ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## 1 – 32 Chapters

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book:yahoo.co.in)
www.namperumal.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## குருபரம்பராஸாரம்

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book:yahoo.co.in)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## தனியன்கள்

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ
வேதாந்தாச்சார்ய வர்யோமே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி

**பொருள்** - அனைத்து உயர்ந்தவையும் நிரம்பியவரும், கவிஞர்கள் மற்றும் தர்க்கவாதிகளில் சிறந்தவரும், வேதாந்த ஆசார்யர்களில் சிறந்தவரும் ஆகிய வேங்கடநாதன் எனது இதயத்தில் எப்போதும் வசிப்பாராக.

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம்
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம்

**பொருள்** – எம்பெருமானாருடைய கருணைக்கு இலக்கானவரும், ஞானம் மற்றும் வைராக்யம் ஆகியவற்றை ஆபரணமாகக் கொண்டவரும், ஸ்ரீமத் வேங்கடநாதன் எனப்படுபவரும் ஆகிய வேதாந்த தேசிகனை நான் வணங்குகிறேன்.

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியில் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

**பொருள்** – இந்த உலகில் வசிப்பவர்கள், பரமபதம் செல்லும் காலம் முடிய வாழ்கின்ற வாழ்க்கைக்கு - சீரான குணங்கள் நிரம்பியவரும், தூப்புல் என்னும் இடத்தில் அவதரித்தவரும், திருவேங்கடமுடையானுடைய திருமணியின் அவதாரமானவரும் ஆகிய வேதாந்த தேசிகன், இந்த உலகில் உள்ளவர்கள் ஈடுபடும்படியாக அருளிச்செய்தவற்றில், ஏதேனும் ஒரு பகுதி மட்டுமே போதுமானதாகாதோ?


email –sridharan_book@yahoo.com

விகாஹே நிகமாந்தார்ய விஷ்ணுபாத ஸமுத்பவாம்
ரஹஸ்ய த்ரய ஸாராக்யாம் த்ரிஸ்நோதஸம் அகல்மஷாம்

**பொருள்** – மஹாவிஷ்ணுவின் திருவடிகளில் தோன்றிய கங்கை போன்று, நிகமாந்த மஹாதேசிகனுடைய திருவடிகளில் தோன்றியதும், தோஷம் அற்றதும் ஆகிய "ரஹஸ்ய த்ரய ஸாரம்" என்னும் கங்கையில் நான் ஆழ்ந்து நீராடுகிறேன்.

அவிஜ்ஞாதம் விஜாநதாம் விஜ்ஞாதம் அவிஜாநதாம்
ரஹஸ்ய த்ரய ஸாராக்யாம் பரம் ப்ரஹ்மாஸ்து மே ஹ்ருதி

**பொருள்** – "முழுமையாக அறிந்தோம்" என்று எண்ணுபவர்களால் அறியப்படாததும், "முழுமையாக அறியவில்லை" என்று எண்ணுபவர்களால் அறியப்பட்டதும் ஆகிய பரப்ரஹ்மம் போன்று, "ரஹஸ்ய த்ரய ஸாரம்" என்பதும் எனது இதயத்தில் எப்போதும் நிலைக்கட்டும்.

# ஸ்ரீ குருபரம்பராஸாரம்

குருப்ய: தத்குருப்யச்ச நமோவாகம் அதீமகே
வ்ருணீமஹே ச தத்ர ஆத்யௌ தம்பதீ ஜகதாம் பதீ

**பொருள்** - எங்களுடைய ஆசார்யனின் பொருட்டும், அவர்களது ஆசார்யர்க்களின் பொருட்டும் "நம:" என்ற பதத்தை நாங்கள் அடிக்கடி கூறுகிறோம். மேலும் இந்த உலகின் அதிபதியாக உள்ள தம்பதிகளான ஸ்ரீமந்நாராயணனையும், மகாலக்ஷ்மியையும் நாங்கள் ப்ரார்த்திக்கிறோம்.

பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார்
 தண் பொருநல் வரும் குருகேசன் விட்டுசித்தன்
துய்ய குலசேகரன் நம் பாணநாதன்
 தொண்டரடிப்பொடி மழிசை வந்த சோதி
வையம் எலாம் மறை விளங்க வாள் வேல் ஏந்தும்
 மங்கையர்க்கோன் என்று இவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித்
 தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே

**பொருள்** - புரிந்து கொள்வதற்கு மிகவும் கடினமான உபநிஷத்துக்களின் உண்மையான பொருள்களை நாம் ஆழ்வார்கள் அருளிச்செய்த இனிமையான தமிழ்ப் பாசுரங்கள் மூலம் தெளிவாகப் புரிந்து கொண்டோம். இத்தகைய ஆழ்வார்கள் - பொய்கைமுனி, பூதமுனி, பேயாழ்வார், மிகவும் குளிர்ந்த தாமிரபரணி ஆற்றின் கரையில் அவதரித்த நம்மாழ்வார் (குலசேகசன்), விட்டுசித்தன்(பெரியாழ்வார்), தூய மனதுடைய குலசேகரன், நம்முடைய திருப்பாணாழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருமழிசையில் அவதரித்த திருமழிசை ஆழ்வார், இந்த உலகெங்கும் வேதங்களின் ஒளி வீசும்படியாக வாளும் வில்லும் ஏந்திய திருமங்கைமன்னன் - ஆகியோர் ஆவர்.

இன்பத்தில் இறைஞ்சுதல் இல் இசையும் பேற்றில்
 இகழாத பல் உறவு இல் இராகம் மாற்றில்
தன்பற்றில் வினை விலக்கில் தகவோக்கத்தில்
 தத்துவத்தை உணர்த்துதலில் தன்மையாக்கில்
அன்பர்க்கே அவதரிக்கும் மாயன் நிற்க
 அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும்
 தொல்வழியே நல்வழிகள் துணிவார்க்கட்கே

**பொருள்** - இந்த உலகில் தனது அடியார்களுக்காக, அவர்களுக்கு அடைக்கலமாக, ஓர் ஆயனாக க்ருஷ்ணன் அவதரித்தான். அவன் தனது அடியார்கள் இந்த உலக விஷயங்களில் வைக்கும் பற்றுதலை தன் மீது வைக்கும்படியும், பாவங்களை

விலக்கும்படியும், எல்லையற்ற இன்பத்தை உணரும்படியும், தத்துவங்களை விளங்கும் படியும் செய்வதற்கு க்ருஷ்ணன் தயாராக இருந்தான். இருந்தாலும் மதுரகவியாழ்வார், அறிந்துக்கொள்ளக் கடினமான வேதங்களை தமிழில் உரைத்த நம்மாழ்வாரின் திருவடிகளையே பற்றினார். ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபட இதுவே உறுதியான் பாதை என்று காண்பித்தார்.

## ஆசார்யனே மோக்ஷ உபாயம்

**மூலம்** - பாபிஷ்ட: க்ஷத்ரபந்துச்ச புண்டரீகச்ச புண்யக்ருத் | ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாத் ஆசார்யவான் பவேத்” என்று ஆசார்யவத்தையே ஸர்வருக்கும் மோக்ஷகாரணமென்று அறுதியிட்டார்கள். முமுக்ஷுவுக்கு ஆசார்ய வம்சம் பகவானளவுஞ் செல்ல அநுஸந்திக்க வேண்டுமென்று ஓதப்பட்டது.

**விளக்கம்** - ஸ்ம்ருதிகளில் - பாபிஷ்ட: க்ஷத்ர பந்துஸ்ச புண்டரீகக்ஷ புண்யக்ருதா ஆசார்ய வத்தயா முக்தௌ தஸ்மாத் ஆசார்யவான் பவேத் - மிகவும் பாபியான க்ஷத்ரபந்துவும், மிகவும் புண்ணியம் செய்த புண்டரீகனும் மோக்ஷம் பெற்றனர்; எப்படியெனில் அவர்களின் ஆசார்யன் உதவியால் ஆகும் – என்று கூறப்பட்டது. ஆகவே, அனைவருக்கும் மோக்ஷம் கிட்டுவதன் வழி ஒரு ஆசார்யனைப் பெறுவதே ஆகும் என்று முடிவு செய்தனர். மோக்ஷத்தில் விருப்பம் உள்ளவன் தனது ஆசார்ய பரம்பரையை பகவான் வரை நீட்டிக்கவேண்டும்.

## பகவானே முதல் ஆசார்யன்

**மூலம் –** “தம் இமம் ஸர்வஸம்பன்னம் ஆசார்யம் பிதரம் குரும்” என்றும், “மம அபி அகில லோகாநாம் குருர் நாராயணோ குரு:” என்றும், “த்வமேவ பந்துச்ச குருஸ் த்வமேவ” என்றும், “குருரஸி கதிச்ச அஸி ஜகதாம்” என்றும் சொல்லுகிறபடியே ஸர்வலோகத்துக்கும் பரமாசார்யனான ஸர்வேச்வரன் - (1) ப்ரஹ்மாவுக்கு அடியிலே வேதங்களைக் கொடுத்தும், (2) அவற்றிற்கு அபஹாரம் பிறந்தபோது மீட்டுக் கொடுத்தும், (3) இவன்முகமாக சாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பித்தும், (4) இவன் புத்ரர்களான

ஸநத்குமாராதிகளை “ஸ்வயம் ஆகத விஜ்ஞாநா நிவ்ருத்திம் தர்மம் ஆஸ்திதா:” என்னும்படி பண்ணி அவர்கள் முகங்களாலே ஹித ப்ரவர்த்தனம் பண்ணுவித்தும், (5) இப்படியே மற்றும் நாரத பராசர சுக சௌனகாதிகளான பல மஹர்ஷிகளையிட்டு அத்யாத்ம ஸம்ப்ரதாயம் குலையாதபடி நடத்தியும், (6) “க்ருஷ்ணத்வைபாயனம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும் | கோ ஹி அந்யோ புவி மைத்ரேய மஹாபாரத க்ருத்பவேத்” என்றும், “மஹர்ஷே: கீர்த்தனாத் தஸ்ய பீஷ்ம: ப்ராஞ்ஜலி: அப்ரவீத்” என்றும் சொல்லுகிறபடி நிற்கிற வ்யாஸாதிகளை அநுப்ரவேசித்து மஹாபாரத சாரீரகாதிகளை ப்ரவர்த்திப்பித்தும், (7) ஹம்ஸ மத்ஸ்ய ஹயக்ரீவ நரநாராயண கீதாசார்யாத் யவதாரங்களாலே தானே வெளிநின்று தத்வ ஹித புருஷார்த்தங்களை ப்ரகாசிப்பித்தும், (8) தான் அருளிச் செய்த அர்த்தங்களை எல்லாம் ஸ்ரீபீஷ்மர் முதலான ஜ்ஞாநாதிகரையிட்டு மூதலிப்பித்தும், (9) “பஞ்சாராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயணஸ் ஸ்வயம்” என்கிறபடியே அடியிலே தான் அருளிச்செய்த பகவச்சாஸ்த்ரத்தை “ப்ராம்மணை: க்ஷத்ரியை: வைச்யை: சூத்ரைச்ச க்ருதலக்ஷணை: | அர்ச்சனீயச்ச ஸேவ்யச்ச நித்ய யுக்தை: ஸ்வகர்மஸு || ஸாத்வதம் விதிமாஸ்தாய கீத ஸங்கர்ஷிணேன ய: | த்வாபரஸ்ய யுகஸ்யாந்தே ஆதௌ கலியுகஸ்ய ச” என்கிறபடியே அவஸரங்களில் ஆவிஷ்கரித்தும், (10) “பூர்வ உத்பந்நேஷு பூதேஷு தேஷு தேஷு கலௌ ப்ரபு: | அநுப்ரவிச்ய குருதே யத் ஸமீஹிதம் அச்யுத:” என்கிறபடியே பராங்குச பரகாலாதி ரூபத்தாலே அபிநவமாக ஒரு தசாவதாரம் பண்ணி, மேகங்கள் ஸமுத்ரஜலத்தை வாங்கி ஸர்வோபஜீவ்யமான தண்ணீராக உமிழுமாபோலே வேதார்த்தங்களில் வேண்டும் ஸாரதமாம்சத்தை ஸர்வருக்கும் அதிகரிக்கலான பாஷையாலே ஸங்க்ரஹித்துக் காட்டியும், (11) இப்படி தான் ப்ரவர்த்திப்பித்த ஸத் பதத்துக்கு ப்ரகடராயும் ப்ரச்சன்னராயுமிருந்துள்ள பாஷாண்டிகளால் உபரோதம் வாராமைக்காக, “ஸாக்ஷாத் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் | மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ரபாணினா” என்றும், “பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து” என்றும் சொல்லுகிறபடியே அகஸ்த்ய ஸேவிதமான தேசத்திலே அநேக தேசிகாபதேசத்தாலே அவதரித்தருளினான். இத்தைக் கணிசித்து, “கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணா: | க்வசித் க்வசித் மஹாபாகா த்ரமிடேஷு ச பூரிச: || தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ | காவேரீ ச மஹாபாகா ப்ரதீசீ ச மகாநதீ” என்று மஹர்ஷி அருளிச்செய்தான்.

**விளக்கம்** - ஸர்வேச்வரனே அனைத்து உலகங்களுக்கும் பரமாச்சார்யன் என்பதைக் கீழே உள்ள வரிகளிலிருந்து உணரலாம்:

- மஹாபாரதம் ஸபாபர்வம் (41-21) - தம் இமம் ஸர்வஸம்பன்னம் ஆசார்யம் பிதரம் குரும் - அவனே (க்ருஷ்ணன்) ஆசார்யனும், தந்தையும் குருவும் ஆவான்

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-1-14) - மம அபி அகில லோகாநாம் குருர் நாராயணோ குரு: - அனைத்து உலகங்களுக்கும் குருவான நாராயணன் எனக்கும் குரு ஆவான்

- ஸ்தோத்ரரத்னம் (60) - குரு: அஸி கதிச்ச அஸி ஜகதாம் - அனைத்து உலகங்களுக்கும் குருவாகவும், அவர்கள் சென்றடையும் இடமாகவும்

இப்படிப்பட்ட ஸர்வேச்வரன் செய்த உபாயங்கள் பின்வருமாறு:

1) வேதங்களை முதலில் நான்முகனுக்கு அளித்தான்
2) அந்த வேதங்கள் தொலைந்தபோது அவற்றை மீட்டுக் கொடுத்தான்
3) நான்முகன் மூலமாகவே வேத ஞானத்தை உலகத்திற்கு அளித்தான்
4) நான்முகனின் புத்திரர்களான ஸனத் குமாரர்களை, மகாபாரதம் சாந்தி பர்வம் (349-71) - ஸ்வயம் ஆகத விஜ்ஞாநா நிவ்ருத்திம் தர்மம் ஆஸ்திதா: - தானாகவே விளைந்த ஞானம் கொண்டவர்கள் மற்றும் தர்மத்தைச் செய்பவர்கள் – என்பதற்கு ஏற்பச் செய்து, அவர்கள் மூலமாகவே உலகிற்கு ஏற்ற நன்மைகளை வெளிப்படுத்தினான்
5) உபநிஷத்துக்களின் நெறி மறையாதபடி நாரதர், பராசரர், சுகர், ஸௌனகர் ஆகியோர் மூலம் காப்பாற்றினான்
6) ஸ்ரீவிஷ்ணுபுராணம் (3-4-5) - க்ருஷ்ணத்வைபாயனம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும் | கோ ஹி அந்யோ புவி மைத்ரேய மஹாபாரத க்ருத்பவேத் - க்ருஷ்ண த்வைபாயனர் என்று அழைக்கப்படும் வ்யாஸர் ஸ்ரீமந்நாராயணனே ஆவார். மைத்ரேயரே! மஹாபாரதத்தை இயற்றுவதற்கு இந்த உலகில் வேறு யார் உள்ளனர்? – என்றும், மஹாபாரதம் ஆதிபர்வம் (114-40) - மஹர்ஷே: கீர்த்தனாத் தஸ்ய பீஷ்ம: ப்ராஞ்ஜலி: அப்ரவீத் - உயர்ந்த வ்யாஸரின் பெயரை மிகுந்த மரியாதையுடனும் கைகளைக் கட்டியபடியும் பீஷ்மர் கூறினார் – என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ள வ்யாஸர்

முதலானவர்களாக நாராயணன் தோன்றி மஹாபாரதம், ப்ரஹ்மஸூத்ரம் ஆகியவற்றைப் படைத்தான்

7) நாராயணனே ஹம்ஸமாகவும், மத்ஸ்யமாகவும், ஹயக்ரீவனாகவும், நரநாராயணனாகவும், கீதாசார்யனாகவும் அவதாரம் செய்து தத்துவங்களையும் மோக்ஷ உபாயங்களையும் அருளினான்

8) தான் அருளிய அனைத்தையும் பீஷ்மர் முதலான ஞானிகள் மூலம் வெளிப்படுத்தினான்

9) மஹாபாரதம் சாந்திபர்வம் (359-68) - பஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயணஸ் ஸ்வயம் - நாராயணனே பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தை உரைத்தான் – என்பதற்கு ஏற்ப தான் உண்டாக்கிய அந்த சாஸ்த்ரம் மறைந்து விட்டபின், அவனே அதனை த்வாபரயுகத்தின் முடிவிலும் கலியுகத்தின் தொடக்கத்திலும் உபதேசித்தான். அதனை அந்தணர்கள், க்ஷத்ரியர்கள், வைச்யர்கள் மற்றும் சூத்ரர்கள் ஆகியோர் அவரவர்களுக்கு உரிய வழிகளில் பகவானுக்குத் தொண்டு செய்யும்படியாக, பாஞ்சராத்ரத்தை ஸங்கர்ஷணன் மூலமாக உபதேசித்தான். இவர்கள் தங்கள் ஆசார்யனிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து கொண்டு அவனை ஆராதனம் செய்யும்படிச் செய்தான்

10) ஸ்ரீவிஷ்ணுதர்மம் (108-50) - பூர்வ உத்பந்நேஷு பூதேஷு தேஷு தேஷு கலௌ ப்ரபு: | அநுப்ரவிச்ய குருதே யத் ஸமீஹிதம் அச்யுத: - கலியுகத்தில் அச்சுதன் இந்த உலகில் பிறந்த உயர்ந்த மனிதர்களின் உள்ளே புகுந்து தனக்கு விருப்பமானவற்றைச் செய்கிறான் - என்பதற்கு ஏற்றபடி, அவன் பராங்குசன் (நம்மாழ்வார்), பரகாலன் (திருமங்கைமன்னன்) போன்ற பத்து அவதாரங்களை புதியதாக எடுத்தான். இப்படியாக அவன் செய்தது என்ன? மேகங்கள் கடலிலிருந்து தண்ணீரை உறிஞ்சி எடுத்து, அதனை அனைத்து உயிர்களுக்கும் ஆதாரமான மழையாகப் பொழிவதுபோல, அனைத்து வேதங்களின் கருத்துக்களையும் எடுத்து அனைவரும் எளிதாகப் படிக்கும் தமிழில் (நாலாயிரத்திவ்யப்பிரபந்தம்) அளித்தான்

11) இப்படியாகத் தான் ஏற்படுத்திய நற்பாதைக்கு "வெளிப்படையாக நாராயணனை மற்றவர்களோடு சமமாக நினைப்பவர்கள், வேதத்தின்படி நடக்காதவர்கள், நாராயணனைத் தாழ்வாகப் பேசுபவர்கள்" ஆகியோர் மூலம் எந்தத் தடையும் ஏற்படாமல் இருப்பதற்காக அவன் செய்தது என்ன? ஜயாக்ய ஸம்ஹிதை - ஸாக்ஷாத் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் | மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ரபாணினா - அறியாமை என்னும் இருளில் மூழ்கிய இந்த உலகத்தை நாராயணன் தானாகவே தனது கருணை காரணமாக, சாஸ்த்ரங்கள் என்னும் கைகொடுத்து மேலே

உயர்த்தினான் – என்றும், பெரியாழ்வார் திருமொழி (5-2-8) - பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அகஸ்தியரின் இந்தப் பகுதியில் பல ஆசார்யர்களாக அவதரித்து அருளினான். இதனை ஸ்ரீமத்பாகவதத்தில் - கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணா: | க்வசித் க்வசித் மஹாபாகா த்ரமிடேஷு ச பூரிச: || தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ | காவேரீ ச மஹாபாகா ப்ரதீசீ ச மகாநதீ - கலியுகத்தில் நாராயணனின் அடியார்கள் உயர்ந்த பக்தியுடன் கூடியவர்களாக திராவிட நாட்டின் இங்குமங்குமாகப் பல இடங்களில் பிறப்பார்கள்; அவர்கள் தாமிரபரணி, வைகை, பாலாறு, காவேரி, மகாநதி ஆகிய நதிகள் ஓடும் இடங்களில் அவதரிப்பர் – என்று மஹரிஷி அருளிச்செய்தார்.

## வைணவ குரு பரம்பரை

**மூலம்** - இவ்வாசார்யர்களில், ஈச்வரமுனிகள் பிள்ளை நாதமுனிகள். இவர் ந்யாயதத்துவமென்கிற சாஸ்த்ரமும் யோக ரஹஸ்யமும் அருளிச் செய்தார். இவருக்கு ஸ்ரீமதுரகவிகள் முதலாக ஸம்ப்ரதாய பரம்பரையாலும், திருவாய்மொழி முகத்தாலும், யோகதசையிலே ஸாக்ஷாத்க்ருதராயும் நம்மாழ்வார் ஆசார்யரானார். நாதமுனிகள் பிள்ளை ஈச்வர பட்டாழ்வான். ஈச்வர பட்டாழ்வான் பிள்ளை ஆளவந்தார். இவர் அருளிச் செய்த ப்ரபந்தங்கள் ஆகமப்ராமாண்யமும், புருஷநிர்ணயமும், ஆத்மஸித்தி ஈச்வரஸித்தி ஸம்வித்ஸித்தி என்கிற ஸித்தித்ரயமும், கீதார்த்த ஸங்க்ரஹமும், ஸ்தோத்ரமும், சதுச்லோகியுமாக எட்டு. ஆளவந்தார்ப்பிள்ளை சொட்டைநம்பி. சொட்டைநம்பி பிள்ளை என்னாச்சான். என்னாச்சான் பிள்ளைகள் நால்வர். இவர்களில் ஒருவர் பிள்ளையப்பர். பிள்ளையப்பர் பிள்ளை தோழப்பர். தோழப்பருக்குப் பெண் பிள்ளைகள் இருவர்.

**விளக்கம்** - இந்த ஆசார்யர்களில் (மேலே உள்ள ஸ்ரீமத்பாகவதம் கூறிய வரிகளில் உள்ள ஆசார்யர்கள்) முதலில் ஈச்வரமுனியின் பிள்ளையான நாதமுனிகள் ஆவார். இவர் நமக்கு ந்யாய தத்துவம் மற்றும் யோகரஹஸ்யம் என்பதை அருளினார். இவருக்கு மதுரகவியாழ்வாரின் உபதேசப் பரம்பரை உண்டு. மேலும் திருவாய்மொழியை உபதேசமாகப் பெற்று, மேலும் யோகம் பெற்றார். இதனால் நம்மாழ்வார் இவருக்கு நேரிலே வந்து ஆசார்யனானார். நாதமுனிகளின் பிள்ளை ஈச்வர பட்டாழ்வான். ஈச்வர

பட்டாழ்வானின் பிள்ளை ஆளவந்தார் ஆவார். ஆளவந்தார் அருளிச் செய்த ப்ரபந்தங்கள் எட்டாகும் - ஆகமப்பிரமாண்யம், புருஷநிர்ணயம், ஆத்ம ஸித்தி, ஈச்வர ஸித்தி, ஸம்வித் ஸித்தி, கீதார்த்த ஸங்க்ரஹம், ஸ்தோத்ர ரத்னம் மற்றும் சதுச்லோகி என்பவை ஆகும். ஆளவந்தாரின் பிள்ளை சொட்டை நம்பி, அவரது பிள்ளை என்னாச்சான், என்னாச்சானின் நான்கு பிள்ளைகளில் ஒருவர் பிள்ளையப்பர், பிள்ளையப்பரின் பிள்ளை தோழப்பர். தோழப்பருக்கு இரண்டு பெண் குழந்தைகள்.

**மூலம்** - நாதமுனிகள் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்த முதலிகள் உய்யக்கொண்டார், குருகைக்காவலப்பன், நம்பி கருணாகரதாஸர், ஏறுதிருவிடையார், திருக்கண்ணமங்கையாண்டான், வானமாதேவியாண்டான், உருப்பட்டூராச்சான்பிள்ளை, சோகத்தூராழ்வான் என்பர். உய்யக்கொண்டார் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தவர்கள் ஐவர். அவர்களாகிறார் மணக்கால்நம்பி, திருவல்லிக்கேணிப் பாண்பெருமாளறயர், சேட்டலூர் செண்டலங்காரர், ஸ்ரீபுண்டரீகதாஸர், உலகப்பெருமாள்நங்கை. மணக்கால்நம்பி ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தவர்கள் ஐவர். அவர்களாகிறார் ஆளவந்தார், தெய்வத்துக்கரசு நம்பி, கோமடத்துத் திருவிண்ணகரப்பன், சிறுப்புள்ளூர் ஆவுடையபிள்ளை, ஆச்சி.

**விளக்கம்** - நாதமுனிகளின் திருவடிகளை பற்றி நின்ற சிஷ்யர்கள் - உய்யக்கொண்டார், குருகைக்காவலப்பன், நம்பிகருணாகரதாஸர், ஏறு திருவுடையார், திருக்கண்ணமங்கை ஆண்டான், வானமாதேவி ஆண்டான், உருப்பட்டூர் ஆச்சான் பிள்ளை, சோகத்தூராழ்வான் ஆகிய எட்டு பேர்கள். உய்யக்கொண்டாரின் சிஷ்யர்கள் ஐவர் - மணக்கால்நம்பி, திருவல்லிக்கேணி பாண் பெருமாள் அரையர், சேட்டலூர் செண்டலங்காரர், ஸ்ரீ புண்டரீகதாஸர் மற்றும் உலகப்பெருமான் நங்கை ஆவர். மணக்கால் நம்பியின் திருவடிகளை அண்டி இருந்தவர்கள் ஐவர் - ஆளவந்தார், தெய்வத்துக்கரசு நம்பி, கோமடத்துத் திருவிண்ணகரப்பன், சிறுப்புள்ளூர் ஆவுடையப் பிள்ளை மற்றும் ஆச்சி ஆகியோர் ஆவர்.

**மூலம்** - ஆளவந்தார் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தவர்கள் பதினைவர். அவர்களாகிறார் பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமாலையாண்டான், ஆளவந்தாராழ்வார், திருமலை நம்பி, ஈசாண்டான், தெய்வவாரியாண்டான், சிறியாண்டான், திருமோகூரப்பன்,

திருமோகூர் நின்றார், தெய்வப்பெருமாள், திருமங்கையாளியார், பிள்ளை திருமாலிருஞ்சோலை தாஸர், மாறனேர் நம்பி, ஆள்கொண்டி.

**விளக்கம்** - ஆளவந்தாரின் திருவடிகளை அண்டியிருந்தவர்கள் பதினைந்து பேர் - பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமாலையாண்டான், ஆளவந்தாராழ்வார் திருமலைநம்பி, ஈசாண்டான், தெய்வவாரிஆண்டான், சிறியாண்டான், திருமோகூரப்பன், திருமோகூர் நின்றார், தெய்வப்பெருமாள், திருமங்கையாளியார், பிள்ளைத் திருமாலிருஞ்சோலை தாஸர், மாறனேர் நம்பி மற்றும் ஆள்கொண்டி ஆகியோர் ஆவர்.

**மூலம்** - பெரியநம்பி ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தவர்கள் அறுவர். அவர்களாகிறார் எம்பெருமானார், மலைகுனிய நின்றார், ஆர்ய ஸ்ரீசடகோபதாஸர், அணியரங்கத் தமுதனார், திருவாய்க்குலமுடையான் பட்டர், திருக்கச்சி நம்பி.

**விளக்கம்** -பெரியநம்பியின் திருவடிகளை அண்டி இருந்தவர்கள் 6 பேர் - எம்பெருமானார் (உடையவர்), மலைகுனியநின்றார், ஆரிய ஸ்ரீ சடகோபதாஸர், அணியரங்கத்தமுதனார், திருவாய்க்குளமுடையான் பட்டர் மற்றும் திருக்கச்சிநம்பி ஆகியோர் ஆவர்.

**மூலம்** - எம்பெருமானார் திருகோட்டியூர்நம்பி ஸ்ரீபாதத்திலே ரஹஸ்யார்த்தங்களைச் சிக்ஷித்தார். திருமாலையாண்டான் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழி கேட்டார். ஆளவந்தாராழ்வார் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழியும் ஓதி, ஸ்தோத்ராதிகளும் அருளிச் செய்யும் நல்வார்த்தைகளும் கேட்டருளினார். திருமலைநம்பி ஸ்ரீபாதத்திலே ஸ்ரீமத்ராமாயணம் கேட்டருளினார். இவர் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் - ஸ்ரீபாஷ்யமும், தீபமும், ஸாரமும், வேதார்த்த ஸங்க்ரஹமும், ஸ்ரீகீதாபாஷ்யமும், சிறிய கத்யமும், பெரிய கத்யமும், ஸ்ரீவைகுண்ட கத்யமும், நித்யமும் ஆக ஒன்பது. இவர் ஸ்ரீபாதத்தில் ஆச்ரயித்த முதலிகளைத் தம் தம் ஸம்ப்ரதாயப்படிகளிலே அறிந்து கொள்வது.

**விளக்கம்** - திருக்கோட்டியூர்நம்பியிடம் எம்பெருமானார் ரஹஸ்ய அர்த்தங்களைக் கற்றார்; திருமாலையாண்டான் திருவடிகளில் திருவாய்மொழி அர்த்தங்களைக் கற்றார்; ஆளவந்தாராழ்வார் திருவடிகளில் திருவாய்மொழியும், ஸ்தோத்ரரத்னமும், அருளிச்செயலும் கற்றார்; திருமலைநம்பிகளின் திருவடிகளில் ஸ்ரீமத் இராமாயணம்

கேட்டருளினார். இவர் அருளிச்செய்த க்ரந்தங்கள் - ஸ்ரீபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்தஸாரம், வேதார்த்தஸங்க்ரஹம், ஸ்ரீகீதாபாஷ்யம், சிறிய கத்யம் (ஸ்ரீரங்க கத்யம்), பெரிய கத்யம் (சரணாகதி கத்யம்), ஸ்ரீவைகுண்டகத்யம் மற்றும் நித்யம் என்னும் ஒன்பதாகும். இவருடைய சீடர்களை தங்கள் தங்கள் ஸம்ப்ரதாயத்துக்கு ஏற்ப அறிந்து கொள்ள வேண்டும்.

## ஆசார்ய பக்தி அவச்யம்

**மூலம் –** "குரும் ப்ரகாசாயேத் தீமாந் மந்த்ரம் யத்நேந கோபயேத் அப்ரகாச ப்ரகாசாப்யாம் க்ஷீயதே ஸம்பதாயுஷீ" என்றார்கள். குருவை ஒருவன் ப்ரகாசிப்பிக்கிறதுவும் ஒருவன் ப்ரகாசிப்பியாதொழிகிறதுவும் குரு பக்தியில் தாரதம்யத்தாலேயிறே. பகவத்விஷயத்தில் போலே குருவிஷயத்திலும் பரையான பக்தியுடைவனுக்கு அபேக்ஷிதார்த்தங்கள் எல்லாம் ப்ரகாசிக்கும் என்னுமிடம் கட-ஜாபாலாதி ச்ருதிகளிலும், ஸஞ்சயாதி வ்ருத்தாந்தங்களிலும் ப்ரஸித்தம். இங்ஙனல்லாதார்க்கு இப்படி ஞானஸம்பத்து உண்டாகாது என்னுமிடம் சிஷ்யர்களுடைய ஞான தாரதம்யத்தாலே கண்டுகொள்வது. மிகவும் குணாதிகரான சிஷ்யர்களுக்கும் கடுக அத்யாத்ம விஷயங்களை ப்ரகாசிப்பியாதார்க்கு நிஷ்டை குலையாது என்னுமிடம் ரைக்வாதி வ்ருத்தாந்தங்களிலே ப்ரஸித்தம். பெற்றது குணமாக உபதேசித்தால் "சிஷ்ய பாபம் குரோரபி" என்கையாலே ஆசார்யனுக்கு நிஷ்டை குலையும்படியாமென்னுமிடம், வருவது விசாரியாதே இந்த்ரனுக்கு உபதேசித்துத் தானும் ப்ரஹ்மவித்யையை மறந்து, தன் சிஷ்யனான நாரதபகவானை இட்டு ஸர்வேச்வரன் உணர்த்துவிக்க வேண்டும்படியிருந்த சதுர்முகன் பக்கலிலே கண்டுகொள்வது. இப்படி "அப்ரகாச ப்ரகாசாப்யாம்" என்கிற இரண்டுக்கும் "க்ஷீயதே ஸம்பதாயுஷீ" என்கிற பலங்களை ஔசித்யத்தாலும் ப்ரமாண ப்ரஸித்தியாலும் க்ரமத்தாலே உதாகரித்தவித்தனை; இரண்டிலும் இரண்டு அந்வயித்தாலும் வாக்யத்தில் வரும் விரோதம் இல்லை. ஆகையால் ஸர்வவஸ்தையிலும் குருபக்தியின் பரீவாகமாக குருவை ப்ரகாசிப்பிக்கவும், மகாரத்ன கர்ப்பமான மாணிக்கச்செப்புப்போலே இருக்கிற திருமந்த்ரத்தினுடைய சீர்மையும் தன் நிஷ்டையும் குலையாமைக்காக சிலவான ப்ரயோஜனங்களைப் பற்ற சிஷ்ய குண பூதிம் இல்லாத சபலர்க்கு வெளியிடாதே மந்த்ரத்தை மிகவும் சேமிக்கவும் ப்ராப்தம். இவ்விடத்தில் குரு சப்தம் பரமகுருக்களுக்கும்

உபலக்ஷணம்; ஸாமாந்யமாகவுமாம். மந்த்ரசப்தம் மந்த்ரார்த்தம் முதலான ரஹஸ்யங்களுக்கும் ப்ரதர்சநபரம். தான் இந்த ரஹஸ்யங்களை அநுஸந்திக்கும் போதெல்லாம் ஆசார்ய பரம்பரையை அநுஸந்திக்கையும் விதி பல ப்ராப்தம். இவ்வாசார்யர்களுடைய அநுஸந்தானம், "ஸம்பாஷ்ய புண்யக்ருதோ மநஸா த்யாயேத்" என்கிறபடியே ப்ரதிஷித் ஸம்பாஷணத்துக்கு ப்ராயச்சித்தமுமாம்.

**விளக்கம்** - சேஷஸம்ஹிதை (14-50) - குரும் ப்ரகாசாயேத் தீமாந் மந்த்ரம் யத்நேந கோபயேத் அப்ரகாச ப்ரகாசாப்யாம் க்ஷீயதே ஸம்பதாயுஷீ - புத்திமான் ஒருவன் தனது ஆசார்யனைப் பற்றி பிறரிடம் புகழ்ந்த பேச வேண்டும், அவர் உபதேசித்த மந்திரங்களைப் பாதுகாக்க வேண்டும், இவ்விதம் குருவைப் புகழாமலும், மந்திரத்தைப் பாதுகாக்காமலும் இருந்தால் ஐச்வர்யமும், ஆயுளும் குறையும் - என்று கூறப்பட்டது. ஒருவன் தனது குருவை இவ்விதம் புகழ்வதும், புகழாமல் இருப்பதும், குருவிடம் அவன் கொண்டுள்ள அதிக பக்தியும் குறைந்த பக்தியுமே காரணம் ஆகும். பகவானிடத்தில் உள்ள பத்தியைப் போன்று, குருவிடத்திலும் பக்தி உள்ளவனுக்கு அனைத்து ஞானமும் ஏற்படும் என்ற கட உபநிஷத்தும் ஜாபால உபநிஷத்தும் கூறின. மற்றவர்களுக்கு இவ்விதம் ஏற்படாது. சிஷ்யர்கள் மிகவும் உயர்ந்த குணங்கள் கொண்டிருந்தாலும், அவர்களுக்கு உடனடியாக முழு தத்துவங்களையும் ஒரு குரு உபதேசிக்கவில்லை என்றாலும் அவருக்கு(குருவுக்கு) எந்தத் தோஷமும் ஏற்படாது. இதனை சாந்தோக்யத்தில் உள்ள ரைக்வர் பகுதிகளில் அறியலாம். ஆனால் சிஷ்யனைப் பற்றி முழுவதுமாக நம்பி, அவனுக்கு உபதேசம் செய்தால், அந்த சிஷ்யனின் பாவங்கள் குருவிற்கே சென்று சேர்க்கின்றன. இதனை இந்தரனுக்கு அவன் தகுதி அறியாமல் உபதேசித்த ப்ரம்மனுக்கு ஏற்பட்ட நிலை மூலம் அறியலாம். ப்ரம்மன் தனது ப்ரஹ்மவித்யையை மறந்துவிட்டான். அதனை பகவான் ப்ரம்மனின் சீடரான நாரத முனிவர் மூலம் மீண்டும் உபதேசிக்கும்படி ஆயிற்று. மேலே கூறப்பட்ட சேஷ ஸம்ஹிதை வாக்கியத்தின்படி "குருவைப் புகழாமல் இருந்தாலும், தவறான முறையில் மந்திரத்தை வெளிப்படுத்தினாலும், ஒருவனுக்கு முறையே செல்வத்திலும் ஆயுளிலும் தோஷம் ஏற்படும்" என்னும் கருத்தானது பலன்களில் வரக்கூடிய பொருத்தத்தாலும், ப்ரமாணங்களில் காணப்படுவதாலும் கூறப்படுகிறது. இந்த ச்லோகத்திற்கு, "குருவைப் புகழாமல் இருந்தால் செல்வத்துக்குத் தோஷம் என்றும், மந்திரத்தைப் போற்றாமல் இருந்தால் ஆயுளுக்குத் தோஷம்" என்றும் பொருள் கொள்ளலாம். ஆகவே அளவற்றதாக ஏற்படும் குருபக்தியால் எப்போதும் குருவைப்

புகழ்ந்தபடி இருத்தல்வேண்டும்; உயர்ந்த இரத்தினக்கற்களான ஆழ்பொருளை சேமித்து வைக்கின்ற செப்பு போன்று உள்ளதான திருமந்த்ரத்தின் சீர்மை குலையாமல் இருப்பதற்காக, அதனைச் செல்வத்தைப் பெறும்விதமாக சிஷ்யனுக்கு இருக்கவேண்டிய தன்மைகள் இல்லாதவர்களுக்கு வெளியிடாமல் காக்கவேண்டும். இங்குள்ள "குரு" என்னும் சொல்லானது தனது ஆசார்யன் தொடங்கி, பகவான் முடிய உள்ள அனைவரையும் குறிப்பதாகும்; அல்லது பொதுவாக உரைக்கப்பட்டதாகவும் கொள்ளலாம். இதே போன்று "மந்த்ரம்" என்பது மந்த்ரத்தால் கூறப்படும் ஆழ்பொருளையும் உள்ளடக்கியதாகும். மேலும் இந்த மந்த்ர உபதேசங்களைத் த்யானிக்கும்போது குருபரம்பரையையும் த்யானிக்க வேண்டும். கௌதம தர்ம சூத்திரம்(9-18) - ஸம்பாஷ்ய புண்யக் க்ருதோ மனசா த்யாயேத் - பேசக்கூடாத மனிதர்களிடம் பேசியதற்குப் ப்ராயச்சித்தம் என்னவெனில், புண்ணியத்தைக் குறித்து த்யானிப்பதே ஆகும் – என்பது காண்க.

என் உயிர் தந்து அளித்தவரைச் சரணம் புக்கி
  யான் அடைவே அவர் குருக்கள் நிரை வணங்கிப்
பின் அருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
  பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால்நம்பி
நன்னெறியை அவர்க்கு உரைத்த உய்யக்கொண்டார்
  நாதமுனி சடகோபன் சேனைநாதன்
இன் அமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு
  எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே

**இதன் பொருள்** - என்னுடைய ஆத்ம ஸ்வரூபமாக பகவான் உள்ளான் என்று உபதேசித்து, என்னைக் காத்த, எனது குருவை சரணம் என்று அடைந்தேன். அவருடைய ஆசார்ய பரம்பரையையும் சரணம் என்று அடைந்தேன். அந்த குருபரம்பரையின் அருள் காரணமாக, ஸ்ரீ பெரும்பூதூரில் அவதரித்த உடையவர், அவருடைய குரு பெரியநம்பி, பெரியநம்பியின் குரு ஆளவந்தார், மணக்கால் நம்பி, சிறந்த வழியை மணக்கால் நம்பிக்கு உபதேசித்த உய்யக்கொண்டார், நாதமுனிகள், நம்மாழ்வார், சேனைமுதலியார், எம்பெருமாளுக்கு அமிர்தம் போன்றுள்ள பெரியபிராட்டியார் ஆகியோரை வணங்கி, பெரியபெருமாள் திருவடியை அடைகின்றேன்.

ஏதே மஹ்யம் அபோட மந்மத ஸார உந்மாதாய நாதாதய:
த்ரய்யந்த ப்ரதிநந்தநீய விவித உதந்தா: ஸ்வதந்தாம் இஹ
ச்ரத்தாதவ்ய சரண்ய தம்பதி தயா திவ்யாபகா வ்யாபகா:
ஸ்பர்த்தா விப்லவ விப்ரலம்ப பதவீ வைதேசிகா தேசிகா:

**இதன் பொருள் -** கடந்த ச்லோகத்தில் கூறப்பட்ட நாதமுனிகள் முதலான ஆசார்யர்கள் எப்படிபட்டவர்கள்? வேதாந்தங்களே புகழவேண்டிய தூய சரிதம் உடையவர்கள், நாம் சரணம் அடைய ஏதுவாக உள்ள, கல்யாண குணங்கள் நிறைந்த, திவ்ய தம்பதிகளின் கருணை என்னும் கங்கையை எங்கும் ஓடச் செய்தவர்கள், போட்டி, வஞ்சனை முதலானவற்றுக்கு எதிர்த்தட்டாக உள்ளவர்கள் ஆவர். இப்படிப்பட்ட இவர்கள் மன்மதனின் பிடியுலிருந்து என்னை விலக்கவேண்டும். பரமபதத்தை அடைந்து, நான் பெரும் இன்பங்களை இவர்கள் (ஆசார்யர்கள்) மூலமே கிட்டும்படிச் செய்யவேண்டும்.

ஹ்ருத்யா ஹ்ருத்பத்ம ஸிம்ஹாஸந ரஸிக ஹயக்ரீவ ஹேஷா உர்மி தோஷ
க்ஷிப்த ப்ரத்யர்தி த்ருப்தி: பஹுகுணா பங்க்தி: அஸ்மத் குரூணாம்
திக் ஸௌத ஆபத்த ஜைத்ர த்வஜ பட பவந ஸ்பாதி நிர்த்தூத தத் தத்
ஸித்தாந்தஸ்தோம தூலஸ்தபக விகமந வ்யக்த ஸத் வர்த்தநீகா

**இதன் பொருள் -** மற்ற குரு பரம்பரையைக் காட்டிலும் சிறந்த குணங்கள் கொண்ட நமது குருபரம்பரை எப்படிப்பட்டது? நம் ஆசார்யர்களின் இதய கமலத்தை மிகவும் விரும்பி ஹயக்ரீவன் வீற்றுள்ளான். இவனது கனைப்புகள் மூலமே, (ராமானுஜரின் ஸித்தாந்தங்களை) எதிர்த்து வாதம் செய்பவர்களையும், அவர்கள் கர்வத்தையும், நமது ஆசார்யர்கள் அடக்குகின்றனர். இவர்களுடைய புகழ் என்பது அனைத்து திசைகள் என்ற வெற்றித்தூண்கள் மேது கட்டப்பட்டுள்ளன. அந்தத் தூண்களில் உள்ள கொடிகள் மூலம் மற்றவர்களுடைய வாதங்கள் அனைத்தும் பருத்திக் கொத்துகள் போன்று காற்றில் தள்ளப்படுகின்றன. இதுவே வாதத்தில் வெல்வதில் சிறந்த வழியாகும்.

ஆரண நூல் வழிச் செவ்வை அழித்திடும் ஐதுகர்க்கு ஓர்
வாரணமய் அவர் வாதக் கதலிகள் மாய்த்த பிரான்
ஏரணி கீர்த்தி இராமாநுசமுநி இன்னுரை சேர்
சீரணீ சிந்தையினோம் சிந்தியோம் இனித் தீவினையே

**இதன் பொருள்** - வேதாந்த விஷயத்தை விளக்கும் உயர்ந்த நூல் ப்ரஹ்மஸூத்திரம் ஆகும். அது கூறும் உண்மையான மார்க்கத்தை தங்களின் தவறான வாதங்களால் பலரும் அழித்தனர். இந்நிலையில் அவர்களின் வாதங்களை, வாழை மரங்களை அழிக்கும் யானைப் போன்று, நம்முடைய ராமானுஜர் சாய்ந்தார். இப்படி பெரிய உதவிகள் செய்தவரும், இந்த உலகிற்கு ஏற்ற அலங்காரமாகத் தனது புகழை உடையவரும் ஆகிய ஸ்ரீபாஷ்யக்காரரின் இனிமையான சொற்களிலும், அவரது சிறந்த குணத்திலும் எங்கள் மனதை வைத்தோம். இவற்றைவிட வேறு சாஸ்திரங்களையும் கர்மங்களையும் எண்ணமாட்டோம்.

நீளவந்து இன்று விதிவகையால் நினைவொன்றிய நாம்
மீளவந்து இன்னும் வினை உடம்பு ஒன்றி விழுந்துழலாது
ஆளவந்தார் எனவென்று அருள் தந்து விளங்கிய சீர்
ஆளவந்தார் அடியோம் படியோம் இனி அல்வழக்கே

**பொருள்** - நீண்ட காலமாக சம்ஸாரம் என்றும் பிடியில் சிக்கியபடி உள்ளோம். நாம் இதற்குப் பிறகும் கர்மம் காரணமாக வெறும் மற்றொரு உடலைப் பெற்று வருத்தமடையாதபடி நம்மைக் காக்க ஆளவந்தார் அவதரித்தார். இப்படிப்பட்ட ஆளவந்தாரின் திருவடிகளில் நாம் அடிபணிந்தோம். அவர் தனது வாதங்கள் மூலம் மற்ற மதத்தவர்களை வென்று நம்மையும் காத்தார். இனி நாம் அவருடைய நூல்கள் அல்லாமல் வேறு எந்த சாஸ்திரங்களையும் படிக்கமாட்டோம்.

காளம் வலம்புரியன்ன நற்காதல் அடியவர்க்குத்
தாளம் வழங்கித் தமிழ் மறை இன்னிசை தந்த வள்ளல்
மூளும் தவநெறி மூட்டிய நாதமுனி கழலே
நாளும் தொழுது எழுவோம் நமக்கு ஆர் நிகர் நானிலத்தே

**இதன் பொருள் -** திருச்சின்னம் மற்றும் சங்கு போன்ற தூய்மையான குரல் உடைய கீழகத்தாழ்வான் மற்றும் மேலகத்தாழ்வான் ஆகிய இருவரும் நாதமுனிகளின் சீடர்கள் ஆவர். சிறந்த பத்தியுடன் தன்னை வணங்கி நின்ற இவர்கள் இருவருக்கும் தாளம் மற்றும் கீதங்களை நாதமுனிகள் உபதேசித்தார். இதன் மூலம் அவர்கள் பல்லாண்டு காலம் மறைந்திருந்த நம்மாழ்வாரின் இனிமையான திருவாய்மொழியை பாடும் விதத்தை உபதேசித்தார். பக்தி மற்றும் பரபக்தி என்னும் பாதையில் இந்த உலகத்தை இயங்கவைத்தார். இப்படிப்பட்ட நாதமுனிகளின் திருவடிகளை நாம் என்றும் பணிவோம். இதனால் நான்கு திசைகளிலும் நமக்கு ஈடானவர்கள் யார் உள்ளனர்?

குருபரம்பராஸாரம் ஸம்பூர்ணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## 1. உபோத்காத அதிகாரம்

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book:yahoo.co.in)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# 1. உபோத்காத அதிகாரம்

ஆபகவத்த: ப்ரதிதாம் அநத்யாம் ஆசார்ய ஸந்ததிம்
மநஸி மம யத் ப்ரஸாதாத் வஸதி ரஹஸ்ய த்ரயஸ்ய ஸார: அயம்

**பொருள்** - எந்தவிதமான தோஷங்கள் அற்றதும், மிகவும் ப்ரஸித்தமானதும், பகவான் வரை நீடித்துள்ளதும் ஆகிய குரு பரம்பரையை நான் வணங்குகிறேன். அவர்கள் அருளால் என் மனதில், மூன்று ரஹஸ்யங்களின் (திருவஷ்டாக்ஷரம், த்வயம், சரம ச்லோகம்) உட்கருத்துக்கள் எப்போதும் நிலைத்திருக்கின்றன.

கர்மம் ப்ரஹ்ம ஆத்மகே சாஸ்த்ரே கௌதஸ்குத நிவர்த்தகாந்
வந்தே ஹஸ்திகிரி ஈசஸ்ய வீதீசோதக கிங்கராந்

**பொருள்** – கர்மகாண்டம் மற்றும் ஞானகாண்டம் என்ற இரு பகுதிகளை உடைய வேதசாஸ்திரங்களின் விஷயத்தில் ஒரு சிலர், "ஏன், எதற்கு" என்று வாதம் செய்து வந்தனர். இவர்களை வென்ற அப்புளாரை வணங்குகிறேன். இதன் மூலம் இவர், ஹஸ்திகிரியின் நாதனான ஈச்வரனை அடையும் தெருவை (மார்க்கத்தை) தூய்மைப்படுத்தினார்.

ஆளும் அடைக்கலம் என்று எம்மை அம்புயத்தாள் கணவன்
தாளிணை சேர்ந்து எமக்கும் அவை தந்த தகவுடையார்
மூளும் இருட்கள் விள்ள முயன்று ஓதிய மூன்றின் உள்ளம்
நாளும் உகக்க இங்கே நமக்கு ஓர் விதி வாய்க்கின்றதே

**பொருள்** - தாமரை மலரில் உதித்த மஹாலக்ஷ்மியின் நாயகனான எம்பெருமானின் இணைந்த திருவடிகள் மட்டுமே தங்களைக் காக்கும் என்றும், அவன் மட்டுமே தங்கள்


email : sridharan_book@yahoo.com

அடைக்கலம் என்றும் அறிந்து கொண்டு நமது ஆசார்யர்கள் செய்தது என்னவென்றால் - அவனது திருவடிகளையே தங்கள் உபாயமாகப் பற்றி, அந்தத் திருவடிகளையே நமக்கும் உபாயமென்று காட்டினர். இப்படிப்பட்ட ஆசார்யர்கள், நமது அறியாமை என்னும் இருளை விலக்க, மூன்று ரஹஸ்யங்களின் உட்பொருளை நமக்கு அளித்தனர். ரஹஸ்ய த்ரயத்தின் உட்கருத்தை அன்றாடம் அனுபவித்து மகிழவல்ல ஒப்பற்ற பாக்கியம், இந்த உலகில், நமது ஆசார்ய பரம்பரை மூலம் கிட்டியுள்ளதே!

மணிவர இவ சௌரே: நித்யஹ்ருத்ய: அபி ஜீவ:
கலுஷமதி: அவிந்தந் கிங்கரத்வ ஆதிராஜ்யம்
விதி பரிணதி பேதாத் வீக்ஷித: தேந காலே
குருபரிஷத் உபஜ்ஞாம் ப்ராப்ய கோபாயதி ஸ்வம்

**பொருள்** - எம்பெருமானுக்கு மிகவும் ப்ரியமான கௌஸ்துபமணி போன்று, ஜீவனும் எம்பெருமானுக்கு மிகவும் பிரியமானவனே ஆவான். ஆனால், தனது அறியாமையால் அவனது புத்தி கலங்கி, பரம்பொருளுக்குச் செய்யவேண்டிய கைங்கர்யத்தை கைவிடுகிறான். ஆயினும் அவன், ஒரு காலகட்டத்தில், எம்பெருமானின் கடாக்ஷத்தின் மூலம், அந்த ஜீவன் தனது ஸ்வரூபம் பற்றிய ஞானம் (தான் அவனுக்கு அடிமை, அவனுக்காக மட்டுமே உள்ளேன் என்ற அறிவு) பெற்றுவிடுகிறான். இந்த நிலை அந்த ஜீவனுக்கு, அவனது ஆசார்யர்களின் உபதேசங்களால் கிட்டுகிறது. இதனால் அவன் தன்னைக் காத்துக் கொள்கிறான்.

## கைங்கர்யம் செய்வதற்கான ஜீவனின் தகுதிகள்

**மூலம்** - ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரனுக்கு ஸ்ரீகௌஸ்துப ஸ்தானீயனாய்க் கொண்டு ஹ்ருதயங்கமனாய் குமாரனென்றும், புத்ரனென்றும், சிஷ்யனென்றும், ப்ரேஷ்யனென்றும், சேஷபூதனென்றும், தாஸபூதனென்றும், அவ்வோ சாஸ்த்ரங்களிலே ப்ரதிபன்னனாயிருக்கும் ஜீவாத்மா.

**விளக்கம் -** ஜீவாத்மா, பரம்பொருளுக்கு அவனுடைய கௌஸ்துபமணி போன்று மிகவும் ப்ரியமானவன் என்று பல சாஸ்திரங்களும் கூறுகின்றன. ஜீவாத்மா பரம்பொருளின் இளவரசன் என்றும், புத்திரன் என்றும், சிஷ்யன் என்றும், வேலையாள் என்றும், அவனுக்காக மட்டுமே உள்ளவன் என்றும், அடிமை என்றும் கூறப்பட்டான்.

**மூலம் -** இவன் தனக்கு வகுத்த சேஷியாய், அயர்வறும் அமரர்கள் அதிபதியாய், உயர்வற உயர்நலம் உடையவனாய், நமக்கும் பூவின்மிசை நங்கைக்கும் இன்பனாய், ஞாலத்தார் தமக்கும் வானத்தவர்க்கும் பெருமானான ஸர்வேச்வரன்

**விளக்கம் -** இந்த ஜீவனுக்கு எஜமானனாகவும், அறியாமை என்ற இருள் சூழாமல் உள்ள நித்யசூரிகளின் அதிபதியாகவும், தன்னைக்காட்டிலும் உயந்தவை என்று ஏதும் இல்லாத கல்யாண குணங்கள் கொண்டவனாகவும், தனது திருமார்பில் வீற்றிருப்பவளான தாமரையில் பொருந்திய மஹாலக்ஷ்மியை எந்த அளவு விரும்புகிறானோ அந்த அளவிற்கு நம்மையும் விரும்புபவனாகவும், இந்த உலகில் உள்ளவர்கள் மற்றும் அந்த உலகில் உள்ளவர்கள் ஆகிய அனைவருக்கும் நாதனாகவும் ஸர்வேச்வரன் உள்ளான்.

**மூலம் –** “வைகுண்டே து பரே லோகே ஸ்ரீயா ஸார்த்தம் ஜகத்பதி: ஆஸ்தே” என்றும், “ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப” என்றும் சொல்லுகிறபடியே பெரியபிராட்டியாரோடே கூடத் தெளிவிசும்பிலே, “யா அயோத்யா இதி அபராஜிதா இதி விதிதா நாகம் பரேண ஸ்திதா” என்கிறபடியே அயோத்யாதி சப்த வாச்யமான கலங்காப் பெருநகரிலே, “ஸஹஸ்ரஸ்தூணா”தி வாக்யங்களாலே ஓதப்படுகிற திருமாமணி மண்டபத்திலே, கௌஷீதகி ப்ராஹ்மணாதிகளிலே ஓதப்படுகிற பர்யங்க விசேஷத்திலே, “சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்” என்றும், “நிவாஸசய்யாஸந” என்றும் சொல்லுகிறபடியே ஸர்வதேச – ஸர்வகால – ஸர்வவஸ்தோசித் – ஸர்வவித - கைங்கர்யங்களையும், ஸர்வவித சரீரங்களாலே அனுபவித்துச் சேஷத்வமே தனக்கு நிரூபகமாகையாலே சேஷன் என்றே திருநாமமாகும்படியான திருவனந்தாழ்வானாகிற திருப்பள்ளி மெத்தையிலே, வானிளவரசாய்க் கொண்டு தான் வாழ்கிற வாழ்வை ஸர்வாத்மாக்களும் அனுபவித்து க்ருதார்த்தராக வேணும் என்று ஸஹ்ருதனாயிருக்கிற

**விளக்கம்** - (பரம்பொருள் எவ்விதம் உள்ளான் என்று கூறப்படுகிறது) லைங்கபுராணம் - வைகுண்டே து பரே லோகே ஸ்ரீயா ஸார்த்தம் ஜகத்பதி: ஆஸ்தே - அனைத்து உலகங்களின் எஜமானனாக உள்ள ஸர்வேச்வரன், வைகுண்டத்தில் மஹாலக்ஷ்மியுடன் பொருந்தியுள்ளான் - என்று கூறியது. திருவாய்மொழியில் (4-9-10) - ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப - அழகான கைவளையல்கள் அணிந்தவளான மஹாலக்ஷ்மியுடன் நீ நிற்க - என்று கூறினார். இவ்விதமாகப் பெரியபிராட்டியுடன் கூடியவனாக உள்ளான். (எங்கு உள்ளான் என்று கூறப்படுகிறது) ஸ்ரீகுணரத்நகோஸம் (23) - யா அயோத்யா இதி அபராஜிதா இதி விதிதா நாகம்பரேண ஸ்திதா - வைகுண்டத்திற்கும் அப்பால் அயோத்யா என்றும், எவராலும் வெல்ல இயலாத அபராஜிதா என்றும் கூறப்படும் நகரத்தில் - என்பதற்கு ஏற்ப அயோத்யா என்று கூறப்படும் மாற்றம் அடையாத பெருநகரில் உள்ளான். தலவகாரோபநிஷத் - ஸஹஸ்ரஸ்தூணே - ஆயிரம் தூண்கள் உடைய - என்று கூறும் திருமாமணி மண்டபத்தில் அமர்ந்துள்ளான். அந்த மண்டபத்தில் கௌஷீதகி ப்ராஹ்மணத்தில் கூறுவது போன்று (4-1-5) - பர்யங்க - உயர்ந்த ஸிம்ஹாஸநத்தில் - அமர்ந்துள்ளான். (அத்தகைய ஸிம்ஹாஸநம் எது என்று அடுத்து கூறுகிறார்) முதல் திருவந்தாதி (53) - சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம் - என்னும்படி ஆதிசேஷன் எம்பெருமான் நடந்தால் குடையாகவும், அவன் அமர்ந்தால் அமரும் ஸிம்ஹாஸநமாகவும் உள்ளான் – என்றும், ஸ்தோத்ரரத்னம்(40) - நிவாஸசய்யாஸந - அவனது இருப்பிடமாகவும், ஆசனமாகவும் உள்ளான் - என்று கூறப்படும் ஆதிசேஷன் என்னும் உயர்ந்த ஸிம்ஹாஸநத்தில் அமர்ந்துள்ளான். இந்த ஆதிசேஷன் எம்பெருமான் எங்கு சென்றாலும், எப்போது சென்றாலும், எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் அந்தந்த நிலைக்கேற்ப தனது உருவம் கொண்டு எம்பெருமானுக்கு அனைத்துப் பணிவிடைகளையும் செய்கிறான். ஆக அவன் எம்பெருமானின் அனைத்து நிலைகளிலும் உதவியபடி, தனக்கென்று எந்த எண்ணமும் இல்லாமல், பகவானுக்கு மட்டுமே அடிமையாக உள்ளதான் சேஷன் எனப்படுகிறான். இப்படிப்பட்ட ஆதிசேஷன் என்ற படுக்கையில் உள்ளபடி அனைத்தையும் ஆட்சி செய்தபடி உள்ளான். இவ்விதம் தான் கொண்டுள்ள நிலையான வாழ்வு போன்று, அனைத்து ஆத்மாக்களும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவனாகவே எம்பெருமான் உள்ளான்.

## ஜீவன் தனது ஸ்வரூபம் இழத்தல்

**மூலம்** - இருப்பு அடியாக நித்யானுபவம் பண்ணுகிற அந்தமில் பேரின்பத்தடியரான நித்யஸூரிகளோடு ஒக்கத் தானும் ஸ்வாமி கைங்கர்யத்துக்கு ஸ்வரூப யோக்யதையாலே இட்டுப் பிறந்து வைத்து அநாதிமாயையாலே ஸுப்தனாய், "அநேக ஜன்ம ஸாஹஸ்ரீம் ஸம்ஸார பதவீம் வ்ரஜந் மோஹ ச்ரம ப்ரயாதோ அஸௌ வாஸநா ரேணு குண்டித:" என்கிறபடியே ப்ரக்ருதியாகிற பாழிலே விழுந்து ஓடியோடிப் பல பிறப்பும் பிறந்து தட்டித்தாவற்று அழுக்கடைந்து, ஒளி அழிந்தபடியாலே தத்வ ஹித விஷயமாய் யதாவத் ப்ரகாசா ரஹிதனாய் நிற்க;

**விளக்கம்** - இவ்விதம் ஜீவன் தனது ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி, எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்வதில் எல்லையற்ற ஆனந்தம் கொண்ட நித்யசூரிகளுக்கு இணையாகத் தானும் கைங்கர்யம் செய்யும் தகுதி பெற்றவனே ஆவான். ஆனால் இந்த ஜீவன் தொடக்கமற்ற மாயையின் பிடியில் சிக்கிவிடுகிறான். இதனால் ப்ரக்ருதி என்ற பாலை நிலத்தில் விழுந்த விதை போன்று உள்ளான். பலப்பல பிறவிகளைத் தொடர்ந்து எடுத்தபடி உள்ளான். தான் எதற்காக உள்ளோம் என்ற எண்ணமே அவனுக்கு இருப்பதில்லை. தனக்கு ஆறுதலும் ஆதரவும் இல்லாமல் தவிக்கிறான். தனது ஸ்வரூப ஒளியை இழந்து, உண்மையான ஞானத்தையும் இழக்கிறான். இதனை ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-7-19) - அநேக ஜன்ம ஸாஹஸ்ரீம் ஸம்ஸார பதவீம் வ்ரஜந் மோஹ ச்ரம ப்ரயாதோ அஸௌ வாஸநா ரேணு குண்டித: - பல ஆயிரம் பிறவிகள் எடுத்து, ஸம்ஸாரம் என்ற வழியில் சிக்குண்டு, (தான் யாரென்று அறியாதபடி) மயக்கத்தையும் அடைந்து, அதனால் சிரமம் அடைந்து, கர்மவாசனை என்னும் புழுதி சூழ, ஞானம் இழந்து ஜீவன் உள்ளான் – என்கிறது.

## ராஜகுமார உதாரணம்

**மூலம்** - ஒரு ராஜா அந்தப்புரத்துடனே வேட்டைக்குச் சென்று விளையாட்டிலே ஸக்தனான அளவிலே வார்த்தை அறிவதற்கு முன்பே வழி தப்பின ராஜகுமாரன்

எடுத்தார்கையிற் பிள்ளையாய் ஏதேனும் ஒரு குறிச்சியிலே வளர, அவன் தனக்கில்லாத சபரத்வாதிஜாதிகளை ஏறிட்டுக் கொண்டு,

**விளக்கம்** - ஒரு நாட்டின் ராஜா, தனது அந்தப்புர நாயகிகளுடன் வேட்டைக்குப் புறப்பட்டான். அவன் தனது வேட்டையில் ஆழ்ந்து, தன்னையே மறந்தான். அந்த ராஜாவின் புத்ரனான ராஜகுமாரன், தான் யார் என்பதே அறியாமல், சொற்கள் கூடப் பேசத் தெரியாத பருவத்தில் உள்ளவன் ஆவான். அந்த ராஜகுமாரன் தனது வழியைத் தவறவிட்டான். வழி தெரியாமல் அலைந்து கொண்டிருந்த அவனை, அந்தக் காட்டிலுள்ள வேடர்கள் அழைத்துக் கொண்டுபோய், தங்கள் இருப்பிடத்தில் வளர்த்து வந்தனர். அவனும் அங்கு (அவனுடைய அரசபிறவிக்கு) தனக்கு ஏற்காத வேடுவ வாழ்க்கை வாழ்ந்து வந்தான்.

**மூலம்** – "மாதா அபி ஏகா பிதா அபி ஏக: மம தஸ்ய ச பக்ஷிண: | அஹம் முநிபி: ஆநீத: ஸ ச ஆநீத: கவாசனை: || அஹம் முநீநாம் வசனம் ச்ருணோமி கவாசனானாம் ஸ வச: ச்ருணோதி | ப்ரத்யக்ஷம் ஏதத் பவதா அபி த்ருஷ்டம் ஸம்ஸர்கஜா தோஷகுணா பவந்தி" என்கிறபடியே வேடுவச்சேரியிலே கிளிபோலே அவர்கள் பழக்கி வைத்த பாசுரமே தனக்குப் பாசுரமாய், அவர்களுக்குப் பிறந்தவர்களைப் போலே அவர்கள் ஊணும் வ்ருத்தியுமே தனக்கு ஊணும் வ்ருத்தியுமாய், தன் பிறவிக்கு உரிய போகங்களில் ஆசார ஸம்ஸ்காராதிகளிலும் புதியது உண்ணாதே ராஜபோக விருத்தங்களான ஜுகுப்ஸித விஷயங்களிலே தனக்குப் பேறுமிழவும் ஹர்ஷசோகங்களுமாய், ராஜகுமாரனென்று தன்னடி அறிவார் சில ரிஷிப்ராயர் உண்டானாலும் அவர்களுக்குக் கிட்டவொண்ணாத அவஸ்தையையுடையவனாய் இப்படி ப்ராந்திஸித்த சபரத்வாத்யவஸ்தையோடே யாவஜ்ஜீவனம் நடக்கில் உத்தர ஜன்மங்களிலும் ஒரு யோக்யதை பெற விரகில்லாதபடியாய்த் தட்டுப்பட்டு நிற்குமாபோலே.

**விளக்கம்** - (ஒரு குலத்தில் பிறந்த ஒருவன் மற்றொரு குலத்தில் தொடர்ந்து இருந்தால் தனது தன்மைகளை மறந்து, தான் இப்போது உள்ள குலத்தினர் போன்று தன்னை மாற்றிக் கொள்வானா என்ற ஐயம் ஏற்படலாம். இதற்கான விடையை விஷ்ணு புராண வரிகள் மூலம் உணர்த்துகிறார்). ஒரு கிளிக்குப் பிறந்த இரு கிளிகள் பற்றிய நிகழ்ச்சி இதுவாகும். ஒரு கிளியானது முனிவர்களாலும் மற்றொரு கிளியானது பசுமாம்ஸம்

உண்பவர்களிடம் சென்று வளர்ந்தன. அவற்றில் முனிவர்களிடம் வளர்ந்த கிளி - மாதா அபி ஏகா பிதா அபி ஏக: மம தஸ்ய ச பக்ஷிண: | அஹம் முநிபி: ஆநீத: ஸ ச ஆநீத: கவாசனை: || அஹம் முநீநாம் வசனம் ச்ருணோமி கவாசனானாம் ஸ வச: ச்ருணோதி | ப்ரத்யக்ஷம் ஏதத் பவதா அபி த்ருஷ்டம் ஸம்ஸர்கஜா தோஷகுணா பவந்தி - எனக்கும் அந்தக் கிளிக்கும் ஒரே தாய், ஒரே தந்தை. நான் இந்த முனிவர்களால் இங்கு கொண்டு வரப்பட்டேன். அந்தக் கிளியானது மாட்டின் இறைச்சி உண்பவர்களால் எடுத்துச் செல்லப்பட்டது. நான் அன்றாடம் இந்த முனிவர்களின் சொற்களைக் கேட்டபடி உள்ளேன். அந்தக் கிளியோ வேடர்களின் பேச்சைக் கேட்டபடி உள்ளது. நான் பேசும் பேச்சிற்கும், அந்தக் கிளி பேசும் பேச்சிற்கும் உள்ள வேறுபாட்டினை நீ உணர்ந்திருக்கலாம். ஆக நல்லொழுக்கமும் தீயொழுக்கமும் சேர்க்கையாலே வருகிறது - என்று கூறியது. வேடர்களால் வளர்க்கப்பட்ட அந்தக் கிளி போன்றே இந்த ராஜ குமாரனும் அவர்கள் தனக்குக் கற்றுக் கொடுத்த பாஷையே தன்னுடைய பாஷையாகவும், அவர்கள் பேசுவது போன்றே தானும் பேசியும், அவர்களுக்குப் பிறந்தவர்கள் என்ன உணவு உட்கொண்பாரோ அதனையே தானும் உண்டபடியும் வாழ்ந்து வந்தான். தனது ராஜபோகங்கள், ஆசாரங்கள், ஸம்ப்ரதாயம் முதலியவற்றை அந்த ராஜகுமாரன் அறியவில்லை. ஒரு ராஜகுமாரன் எப்படி நடந்து கொள்வானோ அதற்கு மாறாக இவனது நன்மை-தீமைகள், இன்ப-துன்பங்கள் இருந்து வந்தன. அந்தக் காட்டில் இருந்த ஒரு சில முனிவர்களுக்கு, இவன் ஒரு ராஜகுமாரன் என்று தெரிந்திருந்தபோதிலும், அவர்கள் இவனைத் திருத்த முயன்றபோதும், இவன் அவர்களுக்கு அருகில் வராமலேயே இருந்தான். மற்றொரு பிறவி எடுக்கும்போது அதிலாவது உன்னதமான ஒரு பிறவியை எடுக்கவல்ல முயற்சி அற்றவனாகவே இருந்து வந்தான்.

**மூலம்** - இவனும் தேஹாத்மாபிமானாதிகளாலே தன்னுருக்கொடுத்து வேற்றுருக் கொண்டு நிற்க, அந்த ராஜகுமாரனுடைய லக்ஷணாதிகளாலே ஜாதி விசேஷத்தை அறிவார் சில தார்மிகர் ஒரு விரகாலே இவனை மீட்கப்பெற்று அபிமானிக்க இவனுக்கு வந்தேறியான ஜாத்யந்தராபிமானத்தை வழிவிலக்கி த்ருஷ்டாத்ருஷ்ட ஸம்ஸ்காராதிகளாலே உத்தரோத்தர போக ததுபாயங்களுக்கு யோக்யனாம்படி விரகு செய்து, இவனுக்கு ஸ்வஜாத்யனுரூபமான குணவ்ருத்தங்களைத் தங்கள் உபதேச அனுஷ்டானங்களாலே குடிபுகரவிட்டு, இவனுக்கு அநேக தோஷ த்ருஷ்டங்களான சபராதி போக்ய க்ஷுத்ர விஷயங்களை அருவருப்பித்து, ராஜாதி போக்யங்களான

அதிசயித புருஷார்த்தங்களை ஆய்ந்து எடுக்கவல்ல அளவுடைமையை உண்டாக்கி நிறுத்துமாபோலே.

**விளக்கம்** - தனது உண்மையான ஸ்வபாவத்தை இழந்து, வேறு ஸ்வபாவம் எடுத்த ராஜகுமாரனின் கதி இவ்வாறு ஆனது. இது போன்றே ஜீவன், "தான் உள்ள உடலும், தானும் ஒன்றே ஆகும்" என்ற மயக்கம் காரணமாக தன்னுடைய ஸ்வபாவத்தை இழக்கிறான். இந்த ராஜகுமாரனின் தேஜஸ் போன்ற லக்ஷணங்கள் மூலம் அவனுடைய அரச பிறப்பை உணர்ந்த சில மஹான்கள் (தார்மிகர் என்றார்), அவனை ஏதேனும் ஒரு உபாயம் செய்து மீட்க மனம் கொண்டனர். அவன் தன்னை வேடுவர்களில் ஒருவனாக எண்ணியிருந்த தவறான எண்ணத்தை முதலில் மாற்றினர். அதன் பின்னர் அவர்கள் மூலமாக சரியானபடி நீராடும் வழக்கம், ஆடை உடுத்தும் வழக்கம், ஆசாரம் போன்றவைகளை அறிந்தான். இதன் மூலம், ராஜகுமாரன் ஒருவன் அனுபவிக்கத் தகுந்த விஷயங்களைத் தானும் அனுபவிக்கும் தகுதிகளைப் பெற்றான். அந்த விஷயங்களை அனுபவிக்கும் உபாயங்களையும் அறிந்தான். அரசகுமாரனுக்கு ஏற்ற உருவம், குணங்கள் என்ன என்பதை அவனுக்கு உபதேசங்கள் மூலமாகவும் எடுத்துக்காட்டுக்கள் மூலமாகவும் உணர்த்தினர். இதன் மூலம் அவன் தான் கைக்கொண்டிருந்த தாழ்வான வாழ்க்கையை வெறுக்கும்படியும், அவனுக்கே அவை அறுவருப்பாக உள்ளபடியும் செய்தனர். இதன் மூலம் அவன் ராஜகுமார வாழ்க்கைக்கு ஏற்ற ஞானம் பெறும்படிச் செய்தனர், உயர்ந்த புருஷார்த்தங்களை தேர்ந்தெடுக்கும் அறிவையும் புகட்டினர்.

**மூலம்** - இவ்வாத்மாவுக்குச் சில தார்மிகர் பித்ராதி முகேந நொடித்து, "புமாந் ந தேவோ ந நரோ ந பசுர் ந ச பாதப: | சரீராக்ருதிபேதா: அஸ்து பூபைதே கர்மயோநய:" என்கிறபடியே, உருவியந்தவிந்நிலைமையை உணர்த்தி, அதுக்கு அநுரூபமான புருஷார்த்த ததுபாயங்களிலே அந்வயிக்கலாம்படி விரகு செய்து, உடம்பு தின்றார்படியன்றிக்கே ஒரு வெளிச்சிறப்புடையார்க்கு வரும் குணவ்ருத்தங்களை உண்டாக்கி, ஹேயோபாதேய விபாக க்ஷமனுமாக்கி நிறுத்தினவளவிலே,

**விளக்கம்** - இந்த ஜீவனுக்கு அவனது பித்ருக்கள் மூலம் சில நல்லோர்களின் (தார்மிகர்) தொடர்பு கிட்டுகிறது. அவர்கள் அந்த ஜீவனுக்குக் கீழே உள்ள விஷ்ணு புராணக் கருத்தை உணர்த்துகின்றனர். அந்த விஷ்ணு புராண வரியானது (2-13-98) - புமாந் ந

தேவோ ந நரோ ந பசுர் ந ச பாதப: சரீராக்ருதிபேதா: அஸ்து பூபைதே கர்மயோநய: - ஜீவன் என்பவன் தேவனும் அல்லன், மனிதனும் அல்லன், விலங்கும் அல்லன், மரமும் அல்லன். உடல் உருவங்களிலும் அமைப்பிலும் உள்ள இந்த வேறுபாடுகள் அவரவர் கர்மங்களினால் உண்டானவையாகும். இது போன்ற பல வரிகளின் மூலம் அவனுக்கு (ஜீவனுக்கு) உடலைக் காட்டிலும் வேறுபட்டது ஜீவன் என்று உணர்த்துகின்றனர். அதன் பின்னர் ஜீவனின் ஸ்வரூபத்திற்கு ஏற்ற புருஷார்த்தங்கள் என்ன என்று உணர்த்தி, அந்தப் புருஷார்த்தங்களை அடையும் உபாயங்களையும் உபதேசிக்கின்றனர். அவனுக்கு - சிறந்த ஞானம் உள்ளவர்களிடம் மட்டுமே காணப்பட்டும், ஆத்மா என்பது உடலைக் காட்டிலும் வேறானது என்று அறியாதவர்களிடம் (இவர்களை உடம்புதின்றார் என்று கூறினார்) இல்லாதவையும் ஆகிய உயர்ந்த குணங்களை ஏற்படுத்துகின்றனர். மேலும் அவனுக்கு எதனை ஏற்க வேண்டும், எதனை விடவேண்டும் என்ற விவேகம் வளரும்படிச் செய்கின்றனர்.

**மூலம் -** இவனுடைய அடியுடைமையையும் சில தார்மிகரடியாக வந்த யோக்யதையும் அளவுடைமையையும் நேராகக் கண்டு பரமகாருணிகனான பரம சேஷியாலே ப்ரேரிதராய்த் தாங்களும் காருணிகோத்தமராயிருப்பார் சில தேசிகர், "ஈச்வரஸ்ய ச ஸௌஹார்த்தம் யத்ருச்சா ஸுக்ருதம் ததா | விஷ்ணோ: கடாக்ஷம் அத்வேஷம் ஆபிமுக்யம் ச ஸாத்த்விகை: || ஸம்பாஷணம் ஷடேதாநி ஹி ஆசார்ய ப்ராப்தி ஹேதவ:" என்கிறபடியே நேர்பட்டு.

**விளக்கம் -** அந்த ராஜகுமாரன் நன்மையின் இருப்பிடமாக மாறியுள்ளதையும், அவனுக்குச் சில நல்லோர்கள் செய்த நன்மைகளையும், அவனது அறிவையும், கருணையே வடிவமான பரம்பொருளால் தூண்டப்பட்ட சில ஆசார்யர்கள் காண்கின்றனர். இவர்கள் பரம்பொருளைப் போன்றே கருணை உள்ளவர்கள் ஆவார்கள். இப்படிப்பட்ட ஆசார்யர்களின் தொடர்பு எவ்விதம் ஏற்படும் என்றால், "ஈச்வரஸ்ய ச ஸௌஹார்த்தம் யத்ருச்சா ஸுக்ருதம் ததா | விஷ்ணோ: கடாக்ஷம் அத்வேஷம் ஆபிமுக்யம் ச ஸாத்த்விகை: || ஸம்பாஷணம் ஷடேதாநி ஹி ஆசார்ய ப்ராப்தி ஹேதவ: - பகவானின் அன்பு, புண்ணிய கர்ம பலன், பகவானின் கருணைப் பார்வை, எம்பெருமானிடம் வெறுப்பு இல்லாமை, எம்பெருமானைப் பற்றி அறிந்துகொள்ளும் ஆர்வம், நல்லவர்களுடன்(ஸத்வ குணம்

உள்ளவர்களுடன்) உரையாடுதல் ஆகிய ஆறும் ஒருவனை நல்லதோர் ஆசார்யனிடம் கொண்டு சேர்க்கும் காரணங்களாகும்", என்பதன் மூலம் ஆகும்.

**மூலம்** - அந்த ராஜகுமாரனுக்குச் சில ராஜாந்தரங்கர் நேர்பட்டு பிறவியை உணர்த்தி மேலுள்ள ப்ரியதமங்களையும் ஹிததமங்களையும் தெளிவித்து ஒரு விரகாலே அந்த ராஜாவுக்கும் ராஜகுமாரனுக்கும் பரஸ்பர ஸம்ச்லேஷாகாங்க்ஷையை உத்தம்பிக்குமாப் போல, இவனுக்கும் "நாயம் தேவோ ந மர்த்யா வா ந திர்யக் ஸ்தாவரோ அபி வா | ஞாநாநந்தமயஸ்த்வாத்மா சேஷோ ஹி பரமாத்மந:" என்றும், "தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹி ஆத்மந: பரமாத்மந:" என்றும் ப்ரமாணங்கள் சொல்லுகிறபடியே, "பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகுமங்காதுஞ் சோராமே ஆள்கின்ற" செங்கோலுடைய ஸ்ரீய:பதி நாராயணனுடனே குடல் துவக்கைத் தெளிவித்து, இவனுக்கு தத் ப்ராப்த்யுபாயங்களிலே முயன்று இவன் பெறுகிற பேறே தங்களுக்குப் பொன்னுலகையும் புவனி முழுவதையுமாளுகையாக உகந்து, அதடியாக அன்று ஈன்ற கன்றுக்கு இரங்கிச் சுரக்கும் தேனுவைப் போலே இத்தேசிகர் இவ்வாத்மாவுக்கு அஜ்ஞான ஸம்சய விபர்யயங்கள் தீரவேண்டுமென்று மிகுந்து குறைவறச் சுரக்கும் பாசுரங்களைக் கொண்டு "தத்த்வேந யச்சிதசிதீச்வர தத் ஸ்வபாவ" இத்யாதிகளிற்படியே ஈச்வரனுடையவும் ஈசிதவ்யங்களுடையவும் ஸ்வரூப ஸ்வபாவ ஸம்பந்தங்களும், இவற்றின் த்யாஜ்யோபாதேயங்களான இவற்றினுடைய உபாயங்களும், இவற்றின் கதி ப்ரகாரங்களும், உக்தாநுக்தங்களான மோக்ஷ விரோதிகளுமாகிற இவ்வர்த்தங்கள் முமுக்ஷுவான இவ்வத்மாவுக்கு ஜ்ஞாதவ்யங்கள். இவ்வர்த்தங்கள் எல்லாம் அத்யாத்ம விஷய சப்தராசியில் ஸாரதமமான ரஹஸ்யத்திலே ப்ரதிதந்த்ர ஸாரோத்தாரேண ஸங்க்ரஹிக்கப்படுகின்றன.

**விளக்கம் -** அவர்கள் ராஜகுமாரனுக்கு அவனுடைய பிறப்பைப் பற்றிக் கூறி, அவனுடைய பிறவிக்கு ஏற்ற நன்மை எது என்றும், அதனை அடையும் உபாயங்கள் என்ன என்றும் உணர்த்துகின்றனர். மேலும் அவர்கள் ராஜாவும் ராஜகுமாரனும் இணைவதற்காக உள்ள அனைத்து வழிகளையும் முயல்கின்றனர். இதனைப் போன்றே ஜீவனுக்கும் ஆசார்யர்கள் மூலமாக நடப்பதை அடுத்துள்ள ப்ரமாணங்கள் கூறுகின்றன: நாயம் தேவோ ந மர்த்யா வா ந திர்யக் ஸ்தாவரோ அபி வா | ஞாநாநந்தமயஸ்த்வாத்மா சேஷோ ஹி பரமாத்மந: - ஜீவன் என்பவன் தேவனும் அல்லன், மனிதனும் அல்லன், விலங்கும் அல்லன், மரமும்

அல்லன். அவன் ஞானம் மற்றும் ஆனந்தமே தனது ஸ்வரூபமாக உடையவன். அவன் பரம்பொருளுக்கு அடிமையாக உள்ளான். அவனை அண்டியே உள்ளான். அவனது கைங்கர்யத்திற்காகவே உள்ளான் (சேஷன்) – என்றும், மந்த்ரராஜபதம் - தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹி ஆத்மந: பரமாத்மந: - (சிவன் கூறுவது) பரம்பொருளின் ஸ்வரூபம் காரணமாக ஜீவன் அவனது அடிமையாக உள்ளான் – என்றும் உள்ளது காண்க.

நாச்சியார் திருமொழி (11-3) - பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்கு ஆதும் சோராமே ஆள்கின்ற செங்கோலுடைய (திருவரங்கச்செல்வனார்) - என்னும்படி உள்ள மஹாலக்ஷ்மியின் நாயகனான நாராயணனுக்கும் ஜீவனுக்கும் இடையே உள்ள உறவை (பிறப்பால் வந்த தொடர்பு) ஆசார்யர்கள் உபதேசிக்கின்றனர். அந்த ஆசார்யர்கள், ஜீவன் பரம்பொருளை அடைதற்குப் பெரிதும் முயல்வர். இவ்விதம் அந்த ஜீவன் பெருகின்ற பேறு மூலம் தங்களுக்கே நித்யவிபூதியும், இந்த உலகம் முழுவதும் கிட்டியதாக எண்ணுவர். அன்று பிறந்த கன்றுக்குப் பசுவானது தானே பாலைச் சுரப்பது போல், அவன் மீது அன்பு வைக்கின்றனர். அவனுடைய அஜ்ஞானம், சந்தேகம் மற்றும் தவறான ஞானம் (தேஹமே ஆத்மா என்ற எண்ணம் போன்றவை) ஆகியவற்றை, மிகவும் அதிகமாகவும் குறைவாகவும் இல்லாமல் உள்ள தங்கள் உபதேசங்கள் மூலம் விலக்குகின்றனர். ஆளவந்தார் ஸ்தோத்ரரத்னத்தில் (4) - தத்த்வேந யச்சிதசிதீச்வர தத்ஸ்வபாவ - எந்த பராசரர் சித் அசித் ஈச்வரன் ஆகியவற்றைப் பற்றிக் கூறுகிறாரோ – என்று கூறுவது போன்று, ஆசார்யர்கள் ஜீவனுக்குச் சேதன அசேதனங்களை நியமிப்பவனான பரம்பொருளின் தன்மைகளை விளக்குகின்றனர். மேலும் அவர்கள், சேதனம் மற்றும் அசேதனம் ஆகியவற்றின் தன்மைகளை விளக்கி, அவற்றின் இடையே உள்ள உறவையும் விளக்குகின்றனர், இந்த ஸம்ஸாரத்தில் அடையும் சுகம் மற்றும் துக்கம் ஆகியவற்றை விளக்குகின்றனர். இந்தப் பிடியிலிருந்து வெளியேறும் மோக்ஷம் பற்றியும், அதனை அடையும் உபாயங்கள் பற்றும் கூறுகின்றனர், ஜீவன் செல்லும் மார்க்கங்கள், அந்த வழியில் சென்று அடையப்படும் மோக்ஷத்தினை தடுக்கும் தடைகள் என்னும் அர்த்தபஞ்சகத்தையும் விளக்குகின்றனர். இவை அனைத்தும் மோக்ஷத்தில் விருப்பம் உள்ளவன் (முமுக்ஷு) அறிய வேண்டியதாகும். இவை அனைத்தும் ரஹஸ்யத்ரயத்தில் கூறப்படுகின்றன. இவையே ஜீவன் மற்றும் ஈச்வரன் ஆகிய இரண்டைப் பற்றியும் கூறும் இடங்களின் சாரமாக உள்ளது.

திருவுடன் வந்த செழுமணிபோல் திருமால் இதயம்
மருவு இடம் என்ன மலரடி சூடும் வகை பெறும் நாம்
கருவுடன் வந்த கடுவினையாற்றில் விழுந்தொழுகாது
அருவுடனைந்தறிவார் அருள் செய்ய அமைந்தனரே

**பொருள்** - நாம் மஹாவிஷ்ணுவின் திருமார்பில் உள்ளதும், திருப்பாற்கடலைக் கடைந்தபோது மஹாலக்ஷ்மியுடன் வெளிப்பட்டதும் ஆகிய கௌஸ்துபம் போன்று அவன் திருமார்பில் இருக்கும் தகுதி உடையவர்களே ஆவோம். மேலும் தாமரை போன்ற அவனது திருவடிகளை நமது தலையில் க்ரீடம் போன்று அணிந்து கொள்ளும் தகுதியும் உள்ளவர்கள் ஆவோம். இத்தகைய தகுதி உள்ள நாம், நமது கர்மங்கள் என்ற வெள்ளத்தில், தாயின் கர்ப்பத்தில் உள்ளபோதே விழுந்து விடுகிறோம். ஆனால் நாம் அந்த வெள்ளத்தில் அடித்து சென்று விடாமல், அர்த்தபஞ்சகம் என்ற ஞானம் பெற்ற ஆசார்யர்கள் நம்மைக் காக்கவே அவதரித்தனர்.

கர்ம அவித்யாதி சக்ரே ப்ரதிபுருஷம் இஹ அநாதி சித்ர ப்ரவாஹ
தத் தத் காலே விபக்திர் பவதி ஹி விவிதா ஸர்வ ஸித்தாந்த ஸித்தா
தத் லப்த ஸ்வாவகாச ப்ரதமகுரு க்ருபா ம்ருஹ்யமாண: கதாசித்
முக்த ஐச்வர்யந்த ஸம்பத் நிதிரபி பவிதா கச்சிதித்தம் விபச்சித்

**பொருள்** - இந்த உலகில், ஸம்ஸாரத்தில் சிக்கிய ஒவ்வொரு ஜீவனுக்கும், கர்மம் மற்றும் அறியாமை போன்ற வினைகள் சக்கரம் போன்று மீண்டும் மீண்டும் தொடர்ந்தபடி இருக்கும். எண்ணற்ற ஆண்டுகளாக இந்த நிலை நீடிக்கும். பல ஸித்தாந்தங்கள் கூறுவது என்னவெனில்: சரியான காலம் வரும்போது, பூர்வ கர்மங்கள் பலன் அளிக்கும் என்பதாகும். இப்படிப் பலன் அளிக்கும் காலம் வரும்போது, முதல் ஆசார்யனான பகவான், அந்த ஜீவனைப் பிடித்து, தனது கருணையை அவன் மீது பொழிகிறான். ஆனால் இப்படிப்பட்ட ஜீவன்கள் மிகவும் குறைவே ஆகும். அவர்கள் ஐச்வர்யத்திற்கு இருப்பிடமாக மாறுகின்றனர். இவர்கள் பெற்ற பேறானது, நித்யஸூரிகள் பெறும் கைங்கர்யம் போன்றதாகும்.

உபோத்காத அதிகாரம் ஸம்பூர்ணம்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீ ரங்கநாயகி ஸமேத ஶ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஶ்ரீ பத்மாவதி ஸமேத ஶ்ரீ ஶ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஶ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## 2. ஸார நிஷ்கர்ஷ அதிகாரம்

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஶ்ரீ அஹோபில தாஸன் க. ஶ்ரீதரன்
(Email: sridharan_book:yahoo.co.in)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## முமுக்ஷு அறியவேண்டிய ஸாரமான பொருளை உரைக்கும் அதிகாரம்

ச்ருதி பத விபரீதம் க்ஷ்வேள கல்பம் ச்ருதை ச
ப்ரக்ருதி புருஷ போக ப்ராபக அம்ச: ந பத்ய:
தத் இஹ விபுத குப்தம் ம்ருத்யுபீதா விசிந்வந்தி
உபநிஷத் அம்ருத அப்தே: உத்தமம் ஸாரமார்யா:

**பொருள்** - வேத மார்க்கத்திற்கு மாறாகப் பொருள் உரைக்கும் அனைத்து மதங்களுமே விஷத்திற்குச் சமம் ஆகும். வேதங்களில் கூட, இந்த உலக விஷயங்களை அடையும் பொருட்டும், தனது ஆத்மாவையே அனுபவிக்கும் (கைவல்யம்) பொருட்டும் கூறப்படும் பகுதிகள் அனைத்தும் உயர்ந்தவை அல்ல. ஆகவே, ஸம்ஸாரம் என்னும் பிறப்பு மற்றும் இறப்பைக் கண்டு அச்சம் கொள்ளும் அறிவாளிகள், உபநிஷத்துகள் என்ற கடலைக் கடைந்து எழும் ஸாரம் (ரஹஸ்ய த்ரயம் = திருமந்த்ரம், சரமச்லோகம், த்வயம்) என்ற அமிர்தத்தையே பருக விரும்புவர். இந்த அமிர்தத்தை, நமது ஆசார்யர்கள், நமது நன்மைக்காக மிகுந்த பாடுபட்டு காப்பாற்றி வருகின்றனர்.

### மூன்று மந்த்ரங்களின் உயர்வு

**மூலம்** - இந்த ரஹஸ்யத்ரயத்தில் திருமந்த்ரம் “ஸர்வம் அஷ்டாக்ஷராந்த: ஸ்தம்” என்கிறபடியே தன் அர்த்தத்தை அறிய எல்லா அர்த்தங்களையும் அறிந்து தரும்படியாயிருக்கையாலும், சரமச்லோகம் “ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ” என்று தான் சொல்லுகிற உபாயம் ஒன்றையுமே அவலம்பிக்க ஸர்வோபாய பலஸித்தி உண்டாம் என்று ஸ்தாபிக்கையாலும், த்வயமும் கட ச்ருத்யாதிகளில் சொல்லுகிறபடியே தன்னை ஒருகால் உச்சரித்தவனை ஸர்வப்ரகாரத்தாலும் க்ருதக்ருத்யனாக்கவல்ல வைபவத்தை உடைத்தாயிருக்கையாலும், ரஹஸ்ய த்ரயமே முமுக்ஷுக்களுக்கு ஆதரணீயம்.

**விளக்கம்** - ரஹஸ்யத்ரயம் என்னும் மூன்று மந்த்ரங்களில், திருமந்த்ரம் (அஷ்டாக்ஷரம்) என்பது மற்றவற்றின் பொருளையும் தன்னுள் கொண்டது ஆகும். இதன் பொருளை உணர்ந்தால், அனைத்தையும் உணர்ந்தது ஆகும். இதனை நாரதீய கல்பம் (1-9) – ஸர்வம் அஷ்டாக்ஷராந்த: ஸ்தம் - அனைத்தும் அஷ்டாக்ஷரத்தில் உள்ளது - என்றது. சரமச்லோகம் கீதை (18-66) - ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ - மோக்ஷத்திற்கான அனைத்து உபாயங்களையும் கைவிட்டு என்னிடம் அடைக்கலம் புகுவாய் – என்று "ஒரே பாதையைக் கடைபிடிக்க வேண்டும், இந்தப் பாதை சரணாகதி என்னும் பாதையாகும்" என்பதைக் கூறுகிறது; இந்தப் பாதையானது மற்ற அனைத்து பாதைகளின் பலனையும் அளிக்கவல்லது. த்வயம் என்பது கட உபநிஷத்தில் கூறப்படுவது போல், தன்னை ஒருமுறை உச்சரித்தவனை, அவன் அனைத்து கர்மங்களையும் (மோக்ஷம் பெறுவதற்கான கர்மம்) சிறப்பாக முடிக்கும்படிச் செய்கிறது. ஆகவே முமுக்ஷுக்களுக்கு இந்த ரஹஸ்யத்ரயமே சிறந்தது.

## சாஸ்த்ரங்களே மோக்ஷத்திற்குப் ப்ரமாணம்

அஸரம் அல்பஸாரம் ச ஸாரம் ஸாரதரம் த்யஜேத்
பஜேத் ஸாரதமம் சாஸ்த்ரே (ஸ்த்ரம்) ரத்னாகர இவாம்ருதம்

**பொருள்** – பயன் எதுவும் இல்லாதவற்றையும், அற்பமான பயன் அளிப்பவற்றையும், சிறிது பலன் அளிப்பவற்றையும், சற்றே அதிக பலன் அளிப்பவற்றையும் துறக்க வேண்டும். சாஸ்த்ரங்களில் அம்ருதம் போன்ற மிக உயர்ந்த கருத்தை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும்.

**மூலம்** - பரமபுருஷார்த்தமும் தது பாயமும் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களால் அறியவொண்ணாதபடியாலே இவற்றுக்கு "சாஸ்த்ராத் வேதிந ஜநார்த்தனம்" என்றும், "தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாண்யம் கார்ய அகார்ய வ்யவஸ்திதௌ" என்றும், "சப்தப்ரஹ்மணி நிஷ்ணாத: பரம் ப்ரஹ்மாதிகச்சதி" என்றும் சொல்லுகிறபடியே சப்தமே ப்ரமாணம்.

**விளக்கம்** - வாழ்க்கையின் மிக உயர்ந்த புருஷார்த்தமாகிய மோக்ஷம் என்பதும், அதனை அடையும் உபாயமும், கண்ணால் காண்பதாலோ (ப்ரத்யக்ஷம்) அல்லது அனுமானம் செய்வதாலோ புரிந்து கொள்ள இயலாது. சாஸ்த்ரமே இவற்றுக்குப் ப்ரமாணம் என்பதை மஹாபாரதம் உத்யோக பர்வம்(68-5) - சாஸ்த்ராத் வேதிந ஜநார்த்தனம் - சாஸ்த்ரம் மூலம் ஜனார்த்தனனை நான் அறிகிறேன் – என்றும், கீதை (16-24) - தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்ய அகார்ய வ்யவஸ்திதௌ - எதனைச் செய்யவேண்டும், எதனைச் செய்யக்கூடாது என்று உனக்கு வழிகாட்டியாக சாஸ்த்ரமே உள்ளது – என்றும், மஹாபாரதம் சாந்திபர்வம் (276-2) - சப்தப்ரஹ்மணி நிஷ்ணாத: பரம் ப்ரஹ்மாதிகச்சதி - சப்தம் எனப்படும் வேதங்களை அறிந்தவன், ப்ரஹ்மத்தை (ப்ரஹ்மம் என்பது ஸ்ரீமந் நாராயணனைக் குறிக்கும்) அறிந்தவன் ஆகிறான் – என்றும் உள்ள வாக்கியங்களால் அறியலாம்.

**மூலம்** – அவ்விடத்தில், "அநந்தபாரம் பஹு வேதிதவ்யம் அல்பச்ச காலோ பஹவச்ச விக்நா: | யத் ஸாரபூதம் தததுபாததீத ஹம்ஸோ யதா க்ஷீரம் இவ அம்புமிச்ரம்" என்கிற ச்லோகத்தில், ஸாரபூதம் என்கிற பதத்தாலே ப்ரதிபந்நமான நிரூபாதிக ஸாரத்தை விஷயீகரிக்கிற ஸாரதம சப்தம் உபாதேயம். பாஹ்ய குத்ருஷ்டி சாஸ்த்ரங்கள் அத்யந்தா ஸாரங்களாகையாலே அநுபாதேயங்கள். வேதத்தில் பூர்வபாகத்தில் ஐஹிக பல ஸாதன ப்ரதிபாதகமான ப்ரதேசம் அத்யல்ப ஸாரமாகையாலே அநுபாதேயம். ஆமுஷ்மிக பல ப்ரதிபாதகாம்சம் ஐஹிக பலத்திற்காட்டில் அதிசயித பலத்தை உடைத்தாகையாலே சிலர்க்கு ஸாரம் என்னவாயிருந்ததேயாகிலும் துக்கமூலத்வாதி தோஷ த்ருஷ்டமாகையாலே அநுபாதேயம். ஆத்ம தத் ப்ராப்தி தத் ஸாதன மாத்ரத்தை ப்ரதிபாதிக்கும் அம்சமும் ஸாரதரமாய் இருந்ததேயாகிலும் அதிலும் அத்யந்தாதிசயிதமான பரமாத்மாநுபவ ஸாபேக்ஷர்க்கு அநுபாதேயம். பரமாத்ம தத் ப்ராப்தி ததுபாயங்களை வெளியிடும் ப்ரதேசம் ஸாரதமமாகையாலே விவேகிக்கு உபாதேயம்.

**விளக்கம்** - மேலும் உத்தவ கீதை(3-10) - அநந்தபாரம் பஹு வேதிதவ்யம் அல்பச்ச காலோ பஹவச்ச விக்நா: | யத் ஸாரபூதம் தததுபாததீத ஹம்ஸோ யதா க்ஷீரம் இவ அம்புமிச்ரம் - நமக்குத் தெரிய வேண்டியது பல உள்ளது, எல்லையற்றது, இதனை அறிய இருக்கும் காலமோ மிகவும் குறைவானது, தடங்கல்கள் பல உள்ளது, ஆகவே அன்னம் எவ்விதம் நீரிலிருந்து பாலை பிரிக்கிறதோ அது போன்று, உயர்ந்ததை மட்டுமே

எடுத்துக்கொள்ள வேண்டும் – என்றது. இங்கு, "உயர்ந்தது" என்றால், "மிக உயர்ந்தது" என்று பொருள் கொள்ளவேண்டும். வேதங்களில் சேராத சாஸ்த்ரங்களும், வேதங்களை மறுத்துக் கூறும் சாஸ்த்ரங்களும் உயர்ந்தவையே அல்ல, எனவே அவை தள்ளப்பட வேண்டியவை ஆகும். வேதத்தின் முதல் பாகமாகிய (பூர்வ பாகம்) கர்ம காண்டத்தில், உலக விஷயங்களைப் பெற உதவும் கர்மங்களைக் கூறும் பகுதிகள் உயர்ந்தவை அல்ல, ஆகவே அவற்றைத் தள்ளலாம். உலக விஷயங்களைவிடச் சற்றே உயர்வாகத் தோன்றும் ஸ்வர்க்கம் முதலானவற்றைப் பெற உதவும் பகுதிகளும் துன்பம் முதலானவற்றிலேயே இறுதியில் முடிவதால், அவையும் பயனற்றதே ஆகும். இதனை விடச் சற்றே உயர்வாகத் தோன்றுகின்ற, ஆத்மாவைப் பற்றி அறிய உதவும் பகுதிகளும் அதனை அடையும் உபாயம் கூறும் பகுதிகளும், பரம்பொருளை மட்டுமே அரிய ஆவல் கொண்ட மனிதர்களுக்கு முக்கியமல்ல. ஆக, விவேகம் கொண்ட மனிதன் ஒருவனுக்கு, பரப்ரஹ்மம் பற்றிக் கூறும் வேத பகுதிகளும், ப்ரஹ்மத்தை அடையும் உபாயம் பற்றிக் கூறும் பகுதிகளும் மிகவும் முக்கியமானதாகும். எனவே அவற்றைக் கைக்கொள்ள வேண்டும்.

**மூலம்** - அவ்வம்சத்திலும் ப்ரதாநப்ரதிதந்த்ரங்களான தத்த்வ ஹிதங்களுடைய ஸங்க்ரஹமாகையாலே மிகவும் ஸாரதம (உபாதேய) மாயிருக்கும் ரஹஸ்யத்ரயம். ஆகையால், "பஹுப்யச்ச மஹத்ப்யச்ச சாஸ்த்ரேப்யோ மதிமாந்நர: | ஸர்வதஸ் ஸாரமாதத்யாத் புஷ்பேப்ய இவ ஷட்பத:" என்கிறபடியே, ரஹஸ்யத்ரயம் முமுக்ஷுவான இவ்வாத்மாவுக்கு மிகவும் உபாதேயமாகக் கடவது.

**விளக்கம்** - அவற்றிலும், அறியப்படவேண்டிய தத்துவங்களாக உள்ளவையும், மோக்ஷ உபாயமாக உள்ளவையும், தனித்து விளங்குபவையும், நமது ஸித்தாந்ததின் அடிப்படையாக உள்ளதும் ஆகிய மூன்று ரஹஸ்யங்களும் மிகவும் முக்கியமானவையாகும். மஹாபாரதம் சாந்திபர்வம் (176-66) - பஹுப்யச்ச மஹத்ப்யச்ச சாஸ்த்ரேப்யோ மதிமாந்நர: | ஸர்வதஸ் ஸாரமாதத்யாத் புஷ்பேப்ய இவ ஷட்பத: - பல உயர்ந்த சாஸ்த்ரங்களில் இருந்து விவேகம் உள்ள மனிதன், தேனியானது எவ்விதம் மலர்களில் உள்ள மகரந்தத்தை மட்டும் எடுக்கிறதோ, அது போன்று முக்கியமானவற்றை மட்டுமே எடுக்க வேண்டும் – என்றது. ஆக, மோக்ஷத்தில் விருப்பம் உள்ள ஜீவன் (முமுக்ஷு), இந்த மூன்று மந்த்ரங்களையே நாடவேண்டும்.

அமையா இவை என்னும் ஆசையினால் அறு மூன்று உலகில்
சுமையான கல்விகள் சூழ வந்தாலும் தொகை இவை என்று
இமையா இமையவர் ஏத்திய எட்டு இரண்டு எண்ணிய - நம்
சமயாசிரியர் சதிர்க்கும் தனி நிலை தந்தனரே

**பொருள்** - இதுவரை கற்றது போதாது என்று ஆசையால் நாம் மேலும் 18 பிரிவுகளை கற்கக் கூடும் (18 பிரிவுகள் = 4 வேதங்கள், சிக்ஷை, வ்யாகரணம், ஸந்தஸ், நிருக்தம், ஜோதிடம், கல்பம், மீமாம்ஸை, நியாயம், புராணம், தர்மம், ஆயுர்வேதம், தனுர் வேதம், காந்தர்வம் மற்றும் அர்த்த சாஸ்த்ரம்). இவை வெறும் எண்ணிக்கை மட்டும் அன்றி, நமக்குச் சுமையாகவும் ஆகிவிடும். ஆகவே, இமைக்காத கண்களை உடையவர்களும் சிறந்த ஞானம் உள்ளவர்களும் ஆகிய நித்யஸூரிகள் துதிக்கும் அஷ்டாக்ஷரத்தையும், மற்ற இரண்டையும் (த்வயம், சரமச்லோகம்) நமது ஆசார்யர்கள் நமக்கு அளித்தனர்.

சாகாநாம் உபரி ஸ்திதேந மநுநா மூலேந லப்த ஆத்மக:
ஸத்தாஹேது ஸக்ருத் ஜபேந ஸகலம் காலம் த்வயேந க்ஷிபந்
வேத உத்தாம்ஸ விஹார ஸாரதி தயாகும்பேந விஸ்ரம்பித:
ஸாரஜ்ஞோ யதி கச்சித் அஸ்தி புவநே நாத: ஸயூதஸ்ய ந:

**பொருள்** - வேதங்களின் மேல் பாகமான உபநிஷத்துக்களில், மூல மந்த்ரமான அஷ்டாக்ஷரம் ப்ரகாசிக்கிறது. விவேகம் கொண்ட ஒருவன் இந்த அஷ்டாக்ஷரம் மூலமாகத் தனது உண்மையான தன்மையை அறிந்தாலோ, தனது வாழ்நாள் முழுவதும் த்வய மந்த்ரத்தைக் கூறியபடி இருந்தாலோ, ஒருமுறை மட்டுமே கூறினாலும் வாழ்வின் மிக உயர்ந்த புருஷார்த்தத்தை அளிக்கவல்ல த்வயத்தைக் இவ்விதம் கூறினாலும், தனது லீலைக்காகவே தேரோட்டியாக நின்றவனும், வேதங்கள் அனைத்திற்கும் மகுடம் போன்றவனும் ஆகிய கண்ணன் தனது கருணை காரணமாக உபதேசித்த சரமச்லோகத்தின் மீது மஹாவிச்வாசம் உள்ளவனும் ஆகிய ஒருவன், நமது கூட்டம் அனைத்திற்கும் ஸ்வாமி போன்றவன் ஆவான்.

ஸாரநிஷ்கர்ஷ அதிகாரம் ஸம்பூர்ணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## 3. ப்ரதாந ப்ரதிதந்த்ர அதிகாரம்


நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book:yahoo.co.in)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## விசிஷ்டாத்வைத ஸித்தாந்த பொருளை உரைக்கும் அதிகாரம்

ஆதேயத்வ ப்ரப்ருதி நியமை: ஆதிகர்த்து: சரீரம்
ஸத்தா ஸ்தேம ப்ரயதந பலேஷு ஏதத் ஆயத்தம் ஏதத்
விச்வம் பச்யந் இதி பகவதி வ்யாபக ஆதர்ச த்ருஷ்டே
கம்பீராணாம் அக்ருதககிராம் காஹதே சித்த வ்ருத்தம்

**பொருள்** - வ்யாபக மந்த்ரங்கள் (இவை மூன்றாகும் - முதலாவது அஷ்டாக்ஷரம் – ஓம் நமோ நாராயணாய, இரண்டாவது ஷடாக்ஷரம் - ஓம் நமோ விஷ்ணவே, மூன்றாவது த்வாதசாக்ஷரம் - ஓம் நமோ பகவதே வாஸுதேவாய) என்னும் கண்ணாடி மூலம் பகவானைக் காணும்போது, அவை, அவன் எங்கும் பரவி உள்ளதைக் காண்பிக்கின்றன. மேலும் இந்த உலகம் முழுவதும் அவனையே சார்ந்து உள்ளதையும், அவனாலேயே நீடித்திருப்பதையும், தனது செயல்களுக்கும் செயல்களின் பலன்களுக்கும் அவனையே அண்டியுள்ளதையும் காணமுடியும். இந்த உலகம் அவனது லீலைக்காகவே உள்ளதாலும், அவனால் நியமிக்கப்பட்டு வருவதாலும், அவனது சரீரமாகவே இந்த உலகம் உள்ளது என்று அறியலாம். இவ்விதம் இந்த உலகமானது அவனது சரீரமாக உள்ளது என்ற உண்மையை அறியும் ஒருவன், யாராலும் உருவாக்கப்படாத ச்ருதிகளை முழுவதுமாக அறிந்தவன் ஆகிறான்.

## அனைத்து அவனுடைய சரீரம், அவனே அனைத்தின் ஆத்மா என்பதே முக்கியமானது

**மூலம்** – ப்ரதிதந்த்ரமாவது, மற்றுள்ள ஸித்தாந்திகள் ஒருவரும் இசையாதே தன்னுடைய ஸித்தாந்தத்துக்கே அஸாதாரணமான அர்த்தம். இங்கு வேதாந்திகளான நம்முடைய தர்சனத்துக்கே அஸாதாரணமுமாய் ப்ரதானமுமான அர்த்தம் ஏதென்னில், சேதநாசேதநங்களுக்கும் ஈச்வரனுக்குமுண்டான சரீராத்மபாவ ஸம்பந்தாதிகள்.

**விளக்கம்** - ப்ரதிதந்த்ரம் என்றால், மற்றவர்களின் ஸித்தாந்தங்களில் காணப்படாதது, ஒரு குறிப்பிட்ட ஸித்தாந்தத்தில் மட்டுமே காணப்படுவது என்று பொருள். வேதாந்தவாதிகளான நமது ஸித்தாந்தத்திற்கு உள்ள தனித்தன்மை எது? இந்தத் தன்மையானது, சேதந அசேதநங்களுக்கும் ஸர்வேச்வரனுக்கும் இடையே உள்ள "சரீரம் – ஆத்மா" என்னும் தொடர்பு ஆகும்.

## சரீரம் என்றால் என்ன, சரீரீ என்றால் என்ன

**மூலம்** - இதில் ஈச்வரனுக்கு சரீரத்வமாவது, சேதநாசேதந த்ரவ்யங்களைப் பற்ற நியமேந தாரகனுமாய், நியந்தாவுமாய், சேஷியாயுமிருக்கை. சேதநாசேதநங்களுக்கு சரீரத்வமாவது, நியமேந ஈச்வரனைப் பற்ற தார்யமுமாய், நியாம்யமுமாய், சேஷமுமான த்ரவ்யமாய் இருக்கை.

**விளக்கம்** - ஈச்வரனே சரீரீ (ஆத்மா) எனப்படுகிறான். இவ்விதம் கூறும் காரணம் என்ன? சேதந அசேதநங்கள் (த்ரவ்யம்) உள்ளவரையில் அவற்றைத் தாங்குபவனாகவும் (தாரகன்), அவைகளை நியமிப்பவனாகவும், அவற்றின் எஜமானனாகவும் இவனே உள்ளான். சேதந அசேதநங்கள் அவனுடைய சரீரமாக இருக்கும் காரணம் என்ன? அவனால் தாங்கப்பட்டு உள்ளன, அவனால் நியமிக்கப்பட்டு உள்ளன, தங்கள் வாழ்நாள் முழுவதும் எஜமானனாகிய அவனுக்காகவே உள்ளன.

## ஈச்வரன் அனைத்தையும் தாங்குதல் மற்றும் நியமித்தல் குறித்த விளக்கம்

**மூலம்** - சேதநாசேதநங்களைப் பற்ற தாரகனுமாய் நியந்தாவுமாகையாவது, தன் ஸ்வரூபத்தாலும் ஸங்கல்பத்தாலும் யதார்ஹம் ஸத்தா ஸ்திதி ப்ரவ்ருத்திகளுக்கு ப்ரயோஜகனாயிருக்கை. அது எங்ஙனேயென்னில், ஈச்வரன் தன் ஸ்வரூப நிரூபக தர்மங்களுக்கும் நிரூபித ஸ்வரூப விசேஷணங்களான குணங்களுக்கும் போலே ஸ்வ வ்யதிரிக்த ஸமஸ்த த்ரவ்யங்களுக்கும் அவ்யவஹிதமாக ஸ்வரூபேண ஆதாரமாயிருக்கும். அவ்வோ த்ரவ்யங்களை ஆச்ரயித்திருக்கும் குணாதிகளுக்கு அவ்வோ த்ரவ்யத்வாரா

ஆதாரமாயிருக்கும். ஜீவர்களாலே தரிக்கப்படுகிற சரீரங்களுக்கு ஜீவத்வாரா ஆதாரமாயிருக்கும் என்று சிலர் சொல்லுவார்கள். ஜீவனை த்வாரமாகக் கொண்டும் ஸ்வரூபத்தாலும் ஆதாரமாயிருக்கும் என்று சில ஆசார்யர்கள் சொல்லுவார்கள். இப்படி ஸர்வமும் ஈச்வர ஸ்வரூபத்தைப் பற்ற அப்ருதக்ஸித்த விசேஷணமாகையாலே இவற்றின் ஸத்தாதிகள் ஆச்ரய ஸத்தாதீனங்கள்.

விளக்கம் - ஈச்வரனுடைய ஸ்வரூபத்தாலும், ஸங்கல்பத்தாலும் மட்டுமே சேதனங்களும் அசேதனங்களும் இந்த உலகில் இருந்து தங்கள் செயல்களைச் செய்தபடி உள்ளன. ஆகவே ஈச்வரன் இவற்றைத் தாங்குபவனாகவும், நியமிப்பவனாகவும் கூறப்படுகிறான். இது எப்படி என்ற கேள்வி எழலாம். தனது ஸ்வரூபத்தை விளக்கவல்லதான தனது கல்யாணகுணங்கள் அனைத்தையும் ஈச்வரன் எவ்விதம் தாங்கியுள்ளானோ (அந்தக் குணங்களுக்கு ஆதாரமாக உள்ளானோ), அது போன்று, தன்னைக் காட்டிலும் வேறாக உள்ளதும், தன்னிடமிருந்து பிரிக்க இயலாததும் ஆகிய சேதன-அசேதனங்களைத் தாங்கியபடி உள்ளான். அவற்றின் தன்மைகளுக்கும் இவனே ஆதாரமாக உள்ளான். ஒரு சிலர், “ஜீவன் மூலமாகவே ஈச்வரன் அனைத்தையும் தாங்கியுள்ளான்” என்று கூறுவார்கள். ஒரு சிலர், “தனது ஸ்வரூபம் மூலம் நேரடியாகவும், ஜீவன் மூலம் மறைமுகமாகவும் ஈச்வரன் அனைத்தையும் தாங்கியுள்ளான்”, என்பர். சேதனம் மற்றும் அசேதனங்களுடன் கூடியவனாக ஈச்வரன் உள்ளான் (அப்ருதக்ஸித்த விசேஷணம்) என்பதால், அவனிடமிருந்து அவற்றைப் பிரிக்க இயலாது. எனவே அவற்றின் இருப்பு என்று கூறும் நிலையே அவற்றைத் தாங்கும் அவனைச் சார்ந்தே உள்ளது.

**மூலம்** - ஸர்வ வஸ்துக்களுடையவும் ஸத்தை ஸங்கல்பாதீநையாகையாவது அநித்யங்கள் அநித்யேச்சையாலே உத்பந்நங்களாயும், நித்யங்கள் நித்யேச்சாஸித்தங்களாயுமிருக்கை. இவ்வர்த்தத்தை “இச்சாத ஏவ தவ விச்வ பதார்த்த ஸத்தா” என்கிற ச்லோகத்தாலே அபியுக்தர் விவேகித்தார்கள். இத்தாலே ஸர்வத்தினுடையவும் ஸத்தாநுவ்ருத்தி ரூபையான ஸ்திதியும் ஈச்வரேச்சாதீநையானபடியாலே ஸர்வமும் ஈச்வர ஸங்கல்பாச்ரிதம் என்று சொல்லுகிறது.

**விளக்கம்** – சேதன அசேதனங்கள் இருப்பது என்பதே அவனது ஸங்கல்பத்தினால் ஆகும். ஒரு சிலர் ஒரு சில காலகட்டத்தில் மட்டுமே இருப்பது என்பது அவனுக்கு அவ்வப்போது

உண்டாகும் ஸங்கல்பத்தினாலும், எப்போதும் இருந்து வரும் பொருள்கள் அனைத்தும் அவனது நித்யமான ஸங்கல்பத்தினாலும் உள்ளன. இதனை, அனைத்தும் அறிந்த அறிவாளிகள், ஸ்ரீவைகுண்டஸ்தவம் (36) - இச்சாத ஏவ தவ விச்வபதார்த்தஸத்தா - உனது ஸங்கல்பத்தினால் மட்டுமே அனைத்தும் உள்ளன - என்ற வரி மூலமாக அறிகின்றனர். ஆக ஒரு பொருள் தொடர்ந்து இருக்கை என்பது ஈச்வரனின் ஸங்கல்பத்தாலேயே ஆகும். எனவே அனைத்தும் ஈச்வரனின் ஸங்கல்பத்தைச் சார்ந்தே உள்ளன என்றாகிறது.

**மூலம் -** குருத்ரவ்யங்கள் ஸங்கல்பத்தாலே த்ருதங்கள் என்று சாஸ்த்ரங்களில் சொல்லுமது, "த்யைஸ்ஸ சந்த்ரார்கநக்ஷத்ரம் கம் திசோ பூர்மஹோததி: | வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதாநி மஹாத்மந:" என்கிறபடியே ஒரொரு தேச விசேஷங்களிலே விழாதபடி நிறுத்துகையைப் பற்ற. இப்படி இச்சாதீந ஸத்தா ஸ்திதி ப்ரவ்ருத்திகளான வஸ்துக்களுக்குப் பரமாத்ம ஸ்வரூபம் என் செய்கிறது என்னில், பரமாத்மாவினுடைய இச்சை இவ்வஸ்துக்களைப் பரமாத்மாவின் ஸ்வருபாச்ரிதங்களாக வகுத்து வைக்கும். இப்படி ஸர்வ வஸ்துவும் ஈச்வர ஸ்வரூபா(தீந)ச்ரிதமுமாய் ஈச்வரேச்சாதீநமுமாயிருக்கும்.

**விளக்கம் -** கனமான பொருள்கள் ஈச்வரனின் ஸங்கல்பத்தினால் தாங்கப்பட்டே உள்ளன என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. உதாரணமாக மஹாபாரதம் அநுசாஸநபர்வம் (254-136) - த்யைஸ்ஸ சந்த்ரார்கநக்ஷத்ரம் கம் திசோ பூர்மஹோததி: | வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதாநி மஹாத்மந: - ஸ்வர்க்கம், சந்த்ரன் சூரியன் நக்ஷத்ரங்கள் ஆகியவற்றுடன் உள்ள ஆகாயம், திசைகள், பூமி, பல பெரிய ஸமுத்ரங்கள் ஆகிய அனைத்தும் பரமாத்மாவான வாஸுதேவனின் ஸங்கல்பத்தால் தாங்கப்பட்டு உள்ளன - என்று கூறியது. இதன் மூலம் இது போன்ற பெரிய வஸ்துக்கள் அவற்றுக்கான இடங்களில் உள்ள நிலையும், அவை அங்கிருந்து நழுவாதபடி உள்ள நிலையும் பகவானின் ஸங்கல்பத்தினாலேயே ஆகும். இவ்விதம் அனைத்தும் அவனது ஸங்கல்பத்தினால் தாங்கப்படுவதற்கு, அவனுடைய ஸ்வரூபம் என்ன செய்கிறது என்ற கேள்வி எழலாம். பகவானுடைய ஸங்கல்பம் என்பதே அனைத்தையும் அவனது ஸ்வரூபத்தினை அண்டியிருக்கும்படிச் செய்கிறது என்று கருத்து. இவ்விதம் அனைத்தும் அவனது ஸ்வரூபத்தையும், ஸங்கல்பத்தையும் அண்டியே உள்ளன.

**மூலம்** – லோகத்திலும், சரீரம் சரீரியினுடைய ஸ்வரூபாச்ரிதமுமாய் ஸங்கல்பாச்ரிதமுமாய் இருக்கக் காண நின்றோம். ஜீவனிருந்த காலமிருந்து இவன் விட்டபோது அழிகையாலே ஸ்வரூபாச்ரிதம்; இவ்வர்த்தம் ஸங்கல்பமில்லாத ஸுஷுப்த்யாதி அவஸ்தைகளிலே தெளிவது. ஜாகராதி தேசைகளில் ஸங்கல்பத்தாலே விழாதபடி தாங்கும்போது ஸங்கல்பாச்ரிதம் என்னக்கடவது. இதில் ஸ்வரூபாச்ரிதமா யிருக்கிறபடியை ஆதேயத்வமென்றும், ஸங்கல்பாதீநமாயிருக்கிறபடியை நியாம்யத்வமென்றும் சொல்லுகிறது.

**விளக்கம்** - இந்த உலகில் நமது உடலானது நமது ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்பவோ அல்லது ஆத்மாவின் ஸங்கல்பத்தினாலோ இயங்குவதைக் காணலாம். இதன் காரணம் - இந்த உடலானது, ஆத்மா உடலுக்குள் புகுவதிலிருந்து அது வெளியேறும்வரை மட்டுமே உள்ளதைக் காண்கிறோம். ஆத்மா வெளியேறியபின் உடல் அழிவதையும் காணலாம். ஆக இந்த உடலானது ஆத்மாவின் ஸ்வரூபத்தாலோ அல்லது ஸங்கல்பத்தாலோ தாங்கப்படுகின்றது. நாம் ஆழ்ந்த உறக்க நிலையில் உள்ளபோது, ஆத்மாவின் ஸங்கல்பம் என்பது காணப்படாமல் உள்ளது, ஆனாலும் உடல் அழியாமல் உள்ளது, ஆக இந்த நிலையில் உடலானது ஆத்மாவின் ஸ்வரூபத்தால் தாங்கப்படுகிறது. விழிப்பு நிலையில் இந்த உடல் கீழே விழாதபடி ஆத்மாவின் ஸங்கல்பத்தால் தாங்கப்படுகிறது. இந்த உடல் ஆத்மாவின் ஸ்வரூபத்தால் தாங்கப்படும்போது, "உடல் ஆத்மாவால் தாங்கப்படுகிறது (ஆதேயத்வம்)", என்று கூறப்படும். இந்த உடல் ஆத்மாவின் ஸங்கல்பத்தால் தாங்கப்படும்போது, "உடல் ஆத்மாவால் நியமிக்கப்படுகிறது (நியாம்யத்வம்)", என்று கூறப்படும்.

## ஈச்வரனுடைய எஜமானத்தன்மை

**மூலம்** - ஈச்வரன் ஸர்வசேஷியாகையாவது, "உபாதத்தே ஸத்தா ஸ்திதி நியமந ஆத்யை: சித் அசிதௌ ஸ்வம் உத்திச்ய ஸ்ரீமாந் இதி வததி வாகௌபநிஷதீ | உபாயோபேயத்வ ததிஹ தவ தத்வம் ந து குணௌ அதஸ்த்வாம் ஸ்ரீரங்கேசய சரணமவ்யாஜமபஜம்" என்கிறபடியே தன் ப்ரயோஜனத்துக்காகவே பாரார்த்யைக ஸ்வபாவங்களான இவற்றை உபாதாநம் பண்ணி இவற்றாலே அதிசயவனாகை.

**விளக்கம்** - ஈச்வரன் அனைவரின் எஜமானனாக உள்ளான் என்றே கூற வேண்டும் - காரணம் அவனுக்காகவே அனைத்தும் உள்ளன. ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (2-87) - உபாதத்தே ஸத்தா ஸ்திதி நியமந ஆத்யை: சித் அசிதௌ ஸ்வம் உத்திச்ய ஸ்ரீமாந் இதி வததி வாகௌபநிஷதீ | உபாயோபேயத்வ ததிஹ தவ தத்வம் ந து குணௌ அதஸ்த்வாம் ஸ்ரீரங்கேசய சரணமவ்யாஜமபஜம் - இந்த உலகில் உள்ள அனைத்தையும் உண்டாக்குவது, உண்டாக்கிய அனைத்தியும் நிலை நிறுத்துவது, அவற்றை நியமிப்பது போன்றவற்றைச் செய்வதன் மூலம் ஸ்ரீரங்கநாச்சியாருடன் கூடியவனாக உள்ள ஸ்ரீரங்கநாதன், சேதன-அசேதனங்களைத் தனது ப்ரயோஜனத்திற்காகவே என்று உணர்த்துகிறான், இவ்விதமாகவே உபனிஷத்துக்கள் கூறுகின்றன. ஸ்ரீரங்கநாதா! நீ சேஷியாக (எஜமானன்) உள்ளதால் ஜீவன் அடையவேண்டிய இடமாகவும்(உபேயம்), அவ்விதம் அடையப் பின்பற்ற வேண்டிய மார்க்கமாகவும்(உபாயம்) நீயே உள்ளாய். இது உனது ஸ்வபாவமாகவே உள்ளது, உன்னிடம் ஏதோ ஒரு காலத்தில் வந்து புகுந்த தன்மை அன்று. ஆகவே, ஸ்ரீரங்கத்தில் உறைபவனே! வேறு பயன் கருதாமல் உன்னிடம் சரணம் புகுந்தேன் - என்றார். ஆக, சேதன-அசேதனங்கள் தங்களுக்காக இல்லை, அவனுக்குப் பயன்படுவதற்காகவே உள்ளன. அவற்றின் ஸ்வபாவமே அவனுக்காக இருப்பதாகும். இவ்விதம் அவற்றைத் தனது பயனுக்காகக் கொள்ளும்போது அவனது குணங்கள் ப்ரகாசிக்கின்றன.

## சேஷ-சேஷி ஞானத்தினால் உண்டாகும் பயன்

**மூலம்** - இந்த ஆதாராதேய பாவாதிகளால் இச்சேதனனுக்கு பலிப்பதென் என்னில் ஆதாராதேய பாவத்தாலே அவனுடைய ஜ்ஞாநசக்த்யாதிகளுக்குப் போலே அப்ருதக்ஸித்த ஸ்வரூபலாபமும் சேஷ சேஷி பாவத்தாலே ஆத்மாபிமாநாநுகுண புருஷார்த்த வ்யவஸ்தையின்படியே ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்த ருசியும், சேஷ சேஷி பாவத்தாலும் நியந்த்ரு நியாம்ய பாவத்தாலும் ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தத்துக்கு அநுரூபமாய் நிரபேக்ஷமுமாயிருந்துள்ள உபாய விசேஷத்தை அறிகையும் பலிக்கும். ஆக இவற்றால் இச்சேதனன் அநந்யாதாரன், அநந்யப்ரயோஜனன், அநந்யசரணன் என்றாயிற்று.


email : sridharan_book@yahoo.com

**விளக்கம்** - ஒரு கேள்வி எழலாம். இவ்விதம் அவனால் தாங்கப்பட்டு, அவனால் நியமிக்கப்பட்டு, அவனது ப்ரயோஜனத்திற்காக மட்டுமே வாழ்ந்து வருவதால் சேதனனுக்கு என்ன பயன்? ஈச்வரனைத் தனது ஆதாரமாகக் கொண்டு வாழ்வதால், ஈச்வரனின் ஞானம் மற்றும் சக்தி போன்ற குணங்கள் அவனை விட்டுப் பிரியாமல் உள்ளது போன்று, ஜீவனும் அவனை விட்டுப் பிரியாத ஸ்வரூபத்தை அடைகிறான். ஈச்வரனின் அடிமையாக உள்ளதாலும், ஈச்வரனைத் தனது எஜமானனாகக் கொள்வதாலும் தான் பெறவேண்டிய புருஷார்த்தம் என்னவென்று அறிகிறான். தனது ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி உள்ள அந்தப் புருஷார்த்தத்தின் மீது அவனுக்கு விருப்பம் (ருசி) பிறக்கிறது, காரணம் எந்த ஒரு பொருளும் தனது ஸ்வபாவத்திற்கு ஏற்ப உள்ள குறிக்கோளை விரும்பும் அல்லவோ? பகவானுக்குத் தான் அடிமையாக இருப்பதாலும், அவனைத் தனது ஆதாரமாகவும் நியமிப்பவனாகவும் கொள்வதாலும், சேதனனுக்குத் தனது ஸ்வரூபத்திற்கு ஏற்ற புருஷார்த்தத்தை அடையும் உபாயமாகவும்-உபேயமாகவும் (உபேயம் = அடையவேண்டிய இலக்கு, உபாயம் = அந்த இலக்கை அடைய உதவும் மார்க்கம்) பகவானே உள்ளான் என்ற ஞானம் ஏற்படுகிறது. இவ்விதம் சேதனனுக்கு உபாயமாகவும் உபேயமாகவும் இருப்பதற்கு பகவான் வேறு எதனையும் எதிர்பார்ப்பதில்லை. ஆக, தனது இருப்புக்கு வேறு ஏதும் ஆதாரமாக இல்லாத சேதனன், வேறு எதற்காகவும் வாழாமல், இந்த ஆதாரமாக உள்ள பகவானுக்காகவே இருக்கிறான் என்றாகிறது.

## மேலே உள்ள கருத்துக்கள் ரஹஸ்யத்ரயத்தில் உள்ளன என்று காண்பித்தல்

**மூலம்** - இவ்வர்த்தம் ப்ரதம ரஹஸ்யத்தில் கிடக்கிறபடி எங்ஙனேயென்னில் - நாராயண சப்தத்தில், தத்புருஷ பஹுவ்ரீஹி ஸமாஸத்வயத்தாலுமுண்டான தாரகத்வ வ்யாபகத்வாதிகளாலே அநந்யாதாரத்வாதி விசிஷ்ட ஸ்வரூப லாபமும், பாரார்த்ய பாரதந்த்ய கர்ப்பமான கீழில் பத த்வயத்தாலே அநநய ப்ரயோஜநத்வமும் அநந்ய சரணத்வமும் பலிக்கும். ப்ரபத்த்யநுஷ்டான ப்ரகாசகமான மந்த்ர ரத்னத்தில் பூர்வகண்டத்தாலே அநந்ய சரணத்வமும், உத்தரகண்டத்தாலே அநந்ய

ப்ரயோஜனத்வமும், உபயபாகத்தாலும் அநந்யாதாரத்வமும் ப்ரகாசிக்கிறது. இப்படி சப்தமாகவும் ஆர்த்தமாகவும் சரமச்லோகத்திலும் இவ்வகுப்புக் கண்டு கொள்வது.

**விளக்கம்** - மேலே கூறப்பட்ட கருத்துக்கள் ரஹஸ்ய த்ரயத்தின் முதல் ரஹஸ்யமான திருமந்த்ரத்தில் எவ்விதம் பொதிந்துள்ளது என்ற கேள்வி எழலாம். "நாராயணா" என்ற சப்தமானது "தாரகன் (அனைத்தையும் தாங்குபவன்)" என்ற பொருளையும், "அனைத்தையும் வ்யாபித்துள்ளவன்" என்ற பொருளையும் அளிக்கவல்லதாகும். எப்படி? இதனை "நாராயணாம் அயநம் = நரங்களுக்கு இருப்பிடம், அனைத்திற்கும் இருப்பிடம்"; ஆகவே தாரகன் என்று கொள்ளலாம். அல்லது இதனை "நாரா: அயநம் யஸ்ய = நரங்கள் யாருக்கு அயனமோ = யாருக்கு நரங்கள் இருப்பிடமோ"; இதன் மூலம் அனைத்திலும் பரவியுள்ளான் என்று கொள்ளலாம். இதன் மூலம் ஜீவன் தனது ஸ்வரூபத்திற்கு ஏற்ப வேறு யாரையும் ஆதாரமாக உடையவன் அல்லன் என்பதையும், நாராயணனைத் தவிர வேறு யாராலும் வ்யாபிக்கப்படாதவன் (தன்னுள் அந்தர்யாமியாக) என்பதையும் அறியலாம். நாராயணாய என்பதற்கு முன்பாக உள்ள ஓம் மற்றும் நமோ என்பவை, ஜீவன் நாராயணனுக்காக மட்டுமே உள்ளான் (அநந்ய ப்ரயோஜத்வம்) என்பதையும், ஜீவன் தனது ஆதாரத்திற்கு நாராயணனை மட்டுமே கொண்டுள்ளான் (அநந்ய சரணத்வம்) என்பதையும் விளக்குகின்றன. ஆக இவற்றின் மூலம் ஜீவன் நாராயணனைத் தவிர வேறு யாருடைய பயனுக்காகவும் இல்லை என்பதையும், நாராயணனைத் தவிர ஜீவனுக்கு அடைக்கலம் வேறு யாரும் இல்லை என்பதையும் உணரலாம். ப்ரபத்தியை விளக்குவதும், மந்த்ரரத்னம் எனப்படுவதும் ஆகிய த்வயமந்த்ரத்தின் முதல் பகுதியானது, ஜீவனுக்கு நாராயணனைத் தவிர அடைக்கலம் வேறு யாரும் இல்லை (அநந்ய சரணத்வம்) என்பதைக் கூறுகிறது, அதன் பிற்பகுதி, ஜீவன் நாராயணனுக்காக மட்டுமே உள்ளான், வேறு யாருடைய பயனுக்காகவும் அல்லன் (அநந்ய ப்ரயோஜனத்வம்) என்பதைக் கூறுகிறது. இரண்டு பகுதிகளும் சேர்ந்து ஜீவனுக்கு வேறு ஆதாரம் இல்லை (அநந்யாதாரத்வம்) என்பதை உணர்த்துகிறது. இதே கருத்துக்கள் சரமச்லோகத்தில் நேரடியாகவும், மறைமுகமாகவும் கூறப்பட்டதை உணரலாம்.


email : sridharan_book@yahoo.com

## அப்புள்ளார் அருளிச் செய்த உதாரணங்கள்

**மூலம்** - இப்படி சரமச்லோகத்திலே ஸித்தோபாய வசீகரணார்த்தமாக விஹிதமான ஸாத்யோபாய விசேஷத்தை த்வயத்தாலே அனுஷ்டிக்கும்போதைக்கு அநுஸந்தேயங்களாகக் கொண்டு அவச்யாபேக்ஷிதங்களான அர்த்தங்களை எல்லாம் சிறிய கண்ணாடி பெரிய உருக்களைக் காட்டுமாப்போலே சுருங்கத் தெளிவிக்கும் திருமந்த்ரம். அதில் ப்ரதம பதத்தில் அர்த்தங்களை அர்ஜுன ரதத்திலும், "அக்ரத: ப்ரயயௌ ராம:" என்கிற ச்லோகத்திலும் கண்டு கொள்வது. த்விதீய பதத்தில் சப்தத்தாலும், அர்த்த ஸ்வபாவத்தாலும் வரும் அர்த்தங்களை ஸ்ரீபரதாழ்வானுடையவும் ஸ்ரீசத்ருக்நாழ்வானுடையவும் வ்ருத்தாந்தங்களிலே அறிவது. "நானுன்னையன்றியிலேன் கண்டாய் நாரணனே நீயென்னையன்றியிலை" என்னும்படி நிற்கிற நாராயண சப்தார்த்தத்தைக் கோஸல ஜன பதத்தில் ஜந்துக்களையும் சக்ரவர்த்தித் திருமகனையும் உதாஹரணமாக்கிக் கண்டு கொள்வது. பூர்வ பத த்வயத்தில் தோன்றின காஷ்டாப்ராப்த பாரார்த்ய பாரதந்த்ரியங்கள் பேரணியாகத் த்ருதீய பதத்தில் சதுர்த்தியில் கருத்திலே ப்ரார்த்தநீயமான சேஷியுகந்த கைங்கர்யத்தை இளையபெருமாளுடையவும் இவருடைய அவதார விசேஷமான திருவடி நிலையாழ்வாருடையவும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளிலே தெளிவது. இது திருமந்த்ர அர்த்தாநுஸந்தாநத்துக்கு குறிப்பாக அப்புள்ளார் அருளிச் செய்த விரகு. இதின் படியிலே த்வயத்திலும் சரமச்லோகத்திலும் உள்ள அர்த்தங்கள் தெளிந்து கொள்வது.

**விளக்கம்** - சரமச்லோகமானது நாம் பகவானைச் சென்றடையும் உபாயமாக (ஸித்தோபாயம்) அவனே உள்ளான் என்றும், நாம் அவனைச் சென்றடைய உதவுவதற்கு அவன் எப்போதும் சித்தமாக உள்ளான் என்றும், அவனது உபாயம் நமக்குக் கிட்டவேண்டும் என்றால் நாம் ஒரு உபாயம் (ஸாத்ய உபாயம்) கைக்கொள்ளவேண்டும் என்றும், இந்த உபாயம் பகவானிடத்தில் சரணாகதியே என்றும் கூறியது. இந்தச் சரணாகதியைச் செய்யும்போது த்வயத்தைக் கூறியபடி இருத்தல் வேண்டும், மேலும் அந்த நேரத்தில் நமது மனதில் என்ன சிந்தனையுடன் இருக்க வேண்டும் என்பதைத் திருமந்த்ரமானது சிறிய கண்ணாடி பெரிய உருவைக் காண்பிப்பது போன்று, நமக்கு உணர்த்துகிறது. திருமந்த்ரத்தின் முதல் பதமான ஓம் என்பதன் இரு பொருள்களை

(அர்த்தம்) அர்ஜுனனின் தேரிலும், இராமாயணம் ஆரண்யகாண்டம் (11-1) - அக்ரத: ப்ரயயௌ ராம: - என்ற ச்லோகத்தின் மூலமும் அறியலாம் (இந்த ச்லோகத்தின் பொருள் - கானகத்தில் இராமன் முதலில் சென்றான். அவனைப் பின்தொடர்ந்து சீதை நடுவில் சென்றாள். பின்னால் இலட்சுமணன் கையில் வில்லுடன் சென்றான் - என்பதாகும். இராமன் = அ என்ற எழுத்து, சீதை = உ என்ற எழுத்து, இலட்சுமணன் = ம என்ற எழுத்து. இம்மூன்றும் இணைந்ததே ஓம் என்பதாகும்). அடுத்து திருமந்த்ரத்தின் இரண்டாம் பதமான நம: என்பது, "நான் சுதந்த்ரமானவன் அல்லன், நான் பகவானுக்கு முழுவதுமாகக் கட்டுப்பட்டவன்", என்ற பொருளை உணர்த்துவதாகும். இதனைப் பரதன் மற்றும் சத்ருக்னன் மூலமாக உணரலாம் (பரதன் இராமனுக்குத் தொண்டனாக இருந்தான் - பகவத் பாரதந்த்ர்யம், சத்ருக்னன் பரதனுக்குத் தொண்டனாக இருந்தான் - பாகவத பாரதந்த்ர்யம்). அடுத்து நாராயண என்ற பதம் உள்ளது. இந்தப் பதமானது, "அவன் உயிர்களின் இருப்பிடமாக உள்ளான். உயிர்கள் அவனது இருப்பிடமாக உள்ளன" என்ற இரண்டு பொருளையும் அளிப்பதாகும், இதனைத் திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதியில் (7) - நான் உன்னை அன்றி இலேன் கண்டாய் நாராரணனே நீ என்னை அன்றி இலை - என்று கூறினார். இதே கருத்து இராமாயணத்திலும் வெளிப்பட்டது, "இராமனைப் பிரிந்த கோஸல நாட்டின் தாவரங்களும் விலங்குகளும் வாடின, இராமன் இந்த உலகை விட்டுப் பிரிந்தபோது அவற்றைப் பிரிய இயலாமல் தன்னுடனே கொண்டு சென்றான்", என்பது காண்க. திருமந்த்ரத்தின் முதல் பதமான ப்ரணவம், "ம எனப்படும் ஜீவன் அ எனப்படும் பகவானுக்காகவே உள்ளான்", என்பதைக் குறிக்கும். இரண்டாம் பதமான நம என்பது, "ஜீவன் பகவானையே சார்ந்துள்ளான்", என்பதைக் குறிக்கும். ஜீவன் பகவானுக்காகவும் அவனது அடியார்களுக்காகவுமே உள்ளான்; ஜீவன் பகவானையும் அவனது அடியார்களையுமே சார்ந்துள்ளான். ஆக, நாராயணாய என்ற பதமானது, ஜீவனின் கைங்கர்யம் என்ற புருஷார்த்தத்தை உணர்த்துகிறது. இந்தக் கைங்கர்ய நிலையானது லக்ஷ்மணன் விஷயத்தில் நேரடியாகக் காணப்பட்டது. ஆதிசேஷனின் அவதாரமாகவே உள்ள லக்ஷ்மணனின் அம்சமான பாதுகை, இராமனை விட்டுப் பிரிந்து, அவனது தொண்டனான பரதனுடன் சென்றதன் மூலம் பாகவத கைங்கர்யத்தை உணர்த்தியது. இவை அனைத்தும் திருமந்த்ரத்தின் பொருளை நன்றாக உணர்த்த அப்புள்ளார் அருளிச் செய்த உதாரணங்களாகும். இது போன்றே த்வயத்திலும், சரமச்லோகத்திலும் உள்ள பொருள்களை உணர வேண்டும்.


email : sridharan_book@yahoo.com

## "சேஷன், சேஷி" என்னும் நிலை "எஜமானன், அடிமை" என்பதில் முடிதல்

**மூலம் -** இவற்றில் ஈச்வரனுக்கு ப்ரகாசித்த சேஷித்வம், சேதநாசேதந ஸாதாரண தர்மமாகையாலே சேதநைகாந்தமான ஸ்வாமித்வமாகிற விசேஷத்திலே பர்யவஸிப்பித்து அநுஸந்திக்க ப்ராப்தம். இப்படித் தன்னுடைய சேஷத்வமும் ஸாமான்யமாகையாலே தாஸத்வமாகிற விசேஷத்திலே விச்ரமிப்பித்து அநுஸந்திக்கவேணும். இவற்றில் ஸாமான்யமான சேஷ சேஷி பாவம் ப்ரதமாக்ஷரத்தில் சதுர்த்தியாலே ப்ரகாச்யம். இதின் விசேஷமான தாஸத்வ ஸ்வாமித்வங்கள் இருவரும் சேதனராய்த் தோற்றுகையாலே அர்த்த ஸித்தம். இப்படி நாராயண சப்தத்திலும் ஸாமான்யமும் விசேஷமும் கண்டு கொள்வது. இதில் ஸாமான்யமான சேஷத்வத்தாலே சேதனனுக்கு ப்ராப்தமான கிஞ்சித்காரம் தாஸத்வமாகிற விசேஷத்தாலே கைங்கர்ய ரூபமான புருஷார்த்தமாயிற்று. இப்படி சேஷித்வத்தாலே வந்த ஈச்வரனுடைய அதிசய யோகமும் ஸ்வாமித்வமாகிற விசேஷத்தாலே அவனுக்குப் புருஷார்த்தமாய்ப் பலிக்கிறது. சேதனருடைய ரக்ஷணத்தில் ஈச்வரன் ப்ராப்தனுமாய் சக்தனுமாய், தததீந ப்ரவ்ருத்தியை ஒழியச் சேதனர் அப்ராப்தமாய் அசக்தருமாயிருக்கைக்கு நிபந்தனம், "ஈச்வரனுடைய நிரூபாதிக சேஷித்வமும் நிரூபாதிக நியாம்யத்வமும், உடையவன் உடைமையை ரக்ஷிக்கையும், ஸமர்த்தன் அஸமர்த்தனை ரக்ஷிக்கையும்" ப்ராப்தமிறே. ரக்ஷிக்கும்போது கர்மவச்யரை ஓருபாயத்திலே மூட்டி ரக்ஷிக்கை ஈச்வரனுக்கு ஸ்வ ஸங்கல்ப நியதம்.

**விளக்கம் -** இந்த மூன்று மந்த்ரங்களிலும் ஈச்வரன் அனைத்திற்கும் எஜமானனாக உள்ளான் என்பதும், இவனுக்காகவே அனைத்தும் உள்ளன என்பதும் கூறப்படுகின்றன. அவன் சேதனம் மற்றும் அசேதனம் ஆகிய இரண்டிற்கும் பொதுவான எஜமானனாகவே உள்ளான். அசேதனங்களைப் பொறுத்தவரையில், அவை இவனுக்காகவே உள்ளதால், அவற்றின் எஜமானனாக இவன் உள்ளான். ஞானத்துடன் கூடிய சேதனங்களைப் பொறுத்தவரையில், சேதனங்கள் அனைத்தும் அவனுக்குக் கைங்கர்யம் செய்தபடி இருக்கவேண்டிய ஸ்வாமியாக உள்ளான். இந்த மூன்று மந்த்ரங்களையும் நாம் கூறும்போது இந்தக் கருத்துக்களை நினைவில் நிறுத்தவேண்டும். நாம் அவனுக்கு அடிமை என்ற நிலையில் அசேதனங்களுக்கு ஒக்க இருந்தபோதிலும், அவனுடைய தாஸர்கள் என்ற சிறப்புத் தகுதி சேதனர்களான நமக்கு மட்டுமே உள்ளது. ஜீவனுக்கும்

பகவானுக்கும் இடையே உள்ள சேஷ-சேஷித்வ உறவுமுறையானது, திருமந்த்ரத்தின் முதல் பதம் மூலம் உணர்த்தப்படுகிறது. ஆனால் சேதனர்களுக்கு மட்டுமே விசேஷமான ஒரு சேஷத்வம் உள்ளது; இது நாம் அவனுக்கு தாஸர்களாக இருப்பதும், அவன் நமது ஸ்வாமியாக இருப்பதும் ஆகும் (இது அசேதனங்களுக்கு இல்லை). இது போன்றே நாராயண என்ற பதம், "அனைத்திற்கும் அவன் எஜமானனாக உள்ளான், ஜீவனுக்கு மட்டுமே ஸ்வாமியாக உள்ளான்", என்பதைக் கூறுகிறது. நாம் அவனுக்கு சேஷனாக இருந்து, அவனுக்குப் ப்ரயோஜனமாக உள்ள நிலை என்பது, நம்மை நாம் அவனுக்குத் தாஸனாகக் கொள்ளும்போது கைங்கர்யம் என்ற புருஷார்த்த நிலையாகிறது. ஆக அனைத்திற்கும் எஜமானனாக (சேஷி) உள்ளான் என்பதை அறிந்தால், வெறும் மேன்மை என்பது மட்டுமே விளங்கும், ஆனால் அவன் ஸ்வாமி என்பதை அறிந்தபோது புருஷார்த்தம் கைகூடுகிறது. அனைத்தையும் காப்பாற்றும் கடமை உள்ளவன் என்பது ஈச்வரனுக்கு உள்ளது, அதற்கான திறனும் அவனுக்கு மட்டுமே உள்ளது. சேதனனுக்குத் தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ளும் தகுதியோ திறனோ இல்லை. இதன் காரணம், ஈச்வரன் எதனையும் எதிர்பாராத எஜமானனாக (நிருபாதிக சேஷி) உள்ளான். ஒரு பொருளின் உரிமையாளன் அந்தப் பொருளைக் காக்க வேண்டியது அவன் கடமையன்றோ? பலம் பொருந்தியவன் பலமற்றவனைக் காப்பது உண்மையன்றோ? ஆனால் ஈச்வரன், "ஜீவன் ஏதோ ஓர் உபாயம் மூலம் ஈச்வரன் தன்னைக் காக்கும்படிச் செய்தால் மட்டுமே, அவனைக் (ஜீவனை) காப்பது", என்ற ஸங்கல்பத்தை ஈச்வரன் எடுத்துக் கொள்கிறான்.

நிலை தந்த தாரகனாய் நியமிக்கும் இறைவனுமாய்
இலது ஒன்று எனா வகை எல்லாம் தனது எனும் எந்தையுமாய்த்
துலை ஒன்று இலையென நின்ற துழாய்முடியான் உடம்பாய்
விலை இன்றி நாம் அடியோம் என்று வேதியர் மெய்ப்பொருளே

**பொருள்** - அவனே நமது இருப்பிற்கும் ஆதாரத்திற்குமாக உள்ளான். நம்மை நியமிப்பவனாக அவனே உள்ளான். அனைத்திற்கும் ஈச்வரனாய் உள்ளான். அவனுக்குத் தொண்டு புரியாமல் ஏதும் இங்கு இல்லை என்னும்படி உள்ளான். அனைத்தும் அவனுக்காக என்னும்படியான ஸ்வாமியாக உள்ளான். தனக்குச் சமமாக வேறு எந்த ஒன்றும் இல்லாதவனாக உள்ளான். இப்படிப்பட்டவனும், துளசிமாலையைத் தனது

திருமுடியில் சூடியுள்ளவனும் ஆகிய நாராயணனுக்கு நாம் உடம்பாகவும், வேறு பயன் கருதாத அடிமைகளாகவும் உள்ளோம் - என்று வேதம் அறிந்தவர்கள் கூறுகின்றனர்.

யதி ஏதம் யதி ஸார்வபௌம கதிதம் வித்யாத் அவித்யாதம:
ப்ரத்யூஷம் ப்ரதிதந்த்ரம் அந்திமயுகே கச்சித் விபச்சித்தம:
தத்ர ஏகத்ர ஞாடிதி உபைதி விலயம் தத் தந்மத ஸ்தாபனா
ஹோவாக ப்ரதமாந ஹைதுககதா கல்லோல கோலாஹல:

**பொருள்** - யதிகளின் தலைவரான எம்பெருமானாரால் அருளிச் செய்யப்பட்டதும், அறியாமை என்ற இருளை நீக்குவதும் ஆகிய இந்த கருத்துக்களை (ஈச்வரனுக்கும் உலகில் உள்ள அனைத்திற்கும் இருக்கும் உறவு என்பது ஆத்மாவிற்கும் உடலுக்கும் இடையே உள்ள உறவு போன்றது என்ற கருத்து), இந்தக் கலியுகத்தில் ஒருவன் அறிந்து கொள்கிறான் என்று வைப்போம். அப்படிப்பட்டவன் உள்ள இடத்தில், மற்ற மதங்களை நிலை நிறுத்த வாதம் செய்பவர்கள் உண்டாக்கும் அலைகளின் இரைச்சல் போன்ற ஓசை, ஒலிக்காமல் அடங்கி விடுகின்றன.

ப்ரதாந ப்ரதிதந்த்ர அதிகாரம் ஸம்பூர்ணம்


email : sridharan_book@yahoo.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## 4. அர்த்த பஞ்சக அதிகாரம்

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book:yahoo.co.in)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# முமுக்ஷு அறியவேண்டிய ஐந்து விஷயங்கள் குறித்து உரைக்கும் அதிகாரம்

ஆதௌ ப்ராப்யம் பரமம் அநகம் ப்ராப்த்ரு ரூபம் ச மாதௌ
இஷ்ட உபாயம் து அயந நமஸோ: ஈப்ஸிதார்த்தம் சதுர்த்யாம்
தத் வ்யாகாதம் மமக்ருதிகிரி வ்யஜ்ஜயந்தம் மநும் தம்
தத் ப்ராயம் ச த்வயம் அபி விதந் ஸம்மத: ஸர்வவேதீ

**பொருள்** - ப்ரணவத்திலும் (ஓம்), அஷ்டாக்ஷரத்திலும் (நாராயண) உள்ள "அ" என்பதன் மூலம், தோஷம் இல்லாததும் மிகவும் உயர்ந்ததும் அடையப்படவேண்டிய பொருளாக உள்ளதும் ஆகிய வஸ்து (பகவான்) கூறப்பட்டது. அடுத்துள்ள "ம" என்பதன் மூலம், இப்படிப்பட்ட வஸ்துவை அடையவேண்டிய ஜீவனின் ஸ்வரூபம் கூறப்பட்டது. (நாராயணாய என்பதில் உள்ள) அயநம் என்பதன் மூலம், இப்படிப்பட்ட வஸ்துவை அடையும் உபாயமான ஸித்த உபாயம் கூறப்பட்டது. "நம" என்பதன் மூலம் இப்படிப்பட்ட உபாயத்திற்குத் தேவையான அங்கமான சரணாகதி (ஸாத்ய உபாயம்) கூறப்பட்டது. நாராயணாய என்பதில் உள்ள நான்காம் வேற்றுமை (நான்காம் வேற்றுமை என்பது யார் ஒருவருக்காக ஒன்றைக் கூறுகிறோமோ என்று பொருள்; உதாரணமாக உழவன் மாடுகளுக்கு நீர் அளிக்கிறான்) மூலம், அடையவேண்டும் என்று ஆசைப்படும் பொருள் கூறப்பட்டது. நம என்பதில் உள்ள "ம" என்ற பதம், இப்படிப்பட்ட பகவானை அடையத் தடையாக உள்ள மமகாரத்தை (என்னுடையது, நான் போன்றவை) குறிக்கும். இப்படியாக ஐந்து கருத்துக்களை விளக்கும் அஷ்டாக்ஷரத்தையும், அது போன்று உள்ள த்வயம் (மற்றும் சரம ச்லோகம்) ஆகியவற்றையும் அறிபவன், அனைத்தையும் அறிந்தவனாகிறான்.

## ஐந்து அல்லது ஆறு அர்த்தங்களில் வேறுபாடு இல்லை

**மூலம் -** ஐந்து அர்த்தங்களைக் கூறுவதற்கும், ஆறு அர்த்தங்களைக் கூறுவதற்கும் வேறுபாடு இல்லை. நாராயணாதி சப்தங்களிலே விவக்ஷிதமான ஸம்பந்த விசேஷத்தை ஸித்தாந்தத்துக்கு தளமாக்கி இத்தை அநுபந்தித்திருக்கும் அர்த்தபஞ்சகத்தைச் சிலர் விசாரித்தார்கள். இஸ்ஸம்பந்தத்தோடே கூட ஷடர்த்தங்களென்று சிலர் அநுஸந்தித்தார்கள்.

**விளக்கம் -** நாராயண மற்றும் ஓம் ஆகிய பதங்களின் மூலம், ஈச்வரனுக்கும் ஜீவனுக்கும் இடையே உள்ள உறவுமுறை என்பது, ஆத்மாவிற்கும் சரீரத்திற்கும் உள்ளது போன்றது என்பது விளக்கப்பட்டது. இந்தத் தத்துவத்தையே நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் அடிப்படை என்று கருதுபவர்கள், முமுக்ஷுவால் அறியப்படவேண்டியது அர்த்தபஞ்சகமே ஆகும் என்று கருதி, அதனை ஆராய்ந்தனர். வேறு சிலர், அர்த்தபஞ்சகத்துடன், இந்த உறவுமுறையும் (ஈச்வரன்-ஜீவன்) அறியப்படவேண்டும் என்று கருதி, ஆறு அர்த்தங்களை ஆராய்ந்தனர்.

## அர்த்தபஞ்சகத்தின் விளக்கம்

**மூலம் -** இஸ்ஸம்பந்தம்போலே முமுக்ஷுவுக்கு விசேஷித்து அறிய வேண்டுவதாகச் சேர்த்த அர்த்தபஞ்சகம் ஏதென்னில், "ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந: | ப்ராப்த்யுபாய பலம் ச ஏவ ததா ப்ராப்தி விரோதி ச | வதந்தி ஸகலா வேதா: ஸ இதிஹாஸ புராணகா:" என்று சொல்லப்பட்டன.

**விளக்கம் –** ஈச்வரன் மற்றும் ஜீவன் என்னும் தொடர்புடன் சேர்த்து, முமுக்ஷுக்கள் அறியவேண்டிய ஐந்து முக்கியமான கருத்துக்கள் என்னவென்பதை ஹாரீத ஸம்ஹிதை - ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந: | ப்ராப்த்யுபாய பலம் ச ஏவ ததா ப்ராப்தி விரோதி ச | வதந்தி ஸகலா வேதா: ஸ இதிஹாஸ புராணகா: - அடையப்பட வேண்டிய ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம், அந்த ப்ரஹ்மத்தை அடையும் ஜீவனின் ஸ்வரூபம், இவ்விதம் ப்ரஹ்மத்தைச் சென்றடையும் உபாயம், ப்ரஹ்மத்தை அடைவதன் மூலம்

பெறும் பயன் மற்றும் ப்ரஹ்மத்தை அடைவதற்குத் தடையாக உள்ள விஷயங்கள் என்பவையே ஆகும், இப்படியாகவே இதிஹாஸங்கள், புராணங்கள் ஆகியவற்றுடன் கூடிய வேதங்கள் கூறுகின்றன - என்று கூறியது.

## அர்த்தபஞ்சகம் – 1 - ஈச்வரனின் ஸ்வரூபம்

### ரஹஸ்ய த்ரயத்தில் ஈச்வர ஸ்வரூபம் வெளிப்படல்

**மூலம்** - இவற்றில் ப்ராப்யமான ப்ரக்ஷ்மத்தினுடைய ஸ்வரூபம் : திருமந்த்ரத்தில் ப்ரதம அக்ஷரத்திலும் நாராயண சப்தத்திலும், த்வயத்தில் ஸவிசேஷணங்களான நாராயண சப்தங்களிலும், சரமச்லோகத்தில் மாம், அஹம் என்கிற பதங்களிலும் அநுஸந்தேயம்.

**விளக்கம்** - இவற்றில் (அர்த்தபஞ்சகத்தில்) அடையப்பட வேண்டிய இலக்கான ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் என்பது திருமந்த்ரத்தின் முதல் சொல்லான ஓம் என்பதில் உள்ள "அ" என்பதன் மூலமும், நாராயண என்ற பதம் மூலமும் அறியப்படுகிறது; த்வய மந்த்ரத்தில் உள்ள "ஸ்ரீமந்" என்ற அடைச்சொல்லுடன் கூடிய "நாராயண" என்ற பதம் மூலம் அறியப்படுகிறது; சரமச்லோகத்தில் உள்ள "நான், என்" என்ற பதங்கள் மூலம் அறியப்படுகிறது.

### ஈச்வரன் பெரியபிராட்டியை அகலாதவன் மற்றும் ஞான ஆநந்த ஸ்வரூபன்

**மூலம்** - அவ்விடங்களில் அநுஸந்திக்கும்போது, ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:, ஏஷ நாராயண: ஸ்ரீமாந், பவாந் நாராயணோ தேவ: ஸ்ரீமாந் சக்ரதரோ விபு:, ஸ்ரீவத்ஸவக்ஷ நித்யஸ்ரீ:, விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ, ஸீதா ஸமக்ஷம் காகுத்ஸ்தம் இதம் வசனமப்ரவீத், ஸீதாமுவாசாதியசா ராகவம் ச மஹாவ்ரதம், அலமேஷா பரித்ராதும் ராகவாத் ராக்ஷஸீ கணம், பவேயம் சரணம் ஹி வ:, பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா, தயா ஸஹாஸீநமநந்த போகினி, காந்தஸ்தே புருஷோத்தம:, ஸ்வபரிசரண போகை: ஸ்ரீமதி ப்ரீயமாணே, ஸ்ரீமதே நிர்மலாநந்தோ தந்வதே விஷ்ணவே நம:, ஸ்ரிய:காந்த: அநந்தோ வரகுண கணைகாஸ்பத வபு:, ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸோ, ஸ்ரிய:பதி: நிகில ஹேயப்ரத்யநீக

கல்யாணைகதாநாநந்த ஞானானந்த ஸ்வரூப:, நீயும் திருமகளும் நின்றாயால், ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப, கோலத் திருமாமகளோடு உன்னை, நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும், உன் தாமரை மங்கையும் நீயும், அகலகில்லேன் இறையும், உணர் முழு நலம், நந்தா விளக்கே அளத்தற்கரியாய் என்றும் ப்ரமாணங்கள் சொல்லுகிறபடியே ஸர்வ ப்ரகாரத்தாலும் ஸர்வாவஸ்தையிலும் ஸஹதர்மசாரிணியான பெரியபிராட்டியாரோடு பிரிவில்லாத முழு நலமான அநந்த ஞாநாநந்த ஸ்வரூபமாக அநுஸந்திக்க வேணும்.

**விளக்கம்** - பகவானின் ஸ்வரூபத்தை எல்லையற்ற ஞானம் உள்ளதாகவும், எல்லையற்ற ஆனந்தம் உள்ளதாகவும் அறிய வேண்டும். மேலும் அவன் எப்போதும், எந்த உருவிலும், எந்தச் சூழலிலும் தனது நாயகியான பெரியபிராட்டியாரை விட்டுப் பிரியாமல் உள்ளான் என்பதை அறியவேண்டும். அவள், அவனது அனைத்துச் செயல்களிலும் பங்கு கொள்கிறாள் என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும். அவன் பிராட்டியை இவ்விதம் பிரியாமல் உள்ளான் என்பதை பல ப்ராமாணங்கள் மூலம் அறியலாம். லைங்க புராணம் – ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: - இந்த உலகின் பதியான நாராயணன் மஹாலக்ஷ்மியுடன் வைகுண்டத்தில் உள்ளான்; ஹரிவம்ஸம் (113-62) - ஏஷ நாராயண: ஸ்ரீமாந் - இந்த நாராயணன் எப்போதும் மஹாலக்ஷ்மியுடன் உள்ளான்; இராமாயணம் யுத்தகாண்டம் (120-13) - பவாந் நாராயணோ தேவ: ஸ்ரீமாந் சக்ரதரோ விபு: - இராமா! நீயே மஹாலக்ஷ்மியின் நாயகனும், சக்கரத்தை உடையவனும், உலகங்களின் எஜமானனும் ஆகிய நாராயணன் ஆவாய்; இராமாயணம் யுத்தகாண்டம் (114-15) - ஸ்ரீவத்ஸவக்ஷ நித்யஸ்ரீ: - ஸ்ரீவத்ஸம் என்ற மறுவைத் திருமார்பில் கொண்டவனாகவும், மஹாலக்ஷ்மியுடன் இணைந்தவனாகவும் உள்ளாய்; ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-18-17) - விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ - மஹாலக்ஷ்மி விஷ்ணுவை விட்டுப் பிரியாதவள்; இராமாயணம் ஆரண்யகாண்டம் (15-6) - ஸீதா ஸமக்ஷம் காகுத்ஸ்தம் இதம் வசனமப்ரவீத் - லக்ஷ்மணன், இராமனிடம் சீதையின் முன்பாக இவ்விதம் கூறினான்; இராமாயணம் அயோத்யாகாண்டம் (31-2) - ஸீதாமுவாசாதியசா ராகவம் ச மஹாவ்ரதம் - தன்னைச் சரணம் புகுந்தவர்களைக் காப்பேன் என்ற ஸங்கல்பம் உடைய இராமனிடமும் சீதையிடமும் லக்ஷ்மணன் கூறினான்; இராமாயணம் ஸுந்தர காண்டம் (58-87) - அலமேஷா பரித்ராதும் ராகவாத் ராக்ஷஸீகணம் - இராமனிடமிருந்து இந்த அரக்கிகளைக் காப்பாற்றும் திறன் சீதையிடம் உள்ளது; இராமாயணம் ஸுந்தர காண்டம் (58-90) -

பவேயம் சரணம் ஹி வ: - சீதை அரக்கிகளிடம், “நான் உங்களுக்குச் சரணம் புகும் இடம் ஆவேன்”, என்றாள்; இராமாயணம் அயோத்யாகாண்டம் (31-27) - பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா – “இராமா! நீ சீதையுடன் இந்த மலை அடிவாரங்களில் சுகமாக இருப்பாயாக”, என்று லக்ஷ்மணன் கூறினான்; ஸ்தோத்ரரத்னம் (39) - தயா ஸஹாஸீநமநந்த போகினி - மஹாலக்ஷ்மியுடன் இணைந்து ஆதிசேஷன் மீது உள்ள எம்பெருமானை; சதுச்ச்லோகீ (1) - காந்தஸ்தே புருஷோத்தம: - உனது ப்ரியமான நாயகன் புருஷோத்தமன்; ஆத்மஸித்தி (மங்கள ச்லோகம்) - ஸ்வபரிசரண போகை: ஸ்ரீமதி ப்ரீயமாணே - மஹாலக்ஷ்மியுடன் அமர்ந்துள்ள எம்பெருமான், தனக்குச் செய்யப்படும் கைங்கர்யங்களை அனுபவித்து மகிழ்கிறான்; வேதாந்தசாரம் (மங்கள ச்லோகம்) - ஸ்ரீமதே நிர்மலாநந்தோ தந்வதே விஷ்ணவே நம: - மஹாலக்ஷ்மியுடன் சேர்ந்துள்ளவனும், தோஷங்கள் அற்றவனும் ஆகிய விஷ்ணுவுக்கு நமஸ்காரம்; வேதாந்த தீபம் (மங்கள ச்லோகம்) - ஸ்ரீய:காந்த: அநந்தோ வரகுணகணைகாஸ்பத வபு: - மஹாலக்ஷ்மிக்குப் ப்ரியமானவனும், எல்லையற்ற கல்யாண குணங்களின் இருப்பிடமாக உள்ளவனும், எங்கும் நிறைந்தவனும்; ஸ்ரீபாஷ்யம் (மங்கள ச்லோகம்) - ப்ரக்ஷ்மணி ஸ்ரீநிவாஸே - மஹாலக்ஷ்மிக்கு இருப்பிடமான பரப்ரஹ்மம்; கீதா பாஷ்யம் (அறிமுகம்) - ஸ்ரீய:பதிர் நிகில ஹேயப்ரத்யநீக கல்யாணைகதாநாநந்த ஞானானந்த ஸ்வரூப: - மஹாலக்ஷ்மியின் பதியும், தாழ்வுகளுக்கு எதிர்தட்டாக உள்ளவனும், கல்யாண குணங்கள் நிறைந்தவனும், எல்லையற்ற ஞானம் மற்றும் ஆனந்தம் கொண்டவனும்; முதல் திருவந்தாதி (86) - நீயும் திருமகளும் நின்றாயால் - குன்றெடுத்து இந்த்ரனின் மழையிலிருந்து காத்தவனே! நீயும் மஹாலக்ஷ்மியும்; திருவாய்மொழி (4-9-10) - ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப - அழகான வளையல்கள் அணிந்த பிராட்டியுடன் நீயும் நிற்க; திருவாய்மொழி (6-9-3) - கோலத் திருமாமகளோடு உன்னை - மஹாலக்ஷ்மியுடன் பொருந்தியுள்ள உன்னை; திருவாய்மொழி (9-2-1) - நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் - உனது கருணையும், தாமரை மலரில் உள்ள பிராட்டியின் கருணையும்; திருவாய்மொழி (9-2-3) - உன் தாமரை மங்கையும் நீயும் - தாமரை மலரில் அமர்ந்துள்ள உனது நாயகியான பிராட்டியும் நீயும்; திருவாய்மொழி (6-10-10) - அகலகில்லேன் இறையும் - உன்னை விட்டு ஒரு நொடியும் பிரியாமல் இருப்பேன் என்ற பிராட்டி; திருவாய்மொழி (1-1-2) - உணர் முழு நலம் - ஞானமாகவும் ஆனந்தமயமாகவும் உள்ளவன்; பெரிய திருமொழி (3-8-1) - நந்தா விளக்கே அளத்தற்கு அரியாய் - அணையாத விளக்கும், எல்லையற்றவனும் ஆகியவன்.

## ஈச்வரன் தாழ்ந்த குணங்கள் அற்றவன்

**மூலம்** – இப்படி “ஸமஸ்த ஹேய ரஹிதம் விஷ்ண்வாக்யம் பரமம் பதம்”, “பர: பராணாம் ஸகலா ந யத்ர க்லேசாதயஸ்ஸந்தி பராவரேசே” என்கிறபடியே ஹேய ப்ரத்யநீகமாக அநுஸந்தேயம்.

**விளக்கம்** - எம்பெருமான் தாழ்வுகள் அனைத்திற்கும் எதிர்தட்டாக உள்ளான் என்பதை ஸ்ரீவிஷ்ணு புராணம் (1-22-53) - ஸமஸ்த ஹேய ரஹிதம் விஷ்ண்வாக்யம் பரமம் பதம் - விஷ்ணு என்ற திருநாமம் கொண்ட எம்பெருமானின் ஸ்வரூபம் தோஷங்கள் அற்றது – என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-5-85) - பர: பராணாம் ஸகலா ந யத்ர க்லேசாதயஸ்ஸந்தி பராவரேசே - அவன் உயர்ந்தவற்றை விட உயர்ந்தவன், அவனிடம் க்லேசம் முதலான தோஷங்கள் ஏதும் இல்லை – என்றும் உள்ள வாக்கியங்களால் அறியலாம்.

## ஈச்வரன் எல்லையற்ற கல்யாண குணங்கள் கொண்டவன்

**மூலம்** - தைர்யுக்த: ச்ரூயதாம் நர:, தமேவம் குண ஸம்பந்நம், ஜ்யேஷ்டம் ச்ரேஷ்ட குணைர் யுக்தம், ஏவம் ச்ரேஷ்ட குணைர் யுக்த:, குணைர் விருருசே ராம:, தமேவம் குண ஸம்பந்நம் அப்ரத்ருஷ்ய பராக்ரமம், பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே, ஆந்ருசம்ஸ்யமனுக்ரோச: ச்ருதம் சீலம் தமச்சம: ராகவம் சோபயந்த்யேதே ஷட்குணா: புருஷோத்தமம், விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: சரணாகத வத்ஸல:, சரண்யம் சரண்யம் ச த்வாம் ஆஹுர்திவ்யா மஹர்ஷய:, நிவாஸவ்ருக்ஷ: ஸாதுநாம் ஆபந்நாநாம் பரா கதி: தேஜோ பலைச்வர்ய மஹாவபோத ஸுவீர்ய சக்த்யாதி குணைகராசி:, ஸர்வபூதாத்ம பூதஸ்ய விஷ்ணோ: கோ வேதிதும் குணாந், யதா ரத்நாநி ஜலதே: அஸங்க்யேயாநி புத்ரக ததா குணாச்ச தேவஸ்ய த்வஸங்க்யேயா ஹி சக்ரிணா:, வர்ணாயுதைர்யஸ்ய குணா ந சக்யா வக்தும் ஸமேதைரபி ஸர்வதேவை:, சதுர்முகயுர்யதி கோடிவக்த்ரோ பவேந்நர: க்வாபி விசுத்தசேதா: ஸ தே குணாநாமயுதைகமம்சம் வதேந்ந வா தேவவர ப்ரஸீத, தவானந்த குணஸ்யாபி ஷடேவ ப்ரதமே குணா: யைஸ்த்வயேவ ஜகத்குக்ஷௌ அந்யே அப்யந்தர்நிவேசிதா:, இஷுக்ஷயாந் நிவர்த்தந்தே நாந்தரிக்ஷ க்ஷிதி க்ஷயாத் மதி க்ஷயாந்

நிவர்த்தந்தே ந கோவிந்த குண க்ஷயாத், வல்வினையேனை ஈர்க்கின்ற குணங்களை உடையாய், உயர்வற உயர்நலம் உடையவன் என்கிறபடியே ப்ராப்யத்வ ப்ராபகத்வோப யுக்தங்களான குணங்களாலே விசிஷ்டமாக அநுஸந்தேயம்.

**விளக்கம்** - அடையக்கூடிய பொருளாக இருப்பதற்கு ஏற்ற அனைத்துக் குணங்களையும், அவ்விதம் அடைவதற்கு ஏற்ற உபாயமாக இருப்பதற்கான குணங்களையும் அவன் கொண்டுள்ளான். இதனைக் கீழே உள்ள பல வரிகளில் காணலாம் : பாலகாண்டம் (1-7) - தைர்யுக்த: ச்ரேயதாம் நர: - அந்தக் குணங்கள் அனைத்தும் கொண்ட மனிதனைப் பற்றிக் கூறுகிறேன்; அயோத்யாகாண்டம் (2-48) - தமேவம் குண ஸம்பன்னம் - இவ்விதமாகக் குணங்கள் கொண்ட இராமனை; பாலகாண்டம் (1-20) - ஜ்யேஷ்டம் ச்ரேஷ்ட குணைர் யுக்தம் - மூத்தவனும், மிகவும் உயர்ந்த குணங்கள் கொண்டவனும் ஆகிய இராமன்; அயோத்யாகாண்டம் (11-31) - ஏவம் ச்ரேஷ்ட குணைர் யுக்த: - இவ்விதமாக மிகவும் உன்னதமான குணங்கள் கொண்ட இராமனை; அயோத்யாகாண்டம் (2-47) – குணைர் விருருசே ராம: - குணங்கள் மூலமாக இராமன் விளங்கினான்; அயோத்யாகாண்டம் (1-34) - தமேவம் குண ஸம்பந்நம் அப்ரத்ருஷ்ய பராக்ரமம் - இவ்விதமாக குணங்களின் இருப்பிடமாக உள்ளவனும், யாராலும் வெல்லப்பட இயலாமல் உள்ளவனும் ஆகிய இராமன்; அயோத்யாகாண்டம் (2-26) - பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே - தசரத மன்னா! உனது புத்ரனுக்குப் பல உயர்ந்த குணங்கள் உள்ளன; அயோத்யாகாண்டம் (33-12) - ஆந்ருசம்ஸ்யமனுக்ரோச: ச்ருதம் சீலம் தமச்சம: ராகவம் சோபயந்த்யேதே ஷட்குணா: புருஷோத்தமம் - தன்னிடம் சரணம் புகுந்தவர்களைக் காக்கும் தன்மை, கருணை, அனைத்து சாஸ்த்ரங்களும் அறிந்துள்ள தன்மை, தாழ்ந்தவர்களுடனும் சரிசமமாகப் பழகும் குணம், மன அடக்கம், புலன் அடக்கம் முதலான ஆறும் புருஷர்களில் உத்தமனான இராமனை அலங்கரிக்கின்றன; ஸுந்தரகாண்டம் (21-20) - விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: சரணாகத வத்ஸல: - தர்மம் அனைத்தும் அறிந்த இராமன், தன்னிடம் சரணம் புகுந்தவர்களிடம் மிகுந்த அன்புள்ளவன் என்று அனைவரும் அறிவார்கள் அல்லவோ?; யுத்தகாண்டம் (121-18) - சரண்யம் சரண்யம் ச த்வாம் ஆஹுர்திவ்யா மஹர்ஷய: - இராமா! உன்னையே சரணம் புகுவதற்கு ஏற்றவன் என்றும், சரணம் அடைந்தவர்களைக் காப்பவன் என்றும் மஹரிஷிகள் கூறுகின்றனர்; கிஷ்கிந்தாகாண்டம் (15-19) - நிவாஸவ்ருக்ஷ: ஸாதூனாம் ஆபன்னானாம் பரா கதி: - ஸாதுக்களுக்கு இனிய நிழல் தரும் கற்பக மரம், துன்பத்தில் உள்ளவர்கள்

அடையவேண்டிய சிறந்த கதி; ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-5-85) - தேஜோ பலைச்வர்ய மஹாவபோத ஸ்வீர்ய சக்த்யாதி குணைகராசி: - தேஜஸ், பலம், ஐச்வர்யம், ஞானம், வீர்யம், சக்தி முதலான உயர்ந்த குணங்களின் இருப்பிடம்; ப்ரஹ்மபுராணம் - ஸர்வபூதாத்ம பூதஸ்ய விஷ்ணோ: கோ வேதிதும் குணாந் - அனைத்து உயிர்களின் ஆத்மாவாக உள்ள விஷ்ணுவின் குணங்களை யார் முழுவதுமாக அறிவார்கள்?; ஸ்ரீவாமனபுராணம் (74-40) - யதா ரத்னாநி ஜலதே: அஸங்க்யேயாநி புத்ரக ததா குணாச்ச தேவஸ்ய த்வஸங்க்யேயா ஹி சக்ரிணா: - ஸமுத்ரத்தில் உள்ள இரத்தினக் கற்களைக் கணக்கிட இயலாது. அது போன்று, சக்கரத்தை ஏந்திய எம்பெருமானின் குணங்களைக் கணக்கிட இயலாது; மஹாபாரதம் கர்ணபர்வம் (83-15) - வர்ணாயுதைர்யஸ்ய குணா ந சக்யா வக்தும் ஸமேதைரபி ஸர்வதேவை: - அனைத்துத் தேவர்களும் ஒன்றாக்கூடி நின்று, பல பதினாயிரம் வருடங்கள் கூறினாலும் அவனது குணங்களை முழுவதுமாகக் கூறி முடிக்க இயலாது; ஸ்ரீவராஹபுராணம் (73-35) - சதுர்முகயுர்யதி கோடிவக்த்ரோ பவேந்நர: க்வாபி விசுத்தசேதா: ஸ தே குணாநாமயுதைகமம்சம் வதேந்ந வா தேவவர ப்ரஸீத - ப்ரம்மனின் ஆயுள், பல ஆயிரக்கணக்கான வாய்கள், மிகவும் தூய்மையான மனம் ஆகியவற்றை உடைய ஒருவன் உள்ளான் என்று வைத்துக் கொள்வோம். அவனால் கூட உனது குணத்தின் பதினாயிரத்தின் ஒரு பகுதியைக் கூற இயலுமோ இயலாதோ?; தவானந்த குணஸ்யாபி ஷடேவ ப்ரதமே குணா: யைஸ்த்வயேவ ஜகத்குக்ஷௌ அந்யே அப்யந்தர்நிவேசிதா: - கணக்கற்ற குணங்களை நீ கொண்டிருந்தாலும் ஆறு குணங்களே உனக்கு மிகவும் ப்ரதானமாக உள்ளன. இந்த உலகை நீ வயிற்றில் வைத்தது போன்று, அந்த ஆறு குணங்களும் மற்ற குணங்களைத் தங்களுக்குள் கொண்டுள்ளன; இஷுக்ஷயாந்நிவர்த்தந்தே நாந்தரிக்ஷ க்ஷிதி க்ஷயாத் மதி க்ஷயாந் நிவர்த்தந்தே ந கோவிந்த குண க்ஷயாத் - ஆகாயம் முழுவது அம்பால் நிரப்பவேண்டும் என்று புறப்படும் சிலர், தங்களிடம் உள்ள பாணங்கள் தீர்ந்து விட்டதால் ஓய்கின்றனர் அல்லாமல், ஆகாயம் நிரப்பப்பட்டதால் இல்லை. அது போன்று, கோவிந்தனின் குணங்களைக் கூறத் தொடங்குபவர்கள் தங்கள் புத்தி ஓய்ந்ததால் நிறுத்துகின்றனர் அல்லாமல், அவனது குணங்களைக் கூறி முடித்து விட்டதால் அல்ல; திருவாய்மொழி (8-1-8) – வல்வினையேனை ஈர்க்கின்ற குணங்களை உடையாய் - மிகவும் கொடிய வினைப்பயன்கள் உடைய என் போன்றவனையும் உன்பால் ஈர்க்கும் குணங்கள் கொண்டவனே; திருவாய்மொழி (1-1-1) - உயர்வற உயர்நலம் உடையவன்.

## ஈச்வரன் எழில் பொங்கும் திவ்யமங்கள திருமேனி உடையவன்

**மூலம்** - ஸதைகரூப ரூபாய, நித்யஸித்தே ததாகாரே தத் பரத்வே ச பௌஷ்கர யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே தஸ்யாஸௌ ஸந்நிதிம் ப்ரஜேத், ஸமஸ்தாச்சக்தயச்சைதா ந்ருப யத்ர ப்ரதிஷ்டிதா: தத் விச்வரூப வைரூப்யம் ரூபமந்யத்தரேர்மஹத், இச்சா க்ருஹீதாபிமதோருதேஹ:, ந பூதஸங்க ஸம்ஸ்தாநோ தேஹோ அஸ்ய பரமாத்மந:, ந தஸ்ய ப்ரக்ருதா மூர்த்தி: மாம்ஸமேதோ அஸ்திஸம்பவா, பூஜைச்சதுர்பி: ஸமுபேதமேதத் ரூபம் விசிஷ்டம் திவி ஸம்ஸ்திதம் ச, ருக்மாபம் ஸ்வபந் தீ கம்யம், தத்ரைகஸ்தம் ஜகத் க்ருத்ஸ்நம், பச்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே, அஸ்த்ர பூஷண ஸம்ஸ்தாந ஸ்வரூபம், பூஷணாஸ்த்ர ஸ்வரூபஸ்தம் யதேதமகிலம் ஜகத், தமஸ: பரமோ தாதா சங்கம் சக்ர கதா தர: என்கிறபடியே ஸர்வஜகதாச்ரயமான அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டமாக அநுஸந்தேயம். இவ்விக்ரஹம் பர வ்யூஹ விபவ ஹார்த்தார்சாவதார ரூபேண பஞ்சப்ரகாரமாயிருக்கும்படியும் இவற்றிலுள்ள விசேஷங்களும் பகவச்சாஸ்த்ர ஸம்ப்ரதாயத்தாலே அறியப்படும்.

**விளக்கம்** - அனைத்து உலகங்களுக்கும் இருப்பிடமாக உள்ள எம்பெருமானின் திருமேனியானது அப்ராக்ருதமானது, திவ்யமானது, மங்களகரமானது என்று அறியவேண்டும். இந்தக் கருத்துக்களை பாஞ்சராத்ர ஆகமத்திலிருந்தும் மற்ற ஸம்ப்ரதாய முறைகளிலிருந்தும் அறியலாம். இதனை அடுத்துள்ள பல வரிகளிலும் காண்க: ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-2-1) - ஸதைகரூப ரூபாய - எப்போதும் மாறாமல் ஒரே போன்ற திருமேனி உள்ளவன்; பௌஷ்கர ஸம்ஹிதை - நித்யஸித்தே ததாகாரே தத் பரத்வே ச பௌஷ்கர யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே தஸ்யாஸௌ ஸந்நிதிம் ப்ரஜேத் – பௌஷ்கரனே! எப்போதும் உள்ள அவனது திருமேனி குறித்தும், அவனே அனைத்திலும் மேம்பட்டவன் என்பது குறித்தும் யாருக்கு அசைக்க இயலாத நம்பிக்கை உள்ளதோ அவனிடம் எம்பெருமான் எப்போதும் உள்ளான்; ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-7-70) - ஸமஸ்தாச்சக்தயச்சைதா ந்ருப யத்ர ப்ரதிஷ்டிதா: தத் விச்வரூப வைரூப்யம் ரூபமந்யத்தரேர்மஹத் - இந்த உலகில் காணப்படும் சரீரங்கள் அனைத்தைக் காட்டிலும் வேறானதாக ஸ்ரீஹரியின் திருமேனி உள்ளது. அந்தத் திருமேனியிலேயே அனைத்து

சக்திகளும் நிலையாக உள்ளன; ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-5-84) - இச்சா க்ருஹீதாபிமதோருதேஹ: - அனைவருக்கும் இன்பம் அளிக்கும் விதமான திருமேனியைத் தனது ஸங்கல்பத்தால் எடுத்துக் கொள்பவன்; மஹாபாரதம் சாந்திபர்வம் (206-60) - ந பூதஸங்க ஸம்ஸ்தாநோ தேஹோ அஸ்ய பரமாத்மந: - பரமாத்மாவின் திருமேனி பஞ்சபூதங்கள் சேர்வதால் உண்டாகும் சரீரம் அல்ல; ஸ்ரீவராஹபுராணம் (31-40) - ந தஸ்ய ப்ரக்ருதா மூர்த்தி: மாம்ஸமேதோ அஸ்திஸம்பவா - எம்பெருமானின் திருமேனியானது மாமிஸம், மஜ்ஜை, எலும்பு ஆகியவற்றால் ஆன சரீரம் அல்ல; மஹாபாரதம் மௌஸலபர்வம் (5-34) - பூஜைச்சதுர்பி: ஸமுபேதமேதத்ரூபம் விசிஷ்டம் திவி ஸம்ஸ்திதம் ச - அவனது திருமேனி நான்கு திருக்கரங்களுடன் உள்ளது, மிகவும் மேன்மை உடையது, பரமபதத்தில் உள்ளது; மனு ஸ்ம்ருதி (12-122) - ருக்மாபம்ஸ்வபந் தீ கம்யம் - தங்கம் போன்று ப்ரகாசம் உடையவன். அவனை மனதால் கனவில் காண்பது போன்று மட்டுமே அடைய இயலும்; கீதை (11-13) - தத்ரைகஸ்தம் ஜகத் க்ருத்ஸ்நம் - அவனது திருமேனியில் இந்த உலகம் ஒரு சிறிய பகுதியாக உள்ளதைக் கண்டான்; கீதை (11-15) - பச்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹ – தேவாதிதேவனே! உனது திருமேனியில் அனைத்து தேவதைகளையும் நான் காண்கிறேன்; ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-22-76) - அஸ்த்ர பூஷண ஸம்ஸ்தாந ஸ்வரூபம் - ஆயுதங்களும் ஆபரணங்களும் தங்கும் இடமாக அவன் திருமேனி உள்ளது; ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-22-66) - பூஷணாஸ்த்ர ஸ்வரூபஸ்தம் யதேதமகிலம் ஜகத் - இந்த உலகங்கள் முழுவதும் அவனது திருமேனியில் ஆபரணங்களாகவும் ஆயுதங்களாகவும் உள்ளன; யுத்தகாண்டம் (114-25) - தமஸ: பரமோ தாதா சங்கம் சக்ர கதா தர: - ப்ரக்ருதிக்கும் மேலே உள்ளவனாகவும், சங்கு-சக்ர-கதை உள்ளவனாகவும்.

## ஈச்வரனின் விபூதிகள்

**மூலம்** – "விஷ்ணோரேதா விபூதய:", "மஹாவிபூதி ஸம்ஸ்தாந", "நாந்த: அஸ்தி மம திவ்யாநாம் விபூதிநாம் பரந்தப" இத்யாதிகளுடைய ஸங்க்ரஹமான "யதண்டமண்டாந்தர கோசரம் ச யத்" என்கிற ச்லோகத்தின்படியே அநந்த விபூதி விசிஷ்டமாக அநுஸந்தேயம்.


email : sridharan_book@yahoo.com

**விளக்கம்** - அவனது விபூதிகள் மிகவும் சிறப்புடையவை, எல்லையற்றவை என்பதை ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-22-32) - விஷ்ணோரேதா விபூதய: - இவை அனைத்தும் விஷ்ணுவின் விபூதிகள்; ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-1-50) - மஹாவிபூதி ஸம்ஸ்தாந - மஹாவிபூதி எனப்படும் பெரிய விபூதியைத் தனது இருப்பிடமாக உள்ளவன்; கீதை (10-40) - நாந்த: அஸ்தி மம திவ்யாநாம் விபூதிநாம் பரந்தப – அர்ஜுனா! எனது மேன்மையான விபூதிகளுக்கு எல்லையில்லை – என்பவற்றின் மூலம் உணரலாம். இவை அனைத்தின் சுருக்கமாகவே ஸ்தோத்ரரத்னம் (17) - யதண்டமண்டாந்தர கோசரம் ச யத் - அண்டம் என்னும் இப்ப்ரபஞ்சமும், இந்த அண்டத்தில் உள்ள அனைத்தும் அவனது விபூதிகள் – என்னும் ச்லோகம் உள்ளது.

## லீலாரூபம் கொண்டவன்

**மூலம்** - இவ்விபூதிகளில் சேதநங்களாயும் அசேதநங்களாயுமுள்ள இரண்டு வகையும் லீலார்த்தங்களாயும் போகார்த்தங்களாயும் விபக்தங்களாயிருக்கும் அநுஸந்தேயம் பொதுவாயிருக்க ரஸ வைஷம்யத்தாலே லீலா-போக-விபாகம் யதாலோகம் கண்டு கொள்வது. அப்படியே ஜன்மாத்யஸ்ய யத:, க்ரீடா ஹரேரிதம் ஸர்வம், க்ரீடதோ பாலகஸ்யேவ, பால: க்ரீடநகைரிவ, ஹரே விஹரஸி க்ரீடா கந்துகைரிவ ஜந்துபி:, லோகவத்து லீலா கைவல்யம் என்கிறபடியே லீலாரூப ஜகத்வ்யாபார லக்ஷணமாக அநுஸந்தேயம்.

**விளக்கம்** - எம்பெருமானின் விபூதிகள் சேதனம் என்றும் அசேதனம் என்றும் இரு வகைப்படும். இவை அவனது லீலைக்காகவும் அனுபவிப்பதற்காகவும் உள்ளன. இவ்விதம் அவனது லீலைக்காகவும், அனுபவத்திற்காகவும் உள்ளன என்ற பிரிவு ரஸத்திற்காக மட்டுமே உள்ளது அன்றி, அனைத்தும் பொதுவாக அவனால் ஏற்கும்படியே உள்ளன. பகவான் இந்த உலகில் ஈடுபட்டபடி உள்ளது என்பது அவனது லீலை காரணமாகவே என்பதை அடுத்துள்ள வரிகளின் மூலம் அறியலாம்: ப்ரஹ்மஸூத்ரம் (1-1-2) - ஜன்மாத்யஸ்ய யத: - அவனிடமிருந்தே அனைத்தும் தோன்றுகின்றன; மஹாபாரதம் சாந்திபர்வம் (206-58) - க்ரீடா ஹரேரிதம் ஸர்வம் - இவை அனைத்தும் ஸ்ரீஹரியின் விளையாட்டு; ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-2-18) - க்ரீடதோ பாலகஸ்யேவ – ஒரு சிறு

குழந்தையின் விளையாட்டு போன்று அவனுக்குச் சுலபமானது; மஹாபாரதம் சபாபர்வம் (40-78) - பால: க்ரீடநகைரிவ - பொம்மைகள் வைத்து விளையாடும் குழந்தை போன்று, நம்மை வைத்து விளையாட்டு செய்கிறான்; ஸ்ரீவிஷ்ணுதர்மம் - ஹரே விஹரஸி க்ரீடா கந்துகைரிவ ஜந்துபி: - பந்துகள் வைத்து விளையாடுவது போன்று ஸ்ரீஹரியே, உனது விளையாட்டு உள்ளது; ப்ரஹ்மஸூத்ரம் (2-1-33) - லோகவத்து லீலா கைவல்யம் - இவை அனைத்தும் அவனது விளையாட்டுக்காகவே.

## அர்த்தபஞ்சகம் – 2 - ஜீவனின் ஸ்வரூபம்

**மூலம்** - இப்படி லக்ஷ்மீ ஸஹாயமாய், அபரிமித ஞானானந்தமாய், ஹேயப்ரத்யநீகமாய், ஞான சக்த்யாத்யநந்த மங்களகுண விசிஷ்டமாய், திவ்யமங்கள விக்ரஹோபேதமாய், சரீரபூத விபூதித்வய யுக்தமாய், ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபார லீலமாய்க் கொண்டு ப்ராப்யமான ப்ரஹ்மத்தை ப்ராபிக்கும் ப்ரத்யகாத்மாவினுடைய பத்த முக்த நித்ய-ஸாதாரண ரூபமும் உபாயாதிகாரியான தனக்கு இப்போது அஸாதாரணமான ரூபமுமறிய வேணும்.

**விளக்கம்** - இவ்விதம் அடையவேண்டிய பொருளான (ப்ராப்யம்) எம்பெருமான் மஹாலக்ஷ்மியுடன் எப்போதும் இணைந்தவனாக உள்ளான். அவன் எல்லையற்ற ஞானம், எல்லையற்ற ஆனந்தம் கொண்டவனாக உள்ளான். தாழ்வுகள் அனைத்திற்கும் எதிர்தட்டாக உள்ளான். ஞானம், சக்தி, ஆனந்தம் போன்ற மங்கள குணங்களை அளவற்று உடையவனாக உள்ளான். திவ்யமங்கள விக்ரஹம் கொண்டவனாக உள்ளான். தன்னுடைய சரீரமாக நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டையும் கொண்டுள்ளான். தன்னுடைய பொழுதுபோக்கிற்காக உலகில் உள்ள அனைத்தையும் படைத்தும், காத்தும், நிர்வகித்தும் வருகிறான். இப்படிப்பட்ட ப்ரஹ்மமான எம்பெருமானை அடைய எண்ணும் ஜீவன், “பத்தர், முக்தர், நித்யர்” ஆகிய மூன்று ஜீவன்களைப் பற்றி அறியவேண்டும். தனக்கு உள்ள வேறுபாட்டினை அறியவேண்டும்.

## மூன்று வகையான சேதனர்கள்

**மூலம் -** இவர்களில் பத்தரானவர் அநாதி கர்ம ப்ரவாஹத்தாலே அநுவ்ருத்த ஸம்ஸாரராய் ப்ரஹ்மாதி ஸ்தம்ப பர்யந்த விபாக பாகிகளான க்ஷேத்ரஜ்ஞர். முக்தராவார் சாஸ்த்ர சோதிதங்களான உபாய விசேஷங்களாலுண்டான பகவத்ப்ரஸாதத்தாலே அத்யந்த நிவ்ருத்த ஸம்ஸாரராய் ஸங்கோச ரஹித பகவதனுபவத்தாலே நிரதிசயானந்தரா யிருக்குமவர்கள். நித்யராவார் ஈச்வரனைப் போலே அநாதியாக ஞானசங்கோச மில்லாமையாலே "ஸவயஸ இவயே நித்ய நிர்தோஷ கந்தா:" என்கிறபடியே அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரராய்க் கொண்டு நித்யகைங்கர்யம் பண்ணுகிற அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகள். இவர்களெல்லார்க்கும் ஸாதாரணமான ரூபம் அணுத்வ ஞானானந்தாமலத்வாதிகளும் பகவச்சேஷத்வ பாரதந்த்யாதிகளும். முமுக்ஷுவான தனக்கு அஸாதாரணமாக அறிய வேண்டும் ஆகாரங்கள் உபோத்காதத்திலே சொன்னோம், மேலும் கண்டு கொள்வது.

**விளக்கம்** - பத்தர்கள் என்பவர்கள் எல்லையற்ற காலமாகத் தொடந்து வரும் கர்மம் காரணமாக ஸம்ஸாரம் என்ற சக்கரத்தில் உழன்றபடி உள்ளவர்கள் ஆவார்கள். நான்முகன்ன் தொடக்கமாக புல் ஆகிய அனைத்தும் க்ஷேத்ரஜ்ஞர் என்பதாகும். முக்தர் என்பவர்கள் சாஸ்த்ரங்களில் கூறிய உபாயங்களைச் சரியானபடி பின்பற்றி, பகவானின் கருணையைப் பெறுகின்றனர்; இதனால் ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு, பகவத் அனுபவம் கிட்டப்பெற்றதால், எல்லையற்ற ஆனந்தத்தில் மூழ்கியபடி உள்ளனர். நித்யர்கள் என்பவர்கள் தங்களது ஞானம் எப்போதும் சுருங்காமல் உள்ளவர்கள் ஆவர், இந்த விஷயத்தில் அவர்கள் ஈச்வரனையே ஒத்துள்ளனர், இதனை ஸ்ரீகுணரத்னகோஸத்தில் (27) - ஸவயஸ இவ யே நித்ய நிர்தோஷ கந்தா - அவனைப் போன்றே ஒத்த வயது கொண்டவர்களாகவும், அவனைப் போன்றே தோஷங்கள் அற்றவர்களாகவும் - என்று கூறினார். இவர்கள் ஸம்ஸாரத்தில் சிக்காமல் பகவானுக்கு எப்போதும் கைங்கர்யம் செய்தபடி உள்ள ஆதிசேஷன், கருடன், விஷ்வக்ஸேனர் முதலானோர் ஆவர். இவர்கள் அனைவருக்கும் பொதுவானதாக உள்ள தன்மைகள், "அணு போன்று அளவுள்ள தன்மை, ஞானமயமாக இருத்தல், ஆனந்தமயமாக இருத்தல், தோஷங்கள் அற்று இருத்தல்", என்பவையாகும். இவர்கள் அனைவரும் எம்பெருமானுக்கு

அடிமைகளாகவும், அவனது ஸங்கல்பத்திற்கு அடிபணிந்தபடியும் உள்ளனர். இவர்களில் முமுக்ஷுவுக்கு உள்ள விசேஷம் என்னவென்று அறிந்து கொள்ளவேண்டும். இதனை உபோத்காத அதிகாரத்தில் நாம் கண்டோம், இனிவரும் அதிகாரங்களிலும் மேலும் கூறப்பட உள்ளது.

## ரஹஸ்யத்ரயத்தில் ஜீவனின் ஸ்வரூபம் பற்றிக் கூறப்படுவது

**மூலம்** - இப்ராப்தாவினுடைய ஸ்வரூபம் ப்ரணவ நமஸ்ஸுக்களில் மகாரங்களிலும், நார சப்தங்களிலும், ப்ரபத்யே என்கிற உத்தமனிலும், வ்ரஜ என்கிற மத்யமனிலும், த்வா என்கிற பதத்திலும், மா சுச: என்கிற வாக்யத்திலும் அநுஸந்தேயம்.

**விளக்கம்** - ஜீவனின் ஸ்வரூபம் குறித்து அஷ்டாக்ஷரத்தில் “ஓம்” என்பதில் உள்ள “ம” என்ற எழுத்து மூலமும், “நம” என்ற பதம் மூலமும், நாராயணா என்பதில் உள்ள “நார” என்ற பதம் மூலமும் அறிவிக்கப்பட்டது, த்வயத்தில், “ப்ரபத்யே” என்ற பதம் மூலம் உணர்த்தப்பட்டது, சரமச்லோகத்தில், “வ்ரஜ” என்பதன் மூலமும், “த்வா” என்பதன் மூலமும், “மா சுச:” என்ற வரி மூலமும் அறிவுறுத்தப்பட்டது.

## அர்த்தபஞ்சகம் – 3, 4 – உபாயம் மற்றும் பலன்

**மூலம்** - ப்ராப்த்யுபாயமும் இதின் பரிகரங்களும் பலஸ்வரூபமிருக்கும்படியும் மேலே ப்ராப்த ஸ்தலங்களிலே பரக்கச் சொல்லக் கடவோம். இவற்றில் உபாயம் திருமந்த்ரத்தில் நமஸ்ஸிலும், அயந சப்தத்திலும், த்வயத்தில் பூர்வ கண்டத்திலும், சரமச்லோகத்தில் பூர்வார்த்தத்திலும் அநுஸந்தேயம். பலஸ்வரூபம் சதுர்த்யந்த பதங்களிலும், த்வயத்தில் நமஸ்ஸிலும், “ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி” என்கிறவிடத்திலும் அநுஸந்தேயம்.

**விளக்கம்** - (பரம்பொருளை) அடையும் உபாயம் பற்றியும், அவ்விதம் அடைந்த பின்னர் கிட்டும் பலன்கள் பற்றியும் நாம் பின்னால் பல இடங்களில் விவரித்துக் கூறுவோம். உபாயம் என்பது திருமந்த்ரத்தில் உள்ள நம என்ற பதம் மூலமும், நாராயணாய என்பதில் உள்ள அயந என்பதன் மூலமும் அறியக்கடவது. உபாயம் குறித்து த்வய மந்த்ரத்தின் முதல்

வரியிலும், சரமச்லோகத்தின் இரண்டாவது வரியிலும் உணரலாம். பலன் பற்றி திருமந்த்ரத்தில் நாராயணனுக்கு என்று கூறும் நான்காம் வேற்றுமை மூலமும், த்வயத்தில் உள்ள நம என்ற பதம் மூலமும், சரமச்லோகத்தில் உள்ள “ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – அனைத்து பாபங்களிலிருந்து நான் விடுவிக்கிறேன்” என்பதன் மூலமும் அறியலாம்.

## அர்த்தபஞ்சகம் – 5 – தடுக்கும் விரோதி

**மூலம் -** ப்ராப்தி விரோதியாவது அவித்யா கர்ம வாஸனாதி ரூபமான மோக்ஷ ப்ரதிபந்தக வர்க்கம். இதில் ப்ரதானம் அநாதியாக ஸந்தந்யமாநமான ஆஜ்ஞாதி லங்கனமடியாகப் பிறந்த பகவந்நிக்ரஹம். இது க்ஷேத்ரஜ்ஞர்க்கு ஞானஸங்கோசகரமான த்ரிகுணாத்மக ப்ரக்ருதி ஸம்ஸர்க்க விசேஷத்தை உண்டாக்கியும், இப்ப்ரக்ருதி பரிணாம விசேஷங்களான சரீரேந்த்ரியாதிகளோடே துவக்கி “திண்ணமழுந்தக் கட்டி பல செய்வினை வன்கயிற்றால் புண்ணை மறையவரிந்தென்னைப் போரவைத்தாய் புறமே” என்றும், “அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழியுழல்வேன்” என்றும் சொல்லுகிறபடியே தேஹேந்த்ரியாதி பரதந்த்ரனாக்கியும், அவ்வவஸ்தையிலும் சாஸ்த்ர வச்யதை கூடாத திர்யகாதி தசைகளிலே நிறுத்தியும், சாஸ்த்ர யோக்யங்களான மனுஷ்யாதி ஜன்மங்களில் பாஹ்ய குத்ருஷ்டி மதங்களாலே கலக்கியும், அவற்றில் இழியாதவர்களையுமுள்பட “பகவத் ஸ்வரூப திரோதானகரீம் விபரீத ஞான ஜனனீம் ஸ்வவிஷயாயாச்ச கோப்யபுத்தேர் ஜநநீம்” என்கிறபடியே இம்மூலப்ரக்ருதி முதலான மோஹன பிஞ்சிகை தன்னாலே தத்வஞான விபரீதஞான விஷய ப்ராவண்யங்களைப் பண்ணியும், இவையடியாக “ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம் பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ” என்கிறபடியே ஸுக லவார்த்தமான அக்ருத்ய கரணாதி ரூபமான ஆஜ்ஞாதி லங்கனத்தைப் பண்ணுவித்தும், “பாபம் ப்ராஜ்ஞாம் நாசயதி க்ரியமாணம் புந: புந: நஷ்டப்ரஜ்ஞ: பாபமேவ புநராரபதே நர:” என்கிறபடியே மேலும் அபராத பரம்பரைகளிலே மூட்டி அதன் பலமாக “க்ஷிபாம்யஜஸ்ரம்” இத்யாதிகளிற்படியே கர்ப்ப ஜன்ம ஜரா மரண நரகாதி சக்ர பரிவ்ருத்தியிலே பரிப்ரமிப்பித்தும், க்ஷுத்ர ஸுகாதிகளுக்கு ஸாதனமான ராஜஸ தாமஸ சாஸ்த்ரார்த்தங்களைக் கொண்டு “யக்ஷ ரக்ஷாம்ஸி ராஜஸா: ப்ரேதான் பூதகணாம்ச்சாந்யே யஜந்தே தாமஸா ஜநா:”

என்கிறபடியே தன்னோடு ஒக்கவொழுகு சங்கிலியிலே கட்டுண்டு உழலுகிற க்ஷேத்ரஜ்ஞர் காலிலே விழப்பண்ணியும், அவர்கள் கொடுத்த ஜுகுப்ஸாவஹ க்ஷுத்ர புருஷார்த்தங்களாலே க்ருமிகளைப்போலே க்ருதார்த்தராக மயக்கியும், யோக ப்ரவ்ருத்தரானவர்களையும் க்ஷுத்ர தேவதா யோகங்களிலேயாதல் நாமாத்ய சேதனோபாஸனங்களிலேயாதல் மூளப்பண்ணிச் சில்வானங்களான பலங்களாலே யோகத்தைத் தலைசாய்ப்பித்தும், ஆத்மப்ரவணரையும் ப்ரக்ருதி ஸம்ஸ்ருஷ்டம் ப்ரக்ருதி வியுக்தமென்கிற இவ்விரண்டு படியிலும் ப்ரஹ்மாத்யஷ்டையாலேயாதல், ஸ்வரூப மாத்ரத்தாலேயாதல் உபாஸிக்க மூட்டி அவை நாலுவகைக்கும் பலமாக அல்பாஸ்வாதங்களைக் கொடுத்து புனராவ்ருத்தியைப் பண்ணியும், ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மசிந்தந ப்ரவ்ருத்தரானவர்களையும் ஸ்வாத்ம சரீரக பரமாத்ம சிந்தநபரரையும் அந்தராயமான ஆத்மானுபவத்தாலேயாதல், அஷ்டைள ஸ்வர்யஸித்திகளாலேயாதல், வஸ்வாதி பத ப்ராப்தி ப்ரஹ்மகாயநிஷேவணாதிகளாலேயாதல், அபிஷேகத்துக்கு நாளிட்ட ராஜகுமாரனுக்குச் சிறையிலே எடுத்துக் கை நீட்டின சேடிமார் பக்கலிலே கண்ணோட்டமுண்டாமாப் போலே ப்ராரப்த கர்மபலமான தேஹேந்த்ரியங்களிலும் ததநுபந்திகளான பரிக்ரஹங்களிலும் தன்மூல போகங்களிலும் கால்தாழப் பண்ணியாதல் அந்யபரராக்கியும் இப்படிப் பல முகங்களாலே பகவத்ப்ராப்திக்கு விலக்காயிருக்கும், முப்பத்திரண்டடியான துரவுதத்துவார் முன்னடியிலே விழுந்ததோடு முப்பதாமடியிலே விழுந்ததோடு வாசியில்லாதாப்போலே ஏதேனுமொரு பர்வத்திலே அந்தராய முண்டானாலும் இவன் ஸம்ஸாரத்தைக் கடந்தானாகான்.

**விளக்கம்** - மோக்ஷம் பெறுவதற்குத் தடையாக உள்ளவைகள் அறியாமை (அவித்யை), கர்மம், வாசனை, ப்ரக்ருதி தொடர்பு முதலானவை ஆகும். இதில் முதலாவது தடையாக உள்ளது எதுவென்றால், எல்லையற்ற காலமாக பகவானின் கட்டளைகளைத் தொடர்ந்து மீறியபடி உள்ளதால், அதற்காக அவன் அளிக்கும் தண்டனைகளே ஆகும். இதன் காரணமாக கீழே உள்ள பலவும் நிகழ்கின்றன: 1. மூன்று குணங்களுடன் கூடியதான ப்ரக்ருதியுடன் ஜீவனுக்குத் தொடர்பு ஏற்பட்டு, அதனல் அவனது ஞானம் சுருங்கி விடுகிறது; 2. ஜீவனையும், ப்ரக்ருதி தொடர்புடைய சரீர-இந்த்ரியங்களையும் சேர்த்து விடுகிறது. மேலும் ஜீவனை சரீர-இந்த்ரியங்களின் பிடிகளில் சிக்கவைக்கிறது. இதனை நம்மாழ்வார் திருவாய்மொழியில் (5-1-5) - திண்ணமழுந்தக் கட்டி பல செய்வினை வன்கயிற்றால் புண்ணை மறையவரிந்தென்னைப் போரவைத்தாய் புறமே - எனது

கர்மபலன் மூலம் உண்டான பாவம் என்னும் கயிற்றால், என்னை இந்த உடலுடன் அழுத்தமாகக் கட்டி, புண் நிறைந்த சரீரத்தை தோலால் மூடி உலவ வைத்தாய் - என்றும், (3-2-1) - அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழியுழல்வேன் - ஸ்ருஷ்டியின்போது உண்டான சரீரத்தின் மகிழ்வுக்காகத் திரிவேன் - என்றும் கூறினார்; 3. ஜீவனை சாஸ்த்ரங்களைப் பின்பற்ற இயலாத விலங்கு போன்ற சரீரம் எடுக்கும்படிச் செய்து விடுகிறது; 4. சாஸ்த்ரங்களைப் பின்பற்றக் கூடிய மனிதப் பிறவி அளித்தாலும், அவன் மனதை, வேதங்களுக்குத் தவறான விளக்கம் கூறும் மதங்களில் ஈடுபடுத்துகிறது; 5. ராமானுஜர் சரணாகதி கத்யத்தில் - பகவத்ஸ்வரூப திரோதானகரீம் விபரீத ஞான ஜனனீம் ஸ்வவிஷயாயாச்ச கோப்யபுத்தேர்ஜனனீம் - எம்பெருமானின் ஸ்வரூபம் குறித்து அறிய இயலாதபடி செய்வதும், ஒரு பொருளை வேறொன்றாக அறியும்படிச் செய்வதும், தானே தனக்கு இன்பமானவன் என்ற எண்ணம் தோன்றும்படிச் செய்வதும் ஆகிய ப்ரக்ருதியை - என்றார். மாயாஜாலம் செய்யும் ஒருவன், அனைவரையும் மயக்கும் பொருட்டு, தனது கைகளில் வைத்துள்ள மயில்தோகை போன்று, ப்ரக்ருதியானது சரீரத்தையும் இந்த்ரியங்களையும் வைத்துள்ளது. இதன் மூலம் ஜீவனை மயக்கி அவனுக்கு உண்மை எது என்ற அறியாமை, தவறான அறிவு, புலன் விஷயங்களில் ஈடுபடுதல் போன்றவற்றை உண்டாக்குகிறது; 6. இப்படியாக, ஜீவனை பகவானின் ஆணைகளைப் பின்பற்றாமல் இருக்கச் செய்துவிடுகிறது. தனது இன்பங்களுக்காகத் தடுக்கப்பட்ட செயல்களில் ஈடுபடும்படிச் செய்கிறது. இதனை நம்மாழ்வார் திருவாய்மொழியில் (6-9-9) - ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம் பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ - எனது ஆத்மா திகைத்து நிற்கும்படி ஐந்து இந்த்ரியங்களும் என்னைக் கட்டி இழுக்கின்றன, இவ்விதம் சிற்றின்பத்தால் பாவியான என்னை மேலும் நீ வருந்தும்படிச் செய்யலாமோ? – என்றார்; 7. ஒரு தவறு என்பது மேலும் மேலும் பாபங்களாக வளர்கின்றன. இதனை மஹாபாரதம் உத்யோக பர்வம் (35-73) - பாபம் ப்ராஜ்ஞாம் நாசயதி க்ரியமாணம் புந: புந: நஷ்டப்ரஜ்ஞ: பாபமேவ புநராரபதே நர: - மீண்டும் மீண்டும் செய்யப்படும் பாவம் அறிவை அழித்து விடுகிறது, இவ்விதம் அறிவை இழந்த ஒருவன் மேலும் மேலும் பாவங்களையே செய்கிறான் - என்றது. இதன் காரணமாக ஜீவனை கர்ப்பம் - பிறப்பு - கிழத்தன்மை - மரணம் - நரகம் என்னும் சுழற்சியில் ஆழ்த்தி விடுகிறான். இதனைக் கீதையில் (16-19) – க்ஷிபாமி அஜஸ்ரம் - அவர்களை அசுர கர்ப்பத்தில் தள்ளுகிறேன் – என்றான்; 8. தாழ்ந்த சுகங்களுக்கு உறுப்பாக உள்ள ராஜஸ தாமஸ சாஸ்த்ரங்களைக் கைக்கொள்கின்றனர். இதனால் அவர்கள் தங்களைப்

போன்றவர்களும், தங்களுக்குச் சமமான சங்கிலிகளால் கட்டப்பட்டவர்களும் ஆகிய தாழ்ந்த தெய்வங்களின் கால்களின் விழும்படி ஆகிறது. இதனை கீதையும் (17-4) - யக்ஷ ரக்ஷாம்ஸி ராஜஸா: ப்ரேதான் பூதகணாம்ச்சான்யே யஜந்தே தாமஸா ஜனா - ரஜோகுணம் மேலோங்கி உள்ளவர்கள், யக்ஷர்கள் மற்றும் அசுரர்களை ஆராதனை செய்கின்றனர், தமோகுணம் மேலோங்கி உள்ளவர்கள், பூதங்களையும் ப்ரேதங்களையும் ஆராதனை செய்கின்றனர் - என்றது காண்க; 9. இந்தத் தாழ்ந்த தெய்வங்கள் இவர்களுக்கு அருவருப்பைத் தரும் மிகவும் தாழ்ந்த பலன்களை அளிக்கின்றன. சேற்றில் மகிழ்வாக உள்ள புழுக்கள் போன்று, இந்த அற்பப் பலன்களைத் தங்களுக்குக் கிட்டிய உயர்ந்த பலனாக எண்ணியபடி உள்ளனர்; 10. யோகங்களில் ஈடுபட்ட பலரும் தாழ்ந்த தேவதைகளையே உபாஸிக்கின்றனர். ஒரு சிலர் தாழ்ந்த தேவதைகளை உபாஸிப்பதைக் கைவிட்டு, நாம உபாஸனத்தில் ஈடுபடுகின்றனர் (நாம உபாஸனம் என்பது - வாக்கு, மனம், நீர் முதலான அசேதனங்களை ப்ரஹ்மமாக எண்ணி உபாஸனை செய்தல். இது சாந்தோக்ய உபனிஷத்தில் கூறப்பட்ட பூமவித்யை என்பதாகும்). இதன் மூலம் கிட்டப்பெறும் தாழ்ந்த பலன்களில் அவர்கள் ஈடுபடும்படி ஆகிறது. இப்படியாக யோகம் என்பது அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகச் செய்யப்படுகிறது; 11. அடுத்து ஆத்மாவின் விஷயத்தில் ஈடுபட்டபடி உள்ளவர்கள் காண்போம். ஆத்மாவானது ப்ரக்ருதியுடன் தொடர்புடையதாகவோ அல்லது தொடர்பற்றதாகவோ கருதியபடி த்யானிக்கின்றனர். மேலும் ப்ரஹ்மாகவோ, ஆத்ம ஸ்வரூபமாகவோ த்யானித்தபடி உள்ளனர். இப்படியாக உள்ள நான்கு வகைத் த்யானங்களில் ஈடுபட்ட இவர்கள், பகவத் அனுபவத்தை விட, மிகவும் தாழ்ந்த ஆத்ம அனுபவத்தை பலனாக அடைகின்றனர். அதன் பின்னர் மீண்டும் ஸம்ஸாரத்தில் சிக்குகின்றனர்; 12. ஒரு சிலர் ப்ரஹ்மத்தையே த்யானித்தபடி இருக்கக்கூடும். ஆனால் இவர்கள் தங்களது ஆத்மாவை த்யானித்து, தங்களின் அந்தர்யாமியாக ப்ரஹ்மம் இருப்பதாகவும், தங்களது ஆத்மாவைத் தனது சரீரமாக ப்ரஹ்மம் கொண்டுள்ளது என்றும் த்யானிக்கின்றனர். ஆக இவர்கள் மறைமுகமாகத் தங்கள் ஆத்மாவிலேயே ஈடுபடுவதால், கைவல்ய நிலையை அடைகின்றனர். அல்லது எட்டு விதமான ஸித்திகளை அடைந்து (அஷ்டமாஸித்தி) விடுகின்றனர். அல்லது வசுக்கள் போன்ற பிறவி அடைகின்றனர். அல்லது ப்ரம்மன் முதலானோரின் உடலில் புகும் தன்மை பெறுகின்றனர். இவர்களின் நிலை எவ்விதம் உள்ளது என்றால் - மணிமகுடம் சூட்டுவதற்கான நிலையில் உள்ள அரசகுமாரன், தான் சிறையில் இருந்தபோது தன்னைப் பார்த்துக்கொண்ட பணிப்பெண்கள் பக்கம் சாய்வது போன்று

உள்ளது. ஆக இவர்கள் மிகவும் உயர்ந்த புருஷார்த்த நிலையில் இருந்து நழுவுகின்றனர் என்று கருத்து.

ஆக, தங்கள் கர்மபலன் காரணமாக உண்டான சரீரம் மற்றும் இந்த்ரியங்களால் அலைக்கழிக்கப்படுகின்றனர். அவைகளின் மூலம் ஏற்படும் போகங்களில் திளைத்தபடி உள்ளனர். ஆக இவர்கள் தங்கள் புருஷார்த்தத்தைக் கைவிட்டு தாழ்ந்த இன்பங்களில் ஈடுபட்டபடி உள்ளனர். இப்படியாக பகவானை அடைவதற்குப் பல தடைகள் உள்ளன. சரியான பாதையில் செல்ல முப்பத்திரண்டடி உள்ளது என்று வைத்துக் கொள்வோம். இதில் ஒருவன் முதல் படியில் தடுக்கி விழுந்தாலும், முப்பத்திரண்டாவது படியில் தடுக்கி விழுந்தாலும் என்ன வேறுபாடு உள்ளது? இதுபோன்று எந்தச் சூழலாக இருந்தாலும், எந்தக் காலமாக இருந்தாலும் மேலே கூறப்பட்ட தடைகள் ஏற்படுமாயின், ஜீவன் ஸம்ஸாரத்தில் உழன்றபடி இருப்பான்.

**மூலம்** - கர்மயோகாதிகளில் ப்ரவ்ருத்தனுக்கு "நேஹாபிக்ரம நாசோ அஸ்தி" இத்யாதிகளிற்படியே இட்டபடை கற்படையாய் என்றேனுமொரு நாள் பலஸித்தியுண்டா மென்கிறவிதுவும் கல்பாந்தர மன்வந்தர யுகாந்தர ஜன்மாந்தராதிகளில் எதிலேயென்று தெரியாது. அனுகூல்யம் மிகவுமுண்டாயிருக்க வஸிஷ்டாதிகளுக்கு விலம்பங்காணா நின்றோம். ப்ரதிகூல்யம் மிகவுண்டாயிருக்க வ்ருத்ர க்ஷத்ரபந்து ப்ரப்ருதிகளுக்குக் கடுக மோக்ஷமுண்டாகக் காணா நின்றோம். ஆதலால் விலம்ப ரஹித மோக்ஷ ஹேதுக்களான ஸுக்ருத விசேஷங்கள் ஆர்பக்கலிலே கிடக்குமென்றும் தெரியாது. விலம்ப ஹேதுவான நிக்ரஹத்துக்குக் காரணங்களான துஷ்கர்ம விசேஷங்களும் ஆர்பக்கலிலே கிடக்குமென்றுந்தெரியாது.

**விளக்கம்** - கர்மயோகத்தில் ஈடுபட்டவனுக்கு அந்த முயற்சி வீணாவதில்லை என்பதை கீதை (2-40) - நேஹாபிக்ரம நாசோ அஸ்தி - என்று கூறியது காண்க. அந்தக் கர்மயோகமானது கல்லால் கட்டப்பட்ட சுவர் போன்று என்றும் நிலையாக இருக்கும். அதன் பலன், "இந்தக் கல்பத்தின் முடிவிலா, மன்வந்தரத்தின் முடிவிலா, யுகத்தின் முடிவிலா அல்லது ஜன்மத்தின் முடிவிலா", என எப்போது கிட்டும் என்று யாராலும் தெளிவாகக் கூற இயலாது. பகவான் உகப்படையும் செயல்கள் பல செய்த வசிஷ்டர் முதலானோர் கூட, பல காலம் காத்திருக்கும்படி ஆனது. ஆனால், பகவானை விரோதித்த

வ்ருத்ராஸுரன், க்ஷத்ரபந்து முதலானோர் மிகவும் எளிதாக, தாமதம் இன்றி மோக்ஷம் சென்றனர். ஆக மோக்ஷம் இட்டுச் செல்லக்கூடிய விசேஷமான கர்மங்களை யார் இயற்றினர் என்று கூற இயலாது. இது போன்று, மோக்ஷம் தாமதிக்கும்படியான செயல்கள யார் செய்தனர் என்றும் கூற இயலாது.

## மோக்ஷத் தடைக்கு சரணாகதியே வழி

**மூலம்** - இப்படி அநிஷ்ட பரம்பரைக்கு மூலங்களான அஜ்ஞாதி லங்கனங்களாலே வந்த பகவத் நிக்ரஹ விசேஷமாகிற ப்ரதான விரோதிக்குச் செய்யும் பரிஹாரத்தை "தஸ்ய ச வசீகரணம் தச்சரணாகதிரேவ" என்று கடவல்லியில் வசீகார்த்த பரம்பரையை வகுத்த இடத்திலே ஸ்ரீபாஷ்யக்காரர் அருளிச்செய்தார்.

**விளக்கம்** - மோக்ஷம் அடைவதற்குத் தடையாக உள்ளவற்றில் முதன்மையாக உள்ளது பகவானின் ஆணைகளை மீறுவதால், அவன் அளிக்கும் தண்டனைகளே ஆகும். இதுவே சங்கிலி போன்றுள்ள தொடர்ச்சியான துன்பங்களின் அடிப்படைக் காரணமாகிறது. இதனை விலக்குவது எப்படி? இதனை பகவத் ராமானுஜர் கூறுகையில் - தஸ்ய ச வசீகரணம் தச்சரணாகதிரேவ - இந்தத் துன்பங்கள் நீங்க, எம்பெருமானை வசப்படுத்துவதே ஆகும், அதற்கான வழி, அவனைச் சரணாகதி அடைவதே ஆகும் - என்று மிகவும் தெளிவாகக் கூறினார். இதனை அவர், கட உபநிஷத்தில் புலன்கள், மனம் போன்றவற்றை அடக்கும் வரிசை கூறும் இடத்தை விளக்கும்போது கூறுகிறார்.

## மோக்ஷ தடைகள் பற்றி ரஹஸ்ய த்ரயத்தில் எங்கு உள்ளது

**மூலம்** - இவ்விரோதி வர்க்கத்தையெல்லாம் ரஹஸ்ய த்ரயத்தில் விதிக்கிற அர்த்தங்களுடைய வ்யவச்சேத சக்தியாலும் நமஸ்ஸுக்களில் மகாரங்களில் ஷஷ்டிகளாலும், ஸர்வபாப சப்தத்தாலும் அனுஸந்தித்து ஸம்ஸாரத்தில் அடிச்சூட்டாலே பேற்றுக்குறுப்பான வழிகளிலே த்வரிக்க ப்ராப்தம்.

**விளக்கம்** - இவ்விதம் மோக்ஷத் தடைக்கான விரோதிகள் பற்றி ரஹஸ்யத்ரயத்தில் மறைமுகமாகக் கூறப்படும் கருத்துக்கள் கொண்டு எளிதாக உணரலாம். இதனை நம என்பதில் உள்ள மமகாரம் (நான், எனது) மூலமாகவும், சரமச்லோகத்தில் உள்ள ஸர்வபாபம் என்ற பதம் மூலமும் அறியலாம். இதனை இவ்விதம் அறிவதன் மூலம் ஒருவன் - நாம் ஸம்ஸாரம் என்ற மிகுந்த சூடான மணலில் நடந்தபடி உள்ளோம், மிகவும் விரைவாக இதனைக் கடந்து, மகிழ்வு அளிக்கக் கூடிய பாதையை அடைய வேண்டும் - என்று உணர்வான்.

பொருள் ஒன்று என நின்ற பூமகள்நாதன் அவனடி சேர்ந்து
அருள் ஒன்றும் அன்பன் அவன் கொள் உபாயம் அமைந்த பயன்
மருள் ஒன்றிய வினைவல் விலங்கு என்று இவை ஐந்து அறிவார்
இருள் ஒன்று இலாவகை என் மனம் தேற இயம்பினரே

**பொருள்** - பரம்பொருள் இவன் மட்டுமே என்று உள்ளவனும், தாமரையில் உள்ள மஹாலக்ஷ்மியின் நாதனும் ஆகிய எம்பெருமான்; என்றும் எம்பெருமானை விரும்பி, அவனது திருவடிகளைச் சரணம் என்று பற்றி அவன் அருளை விரும்பி நிற்கின்ற ஜீவன்; இவ்விதம் எம்பெருமானை அடைய விரும்பும் ஜீவன் கைக்கொள்ள வேண்டிய உபாயம்; எம்பெருமானை அடைந்த பின்னர் பெறும் பலன்; எம்பெருமானை அடைவதற்குத் தடையாக உள்ள அறியாமை போன்ற வலிய வினைப்பயன்கள் - இப்படிப்பட்ட ஐந்து விஷயங்களையும், அனைத்தும் அறிந்த ஆசார்யர்கள், சிறிதும் ஐயம் இல்லாதபடி, நமது மனதில் இவை பற்றிய ஐயம் நீங்கும்விதமாக உபதேஸித்தனர்.

ப்ராப்யம் ப்ரக்ஷ்ம ஸமஸ்த சேஷி பரமம் ப்ராப்தா அஹம் அஸ்ய உசித:
ப்ராப்தி: தாய தன க்ரமாத் இஹ மம ப்ராப்தா ஸ்வத: ஸ்ரீவத்
ஹந்த ஏநாம் அதிவ்ருத்தவாந் அஹம் அஹமத்யா விபத்யாச்ரய:
ஸேது: ஸம்ப்ரதி சேஷிதம்பதி பரந்யாஸஸ்து மே சிக்ஷயதே

**பொருள்** - நான் அடையவேண்டிய இலக்கு எதுவென்றால், மிகவும் உயர்ந்ததாகவும், அனைத்திற்கும் எஜமானனாகவும் உள்ள பரம்பொருளே ஆகும். அவனைச் சென்று அடையவேண்டிய நான், அவ்விதம் அடைவதற்கு ஏற்றவனே ஆவேன். தந்தையின்

செல்வம் எவ்விதம் பிள்ளைக்கு வருகிறதோ அது போன்று, நித்யஸூரிகளுக்குக் கிட்டிய அந்த இலக்கு எனக்கும் தானாகவே கிட்டியிருக்கவேண்டும். அந்தோ. என்னுடைய அஹங்காரத்தாலும், அதனால் ஏற்பட்ட அறியாமையாலும் நான் அந்த இலக்கை இழந்து நிற்கிறேன். ஆனால் அனைவருக்கும் சேஷிகளான திவ்யதம்பதிகளிடம் சரணாகதி செய்யும்போது, அந்த இலக்கு கிட்டிவிடும், ஆக சரணாகதி அந்த இலக்கை அடைவதற்கான உபாயமாக உள்ளது என்று தெரிந்துகொண்டேன்.

## அர்த்தபஞ்சக அதிகாரம் ஸம்பூர்ணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

# 5. தத்வ த்ரய சிந்தந அதிகாரம்


நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book:yahoo.co.in)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# சித், அசித் மற்றும் ஈச்வரன் ஆகிய தத்வங்கள் குறித்து உரைக்கும் அதிகாரம்

ப்ரக்ருதி ஆத்மா ப்ராந்தி: களதி சித் அசித் லக்ஷண தியா
ததா ஜீவ ஈச ஐக்ய ப்ரப்ருதி கலஹ: தத் விபஜனாத்
அத: போக்தா போக்யம் தத் உபய நியந்தா நிகமை:
விபக்தம் ந: தத்த்வத்ரயம் உபதிசந்தி அக்ஷததிய:

**பொருள்** - சேதன அசேதனங்களைப் பற்றிய அறிவு உண்டாகும்போது, ஆத்மா என்பது உடலும் இந்த்ரியங்களுமே என்றுள்ள மயக்கம் நீங்கிவிடும். ஜீவனும் ஈச்வரனும் ஒன்று என எண்ண வைக்கும் தவறான வாதங்கள், அந்த இரண்டின் (ஜீவன், ஈச்வரன்) தன்மைகள் உணரப்படும்போது மறைந்துவிடும். இத்தகைய தவறான எண்ணங்கள் நீங்கும்விதமாக, சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள மூன்று தத்துவங்களை நமது ஆசார்யர்கள் நமக்கு உபதேசம் செய்கின்றனர். இவையாவன - சுகதுக்கங்களை அனுபவிப்பவன் சேதனன் (போக்தா), அவனால் அனுபவிக்கப்படுவது அசேதனம் (போக்யம்), இவை இரணடையும் நியமித்தபடி உள்ளவன் ஈச்வரன் (நியந்தா) - என்பதாகும்.

## தத்த்வ த்ரயமும், இதனை அறியவேண்டிய காரணமும்

**மூலம்** - ஸம்பந்தமும் அர்த்தபஞ்சகமுங்கூட ஆறு அர்த்தமறிய வேண்டியிருக்க, இவற்றில் ஏகதேசமான தத்த்வத்ரயத்தை முமுக்ஷுவுக்கு விசேஷித்து அறியவேண்டுமென்று ஆசார்யர்கள் உபதேசித்துப் போருகைக்கு அடியென்னென்னில் - அதுக்கடி ப்ரக்ருதி ஆத்ம ப்ரமமும், ஸ்வதந்த்ர ஆத்ம ப்ரமமும், இதுக்கு நிதானமான அநீச்வரவாத ருசியுமான மஹாவிரோதிகளை முற்படக் கழிக்கப் ப்ராப்தமாகை. இத்தை நினைத்து போக்த்ரு போக்ய நியந்த்ரு ரூபத்தாலே சாஸ்த்ரங்களிலே தத்த்வ விவேகம் பண்ணுகிறது.


email : sridharan_book@yahoo.com

**விளக்கம்** - அர்த்தபஞ்சகம் மற்றும் ஜீவ-ஈச்வர உறவு என்பது சரீர-ஆத்ம உறவு என்னும் கருத்துடன் கூடிய ஆறு தத்வங்கள் முமுக்ஷுவால் அறியப்படவேண்டியவை ஆகும். இங்கு கூறப்படும் மூன்று தத்வங்களும், இந்த ஆறு தத்வங்களிலேயே அடங்கிவிடுகின்றன. அப்படி உள்ளபோது, இவற்றை நமது ஆசார்யர்கள் ஏன் சிறப்பித்துக் கூறவேண்டும் என்ற சந்தேகம் எழலாம். இதற்குக் காரணம், "உடலே ஆத்மா என்ற மயக்கம், ஜீவன் சுதந்த்ரமானவன்", என்ற மயக்கங்கள் நீங்கவேண்டும் என்பதற்காகும். இந்த மயக்கங்கள் உண்டாகக் காரணம், எம்பெருமான் இல்லை என்று எண்ணுவதே ஆகும். இவை அனைத்துமே மோக்ஷத் தடைகள் ஆகின்றன. ஆகவே சாஸ்த்ரங்கள் தத்த்வங்களை மூன்றாகப் பிரித்தன; அவையாவன, "அனுபவிப்பவன், அனுபவிக்கப்படுவது, இவை இரண்டையும் நியமிப்பவன்", என்பதாகும்.

## தத்வ த்ரய வேறுபாடுகள் குறித்த விளக்கம்

**மூலம்** - இவற்றில் வைத்துக் கொண்டு, "அசேதனா பரார்த்தா ச நித்யா ஸததவீக்ரியா த்ரிகுணா கர்மிணாம் க்ஷேத்ரம் ப்ரக்ருதே ரூபமுச்யதே அநாதிர்பகவாந் காலோ நாந்தோ அஸ்ய த்விஜ வித்யதே, கலா முஹூர்த்தாதி மயச்ச காலோ ந யத்விபூதே: பரிணாமஹேது:, ஞானானந்தமயா லோகா:, காலம் ஸ பசதே தத்ர ந காலஸ்தத்ர வை ப்ரபு:" இத்யாதிகளிலே த்ரிகுண கால சுத்த ஸத்வரூபங்களான த்ரிவித அசேதனங்களுடைய ஸ்வபாவஞ் சொல்லிற்று.

**விளக்கம்** - இவற்றில் அனுபவிக்கpபடும் பொருள்களான அசேதனங்கள் மூன்று வகைப்படும். அவையாவன, "ஸத்வ, ரஜோ, தாமஸ குணங்களுடன் கூடிய ப்ரக்ருதி, காலம், சுத்தஸத்வம்", என்பதாகும். இவற்றில் ப்ரக்ருதியின் தன்மை பரம ஸம்ஹிதையில் (2) - அசேதனா பரார்த்தா ச நித்யா ஸததவீக்ரியா த்ரிகுணா கர்மிணாம் க்ஷேத்ரம் ப்ரக்ருதே ரூபமுச்யதே - ப்ரக்ருதி அறிவற்றது, எப்போதும் மற்றவர்களுக்காகவே உள்ளது, தனது ஸ்வரூபம் அழியாமல் உள்ளது, எப்போதும் மாறியபடி உள்ளது, ஸத்வம் முதலான மூன்று குணங்கள் கொண்டது, கர்மம் இயற்றும் ஜீவன்களுக்கு கர்மத்தின் பலனை அனுபவிக்கும் சரீரமாக உள்ளது - என்று கூறப்பட்டது. அடுத்து காலத்தின் தன்மை குறித்து ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-2-26) - அநாதிர்பகவாந் காலோ நாந்தோ அஸ்ய த்விஜ

வித்யதே - பகவான் என்று அவனுக்குச் சரீரமாக உள்ள காலத்திற்கு தொடக்கமும் இல்லை, முடிவும் இல்லை - என்றது. மேலும் காலம் குறித்து ஸ்ரீவிஷ்ணுபுராணம் (4-1-84) - கலா முஹூர்த்தாதி மயச்ச காலோ ந யத்விபூதே: பரிணாமஹேது - வினாடி, முஹூர்த்தம் என்று அழைக்கப்படும் காலமானது, எம்பெருமானின் நித்யவிபூதியில் எந்தவிதமான மாற்றங்களையும் உண்டாக்குவதில்லை - என்றது. அடுத்து சுத்தஸத்வம் விவரிக்கப்படுகிறது. ப்ரக்ருதிக்கு அப்பால் (நித்யவிபூதி) உள்ள அனைத்தும் (அசேதனங்களாக உள்ளபோதிலும்) சுத்த ஸத்வத்தால் ஆனவை. ஆகவே இவை - ஞானானந்தமயா லோகா - ஞானமும் ஆனந்தமும் நிறைந்தவையாக உள்ளன. மேலும் மஹாபாரதம் சாந்திபர்வம் (196-9) - காலம் ஸ பசதே தத்ர ந காலஸ்தத்ர வை ப்ரபு: - நித்யவிபூதியில் பகவான் காலத்தை நிர்ணயிக்கிறான், அங்கு காலமானது எந்த மாறுபாடுகளையும் ஏற்படுத்துவதில்லை - என்றது. இப்படியாக ப்ரக்ருதி, காலம், சுத்த ஸத்வம் ஆகிய மூன்று அசேதனங்களின் தன்மைகள் விளக்கப்பட்டன.

**மூலம்** – "புமாந் ந தேவோ ந நர:, நாயம் தேவோ ந மர்த்யோ வா, க்ஷரஸ்ஸர்வாணி பூதாநி கூடஸ்த: அக்ஷர உச்யதே, யத்வை பச்யந்தி ஸூரய:" இத்யாதிகளாலே த்ரிவித ஜீவர்களுடைய ப்ரகாரம் விவேகிக்கப்பட்டது.

**விளக்கம்** - ஜீவனைப் பற்றிக் கூறுகையில் ஸ்ரீவிஷ்ணுபுராணம் (2-13-98) - புமாந் ந தேவோ ந நர: - மனிதனும் அல்லன், தேவனும் அல்லன் - என்றும், நாயம் தேவோ ந மர்த்யோ வா - தேவனும் அல்லன், மனிதனும் அல்லன் - என்றும் கூறப்பட்டது. ஜீவன்கள் மூன்று பிரிவில் அடங்குவர். முதல் இரண்டு பிரிவுகள் - பத்தர் மற்றும் முக்தர் ஆவர். இதனை கீதை (15-16) - க்ஷரஸ்ஸர்வாணி பூதாநி கூடஸ்த: அக்ஷர உச்யதே - கர்மத்திற்கு வசப்பட்ட அனைத்தும் க்ஷரம் என்பதாகும், கர்மவசப்படாமல் உள்ளவை முக்தாத்மா அல்லது கூடஸ்தம் என்பதாகும் - என்று கூறியது. மூன்றாவது பிரிவினரைப் பற்றி ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-6-39) - யத்வை பச்யந்தி ஸூரய - நித்யஸூரிகள் பார்த்தபடி உள்ள இடம் - என்று நித்யஸூரிகளைக் கூறியது. இப்படியாக ஜீவ தத்வத்தின் தன்மைகள் விளக்கப்பட்டன.

**மூலம்** – "ஸர்வஜ்ஞ: ஸர்வக்ருத் ஸர்வம் சக்தி ஞான பலர்த்திமாந்", "க்லம தந்த்ரீ பய க்ரோத காமாதிபிரஸம்யுத:" இத்யாதிகளாலே ஈச்வர ஸ்வபாவம் உபதிஷ்டமாயிற்று.

**விளக்கம்** - அடுத்து மூன்றாவது தத்துவமான ஈச்வர தத்துவம் விளக்கப்படுகிறது. ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-1-47) - ஸர்வஜ்ஞ: ஸர்வக்ருத் ஸர்வம் சக்தி ஞான பலர்த்திமாந் - அனைத்தும் அவனே, அனைத்தும் அறிந்தவன், அனைத்து சக்தி, ஞானம், பலம், செல்வம் உள்ளவன் - என்றது. மேலும் ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-1-48) - க்லம தந்த்ரீ பய க்ரோத காமாதிபிரஸம்யுத: - அவன் களைப்பு, சோம்பல், பயம், கோபம், காமம் அற்றவன் - என்றது. இப்படியாக ஈச்வர ஸ்வபாவம் விளக்கப்பட்டது.

**மூலம்** - இவ் ஈசோசிதவ்ய ரூபமான தத்த்வத்ரயம் நிற்கும் நிலையை "ஸ்வாதீந த்ரிவித சேதன அசேதன ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம்" என்று சுருங்க அருளிச் செய்தார். த்ரிவிதசேதனரென்றது பத்தரையும், முக்தரையும், நித்யரையும்; த்ரிவித அசேதனமென்றது த்ரிகுணத்ரவ்யத்தையும், காலத்தையும், சுத்தஸத்த்வமான த்ரவ்யத்தையும்.

**விளக்கம்** - இப்படியாக ஈச்வரனையும், அவனால் நியமிக்கப்படுபவற்றையும் நமது ஆசார்யர்கள் சுருக்கமாகப் பின்வருமாறு அரளிச் செய்தனர் (எம்பெருமானாரின் ஸ்ரீவைகுண்ட கத்யம், ஆளவந்தாரின் ஆத்மஸித்தி) - ஸ்வாதீந த்ரிவித சேதன அசேதன ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம் - மூன்று விதமான சேதனர்கள், மூன்று விதமான அசேதனங்கள் ஆகியவற்றின் தன்மை (ஸ்வரூபம்), இருப்பு (ஸ்திதி) மற்றும் செயல்பாடு (ப்ரவ்ருத்தி) என்னும் இவையும், அவற்றின் வேறுபாடுகளும் தன்னைச் சார்ந்து இருக்கும்படி உள்ளான் - என்றனர். த்ரிவித சேதனம் என்பது - பந்தத்தில் உள்ள பத்தர்கள், மோக்ஷம் பெற்ற முக்தர்கள், நித்யஸூரிகள் ஆகியவர்கள் ஆவர். த்ரிவித அசேதனம் என்பது - மூன்று குணங்கள், காலம், சுத்தஸத்வம் - என்பதாகும்.

## ஸ்வரூபம் - ஸ்திதி - ப்ரவ்ருத்தி என்பவற்றின் விளக்கங்கள்

**மூலம்** - ஸ்வரூபமென்றது ஸ்வாஸதாரணதர்மத்தாலே நிரூபிதமான தர்மியை. ஸ்திதியாவது இதனுடைய காலாந்தரானுவ்ருத்தி. இதுதான் நித்யவஸ்துக்களுக்கு நித்யையாயிருக்கும் அநித்ய வஸ்துகளுக்கு ஈச்வரஸங்கல்பத்துக்கு ஈடாக ஏறியும் சுருங்கியுமிருக்கும். இங்கு ப்ரவ்ருத்தியாவது, ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபமான வ்யாபாரம்.

இவையெல்லாம் வஸ்துக்கள்தோறும் ப்ரமாண ப்ரதிநியதமாயிருக்கும். ப்ரமாணங்கள் வஸ்துக்களைக் காட்டும்போது அவ்வோ வஸ்துக்களின் ஸ்வரூபத்தையும், ஸ்வரூப நிரூபக தர்மங்களையும், நிரூபித ஸ்வரூப விசேஷணங்களையும், வ்யாபாரங்களையும் காட்டும். அதில் ஸ்வரூபத்தை ஸ்வரூப நிரூபக தர்மங்களாலே விசிஷ்டமாகவே காட்டும். அந்த ஸ்வரூபத்தைச் சொல்லும்போது அவ்வோ தர்மங்களை இட்டல்லது சொல்லவொண்ணாது. அவற்றைக் கழித்துப் பார்க்கில் சச விஷாண துல்யமாம்.

**விளக்கம்** - ஸ்வரூபம் என்பது ஒரு பொருளுக்கு உள்ள தனித்தன்மையை, அதன் அஸாதாரண தன்மையைக் குறிக்கும். அதன் நீடிப்பு (ஸ்திதி) என்பது, அது காலத்தின் போக்கில் அப்படியே இருப்பதாகும். இத்தகைய நிலையானது நிலையாக உள்ள நித்யவஸ்துக்களுக்கு நிலையாகவே இருக்கும். ஆனால், நித்யம் அல்லாத பொருள்களுக்கு, விரிவதும் சுருங்குவதும் ஆகிய தன்மைகள், ஈச்வரனின் ஸங்கல்பத்திற்கு ஏற்றபடியே இருக்கும். அடுத்து, ப்ரவ்ருத்தி என்பது செயல் புரிவதும், செயல் புரியாமல் உள்ள தன்மைகளும் ஆகும். இவை மூன்றும் (ஸ்வரூபம், ஸ்திதி, ப்ரவ்ருத்தி), பல ப்ரமாணங்கள் மூலம் ஒவ்வொரு பொருளுக்கும் வேறுபட்டே காணப்படும். ஒரு ப்ரமாணமானது, ஒரு பொருளைப் பற்றிக் கூறுகையில், அந்தப் பொருளின் ஸ்வரூபம், அந்தப் பொருளின் ஸ்வரூபத்தை விளக்கும் தன்மைகள், மற்ற தன்மைகள், அதன் செயல்பாடுகள் ஆகிய அனைத்தையுமே குறிப்பிடும். ஸ்வரூபத்தைப் பற்றிக் கூறும்போது, அந்த ஸ்வரூபத்தின் தன்மைகளும் கூறப்படும். ஒரு பொருளுடைய ஸ்வரூபத்தின் தன்மைகளைக் கூறாமல், அதன் ஸ்வரூபத்தைப் பற்றிக் கூற இயலாது. ஒரு பொருளைப் பற்றிய தன்மைகளைப் பற்றிக் கூறாமல், அந்தப் பொருளைப் பற்றி மட்டுமே கூற முற்படுவது, முயலின் காது பற்றிப் பேசுவது போன்றே ஆகும்.

## தத்வம் – 1 – சித் அல்லது சேதனம்

## ஜீவனின் ஸ்வரூபம்

**மூலம் -** ஆகையால் ஜீவஸ்வரூபத்தை ஞானத்வம், ஆனந்தத்வம், அமலத்வம், அணுத்வம் இத்யாதிகளான நிரூபக தர்மங்களையிட்டு நிரூபித்து ஞானம், ஆனந்தம், அமலம், அணு என்று இம்முகங்களாலே சொல்லக்கடவது.

**விளக்கம் -** ஆகவே ஜீவனின் ஸ்வரூபத்தை ஞானம், ஆனந்தம், அமலம் (தூய்மை), அணு ஆகிய தன்மைகள் கொண்டு உரைக்கலாம். அதாவது ஜீவன் ஞானமயமானவன், ஆனந்தமயமானவன், தூய்மையானவன், அணு போன்ற அளவினன் என்று கூறலாம்.

## ஜீவன் பரம்பொருளுக்கே இயல்பான அடிமையானவன்

**மூலம் –** இஜ்ஜீவ தத்த்வம் ஸர்வேச்வரனுக்குச் சேஷமாயேயிருக்குமென்றும், அவனுக்கே நிரூபாதிகசேஷமென்றும், அயோகாந்ய யோக வ்யவச்சேதங்களாலே ப்ரதம பதத்திலே தோன்றின சேஷத்வம் ஸம்பந்த ரூபமாகையாலே ஸம்பந்தி ஸ்வரூபம் நிரூபிதமானாலல்லது அறியவொண்ணாமையாலே, ஜீவனுக்கு இது நிரூபித ஸ்வரூப விசேஷணமென்னலாம். அணுத்வே ஸதி சேதநத்வம் போலே ஸ்வத: சேஷத்வே ஸதி சேதநத்வமும் ஜீவ லக்ஷணமாகவற்றாகையாலே, இச்சேஷத்வம் ஜீவனுக்கு ஸ்வரூப நிரூபகமென்னவுமாம். இப்படி விபுத்வேஸதி சேதநத்வமும், அநந்யாதீநத்வ நிரூபாதிக சேஷித்வாதிகளும் ஈச்வர லக்ஷணங்கள். ஜீவேச்வர ரூபமான ஆத்மவர்க்கத்துக்கெல்லாம் பொதுவான லக்ஷணம் சேதநத்வமும் ப்ரத்யக்த்வமும். சேதநத்வமாவது ஞானாச்ரயமாகை, ப்ரத்யக்த்வமாவது தனக்குத்தான் தோற்றுகை. அப்போது தர்மபூதஞான நிரபேக்ஷமாக “நான்” என்று தோற்றும். இப்படி சேதநத்வாதிகள் ஈச்வரனுக்கும் ஜீவனுக்கும் பொதுவாகையாலே அவனிற்காட்டில் வ்யாவ்ருத்தி தோற்றுகைக்காக ஜீவலக்ஷணத்தில் ஸ்வதச்சேஷத்வாதிகள் சொல்லுகிறது. ப்ரதமாக்ஷரத்தில் சதுர்த்தியில் தோற்றின தாதர்த்யத்துக்கு உபாதியில்லாமையாலே, ஸர்வரக்ஷகனான ஸ்ரீய:பதிக்கு ஜீவாத்மா நிரூபாதிக சேஷமாயே இருக்குமென்று இப்படி யாவத் ஸ்வரூபம் ஸம்பந்தம் சொல்லுகை, அயோக வ்யவச்சேதம் மத்யமாக்ஷரத்தில் அவதாரண ஸாமர்த்யத்தாலே அவனுக்கே

நிரூபாதிக சேஷம், வேறொருத்தருக்கு நிரூபாதிகசேஷமென்கை அந்யயோக வ்யவச்சேதம். இச்சேஷத்வம் பாகவத சேஷத்வ பர்யந்தமாக வளரும்படி மேலே சொல்லக் கடவோம்.

**விளக்கம்** - ஜீவன் என்னும் தத்த்வம் ஸர்வேச்வரனுக்கு எப்போதும் அடிமையாகவே உள்ளான், அவனுக்காகவே உள்ளான், எந்தப் ப்ரதிபலனையும் எதிர்பாராமல் அவனுக்கு அடிமையாக உள்ளான். இதன் மூலம் அவன் ஸர்வேச்வரனுக்காகவே எப்போதும் உள்ளான் (அயோக வ்யவச்சேதம்) என்பதும், மற்றவர்களுக்காக அல்லன் (அந்யயோக வ்யவச்சேதம்) என்பதும் உணர்த்தப்பட்டது. திருமந்த்ரத்தின் முதல் பதமான ப்ரணவத்தின் மூலம், ஜீவன் இவ்விதம் அவனுக்கு அடிமையாக உள்ளான் என்பது கூறப்பட்டது. இதன் மூலம், ஜீவனுக்கு ஸர்வேச்வரனுடன் உள்ள ஸம்பந்தம் கூறப்பட்டது. இப்படியிருக்கையில், இத்தகைய ஸம்பந்தம் இன்றி ஜீவனைப் பற்றி ஏதும் கூற இயலாது. அணு போன்று உள்ளதும், அறிவுடன் உள்ளதும் ஜீவனுடைய தன்மைகள் போன்று, அறிவுடன் உள்ளதும் ஈச்வரனுக்கு அடிமையாக உள்ளதும் ஜீவனின் தன்மைகள் ஆகும். ஆகவே அடிமையாக உள்ளவன் என்பதும் ஜீவனுக்கு ஓர் அடையாளமாக உள்ளது. இது போன்று ஈச்வரனுக்கு "அறிவுடன் உள்ளது, எங்கும் உள்ளது (விபுத்வம்)" ஆகியவை தன்மைகளாக உள்ளன. இது தவிர அவன் மற்ற எதனையும் சார்ந்து இல்லாமல் சுதந்திரமாக உள்ளான் என்பதும், மற்றவற்றிலிருந்து எதனையும் எதிர்பாராமல் உள்ளான் என்பதும் அறியப்படவேண்டும். ஜீவன் மற்றும் ஈச்வரன் முதலான ஆத்ம வஸ்துக்கள் அனைத்திற்கும், சேதநத்வம் மற்றும் ப்ரத்யக்த்வம் ஆகிய இரண்டும் பொருந்தும். சேதநத்வம் என்றால் ஞானத்துடன் உள்ள நிலையாகும். ப்ரத்யக்த்வம் என்றால் தன்னைப் பற்றிய அறிவுடன் உள்ள நிலையாகும். ஜீவனிடம் உள்ள ஞானமானது தர்மபூதஞானம் எனப்படும் (இதனைக் கொண்டே ஜீவன் அனைத்தையும் அறிகிறான்). ஆனால் தன்னைப் பற்றி, "இது நான்", என்று அறிந்து கொள்ள தர்மபூதஞானம் அவசியமில்லை. இவ்விதம் ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் சேதநத்வம் மற்றும் ப்ரத்யக்த்வம் ஆகியவை பொதுவாக உள்ளதால், ஜீவனுக்கு உள்ள தன்மையை ஈச்வரத் தன்மைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக, ஜீவன் இயல்பாகவே ஈச்வரனின் அடிமை எனப்படுகிறான். ஆகவே அஷ்டாக்ஷரத்தின் முதல் பதத்தில், "அ" என்னும் எழுத்து மூலம், எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி, ஜீவன் ஈச்வரனின் அடிமையாக உள்ளான் எனப்பட்டது. ஆகவே பெரியபிராட்டியின் நாயகனான ஸ்ரீமந்நாராயணனுக்கு ஜீவன்


email : sridharan_book@yahoo.com

முழுவதுமாக, எதனையும் எதிர்பாராத அடிமையாக உள்ளான் என்பது உணர்த்தப்பட்டது. இப்படியாக ஜீவன் உள்ளவரையில், அவனுக்கும் ஈச்வரனுக்கும் உள்ள உறவுமுறையை அயோக வ்யவச்சேதம் என்கிறோம். அஷ்டாக்ஷரத்தின் முதல் எழுத்தான "ஓம்" என்பதன் நடுவில் உள்ள "உ" என்னும் எழுத்தானது (ஓம் = அ, உ, ம), "மட்டும்" என்னும் பொருள் அளிக்கிறது; அதாவது, ஜீவன் ஈச்வரனுக்காக மட்டுமே உள்ளான் என்பதும், அவன் மற்றவர்களுக்காக உள்ளான் என்பது மறுக்கப்படவும் செய்கிறது. இந்த மறுப்பானது அந்யயோக வ்யவச்சேதம் எனப்படுகிறது. இத்தகைய சேஷத்வம் பகவான் தொடங்கி அடியார்கள்வரை நீடிப்பதை நாம் வேறு ஓர் இடத்தில் விளக்குவோம்.

## சேதனனின் செயல்பாடு

**மூலம் -** இப்படியிருக்கிற சேதனருக்குப் ப்ரவ்ருத்தியாவது பராதீனமுமாய் பரார்த்தமுமான கர்த்ருத்வமும் போக்த்ருத்வமும். ஈச்வரன் தன் போக்த்ருத்வார்த்தமாக இவர்களுக்குக் கர்த்ருத்வ போக்த்ருத்வங்களை உண்டாக்குகையால் இவை பரார்த்தங்கள்.

**விளக்கம் -** சேதனர்களின் செயல்பாடு என்பது ஈச்வரனின் ஸங்கல்பத்திற்கு ஏற்ப கர்மங்களை இயற்றியபடி இருப்பது, அந்தக் கர்மங்களின் பலன்களை அனுபவிப்பதும் ஆகும். இவ்விதம் அவர்கள் கர்மம் இயற்றுவதும், அவற்றின் பலனை அனுபவிப்பது ஈச்வரனின் ஸங்கல்பம் காரணமாகவே என்பதால், அவர்கள் அவனுக்காகவே உள்ளனர் அன்றி, தங்களுக்காக அல்ல.

## மூன்று வகையான சேதனர்களின் செயல்பாடுகளும் வேறுபாடுகளும்

**மூலம் -** பத்தசேதநருக்கு நீங்கியுள்ளாரில் பேதம், அவித்யா கர்ம வாஸநா ருசி ப்ரக்ருதி ஸம்பந்த யுக்தராயிருக்கை. இவர்களுக்கு அந்யோந்யம் வரும் ஞான ஸுகாதி பேதத்தை ப்ரஹ்மாதி ஸ்தம்ப பர்யந்தங்களான வகுப்புகளிலே கண்டு கொள்வது. இப்பத்த சேதநர் தந்தாமுக்குக் கர்மானுரூபமாக ஈச்வரன் அடைத்த சரீரங்களை தர்மி ஸ்வரூபத்தாலும் தரியா நிற்பார்கள், தர்மியால் வருகிற தாரணம் சரீரத்தினுடைய ஸத்தைக்குப் ப்ரயோஜனமாயிருக்கும் ஜாக்ரதாத்யவஸ்தையில் தர்மபூதஞானத்தாலே வருகிற

சரீரதாரணம் புருஷார்த்த ததுபாயானுஷ்டானங்களுக்கும், க்ருதோபாயனான பரமைகாந்திக்கு பகவதனுபவ கைங்கர்யங்களுக்கும் உபயுக்தமாயிருக்கும். பாபக்ருத்துக்களுக்கு இச்சரீரதாரணம் விபரீத பலத்துக்கு ஹேதுவாயிருக்கும். இஜ்ஜீவர்கள் இச்சரீரத்தை விட்டால் இதின் ஸங்காதம் குலையுமித்தனை. சரீரத்துக்கு உபாதானமான த்ரவ்யங்கள் ஈச்வர சரீரமாய்க் கொண்டு கிடக்கும். பத்தசேதநருக்கு இதரரிற் காட்டில் ஸ்திதி பேதம் யாவந்மோக்ஷம் அனுவர்த்திக்கை. ப்ரவ்ருத்தி பேதம் புண்ய பாப அனுபயரூபங்களான த்ரிவித ப்ரவ்ருத்திகளும்.

**விளக்கம்** - ஸம்ஸார பந்தம் என்னும் பிடியில் சிக்கியுள்ள சேதனர்களுக்கும் மற்ற சேதனர்களுக்கும் (முக்தர், நித்யர்) உள்ள வேறுபாடு என்னவெனில் - பந்தத்தில் உள்ள சேதனர்கள் அறியாமை, கர்மங்கள், பூர்வ கர்ம வாஸனை, உலக விஷயங்களில் நாட்டம், ப்ரக்ருதியுடன் தொடர்பு என்பதைக் கொண்டுள்ளனர். ப்ரம்மன் தொடங்கி புல்பூண்டு வரை உள்ள ஜீவன்களில் ஞானம் மற்றும் சுக அனுபவங்கள் முதலானவற்றில் வேறுபாடுகளைக் காணலாம். தங்களுடைய கர்மம் காரணமாக ஈச்வரன் தங்களுக்கு அளித்த சரீரத்தை ஆதரித்தபடி இவ்வகை சேதனர்கள் உள்ளனர். தங்கள் சரீரங்களைத் தங்களது ஸ்வரூபம் மூலமாகவோ, தர்மபூதஞானம் மூலமாகவோ தாங்கியபடி உள்ளனர். ஸ்வரூபம் மூலம் தாங்கப்படுவதாலேயே சரீரம் வாழ்கிறது. விழித்திருக்கும் நிலையில் தர்மபூதஞானத்தின் காரணமாக இந்தச் சரீரமானது வாழ்வின் புருஷார்த்தங்களைத் தேட முயற்சி செய்தபடி உள்ளது. அத்தகைய புருஷார்த்தங்களைப் பெற உதவும் முயற்சிகளிலும் ஈடுபடுகிறது. மிகவும் உயர்ந்த பரமைகாந்திகளுக்கு தர்மபூதஞானம் வழியாக, இந்தச் சரீரம் பகவத் அனுபவத்திலும், பகவானின் கைங்கர்யத்திலும் ஈடுபடுத்தப்படுகிறது. பாபம் நிறைந்தவர்களுக்கு இந்தச் சரீரமானது மேலும் பாபம் செய்யக் காரணமாக அமைந்துவிடுகிறது. ஜீவன் இந்த உடலை விடும்போது, இது அழியத் தொடங்குகிறது. சரீரம் உண்டாக முக்கியமான காரணமாக உள்ள பஞ்சபூதங்கள் ஈச்வரனின் சரீரமாக நிலைத்து விடுகின்றன. மற்ற சேதனர்களைக் காட்டிலும், பத்தசேதனர்களின் நீடிப்பு (ஸ்திதி) என்பது, மோக்ஷம் அடையும்வரை, இந்தச் சரீரத்துடன் தொடர்பு கொண்டபடி இருப்பதாகும். இவர்களின் செயல்பாடு (ப்ரவ்ருத்தி) என்பது, “புண்யம், பாவம், இவை இரண்டும் அற்றது” என்று மூன்று வகையாகும்.

**மூலம்** - முக்தருக்கு நீக்கியுள்ளாரில் பேதம் ப்ரதிபந்தக நிவ்ருத்தியாலே ஆவிர்பூத ஸ்வரூபராயிருக்கை. ஸ்திதி பேதம் பூர்வாவதியுண்டான ஆவிர்பாவத்துக்கு உத்தராவதியன்றிக்கேயிருக்கை. இவர்களுக்கு அந்யோந்யம் ஸ்திதி பேதம் ஆவிர்பாவத்தில் முற்பாடு பிற்பாடுகளால் உண்டான முன்புற்ற ஏற்றச் சுருக்கம். ப்ரவ்ருத்தி பேதம் அநாதிகாலம் இழந்து பெற்ற பரிபூர்ண பகவதனுபவ ஜநித ப்ரீதிகாதிதமான யதாபிமத கைங்கர்ய விசேஷங்கள்.

**விளக்கம்** - முக்தி பெற்ற ஜீவன்களுக்கும் மற்ற ஜீவன்களுக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், முக்தி பெற்ற ஜீவன்கள் தங்களுடைய தடைகளைக் கடந்து, தங்களின் ஸ்வரூபத்தை அடைந்தவர்கள் ஆவர். இவர்களுடைய ஸ்திதி (நீடிப்பு) என்பது இவர்களுக்கு வெளிப்பட்ட ஸ்வரூபமானது முடிவில்லாமல் அப்படியே நிலைப்பது ஆகும். இவர்களுடைய ப்ரவ்ருத்தி (செயல்) என்பது எண்ணற்ற காலமாக இழந்திருந்த, பகவானின் மீது மிகவும் அன்புடன் உள்ள நிலை காரணமாக உண்டாகும் கைங்கர்யத்தை மீண்டும் பெறுதல் என்பதே ஆகும்.

**மூலம்** – நித்யருக்கு நீக்கியுள்ளாரில் பேதம், அநாத்யாவிர்பூத ஸ்வரூபராய்ப் பரதந்த்ரராயிருக்கை. இவர்களுக்கு நீக்கியுள்ளாரிற் காட்டில் ஸ்திதி பேதம், அநாத்யநுவ்ருத்தமான சேஷித்வாநுபவம். இது நித்யருக்கெல்லாம் பொதுவானபடியாலே, இவர்களுக்கு அந்யோந்யம் ஸ்திதியில் வைஷம்யமில்லை. இவர்களுக்குப் ப்ரவ்ருதி பேதம், அநாதி ப்ரவாஹ நித்யங்களான கைங்கர்ய விசேஷங்கள்.

**விளக்கம் -** நித்யஸூரிகளுக்கும் மற்ற ஜீவன்களுக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், நித்யஸூரிகள் அநாதியாகவே (தொடக்கம் இன்றி) தங்களுடைய ஆத்ம ஸ்வரூபம் வெளிப்பட்டவர்களாக, பகவானுக்கு மட்டுமே வசப்பட்டவர்களாக இருத்தல் ஆகும். மற்றவர்களுடைய இருப்பு என்பதற்கும், இவர்களுடைய இருப்பு என்பதற்கும் இடையே உள்ள வேறுபாடானது, "இவர்களுடைய பகவத் அனுபவம் என்பது எல்லையற்ற காலமாக வளர்ந்தபடி உள்ளது", என்பதாகும். ஆனால், இந்த நிலையானது அனைத்து நித்யஸூரிகளுக்கும் பொதுவானது என்பதால், இவர்கள் ஒவ்வொருக்கு இடையிலும், இருப்பு வேறுபாடு என்பது கிடையாது. இவர்களுடைய செயலில் உள்ள வேறுபாடு என்பது, எப்போதுமே வெள்ளம் போன்று பெருகுகின்ற கைங்கர்ய சிறப்பே ஆகும்.

## நித்யர்களுக்கும் முக்தர்களுக்கும் ஏற்படும் கைங்கர்யம்

**மூலம்** - அநந்த கருடாதிகளுக்கு அதிகார விசேஷங்களும் ததுசித கைங்கர்யங்களும் வ்யவஸ்திதங்களாயிருக்க, நித்யருக்கும் முக்தருக்கும் ஸர்வவித கைங்கர்ய ஸித்தியுண்டென்கிற அர்த்தம் கூடுமோவென்னில் - ஸ்வாமியினுடைய அபிப்ராயத்துக்கு ஈடாக தனக்கு அபிமதங்களான கைங்கர்யங்களிலே கிடையாதவை ஒன்றுமில்லாமையாலும், ஓரொருத்தருக்கு வ்யவஸ்திதங்களான கைங்கர்யங்களைத் தாங்கள் அனுஷ்டிக்க வேணுமின்கிற அபிஸந்தி வேறொருத்தருக்குப் பிறவாமையாலும், ஆரேனுமொருவர் அனுஷ்டிக்கும் கைங்கர்யமும் ஸ்வாமிக்குப் ப்ரியமானபடியாலே ததுசித் கைங்கர்யங்களும் ஸர்வருக்கும் ப்ரியமாய் கைங்கர்ய பலமான ப்ரீதியில் வாசியில்லாமையாலும் ஸர்வருக்கும் ஸர்வவித கைங்கர்ய ஸித்தி உண்டென்கையில் விரோதமில்லை.

**விளக்கம்** - ஆதிசேஷன், கருடன் முதலான நித்யஸூரிகள் ஒரு சில குறிப்பட்ட பணிகளையும் கைங்கர்யங்களையும் செய்து வருகின்றனர் என்று சொல்வதுண்டு. அப்படியென்றால் எம்பெருமானார் கூறும் கருத்தான, "நித்யஸூரிகளும் முக்தி பெற்றவர்களும் அனைத்து விதமான கைங்கர்யமும் செய்து வருகின்றனர்", என்பது முரணாகி விடுகிறதே எனலாம். இதற்கு விடை - அவர்கள் தங்களுக்கு விருப்பமான செயல்களைச் செய்ய எந்தத் தடையும் இல்லை, ஆனால் தங்களில் மற்றொருவர் செய்கின்ற அதே செயலைத் தாங்களும் செய்யவேண்டும் என்ற (போட்டி மனப்பான்மை) எண்ணம் அவர்களுக்கு இல்லை என்பதே இங்கு கருத்து. மேலும் இவர்களில் யார் எந்தவிதமான கைங்கர்யம் செய்தாலும் எம்பெருமானுக்கு அதனால் உகப்பே உண்டாகும். ஆகவே யாரோ ஒருவர் ஏதேனும் ஒரு கைங்கர்யத்தைச் செய்வதால், அனைவருக்கும் வேறுபாடு இல்லாமல், அவர் செய்த கைங்கர்யம் கண்டு மகிழ்வே உண்டாகிறது. இவர்களுக்கு அதனால் உண்டாகும் மகிழ்வில் எந்தவிதமான வேறுபாடும் இல்லை. ஆகவே அனைவருக்கும் அனைத்து கைங்கர்யமும் உண்டு என்று எம்பெருமானார் கூறுவதில் முரண்பாடு இல்லை.

## தர்மபூத ஞானம்

**மூலம்** - இவ்வாத்மாக்களெல்லாருக்கும் தர்மிஸ்வரூபம் போலே தர்மபூதஞானமும் த்ரவ்யமாயிருக்க, இதின் ஸ்வரூபத்தைத் தனித்து இங்கு அருளிச் செய்யாதொழிந்தது சேதநரென்று எடுத்த விசிஷ்டத்திலே விசேஷணமாய்ச் சொருகி நிற்கையடியாக.

**விளக்கம்** - (தர்மபூதஞானம் என்றால் என்ன - ஆத்மா என்பது ஞானமயமானது. அதன் ஸ்வரூபம் என்பது ஞானமே ஆகும். அதே நேரத்தில் ஞானம் என்பதைத் தனது ஒரு தன்மையாகவும் ஆத்மா கொண்டுள்ளது. இந்த ஞானம் தர்மபூதஞானம் என்பதாகும்). அனைத்து ஆத்மாக்களுக்கும் ஸ்வரூபம் என்பது ஒரு அடிப்படையாக உள்ளது போன்று, தர்மபூதஞானமும் அடிப்படையாக உள்ளது. இத்தகைய தர்மபூதஞானத்தின் ஸ்வரூபத்தை இங்கு கூறாமல் விட்டதற்குக் காரணம், சேதநன் என்று கூறும்போது அந்தப் பதத்திலேயே அடங்கி விடுவதால் ஆகும்.

**மூலம்** - இத்தர்மபூதஞானம் விஷயப்ரகாச தசையிலே ஸ்வாச்ரயத்துக்கு ஸ்வயம் ப்ரகாசமாயிருக்கும். இது ஈச்வரனுக்கும், நித்யருக்கும் நித்யவிபுவாயிருக்கும். மற்றுள்ளோருக்கு ஸம்ஸாராவஸ்தையில் கர்மானுரூபமாக பஹுவித ஸங்கோச விகாஸவத்தாய் முக்தாவஸ்தையிலே ஏகவிகாஸத்தாலே பின்பு யாவத்காலம் விபுவாயிருக்கும்.

**விளக்கம்** - இந்த தர்மபூதஞானம் என்பது அந்தந்த ஆத்மாவிற்கு ஒரு விஷயத்தைக் குறித்து உணர்த்தும் நேரத்தில், தானாகவே தகுந்த காலத்தில் வெளிப்பட்டுவிடும். ஸர்வேச்வரனுக்கும் நித்யர்களுக்கும் இது எப்போதும் எங்கும் எல்லாவற்றையும் அறியும் விதமாக பரந்து காணப்படும். ஸம்ஸாரத்தில் உள்ள மற்றவர்களுக்கு, அவரவர்களின் கர்மங்களுக்கு ஏற்ப இது சுருங்கியும் விரிவடைந்தும் காணப்படும். முக்தர்களுக்கு இது ஒரு முறை நன்றாக மலர்ந்து, பின்னர் சுருங்காமல் அப்படியே நீடித்து நிற்கும்.

**மூலம்** - இதுக்கு ப்ரவ்ருத்தியாவது விஷயங்களை ப்ரகாசிப்பிக்கையும், ப்ரயத்நாவஸ்தையிலே சரீராதிகளைப் ப்ரேரிக்கையும், பத்த தசையில் ஸங்கோச

விகாரங்களும், ஆனுகூல்ய ப்ரதீகூல்ய ப்ரகாசமுகத்தாலே போகமென்கிற அவஸ்தையை அடைகையும். போகமாவது தனக்கு அனுகூலமாகவாதல், ப்ரதிகூலமாகவாதல் ஒன்றை அனுபவிக்கை.

**விளக்கம்** - தர்மபூதஞானத்தின் செயல்பாடு (ப்ரவ்ருத்தி) என்பது என்னவெனில் அனைத்து விஷயங்களையும் உணர்த்துவது (விஷயங்கள் குறித்த ஞானம் ஏற்படுத்துவது), சரீரம் மற்றும் புலன்களை வழி நடத்தவோ அல்லது வழி நடத்த விருப்பமோ கொள்வது, ஸம்ஸார நிலையில் சுருங்கியும் விரிவடைந்தும் இருப்பது, விஷயங்களை அனுபவிப்பதன் மூலம் எது ஏற்கப்படலாம் எது தள்ளப்படலாம் என்று உணர்த்துவது போன்றவை ஆகும். போகம் என்பது எந்தப் பொருள் தனக்கு ஏற்கும், எது ஏற்காது என்று அனுபவத்தின் மூலம் அறிதல் ஆகும்.

**மூலம்** - ஈச்வரவிபூதியான ஸர்வவஸ்துவுக்கும் ஆநுகூல்யம் ஸ்வபாவமாய் இப்படி ஈச்வரனும் நித்யரும் முக்தரும் அனுபவியாநிற்க, ஸம்ஸாரிகளுக்குக் காலபேதத்தாலும் புருஷ பேதத்தாலும் தேசபேதத்தாலும் அல்பானுகூலமாயும் ப்ரதிகூலமாயும் உதாஸீநமாயுமிருக்கிற இவ்விபாகங்களெல்லாம் இவ்வஸ்துக்களுக்கு ஸ்வபாவஸித்தங்களல்ல. இது இவர்களுடைய கர்மங்களுக்கீடாக ஸத்ய ஸங்கல்பனான ஈச்வரன் இவர்களுக்கு பலப்ரதானம் பண்ணின ப்ரகாரம்.

**விளக்கம்** - ஈச்வரனின் விபூதியாக உள்ள அனைத்துப் பொருள்களுமே, அவற்றின் இயல்பாகவே அனைவராலும் ஏற்கப்படும் தன்மையுடனேயே உள்ளன. இவை ஈச்வரனாலும், நித்யஸூரிகளாலும், முக்தர்களாலும் ஏற்கும்படியாகவே உள்ளன. ஆனால் ஸம்ஸாரத்தில் உள்ளவர்களுக்கு இந்தப் பொருள்கள் ஒரு சில நேரங்களில், ஒரு சில இடங்களில், ஒரு சிலருக்கு ஏற்கும்படியாகவும், வேறு சில நேரம், இடம், மனிதர்களுக்கு ஏற்காதபடியாகவும் உள்ளன. ஆனால் இந்த முரண்பாடு நிறைந்த தன்மைகள், அந்தப் பொருள்களுக்கு இயற்கையாக இருப்பதில்லை. இவ்விதம் ஒரே பொருள் பலருக்குப் பலவிதமாக உள்ளது என்ற நிலை, அவரவர்களின் கர்மம் காரணமாக, ஸர்வேச்வரனின் மாற்ற இயலாத ஸங்கல்பத்தினால் ஏற்படுகின்றன.

**மூலம் -** இக்கர்மபலம் அனுபவிக்கைக்குப் பத்தருக்கு ஸ்வரூப யோக்யதையும், ஸஹகாரி யோக்யதையுமுண்டு. ஸ்வரூப யோக்யதை பரதந்த்ர சேதநத்வம். ஸஹகாரி யோக்யதை ஸாபராதத்வம். நித்யருக்கும் முக்தருக்கும் பரதந்த்ர சேதநதையாலே ஸ்வரூப யோக்யதையுண்டேயாகிலும், ஈச்வராநபிமத விபரீதானுஷ்டானமில்லாமையாலே ஸஹகாரி யோக்யதை இல்லை. ஈச்வரன் ஸர்வம் ப்ரசாஸிதவாய்த் தானொருத்தருக்கு சாஸநீயனன்றிக்கே நிற்கையாலே, பரதந்த்ர சேதநத்வமாகிற ஸ்வரூப யோக்யதை யுமில்லை, ஸ்வதந்த்ராஜ்ஞாதி லங்கனமாகிற ஸஹகாரி யோக்யதையுமில்லை.

**விளக்கம் -** ஸம்ஸாரத்தில் உள்ளவர்களுக்கு இக்கர்ம பலன்களை அனுபவித்தல் என்பது இயற்கையிலேயும், தங்களுடனேயே உள்ள வேறு சில காரணங்களாலும் ஆகும். அவர்கள் மற்றவருக்கு (ஈச்வரனுக்கு) அடங்கியவர்கள் என்பதால், இவ்விதம் கர்மபலனை அனுபவித்தல் இயற்கையாகிறது. வேறு சில காரணங்கள் எவை என்றால் ஈச்வரனுக்கு எதிரான சில பாவச்செயல்களைச் செய்வது ஆகும். நித்யர்களும், முக்தர்களும் ஈச்வரனுக்கு உட்பட்டவர்கள் என்பதால் அவர்களுக்கும் இயற்கையாகவே கர்மபலன் அனுபவித்தல் என்பது உண்டு. ஆனால் அவர்கள் ஈச்வரனின் விதிகளை மீறாமல் உள்ளதால், வேறு காரணங்களால் கர்மபலன் அனுபவித்தல் என்ற நிலை அவர்களுக்கு உண்டாகாது. ஈச்வரன் அனைத்தையும் நியமிப்பவனாகவும், யாருக்கும் கட்டுப்பட்டு இல்லாதவனாகவும் இருப்பதால் இப்படிப்பட்ட கர்மபலனை அனுபவித்தல் என்பது அவனுக்கு இயற்கையாகவே கிடையாது. அவனுக்கு இப்படித்தான் நடக்கவேண்டும் என்ற விதிகளை விதிக்க யாரும் இல்லாததால், மற்ற காரணங்களால் கர்மபலன் அனுபவித்தல் என்பதும் இல்லை.

**மூலம் –** ஜீவேச்வரரூபரான ஆத்மாக்களெல்லாருடையவும் ஸ்வரூபம் ஸ்வஸ்மை ஸ்வயம் ப்ரகாசம். இத்தர்மி ஸ்வரூப ப்ரகாசத்துக்குப் பத்தருக்குமுள்பட ஒரு காலத்திலும் ஸங்கோச விகாஸங்களில்லை. ஸர்வாத்மாக்களுடையவும் தர்மபூதஜ்ஞானம் விஷய ப்ரகாசன வேளையிலே ஸ்வாச்ரயத்துக்கு ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கும். ஜ்ஞானத்வமும் ஸ்வயம்ப்ரகாசத்வமும் தர்மதர்மிகளுக்கு ஸாதாரணம். தர்மபூதஜ்ஞானத்துக்கு விஷயித்வமேற்றம். தர்மியான ஆத்மஸ்வரூபத்துக்குப் ப்ரத்யக்த்வம் ஏற்றம். ஜ்ஞானத்வமாவது கஸ்யசித் ப்ரகாசகத்வம், அதாவது தன்னுடையவாகவுமாம் வேறொன்றினுடையவாகவுமாம் ஏதேனுமொன்றினுடைய வ்யவஹாராநுகுண்யத்தைப்

பண்ணுகை. ஸ்வயம் ப்ரகாசத்வமாவது தன்னை விஷயீகரிப்பதொரு ஞானாந்தரத்தால் அபேக்ஷையறத்தானே ப்ரகாசிக்கை. தர்மபூதஞானத்துக்கு விஷயித்வமாவது தன்னையொழிந்ததொன்றைக் காட்டுகை. ஆத்மாக்களுக்குப் ப்ரத்யக்த்வமாவது ஸ்வஸ்மை பாஸமாநத்வம், அதாவது தன் ப்ரகாசத்துக்குத்தான் பலியாயிருக்கை என்றபடி. ஏதேனுமொரு வஸ்துவின் ப்ரகாசத்துக்குப் பலியென்கிற ஸாமாந்யாகாரத்தைத் தன் ப்ரகாசத்துக்குத் தான் பலியென்று விசேஷித்தவாறே ப்ரத்யக்த்வமாம். இவ்விசேஷமில்லாத வஸ்துவுக்கு இஸ்ஸாமாந்யமும் இத்தோடு வ்யாப்தமான சேதநத்வமுமில்லை. இத்தர்ம தர்மிகளிரண்டும் ஸ்வயம்ப்ரகாசமாயிருந்தாலும் நித்யத்வாதி தர்மவிசேஷ விசிஷ்ட ரூபங்களாலே ஞானாந்தர வேத்யங்களுமாம். தன்னுடைய தர்மபூதஞானம் தனக்கு ஞானாந்தர வேத்யமாம்போது ப்ரஸரண பேதமாத்ரத்தாலே ஞானாந்தர வ்யபதேசம்.

**விளக்கம்** - ஜீவன், ஈச்வரன் போன்ற ஆத்மாக்கள் அனைத்தும் இயல்பாகவே தங்களுக்குத் தாங்கள் ப்ரகாசமானவை ஆகும். இவ்விதம் தங்களுக்குத் தாங்களே ப்ரகாசமாக உள்ள நிலை என்பது, ஸம்ஸாரிகள் உட்பட யாருக்கும், எக்காலத்திலும் சுருங்குவதோ விரிவதோ இல்லை. ஒரு பொருளைக் காண்பிக்கும்போது தர்மபூதஞானம் என்பது தனது ஆத்மாவிற்குப் ப்ரகாசமாகவே உள்ளது. ஆக ஆத்மாவிற்கு இயற்கையாகவே உள்ள ஞானம் (ஸ்வரூப ஞானம்) மற்றும் தர்மபூதஞானம் ஆகிய இரண்டிற்கும் உள்ள ஒற்றுமை என்னவென்றால், இரண்டுமே மற்ற எதனின் உதவியும் இன்றி ப்ரகாசிக்கக்கூடியவை ஆகும். தர்மபூதஞானத்தின் சிறப்பு என்னவென்றால், பொருள்களை உணர்த்துவது (விஷயித்வம்) ஆகும். ஸ்வரூப ஞானத்தின் சிறப்பு என்னவென்றால் தன்னைத்தானே உணர்த்துவது (ப்ரத்யக்த்வம்) ஆகும். இரண்டிற்கும் பொதுவாக உள்ள ஞானம் என்பது ஒன்றை உணர்த்துவது என்பதாகும். அதாவது, ஞானம் என்பது தன்னைப் பற்றியோ, அல்லது மற்ற ஒன்றைப் பற்றியோ உணர்த்துகிறது, தன் மீதோ அல்லது மற்றவற்றின் மீதோ செயலாற்றவும் வைக்கிறது. ஸ்வயம்ப்ரகாசம் என்றால் தன்னை விளக்க, மற்ற ஏதோ ஒரு ஞானம் அவசியம் இல்லாமல், தானாகவே தன்னை விளங்கவைப்பதாகும். தர்மபூதஞானத்தின் தன்மை என்பது தன்னை அல்லாமல் மற்றொரு பொருளை உணர்த்துவது ஆகும். ஆத்மாக்களின் ஸ்வரூப ஞானம் என்பதின் தன்மை தன்னையே உணர்த்துவது ஆகும். எந்த ஒரு பொருளைப் பற்றி உணர்த்தப்பட்டாலும், அந்த ஞானத்தால் பலனடைவது ஆத்மாவே

ஆகும்; இந்தக் கருத்து பொதுப்படையான ஒன்றாகும்; இந்த வரியில் உள்ள “எந்த ஒரு பொருளைப் பற்றி உணர்த்தப்பட்டாலும்” என்பதில் உள்ள “பொருள்” என்னும் பொதுவான பதத்தை, “ஆத்மா” என்று குறிப்பிட்டுக் கூறினால், தன்னைப் பற்றியே ஆத்மா அறிந்துகொண்டு, அதனால் தானே பலனடைவதாக ஆகிறது அல்லவா? இதுவே ப்ரத்யக்த்வம் என்பதாகும். இது போன்று ப்ரத்யக்த்வம் இல்லாத பொருள் ஏதேனும் உள்ளது என்றால், அந்தப் பொருளுக்குத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் திறன் இல்லை, அப்படிப்பட்ட பொருள் சேதனம் என்று கூற இயலாததாகும். தர்மபூதஞானமும், அந்த ஞானம் உள்ள ஆத்மாவும் தங்களைத் தாங்களே வெளிப்படுத்திக்கொள்ளும் திறன் உள்ளவையாகிலும், சாஸ்த்ரம் மூலமும் இவற்றை வெளிப்படுத்த இயலும். இவ்விதம் சாஸ்த்ரம் மூலமாக நித்யத்தன்மை முதலானவற்றை விளக்க இயலும். ஆக இவ்விதம் தானே வெளிப்படக்கூடிய தர்மபூதஞானமும், மற்ற ஒரு ஞானம் மூலம் விளக்கப்படலாம், அந்த ஞானம் என்பது தர்மபூதஞானத்தின் ஒரு பகுதியே ஆகும்.

## தத்வம் – 2 – அசித் அல்லது அசேதனம்

## அசேதநத்தின் இலக்கணம்

**மூலம்** - த்ரிவிதாசேதநங்களும் பரருக்கே தோன்றக் கடவனவாயிருக்கும். அசேதநத்வமாவது ஞானாச்ரயமன்றிக்கேயொழிகை. பிறருக்கே தோன்றுகையாவது தன் ப்ரகாசத்துக்குத்தான் பலியன்றிக்கேயொழிகை. இவையிரண்டும் தர்மபூத ஞானாதிகளுக்கும் துல்யம்.

**விளக்கம்** - மூன்றுவகையான அசேதநங்கள் மற்றவர்களுக்காக தோன்றுகின்றனவே அல்லாமல் தங்களுக்காக அல்ல. அசேதநம் என்றால் ஞானம் இன்றி இருத்தல் என்பதாகும். மற்றவர்களுக்காக தோன்றுதல் என்பதன் பொருளாவது, அவை தங்களுக்குத் தாங்களே பயன் அளித்துக்கொள்வதில்லை என்பதாகும். இவைகளுடைய தர்மபூதஞானம் என்பதற்கும் இந்த இரண்டும் (ஞானம் இல்லாமல் இருக்கும் நிலை, தனக்காக இல்லாமல் உள்ள நிலை) பொருந்தும்.

### ப்ரக்ருதி, காலம், சுத்தஸத்வம்

**மூலம் -** த்ரிவிதாசேதநங்களென்றெடுத்தவற்றில் ப்ரக்ருதியும் காலமும் ஜடங்கள். சுத்தஸத்வமான த்ரவ்யத்தையும் ஜடமென்று சிலர் சொல்லுவார்கள். ஜடத்வமாவது ஸ்வயம்ப்ரகாசமன்றிக்கேயிருக்கை. பகவச்சாஸ்த்ராதி பராமர்சம் பண்ணினவர்கள் ஞானாத்மகத்வம் சாஸ்த்ர ஸித்தமாகையாலே, சுத்தஸத்வ த்ரயத்தை ஸ்வயம்ப்ரகாசமென்பார்கள்.

**பொருள் -** மூன்று வகையான அசேதங்களில் ப்ரக்ருதியும், காலமும் ஜடப்பொருள்கள் ஆகும். ஒரு சிலர் சுத்தஸத்வத்தையும் ஜடப்பொருள் என்று கூறுவதுண்டு; ஜடப்பொருள் என்றால் தன்னைத்தானே வெளிப்படுத்த இயலாத பொருள் ஆகும். பாஞ்சராத்ரம் முதலான ஆகமங்களை ஆராய்ந்து கற்றவர்கள், "சாஸ்த்ரங்களில் கூறப்பட்டபடி, சுத்தஸத்வம் என்பது ஞானம் பொருந்தியதாக உள்ளதால், ஜடம் அல்ல. தானாகவே வெளிப்படக்கூடியது", என்பார்கள் (சுத்தஸத்வம் என்பது முழுவதும் ஸத்வமயமானது. ஸ்ரீவைகுண்டத்தில் இது மட்டுமே உள்ளது. எம்பெருமான், பெரியபிராட்டி ஆகியோரின் திருமேனிகள் சுத்தஸத்வத்தால் ஆனவை என்றே அறியப்படுகிறது).

**மூலம் -** இப்படி ஸ்வயம்ப்ரகாசமாகில் ஸம்ஸாரிகளுக்கு சாஸ்த்ரவேத்யமாக வேண்டாதே தானே தோன்ற வேண்டாவோவென்னில் ஸர்வாத்மாக்களுடையவும் ஸ்வரூபமும் தர்மபூதஞானமும் ஸ்வயம்ப்ரகாசமாயிருக்க ஸ்வரூபம் தனக்கே ஸ்வயம்ப்ரகாசமாய் வேறெல்லார்க்கும் ஞானாந்தர வேத்யமானாற் போலவும், தர்மபூதஞானம் ஸ்வாச்ரயத்துக்கே ஸ்வயம்ப்ரகாசமாய் இதரருக்கு ஸ்வயம்ப்ரகாசம் அல்லாதாப்போலவும் இதுவும் நியதவிஷயமாக ஸ்வயம்ப்ரகாசமானால் விரோதமில்லை.

**விளக்கம் -** இவ்விதம் (சுத்தஸத்வம்) தானாகவே வெளிப்படும் திறன் உள்ளது என்றால், சாஸ்த்ரங்கள் மூலம் அறியப்படவேண்டிய அவசியம் இல்லாதது என்றால், அது ஏன் ஸம்ஸாரத்தில் உள்ளவர்களுக்குப் புலப்படாமல் உள்ளது? இதற்கான விடை கூறுவோம். ஆத்மாவின் ஸ்வரூபமான ஞானமும், அதன் தர்மபூதஞானமும் தானாகவே வெளிப்படக்கூடியவை ஆகும். இதில் ஆத்மாவின் ஸ்வரூபம் என்பது அந்த ஆத்மாவிற்கு


email : sridharan_book@yahoo.com

மட்டுமே வெளிப்படும், மற்றவர்களுக்கு அவரவர்களின் தர்மபூதஞானம் வழியாகவே மற்ற ஆத்மாவின் ஸ்வரூபம் புலப்படும். ஆனால் தர்மபூதஞானம் என்பது அந்த ஆத்மாவிற்கு மட்டுமே புலப்படும், மற்றவர்களுக்கு அல்ல. இது போன்று சுத்தஸத்வம் என்பது ஈச்வரன், நித்யர், முக்தர் ஆகியோருக்கு மட்டுமே தானாகவே வெளிப்படும், மற்றவர்களுக்கு அல்ல. ஆக இந்தக் கருத்துக்களில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை.

**மூலம்** - "யோ வேத்தி யுகபத்ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத: | தம் ப்ரணம்ய ஹரிம் சாஸ்த்ரம் ந்யாயதத்வம் ப்ரசக்ஷ்மஹே" என்கிறபடியே தர்மபூதஞானத்தாலே ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரித்துக் கொண்டிருக்கிற ஈச்வரனுக்கு சுத்தஸத்வ த்ரயம் ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கிறபடி எங்ஙனேயென்னில், இவனுடைய தர்மபூதஞானம் திவ்யாத்ம ஸ்வரூபம் ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கிறாப்போலே இதுவும் ஸ்வயம் ப்ரகாசமாயிருக்கலாம். இப்படி நித்யருக்கும் துல்யம். விஷயப்ரகாச காலத்திலே தர்மபூதஞானம் ஸ்வாச்ரயத்துக்கே ஸ்வயம்ப்ரகாசமானாற்போலே முக்தருக்கும் அவ்வவஸ்தையிலே இதுவும் ஸ்வயம்ப்ரகாசமானால் விரோதமில்லை. தர்மபூதஞானத்தினுடைய ஸ்வாத்ம ப்ரகாசன சக்தியானது விஷயப்ரகாசமில்லாத காலத்தில் கர்மவிசேஷங்களாலே ப்ரதிபத்தையானாற்போலே சுத்தஸத்வத்தினுடைய ஸ்வாத்ம ப்ரகாசன சக்தியும் பத்ததசையில் ப்ரதிபத்தையாகையாலே சுத்தஸத்வம் பத்தருக்கு ப்ரகாசியாதொழிகிறது.

**விளக்கம்** - ந்யாய தத்வத்தின் மங்கள ச்லோகம், "யோ வேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத: தம் ப்ரணம்ய ஹரிம் சாஸ்த்ரம் ந்யாயதத்வம் ப்ரசக்ஷ்மஹே - எந்த ஒரு ஸர்வேச்வரன் அனைத்தையும் ஒரே நேரத்தில் தனது ஸ்வபாவம் காரணமாக அறிகிறானோ, அப்படிப்பட்ட ஹரியை வணங்கிவிட்டு ந்யாயதத்வம் என்ற இந்த சாஸ்த்ரத்தைக் கூறுகிறோம்", என்றது. இங்கு ஒரு கேள்வி எழலாம். சுத்தஸத்வமானது ஸர்வேச்வரனின் தர்மபூதஞானத்தாலேயே அவனுக்குப் புலப்படுகிறது, இப்படி உள்ளபோது அவனுக்கு சுத்தஸத்வம் தானாகவே புலப்படுவதாகக் கூறுவது எப்படி? விடை அளிப்போம் - ஸர்வேச்வரனின் தர்மபூதஞானம் என்பது அவனது திவ்யமான ஸ்வரூபம் உட்பட அனைத்தையும் புலப்பட வைக்கிறது என்று கூறினோம், ஆயினும் அவனது ஸ்வரூபம் தானாகவே வெளிப்படவல்லது என்று கூறவில்லையா? இதுபோன்று அவனுக்கு சுத்தஸத்வமும் தர்மபூதஞானம் வழியே வெளிப்பட்டாலும், தானாகவே

வெளிப்படுவதாகவே கொள்ளவேண்டும். இது நித்யசூரிகளுக்கும் பொருந்தும். ஒரு பொருளை உணர்த்தவல்ல காலத்தில், அந்த ஆத்மாவிற்கு தர்மபூதஞானம் தானாகவே தன்னை வெளிப்படுத்துவது போன்று (அந்தப் பொருள் உணரப்படுவதே தர்மபூதஞானம் தன்னை வெளிப்படுத்துவதால்தான்), முக்தி அடைந்தவர்களுக்கு சுத்தஸத்வமானது தானாகவே தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும். இதில் எந்த முரண்பாடும் இல்லை. ஆனால் கர்மம் காரணமாக, ஒரு பொருளை உணர்த்தவேண்டிய நேரத்தில்கூட தர்மபூதஞானம் தடைபட்டு, தன்னை வெளிப்படுத்திக்கொள்ள இயலாமல் போகலாம். இது போன்றே ஸம்ஸார பந்தத்தில் உள்ளதால், சுத்தஸத்வம் என்பது தன்னைத் தானாகவே வெளிப்படுத்த இயலாமல் போகிறது.

திய: ஸ்வயம்ப்ரகாசத்வம் முக்தௌ ஸ்வாபாவிகம் யதா
பத்தே கதாசித் ஸம்ருத்தம் ததா அத்ராபி நியம்யதே

**பொருள்** - மோக்ஷ காலத்தில் தானாகவே வெளிப்படும் தர்மபூதஞானமானது, ஸம்ஸார காலத்தில் சில நேரங்களில் தடைபட்டு உள்ளது, இது போன்றே சுத்தஸத்வ விஷயத்திலும் கொள்ளவேண்டும்.

**மூலம்** - இவ்வளவு அவஸ்தாந்தராபத்தி விகாரி த்ரவ்யத்துக்கு விருத்தமன்று. ஆகையாலே ப்ரமாண ப்ரதிபந்நார்த்தத்துக்கு யுக்தி விரோதம் சொல்ல வழியில்லை. இங்ஙனன்றிக்கே உபசாரத்தாலே நிர்வஹிக்கப்பார்க்கில் ஆத்ம ஸ்வரூபத்திலும் ஞானாதி சப்தங்களை அந்யபரங்களாக்கலாம். ஸ்வயம்ப்ரகாசத்துக்கு ரூப ரஸாதி குணங்களுக்கும் அவையடியாக வந்த ப்ருதிவ்யாதி விபாகமும் பரிணாமாதிகளும் கூடுமோவென்கிற சோத்யமும் தர்மபூதஞானத்துக்கும் தர்மிஞானத்துக்குமுண்டான வைஷம்யங்களை ப்ரதிபந்தியாகக் கொண்டு ப்ரமாணபலத்தாலே பரிஹ்ருதம். இப்படி ஸ்வயம்ப்ரகாசமான சுத்தஸத்வத்ரயத்தை ஞாத்ருத்வமில்லாமையாலே த்ரிவிதாசேதனங்களென்று சேரக்கோத்தது. இவ்வசேதநங்கள் மூன்றுக்கும் ப்ரவ்ருத்தியாவது ஈச்வர ஸங்கல்பாநுரூபங்களான விசித்ர பரிணாமாதிகள்.

**விளக்கம்** - தொடர்ந்து மாற்றம் அடைந்தபடி உள்ள பொருள்கள் ஒரு சில நேரங்களில் ஒருவரால் ஏற்கவும்படலாம், நிராகரிக்கவும்படலாம், மற்றவர்களும் அந்தப் பொருள் குறித்து இதே போன்று இருக்க வாய்ப்புண்டு. இதில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை. ப்ரமாணங்களால் தெளிவாக நிரூபிக்கப்பட்ட பொருள்களுக்கு உதாரணம் மூலம் முரண்பாடு கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. இங்கு ஒரு சிலர், "சுத்தஸத்வமானது தானாகவே வெளிப்படும் என்பது உபசாரமாக (உதாரணமாக சிங்கம் போன்ற மாணவன் என்றால் அது அந்த மாணவனைப் புகழ்வதற்கான உபசாரமாகும். உண்மையில் அவன் சிங்கம் அல்லன்) மட்டுமே கூறப்படுகிறது, உண்மையில் அவ்விதம் இல்லை", என்று கூறலாம். இப்படிக்கொண்டால், "ஆத்மாவும் ஞானமயமானது அல்ல, ஆனந்தமயமானது அல்ல", என்றும் கூறலாமே. இது பெருத்த முரண்பாடாகிவிடும் அல்லவோ? இவர்கள், "தானாகவே வெளிப்படும் ஒரு பொருளுக்கு எவ்விதம் ரூபம், சுவை, குணங்கள் முதலானவை அமையும்? தானாகவே வெளிப்படும் ஆத்மா, தர்மபூதஞானம் போன்றவற்றுக்கு இது போன்று சுவை, ரூபம் முதலானவை இல்லை அல்லவோ?", என்று கேட்கலாம். இதற்கு விடை அளிப்போம். தானாகவே வெளிப்படும் பொருள்களில் அடிப்படையான பேதங்கள் உள்ளதால் இவ்விதம் ஒத்துக் கூற இயலாது. ஆகவே இது போன்ற இடங்களில் சாஸ்த்ரங்களையே ப்ரமாணங்களாக எடுத்துக் கொள்ளவேண்டும். தானாகவே வெளிப்படும் சுத்தஸத்வம் என்பது சேதனம் மற்றும் அறிபவன் ஆகிய இரண்டின் தன்மைகளும் இன்றி இருப்பதால், இது மூன்று விதமான அசேதனத்தில் சேர்க்கப்பட்டது. இந்த மூன்று வகையான அசேதங்களின் செயல்பாடு (ப்ரவ்ருத்தி) என்பது ஈச்வரனின் ஸங்கல்பத்தின் காரணமாக தொடர்ந்து மாறியபடி இருத்தலே ஆகும் (பரிணாமம்).

## த்ரிகுண த்ரவ்யங்கள்

**மூலம்** - இவற்றில் த்ரிகுண த்ரவ்யத்துக்கு ஸ்வரூபபேதம் குண த்ரயாச்ரயத்வம். ஸதத பரிணாமசீலமான இத்த்ரவ்யத்துக்கு ஸத்த்வ ரஜஸ் தமஸ்ஸுக்கள் அந்யோந்யம் ஸமமானபோது மஹாப்ரளயம். விஷமமானபோது ஸ்ருஷ்டி ஸ்திதிகள். குணவைஷம்யமுள்ள ப்ரதேசத்திலே மஹதாதி விகாரங்கள். இதில் விக்ருதமல்லாத ப்ரதேசத்தையும் விக்ருதமான ப்ரதேசத்தையுங்கூட ப்ரக்ருதி மஹதஹங்கார தந்மாத்ர

பூதேந்த்ரியங்களென்று இருபத்து நாலு தத்த்வங்களாகச் சாஸ்த்ரங்கள் வகுத்துச் சொல்லும். சில விவக்ஷாவிசேஷங்களாலே ஓரோரிடங்களில் அவாந்தர வகுப்புக்களும் அவற்றின் அபிமானி தேவதைகளும் அவ்வோ உபாஸநா திகாரிகளுக்கு அறியவேணும். ஆத்மாவுக்கு அவற்றிற்காட்டில் வ்யாவ்ருத்தியறிகை இங்கு நமக்கு ப்ரதானம்.

**விளக்கம் -** மூன்று அசேதனங்களில் ப்ரக்ருதியின் ஸ்வரூபம் (இயல்பான தன்மை) என்பது மூன்று குணங்களுடன் (தன்மைகளுடன்) உள்ளதே ஆகும். இந்தப் ப்ரக்ருதி என்பது எப்போதும் மாறியபடியே இருப்பதாகும். ப்ரக்ருதியில் உள்ள ஸத்வ, ரஜோ மற்றும் தாமஸ குணங்கள் சரிசமமாக உள்ளபோது, மஹாப்ரளயம் உண்டாகிறது. இவை வேறுபடும்போது ஸ்ருஷ்டி ஏற்படுகிறது. இந்தக் குணங்களில் ஏற்றத்தாழ்வுகள் உண்டாகும்போது, ப்ரக்ருதியானது மஹத் முதலானவைகளாக மாறுகிறது. மாறுபடாமல் உள்ள ப்ரக்ருதியின் பகுதி, மாறுபடும் ப்ரக்ருதியின் பகுதி என்பதை சாஸ்த்ரங்கள் இருபத்துநான்கு தத்துவங்களாகப் பிரித்துக் கூறுகின்றன. அவையாவன - ப்ரக்ருதி, மஹத், அஹங்காரம், ஐந்து தந்மாத்திரைகள், ஐந்து பூதங்கள், பதினொன்று இந்த்ரியங்கள் - ஆகும். இப்படியாகப் பிரிக்கப்பட்ட பிரிவுகளைப் பற்றியும், அந்தந்த பிரிவுக்கு அதிபதியான தேவதை பற்றியும் இவற்றை த்யானம் செய்யும் தகுதி பெற்றவர்கள் அறியவேண்டும். இவை அனைத்தும் ஆத்மாவைக் காட்டிலும் வேறானவை என்பதும், அந்த வேறுபாடு என்ன என்பதும் நாம் முக்கியமாக அறியவேண்டியதாகும்.

## இருபத்து நான்கு தத்வங்களும் ஆயுதங்கள் மற்றும் ஆபரணங்கள்

**மூலம் -** இவையெல்லாம் ஸர்வேச்வரனுக்கு அஸ்த்ர பூஷணாதி ரூபங்களாய் நிற்கும் நிலையை

புருடன் மணிவரம் ஆக பொன்றா மூல
  பிரகிருதி மறுவாக மான் தண்டாகத்
தெருள் மருள் வாள்மறைவாக ஆங்காரங்கள்
  சார்ங்கம் சங்காக மனம் திகிரி ஆக
இருடிகங்கள் ஈர் ஐந்தும் சரங்களாக

இருபூதமாலை வனமாலையாகக்
கருடன் உருவாம் மறையின் பொருளாம் கண்ணன்
கரிகிரிமேல் நின்று அனைத்தும் காக்கின்றானே

என்கிற கட்டளையிலே அறிகை உசிதம்.

**விளக்கம்** - இந்த இருபத்திநான்கு தத்வங்களும் ஸர்வேச்வரனுடைய ஆயுதங்களாகவும், ஆபரணங்களாகவும் உள்ளதைக் கீழே உள்ள ச்லோகம் மூலம் அறியலாம். (ச்லோகத்தின் பொருள்) - கருடனைச் சரீரமாகக் கொண்ட வேதத்தின் பொருளாக கண்ணன் உள்ளான். அவனுடைய திருமார்பில் உள்ள, இரத்தினங்களில் மிகவும் உயர்ந்ததான கௌஸ்துப மணியாக ஜீவன் உள்ளான். அவனது திருமார்பில் உள்ள ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவாக, நாசம் அடையாத ப்ரக்ருதி உள்ளது. அவனது கதையாக மஹத் உள்ளது. ஞானம் என்பது அவனது வாளாகவும், அஜ்ஞானம் என்பது அந்த வாளின் உறையாகவும் உள்ளன. அஹங்காரங்கள் சார்ங்கம் என்னும் வில்லாகவும், சங்காகவும் உள்ளன. மனம் என்பது சக்கரமாக உள்ளது. பத்து இந்த்ரியங்கள் வில்லின் பாணங்களாக உள்ளன. தந்மாத்திரைகள் ஐந்தும், பஞ்ச பூதங்களும் மாலையாக உள்ளன. இப்படியாக ஹஸ்திகிரி மீது நிற்கும் கண்ணன் அனைத்தையும் காக்கிறான்.

**மூலம்** - இருபத்துநாலு தத்வங்களுக்கும் அந்யோந்ய ஸ்வரூபபேதமும் அவ்வோ லக்ஷணங்களாலே ஸித்தம். இவற்றில் கார்யமான இருபத்திமூன்று தத்வங்களுக்கும் இவற்றால் ஆரப்தங்களானவற்றுக்கும் ஸ்திதியில் வரும் ஏற்றச் சுருக்கங்கள் புராணங்களிலே ப்ரஸித்தமானபடியே கண்டு கொள்வது. "ஸ்வஸத்தா பாஸகம் ஸத்த்வம் குணஸத்த்வாத் விலக்ஷணாம்", "தமஸ: பரமோ தாதா", "அப்ராக்ருதம் ஸுரைர்வந்த்யம்" இத்யாதிகளாலே தமஸ்ஸுக்கு மேலான தேசவிசேஷம் ஸித்திக்கையாலே, "அநந்தஸ்ய ந தஸ்யாந்த: ஸங்க்யானம் வா அபி வித்யதே | ததநந்தம் அஸங்க்யாத ப்ரமாணம் சாபி வை யத:" இத்யாதிகள் நித்யவிபூதியில் அவச்சிந்நமல்லாத ப்ரதேசத்தாலே மூலப்ரக்ருதிக்கு ஆனந்த்யம் சொல்லுகின்றன.

**விளக்கம்** - இந்த இருபத்துநான்கு தத்துவங்களின் ஸ்வரூபம் பற்றி அவைகளின் இலக்கணம் மூலமாக அறியலாம். இவற்றில் இருபத்துமூன்று தத்துவங்கள் ப்ரக்ருதியின்

மாறுதல்களால் வெளிப்படுகின்றன (இவை ப்ரக்ருதியின் கார்யங்கள்). மேலும் இவை ஒவ்வொன்றும் உண்டாக்கவல்ல மாறுபாடுகள் வெவ்வேறானவை, இவைகளின் விளைவுகளும் வெவ்வேறானவை என்பதை பல புராணங்கள் மூலம் அறியலாம். தமஸ்ஸுக்கு அப்பால் சுத்தஸத்வம் உள்ளதைக் கீழே உள்ள வரிகள் கூறுகின்றன: பௌஷ்கர ஸம்ஹிதை (25-42) - ஸ்வஸத்தா பாஸகம் ஸத்த்வம் குணஸத்த்வாத் விலக்ஷணாம் - சுத்தஸத்வம் என்பது தானாகவே வெளிப்படுவதாகும். இந்த சுத்தஸத்வம் என்பது ரஜோ, தமஸ் ஆகியவற்றுடன் உள்ள ஸத்வம் என்பதைக் காட்டிலும் வேறுபட்டது ; யுத்தகாண்டம் (114-15) – தமஸ: பரமோ தாதா - தமஸ்ஸுக்கும் அப்பால் உள்ளவன் பரமாத்மா; ஜிதந்தே ஸ்தோத்ரம் (2-21) - அப்ராக்ருதம் ஸூரைர்வந்த்யம் - ப்ரக்ருதியைக் காட்டிலும் வேறானதும், நித்யஸூரிகளால் போற்றப்படுவதும் ஆகிய நித்யவிபூதி – என்பது காண்க. ஆகவே ஸ்ரீவிஷ்ணுபுராணம் - அநந்தஸ்ய ந தஸ்யாந்த: ஸங்க்யானம் வா அபி வித்யதே தத் அநந்தம் அஸங்க்யாத ப்ரமாணம் ச அபி வை யத: - அந்தப் ப்ரக்ருதிக்கு அழிவில்லை, கால அளவு இல்லை, அளவிட இயலாத ஒன்றாகும் - என்று கூறும் வரியின் மூலம், நித்யவிபூதிக்கு உட்படாத ப்ரக்ருதியின் முடிவின்மை மட்டுமே கூறப்பட்டது என்று அறியவேண்டும்.

## மூன்று குணங்களின் செயல்பாடு பேதங்கள்

**மூலம்** - த்ரிகுணத்ரயத்துக்குப் ப்ரவ்ருத்தி பேதம் பத்தசேதநருடைய போகாபவர்கங்களுக்கும் ஈச்வரனுடைய லீலாரஸத்துக்குமாக ஸமமாகவும் விஷமமாகவும் பரிணாம ஸந்ததியையுடைத்தாய், தேஹேந்த்ரியாதி ரூபத்தாலே அவ்வோ வ்யாபாரங்களையும் பண்ணுகை. இது ரஜஸ் தமஸ்ஸுக்களையிட்டுப் பத்தர்க்குத் தத்த்வங்களிலுண்மையை மறைத்து விபரீத ஜ்ஞாநத்தை உண்டாக்குகிறது போகார்த்தமாக. இதுதானே அபவர்க்கார்த்தமாக ஸத்த்வ வ்ருத்தியாலே தத்த்வங்களை யதாவத் ப்ரகாசிப்பிக்கிறது. இவையெல்லாமீச்வரனுக்கு லீலாரஸாவஹமாயிருக்கும்.

**விளக்கம்** - ப்ரக்ருதியின் செயல்பாடு என்பது ப்ரளயத்தின்போது மூன்று குணங்களைச் சரிசமமாக வைத்தபடி தான் மாறுவதும், ஸ்ருஷ்டியின்போது அவற்றுள் பேதங்கள் ஏற்படுத்தி தான் மாறுவதும், இவற்றை ஸம்ஸாரத்தில் கட்டுப்பட்டுள்ள ஜீவன்

அனுபவிக்கும் வகையில் செய்வதும், அந்த ஜீவன்கள் ஸம்ஸாரத்திலிருந்து விடுபடவும், எம்பெருமானின் லீலைக்காக இவ்விதம் செய்வதும் ஆகும். இதற்கு ஏற்ற வகையில் பெயர் மற்றும் உருவம் எடுக்கிறது. அந்தந்த உடல் தொடர்பு காரணமாக இவை ரஜோ மற்றும் தாமஸங்களால் உண்மையான தத்வங்களை மறைத்து, தவறான ஞானம் உண்டாக்கிவிடுகிறது. இவ்விதம் ஸம்ஸாரத்தில் உள்ள ஜீவனுக்கு ஸத்த்வ குணம் மேலோங்கும்போது, உண்மையான ஞானம் ஏற்பட்டு, மோக்ஷத்தைப் பெற அவன் செய்யும் முயற்சியில் உதவுகிறது. இவை அனைத்தும் எம்பெருமானின் லீலையாகவே உள்ளன.

## சுத்தஸத்வத்தின் ஸ்வரூபம், ஸ்திதி, ப்ரவ்ருத்தி

**மூலம்** - சுத்தஸத்வத்துக்கு ஸ்வரூபபேதம் ரஜஸ் தமஸ்ஸுக்களோடு கலவாத ஸத்த்வகுணாச்ரயமாயிருக்கை. இதின் ஸ்திதிபேதம் நித்யமான மண்டப கோபுராதிகளிலும் ஈச்வரனுடையவும் நித்யருடையவும் விக்ரஹ விசேஷங்களிலும் நித்யமாயிருக்கும். நித்யருடையவும், முக்தருடையவும் ஈச்வரனுடையவும் அநித்யேச்சையாலே வந்த விக்ரஹாதிகளில் அநித்யமாயிருக்கும். இதின் ப்ரவ்ருத்திபேதம் இவர்களுடைய இச்சைக்கீடான பரிணாமாதிகளாலே சேஷிக்கு போகோபகரணமாயும் சேஷபூதனுக்குக் கைங்கர்யோபகரணமாயும் நிற்கை.

**விளக்கம்** - சுத்தஸத்வத்தின் ஸ்வரூபம் என்பது ரஜஸ் மற்றும் தமஸ் ஆகியவற்றுடன் கலவாத ஸத்வத்தின் இருப்பிடமாகத் திகழ்வதே ஆகும். இந்த சுத்தஸத்வமானது ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள மண்டபம் மற்றும் கோபுரங்களாக இருத்தல், ஈச்வரனின் விக்ரஹமாக இருத்தல், நித்யர்களின் சரீரமாக இருத்தல் என்னும் தன்மைகளில் நித்யமாக உள்ளது. ஆனால் ஈச்வரன், நித்யர், முக்தர் ஆகியவர்களின் தற்காலிக விருப்பத்தின் அடிப்படையில் உண்டாகும் விக்ரஹம் போன்றவற்றில் நித்யமாக இருப்பதில்லை.இதன் செயல்பாடுகள் என்பது ஈச்வரன், நித்யர், முக்தர் ஆகியவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப மாறுபாடுகள் அடைவதே ஆகும். இத்தகைய மாறுபாடுகள் மூலம் சுத்தஸத்வமானது எஜமானனாகிய ஈச்வரனுக்கு அனுபவிக்கக்கூடிய பொருளாகவும், அடிமையாகிய ஜீவனுக்கு அவன் கைங்கர்யம் செய்யப் பயன்படும் பொருளாகவும் உள்ளது.

## காலத்தின் ஸ்வரூப, ஸ்திதி, ப்ரவ்ருத்தி பேதங்கள்

**மூலம்** - காலத்துக்கு ஸ்வரூபபேதம் ஜடமாய் விபுவாயிருக்கை. இதன் ஸ்திதி காலாவச்சேதமில்லாமையாலே நித்யையாயிருக்கும். இதின் ப்ரவ்ருத்திபேதம் கலாகாஷ்டாதி விபாகத்தாலே ஸ்ருஷ்ட்யாதிகளுக்கு உபகரணமாயிருக்கிறபடியிலே கண்டு கொள்வது.

**விளக்கம்** - காலத்தின் ஸ்வரூபம் என்பது தானே வெளிப்படாமல், எங்கும் பரவியதாய் இருப்பதாகும். காலத்தால் அளவுபடாத காரணத்தினால், என்றும் இருக்கும் தன்மையானது இதன் ஸ்திதி ஆகும். இதன் செயல்பாடு என்பது ஸ்ருஷ்டிக்கு உதவியாக இருத்தல், கலா (ஒரு முஹூர்த்தத்தின் 1/30 பகுதி), காஷ்டை (கலா என்பதின் 1/30 பகுதி) போன்றவையாக இருத்தல் முதலானவையாகும்.

## வஸ்துக்களின் நித்யம் மற்றும் அநித்யம் என்னும் வேறுபாடு

**மூலம்** - இத்த்ரவ்யங்களெல்லாம் ஸ்வரூபேண நித்யங்களாயிருக்கும் நாமாந்தரபஜநார்ஹாவஸ்தா விசேஷ விசிஷ்டதையையிட்டுச் சிலவற்றை அநித்யங்க ளென்கிறது. அழிந்ததோடு ஸஜாதீயங்களான அவஸ்தாந்தரங்கள் மேலும் முழுக்க வருகையாலே ப்ரவாஹ நித்யங்களென்று சொல்லுகிறது.

**விளக்கம்** - இந்த அனைத்து வஸ்துக்களும் அதன் ஸ்வரூபத்தினால் என்றும் இருக்கக்கூடியவையே ஆகும். இவை தங்களது நிலையை அவ்வப்போது மாற்றிக் கொள்கின்றன என்பதால், இவை தாற்காலிகமானவை என்றும் அழியக்கூடியவை என்றும் கூறப்படுகின்றன (நிலையை மாற்றுதல் என்றால் - பனிக்கட்டி நீராகுதல், நீர் ஆவியாதல் போன்றவை). இதனால் இவை புதுப்பெயர்களை எடுத்துக் கொள்கின்றன. புதிய நிலைகள் என்பவை, பழைய நிலைகள் அழிந்தவுடன் இடைவெளி இன்றித் தொடர்வதால், இவை நித்யம் என்றே கொள்ளப்படுகின்றன.


email : sridharan_book@yahoo.com

## வஸ்துக்களுடைய ஸ்வரூபம், ஸ்திதி, ப்ரவ்ருதி ஈச்வரனுடைய வசப்பட்டவை

**மூலம் -** இப்பதார்த்தங்கள் எல்லாவற்றினுடையவும் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதங்கள் ஈச்வரனுக்கு ஸ்வாதீநங்களாயிருக்கையாவது ஈச்வர ஸத்தையையும் ஈச்வரேச்சையையுமொழிய இவற்றுக்கு ஸத்தாதிகள் கூடாதொழிகை.

**விளக்கம் -** இந்த அனைத்து வஸ்துக்களின் ஸ்வரூபம் (தன்மை), ஸ்திதி (இருப்பு) மற்றும் ப்ரவ்ருத்தி (செயல்பாடு) ஆகிய மூன்றும் ஈச்வரனை நம்பியே உள்ளன. இதன் காரணம் - அவனுடைய இருப்பு இல்லாமல் இவை இல்லை, அவனுடைய விருப்பம் இல்லாமல் இவை இல்லை என்பதால் ஆகும்.

## அனைத்தும் ஈச்வரனுக்கு ஏற்புடையதாக இருத்தலே இயல்பு

**மூலம் -** ஆகையால் ஸமஸ்த வஸ்துக்களுக்கும் ஸ்வபாவ ஸித்தாநுகூல்யம் ஈச்வரேச்சாயத்தம். இத்தாலே ஈச்வரனுக்கும், நித்யருக்கும், முக்தருக்கும் ஸர்வமும் அநுகூலமாயிருக்கும். பத்தருக்குக் கர்மாநுரூபமாகப் புருஷபேதத்தாலும் காலபேதத்தாலும் இவற்றில் ப்ராதிகூல்யங்களும் அல்பாநுகூல்யங்களும் நடவாநிற்கும். இப்பத்தர் தங்களுக்கும் ஸ்வாத்மஸ்வரூபம் ஸர்வதா அனுகூலமாக ஈச்வரேச்சாஸித்தம். இப்படி அநுகூலமான ஆத்மஸ்வரூபத்தோடே ஏகத்வ ப்ரமத்தாலும் கர்மவசத்தாலுமிறேஹேயமான சரீரம் ஞாநாஹீநருக்கு அனுகூலமாய்த் தோற்றுகிறது. இவற்றுக்குக் கர்மாபாதிகமான ப்ரதிகூலரூபத்தாலே முமுக்ஷுவைப் பற்ற த்யாஜ்யத்வம். ஸ்வாபாவிகமான அநுகூல ரூபத்தாலே முக்தனைப் பற்ற அவை தமக்கே உபாதேயத்வம். அஹங்கார மமகார யுக்தனாய்க் கொண்டு தனக்கென்று ஸ்வீகரிக்குமவையெல்லாம் ப்ரதிகூலங்களாம். ஸ்வரூபஞானம் பிறந்து ஸ்வாமிசேஷமென்று காணப்புக்கால் எல்லாம் அநுகூலமாம். இவ்வர்த்தம் பரிபூர்ணப்ரஹ்மானுபவம் சொல்லுமிடத்திலே பரக்கச் சொல்லக்கடவோம்.

**விளக்கம் -** எனவே ஈச்வரனின் ஸங்கல்பம் காரணமாக, அனைத்து வஸ்துக்களும் தங்கள் இயல்பாகவே ஏற்கக்கூடியவைகள் என்று விளங்குகிறது. இதன் மூலம் அனைத்தும்

ஈச்வரனுக்கு, நித்யஸூரிகளுக்கு, முக்தர்களுக்கு ஏற்புடையதாக உள்ளன என்று அறியலாம். ஆனால் ஸம்ஸாரத்தில் பிணைக்கப்பட்டவர்களுக்கு, அவரவர்களின் கர்மங்களுக்கு ஏற்ப ஒரு சில வஸ்துக்கள், ஒரு சில நேரங்களில் ஏற்புடையவையாகவும், மற்ற சில நேரங்களில் ஏற்க இயலாதவையாகவும் உள்ளன. ஆனால் ஸம்ஸாரத்தில் உள்ளவர்களுக்கும், ஈச்வரனின் விருப்பம் காரணமாக, அவரவர்களின் ஆத்மஸ்வரூபம் ஏற்புடையதாகவே உள்ளது. இப்படியாக ஆத்மா மட்டுமே ஏற்புடையதாக எண்ணப்படும்போது, ஒரு சிலருக்குத் தங்கள் கர்மம் காரணமாக, தங்களின் உடலே ஆத்மா என்ற எண்ணம் மேலிட, அதனால் உடலும் ஏற்கக்கூடியது என்ற சிந்தனை உண்டாகி, உடலின் மீது அபிமானம் வந்துவிடுகிறது. ப்ரக்ருதி மற்றும் அதன் மாறுபாடுகள் அனைத்தும் ஒருவனைக் கர்மத்தில் ஈடுபடுத்திவிடும் இயல்பு கொண்டதால், மோக்ஷத்தில் விருப்பம் கொண்ட ஒருவன் அவற்றின் மீது உள்ள பற்றுதல்களை விலக்கவேண்டும். ஆனால் முக்தன் ஒருவனுக்கு இவை ஏற்கக்கூடியதாக (எந்தப் பாதிப்பும் உண்டாக்காமல் உள்ளதாக) இருப்பதால், இவற்றை விலக்கவேண்டிய அவசியம் இல்லை. இவை அனைத்தையும் "நான், எனது" என்னும் எண்ணத்துடன் கைக்கொள்வது தவிர்க்கப்பட வேண்டியதாகும். இவை அனைத்தும் ஒருவனுக்கு எப்போது ஏற்கும்படியாக உள்ளது என்றால், "தன்னுடைய ஸ்வரூப ஞானத்தை உணர்தல், இவை அனைத்தும் எம்பெருமானுக்காகவே உள்ளன என்ற எண்ணம் இருத்தல்",என்ற நிலையில் ஆகும். இவை அனைத்தையும் ப்ரஹ்மத்தின் பூர்ணம் மற்றும் ஆனந்தம் பற்றிக் கூறும்போது விரிவாக விளக்குவோம்.

## தத்வம் – 3 – ஈச்வரன்

### ஈச்வரனுடைய ஸ்வரூபத்தை நிரூபிக்கக்கூடிய சிறப்புகள்

**மூலம் -** இப்படி ஸ்வாதீந ஸர்வஸத்தாதிகளையுடையவனாயிருக்கிற ஈச்வரனுடைய ஸ்வரூபம் ஸத்யத்வாதிகளாகிற ஸ்வரூப நிரூபக தர்மங்களாலே ஸத்யமாய், ஜ்ஞானமாய், அநந்தமாய், ஆனந்தமாய், அமலமாயிருக்கும். இவ்வர்த்தத்தை "நந்தா விளக்கேயளத்தற்கரியாய்" என்றும், "உணர்முழுநலமெ"ன்றும், "சூழ்ந்ததனிற் பெரிய சுடர்ஞானவின்பம்" என்றும், "அமலன்" என்றும் இத்யாதிகளாலே ஆழ்வார்கள் அனுஸந்தித்தார்கள்.

**விளக்கம்** - இப்படியாக அனைத்தும் தங்களது இருப்பிற்குச் சார்ந்துள்ள ஈச்வரனின் ஸ்வரூபமானது ஸத்யம், ஞானம், அனந்தம் (எல்லையற்றது), ஆனந்தம், தூய்மை என்பதாகவே உள்ளது. இத்தன்மைகளை ஆழ்வார்கள் கீழே உள்ளபடி அனுபவித்தனர்: பெரியதிருமொழி (3-8-1) - நந்தா விளக்கே அளத்தற்கு அரியாய் - எப்போதும் அழியாமலும், அளவிடக் கடினமாகவும் உள்ளவனே; திருவாய்மொழி (1-1-2) - உணர்முழு நலம் - ஆனந்தமும் ஞானமும் முழுமையாக உள்ளவன்; திருவாய்மொழி (10-10-1) - சூழ்ந்ததனிற் பெரிய சுடர்ஞானவின்பம் - உயர்ந்தவற்றிலும் உயர்ந்தவன், ஞானமயமானவன், ஆனந்தமயமானவன்; அமலனாதிபிரான் (1) - அமலன் - தூய்மையானவன், தோஷங்கள் அற்றவன் – என்பது காண்க.

**மூலம்** - மற்றுள்ள குணங்களும் திவ்ய மங்கள விக்ரஹாதிகளுமெல்லாம் ஈச்வரனுக்கு நிரூபித ஸ்வரூப விசேஷணங்களாயிருக்கும். இக்குணங்களில் ஞான பல ஐச்வர்ய வீர்யம் சக்தி தேஜஸ்ஸுக்களென்று ஆறு குணங்கள் பரத்வோபயுக்தங்களாயிருக்கும். ஸௌசீல்ய வாத்ஸல்யாதிகள் ஸௌலப்யோபயுக்தங்களாயிருக்கும். இக்குணங்களெல்லாம் ஸர்வ காலத்திலும் ஸ்வரூபாச்ரிதங்களாயிருக்கும்.

**விளக்கம்** - அவனுடைய மற்ற குணங்கள், அவனுடைய திவ்யமங்கள விக்ரஹம் முதலானவை அவனது ஸ்வரூபத்தை நிரூபிப்பவையாக உள்ளன. இவற்றில் ஞானம், பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி மற்றும் தேஜஸ் ஆகிய ஆறு குணங்கள், இவனே பரத்வம் என்பதை பறைசாற்றும்படி உள்ளன. ஸௌசீல்யம், வாத்ஸல்யம் முதலானவை இவன் அனைவராலும் எளிதில் அணுகக்கூடியவன் என்பதை விளக்கும். இந்தக் குணங்கள் அனைத்தும் அவனது ஸ்வரூபத்தின் தன்மைகளாக எப்போதும், எந்தக் காலத்திலும் உள்ளன.

## பரம், வ்யூஹம் முதலான ஐந்து ரூபங்கள்

**மூலம்** - பர வ்யூஹாதி விபவங்களில் குணநியமம் சொல்லுகிறதெல்லாம் அவ்வோ ரூபங்களை அனுஸந்திப்பார்க்கு ஸர்வேச்வரன் ஆவிஷ்கரிக்கும் குணவிசேஷங்கள்


email : sridharan_book@yahoo.com

சொல்லுகைக்காக வத்தனை. ஔபனிஷத் வித்யாவிசேஷங்கள்தோறும் அனுஸந்தேய குண விசேஷங்கள் நியதங்களானாற்போலே பகவச்சாஸ்த்ரோக்தமான ரூப விசேஷானுஸந்தானத்துக்கும் குணவிசேஷங்கள் நியதங்கள். அவ்விடத்தில் பரரூபத்தில் ஞானாதிகுணங்கள் ஆறும் வேத்யங்கள்.

**விளக்கம்** - இந்தக் குணங்களில் சில பர ரூபத்திலும், சில வ்யூஹ ரூபத்திலும், சில விபவ ரூபத்திலும் மட்டுமே வெளிப்படும் என்று கூறுவது ஏன் என்றால், எந்த ரூபத்தை உபாஸித்தாலும், அவர்களுக்கு அவன் தனது குணங்களைக் காட்டித் தருகிறான் என்று விளக்கவே ஆகும். உபநிஷத்தில் குறிப்பிட்ட வித்யை மூலம் ப்ரஹ்ம உபாஸனை செய்வது கூறப்படுவது போன்று, பாஞ்சராத்ர ஆகமத்தில், குறிப்பிட்ட பகவத் ரூபங்களில் குறிப்பிட்ட குணங்களை உபாஸிப்பது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அனைத்து ரூபங்களிலும் மேற்கூறிய ஆறு குணங்களும் வெளிப்படும்.

### பர மற்றும் வ்யூஹ ரூபம் குறித்த விளக்கம்

**மூலம்** - வ்யூஹங்கள் நாலென்றும் மூன்றென்றும் சாஸ்திரங்கள் சொல்லும். நாலு வ்யூஹமுண்டாயிருக்க வ்யூஹ வாஸுதேவ ரூபத்துக்குப் பரரூபத்திற்காட்டில் அநுஸந்தேய குணபேதமில்லாமையாலே த்ரிவ்யூஹமென்கிறது. இப்பக்ஷத்தை, "குணைஷ்ஷட்பிஸ்த்வேதை: ப்ரதமதர மூர்த்தஸ்தவ பபௌ | ததாஸ்திஸ்ரஸ் தேஷாம் த்ரியுக யுகளைர்ஹி த்ரிபிரபு:" என்கிற ச்லோகத்தில் ஸங்க்ரஹித்தார்கள். இப்பரவ்யூஹங்களில் குண க்ரியா விபவங்கள்,

> ஷாட்குண்யாத் வாஸுதேவ: பர இதி பகவாந் முக்தபோக்யோ பலாட்யாத்
> போதாத் ஸங்கர்ஷண: த்வம் ஹரஸி விதநுஷே சாஸ்த்ரம் ஐச்வர்ய வீர்யாத்
> ப்ரத்யும்ந: ஸர்க்கதர்மௌ நயஸிச பகவந் சக்தி தேஜோ நிருத்த:
> பிப்ராண: பாஸி தத்வம் கமயஸி ச ததா வ்யூஹ்ய ரங்காதிராஜ

என்கிற ச்லோகத்திலே ஸங்க்ரஹிக்கப்பட்டன. ஜாக்ரதாதி பத பேதங்களிலுள்ள விசேஷங்களெல்லாம், "ஜாக்ரத் ஸ்வப்நாத்யலஸ துரீய ப்ராய த்யாத்ருக்ரமவத் உபாஸ்ய:

| ஸ்வாமிந் தத் தத் குண பரிபர்ஹ: சாதுர்வ்யூஹ்யம் வஹஸி சதுர்த்தா" என்று ஸங்க்ருஹீதங்களாயிற்று. கேசவாதிகளான பன்னிரண்டு ரூபங்களும் வ்யூஹாந்தரங்கள்.

**விளக்கம்** - சாஸ்த்ரங்கள் வ்யூஹங்களானவை நான்கு என்றும், மூன்று என்றும் கூறுகின்றன. நான்காகக் கூறப்படும் இடங்களில் வாஸுதேவன் அவற்றுள் ஒருவன் என்று கூறுவதுண்டு. இப்படிக் கொள்ளும்போது, வ்யூஹ வாஸுதேவனுக்கும், பரவாஸுதேவனுக்கும் த்யானிக்கத்தகுந்த குணங்களில் பேதம் இல்லை என்பதால், இரண்டும் ஒன்றே எனக் கொண்டு, வ்யூஹம் என்பது மூன்று எனலாம். வ்யூஹங்கள் மூன்று எனக் கூறுபவர்கள் கீழே உள்ள ஸ்ரீவரதராஜ ஸ்தவ (16) - குணைஷ்ஷட்பிஸ்த்வேதை: ப்ரதமதர மூர்த்தஸ்தவ பபௌ | ததாஸ்திஸ்ரஸ் தேஷாம் த்ரியுக யுகளைர்ஹி த்ரிபிரபு: - வரதனே! உன்னுடைய பரவாஸுதேவ ரூபம் என்பது ஆறு குணங்களால் விளங்கியது, அதன் பின்னர் உண்டான மூன்று வ்யூஹங்கள் (ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன்) இந்த ஆறு குணங்களிலிருந்து இரண்டிரண்டு குணங்களை எடுத்துக் கொண்டன – என்னும் ச்லோகத்தின் மூலம் இவ்விதம் கூறுகின்றனர். இத்தகைய பர மற்றும் வ்யூஹங்களின் குணங்களைக் கீழே உள்ள ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் (2-39) - ஷாட்குண்யாத் வாஸுதேவ: பர இதி பகவாந் முக்தபோக்யோ பலாட்யாத் | போதாத் ஸங்கர்ஷண: த்வம் ஹரஸி விதநுஷே சாஸ்த்ரம் ஐச்வர்ய வீர்யாத் | ப்ரத்யும்ந: ஸர்க்கதர்மௌ நயஸிச பகவந் சக்தி தேஜோ நிருத்த: | பிப்ராண: பாஸி தத்வம் கமயஸி ச ததா வ்யூஹ்ய ரங்காதிராஜ – ஸ்ரீரங்கநாதனே! ஆறு குணங்களுடன் கூடிய பரவாஸுதேவன் என நீயே உள்ளாய். இப்படியாக உள்ள நீ முக்தர்களால் அனுபவிக்கப்படுகிறாய். ஸங்கர்ஷணனாக பலம், ஞானம் கொண்டு இந்த உலகை ஸம்ஹாரம் செய்கிறாய். ப்ரத்யும்நனாக ஐச்வர்யம் மற்றும் வீர்யம் கொண்டு உலகைப் படைத்து, தர்மத்தை நிலைநிறுத்துகிறாய். அநிருத்தனாக சக்தி மற்றும் தேஜஸ் கொண்டு உலகைக் காப்பாற்றி, தத்துவங்களை விளக்கியபடி உள்ளாய் – என்பதில் காணலாம். விழிப்பு நிலை முதலான பல்வேறு நிலைகளின் வேறுபாடுகள் கீழே உள்ள ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் (2-40) - ஜாக்ரத் ஸ்வப்நாத்யலஸ துரீய ப்ராய த்யாத்ருக்ரமவத் உபாஸ்ய: | ஸ்வாமிந் தத் தத் குண பரிபர்ஹ: சாதுர்வ்யூஹ்யம் வஹஸி சதுர்த்தா - ஸ்ரீரங்கநாதா! உன்னைத் த்யானிப்பவர்களில் ஒரு சிலர் விழிப்பு நிலையில் உள்ளனர் (இவர்களின் புலன்கள் இயங்கியபடி உள்ளன), ஒரு சிலர் கனவு நிலையில் உள்ளனர் (இவர்களின் புலன்கள் உறங்கியபோதிலும் மனம் விழித்துக் கொண்டுள்ளது), ஒரு சிலர்

கனவுகள் அற்ற ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளனர் (இவர்களின் புலன்கள், மனம் போன்ற எதுவும் இயங்குவதில்லை, மூச்சு மட்டுமே சீராக இருக்கும்), மேலும் சிலர் மயக்க நிலையில் உள்ளனர் (இவர்களின் மூச்சும் சீராக இருப்பதில்லை), இப்படியாக நீயும் உன்னை நான்கு ரூபங்களாகப் பிரித்துக் கொண்டு, அந்தந்த ரூபத்திற்கு ஏற்ற குணங்கள் மற்றும் ஆயுதங்களைக் கொண்டுள்ளாய் – என்னும் ச்லோகத்தில் சுருக்கமாகக் கூறப்பட்டது. கேசவன் முதலான பன்னிரண்டும் வ்யூஹாத்திலிருந்து வெளிப்படும் மற்ற ரூபங்கள் ஆகும்.

## விபவ ரூபம் குறித்த விளக்கம்

**மூலம்** - விபவங்களாவன பத்மநாபாதிகளான முப்பத்துச் சின்ன ரூபங்கள். இவற்றில் மத்ஸ்ய கூர்மாதிகளான அவதாரங்கள் ஒரு ப்ரயோஜனவசத்தாலே விசேஷித்துச் சொல்லப்பட்டன. இவ்விபவங்களில் ஈச்வரன் அவ்வோ கார்யவிசேஷங்களுக்கு ஈடாகத்தான் வேண்டின குணங்களை வேண்டினபோது மறைத்தும், வேண்டினபோது ப்ரகாசிப்பித்தும் நடத்தும். இவற்றில் அவாந்தரபேதங்கள் க்ருஷ்ணரூபாண்யஸங்க்யாநி இத்யாதிகளிற்படியே அநந்தங்கள். இப்படியே விபவாந்தரங்களும் கண்டு கொள்வது. சில ஜீவர்களை விக்ரஹ விசேஷத்தாலும் சக்தி விசேஷத்தாலும் அதிஷ்டித்து அதிசயித்த கார்யங்களை நடக்கிறதுவும் விபவபேதம்.

**விளக்கம்** - விபவங்கள் என்பவை பத்மநாபன் முதலான முப்பது ரூபங்கள் ஆகும். இந்த முப்பதில் மத்ஸ்யம், கூர்மம் போன்றவை ஒரு குறிப்பிட்ட செயலுக்காக வெளிப்பட்டதாகும். இத்தகைய விபவ அவதாரங்களில், அந்த அவதாரத்திற்கு ஏற்ப, தான் அந்த அவதாரம் எடுத்த நோக்கத்திற்கு ஏற்ப, ஈச்வரன் தனது ஒரு சில குணங்களை மட்டுமே வெளிப்படுத்தியும், சில குணங்களை மறைத்தபடியும் உள்ளான். இவைகளில் உள்ள உட்பிரிவுகளுக்கு கணக்கில்லை. பாஞ்சராத்ர ஆகமம், “க்ருஷ்ண ரூபாண்யஸங்க்யாநி - கண்ணனின் ரூபங்கள் எல்லையற்றவை”, என முழங்கியது. விபவ அவதாரங்களில் உள்ள பலவற்றையும் சாஸ்த்ரங்கள் மூலம் உணரலாம். ஒரு சில ஜீவன்களுக்குள் ஈச்வரன் தன்னுடைய ரூபத்துடனோ அல்லது சக்தியை மட்டுமோ புகுத்தி எண்ணற்ற அதிசயங்களைச் செய்கிறான். இவையும் விபவங்களின் பிரிவே ஆகும்.

## அர்ச்சாவதாரம் குறித்த விளக்கம்

**மூலம்** - பர வ்யூஹாதி ரூபங்கள் தாமே ஆச்ரிதர்க்காக அவர்கள் அபேக்ஷித்தபடியிலே “பிம்பாக்ருத்யாத்மநா பிம்பே ஸமாகத்யாவதிஷ்டதே” என்கிறபடியே நிற்கிற நிலை அர்ச்சாவதாரம்.

**விளக்கம்** - பர, வ்யூஹ மற்றும் விபவ ரூபங்கள், தன்னை அண்டிய அடியார்களுக்காக, ஸாத்வத ஸம்ஹிதை கூறுவது போன்று, “பிம்பாக்ருத்யாத்மநா பிம்பே ஸமாகத்யாவதிஷ்டதே - பிம்பத்தில் எழுந்தருளி பிம்பம் மற்றும் திருமேனி எனப் பிரிக்க இயலாதபடி”, விக்ரஹமாக உள்ளன. இவை அர்ச்சாவதாரமாகும்.

## அந்தர்யாமி ரூபம் குறித்த விளக்கம்

**மூலம்** - ஸர்வருடையவும் ஹ்ருதயங்களிலே ஸூக்ஷ்மமாயிருப்பதொரு ரூபவிசேஷத்தைக் கொண்டு நிற்கிற நிலை அந்தர்யாம்யவதாரம். இது ஸர்வாந்தர்யாமியான திவ்யாத்மஸ்வரூபத்தை அனுஸந்திக்க இழிவார்க்குத் துறையாக, “அஷ்டாங்க யோக ஸித்தாநாம் ஹ்ருத்யாக நிரதாத்மநாம் | யோகிநாம் அதிகாரஸ் ஸ்யாத் ஏகஸ்மிந் ஹ்ருதயேசயே”, இத்யாதிகளிலே சொல்லுகையாலே அந்தர்யாமிரூபமென்று சொல்லப்பட்டது.

**விளக்கம்** - ஜீவன்களின் இதயத்திலே ஸூக்ஷ்ம ரூபத்தில் ஈச்வரன் உள்ளான். இது அந்தர்யாமி ரூபமாகும். இந்த நிலையானது அந்தர்யாமியாக, ஸர்வேச்வரனின் திவ்ய மங்கள ரூபத்தைத் த்யானிக்க முயல்பவர்களுக்கு உரியதாகும். இதனை ஸாத்வத ஸம்ஹிதை, “அஷ்டாங்க யோக ஸித்தாநாம் ஹ்ருத்யாக நிரதாத்மநாம் யோகிநாமதிகாரஸ்ஸ்யாத் ஏகஸ்மிந் ஹ்ருதயேசயே - அஷ்டாங்க யோகத்தை அடைந்து, தங்கள் இதயத்தில் அந்தர்யாமியாக உள்ள ஸர்வேச்வரனைத் த்யானிக்க முயலும் யோகிகள் அந்தர்யாமியாக உள்ள அந்த ரூபத்தை உபாஸிக்கும் தகுதி பெற்றவர்கள்”, என்றது. இப்படியாக அந்தர்யாமி ரூபம் கூறப்பட்டது.

**மூலம் -** இப்படி அவதரிக்கிற ரூபங்களில் வகைகளெல்லாம் சுத்தஸத்வ த்ரவ்யமயங்களாய் கர்மதத்பலங்களோடு துவக்கற வருகையாலே சுத்தஸ்ருஷ்டியென்று பேர்பெற்றிருக்கும். இவ்வதாரங்களெல்லாம் ஸத்யங்களென்றும், இவற்றில் ஈச்வரனுக்கு ஞானாதி ஸங்கோசமில்லையென்றும், இவ்விக்ரஹங்கள் சுத்தஸத்த்வமயங்களென்றும், இவற்றிற்கு ஈச்வரேச்சாமாத்ரமே காரணமென்றும், தர்மரக்ஷணம் பண்ண வேண்டும் காலமே காலமென்றும், ஸாதுபரித்ராணாதிகளே ப்ரயோஜனங்களென்றும், இவ்வர்த்தம் தெளிந்து அனுஸந்திப்பார்க்கு ஏகஜன்மத்திலே ஸ்வாதிகாரானுகுண ஸமீஹிதோபாய பூர்த்தியாலே ஜன்மாந்தரம் அனுபவியாதே முக்தராகலாமென்றும், "பஹூநி மே வ்யதீதாநி" என்று தொடங்கி ஐந்து ச்லோகத்தாலே கீதாசார்யன் அருளிச் செய்தான். இது ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனுக்கு சரண்யகுணாவிசேஷ ஞானமுகத்தாலே உபாயானுஷ்டானக்ஷணத்திலே மஹாவிச்வாஸாதிகளை ஸ்திரீகரித்து உபகாரகமாம்.

**விளக்கம்** - இவ்விதமாக எம்பெருமான் அவதாரம் செய்யும் ரூபங்கள் அனைத்தும் சுத்தஸத்வங்கள் ஆகும். இவை கர்மத்துடனோ அல்லது கர்ம பலன்களுடனோ ஸம்பந்தம் பெற்றவை அல்ல. எனவே இவை சுத்த ஸ்ருஷ்டி எனப்படும். இந்த அவதாரங்கள் அனைத்தும் உண்மையானவை, இவற்றில் ஈச்வரனுக்கே உரித்தான ஞானம் மற்றும் உள்ள குணங்களுக்குக் குறைவில்லை, இந்த அவதாரங்கள் அனைத்தும் சுத்தஸத்வ விக்ரஹங்கள், இந்த அவதாரங்களுக்குக் காரணம் ஈச்வரனின் விருப்பம் மட்டுமே, இவை எப்போது வெளிப்படும் என்றால் தர்மத்தை நிலை நிறுத்த வேண்டிய காலங்களில் மட்டுமே, இவற்றின் நோக்கம் ஸாதுக்களைக் காப்பதே; இந்த அவதாரங்களைக் குறித்து இப்படியாக உள்ள உண்மைகளை ஒரு சிலர் புரிந்து கொள்ளலாம். அவர்கள் இந்தப் பிறப்பிலேயே மோக்ஷம் பெற்று விடுகின்றனர், அவர்களுக்கு மேலும் பிறவிகள் இல்லை, இவர்கள் தங்கள் அதிகாரம், தகுதிகளுக்கு ஏற்ப அனைத்தையும் பெறுகின்றனர். இவை அனைத்தையும் கண்ணன் கீதையில் - பஹூநி மே வ்யதீதாநி (4-5) - என்ற ச்லோகம் தொடங்கி அருளிச் செய்தான். விபவ அவதாரங்கள் குறித்த த்யானம் மூலமாகக் கிட்டுவது என்ன? மோக்ஷத்தில் விருப்பம் கொள்ளும் ஒருவனுக்கு, தன்னை மோக்ஷத்திற்கு இட்டுச் செல்லும் உபாயம் ப்ரபத்தி மட்டுமே என்று அறியும் ஒருவனுக்கு - இத்தகைய விபவ அவதார த்யானம் என்பது எந்த ஒரு பரம்பொருளை சரணம் என்று புகுந்து விடுகிறானோ,

அந்தப் பரம்பொருளின் குணங்கள் குறித்த ஞானத்தை உண்டாக்கிவிடுகிறது. இதன் மூலம் அவனுக்கு மஹாவிச்வாசம் உண்டாகிவிடுகிறது.

## அர்ச்சாவதாரமும் மோக்ஷம் அளிக்கவல்லது

**மூலம்** - இப்படியே அர்ச்சாவதாரமும் மிறுக்கிற மோக்ஷத்தைத் தருமென்னுமிடத்தை, "ஸுரூபாம் ப்ரதிமாம் விஷ்ணோ: ப்ரஸந்ந வதநேக்ஷணாம் | க்ருத்வா ஆத்மந: ப்ரீதிகரீர் ஸுவர்ண ரஜதாதிபி:", "தாமர்சயேத்தாம் ப்ரணமேத்தாம் யஜேத்தாம் விசிந்தயேத் | விசத்யபாஸ்ததோஷஸ்து தாமேவ ப்ரஹ்மரூபிணீம்" என்று ஸ்ரீசௌநகபகவான் அருளிச் செய்தான். ஆழ்வார்களுக்கும் இவ்வவதார ரஹஸ்யத்தையும், அர்ச்சாவதார வைலக்ஷண்யத்தையும் ப்ரசுரமாக அனுஸந்தித்து, இதற்குப் பேரணியாக பரத்வத்தைக் கண்டு போந்தார்கள்.

**விளக்கம்** - இது போன்றே அர்ச்சாவதாரமும் எந்தவிதமான சிரமமும் இன்றி மோக்ஷம் அளிக்கவல்லதே ஆகும். இதனைச் சௌநக பகவான் ஸ்ரீவிஷ்ணுதர்மத்தில் (103-16, 29, 30) - ஸுரூபாம் ப்ரதிமாம் விஷ்ணோ: ப்ரஸந்ந வதநேக்ஷணாம் | க்ருத்வா ஆத்மந: ப்ரீதிகரீர் ஸுவர்ண ரஜதாதிபி: || தாமர்சயேத்தாம் ப்ரணமேத்தாம் யஜேத்தாம் விசிந்தயேத் | விசத்யபாஸ்ததோஷஸ்து தாமேவ ப்ரஹ்மரூபிணீம் - தங்கம், வெள்ளி முதலானவற்றைக் கொண்டு, அழகான உருவம் கொண்டதாக, தெளிவான திருமுகம் மற்றும் கண்கள் கொண்டதாக, காண்பவர்களுக்கு இன்பத்தை அளிக்கவல்லதாக உள்ள விஷ்ணு பிம்பத்தை வடித்து, அதனை அர்ச்சனை செய்து வணங்கவேண்டும், இபடியாக த்யானிப்பதன் மூலம், தன்னுடைய தோஷங்கள் அனைத்தும் கழியப்பெற்று, ப்ரஹ்ம ரூபமான அந்த விக்ரஹத்தையே அடைந்துவிடுகிறான் – என்றார். இப்படியாக உள்ள அர்ச்சாவதார ரஹஸ்யத்திலும், இதில் உள்ள மேன்மைகளையும் உணர்ந்த ஆழ்வார்கள், அர்ச்சாவதாரத்திலேயே மூழ்கினர். இவற்றின் மூலாதாரமாக பரம்பொருளையே கண்டனர்.

## ஈச்வரனின் செயல்கள்

**மூலம் -** இப்படியிருக்கிற ஈச்வரன் தன் ஆனந்தத்துக்குப் பரீவாஹமாகப் பண்ணும் வ்யாபாரங்கள் ஸகல ஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார மோக்ஷ ப்ரதத்வாதிகள்.

**விளக்கம் -** மோக்ஷத்தை அளிக்கவல்ல ஈச்வரனின் செயல்பாடுகள் என்பது அனைத்து உலகங்களையும் படைத்து, காத்து, ஸம்ஹாரம் செய்வது ஆகும். இதனை அவன் தன்னுடைய ஆனந்தம் காரணமாகவே செய்கிறான்.

## ஈச்வரன் பெரியபிராட்டியைப் பிரியாமல் உள்ளான்

இவ்வீச்வரன் “நித்யைவைஷா ஜகன்மாதா விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ” இத்யாதிகளிற்படியே ஸர்வாவஸ்தையிலும் ஸபத்நீகனாய்க் கொண்டேயிருக்கு மென்னுமிடத்தை “தத்த்வேந ய:”, “மாதா பிதா” என்கிற ச்லோகங்களிலே உபகார விசேஷத்தாலே ஸாதரமாக விசேஷித்துச் சொல்லப்பட்ட பராசர பராங்குச ப்ரபந்தங்களிலே தெளிந்து கொள்வது.

**விளக்கம்** – ஈச்வரன் எப்போதும் தன்னுடைய பத்நியாகிய பெரியபிராட்டியுடன் கூடியவனாகவே உள்ளான் என்பதை விஷ்ணுபுராணம் (1-22-53) - நித்யைவைஷா ஜகன்மாதா விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ – உலகின் தாயான மஹாலக்ஷ்மி எப்போதும் விஷ்ணுவைப் பிரியாமல் உள்ளாள் – போன்ற வரிகள் மூலமாக அறியலாம். இந்தக் கருத்தை பராசரர் மற்றும் பராங்குசர் (நம்மாழ்வார்) ஆகியோரின் அருளிச்செயல்கள் மூலமாக அறியலாம். இதனை ஆளவந்தாரின் ஸ்தோத்ர ரத்னம் ச்லோகங்கள் 4, 5 மூலம் அறியலாம்.

## திவ்யதம்பதிகளின் செயல்கள்

**மூலம் -** இவ்விடத்தில், தண்டதரத்வமும், புருஷகாரத்வாதிகளும் எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் கூறாக விபஜித்த வ்யாபாரங்கள். உபதிச்யமான தர்மாதாரத்திற் காட்டில் அதிதிச்யமான தர்மாதாரத்துக்கு விசேஷம் ஸ்வத:ப்ராப்தம் என்று உவர் அருளிச்செய்ததுக்கும் இப்படி விபாகத்தால் வந்த வைஷம்யத்திலே தாத்பர்யம். இது

"யுவத்வாதௌ துல்யே அபி" என்கிற ச்லோகத்திலே நிர்ணிதம். "இறை நிலையுணர்வரிது" என்று ஆழ்வார் அருளிச் செய்த நிலத்திலே ஏதேனுமொரு வ்ருதாநிர்ப்பந்தம் ஆகாது. "க்ருசாநர்தாம்ஸ்தத: கேசித் க்ருசாம்ஸ்தத்ர குர்வதே" என்கிறபடியே தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்ததெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச் செய்தேயிறே நாம் ப்ரமாண சரணராய்ப் போருகிறது. ஆகையால் இவ்வீச்வரத்வத்தையும் ஈசிதவ்யதத்வங்களையும் யதாப்ரமாணம் தெளியப் ப்ராப்தம்.

**விளக்கம்** – இந்த இடத்தில் எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் உள்ள செயல்பாடுகளின் வேறுபாட்டை நாம் அறியவேண்டும். எம்பெருமான் தவறு செய்பவர்களைத் தண்டித்தபடி உள்ளான். பிராட்டியோ, அவ்விதம் தவறு செய்பவர்களை மன்னிக்கும்படி எம்பெருமானிடம் கூறியபடி உள்ளாள். மீமாம்ஸகர்கள் கூறுவது – ஒரு பொருளானது எந்தத் தன்மையால் மற்றொரு பொருள் போன்றே உள்ளது எனக் கூறப்பட்டதோ, அதே தன்மையால் அந்தப் பொருளைக் காட்டிலும் வேறுபட்டதாகவும் இருக்கும் – என்பதாகும் (இங்கு எம்பெருமான் மற்றும் பிராட்டியின் ஸங்கல்பம் என்பது இவ்விதமே ஆகும் என்பதை அறியலாம்). ஆக இங்கு எம்பெருமானுக்கும் பெரியபிராட்டிக்கும் உள்ள வேறுபாடு என்பது, அவர்களின் செயல்பாடுகளில் என்று அறியவேண்டும். இதனை பராசரபட்டர் அருளிச்செய்த ஸ்ரீகுணரத்நகோசம் (14) - யுவத்வாதௌ துல்யே அபி – ஸ்ரீரங்கநாயகி! உங்கள் இருவருக்கும் இளமை முதலான குணங்கள் ஒன்றாக இருந்தாலும், எம்பெருமானிடம் ஸ்வதந்த்ரமானவன், விரோதிகளை அழித்தல், ஸங்கல்பம் போன்றவை உள்ளன; உன்னிடம் பெண்மைக்கு உரிய மென்மை, கணவனுக்கு அடங்கி இருத்தல், கருணை போன்றவை உள்ளன – என்ற ச்லோகத்தின் மூலம் அறியலாம். ஈச்வரனின் உண்மையான நிலையை அறிவது கடினம் என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் (1-3-6) - இறை நிலையுணர்வரிது – அருளிச்செய்தார் அன்றோ? இது போன்ற விஷயங்களில் வீணாக நிர்ப்பந்தம் செய்வது சரியல்ல. மஹாபாரதம் ஸபாபர்வம் (39-5) - க்ருசாநர்தாம்ஸ்தத: கேசித் க்ருசாம்ஸ்தத்ர குர்வதே – சிலர் சிறிய விஷயங்களையும் பெரிதாக்குகின்றனர் – என்று கூறியது. நாம் நமது வாதங்களை நமக்கு உள்ள தர்க்கம் செய்யும் அறிவைக் கொண்டே நிரூபித்துவிட இயலும். ஆனால் இவ்விதம் செய்யாமல், சிறிய விஷயங்களுக்கும் சாஸ்த்ர ப்ரமாணம் வேண்டுகிறோம். ஆகவே இந்த ஈச்வர தத்வத்தையும் சாஸ்த்ரம் மூலமே அறியவேண்டியதாகிறது.


email : sridharan_book@yahoo.com

**மூலம் -** இவ்விடத்தில் ஸர்வஜ்ஞனாகவும் வேண்டா. அத்யந்தானுபயுக்தங்களிற் போலே ஸ்வல்போபயுக்தங்களானவற்றில் அபிஸந்தி பண்ணவும் வேண்டா. அபரிச்சேத்யமான கடலிலே படகோடுவார் வழி முதலாக வேண்டுவன தெளியுமாப் போலே இவ்வளவு விவேகிக்கை அவச்யாபேக்ஷிதம். இது ப்ரதிஷ்டிதமாகைக்காக இவற்றின் விரிவுகள் எண்ணுகிறது.

**விளக்கம்** – ஆயினும் நாம் அனைத்தையும் அறியவேண்டிய அவசியம் இல்லை. நமக்குத் தேவையற்ற விஷயங்கள் குறித்து மிகுந்த அறிவு உண்டாக வேண்டுமென்று சிரமப்பட வேண்டியதில்லை. ஒரு பெரிய கடலில் படகைச் செலுத்துபவனுக்கு, தன்னுடைய படகு செல்லவேண்டிய வழி அறிந்தாலே போதுமானது. இது போன்று நமக்கு அவசியமானதை அறிந்தாலே போதுமானது. இந்த தத்வங்களைக் குறித்து உறுதியாக அறிந்து கொள்ள, விரிவாக்க் கற்பது அவசியமாகிறது.

**மூலம் -** இப்படி மூன்று தத்வங்களாக வகுத்துச் சிந்தித்தாற்போலே ஸர்வவிசிஷ்டவேஷத்தாலே ஈச்வரன் ஏகதத்வமாக அநுஸந்திப்பார்க்கும், ஈச – ஈசிதவ்யங்கள், ஆத்மா – அநாத்மாக்கள், உபாய – உபேயங்களென்றாற்போலே இரண்டு அர்த்தம் ஞாதவ்யமாக வகுப்பார்க்கும், ரக்ஷ்யம் – ரக்ஷகன், ஹேயம் – உபாதேயம் என்று இப்புடைகளிலே அர்த்தசதுஷ்டயம் ஞாதவ்யமாக ஸங்க்ரஹிப் பார்க்கும், முன்பு சொன்னபடியே அர்த்தபஞ்சகம் ஷடர்த்தங்களென்று விவேகிப்பார்க்கும், ரஹஸ்ய சாஸ்த்ரங்களிற்படியே ஸப்த – பதார்த்த – சிந்தாதிகள் பண்ணுவார்க்கும் அவ்வோ ஞானாநுஷ்டான – ப்ரதிஷ்டாரூபங்களான ப்ரயோஜநவிசேஷங்கள் கண்டு கொள்வது.

**விளக்கம்** – நாம் இங்கு தத்வங்களை மூன்றாகப் பிரித்துள்ளோம். ஒரு சிலர் ஈச்வரன் மட்டுமே தத்துவம் என்றும், மற்றவை அவனது தன்மைகள் என்றும் கூறுவார்கள். ஒரு சிலர் தத்வங்களை இரண்டாகப் பிரிப்பார்கள். அவையாவன: ஈச்வரன் – அவனுக்கு அடங்கியவை, ஆத்மா – ஆத்மா அல்லாதவை, அடையவேண்டியவழி – அடையப்படும் இடம் போன்றவை ஆகும். ஒரு சிலர் நான்கு விதமாகக் கூறுவார்கள் – ரக்ஷிப்பவன், ரக்ஷிக்கப்படும் வஸ்து, விலக்கப்பட வேண்டியவை, ஏற்கப்படவேண்டியவை – என்பவை ஆகும். மேலும் சிலர் அறிய வேண்டியவை அர்த்தபஞ்சகம் என்னும் ஐந்து என்றும், வேறு சிலர் ஆறு என்றும் கூறுவார்கள். ரஹஸ்யசாஸ்த்ரங்களில் அறியப்பட வேண்டியவை ஏழு

என்று கூறப்படுகின்றன (ஏழு = ஈச்வரன், அவித்யை, கர்மம், காலம், கடமை, இயற்றவேண்டிய முறை, சமமாக இருத்தல்). அந்தந்த சிந்தனைகளில், அவரவர்களுக்கு ஏற்ற நன்மைகளும், பலன்களும் உள்ளன.

**மூலம் –** “சாஸ்த்ரஜ்ஞானம் பஹுக்லேசம் புத்தேச்வலந காரணம் | உபதேசாத்தரிம் புத்தவா விரமேத் ஸர்வகர்மஸு” என்கிறது உபயுக்தமான ஸாராம்சத்தைக் கடுக ச்ரவணம் பண்ணி க்ருஷி பண்ணாதே உண்ண விரகுடையவன் க்ருஷி சிந்தையை விடுமாப்போலே விரிவுகற்கைக்கு ஈடான சாஸ்த்ராப்யாஸாதிகர்மங்களில் உபரதனாய்க் கடுக மோக்ஷோபாயத்திலே மூள ப்ராப்தமென்றபடி.

**விளக்கம் –** மேலே உள்ள ச்லோகத்தின் பொருள் – சாஸ்த்ரஜ்ஞானம் என்பது மிகுந்த கடினத்தால் மட்டுமே கிட்டுகிறது; அப்படிக் கிட்டிய ஞானத்தால் புத்தி கலங்கக்கூடும்; ஆகவே ஆசார்யன் மூலமாக எம்பெருமானைப் பற்றி அறிந்து கொண்டு, அதன் பின்னர் சாஸ்த்ரஜ்ஞானம் பெறுவதற்கான செயல்களை நிறுத்தி விடவேண்டும் – என்பதாகும். இதன் பொருளானது, சாஸ்த்ரங்களை அறிவதற்கான முயற்சியில் ஈடுபடக்கூடாது என்பதல்ல. இதன் மூலம் கூறப்படுவது - சாஸ்த்ரத்தின் எந்தப் பகுதிகள் அவசியமோ அவற்றை மிகவும் வேகமாக அறிந்து கொண்டு, அவை மூலமாக மோக்ஷத்திற்கான உபாயங்களை நாடவேண்டும்; அதனை விடுத்து அவற்றை மேலும் ஆராய்ந்து, அவை கூறும் உபாயங்களை செயலாற்றுவதில் தாமதம் செய்யக்கூடாது – என்பதாகும். தனக்குத் தேவையான உணவு உள்ள ஒருவன், விவசாயம் செய்வதைப் பற்றி எண்ணமாட்டான். இது போன்றே தாமதம் செய்யாமல் மோக்ஷ உபாயங்களில் ஈடுபடவேண்டும்.

உபயுக்தேஷு த்ரிவர்க்க நிரபேக்ஷதா
கராணத்ரய ஸாரூப்யம் இதி ஸௌக்ய ரஸாயனம்

**பொருள் –** தேவையானவற்றைக் குறித்த ஞானம்; தர்மம், அர்த்தம், காமம் ஆகியவற்றில் பற்றுதல் இல்லாமை; சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றில் ஒரே போன்று உள்ள தன்மை – இவையே சௌக்யம் உண்டாக்கும் மருந்தாகும்.

தேற இயம்பினர் சித்தும் அசித்தும் இறையும் என
வேறுபடும் வியன் தத்துவம் மூன்றும், வினை உடம்பில்
கூறுபடும் கொடுமோகமும் தான் இறையாம் குறிப்பும்
மாறநினைந்து அருளால் மறை நூல் தந்த வாதியரே.

**பொருள்** – வேதங்களின் சாரத்தை நமக்கு அளித்த ஆசார்யர்கள், நம் மீது கொண்ட அளவற்ற கருணையால் செய்தது என்ன – கர்மத்தின் தொடர்பால் உண்டாகிய இந்த உடலில் ஏற்படுகின்ற மோகம் (உடலே ஆத்மா என்னும் எண்ணம்), சுதந்திரமானவன் என்னும் எண்ணம் ஆகியவற்றை நீக்கத் திருவுள்ளம் கொண்டனர். இதனால் சேதனம், அசேதனம், ஈச்வரன் ஆகிய மூன்று தத்வங்கள் குறித்தும், இவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் குறித்தும், நமக்குச் சிறிதும் ஐயம் ஏற்படாமல் உபதேசித்தனர்.

ஆவாப உத்வாபதஸ்ஸ்யு: கதி கதி கவிதீ சித்ரவத்தத்ததர்தேஷு
ஆனந்த்யாதஸ்திநாஸ்த்யோரநவதிகுஹநா யுக்திகாந்தா: க்ருதாந்தா:
தத்த்வாலோகஸ்து லோப்தும் ப்ரபவதி ஸஹஸா நிஸ்ஸமஸ்தாந் ஸமஸ்தாந்
பும்ஸ்த்வே தத்வேந த்ருஷ்டே புனரபி ந கலு ப்ராணிதா ஸ்தாணுதாதி:

**பொருள்** – பலவிதமான தத்வங்கள் உள்ளன. இவற்றில் ஒன்றில் இல்லாதது மற்றொன்றில் உள்ளது, மற்றொன்றில் உள்ளது வேறொன்றில் நீக்கப்படுவதுமாக பல உள்ளன. இவை ஒவ்வொன்றும் தத்தமது வாதங்களால் காண்பதற்கு அழகாகவே உள்ளன. இவற்றில் "உள்ளது", "இல்லை" என்ற தவறான வாதங்கள் எண்ணற்று உள்ளன. கவிஞர்களின் எல்லையில்லாத சிந்தனை போன்று, இது போன்ற தத்வங்கள் எண்ணற்று உள்ளன. எத்தனை இருந்தாலும் உண்மையைப் பற்றிய அறிவானது, இவை அனைத்தையும், இருந்த இடம் தெரியாமல் போக்கும் வலிமை பெற்றதாகும். தனக்கு முன்பாக உள்ள பொருளை மனிதன் என்று அறிந்த பின்னர், அந்தப் பொருள் மிருகமா, கட்டையா, புருஷனா என்ற சந்தேகம் நீங்கிவிடும். இது போன்றே, ஸ்ரீமந் நாராயணனே பரதெய்வம் என்று அறிந்த பின்னர், அப்படிப்பட்ட பரதெய்வம் என்பது ருத்ரனா, ப்ரம்மனா என்ற சந்தேகம் அடியுடன் நீங்கிவிடுகிறது.

## தத்த்வ த்ரய சிந்தந அதிகாரம் ஸம்பூர்ணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

# 6. பரதேவதாபாரமார்த்ய அதிகாரம்

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book:yahoo.co.in)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## (பரதேவதை யார் என நிரூபித்தல்)

ஆத்மைக்யம் தேவதைக்யம் த்ரிகஸமதிகதா துல்யதைக்யம் த்ரயாணாம்
அந்யத்ர ஐச்வர்யம் இத்யாதி அநிபுணா பணிதீ: ஆத்ரியந்தே ந ஸந்த:
த்ரயந்தை: ஏககண்டை: தத் அநுகுண மநு வ்யாஸ முக்ய உக்திபி: ச
ஸ்ரீமாந் நாராயணோ ந: பதி: அகிலதநு: முக்தித: முக்தபோக்ய:

**பொருள்** – சாஸ்த்ர ஞானம் அற்றவர்கள் கூறுவது – ஆத்மாக்கள் எல்லாம் ஒன்றே, இந்திரன் முதலான தேவதைகள் ஒன்றே, ப்ரம்மன் உள்ளிட்ட மூன்று மூர்த்திகளின் தன்மைகளை அறிந்து கொண்டால் அவர்கள் ஒன்றே,இவர்களின் ஆத்மஸ்வரூபம் ஒன்றே, இவர்கள் மூவரைக் காட்டிலும் மேலான ஒருவனே ஈச்வரன் – போன்றவையாகும். உண்மை எது, பொய் எது என்று பிரித்து அறியக்கூடியவர்கள், இந்தச் சொற்களை உண்மை என்று ஏற்பதில்லை. அனைத்து உபனிஷத்துக்களும் ஒரே கருத்தை முழங்குகின்றன, இந்த உபனிஷத்துக்களின் கருத்தைப் பின்பற்றியே மனு, வ்யாஸர் முதலானவர்களின் ஸூக்திகள் உள்ளன, இந்தக் கருத்து என்னவெனில் – அனைத்தையும் சரீரமாகக் கொண்டவன், மோக்ஷத்தை அளிக்கக்கூடியவன், முக்தர்களால் அனுபவிக்கக்கூடியவன் பெரியபிராட்டியுடன் கூடியுள்ள நாராயணனே ஆவான்; அவனே நமக்கும் அனைவருக்கும் எஜமானன் – என்பதாகும்.

## பரதேவதை யார் என்று ஏன் நிர்ணயம் செய்ய வேண்டும்

**மூலம்** - உக்தவைதர்ம்யங்களாலே பொதுவிலே ப்ரக்ருதி – புருஷ – ஈச்வர – விவேகம் பண்ணினாலும் “ஒன்றுந்தேவும்” இத்யாதிகளிற்படியே பர தேவதா விசேஷ நிச்சமில்லாதபோது “உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவனையல்லால்” என்கிற பரமைகாந்தித்வம் கூடாமையாலும், பரமைகாந்திக்கல்லாது வ்யவதாந ரஹிதமாக மோக்ஷம் கிடையாமையாலும் ஈச்வரன் இன்ன தேவதாவிசேஷமென்று நிஷ்கர்ஷிக்க வேணும்.

**விளக்கம்** – இதுவரை கூறப்பட்ட பல விவரங்கள் மூலம் அனைத்துத் தத்துவங்களும் ப்ரக்ருதி – புருஷன் – ஈச்வரன் என்று பிரிக்கப்பட்டன. இப்படிப் பிரிக்க முடிந்த ஞானம் மட்டுமே கொண்டு, இன்னதுதான் அனைத்திலும் உயர்ந்த தெய்வம் என்று திருவாய்மொழியில் (4-10-1) – ஒன்றுந்தேவும் – கூறியது போன்று, நம்மால் உணர இயலாது. இவ்விதம், இன்னதுதான் உயர்ந்த பரதெய்வம் என்று முடிவு செய்ய, திருவாய்மொழி (4-6-10) - உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவனையல்லால் – என்னும் ஞானம் அவசியமாகும். இப்படிப்பட்ட பரமைகாந்தி நிலையில் உள்ளவர்களுக்கு அல்லாது, வேறு யாருக்கும் மோக்ஷமானது மிகவும் விரைவாகக் கிட்டுவதில்லை. ஆகவே இன்னதுதான் பரதெய்வம் என்று நிரூபிப்பது அவசியம் ஆகும்.

## பல மதங்களின் கண்டன வாதங்கள்

**மூலம்** - அவ்விடத்தில் சேதநாசேதநங்களுடைய அத்யந்தபேதம் ப்ரமாண ஸித்தமாகையாலே எல்லாம் பரதேவதையாயிருக்கிற ப்ரஹ்மத்ரவ்யமென்கிற பக்ஷம் தடியாது. ஸ்வபாவஸித்தமான ஜீவேச்வரபேதமும் அப்படியே தேவாதிரூபரான ஜீவர்களுடைய அந்யோந்யபேதமும் ஸுக துக்காதி வ்யவஸ்தையாலே ப்ரமாணிகமாகையால் ஸர்வாந்தர்யாமி ஒருவனேயாகிலும் ப்ரஹ்ம ருத்ரேந்த்ராதி ஸர்வதேவதைகளும் ஈச்வரனோடும் தன்னில்தானும் அபிந்நர் என்கிற பக்ஷம் கூடாது.

**விளக்கம்** – ப்ரமாணங்கள் மூலம் சேதனங்களும் அசேதனங்களும் வெவ்வேறு என்று தெளிவாக அறியப்படுகிறது. ஆகவே அனைத்தும் ப்ரஹ்மத்தின் அங்கம் என்னும் வாதம் ஏற்க இயலாது. இது போன்றே ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் இடையே வேறுபாடு உண்டு. மேலும், சுக துக்கங்களில் உள்ள நிலை மாறுபாடு காரணமாகவும், பல ப்ரமாணங்கள் மூலமும் தேவர்களாக உள்ள ஜீவன்களுக்கு இடையே உள்ள வேறுபாட்டை உணரலாம். அனைத்தின் உள்ளே அந்தர்யாமியாக உள்ள ஸர்வேச்வரன் ஒருவனே என்றாலும் – ப்ரம்மன், ருத்ரன், இந்த்ரன் ஆகியவர்களுக்கும் ஈச்வரனுக்கும் பேதம் இல்லை என்பதையும், இவர்களுக்கு இடையில் (ஒருவருக்கு ஒருவர்) பேதம் இல்லை என்பதையும் ஏற்க இயலாது.

## ப்ரம்மன், ருத்ரன் போன்றோர் பரதேவதை அல்லர்

இத்தேவதைகளில் ப்ரதாநராகச் சொல்லுகிற ப்ரம்மருத்ரேந்த்ராதிகளுக்குக் கார்யத்வ கர்மவச்யத்வங்கள் ப்ரமாணிகங்களாகையாலும், "ஆபூதஸம்ப்லவே ப்ராப்தே ப்ரலீநே ப்ரக்ருதௌ மஹாந் | ஏகாஸ்திஷ்டதி விச்வாத்மா ஸ து நாராயண: ப்ரபு:", "ஆத்யோ நாராயணோ தேவ: தஸ்மாத் ப்ரஹ்மா த்தோ பவ:", "பரோ நாராயணோ தேவ: தஸ்மாத் ஜாதச்சதுர்முக: | தஸ்மாத் ருத்ரோ அபவதேவி" இத்யாதிகளிலே, "ததஸ்த்வமாபி துர்தர்ஷ: தஸ்மாத் அபவாத் ஸநாதநம் | ரக்ஷார்த்தம் ஸர்வபூதாநாம் விஷ்ணுத்வமுபஜக்மிவாந்" என்கிறபடியே ஸ்வேச்சாவதீர்ணனாய் த்ரிமூர்த்தி மத்யஸ்தனான விஷ்ணு நாராயணாதி சப்தவாச்யன் தானே தன்னுடைய பூர்வாவஸ்தையாலே ஸர்வஜகத்துக்கும் காரணமென்கையாலும், "நித்யம் ஹி நாஸ்தி ஜகதி பூதம் ஸ்தாவர ஜங்கமம் | ருதே தமேகம் புருஷம் வாஸுதேவம் ஸநாதநம்" என்கிறபடியே அவனே நித்யனென்கையாலும், த்ரிமூர்த்திகளும் ஸமரென்றும், த்ரிமூர்த்திகள் ஏகதத்த்வமென்றும், த்ரிமூர்த்யுத்தீர்ணன் ஈச்வரனென்றும், த்ரிமூர்த்திகளுக்குளே ப்ரஹ்மாவாதல், ருத்ரனாதல் ஈச்வரனென்று சொல்லுகிற ஸாம்ய ஐக்ய உத்தீர்ண வ்யக்த்யந்தரபக்ஷங்கள் தடியா.

**விளக்கம்** – தேவதைகளில் ப்ரதானமாக உள்ளவர்கள் என்று கூறப்படும் ப்ரம்மன், ருத்ரன் மற்றும் இந்த்ரன் ஆகியோர் கர்மவசப்பட்டவர்கள் என்பது பல ப்ரமாணங்கள் மூலம் அறியலாம். அடுத்துள்ள பல வரிகள் காண்க: மஹாபாரதம் சாந்தி பர்வம் (210-24) - ஆபூதஸம்ப்லவே ப்ராப்தே ப்ரலீநே ப்ரக்ருதௌ மஹாந் ஏகாஸ்திஷ்டதி விச்வாத்மா ஸ து நாராயண: ப்ரபு: - பஞ்சபூதங்கள் லயத்தை அடைந்தபோது, மஹத் என்பது ப்ரக்ருதியில் லயித்தபோது, அனைத்தின் ஆத்மாவான ஒருவன் மட்டுமே உள்ளான், அவனே அனைத்தின் ப்ரபுவான நாராயணன்; ஸ்ரீவராஹபுராணம் (25-6) - ஆத்யோ நாராயணோ தேவ: தஸ்மாத் ப்ரஹ்மா ததோ பவ: - தொடக்கத்தில் நாராயணன் மட்டுமே உள்ளான்; அவனிடமிருந்து ப்ரம்மன் தோன்றினான்; ஸ்ரீவராஹபுராணம் (90-3) - பரோ நாராயணோ தேவ: தஸ்மாத் ஜாதச்சதுர்முக: தஸ்மாத் ருத்ரோ அபவதேவி – தேவியே! நாராயணனே மேலான தெய்வம்; அவனிடமிருந்து நான்முகன் (ப்ரம்மன்) தோன்றினான்; ப்ரம்மனிடமிருந்து ருத்ரன் தோன்றினான்.

மேலும், இராமாயணம் உத்தர காண்டம் (101-26) - ததஸ்த்வமாபி துர்தர்ஷ: தஸ்மாத் அபவாத் ஸநாதநம் ரக்ஷார்த்தம் ஸர்வபூதாநாம் விஷ்ணுத்வமுபஜக்மிவாந் – ப்ரம்மன் கூறுவது: யாராலும் வெல்ல முடியாதவனாகிய நீ, அனைவரையும் காக்கும் பொருட்டு, நாராயணன் என்னும் உயர்ந்த ரூபத்திலிருந்து விஷ்ணுவாகத் தோன்றினாய் – போன்ற வரிகள் மூலம், தன்னுடைய விருப்பம் காரணமாகவே நாராயணன், மூன்று மூர்த்திகளில் நடுநாயகமான விஷ்ணுவாகத் தோன்றினான் என்பது விளங்கும். விஷ்ணு, நாராயணன் என்னும் பல திருநாமங்களால் கூறப்படும் அவனே, அவனது அனைத்து நிலைகளிலும் இந்த உலகின் காரணமாக உள்ளான். மஹாபாரதம் சாந்திபர்வம் (347-32) - நித்யம் ஹி நாஸ்தி ஜகதி பூதம் ஸ்தாவர ஜங்கமம் ருதே தமேகம் புருஷம் வாஸுதேவம் ஸநாதநம் – எப்போதும் உள்ளவன் என்று முழங்கப்படும் புருஷனாகிய வாஸுதேவனைத் தவிர இந்த உலகில் தாவரமோ மற்ற விலங்குகளோ நிரந்தரமாக இருப்பதில்லை – என்று கூறியது. இதன் மூலம் அவனே நித்யன் என்பது விளங்குகிறது.

மேலே கூறப்பட்ட பல காரணங்களால் – மூன்று மூர்த்திகளும் சமம், மூன்று மூர்த்திகளும் ஒன்று, மூன்று மூர்த்திகளுக்கும் மேலான ஈச்வரன் ஒருவன், மூன்று மூர்த்திகளுக்குள் ஈச்வரன் என்பது ப்ரம்மனோ அல்லது ருத்ரனோ ஆவார்கள் – என்று கூறப்படும் வாதங்கள் தள்ளப்படுகின்றன. இந்த வாதங்கள் மூலம் வெளிப்படும் சமத்வம், ஒரே தன்மை, இவற்றைக் காட்டிலும் உயர்ந்த ஒன்று போன்ற கருத்துக்கள் அனைத்தும் ப்ரமாணங்களுக்கு முரணாக உள்ளன.

## ப்ரம்மன், ருத்ரன் போன்றோர் படைக்கப்பட்டவர்களே

**மூலம்** - ப்ரம்மருத்ராதிகள் ஸர்வேச்வரனுக்குக் கார்யபூதரென்னுமிடம், "தத் விஸ்ருஷ்டஸ்ஸ புருஷோ லோகே ப்ரஹ்மேதி கீர்த்யதே" இத்யாதிகளாலும், "ஸங்க்ஷிப்ய ச புரா லோகாந் மாயயா ஸ்வயமேவ ஹி | மஹார்ணவே சாயாந: அப்ஸு மாம் த்வம் பூர்வமஜீஜந:", "க இதி ப்ரஹ்மணோ நாம ஈச: அஹம் ஸர்வதேஹிநாம் | ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேசவநாமவாந்", "அஹம் ப்ரஸாதஜஸ்தஸ்ய கஸ்மிம்ச்சித் காரணாந்தரே | த்வம் ச ஏவ க்ரோதஜஸ்தாத் பூர்வஸர்க்கே ஸநாதநே" என்று எதிரி கையாலே விடுதீட்டானபடியே அவர்கள் தங்கள் பாசுரங்களாலும் ஸித்தம்.

**விளக்கம்** – ப்ரம்மன், ருத்ரன் முதலானோர் ஸர்வேச்வரனிடமிருந்தே தோன்றியவர்கள் என்பது மநு ஸ்ம்ருதி (1-11) - தத்விஸ்ருஷ்டஸ்ஸ புருஷோ லோகே ப்ரஹ்மேதி கீர்த்யதே – நாராயணனிடமிருந்து தோன்றிய அந்தப் புருஷன் உலகினரால் ப்ரம்மன் எனப்படுகிறான் – போன்ற வரிகள் மூலம் உணரலாம். அடுத்துள்ள பல வரிகளும் காண்க: உத்தரகாண்டம் (104-4) - ஸங்க்ஷிப்ய ச புரா லோகாந் மாயயா ஸ்வயமேவ ஹி மஹார்ணவே சயாந: அப்ஸு மாம் த்வம் பூர்வமஜீஜந: - உனது ஸங்கல்பம் மூலம் அந்த உலகை அழித்து, ப்ரளயத்தின் ஸமுத்திரத்தில் சயனித்தபடி என்னைப் (ப்ரம்மன்) படைத்தாய்; ஸ்ரீஹரிவம்சம் (3-131-4) - க இதி ப்ரஹ்மணோ நாம ஈச: அஹம் ஸர்வதேஹிநாம் ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேசவநாமவாந் – க என்பது ப்ரம்மன், நான் (சிவன்) அனைத்து உயிர்களின் ஈசன், நாங்கள் இருவரும் உனது திருமேனியிலிருந்தே தோன்றினோம், இதனால் நீ கேசவன் எனப்படுகிறாய்; மஹாபாரதம் சாந்திபர்வம் (352-62) - அஹம் ப்ரஸாதஜஸ்தஸ்ய கஸ்மிம்ச்சித் காரணாந்தரே த்வம் ச ஏவ க்ரோதஜஸ்தாத் பூர்வஸர்க்கே ஸநாதநே – சிவனிடம் ப்ரம்மன், "எம்பெருமான் ஒரு காலகட்டத்தில் மகிழ்வுடன் இருக்க, அப்போது நான் தோன்றினேன். அது போன்று ஒரு காலகட்டத்தில் அவன் கோபத்துடன் இருந்தபோது நீ தோன்றினாய்", என்றான். மேலே உள்ள வரிகளானவை, "பல தெய்வங்களும் தங்களுக்குத் தாங்களே எம்பெருமானால் படைக்கப்பட்டவர்கள்" என்று வாக்குமூலம் கொடுப்பதாக அமைந்துள்ளது காண்க.

## ப்ரம்மன், ருத்ரன் போன்றோர் நாராயணனை ஆராதித்தே தங்கள் பதவிகளை அடைந்தவர்கள்

இவர்கள் கர்மவச்யராய்ச் சில கர்மவிசேஷங்களாலே ஸர்வேச்வரனை ஆராதித்துத் தத்தம் பதங்கள் பெற்றார்களென்னுமிடம், "ஸர்வே தேவா வாஸுதேவம் யஜந்தே ஸர்வே தேவா வாஸுதேவம் நமந்தே", "ஸப்ரஹ்மகாஸ்ஸருத்ராச்ச ஸேந்த்ர தேவா மஹர்ஷய: | அர்ச்சயந்தி ஸுரச்ரேஷ்டம் தேவம் நாராயணம் ஹரிம்", "சிந்தயந்தோ ஹி யம் நித்யம் ப்ரஹ்மே சாநாதய: ப்ரபும் | நிச்சயம் நாதிகச்சந்தி தமஸ்மி சரணம் கத:", "பத்மே திவ்யே அர்க்கஸங்காசே நாப்யாமுத்பாத்ய மாமபி | ப்ராஜாபத்யம் த்வயா கர்ம ஸர்வம் மயி நிவேசிதம் || ஸோ அஹம் ஸந்ந்யஸ்த பாரோ ஹி த்வாமுபாஸே ஜகத்பதிம்", "யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ: | புனஸ்த்ரைலோக்ய தாத்ருத்வம் ப்ராப்தவாநித சுச்ரும", "விச்வரூபோ மஹாதேவ: ஸர்வமேதே மஹாக்ரதௌ | ஜுஹாவ ஸர்வபூதாநி ஸ்வயமாத்மாநமாத்மநா", "மஹாதேவ: ஸர்வமேதே மஹாத்மா ஹ்ருத்வா ஆத்மாநம்

தேவதேவோ பபூவ | விச்வாந் லோகாந் வ்யாப்ய விஷ்டப்ய கீர்த்யா விராஜதே துதிமாந் க்ருத்திவாஸா:", "யோ மே யதா கல்பிதவாந் பாகமஸ்மிந் மஹாக்ரதௌ | ஸ ததா யஜ்ஞபாகர்ஹோ வேதஸூத்ரே மயா க்ருத:" இத்யாதிகளிலே ப்ரஸித்தம்.

**விளக்கம்** – ப்ரம்மன், ருத்ரன் முதலானோர் கர்மவசப்பட்டவர்களே ஆவார்கள். இவர்கள் ஸர்வேச்வரனான ஸ்ரீமந் நாராயணனை ஆராதனை செய்வதன் மூலமே தங்களது பதவிகளை அடைகின்றனர் என்பதைக் கீழே உள்ள பல வரிகளின் மூலம் அறியலாம்:

- ஸர்வே தேவா வாஸுதேவம் யஜந்தே ஸர்வே தேவா வாஸுதேவம் நமந்தே – வாஸுதேவனையே அனைத்து தேவர்களும் ஆராதனை செய்கின்றனர்; வாஸுதேவனையே அனைத்து தேவர்களும் வணங்குகின்றனர்;

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (350-30) - ஸப்ரஹ்மகாஸ்ஸருத்ராச்ச ஸேந்த்ர தேவா மஹர்ஷய: அர்ச்சயந்தி ஸுரச்ரேஷ்டம் தேவம் நாராயணம் ஹரிம் – ப்ரம்மன், ருத்ரன், இந்த்ரன், தேவர்கள், அனைத்து முனிவர்கள் ஆகியோர் தேவர்களுக்குத் தேவனாக உள்ள ஸ்ரீஹரியாகிய நாராயணனையே ஆராதனை செய்தபடி உள்ளனர்.

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (210-33) - சிந்தயந்தோ ஹி யம் நித்யம் ப்ரஹ்மே சாநாதய: ப்ரபும் நிச்சயம் நாதிகச்சந்தி தமஸ்மி சரணம் கத: - ப்ரம்மன், ருத்ரன் முதலானோர் நாராயணனை எப்போதும் ஆராதனை செய்தபடி உள்ளபோதிலும், அவனது தன்மை இத்தகையது என்பதை இன்னமும் அறியாமலேயே உள்ளனர்; இப்படிப்பட்ட நாராயணனை நான் வணங்குகிறேன்.

- இராமாயணம் உத்தரகாண்டம் (104-7, 8) - பத்மே திவ்யே அர்க்கஸங்காசே நாப்யா முத்பாத்ய மாமபி ப்ராஜாபத்யம் த்வயா கர்ம ஸர்வம் மயி நிவேசிதம் ஸோ அஹம் ஸந்ந்யஸ்த பாரோ ஹி த்வாமுபாஸே ஜகத்பதிம் – ப்ரம்மன் கூறுவது, "உனது திருநாபியில், சூர்யன் போன்ற பிரகாசத்துடன் உண்டான தாமரையில், என்னை உண்டாக்கினாய்; ப்ரஜாபதி என்பவர் செய்யவேண்டிய அனைத்துக் கடமைகளையும் என்னிடம் வைத்தாய்; இப்படியாக பெரும் பாரத்தைக் கொண்டவனாகிய நான், அனைத்து உலகின் பதியாக உள்ள உன்னை வணங்குகிறேன்.

- மஹாபாரதம் - யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ: புனஸ்த்ரைலோக்ய தாத்ருத்வம் ப்ராப்தவாநித சுச்ரும – தாமரையில்

அமர்ந்துள்ளவனான ப்ரம்மன், ஆயிரம் கோடி யுகங்கள் நாராயணனை ஆராதனை செய்து, மூன்று உலகங்களையும் படைக்கும் திறமையைப் பெற்றான் என்பதை நாம் கேள்விப்பட்டுள்ளோம்.

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (8-37) - விச்வரூபோ மஹாதேவ: ஸர்வமேதே மஹாக்ரதௌ ஜுஹாவ ஸர்வபூதாநி ஸ்வயமாத்மாநமாத்மநா – விச்வரூபன் என்னும் பெயர் கொண்ட ருத்ரன், ஸர்வமேதம் என்னும்படியான யாகத்தில் அனைத்துப் பூதங்களையும், தன்னையும் மனதால் அர்ப்பணித்தான்.

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (20-12) - மஹாதேவ: ஸர்வமேதே மஹாத்மா ஹ்ருத்வா ஆத்மாநம் தேவதேவோ பபூவ விச்வாந் லோகாந் வ்யாப்ய விஷ்டப்ய கீர்த்யா விராஜதே த்யுதிமாந் க்ருத்திவாஸா: - ஸர்வமேதம் என்னும் யாகத்தில் மஹாதேவன் என்னும் ருத்ரன் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்டு, தேவர்களில் உயர்ந்தவன் என்னும் பெயர் அடைந்தான்; இதன் மூலம், யானையின் தோலைத் தனது உடையாகக் கொண்ட அவன், தனது ஞானம் மூலம் அனைத்து உலகங்களையும் வ்யாபித்து நின்றான்; எட்டுவிதமான மூர்த்திகளைத் தாங்கியபடி உள்ளான்.

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (349-61) - யோ மே யதா கல்பிதவாந் பாகமஸ்மிந் மஹாக்ரதௌ ஸ ததா யஜ்ஞபாகர்ஹோ வேதஸூத்ரே மயா க்ருத: - இத்தகைய பெரிய யாகத்தில், எனக்கு அளிக்கப்பட வேண்டிய அவிர்பாகத்தை யார் ஒருவன் முறைப்படி அளித்தானோ, அவன் தனக்கு உரிமையான யஜ்ஞ பாகத்தைப் பெறும் உரிமை உடையவன் ஆகிறான்; இதனை நான் வேதங்களிலும், ஆபஸ்தம்ப ஸூத்ரத்திலும் கூறியுள்ளேன்.

## ப்ரம்மன், ருத்ரன் போன்றோர் நாராயணனின் மாயைக்கு உட்பட்டவர்களே

**மூலம்** - இவர்கள் பகவந்மாயா பரதந்த்ர்ராய் குணவச்யராய் ஞானஸங்கோச விகாஸவான்களாயி ருப்பார்களென்னுமிடம் வேதாபஹாராதி வ்ருத்தாந்தங்களிலும், “ப்ரஹ்மாத்யாஸ்ஸகலா தேவா மனுஷ்யா: பசவஸ்ததா | விஷ்ணுமாயா மஹாவர்த்த மோஹாந்த தமஸாவ்ருதா:”, “ப்ரஹ்மா விச்வஸ்ருஜோ தர்மா மஹாந் அவ்யக்தமேவ ச | உத்தமாம் ஸாத்த்விகீமேதாம் கதிமாஹுர்மநீஷிணா:” இத்யாதிகளிலும் ப்ரஸித்தம்.

**விளக்கம்** – ப்ரம்மன், ருத்ரன் முதலானோர் நாராயணனின் மாயைக்கு வசப்பட்டவர்கள், மூன்று குணங்களின் வசப்பட்டவர்கள், இவர்களின் ஞானமானது விரிவதும் சுருங்குவதுமாகவே உள்ளது. இவை அனைத்தையும் வேதங்களைப் ப்ரம்மன் தொலைத்த நிகழ்வு மூலமும், கீழே உள்ள வரிகளின் மூலமும் அறியலாம்:

- விஷ்ணு புராணம் - ப்ரஹ்மாத்யாஸ்ஸகலா தேவா மனுஷ்யா: பசவஸ்ததா விஷ்ணுமாயா மஹாவர்த்த மோஹாந்த தமஸாவ்ருதா: - ப்ரம்மன் உள்ளிட்ட தேவர்கள், மனிதர்கள், விலங்குகள் ஆகிய அனைத்தும் விஷ்ணுவின் மாயை எனப்படும் இருளால் சூழப்பட்டே உள்ளனர்.

- மநு ஸ்ம்ருதி (12-50) - ப்ரஹ்மா விச்வஸ்ருஜோ தர்மா மஹாந் அவ்யக்தமேவ ச உத்தமாம் ஸாத்த்விகீமேதாம் கதிமாஹுர்மநீஷிணா: - கடந்த பிறவியில் ஸத்வ குணம் மேலோங்கி நிற்க, பல புண்ணியங்களைச் சிலர் செய்கின்றனர்; இவர்களால் ப்ரம்மன், ஒன்பது ப்ரஜாபதிகள், தர்மதேவதை, மஹத் தேவதை, அவ்யக்த தேவதை என்னும் உயர்ந்த பிறவிகள் எடுக்கப்படுகின்றன.

## ப்ரம்மன், ருத்ரன் போன்றோர் நாராயணனிடமிருந்தே ஞானம் பெறுபவர்கள்

**மூலம்** - இவர்கள் தங்களுக்கு அந்தராத்மாவான அவன் கொடுத்த ஞானாதிகளைக் கொண்டு அவனுக்கு ஏவல் தேவை செய்கிறார்களென்னுமிடம், "ஏதௌ விபுதச்ரேஷ்டௌ ப்ரஸாத க்ரோதஜௌ ஸ்ம்ருதௌ | ததாதர்சித பந்தாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹார காரகௌ" என்று சொல்லப்பட்டது.

**விளக்கம்** – ப்ரம்மன் முதலானோர் தங்களுக்கு அந்தர்யாமியாக உள்ள ஸ்ரீமந் நாராயணன் அளித்த ஞானத்தைக் கைக்கொள்கின்றனர். அந்த ஞானம் மூலமே, அவனுக்கு ஏற்ற பணிவிடைகளைச் செய்தபடி உள்ளனர். இதனை மஹாபாரதம் சாந்திபர்வம் (350-19) - ஏதௌ விபுதச்ரேஷ்டௌ ப்ரஸாத க்ரோதஜௌ ஸ்ம்ருதௌ ததாதர்சித பந்தாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹார காரகௌ – எம்பெருமானின் மகிழ்வாலும், கோபத்தாலும் தோன்றியவர்களான தேவர்களில் உயர்ந்தவர்கள் (ப்ரம்மன், சிவன்), அவன் கொடுத்த அறிவு மூலம் ஸ்ருஷ்டியையும், அழித்தலையும் செய்தபடி உள்ளனர் – என்று கூறியது.

## ப்ரம்மன் முதலானோர் த்யானிக்கத் தக்கவர்கள் அல்லர்

**மூலம் -** இவர்களுக்கு சுபாச்ரயத்வமில்லையென்னுமிடத்தை, "ஹிரண்யகர்ப்போ பகவாந் வாஸவோ அத ப்ரஜாபதி:" என்று தொடங்கி, "அசுத்தாஸ்தே ஸமஸ்தாஸ்து தேவாத்யா: கர்மயோநய:" என்றும், "ஆப்ரஹ்ம ஸ்தம்பபர்யந்தா ஜகதந்தர்வ்யவஸ்திதா: | ப்ராணின: கர்மஜநித ஸம்ஸார வசவர்த்திந:" என்றும், "கர்மணாம் பரிபாகத்வாத் ஆவிரிஞ்சாதமதங்களம் | இதி மத்வா விரக்தஸ்ய வாஸுதேவ: பரா கதி:" என்றும் பராசர சௌநக சுகாதிகள் ப்ரதிபாதித்தார்கள்.

**விளக்கம்** – இவர்கள் (ப்ரம்மன் முதலானோர்) தூய்மையானவர்கள் அல்லர் என்பதும், த்யானம் செய்பவர்களுக்கு இலக்காகும் தகுதி பெற்றவர்கள் அல்லர் என்பதும் கீழே உள்ள வரிகளில் கூறப்பட்டன:

- விஷ்ணுபுராணம் (6-7-56, 77) ஹிரண்யகர்ப்போ பகவாந் வாஸவோ அத ப்ரஜாபதி: … அசுத்தாஸ்தே ஸமஸ்தாஸ்து தேவாத்யா: கர்மயோநய: - பகவானாகிய ப்ரம்மன், இந்த்ரன், ப்ரஜாபதிகள், தேவர்கள் ஆகியோர் பூர்வகர்ம்ம காரணமாகப் பிறவி எடுத்தவர்கள், எனவே தூய்மை அற்றவர்களே.

- விஷ்ணுதர்மம் (104-23) - ஆப்ரஹ்ம ஸ்தம்பபர்யந்தா ஜகதந்தர்வ்யவஸ்திதா: ப்ராணின: கர்மஜநித ஸம்ஸார வசவர்த்திந: - ப்ரம்மன் தொடங்கி சிறிய புல் வரை உள்ள அனைத்தும் கர்மம் காரணமாகப் பிறவி எடுத்தவர்கள்; எனவே அவர்கள் ஸம்ஸார சுழற்சிக்கு உட்பட்டவர்களே ஆவர்.

- ஸ்ரீமத் பாகவதம் (11-19-18) - கர்மணாம் பரிபாகத்வாத் ஆவிரிஞ்சாதமதங்களம் இதி மத்வா விரக்தஸ்ய வாஸுதேவ: பரா கதி: - உலக விஷயங்களில் பற்றுதல் நீங்கப் பெற்றவன், ப்ரம்மன் முதலானவர்கள் எந்தவிதமான பாவங்களையும் நீக்கவல்லவர்கள் அல்லர் என்று அறியவேண்டும்; இதனால் அவர்கள் தூய்மை அற்றவர்கள்; இப்படிப்பட்டவன் வாஸுதேவனையே தனது உயர்ந்த இலக்காகக் கொள்ளவேண்டும்.

இப்படியாகவே பராசரர், சௌநகர் மற்றும் சுகர் ஆகியோர் உபதேசித்தனர்.

## ப்ரம்மன் முதலானோர் எம்பெருமானை அண்டியே உள்ளனர்

**மூலம் -** இவர்களுக்குப் பகவான் ஆச்ரயணீயனென்னுமிடத்தையும், பகவானுக்கு ஓர் ஆச்ரயணீயரில்லையென்னுமிடத்தையும், "ருத்ரம் ஸமாச்ரிதா தேவா ருத்ரோ ப்ரஹ்மாணமாச்ரித: | ப்ரஹ்மா மாமாச்ரிதோ ராஜந் அஹம் கஞ்சிதுபாச்ரித: || மமாச்ரயோ ந கச்சித்து ஸர்வேஷாமாச்ரயோ ஹி அஹம்" என்று தானேயருளிச் செய்தான்.

**விளக்கம்** - ப்ரம்மன் முதலானோர் தங்கள் பாதுகாப்பிற்காக எம்பெருமானை அண்டியே இருக்கவேண்டும். ஆனால் எம்பெருமான் தனது பாதுகாப்பிற்கு யாரையும் அண்டி நிற்க வேண்டிய அவசியம் இல்லை. இந்தக் கருத்தை எம்பெருமான் தனது திருவாயின் மூலம் மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வத்தில் (118-37, 38) - ருத்ரம் ஸமாச்ரிதா தேவா ருத்ரோ ப்ரஹ்மாணமாச்ரித: ப்ரஹ்மா மாமாச்ரிதோ ராஜந் அஹம் கஞ்சிதுபாச்ரித: மமாச்ரயோ ந கச்சித்து ஸர்வேஷாமாச்ரயோ ஹி அஹம் – அரசனே! தேவர்கள் தங்கள் பாதுகாப்பிற்கு ருத்ரனை அடைகின்றனர்; ருத்ரன் தனது பாதுகாப்பிற்கு ப்ரம்மனை அடைகிறான்; ப்ரம்மன் தனது பாதுகாப்பிற்கு என்னை அடைகிறான்; நான் எனது பாதுகாப்பிற்கு யாரையும் அண்டுவதில்லை; நான் அனைவருக்கும் புகலிடமாக உள்ளதால், என்னால் அடையப்படும் இடம் ஏதும் இல்லை – என்றது காண்க.

## ப்ரம்மன் முதலானோர் எம்பெருமானின் விபூதிகள்

**மூலம் -** இவர்கள் உபயவிபூதிநாதனான ஸர்வேச்வரனுக்கு விபூதிபூதரென்னுமிடம் ப்ரஹ்மா தக்ஷாதய: கால:, ருத்ர: காலாந்தகாத்யாச்ச இத்யாதிகளிலே மற்றுள்ளாரோடு துல்யமாகச் சொல்லப்பட்டது.

**விளக்கம்** – நித்யவிபூதி மற்றும் லீலாவ்பூதி ஆகிய இரண்டிற்கும் தலைவனாக உள்ள ஸர்வேச்வரனின் விபூதிகளாக ப்ரம்மன் முதலானோர் உள்ளனர். இதனைக் கீழே உள்ள விஷ்ணு புராண வரிகளின் மூலம் அறியலாம்:

- (1-22-31) - ப்ரஹ்மா தக்ஷாதய: கால: - ப்ரம்மன், தக்ஷன், காலம் போன்றவை எம்பெருமானின் விபூதிகளாக இருந்து அனைத்தையும் உண்டாக்குகின்றன.
- (1-22-33) - ருத்ர: காலாந்தகாத்யாச்ச – ருத்ரன், யமன் போன்றவர்கள் எம்பெருமானின் விபூதிகளாக இருந்து ப்ரளய காரணமாக உள்ளனர்.

## ப்ரம்மன் முதலானோர் எம்பெருமானின் விசேஷணமாவர்

**மூலம் -** இப்படி வஸ்த்வந்தரம் போல இவர்களும் ஸர்வசரீரியான ஸர்வேச்வரனுக்கு ப்ரகாரபூதரென்னுமிடம் வஸ்த்வந்தரங்களுக்கும் இவர்களுக்கும் சேர நாராயணாதிசப்த ஸாமாநாதிகரண்யத்தாலே ஸித்தம்.

**விளக்கம்** – மற்ற பொருள்கள் போன்றே, ப்ரம்மன் முதலானோர் அனைத்தையும் தனது சரீரமாக்க் கொண்ட ஸர்வேச்வரனுக்கு விசேஷணமாக உள்ளவர் ஆவர். இதனை நாராயண என்ற பதத்துடன் மற்ற பொருள்கள் கூறப்படுவது போன்று, இவர்களும் கூறப்படுவதன் மூலம் அறியலாம்.

## ப்ரம்மன் முதலானோர் எம்பெருமானின் சரீரங்கள்

**மூலம் -** இவர்கள் சரீரமாய் அவன் ஆத்மாவாயிருக்கிறபடியை, "தவாந்தராத்மா மம ச யே ச அந்யே தேஹிஸம்ஜ்ஞிதா: | ஸர்வேஷாம் ஸாக்ஷிபூத: அஸௌ ந க்ராஹ்ம: கேநசித் க்வசித்" என்று ப்ரஹ்மா ருத்ரனைக் குறித்துக் கூறினான்.

**விளக்கம்** – ப்ரம்மன் முதலானோர் ஸர்வேச்வரனின் சரீரமாக உள்ளதையும், அவன் இவர்களது ஆத்மாவாக உள்ளதையும் மஹாபாரதம் சாந்திபர்வம் (361-4) - தவாந்தராத்மா மம ச யே ச அந்யே தேஹிஸம்ஜ்ஞிதா: ஸர்வேஷாம் ஸாக்ஷிபூத: அஸௌ ந க்ராஹ்ம: நசித் க்வசித் – உனக்கு, எனக்கு, சரீரம் கொண்ட பலருக்கு ஆத்மாவாக உள்ள ஸர்வேச்வரன் அனைவரது செயல்பாடுகளையும் எப்போதும் பார்த்தபடி உள்ளான்; ஆனால் அவனை எளிதாக யாராலும் காண இயலாது – என்று கூறியது. இந்த வரி ப்ரம்மன் ருத்ரனிடம் கூறுவதாகும்.

## ப்ரம்மன் முதலானோர் எம்பெருமானின் தொண்டர்கள்

**மூலம் -** இவர்கள் சேஷபூதர் அவன் சேஷி என்னுமிடத்தை, "தாஸபூதாஸ்ஸ்வதஸ்ஸர்வே ஹி ஆத்மாந: பரமாத்மன: | அத: அஹம் அபி தே தாஸ இதி மத்வா நமாமி அஹம்" என்று மந்த்ரராஜபதஸ்தோத்ரத்திலே ஸர்வஜ்ஞனான ருத்ரன் தானே சொன்னான்.

**விளக்கம்** – ப்ரம்மன் முதலானோர்கள் தொண்டர்கள் என்பதையும், ஸர்வேச்வரனே இவர்களின் எஜமானன் என்பதையும் மந்த்ரராஜபத ஸ்தோத்ரத்தில், அனைத்தையும் அறிந்தவனான சிவன் – தாஸபூதாஸ் ஸ்வதஸ்ஸர்வே ஹி ஆத்மாந: பரமாத்மன: அத: அஹம் அபி தே தாஸ இதி மத்வா நமாமி அஹம் – அனைத்து ஆத்மாக்களும் பரமாத்மாவுக்கு இயற்கையாகவே அடிமைகள் ஆவர்; இந்த ஞானம் கொண்டவனான நானும், உனது தொண்டனான நானும் உன்னை வணங்கி நிற்கிறேன் – என்றான்.

## ஸ்ரீமந் நாராயணனுக்கு ஒப்பும் இல்லை, இவனை விட உயர்ந்தவரும் இல்லை

**மூலம் -** இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் நாராயணன் ஸமாதிக தரித்ரன் என்னுமிடத்தை, "ந பரம் புண்டரீகாக்ஷாத் த்ருச்யதே புருஷர்ஷப; பரம் ஹி புண்டரீகாக்ஷாத் பூதம் ந பவிஷ்யதி; ந விஷ்ணோ: பரமோ தேவோ வித்யதே ந்ருபஸத்தம; ந வாஸுதேவாத் பரம் அஸ்தி மங்களம் ந வாஸுதேவாத் பரம் அஸ்தி பாவநம் ந வாஸுதேவாத் பரம் அஸ்தி தைவதம் ந வாஸுதேவம் ப்ரணிபத்ய ஸீததி; த்ரைலோக்யே தாத்ருசா: கச்சித் ந ஜாதோ ந ஜநிஷ்யதே; ந தைவம் கேசவாத்பரம்; ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம் விஷ்ணுர்ப்ரஹ்மமயோ மஹாந்; ஈச்வரம் தம் விஜாநீம: ஸ பிதா ஸ ப்ரஜாபதி:" இத்யாதிகளாலே பலபடியும் சொன்னார்கள்.

**விளக்கம்** – இப்படியாக அனைத்துவிதங்களிலும் தனக்கு ஒப்பாக யாரும் இல்லாதவனாகவும், தனக்கு மேல் யாரும் இல்லாதவனாகவும் நாராயணன் உள்ளான் என்பதைக் கீழே உள்ள பல வரிகளில் உணரலாம்:

- மஹாபாரதம் பீஷ்ம பர்வம் (67-2) - ந பரம் புண்டரீகாக்ஷாத் த்ருச்யதே புருஷர்ஷப – புருஷர்களில் உயர்ந்தவனே! அழகான தாமரை போன்ற கண்கள் கொண்ட எம்பெருமானை விட உயர்ந்தவர்களைக் காண இயலாது.

- மஹாபாரதம் பீஷ்ம பர்வம் (67-17) - பரம் ஹி புண்டரீகாக்ஷாத் பூதம் ந பவிஷ்யதி - அழகான தாமரை போன்ற கண்கள் கொண்ட எம்பெருமானை விட உயர்ந்தவர்கள் இனி உண்டாகப்போவதில்லை.

- பரமோ தேவோ வித்யதே ந்ருபஸத்தம – அரசர்களில் உயர்ந்தவனே! எம்பெருமானை விட உயர்ந்த தேவர்களைக் காண இயலாது.

- ந வாஸுதேவாத் பரம் அஸ்தி மங்களம் ந வாஸுதேவாத் பரம் அஸ்தி பாவநம் ந வாஸுதேவாத் பரம் அஸ்தி தைவதம் ந வாஸுதேவம் ப்ரணிபத்ய ஸீததி – வாஸுதேவனை விடச் சிறந்த மங்களம் ஏதும் இல்லை, அவனைக் காட்டிலும் நமது பாவங்களை நீக்கவல்ல தூய்மையான வஸ்து வேறு எதுவும் இல்லை, அவனை விட உயர்ந்த தெய்வம் ஏதும் இல்லை, அவனை அடைந்த பின்னர் யாரும் வருத்தம் கொள்வதில்லை.

- த்ரைலோக்யே தாத்ருசா: கச்சித் ந ஜாதோ ந ஜநிஷ்யதே – மூன்று உலகங்களிலும் எம்பெருமானுக்கு நிகராக யாரும் இல்லை, இனியும் பிறக்கப்போவதில்லை.

- நரஸிம்ஹ புராணம் (18-33) - ந தைவம் கேசவாத்பரம் – கேசவனை விட உயர்ந்த தெய்வம் வேறு இல்லை.

- மஹாபாரதம் - ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம் விஷ்ணுர்ப்ரஹ்மமயோ மஹாந்; ஈச்வரம் தம் விஜாநீம: ஸ பிதா ஸ ப்ரஜாபதி: - அனைத்து உயிர்களுக்கும் அரசன் போன்றுள்ள ப்ரம்மனுக்கும் அரசனாக விஷ்ணு உள்ளான், அவனே ப்ரஹ்மம், அவனே மிகவும் உயர்ந்தவன், இதனால் அவனை நாம் ஈச்வரன் என்கிறோம், அவனே அனைத்தின் தந்தை, அனைத்தின் உற்பத்தி நாயகன் அவனே.

## எம்பெருமானுக்கும் மற்ற தேவதைகளுக்கும் உள்ள வித்தியாசங்கள்

**மூலம் -** கருவிலே திருவுடையார்களாய் ஜாயமானதசையிலே ரஜஸ்தம: ப்ரசமஹேதுவான மதுஸூதநனுடைய கடாக்ஷமுடையவர்கள் முமுக்ஷுக்களாவார்களென்னுமிடமும், ப்ரஹ்ம ருத்ர த்ருஷ்டரானவர்கள் ரஜஸ்தம: பரதந்த்ரராவார்களென்னுமிடமும் ஜாயமானம் ஹி புருஷம் யம் பச்யேந்மதுஸூதந: ஸாத்த்விகஸ்ஸது விஜ்ஞேயஸ்ஸ வை மோக்ஷார்த்தசிந்தக: பச்யத்யேநம் ஜாயமானம் ப்ரஹ்மா ருத்ர: அதவா புந: ரஜஸா தமஸா ச அஸ்ய மானஸம் ஸமபிப்லுதம் என்று விபஜிக்கப்பட்டது.

**விளக்கம்** – மதுஸூதனனின் கடாக்ஷம் என்பது ரஜஸ் மற்றும் தாமஸ குணங்களை அறுக்கவல்லது. தாயின் கருவில் உள்ளபோதே பாக்கியம் உடையவனாக இருக்கும் ஒருவன், இப்படிப்பட்ட மதுஸூதனனின் கடாக்ஷத்தைத் தனது பிறப்பின்போதே பெற்றுவிடுகிறான் (இதுவே ஜாயமான கடாக்ஷம் எனப்படும்). இவன் முமுக்ஷுவாகவே உள்ளான் (எப்போதும் மோக்ஷத்தில் விருப்பம் கொண்டவனாக உள்ளான்). பிறக்கும்போது ப்ரம்மன், ருத்ரன் பார்வை பெற்றவர்கள் ரஜஸ் மற்றும் தாமஸ குணம்

நிறைந்தவர்களாகவே இருப்பார்கள். இதனை மஹாபாரதம் சாந்திபர்வம்(358-73:77) - ஜாயமானம் ஹி புருஷம் யம் பச்யேந்மதுஸூதந: ஸாத்த்விகஸ்ஸது விஜ்ஞேயஸ்ஸ வை மோக்ஷார்த்தசிந்தக: பச்யத்யேநம் ஜாயமானம் ப்ரஹ்மா ருத்ர: அதவா புந: ரஜஸா தமஸா ச அஸ்ய மானஸம் ஸமபிப்லுதம் – யார் ஒருவனை, அவன் பிறக்கும்போதே மதுஸூதனன் கடாக்ஷிப்பானோ, அவன் ஸத்வகுணத்துடன் கூடியவன் ஆவான்; இவன் எப்போதும் மோக்ஷத்தைப் பற்றியே சிந்தித்தபடி இருப்பான்; யார் ஒருவனை, அவன் பிறக்கும்போது ப்ரம்மனோ ருத்ரனோ கண்டார்கள் என்றால், அவன் எப்போதும் ரஜோ மற்றும் தாமஸ குணங்கள் நிறைந்தவனாகவே இருப்பான் – என்று வேறுபடுத்திக் கூறியது.

**மூலம்** - இவர்கள் முமுக்ஷுக்களுக்கு அநுபாஸ்யரென்னுமிடமும், இவர்களுக்குக் காரணபூதனான ஸர்வேச்வரனே இவர்களுக்கும் மற்றுமுள்ள முமுக்ஷுக்களுக்கும் உபாஸ்யரென்னுமிடமும் “ஸம்ஸாரார்ணவ மக்நாநாம் விஷயாக்ராந்த சேதஸாம் விஷ்ணுபோதம் விநா நாந்யத் கிஞ்சித் அஸ்தி பராயணம்” என்றும், “ப்ரஹ்மாணாம் சிதிகண்டம் ச யாச்சாந்யா தேவதாஸ்ஸ்ம்ருதா: ப்ரதிபுத்தா ந ஸேவந்தே யஸ்மாத் பரிதிதம் பலம்” என்றும், “ஹரிரேக: ஸதா த்யேயோ பவத்பி: ஸத்த்வ ஸம்ஸ்திதை:, உபாஸ்ய: அயம் ஸதா விப்ரா உபாய: அஸ்மி ஹரே: ஸ்ம்ருதௌ” என்றும் சொல்லப்பட்டது.

**விளக்கம்** – ப்ரம்மன், ருத்ரன் போன்றவர்கள் முமுக்ஷுக்களால் வழிபட அவசியம் அற்றவர்கள் என்பதும், இந்த தெய்வங்களுக்குக் காரணமாக உள்ள நாராயணனே இந்தத் தெய்வங்களாலும் முமுக்ஷுக்களாலும் உபாஸிக்கப்பட வேண்டியவன் என்பதும் கீழே உள்ள ப்ரமாணங்களில் காணலாம்:

- விஷ்ணு தர்மம் (1-59) - ஸம்ஸாரார்ணவ மக்நாநாம் விஷயாக்ராந்த சேதஸாம் விஷ்ணுபோதம் விநா நாந்யத் கிஞ்சித் அஸ்தி பராயணம் – ஸம்ஸாரம் என்னும் கடலில் மூழ்கி, உலக விஷயங்களில் சிக்குண்ட மனதை உடையவர்களை கரையேற்றும் ஓடம் விஷ்ணுவே அல்லாமல், அவர்களால் அடையக்கூடிய சிறந்தது வேறு ஏதும் இல்லை.

- மஹாபாரதம் சாந்திபர்வம் (350-36) - ப்ரஹ்மாணாம் சிதிகண்டம் ச யாச்சாந்யா தேவதாஸ்ஸ்ம்ருதா: ப்ரதிபுத்தா ந ஸேவந்தே யஸ்மாத் பரிதிதம் பலம் – விவேகம் உள்ளவர்கள் ப்ரம்மன், ருத்ரன் போன்ற தேவதைகளை வணங்குவதில்லை, காரணம் இவர்கள் அளிக்கும் பலன்கள் மிகவும் அற்பமானவையே ஆகும்.

- ஹரிவம்ஸம் (132-8.14) - ஹரிரேக: ஸதா த்யேயோ பவத்பி: ஸத்த்வ ஸம்ஸ்திதை: - சிவன் கூறுவது, “ஸத்வ குணம் கொண்ட அந்தணர்களே! உங்களால் எப்போதும் த்யானிக்கப்பட வேண்டியவன் ஸ்ரீஹரி ஒருவனே”.

- ஹரிவம்ஸம் - உபாஸ்ய: அயம் ஸதா விப்ரா உபாய: அஸ்மி ஹரே: ஸ்ம்ருதௌ – சிவன் கூறுவது, “ஸ்ரீஹரி மட்டுமே உபாஸிக்கத் தகுந்தவன் ஆவான். அவனை நீங்கள் த்யானம் செய்வதற்கு ஏற்ற வழிகாட்டியாக நான் இருக்கிறேன்”.

**மூலம்** - இத்தாலே இவர்களை மோக்ஷோபகாரகராகச் சொன்னவிடங்களும் ஆசார்யாதிகளைப் போலே ஞானாதிஹேதுக்களாகையாலே என்றும் நிர்ணிதம். இவ்வர்த்தம் “ஸூர்யஸ்யைவ து யோ பக்த: ஸப்த ஜன்மாந்தரம் நர: தஸ்யைவ து ப்ரஸாதேந ருத்ர பக்த: ப்ரஜாயதே சங்கரஸ்ய து யோ பக்த: ஸப்த ஜன்மாந்தரம் நர: தஸ்யைவ து ப்ரஸாதேந விஷ்ணு பக்த: ப்ரஜாயதே வாஸுதேவஸ்ய யோ பக்த: ஸப்த ஜன்மாந்தரம் நர: தஸ்யைவ து ப்ரஸாதேந வாஸுதேவ ப்ரலீயதே” என்கிற இடத்திலும் விவக்ஷிதம்.

**விளக்கம்** – ஒரு சில இடங்களில் இந்தத் தெய்வங்கள் மோக்ஷத்திற்கான உபாயங்கள் என்பது போன்று கூறப்பட்டாலும், அவர்கள் ஆசார்யர்கள் போன்று மோக்ஷத்திற்கான ஞானம் மட்டுமே அளிக்கிறார்கள் என்பதை உணர வேண்டும். இதனை - ஸூர்யஸ்யைவ து யோ பக்த: ஸப்த ஜன்மாந்தரம் நர: தஸ்யைவ து ப்ரஸாதேந ருத்ர பக்த: ப்ரஜாயதே சங்கரஸ்ய து யோ பக்த: ஸப்த ஜன்மாந்தரம் நர: தஸ்யைவ து ப்ரஸாதேந விஷ்ணு பக்த: ப்ரஜாயதே வாஸுதேவஸ்ய யோ பக்த: ஸப்த ஜன்மாந்தரம் நர: தஸ்யைவ து ப்ரஸாதேந வாஸுதேவ ப்ரலீயதே – ஏழு பிறவிகளில் சூர்யனிடம் பக்தி கொள்ளும் ஒருவன், சூர்யனின் அருள் காரணமாக ருத்ரனின் பக்தனாகிறான்; ஏழு பிறவிகளில் ருத்ரனிடம் பக்தி கொள்ளும் ஒருவன், ருத்ரனின் அருள் காரணமாக விஷ்ணுவின் பக்தனாகிறான்; ஏழு பிறவிகளில் வாஸுதேவனிடம் பக்தி கொள்ளும் ஒருவன், வாஸுதேவனின் அருள் காரணமாக வாஸுதேவனிடமே செல்கிறான் – என்பதன் மூலம் அறியலாம்.

**மூலம்** - இப்படி ஸூர்யபக்த்யாதிகள் பரஸ்பரயா பகவத்பக்த்யாதிகளிலே மூட்டுவதும் பராவர தத்த்வங்களிலே ஏக்யபுத்தியும் வ்யத்யயபுத்தியும் ஸமத்வபுத்தியும் மற்றும் இப்புடைகளிலே வரும் மதிமயக்கங்களும் ஆஸுரஸ்வபாவத்தாலே ஒரு விஷயத்தில் ப்ரத்வேஷாதிகளுமின்றிக்கே ஸூர்யாதிகளைப் பற்றுமவர்களுக்கே என்னுமிடத்தை “யே து ஸாமாந்ய பாவேந மந்யந்தே புருஷோத்தமம் தே வை பாஷாண்டிநோ ஜ்ஞேயா: ஸர்வகர்ம பஹிஷ்க்ருதா:” இத்யாதிகளிலே கண்டு கொள்வது.

**விளக்கம்** – இப்படியாக சூர்யன் முதலானவர்களிடம் கொள்ளும் பக்தியானது எம்பெருமானிடம் இட்டுச்செல்லும். ஆயினும் இது எப்போது நிகழும் என்றால், எம்பெருமானின் மேன்மையைப் பற்றிய ஐயமோ, அவன் கீழ் உள்ள மற்ற ஜீவாத்மாக்களைப் பற்றிய மயக்கமும் இல்லாமல் இருந்தாலே ஆகும். இத்தகைய மயக்கங்கள் எவை என்றால் – எம்பெருமானும் இவர்களும் ஒன்றே, ஜீவாத்மாவே பரம்பொருள், இவை அனைத்தும் எம்பெருமானுக்கு நிகரான மேன்மை உடையவை, அவர்களிடம் இயல்பான அசுரத்தன்மை இல்லாமை – போன்றவையாகும். இதனை - யே து ஸாமாந்ய பாவேந மந்யந்தே புருஷோத்தமம் தே வை பாஷாண்டிநோ ஜ்ஞேயா: ஸர்வகர்ம பஹிஷ்க்ருதா: - புருஷோத்தமனாகிய எம்பெருமானும் மற்ற அற்ப தேவதைகளும் ஒன்றே என எண்ணுபவர்கள் பாஷாண்டிகள் (வேஷதாரிகள்) என அறியவேண்டும்; அவர்களுக்கு எந்தவிதமான கர்மம் இயற்றும் அதிகாரமும் இல்லை என அறியவேண்டும் – என்ற ச்லோகம் மூலம் அறியலாம்.

**மூலம்** - இப்படி ஞாநாதிகளில் மாறாட்டம் உடையார்க்கு தேவதாந்தரபக்தி உண்டேயாகிலும் பகவந்நிக்ரஹத்தாலே ப்ரத்யவாயமே பலிக்கும். ஆகையால், "த்வம் ஹி ருத்ர மஹாபாஹோ மோஹ சாஸ்த்ராணி காரய தர்சயித்வா அல்பமாயாஸம் பலம் சித்ரம் ப்ரதர்சய" என்கிறபடியே மோஹநசாஸ்த்ரங்களிலே த்ருஷ்டபல ஸித்தியை உண்டாக்கினதுவும் அவற்றையிட்டு மோஹிப்பித்து நரகத்திலே விழவிடுகைக்காக வத்தனை.

**விளக்கம்** – இப்படிப்பட்டவர்கள் மற்ற தேவதைகளிடம் பக்தியுடன் உள்ளபோதிலும், தங்கள் அறிவுமயக்கம் காரணமாகப் பகவானால் தண்டிக்கப்பட்டு, பாவங்களையே தழுவுவார்கள். வராஹ புராணம் (70-36) - த்வம் ஹி ருத்ர மஹாபாஹோ மோஹ சாஸ்த்ராணி காரய தர்சயித்வா அல்பமாயாஸம் பலம் சித்ரம் ப்ரதர்சய – நீண்ட கைகள் கொண்ட ருத்ரனே! மக்களுக்கு மயக்கம் உண்டாக்கக் கூடிய சாஸ்த்ரங்களை நீ இயற்றுவாயாக! அவற்றில் மிகவும் குறைவான சிரமங்கள் மூலமே, விரைவான பலன் கிட்டும் என்று போலியாகக் காண்பிப்பாயாக – என்று கூறியது. இதன் மூலம் மயக்கம் உண்டாக்கவல்ல அந்த சாஸ்த்ரங்கள் விரைவான பலனை அளிப்பதாக உள்ளபோதிலும், அவை மனிதர்களை மயக்கி நரகத்தில் விழவைக்கும் வலிமை கொண்டவை என்று அறியவேண்டும்.

**மூலம்** - ஸத்யஸங்கல்பனான பகவான், ஒருவனை நிக்ராஹவனாக்கக் கோலினால் "ப்ரஹ்மா ஸ்வயம்பூச்சதுராநநோ வா ருத்ராஸ் த்ரிநேத்ரஸ் த்ரிபுராந்தகோ வா இந்த்ரோ

மஹேந்த்ர: ஸுரநாயகோ வா த்ராதும் ந சக்தா யுதி ராமவத்யம்" என்கிறபடியே தேவதாந்தரங்கள் ரக்ஷிக்க சக்தரல்லர்கள். ஸர்வதேவதைகளும் ஸுக்ரீவமஹாராஜாதிகளைப் போலே தனக்கு அந்தரங்கபூதராயிருப்பாரும் தன்னையடைந்தானொருவனை நலிய நினைத்தால் "ஸக்ருதேவ ப்ரபந்நாய" என்கிறபடியே ஸத்யப்ரதிஜ்ஞனான தன் வ்ரதம் குலையாமைக்காக ராவணாதிகளைப் போலே துஷ்ப்ரக்ருதிகளாய் நிராகரிக்க வேண்டுவாரை நிராகரித்தும், ஸ்ரீவாநர வீரர்களைப் போலே ஸத்ப்ரவ்ருத்திகளாய் அநுகூலிப்பிக்க வேண்டுவாரை அநுகூலிப்பித்தும் ஸர்வேச்வரன் ரக்ஷிக்கும்.

**விளக்கம்** – ஸத்யஸங்கல்பனாக உள்ள எம்பெருமான், ஒரு மனிதன் தன்னால் தண்டிக்கப்பட வேண்டியவன் என்று முடிவு செய்துவிட்டால், அந்த மனிதனை எந்த தேவர்களும் காக்கவல்லவர்கள் அல்லர் (யாராலும் காக்க இயலாது). இதனை இராமாயணம் ஸுந்தரகாண்டம் (51-45) - ப்ரஹ்மா ஸ்வயம்பூச்சதுராநநோ வா ருத்ராஸ் த்ரிநேத்ரஸ் த்ரிபுராந்தகோ வா இந்த்ரோ மஹேந்த்ர: ஸுரநாயகோ வா த்ராதும் ந சக்தா யுதி ராமவத்யம் – ஒருவன் இராமனால் கொல்லப்பட வேண்டியவன் என்று முடிவான பின்னர், அவனை ப்ரம்மனால் காக்க இயலாது, மூன்று கண்கள் கொண்டவனாக மூன்று உலகங்களை அழித்தவனாக உள்ள சிவனால் காக்க இயலாது, தேவர்களின் தலைவன் என்றும் மஹேந்த்ரன் என்றும் போற்றப்படும் இந்திரனாலும் காக்க இயலாது – என்றது. ஆனால் ஒருவன் எம்பெருமானிடம் அடைக்கலம் என்று புகுந்துவிட்டான் என்றால் - அந்த மனிதனை அனைத்து தேவர்களும் எதிர்த்தாலும் சரி, வானர அரசனான சுக்ரீவன் போன்ற எம்பெருமானின் நெருங்கிய நண்பர்களே எதிர்த்தாலும் சரி, அந்த மனிதனை எம்பெருமான் ரக்ஷித்தே தீருவான். இராமாயணம் யுத்தகாண்டம் (18-33) - ஸக்ருதேவ ப்ரபந்நாய – ஒருமுறை சரணாகதி செய்தாலும் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஸத்யத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற உறுதி குலையாமல் இருக்கவேண்டும் என்பதற்காக, அந்த மனிதனைக் காத்தே தீருவான். இராவணன் போன்று அழிக்கப்பட வேண்டியவர்களை அழித்தும், வானரர்கள் போன்று இதமாகப் பேசவேண்டியவர்களிடம் இதமாகப் பேசியும் விபீஷணனைக் காத்தான் அல்லவோ?

**மூலம் -** தேவதாந்தரங்கள் பக்கல் "காங்க்ஷந்த: கர்மணாம் ஸித்தம் யஜந்த இஹ தேவதா: க்ஷிப்ரம் ஹி மானுஷே லோகே ஸித்திர்பவதி கர்மஜா" என்கிறபடியே விஷமது துல்யங்களான க்ஷுத்ரபலங்கள் கடுக ஸித்திக்கும். அவை தாமும் "லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந்; ஏஷ மாதா பிதா சாபி யுஷ்மாகம் ச பிதாமஹ: மயா அநுசிஷ்டோ பவிதா ஸர்வம்பூத வரப்ரத:; அஸ்ய சைவாநுஜோ ருத்ரோ லலாடாத்ய: ஸமுத்தித: ப்ரஹ்மாநுசிஷ்டோ பவிதா ஸர்வஸத்த்வ வரப்ரத:" இத்யாதிகளிற்படியே பகவத்தீநங்கள். "யஸ்மாத் பரிமிதம் பலம். ஸாத்விகேஷு து கல்பேஷு

மஹாத்ம்யமாதிகம் ஹரே: தேஷ்வேவ யோகஸம்ஸித்தா கமிஷ்யந்தி பராம் கதிம்” என்கையாலே அவர்கள் பக்கல் மோக்ஷம் விளம்பித்தும் கிடையாது.

**விளக்கம்** – மற்ற தேவதைகளை ஆராதிக்கும்போது, அற்பமான பலன்கள் உடனடியாகவே கிடைத்துவிடும். ஆனால் அவை விஷம் தடவிய இனிப்பு போன்றவையாகும். இதனைக் கீதையில் (4-12) - காங்க்ஷந்த: கர்மணாம் ஸித்தம் யஜந்த இஹ தேவதா: க்ஷிப்ரம் ஹி மானுஷே லோகே ஸித்திர்பவதி கர்மஜா – கர்மங்களுக்கான பலன் உடனடியாகக் கிட்டவேண்டும் என்று எண்ணுபவர்கள், இங்கு பல தேவதைகளையும் ஆராதிக்கின்றனர்; இதனால் இந்த உலகத்திலேயே கர்மங்களுக்கான பலன் வெகு விரைவாகக் கிடைத்து விடுகின்றது அல்லவோ – என்றான். அந்தத் தேவதைகளை அனைத்தும் தாங்கள் மனிதர்களுக்குப் பலன் அளிக்க பகவானையே அண்டியுள்ளன என்பதைக் கீழே உள்ள வரிகள் மூலம் உணரலாம்:

- ஸ்ரீமத் பகவத் கீதை (7-22) - லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந் – மற்ற தேவதைகளை ஆராதிப்பதால் அவற்றின் மூலம் பலனை அடைகிறான், அந்தப் பலன்கள் அவற்றுக்கு என்னாலேயே அளிக்கப்பட்டன.

- மஹாபாரதம் சாந்திபர்வம் (349: 76, 77) - ஏஷ மாதா பிதா சாபி யுஷ்மாகம் ச பிதாமஹ: மயா அநுசிஷ்டோ பவிதா ஸர்வம்பூத வரப்ரத:; அஸ்ய சைவாநுஜோ ருத்ரோ லலாடாத்ய: ஸமுத்தித: ப்ரஹ்மாநுசிஷ்டோ பவிதா ஸர்வஸத்த்வ வரப்ரத: - தேவர்களிடம் எம்பெருமான், “இந்த நான்முகன் உங்களுக்குத் தாயாகவும் தந்தையாகவும் பிதாமகனாகவும் உள்ளான். எனது ஆணைக்கு ஏற்ப அனைத்து வரங்களையும் உங்களுக்கு அவன் அளிப்பான். எனது நெற்றியில் இருந்து தோன்றுபவனும், ப்ரம்மனுக்குப் பின்னால் வந்தவனும் ஆகிய சிவன் ப்ரம்மனின் கட்டளைகளுக்கு ஏற்ப அனைவருக்கும் அனைத்து வரங்களையும் அளிப்பான்”, என்றான்.

மஹாபாரதம் சாந்திபர்வம் (350-36) - யஸ்மாத் பரிமிதம் பலம் – அவர்கள் (ப்ரம்மன் முதலானோர்) அளிக்கும் பலன்கள் மிகவும் அற்பமானவை – என்பது காண்க. மத்ஸ்ய புராணம் (290-16) - ஸாத்விகேஷு து கல்பேஷு மஹாத்ம்யமாதிகம் ஹரே: தேஷ்வேவ யோகஸம்ஸித்தா கமிஷ்யந்தி பராம் கதிம் – ஸத்த்வ குணம் மேலோங்கியுள்ள காலகட்டங்களில், ஸ்ரீஹரியின் மேன்மை ஓங்கியுள்ளது; அந்த மேன்மையில் மனதை நிலைநிறுத்தி, சாஸ்த்ர வழிகளில் யோகம் இயற்றுபவர்கள் மிக உயர்ந்த கதியைப் பெறுகின்றனர் – என்றது. இதன் மூலம் எத்தனை காலம் ஆனாலும் மற்ற தேவதைகளால் மோக்ஷம் என்பதை அளிக்க இயலாது என்றாகிறது.

**மூலம் -** ஸர்வேச்வரன் பக்கல் “யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ:” இத்யாதிகளிற்படியே அதிசயிதமான ஐச்வர்யாதிகளும் வரும். பின்பு விடாய்த்தீரக் கங்காஸ்நாநம் பண்ணப் பாபம் போமாப்போலே விஷயஸ்வபாவத்தாலே ஆநுஷங்கிகமாகப் பாபக்ஷயம் பிறந்து ரஜஸ்தமஸ்ஸுக்கள் தலைசாய்ந்து ஸத்த்வோந்மேஷமுண்டாய் ஜநக அம்பரீஷ கேகயாதிகளுக்குப் போலே க்ரமேண மோக்ஷபர்யந்தமாய் விடும். மோக்ஷோபாய நிஷ்டனாம்போது “பஹூநாம் ஜந்மநாமந்தே ஞானவாந் மாம் ப்ரபத்யதே; யே ஜந்மகோடிபி: ஸித்தா: தேஷாமந்தே அத்ர ஸம்ஸ்திதி:; ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ த்யான ஸமாதிபி: நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே” என்கிறபடியே விளம்பமுண்டு. மோக்ஷருசி பிறந்து வல்லதோருபாயத்திலே மூண்டால் “தேஷாமஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்யு ஸம்ஸார ஸாகராத் பவாமி ந சிராத் பார்த்த மய்யாவேசித சேதஸாம்” என்கிறபடியே மோக்ஷஸித்திக்கு விளம்பமில்லை.

**விளக்கம்** – ஸர்வேச்வரனிடமிருந்து ஒரு மனிதனுக்கு எல்லையற்ற ஐச்வர்யம் கிட்டும் என்பதை மஹாபாரதம் - யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ: - ஆயிரம் கோடி யுகங்கள் விஷ்ணுவைக் குறித்துத் தவம் இயற்றி நான்முகன் ப்ரம்ம பதவி பெற்றான் – என்பதன் மூலம் அறியலாம். அதன் பின்னர் நிகழ்வது – தனது தாகம் தீர்த்துக்கொள்ள கங்கையில் இறங்கியவனின் பாவம் மறைமுகமாக அழிந்துவிடுவது போல, இவனது பாவங்களும் நீங்கிவிடுகிறது. அவனது ரஜஸ் மற்றும் தாமஸ குணங்கள் மெதுவாக மறைந்து, ஸத்த்வ குணம் மேலோங்குகிறது. அதன் பின்னர் அந்த மனிதன் – ஜநகன், அம்பரீஷன், கேகயன் போன்றவர்கள் போலே மோக்ஷம் பெறுகிறான். ஆனால் இவ்விதமான மோக்ஷம் உண்டாக சற்று தாமதம் ஏற்படலாம். இதனைக் கீழே உள்ள வரிகள் மூலமாக உணரலாம்:

- ஸ்ரீமத் பகவத் கீதை (7-19) - பஹூநாம் ஜந்மநாமந்தே ஞானவாந் மாம் ப்ரபத்யதே - புண்ணியம் நிறைந்த பல பிறவிகளுக்குப் பின்னர் ஒருவன் ஞானியாகி என்னை வணங்குகிறான்.

- பௌஷ்கர ஸம்ஹிதை (38-305) - யே ஜந்மகோடிபி: ஸித்தா: தேஷாமந்தே அத்ர ஸம்ஸ்திதி: - பல கோடி பிறவிகளில் எம்பெருமானிடமிருந்து ஐச்வர்யம் போன்றவற்றைப் பெற்றவர்களே பக்தி முதலியவற்றில் நிலைநிற்பார்கள்.

- பாஞ்சராத்ரம் - ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ த்யான ஸமாதிபி: நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே – பல ஆயிரம் பிறவிகளில் செய்த தவம், த்யானம் மற்றும் யோகம் ஆகிய காரணங்களால் தங்கள் பாவங்கள் அனைத்தும் நீங்கப்பெற்றவர்களே க்ருஷ்ணனிடம் பக்தியைப் பெறுவார்கள்.

ஆனால் மோக்ஷத்தின் மீது ஆழ்ந்த ருசி உண்டாகி, சிறந்த ஓர் உபாயத்தைக் கைக்கொள்ளும்போது, மோக்ஷம் உடனடியாகவே கிட்டிவிடுகிறது. இதனைக் கண்ணன் (கீதை: 12-7) - தேஷாமஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்யு ஸம்ஸார ஸாகராத் பவாமி ந சிராத் பார்த்த மய்யாவேசித சேதஸாம் – யார் என்னிடம் மனம் வைத்தார்களோ அவர்களை, அவர்களுக்கு யமன் போன்றுள்ள ஸம்ஸாரக் கடலில் இருந்து மிகவும் விரைவாக நான் தூக்கிவிடுகிறேன் – என்றான்.

**மூலம்** - ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனுக்குத் தான் கோலினதேயளவு, வேறு விளம்பா விளம்பங்களுக்குக் குறியில்லை. இந்நியமங்களெல்லாம் "ஸ்வாதந்த்ர்யமைச்வரம பர்யநுயோஜ்யமாஹு:" என்கிற நிரங்குச ஸ்வச்சந்ததையாலே ஸித்தங்களென்று ப்ரமாண பரதந்த்ரருக்கு ஸித்தம். இவ்வர்த்தங்கள் இப்படித் தெளியாதார்க்கே தேவதாந்தரங்கள் ஸேவ்யங்களென்னுமிடம் ப்ரதிபுத்தவர்ஜம் ஸேவ்யந்து என்று வ்யவஸ்தை பண்ணப்பட்டது.

**விளக்கம்** – ப்ரபத்தி செய்தவன் மோக்ஷம் பெறத் தாமதம் செய்ய விரும்பினாலோ அல்லது மோக்ஷம் அடையாமல் இருக்க விரும்பினாலோ அல்லாமல் (அதாவது அவன் தாமதிக்க விருப்பம் கொண்டால் அன்றி), அவனுக்கு மோக்ஷம் பெறுவதற்குத் தாமதமோ அல்லது மோக்ஷம் கைகூடாமை என்பதோ இல்லை. இவை ப்ரமாணங்களை ஏற்பவர்களால் கண்டிப்பாக ஒப்புக்கொள்ளப்படும். இதன் காரணம் இது போன்ற செயல்கள் யாராலும் தடுக்க இயலாத ஈச்வரனின் ஸங்கல்பத்தால் நடைபெறுகின்றன. இதனை ஸ்ரீவைகுண்ட ஸ்தவம் (55) - ஸ்வாதந்த்ர்யமைச்வரம பர்யநுயோஜ்யமாஹு: - ஸர்வேச்வரனின் ஈச்வரத்தன்மை என்பது சுதந்திரமானது, யாராலும் கேள்வி கேட்க இயலாதது – என்று கூறியது. இப்படிப்பட்ட ஆழ்பொருட்களை அறியாமல் உள்ளவர்களுக்கே மற்ற தேவதைகளின் ஆராதனம் - ப்ரதிபுத்தவர்ஜம் ஸேவ்யந்து – விவேகம் இல்லாத மனிதர்களாலேயே மற்ற தேவதைகள் ஆராதிக்கப்படுகின்றனர் – என்று கூறப்பட்டது.

**மூலம்** - இத்தேவதாந்தரங்களை பகவச்சரீரமென்று அறியாதே பற்றினார்க்குச் சார்வாகனாயிருப்பான் ஒரு ஸேவகன் ராஜாவினுடம்பிலே சந்தனாதிகளைப் ப்ரயோகிக்க

ராஜசரீரத்தில் ஆத்மாப்ரீதனமாப்போலே வஸ்துவ்ருத்தியில் ஸர்வேச்வரனே ஆராத்யனானாலும். “யே அப்யந்யதேவதாபக்தா: யஜந்தே ச்ரத்தயா அந்விதா: தே அபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதி பூர்வகம்” என்கிறபடியே சாஸ்த்ரார்த்த வைகல்ய முண்டானபடியாலே அவற்றிற் சொன்ன பலம் விகலமாம். பகவச்சரீரங்களென்றறிந்து க்ஷுத்ர பலங்களைக் கடுகப் பெற வேணுமென்கிற ராகவிசேஷத்தாலே அவர்களை உபாஸிப்பார்க்கு அவ்வோ பலங்கள் பூர்ணங்களாம். இப்படி அறிந்தால் பகவான் தன்னையே “ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்தார்த்தீ” என்கிறபடியே பலாந்தரங்களுக்காகவும் பற்றினால் அந்த பலங்கள் அதிசயிதங்களாம். அநந்யப்ரயோஜநராய்ப் பற்றினார்க்கும் “சரீராரோக்யமர்த்தாம்ச்ச போகாம்ச்சைவ ஆநுஷங்கிகாந் ததாதி த்யாயிநாம் நித்யம் அபவர்க்கப்ரதோ ஹரி:” என்கிறபடியே பலாந்தரங்கள் ஆநுஷங்கிகமாக வரும். இவ்வர்த்தத்தை ஆநுஷங்க ஸித்தைச்வர்யரான ஸ்ரீகுலசேகரப் பெருமாளும் “நின்னையே தான் வேண்டி நீள்செல்வம் வேண்டாதான் தன்னையே தான் வேண்டும் செல்வம்போல்” என்று அருளிச்செய்தார். “அபிலஷித துராப யே புரா காமயோகா ஜலதிமிவ ஜலௌதாஸ்தே விசாந்தி ஸ்வயம் ந:” என்று ஈசாண்டாலும் தாமருளிச் செய்த ஸ்தோத்ரத்திலே நிபந்தித்தார். இது வித்யாவிசேஷ ராகவிசேஷாதிநியதம்.

**விளக்கம்** – ஒரு சிலர் மற்ற தேவதைகள் அனைத்தும் எம்பெருமானின் சரீரங்கள் என்று அறியாமல், அந்தத் தேவதைகளை ஆராதிப்பார்கள். இவர்கள் – ஆத்மா என்பதே இல்லை, உடல் மட்டுமே உண்மை என்னும் கருத்தை உடைய அரசசேவகன் ஒருவன், அந்த அரசனுக்கு ஆத்மா உள்ளது என்று அறியாமல் அரசனுக்குச் சந்தனம் பூசுதல் முதலான வேலைகளைச் செய்தபடி உள்ளது போன்றவர்கள் ஆவர். அந்தச் சேவகனின் செயலால் அரசனின் ஆத்மா மகிழ்வது போன்று, மற்ற தேவதைகள் குறித்த ஆராதனம் கண்டு, அவர்களைத் தனது சரீரமாக உடைய ஸர்வேச்வரன் மகிழ்வே கொள்கிறான். ஆனால், இந்தத் தேவதைகளின் ஆராதனம் மூலம் உண்டாகும் பலங்கள் அற்பமானவையாகவும் முழுமை இல்லாததாகவும் இருக்கும். கீதையில் (9-23) - யே அப்யந்யதேவதாபக்தா: யஜந்தே ச்ரத்தயா அந்விதா: தே அபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதி பூர்வகம் – அர்ஜுனா! மற்ற தேவதைகளிடம் பக்தி கொண்டு, அவர்களை மிகவும் நம்பிக்கையுடன் ஆராதனை செய்பவர்கள் என்னையே மறைமுகமாக ஆராதனை செய்கின்றனர், ஆயினும் அவர்கள் சாஸ்த்ர வழிகளின்படி ஆராதனை செய்யாதவர்களே ஆவர் – என்றது காண்க. ஆனால் இப்படிப்பட்ட மற்ற தேவதைகள் எம்பெருமானின் சரீரங்கள் என்று அறிந்த கொண்டு, பலன்களை விரைவாகப் பெறவேண்டும் என்று எண்ணி, அந்தத் தேவதைகளின் ஆராதனை மூலம் பெறப்படும் பலங்கள் மிகவும் உயர்ந்தவையும், முழுமையானவையும் ஆகும். கீதையில் (7-16) - ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்தார்த்தீ – இழந்த செல்வத்தை மீண்டும் அடைய எண்ணுபவன், ஆத்ம

ஸ்வரூபத்தை அனுபவிக்க விரும்புபவன், புதிய செல்வங்கள் வேண்டுபவன் – என்று கூறியபடி சிறிய பலனுக்காக எம்பெருமானைப் பற்றுபவர்கள் மிகப்பெரிய பலன்களையே பெறுகின்றனர். வேறு பலன் எதனையும் எண்ணாமல், மோக்ஷத்தை மட்டுமே விரும்பி எம்பெருமானை அடைபவர்கள் குறித்து விஷ்ணுதர்மம் (74-43) - சரீராரோக்யமர்த்தாம்ச்ச போகாம்ச்சைவ ஆநுஷங்கிகாந் ததாதி த்யாயிநாம் நித்யம் அபவர்க்கப்ரதோ ஹரி: - தன்னைத் த்யானித்தபடி இருப்பவர்களுக்கு ஸ்ரீஹரி, அவர்கள் விரும்பும் மோக்ஷம் மட்டும் அல்லாமல் அவர்களுக்குத் தேவையான உடல் ஆரோக்யம், செல்வம், போகங்கள் ஆகிய அனைத்தையும் அளிக்கிறான் – என்றது. ஆக இவர்களுக்கு இத்தகைய செல்வங்கள் அவர்களால் வேண்டப்படாமலேயே கிட்டிவிடுகிறது என்று கருத்து. இத்தகைய செல்வங்கள் தானாகவே கிட்டப்பெற்றவரான குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியில் (5-9) - நின்னையே தான் வேண்டி நீள்செல்வம் வேண்டாதான் தன்னையே தான் வேண்டும் செல்வம்போல் – உன்னை மட்டுமே வேண்டி, மற்றைய பெரும் செல்வம் வேண்டாமல் நிற்பவர்களிடம், அந்தச் செல்வங்கள் தாங்களாகவே வர விரும்புவது போன்று – என்றார். ஈசாண்டன் - அபிலஷித துராப யே புரா காமயோகா ஜலதிமிவ ஜலௌதாஸ்தே விசாந்தி ஸ்வயம் ந: - எந்தச் செல்வங்கள் நம்மால் முன்பு ஆசைப்பட்டபோது கிடைக்காமல் இருந்தனவோ, அவை அனைத்தும் நதிகள் கடலில் தாமாகவே சென்று விழுவது போன்று, இப்போது தாமாகவே எந்த முயற்சியும் செய்யாத நம்மிடம் ஓடிவருகின்றன – என்றது காண்க. ஒரு கேள்வி எழலாம் – ஏன் மோக்ஷம் மட்டுமே விரும்புபவர்களுக்கு மற்ற செல்வங்கள் கிட்டாமல் உள்ளன? இது அவர்கள் செய்யும் ஒருவகை த்யானம் காரணமாகவும், அவர்கள் பின்பற்றும் வித்யை காரணமாகவும், கடந்த பிறவிகளில் உண்டான விருப்பம் காரணமாகவும் ஆகும்.

## ஸ்ரீமந் நாராயணனுக்கும் மற்ற தேவதைகளுக்கும் உள்ள வேறுபாடுகள் – ஆழ்வார்களின் திருவாக்கில் உள்ளவை

**மூலம் -** இப்படி ஸர்வேச்வரனுக்கும் ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் உண்டான விசேஷங்களை "எம்பெருமானுண்டுமிழ்ந்த எச்சில் தேவரல்லாதார் தாமுளரே" என்றும், "நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்" என்றும், "மேவித் தொழும் பிரமன் சிவன் இந்திரனாதிக்கெல்லாம் நாவிக்கமல முதற்கிழங்கு" என்றும், "தீர்த்தனுலகளந்த சேவடி மேல் பூந்தாமஞ்சேர்த்தி அவையே சிவன் முடிமேல் தான் கண்டு பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை" என்றும், "வானவர் தம்மையாளுபவனும் நான்முகனும் சடை முடியண்ணலும் செம்மையானவன் பாதபங்கயம் சிந்தித்தேத்தித்திரிவரே" என்றும், "பேச நின்ற

சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகனவனே" என்றும், "ஒற்றைவிடையனும் நான்முகனும் உன்னையறியாப் பெருமையோனே" என்றும், "எருத்துக்கொடியுடையானும் பிரமனும் இந்திரனும் மற்றுமொருத்தரும் இப்பிறவியென்னும் நோய்க்கு மருந்தறிவாருமில்லை" என்றும் பல முகங்களாலே அருளிச் செய்தார்கள்.

**விளக்கம்** – இப்படியாக ப்ரம்மன், ருத்ரன் முதலானவர்களுக்கும் ஸர்வேச்வரனுக்கும் உள்ள வேறுபாடுகளை ஆழ்வார்கள் கீழே உள்ளபடி அருளிச் செய்தனர்.

- பெரிய திருமொழி (11-6-2) - எம்பெருமானுண்டுமிழ்ந்த எச்சில் தேவரல்லாதார் தாமுளரே – அவன் ப்ரளய காலத்தில் தனது வயிற்றில் வைத்து, பின்னர் உமிழ்ந்தான். இப்படி அல்லாத தேவர்கள் யாரும் உள்ளனரோ?

- நான்முகன் திருவந்தாதி (1) - நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்

- திருவாய்மொழி (10-10-3) - மேவித் தொழும் பிரமன் சிவன் இந்திரனாதிக்கெல்லாம் நாவிக்கமல முதற்கிழங்கு – உன்னையே வணங்கி நிற்கும் ப்ரம்மன், சிவன், இந்த்ரன் ஆகியோர்கள் தோன்றுவதற்குக் காரணமாக உள்ள திருநாபிக்கமலத் தாமரைக்குக் கிழங்கு போன்றவனே

- திருவாய்மொழி (2-8-6) - தீர்த்தனுலகளந்த சேவடி மேல் பூந்தாமஞ்சேர்த்தி அவையே சிவன் முடிமேல் தான் கண்டு பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை – மூன்று உலகங்களையும் அளந்த எம்பெருமானின் திருவடிகளில் சேர்க்கப்பட்ட மாலைகள், சிவனின் தலையில் உள்ளதை அர்ஜுனன் கண்டான், இதன் மூலம் இவனே ஸர்வேச்வரன் என்று தெளிந்தான்.

- திருவாய்மொழி (3-6-4) - வானவர் தம்மையாளுபவனும் நான்முகனும் சடை முடியண்ணலும் செம்மையானவன் பாதபங்கயம் சிந்தித்தேத்தித்திரிவரே – தேவர்களை ஆளும் இந்த்ரன், நான்முகன், சிவன் ஆகிய அனைவரும் மிகச்சிறந்தவனான எம்பெருமானின் திருவடித்தாமரைகளை எண்ணி, புகழ்ந்தபடி இருப்பர்.

- திருவாய்மொழி (4-10-4) - பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகனவனே

- பெரியாழ்வார் திருமொழி (4-10-4) - ஒற்றைவிடையனும் நான்முகனும் உன்னையறியாப் பெருமையோனே

- பெரியாழ்வார் திருமொழி (5-3-6) - எருத்துக்கொடியுடையானும் பிரமனும் இந்திரனும் மற்றுமொருத்தரும் இப்பிறவியென்னும் நோய்க்கு மருந்தறிவாருமில்லை – காளை மாட்டைத் தனது கொடியாகக் கொண்டவனும், ப்ரம்மனும், இந்த்ரனும் ஆகிய யாரும் ஸம்ஸாரம் என்னும் பிறவிப் பிணிக்கு மருந்து அறிந்தவர்கள் அல்லர்.

## நாராயணனே உயர்ந்த தெய்வம் என்பது ரஹஸ்யத்ரயத்தில் உள்ள இடங்கள்

**மூலம் -** இப்பரதேவதா பாரமார்த்தம் திருமந்திரத்தில் ப்ரதமாக்ஷரத்திலும் நாராயண சப்தத்திலும், த்வயத்தில் ஸவிசேஷணங்களான நாராயண சப்தங்களிலும், சரமச்லோகத்தில் "மாம், அஹம்" என்கிற சப்தங்களிலும் அநுஸந்தேயம்.

**விளக்கம்** – நாராயணனே உயர்ந்த தெய்வம் என்னும் விஷயமானது திருமந்த்ரத்தில் உள்ள முதல் எழுத்தான "அ" என்பதிலும் (ஓம் என்பதில் உள்ள அ), நாராயண என்பதிலும் காணலாம். இதனை த்வய மந்த்ரத்தில் உள்ள ஸ்ரீ என்பதுடன் கூடிய நாராயண என்பதில் காணலாம். சரமச்லோகத்தில் – நான் – என்னும் பதத்தில் காணலாம்.

## நாராயணனே உயர்ந்த தெய்வம் என்று எண்ணாதவனுக்கு அவனைத் தவிர தன்னைக் காக்க யாரும் இல்லை என்னும் எண்ணம் ஏற்படாது

**மூலம் -** இத்தேவதா விசேஷ நிச்சயமுடையவனுக்கல்லது "கண்ணன் கண்ணலல்லதில்லையோர் கண்ணே" என்றும், "களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்", என்றும், "ஆவிக்கு ஓர் பற்றுக்கொம்பு நின்னலால் அறிகின்றிலேன் யான்" என்றும், "தருதுயரம் தடாயேல்" என்கிற திருமொழி முதலானவற்றிலும் சொல்லும் அநந்ய சரணத்வாவஸ்தை கிடையாது.

**விளக்கம்** – நாராயணன் மட்டுமே தங்களைக் காக்கவல்லவன் என்னும் நிலையானது ஆழ்வார்களின் பாசுரங்களில் பின்வருமாறு வெளிப்படுகின்றன:

- திருவாய்மொழி (2-2-1) - கண்ணன் கண்ணல்லதில்லையோர் கண்ணே – கண்ணன் அல்லாமல் ரக்ஷகன் வேறு யாரும் இல்லை.

- திருவாய்மொழி (5-8-8) - களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன் – நீ என் துன்பங்களை நீக்கினாலும் சரி, நீக்காவிட்டாலும் சரி, உன்னை அல்லாமல் அவற்றைப் போக்கவல்லவர் யாரும் இல்லை.

- திருவாய்மொழி (10-10-3) - ஆவிக்கு ஓர் பற்றுக்கொம்பு நின்னலால் அறிகின்றிலேன் யான் – உன்னை அல்லாமல் எனது ஆத்மாவுக்குப் பற்றுக்கொம்பு கிடையாது.

- பெருமாள் திருமொழி (5-1) - தருதுயரம் தடாயேல் – என் கர்மங்களுக்கு ஏற்றபடி எனக்கு உண்டாகும் துன்பங்களை நீ தடுக்காவிட்டால்....

இப்படிப்பட்ட நிலையானது நாராயணனே உயர்ந்த தெய்வம் என்று கொள்ளாதவர்களுக்கு ஏற்படாது.

## அவனுக்கு மட்டுமே அடிமையாக உள்ளதும், மற்ற தேவதைகளைக் கைவிடுவதும்

**மூலம் -** இந்தப் பரதேவதாபாரமார்த்தத்தைத் திருமந்த்ரத்திலே கண்டு ததீயபர்யந்தமாக தேவதாந்தர த்யாகமும் ததீய பர்யந்தமாக பகவச்சேஷத்வமும் ப்ரதிஷ்டிதமானபடியை "மற்றுமோர் தெய்வம் உளதென்றிருப்பாரோடு உற்றிலேன் உற்றதும் உன்னடியார்க் கடிமை" என்கிற பாட்டிலே ஸர்வேச்வரன் பக்கலிலே ஸர்வார்த்தக்ரஹணம் பண்ணின ஆழ்வாரருளிச் செய்தார்.

**விளக்கம்** – ஸர்வேச்வரனிடமிருந்து நேரடியாகவே உபதேசம் பெற்ற திருமங்கையாழ்வார், இவனைப் பற்றிய உண்மையை திருமந்த்ரம் மூலமாக உணர்ந்தார். இப்படியாக இவர் மற்ற தேவதைகளைக் கைவிட்டும், இவனுக்கு மட்டுமே அடிமையாக உள்ள நிலையையும் அடைந்தார். இதனை பெரியதிருமொழியில் (8-10-3) - மற்றுமோர் தெய்வம் உளதென்றிருப்பாரோடு உற்றிலேன் உற்றதும் உன்னடியார்க் கடிமை – உன்னைத் தவிர வேறு ஒரு தெய்வம் உள்ளது என்று கூறுபவர்களுடன் நான் வசிக்கமாட்டேன்; உனது அடியார்களுக்கு அடிமை செய்து கிடப்பதையே விரும்பினேன் – என்றார்.

**மூலம் -** இவர் "பாருருவி நீரெரிகால்" என்கிற பாட்டிலே பரிசேஷக்ரமத்தாலே விவாதவிஷயமான மூவரை நிறுத்தி அவர்கள் மூவரிலும் ப்ரமாணாநுஸந்தாநத்தாலே இருவரைக் கழித்துப் பரிசேஷித்த பரஞ்ஜ்யோதிஸ்ஸான ஒருவனை "முகிலுருவம் எம் அடிகளுருவம்" என்று நிஷ்கர்ஷித்தார். இந்த ரூபவிசேஷத்தையுடைய பரமபுருஷனே ஸர்வவேத ப்ரதிபாத்யமான பரதத்த்வமென்னும் இடத்தை ஸர்வவேத ஸார பூத ப்ரணவ ப்ரதி பாத்யதையாலே "மூலமாகிய ஒற்றையெழுத்தை மூன்று மாத்திரை உள்ளெழ வாங்கி வேலை வண்ணனை மேவுதிராகில்" என்று பெரியாழ்வார் அருளிச்செய்தார்.

**விளக்கம்** – திருநெடுந்தாண்டகம் (2) - பாருருவி நீரெரிகால் – பூமி, நீர், நெருப்பு, வாயு, ஆகாயம் ஆகியவற்றைப் படைத்தபின் – என்று தொடங்கும் பாசுரத்தில், அனைவராலும் பரவலாக ஆராயப்படும் மூன்று மூர்த்திகளையும் தன் முன்பாக நிறுத்துகிறார். பல ப்ரமாணங்களை உதவியுடன் இந்த மூவரில் இரண்டு மூர்த்திகளைத் தள்ளுகிறார். மீதம் உள்ள உயர்ந்த ஜோதியான நாராயணனை, திருநெடுந்தாண்டகம் (2) - முகிலுருவம் எம் அடிகளுருவம் – மேகம் போன்ற நிறம் கொண்ட என் நாராயணன் – என்றார். பெரியாழ்வாரும் இப்படியாக மேகம் போன்ற நிறமும் உருவும் கொண்டவனே உயர்ந்த தத்துவம் என்று வேதங்கள் முழங்குவதாகக் கூறுகிறார். இதனை தனது திருமொழியில் (4-5-4) - மூலமாகிய ஒற்றையெழுத்தை மூன்று மாத்திரை உள்ளெழ வாங்கி வேலை வண்ணனை மேவுதிராகில் – அனைத்து வேதங்களுக்கும் மூலமாக உள்ள ஓர் எழுத்தான, மூன்று மாத்திரை அளவுள்ள ப்ரணவத்தை யாருக்கும் கேட்காதபடி ஜபித்து, கடல் போன்ற நிறம் கொண்ட எம்பெருமானைத் த்யானம் செய்தால் – என்றார்.

## திவ்யதம்பதிகளே அனைத்துமாக உள்ளனர்

**மூலம் -** தைத்திரீயத்தில் ஸ்ரீய:பதித்வ சிஹ்நத்தாலே மஹாபுருஷனுக்கு வ்யாவ்ருத்தி ஓதினபடியே நினைத்துத் "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று உபக்ரமித்துச் "சார்வு நமக்கு" என்கிற பாட்டிலே ப்ரதிபுத்தரான நமக்குப் பெரிய பிராட்டியாருடனே இருந்து என்றும் ஒக்கப் பரிமாறுகிற இவனையொழிய ப்ராப்யாந்தரமும் சரண்யாந்தரமுமில்லை. இத்தம்பதிகளே ப்ராப்யரும் சரண்யரும் என்று நிகமிக்கப்பட்டது.

**விளக்கம்** – தைத்திரீய உபநிஷத்தில் மஹாலக்ஷ்மியின் நாயகனே உயர்ந்த தத்துவம் என்று முழங்கப்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு மற்ற தெய்வங்களிடம் நாராயணனை வேற்றுமைபடுத்தி மூன்றாம் திருவந்தாதியில் (1) - திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் – என்று ஆழ்வார் அருளிச்செய்தார். இப்படியாகத் தொடங்கிய

ஆழ்வார், மூன்றாம் திருவந்தாதியில் (100) - சார்வு நமக்கு – என்று நிறைவு செய்தார். இப்படியாக இந்த இறுதிப் பாசுரத்தின் மூலம் பெரிய பிராட்டியுடன் எப்போதும் நிற்கும் இவனே நமக்கு இலக்கும், சரணமடையும் இடமும் ஆவான் என்று அருளிச்செய்தார்.

**மூலம்** – இவ்வர்த்தத்தை “தேவதா பாரமார்த்யம் ச யதாவத்வேத்ஸ்யதே பவாந்”, “புலஸ்த்யேந யதுக்தம் தே ஸர்வமேதத்பவிஷ்யதி” என்று புலஸ்த்ய வஸிஷ்ட வரப்ரஸாதத்தாலே பரதேவதாபாரமார்த்ய ஞானமுடையனாய், பெரியமுதலியார் “தஸ்மை நமோ முநிவராய பராசராய” என்று ஆதரிக்கும்படியான ஸ்ரீபராசரப்ரஹ்மர்ஷி பரக்கப்பேசி “தேவ திர்யங் மநுஷ்யேஷு புந்நாம பகவாந் ஹரி: | ஸ்த்ரீநாம்நி லக்ஷ்மீமைத்ரேய நாநயோர்வித்யதே பரம்” என்று பரமரஹஸ்ய யோக்யனான ஸச்சிஷ்யனுக்கு உபதேசித்தான்.

**விளக்கம்** – இந்த உயர்ந்த தத்துவத்தை, உயர்ந்த ரஹஸ்யங்களைப் பெறும் தகுதியை உடைய தனது சிஷ்யனுக்கு பராசரமஹரிஷி உபதேசம் செய்தார். இதனை விஷ்ணு புராணம் (1-8-35) – தேவ திர்யங் மநுஷ்யேஷு புந்நாம பகவாந் ஹரி: ஸ்த்ரீநாம்நி லக்ஷ்மீமைத்ரேய நாநயோர்வித்யதே பரம் - மைத்ரேயரே! தேவர்கள், விலங்குகள், மனிதர்கள் என்றுள்ள பலவற்றில் ஆண்வர்க்கம் அனைத்தும் எம்பெருமானுக்கும், பெண்வர்க்கம் அனைத்தும் மஹாலக்ஷ்மிக்கும் அடங்கியவை ஆகும் – என்றார். இந்தப் பராசர மஹரிஷி எம்பெருமானைப் பற்றிய ஞானத்தை புலஸ்த்யர் மூலமாகவும், வசிஷ்டர் மூலமாகவும் பெற்றார். இவரைப் புலஸ்த்யர் (விஷ்ணு புராணம் : 1-1-26) - தேவதா பாரமார்த்யம் ச யதாவத்வேத்ஸ்யதே பவாந் – பரதேவதையை பற்றிய உண்மையை நீ அறிவாயாக – என்றும், வசிஷ்டர் (புராணம் : 1-1-26) - புலஸ்த்யேந யதுக்தம் தே ஸர்வமேதத்பவிஷ்யதி – புலஸ்த்யர் உனக்கு அருளிய அனைத்தும் கைகூடும் – என்றும் அருளினர். இவரை ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் (4) - தஸ்மை நமோ முநிவராய பராசராய – முனிவர்களில் உயர்ந்தவரான பராசர முனிவரை நான் வணங்குகிறேன் – என்று வணங்கினார்.

**மூலம்** - இத்தை மயர்வற மதிநலமருளப் பெற்று ஆத்யஸ்ய ந: குலபதே: என்கிறபடியே ப்ரபந்நஸந்தாந கூடஸ்தரான நம்மாழ்வாரும் “ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக்கண்ட சதிர் கண்டு” என்று அருளிச் செய்தார். இவ்விஷயத்தில் வக்த்வ்யமெல்லாம் சது:ச்லோகீ வ்யாக்யாநத்திலே பரபக்ஷ ப்ரதிக்ஷேபபூர்வகமாகப் பரக்கச் சொன்னோம். அங்கே கண்டு கொள்வது.

**விளக்கம்** – நாம் அடையும் இலக்காக, நமக்குச் சரணம் அளிக்கும் இடமாக பகவானுடன் பிராட்டியும் சேர்ந்தே உள்ளால் என்னும் கருத்தை, ப்ரபத்தி செய்தவர்களின் பரம்பரையில் முதலாவதாக உள்ளவரும், எம்பெருமானிடம் இருந்து தடுமாற்றம் இல்லாத ஞானத்தைப் பெற்றவரும் ஆகிய நம்மாழ்வார் திருவாய்மொழியில் (4-9-10) - ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக்கண்ட சதிர் கண்டு – அழகான கைவளையல்களுடன் கூடிய நீயும் பிராட்டியும் நிற்கையில் - என்று அருளிச்செய்தார்.

வாதியர் மன்னும் தருக்கச் செருக்கின் மறைகுலையச்
சாது சனங்கள் அடங்க நடுங்கத் தனித்தனியே
ஆதி எனாவகை ஆரணதேசிகர் சாற்றினர் – நம்
போதமரும் திருமாதுடன் நின்ற புராணனையே

**பொருள்** – தவறான வாதம் செய்பவர்கள் தங்களிடம் ஸ்திரமாக நிலைத்து நிற்கும் தர்க்கம் செய்யும் திறன் காரணமாகச் செய்ய முயன்றது என்னவெனில் – வேதங்கள் நடுங்குபடியாக, எம்பெருமானின் அடியார்கள் நடுங்கும்படியாக, அவரவர்கள் எண்ணியபடி சிவன், ப்ரம்மன் முதலானோர்களே இந்த உலகின் காரணம் என்று கூற முற்பட்டனர். ஆனால் அவர்கள் அவ்விதம் கூற இயலாதபடி வேதாந்த சாஸ்த்ர நிபுணர்களான நமது ஆசார்யர்கள் செய்தது என்ன? தாமரை மலரில் அமர்ந்துள்ள பெரிய பிராட்டியின் நாயகனான நிற்கும் ஆதி புருஷனான நாராயணனையே இந்த உலகின் காரணம் என்று நிரூபித்தனர்.

ஜநபத புவநாதி ஸ்தாந் ஜைத்ராஸநஸ்தேஷு
அநுகத நிஜவார்த்தம் நச்சரேஷு ஈச்வரேஷு
பரிசித் நிகமாந்த: பச்யதி ஸ்ரீஸஹாயம்
ஜகதி கதிம் அவித்யா தந்துரே ஜந்துரேக:

**பொருள்** – எல்லையற்ற கர்மங்கள், அறியாமைகள் சூழ்ந்த இந்த உலகத்தில், பல இடங்களிலும் உலகங்களை வென்று அமர்ந்தவர்களான பலரும், தங்களைப் பற்றிய வீரக்கதைகள் தங்களுடன் சேர்ந்து நாசம் அடையும்படி உள்ளனர். இப்படிப்பட்ட உலகத்தில், வேதாந்தங்களை அறிந்த ஒருவன் ஸ்ரீமந் நாராயணனை, இந்த உலகின் ரக்ஷகனாகக் காண்கிறான்.

## பரதேவதாபாரமார்த்த்யாதிகாரம் ஸம்பூர்ணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## 7. முமுக்ஷுத்வ அதிகாரம்


நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book:yahoo.co.in)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

## (மோக்ஷ விருப்பம் பற்றிய விஷயங்களைக் கூறுதல்)

கால ஆவர்த்தாந் ப்ரக்ருதி விக்ருதீ: காமபோகேஷு தோஷாந்
ஜ்வாலா கர்த்த ப்ரதிம துரித உதர்க்க துக்க அநுபூதிம்
யாதாதத்யம் ஸ்வபரிநியதம் யச்ச திவ்யம் பதம் தத்
காராகல்பம் வபுரபி விதந் கஸ்திதிக்ஷேத பந்தம்

**பொருள்** – சுழல் போன்று மீண்டும் மீண்டும் வருகின்ற காலங்கள், ப்ரக்ருதி மற்றும் அதன் மாற்றமான மஹத் போன்ற தத்துவங்கள், இந்த உலகம் மற்றும் அந்த உலகம் ஆகியவற்றில் உள்ள சுகங்களில் மறைந்துள்ள தோஷங்கள், நெருப்பால் நிரம்பியுள்ள குழியாக உள்ள பாவங்களின் பலனாக வருகின்றன துன்பங்கள், தன்னிடமும் எம்பெருமானிடமும் எப்போதும் உள்ள ஸ்வபாவங்கள், மிகவும் மேன்மையான பரமபதம், சிறை போன்ற இந்த உடல் – இப்படிப்பட்ட பலவற்றையும் அறிந்த யார் ஒருவன், இந்த ஸம்ஸார பந்தத்தை விரும்புவான்?

## ஜீவன் வேறு, உடல் வேறு, ஈச்வரன் வேறு என்று ஏன் அறிய வேண்டும்

**மூலம்** - இப்படி இவ்வர்த்தங்களை அத்யாத்ம சாஸ்த்ரங்களாலே தெளிந்து ஸ்வயம் ப்ரகாசாத்வ ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வ சரீரித்வ அணுத்வ நித்யத்வ நிரவயவத்வ ச்சேதந தஹந க்லேதந சோஷணாத்யநர்ஹத்வ வ்ருத்திஹ்ரஸா ரஹித ஸ்வரூபத்வாதிகளாலே ஆத்மாவுக்கு விசேஷணபூத தேஹேந்த்ரியாதி வைலக்ஷண்யத்தைக் கண்டு, இவனுடைய பரலோககமந தேஹாந்தரப்ராப்தி யோக்யத்வநிச்சயத்தாலே ஸாமாந்யேந லோகோத்தீர்ண புருஷார்த்தயோக்யராய், நரக பதநாதி ஜந்மாந்தர க்லேசங்களுக்கு அஞ்சி அவற்றின் காரணங்களான கர்மங்களினின்றும் நிவ்ருத்தராய், ஆதேயத்வ விதேயத்வ சேஷத்வ அல்பசக்தித்வ அணுத்வ அஜ்ஞான ஸம்சய விபர்யய துக்காதியோக்யத்வ அசுபாச்ரயத் வாதிகளாலே உண்டான விசேஷ்யபூத ஈச்வர வ்யாவ்ருத்திநிச்சயத்தாலே பகவத் கைங்கர்யரூபமான ஸ்வரூப ப்ராப்த வைபவத்தை அபேக்ஷிக்கைக்கு யோக்யராய்,

**விளக்கம்** – இப்படியாக ஆத்மாவைப் பற்றிக் கூறுகின்ற சாஸ்த்ரங்கள் மூலமாக ஒருவன் மேலே கூறப்பட்ட பலவற்றையும் அறிந்து கொள்ளவேண்டும். ஆத்மா தானகவே

ப்ரகாசிக்கக் கூடியவன், அனைத்தையும் அறியவல்லவன், செயல்களைச் செய்பவன், அனுபவிப்பவன், இந்த உடலை இவைகளுக்குத் துணையாகக் கொண்டவன் என்று அறிய வேண்டும். ஆத்மா என்பது அணு அளவே; அழியாமல் எப்போதும் உள்ளது; உடல் உறுப்புகள் அற்றது; இதனை அறுக்கவோ, எரிக்கவோ, காயப்படுத்தவோ, உலர வைக்கவோ அல்லது வேறு எந்த வகையிலும் மாற்றவோ இயலாது என்று அறியவேண்டும். மேலும் ஆத்மா சுருங்குவதோ விரிவதோ இல்லை. இப்படியாக உள்ள தன்மைகள் மூலமாக ஆத்மாவானது உடலை விட்டு மாறுபட்டு நிற்கிறது. இத்தகைய ஆத்மாவானது வேறு உடலையோ அல்லது வேறு உலகத்திற்குச் சென்று அங்கு வேறு உடலையோ எடுக்கவல்லது என்று அறியும் ஒருவன், இந்த உலகில் காணப்படும் பலன்களைக் காட்டிலும் வேறு உயர்ந்த பலன்கள் இருக்கின்றன என்று அறிகிறான். அவன் நரகத்தில் விழுந்து படும் துன்பங்களை எண்ணியும், அடுத்த பிறவியை எடுத்தால் படக்கூடிய துன்பங்களை எண்ணியும், அந்தத் துன்பங்களை உண்டாக்கவல்ல பாவங்களை உண்டாக்கும் செயல்களைத் தவிர்க்கிறான். தான் ஈச்வரனால் காக்கப்பட்டும் நியமிக்கப்பட்டும் உள்ளபோதிலும் தான் மிகவும் அற்பமானவன், அறியாமையால் சூழப்பட்டவன், சந்தேகம் நிரம்பியவன், பிழைகள் செய்பவன், துன்பத்தில் உள்ளவன், அசுத்தங்களின் இருப்பிடமாக உள்ளவன் என்று அறிகிறான். தனது ஆத்மாவானது ஈச்வரனின் சரீரமாக உள்ளபோதிலும், ஈச்வரன் இந்த தோஷங்களுக்கு எதிர்தட்டாக உள்ளதை உணர்கிறான். இதனால் தான் ஈச்வரனை விட வேறுபட்டவன் என்று அறிகிறான். இந்த ஞானம் காரணமாக எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்து அதனால் புகழ் பெறும் தகுதியை அடைந்துவிடுகிறான்.

## திருமந்த்ரத்தின் மூலம் அஹங்காரம் முதலானவை அழிதல்

**மூலம் -** ஸர்வாபேக்ஷித ஸங்க்ரஹமான திருமந்த்ரத்தைக் கொண்டு ஸாரதமார்த்தங்களை அநுஸந்திக்கும்போது, (1) ப்ரதமபதத்தில் த்ருதீயாக்ஷரத்தாலே ப்ரதிபந்நமான ஞானத்வாத்யநுஸந்தானத்தாலே தேஹ ததநுபந்திகளில் வரும் அஹங்கார மமகாரங்களையும், (2) ப்ரதமாக்ஷரத்தில் லுப்த சதுர்த்தியாலே ப்ரதிபந்நமான தாதர்த்யத்தாலே தேஹாதிரிக்த ஆத்மஸ்வரூப ததுகுணங்களில் த்வம் மே அஹம் மே என்கிற ச்லோகத்தின்படியே தனக்குரிமையுண்டாக நினைக்கிற அஹங்கார மமகாரங்களையும், (3) மத்யமாக்ஷரத்தில் அவதாரணார்த்தத்தாலே அந்யசேஷபூதோ அஹம் என்றும் மமாந்ய: சேஷி என்றும் வரும் அஹங்கார மமகாரங்களையும், (4) மத்யமபதத்தில் ப்ரதிபந்நமான நிஷேதவிசேஷத்தாலே ஸ்வரக்ஷணவ்யாபாரத்தைப் பற்ற வரும் நிரபேக்ஷஸ்வாதந்த்ர்ய நிரூபாதிக சேஷித்வாபிமானரூபங்களான அஹங்கார மமகாரங்களையும், (5) இந்நிஷேத ஸாமர்த்யந்தன்னாலே த்ருதீயபதத்தில் சதுர்த்தியாலே அபிப்ரேதமாய் பாவியான கைங்கர்யபர்யந்தாநுபவமாகிற பலத்தைப் பற்ற இப்போது பலாந்தராநுபவ ந்யாயத்தாலே வரும் ஸ்வாதீநகர்த்ருத்வ போக்த்ருத்வ ஸ்வார்த்த கர்த்ருத்வ போக்த்ருத்வ ப்ரமரூபங்களான அஹங்கார மமகாரங்களையும் யதா யோக்யம் ஆர்த்தமாகவும் சப்தமாகவும் அடியறுத்து இப்படி ஸ்திரப்ரதிஷ்ட ஞானராய்

**விளக்கம்** – அறியவேண்டிய அனைத்தின் ஸாரமாக உள்ள திருமந்த்ரத்தின் மூலமாக அறியவேண்டிய தத்துவங்களை முழுவதுமாக அறிகிறான். இவையாவன: (1) திருமந்த்ரத்தின் முதல் பதமான ஓம் என்பதன் மூன்றாம் எழுத்தான "ம" என்பதன் மூலம், ஆத்மா என்பது ஞானஸ்வரூபமானது என அறிகிறான். இதன் மூலமாக "இந்த உடலே நான்" என்னும் அஹங்காரத்தையும், "இவை என்னுடையவை" என்று உடல் மூலமாகத் தோன்றும் மமகாரத்தையும் கைவிடுகிறான். (2) திருமந்த்ரத்தின் முதல் பதமான ஓம் என்பதன் முதல் எழுத்தான "அ" என்பதில் நான்காம் வேற்றுமை நீக்கப்பட்டதன் மூலம் ஜீவன் ஈச்வரனுக்காகவே உள்ளான் என்பதை உணர்கிறான். இதன் மூலம் ஸ்வாமி பராசர பட்டர் அருளிச்செய்த திருமஞ்சனக் கட்டிய ச்லோகத்தில் நம்பெருமாள் ஜீவனிடம், "நீ என்னுடையவன்", என்னும்போது ஜீவன் அவனிடம், "அல்ல, நான் என்னுடையவன்", என்று மறுப்பது போன்ற வாசகங்களை எண்ணிப்பார்க்கிறான். இது போன்று "தான் தனக்கே உரிமையானவன்", என்னும் அஹங்காரம் மற்றும் மமகாரம் ஆகியவற்றைக் கைவிடுகிறான். (3) திருமந்த்ரத்தின் முதல் பதமான ஓம் என்பதன் நடு எழுத்தான "உ" என்பதன் மூலம் "மட்டுமே" என்பது வெளிப்படுகிறது. இதனைக் கொண்டு "நான் எம்பெருமானைத் தவிர உள்ள மற்றவர்களுக்கு அடிமை" என்பதில் உள்ள அஹங்காரம், "எம்பெருமானை விடுத்து வேறு யாரோ எனக்கு எஜமானன்" என்பதில் உள்ள மமகாரம் ஆகியவற்றைக் கைவிடுகிறான். (4) திருமந்த்ரத்தின் நடு பதமான நமோ (ந மம – நான் என்னுடையவன் அல்லன்) என்பதன் மூலம் ஜீவனுக்கு ஸ்வதந்த்ரம் என்று ஏதும் இல்லை என அறிகிறான். இதன் மூலம், "என்னைக் காப்பாற்றிக் கொள்வதில் நான் சுதந்திரமானவன்" என்பதில் வெளிப்படும் அஹங்காரம், "இவ்விதம் என்னைக் காப்பாற்றிக் கொள்ளும் செயலானது முழுவதுமாக என்னைச் சார்ந்ததே" என்பதில் வெளிப்படும் மமகாரம் ஆகியவற்றைக் கைவிடுகிறான். (5) இப்படியாக உள்ள நமோ என்பதன் மூலம் ஸ்ரீவைகுண்டத்திற்குச் சென்று அங்கு எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்தல் வரை உள்ள பலன்களின் பொருட்டு உண்டாகும் விபரீத எண்ணங்களை மாற்றிக் கொள்கிறான். இந்த எண்ணங்கள் எவை என்றால்: அஹங்காரம் – "நான் சுதந்திரமானவன்", "என்னை யாரும் அனுபவிக்க இயலாது"; மமகாரம் – "இதனை நான் எனக்காகச் செய்கிறேன்", "இதனை நானே அனுபவிப்பேன்" – போன்றவை ஆகும்.

## உலக விஷயங்களில் உள்ள தோஷங்களும் பகவத் விஷயத்தின் மேன்மையும்

**மூலம்** - "அற்பசாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன்", "கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலும் ஐங்கருவி கண்ட இன்பம் தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்",

“தஸ்மிந் ப்ரஸந்நே கிமிஹாஸ்த்யலப்யம் தர்மார்த்தகாமைரலமல்பகாஸ்தே”, “அந்தவஸ்து பலம் தத்பவத்யல்ப மேதஸாம்”, “அநித்யமஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்”, “மஹாபலாந் மஹாவீர்யாந் அநந்தத்ந ஸத்ஜயாந் | கதாந் காலேந மஹதா கதாசேஷாந்நராதிபாந் || ச்ருத்வா ந புத்ரதாராதௌ க்ருஹக்ஷேத்ராதிகே அபி வா | த்ரவ்யாதௌ வா க்ருதப்ரஜ்ஞோ மமத்வம் குருதே நர:”, “ஸர்வம் துக்கமயம் ஜகத்”, “ஸ்வர்க்கே அபி பாதபீதஸ்ய க்ஷயிஷ்ணோர்நாஸ்தி நிர்வ்ருத்தி:”, “ராஜ்யே க்ருத்நந்த்யவித்வாம்ஸோ மமத்வாஹ்ருத சேதஸ: | அஹம்மாந மஹாபாந மதமத்தா ந மாத்ருசா:”, “ஆப்ரஹ்மபவநாதேதே தோஷா: ஸத்தி மஹாபுநே | அத ஏவ ஹி நேச்சந்தி ஸ்வர்க்கப்ராப்திம் மநீஷிணா:”,”ப்ரஹ்மணா: ஸதநாதூர்த்வம் தத்விஷ்ணோ: பரமம் பதம் | சுத்தம் ஸநாதநம் ஜ்யோதி: பரம் ப்ரஹ்மேதி || ந தத்ர பூதா கச்சந்தி புருஷா விஷயாத்மகா: || டம்ப லோப மத க்ரோத த்ரோஹ மோஹைரபி த்ருதா: || நிர்மமா நிரஹங்காரா நிர்த்வந்த்வா: ஸம்யதேந்த்ரியா: | த்யாநயோகரதாச்சைவ தத்ர கச்சந்தி ஸாதவ:”, ரம்யாணி காமசாராணி விமாநாநி ஸமாஸ்ததா | ஆக்ரீடா விவிதா ராஜாந் பத்மிந்யச்ராமலோதகா:”, “ஏதே வை நிரயாஸ்தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந:” இத்யாதி ப்ரமாணங்களாலே அல்பத்வ அஸ்திரத்வ துக்கமூலத்வ துக்க மித்ரத்வ துக்கோதர்க்கத்வ விபரீதாபிமாநமூலத்வ ஸ்வாபாவிகாநந்தவிருத்தத்வங்களாகிற அசித்விஷயாநுபவ தோஷஸப்தகத்தையும் இவற்றில் யதாஸம்பவம் உண்டான சேதநமாத்ராநுபவ தோஷங்களையும், இவ்வநுபவங்களுக்கு எதிர்த்தட்டான பகவதநுபவத்தின் வைலக்ஷண்யத்தையும் விசதமாக அநுஸந்தித்து, “பரமாத்மநி யோ ரக்தோ விரக்த: அபரமாத்மநி” என்கிற அவஸ்தையையுடையராய்.

**விளக்கம்** – கீழே உள்ள பல ப்ரமாணங்கள் காண்க:

- திருவாய்மொழி (3-2-6) - அற்பசாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன் – அற்பமான விஷயங்களில் ஈடுபட்டு, அவற்றின் தோஷங்களை அறிந்து, அவற்றைக் கைவிட்டேன்

- திருவாய்மொழி (4-9-10) - கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலும் ஐங்கருவி கண்ட இன்பம் தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம் – ஐந்து புலன்களால் அடையப்படும் இன்பம், புலன்களால் அறிய இயலாத ஆத்ம அனுபவத்தின் இன்பம் ஆகியவற்றைக் கைவிட்டேன்.


email : sridharan_book@yahoo.com

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-17-91) - தஸ்மிந் ப்ரஸந்நே கிமிஹாஸ்த்யலப்யம் தர்மார்த்தகாமைரலமல்பகாஸ்தே – கருணையுடன் கூடிய எம்பெருமான் உள்ளபோது எதுதான் அடைவதற்குக் கடினம்? தர்மம், அர்த்தம், காமம் ஆகியவற்றால் ஆவதற்கு ஏதும் இல்லை.

- ஸ்ரீமத் பகவத் கீதை (7-23) - அந்தவஸ்து பலம் தத்பவத்யல்ப மேதஸாம் – அற்ப புத்தி உடையவர்களால் அடையப்படும் பலன்களும் அற்பமானவையே ஆகும்.

- ஸ்ரீமத் பகவத் கீதை (9-33) - அநித்யமஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம் – நிலையற்றதும், துன்பங்கள் சூழ்ந்துள்ளதும் ஆகிய இந்த உலகை அடைந்துள்ள நீ என்னை வணங்குவாயாக.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (4-24-142, 143) - மஹாபலாந் மஹாவீர்யாந் அநந்ததந ஸத்ஜயாந் கதாந் காலேந மஹதா கதாசேஷாந்நராதிபாந் ச்ருத்வா ந புத்ரதாராதௌ க்ருஹக்ஷேத்ராதிகே அபி வா த்ரவ்யாதௌ வா க்ருதப்ரஜ்ஞோ மமத்வம் குருதே நர: - இந்த உலகில் மிகுந்த பலம், அளவற்ற செல்வம், வீரம் ஆகியவற்றுடன் வாழ்ந்த அரசர்கள், தங்களின் நீண்ட வாழ்வு முடிந்த பின்னர், இந்த உலகில் தங்களைப் பற்றிய சரிதங்களை மட்டுமே விட்டுச் சென்றனர். இதனை அறிந்த அறிவாளி ஒருவன் பிள்ளை, மனைவி, வீடு, நிலம், செல்வம் முதலானவற்றில் “என்னுடையது” என்ற எண்ணம் கொள்ளமாட்டான்.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-17-69) - ஸர்வம் துக்கமயம் ஜகத் – இந்த உலகம் முழுவதும் துக்கமயமானது.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-5-50) - ஸ்வர்க்கே அபி பாதபீதஸ்ய க்ஷயிஷ்ணோர்நாஸ்தி நிர்வ்ருத்தி: - ஸ்வர்க்கத்தில் உள்ளவன் எப்போதும் தனது புண்ணிய பலன் குறைந்து விட்டால், தான் கீழே விழுந்து விடுவோம் என்று பயம் காரணமாக சுகம் என்பது அவனுக்கு இருப்பதில்லை.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-7-7) - ராஜ்யே க்ருத்நந்த்யவித்வாம்ஸோ மமத்வாஹ்ருத சேதஸ: அஹம்மாந மஹாபாந மதமத்தா ந மாத்ருசா: - அஹங்காரம் கொண்ட மனம் படைத்தவர்கள் மட்டுமே, அந்த மயக்கம் காரணமாக ராஜ்யம், நாடு முதலானவற்றின் மீது ஆசை கொண்டவர்களாக இருப்பார்கள். என் போன்றவர்கள் அவற்றுக்காக ஏங்குவது இல்லை.

- இதிஹாஸ ஸமுச்சயம் (4-49) - ஆப்ரஹ்மபவநாதேதே தோஷா: ஸந்தி மஹாபுநே அத ஏவ ஹி நேச்சந்தி ஸ்வர்க்கப்ராப்திம் மநீஷிணா: - முனிவரே! ப்ரம்மலோகம் தொடங்கி அனைத்து உலகங்களிலும் அற்பமான தோஷங்கள் பரவியே உள்ளன. எனவே அறிவு நிறைந்தவர்கள் ஸ்வர்க்கத்தை விரும்புவதில்லை.

- மஹாபாரதம் வநபர்வம் (217-37, 38, 39) - ப்ரஹ்மணா: ஸதநாதூர்த்வம் தத்விஷ்ணோ: பரமம் பதம் சுத்தம் ஸநாதநம் ஜ்யோதி: பரம் ப்ரஹ்மேதி ந தத்ர பூதா கச்சந்தி புருஷா விஷயாத்மகா: டம்ப லோப மத க்ரோத த்ரோஹ மோஹைரபி த்ருதா: நிர்மமா நிரஹங்காரா நிர்த்வந்த்வா: ஸம்யதேந்த்ரியா: த்யாநயோகரதாச்சைவ தத்ர கச்சந்தி ஸாதவ: - ப்ரம்மலோகத்தின் மேலே விஷ்ணுவின் பரமபதம் உள்ளது. அது தூய்மையாகவும், நித்யமாகவும், ஜ்யோதி ரூபமாகவும் உள்ளது. பரம்பொருளை அனுபவிக்கத் தக்கதாக உள்ளதால் பரப்ரஹ்மம் என்றும் கூறப்படுகிறது. அந்த உலகிற்கு டம்பம், லோபம், ஆணவம், கோபம், துரோகம், ஆசை முதலியவற்றால் பீடிக்கப்பட்ட அறிவற்றவர்கள் செல்வதில்லை. அஹங்காரம் மற்றும் மமகாரம் ஆகியவற்றைக் கைவிட்டவர்கள், இரட்டையாக வரும் இன்பதுன்பங்களில் சமநிலையில் உள்ளவர்கள், புலன்களைத் தங்கள் வசம் வைத்தவர்கள், பகவானைத் த்யானித்தபடி உள்ளவர்கள் – இப்படிப்பட்ட ஸாதுக்கள் மட்டுமே அங்கு செல்கின்றனர்.

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (196-4) - ரம்யாணி காமசாராணி விமாநாநி ஸமாஸ்ததா ஆக்ரீடா விவிதா ராஜாந் பத்மிந்யச்ராமலோதகா: - பரமபதத்தில் விருப்பப்படி செல்லக்கூடிய அழகான விமானங்கள், மண்டபங்கள், பலவிதமான தோட்டங்கள், தெளிவான நீர் நிறைந்த தாமரைக் குளங்கள் ஆகியவை உள்ளன.

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (196-6) - ஏதே வை நிரயாஸ்தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந: - எம்பெருமானின் இருப்பிடமான பரமபதத்திற்கு முன்பாக மற்ற லோகங்கள் அனைத்தும் நரகம் போன்றவையே.

மேலே உள்ள பல ப்ரமாணங்கள் மூலமாக, அசித் பொருள்களால் ஏற்படும் இன்பங்கள் அனைத்தும் ஏழு வகையான தோஷங்களுடன் கூடியவை என்று அறியவேண்டும். இவையாவன – அற்பமானவை, ஸ்திரம் அற்றவை (நிலையற்றவை), துக்கத்தின் தொடக்கமாக உள்ளவை, துக்கம் நிறைந்தவை, துக்கம் உண்டாக்கவல்லவை, அஹங்காரம் முதலானவற்றால் உண்டானவை, ஜீவனின் இயல்பான ஆனந்தமயமான நிலைக்கு எதிரானவை – என்பதாகும். இதே தோஷங்கள் ஒருவன் தனது ஆத்ம அனுபவத்தில் திளைக்கும்போதும் உண்டாகக் கூடியவை என்று அறியவேண்டும். இவற்றுக்கு எதிர்தட்டாக உள்ளதான பகவத் அனுபவத்தின் மூலம் உண்டாகவல்ல ஆனந்தத்தில் உள்ள நன்மைகளை அறிந்து, அதில் ஈடுபட வேண்டும். இதன் மூலம் ஒருவன் பார்ஹஸ்பத்ய ஸ்ம்ருதியில் கூறியபடி - பரமாத்மநி யோ ரக்தோ விரக்த: அபரமாத்மநி – எம்பெருமானிடம் மட்டுமே ஆசை கொண்டபடி, மற்ற பொருள்கள் மீது ஆசை இல்லாதபடி – என்ற நிலைக்கு வந்துவிடுவான்.

**மூலம் –** “ப்ரவ்ருத்திலக்ஷணம் தர்மம் ப்ரஜாபதிரதாப்ரவீத்” என்கிற ப்ரவ்ருத்தி தர்மங்களில் நின்றும் நிவ்ருத்தராய், “நிவ்ருத்தலக்ஷணம் தர்மம் ருஷிர்நாராயணோ அப்ரவீத்” என்கிற நிவ்ருத்தி தர்மங்களிலே ப்ரவ்ருத்தரானவர்கள் முமுக்ஷுக்களான அதிகாரிகள்.

**விளக்கம்** – மஹாபாரதம் சாந்திபர்வம் (219-4) - ப்ரவ்ருத்திலக்ஷணம் தர்மம் ப்ரஜாபதிரதாப்ரவீத் – ப்ரவ்ருத்தி தர்மங்களை ப்ரம்மன் உரைத்தான் – என்னும்படியாக உள்ள ப்ரவ்ருத்தி தர்மங்களை கைவிட்டும்; மஹாபாரதம் சாந்திபர்வம் (219-2) - நிவ்ருத்தலக்ஷணம் தர்மம் ருஷிர்நாராயணோ அப்ரவீத் – நாராயண ரிஷி என்பவர் கடைபிடிக்க வேண்டிய தர்மங்களை உரைத்தார் – என்னும்படியாக உள்ள தர்மங்களைப் பின்பற்ற வேண்டும். இதுவே மோக்ஷத்தில் விருப்பம் உள்ளவர்கள் என்று கூறப்படுபவர்களுக்கு இருக்கவேண்டிய தகுதிகள் ஆகும்.

**மூலம்** - கீழ்ச்சொன்னபடியிலே பராவரங்களான தத்வங்களும் புருஷார்த்தங்களும் தெளிந்தாலும், இப்படி வைராக்யபூர்வகமாக பரம புருஷார்த்தோபாய அநுஷ்டாநத்தில் ப்ரவர்த்தியானாகில்”சீல வ்ருத்த பலம் ச்ருதம்”, “சமார்த்தம் ஸர்வசாஸ்த்ராணி விஹிதாநி மநீஷிபி: | தஸ்மாத் ஸ ஸர்வசாஸ்த்ரஜ்ஞோ யஸ்ய சாந்தம் மந: ஸதா” என்கிற ச்ருதபலத்தையும் இழந்து, “நாச்சாதயதி கௌபீநம் ந தம்ச மசகாபஹம் | சுந: புச்சமிவாநர்த்தம் பாண்டித்யம் தர்மி வர்ஜிதம்” என்கிறபடியே ஹாஸ்யனாம். ஆகையால்

“வயஸ: கர்மணோ அர்த்தஸ்ய ச்ருதஸ்யாபிஜநஸ்ய ச | வேஷவாக்வ்ருத்தி ஸாருப்யமாசரந் விசரேதிஹ” என்கிறபடியே ச்ருதாநுரூபமாக ஸ்வோசிதமான பரம புருஷார்த்தோபாயநுஷ்டாநத்திலே த்வரிக்குமவர்கள் “தன் கருமஞ்செய்யப் பிறருகந்தார்” என்கிறபடியே, “தம் தேவா ப்ரஹ்மாணம் விது:”, “ப்ரணமந்தி தேவதா:” இத்யாதிகளிற் சொல்லும் ஏற்றம் பெறுவர்கள்.

**விளக்கம்** – எது உயர்ந்த தத்துவம், எது தாழ்ந்த தத்துவம் என்றோ; எது உயர்ந்த புருஷார்த்தம், எது தாழ்ந்த புருஷார்த்தம் என்று ஒருவன் அறிந்து கொள்ளக்கூடும். ஆயினும் அவன் தனது வாழ்வின் உயர்ந்த புருஷார்த்தத்தை அளிக்கவல்ல உபாயத்தை அறிந்து, அதனைப் பின்பற்றவில்லை என்றால் என்ன நிகழும் என்றால் – மஹாபாரதம் ஸபாபர்வம் (5-117) - சீல வ்ருத்த பலம் ச்ருதம் – சாஸ்த்ரத்தை அறிவதன் மூலம் ஏற்படும் ஞானத்தின் பலன்கள் ஆத்மகுணங்களும் சிறந்த ஒழுக்கமும் – என்று கூறப்படும் பலனை இழக்க நேரிடும். மேலும் இதிஹாஸ ஸமுச்சயம் (12-37) - சமார்த்தம் ஸர்வசாஸ்த்ராணி விஹிதாநி மநீஷிபி: தஸ்மாத் ஸ ஸர்வசாஸ்த்ரஜ்ஞோ யஸ்ய சாந்தம் மந: ஸதா – மனதை வசப்படுத்தும் பொருட்டே பல சாஸ்த்ரங்களும் ஞானம் உள்ளவர்களால் இயற்றப்பட்டது, ஆகவே யார் ஒருவனின் மனம் அடக்கப்பட்டுள்ளதோ அவன் அனைத்து சாஸ்த்ரங்களும் அறிந்தவன் – என்று கூறப்படும் கருத்தையும் இழந்தவன் ஆகிறான். இது தவிர - நாச்சாதயதி கௌபீநம் ந தம்ச மசகாபஹம் சுந: புச்சமிவாநர்த்தம் பாண்டித்யம் தர்மி வர்ஜிதம் – நாயின் வால் என்பது மறைக்க வேண்டிய இடத்தை மறைப்பதில்லை, நாயை மொய்க்கும் ஈ முதலானவற்றை விரட்டவும் பயன்படுவதில்லை – என்பதற்கு ஏற்ப, அவனது ஞானம் அவனுக்குப் பயன்படாமல் போகின்றது. ஆகவே மநு ஸ்ம்ருதி (4-18) - வயஸ: கர்மணோ அர்த்தஸ்ய ச்ருதஸ்யாபிஜநஸ்ய ச வேஷவாக்வ்ருத்தி ஸாருப்யமாசரந் விசரேதிஹ – வயது, கடைபிடிக்க வேண்டிய கர்மம், கர்மபலன், சாஸ்த்ர ஞானம், உயர்ந்த குலத்தில் பிறவி ஆகியவற்றுக்கு ஏற்ப ஒருவன் தனது பேச்சு, செயல் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும் – என்று கூறுவதற்கு ஏற்ப நடக்க வேண்டும். இப்படியாக உயர்ந்த புருஷார்த்தத்தைப் பெற்றுத் தரவல்ல உபாயத்தைக் கடைபிடித்து நடப்பவர்கள் பெறும் ஏற்றத்தைக் கீழே உள்ள வரிகளில் காணலாம்: தன் கருமஞ்செய்யப் பிறருகந்தார் – தனது கடமைகளைச் செய்யும் ஒருவன் அனைவராலும் புகழப்படுகிறான்; மஹாபாரதம் சாந்திபர்வம் (118-11) - தம் தேவா ப்ரஹ்மாணம் விது: - சிறந்த ஒழுக்கம் உள்ள சண்டாளன் தேவர்களால் அந்தணன் என்றே கொள்ளப்படுகிறான்; ஸ்ரீவிஷ்ணுதர்மம் (43-28) - ப்ரணமந்தி தேவதா: - அவனைத் தேவர்கள் வணங்கி நிற்கின்றனர்.

நின்றபுராணன் அடியிணை ஏந்தும் நெடும்பயனும்
பொன்றுதலே நிலை என்றிடப் பொங்கும் பவக்கடலும்
நன்று இது தீயது இது என்று நவின்றவர் நல்லருளால்
வென்று புலன்களை வீடினை வேண்டும் பெரும்பயனே

**பொருள்** – எப்போதும் நிலையாக நிற்கின்ற எம்பெருமானின் பொருந்திய திருவடிகளைத் தனது தலையால் ஏந்தி நின்று, அவனுக்குக் கைங்கர்யம் செய்தலே மோக்ஷம் என்னும் உயர்ந்த புருஷார்த்தம்; அழிவது என்பதையே இயல்பாக உடையதும், ஓங்கி வளர்வதும் ஆகிய ஸம்ஸாரம் என்னும் ஸமுத்ரம் – இந்த இரண்டில் மோக்ஷம் என்பது நன்மை, ஸம்ஸாரம் என்பது தீமை – என்று ஒருவன் அறியக்கூடும். இதனை அவன் எப்படி அறிகிறான் என்றால், சிறந்த ஆசார்யர்கள் மூலமே ஆகும். இப்படிப்பட்ட ஆசார்யர்களின் கருணை காரணமாக அவன் தனது இந்த்ரியங்களை வென்று, மிகவும் உயர்ந்த புருஷார்த்தமாகிய மோக்ஷம் என்பதை மட்டுமே விரும்பி நிற்பான்.

விஷமது பஹிஷ்குர்வந் தீரோ பஹிர்விஷயாத்மகம்
பரிமிதரஸ ஸ்வாத்ம ப்ராப்தி ப்ரயாஸ பராங்முக:
நிரவதி மஹாநந்த ப்ரஹ்மாநுபூதி குதூஹலீ
ஜகதி பவிதா தைவாத் கச்சித் ஜிஹாஸித ஸம்ஸ்ருதி:

**பொருள்** – சற்றும் கலக்கம் இல்லாத மனம் உள்ளவன் : ஆத்மாவைக் காட்டிலும் வேறுபட்டதும், விஷம் கலந்த தேன் போன்றதும் ஆகிய உலக விஷயங்களை ஒதுக்கி; அற்பமான சுகத்தை அளிக்கவல்ல தனது ஆத்ம அனுபவத்தை அடைந்து ஆனந்தம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தை நீக்கி; எல்லையற்ற ஆனந்தம் அளிக்கவல்ல ஸர்வேச்வரனுடைய அனுபவத்தில் ஆவல் கொண்டவனாக இருக்கக்கூடும். இவன் ஸர்வேச்வரனின் அநுக்ரஹம் மூலமாக ஸம்ஸாரத்தைக் கைவிட வேண்டும் என்னும் ஆசை கொண்டவன் ஆகிறான்

## முமுக்ஷுத்வ அதிகாரம் ஸம்பூர்ணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## 8. அதிகாரி விபாக அதிகாரம்

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book:yahoo.co.in)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## (மோக்ஷ அதிகாரிகளின் பிரிவுகள், வகைகள்)

முமுக்ஷுத்வே துல்யே ஸதி ச மதுவித்யாதிஷு யதா
வ்யவஸ்தா ஸம்ஸித்தயதி க்ருதி விசேஷேண விதுஷாம்
விகல்ப்யேத ந்யாஸே ஸ்திதி: இதரவித்யாஸு ச ததா
நியத்யா வையாத்யம் நியமயிதும் ஏவம் ப்ரபவதி

**பொருள்** – மோக்ஷ விருப்பம் கொண்டவர்களுக்கு அந்த விருப்பமானது ஒரே போன்று உள்ளபோதிலும், மதுவித்யை முதலான வித்யைகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு இடையே வேறுபாடுகள் உணர்த்தப்படுகின்றன (ஒரு சிலர் இதனைச் செய்யலாம், ஒரு சிலர் வேறு சிலவற்றைச் செய்யலாம் போன்ற வேறுபாடுகள்). இப்படியாகவே ப்ரபத்தி மற்றும் சில வித்யைகளிலும் செயல்பாடுகளைக் குறித்த வேறுபாடுகள் கைக்கொள்ளப் படுகின்றன. இந்த நிலை இவர்களின் பூர்வகர்மங்கள் அல்லது அத்ருஷ்டம் காரணமாக, வேறு காரணம் ஏதும் கூற இயலாதபடி அமைகிறது.

## இரண்டு வகையான மோக்ஷ அதிகாரிகள்

**மூலம் -** இப்படி பரமபுருஷார்த்தோபாயங்களான நிவ்ருத்தி தர்மங்களிலே ப்ரவ்ருத்தரான அதிகாரிகள் இருவர். அவர்களாகிறார் அத்வாரக ப்ரபத்தி நிஷ்டனும் ஸத்வாரக ப்ரபத்தி நிஷ்டனும்.

ஸ்வதந்த்ர அங்க ப்ரபத்திப்யாம் ப்ரபந்நௌ அத்ர தாவுபௌ |
பல ஸாதந பக்திப்யாம் பக்தாவபி ச தர்சிதௌ ||

**விளக்கம்** – இப்படியாக கைவிடவேண்டியதைக் கைவிடுதல் என்னும் தர்மவழியில் நிலை நின்று, மோக்ஷம் என்னும் உயர்ந்த புருஷார்த்தத்தை விரும்பும் மனிதர்கள் இருவகை ஆவர். அவர்கள் – அத்வாரக ப்ரபத்தி நிஷ்டர்கள், ஸத்வாரக ப்ரபத்தி நிஷ்டர்கள் ஆவர் (ப்ரபத்தி மூலமாக பக்தியோகத்தைப் பெற்று, அந்த பக்தியோகத்தின் மூலம் மோக்ஷம் பெறுபவர்கள் ஸத்வாரக ப்ரபத்தி நிஷ்டர்கள் ஆவர். ப்ரபத்தி மட்டுமே கைக்கொண்டு, அதன் மூலம் மட்டுமே மோக்ஷம் பெறுபவர்கள் அத்வாரக ப்ரபத்தி நிஷ்டர்கள் ஆவர்).

இவர்கள் இருவருமே ப்ரபந்நர்களே – ஒருவர் ப்ரபத்தி என்பதை ஸ்வதந்த்ரமான முயற்சியாகக் கொள்கிறார், மற்றொருவர் ப்ரபத்தியை பக்தியின் அங்கமாகக் கொள்கிறார்; ஒருவருக்கு பக்தி உபாயமாக உள்ளது, மற்றொருவருக்கு பக்தி பலனாக உள்ளது.

## ப்ரபத்தியின் வகைகள்

**மூலம் -** “ஸ்நானம் ஸப்தவிதம் ஸ்ம்ருதம்” என்கிறபடியே யதாதிகாரம் மாந்த்ர மாநஸ திவ்ய வாயவ்யாதிகளும் துல்யபலங்களான ஸ்நாந பேதங்களானாற் போலே உக்தி ஆசார்ய நிஷ்டை என்கிற இவையும் ப்ரபத்தியில் முக பேதங்கள்.

**விளக்கம் -** ஸ்நானம் ஸப்தவிதம் ஸ்ம்ருதம் – ஸ்நானம் என்பது ஏழு வகைப்படும்; அவற்றுள் சில – மந்த்ரம் உச்சரித்தல், மானஸீகம், திவ்ய ஸ்நானம், வாயு ஸ்நானம் – போன்றவையாகும்; இவை ஒவ்வொன்றும் அந்தந்த ஸ்நாந முறைகளுக்குத் தகுதி உள்ளவர்களுக்கு ஏற்றதாகவே கூறப்பட்டது; இவை அனைத்தும் ஒரே போன்று ஸ்நானமே ஆகும். இது போன்று, ப்ரபத்தி என்பது உக்திநிஷ்டை மற்றும் ஆசார்ய நிஷ்டை என்று இருவகைப்படும் (உக்திநிஷ்டை – ஆசார்யன் கூறும் ப்ரபத்தி வாக்யங்களைத் தானும் உச்சரித்துப் ப்ரபத்தி செய்து கொள்ளுதல்), ஆசார்யநிஷ்டை (ஆசார்யன் செய்கின்ற ப்ரபத்தியில் அடங்கியிருத்தல்).

## ப்ரபத்தி வகைகள் – கூரத்தாழ்வான், பட்டர் கூற்றுகள்

**மூலம் -** இவற்றில் உக்தியாவது, ஆநுகூல்ய ஸங்கல்பாத்யங்கங்களில் வேசத்யமில்லாதார் அவனையொழியப் போக்கற்று நிற்கிற அதிகாரமும் அபேக்ஷித்தால் ரக்ஷிக்கும் என்கிற விச்வாஸமுமுடையாராய்க் கொண்டு சரண்யன் அறியப் பூர்ண ப்ரபத்தி கர்ப்பமான ஆசார்யோபாதிஷ்ட வாக்யத்தாலே, தாதிமார் சொன்ன பாசுரத்தைச் சொல்லி ஸார்வபௌமனை சரணம் புகும் முக்தரான ஸாமந்தகுமாரர்களைப் போலே, என்னுடைய ரக்ஷை உனக்கே பரமாக ஏறிட்டுக் கொள்ள வேணுமென்கை. பத வாக்யாதி வ்ருத்தாந்தம் அறியாத பாலகன் ஒருகால் பவதி பிக்ஷாம் தேஹி என்றால் ஆடச்யரான ஸத்துக்கள் அகத்திலே அப்போதே அபேக்ஷித ஸித்தி உண்டாமாப் போலே, “கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும்” என்னும்படியிருக்கிற பரிபூர்ண பரமோதார விஷயத்தில் இவ்வுக்திக்கும் பல அவிநாபாவம் உண்டு. அறிவிலிகளாய் இவ்வுக்தி மாத்ரமே பற்றாசானவர்கள் திறத்தில் “யேந கேநாபி ப்ரகாரேண த்வயவக்தா த்வம்” என்று சொல்லுகிறபடியே இவ்வுக்தி மாத்ரமும் உண்டாறுக்க மாட்டாது சரண்யரின் க்ருபை.

இவ்வர்த்தத்தை "பாபியஸோபி சரணாகதிசப்தமாஜ:" என்றும், "சரணவரணவாகியம் பேதிதா ந பவதி பத ஸாபி தீபூர்விகா" என்றும், "ப்ரபத்திவாசைவ நிரீக்ஷிதும் வ்ருணே" என்றும் அபியுக்தர் பேசினார்கள்.

**விளக்கம்** – இவற்றில் உக்திநிஷ்டை என்பது – ப்ரபத்தி அங்கங்களில் தெளிவான அறிவு இல்லாமை, எம்பெருமானுக்கு எது ஏற்புடையது என்று அறியாமை, இவற்றை அறிந்து கொள்ளக்கூடிய தகுதி பெற்றிருத்தல், அவனைத் தவிர வேறு கதி இல்லாமை (ஆகிஞ்சந்யம்), அவனை அண்டி நின்றால் காப்பாறுவான் என்னும் திடமான நம்பிக்கை (மஹாவிச்வாசம்) ஆகிய தன்மைகள் கொண்டவர்கள், தங்களில் ரக்ஷகனான எம்பெருமான் திருமுன்பாக, தங்கள் ஆசார்யன் தங்களுக்கு என்ன உபதேசிக்கின்றாரோ அதனை மீண்டும் உச்சரிப்பர். இதனை முழுமையான ப்ரபத்தி என்றே ஸர்வேச்வரன் ஏற்றுக் கொள்கிறான். இவர்கள், "என்னைக் காக்கும் முழுப் பொறுப்பும் உன்னுடையதே", என்று கூறுகின்றனர். அரசனுடன் பகையாக உள்ள அரசகுமாரர்களின் புத்ரர்கள், தங்களுக்குத் தங்கள் செவிலியர்கள் கூறியதைக் கேட்டு அதன்படி அரசனிடம் சரணம் புகுவது போன்ற அரசகுமாரர்களின் புத்ரர்கள் போன்று உள்ளனர். ஒரு ப்ரம்மச்சாரி - பவதி பிக்ஷாம் தேஹி – எனக்கு அன்னம் இடவேண்டும் – என்று தான் கூறும் வாக்யத்திற்குப் பொருள் தெரியாமல் ஒரு வீட்டிற்குச் சென்று உச்சரித்தாலும், அவனுக்கு வேண்டிய அன்னம் அந்த இல்லத்தில் கிட்டிவிடுகிறது. திருவாய்மொழி (3-9-5) - கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும் – எத்தனை அளித்தாலும் வற்றாத செல்வம் உடைய ஸர்வேச்வரன், நாம் வேண்டியதை அளிப்பான் – என்று கூறியது காண்க. அவன் பரிபூர்ணமாக, அனைத்தும் நிரம்பியவனாக, தாராள குணத்துடன் கூடியவனாக உள்ளதால், நாம் கூறும் ப்ரபத்தி வரிக்கும் (என்னைக் காக்கும் முழுப் பொறுப்பும் உன்னுடையதே) முழுமையான பலன் கிட்டிவிடுகிறது. அறிவற்றவர்களாக இருந்தாலும், இந்த வரியைக் கூறுவதற்குக்கூட மற்றவர்களைச் சார்ந்து இருந்தாலும், அனைவருக்கும் புகலிடமாக உள்ள ஸர்வேச்வரனால் இந்த ப்ரபத்தியைத் தள்ள இயலாது, அவன் ஏற்றுக் கொள்கிறான். இதன் காரணம் சரணாகதி கத்யம் - யேந கேநாபி ப்ரகாரேண த்வயவக்தா த்வம் – நீ எப்படி இருந்தாலும் த்வய மந்த்ரத்தை உச்சரித்து விட்டாய், ஆகவே உன்னை ரக்ஷிப்பது என் பொறுப்பு – என்று கூறியது அல்லவா? இதனைக் கீழே உள்ள பல வரிகளில், பூர்வாசார்யர்கள் கூறுவது காண்க:

- அதிமாநுஷஸ்தவம் (61) - பாபியஸோபி சரணாகதிசப்தமாஜ: - மிகுந்த பாவங்கள் செய்தபோதிலும், சரணாகதியை வெளிப்படுத்தும் சொல்லை நான் கூறுகிறேன். இப்படிப்பட்ட என்னை ஒதுக்குவது உனக்கு ஏற்புடையது அல்ல.

- ஸ்ரீவரதராஜஸ்தவம் (84) - சரணவரணவாகியம் பேதிதா ந பவதி பத ஸாபி தீபூர்விகா – நான் கூறிய சரணாகதி குறித்த சொற்களானவை எனது அறிவாலும், முழு மனதாலும் உணர்ந்து கூறப்படவில்லை. ஆயினும் இதனையும் நீ ஏற்று என்னை ரக்ஷித்தால் மட்டுமே நான் பிழைக்க இயலும்.

- ஸ்ரீவரதராஜஸ்தவம் (92) - ப்ரபத்திவாசைவ நிரீக்ஷிதும் வ்ருணே – பக்தியில்லாதவர்களால் அறிய இயலாத உன்னை, ப்ரபத்தியை வெளிப்படுத்தும் சொற்கள் கொண்டு காண விரும்புகிறேன்.

**மூலம் -** இவ்வுக்தி மாத்ர நிஷ்டைனுடையவும் ஆசார்யநிஷ்டைனுடையவும் நிலைகள் இரண்டையும் "தவ பரோ அஹமகாரிஷி தார்மீகை: சரணமித்யபி வாசமுதைரிரம் இதி ஸஸாக்ஷிகயந்நிதமத்ய மாம் குரு பரம் தவ ரங்கதுரந்த"ர என்று சேர்த்து அநுஸந்தித்தார்கள். இதில் மிகுதி காட்டுகிற அபிசப்தத்தாலே ஒரொன்றே அமையுமென்று ஸூசிதமாயிற்று.

**விளக்கம்** – உக்திநிஷ்டை, ஆசார்யநிஷ்டை ஆகிய இரண்டையும் பின்பற்றுபவர்களும் நிலைகள் என்ன என்பதை ஒரே ச்லோகத்திலும் காணலாம். ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-102) - தவ பர: அஹம் அகாரிஷி: தார்மிகை: சரணம் இதி அபி வாசம் உதைரிரம் இதி ஸஸாக்ஷிகயந் இதம் அத்ய மாம் குரு பரம் தவ ரங்கதுரந்தர - ஸ்ரீரங்கநாதா! மிகவும் உன்னதமான திருக்கல்யாண குணங்கள் கொண்ட எனது ஆசார்யர்களால் உனக்கு எற்றவனாக அடியேன் ஆக்கப்பட்டேன். "சரணம் புகுந்தேன்", என்று அடியேனின் வாய்விட்டுக் கூறினேன். இவற்றையே எனது கைம்முதலாகக் கொண்டு, அடியேனைக் காப்பது என்பது உனது பொறுப்பு என்று செய்து கொள்ளவேண்டும் – என்ற ச்லோகம் காண்க. ச்லோகத்தில் உள்ள அபி என்னும் சொல் மூலம், இந்த இரண்டில் ஏதேனும் ஒன்று கரையேற்றும் என்பது மறைமுகமாக உணர்த்தப்பட்டது.

## ஆசார்ய நிஷ்டை என்பதன் விளக்கம்

**மூலம் -** இவர்களில் ஆசார்யநிஷ்டன் "புத்த்ர: ப்ரேஷ்யஸ்ததா சிஷ்ய இதி ஏவம் ச நிவேதயேத்" என்று சாண்டில்ய ஸ்ம்ருத்யாதிகளிற் சொல்லுகிறபடியே ஆசார்யனுடைய ஆத்மாத்மீய பரஸமர்ப்பணத்திலே தானும் அந்தர்ப்பூதன். "ஸித்திர்பவதி வா நேதி ஸம்சய: அச்யுத ஸேவிநாம் | ந ஸம்சய: அத்ர தத்பக்த பரிசர்யா ரதாத்மநாம்" என்கிற கணக்கிலே ஆசார்யநிஷ்டனுக்குக் கைமுதிக ந்யாயத்தாலே பலஸித்தியில் ஸந்தேஹமில்லை. ஒரு

மலையில் நின்றும் ஒரு மலையிலே தாவும் ஸிம்ஹ சரீரத்தில் ஐந்துக்களைப் போலே பாஷ்யகாரர் ஸம்ஸார லங்கனம் பண்ண அவரோடு உண்டான குடல் துவக்காலே நாம் உத்தீர்ணராவுதோமென்று முதலியாண்டான் அருளிச்செய்த பாசுரம். "அந்த: அநந்த ப்ரஹணவசகோ யாதி ரங்கேச யத்வத் பங்குர்நௌகா குஹர நிஹிதோ நீயதே நாவிகேந | புங்க்தே போகாநவிதித நிபஸ்ஸேவகஸ்யார்க்ககாதி: த்வத் ஸம்ப்ராப்தௌ ப்ரபவதி ததா தேசிகோ மே தயாளு: ||" என்று ந்யாஸதிலகத்திலே சொன்னோம்.

**விளக்கம்** – உக்திநிஷ்டை, ஆசார்யநிஷ்டை ஆகிய இரண்டில் ஆசார்யநிஷ்டையை அடைந்தவன் நிலை என்ன? சாண்டில்யஸ்ம்ருதி (3-75) - புத்ர: ப்ரேஷ்யஸ்ததா சிஷ்ய இதி ஏவம் ச நிவேதயேத் – புத்திரன், தாஸன், சீடன் என்ற வரிசையில் ஸமர்ப்பிக்கவேண்டும் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஆசார்யநிஷ்டையை அடைந்தவன் ஆசார்யனின் பர ஸமர்ப்பணத்தில் தானும் அடங்கியவனாக உள்ளான். சாண்டில்யஸ்ம்ருதி (1-95) - ஸித்திர்பவதி வா நேதி ஸம்சய: அச்யுத ஸேவிநாம் ந ஸம்சய: அத்ர தத்பக்த பரிசர்யா ரதாத்மநாம் – எம்பெருமானை அடைந்தவர்களுக்கு பலன் கிட்டுமா என்ற ஐயம் உண்டாகலாம், அவன் அடியார்களுக்குத் தொண்டு செய்வதில் விருப்பம் உள்ளவர்களுக்கு பலன் கிட்டுமா என்ற ஐயமே அவசியம் இல்லை – என்று கூறியது. இதற்கு ஏற்றாப்போல், ஆசார்யனை அடைந்தவர்களுக்குப் பலன் கிட்டுமா அன்ற சந்தேகமே அவசியம் இல்லை (கைமுதிக ந்யாயம் என்றால் தகுதி இல்லாதவனுக்கு அனைத்தும் கிட்டும்போது, தகுதி உள்ளவனுக்குக் கிட்டாதா என்பதாகும்). ஒரு மலையில் உள்ள சிங்கம் மற்றொரு மலைக்குத் தாவும்போது, அதன் உடலில் உள்ள ஈ, கொசு முதலான கிருமிகளும் அதனுடனே சேர்ந்து செல்லும் அல்லவா? எம்பெருமானார் ப்ரபத்தி செய்தபோது, அவருடன் நமக்கு உள்ள காரணமாக, நமக்கும் அந்த ப்ரபத்தி கிட்டிவிட்டது என்று முதலியாண்டான் கூறுவது காண்க. மேலும் ந்யாஸதிலகத்தில் (21) – அந்த: அநந்த ப்ரஹணவசகோ யாதி ரங்கேச யத்வத் பங்குர்நௌகா குஹர நிஹிதோ நீயதே நாவிகேந | புங்க்தே போகாநவிதித நிபஸ்ஸேவகஸ்யார்க்ககாதி: த்வத் ஸம்ப்ராப்தௌ ப்ரபவதி ததா தேசிகோ மே தயாளு: - திருவரங்கனே! குருடன் ஒருவன் கண்பார்வை உள்ளவனைப் பிடித்தபடி நடக்கிறான். கால் விளங்காதவன், ஓடம் ஓட்டுபவனால் ஓடத்தில் கொண்டு செல்லப்படுகிறான். அரசனின் வேலையாட்களின் புத்திரர்கள் அரசனை அறியமாட்டார்கள் என்றாலும், போகங்களை அனுபவித்தபடி வாழ்கின்றனர். இது போன்றே கருணை நிரம்பிய ஆசார்யன் உன்னை நான் அடையும்படிச் செய்கிறார் – என்றோம்.

## ப்ரபத்தி இல்லாமல் மோக்ஷம் இல்லை

**மூலம் -** ஏதேனும் ஒரு ப்ரகாரமாகவுமாம், ஆரேனும் ஒருவர் அனுஷ்டிக்கவுமாம் ப்ரபத்திக்கல்லது ஸர்வேச்வரன் பரமபுருஷார்த்தம் கொடுக்க இரங்கான் என்றதாயிற்று.

**விளக்கம் –** ஏதேனும் ஒரு உபாயம் மூலமாகவோ அல்லது ஓர் ஆசார்யன் நமக்காகவோ ப்ரபத்தி என்பதைச் செய்யவேண்டும். இப்படிச் செய்யாமல் ஸர்வேச்வரன் மிகவும் உயர்ந்த புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை அளிக்க முன்வரமாட்டான்.

## பலவிதமான உபாயங்களும் அவற்றின் உபகாரங்களும்

**மூலம் –** இப்படி "பசுர்மநுஷ்ய: பக்ஷீ வா யே ச வைஷ்ணவ ஸம்ச்ரயா: | தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத்விஷ்ணோ: பரமம் பதம்" என்றும், "தே வயம் பவதா ரக்ஷயா பவத்விஷயவாஸிந: | நகரஸ்தோ வநஸ்யோ வா த்வம் நோ ராஜா ஜநேச்வர" என்றும், "நற்பாலயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் நற்பாலுக்கு உய்த்தனன்" என்றும், "வன்மையாவது உன் கோயிலில் வாழும் வைட்டணவனென்னும் வன்மை" என்றும் சொல்லுகிற பகவதாபிமாந பகவத்விஷயவாஸாதிகளுக்கும் தன் பக்கலிலேயாதல் பிறர் பக்கலிலேயாதல், முன்பேயாதல் பின்பேயாதல் ஓர் உபாயத்துவக்குண்டு. எங்ஙனேயென்னில் இவை உபாஸநத்திலேயாதல் ப்ரபத்தியிலேயாதல் மூட்டியும், உத்பந்நோபாஸனனுக்கு உத்தரோத்தர உபசயத்தைப் பண்ணியும், ஸ்வதந்த்ரப்ரபத்த்யநுஷ்டாநம் பண்ணினவனுக்கு இங்குற்ற கைங்கர்யாபிவ்ருத்தியை உண்டாக்கியும், பகவத் ப்ராப்தியிலே த்வரையை உண்டாக்கியும் உபகாரங்களாம்.

**விளக்கம் –** திவ்யதேசங்களில் வசிப்பது முதலான செயல்கள் மோக்ஷத்தை நேரடியாகவோ அல்லது தாமாகவோ அளிக்கவல்லவை அல்ல. கீழே உள்ள பல வரிகள் காண்க:

- சாண்டில்ய ஸ்ம்ருதி (1-15) - பசுர்மநுஷ்ய: பக்ஷீ வா யே ச வைஷ்ணவ ஸம்ச்ரயா: தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத்விஷ்ணோ: பரமம் பதம் – பசு, மனிதன், பறவை முதலானவர்கள் ஒரு பாகவதனை அண்டுவதன் மூலமே மோக்ஷம் பெறுகின்றனர்.

- இராமாயணம் ஆரண்யகாண்டம் (1-20) - தே வயம் பவதா ரக்ஷயா பவத்விஷயவாஸிந: நகரஸ்தோ வநஸ்யோ வா த்வம் நோ ராஜா ஜநேச்வர – நீ

எங்களின் அரசனாக இருப்பதால் உன்னால் நாங்கள் காக்கப்பட வேண்டியவர்கள். நீ நாட்டில் இருந்தாலும், காட்டில் இருந்தாலும் நீயே எங்கள் அரசன் ஆவாய்.

- திருவாய்மொழி (7-5-1) - நற்பாலயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் நற்பாலுக்கு உய்த்தனன் – சிறந்த இடமான அயோத்தியில் வாசம் செய்யும் அனைத்து உயிர்களுக்கும் நல்ல ஸ்வபாவம் உண்டாகும்படிச் செய்தான்.

- பெரியாழ்வார் திருமொழி (5-1-3) - வன்மையாவது உன் கோயிலில் வாழும் வைட்டணவனென்னும் வன்மை – என்னுடைய பலம் என்பது நீ வாசம் செய்கின்ற திவ்யதேசங்களில் வசிக்கும் வைணவன் என்பதே ஆகும்.

இந்த வரிகளிலும் மறைமுகமாக ப்ரபத்தி என்பது உக்திநிஷ்டையாகவோ ஆசார்யநிஷ்டையாகவோ கூறப்பட்டது எனலாம். எப்படி? மேலே கூறப்பட்டுள்ள அனைத்தும் ஒருவனை பக்தி மார்க்கத்திலோ ப்ரபத்தி மார்க்கத்திலோ ஈடுபடுத்தவல்லவை ஆகும். ஒருவனுக்கு முன்பே பக்தி அல்லது உபாஸனம் கைகூடியிருந்தால், இது போன்றவை (திவ்யதேச வாசம்) அவனுக்கு அந்த பக்தி அல்லது உபாஸனத்தை மேலும் வளர்க்கவல்லவை ஆகும். ஒருவன் ப்ரபத்தி செய்திருப்பான் என்றால், இவை அவனுக்கு கைங்கர்ய ருசியை உண்டாக்கவல்லவை ஆகும். இப்படியாக இவை உதவுகின்றன.

## பக்தி ப்ரபத்தி – ஒற்றுமை வேற்றுமைகள்

**மூலம்** - இவர்களில் வ்யாஸாதிகளைப்போலே உபாயாந்தர ஸமர்த்தனாகையாலே அகிஞ்சனுமன்றிக்கே விலம்பக்ஷமனாகையாலே அநந்யகதியுமன்றிக்கேயிருக்கிற ஸத்வாரக ப்ரபத்திநிஷ்டனுக்கு ப்ராப்தகர்ம பர்யவஸாந பாவியான அந்திம ப்ரத்யயத்தை அவதியாக உடைத்தான உபாஸனரூப அங்கியினுடைய யதாவந்நிஷ்பத்தி பூர்வகமான மோக்ஷம் பலம்.

**விளக்கம்** – இவர்களில் பக்திக்கு மார்க்கமாக ப்ரபத்தியைக் கொண்டவர்கள், வ்யாஸர் முதலானோர் போன்று, மோக்ஷம் அடைய ப்ரபத்தி அல்லாத மற்ற மார்க்கங்களும் உடையவர்களாக இருப்பார்கள். ஆக இவர்கள் வேறு கதி இல்லாதவர்கள் (அகிஞ்சனர்கள் அல்லர்) அல்லர். இவர்கள் மோக்ஷம் கிட்டும்வரை பொறுத்திருக்கத் தயாராக உள்ளதால், மற்ற விஷயங்களிலும் ஈடுபடுவர். இவர்கள் பலன் தரத் தொடங்கிவிட்ட (ப்ராப்தகர்மம்) கர்மங்கள் முற்றிலுமாக அழிந்த பின்னரே மோக்ஷம் பெறுவார்கள். மரண காலத்தில் மட்டுமே இது நிகழ்வதாக இருக்கும்.

இப்படிப்பட்டவர்கள் பக்தியை மோக்ஷ உபாயமாகக் கொண்டதால், பக்தியின் இலக்கணம் பரிபூர்ணமாகப் பின்பற்றப்பட்டால் மட்டுமே மோக்ஷம் கிட்டும்.

**மூலம் -** ஸர்வாதிகாரமாய், ஸர்வ அநிஷ்ட நிவர்த்தநக்ஷமமாய், ஸர்வேஷ்ட ஸாதநமாகவற்றாய், ஸுகரமாய், ஸக்ருத் கர்த்தவ்யமாய், ஆசுகாரியாய், ப்ரதிபந்தாநர்ஹமாய், ப்ரஹ்மாஸ்த்ர பந்தம் போலே ஸ்வபலத்தில் உபாயாந்தர ப்ரயோக அஸஹமாயிருந்துள்ள ப்ரபத்தியைத் தன் அதிகாராநுரூபமாக அத்வாரகமாகப் பற்றினவனுக்குப் பரிபூர்ணாநுபவத்துக்கு வேறு ப்ரதிபந்தகம் இல்லாதபடியாலே ப்ரபத்திக்ஷணம் முதலாக "இங்கே திரிந்தேற்கு இழுக்குற்றென்" என்றும், "இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என்றும், "ஏரார் முயல் விட்டுக் காக்கைப் பின் போவதே" என்றும், "ஸ்நேஹோ மே பரமோ ராஜந் வ்யாதி நித்யம் ப்ரதிஷ்டித: பக்திச்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி" என்றும் சொல்லுகிறபடிகளிலே இச்சரீரத்தோடேயிருந்து கைங்கர்யாத்யநுபவம் பண்ண வேணுமென்கிற அபிஸந்திக்குக் காரணமான அர்ச்சாவதாராதி ஸங்கல்பமடியாக வந்த ஸ்வாநுமதியாலே ஸ்தாபிதமான சரீரத்தின் அவஸாநத்தை எல்லையாக உடைத்தாய் தேச கால ஸ்வரூப பரிச்சேதவத்தாய்க் கொண்டு இங்கு உண்டாம் கைங்கர்ய பலோத்கமத்தை முதலாகவுடைத்தான பரிபூர்ண கைங்கர்ய பர்யந்த மோக்ஷம் பலம்.

**விளக்கம் –** மாறாக ப்ரபத்தி என்பது அனைத்து அதிகாரிகளுக்கும் பொருந்தும் வகையில் உள்ளது; மோக்ஷம் அடையத் தடையாக உள்ள அனைத்து தடைகளையும் நீக்கிவிடுகிறது; விரும்பினவற்றை அளிக்கவல்லதாக உள்ளது; இயற்றுவதற்கு மிகவும் சுலபமானது; ஒருமுறை செய்தாலே போதுமானது; மிகவும் விரைவாக விரும்பிய பலனை அளிக்கவல்லது; எந்தவிதமான தடைகளாலும் தடுக்கப்பட இயலாதது ஆகும். ப்ரம்மாஸ்திரம் எப்படி குறிப்பிட்ட இலக்கை வீழ்த்தாமல் ஓயாதோ அது போன்று, ப்ரபத்தியும் வேறு எந்தவிதமான உபாயத்தைப் பற்றுவதையும் விரும்பாமல், தானே பலன் அளிக்கவல்லதாகும். இப்படியாக உள்ள ப்ரபத்தியை மோக்ஷ மார்க்கமாக கைக்கொண்டவன், முழுமையான பகவத் அனுபவம் பெற்று, அதனால் ஆன்ந்தத்தில் திளைக்க எந்தவிதமான தடையும் உண்டாவதில்லை. ஆக ப்ரபத்தியைக் கைக்கொண்ட பின்னர், அந்த அதிகாரி மோக்ஷம் பெற எந்தவிதமான தடையும் இல்லை. அவனாக விரும்பும் வரையில், இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டு, அவன் விரும்பும்படி அர்ச்சாவதாரத்தில் உள்ள எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்தபடி இருக்கலாம். இவனுக்கான மோக்ஷ காலம் என்பது இவன் உடலை விடும் காலம்வரை காத்து நிற்கிறது. இந்த உலகில் இவன் உள்ளபோது தொடங்கப்பட்ட கைங்கர்யம் என்பது காலம், இடம், சரீரத் தொடர்பு போன்ற வரம்புகளால் சுருங்கியே உள்ளது. இவன் உடலை விடும் காலத்திம், ப்ரபத்தியானது இவனை வைகுண்டத்தில் ஏற்றி, இவன் முழுமையான கைங்கர்யத்தைத் தொடரும்படிச் செய்து விடுகிறது. மோக்ஷம் பெறும்

காலம் வரையில் இந்த உலகில் வாழ்கின்ற ப்ரபன்னர்களின் (ப்ரபத்தி செய்தவர்களின்) நிலை என்ன என்பதைக் கீழே உள்ள வரிகள் கூறுகின்றன:

- திருவாய்மொழி (8-10-4) - இங்கே திரிந்தேற்கு இழுக்குற்றென் – அவனுக்குக் கைங்கர்யம் செய்வதற்கு அவன் அருளிய பின்னர், இந்த உலகில் வாழும்போது என்ன குற்றம் என்னை வந்தடையும்?

- திருமாலை (2) - இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்

- சிறிய திருமடல் - ஏரார் முயல் விட்டுக் காக்கைப் பின் போவதே – இனிமையான முயல் மாமிஸத்தை விட்டுப் பறக்கும் காக்கையின் மாமிஸத்திற்காக அலைவார்களோ.

- இராமாயணம் உத்தர காண்டம் (40-15) - ஸ்நேஹோ மே பரமோ ராஜந் வ்யாதி நித்யம் ப்ரதிஷ்டித: பக்திச்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி – அனுமன் இராமனிடம், "அரசனே! எப்போதும் அதிகமாக உள்ள எனது நட்பு என்பது உன்னிடத்தில் அசைக்க இயலாதபடி உள்ளது. இது போன்று உன்னிடம் உள்ள பக்தியும் உறுதியாகவே உள்ளது. இவற்றை விடுத்து எனது மனம் எங்கும் செல்லாது", என்றான்.

## பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகிய இரண்டும் அனைத்தும் அளிக்கும்

**மூலம்** - "வரம் வரய தஸ்மாத்த்வம் யதாபிமதமாத்மந: | ஸர்வம் ஸம்பத்ஸ்யதே பும்ஸாம் மயி த்ருஷ்டிபதம் கதே", "கிம் வா ஸர்வ ஜகத் ஸ்ரஷ்ட: ப்ரஸந்நே த்வயி துர்லபம்", "தஸ்மிந் ப்ரஸந்நே கிமிஹாஸ்த்யலப்யம்", "கிம் லோகே ததிஹ பரத்ர சாஸ்தி பும்ஸாம் யத்விஷ்ணு ப்ரவண தியாம் ந தால்ப்ய ஸாத்யம்", "பலமத உபபத்தே:" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வேச்வரன் ஸகலபலப்ரதனாகையாலே அவன் திருவடிகளிலே ப்ரபத்தி ஸகலபல ஸாதநமாகையால் இவ்வதிகாரிகள் இருவருக்கும் இது யதாபிமதபல ஹேதுவாயிற்று. "சதுர்விதா பஜந்தே மாம்" என்கிறபடியே உபாஸநம் யாதொருபடி சதுர்வித பலத்துக்கும் ஸாதநமாயிருக்கிறது. அப்படியே "தாவதார்த்திஸ்ததா வாஞ்சா தாவந்மோஹஸ்ததா அஸுகம் | யாவந்ந யாதி சரணம் த்வாமசேஷாதநாசநம்" என்கிறபடியே ப்ரபத்தியும் இச்சதுர்வித பலத்துக்கும் ஸாதநமாகவிறே மஹர்ஷிகள் அறுதியிடுவது.

**விளக்கம்** – ஸர்வேச்வரன் அனைத்தும் அளிப்பவனாக உள்ளதாலும், அவனது திருவடிகளில் செய்யப்பட்ட ப்ரபத்தி என்பது அனைத்தையும் அளிக்கவல்லதாக உள்ளதாலும், இத்தகைய ப்ரபத்தி என்பதே பக்தன், ப்ரபந்நன் ஆகிய இருவருக்கும், அவர்கள் விரும்பியதை அளிப்பதாக உள்ளது. இதனைக் கீழே உள்ள பல வரிகளிலும் காணலாம்:

- விஷ்ணுபுராணம் (1-12-76) - வரம் வரய தஸ்மாத்த்வம் யதாபிமதமாத்மந: ஸர்வம் ஸம்பத்ஸ்யதே பும்ஸாம் மயி த்ருஷ்டிபதம் கதே – எம்பெருமான் துருவனிடம், "உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்பாயாக. நான் கண்ணில் தெரியும்போது, அங்கு அனைத்தும் ஏற்படும்", என்றான்.

- விஷ்ணுபுராணம் (1-12-79) - கிம் வா ஸர்வ ஜகத் ஸ்ரஷ்ட: ப்ரஸந்நே த்வயி துர்லபம் – துருவன் எம்பெருமானிடம், "அனைத்து உலகங்களையும் படைத்தவனே! நீ கண் முன்னே நிற்கும்போது எதுதான் கிடைப்பது அரிது?", என்றான்.

- விஷ்ணுபுராணம் (1-17-91) - தஸ்மிந் ப்ரஸந்நே கிமிஹாஸ்த்யலப்யம் – அவன் இங்கு தோன்றினால் அடைய இயலாதது எது?

- விஷ்ணுதர்மம் (43-46) - கிம் லோகே ததிஹ பரத்ர சாஸ்தி பும்ஸாம் யத்விஷ்ணு ப்ரவண தியாம் ந தால்ப்ய ஸாத்யம் – தால்ப்யனே! ஸர்வேச்வரனிடம் பக்தி கொண்டவர்களுக்கு இந்த உலகத்திலோ, அந்த உலகத்திலோ அடைய இயலாமல் உள்ளது எது?

- ப்ரஹ்மஸூத்ரம் (3-2-37) - பலமத உபபத்தே: - அனைத்து பலங்களும் ப்ரஹ்மத்திடமே உண்டாகின்றன.

பக்தி அல்லது உபாஸநம் என்பதே நான்கு விதமான பலன்களுக்கு வழியாக உள்ளது. இதனை ஸ்ரீமத் பகவத் கீதை (7-16) - சதுர்விதா பஜந்தே மாம் – நான்கு வகையான மனிதர்கள் என்னை ஆராதிக்கின்றனர் – என்றது. இது போன்றே ப்ரபத்தியும் நான்கு விதமான பலன்களை அடையும் உபாயமாக உள்ளது என்று மஹரிஷிகள் கூறுகின்றனர். இதனை விஷ்ணுபுராணம் (1-9-73) - தாவதார்த்திஸ்ததா வாஞ்சா தாவந்மோஹஸ்ததா அஸுகம் யாவந்ந யாதி சரணம் த்வாமசேஷாதநாசநம் – அனைத்து பாவங்களையும்

நீக்கவல்ல ப்ரபத்தியை உன்னிடம் பண்ணாமல் உள்ளவரை மட்டுமே மனிதனுக்குத் தான் இழந்த செல்வங்களை மீண்டும் பெறவேண்டும், புதிய செல்வம் அடையவேண்டும், சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்மாவை உணராமல் இருப்பது, ஸம்ஸார துக்கம் ஆகியவை தொடரும் – என்றது.

## ப்ரபந்நன் சிறந்தவன்

**மூலம் -** இதில் அசேஷ அதநாசநம் என்கையாலும், ஆதரம் தோற்றத் தாவத் என்று அதிகாரம் தோறும் ஆவர்த்திக்கையாலும் இவன் அபேக்ஷித்த பலமெல்லாம் இவன் கோலின காலத்திலே யதாமநோரதம் ஸித்திக்கும். இப்படிப்பட்ட ஏற்றத்தை நினைத்து "ஸத்கர்ம நிரதா: சுத்தா: ஸாங்க்ய யோக விதஸ்ததா | நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி" என்று சொல்லுகிறது.

**விளக்கம் –** ஆக "அனைத்து பாவங்களையும் நீக்கும்" என்று கூறப்படுவதாலும், "ப்ரபத்தி வரை" என்று பல இடங்களிலும் மீண்டும் மீண்டும் கூறப்படுவதாலும், ப்ரபத்தி செய்தவன் விரும்புகின்ற அனைத்தும் அவன் நினைத்த நேரத்திலேயே கிட்டிவிடும். இவனுக்கு இப்படிப்பட்ட மேன்மை உள்ளது என்பது லக்ஷ்மீ தந்த்ரத்தில் (16-62) - ஸத்கர்ம நிரதா: சுத்தா: ஸாங்க்ய யோக விதஸ்ததா நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி – ஞான யோகத்தைக் கைக்கொண்டவர்கள், பக்தி யோகத்தைக் கைக்கொண்டவர்கள், ஆத்மாத் தூய்மைப்படுத்தவல்ல கர்மங்களை செய்பவர்கள் ஆகிய பலரும் ப்ரபத்தி செய்தவன் பெறுவதில் கோடியில் ஒரு பங்கைக் கூடப் பெறத் தகுதியானவர்கள் அல்லர் – என்றது.

## இருவருக்கும் மோக்ஷம் ஒன்றே

**மூலம் -** இவனுக்கு இங்கிருந்த காலத்தில் கைங்கர்யத்தில் வைஷம்யம் தன் கோலுதலில் வைஷம்யத்தாலே வந்தது. அது தனக்கு அடி ப்ராரப்த ஸுக்ருத விசேஷம். அந்திம சரீராநந்தரம் பெறும் பேற்றில் ஒரு வைஷம்யமில்லை. பாரதந்த்ரம் ஏகரூபம். "பாரதந்த்ர்யம் பரே பும்ஸி ப்ராப்ய நிர்கத பந்தந: | ஸ்வாதந்த்ர்யமதுலம் ப்ராப்ய தேநைவ ஸஹ மோததே" என்று பலதசையிற் சொல்லுகிற ஸ்வாதந்த்ர்யமும் கர்மவச்யனன்றிக்கே ஸர்வவித கைங்கர்ய யோக்யனாகை என்று பலபாதத்திலே நிர்ணிதம்.

**விளக்கம் –** ப்ரபந்நன் இங்கு வாழும்போது செய்து வரும் கைங்கர்யம் என்பதன் அளவும் முறையும் அவன் எந்த அளவு கைங்கர்யம் செய்யவேண்டும் என்று ஆசைப்படுகிறானோ,


email : sridharan_book@yahoo.com

அதனைப் பொறுத்தே அமையும். அவனுக்கு எந்த அளவு இப்படிப்பட்ட ஆசை உண்டாகிறது என்றால், கடந்த பிறவிகளில் அவன் செய்த புண்ணிய பலன்கள் எந்த அளவு இந்தப் பிறவியில் பலன் தரத் தொடங்கிவிட்டனவோ அந்த அளவே ஆகும். ஆனால் அவன் தனது உடலை விட்ட பின்னர் கிடைக்கவுள்ள பேரானந்தத்தில் எந்தவிதமான வேறுபாடுகளும் இருக்காது. எம்பெருமானை முழுமையாகச் சார்ந்து இருத்தல் என்பது அனைவருக்கும் சமமே ஆகும். இதனை விஷ்ணுதத்வம் - பாரதந்த்ர்யம் பரே பும்ஸி ப்ராப்ய நிர்கத பந்தந: ஸ்வாதந்த்ர்யமதுலம் ப்ராப்ய தேநைவ ஸஹ மோததே – தான் எம்பெருமானைச் சார்ந்தே உள்ளவன் என்பதை அறிந்த ஒருவன், தனது கர்ம பந்தங்களை விடுகிறான், கர்மத்திற்கு வசப்படாத நிலையை அடைகிறான், எம்பெருமானுடன் இருந்து ஆனந்தப்படுகிறான் – என்றது. மோக்ஷம் என்பது எந்தவிதமான கர்மபந்தமும் இன்றி எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்தல் என ப்ரஹ்மஸூத்ரமும் கூறியது காண்க.

வேண்டும் பெரும்பயன் வீடு என்று அறிந்து விதிவகையால்
நீண்டும் குறுகியும் நிற்கும் நிலைகளுக்கு ஏற்கும் என்பர்
மூண்டு ஒன்றில் மூலவினை மாற்றுதலில் முகுந்தன் அடி
பூண்டு அன்றி மற்றோர் புகல் ஒன்று இலை என நின்றனரே

**பொருள்** – பகவத் அனுபவத்தில் திளைக்க வேண்டும் என்னும் ஆசை உள்ளவர்கள் வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோள் மோக்ஷம் என்றும், அதனை அடைய இரண்டு உபாயங்கள் உள்ளன என்றும், தாங்கள் செய்த புண்ணிய பலன் காரணமாக நீண்ட காலம் கழித்து பலன் தரும் உபாயம் மற்றும் உடனடியாக பலன் தரும் உபாயம் இவையே என்றும் அறிகின்றனர். இந்த இரண்டில் ஒன்றைப் பின்பற்ற எண்ணுகின்றனர். இவற்றுக்குத் தடையாக உள்ள தங்களது முன்வினை கர்ம பலன்களை நீக்குவதற்கு, முகுந்தனாகிய எம்பெருமானின் திருவடிகளைப் பற்றுதலே வழி என்றும், வேறு உபாயம் இல்லை என்றும் அறிகின்றனர்.

ப்ரபந்நாதந்யேஷாம் ந திசதி முகுந்தோ நிஜபதம்
ப்ரபந்நாச்ச த்வேதா ஸுசரித பரீபாக பிதாய விளம்பேந
ப்ராப்திர் பஜநஸுகமேகஸ்ய விபுலம்
பரஸ்யாஸு ப்ராப்தி: பரிமிதரஸா ஜீவிததசா

**பொருள்** – ப்ரபந்நர்களைக் காட்டிலும் வேறு யாருக்கும் முகுந்தன் தனது திருவடிகளை அளிப்பதில்லை. ப்ரபந்நர்களில் இருவகை உண்டு – மோக்ஷம் பெறுவதற்காகப் ப்ரபத்தி செய்தல், பக்தி அல்லது உபாஸனை கிட்டுவதற்காகப் ப்ரபத்தி செய்தல் என்பதாகும். இது அவர்கள் முற்பிறவி புண்ணியங்களால் மாறுபடுகிறது. பக்தனுக்கு உண்டாகும் மோக்ஷம்

என்பது தாமதமாகவே உண்டாகும். ஆனால் அவனுக்குப் பக்தி மூலமாகக் கிட்டும் பகவத் அனுபவம் இந்த உலகில் நீண்ட நாட்கள் நீடிக்கும். மற்றவனுக்கு மோக்ஷம் என்பது உடனடியாகக் கிட்டும். ஆனால் உயிருடன் உள்ள காலம் என்பது குறைவாக உள்ளதால், கைங்கர்ய இன்பமும் குறைவாகவே இருக்கும்.

அதிகாரிவிபாகாதிகாரம் ஸம்பூர்ணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## அதிகாரங்கள் 9 - 15

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# 9. உபாயவிபாகாதிகாரம்

(மோக்ஷ உபாயங்களில் உள்ள வகைகள்)

உபாய: ஸ்வப்ராப்தே: உபநிஷத் அதீத: ஸ பகவாந்
ப்ரஸத்த்யை தஸ்ய உக்தே ப்ரபதந நிதித்யாஸந கதீ
ததாரோஹ: பும்ஸ: ஸுக்ருத பரிபாகேண மஹதா
நிதாநம் தத்ர அபி ஸ்வயம் அகில நிர்மாண நிபுணா:

**பொருள்** – எம்பெருமானை அடையும் உபாயம் எம்பெருமானே என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. அவனது அனுக்ரஹத்தைப் பெறும் மார்க்கங்களாகப் பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகிய இரண்டும் கூறப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட பக்தி மற்றும் ப்ரபத்தி மார்க்கங்களில் ஒருவன் ஈடுபடுவதற்கு, அவனுடைய பூர்வகர்ம புண்ணியமே காரணமாக உள்ளது. ஆயினும், அனைத்தையும் படைக்கவல்ல எம்பெருமானே காரணமாக உள்ளான்.

## உபாயம் உபேயம்

**மூலம்** - இவர்களுக்கு கர்த்தவ்யமான உபாயமாவது ஒரு ஜ்ஞாநவிகாஸ விசேஷம். இத்தாலே ஸத்யமாய் ப்ராப்திரூபமான உபேயமாவது ஒரு ஜ்ஞாநவிகாஸ விசேஷம். இவற்றில் உபாயமாகிற ஜ்ஞாந விகாஸ விசேஷம் கரண ஸாபேக்ஷமுமாய் சாஸ்த்ர விஹிதமுமாய் ஸத்யத்வாதிகளான ஸ்வரூபநிரூபகதர்மங்கள் அஞ்சோடே கூடின அவ்வோ வித்யாவிசேஷ ப்ரதிநித்ய குணாதிகளிலே நியதப்ரஹ்ம விஷயமுமாயிருக்கும். உபேயமாகிற ஜ்ஞாநவிகாஸ விசேஷம் கரண நிரபேக்ஷமுமாய் ஸ்வபாவ ப்ராப்தமுமாய் குண விபூத்யாதிகள் எல்லாவற்றாலும் பரிபூர்ணப்ரஹ்ம விஷயமுமாயிருக்கும்.

**பொருள்** – முமுக்ஷுக்களால் செய்யவேண்டிய உபாயமானது, ஒரு வகையான ஞான மலர்ச்சி ஆகும். இத்தகைய உபாயம் மூலமாக அடையப்படுகிற வஸ்துவானது (உபேயம்) மற்றொரு வகையான ஞான மலர்ச்சி ஆகும். இவற்றில் உபாயமாக இருக்கின்ற ஞான மலர்ச்சி என்பது இந்த்ரியங்களை எதிர்பார்ப்பதாக உள்ளது என சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இந்த உபாயமானது ஸத்யம் முதலான ஐந்து தன்மைகளுடன் கூடிய ப்ரஹ்மத்தையே இலக்காகக் கொண்டுள்ளது. இந்தத் தன்மைகள் அந்த ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை விளக்குவதாக உள்ளன. பல ப்ரஹ்மவித்யைகளில் கூறப்பட்டுள்ள தன்மைகளுடன் கூடியதாகவும் உள்ளன. ஆனால், உபேய ஞான மலர்ச்சி என்பது ஞான இந்த்ரியங்களின் துணையின்றி இயங்குகிறது. இது ஜீவன்களுக்கு இயற்கையாகவே

உள்ளதாக இருக்கும். அனைத்து குணங்களுடனும் விபூதிகளுடனும் கூடிய ப்ரஹ்மத்தை இலக்காகக் கொண்டு இது உள்ளது.

உபாஸிதகுணாதேர்யா ப்ராப்தாவப்யவஹிஷ்க்ரியா
ஸா தத்க்ரதுநய க்ராஹ்யா ந ஆகாராந்தர வர்ஜநம்

**பொருள்** – தத்க்ரது ந்யாயம் என்பது பகவத் அனுபவ காலத்தில், த்யானம் முதலானவை விலகாமல் உள்ளன என்று தெரிவிக்கிறதே அல்லாமல், மற்ற எதனையும் விடும்படிக் கூறவில்லை.

## பக்தருக்கும் ப்ரபந்நருக்கும் உபாய உபேயங்கள் பயன்படும் விதம்

**மூலம் -** ப்ராப்திரூபமான இவ்வநுபவத்தினுடைய பரீவாஹமாய்க் கொண்டு கைங்கர்யம் உபேயம். இவ்வுபாயரூபமாயும் ப்ராப்திரூபமாயுமிருக்கிற ஜ்ஞானத்துக்கு விஷயமாய்க் கொண்டு பலப்ரதந்த்வ போக்யத்வாதிவேஷத்தாலே ஈச்வரனுக்கு உபாயத்வமும் உபேயத்வமும்.

**விளக்கம்** – எம்பெருமானுக்குச் செய்யும் கைங்கர்யம் என்பதும் அடையும் பேறாக, அடையப்பட வேண்டிய இலக்காக (உபேயம்) உள்ளது. ஞானத்துக்கு விஷயமாக உள்ள ஸர்வேச்வரனே உபாயமாகவும், உபேயமாகவும் உள்ளான். அனைத்துவிதமான பலன்களையும் அளிப்பதால் உபாயமாகவும், அனுபவிக்கவேண்டிய வஸ்துவாக உள்ளதால் உபேயமாகவும் உள்ளான்.

**மூலம் -** இவ்வீச்வரனுடைய உபாயத்வம் அத்வாரக ப்ராப்திநிஷ்டன் பக்கல் உபாயாந்தர ஸ்தாந நிவேசத்தாலே விசிஷ்டமாய் இருக்கும். மற்ற அதிகாரிக்கும் கர்மயோகாரம்பம் முதலாக உபாஸநபூர்த்தி பர்யந்தமாக நடுவுள்ள கர்த்தவ்யங்களில் அத்யந்த அசக்த்யமான நேர்களிலே இப் ப்ரபத்தி வசீக்ருதனான ஈச்வரன் புகுந்து நின்று அந்த துஷ்கர கர்த்தவ்யங்களாலே வரும் பாபநிவ்ருத்தியையும் ஸத்த்வோந்மேஷாதிகளையும் உண்டாக்கிக் கொடுத்து அவ்வுபாஸநமாகிற உபாயத்தை பலபர்யந்தமாக்கிக் கொடுக்கும்.

**விளக்கம்** – ப்ரபத்தியைக் கைக்கொண்ட முமுக்ஷுவிற்கு, அனைத்துவிதமான உபாயங்களாக ஸர்வேச்வரனே உள்ளான். பக்தியில் ஈடுபட்ட பக்தனுக்கும் ஸர்வேச்வரனின் ஈடுபாடு உள்ளது. இவர்கள் கர்மயோகத்தில் ஈடுபடும்போது, அவர்களின் பாவங்கள் காரணமாக அந்தக் கர்மங்கள் தடைபட வாய்ப்புள்ளது. இதனால் கர்மம் தொடங்குதல், தொடங்கிய கர்மம் முடியாமல் இருத்தல் போன்ற நிலைகள்

உண்டாகின்றன. அப்போது ஸர்வேச்வரன் தலையிட்டு, அவர்களின் தடையாக உள்ள பாவங்களை நீக்கி, ஸத்வ குணம் மேலோங்கி உள்ளபடி செய்கிறான். இவர்கள் தங்களின் உபாயமாகக் கைக்கொண்டுள்ள உபாஸநம், த்யானம் முதலானவை பலன் தரும்படிச் செய்கிறான்.

## கர்மயோகத்தின் இயல்பு

**மூலம்** - அங்குக் கர்மயோகமாவது – சாஸ்த்ரத்தாலே ஜீவ பரமாத்ம யாதாத்மஜ்ஞாநம் பிறந்தால் தனக்கு சக்யங்களாய் பலஸங்காதி ரஹிதங்களான காம்யகர்மங்களோடும் நித்ய நைமித்திகங்களோடும் கூட ஸநியமமாகப் பரிக்ருஹீதமாயிருக்கும் கர்மவிசேஷம். அதின் அவாந்தரபேதங்கள் தைவமேவாபரே யஜ்ஞம் என்று தொடங்கிச் சொல்லப்பட்ட தேவார்சந தபஸ்தீர்த்த தாந யஜ்ஞாதிகள். அதிகாரி பேதத்தாலே ப்ரபத்திதானே பக்தியை இடையிட்டும் இடையிடாதேயும் மோக்ஷ ஹேதுவானாற்போலே இக்கர்மயோகம் ஜ்ஞாநயோகத்தை இடையிட்டும் இடையிடாதேயும் ஸபரிகரமான யோகத்தைக் கொண்டு ஆத்மாவலோகந ஸாதனமாம்.

**விளக்கம்** – சாஸ்த்ரங்கள் மூலமாக ஜீவாத்மா-பரமாத்மா பற்றிய ஞானம் உண்டாகி, அத்தகைய ஞானம் காரணமாகச் செய்யும் கர்மங்களே கர்மயோகம் எனப்படும். இந்தக் கர்மங்கள் - நித்யகர்மங்கள் (ஸந்த்யாவந்தனம் போன்றவை), நைமித்திக கர்மங்கள் (க்ரஹண கால தர்ப்பணம் போன்றவை) மற்றும் காம்ய கர்மங்கள் (பலனை எதிர்நோக்கிச் செய்யப்படும் கர்மங்கள்) என்று மூன்று வகைப்படும். இவை ஒவ்வொன்றும் அதிகாரியின் இயற்றும் திறனின் அடிப்படையிலேயே உள்ளன. ஸ்ரீமத் பகவத் கீதையில் (4-25) - தைவமேவாபரே யஜ்ஞம் – என்று கூறப்பட்டது போன்று, இந்தக் கர்மங்கள் தெய்வ தரிசனம், தவம் இயற்றுதல், புண்ணிய இடங்களுக்குச் செல்லுதல், தானம் அளித்தல், யாகம் இயற்றுதல் போன்று பலவகைப்படும். ப்ரபத்தி என்பது எவ்விதம் அதனைக் கடைபிடிக்கும் அதிகாரியின் தகுதியைப் பொறுத்து நேரடியாகவோ அல்லது பக்தியை முன்னிறுத்தியோ மோக்ஷம் அளிக்குமோ அது போன்று – கர்மயோகமானது ஞானயோகத்தை முன்னிறுத்தியோ அல்லது தான் மட்டுமோ ஆத்மதரிசனம் உண்டாக்கவல்லதாகும்.

## ஞானயோகத்தின் இயல்பு

**மூலம்** - ஞானயோகமாவது – கர்மயோகத்தாலே அந்தகரணஜயம் பிறந்தவனுக்குப் ப்ரக்ருத்யாதி விலக்ஷணமாய் ஈச்வரனைப் பற்ற ஆதேயத்வ விதேயத்வ சேஷத்வங்களாலே சரீரதயா ப்ரகாரமான தன் ஸ்வரூபத்தைப் நிரந்தர சிந்தநம்

பண்ணுகை. இக் கர்மயோக ஜ்ஞாநயோகங்களாலே யோகமுகத்தாலே ஆத்மாவலோகநம் பிறந்தால் வைஷயிக ஸுக வைத்ருஷ்ணயாவஹமான ஆத்மாநுபவஸுகமாகிற ஆகர்ஷகத்தில் அகப்பட்டிலனாகில் பரமபுருஷார்த்தமான பகவதநுபவத்துக்கு உபாயமான பக்தியோகத்திலே இழியும்போது உள்ளிருக்கிற ரத்நம் காண்கைக்குக் கிழிச்சீரை கண்டாற்போலே அந்தர்யாமியைப் பார்க்கும்போதைக்கு அவனுடைய சரீரபூதனான ஜீவாத்மாவினுடைய தர்சனம் உபயுக்தமாய்க் கொண்டு பக்தியோகத்துக்கு அதிகாரகோடியிலே ஏறிட்டுக் கிடக்கும்.

**விளக்கம்** – ஞானயோகம் என்பது என்னவென்றால் - கர்மயோகம் மூலம் தனது அந்தகரணத்தை (புத்தி, மனம் போன்றவை) வசப்படுத்தியவன், ப்ரக்ருதியை விட மாறுபட்டதும் எம்பெருமானுக்குச் சரீரமாக உள்ளதும் ஆகிய தனது ஆத்மாவின் ஸ்வரூபத்தைக் குறித்து தொடர்ந்து த்யானம் செய்தபடி இருத்தல் ஆகும். எம்பெருமானால் நியமிக்கப்பட்டும், அவனுக்காகவே உள்ளதும் ஆகையால், ஆத்மாவானது எம்பெருமானின் சரீரமாகவே உள்ளது. ஒருவனுக்கு கர்மயோகம், ஞானயோகம் ஆகியவை மூலமாகத் தனது ஆத்மதரிசனம் கிட்டக்கூடும். உலக விஷயங்களின் மூலம் கிட்டும் சுகங்கள் அனைத்தையும் விரட்டவல்லதான இந்த ஆத்ம அனுபவத்தின் இன்பத்தில், அவன் சிக்காமல் இருக்கவேண்டும். அப்படி இருந்தான் என்றால், அவன் மிகவும் உயர்ந்த புருஷார்த்தமான எம்பெருமானை அடையும் நேரடி வழியான பக்தியோகத்தில் திளைத்து, அதன் மூலம் பகவத் அநுபவம் கிட்டப் பெறுகிறான். இவ்விதம் பக்தியோகத்தில் திளைக்கும்போது, தனது அந்தர்யாமியான எம்பெருமானைத் த்யானித்தபடி உள்ளான்; எம்பெருமானின் சரீரமாக உள்ள தனது ஆத்மாவின் அந்தர்யாமியை எண்ணியபடி உள்ளான். இப்படிப்பட்டவனுக்கு முதலில் ஏற்பட்ட ஆத்ம தரிசனம் எப்படி உதவுகிறது என்றால் – துணியில் கட்டி வைக்கப்பட்ட ரத்னக் கல்லைக் காண்பதற்கு முன்பாக, அந்தத் துணி மூட்டையைக் காண வேண்டும் அல்லவா? இது போன்று தனது ஆத்ம தரிசனம் வாய்க்கப் பெற்ற ஒருவனுக்கு பக்தியோக அதிகாரம் உண்டாகிவிடுகிறது.

## பக்தியோகம் என்பதன் ஸ்வரூபம்

**மூலம் -** பக்தியோகமாவது அநந்ய நிஷ்டனாய் அநந்யகதியனாய் அநந்ய சேஷபூதனான பகவானுடைய ஸ்வரூபாதிகளை விஷயமாகவுடைத்தாய் நிரதிசய ப்ரீதிரூபமான த்யானவிசேஷம். அதுதான் தைலதாரை போலே நிரந்தரமான ஸ்ம்ருதிரூபமாய் ஸாக்ஷாத்கார துல்யமான வைசத்யத்தையுடைத்தாய்ப் பரமபதத்துக்குப் ப்ரயாணம் பண்ணும் திவஸமறுதியாக நாள்தோறும் அநுஷ்டிக்க வளர்ந்து வருவதாய் அந்திமப்ரத்யய அவதியான ஜ்ஞாநஸந்ததி விசேஷம்.

**விளக்கம்** – பக்தியோகம் என்பது வேறு எதனையும் எதிர்பாராமல் எம்பெருமானிடம் செலுத்தும் அன்பு என்பதாகும். அந்த எம்பெருமான் தனது எந்தச் செயல்களுக்கும் யாரையும் எதிர்பாராதவன், வேறு யாருடைய கட்டளைக்கும் அடிபணிந்து நடக்க வேண்டிய அவசியம் அற்றவன், வேறு யாருடைய நிர்ப்பந்தம் காரணமாகவும் இல்லாமல் இருப்பவன் ஆவான். இப்படிப்பட்ட எம்பெருமான் மீதும், அவனது ஸ்வரூபங்கள் மீதும் எல்லையற்றதாக உள்ள த்யானம் என்பதே பக்தியோகம் எனப்படும். பக்தி என்பது தெளிந்த ஞானம் எனலாம். இது எண்ணை தடையற்று விழுவது போன்று தடையற்று உள்ளதாகும், நேரடியாகக் காண்பது போன்ற உண்மையாகும், பரமபதம் செல்லும் நாள்வரை ஒவ்வொரு நாளும் படிப்படியாக வளர்ந்தபடி இருப்பதாகும். உயிர் பிரியும் நேரத்தில் மற்ற நினைவுகளுடன் துண்டிக்கப்படுவதாகும்.

## வர்ணாச்ரமங்களின் அவசியம்

**மூலம்** - இதுக்கு வர்ணாச்ரம தர்மங்கள் ஜ்ஞாந விகாஸ ஹேதுவான ஸத்த்வாதி வ்ருத்திக்குக் களையான ரஜஸ்தமஸ்ஸுக்களுக்கு மூலமான பாபங்களைக் கழித்துக் கொண்டு இதிகர்த்தவ்யதையாயிருக்கும்.

**விளக்கம்** – ஸத்வம் என்னும் பயிர் மேலோங்கி வளர்வதற்குக் களையாக ரஜஸ் மற்றும் தாமஸங்கள் உள்ளன. இவை உண்டாவதற்கு பாவங்களே காரணமாக இருக்கின்றன. இவை கழிந்து ஸத்வம் மேலோங்கினால் மட்டுமே ஞானம் செழிக்கும். இப்படிப்பட்ட பாவங்கள் கழிய அவரவர்களின் வர்ணாச்ரம தர்மங்களே வழியாகும். அவற்றின்படி கர்மம் இயற்றும்போது பாவங்கள் கழிகின்றன. இப்படியாக இந்த வர்ணாச்ரம தர்மங்கள் பக்திக்குத் துணையாக உள்ளன.

## பக்தியோகம் ஐச்வர்யத்தை அளித்தல்

**மூலம்** - இப்பக்தியோகந்தானே ப்ரத்யயார்த்தம் ச மோக்ஷஸ்ய ஸித்தய: ஸம்ப்ரகீர்த்திதா: என்கிறபடியே இளநெஞ்சரைத் தேற்றுகைக்கு இட்ட விரகான வழியில் காமநா பேதத்தாலே ஐச்வர்யாதிகளுக்கும் ஸாதனமென்னும் இவ்வர்த்தம் சதுர்விதா பஜந்தே மாம் என்று சொல்லப்பட்டது.

**விளக்கம்** – பக்தியோகமாவது உலகவிஷயங்களை அடைவதற்கும், கைவல்யம் போன்றவற்றுக்கும் ஸாதனம் என்று கூறப்பட்டது. இந்த விஷயத்தை ஸத்வத ஸம்ஹிதை - ச மோக்ஷஸ்ய ஸித்தய: ஸம்ப்ரகீர்த்திதா: - பக்தியோகம் மூலம் உலகவிஷயங்களும் கிட்டும்; இவற்றின் மூலம், பக்தியோகம் மோக்ஷத்தை ஏற்படுத்தவல்லது என்ற நம்பிக்கை

உண்டாகிறது – என்று கூறியது. இந்த வரியானது பக்தியோகத்தின் மீது தாழ்ந்தவர்களுக்கு நம்பிக்கை உண்டாக்குவதற்காக உள்ளது. இதனை கீதையும் (7-16) - சதுர்விதா பஜந்தே மாம் – நான்குவிதமான மனிதர்கள் என்னை வணங்குகின்றனர் – என்றது காண்க.

## ஞானியின் உயர்வு

**மூலம்** - அவ்விடத்தில் தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர்விசிஷ்யதே என்று தொடங்கிச் சொன்ன ஞானியினுடைய ஏற்றத்தை

சதுர்விதா மம ஜநா பக்தா ஏவ ஹி தே ஸ்ம்ருதா:
ஏஷாமேகாந்திந: ச்ரேஷ்டா: தே சைவாநந்யதேவதா:
அஹமேவ கதிஸ்தேஷாம் நிராசீ: கர்மகாரிணாம்
யே து சிஷ்டாத்ரயோ பக்தா: பலகாம ஹி தே மதா:
ஸர்வே ச்யவநதர்மாண: ப்ரதிபுத்தஸ்து மோக்ஷபாக்

என்று தானே வெளியிட்டான்.

**விளக்கம்** – நான்குவிதமான மனிதர்களில் ஞானியின் ஏற்றத்தை கீதை (7-17) - தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர்விசிஷ்யதே – இவர்களில் ஞானியானவன் எம்பெருமானிடம் எப்போதும் இருப்பதையே விரும்புவதாலும், அவனுக்காக மட்டுமே வாழ்வதாலும், அவனுக்கு மட்டுமே தொண்டு செய்வதாலும் சிறந்தவன் – என்றது. இதனையே எம்பெருமான் மஹாபாரதம் சாந்திபர்வத்தில் - சதுர்விதா மம ஜநா பக்தா ஏவ ஹி தே ஸ்ம்ருதா: ஏஷாமேகாந்திந: ச்ரேஷ்டா: தே சைவாநந்யதேவதா: அஹமேவ கதிஸ்தேஷாம் நிராசீ: கர்மகாரிணாம் யே து சிஷ்டாத்ரயோ பக்தா: பலகாம ஹி தே மதா: ஸர்வே ச்யவநதர்மாண: ப்ரதிபுத்தஸ்து மோக்ஷபாக் – என்னுடைய பக்தர்கள் நான்கு வகை ஆவர்; அவர்களில் என்னைத் தவிர மற்ற தேவதைகளை நாடாமல் உள்ளவர்களே சிறந்தவர்கள்; அவர்கள் தங்களுடைய கர்மங்களை எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்கின்றனர்; என்னை அடைவதையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர்; மற்ற மூவரும் உலகவிஷயங்களைப் பலனாக எதிர்பார்ப்பதால், நழுவ வாய்ப்புள்ளது; என்னை மட்டுமே வணங்கியபடி உள்ள புத்திமான் மோக்ஷம் பெறுகிறான் – என்று கூறினான்.

## பக்தி – பரபக்தி – பரஜ்ஞாந – பரமபக்தி என்றால் என்ன

**மூலம் -** இப்படி மோக்ஷோபாயமாக விதித்த பக்தியோகம் பரபக்தியென்று பேசப்பட்டது. இதினுடைய ஹேதுவாய் ஸாத்விக பரிசீலநாதிகளாலே வந்த பகவத் விஷயத்தில் ப்ரீதிவிசேஷம் ஸர்வேச்வரனைத் தெளியவறிய வேணுமென்னும் அபிநிவேசத்துக்குக் காரணமாய் பக்தியென்று பேர் பெற்றிருக்கும்.

**விளக்கம்** – இப்படியாக மோக்ஷத்திற்கு உபாயமாக உள்ள பக்தியோகம் என்பது பரபக்தி எனப்படும். ஸாத்வீகமான மனிதர்களின் தொடர்பு காரணமாக எம்பெருமான் மீது உண்டாகும் அளவு கடந்த அன்பும், பரபக்தியை உண்டாக்குவதும் பக்தி எனப்படும். இதன் காரணம் – இதுவே எம்பெருமானை எந்தவித ஐயமும் இல்லாமல் அறிவதற்கான ஆசையைத் தூண்டுவதாகும்.

**மூலம் -** இத்தாலே சுத்தபாவம் கதோ பக்த்யா சாஸ்ராத் வேதிந ஜநார்த்தநம் என்கிறபடியே சாஸ்த்ரஜந்ய தத்த்வஜ்ஞான கர்மயோகாதி பரம்பரையாலே பிறந்த பரபக்தியானது ஸாக்ஷாத்கரிக்கவேணுமென்னும் அபிநிவேசத்தை உண்டாக்கி யோகேச்வர ததோ மே த்வம் தர்சயாத்மாநமவ்யயம், காணுமாறு அருளாய், ஒருநாள் காணவாராய் என்று விலபிக்கும்படி பண்ணி, இவ்வபேக்ஷாமாத்ரமடியாக வந்த பகவத்ப்ரஸாத விசேஷத்தாலே தத்காலநியதமான பரிபூர்ண ஸாக்ஷாத்காரத்தை உண்டாக்கும். இஸ்ஸாக்ஷாத்காரம் பரஜ்ஞானமென்று பேசப்பட்டது.

**விளக்கம்** – மஹாபாரதம் உத்யோகபர்வம் (68-5) - சுத்தபாவம் கதோ பக்த்யா சாஸ்ராத் வேதிந ஜநார்த்தநம் – எம்பெருமான் மற்றும் ஆசார்யன் மீது கொண்ட பக்தி மூலமாக எனது ஸ்வரூபத்தை உணர்ந்தேன்; சாஸ்த்ரம் மூலமாக ஜனார்த்தனனை அறிகிறேன் – என்றது காண்க. இப்படியாக பரபக்தி என்பது சாஸ்த்ரம் மூலமாக உண்டான ஞானயோகம் மற்றும் கர்மயோகம் ஆகியவற்றால் உண்டாகிறது. இது எம்பெருமானைக் காணவேண்டும் என்னும் ஆர்வத்தை மிகவும் அதிகப்படுத்துகிறது. இது ஒரு மனிதனை கீழே உள்ள வரிகளில் உள்ளபடி, எம்பெருமானைக் குறித்து புலம்ப வைக்கிறது:

- ஸ்ரீமத் பகவத் கீதை (11-4) - யோகேச்வர ததோ மே த்வம் தர்சயாத்மாநமவ்யயம் – ஞானம் முதலான குணங்களுக்கு இருப்பிடமாக உள்ள கண்ணா! உன்னை எனக்கு முழுவதுமாகக் காண்பிக்க வேண்டும்.

- திருவாய்மொழி (8-1-1) - காணுமாறு அருளாய் – உன்னை நான் காணும்படி கருணை செய்ய வேண்டும்.

- திருவாய்மொழி (6-9-4), (8-5-1) - ஒருநாள் காணவாராய் – நான் உன்னைக் காணும்படிபடி ஒருநாளாவது என் முன்பாக வரவேண்டும்.

இப்படிப்பட்ட எல்லையற்ற ஆசையின் காரணமாக எம்பெருமானின் கருணை கிட்டிவிடுகிறது. இதன் பலனாக எம்பெருமான் தனது பரிபூர்ணமான திருவடிவைக் காண்பிக்கிறான். இத்தகைய காட்சியே பரஜ்ஞானம் எனப்படும்.

**மூலம்** - இப்படி நிரதிசய போக்யமான பகவத்ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரித்தவாறே பெருவிடாய்ப்பட்டவன் தடாகத்தைக் கண்டாற் போலே பிறந்த ப்ரீத்யதிசயம் பரமபக்தி.

**விளக்கம்** – அளவு கடந்த தாகம் கொண்டவன் நீர்நிலையைக் கண்டால் எத்தனை மகிழ்வு கொள்ளுவான்? இது போன்று, எம்பெருமானை கண்டவன் அவன் மீது அளவு கடந்த ப்ரியம் கொள்கிறான். இதுவே பரமபக்தி எனப்படும்.

## பரமபக்தி எவ்விதம் மோக்ஷம் கிட்டச் செய்கிறது

**மூலம்** - இது முனியே நான்முகனிற்படியே ஸங்கோசமற அநுபவித்தல்லது தரிக்கவொண்ணாத அபிநிவேசத்தை உண்டாக்கி மறுக்கவொண்ணாத திருவாணையிட்டு வளைத்துக் கூப்பிடுகையாலே இவனுக்குக் கடுகப் ப்ராப்தியைக் கொடுக்கும்படி ஸர்வேச்வரனுக்குத் த்வராதிசயத்தை உண்டாக்கி இவனை அவாவற்று வீடு பெறப்பண்ணும்.

**விளக்கம்** – பரமபக்தி என்பது எந்தவிதமான தடைகளும் இல்லாமல் எம்பெருமானை அனுபவிக்கவேண்டும் என்னும் ஆசையையும் உறுதியையும் ஏற்படுத்தும். அதன் பின்னர் பக்தன், எம்பெருமானின் அனுபவம் இல்லாமல் தன்னால் உயிர் வாழ இயலாது என்ற நிலைக்கு வருகிறான். இதனைத் திருவாய்மொழியில் (10-10-1) – முனியே நான்முகனே – என்பதன் மூலம் காணலாம். அவன் எம்பெருமானுடன் கலந்து நிற்கவேண்டும் என்று எண்ணி, தனது எண்ணத்தை எம்பெருமான் முன்னிலையில் ஆணையாகவே இடுகிறான். இதனை எம்பெருமானால் மறுக்க இயலாது.இதன் மூலம் எம்பெருமானுக்கும் அந்த பக்தன் மீது அளவற்ற அன்பு உண்டாகிறது. அதனால் மோக்ஷம் கிட்டும்படிச் செய்து, தன்னுடன் எப்போதும் நிலைக்கும்படிச் செய்கிறான்.

## பக்தியோகம் ப்ரபத்தியின் பலனை அளித்தல்

**மூலம்** – இப்பக்தியோகம் த்ரைவர்ணிகரையொழிந்தார்க்கும் த்ரைவர்ணிகர் தங்களில் ஞானத்திலேயாதல் சக்தியிலேயாதல் இரண்டிலுமாதல் குறையுடையார்க்கும் பலவிளம்பம் பொறுக்க இசையாத தீவ்ர ஸம்வேகமுடையார்க்கும் யோக்யமல்லாமையாலே தங்கள் அளவுகளைத் தெளிந்து அத்வாரகமாக ப்ரபத்தியை மோக்ஷோபாயமாகப் பற்றுமவர்களுக்கு ஸர்வபலஸாதநமான ப்ரபத்திதானே பரபக்தி ஸ்தாநத்திலே சோதிதையாகையாலே உபாஸகனுக்குப் பரபக்திக்கு மேல் வரும் அவஸ்தைகள் போலே இஸ்ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனுடைய கோலுதலுக்கு ஈடாக இப்ப்ரபத்திக்கு மேல் வரும் அநுகூலாவஸ்தைகள் இதின் பலமாயிருக்கும்.

**விளக்கம்** – இந்தப் பக்தியோகம் என்பது மூன்று வர்ணத்தைச் (அந்தணன், க்ஷத்ரியன், வைசியன்) சேராதவர்களால் கடைபிடிக்க இயலாது. இது போன்று மூன்று வர்ணத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஞானம் மற்றும் சக்தி ஆகிய இரண்டிலும் குறையுடன் கூடியவர்களால் கடைபிடிக்க இயலாது. இது போன்று, இதன் பலனாகிய மோக்ஷம் என்பதைப் பெறுவதில் உண்டாகும் தாமதத்தைப் பொறுக்க இயலாதவர்களாலும் கடைபிடிக்க இயலாது. ஆக இப்படிப்பட்டவர்களுக்கு ப்ரபத்தியே ஏற்புடையது. ஆக மேலே உள்ளது போன்ற குறைகள் உள்ளவர்களுக்கு அவர்கள் விரும்புகின்ற பலனை அளிக்கவல்லதாக ப்ரபத்தியே பரபக்திக்குப் பதிலாக ஏற்கப்படுகிறது. பரபக்தியை மோக்ஷ சாதனமாகக் கொண்டவனுக்கு, அத்தகைய பரபக்திக்குப் பின்னர் பரஜ்ஞானம் முதலானவை உண்டாகிறது. அது போன்று, ப்ரபத்தியை மட்டுமே மோக்ஷ சாதனமாகக் கொண்டவனுக்கு, அதன் விளைவாக அவன் வேண்டிய பலன்கள் கைகூடுகின்றன.

## ப்ரபத்தி ப்ரஹ்மவித்யையில் ஒன்று

**மூலம்** – இப்படி ப்ரபத்திக்கும் பக்திக்கும் அதிகாரி விசேஷத்தைப் பற்றித் துல்யபலத்வம் உண்டாகையாலே விகல்பமாகக் கடவது. இவற்றுக்கு நாநாசப்தாதி பேதாத் என்கிற அதிகரணத்திலே பேதம் ஸித்தம். விகல்போ அவிசிஷ்டபலத்வாத் என்கிற அதிகரணத்திலே விகல்பமும் ஸித்தம்.

**விளக்கம்** – ஆக ஒருவரது தகுதியைப் பொறுத்து ப்ரபத்தி மற்றும் பக்தி என்பது அமைகின்றது. இவை இரண்டும் வெவ்வேறு என்பதை ப்ரஹ்மஸூத்ரம் இவற்றை வெவ்வேறு அதிகரணங்களில் கூறியிருப்பதன் மூலம் உணரலாம். இவற்றுக்கு இடையே வேறுபாடு உள்ளது என்பதை ப்ரஹ்மஸூத்ரம் (3-3-56) - நாநாசப்தாதி பேதாத் – பெயர்

முதலானவை வேறுபட்டுள்ளதால், வேறுபாடு உண்டு – என்று கூறியது. இவை இரண்டில் எதனை வேண்டுமானாலும் கைக்கொள்ளலாம் என்பதை ப்ரஹ்மஸூத்ரம் (3-3-57) - விகல்போ அவிசிஷ்டபலத்வாத் – மோக்ஷம் என்னும் ஒரே பலன் உள்ளதால் எதனையும் கைக்கொள்ளலாம் – என்றது.

## ப்ரபத்தியும் உட்பிரிவுகள் கொண்டிருத்தல்

**மூலம்** - உபாஸநத்தில் விசேஷங்கள் போலே சாகாபேதங்களிலும் பகவச்சாஸ்த்ர ஸஹிதா பேதங்களிலும் சொல்லும் ந்யாஸவித்யையில் மந்த்ராதி விசேஷங்களை கண்டு கொள்வது. நமஸ்காரம் வாசிகம் மாநஸம் காயிகமென்று பிரிந்தாற்போலே ப்ரபத்தியிலும் ஓர் ஒன்றை முன்னிட்டு இவ்விபாகங்கள் சொல்லப்பட்டன. இவை மூன்றும் பொருந்தினபோது பூர்ணநமஸ்காரமானாற்போலே பூர்ணப்ரபத்தியாகக் கடவதென்ற வர்கள் பாசுரங்களுக்கும் வாசிக காயிகங்களான வ்யாபாரவிசேஷங்கள் பரீவாஹமாம்படியான மாநஸப்ரபத்தியினுடைய பூர்த்தியிலே தாத்பர்யமாகக் கடவது. யதாதிகாரம் இவையெல்லாம் பலப்ரதங்களென்னுமிடம் முன்பே சொன்னோம்.

**விளக்கம்** – உபாஸனைகளில் பலவிதமான வேறுபாடுகள் உள்ளது போன்று, ந்யாஸவித்யையிலும் சாஸ்த்ரங்கள் மூலமாகப் பலவிதமான மந்த்ர பேதங்கள் கூறப்பட்டுள்ளன. நமஸ்காரம் செய்வதில் வாக்கு, மனம், உடல் ஆகிய வேறுபாடுகள் உள்ளது போன்று ப்ரபத்தியிலும் வேறுபாடுகள் உள்ளன. ப்ரபத்தியில் உள்ள ஈடுபாட்டைப் பொறுத்து இவை அமைகின்றன. நமஸ்காரம் செய்யும்போது மனம், வாக்கு, உடல் ஆகிய மூன்று பொருந்தும்போதே முழுமையான நமஸ்காரம் என்று கூறுவது போல, இந்த மூன்றும் பொருந்தினாலே முழுமையான ப்ரபத்தி என்றாகிறது. இந்த வரியை எவ்விதம் புரிந்து கொள்ளவேண்டும் என்றால் – மனதளவில் செய்கின்ற ப்ரபத்தி பூர்ணமாக உள்ளது என்றும், இதன் ப்ரதிபலிப்பே உடல் மற்றும் வாக்கு மூலமாக மேலும் வெளிப்படுகிறது என்றும் உணரவேண்டும். இவை அனைத்தும் அவரவர்களின் தகுதியைப் பொறுத்தே அமையும் என்று முன்பே கூறினோம்.

நின்ற நிலைக்கு உறநிற்கும் கருமமும் நேர்மதியால்
நன்று என நாடிய ஞானமும் நல்கும் உள்கண் உடையார்
ஒன்றிய பத்தியும் ஒன்றும் இலா விரைவார்க்கு அருளால்
அன்று பயன் தரும் ஆறும் அறிந்தவர் அந்தணரே

**பொருள்** – வர்ணாச்ரம தர்மத்திற்கு ஏற்றபடியான கர்மயோகம் இயற்றல்; ஞானயோகத்தை அதன் பலனை முழுவதுமாக அறிந்த ஞானத்துடன் இயற்றல்;

ஆத்மஸாக்ஷாத்காரத்துடன் ஐக்கியமான பக்தியோகம் இயற்றல்; மேலே உள்ள தகுதி அற்றவர்கள், மோக்ஷ காலம் தாமதிப்பதைப் பொறுத்துக் கொள்ளாதவர்கள் ஆகியவர்களுக்கு எம்பெருமானின் கருணை மூலமாக விரைந்து பலன் அளிக்கவல்ல ப்ரபத்தி – இவை நான்கும் அறிந்தவர்கள், வேதம் முழுவதையும் கற்ற அந்தணர்கள் ஆவர்.

கர்ம ஞானம் உபாஸநம் சரணவ்ரஜ்யா இதி ச அவஸ்திதாந்
ஸந்மார்க்காந் அபவர்க்க ஸாதந வித்யௌ ஸத்வாரக அத்வாரகாந்
ஏகத்வி ஆக்ருதி யோக ஸம்ப்ருத ப்ருதக்பாவ அநுபாவாந் இமாந்
ஸம்யக் ப்ரேக்ஷ்ய சரண்ய ஸரதி கிராமந்தி ரமந்தி புதா:

**பொருள்** – கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் மற்றும் சரணாகதி ஆகிய நான்கும் மோக்ஷ உபாயங்கள் என சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இவற்றில் சில நேரடியாக மோக்ஷம் அளிக்கவல்லவை, ஒரு சில மறைமுகமாக அளிக்கவல்லவை ஆகும். இவற்றில் கர்மயோகம் மற்றும் ஞானயோகம் ஆகியவை ஒரு வழியில் மட்டுமே மோக்ஷ உபாயமாக உள்ளன. இவை மறைமுகமாக மோக்ஷம் அளிப்பவை ஆகும். பக்தியோகம் நேரடியாகப் பலன் அளிப்பதாகும். ப்ரபத்தி என்பது தானே நேரடியாகவும், பக்தியோகத்தைத் தூண்டி மறைமுகமாகவும் பலன் அளிப்பதாகும். இப்படியாக இரு வழிகளில் மோக்ஷம் அளிக்கவல்ல உபாயமாக இருக்கும் மேன்மை ப்ரபத்திக்கு மட்டுமே உண்டு. இந்த உண்மையை அறிந்தவர்கள் இதனைக் கடைபிடிக்கிறார்கள்.

## உபாயவிபாகாதிகாரம் ஸம்பூர்ணம்

# 10. ப்ரபத்தி யோக்ய அதிகாரம்

அர்த்தித்வேந ஸமர்த்ததா த்ரிகதநு: ஸம்பிண்டிதா: அதிக்ரியா
ஸா சாஷ்டாங்க ஷடங்க யோக நியதாவஸ்தா வ்யவஸ்தாபிதா
ச்ரோதீ ஸர்வ சரண்யதா பகவத: ஸ்ம்ருத்யா அபி ஸத்யாபிதா
ஸத்யாதிஷு இவ நைகமேஷு அதிக்ருதி: ஸர்வ ஆஸ்பதே ஸத்பதே.

**பொருள்** – ஒரு பலனைப் பெறுவதற்கான உபாயத்தில் ஈடுபடும் அதிகாரம் (தகுதி) என்பது அந்தப் பலனில் ஆசை கொண்டிருப்பதுடன், மூன்றுவிதமான ஸ்வரூபங்களைக் கொண்ட திறமை ஆகியவற்றைப் பொறுத்தே உண்டாகிறது. இவற்றில் பக்தி யோகத்திற்கு எட்டு அங்கங்களும், ப்ரபத்திக்கு ஆறு அங்கங்களும் கூறப்பட்டுள்ளன. எம்பெருமானே அனைத்து உயிர்களும் சரணம் புகும் இடமாக உள்ளான் என்று ச்ருதிகள் கூறுவதை, ஸ்ம்ருதிகளும் உறுதியாகக் கூறுகின்றன. வேதங்களில் கூறப்படும்

“உண்மையை மட்டுமே பேசுதல்” என்பது போன்ற தகுதிகள் அனைவருக்கும் பொதுவாக உள்ளது போன்று, ப்ரபத்தி என்பதும் அனைவருக்கும் பொதுவாகவே உள்ளது.

## அதிகாரம், பலன் போன்றவற்றின் விளக்கம்

**மூலம்** – இப்படி அபிமதபலத்துக்கு உபாயாந்தர நிஸ்ப்ருஹனாய் ந்யாஸவித்யையிலே இழியுமவனுக்கு இவ்வித்தைக்கு அதிகார விசேஷம் முதலானவை இருக்கும்படி அறியவேணும். அதிகாரமாவது – அவ்வோபலோபாயங்களிலே ப்ரவ்ருத்தனாம் புருஷனுக்குப் பலத்தில் அர்த்தித்வமும், உபாயத்தில் ஸாமர்த்யமும். இவற்றில் ஸாமர்த்யமாவது சாஸ்த்ரார்த்தத்தை அறிகையும், அறிந்தபடி அநுஷ்டிக்க வல்லவனாகையும், சாஸ்த்ராநுமத ஜாதி குணாதி யோக்யதையும். இவ்வதிகாரம் முன்பே ஸித்தமாயிருக்கும். இது உடையவனுக்குப் ப்ரயோஜநமாய்க் கொண்டு ஸாத்யமாக அநுவதிக்கப்படுமது பலம். ததர்த்தமாக ஸாத்யமாக விதிக்கப்படுமது உபாயம்.

**விளக்கம்** – ப்ரபத்தி என்னும் ந்யாஸவித்யையில் ஈடுபட விரும்பும் ஒருவன், மற்ற எதனையும் உபாயமாகப் பற்றுவதில் ஆசை கொள்ளாமல் இருக்கும் ஒருவன் எந்தவிதமான தகுதிகளைக் கொண்டிருக்கவேண்டும் என்பதை அறிய வேண்டும். அதிகாரம் என்றால் – ஒரு பலனை அடையவேண்டும் என்ற விருப்பமும், அந்தப் பலனை அடைவதற்கான உபாயத்தில் உள்ள ஆர்வமும், அந்த உபாயத்தைக் கைக்கொள்ளக் கூடிய திறனும் (ஸாமர்த்யம்) ஆகும். ஸாமர்த்யம் (திறன்) என்றால் – சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட ஆழமான பொருள்களை உணரும் தன்மை, அவற்றை அறிந்த பின்னர் அதன்படி நடத்தல், சாஸ்த்ரங்களில் கூறியபடி ஜாதி, தன்மைகள் முதலானவற்றைக் கொண்டிருத்தல் என்பதாகும். இப்படிப்பட்ட தகுதி உள்ளவனுக்கு உபாயம் மூலம் அடையப்படும் இலக்கு என்பதே பலனாக உள்ளது. உபாயம் என்பது அந்தப் பலனை அடைய வைக்கும் வழியாகும்.

## ஆகிஞ்சந்யம் – அநந்யகதித்வம் என்பதன் விளக்கம்

**மூலம்** – இங்கு முமுக்ஷுத்வமுண்டாய் ஸ்வதந்த்ரப்ரபத்திரூப மோக்ஷோபாயவிசேஷ நிஷ்டனுக்கு சாஸ்த்ரஜந்ய ஸம்பந்தஜ்ஞாநாதிகள் உபாஸகனோடு ஸாதாரணமாயிருக்க விசேஷித்த அதிகாரம் தன்னுடைய ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமும். ஆகிஞ்சந்யமாவது உபாயாந்தர ஸாமர்த்யாபாவம். அநந்யகதித்வமாவது ப்ரயோஜநாந்தர வைமுக்யம், சரண்யாந்தர வைமுக்யமாகவுமாம். இது ப்ரயோஜநாந்தர வைமுக்யத்தாலும் அர்த்தஸித்தம். இவ்வர்த்தம்

ப்ராஹ்மணம் சிதிகண்டம் ச யாந்சாந்யா தேவதா: ஸ்ம்ருதா:
ப்ரதிபுத்தா ந ஸ்வந்தே யஸ்மாத் பரிமிதம் பலம்

இத்யாதிகளிலே கண்டுகொள்வது.

**விளக்கம்** – ஒருவனுக்கு மோக்ஷத்தில் விருப்பம் ஏற்படலாம். இவன் பக்தியோகத்தில் ஈடுபடும் ஒருவனைப் போன்று, ஜீவாத்மா-பரமாத்மா குறித்த வேறுபாடுகளை, சாஸ்த்ரங்கள் மூலமாக அறிந்து கொள்கிறான். இப்படியாக ப்ரபத்தியை இவன் மோக்ஷ உபாயமாகக் கொள்ளும்போது, இவனிடம் ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமும் மேலும் இரண்டு தகுதிகளாக இருத்தல் வேண்டும். ஆகிஞ்சந்யம் என்றால் மற்ற உபாயங்களில் ஈடுபடத் திறன் இல்லாமை ஆகும். அநந்யகதித்வம் என்றால் மோக்ஷம் தவிர்ந்த மற்ற எதிலும் பற்று கொள்ளாமையும், எம்பெருமான் அல்லாமல் வேறு எதனையும் துணையாகக் கொள்ளாமையும் ஆகும். அநந்யகதித்வத்தில் உள்ள "மற்ற எதிலும் பற்றற்ற தன்மை" என்பது ஆகிஞ்சந்யத்தில் அடக்கமே ஆகும். இதனை மஹாபாரதம் சாந்திபர்வம் (350-36) - ப்ரஹ்மணம் சிதிகண்டம் ச யாந்சாந்யா தேவதா: ஸ்ம்ருதா: ப்ரதிபுத்தா ந ஸ்வந்தே யஸ்மாத் பரிமிதம் பலம் – சிறந்த அறிவுள்ள முமுக்ஷுக்கள் ப்ரம்மன், ருத்ரன் போன்றவர்களை வணங்குவதில்லை, காரணம் அவர்கள் அளிக்கும் பலன்கள் அற்பமானவை என்று அறிகின்றனர் – என்றது.

**மூலம்** – தீவ்ரதமமான முமுக்ஷுத்வமின்றிக்கே தேஹாநுவ்ருத்யாதி ப்ரயோஜநாந்தர ஸக்தனானவன் மோக்ஷார்த்தமாக ப்ரபத்தியைப் பற்றினால் அவ்வோ ப்ரயோஜநாந்தரங்களின் அளவுக்கு ஈடாக மோக்ஷம் விளம்பிக்கும்.

**விளக்கம்** – ஒருவன் மோக்ஷம் அடைவதில் ஆழ்ந்த விருப்பம் இல்லாமல், தனது உடல் நீண்ட நாள் இருக்கவேண்டும் போன்ற அற்பமான பலன்களை எண்ணியபடியும் ப்ரபத்தியில் ஈடுபடக்கூடும். இப்படிப்பட்டவனுக்கு, அந்தப் பலன்களுக்கு ஏற்றாப்போல் மோக்ஷ காலம் என்பது தாமதிக்கும்.

## ஆகிஞ்சந்யம் – அநந்யகதித்வம் இவற்றின் காரணம்

**மூலம்** – இவ் ஆகிஞ்சந்யத்துக்கும் அநந்யகதித்வத்துக்கும் நிபந்தனம் உபயாந்தரங்களில் இவ்வதிகாரியினுடைய அஜ்ஞான அசக்திகளும் பலவிளம்ப அஸஹத்வமும். இதில் சரண்யாந்தர வைமுக்யத்துக்கு நிபந்தனம்:

யதா வாயோஸ்த்ருணாக்ராணி வசம் யாந்தி பலீயஸ:
தாதுரேவ வசம் யாந்தி ஸர்வபூதாநி பாரத

என்கிறபடியே தனக்கும் பிறருக்குமொத்திருக்கிற பகவதேக பாரதந்த்ர்யாத்யவ ஸாயமும் ப்ரயோஜநாந்தர வைமுக்யமும்.

**விளக்கம்** – மற்ற உபாயங்களில் ஈடுபட இயலாமையும், அவற்றைப் பற்றி அறியாமையும், மோக்ஷம் தாமதிப்பதைப் பொறுத்துக் கொள்ள இயலாமையும் ஆகிஞ்சந்யம் மற்றும் அநந்யகதித்வம் வளர்வதற்கான காரணங்கள் ஆகின்றன. எம்பெருமானை மட்டுமே நம்பி இருத்தல் என்பது, மற்றவர்களிடம் உள்ளது போன்றே ஒருவனுக்கு, "எம்பெருமானே அனைத்தும்", என்ற சிந்தனையை வளர்க்கிறது. இதனை மஹாபாரதம் உத்யோகபர்வம் (26-29) - யதா வாயோஸ்த்ருணாக்ராணி வசம் யாந்தி பலீயஸ: தாதுரேவ வசம் யாந்தி ஸர்வபூதாநி பாரத – பாரதனே! புல்லின் நுனிகள் என்பவை, பலமாக வீசும் காற்றின் வசம் உள்ளன; இது போன்று, அனைத்து உயிர்களும் உலகைப் படைத்த ஸர்வேச்வரன் வசம் உள்ளன – என்றது.

## ப்ரபத்திக்கு ப்ரமாணங்கள்

**மூலம்** – இப்ப்ரபத்யாதிகார விசேஷம் : ஸ பித்ரா ச பரித்யக்தஸ்ஸுரைச்ச ஸமஹர்ஷிபி: த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணம் கத:, அஹமஸ்ம்யபராதாநாமாலய: அகிஞ்சந: அகதி:, ஆகிஞ்சந: அநந்யகதி: சரண்ய, அநாகதாநந்தகால ஸமீக்ஷயாப்யத்ருஷ்ட ஸந்தாரோபாய:, தத்ப்ராப்த்யே ச தத்பாதாம்புஜத்வய ப்ரபத்தேரந்யந்ந மே கல்பகோடி ஸஹஸ்ரேணாபி ஸாதநமஸ்தீதி மந்வாந:, புகலொன்றில்லா அடியேன் என்றிவை முதலான ப்ரமாண ஸம்ப்ரதாயங்களாலே ஸித்தம்.

**விளக்கம்** – ப்ரபத்திக்கு இருக்கின்ற அதிகாரம் குறித்து கீழே உள்ள பல வரிகள் ப்ரமாணங்களாக உள்ளன:

- இராமாயணம் ஸுந்தரகாண்டம் (38-33) - ஸ பித்ரா ச பரித்யக்தஸ்ஸுரைச்ச ஸமஹர்ஷிபி: த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணம் கத: - காகமானது தனது தந்தையான இந்த்ரன், தேவர்கள், ரிஷிகள் போன்ற பலராலும் கைவிடப்பட்டு, மூன்று உலகங்களுக்கும் சென்று, இறுதியாக இராமனிடமே சரணம் அடைந்தது.

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-30) - அஹமஸ்ம்யபராதாநாமாலய: அகிஞ்சந: அகதி: - தவறுகளுக்கு இருப்பிடமாக உள்ள என்னைக் காப்பாற்ற வேறு புகலிடம் இல்லை, உன்னைத் தவிர அடைவதற்கு வேறு இடம் இல்லை.

- ஸ்தோத்ர ரத்னம் (22) - ஆகிஞ்சந: அநந்யகதி: சரண்ய – உன்னிடமே சரணம் அடைகிறேன், என்னக்கு உன்னைவிட்டால் சரணம் அடையும் இடம் இல்லை.

- ஸ்ரீரங்க கத்யம் (2) - அநாகதாநந்தகால ஸமீக்ஷயாப்யத்ருஷ்ட ஸந்தாரோபாய: - எல்லையற்ற ஸம்ஸாரம் என்பது எதிர்காலங்களிலும் உள்ளது, அதனைக் கடக்க உன்னைத் தவிர வேறு உபாயம் இல்லாதவனாக உள்ளேன்.

- ஸ்ரீவைகுண்ட கத்யம் - தத்ப்ராப்த்யே ச தத்பாதாம்புஜத்வய ப்ரபத்தேரந்யந்ந மே கல்பகோடி ஸஹஸ்ரேணாபி ஸாதநமஸ்தீதி மந்வாந: - ஆயிரம் கோடி கல்ப காலங்களிலும், அவனது அழகான இரண்டு தாமரைத் திருவடிகளைக் காட்டிலும் சரணம் அடைய வேறு இடம் இல்லை என்று நான் அறிவேன்.

- திருவாய்மொழி (6-10-10) - புகலொன்றில்லா அடியேன் – வேறு புகலிடம் இல்லாத நான்.

## ப்ரபத்தி அனைவருக்கும் ஏற்புடையது

**மூலம்** – இவ்வளவு அதிகாரம் பெற்றால் ப்ரபத்திக்கு ஜாத்யாதி நியமமில்லாமையாலே ஸர்வாதிகாரத்வம் ஸித்தம்.

**விளக்கம்** – மேலே உள்ளா அனைத்துவிதமான அதிகாரங்களும் இருந்தால், ப்ரபத்தி என்பது அனைவருக்கும் ஏற்றதே ஆகும் – காரணம் இதில் எந்தவிதமான ஜாதிக் கட்டுப்பாடுகளும் இல்லை.

அந்தணர் அந்தியர் எல்லையில் நின்ற அனைத்து உலகும்
நொந்தவரே முதலாக நுடங்கி அனன்னியராய்
வந்து அடையும் வகை வன் தகவு ஏந்தி வருந்திய நம்
அந்தம் இல் ஆதியை அன்பர் அறிந்து அறிவித்தனரே.

**பொருள்** – அனைத்திற்கும் காரணமாக உள்ளவனும், அழிவற்றவனும், நம்மைக் காப்பதற்கு எப்போதும் தயாராக நிற்பவனும், நாம் எத்தனை பிழைகள் செய்தாலும் மாறாத கருணை கொண்டவனும் ஆகிய எம்பெருமானைக் குறித்து எம்பெருமானிடமும் ஆசார்யர்களிடமும் மிகுந்த பக்தி கொண்ட நமது ஆசார்யர்கள் தெளிவாக அறிந்து கொண்டனர். இவர்கள் செய்தது என்ன? ஸம்ஸாரத்தில் உழல்கின்ற அந்தணர் முதலாக சண்டாளர் வரை உள்ள அனைவரும் வேறு உபாயங்களை நாட இயலாமல் துவண்டு நிற்கின்ற நிலையில், வேறு பலனையோ வேறு ரக்ஷகனையோ தேடாத வகையில், எம்பெருமானிடம் சரணம் புகும் வழியை நமக்கு உபதேசம் செய்தனர்.

பக்த்யாதெள சக்தி அபாவ: ப்ரமிதி ரஹிததா சாஸ்த்ரத: பர்யுதாஸ:
காலக்ஷேப அக்ஷபத்வம் த்விதி நியதிவசாத் ஆபதப்தி: சதுர்பி:
ஏக த்வி த்ரி ஆதியோக வ்யதிபிதுர நிஜ அதிக்ரியா: ஸம்ச்ரயந்தே
ஸந்த: ஸ்ரீசம் ஸ்வதந்த்ர ப்ரபதந விதிநா முக்த்யே நிர்விசங்கா:

**பொருள்** – பக்தியோகம் முதலான உபாயங்களைப் பின்பற்ற சக்தி இல்லாமை, இவற்றைப் பற்றிய ஞானம் இல்லாமை, இவற்றை இயற்றத் தகுதி இல்லாதவன் என்று சாஸ்த்ரங்களால் விலக்கப்படுதல், மோக்ஷம் பெறும் காலம் தாமதமாக வருவதைப் பொறுத்துக் கொள்ள இயலாமை – இவற்றில் ஒன்றோ, இரண்டோ, மூன்றோ அல்லது நான்குமோ அமைவது என்பது பூர்வபயனால் ஆகும். இவை மஹாலக்ஷ்மியின் பதியாகிய எம்பெருமானை ப்ரபத்தி மூலமாக அடைவதற்கான பல தகுதிகள் ஆகின்றன. அறிந்தவர்கள் இவற்றைக் கொண்டு, மோக்ஷம் பெறுவதில் எந்தவிதமான ஐயமும் இல்லாமல் எம்பெருமானை அண்டி நிற்கின்றனர்.

## ப்ரபத்தி யோக்ய அதிகாரம் ஸம்பூர்ணம்

# 11. பரிகரவிபாகாதிகாரம்

## (ப்ரபத்தியின் அங்கங்களைக் கூறுதல்)

இயாந் இத்தம்பூத: ஸக்ருத் அயம் அவச்யம்பவநவாந்
தயா திவ்ய அம்போதௌ ஜகத் அகிலம் அந்த: யமயதி
பவ த்வம்ஸ உத்யுக்தே பகவதி பரந்யாஸ வபுஷ:
பரபத்தே: ஆதிஷ்ட: பரிகர விசேஷ: ச்ருதிமுகை:

**பொருள்** – கருணைக் கடலாக உள்ளவன், அனைத்து உலகங்களையும், அவற்றின் ஆத்மாவாக இருந்து நியமிப்பவன், ஸம்ஸாரத்தை அழிப்பதற்கு எப்போதும் ஆயத்தமாக உள்ளவன் ஸர்வேச்வரன் ஆவான். இப்படிப்பட்ட அவனிடம் அனைத்துவிதமான பொறுப்புகளையும் ஸமர்ப்பணம் செய்வதையே ஸ்வரூபமாகக் கொண்டது ப்ரபத்தி ஆகும். ப்ரபத்தியின் அங்கங்கள் குறித்து வேதங்கள் - அங்கங்கள் இன்னவை என்றும், இத்தனை என்றும், அங்கங்களின் ஸ்வரூபம் இவை என்றும், அங்கங்களின் பயன் இவை என்றும், ஒருமுறை ப்ரபத்தி இயற்றப்படும்போது இந்தந்த அங்கங்கள் இருக்கவேண்டும் என்றும் – விதித்துள்ளன.

## ப்ரபத்தியின் அங்கங்கள்

**மூலம்** - இவ்வித்யைக்குப் பரிகரமாவது ஆநுகூல்யஸங்கல்பமும், ப்ரதிகூல்யவர்ஜனமும், கார்பண்யமும், மஹாவிச்வாஸமும், கோப்த்ருத்வவரணமும்.

**விளக்கம்** – ப்ரபத்தி அல்லது ந்யாஸவித்யை எனப்படும் இந்த வித்யைக்குக் கீழே உள்ள பலவும் அங்கங்கள் ஆகும் – எம்பெருமானுக்கு ஏற்புடையவற்றை மட்டுமே செய்தல், அவனுக்கு விருப்பம் இல்லாதவற்றைத் தவிர்த்தல், உதவியற்று இருத்தல், மஹாவிச்வாஸம் மற்றும் அவனது ரக்ஷகத்தை விண்ணப்பித்தல்.

**மூலம்** – இவ்விடத்தில்

ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ரதிகூல்யஸ்ய வர்ஜநம்
ரக்ஷிப்யதீதி விச்வாஸோ கோப்த்ருத்வவரணம் ததா
ஆத்மநிக்ஷேப கார்ப்பண்யே ஷட்விதா சரணாகதி:

இத்யாதிகளிற் சொல்லுகிற ஷாட்வித்யமும் அஷ்டாங்கயோகமென்னுமாப்போலே அங்க அங்கி ஸமுச்சயத்தாலே ஆகக்கடவதென்னுமிடமும், இவற்றில் இன்னது ஒன்றுமே அங்கி, இதரங்கள் அங்கங்களென்னுமிடமும்,

நிக்ஷேபாபரபர்யாயோ ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத:
ஸந்ந்யாஸஸ்த்யாக இத்யுக்த: சரணாகதிரித்யபி

என்கிற ச்லோகத்தாலே ந்யாய நிரபேக்ஷமாக ஸித்தம்.

**விளக்கம்** – அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை சரணாகதி என்பது ஆறு வகை என்பதை - ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ரதிகூல்யஸ்ய வர்ஜநம் ரக்ஷிப்யதீதி விச்வாஸோ கோப்த்ருத்வவரணம் ததா ஆத்மநிக்ஷேப கார்ப்பண்யே ஷட்விதா சரணாகதி: - அவனுக்கு மகிழ்வை உண்டாக்குவதை மட்டுமே செய்வேன் என்ற எண்ணம், அவனுக்கு விருப்பம் இல்லாதவற்றை கைவிடுதல், அவன் எப்போதும் காப்பான் என்ற திடமான நம்பிக்கை, ரக்ஷிக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்தல், ஆத்ம ஸ்வரூபத்தை ஸமர்ப்பணம் செய்தல், வேறு கதியற்றவன் என்ற எண்ணம் – என்று கூறியது. அஷ்டாங்க யோகத்தில் அங்கியான ஸமாதி நிலையையும் சேர்த்து எட்டு என்பது போன்று, இங்கு அங்கியான ப்ரபத்தியையும் சேர்த்து ஆறு வகை என்பது காண்க (அதாவது – அஷ்டாங்க யோகம் என்பது யமம், நியமம், ஆசனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், த்யானம், தாரணம் என்னும் ஏழு அங்கங்களுடன் அங்கியான ஸமாதியையும் சேர்த்து எட்டு எனப்படுகிறது. இது போன்று இங்கு சரணாகதி என்பது ஆநுகூல்யஸங்கல்பம், ப்ரதிகூல்யவர்ஜனம், கார்பண்யம், மஹாவிச்வாஸம், கோப்த்ருத்வவரணம் என்னும் ஐந்து அங்கங்களுடன் அங்கியான ஆத்மஸமர்ப்பணமும் சேர்த்து ஆறு எனப்படுகிறது). இந்த ஆறில் ஒன்று அங்கி என்றும், மற்ற ஐந்தும் அங்கங்கள் என்றும் லக்ஷ்மீ தந்த்ரம் (17-74) - நிக்ஷேபாபரபர்யாயோ ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத: ஸந்ந்யாஸஸ்த்யாக இத்யுக்த: சரணாகதிரித்யபி – ஐந்து அங்கங்களுடன் கூடிய ஸமர்ப்பணம் என்னும் ந்யாஸம் என்பதே ஸந்ந்யாஸம் என்றும், த்யாகம் என்றும், சரணாகதி என்றும் கூறப்படுகிறது – என்று கூறியது.

**மூலம்** – இவ்விடத்தில்

சாச்வதீ மம ஸம்ஸித்திரியம் ப்ரஹ்மவிபவாமி யத்
புருஷம் பரமுதிச்ய ந மே ஸித்திரித: அந்யதா
இதியங்கமுதிதம் ச்ரேஷ்டம் பலேப்ஸா தத்விரோதிநீ

என்று அஹிர்புத்ந்யோக்தமான பலத்யாகரூப அங்காந்தரம் மோக்ஷார்த்தமான ஆத்மநிக்ஷேபத்திலே நியதம். பல ஸங்க கர்த்ருத்வாதி த்யாகம், கர்மயோகம் முதலாக நிவ்ருத்தி தர்மங்களெல்லாவற்றிலும் வருகையாலே இவ்வநுஸந்தாநம் முமுக்ஷுவுக்கு ஸாங்க ஸமர்ப்பண தசையிலே கர்த்தவ்யம்.

**விளக்கம்** – அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை - சாச்வதீ மம ஸம்ஸித்திரியம் ப்ரஹ்மவிபவாமி யத் புருஷம் பரமுதிச்ய ந மே ஸித்திரித: அந்யதா இதியங்கமுதிதம் ச்ரேஷ்டம் பலேப்ஸா தத்விரோதிநீ – எம்பெருமானிடம் நான் செய்கின்ற ப்ரபத்தி என்பதே உயர்ந்த புருஷார்த்தம், இதனைத் தவிர வேறு எதுவும் எனக்குப் பயனாக நான் விரும்பவில்லை, இப்படியாக வேறு எதனையும் விரும்பாமல் உள்ளதே சிறந்த அங்கமாகக் கூறப்படுகிறது, இதற்கு விரோதியாக பலன் மீது கொள்ளும் ஆசை உள்ளது – என்றது. மோக்ஷத்தை அடையும் பொருட்டு ஆத்ம ஸமர்ப்பணம் செய்தல் என்னும் சரணாகதிக்கு, மற்ற பலன்களின் மீது உள்ள பற்றுதல்களைத் தவிர்த்தல் என்பது, அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை கூறுவது போன்று, மிகவும் முக்கியமான அங்கம் ஆகும். பலன்களின் மீது உள்ள பற்றுதல்களைக் கைவிடுதல், கர்மங்களைத் தானே இயற்றுதல் என்ற எண்ணத்தைக் கைவிடுதல் முதலானவை கர்மயோகம் போன்றவற்றில் துறப்பது என்றாகிறது. இதே எண்ணங்கள், மோக்ஷத்தை விரும்பி, எம்பெருமானிடம் அனைத்து அங்கங்களுடன் சரணாகதி செய்யும்போது இருத்தல்வேண்டும்.

## ஆநுகூல்ய ஸங்கல்பம், ப்ரதிகூல்ய வர்ஜநம்

**மூலம்** – இங்குப் பரிகரங்களானவற்றில் ஆநுகூல்ய ஸங்கல்பத்துக்கும் ப்ரதிகூல்ய வர்ஜநத்துக்கும் நிபந்தனம், ஸர்வசேஷியான ஸ்ரீய:பதியைப் பற்றப் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளாலே அபிமதாநுவர்த்தனம் பண்ணவேண்டும்படி இவனுக்கு உண்டான பாரார்த்ய ஜ்ஞாநம். இத்தாலே ஆநுகூல்யேதராப்யாம் து விநிவ்ருத்திரபாயத: என்கிறபடியே அபாய பரிஹாரம் ஸித்தம்.

**விளக்கம்** – ப்ரபத்தியின் அங்கங்களில் எம்பெருமானுக்கு மகிழ்வை உண்டாக்கும் செயல்களை மட்டுமே செய்தல், அவனுக்கு விருப்பம் இல்லாத செயல்களைக் கைவிடுதல் என்பது காண்க. இதன் மூலம் மஹாலக்ஷ்மியின் நாயகனான எம்பெருமானுக்காகவே அனைத்து உயிர்களும் உள்ளன என்னும் ஞானம் பிறக்கிறது (சேஷத்வ ஞானம்). ஆகவே எத்தகைய செயல்களைச் செய்தால் அவன் மகிழ்வானோ, எதனைக் கைவிட்டால் அவன் மகிழ்வானோ அவற்றை மட்டுமே கடைபிடிக்க வேண்டும். லக்ஷ்மீதந்த்ரம் (17-76) - ஆநுகூல்யேதராப்யாம் து விநிவ்ருத்திரபாயத: என்கிறபடியே அபாய பரிஹாரம் – அவனுக்கு விருப்பமானவற்றைச் செய்தல், அவனுக்கு விருப்பம் இல்லாதவற்றைத்

துறத்தல் என்பதன் மூலம் அவனது ஆணைகளை மீறாமல் இருக்கும் நிலை உண்டாகிறது – என்று கூறியது.

## கார்ப்பண்யம்

**மூலம்** – கார்ப்பண்யமாவது முன்பு சொன்ன ஆகிஞ்சந்யாதிகளுடைய அநுஸந்தானமாதல், அதடியாக வந்த கர்வஹாநியாதல், க்ருபாஜநக க்ருபணவ்ருத்தியாதலாய் நின்று சரண்யனுடைய காருண்யோத்தம்பநார்த்தமுமாய், கார்ப்பண்யேநாப்யுபாயாநாம் விநிவ்ருத்திரிஹேரிதா என்கிறபடியே பின்பும் அநந்யோபாயதைக்கும் உபயுக்தமாயிருக்கும்.

**விளக்கம்** – கார்ப்பண்யம் என்றால் முன்பு கூறப்பட்ட ஆகிஞ்சந்யம் முதலானவற்றைக் குறித்து எண்ணியபடி இருத்தல், இந்த எண்ணங்கள் மூலமாகத் தனது கர்வம் நீங்குதல் என்பதாகும். இதன் மூலமாக தான் எந்தவிதமான உதவியும் அற்று (கதியும் அற்று) உள்ளோம் என்னும் எண்ணம் தோன்றும். இதன் மூலமாகத் தஞ்சம் புகுகின்ற எம்பெருமானின் கருணையானது பல மடங்கு பெருகுகிறது. இதன் மூலமாக வேறு எந்தவிதமான உபாயமும் இல்லை என்ற ஞானம் ஓங்குகிறது. லக்ஷ்மீதந்த்ரம் (17-77) - கார்ப்பண்யேநாப்யுபாயாநாம் விநிவ்ருத்திரிஹேரிதா – மற்ற உபாயங்களை நாடாமல் உள்ளதே கார்ப்பண்யம் – என்றது காண்க.

## மஹாவிச்வாசம்

**மூலம்** – மஹாவிச்வாஸம் ரக்ஷிஷ்யதீதி விச்வாஸாத் அபீஷ்டோபாய கல்பநம் என்கிறபடியே அணியிடாத அநுஷ்டாந ஸித்தர்த்தமுமாய்ப் பின்பு நிர்பரதைக்கும் உறுப்பாயிருக்கும்.

**விளக்கம்** – எந்தவிதமான ஐயமும் இல்லாத மஹாவிச்வாஸம் என்பது ப்ரபத்திக்கு மிகவும் அவசியமானதாகும். இத்தகைய மஹாவிச்வாஸம் என்பதே ப்ரபத்திக்குப் பின்னர் நம்மைப் பற்றிய கவலை கொள்ளுதல், நம்மைக் காத்துக் கொள்ள நாமே முயலுதல் போன்ற செயல்களில் இருந்து நம்மை விடுவிக்கிறது. இதனை லக்ஷ்மீ தந்த்ரம் (17-77) - மஹாவிச்வாஸம் ரக்ஷிஷ்யதீதி விச்வாஸாத் அபீஷ்டோபாய கல்பநம் – எம்பெருமான் ரக்ஷிப்பான் என்னும் நம்பிக்கை காரணமாக, எம்பெருமானை உபாயமாகக் கொள்ளும் பயன் கிட்டுகிறது – என்றது.

# கோப்த்ருத்வ வாரணம்

**மூலம்** – ஸ்வரூபாநுசித புருஷார்த்தங்கள்போலே ஸ்வரூப ப்ராப்தமான அபவர்க்கமும் புருஷார்த்தமாம்போது புருஷன் அர்திக்கக் கொடுக்க வேண்டுகையாலே இங்கு கோப்த்ருத்வ வரணமும் அபேக்ஷிதம். நன்றாயிருப்பது ஒன்றையும் இப்புருஷன் அர்த்திக்கக் கொடாதபோது புருஷார்த்தங் கொடுத்தானாகானிறே. ஆகையாலேயிறே அப்ரார்த்திதோ ந கோபாயேத் என்றும், கோப்த்ருத்வ வரணம் நாம ஸ்வாபிப்ராய நிவேதநம் என்றும் சொல்லுகிறது.

**விளக்கம்** – மோக்ஷம் என்பது நம்முடைய ஸ்வரூபத்திற்கு ஏற்ற குறிக்கோளாக உள்ளது. ஆனால், அதனை ஒரு புருஷார்த்தமாக விரும்பும்போது, மற்ற புருஷார்த்தங்கள் போன்று அதனையும் வேண்டியே பெற வேண்டியதாகிறது. இப்படியாக மோக்ஷம் என்பது யார் ஒருவன் அதனை வேண்டுகிறானோ அவனுக்கு மட்டுமே அளிக்கப்படுவதால், காப்பாற்றவேண்டும் என்பதும் வேண்டியே நிற்க வேண்டியதாகிறது. எந்த ஒரு நல்ல பொருளும், அதற்காக வேண்டாமல் அளிக்கப்படுவதில்லை. ஆக புருஷன் கேட்காதபோது மோக்ஷம் என்னும் புருஷார்த்தம் அளிக்கப்படுவதில்லை. இதனை லக்ஷ்மீ தந்த்ரம் கீழே உள்ள வரிகளில் கூறுகிறது:

- 17-72 - அப்ரார்த்திதோ ந கோபாயேத் – கேட்கப்படாமல் எந்த ரக்ஷகமும் அளிக்கப்படுவதில்லை.
- 17-78 - கோப்த்ருத்வ வரணம் நாம ஸ்வாபிப்ராய நிவேதநம் – நமது மனதில் உள்ளதை எம்பெருமானிடம் தெரிவித்தலே கோப்த்ருத்வ வரணம்.

**மூலம்** - இப்படி இவ்வைந்தும் இவ்வித்யாநுஷ்டாந காலத்தில் உபயுக்தங்களாகையால் இவை இவாத்மநிக்ஷேபத்துக்கு அவிநாபூத ஸ்வபாவங்கள்.

**விளக்கம்** – இப்படியாக மேலே உள்ள ஐந்தும் ப்ரபத்தியின்போது உதவியாக உள்ளதால், இவை ஆத்ம சமர்ப்பணம் செய்வதற்கு இன்றியமையாதவை ஆகும்.

# த்ரிஜடா சரணாகதி நிரூபணம்

**மூலம்** – இவ்வர்த்தம் பிராட்டியை சரணமாகப் பற்ற வாருங்கள் என்று ஸாத்த்விக ப்ரக்ருதியான த்ரிஜடை ராக்ஷஸிகளுக்குச் சொல்லுகிற வாக்யத்திலும் காணலாம். ததலம் க்ரூ ஸ்வாக்யைர்வ: என்று ப்ராதிகூல்யவர்ஜநம் சொல்லப்பட்டது. ஸாந்த்வமேவாபி தீயதாம் என்கையாலே மந:பூர்வமாகவல்லது வாக்ப்ரவ்ருத்தியில்லாமையாலே ஆநுகூல்ய ஸங்கல்பம் ஆக்ருஷ்டமாயிற்று. ராகவாத்தி பயம் கோரம் ராக்ஷஸாநாமுபஸ்திதம் என்று போக்கற்று நிற்கிற நிலையைச் சொல்லுகையாலே அதிகாரமான ஆகிஞ்சந்யமும் அதினுடைய அநுஸந்தாநமுகத்தாலே வந்த கர்வஹாந்யாதிரூபமாய் அங்கமான கார்ப்பண்யமும் சொல்லிற்றாயிற்று. அலமேஷா பரித்ராதும் ராக்ஷஸ்யோ மஹதோ பயாத் என்கையாலும் இத்தை விவரித்துக் கொண்டு அலமேஷா பரித்ராதும் ராகவாத் ராக்ஷஸீகணம் என்று திருவடி அநுவதிக்கையாலும், பெருமாள் ஒருத்தனை நிக்ரஹிக்கப் பார்க்கிலும் அவர் சீற்றத்தையாற்றி இவள் ரக்ஷிக்க வல்லவளாகையாலே ரக்ஷிஷ்யதீதி விச்வாஸம் சொல்லப்பட்டது. அபியாசாம வைதேஹீம் ஏதத்தி மம ரோசதே, பர்த்ஸிதாமபி யாசத்வம் ராக்ஷஸ்ய: கிம் விவக்ஷயா என்கையாலே கோப்த்ருத்வ வரணம் சொல்லிற்றாயிற்று.

**விளக்கம்** – இப்படிப்பட்ட உயர்ந்த கருத்துக்கள், சிறந்தவளான த்ரிஜடை என்னும் அரக்கி, மற்ற அரக்கிகளிடம், “சீதையைச் சரணம் என்று பற்றுங்கள்”, எனக் கூறுவதன் மூலம் வெளிப்படுகிறது. இதனைக் கீழே உள்ள பல வரிகளில் காணலாம்:

- இராமாயணம் ஸுந்தரகாண்டம் (27-42) - ததலம் க்ரூ ஸ்வாக்யைர்வ: - உங்கள் கொடிய சொற்களை நிறுத்துங்கள் – என்பதன் மூலம் எம்பெருமானுக்கு ஏற்காதவற்றைத் தள்ளும் ப்ராதிகூல்யவர்ஜநம் சொல்லப்பட்டது.

- இராமாயணம் ஸுந்தரகாண்டம் (27-42) - ஸாந்த்வமேவாபி தீயதாம் – ஸமாதானம் உண்டாக்கும் சொற்களை மட்டுமே கூறுங்கள் – என்பதன் மூலம் எம்பெருமானுக்கு மகிழ்வை உண்டாக்கும் ஆநுகூல்யஸங்கல்பம் சொல்லப்பட்டது. மனதில் இத்தகைய நிலை உண்டானால் மட்டுமே சொற்கள் இது போன்று வெளிவரும்.

- இராமாயணம் ஸுந்தரகாண்டம் (27-45) - ராகவாத்தி பயம் கோரம் ராக்ஷஸாநாமுபஸ்திதம் – இராமன் மூலமாக அரக்கர்களுக்கு கொடிய பயம் உண்டானது – இதன் மூலம் அரக்கர்கள் வேறு கதியில்லாமல் நிற்பது என்ற நிலை கூறப்பட்டதால், இங்கு ஆகிஞ்சந்யம் சொல்லப்பட்டது. இதன் மூலம்

கார்ப்பண்யமும் உணர்த்தப்பட்டது. எப்படி என்றால், தங்களது கதியற்ற நிலைய உணர்ந்த அரக்கர்கள் தாங்களாகவே தங்கள் கர்வம் முதலானவற்றைக் கைவிடுவார்கள், இதுவே ஓர் அங்கமான கார்ப்பண்யத்திற்கு இட்டுச் செல்லும்.

- இராமாயணம் ஸுந்தரகாண்டம் (27-43) - அலமேஷா பரித்ராதும் ராக்ஷஸ்யோ மஹதோ பயாத் – அரக்கிகளே! இராமன் மூலமாக உண்டாகும் பயத்திலிருந்த இவள் (சீதை) நம்மைக் காக்கும் சக்தி உடையவள் – என்று கூறப்பட்டது. இதே கருத்தை அனுமன், ஸுந்தரகாண்டம் (58-91) - அலமேஷா பரித்ராதும் ராகவாத் ராக்ஷஸீகணம் – இராகவனிடமிருந்து அரக்கிகளைக் காப்பாற்றும் திறன் உடையவள் இவள் – என்று மீண்டும் கூறியது காண்க. இதன் மூலம் எம்பெருமான் ஒருவனைத் தண்டிக்க வேண்டும் என்று முடிவு செய்திருந்தாலும், அந்தக் கோபத்தை மாற்றி, கண்டிப்பாகக் காப்பாற்றுவாள் என்னும் மஹாவிச்வாஸம் சொல்லப்பட்டது.

- இராமாயணம் ஸுந்தரகாண்டம் (27-44) - அபியாசாம வைதேஹீம் ஏதத்தி மம ரோசதே, பர்த்ஸிதாமபி யாசத்வம் ராக்ஷஸ்ய: கிம் விவக்ஷயா – சீதையிடம் நாம் அபயம் என்று விண்ணப்பம் செய்வோம். இதுவே எனக்கு (த்ரிஜடை) சரியாகப்படுகிறது. உங்களால் அச்சுறுத்தப்பட்டவளாக இருந்தாலும், அவளை நீங்கள் ப்ரார்த்தனை செய்யுங்கள். அவள் காப்பாற்றுவாளோ என்ற ஐயமே அவசியம் இல்லை. அத்தகைய ஐயம் வீணே ஆகும் – என்று உள்ளது. இதன் மூலம் கோப்த்ருத்வ வரணம் கூறப்பட்டது.

**மூலம்** - இவ்வைந்துக்கும் அங்கியான ஆத்ம நிக்ஷேபம், ப்ரணிபாத ப்ரஸந்நா ஹி மைதிலீ ஜநகாத்மஜா என்று ப்ரஸாத காரணவிசேஷத்தைச் சொல்லுகிற ப்ரணிபாத சப்தத்தாலே விவக்ஷிதமாயிற்று. ஆகையால் ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத: என்கிற சாஸ்த்ரார்த்தம் இங்கே பூர்ணம்.

**விளக்கம்** - ஆத்மசமர்ப்பணம் என்னும் அங்கியானது மேலே உள்ள ஐந்து அங்கங்களுடன் உள்ளதை ப்ரணிபாதம் (தலை வணங்குதல்) என்ற பதம் கூறுகிறது. இந்தப் பதம் எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் கருணை உண்டாகக் காரணம் என்ன என்பதைத் தெளிவாக்குகிறது. இதனை இராமாயணம் ஸுந்தரகாண்டம் (27-45) - ப்ரணிபாத ப்ரஸந்நா ஹி மைதிலீ ஜநகாத்மஜா – ஜனகனின் திருமகளான சீதை நீங்கள் அவளிடம் செய்த ப்ரபத்தியால் உங்களுக்குக் கருணை செய்பவளாக உள்ளாள் – என்றது. ஆக,

லக்ஷ்மீ தந்த்ரம் (17-74) – ந்யாஸ: பஞ்சாங்கம் ஸம்யுத: - ந்யாஸம் ஐந்து அங்கங்கள் கொண்டது – என்னும் கருத்து த்ரிஜடையின் சரணாகதியில் பூர்ணமாக வெளிப்படுகிறது.

**மூலம்** - இப்படி உபதேசிக்க ராக்ஷஸிகள் விலக்காதமட்டே பற்றாசாகப் பிராட்டி தன் வாத்ஸல்யாதிசயத்தாலே பவேயம் சரணம் ஹி வ: என்று அருளிச் செய்தாள். இப்பாசுரம் ஸஹ்ருதமாய் பலபர்யந்தமானபடியை,

மாதர் மைதிலீ ராக்ஷஸீ: த்வயி ததைவ ஆர்த்ராபராதா: த்வயா
ரக்ஷந்த்யா பவநாத்மஜாத் லகுதரா ராமஸ்ய கோஷ்டீ க்ருதா

என்று அபியுக்தர் வெளியிட்டார்கள். இவ்விடத்தில் த்ரிஜடையுடைய ஆத்மாத்மீய பரஸமர்ப்பணத்திலே அவர்களுக்குப் பிறவித் துவக்காலே நம்மவர்களென்று கண்ணோட்டம் பிறக்கும் ராக்ஷஸிகளும் அந்தர்பூதைகள். அப்படியே ஸ்ரீவிபீஷணாழ்வானோடு கூட வந்த நாலு ராக்ஷஸரும் அவருடைய உபாயத்திலே அந்தர்பூதர்.

**விளக்கம்** – இப்படியாக த்ரிஜடை கூறியதை அரக்கிகள் மறுக்கவில்லை. இப்படியாக இவர்கள் “சரணம் அடைகிறோம்” என்று வெளிப்படையாக கூறாத போதிலும், த்ரிஜடை கூறியதை மறுக்காமல் இருந்த காரணத்தையே அடிப்படையாகக் கொண்டு, தனது அளவு கடந்த அன்பு மற்றும் கருணை காரணமாக சீதை, இராமாயணம் ஸுந்தரகாண்டம் (58-90) – பவேயம் சரணம் ஹி வ: - நான் உங்களுக்கு அடைக்கலமாக இருக்கிறேன் – என்றாள்.இப்படியாக சீதை தனது மனப்பூர்வமாக கூறியதும், அதன் பலனையும் பராசரபட்டர் ஸ்ரீகுணரத்நகோசத்தில் (50) - மாதர் மைதிலீ ராக்ஷஸீ: த்வயி ததைவ ஆர்த்ராபராதா: த்வயா ரக்ஷந்த்யா பவநாத்மஜாத் லகுதரா ராமஸ்ய கோஷ்டீ க்ருதா – தாயே! ஸ்ரீரங்கநாயகீ! உனது நாயகனாக உதித்த இராமன் தன்னைச் சரணம் என்று புகுந்த விபீஷணனையும், காகம் ஒன்றையும் மட்டுமே காப்பாற்றினான். நீயோ, பல தவறுகள் இழைத்த அரக்கிகளை, அவர்கள் உன்னிடத்தில் ”சரணம்” என்று புகாமலேயே காப்பாற்றினாய். இப்படியாக இராமனின் புகழ் சற்றுத் தாழ்ந்ததே ஆகும் – என்றார். த்ரிஜடையின் இந்தச் சரணாகதியில், த்ரிஜடையின் பாதுகாப்பு, அவளுடன் பிறந்த அரக்கிகளின் பாதுகாப்பு ஆகிய பலவும் அடக்கம் ஆகும். இது போன்று விபீஷணனுடன் வந்த நான்கு அரக்கர்களுக்கும் விபீஷணனின் சரணாகதி பொருந்தும்.

# விபீஷண சரணாகதி

**மூலம்** - அங்குற்ற அபயப்ரதான ப்ரகரணத்திலும் இவ்வங்க அங்கி வர்க்கம் அடைக்கலாம். எங்ஙனேயென்னில் ப்ராதிகூல்யத்திலே வ்யவஸ்திதனான ராவணனுக்குங் கூடப் ப்ரதீயதாம் தாசரதாய மைதிலீ, ஸீதாம் ச ராமாய நிவேத்ய தேவீம் வஸேம ராஜந்நிஹ வீதசோகா: என்று ஹிதம் சொல்லுகையாலே ஆநுகூல்யஸங்கல்பம் தோற்றிற்று. இந்த ஹிதவசநம் பித்தோபஹததனுக்குப் பால் கைக்குமாப் போலே அவனுக்கு உத்வேக ஹேதுவாயிற்று. த்வாம் து திக் குல பாம்ஸநம் என்று திக்காரம் பண்ணின பின்பு இனி இவனுக்கு உபதேசிக்கவும் ஆகாது, இவனோடு அநுபந்தித்த விபூதிகளுமாகாது, இவன் இருந்தவிடத்தில் இருக்கவுமாகாதென்று அறுதியிட்டு,

**விளக்கம்** – இராமனால் அபயம் அளிக்கப்பட்ட இடத்திலும் இந்த அங்கம் அங்கிகளைக் காணலாம். எப்படி? இராவணன் தகாதவற்றைச் செய்வதிலேயே குறியாக இருந்தான். அவனுக்கு விபீஷணன் கீழ்க்கண்ட நன்மை பயக்கும் வரிகளைக் கூறினான்:

- இராமாயணம் யுத்த காண்டம் : (9-22), (9-23), (14-3), (14-4) - ப்ரதீயதாம் தாசரதாய மைதிலீ – இராமனிடம் சீதையை ஒப்படைப்பாயாக.

- இராமாயணம் யுத்த காண்டம் (15-14) - ஸீதாம் ச ராமாய நிவேத்ய தேவீம் வஸேம ராஜந்நிஹ வீதசோகா: - சீதையை இராமனிடம் அளித்துவிட்டு, நாம் இந்த இலங்கையில் வருத்தம் அற்றவர்களாக வாழ்வோமாக.

மேலே உள்ள வரிகளின் மூலம் ஆநுகூல்யஸங்கல்பம் (எம்பெருமானுக்கு மகிழ்வை ஏற்படுத்தும் செயல்) வெளிப்படுகிறது. பித்தம் கொண்ட ஒருவனுக்கு பால் கசப்பது போன்று, இந்த நன்மை பயக்கும் சொற்கள் இராவணனுக்கு கோபம் ஏற்படக் காரணமான சொற்களாயின. இராவணன் விபீஷணனிடம் இராமாயணம் யுத்த காண்டம் (16-15) - த்வாம் து திக் குல பாம்ஸநம் – நம் அசுர குலத்தை கெடுக்கின்ற உன்னை அவமதிக்கிறேன் – என்றான். இதனைக் கேட்ட விபீஷணன், “இனி இவனுக்கு உபதேசம் செய்ய ஏதும் இல்லை. இவன் தொடர்புடைய எதனையும் அனுபவிப்பது கூடாது, இவன் உள்ள இங்கு இருக்கவும் கூடாது”, என்று முடிவு செய்தான்.

**மூலம்** – த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச, பரித்யக்தா மயா லங்காம் மித்ராபி ச தநாநி ச என்கிற ஸ்வவாக்யத்தின்படியே அங்குத் துவக்கற்றுப்போருகையாலே ப்ராதிகூல்யவர்ஜந அபிஸந்தி தோற்றிற்று. ராவணோ நாம துர்வ்ருத்த: என்று தொடங்கி ஸர்வஜித்தான

ராவணனோட்டை விரோதத்தாலே தாம் போக்கற்று நிற்கிற நிலையைச் சொல்லுகையாலும், பின்பும்

அநுஜோ ராவணஸ்யாஹம் தேந சாஸ்ம்யவமாநித:
பவந்தாம் ஸர்வபூதாநாம் சரண்யம் சரண்யம் கத:

என்கையாலும் கார்ப்பண்யம் சொல்லப்பட்டது. அஞ்சாதே வந்துகிட்டி ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே என்று சொல்லும்படி பண்ணின மஹாவிச்வாஸம் விபூஷணோ மஹாப்ராஜ்ஞ: என்று காரணமுகத்தாலே சொல்லப்பட்டது. ப்ராஜ்ஞதையை விசேஷிக்கிற மஹச்சப்தத்தாலே விச்வாஸாதிசயந்தானே விவக்ஷிதமாகவுமாம். ராகவம் சரணம் கத: என்கையாலே உபாயவரணாந்தர்நீதமான கோப்த்ருத்வவரணம் சொல்லிற்றாயிற்று. உபாயவரண சப்தத்தாலே வ்யாஜ்ஜிதமாகிறவளவன்றிக்கே, நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபாஸ்திதம் என்கையாலே கடக புரஸ்ஸரமான ஆத்மநிக்ஷேபம் சொல்லிற்று. இப்ப்ரகணத்திலே நிவேதந சப்தம் விஜ்ஞாபநமாத்ர பரமானால் நிஷ்ப்ரயோஜநம்.

**விளக்கம்** – இப்படியாக முடிவு செய்த விபீஷணன் கீழே உள்ளபடி உரைத்தான். இதன் மூலம் இவனது ப்ராதிகூல்யவர்ஜநம் (எம்பெருமானுக்கு விருப்பம் இல்லாதவற்றைத் தவிர்த்தல்) வெளிப்படுகிறது:

- இராமாயணம் யுத்த காண்டம் (17-14) - த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச – புத்திரன், மனைவி ஆகியவர்களை விட்டு இராமனைச் சரணம் அடைந்தேன்.

- இராமாயணம் யுத்த காண்டம் (19-5) - பரித்யக்தா மயா லங்காம் மித்ராபி ச தநாநி ச – இலங்கை, தோழர்கள், செல்வம் ஆகியவற்றைக் கைவிட்டேன்.

அடுத்து, விபீஷணன் இராமாயணம் யுத்த காண்டம் (17-12) - ராவணோ நாம துர்வ்ருத்த: - இராவணன் தகாத நடவடிக்கைகள் கொண்டவன் – என்று கூறத் தொடங்கி, அனைவரையும் வென்ற இராவணனுடன் கொண்ட விரோதம் காரணமாக, வேறு புகலிடம் இல்லாமல் இருப்பதைக் கூறுகிறான். தொடர்ந்து இராமனிடம், இராமாயணம் யுத்த காண்டம் (19-4) - அநுஜோ ராவணஸ்யாஹம் தேந சாஸ்ம்யவமாநித: பவந்தாம் ஸர்வபூதாநாம் சரண்யம் சரண்யம் கத: - நான் இராவணனின் தம்பி; அவனால் அவமானம் அடைந்தேன்; அனைத்து உயிர்களுக்கும் ரக்ஷகனான உன்னைச் சரணம் அடைந்தேன் – என்றான். இதனால் கார்ப்பண்யம் வெளிப்பட்டது. விபீஷணனிடம் இருந்த மஹாவிச்வாஸம் என்பதே, அவனை யாருக்கும் அஞ்சாமல் இராமாயணம் யுத்த

காண்டம் (17-15) - ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே – அனைத்து உலகங்களுக்கும் புகலிடமான இராமனிடம் - என்று கூறுப்படிச் செய்தது. இப்படியாக இவனது மஹாவிச்வாஸத்திற்கான காரணமாக இராமாயணம் யுத்த காண்டம் (19-1) - விபூஷணோ மஹாப்ராஜ்ஞ: - விபீஷணன் மிகுந்த அறிவுள்ளவன் – என்பது கூறப்பட்டது. இங்கு உள்ள "மஹ" என்னும் பதம் "மிகுந்த" என்ற பொருளை அளித்து, அந்தப் பதம் "ஞானம்" என்பதற்கு அடைமொழியாகக் கூறப்பட்டாலும், அதே பதம் விபீஷணனின் விச்வாஸத்தை உணர்த்துவதாகவும் கொள்ளலாம். அடுத்து, தன்னைக் காக்க வேண்டும் என்னும் விண்ணப்பத்தை இராமாயணம் யுத்த காண்டம் (17-14) – ராகவம் சரணம் கத: - இராகவனைச் சரணம் அடைந்தேன் – என்ற வரி உணர்த்துகிறது. இதுவே கோப்த்ருத்வவரணம் ஆகும். இந்த வரி மூலம் கோப்த்ருத்வவரணம் மறைமுகமாக உணர்த்தப்பட்டாலும், இராமாயணம் யுத்த காண்டம் (17-15) - நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபாஸ்திதம் – விபீஷணனாகிய என்னை இராமனிடம் ஸமர்ப்பணம் செய்யுங்கள் – என்ற வரி மூலம், சரணாகதியைத் தூண்டுபவர்கள் மூலமாக ஆத்மநிக்ஷேபம் செய்யப்படுவது கூறப்பட்டது. இங்கு உள்ள "நிவேதயத" என்னும் பதத்தை "கூறுங்கள்" என்ற பொருளில் எடுத்துக் கொண்டால், அந்தப் பதம் வெளிப்படுத்துகின்ற "என்னை அவனுக்கு ஸமர்ப்பணம் செய்யுங்கள்" என்னும் பொருள் வெளிப்படாமல் போய்விடும்.

**மூலம்** – இப்படி மற்றுமுள்ள ப்ரபத்தி ப்ரகரணங்களிலும் லௌகிக த்ரவ்ய நிக்ஷேபங்களிலும் ஸம்க்ஷேப விஸ்தர ப்ரக்ரியையாலே இவ்வர்த்தங்கள் காணலாம். தான் ரக்ஷிக்க மாட்டாதொரு வஸ்துவை ரக்ஷிக்கவல்லனொருவன் பக்கலிலே ஸமர்ப்பிக்கும்போது தான் அவன் திறத்தில் அநுகூலாபிஸந்தியையுடையவனாய், ப்ரதிகூலாபிஸந்தியைத் தவிர்ந்து, "இவன் ரக்ஷிக்கவல்லவன், அபேக்ஷித்தால் ரக்ஷிப்பதும் செய்யும்", என்று தேறி, தான் ரக்ஷித்துக் கொள்ளமாட்டாமையை அறிவித்து, நீ ரக்ஷிக்க வேணுமென்று அபேக்ஷித்து, ரக்ஷ்ய வஸ்துவை அவன் பக்கலிலே ஸமர்ப்பித்துத் தான் நிர்பரனாய் பயங்கெட்டு மார்பிலே கைவைத்துக் கொண்டு கிடந்து உறங்கக் காணா நின்றோமிறே.

**விளக்கம்** – இந்த உலகத்தில் லௌகிகமாக ஒருவரின் பொருள்களை மற்றவர்களிடம் வைப்பதிலும், மற்ற ப்ரபத்தி நூல்களிலும் இந்த விஷயங்கள் சுருக்கமாகவும் விரிவாகவும் உள்ளதைக் காணலாம். தனது பொருளைத் தன்னால் பாதுகாக்க இயலாது என்று எண்ணும் ஒருவன், அந்தப் பொருளை "இவனால் பாதுகாக்க இயலும்", என்று ஆராய்ந்து அவனிடம் செல்கிறான். அப்போது, அந்த மனிதனுக்கு விருப்பமானதை மட்டுமே செய்து, அவனுக்கு விருப்பம் இல்லாதவற்றைத் தவிர்த்து, அவனிடம் பொருளை அளிப்பதைக் காணலாம். மேலும், "இவனே இந்தப் பொருளைக் காக்க இயலும், இவனை வேண்டினால் காப்பதற்கு ஒப்புக்கொள்வான்", என்று முடிவு செய்து, அவனிடம் சென்று, தன்னால்

அந்தப் பொருளைக் காக்க இயலாது என்று தனது இயலாமையைக் கூறுகிறான். அவனிடம், “நீயே காப்பாற்ற வேண்டும்”, என்று விண்ணப்பம் செய்கிறான். பின்னர் காப்பாற்றப்பட வேண்டிய தனது பொருளை அவனிடம் ஒப்படைத்துவிட்டு, பயம் இல்லாமல், பாரம் இல்லாமல், தனது மார்பிலே கைகளை வைத்து, படுத்து, சுகமாக உறங்குவதைக் காண்கிறோம் அல்லவா?

## த்வயமும் – ஆநுகூல்ய ஸங்கல்ப, ப்ராதிகூல வர்ஜநங்களும்

**மூலம்** – இக்கட்டளையெல்லாம் க்ரியாமாணார்த்த ப்ரகாசகமான த்வயாக்யமந்த்ரத்திலே அநுஸந்திக்கும்படி எங்ஙனேயென்னில் – ஸர்வஜ்ஞ ஸர்வ சக்தி யுக்தனாய், கர்மாநுரூப பலப்ரதனாய், ஸர்வோபகார நிரபேக்ஷனாய், க்ஷுத்ர தேவதைகளைப் போலே க்ஷிப்ரகாரியன்றிக்கேயிருப்பானாய், ஸமாதிக தரித்ரனான ஸர்வேச்வரன் அநந்தாபராதங்களையுடையார்க்கு அபிகம்யனாகையும், ப்ராப்தி விரோதியான அநந்தாபராதங்களையுடையார்க்கு அளவில்லாத பலத்தைத் தருகையும், அல்பவ்யாபாரத்துக்குத் தருகையும், தாழாதே தருகையும், தரம் பாராதே தருகையும் கூடுமோவென்கிற சங்கைகளுக்கு நிவர்த்தகங்களுமாய் யதாஸம்பவம் உபாயத்வ ப்ராப்யத்வோபயுக்தங்களுமாய் இருந்துள்ள புருஷகார ஸம்பந்த குண வ்யாபார ப்ரயோஜந விசேஷங்களாகிற சேஷியினுடைய ஆகாரங்களைப் பொதிந்து கொண்டிருக்கிற ஸ்ரீமச்சப்தத்திலும் நாராயண சப்தத்திலும் ஆர்த்தமாக ஆநுகூல்ய ஸங்கல்பமும் ப்ராதிகூல வர்ஜநமும் அநுஸந்தேயமாகக் கடவது. இப்படி விசிஷ்டனான ஸ்வாமியைக் காட்டுகிற சப்தங்கள் ஔசித்யத்தாலே அவன் திறத்தில் ப்ராப்தமான அபிமதாநுவர்த்தன ஸங்கல்பத்தையும் அநபிமத நிவர்த்தனத்தையும் ப்ரகாசிப்பிக்கின்றன.

**விளக்கம்** – ப்ரபத்தி என்னும் செயலின் ஆழ்பொருளை அறிவிக்கும் த்வய மந்திரத்தில், இந்த ஐந்து அங்கங்கள் எப்படி வெளிப்படுகின்றன என்ற கேள்வி எழலாம். அனைத்தும் அறிந்தவன், எங்கும் உள்ளவன், கர்மங்களுக்கு ஏற்ப பலன் அளிப்பவன், வேறு யாருடைய உதவியும் வேண்டாதவன், மற்ற தெய்வங்கள் போன்று உடனடியாகப் பலன் அளிக்காதவன், தனக்கு நிகராகவோ மேலாகவோ யாரும் இல்லாதவன் – இப்படிப்பட்ட ஸர்வேச்வரன் விஷயத்தில் பின்வரும் சந்தேகங்கள் எழலாம்:

1. எல்லையற்ற தவறுகள் இழைத்தவர்களால், இப்படிப்பட்ட எம்பெருமான் நெருங்கக் கூடியவனாக இருப்பானா?
2. பலன்களை அடைவதற்குத் தடையாக எல்லையற்ற தவறுகள் இழைத்தவர்களுக்கு, எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் பலன்களை அளிப்பானா?

3. இத்தகைய பலன்களை அற்பமான கர்மங்களைச் செய்தவர்களுக்கும் அளிப்பானா?
4. இந்தப் பலன்களை தாமதம் செய்யாமல் விரைவாக அளிப்பானா?
5. தன்னை அண்டியவர்களின் ஏற்றத்தாழ்வு பாராமல் இருப்பானா?

இப்படிப்பட்ட சந்தேகம் உள்ளவர்கள், எம்பெருமான் கீழே உள்ள விசேஷங்கள் கொண்டவன் என்பதை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும்:

- பெரியபிராட்டியைப் புருஷகாரமாகக் கொண்டுள்ளான்.
- எஜமானன் தனது வேலையாள் மீது கொண்டுள்ள உறவுமுறையில் உள்ளான்.
- தனது படைப்புகள் மீது ஆழ்ந்த அன்பு முதலான குணங்கள் கொண்டுள்ளான்.
- அனைத்து உயிர்களையும் கரை சேர்க்கும் எண்ணம் கொண்டுள்ளான்.
- இவற்றைக் கரை ஏற்றுவதைத் தனது பலனாகக் கொண்டுள்ளான்.

இப்படிப்பட்ட எஜமானத் தன்மைகள் உபாயமாக உள்ளதை த்வயத்தில் உள்ள ஸ்ரீமத் என்ற பதம் மூலமும், அவனை அடைதல் என்பதை த்வயத்தில் உள்ள நாராயண என்ற பதம் மூலமும் காணலாம். ஆனால் ஸர்வேச்வரனுக்கு விருப்பமானதைச் செய்வேன் என்ற எண்ணமும், அவனுக்கு விருப்பம் இல்லாதவற்றைச் செய்யமாட்டேன் என்ற எண்ணமும் இல்லாதவனுக்கு மேலே கூறப்பட்ட விசேஷங்கள் வெளிப்படாது. இப்படியாக அவனது விசேஷங்களை வெளிப்படுத்தும் சொற்கள் - அவனுக்கு விருப்பமானதைச் செய்வதையும், அவனுக்கு விருப்பம் இல்லாதவற்றைத் தவிர்ப்பதையும் – வாக்கியத்தில் உள்ள தங்களின் அமைப்பு மூலம் உணர்த்துகின்றன.

## சேஷியின் புருஷகாரம் போன்ற தன்மைகள்

**மூலம்** – இப்புருஷகாராதிகள் அஞ்சுக்கும் விசேஷங்களாவன – மறுக்கவொண்ணாமையும், ஒழிக்கவொழியாமையும், நிருபாதிகமாகையும், ஸஹகாரியைப் பார்த்திருக்க வேண்டாமையும், தண்ணியரான பிறருடைய பேறே தன் பேறாகையும்.

**விளக்கம்** – பிராட்டியிடமிருந்து சிபாரிசாக (புருஷகாரமாக) எம்பெருமான் பெறுகின்ற விண்ணப்பங்கள் ஐந்து தன்மைகளுடன் கூடியிருக்கும். அவையாவன – பிராட்டி கூறுவதை மறுக்க இயலாமை, தன்னைச் சரணம் அடைந்தவர்களை தள்ள இயலாமை, எதனையும் எதிர்பாராமல் இருத்தல், சரணாகதி அடைவதற்கு வேறு எதனையும் எதிர்பாராமல் இருத்தல் மற்றும் சரணம் அடைந்தவர்களின் பலனைத் தனது பலனாகவே கொள்ளுதல் – என்பதாகும்.

# ப்ரபத்தி குறித்த ஐந்து சந்தேகங்கள்

**மூலம்** - இவ்விசேஷங்கள் அஞ்சாலும் சங்காபரிஹாரம் பிறந்தபடி எங்ஙனேயென்னின்:

**விளக்கம்** – முன்பு எழுந்த ப்ரபத்தி குறித்த ஐந்து சந்தேகங்கள், இந்த ஐந்து தன்மைகளால் எப்படி நீங்கியது என்றால்…

**மூலம்** - ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாயிருந்தானேயாகிலும் மறுக்கவொண்ணாத புருஷகார விசேஷத்தாலே அந்த:புர பரிஜந விஷயத்திற்போலே அபிகந்தவ்யதா விரோதிகளான அபராதங்களையெல்லாம் க்ஷமித்து இவற்றில் அவிஜ்ஞாதா என்னும்படி நின்று அபிகந்தவ்யனாம்.

**விளக்கம்** – எம்பெருமான் அனைத்தும் அறிந்தவனாகவும், அனைத்து சக்தியும் கொண்டவனாக உள்ளபோதிலும், பிராட்டியின் புருஷகாரத்தை மறுக்க இயலாமல் உள்ளான். அரசியின் வேலையாட்கள் செய்யும் தவறுகளை மன்னன் எப்படி பொறுத்துக் கொள்வானோ அது போன்று, தன்னை அடைய இயலாமல் தடுக்கின்ற குற்றங்களை பொறுத்துக் கொள்கிறான். இந்தத் தவறுகளைத் தான் காணாமல் உள்ளவன் போன்றே இருந்து, அனைவரும் தன்னிடம் வரும்படியாக நிற்பான்.

**மூலம்** - கர்மாநுரூப பலப்ரதனேயாகிலும் இப்ப்ரபத்திரூப வ்யாஜத்தாலே ப்ரஸந்நனாய் ஸ்வாமித்வ தாஸத்வ ஸம்பந்தோபோதிதமாய் தாயம் போலே ஸ்வத:ப்ராப்தமான அளவில்லாத பலத்தையும் தரும்.

**விளக்கம்** – அவரவர்களின் கர்மங்களுக்கு ஏற்ப பலன் அளிப்பவனாக உள்ளபோதிலும், ப்ரபத்தி செய்வதன் மூலம் அதிக கருணை உள்ளவன் ஆகிறான். இதனால் அடையவேண்டிய பலனை விட அதிகமாகவே அளிக்கிறான். எஜமான-அடிமை உறவுக்கு ஏற்ப, தவறுகள் பல இழைத்தபோதிலும், அவர்கள் பிறப்புரிமையாக அடையப்பட வேண்டிய நன்மைகள் போன்று, இவன் நன்மைகள் செய்கிறான்.

**மூலம்** – அவாப்த ஸமஸ்த காமதையாலே ஸர்வோபகார நிரபேக்ஷனேயாகிலும் அல்பவ்யாஜத்தாலே வசீகார்யனான ஸுஜந ஸார்வபௌமனைப் போலே தன் நிருபாதிக

காருண்யாதிகளாலே இவன் செய்கிற சிலவான வ்யாபாரத்தைத் தனக்குப் பரிபோபகாரமாக ஆதரித்துக் கொண்டு க்ருதஜ்ஞனாய்க் கார்யம் செய்யும்.

**விளக்கம்** – இவன் அடையவேண்டிய அனைத்தையும் பெற்றவனாக உள்ளபோதிலும், அவற்றைப் பெறுவதற்கு யாருடைய உதவியும் அவசியம் இல்லாதவனாக உள்ளபோதிலும் – எதனையும் எதிர்பாராமல் உள்ள தனது அளவு கடந்த கருணை காரணமாக, நாம் செய்யும் சிறியதான ப்ரபத்தி என்பதை, நாம் அவனுக்குச் செய்யும் மிகப்பெரிய பேறு என்று கொள்கிறான். சிறிய பரிசு கொடுத்தாலும் மகிழும் பேரரசர், பரிசு கொடுத்தவனுக்கு எண்ணற்ற உதவிகள் செய்வது போன்று இவன் உள்ளான்.

**மூலம்** – க்ஷுத்ரதேவதைகளைப்போலே க்ஷிப்ரகாரியன்றாகிலும் மற்றுள்ள சாஸ்த்ரார்த்தங்களுக்கு விளம்பித்துப் பலங்கொடுத்தானேயாகிலும் அநந்யசரணனுடைய ப்ரபத்திக்கு ஔதார்யாதி குணஸஹிதமாய் ஸஹகார்யந்தர நிரபேக்ஷமான தன் ஸங்கல்பமாத்ரத்தாலே காக விபீஷணாதிகளுக்குப்போலே இவன் கோலின காலத்திலே அபேக்ஷிதம் கொடுக்கும்.

**விளக்கம்** – இவன் சாதாரண தெய்வங்கள் போன்று உடனடியாகப் பலன் அளிப்பதில்லை. மற்ற சாஸ்த்ரங்களின் வழி நடப்பவனுக்குச் சற்று தாமதமாகவே பலன்கள் அளிக்கிறான். ஆனால், மற்ற உபாயங்கள் ஏதும் இல்லாமல், தன்னையே சரணம் என்று ப்ரபத்தி செய்தவர்கள் விரும்புவதை, சற்றும் காலம் தாழ்த்தாமல், உடனேயே அளித்துவிடுகிறான். இது இவனது ஔதார்யத்தையும், மற்றவர்களிடமிருந்து எந்த உதவியையும் எதிர்பாராமல் உள்ள குணங்களாலும் ஆகும். இதனை காகாசுரன், விபூஷணன் விஷயங்களில் காணலாம்.

**மூலம்** – ஸமாதிக தரித்ரனேயாகிலும் ஸ்வாதந்த்ரயாதி குணவிசிஷ்டனாய் தன் ப்ரயோஜநமாக ஆச்ரிதருக்கு அபேக்ஷிதம் செய்கிறானாகையால் கோசல ஜநபதத்தில் ஜந்துக்களுக்குப்போலே, குமாரனோடொக்கத் திர்யக்கான கிளிக்குப் பாலூட்டுங் கணக்கிலே தரம் பாராதே கொடுக்கும்.

**விளக்கம்** – இவனுக்கு மேலே யாரும் இல்லை, இவனைப் போன்றவர்களும் யாரும் இல்லை. இவன் ஸ்வதந்த்ரமானவன் ஆவான். ஆயினும், தன்னை அண்டியவர்களுக்கு, தனது மகிழ்ச்சிக்காகவும் பேற்றுக்காகவும், அவர்கள் விருப்பத்தின்படி நடக்கிறான். ஆகவே, இவன் யாருடைய உயர்வு தாழ்வுகளையும் பாராமல் உதவுகிறான். கோசல நாட்டில் இராமன் தன்னுடைய கிளிக்கு பாலூட்டும் அரசகுமாரன் தொடங்கி, தனது

குழந்தைக்குப் பாலூட்டும் சாதாரண விலங்குகள் வரை அனைவரையும் ஒன்றாகவே நடத்தினான்.

**மூலம்** – இப்படி யதாலோகம் பிறந்த சங்கைகளுக்கு யதாலோகம் பரிஹாரமுண்டாகையாலே யதாசாஸ்த்ரம் ப்ரபத்தி அபேக்ஷித ஸாதநமாகக் குறையில்லை.

**விளக்கம்** – இப்படியாக ப்ரபத்தி குறித்து நாம் அன்றாடம் காணும் செயல்கள் குறித்து எழுந்த சந்தேகங்கள் அனைத்தும், அதே போன்று நாம் அன்றாடம் காணக்கூடிய செயல்கள் மூலமாகவே தீர்க்கப்பட்டன. ஆகவே சாஸ்த்ரங்களால் கூறப்படும் ப்ரபத்தி என்பது எம்பெருமானை அடைவதற்கான உபாயம் என்பதில் ஐயம் இல்லை.

## ஆசார்யனின் கடாக்ஷம் மூலமே மஹாவிச்வாசம் உண்டாகிறது

**மூலம்** – இவ்விசிஷ்டமான புருஷகாராதிகள் அஞ்சையும் ஸதாசார்ய கடாக்ஷ விசேஷத்தாலே தெளிந்தவனுக்கல்லது மஹாவிச்வாஸம் பிறவாது. எங்ஙனேயென்னில் – ஈச்வரன் அபிமுகனல்லாமையாலே கர்மயோகாதிகளுக்கு அநர்ஹனாம்படியான மஹாபராதங்களை உடையவனாய் திகசுசிமவிநீதம் என்கிற ச்லோகத்தின்படியே எட்ட அரிய பலத்தைக் கணிசிக்கும்படியான சாபலத்தையுமுடையனாய் இப்பலத்துக்கு அநுஷ்டிக்கப் புகுகிற உபாயம் காயக்லேச அர்த்தவ்யய காலதைர்த்யாதிகளொன்றும் வேண்டாததொரு ஸக்ருதநுஸந்தாநமாதல், ஸமுதாயஜ்ஞாந பூர்வக ஸக்ருதுக்திமாத்ர மாதலாய், இந்த லகுதரமான உபாயத்தைக் கொண்டு அந்த குருதரமான பலத்தைத் தான் கோலின காலத்திலே பெற ஆசைப்பட்டு இப்பலத்துக்கு சுநமிவ புரோடாச: என்கிறபடியே ஜந்மவ்ருத்தாதிகளாலே தான் அநர்ஹனாய் வைத்துத் தன் அநுபந்திகளையுங்கொண்டு இப்பேறு பெறுவதாக ஒருத்தனுக்கு மஹாவிச்வாஸம் பிறக்கையில் அருமையை நினைந்து கலவெள்ளுக்கட்டுப்போய்க் கல எண்ணெயாயிற்று என்று எம்பார் அருளிச்செய்தாரிறே.

**விளக்கம்** – புருஷகாரம் முதலான ஐந்தையும் (கடந்த பத்தி காண்க) ஆசார்யனின் கடாக்ஷத்தால் அறிந்து கொள்ளாதவனுக்கு மஹாவிச்வாசம் என்பது உண்டாகாது. இது எப்படி? இப்படிப்பட்டவன் பக்கம் எம்பெருமானின் கடாக்ஷம் திரும்பாத காரணத்தால், இவன் கர்மயோகம் போன்றவற்றுக்கான தகுதிகளை இழக்கும்படியான பாவங்கள் பல நிறைந்தவனாக உள்ளான். இவனுடைய நிலை ஆளவந்தாரின் ஸ்தோத்ரரத்னம் (47) – திகசுசிமவிநீதம் – தூய்மை, வெட்கம், தயை போன்றவை இல்லாத என்னை

நிந்திக்கவேண்டும் – என்பதாக உள்ளது. ஆக இவன் எட்டுவதற்கு இயலாத ஒன்றை அடைவதற்கு மிகவும் முயற்சித்தபடி உள்ளான். ஆனால் அந்த ஒன்றை அடைவதற்கு இவன் ஒரு சுலபமான உபாயத்தைக் கைக்கொள்கிறான். இந்த உபாயம் – கடுமையான உடல் முயற்சிகள் தேவை அற்றது, பணச் செலவு அற்றது, அதிக நேரமும் எடுத்துக் கொள்ளாதது, மிகவும் எளிமையானது, மனதாலோ வாக்காலோ பொருள் அறிந்து சிலவற்றைக் கூறினாலே போதுமானது ஆகும். இப்படிப்பட்ட உபாயம் மூலம் தான் விரும்பும் அந்த மோக்ஷத்தை, தான் அடைய விரும்பும் நேரத்தில் பெற ஆசை கொள்கிறான். சுநமிவ புரோடாச: - தேவர்களுக்கு அளிக்கப்பட்டதை ஏற்கும் தகுதி நாய்க்கு இல்லை – என்பது போன்று, தனது பிறப்பு மற்றும் பல நடவடிக்கைகளின் காரணமாக, மோக்ஷம் என்பதை அனுபவிக்கும் தகுதி தன்னிடம் இல்லை என்று உணர்கிறான். ஆனாலும் அதனைத் தானும், தன்னைச் சார்ந்தவர்களும் அனுபவிக்க வேண்டும் என்று பெரும் ஆவல் கொள்கிறான். இப்படியாக பக்தியோகத்தை அடையவே அச்சம் மற்றும் தயக்கம் கொள்ளும் ஒருவன், ப்ரபத்திக்கு முக்கியமான அங்கமாக உள்ள மஹாவிச்வாசம் கொள்ள எண்ணுதல் என்பதை எம்பார் "கலவெள்ளுக்கட்டுப்போய்க் கல எண்ணெயாயிற்று" என்று அருளிச் செய்தார்.

**குறிப்பு** – கடந்த பத்தியில் கூறப்பட்ட "கலவெள்ளுக்கட்டுப்போய்க் கல எண்ணெயாயிற்று" என்பதற்கு என்ன பொருள் என்பதைக் காண்போம். ஒரு எண்ணெய் வியாபாரி தனது செக்கு பழுதடைய, அதற்குப் புதிதாக மரம் வெட்டக் கானகம் சென்றான். அப்போது ஒரு மரத்தை வெட்ட முயன்றபோது, அதில் இருந்த பிசாசு ஒன்று, "இதனை வெட்டாதே. உனக்கு எண்ணெய்தானே வேண்டும். அதற்குப் பதிலாக நான் தினமும் உனக்கு எள்ளை மூட்டையாகவே தருகிறேன். அதனை வியாபாரம் செய்வாயாக", என்றது. இவனும் ஒப்புக்கொள்ள, பிசாசு அன்றாடம் ஒரு மூட்டை எள்ளை அளித்துவந்தது. இந்த நிலையில் அங்கு வந்த மற்றொரு பிசாசு, இதனை அறிந்து, முதல் பிசாசிடம், "நான் சென்று அவனைக் கொன்றுவிடுகிறேன்", என்று புறப்பட்டது. அந்தப் பிசாசு அவன் வீட்டுக்குச் சென்ற நேரம், அவன் தனது மகனிடம் அடங்காத மாடு ஒன்றைக் கட்டுவதற்காக, "மகனே! அந்த இரண்டாவது பிசாசை பிடித்துக் கட்டு", என்றான். உடனே இரண்டாவது பிசாசு மிகுந்த அச்சம் கொண்டு அவனிடம் சென்று, "ஐயா! நான் உனக்கு அன்றாடம் எண்ணெயை பாத்திரத்தில் (டின்) அடைத்தே கொடுத்துவிடுகிறேன், என்னை விடுங்கள்", என்று கூறி ஓடியது. இதனைக் கேள்விப்பட்ட முதல் பிசாசு, ""கலவெள்ளுக்கட்டுப்போய்க் கல எண்ணெயாயிற்று" என்று சிரித்தது. ஆக முதல் பிசாசின் வேலையைக் காட்டிலும் இரண்டாவது பிசாசுக்குச் சிரமம் அதிகம் என்றானது. இது போன்றே, மஹாவிச்வாஸம் என்பது பக்தியைக் காட்டிலும் சிரமம் என்பதாகும்.

மேலே உள்ள கதைக்குப் பதிலாக – ஒரு பிடி எள்ளையே கொடுக்க இயலாதவனிடம், ஒரு பாத்திரம் எண்ணெய் கேட்பது போன்று - கர்மயோகத்திலேயே தகுதி இல்லாதவன் மஹாவிச்வாஸம் கொள்ள நினைப்பது உள்ளது – என்றும் சிலர் விளக்கம் கூறுவர்.

## அப்புள்ளாரின் விளக்கங்கள்

**மூலம்** – இவ்விடத்தில் ஸர்வேச்வரனுடைய பரத்வமாத்ரத்தை அறிந்து அகலுகையாலே நராதமனென்று பேர் பெற்ற பிறந்து கெட்டானிற் காட்டில் இடைச்சிகளைப்போலே விவேகமில்லையேயாகிலும் ஸௌலப்யத்தை அறிந்து அந்நலனுடையொருவனை நணுகுமவனே பரமாஸ்திகனென்று அப்புள்ளார் அருளிச்செய்யும் பாசுரம்.

**விளக்கம்** – இங்கு அப்புள்ளார் கூறும் கருத்து கவனிக்கத் தக்கதாகும். ஒருவனுக்கு கோபிகைகள் போன்று விவேகம் இல்லை என்றாலும், எம்பெருமானின் எளிமையை அறிந்தவனாக, அந்த எளிமையைக் கொண்ட எம்பெருமானை அணுகுபவனாக இருந்தால் அவன் பரமாஸ்திகன் ஆகிறான். மாறாக, ஸர்வேச்வரனின் பரதத்துவ தன்மையை மட்டுமே கண்டு, அவனை அடையத் தகுதியில்லை என்று ஒதுங்குபவன் கீதையில் கூறப்பட்டபடி நராதமன் ஆகிறான். பரமாஸ்திகனுக்கு நராதமனைக் காட்டிலும் எம்பெருமானிடம் மஹாவிச்வாஸம் அதிகமே ஆகும்.

## த்வயத்தில் மஹாவிச்வாஸம், கார்ப்பண்யம்

**மூலம்** – இப்படி புருஷகாராதி ஜ்ஞாத்தாலே பிறந்த விச்வாஸ மஹத்வமும் விச்வாஸ ஸ்வரூபமும் கார்ப்பண்யமும் ப்ரபத்யே என்கிற க்ரியாபதத்தில் உபஸர்க்கத்திலும், சரணசப்தோபலிஷ்டமான தாதுவிலும், உத்தமனிலும் அநுஸந்தேயங்கள். இதில் உத்தமனில் விவக்ஷிதத்தை அநந்யசரண: என்று கத்யத்திலே வ்யாக்யாநம் பண்ணினார்.

**விளக்கம்** – பெரியபிராட்டியின் புருஷகாரம் முதலான பலவற்றால் பிறக்கின்ற மஹாவிச்வாஸத்தின் மேன்மை, இதன் ஸ்வரூபம், தன்னிடம் வேறு கதி இல்லை என்னும் எண்ணம் ஆகியவை த்வய மந்த்ரத்தில் ப்ரபத்யே என்பதில் உள்ள ப்ர என்பதிலும், சரணம் என்பதுடன் சேர்ந்து வருகின்ற ப்ரபத்யே என்பதில் உள்ள பத் என்னும் தாதுவிலும் (root), முதல் சுட்டுப் பொருளிலும் காணலாம். இதில் முதல் சுட்டும் பொருளில் உள்ள கருத்தையே எம்பெருமானார் சரணாகதி கத்யத்தில் – அநந்யசரண: - வேறு சரணம் இல்லை – என்று அருளிச் செய்தார்.

# கோப்த்ருத்வவரணம் த்வயத்தில் கிட்டுவது

**மூலம்** – இவ்விடத்தில் உபாயத்வ அத்யவஸாய வாசகசப்தத்திலே கோப்த்ருத்வவரணம் அந்தர்நீதம்.

அஹம் அஸ்மி அபராதாநாம் ஆலயோ அகிஞ்சநோ அகதி:
த்வம் ஏவ உபாய பூதோ மே பவதி ப்ரார்த்தநாபதி:

சரணாகதிரித்யுக்தா ஸா தேவே அஸ்மிந் ப்ரயுஜ்யதாம் என்றும்,

உபாயோ க்ருஹ ரக்ஷித்ரோ: சப்த: சரணமித்யயம்
வர்த்ததே ஸாம்ப்ரதம் உபாயார்த்த ஏக வாசக: என்றும்

சொல்லுகிறபடியே உபாயாந்தர அசக்தனுக்கு ஸர்வேச்வரன் ஸர்வசாஸ்த்ரார்த்த ஸாதாரணமான ரக்ஷகத்வமாத்ரத்திலே நிற்கையன்றிக்கே ஸ்வீக்ருதபரனாய்க் கொண்டு உபாயாந்தர ஸ்தாநத்திலே நிவேசிக்கையாலும் ந்யஸ்தபரனான இவ்வதிகாரிக்குப் பின்பு அந்நயோபாயத்வம் நிலைநிற்கைக்காகவும் உபாயத்வாத்யவஸாயம் இவ்விடத்திலே விவக்ஷிதமாயிற்று. உபாயமென்றால் ஒரு விரகு என்ற மாத்ரமாகையாலே இவ்வுபாயத்வம் சேதந அசேதந ஸாதாரணமாயிருக்கையாலும்,

ரக்ஷிஷ்யதீதீ விச்வாஸோ கோப்த்ருத்வவரணம் ததா என்றும்,

ஸர்வஜ்ஞ: அபி ஹி விச்வேசா: ஸதா காருணிகோ அபி ஸந்
ஸம்ஸாரதந்த்ர வாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே என்றும்

சொல்லுகிறபடியே சேதநைகாந்தமான கோப்த்ருத்வவரணம் அநுஸந்தேயமாகையாலும் கோப்த்ருத்வவரணம் இங்கே விவக்ஷிதம். அதி சரண சப்தம் ஒரு ப்ரயோகத்திலே இரண்டு அர்த்தத்தை அபிகாநம் பண்ணமாட்டாமையாலே இவ்வதிகாரிக்கு அஸாதாரணமான உபாயத்வாத்யவஸாயம் இவ்விடத்திலே சப்தமாய் ஸர்வாதிகாரி ஸாதாரணமான கோப்த்ருத்வவரணம் அர்த்தமாகக் கடவது.

**விளக்கம்** – த்வயத்தில் எம்பெருமான் மீது கொள்ளும் மஹாவிச்வாஸம் வெளிப்படையாகவே உள்ளதால், இங்கு நம்மைக் காப்பாற்றும்படி விண்ணப்பம் செய்தல் என்பது மறைமுகமாக சரணம் என்பதிலேயே உள்ளடங்கியது ஆகும்.

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-30) - அஹம் அஸ்மி அபராதாநாம் ஆலயோ அகிஞ்சநோ அகதி: த்வம் ஏவ உபாய பூதோ மே பவதி ப்ரார்த்தநாபதி: - நான் பிழைகளுக்கு இருப்பிடமாகவும், என்னைக் காப்பாற்றிக் கொள்ளும் திறன் அற்றவனாகவும், உன்னைத் தவிர அடையவேண்டிய பொருள் ஏதும் இல்லாதவனாகவும் உள்ளேன்.

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-31) - சரணாகதிரித்யுக்தா ஸா தேவே அஸ்மிந் ப்ரயுஜ்யதாம் – "நீயே எனக்கு உபாயமாக இருத்தல் வேண்டும்" என்று வேண்டுவதே சரணாகதி ஆகும்; அது எம்பெருமானிடம் செய்யப்படட்டும்.

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-29) - உபாயோ க்ருஹ ரக்ஷித்ரோ: சப்த: சரணமித்யயம் வர்த்ததே ஸாம்ப்ரதம் உபாயார்த்த ஏக வாசக: - சரணம் என்ற பதம் உபாயம், வீடு, ரக்ஷகன் என்பதை அளித்தாலும், இங்கு உபாயம் என்ற பொருளே தருகிறது.

அனைத்தையும் காப்பவனாகவே எம்பெருமான் சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளான். ஆனால், சரணாகதி செய்த ப்ரபன்னனைக் காப்பதாக எம்பெருமான் பொறுப்பை ஏற்றுக் கொண்டுவிட்டதாலும், மற்ற உபாயங்களுக்குப் பதில் எம்பெருமானே உள்ளதாலும், ப்ரபன்னன் எப்போதும் உபாயமாகவே எம்பெருமானை எண்ணியபடி இருக்க வேண்டும். மேலும், தன்னைக் காப்பாற்றும் அனைத்து பொறுப்புகளையும் எம்பெருமானிடம் கொடுத்து, சரணாகதி செய்துவிட்டதால், வேறு உபாயத்தை நாடாமல் எம்பெருமானையே உபாயம் என்று எண்ணியபடி இருக்கவேண்டும்.

உபாயம் என்றால் "ஒரு இலக்கை அடைவதற்கான வழி" என்பதாகும். இந்த வழியானது சேதனமாகவும், அசேதனமாகவும் இருக்கலாம்.

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-28) - ரக்ஷிஷ்யதீதீ விச்வாஸோ கோப்த்ருத்வவரணம் ததா – ரக்ஷிப்பான் என்ற நம்பிக்கை, ரக்ஷிக்கவேண்டும் என்னும் விண்ணப்பம் ஆகிய இரண்டும்

- லக்ஷ்மீ தந்த்ரம் (17-78) - ஸர்வஜ்ஞ: அபி ஹி விச்வேசா: ஸதா காருணிகோ அபி ஸந் ஸம்ஸாரதந்த்ர வாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே – அனைத்தையும் நியமிப்பவனாகவும், அனைத்தும் அறிந்தவனாகவும், மிகுந்த கருணை உள்ளவனாகவும் இருந்தாலும் ஸம்ஸாரத்தை வழிநடத்துபவன் ஆகையால் "ரக்ஷிக்கவேண்டும்" என்னும் விண்ணப்பத்தை எதிர்பார்க்கிறான்.

இங்கு உபாயமாக சேதனனாகிய எம்பெருமான் கூறப்பட்டதாலும், சேதனத்திற்கு மட்டுமே விண்ணப்பம் செய்யப்படவேண்டிய “ரக்ஷிக்கவேண்டும்” என்னும் விண்ணப்பம் அவசியமாக உள்ளதாலும் - த்வயத்தில் உள்ள “சரணம்” என்னும் பதம் உபாயத்தைக் குறித்தாலும், இங்கு அதே பதம் “ரக்ஷிக்கவேண்டும்” என்னும் விண்ணப்பத்தையும் குறிப்பதாக உள்ளது. ஆனால் சரணம் என்னும் பதம் த்வயத்தில் ஒரே முறை உபயோகப்படுத்தப்பட்டதால், அந்த ஒரு சொல்லானது மேலே கூறியபடி (உபாயம், விண்ணப்பம்) இரண்டு பொருள்களை அளிக்க இயலாது. எனவே சரணம் என்னும் பதம் எம்பெருமான் இந்த அதிகாரியான ப்ரபன்னனுக்கு உபாயம் என்பதைக் கூறுவதாகவும், இந்தப் பதத்தின் பொருள் மூலம் அனைத்து அதிகாரிகளுக்கும் ஏற்ற “ரக்ஷிக்கவேண்டும்” என்னும் விண்ணப்பம் கூறப்பட்டது என்றும் கொள்ளவேண்டும்.

அறிவித்தனர் அன்பர் ஐயம் பறையும் உபாயம் இல்லாத்
துறவித்துனியில் துணையாம் பரனை வரிக்கும் வகை
உறவு இத்தனை இன்றி ஒத்தாரென நின்ற உம்பரை நாம்
பிறவித்துயர் செகுப்பீர் என்று இரக்கும் பிழை அறவே.

**பொருள்** – பக்தியோகம் முதலான உபாயங்களைப் பின்பற்ற இயலாமல் வறுமையில் உள்ள நிலையில் நாம் இருக்கும்போதும், அவை நமக்குக் கைகொடுக்குமோ என்னும் ஐயத்தில் நாம் உள்ளபோதும், நமது நிர்க்கதியான நிலையை உணர்ந்த ஸர்வேச்வரன் நமக்கு உதவிடத் தயாராக உள்ளான். இப்படிப்பட்ட உபாயமாகிய அவனை அடையும் மார்க்கத்தை நம் மீது மிகுந்த அன்பு கொண்ட ஆசார்யர்கள் உபதேசித்துள்ளனர். இதன் மூலம் - நம்மைப் போன்றே கர்மங்களால் பீடிக்கப்படும் மற்ற தெய்வங்களை நாடி, நமக்குச் சிறிதும் தொடர்பு இல்லாத அவர்களிடம், “என்னை இந்த ஸம்ஸார துன்பத்தில் இருந்து விடுவிக்கவேண்டும்”, என்று கையேந்தி நிற்கும் தவறைச் செய்யமாட்டோம்.

ப்ரக்யாத: பஞ்சஷ அங்க: ஸக்ருத் இதி பகவச்சாஸநை: ஏஷ யோக:
தத்ர த்வாப்யாம் அபாயாத் விரதி: அநிதர உபாயதா ஏகேந போத்யா
ஏகேந ஸ்வாந்ததார்ட்யம் நிஜ பர விஷயே அந்யேந தத்ஸாத்யதா இச்சா
தத்வஜ்ஞாந ப்ரயுக்தா து இஹ ஸபரிகரே தாததீந்ய ஆதி புத்தி:

**பொருள்** – பாஞ்சராத்ர ஆகமத்தில் ப்ரபத்தி என்னும் யோகம், ஐந்து அங்கங்கள் கொண்டது மற்றும் ஆறு அங்கங்கள் கொண்டது என்றும், ஒரே ஒருமுறை செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது. (மோக்ஷத்தின் பொருட்டுச் செய்யப்படும் ப்ரபத்தியில் ஸாத்த்விக த்யாகம் என்னும் ஓர் அங்கம் ஆறாவதாக உள்ளது. மற்ற பலன்களை எண்ணிச் செய்யப்படும் ப்ரபத்தியில் இந்த அங்கம் கிடையாது. எனவே ஐந்து அல்லது ஆறு என்று கூறப்பட்டது. மேலே உள்ள ச்லோகத்தின் இறுதி வரியில் உள்ள “து”

என்னும் சொல், இந்த வேறுபாட்டை விளக்குவதற்காகவே உள்ளது). இந்த அங்கங்களில் – எம்பெருமானின் ஆணையை மீறுதல் என்னும் நிலையை மாற்றுவதாக ஆநுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல்யவர்ஜநம் ஆகிய இரண்டு அங்கங்கள் உள்ளன; எம்பெருமான் அல்லாமல் வேறு உபாயத்தைப் பற்றாத தன்மையை கார்ப்பண்யம் என்னும் ஓர் அங்கம் அளிக்கிறது; தன்னைக் காப்பாற்றும் விஷயத்தில் வேறு உபாயங்களை நாடாமல் இருக்கும் தன்மையை மஹாவிச்வாஸம் உண்டாக்குகிறது; "ஜீவன் விரும்பும் பலனை நான் அளிக்கிறேன்", என்னும் எம்பெருமானின் ஸங்கல்பத்தை கோப்த்ருத்வவரணம் ஏற்படுத்துகிறது. இதனை முதலில் அறியவேண்டும். இப்படியாக உள்ள அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியில், இது அனைத்தும் எம்பெருமானாலேயே செய்யப்படுகிறது என்ற எண்ணம், சாஸ்த்ரங்கள் மூலமாக உண்டாகும் உண்மையான ஞானத்தினால் மட்டுமே ஏற்படுகிறது.

## பதினொன்றாம் அத்யாயம் ஸம்பூர்ணம்

# 12. ஸாங்கப்ரபதநாதிகாரம்

(ப்ரபத்தியை அநுஷ்டிக்கும் முறை)

அபீஷ்டே துஸ்ஸாதே ஸ்வத இதரதோ வா க்வசந தத்
பரந்யாஸம் யாச்சா அந்விதம் அபிவதந்தி ப்ரபதநம்
இத: பச்சாத் அஸ்மத் யதந நிரபேக்ஷண பவதா
ஸமர்த்ய: அஸௌ அர்த்த: து இதி மதிவிசேஷம் ததாவிது:

**பொருள்** - விருப்பமான பலன் ஒன்றைத் தனது முயற்சியாலும், ப்ரபத்தி தவிர உள்ள வேறு எந்தவிதமான முயற்சியாலும் பெற முடியாமல் உள்ளபோது, அதனைச் செய்து முடிக்கும் திறன் கொண்ட ஒருவனிடம், அந்தச் செயலைச் செய்து கொடுக்கும்படி, வேண்டுதலுடன் பொறுப்பை ஒப்படைத்தல் என்பதே ப்ரபத்தி என்று ஆசார்யர்கள் கூறுகின்றனர். இது, "இந்தச் செயலுக்காக இந்த நேரம் முதல், என்னிடம் இருந்து எந்தவிதமான முயற்சியும் இருக்காது; ஆகவே இதனை என் பொருட்டு, எனக்காக நீ முடித்துத் தரவேண்டும்", என்ற எண்ணத்துடன் இருத்தல் ஆகும்.

## அங்கி ஸ்வரூபம்

**மூலம் –** முமுக்ஷுவான அதிகாரிக்கு இவ்வுபாயத்தில் அங்கிஸ்வரூபமாவது ஆபரணத்தை உடையவனுக்கு அவன் தானே ரக்ஷித்துக் கொண்டு பூணக்கொடுக்குமாப்போலே யதாவஸ்திதமான ஆத்மநிக்ஷேபம். அதாவது ப்ரணவத்தில் ப்ரதமாக்ஷரத்தில் ப்ரக்ருதி

ப்ரத்யயங்களாலே ஸர்வரக்ஷகனாய் ஸர்வசேஷியாய்த் தோற்றின ஸர்வேச்வரனைப் பற்ற ஆத்மாத்மீய ரக்ஷணவ்யாபாரத்திலும் ஆத்மாத்மீய ரக்ஷணபலத்திலும் ஸ்வாநீநமாகவும் ஸ்வார்த்தமாகவும் தனக்கு அந்வயமில்லாதபடி பரந்யாஸ ப்ரதாநமான அத்யந்த பாரதந்த்ர்யவிசிஷ்ட்ட சேஷத்வாநுஸந்தான விசேஷம்.

**விளக்கம்** – மோக்ஷத்தில் விருப்பம் உள்ள முமுக்ஷுக்கள் கைக்கொள்ள வேண்டியதான அங்கங்களுடனும் அங்கியுடனும் கூடியதான இந்த உபாயத்தில், அங்கி என்பது தனது ஆத்மாவைச் சமர்ப்பணம் செய்வது ஆகும்; இவ்விதம் சமர்ப்பிக்கும்போது ப்ரபத்தியிலோ அல்லது அதன் பலனிலோ தனக்கு எந்தவிதமான ஸ்வதந்த்ரமும் இல்லை என்று எண்ணியபடியே இருத்தல் வேண்டும். தன்னிடம் பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் வேறு ஒருவனால் கொடுக்கப்பட்ட ஒரு நகையை, மீண்டும் அதன் உரிமையாளரிடம், அவன் அணிந்து மகிழும்விதமாக, பத்திரமாக அளித்தல் என்ற நிலையைப் போன்றே ஆத்மசமர்ப்பணம் செய்யவேண்டும். ப்ரணவத்தின் முதல் எழுத்தான "அ" என்பதன் மூலம் கூறப்படுபவனும், அனைத்திற்கும் எஜமானனும், அனைத்தையும் காப்பவனும் ஆகிய ஸர்வேச்வரனை முன்னிறுத்தி – தன்னையோ அல்லது தன்னைச் சார்ந்தவர்களையோ காக்கும் பொறுப்பைத் தாங்களாகவே எடுக்காமல் இருக்கவேண்டும்; இப்படியாகக் காப்பதன் மூலம் உண்டாகும் பலனில் தாங்களோ, தங்களைச் சார்ந்தவர்களோ பற்றில்லாமல் இருத்தல்வேண்டும். இந்த நிலையானது - நாம் எம்பெருமானின் அடிமைகள், அவனை மட்டுமே நம்பி உள்ளோம் என்ற எண்ணங்களுடன் கூடியிருத்தல் ஆகும். இவற்றில் நம்மைக் காப்பாற்றும் பொறுப்பு முழுவதையும் அவனிடம் ஒப்படைத்தல் என்பது விசேஷமாகும்.

## பரஸமர்ப்பணத்தை அநுஷ்டிக்கும் முறை

**மூலம்** – ஸ்வாத்மாநம் மயி நிக்ஷிபேத் என்று சோதிதமான இவ்வநுஸந்தாந விசேஷத்தை அநுஷ்டிக்கும்படி :

சேஷியாய் ஸ்வதந்த்ரனான ஈச்வரன் தன் ப்ரயோஜநமாகவே தானே ரக்ஷிக்கும்படிக்கு ஈடாக அநந்யார்ஹ அநந்யாதீந சேஷ பூதனாய் அத்யந்த பரதந்த்ரனான நான் ஆத்மாபி சாயம் ந மம என்கிறபடியே எனக்குரியேனல்லேன்; ஒன்றை நிரூபாதிகமாக என்னது என்னவும் உரியேனல்லேன்;

ஸ்வயம் ம்ருத்பிண்டபூதஸ்ய பரதந்த்ரஸ்ய தேஹிந:
ஸ்வரக்ஷணே அபி அசக்தஸ்ய கோ ஹேது: பரரக்ஷணே

என்கிறபடியே என்னையும் என்னதென்று பேர் பெற்றவற்றையும் நானே ஸ்வதந்த்ரனாயும் ப்ரதாநபலியாயும் ரக்ஷித்துக்கொள்ள யோக்யனுமல்லேன்;

ஆத்மா ராஜ்யம் தநம் சைவ களத்ரம் வாஹநாநி ச
ஏதத் பகவதே ஸர்வம் இதி தத்ப்ரேக்ஷிதம் ஸதா

என்று விவேகிகள் அநுஸந்தித்த க்ரமத்திலே என்னுடைய ஆத்மாத்மீயங்களும் அவனதே;

ஆத்மாத்மீய பர ந்யாஸோ ஹி ஆத்ம நிக்ஷேப உச்யதே என்கையால் இவற்றினுடைய ரக்ஷணபரமும் ந ஹி பாலநஸாமர்த்யம் ருதே ஸர்வேச்வரம் ஹரிம் என்கிறபடியே ஸர்வரக்ஷகனான அவனதே;

தேந ஸம்ரக்ஷ்யமாணஸ்ய பலே ஸ்வாம்யவியுக்ததா
கேசவார்ப்பண பர்யந்தா ஹி ஆத்மநிக்ஷேப உச்யதே

என்கிறபடியே ரக்ஷணபலமும் ப்ரதாந பலியான அவனதே என்று பாவிக்கை.

**விளக்கம்** – சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்டதான (ஸாத்வத தந்த்ரம்) ஸ்வாத்மாநம் மயி நிக்ஷிபேத் – தனது ஆத்மாவை என்னிடம் ஒப்படைக்கவேண்டும் – என்று உள்ளதைக் கடைப்பிடிக்கும் முறையானது இப்போது கூறப்படுகிறது. அந்த மனிதன் தனது மனதிற்குள், "நான் எம்பெருமானை முழுவதுமாக நம்பியுள்ளேன்; நான் அவனது அடிமை, அவனுக்காகவே உள்ளேன்; எனது அடிமைத்தனம் வேறு யாருக்காகவும் இல்லை; நான் வேறு யாரையும் நம்பி இருப்பதில்லை. ஆகவே அனைத்திற்கும் எஜமானனாகவும், எதனையும் சார்ந்து இல்லாமல் உள்ளவனும் ஆகிய எம்பெருமானுக்கு, தனது ப்ரயோஜனத்திற்காகவே என்னைக் காக்கும் பொறுப்பு உள்ளது", என்று எண்ண வேண்டும். மஹாபாரதம் சாந்திபர்வம் - ஆத்மாபி சாயம் ந மம – எனது ஆத்மா என்னைச் சேர்ந்தது அல்ல – என்று கூறுவது போன்று, எனது ஆத்மாவும் என்னுடையது அல்ல, வேறு எதனையும் என்னுடையது என்று சொந்தம் கொண்டாடவும் எனக்கு உரிமை இல்லை.

- மஹாபாரதம் சாந்திபர்வம் (294-19) - ஸ்வயம் ம்ருத்பிண்டபூதஸ்ய பரதந்த்ரஸ்ய தேஹிந: ஸ்வரக்ஷணே அபி அசக்தஸ்ய கோ ஹேது: பரரக்ஷணே – மண்கட்டி போன்று எம்பெருமானை நம்பி இருக்கின்ற ஜீவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் திறன் அற்றவனாகவே உள்ளான்; இப்படி உள்ளபோது அவனால் மற்றவர்களை எப்படிக் காக்க இயலும் – என்றது. ஆகவே என்னையும் என்னைச்

சேர்த்தவர்களையும் எம்பெருமானின் துணையின்றி, சுயமாகக் காப்பாற்றும் திறன் கொண்டவன் அல்லன்.

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (343-24) - ஆத்மா ராஜ்யம் தநம் சைவ களத்ரம் வாஹநாநி ச ஏதத் பகவதே ஸர்வம் இதி தத்ப்ரேக்ஷிதம் ஸதா – ஆத்மா, ராஜ்யம், செல்வம், மனைவி, வாகனங்கள் போன்ற பலவும் எம்பெருமானுக்காகவே உள்ளன என்று உபரிசரவஸு கூறினான் – என்றது. இப்படியாக அறிஞர்கள் கூறுவது போன்று நானும், எனது என எண்ணப்படும் அனைத்தும் எம்பெருமானுடையதே ஆகும்.

- லக்ஷ்மீ தந்த்ரம் (17-79) - ஆத்மாத்மீய பர ந்யாஸோ ஹி ஆத்ம நிக்ஷேப உச்யதே – ஆத்மாவையும், ஆத்மாவைச் சேர்ந்தவற்றையும் காக்கும் பொறுப்பை எம்பெருமானிடம் சமர்ப்பணம் செய்வதே ஆத்மநிக்ஷேபம் எனப்படும் – என்றது. ஆகவே அனைத்தையும் காக்கும் பொறுப்பு, அனைத்தையும் காப்பாற்றும் அவனுடையதே ஆகும். விஷ்ணு புராணம் (1-22-21) - ந ஹி பாலநஸாமர்த்யம் ருதே ஸர்வேச்வரம் ஹரிம் – அனைவரையும் நியமிக்கும் ஸ்ரீஹரியைத் தவிர, காக்கும் திறன் வேறு யாருக்கும் இல்லை – என்றது காண்க.

- லக்ஷ்மீ தந்த்ரம் (17-73) - தேந ஸம்ரக்ஷ்யமாணஸ்ய பலே ஸ்வாம்யவியுக்ததா கேசவார்ப்பண பர்யந்தா ஹி ஆத்மநிக்ஷேப உச்யதே – எம்பெருமானால் காக்கப்படும் ஆத்மாவை, பலனில் கூட தனக்கு உரிமையில்லை என்ற துணிச்சலுடன் கேசவனிடம் சமர்ப்பணம் செய்தலே ஆத்மநிக்ஷேபம் ஆகும் – என்றது. இதன்படி சமர்ப்பணம் செய்வதால் உண்டாகும் பலனும் அவனுடையதே என்று எண்ண வேண்டும்.

## அதிகாரி விசேஷங்கள்

முமுக்ஷுமாத்ர ஸாமாந்யம் ஸ்வரூபாதி ஸமர்ப்பணம்
அகிஞ்சநே பரந்யாஸ: த்வதிக: அங்கிதயா ஸ்தித:
அத்ர ரக்ஷாபரந்யாஸ: ஸமஸ்ஸர்வே பலார்த்திநாம்
ஸ்வரூப பல நிக்ஷேபஸ்த்வதிகோ மோக்ஷ காங்க்ஷிணாம்

**பொருள்** – ஸ்வரூபம் மற்றும் பலன் ஆகியவற்றைச் ஸமர்ப்பணம் செய்தல் என்பது அனைத்து வகையான முமுக்ஷுக்களும் பொதுவானதே ஆகும். வேறு கதியற்ற முமுக்ஷு

விஷயத்தில் தன்னைக் காக்கும் பொறுப்பை ஸமர்ப்பணம் செய்வது என்பது மேலும் ஓர் அங்கியாக உள்ளது. மற்ற பலன்களை விரும்பும் அதிகாரிகளுக்கும் காக்கும் பொறுப்பை ஸமர்ப்பணம் செய்தல் என்பது பொதுவாக உள்ளது. மோக்ஷத்தை விரும்பும் அதிகாரிகளுக்கு, ஸ்வரூபம் மற்றும் பல ஸமர்ப்பணம் என்பது அதிகமாக உள்ளது.

## ப்ரபத்தியின் பலனை அடைபவன் ஸர்வேச்வரனே

**மூலம்** – பலார்த்தியாய் உபாயாநுஷ்டானம் பண்ணுகிற ஜீவன் பலியாயிருக்க ஈச்வரன் இங்குப் ப்ரதாந பலியானபடி எங்ஙனேயென்னில் – அசித்தின் பரிணாமங்கள்போலே சித்துக்குத் தான் கொடுத்த புருஷார்த்தங்களும் ஸர்வசேஷியான தனக்கு உகப்பாயிருக்கையாலே ஈச்வரன் ப்ரதாந பலியாயிருக்கிறான். அசேதநமான குழமணனை அழித்துப் பண்ணியும் ஆபரணம் பூட்டியும் அழகு கண்டு உகக்கிறதோடு சேதநமான கிளியைப் பஞ்ஜரத்தில் வைத்துப் பால் கொடுத்தும் வேண்டினபடி பறக்கவிட்டும் அதின் உகப்புக்கண்டு உகக்கிறதோடு வாசியில்லையிறே நிரபேக்ஷரான ரஸிகர்க்கு.

**விளக்கம்** – ஏதோ ஒரு பலனை அடையும் பொருட்டு ப்ரபத்தியைச் செய்து, அதன் பலனை அனுபவித்தபடி இருப்பவன் ஜீவனே ஆவான். அப்படி உள்ளபோது, ஈச்வரன் எப்படி பலனைப் பெறுகிறான் என்ற சந்தேகத்திற்கு விடை தரப்படுகிறது. அசித்துக்கு உண்டாகும் மாற்றங்கள் போன்று சித் வஸ்துவான ஜீவனுக்குத் தன்னால் தரப்பட்ட புருஷார்த்தங்களால் ஈச்வரன் மகிழ்கிறான். இதன் காரணம் அனைத்தின் எஜமானனாக உள்ளதால் ஆகும். எதனையும் எதிர்பாராத ஒருவனுக்கு – மண்ணைக் குழைத்து, அதில் ஒரு பொம்மை செய்து, அந்தப் பொம்மைக்கு நகைகள் அணிவித்து அழகு பார்த்தல்; உயிருடன் உள்ள கிளியைக் கூண்டில் வைத்து, அதற்கு பால் அளித்து, தனது விருப்பத்தின்படி அதனை விடுவித்தல் – ஆகிய இரண்டு செய்கைகளுக்கும் எந்த வேறுபாடும் இருப்பதில்லை.

## ஆத்ம ஸமர்ப்பணம் என்றால் என்ன

**மூலம்** – ஆனபின்பு இங்கு

ஸ்வநிர்பரத்வ பர்யந்த ரக்ஷைககார்த்ய பாவநம்
த்யுக்த ரக்ஷாபல ஸ்வாம்யம் ரக்ஷ்யஸ்யாத்ம ஸமர்ப்பணம்

**விளக்கம்** – ஆகவே ஆத்மஸமர்ப்பணம் என்பது தனது ஆத்மா என்பது தன்னைக் காக்கும் ஸர்வேச்வரனுக்காகவே உள்ளது என்றும், ஆகவே ஆத்மா குறித்து தனது பொறுப்பு நீங்கியது என்றும், இந்த ஸமர்ப்பணம் மூலம் கிட்டும் பலன் தன்னுடையது அல்ல என்றும் எண்ணியபடி இருத்தல் ஆகும்.

## ஸ்வரூபம் ஞானம் அற்றவர்களுக்கு ஆளவந்தாரின் தாத்பர்யம்

**மூலம்** – ஸ்தோத்ரத்தில்

வபுராதிஷு யோ அபி கோ அபி வா குணத: அஸாநி யதாததாவித:
ததயம் தவ பாதபத்மயோரஹமத்யைவ மயா ஸமர்ப்பித:

என்கிறதுக்குத் தாத்பர்யமென்னென்னில் – முத்திரையிட்டிருக்கிற ராஜாவின் கிழிச்சீரை ஒரு ஹேதுவாலே தன் கையிலே இருந்தால் ராஜா கைக்கொள்ளுமென்று உள்ளிருக்கிற மாணிக்கத்தின் ஸ்வரூப ஸ்வபாவங்களை விசதமாக அறியாதே கிழிச்சீரையோடே மீளக்கொடுக்குமாப்போலே தேஹாத்யதிரிக்த ஆத்மாவின் ஸ்வரூப ஸ்வபாவ ஸ்திதிகளை விசதமாக விவேகிக்க அறியாதாரும் உள்ள அறிவைக் கொண்டு ஆத்மஸமர்ப்பணம் பண்ணினால் அவ்வளவாலும் அநாதிகாலம் பண்ணின ஆத்மாபஹார சௌர்யத்தால் உண்டான பகவந்நிக்ரஹம் சமிக்குமென்கிற சாஸ்த்ரார்த்தத்திலே திருவுள்ளம்.

**விளக்கம்** – ஆளவந்தாரின் ஸ்தோத்ரத்தில் (52) - வபுராதிஷு யோ அபி கோ அபி வா குணத: அஸாநி யதாததாவித: ததயம் தவ பாதபத்மயோரஹமத்யைவ மயா ஸமர்ப்பித: - சரீரம் போன்றவைகளில் நான் ஏதோவொன்றாக இருக்கக்கடவேன்; எனது குணங்களாலும் நான் எப்படிப்பட்டவனாகவாவது இருக்கக்கடவேன்; நான் உனது அடிமை என அறிவேன்; ஆகவே உனது இரண்டு தாமரை போன்ற திருவடிகளின் என்னை ஸமர்ப்பிக்கிறேன் – என்று உள்ளது காண்க. இதன் கருத்து என்ன? ஒருவன் தான் செல்லும் வழியில் அரசாங்க முத்திரையுடன் கூடிய மூட்டை ஒன்றைக் காண்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அந்த மூட்டைக்குள் இருக்கும் உயர்ந்த கற்கள் குறித்து அவன் அறியவில்லை என்றாலும், அந்த மூட்டையில் அரசாங்க முத்திரை உள்ளதால், அதனை அரசன் ஏற்றுக் கொள்வான் என்ற எண்ணத்துடன் அரசனிடம் கொடுக்க முற்படுவான் அல்லவா? இது போன்ற உடலைக் காட்டிலும் வேறுபட்டதான ஆத்மாவின் ஸ்வரூபம், ஸ்வபாவம், இருப்பு ஆகியவற்றை ஒருவன் அறியாதபோதிலும், தங்களுக்கு உள்ள அற்பமான அறிவு கொண்டு மட்டுமே தங்கள் ஆத்மாவை ஸர்வேச்வரனிடம் ஸமர்ப்பணம் செய்வர். இப்படிச் செய்த காரணத்தினாலேயே, எல்லையற்ற காலமாக ஆத்மாவை அபஹரித்த காரணத்தினால் பெறக்கூடிய தண்டனையை ஸர்வேச்வரன்

தள்ளுகிறான் என்று அறியவேண்டும். சாஸ்த்ரங்களில் உள்ள இந்தக் கருத்தே ஆளவந்தாரின் திருவுள்ளத்தில் இருந்தது.

## ஆத்ம ஸமர்ப்பணம் குறித்து ஆளவந்தாரின் தாத்பர்யம்

**மூலம்** – இதுக்குமேல் மம நாத யதஸ்தி என்கிற ச்லோகத்தில் இஸ் ஸமர்ப்பணத்தைப் பற்ற அநுசயம் பண்ணிற்றும் ஸ்வரூபாதி விவேகமின்றிக்கே ஸமர்ப்பிக்கப்புக்காலும் தன்னுடைய த்ரவ்யத்தை ராஜாவுக்கு உபஹாரமாகக் கொடுப்பாரைப் போலே, “என்னது” என்கிற அபிமாநத்தோடே ஸமர்ப்பிக்கில் ஆத்மாபஹாரசைர்யம் அடியற்றதாகா தென்கைக்காகவத்தனை; அல்லது சாஸ்த்ர சோதிதமாய்த் தாம் அநுஷ்டித்த ஸமர்ப்பணத்தை அஜ்ஞக்ருத்யமாக்கினபடியன்று. ஆக இரண்டு ச்லோகத்தாலும் யதாவஸ்தித ஸ்வரூபாதி விவேகமில்லையேயாகிலும் “ந மம” என்று ஸ்வஸம்பந்தம் அறுக்கையே அஹமபி தவைவாஸ்மி ஹி பர: என்னும்படி பரஸமர்ப்பணப்ரதாநமான சாஸ்த்ரார்த்தத்தில் ஸாரமென்றதாயிற்று.

**விளக்கம்** – அடுத்த ச்லோகத்தில் (ஸ்தோத்ரம் – 53) – என்னுடைய நாதனே – தன்னுடைய ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி ஒருவன் பரஸமர்ப்பணம் செய்தபோதும், அதனை அறியாமல் இருக்கக்கூடும்; இவன் ராஜாவுக்குத் தனதான ஒரு பொருளை கொடுப்பது போன்று செய்தாலும், அதுவரை ஆத்மாவைத் திருடியிருந்த குற்றத்தை முழுவதுமாக மறைத்துவிடாது. இதன் மூலம் ச்லோகம் 52ல் சாஸ்த்ர விதிகளின்படி செய்த ஸமர்ப்பணம் என்பது அறியாமையால் எழுந்தது என்று ஆளவந்தார் கூறுவதாகாது. ஆக இந்த இரண்டு ச்லோகங்கள் மூலமும் சாஸ்த்ரங்கள் கூறுவதான பரஸமர்ப்பணம் என்பது, ந மம – எனது அல்ல என்று கூறுவதும், தனது ஸ்வரூபத்தைப் பற்றிய ஞானம் இல்லை என்றாலும் அனைத்திலும் இருந்து பற்றுதல் நீங்கி நிற்பது என்பதுமே ஆகும். இதனையே சாஸ்த்ரத்தில் கூறப்பட்ட பரஸமர்ப்பணத்தின் ஸாரமாக ஆளவந்தார் (ஸ்தோத்ரம் – 60) - அஹமபி தவைவாஸ்மி ஹி பர: - நானும் உன்னுடைய ரக்ஷிக்க வேண்டிய பொறுப்பாக உள்ளேன் – என்றார்.

## த்வயத்தில் பரஸமர்ப்பணம்

**மூலம்** – இப்படி சேஷத்வாநுஸந்தான விசிஷ்டமான ஸ்வரக்ஷாபர ஸமர்ப்பணம் த்வயத்தில் உபாயபரமான பூர்வகண்டத்தில் மஹாவிச்வாஸபூர்வக கோப்த்ருத்வவரண கர்ப்பமான சரணசப்தோபலிஷ்ட க்ரியாபதத்திலே சேர்ந்து அநுஸந்திக்கப் ப்ராப்தம்.

**விளக்கம்** – த்வயத்தின் முதல் பகுதியில் உபாயம் கூறப்படுகிறது. தனது ரக்ஷகத்திற்கு எம்பெருமானையே சரணம் புகவேண்டும். இந்தச் செயலானது தான் எம்பெருமானின் அடிமை என்றும், அவனுக்காகவே உள்ளேன் என்ற எண்ணத்துடன் கூடியதாக இருத்தல் வேண்டும். இதனை ப்ரபத்யே என்னும் பதமானது சரணம் என்ற பதத்துடன் கூடியதாக உணர்ந்து எண்ணவேண்டும். சரணம் என்னும் பதம் “காப்பாற்றவேண்டும்” என்ற விண்ணப்பத்துடன் தொடங்குவதான மஹாவிச்வாஸத்தை உள்ளடக்கியதாகும்.

**மூலம்** – இப்படி இவை ஆறும் இம்மந்த்ரத்திலே விமர்சதசையில் தனித்தனியே அநுஸந்தித்தாலும் வாக்யார்த்த ப்ரதிபத்தி தசையில் அல்லாத வாக்யார்த்தங்கள்போலே ஸாங்கமான ப்ரதாநம் ஏகபுத்தயாரூடமாம். ஆகையால் யதாசாஸ்த்ரம் ஸாங்கப்ரதாநா நுஷ்டாநம் ஸக்ருத் கர்த்தவ்யமாயிற்று. அநேக வ்யாபார ஸாத்ய தாநுஷ்கனுடைய லக்ஷ்ய வேதார்த்தமான பாணமோக்ஷம் க்ஷணக்ருத்யமாகிறாப்போலே இவ்வாத்ம ரக்ஷாபர ஸமர்ப்பணமிருக்கும்படியென்று ச்ருதிஸித்தம்.

**விளக்கம்** – இப்படியாக இந்த ஆறும் (ஐந்து அங்கங்கள், ஒரு அங்கி) தனித்தனியே அநுஸந்திக்கப்பட்டாலும், ஒரே பொருளை அளிக்கவல்ல வாக்யமாகவே கொள்ள வேண்டும். இப்ப்டியாக ஆத்ம ரக்ஷ பரஸமர்ப்பணம் என்பது சாஸ்த்ரங்கள் மூலமாக, ஒருமுறை மட்டுமே இயற்றப்படுவது என்று அறியலாம். ஒரு வில்லாளி இலக்கைக் குறி வைத்து அம்பு எய்யும்போது, அவன் பல செயல்களைச் செய்தாலும் (அம்பு எடுத்தல், நாண் ஏற்றுதல், குறி பார்த்தல் போன்றவை), அம்பு விடுதல் என்பது ஒரு க்ஷணத்தில் முடிந்துவிடுகிறது. இது போன்றே எம்பெருமானிடம் தனது ரக்ஷகத்தின் பொருட்டு ஸமர்ப்பணம் செய்தல் என்பது ஒரு க்ஷணத்தில் நடப்பதாகும். இதனை ச்ருதிகளில் காணலாம்.

## ப்ரபத்தி மந்த்ரங்களில் பரஸமர்ப்பணமே முக்கியம்

**மூலம்** – இப்பரஸமர்ப்பணமே ப்ரபத்தி மந்த்ரங்களில் ப்ரதாநமாக அநுஸந்தேயமென்னு மிடத்தை

அநேநைவ து மந்த்ரேண ஸ்வாத்மாநம் மயி நிக்ஷிபேத்
மயி நிக்ஷிப்த கர்த்தவ்ய: க்ருதக்ருத்யோ பவிஷ்யதி

என்று ஸாத்யகி தந்த்ரத்திலே பரஸ்வீகாரம் பண்ணுகிற சரண்யன்தானே தெளியவருளிச் செய்தான்.

**விளக்கம்** – ப்ரபத்தி மந்த்ரங்களில் முக்கியமாக பரஸமர்ப்பணமே அநுஸந்திக்கப்படுகிறது என்பதை ஸாத்யகி தந்த்ரத்தில், நம்மைக் காப்பாற்றுவதாக உறுதி அளிக்கின்ற எம்பெருமானே கூறுவதைக் காணலாம். இந்த வரியானது - அநேநைவ து மந்த்ரேண ஸ்வாத்மாநம் மயி நிக்ஷிபேத் மயி நிக்ஷிப்த கர்த்தவ்ய: க்ருதக்ருத்யோ பவிஷ்யதி – இந்த மந்த்ரம் கொண்டு ஒருவன் தனது ஆத்மாவை என்னிடம் ஸமர்ப்பணம் செய்யவேண்டும்; இப்படிச் செய்யவேண்டியதை என்னிடம் செய்தவன், செய்யவேண்டியதைச் செய்தவன் ஆகிறான் – என்பதாகும்.

## அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தி முறை

**மூலம்** – இதில் ஸாங்காநுஷ்டாநமாயற்றது கர்த்ருத்வ த்யாக மமதா த்யாக பல த்யாக பலோபாயத்வ த்யாக பூர்வகமான ஆநுகூல்யஸங்கல்பாதி அர்த்தாநுஸந்தானத்தோடே குருபரம்பரோபஸத்திபூர்வக த்வயவசந முகத்தாலே ஸ்வரூப பல ந்யாஸ கர்மமான ஆத்மரக்ஷா பரஸமர்ப்பணம் பண்ணுகை.

**விளக்கம்** – இந்த அங்கியை அதன் அங்கங்களுடன் அநுஷ்டிக்கும் முறை என்பது: தன்னைக் காப்பாற்றவேண்டும் என்னும் பொறுப்பை எம்பெருமானிடம் அளித்தல் என்பதற்கு முன்பாக கீழே உள்ளவற்றைப் பின்பற்ற வேண்டும் – தானே அனைத்தையும் செய்வதாக எண்ணுவதைக் கைவிட வேண்டும், "எனது" என்று எண்ணுவதைக் கைவிட வேண்டும், பலன்களில் உள்ள பற்றுதல்களைக் கைவிட வேண்டும், தானாகவே பலனை விளைவிக்கக்கூடிய உபாயத்தைப் பின்பற்றுவதாக எண்ணுவதைக் கைவிட வேண்டும்; இதனைத் தொடர்ந்து ஆநுகூல்ய ஸங்கல்பம் (எம்பெருமானுக்கு ஏற்றவனாக நடப்பேன் என்னும் உறுதி) போன்றவற்றை அவற்றின் பொருளுடன் உணர்ந்து நிற்கவேண்டும்; தொடர்ந்து குருபரம்பரையை த்யானித்தபடி இருக்கவேண்டும்; த்வய மந்த்ரம் உச்சரிக்க வேண்டும். தன்னைக் காக்கவேண்டும் என்று பரஸமர்ப்பணம் செய்வதன் அடிப்படையில் தனது ஸ்வரூபத்தை அர்ப்பணிப்பதும், பரஸமர்ப்பணம் மூலம் கிட்டும் பலனை அர்ப்பணிப்பதும் உள்ளன என்று அறியவேண்டும்.

## ப்ரபத்தியில் உள்ள த்யாகங்களின் காரணம்

**மூலம்** – இக்கர்த்ருத்வத்யாகத்துக்கு நிபந்தனம் தன் கர்த்ருத்வமும் அவனடியாக வந்ததென்று தனக்கு யாவதாத்மபாவியான பகவதேக பார தந்த்ர்யத்தை அறிகை. மமதாத்யாகத்துக்கும் பலத்யாகத்துக்கும் நிபந்தனம் ஆத்மாத்மீயங்களுடைய ஸ்வரூபாநுபந்தி பகவதேக சேஷத்வஜ்ஞானம். பலோபாயத்வ த்யாகத்துக்கு நிபந்தனம்

சரண்ய ப்ரஸாதனமான இவனுடைய அநுஷ்டானம் ப்ரதாநபலத்துக்கு வ்யவஹித காரணமாகையும் அசேதநமாகையாலே பலப்ரதாந ஸங்கல்பாச்ரயமல்லாமையும்.

**விளக்கம்** – "நாமே நமது செயல்களைச் செய்கிறோம்" என்ற எண்ணம், நமது ஆத்மா உள்ளவரை நாம் முழுவதுமாக எம்பெருமானையே சார்ந்து உள்ளோம் என்ற சிந்தனை உதயமாகும்போது நீங்கிவிடும். இதன் மூலம் ஒரு செயலைச் செய்யும் திறன் என்பது எம்பெருமான் நமக்கு அளித்தது என்ற ஞானம் உண்டாகிறது. மேலும் "என்னுடையது" என்ற எண்ணம், ப்ரபத்தியின் பலன் மீது விருப்பம் முதலானவை – தானும், தன்னைச் சார்ந்தவையும் எம்பெருமானுக்காகவே உள்ளோம் என்றும், அவனுடைய அடிமையாகவே நாம் உள்ளோம் என்றும் பிறக்கின்ற ஞானம் மூலம் நீங்கிவிடும். அடுத்து மோக்ஷ பலனை அளிக்கவல்ல உபாயத்தினையும் கைவிடவேண்டும். இந்தக் கைவிடுதல் என்பது – எம்பெருமானின் கருணையைப் பெறுவதற்காக ப்ரபத்தி செய்த ஒருவன், அந்த ப்ரபத்தி என்பது அசேதனமாக உள்ளதால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மோக்ஷ பலனை அளிக்கும் ஸங்கல்பம் கொண்டதல்ல என்றும், அந்தப் பலனை அளிக்கவல்ல உபாயமாக எம்பெருமானே உள்ளான் என்றும் அறிவதன் மூலம் உண்டாகும்.

## ஈச்வரன் பலனுக்கு உபாயமாதல்

**மூலம்** – ஈச்வரன் பலோபாயமாகிறது ஸஹஜஸௌஹார்த்தத்தாலே கரண களேபர ப்ரதாநம் தொடங்கி த்வயோச்சாரணபர்யந்தமாக ஸர்வத்துக்கும் ஆதிகாரணமான தானே ப்ரஸாதபூர்வக ஸங்கல்பவிசேஷ விசிஷ்டனாய்க் கொண்டு அவ்யவஹித காரணமாகையாலும் உபாயாந்தர சூந்யனுக்கு அவ்வோ உபாயஸ்தாநத்திலே நிவேசிக்கையாலும் இங்ஙனிருக்கைக்கடி தர்மி க்ராஹகமான சாஸ்த்ரத்தாலே அவகதமான வஸ்துஸ்வபாவமாகையால், இவ்வர்த்தம் யுக்திகளால் சலிப்பிக்க வொண்ணாது.

**விளக்கம்** – எல்லையற்ற அன்பு காரணமாக மனிதர்களுக்கு உடல் மற்றும் உறுப்புகள் உண்டான காலம் தொடங்கி, அந்த மனித த்வய மந்த்ரத்தைக் கூறும் காலம் வரை அனைத்திற்கும் காரணமாகத் தானே நிற்கிறான்; மேலும் எம்பெருமான் ஸத்ய ஸங்கல்பனாகவும், தான் கொண்டுள்ள கருணையை வெளிப்படுத்தும் ஆசையுடனும் உள்ளான்; அவனே மோக்ஷத்திற்கான நேர்க்காரணமாகவும் உள்ளான்; மற்ற உபாயங்களைக் கைக்கொள்ள இயலாமல் தவிப்பவர்களுக்கு ஏற்ற உபாயமாகத் தானே நிற்கிறான். இத்தகைய ஆணித்தரமான கருத்துக்களை சாஸ்த்ரங்கள் மூலமாக வஸ்துவின் (பகவானின்) தன்மைகளைக் கொண்டு அறியலாம். சாஸ்த்ரங்கள் பகவானின் தன்மைகளைக் கூறும்போது, மேலே உள்ள தன்மைகளை கொண்ட வஸ்துவே பகவான்

என்றும், இதனை வேறு எந்தவிதமான காரணங்களாலும் மறுக்க இயலாது என்றும் கூறுகின்றன.

## நடாதூர் அம்மாள் அருளிய ப்ரபத்தியின் சுருக்கம்

**மூலம்** – இது ஸாங்காநுஷ்டாநத்துக்கு நடாதூரம்மாள் அருளிச்செய்யும் சுருக்கு: - "அநாதிகாலம் தேவரீருக்கு அநிஷ்டாசரணம் பண்ணுகையாலே ஸம்ஸரித்துப் போந்தேன். இன்று முதல் அநுகூலனாய் வர்த்திக்கக் கடவேன். ப்ரதிகூலா சரணம் பண்ணக்கடவேனல்லேன். தேவரீரைப் பெறுகைக்கு என் கையில் ஒரு கைம்முதலில்லை. தேவரீரையே உபாயமாக அறுதியிட்டேன். தேவரீரே உபாயமாகவேணும். அநிஷ்ட நிவ்ருத்தியிலாதல் இஷ்ட ப்ராப்தியிலாதல் எனக்கினி பரமுண்டோ?", என்று.

**விளக்கம்** – ப்ரபத்தியை அதன் அங்கங்களுடன் அநுஷ்டிக்க நடாதூர் அம்மாள் அருளிச்செய்த சுருக்கம் பின்வருமாறு – எல்லையற்ற காலமாக நான் உனக்குப் பிடிக்காதவற்றை மட்டுமே செய்தபடி ஸம்ஸாரத்தில் சுற்றித் திரிந்தேன். இந்த நாள் தொடங்கி உனக்கு எது விருப்பமோ அதனை மட்டுமே செய்வேன். உனக்கு வருத்தம் உண்டாக்கும் எதனையும் நான் இனி செய்யமாட்டேன். உன்னை அடைவதற்கு என்னிடம் எந்தவிதமான முதலுமில்லை. உன்னையே உபாயமாகக் கொள்வது என்று முடிவு செய்துவிட்டேன். என்னுடைய உபாயமாக நீயே இருத்தல் வேண்டும். இனி எனக்குத் தீமையை ஏற்படுத்துவதை தவிர்த்தல், நன்மையை உண்டாக்குதல் ஆகிய செயல்களில் என் பொறுப்பு ஏது இல்லை; அவை உன்னுடையதே ஆகும்.

## அங்கங்களை ஒருமுறை செய்தல்

**மூலம்** – இவ்விடத்தில் ஆநுகூல்யஸங்கல்பாதிகள் உபாயபரிகரமாய் ஸக்ருத்தாயிருக்கும். மேல் இவன் கோலின அநுகூல வ்ருத்யாதிகளோடே போகிறவிடமும் உபாயபலமாய் யாவதாத்மபாவியாய் இருக்கும். இவற்றில் ப்ரதிகூல்யவர்ஜநமும் அம்மாள் அருளிச் செய்தபடியே ஆநுகூல்யஸங்கல்பம் போலே ஸங்கல்பரூபமானாலும் ஸக்ருத் கர்த்தவ்ய மென்னுமிடம் ஸ்பஷ்டம். அபாயேப்யோ நிவ்ருத்த: அஸ்மி என்கிறபடியே அபிஸந்தி விராமமாதல் ப்ராதிகூல்ய ஸ்வரூப நிவ்ருத்தியாதலானாலும் அதில் ப்ரதமக்ஷணம் அங்கமாய் மேலுள்ளது பலமாய்க்கடவது. இப்படி விச்வாஸத்திலும் பார்ப்பது.

ப்ரவ்ருத்தி: அநுகூலேஷு நிவ்ருத்தி: ச அந்யத: பலம்
ப்ராரப்த ஸுக்ருதாச்ச ஸ்யாத் ஸங்கல்பே ச ப்ரபத்தி:

**விளக்கம்** – இவற்றில் எம்பெருமானுக்கு விருப்பம் அல்லாதவற்றைத் தள்ளுவதும், அவனுக்கு விருப்பமானவற்றைச் செய்தலும் என்ற உறுதிமொழியை உபாயத்தின் அங்கமாக ஒருமுறை எடுத்துக்கொண்டாலே போதுமானது. அதன் பின்னர் ஒருவன் விருப்பம் இல்லாதவற்றை விலக்கியபடி வாழ்வது போன்ற ஸங்கல்பங்கள், உபாயத்தின் பலனாக இவனுடைய ஆத்மா உள்ளவரை நீடிக்கும். நடாதூர் அம்மாள் சொற்களில் உள்ளபடி எம்பெருமானுக்கு விருப்பம் இல்லாதவற்றை விலக்குதல் என்பது, அந்தச் செயல்களைச் செய்யாமல் இருக்கும் உறுதியே என்று வைத்துக் கொண்டால், அந்த உறுதியை ப்ரபத்தியின்போது ஒருமுறை எடுத்துக் கொண்டாலே போதுமானது. லக்ஷ்மீ தந்த்ரம் (50-215) - அபாயேப்யோ நிவ்ருத்த: அஸ்மி – ஸம்ஸாரத்தில் தள்ளக்கூடிய பாவங்களில் இருந்து விலகினேன் – என்றது காண்க. விருப்பம் இல்லாதவற்றைத் தள்ளுதல் என்பது – அவற்றின் தொடர்பு இல்லாமல் இருத்தல், அவற்றைச் செய்யாமல் இருப்பது என்னும் உறுதி – ஆகிய இரண்டில் ஒன்றெனக் கொள்ளலாம். எப்படி இருப்பினும் இது ஓர் அங்கமே ஆகும். அதன் பின்னர், விருப்பம் இல்லாதவற்றை விலக்குதல் போன்றவை ப்ரபத்தின் பலனாகவே கொள்ளபடும். இதனையே விச்வாஸத்திலும் கொள்ளலாம். இதனை - ப்ரவ்ருத்தி: அநுகூலேஷு நிவ்ருத்தி: ச அந்யத: பலம் ப்ராரப்த ஸுக்ருதாச்ச ஸ்யாத் ஸங்கல்பே ச ப்ரபத்தி: - ப்ரபத்தியின் பின்னர், எம்பெருமானுக்கு விருப்பமானவற்றைச் செய்வதும், விருப்பம் இல்லாதவற்றைத் தள்ளுவதும் கடந்த பிறவிகளின் புண்யத்தாலும், ப்ரபத்தியின்போது எடுத்துக் கொள்ளும் ஸங்கல்பத்தாலும் ப்ரபத்தியின் பலனாக ஆகிறது.

## ப்ரபத்தியை அநுஷ்டிப்பதில் சாதுர்யம்

**மூலம்** – ஆகையால் இருந்த நாளில் நிரபராத கைங்கர்யத்தையும் ப்ராரப்த சரீராநந்தரம் மோக்ஷத்தையும் சேரப் பலமாகக் கோலிப் ப்ரபத்தி பண்ணுவார்கள் நிபுணர்.

**விளக்கம்** – ஆகவே அறிந்தவர்கள் எவ்விதம் ப்ரபத்தி செய்வார்கள் என்றால், வாழ்நாளில் தவறாத கைங்கர்யம் செய்தபடி இருத்தல் வேண்டும் என்றும், பலன் தரத் தொடங்கிவிட்ட கர்மங்கள் முடிந்து உயிரைவிடும் நேரத்தில் மோக்ஷம் கிட்டவேண்டும் என்றும் செய்வார்கள்.

அறவே பரமென்று அடைக்கலம் வைத்தனரன்று நம்மைப்
பெறவே கருதிப் பெருந்தகவுற்ற பிரானடிக்கீழ்
உறவே இவனுயிர் காக்கின்ற ஒருயிருண்மையை நீ
மறவேலென நம் மறைமுடி சூடிய மன்னவரே.

**பொருள்** – நமது ஆசார்யர்கள் வேதங்கள் என்னும் ஸாம்ராஜ்யத்தில் முடிசூடி நிற்கும் அரசர்கள் ஆவர். இந்த ஆசார்யர்கள் - தனது கருணை காரணமாக, எல்லையற்ற காலமாக நம்மைக் காப்பது என்னும் உறுதியைக் கொண்டுள்ள எம்பெருமானின் திருவடியின்கீழ், நம்மை ரக்ஷிக்கும் பொறுப்பு நம்மைவிட்டு நீங்கும்படி ரக்ஷிக்கப்பட வேண்டிய வஸ்துவாக ஸமர்ப்பிக்கின்றனர். நம்மிடம், "அந்தர்யாமியாக உள்ள எம்பெருமான், அவனுடைய அடிமையாக உள்ள உன்னை எப்போதும் ரக்ஷிப்பான் என்பதை மறக்காதே", என்று உபதேசம் செய்தனர்.

யுக்ய ஸ்யந்தந ஸாரதி க்ரமவதி த்ரயந்த ஸந்தர்சிதே
தத்த்வாநாம் த்ரிதயே யதார்ஹ விவித வ்யாபாரஸந்தாநிநி
ஹேதுத்வம் த்ரிஷு கர்த்துபாவ உபயோ: ஸ்வாதீநதைகத்ர தத்
ஸ்வாமி ஸ்வீக்ருத யத் பர: அயம் அலஸ: தத்ர ஸ்வயம் நிர்பர:

**பொருள்** – குதிரை, தேர், தேர் ஓட்டுபவன் என்ற மூன்றைப் போன்று, மூன்று தத்துவங்களான சித், அசித் மற்றும் ஈச்வரன் ஆகியவை செயல்பாடுகளிலும் தன்மைகளிலும் உள்ளதாக வேதாந்தங்கள் கூறுகின்றன. இந்தச் செயல்பாடுகளைப் பொறுத்தவரை மூன்றுமே காரணமாக இருத்தல் என்பதைக் கொள்கின்றன. இவற்றில் செயல்கள் செய்வது என்பது சித் மற்றும் அசித் ஆகிய இருவரிடமும், செயல்கள் செய்யாத தன்மை ஈச்வரனிடமும் காணப்படுகின்றன. ஆகவே, எந்த ஒரு எஜமானனான எம்பெருமானால் தன்னைக் காக்கும் பொறுப்பு ஏற்கப்படுகிறதோ, அந்த ஜீவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் பொறுப்பில்லாதவனே ஆகிறான்.

## ஸாங்கப்ரபதந அதிகாரம் ஸம்பூர்ணம்

# 13. க்ருதக்ருத்யாதிகாரம்

(ப்ரபத்தி என்னும் கடமை முடித்த சேதனன் கவலை நீங்கி நிற்பது)

ஸமர்த்தே ஸர்வஜ்ஞே ஸஹஜ ஸஹ்ருதி ஸ்வீக்ருத பரே
யத் அர்த்தம் கர்த்தவ்யம் ந புநரிஹ யத் கிஞ்சித் அபி ந:
நியச்சந்தஸ்தஸ்மிந் நிருபாதி மஹாநந்த ஜலதௌ
க்ருதார்த்தீகுர்ம: ஸ்வம் க்ருபணம் அபி கைங்கர்ய தநிந:

**பொருள்** – அனைத்தையும் முடிக்கும் சக்தி உள்ளவன், அனைத்தையும் அறிந்தவன், தன்னுடைய ஸ்வபாவத்தாலேயே நம்மிடம் அன்புடன் உள்ளவன் – இப்படிப்பட்ட ஸர்வேச்வரன் நம்மைக் காப்பாற்றும் பொறுப்பை தான் எடுத்துக் கொண்ட பின்னர், அதற்காக நாம் மீண்டும் இந்த உலகில் ஏதும் செய்யத் தேவையில்லை. அதன் பின்னர், நமது ஆத்மாவை எல்லையற்ற ஆனந்தக் கடலாக உள்ள ஸர்வேச்வரனின் அனுபவம் என்பதிலேயே நமது ஆத்மாவை நிலைநிறுத்த வேண்டும். அந்த மோக்ஷம் என்பது உடனே கிட்டாத தரித்ரம் அடைந்தவர்களாக நின்றாலும், நமக்குக் கைங்கர்யம் என்னும் பெருஞ்செல்வம் கிட்டியதை எண்ணி மகிழ்வுடன் இருப்போமாக.

## ப்ரபத்தியைச் செய்தவனை “செய்யவேண்டியதைச் செய்தவன்” என்று கூறுவது ஏன்

**மூலம்** – இவ்வுபாய விசேஷ நிஷ்டன் ப்ராப்திக்கு அநந்தரகாலம் தொடங்கித் தான் இதுக்குக் கோலின பலத்தைப் பற்றத் தனக்குக் கர்த்தவ்யாம்சத்தில் அந்வயமில்லாமையாலும் கர்த்தவ்யாம்சம் ஸக்ருதநுஷ்டானத்தாலே க்ருதமாகையாலும், ஸ்வதந்த்ரனாய் ஸத்ய ஸங்கல்பனான பலப்ரதன் “மா சுச:” என்று அருளிச் செய்கையாலும், தனக்குப் பிறந்த பரந்யாஸரூப தசையைப் பார்த்து நிர்பரனாய்;

**விளக்கம்** – இப்படியாக ப்ரபத்தி என்னும் உபாயத்தைக் கைக்கொண்ட ஒருவன், இந்த உபாயத்தைக் கைக்கொண்ட நேரம் தொடக்கமாக, அதன் பலனைப் பெறுவதற்காக வேறு எதனையும் செய்யவேண்டிய அவசியம் இல்லை. இவன் என்ன செய்யவேண்டுமோ, அந்தச் செயல்கள் அனைத்தும் ஒருமுறை ப்ரபத்தி செய்ததிலேயே அடங்கிவிடுகிறது. சுதந்திரமாக உள்ளவனும், எடுத்த செயலை முடிப்பது என்ற விரதம் பூண்டவனும், ப்ரபத்தியின் பலனை அளிக்கவல்லவனும் ஆகிய ஸர்வேச்வரன் கீதையில் (18-66) – மா சுச: - கவலைப்படாதே – என்றான். இந்தக் காரணங்களால் ப்ரபன்னன், தனது பாரங்களை ஸமர்ப்பித்துவிட்டதை எண்ணியபடியே கவலையின்றி உள்ளான்.

**மூலம்** - "மாமேகம் சரணம் வ்ரஜ" என்கிறபடியே ஸித்தோபாயத்வேந ஸ்வீக்ருதனான ஸர்வேச்வரன், "அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று பலப்ரதாந ஸங்கல்பத்தைப் பண்ணுகையாலே இப்படி விச்வஸநீயனுமாய் ஸமர்த்தனுமாய் உபாயபூதனுமான ஈச்வரனைப் பார்த்து பலஸித்தியில் நிஸ்ஸம்சயனுமாய், நிர்பயனுமாய், கடையேறவிட்ட அந்ய புருஷார்த்தங்களையும் காம்பறவிட்ட உபாயாந்தரங்களையும் அகிஞ்சநன் அயத்நமாக மஹாநிதியைப் பெறுமாப் போலே தான் பெறப்புகுகிற பரம புருஷார்த்தத்தையும் பார்த்து ஹஷ்டமநாவாய்;

**விளக்கம்** – இப்படிப்பட்ட உபாயமாக உள்ள ஸர்வேச்வரன் கீதையில் – மாமேகம் சரணம் வ்ரஜ: - என்னை மட்டுமே சரணம் புகுவாயாக – என்றான். இதனால் கிட்டும் பலனைத் தானே அளிப்பதாக - அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – நான் உன்னை அனைத்துப் பாவங்களில் இருந்தும் காப்பாற்றுவேன் – என்று உறுதி அளிக்கிறான். இப்படியாக நம்பத்தகுந்தவனாக, எதனையும் செய்யவல்லவனாக, உபாயமாக உள்ளா ஸர்வேச்வரனைக் காணும் ப்ரபன்னன், தான் செய்த ப்ரபத்திக்கான பலன் குறித்து உள்ள ஐயங்களைக் கைவிடுகிறான்; தனது பயம் அனைத்தையும் துறக்கிறான்; மற்ற புருஷார்த்தங்களை அவற்றின் வாஸனையுடன் கைவிடுகிறான்; மற்ற உபாயங்களை அனைத்தையும் கைவிடுகிறான். மிகுந்த ஏழை ஒருவன், எந்தவிதமான பெரும் முயற்சியும் இல்லாமல் பெருஞ்செல்வம் கிட்டப்பெறுகிறான் என்னும்போது, அவனுக்கு ஏற்படும் ஆனந்தம் போன்று, ப்ரபன்னன் தான் அடையவுள்ள பரமபுருஷார்த்தத்தை எண்ணியபடி மகிழ்கிறான்.

**மூலம்** –

தேவர்ஷிபூதாத்மந்ருணாம் பித்ருணாம் ந கிங்கரோ நாயம்ருணீ ச ராஜந்
ஸர்வாத்மநா ய: சரணம் சரண்யம் நாராயணம் லோககுரும் ப்ரபந்ந:

என்கிற ச்லோகத்தின்படியே ப்ரஜாபதி பசுபதி என்றாற்போலே பேரிட்டுக் கொண்டிருக்கிற ஸஜாயதீயரான க்ஷேத்ரஜ்ஞரைப் பற்ற ஓரோர் அவஸரங்களிலே கைக்கூலி போலே சில உபாதிகளடியாக எழுதாமறையிலே ஏறிட்டுக் கிடக்கிற அடிமை தீட்டும் முதல் மாளாதே பொலிசையிட்டுப் போகிற தனிசுதீட்டும் கிழித்தவனாகையாலே பஞ்சமஹாயஜ்ஞாதிகளான நித்ய நைமித்திகங்களில் அவர்கள் பேர் சொல்லும்போது

யே யஜந்தி பித்ருந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹுதாசநாந்
ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்தி தே

இத்யாதிகளில் மஹர்ஷிகள் அறுதியிட்டபடியே ராஜஸேவகர் ராஜாவுக்குச் சட்டை மேலே மாலையையும் ஆபரணத்தையும் இட்டாலும் சட்டையில் துவக்கற்று ராஜாவின் ப்ரீதியே ப்ரயோஜநமாகத் தெளிந்திருக்குமாப்போலவும், யஜுர் அக்ரஹர அத்யாயாதிகளிலும் ஸ்ரீஹஸ்திகிரிமஹாத்ம்யத்திலும் ஸாக்ஷாதர்ப்யாவரோதம் ஜைமிநி: என்கிற ஸூத்திரத்திலும் சொல்லுகிறபடியே தேவர்கள் பித்ருக்கள் என்கிற சட்டைகளோடு துவக்கற அவ்வோ சப்தங்கள் அவயவ சக்தி பௌஷ்கல்யங்களாலே ஈச்வரன் பக்கலிலே நாராயணாதிசப்தங்கள் போலே நிற்கிற நிலையையுங்கண்டு, அவற்றினுடைய உச்சாரணாதிகளில் ச்வேததீபவாஸிகளான சுத்தயஜாதிகளுக்குப் போலே தன் பரமைகாந்தித்வம் குறையாதே நிற்கிறபடியை நிரூபித்துத் தன் வர்ண ஆச்ரம நிமித்த குணாத்யதிகாரத்துக்கு அநுரூபமாக அடிமை கொள்ள ஸங்கல்பித்திருக்கிற சாஸிதாவான சேஷியினுடைய சாஸ்த்ரவேத்ய ஆஜ்ஞாநுஜ்ஞா பரிபாலநரூப கைங்கர்ய முகத்தாலே ப்ரத்யக்ஷ விதித பரமபுருஷாபிப்ராயரான முக்தரைப்போலே கிஞ்சித்கரனாய்க் கொண்டு முக்ததுல்யனாய், உபாயபூர்த்தியாலே க்ருதக்ருத்யனென்றும், புருஷார்த்தபூர்த்தியாலே க்ருதார்த்தனென்றும் சாஸ்த்ரங்களாலும் தந்நிஷ்டராலும் கொண்டாடப்பட்டிருக்கும்.

**விளக்கம்** – ஸ்ரீமத்பாகவதம் (11-5-41) - தேவர்ஷிபூதாத்மந்ருணாம் பித்ருணாம் ந கிங்கரோ நாயம்ருணீ ச ராஜந் ஸர்வாத்மநா ய: சரணம் சரண்யம் நாராயணம் லோககுரும் ப்ரபந்ந: - அனைவராலும் அடையத்தக்கவனும், அனைவருக்கும் ஆசார்யனாக உள்ளவனும் ஆகிய நாராயணனைச் சரணம் என அடைந்த ஒருவன் தேவர்கள், முனிவர்கள், மனிதர்கள், பித்ருக்கள் என யாருக்கும் அடிமையும் இல்லை, கடன்பட்டவனும் அல்லன் – என்றது காண்க. இவர்களைப் பொறுத்தவரையில் தங்கள் நித்ய, நைமித்திக கர்மங்களில் ப்ரஜாபதி, பசுபதி என்பது போன்ற, தங்களை ஒத்த ஜீவர்களின் பெயர்களை உச்சரிக்கக்கூடும். இவர்கள் தங்கள் வர்ணாச்ரம தர்மங்கள் என்னும் எழுதாத வேதங்களுக்குக் கடன்பட்டவர்களாக, அந்தக் கடனுக்குச் செலுத்தவேண்டிய வட்டி போன்று தேவர்கள், பித்ருக்கள் ஆகியவர்களுக்குத் தொண்டு செய்யவேண்டியதாகிறது. ஆனால், ப்ரபத்தி செய்தவனுக்கு அந்தக் கடன்சீட்டு கிழிக்கப்பட்ட ஒன்றாகிறது. ஆகவே இப்படிப்பட்ட ஒருவன் பஞ்சமஹாயஜ்ஞங்களான நித்ய, நைமித்திக கர்மங்களில் இவர்களில் பெயரை உச்சரிக்கக்கூடும் (பஞ்ச மஹாயஜ்ஞங்கள் = தேயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், பூதயஜ்ஞம், மநுஷ்யயஜ்ஞம் மற்றும் ப்ரஹ்மயஜ்ஞம்). இவ்விதம் மற்றவர்களின் பெயர்களை உச்சரித்தாலும், அவை ஈச்வரனையே குறிப்பிடுகின்றன என அறிகிறான். இதனை மஹாபாரதம் சாந்திபர்வம் (355-41) - யே யஜந்தி பித்ருந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹுதாசநாந் ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்தி தே – பித்ருக்கள், தேவர்கள், அந்தணர்கள் மற்றும் அக்னியை ஆராதனை செய்பவர்கள் அனைத்து உயிர்களின் ஆத்மாவான எம்பெருமானையே ஆராதனை செய்கிறார்கள் – என்றது காண்க. அரசனின்

வேலையாட்கள் அரசனின் சட்டை மீது மாலை மற்றும் ஆபரணங்கள் அணிவித்த காரணத்தால், அவர்கள் சட்டைக்கு மரியாதை செய்கின்றனர் என்பதல்ல, அதனுள் உள்ள அரசனுக்கே அவற்றைச் செய்கின்றனர் அல்லவோ? இதே கருத்து மஹாபாரதம் சாந்தி பர்வத்தில் உள்ள யஜ்ஞ அக்ரஹாரத்திலும், ஶ்ரீஹஸ்திகிரிமஹாத்ம்யத்திலும், ப்ரஹ்மஸூத்ரம் (1-2-29) - ஸாக்ஷாதர்ப்யாவரோதம் ஜைமிநி: - அக்னி போன்ற சொற்கள் எம்பெருமானையே குறிப்பதால் விரோதமில்லை என்று ஜைமிநி கூறிகிறார் – என்பது போன்ற சூத்திரங்களிலும் உள்ளது. தேவர்கள், பித்ருக்கள் என்னும் சொற்கள், எம்பெருமானின் சட்டை போன்ற தேவர்கள், பித்ருக்கள் என்பதைக் குறிக்கவில்லை. அவை நாராயணன் என்னும் பதம் போன்று ஈச்வரனையே குறிப்பதாக உள்ளன. ச்வேத த்வீபத்தில் உள்ளவர்களுக்கு நாராயணன் என்ற திருநாமத்தை உச்சரிக்கும்போது “நார” என்ற சப்தம் உண்டானாலும், அவன் மீது மட்டுமே உள்ள உறுதியான பக்தி எப்படி மாறாமல் உள்ளதோ, அது போன்று, ப்ரபந்நன் தனது கர்மங்களின் பொருட்டு உச்சரிக்கும் ப்ரஜாபதி, பசுபதி போன்றவைகளால் எந்த தோஷமும் பெறுவதில்லை. ஒவ்வொருவரின் வர்ணாச்ரம தர்மங்களுக்கு ஏற்ப, அவரவர்களைத் தனது சேவகனாக எம்பெருமான் மகிழ்வுடன் ஏற்க ஸங்கல்பம் செய்துள்ளான். ஆகவே சேஷியான அவனுக்குக் கைங்கர்யம் செய்தல் என்பது சாஸ்த்ரங்கள் மூலமாக அறியப்படுகின்ற, அவனால் விதிக்கப்பட்டவற்றைச் செய்தல் ஆகும். முக்தர்கள் எவ்விதம் நேரடியாகவே எம்பெருமானின் திருவுள்ளத்தை அறிந்துகொண்டு கைங்கர்யம் செய்கின்றனரோ, அது போன்று, ப்ரபந்நனும் சிறிதுசிறிதான கைங்கர்யங்களைச் செய்ய முயல்வான். இப்படிப்பட்டவன், சரியான உபாயத்தைக் கைக்கொண்டதால் ”க்ருதக்ருத்யன்” (செய்யவேண்டியதைச் செய்தவன்) என்றும், தான் அடைய வேண்டிய புருஷார்த்தத்தை அடைந்துவிட்டதால் “க்ருதார்த்தன்” என்றும் சாஸ்த்ரங்களால் புகழப்படுகிறான்.

## சரணாகதிகத்யத்திலிருந்து உதாரணம்

**மூலம்** – இவனுடைய இந்தக் க்ருதக்ருத்ய அநுஸந்தானத்தை அதஸ்த்வம் தவ தத்த்வதோ மத்ஜ்ஞாந தர்சன ப்ராப்திஷு நிச்சய: ஸுகமாஸ்ஸ்வ என்று சரணாகதிகத்யத்திலே நிகமித்தருளினார். இதுக்குக் கருத்து – அநாதிகாலம் அஜ்ஞாதிலங்கனமடியாகவுண்டான பகவந்நிக்ரஹத்தாலே ஸம்ஸரித்துப்போந்த நமக்கு அவஸர ப்ரதீக்ஷை பகவத் க்ருபையடியாக உண்டான ஸாதாசார்ய கடாக்ஷ விஷயீகாரத்தாலே வந்த த்வயோச்சாரண அநுச்சாரணத்தாலே ப்ரபத்த்யநுஷ்டானம் பிறந்தபின்பு சரண்ய ப்ரஸாதநங்களில் இதுக்குமேல் ஒன்றில்லாமையாலே நிக்ரஹஹேதுக்களையெல்லாம் க்ஷமித்துத் தீர்ந்த அடியவர் தம்மைத் திருத்திப் பணிகொள்ளவல்ல ஸர்வசேஷியான

ஸ்ரிய:பதி தன் பேறாகத் தானே ரக்ஷிக்குமென்று தேறி நிர்பரனாயிரு – என்கை. இது “மா சுச:” என்கிற சரண்ய வாக்யத்திலும் தீர்ந்த பொருள்.

**விளக்கம்** – இப்படிப்பட்ட க்ருதக்ருத்யன் தான் செய்யவேண்டியதைச் செய்துவிட்ட காரணத்தினால் அடையக்கூடியதை எம்பெருமானார் சரணாகதிகத்யத்தில் - அதஸ்த்வம் தவ தத்த்வதோ மத்ஜ்ஞாந தர்சன ப்ராப்திஷு நிச்சய: ஸுகமாஸ்ஸ்வ – எனவே நீ என்னை உள்ளபடி அறிவதிலும், காண்பதிலும், அடைவதிலும் எந்தவிதமான ஐயமும் கொள்ளாமல், இன்பமாக இருந்து வருவாயாக – என்று ஸ்ரீரங்கநாதன் திருவாய் மலர்கிறான். இதன் கருத்து பின்வருமாறு: எல்லையற்ற காலமாக எம்பெருமான் நமக்கு விதித்த கட்டளைகளை, நமது அறியாமை காரணமாக மீறி நடந்ததால், அவன் அளித்த தண்டனை காரணமாக நாம் ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ளோம். இப்படியாக உள்ள நம்மைக் கரையேற்றுவதற்கான சரியான சந்தர்ப்பத்தை எம்பெருமான் எதிர்நோக்கியே உள்ளான். அவனது கருணை காரணமாக நமக்கு ஆசார்யனின் கடாக்ஷம் கிட்டுகிறது. ஆசார்யன் மூலமாக த்வயத்தை அநுஸந்தானம் செய்வதன் மூலம் நாம் ப்ரபத்தியைக் கைக்கொள்கிறோம். நம்மைக் காப்பாற்றவல்ல எம்பெருமானை அடைய வேறு எதுவும் அவசியம் இல்லை. இதன் மூலமாக நமக்கு உண்டான தண்டனைகளுக்குக் காரணமான பாவங்கள் அனைத்தையும் அவன் அழித்துவிடுகிறான். பெரியபிராட்டியின் நாயகனான அவன், நம்மைத் தூய்மைப்படுத்தி, தனது கைங்கர்யத்திலும் ஈடுபடுத்திக் கொள்கிறான். இதனை அவன் தனது பேறாகவே எண்ணுகிறான். இப்படியாக அவன் நம்மைக் காப்பான் என்று எண்ணியபடி, ப்ரபந்நன் வருத்தங்கள் அற்று இருத்தல் வேண்டும். இந்தக் கருத்தே அபயம் அளிக்கக்கூடியவன் கீதையில் (18-66) கூறிய – மா சுச: - வருத்தம் கொள்ளாதே – என்பதன் பொருளாகும்.

## க்ருதக்ருத்யனின் இலக்கணம்

**மூலம்** – இவனுக்குப் ப்ரபத்திக்கு முன்புற்ற சோகம் அதிகாரத்திலே சொருகுகையாலே முன்பு சோகித்திலனாகில் அதிகாரியல்லாமையாலே காரணாபாவாத் கார்யபாவ: என்கிற ந்யாயத்தாலே உபாய நிஷ்பத்தி உண்டாகாது. உபாயஸ்வீகாரம் பண்ணினானாகத் தன்னை நினைத்திருந்த பின்பு சரண்யோக்தியிலே நெகிழ்ச்சி உடையவனாய் சோகித்தானாகில் கார்யபாவாத் ஸாமக்ரஞ்யபாவ: என்கிற ந்யாயத்தாலே பூர்ணோபாயனல்லாமையாலே பலம் உபாய பூர்த்தி ஸாபேக்ஷமாய்க் கொண்டு

விலம்பிக்குமென்று அறியலாம். முன்பு ப்ரஸக்த சோகனாய்ப் பின்பு "மா சுச:" என்று ப்ரதிஷேகிக்கிறபடியே வீதசோகனானவன் க்ருதக்ருத்யனென்று அறியலாம்.

**விளக்கம்** – ப்ரபத்திக்கு முன்பாக (ஸம்ஸாரத்தை எண்ணியும், தனது ஆத்மஸ்வரூபத்திற்கு விரோதமாக நடப்பது எண்ணியும் முதலானவை) வருத்தம் கொண்டவனாக இருத்தல் என்பதே ப்ரபத்தி செய்வதற்கான தகுதியை உண்டாக்குகிறது. இந்த வருத்தம் இல்லையென்றால், இவனுக்கு ப்ரபத்திக்கான தகுதி இல்லை என்றே கொள்ளவேண்டும். இவ்விதம் இல்லை என்றால் - காரணாபாவாத் கார்யபாவ: - காரணம் இல்லை என்றால் காரியம் இல்லை – என்னும் ந்யாயத்தின்படி ப்ரபத்தி பூர்த்தியாகாது. ப்ரபத்தி செய்த பின்னர், நம்பிக்கை உண்டாகாத காரணத்தினால், வருத்தத்தில் தொடர்ந்து ஆழ்ந்தபடி இருக்கக்கூடும். இதனால் - கார்யபாவாத் ஸாமக்ரஞ்யபாவ: - காரியம் உண்டாகவில்லை என்றால், காரணமும் இல்லை என்று பொருள் – என்னும் ந்யாயத்தின்படி, இவனது ப்ரபத்தி உபாயம் பூர்த்தியாகாது. இந்த ப்ரபத்தி உபாயம் பூர்த்தியாகும்வரையில், இதன் மூலமாகக் கிட்டவுள்ள பலனும் தள்ளியே செல்லும். யார் ஒருவன் ப்ரபத்திக்கு முன்பு வரை, வருத்தத்தில் ஆழ்ந்தவனாக இருந்து, ப்ரபத்திக்குப் பின்னர் "மா சுச:" என்னும் பகவானின் சொற்களின்படி வருத்தம் இல்லாமல் வாழ்கிறானோ, அவனே க்ருதக்ருத்யன் ஆகிறான்.

மன்னவர் விண்ணவர் வானோர் இறை ஒன்றும் வான்கருத்தோர்
அன்னவர் வேள்வி அனைத்தும் முடித்தனர் அன்புடையார்க்கு
என்ன வரம் தர என்ற நம் அத்திகிரித் திருமால்
முன்னம் வருந்தி அடைக்கலம் கொண்ட நம் முக்கியரே.

**பொருள்** – தன்னிடம் பக்தி கொண்டவர்களுக்கு மேலும் என்ன வரம் அளிக்கலாம் என்று எண்ணியபடி ஹஸ்திகிரி (காஞ்சீபுரம்) மலையில் எழுந்தருளியுள்ள வரதராஜன், தன்னால் காக்கப்பட வேண்டியவர்கள் என்று ப்ரபந்நர்களை மிகவும் ப்ரயாஸப்பட்டு ஏற்றுக் கொள்கிறான். இப்படிப்பட்ட ப்ரபந்நர்கள் – நமக்கு அரசர்கள் போன்றவர்கள், தேவர்கள் போன்று நம்மால் ஆராதிக்கப்பட வேண்டியவர்கள், நித்யஸூரிகளின் தலைவனான எம்பெருமானின் இருப்பிடமான பரமபதத்தி வசிக்கவேண்டும் என்னும் ஆர்வம் உடையவர்கள், நல்லது கெட்டது அறியக்கூடிய அன்னம் போன்றவர்கள், செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவர்கள் ஆவர்.

பகவதி ஹரௌ பாரம் கந்தும் பரந்யஸநம் க்ருதம்
பரிமித ஸுக ப்ராப்த்யை க்ருத்யம் ப்ரஹீணம் அக்ருத்யவத்
பவதி ச வபுவ்ருத்தி: பூர்வம் க்ருதை: நியதக்ரமா
பரம் இஹ விபோ: ஆஜ்ஞாஸேது: புதை: அநுபால்யதே

**பொருள்** – ஸம்ஸாரத்தைக் கடக்கும் பொருட்டு, விரோதியைப் போக்கவல்ல எம்பெருமானின் திருவடிகளில் பரந்யாஸம் (நம்மைக் காக்கும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தல்) செய்யப்பட்டது. அற்பமான பலன்கள் அளிக்கக்கூடிய காம்யகர்மங்கள், செய்யத்தகாதவை என்றே விடப்பட்டன. முன்பு செய்த கர்மங்களின் பலன் மூலமாகவே இனி உடல் பேணுதலும் நடைபெறும். இதற்காக ஏதும் இனி செய்யப்பட வேண்டியதில்லை. ஆகவே ப்ரபத்திக்குப் பிறகு எம்பெருமானின் ஆணையால் ஏற்படுத்தப்பட்ட அணைகளாகிய நித்ய நைமித்திக கர்மங்கள் மட்டுமே, தங்களது ஸ்வரூபம் அறிந்த ப்ரபந்நர்களால் கைக்கொள்ளப்படும்.

## க்ருதக்ருத்யாதிகாரம் ஸம்பூர்ணம்

## 14. ஸ்வநிஷ்ட்டாபிஜ்ஞாதிகாரம்

ஸ்வரூப உபாய அர்த்தேஷு அவிதத நிவித்ய ஸ்திரமதே:
ஸ்வநிஷ்ட அபிஜ்ஞானம் ஸுபகம் அபவர்க்காத் உபதநாத்
ப்ரதிம்நா யஸ்ய ஆதௌ ப்ரபவதி விநீத: ஸ்தகயிதும்
கபீராந் துஷ்பூராந் ககநமஹத: சித்ர நிவஹாந்

**பொருள்** – ஒருவன் தனது ஸ்வரூபம், ப்ரபத்தி என்னும் உபாயம், மோக்ஷம் என்னும் பலன் ஆகியவற்றில் உண்மையான நிலையான உறுதியுடன் இருக்கக்கூடும்; இப்படிப்பட்டவன் தனது இந்த நிலைகளைப் பற்றிய ஞானம் கைக்கொள்ளுதல் என்பது அவனுக்கு மிகவும் நெருக்கமாக உள்ள மோக்ஷத்தைக் காட்டிலும் மிகவும் இனிமையானதாகும். இப்படிப்பட்ட ஞானம் மூலம், தெளிந்த புத்தி உடையவனாக இருந்து, தனக்கு முன்பாக நிரப்ப இயலாததும், ஆகாயம் போன்று விரிந்ததும் ஆகிய தோஷங்கள் என்னும் தடைகளை மறைக்கும் வல்லமை பெறுகிறான்.

## ஸ்வரூபநிஷ்டையின் அடையாளங்கள்

**மூலம்** – இப்படித் தனக்கு நிஷ்டையுண்டென்று தான் அறியும்படி எங்ஙனேயென்னில்:

(1) பரராலே பரிபவாதிகளுண்டாம்போது தன் தேஹாதிகளைப் பற்றப் பரிபாவகர் சொல்லுகிற குற்றங்கள் தன் ஸ்வரூபத்தில் தட்டாதபடி விஷாதாதிகளற்றிருக்கையும்.

(2) சாப்யமாநஸ்ய யத் பாபம் சாபந்தமதிகச்சதி என்கிறபடியே பரிபவாதிகளாலே தன் பாபத்தை வாங்கிக் கொள்ளுகிற மதிகேடரைப் பற்ற

> பத்த வைராணி பூதாநி த்வேஷம் குர்வந்தி சேத்தத:
> சோச்யாந்யஹ: அதிமோஹேந வ்யாப்தாநீதி மநீஷிணா

> ஆத்மத்ருஹமமர்யாதம் மூடமுஞ்ஜித ஸத்பதம்
> ஸுதராமநுகம்பேத நரகார்ச்சிஷ்மாதிந்தநம்

என்கிறபடியே கரைபுரண்ட க்ருபையும்.

(3) அமர்யாத: க்ஷுத்ர: என்கிற ச்லோகத்தாலும், "வாடினேன் வாடி" முதலான ஆழ்வார்கள் பாசுரங்களாலும் தனக்கு அநுஸந்தேயமாக உதாஹரித்த தோஷங்களைப் பரிவாதாதிகளாலே மறவாதபடி பண்ணினார்களென்கிற உபகாரஸ்ம்ருதியும்.

(4) ஆத்மாக்களுக்கெல்லாம் ஸ்வரூபாநுபந்தியான பகவத் பாரதந்த்ர்யத்தையும் க்ஷேத்ரஜ்ஞரெல்லாரும் கர்மவச்யராய் நிற்கிற நிலையையும் பார்த்து நமக்கும் நம்மளவில் பரிபவாதிகள் பண்ணுகிற சேதநருக்கும் உள்ள கர்மாநுகுணமாக இன்புறும் இவ்விளையாட்டுடையனான ஸ்வதந்த்ரசேஷியாலே ப்ரேரிதராய் அவர்கள் பரிவாதாதிகள் பண்ணுகிறார்களென்று அவர்கள் பக்கல் நிர்விகார சித்தத்தையும்.

(5) ப்ராப்த பாபவிசேஷம் சிகையறுக்கிறதென்கிற ஸந்தோஷமும் நடையாடிற்றாகில் ப்ரதம மத்யம பதங்களிலே சோதிதமானபடியே அசித்வைலக்ஷண்யத்தையும், ஸர்வபூதாநுகூல்யாதிகளுக்கு யோக்யமான ஜ்ஞானத்தையும், ஸர்வதோமுகமான ஆகிஞ்சன்யத்தையும், ஸ்வத: ஸர்வஸமனாய்க் கர்மாநுரூப பலப்ரதனான ஸ்வதந்த்ரசேஷிக்கு இஷ்டவிநியோகார்ஹமாம்படி அநந்யார்ஹ சேஷத்வ பாரதந்த்ர்யங்களையும், யத்திதம் மம தேவேச இத்யாதிகளிற்படியே பராதீந ஹிதஸித்தியையுமுடைய தன் ஸ்வரூபத்திலே நிஷ்டையுண்டென்று அறியலாம்.

**விளக்கம்** – தன்னுடைய ஸ்வரூபம் குறித்த ஞானம் தனக்கு உள்ளது என்பதை ஒருவன் எவ்விதம் நம்புகிறான்? இதற்கான விடை கீழே உள்ளது.

(1) தன்னை யாரேனும் அவமானம் செய்தால், அவ்விதம் அவமானப்படுத்துபவர்கள் தனது சரீரத்தையே அவமானம் செய்கிறார்கள் என்றும், தனது ஸ்வரூபத்திற்கும் இதற்கும் ஸம்பந்தமில்லை என்றும் எண்ணியபடி வருத்தம் போன்றவை இல்லாமல் இருப்பான்.

(2) மஹாபாரதம் ஆச்வமேதிக பர்வம் (110-34) - சாப்யமாநஸ்ய யத் பாபம் சாபந்தமதிகச்சதி – ஒருவனை ஒருவன் தகாத சொற்கள் குறித்து நிந்தனை செய்தால், அவமானப்பட்டவனின் பாவங்கள் அவமானம் செய்தவனைச் சென்றடையும் – என்று கூறுவது போன்று, தனது பாவங்களை வாங்கிக் கொள்ளும் புத்தி இல்லாதவர்கள் குறித்து இவன் கருணை கொள்கிறான். எப்படி என்றால் விஷ்ணுபுராணம் (1-17-81) - பத்த வைராணி பூதாநி த்வேஷம் குர்வந்தி சேத்தத: சோச்யாந்யஹ: அதிமோஹேந வ்யாப்தாநீதி மநீஷிணா – விலங்குகள் தன் மீது விரோதம் கொண்டு நின்றால், இவை இப்படி மோகத்தில் உள்ளனவே என்று அவற்றிடம் விவேகியாக உள்ள ஒருவன் இரக்கம் கொள்ளவேண்டும் – என்றும், ஆயுர்வேதம் - ஆத்மத்ருஹமமர்யாதம் மூடமுஞ்ஜித ஸத்பதம் ஸுதராமநுகம்பேத நரகார்ச்சிஷ்மாதிந்தநம் – யார் ஒருவன் சாஸ்த்ர வழிகளை மீறி தனக்கே துரோகம் செய்துகொள்கிறானோ, நல்ல வழியை விட்டு விலகி விறகு போன்று நிச்சயமாக நரகம் என்னும் தீயை வளர்த்துக் கொண்டு எரிய உள்ளானோ, அப்படிப்பட்ட மூடனை எண்ணி இரக்கம் கொள்ளவேண்டும் – என்றும் கூறப்பட்டபடி இரக்கம் கொள்ளுதல் வேண்டும்.

(3) ஆளவந்தாரின் ஸ்தோத்ரரத்னம் (62) – அமர்யாத: க்ஷுத்ர: - சாஸ்த்ர மரியாதைகளை மீறியவன் – என்றும், பெரியதிருமொழி (1-1-1) – வாடினேன் வாடி – என்றும் கூறுவதற்கு ஏற்ப, தன்னுடைய தோஷங்களை, தனக்குத் தீமை செய்பவர்கள் நினைவுபடுத்தினர் என்று எண்ணியபடி அவர்களிடம் உபகாரம் செய்தவர்கள் என்னும் நன்றியுடன் இருப்பான்.

(4) தனது ஸ்வரூப நிஷ்டையில் நிலைக்கும் ஒருவன் ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்ப, அனைத்து ஆத்மாக்களும் ஸர்வேச்வரனை அண்டியே உள்ளன என்று அறிவான். அனைத்து ஆத்மாக்களும் அதனதன் பூர்வகர்மங்களின் பலனில் சிக்கி உள்ளன என்று அறிவான். தன்னைத் தாழ்த்திப் பேசி, தன்னிடம் தோஷம் பாராட்டுபவர்கள் – ஸ்வதந்த்ரமானவனும், அனைவரின் எஜமானனும், தனக்கும் மற்றவர்களுக்கும் இடையே

பூர்வகர்மம் காரணமாகப் பேதம் உண்டாவதைக் ஒரு லீலையாகவே கொண்டவனும் ஆகிய ஸர்வேச்வரனின் தூண்டுதல் காரணமாகவே இவ்விதம் செய்கிறார்கள் என்று அறிந்து கொள்கிறான். இதனால் அவர்களிடம் த்வேஷம் பாராட்டாமல் உள்ளான்.

(5) பலன் தரத் தொடங்கிவிட்ட பூர்வகர்மங்கள் குறித்து, அவை கழியத் தொடங்கி விட்டனவே என்று எண்ணி மகிழ்வான். இப்படியாக திருமந்த்ரத்தின் முதல் மற்றும் இரண்டாம் பதங்களின் (ப்ரணவம் மற்றும் நம) பொருளாக உள்ள பல அடையாளங்களை ஒருவன் பெற்றான் என்றால், அவன் கீழே உள்ள பலவற்றை அடைந்ததாகக் கொள்ளலாம் – சித் மற்றும் அசித் ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடு; அனைத்து உயிர்களுக்கும் நன்மை அளிக்கவல்ல செயல்களைச் செய்வதற்கான ஞானம்; மற்ற உபாயங்களை அனைத்தையும் கைவிட்ட நிலை; எம்பெருமானுக்காகவே வாழ்கின்ற தன்மை; அவனை மட்டுமே நம்பியுள்ள காரணத்தினால் அவனுக்கு மகிழ்வை உண்டாக்கும் செயலை மட்டுமே செய்தல்; அவன் யாருக்கும் பாரபக்ஷமாகச் செயல் புரிவதில்லை என்றும், அவரவர்களின் கர்மங்களுக்கு ஏற்ற பலனை அளிக்கிறான் என்றும், ஸ்வதந்த்ரமான எஜமானனாகிய அவனுக்காகவே அனைத்தும் உள்ளன என்றும், தன்னுடைய நன்மை என்பது அவன் மூலமாகவே விளைகிறது என்றும் அறிதல்.

## உபாய நிஷ்டையின் அடையாளங்கள்

மூலம் –

(1) ஸர்வேச்வரனையொழியத் தானும் பிறரும் தனக்குத் தஞ்சமென்று என்கிற புத்தியும்.

(2) ம்ருத்யுபர்யந்தமான பயஹேதுக்களைக் கண்டாலும், ப்ராயோணா க்ருதக்ருத்யத்வாத் ம்ருத்யோருத்விஜதே ஜந: க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம் என்கிறபடியே இச்சரீராநந்தரம் என்படப் புகுகிறோம் என்கிற கரைதலற்று அபிமத ஆஸக்தியாலே ப்ரீதனாயிருக்கையும்,

(3) கஜம் வா வீக்ஷ்ய ஸிம்ஹம் வ்யாக்ரம் வா அபி வராநநா
நாஹாரயதி ஸந்த்ராஸம் பாஹூ ராமஸ்ய ஸம்ச்ரிதா என்றும்

அஸந்தேசாத்து ராமஸ்ய தபஸச்வாநுபாலநாத்
ந த்வா குர்மி தசக்ரீவ பஸ்ம பஸ்மார்ஹ தேஜஸா என்றும்

சரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்த்தந:
மாம் நயேத்யாதி காகுத்ஸ்த: தத்தஸ்ய ஸத்ருசம் பவேத் என்றும்

பிராட்டி நடத்திக்காட்டின ரக்ஷக அவஷ்டம்பத்தாலுள்ள தேற்றமும்.

(4) தான் பரந்யாஸம் பண்ணின விஷயத்தில் ஸ்வயத்நமற்றிருக்கையும்.

(5) அதில் அநிஷ்டநிவ்ருத்தியும் இஷ்டப்ராப்தியும் அவன் கையதே என்றிருக்கையும் உண்டாயிற்றாகில்.

தான் கோலின ஸகலபலத்துக்கும் ஸாதநமாகவற்றாய், சரமச்லோகத்தில் பூர்வார்த்தத்திலே விஹிதமாய், த்வயத்தில் பூர்வகண்டத்தில் அநுஸந்தேயமாய், திருமந்த்ரத்தில் மத்யமபதத்திலும் விவக்ஷிதமான உபாயத்திலே தனக்கு நிஷ்டையுண்டென்று அறியலாம்.

**விளக்கம்** – கீழே உள்ள பல தன்மைகள் தன்னிடம் உள்ளது என்று உணர்ந்தால், உபாயத்தைக் குறித்த ஞானம் தன்னிடம் உள்ளது என்று ப்ரபந்நன் அறியலாம்.

1. தனக்குத் தன் மூலமாகவோ, மற்றவர்கள் மூலமாகவோ எந்தவிதமான ரக்ஷகமும் இல்லை. தனது ரக்ஷகம் என்பதற்கு ஸர்வேச்வரனைத் தவிர வேறு யாராலும் அளிக்க இயலாது.

2. மரணம் உள்ளிட்ட பலவிதமானவற்றைக் குறித்து அச்சத்தை விளைவிக்கக் கூடிய காரணங்களைத் தெரிந்தவனாக இருந்தாலும், தனது நிலையைக் குறித்துக் கவலை கொள்ளாமல், தனது நிலை மாறாமல் வருத்தம் அடையாமல், தான் பெற விரும்பிய பலனை விரைவாக அடையப் போகிறோம் என்றே இருப்பான். இதனை இதிஹாஸ ஸமுச்சயம் (7-38) - ப்ராயோணா க்ருதக்ருத்யத்வாத் ம்ருத்யோருத்விஜதே ஜந: க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம்– தங்கள் கடமையைச் செய்யாத மனிதர்கள், மரணத்தை எண்ணிப் பெரிதும் அச்சம் கொண்டபடி உள்ளனர்; தங்கள் கடமையான ப்ரபத்தியைச் செய்தவர்கள், மரணத்தைத் தங்கள் விருந்தாளி போன்று எதிர்பார்த்தபடி உள்ளனர் – என்றது காண்க.

3. தன்னைக் காப்பாற்றத் தகுந்த ஒருவன் கிட்டினான் என்ற நம்பிக்கையுடன் (விச்வாஸத்துடன்) இருப்பான். இதனை சீதையின் பல உதாரணங்களில் காணலாம். கீழே உள்ள வரிகள் காண்க:

- இராமாயணம் ஸுந்தர காண்டம் (60-20) - கஜம் வா வீக்ஷ்ய ஸிம்ஹம் வ்யாக்ரம் வா அபி வராநநா நாஹாரயதி ஸந்த்ராஸம் பாஹூ ராமஸ்ய ஸம்ச்ரிதா– அழகான

திருமுகம் கொண்ட சீதை, இராமனது தோள்களை எப்போதும் பற்றியுள்ளதால் யானை, சிங்கம், புலி ஆகியவற்றைக் கண்டு அஞ்சுவதில்லை.

- இராமாயணம் ஸுந்தர காண்டம் (22-20) - அஸந்தேசாத்து ராமஸ்ய தபஸச்வாநுபாலநாத் ந த்வா குர்மி தசக்ரீவ பஸ்ம பஸ்மார்ஹ தேஜஸா– சாம்பலாக்கப்பட வேண்டிய இராவணனே! இராமனது கட்டளை எனக்கு இல்லை, பதிவ்ரதை என்னும் தவத்தை நான் காக்கவேண்டியதுள்ளது. இதனால்தான் உன்னை எனது தேஜஸ் மூலம் எரிக்கவில்லை.

- இராமாயணம் ஸுந்தர காண்டம் (39-30) - சரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்த்தந: மாம் நயேத்யாதி காகுத்ஸ்த: தத்தஸ்ய ஸத்ருசம் பவேத்– விரோதியின் வலிமையை அழிக்கவல்ல இராமன், இலங்கையைத் தனது அம்புகளால் நிரப்பி, அதன் பின்னரே என்னை அழைத்துச் செல்லவேண்டும். இதுவே அவனுக்குப் பெருமை ஆகும்.

4. தான் எந்தவிஷயத்திற்காக பரந்யாஸம் செய்தானோ, அந்த விஷயத்தைக் குறித்து வேறு சொந்த முயற்சிகளோ, தன்னைக் காப்பாற்றிக் கொள்ள சொந்த முயற்சிகளோ எடுக்கமாட்டான்.

5. தனக்கு விருப்பம் அல்லாதவைத் தன்னைவிட்டு விலகுதலும், தனக்கு நன்மையை அளிக்கவல்லவைத் தன்னிடம் வந்து சேர்தலும் ஸர்வேச்வரனின் விருப்பத்தாலேயே கைகூடும் என்று இருப்பான்.

இந்தத் தன்மைகளை ஒருவன் கொண்டிருந்தான் என்றால், அவன் தான் விரும்பும் உபாயத்தில் நிலைநிற்கிறான் என்று அறியலாம். இந்த உபாயமே இவன் விரும்பும் அனைத்தையும் அளிக்கவல்லதாகிறது. இந்த உபாயமே சரமச்லோகத்திம் முதல் வரியிலும், த்வய மந்த்ரத்தில் முதல் பகுதியிலும், திருமந்த்ரத்தில் நடுப் பகுதியிலும் கூறப்படுவதாகும்.

## புருஷார்த்த நிஷ்டையின் அடையாளங்கள்

**மூலம் –**

உத்பத்தி ஸ்திதி நாசாநாம் ஸ்திதௌ சிந்தா குதஸ்தவ
யத் உத்பத்தி: யதா நாச: ஸ்திதிஸ்த த்வத்பவிஷ்யதி

அசேஷ்டமாநமாஸீநம் ஸ்ரீ: கிஞ்சித் உபதிஷ்டதி
கர்மீ கர்மாநுஸ்ருத்யாந்யோ ந ப்ராச்யமதிகச்சதி

என்கிறபடியே ப்ராரப்த கர்ம விசேஷாதீனமாக ஈச்வரன் செய்யும் தேஹயாத்ராதிகளில் கரைதலற்று, தான் கரைந்தாலும்

உத்பதந்நபி சாகாசம் விசந்நபி ரஸாதலம்
அடந்நபி மஹீம் க்ருத்ஸ்நாம் நாதத்தமுபதிஷ்டதே

யத் கிஞ்சித் த்வர்த்ததே லோகே ஸர்வம் தந்மத்விசேஷ்டிதம்
அந்யோ ஹி அந்யச்சிந்தயதி ஸ்வச்சந்தம் விததாம்யஹம்

என்கிறபடியே ஈச்வரன் நினைவின்படி அல்லது ஒன்றும் நடவாதென்று ப்ரதிஸந்தானம் பண்ணி

அப்ரயத்நாகதா: ஸேவ்யா க்ருஹஸ்தைர்விஷயா: ஸதா
ப்ரயத்நேநாபி கர்த்தவ்ய: ஸ்வதர்ம இதி மே மதி:

நாஹாரம் சிந்தயேத் ப்ராஜ்ஞோ தர்மமேவாநுசிந்தயேத்
ஆஹாரோ ஹி மநுஷ்யாணாம் ஜந்மநா ஸஹ ஜாயதே

என்று பராசரகீதாதிகளிலும்,

ந ஸந்நிபதிதம் தர்ம்யம் உபபோகம் யத்ருச்சயா
ப்ரத்யாசக்ஷே ந சாப்யேநம் அநுருந்தே ஸுதுர்லபம்

என்று அஜகரோபாக்யாநத்திலும் சொல்லுகிறபடியே சாஸ்த்ரவிருத்தமல்லாத விஷயங்கள் தான் ஒரு விரகு செய்யாதிருக்க பகவத் ஸங்கல்பத்தாலே தாமே வரக்கண்டு ப்ராரப்தகர்மபலமான தனிசு தீருகிறதென்று விலக்காதே அநுபவிக்கையும்.

**விளக்கம்** – கீழே உள்ள வரிகள் காண்க:

- உத்பத்தி ஸ்திதி நாசாநாம் ஸ்திதௌ சிந்தா குதஸ்தவ யத் உத்பத்தி: யதா நாச: ஸ்திதிஸ்த த்வத்பவிஷ்யதி– பிறத்தல், இருத்தல், இறத்தல் ஆகியவற்றுள்

இருத்தலைப் பற்றி மட்டும் நான் ஏன் கவலை கொள்ளவேண்டும்? பிறத்தல், இறத்தல் போன்றே இருத்தலும் உண்டாகிறது.

- மஹாபாரதம் சாந்திபர்வம் (339-15) - அசேஷ்டமாநமாஸீநம் ஸ்ரீ: கிஞ்சித் உபதிஷ்டதி கர்மீ கர்மாநுஸ்ருத்யாந்யோ ந ப்ராச்யமதிகச்சதி– ஏதும் செய்யாமல் உள்ளவனிடம் செல்வமாகிய லக்ஷ்மீ தானாகவே வருகிறாள். ஆனால், தனது உடலைக் காப்பதற்காக பெரும் முயற்சி எடுக்கும் ஒருவன் உணவை ஈட்டவும் கடினப்படுகிறான். இது ஒருவனது பூர்வ கர்மங்களால் நடைபெறுகிறது.

புருஷார்த்தத்தில் மட்டுமே தனது சிந்தனையை நிலைநிறுத்திய ஒருவன், தனது பூர்வ கர்ம பலன்களுக்கு ஏற்றபடி ஈச்வரனால் இயக்கப்படும் உடல் பேணுதல் குறித்து சிறிதும் கவலை கொள்ளமாட்டான். தான் எத்தனை கவலையோ வருத்தமோ கொண்டாலும், ஸர்வேச்வரனின் ஸங்கல்பத்தின்படியே அனைத்தும் நடக்கும் என்று எண்ணியபடியே இருப்பான். இதனைக் கீழே உள்ள வரிகளில் காண்க:

- உத்பதந்நபி சாகாசம் விசந்நபி ரஸாதலம் அடந்நபி மஹீம் க்ருத்ஸ்நாம் நாதத்தமுபதிஷ்டதே– ஆகாயத்தில் எம்பிக் குதித்தாலும், பாதாள லோகம் சென்றாலும், பூமி முழுவதும் சென்றாலும், ஒருவனுக்கு கொடுத்து வைக்காத ஏதும் கிட்டாது.

- மஹாபாரதம் சாந்திபர்வம் (359-56) - யத் கிஞ்சித் த்வர்த்ததே லோகே ஸர்வம் தந்மத்விசேஷ்டிதம் அந்யோ ஹி அந்யச்சிந்தயதி ஸ்வச்சந்தம் விததாம்யஹம்– உலகில் நடப்பவை அனைத்தும் எனது செயலே ஆகும். ஆகவே மற்றவர்களின் எண்ணத்தைத் தள்ளி, நான் எனது விருப்பப்படியே செய்கிறேன்.

மேலே உள்ள வரிகளை மனதில் நிறுத்தி, ஈச்வரனின் ஸங்கல்பத்தின்படியே அனைத்தும் நடைபெறும் என்றும், அவன் ஸங்கல்பம் இன்றி ஏதும் நடக்காது என்றும் எண்ணியபடியே இருக்க வேண்டும். பராசரகீதை போன்றவற்றில் கீழே உள்ள வரிகளைக் காணலாம்:

- மஹாபாரதம் சாந்திபர்வம் (301-35) - அப்ரயத்நாகதா: ஸேவ்யா க்ருஹஸ்தைர்விஷயா: ஸதா ப்ரயத்நேநாபி கர்த்தவ்ய: ஸ்வதர்ம இதி மே மதி: - தங்களது முயற்சி சிறிதும் இல்லாமல், தானாகவே வரும் எதனையும் க்ருஹஸ்தர்கள் ஏற்கவேண்டும். ஆனால் தங்களுக்கு விதிக்கப்பட்ட தர்மங்களை பெரும் முயற்சி எடுத்தாகிலும் செய்யவேண்டும் என்பது என் கருத்து.

- நாஹாரம் சிந்தயேத் ப்ராஜ்ஞோ தர்மமேவாநுசிந்தயேத் ஆஹாரோ ஹி மநுஷ்யாணாம் ஜந்மநா ஸஹ ஜாயதே– சிறந்த அறிவுள்ளவன் தனது உணவைக் குறித்துக் கவலைப்பட வேண்டாம். தர்மத்தைப் பற்றி எண்ணியபடி இருந்தால் போதுமானது. ஒருவனின் பிறப்பின்போதே அவனது உணவும் அவன் கூடவே வருகிறது.

- மஹாபாரதம் சாந்திபர்வம் (177-34) - ந ஸந்நிபதிதம் தர்ம்யம் உபபோகம் யத்ருச்சயா ப்ரத்யாசக்ஷே ந சாப்யேநம் அநுருந்தே ஸுதுர்லபம்– எனது முயற்சி இல்லாமல் தானாகவே என்னிடம் வருகிற, தர்மங்களுக்கு ஏற்ற, அனுபவிக்கத் தகுந்தவற்றை நான் மறுக்காமல் ஏற்பேன். கடினப்பட்டுத் தேடவேண்டிய போகங்களை நான் நாடமாட்டேன்.

சாஸ்த்ரங்களால் தள்ளப்படாத விஷயங்கள், தான் எந்தவிதமான முயற்சியும் எடுக்காதபோதிலும், ஈச்வரனின் ஸங்கல்பம் காரணமாகத் தாமாகவே தன்னிடம் வருவதை ஒருவன் காணக்கூடும். இவற்றைக் கண்டு, தனது பூர்வ கர்மங்கள் பலன் அளிக்கத் தொடங்கிவிட்டன என்று அறிந்து, இவை மூலம் தனது கடன்கள் கழிவதாகவே எண்ணி, அவற்றைத் தடுக்காமல் அனுபவிக்கிறான்.

**மூலம்** - இப்படிக் கர்மவிசேஷாதீநமாக வருகிற ப்ராப்யாந்தர லாபாலாபங்களில்

தயோரேகதரோ ராசிர்யத்யேநமுபஸந்நமேத்
ந ஸுகம் ப்ராப்யம் ஸம்ஹ்ருஷ்யேத் ந துக்கம் ப்ராப்ய ஸம்ஜ்வரேத்

என்றும், “உளதென்றிறுமாவார்” என்றும் சொல்லுகிறபடியே ஹர்ஷசோகங்களற்று ஸ்வரூபாநுரூபமான பரம ப்ராப்ய கைங்கர்யத்திலே ருசியும்,

ஸ்தோத்ரத்திலும் ஸ்ரீவைகுண்டகத்யாதிகளிலும் “கடாகடா” என்று வாய் புலற்றப் பண்ணுகிற ப்ராப்தியில் த்வரையும் நடையாடிற்றாகில் – திருமந்த்ரத்தில் நாராயண சப்தத்தில் சதுர்த்தியாலும், த்வயத்தில் சதுர்த்தீ நமஸ்ஸுக்களாலும், சரமச்லோகத்தில் அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி என்கிற வாக்யத்தாலும் கடலைக் கையிட்டுக் காட்டுமாப்போலே காட்டப்பட்ட அபரிச்சேதமான பரம புருஷார்த்தத்திலே நிஷ்டையுண்டென்று அறியாலாம்.

**விளக்கம்** – புருஷார்த்த நிஷ்டை அடைந்த ப்ரபந்நன் ஒருவன் மோக்ஷம் அல்லாத ஒன்றை அடைய நேரிட்டால் மகிழ்வோ, அடையாவிட்டால் வருத்தமோ கொள்ளமாட்டான். இதனைக் கீழே உள்ளவற்றின் மூலம் அறியலாம். மஹாபாரதம் சாந்திபர்வம் (175-5) - தயோரேகதரோ ராசிர்யத்யேநமுபஸந்நமேத் ந ஸுகம் ப்ராப்யம் ஸம்ஹ்ருஷ்யேத் ந

துக்கம் ப்ராப்ய ஸம்ஜ்வரேத்– சுக துக்கங்களில் எஹொ ஒன்று வரும்போது, சுகத்தைக் கண்டு மகிழ்வோ, துன்பத்தைக் கண்டு துக்கமோ அடையக் கூடாது – என்றும், இரண்டாம் திருவந்தாதி (45) – உளதென்றிறுமாவார்– ஸர்வேச்வரனின் திருவடிகளைப் பணிந்தவர்கள் செல்வத்தை கண்டு கர்வமோ வருத்தமோ கொள்ளமாட்டனர் – என்றும் கூறியது காண்க. மாறாக, இப்படிப்பட்டவன் மற்ற விஷயங்களைக் குறித்து இன்பமோ துன்பமோ கொள்ளாமல், தன்னுடைய ஸ்வரூபத்திற்கு ஏற்றதும் புருஷார்த்தமும் ஆகிய ஸர்வேச்வரனின் கைங்கர்யம் என்பதிலேயே ஆசை உள்ளவனாக இருப்பான்.

இப்படிப்பட்டவன் ஸ்தோத்ர ரத்னத்திலும், ஸ்ரீவைகுண்டகத்யத்திலும் கூறியபடி, “எப்போது நான் நாராயணனை அடைவேன்?” என்று புலம்பியபடி, அந்த நாளை எதிர்நோக்கியபடியும் இருப்பான். இப்படியாக ஒருவன் இருந்தான் என்றால், அவன் மனம் மிகவும் உயர்ந்த புருஷார்த்தத்தில் நிலைநிற்கிறது என்பதைப் பெரிய கடல் ஒன்றைக் கையால் சுட்டிக் காட்ட இயல்வது போன்று, கீழே உள்ளவற்றின் மூலம் அறியலாம்: திருமந்த்ரத்தில் உள்ள நாராயணாய என்பதன் நான்காம் வேற்றுமை, த்வயத்தில் உள்ள நம:, சரமச்லோகத்தில் உள்ள அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி என்பவற்றின் மூலம் அறியலாம்.

## மூன்று நிஷ்டைகளின் அடையாளங்கள் உள்ளதை அறிவதால் என்ன பலன்

**மூலம்–** இப்படி அவ்வோ அடையாளங்களாலே

அஹமாத்மா ந தேஹ: அஸ்மி விஷ்ணுசேஷ: அபரிக்ரஹ:
தமேவ சரணம் ப்ராப்த: தத்கைங்கர்ய சிகிர்ஷயா

என்கிறபடியே மூலமந்த்ராதிகளைக் கொண்டு ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களில் தன்னுடைய நிஷ்டையை உணர்ந்து போரும் இவ்வதிகாரிக்கு

நைஷா பச்யாதி ராக்ஷஸ்யோ நிமாந் புஷ்ப பலத்ருமாந்
ஏகஸ்த ஹ்ருதயா நூநம் ராமமேவாநுபச்யதி

என்கிறபடியே விரோதியோடே கூடியிருக்கிற தனக்குப் பாக்ஷிகமாக ஸம்பாவிதமான ப்ரஹ்மவிதபசாராதி வ்யதிரிக்தங்களான ஏதேனுமொரு பீதிஹேதுக்களிலும் ஸ்வரூப ப்ராப்த கைங்கர்ய வ்யதிரிக்தங்களான ஏதேனுமொரு பீதிஹேதுங்களிலும் கண்ணோட்டம் உண்டாகாது. யத்ருச்சயா உண்டானாலும் அவற்றால் பீதியும் ப்ராப்தியும் உண்டாகாது.

**விளக்கம்** – இப்படியாக நிஷ்டையின் அடையாளங்கள் தன்னிடம் உள்ளதை அறிந்து கொள்ளும் ப்ரபந்நன் ஒருவன் தனது ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் ஆகியவற்றுக்கு ஏற்றபடியான ப்ரபந்நனின் நிலையில், தான் இருப்பதை உணர்ந்து கொள்கிறான். இதனை - அஹமாத்மா ந தேஹ: அஸ்மி விஷ்ணுசேஷ: அபரிக்ரஹ: தமேவ சரணம் ப்ராப்த: தத்கைங்கர்ய சிகிர்ஷயா – நான் ஆத்மா, சரீரம் அல்லன், எம்பெருமானுக்கு நான் அடிமை, எனக்கு அடிமை ஏதும் இல்லை, அவனுக்குக் கைங்கர்யம் செய்யவேண்டும் என்னும் ஆவல் காரணமாகவே அவனைச் சரணம் அடைந்துள்ளேன் – என்பதன் மூலம் அறியலாம். இப்படியாகத் தன்னிடம் நிஷ்டையின் அடையாளங்கள் உள்ளதை அறிந்து கொள்ளும் ப்ரபந்நன் ஒருவன், தனது புலன்கள் என்னும் விரோதிகளுடன் கூடி இருப்பதால் ப்ரஹ்மத்தை அறிந்தவர்களுக்குச் செய்யும் அபராதங்களைப் பற்றியும், தனது ஸ்வரூபத்திற்கு ஏற்றதான கைங்கர்யம் அல்லாதவற்றின் மூலம் கிட்டும் இன்பம் பற்றியும் மட்டுமே கவலைப்படுவான் அல்லாமல், வேறு எதனைப் பற்றியும் பயம் கொள்ள மாட்டான். இதனை இராமாயணம் ஸுந்தரகாண்டம் (16-25) - நைஷா பச்யாதி ராக்ஷஸ்யோ நிமாந் புஷ்ப பலத்ருமாந் ஏகஸ்த ஹ்ருதயா நூநம் ராமமேவாநுபச்யதி– அசோக வனத்தில் இருந்த சீதை அரக்கிகளைக் காண்பதில்லை, மலர்களும் பழங்களும் உள்ள மரங்களைக் காண்பதில்லை, இராமனிடம் மட்டுமே மனதை வைத்தவளாக, அவனை மட்டுமே பார்த்தபடி உள்ளாள் என்பது நிச்சயம் – என்பதில் காணலாம். இவற்றைத் தவிர மற்ற ஏதேனும் இவன் முன்பாகத் தோன்றினாலும், அவற்றைக் குறித்து அச்சமோ, வருத்தமோ கொள்ளமாட்டான்.

முக்கிய மந்திரம் காட்டிய மூன்றின் நிலையுடையார்
தக்கவையன்றித் தகாதவை ஒன்றும் தமக்கு இசையார்
இக்கருமங்கள் எமக்கு உளவென்னும் இலக்கணத்தால்
மிக்க உணர்த்தியர் மேதினி மேவிய விண்ணவரே.

**பொருள்** – மூன்று மந்த்ரங்களில் முக்கியமான திருமந்த்ரம் உணர்த்துகின்ற ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் ஆகிய மூன்றில் நிஷ்டையைக் கொண்டவர்கள் தங்களது நிஷ்டைக்கு ஏற்றதாக உள்ள கர்மங்களை தவிர, தங்களது ஸ்வரூபத்திற்கு ஏற்காததாக உள்ள மூன்றையும் நமக்குச் செய்யத்தக்கதாக உரைக்கமாட்டனர். இந்த நிஷ்டையின் அடையாளங்களைக் கொண்டு, அவை தம்மிடம் உள்ளன என்னும் ஞானம் உள்ளவர்கள், இந்த உலகத்தில் வாழ்கின்றபோதிலும் நித்யஸூரிகளே ஆவர்.

ஸ்வாப உத்வோத வ்யதிகர போக மோக்ஷாந்தராலே
காலம் கஞ்சித் ஜகாதி விதிநா கேநசித் ஸ்தாப்யமாநா:
தத்வ உபாய ப்ரப்ருதி ஸ்வாமி ததாம் ஸ்வநிஷ்டாம்
சேஷாம் க்ருத்வா சிரஸி க்ருதிந: சேஷமாயுர்நயந்தி

**பொருள்** – இந்த உலக வாழ்க்கை, மரணத்திற்குப் பின்னர் கிட்டும் மோக்ஷம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள காலம் என்பது உறங்குதல், விழித்தல் ஆகியவற்றுக்கு இடையே உள்ள கனவு காலம் போன்றதே ஆகும். இந்த இடைவெளியில் ப்ரபந்நர்கள் ஏதோ ஒரு காரணத்தினால் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தங்கள் தலையில் தத்வம், உபாயம் மற்றும் புருஷார்த்தம் ஆகியவற்றில் தங்களுக்கு உள்ள நிஷ்டை என்பதை எம்பெருமான் தங்களது தலையில் கட்டிவிட்ட திருப்பரிவட்டம் என்றே எண்ணி, மீதம் உள்ள நாட்களை கழிக்கின்றனர்.

## ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரம் ஸம்பூர்ணம்

## 15. உத்தரக்ருத்யாதிகாரம்
## (ப்ரபத்திக்குப் பின்னர் உள்ள கடமைகளைக் கூறும் அதிகாரம்)

ஸந்தோஷார்த்தம் விம்ருசதி முஹு: ஸத்பி: அத்யாத்மவித்யாம்
நித்யம் ப்ரூதே நிசமயதி ச ஸ்வாது ஸூவ்யாஹ்ருதாநி
அங்கீகுர்வந் அனத லலிதாம் வ்ருத்திமாதேஹபாதாம்
த்ருஷ்ட அத்ருஷ்ட ஸ்வ பர விகமே தத்தத்ருஷ்டி: ப்ரபந்ந:

**பொருள்**– ப்ரபத்தியைக் கைக்கொண்ட ஒருவன், கண்ணால் காணக்கூடிய இந்த வாழ்க்கை மற்றும் காண இயலாத மோக்ஷ வாழ்க்கை ஆகிய இரண்டைப் பொறுத்தவரையில், தனது பொறுப்பு நீங்கியது என்பதில் மாறாத சிந்தனை கொண்டுள்ளான். அவன் தனது உடல் விழும்வரையில் செய்வது என்னவெனில் – எந்தவிதமான தோஷமும் இன்றி இனிமையாக உள்ள தனது வாழ்நாளை, தனது மனமகிழ்வுக்காக, சான்றோர்களுடன் கூடி நின்று, ஸ்ரீபாஷ்யத்தை எப்போதும் ஆராய்ந்தபடி உள்ளான். செவிகளுக்கு இன்பம் அளிப்பதான ஆழ்வார்களின் பாசுரங்களை எப்போதும் அனுஸந்தானம் செய்தபடி உள்ளான். இவற்றை மற்றவர்களுக்கும் கூறுகிறான்.

**மூலம்**– இப்படி க்ருதக்ருத்யனாய் ஸ்வநிஷ்டையைத் தெளிந்து சரீரத்தோடிருந்த காலம், பழந்திருவிடையாட்டத்திலே சிறிதிடத்தை அடைத்துக் கொண்டிருப்பாரைப்போலே, ஒரு படி துவக்கற்று ஒரு படி துவக்குண்டிருக்கிற இவ்வதிகாரிக்கு முக்தருடைய கைங்கர்ய பரம்பரைபோலே ஸ்வாதுதமமாகையாலே ஸ்வயம்ப்ரயோஜநமாய், சாஸ்த்ர விமுக்த பாலவிசேஷ நியதமாய், உத்தரகைங்கர்யத்துக்கு அவஸர லாபார்த்தமாகப் பூர்வ கைங்கர்யம் தலைக்கட்ட வேண்டும்படி சங்கிலித் துவக்காய், ஸ்வாமிஸம்ப்ரீதிக்கு காரணமுமாய், கார்யமுமாய், "வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன்போது" என்றும், "சீர் கலந்த சொல் நினைந்து போக்காரேல்

சூழ்வினையினாழ்துயரை என் நினைந்து போக்குவர் இப்போது" என்றும், "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்" என்றும், "பொங்கேழ் புகழ்கள் வாயவாய்ப் புலன்கொள் வடிவு என மனத்ததாய் அங்கேய் மலர்கள் கையலாய் வழிபட்டோட அருளில்" என்றும், "நாடாத மலர் நாடி" என்றும், "வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடியைக் கொடுவினையேனும் பிடிக்க" என்றும், "தனக்கேயாக எனைக்கொள்ளும் ஈதே" என்றும், "உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்றும், "பள்ளிகொள்ளுமிடத்து அடிகொட்டிடக் கொள்ளுமாகில்" என்றும், "எண்ணைக் கண்ட விரல்கள்" என்றும், "உண்ணா நாள் பசியாவதொன்றில்லை ஓவாதே நமோ நாரணாவென்று எண்ணா நாளும் இருக்கெகச் சாமவேத நாண்மலர் கொண்டு உனபாதம் நண்ணா நாள் அவை தத்துறமாகில் அன்று எனக்கு அவை பட்டினி நாள்" என்றும், "நாக்கு நின்னையல்லால் அறியாது நானதஞ்சுவன் என் வசமன்று" என்றும், "வாய் அவனையல்லது வாழ்த்தாது" என்றும், "தோள் அவனையல்லால் தொழா" என்றும், "நயவேன் பிறர் பொருளை" என்றும், "நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டும்" என்றும், "இருளிரிய", "ஊனேறு செல்வத்து", "நீணாகஞ் சுற்றி" என்னும் திருமொழிகளிலும்,

பத்யு: ப்ரஜாநாமைச்வர்யம் பசூநாம் வா ந காமயே
அஹம் கதம்போ பூயாஸம் குந்தோ வா யமுநாதடே என்றும்,

குருஷ்வ மாமநுசரம் வைதர்ம்யம் நேஹ வித்யதே
க்ருதார்த்த: அஹம் பவிஷ்யாமி தவ சார்த்த: ப்ரகல்பதே

அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதச்ச தே
பரவாநாஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷசதம் ஸ்திதே

ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத என்றும்,

காமயே வைஷ்ணவத்வம் து ஸர்வஜந்மஸு கேவலம் என்றும்,

வர்த்தமான: ஸதா சைவம் பாஞ்சகாலிக வர்த்தமான
ஸ்வார்ஜிதைர்கந்த புஷ்பாத்யை: சுபை: சக்த்யநுரூபத:

ஆராதயந் ஹரிம் பக்த்யா கமயிஷ்யாமி வாஸராந் என்றும்,

சொல்லுகிறபடியே ஸ்வரூபாநுரூப காலக்ஷேபார்த்தமான உத்தரக்ருத்யமிருக்கும்படி.

**விளக்கம்** – இப்படியாகச் செய்யவேண்டியதைச் செய்த ஒருவன் (ப்ரபத்தியைச் செய்தவன்), தனக்கு நிஷ்டை உண்டானதை அறிந்து கொண்ட ஒருவன், தன்னுடைய உடல் இந்த உலகில் உள்ளவரை எப்படி இருத்தல் வேண்டும் என்றால் – தானியம் விளைகின்ற பூமியில் தனக்காக ஒரு சிறு பகுதியை மட்டும் வைத்துக் கொண்டிருக்கும் விவசாயி போன்று, தனக்காக ஏதேனும் சிலவற்றை மட்டுமே, சிறிதளவு மட்டுமே வைத்தபடி இருப்பான்; இவன் உலக விஷயங்களின் தொடர்பு பலவற்றைக் கைவிட்டபோதிலும், தனது சரீரம் போன்ற சிலவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளான் என்றாலும், நித்யஸூரிகளுக்கு எப்படிக் கைங்கர்யம் இனிமையாக உள்ளதோ அது போன்று இவனும் செய்தபடி இருக்கவேண்டும். இத்தகைய கைங்கர்யம் சாஸ்த்ரங்கள் மூலமாக விதிக்கப்பட்டு, இவையே முடிவுமாக உள்ளன. ஒரு கைங்கர்யம் முடித்தவுடன் அடுத்த கைங்கர்யம் என்று சங்கிலித் தொடர் போன்று இவற்றை இயற்றியபடி இருத்தல் வேண்டும். இதுவே அவனை ஸ்வாமியாக ஏற்றுக்கொள்ள வழியாகிறது. கீழே உள்ள பல வரிகள் காண்க:

- நான்முகன் திருவந்தாதி (63) - வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன்போது – அவனது திருக்கல்யாண குணங்கள் குறித்துப் படித்தும், கேட்டும், அவனை வணங்கியும், பூஜைகள் செய்து எனது காலத்தை நான் கழித்தேன்.

- பெரிய திருவந்தாதி (86) - சீர் கலந்த சொல் நினைந்து போக்காரேல் சூழ்வினையினாழ்துயரை என் நினைந்து போக்குவர் இப்போது – அவனுடைய குணங்களைக் கூறும் நூல்களைப் படிப்பதால் மட்டுமே ஆத்மாவைச் சூழ்ந்துள்ள துன்பத்தை நீக்கையலும், வேறு எதனை எண்ணி நீக்க இயலும்?

- திருவாய்மொழி (3-3-1) - ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம் – சற்றும் இடைவிடாமல் அவனுடன் கூடியிருந்து, அனைத்து நிலைகளிலும் தோஷம் இல்லாத கைங்கர்யம் செய்தல் வேண்டும்.

- திருவாய்மொழி (8-10-4) - பொங்கேழ் புகழ்கள் வாயவாய்ப் புலன்கொள் வடிவு என மனத்ததாய் அங்கேய் மலர்கள் கையலாய் வழிபட்டோட அருளிலே – அவனது ஓங்கி வளர்கின்ற குணங்களைக் கூறுகின்ற பாசுரங்கள் எனது வாயிலும், இந்த்ரியங்களை வெல்லவல்ல திருமேனி அழகு மனதிலும், அந்தத் திருமேனிக்கு ஏற்ற மலர்களை எனது கைகள் தூவும்படிச் செய்தலும் ஆகியவற்றைச் செய்தான் என்றால், எனக்கு என்ன குற்றம் உண்டாகும்.

- திருவாய்மொழி (1-4-9) - நாடாத மலர் நாடி – எளிதாகக் கிட்டாத மலர்களைத் தேடி அவனுக்காக அளிப்பதற்காகவே இந்த உடல் உள்ளது.

- திருவாய்மொழி (9-2-10) - வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடியைக் கொடுவினையேனும் பிடிக்க – அழகில் ஈடில்லாத பெரியபிராட்டியும், பூமிப்பிராட்டியும் வருடுகின்ற மென்மையான அவன் திருவடிகளைக் கடும் பாவங்கள் பலவற்றைச் செய்யும் நானும் பிடிக்க.

- திருவாய்மொழி (2-9-4) - தனக்கேயாக எனைக்கொள்ளும் ஈதே – தனது மகிழ்ச்சிக்காகவே என்னை அவன் வைத்துக் கொள்ளவேண்டும்.

- திருப்பாவை (29) - உனக்கே நாம் ஆட்செய்வோம் – உனக்கே நாங்கள் பல கைங்கர்யங்கள் செய்வோம்.

- நாச்சியார் திருமொழி (4-1) - பள்ளிகொள்ளுமிடத்து அடிகொட்டிடக் கொள்ளுமாகில் – அவன் சயனிக்கும் இடத்தில் அவனது திருவடிகளைப் பிடிக்கும் கைங்கர்யம் செய்யும்படி அவன் கருணை செய்தான் என்றால்.

- பெரியாழ்வார் திருமொழி (4-4-3) - எண்ணக் கண்ட விரல்கள் – அவனது திருநாமங்களை எண்ணுவதற்காகவே உள்ள விரல்கள்.

- பெரியாழ்வார் திருமொழி (5-1-6) - உண்ணா நாள் பசியாவதொன்றில்லை ஓவாதே நமோ நாரணாவென்று எண்ணா நாளும் இருக்கெகச் சாமவேத நாண்மலர் கொண்டு உனபாதம் நண்ணா நாள் அவை தத்துறமாகில் அன்று எனக்கு அவை பட்டினி நாள் – நான் உண்ணாமல் இருக்கின்றபோது எனக்குப் பசி ஏற்படுவதில்லை. ஆனால் திருமந்த்ரம் கூறாத நாள், மூன்று வேதங்களையும் ஓதாத நாள், புதிய மலர்களைக் கொண்டு வந்து உனது திருவடிகளில் சேர்க்காத நாள் ஆகிய நாள்களே எனக்குப் பட்டினி நாள்கள்.

- பெரியாழ்வார் திருமொழி (5-1-1) - நாக்கு நின்னையல்லால் அறியாது நானதஞ்சுவன் என் வசமன்று – எனது நாக்கு உன்னைக் கூறுவது அல்லாமல் வேறு எதனையும் அறியாது, இதனால் உனக்குக் குறை வந்துவிடுமோ என அச்சம் கொள்கிறேன்.

- முதல் திருவந்தாதி (11) - வாய் அவனையல்லது வாழ்த்தாது – அவனைத் தவிர வேறு யாரையும் எனது வாய் புகழாது.

- முதல் திருவந்தாதி (63) - தோள் அவனையல்லால் தொழா – எனது தோள்கள் அவனை அல்லாது வேறு யாரையும் வணங்காது.

- முதல் திருவந்தாதி (64) - நயவேன் பிறர் பொருளை – மற்றவர்கள் பொருளை நாடமாட்டேன்.

- திருச்சந்தவிருத்தம் (101) - நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டும் – நான் உன்னை எப்போதும் நினைக்கவேண்டும் என்று நீ கருணையுடன் எண்ணவேண்டும்.

- பெருமாள் திருமொழி (1) – இருளிரிய – திருவரங்கனை எப்போது காண்பேன்.
- பெருமாள் திருமொழி (4) – ஊனேறு செல்வத்து – திருவேங்கடமுடையானுக்கே ஆளாவேன்.

- பெரிய திருமொழி (11-7) –நீணாகஞ் சுற்றி– புலன்கள் அவனுக்கே ஆகவேண்டும்.

- பத்யு: ப்ரஜாநாமைச்வர்யம் பசூநாம் வா ந காமயே அஹம் கதம்போ பூயாஸம் குந்தோ வா யமுநாதடே – நான்முகன் அல்லது சிவனது ஐச்வர்யம் வந்தாலும் நான் விரும்பமாட்டேன். க்ருஷ்ணனின் திருவடிபட்ட யமுனையின் கரையில் நான் கடம்ப மரமாகவோ அல்லது குந்த மரமாகவோ இருக்க விரும்புவேன்.

- இராமாயணம் அயோத்யாகாண்டம் (31-22) - குருஷ்வ மாமநுசரம் வைதர்ம்யம் நேஹ வித்யதே க்ருதார்த்த: அஹம் பவிஷ்யாமி தவ சார்த்த: ப்ரகல்பதே– என்னை உனக்குத் தொண்டு செய்பவனாக ஏற்றுக் கொள்ளவேண்டும். இதனால் எனது தகுதி குறையாது. அப்படிச் செய்தால் கைங்கர்யம் என்னும் பலனை அடைவேன். நீயும் உன்னை அடைந்தவனைக் காப்பாற்றிய பலனைப் பெறலாம் (என இராமனிடம் இலக்குவன் கூறுகிறான்).

- இராமாயணம் ஆரண்யகாண்டம் (15-7) - அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதச்ச தே பரவாநாஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷசதம் ஸ்திதே ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத – இராமா! நீ நூறு ஆண்டுகள் இருந்தால் நானும் நூறு ஆண்டுகள் உனக்கு அடங்கியே இருப்பேன். உனது திருவுள்ளம் மகிழும் இடம் என்று பார்த்து ,அங்கு பர்ணசாலை அமைக்கும்படி நீ எனக்குக் கட்டளை இடவேண்டும்.

- ஜிதந்தே ஸ்தோத்ரம் (1-13) - காமயே வைஷ்ணவத்வம் து ஸர்வஜந்மஸு கேவலம் –அனைத்துப் பிறப்புகளிலும் அவனுக்குத் தொண்டனாய் நிற்பதையே விரும்புகிறேன்.

- வர்த்தமான: ஸதா சைவம் பாஞ்சகாலிக வர்த்தமான ஸ்வார்ஜிதைர்கந்த புஷ்பாத்யை: சுபை: சக்த்யநுரூபத: ஆராதயந் ஹரிம் பக்த்யா கமயிஷ்யாமி வாஸராந் – ஒவ்வொரு நாளையும் நான் ஐந்து பாகமாய்ப் பிரிப்பேன். அவற்றில் செய்யக்கூடியதான பகவத் கைங்கர்யங்களைச் செய்தபடி இருப்பேன். எனது திறனுக்கு ஏற்றபடி நான் ஈட்டிய சந்தனம், மலர்கள் கொண்டு பக்தியுடன் அவனை ஆராதனை செய்து எனது நாட்களைக் கழிப்பேன்.

## ஆசார்யனிடம் பொருள்களைக் கேட்டு அறிதல்

**மூலம்–** தன் நிஷ்டைக்கு அநுரூபமாகத் தெளியவேண்டும் அர்த்தங்களில் தனக்குத் தெளியாத நிலங்களை நான் க்ருதக்ருத்யனென்று அநாதரித்திராதே அநுபவபூர்த்தி யுண்டாம்போது தெளிவும் ப்ரேமமும் வேண்டுகையாலும்,

தத்பாத பக்தி ஞானாப்யாம் பலமந்யத் கதாசந
ந யாசேத் விஷ்ணும் யாசநாந்நச்யதி த்ருவம்

என்கிறபடியே ஞாநபக்திகளை அபேக்ஷித்தால் குற்றமில்லாமையாலும், தனக்கு சேஷி விஷயத்திலே சித்தரஞ்ஜனம் பிறக்கைக்காக, "பீதகவாடைப்பிரானார் பிரம குருவாகி வந்து" என்னும்படி நிற்கிற தெளிவுடைய பரமைகாந்திகள் பக்கலிலே,

தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா
உபதேக்ஷ்யந்தி ஞானம் ஞாநிநஸ்தத்த்வதர்சிந:

என்கிற கட்டளையிலே தெளியக்கேட்டு,

மந்தோப்யமந்ததாமேதி ஸம்ஸர்கேண விபச்சித:
பங்கச்சித: பலஸ்யேவ நிதர்ஷேணாவிலம் மய:

என்கிறபடியே பரிசுத்தஞானனாய்.

**விளக்கம்** – தான் என்ன செய்யவேண்டுமோ (ப்ரபத்தி) அதனைச் செய்தாகிவிட்டது என்று எண்ணியபடி ஒருவன் இருந்துவிடக் கூடாது. அந்த நிலையில் தான் அறியாதவற்றைக் கற்பதில் ஆர்வம் இருக்கவேண்டும். அந்த நிலையில் எம்பெருமானுடன் சேர்ந்து மகிழ்வுடன் இருந்தபோதிலும், ஞானமும் ப்ரேமையும் மிகவும் அவசியமாகும். தத்பாத பக்தி ஞானாப்யாம் பலமந்யத் கதாசந ந யாசேத் விஷ்ணும் யாசநாந்நச்யதி த்ருவம் – ஸர்வேச்வரனுடைய திருவடிகளில் ஒருவன் பக்தி மற்றும் ஞானம் ஆகிய இரண்டை மட்டுமே கேட்கவேண்டும்; இவற்றைத் தவிர வேறு பலன்களைக் கேட்பவன் கெட்டுப் போவது உறுதி – என்ற ச்லோகத்திற்கு ஏற்ப ஞானம் மற்றும் ப்ரேமையை எம்பெருமானிடம் கேட்பதால் எந்தக் குற்றமும் இல்லை. தன்னுடைய எஜமானனாகிய எம்பெருமானைக் குறித்து மயக்கம் அற்ற ஞானம் அடையும் பொருட்டு, பெரியாழ்வார் திருமொழி (5-2-8) - பீதகவாடைப்பிரானார் பிரம குருவாகி வந்து – என்று கூறுவது போன்றுள்ள ஆசார்யனிடம் கேட்டுத் தெளியவேண்டும். அவர்களிடமிருந்து கீதை (4-34) - தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா உபதேக்ஷ்யந்தி ஞானம் ஞாநிநஸ் தத்த்வதர்சிந: - உனது ஆசார்யனைப் பணிந்து, உனது சந்தேகங்களை அவரது திருவடிகளில் வைத்து, அவருக்குக் கைங்கர்யம் செய்வாயாக; அதன் பின்னர் ஆத்மாவைக் குறித்து அவரிடம் கேட்டு அறிவாயாக; உனது சந்தேகங்களை அவர் தெளிய வைப்பார் – என்னும் ச்லோகத்தின் அடிப்படையில் ஞானம் பெறவேண்டும். இதனால் தூய்மையான ஞானம் பெறுவான். இதனை காளிதாஸனின் மாளவிகாக்நிமித்ரம் - மந்தோப்யமந்ததாமேதி ஸம்ஸர்கேண விபச்சித: பங்கச்சித: பலஸ்யேவ நிதர்ஷேணாவிலம் மய: - நீரின் கலக்கத்தை நீக்கும் தேத்தாங்கொட்டையைத் தேய்ப்பதன் மூலம் கலக்கமாக உள்ள நீர் தெளிவது போன்று, அறிஞனின் சேர்க்கையால் மூடனும் ஞானம் அடைவான் – என்பதில் காண்க.

## பரமைகாந்திகளைப் பின்பற்றுதல்

**மூலம் –**

யஸ்யாநுபவ பர்யந்தா புத்திஸ்தத்த்வே ப்ரதிஷ்டிதா
தத்த்ருஷ்டி கோசரா: ஸர்வே முச்யந்தே ஸர்வகில்பிஷை:

என்கிறபடியே இவ்வர்த்தங்களில் நிஷ்டையுடையவர்களுடனே நெருங்கி வர்த்தித்து, அவர்கள் அநுஷ்டானங்களில், யாவாநர்த்த உதபாநே ஸர்வத: ஸம்ப்லுதோதகே என்கிற ப்ரகாரத்திலே தன் வர்ண ஆச்ரம ஜாதி குணாதிகளுக்கு அநுரூபமான கர்த்தவ்யாம்சத்தை நிஷ்கரித்து அநுஷ்ட்டித்து, இவ்வநுஷ்ட்டாநாதிகளையுடையோமென்னும் பாவநை யடியாக வரும் ஸ்வோத்கர்ஷ பரநிகர்ஷ அநுஸந்தாநங்களாகிற படுகுழிகளைத் தப்பும்படி தான் முன்னடி பார்த்து நடக்கவும்,

**விளக்கம்** – ஸாத்வத ஸம்ஹிதை - யஸ்யாநுபவ பர்யந்தா புத்திஸ்தத்த்வே ப்ரதிஷ்டிதா தத்த்ருஷ்டி கோசரா: ஸர்வே முச்யந்தே ஸர்வகில்பிஷை: - பகவத் அனுபவத்தை எல்லையாகக் கொண்ட தத்வ ஞானத்தை உடைய ஒருவனது கடாக்ஷத்திற்கு இலக்காக உள்ளவர்கள், அனைத்து பாவங்களும் நீங்கப்பெறுவர் – என்றது காண்க. ஆகவே ப்ரபந்நன் ஒருவன், தத்வ ஞானம் உள்ளவர்களுடன் நெருக்கமாக வாழ்தல் வேண்டும். கீதை (2-46) - யாவாநர்த்த உதபாநே ஸர்வத: ஸம்ப்லுதோதகே– பலருக்கும் பயன்படும் ஏரியில் இருந்து அவரவர் தேவைக்கேற்ப எடுப்பது போன்று – என்ற ச்லோகத்தின்படி, தனது வர்ணாச்ரம தர்மங்களுக்கு எது தேவை என்பதை அறிந்து அதன்படி செயல்களைச் செய்தபடி இருத்தல் வேண்டும். மேலும் இந்தப் பாதையில் மிகவும் எச்சரிக்கையுடன் நடத்தல் வேண்டும். காரணம், தான் அனைத்தையும் கடைபிடிப்பதால் மிகவும் உயர்ந்தவன் என்றும், மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் எண்ணம் உருவாகலாம். இதனால் படுகுழியில் விழக்கூடும்.

## கார்ப்பண்யத்தை விடாமல் இருத்தல்

**மூலம்** – தனக்கு சரண்யப்ரஸாத விசேஷமூலமாக நம்மாழ்வார் நாதமுநிகளுள்ளிட்டார்க்குப் போலே ஸாக்ஷாத்காராதிகளாகிற பலோத்கமபர்வங்கள் வந்தாலும் “நன்மை தீமைகளொன்றுமறியேன்” என்றும், “அறிவனேலும் இவையெல்லாம் என்னால் அடைப்பு நீக்கொண்ணாது” என்றும் நிச்சயித்துப் பராதீந ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தியான தன் அதிகாரத்திலே சொருகின ஆகிஞ்சந்யத்தை அழியமாறாதே அஹமஸ்ம்ய பராதாநாமாலப: ஆகிஞ்சநோ அகதி: இத்யாதிகளை அடியொற்றி நடக்கிற “நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்”, “என்னான் செய்கேன்”, “களைவாய் துன்பங்களை யாதொழிலாய் களைகண் மற்றிலேன்”, “புகலொன்றில்லா அடியேன்”, “ஆவிக்கு ஓர் பற்றுக் கொம்பு நின்னலால் அறிகின்றிலேன்”, “கறவைகள் பின்சென்று”, “குளித்து மூன்றனலையோம்பும்”, ”குலங்களாய ஈரிரண்டில்”, “ஏழை ஏதலன்”, “பற்றேல் ஒன்றுமிலேன்”, “தருதுயரம் தடாயேல்” என்கிற பாட்டுக்களிலும், ந தர்மநிஷ்ட: அஸ்தி என்கிற ச்லோகத்திலும் இவர்கள் அருளிச்செய்த கார்ப்பண்யத்தின் சுவடுகளை எல்லாம் அவலம்பித்துக் கொண்டுபோரவும்.

**விளக்கம்** – ஒருவனுக்கு ஸர்வேச்வரனின் கடாக்ஷம் காரணமாக, நம்மாழ்வார் மற்றும் நாதமுனிகள் ஆகியோருக்கு உண்டானது போன்று அவனது தரிசனம் முதலான பலன்கள் கிட்டக்கூடும். இப்படி உண்டானாலும் அவன் கர்வம் கொள்ளாமல், பெரியாழ்வார் திருமொழி (5-1-3) - நன்மை தீமைகளொன்றுமறியேன்– எனக்கு எது நன்மை எது தீமை என்று அறியமாட்டேன் – என்றும், பெரியதிருவந்தாதி (3) - அறிவனேலும் இவையெல்லாம் என்னால் அடைப்பு நீக்கொண்ணாது– நல்லது கெட்டதை நான் அறிய நேர்ந்தாலும் நல்லதை எடுத்துக் கொள்ளவோ தீயதை விலக்கவோ என்னால் இயலாது – என்றும் இருக்கவேண்டும். இப்படியாக ஸர்வேச்வரனை மட்டுமே சார்ந்துள்ளதான தனது ஸ்வரூபம், இருப்பு, செயல்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ள

ஆகிஞ்சந்யம் (வேறு உபாயம் இல்லை என்னும் நிலை) மாறாதபடி அவன் இருத்தல் வேண்டும். அவன் அஹிர்புத்ந்யஸம்ஹிதை - அஹமஸ்ம்ய பராதாநாமாலப: ஆகிஞ்சநோ அகதி: - நான் அபராதங்களின் இருப்பிடம், என்னைக் காப்பாற்றிக்கொள்ள வேறு உபாயம் இல்லை, உன்னை அடையும் உபாயம் வேறு ஏதும் இல்லை – என்று கூறும்படியாக உள்ள நிலையில் இருத்தல் வேண்டும். மேலும் கீழே உள்ள பல வரிகளிலும் காணப்படும் கார்ப்பண்யத்தை (வேறு உபாயம் இல்லை என்று, கர்வம் நீங்கி, எம்பெருமானின் கருணை உண்டாகும்படி தாழ்ந்து நிற்றல் (கைவிடாமல் இருத்தல் வேண்டும்.

- திருவாய்மொழி (5-7-1) - நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன் – சிறந்த அநுஷ்டானம், ஞானம் அற்றவன்
- திருவாய்மொழி (5-8-3) - என்னான் செய்கேன் – நான் என்ன செய்யப்போகிறேன்
- திருவாய்மொழி (5-8-8) - களைவாய் துன்பங்களை யாதொழிலாய் களைகண் மற்றிலேன் – நீ எனது ஸம்ஸார துன்பங்களை நீக்கினாலும் நீக்காவிட்டாலும் உன்னைத் தவிர எனக்கு வேறு கதி இல்லை
- திருவாய்மொழி (6-10-10) - புகலொன்றில்லா அடியேன் – வேறு கதியில்லாத அடியேன்
- திருவாய்மொழி (10-10-3) - ஆவிக்கு ஓர் பற்றுக் கொம்பு நின்னலால் அறிகின்றிலேன்
- திருப்பாவை (28) - கறவைகள் பின்சென்று – பசுக்கள் பின்னே சென்று ஒன்றாக உண்போம்
- திருமாலை (25) - குளித்து மூன்றனலையோம்பும் – நீராடிய பின்னர் மூன்று அக்னிகளைக் காக்கவேண்டியதான அந்தணத் தன்மையை நான் அழித்துக்கொண்டேன்
- திருச்சந்தவிருத்தம் (90) - குலங்களாய ஈரிரண்டில் – தர்மங்களை செய்யக்கூடிய பிறவியில் பிறக்கவில்லை
- பெரியதிருமொழி (5-8-1) - ஏழை ஏதலன் – ஞானம் இல்லாதவன், நல்ல தொடர்பு அற்றவன்
- பெரியதிருமொழி (1-9-9) - பற்றேல் ஒன்றுமிலேன் – எந்தவிதமான ஆதாரமும் எனக்கு இல்லை
- பெருமாள் திருமொழி (5-1) - தருதுயரம் தடாயேல் – எனது துன்பங்களை நீ தடுக்காவிடில்
- ஆளவந்தாரின் ஸ்தோத்ரம் (22) - ந தர்மநிஷ்ட: அஸ்தி– நான் எந்தவிதமான தர்மங்களும் அற்றவன்

## இதுநாள் இழந்ததை எண்ணித் தளராமல் இருத்தல்

**மூலம்** – இப்படித் தனக்கு அநாதிகாலம் பிறந்த அநர்ஹதையையும் அதடியாக இழந்த கைங்கர்யத்தையும் பார்த்து, “பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும்” என்று அலற்றப்பண்ணும் நிர்வேத ப்ராசுர்யத்தாலே அவஸந்நனாகாதே “உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா” என்கிறபடியே எதிர் சூழல்புக்கு நிற்கிற சரண்யனுடைய தாய் முலைப்பால்போலே பத்யதமமுமாய் ப்ரியதமுமான உபதேசத்தாலே தெளிந்த அவதார ரஹஸ்யாதிகளாகிற தீர்த்தங்களை அவகாஹித்துத் தேறி, உத்தமே சேத்வயஸி ஸாதுவ்ருத்த: என்றும்,

துராசார: அபி ஸர்வாசீ க்ருதந்தோ நாஸ்திக புரா
ஸமாச்ரயேதாதிதேவம் ச்ருத்த்யா சரணம் யதி
நிர்த்தோஷம் வித்தி ஜந்தும் ப்ரபாவாத் பரமாத்மந: என்றும்,

யத்ப்ரஹ்மகல்ப நியுதாநுபவே அப்யநாச்யம்
தத் கில்பிஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே
ஏவம் ஸதா ஸகலஜந்மஸு ஸாபராதம்
க்ஷாம்யஸ்யஹோ ததாபிஸந்தி விராம மாத்ராத் என்றும்,

ப்ரவஹத்யேவ ஹி ஜலே ஸேது: கார்யோ விஜாநதா என்றும்,

”மாளும் ஓரிடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே” என்றும் சொல்லுகிற ந்யாயத்தாலே கதத்துக்குச் சோகியாதே, கதமான அயோக்யதையைக் கண்டு அகலவும் பாராதே, அபர்யநுயோஜ்யமாய் அநவதிகமான சரண்யப்ரபாவத்தாலே இப்போது பிறந்த யோக்யதையைக் கண்டு, வருகிற நீருக்கு அணை கோலுங்கணக்கிலே இவ்வவஸ்தைக்கு அநுரூபமான ஆஜ்ஞா அநுஜ்ஞா அநுவர்த்தநமாகிற கைங்கர்யாநுபவத்தை இழவாதே.

**விளக்கம்** – தான் இத்தனை காலமாக தகுதி இழந்து இருந்த நிலையையும், இதனால் ஸர்வேச்வரனுக்குச் செய்யவேண்டிய கைங்கர்யங்களைச் செய்யாமல் விட்டதையும் உணரும் ப்ரபந்நன், தனது நிலையைக் கண்டு மிகவும் துவண்டு போகக்கூடும். இதனால் திருவிருத்தம் (1) - பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும்– விபரீதமான ஞானம், தீய ஒழுக்கம், அசுத்தமான சரீரம் – என்று கூறுவது போன்று, தன்னைத்தானே மிகவும் நிந்தித்துக் கொண்டு, அதனால் தளர்ச்சி அடையாமல் இருத்தல் வேண்டும். திருவிருத்தம் (1) - உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா– இது போன்ற பிறவிகளில் பிறக்காமல் காப்பதற்காக நீ பல அவதாரங்கள் எடுத்தாய் – என்று கூறுவதை எண்ணி உறுதி கொள்ளவேண்டும். தாய்ப்பால் போன்ற இனிமையான ஸர்வேச்வரன் தன் முன்பாக நின்று தன்னைக்

காப்பாற்றும் பொருட்டு கூம் சொற்களை எண்ணியபடி இருக்கவேண்டும் (உதாரணமாக கீதையில் – பரித்ராயாண ஸாதூநாம், ஸம்பவாமி யுகே யுகே, அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ போன்றவை). அவனது அவதார ரஹஸ்யங்கள் என்னும் நீர் நிலைகளில் குடைந்து நீராடவேண்டும். கீழே உள்ள வரிகளை எண்ணியபடி இருக்கவேண்டும்:

- போதாயந ஸூத்ரம் (1-10-32) - உத்தமே சேத்வயஸி ஸாதுவ்ருத்த: - முதுமையில் நல்ல ஒழுக்கத்துடன் இருந்தால் நன்மையைப் பெறுவான்.

- ஸாத்த்வத ஸம்ஹிதை (16-23-24) - துராசார: அபி ஸர்வாசீ க்ருதந்தோ நாஸ்திக புரா ஸமாச்ரயேதாதிதேவம் ச்ருத்த்யா சரணம் யதி நிர்த்தோஷம் வித்தி ஜந்தும் ப்ரபாவாத் பரமாத்மந: - ஒருவன் தீய ஒழுக்கம் கொண்டவனாக, அனைத்தையும் உண்பவனாக, நன்றி கெட்டவனாக, நாஸ்திகனாக இருக்கக்கூடும். ஆயினும் ஸர்வேச்வரனை சரணம் புகுந்த பின்னர், அவனது கடாக்ஷம் காரணமாக குற்றங்கள் நீங்கப்பெறுவான்

- ஸ்ரீவைகுண்டஸ்தவம் (61) - யத்ப்ரஹ்மகல்ப நியுதாநுபவே அப்யநாச்யம் தத் கில்பிஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே ஏவம் ஸதா ஸகலஜந்மஸு ஸாபராதம் க்ஷாம்யஸ்யஹோ ததாபிஸந்தி விராம மாத்ராத் – நான்முகனின் காலத்தில் பதினாயிரம் கல்ப காலங்கள் அநுபவித்தாலும் கழியாத தீயபலன்களை அளிக்கக்கூடிய பாவங்களை ஒருவன் அரை நொடியில் செய்யக்கூடும். இப்படியாக அனைத்துப் பிறவியிலும் பாவங்களையே ஒருவன் செய்துவந்தாலும், "பாவங்களைச் செய்யமாட்டேன்" என்ற நினைவு அவனுக்குத் தோன்றிவிட்டாலே நீ மன்னித்துவிடுகிறாய்.

- வங்கிபுர நம்பி காரிகை (31) - ப்ரவஹத்யேவ ஹி ஜலே ஸேது: கார்யோ விஜாநதா – கழிந்துவிட்ட பிறவி கழிந்ததே. அறிவாளி ஒருவன் தண்ணீர் ஓடி வரும்போது அல்லவோ அணை இடுவான்?

- திருவாய்மொழி (3-8-1) - மாளும் ஓரிடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே – இறக்கும் காலத்திலாவது ப்ரபத்தி செய்து இறப்பது நலமே

இப்படியாக ஒருவன் தனது கடந்த கால நிலையை எண்ணி வருத்தம் கொண்டு , எம்பெருமானை விட்டு அகன்று செல்லக்கூடாது. மாறாக, தனக்கு இப்போது வாய்த்துள்ள "ஏன் என்ற கேள்வி எழாமல், எல்லையற்ற எம்பெருமானின் பெருமையால்" உண்டான தகுதியை எண்ணி, இனிவரும் காலங்களில் வர உள்ள நீரைத் தடுக்க அணை கட்டுவது போன்று, மேன்மேலும் தகுதிகளுக்குத் தன்னைத் தயார் செய்து

கொள்ளவேண்டும். மேலும் எம்பெருமானின் ஆணை, கைங்கர்யங்கள் ஆகியவற்றில் நிலை நின்று, தனது ப்ரபந்நன் என்னும் நிலையை விடாமல் இருத்தல் வேண்டும்.

## இந்த்ரியங்களை வசப்படுத்தி முறையான விஷயங்களில் பயன்படுத்துதல்

**மூலம்–** முடியானேயிற்படியே விடாய்த்த கரணங்களை ஸாத்விக ஆஹார ஸேவாதிகளாலே யோக்யங்களாக்கிப் ப்ராப்தங்களான அநுபவங்களிலே மூட்டி அயோக்யவிஷயாந்தரங்களின் பட்டிபுக்க வாஸநைகளை மாற்றுவிக்கவும்,

**விளக்கம்–** திருவாய்மொழி (3-8-1) – முடியானே – என்பதில் கூறியபடி, தான் விரும்பியவாறு எம்பெருமானை அடைய இயலாத காரணத்தால் சோர்வு அடைந்த இந்த்ரியங்களை, எம்பெருமானை அனுபவிக்கத் தக்கதாக மாற்றவேண்டும். எப்படி என்றால் – தூய்மையான உணவு, அவனுக்கே தொண்டு செய்தல் முதலான செயல்கள் மூலம் ஆகும். பயிர்களை மேயவிடாமல் எவ்விதம் பசுக்கள் திருப்பிவிடப்படுகின்றனவோ அது போன்று, தவறான விஷயங்களில் இந்த்ரியங்கள் பாயாமல், திருப்பப்படவேண்டும்.

## கைங்கர்யங்களை சரியான வழியில் விருப்பத்துடன் செய்தல்

**மூலம்–** அக்கரையில் அபிமததேசத்துக்குப்போக ஓடம் பார்த்திருப்பார் நினைத்தபோது விடவொண்ணாத பணபந்த த்யூதத்திலிழியாதே வேண்டின மட்டிலே தலைக்கட்டுகைக்கு ஈடான விஹார த்யூதத்திலே இழிந்தாலும் த்யூதசாஸ்த்ரத்தின்படியே அடிதப்பாதே கருவி வைக்குமாப்போலே ஆஜ்ஞாநுஜ்ஞைகளாலே அடிமை கொள்ளுகிற சாஸிதாவினுடைய சாஸநத்துக்குப் பொருந்தின காலவிசேஷாதி நியதமான கைங்கர்யத்தை, பித்த பரிஹாரார்த்தமாக க்ஷீரஸேவை பண்ணுவாரைப் போலன்றிக்கே அயத்நலப்தமான ஔஷதத்தாலே அவிலம்பிதமாக ஆரோக்யம் பெற்றவர்கள் பால் வார்த்துண்ணுமாப் போலே, உகந்து பண்ணவும்.

**விளக்கம்–** ஓர் ஆற்றின் ஒரு கரையில் இருந்து எதிர்கரைக்குச் செல்ல விரும்புபவர்கள், ஓடத்திற்காகக் காத்திருக்கும் நேரத்தில், பொழுதுபோக்காகச் சொக்கட்டான் முதலான விளையாட்டில் ஈடுபடுவர். அப்போது அவர்கள் அவற்றைப் பந்தயத்துக்காக ஆடாமல், பொழுதுபோக்கிறாக மட்டுமே ஆடுவர். இதன் காரணம், பந்தயத்துக்காக ஆடினால், ஆடிக்கொண்டிருக்கும்போதே ஓடம் வந்துவிட்டால் நிறுத்த இயலாது. ஆனால் பொழுதுபோக்கிறாக ஆடினால், ஓடம் வந்துவிட்டால் ஆட்டத்தை நிறுத்திவிட்டு, ஓடத்தில் ஏறிவிடலாம். இவ்விதம் அவர்கள் பொழுதுபோக்கிறாக மட்டுமே ஆடினாலும், அந்த விளையாட்டிற்கான விதிமுறைகள் தவறாமலேயே ஆடுகின்றனர். இது போன்றே, ப்ரபந்நன் ஒருவன் எம்பெருமானால் விதிக்கப்பட்டவற்றைச் செய்யும்போது, அவனது கைங்கர்யமாக உள்ள அவற்றைச் செய்யும்போது, தனக்கு அவை பயன் அளிக்கும் என்ற

எண்ணத்துடன் செய்யவில்லை என்றாலும், சாஸ்த்ர முறைப்படியே செய்தல் வேண்டும். அவற்றை எந்த நேரத்தில், எந்த இடத்தில் இயற்றவேண்டுமோ, அந்த முறை மாறாமல் செய்தல் வேண்டும். இதனைச் செய்யும்போது இவனது நிலை எப்படி இருக்கவேண்டும் என்றால் – பித்தம் உள்ளவன், பித்தம் நீங்குவதற்காகப் பாலைப் பருகினான் என்னும்போது, இயல்பாகவே ருசி கொண்டதான பாலானது, மருந்தாகப் பருகப்படுவதால், இனிமையாக இருக்காது; ஆனால் பித்தம் நீங்கிய பின்னர் பாலைப் பருகும்போது மகிழ்வுடன் ருசித்துப் பருகுவான் (அதாவது, வேறு பலன் கருதி செய்யும் பகவத் கைங்கர்யங்கள், பித்தம் உள்ளவன் பருகும் பால் போன்று இனிக்காது. ப்ரபத்தி மூலம் கர்மங்களை நீக்கியவர்கள், பித்தம் நீங்கிப் பருகும் பால் இனிப்பது போன்று, பகவத் கைங்கர்யத்தால் இனிமை அடைவர்).

## அர்ச்சை நிலைக்குக் கைங்கர்யம் செய்தல்

**மூலம்–** அப்போது, நித்யஸித்தே ததாகாரே தத்பரத்வே ச பௌஷ்கர யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே தஸ்யாஸௌ ஸந்நிதிம் வ்ரஜேத் என்றும், யதா ஸாஸாமுத்ரமம்ப: அப்தை: ஸ்ப்ருஷ்டமேத்யுபோக்யதாம் ததைவ ஹி மநுஷ்யாணாம் பக்தை: ஸம்பாவிதோ ஹரி: என்றும் சொல்லுகிறபடியே ஓர் அதிகாரி விசேஷத்துக்காக ஸாந்நித்யாதிகளைப் பண்ணிப் பரமைகாந்தியான தன்னையுகந்து வந்து அர்ச்சாவதாரம் பண்ணியிருக்கிற எம்பெருமான் பக்கலிலே ஸர்வாதிசாயி ஷாட்குண்யம் ஸம்ஸ்திதம் மந்த்ர பிம்பயோ: என்கிற பூர்த்தியையும், ஆபீடாந்மௌலி பர்யந்தம் பச்யத: புருஷோத்தமம் பாதகாந்யாசு நச்யந்தி கிம் புநஸ்தூபபாதகம் என்கிற பாவநதமத்வத்தையும், ஸந்தர்சநாதகஸ்மாச்ச பும்ஸாம் ஸம்பூட சேதஸாம் குவாஸநா குபுத்திச்ச குதர்க்க நிசயச்ச ய: குஹேதுச்ச குபாவச்ச நாஸ்திகத்வம் லயம் வ்ரஜேத் என்கிறபடியே ப்ரத்யக்ஷாதி ப்ரமாணத்ரயத்திலும் ஹேதுபலபாவத்தாலே வரும் மதிமயக்குகளெல்லாவற்றுக்கும் மருந்தாய் இருக்கிற படியையும், யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம் என்றும், "தமருகந்தது எவ்வுருவம்" என்கிற பாட்டிலும் சொல்லுகிறபடியே அவாங்மனஸாபரிச்சேத்யமான ஆச்ரித பாரதந்த்ர்யத்தையும், "கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணா" என்கிற ஆகர்ஷகத்தையும் அநுஸந்தித்து,

ஸதீவ ப்ரியபர்த்தாரம் ஜநநீவ ஸ்தநந்தயம்
ஆசார்யம் சிஷ்யவந்மித்ரம் மித்ரவல்லாலயேத்திரம்
ஸ்வாமித்வேந ஸுஹ்ருத்வேந குருத்வேந ச ஸர்வதா
பித்ருத்வேந ததா பாவ்யோ மாத்ருத்வேந ச மாதவ:
யதா யுவாநம் ராஜாநம் யதா ச மதஹஸ்திநம்
யதா ப்ரியாதிதம் யோக்யம் பகவந்தம் ததா அர்ச்சயேத்

யதா ச புத்ரம் தயிதம் ததைவோபசரேத்திரம்

என்கிறபடியே அவ்வோ ஸம்பந்தவர்க்க பரத்வ ஸௌலப்யாதிகளுக்கு அநுரூபமான வ்ருத்தியைப் பண்ணவும்.

**விளக்கம்** – அவ்விதம் கைங்கர்யம் செய்யும்போது, தனக்கும் ஸர்வேச்வரனுக்கும் உள்ள உறவுமுறைக்கு ஏற்றபடியும், ஸர்வேச்வரனின் எஜமானத்தன்மை மற்றும் எளிமை ஆகியவற்றுக்கு ஏற்றபடியும் செய்தல்வேண்டும். தன்னிடம் ஆழ்ந்த அன்பு கொண்ட அடியார்களுக்காக அர்ச்சை ரூபமாக வந்துள்ள ஸர்வேச்வரனுக்கு ஏற்றபடி கைங்கர்யம் செய்யவேண்டும். பௌஷ்கர ஸம்ஹிதை - நித்யஸித்தே ததாகாரே தத்பரத்வே ச பௌஷ்கர யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே தஸ்யாஸௌ ஸந்நிதிம் வ்ரஜேத் – எப்போதும் நிலையாக உள்ள ஸர்வேச்வரனின் திருமேனி குறித்தும், அவன் அனைவரைக் காட்டிலும் உயர்ந்தவன் என்பது குறித்தும் யார் மனதில் உள்ளதோ அவன் அருகில் ஸர்வேச்வரன் எப்போதும் வருவான் - என்றும் ,பௌஷ்கர ஸம்ஹிதை - யதா ஸாலாமுத்ரமம்ப: அப்தை: ஸ்ப்ருஷ்டமேத்யுபோக்யதாம் ததைவ ஹி மநுஷ்யாணாம் பக்தை: ஸம்பாவிதோ ஹரி: - கடலில் உள்ள நீரைப் பருகிய மேகங்களால் மழையாகப் பொழியப்பட்ட பின்னர், அந்தக் கடல்நீரே அனைவராலும் பருகும்படியாக உள்ளது; இது போன்று எம்பெருமான் அர்ச்சையாக நின்ற பின்னர் அனைவராலும் கைங்கர்யம் செய்து, அனுபவிக்கும்படியாக உள்ளான் – என்றும் கூறியது காண்க. விஷ்வக்ஸேந ஸம்ஹிதை - ஸர்வாதிசாயி ஷாட்குண்யம் ஸம்ஸ்திதம் மந்த்ர பிம்பயோ: -மந்த்ரங்களில் காணப்படும் எம்பெருமானின் ஞானம் உள்ளிட்ட ஆறு குணங்களானவை அர்ச்சையாக உள்ள அவனது வடிவத்தில் காணப்படுகின்றன – என்பதன் மூலம் பூர்ணமாக உள்ளது கூறப்பட்டது. சாண்டில்ய ஸம்ஹிதை - (89-2)ஆபீடாந்மௌலி பர்யந்தம் பச்யத: புருஷோத்தமம் பாதகாந்யாசு நச்யந்தி கிம் புநஸ்தூபபாதகம் – அர்ச்சையாக நிற்கின்ற புருஷோத்தமின் ரூபத்தை திருவடிப்பீடம் தொடங்கி திருமுடிவரை காண்பவனின் அனைத்துப் பாவங்களும் உடனே அழிந்துவிடும், இப்படி உள்ளபோது சிறு பாவங்கள் குறித்துக் கூறவேண்டுமா – என்பதன் மூலம் அவனது அர்ச்சை ரூபமானது அனைத்து பாவங்களையும் நீக்கவல்லது என்பதை அறியலாம். பௌஷ்கர ஸம்ஹிதை- (32-31-1) ஸந்தர்சநாதகஸ்மாச்ச பும்ஸாம் ஸம்பூட சேதஸாம் குவாஸநா குபுத்திச்ச குதர்க்க நிசயச்ச ய: குஹேதுச்ச குபாவச்ச நாஸ்திகத்வம் லயம் வ்ரஜேத்– மதிமயக்கம் கொண்டவர்கள் அர்ச்சையாக நிற்கும் எம்பெருமானின் ரூபத்தைத் தற்செயலாக வணங்கினாலும் அவர்களது தீயவாஸனை, வஞ்சனைகளின் தொகுப்பு, தீய காரணம், தீய எண்ணங்கள் மற்றும் நாஸ்திகத்தன்மை ஆகியவை அழிந்துவிடும் – என்றது. இப்படியாக அறிவுதடுமாற்றம் என்னும் நோய்க்கு ஏற்ற மருந்தாக அர்ச்சாரூபம் உள்ளது.

மனம் மற்றும் வாக்கால் அளவிட இயலாதபடி உள்ள எம்பெருமான், தனது அடியார்களின் பொருட்டு, அவர்களுக்காகத் தன்னையும் கொடுத்தபடி நிற்கும் நிலையை எண்ணி த்யானித்தல் வேண்டும். இதனை – கீதை (4-11 - (யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம் – என்னை அடைய விரும்புகிறவர்கள் எந்த வடிவில் என்னை

அமைக்கின்றனரோ, அந்த வடிவிலேயே நான் என்னை அவர்களுக்குக் காண்பிக்கிறேன் - என்றும், முதல் திருவந்தாதி (44) - தமருகந்தது எவ்வுருவம் – அடியார்கள் அந்த உருவத்தை விரும்புகின்றனரோ – என்றும் கூறியது காண்க. மேலும் அமலனாதிபிரானில் (10) – கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணா – என்னும்படியாக அவனது அர்ச்சா ரூபத்தில் உள்ள ஈர்ப்பை அனுபவிக்க வேண்டும். அடுத்து அவனது எளிமை மற்றும் எஜமானத்தன்மை ஆகியவற்றுக்கு ஏற்றபடி கைங்கர்யம் செய்தல் வேண்டும். கீழே உள்ள பல வரிகள் காண்க:

- சாண்டில்ய ஸம்ஹிதை (4-37) - ஸதீவ ப்ரியபர்த்தாரம் ஜநநீவ ஸ்தநந்தயம் ஆசார்யம் சிஷ்யவந்மித்ரம் மித்ரவல்லாலயேத்திரம்– உண்மையான மனைவி தனது கணவனையும், பெற்ற தாய் தனது குழந்தையையும், சிஷ்யன் தனது ஆசானையும், நண்பன் தனது நண்பனையும் உபசரிப்பது போன்று ஸர்வேச்வரனை உபசரிக்க வேண்டும்.

- சாண்டில்ய ஸம்ஹிதை (4-38) - ஸ்வாமித்வேந ஸுஹ்ருத்வேந குருத்வேந ச ஸர்வதா பித்ருத்வேந ததா பாவ்யோ மாத்ருத்வேந ச மாதவ: - மஹாலக்ஷ்மியைத் தரித்த எம்பெருமானை எப்போதும் எஜமானன், நண்பன், ஆசார்யன், தந்தை, தாய் என எண்ணியபடி இருத்தல் வேண்டும்.

- சாண்டில்ய ஸம்ஹிதை (4-31) - யதா யுவாநம் ராஜாநம் யதா ச மதஹஸ்திநம் யதா ப்ரியாதிதம் யோக்யம் பகவந்தம் ததா அர்ச்சயேத்– இளவரசன் மற்றும் மதம் கொண்ட யானை ஆகியவர்களை எவ்விதம் பயந்து உபசரிப்போமோ, அது போன்று எம்பெருமானை உபசரிக்க வேண்டும். இதே போன்று வீட்டிற்கு வந்த விருந்தினரை மகிழ்வுடன் உபசரிப்பது போன்று எம்பெருமானை உபசரிக்க வேண்டும்.

- யதா ச புத்ரம் தயிதம் ததைவோபசரேத்திரம்– தனக்குப் பிரியமான குழந்தையைக் கொண்டாடுவது போன்று எம்பெருமானைக் கொண்டாட வேண்டும்.

### சரியான வழியில் ஈட்டிய பொருள் மூலம் கைங்கர்யம் செய்தல்

**மூலம்–** அப்போது

ததா ஹி யத்கார்யமுபைதி கிஞ்சித்துபாயநம் சோபஹ்ருதம் மஹார்ஹம்
ஸ பாதுகாப்யாம் ப்ரதமம் நிவேத்ய சகார பச்சாத்பரதோ யதாவத்

என்று திருவடிநிலைகள் விஷயத்தில் ஸ்ரீபரதாழ்வான் நடத்தின ராஜஸேவக வ்ருத்தியை ந்யாயார்ஜித த்ரவ்யங்களாலே நடத்தவும்,

**விளக்கம்** – இராமாயணம் அயோத்யாகாண்டம் (115-27) - ததா ஹி யத்கார்யமுபைதி கிஞ்சித்துபாயநம் சோபஹ்ருதம் மஹார்ஹம் ஸ பாதுகாப்யாம் ப்ரதமம் நிவேத்ய சகார பச்சாத்பரதோ யதாவத்– இராமனின் பாதுகைகள் அயோத்தியை ஆண்டபோது அன்றாடம் செய்யவேண்டிய செயல்களையும், சிற்றரசர்களிடம் வந்த பொருள்களையும் பாதுகைகளிடம் தெரிவித்த பின்னரே, பரதன் ஆகவேண்டியவற்றைச் செய்தான் – என்பது காண்க. இதே போன்று ப்ரபந்நன் ஒருவன் ந்யாயமான வழியில் ஈட்டிய பொருள்கள் கொண்டு அரசனுக்குச் செய்யவேண்டிய பணிவிடை போன்று கைங்கர்யம் செய்தல் வேண்டும்.

## கைங்கர்யத்தைத் தனது கடமை எனக் கொள்ளவேண்டும்

**மூலம்**– இவ்வ்ருத்தியை வாழ்க்கைப்பட்ட வதூவின் மாங்கல்ஸூத்ராதி ரக்ஷணமாத்ரமாக நினைத்திருக்கவும்.

**விளக்கம்**– இத்தகைய கைங்கர்யத்தை ஒருவன் எப்படி எண்ணவேண்டுமென்றால், திருமணம் ஆகிய பெண் தனது திருமாங்கல்யத்தை எப்படிப் பத்திரமாகப் பார்த்துக் கொள்வாளோ அது போன்று, தனது கடமை எனக் கொள்ளவேண்டும்.

## ஆசார்யனிடம் நன்றி

**மூலம்** – இப்படி பகவதுபக்ரமமாய் பாகவதபர்யந்தமாக வருகிற கைங்கர்யாக்ய புருஷார்த்த ஸித்திக்குப் ப்ரதானகாரணம்

பாபிஷ்ட: க்ஷத்த்ரபந்துச்ச புண்டரீகச்ச புண்யக்ருத்
ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாதாசார்யவாந் பவேத் என்றும்,

"எம்மீசர் விண்ணோர் பிரானார் மாசில் மலரடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே" என்றும், "வில்லிபுதுவை விட்டு சித்தர் தங்கள் தேவரை வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே" என்றும் சொல்லுகிறபடியே ஸதாசார்ய ஸம்பந்தமே என்று விச்வஸித்து, அபிஷேகம் பண்ணப் புகுகிற ராஜகுமாரனுக்கு ராத்ரியில் விளக்கேற்றி வைக்குமாப் போலே தனக்கு அவர்கள் பண்ணின வெளிச் சிறப்பையும் அதடியாகத் தனக்கு வந்த கைங்கர்யாதிகளையும் அநுஸந்தித்து அவர்கள் பக்கலிலே க்ருதஜ்ஞனாயிருக்கவும்.

**விளக்கம்–** எம்பெருமான் தொடக்கமாக அடியார்கள் முடிய உள்ள அனைவருக்கும் கைங்கர்யம் செய்தல் என்பதே தனது வாழ்வின் லட்சியம் என்பதையும், இந்த நிலையானது தன்னுடைய ஆசார்யனிடம் கொண்ட தொடர்பு காரணமாகவே தான் அடைந்ததாகவும் எண்ணியபடி இருத்தல் வேண்டும். இதனைக் கீழே உள்ள வரிகளில் காணலாம்:

- பாபிஷ்ட: க்ஷத்த்ரபந்துச்ச புண்டரீகச்ச புண்யக்ருத் ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாதாசார்யவாந் பவேத்– மிகுந்த பாவங்கள் செய்த க்ஷத்ரபந்துவும், மிகுந்த புண்ணியம் செய்த புண்டரீகனும் ஆசார்யர்களைக் கொண்டிருந்த காரணத்தால் மோக்ஷம் பெற்றனர். எனவே ஒவ்வொருவரும் ஆசார்யனை அடையவேண்டும்.

- திருவிருத்தம் (54) - எம்மீசர் விண்ணோர் பிரானார் மாசில் மலரடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே – எங்களது ஈசனும், வானவர்களின் தலைவனும் ஆகிய எம்பெருமானின் தோஷங்கள் இல்லாத திருவடித் தாமரைகளில் எங்களைச் சேர்க்கவல்ல ஆசார்யர்களே

- நாச்சியார் திருமொழி (10-10) - வில்லிபுதுவை விட்டு சித்தர் தங்கள் தேவரை வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே – ஸ்ரீவில்லிபுத்தூரின் தலைவரான பெரியாழ்வார் தனது எம்பெருமானைத் தன்னால் முடிந்த காரணத்தால் இங்கு அழைக்கும்போது, அவனை நாம் வணங்குவோமாக.

தன்னுடைய ஞானம் என்பது வெளிப்பட உதவியது ஆசார்யனே என்பதால் அவரிடம் நன்றியுடன் இருந்து, அந்த ஞானம் காரணமாகவே தனக்கு கைங்கர்யம் என்பது கிட்டியது என்பதையும் உணரவேண்டும். மறுநாள் அரியணை ஏறப்போகும் ராஜகுமாரன் ஒருவனுக்கு, அதற்கு முந்தைய நாள் இரவு முழுவதும் விழித்திருந்து அரண்மனையில் விளக்குகள் அணையாமல் பாதுகாக்கும் வேலைக்காரர்கள் போன்று ஆசார்யனிடம் இருத்தல் வேண்டும்.

## ஸர்வேச்வரனிடம் நன்றியுடன் இருத்தல்

**மூலம்–** இவையெல்லாவற்றிற்கும் ஸாதாரணமான ப்ரதாநகாரணமுமாய் முக்ததசையில் ஆத்மாநுபந்தியான பகவதநுபவத்தைப் பற்ற அபர்யநுயோஜ்ய ஸ்வாதந்த்ர்யமடியாக சங்கிதமாம் விச்சேதத்துக்கும் பரிஹாரமாயிருப்பது "இருளகற்றும் எறிகதிரோன் மண்டலத்தூடு ஏற்றிவைத்து ஏணி வாங்கி", என்றும், "போயினால் பின்னை இத்திசைக்கு என்றும் பிணை கொடுக்கிலும் போகவிட்டார்" என்றும், "வண்புகழ் நாரணன் திண்கழல்"

என்றும், “சன்ம சன்மாந்தரம் காத்து அடியார்களைக் கொண்டு போய்த் தன்மை பெறுத்தித் தன் தாளினைக் கீழ்க் கொள்ளுமப்பன்” என்றும், ”தன் தாளிணைக் கீழ்ச் சேர்த்து அவன் செய்யும் சேமத்தை” என்றும் சொல்லுகிறபடியே அபுநராவ்ருத்தியிலும் முன்பு ஸம்ஸரிப்பிக்கையிற்போலே ஸத்யஸங்கல்பனாய்ச் சேஷியான ச்ரிய:பதியினுடைய “பண்டை நாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின் கோயில் சீய்த்து” என்று சொல்லப்பட்ட ஸஹஜகாருண்யமென்று தெளிந்து அவ்விஷயத்திலும் க்ருதஜ்ஞனாயிருக்கவும் ப்ராப்தம்.

**விளக்கம்–** இவை அனைத்திற்கும் காரணமானவனும், முக்தி அடையும் நேரத்தில் அவனது அனுபவத்தைத் தடுக்கக்கூடிய அனைத்தையும் தனது ஸத்யஸங்கல்பத்தால் போக்கக்கூடியவனும் ஆகிய எம்பெருமான் விஷயத்தில் நன்றி கொண்டவனாக இருத்தல் வேண்டும். கீழே உள்ள பல வரிகளைக் காண்க:

- பெரியாழ்வார் திருமொழி (4-9-3) – இருளகற்றும் எறிகதிரோன் மண்டலத்தூடு ஏற்றிவைத்து ஏணி வாங்கி - திருவரங்கன் செய்வது என்னவென்றால் இருளை நீக்கவல்ல கதிர்கள் கொண்ட சூரிய மண்டலத்தில் தனது அடியார்களை ஏற்றி, பரமபதத்தில் அவர்களை நிலையாக நிறுத்தி, மீண்டும் இறங்கி விடாதபடி ஏணியை விலக்கி விடுவான்.

- பெரியாழ்வார் திருமொழி (4-5-2) – போயினால் பின்னை இத்திசைக்கு என்றும் பிணை கொடுக்கிலும் போகவிட்டார் – நமோ நாராயணா என்று ப்ரபத்தி செய்து ஸ்ரீவைகுண்டத்திற்குச் சென்ற பின்னர், பெரியபிராட்டியாரையே பணயமாக வைத்தாலும் மீண்டும் ஸம்ஸாரத்திற்குத் திரும்ப விடமாட்டான்.

- திருவாய்மொழி (1-2-10) - வண்புகழ் நாரணன் திண்கழல் – மேன்மையான புகழ் கொண்ட நாராயணனின் திருவடிகளைப் பற்றுங்கள்.

- திருவாய்மொழி (3-7-7) - சன்ம சன்மாந்தரம் காத்து அடியார்களைக் கொண்டு போய்த் தன்மை பெறுத்தித் தன் தாளினைக் கீழ்க் கொள்ளுமப்பன் – தானும் இந்த உலகில் அவதாரம் செய்து, அடியார்களைக் காப்பாற்றி, அவர்களை ஸ்ரீவைகுண்டத்திற்குக் கொண்டு சென்று, அவர்களுக்கு இயல்பாகவே உள்ள ஸ்வரூபத்தை வெளிப்படுத்தி, தனது திருவடிகளில் சேர்த்துக் கொள்ளும் எம்பெருமான்.

- திருவாய்மொழி (7-5-10) - தன் தாளிணைக் கீழ்ச் சேர்த்து அவன் செய்யும் சேமத்தை– தன்னுடைய திருவடிகளில் சேர்த்துக் கொண்டு, எப்போது அவன் செய்கின்ற நன்மைகளை.

தன்னுடைய எஜமானனாக உள்ள மகஷாலக்ஷ்மியின் நாயகனான எம்பெருமானிடம் ப்ரபந்நன் மிகுந்த நன்றியுடன் இருக்கவேண்டும். இதன் காரணம் – ஸம்ஸாரத்தில் உள்ளபோது எத்தனை வாத்ஸல்யத்துடன் அவன் உள்ளானோ, அதே போன்று மோக்ஷம் பெற்ற பின்னரும் நம்மிடம் அவன் உள்ளான். இதனை திருவாய்மொழியில் (9-2-1) - பண்டை நாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின் கோயில் சீய்த்து – உன்னுடைய கருணையாலும், உன்னுடைய பிராட்டியின் கருணையாலும் உனது கோயிலைத் தூய்மையாக்கும் கைங்கர்யங்கள் செய்து – என்பதன் மூலம் காணலாம்.

## மூன்று கரணங்களால் விலக்கவேண்டியவையும் ஏற்கவேண்டியவையும்

**மூலம்–** இவ்வுத்தரக்ருத்யத்தில் மநோவாக்காயங்களென்று சொல்லுகிற கரணங்கள் மூன்றாலும் பரிஹரணீயங்களிலும் பரிக்ராஹ்யங்களிலும் ஸாரமிருக்கும்படி சொல்லுகிறோம்:

விஷஸ்ய விஷயாணாம் ச தூரமத்யந்தமந்தரம்
உபபுக்தம் விஷம் ஹந்தி விஷயா: ஸ்மரணாதபி

என்றும், “ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம் பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ” என்றும் சொல்லுகையாலே பரமபுருஷார்த்தருசி குலையாமைக்காக மறக்க வேண்டுமவற்றில் ப்ரதாநம் விஷயாஸ்வாதம் க்ருதத்நதை வாராமைக்காக நினைக்க வேண்டுமவற்றில் ப்ரதாநம் ஆசார்யன் செய்த ப்ரதமகடாக்ஷம் முதலான உபகாரம். கார்ப்பண்யம் குலையாமைக்காகச் சொல்லாதொழிய வேண்டுமவற்றில் ப்ரதாநம் ஆத்மோத்கர்ஷம் உபாயநிஷ்டையை மறவாமைக்காக ஸதைவம் வக்தா என்கிறபடியே, சொல்லவேண்டுமவற்றில் ப்ரதாநம் த்வயம். உகந்து பணி கொள்ள உரியனான எம்பெருமான் திருவுள்ளமழலாமைக்காகக் கரணத்ரயத்தாலும் “செய்யாதன செய்யோம்” என்னுமவற்றில் ப்ரதாநம் ப்ரஹ்மவிதபசாரம். புருஷார்த்த ஸாகரம் வற்றுதல் வரையிடுதல் செய்யாமைக்காகக் கரணத்ரயத்தாலும் கர்த்தவ்யங்களில் ப்ரதாநம் பகவத் கைங்கர்யத்தின் எல்லை நிலமாய் சாஸ்த்ராநுஜ்ஞாதமான ஆசார்யாதி பாகவத கைங்கர்யம்.

**விளக்கம் –** மனம், வாக்கு மற்றும் உடல் என்று கூறப்படும் மூன்றாலும் ப்ரபந்நன் ஒருவன் செய்யக்கூடியது எது என்றும், செய்யக்கூடாதது எது என்றும் இப்போது சுருக்கமாகக் காண்போம். விஷஸ்ய விஷயாணாம் ச தூரமத்யந்தமந்தரம் உபபுக்தம் விஷம் ஹந்தி விஷயா: ஸ்மரணாதபி– சிற்றின்ப விஷயங்களுக்கும் விஷத்திற்கும் வேறுபாடு அதிகமாகும்; விஷம் என்பது குடித்தால் மட்டுமே அழிக்கும், ஆனால் விஷயங்கள் என்பது

நினைத்தவுடன் அழிக்கவல்லவையாகும் – என்றது காண்க. மேலும், திருவாய்மொழி (6-9-9) - ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம் பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ– என்னுடைய ஆத்மா ப்ரமித்து நிற்கும்படியாக ஐந்து இந்த்ரியங்களும் என்னைத் தங்கள் பக்கம் இழுத்து வருத்துகின்றன, இப்படியான அற்பமான சுகங்களைப் பாவியான எனக்குக் காண்பித்து, நீ என்னை வருத்தலாமா – என்றதும் காண்க. ஆகவே மிகவும் உயர்ந்த புருஷார்த்தத்தின் மீது உள்ள ருசி குறைந்து விடாமல் இருப்பதற்கு, புலன்களால் நுகரப்படும் இன்பங்களை விலக்குவது என்பது முக்கியமாகும். செய்நன்றி மறத்தல் என்னும் பழி வராமல் இருப்பதற்குச் செய்யவேண்டியது, ஆசார்யன் நம்மை முதன்முதலில் கடாக்ஷம் செய்ததை எப்போதும் எண்ணியபடி இருத்தல் வேண்டும். கார்ப்பண்யம் என்பது குறையாமல் இருப்பதற்கு நம்மைப் பற்றிய தற்பெருமையான சொற்களைக் கூறாமல் இருத்தல் வேண்டும் .உபாயத்தை எப்போதும் மறவாமல் இருப்பதற்கு சரணாகதி கத்யம் – ஸதைவம் வக்தா – த்வயத்தின் பொருளை – என்று கூறுவது போன்று, எப்போதும் த்வய மந்த்ரத்தை உச்சரித்தபடி இருக்கவேண்டும். நமுடைய கைங்கர்யத்தை உகப்புடன் ஏற்கின்ற எம்பெருமான் நம்மீது அத்ருப்தி கொள்ளாமல் இருப்பதற்கு திருப்பாவை (2) – செய்யாதன செய்யோம் – என்று கூறுவது போன்று, ப்ரஹ்மத்தை அறிந்தவர்களை மனம், வாக்கு மற்றும் உடல் ஆகியவை மூலம் எந்தவிதமான அபசாரம் செய்யாமல் இருப்பதே ஆகும். நம்முடைய புருஷார்த்தம் என்னும் கடலானது வற்றாமலோ சுருங்காமலோ இருப்பதற்கு நாம் செய்யவேண்டியது எம்பெருமானின் கைங்கர்யத்தினுடைய எல்லையாக உள்ளதும், சாஸ்த்ரங்களால் முழங்கப்படுவதும் ஆகிய ஆசார்ய, பாகவத கைங்கர்யங்களே ஆகும்.

## உத்தரக்ருத்யத்தை ரஹஸ்யத்ரயத்தில் காணலாம்

**மூலம்–** ஸ்வயம்ப்ரயோஜனமான இவ்வுத்தரக்ருத்யமும் ரஹஸ்யத்ரயத்தில் பலப்ரதிபாதகங்களான ப்ரதேசங்களிலே அநுஸந்தேயம்.

**விளக்கம்–** ப்ரபத்திக்குப் பின்னர் கைக்கொள்ள வேண்டியதும், இதுவே பலனாக உள்ளதும் ஆகிய மேலே கூறப்பட்டவை அனைத்தையும், ரஹஸ்ய த்ரயத்தில் காண இயலும்.

விண்ணவர் வேண்டி விலக்கின்றி மேவும் அடிமை எல்லாம்
மண்ணுலகத்தில் மகிழ்ந்து அடைகின்றனர், வண்துவரைக்
கண்ணன் அடைக்கலம் கொள்ளக் கடன்கள் கழற்றிய, நம்
பண்ணமரும் தமிழ் வேதம் அறிந்த பகவர்களே.

**பொருள்** – அழகான த்வாரகை நகரத்தின் பதியாகிய க்ருஷ்ணனிடம் ப்ரபத்தி செய்து, அவனால் காக்கப்பட வேண்டியவர்களாக ஆனவர்களும், இதனால் தேவர்கள்

முதலானோர்களுக்குப் பட்ட கடனைத் தீர்த்தவர்களும், இசையுடன் கூடியதான தமிழ் வேதமாகிய திவ்யபிரபந்தத்தை அறிந்தவர்களும் ஆகிய பாகவதர்கள் பெறுவது என்ன? எம்பெருமானிடன் நித்யஸூரிகள் ப்ரார்த்தனை செய்து, அதன் மூலம் தடையில்லாமல் ப்ரேமையுடன் செய்கின்ற கைங்கர்யங்களை, பாகவதர்கள் இந்த உலகத்திலேயே மகிழ்வுடன் செய்கின்றனர்.

ப்ரணயிநமிவ ப்ராப்தம் பச்சாத் ப்ரியா ஸ்வஸமந்திதம்
மஹதி முஹுராம்ருஷ்டே த்ருஷ்ட்வா மநௌ மணிதர்ப்பணே
ப்ரபதநதநா: ஸந்த: சுத்தை: ப்ரபும் பரிபுஞ்ஜதே
ப்ரஸ்ருமர மஹாமோத ஸ்மேர ப்ரஸூநஸமை: க்ரமை:

**பொருள்** – நன்றாக துடைக்கப்பட்டு தெளிவான ப்ரதிபலிப்பைக் காண்பிக்கும் கண்ணாடியின் முன்பாக வந்து நிற்கும் மனைவியானவள், தன் அருகில் வந்து நிற்கும் தனது கணவனின் பிம்பத்தைத் தன்னுடைய பிம்பத்துடன் சேர்த்துக் கண்ணாடியில் பார்க்கிறாள். இதனால் மகிழ்வு கொண்டு, நறுமணம் கூடிய மலர்களை எங்கும் தூவி மகிழ்வுடன் இருக்கிறாள். அந்த மனைவி போன்று, ப்ரபந்நர்கள் உள்ளனர். எப்படி? ஆசார்யனால் உபதேசிக்கப்பட்ட ஆழ்பொருள்களைக் கொண்டு நன்றாக துடைக்கப்பட்ட கண்ணாடி போன்று மேன்மை பொருந்திய திருஅஷ்டாக்ஷரத்தைக் கைக்கொள்கின்றனர். அதில், தங்களுடைய எஜமானனாகிய எம்பெருமானைத் தங்களுக்கு அருகாமையில் காண்கின்றனர். அப்போது மலர்ந்த மலர்கள் போன்ற கைங்கர்யங்களைச் செய்தபடி, மேலே கூறப்பட்ட மனைவி போன்று மகிழ்வுடன் உள்ளனர்.

## உத்தரக்ருத்யாதிகாரம் ஸம்பூர்ணம்

பெரியபெருமாள் திருவடிகளே சரணம்

பெரியபெருமாள் திருவடிகள் தஞ்சம் அடைந்த நம் உடையவர் திருவடிகளே சரணம்

உடையவர் திருவடிகள் சரணம் புகுந்த நம் தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## அதிகாரங்கள் 16 - 20


நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# அதிகாரம் – 16 – புருஷார்த்தகாஷ்ட்டாதிகாரம்

(பாகவத கைங்கர்யமே பகவத் கைங்கர்யம் என்னும் புருஷார்த்தத்தின் எல்லை)

ஸ்வதந்த்ர ஸ்வாமித்வாத் ஸ்வபஹுமதிபாத்ரேஷு நியதம்
ஸ்ரீய: காந்தோ தேவ: ஸ கலு விநியுங்க்தே சிதசிதௌ
யதாலோகாம்நாயம் யதிபதிமுகைராஹிததியாம்
ததோ ந: கைங்கர்யம் ததபிமத பர்யந்தம் அபவத்

**பொருள்** – இந்த உலகில் எஜமானர்கள் தங்களது பணியாட்களைத் தங்களுக்கு மட்டும் அல்லாமல், தங்கள் உறவினர்களுக்கும் பணி செய்யக் கூறுவதைக் காணலாம். அடியார்களுக்குத் தேவதைகள் தொண்டு செய்வதை வேதங்களும் கூறுகின்றன. இதே போன்று, தனது மதிப்பைப் பெற்ற பாகவதர்களுக்குத் தொண்டு செய்யும்படியாக , சேதனம் மற்றும் அசேதனங்களை, அவற்றின் எஜமானனாக உள்ளதால் பெரியபிராட்டியின் நாயகன் விதிக்கிறான். ஆகவே யதிகளின் தலைவரான எம்பெருமானார் தொடக்கமாக உள்ள ஆசார்யர்கள் மூலமாக ஞானம் பெற்ற நமக்கு, பகவத் கைங்கர்யம் என்பது, அவனுக்குப் பிரியமான பாகவத கைங்கர்யம் வரை உள்ளது என்பதை அறியவேண்டும்.

## பாகவதர்களுக்குக் கைங்கர்யம் செய்வதன் காரணம்

**மூலம்** – இங்கு பகவத் கைங்கர்யத்தை பாகவத கைங்கர்ய பர்யந்தமாகச் சொல்லுகைக்கு அடி என் என்னில் – பரகத அதிசயாதாந இச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸ சேஷ: பர: சேஷீ என்று வேதார்த்தஸங்க்ரஹத்திலே அருளிச் செய்தபடியே ஸர்வேச்வரனைப் பற்ற சேஷபூதனான இவன் அதிசயாதாநம் பண்ணப் ப்ராப்தன். அவ்வதிசயந்தான் வஸ்து சக்தியை அநுரோதித்து வரவேணும். ஆனால் ஜீவனுக்குப் பரனைப் பற்ற சக்யமான அதிசயம் எது என்று பார்த்தவிடத்தில் சரீரத்வாதிமுகத்தாலே அதிசயாதாநம் பண்ணுகை இவனுக்கும் அசித்துக்கும் பொதுவாயிருந்தது. இவன் சேஷிக்கு விசேஷித்துப் பண்ணும் அதிசயம் சைதந்யமுகத்தாலேயாயிருக்கும்.

**விளக்கம்–** பகவத் கைங்கர்யம் எவ்விதம் பாகவத கைங்கர்யம்வரை செல்லும் என்று கேள்வி எழலாம். இதற்கு விடை தரப்படுகிறது. வேதார்த்த ஸங்க்ரஹம் - பரகத

அதிசயாதாந இச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸ சேஷ: பர: சேஷீ– மற்றவர்களுக்குப் புகழை ஏற்படுத்தவேண்டும் என்னும் விருப்பம் காரணமாக, அங்கீகரிக்கத் தக்கதாக இருத்தல் என்பதையே ஸ்வரூபமாக எந்த வஸ்து கொண்டுள்ளதோ அதுவே சேஷம், அந்தப் புகழை அடைபவன் சேஷீ – என்றது காண்க. ஆக ஸர்வேச்வரனுக்குப் புகழ் ஏற்படுத்தியபடி இருப்பவனாகிய ஜீவனே சேஷனாக உள்ளான். அத்தகைய புகழை உண்டாக்கும் ஜீவனின் ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி அந்தப் புகழ் இருக்கும். ஆனால் ஜீவனால் ஸர்வேச்வரனுக்கு என்ன புகழை அளிக்க இயலும் என்ற கேள்வி எழலாம். சரீரம் முதலானவற்றைக் கொண்டு ஒரு ஜீவன், அசித் வஸ்துவானது என்ன புகழை அளிக்க இயலுமோ அதனை மட்டுமே அளிக்க இயலும். ஆக இத்தகைய செயலானது இவனுக்கும் அசித்துக்கும் பொதுவானது ஆகும். தன்னுடைய சைதன்யம் அல்லது புத்தி மூலமாகச் சிறப்பான ஒரு புகழை உண்டாக்க இயலும்.

## பாகவதர்களுக்குக் கைங்கர்யம் செய்வதன் காரணம்

**மூலம்** – இங்கு பகவத் கைங்கர்யத்தை பாகவத கைங்கர்ய பர்யந்தமாகச் சொல்லுகைக்கு அடி என் என்னில் – பரகத அதிசயாதாந இச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸ சேஷ: பர: சேஷீ என்று வேதார்த்தஸங்க்ரஹத்திலே அருளிச் செய்தபடியே ஸர்வேச்வரனைப் பற்ற சேஷபூதனான இவன் அதிசயாதாநம் பண்ணப் ப்ராப்தன். அவ்வதிசயந்தான் வஸ்து சக்தியை அநுரோதித்து வரவேணும். ஆனால் ஜீவனுக்குப் பரனைப் பற்ற சக்யமான அதிசயம் எது என்று பார்த்தவிடத்தில் சரீரத்வாதிமுகத்தாலே அதிசயாதாநம் பண்ணுகை இவனுக்கும் அசித்துக்கும் பொதுவாயிருந்தது. இவன் சேஷிக்கு விசேஷித்துப் பண்ணும் அதிசயம் சைதந்யமுகத்தாலேயாயிருக்கும்.

**விளக்கம்**– பகவத் கைங்கர்யம் எவ்விதம் பாகவத கைங்கர்யம்வரை செல்லும் என்று கேள்வி எழலாம். இதற்கு விடை தரப்படுகிறது. வேதார்த்த ஸங்க்ரஹம் - பரகத அதிசயாதாந இச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸ சேஷ: பர: சேஷீ– மற்றவர்களுக்குப் ப்ரயோஜனம் உண்டாக்குவதையே தனக்கு முக்கியமான ப்ரயோஜனம் என்று எண்ணுபவன் சேஷன் எனப்படுகிறான்; அந்த ப்ரயோஜனத்தைப் பெறுகிறவன் சேஷி ஆகிறான் – என்றது காண்க. ஆக ஸர்வேச்வரனுக்கு சேஷனான ஜீவன் எம்பெருமானுக்கு ஏதேனும் ப்ரயோஜனமாக இருந்தால் மட்டுமே அவனுக்கு சேஷனாக இருக்க இயலும். அத்தகைய ப்ரயோஜனம் ஜீவனின் ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி இருக்கும். ஆனால் அனைத்தும்வல்ல எம்பெருமானுக்கு ஜீவன் என்ன ப்ரயோஜனத்தை அளிக்க இயலும் என்ற கேள்வி எழலாம். எம்பெருமானின் சரீரமாக ஜீவன் உள்ளதால், ஜீவன் ஏதேனும் ப்ரயோஜனத்தை அளிக்க இயலும் என்று வைப்போம். ஆனால் அசித் பொருள்களும் எம்பெருமானின் சரீரமே ஆகும். அப்படியெனில் எம்பெருமானுக்கு

ப்ரயோஜனமாக இருத்தல் என்பது சித் மற்றும் அசித் ஆகிய இரண்டிற்கும் பொதுவாகவே உள்ளது. ஆனால் ஜீவன் தன்னுடைய அறிவு மூலமாகச் சிறப்பான ப்ரயோஜனத்தைச் செய்ய இயலும்.

**மூலம்–** அதில் இவன் சாஸ்த்ரவிருத்தமாக வர்த்திக்கும்போது சாஸிதாவாய் தண்டகரான ஈச்வரனுக்கு லீலா ரஸ மாத்ரத்தை உண்டாக்கி அம்முகத்தாலே அதிசயாதாயகனாம். சாஸ்த்ராநுகுணமாக வர்த்திக்கும்போது, சுபே த்வஸௌ துஷ்யதி துஷ்க்ருதே து ந துஷ்யதே அஸௌ பரம: சரீரீ என்கிறபடியே ஈச்வரனுக்கு ஸந்தோஷத்தை உண்டாக்கி அவனுடைய ஔதார்யாதி குணங்கள் குமரிராதபடி அம்முகத்தாலே உதாரா: ஸர்வ ஏவைதே என்று அவன் தானே கொண்டாடும்படி அதிசயாதாயகனாம்.

**விளக்கம்–** இப்படியாக ஜீவன் செய்கின்ற செயல்கள் சாஸ்த்ரங்களுக்கு உட்படாமல், அவற்றுக்கு விரோதமாக இருந்தால், தவறுகளுக்குத் தண்டனை விதிப்பவனாகிய எம்பெருமானின் லீலைகளுக்கு ப்ரயோஜனமாகி விடுகிறான் (ஜீவனின் பாவங்களை நீக்கும் பொருட்டு ஜீவனைத் தவறுகள் செய்ய வைப்பது, இதன் மூலம் தண்டனை அளித்து அவன் பாவங்களைப் போக்குவது உள்ளிட்ட லீலைகளுக்கு ஜீவன் ப்ரயோஜனமாகிறான்). மாறாக, சாஸ்த்ரங்களுக்கு உட்பட்ட செயல்களைச் செய்தால் ஈச்வரனுக்கு மகிழ்ச்சியை உண்டாக்க்கி, அவனுடைய தாராளகுணம் முதலானவை வீணாகாமல் வெளிப்படும்படிச் செய்து, எம்பெருமானாலேயே கொண்டாடப்படுகிறான். இப்படிப்பட்டவர்களை கீதையில் (7-18) – உதாரா: ஸர்வ ஏவைதே – என்னை அவர்களுக்குக் கொடுப்பவனாக மாற்றுவதால் அவர்களும் கொடையாளிகள் – என்று கொண்டாடுவதன் மூலம் உணரலாம். மேலும் மஹாபாரதம் சாந்திபர்வம் (199-25) - சுபே த்வஸௌ துஷ்யதி துஷ்க்ருதே து ந துஷ்யதே அஸௌ பரம: சரீரீ – அனைத்தையும் தனது சரீரமாகக் கொண்டு, அனைவரிலும் மேம்பட்டு நிற்கும் ஸர்வேச்வரன், ஜீவன் செய்கின்ற செயல்கள் நல்லவையாக இருந்தால் மகிழ்கிறான், தீமையாக இருந்தால் மகிழ்வதில்லை – என்றது காண்க.

**மூலம்–** அப்படியே நித்யரும் முக்தரும் ஈச்வராபிப்ராயத்தை ஸாக்ஷாத்கரித்து பண்ணுகிற கைங்கர்யங்களாலே ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாதஜீவித: என்கிறபடியே போக விசேஷத்தை உத்பாதித்து அம்முகத்தாலே அதிசயா தாயகராவார்கள். இப்ப்ரகாரம் சாஸ்த்ரமுகத்தாலே ஈச்வராபிப்ராயத்தை அறிந்து கைங்கர்யம் பண்ணுகிற க்ருதக்ருத்யனுக்கும் ஸமாநம். இவற்றில் சாஸ்த்ரவிருத்தங்களாலே ஈச்வரனுக்கு லீலா ரஸ மாத்ரத்தை உண்டாக்கும்போது தனக்கு அநர்த்த பர்யவஸிதமாயிருக்கும். பத்ததசையில் சாஸ்த்ரத்தாலும் முக்ததசையில் ப்ரத்யக்ஷத்தாலும் ஈச்வராபிப்ராயத்தைக் கண்டு ததநுரூபமாக வர்த்திக்கும்போது ஈச்வரனுடைய லீலாதிபுருஷார்த்தத்துடனே ஆநுஷங்கிதமாகத் தனக்கும் ஸ்வாபிமத புருஷார்த்தம் உண்டாம்.

**விளக்கம்–** இதே போன்று நித்யரும், முக்தரும் எம்பெருமானின் எண்ணங்களை நேரில் அறிந்தவர்களாக அவனுடைய கைங்கர்யங்களில் ஈடுபடுவதால், ஸ்தோத்ரரத்னம் (46) - ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாதஜீவித: - எப்போதும் உனக்கே கைங்கர்யம் செய்தபடி, உனக்காகவே வாழ்ந்து உன்னை நான் மகிழும்படிச் செய்வேனோ – என்று கூறுவதற்கு ஏற்ப அவனுக்கு மகிழ்வை உண்டாக்கி, ப்ரயோஜனமாகிறார்கள். சாஸ்த்ரங்களை அனைத்தும் எம்பெருமானின் கட்டளைகள் என்பதால் அவைகளை மூலமாக அவனுடைய அபிப்ராயத்தை அறிகின்ற ப்ரபன்னர்களும் அவனுக்குக் கைங்கர்யங்கள் செய்து அவனுக்கு உபயோகமாக உள்ளனர். சாஸ்த்ரங்களுக்கு விரோதமாக நடக்கும்போது, எம்பெருமானுக்கு விளையாட்டை மட்டுமே அளித்து, தனக்குக் கெடுதலையே தேடிக் கொள்கிறான். முக்தனாக உள்ளபோது எம்பெருமானின் அபிப்ராயங்களை நேரில் அறிந்தும், இந்த உலகில் பந்தப்பட்டு உள்ளபோது எம்பெருமானின் அபிப்ராயங்களை சாஸ்த்ரங்கள் மூலமாக அறிந்தும் கைங்கர்யங்கள் செய்யும்போது – எம்பெருமானுக்கு விளையாட்டு முதலான மகிழ்ச்சியை உண்டாக்குவதுடன், தனக்கும் விருப்பமான புருஷார்த்தங்களை அடைகிறான்.

**மூலம்** – ஆனபின்பு சேதநனான இவன் புத்திபூர்வகமாக ஒரு ப்ரவ்ருத்தி பண்ணும்போது தன் புருஷார்த்தமும் ஆநுஷங்கிதமாகவாகிலும் புகிரவேண்டியதால் அது வரும்போது ஈச்வராபிப்ராய விசேஷ மடியாக வரவேண்டுகையால் அதுக்காக ஈச்வராபிப்ராயத்தை ஆராய்ந்தவிடத்தில் பாகவதகைங்கர்யம் அவனுக்கு ஸர்வத்திலும் அபிமதமாயிருந்தது.

**விளக்கம்** – ஆக ஜீவன் தனது புத்திக்கு ஏற்றபடி ஒரு செயலைச் செய்தாலும், அது ஜீவனுக்கு ஏற்ற புருஷார்த்தத்தை அளிப்பதாக இருந்தாலும், அந்தச் செயலானது எம்பெருமானின் எண்ணங்களுக்கு ஏற்றதாக இருத்தல் அவசியமாகிறது. ஆக ஈச்வரனின் அபிப்ராயங்களை ஆராய்ந்து பார்க்கும்போது பாகவதர்களுக்குச் செய்யும் கைங்கர்யமே ஜீவனுக்கு அனைத்திலும் உயர்வானது என்பது விளங்குகிறது.

## பாகவத கைங்கர்யமே முக்கியமானது

**மூலம்** – இவ்வர்த்தத்தில்

ஆராதநாநாம் ஸர்வேஷாம் விஷ்ணோராராதநம் பரம்
தஸ்மாத் பரதம் ப்ரோக்தம் ததீயாராதநம் பரம்

மம மத்பக்தபக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத்
தஸ்மாத் மத்பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத:

மத்பக்தஜந வாத்ஸல்யம் பூஜாயாம் சாநுமோதநம்
மத்கதா ச்ரவணே பக்தி: ஸ்வர நேத்ராங்கவிக்ரியா
ஸ்வயமாராதநே யத்நோ மமார்த்தே டம்பவர்ஜநம்
மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி
பக்திரஷ்டவிதா ஹி ஏஷா யஸ்மிந் ம்லேச்சே அபி வர்த்ததே
ஸ விப்ரேந்த்ரோ முநி: ஸ்ரீமாந் ஸ யதி: ஸ ச பண்டித:
தஸ்மை தேயம் க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹி அஹம்

அநந்யதேவதா பக்தா யே மத்பக்தஜந ப்ரியா:
மாமேவ சரணம் ப்ராப்தாஸ்தே மத்பக்தா: ப்ரகீர்த்திதா:

தஸ்ய யஜ்ஞவராஹஸ்ய விஷ்ணோரமிததேஜஸ:
ப்ரணாமம் யே அபி குர்வந்தி தேஷாமபி நமோ நம:

ததாச்ரயஸ்யாச்ரயணாத் தஸ்ய தஸ்ய ச தஸ்ய ச
ஸம்ஸேவநாந்நர லோகே பூயந்தே ஸர்வபாதகை:

இத்யாதி ப்ரமாணங்களை ஆராய்ந்தால் ராஜாவுக்கு ராஜகுமாரோபலாலநம் போலே பாகவத கைங்கர்யம் பகவானுக்கு அபிமதமாயிருக்கையால் சேஷபூதனான இவன் செய்யும் கிஞ்சித்காரங்களில் பாகவதகைங்கர்யம் ப்ரதாநமாயிற்று.

**விளக்கம்–** பாகவத கைங்கர்யமே மேம்பட்டது என்பதைக் கீழே உள்ள பல வரிகளில் காணலாம்:

- பாத்மோத்தரம் (29-81) - ஆராதநாநாம் ஸர்வேஷாம் விஷ்ணோராராதநம் பரம் தஸ்மாத் பரதம் ப்ரோக்தம் ததீயாராதநம் பரம் – அனைத்து ஆராதனங்களிலும் விஷ்ணுவின் ஆராதனமே சிறந்தது; அதனைக் காட்டிலும் சிறந்தது பாகவத ஆராதனமாகும்.

- மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வம் (116-23) - மம மத்பக்தபக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத் தஸ்மாத் மத்பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத: - எனது அடியார்கள் மீது

பக்தியுள்ளவர்களிடம் எனக்கு அதிகமான ப்ரேமை உள்ளது. ஆகவே அவர்களை நன்கு ஆராதிக்க வேண்டும்.

- கருட புராணம் (219-6, 7, 8, 9) - மத்பக்தஜந வாத்ஸல்யம் பூஜாயாம் சாநுமோதநம் மத்கதா ச்ரவணே பக்தி: ஸ்வர நேத்ராங்கவிக்ரியா ஸ்வயமாராதநே யத்நோ மமார்த்தே டம்பவர்ஜநம் மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி பக்திரஷ்டவிதா ஹி ஏஷா யஸ்மிந் ம்லேச்சே அபி வர்த்ததே ஸ விப்ரேந்த்ரோ முநி: ஸ்ரீமாந் ஸ யதி: ஸ ச பண்டித: தஸ்மை தேயம் க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹி அஹம்– என்னிடம் உள்ள பக்தி என்பது எட்டு வகைப்படும். அவையாவன – என் பக்தர்களிடம் உள்ள குறைகளைப் பொருட்படுத்தாமை; எனக்குச் செய்யும் பூஜையைக் கண்டு மகிழ்தல்; எனது சரிதங்களைக் கேட்பதில் ஆவல்; அவற்றைக் கேட்கும்போது குரல் தழுதழுத்து, மயிர்க்கூச்சல் எடுத்து, கண்ணீர் பெருகுதல்; தானும் ஆராதனை செய்தல்; எனது விஷயத்தில் ஆடம்பரம், டம்பம் இல்லாத தன்மை; எப்போது என்னை நினைத்தபடி இருத்தல்; என்னிடம் என்னைத் தவிர வேறு பலன் கேட்காமல் இருத்தல் – என்பதாகும். இவை யாரிடம் உள்ளனவோ அவன் மிலேச்சனாக இருந்தாலும் அவனை ஞானம் மற்றும் பக்தி கொண்ட அந்தணன் என்றும், ஸந்ந்யாஸி என்றும், பண்டிதன் என்றும் எண்ணப்படவேண்டும். அவனுக்கு ஞான உபதேசம் செய்யலாம். அவனிடமிருந்து ஞானத்தைப் பெறலாம். என்னைப் போன்றே அவன் பூஜிக்கப்பட வேண்டியவன்.

- மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வம் (104-91) - அநந்யதேவதா பக்தா யே மத்பக்தஜந ப்ரியா: மாமேவ சரணம் ப்ராப்தாஸ்தே மத்பக்தா: ப்ரகீர்த்திதா: - மற்ற தேவதைகளிடம் பக்தி அற்றவர்களாய், பாகவதர்களிடம் அன்பு பூண்டவர்களாய், என்னையே சரணம் என்று அடைந்தவர்கள் எனது பக்தர்கள்.

- மஹாபாரதம் சாந்திபர்வம் (46-126) - தஸ்ய யஜ்ஞவராஹஸ்ய விஷ்ணோரமிததேஜஸ: ப்ரணாமம் யே அபி குர்வந்தி தேஷாமபி நமோ நம: - எல்லையற்ற தேஜஸ் கொண்ட யஜ்ஞவராஹ வடிவம் கொண்ட விஷ்ணுவை ஆராதிப்பவர்களை நான் பலமுறை வணங்குகிறேன்.

- கருடபுராணம் ஸ்ரீரங்கமஹாத்ம்யம் (8-91) - ததாச்ரயஸ்யாச்ரயணாத் தஸ்ய தஸ்ய ச தஸ்ய ச ஸம்ஸேவநாந்நர லோகே பூயந்தே ஸர்வபாதகை: - எம்பெருமானின் பக்தனை அண்டியிருப்பதாலும், அவனுக்குப் பக்தன், அவனுக்குப் பக்தன் என்ற தொடரின் இறுதியில் உள்ளவனுக்குக் கைங்கர்யம் செய்வதாலும் இந்த உலகில் உள்ளவர்கள் அனைத்து பாவங்களில் இருந்து விடுபடுகின்றனர்.

மேலே உள்ள பல வரிகள் மூலம் உணரப்படுவது என்ன? அரசனுக்கு அவனது ராஜகுமாரனை மகிழ்விப்பதால் எத்தனை மகிழ்ச்சி உண்டாகுமோ அது போன்று, பாகவத கைங்கர்யம் மூலம் எம்பெருமானுக்கு அதிகமான மகிழ்ச்சி உண்டாகிறது. ஆகவே எம்பெருமானின் சேஷனான ஜீவனுக்கு பாகவத கைங்கர்யம் மிகவும் அவசியம் என்று தெளிவாக அறியப்படுகிறது.

## பாகவத கைங்கர்யம் மூலம் எம்பெருமான் எவ்விதம் மகிழ்கிறான்

**மூலம்–** இவ்விடத்தில் தத்த்வவித்துக்குப் ப்ரமாண ஸரணியைப் பார்த்தால் யே யஜந்தி பித்ரூந் தேவாந் இத்யாதிகளிற்படியே ஈச்வரன் பாகவத சரீரனாய்க் கொண்டும் ஆராத்யனாம். ஸ ச மம ப்ரிய: என்கிறபடியே பரமைகாந்தி விஷயத்தில் ப்ரீதி பரதந்த்ரனான ப்ரகாரியினுடைய நினைவைப் பார்த்தால் ஜ்ஞாநீ த்வாத்மை மே மதம் என்கிறபடியே பாகவத கைங்கர்யத்தைப் பார்த்தால் பகவான் தன் அந்தர்யாமி பக்கலிலே பண்ணினதாக உகக்கும்.

**விளக்கம்–** இங்கு நாம் பல ப்ரமாணங்களை ஆராய்ந்தால், பாகவதனைத் தனது சரீரமாகக் கொண்டுள்ள ஸர்வேச்வரனே ஆராதிக்கப்படுகிறான் என்பதை மஹாபாரதம் சாந்திபர்வம் (355-41) - யே யஜந்தி பித்ரூந் தேவாந் –பித்ருக்கள் முதலானவர்களை ஆராதிப்பவர்கள், அவர்களின் ஆத்மாவாக உள்ள ஸர்வேச்வரனையே ஆராதிக்கின்றனர் – போன்ற வரிகளின் மூலமாக அறியலாம். மேலும் கீதை (7-17) - ஸ ச மம ப்ரிய: - எனக்கு அவன் ப்ரியமானவன் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஈச்வரனின் எண்ணத்தை நோக்கும்போது, கீதை (7-18) - ஜ்ஞாநீ த்வாத்மை மே மதம் – அவர்களின் ஞானியானவன் எனது ஆத்மாவாகவே உள்ளான் – என்று கூறுவதற்கு ஏற்ப, பாகவதர்களுக்குச் செய்யப்படும் கைங்கர்யங்களைத் தன்னுடைய ஆத்மாவிற்குச் செய்யப்படும் கைங்கர்யங்களாகவே எம்பெருமான் எண்ணுகிறான். இதனால் மகிழ்கிறான்.

**மூலம்–** இப்படி சேஷிக்கு அபிமதமென்கிறவளவே அன்று, சேஷத்வமாகிற ஸம்பந்தந்தான் ஸத்வாரகமாகவும் உண்டாகையால் கைங்கர்யமும் ஸத்வாரகமாகவும் ப்ராப்தம். அது எங்ஙனேயென்னில்:

நித்யம் ச்ரியா ஸமேதஸ்ய பக்தேராத்மவத: ஸதா
ஸஹ ஸத்வாரகம் ச ஸ்யாத் சேஷித்வம் பரமாத்மந:

ஸ்வதந்த்ரனாய் ஸ்வச்சந்தலீலனான ராஜா தான் பூண்ட ஆபரணத்தையும் இட்ட மாலையையும் அடியார்களுடையவும் ஆனை குதிரைகளுடையவும் கழுத்திலே இடுமாப்போலே “அடியார்க்கு என்னையாட்படுத்த விமலன்” என்றும்,

நாரத: அஹமநுப்ராப்த: ஸ்வதர்சன குதூஹலாத்
ப்ரபவோ பகவத்பக்தா மாதர்சாம் ஸததம் த்விஜ என்றும்

"மற்றும் ஓர் தெய்வம் உளதென்று இருப்பாரோடு உற்றிலேன் உற்றதும் உன்னடியார்க்கடிமை" என்றும் சொல்லுகிறபடியே அத்யந்த பாரதந்த்ர்யாதிகளடியாக பகவதிஷ்டவிநியோகார்ஹதையாலே பகவச்சேஷத்வம் தான் யாவதாத்மபாவியான கட்டளையிலே பாகவதசேஷத்வபர்யந்தமாயிற்று. இங்கு பாகவதத்வமடியாக ஸ்வரூப ப்ரயுக்தமாகவும் குணைர்தாஸ்யமுபாகத: என்கிற ந்யாயத்தாலே குணஜ்ஞானமடியாக ஸ்வேச்சையாலும் வந்த பாகவதசேஷத்வம் "பகவத்பக்தா:", "மாத்ருசாம்" என்கிற இரண்டு பதத்தாலும் ஸூசிதம்.

**விளக்கம்** – இப்படியாக பாகவதர்களுக்குச் செய்யும் கைங்கர்யம் எம்பெருமானுக்கு மகிழ்வை உண்டாக்குகிறது. அத்துடன் மட்டும் நில்லாமல், தான் எம்பெருமானின் சேஷனாக உள்ள நிலையானது பாகவதர்களை இடையிட்டும் மேம்படுகிறது. ஆகவே ஒருவன் எம்பெருமானுக்குச் செய்யும் கைங்கர்யம் என்பது பாகவதர்கள் மூலமாகவும் சென்றடைகிறது. இதனை நித்யம் ச்ரியா ஸமேதஸ்ய பக்தேராத்மவத: ஸதா ஸஹ ஸத்வாரகம் ச ஸ்யாத் சேஷித்வம் பரமாத்மந: - பெரியபிராட்டியை விட்டு அகலாத எம்பெருமான், தன்னுடைய பாகவதர்களைத் தனது ஆத்மா என்றே கருதும் எம்பெருமான், தன்னுடைய பத்னியாகிய பிராட்டியுடன் உள்ளபோதும் எஜமானத்தன்மையை வெளிப்படுத்தியபடியும், பாகவதர்கள் மூலமாகத் தனது எஜமானத்தன்மையை வெளிப்படுத்தியபடியும் உள்ளான் – என்பதன் மூலம் அறியலாம்.

சுதந்திரமாகவும் தன்னுடைய விருப்பப்படியும் செயல்படுவதில் நாட்டம் கொண்ட அரசன் ஒருவன் தான் கழுத்தில் அணிந்துள்ள ஆபரணங்களையும், மாலைகளையும் தன்னுடைய வேலையாட்கள் மற்றும் யானை குதிரைகள் ஆகியவர்களின் கழுத்தில் அணிவிக்க விருப்பம் கொள்கிறான் (இது போன்று எம்பெருமான் தனது அடியார்களைக் கௌரவிப்பதில் மகிழ்வு கொள்கிறான்). கீழே உள்ள வரிகள் காண்க:

- அமலனாதிப்பிரான் (1) - அடியார்க்கு என்னையாட்படுத்த விமலன்

- பத்மோத்தரம் (81-52) - நாரத: அஹமநுப்ராப்த: ஸ்வதர்சன குதூஹலாத் ப்ரபவோ பகவத்பக்தா மாதர்சாம் ஸததம் த்விஜ – நாரதனாகிய உன்னைக் காணவே நான் இப்போது மிகவும் ஆர்வத்துடன் வந்தேன். இருமுறை பிறப்புள்ள அந்தணனே! பாகவதர்கள் அனைவரும் என்னைப் போன்றவர்களுக்கு எப்போதும் எஜமானர்கள்

- பெரியதிருமொழி (8-10-3) - மற்றும் ஓர் தெய்வம் உளதென்று இருப்பாரோடு உற்றிலேன் உற்றதும் உன்னடியார்க்கடிமை

மேலே உள்ள பல வரிகளின் மூலம் - ஜீவன்கள் எம்பெருமானின் கட்டளைக்கு அடிபணிந்தவர்கள் என்பதாலும், எஜமானனின் ஓர் அடிமைக்கு மற்ற அடிமைகள் தொண்டு செய்வது இயல்பானதே என்பதாலும், நாம் எம்பெருமானுக்குச் செய்யும் கைங்கர்யங்கள் நம்முடைய உயிர் உள்ளவரையில் பாகவதர்கள் முடிய நீட்டிக்கப்பட வேண்டும் என்றாகிறது.

பாகவதர்களின் குணங்கள் மற்றும் ஞானம் காரணமாகவும் அவர்களுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்னும் நமது ஆர்வம் மேலும் அதிகரிக்கவே செய்கிறது. இதனை இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (4-12) - குணைர்தாஸ்யமுபாகத: - இராமனின் குணங்களுக்குக் கட்டுப்பட்டு அடிமையாக உள்ளேன் – என்று லக்ஷ்மணன் கூறுவதன் மூலம் அறியலாம். இதனையே "பகவத்பக்தா:", "மாத்ருசாம்" போன்ற பதங்கள் உணர்த்துகின்றன.

## பாகவத சேஷத்வத்தின் முறை

**மூலம்–** இப்பாகவத சேஷத்வம் க்ரயம் செல்லும்படியைப் "பேசிவார் அடியார்கள் எந்தம்மை விற்கவும் பெறுவார்களே" என்று கல்பஸூத்ர வ்யாக்யாதாக்களான பெரியாழ்வார் அருளிச்செய்தார். இது மத்யமபதத்துக்குத் தாத்பர்யார்த்தம். இவ்வர்த்தத்தை அநுஸந்தித்தால் இச்சேஷத்வம் ஸ்த்வாரகமாகவும் அத்வாரகமாகவும் நின்ற நிலையிலே சேஷ வ்ருத்தியான கைங்கர்யமும் நிற்கும். ஆகையால் தன் சக்திக்கு அநுரூபமாக பகவத்கைங்கர்யத்தினுடைய ஸாத்யாகார வ்ருத்தியான புருஷார்த்தத்தில் எல்லை நிலத்தைத் தரிசு தூறு விடாதொழியப் ப்ராப்தம். இது,

பர்த்துர்ப்ருத்யகணஸ்ய ச,

ஆப்தோ விஷ்ணோரநாப்தச்ச த்விதா பரிகர: ஸ்ம்ருத:
நித்யோ வந்த்யோ ந வாநித்ய: கர்மவச்யோ முமுக்ஷுபி:

என்று ஸ்ரீபௌஷ்காதிகளிற் சொன்ன ந்யாயத்தாலே பதிவ்ரதாதர்மம் போலே இருக்கிற பரமைகாந்தித்வத்துக்கு மிகவும் உசிதமான பதிசித்தாநுவர்த்தநம் ஆகையால் ஹேத்வந்தரத்தாலன்றிக்கே அநந்யார்ஹ சேஷத்வஞானமடியாக வருகையாலே இவ்வந்ய சேஷத்வம் விருத்தமன்று.

**விளக்கம்** – இப்படியாக உள்ள பாகவத சேஷத்வம் விலைக்கு விறாலும் செல்லும்படியாக உள்ளதைக் கல்பஸூத்ரத்தின் வ்யாக்யான கர்த்தாவாகிய பெரியாழ்வார் தனது திருமொழியில் (4-4-10) - பேசிவார் அடியார்கள் எந்தம்மை விற்கவும் பெறுவார்களே– எம்பெருமானின் திருநாமத்தைக் கூறுபவர்கள் எங்களை விற்கக்கூட உரிமை உள்ளவர்கள் - என்றார். இதுவே திருமந்த்ரத்தின் நடுப்பதமான "நம:" என்பதன் பொருளாக உள்ளது. இந்த அர்த்தத்தில் நாம் சிந்தனை செய்தால், நாம் எம்பெருமானுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் (அடியார்கள் மூலம்) அடிமையாக உள்ளோம் என்றாகிறது. இதன்படி நாம் செய்யும் கைங்கர்யங்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆகிறது. ஆகவே எம்பெருமானின் அடிமையாக உள்ள ப்ரபன்னன் ஒருவன் தனது சக்திக்கு இயன்றவரையில் பாகவதர்களுக்குத் தொண்டு செய்வதே தங்களின் கடமை என்று அறியவேண்டும். இப்படியாக உள்ள பாகவதர்களுக்குக் கைங்கர்யம் என்ற நிலமானது பாழாகப் போகும்படிச் செய்துவிடாமல், எப்போதும் கைங்கர்யம் என்னும் உழவு செய்தபடி இருக்கவேண்டும். கீழே உள்ள பௌஷ்கர ஸம்ஹிதை வரிகளைக் காண்க:

- பர்த்துர்ப்ருத்யகணஸ்ய ச – தனது கணவன் அருகில் இருந்தாலும் சரி, இல்லாதபோதும் சரி, கணவனையும் அவனது வேலையாட்களையும் கவனிப்பது மனைவிக்குக் குற்றமன்று.

- ஆப்தோ விஷ்ணோரநாப்தச்ச த்விதா பரிகர: ஸ்ம்ருத: நித்யோ வந்த்யோ ந வாநித்ய: கர்மவச்யோ முமுக்ஷுபி: - எம்பெருமானின் பரிவாரங்கள் ஆப்தர் மற்றும் அநாப்தர் என்று இருவகைப்படுவர். ஆப்தர் என்பவர் நித்யர், முக்தர் மற்றும் பாகவதர்கள். அநாப்தர் என்பவர் தேவர்களும், கர்ம வசப்பட்ட ஸம்ஸாரிகளும் ஆவர். முமுக்ஷு ஒருவன் முதலில் கூறியவர்களை வணங்கலாம், இரண்டாவதாகக் கூறப்பட்டவர்களை வணங்கக்கூடாது.

ஆகவே பதிவ்ரதைக்கான தர்மங்களுடன் கூடிய ஒருவன், எம்பெருமானிடம் மிகவும் ஈடுபாடு கொண்ட ஒருவன், எம்பெருமானின் ஸங்கல்பத்திற்கு உட்பட்டே நடக்க முயல்வான். பாகவதர்களுக்கு அடிமையாக இருத்தல் என்பது நாம் எம்பெருமானுக்கு மட்டுமே அடிமை என்ற ஞானத்தால் உண்டாவதாகும். மற்ற யாருக்கும் நாம் அடிமை அல்ல என்பதால், பாகவதர்களுக்குத் தொண்டு செய்தல் என்பது முறையானதே ஆகும்.

**மூலம்**– இப்பாகவத சேஷத்வம் ஸ்வாபாவிகமோ ஔபாவிகமோவென்னில், கர்மாத்யுபாதிகளற நித்யாபிவாச்சித பரஸ்பர நீசபாவை: என்கிறபடியே யாவதாத்மபாவியாய்க்கொண்டு முக்ததசையிலும் அநுவர்த்திப்பதொன்றாகையாலே ஸ்வாபாவிகமென்னவுமாம்; பகவத்ஸம்பந்த ஜ்ஞாநவிசேஷ நிபந்தநமாகையாலே ஔபாவிகமென்னவுமாம்.

**விளக்கம்–** இப்படியாக பாகவதர்களுக்குத் தொண்டு புரிந்தபடி இருத்தல் என்பது இயற்கையாகவே உண்டாகிறதா அல்லது எதிர்பாராமல் உண்டாகிறதா என்ற கேள்வி எழலாம். இரண்டு வகைகளிலும் உண்டாகிறது. ஸ்ரீவைகுண்டஸ்தவம் (77) - நித்யாபிவார்ச்சித பரஸ்பர நீசபாவை: - ஒருவருக்கொருவர் தொண்டு செய்தபடி இருக்க விரும்பும் நித்யஸூரிகளோடு நான் எப்போது சேர்வேன் – என்று கூறுவதற்கு ஏற்ப இத்தகைய பாகவத சேஷத்வம் என்பது முக்தி அடைந்த பின்னரும் தொடர்வதால் இது இயற்கையாகவே உள்ளதாகிறது. எம்பெருமானின் தொடர்பு பற்றிய ஞானம் உண்டாகும்போது இத்தகைய பாகவத சேஷத்வமும் உண்டாவதால் எதிர்பாராமல் உண்டாகிறது எனவும் கூறலாம்.

## பாகவத சேஷத்வமும் பாகவத சேஷித்வமும்

**மூலம்–** இப்படியாகில் இருவருக்கும் பாகவதத்வமுண்டானால் ஒருவரைப்பற்ற ஒருவர்க்கு சேஷத்வமும் சேஷித்வமும் வருகை விருத்தமன்றோ என்னில், பரஸ்பர உபகார்யே உபகாரக பாவாதிகளிற்போலே இங்கும் விரோதமில்லை. அதிகார்யவஸ்தையிலே க்ரியைக்குச் சேஷியானவன் தானே கர்த்ரவஸ்தையிலே இதுக்குச் சேஷமாய் நில்லா நின்றான். அப்படியே அந்யோந்யம் பண்ணும் அதிசயங்களை உபஜீவியாதே ஒருத்தருக்கொருத்தர் அதிசயாதாநம் பண்ணினால் அதிசயாதாயகத்வவேஷத்தாலே இருவருக்கும் சேஷத்வமுண்டாய் அதிசயத்துக்கு வேஷத்தாலே இருவருக்கும் சேஷித்வமுண்டாகக் குறையில்லை.

**விளக்கம்** – பாகவதர்களுக்குக் கைங்கர்யம் செய்யும்போது, இருவருமே பாகவதர்கள் என்றாகின்றனர். இவ்விதம் ஆகும்போது இருவருக்குள் ஒருவர் அடிமையாகவும், மற்றொருவர் எஜமானனாகவும் இருக்கின்ற நிலை உண்டாகும் அல்லவோ? இது முரணாக உள்ளதே என்ற சந்தேகம் எழலாம். இதில் முரண்பாடு ஏதும் இல்லை. இந்த உலகத்தில் ஒருவர் மற்றவர்களுக்கு உதவி செய்தபடியும், தான் அவரிடமே உதவி கேட்டபடியும் உள்ள நிலையைக் காணலாம். யாகம் ஒன்றை இயற்றும் ஒருவன், ஏதோ ஒரு பலனுக்காக அதனை இயற்றியபோதிலும் அவன் எஜமானனாக உள்ளான்; அவனே அந்த யாகம் இயற்றுகின்ற நேரத்தில் யாகம் இயற்றும் தொண்டனாகவும் உள்ளான். இது போன்று ஒரு பாகவதர் மற்றொரு பாகவதருக்குக் கைங்கர்யம் செய்யும்போது கைங்கர்யம் செய்கின்ற பாகவதர் மற்றவருக்கு சேஷனாக உள்ளார். கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்கின்ற பாகவதர் வேறு ஒரு காலகட்டத்தில் கைங்கர்யம் செய்த பாகவதருக்குக் கைங்கர்யம் செய்யும்போது அவருக்கு இவர் சேஷனாகிறார். இப்படியாக இருவருக்கும் சேஷத்வமும் சேஷித்வமும் உண்டாவதில் குறையில்லை.

**மூலம்–** இப்படி ஈச்வரேச்சையாலே இருவரும் பரஸ்பரம் அதிசயாதாயகராக விநியுக்தராகையாலே இருவருக்கும் பாகவதசேஷித்வஸம்பந்தம் ப்ராமாணிகம். குணவசீக்ருதனான தன் நினைவாலே பகவத்விஷயத்திலும் பாகவத விஷயத்திலும் வரும் தாஸத்வம் போகவர்த்தகமாய்க் கொண்டு தன்னேற்றமாயிருக்கும். இவ்விடத்தில் ஈச்வரன் ஸ்வாதந்த்ர்ய ஸஹக்ருதையான தன் இச்சையாலே பாகவதர்க்கெல்லாம் சேஷித்வத்தை உண்டாக்கும். இவர்களிச்சையையும் கூட்டிக் கொண்டு இவர்களுக்கு பாகவத சேஷத்வத்தை உண்டாக்கும்.

**விளக்கம்–** இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் தொண்டு செய்வது என்பது எம்பெருமானின் இச்சையால் உண்டாவதால், இந்த சேஷித்வ ஸம்பந்தம் என்பது சாஸ்த்ரங்களால் ஏற்கப்படும் என்றே கொள்ளவேண்டும். பகவானுக்கு அல்லது பாகவதருக்கு அவர்களுடைய குணங்களைக் கண்டு வசீகரிக்கப்பட்டு, அவர்களுக்குத் தொண்டு செய்யும்போது தன்னுடைய இச்சையால் தொண்டு செய்வதால், அதிகமான மகிழ்ச்சி உண்டாகும். இப்படியாக உள்ளபோது, ஈச்வரன் தன்னுடைய ஸ்வதந்த்ரம் காரணமாகவும், ஸங்கல்பம் காரணமாகவும் அனைத்து பாகவதர்களுக்கும் எஜமானத் தன்மையை (சேஷித்வம்) உண்டாக்கிவிடுகிறான். மேலும் பாகவதர்களின் விருப்பம் மற்றும் தன்னுடைய ஸங்கல்பம் ஆகியவை மூலம் பாகவதர்களுக்கு சேஷத்வத்தையும் (தொண்டனாக உள்ள தன்மை) உண்டாக்குக்கிறான்.

**மூலம் –** இப்படி ஸ்வாமிக்கு இஷ்டவிநியோகார்ஹராய்க் கொண்டு சேஷிகளாய் நிற்கை தன்னாலே இருவரும் ஸ்வரூபம் பெற்றார்கள். ஸ்வாபீஷ்டமான பாகவதசேஷத்வமும் அதின் பலமான பாகவதகைங்கர்யமும் ஸித்திக்கையாலே இருவரும் புருஷார்த்த காஷ்டை பெற்றார்கள். இருவரையும் இப்படிப் பரஸ்பர சேஷ சேஷிகளாக நியமித்து ரஸிக்கையாலே ஈச்வரன் தன் ஈச்வரத்வமும் போக்த்ருத்வமும் பெற்றான். இப்ப்ரகாரத்தாலே தங்களுக்கு வந்த சேஷத்வ சேஷித்வாதிகளெல்லாம் ஈச்வரனுடைய போக்த்ருத்வத்துக்குச் சேஷமென்று தெளிகையாலே இருவர்க்கும் கோதற்ற புருஷார்த்த காஷ்டை உண்டாகிறது.

**விளக்கம் –** இப்படியாக இருவரும் ஒருவருக்கொருவர் எம்பெருமானின் ஸங்கல்பத்தால் சேஷியாக (ஒருவருக்கொருவர் எஜமானர்கள்) இருப்பதன் மூலம் தங்களது ஸ்வரூபத்தை உணர்கின்றனர். தங்களது விருப்பமான பாகவதர்களுக்கு அடிமையாக இருப்பதன் பலனான பாகவத கைங்கர்யத்தை இவர்கள் அடைகின்றதால், அடையப்படவேண்டிய புருஷார்த்தத்தின் எல்லையை அடைந்துவிடுகின்றனர். இப்படியாக ஒருவருக்கொருவர் தொண்டனாகவும் எஜமானனாகவும் உள்ள நிலையைக் கண்டு மகிழ்வதால், ஈச்வரன் தன்னுடைய ஈச்ரவத்தன்மை மற்றும் இன்பமாக உள்ள தன்மை ஆகியவற்றை அடைந்துவிடுகிறான். தாங்கள் ஒருவருக்கொருவர் சேஷனாகவும் சேஷியாகவும் (கைங்கர்யம் செய்பவராகவும், கைங்கர்யம் ஏற்பவராகவும்) உள்ளதைக் கண்டு

எம்பெருமான் இன்பம் அடைகிறான் என்று உணர்ந்து கொள்கின்றனர். இதனால் இவர்களுக்கு தோஷம் இல்லாத புருஷார்த்த எல்லை கிட்டுகிறது.

**மூலம்–** இப்படி நிச்சிதார்த்தராய் ஸாரவித்துக்களான க்ருதக்ருத்யருக்கு அபராதருசியும் அதிசங்கையும் அன்யதேவதா ஸ்பர்சமும் ஆத்மாதீந போகமும் ஆத்மார்த்த போகமுமாகிற பழுதில்லாத பரமைகாந்திகளுடைய ப்ரஸாதமே எப்போதும் ஸ்வயம் ப்ரயோஜநமாக அபேக்ஷணீயம்.

**விளக்கம்** – இப்படியாகத் தங்களது புருஷார்த்தத்தின் நிலைமையை உணர்ந்து, தங்களது நிலையை நன்றாக உணர்ந்தவர்கள் எம்பெருமானிடமும் பாகவதர்களிடமும் அபசாரப்படுதல் என்னும் ருசியைக் கைவிடுவர்; அவர்களைக் குறித்தி எந்தவிதமான சந்தேகமும் கொள்ளமாட்டார்கள்; எம்பெருமானைத் தவிர மற்ற தேவதைகளை நாட மாட்டனர்; தன்னுடைய இன்பத்திற்காகவோ, தனது சுதந்திரம் மூலமாக இன்பம் அடைவதாக எண்ணியோ ஏதும் செய்ய மாட்டனர்; பாகவதர்களின் க்ருபையே தங்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக எண்ணுவர்.

வேதம் அறிந்த பகவர் வியக்க விளங்கிய சீர்
நாதன் வகுத்த வகை பெறுநாம் அவன் நல்லடியார்க்கு
ஆதரமிக்க அடிமையிசைந்து அழியா மறைநூல்
நீதி நிறுத்த நிலை குலையாவகை நின்றனமே

**பொருள்–** வேதங்களை நன்று அறிந்த பாகவதர்களும் வியக்கும்படியான உயர்ந்த திருக்கல்யாண குணங்களைக் கொண்ட எம்பெருமான் நமக்கு இட்ட கட்டளையை (பாகவதர்களுக்குக் கைங்கர்யம் செய்தல்) நாம் அறிந்தோம். அவனுடைய சிறந்த அடியார்களுக்கு அன்புடன் கூடிய கைங்கர்யத்தைச் செய்வது என்பதை ஒப்புக் கொண்டோம். எப்போதும் அழியாமல் உள்ள வேதங்கள் கூறிய தர்ம மார்க்கத்தின் நிலையில் நின்று, முறை தவறாமல் நடந்தோம்.

நாதே ந: த்ருணம் அந்யத் அந்யத் அபி வா தந்நாபி நாலீகிநீ
நாலீக ஸ்ப்ருஹணீய ஸௌரபமுசா வாசா ந யாசாமஹே
சுத்தாநாம் து லபேமஹி ஸ்திரதியாம் சுத்தாந்த ஸித்தாந்திநாம்
முக்தைச்வர்ய திந ப்ரபாத ஸமயாஸித்தம் ப்ரஸத்திம் முஹு:

**பொருள்–** எம்பெருமானின் அடியார்களாகிய நமது வாக்குகள் அவனது திருநாபி என்னும் குளத்தில் தோன்றிய தாமரையும் விரும்பும் நறுமணம் கொண்டுள்ளது. இந்த வாக்கைக் கொண்டு நம்முடைய ஸ்வாமியான எம்பெருமானிடம் புல் போன்று அற்பமான செல்வம், இந்த்ர பதவிகள், ப்ரஹ்மபதம், கைவல்யம், மோக்ஷம் போன்ற எதனையும் யாசிக்க

மாட்டோம். முக்தர்களுக்குச் செல்வமாக பரிபூர்ணமான பகவத் அநுபவம் உள்ளது. இதனைப் பகல்பொழுது என்று கொண்டால், இதன் இனிமையான காலைப்பொழுது போன்று எது உள்ளது என்றால் – தூய்மையானவர்களும், எம்பெருமானிடம் அசைக்க இயலாத உறுதி கொண்டவர்களும், எம்பெருமான் விஷயத்தில் பதிவ்ரதைகளின் கற்பு உள்ளவர்களும் ஆகிய பாகவதர்களின் அநுக்ரஹமே ஆகும். இதனை நாம் அடைவோம்.

புருஷார்த்தகாஷ்ட்டாதிகாரம் ஸம்பூர்ணம்

## .17சாஸ்த்ரீய நியமந அதிகாரம்

கைங்கர்யங்களை சாஸ்த்ர விதிகளின்படிச் செய்வதைக் கூறுதல்

முகுந்தே நிக்ஷிப்ய ஸ்வபரம் அநதோ முக்தவத் அஸௌ
ஸ்வதந்த்ர ஆஜ்ஞாஸித்தம் ஸ்வயம் அவிதித ஸ்வாமி ஹ்ருதய:
பரித்யாகே ஸத்ய: ஸ்வ பர விவித அநர்த்த ஜநநாத்
அலங்க்யாம் ஆமோக்ஷாத் அநுஸரதி சாஸ்த்ரீய ஸரணிம்

**பொருள்** – ஒரு ப்ரபந்நன் தன்னுடைய பொறுப்புகள் முழுவதையும் எம்பெருமானிடம் ஸமர்ப்பணம் செய்த பின்னர், தனது பாவங்களை அனைத்தும் நீங்கப் பெற்றவனாக, முக்தனின் நிலையை அடையக்கூடும். ஆயினும் அவன் தான் உள்ள ஸம்ஸார நிலை காரணமாக எம்பெருமானின் உள்ளத்தை அறியாதவனாக, தான் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமல் விடக்கூடும். இதனால் அவன் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் தீமைகளை ஏற்படுத்தக்கூடும். இதனை உணரும் ஒருவன் - சுதந்திரமான எம்பெருமானின் ஆணையால் உண்டாக்கப்பட்டதும், மீறாமல் பின்பற்றப்பட வேண்டியதும் ஆகிய சாஸ்த்ரங்கள் கூறும் நெறிகளை மோக்ஷம் உண்டாகும்வரை பின்பற்றுகிறான்.

**மூலம்–** இச்சேஷத்வ ஸம்பந்தமடியாக பகவத்பாகவதவிஷயங்களில் இவன் பண்ணும் கைங்கர்யம் சாஸ்த்ர ஸாபேக்ஷ ருசியாலேயோ, சாஸ்த்ர நிரபேக்ஷ ருசியாலேயோ என்னில், இருள்தரு மாஞாலத்துள் இருக்கிற இவனுக்குச் சாஸ்த்ரம் கைவிளக்காக வேண்டுகையாலே யதாசாஸ்த்ரமாய் சாஸ்த்ரம் விகல்பித்தவற்றில் யதாருசியாகக் கடவது.

**விளக்கம்** – கடந்த அதிகாரத்தில் ஒருவன் தான் சேஷனாக (தொண்டு புரிபவனாக) உள்ள தன்மை காரணமாக எம்பெருமானுக்கும், அவனது அடியார்களுக்கும் கைங்கர்யம் செய்தல் பற்றி ஆராயப்பட்டது. அப்படிப்பட்ட கைங்கர்யத்தின் மீது இவன் கொள்ளும் ஆசை என்பது: இவனுக்கு இயல்பாகவே உள்ள ஆசை மற்றும் இது சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டது என்பதாலா அல்லது இவனுக்கு இயல்பாகவே உள்ள ஆசை காரணமாக மட்டுமே அல்லாமல் இவற்றைப் பற்றி சாஸ்த்ரங்களில் எதுவும் கூறப்படவில்லை

என்பதாலா என்று சந்தேகம் எழுகிறது. அறியாமை என்னும் இருள் சூழ்ந்த இந்த உலகில் உள்ள ஒருவனுக்கு சாஸ்த்ரங்களே கைவிளக்காக உள்ளன. ஆகவே இவனுக்கு சாஸ்த்ரங்கள் மூலமாகவே இந்த ஆசை ஏற்படுகிறது. ஒரு சில இடங்களில் சாஸ்த்ரங்கள் "செய்தாலும் செய்யலாம், செய்யாமல் விட்டாலும் தவறில்லை" என்று கூறும்போது, ஒருவன் தனது சொந்த முடிவு எடுக்கலாம்.

## எம்பெருமானார் தனது அந்திம காலத்தில் உரைத்தவை

**மூலம்–** அது எங்ஙனே என்னில், எம்பெருமானார் திருநாட்டுக்கு எழுந்தருளுகிறபோது ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருந்த முதலிகளுடைய ஆர்த்தியைக் கண்டருளி இவர்களை அழைத்தருளி, "என்னுடைய வியோகத்தில் தேஹத்யாகம் பண்ணினாருண்டாகில், ஆளவந்தார் ஸ்ரீபாதமே! என்னோடு அவர்களுக்கு ஸம்பந்தமில்லை", என்றருளிச்செய்ய, இவர்களும் இதைக்கேட்டு மிகவும் சோகார்த்தராய், "இனி எங்களுக்குச் செய்ய அடுப்பது எது?", என்று விண்ணப்பம் செய்ய, இவர் அருளிச் செய்தருளின வார்த்தை:

**விளக்கம்–** உடையவர் திருநாட்டு எழுந்தருளும் அந்திம காலத்தில், அவருடைய திருவடிகளைப் பற்றியபடி அவரது சிஷ்யர்கள் சோகத்தில் ஆழ்ந்து அமர்ந்திருந்தனர். அவர்களுடைய துயரத்தைக் கண்ட எம்பெருமானார் அவர்களைத் தன்னிடம் அழைத்தார். அவர்களிடம், "நான் எனது உயிரை விட்டபின்னர் யாரும் தங்களது உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சி செய்யக்கூடாது. அவ்விதம் யாரேனும் செய்தார்கள் என்றால், ஸ்வாமி ஆளவந்தாரின் திருவடிகளின் மீது ஆணையாக, அவர்களுக்கு என்னுடனான தொடர்பு நீங்கிவிடும்", என்றார். இதனைக் கேட்ட சிஷ்யர்கள் மேலும் சோகம் கொண்டவர்களாக எம்பெருமானாரிடம், "அப்படி என்றால், நாங்கள் வேறு என்ன செய்யவேண்டும்?", என்று உடையவரிடம் கேட்டனர். இதற்கு உடையவர் பின்வருமாறு அருளிச்செய்தார் (இவை ஐந்து ஆகும். இவை ஒன்றன் பின் ஒன்றாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன):

**மூலம் –**

.1ஒருவன் ப்ரபந்நனானால் அவனுடைய ஆத்ம யாத்ரை பகவததீநையாகையாலே அதில் அவனுக்கு அந்வயமில்லை; உண்டென்றிருந்தானாகில் ஆத்ம ஸமர்ப்பணம் பொய்யாமித்தனை. தேஹயாத்ரை கர்மாதீநையாகையாலே அதுக்குக் கரையவேண்டா; கரைந்தானாகில் நாஸ்திகனாமித்தனை. ஆகையால் உபய யாத்ரையையுங் கொண்டு இவனுக்குக் கார்யமில்லை.

.2ஆனால் மநோவாக்காயங்களாகிற த்ரிவித கரணங்களையுங் கொண்டு வேண்டிற்றுச் செய்து திரியவமையுமோ என்னில், அது இவனுக்கு ஸ்வரூபமன்று; உபயாம்சத்தில்

அந்வயமில்லாவிட்டாலும், ப்ராப்யமான கைங்கர்யத்திலே இவற்றை அந்வயிப்பிக் குமித்தனை.

**விளக்கம் –**

.1ஒருவன் ப்ரபந்நன் என்றால் தன்னுடைய மோக்ஷம் என்பது எம்பெருமானின் வசப்பட்டது என்பதால் அதனைக் குறித்து அவன் வருத்தம் கொள்ளவேண்டியதில்லை. அப்படியும் அவன் வருந்தினால் என்றால், அவன் ப்ரபத்தி செய்தது என்பது பொய்யே ஆகும். அவன் தனது சரீரத்தைக் கைவிடுதல் என்பது கர்மத்தின் கையில் உள்ளது என்பதால், அதற்காகவும் வருத்தம் கொள்ளக் கூடாது. அப்படியும் அவன் வருந்தினால் என்றால், அவன் நாஸ்திகனே ஆவான். ஆகவே இரண்டிற்காகவும் வருத்தம் கொள்ளக் கூடாது.

.2அப்படி என்றால் மனம், வாக்கு மற்றும் சரீரம் ஆகியவற்றைக் கொண்டு ஒருவன் தனது விருப்பப்படி செயல்கள் செய்தபடி இருக்கலாமா என்ற கேள்வி எழலாம். அப்படிச் செய்தல் என்பது இவனுடைய ஸ்வரூபத்திற்கு (இயல்பிற்கு) ஏற்றதன்று. அவனுக்கு அந்த மூன்று கரணங்களைக் கொண்டு உபாயத்தின் மீது எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை என்றாலும், இவற்றைக் கொண்டு இவன் தனது கைங்கர்யத்தில் ஈடுபட்டபடி இருக்கலாம். இந்தக் கைங்கர்யம் அல்லவோ இவனுடைய புருஷார்த்தமாக உள்ளது?

**மூலம் –**

.3அதில் இவனுக்கு இங்கிருந்த நாள் பண்ணலாம் கைங்கர்யம் அஞ்சு உண்டு. அவையாவன – பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல்; அதுக்கு யோக்யதையில் லையாகில் அருளிச்செயலைக் கேட்டு ப்ரவர்த்திப்பித்தல்; அதுக்கு யோக்யதையில் லையாகில் உகந்தருளின திவ்யதேசங்களுக்கு அமுதுபடி, சாத்துப்படி, திருவிளக்குத் திருமாலைகளை உண்டாக்குதல்; அதுக்கு யோக்யதையில்லையாகில் த்வயத்தினுடைய அர்த்தாநுஸந்தானம் பண்ணுதல், அதுக்கு யோக்யதையில்லையாகில் என்னுடையவன் என்று அபிமாநிப்பானொரு ஸ்ரீவைஷ்ணவனுடைய அபிமானத்திலே ஒதுங்கி வர்த்தித்தல் செய்யலாம்.

**விளக்கம்–** ப்ரபந்நன் இந்த உலகில் வாழும்வரையில் அவன் ஐந்துவிதங்களில் கைங்கர்யங்கள் செய்யலாம். அவையாவன:

- ஸ்ரீபாஷ்யத்தை (இங்கு பாஷ்யம் என்று மட்டுமே கூறப்பட்டதால், கீதா பாஷ்யமும் அடக்கம் என்று சிலர் கூறுவர்) தான் கற்றுக் கொண்டு, மற்றவர்களுக்கும் உபதேசம் செய்தல்.

- மேலே கூறப்பட்டது இயலவில்லை என்றால், ஆழ்வார்களின் அருளிச் செயலைக் கொண்டு, மற்றவர்களுக்கும் உபதேசம் செய்தல்.
- மேலே கூறப்பட்டது இயலவில்லை என்றால், எம்பெருமானின் திவ்யதேசங்களில் வசித்துக் கொண்டு அங்குள்ள எம்பெருமானுக்கு சமைத்துக் கொடுப்பது, சந்தனம் அரைப்பது, திருவிளக்கு தூய்மையாக்கி ஏற்றுதல், திருமாலைகள் தொடுத்தல் முதலியவற்றைச் செய்தல்.
- மேலே கூறப்பட்டது இயலவில்லை என்றால், த்வய மந்த்ரத்தை அதன் பொருளுடன் அறிந்து கொண்டு, அதனைக் கூறியபடி இருத்தல்.
- மேலே கூறப்பட்டது இயலவில்லை என்றால், "நான் உடையவரின் கோஷ்டியைச் சேர்ந்தவன்" என்று எண்ணியபடி உள்ள ஒரு ஸ்ரீவைஷ்ணவனைப் பற்றிக் கொண்டு, அவனுடைய நிழலில் ஒதுங்கி வாழ்தல்.

**மூலம் -**

.4இப்படி வர்த்திக்கும் அதிகாரிக்கு முன்னடி பார்த்து வர்த்திக்க வேண்டுவன மூன்று விஷயமுண்டு. அவையாவன – அநுகூலரென்றும், ப்ரதிகூலரென்றும், அநுபயரென்றும். அநுகூலராவார் – ஸ்ரீவைஷ்ணவர்கள். ப்ரதிகூலராவார் – பகவத் த்விட்டுக்கள், அநுபயராவார் – இவ்விரண்டுமில்லாத ஸம்ஸாரிகள். இதில் அநுகூலரைக் கண்டால் சந்தந குஸுமாதிகள் போலவும், நிலவு தென்றல் போலவும், அபிமத விஷயங்கள் போலவும் உகந்து வர்த்திப்பான். ப்ரதி கூலரைக் கண்டால் ஸர்ப்பாதிகளைக் கண்டாற்போலே வெருவி வர்த்திப்பான். அநுபயரைக் கண்டால் காஷ்ட லோஷ்டாதிகளைக் கண்டாற்போலே த்ருணவத்கரித்து வர்த்திப்பான். இவர்கள் அநுகூலிப்பார்களாகில் இவர்களுக்கு ஜ்ஞாநத்தை உண்டாக்கவும், இவர்கள் அநுகூலியார்களாகில் ஐயோ என்று இவர்கள் பக்கலிலே க்ருபை பண்ணியிருக்கவும் அடுக்கும்.

**விளக்கம்** – மேலே கூறப்பட்டபடி வாழ்கின்ற ப்ரபந்நன் தன் முன்பாக உள்ள மூன்று விஷயங்களைக் கவனித்து இருத்தல் வேண்டும். அவையாவன: அநுகூலர், ப்ரதிகூலர் மற்றும் அநுபயர் என்பவர்கள் குறித்தே ஆகும். அநுகூலர் = ஸ்ரீவைஷ்ணவர்கள்; ப்ரதிகூலர் = எம்பெருமானைத் த்வேஷம் செய்பவர்கள்; அநுபயர் = இந்த இரண்டிலும் பொருந்தாத ஸம்ஸாரிகள் ஆவர். இவர்களில் அநுகூலரைக் காணும்போது சந்தனம் மற்றும் மலர்களைக் கண்டது போன்றும், நிலவு மற்றும் தென்றலை அனுபவிப்பது போன்றும் ,மனதிற்குப் பிடித்த விஷயங்கள் போன்றும் மகிழ்வு கொள்ளவேண்டும். ப்ரதிகூலரைக் காணும்போது நாகம் மற்றும் நெருப்பைக் கண்டால் எப்படி அச்சம் உண்டாகுமோ அது போன்று அச்சம் கொள்ளவேண்டும். அநுபயரைக் காணும்போது, மரம் அல்லது மண்கட்டியைக் காண்பது போல் எண்ணி, அவர்களைப் புல்லாக நினைத்து பொருட்படுத்தாமல் தவிர்க்கவேண்டும். இப்படி உள்ள அநுபயர்கள் பகவத் விஷயத்தில் ஈடுபட எண்ணினால், அவர்களுக்குத் தகுந்த ஞானத்தை அளிக்கவேண்டும்; அவர்கள்

பகவத் விஷயத்தில் ஈடுபாடு கொள்ளவில்லை என்றால் அவர்களின் நிலை கண்டு வருந்தி கருணை கொள்ளவேண்டும்.

**மூலம் –**

.5இப்படிச் செய்யவொட்டாதொழிகிறது அர்த்தகாமங்களில் ப்ராவண்யம். அர்த்தகாமங்களடியாக ஸ்ரீவைஷ்ணவர்களை அநாதரித்திருக்குமாகில் ஸார்வபௌமனாயிருப்பானொரு ராஜாவினுடைய புத்திரனை ராஜஸந்நிதியிலே பரிபிவித்தால் ராஜா வெறுக்குமாப் போலே எம்பெருமான் திருவுள்ளம் சீறும். அர்த்தகாமங்களடியாக ப்ரதிகூலரை ஆதரித்திருக்குமாகில் ராஜா ஸார்வபௌமனாயிருக்க ராஜமஹிஷி க்ஷுத்ர ஜந்துக்கள் பக்கலிலே மடிப்பிச்சை புக்கால் ராஜாவுக்கு அவத்யமாய் அத்தாலே அவளை அவன் வெறுக்குமாப் போலே எம்பெருமான் திருவுள்ளம் வெறுத்திருக்கும். அர்த்தகாமங்களடியாக அநுகூலரை ஆதரித்திருக்குமாகில் ரத்நத்துக்கும் பாஷாணத்துக்கும் வாசியறியாதாப் போலே இவனுக்குப் பிறந்த ஜ்ஞாநம் கார்யகரமாயிற்றில்லையென்று அவனளவிலே எம்பெருமான் அநாதரித்திருக்கும்.

**விளக்கம்** – கடந்த பத்தியில் கூறியபடி செய்ய இயலாமல் தடுப்பது எது என்றால், செல்வம் மற்றும் புலன் விஷயங்களில் உள்ள ஆசையே ஆகும். இப்படியாக பொருள் மற்றும் புலன் விஷயங்களில் கொண்ட ஆசை காரணமாக ஒருவன் ஸ்ரீவைஷ்ணவர்களை தரக்குறைவாக நடத்தினான் என்று வைப்போம்; அவனுடைய நிலை என்ன? அரசனின் முன்னிலையில் அரசகுமாரனை அவமானப்படுத்தினால் அரசனுக்கு எத்தனை கோபம் உண்டாகுமோ அது போன்று எம்பெருமான் தனது மனதில் அவன் மீது சீற்றம் கொள்வான். பொருள் மற்றும் புலன் விஷயங்களில் கொண்ட ஆசை காரணமாக ஒருவன் ப்ரதிகூலர்களை மரியாதையுடன் நடத்தினான் என்று வைப்போம்; அவனுடைய நிலை என்ன? அரசன் உள்ளபோது அரசியானவள் மற்றவர்களிடம் சென்று தனக்கு உதவி என்று கேட்டால் அரசன் எவ்விதம் அரசியை வெறுப்பானோ அது போன்று எம்பெருமான் அவனை வெறுப்பான். பொருள் மற்றும் புலன் விஷயங்களில் கொண்ட ஆசை காரணமாக ஒருவன் மேலே உள்ள இரு பிறவினர் நீங்கலாக உள்ள மற்றவர்களை மரியாதையுடன் நடத்தினான் என்று வைப்போம்; அவனுடைய நிலை என்ன? இப்படிபட்டவனுக்கு இரத்தினக்கல்லிற்கும் பாறாங்கல்லிற்கும் வேறுபாடு தெரியாத அளவிற்கு ஞானம் உள்ளது என்று தீர்மானித்து எம்பெருமான் அவனை ஒதுக்கிவிடுவான்.

**மூலம்–** இப்படி ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்த உத்தரக்ருத்யத்தில்

குலடா ஷண்ட பதிதா வைரிப்ய: காகிணீமபி
உத்யதாமபி க்ருஹீண்யாந்நாபத்யபி கதாசந

பரரந்த்ரேஷு ஜாத்யந்தா: பரதாரேஷ்வபும்ஸகா:
பரிவாதேஷு யே மூகா: தே அதீவ தயிதா மம

இத்யாதிகளிற்படியே தர்மவிருத்த அர்த்தகாமங்கள் தூரதோ நிரஸ்தங்களான படியாலே தர்ம அவிருத்தங்களான அர்த்தகாமங்களுபாதியாகவும் அநுகூல ப்ரதிகூல உதாஸீந விஷயங்களில் தான் நின்ற நிலை குலையலாகாதென்று திருவுள்ளம்.

**விளக்கம்–** இப்படியாக ப்ரபந்நர்களுக்கான ஒழுக்கங்களை எம்பெருமானார் அருளிச்செய்ததைக் காணலாம். மேலும் சாஸ்த்ரங்களால் அப்பால் விலக்கப்பட்டவை என்பதால், பொருள் மற்றும் புலன் விஷயங்களில் கொள்ளும் ஆசை என்பது ப்ரபந்நர்களுக்கு மட்டும் அல்லாமல், அனைவருக்குமே தடுக்கப்பட்ட ஒன்றாகும். இதனைக் கீழே உள்ள ச்லோகங்களில் காணலாம்:

- சாண்டில்ய ஸ்ம்ருதி (3-18) - குலடா ஷண்ட பதிதா வைரிப்ய: காகிணீமபி உத்யதாமபி க்ருஹீண்யாந்நாபத்யபி கதாசந – விபச்சாரி, அலி, கர்மங்களைத் துறந்தவன், விரோதி ஆகியவர்கள் தாங்களாகவே அளித்தாலும், எப்பேர்ப்பட்ட ஆபத்து காலமாக இருந்தாலும் அவற்றைப் பெறுதல் கூடாது.

- விஷ்ணுதர்மம் (76-22) - பரரந்த்ரேஷு ஜாத்யந்தா: பரதாரேஷ்வபும்ஸகா: பரிவாதேஷு யே மூகா: தே அதீவ தயிதா மம – மற்றவர்களின் குற்றங்களைக் காணாத குருடன், மற்றவர்களின் மனைவிகளிடம் அலி போன்று நடப்பவன், மற்றவர்களைப் பற்றிப் பேசாத ஊமை ஆகியவர்கள் எனக்கு மிகவும் ப்ரியமானவர்கள்.

ஆக, தர்மவழிக்கு மாறாத வழியில் பொருள் ஈட்டுதல் மற்றும் புலன் விஷயங்களில் ஈடுபடுதல் என்றாலும் கூட, ப்ரபந்நர்கள் தங்களது நிலையை அநுகூலர், ப்ரதிகூலர் மற்றும் உதாஸீநர் ஆகியவர்கள் விஷயங்களில் மாற்றிக் கொள்ளக்கூடாது என்பதே எம்பெருமானாரின் திருவுள்ளம் ஆகும்.

**மூலம்–** அதில் அநுகூலரை அநாதரிக்கலாகாதென்னுமிடம் ஸ்ரீசாண்டில்ய ஸ்ருதியிலே, அநாத்யத ஸூதம் கேஹீ புருஷம் நாபிநந்ததி ததா அநார்சித ஸத்பக்தம் பகவாந் நாபிநந்ததி என்று சொல்லப்பட்டது. ப்ரதிகூல ஸம்ஸர்க்கம் ஆகாதென்னுமிடம், மஹாபாரதத்திலே யே த்விஷந்தி மஹாத்மாநம் ந ஸ்மரந்தி ச கேசவம் ந தேஷாம் புண்யதீர்த்தேஷு கதி: ஸம்ஸர்க்கிணாமபி என்று சொல்லப்பட்டது. அப்படியே மூடை: பாபரதை: க்ரூரைர்பகவச்சாஸ்த்ர தூஷகை: ஸம்பந்தம் நாசரேத்பக்திர்நச்யத்யேதைஸ்து ஸங்கமே என்று ப்ரதிகூல ஸம்ஸர்க்கம் பகவத்ப்ரேமத்தை அழிக்குமென்று சொல்லப்பட்டது. உதாஸீநரை த்ருணவத்கரித்திருக்கவேணுமென்னுமிடம், அத்யப்ரப்ருதி

ஹே லோகா யூயம் வயம் வயம் அர்த்தகாமபரா யூயம் நாராயணபரா வயம் நாஸ்தி ஸங்கதிரஸ்மாகம் யுஷ்மாகம் ச பரஸ்பரம் வயம் து கிங்கரா விஷ்ணோர்யூயமிந்த்ரய கிங்கரா: இத்யாதிகளிலே ப்ரஸித்தம்.

**விளக்கம்–** ப்ரபந்நன் யாரை ஏற்கவேண்டுமோ (ஸ்ரீவைஷ்ணவர்கள்) அவர்களைத் தள்ளக்கூடாது என்பதை சாண்டில்ய ஸ்ம்ருதி (4-86) - அநாத்யத ஸுதம் கேஹீ புருஷம் நாபிநந்ததி ததா அநார்சித ஸத்பக்தம் பகவாந் நாபிநந்ததி – தன்னுடைய குழந்தையை மதிக்காமல், தன்னிடம் உதவி கேட்டு வரும் ஒருவனிடம் அந்தக் குழந்தையின் தந்தை எப்படி அன்பு காட்டுவதில்லையோ அது போன்று, தனது பக்தர்களை வணங்காதவர்களிடம் எம்பெருமான் அன்பு காட்டுவதில்லை – என்றது. அடுத்து, ப்ரபந்நர்கள் தகாதவர்களிடம் தொடர்பு வைக்கக்கூடாது என்ற கருத்து மஹாபாரதத்தில் (சாந்திபர்வம்: 336-36) - யே த்விஷந்தி மஹாத்மாநம் ந ஸ்மரந்தி ச கேசவம் ந தேஷாம் புண்யதீர்த்தேஷு கதி: ஸம்ஸர்க்கிணாமபி – பரமாத்மாவான கேசவனை எண்ணமுடியாத அளவிற்கு அவனிடம் பகையை வளர்த்திருப்பவர்கள், அப்படிப்பட்டவர்களுடன் சேர்பவர்கள் ஆகிய இருவரும் புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதால் எந்தப் பயனும் பெறுவதில்லை – என்றது காண்க. மேலும் தகாதவர்களிடம் வைக்கும் தொடர்பு எம்பெருமான் மீது வைக்கும் ப்ரேமையை அழிக்கும் என்பதை சாண்டில்ய ஸ்ம்ருதி (1-121) - மூடை: பாபரதை: க்ரூரைர்பகவச்சாஸ்த்ர தூஷகை: ஸம்பந்தம் நாசரேத்பக்திர்நச்யத்யேதைஸ்து ஸங்கமே – அறிவில்லாதவர்கள், பாவங்களில் ஈடுபட்டபடி உள்ளவர்கள், தீய தன்மைகள் உள்ளவர்கள், பாஞ்சராத்ர ஆகமத்தைத் தவறாகக் கூறுபவர்கள் ஆகியவர்களுடன் சேர்ந்தால் பக்தி அழியும் – என்றது. ஏற்கத்தக்கவர்கள், ஏற்கத்தகாதவர்கள் ஆகிய இரண்டு பிரிவினர் தவிர உள்ள மூன்றாவது பிரிவினரைப் புல் போன்று அற்பமாக ஒதுக்கவேண்டும் என்பது குறித்து - அத்யப்ரப்ருதி ஹே லோகா யூயம் வயம் வயம் அர்த்தகாமபரா யூயம் நாராயணபரா வயம் நாஸ்தி ஸங்கதிரஸ்மாகம் யுஷ்மாகம் ச பரஸ்பரம் வயம் து கிங்கரா விஷ்ணோர்யூயமிந்த்ரய கிங்கரா: - உலகவிஷயங்களில் ஈடுபட்டபடி உள்ளவர்களே! இன்று தொடக்கமாக நீங்களும் நாங்களும் வெவ்வேறு ஆவோம். நீங்கள் உலக இன்பம் மற்றும் செல்வம் ஆகியவற்றில் மட்டுமே ஈடுபாட்டுடன் உள்ளீர்கள், நாங்கள் ஸ்ரீமந்நாராயணனிடம் மட்டுமே ஈடுபாட்டுடன் உள்ளோம். உங்களுக்கும் எங்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. நீங்கள் புலன்கள் வசப்பட்டவர்கள், நாங்கள் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்பவர்கள் – என்றது காண்க.

**மூலம்–** இப்படி முன்னடி பார்த்து வர்த்திக்கவேணுமென்று அருளிச் செய்த அர்த்தம் சாஸ்த்ரைகவேத்யமாகையாலே சாஸ்த்ரீயங்களுக்கு உபலக்ஷணமாக ஸாரோத்தாரம் பண்ணி இவரருளிச் செய்த கைங்கர்யங்களும் தான் வேண்டினபடி செய்யவொண் ணாமையாலே சாஸ்த்ரோக்தமான நியமத்தோடே செய்தால் கைங்கர்யமாமென்று ஸூசிதம். “வேண்டிற்றுச் செய்து திரியவமையுமோவென்னில் அது இவனுக்கு ஸ்வரூபமன்று” என்றருளிச் செய்தபடியாலே அசாஸ்த்ரமாஸூரம் க்ருத்ஸ்நம் என்று

ஆளவந்தார் அருளிச் செய்தபடியே, சாஸ்த்ர விருத்தங்கள் தைவப்ரக்ருதியான இவன் ஸ்வரூபத்துக்குப் பொருந்தாமையாலும்,

ச்ருதி: ஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்யம் வர்த்ததே
ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோ அபி ந வைஷ்ணவ:

என்று அடிமை கொள்ளுகிறவன் அருளிச் செய்தபடியாலும் இவன் சரீரத்தோடு இருந்த காலம் சாஸ்த்ரவச்யனாய் அடிமை செய்யவேண்டுமென்று திருவுள்ளம்.

**விளக்கம்** – இப்படியாக முன்னர் கூறப்பட்டதை அறிந்து ப்ரபன்னர்கள் வாழவேண்டும் என்பதன் பொருள் என்னவென்றால் - எம்பெருமானார் அருளிச்செய்த இன்றியமையாத கைங்கர்யங்கள் அனைத்தும் சாஸ்த்ரங்கள் மூலமாக அறியப்படவேண்டும் என்பதும், இவர் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட விதிமுறைகளில் கைக்கொள்ளப்படவேண்டும் என்பதும், இப்படிச் செய்தால் மட்டுமே அவை கைங்கர்யங்களாகக் கொள்ளப்படும் என்பதும் ஆகும். இதனை எம்பெருமானார் - வேண்டிற்றுச் செய்து திரியவமையுமோவென்னில் அது இவனுக்கு ஸ்வரூபமன்று – இவன் தன்னுடைய விருப்பத்திற்கு ஏற்பச் செய்வான் என்றால் அது இவனுடைய ஸ்வரூபத்திற்கு விரோதமாகவே அமையும் – என்றார். கீதார்த்த ஸங்க்ரஹத்தில் ஆளவந்தார் (21) - அசாஸ்த்ரமாஸுரம் க்ருத்ஸ்நம் – சாஸ்த்ரத்திற்கு உட்படாத செயல்கள் அனைத்தும் அசுரத்தன்மை உள்ளவை – என்றார். மேலும் நம்முடைய கைங்கர்யங்களை ஏற்றுக் கொண்டு, நம்மை அடிமையாக்கிக் கொள்கிறவன் விஷ்ணுதர்மத்தில் (6-31) - ச்ருதி: ஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்யம் வர்த்ததே ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோ அபி ந வைஷ்ணவ: - வேதமும் ச்ருதியும் எனது கட்டளைகளாகும்; அவற்றை மீறி நடப்பவன் யாராக இருப்பினும் எனது ஆணைகளை மீறுபவன் ஆவான்; அவன் எனக்குத் துரோகம் செய்தவன் ஆவான்; அவன் என்னிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தாலும் வைஷ்ணவன் அல்லன் – என்றான். ஆகவே தன்னுடைய சரீரத்துடன் உள்ள காலம் முடிய ப்ரபன்னன் சாஸ்த்ரங்களுக்கு உட்பட்டு கைங்கர்யம் செய்யவேண்டும் என்பது எம்பெருமானாரின் திருவுள்ளம் ஆகும்.

**மூலம் –**

நிஜகர்மாதி பக்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித:
உபாயதாம் பரித்யஜ்ய ந்யஸ்யேதேவே து தாமபீ:

என்று ஸ்ரீகீதார்த்தஸங்க்ரஹத்தில் ப்ரீத்யைவ என்கிற அவதாரணத்தாலே ஸாதநத்வ புத்தியை வ்யவச்சேதித்தார் என்னுமிடம் உபாயதாம் பரித்யஜ்ய என்று விவரிக்கையாலே வ்யக்தம். சாஸ்த்ரீய கைங்கர்யத்தில் ப்ரீதியினுடைய ப்ரேரகத்வாதிசயம் விவக்ஷிதமானாலும் நிஜகர்மாதி பக்த்யந்தம் என்கிற இவற்றின் ஸ்வரூபத்துக்குச்

சாஸ்த்ரமே ப்ரமாணமென்னுமிடம் நிஜகர்ம சப்தத்தாலே தர்சிதமாயிற்று. இது சாஸ்த்ரீய நியமம்:

> அவிப்லவாய தர்மாணாம் பாலநாய குலஸ்ய ச
> ஸங்க்ரஹாய ச லோகஸ்ய மர்யாதா ஸ்தாபநாய ச
> ப்ரியாய மம விஷ்ணோச்ச தேவதேவஸ்ய சார்ங்கிண:
> மநீஷீ தைவிகாசாரம் மநஸா அபி ந லங்கயேத்

என்று ப்ரபத்த்யாயத்திலே ப்ரஸித்தம்.

**விளக்கம்–** கீதார்த்த ஸங்க்ரஹத்தில் (31) - நிஜகர்மாதி பக்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித: உபாயதாம் பரித்யஜ்ய ந்யஸ்யேதேவே து தாமபீ: - கர்மயோகம் தொடங்கி பக்தியோகம் முடிய அவரவர்களின் வர்ணத்திற்கு ஏற்றவற்றை எம்பெருமான் மீது அன்பின் அடிப்படையிலேயே செய்யவேண்டும்; அவைகளை உபாயம் என்று கொள்ளாமலும், மற்ற தேவதைகளைக் கண்டு அஞ்சாமலும், எம்பெருமானே உபாயம் என்று கொண்டும் இருத்தல் வேண்டும் – என்றார். இங்கு – ப்ரீத்யைவ – அன்பினால் மட்டுமே – என்னும் பதம் மூலம் இவை உபாயங்கள் என்று எண்ணக்கூடிய புத்தியைத் தள்ளினார். இதனை - உபாயதாம் பரித்யஜ்ய – இவைகள் உபாயங்கள் அல்ல எனத் தள்ளவேண்டும் – என்பதன் மூலம் தெளிவாக அறியலாம். எம்பெருமான் மீது ஒருவன் கொண்டுள்ள அன்பானது அவனை சாஸ்த்ரங்கள் விதித்துள்ள வழிகளில் கைங்கர்யத்தில் ஈடுபடுத்தவல்ல வலிமை கொண்டதாகும். ஆனால் - நிஜகர்மாதி பக்த்யந்தம் - கர்மயோகம் தொடங்கி பக்தியோகம் முடிய அவரவர்களின் வர்ணத்திற்கு ஏற்ற – என்பதன் மூலம், இந்தக் கைங்கர்யங்களாகிய கர்மங்களின் ஸ்வரூபம் அனைத்திற்கும் சாஸ்த்ரங்களே ப்ரமாணங்கள் என்பது உணர்த்தப்பட்டது. இந்த விதியானது சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டது என்பது கீழே உள்ள லக்ஷ்மீ தந்த்ரம் (17-93, 94) மூலம் அறியலாம்:

> அவிப்லவாய தர்மாணாம் பாலநாய குலஸ்ய ச
> ஸங்க்ரஹாய ச லோகஸ்ய மர்யாதா ஸ்தாபநாய ச
> ப்ரியாய மம விஷ்ணோச்ச தேவதேவஸ்ய சார்ங்கிண:
> மநீஷீ தைவிகாசாரம் மநஸா அபி ந லங்கயேத்

இதன் பொருள் – தர்மங்கள் மாறாமல் இருக்கவும், குலங்களைக் காப்பாற்றவும், இந்த உலகை தூய்மையான வழியில் நிலையாக நிறுத்தவும், சாஸ்த்ரங்களுக்கான மரியாதை என்றும் உள்ளதற்கும் ப்ரபன்னன் ஒருவன் வேதங்களில் விதிக்கப்பட்ட விதிகளை மனதாலும் மீற எண்ணக்கூடாது. இதனை ப்ரபன்னன் ஏன் செய்யவேண்டும் என்றால்

என்னுடைய மகிழ்ச்சிக்காகவும், அனைவருக்கும் தேவனும் சார்ங்கம் என்னும் வில்லை உடையவனும் ஆகிய எம்பெருமானின் மகிழ்ச்சிக்காகவும் ஆகும்.

**மூலம்–** இது தவிர்ந்தபோது வரும் அநிஷ்டமும்,

யதா ஹி வல்லபோ ராஜ்ஞோ நதீம் ராஜ்ஞா ப்ரவர்த்திதாம்
லோகோபயோகிநீம் ரம்யாம் பஹுஸஸ்ய விவர்த்தநீம்
லங்கயந் சூலமாரோஹேதநபேக்ஷ: அபி தாம் ப்ரதி
ஏவம் விலங்கயந் மர்யாதாம் வேதநிர்மிதாம்
ப்ரிய: அபி ந ப்ரிய: அஸௌ மே மதாஜ்ஞா வ்யதிவர்த்தநாத்

என்று அநந்தரம் சொல்லப்பட்டது. இந்த பகவதப்ரீதிக்கு க்ஷமை கொண்டிலனாகில் முக்தனாவதற்கு முன்னே அதிகாராநுரூபமாக ஏதேனுமோர் அநிஷ்டத்தை விளைவிக்கும். அது நிற்க ஸத்த்வப்ரக்ருதியான இவனுக்கு பகவதப்ரீதிக்கு மேற்பட்ட நரகமில்லை. அந்த பகவதப்ரீதி சமிப்பதும் பின்பு க்ஷமை கொள்ளில். ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் என்னும்படி நிஸர்க்கஸுஹ்ருத்தான ஈச்வரனுடைய அப்ரீதி சமிக்குமளவும் இவனுக்கு அருந்துதமாயிருக்கும். இங்ஙன் இராதவனுக்கு ஸ்வாமி விஷயத்தில் ப்ராவண்யமும் கைங்கர்ய ரூபமான மோக்ஷத்தில் ருசியும் சங்கிக்க அடுக்கும்.

**விளக்கம்–** இப்படியாக உள்ள சாஸ்த்ர நியமங்களை மீறும்போது உண்டாகும் தீமை குறித்து அடுத்துக் கூறப்பட்டது. அந்த வரிகள் (லக்ஷ்மீ தந்த்ரம்: 17 :(97 ,96 ,95 –

யதா ஹி வல்லபோ ராஜ்ஞோ நதீம் ராஜ்ஞா ப்ரவர்த்திதாம்
லோகோபயோகிநீம் ரம்யாம் பஹுஸஸ்ய விவர்த்தநீம்
லங்கயந் சூலமாரோஹேதநபேக்ஷ: அபி தாம் ப்ரதி
ஏவம் விலங்கயந் மர்யாதாம் வேதநிர்மிதாம்
ப்ரிய: அபி ந ப்ரிய: அஸௌ மே மதாஜ்ஞா வ்யதிவர்த்தநாத்

இதன் பொருள் – ஓர் அரசன் உலகிற்குப் பயன்படுவதற்காக அழகான ஒரு நதியை ஏற்படுத்தக்கூடும்; அந்த நதியானது பலவிதமான இடங்களில் உள்ள பயிர்களைச் செழிப்பாக வைத்தபடி ஓடும்; அந்த நதியால் தனக்கு எந்தவிதமான பயனும் இல்லை என்று ஒருவன் அழிக்க முற்படுகிறான் என வைப்போம்; அப்படிப்பட்டவன் அரசனின் நண்பனாக இருந்தாலும் அவனை அந்த அசரன் கழுவில் ஏற்றுவான்; இப்படியாகவே வேதங்களில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளை மீறி நடப்பவன் எனக்கு ப்ரியமானவனாகவே இருந்தாலும், எனது கட்டளைகளை மீறியதால் தண்டனைக்கு உரியவனே ஆவான் – என்பதாகும். இப்படியாக ஒருவன் எம்பெருமானுக்கு மகிழ்ச்சியை அளிக்காத செயலைச் செய்தான் என்று வைத்துக்கொள்வோம். அப்படிப்பட்டவன் தான்

மரணம் அடைவதற்கு முன்பாக அதற்காக எம்பெருமானிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். அப்படிக் கேட்கவில்லையென்றால், அவனுடைய தகுதிக்கு ஏற்ப தீமைகள் வந்து சேரும். அது மட்டும் அல்லாமல், எம்பெருமானுக்கு வருத்தம் அளிக்கக்கூடிய செயலைச் செய்வதைக் காட்டிலும் ப்ரபன்னனுக்கு வேறு பெரிய நரகம் என்று ஏதும் இல்லை. இவன் மன்னிப்பு கேட்டவுடன் எம்பெருமானின் வருத்தம் மறைந்து விடுகிறது. கீதை (5-29) - ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்– எம்பெருமான் அனைத்து உயிர்களின் நன்மையை விரும்புபவன் – என்று கூறுவதற்கு ஏற்ப அனைத்தின் நன்மையை அளிப்பவனாகிய ஈச்வரனின் வருத்தமானது தணிகின்றவரையில் இவனுக்கு உண்டான வேதனையானது பிறப்புறுப்பில் உண்டான வேதனை போன்று தாங்க இயலாத அளவு இருக்கும். தனது செயலைக் கண்டு எம்பெருமானின் மகிழ்ச்சி குலைந்தது கண்டும், இப்படியான வேதனை ஒருவனுக்கு உண்டாகவில்லையென்றால் அவன் தனது எஜமானனாகிய எம்பெருமானிடம் கொண்டுள்ள பக்தியும் ,கைங்கர்ய ரூபமாக உள்ள மோக்ஷத்தில் கொண்டுள்ள ஆசையும் சந்தேகிக்கக் கூடியவையே ஆகும்.

**மூலம்–** இவ்வாஜ்ஞாதிலங்கனம் ப்ரஹர்ஷயிஷ்யாமி என்று உத்தேச்யையான பகவத் ப்ரீதிக்கு விரோதியானபடியாலே இச்சாஸ்த்ரீய நியமம் ரஹஸ்ய த்ரயத்தில் விரோதி நிவ்ருத்தியை அநுஸந்திக்குமிடங்களிலே அநுஸந்திக்கப் ப்ராப்தம்.

**விளக்கம்** – எம்பெருமானின் கட்டளைகளை மீறுதல் என்பது, நம்முடைய இலக்காக உள்ள "எம்பெருமானின் மகிழ்ச்சிக்காகவே நாம் உள்ளோம்" என்பதற்கு விரோதியாகவே உள்ளது. நாம் அவனது மகிழ்விற்காகவே உள்ளோம் என்பதை ஸ்தோத்ர ரத்னம் (46) – ப்ரஹர்ஷயிஷ்யாமி– எப்போது உன்னை மகிழச் செய்வேன் – என்பதில் காணலாம். ஆகவே சாஸ்த்ரங்களில் உள்ளவற்றைப் பின்பற்றுதல் என்பதை, மூன்று ரஹஸ்யங்களிலும் (திருமந்த்ரம், த்வயம், சரம ச்லோகம்) உள்ள விரோதி நீக்கம் பற்றிக் கூறும் இடங்களில் கண்டு கொள்க.

**மூலம்–** இந்த நியமாநுவர்த்தனம் பூர்ணோபாயரல்லாத அதிகாரிகளுக்கு உபாய பூர்த்தி விரோதியை சமிப்பித்துக் கொண்டு பகவத்ப்ரஸாதநமாய் இருக்கும். பூர்ணோபாயருக்கு அதிலங்கனஹேதுக அப்ரீதி பிறவாதபடி பண்ணிக்கொண்டு பகவத்ப்ரீணநமாயிருக்கும்.

**விளக்கம்** – ஒரு சிலர் ப்ரபத்தி என்ற உபாயத்தைக் கைக்கொள்ளாமல் இருக்கக்கூடும். அப்படிப்பட்டவர்கள் சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டதைக் கைக்கொண்டால், அதுவே அவர்களது ப்ரபத்தி உபாயத்திற்குத் தடையாக உள்ள விரோதிகளை நீக்கி, எம்பெருமானின் கருணையையும் சம்பாதித்துக் கொடுக்கும். ஒரு சிலர் ப்ரபத்தி என்ற உபாயத்தைக் கைக்கொண்டிருக்கக்கூடும். அப்படிப்பட்டவர்கள் சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டதை மீறாமல் இருந்தால், அதுவே எம்பெருமானுக்கு "சாஸ்த்ரங்களை மீறுவதால் உண்டாகும் மகிழ்ச்சியின்மை" என்பது உண்டாகாதபடி தடுத்து, எம்பெருமானின் மகிழ்வையும் சம்பாதித்துக் கொடுக்கும்.

**மூலம் –**

ஆஜ்ஞா அநுஜ்ஞா விபாகேந த்விதா சாஸ்த்ரீய புத்தி:
நிக்ரஹ அநுதயாய ஆத்யா பரா தத்தத் பல ஆப்தயே

அநுஜ்ஞயா ப்ரவ்ருத்தே அபி க்ரம கோப ஆதி ஸம்பவே
ஆஜ்ஞா அதிக்ரம தோஷ: ஸ்யாத் நியம: அத: துரத்யய:

ப்ரத்யவாய பரீஹாரே பலாந்தர ஸமந்விதே
தத்ர ஸம்வலிதம் ப்ராஹு: அதிகாரம் விசக்ஷணா:

நித்ய காம்ய ஸ்வரூப ஐக்யே விநியோக ப்ருதக்த்வத:
பலார்த்தம் க்ரியமாணே அபி நித்யம் பவதி தந்த்ரத:

அநுஜ்ஞா மாத்ர ஸித்தேஷு கைங்கர்யேஷு விசக்ஷணை:
அக்ருதௌ தத் பல அலாப: ந து தோஷ இதி ஈரிதம்

**விளக்கம் –**

- ஆஜ்ஞா அநுஜ்ஞா விபாகேந த்விதா சாஸ்த்ரீய புத்தி: நிக்ரஹ அநுதயாய ஆத்யா பரா தத்தத் பல ஆப்தயே – சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட விதிமுறைகள் ஆஜ்ஞை (செய்தே தீர வேண்டும்) மற்றும் அநுஜ்ஞை (செய்தால் நலம் விளையும்) என்று இருவகைப்படும். ஆஜ்ஞை என்பது எம்பெருமானின் தண்டனையில் இருந்து தப்புவதற்கும், அநுஜ்ஞை என்பது அந்தந்த பலனைப் பெருவதற்கும் வழி வகுக்கும்.

- அநுஜ்ஞயா ப்ரவ்ருத்தே அபி க்ரம கோப ஆதி ஸம்பவே ஆஜ்ஞா அதிக்ரம தோஷ: ஸ்யாத் நியம: அத: துரத்யய: - அநுஜ்ஞை விதியால் தொடங்கப்பட்ட கைங்கர்யம் என்றபோதும், அதில் ஏதேனும் முறை தவறுதல் போன்ற குற்றங்கள் உண்டானால், ஆஜ்ஞையை மீறினால் எந்தவிதமான தோஷம் உண்டாகுமோ, அதுவே உண்டாகும். ஆகவே சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட கட்டுப்பாடுகள் மீற இயலாதவை ஆகும்.

- ப்ரத்யவாய பரீஹாரே பலாந்தர ஸமந்விதே தத்ர ஸம்வலிதம் ப்ராஹு: அதிகாரம் விசக்ஷணா: - ஒரே கர்மம் சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட விதிகளை மீறாமல்

இருப்பதற்கும், மற்ற பலன்களை அடைவதற்கும் என்று இருக்கலாம். இதில் அதிகாரம் சேர்ந்துள்ளதாக பண்டிதர்கள் கூறுகின்றனர்.

- நித்ய காம்ய ஸ்வரூப ஐக்யே விநியோக ப்ருதக்த்வத: பலார்த்தம் க்ரியமாணே அபி நித்யம் பவதி தந்த்ரத: - ஒரே கர்மம் நித்யகர்மமாகவும் (செய்தே ஆகவேண்டும்), காம்ய கர்மமாகவும் (பலனுக்காகச் செய்யப்படுபவை) இருக்கலாம். இப்படி உள்ளபோது பலனுக்காகச் செய்யப்படும் அதே கர்மம், விதிமுறைகளுக்காகவும் செய்யப்படும் கர்மம் என்றும் கொள்ளப்படும்.

- அநுஜ்ஞா மாத்ர ஸித்தேஷு கைங்கர்யேஷு விசக்ஷணை: அக்ருதௌ தத் பல அலாப: ந து தோஷ இதி ஈரிதம் - ஒரு சில குறிப்பிட்ட பலன்களுக்கான கர்மங்களை இயற்றும்போது ஏதேனும் தோஷம் உண்டானால், அந்தப் பலன்கள் கிட்டாமல் போகும். இதனால் சாஸ்த்ரங்களை மீறுதல் என்னும் தோஷம் உண்டாவதில்லை என பண்டிதர்கள் கூறுகின்றனர்.

நின்றனம் அன்புடை வானோர் நிலையில் நிலமளந்தான்
நன்றிது தீயதிதென்று நடத்திய நான்மறையால்
இன்று நமக்கிரவாதலில் இம்மதியின் நிலவே
அன்றி, அடிக்கடி ஆரிருள் தீர்க்க அடியுளதே.

**பொருள்** – த்ரிவிக்ரமனாக நின்று உலகம் அனைத்தையும் அளந்த ஸர்வேச்வரனால் “இந்தக் கர்மம் செய்யக்கூடியது, இந்தக் கர்மம் செய்யக்கூடாதது” என்று சாஸ்த்ரங்கள் மூலமாக நமக்கு உணர்த்துகிறான். இவ்விதம் வேதங்களால் காண்பிக்கப்பட்ட வழிமுறைகளில் நாம் நடப்பதன் மூலம் கிட்டுவது என்னவென்றால் எம்பெருமானிடம் பூர்ணமான ப்ரேமை கொண்ட நித்யஸூரிகளுக்கு ஒத்த கைங்கர்ய நிலை நமக்கும் கிட்டுகிறது. ஸம்ஸாரம் என்னும் இருளில் வாழ்கின்ற நம்மை, மீண்டும் மீண்டும் அஜ்ஞானம் என்னும் இருள் சூழ்ந்தபடியே உள்ளது. இதனைப் போக்க வேதங்களாகிய சந்த்ரனின் ப்ரகாசம் போன்ற ஸ்ம்ருதியைக் காட்டிலும் வேறு உபாயம் உள்ளதோ?

ச்ருதி ஸ்ம்ருதி ஆசாரை: ஸ்வமதி பதிபி: சுத்தமநஸாம்
ஸுஸங்கல்பை: தர்ம்யை: குல சரண தேசாதி ஸமயை:
நியோகை: யோக்யாநாம் நியமயிது: ஆதே: அபிமதம்
நிமித்த ஸ்வப்நாத்யை: நிபுணம் அந்திச்சதி புத:

**பொருள்** – வித்வானாக உள்ளவன் செய்வது என்ன? வேதங்கள், ஸ்ம்ருதிகள், ஆசாரங்கள், தன்னுடைய புத்தி, தூயவர்களின் ஸங்கல்பம், தர்மங்களின் வழியில் இருந்து மாறுபடாமல் உள்ள குலம்-சாகை-தேசம் போன்ற கட்டுப்பாடுகள், பெரியவர்களின்

ஆணைகள், சகுனங்கள் மற்றும் கனவுகள் போன்ற பலவற்றால் இந்த உலகத்தை அடக்கி ஆள்பவனும், அனைத்திற்கும் காரணமானவனும் ஆகிய ஸர்வேச்வரனின் திருவுள்ளத்தை நன்கு அறிந்து கொள்கிறான்.

சாஸ்த்ரீயநியமநாதிகாரம் ஸம்பூர்ணம்

## அதிகாரம் – 18 – அபராதபரிஹார அதிகாரம்

ஸ்வச்ச ஸ்வாது ஸதா அவதாத ஸுபகாம் தைவாதயம் தேஹப்ருத்
மாலிந்ய ப்ரசமாய மாதவ தயா மந்தாகிநீம் விந்ததி
யத்யப்யேவமஸாவஸார விஷய ஸ்ரோத: ப்ரஸூதை: புந:
பங்கைரேவ கலங்கயந் ப்ராஜ்ஞைர்ந ஸம்லிஷ்யதே

**பொருள்–** இந்த சரீரத்தைத் தாங்கி நிற்கின்ற ஜீவன் தற்செயலாக அடைவது என்னவென்றால்: சிறிதும் களங்கம் அற்றதும், இனிமையாக உள்ளதும், தூய்மையாக உள்ளதால் பாவங்களைப் போக்கவல்லதும், அனைத்தையும் அளிக்கவல்ல உயர்ந்த குணங்கள் கொண்டதுமான எம்பெருமானின் தயை என்னும் கங்கையை, மோக்ஷத்திற்குத் தடையாக உள்ள பாவம் நீங்கும் பொருட்டு அடைகிறான். இப்படியாக உயர்ந்த வஸ்து கிட்டியபோதிலும், ஒரு ப்ரபன்னன் சற்றும் ஸாரம் இல்லாத உலக விஷயங்கள் என்னும் வெள்ளத்தின் காரணமாக உண்டாகும் சேற்றில் சிக்குகிறான். இதன் மூலம் தனது சரீரத்தை மீண்டும் அசுத்தப்படுத்தியவனாக, அறிஞர்களால் அண்டத் தகாதவனாக உள்ளான்.

### ப்ரபன்னனுக்கு பாவங்கள் நேராமை, ஒட்டாமை

**மூலம்–** இப்படி பகவச்சேஷதைக ஸ்வபாவனாகையாலே சாஸ்த்ரநியத தத்கைங்கர்யைக ரஸனான இவ்வதிகாரிக்குப் பின்பு அநாபத்தில் புத்திபூர்வகமான அபராதம் வருகை, பற்றின கைங்கர்யைகநிஷ்டைக்கு விருத்தமாகையாலே, ப்ராயேண ஸம்பாவிதமன்று. ப்ராப்தகர்ம விசேஷவசத்தாலே தேச கால அவஸ்தா வைகுண்யஹேதுகமாகவும் ப்ராமாதிகமாகவும் ஸுஷுப்த்யாத்ய வஸ்தைகளிலும் வரும் அபராதலேசங்களுள்ளவை அச்லேஷ விஷயமாய்க் கழிந்துபோம்.

**விளக்கம்** – ப்ரபன்னன் தன்னுடைய இயல்பாகவே எம்பெருமானின் அடிமையாக உள்ளான். அவன் சாஸ்த்ரங்களின் அடிப்படையில் அமைந்துள்ள கைங்கர்யங்கள் மூலமாக எம்பெருமானுக்குக் கைங்கர்யங்கள் செய்து மகிழ்கிறான். இப்படிப்பட்ட ஒருவன் தனது ஆபத்து காலம் நீங்கலாக எம்பெருமானுக்கு எதிராக எந்தவிதமான அபராதமும்

செய்யமாட்டான். அப்படிச் செய்தான் என்றால், அவன் எம்பெருமானுக்கு மட்டுமே அடிமை என்ற தன்மை பொருந்தாது போய்விடும் (ஆகவே அவன் எந்தவிதமான அபராதங்களும் செய்வதில்லை). ஆனால் பலன் தரத் தொடங்கிவிட்ட பூர்வகர்மங்கள் காரணமாகவும், காலம்-இடம்-தருணம் ஆகியவை காரணமாகவும் அவன் தன்னை அறியாமலோ அல்லது உறங்கும்போதோ சில அபராதங்களைச் செய்துவிடக்கூடும். இப்படிப்பட்ட அபராதங்கள் அவனுக்கு ஒட்டுவதில்லை. அவை எந்தவிதமான சுவடும் இன்றி கழிந்துவிடுகின்றன.

## ப்ரபந்நன் தனது அறிவுக்குத் தெரிந்து செய்யும் பாவங்களுக்கு ப்ராயச்சித்தம்

**மூலம்–** புத்திபூர்வக பாபாரம்பக பாபங்களுக்கு அஞ்சி அவையும் கழிய வேண்டுமென்று ப்ரபத்தி பண்ணாதே "பாம்போடு ஒரு கூரையிலே பயின்றாற்" போலே ப்ரக்ருதியோடே கூட இருக்கிற இவனுக்கு ஆத்மகுணபூர்த்தியில்லாமையாலே மந்ததைர்யரான ரிஷிகளுக்குப்போலே புத்திபூர்வகமாகவும் சில ஸ்வநிஷ்டாவிபரீதங்கள் வந்தாலும் நிஸர்க்க ஸுஹ்ருத்தான ச்ரிய:பதி ரக்ஷணோந்முகனாய் நிற்கையாலே இவ்விபரீதாநுஷ்டாநங்கள் மின்னொளி மாத்ரமாய் நிலை நிற்குமவையன்றிக்கே அக்காலத்தில் பிறந்த ஸ்வநிஷ்டாவைபரீத்யமாகிற இழவைக் கடுக அநுஸந்தித்து யதோசிதமாக லஜ்ஜாநுதாபங்கள் பிறந்து

அபாய ஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத்
ப்ராயச்சித்திரியம் ஸாத்ர யத்புந: சரணம் வ்ரஜேத்
உபாயாநாமுபாயத்வ ஸ்வீகாரேப்யேததேவ ஹி

அஜ்ஞாநாததவா ஜ்ஞாநாத் அபராதேஷு ஸத்ஸ்வபி
ப்ராயச்சித்தம் க்ஷமஸ்வேதி ப்ரார்த்தநைகைவ கேவலம்

விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: சரணாகத வத்ஸல:
தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி
ப்ரஸாதயஸ்வ த்வம் சைநம் சரணாகத வத்ஸலம்
மாம் சாஸ்மை ப்ரயதோ பூத்வா நிர்யாதயிதுமர்ஹஸி

இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே யதாதிகாரம் ப்ராயச்சித்தாவலம்பநம் உண்டாம்.

**விளக்கம் –** ப்ரபத்தி செய்கின்றபோது ஒருவன் தனது பாவங்களுக்கு அஞ்சி, அவைகளை நீக்கவேண்டும் என்று வேண்டாமல் இருக்கக்கூடும். இதனால் நேர்வது என்ன? பெரியதிருமொழி (11-8-3) - பாம்போடு ஒரு கூரையிலே பயின்றாற் – கூறுவது போன்று

பாம்புடன் ஒரே வீட்டில் வசிப்பது போல இவன் இந்த ப்ரக்ருதியுடன் உள்ளான். இதனால் இவனுக்கு ஆத்மகுணங்களானவை பூர்ணமாக உண்டாகாமல் இருப்பதால், புலனடக்கம் இன்றி சஞ்சலம் நிறைந்த மனம் கொண்ட சில ரிஷிகள் போன்று (விச்வாமித்ரர் போன்றவர்கள்) இவனுடைய "ப்ரபந்நன்" என்னும் தன்மைக்கு விரோதமாக உள்ள பாவங்கள், இவனது அறிவுக்குத் தெரிந்தே இவனைச் சூழக்கூடும். இப்படியாகத் தெரிந்தே இவன் பாவங்களைச் செய்தபோதிலும், பெரியபிராட்டியாரின் நாயகனான எம்பெருமான், இவனைக் காப்பாற்றும் எண்ணத்துடன் எப்போதும் உள்ளதால், அந்தச் சூழலிலும் காப்பதற்குத் தயாராகவே உள்ளான். இதனால் அந்த ப்ரபந்நன் செய்கின்ற விபரீதமான செயல்கள் ஒரு நொடியில் தோன்றி மறைகின்ற மின்னல் போன்று, நொடிப்பொழுதே நிற்கின்றன. தன்னுடைய தவறை உணர்ந்த ப்ரபந்நன் தான் செய்த தவறுக்காக வருந்தி, அதற்காக வெட்கம் அடைந்து, தன்னுடைய தகுதிக்கு ஏற்ப அதற்கான ப்ரயாச்சித்தம் செய்கிறான். இதனைக் கீழே உள்ள வரிகளில் காணலாம்:

- லக்ஷ்மீ தந்த்ரம் (17-91, 92) - அபாய ஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத் ப்ராயச்சித்திரியம் ஸாத்ர யத்புந: சரணம் வ்ரஜேத் உபாயாநாமுபாயத்வ ஸ்வீகாரேப்யேததேவ ஹி – பாவங்கள் செய்ய நேர்ந்தால் உடனே ப்ராயச்சித்தம் செய்தாக வேண்டும். எம்பெருமானைச் சரணம் புகுவதே இங்கு ப்ராயச்சித்தம் ஆகும். மோக்ஷத்திற்கான ப்ரபத்தியைச் செய்த பின்னர், கர்மயோகம் முதலானவற்றை மோக்ஷத்தின் உபாயமாகக் கைக்கொள்வதும் பாவமே ஆகும்.

- வங்கீபுர நம்பி - அஜ்ஞாநாததவா ஜ்ஞாநாத் அபராதேஷு ஸத்ஸ்வபி ப்ராயச்சித்தம் க்ஷமஸ்வேதி ப்ரார்த்தநைகைவ கேவலம் –தெரிந்தோ, தெரியாமலோ செய்துவிட்ட பாவங்களை எண்ணி, "என்னைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்", என்று எம்பெருமானிடம் இறைஞ்சுவதே ப்ராயச்சித்தம் ஆகும்.

- இராமாயணம் ஸுந்தரகாண்டம் (21: 20, 21) - விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: சரணாகத வத்ஸல: தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி ப்ரஸாதயஸ்வ த்வம் சைநம் சரணாகத வத்ஸலம் மாம் சாஸ்மை ப்ரயதோ பூத்வா நிர்யாதயிதுமர்ஹஸி– சீதை இராவணனிடம், "தன்னைச் சரணம் புகுந்தவர்களிடம் மிகவும் அன்பு கொண்டவனாக தர்மங்களை அறிந்த இராமன் உள்ளான். இது அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும். உனக்கு உயிர் வாழ்வதில் ஆசை இருந்தால், அவனுடன் நட்பு கொள்வாயாக. தன்னிடம் சரணம் புகுந்தவர்களிடம் அன்புடன் இருக்கின்ற இராமனின் மனதை மகிழும்படிச் செய்வாயாக. தூய்மையான மனதுடன் என்னை அவனிடம் ஒப்படைப்பாயாக", என்றாள்.

மேலே உள்ள பல வரிகளின்படி ப்ராயச்சித்தம் என்பதைக் கைக்கொள்ளுதல் குறித்து அறியலாம்.

## அறிந்தே செய்கின்ற பாவங்களுக்குப் பிராயச்சித்தம் செய்யாதபோது சிறு தண்டனை

**மூலம் –** ப்ராப்த கர்மவிசேஷ வசத்தாலே கடினப்ரக்ருதியாய் க்ஷமை கொள்ளுகையும் கை தப்பினபோது

ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தாம் வததி யம: கில தஸ்ய கர்ணமூலே
பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந் ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம்

கமலநயந வாஸுதேவ விஷ்ணோ தரணிதராச்யுத சங்கசக்ரபாணே
பவ சரணமிதீரயந்தி யே வை த்யஜ பட தூரதரேண தாநபாபாந்

தேவ சார்ங்கதரம் விஷ்ணும் ப்ரபந்நா: பராயணம்
ந தேஷாம் யமஸாலோக்யம் ந ச தே நரகௌகஸ:

என்று வைஷ்ணவவாமநாதி புராணங்களில் பாசுரங்களுக்கு மூலமான ச்ருதியிற் சொல்லுகிறபடியே யம விஷய கமநமின்றிக்கே "வேலிட்டுப் பாயவேண்டுமது முள்ளிட்டுப் பாய்ந்து கழியுமென்கிற" கணக்கிலே காணன் கஞ்சன் என்று முதலாக ஓதுகிற இங்குத்தை உபக்லேச முகத்தாலே சிகையறுக்கும் விரகுகளை முன்னிட்டு ஸர்வேச்வரன் க்ஷமா ப்ரேம தயா வாத்ஸல்யங்களாலே தணிந்த ப்ரதாபத்தையுடையனாய், மிகவும் தண்டிக்க வேண்டும் அபராதத்துக்கு ஸேவ்யனான ஸார்வபௌமன், அடையாளக்காரர் அந்த:புரபரிஜநம் கூனர் குறளர் குமாரர்கள் விஷயத்தில் அபராதங்களுக்கு ஈடாகவும், அந்தரங்கத்வாதி தாரதம்யத்துக்கு ஈடாகவும், ஸம்பந்த ஆந்ருசம்ஸ்யாதிகளாலே ப்ரீதி நடக்கச் செய்தே அவர்கள் தப்பினதுக்கு க்ஷமை கொள்ளுகைக்காகவும், மேலைக்கும் சிக்ஷையாகைக்காகவும் முகங்கொடாதேயிருத்தல், சம்மட்டியிட்டடித்தல், தள்ளுவித்தல், வாசலிலே தகைவித்தல், சிறிதுநாள் ஸேவையை விலக்கிவிடுதல் செய்யுமாப்போலே காகந்யாயத்தாலே ஒரு கண்ணழிவாலே இவ்வாச்ரிதரை ரக்ஷித்துவிடும்.

**விளக்கம்–** பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட பூர்வகர்மங்களால் ஒரு ப்ரபந்நன் கடினமான மனம் கொண்டவனாக இருக்கக்கூடும். அப்போது அவன் ப்ராயச்சித்தத்தைக் கைக்கொண்டாலும் மன்னிப்பு பெறாமல் இருக்கக்கூடும். ஆயினும் அவன் யமலோகத்தை அடைவதில்லை. இதனைக் கீழே உள்ள வரிகளில் காண்க:

- விஷ்ணுபுராணம் (3-7-14) - ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தாம் வததி யம: கில தஸ்ய கர்ணமூலே பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந் ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் – தன்னுடைய கைகளில் பாசக்கயிற்றுடன் உள்ள தனது கிங்கரனைப் பார்த்து யமன் அவனது காதில் மிகவும் ரகசியமாக, "நான் சாதாரணவர்களுக்கு மட்டுமே ப்ரபு ஆவேன். எனது அதிகாரம் என்பது நாராயணனின் பக்தர்களிடம் செல்வதில்லை. ஆகவே மது என்னும் அசுரனை அழித்த ஸர்வேச்வரனின் திருவடிகளில் ப்ரபத்தி செய்தவர்களிடம் நீ செல்லவேண்டாம்", என்பான்.

- விஷ்ணுபுராணம் (3-7-33) - கமலநயந வாஸுதேவ விஷ்ணோ தரணிதராச்யுத சங்கசக்ரபாணே பவ சரணமிதீரயந்தி யே வை த்யஜ பட தூரதரேண தாநபாபாந் – யமன் தனது கிங்கரனிடம், "தாமரை போன்ற கண்கள் கொண்டவனே! வாஸுதேவா! விஷ்ணுவே! அடியார்களை நழுவவிடாதவனே! சங்கு மற்றும் சக்கரங்களைத் திருக்கரங்களில் கொண்டவனே! நீயே எனக்கு அடைக்கலம் – இவ்விதமாகக் கூறுபவர்கள் எந்தவிதமான பாவங்களும் அற்றவர்கள் ஆவர். அவர்களை நீ அணுகாமல், அவர்களை விட்டு விலகிச் செல்வாயாக", என்றான்.

- வாமநபுராணம் (94-43) - தேவ சார்ங்கதரம் விஷ்ணும் ப்ரபந்நா: பராயணம் ந தேஷாம் யமஸாலோக்யம் ந ச தே நரகௌகஸ: - சார்ங்கம் என்னும் வில்லை உடைய ஸ்ரீமந்நாராயணனே தாங்கள் பெற வேண்டிய உயர்ந்த புருஷார்த்தம் என்று கருதி, அவனது திருவடிகளில் ப்ரபத்தி செய்தவர்கள், யமலோகம் செல்வதில்லை; அவர்களுக்கு நரக இருப்பும் இல்லை.

மேலே கூறப்பட்ட விஷ்ணுபுராணம் மற்றும் வாமனபுராணம் ஆகியவற்றின்படியும், இவை எந்த வேதங்களின் அடிப்படையில் உள்ளனவோ அந்த வேதங்களின்படியும், ப்ரபந்நர்கள் தங்களின் பாவங்களுக்காக யமலோகம் சென்று தண்டனை பெறுவதில்லை. மாறாக இந்த உலகத்திலேயே, அவர்கள் வாழும்போதே சிறு தண்டனையைப் பெறுகின்றனர். அவர்கள் - வேலிட்டுப் பாயவேண்டுமது முள்ளிட்டுப் பாய்ந்து கழியும் – ஒருவனை வேல் கொண்டு தண்டிப்பதைக் காட்டிலும், அவனுக்கு ப்ரியமானவர்களைச் சிறு முள் கொண்டு துன்புறுத்துவது அதிக தண்டனை அளிக்கும் – என்ற ந்யாயத்தின்படி தண்டனை பெறுவர். இப்படியாக அவர்களுக்கு ப்ரியமானவர்கள் குருடர்களாகவோ அல்லது முடமாகவோ ஆவர். ஆனால் பொறுமை, கருணை ,ப்ரேமை, மாறாத அன்பு ஆகியவை நிறைந்த ஸர்வேச்வரன் இவர்கள் பெறும் தண்டனைகளைக் கண்டு, தனது கோபத்திற்காக வருந்தி, அந்த ப்ரபந்நர்களை, அவர்களை அனுபவித்த சிறு தண்டனைகளுக்குப் பின்னர் காப்பாற்றுகிறான். அரசன் ஒருவன் தனது குடை முதலானவற்றை ஏந்திவருபவர்கள், தனது அந்தப்புரங்களில் பணிபுரிபவர்கள், கூனமாக உள்ளவர்கள், குள்ளமாக உள்ளவர்கள், தனது புத்திரர்கள் என்ற வேறுபாடு காணாமல், அவர்கள் ஏதும் தவறு செய்தால் அந்தத் தவறுகளுக்கு ஏற்றபடி தண்டிக்கிறான்.

அவர்களுக்கும் தனக்கும் நெருக்கமான உறவு இருந்தாலும், அவர்கள் மீது ப்ரேமை இருந்தாலும், தனக்குக் கருணை இருந்தாலும் அவர்களை தண்டிக்கிறான். இது ஏனென்றால் தங்களின் செயலுக்காக அவர்கள் மன்னிப்பு கேட்பதற்காகவும், அதே தவறுகளை மீண்டும் செய்யாமல் இருப்பதற்காகவும் ஆகும். இந்தத் தண்டனைகள் என்னவென்றால் – தனது முகத்தையே அவர்கள் காணக்கூடாது என்று கூறுதல், கசையடி அளித்தல், தனது அரண்மனை விட்டு விலக்கி வைத்தல், வாசலை விட்டு ஒதுக்குதல், தனக்கு அவர்களி செய்யும் பணிகளில் இருந்து சிலகாலம் தள்ளிவைத்தல் போன்றவை ஆகும். உயிரைப் பறிக்கவேண்டிய அபராதம் செய்தபோதும், தன்னைச் சரணம் புகுந்த காரணத்தினால், காகாசுரனின் ஒரு கண்ணை மட்டும் பறித்த செயல் போன்று ஸர்வேச்வரன் தண்டனையை சுலபமாக்குகிறான்.

**மூலம்** – இப்படி ம்ருதுப்ரக்ருதிகளை க்ஷமைகொள்ளப் பண்ணுவித்தல் கடிந ப்ரக்ருதிகளுக்கு சிக்ஷாரூபமான தண்டவிசேஷம் பண்ணுதல் செய்கிறவிடமும் பூர்வப்ரபத்தி பலமான க்ஷமையின் ப்ரகாரபேதமென்று சிக்ஷகனான சேஷி பக்கலிலே க்ருதஜ்ஞதை நடக்கைக்காக புத்திபூர்வோத்தராகத்தையும் க்ஷமிக்குமென்று சிலர் சொன்னார்கள்.

**விளக்கம்** – ஒரு சிலரை அவர்களது தவறுகளுக்காகப் பிராயச்சித்தம் செய்தபின்னர் மன்னிப்பதும், ஒரு சில கடினமானவர்களை அவர்களது தவறுகளுக்காகத் தண்டித்தல் என்பது ஸர்வேச்வரனின் மன்னிக்கும் தன்மையாலேயே ஆகும். இத்தகைய செயல்கள் அவர்கள் முன்னர் செய்த ப்ரபத்தியின் காரணத்தால் உண்டாகிறது. இப்படியாகத் தங்களைத் திருத்தியதற்காக இவர்கள் எம்பெருமானிடம் நன்றியுடன் இருத்தல் வேண்டும். இந்தக் கருத்தை வலியுறுத்தும் பொருட்டே ஒரு சிலர், “தெரிந்தே செய்யும் தவறுகளையும் எம்பெருமான் மன்னிக்கிறான்”, என்றனர்.

**மூலம்–** ப்ராரப்தகர்மத்தில் பாபாம்சம் போலே புத்திபூர்வோத்தராகம் ப்ராயச்சித்தம் பண்ணாதபோது ஸபலமானாலும் பண்ணின ப்ரபத்தி மோக்ஷங்கொடா தொழியுமோவென்று சங்கிக்கவொண்ணாது; பெருங்காயம் வைத்த மரங்களுக்கு ஸ்தலாதிவிசேஷங்களாலே வாட்டத்துக்குக் காலதாரதம்யமுள்ள மாத்ரம்; இங்கும் இவர்கள் ஸம்ஸாரத்தினுடைய நிச்சேஷநிவ்ருத்தி பிறக்கைக்கு விலம்பாவிலம்ப வைஷம்யமே உள்ளது. இத்தேஹாநந்தரம் மோக்ஷம் பெறவேணுமென்று அபேக்ஷித்தாலும் அநியதாயுஸ்ஸுக்களாய் விலம்பாக்ஷமராயிருப்பார்க்கு ஆயுர்வ்ருத்தியாலே விலம்பம் வரும். நியதாயுஸ்ஸுக்களுக்கு உள்ள ஆயுஸ்ஸுக்குள்ளே பலித்துவிடும்.

**விளக்கம்** – ஒரு சிலர் ப்ரபத்தி செய்த பின்னர் தங்களது புத்தியில் உணர்ந்தே சில தவறுகளைச் செய்யக்கூடும். இதற்கான பிராயச்சித்தமும் செய்யாமல் இருக்கக்கூடும். இதன் காரணமாக, பலன் தரத் தொடங்கிவிட்ட கர்மவினைகளை அனுபவிப்பது

போன்று, இந்தத் தவறுகளுக்கான பலன்களை அனுபவிக்கவேண்டும் என்றோ, தாங்கள் செய்த ப்ரபத்தி மோக்ஷம் அளிக்காமல் போய்விடும் என்றோ சந்தேகம் கொள்ளவேண்டாம். இலைகள் உதிர்வதற்காக வைக்கப்பட்ட பெருங்காயம் காரணமாக இலைகள் உதிர்ந்தாலும், அந்த மரங்கள் உள்ள இடங்கள் மற்றும் வேறு சில காரணங்களாலும் இலைகள் உதிரக்கூடும்; இது போன்று ப்ரபத்திக்குப் பின்னர் செய்யும் தவறுகளின் காரணமாக ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை அடைவதற்கான காலதாமதம் ஏற்படலாமே அன்று, மோக்ஷம் கிட்டாமல் போகாது. இவர்கள் தங்களது வாழ்வின் இறுதியில் மோக்ஷத்தை விரும்பியும், அதற்கான காலதாமதத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாமலும் இருக்கக்கூடும். இவர்களது ஆயுட்காலம் இத்தனை ஆண்டுகள் என்று முன்னரே தீர்மானிக்கப்படவில்லை என்றாலும், இவர்களது ஆயுட்காலம் நீட்டிக்கப்பட்டு மோக்ஷம் தாமதம் ஆகும். மாறாக இவர்களது ஆயுட்காலம் இத்தனை ஆண்டுகள் மட்டுமே என்று தீர்மானிக்கப்பட்டிருந்தால், அதற்குள்ளாகவே மோக்ஷம் கைகூடும்.

**மூலம்** – பவேயம் சரணம் ஹி வ: என்ற பின்பும் உண்டான ராக்ஷஸிகளுடைய புத்திபூர்வாபசாரங்கள் மர்ஷயாமீஹ துர்பலா பாபாநாம் வா சுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம என்கிறபடியே பிராட்டிக்கு க்ஷமாவிஷயமாயிற்றில்லையோ வென்னில், அவ்விடத்திலும் அவர்களுக்குத் திருவடி நலியப் புகுகிறாரென்கிற பயம் விளைந்து நலிவுக்கு விலக்கு உண்டானபடியாலே வாளாலே ஓங்கி விடுமாப் போலே தண்டலேசமும் க்ஷமையும் ஸித்தம்.

**விளக்கம்–** ஒரு கேள்வி எழலாம். இராமாயணம் ஸுந்தரகாண்டம் (58-90) - பவேயம் சரணம் ஹி வ: - உங்களை நான் காப்பேன் – என்று அரக்கிகளிடம் சீதை கூறிய பின்னரும் சீதைக்கு அந்த அரக்கிகள் பல துன்பங்களை இழைத்தனர்; இவர்கள் இவ்விதம் செய்தபோதிலும் சீதை பின்வருமாறு கூறியதன் மூலம், தெரிந்தே செய்யும் தவறுகளையும் சீதை மன்னித்தாள் என்றாகிறதே என்னும் ஐயம் தோன்றலாம்:

- இராமாயணம் யுத்தகாண்டம் (116-40) - மர்ஷயாமீஹ துர்பலா – அவர்களது குற்றங்களை நான் பொறுக்கிறேன். அவர்களது துன்பங்களை என்னால் பொறுக்க இயலாது.

- இராமாயணம் யுத்தகாண்டம் (116-44) - பாபாநாம் வா சுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம – அனுமனே! நீ எண்ணுவது போன்று இவர்கள் குற்றம் புரிந்தவர்களாக இருந்தாலும், உன்னுடைய மன்னிக்கும் இயல்பு காரணமாக இவர்களை மன்னிக்கவேண்டும். யார்தான் குற்றம் செய்வதில்லை?

இப்போது மேலே எழுந்த ஐயத்திற்கான பதிலைக் காண்போம். இங்கு சீதை மன்னித்தாலும், அந்த அரக்கிகளுக்குத் தங்களை அனுமன் அழித்துவிடுவான் என்னும்

பயம் உண்டானது அல்லவோ? அந்தப் பயமே தண்டனை போன்றது என்று கருத்து. ஆக ஒரு மனிதனை வெட்ட வாளை ஓங்கி பின்னர் நிறுத்துவது போன்றி, சற்றே பயம் என்னும் தண்டனையும் அதன் பின்னர் மன்னிப்பும் அளிக்கப்படுகிறது.

**மூலம்** – ஆகையால் ப்ரபந்நனுக்கு புத்திபூர்வோத்தராகம் லேபியாதென்று விசேஷித்துச் சொல்லுவதொரு ப்ரமாணமின்றிக்கேயிருக்க, இவனுக்குப் பின்பு புத்திபூர்வோத்தராகம் பிறந்தாலும் க்ஷமை கொள்ளவேண்டாமென்றும், க்ஷமை கொள்ளாவிடிலும் சிக்ஷாரூப தண்டவிசேஷமில்லையென்றும், விலம்பாக்ஷமருக்கும் பரமபலத்துக்கு விலம்பம் வாராதென்றும், ப்ராரப்த ஸுக்ருதவிசேஷாதிகளாலே வரும் இங்குத்தைக்குக் கைங்கர்யத்துக்கு விச்சேத ஸங்கோசங்கள் வாராவென்றும் சொல்லுகிற பக்ஷங்கள் சரண்யனுடைய குணங்களையும் சரணாகதியினுடைய ப்ரபாவத்தையும் சொல்லுகைக்காகவத்தனை.

**விளக்கம்** – ஆகவே ப்ரபந்நன் ஒருவன் அறிந்தே செய்கின்ற தவறுகள் மூலம் உண்டாகும் பாவங்கள் அவனுக்கு ஒட்டுவதில்லை என்று சிலரால் கூறப்பட்டாலும், இந்தக் கருத்துக்கு ஏற்ற ப்ரமாணங்கள் ஏதும் இல்லை. மேலும் சிலரால் கூறப்படுவது என்னவென்றால் – தனது புத்திக்குத் தெரிந்தே ப்ரபந்நன் செய்யும் பாவங்களுக்கு அவன் பிராயச்சித்தம் செய்ய வேண்டாம் என்றும், இப்படியாக அவன் பிராயச்சித்தம் செய்யவில்லை என்றாலும் அவனுக்கு நல்வழி புகட்ட சிறு தண்டனை கூட அளிக்கப்படுவதில்லை என்றும் – என்பதாகும். மேலும் இப்படியாக ப்ரபந்நன் ஒருவன் தெரிந்தே செய்யும் பாவங்கள் காரணமாக, அவன் தனக்கு மோக்ஷம் உண்டாகும் காலதாமதத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாதவன் என்றாலும், அந்தக் காலதாமதம் மூலமாக தண்டனை அளிக்கும்விதமாகக் கூட அவனுக்கு மோக்ஷம் காலதாமதம் ஆவதில்லை. இப்படிப்பட்டவன் தனது பூர்வகர்மங்கள் காரணமாகப் பெற்ற கைங்கர்யங்களில் குறைபாடுகளும், தடங்கல்களும் உண்டாவதில்லை. இப்படியாகப் பலவிதமாகக் கூறப்படுவது ஏன்? இவை அனைத்தும் சரணாகதி அளிக்கின்ற ஸர்வேச்வரனின் உயர்ந்த குணங்களை உணர்த்தவும், சரணாகதியின் மேன்மையை உணர்த்தவுமே ஆகும்.

**மூலம்** – இப்படியல்லாதபோது ப்ரபந்நரான பூர்வர்களுடைய அநுஷ்டாந பரம்பரைக்கும், ப்ரபந்நரைப் பற்றவே ப்ராயச்சித்தம் விதிக்கிற சாஸ்த்ரத்துக்கும், மோக்ஷம் பெறுகைக்குக்

காலம் குறித்து ப்ரபத்தி பண்ணாதே அநுவ்ருத்த புத்திபூர்வாபராதருமாய் விலம்பாக்ஷமருமாயிருப்பார்க்கு விலம்பம் சொல்லுகிற ப்ரமாணங்களுக்கும் சேராது.

**விளக்கம்** – இப்படியாக அவர்கள் கூறும் கருத்து என்பது, சரணாகதி அளிக்கின்ற ஸர்வேச்வரனின் உயர்ந்த குணங்களை உணர்த்தவும், சரணாகதியின் மேன்மையை உணர்த்தவுமே ஆகும் என்று கொள்ளவில்லை என்றால்– இதுவரையில் ப்ரபந்நர்கள் அநுஷ்டித்து வந்த நெறிகளுக்கும்; ப்ரபந்நர்களின் தவறுகளுக்கான பிராயச்சித்தம் விதிக்கின்ற சாஸ்த்ரங்களுக்கும்; ப்ரபத்தி செய்யும்போது எப்போது மோக்ஷம் பெறவேண்டும் என்னும் கால விண்ணப்பம் செய்யாமல் ப்ரபத்தி செய்தவர்களுக்கும், தெரிந்தே பாவங்களைச் செய்துவிட்டு மோக்ஷத்திற்கான காலதாமதம் ஏற்படுவதைப் பொறுத்துக் கொள்ள இயலாமல் உள்ளவர்களுக்கும் மோக்ஷம் காலதாமதம் ஆன பின்னரே கிட்டுகிறது என்று கூறும் ப்ரமாணங்களுக்கும் பயன் இல்லாமல் போய்விடும்.

**மூலம்–** ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி என்று ஸாமாந்யேந சொல்லச் செய்தேயும், ப்ராயச்சித்திரியம் ஸா அத்ர யத்புந: சரணம் வ்ரஜேத் என்று விசேஷிக்கையாலே புத்திபூர்வோத்தராகத்துக்கு ப்ரபத்த்யநந்தரம் ப்ராயச்சித்தமாக ப்ராப்தமாயிற்று.

**விளக்கம்–** கீதையில் (18-66) - ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – அனைத்து பாவங்களில் இருந்தும் விடுவித்து – என்று கூறினான். ஆயினும் லக்ஷ்மீ தந்த்ரத்தில் (17-91) - ப்ராயச்சித்திரியம் ஸா அத்ர யத்புந: சரணம் வ்ரஜேத் – அபராதம் உண்டானால் மீண்டும் எம்பெருமானைச் சரணம் புகுவதே ப்ராயச்சித்தம் – என்று கூறப்பட்டது. ஆகவே தெரிந்தே செய்கின்ற பாவங்களுக்கு மீண்டும் ப்ரபத்தி செய்வதே அதற்கான ப்ராயச்சித்தம் என்றாகிறது.

**மூலம்–** புந: சரணாகதியை விதிக்கிற வசநத்தை அடியிலே புத்தி பூர்வோத்தராகத்துக்கும் பரிஹாரமாக ப்ரபத்தி பண்ணாதார் விஷயத்திலே நியமித்தாலோ என்னவொண்ணாது; புத்திபூர்வோத்தராகத்தையும் பற்ற ப்ரபத்தி பண்ணலாமென்று விசேஷித்துக் கண்டோக்தி பண்ணுவதொரு வசநம் உண்டாகிலிறே இப்படி நியமிக்கலாவது? இப் ப்ரபத்தி பூர்வோத்தராகத்துக்கும் பரிஹாரமென்று அறிந்தால் இச்செட்டை விடுவாரையும் கிடையாமையாலே புந:ப்ரபத்திவசநம் நிர்விஷயமாம். ஸாமாந்யவசநத்தளவைப்பற்றி விசேஷவசநத்தை பாதிக்கவோண்ணாது. இப்படி விசேஷவசநத்தை பாதிக்கில் உபாஸநிஷ்டனுக்கும் பூர்வோத்தராகத்துக்கும் தோஷமில்லையாம்.

**விளக்கம்** – முதல் ப்ரபத்தி செய்யும்போதே, தான் பின் ஒரு காலத்தில் அறிந்தே செய்யும் பாவங்களுக்கான ப்ரபத்தியையும் சேர்த்துச் செய்யாதவர்களுக்கு மட்டுமே கடந்த பத்தியில் கூறியபடி “தெரிந்தே செய்த பாவங்களுக்கு ப்ராயச்சித்தம் மீண்டும் சரணாகதி செய்தல்” என்று விதிக்க இயலாது. ஏன்? பின் ஒரு காலத்தில் அறிந்தே செய்ய உள்ள

பாவங்களுக்கான ப்ரபத்தியையும் முதல் ப்ரபத்தி செய்யும்போதே சேர்த்துச் செய்யவேண்டும் என்று நேரடியாகக் கூறும் ப்ரமாணங்கள் இருந்தால் அல்லவோ இப்படிக் கூற இயலும். இப்படியாகப் பின்னர் செய்யப் போகும் பாவங்களுக்கான ப்ராயச்சித்தமாக முதலிலேயே ப்ரபத்தி செய்யலாம் என்று விதியிருந்தால், இப்படிப்பட்ட எளிமையான வாய்ப்பை யாரேனும் நழுவ விடுவார்களோ? ஆகையால் இது போன்று கூற இயலாது. ஒரு குறிப்பிட்ட விதி உள்ளபோது, அதனை ஒரு பொது விதி மூலம் தள்ள இயலாது. இப்படி ஒரு பொது விதியானது, குறிப்பிட்ட ஒரு விதியைத் தள்ள இயலும் என்று கூறினால், பக்தி நிஷ்டன் மற்றும் உபாஸனை நிஷ்டன் ஆகிய இருவருக்கும் அறிந்தே செய்கின்ற பாவங்களுக்குத் தோஷம் இல்லை என்றாகிவிடும்.

**மூலம்** – பூர்வோத்தராகத்திலும் பரமைகாந்திகளான இவர்கள் இருவருக்கும் யம வச்யதாதிகளில்லையென்னுமிடம்

யஸ்மிந் கஸ்மிந் குலே ஜாதா யத்ர குத்ர நிவாஸிந:
வஸுதேவ ரதா நித்யம் யமலோகம் ந யாந்தி தே

இத்யாதி வசநபலத்தாலே ஸித்தம். ஒரு பாபந்தானே ஜாதிகுணாதி அதிகாரபேதத்தாலே குரு லகு பல பேதவத்தாயிருக்குமென்னுமிடம் ஸர்வஸம்ப்ரதிபந்நம். இவ்வர்த்தம் ராஜபுத்ராபராதிகளிற்போல லோகமர்யாதையாலும் உபபந்நம்.

ந ப்ராக்வத்புத்திம் பூர்வாதே ந சாத்யந்தமநுக்ரஹ:
லகுர்தண்ட: பரபந்நஸ்ய ராஜபுத்ராபராதவத்

ஆகையால் அதிகாராநுரூபமாக லகுபலமும் வாராமைக்காகப் புந:ப்ரபதநம் விதிக்கப்படுகிறது.

**விளக்கம்–** பக்தி நிஷ்டன் மற்றும் பரபந்நன் ஆகிய இருவரும் தெரிந்தே பாவங்களைச் செய்தாலும் இவர்கள் இருவருக்கும் யமனிடம் சிக்குதல் என்பது இல்லை (நரகம் இல்லை) என்னும் கருத்தை - யஸ்மிந் கஸ்மிந் குலே ஜாதா யத்ர குத்ர நிவாஸிந: வஸுதேவ ரதா நித்யம் யமலோகம் ந யாந்தி தே – எந்தக் குலத்தில் பிறந்தாலும், எங்கு வாழ்ந்தாலும் எம்பெருமானிடம் எப்போதும் ஈடுபட்டபடி உள்ளவர்கள் யமலோகம் புகுவதில்லை – என்று கூறியதன் மூலம் காண்க. ஒரே பாவத்திற்கான தண்டனை என்பது குலம், ஒழுக்கம் போன்றவை காரணமாகச் சிலருக்கு அதிகமாகவும் சிலருக்குக் குறைவாகவும் உள்ளதைப் பலரும் ஒப்புக் கொள்வதைக் காணலாம். இந்தக் கருத்தை ராஜகுமாரர்கள் தவறு செய்தால் பெறும் தண்டனை மூலம் அறியலாம் (அவர்களுக்குத் தண்டனை குறைவாக இருக்கும்). இதனை - ந ப்ராக்வத்புத்திம் பூர்வாதே ந சாத்யந்தமநுக்ரஹ: லகுர்தண்ட: பரபந்நஸ்ய ராஜபுத்ராபராதவத் – ப்ரபந்நன் ஒருவன் தனக்குத் தெரிந்தே பாவங்கள் செய்ய நேரிட்டால் அவனுக்கு ப்ரபத்திக்கு முன்னர் உள்ள நிலைமை போன்று அதிக

தண்டனை அளிக்கப்படுவதில்லை; இதே போன்று அவனுக்கு எம்பெருமானின் அதிகமான க்ருபையும் கிட்டுவதில்லை; இப்படிப்பட்ட ப்ரபந்நனுக்கு அரசகுமாரன் போன்று குறைவான தண்டனையே கிட்டுகிறது – என்பதன் மூலம் உணரலாம். ஆக இந்தக் குறைவான தண்டனையும் கிட்டக்கூடாது என்பதற்காகவே மீண்டும் இவர்களுக்கு ப்ரபத்தி செய்தல் என்பது கூறப்பட்டது.

**மூலம்–** சிஷ்டதயா வ்யபதேச்யரான ஸமர்த்தருக்கு லோக ஸங்க்ரஹத்துக்காகவும் ப்ரஸித்த நிமித்தங்களில் யதாசக்தி ப்ரஸித்த ப்ராயசித்தம் உசிதம். அது தவிருகையும் முன் சொன்ன ஆஜ்ஞாதிலங்கநமாம். ஸைரந்திகைக்கு ஸேவை தப்பினபோது தாதாத்விகமான பரிமளாதிகளையும் இழந்து பயாநுபவமும் உண்டாமாப்போலே ஆஜ்ஞாதி லங்கநம் இரண்டுபடி அநர்த்தம்.

**விளக்கம்** – மிகுந்த ஞானம் மற்றும் ஒழுக்கம் உள்ளவர்களாக உள்ள சிலர் பலராலும் மதிக்கப்பட்டபடி இருப்பர். இவர்கள் தாங்கள் செய்த பாவங்களுக்கான ப்ராயச்சித்தம் என்பதை அனைவரது முன்னிலையிலும் செய்வதே சரியானதாகும். இதன் காரணம், மற்றவர்களுக்கு இவர்களது இச்செய்கை ஒரு உதாரணமாக இருக்கவேண்டும் என்பதால் ஆகும். இப்படிச் செய்யவில்லையென்றால் அது எம்பெருமானின் ஆணையை மீறுவதாகவே ஆகும். பெண்களின் கூந்தலை அழகுபடுத்தும் பெண் ஒருவள் ஏதோ ஒரு காரணத்தால் தண்டிக்கப்பட்டால் அவளுக்குக் கிட்டவேண்டிய ஊதியமான பரிமளங்களும் கிட்டுவதில்லை, மேலும் என்ன நடக்குமோ என்ற அச்சமும் உண்டாகிறது. ஆகவே எம்பெருமானின் ஆணைகளை மீறுவதன் மூலம் இரண்டுவிதமான தண்டனைகள் கிட்டலாம்.

**மூலம்** – ஸ்வேச்சாமாத்ரத்தாலே புத்திபூர்வோத்தராகத்தையும் அடியிலே ப்ரபதநம் பண்ணினாலோ என்னில், இது உபாஸநத்தையும் புத்திபூர்வோத்தராகத்துக்கும் பரிஹாரமாகப் பண்ணினாலோ, அங்கப்ரபத்தியும் அதுக்குச் சேரப் பண்ணினாலோவென்கிற ப்ரதிபந்தியாலே நிரஸ்தம். இருவருக்கும் இப்படியாகிடுகவென்கை பாஷ்யாதி விருத்தமாகையாலே அபஸித்தாந்தம்; உஷஸ்தி ப்ரவ்ருத்திகளான ப்ரஹ்மநிஷ்டர்களுடைய அநுஷ்டாநத்துக்கும் விருத்தம். ஆகையாலே விசேஷ வசநமில்லாமையாலே க்ருதே பாபே அநுதாபோ வை இத்யாதிகள் கணக்கிலே "நிமித்தம் உதித்தாலல்லது நைமித்திகம் ப்ராப்தமன்று" என்கிற ந்யாயம் புத்திபூர்வோத்தராகத்தில் பதிதமாகாது. ஆனபின்பு ஆகாமி புத்திபூர்வபாபத்துக்கு அஞ்சினானாகில் அதுக்குக் காரணமான ப்ராரப்த பாபத்துக்குப் ப்ரபதநரூப ப்ராயச்சித்தம் பண்ணப் ப்ராப்தம்,

ராத்ய பக்திஸ்து ஸா ஹந்த்ரீ ப்ராரப்தஸ்யாபி பூயஸீ

என்றார்களிறே.

ஜந்மாந்தர க்ருதே பாபம் வ்யாதிரூபேண பாததே
தத் சாந்தி: ஔஷதை: தாநை: ஜப ஹோமார்சநாதிபி:

இத்யாதிகளில் தானஜபாதிகளிலும் அகப்படப் ப்ராரப்த பாபநாசம் சொல்லப்பட்டதிறே. ஆகையால் பாபாரம்பக பாபத்துக்கு அஞ்சிப் ப்ரபத்தி பண்ணினானாகில் அப்போது புத்திபூர்வக பாபமும் உதியாது.

**விளக்கம்** – இங்கு ஒரு கேள்வி எழலாம். முதலில் செய்யப்பட்ட ப்ரபத்தி என்பது ஒருவனின் விருப்பம் காரணமாக, எதிர்வரும் காலங்களில் தெரிந்தே செய்யப்போகும் பாவங்களுக்காகச் செய்யப்பட்டது என்றால் என்ன நிகழும்? இத்தகைய கேள்வியானது கீழே உள்ள இரண்டு எதிர் வினாக்களால் தள்ளப்படுகிறது:

- எதிர்வரும் காலங்களில் தெரிந்தே செய்யப்போகும் பாவங்களுக்காக ஒருவன் பக்தியோ அல்லது உபாஸனமோ செய்யலாம் அல்லவோ?

- எதிர்வரும் காலங்களில் தெரிந்தே செய்யப்போகும் பாவங்களுக்காக ப்ரபத்தியை ஓர் அங்கமாகக் கைக்கொள்ளலாம் அல்லவோ?

மேலே கேட்கப்பட்ட இரண்டு வினாக்களுக்கும், “பக்தி, உபாஸனம் அல்லது ப்ரபத்தியை ஓர் அங்கமாகக் கொள்ளுதல்” ஆகியவை மூலம் எதிர்வரும் காலங்களில் தெரிந்தே செய்யப்போகும் பாவங்களும் நீங்கிவிடும் என்று கொண்டால், இந்தக் கருத்து ஸ்ரீபாஷ்யத்திற்கும் மற்றும் உள்ள பல சாஸ்த்ரங்களுக்கும் விரோதமாகிவிடும். மேலும் இந்தக் கருத்து உஷஸ்தி முதலானவர்களின் அனுஷ்டானங்களுக்கும் விரோதமே ஆகும் **(உஷஸ்தி முனிவரின் அனுஷ்டானம்:** ஒரு காலத்தில் உணவிற்கு மிகவும் தட்டுப்பாடு உண்டானபோது, உஷஸ்தி முனிவர் யானைப்பாகர்கள் உள்ள கிராமத்திற்கு வந்தார். அப்போது அவர் பசி காரணமாக இறக்கும் தறுவாயில் இருந்தபோது, அங்கிருந்த யானைபாகன் ஒருவனிடம் இருந்த உணவுப்பண்டத்தை உண்டு தனது பசியைப் போக்கிக் கொண்டார். இதனைத் தொடர்ந்து அவன் தண்ணீரை அளித்தான். உடனே அந்த முனிவர், “எனக்கு இந்த உணவுப்பண்டம் உயிர் தரிக்கத் தேவை. ஆனால் நீர் அருந்தாமல் என்னால் இருக்க இயலும். ஆகவே இந்த நீரைப் பருகுவது விருப்பத்தின் அடிப்படையில் அன்றி, அவசியமானது என்னும் அடிப்படையில் அல்ல. ஆகவே நீர் எனக்கு வேண்டாம்”, என்றார். ஆக, உபாஸனம் என்பது அதன் பின்னர் அறிந்தே செய்கின்ற பாவங்களை நீக்கும் என்றால் இந்த முனிவர் அச்சம் கொண்டிருக்கமாட்டார்.

எனவே மோக்ஷ உபாயம் மூலம் அறிந்தே செய்கின்ற பாவங்களின் பலன் கழியாது என்று அறியவேண்டும்). ஆகவே இங்கு விசேஷமாக உரைக்க எந்த வாக்கியமும் இல்லாத காரணத்தினால் விஷ்ணுபுராணம் (2-6-40) - க்ருதே பாபே அநுதாபோ வை– பாவங்களைச் செய்த பின்னர் ஒருவனுக்கு "தவறு செய்தோமே" என்று உண்டாகும் எண்ணம் காரணமாக அவன் எம்பெருமானை த்யானிப்பதே சரியான ப்ராயச்சித்தம் ஆகும் – என்பது போன்ற வாக்கியங்களை மறுப்பதற்கு இல்லை. ஆகவே -ஒரு சரியான சந்தர்ப்பம் உண்டானால் தவிர, அந்தச் சந்தர்ப்பத்திலிருந்து வெளியேறுவது குறித்து சிந்திக்க இயலாது என்னும் விதியானது ப்ரபத்திக்குப் பின்னர் செய்யப்படும் பாவங்களுக்குப் பொருந்தும். ப்ராயச்சித்தம் என்பது செய்த தவறுக்கான செயல் அல்லாமல் இனி செய்யப்போகும் தவறுக்கான செயல் அல்லவே! ஒருவன் தான் தெரிந்தே செய்யப்போகும் தவறுகளுக்காக அச்சம் கொண்டான் என்றால், அவன் இதுவரை செய்த பாவங்களை மனதில் நிலைநிறுத்தி ப்ரபத்தி செய்யவேண்டும். இதன் காரணம் அந்தப் பாவங்களுக்கான பலன்கள் இவனுக்குக் கிட்டத் தொடங்கி இருக்கும். இந்தப் பூர்வ பாவ பலன்களே இவன் மேலும் தவறுகள் செய்வதற்குக் காரணமாகின்றன. ஆகவே அவற்றைப் போக்க இவன் ப்ரபத்தி செய்தல் வேண்டும். ராத்ய பக்திஸ்து ஸா ஹந்த்ரீ ப்ராரப்தஸ்யாபி பூயஸீ –பக்தி என்னும் உபாயம் பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட பாவ பலன்களைத் தவிர மற்ற பாவங்கள் அனைத்தையும் நீக்கும் – என்றது காண்க.

ஜந்மாந்தர க்ருதே பாபம் வ்யாதிரூபேண பாததே தத் சாந்தி: ஔஷதை: தாநை: ஜப ஹோமர்சநாதிபி: - முன் ஜன்மங்களில் செய்த பாவங்களே இந்தப் பிறவியில் பல வ்யாதிகளாக வந்து துன்பம் செய்கின்றன; இவற்றை மருந்துகளாலும், தானங்களாலும், ஜபங்களாலும், ஹோமங்களாலும், எம்பெருமானை வணங்குவதாலும் நீக்கவேண்டும் – என்று கூறியது காண்க. இது போன்ற வரிகள் மூலம், ஜபம் மற்றும் ஹோமங்களால் பலன் தரத் தொடங்கிவிட்ட பூர்வகர்மங்களும் நீங்கும் என்று கூறப்பட்டன அல்லவா? ஆகவே, முன்னர் செய்த வினைகளின் பயனாக எதிர்வரும் காலங்களில் தெரிந்தே செய்யப்போகும் பாவங்களுக்காக ஒருவன் அச்சம் கொண்டு ப்ரபத்தி செய்தான் என்றால், அவை நீங்குவதோடு மட்டும் அல்லாமல், அது போன்ற பாவங்களும் உண்டாகாது.

## எம்பெருமானுக்கு நெருக்கமான ஒருவரும் தெரிந்தே செய்யும் அபராதங்களை விலக்கவேண்டிய காரணம்

**மூலம்–** தாஸ: ஸகா வாஹநமாஸநம் த்வஜ: இத்யாதிகளிற்படியே அத்யந்த பகவதந்தரங்கர்க்கும் ஸாத்த்விகாபராதலேசமும் ப்ரத்யவாயகரமென்னுமிடம் சாண்டிலீ வ்ருத்தாந்தாதிகளிலே ப்ரஸித்தம். ஸர்வேச்வரனைப் போலே ஸூரிகளும் அவதரித்தால் கர்மவச்யத்வாபிநயம் பண்ணி லோகஹித ப்ரவர்தநார்த்தமாக அபசார பரிஹாராதிகளை நடத்திப் போவர்கள். ஆகையால் பகவத்ப்ரீதியிழவாமைக்காகவும், அதுக்காகப் புந:ப்ரபத்தியாதல் லகுதண்டமாதல் ப்ரஸங்கியாமைக்காகவும் மேல்வரும் அபராதங்கள் வேராறுக்கும் விரகு பார்க்கவேணும்.

**விளக்கம்** – ஸ்தோத்ரரத்னம் (41) - தாஸ: ஸகா வாஹநமாஸநம் த்வஜ: - அடிமையாகவும், நண்பனாகவும், வாஹனமாகவும், இருக்கையாகவும், கொடியாகவும்– என்பது போன்று எம்பெருமானுக்கு அனைத்தாகவும் கருடன் இருந்தபோதிலும், அவன் சாண்டிலீ என்னும் பாகவதோத்தமை குறித்து செய்த அபராதம் காரணமாக துன்பம் அனுபவித்த நிகழ்வு மிகவும் ப்ரஸித்தம் ஆகும். ஆகவே எம்பெருமானுக்கு மிகவும் நெருக்கமானவர்களாக இருந்தாலும் ஸாத்விகமான எண்ணம் மேலோங்கி இருந்தாலும், தெரிந்தே செய்யும் அபராதம் மிகுந்த பாவத்தையே உண்டாக்கும் என்றாகிறது (**சாண்டிலீ பற்றிய குறிப்பு:** மிகுந்த பாகவதோத்தமையான இவள் கடலின் நடுவே வசித்து வந்தாள். இவளது ஆச்ரமத்தின் வழியே சென்ற கருடனின் மாமாவான காவலர் என்பவரும், கருடனும் இவளது ஆச்ரமத்தில் சற்று இளைப்பாறினர். இவளது உபசரிப்பைக் கண்ட கருடன் தனது மனதில், "இவள் இங்கு இருக்கவேண்டியவள் அல்லள். இவளை நாம் விஷ்ணுலோகம் போன்ற இடத்திற்குக் கொண்டுவிடுவோம்", என்று எண்ணினான். மறுநாள் தனது சிறகுகள் அனைத்தும் உதிர்ந்து நிற்பதைக் கருடன் கண்டான். தான் சாண்டிலீ பற்றி எண்ணியதன் விளைவே இதன் காரணம் என்று உணர்ந்து மன்னிப்புக் கேட்டான். பின்னர் தனது சிறகுகள் முளைக்கப்பெற்றான். ஆகவே எண்ணம் உயர்வானதாக இருந்தபோதிலும், அது அபசாரத்தை உண்டாக்குமானால், பாவமே விளையும்). ஆகவே நித்யஸூரிகளாக உள்ளபோதிலும் அவர்கள் இந்தப் பூமியில் அவதரித்தால், கர்மவசப்பட்ட மற்றவர்கள் போன்றே நடந்துகொண்டு, உலகின் நன்மைக்காகத் தங்களது அபசாரத்திற்கு ஏற்ற ப்ராயச்சித்தம் செய்வர். ஆகவே எம்பெருமானின் கருணையை இழக்காமல் இருப்பதற்காகவும், அபராதம் காரணமாக இழக்க நேரிட்டால் அதற்காக மறுபடியும் ப்ரபத்தி செய்தல் மற்றும் சிறு தண்டனைகளைப் பெறுதல் போன்றவற்றை விலக்குவதற்காகவும் இனிவரும் காலங்களில் அபராதம் செய்யாமல் உள்ளதற்கு ஏற்ற வழியை ஆராயவேண்டும்.

## அவிவேகத்தை நீக்குவதற்கான வழி

**மூலம்–** அபராதங்கள் எல்லாவற்றிற்கும் அடி அவிவேகம். அதில் ப்ரதாநமான அவிவேகம் அசித் ஸ்வபாவமான ஜடத்வ விகாராதிகளைச் சுமக்கையும் ஈச்வர ஸ்வபாவமான ஸ்வநிஷ்டத்வ ஸ்வாதந்த்ர்ய அநந்யார்த்தத்வாதிகளைச் சுமக்கையும், இவ் அவிவேகத்தை அறுக்கைக்குத் தெளிவாளாயிருப்பது ஏற்றச் சுருக்கமறத் தன்னளவிலுண்டான தெளிவு.

அவிவேக ப்ரபுத்வாதேர்நிதாநஸ்ய நிவர்த்தநாத்
அர்த்த காமாபசாராணாமயத்நோந்மூலநம் பவேத்

இவையெல்லாவற்றுக்கும் அடி பலப்ரதாநோந்முகமாயிருப்பதொரு பூர்வாகமாகையாலே அதினுடைய நிவ்ருத்திக்குமாக அடியிலே ப்ரபத்தி பண்ணுதல், இதுக்கென்று பின்பு ஒரு ப்ரபத்தி பண்ணுதல் செய்தார்க்கு இவையெல்லாம் பரிஹ்ருதங்களாம்.

**விளக்கம்** – அனைத்துவிதமான அபராதங்கள் செய்வதற்குக் காரணம் அவிவேகமே ஆகும். இதில் முக்கியமான அவிவேகம் - அசித்தாகவும், அறிவற்றும், எப்போதும் மாற்றம் அடைந்தபடியே இருக்கும் இந்த சரீரத்தையே ஆத்மா என்று எண்ணுவது; மேலும் ஈச்வரன் எவ்விதம் சுதந்திரமாகவும், யாருக்கும் வசப்படாமலும் உள்ளானோ அதுபோன்று இந்த ஆத்மாவும் சுதந்திரமாகவும், யாருக்கும் வசப்படாமலும் உள்ளது என்று எண்ணுவது ஆகும். இத்தகைய அவிவேகத்தை அறுக்கும் கூரிய வாளாக உள்ளது எதுவென்றால் – ஆத்மாவைப் பற்றிச் சுருக்கம் இல்லாமலும், தேவைக்கு அதிகமாக இல்லாமலும் உள்ள தெளிந்த ஞானமே ஆகும். அவிவேக ப்ரபுத்வாதேர்நிதாநஸ்ய நிவர்த்தநாத் அர்த்த காமாபசாராணாமயத்நோந்மூலநம் பவேத்– இந்த சரீரத்தை ஆத்மா என்று எண்ணுதல், ஆத்மாவானது சுதந்திரமானது என்று எண்ணுதல் போன்ற அபசாரத்திற்கான காரணங்கள் நீங்கி விடுவதால் பொருள் மற்றும் விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் உண்டாகும் அபசாரங்கள் எந்தவிதமான முயற்சியும் இன்றி வேறுடன் நீங்கும் நிலை உண்டாகும்- என்பது அறிக .இப்படியான அபசாரங்கள் உண்டாதல் போன்றவற்றுக்கான அடிப்படை என்னவென்றால், கடந்த பிறவிகளில் செய்த பாவங்கள் காரணமாக ஏற்பட்ட வினைப்பலன்கள் இப்போது பலன் அளிக்கத்தொடங்கியதே ஆகும். இவை அனைத்தும் முன்னர் ப்ராயச்சித்தம் போன்று செய்யப்பட்ட ப்ரபத்தியினால் கழிந்துவிடும். அல்லது இவற்றுக்காக பின்னர் செய்யப்படும் ப்ரபத்தியும் இவற்றுக்கான பரிஹாரம் செய்ததாகவே ஆகும்.

## பாகவத அபசாரமே முதன்மையாக விலக்கப்படவேண்டியது

**மூலம்** – இப்படி இவனுக்குப் பரிஹரணீயங்களானவற்றில் ராஜதாராபராதம் போலே பாகவதாபசாரம் ப்ரதாநமென்னுமிடத்தை ஏவம் முக்திபலா நியம: தத்வஸ்தாவத்ருதே: தத்வஸ்தாவத்ருதே: என்கிற ஸூத்ரத்திலே பாஷ்யகாரர் அருளிச்செய்தார்.

**விளக்கம்** – ப்ராயச்சித்தம் செய்யவேண்டிய அபசாரங்களில் அரசனின் பத்தினிகளுக்குச் செய்த அபசாரம் போன்று முதன்மையாக உள்ளது பாகவத அபசாரமே ஆகும். இதனை ஸ்ரீபாஷ்யத்தில் பாஷ்யகாரர் (3-4-51) - ஏவம் முக்திபலா நியம: தத்வஸ்தாவத்ருதே: தத்வஸ்தாவத்ருதே: - முக்தி என்னும் பலன் உடனே கைகூடும் என்னும் அவசியம் இல்லை; அதற்கும் சில காலநிர்ணயம் உள்ளது – என்று அருளிச்செய்தார்.

**மூலம் –** ஆனபின்பு ஜாதி குண வ்ருத்தாதிகளாலே உத்க்ருஷ்டரான பராசர வ்யாஸ சுக சௌநக நாதமுனி ப்ரப்ருதிகளுக்கும் தனக்கும் பாகவதத்வாதிகளும் பரமபுருஷார்த்த லாபமும் துல்யமாயிருந்தாலும் பகவத்பரிக்ரஹமான கோ-கோபஜாதிகளுடையவும், துளஸீ-சம்பகாதிகளுடையவும், கோமய-ம்ருகமதாதிகளுடையவும் வைஷம்யம் போலே பகவத்ஸங்கல்ப விசேஷ ப்ரயுக்தமான தத்ததுபாதி ஸ்வபாவத்தாலே ஸித்தங்களான உத்கர்ஷாபகர்ஷங்களை அஸூயா ப்ராதுர்பாவ ப்ரகணத்தில் ஆப்நாதமானபடியே திரஸ்கரிக்க நினையாதொழியவும், ஜாத்யாத்யுபாதிகளாலே பாகவதர் திறத்தில் அநுஜ்ஞா பரிஹாரௌ தேஹஸம்பந்தாஜ்ஜ்யோதிராதிவத் என்கிற ந்யாயத்தாலே ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி விசேஷங்களுக்கு யதா சாஸ்த்ரம் நியமமுண்டானாலும் ஸாதுரேவ ஸ மந்தவ்ய: என்றும், ஸ்ம்ருத: ஸம்பாஷிதோ வா அபி என்றும், ய: சூத்ரம் பகவத்பக்தம் நிஷாதம் ச்வபசம் ததா வீக்ஷதே ஜாதிஸாமாந்யாத் ஸ யாதி நரகம் நர: என்றும், தஸ்மாத்விஷ்ணு ப்ரஸாதாய வைஷ்ணவாந் பரிதோஷயேத் ப்ரஸாதஸுமுகோ விஷ்ணு: தேநைவ ஸ்யாந்ந ஸம்சய: என்றும், பயிலும் சுடரொளி, நெடுமாற்கடிமைகளிலும் விசேஷித்தபடியே ப்ரதிபத்தியில் குறையற்றிருக்கவும், இப் ப்ரதிபத்தி மாத்ரத்தாலும் தஸ்யேதமித தீஹேதுரப்யுபகாரீ என்கிறபடியே பரிபூர்ண விஷயத்தில் சேஷத்வோசித கிஞ்சித்காரமான கைங்கர்யம் ஸித்தமென்றிருக்கவும், இந்நிலைகளில் ஒன்று கோணினபோது ஸர்வம் ஜிஹ்யம் ம்ருத்யுபதமார்ஜவம் ப்ரஹ்மண: பதம் என்கிறபடியே ம்ருத்யுவின் கடைவாயிலே அகப்பட்டாற்போலே நடுங்கி, க்ருதாபராதஸ்ய ஹி தே நாந்யத்பச்யாம்யஹம் க்ஷமம் அந்தரேணாஞ்ஜலிம் பத்த்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத் என்றும், யதி கிஞ்சிததீக்ராந்தம் விச்வாஸாத் ப்ரணயேந வா ப்ரேஷ்யஸ்ய க்ஷமிதவ்யம் மே ந கச்சித் அபராத்யதி என்றும், யச்ச சோகாபி பூதஸ்ய ச்ருத்வா ராமஸ்ய பாஷிதம் மயா த்வம் புருஷாண்யுக்தஸ்தச்ச த்வம் க்ஷந்துமர்ஹஸி என்றும் மஹாராஜருடையவும் இளையபெருமாளுடையவும் அந்யோந்ய ப்ரஸாதந ப்ரகாரம் சொல்லுகிற ச்லோகங்களைப் பராமர்சித்து அப்படியே ஈர்த்தவாய் தெரியாமல் வஜ்ரலேப கடிதமானாற் போலே பொருந்திப் போரவும் ப்ராப்தம்.

**விளக்கம்–** தங்களுடைய குலம், ஒழுக்கம், நடத்தை, எம்பெருமானிடம் உள்ள பக்தி, வாழ்க்கையின் புருஷார்த்தத்தை உணர்ந்து அடைந்த தன்மை போன்றவற்றில் சிறந்தவர்களான பராசரர், வ்யாஸர், சுகர், சௌனகர், நாதமுனிகள் ஆகியவர்களுக்கும் தனக்கும் பக்தி உள்ளிட்ட அதே தன்மைகளில் ஒற்றுமைகள் உள்ளன என்று சிலர் எண்ணலாம். அப்படி இருந்தாலும் அவர்கள் போன்றவர்களைத் தங்களுக்குச் சமமானவர்கள் என்று துச்சமாக எண்ணக்கூடாது. எம்பெருமானுக்கே ஏற்புடைய பொருள்களாக பசுக்கள்-ஆயர்கள், துளஸி-சம்பக மலர்கள், பசுவின் சாணம்-கோரோசனம் இருந்தாலும் முதலில் உள்ள பொருள்கள் (பசு ,துளஸி, பசுவின் சாணம்) உயர்ந்தவை என்றே கருதப்படுகின்றன. அப்படியாக உயர்ச்சி-தாழ்ச்சி என்பதான பொறாமையைத் தோற்றுவிக்கவல்ல தன்மைகள் காரணமாக உயர்ந்தவர்களை ஒருபோதும் தாழ்வாக எண்ணும் எண்ணம் உண்டாகக்கூடாது. இதனை அஸூயா ப்ராதுர்பாவ ப்ரகரணத்தில் பொறாமை ஏற்படுவதற்கான விளக்கத்தில் காணலாம் (குறிப்பு: ரஹஸ்யாம்நாயத்திற்கு ஏற்ப அந்தணன் உள்ளிட்ட நான்கு வர்ணங்களுக்கும் தனித்தனி கர்மங்கள்

விதிக்கப்பட்டுள்ளன. த்ரேதாயுகத்தின் தொடக்கத்தில் இவர்களுக்குள்ளே பொறாமை உணர்வு தலைதூக்கியது. ஒருவர் மற்றவருக்கு உதவுவதில்லை என முடிவு செய்தனர். இது போன்ற பொறாமை இருக்கக்கூடாது என்று கருத்து). வர்ணத்திற்கு ஏற்ப ஒரு சில செயல்களைச் செய்யவேண்டும் என்பதும், ஒரு சிலவற்றைச் செய்யக்கூடாது என்பதும் பாகவதர்களாக இருந்தாலும் பொருந்தும் என்பதை ப்ரஹ்மஸூத்ரம் (2-3-47) - அநுஜ்ஞா பரிஹாரௌ தேஹஸம்பந்தாஜ்ஜ்யோதிராதிவத் – ஒரு வர்ணத்திற்கு ஒரு செயலை அனுமதிப்பதும், மற்றொரு வர்ணத்திற்கு அதே செயலை மறுப்பதும் அந்தந்த சரீர தொடர்பினால் ஆகும் – என்பதன் மூலம் உணரலாம். இப்படிப்பட்ட விதிகள் உள்ளபோதிலும் கீழே உள்ள கருத்துக்கள் கவனிக்க.

கீழே உள்ள பல வரிகளில் கூறப்பட்டது போன்று பாகவதர்கள் விஷயத்தில் நாம் சிறிதளவும் மரியாதை குறைக்கக்கூடாது:

- கீதை (9-30) - ஸாதுரேவ ஸ மந்தவ்ய: - என்னை மட்டுமே வேறு பலன் எண்ணாமல் வணங்குபவன் தனது வர்ணத்திற்கு மாறான செயல்களைச் செய்தபோதிலும், அவன் மிகவும் மதிக்கத்தக்கவனே.

- இதிஹாஸ ஸமுச்சயம் (31-55) -ஸ்ம்ருத: ஸம்பாஷிதோ வா அபி – ஒருவன் சண்டாளனாக இருந்தாலும் அவன் பகவத் பக்தி உள்ளவன் என்றால் அவனுடன் உரையாடினாலே தூய்மை அடையச் செய்கிறான்.

- இதிஹாஸ ஸமுச்சயம் (25-26) - ய: சூத்ரம் பகவத்பக்தம் நிஷாதம் ச்வபசம் ததா வீக்ஷதே ஜாதிஸாமாந்யாத் ஸ யாதி நரகம் நர: - சூத்ரனாக இருந்தாலும், வேடனாக இருந்தாலும், நாயின் மாமிசத்தை உண்பவனாக இருந்தாலும் அவர்கள் எம்பெருமானின் பக்தர்கள் என்றால், அவர்களை அந்தந்த பிறப்பில் பிறந்த மற்றவர்கள் போன்று எண்ணி இகழும் ஒருவன் நரகம் புகுவான்.

- இதிஹாஸ ஸமுச்சயம் (25-2) - தஸ்மாத்விஷ்ணு ப்ரஸாதாய வைஷ்ணவாந் பரிதோஷயேத் ப்ரஸாதஸுமுகோ விஷ்ணு :தேநைவ ஸ்யாந்ந ஸம்சய: - எம்பெருமானின் கருணையையும் கடாக்ஷத்தையும் பெறுவதற்கு அவனது அடியார்களை மகிழ வைக்கவேண்டும். இதனால் எம்பெருமான் மனம் குளிர்ந்து கடாக்ஷிப்பான் என்பதில் சந்தேகம் இல்லை.

- திருவாய்மொழி (3-7-1) - பயிலும் சுடரொளி – எம்பெருமானின் அடிமைகள் தனது அத்தனை பிறவியிலும் தனது எஜமானர்கள் – என்கிறார்.

- திருவாய்மொழி (8-10-1) – நெடுமாற்கடிமை – எம்பெருமானின் அடியார்களுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்று எண்ணிய உடனேயே கர்மபலன்கள் அழிந்துவிடுகின்றன.

மேலும் எம்பெருமானின் அடியார்களுக்கு உரிய மரியாதை செலுத்துவதில் எந்தவிதமான குறைகளும் இல்லாமல் பார்த்துக் கொள்வதை நமது கடமை என்றே கொள்ளவேண்டும். இப்படியாக ஓர் எண்ணம் இருந்தாலே போதுமானது, அந்த எண்ணமே அனைத்தும் கொண்டவனான எம்பெருமானுக்குச் செய்யும் மிகப்பெரிய கைங்கர்யமாகும். தஸ்யேதமித தீஹேதுரப்யுபகாரீ – இவன் எம்பெருமானுக்கு உரியவன் என்று எண்ணும் எண்ணமே பல உபகாரங்களைச் செய்யவல்லதாகும். இத்தகைய எண்ணத்திலிருந்து சற்று மாறுபாடு தென்பட்டாலும், மரணத்தின் பிடியில் சிக்கிவிட்டோமோ என்ற எண்ணம் உண்டாகி நடுங்கவேண்டும். மஹாபாரதம் சாந்திபர்வம் (79-21) - ஸர்வம் ஜிஹ்யம் ம்ருத்யுபதமார்ஜவம் ப்ரஹ்மண: பதம் – அஹங்காரம் உள்ளிட்ட பலவும் ஸம்ஸாரத்திற்குக் காரணமான அறியாமையை ஏற்படுத்தும்; நேரான நடத்தைகள் மோக்ஷத்திற்குக் காரணமான ஞானத்தை அளிக்கும் – என்றது காண்க. எம்பெருமானின் அடியார்கள் விஷயத்தில் குற்றங்கள் இழைத்திருந்தால் அவர்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும். இதனைக் கீழே உள்ள பல வரிகளின் மூலம் உணரலாம்:

- இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (32-17) - க்ருதாபராதஸ்ய ஹி தே நாந்யத்பச்யாம்யஹம் க்ஷமம் அந்தரேணாஞ்ஜலிம் பத்த்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத்– அனுமன் சுக்ரீவனிடம், "நீ குற்றம் செய்துள்ளாய். ஆகவே லக்ஷ்மணனிடம் உனது கைகளைக் குவித்து வணங்கி, மன்னிப்புக் கேட்பதைக் காட்டிலும் வேறு ஒரு ப்ராயச்சித்தம் நான் அறியேன்", என்றான்.

- இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (36- - (11யதி கிஞ்சிததீக்ராந்தம் விச்வாஸாத் ப்ரணயேந வா ப்ரேஷ்யஸ்ய க்ஷமிதவ்யம் மே ந கச்சித் அபராத்யதி – சுக்ரீவன் லக்ஷ்மணனிடம், "நம்பிக்கை அல்லது அன்பு காரணமாக நான் உம்மிடம் தவறாக நடந்து கொண்டிருந்தால், அதனைப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன். என்னை மன்னிக்கவேண்டும். இந்த உலகில் குற்றம் செய்யாதவர்கள் யார்?", என்றான்.

- இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (36-20) - யச்ச சோகாபி பூதஸ்ய ச்ருத்வா ராமஸ்ய பாஷிதம் மயா த்வம் புருஷாண்யுக்தஸ்தச்ச த்வம் க்ஷந்துமர்ஹஸி - லக்ஷ்மணன் சுக்ரீவனிடம், "துன்பத்தில் சிக்கிய இராமனின் சொற்களைக் கேட்டவுடன் எனக்கு உண்டான வேதனை காரணமாக நான் உம்மை கடுஞ்சொற்களால் பேசிவிட்டேன். அவற்றைப் பொறுக்கவேண்டும்", என்றான்.

இப்படியாக சுக்ரீவனும் லக்ஷ்மணனும் பேசிக்கொண்டவற்றை நன்கு ஆராயவேண்டும். இவற்றின்படியே, கத்தியால் பிளக்கப்பட்ட ஒரு பொருள் வஜ்ரத்தால் ஒட்டப்படுவது போன்று நாம் அவமதித்த அடியார்களிடம் மன்னிப்புக் கேட்டு, சமாதானம் செய்து கொள்ளவேண்டும்.

**மூலம்** – ஜ்ஞாநவானானவன் ப்ராதிகூல்யத்திலே புத்திபூர்வகமாகப் ப்ரவ்ருத்தனானாலும் புந:ப்ரபத்தியாலே ஸர்வேச்வரன் க்ஷமிக்குமென்னுமிடம் ஸ்ரீபதரிகாச்ரமத்திலே க்ரோதாந்தனாய் தர்மாத்மஜனான பகவானோடே எதிரம்பு கோத்த ருத்ரனை ப்ரஹ்மா தெளிவித்து விலக்க, அவனும்

ப்ரஸாதயாமாஸ பவோ தேவம் நாராயணம் ப்ரபும்
சரணம் ச ஜகாமாத்யம் வரேண்ய வரதம் ஹரிம்

என்கிறபடியே ப்ரஸாதமான சரணாகதியைப் பண்ண,

ததோ அத வரதோ தேவோ ஜிதக்ரோதோ ஜிதேந்த்ரிய:
ப்ரீதிமாநபவத் தத்ர ருத்ரேண ஸஹ ஸங்கத:

என்கிறபடியே ஸர்வேச்வரன் ப்ரஸந்நனாய் ருத்ரனை அங்கீகரித்தானென்கையாலே ஸித்தம்.

**விளக்கம்–** தத்வ ஞானம் கொண்ட ஒருவன் தனது அறிவுக்குத் தெரிந்தே எம்பெருமானுக்கு வெறுப்பு உண்டாகும்படியான செயலில் ஈடுபடக்கூடும். அந்தச் செயலுக்காக வருந்தி அவன் ப்ராயச்சித்த ப்ரபத்தி செய்தான் என்றால், அவனை எம்பெருமான் மன்னிக்கிறான். இதனை ஸ்ரீபதரிகாச்ரமத்தில் நடந்த நிகழ்வு மூலம் அறியலாம். தர்மத்தின் புத்ரனாக எம்பெருமான் ஸ்ரீபதரிகாச்ரமத்தில் அவதரித்தபோது, அவனுக்கு எதிராக அம்பைக் குறி பார்த்த ருத்ரனை நான்முகன் தடுத்து, ருத்ரனுக்கு புத்தி புகட்டினான். அதன் பின்னர் தெளிந்த ருத்ரன் மஹாபாரதம் சாந்திபர்வம் (352-64) - ப்ரஸாதயாமாஸ பவோ தேவம் நாராயணம் ப்ரபும் சரணம் ச ஜகாமாத்யம் வரேண்ய வரதம் ஹரிம் – அதன் பின்னர் ப்ரபுவான நாராயணனின் கோபம் தீர்ந்து அவன் மகிழும்படியாக ருத்ரன் சரணம் புகுந்தான், அனைத்திற்கும் காரணமானவனும் வரங்களை அளிப்பவனும் ஆகிய அந்த ஸ்ரீஹரியிடம் சரணம் புகுந்தான் – என்பதற்கு ஏற்ப எம்பெருமானிடம் சரணாகதி அடைந்தான். அப்போது மஹாபாரதம் சாந்திபர்வம் (352-65) - ததோ அத வரதோ தேவோ ஜிதக்ரோதோ ஜிதேந்த்ரிய: ப்ரீதிமாநபவத் தத்ர ருத்ரேண ஸஹ ஸங்கத: - இந்த்ரியங்களை வென்றவனும் வரங்களை அளிப்பவனும் ஆகிய எம்பெருமான் தனது கோபம் நீங்கப்பெற்று ருத்ரனுடன் ப்ரியமாக இருந்தான் - என்பதற்கு ஏற்ப எம்பெருமான் மகிழ்வுடன் ருத்ரனின் சரணாகதியை ஏற்றான்.

**மூலம்** – தான் குற்றவாளனாகவுமாம் தான் இப்போது குற்றம் செய்யாதேயிருக்க ஜந்மாந்தர துஷ்க்ருதத்தாலேயாகவுமாம் சில பாகவதர் தன்னை வெறுக்கில் ஏதேனுமொரு விரகாலே அவர்களை க்ஷமை கொள்ளுகிற முகத்தாலே ஈச்வரனை க்ஷமை கொள்ள வேணுமென்னுமிடம்

ருக்ஷாக்ஷராணி ச்ருண்வந் வை ததா பாகவதேரிதாந்
ப்ரணாமபூர்வகம் க்ஷாந்த்யா யோ வதேத்வைஷ்ணவோ ஹி ஸ:

என்று ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம் சொல்லுகிற ப்ரமாணத்திலே ப்ரஸித்தம். இங்ஙன் செய்யாதபோது

யே ப்ராஹ்மணாஸ்தே அஹமஸம்சயம் ந்ருப
தேஷ்வர்ச்சிதேஷ்வர்ச்சிதோ அஹம் யதாவத்
தேஷ்வேவ துஷ்டேஷ்வஹமேவ துஷ்டோ வைரம்
ச தைர்யஸ்ய மமாபி வைரம்

க்நந்தம் சபந்தம் புருஷம் வதந்தம் யோ ப்ராஹ்மணம் ந ப்ரணமேத்யதா அஹம்
ஸ பாபக்ருத் ப்ரஹ்மதவாக்நிதக்தோ வக்யச்ச தண்டயச்ச ந சாஸ்மதீய:

என்கிறபடியே பகவதபிமாந பாஹ்யனுமாய், வைஷ்ணவப்ரக்ருதியாயிருக்கிற தனக்கு ஸ்வரூபமென்னலாம்படி அந்தரங்கமான பாகவதசேஷத்தையும் ஸ்வபாவமாய் நிற்கிற சாம தமாதிகளையும் இழந்தானாம். இவற்றை இழக்கைதானே இவனுக்கு வதமும் தண்டமும். பகவதபிமாந பாஹ்யதையின் கொடுமையை "அளியன் நம் பையல் என்னார் அம்மவோ கொடியவாறே" என்று பாகவத சேஷத்வமே தமக்கு நிரூபகமாக ருசித்த தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்தார்.

**விளக்கம்** – ஒருவன் இந்தப் பிறவியில் பாகவத அபசாரம் செய்யக்கூடும்; அல்லது இந்தப் பிறவியில் ஒருவன் பாகவத அபசாரம் செய்யாதபோதிலும் அவன் முற்பிறவிகளில் செய்த தவறுகளின் காரணமாக அவனை ஒரு சில பாகவதர்கள் வெறுக்கக்கூடும். இப்படி உள்ளபோது அவன் ஏதோ ஒரு முறையில் அவர்கள் தன்னை மன்னிக்கும்படிச் செய்து, இதன் மூலம் ஈச்வரனும் தன்னை மன்னிக்கும்படிச் செய்யவேண்டும். இதனை ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம் குறித்து விளக்கும் ப்ரமாணம் மூலம் அறியலாம். அந்த ப்ரமாணம் லைங்கபுராணம் உத்தரபாகம் (4-9) - ருக்ஷாக்ஷராணி ச்ருண்வந் வை ததா பாகவதேரிதாந் ப்ரணாமபூர்வகம் க்ஷாந்த்யா யோ வதேத்வைஷ்ணவோ ஹி ஸ: - ஒரு பாகவதன் தன்னைக் குறித்துக் கடுமையாகப் பேசினாலும், அவனை வணங்கியபடி நின்று, அவனது கோபத்திற்குத் தான் இலக்கானதற்காக மன்னிப்பு கேட்பவனே

உண்மையான ஸ்ரீவைஷ்ணவன் ஆவான் – என்பதாகும். இப்படிச் செய்யவில்லையெனில் – அவன் பகவானின் கடாக்ஷத்தையும் கருணையையும் இழக்கிறான், எம்பெருமானுக்கு மிகவும் நெருக்கமான அடிமையாக இருத்தல் என்பதாகிய தனது வைஷ்ணவ ஸ்வரூபத்தை இழக்கிறான் ,புலன்களை வசப்படுத்தும் தன்மை மற்றும் பொறுமை ஆகியவற்றை இழக்கிறான். கீழே உள்ள வரிகள் காண்க:

- விஷ்ணுதர்மம் (52-20) - யே ப்ராஹ்மணாஸ்தே அஹமஸம்சயம் ந்ருப தேஷ்வர்ச்சிதேஷ்வர்ச்சிதோ அஹம் யதாவத் தேஷ்வேவ துஷ்டேஷ்வஹமேவ துஷ்டோ வைரம் ச தைர்யஸ்ய மமாபி வைரம் – பாகவதர்கள் அனைவரும் எனது வடிவமே ஆவர். அரசனே! அவர்களை பூஜித்தால் என்னைப் பூஜிப்பதே ஆகும். அவர்கள் மகிழ்வு கொண்டால் நானும் மகிழ்கிறேன். அவர்களை வெறுப்பவன் என்னையும் வெறுப்பவன் ஆகிறான்.

- இதிஹாஸ ஸமுச்சயம் - க்நந்தம் சபந்தம் புருஷம் வதந்தம் யோ ப்ராஹ்மணம் ந ப்ரணமேத்யதா அஹம் ஸ பாபக்ருத் ப்ரஹ்மதவாக்நிதக்தோ வக்யச்ச தண்டயச்ச ந சாஸ்மதீய: - ஓர் அந்தணன் தன்னை அடித்தாலும், சாபம் அளித்தாலும், தகாத சொற்களைக் கூறினாலும் அந்த அந்தணனை ஒருவன், நான் (எம்பெருமான்) ப்ருகு முனிவரை வணங்கியது போன்று வணங்கவேண்டும். இவ்விதம் செய்யாதவன் பாவம் செய்தவன் ஆகிறான். அவன் அந்தணனின் கோபம் என்னும் காட்டுத்தீயால் எரிக்கப்பட்டவன் ஆகிறான், அவன் கொல்லத்தக்கவன், தண்டனை பெறுவதற்கு ஏற்றவன், என்னைச் சேராதவன் ஆகிறான்.

மேலே கூறியபடி "எம்பெருமானுக்கு மிகவும் நெருக்கமான அடிமையாக இருத்தல் என்பதாகிய தனது வைஷ்ணவ ஸ்வரூபத்தை இழத்தல்" போன்றவை ஓர் உண்மையான வைஷ்ணவனுக்கு மரணதண்டனை போன்றே இருப்பதாகும். இப்படியாக தான் அந்த அரங்கனுக்கே அடிமைப்பட்டு இருப்பது குறித்தும், திருவரங்கன் தன்னைக் கண்டுகொள்ளாமல் இருப்பது குறித்தும் கூறும் தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலையில் (37) - அளியன் நம் பையல் என்னார் அம்மவோ கொடியவாறே – என்று அவனது பார்வை தன் மீது படாமல் போனால் உண்டாகும் துக்கத்தை வெளிப்படுத்துவது காண்க.

**மூலம்** - இச்ச்லோகங்களில் ப்ராஹ்மணசப்தம் விஷ்ணும் க்ராந்தம் வாஸுதேவம் விஜாநன் விப்ரோ விப்ரத்வம் கச்சதே தத்த்வதர்சீ என்கிற ப்ரக்ரியையாலே விசேஷ விஷயம். ஸாமாந்ய விஷயமானாலும் பாகவத விஷயத்தில் அபராதம் கைமுதிக ந்யாயத்தாலே ஸித்தம்.

அநுதாபாதுபரமாத் ப்ராயச்சித்தோந்முகத்வத:
தத்பூரணாசாபராதா: ஸர்வம் நச்யந்தி பாதச:

பூர்வஸ்மிந் வா பரஸ்மிந் வா கல்பே நிர்விண்ண சேதஸாம்
நிவர்த்ய தாரதம்யே அபி ப்ரபத்திர்ந விசிஷ்யதே

ஏவமேவ லகூநாம் வா குருணாமபி வா ஆகஸாம்
ஸக்ருத் ப்ரபத்திரேகைவ ஸத்ய: ப்ரசம காரணம்

உளதான வல்வினைக்கு உள்ளம் வெருவி உலகளந்த
வளர்தாமரையிணை வன்சரணாக வரித்தவர்தம்
களைதானென எழுங்கன்மம் துறப்பர் துறந்திடிலும்
இளைதாநிலைசெக எங்கள் பிரான் அருள் தேனேழுமே

ப்ராரப்தேதர பூர்வபாபமகிலம் ப்ராமதிகம் சோத்தரம்
ந்யாஸேந க்ஷபயந்நநப்யுபகத ப்ராரப்த கண்டம் ச ந:
தீபூர்வோத்தர பாப்மாநாமஜநநாஜ்ஜாதே அபி தந்நிஷ்க்ருதே:
கௌடில்யே ஸந்திம் சிக்ஷயா அப்யநதயநம் க்ரோடீகரோதிம் ப்ரபு:

**விளக்கம்** – இந்தச் ச்லோகங்களில் உள்ள "ப்ராஹ்மண" என்ற பதம் விசேஷமான ஒரு பொருளை உணர்த்துவதாக உள்ளது. இதனை மஹாபாரதம் ஆநுசாநிக பர்வம் (16-2) - விஷ்ணும் க்ராந்தம் வாஸுதேவம் விஜாநன் விப்ரோ விப்ரத்வம் கச்சதே தத்த்வதர்சீ – இந்த உலகங்கள் அனைத்தையும் அளந்து, எங்கும் பரவி நின்ற வாஸுதேவனை நன்றாக உணர்ந்து கொண்ட ப்ராஹ்மணனே உண்மையான அந்தணன் ஆகிறார் – என்பதன் மூலம் அறியலாம். இவ்விதம் கொள்ளாமல், சாதாரண பொருளில் "ப்ராஹ்மண" என்ற பதத்தை அந்த ச்லோகங்களில் கைக்கொண்டால், கைமுதிக ந்யாயத்தின்படி அந்தணர்களுக்குத் தீமை இழைத்தாலே தவறு என்னும்போது அடியார்களுக்குச் செய்யும் அபசாரம் மிகப்பெரிய தவறு என்பதாகாதோ? (கைமுதிக ந்யாயம் – தகுதி இல்லாத ஒருவனுக்கு ஏதோ ஒன்று கிட்டும்போது, தகுதி உள்ளவனுக்குக் கிட்டும் என்பதும் தெளிவு)

- அநுதாபாதுபரமாத் ப்ராயச்சித்தோந்முகத்வத: தத்பூரணாசாபராதா: ஸர்வம் நச்யந்தி பாதச: - "தவறு செய்துவிட்டோம்" என்ற குற்ற உணர்ச்சி, தவறுகள் செய்வதை நிறுத்துதல், தவறுகளுக்கான ப்ராயச்சித்தம் செய்ய எண்ணுதல், ப்ராயச்சித்தம் செய்தல் ஆகியவற்றால் பாவங்கள் அனைத்தும் கால் கால் பாகமாக அழிகின்றன.

- பூர்வஸ்மிந் வா பரஸ்மிந் வா கல்பே நிர்விண்ண சேதஸாம் நிவர்த்ய தாரதம்யே அபி ப்ரபத்திர்ந விசிஷ்யதே –தங்களது பாவங்களை எண்ணி வருந்தியபடி உள்ளவர்களின் பாவங்களில் அதிகம்-குறைவு என்னும் வேறுபாடு உள்ளபோதிலும், முந்தைய கல்பத்திலோ பிந்தைய கல்பத்திலோ செய்யும் ப்ரபத்தியில் வேறுபாடு இல்லை.

- ஏவமேவ லகூநாம் வா குருணாமபி வா ஆகஸாம் ஸக்ருத் ப்ரபத்திரேகைவ ஸத்ய: ப்ரசம காரணம் – இப்படியாக சிறிய பாவங்கள், பெரிய பாவங்கள் ஆகிய அனைத்திற்கும் ஒருமுறை செய்யும் ப்ரபத்தி என்பது அனைத்தும் அழியக் காரணமாக உள்ளது.

உளதான வல்வினைக்கு உள்ளம் வெருவி உலகளந்த
வளர்தாமரையிணை வன்சரணாக வரித்தவர்தம்
களைதானென எழுங்கன்மம் துறப்பர் துறந்திடிலும்
இளைதாநிலைசெக எங்கள் பிரான் அருள் தேனேழுமே

**இதன் பொருள்–** தங்களிடம் உள்ள வலிமையான பாவங்களைக் கண்டு உள்ளம் நடுங்கி, உலகை அளந்தவைகளும் வளர்ந்தபடி உள்ள தாமரை போன்றவைகளும் ஆகிய எம்பெருமானின் திருவடிகளை உறுதியான உபாயம் என்று சிலர் பற்றக்கூடும். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் எம்பெருமானை அனுபவிக்கவிடாமல் தடுக்கவல்ல தீயசெயல்களைக் கைவிடுவார்கள். இப்படியாக அவர்கள் கைவிட்ட பின்னர், அவர்களது விவேகம் இல்லாத தன்மையானது நீங்கும்படியாக எங்கள் ஸ்வாமியான எம்பெருமானின் கடாக்ஷம் என்னும் தேன் அவர்களிடம் வளரும்.

ப்ராரப்தேதர பூர்வபாபமகிலம் ப்ராமதிகம் சோத்தரம்
ந்யாஸேந க்ஷபயந்நநப்யுபகத ப்ராரப்த கண்டம் ச ந:
தீபூர்வோத்தர பாப்மாநாமஜநநாஜ்ஜாதே அபி தந்நிஷ்க்ருதே:
கௌடில்யே ஸந்திம் சிக்ஷயா அப்யநதயநம் க்ரோடகரோதிம் ப்ரபு:

**இதன் பொருள் –** நாம் ப்ரபத்தி செய்வதற்கு முன்னர் இருந்த பாவங்கள் அனைத்தையும், பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட பாவங்கள் நீங்கலாக, ப்ரபத்தி செய்த பின்னர் அறியாமல் செய்த பாவங்கள் அனைத்தையும் எம்பெருமான் நீக்குகிறான். பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட பாவங்களாக இருந்தாலும், நம்மால் ஏற்க இயலாத பாவங்களை அவன் நீக்குகிறான். ப்ரபந்நன் ஒருவனுக்கு ப்ரபத்திக்குப் பின்னர் அறிந்தே செய்யும் பாவங்கள் என்பவை பெரும்பாலும் உண்டாகாது; அப்படியும் உண்டானால், அவை ப்ராயச்சித்தம் மூலம் கழிகின்றன. ஒரு சிலர் முரட்டுத்தன்மையுடன் கூடியவர்களாக ப்ராயச்சித்தம்

செய்யாமல் இருந்தால், அவர்களுக்கு மிகவும் சிறிய தண்டனைகளை அளித்து, அவர்களை பாவம் அற்றவர்களாக எம்பெருமான் காக்கிறான்.

அபராதபரிஹாராதிகாரம் ஸம்பூர்ணம்

## .19ஸ்தாந விசேஷ அதிகாரம்

யத்ர ஏகாக்ரக்யம் பவதி பகவத்பாத ஸேவா அர்ச்சநாதே:
யத்ர ஏகாந்த்ய வ்யவஸ்தித தியோ யஸ்யகஸ்யாபி லாப:
வாஸஸ்தாநம் ததிஹ க்ருதிநாம் பாதி வைகுண்ட கல்பம்
ப்ராயோ தேசா முநிபிருதிதா: ப்ராயிக ஔசித்யவந்த:

**பொருள்** – எந்த ஓர் இடத்தில் வசிக்கும்போது எம்பெருமானுடைய திருவடி தரிசனம், திருவாராதனம் முதலானவற்றுக்கு ஏற்ற மன ஒருமைப்பாடு உண்டாகிறதோ; எந்த ஓர் இடத்தில் வசிக்கும்போது மற்ற தேவதைகளை அடையாமை ,பலனை நோக்காமை என்னும்படியான உறுதியான மனம் கொண்ட ஒருவனை அடைய இயல்கிறதோ – அப்படிப்பட்ட இடம் இந்த உலகில் வாழும் ப்ரபன்னர்களுக்கு ஸ்ரீவைகுண்டம் போன்றே ப்ரகாசமாக உள்ளது. மஹரிஷிகளால் உரைக்கப்பட்ட பெரும்பான்மையான இடங்கள் இது போன்று பலவிதமான தகுதி கொண்டதாகவே உள்ளன.

### வர்ணாச்ரம தர்மங்கள் ஓங்கியுள்ள இடங்களே சிறந்தவை

**மூலம்** – இருந்த நாள் இப்படி ஸ்வயம்ப்ரயோஜநமாக நிரபராத அநுகூல வ்ருத்தியிலே ருசியும் த்வரையுமுடையவனாய்.

ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராம குலாதிபி:
விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்ய: தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி

என்னும்படியாயிருக்கிற பரமைகாந்திக்கு வ்ருத்திக்கு அநுகுணமாக வாஸஸ்தாநவிசேஷம் எதென்னில், ஆர்யாவர்த்தாதி புண்யதேசங்கள் யுகஸ்வபாவத்தாலே இப்போது வ்யாகூலங்களானபடியாலே சாதுர்வர்ண்யதர்மம் ப்ரதிஷ்டிதமான இடத்திலே வஸிப்பானென்கிறதுவே இப்போதைக்கு உபாதேயம்.

**விளக்கம்** – தான் இந்த உலகில் வாழும் காலம் முடிய எந்தவிதமான அபராதங்களும் இழைக்காமல், எம்பெருமானுக்கு ஏற்புடைய வகையில் வாழ்வதில் விருப்பமும் ஆர்வமும் கொண்டபடி ப்ரபன்னன் உள்ளான். அவன் எம்பெருமானுக்கு எப்படி நெருக்கமாக

உள்ளான் என்றால் - ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராம குலாதிபி: விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்ய: தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி – மற்ற தேவதைகளைப் பற்றாத பரமபாகவதனைப் பற்றிக் குறிப்பிடும்போது அவனுடைய ஊர், குலம் முதலானவற்றைக் கொண்டு அவனைக் குறிப்பிடக்கூடாது; அவனுக்கு எம்பெருமானுடன் உள்ள தொடர்பைக் கூறியே கூறவேண்டும்; காரணம், அவனுக்கு அனைத்துமாக எம்பெருமானே அல்லவோ உள்ளான் –என்று விஷ்வக்ஸேந ஸம்ஹிதை கூறுவதன் மூலம் அறியலாம். ஆக இப்படிப்பட்ட பரமைகாந்திகள் வஸிப்பதற்கு ஏற்ற இடம் எவை என்றால்: ஆர்யாவர்த்தம் என்பதான இமயமலை மற்றும் விந்தியமலை ஆகியவற்றின் இடையே உள்ள பகுதியானது யுகங்களின் மாறுபாடு காரணமாக நிலைகுலைந்துள்ளது. ஆகவே நான்கு வர்ணங்களுக்கும் ஏற்றபடியான தர்மங்கள் எந்த இடங்களில் கடைபிடிக்கப்படுகின்றனவோ, அப்படிப்பட்ட இடங்களே பரமைகாந்திகள் வஸிக்கத்தக்கவை ஆகும்.

## பாகவதர்கள் வஸிக்கும் இடங்களே சிறந்தவை

**மூலம்–** அவ்விடங்கள் தம்மிலும் "கருந்தடமுகில் வண்ணனைக் கடைக்கொண்டு கைதொழும் பத்தர்கள் இருந்தவூரிலிருக்கும் மானிடர் எத்தவங்கள் செய்தார்கொலோ" என்கிறபடியே பாகவதோத்தரமான தேசம் முமுக்ஷுவுக்குப் பரிக்ராஹ்யம்.

கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரமீச்வரம்
நார்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்டோபஹதா ஜநா:

என்னச் செய்தே,

கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா: க்வசித்க்வசிந்மஹாபாகாத்ரமிடேஷு ச பூரிச: தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ காவேரி ச மஹாபாகாப்ரதீசீ ச மஹாநதீ யே பிபந்தி ஜலம் தாஸாம் மனுஜா மனுஜேச்வர ப்ராயோ பக்தா பகவதி வாஸுதேவே அமலாசயா:

இத்யாதிகளிலே கலியுகத்தில் பாகவதர்கள் வஸிக்கும் தேசவிசேஷம் சொல்லுகையாலே இந்த யுகத்தில் இப் ப்ரதேசங்களில் பாகவத பரிக்ருஹீதமான ஸ்தலங்களே பரிக்ராஹ்யங்கள்.

**விளக்கம்** – இப்படிப்பட்ட இடங்களிலும் மிகவும் சிறப்பான இடங்கள் எவை என்றால், பாகவதர்கள் வசிக்கும் இடங்களே ஆகும். மோக்ஷத்தில் விருப்பம் கொண்டவர்கள் , பெரியாழ்வார் திருமொழி (4-4-7) - கருந்தடமுகில் வண்ணனைக் கடைக்கொண்டு கைதொழும் பத்தர்கள் இருந்தவூரிலிருக்கும் மானிடர் எத்தவங்கள் செய்தார்கொலோ –

என்று கூறுவது போன்று, பாகவதர்கள் வசிக்கும் இடங்களையே கைக்கொள்ளத் தக்கதாகக் கொள்ளவேண்டும். ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-1-50 - (கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸந்த்ரஷ்டாரமீச்வரம் நார்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்டோபஹதா ஜநா: - மைத்ரேயரே! இந்தக் கலியுகத்தில் பாஷாண்டிகளால் மனம் கெடுக்கப்பட்ட மனிதர்கள், அனைத்திற்கும் நாதனாக அனைத்தையும் படைத்த விஷ்ணுவை ஆராதனை செய்யமாட்டனர் – என்று கூறியபோதிலும், கலியுகத்தில் பாகவதர்கள் எங்கு வாழ்கின்றனர் என்று ஸ்ரீமத்பாகவதம் (40 ,39 ,38-5-11)பின்வருமாறு கூறுகிறது - கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா: க்வசித்க்வசிந்மஹாபாகாத்ரமிடேஷு ச பூரிச: தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ காவேரீ ச மஹாபாகாப்ரதீசீ ச மஹாநதீ யே பிபந்தி ஜலம் தாஸாம் மனுஜா மனுஜேச்வர ப்ராயோ பக்தா பகவதி வாஸுதேவே அமலாசயா: - நாராயணனே அடையவேண்டிய இலக்கு என்று உணர்கின்ற பரமைகாந்திகள் கலியுகத்தில் இங்கும் அங்குமாகப் பல இடங்களில் பிறப்பார்கள்; அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள தாமிரபரணி, க்ருதமாலா, பாலாறு, காவேரி முதலான நதிக்கரைகளிலும் மேற்கு நோக்கிப் பாய்கின்ற நதிக்கரைகளிலும் பிறப்பார்கள்; இப்படிப்பட்ட பாவனமான நதிகளின் தீர்த்தங்களைப் பருகுபவர்கள் தூய்மையான மனம் கொண்டவர்களாக, வாஸுதேவனிடம் மிகுந்த பக்தியை உடையவர்களாக இருப்பார்கள் – என்றது. இப்படியாக இந்தக் கலியுகத்தில் பாகவதர்கள் வாழ்கின்ற இடங்களே பரமைகாந்திகள் வாழ்வதற்கு ஏற்ற இடம் என்று கூறப்பட்டுள்ளன.

## வாஸம் செய்வதற்கான இடங்கள் என எம்பெருமான் கூறும் இடங்கள்

**மூலம்** – திருநாராயணீயத்தில் ஏகபாத ஸ்திதே தர்மே யத்ர க்வசந காமிநி கதம் வஸ்தவ்யமஸ்மாபி: பகவம்ஸ்தத்வதஸ்வ ந: என்று தேவர்களும் ருஷிகளும் விண்ணப்பம் செய்ய, "குரவோ யத்ர பூஜ்யந்தே ஸாதுவ்ருத்தா: சாமாந்திதா: வஸ்தவ்யம் தத்ர யுஷ்மாபி: யத்ர தர்மோ ந ஹீயதே யத்ர தேவாச்ச யஜ்ஞாச்ச தப: ஸத்யம் தமஸ்ததா ஹிம்ஸா ச தர்மஸம்யுக்தா ப்ரசரேயு: ஸுரோத்தமா: ஸ வை தேசோ ஹி வ: ஸேவ்யோ மா வ: அதர்ம: பதா ஸ்ப்ருசேத்" என்று பகவான் அருளிச்செய்தான்.

**விளக்கம்** – ஸ்ரீநாராயணீயத்தில் எம்பெருமானிடம் தேவர்களும் முனிவர்களும் பின்வருமாறு விண்ணப்பம் செய்தனர், மஹாபாரதம் சாந்திபர்வம் (349-85) - ஏகபாத ஸ்திதே தர்மே யத்ர க்வசந காமிநி கதம் வஸ்தவ்யமஸ்மாபி: பகவம்ஸ்தத்வதஸ்வ ந: - பகவானே! இந்தக் கலியுகத்தில் தர்மம் என்பது ஒற்றைக்காலில் நின்றபடி எங்காவது செல்ல முயல்கிறது, இப்படி உள்ளபோது நாங்கள் எப்படி வாழ இயலும் என்பதை நீயே கூறவேண்டும் – என்று கேட்டனர். இதற்கு பகவான் அருளிச்செய்தது மஹாபாரதம் சாந்திபர்வம் (349-86, 87) - குரவோ யத்ர பூஜ்யந்தே ஸாதுவ்ருத்தா: சாமாந்திதா: வஸ்தவ்யம் தத்ர யுஷ்மாபி: யத்ர தர்மோ ந ஹீயதே யத்ர தேவாச்ச யஜ்ஞாச்ச தப: ஸத்யம் தமஸ்ததா ஹிம்ஸா ச தர்மஸம்யுக்தா ப்ரசரேயு: ஸுரோத்தமா: ஸ வை தேசோ ஹி வ: ஸேவ்யோ மா வ: அதர்ம: பதா ஸ்ப்ருசேத்– முனிவர்களே! எந்த இடங்களில் நல்ல

ஒழுக்கம் மற்றும் அடக்கம் ஆகியவற்றுடன் கூடிய நல்லவர்கள் மதிக்கப்படுகின்றனரோ, எந்த இடத்தில் தர்மம் குறைவற்று உள்ளதோ, எங்கு சென்று வாழுங்கள்; தேவர்களே! வேதங்கள், யாகங்கள், தவங்கள், ஸத்யம், புலனடக்கம், தர்மத்தை அடியொட்டிய ஹிம்ஸை ஆகியவை எங்கு உள்ளனவோ அந்த இடங்களே உங்களுக்கு ஏற்ற இடமாகும்; உங்களிடம் அதர்மம் காலடி வைக்காது – என்றான்.

## கைங்கர்யத்துடன் கூடிய வாஸம்

**மூலம்–** அவ்விடங்கள் தம்மில் உகந்தருளின திவ்யதேசங்களிலே தனக்குக் கைங்கர்யத்துக்கு ஸௌகரியமுள்ள இடத்திலே நிரந்தரவாஸம் பண்ண உசிதம். இத்தை யாவச்சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ என்று ஸத்த்வோத்தரங்களான பகவத் க்ஷேத்ரங்களுக்குப் ப்ரதர்சநார்த்தமாக அருளிச்செய்தார். பகவத் க்ஷேத்ரங்களே விவேகிக்கு வாஸஸ்தானமென்னுமிடத்தை

யத்ர நாராயணோ தேவ: பரமாத்மா ஸநாதந:
தத்ரபுண்யம் தத்பரம் ப்ரஹ்மா தத்தீர்த்தம் தத்போவநம்
தத்ர தேவர்ஷய: ஸித்தா: ஸர்வே சைவ தபோதநா:

என்று ஆரண்யபர்வத்தில் தீர்த்தயாத்ரையிலும்,

கோமந்த: பர்வதோ ராஜந் ஸுமஹாந் ஸர்வதாதுமாந்
வஸதே பகவாந் யத்ர ஸ்ரீமாந் கமலலோசந:
மோக்ஷிபி: ஸம்ஸ்துதோ நித்யம் ப்ரபுர்நாராயணோ ஹரி:

என்று ப்ரதேசாந்தரத்திலும் மஹர்ஷி அருளிசெய்தான். ஸ்ரீவால்மீகி பகவானாலும் ஸுபகச்சித்ரகூடோ அஸௌ கிரிராஜோபமோ கிரி: யஸ்மிந் வஸதி காகுத்ஸ்த: குபேர இவ நந்தநே என்கிறவிடத்திலும் பகவததிஷ்டித க்ஷேத்ரத்தினுடைய அபிகந்தவ்யதை ஸுபகசப்தத்தாலே ஸூசிக்கப்பட்டது.

**விளக்கம்–** இப்படியாக உள்ள இடங்களிலும் எம்பெருமான் அர்ச்சாவதாரமாக நிற்கின்ற இடங்களில் அவனுக்குக் கைங்கர்யம் செய்தபடி வாழ்வதற்கான வசதிகள் உள்ள இடங்களே ப்ரபந்நனுக்கு சரியான இடங்களாகும். இப்படியாக ஸத்துவ குணங்கள் நிரம்பிய இடங்களுக்கு எடுத்துக்காட்டாக, ஸ்ரீரங்கநாதன் சரணாகதி கத்யத்தில் உடையவர் மூலமாக - யாவச்சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ – இந்த சரீரம் விழும்வரை ஸ்ரீரங்கத்திலேயே ஸுகமாக மகிழ்வுடன் இருப்பாயாக – என்று அருளிச்

செய்தான். எம்பெருமான் உள்ள இடங்களே விவேகம் கொண்ட ஒருவன் வாழ்வதற்கு ஏற்ற இடம் என்பதைக் கீழே உள்ள வரிகளில் காண்க:

- மஹாபாரதம் ஆரண்யபர்வம் (88-27-28) - யத்ர நாராயணோ தேவ: பரமாத்மா ஸநாதந: தத்ரபுண்யம் தத்பரம் ப்ரஹ்மா தத்தீர்த்தம் தத்போவநம் தத்ர தேவர்ஷய: ஸித்தா: ஸர்வே சைவ தபோதநா: - எப்போதும் உள்ளவனாகிய நாராயணன் எங்கு உள்ளானோ அந்த இடமே புண்ணியமானது; மிகவும் உயர்ந்த இடமாகும்; தூய்மையானது; அந்த இடமே புண்ணிய தீர்த்தங்கள் நிறைந்ததாகும்; தவம் செய்ய ஏற்ற இடமாகும்; அந்த இடத்தில் தேவர்களும், ஸித்தர்களும், முனிவர்களும் உள்ளனர்.

- மஹாபாரதம் பீஷ்மபர்வம் (12-8-9) - கோமந்த: பர்வதோ ராஜந் ஸுமஹாந் ஸர்வதாதுமாந் வஸதே பகவாந் யத்ர ஸ்ரீமாந் கமலலோசந: மோக்ஷிபி: ஸம்ஸ்துதோ நித்யம் ப்ரபுர்நாராயணோ ஹரி: - பல தாதுக்கள் நிறைந்த மிகவும் உயர்ந்த கோமந்தம் என்னும் மலை உள்ளது. அரசனே! அங்கு தாமரை போன்று அழகிய கண்கள் கொண்டவனும், ஐச்வர்யம் நிரம்பியவனும் ஆகிய நாராயணன், மோக்ஷத்தை விரும்பும் முமுக்ஷுக்களால் துதிக்கப்பட்டு, எப்போதும் வாழ்கிறான்.

இப்படியாக அர்சாவதாரமாக இல்லாத மற்ற இடங்கள் பற்றியும் அருளிச்செய்தார்கள். வால்மீகி பகவான் இராமாயணம் அயோத்யாகாண்டத்தில் (98-12) - ஸுபகச்சித்ரகூடோ அஸௌ கிரிராஜோபமோ கிரி: யஸ்மிந் வஸதி காகுத்ஸ்த: குபேர இவ நந்தநே – இமய மலை போன்றதான இந்தச் சித்ரகூட மலையும் மிகவும் மேன்மை உள்ளது; ஏன்? குபேரன் நந்தவனத்தில் உள்ளது போன்று இங்கு இராமன் உள்ளதால் ஆகும் – என்றார். இங்கு உள்ள ஸுபக என்னும் பதம், எம்பெருமான் அங்கு வாஸம் செய்த காரணத்தினால் சென்று அடையத்தக்கது என்பதைக் கூறுகிறது.

**மூலம்** - ஸ்ரீஸாத்த்வதாதிகளிலும் ஸ்வயம்வ்யக்த ஸைத்த வைஷ்ணவங்களென்கிற க்ஷேத்ர விசேஷங்களையும் அவற்றின் எல்லைகளில் ஏற்றச் சுருக்கங்களையும் பிரியச் சொல்லி த்ருஷ்டேந்த்ரியவசச்சித்தம் ந்ருணாம் யத் கல்மஷைர்வ்ருதம் ததந்தகாலே ஸம்சுத்திம் யாதி நாராயணாலயே என்று அவ்வோ க்ஷேத்ரங்களிலெல்லைக்குள்ளே வஸித்தவனுக்கு தேஹந்யாஸ காலத்திலே வரும் விசேஷமும் சொல்லப்பட்டது. ஆகையால் யத்கிஞ்சிதபி குர்வாணோ விஷ்ணோராயதநே வஸேத் ந கிஞ்சிதபி குர்வாணோ விஷ்ணோராயதநே வஸேத் என்கிறபடியே ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளாலே வல்ல கைங்கர்யத்தைப் பண்ணிக் கொண்டு பகவத் பாகவத அபிமாந விஷயமான ஸத்த்வோத்தர க்ஷேத்ரத்திலே வஸிக்கை உசிதம்.

**விளக்கம்** – எம்பெருமான் தானாகவே எங்கெல்லாம் தோன்றினானோ, எங்கெல்லாம் ஸித்தர்களால் எம்பெருமான் ஸ்தாபிக்கப்பட்டானோ, எங்கெல்லாம் வைஷ்ணவர்களால் ஸ்தாபிக்கப்பட்டானோ எந்த இடங்களின் மேன்மைகளை ஸாத்த்வத ஸம்ஹிதைகள் உரைக்கின்றன; அந்த இடங்களைப் பற்றியும், அதன் எல்லைகள் பற்றியும் தனியாகவே கூறப்பட்டன. ஸாத்வத ஸம்ஹிதை (7-120) - த்ருஷ்டேந்த்ரியவசச்சித்தம் ந்ருணாம் யத் கல்மஷைர்வ்ருதம் ததந்தகாலே ஸம்சுத்திம் யாதி நாராயணாலயே – கொடியதான இந்த்ரியங்களின் பிடியில் சிக்கி, தோஷங்கள் பல அடைந்த மனமானது, மரணகாலத்தில் நாராயணன் கோயில் உள்ள திவ்யதேசத்தில் வசிப்பதன் மூலம் தூய்மை அடைகிறது – என்றது காண்க. இப்படியாக அப்படிப்பட்ட இடங்களில் வசிப்பவன் தனது உடலை விடும்போது அவனுக்கு ஏற்படும் மேன்மை கூறப்பட்டது. ஆகவே - யத்கிஞ்சிதபி குர்வாணோ விஷ்ணோராயதநே வஸேத் ந கிஞ்சிதபி குர்வாணோ விஷ்ணோராயதநே வஸேத் – எம்பெருமான் கோயில் கொண்டுள்ள இடத்தில் வாழ்ந்தபடி தன்னால் இயன்ற கைங்கர்யம் செய்தபடி இருக்கவேண்டும்; அப்படி கைங்கர்யம் செய்ய இயலவில்லை என்றாலும், செய்யக்கூடாதவற்றைத் தவிர்த்தபடி எம்பெருமான் கோயில் கொண்டுள்ள ஊரில் வாழவேண்டும் – என்னும்படி இருக்கவேண்டும். அதாவது தள்ளப்பட வேண்டியவை, ஏற்கப்பட வேண்டியவை என்றபடி வாழ்ந்து, கைங்கர்யம் செய்தபடி, பகவானும் பாகவதர்களும் உள்ள இடத்தில் இருந்தபடி, ஸத்வ குணம் பெருகியபடி உள்ள இடத்தில் வாழவேண்டும்.

**மூலம் –**

நிக்ருஹீதேந்த்ரிய க்ராமோ யத்ர யத்ர வஸேந்நர:
தத்ர தத்ர குருக்ஷேத்ரம் நைமிசம் புஷ்கரம் ததா

என்று சொல்லுகிறவிது கத்யந்தரமில்லாதபோது ஏதேனுமொரு தேசத்திலே வஸித்தாலும் இவன் வாஸத்தாலே அத்தேசமும் ப்ரசஸ்தமாமென்கைக்காக. இதுக்கு சாண்டிலீ வ்ருத்தாந்தம் உதாஹரணமாகக் கண்டு கொள்வது.

**விளக்கம்** – இதிஹாஸ ஸமுச்சயம் (25-18) - நிக்ருஹீதேந்த்ரிய க்ராமோ யத்ர யத்ர வஸேந்நர: தத்ர தத்ர குருக்ஷேத்ரம் நைமிசம் புஷ்கரம் ததா – எந்த ஒருவன் தனது புலன்கள் அனைத்தையும் தன்வசப்படுத்தியபடி வாழ்கின்றானோ, அந்த மனிதன் வாழும் இடத்தில் குருக்ஷேத்ரம், நைமிசாரண்யம், புஷ்கரம் போன்ற அனைத்து திவ்யதேசங்களும் உள்ளன – என்றது காண்க. இதன் கருத்து என்ன? உயர்ந்த திவ்யதேசங்களில் உன்னதமான ஒருவன் வஸிக்க இயலாதபோது, அவன் மற்ற இடங்களில் வசித்தாலும் அந்த இடம் இவன் வசிப்பதன் காரணமாகவே உயர்கிறது. இதனை சாண்டிலீ சரிதத்தில் காண்க (இது பதினெட்டாவது அத்யாயத்தில் உள்ளது).

**மூலம்** – ஆகையால்,

ஞானஸமகாலமுக்த்வா கைவல்யம் யாதி கதசோக:
தீர்த்தே ச்வபச க்ருஹே வா நஷ்டஸ்ம்ருதிரபி பரித்யஜன் தேஹம்

என்று சரீரபாதத்துக்கு ஒரு தேச விசேஷ நியமமில்லை என்றதுவும் எப்படிக்கும் பலத்தில் இழவில்லையென்கைக்காக.

ஆராத அருளமுதம் பொதிந்த கோயில்
அம்புயத்தோன் அயோத்திமன்னற்களித்த கோயில்
தோலாத தனிவீரன் தொழுத கோயில்
துணையான வீடணற்குத் துணையாம் கோயில்
சேராத பயனெல்லாம் சேர்க்கும் கோயில்
செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயில்
தீராத வினையனைத்தும் தீர்க்கும் கோயில்
திருவரங்கமெனத் திகழும் கோயில்தானே.

கண்ணனடியிணை எமக்குக் காட்டும் வெற்புக்
கடுவினையர் இருவினையும் கடியும் வெற்புத்
திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்புத்
தெளிந்த பெருந்தீர்த்தங்கள் செறித்த வெற்புப்
புண்ணியத்தின் புகலிதெனப் புகழும் வெற்புப்
பொன்னுலகிற் போகமெலாம் புணர்க்கும் வெற்பு
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு
வேங்கடவெற்பென விளங்கும் வேதவெற்பே.

உத்தமவமர்த்தல மமைத்ததோர்
எழிற்றனுவினுய்த்த கணையால்
அத்திவரக்கன் முடிபத்துமொரு
கொத்தென உதிர்த்த திறலோன்
மத்தறு மிகுத்த தயிர்மொய்த்தவெணெய்
வைத்ததுணும் அத்தனிடமாம்
அத்திகிரி பத்தர்வினை தொத்தறவறுக்கும்
அணியத்திகிரியே.

தேனார்கமலத் திருமகள் நாதன் திகழ்ந்துறையும்
வானாடுகந்தவர் வையத்திருப்பிடம் வன்தருமக்
கானாரிமயமும் கங்கையும் காவிரியும் கடலும்
நானாநகரமு நாகமும் கூடிய நன்னிலமே.

ஸா காசீதி ந சாகசீதி புவி ஸ: அயோத்யேதி
ஸ: அவந்தீதி ந கல்மஷாதவதி ஸா காஞ்சீதி நோதஞ்சதி
தத்தே ஸா மதுரேதி நோத்தமதுராம் நான்யாபி மாந்யா பூரி
யா வைகுண்ட கதா ஸூதா ரஸபுஜாம் ரேசேத நோ சேதஸே

**விளக்கம்** – வராஹ புராணம் - ஞானஸமகாலமுக்த்வா கைவல்யம் யாதி கதசோக: தீர்த்தே ச்வபச க்ருஹே வா நஷ்டஸ்ம்ருதிரபி பரித்யஜன் தேஹம் – இந்த மந்த்ரத்தைக் கூறி ப்ரபத்தி செய்யும் ஒருவன் புண்ணிய தீர்த்தம், நாய் மாமிஸம் உண்பவன் வீடு, நினைவிழத்தல் போன்ற எந்தச் சூழலில் மரணம் அடைந்தாலும் மோக்ஷம் பெறுகிறான் – என்றது. ஆகவே இந்த வரியானது மரணம் ஸம்பவிக்க சிறப்பான இடங்கள் என்று ஏதும் இல்லை என்று கூறியபோதிலும், செய்த ப்ரபத்திக்குப் பலனாகிய மோக்ஷம் எப்படியாயினும் கிட்டும் என்பதை உணர்த்துவதையும் அறியவேண்டும்.

ஆராத அருளமுதம் என்னும் பாசுரத்தின் பொருள் – எத்தனை அனுபவித்தாலும் திகட்டாதபடி உள்ளது; கருணையே வடிவான அழகியமணவாளன் உறைகின்ற கோயில்; தாமரையில் வஸிக்கும் நான்முகன் அயோத்தியை ஆண்டு வந்த இக்ஷ்வாகு வம்ஸத்தினருக்கு அளித்த கோயில்; தோல்வி என்பதை அறியாத வீரனாகிய இராமன் ஆராதனை செய்த கோயில்; இராமனுக்குத் துணையாக நின்ற விபீஷணனுக்குக் காப்பாக இருந்த கோயில்; வேறு எங்கும் கிட்டாத பயன்கள் அனைத்தையும் அளிக்கும் கோயில்; வேதத்தின் முதல் அக்ஷரமான ப்ரணவத்தின் சேர்க்கை கொண்ட கோயில்; தீராத வினைகள் அனைத்தையும் நீக்கும் கோயில் – இதுவே திருவரங்கம் என்னும் கோயிலாகும்.

கண்ணனடியிணை என்னும் பாசுரத்தின் பொருள் – க்ருஷ்ணனின் திருவடிகளை நாம் பற்றும்படியாகக் காட்டித் தரும் திருமலை; தீய பாவங்களை பலவற்றையும் கொண்டவர்களின் இருவினைகளையும் தீர்க்கும் திருமலை; இதுவே பரமபதம்

என்னும்படியாக ஒளிர்கின்ற திருமலை; தெளிந்த தீர்த்தங்கள் கொண்ட பொய்கைகள் நிறைந்த திருமலை; புண்ணியத்தின் இருப்பிடம் இதுவே என்று போற்றப்படும் திருமலை; பரமபதத்தில் அடைகின்ற அனுபவங்கள் அனைத்தையும் இங்கேயே அனுபவிக்கச் செய்யும்படியான திருமலை; நித்யஸூரிகளாலும் இங்கு உள்ளவர்களாலும் விரும்பத்தக்க திருமலை – இது திருவேங்கடமலை என்று வேதங்களாலும் போற்றபடும் திருமலையாகும்.

உத்தம என்னும் பாசுரத்தின் பொருள் – உயர்ந்த போர்க்களத்தில் அமைக்கப்பட்டிருந்த அழகான வில்லில் இருந்து ஏவப்பட்ட ஒரே அம்பு மூலமாக பல அஸ்த்ரங்களின் பலம் நிறைந்த அசுரனாகிய இராவணனின் பத்துத் தலைகளையும், தேங்காய்க்கொத்து போன்று அறுத்த பலம் கொண்ட இராமன்; மத்தினால் கடையப்படும்படியான மிகுந்த தயிர், தாயான யசோதை மற்றும் ஆய்ச்சிமார்களால் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மிகுதியான வெண்ணெய் ஆகியவற்றை உண்ட க்ருஷ்ணன் – இப்படிப்பட்ட ஸ்வாமியான ஸ்ரீமந்நாராயணன் வாஸம் செய்யும் ஸ்தலமாக ஹஸ்திகிரி உள்ளது. எம்பெருமானின் அடியார்களுடைய பாவங்களை நீக்கி, ஸம்ஸார பந்தம் இல்லாதபடி ஒழிக்கவல்ல சக்கராயுதம் போன்றே உள்ளது.

தேனார் என்னும் பாசுரத்தின் பொருள் – தேன் நிறைந்த தாமரைமலரில் வீற்றுள்ள பெரியபிராட்டியாரின் நாதனான ஸர்வேச்வரன் எப்போதும் வாஸம் செய்கின்ற பரமபதத்தை அடையவேண்டும் என்று விரும்பி ப்ரபத்தி செய்வர். இப்படிச் செய்தவர்கள் இந்த உலகில் வஸிக்கின்ற இடங்கள் எவையோ அவை – கடுமையான தவங்கள் இயற்றப்படும் இமயமலை, கங்கையின் கரைகள், காவேரியின் கரைகள், கடலில் உள்ள சுவேத த்வீபம், மற்ற திவ்யதேசங்கள், பரமபதம் ஆகிய பலவும் கூடியுள்ள இடம் போன்று ஆகின்றன.

ஸா காசீதி என்று தொடங்கும் ச்லோகத்தின் பொருள் – இந்தப் பூமியில் உள்ள எந்த நகரமானது எம்பெருமானின் சரிதங்கள் என்னும் அமிர்தத்தைப் பருகவல்ல பாகவதர்களின் மனதிற்கு ஏற்றபடி இல்லையோ, அப்படிப்பட்ட நகரம் - காசி என்ற பெயர் கொண்டதாக உள்ளபோதிலும் ப்ரகாசம் அடைவதில்லை; அயோத்தியாக இருந்தாலும் வசிப்பதற்கு ஏற்றதல்ல; அவந்தியாக இருந்தாலும் பாவங்களில் இருந்து காப்பாற்ற வல்லது அல்ல; காஞ்சி என்றாலும் உயர்வானது அல்ல; மதுரா என்றாலும் பெருமையை அடைவதில்லை; எப்படி இருந்தாலும் மதிக்கத் தக்கதாக இருப்பதில்லை.

## ஸ்தாநவிசேஷ அதிகாரம் ஸம்பூர்ணம்

## 20. நிர்ணயாதிகாரம்

)ஜீவன் உடலை விட்டு வெளியேறும் முறை)

**மூலம்–**

மனஸி கரண க்ராமம் ப்ராணே புன: புருஷே ச தம்
ஜடிதி கடயந் பூதேஷ்வேநம் பரே ச தமாத்மநி
ஸ்வவித் அவிதுஷோ: இத்தம் ஸாதாரணே ஸரணேர்முகை:
நயதி பரதோ நாடீபேதை: யதோசிதம் ஈச்வர:

இப்படி லோகவிக்ராந்த சரணௌ சரணம் தே அவ்ரஜம் விபோ என்று இவன் கால்பிடிக்க ஹஸ்தாவலம்பநோ ஹி ஏகோ பக்தி க்ரீதோ ஜனார்த்தன: என்கிறபடியே இவனைக் கைப்பிடித்து ராஜாதிராஜ: ஸர்வேஷாம் என்கிறபடியே உபயவிபூதி நாதனான ஸர்வேச்வரன் தானுகந்ததொரு நிலத்திலே வைக்க, அபிஷிக்தையான மஹிஷியைப் போலே பஹுமதனாய்த் தன் பரமைகாந்தித்வத்துக்கு அநுரூபமான வ்ருத்தியோடே போகும் இவ்வதிகாரி. இப்படிப்பட்ட அதிகாரிகளிலே ப்ராரப்த துஷ்க்ருதவிசேஷ வைசித்ரியாலே வரும் அஹங்கார மமகாரங்களென்ன, அவையடியாக அதடியாக அபசாரங்களென்ன, ப்ரயோஜநாந்தர ருசியென்ன, அதடியாக ஸம்பாவிதமான தேவதாந்தர ஸ்பர்சமென்ன, புத்தி தௌர்ப்பல்யமென்ன, அதடியாக வரும் உபாயாந்தர ப்ரத்யாசையென்ன, இவ்வைபரீத்யம் பிறந்தவர்களுக்கும் இவை பிறவாதே ப்ராரப்த ஸுக்ருதவிசேஷத்தாலும் பூர்வப்ரபத்தியில் பலஸங்கல்ப விசேஷத்தாலும் சித்ரமில்லாத கைங்கர்யத்திலே ப்ரதிஷ்டிதராய்ப் போந்தவர்களுக்கும் ஸம்ஸாரத்தினின்றும் நிர்யாணத்துக்கு விலம்ப அவிலம்பங்களிலே நிலையிருக்கும்படி எங்ஙனே என்னில்:

இவ்விடத்தில் இவர்களுக்குச் சார்வாகாதிகளுக்குப்போலே நிலை நின்ற அஹங்கார மமகாரங்கள் புகா. அவஹிதராய் நடப்பார் இடறுமாப்போலே என்றேனும் ஒரு கால் வரும் அஹங்கார மமகாரங்கள் விவேகாவதிகளாய்ப் பின்பற்ற தெளிவாலே கழிந்துபோம். அபராதங்கள் பிறந்தால் க்ஷாமணாவதியாயும் சிக்ஷாவதியாயும் கோரின காலத்துக்குள்ளே அபராத நிஸ்தாரம் பிறக்கும்படி அபராத பரிஹாராதிகாரத்திலே சொன்னோம்.

**விளக்கம்** ) –முதலில் உள்ள ச்லோகத்திற்கான பொருள்) – மனத்தில் இந்த்ரியங்களையும், மனத்தை ப்ராணனிலும், ப்ராணத்தை ஜீவனிடமும், ஜீவனை பஞ்சபூதங்களிலும்,

பஞ்சபூதங்களுடன் கூடிய ஜீவனைத் தன்னுடனும் எம்பெருமான் விரைவாகச் சேர்த்துக் கொள்கிறான். ஆக ஜீவன் வெளிக்கிளம்புதல் என்பது தனது ஸ்வரூபத்தை அறிந்து உபாயம் செய்தவன், செய்யாதவன் ஆகிய இருவருக்கும் பொதுவாகவே உள்ளது. ஆனால் அவரவர்களுக்கு ஏற்றபடி தூமாதி மார்க்கமாகவோ அல்லது அர்ச்சிராதி மார்க்கமாகவோ எம்பெருமான் அழைத்துச் செல்கிறான்.

ஜிதந்தே ஸ்தோத்ரம் - லோகவிக்ராந்த சரணௌ சரணம் தே அவ்ரஜம் விபோ – எங்கும் உள்ளவனே! அனைத்து உபாயங்களையும் கைவிட்டு உலகம் அளந்த உனது திருவடிகளைச் சரணம் புகுந்தேன் – என்று சேதனன் எம்பெருமானின் திருவடிகளில் சரணம் புகுகிறான். அப்போது எம்பெருமான், விஷ்ணுதர்மம் (3-24) - ஹஸ்தாவலம்பநோ ஹி ஏகோ பக்தி க்ரீதோ ஜனார்த்தன: - பக்தியால் வாங்கப்பட்ட ஜனார்த்தனன் என்று திருநாமம் கொண்ட எம்பெருமானின் திருக்கரங்களே ப்ரபன்னனுக்குத் துணையாகும் – என்பதற்கு ஏற்ப சேதனனின் கைகளைப் பிடிக்கிறான். இவ்விதமாகத் தன்னால் கைப்பிடிக்கப்பட்ட சேதனனை, மஹாபாரதம் -ராஜாதிராஜ: ஸர்வேஷாம் – அனைத்திற்கும் ராஜாதிராஜன் – என்று போற்றப்படும் உபயவிபூதி நாதனான ஸர்வேச்வரன், தான் எந்த ஒரு திவ்யதேசத்தில் விருப்பம் கொண்டு வாஸம் செய்கிறானோ, அந்த இடத்தில் வாழவைக்கிறான். அங்கு அந்த சேதனன் அரசனின் ப்ரியமான அரசியைப் போன்று அனைவராலும் கொண்டாடப்பட்டபடி வாழ்கிறான். தனது பரமைகாந்தி நிலைக்கு ஏற்றபடி அவன் வாழ்ந்து வருகிறான் .

இப்படியாக வாழ்ந்து வருபவர்களில், பலன் தரத்தொடங்கிவிட்ட பூர்வ பாவ கர்மபயன் காரணமாகக் கீழே உள்ள நிலைகளில் இருத்தல் கூடும்:

- அவர்களில் சிலர் “நான்”, “எனது” என்ற அஹங்கார மமகாரங்களில் சிக்கக்கூடும்
- இத்தகைய எண்ணங்கள் காரணமாக அபராதங்கள் செய்யக்கூடும்
- எம்பெருமானைத் தவிர உள்ள மற்ற விஷயங்களில் விருப்பமோ ஆசையோ கொள்ளக்கூடும்
- இத்தகைய விருப்பங்கள் நிறைவேறும் பொருட்டு, மற்ற தெய்வங்களை நாடக்கூடும்
- மன உறுதியை இழக்கக்கூடும்
- இதனால் மற்ற உபாயங்களில் இழியக்கூடும்

மேலும் சில அதிகாரிகள், பலன் தரத்தொடங்கிவிட்ட பூர்வ புண்ணிய கர்மபயன் காரணமாகவும், ப்ரபத்தியின்போது செய்த குறிப்பிட்ட விண்ணப்பம் காரணமாகவும் எம்பெருமானின் கைங்கர்யத்தை விட்டு சற்றும் இடைவெளி இன்றி, அகலாமல் இருக்கக்கூடும். இப்படியாக உள்ள இரண்டுவிதமான ப்ரபன்னர்கள் இந்த சரீரத்தை விட்டு அகலும் காலதாமதம் எத்தகையது என்ற கேள்வி எழலாம். விடை அளிப்போம்.

இங்கு ப்ரபன்னர்களுக்குச் சார்வாகர்கள் போன்று எப்போதும் அஹங்கார மமகாரங்கள் நிலையாக நிற்பதில்லை. நன்றாக நடப்பவர்கள் கூட ஒரு சில நேரத்தில் நிலை தடுமாறி விழுவது போன்று, இத்தகைய அஹங்கார மமகாரங்கள் எப்போதாவது ப்ரபன்னர்களைச் சூழ்கின்றன. ஆனால் இவை விவேகம் ஏற்பட்டவுடனேயே கழிகின்றன. அபராதபரிஹார அதிகாரத்தில் – ஏதேனும் அபசாரம் உண்டாகிவிட்டால் அதற்காக மன்னிப்பு கேட்கும் வரையிலோ அல்லது அதற்கான பிராயச்சித்தமான சிறிய தண்டனையை அனுபவித்த பின்னரோ அந்த அபசாரம் நீங்கிவிடும் என்று கூறியது காண்க.

**மூலம்–** மோக்ஷம் பெறுகைக்கு காலவிசேஷம் குறியாதே ப்ரபந்நரானாரைப் பற்ற,

அபாயாவிரத: சச்வந்மாம் சைவ சரணம் கத:
தநூக்ருத்யாஸ்விலம் பாபம் மாமாப்நோதி நர: சநை:

என்று சொல்லுகிறது. முமுக்ஷுவாயிழிந்தவனாகையாலே ப்ரயோஜநாந்தர ருசி நிலை நிற்கவுண்டாகாது. உபய பாவனர்க்குப் போலே மோக்ஷருசியோடே கூட ப்ரயோஜநாந்தர ருசியும் கலந்து வந்தால் இவனுக்கு ஹிதபரனான ஈச்வரன் யாசிதோ அபி பக்தைர்நாஹிதம் காரயேத்தரி:, யஸ்யாநுக்ரஹமிச்சாமி தநம் தஸ்ய ஹராம்யஹம் இத்யாதிகளிலும், குண்டதாரோபாக்யாநாதிகளிலும் சொல்லுகிறபடியே சில ப்ரயோஜநாந்தரங்களைக் கொடாதே கண்ணழித்தும் சிலவற்றிலே அல்பாஸ்திரத்வ துக்கமிச்ரத்வாதி விவேகத்தாலே இவன் தனக்கு அருசியை விளைவித்தும், ஸௌபரி குசேலாதிகளுக்குப்போலே சில போகங்களைக் கொடுத்துத் தானே அலமந்துவிடப் பண்ணியும் விடுகையாலே மோக்ஷ காலம் குறித்து ப்ரபத்தி பண்ணியவனுக்கு அக்காலத்துக்குள்ளே ப்ரயோஜநாந்தர வைமுக்யம் பிறந்துவிடும். மற்றையவனுக்கும்

அதோபாய ப்ரஸக்தோ அபி புக்த்வா போகாநநாமயாந்
அந்தே விரக்திமாஸாத்ய விசதே வைஷ்ணவம் பதம்

என்கிறபடியே வைராக்யாவதியே விலம்பமாயிருக்கும். தேவதாந்தரஸ்பர்சம் உண்டாயிற்றாகிலும் ஸர்வேச்வரன் ஏதேனும் ஒரு நாளிலே சருத்யுக்தமானபடியே பரமைகாந்திகளோடே சேர்த்து லஜ்ஜாவதியாகத் திருத்தி இவனுடைய வ்யபிசாரத்தைத் தீர்க்கும். சிலருக்கு தேவதாந்தரஸ்பர்சம் நிலை நிற்குமாகில் முன்பு உபாயஸ்பர்சமில்லை; மேல் நரகாதிகளும் உண்டென்று அறியலாம். இவனுக்கு பகவத்விஷயத்தில் க்ருதாம்சம் என்றேனும் ஒரு நாள் உபாய நிஷ்பத்தியைப் பண்ணிக் கார்யகரமாம்.

மஹாவிச்வாஸம் பூர்ணமாகப் பிறந்து ப்ரபத்தி பண்ணினார்க்கு புத்திதௌர்பல்யமும் உபாயாந்தர ப்ரத்யாசையும் பிறவா. இவை பிறந்தவர்களுக்கு முன்பு பிறந்த விச்வாஸம் மந்தமாயிருக்கும். இவர்களையும் ஸர்வேச்வரன் மஹாவிச்வாஸாவதியாகத் திருத்திப் பூர்ணப்ரபத்தி நிஷ்டராக்கும்.

இவ்வைபரீத்யங்களுள் ஒன்றும் பிறவாதே நடந்தவர்களுக்கு விலம்பாதி சங்கையுங்கூட இல்லை. இவர்களுக்கு இச்சாவதி விலம்பம். இவர்கள் கோலின எல்லையில் மோக்ஷம் அவினாபூதம், இந்நிஷ்டையைப் பெற்ற இவ்வதிகாரி "கடைத்தலையிலிருந்து வாழும் சோம்பரை உகத்தி" என்கிறபடியே ச்ரிய:பதியான ஸர்வேச்வரனுக்கு சர்வதா அபிமதனாயிருக்கும்.

**விளக்கம்–** மோக்ஷம் அடைவதற்காக எந்தவிதமான காலமும் குறிப்பிடாமல் ப்ரபத்தி செய்த ஒருவன் எப்போது மோக்ஷம் பெறுவான் என்பதை லக்ஷ்மீ தந்த்ரம் (17-102) - அபாயாவிரத: சச்வந்மாம் சைவ சரணம் கத: தநூக்ருத்யாஸ்விலம் பாபம் மாமாப்நோதி நர: சநை: - என்னைச் சரணம் என்று புகுந்த பின்னரும் ஒருவன் பாவங்களை இடைவிடாமல் செய்து, அதற்கான பிராயச்சித்தமும் செய்யாமல் இருக்கக்கூடும்; அவன் தனது அத்தனை பாவங்களையும் அனுபவித்துக் கழித்த பின்னரே என்னை அடைவான் – என்றது காண்க. ப்ரபன்னன் ஒருவன் மோக்ஷத்தில் விருப்பம் கொண்ட காரணத்தினால் அவன் மற்றை பலன்களில் அதிக காலம் விருப்பம் கொண்டிருக்கமாட்டான். ஒரு சில ப்ரபன்னர்கள் தங்களுடைய மோக்ஷ ஆசையுடன் சேர்த்து, ப்ரஹ்மபாவனர்கள் மற்றும் கர்மபாவனர்கள் போன்று, மற்ற பலன்களில் விருப்பம் கொண்டிருக்கக்கூடும். ஆனாலும், அவர்களுக்கு அவை ஏற்புடையவை என்பதால், அவர்களின் நலத்தை விரும்பும் ஸர்வேச்வரன் அவர்களுக்கு அவற்றை அளிப்பதில்லை. இதனை விஷ்ணுதர்மம் - யாசிதோ அபி பக்தைர்நாஹிதம் காரயேத்தரி: - தனக்கு தீமை உண்டாகும் ஒன்றை ப்ரபன்னன் வேண்டினாலும், அதனை எம்பெருமான் செய்வதில்லை – என்றும், யஸ்யாநுக்ரஹமிச்சாமி தநம் தஸ்ய ஹராம்யஹம் – நான் யாருக்கு அனுக்ரஹம் செய்யவேண்டும் என்று எண்ணுகிறேனோ அவனிடமிருந்து செல்வங்களை பறிக்கிறேன்; இதனால் அவனது உறவினர்களும் நண்பர்களும் அவனைவிட்டு அகல்வார்கள்; அவன் மிகுந்த துன்பம் கொண்ட அந்த நிலையிலும் என்னை விடாமல் இருந்தான் என்றால், தேவர்களுக்கும் கிட்டாத பலவற்றையும் அவனுக்கு அளிப்பேன் – என்றும் கூறியது காண்க. மேலும் குண்டதாரோபாக்யாநத்தில் கூறுவது போன்று மற்ற பயன்களை அளிக்காமல் தவிர்க்கிறான் (**குறிப்பு:** குண்டதாரோபாக்யாநம் என்பது மஹாபாரதத்தில் உள்ளதாகும். குண்டாதரன் என்னும் மேக தேவதையை வணங்கும் அந்தணன் ஒருவன் செல்வங்களை அந்தத் தேவதையிடம் யாசித்தான். ஆனால் அந்தத் தேவதையோ அவற்றை அளிக்காமல், அவனுக்கு அந்தச் செல்வங்கள் காரணமாக உண்டாகவல்ல குற்றங்களை உணர்த்தி, நல்வழிப்படுத்தியது). ஒரு சில நேரங்களில் இது போன்ற மற்ற பயன்கள் என்பவை அற்பமானவை, ஸ்திரமாக இல்லாதவை, துன்பத்தை அளிக்கவல்லவை என்று உணர்த்துகிறான். ஒரு சில நேரங்களில் ஸௌபரி மற்றும்

குசேலர் போன்றவர்களுக்கு அளித்தது போன்று பெருஞ்செல்வத்தை அளித்துவிட்டு, அவர்களுக்கு அவற்றின் மீது வெறுப்பு உண்டாகும்படியாகச் செய்துவிடுகிறான்.

ஆகவே மோக்ஷத்திற்கான காலவரம்புடன் ப்ரபத்தி செய்யும் ஒருவன், அந்தக் காலகட்டத்திற்குள் எம்பெருமான் நீங்கலாக உள்ள மற்ற பயன்களில் வெறுப்பு கொண்டவனாக ஆகிறான். மோக்ஷத்திற்கான காலவரம்புடன் ப்ரபத்தி செய்யாத ஒருவனுக்கு காலதாமதம் உண்டாகும். இதனை லக்ஷ்மீதந்த்ரம் (17-103) - அதோபாய ப்ரஸக்தோ அபி புக்த்வா போகாநநாமயாந் அந்தே விரக்திமாஸாத்ய விசதே வைஷ்ணவம் பதம் – மற்ற பலன்களை விரும்பி, காம்யகர்மங்களில் ஈடுபடும் ஒருவன், எந்தவிதமான இடையூறும் இன்றி, இந்த உலகில் இன்பங்களை அனுபவித்து, இறுதியில் வைராக்யம் பெற்று பரமபதம் அடைவான் – என்றது. ஆகவே இவனுக்கு மற்றவை மீது வெறுப்பு உண்டாகும்வரை காலதாமதம் உள்ளது.

ப்ரபத்தி செய்த ஒருவன் ஸர்வேச்வரனை விடுத்து மற்ற தேவதைகளை நாடியபடி இருக்கக்கூடும். அவனை ஏதோ ஒருநாள் ஸர்வேச்வரன் தன்னுடைய அடியார்களுடன் சேர்த்து வைக்கிறான். இதன் மூலம் அவன், தான் இத்தனை நாட்கள் இருந்த நிலையை எண்ணி வெட்கப்படும்படிச் செய்து, அவனைத் திருத்துகிறான். இப்படியாக அவனுடைய தகாத தொடர்புகளை நீக்கிவிடுகிறான். ப்ரபத்தி செய்த ஒரு சிலருக்கு மற்ற தேவதைகளின் தொடர்பு என்பது நிலையாக நின்றுவிடுகிறது. இவர்களுக்கு ப்ரபத்தி என்னும் உபாயம் முழுமையாக இல்லை என்று அறியவேண்டும். இவர்கள் நரகங்களுக்குச் செல்வர் என்பதையும் அறியவேண்டும். இப்படிப்பட்ட ஒருவனுக்கு, அவனிடம் உள்ள சிறிதளவு ப்ரபத்தி என்பது எதிர்காலத்தில், சில நேரங்களை பூர்த்தியாகக் கூடும், அப்போது அந்த ப்ரபத்தி பலன் அளிக்கும்.

பூர்ணமான விச்வாஸம் பிறந்த பின்னர் ப்ரபத்தி செய்த ஒருவனுக்கு எந்தவிதமான புத்தி தடுமாற்றமும் இருக்காது. அவன் மற்ற உபாயங்களை நாடவும் மாட்டான். ஒரு சிலருக்கு இப்படியான புத்தி தடுமாற்றமோ அல்லது மற்ற உபாயங்களை நாடுதல் என்பதோ உள்ளது என்றால், அவர்கள் முன்பு கொண்டிருந்த விச்வாஸம் பூர்ணமானது அல்ல என்று கருத்து. இவர்கள் பூர்ணவிச்வாஸம் பெறும்வரை ஸர்வேச்வரன் இவர்களைத் திருத்தியபடி உள்ளான். இப்படியாக இவர்களை முழுமையான ப்ரபன்னர்களாக மாற்றுகிறான்.

இப்படியாக உள்ள எந்தவிதமான தோஷங்களும் இல்லாத ப்ரபன்னன் ஒருவனுக்கு மோக்ஷம் பெறுவதற்கு எந்தவிதமான காலதாமதமும் இல்லை. இதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. அவர்களுக்கு "இந்த நாளில் மோக்ஷம் அடையலாம்" என்னும் விருப்பம் உண்டாகின்றவரை மட்டுமே காலதாமதம் உள்ளது. அவர்கள் விரும்பிய நேரத்தில் அவர்களுக்கு மோக்ஷம் கிட்டும். இப்படியாக உண்மையான ப்ரபன்னன் என்னும்படியாக உள்ள ஒருவன் திருமாலை (38) - கடைத்தலையிலிருந்து வாழும் சோம்பரை உகத்தி -

என்று கூறுவதற்கு ஏற்ப, ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனான அரங்கனின் திருவுள்ளத்திற்கு மிகவும் ப்ரியமான ஒருவனாக உள்ளான்.

## ஜீவன் வெளியேறும் முன் ப்ரபந்நனுக்கு எம்பெருமான் செய்யும் உபகாரங்கள்

**மூலம்)** – 1 (இவன்றிறத்தில் நிருபாதிக ஸர்வசேஷியாய் நிருபாதிக ஸ்வதந்த்ரனாய் ஸத்யஸங்கல்பனுமான ஸர்வேச்வரன் ஸர்வபயங்களுக்கும் காரணமான நிக்ரஹ ஸங்கல்பத்தை தததிகம உத்தர பூர்வாகயோரச்லேஷ விநாசௌ தத்வ்யபதேசாத் என்கிறபடியே ஸத்வாரகப்ரபத்தி நிஷ்டனுக்கு உபாஸந ப்ராரம்பத்திற்போலே ப்ரபத்தி வாக்யோச்சாரணத்தில் ப்ரதமக்ஷணத்திலே விலக்கி;

)2 (இவனையும் இவனுடைய அநுபந்திகளையும் நித்யஸூரிகள் கோவையிலே கோத்தாலும் ஆவல் கெடாதே ஆச்ரித அபராதராசிகளில் உண்டது உருக்காட்டாதே வயிறுதாரியாய் அனுபந்திகளுடைய புத்திபூர்வாபராதங்களுக்கும் அநுதாபாதிகளாலே நிஸ்தாரம் பண்ணுவிக்கும்படிக்கு ஈடான அநுக்ரஹ ஸங்கல்பத்தைப் பண்ணி ;

)3 ("விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான் "என்கிறபடியே இவன் இசைந்த விலம்பத்துக்குத் தான் ஸாநுசயனாய் த்வரித்து;

)4 ("இருள் தருமா ஞாலத்துள் இனிப் பிறவி யான் வேண்டேன்" என்றும், "மாயஞ்செய்யேல் என்னை" என்றும் சொல்லுகிறபடியே இவனுக்கு இசைவை உண்டாக்கி;

)5 ("உன் திருமார்வத்து மாலை நங்கை வாசஞ்செய் பூங்குழலாள் திருவாணை நின்னாணை" என்று இவன்தான் த்வரித்து வளைக்கும்படி பண்ணி;

)6 ("சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்" என்கிறபடியே இவன் கோருதலுக்கு ஈடாகப் ப்ராரப்த சரீராவஸாநத்திலே பரமபத ப்ராப்தியுண்டாக்குவதாகக் கோரி;

)7 (பொன்னும் இரும்புமான விலங்குகள் போலே பந்தங்களான பூர்வோத்தர புண்ய பாபங்களையும் ப்ராரப்த கார்யமான கர்மத்தில் இவன் இசைந்த அம்சமொழிய மேலுள்ள கூற்றையும் "போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்" என்கிறபடியே முன்பே இவனோடு துவக்கறுத்து வைக்கையாலே சரீரபாதத்துக்கு நினைப்பிட்ட ஸமயம் வந்தவாறே

ப்ரியேஷு ஸர்வேஷு ஸுக்ருதம் அப்ரியேஷு ச துஷ்க்ருதம்
விஸ்ருஜ்ய த்யாநயோகேந ப்ரஹ்மாப்யேதி ஸநாதநம்

என்றும், "நம்மன்போலே வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவமெல்லாம் சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே" என்றும் ஸ்மர்த்தாக்கள் சொன்ன உபநிஷதர்த்தத்தின்படியே இவனுக்கு அநுகூல ப்ரதிகூலராயிருந்துள்ள இரண்டு சிறகிலும் இவன் பக்கல் ஆநுகூல்ய ப்ராதிகூல்யங்களுக்குப் பலமாக அசல் பிளந்தேறிடுகிறதென்னும்படி பண்ணி;

)8 (திவா ச சுக்லபக்ஷச்ச உத்தராயணமேவ ச முமூர்ஷதாம் ப்ரசாஸ்தாநி என்று ஸ்ம்ருதியிலும் ஜ்யோதி: சாஸ்த்ரத்தில் நிர்யாண ப்ரகரணத்திலும் பலாந்தர ப்ரஸக்தரையும் மோக்ஷோபாய பூர்த்தியில்லாதாரையும் பற்றச் சொல்லும் கால நியமமின்றிக்கே, நிசிநேதி சேந்ந ஸம்பந்தஸ்ய யாவத்தேஹபாவித்வாத் என்றும், அதச்சாயநே அபி தக்ஷிணே என்றும் சொல்லுகிறபடியே மநுஷ்ய பித்ரு தேவர்களுடைய பகல்களிலேயாதல், ராத்ரிகளிலேயாதல் தான் ஸங்கல்பித்த ஸமயத்திலே அப்ரச்யுத பூர்வஸம்ஸ்கார மநோரதனாம்படி பண்ணி;

)9 (சிறை கிடந்த ராஜகுமாரன் திறத்தில் ப்ரஸந்நனான ராஜா விலங்கை வெட்டிச் சிறைக்கூடத்தினின்றும் கொண்டு புறப்படுமாப்போலே ப்ரசஸ்த அப்ரசஸ்த நியமமறத் தத்காலோபஸ்திதமாயிருப்பது ஏதேனுமொரு சரீர விச்லேஷ நிமித்தத்தை உண்டாக்கி;

)10 (வாகாதிகளான பாஹ்யேந்த்ரியங்கள் பத்தையும் மனஸ்ஸிலே சேர்த்து;

)11 (இப்படிக் கர்மஜ்ஞானேந்த்ரியங்களெல்லாவற்றோடும் கூடின மனஸ்ஸை ப்ராண வாயுவோடே சேர்த்து;

)12 (இப்படிப் பதினோர் இந்த்ரியங்களோடும் கூடிய ப்ராணவாயுவை ஜீவனோடே சேர்த்து;

)13 (ப்ராணேந்த்ரிய ஸம்யுக்தனான ஜீவனை த்ரிஸ்தூண க்ஷேபக தசையிலே ஸ்தூல தேஹத்தினின்றும் கடைந்தெடுத்த பஞ்சபூத ஸூக்ஷ்மங்களோடே சேர்த்து;

)14 (இப்படி இந்த்ரிய ப்ராண பூதஸூக்ஷ்ம ஸம்யுக்தனான ஜீவனை நிஸர்க்க ஸௌஹார்த்தமுடைய ஹார்த்தனான தன் பக்கலிலே இளைப்பாற்றி, இப்படி ஸ்தூல சரீரத்தினின்றும் வித்வதவித்வத்ஸாதாரணமான உத்க்ராந்தி க்ரமத்தை நடத்தி;

)15 ( அநந்தா ரச்மயஸ்தஸ்ய தீபவத்ய: ஸ்திதோ ஹ்ருதி
ஸிதாஸிதா: கந்த்ருநீலா: கபிலா: பீதலோஹிதா:

ஊர்த்வமேக: ஸ்திதஸ்தேஷாம் யோ பித்த்வா ஸூர்யமண்டலம்
ப்ரஹ்மலோகமதிக்ரம்ய தேந யதி பராம் கதிம்

யதஸ்யாந்யந்த்ரச்மி சதமூர்த்வமேவ வ்யவஸ்திதம்
தேந தேவசரீராணி ஸ தாமாநி ப்ரபத்யதே

யேநைகரூபாச்சாதஸ்தாந்த்ரச்மய: அஸ்ய ம்ருதுப்ரபா:
இஹ கர்மோபபோகாய தை: ஸம்ஸரதி ஸ: அவச:

என்கிறபடியே கள்ளர் கொண்டுபோம் வழிகள்போலே ஆத்மாபஹாரிகள் ஸ்வர்க்க நரகங்களுக்குப்போம் மார்க்காந்தரங்களுக்கு முகங்களான நாடீ விசேஷங்களில் போகாதபடி வழிவிலக்கி;

)16 (அர்ச்சிராதி மார்க்கத்துக்கு முகமான சதாதிகையான ப்ரஹ்மநாடியிலே ப்ரவேசிப்பித்து, ஸூர்யகராவலம்பியாய்க் கொண்டு புறப்படும்படி பண்ணும்.

**விளக்கம் –**

ப்ரதிபலனை எதிர்பாராமல் அனைத்திற்கும் எஜமானனாக, அனைவரைக் காட்டிலும் சுதந்திரமானவனாக, தளராத ஸங்கல்பம் கொண்டவனாக உள்ள ஸர்வேச்வரன் ப்ரபந்நன் விஷயத்தில் செய்வது என்ன?

)1 (அனைவருக்கும் அச்சம் உண்டாக்குவதான தனது தண்டித்தல் என்னும் செயலை இவன் பொருட்டு தள்ளி வைக்கிறான். எப்போது என்றால் – ப்ரபத்தி என்பதை பக்தியை அடையும் பொருட்டு கைக்கொண்ட உபாஸகன், தனது த்யானத்தின் தொடக்கத்தில் எவ்விதம் உரைப்பானோ அது போன்று ப்ரபந்நன் ப்ரபத்தியை முன்னிட்டு அதற்கான முதல் வாக்கியம் உரைக்கும்போதே தனது தண்டிக்கும் இச்சையைத் தள்ளிவைக்கிறான். ப்ரஹ்மஸூத்திரம் (4-1-13) - தததிகம உத்தர பூர்வாகயோரச்லேஷ விநாசௌ தத்வ்யபதேசாத்– பக்தியோகத்தில் இழியும் ஒருவனுக்கு, அவன் முன்னர் செய்த பாவங்கள் அனைத்து ஒழிந்துவிடுகின்றன, அதன் பின்னர் அறியாமல் செய்யும் பாவங்கள் சேர்வதில்லை – என்றது காண்க. இப்படிப்பட்ட பக்திநிஷ்டனே மேலே கூறப்படுகிறான்.

)2 (அந்த ப்ரபந்நனையும், அவனுடன் சேர்ந்தவர்களையும் உடனடியாக நித்யஸூரிகளின் வரிசையில் சேர்க்கிறான். அத்துடன் எம்பெருமானின் ஆவல் தீர்வதில்லை. இப்படியாகத் தன்னை அடைந்தவர்களின் பாவங்கள் அனைத்தையும் வெளியில் தெரியாதபடி விழுங்குகிறான். அப்படியும் வயிறு நிரம்பாதவனாக மேலும் இவர்களிடம் பாவங்கள் உள்ளனவோ என்று பார்க்கிறான். அந்த ப்ரபந்நனைச் சேர்ந்தவர்கள் தெரிந்தே பாவங்கள் செய்தபோதிலும், "ப்ரபந்நனுக்கு அநுக்ரஹம் செய்வேன்" என்னும் தனது ஸங்கல்பம் காரணமாக, அவர்களுடைய பாவங்களையும் நீக்குகிறான். இதன் காரணமாக அவர்கள் தங்கள் தவறுகளுக்காக வருந்தி, பாவங்களைப் போக்குவார்கள்.

)3 (திருவாய்மொழி (10-6-3) - விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான் – என்று கூறுவதற்கு ஏற்ப பரமபதம் அளிக்க தான் விரைவாக உள்ளபோதிலும், ப்ரபந்நன் தனது மோக்ஷம் பெறுவதற்கான விண்ணப்பத்தில் காலதாமதம் வேண்டும் என்று விரும்புவதை எண்ணி எம்பெருமான் வருத்தம் கொள்கிறான். ஆகவே அந்த ப்ரபந்நனுக்கு மோக்ஷத்தை அடையும் காலதாமதத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாதபடி செய்கிறான்.

)4 (அந்த ப்ரபந்நனுக்கு மோக்ஷம் அடைவதற்கான ஆர்வத்தை அதிகப்படுத்துகிறான். ஆகவே, திருவாய்மொழி (10-6-1) - இருள் தருமா ஞாலத்துள் இனிப் பிறவி யான் வேண்டேன் – அறியாமை என்னும் இருள் சூழ்ந்த இந்த உலகப்பிறவி இனி எனக்கு வேண்டாம் - என்றும், திருவாய்மொழி) 10-10-2 - (மாயஞ்செய்யேல் என்னை – என்றும் கூறும்படியாகச் செய்கிறான்.

)5 (அத்துடன் ப்ரபந்நன் நிற்காமல் திருவாய்மொழி (10-10-2) - உன் திருமார்வத்து மாலை நங்கை வாசஞ்செய் பூங்குழலாள் திருவாணை நின்னாணை – இனியும் என்னை நீ வஞ்சிக்காதே, இது உன்னுடைய திருமார்பில் வாழ்பவளும் அழகான கூந்தல் கொண்டவளும் ஆகிய பெரியபிராட்டி மீது ஆணை – என்று வேதனை தாங்காமல் புலம்பச் செய்கிறான்.

)6 (திருவாய்மொழி (9-10-5) - சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான் – அனைவருக்கும் சரணம் புக ஏற்றபடி உள்ள தனது திருவடிகளின் சரணம் என்று புகுந்தவர்கள் மரணம் அடையும்போது அவர்களுக்கு ஸ்ரீவைகுண்டம் அளிக்கிறான் – என்று கூறுவதற்கு ஏற்ப, பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்களின் முடிவில் சரீரத்தை விடும்போது, ப்ரபந்நனின் விருப்பத்திற்கு ஏற்ப பரமபதம் அளிக்கிறான்.

)7 (பொன்னால் செய்யப்பட்ட விலங்கு போன்றுள்ள புண்ணியம், இரும்பால் செய்யப்பட்ட விலங்கு போன்ற பாவங்கள் ஆகிய இரண்டும் ப்ரபந்நனை மேலும் பந்தப்படுத்தும் என்பதால் அவற்றை எம்பெருமான் விலக்குகிறான். இது போன்று பலன்

தரத் தொடங்கிவிட்ட ப்ராரப்த கர்மங்களையும் விலக்குகிறான். ஆகவே ப்ராரப்த கர்மங்களில், ப்ரபந்நன் தான் கழித்து நீக்கிக்கொள்வேன் என்று ஒப்புக்கொண்டவை தவிர மற்ற அனைத்தையும் இருந்த சுவடே தெரியாமல் விலக்குகிறான். இதனையே திருப்பாவையில் (5) - போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும் – ப்ரபத்திக்கு முன்பாக செய்த பாவங்களும், அதன் பின்னர் தொடர்கின்ற பாவங்களும் தீயில் இட்ட பஞ்சு போன்றாகும் – என்றாள். ப்ரபந்நன் தனது சரீரத்தை விடும் நேரம் வந்தபோது, அவனிடம் எஞ்சியுள்ள புண்ணியங்கள் அனைத்தும் அவனுடைய நண்பர்களிடமும், எஞ்சிய பாவங்கள் அனைத்தும் அவனுடைய விரோதிகளிடமும் சென்று சேரும்படியாக எம்பெருமான் செய்துவிடுகிறான். இதனை மநுஸ்ம்ருதி (6-79) - ப்ரியேஷு ஸர்வேஷு ஸுக்ருதம் அப்ரியேஷு ச துஷ்க்ருதம் விஸ்ருஜ்ய த்யாநயோகேந ப்ரஹ்மாப்யேதி ஸநாதநம் – பரமபதம் செல்லும் ஒருவன் தனது புண்ணிய பலன்களைத் தனது நண்பர்களிடமும், பாவங்களைத் தனது விரோதிகளிடமும் விடுகிறான்; தனது பக்தியால் என்றும் உள்ளதான ப்ரஹ்மத்திற்கு ஒத்த இன்பம் அடைகிறான் – என்றது காண்க. இதனையே பெரியாழ்வார் திருமொழியில் (5-4-3) - நம்மன்போலே வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவமெல்லாம் சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே – யமன் போன்று நம் மீது விழுந்து அழுத்துகின்ற பாவங்கள் அனைத்தும் ஓடிச்சென்று நமது பகைவர்களிடம் பாய்கின்றன – என்றார். ஸ்ம்ருதிகளை ஆக்கியவர்கள் உபநிஷத்துக்கள் கூறும் கருத்துக்களையே மேலே உள்ளது போன்று கூறுகின்றனர்.

(8) ஒரு சிலர் மோக்ஷம் தவிர உள்ள மற்ற பலன்களை நாடியபடி இருத்தல் கூடும். மேலும் சிலர் மோக்ஷ உபாயம் அனைத்தையும் முழுமையாகக் கைக்கொள்ளாமல் இருத்தல் கூடும். இப்படிப்பட்டவர்கள் தங்கள் சரீரத்தை விட்டுப் பிரிய ஏற்ற நேரம் என்று ச்ருதி மற்றும் சாஸ்த்ரங்களில், மஹாபாரதம் - திவா ச சுக்லபக்ஷச்ச உத்தராயணமேவ ச முமூர்ஷதாம் ப்ரசாஸ்தாநி – இறக்கும் அவர்களுக்கு பகல் நேரம், சுக்ல பக்ஷம், உத்தராயணம் ஆகியவை சிறந்த காலங்கள் – என்று கூறுவது போன்று உரைக்கப்பட்டது. ஆனால் ப்ரபந்நன் ஒருவனுக்கு இது போன்ற கட்டுப்பாடுகள் ஏதும் இல்லை. இதனை ப்ரஹ்மஸூத்ரம் (4-3-8) - நிசிநேதி சேந்ந ஸம்பந்தஸ்ய யாவத்தேஹபாவித்வாத் – மோக்ஷ உபாயம் கைக்கொண்ட ஒருவன் இரவில் மரணம் அடைந்தால் மோக்ஷம் இல்லை என்று கூறக்கூடாது – என்றது. இதே காரணத்தினால் ப்ரஹ்மஸூத்ரம் (4-2-19) - அதச்சாயநே அபி தக்ஷிணே – தக்ஷிணாயத்தில் இறந்தாலும் மோக்ஷம் உண்டு – என்றது. ஆக மனிதர்களின் காலத்தில் உள்ள இரவு-பகல் (ஒரு நாளில் இரவு மற்றும் பகல்), பித்ருக்களின் காலத்தில் உள்ள இரவு-பகல் (இவர்களுக்கு

சுக்லபக்ஷம் என்பது பகல், க்ருஷ்ணபக்ஷம் என்பது இரவு), தேவர்களின் காலத்தில் உள்ள இரவு-பகல் (இவர்களுக்கு உத்தராயணம் என்பது பகல், தக்ஷிணாயணம் என்பது இரவு) என்று எந்தக் காலமாக இருந்தாலும், எம்பெருமான் ஸங்கல்பம் செய்த நேரம் வரும்போது, அந்த ப்ரபந்நனுக்கு மோக்ஷத்தின் மீது கொண்ட ஆசையின் நினைவுகள் உண்டாகும்படிச் செய்கிறான்.

(9) சிறையில் வாடுகின்ற ராஜகுமாரன் ஒருவனை மீட்க வரும் அரசன், அந்த விலங்குகளை வெட்டி, அந்தச் சிறையிலிருந்து ராஜகுமாரனை மீட்டுச் செல்வது போன்று, ப்ரபந்நனை எம்பெருமான் தன்னுடன் அழைத்துச் செல்கிறான். அவ்விதம் சரீரத்தை விட்டுப் பிரிகின்ற நேரமானது, மற்றவர்களுக்கு உள்ளது போன்று சுபவேளை, அசுபவேளை என்ற கட்டுப்பாடுகள் இன்று, ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு, பிரியும்படிச் செய்கிறான்.

(10) அதன் பின்னர் வாக்கு உள்ளிட்ட பத்து இந்த்ரியங்களை மனதுடன் சென்று லயிக்கும்படிச் செய்கிறான்.

(11) இப்படியாக கர்மேந்த்ரியங்கள் மற்றும் ஞானேந்த்ரியங்களுடன் கூடிய மனதை, ப்ராணவாயுவுடன் சேர்க்கிறான்.

(12) இப்படியாக மனம் உள்ளிட்ட பதினோரு இந்த்ரியங்களுடன் கூடிய ப்ராணவாயுவை ஜீவனுடன் சேர்க்கிறான்.

(13) அதன் பின்னர் முதுகின் நடுவில் உள்ள நரம்புகளில் இருந்து கடைந்தெடுக்கும் நேரம் வரும்போது, ஸ்தூல உடலில் இருந்து அவ்விதம் கடைந்து எடுக்கப்பட்ட பஞ்சபூதங்களுடன், ப்ராணவாயு மற்றும் இந்த்ரியங்களுடன் கூடிய ஜீவனைச் சேர்க்கிறான்.

(14) இவ்விதம் இந்த்ரியங்கள், ப்ராணன், பஞ்சபூதஸூக்ஷ்மங்களுடன் கூடிய ஜீவனை அவனுடைய நலத்தை விரும்புபவனாக உள்ளதால், அந்த ஜீவனின் இதயமாகத் தானே உள்ளது போன்று, அந்த ஜீவனைத் தன்னுடன் அணைத்து இளைப்பாற்றுகிறான்.

இப்படியாக ஜீவனை ஸ்தூல சரீரத்திலிருந்து வெளியேற்றுகிறான். இதுவரை கூறப்பட்ட (9 முதல் 14 முடிய) அனைத்தும் சாதாரண மனிதர்களுக்கும், ப்ரஹ்மத்தை அறிந்தவர்களுக்கும் பொதுவானது ஆகும்.

(15) இவ்விதம் கிளம்பும் ஜீவன் சரீரத்தை விட்டு எவ்விதம் வெளியேறுகிறான் என்பதை யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி (3-166, 169) பின்வருமாறு கூறுகிறது. (**குறிப்பு:** மேலே உள்ள மூலத்தில் இவற்றுக்கான ச்லோகங்களைக் கண்டு கொள்க). இதயத்தில் தீபம் போன்ற ஒளியுடன் கூடிய ஜீவனுக்கு எண்ணற்ற நாடிகள் உள்ளன; அவை வெண்மை, கருமை, ஊதா, நீலம், பொன்னிற மஞ்சள், மஞ்சள் மற்றும் சிவப்பு போன்ற பல நிறங்களுடன் உள்ளன; அவற்றின் நடுவில் ஒரே ஒரு நாடி மட்டும் மேல் நோக்கிச் செல்வதாக உள்ளது; இந்த நாடி வழியே செல்கின்ற ஜீவன், சூரிய மண்டலத்தைப் பிளந்து கொண்டு சென்று, ப்ரஹ்மலோகத்தைக் கடந்து உயர்ந்த மார்க்கத்தை அடைகிறான்; மேல் நோக்கி மேலும் நூறு நாடிகள் செல்கின்றன; இவற்றில் ஏதேனும் ஒன்றில் செல்லும் ஜீவன், தேவர்களுக்கான சரீரம் அடைந்தவனாக, தேவர்களின் லோகத்தில் நுழைகிறான்; பல நிறங்களில் உள்ள சில நாடிகள் கீழ்நோக்கிச் செல்கின்றன; இவற்றின் வழியே செல்லும் ஜீவன், தனது கட்டுப்பாட்டை இழந்தவனாக, கர்ம பலன்களை அனுபவிக்கும் பொருட்டு, ஸம்ஸாரத்தில் விழுகிறான் – என்றது காண்க. இது போன்று, திருடர்கள் செல்லும் பாதை போன்றதான வழிகளில், “எம்பெருமானின் ஆத்மா என்னுடையதே” என்று எண்ணும் திருடர்கள் செல்லும் வழிகளில் ப்ரபந்நனின் ஜீவன் செல்லாதபடி எம்பெருமான் பார்த்துக் கொள்கிறான். இத்தகைய திருடர்கள் சென்று சேரும் இடங்களான ஸ்வர்க்கம் மற்றும் நரகங்களுக்குச் செல்லும் நாடிகளில் ப்ரபந்நன் புகாதபடி எம்பெருமான் விலக்குகிறான்.

(16) மேலே கூறப்பட்ட நூறுவகையான நாடிகளிலிருந்து மாறுபட்டதும், அர்ச்சிராதி மார்க்கத்திற்கு இட்டுச் செல்வதும் ஆகிய ப்ரஹ்மநாடி என்பதில் ஜீவன் புகும்படிச் செய்கிறான். அங்கு சூரியனின் கிரணங்களைப் பிடித்தபடி அவன் மேலே ஏறிப் புறப்படும்படியாகச் செய்கிறான்.

**மூலம்** – ஆழ்வான் அந்திமதசையிலே விடாயிலே நாக்கொட்டி எம்பெருமானார் திருவடிகளைப் பிடிக்க, இவர் அப்போது ஆழ்வான் செவியிலே த்வயத்தை அருளிச்செய்ய, “இப்பேறு நமக்கு வருகை அரிது. நாமென் செய்யக் கடவோம்?”, என்று அப்போது ஸேவித்திருந்த முதலிகள் கலங்க, இவர்களபிப்ராயத்தை திருவுள்ளம் பற்றி

“ஆழ்வான் ப்ரக்ருதி அறியீர்களோ? இவ்வவஸ்தையில் இவருக்கு இது கர்ப்பூரத்தையும் கண்டசர்க்கரையையும் இட்டமாத்ரமன்றோ? நாமிது உபாயத்துக்குப் பரிகரமாகச் செய்தோமல்லோம்” என்று அருளிச்செய்ய முதலிகள் தெளிந்து நிர்பரரானார்கள். ஆகையால் நஷ்டஸ்ம்ருதிரபி பரித்யஜன் தேஹம் என்றும், ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே என்கிற ச்லோகத்வயத்திலும், “துப்புடையாரை அடைவதெல்லாம்” என்கிற பாட்டிலும் சொல்லுகிறபடியே ப்ரபந்நனுக்கு அந்திம ஸ்ம்ருத்யாதிகளில் நிர்பந்தமில்லை.

**விளக்கம்** – கூரத்தாழ்வான் தனது உயிர் பிரியும் நேரத்தில், நாக்கு உலர்ந்து, ஏதும் கூற இயலாமல் எம்பெருமானாரின் திருவடிகளைப் பற்றினார். அப்போது ஆழ்வானின் செவியில் எம்பெருமானார் த்வயமந்த்ரத்தை உச்சரித்தார். அப்போது அங்கிருந்தவர்கள் தனக்கள் மனதில், “இப்படியாக நமது செவிகளில் எம்பெருமானார் த்வயமந்த்ரத்தை உச்சரிக்கும் பேறு கிட்டுமோ? நாம் என்ன செய்யவேண்டும்?”, என்று எண்ணியபடி நின்றனர். அவர்களுடைய எண்ணத்தை அறிந்துகொண்ட எம்பெருமானார் அவர்களிடம், “ஆழ்வானின் ஸ்வபாவம் என்ன என்பதை நீங்கள் அறிவீர்களா? இப்படிப்பட்ட நிலையில் இவர் உள்ளபோது நான் இவரது நாக்கில் சிறிதளவு கர்ப்பூரத்தையும் கண்டசர்க்கரையையும் வைப்பது போன்றே த்வயத்தைக் கூறினோம், அந்த மந்த்ரத்தை இங்கு மோக்ஷ உபாயமாக, அதன் அங்கங்களுடன் உரைக்கவில்லை”, என்றார். இதனைக் கேட்ட பின்னரே அங்கிருந்தவர்கள் சமாதானம் அடைந்தனர். ஆகவே கீழே உள்ள வரிகளில் கூறியபடி ப்ரபந்நன் ஒருவனுக்கு அந்திமநேரத்தில் ஸர்வேச்வரனை எண்ணியபடி இருத்தல் வேண்டும், அப்போதுதான் மோக்ஷம் கிட்டும் என்பதான கட்டாயம் இல்லை:

- வராஹ புராணம் - நஷ்டஸ்ம்ருதிரபி பரித்யஜன் தேஹம் – நினைவிழந்த நிலையில் மரணம் அடைந்தாலும் மோக்ஷம் அடைகிறான்.

- வராஹ சரமச்லோகம் - ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே – மனம் உறுதியாக உள்ளபோதும், சரீரம் தளராமல் உள்ளபோதும், சரீரத்தில் உள்ள தாதுக்கள் சரியான பக்குவத்தில் உள்ளபோதும் யார் என்னைச் சரணம் அடைந்து த்யானிக்கிறானோ, அவன் இறக்கும்போது கட்டை மற்றும் கல் போன்று கிடந்தாலும் நான் அவனை எண்ணியபடி மோக்ஷம் அளிக்கிறேன்.

- பெரியாழ்வார் திருமொழி (4-10-1) - துப்புடையாரை அடைவதெல்லாம் – திருவரங்கா! எனது இந்த்ரியங்கள் தளர்கின்ற காலத்தில் நான் உன்னை எண்ணமாட்டேன், அதற்காக இப்போதே விண்ணப்பிக்கிறேன்.

**மூலம்**– சரீர பாத ஸமயே து கேவலம் மதீயயைவ தயயா அதிப்ரபுத்தோ மாமேவாவலோகயந் அப்ரச்யுத பூர்வஸம்ஸ்கார மநோரத: என்று அருளிச்செய்ததும்

இவ்வசநங்களுக்கு அவிருத்தமாக ஒரு ப்ரகாரத்தாலே நிர்வாஹம், எங்ஙனேயென்னில் – கத்யத்தில் அருளிச்செய்கிற அந்திமஸ்ம்ருதி இவ்வந்திமஸ்ம்ருதியையும் உபாயபலமாகக் கோரி ப்ரபந்நரானவர்களுக்கு வரக்கடவதென்று சில ஆசார்யர்கள் நிர்வஹிப்பார்கள். இப்படியாகில் ஒரு சரீரத்திலும் அந்திமமான ப்ரத்யயம் நிர்விஷயமாயிராமையால் இது பகவத்வ்யதிரிக்த விஷயத்திலே போமாகில் யம் யம் வாபி ஸ்மரந் பாவம் என்கிற கணக்கிலே விபரீதபலமாம். ஆனபின்பு கத்யத்தில் அருளிச்செய்தபடியே ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனுக்கு பகவத் விஷயத்தில் அந்திம ப்ரத்யயம் அவச்யம் வரும். நஷ்டஸ்ம்ருதிரபி இத்யாதிகள் ஸ்ரீகீதையில் அஷ்டமாத்யாயத்திலும், யம் யோகிந: ப்ராணவியோக காலே யத்நேந விநிவேசயந்தி இத்யாதிகளிலும் ஸ்வயத்நஸாத்யமாக விதித்த கட்டளையிலே உபாயமாக அந்திமஸ்ம்ருதி வேண்டாவென்கின்றன என்று சில ஆசார்யர்கள் அநுஸந்திப்பார்கள். “கேவலம் மதீயயைவ தயயா” என்றே இங்கு அருளிச்செய்தது.

**விளக்கம்** – சரணாகதிகத்யம் (சூர்ணை 21) - சரீர பாத ஸமயே து கேவலம் மதீயயைவ தயயா அதிப்ரபுத்தோ மாமேவாவலோகயந் அப்ரச்யுத பூர்வஸம்ஸ்கார மநோரத: - உனது சரீரம் விழும் நேரத்தில், உனக்கு எனது தயை காரணமாக முழுமையான ஞானம் உண்டாகும்; எனது திவ்யமங்கள விக்ரஹத்தைக் காண்பவனாக, ”எம்பெருமானே உயர்ந்த பலன்” என்பதான உனது ஆசையும் நினைவும் கைகூடும் – என்பது போன்ற வரிகள் கடந்த பத்தியில் கூறப்பட்ட விஷயங்களுக்கு முரணாகாதபடி பொருள் கொள்ளப்பட வேண்டும். ஒரு சில ஆசார்யர்கள் அந்த கத்யவரிக்கு “உயிர்பிரியும் நேரத்தில் எம்பெருமானைக் குறித்த எண்ணம் உண்டாகவேண்டும் என்று ப்ரபத்தியின்போது செய்கின்ற வேண்டுதலே அந்த வரியால் உரைக்கப்பட்டது” என்று பொருள் கொள்வர். இந்தக் கருத்தை ஏற்க இயலாது. ஏன்? உயிர் பிரிகின்ற நேரத்தில் ஏதோ ஒரு எண்ணம் கண்டிப்பாக உண்டாகும் ,அப்படி உண்டாகும் எண்ணம் ஏதோ ஒரு பொருளைக் குறித்தே இருக்கும். இவ்விதம் எண்ணப்படும் பொருளானது எம்பெருமான் நீங்கலாக வேறு ஏதேனும் ஒன்றாக இருந்தால் கீதை (8-6) - யம் யம் வாபி ஸ்மரந் பாவம் – எந்தனை எண்ணியபடி சரீரம் விடுகிறானோ, அதனையே அடைகிறான் – என்பதற்கு ஏற்ப விபரீதத்தில் கொண்டுவிடக்கூடும். ஆகவே ப்ரபந்நன் ப்ரபத்தியை ”அந்திமகாலத்தில் எம்பெருமானை எண்ணவேண்டும்” போன்றதான வேண்டுதல்கள் இன்றிச் செய்தாலும், அவனுக்கு எம்பெருமானைப் பற்றிய எண்ணங்கள் அந்த நேரத்தில் உண்டாகிவிடும் என்பதே அந்த கத்ய வரிக்கான பொருளாகும். இப்படியாக அந்திம நேரத்தில் எம்பெருமானை எண்ணுதல் என்பது பற்றி கீதையின் எட்டாவது அத்யாயத்திலும், மஹாபாரதம் சாந்திபர்வம் (46-143) - யம் யோகிந: ப்ராணவியோக காலே யத்நேந விநிவேசயந்தி – யோகிகள் தங்களது அந்திம நேரத்தில் எந்த எம்பெருமானை மிகவும் கடினப்பட்டு எண்ணுகிறார்களோ, அவனைப் பீஷ்மர் தனது கண்களின் முன்பாகப் பார்த்தபடி மரணம் அடைந்தார் – என்றும் கூறுவது காண்க. ஆகவே இத்தகைய எண்ணமானது உபாயமாக ப்ரபந்நனுக்கு விதிக்கப்படவில்லை என்றாகிறது. இத்தகைய எண்ணம் எம்பெருமானின் தயை காரணமாகவே உண்டாகும்

என்பதை கத்யத்தில் - கேவலம் மதீயயைவ தயயா – எனது தயையால் மட்டுமே – என்றது காண்க.

**மூலம்–** அந்திம ஸ்ம்ருதியாவது வாகாதிகள் உபசாந்தமானால் மநஸ்ஸு உபசாந்தமாவதற்கு முன்பே பிறப்பதொரு ஸ்ம்ருதி. இது அருகிருந்தார்க்குத் தெரியாது. த்ருச்யதே ஹி வாகிந்த்ரிய உபரதே அபி மந: ப்ரவ்ருத்தி: என்கிற பாஷ்யமும் ஏதேனும் ஒரு லிங்கத்தாலே ஒரு மந: ப்ரவ்ருத்தி இவனுக்கு உண்டென்று அறிகிறவளவைச் சொல்லுகிறது. தனக்குச் சில வ்யாத்யாத்யவஸ்தைகளிலே கண்டபடியைச் சொல்லுகிறதாகவுமாம். ஆனபின்பு பகவத்விஷயத்தில் அந்திமஸ்ம்ருதி முக்தராகிறவர்க்கும் மோக்ஷம் கொடுக்கிறவர்க்கும் தெரியுமித்தனை.

**விளக்கம்–** இப்படியாகக் கூறப்படும் "அந்திமஸ்ம்ருதி" என்றால் என்ன? வாக்கு முதலான செய்கைகள் அடங்கும்போது, மனதிலிருந்து உண்டாகும் எண்ணங்கள் அனைத்தும், மனம் அடங்குவதற்கு முன்பாக அடங்கிவிடுகின்றன. இதுவே இங்கு உணர்த்தப்படுகிறது. ஆனால் இதனை அருகில் உள்ளவர்களால் அறிய இயலாது. ஸ்ரீபாஷ்யத்தில் (4-2-1) - த்ருச்யதே ஹி வாகிந்த்ரிய உபரதே அபி மந: ப்ரவ்ருத்தி: - மரணம் அடையும் நேரத்தில் வாக் இந்த்ரியம் தனது செயல்பாட்டை இழந்த பின்னரும் மனம் தொடர்ந்து இயங்குவதைக் காண முடிகிறது– என்று கூறியது ஏன் என்றால், மனதி இயக்கம் என்பது செய்கைகள் மூலம் உணர இயலும் என்பதால் ஆகும். தனக்கு நோய்வாய்ப்பட்ட காலங்களில் உண்டான அனுபவத்தின் மூலம் கூறுவதாகவும் கொள்ளலாம். ஆகவே அந்திமஸ்ம்ருதி என்பது முக்தி பெற்றவனுக்கும், அவனுக்கு மோக்ஷம் அளித்த எம்பெருமானுக்கும் மட்டுமே தெரியும்.

**மூலம்–** இதுக்கு அநந்தரம் யோகிகளோடும் அயோகிகளோடும் வாசியற ஹார்த்தனான பரமாத்மாவின் பக்கலிலே விச்ரமிக்குமளவும் ஸுஷுப்திதுல்யமாயிருக்கும். இவ்வவஸ்தையைப் பற்றக் காஷ்ட பாஷாண ஸந்நிபம், நஷ்ட ஸ்ம்ருதிரபி என்றும், "நினைக்கமாட்டேன்" என்றும் சொல்லுகிறது என்றால் ப்ரபந்நாதிகாரிக்கு விசேஷித்து ஓரதிசயம் சொல்லிற்றாகாது. இதுக்கு மேல் மத்த: ஸ்ம்ருதிர்ஜ்ஞாந மபோஹநம் ச என்கிற ப்ராஜ்ஞனுணர்த்த தத்ப்ரகாசிதத்வாரனாய்க் கொண்டு ப்ரஹ்மநாடியிலே ப்ரவேசித்தால் பின்பு காலதத்வமுள்ளதனையும் ஒரு பகலாயுணர்த்தியேயாம்.

**விளக்கம்** – அதன் பின்னர் யோகியுடையதாக இருந்தாலும் சரி, யோகி அல்லாதவனுடையதாக இருந்தாலும் சரி, ஆத்மாவானது இதயத்தில் வாசம் செய்யும் பரமாத்மாவின் பக்கம் ஓய்வெடுக்கும். இந்த நிலை கனவுகள் அற்றதான ஆழ்ந்த உறக்கம் போன்றதே ஆகும். மேலே வராஹ புராண வரிகளும், பெரியாழ்வார் திருமொழி வரிகளும் அந்திமஸ்ம்ருதியைக் கூறாமல் ஆழ்ந்த உறக்கத்தைக் கூறியிருக்கலாம் அல்லவோ என்ற சந்தேகம் எழலாம். இவ்விதம் கொண்டால் ப்ரபந்நனுக்கு எந்த ஒரு மேன்மையும் கூற இயலாது அல்லவோ? ஆகவே அவை அந்திமஸ்ம்ருதியைக் கூறுவதாகவே

கொள்ளவேண்டும். அதன் பின்னர் கீதை (15-15) - மத்த: ஸ்ம்ருதிர்ஜ்ஞாந மபோஹநம் ச – அனைத்து நினைவுகளும் என்னிடமிருந்தே உண்டாகின்றன – என்று கூறுவதற்கு ஏற்ப அனைத்தும் அறிந்தவனான எம்பெருமானால் அந்த முக்தாத்மாவிற்குத் தத்வஞானம் உண்டாகிறது. இந்த ஞானத்தால் ஒளி அளிக்கப்பட்ட அந்த ஜீவன் ப்ரஹ்மநாடியில் நுழைகிறான்.

நன்னிலமாமது நற்பகலாமது நன்னிமித்தம்
என்னலுமாமது யாதானுமா மங்கடியவர்க்கு
மின்னிலைமேனி விடும் பயணத்து விலக்கிலதோர்
நன்னிலையா நடுநாடி வழிக்கு நடைபெறவே.

**பொருள்** – மின்னல் போன்று சட்டென்று தோன்றி மறைவதான இந்த சரீரத்தை விட்டு, பரமபதம் கொண்டு சேர்ப்பதால் சிறந்த தன்மை கொண்டதும், அனைத்து நாடிகளின் நடுவில் உள்ளதும் ஆகிய ப்ரஹ்மநாடியின் வழியே, ப்ரபந்நன் ஒருவன் செல்வதற்கு எந்த கால, தேச கட்டுப்பாடும் இல்லை. அவன் அவ்விதம் புறப்படும் இடமே சிறந்த இடம், புறப்படும் நாளே சிறந்த நாள் ஆகும்.

தஹரகுஹரே தேவஸ்திஷ்டந் நிஷ்த்வர தீர்க்கிகா
நிபதித நிஜாபத்யாதித்ஸாவதீர்ண பித்ருக்ரமாத்
தமநிமிஹ நஸ்தஸ்மிந் காலே ஸ ஏவ சதாதிகாம்
அக்ருதக புர ப்ரஸ்தாநார்த்தம் ப்ரவேசயதி ப்ரபு:

**பொருள்** – சேறு நிறைந்த கிணற்றில் விழுந்த தனது குழந்தையை எடுக்கவேண்டும் என்று ஒரு தகப்பன் எவ்விதம் இறங்குவானோ அது போன்று அனைத்து வல்லமையும் பெற்றவனாகிய எம்பெருமான், இதயத்தாமரை என்பதான தஹரா என்னும் ஆகாசத்தில் நிற்கிறான். அந்திம நேரத்தில் ,அவனே நம்மை என்றும் உள்ளதான ஸ்ரீவைகுண்டத்திற்கு இட்டுச் செல்வதற்காக, நூற்று ஒன்றாவது நாடியில் இந்த உலகில் உள்ளபோது நுழையும்படிச் செய்கிறான்.

நிர்யாணாதிகாரம் ஸம்பூர்ணம்

பெரியபெருமாள் திருவடிகளே சரணம்

பெரியபெருமாள் திருவடிகள் தஞ்சம் அடைந்த நம் உடையவர் திருவடிகளே சரணம்

உடையவர் திருவடிகள் சரணம் புகுந்த நம் தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## அதிகாரங்கள் 21 - 26


நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# 21. கதிவிசேஷாதிகாரம்

(ஜீவன் செல்கின்ற மார்க்கம்)

ஜ்வலந விதஸ ஜ்யோத்ஸ்நாபக்ஷ உத்தராயண வத்ஸராந்
பவந தபந ப்ராலேயாம்சூந் க்ரமாதசிரத்யுதிம்
ஜலதரபதிம் தேவாதீசம் ப்ரஜாபதிமாகத:
தரதி விரஜாம் தூரே வாசஸ்தத: பரமத்புதம்

**பொருள்–** அக்னி, பகல்பொழுதின் தேவதை (ஒருநாளின் தேவதை), சுக்லபக்ஷத்தின் தேவதை (பதினைந்து நாட்களின் தேவதை), உத்தராயணத்தின் தேவதை (ஆறு மதங்களின் தேவதை), ஸம்வத்ஸரத்தின் தேவதை (ஒரு வருடத்தின் தேவதை) ஆகியோர்களை அடைகிறான்; வாயு தேவதை, சூரியன், சந்த்ரன் ஆகியவர்களை அடைகிறான்; மின்னல், வருணன், இந்த்ரன், ப்ரஜாபதி ஆகியவர்களை அடைகிறான்; அதன் பின்னர் விரஜா நதியைக் கடக்கிறான்; அதன் பின்னர் நடக்கும் வியப்பான செயல்கள் வார்த்தைகளுக்கு எட்டாதவை ஆகும்.

## சரீரத்தை விட்டு ஜீவனை எடுத்துக் கொண்டு புறப்படுதல்

**மூலம்** – இப்படி மூர்த்தந்ய நாடியிலே ப்ரவேசிதனான முமுக்ஷுவை ஸ்தூல சரீரமாகிற ப்ரஹ்மபுரத்தினின்றும் ப்ரஹ்ம நாடியாகிற தலைவாசலாலே வத்ஸலனான ஹார்த்தன், வார்த்தை சொல்லக் கற்கிற முகவச்யனான ராஜகுமாரனை ராஜா எடுத்துக் கொண்டு உலாவுமாப்போலே கொண்டு புறப்பட்டு.

**விளக்கம்–** இப்படியாக மூர்த்தந்ய நாடியில் நுழைகின்ற முமுக்ஷுவின் ஜீவனை, ப்ரஹ்மபுரி என்று கூறப்படுகின்ற ஸ்தூல உடலில் இருந்து, ப்ரஹ்மநாடி எனப்படும் தலை முடிய உள்ள நாடி வழியாக, அந்த ஜீவனின் இதயத்தில் வசிக்கின்ற அன்பு நிறைந்த எம்பெருமான் எடுக்கிறான். மழலை முற்றாத சொற்கள் கொண்ட கைக்குழந்தையான அரசகுமாரனைத் தனது தோள்களில் வைத்தபடி, மிகுந்த மகிழ்வுடன் அங்குமிங்கும் உலவுகின்ற அரசன் போன்று ஜீவனை எம்பெருமானை வைத்துக் கொண்டு புறப்படுகிறான்.

## தேவயான மார்க்கத்தில் எம்பெருமானே வழிநடத்துதல்

மூலம் – ”மன்னும் கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள் அன்ன தோரில்லியினூடு போய்” என்றும், “தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டுபுக்கு” என்றும், “சண்ட மண்டலத்தினூடு சென்று” என்றும், “இருளகற்றும் எரிகதிரோன் மண்டலத்தூடு ஏற்றி வைத்து ஏணி வாங்கி” என்றும் சொல்லுகிற தேவயாந மார்க்கத்திலே வழிப்படுத்தி, “அமரரோடு உயர்வில் சென்று அறுவர்தம் பிறவியஞ்சியே” என்கிறபடியே அர்ச்சிஸ்ஸென்றும், அஹஸ்ஸென்றும், பூர்வபக்ஷமென்றும், உத்தராயணமென்றும், ஸம்வத்ஸரமென்றும், வாயுவென்றும், ஆதித்யனென்றும், சந்த்ரனென்றும், வைத்யுதனென்றும், அமாநவஸம்ஜ்ஞனான இவனுக்கு ஸஹகாரிகளான வருண இந்த்ர ப்ரஜாபதிகளென்றும் சொல்லப்படுகிற வழிநடத்தும் முதலிகளையிட்டு, அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம் என்கிறபடியே தான் ப்ரதாநனாய் நடத்தி, அவ்வோ எல்லைகளில் பகவச்சாஸ்த்ரத்திலே பரக்கப் பேசின போகங்களையும் அநுபவிப்பித்து.

**விளக்கம்–** பின்னர் கீழே உள்ள பல வரிகளில் கூறப்படுவது போன்று ஜீவனை எம்பெருமான் தேவயான மார்க்கத்தில் வைக்கிறான்:

- பெரிய திருமடல் - மன்னும் கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள் அன்ன தோரில்லியினூடு போய் – கடுமையான வெப்பத்துடன் கூடிய சூரியனின் நடுவில் உள்ள துவாரம் வழியாக ஜீவனைப் புகவைத்து.

- சிறிய திருமடல் - தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டுபுக்கு – தேரில் உள்ளவனும், கதிர்கள் நிறைந்தவனும் ஆகிய சூரியனின் மண்டலம் வழியே சென்று.

- திருச்சந்தவிருத்தம் (67) - சண்ட மண்டலத்தினூடு சென்று – சூரிய மண்டலத்தின் நடுவில் புகுந்து.

- பெரியாழ்வார் திருமொழி (4-9-3) - இருளகற்றும் எரிகதிரோன் மண்டலத்தூடு ஏற்றி வைத்து ஏணி வாங்கி – இருளை விலக்குகின்ற சூரிய மண்டலத்திற்குள் ஜீவனை ஏற்றி, பரமபதத்திலிருந்து மீண்டும் இறங்கிவிடக் கூடாது என்பதால் ஏற்றிவிட்ட ஏணியை திருவரங்கன் அகற்றுகிறான்.

அதன் பின்னர், திருவாய்மொழி (1-3-11) - அமரரோடு உயர்வில் சென்று அறுவர்தம் பிறவியஞ்சியே – அதன் பின்னர் ஸ்ரீவைகுண்டம் சென்று தங்களது பிறவியை விடுவர் – என்று கூறுவதற்கு ஏற்ப, தானே அந்த ஜீவனை வழிநடத்துகிறான். அப்போது அந்த ஜீவனுக்கு அக்னி, அஹஸ் (பகல் தேவதை), பூர்வபக்ஷம் (முதல் பதினைந்து நாட்களின் தேவதை), உத்தராயணம் (ஆறு மாதங்களின் தேவதை), ஸம்வத்ஸரம் (வருடத்தின் தேவதை), வாயு, சூரியன், சந்த்ரன், மின்னல் போன்ற பல தேவதைகளை வழித்துணையாக வைக்கிறான். மேலும் அமானவன் என்பவனையும் அவனது உதவியாட்களான வருணன், இந்த்ரன், ப்ரஜாபதி ஆகியோரையும் கொண்டு ஜீவனை வழிநடத்துகிறான். அதன் பின்னர் வராஹ சரமச்லோகத்தில் - அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம் – அவர்களை நினைவில் வைத்துக் கொண்டு, நானே அவர்களை வழிநடத்துவேன் – என்று கூறுவதற்கு ஏற்ப தானே முன்னின்று ஜீவனை வழிநடத்துகிறான். வழி நெடுக உள்ள பல இடங்களில் பகவத்சாஸ்த்ரம் என்னும் ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்தில் கூறப்படுவது போன்று, எல்லையற்ற இன்பங்களை ஜீவன் அனுபவிக்கும்படி எம்பெருமான் செய்கிறான்.

## ஜீவனை விரஜை நதியின் அக்கரையில் வைத்து, திவ்ய சரீரம் அளித்தல்

மூலம்–

லோகம் வைகுண்ட நாமாநம் திவ்யம் ஷட்குண்ய ஸம்யுதம்
அவைஷ்ணவாநாமப்ராண்யம் குணத்ரய விவர்ஜிதம்
நித்யஸித்தை: ஸமாகீர்ணம் தந்மயை: பாஞ்சகாலிகை:
ஸபா ப்ராஸாத ஸம்யுக்தம் வநைச்சோபவநை: சுபம்
வாபீ கூப தடாகைச்ச வ்ருக்ஷ ஷண்டைச்ச மண்டிதம்
அப்ராக்ருதம் ஸுரைர்வந்த்யமயுதார்க்கஸமப்ரபம்
ப்ரக்ருஷ்ட ஸத்த்வராசிம் தம் கதா த்ரக்ஷ்யாமி சக்ஷுஷா

என்று நெடுங்காலம் காண ஆசைப்பட்டதொரு தேசவிசேஷத்திலே சென்றவாறே கர்மபலம் விசேஷ போகார்த்தமாகவன்றிக்கே வித்யதையாலே ஸ்தாபிதமாய் கதிமாத்ரார்த்தம் அநுவ்ருத்தமான ஸூக்ஷ்ம சரீரத்தை ஆறு கடக்கைக்குப் பற்றின தெப்பம் போகவிடுமாப்போலே போகவிடுவித்து, விரஜைக்கு அக்கரைப்படுத்தி, அப்ராக்ருத சரீரத்தைக் கொடுத்து,

**விளக்கம்–** ஜிதந்தே ச்லோகம் (2-18 தொடங்கி 2-20 முடிய) - லோகம் வைகுண்ட நாமாநம் திவ்யம் ஷட்குண்ய ஸம்யுதம் அவைஷ்ணவா நாமப்ராண்யம் குணத்ரய விவர்ஜிதம் நித்யஸித்தை: ஸமாகீர்ணம் தந்மயை: பாஞ்சகாலிகை: ஸபா ப்ராஸாத ஸம்யுக்தம்

வநைச்சோபவநை: சுபம் வாபீ கூப தடாகைச்ச வ்ருக்ஷ ஷண்டைச்ச மண்டிதம்அப்ராக்ருதம் ஸூரைர்வந்த்யமயுதார்க்கஸமப்ரபம் ப்ரக்ருஷ்ட ஸத்த்வராசிம் தம் கதா த்ரக்ஷ்யாமி சக்ஷுஷா – ஸ்ரீவைகுண்டமானது தானாகவே ஒளிரக்கூடிய தன்மை கொண்டது; ஆறு குணங்கள் வெளிப்படும் இடம்; ஸ்ரீவைஷ்ணவர்கள் அல்லாதவர்களால் செல்ல இயலாத இடம்; ஸத்வம் போன்ற மூன்று குணங்கள் இல்லாத இடம்; நித்யஸூரிகளால் ஐந்து காலங்களிலும் கைங்கர்யங்கள் செய்யப்படும் இடம்; முக்தர்களால் நிரம்பியுள்ள இடம்; ஸபை, மாளிகைகள், அழகான நந்தவனங்கள், கிணறுகள், குளங்கள், சோலைகள் ஆகியவைகளால் நிரம்பியுள்ள இடம்; ப்ரக்ருதியின் தொடர்பு இல்லாத இடம்; தேவர்களால் போற்றத்தக்க இடம்; பல ஆயிரக்கணக்கான சூரியன்களின் பிரகாசம் கொண்ட இடம்; சுத்தஸத்வமயமான இடம்; அப்படிப்பட்ட உலகத்தை எனது கண்களால் எப்போது காண்பேன் – என்று ஏங்கியபடி இருந்த இடத்திற்கு ஜீவன் செல்கிறான். அப்போது கர்மபலனை அனுபவிப்பதற்காக அல்லாமல், ஸ்ரீவைகுண்டம் வருவதற்காக மட்டுமே உண்டான ஸூக்ஷ்ம சரீரத்தை அவன் கைவிடுகிறான். ஆறு ஒன்றைக் கடக்க உதவிய படகை அக்கரைக்குச் சென்றவுடன் கைவிடுவது போன்று, விரஜை நதிக்கு அக்கரை சென்றவுடன் ஜீவனுடைய ஸூக்ஷ்ம சரீரத்தை விலக்கி, ப்ரக்ருதி தொடர்பற்ற திவ்யமான சரீரத்தை எம்பெருமான் அளிக்கிறான்.

## விரஜை நதியிலிருந்து திருமாமணி மண்டபம் செல்லுதல்

**மூலம்** – ஐரமதீயமென்கிற ஸரஸ்ஸினளவும் சேர்த்து, ஸோமஸவநமென்கிற அச்வத்தத்தைக் கிட்டுவித்து, மாலா அஞ்ஜந சூர்ண வாஸ: பண ஹஸ்தைகளான ஐந்நூறு திவ்யாப்ஸரஸ்ஸுங்களையிட்டு எதிர்கொள்வித்து, ப்ரஹ்மாலங்காரத்தாலே அலங்கரிப்பித்து, ப்ரஹ்மகந்தரஸ தேஜஸ்ஸுக்களை ப்ரவேசிப்பித்து, "குடியடியார் இவர் கோவிந்தன் தனக்கென்று முடியுடை வானவர் முறை முறை எதிர்கொள்ளக் கொடியணி நெடுமதிள் கோபுரம் குறுகு" வித்து, இந்த்ர ப்ரஜாபதிகளென்று பேருடையை த்வாரகோபரைக் கிட்டுவித்து, "வைகுந்தம் புகுதலும்" என்று தொடங்கி மேல், மூன்று பாட்டிலும் சொல்லுகிறபடியே அப்ராக்ருதங்களான ராஜோபசாரங்களைப் பண்ணுவித்து, ஆனந்தமயமான மண்டபரத்நத்தில் அழகோலக்கத்திலே புகவிட்டு,

**விளக்கம்–** அதன் பின்னர் அந்த ஜீவனை ஐரமதீயம் என்னும் ஏரியில் சேர்க்கிறான். பின்னர் ஸோமவஸநம் என்னும் மரத்தை அடையும்படிச் செய்கிறான். அத்ன் பின்னர் ஐந்நூறு அப்ஸரஸ் பெண்கள் தங்கள் கைகளில் மாலைகள், சந்தனம், நறுமணப் பொடிகள், வாஸனை திரவியங்கள் மற்றும் ஆபரணங்களை வைத்தபடி அந்த ஜீவனை வரவேற்கின்றனர். அவர்களால் அந்த ஜீவன் ப்ரஹ்மத்திற்கு ஏற்றபடி அலங்கரிக்கப்படுகிறான். மேலும் அந்த ஜீவனிடம் ப்ரஹ்மத்திற்கே உரிய

நறுமணங்களும், சுவைகளும், தேஜஸ்ஸும் சேர்க்கப்படுகின்றன. பின்னர் திருவாய்மொழி (10-9-8) - குடியடியார் இவர் கோவிந்தன் தனக்கென்று முடியுடை வானவர் முறை முறை எதிர்கொள்ளக் கொடியணி நெடுமதிள் கோபுரம் குறுகு – என்று கூறுவதற்கு ஏற்ப நித்யஸூரிகளால் எதிர்கொண்டு அழைக்கப்பட்டு, கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட நீண்ட மதில்கள் கொண்ட கோபுரத்தினுள் அழைத்துச் செல்லப்படுகிறான். அங்கு அந்த ஜீவன் இந்த்ரன் மற்றும் ப்ரஜாபதி போன்ற வாயிற்காப்பவர்களால், திருவாய்மொழி (10-9-9) - வைகுந்தம் புகுதலும் – என்று தொடங்கி அடுத்து உள்ள மூன்று பாசுரங்களில் கூறப்படுவது போன்று, திவ்யமான அரச மரியாதைகள் அளிக்கப்படுகிறான். பின்னர், இரத்தினங்களால் இழைக்கப்பட்ட ஆனந்தமே வடிவான திருமாமணி மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறான்.

## பரமபதம் செல்லும் ஜீவன் அங்கு அடைகின்ற பேறுகள்

**மூலம்–**

அநயாஹம் வசீபூத: காலமேதந்ந புத்வவாந்
உச்ச மத்யம நீசாந்தாம் தாமஹம் கதமாவஸே
அபேத்யாஹமிமாம் ஹித்வா ஸம்ச்ரயிஷ்யே நிராமயம்
அநேந ஸாம்யம் யாஸ்யாமி நாநயாஹமசேதஸா
க்ஷமம் மம ஸஹாநேந ஹி ஏகத்வம் நாநயா ஸஹ

க்ரீடந்தம் ரமயா ஸார்தம் லீலாபூமிஷு கேசவம்
மேகச்யாமம் விசாலாக்ஷம் கதா த்ரக்ஷ்யாமி சக்ஷுஷா

மேகச்யாமம் மஹாபாஹும் ஸ்திரஸத்த்வம் த்ருடவ்ரதம்
கதா த்ரக்ஷ்யாமஹே ராமம் ஜகத: சோகநாசநம்
த்ருஷ்ட ஏவ ஹி ந: சோகமபநேஷ்யதி ராகவ:
தம: ஸர்வஸ்ய லோகஸ்ய ஸமுத்யந்நிவ பாஸ்கர:

இத்யாதிகளின் கட்டளையிலே இவன் மநோரதித்தபடியே இழந்த இழவெல்லாந் தீர நிரதிசய போக்யனான தன்னைக் காட்டித் “தன்மை பெறுத்தித் தன் தாளிணைக் கீழ்க்” கொண்டு தன்னோடு ஸமாநபோகத்வலக்ஷணமான ஸாயுஜ்யத்தாலே இவனுக்கு ஸஜாதீயரான “அந்தமில் பேரின்பத்தடியரோடிரு” த்தி, இப்படி ஸமஸ்த ப்ரதிபந்தக நிவ்ருத்திபூர்வகமாகவும் தேசகாலாவஸ்தா ஸங்கோசமில்லாதபடியாகவும் தன் மநோரதத்துக்கு அநுரூபமாக இவன் மநோரதித்த கைங்கர்யங்களை எல்லாம் யாவதாத்மபாவியாகக் கொண்டருளி, ஸவயஸ இவ யே நித்ய நிர்தோஷ கந்தா:

என்கிறபடியே தனக்கு அந்யோந்யம் ஒரு வயஸ்ஸில் தோழன்மாரைப் போலே இருக்கிற நித்யஸூரிகளோடு இன்று வந்த இவனோடு வாசியறப் புறையறப் பரிமாறி, ஸ்தோத்ரத்திலும் ஸ்ரீவைகுண்ட கத்யத்திலும் அருளிச் செய்த மநோரதத்தின்படியே ஐகாந்திக ஆத்யந்திக நித்ய கிங்கரனான இவனுக்கப்பாலே தான் நிரதிசய ஆனந்தனாயிருக்கும்.

**விளக்கம்–** கீழே உள்ள வரிகள் காண்க:

- மஹாபாரதம் சாந்திபர்வம் (312-30, 38, 39) - அநயாஹம் வசீபூத: காலமேதந்ந புத்தவாந் உச்ச மத்யம நீசாந்தாம் தாமஹம் கதமாவஸே, அபேத்யாஹமிமாம் ஹித்வா ஸம்ச்ரயிஷ்யே நிராமயம் அநேந ஸாம்யம் யாஸ்யாமி நாநயாஹமசேதஸா, க்ஷமம் மம ஸஹாநேந ஹி ஏகத்வம் நாநயா ஸஹ – இந்த ப்ரக்ருதியில் கட்டுப்பட்டு, அதன் பிடியில் நான் வீணாக எத்தனை கால போக்கினேன் என்று அறியவில்லை. உயர்ந்த தேவர்களின் சரீரம், நடுவில் உள்ள மனித சரீரம், தாழ்ந்த விலங்குகளின் சரீரம் போன்றவற்றைக் கொண்ட இந்த ப்ரக்ருதியில் நான் எவ்விதம் தொடர்ந்து வஸிப்பது? இங்கிருந்து விலகி துன்பங்களில் தொடர்பில்லாமல் உள்ள எம்பெருமானை அடையப் போகிறேன். எம்பெருமானுடன் கலந்த பின்னர், ப்ரக்ருதியிடம் சேரமாட்டேன். அவனுடன் உள்ளதே எனக்கு ஏற்றதாகும்.

- ஜிதந்தே ஸ்தோத்ரம் (4-21) - க்ரீடந்தம் ரமயா ஸார்தம் லீலாபூமிஷு கேசவம் மேகச்யாமம் விசாலாக்ஷம் கதா த்ரக்ஷ்யாமி சக்ஷுஷா – விளையாடி மகிழ ஏற்றதான இடங்களில் பிராட்டியுடன் விளையாடியபடி உள்ளவனும், கறுத்த மேகம் போன்ற நிறம் கொண்டவனும், விசாலமான அழகான திருக்கண்களை உடையவனும் ஆகிய எம்பெருமானை நான் எப்போது பார்ப்பேன்?

- இராமாயணம் அயோத்யாகாண்டம் (83 – 8, 9) - மேகச்யாமம் மஹாபாஹும் ஸ்திரஸத்த்வம் த்ருடவ்ரதம் கதா த்ரக்ஷ்யாமஹே ராமம் ஜகத: சோகநாசநம், த்ருஷ்ட ஏவ ஹி ந: சோகமபநேஷ்யதி ராகவ: தம: ஸர்வஸ்ய லோகஸ்ய ஸமுத்யந்நிவ பாஸ்கர: - மேகம் போன்ற நீல நிறம் கொண்டவனாக, நீண்ட திருக்கரங்களை உடையவனாக, நிலையான ஸத்வகுணம் கொண்டவனாக, மாறாத ஸங்கல்பம் கொண்டவனாக, இந்த உலகின் துயரங்களை நீக்குபவனாக உள்ள இராமனை நாம் எப்போது காண்போம்? இந்த உலகின் இருள் முழுவதையும் சூரியன் விலக்குவது போன்று, நாம் இராமனைப் பார்த்த உடனேயே நமது துயரங்களை அவன் விலக்குவான்.

மேலே உள்ள வரிகளின்படி, அந்த ஜீவன் விரும்பினபடியே, அவன் இத்தனை காலம் இழந்திருந்தவை கிட்டும்படியாகத் தன்னைக் காட்டிக் கொடுக்கிறான். திருவாய்மொழி (3-7-7) - தன்மை பெறுத்தித் தன் தாளிணைக் கீழ் – கூறுவது போன்று அந்த ஜீவனைத் தனது திருவடிகளில் கொண்டு, தனக்கு ஒத்தபடியான இன்பங்களை அந்த ஜீவனுக்கு அளித்து, தனது கைங்கர்யத்தில் எப்போது ஈடுபட்டபடி உள்ள நித்ஸூரிகளின் நடுவே அந்த ஜீவனை நிறுத்துகிறான். அந்த ஜீவன் தன்னை அடைய உள்ள தடைகள் அனைத்தையும் நீக்கி, அந்த ஜீவனின் ஸ்வரூபத்திற்கு ஏற்றபடியும் தனக்கு ஏற்றபடியும் அந்த ஜீவன் விரும்பினபடியும் உள்ள கைங்கர்யங்களை அவனுக்கு அளிக்கிறான். அவன் செய்கின்ற கைங்கர்யங்களானவை கால, தேச, சூழ்நிலைக்கு ஏற்ப மாறாதபடி அமைத்துக் கொடுக்கிறான். அந்த ஜீவன் உள்ளவரை கைங்கர்யங்களும் நிலைக்கும்படிச் செய்கிறான். அங்குள்ள நித்யஸூரிகள் எவ்விதம் தோஷங்கள் அற்றவர்களாக, எம்பெருமானுடன் சமமான வயது கொண்ட நண்பர்கள் போன்று பழகுவார்களோ அது போன்று, அங்கு வந்த ஜீவனை எம்பெருமான் கட்டித் தழுவி, அவர்களுக்கும் இவனுக்கும் எந்தவிதமான ஏற்றத்தாழ்வும் இல்லை என்னும்படியாக பேதமின்றி நடத்துகிறான். மேலும் ஆளவந்தார் ஸ்தோத்ரரத்நத்தில் கூறியபடியும், எம்பெருமானார் ஸ்ரீவைகுண்ட கத்யத்தில் அருளிச்செய்தபடியும் (நான் எப்போது பரமபதம் அடைந்து, எம்பெருமானைக் கண்டு, கைங்கர்யம் செய்வேன்), அந்த ஜீவன் தான் விரும்பியபடி உன்னதமான உயர்ந்த இடத்தை அடைந்தது குறித்து ஆனந்தம் அடைவது கண்டு, எம்பெருமான் மிகுந்த ஆனந்தம் அடைகிறான்.

## சிலர் செல்லும் மார்க்கத்தின் விசேஷங்களை அவரவர்களே அறியவேண்டுதல்

**மூலம்**– ஸ்வவாதி பத ப்ராப்தி பூர்வக மோக்ஷஸாதனமான மதுவித்யாதிகளிலும்,

ஸத்த்வம் வஹதி சுத்தாத்மா தேவம் நாராயணம் ஹரிம்
ப்ரபுர்வஹதி சுத்தாத்மா பரமாத்மாநமாத்மநா

யேது தக்தேந்தநா லோகே புண்ய பாப விவர்ஜிதா:
தேஷாம் வை க்ஷேமமத்வாநம் கச்சதாம் த்விஜஸத்தம
ஸர்வலோகே தமோஹந்தா ஆதித்யோ த்வாரமுச்யதே
ஜ்வாலா மாலீ மஹாதேஜா யேநேதம் தார்யதே ஜகத்
ஆதித்ய தக்த ஸர்வாங்கா அத்ருச்யா: கேநசித் க்வசித்
பரமாண்வாத்மபூதாச்ச தம் தேவம் ப்ரவிசந்த்யுத
தஸ்மாதபி விநிர்முக்தா அநிருத்த தநௌ ஸ்திதா:
மநோபூதாஸ்ததோ பூய: ப்ரத்யும்நம் ப்ரவிசந்த்யுத
ப்ரத்யும்நாச்ச விநிர்முக்தா ஜீவம் ஸங்கர்ஷணம் தத:

விசந்தி விப்ரப்ரவரா: ஸாங்க்ய்யோகாச்ச தை: ஸஹ
ததஸ்த்ரைகுண்ய ஹீநாஸ்தே பரமாத்மாநமஞ்ஜஸா
ப்ரவிசந்தி த்விஜச்ரேஷ்டா: க்ஷேத்ரஜ்ஞம் நிர்குணாத்மகம்
ஸர்வாவாஸம் வாஸுதேவம் க்ஷேத்ரஜ்ஞம் வித்தி தந்வத:
ஸமாஹித மநஸ்காஸ்து நியதா: ஸம்யதேந்த்ரியா:
ஏகாந்தபாவோபகதா வாஸுதேவம் விசந்தி தே

இத்யாதிகளான மஹாபாரதாதி வசநங்களிலும்,

ச்வேத த்வீபமித: ப்ராப்ய விச்வரூபதரம் ஹரிம்
தத: அநிருத்தமாஸாத்ய ஸ்ரீமத்க்ஷீரோததௌ ஹரிம்
தத: ப்ரத்யும்நமாஸாத்ய தேவம் ஸர்வேச்வரேச்வரம்
தத: ஸங்கர்ஷணம் திவ்யம் பகவந்தம் ஸநாதநம்
அயமப்யபரோ மார்க்க: ஸதா ப்ரஹ்மஸுகைஷிணாம்
பரமைகாந்தி ஸித்தாநாம் பஞ்சகால ரதாத்மநாம்

என்று இப்புடைகளிலே ஜயத் ஸம்ஹிதாதிகளிலும், விபவார்ச்சநாத்வ்யூஹம் ப்ராப்ய வ்யூஹார்ச்சநாத் பரம் ப்ரஹ்ம வாஸுதேவாக்யம் ஸூக்ஷ்மம் ப்ராப்யத இதி வதந்தி என்று ஸ்ரீபாஞ்சராத்ராதிகரணத்திலும் சில அதிகாரி விசேஷங்களைப் பற்றச் சொல்லுகிற க்ரமமுக்தி பக்ஷத்திலும், ஸத்யலோகாதிகளிலிருந்து முக்தராமவர்களுக்குமுள்ள கதிவிசேஷாதிகளிருக்கும் கட்டளைகள் அவ்வோ அதிகாரிகளுக்கே ஜ்ஞாதவ்யங்களாகையால் இங்கு அவை வகுத்துச் சொல்லுகை அபேக்ஷிதமன்று.

**விளக்கம்** – மோக்ஷஸாதநமான மதுவித்யை போன்றவற்றிலும், கீழே உள்ள பல வரிகளிலும் முக்தர்களுக்கு வேறு மார்க்கம் உள்ளது என்று கூறப்பட்டதைக் காண்க:

- மஹாபாரதம் சாந்திபர்வம் (307-77) - ஸத்த்வம் வஹதி சுத்தாத்மா தேவம் நாராயணம் ஹரிம் ப்ரபுர்வஹதி சுத்தாத்மா பரமாத்மாநமாத்மநா – தூய்மையான ஸ்வரூபம் கொண்டதான ஸத்வகுணம் என்பது அநிருத்தனாக ரூபம் கொண்ட நாராயணனை அடையும்படிச் செய்கிறது. தூய்மையான ஸ்வரூபம் கொண்ட அநிருத்தனாகிய எம்பெருமான், தானே பரவாஸுதேவனிடம் இட்டுச் செல்கிறான்.

- மஹாபாரதம் சாந்திபர்வம் (254 – 18 முதல் 20) – அந்தணர்களில் சிறந்தவரே! இந்த உலகில் ஸம்ஸாரம் என்னும் அக்னிக்கு, கர்மங்கள் என்பவை விறகுகளாக உள்ளன. இத்தகைய கர்மங்கள் கழிந்தவர்களாக, உலகில் புண்ணியபாவங்கள் நீங்கப் பெற்றவர்களாக, தங்களுக்கு நன்மையை அளிக்கவல்ல விஷ்ணுலோகம்

செல்பவர்களுக்கு, அனைத்து உலகின் இருளை நீக்குபவனும் நிறைந்த கதிர்களுடன் மிகுந்த ஒளியைக் கொண்டவனும் ஆகிய சூரியன், அவர்கள் செல்லும் துவாரமாகவே கூறப்படுகிறான். இந்த உலகம் அவனால் தரிக்கப்படுகிறது. அந்த துவாரத்தின் வழியே செல்லுபவர்கள், சூரியனால் தங்களது சரீரம் முழுவதும் எரிக்கப்படுகின்றனர். அதன் பின்னர் யாருடைய பார்வைக்கும் புலப்படாதவர்களாக, பரமாணு அளவே இருக்கின்ற ஆத்மஸ்வரூபத்துடன் அநிருத்தனிடம் செல்கின்றனர். அநிருத்தனிடமிருந்து மீண்டு, தங்களது மனம் மட்டும் கொண்டவர்களாக ப்ரத்யும்நனிடம் செல்கின்றனர். ப்ரத்யும்நனிடமிருந்து மீண்டு, ஜீவனின் அபிமான தேவதையான ஸங்கர்ஷணனிடம் புகுகின்றனர். இவர்களுடன் ஞானயோகம் கைக்கொள்பவர்களும் ஸங்கர்ஷணனிடம் சேர்கின்றனர். அதன் பின்ன்னர் தங்களது மூன்று குணங்களையும் கைவிட்டவர்களாக, அந்தர்யாமியாகவும் தாழ்வான குணங்கள் அற்றவனும் ஆகிய பரமாத்மாவை அடைகின்றனர். அந்தப் பரமாத்மாவே அனைத்து வஸ்துக்களின் இருப்பிடமான வாஸுதேவன் என்று மன அமைதி கொள்கின்றனர். தங்கள் இந்த்ரியங்களை வசப்படுத்தியவர்களாக, ஒருவனிடம் மட்டுமே தங்கள் மனதை நிலைநிறுத்தியவர்களாக அவர்கள் வாஸுதேவனை அடைகின்றனர்.

- ஜயத் ஸம்ஹிதை – இந்த உலகிலிருந்து ச்வேத த்வீபம் சென்று, அனைத்தையும் தனது சரீரமாகக் கொண்ட எம்பெருமானை அடைகின்றனர். பின்னர் திருப்பாற்கடலில் உள்ள அநிருத்தனை அடைகின்றனர். அங்கிருந்து புறப்பட்டு அனைத்து தேவர்களுக்கும் ஈச்வரனாகிய ப்ரத்யும்நனை அடைகின்றனர். அதன் பின்னர் ஸங்கர்ஷணனை சேர்கின்றனர். எப்போதும் ப்ரஹ்மத்திற்கு ஒத்த ஆனந்தம் இருக்கவேண்டும் என்று எண்ணியவர்களாக, பரமைகாந்திகளாக, ஐந்துவேளையிலும் கைங்கர்யங்கள் செய்து உன்னத நிலை அடைந்தவர்களுக்கு இந்த மார்க்கமும் உள்ளது.

- ஸ்ரீபாஷ்யம் ஸ்ரீபாஞ்சராத்ராதிகரணத்தில் (2-2-41) - விபவார்ச்சநாத்வ்யூஹம் ப்ராப்ய வ்யூஹார்ச்சநாத் பரம் ப்ரஹ்ம வாஸுதேவாக்யம் ஸூக்ஷ்மம் ப்ராப்யத இதி வதந்தி – எம்பெருமானின் ஸ்வரூபத்தை எப்போதும் ஆராதனை செய்தபடி உள்ளதால், வ்யூஹங்களை அடைந்து, அவற்றை ஆராதனை செய்து, பரப்ரஹ்மமாகிய வாஸுதேவனை அடைகின்றனர்.

இவை அனைத்தும் முக்தியை அடைகின்ற குறிப்பிட்ட பிரிவினர்களைச் (அதாவது குறிப்பிட்டவர்கள் மட்டுமே இப்படிப்பட்ட ப்ரத்யேகமான வழிகளில் முக்தி பெறுகின்றனர்) சொல்லுகிறது. இது போன்று ஒரு சிலர் ப்ரஹ்மனின் இருப்பிடமான ஸத்யலோகத்தில் சிலகாலம் இருந்த பின்னர் முக்தி அடைகின்றனர். இது க்ரமமாக முக்தி

பெறுபவர்களுக்கும் (குறிப்பிட்ட வரிசையில் பெறுவது) கூறப்படுகிறது. இப்படியாக பலவிதமான அதிகாரிகளுக்கு அவர்களுக்கு ஏற்றபடி முக்தி மார்க்கம் வெவ்வேறாக உள்ளதால், அவை அனைத்தையும் விவரித்து இங்கு நாம் கூறவில்லை.

## கத்ய (கதி) அநுஸந்தானம் செய்வதால் ப்ரபந்நனுக்கு உண்டாகும் பலன்

**மூலம்–** இக்கத்யநுஸந்தாநாதிகள் ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனான இவனுக்கு ஸத்வாரக ப்ரபத்தி நிஷ்டனுக்குப்போலே உபாயாங்கமாக நாள்தோறும் கர்த்தவ்யங்களல்லவாகிலும் இவ்வுபாயத்தில் இழியும்போது அதிகாரித்வ ஸித்திக்காகப் பலார்த்தித்வம் அபேக்ஷிதமாகையாலே பலபர்வவிசேஷாநுஸந்தாநமாய்ப் புகக்கடவன. பின்பு, வரப்போகிற கண்ணாலத்துக்கு நாள் எண்ணி இருக்குமாப் போலே பூர்வப்ரார்த்தித புருஷார்த்த ஸ்மரணமாத்ரமாய் இப்புருஷார்த்தம் பெறப் போகிறோமென்கிற ப்ரீதித்யதிசயத்தை விளைவித்துக் கொண்டு ஸ்வயம்ப்ரயோஜநமாயிருக்கும். ஆகையால் இங்கு ஸமுதாய ஞானமாத்ரத்தாலும் இவனுக்கு அபேக்ஷிதஸித்தியுண்டு.

**விளக்கம்** – யார் ஒருவன் தனது உபாயமாக பக்தி அல்லது உபாஸனத்தைக் கைக்கொண்டபடி உள்ளானோ அவனுக்கு முக்தி மார்க்கம் என்பதை அனுஸந்தித்தபடி இருத்தல் என்பது மற்ற அன்றாட அங்கங்கள் போன்றே ஆகும். ஆனால் ப்ரபத்தியை உபாயமாகக் கொண்டவன் இவ்விதம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ப்ரபத்தியைக் கைக்கொள்ளும் நேரத்தில் அவன் தனது இலக்கு என்ன என்று அறிந்தால் மட்டுமே அந்த இலக்கிற்கான உபாயத்தைக் கைக்கொள்ளும் தகுதியை அடைகிறான். ஆகவே அந்த நேரத்தில் தனது உயர்ந்த இலக்கை எண்ணும் பொருட்டு அவன் முக்தி மார்க்கத்தை நினைக்கவேண்டும். இவ்விதம் செய்யும்போது, நடக்க உள்ள கல்யாணத்தை எண்ணி மகிழ்வது போன்று, எப்போதும் எண்ணியபடி உள்ள புருஷார்த்தம் கைகூட உள்ளது என்னும் நிலையை ப்ரபத்தியின்போது செய்யப்பட்ட முக்தி மார்க்கம் பற்றிய எண்ணங்கள் தானாகவே உண்டாக்கிவிடும். அந்த முக்திமார்க்கம் பற்றி ப்ரபந்நன் நன்கு அறியவில்லை என்றாலும், மேலோட்டமாக மட்டுமே அறிந்தான் என்றாலும், அவன் விரும்பிய முக்தி கிட்டும்.

## கத்ய (கதி) அநுஸந்தானத்துக்கு உதாரணம்

மூலம் –

ஸமீபம் ராஜஸிம்ஹஸ்ய ராமஸ்ய விதிதாத்மந:
ஸங்கல்பஹய ஸம்யுக்தைர்யாந்தீமிவ மநோரதை:

என்னும்படி பிராட்டி இருந்த இருப்பு இவனுடைய கத்யநுஸந்தாநத்துக்கு நிதர்சநம்.

**விளக்கம்–** இராமாயணம் (5-19-7) - ஸமீபம் ராஜஸிம்ஹஸ்ய ராமஸ்ய விதிதாத்மந: ஸங்கல்பஹய ஸம்யுக்தைர்யாந்தீமிவ மநோரதை: - தன்னுடைய கடமையை அறிந்தவனும், அரசர்களில் உயர்ந்தவனும் ஆகிய இராமனின் அருகாமையை அடையும்விதமாகத் தனது சிந்தனை என்னும் தேரை, இராமனைக் காணவேண்டும் என்ற ஆசை என்னும் குதிரைகள் மூலமாக சீதை இழுத்துச் சென்றாள் – என்பதற்கு ஏற்ப சீதை எவ்விதம் இராமனை அடையும் கதியை எண்ணியபடி இருந்தாளோ, அது போன்று ப்ரபந்நனும் இருத்தல்வேண்டும்.

நடைபெறவங்கிப் பகலொளிநாள் உத்தராயணமாண்டு
இடைவரு காற்றிரவி இரவின்பதி மின் வருணன்
குடையுடை வானவர்கோன் பிரசாபதி என்றிவரால்
இடையிடை போகங்களெய்தி எழிற்பதம் ஏறுவரே

**பொருள்–** இப்படியாக பரமபதம் செல்கின்ற ஜீவன் ஸூக்ஷ்ம சரீரத்துடன் நடந்து செல்லும்போது அக்னி, பகல்பொழுதின் தேவதை, சுக்லபக்ஷத்தின் தேவதை, உத்தராயணத்தின் தேவதை, வருடத்தின் தேவதை, வருடம் மற்றும் சூரியன் ஆகியவர்களின் இடையில் உள்ள வாயு, சூரியன், இரவின் தலைவனாகிய சந்த்ரன், மின்னலின் தேவதை, வருணன், வெண்கொற்றக்குடை கொண்ட தேவர்களின் அதிபதியாகிய இந்த்ரன், ப்ரஜாபதி ஆகியவர்களால் வழிகாட்டியபடி செல்கிறான். அப்பாதையின் நடுவில் பலவிதமான இன்பங்களை அனுபவித்தபடி அழகான பரமபதம் செல்வர்.

பித்ருபத கடீயந்த்ர ஆரோஹ அவரோஹ பரிந்பமை:
நிரயபதவீ யாதாயாத க்ரமைச்ச நிரந்தரை:
அதிகத பரிச்ராந்தீந் ஆஜ்ஞாதரை: அதிவாஹ்ய ந:
ஸுகயதி நிஜச்சாயாதாயீ ஸ்வயம் ஹரிசந்தந:

**பொருள் –** நீர் ஏற்றத்தில் கட்டப்பட்ட பானை ஒன்று எவ்விதம் மேலே ஏறியபடியும், கீழே இறங்கியபடியும் இருக்குமோ அது போன்று நாமும் பித்ருக்களின் வழியே இறங்குதல் மற்றும் ஸ்வர்க்கம் புக ஏறுதல் போன்றவற்றைச் செய்தபடியே உள்ளோம். இப்படியாக நரக மார்க்கத்தில் போவதும், வருவதும் ஆகிய செயல்கள் மூலம் நாம் களைத்துப் போகிறோம். இப்படியாக உள்ள நம்மை ஆதிவாஹிகர்கள் மூலம் நல்வழியில் கொண்டு சென்று, எம்பெருமான் என்னும் சந்தன மரம் தானாகவே தனது நிழலை அளித்து, இன்பம் அளிக்கும்படிச் செய்கிறான்.

## கதிவிசேஷாதிகாரம் ஸம்பூர்ணம்

# 22. பரிபூர்ண ப்ரஹ்ம அநுபவ அதிகாரம்

**மூலம்–**

விதமஸி பதே லக்ஷ்மீகாந்தம் விசித்ர விபூதிகம்
ஸசிவ கமித: ஸம்பத்ய ஆவிர்பவத் ஸஹஜ ஆக்ருதி:
ஸ்புட தத் அப்ருதக்ஸித்தி: ஸித்யத் குணாஷ்டக தத்பலோ
பஜதி பரமம் ஸாம்யம் போகே நிவ்ருத்தி கதா உஜ்ஜிதம்

**பொருள்–** இந்த ப்ரக்ருதிக்கு அப்பால் உள்ள ஸ்ரீவைகுண்டத்தில், வியக்கவைக்கும் விபூதிகளைக் கொண்டவனாகிய மஹாலக்ஷ்மியின் நாயகனான ஸ்ரீமந்நாராயணன் உள்ளான். அவனை ஆதிவாஹிகர்களால் ப்ரபந்நன் அடைகிறான். அப்போது அவனது ஸ்வபாவமாக உள்ள தன்மைகள் வெளிப்படுகின்றன. தான் எம்பெருமானை விட்டு அகலக்கூடாது என்று அறிகிறான். பாவங்கள் அற்ற தன்மை உள்ளிட்ட எட்டு குணங்கள் மற்றும் அவற்றின் பலன்கள் ஆகியவை மீண்டும் கிட்டப்பெறுகிறான். மீண்டும் அங்கிருந்த திரும்புதல் என்ற நிலையே உண்டாகாமல், எம்பெருமானை ஒத்த அனுபவங்களை அடைகிறான்.

## எம்பெருமானின் ஸ்வரூபம் என்பது இவனுக்கும் இன்பமாக இருத்தல்

**மூலம்–** இக்கதிவிசேஷத்தாலே சென்றவனுடைய பரிபூர்ண ப்ரஹ்மாநுபவமிருக்கும்படி எங்ஙனேயென்னில், “அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனைத் தினைத்தனையும் விடாள்” இத்யாதிகளிற்படியே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வேச்வரனை அநந்தங்களான விக்ரஹ குண விபூதி சேஷ்டிதங்களில் ஒன்றும் குறையாமே நிரதிசய போக்யமாக விஷயீகரித்துக் கொண்டிருக்கும். இவ்வநுபவம் ஈச்வரனுக்கும் இவனுக்கும் அத்யந்ததுல்யமாகையாலே பரமஸாம்யம் சொல்லுகிறது. “உணர் முழுநலம்” என்றும், “நிரஸ்தாதிசயாஹ்ணாத ஸுகபாவைக லக்ஷணா பேஷஜம் பகவத்ப்ராப்திரேகாந்த ஆத்யந்திகீ மதா” என்றும் சொல்லுகிறபடியே பகவத்ஸ்வரூபம் போக்யமாகப் ப்ராப்தம். மற்றுள்ளவை போக்யமாம்படி எங்ஙனேயென்னில் – ராஜமஹிஷிக்கு ராஜா போக்யனானால் அவனுக்கு அபிமதங்களாய் அவனுடைய போகத்துக்கு உறுப்பான போகோபகரண போகஸ்தாநாதிகளும் இவளுக்கு அநுகூலமாமாப் போலே இங்கும் பகவத்ஸ்வரூப அநுபந்திகளானவையெல்லாம் போக்யமாகக் குறையில்லை.

**விளக்கம்–** உயர்ந்த கதியில் செல்கின்ற ப்ரபந்நன் ஒருவனுடைய பரிபூர்ணமான ப்ரஹ்ம அனுபவம் எப்படி இருக்கும் என்றால்: திருவாய்மொழி (6-7-10) - அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனைத் தினைத்தனையும் விடாள் – என்று கூறுவதற்கு ஏற்ப, அனைத்து இடங்களிலும், அனைத்து காலங்களிலும், அனைத்து நிலைகளிலும் ஸர்வேச்வரனை அவனுடைய எண்ணற்ற திருமேனி, குணங்கள், விபூதிகள் மற்றும் லீலைகள் ஆகியவற்றுடன் ஒன்றும் குறையாமல் எப்போதும் இன்பத்துடன் அனுபவிக்கப் பெறுகிறான். இத்தகைய அனுபவம் என்பது ஈச்வரனுக்கும் முக்தனுக்கும் அனைத்துவிதங்களிலும் ஒன்றாகவே இருப்பதால் ஒற்றுமை கூறப்படுகிறது. எம்பெருமானின் ஸ்வரூபமானது எல்லையற்ற இன்பம் அளிப்பதாக உள்ளது என்பது முறையானதே என்னும் கருத்து கீழே உள்ள வரிகளின் மூலம் உணரலாம்:

- திருவாய்மொழி (1-1-2) - உணர் முழுநலம்

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-5-59) - நிரஸ்தாதிசயாஹ்ணாத ஸுகபாவைக லக்ஷணா பேஷஜம் பகவத்ப்ராப்திரேகாந்த ஆத்யந்திகீ மதா – மற்ற இன்பங்களை அனுபவிக்கும் எண்ணமே இல்லாமல் செய்யும்படியாக உயர்ந்த சுகமே ரூபமாக உள்ளதும், சற்றும் துன்பத்தின் கலப்பே இல்லாததும், முடிவே இல்லாமல் இருப்பதும் ஆகிய எம்பெருமானின் அனுபவம் என்பது ஸம்ஸாரம் என்னும் நோய்க்கான சிறந்த மருந்தாக உள்ளது.

ஸர்வேச்வரன் மட்டும் அல்லாமல் அவனுடைய குணக்கள் உள்ளிட்ட பலவும் எவ்விதம் இன்பம் அளிப்பதாக உள்ளன என்றால்: ஓர் அரசன் அரசிக்கு இன்பமாக இருக்கிறான் என்றால், அவனுக்கு இன்பம் அளிப்பவை அனைத்தும் அவளுக்கும் இன்பம் அளிப்பதாகவே இருக்கும்; அவன் எந்தெந்த இடங்கள் இன்பம் அளிக்கின்ற என்று கொள்கிறானோ அவை அவளுக்கும் இன்பங்களை அளிப்பதாகவே இருக்கும். இது போன்றே ஸர்வேச்வரனுக்கும் இன்பம் அளிக்கவல்ல அனைத்தும் முக்தனுக்கும் இன்பம் அளிப்பதாகவே உள்ளன என்று கருத்து.

## எம்பெருமானின் ஸ்வரூபம், ஸ்ரீவைகுண்டம், ஜீவனின் ஸ்வரூபம் ஆகியவை பரமபதம்

**மூலம்–** இப்படி ஸர்வ ப்ரகார விசிஷ்டனாய்க் கொண்டு ஸர்வேச்வரன் போக்யனென்னுமிடம் ச்ருதி ஸ்ம்ருத்யாதிகளிலே ப்ரஸித்தம். இவ்வர்த்தத்தை பூமாதிகரணத்திலே ஸாதித்தருளினார். இவற்றில் நிரதிசயாநுகூல்யத்தாலே பரமப்ராப்யமாகையாலே பகவத்ஸ்வரூபத்தைப் பரமபதமென்கிறது. இப்பகவத் ஸ்வரூபத்தினுடைய பரிபூர்ணாநுபவம் பெறுவது போக்யதமாய்

ஸர்வோத்தரமாயிருப்பதொரு ஸ்தாந விசேஷத்திலே சென்றாலாகையாலே அந்த ஸ்தாந விசேஷத்தையும் பரமபதமென்கிறது. இவ்வநுபவத்துக்கு ஆச்ரயமாய்க் கொண்டு அநுபாவ்யமாகையாலே பகவத் விபூதிபூதமாய் ஞானாநந்த லக்ஷணமான தன் ஸ்வரூபத்தையும் பரமபதமென்கிறது. இவை மூன்றுக்கும் மற்றுள்ளவற்றுக்கும் ப்ராப்யத்வமாத்ரம் அவிசிஷ்டம்.

**பொருள்–** ஸர்வேச்வரன் தனது குணங்கள் மற்றும் திருமேனி ஆகியவற்றுடன் கூடியவனாக இன்பம் அளிக்கவல்ல வஸ்துவாகவே உள்ளவன் என்பதை ச்ருதி மற்றும் ஸ்ம்ருதிகளில் காணலாம். இதனை ஸ்ரீபாஷ்யத்தில் பூமாதிகரணத்தில் எம்பெருமானார் அருளிச்செய்தார். அடையவேண்டிய மிக உயர்ந்த இலக்காக எம்பெருமானின் ஸ்வரூபம் உள்ளதால், அந்த ஸ்வரூபமானது பரமபதம் எனப்படுகிறது. இப்படிப்பட்ட எம்பெருமானின் ஸ்வரூபம் என்பதை முழுமையாக அனுபவிக்கவேண்டும் என்றால், அனைத்தையும் விட மிகவும் உயர்ந்த இன்பம் அளிப்பதாக உள்ள இடத்திற்குச் சென்றால் மட்டுமே கிட்டும் என்பதால், அந்த இடமும் பரமபதம் எனப்படுகிறது. ஞானமயமாகவும் ஆனந்தமயமாகவும் இருப்பதும், எம்பெருமானின் செல்வங்களில் மிகவும் முக்கியமாக உள்ளதும், எம்பெருமானை அடைவதால் உண்டாகும் மகிழ்ச்சியைப் பெறுவதும் ஆகிய ஜீவனின் ஸ்வரூபமும் பரமபதம் எனப்படுகிறது. இம்மூன்றுக்கும் மற்றவற்றுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், இம்மூன்றும் அடையப்பட வேண்டிய இலக்காக உள்ளதே ஆகும்.

## லீலாவிபூதியில் உள்ளவை முக்தனுக்கு இன்பமாக இருத்தல்

**மூலம்** – இப்படி பகவத்ஸ்வரூப குண விக்ரஹாதிகளும் சுத்தஸத்த்வாச்ரயமான நித்யவிபூதியும் ஸ்வஸ்வரூபமும் போக்யமானால் ப்ரதிகூலமாகப் ப்ரத்யக்ஷாதி ப்ரமாண ஸித்தமாய் முமுக்ஷுவுக்குத் த்யாஜ்யமாகச் சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்ட லீலாவிபூதியில் பதார்த்தங்கள் முக்தனுக்கு போக்யமாகக் கூடுமோ என்னில், அதிலும் குறையில்லை. பித்தோபஹதனுக்குப் ப்ரதிகூலமான பால் பித்தம் சமித்தால் அநுகூலமாமாப் போலவும் ஸர்வபௌமனான பிதாவினுடைய சிறைக்கூடம் சிறை கிடக்கிற ராஜகுமாரனுக்கு அப்போது ப்ரதிகூலமாய் ராஜா சிறைக் கூடத்தினின்றும் புறப்படவிட்டு உகந்து துல்யபோகனான வைத்தவளவில் சிறைக்கூடமான கோப்புக் குலையாதிருக்கச் செய்தே பிதாவின் விபூதியென்று அநுகூலமாமாப் போலவும், யஸ்த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ நிரயோ யஸ்த்வயா விநா என்றும், ந ஹி மே ஜீவிதேநார்த்தோ நைவார்த்தைர்ந ச பூஷணை: வஸந்த்யா ராக்ஷஸீமத்யே விநா ராமம் மஹாரதம் என்றும், "ஏறாளும் இறையோ" னிலும் சொல்லுகிறபடியே ஸம்ச்லேஷமின்றிக்கே தான் நின்றபோது கர்மாநுரூபமாகத் தனக்குப் ப்ரதிகூலமாயும் அல்பாநுகூலமாயும் தோன்றின லீலாவிபூதியில் பதார்த்தங்கள் முக்தனாய் நிரந்தர பகவதநுபவம் பண்ணுகிறவனுக்கு நிரதிசய போக்யவர்க்கத்திலே சொருகுகை உபபந்நம்

இப்படி பத்தருக்குப் ப்ரதிகூலமாயும் அல்பாநுகூலமாயும் கர்மபந்தமில்லாதார்க்கு அநுகூல ஸ்வபாவமாயுமிருக்கை அப்பதார்த்தங்களுக்கு பகவதிச்சாஸித்தம்.

**விளக்கம்–** இப்படியாக பகவத் ஸ்வரூபமும், குணங்களும், திருமேனியும், சுத்தஸத்வமாக உள்ள நித்யவிபூதியும், தன்னுடைய ஸ்வரூபமும் முக்தன் ஒருவனுக்கு இன்பமாக உள்ளன எனப்பட்டது. இங்கு ஒரு கேள்வி எழலாம் – அவைகள் இன்பத்தை அளிப்பதாக இருக்கலாம்; இந்த உலகில் நாம் ப்ரத்யக்ஷமாகவும் ஞானம் மூலமும் அறியக்கூடிய வஸ்துக்கள் அனைத்தும் சாஸ்த்ரங்களால் கைவிடப்பட வேண்டியவை என்று கூறப்படுவதாகும்; அப்படி உள்ளபோது இந்த லீலாவிபூதியில் உள்ள வஸ்துக்கள் முக்தனுக்கு இன்பம் அளிப்பதாக இருக்குமோ? இதில் எந்தவிதமான குறையும் இல்லை. பித்தம் அதிகமாக உள்ள ஒருவனுக்கு பால் என்பது ஏற்காத ஒன்றாக உள்ளது; ஆயினும் அவனது பித்தம் நீங்கிய பின்னர் அதே பால் ஏற்கக்கூடியதாக உள்ளது. ஓர் அரசகுமாரனை ஓர் அரசன் சிறையில் வைத்திருந்தால், அந்தச் சிறைச்சாலை ராஜகுமாரனுக்கு ஏற்காத ஒன்றாக உள்ளது; அதன் பின்னர் அவனை அரசன் சிறையில் இருந்து விடுவித்து, தனது அருகில் அமரவைத்துக் கொண்டு இன்பமாக வைத்துக் கொள்ளும்போது, அந்தச் சிறைச்சாலை எந்தவிதமான மாற்றமும் அடையாதபோதும், தனது தந்தையின் மேன்மைக்கு அடையாளமாக உள்ளது என்று எண்ணக்கூடியதாக உள்ளது. கீழே உள்ள வரிகள் காண்க:

- இராமாயணம் அயோத்யாகாண்டம் (30-18) - யஸ்த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ நிரயோ யஸ்த்வயா விநா – சீதை இராமனிடம், "நீங்கள் எனது அருகில் இருப்பது ஸ்வர்க்கம் போன்று உள்ளது, உங்களைப் பிரிவதே நரகம் ஆகும்", என்றாள்.

- இராமாயணம் ஸுந்தரகாண்டம் (26-5) - ந ஹி மே ஜீவிதேநார்த்தோ நைவார்த்தைர்ந ச பூஷணை: வஸந்த்யா ராக்ஷஸீமத்யே விநா ராமம் மஹாரதம் – இராமனை விட்டுப் பிரிந்து நான் இந்த அரக்கியர்கள் நடுவில் வாழ்வதால் என்ன பயன்? எனது செல்வங்களாலும் ஆபரணங்களாலும் என்ன பயன்?

- திருவாய்மொழி (4-8-1) - ஏறாளும் இறையோனும் – எம்பெருமானால் ஏற்றுக் கொள்ளப்படாதவற்றால் எந்தவிதமான பயனும் இல்லை.

இப்படியாக ஜீவன் எம்பெருமானுடன் சேர்ந்திருக்காதபோது இந்த உலகில் உள்ள வஸ்துக்கள் முக்தனுக்கு ஏற்புடையது அல்ல என்று இருந்தாலும், அவன் முக்தனாக நின்று எம்பெருமானுடன் சேர்ந்து எல்லையற்ற இன்பம் கொள்ளும்போது, இந்த வஸ்துக்கள் ஏற்புடையதாகவே உள்ளன. இப்படியே இங்கு கொள்ளவேண்டும். ஸம்ஸாரத்தில் உள்ள ஒருவனுக்கு ஏற்புடையதாக இல்லாத வஸ்துக்கள், கர்மங்களில்

இருந்து விடுபட்ட ஒருவனுக்கு ஏற்புடையதாக உள்ளன. இப்படியாக அந்த வஸ்துக்கள் இருப்பது என்பது எம்பெருமானின் ஸித்தம் ஆகும்.

## ஸ்ரீமந்நாராயணனே பலன்

**மூலம் –** இப்படி ஸ்வேச்சாஸித்தமான ஆநுகூல்யத்தை உடைத்தான தன் ப்ரகாரங்கள் எல்லாவற்றோடும் கூடின ஸ்ரீமானான நாராயணன் ப்ராப்யனென்னுமிடம் திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் சதுர்த்யந்த பதங்களிலே அபிப்ரேதம்.

**விளக்கம்–** இப்படியாக அனைத்தும் அவனை அண்டி நிற்பது என்பதே அவனுடைய ஸங்கல்பத்தால் மட்டுமே கைகூடும் என்னும்படியாக உள்ளவனும், மஹாலக்ஷ்மியுடன் கூடியபடி உள்ளவனும் ஆகிய ஸ்ரீமந்நாராயணனே அடையப்படும் இலக்காகவும் பலனாகவும் உள்ளான். இதனை திருமந்த்ரத்திலும், த்வயத்திலும் உள்ள நான்காம் வேற்றுமை மூலம் மறைமுகமாக அறியலாம்.

## கைங்கர்யங்களே செயல்களாக இருத்தல்

**மூலம் –** முன்பு சொன்ன கைங்கர்யம் இப்படிப் பரிபூர்ணார்நுபவத்தாலே பிறந்த ப்ரீதிவிசேஷத்துக்குப் பரீவாஹமென்னுமிடத்தை கத்யத்திலே பலகாலும் அருளிச் செய்தார். முக்ததசையில் ச்ருதிஸித்தமான ஜக்ஷணாதிகளும் ஜ்ஞாத்யாதி ஸம்பாதநங்களுமெல்லாம் புண்யபாபரூப கர்மநிரபேக்ஷ பகவதிச்சாநுகுண ஸ்வேச்சா மூலங்களாகையாலே கர்மபலமன்றிக்கே அநுபவ பரீவாஹமான கேவல கைங்கர்யத்திலே அந்தர்பூதங்கள். ஆகையால் ப்ராப்தியாயற்றது யதாபிமத கைங்கர்ய பர்யந்த பரிபூர்ண ப்ரஹ்மாநுபவமென்றதாயிற்று.

**விளக்கம்–** மேலே கூறப்பட்ட கைங்கர்யம் என்பது பரிபூர்ணமான பகவத் அநுபவம் மூலமாக உண்டாகும் அளவு கடந்த ப்ரீதி காரணமாகத் தோன்றுகிறது என்பதை எம்பெருமானார் சரணாகதி கத்யத்தில் பல இடங்களில் அருளிச் செய்தார். முக்தி பெற்ற நிலையில் உண்பது, தன்னுடைய பித்ருக்கள் போன்றவர்களைக் காண்பது உள்ளிட்ட செயல்கள் அந்த முக்தனுடைய புண்ணியபாவ கர்மங்களின் பலனால் அல்ல; அவை எம்பெருமானுடைய ஸங்கல்பத்திற்கு உட்பட்டு அந்த முக்தனின் விருப்பம் காரணமாகவே உண்டாகிறது. ஆகவே அவை கர்மபலன்கள் அல்ல, பகவத் அநுபவத்தின் காரணமாக வெளிப்படும் கைங்கர்யங்கள் என்றே ஆகின்றன. ஆக இறுதியான பலன் என்பது பரிபூர்ண பகவத் அநுபவம் மற்றும் முக்தன் விரும்பியபடி அந்த ப்ரஹ்மத்திற்கான கைங்கர்யம் என்பதே ஆகிறது.

## பரிபூர்ண பகவத் அநுபவம் என்றும் அழிவதில்லை

**மூலம்–** இவ்வநுபவமுண்டானால் பின்பு ஒரு காலத்திலும் அழியாதென்னுமிடம்
ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே யதி:

மாமுபேத்ய புநர்ஜந்ம துக்காலயம சாஸ்வதம்
நாப்நுவந்தி மஹாத்மந: ஸம்ஸித்தி பரமாம் கத:
ஆப்ரஹ்ம புவநால்லோகா: புநராவர்த்திந: அர்ஜுந
மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே

யதா ஸ கேவலீபூத: ஷட்விம்சமநுபச்யதி
ததா ஸ ஸர்வஸித்தத்வாத் புநர்ஜந்ம ந விந்ததி

கத்வா கத்வா நிவர்த்தந்தே சந்த்ர ஸூர்யாதயோ க்ரஹா:
அத்யாபி ந நிவர்த்தந்தே த்வாதசாக்ஷர சிந்தகா:

வாயினால் நமோ நாராயணாவென்று மத்தகத்திடைக் கைகளைக் கூப்பிப்
போயினால் பின்னை இத்திசைக்கென்றும் பிணைகொடுக்கிலும் போகவொட்டாரே

இத்யாதிகளிலே ப்ரஸித்தம். பகவத் கைங்கர்யாந்தர்கதமான ஸ்வச்சந்த விஹாரத்தாலே லீலாவிபூதியிலே புகுந்தாலும் இவ்வநுபவத்துக்கு ஸங்கோசாதிகள் பிறவாமையாலே புநராவ்ருத்தியில்லை என்கிறது.

**விளக்கம்–** முக்தனுக்கு இப்படிப்பட்ட பகவத் அனுபவம் கிட்டிய பின்னர் ஒருபோதும் அழியாது என்பதைக் கீழே உள்ள வரிகள் மூலம் அறியலாம்:

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-26) - ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே யதி: - அடையப்படவேண்டிய இலக்கான பகவானை உபாஸிப்பவன், மீண்டும் திரும்பி வராத பரமபதத்தை அடைகிறான்.

- கீதை (8-15) - மாமுபேத்ய புநர்ஜந்ம துக்காலயம சாஸ்வதம் நாப்நுவந்தி மஹாத்மந: ஸம்ஸித்தி பரமாம் கத: - என்னை உண்மையாக அறிந்தவர்களாகவும், என்னிடம் அளவில்லாத அன்பு காரணமாக என்னைப் பிரிந்து இருக்க முடியாதவர்களாகவும், என்னிடம் மட்டுமே மனத்தைச் செலுத்தியவர்களாகவும்

உள்ளவர்கள் என்னையே அடைகின்றனர்; அதன் பின்னர் அவர்களுக்கு மீண்டும் பிறவி என்பது இல்லை.

- கீதை (8-16) - ஆப்ரஹ்ம புவநால்லோகா: புநராவர்த்திந: அர்ஜுந மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே – ப்ரம்மலோகம் முடிய உள்ள அனைத்து பலன்களும் அழியும் இயல்பைக் கொண்டவை ஆகும். அர்ஜுனா! என்னை அடைந்தவனுக்கு மறுபிறப்பு என்பது இல்லை.

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (323-80) - யதா ஸ கேவலீபூத: ஷட்விம்சமநுபச்யதி ததா ஸ ஸர்வஸித்தத்வாத் புநர்ஜந்ம ந விந்ததி – இந்த உலகின் தொடர்பு நீங்கிய பின்னர், இருபத்துஆறாவது தத்துவமாக உள்ள ஸர்வேச்வரனைக் காண்கின்ற முக்தன் ஒருவன் அனைத்து ஸித்திகளையும் பெறுகிறான். அதன் பின்னர் அவனுக்கு மீண்டும் பிறவி என்பது இல்லை.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-8-40) - கத்வா கத்வா நிவர்த்தந்தே சந்த்ர ஸூர்யாதயோ க்ரஹா: அத்யாபி ந நிவர்த்தந்தே த்வாதசாக்ஷர சிந்தகா: - சந்த்ரன் மற்றும் சூரியன் உள்ளிட்ட பல ஜீவன்களும் ப்ரளயம் உண்டாகும்போது தங்களது அதிகாரம் அழிந்தவர்களாக மீண்டும் ஸம்ஸாரத்திற்குத் திரும்புகின்றனர். ஆனால் த்வாதநசாக்ஷர மந்த்ரம் மூலம் (ஓம் நமோ பகவதே வாஸுதேவாய) ஸர்வேச்வரனை த்யானம் செய்து பரமபதம் சென்றவர்கள் மீண்டும் திரும்புவதில்லை.

- பெரியாழ்வார் திருமொழி (4-5-2) - வாயினால் நமோ நாராயணாவென்று மத்தகத்திடைக் கைகளைக் கூப்பிப் போயினால் பின்னை இத்திசைக்கென்றும் பிணைகொடுக்கிலும் போகவொட்டாரே – “ஓம் நமோ நாராயணா” என்று கூறியபடி ஸ்ரீவைகுண்டம் சென்ற ஒருவனை, பெரியபிராட்டியாரையே பணயமாக வைக்க நேர்ந்தாலும், ஸம்ஸார உலகிற்குச் செல்ல விடமாட்டான்.

ஆனால் ஒரு சில முக்தர்கள் இந்த உலகில் மீண்டும் தோன்றி எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்யவேண்டும் என்னும் தங்களுடைய ஆசை காரணமாக மீண்டும் இந்த உலகில் பிறக்கக்கூடும். இப்படிப்பட்டவர்களுக்கு இந்த உலகில் உள்ளபோதும் பகவத் அனுபவம் குறையில்லாமல் கிட்டுவதால், ஸம்ஸாரத்தில் அவர்கள் சிக்குவதில்லை.

## ஆநந்ததீர்த்தரின் (த்வைதம்) மதம் பொருந்தாமை

**மூலம்–** இப்படி உத்தராவதியில்லாத இவ்வநுபவம் பெறுவார்க்கு அந்திமசரீரம் தேவமநுஷ்யாதிகளில் இன்னதென்று தெரியாது. ப்ரஹ்மாதிகளுக்கும் மோக்ஷமுண்டு. அப்படியே

தர்மவ்யாதாதய: அப்யந்தே பூர்வ அப்யாஸாத் ஜுகுப்ஸிதே
வர்ணாவரத்வே ஸம்ப்ராப்தா: ஸம்ஸித்திம் ச்ரமணீ யதா

என்று மஹர்ஷிகள் சொன்னார்கள். ஆகையால் முமுக்ஷு தசையில் ஔபாதிகங்களான உத்கர்ஷ அபகர்ஷங்களைக் கொண்டு முக்ததசையிலும் அநுபவ தாரதம்யம் உண்டென்ற ஆநந்ததீர்த்தீயர் முக்தருக்கெல்லாம் ஸர்வேச்வரனோடே பரமஸாம்யம் சொல்லுகிற ச்ருத்யாதிகளை மறந்தார்கள்.

**விளக்கம்–** இப்படியாக எல்லையற்ற ப்ரஹ்ம ஆனந்தம் அனுபவிக்கின்ற முக்தர்களின் இறுதியான சரீரம் என்பது தேவ பிறவியா, மனித பிறவியா போன்ற எதுவும் அறிய இயலாது. நான்முகன் உள்ளிட்டவர்களுக்கும் மோக்ஷம் என்பது உண்டு. விஷ்ணுதர்மம் (102-29) - தர்மவ்யாதாதய: அப்யந்தே பூர்வ அப்யாஸாத் ஜுகுப்ஸிதே வர்ணாவரத்வே ஸம்ப்ராப்தா: ஸம்ஸித்திம் ச்ரமணீ யதா – தர்மவ்யாதர் போன்றவர்கள் அருவருப்பான குலத்தில் பிறந்தபோதும், கடந்த பிறவியில் பக்தியோகம் கைக்கொண்டிருந்த காரணத்தால், அந்தப் பழக்கம் காரணமாக, இந்தப் பிறவியிலும் அதனையே பின்பற்றி, சபரி போன்று ஸித்தி அடைந்தனர் – என்றது. ஆனால் ஆநந்ததீர்த்தரைப் பின்பற்றுபவர்கள் கூறுவது – பூர்வ கர்மங்களின் காரணமாக உண்டாகின்ற புண்ணிய பாவங்களின் விளைவாக முக்தர்களுக்கு முக்தி அடைந்த பின்னர் உண்டாகின்ற இன்பங்களின் ஏற்றதாழ்வுகள் உள்ளன – என்பதாகும். ஆனால் முக்தி அடைந்தபின்னர் ஸர்வேச்வரனுக்கு ஒத்த இன்பங்களை முக்தர்கள் அடைகின்றனர் என்று ச்ருதிகள் முழங்குவதை இவர்கள் மறந்தார்கள் போலும்.

## ஆசாரக்குறைவினால் முக்தனுக்கு ஆனந்தம் குறையும் என்பதன் உட்பொருள்

**மூலம்–** ஆசார கைவல்யமுடைய முமுக்ஷுக்களுக்கு ஆனந்தஹாஸமுண்டாமென்று சிலர் சொல்லும் வசநம் ஆப்தமானாலும் முக்தனாவதற்கு முன்னே வரும் பகவத் அநுபவத்தில் ஸங்கோசத்தைச் சொல்லிற்றாமித்தனை. பிற்பட முக்தரானார்க்கும் நாளிழவே போக்கிப் பொருளிழவில்லை.

**விளக்கம்–** ஆசாரத்தில் குறைபாட்டுடன் விளங்கும் முக்தர்களுக்கு உண்டாகும் ஆனந்தம் என்பதில் சுருக்கம் உண்டு என்று சிலர் கூறுவதுண்டு. இவர்களின் கருத்து நம்பத் தகுந்தது என்றாலும், அவர்கள் கூறுவதன் உட்கருத்து என்னவென்றால் – முக்தி அடைவதற்கு முன்பாக உண்டாகும் பகவத் அனுபவம் என்பது சுருக்கத்துடன் கூடியதாக இருக்கும் என்பதே ஆகும். இப்படிப்பட்டவர்களுக்கு முக்தி விரைவாகக் கிட்டினாலும், தாமதமாகக் கிட்டினாலும், அதன் பின்னர் உண்டாகும் இன்பத்திற்குக் குறைவில்லை.

## ஸாயுஜ்யம் மற்றும் ஸார்ஷ்டிதை என்பதன் விளக்கம்

**மூலம்–** ஸ்ரீவிஷ்ணுலோகாதிகளிலே ஸாலோக்ய ஸாரூப்யாதிமாத்ரம் பெற்றார்க்கு முக்த வ்யபதேசம் அதூர விப்ரகர்ஷத்தாலேயாமத்தனை இவ்வர்த்தம்

லோகேஷு விஷ்ணோர் நிவஸாந்தி கேசித் ஸமீபம்ருச்சந்தி ச கேசிதந்யே
அந்யே து ரூபம் ஸத்ருசம் பஜந்தே ஸாயுஜ்யமந்யே ஸ து மோக்ஷ உக்த:

என்று நியமிக்கையாலே ஸித்தம். இது பரமபதத்திலே சென்றால் வரும் ஸாயுஜ்ஜமே மோக்ஷமென்கிறது. அதுக்குள்ளே ஸஹஸ்ரத்தில் சதாதிகளைப்போலே ஸாலோக்யாதிகளெல்லாம் அந்தர்பூதங்களாகையால் அங்கு ஒருவர்க்கும் வைஷம்யமில்லை.

மோக்ஷம் ஸாலோக்ய ஸாரூப்யம் ப்ரார்யயே ந கதாசந
இச்சாம்யஹம் மஹாபாஹோ ஸாயுஜ்யம் தவ ஸுவ்ரத

என்கிறவிடத்திலும் இவ்வர்த்தம் கண்டுகொள்வது.

ஸாயுஜ்யமாவது ஸயுக்கினுடைய பாவம். ஸயுக்கானவன் ஒரு போக்யத்திலே போக்தாவாய்க் கொண்டு கூட அந்வயிக்குமவன் இங்கு ஸப்ரகார ப்ரஹ்மமாகிற போக்யத்திலே ப்ரஹ்மமும் முக்தனும் கூட போக்தாக்களாய் அந்வயிக்கையாலே முக்தனை ஸயுக் என்கிறது.

இப்படியாகில் ச்ருதியில் ஸாயுஜ்ய சப்தமும் ஸார்ஷ்டிதா சப்தமும் சேரப் ப்ரயோகிப்பானேன் என்னில்,

ஸாயுஜ்யம் ஸமுபயோரத்ர போக்தவ்யஸ்யாவிசிஷ்டதா
ஸார்ஷ்டிதா தத்ர போக்யஸ்ய தாரதம்ய விஹீநதா

**விளக்கம்–** ஸ்ரீவிஷ்ணுவின் லோகத்தில் ஒரு சில முக்தர்கள் அவனுடைய லோகத்திலேயே வஸிக்கின்றனர் (ஸாலோக்யம்), ஒரு சிலர் அவனுக்கு மிகவும் அருகில் வஸிக்கின்றனர் (ஸாமீப்யம்), ஒரு சிலர் அவனுக்குச் சமமான ரூபம் பெறுகின்றனர் (ஸாரூப்யம்). இவர்களில் ஸாலோக்யம் மற்றும் ஸாமீப்யம் அடைந்தவர்களும் முக்தர்கள் என்றே அழைக்கப்படுகின்றனர், காரணம் அவர்கள் மோக்ஷ நிலையிலிருந்து அதிக தூரத்தில் இல்லாமையால் ஆகும். இதனை ஸ்ரீமத் பாகவதம் - லோகேஷு விஷ்ணோர் நிவஸாந்தி கேசித் ஸமீபம்ருச்சந்தி ச கேசிதந்யே அந்யே து ரூபம் ஸத்ருசம் பஜந்தே ஸாயுஜ்யமந்யே ஸ து மோக்ஷ உக்த: - ஸர்வேச்வரனை உபாஸனை செய்தவர்களில் சிலர் அவனுடைய லோகத்திலேயே வஸிக்கின்றனர் (ஸாலோக்யம்), ஒரு சிலர் அவனுக்கு மிகவும் அருகில் வஸிக்கின்றனர் (ஸாமீப்யம்), ஒரு சிலர் அவனுக்குச் சமமான ரூபம் பெறுகின்றனர் (ஸாரூப்யம்), சிலர் எம்பெருமானுக்குச் சமமான இன்பங்களை அனுபவிக்கின்றனர் (ஸாயுஜ்யம்); இந்த ஸாயுஜ்யம் என்பதே மோக்ஷமென்றும் கூறப்படும் – என்று கூறியது காண்க. இந்த ச்லோகமானது பரமபதம் சென்ற பின்னர் கிட்டுகின்ற ஸாயுஜ்யம் என்பதே மோக்ஷம் என்றது காண்க. ஆயிரம் என்பதில் நூறும் அடங்கும் என்பது போன்று, ஸாலோக்யம் முதலான பலவும் ஸாயுஜ்யம் என்பதில் அடங்குகிறது. மேலும் ஜிதந்தே ஸ்தோத்ரம் (2-36) - மோக்ஷம் ஸாலோக்ய ஸாரூப்யம் ப்ரார்யயே ந கதாசந இச்சாம்யஹம் மஹாபாஹோ ஸாயுஜ்யம் தவ ஸுவ்ரத – நீண்ட திருக்கரங்கள் கொண்டவனே! தவறாத ஸங்கல்பம் கொண்டவனே! ஸாலோக்யம் மற்றும் ஸாரூப்யம் போன்றதான மோக்ஷங்களை நான் எப்போதும் நாடமாட்டேன்; உன்னுடைய ஸாயுஜ்யம் என்பதான மோக்ஷத்தையே விரும்புகிறேன் – என்றது.

ஸாயுஜ்யம் என்றால் இணைந்த இருவரிடையே உள்ள ஸம்பந்தம் ஆகும் (ஸயுக்). ஒருவர் மற்றவருடன் ஒரு சில இன்பங்களை அனுபவிப்பதற்கு மட்டுமே ஸயுக் ஆக இருப்பான். முக்தர்களைப் பொறுத்தவரையில் அனுபவிக்கப்படும் வஸ்துவானது அனைத்துவிதமான

நிலைகளுடன் கூடிய ப்ரஹ்மமாகும். ஆகவே ப்ரஹ்மமும் முக்தனும் ஒன்றாக ஆனந்தம் அனுபவிப்பதால், முக்தனை ஸயுக் என்பர்.

இவ்விதம் கொண்டால் ச்ருதி வரி ஒன்றில், ஸாயுஜ்யம் மற்றும் ஸார்ஷ்டிதம் ஆகிய இரண்டு பதங்களுக்கும் ஒரே பொருள் தருவதாக உள்ளது ஏன் (அந்த வரியானது – ஸாயுஜ்யம் ஸார்ஷ்டிதம் ஸமாநலோகதாமாப்ரோதி என்பதாகும்)? ஏனென்றால் - ஸாயுஜ்யம் ஸமுபயோரத்ர போக்தவ்யஸ்யாவிசிஷ்டதா ஸார்ஷ்டிதா தத்ர போக்யஸ்ய தாரதம்ய விஹீநதா – ஸாயுஜ்யம் என்றால் இருவரும் (ப்ரஹ்மமும் முக்தனும்) அனுபவிக்கும் வஸ்துக்களில் எந்தவிதமான வேறுபாடும் இல்லை என்பதாகும்; ஸார்ஷ்டிதம் என்றால் இருவரின் அனுபவித்தலிலும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை என்பதாகும் – என்று அறிக.

## முக்தனுக்குப் படைத்தல் போன்றவை இல்லை என்றாலும் ஸாயுஜ்யம் கூறப்படுகிறது

**மூலம்–** முக்தனுக்கு ஜகத்வ்யாபாரமில்லையேயாகிலும் க்ருஷி பண்ணின பிதாவும் நிர்வ்யாபாரரான புத்ராதிகளும் க்ருஷிபலத்தை பஜிக்குமாப்போலே ஜகத்வ்யாபாரத்தால் வரும் ரஸம் வ்யாபரிக்கிற ஈச்வரனுக்கும் பார்த்திருக்கிற முக்தனுக்கும் துல்யம். ஸூத்ரகாரரும் ஜகத்வ்யாபார வர்ஜம் என்று தொடங்கி போகமாத்ர ஸாம்ய லிங்காச்ச என்று அருளிச்செய்தார். ஸாமரஸ்யம் ஹி ஸாயுஜ்யம் வதந்தி ப்ரஹ்மவதிந: என்று சாகடாயநனும் சொன்னான்.

**விளக்கம்–** முக்தன் ஒருவனுக்கு உலகைப் படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் போன்ற பணிகள் இல்லை; என்றாலும் தந்தை ஒருவன் விவசாயம் செய்வதன் மூலம் கிட்டிய பலனை ஏதும் செய்யாமல் இருக்கின்ற அவனது புத்திரர்கள் சேர்ந்து அனுபவிப்பது போன்று, ஈச்வரன் மட்டுமே மேலே கூறப்பட்ட செயல்களைச் செய்கின்றபோதிலும், அதிலிருந்து கிட்டுகின்ற ஆனந்தம் என்பதை ஈச்வரனும் முக்தனும் சேர்ந்தே அனுபவிக்கின்றனர். ப்ரஹ்மஸூத்ரத்தில் (4-4-17) - ஜகத்வ்யாபார வர்ஜம் – ஜீவனுக்கு உலகைக் குறித்த பணிகள் இல்லை – என்று தொடங்கி, (4-4-21) - போகமாத்ர ஸாம்ய லிங்காச்ச – ப்ரஹ்மத்திற்கும் முக்தனுக்கும் அனுபவங்களில் ஒற்றுமை உள்ளது – என்று முடிக்கப்பட்டது காண்க. சாகடாயநத்தில் - ஸாமரஸ்யம் ஹி ஸாயுஜ்யம் வதந்தி ப்ரஹ்மவதிந: - ப்ரஹ்மத்தை உபாஸிப்பவர்கள், ஸர்வேச்வரனுக்கு ஒத்த இன்பத்தை அடைதலே ஸாயுஜ்யம் என்று கூறுவர் – என்றதும் காண்க.

## ஸாயுஜ்யம் என்ற பதம் ஒன்றாகுதலைக் குறிக்கும் என்னும் அத்வைத வாதம் பொருந்தாது

**மூலம்–** சப்தசக்தியின்றிக்கேயிருக்க பேதச்ருதிகளும் விரோதிக்க ஸாயுஜ்ய சப்தத்துக்கு ஐக்யம் பொருளாக நினைத்திருப்பார்க்கு முக்தன் பரம ஸாம்யத்தை அடையுமென்றும் தாத்ருக்காமென்றும் சொல்லுகிற ச்ருதிகளும் விரோதிக்கும். மம ஸாதர்ம்யமாகதா: என்று கீதாசார்யனும் அருளிச்செய்தான். இவ்வர்த்தத்தை

பரேண பரதர்மீ ச பவத்யேஷ ஸமேத்ய வை
விசுத்த தர்மா சுத்தேந புத்தேந ச ஸ புத்திமான்
விமுக்த தர்மா முக்தேந ஸமேத்ய பரதர்ஷப
வியோக தர்மணா சைவ வியோகாத்மா பவத்யபி
விமோக்ஷிணா விமோக்ஷீ ச ஸமேத்யேஹ ததா பவேத்
சுசிகர்மணா சுசிச்சைஷ பவத்யமித தீப்திமாந்
விமலாத்மா ச பவதி ஸமேத்ய விமலாத்மநா
கேவலாத்மா ததா சைவ கேவலேந ஸமேத்ய வை
ஸர்வதந்த்ரச்ச ஸவதந்த்ரத்வம் உபாச்நுதே
ஏதாவதேதத் கதிதம் மயா தே தத்யம் மஹாராஜ யதார்த்த தத்த்வம்
அமத்ஸரஸ்த்வம் ப்ரதிக்ருஹ்ய சார்த்தம் ஸநாதநம் ப்ரஹ்ம விசுத்தமாத்யம்

என்று வஸிஷ்ட கரால ஸம்வாதத்தில் பரக்கப்பேசி இதுவே பரமார்த்தமென்று மஹர்ஷி நிகமித்தான். இங்கு முக்தனை ஸ்வதந்த்ரனென்கிறது கர்மவச்யனல்லன் என்றபடி. முக்த விஷயமான ஸ்வராட் சப்தத்தை அகர்மவச்ய: என்று பாஷ்யகாரர் வ்யாக்யாநம் பண்ணியருளினார்.

**விளக்கம்–** ஸாயுஜ்யம் என்பது ப்ரஹ்மத்துடனான ஐக்யம் என்று கூறும் வாதமானது - "ஸாயுஜ்யம்" என்னும் பதம், ஜீவ-ப்ரஹ்ம ஐக்யத்தை தனது பொருள் மூலமாக வெளிப்படுத்த இயலவில்லை; இவ்விதமாகப் பொருள் கொண்டால் பல வேதவரிகள் முரணாகிறது – ஆகிய காரணங்களால் விரோதமாகிறது. மேலும் முக்தன் ப்ரஹ்மத்தைப் போன்றே ஆகிறான் என்பதான் ச்ருதி வரிகள் முரணாகிவிடும். இதனை க்ருஷ்ணனும் கீதையில் (14-2) - மம ஸாதர்ம்யமாகதா: - என்னைப் போன்று ஆகின்றனர் – என்றான். மஹாபாரதத்தில் வசிஷ்டருக்கும் கராலருக்கும் இடையே நடந்த ஸம்பாஷணைக் கீழே உள்ளபடி கூறுகின்ற வ்யாஸபகவான், இதுவே உயர்ந்த உண்மை என்கிறார் (**குறிப்பு**: இதற்கான ச்லோக வரிகளை மேலே உள்ள மூலத்தில் கண்டுகொள்வது):

மஹாபாரதம் சாந்திபர்வம் (313-26 முதல் 31) "முக்தன் ஒருவன் பரமபுருஷனுடன் சேர்ந்தவனாக, அவனைப் போன்றே தர்மங்களை உடையவன் ஆகிறான். அவித்யை முதலான தோஷங்கள் அற்ற ப்ரஹ்மத்துடன் சேர்வதால் முக்தனும் அவ்விதமான தோஷங்கள் அற்றவன் ஆகிறான். அனைத்தும் அறிந்த ப்ரஹ்மத்துடன் சேர்வதால் முக்தனும் அவ்விதமாக அனைத்தையும் அறிந்தவன் ஆகிறான். கர்மங்களின் தொடர்பு இல்லாத ப்ரஹ்மத்துடன் சேர்வதால் முக்தனும் அவ்விதமாகக் கர்மபந்தம் அற்றவன் ஆகிறான். துக்கம் என்பதே இல்லாத ப்ரஹ்மத்துடன் சேர்வதால் முக்தனும் அவ்விதமாக ஆகிறான். பரமானந்தம் கொண்ட ப்ரஹ்மத்துடன் சேர்வதால் முக்தனும் அவ்விதமான பரமானந்தம் கொண்டவன் ஆகிறான். ப்ரஹ்மம் எவ்விதம் கர்மத்தால் அன்றி ஸங்கல்பத்தால் செயலாற்றுகிறதோ, அது போன்றே முக்தனும் ஸங்கல்பத்தால் செயலாற்றுகிறான். மூன்று குணங்களின் ஸம்பந்தம் அற்ற ப்ரஹ்மத்துடன் சேர்வதால் முக்தனும் அக்குணங்கள் நீங்கப் பெறுகிறான். இந்த உலகின் தொடர்புடன் கூடியதான சரீரமோ இந்த்ரியங்களோ அற்ற ப்ரஹ்மத்துடன் சேர்வதால் முக்தனும் அவ்விதமான சரீரமோ இந்த்ரியங்களோ அற்றவன் ஆகிறான். கர்மங்களுக்கு வசப்படாத ப்ரஹ்மத்துடன் சேர்வதால் முக்தனும் கர்மவசப்படாதவன் ஆகிறான். அரசனே! இப்படியாக உண்மை உனக்கு உரைக்கப்பட்டது. இந்த உண்மையை ஏற்றவனாக நித்யமாகவும், தோஷம் அற்றதாகவும், உலகின் காரணமாகவும் உள்ள ப்ரஹ்மத்தை உபாஸிப்பாயாக", என்றார். இங்கு முக்தனை சுதந்திரமானவன் என்று கூறியது ஏனென்றால், அவன் கர்மவசப்பட்டவன் அல்லன் என்று கூறவே ஆகும். ஸ்வாமி எம்பெருமானாரும் "ஸ்வராட்" என்ற பதத்திற்கு "கர்மவசப்படாதவன்" என்றே பொருள் உரைத்தார்.

**மூலம்** – இப்படி ச்ருதி ஸ்ம்ருதி ஸூத்ரங்களிலே ஸாம்யம் கண்டோக்தமாகையால் முக்த தசையில் ஐக்யம் தோற்றினவிடங்களெல்லாம் ராமஸுக்ரீவரோரைக்யம் தேவ்யேவம் ராமஜாயத இத்யாதிகளிற்படியே பேதச்ருத்யவிரோதேந கண்டு கொள்வது இங்ஙனல்லாத போது

யதா து மந்யதே அந்ய: அஹமந்ய ஏஷ இதி த்விஜ:
ததா ஸ கேவலீபூத: ஷட்விம்ச புநபச்யதி
அந்யச்ச ராஜந் ஸ பரஸ்ததா அந்ய: பஞ்சவிம்சக:
தத்ஸ்தத்வாதநுபச்யந்தி ஹி ஏக ஏவேதி ஸாதவ:
அந்யச்ச ராஜந் ஸ பரஸ்ததா அந்ய: பஞ்சவிம்சக:
தேநைதந்நாபிஜாநந்தி பஞ்சவிம்சகம் அச்யுதம்
ஜந்ம ம்ருத்யு பயாப்பீதா: ஸாங்க்யயோகாச்ச காச்யப
ஷட்விம்சம் அநுபச்யந்தி சுசயஸ்தத்பராயணா:

உத்தம: புருஷஸ்த்வந்ய:

தத்ர ய: பரமாத்மா து ஸ நித்யோ நிர்குண:
ஸ து நாராயணோ ஜ்ஞேய: ஸர்வாத்மா புருஷோ ஹி ஸ:
ந லிப்யதே கர்மபலை: பத்மபத்ரமிவாம்பஸா
கர்மாத்மா த்வவரோ ய: அஸௌ மோக்ஷபந்தை: ஸ யுஜ்யதே

அய: பிண்டே யதா வஹ்நிர்பிந்நஸ்திஷ்டத்யபிந்நவத்
ததா விச்வமிதம் தேவோ ஹி ஆவ்ருத்ய பரிதிஷ்டதி

இத்யாதி ப்ரமாண ஸஹஸ்ரம் விரோதிக்கும். ஆகையால் முக்தனுக்கு ஜ்ஞாந போக்யாதிகளால் வந்த பரமஸாம்யமே உள்ளது.

**விளக்கம்–** இப்படியாக முக்தன் ப்ரஹ்மம் போன்று ஆகிறான் என்பதை ச்ருதிகளும், ஸ்ம்ருதிகளும், ப்ரஹ்மஸூத்ரமும் மறுக்க இயலாதபடி உரைத்தன. ஆகவே முக்தி பெறும்போது ஐக்யம் என்று கூறும் வரிகளுக்கு விளக்கம் அளிக்கும்போது, அந்த விளக்கமானது ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் உள்ள வேறுபாடுகளை உணர்த்தும் வேதவரிகளுக்கு முரணாகாதபடி விளக்கம் அளிக்கவேண்டும். "ஐக்யம்" என்ற பதம் எப்படிப்பட்ட பொருளில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்றால், இராமாயணம் ஸுந்தரகாண்டம் (35-51) - ராமஸுக்ரீவரோரைக்யம் தேவ்யேவம் ராமஜாயத – இப்படியாக இராமனுக்கும் சுக்ரீவனுக்கும் மனதால் ஒற்றுமை உண்டானது – என்ற வரியில் என்ன பொருளில் உள்ளதோ, அதே பொருளில் எடுக்கப்படவேண்டும். "ஐக்யம்" என்னும் பதத்திற்கு இவ்விதம் பொருள் கொள்ளவில்லை என்றால், கீழே உள்ள வரிகளுக்கு முரண்பாடு உண்டாகும் (ச்லோகங்களை மேலே உள்ள மூலத்தில் காண்க):

- மஹாபாரதம் சாந்திபர்வம் (323-77 முதல் 80) – எந்த ஒரு நேரத்தில் அந்தணன் ஒருவன் "நான் ஸர்வேச்வரனைக் காட்டிலும் வேறுபட்டவன், அவன் என்னைக் காட்டிலும் வேறுபட்டவன்" என்று எண்ணுகிறானோ, அப்போதே அந்த மனிதன் ஸம்ஸார பந்தங்களில் இருந்து விடுபடுகிறான். அவன் இருபத்துஆறாவது தத்துவமாக உரைக்கப்பட்ட பரம்பொருளை அனுபவிக்கிறான். அரசனே! பரமாத்மாவும் இருபத்துஐந்தாவது தத்துவமான ஜீவாத்மாவும் வேறுபட்டவர்கள் ஆவர். ஜீவனுக்கு அந்தர்யாமியாக பரமாத்மா உள்ளதால் ஸாதுக்கள் அவர்கள் இருவரையும் ஒன்றாகக் காண்கின்றனரே அல்லாமல் அவர்களின் ஸ்வரூபம் ஒன்றல்ல. ஜீவாத்மாவும் மற்ற இருபத்துநான்கு தத்துவங்களும் வேறு ஆகும். காச்யபரே! பிறப்பு மற்றும் இறப்பு ஆகிய சுழற்சிக்கு அஞ்சியவர்களாக, கர்மயோகம் செய்து, அதனால் மனம் தூய்மை அடைந்தவர்களாக,

ஞானயோகத்தில் நிலைநின்று, பரமாத்மாவையே தங்களது உயர்ந்த புருஷார்த்தமாகக் கொள்கின்றனர்.

- கீதை (15-17) - உத்தம: புருஷஸ்த்வந்ய: - புருஷோத்தமன் வேறுபட்டவன்.

- மஹாபாரதம் சாந்திபர்வம் (361-14, 15) – ஜீவனுக்கு எப்போதும் அந்தர்யாமியாக உள்ள பரமாத்மா அழிவில்லாதவன். அவன் ஸத்வம் உள்ளிட்ட மூன்று குணங்களும் அற்றவன் ஆவான். அவனே அனைத்தின் அந்தர்யாமி, அவனே புருஷன் எனப்படுகிறான், அவனே நாராயணன் ஆவான். தாமரை இலையில் நீர் எவ்விதம் ஒட்டுவதில்லையோ அது போன்று அவனிடம் கர்மத்தின் பலன்கள் ஒட்டுவதில்லை. அவனைக் காட்டிலும் தாழ்ந்தவனாகிய ஜீவாத்மா தன்னுடைய கர்மங்கள் மூலம் ஸம்ஸார பந்தத்தையும், ஸர்வேச்வரனைக் குறித்த உபாஸனம் மூலம் மோக்ஷமும் பெறுகிறான்.

- ஜயாக்ய ஸம்ஹிதை (4-83) – நன்றாகக் காய்ச்சப்பட்ட இரும்புக்குண்டு என்பதும், அதில் உள்ள உஷ்ணமும் வெவ்வேறு ஆகும். ஆனாலும் நமக்கு ஒன்றாகவே தோன்றுகிறது. இதே போன்று இந்த உலகைக் காட்டிலும் வேறான ஈச்வரன், உலகிற்குள் அந்தர்யாமியாக ஒன்றாக இருப்பதாகத் தோன்றுகிறான்.

ஆக மேலே உள்ள வரிகளின் மூலம் உணரப்படுவது என்னவென்றால் முக்தனுக்கும் ப்ரஹமத்திற்கும் ஞானம் மற்றும் இன்பங்களை அனுபவித்தல் போன்றவற்றில் மட்டுமே ஒற்றுமை உள்ளது என்பதாகும்.

### ஈச்வரனுக்கும் முக்தனுக்கும் உள்ள தனித்தன்மைகள்

**மூலம்–** ஈச்வரனுக்குச் சத்ர சாமராதிகளைப் போலே லக்ஷணமாகச் சொன்ன ஜகத்காரணத்வ மோக்ஷப்ரதத்வ ஸர்வாதாரத்வ ஸர்வநியந்த்ருத்வ ஸர்வசேஷித்வ ஸர்வசரீரத்வ ஸர்வசப்தவாச்யத்வ ஸர்வவேதவேத்யத்வ ஸர்வலோகசரண்யத்வ ஸர்வமுமுக்ஷூபாஸ்யத்வ ஸர்வபலப்ரதத்வ ஸர்வவ்யாப்தஜ்ஞாநாநந்தஸ்வரூபத்வ லக்ஷ்மீஸஹாயத்வாதிகள் ப்ரதிநியதங்கள்; முக்தனுக்கு ஆதேயத்வ விதேயத்வ சேஷத்வ அணுத்வாதிகள் வ்யவஸ்திதங்கள்.

**விளக்கம்–** ஈச்வரனுக்கு கீழே கூறப்பட்டுள்ள தன்மைகள் குடையும் சாமரங்களும் போலே உள்ளன (அதாவது அவனது உயர்ந்த நிலையைக் காட்டுவதாக). அவையாவன – இந்த உலகின் காரணமாக இருத்தல், மோக்ஷம் என்பதை ஜீவனுக்கு அளிப்பவனாக இருத்தல்,

அனைத்திற்கும் ஆதாரமாக இருத்தல், அனைத்தையும் நியமிப்பவனாக இருத்தல், அனைத்திற்கும் எஜமானனாக இருத்தல் (அல்லது யார் ஒருவனுக்காக அனைத்தும் உள்ளனவோ), அனைத்தையும் தனது சரீரமாக கொண்டிருத்தல், அனைத்து பதங்கள் அல்லது ஒலி மூலம் குறிக்கப்படுபவனாக இருத்தல், வேதங்களால் மட்டுமே அறியக்கூடியவனாக இருத்தல், அனைத்து லோகங்களும் சென்று சரணம் புகக் கூடியவனாக இருத்தல், அனைத்து முமுக்ஷுக்களும் உபாஸனம் செய்யத்தக்கவனாக இருத்தல், அனைத்து பலன்களையும் அளிப்பவனாக இருத்தல், எங்கும் இருப்பவனாக இருத்தல், ஞானமயமாகவும் ஆனந்தமயமாகவும் இருத்தல், மஹாலக்ஷ்மியின் துணைவனாக இருத்தல் போன்ற பலவும் ஆகும். இதே போன்று முக்தனுக்கு வரையறுக்கப்பட்ட தன்மைகளாவன – ஈச்வரனால் தாங்கப்படுபவனாக இருத்தல், ஈச்வரனால் நியமிக்கப்படுபவனாக இருத்தல், எம்பெருமானுக்காக மட்டுமே இருத்தல், அணு அளவாக மட்டுமே இருத்தல் போன்ற பலவாகும்.

## முக்தன் மீண்டும் திரும்புதல் குறித்த சந்தேகங்களுக்கான விடை

**மூலம்** – இப்படியாகில்,

> ந ஸம்பாதம் ஸாமாஹாரே விபதாம் விநிவர்த்தநே
> ஸமர்த்தோ வித்யதே கச்சித் தம் விநா புருஷோத்தமம்

என்கிற நிலையாய் ஸ்வதந்த்ரரல்லாத முக்தருக்கு ஏதேனுமொரு ஹேதுவாலே ஆவ்ருத்திசங்கை வாராதோ என்னில், அது வாராது:

> ஸாயுஜ்யம் ப்ரதிபந்நா யே தீவ்ரபக்தாஸ்தபஸ்விந:
> கிங்கரா மம தே நித்யம் பவந்தி நிரூபத்ரவா:

என்று தானே அருளிச்செய்தானிறே.

**விளக்கம்–** இவ்விதம் கொண்டால், பரமஸம்ஹிதை (3-34) - ந ஸம்பாதம் ஸாமாஹாரே விபதாம் விநிவர்த்தநே ஸமர்த்தோ வித்யதே கச்சித் தம் விநா புருஷோத்தமம் – ஒருவனுக்கு ஏற்ற செல்வத்தை அளிப்பதற்கும், அதனை அபகரிப்பதற்கும் அந்தப் புருஷோத்தமனைத் தவிர வேறு யாருக்கும் வலிமை இல்லை – என்று கூறுவதற்கு ஏற்ப, எந்தவிதமான சுதந்திரமும் இல்லாமல் எம்பெருமானின் கட்டுப்பாட்டில் மட்டுமே உள்ளவனாகிய முக்தனுக்கு, ஏதோ ஒரு காரணத்தினால் மீண்டும் இந்த ஸம்ஸாரத்திற்குத் திரும்புதல் என்பது உண்டாவதற்கு வாய்ப்பு உள்ளது அல்லவோ என்ற சந்தேகம்

எழலாம். அவ்விதம் நிகழாது. ஏன்? பரமஸம்ஹிதையில் (30-94) - ஸாயுஜ்யம் ப்ரதிபந்நா யே தீவ்ரபக்தாஸ்தபஸ்விந: கிங்கரா மம தே நித்யம் பவந்தி நிருபத்ரவா: - மிகுதியான ஆசையுடன் பக்தியோகத்தை இயற்றுபவர்களும், மிகவும் உயர்ந்த தவம் என்றே கருதப்படும் ப்ரபத்தியைக் கைக்கொண்டவர்களும் மோக்ஷம் பெற்று, எனக்குக் கைங்கர்யம் செய்தபடி இருப்பார்கள்; அவர்கள் எப்போதும் ஸம்ஸாரத்தின் பிடியில் சிக்கமாட்டனர் – என்று எம்பெருமான் தானே அருளிச்செய்தான் அல்லவோ?

**மூலம்** - முமுக்ஷு தசையில் கேவல அசித்தையும் கேவல சித்தையும் அநுபவிக்கையாகிற ஐச்வர்ய கைங்கர்யங்களில் வைராக்யம் பிறந்தவிது முக்தனுக்கு ப்ரஹ்மாத்மகமாக ஸர்வத்தையும் காண்கையாலே கேவலாநுபவ ப்ரஸங்கமில்லாமையாலும் அந்தப் புருஷார்த்தாந்தரங்களினுடைய தோஷமெல்லாம் மேல் நித்ய ப்ரத்யக்ஷிதமாகையாலும் ப்ரதிஷ்டிதமாயிற்று. ஆகையால் தன்னிச்சையடியாக ஆவ்ருத்தி சங்கையில்லை. சிதசிதீச்வர தத்த்வத்ரய விஷயமாகவும் ஹேயோபாதேய விஷயமாகவும் முன்பு பிறந்த ஜ்ஞாநம் இப்போது விச்சேந்த ஸங்கோசங்களில்லாதபடி விகஸிதமாயிற்று. ஆகையால் தன் அஜ்ஞாநமடியாக ஆவ்ருத்தி சங்கிக்கவொண்ணாது.

**விளக்கம்**– மோக்ஷத்தின் மீது விருப்பம் கொள்கின்ற நேரத்தில் முமுக்ஷு ஒருவனுக்கு அசித் பொருட்களையும், சித் பொருளாகிய தனது ஆத்மாவையும் அனுபவிக்கவேண்டும் என்பதான ஐச்வர்யம் மற்றும் கைவல்ய ஆசைகளின் மீது வெறுப்பு உண்டாகிவிடும். அப்போது அவன் அனைத்தின் அந்தராத்மாவாக ப்ரஹ்மம் உள்ளதைக் காண்கிறான். ஆகவே அவனுக்கு தனது ஆத்மாவைத் தனித்து அனுபவிப்பதற்கான சந்தர்ப்பமே கிடையாது. மேலும் மற்ற புருஷார்த்தங்களில் எப்போதும் உள்ளதான தோஷங்களை அவன் தெளிவாகக் காண்கிறான். ஆகவே அவனது வைராக்யம் நிலையாக நிற்கிறது. எனவே அவன் மீண்டும் (ஈச்வர ஸங்கல்பம் அல்லாமல்) தனது விருப்பத்தால் ஸம்ஸாரத்திற்குத் திரும்புவானோ என்னும் சந்தேகத்திற்கு இடமில்லை. அவனுக்கு சித்-அசித்-ஈச்வரன் ஆகிய மூன்றைப் பற்றியதும், நன்மை-தீமை பற்றியதும் ஆகிய ஞானம் என்பது தற்போது பூர்ணமாக, எந்தவிதமான இடையூறும் இன்றி, எந்தவிதமான சுருக்கமும் இன்றி தழைக்கிறது. எனவே அவன் மீண்டும் தனது அறியாமையால் ஸம்ஸாரத்திற்குத் திரும்புவானோ என்னும் சந்தேகத்திற்கும் இடமில்லை.

**மூலம்**– பகவத்விஷய வைலக்ஷண்ய ஞானத்தாலே முன்பு பிறந்த பக்திசப்த வாச்யமான ப்ரீதிரூபாபந்நஞானம் இப்போது சாஸ்த்ரங்களுக்கு நிலமில்லாத பகவத் வைலக்ஷண்யமெல்லாம் ப்ரத்யக்ஷமானபடியாலே நிரதிசய ப்ரீதிரூபாபந்நமாய்த் தலைக்கட்டிற்று. இப்படி இருக்கையாலே ஸ ச மம ப்ரிய: என்ற ஈச்வரனுடைய ப்ரீத்யதிசயம் அவன் தன்னாலும் நியமிக்கவொண்ணாதபடி கரைபுரண்டு இவனோடு பரம்பரயா ஸம்பந்தமுடைய திடர் நிலங்களிலும் ஏறிப்பாயும்படியாயிற்று. ஆகையால்

கர்மமில்லையேயாகிலும் ஸ்வதந்த்ரனான ஈச்வரனுடைய இச்சையாலே புநராவ்ருத்தியுண்டாகிறதோ என்று சங்கிக்கவொண்ணாது.

**விளக்கம்–** ஸம்ஸார நிலையில் உள்ளபோது எம்பெருமானின் மேன்மைகளைக் குறித்ததும், பக்தி என்பதான அவன் மீது கொண்ட பேரன்பு என்னும் வடிவானதும் ஆகிய ஞானம் பிறக்கிறது. அத்தகைய ஞானமானது முக்தி நிலையில் - சாஸ்த்ரங்களாலும் தெளிவாக அறிய இயலாத எம்பெருமானின் தனித்தன்மைகளைத் தனது அனுபவங்களால் கண்கூடாக உணர்வதால் – எம்பெருமான் மீது எல்லையற்ற பேரன்பாக தழைத்து நிற்கிறது. கீதையில் (7-17) - ஸ ச மம ப்ரிய: - அத்தகைய ஞானி எனக்கு மிகவும் ப்ரியமானவன் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஈச்வரன் அந்த ஜீவன் மீது கொள்கின்ற பேரன்பு என்னும் வெள்ளமானது, ஈச்வரனாலும் கட்டுப்படுத்த இயலாதபடி கரைபுரண்டு பாய்கிறது. பாய்ந்து வரும் வெள்ளம் எவ்விதம் மேட்டு நிலங்களிலும் பாய்கிறதோ அது போன்று, அந்த ஜீவனுக்கு மிகவும் தூரத்தில் உள்ள பரம்பரைகளுக்கும் ஈச்வரனின் பேரன்பு என்னும் வெள்ளம், அந்த ஜீவனின் பொருட்டு பாய்கிறது. ஆகவே அந்த ஜீவனுக்குக் கர்மம் இல்லை என்றாலும், யாருடைய கட்டுப்பாட்டிலும் இல்லாதவனான ஈச்வரனின் ஸங்கல்பத்தால் அந்த முக்தன் மீண்டும் ஸம்ஸாரத்திற்குத் திரும்புவானோ என்னும் சந்தேகத்திற்கும் இடமில்லை.

**மூலம்** – சாஸ்த்ரவச்ய அதிகாரம் கழிகையாலே முக்ததசையில் ஆஜ்ஞாதி லங்கனமில்லை. அவனுகப்பே தனக்கு உகப்பாகையாலே ஈச்வராபிமதத்துக்கு விபரீதமான அநுஷ்டாநமில்லை. ஆகையால் கைங்கர்ய பர்யந்த பரிபூர்ண ப்ரஹ்மாநுபவரூபமான மோக்ஷாக்ய புருஷார்த்தம் மேல் யாவதாத்மபாவியாயிற்று. இவையெல்லாவற்றையும் நினைத்து அநாவ்ருத்தி: சப்தாதநாவ்ருத்தி: சப்தாத் என்று ஸூத்ரகாரரும் அருளிச்செய்தார்.

**விளக்கம்–** முக்த நிலையில் ஒருவனுக்கு சாஸ்த்ரங்கள் விதிப்பதைக் கடைபிடிக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போவதால், ”சாஸ்த்ரங்கள் கூறுவதைக் கடைபிடிக்காமல் உள்ளதால் ஸர்வேச்வரனின் ஆணைகளை மீறுதல்” என்னும் நிலை அவனுக்கு உண்டாவதில்லை. எம்பெருமானின் மகிழ்வு என்பதே இவனுடைய மகிழ்வாக உள்ளதால், எம்பெருமானின் விருப்பத்திற்கு மாறாகச் செயலாற்றுதல் என்னும் பேச்சுக்கே இடமில்லாமல் போகிறது. ஆக பரிபூர்ணமான ப்ரஹ்ம அனுபவம் தொடங்கி எம்பெருமானுக்குத் தொடர்ந்து கைங்கர்யம் செய்தபடி இருத்தல் என்பதான மிகவும் உயர்ந்த புருஷார்த்தமாகிய மோக்ஷம் என்பது அவனுக்கு எப்போதும் உள்ளதாகிறது. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டுதான் ப்ரஹ்மஸூத்ரத்தை அருளிச்செய்த வ்யாஸபகவான் (4-4-22) - அநாவ்ருத்தி: சப்தாதநாவ்ருத்தி: சப்தாத் – மீண்டும் திரும்புவதில்லை, இப்படியே உபநிஷத் கூறுவதால் – என்றார்.

ஏறியெழிற்பதம் எல்லாவுயிர்க்கும் இதமுகக்கும்
நாறுதுழாய்முடி நாதனை நண்ணி அடிமையில் நம்
கூறுகவர்ந்த குருக்கள் குழாங்கள் குரைகழற்கீழ்
மாறுதலின்றி மகிழ்ந்தெழும் போகத்து மன்னுவமே

**பொருள்–** அழகாக விளங்குகின்ற பரமபதத்தை நாம் அடைந்து, அனைத்து ஜீவன்களும் செய்கின்ற சிறிய உபாயத்தை எண்ணி மனம் மகிழ்பவனும், நறுமணம் வீசுகின்ற துளசி மாலையைத் தனது திருமுடியில் கொண்டவனும் ஆகிய ஸர்வேச்வரனை நெருங்குவோம். அங்கு சென்ற பின்னர், அவனது கைங்கர்யத்தில் நமக்காக ஒதுக்கப்பட்ட பணியினை நாம் அடையவேண்டும் என்று எப்போதும் விருப்பம் கொண்ட ஆசார்யர்களின் சதங்கை ஒலியுடன் கூடிய திருவடிகளின் கீழ் நிற்போம். "மீண்டும் திரும்புதல்" என்பதே இல்லாமல், தழைக்கின்ற பகவத் அநுபவத்தில் மகிழ்வுடன் நிலையாக நிற்போமாக.

அவிச்ராந்த ச்ரத்தசத கலஹ கல்லோல கலுஷா:
மம ஆவிர்பூயாஸு: மநஸி முநி ஸித்தாதி ஸுலபா:
மது க்ஷீர ந்யாய ஸ்வகுண விபவ ஆஸஜ்ஜன கநத்
மஹாநந்த ப்ரஹ்ம அநுபவ பரிவாஹா பஹுவிதா:

**பொருள்–** சற்றும் ஓய்வே இல்லாமல் எம்பெருமானுக்கான பலவிதமான கைங்கர்யங்களை உடனே செய்யவேண்டும் என்று நூற்றுக்கணக்கான ஆசைகள் எழுந்து, அவை ஒன்றுடன் ஒன்று போட்டி போடுகின்ற கலஹங்கள் என்பதான அலைகள் நிறைந்துள்ளதும்; முனிவர்கள், சித்தர்கள் போன்றவர்களுக்கே எளிதாக கிட்டும்படி உள்ளதும்; பலவிதமாக உள்ளதும்; ஸ்வரூபம், குணம், விபூதி போன்றவற்றின் சேர்க்கை காரணமாக ப்ரகாசம் பெறுகின்றதும்; ஆனந்தமயமானதும்; ப்ரஹ்ம அனுபவம் என்பதன் எல்லையாக உள்ளதும் ஆகிய கைங்கர்யங்கள் எனது மனதில் உண்டாவதாக.

## ஒன்று முதல் இருபத்திரண்டு அதிகாரம் வரை கூறப்பட்ட விஷயத்தின் ஸாரத்தை உணர்த்தும் ச்லோகம்

ஸந்த்ருஷ்ட: ஸாரவாக்வித் ஸ்வ பர நிசித தீ: ஸங்கஜித் நைகஸம்ஸ்த:
ஸ்பஷ்ட உபாய: அதிகிந்ந: ஸபரிகர பரந்யாஸ நிஷ்பந்ந க்ருத்ய:
ஸ்வ அவஸ்தா அர்ஹம் ஸபர்யாவிதிம் இஹ நியதம் வ்யாகஸம் க்வாபி பிப்ரத்
நிர்முக்த ஸ்தூல ஸூக்ஷ்ம ப்ரக்ருதி அநுபவதி அச்யுதம் நித்யம் ஏக:

**பொருள்–** ஓர் அதிகாரியானவன்: எம்பெருமானால் கடாக்ஷிக்கப்பட்டு (முதல் அதிகாரம்); ஸாரமான ரஹஸ்யத்ரயத்தை அறிந்தவனாக (இரண்டாம் அதிகாரம்); சேதனம், அசேதனம் மற்றும் ஈச்வரன் ஆகியவர்கள் பற்றி தெளிவான அறிவு கொண்டவனாக (3, 4, 5 மற்றும் 6 ஆம் அதிகாரங்கள்); உலகியல் இன்பங்களுடைய பற்றுதல்களை வென்றவனாக (ஏழாம் அதிகாரம்); பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகியவற்றைக் கைக்கொண்டவனாக (எட்டாம் அதிகாரம்); உபாயங்கள் பற்றிய தெளிவான ஞானம் கொண்டவனாக (ஒன்பதாம் அதிகாரம்); மற்ற உபாயங்களைக் கைக்கொள்ள வலிமை இல்லாமையால் வருத்தம் கொண்டவனாக (பத்தாம் அதிகாரம்); அங்கங்களுடன் கூடியதான பரந்யாஸத்தினால் தனது கார்யம் நிறைவேறப்பட்டவனாக (11, 12, 13) அதிகாரம்); தனது நிஷ்டைக்கு ஏற்றதான (14) கைங்கர்ய விதிமுறைகளை (15, 16), இந்த ஸம்ஸாரநிலையில் உள்ளபோது சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டபடியும் (17), அபராதம் ஏதும் இல்லாமலும் (18), ஒரு திவ்யதேசத்தில் இயற்றுபவனாக (19); ஸ்தூலம் மற்றும் ஸூக்ஷ்ம சரீரம் ஆகியவற்றை விட்டவனாக (20, 21); எம்பெருமானை எப்போதும் அனுபவித்தபடி உள்ளான் (22).

பரிபூர்ண ப்ரஹ்ம அநுபவ அதிகாரம் ஸம்பூர்ணம்

முதல் பாகமான அர்த்தாநுசாஸநம் ஸம்பூர்ணம்

## இரண்டாம் பாகம் - ஸ்த்திரீகரண பாகம்

### 23. ஸித்தோபாயசோதநாதிகாரம்

யுகபத் அகிலம் ப்ரத்யக்ஷேண ஸ்வத: ஸததம் விதந்
நிரவதி தயா திவ்ய உதந்வாந் அசக்ய விவர்ஜித:
ஜலதி ஸுதயா ஸார்தம் தேவோ ஜகத்பரிபாலயந்
பரமபுருஷ: ஸித்தோபாய: ப்ரதீஷ்டபர: ஸதாம்

**பொருள்–** அனைத்தையும் ஒரே நேரத்தில் ப்ரத்யக்ஷமாக, யாருடைய உதவியும் இன்றி தானாகவே எப்போதும் அறிந்தபடி உள்ளவன்; எல்லை காண இயலாத தயை என்னும் குணத்திற்கு தனது இயல்பாகவே ஸமுத்திரம் போன்று உள்ளவன்; இந்த உலகின் ஸ்ருஷ்டி போன்ற பலவற்றையும் செய்பவன்; பரமபுருஷன்; திருப்பாற்கடலில் தோன்றியவளாகிய பெரியபிராட்டியாருடன் இருந்தபடி இந்த உலகைக் காப்பவன்; சரியான மார்க்கத்தில் நடப்பவர்களைப் பாதுகாப்பது என்னும் பொறுப்பை ஏற்றவன் - இப்படிப்பட்ட எம்பெருமான் ப்ரபந்நர்களின் ஸித்தோபாயமாக உள்ளான்.

### கடந்த அதிகாரங்களின் திரண்ட பொருள்

**மூலம் –** அநாதிகாலம் ஸம்ஸரித்துப் போந்த க்ஷேத்ரஜ்ஞன் அவஸரப்ரதீக்ஷையான பகவத் க்ருபையாலே புரிந்து ஸமீசீந சாஸ்த்ரமுகத்தாலே தத்வ ஹித புருஷார்த்த விசேஷங்களைத் தெளிந்து, முமுக்ஷுவாய், ஸ்வாதிகாராநுரூபமாயிருப்பதொரு உபாய விசேஷத்தைப் பரிக்ரஹித்துக் க்ருதக்ருத்யனாய், தன் நிஷ்டையைத் தெளிந்து, அதுக்கு அநுரூபமாக இங்கிருந்த நாள் யதாசாஸ்த்ரம் நிரபராதமாகப் பண்ணும் கைங்கர்யரூப புருஷார்த்தமிருக்கும்படியும், சரீரபாதாநந்தரம் அர்ச்சிராதிகதியாலே அப்ராக்ருத தேச விசேஷத்திலே சென்றால் இவனுக்கு அநவச்சிந்ந பகவதநுபவ பரிவாஹமாக வரும் பரிபூர்ண கைங்கர்யரூப பரமபுருஷார்த்த ஸித்தியிருக்கும்படியும் சொன்னோம்.

**விளக்கம்–** ஸம்ஸாரத்தில் எல்லையற்ற காலமாக உழன்றபடி இருக்கும் ஜீவனுக்கு உதவத் தயாராக உள்ள எம்பெருமானின் க்ருபை என்பதை, அந்த க்ருபையால் ஒருவன் பற்றிக் கொண்டு, ஸம்ஸாரத்தில் வெறுப்பைக் காண்கிறான். சரியான சாஸ்த்ரங்களின் உதவியால் அவன் உண்மையாகவும், தனக்கு நன்மை மற்றும் புருஷார்த்தங்களை அளிக்கவல்லதாகவும் உள்ள உபாயத்தை அறிகிறான். அதன் பின்னர் மோக்ஷத்தில் ஆசை கொள்கிறான். தனது அதிகாரத்திற்கு ஏற்றபடி உள்ள உபாயத்தை அறிந்த பின்னர்

செய்யவேண்டியதைச் செய்கிறான் (அந்த உபாயத்தைக் கைக்கொள்கிறான்). தனது ப்ரபந்நன் என்னும் நிலையைத் தெரிந்து கொள்கிறான். அந்த நிலைக்கு ஏற்றபடி, தான் இந்த உலகில் வாழும் காலம் முடிய சாஸ்த்ரங்களுக்கு விரோதம் உண்டாகாதவகையில் கைங்கர்ய வடிவில் உள்ள புருஷார்த்தத்தைக் கைக்கொள்கிறான். இந்தச் சரீரம் விழுந்தவுடன் அர்ச்சிராதி மார்க்கமாக, இந்த உலகைக் கடந்து, ப்ரக்ருதியின் பாதிப்பு இல்லாத பரமபதம் அடைகிறான். அங்கு எல்லையற்ற பகவத் அனுபவத்தின் விளைவாக உண்டாகும் பரிபூர்ணமான கைங்கர்ய வடிவில் உள்ள புருஷார்த்தம் கிட்டப் பெறுகிறான். இவை அனைத்தும் எப்படி நிகழ்கின்றன என்பதை நாம் கடந்த சில அதிகாரங்களில் விரிவாகக் கூறினோம்.

## ஈச்வரனின் "தண்டிக்கவேண்டும்" என்ற எண்ணம் நீங்க மூன்று காரணங்கள்

**மூலம்** – இவ்வர்த்தங்களில் ஜ்ஞாதவ்யதமமான ஸித்தோபாயத்தைப் பற்றவும், ஸாத்யோபாய விஷயமாகவும் இவ்வுபாய ப்ரபாவ விஷயமாகவும் கர்மவச்யருக்குக் கடுகத் தெளிவு பிறவாமைக்கு ஸ்வதந்த்ரனான ஸர்வேச்வரன், இவர்களுடைய பூர்வாபராதத்தாலே இட்ட நினைப்பு ஈடுமாறுகைக்கு ப்ரதான காரணம் மூன்று உண்டு. அவையெவையென்னில்: (1) அஸ்து மே என்றபேக்ஷித்தால், அஸ்து தே தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே என்கிற திருமுகப் பாசுரமும், (2) ஸதாசார்யாநுக்ரஹமும், (3) ஸத்ஸம்ப்ரதாய ஸித்தியும். இவற்றில் ஸதாசார்யாநுக்ரஹத்துக்கு வ்யாஜங்களும் இதின் பலவிசேஷங்களும் பராசர மைத்ரேய ஸஞ்ஜய ஆச்வலாயநாதி வ்ருத்தாந்தங்களிலே கண்டுகொள்வது.

**விளக்கம்–** பூர்வ கர்ம வினைகளின் காரணமாக, அறிந்து கொள்ளவேண்டிய உபாயங்களில் முதன்மையாக உள்ள ஸித்தோபாயம் (எம்பெருமான்) பற்றியும், ஸாத்யோபாயம் (பக்தி, ப்ரபத்தி போன்றவை) பற்றியும், இந்த உபாயங்களின் வலிமை பற்றியும் ஜீவன்கள் அறியாமல் உள்ளனர். சற்றே ஆராய்ந்தால் இவர்களுக்கு இந்த விஷயங்களில் தெளிவு பிறவாமைக்குக் காரணம், இவர்களது பூர்வ அபராதங்களின் விளைவாக எம்பெருமான் "இவர்கள் நம்மை உள்ளபடி அறிந்து கொள்பவர்கள் அல்லர்" என்று எண்ணுவதே ஆகும். எம்பெருமானின் இவ்விதமான தண்டிக்கும் எண்ணமானது நீங்குவதற்கு மூன்று வழிமுறைகள் அல்லது காரணங்கள் உள்ளன. அவையாவன:

(1) சரணாகதி கத்யம் - அஸ்து மே – ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளில் எனக்கு உண்மையான சரணாகதி உண்டாகவேண்டும் – என்று விண்ணப்பம் செய்யும்போது, அதனைக் கேட்ட ஸ்ரீரங்கநாச்சியார் - அஸ்து தே தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே – உனக்கு அந்தச் சரணாகதி உண்டாவதாக, அதன் மூலமே அனைத்தும் கிட்டுவதாக – என்று திருவாய் மலர்தல்.

(2) ஆசார்யனின் அனுக்ரஹம்
(3) ஸம்ப்ரதாயத்தின் மீது பிடிப்பு

இந்த மூன்றில் ஆசார்யனின் அனுக்ரஹம் உண்டாவதற்கான காரணங்களும், அதன் பலன்களும் குறித்து அறிய பராசரர், மைத்ரேயர், ஸஞ்ஜயன் மற்றும் ஆச்வலாயநர் ஆகியவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளில் காண்க.

**மூலம்** – ஸத்ஸம்ப்ரதாயஸித்தியாவது தான் ஸத்த்வோத்தரனாய் ஸம்யகுபஸந்நனாய் ஸாவதாநனாயிருக்கும் அவஸ்தையிலே க்யாதி-லாப-பூஜா-நிரபேக்ஷனாய் காருண்ய-பரதந்த்ரனான ஸதாசார்யன் ஸர்வருக்கும் ப்ரதாமாசார்யனான ஸர்வேச்வரன் முதலாக உபதேச பரம்பரையாலே வந்த தத்த்வஹிதங்களை அநபேக்ஷித-விஸ்தரமும் அபேக்ஷித-ஸங்கோசமுமில்லாதபடி,

ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ:
கச்சத்வமேநம் சரணம் சரண்யம் புருஷர்ஷபா:

என்கிற கட்டளையிலே, உபதேசிக்கப் பெறுகை. பஹுக்லேசமாய் புத்திசலந ஸம்பாவநையுண்டான சாஸ்த்ரபரிக்ரமத்தில் அநாதிக்ருதருமாய்ப் பரமாஸ்தி கருமாயிருப்பார்க்கு இவ்வுபதேசமே ப்ரதானம். மற்றுள்ளார்க்குத் தாங்கள் தெளிகைக்காகவும் குதர்க்கங்களாலே கலங்குவாரைத் தெளிவிக்கைக்காகவும் ஸமீசீந யுக்திகளோடே கேட்க ப்ராப்தம்.

**விளக்கம்–** ஸத்ஸம்ப்ரதாயஸித்தி என்பது என்ன? ஸத்வகுணம் முழுவதுமான நிறைந்திருப்பதும், சிஷ்யனாய் இருக்கும் இருப்பைச் சரியானபடி அடைந்தவனாகவும், கவனத்தைத் திருப்பாத மனம் கொண்டவனாகவும் இருப்பதாகும். மேலும் எந்தவிதமான புகழுக்கோ, செல்வத்துக்கோ பின்செல்லாமல் உள்ளவரும், காருண்யம் நிரம்பியவரும் ஆகிய ஓர் ஆசார்யனின் மூலமாக, தத்வம் மற்றும் ஹிதங்கள் (உண்மை மற்றும் நன்மை) ஆகியவற்றைப் பற்றி நன்றாக அறியவேண்டும். இப்படிப்பட்ட உபதேசங்கள், முதன்மையான ஆசார்யனாகிய ஸர்வேச்வரன் தொடக்கமாக இன்றுள்ள ஆசார்யன் முடிய பரம்பரையாக உபதேசிக்கப்பட்டு வருபவையாகும். இப்படியாக உபதேசம் செய்யப்படும்போது தேவையற்ற விரிவாக்கங்களும், தெளிவாக உரைக்க வேண்டியவற்றைத் தள்ளுவதும் கூடாது. மஹாபாரதம் வனபர்வம் (161-56) - ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ: கச்சத்வமேநம் சரணம் சரண்யம் புருஷர்ஷபா: - மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய ஸர்வேச்வரன் அனைத்து உலகங்களுக்கும் தந்தையாகவும் தாயாகவும் உள்ளான்; புருஷர்களில் சிறந்த பாண்டவர்களே! அனைவருக்கும் ரக்ஷகனாக உள்ள அவனையே உபாயம் என்று

கைக்கொண்டு சரணாகதி செய்யுங்கள் – என்பது போன்றதான உபதேசங்களாக இருத்தல் வேண்டும். ஒரு சிலர் பரமபக்தர்களாகவும், சாஸ்த்ரங்களில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருக்கக்கூடும்; ஆனாலும் அவர்கள் மிகவும் சிக்கலான விஷயங்களைக் கூறும் சாஸ்த்ரங்களைப் புரிந்துகொள்ளும் தகுதி அற்றவர்களாக இருக்கலாம். அவர்களுடைய சலனம் நிறைந்த புத்திக்கு ஆசார்யனின் உபதேசமே மிகவும் முக்கியமாகும். மற்றவர்களுக்கு அவர்களுடைய தெளிவான ஞானத்தின் பொருட்டும், தங்களுடன் வாதம் செய்யவருபவர்களை எதிர்கொள்ளும் பொருட்டும் சாஸ்த்ரங்களை அவற்றின் காரணங்களுடன் தெளிவது மிகவும் அவசியமாகிறது.

**மூலம்–**

ஆர்ஷம் தர்மோபதேசம் ச வேதசாஸ்த்ராவிரோதிநா
யஸ்தர்கேணாநுஸந்தத்தே ஸ தர்மம் வேத நேதர:

என்கிறபடியே இவ்வர்த்தங்களை ஸமீசீந தர்க்கங்களாலே தெளியாதவர்கள் காணாத சாக்ய பாஷண்டை: த்ரயீதர்மோ விலோபித: என்கிறபடியே, ஹைதுகராய் வேதவிரோதி தர்க்கங்களையிட்டு ப்ராமாணிகார்த்தங்களை அபஹரிப்பவர்கள். இவ்வபஹாரம் விபூதியையும் விபூதிமானையும் பற்ற இரண்டு வகையாயிருக்கும். அதில் விபூதிமானை அபஹரிக்கையாவது – (1) ச்ரிய:பதியான ஸர்வேச்வரனை இல்லையென்னுதல், (2) வேறொருத்தனை ஈச்வரனாகக் கட்டி ஸர்வேச்வரனை விபூதி கோடியிலே வைத்தல் செய்கை. விபூதியை அபஹரிக்கையாவது – (1) விபூதியை ஒரு முகத்தாலே இல்லையென்னுதல், (2) உண்டாக்கி ஈச்வரனோடு ஸம்பந்தமறுத்து ஸ்வதந்த்ரமென்னுதல், (3) பரதந்த்ரமாக்கி தன்னோடு பிறரோடு புணைப்புதல் செய்கை.

**விளக்கம்–** மநுஸ்ம்ருதி (12-106) - ஆர்ஷம் தர்மோபதேசம் ச வேதசாஸ்த்ராவிரோதிநா யஸ்தர்கேணாநுஸந்தத்தே ஸ தர்மம் வேத நேதர: - வேதங்களில் கூறப்பட்ட பொருளையும், தர்ம சாஸ்த்ரங்களையும் வேதங்களாகிய சாஸ்த்ரத்திற்கு விரோதம் ஏற்படாத வகையில் யார் அறிந்துகொள்கிறானோ அவனே தர்மம் அறிந்தவன், இவ்விதம் உணராதவன் தர்மம் அறியாதவன் – என்றது காண்க. ஒரு சிலர் தர்மங்களின் அர்த்தங்களை சரியான கருத்துடன் அறியாமல் இருக்கக்கூடும். இவர்கள் அத்ரிஸ்ம்ருதி - காணாத சாக்ய பாஷண்டை: த்ரயீதர்மோ விலோபித: - காணாதர் (வைசேஷிகர்கள்), பௌத்தர்கள் மற்றும் பாஷாண்டிகள் மூலமாக வேதங்களில் உரைக்கப்படும் தர்மங்கள் மறைக்கப்படுகின்றன –என்று கூறுவது போன்று, வேதங்களுக்கு விபரீதமான பொருளைக் கற்பித்து, அவற்றின் உண்மையான அர்த்தங்களை தங்களது முரணான வாதங்களால் மறுப்பர். இப்படியாக மறுக்கின்றவர்கள் இருவிதமாக மறுப்பர்.

அவையாவன – விபூதியையும், அந்த விபூதியையுடைய எம்பெருமானையும் ஆகும். இவற்றில் விபூதியை உடைய ஸர்வேச்வரனைத் தள்ளுவது என்பது கீழே உள்ள விதங்களில் ஆகும்:

(1) பெரியபிராட்டியின் நாயகனான ஸர்வேச்வரனை "இல்லை" என்று கூறுதல்.
(2) வேறு ஒருவனை ஸர்வேச்வரன் என்று அனைவருக்கும் உபதேசித்து, உண்மையான ஸர்வேச்வரனை ஒதுக்கிவைத்தல்.

விபூதியைத் தள்ளுவது என்பது கீழே உள்ள விதங்களில் ஆகும்:

(1) விபூதியே இல்லை என்று கூறுதல்.
(2) விபூதியை உள்ளது என்று ஒப்புக்கொண்டு, ஆனால் ஈச்வரனுடன் தனக்குத் தொடர்பு இல்லை என்று கூறி, தன்னைச் சுதந்திரமானவன் என்னுதல்.
(3) தன்னை மற்றவர்களுக்கு வசப்படும்படியாக செய்து கொள்கை.

## மேலே கூறப்பட்டவர்களின் நட்பை விடவேண்டியதன் அவசியம்

மூலம் – இவ்வபஹாரங்களில் ஏதேனுமொன்று ஸ்வரூபத்தில் ம்ருதுப்ரஜ்ஞனாய் ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணினவனுக்கு விபரீத ஸம்ஸர்க்கத்தாலே வருமாகில் தத்தஸ்ய ஹரணேந ச என்கிற அபஹாரத்திலும் கொடியதாய், களவுகொண்டு கொடுத்த த்ரவ்யத்தை மீளக்களவு கொண்டாற்போலேயாம். ஆகையால் பஹிவிதங்களானவ்யாமோஹ காரணங்களில் ஹைதுக ஸம்ஸர்க்கம் போரப் பரிஹரணீயம். இவ்வர்த்தத்தை பாஷாண்டிநோ விகர்மஸ்தாந் பைடால வ்ரதிகாந் சடாந் ஹைதுகாந் பக்வ்ருத்திம்ச்ச வாங்மாத்ரேணாபி நார்சயேத், டம்பி ஹைதுக பாஷண்டி பக்வ்ருத்திம்ச்ச வர்ஜயேத், நாஸப்தி: கிஞ்சிதாசரேத், த்யஜ துர்ஜநஸம்ஸர்க்கம், வரம் ஹைதுவஹ ஜ்வாலா பஞ்ஜராந்தர்வ்யவஸ்திதி: ந சௌரி சிந்தா விமுக ஜநஸம்வாஸவைசஸம் இத்யாதிகளிலே ப்ரபஞ்சித்தார்கள்.

**விளக்கம்–** அற்பமான ஞானத்தைக் கொண்ட ஒருவன் ப்ரபத்தியைச் செய்திருக்கலாம். அப்படிப்பட்டவன் சேரக்கூடாதவர்களுடன் சேரும்போது, மேலே கூறப்பட்ட விபரீதமான எண்ணங்கள் அவனுக்கு உண்டாகக்கூடும். அவனது இந்தச் செய்கைகள் எப்படிப்பட்டவை என்றால், சாண்டில்ய ஸ்ம்ருதி - தத்தஸ்ய ஹரணேந ச – தானமாகக் கொடுக்கப்பட்டதை அபஹரிப்பதைக் காட்டிலும் பாவமானவை ஆகும். ஒருவன் ஒரு பொருளை மற்றவனுக்கு அளிக்கிறான்; பின்னர் அவ்விதம் அளித்தவன் அதனையே திருடிவிடுகிறான்; சற்று காலம் கழிந்து மனம் திருந்தி மீண்டும் அப்பொருளை

உரியவனிடம் ஒப்படைக்கிறான்; ஆனால் மீண்டும் அதனைத் திருடுகிறான். இந்தச் செயலைக் காட்டிலும் பாவமானது மேலே கூறப்பட்ட செய்கைகள் ஆகும். ஆகவே மயக்கத்தில் ஆழ்த்தவல்ல பலவிதமான காரணங்களில், மேலே கூறப்பட்டவர்களின் நட்பு என்பது மிகவும் விலக்கப்படவேண்டியது ஆகும். கீழே உள்ள பல வரிகளில் இத்தகைய கருத்தையே பலரும் விளக்கினார்கள்:

- மநு ஸ்ம்ருதி (4-30) - பாஷாண்டிநோ விகர்மஸ்தாந் பைடால வ்ரதிகாந் சடாந் ஹைதுகாந் பக்வ்ருத்திம்ச்ச வாங்மாத்ரேணாபி நார்சயேத் – ஸர்வேச்வரனைத் தாழ்வாக உரைக்கும் பாஷாண்டிகள், பூனை போன்று வஞ்சனையுடன் உள்ளவர்கள், வேதங்களை ஏற்காமல் தர்க்கவாதம் மட்டுமே செய்தபடி உள்ள ஹைதுகர்கள், கொக்கு போன்று தன்னருகில் உள்ளவர்களைத் துன்புறுத்தியபடி உள்ளவர்கள் ஆகியவர்களை வாயால் புகழக்கூடாது.

- யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி (1-130) - டம்பி ஹைதுக பாஷண்டி பக்வ்ருத்திம்ச்ச வர்ஜயேத் – தானங்களும் தர்மங்களும் செய்வது போன்று வேடம் இடுபவன், ஹைதுகர்கள், பாஷாண்டிகள், கொக்கு போன்றவர்கள் ஆகியோரிடம் பசியால் இருக்கும் ஒருவன் தானம் பெறக்கூடாது.

- நாஸப்தி: கிஞ்சிதாசரேத் – ப்ரஹ்மத்தைப் பற்றிய ஞானம் அற்றவர்களிடம் சிறிதளவு கூட எந்தவிதமான நட்பும், விவாதமும் வைத்துக் கொள்ளக்கூடாது.

- மஹாபாரதம் - த்யஜ துர்ஜநஸம்ஸர்க்கம் – தீயநடத்தை உள்ளவர்களின் நட்பைக் கைவிடு.

- வரம் ஹைதுவஹ ஜ்வாலா பஞ்ஜராந்தர்வ்யவஸ்திதி: ந சௌரி சிந்தா விமுக ஜநஸம்வாஸவைசஸம் – ஸர்வேச்வரனைப் பற்றிய எண்ணம் சிறிதும் இல்லாமல் உள்ளவர்களுடன் கொள்ளும் நட்பைக் காட்டிலும் ஒரு சிறிய அறையில் எரிகின்ற பெரிய நெருப்புடன் உள்ள நிலை சிறந்ததாகும்.

**மூலம்** - இந்த ஹைதுகரோட்டை ஸம்பாஷணம் மாயயா அபஹ்ருதஜ்ஞாநா: என்கிறபடியே கண்டு மதிகெட்டானாகி சதுர்விதா மம ஜநா பக்தா ஏவ ஹி தே ச்ருதா: என்று ஈச்வரன் நம்முடையவர்களென்னும் நாலு வகையிலும் கூடாதே "அளியன் நம் பையல்" என்னாதபடி பண்ணி ந மாம் துஷ்க்ருதினோ மூடா: ப்ரபத்யந்தே என்கிற பகவதபிமான பாஹ்யவர்கத்திலே கோப்புண்ணப் பண்ணும்.

**விளக்கம்–** இத்தகைய ஹைதுகர்களுடன் ஒருவன் செய்கின்ற வாதங்களோ அல்லது பேச்சுக்களோ கீதை (7-15) - மாயயா அபஹ்ருதஜ்ஞாநா: - மாயை மூலம் ஞானம் அழிக்கப்பட்டவர்கள் - என்னும்படி ஒருவனது புத்தியைக் கெடுப்பதாகும். மேலும் மஹாபாரதம் சாந்திபர்வம் (350-33) - சதுர்விதா மம ஜநா பக்தா ஏவ ஹி தே ச்ருதா: - என்னுடைய பக்தர்கள் நான்குவகை ஆவர் – என்று ஈச்வரனால் “இவர்கள் என்னுடையவர்கள்” என்று கொண்டாடப்படும் நான்கு வகையில் அடங்காமல் ஆகிவிடுகின்றனர். மேலும், திருமாலையில் (37) – அளியன் நம் பையல் – இரக்கப்படவேண்டியவன் – என்று ஸ்ரீரங்கநாதனால் ஏற்கப்படாமல் போகின்றனர். இது தவிர கீதை (7-15) - ந மாம் துஷ்க்ருதினோ மூடா: ப்ரபத்யந்தே – அவர்கள் என்னிடம் ப்ரபத்தி செய்து, என்னை வணங்குவதில்லை – என்னும் நிலைக்கு ஆளாகின்றனர். இப்படியாக அவர்கள் அந்த கூடாநட்பானது எம்பெருமானின் ப்ரியமான நிலையிலிருந்து விலக்கி, எம்பெருமானின் ப்ரியத்துக்கு ஆளாகாதவர்களின் வட்டத்தில் சேர்த்துவிடும்.

**மூலம்–** அசரண்ய சரண்யனான ஸர்வேச்வரனைச் சரணமாகப் பற்றுகிற பரமாஸ்திகனுக்குச் சிலரோடு சேர்த்தியால் பாஹ்யதை வாராதாகிலும், அவனுக்குக் கலக்கங்கள் வரவும், அதுக்கு ஸதாசார்யர்கள் பரிஹாரம் பண்ணவும் காணாநின்றோம். மஹரிஷிகளும்

ஏகம் யதி பவேச்சாஸ்த்ரம் ஜ்ஞானம் நிஸ்ஸம்சயம் பவேத்
பஹுத்வாதிஹ சாஸ்த்ராணாம் ஞாநதத்வம் ஸுதுர்லபம் என்றும்

நிஸ்ஸம்ச்யேஷு ஸர்வேஷு நித்யம் வஸதி வை ஹரி:
ஸஸம்ச்யாந் ஹேதுபலாந் நாத்யாவஸதி மாதவ:

என்றும் சொன்னார்களிறே. ந க்ரோதோ ந ச மாத்ஸர்யம் லோபோ நாசுபா மதி: இத்யாதிகளும் ஆத்மகுணபரிபூர்ண அதிகாரி விசேஷ விஷயத்திலேயாகக் கடவன. ஆன பின்பு ஆருருக்ஷுக்களுக்குக் கலக்கமுண்டென்னுமிடம்

ச்ரூயதே கில கோவிந்தே பக்திமுத்வாஹதாம் ந்ருணாம்
ஸம்ஸார ந்யூநதா பீதா: த்ரிதசா: பரிபந்திந:

ஸத்யம் சதேந விக்நாநாம் ஸஹஸ்ரேண ததா தப:
விக்நாயுதேந கோவிந்தே ந்ருணாம் பக்திர்நிவார்யதே

இத்யாதிகளிலே ப்ரஸித்தம்.

**விளக்கம்–** வேறு கதியற்ற அனைவருக்கும் ஏற்ற புகலிடமாக உள்ள எம்பெருமானைச் சரணம் என்று புகுந்த ஒருவன், தகாத சேர்க்கை காரணமாக மயக்கமும் கலக்கமும் அடையக்கூடும். ஆனாலும் அவன் எம்பெருமானின் விலக்குதலுக்கு இலக்காவதில்லை. அவன் சரியான காலத்தில் ஆசார்யர்களால் திருத்தப்படுகிறான். கீழே உள்ள வரிகள் காண்க:

- இதிஹாஸ ஸமுச்சயம் (33-105) - ஏகம் யதி பவேச்சாஸ்த்ரம் ஜ்ஞானம் நிஸ்ஸம்சயம் பவேத் பஹுத்வாதிஹ சாஸ்த்ராணாம் ஞாநதத்வம் ஸுதுர்லபம் – சாஸ்த்ரம் ஒன்றை மட்டுமே உரைப்பவையாக இருந்தால், எந்தவிதமான ஐயமும் இன்றி அனைவருக்கும் சரியான ஞானம் உண்டாகும். ஆனால் சாஸ்த்ரங்கள் பலவாக உள்ளதால் உண்மையான ஞானம் பெறுவது மிகவும் கடினமான செயலாகும்.

- மஹாபாரதம் சாந்திபர்வம் (359-71) - நிஸ்ஸம்ச்யேஷு ஸர்வேஷு நித்யம் வஸதி வை ஹரி: ஸஸம்ச்யாந் ஹேதுபலாந் நாத்யாவஸதி மாதவ: - எந்தவிதமான சந்தேகமும் இல்லாதவர்கள் அருகில் மாதவன் எப்போதும் உள்ளான். ஆனால் ஏதோ பல காரணங்களை வைத்துக் கொண்டு சந்தேகம் அடைபவர்களை அவன் விட்டுச் செல்கிறான்.

மஹாபாரதம் ஆநுசசனிகபர்வம் (232-135) - ந க்ரோதோ ந ச மாத்ஸர்யம் லோபோ நாசுபா மதி: - மிகுந்த புண்ணியம் செய்ததன் காரணமாக பஎம்பெருமானிடம் பக்தி கொண்டவர்களுக்கு கோபம், த்வேஷம், லோபம், தீய எண்ணம் ஆகியவை தோன்றாது – என்று கூறும் வரிகள் பரிபூர்ண ஆத்மகுணங்கள் கொண்ட அதிகாரிகளுக்குப் பொருந்தும். ஆனால், பக்தியில் ஆழ்பவர்களுக்கும் கலக்கம் உண்டாகும் என்பதைக் கீழே உள்ள வரிகளில் காணலாம்:

- விஷ்ணுதர்மம் (2-25) - ச்ரூயதே கில கோவிந்தே பக்திமுத்வாஹதாம் ந்ருணாம் ஸம்ஸார ந்யூநதா பீதா: த்ரிதசா: பரிபந்திந: - கோவிந்தனிடம் பக்தியில் ஆழ்ந்தவர்களுக்கு "ஸம்ஸாரம் என்பது குறையுமோ" என அச்சம் கொண்டு தேவர்கள் விரோதம் செய்வதாகக் கேட்கப்படுகிறது.

- விஷ்ணுதர்மம் (74-94) - ஸத்யம் சதேந விக்நாநாம் ஸஹஸ்ரேண ததா தப: விக்நாயுதேந கோவிந்தே ந்ருணாம் பக்திர்நிவார்யதே – மனிதன் செய்கின்ற

ஸத்யங்கள் நூறு தடைகளாலும், தவங்கள் ஆயிரம் தடைகளாலும், கோவிந்தனிடம் கொள்ளும் பக்தியானது பதினாயிரம் தடைகளாலும் தடுக்கப்படுகின்றன.

## ஸர்வேச்வரனின் திருக்கல்யாண குணங்கள் பற்றிய ஐயங்களும் விடைகளும்

**மூலம்–** அதில் முற்பட ஸித்தோபாயத்தைப் பற்றவரும் கலக்கங்களும், அவற்றின் பரிஹாரங்களும் சொல்கிறோம்.

**விளக்கம்–** முதலில் நாம் ஸித்தோபாயமான ஸர்வேச்வரனைப் பற்றியும், அவனது குணங்கள் பற்றியும் உண்டாகின்ற ஐயம் அல்லது தவறான எண்ணங்களைப் பட்டியலிட்டு, அந்தச் சந்தேகங்களை நீக்குவோம்.

## ப்ரபத்தி அவசியம் அற்றது என்ற வாதத்திற்கான பதில்

**மூலம்** – அநாதிகாலம் அநாதரித்த ஈசுவரன் இன்று ஒருத்தனை ஆதரிக்கிறது தன் ஸ்வாதந்த்ர்ய மாத்ரத்தாலேயன்றோ? இங்ஙனன்றாகில், "இன்று என்னைப் பொருளாக்கி தன்னை என்னுள் வைத்தான், அன்று என்னைப் புறம் போகப்புணர்த்தது என் செய்வான்" என்று ஆழ்வார் விண்ணப்பஞ் செய்ய, ஸர்வேச்வரன் "சூழ்விசும்பணிமுகில் தூரியம் முழக்கின" விதொழிய வேறோர் உத்தரம் அருளிச்செய்தானோ? ஆகையால் நாம் ஒரு உபாயாநுஷ்டாநம் பண்ணுகை என்னென்பது? "நடுவே வந்து உய்யக்கொள்கின்ற நாதன்" என்கிறபடியே அருள் புரிந்த சிந்தையடியார்மேல் வைத்து அவன் தானே ரக்ஷித்தபோது காணுமத்தனையன்றோ – என்று சிலர் கலங்குவார்கள்.

**விளக்கம்–** எல்லையற்ற காலம் ஒருவனைத் தள்ளியே வைத்திருந்த ஸர்வேச்வரன் இன்று தன்னுடன் சேர்த்துக் கொள்கிறான் என்றால் அதற்குக் காரணம் ஸர்வேச்வரனின் சுதந்திரமே ஆகும். இவ்விதம் கொள்ளாமல், அந்தச் செயலுக்குக் காரணம் சேதனனின் முயற்சியே என்று கூறினால்: திருவாய்மொழியில் (10-8-9) - இன்று என்னைப் பொருளாக்கி தன்னை என்னுள் வைத்தான், அன்று என்னைப் புறம் போகப்புணர்த்தது என் செய்வான் – ஸர்வேச்வரன் என்னை ஒரு பொருளாக்கி தன்னுடன் சேர்த்துக் கொள்ளும்விதமாக என்னில் தன்னை வைத்துக்கொண்டான்; ஆனால் இதற்கு முன்னர் என்னை ஏன் அவனைக் காட்டிலும் வேறான விஷயங்களில் ஈடுபடும்படிச் செய்தான் – என்று ஆழ்வார் வினவினார்; இதற்கு ஈச்வரன், திருவாய்மொழி (10-9-1) - சூழ்விசும்பணிமுகில் தூரியம் முழக்கின – ஆகாயத்தில் அழகான மேகங்கள் இனிய வாத்திய ஓசையை எழுப்பின – என்று கூறுவதற்கு ஏற்ப எந்தப் பதிலையும்

அளிக்கவில்லை – என்பதற்கு எப்படி விடை அளிக்கமுடியும்? ஆகவே அவனது பாதுகாப்பை நாடும் பொருட்டு நாம் ஏதேனும் ஓர் உபாயத்தைக் கைக்கொள்வது எதற்காக (அது வீணே ஆகும்)? திருவாய்மொழி (1-7-5) - நடுவே வந்து உய்யக்கொள்கின்ற நாதன் – எந்தக் காரணமும் இன்றி என்னைப் பிழைக்கும்படிச் செய்பவன் – என்று கூறுவதற்கு ஏற்ப, அவனது கருணையானது எப்போது ஒருவன் மீது விழுகிறதோ அப்போது தானாகவே வந்து ரக்ஷிப்பான் – என்று சிலர் கூறுவார்கள்.

**மூலம்** – இவர்களைத் தெளிவிக்கும்படி – ஈச்வரன் ஸ்வதந்த்ரனேயாகிலும் வைஷம்ய நைர்க்ருண்யங்களாகிற தோஷங்கள் தனக்குத் தட்டாமைக்காக இவன் பக்கலிலே ஒரு வ்யாஜத்தை உண்டாக்கி, அத்தை அவலம்பித்துத்தான் ரக்ஷிக்கும். இவ்வர்த்தத்தை, “திருமாலிருஞ்சோலைமலை என்றேன் என்னத் திருமால் வந்து என்னெஞ்சு நிறையப் புகுந்தான்” என்று ஆழ்வார் தாமே அருளிச்செய்தார். இந்த வ்யாஜம்தானும் ஈச்வரன் தன்னாலேயாகில், இத்தை முன்பே உண்டாக்காதே விட்டதென்னென்னில், இவ்வாத்மாக்களுக்கு அநாதியான கர்மப்ரவாஹங்கள் விஷம விபாக ஸமயங்களாய்க் கொண்டு போருகையாலே ஈச்வரன் கர்மாநுரூப பலப்ரதனல்லாதபோது வைஷம்யதோஷம் வருகையாலே முன்பு இதுக்கு அவஸரமாயிற்றில்லை என்னுமிடம் கார்ய விசேஷதர்சநத்தாலே கல்பிதம். இங்ஙனிசையாதபோது ஸர்வஸித்தாந்திகளுக்கும் “இதுக்கு முன்பில்லாத மோக்ஷச்ரத்தாதிகள் இப்போது பிறக்கைக்கு அடியென்?” என்றால், உத்தரம் சொல்ல விரகில்லை. அநாதி கர்மப்ரவாஹ வைசித்ரயத்தாலே என்னும் உத்தரம் ஈச்வரனை இசைந்தார்க்கும் இசையாதார்க்கும் துல்யம். ஈச்வர ஸ்வாதந்த்ர்யம் ஒரு வ்யாஜத்தைக் கொண்டு அவன் நினைத்தபோதே ரக்ஷிக்கைக்கும் விலக்கவல்லாரில்மைக்கும் உறுப்பாம்.

**விளக்கம்–** இவ்விதம் எண்ணுபவர்களை நாம் கீழே உள்ளபடி தெளிவாக்குவோம். ஈச்வரன் சுதந்திரமானவன் (தனது விருப்பத்தின்படி செயலாற்றுபவன்) என்றாலும், ”ஈச்வரன் ஒரு சேதனனிடம் பாரபக்ஷமாக நடந்துகொள்கிறான் (வைஷம்ய), இரக்கம் இன்றி நடந்துகொள்கிறான் (நைர்குண்யம்)” முதலான அவப்பெயர்கள் தனக்கு வராமல் இருக்கவேண்டும் என்று எண்ணுகிறான். ஆகவே தான் யாரைக் காப்பாற்றவேண்டும் என்று எண்ணுகிறானோ அந்தச் சேதனன், தன்னுடைய காப்பாற்றுதலை பெறும் விதமாக, ஏதேனும் ஒரு செயலைச் செய்யவேண்டும் என்றாக்குகிறான். அந்தச் செயலை முன்னிட்டு அவனைக் காப்பாற்றுகிறான் (அப்போது மேலே கூறப்பட்ட அவப்பெயர்கள் வராது அல்லவோ). இவ்விதம் ஈச்வரன் செய்கிறான் என்பதை ஆழ்வார் திருவாய்மொழியில் (10-8-1) - திருமாலிருஞ்சோலைமலை என்றேன் என்னத் திருமால் வந்து என்னெஞ்சு நிறையப் புகுந்தான் – திருமாலிருஞ்சோலை என்று அவனது இருப்பிடத்தின் பெயரை மட்டுமே உச்சரித்தேன்; அதனையே காரணமாக்கி எனது மனதின் அவன் வந்து நின்றுவிட்டான் – என்றார். இதற்கு சிலர், “சரி – இவ்விதம் ஏதோ

காரணம் காண்பிக்கவேண்டும் என்பதால் சேதனனை ஒரு செயலைச் செய்யும்படி ஈச்வரன் செய்கிறான் என்றால், அதனை ஏன் அவன் முன்பே செய்யவில்லை?", என்று கேட்கலாம். இதற்கு பதில் அளிப்போம். ஆத்மாக்களுக்கு எல்லையற்ற காலமாக கர்மங்களும், அவற்றின் பயன்களும் தொடர்ந்தபடி உள்ளன. இப்படி வெள்ளம் போன்று தொடரும் கர்மங்களானவை தங்களது பலன்களை பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு விதமாக அளிப்பவையாக உள்ளன. இப்படிப்பட்ட கர்மபலன்களின் அடிப்படையில் ஈச்வரன் தனது கருணையை ஒரு சேதனன் மீது பொழியவேண்டும். அவ்விதம் செய்யவில்லை என்றால் "ஈச்வரன் பாரபக்ஷமாக உள்ளான்" என்னும் அவப்பெயர் அவனுக்கு உண்டாகிவிடும். ஆகவே கர்மபலனின் காரணமாகத் தகுந்த நேரம் வராதவரையில், தான் யாரைக் காக்கவிரும்புகிறானோ அந்தச் சேதனனை, காப்பாற்றுவதற்குரிய செய்கைகளைச் செய்யத் தூண்டுவதில்லை. இதனால் மேலே கேட்கப்பட்ட கேள்விக்கு விடை அளித்தாயிற்று. இந்தப் பதிலை ஏற்கவில்லை என்றால், "ஏன் ஒருவனுக்கு ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மட்டுமே, அதற்கு முன்பு எழாத மோக்ஷ ஆசை உண்டாகிறது?" என்ற கேள்விக்கான பதிலை எந்த மதத்தைச் சேர்ந்த ஸித்தாந்தவாதிகளும் உரைக்க இயலாது. இத்தகைய ஆசைக்குக் காரணம் முன்பு செய்த கர்மங்களின் பலன்களே என்பதை ஈச்வரனை ஒப்புக் கொள்ளும் மதத்தினரும், ஒப்புக் கொள்ளாத மதத்தினரும் நிச்சயம் ஏற்பர். ஆக ஸர்வேச்வரனின் சுதந்திரமான தன்மை என்பது சேதனனிடம் உள்ள ஏதோ ஒரு காரணத்தை மட்டுமே சாக்காகக் ரக்ஷிப்பதற்கும், அவ்விதம் ரக்ஷிக்கும்போது தடுப்பதற்கு யாரும் இல்லாதபடி செய்வதற்கும் ஒரு காரணமாகிறது.

**மூலம்** – இப்படியானால் "இன்றென்னை" என்கிற பாட்டுக்கும் இதுக்கு மூலமான வசனங்களுக்கும் நிர்வாஹம் என்னென்னில், அது சொல்லுகிறோம் – ஈச்வரனுக்கு ஸஹஜங்களான ஸ்வாதந்த்ர்யகாருண்யங்களினுடைய ப்ராதாந்யத்தாலே இவற்றுக்கு வ்யாஜபூதங்களான விசேஷ காரணங்களை அநாதரித்து, "பண்டு என்னை பராங்முகனாக்குகைக்கும் இன்று என்னை அபிமுகனாக்குகைக்கும் உன் ஸ்வாதந்த்ர்யமும் க்ருபையுமொழிய வேறொரு ப்ரதாந காரணம் கண்டிலேன்; எனக்குக் காட்டாதே ஸ்வத:ஸர்வஜ்ஞனான நீ கண்டதுண்டாகில் அருளிச் செய்யவேணு"மென்ன, ஈச்வரன் நிருத்தரனாயிருக்கிற விருப்பாலே ஸ்வாதந்த்ர்ய க்ருபைகளினுடைய ப்ராதாந்யத்தை நாட்டுக்கு வெளியிடுகிறார். இத்தால் இச்சேதநனை லீலோபகரணமாக்குகைக்கு ப்ரதாந காரணம் ஈச்வர ஸ்வாதந்த்ர்யம்; இதுக்கு ஸஹகாரி காரணம் ப்ரவாஹாநாதியான ஸ்வதந்த்ராஜ்ஞாதிலங்கனம். இவனை போகோபகரணமாக்குகைக்கு ப்ரதாந காரணம் ஈச்வரனுடைய ஸ்வாபாவிக காருண்யம்; இதுக்குப் ப்ரதிபந்தகமான ஈச்வர நிக்ரஹத்தை சமிப்பித்துக் கொண்டு ஸஹகாரி காரணமென்று பேர்பெற்றது. இவனுடைய ஸுக்ருதவிசேஷ த்வாரக க்ருபையடியாக வந்த வசீகரண விசேஷங்களென்று ஈச்வரனுடைய ஸ்வபாவத்தையும் வைஷம்ய நைர்க்ருண்யங்களில்லாமையும் பந்த மோக்ஷாதி வ்யவஸ்தையையும் ப்ரமாண

ப்ரதிநியதமானபடியிலே அநுஸந்தித்து, ஸ்வதந்த்ரனுடைய க்ருபையிலே ஊன்றிப் போரவடுக்கும் என்று கருத்து.

**விளக்கம்–** மேலே கூறியது போன்று கொண்டால், மேலே கூறப்பட்ட திருவாய்மொழி (10-8-9) – இன்றென்னை – என்னும் பாசுரத்திற்கும், அந்தப் பாசுரத்திற்கு ப்ரமாணமாக உள்ள சாஸ்த்ரங்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமைக்கு என்ன விளக்கம் (அதாவது - என்னை ஏன் முன்பே கைவிட்டு, இப்போது எனது மனதில் புகுந்தான் என்று ஆழ்வார் கேட்க, அதற்கு எம்பெருமானிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை என்ற நிலைக்கும், எம்பெருமானே அனைத்து காலத்திலும் அனைவருக்கும் ரக்ஷகனாக உள்ளான் என்னும் கருத்திற்கும் உள்ள முரண்பாட்டிற்கான விளக்கம்) அளிக்கமுடியும்? இதனை விளக்குவோம். ஈச்வரனுடைய ஸ்வாதந்த்ர்யத்திற்கும் (சுதந்திரமாக செயலாற்றுதல், எந்தவிதமான தடையும் இல்லாத ஸங்கல்பம் போன்றவை), அவனுடைய கருணைக்கும் ஆழ்வார் முக்கியத்துவம் அளிக்கிறார். இதன் காரணமாக தான் அவனைப் பற்றுவதற்குச் செய்யும் யுக்திகளைத் தள்ளுகிறார். இதனை அவர், “முன்பு நீ என்னைப் பாராமுகமாகக் கைவிட்டதற்கும், இப்போது என்னை உனக்கு மிகவும் வேண்டியவனாக ஏற்றதற்கும் உன்னுடைய சுதந்திரம் மற்றும் காருண்யம் அல்லாமல் வேறு எந்தக் காரணத்தையும் நான் முக்கியமானதாக எண்ணவில்லை; ஆனால் வேறு ஏதேனும் காரணம் உள்ளது என்று அனைத்தும் அறிந்த நீ எண்ணினால், அந்தக் காரணங்களை எனக்கும் உணர்த்துவாயாக”, என்று கூறுகிறார். இதற்கு எந்தவிதமான பதிலும் ஈச்வரன் அளிக்காததால், அவனது ஸ்வாதந்த்ர்யம் மற்றும் காருண்யம் ஆகியவையே ஈச்வரன் ஒருவனை முதலில் கைவிடுவதற்கும், பின்னர் தனக்கு மிகவும் விருப்பமானவனாக ஏற்பதற்கும் உள்ள முக்கிய காரணங்கள் என்று உலகிற்கு அருளிச்செய்தார். ஆக ஸர்வேச்வரன் ஒரு சேதநனை தன்னுடைய லீலைக்கு உட்படுத்துதல் என்பதற்கு அவனுடைய ஸ்வாதந்த்ர்யம் என்பதே முக்கியமான காரணமாக உள்ளது; அந்தச் சேதநன் ஸர்வேச்வரனின் ஆணைகளுக்குக் கட்டுப்படாமல் எல்லையற்ற காலமாக வாழ்ந்தபடி இருப்பதே இதற்குத் துணைக்காரணமாக உள்ளது. ஸர்வேச்வரன் சேதநனுக்குப் பரமபதத்தில் தன்னுடைய இன்பங்களை அளித்தல் என்பதற்கு அவனுடைய காருண்யம் என்பதே முக்கியமான காரணமாக உள்ளது; ஸர்வேச்வரன் சேதநனுக்குத் தண்டனை அளிப்பதிலிருந்து காப்பதும், ஸர்வேச்வரனின் காருண்யத்தை அடையத் தடையாக உள்ளவற்றை நீக்குவதுமான வ்யாஜங்கள் (பக்தி, ப்ரபத்தி முதலானவை) துணைக்காரணமாக உள்ளன. எம்பெருமானின் காருண்யம் காரணமாக சேதநன் ஒருவன் நற்செயல்களில் ஈடுபட்டு, அதனால் பக்தி மற்றும் ப்ரபத்தி போன்றவற்றைக் கைக்கொண்டு ஸர்வேச்வரனின் கருணையைப் பெறுகிறான். இவை ஸர்வேச்வரனின் ஸ்வாதந்த்ர்யம் மற்றும் காருண்ய ஸ்வபாவங்களை உணர்த்துவதாக உள்ளன. ஸர்வேச்வரன் பாரபக்ஷம் இல்லாதவன்

மற்றும் தண்டிக்காமல் உள்ள ஸ்வபாவம் கொண்டவன் என்பதும், பந்தங்கள் மற்றும் மோக்ஷத்தை அடைதல் என்பதும் அவனுடைய ஆணைகளை மீறுவதாலும், பக்தி போன்ற வ்யாஜங்களைக் கைக்கொள்வதாலுமே ஆகும் என்று ப்ரமாணங்கள் கூறுவதை அறியவேண்டும். ஆகவே ப்ரபந்நன் ஒருவன் ஸர்வேச்வரனின் க்ருபை என்பதில் ஆழ்ந்த விச்வாசமும் பக்தியும் கொண்டவனாக இருத்தலே பொருந்தும்.

## ஸ்வாதந்த்ர்யம் மற்றும் காருண்யம் ஒன்றாவதால் நன்மை

**மூலம்** – நிஷ்க்ருபனுடைய ஸ்வாதந்த்ர்யம் பாதகம். அஸ்வதந்த்ர்யனுடைய காருண்யம் பரர்க்கும் அநுபகாரகமாய்த் தனக்கும் க்லேசாவஹமாயிருக்கும். ஸ்வதந்த்ரனுடைய காருண்யம் நினைத்து முடிக்கையாலே தனக்கும் அதிரஸமாய் ஆச்ரயிப்பார்க்கெல்லாம் அன்றே அநிஷ்ட நிவ்ருத்திக்கும் இஷ்ட ப்ராப்த்திக்கும் உடலாயிருக்கும்.

**விளக்கம்** – க்ருபை என்பதே இல்லாமல் இருக்கின்ற ஒருவனது சுதந்திரம் என்பது தீமையை மட்டுமே அளிக்கும். சுதந்திரம் இல்லாதவன் ஒருவனுடைய காருண்யம் என்பது மற்றவர்களுக்கும் உதவாமல், அவனுக்கும் துன்பத்தை அளிப்பதாகவே இருக்கும். ஆனால் சுதந்திரத்துடன் கூடிய ஒருவனது காருண்யம் என்பது அவன் எதனைச் செய்யவேண்டும் என்று எண்ணுகிறானோ அதனைச் செய்து முடிக்க வல்லதாக உள்ளதால் - அவனுக்கும் இன்பதை அளித்து, அவனை அண்டியவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதாகவும், அவர்களுக்கு விருப்பம் அல்லாதவற்றை விலக்குவதாகவும் உள்ளதற்குக் காரணமாக இருக்கும்.

## அவதாரங்களின்போது ஈச்வரனுக்குத் துக்கங்கள் பற்றிக் கூறுவதன் பொருள்

**மூலம்–** இப்படியாகையாலேஅவதாரதசையிலும் வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி துக்கித: என்றிப்புடையிற்சொல்லுமவையெல்லாம் அநுக்ரஹ விஷயமாய் இருப்பார் சிலரை ரஞ்ஜிப்பிக்கைக்கும் அஸுர ப்ரக்ருதிகளை மோஹிப்பிக்கைக்குமாக வத்தனை. இவ்வர்த்தத்தை

காலஸ்ய ஹி ச ம்ருத்யோச்ச ஜங்கம ஸ்தாவரஸ்ய ச
ஈசதே பகவாநேக: ஸத்யமேதத் ப்ரவீமி தே
ஈசந்நபி மஹாயோகீ ஸர்வஸ்ய ஜகத: ப்ரபு:
கர்மாண்யாரபதே கர்த்தும் கீநாச இவ துர்பல:
தேந வஞ்சயதே லோகாந் மாயாயோகேந கேசவ:
யே தமேவ ப்ரபத்யந்தே ந தே முஹ்யாந்தி மாநவா:

க்ருத்வா பாராவதரணம் ப்ருதிவ்யா: ப்ருதுலோசந:
மோஹயித்வா ஜகத்ஸர்வம் கத: ஸ்வம் ஸ்தாநமுத்தமம்

மநுஷ்ய தேஹிநாம் சேஷ்டாமித்யேவமநுவர்த்ததே
லீலா ஜகத்பதே: தஸ்ய சந்தத: ஸம்ப்ரவர்த்ததே

இத்யாதிகளில் மஹர்ஷிகள் அறுதியிட்டார்கள். ஆகையால் அவதார வ்ருத்தாந்தங்களிலும் துக்காபிநயமாத்ரமேயுள்ளது. அது தானும் க்ருபாமூலம். இது ஸ்வதந்த்ரனான தனக்கு லீலையுமாயிருக்கும். கூனர் குறளரைக் கொண்டாடி ரக்ஷிக்கை நிரபேக்ஷரான ராஜாக்களுக்கு நிலையுமாய் க்ருபாகார்யமுமாய்க் காணாநின்றோமிறே. இப்படியாகையாலேயிறே உபாதத்தே ஸத்தா ஸ்திதி நியமநாத்யை: சிதசிதௌ ஸ்வமுத்திச்ய ஸ்ரீமாந் என்றது. இப்படி பரஹித வ்யாபாராச்ரயமாகையாலே ஆச்ரிதர்க்கு ரக்ஷகனுமாய் உபாயாந்தர ஸ்தாநநிவேசத்தாலே உபாயமுமாயிருக்கும். ரக்ஷண வ்யாபார பலாச்ரயமாகையாலே சேஷியுமாய் அதடியாக ப்ராப்யனுமாயிருக்கும். இப்படியிருக்கை இவனுக்கு ஸ்வரூப ப்ரயுக்தமென்று தர்மிக்ராஹக ப்ரமாணஸித்தம். இப்படி ரக்ஷகனான ஈச்வரனுக்கு ப்ரதானமான ஞான சக்தி கருணைகளில் ஞான சக்திகள் நிக்ரஹாநுக்ரஹ ஸாதாரணங்கள். காருண்யம் அநுக்ரஹத்துக்கு அஸாதாரணம்.

**விளக்கம்–** இராமாயணம் அயோத்யாகாண்டம் (2-40) - வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி துக்கித: - மனிதர்களின் துன்பங்களைக் காணும் இராமன் மிகுந்த துக்கம் அடைகிறான் – போன்ற வரிகள் காண்க. இது போன்ற வரிகள் அவனுடைய கருணைக்கு இலக்காகத் தகுதி பெற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கவே ஆகும். மேலும் இப்படியாக அவன் துக்கப்படுவதாகக் கூறப்படுவது அசுரர்களை ஒத்த குணங்கள் கொண்டவர்கள், "அவன் ஈச்வரனின் அவதாரம் அல்ல, சாதாரண மனிதனே" என்னும் மயக்கத்தில் முழுகுவதற்காக ஆகும். இதனைக் கீழே உள்ள பல வரிகள் மூலமாக மஹரிஷிகள் கூறுகின்றனர்:

- மஹாபாரதம் உத்யோகபர்வம் (67 – 13, 14, 15) :

காலஸ்ய ஹி ச ம்ருத்யோச்ச ஜங்கம ஸ்தாவரஸ்ய ச
ஈசதே பகவாநேக: ஸத்யமேதத் ப்ரவீமி தே
ஈசந்நபி மஹாயோகீ ஸர்வஸ்ய ஜகத: ப்ரபு:
கர்மாண்யாரபதே கர்த்தும் கீநாச இவ துர்பல:
தேந வஞ்சயதே லோகாந் மாயாயோகேந கேசவ:
யே தமேவ ப்ரபத்யந்தே ந தே முஹ்யாந்தி மாநவா:

**இதன் பொருள்–** காலம், ம்ருத்யு, அசையும் மற்றும் அசையாப் பொருள்களை பகவான் மட்டுமே நியமனம் செய்கிறான். இதனை நான் உனக்கு உண்மையாக உரைக்கிறேன். அனைத்திற்கும் பிரபுவாகவும், வியப்பான ஞானம் மற்றும் சக்திகளைக் கொண்டவனாகவும், அனைத்தையும் நியமிப்பவனாகவும் இருந்தாலும் சாதாரண ஒரு மனிதன் மோன்று தேவையற்ற கர்மங்களைச் செய்கிறான் (தேர் ஓட்டுதல், தூது செல்லுதல்). இதன் மூலமாக உலகில் உள்ளவர்களுக்கு “தான் ஒரு சாதாரணமானவன்” என்னும் மயக்கம் தோன்றும்படி வஞ்சிக்கிறான். ஆனால் யார் அவனைச் சரணம் அடைகின்றனரோ, அவர்கள் இந்த மயக்கத்தில் ஆழ்வதில்லை.

- மஹாபாரதம் மௌஸலபர்வம் (9-34) - க்ருத்வா பாராவதரணம் ப்ருதிவ்யா: ப்ருதுலோசந: மோஹயித்வா ஜகத்ஸர்வம் கத: ஸ்வம் ஸ்தாநமுத்தமம் – நீண்ட அழகான திருக்கண்களைக் கொண்ட க்ருஷ்ணன் இந்த உலகின் பாரத்தை இறக்கினான். பின்னர் உலகமே மயங்கும்படியாகச் செய்து, மிகவும் உயர்ந்த தனது இடத்தை மீண்டும் அடைந்தான்.

- விஷ்ணுபுராணம் (5-22-18) - மநுஷ்ய தேஹிநாம் சேஷ்டாமித்யேவமநுவர்த்ததே லீலா ஜகத்பதே: தஸ்ய சந்தத: ஸம்ப்ரவர்த்ததே – இப்படியாக அவன் மனிதர்களின் செயல்களைக் கடைபிடிக்கிறான். உலகின் அதிபதியான அவனது இப்படிப்பட்ட லீலைகள் அனைத்தும் அவனுடைய ஸங்கல்பத்தாலேயே உண்டாகின்றன.

இப்படியாக அவனது அவதாரங்களின்போது துக்கப்படுவதாக காண்பித்துக் கொள்ளுதல் என்பது ஓர் அபிநயம் (லீலை) என்றே உள்ளது. இதற்கும் அவனது க்ருபையே மூலமாக உள்ளது. இது சுதந்திரமாக உள்ள அவனுக்கும் லீலையாக உள்ளது. ஒரு சில அரசர்கள் எந்தவிதமான ப்ரதிபலனையும் எதிர்பாராமல் கூனர்களையும், குள்ளர்களையும் தங்களது பாதுகாப்பில் பத்திரமாக வைத்துள்ளதைக் காண்கிறோம் அல்லவோ? இது அந்த அரசர்களுக்கு பொழுதுபோக்கு மட்டும் அல்ல, கருணையின் வெளிப்பாட்டினால் ஆகும்.

இதனால் அல்லவோ ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (2-87) ஸ்வாமி பராசரபட்டர் - உபாதத்தே ஸத்தா ஸ்திதி நியமநாத்யை: சிதசிதௌ ஸ்வமுத்திச்ய ஸ்ரீமாந் – ஒரு பொருளை ஒரு பொருளாகப் படைத்தல், இப்படியாக உண்டான அந்தப் பொருள் நிலையாக உள்ளபடி செய்தல், அதனை நியமித்தல் போன்ற செயல்களைத் தனது லீலைக்காகவே செய்கிறான் என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன – என்று அருளிச்செய்தார். இப்படியாக ஸர்வேச்வரன் மற்றவர்களுக்கு நன்மைகளை அளிக்கின்ற அனைத்து செயல்களுக்கும் இருப்பிடமாக உள்ளதால், தன்னை அண்டியவர்களுக்கு ரக்ஷகனாக உள்ளான்; தன்னை உபாயம் என்னும் ஸ்தானத்தில் நிலைநிறுத்திக் கொள்வதால், உபாயமும் அவனே ஆகிறான். இப்படியாகத் தன்னை அண்டியவர்களைக் காப்பது என்னும் செயல்களால் உண்டான மகிழ்வை அவன் அடைவதால், அவனே எஜமானனாகவும், அடையப்படும் இலக்காகவும் உள்ளான். இப்படியாக இவன் இருத்தல் என்பது இவனுக்கு இயல்பாகவே உள்ள தன்மை என்பதை ப்ரப்ரஹ்மத்தை விளக்குகின்ற சாஸ்த்ரங்கள் மூலமாக நாம் அறியலாம்.

## ஸர்வேச்வரனின் கருணையால் உண்டாகும் நன்மைகள்

**மூலம்–** இங்குக் காருண்யமாவது பரஹித ப்ரவணதை. இது த்ரிவித சேதநர்களுடைய ஸத்தா ஸ்திதிகளுக்கும், அநுகூல வ்ருத்திகளுக்கும், நித்யருடைய நித்யாநுபவத்துக்கும், முக்தருடைய அநாவ்ருத்திக்கும், லீலாவிபூதியில் ஸாமாந்ய ஸ்ருஷ்ட்யாதிகளுக்கும், ஸ்வாவதாரரூபையான சுத்த ஸ்ருஷ்டிக்கும், சாஸ்த்ரப்ரவர்த்தநத்துக்கும், அதடியாகத் தத்வஹித விஷயமான ஜ்ஞாநத்தைப் பிறப்பிக்கைக்கும், மோக்ஷ ச்ரத்தையை உண்டாக்குகைக்கும், இது கொடுக்கைக்கு ஸ்யாஜமான ஸுக்ருத விசேஷத்துக்கும், அதிகாராநுரூபங்களான நிக்ரஹசமநோபாயங்களைக் கொடுக்கைக்கும், இவற்றில் கரண ப்ரேரண தசையில் ஸஹகாரியாய் நிற்கைக்கும், உபாஸகனுக்கு அந்தராயம் வந்தால் ப்ரதிஸமாதாநம் பண்ணுவிக்கைக்கும், அகிஞ்சநர்க்கு உபாய ஸ்தாநத்திலே நின்று நிரபாயமாக ரக்ஷிக்கைக்கும், இவ்வ்யாஜங்களைக் கொண்டு ப்ரஸந்நனாய் அநாதிகாலம் பண்ணின அநந்த மஹாபாரதங்களை அநாதரித்து அநந்த ஸுகத்திலே விச்ரமிக்கும்படி ஸம்ஸார நிவர்த்தகனாகைக்கும், ஆர்த்தப்ரபந்நர்க்கு அப்போதே மோக்ஷங் கொடுக்கைக்கும், இருந்த நாள் நிரபராதனாயிருக்க வேணுமென்று பலம் கோல மறந்த த்ருப்தப்ரபந்நனுக்குப் ப்ராரப்தகர்மவசத்தாலே புகுந்த அபராதத்துக்கு அநுதாபத்தை விளைப்பித்து அதிகாராநுரூபமான ப்ராயச்சித்த விசேஷத்திலே மூட்டுகைக்கும், அங்ஙன் ம்ருதுப்ரக்ருதிகளல்லாதார்க்கு யமவிஷயகமநமும் கோலின பலத்துக்குப் ப்ரதிபந்தமும் வாராதபடி பண்ணி உபக்லேசங்களாலே சிக்ஷிக்கைக்கும் ப்ரதாநமான ஸாமாந்ய நிதாநமாயிருக்கும்.

**விளக்கம்–** காருண்யம் என்பது அனைவருக்கும் நன்மையை மட்டுமே செய்யவேண்டும் என்னும் ஈடுபாடு ஆகும். இப்படிப்பட்ட ஈச்வரனின் காருண்யம் என்பது பின்வரும் பலவற்றிலும் வெளிப்படுகிறது:

- பத்தர், முக்தர் மற்றும் நித்யர் ஆகிய மூன்றுவிதமான சேதநர்களின் ஸ்ருஷ்டி மற்றும் இருப்பு
- அவர்கள் ஈச்வரனின் மனதிற்கு ஏற்ற செயல்களில் மட்டுமே ஈடுபடுதல்
- நித்யஸூரிகள் எப்போதும் அவனை அனுபவித்தபடி உள்ள நிலை
- ஸம்ஸார பந்தங்களிலிருந்து மீண்டு முக்தி அடைந்தவர்கள் மீண்டும் ஸம்ஸாரத்திற்குத் திரும்பாத நிலை
- லீலாவிபூதியில் உள்ள பலவற்றையும் ஸ்ருஷ்டி செய்தல்
- தன்னுடைய அவதாரங்கள் என்னும் தூய்மையான ஸ்ருஷ்டிகள்
- சாஸ்த்ரங்கள் தழைத்தோங்குவதற்கும், அதன் மூலமாக நன்மைகள் மற்றும் உண்மைகள் பற்றிய ஞானம் அடையவைத்தல்
- மோக்ஷத்தின் மீது ஆசை கொள்ளும்ப்படிச் செய்தல்
- மோக்ஷ ஆசையைத் தூண்டவல்ல காரணமாக இருக்கின்ற நன்மை பயக்கும் செயல்களைச் செய்யும்படிச் செய்தல்
- தன்னுடைய ஆணைகளை மீறுவதால் கிட்டக்கூடிய தண்டனைகளில் இருந்து தப்பவைக்கும் உபாயங்களை அவரவர்களின் தகுதிக்கு ஏற்பச் செய்யும்படித் தூண்டுதல்
- இவ்விதமான உபாயங்களில் ஜீவன் தன்னுடைய புலன்களைத் தூண்டி செயலாற்றும் நிலையில் உள்ளபோது, அவனுக்கு உதவி செய்தல்
- உபாஸகன் ஒருவனுக்கு ஏதேனும் இடையூறு உண்டானால், அதனை நீக்கும்விதமாக அதற்கான எளிய ப்ராயச்சித்தம் செய்யும்படிச் செய்தல்
- மற்ற உபாயங்கள் அனைத்தையும் கைவிட்டு நிற்கின்ற ப்ரபந்நர்களுக்கு, அந்த உபாயங்கள் என்ன செய்யுமோ அதனைத் தானே செய்து, அவர்களை அனைத்து ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றுதல்
- ஒருவனது உபாயங்களையே காரணமாகக் கொண்டு, அவன் எல்லையற்ற காலமாகச் செய்துவரும் அபராதங்களைத் தள்ளி, இந்த ஸம்ஸார உலகத்திலிருந்து மீட்டு, எல்லையற்ற ஆனந்தத்தில் ஓய்வெடுக்கும்படிச் செய்தல்
- மோக்ஷம் பெறுவதில் காலதாமதம் பொறுக்காத ஆர்த்தப்ரபந்நர்களுக்கு உடனடியாக மோக்ஷம் அளித்தல்
- உடனடியாக மோக்ஷம் பெற விரும்பாமல், ப்ரபத்தி செய்யும்போது எதிர்காலங்களில் பாவங்கள் செய்யாமல் இருக்கவேண்டும் என்று விண்ணப்பம் செய்ய மறந்த ப்ரபந்நர்கள் இருப்பார்கள். அவர்கள், பலன் தரத்தொடங்கிவிட்ட (ப்ராரப்தகர்மங்கள்) கர்மங்களின் காரணமாக ஏதேனும் அபராதங்கள் செய்யக்கூடும். இதற்கான ப்ராயச்சித்தங்களை அவரவர்களின் தகுதிக்கு ஏற்ப செய்யும்படித் தூண்டுதல்

- இப்படி ப்ராயச்சித்தம் செய்யாமல் கல்மனதுடன் உள்ளவர்கள் யமலோகம் செல்லாதபடியும், ப்ரபத்தியானது பலிக்கும்படியும் செய்தல்; அத்தகைய தவறுகளுக்காகச் சிறிய தண்டனைகள் அனுபவிக்கும்படிச் செய்தல்

## ஸித்தோபாயம், ஸாத்யோபாயம்

**மூலம்** – இப்படிப்பட்ட க்ருபாவிசிஷ்டனான ஈச்வரன் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் என்கிறபடியே ஸித்தோபாயம். இவனுக்கு ப்ரஸாதங்களான பக்தி ப்ரபத்திகள் ஸாத்யோபாயங்கள்.

**விளக்கம்–** மேலே கூறப்பட்ட கருணை நிரம்பிய ஈச்வரனே, மஹாபாரதம் வனபர்வம் (71-123) - க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்- க்ருஷ்ணனே எப்போதும் உள்ள தர்மம் (உபாயம்) – என்று கூறுவதற்கு ஏற்ப, ஸித்தோபாயமாக உள்ளான். ப்ரபந்நன் ஒருவனை எப்போது மகிழும்படிச் செய்யவல்ல பக்தி, ப்ரபத்தி போன்றவை ஸாத்யோபாயங்கள் ஆகும்.

## ப்ரபத்தி என்பது அதிகாரி விசேஷணம் என்பதற்கான மறுப்பு

**மூலம்** – ஓர் அதிகாரி விசேஷத்துக்குக் கர்த்தவ்யமாக "மாமேகம் சரணம் வ்ரஜ" என்று விதிக்கப்படுகிற ப்ரபத்தியை அதிகாரி விசேஷணமென்று சிலர் சொன்னவிடம், அதிகாரி விசேஷணத்துக்குச் சொல்லும் லக்ஷணத்தோடு சேராமையாலே அதிவாதம். இங்ஙனல்லாதபோது ஈச்வரன் உபாயமாய் நிற்க உபாஸநாதி சாஸ்த்ரார்த்தங்களும் அதிகாரி விசேஷணங்களாம்.

**விளக்கம்–** ப்ரபத்தி என்பது கீதையில் (18-66) - மாமேகம் சரணம் வ்ரஜ – என்னை மட்டுமே சரணம் என்று அடைவாயாக – என்று தெளிவாக விதிக்கப்படுகிறது. ஆனால் ஒரு சிலர் இத்தகைய ப்ரபத்தி என்பது இது போன்று விதிக்கப்படுவது அல்ல, அது அந்தந்த அதிகாரியின் தன்மைக்கு உட்பட்டது ஆகும் என்று கூறுகின்றனர். இது சாஸ்த்ரங்களுக்கு அடங்காத வாதமாகும். எப்படி? இது அதிகாரி விசேஷணத்துக்கு உரைக்கபடும் லக்ஷணத்துடன் சேராத காரணத்தால் ஆகும் (இதனைப் புரிந்து கொள்வோம். வேதங்களில் – ஸ்வர்க்க காமோ யஜேத – ஸ்வர்க்கம் விரும்புகிறவன் யாகம் செய்யக்கடவன் – என்று உள்ளது. அதாவது "ஸ்வர்க்கம் விரும்புதல்" என்பது அந்த அதிகாரிக்கு முன்னரே உள்ள தன்மையாக இருப்பதால், "யாகம் இயற்றவேண்டும்" என்று விதிக்கப்படுகிறது. ஆனால் ப்ரபத்தி என்பது இது போன்ற விதியைக் கேட்ட பின்னரே கைக்கொள்ளபடுவதால், இதனை அதிகாரியின் தன்மையாகக் கொள்ள இயலாது).

இவ்விதம் கொள்ளவில்லை என்றால், உபாயமாக ஈச்வரன் உள்ளபோது, உபாஸனை குறித்துக் கூறும் சாஸ்த்ரங்கள் அனைத்தும் செயல்களை விளக்கவில்லை, அவை அதிகாரிகளின் விசேஷணங்கள் என்றே ஆகிவிடும்.

## ப்ரபத்தி உபாயம் அல்ல என்று கூறுபவர்களின் கருத்து

**மூலம்** –ஆகையால் ப்ரபத்தியுங்கூட உபாயமன்றென்று சிலர் அதிவாதம்பண்ணுகிறதுவும் ஸித்தோபாயத்தினுடைய ப்ராதாந்யமடியாக வித்தனை. அது ப்ரதாநமானபடி ப்ரஸாதங்களாலே ப்ரதிபந்தகமான நிக்ரஹம் சமித்தால் ஸ்வாபாவிகாநுபவத்துக்குப் ப்ரயோஜகமாகையாலே. அதெங்ஙனேயென்னில், ரத்நத்துக்கு அழுக்கற்றால் வரும் ஸ்வாபாவிகமான ப்ரபாவிகாஸமும் அதுக்கு அநுரூபமான பகவத்ஸங்கல்பமாத்ரத்தாலேயானாற் போலே முக்தனுக்கு வரும் ஜ்ஞானவிகாஸாதிகளும் அதுக்கு அநுரூபமாய்க் கொண்டு வ்யவஸ்திதமான பகவத்ஸங்கல்பமடியாகவாயிருக்கும். இப்படி நித்யர்க்கும். இவ்வர்த்தத்தை இச்சாத ஏவ தவ விச்வபதார்த்தஸத்தா என்று அபியுக்தர் ஸங்க்ரஹித்தார்கள். ஆகையால் ஸித்தோபாயம் ப்ரதாநமேயாகிலும் தத்வசீகரணார்த்தமான ஸாத்யோபாயாநுஷ்டா நத்துக்கு "இன்றென்னை" இத்யாதி பூர்வாசார்யவாக்ய விரோதமில்லை.

யோ மே கர்ப்பகதஸ்யாபி வ்ருத்திம் கல்பிதவாந் ப்ரபு:
சேஷவ்ருத்திவிதாநே அபி கிம் ஸுப்தஸ்ஸ: அத வா ம்ருத:

இத்யாதிகளும் ரக்ஷகாந்தரம் தேடாமைக்குச் சொன்னவையத்தனை, அல்லாதபோது போஜநாதி வ்யாபாரங்களும் தவிரவேணும்.

ஸ்வயம் ம்ருத்பிண்டபூதஸ்ய பரதந்த்ரஸ்ய தேஹிந:

ஆஜ்ஞோ ஜந்துரநீச: அயம் ஆத்மநஸ்ஸுகதுக்கயோ:
ஈச்வரோப்ரேரிதோ கச்சேத் ஸ்வர்க்கம் வா ச்வப்ரமேவ வா

அப்ரமேயோ அநியோஜ்யச்ச யத்ர காமகமோ வசீ
மோததே பகவாந் பூர்த்தை: பால: க்ரீடநகைரிவ

இத்யாதிகளில் ஜீவனுடைய பாரதந்த்யமும், ஈச்வரன் இவனுடைய கர்மாநுகுணமாக நடத்தும்படியுஞ் சொன்னவித்தனை. இப்பாட்டுக்கும் இவ்வசநங்களுக்கும் இப்படி தாத்பர்யமல்லாதபோது ஸர்வசாஸ்த்ர விரோதமும் பூர்வாபரவிரோதமும் வரும்.

**விளக்கம்–** ஆகவே ப்ரபத்தி என்பது ஓர் உபாயம் அல்ல என்று மிகைப்படுத்தி ஒரு சிலர் கூறும் வாதங்கள் அனைத்தும், ஸித்தோபாயமான எம்பெருமானே முதன்மையான உபாயமாக இருப்பதன் காரணமாகவே ஆகும். ஸித்தோபாயம் என்பது மிகவும் முதன்மையாக உள்ளது; எப்படி என்றால், தகுந்த ப்ராயச்சித்தம் காரணமாக செய்த தவறுகளுக்கான தண்டனைகளை எம்பெருமான் தள்ளுபடி செய்யும்போது, இத்தகைய ஸித்தோபாயம் என்பதே ஆத்மாவின் ஸ்வபாவத்துக்கு ஏற்றபடி இருந்து, பகவத் அனுபவத்தை அளிக்கிறது. இது எப்படி என்பதைக் கூறுவோம். ஒரு இரத்தினக்கல்லின் மீது படிந்துள்ள அழுக்குகளை நீக்கினால், தன் இயல்பான ஒளியுடன் மிகவும் ப்ரகாசமான ஒளிர்கிறது; ஆனால் அந்தக் கல்லின் இயல்பான ப்ரகாசம் என்பது, “இந்தக் கல்லிற்கு இந்த ப்ரகாசம் இருக்கட்டும்” என்று எம்பெருமான் ஸங்கல்பித்ததாலேயே உண்டாகிறது. இது போன்றே முக்தன் ஒருவனுக்கு உண்டாகின்ற ஞானப்பெருக்கம் உள்ளிட்ட பல தன்மைகள், பகவத்ஸங்கல்பம் காரணமாகவே உண்டாகிறது. இது போன்ற நிலையே நித்யஸூரிகளுக்கும் உள்ளது. இதனையே நன்கு அறிந்தவர்கள் ஸ்ரீவைகுண்டஸ்தவம் (36) - இச்சாத ஏவ தவ விச்வபதார்த்தஸத்தா – உன்னுடைய இச்சையின் காரணமாகவே இந்த உலகத்தில் ஒரு பொருளாக இருக்கின்ற நிலை எங்களுக்கு உண்டானது – என்று சுருக்கமாக உரைத்தனர். ஆகவே ஸித்தோபாயம் என்பது முதன்மையான உள்ளபோதிலும், அவனுடைய கருணையைப் பெறுவதான ஸாத்யோபாயமும் கைக்கொள்ளப்பட வேண்டும். இந்தக் கருத்து, திருவாய்மொழி (10-8-9) – இன்றென்னை – என்பதில் உள்ள பூர்வர்களின் கருத்துடன் எந்த முரண்பாடும் கொள்ளவில்லை.

விஷ்ணுதர்மம் - யோ மே கர்ப்பகதஸ்யாபி வ்ருத்திம் கல்பிதவாந் ப்ரபு: சேஷவ்ருத்திவிதாநே அபி கிம் ஸுப்தஸ்ஸ: அத வா ம்ருத: - எந்த ஒரு ஸர்வேச்வரன் நான் எனது தாயின் கர்ப்பத்தில் இருந்தபோதும் பிழைக்கும்படியான வழிகளைச் செய்தபடி இருந்தானோ அவன், நான் இப்போது பிறந்து பின்னர் என்னைப் பிழைக்கவைக்கும் உபாயங்களின் விஷயத்தில் உறங்குகிறானோ அல்லது மறைந்தானோ – என்றது காண்க. இந்த வரியானது ஸர்வேச்வரன் மட்டுமே உபாயம் என்பதையும், ஜீவன் வேறு எந்தவிதமான உபாயத்தையும் கைக்கொள்ள வேண்டியதில்லை என்பதையும் உணர்த்துவதற்காகக் கூறப்படுவதாகும். இதன் உட்கருத்து நம்மைக் காக்க வேறு எதனையும் நாடக்கூடாது என்பதே ஆகும். இவ்விதம் கொள்ளவில்லை என்றால் உண்ணுவது போன்ற செயல்களைக் கூடச் செய்யவேண்டாம் என்றாகிவிடும்.

- இதிஹாஸ ஸமுச்சயம் - ஸ்வயம் ம்ருத்பிண்டபூதஸ்ய பரதந்த்ரஸ்ய தேஹிந: - ஈச்வரனின் உதவி இல்லையென்றால் ஜீவன் மண்கட்டி போன்று மற்றவர்களுக்கு வசப்பட்டுத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் திறன் கூட அற்றவனாக உள்ளான்.

- மஹாபாரதம் சாந்திபர்வம் (12-36) - ஆஜ்ஞோ ஜந்துரநீச: அயம் ஆத்மநஸ்ஸுகதுக்கயோ: ஈச்வரோப்ரேரிதோ கச்சேத் ஸ்வர்க்கம் வா ச்வப்ரமேவ வா – ஜீவன் அறிவற்றவனாகவும், தன்னுடைய சுகதுக்கங்களைக் கூட ஈட்டுவதற்குத் திறன் அற்றவனாகவும் உள்ளான். ஈச்வரனால் நியமிக்கப்பட்டு ஸ்வர்க்கமோ, நரகமோ செல்கிறான்.

- மஹாபாரதம் ஸபாபர்வம் (40-78) - அப்ரமேயோ அநியோஜ்யச்ச யத்ர காமகமோ வசீ மோததே பகவாந் பூர்த்தை: பால: க்ரீடநகைரிவ – ஸர்வேச்வரன் அனைத்தும் நிரம்பியவன், யாராலும் ஏவத் தகாதவன், எங்கே செல்ல எண்ணுகிறானோ அங்குச் செல்லும் திறன் கொண்டவன், அனைத்தையும் தனது வசத்தில் வைத்துள்ளவன், குழந்தை விளையாட்டுப் பொம்மைகள் கொண்டு விளையாடுவது போன்று, உலகில் உள்ள அனைத்தையும் வைத்துக் கொண்டு விளையாடியபடி உள்ளான்.

மே உள்ள வரிகளின் மூலம் ஜீவன் ஸர்வேச்வரனுக்கு மட்டுமே வசப்படுதலையும், ஈச்வரன் ஜீவனுடைய கர்மங்களுக்கு ஏற்ப வழிநடத்துகிறான் என்பதையும் கூறுவதாக உள்ளன; அதாவது எதனையும் விடும்படி உரைக்கவில்லை. இதே போன்ற கருத்தைத் திருவாய்மொழி பாசுரத்திற்கும், மேலே உள்ள ச்லோகங்களுக்கும் கொள்ளவில்லை என்றால், சாஸ்த்ரங்களுடன் விரோதம் ஏற்படும்; மேலும் முன்னர் கூறியவற்றுக்கு முரண்பாடு உண்டாகும்.

## சேஷ-சேஷி ஸம்பந்தம் குறித்து உண்டாகும் தவறான கருத்துகளுக்கு விளக்கம்

**மூலம்–** இப்படி ஈச்வர ஸ்வாதந்த்ர்ய ஸஹஜகாருண்யங்கள் அடியாக வரும் கலக்கங்களுக்குப் பரிஹாரம் சொன்னோம். ஸம்பந்தவிசேஷமடியாக வருங்கலக்கத்துக்குப் பரிஹாரம் சொல்லுகிறோம்.

**விளக்கம்–** இப்படியாக ஸர்வேச்வரனின் எல்லையற்ற சுதந்திரத் தன்மை குறித்தும், அவனுக்கு இயல்பாகவே உள்ள கருணை குறித்தும் உண்டாகும் மயக்கங்களை நீக்கும் கருத்துக்களை உரைத்தோம். இனி அவனுக்கும் ஜீவனுக்கும் இயல்பாகவே உள்ள உறவுமுறை குறித்து உண்டாகும் மயக்கங்களை நீக்கும் கருத்துக்களை உரைப்போம்.

## சேஷ – சேஷி ஸம்பந்த தன்மையைக் காரணம் காண்பித்து ப்ரபத்தி அவசியம் இல்லை என்று கூறும் வாதமும், அதற்கான மறுப்பும்

**மூலம்**—ஈச்வரன் சேஷியாயிருக்க, நாம் கர்ப்பபூதாஸ்தபோதநா: என்னுங்கணக்கிலே ஸ்தநந்தய ப்ராயராயிருக்க தாய் முலைப்பாலுக்கு ஆர்த்தனாய் அழுதல் செய்யுமளவன்றிக்கே கூலி கொடுப்பாரைப்போலே, நாம் ஆத்மஸமர்ப்பணம் பண்ணுகையும், ரக்ஷிக்க வேணுமென்று அபேக்ஷிக்கையும், விச்வஸிக்கையும் என்றாற் போலே சொல்லுகிற இவையெல்லாம் ஸ்வரூபத்துக்குப் பொருந்துமோவென்று சிலர் ஸித்தோபாயமுகத்தாலே ஸாத்யோபாயசரீரத்தை அழிக்கப் பார்ப்பார்கள்.

**விளக்கம்** – ஒரு சிலர் ஸர்வேச்வரனின் க்ருபையைப் பெறுவதற்கு ஸாத்யோபாயம் என்பது அவசியம் இல்லை என்பார்கள். இதற்கு இவர்கள் கூறும் காரணம் ஸர்வேச்வரன் எஜமானனாக உள்ளதாலும், அவனுக்காக மட்டுமே நாம் அனைவரும் உள்ளதாலும், அவனுக்கே உரியவர்களாக நாம் உள்ளதாலும் என்பதாகும். இவர்கள் வைக்கின்ற வாதம் பின்வருமாறு: ஈச்வரன் நமக்கு சேஷியாகவும், நாம் அனைவரும் தாய்ப்பால் பருகும் குழந்தைகளாகவும் உள்ளோம். இராமாயணம் ஆரண்யகாண்டம் (3-1-21) - கர்ப்பபூதாஸ்தபோதநா: - குழந்தை போன்றவர்கள் என்று முனிவர்கள் இராமனிடம் உரைத்தனர் – என்று கூறுவது போன்று உள்ளோம். பசித்த குழந்தை தாய்ப்பாலுக்காக அழுவது அல்லாமல் வேறு ஏதேனும் செய்கைகள் செய்வதை யாரேனும் காண இயலுமா? இதனை விடுத்து அவனிடம் ஆத்மஸமர்ப்பணம் செய்வதும், தன்னைக் காக்கவேண்டும் என்று விரும்புவதும், ஆழ்ந்த விச்வாஸம் கொள்வதும் ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்குமோ என்று சிலர் கேட்கலாம். இவர்கள் ஸித்தோபாயமான எம்பெருமானைக் காண்பித்து ஸாத்யோபாயங்களை நீக்க முனைவார்கள்.

**மூலம்** – இவர்களை விலக்கும்படி பரமர்ஷிகளும் பாஷ்யகாராதிகளும் விச்வாஸபூர்வக ப்ரார்த்தநாத்மநிக்ஷேபாதிகளைத் தாங்களும் அநுஷ்டித்து இதுக்குச் சாஸ்த்ரங்களையும் மூதலிப்பித்துக் கொண்டு உபதேச பரம்பரையும் நடத்திப் போருகையாலே சேஷித்வாதி ஸம்பந்தம் நித்யமேயாகிலும் கர்மவான்களான ஜீவர்கள் விஷயத்தில் ஈச்வரன் ஒரு ஸாத்யோபாயவிசேஷத்தை முன்னிட்டல்லது ரக்ஷியான் என்று சாஸ்த்ரநிஷ்டருக்கு வேணும். சாஸ்த்ரத்தைக் கைவிட்டால் இஸ்ஸம்பந்தம் சொல்லுகைக்கு ஈச்வரனும் கிடையாது. ஆனபின்பு ஸம்பந்தமடியாக ஈச்வரன் ரக்ஷிக்க ப்ராப்தன் என்றும்,

சேஷபூதனான இவன் தன்னை ரக்ஷித்துக் கொள்ள ப்ராப்தனன்றென்றும் முன்பு சொன்னதுவும் ரக்ஷ்ய ரக்ஷக பாவத்துக்கு லோகத்ருஷ்ட ப்ரக்ரியையாலே ஔசித்யம் சொன்னபடி இத்தனை. இவ்வளவே ரக்ஷைக்கு நிரபேக்ஷகாரணமென்றபடியன்று. அப்படிக் கொள்ளில் ஸர்வரும் நித்யமுக்தராகப் ப்ரஸங்கிக்கும். ஸ்வாதந்த்ர்யத்தாலே நியமம் சொல்லில் முன்பு சொன்னபடியே வைஷம்ய நைர்க்ருண்யங்கள் ப்ரஸங்கிக்கும்.

**விளக்கம்** – இதற்கான சமாதானம் உரைப்போம். மஹரிஷிகளும் ஸ்ரீபாஷ்யகாரரான ஸ்வாமி எம்பெருமானாரும் தங்களுடைய வாழ்க்கையில், சரணாகதியை உணர்த்துகின்ற தகுந்த ப்ரமாணங்களை முன்னிட்டுக் கொண்டு, மஹாவிச்வாஸத்தை முன்னிறுத்தியபடி, ஸர்வேச்வரனின் ரக்ஷகத்தை வேண்டியபடி இருந்தனர். இவர்கள் இதற்கான தகுந்த ப்ரமாணங்களைக் காண்பித்தவர்களாக, தங்களுக்குப் பின்வருபவர்களுக்கு இவற்றைக் குறித்த உபதேசங்களையும் வைத்தனர். ஈச்வரனின் எஜமானத்தொடர்பு என்பது நித்யமாக உள்ளபோதிலும், தங்களது பூர்வகர்மபலன்களால் பீடிக்கப்படுகின்ற ஜீவர்கள், அவனுடைய க்ருபையைப் பெறுவதற்காக ஏதோ ஒரு உபாயத்தைக் (ஸாத்யோபாயத்தை) கைக்கொண்டால் மட்டுமே ஈச்வரன் அவர்களை ரக்ஷிக்கிறான்; இல்லையென்றால் ரக்ஷிப்பதில்லை. சாஸ்த்ரங்களை ஏற்பவர்கள் இந்த தத்துவத்தை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். மாறாக சாஸ்த்ரங்களைக் கைவிட்டால், இத்தகைய சேஷ-சேஷி ஸம்பந்தம் கூறுவதற்கு ஈச்வரனும் இல்லை என்றே ஆகிறது. எஜமானனாக உள்ளதால் தனக்கு அடிமையாக உள்ள ஜீவனை, உறவுமுறை காரணமாகக் காப்பாற்றவேண்டிய கடமை ஈச்வரனுக்கு உள்ளது என்றும்; அடிமையாக உள்ளதால் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளவேண்டிய அவசியமோ திறனோ ஜீவனுக்கு இல்லை என்றும் முன்பு கூறப்பட்டது (மாறாக மேலே ஈச்வரன் தகுந்த உபாயம் இன்றி காக்கமாட்டான் என்பது முரணாக உள்ளதே என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார்). இதன் கருத்து என்ன? அங்கு “காப்பாற்றப்படுகிறவன் – காப்பாற்றுபவன்” என்னும் இருவருக்கும் இடையே உள்ள உறவுமுறை என்பது, உலக வழக்கத்தில் காணப்படும் நடைமுறைகளின் அடிப்படையை வைத்து உரைக்கப்பட்டதாகும். எந்தவிதமான காரணமும் காப்பாற்றப்படுபவனுக்கு அமையாமல், காப்பவன் எப்போதும் காத்துநிற்பான் என்ற பொருள்பட அங்கு கூறவில்லை. இவ்விதம் கொண்டால் எப்போதும் அனைத்து ஜீவன்களும் ஸம்ஸாரபந்தம் என்பதே இல்லாமல், எப்போதும் நித்யமாக மோக்ஷம் அடைந்தவர்கள் என்றாகிவிடும். மாறாக தன்னுடைய சுதந்திரம் காரணமாக ஸர்வேச்வரன் ஒரு சிலரைப் பாதுகாக்கிறான்,

ஒரு சிலரை ஒதுக்கிவிடுகிறான் என்று கூறினால் – முன்பு உரைத்தபடி ஸர்வேச்வரன் பாரபக்ஷமாகவும் கொடுமையாகவும் நடக்கிறான் என்றாகிவிடும்.

## எம்பெருமானுடனான ஸம்பந்த ஞானமே போதுமானது, ப்ரபத்தி அவசியம் இல்லை என்பதற்கான மறுப்பு

**மூலம்**–யுக்திமாத்ரத்தால் இவ்வர்த்தங்கள் சொல்லுவார்க்கு "ஸம்பந்த ஜ்ஞாநமே அபேக்ஷிதம், ரக்ஷாபேக்ஷாதிகள் வேண்டாம்" என்று சொல்லவொண்ணாது. அசித்த்ரவ்யங்களும் பசு ம்ருக பக்ஷ்யாதிகளும் ஸ்தநந்தயரும் ரக்ஷாபேக்ஷா ரஹிதங்களானாற்போல ஸம்பந்தஞானரஹிதங்களுமாயிருக்க, அவற்றை ரக்ஷிக்கக் காணாநின்றோமிறே. அப்படிக் கண்டோமாகிலும் சாஸ்த்ர பலத்தாலே இங்கு ஸம்பந்த ஜ்ஞாநம் அபேக்ஷிதமென்னில், சாஸ்த்ரம் சொன்ன கட்டளையிலே ஜ்ஞாநவிசேஷம் ஸ்வீகரிக்கவேணும். தன்னை ஈச்வரன் ரக்ஷிக்கும்போது ஸம்பந்தத்தோடே கூட விலக்காமையே வேண்டுவதென்னில், அதுவும் அநுபபந்நம். ஸுஷுப்த்யாத்ய வஸ்தைகளிலே எல்லார்க்கும் மோக்ஷம் கொடுக்கப் ப்ரஸங்கிக்கையால், தான் விலக்குகைக்கு யோக்யதையுள்ள அவஸ்த்தையிலே விலக்காதொழிகையே அபேக்ஷிதம் என்னவுமொண்ணாது; விலக்குகைக்கு யோக்யதையில்லாத அசித்தையும், விலக்குகிற பச்சாதிகளையும், புத்த்ராதிகளையும் ரக்ஷிக்கக் காண்கையால். ஆனபின்பு

> யே நாதவந்தோ ஹி பவந்தி லோகே தே நாத்மகர்மாபி ஸமாரபந்தே
> தேஷாம் ஹி கார்யேஷு பவந்தி நாதா: சைப்யாதயோ ராம யதா யயாதே:

என்கிற ச்லோகத்திலும் நாதசப்தத்தில் வ்யுத்பத்தியாலும் நிர்பரதைக்கு உபயுக்தமான ஸம்பந்த விசேஷத்தைச் சொல்லுகிற மதுப் ப்ரத்யயத்தாலும் யாசநமும் ஆத்மநிக்ஷேபமும் வ்யஞ்ஜிதமாயிற்று. அல்லாதபோது அதிப்ரஸங்காதி தோஷங்கள் வரும். "நாதவந்த:" என்கிறவிடத்தில் இத்தனை விவக்ஷை கொள்ளாதபோது லோக நீதியிலுள்ளதெல்லாம் மோக்ஷ சாஸ்த்ரத்தில் ஊஹிக்க வசந விருத்தம்.

**விளக்கம்** – ஒரு சிலர், "எம்பெருமானுடன் நமக்கு உள்ள ஸம்பந்த பற்றிய ஞானம் இருந்தாலே போதுமானது, நம்மைக் காப்பாற்றும்படி வேண்டிக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை" என்று கூறுவர்; ஆனால் இவ்விதம் கூறுவது பொருத்தமானது அல்ல. ஏன் என்றால் – பசு, மான், பறவைகள், குழந்தைகள் போன்ற பலவும் தங்களைக் காப்பாற்றவேண்டும் என்று கேட்காமல் உள்ளது போன்றே, எம்பெருமானுடன் தங்களுக்கு உள்ள தொடர்பைப் பற்றிய ஞானமும் கொண்டிருக்கவில்லை; ஆயினும்

அவை காப்பாற்றப்படுவதை நாம் காண்கிறோம். ஆனால் இது போன்று உள்ள இவையும், ஒரு சில இடங்களில் இவ்விதமான ஞானம் அல்லது வேண்டுதல்கள் மூலம் காப்பாற்றப்பட்டன என்பதை நாம் காண நேரிட்டாலும், இத்தகைய "ஸம்பந்த ஞானம்" என்பதற்கு சாஸ்த்ரங்களின் அடிப்படையிலான ப்ரமாணங்கள் அவசியம் அல்லவா என்று கேட்கலாம். இதற்கு விடை அளிப்போம். நீங்கள் கேட்பது போன்று கொள்ளும்போது, அதே சாஸ்த்ரங்களின் அடிப்படை காரணமாக பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகியவை குறித்த ஞானமும் ஒப்புக்கொள்ளப்படவேண்டும். தன்னை ஸர்வேச்வரன் ரக்ஷிக்கும்போது, அவனுடனான ஸம்பந்தம் மட்டும் அல்லாமல், அவனது ரக்ஷிக்கின்ற செயலைத் தடுக்காமல் இருத்தல் வேண்டும் என்றும் சிலர் கூறுவர். இது ஏற்க இயலாத வாதமாகும். ஏன்? இதற்கு பதில் அளிப்போம். இவ்விதம் கொண்டால் கனவுகள் அற்ற உறக்க நிலையான ஸுஷுப்தி நிலையில் உள்ள அத்தனை ஜீவன்களுக்கும் மோக்ஷம் அளித்தே ஆகவேண்டும் (காரணம் அந்த நிலையில் அவனுடஸம்பந்தம் உள்ளது, மேலும் அவனது செயலைத் தடுப்பதில்லை) என்றாகிறது. இதற்கு விடை அளிக்கும்விதமாக, ஸுஷுப்தி நிலை நீங்கலாகத் தன்னால் அவனது ரக்ஷகத்தை விலக்க முடிந்த நிலைகளுக்கு மட்டுமே மேலே கூறப்பட்ட வாதம் பொருந்தும் என்று அவர்கள் கூறலாம். இதுவும் பொருந்தாது. ஏன்? தங்களால் அவனது ரக்ஷகத்தை விலக்க இயலாத அசேதனங்களையும், பசுக்களையும், சிறிய வயதினைரையும் அவன் ரக்ஷிப்பதைக் காணலாம் (ஆக ரக்ஷகத்தைத் தடுத்தல் கூடாது என்பது, ரக்ஷகம் பெறுவதற்கு ஒரு தகுதி அல்ல என்றாகிறது). மஹாபாரதம் வனபர்வம் (96-2) - யே நாதவந்தோ ஹி பவந்தி லோகே தே நாத்மகர்மாபி ஸமாரபந்தே தேஷாம் ஹி கார்யேஷு பவந்தி நாதா: சைப்யாதயோ ராம யதா யயாதே: - இந்த உலகில் உள்ள யாருக்கு ஸ்வாமியாக ஸர்வேச்வரன் உள்ளானோ, அவர்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்வதற்கான செயல்களைச் செய்ய முனைவதில்லை; பலராமா! அவர்களுடைய ரக்ஷகத்திற்குத் தேவையான செயல்களை அவர்களுடைய ஸ்வாமியாகிய ஸர்வேச்வரனே செய்வான்; யயாதிக்குச் சிபி செய்தது போன்று – என்பது போன்றதான ச்லோகங்கள் மூலமாக, காப்பாற்றப்பட வேண்டியவர்கள் அதற்கான எந்தவித முயற்சியிலும் இறங்கவேண்டிய அவசியம் இல்லை என்று கொள்ளக்கூடாது. இந்த ச்லோகத்தில் உள்ள "நாத" என்னும் பதம் "நாத்" என்னும் தாதுவிலிருந்து வந்ததாகும்; இதற்கு "காப்பாற்றவேண்டும் என்று இறைஞ்சுதல்" என்பதே பொருள் ஆகும். ச்லோகத்தில் உள்ள "நாதவந்த:" என்னும் பதம் தன்னுடைய ரக்ஷகத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருப்பதற்கு உறுப்பான சேஷ-சேஷி ஸம்பந்தத்தை வெளிப்படுத்துகிறது; இதுவே "காப்பாற்றவேண்டும்" என்ற விண்ணப்பத்தையும், சரணாகதியையும் உணர்த்துவதாக உள்ளது. இந்த ச்லோகத்தில் உள்ள "நாதவந்த:" என்னும் பதத்திற்கு இது போன்ற விளக்கம் பொருந்தாது என்று கூறினால், நாம் அன்றாட வாழ்வில் காண்கின்ற எந்த ஒரு உதாரணத்தையும் மேற்கோள் காண்பிக்கவே இயலாது, காரணம் அவை சாஸ்த்ரங்கள் உரைக்கின்ற வரிகளுக்கு முரணாகவே உள்ளதால் ஆகும்.

## நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் பொறுப்பில் நமக்குத் தொடர்பு இல்லை என்பதன் கருத்து

**மூலம்–** ஸர்வ ரக்ஷகனான ஈச்வரன் உண்டாயிருக்க ஸ்வரக்ஷண வ்யாபாரத்தில் நமக்கு அந்வயமில்லை என்கிற ஆப்தர் பாசுரத்துக்குத் தாத்பர்யம் சொல்லுகிறோம்.

யதர்த்தம் து க்ருதோ ந்யாஸ: ததர்த்தம் ந புந: க்ரியா
பூர்வமப்யபராதீந ப்ரவ்ருத்தாவஸ்ய நாந்வய:

யதாப்ரமாணம் ஸ்வரக்ஷணபர ஸமர்ப்பணம் பண்ணினவனுக்குப் பின்பு ஸ்வரக்ஷணார்த்த வ்யாபாரத்தில் ப்ராப்தியில்லை. முன்பு தானும் ஸ்வரக்ஷணார்த்தமாகப் பண்ணின ஸமர்ப்பணாதி வ்யாபாரமும் ஸ்வகர்த்தாவான அவன் தானே பீஜாங்குர ந்யாயத்தாலே அநாதியாக ப்ரவர்ப்பித்த கர்மப்ரவாஹ விபாக விசேஷத்திலே வந்ததொரு யாத்ருச்சிக ஸுக்ருதாதி விசேஷகாரணத்தை முன்னிட்டுக் கொண்டு பண்ணுவித்தானாகையால் நாமே நம்மை ரக்ஷித்துக் கொள்ளுகிறோமென்றிருக்கப் ப்ராப்தியில்லை. ஸர்வ ரக்ஷகனாக மூலமந்த்ராதிகளிலே சிக்ஷிதனான இவன்தானே நம்மை ஓருபாயத்திலே வ்யாபரிப்பித்து அந்த வ்யாபாரத்தாலே ப்ரஸந்நனாய் ரக்ஷிக்கிறானென்றிக்க ப்ராப்தம்.

**விளக்கம்–** அனைத்தையும் காப்பாற்றுகிறவனாக ஸர்வேச்வரன் உள்ளபோது, நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் இறங்குவதற்கு நமக்கு அவசியம் இல்லை என்பதை உரைக்கின்ற சோமாசியாண்டானின் கருத்திற்கு உட்கருத்து உரைப்போம். யதர்த்தம் து க்ருதோ ந்யாஸ: ததர்த்தம் ந புந: க்ரியா பூர்வமப்யபராதீந ப்ரவ்ருத்தாவஸ்ய நாந்வய: - எந்தப் பலனிற்காக பரஸமர்ப்பணம் செய்யப்பட்டதோ, அதே பலனிற்காக மீண்டும் பரஸமர்ப்பணம் செய்தல் கூடாது; ஆத்மாவிற்கு எம்பெருமானின் கட்டளைக்குக் கீழ்ப்படிதல் என்னும் நிலை இல்லாமல், சுதந்திரமாக இயங்குவதில் தொடர்பு இல்லை – என்றது காண்க. இந்த ப்ரமாணம் மூலமாக அறியப்படுவது என்னவென்றால் – தன்னைக் காக்கும் செயல் என்பதை ஸர்வேச்வரனிடம் ஒப்படைத்த பின்னர், தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும் முயற்சிகளில் இறங்க நமக்கு உரிமையில்லை. நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் விதமாக நாம் செய்த பரஸமர்ப்பணம் என்பது நம்முடைய ஸ்ருஷ்டி மற்றும் இருப்புக்குக் காரணமாக உள்ள ஸர்வேச்வரன் மூலமாக ஊண்டானதே ஆகும் (அதாவது நம்மைக் காப்பாற்றும் விதமாக பரஸமர்ப்பணம் செய்தல் என்பதும் நம்முடைய செயல் அல்ல, அவனால் ஆனது). செடியிலிருந்து விதை உண்டானதா, அல்லது விதையிலிருந்து செடி உண்டானதா என்பதை அறிய இயலாமல் தொடர்கின்ற ந்யாயத்திற்கு பீஜாங்குர ந்யாயம் என்று பெயர். இந்த ந்யாயம் போன்றே நமது கர்மவினைகளும், அவற்றின் பலன்களும் உள்ளன. இப்படி உள்ளபோது தற்செயலாக

நடந்த ஏதோ ஒரு நல்வினை காரணமாக ஸர்வேச்வரன் நம்மை பரஸமர்ப்பணம் செய்யும்படியாகச் செய்தான். ஆகவே நம்மை நாம் காப்பாற்றிக் கொள்கிறோம் என்பது பொருந்தாது. அனைத்தையும் காப்பாற்றுபவனாக மூலமந்த்ரங்களின் மூலம் அறியப்படுகின்ற ஸர்வேச்வரன், தானாகவே வலிய வந்து, நம்மை ஓர் உபாயத்தில் நிற்க வைத்து, நம்முடைய அந்தச் செயலையே நம்மைக் காப்பாற்றுகின்ற வாய்ப்பாகக் கொண்டு, நம்மைக் காக்கிறான் என்று கருத்து.

மூலம்–

ஸ்வாமீ ஸ்வசேஷம் ஸ்வவசம் ஸ்வபரத்வேந நிர்பரம்
ஸ்வதத்த ஸ்வதியா ஸ்வார்த்தம் ஸ்வஸ்மிந் ந்யஸ்யதி மாம் ஸ்வயம்

இது ஆத்மஸமர்ப்பண தசையில் க்யாதி லாப பூஜா பலஸங்க கர்த்ருத்வ உபாயத்வங்களாகிற தூராலற்ற பகவதநுஸந்தானக் கட்டளை. ஆகையால் தாய் முலைப்பால் போலே வருகிற ஈச்வரப்ரஸாதத்துக்கும் ஸ்தநந்தயனுடைய முலையுண்கிற வ்யாபாரம் போலே இவனுடைய அபேக்ஷாதிகள். இத்தால் ஸித்தோபாய ஸ்வரூபத்துக்குக் கொத்தை வராது.

**விளக்கம்** - ஸ்வாமீ ஸ்வசேஷம் ஸ்வவசம் ஸ்வபரத்வேந நிர்பரம் ஸ்வதத்த ஸ்வதியா ஸ்வார்த்தம் ஸ்வஸ்மிந் ந்யஸ்யதி மாம் ஸ்வயம் – அனைத்திற்கும் ஸ்வாமியாக உள்ள ஸர்வேச்வரன், தன்னுடைய தொண்டனாகவும் வசப்பட்டவனாகவும் உள்ள என்னை, தன்னால் அளிக்கப்பட்ட பரஸமர்ப்பணம் என்னும் புத்தி மூலமாக, என்னைக் காப்பாற்றிக் கொள்வதில் எந்தவிதமான பொறுப்பும் எனக்கு இல்லாதபடி, என்னைக் காப்பாற்றும் பொறுப்பு தன்னுடையது என்று ஏற்றுக்கொண்டு, என்னைத் தன்னிடம் தானாகவே பாதுகாப்பாக வைத்துக் கொள்கிறான் – என்றது காண்க. இந்த வரியானது நம்முடைய பரஸமர்ப்பண நேரத்தில் – ப்ரபலமாக வேண்டும், பலன் பெறவேண்டும், மரியாதைகள் அடையவேண்டும் என்னும் ஆசைகள், பலனில் பற்றுதல், நானே செய்கிறேன் என்னும் எண்ணம் உள்ளிட்ட பலவிதமான சேறு போன்ற தோஷங்கள் நம்மை அடையாமல் இருப்பதற்காக, எம்பெருமானை மட்டுமே எண்ணியபடி இருப்பதற்கான கட்டளை போன்றதாகும். ஆகவே இப்படியாக நம்மைக் காக்கவேண்டும் என்பது போன்றதான வேண்டுதல்களும், அதனை ஈச்வரன் ஏற்பதும் எப்படிப்பட்டது என்றால் – தானாகவே சுரந்து வருகின்ற தாய்ப்பாலும், அதனைப் பருகியபடி உள்ள குழந்தையின் செயலும் – போன்றதாகவே உள்ளது. ஆக இப்படியாக ஸித்தோபாயமான எம்பெருமானின் ஸ்வரூபத்திற்கு எந்தவிதமான தோஷமும் இல்லை.

## பிராட்டியின் தொடர்பு குறித்து உண்டாகின்ற ஐயங்களும் விளக்கமும்

**மூலம்–** இப்படி நாராயண சப்தத்தில் ஸித்தமான குணவிசேஷ ஸம்பந்த விசேஷங்களடியாகப் பிறக்கும் கலக்கங்களுக்குப் பரிஹாரம் உதாஹரித்தோம். இனி

லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்ய ரூபயா
ரக்ஷக: ஸர்வஸித்தாந்தே வேதாந்தே அபி ச கீயதே

என்கிறபடியே ஸபத்நீகனாய்க் கொண்டு ஸ்வரக்ஷண யஜ்ஞதீக்ஷிதனான ஸர்வேச்வரனுக்கு ஸ்ரீமச்சப்தத்தாலே சொல்லுகிற பத்நீ ஸம்பந்தத்தில் வரும் கலக்கங்களுக்கு திங்மாத்ரத்தாலே பரிஹாரம் காட்டுகிறோம்.

**விளக்கம்–** இப்படியாக இதுவரை நாராயண என்னும் பதம் மூலம் வெளிப்படுவதான ஸர்வேச்வரனின் ப்ரத்யேக குணங்களைப் பற்றியும், எஜமானன் – தொண்டன் என்னும் உறவுமுறைகள் பற்றியும் உண்டான பலவிதமான சந்தேகங்களுக்கான சமாதானங்களை அளித்தோம். லக்ஷ்மீதந்த்ரத்தில் (28-14) - லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்ய ரூபயா ரக்ஷக: ஸர்வஸித்தாந்தே வேதாந்தே அபி ச கீயதே – கருணையே வடிவம் எடுத்தாற்போன்று இருக்கின்ற லக்ஷ்மியுடன் இருந்தபடியே ஸர்வேச்வரன் அனைத்தையும் ரக்ஷிக்கிறான் என அனைத்து ஸித்தாந்தங்களும் வேதாந்தங்களும் உரைக்கின்றன – என்றது காண்க. இந்த ச்லோகத்தில் உள்ளபடியே மஹாலக்ஷ்மியைத் தனது பத்னியாகக் கொண்டுள்ளவனும், அனைத்தையும் காப்பதை ஒரு யஜ்ஞமாகவே கொண்டுள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரனுக்கு, “ஸ்ரீமத்” என்னும் பதம் மூலம் உரைக்கப்படுவதான பிராட்டியுடனான ஸம்பந்தம் காரணமாக உண்டாகும் சந்தேகங்களுக்குப் பொதுவாக எவ்விதம் சமாதானம் உரைக்கப்படுமோ அப்படியே உரைப்போம்.

## த்வயத்தின் இரு வரிகளிலும் உள்ள ஸ்ரீமத் பதம்

**மூலம்** – சிலர் த்வயத்தில் பூர்வகண்டத்தில் ஸ்ரீமச்சப்தம் உபலக்ஷண பரமென்றும், உத்தரகண்டத்தில் ஸ்ரீமச்சப்தம் விசேஷண பரமென்றும் பிரியச் சொன்னார்கள். இவ்விடத்தில் சப்தம் ஏகரூபமாயிருக்க, ஸ்வாரஸ்யத்துக்கு பாதகமுமன்றிக்கேயிருக்க, ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம் பகவத இதம் இத்யாதிகளிலே ப்ரஸித்தமான கூடஸ்த ஸம்ப்ரதாய விருத்தமாகப் பண்ணுகிற இவ்விபாகம் அநுபபந்நம். அநந்யோபாயத்வ விருத்தமான உபாயவிதித்வ ப்ரஸங்கம் இவ்விடத்தில் பாதகமானாலோவென்னில், அநந்யப்ரயோஜநத்வ விருத்தமான ப்ராப்யவிதித்வ ப்ரஸங்கத்தாலே உத்தரகண்டத்திலும்

விசேஷணத்வம் தவிரப் ப்ரஸங்கிக்கும். ஆனால் இரண்டிடத்திலும் உபலக்ஷணமானாலோவென்னில், குண விக்ரஹ வ்யாபார விசேஷங்களுக்கும் இரண்டிடத்திலும் உபலக்ஷணங்களாகப் ப்ரஸங்கிக்கும். உபயுக்தங்களாகையாலே அவை விசேஷணங்களென்னில், இது பூர்வோத்தரகண்டங்களில் பத்நீஸம்பந்தத்திலும் துல்யம். உபயோக விசேஷங்கள் தத்தத்வஸ்துக்களுக்கு அநுரூபமானபடியிலே ப்ரமாண ஸம்ப்ரதாயங்களாலே கண்டு கொள்வது. வஸ்த்வநுரூபமாயிறே உபயோகமிருப்பது.

**விளக்கம்–** த்வயத்தின் முதல் பகுதியில் உள்ள ஸ்ரீமத் என்னும் பதம் உபலக்ஷணமாக உள்ளது என்று சிலர் கூறுவர் (உபலக்ஷணம் என்றால் என்ன? அந்தப் பறவை அமர்ந்திருக்கும் மரமே ஆலமரம் என்று கூறும்போதும் பறவையானது ஆலமரத்திற்கு உபலக்ஷணமாகிறது. அதாவது அது அந்த நேரத்தில் ஆலமரத்தை அடையாளம் காட்ட உதவுகிறது அல்லாமல், ஆலமரத்தின் நிரந்தரமான தன்மை அல்ல). மேலும் சிலர் த்வயத்தின் அடுத்த பகுதியில் உள்ள ஸ்ரீமத் என்னும் பதம் விசேஷணமாக உள்ளது என்று சிலர் கூறுவர் (விசேஷணம் என்றால் ஒரு வஸ்துவிடம் காணப்படும் நிரந்தரமான குணங்களாகும்). இங்கு ஸ்ரீமத் என்னும் பதம் இரண்டு இடங்களிலும் ஒன்றாகவே உள்ளது; இரு இடங்களிலும் ஒரே பொருளை இப்பதத்திற்குக் கொள்வதில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை. இப்படி உள்ளபோது நம்முடைய பூர்வர்களின் கருத்திற்கும், நம்மாழ்வாரின் மதத்திற்கும் மாறுபட்டதான "இரு இடங்களின் உள்ள ஸ்ரீமத் பதமானது இரு வேறுபட்ட பொருளை அளிக்கிறது" என்று கூறுவது பொருந்தவில்லை. ஸ்வாமி பராசரபட்டரும் ஸ்ரீகுணரத்னகோசத்தில் (28) - ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம் பகவத இதம் – ஸ்ரீரங்கநாச்சியாரே! உன்னுடைய ஸம்பந்தம் காரணமாக அல்லவோ ஸ்ரீரங்கநாதன் சுதந்திரம் என்னும் ஸ்வரூபம் கொண்டவனாக உள்ளான் – என்றது காண்க. இங்கு ஓர் ஆக்ஷேபம் எழலாம். நாம் ஸ்ரீமத் என்பதை நாராயணனிடமிருந்து பிரிக்க இயலாத ஒன்றாக த்வயத்தின் முதல் வரியிலும் கூறிவிட்டு, இரண்டு உபாயங்கள் உள்ளன (நாராயணன், மஹாலக்ஷ்மி) என்பதையும் மறுத்தால், பகவானைத் தவிர வேறு உபாயம் இல்லை என்று கூறும் ப்ரமாணங்களுக்கு இது முரணாக இருக்கும் அல்லவோ? இதற்கு சமாதானம் கூறுவோம். நீங்கள் கூறுவது போன்று த்வயத்தின் முதல் வரியின் மூலம் மஹாலக்ஷ்மியை நாராயணனிடமிருந்து பிரிக்க இயலாதவளாகவே கொண்டு, இரண்டாம் வரியில் அடையப்படும் இலக்குகள் இரண்டு (நாராயணன், லக்ஷ்மி) என்று கூறினால், இந்தக் கருத்து "எம்பெருமானைத் தவிர அடையப்படும் இலக்கு வேறு ஏதும் இல்லை" என்பதற்கு முரணாகிறதே! இங்கு மற்றொரு கேள்வி எழலாம் – நீங்கள் இறுதியாகக் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும்விதமான, ஸ்ரீமத் என்னும் பதத்தை பகவானுக்கு உபலக்ஷணமாகக் கொண்டு, இதே காரணத்தின் மூலம் த்வயத்தின் இரு வரிகளிலும் பகவான் வேறுபடுத்திக் காண்பிக்கப்படுகிறான் என்று கொள்ளலாம் அல்லவோ? இதற்கு விடை அளிப்போம். ஈச்வரன் உபாயமாக இருப்பதற்கு சில குறிப்பிட்ட குணங்கள், ரூபங்கள் மற்றும் செயல்பாடுகள் அவசியம் இருத்தல் வேண்டும். இதே போன்று ஈச்வரன் அடையப்படும் இலக்காக இருப்பதற்குச் சில குறிப்பிட்ட

குணங்கள், ரூபங்கள் மற்றும் செயல்பாடுகள் அவனிடம் எப்போதுமே காணப்படுகின்றன. இப்படியாக நிச்சயமாக இருத்தல்வேண்டும் என்பதான பலவும் ஈச்வரன் மட்டுமே உபாயம் என்னும்போதும், ஈச்வரன் மட்டுமே இலக்கு என்னும்போதும் இரண்டாக மாறுபட்டு உள்ளன (அதாவது உபாயம் என்னும்போது உள்ள தன்மைகள் வேறு, இலக்கு என்னும்போது உள்ள தன்மைகள் வேறு). ஆகவே இவற்றை ஈச்வரனின் விசேஷணமாகக் கொள்ளாமல் உபலக்ஷணமாகக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. ஆனால், இவ்விதம் கொள்ளும்போது ஸர்வேச்வரன் எங்கும் உள்ளவன் என்பதாலும், கருணையே வடிவானவன் என்பதாலும் மட்டுமே அவன் அனைத்தையும் காப்பவனாக உள்ளான் என்னும் எண்ணம் கொண்டவர்களுக்கு முரணாக இருக்கும். இவர்கள் இது போன்ற தன்மைகள் உபலக்ஷணங்களாக ஏற்கமாட்டனர்.

இவர்கள் ஸர்வேச்வரனுடைய இந்தத் தன்மைகள், ரூபங்கள் மற்றும் செயல்பாடுகள் அனைத்தும் விசேஷணங்கள் அல்லாமல் உபலக்ஷணங்கள் அல்ல என்று கூறுவர். இதன் காரணம் இவை அனைத்தும் அவன் அனைத்தையும் ரக்ஷிக்கத் தேவையானவை என்றும் கூறுவர். இதற்கு நாம் விடை அளிப்போம். இதனையே நாம் வேறு விதமாகக் கூறுவோம் – அவனுக்கு மஹாலக்ஷ்மியுடனான ஸம்பந்தம் என்பது த்வயத்தின் முதல் மற்றும் இரண்டாம் வரியில் காணப்படுகிறது என்றும், இந்தத் தொடர்பு என்பது அவன் அனைத்தையும் ரக்ஷிக்கத் தேவையானது என்றும் கூறுவோம். ஒரு குறிப்பிட்ட வஸ்துவின் பயன் என்பது அந்த வஸ்துவின் தன்மைக்கு ஏற்றபடி உள்ளதா என்பதையும், அந்த வஸ்துவின் பயன் என்ன என்பதையும் நாம் ப்ரமாணங்கள் மூலமாகவும், பழக்கவழக்கங்கள் மூலமாகவும் அறியலாம். ஆனால் ஒரு வஸ்துவின் பயன் என்பது அதன் தன்மை மூலமாகவே அறியப்படுகிறது.

## உபாய தசை மற்றும் பல தசை ஆகியவற்றில் பெரியபிராட்டியின் பணி

**மூலம்–** உபாயோபேயபரமான வாக்யத்வயத்திலும் ச்ருதமான இவ்விசேஷணத் தினுடைய உபயோக ப்ரகாரத்தை “வேரி மாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்கும்” என்றும், “நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின் கோயில் சீய்த்து” என்றும் நம்மாழ்வார் அருளிச் செய்தார்.அலமேஷா பரித்ராதும் ராக்ஷஸ்யோ மஹதோ பயாத் என்றும், அலமேஷா பரித்ராதும் ராகவாத்ராக்ஷஸீகணம் என்றும் ஸ்ரீவால்மீகி பகவான் சரணாகதிஸாரமான ஆதிகாவ்யத்திலே நிபந்தித்தான். ஸம்ஸரார்ணவ தாரிணீம் என்று ஹிரண்யவர்க்க காச்யபாதிகளும் சொன்னார்கள். வாச: பரம் ப்ரார்த்தயிதா ப்ரபத்யேந்நியத: ச்ரியம் என்று ஸ்ரீசௌநகபகவான் விதித்தான். ஆத்மவித்யா ச தேவி த்வம் விமுக்திபல தாயிநீ என்று வஸிஷ்ட புலஸ்த்ய வரப்ரஸாத லப்த பரதேவதா பரமார்த்தய ஞானமுடைய ஸ்ரீபராசரப்ரஹ்மர்ஷி அருளிச்செய்தான். “விமுக்திபல தாயிநீ” என்கிறவிது “ஆத்மவித்யா” விசேஷணமானாலும் தத்ஸாமாநாதிகரண்யத்தாலே அது இவளுடைய விபூதியாயிற்று.

**விளக்கம்–** உபாயத்தை விளக்கவல்லதாகவும், உபேயத்தைக் காண்பிக்கவல்லதாகவும் இருக்கின்ற த்வயத்தின் இரண்டு வரிகளிலும் பெரியபிராட்டியின் விசேஷணம் (அவளிடமிருந்து பிரிக்க இயலாத தன்மைகள்) கூறப்பட்டுள்ளது; இதன் ப்ரயோஜனம் என்ன என்பதை ஸ்வாமி நம்மாழ்வார் கீழே உள்ளபடி அருளிச்செய்தார்:

- திருவாய்மொழி (4-5-11) - வேரி மாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்கும்– நறுமணம் நீங்காமல் உள்ள தாமரை மீது உள்ள மஹாலக்ஷ்மியானவள், ஜீவன்களின் அனைத்து வினைகளையும் தீர்ப்பாள்.

- திருவாய்மொழி (9-2-1) - நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின் கோயில் சீய்த்து– உன்னுடைய கருணை மற்றும் மஹாலக்ஷ்மியின் கருணை ஆகியவை மூலமாக நீங்கள் வஸிக்கின்ற கோயிலைப் பெருக்கி.

இதே போன்று, சரணாகதி தத்துவத்தைத் தனது சாரமாகக் கொண்ட ஸ்ரீஇராமாயணத்தில் வால்மீகிபகவான் கீழே உள்ளது போன்று அருளிச்செய்தார்:

- இராமாயணம் ஸுந்தரகாண்டம் (27-44) - அலமேஷா பரித்ராதும் ராக்ஷஸ்யோ மஹதோ பயாத் – ராக்ஷஸிகளே! இராமன் என்னும் மிகவும் பெரிய பயத்திலிருந்து நம்மை இவளால் மட்டுமே காக்க இயலும்.

- இராமாயணம் ஸுந்தரகாண்டம் (58-91) - அலமேஷா பரித்ராதும் ராகவாத்ராக்ஷஸீகணம் – இராமனிடமிருந்து இந்த ராக்ஷஸிகளைக் காப்பாற்றும் திறன் கொண்டவள் சீதை மட்டுமே.

ஹிரண்யகர்ப்பனும் காச்யபனும் காச்யபஸ்ம்ருதியில் - ஸம்ஸரார்ணவ தாரிணீம் – ஸம்ஸாரம் என்னும் ஸமுத்திரத்திலிருந்து கரை சேர்ப்பவள் – என்றனர். சௌநக ஸம்ஹிதையில் ஸ்ரீசௌநகபகவான் - வாச: பரம் ப்ரார்த்தயிதா ப்ரபத்யேந்நியத: ச்ரியம் – சொற்கள் அனைத்திற்கும் தாத்பர்யமாக விளங்கும் பகவானை அடைய எண்ணுபவன், அவனது பத்னியாகிய பெரியபிராட்டியையும் சரணம் அடையவேண்டும் – என்றார். வஸிஷ்டர் மற்றும் புலஸ்த்யர் ஆகியோர்களிடமிருந்து பெற்ற வரம் மூலமாக பரதேவதையான ஸர்வேச்வரனைக் குறித்த உண்மையான ஞானத்தைப் பெற்றவராகிய ஸ்ரீபராசரமஹரிஷி விஷ்ணுபுராணத்தில் (1-9-20) - ஆத்மவித்யா ச தேவி த்வம் விமுக்திபல தாயிநீ – தேவியே! மஹாலக்ஷ்மீ! ஆத்மஞானம் மற்றும் மோக்ஷபலன் ஆகியவற்றை அளிப்பதை உனது ஸ்வபாவமாகவே நீ கொண்டுள்ளாய் – என்றார். இந்த

ச்லோகத்தில் உள்ள "மோக்ஷம் அளித்தல்" என்பது "ஆத்மஞானம்" என்பதன் விசேஷணமாக உள்ளது என்றாலும் (அதாவது ஆத்மஞானம் என்பதிலிருந்து மோக்ஷம் பெறுவதைப் பிரிக்க இயலாது), "மோக்ஷம் அளித்தல்" என்பது இவளது செல்வமாகவே உள்ளது என்று கொள்ளவேண்டும்.

**மூலம்–** ஸ்ரீய:பதி தானும்

யாமாலம்ப்ய ஸுகேநேமம் துஸ்தரம் ஹி குணோததிம்
நிஸ்தரந்த்யசிரேணைவ வ்யக்த த்யாநபராயணா:

என்று ஸ்ரீஸாத்வத ஸம்ஹிதையிலே ஸ்ரீபதிரூப த்யாநத்திலே அருளிச்செய்தான். தத்பரங்களான சாஸ்த்ரங்கள் நிற்க, இம்மத்யஸ்த சாஸ்த்ரங்கள் அதிப்ரபலங்கள். ஆளவந்தாரும் ஜகத்ஸமஸ்தம் யதபாங்கஸம்ச்ரயம் என்றும், ச்ரேயோ ந ஹி அரவிந்தலோசனமந: காந்தா ப்ரஸாதாத்யதே ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்வஸு ந்ருணாம் ஸம்பாவ்யதே கஹிசித் என்றும் அருளிச்செய்தார். ஸ்ரீபாஷ்யகாரரும் ஸ்ரீவைகுண்டகத்யத்தில் சேஷசேஷாசநாதிகம் ஸர்வம் பரிஜநம் பகவத: தத்ததவஸ்தோசித பரிசர்யாயாம் ஆஜ்ஞாபயந்த்யா என்று பகவத்கைங்கர்யரூப பரமபுருஷார்த்தம் இவள் நியோகத்தின்படியே நடத்த வேணுமென்று அருளிச்செய்தார். கூரத்தாழ்வானும்,

ஸ்வஸ்தி ஸ்ரீர்திசதாதசேஷ ஜகதாம் ஸர்கோபஸர்கஸ்திதீ:
ஸ்வர்கம் துர்கதிமாபவர்கிகபதம் ஸர்வம் ச குர்வந் ஹரி:
யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீநோ விதத்தே அகிலம்
க்ரீடேயம் கலு நாந்யதா அஸ்ய ரஸதா ஸ்யாதைகரஸ்யாத்தயா

என்று ஸங்க்ரஹித்த அர்த்தத்தை தேவி த்வந்மஹிமாவர்த்திந ஹரிணா நாபி த்வயா ஜ்ஞாயதே என்று தொடங்கி விஸ்தரித்தார்.

**விளக்கம்–** ஸ்ரீஸாத்வத ஸம்ஹிதையில் உள்ள ஸ்ரீபதிரூப த்யான பகுதியில் ஸர்வேச்வரன், யாமாலம்ப்ய ஸுகேநேமம் துஸ்தரம் ஹி குணோததிம் நிஸ்தரந்த்யசிரேணைவ வ்யக்த த்யாநபராயணா: - ஸர்வேச்வரனின் திருமேனியை எப்போதும் த்யானித்தபடி உள்ளனரோ அவர்கள் எந்த மஹாலக்ஷ்மியை ப்ரபத்தி செய்து, எளிதாகக் கரையேற இயலாத மூன்று குணங்களால் உண்டான இந்த ஸம்ஸாரம் என்னும் கடலை, எந்தவிதமான சிரமமும் இல்லாமல், விரைவாகக் கடக்கின்றார்களோ – என்றான். மஹாலக்ஷ்மியைப் பற்றி மட்டுமே உரைக்கின்ற சாஸ்த்ரங்களைக் காட்டிலும், நடுநிலையாக அனைத்தைப் பற்றியும் கூறுகின்ற சாஸ்த்ரங்களில் இவளைப் பற்றி

உரைப்பது மிகவும் ப்ரஸித்தம் ஆகும். ஸ்வாமி ஆளவந்தார் கீழே உள்ளபடி அருளிச்செய்தார்:

- ஸ்தோத்ரரத்னம் (27) - ஜகத்ஸமஸ்தம் யதபாங்கஸம்ச்ரயம் – இந்த உலகம் முழுவதும் எந்த பிராட்டியின் கடைக்கண் பார்வையில் மட்டுமே தனது ஆதாரத்தைக் கொண்டுள்ளதோ.

- சது:ச்லோகி - ச்ரேயோ ந ஹி அரவிந்தலோசனமந: காந்தா ப்ரஸாதாத்யதே ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்வஸு நருணாம் ஸம்பாவ்யதே கஹிசித் – தாமரை போன்ற அழகான திருக்கண்களைக் கொண்டவனாகிய ஸர்வேச்வரனின் மனதிற்கு மிகவும் இனிமையாக உள்ளவளான பெரியபிராட்டியின் கருணை இல்லாமல் ஜீவாத்மா பற்றிய அனுபவம், ஸர்வேச்வரன் பற்றிய அனுபவம் போன்ற எதுவும் நமக்கு உண்டாகாது.

ஸ்வாமி எம்பெருமானார் ஸ்ரீவைகுண்டகத்யத்தில் - சேஷசேஷாசநாதிகம் ஸர்வம் பரிஜநம் பகவத: தத்ததவஸ்தோசித பரிசர்யாயாம் ஆஜ்ஞாபயந்த்யா – ஆதிசேஷன், விஷ்வக்ஸேநர் உள்ளிட்ட அனைவரையும், ஸர்வேச்வரனுக்குத் தேவையான அந்தந்த காலகட்டங்களிலும் நிலைகளிலும் ஏற்ற கைங்கர்யங்களைச் செய்யும்படியாக நியமிக்கின்ற மஹாலக்ஷ்மியுடன் உள்ள – என்று உரைத்தார். இதன் மூலம் பகவத் கைங்கர்யம் என்பதான மிகவும் உயர்ந்த புருஷார்த்தமானது பெரியபிராட்டியின் கட்டளைக்கு ஏற்பவே நடக்கவேண்டும் என்றார். ஸ்வாமி கூரத்தாழ்வான் ஸ்ரீஸ்தவத்தில் கீழே உள்ளபடி அருளிச்செய்தார்:

ஸ்வஸ்தி ஸ்ரீ: திசதாத் அசேஷ ஜகதாம் ஸர்க்க உபஸர்க்க ஸ்திதீ:
ஸ்வர்க்கம் துர்க்கதிமாபவர்க்கிக பதம் ஸர்வம் ச குர்வந் ஹரி:
யஸ்யா வீக்ஷ்ய முகம் தத் இங்கித பராதீந: விதத்தே அகிலம்
க்ரீடா இயம் கலு ந அந்யதா அஸ்ய ரஸதா ஸ்யாத் ஐகரஸ்யாத் தயா

இதன் பொருள் - அனைத்து உலகங்களின் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றைச் செய்தபடியும்; ஸ்வர்க்கம், நரகம், பரமபதம் ஆகியவற்றைப் போன்ற அனைத்தையும் செய்தபடியும் இருக்கின்ற ஸ்ரீரங்கநாதன், ஸ்ரீரங்கநாச்சியாரின் அழகான திருமுகத்தை பார்த்தபடி நின்று, அவளது புருவநெறிப்பு முதலான முக பாவங்களுக்கு அடங்கியவனாக அனைத்தையும் செய்கிறான்.இவ்விதம் அவளது குறிப்பிற்கு ஏற்றபடி இவன் செல்லாவிடில் இவனுக்கு இந்த ஸ்ருஷ்டி முதலான லீலைகள், ஆனந்தத்தை அளிக்காமல்

வீணாகிவிடும் அல்லவோ?இப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாச்சியார் அனைத்து நன்மைகளையும் அளிக்கக் கடவாளாக.

இப்படியாக மிகவும் சுருக்கமாக அருளிச்செய்த விஷயத்தை, பின்னர் ஸ்ரீஸ்தவம் (8) - தேவி த்வந்மஹிமாவர்த்திந ஹரிணா நாபி த்வயா ஜ்ஞாயதே - ஹே! ஸ்ரீரங்கநாச்சியாரே! உன்னுடைய மேன்மையின் எல்லையானது ஸ்ரீரங்கநாதனாலும் அறியப்படுவதில்லை. உன்னாலும் உனது மேன்மை என்பது எத்தன்மையது என்று அறியப்படுவதில்லை - என்று விரிவாக உரைத்தார்.

**மூலம்–** பட்டரும்,

ஐச்வர்யம்அக்ஷரகதிம்பரமம்பதம்வா
கஸ்மைசித்அஞ்ஜலிபரம்வஹதேவிதீர்ய
அஸ்மைநகிஞ்சித்உசிதம்க்ருதம்இதிஅதஅம்ப
த்வம்லஜ்ஜஸேகதயக: அயம்உதாரபாவ:

என்று ச்ருதியில் உதாரசப்தத்துக்கு வ்யாக்யாநம் பண்ணினார். ஸ்ரீஸூக்தபாஷ்யத்தில் பெரியஜீயரும் அபேக்ஷிதார்த்தங்களெல்லாம் உபபாதித்தார். இப்படி ச்ருதி ஸ்ம்ருதி ஸம்ப்ரதாயம் நிற்கிற நிலைகளைக் கொண்டு ஸ்ரீமச்சப்தத்தில் சொன்ன விசேஷணத்துக்கு விக்ரஹாதிகளுக்குப்போலே வஸ்த்வநுரூபமான உபயோக விசேஷங்களை ஸஹ்ருதயர் அறிந்து கொள்வது.

**விளக்கம்–** ச்ருதியில் உள்ளதான ஸ்ரீஸூக்தத்தில் (5) காணப்படும் “உதார” என்னும் பதத்திற்கான விளக்கத்தை, ஸ்வாமி பராசரபட்டர் ஸ்ரீகுணரத்னகோசத்தில் (58) பின்வருமாறு அருளிச்செய்தார்:

ஐச்வர்யம்அக்ஷரகதிம்பரமம்பதம்வா
கஸ்மைசித்அஞ்ஜலிபரம்வஹதேவிதீர்ய
அஸ்மைநகிஞ்சித்உசிதம்க்ருதம்இதிஅதஅம்ப
த்வம்லஜ்ஜஸேகதயக: அயம்உதாரபாவ:

இதன் பொருள் –தாயே! ஸ்ரீரங்கநாயகீ! உனக்கு முன்னால் நின்று கொண்டு ஒருவன் தனது இரு கரங்களையும் தலைக்கு மேல் தூக்கி வணங்கினால் நீ துடித்துப் போகிறாய்! என்ன காரணம்? அவனது கைகள் நோகுமே என்றும், அந்தப் பாரத்தை அவன்

தாங்குவானா என்றும் என்ணுகிறாய். இதனால் அவனுக்கு மிகுந்த செல்வமும், உனக்குக் கைங்கர்யம் செய்யும் வாய்ப்பையும், உயர்ந்த மோக்ஷத்தையும் அளிக்கிறாய். இத்தனை செய்த பின்னரும் உனது நிலை எப்படி உள்ளது? “ஐயோ! எதனை நினைத்து இந்தக் குழந்தை நம்மிடம் வந்தானோ? நாம் அளித்தது போதுமானதாக இருந்ததா? இதன் மூலம் இவனது வேண்டுதல் பலித்ததா? தெரியவில்லையே! நாம் குறைவாகக் கொடுத்து விட்டோமோ?”, என்று பலவாறு எண்ணியபடி, நீ வெட்கப்பட்டுத் தலையைச் சற்றே தாழ்த்தி அமர்ந்திருக்கிறாய். இத்தகைய உனது கொடைத்திறன் எத்தன்மை உடையது என்பதை நீயே கூறுவாயாக.

இப்படியாக உள்ள பலவிதமான அர்த்தங்களை பெரியஜீயர் எனப்படும் நாராயணமுனியாகிய நஞ்ஜீயர் தனது ஸ்ரீஸூக்த பாஷ்யத்தில் அருளிச்செய்தார். ஆகவே ச்ருதி, ஸ்ம்ருதி மற்றும் ஸம்ப்ரதாயங்கள் மூலமாக அறியப்படுவது என்னவென்றால் திவ்யமங்கள விக்ரஹங்களின் பயன் எப்படியாக உள்ளதோ அதே போன்று த்வயத்தில் காணப்படும் ஸ்ரீமத் என்னும் பதத்தின் பயனும், அதன் தன்மைக்கு ஏற்றபடி உள்ளது என்பதாகும். இதனை உள்ளது உள்ளபடி அறியக்கூடியவர்கள் அறிவார்கள்.

**மூலம் –**

பரஸ்வீகார ரஹிதம் ரக்ஷா ஸங்கல்ப வர்ஜிதம்
குணாதிகமிஹேஷ்டம் ஹி சரண்யஸ்ய விசேஷணம்

ஏகரஸ்யஜுஷோ: சேஷிதம்பத்யோ: ஸர்வகர்மஸு
விசேஷண விசேஷ்யத்வம் ச்ருதம் கஸ்மாந்ந ரோசதே

ப்ரதர்தநாதிவித்யாஸு வேத்யே அபி பரமாத்மநி
அசேதநவதிச்சாம: சேதநம் ச விசேஷணம்

இத்தம் ப்ரபத்திவித்யாயாம் தத்தந்மந்த்ராநுஸாரத:
விபு: பத்ந்யா குணாத்யைச்ச விதிஷ்டோ விஷய: அத்ர ந:

**விளக்கம்–** (மேலே உள்ள ச்லோகங்களின் பொருள்)

- பரஸ்வீகார ரஹிதம் ரக்ஷா ஸங்கல்ப வர்ஜிதம்குணாதிகமிஹேஷ்டம் ஹி சரண்யஸ்ய விசேஷணம் – (த்வயத்தின் முதல் வரியில் மஹாலக்ஷ்மியை

நாராயணனிடமிருந்து பிரிக்க இயலாத விசேஷணமாக்க் கொள்ளாதவர்களைப் பார்த்து உரைக்கிறார்) அவனுடைய காப்பாற்றும் தன்மை போன்ற பலவும் காப்பாற்றுவதற்கான பொறுப்பை ஏற்கத் தகுதி இல்லாதவை என்றும், அவற்றுக்குக் காக்கவேண்டும் என்ற ஸங்கல்பம் என்பது இல்லை என்றும் உணர்ந்தபோதிலும், அவற்றை (அதாவது இது போன்ற தகுதியும், ஸங்கல்பமும் அவனுக்கு மட்டுமே உள்ளன) அவனுடைய உபலக்ஷணங்களாகக் கொள்ளாமல் அவனுடைய விசேஷணமாகக் கொள்ளுவதில் நீங்கள் விருப்பம் கொள்கிறீர்களே!

- ஏகரஸ்யஜுஷோ: சேஷிதம்பத்யோ: ஸர்வகர்மஸு விசேஷண விசேஷ்யத்வம் ச்ருதம் கஸ்மாந்ந ரோசதே – ஸ்ருஷ்டி உள்ளிட்ட அனைத்துவிதமான செயல்பாடுகளிலும் ஒரே போன்ற மகிழ்வை அடைகின்றவர்களும், அனைத்திற்கும் எஜமானர்களும் ஆகிய திவ்யதம்பதிகள், சாஸ்த்ரங்களின் அடிப்படையில் ஒருவர் விசேஷணமாகவும் (பிரிக்க இயலாத தன்மை), ஒருவர் அந்த விசேஷணத்தைக் கொண்ட விசேஷ்யமாகவும் கூறப்பட்டுள்ளனர். இப்படியாக இவர்கள் உள்ள நிலை என்பது எந்தக் காரணத்தால் உங்களுக்கு ஏற்கும்படி இல்லை?

- ப்ரதர்தநாதிவித்யாஸு வேத்யே அபி பரமாத்மநி அசேதநவதிச்சாம: சேதநம் ச விசேஷணம் – ப்ரதர்த்தந வித்யை போன்ற பலவற்றிலும் பரமாத்மாவே முதன்மையானவனாக ஏற்கப்படுகின்றபோதிலும், அசேதன வஸ்துக்கள் போன்றே சேதனமாக உள்ள இந்த்ரன் உள்ளிட்டவர்களையும் அந்தப் பரமாத்மாவின் விசேஷணங்களாக ஏற்கிறோம்.

- இத்தம் ப்ரபத்திவித்யாயாம் தத்தந்மந்த்ரானுஸாரத: விபு: பத்ந்யா குணாத்யைச்ச விதிஷ்டோ விஷய: அத்ர ந: - இது போன்றே இந்த ப்ரபத்தி என்னும் வித்யையில், த்வயம் உள்ளிட்ட மந்த்ரங்களில் கூறப்பட்டபடி, தன்னுடைய பத்னியாகிய பெரியபிராட்டியுடனும், தனது குணங்கள் மற்றும் திருமேனி ஆகியவற்றுடனும் கூடியவனான எம்பெருமானே நமக்கு விஷயமாக உள்ளான்.

## பெரியபிராட்டியுடன் கூடியுள்ள எம்பெருமானே உபாயமாக உள்ளான்

**மூலம்** – இங்கு கேவல தர்க்கங்களையிட்டு ப்ரமாணங்களை பாதிக்கலாகாதென்னுமிடம் முன்பே சொன்னோம். ஆகையால் யதாப்ரமாணம் சரண்யாபிப்ராய விசேஷாநுகுணமாக விசிஷ்டம் உபேயமானாற்போலே விசிஷ்டம் உபாயமாகக் குறையில்லை.

**விளக்கம்**– சாதாரணமாக உள்ள தர்க்கவாதங்கள் மூலமாக உறுதியான ப்ரமாணங்களைத் தகர்க்க இயலாது, அவ்விதம் செய்தலும் கூடாது என்பதை நாம் முன்னரே உரைத்தோம்.

ஆகவே எந்த ப்ரமாணங்கள் மூலமாக ஸர்வேச்வரனின் விருப்பத்திற்கு ஏற்றபடி, பிராட்டியுடன் கூடிய எம்பெருமானே உபேயமாக உள்ளான் என்று கூறுகிறோமோ, அதே போன்று பிராட்டியுடன் கூடிய எம்பெருமானே உபாயமாகவும் உள்ளான் என்று கூறுவதில் எந்தவிதமான விரோதமும் இல்லை.

## பிராட்டியும் உபாயம் என்பதால், “உபாயம் ஒன்று மட்டுமே” என்பதற்கு முரண்பாடு இல்லை

**மூலம்–** நாராயண சப்தத்திலும், சரண சப்தத்திலும் தோற்றுகிற குணவிசேஷ விக்ரஹ விசேஷாதி விசிஷ்டமான ஏகம் உபாயமானாற் போலே துல்ய யோகக்ஷேமமான ஸ்ரீமச்சப்தத்தில் தோற்றின நித்ய பத்நீஸம்பந்த விசிஷ்டமானாலும் உபாயைக்யத்துக்குக் குறையில்லை. உபாய விசேஷணங்களை எல்லாம் விட்டு உபாயத்தை ஏகமாக்க வேணுமென்னில், உபாயத்வமும் விசேஷணமன்றிக்கே போம். விசேஷணப்ரயுக்தமாய் விசேஷ்யத்துக்கு வரும் ஏற்றத்தால் விசேஷ்யத்துக்கு வைகுண்யாதிகள் வாராவென்று:

ஸ்வத: ஸ்ரீ: த்வம்விஷ்ணோ: ஸ்வம்அஸிததஏவஏஷ: பகவாந்
த்வத்ஆயத்தருத்தித்வேபிஅபவத்அபராதீநவிபவ:
ஸ்வயாதீப்த்யாரத்நம்பவத்அபிமஹார்கம்நவிகுணம்
நகுண்டஸ்வாதந்த்ர்யம்பவத்இதிசநசஅந்யஆஹிதகுணம்

என்கிற ச்லோகத்திலே நிர்ணயிக்கப்பட்டது. விசேஷணத்தால், விசேஷ்யத்துக்கு வரும் அதிசயம்போலே விசேஷயத்துக்கு ஸ்வரூபாநுபந்தியான அதிசயமும் அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா என்கிற த்ருஷ்டாந்தத்திலே காணலாம். பாஸ்கரனுக்கும் ப்ரபைக்கும் ஸ்வதஸித்தாமான தேஜஸ்த்வம்போலே இருவருக்கும் அநந்யாதீந கல்யாணம் என்கிறபடியே ஸ்வபாவஸித்த கல்யாணதையாலே. அப்ரமேயம் ஹி தத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா என்றும், தவ ச்ரியா என்றும், “உன் திரு” என்றும், ஸ்ரீய: ஸ்ரீ: என்றும், “திருவுக்கும் திரு” என்றும் அந்யோந்யாதிசயாவஹங்களாக விசேஷண விசேஷ்யங்களை நிர்தேசிக்கிறதற்கும் குறையில்லை. ச்ருதிபலத்தாலே த்வை ச ஸதகைசேஷீ என்கிறபடியே உபயாதிஷ்டாநம் சைகம் சேஷித்வம் என்றும் சோமாசியாண்டான் ஷடர்த்தஸங்க்ஷேபத்தில் நிஷ்கர்ஷித்தபடியே இருவரும் ஏகசேஷித்வாச்ரயரானாபடியாலே ஹவிர்விசேஷங்களிலே அக்ராவிஷ்ணு ப்ரப்ருதி களுக்குப் போலே ஆத்மஹவி: ஸமர்ப்பண ப்ரதிஸம்பந்திகளாகைக்கும் குறையில்லை.

**விளக்கம்–** த்வயத்தில் உள்ள நாராயண என்ற பதம் மூலம் பல குணங்கள் கொண்டவனாகவும், சரணௌ என்னும் பதம் மூலம் திவ்யமங்கள விக்ரஹம் கொண்டவனாகவும் உணர்த்தப்பட்டு, இந்த இரு தன்மைகளாலும் நாராயணனே

உபாயம் என்பது உரைக்கப்படுகிறது; இது போன்றே, ஸ்ரீமத் என்பதன் மூலம் எப்போதும் பிராட்டியுடன் கூடியவனாகிய நாராயணன் என்பது உணர்த்தப்பட்டு, அவளுடன் சேர்ந்த அவனே உபாயம் என்பது கூறப்படுகிறது. இதனால் எந்தவிதமான முரண்பாடும் இல்லை. உபாயத்தின் தன்மைகள் அனைத்தையும் விட்ட பின்னரே "உபாயம் என்பது மட்டும் உள்ளது" என்ற நிலை உண்டாகும் என்பதால், அனைத்து தன்மைகளையும் கைவிடவேண்டும் என்று சிலர் கூறலாம்; அப்படியானால் உபாயமாக உள்ள தர்மமும் (உபாயத்வம்) விடவேண்டியதாகிறது அல்லவோ? இங்கு ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்; அதாவது, மஹாலக்ஷ்மியுடன் கூடியுள்ளதால் எம்பெருமானுக்குச் சிறப்பான தன்மைகள் உண்டு என்று கூறுவதன் மூலம், அப்படி அவளுடன் சேர்ந்து இருப்பதன் முன்பாக அந்தச் சிறப்புகள் அவனுக்கு இல்லை என்று கூறலாகாது. இதனை ஸ்ரீகுணரத்நகோசத்தில் (31) ஸ்வாமி பராசரபட்டர் பின்வருமாறு உரைக்கிறார்:

> ஸ்வத: ஸ்ரீ: த்வம்விஷ்ணோ: ஸ்வம்அஸிததஏவஏஷ: பகவாந்
> த்வத்ஆயத்தருத்தித்வேபிஅபவத்அபராதீநவிபவ:
> ஸ்வயாதீப்த்யாரத்நம்பவத்அபிமஹார்கம்நவிகுணம்
> நகுண்டஸ்வாதந்த்ர்யம்பவத்இதிசநசஅந்யஆஹிதகுணம்

இதன் பொருள் - மஹாலக்ஷ்மீ! ஸ்ரீரங்கநாயகீ! நீ ஸ்ரீரங்கநாதனுக்கு உரிமை உள்ளவளாக எப்போதும் இருக்கிறாய். இதனால்தானே உன் மூலம் பெருமைகள் அடைந்த அவன், தனது இயல்பான பெருமைகளையும் கொண்டு விளங்குகிறான். ஒரு இரத்தினக்கல்லுக்கு பெருமை, மதிப்பு போன்ற அனைத்தும் அதிலிருந்து வீசும் ஒளிக்கே உரியது. ஆயினும் அந்தக் கல்லைக் காணும் யாரும் ஒளியை மட்டும் மதித்துவிட்டு, இரத்தினக்கல் முக்கியத்வம் கொண்டது இல்லை என்று ஒதுக்கி விடுவதில்லையே. ஆகவே ஒளியால் உண்டாகிய சிறப்பை இரத்தினம் ஏற்கிறது அல்லவா?

இப்படியாக குறிப்பிட்ட தன்மைகள் மூலமாக (மஹாலக்ஷ்மி), அந்தத் தன்மைகள் கொண்ட வஸ்துவிற்கு (எம்பெருமான்) மேன்மைகள் ஏற்படும்போதிலும், அந்த வஸ்துவானது தனக்கே உரியதான மேன்மைகள் கொண்டதாகவே உள்ளது. இதனை இராமாயணம் ஸுந்தரகாண்டம் (21-15) - அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா – சூரியனை விட்டு அதன் ஒளி எவ்விதம் பிரிந்திருக்க முடியாதோ அது போன்று நானும் இராமனை விட்டுப் பிரிந்திருக்க இயலாதவள் – என்றது காண்க. அதாவது ஒளி என்பது சூரியனுக்கும், அதன் கதிர்களுக்கும் இயற்கையாகவே உள்ளதாகும். இது போன்றே இராமனுக்கு சீதைக்கும் இயற்கையாகவே அவரவர்களுக்கான குணங்கள்

உள்ளன என்பதை லக்ஷ்மீ கல்யாணத்தில் ஸ்வாமி பராசரபட்டர் - அநந்யாதீந கல்யாணம் – தங்களுக்கென்றே உரிய குணங்களுடன் கூடியவர்களும், ஒருவரால் மற்றவருக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லாத குணங்கள் கொண்டவர்களும் ஆகிய திவ்யதம்பதிகளை வணங்குகிறோம் – என்றார். இந்த இருவரும் ஒருவருக்கொருவர் மேன்மைகளை பரஸ்பரம் அளித்துக் கொள்கின்றனர் என்பதைக் கீழே உள்ள பல வரிகளிலும் காணலாம்:

- இராமாயணம் ஆரண்யகாண்டம் (37-18) - அப்ரமேயம் ஹி தத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா – ஜனகனின் திருமகளான அந்த சீதை யாருடைய பத்தினியோ, அந்த இராமனின் தேஜஸ் அளவிட இயலாத ஒன்றாகும்.

- ஸ்தோத்ரரத்னம் (38) - தவ ச்ரியா – உனக்கு ஏற்றபடி உள்ள மஹாலக்ஷ்மியுடன்

- திருவாய்மொழி (10-10-2) - உன் திரு – உனது மஹாலக்ஷ்மி

- ஸ்ரீகுணரத்நகோசம் (9) - ஸ்ரீய: ஸ்ரீ: - ஸ்ரீரங்கநாச்சியாருக்கும் அழகு சேர்க்கும் ஸ்ரீரங்கநாதா!

- பெரியதிருமொழி (7-7-1) - திருவுக்கும் திரு – மஹாலக்ஷ்மிக்கும் அழகு சேர்ப்பவனே!

ச்ருதிகளில் கூறப்பட்ட வரிகளின் காரணமாகவும், ஸாத்வத ஸம்ஹிதையில் - த்வை ச ஸதகைசேஷீ – பெரியபிராட்டியும் எம்பெருமானும் எப்போதும் சேர்ந்தே இருந்து உலகின் எஜமானர்களாக உள்ளனர் – கூறியதற்கு ஏற்பவும், சோமாசியாண்டான் தன்னுடைய ஷடர்த்தஸங்க்ஷேபத்தில் - உபயாதிஷ்டாநம் சைகம் சேஷித்வம் – எஜமானனாக இருக்கும் தன்மை ஒன்று என்றாலும், அது இருவரிடமுமே உள்ளது – என்று தீர்மானம் செய்தது காண்க. யாகங்களில் அளிக்கப்படும் அவிர்பாகம் என்பது அக்னி மற்றும் விஷ்ணுவிற்கு, அவர்கள் ஒன்றாகவே உள்ளனர் என்பதாகவே எண்ணியபடி அளிக்கப்படுகிறது; இது போன்றே பிராட்டியும் எம்பெருமானும் ஒரே எஜமானன் என்பது போன்றே உள்ளதால், ஆத்மசமர்ப்பணம் என்பதை இந்த இருவருக்கும் ஒன்றாகவே செய்வதில் எந்தக் குறையும் இல்லை என்று கருத்து.

**மூலம்–**

யுவத்வாதௌதுல்யேஅபிஅபரவசதாசத்ருசமந
ஸ்திரத்வஆதீந்க்ருத்வாபகவதிகுணாந்பும்ஸ்த்வஸுலபாந்
த்வயிஸ்த்ரீத்வஏகாந்தாந்மரதிமபதிபாரார்த்த்யகருணா
க்ஷமாஆதீந்வாபோக்தும்பவதியுவயோ: ஆத்மநிபிதா

என்கிறபடியே பத்நிக்கு நித்யபதிர்பாரார்த்தவ்யத்தாலே யாகதந்த்ரத்திற்போலே பதிப்ரதானமாகச் சாஸ்த்ரங்களில் உபதேசங்களுக்கும், ஏகன் யஜமாநன் என்னுமாப்போலே ஏகவ்யபதேசத்துக்கும் குறையில்லை. “தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு” என்கிறதற்குமிதுவே தாத்பர்யம். தத் அந்தர்பாவாத் த்வாம் ந ப்ருத கபிததே ச்ருதி: அபி என்கிற வழிகளும் கண்டு கொள்வது. “எம்பெருமானைச் சொன்னவிடத்திலே பிராட்டியையுஞ் சொல்லிற்றாம்” என்று தொடங்கி உடையவர் அருளிச்செய்த வார்த்தையை ஆச்சான் பக்கலிலே கேட்டு நஞ்ஜீயர் ஸங்க்ரஹித்தார்.

**விளக்கம்–** ஸ்ரீகுணரத்னகோசத்தில் (34) - மேலே மூலத்தில் “யுவாத்வாதௌ” என்றுள்ள ச்லோகம்) - ஸ்ரீரங்கநாயகீ! மேலே கூறப்பட்ட இளமை முதலியவை உங்கள் இருவருக்கும் பொதுவாக உள்ளது என்றாலும் ஸ்ரீரங்கநாதனிடம் ஆண்களுக்கே உரிய சில குணங்கள் உள்ளன. அவையாவன – மற்றவர்களுக்கு எளிதில் வசப்படாமல் இருத்தல், அடியார்களின் பகைவர்களை அழித்தல், என்ன இடையூறு வந்தாலும் அடியார்களைக் காத்து நிற்பது – இவை முதலான குணங்கள் அவனிடம் மட்டுமே உண்டு. உன்னிடம் பெண்களுக்கே உரிய குணங்கள் பொதிந்து உள்ளன. அவையாவன – இரக்கம் நிரம்பிய மனம், ஸ்ரீரங்கநாதனின் குறிப்பறிந்து நடத்தல், கருணை, பொறுமை போன்ற பல குணங்கள் உன்னிடம் உள்ளன. இப்படியாக உங்கள் இருவரிடமும் உள்ள குணங்களில் வேறுபாடு உள்ளது– என்றது காண்க. இந்த ச்லோகத்திற்கு ஏற்ப பெரியபிராட்டியார் ஸர்வேச்வரனுக்கு வசப்பட்டே உள்ளாள். மேலும் யஜ்ஞம் முதலான பலவற்றைப் பேசும்போது யஜமானன் பற்றியே கூறப்படுவது காண்க (ஆனால் அந்த யஜமானனுடன் அவனது பத்னியும் சேர்ந்தே அந்த யஜ்ஞம் முதலியவற்றில் ஈடுபடுகிறாள். ஆக யஜமானன் என்னும் ஒரே பதம் மூலம் இருவரும் கூறப்படுவது காண்க). சாஸ்த்ரங்களில் யஜமானன் என்று ஒருவனைப் பற்றிக் கூறுவது என்பது, அங்கு அவனது பத்னியைப் பற்றிக் கூறவில்லை என்றாகாது; இருவரும் ஒன்றே என்று கூறுவது பொருத்தமே ஆகும். முதல் திருவந்தாதியில் (67) - தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு– என்று கூறுவதற்கு இதுவே கருத்தாகும். மேலும்,

ஸ்ரீகுணரத்னகோசத்தில் (28) - தத் அந்தர் பாவாத் த்வாம் ந ப்ருத கபிதகே ச்ருதி: அபி - சந்திரனைப் போன்ற குளிர்ந்த முகம் உடையவளே! தாயே! மஹாலக்ஷ்மீ! ஸ்ரீரங்கநாயகீ! நன்றாக ஆராய்ந்து பார்த்தால் உனது கணவனான ஸ்ரீரங்கநாதனின் ஸ்வரூபம், திருக்கல்யாண குணங்கள் போன்றவை உனது தொடர்பு அவனுக்கு உள்ளதால் அல்லவோ உண்டாகிறது? இப்படியாக உனது கணவனுடைய ஸ்வரூபமாகவும், இனிய குணங்களாகவும் நீயே விளங்குகின்றாய். வேதங்கள் இதனை நன்கு உணர்ந்துள்ளன. அவை உன்னை நம்பெருமாளின் ஸ்வரூபமாகவும், திருக்கல்யாண குணங்களாகவும் கண்டன. ஆகவேதான் அவை உன்னைத் தனியே ஓதவில்லை போலும்! – என்பதிலும் ஸர்வேச்வரன் என்பதிலேயே இவளும் அடக்கம் என்பது உணர்த்தப்படுவது காண்க. உடையவரின் சிஷ்யரான கிடாம்பி ஆச்சானிடம், “எம்பெருமானைப் பற்றிக் கூறும் அனைத்து இடங்களிலும் பிராட்டியும் கூறப்படுகிறாள்” என்பதை நஞ்ஜீயர் அறிந்தார்.

**மூலம்** – ஆகையால் காம்யப்ரதாநமான அதிகாரார்ச்சநரூபத்திலும் விஷ்ணுபத்நீத்வம் ப்ரதிஷ்டிதமாகையாலே லயபோகார்ச்சநங்களிலே ப்ரவ்ருத்தராய் அநந்யப்ரயோஜநரான முமுக்ஷுக்களுக்கும் காம்யப்ரதாநமான பகவத்ரூபத்திற்போலே மாத்ருத்வாத்யு பாதிகமான ப்ரணாமாத்யாசாரங்களுக்கும் குறையில்லை. இப்படி மத்யஸ்த த்ருஷ்டியாலே ப்ரமாணிகார்த்தங்கள் தோற்றச் செய்தே பற்றினது விடாதொழியில்,

த்ருடபூர்வச்ருதோ மூர்க்கோ தர்மாணாமவிசாரத:
வ்ருத்தாநப்ருச்சந் ஸந்தேஹாந் அந்த: ஸ்வப்ரமிவர்ச்சதி
அந்யதா மந்தபுத்தீநாம் ப்ரதிபாதி துராத்மநாம்
குதர்க்க வ்யாள தஷ்டாநாம் விப்ராந்தேந்த்ரிய வாஜிநாம்

என்கிற தசையாம். ஆகையால் ஸித்தோபாயசப்த வாச்யவிமர்சத்தில் நாநயோர்வித்யதே பரம், யதா ஸர்வகதோ விஷ்ணு: ததைவேயம் த்விஜோத்தம, அஸ்யா தேவ்யா மநஸ்தஸ்மிந் தஸ்ய சாஸ்யாம் ப்ரதிஷ்டிதம் தேநேயம் ஸ ச தர்மாத்மா முஹூர்த்தமபி ஜீவதி, வ்யாபகாவதி ஸம்ச்லேஷாத் ஏகதத்வமிவோதிதௌ என்கிறபடியே ஏகசேஷித்வத்தாலும், ஏகாபிப்ராயதையாலும் பரஸ்பர ப்ராவண்யாதிசயத்தாலும் ஸ்வரூப ரூபாதிகளில் பிரிவற்ற அந்வய விசேஷத்தாலும் காடோபகூடாநிதே என்னும்படி ஸுச்லிஷ்டமான் விசிஷ்டதத்த்வம் நிற்கிற நிலை குலையாதபடி ஸவிசேஷணமான நாராயண சப்தம் ப்ரதிபாதிக்கிறபடியை அநுஸந்திக்கை ஸத்த்வஸ்தர்க்குப் ப்ராப்தம்.

**விளக்கம்**– மோக்ஷத்தை மட்டுமே ப்ரதானமாகக் கொண்டு, வேறு எந்தவிதமான பலன் மீதும் ஈடுபாடு இல்லாதவர்கள் மஹாலக்ஷ்மியை எம்பெருமானின் திருமார்பில் லயித்துள்ளவளாகவும், அவனது அருகில் அவனது இன்பமான துணைவி என்னும்

வடிவில் உள்ளவளாகவும் வழிபடுகின்றனர். நாம் எம்பெருமானின் ஒரு சில வகையான விக்ரஹங்களைக் கண்டு, அவன் முன்பாக உலகவிஷயங்களை அடைவது குறித்து வணங்குகிறோம் (உதாரணமாக பிள்ளைப்பேறு வேண்டுபவர்கள் சந்தானக்ருஷ்ணனை வணங்குவது போன்று); இதே போன்று முமுக்ஷுக்கள் வேறு பயன் எண்ணவில்லை என்றாலும், அவர்கள் மஹாலக்ஷ்மியின் தனியான ஸன்னதி முன்பாக நின்று வணங்குவதில் எந்தவிதமான குறையும் இல்லை; இந்தச் செய்கை, நாம் நமது தாயை வணங்குவது போன்றே ஆகும்; இதன் காரணம் அவளது திவ்யமங்கள விக்ரஹம் என்கு இருந்தாலும், அவள் ஸர்வேச்வரனின் பத்னியாகவே உள்ளாள் என்பது வெளிப்படை ஆகும்.

இது போன்று பலவிதமான ப்ரமாண வசனங்கள் நடுநிலையாளர்களால் கூறப்பட்டபோதிலும், ஒரு சிலர் தாங்கள் கூறுகின்ற வாதங்களில் மாறாமலேயே இருப்பார்கள். இவர்களின் நிலை பற்றி பின்வருமாறு உரைக்கப்பட்டுள்ளது காண்க:

- மஹாபாரதம் கர்ணபர்வம் (72-54) - த்ருடபூர்வச்ருதோ மூர்க்கோ தர்மாணாமவிசாரத: வ்ருத்தாநப்ருச்சந் ஸந்தேஹாந் அந்த: ஸ்வப்ரமிவர்ச்சதி – தான் முதன்முதலில் கேட்டதை மட்டுமே உறுதியாகக் கொண்டுள்ளவனும், மூடனும், எந்தவிதமான தர்மங்களை அறியாமல் உள்ளவனும், கற்றவர்களிடம் தன்னுடைய சந்தேகங்களைக் கேட்டுத் தெளியாதவனும் ஆகிய ஒருவன், குருடன் எவ்விதம் பள்ளத்தில் விழுகிறானோ அது போன்று விழுந்து தீமையை அடைகிறான்.

- இதிஹாஸ ஸமுச்சயம் (33-108) - அந்யதா மந்தபுத்தீநாம் ப்ரதிபாதி துராத்மநாம் குதர்க்க வ்யாள தஷ்டாநாம் விப்ராந்தேந்த்ரிய வாஜிநாம் – மந்தமான அறிவு கொண்டவர்களாக, பெரியவர்களை நிந்திப்பவர்களாக, தவறான வாதங்கள் என்னும் நாகங்களால் தீண்டப்பட்டவர்களாக, மயக்கம் கொண்ட இந்த்ரியங்கள் என்னும் குதிரைகளைக் கொண்டவர்களாக உள்ளவர்களுக்கு எந்தவொரு விஷயமும் உள்ளது உள்ளபடித் தோன்றாமல் மாறுபட்டே தோன்றும்.

ஸித்தோபாயம் என்னும் பதத்தின் உண்மையான பொருளை உள்ளது உள்ளபடி அறிந்து கொள்ள, கீழே உள்ள வரிகளை மனதில் கொள்ளவேண்டும்:

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-8-35) - நாநயோர்வித்யதே பரம் – இவர்களைத் தவிர உயர்ந்தவர்கள் யாரும் இல்லை.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-8-17) -யதா ஸர்வகதோ விஷ்ணு: ததைவேயம் த்விஜோத்தம – அந்தணர்களில் உயர்ந்தவரே! எம்பெருமான் எவ்விதம் எங்கும் வ்யாபித்துள்ளானோ, எவ்விதம் அவனே அனைவராலும் உபாயம் என்று கொள்ளப்படுகிறானோ, அப்படியே பெரியபிராட்டியும் உள்ளாள்.

- இராமாயணம் ஸுந்தரகாண்டம் (15-52) - அஸ்யா தேவ்யா மநஸ்தஸ்மிந் தஸ்ய சாஸ்யாம் ப்ரதிஷ்டிதம் தேநேயம் ஸ ச தர்மாத்மா முஹூர்த்தமபி ஜீவதி – சீதையின் மனம் இராமனிடமும், இராமனின் மனம் சீதையிடமும் லயித்துள்ளது. இதனால்தான் இவளும், தர்மமே வடிவான இராமனும் ஒவ்வொரு முகூர்த்த காலமும் உயிருடன் உள்ளனர்.

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (4-78) - வ்யாபகாவதி ஸம்ச்லேஷாத் ஏகதத்வமிவோதிதௌ – அனைத்திலும் வ்யாபித்தபடியும், எப்போதும் சேர்ந்துள்ளபடியும் இருப்பதால், ஒரே தத்வம் என்று கூறப்படுகின்றனர்.

என்கிறபடியே ஏகசேஷித்வத்தாலும், ஏகாபிப்ராயதையாலும் பரஸ்பர ப்ராவண்யாதிசயத்தாலும் ஸ்வரூப ரூபாதிகளில் பிரிவற்ற அந்வய விசேஷத்தாலும் காடோபகூடாநிதே என்னும்படி ஸுச்லிஷ்டமான விசிஷ்டதத்த்வம் நிற்கிற நிலை குலையாதபடி ஸவிசேஷணமான நாராயண சப்தம் ப்ரதிபாதிக்கிறபடியை அநுஸந்திக்கை ஸத்த்வஸ்தர்க்குப் ப்ராப்தம்.

மேலே உள்ள வரிகளின்படி, ஒரே எஜமானன் என்று கூறும்படி இருவரும் ஒன்றாக உள்ளதாலும், ஒரே போன்று சிந்தனை கொண்டுள்ளவர்கள் என்பதாலும், ஒருவருக்கொருவர் ஏற்றவர்கள் என்று கூறும்படியாக உள்ளதாலும், ஸ்வரூபம் மற்றும் ரூபங்களில் எந்தவிதமான பிரிவும் இன்றி ஒத்துள்ளதாலும் – ஸத்வத்தில் எப்போதும் நிலையாக நிற்பவர்கள், நாராயண என்னும் பதத்தை ஸ்ரீமத் என்பதுடன் சேர்த்துப் படிக்கும்போது, தத்வமாகிய பகவானுக்கும் அவனுடைய பிரிக்க இயலாத தன்மை போன்றுள்ள பெரியபிராட்டியாருக்கும் உள்ள பிரிக்க இயலாத தன்மையை மனதிற் கொள்ளவேண்டும். இதனை எவ்விதம் மனதில் நிலைநிறுத்தவேண்டும் என்றால், சது:ச்லோகி (4) – காடோபகூடாநிதே – உனது ஸ்வரூபம் மற்றும் திருமேனியால் அவனது ஸ்வரூபம் மற்றும் திருமேனியானது தழுவப்பட்டுள்ளது – என்று கூறப்பட்டது போன்று ஆகும்.

**மூலம்–**

ஸமஸ்த புருஷார்த்தாநாம் ஸாதகஸ்ய தயாநிதே:
ஸ்ரீமத: பூர்வஸித்தத்வாத் ஸித்தோபாயமிமம் விது:

பக்தி ப்ரபத்தி ப்ரமுகம் தத்வசீகார காரணம்
தத்தத்பலார்த்தி ஸாத்யத்வாத் ஸாத்யோபாயம் விதுர்புதா:

ஸாத்யோபாயோத்தரங்கேண ஸித்தோபாயஸ்ய சேஷிண:
லீலாப்ரவாஹ: காருண்ய ப்ரவாஹேண நிருத்யதே

தேநைவ ஸர்வே லீயந்தே ஸிகதாஸேது பந்தவத்
ஸ்வதந்த்ரஸ்யாபி ஸங்கல்பா: ஸ்வகைங்கர்ய நிரோதகா:

ப்ரஸாதநஸ்யோபாயத்வே சாஸ்த்ரீயேபி பலம் ப்ரதி
கர்த்துத்வாவ்யவதாநாத்யை: ஸித்தோபாயப்ரதாநதா

ஸ்வதந்த்ரந்யாஸநிஷ்டாநாம் ஸித்தோபாயே விபௌ ஸ்திதி:
க்ஷணாத் ஸ்வயத்ந விரதி வ்யக்த்யை ப்ரோக்தா விசேஷத:

அதோ யதர்த்தம் ஸ்வபர: ஸித்தோபாயே நிவேசித:
ததர்த்தம் சாந்தயத்ந: அஸௌ ஸித்தோபாயம் ப்ரதீக்ஷதே

ப்ரபத்தேர்லக்ஷணே மந்த்ரே விதௌ வாக்யாந்தரேஷு ச
பாஷ்யாதௌ ஸம்ப்ரதாயே சோபாயத்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்

பூர்வஸித்தஸ்ய தேசாதே: தர்மத்வம் யத்விதிஷ்யதே
ஏவம் தத்வவித: ப்ராஹு: க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்

**விளக்கம்–** (மேலே உள்ள பல ச்லோகங்களுக்கான பொருள்)

- ஸமஸ்த புருஷார்த்தாநாம் ஸாதகஸ்ய தயாநிதே: ஸ்ரீமத: பூர்வஸித்தத்வாத் ஸித்தோபாயமிமம் விது: - அனைத்து புருஷார்த்தங்களையும் அளிக்கவல்லவனும், கருணைக்கு இருப்பிடமாக உள்ளவனும் ஆகிய ஸ்ரீமந்நாராயணன் ப்ரபத்தி

செய்வதற்கும் முன்பே உள்ளதால் அவனையே ஸித்தோபாயமாக பூர்வர்கள் அறிகிறார்கள்.

- பக்தி ப்ரபத்தி ப்ரமுகம் தத்வசீகார காரணம் தத்தத்பலார்த்தி ஸாத்யத்வாத் ஸாத்யோபாயம் விதுர்புதா: - அவனை வசீகரிப்பதற்குக் காரணமாக உள்ளவை பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகும். இவை ஸாத்யோபயங்கள் எனப்படுகின்றன. இதன் காரணம் இவை அந்தந்த பலன்களை விரும்புகிறவர்களால் கைக்கொள்ளப்பட வேண்டியவை என்பதால் ஆகும் என்று அறிஞர்கள் உணர்கின்றனர்.

- ஸாத்யோபாயோத்தரங்கேண ஸித்தோபாயஸ்ய சேஷிண: லீலாப்ரவாஹ: காருண்ய ப்ரவாஹேண நிருத்யதே – ஸாத்யோபாயங்கள் வெகுவாக வளர்வதன் காரணமாக எம்பெருமானின் கருணை அளவற்றுப் பெருகிப் பாய்கிறது. இந்த வெள்ளத்தின் மூலம் ஸித்தோபாயமாகவும் எஜமானனாகவும் உள்ள அவனது லீலையின் ப்ரவாஹம் என்பது தடுக்கப்படுகிறது.

- தேநைவ ஸர்வே லீயந்தே ஸிகதாஸேது பந்தவத் ஸ்வதந்த்ரஸ்யாபி ஸங்கல்பா: ஸ்வகைங்கர்ய நிரோதகா: - இத்தகைய அவனுடைய காருண்யம் என்னும் வெள்ளம் காரணமாக, அவனுக்குக் கைங்கர்யம் செய்வதற்குத் தடங்கலாக உள்ள அவனுடைய சுதந்திரமான ஸங்கல்பங்கள் போன்ற அனைத்தும் மண்ணால் கட்டப்பட்ட அணை போன்று அழிகின்றன.

- ப்ரஸாதநஸ்யோபாயத்வே சாஸ்த்ரீயேபி பலம் ப்ரதி கர்த்துத்வாவ்யவதாநாத்யை: ஸித்தோபாயப்ரதாநதா – எம்பெருமானின் அனுக்ரஹத்தை அடைவதற்குக் காரணமாக உள்ள பக்தி மற்றும் ப்ரபத்தி போன்றவைகளுக்கு பலன்களை அளிக்கவல்ல உபாயமாக உள்ள தன்மை உண்டு என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ஆனாலும், பலனை அளிப்பதில் நேரடி கர்த்தாவாக உள்ள தன்மை, காரணமாக உள்ள தன்மை போன்றவற்றுக்கு ஸித்தோபாயமான எம்பெருமானே ப்ரதானம் என்று கூறப்பட்டுள்ளது.

- ஸ்வதந்த்ரந்யாஸநிஷ்டாநாம் ஸித்தோபாயே விபௌ ஸ்திதி: க்ஷணாத் ஸ்வயத்ந விரதி வ்யக்த்யை ப்ரோக்தா விசேஷத: - ப்ரபத்தியை ப்ரதானமாகவும் ஸ்வதந்த்ரமாகவும் கைக்கொண்டவர்களுக்கு ஸித்தோபாயமான எம்பெருமானிடம் மட்டுமே ஆழ்ந்த நிஷ்டை என்பது கூறப்பட்டது; ஏன் என்றால், ப்ரபத்தியைக் கைக்கொண்ட அந்த நொடியிலேயே தங்களது முயற்சி என்பது அழிகிறது என்பதை உணர்த்தவே ஆகும்.

- அதோ யதர்த்தம் ஸ்வபர: ஸித்தோபாயே நிவேசித: ததர்த்தம் சாந்தயத்ந: அஸௌ ஸித்தோபாயம் ப்ரதீக்ஷதே – எந்த ஒரு மோக்ஷம் என்பதற்காக தனது பாரமானது ஸித்தோபாயமான ஸர்வேச்வரனிடம் சமர்ப்பணம் செய்யப்பட்டதோ, அந்த மோக்ஷம் என்ற பலனுக்காக ஜீவன் வேறு முயற்சிகள் செய்யாதவனாக, ஸித்தோபாயமான ஸர்வேச்வரனையே எதிர்பார்த்தபடி உள்ளான்.

- ப்ரபத்தேர்லக்ஷணே மந்த்ரே விதௌ வாக்யாந்தரேஷு ச பாஷ்யாதௌ ஸம்ப்ரதாயே சோபாயத்வம் ப்ரஹ்மணி ஸ்திதம் – ப்ரபத்தி மந்த்ர வாக்யத்திலும், த்வய மந்த்ரத்திலும், சரம ச்லோகத்திலும், ப்ரபத்தியை விதிக்கின்ற மற்ற வாக்கியங்களிலும், ஸ்ரீபாஷ்யத்திலும், கீதா பாஷ்யத்திலும், ஸம்ப்ரதாயத்திலும் ப்ரஹ்மத்திடமே உபாயமாக உள்ள தன்மை உறுதியாகக் கூறப்பட்டுள்ளது.

- பூர்வஸித்தஸ்ய தேசாதே: தர்மத்வம் யத்விதிஷ்யதே ஏவம் தத்வவித: ப்ராஹு: க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் – எவ்விதம் திவ்யதேசம் முதலானவைகளுக்கு தர்மம் என்னும் பதத்தின் அர்த்தமாக உள்ள நிலை ஏற்கப்படுகிறதோ, அது போன்றே உள்ளது உள்ளபடி அறிந்தவர்களால் க்ருஷ்ணனே அநாதியாக உள்ள தர்மம் என்று கூறப்படுகிறது.

## ஸித்தோபாயத்தை ரஹஸ்யத்ரயத்தில் காணும் இடம்

மன்னுமனைத்துறவாய் மருண்மாற்றருளாழியுமாய்த்
தன்னினைவாலனைத்தும் தரித்தோங்குந் தனியிறையாய்
இன்னமுதத்தமுதாலிரங்குந் திருநாரணனே
மன்னிய வன்சரண் மற்றோர் பற்றின்றி வரிப்பவர்க்கே

**இதன் பொருள்–** எந்த நிலையிலும் உறுதியாக உள்ள அனைத்துவிதமான உறவினனாகவும், அறியாமை என்பதை நீக்கவல்ல கருணை என்னும் கடலாகவும், செயல் மூலம் அல்லாமல் தனது நினைவு மூலம் மட்டுமே அனைத்தையும் செய்யவல்ல சக்தி கொண்டவனும், ஓங்கி நிற்கின்ற ஒப்பற்ற ஸ்வாமியும், இனிமையான அமிர்தத்துடன் தோன்றிய அமிர்தமாக உள்ள பெரியபிராட்டியின் சிபாரிசு காரணமாக தயை செய்தபடி உள்ளவனும் ஆகியவன் ஸ்ரீமந்நாராயணன் ஆவான். இவனே பக்தியோகம் போன்றதான வேறு எந்தவிதமான உபாயங்களையும் கைக்கொள்ளாமல் சரணம் புகுந்தவர்களுக்கு எப்போதும் இருக்கின்ற உறுதியான உபாயமாக உள்ளான்.

விச்ராம்யத்பி: உபரி உபரி அபி திவாநக்தம் வஹிர்தர்சநௌ:
அஸ்மத் தேசிக ஸம்ப்ரதாய ரஹிதைரத்யாபி நாலக்ஷித:
ஸ்வப்ராப்தே ஸ்வயமேவ ஸாதநதயா ஜோகுஷ்யமாண: ச்ருதௌ
ஸத்த்வஸ்தேஷு பஜேத ஸந்நிதிமஸௌ சாந்தாவதி: சேவதி:

**இதன் பொருள்–** எம்பெருமான் என்னும் புதையல் குறித்து தொடர்ந்து இரவு மற்றும் பகல் ஆகிய காலங்களில் தொடர்ந்து அந்தப் புதையல் மேலே அமர்ந்து ஒரு சிலர் ஓய்வு எடுத்தபடி இருக்கக்கூடும். இப்படியாக உள்ளவர் அவர்கள் நம்முடைய ஆசார்யர்களின் ஸம்ப்ரதாயத்தைச் சேராமல் இருந்தபடி, அந்தப் புதையலை இதுவரை காணாமல் இருந்தபடி உள்ளனர். அந்தப் புதையல் தன்னை அடைவதற்குத் தானே உபாயமாக உள்ளதாகவே வேதங்களாக் முழங்கப்படுகின்றன. எல்லையற்ற ஸர்வேச்வரன் என்னும் இந்தப் புதையலானது வெளியில் தேடப்பட வேண்டிய அவசியம் இன்றி, ஸத்வகுணம் கொண்டவர்களின் அருகிலேயே (அவர்களுள்ளேயே) இருக்கின்ற இருப்பைக் கொண்டதாகும்.

ஸித்தோபாயசோதநாதிகாரம் ஸம்பூர்ணம்

## 24. ஸாத்யோபாயசோதநாதிகாரம்

யதாதிகரணம் ப்ரபுர்யஜந தாந ஹோமார்சநா
பரந்யஸந பாவநா ப்ரப்ருதிபி: ஸமாராதித:
பலம் திசதி தேஹிநாமிதி ஹி ஸம்ப்ரதாயஸ்திதி:
ச்ருதி ஸ்ம்ருதி குரு உக்திபி: நயவதீபி: ஆபாதி ந:

**பொருள்–** அவரவர்களின் பலனை அளிப்பதில் சாமர்த்யம் கொண்டவனாக உள்ள ஸர்வேச்வரன், அவரவர்களுடைய அதிகாரத்திற்கு ஏற்ப இயற்றப்பட்ட யாகம் – தானம் – ஹோமம் – அர்ச்சனை – ப்ரபத்தி – பக்தி போன்றவைகளால் நன்றாக ஆராதிக்கப்படுகிறான். இதனால் அவன் ஜீவன்களுக்கு ஏற்ற பலன்களை அளிக்கிறான். இப்படியாகவே ப்ரஸித்தி பெற்ற நம்முடைய ஸம்ப்ரதாயத்தின் நிலை என்பது உள்ளது. இந்த நிலையானது சிறந்த ந்யாயங்களுடன் கூடியதான வேதங்கள், ஸ்ம்ருதிகள், ஆசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகள் ஆகியவற்றால் நமக்கு நன்றாக விளங்குகிறது.

### ஸாத்யோபாயத்தைப் பற்றிய ஞானம் அவசியம்

**மூலம்** – இப்படி ஸர்வஜ்ஞுமாய் ஸர்வசக்தியாய்ப் பரமகாருணிகமாய் ஸர்வசேஷியாய் ஸபத்நீகமாய் ஸர்வலோக சரண்யமான ஸித்தோபாய விசேஷம் தெளிந்தாலும்,

ஆரோக்யம் இந்த்ரியௌஅல்பண்யம் ஐச்வர்யம் சத்ருசாலிதா
வியோகோ பாந்தவைராயு: கிம் தத் யேநாத்ர துஷ்யதி

என்கிறபடியே விவேகமில்லாதார்க்குக் குணமாய்த் தோன்றினவையும் தோஷமானபடி கண்டு ஸம்ஸார வைராக்யம் பூர்ணமானாலும் பரமாத்மநி யோரக்த: என்கிறபடியே ப்ராப்யருசியுண்டானாலும்,

மஹதா புண்ய பண்யேந க்ரீதேயம் காயநௌஸ்த்வயா
ப்ராப்தும் துக்கவோததே: பாரம் த்வர யாவந்ந பித்யதே

என்கிறபடியே த்வரை பிறந்தாலும் அநாதியாக அநுவ்ருத்தமான ஆஜ்ஞாதி லங்கநமடியாகப் பிறந்து நிற்கிற பந்தகமான பகவந்நிக்ரஹத்துக்குப் ப்ரசமநமாக மாமேகம் சரண்யம் வ்ரஜ என்று விதி வாக்யத்தாலும், ப்ரபத்யே என்று அநுஷ்டான வாக்யத்தாலும் சொல்லப்பட்ட ஸாத்யோபாய விசேஷம் தெளியாதபோது ஸித்தோபாய

பூதனான ஸர்வேச்வரனை வசீகரிக்க விரகில்லை. ஆகையால் அதின் அதிகாரத்திலும், ஸ்வரூபத்திலும், பரிகரங்களிலும் வரும் கலக்கங்களை சமிப்பிக்கிறோம்.

**விளக்கம்–** அனைத்தும் அறிந்தவனும், அனைத்து வலிமையும் கொண்டவனும், மிகவும் கருணை நிரம்பியவனும், தன்னுடைய பத்னியுடன் அனைத்திற்கும் எஜமானனும், அனைத்து உலகங்களில் உள்ள உயிர்களும் சரணம் புக ஏற்றவனும் ஆகிய ஸித்தோபாயமான ஸர்வேச்வரன் குறித்து ஒருவன் நன்றாக அறிந்திருக்கக்கூடும். ஆரோக்யம் இந்த்ரியௌஷ்பண்யம் ஐச்வர்யம் சத்ருசாலிதா வியோகோ பாந்தவைராயு: கிம் தத் யேநாத்ர துஷ்யதி – மனிதனுக்கு நல்ல ஆரோக்யம் உள்ளபோது, அவனது இந்த்ரியங்களில் உள்ள வலிமையால் பாவங்களைச் செய்ய முனைகிறான்; செல்வம் அதிகமாக இருந்தால் அதிகமான பகைவர்கள் உண்டாகி, துன்பமே விளையும்; நீண்ட ஆயுள் இருந்தால் நமது உறவினர்கள் பலரது மரணத்தைப் பார்த்தபடியே துக்கம் உண்டாகும்; ஆக இவற்றில் எதனை வைத்து இன்பமாக இருக்கமுடியும்? – என்னும் ச்லோகத்துக்கு ஏற்ப, விவேகம் அற்றவர்களுக்கு ஏற்கும்படியாகத் தோன்றுகின்ற ஸம்ஸாரம் என்பது தோஷமாகவும், ஏற்றுக் கொள்ள இயலாதபடியும் உள்ளது. இதனால் ஒருவனுக்கு ஸம்ஸாரம் குறித்து வைராக்யம் உண்டாகிறது. மேலும் ஸர்வேச்வரனை அடையவேண்டும் என்னும் ருசியானது, பரமாத்மநி யோரக்த: - ஸர்வேச்வரனை விரும்பும் ஒருவன் வேறு எதனையும் விரும்புவதில்லை – என்னும் ச்லோகத்திற்கு ஏற்ப ஒருவனுக்கு அதிகமாகலாம். இதனால் வராஹபுராணம் - மஹதா புண்ய பண்யேந க்ரீதேயம் காயநௌஸ்த்வயா ப்ராப்தும் துக்கவோததே: பாரம் த்வர யாவந்ந பித்யதே – மிகுந்த புண்ணியம் என்பதை விலையாகக் கொடுத்து வாங்கப்பட்ட ஓடம் போன்ற இந்த சரீரம் உடைவதற்குள், துன்பத்தின் அக்கரையை அடைவாயாக – என்பதற்கு ஏற்ப மோக்ஷத்தின் மீது அதிக வேகமான ருசி உண்டாகலாம். ஆனாலும் அவனுக்கு ஸாத்யோபாயம் குறித்து தெளிவாக அறியவில்லை என்றால் நடப்பது என்ன? (இதனைத் தொடர்ந்து கூறுகிறார்) எல்லையற்ற காலமாக ஸர்வேச்வரனின் ஆணைகளைத் தொடர்ந்து மீறியபடி உள்ளதால், எல்லையற்ற காலமாக ஸம்ஸாரத்தில் உழலுவதான தண்டனையைப் பெறுகிறோம்; இந்த தண்டனையை விலக்குவது எது என்றால் கீழே உள்ளவற்றில் காணப்படும் ஸாத்யோபாயம் குறித்த விசேஷமே ஆகும்:

- மாமேகம் சரணம் வ்ரஜ – என்னிடம் மட்டுமே சரணம் அடைவாயாக
- ப்ரபத்யே – நான் சரணம் புகுகிறேன்

இத்தகைய ஸாத்யோபாயம் பற்றி ஒருவன் அறியவில்லை என்றால், அவன் ஸித்தோபாயமாக உள்ள ஸர்வேச்வரனைத் தன்பக்கம் வசீகரிக்க வழி ஏதும் இல்லை.

ஆகவே நாம் ஸாத்யோபாயத்தின் தகுதிகள், அதன் ஸ்வரூபம், அதன் அங்கங்கள் ஆகியவை குறித்து உண்டாகும் சந்தேகங்களை இப்போது தீர்ப்போம்.

## ப்ரபத்திக்கு அனைவரும் தகுதியானவர்கள் என்பதற்கான ஆக்ஷேபமும் சமாதானமும்

**மூலம்**– இப் ப்ரபத்தியுமொரு வைதிக தர்மமன்றோ? இதுவுமொரு யாக விசேஷமாகவன்றோ ந்யாஸவித்யையில் ஓதப்படுகிறது? ஆகையால் இது ஸர்வாதிகாரமாகக் கூடுமோ? என்று சிலர் விசாரிப்பார்கள். இது ஸர்வேச்வரனை ஸர்வருக்கும் சரணமென்று ஓதுகிற ச்வேதாஸ்வதர ச்ருதிபலத்தாலே பரிஹ்ருதம், இவ்வர்த்தம். ஸர்வலோக சரண்யாய, ஸர்வயோக்யமநாயாஸம் அப்ரபாவமநூபமம் ப்ரபந்நார்த்திஹரம் விஷ்ணும் சரணம் கந்துமர்ஹஸி இத்யாதி உபப்ருஹ்மணங்களாலும், த்ரயாணாம் க்ஷத்த்ரியாதீநாம் என்று தொடங்கி சூத்ரபர்யந்தங்களான வர்ணங்களை எடுத்து ப்ரபந்நாநாம் ச தத்த்வத: என்று சொல்லுகிற ஸ்ரீ ஸாத்த்வத வசநத்தாலும்,

குயோநிஷ்வபி ஸஞ்ஜாதோ ய: ஸக்ருச்சரணம் கத:
தம் மாதா பித்ரு ஹந்தாரம் அபி பாதி பவார்த்திஹா

என்றும் சொல்லுகிற ஸநத்குமார ஸம்ஹிதா வசநத்தாலும் த்ருடீக்ருதம். ஆகையால் உபாஸநம் த்ரைவர்ணிகாதிகாரமாக அபசூத்ராதிகரணத்திலே ஸமர்த்திதமானாலும் வைதிகங்களான ஸத்யவசநாதிகள் போலே ப்ரபத்தியும் ஸாமாந்ய தர்மமாகையாலே யதாதிகாரம் வைதிகமந்த்ரத்தாலேயாதல் தாந்த்ரிக மந்த்ராதிகளாலேயாதல் ஸர்வருக்கும் ப்ரபத்த்யநுஷ்டாநத்துக்கு விரோதமில்லை. காகாதிகளும் ப்ரபந்நராகச் சாஸ்த்ரங்களிலே கேளாநின்றோம்.

**விளக்கம்**– "ப்ரபத்தி என்பது வேதங்களின் கூறப்படுகின்ற ஒரு தர்மமாக உள்ளது அல்லவோ? இது தைத்திரீய உபநிஷத்தின் நாராயண மந்த்ரத்தில் விசேஷமாக அல்லவோ ஓதப்படுகிறது? அப்படி என்றால், இது அனைவராலும் கைக்கொள்ளக் கூடியது என்று எவ்விதம் கூற இயலும் (வேதங்களை ஓதும் தகுதி படைத்தவர்களுக்கு மட்டுமே இது பொருந்தும் அல்லவோ என்று கேட்பதாகக் கருத்து)?", என்று சிலர் கேட்கலாம். இந்தக் கேள்விக்கான பதிலை, "ஸர்வேச்வரனே அனைவராலும் சரணம் என்று புகும் இடமாக உள்ளான்" என்று கூறுகின்ற ச்வேதாஸ்வதர உபநிஷத் வாக்கியத்தின் மூலம் உரைக்கலாம் (இந்த வரியானது - ஸர்வேந்த்ரிய குணாபாஸாம் ஸர்வேந்த்ரிய விவர்ஜிதம் ஸர்வஸ்ய ப்ரபுமீசாநம் ஸர்வஸ்தம் சரணம் ஸுஹ்ருத் – தான் எண்ணினால் புலன்கள் மூலம் அனைத்தையும் அறிய வல்லவனும், புலன்கள் இல்லாதவனும், கைங்கர்யத்திற்கு ஏற்ற பலன்களை அளிப்பவனும், அனைவரையும்

நியமிப்பவனும், கருணை மிகுந்தவனும் ஆகிய ஸர்வேச்வரன் அனைவரும் சரணம் புகும் இடமாக உள்ளான் – என்பதாகும்). இந்தக் கருத்து கீழே உள்ள பல இடங்களின் மூலம் உறுதியாகின்றது:

- இராமாயணம் யுத்தகாண்டம் (17-15) - ஸர்வலோக சரண்யாய – அனைத்து உலகங்களும் சரண் புக ஏற்றபடி உள்ளவனாகிய இராமனிடம் அழைத்துச் செல்வாயாக.

- ஸர்வயோக்யமநாயாஸம் அப்ரபாவமநூபமம் ப்ரபந்நார்த்திஹரம் விஷ்ணும் சரணம் கந்துமர்ஹஸி – அனைத்து உயிர்களாலும் சரணம் அடையத்தக்கவனும், எளிதாக அடையக்கூடியவனும், தன்னுடைய எந்தச் செய்கையிலும் தவறுகளுக்கு இடம் அளிக்காதவனும், வேறு யாரையும் ஒப்பாகக் கூற இயலாதபடி உள்ளவனும், ப்ரபத்தி செய்தவர்களின் துன்பத்தைப் போக்குபவனாகவும் உள்ள விஷ்ணுவைச் சரணம் அடைய நீ தகுதி கொண்டவன்.

- ஸாத்த்வத ஸம்ஹிதையில் (2-7 முதல் 2-11) - த்ரயாணாம் க்ஷத்த்ரியாதீநாம் – க்ஷத்ரியர்கள் தொடக்கமாக உள்ள மூன்று வர்ணத்தார்களும் விதிகளின்படி ப்ரபத்தி செய்து, நான்கு வ்யூஹங்களையும் மந்த்ரங்கள் இன்றி ஆராதனை செய்வதில் அதிகாரம் உள்ளது – என்றது காண்க.

- ஸநத்குமார ஸம்ஹிதை - குர்யோநிஷ்வபி ஸஞ்ஜாதோ ய: ஸக்ருச்சரணம் கத: தம் மாதா பித்ரு ஹந்தாரம் அபி பாதி பவார்த்திஹா – தாழ்ந்த குலத்தில் ஒருவன் பிறந்திருந்தாலும் ஸர்வேச்வரனிடம் ஒருமுறை ப்ரபத்தி செய்தால் போதுமானது; அவன் தனது தாய்தந்தையரைக் கொலை செய்தாலும், ஸம்ஸார துன்பத்தை நீக்கவல்ல ஸர்வேச்வரன் அவனைக் காப்பாற்றுகிறான்.

உபாஸநம் போன்றவை சூத்திரர்கள் அல்லாத மற்ற மூன்று வர்ணத்தால் மட்டுமே கைக்கொள்ளக் கூடியது, மற்றவர்களுக்கு அந்தத் தகுதி இல்லை என்று ஸ்ரீபாஷ்யத்தின் அபசூத்ராதிகரணத்தில் தீர்மானம் செய்யப்பட்டது; ஆனாலும் வேதங்களில் கூறப்படும் உண்மையான வசனங்கள் போன்று, ப்ரபத்தியும் அனைவருக்கும் தகுதியான ஒன்றே ஆகிறது. ஆகவே இந்த ப்ரபத்தியை அவரவர்களின் தகுதிக்கு ஏற்ப வேதங்களில் உள்ள மந்த்ரங்களின் அடிப்படையிலோ அல்லது தந்த்ரங்களில் உள்ள மந்த்ரங்கள் மூலமாகவோ யார் வேண்டுமானாலும் கைக்கொள்ள எந்தவிதமான விரோதமும் இல்லை. காகங்கள் கூட ப்ரபத்தி செய்தன என்று நாம் சாஸ்த்ரங்கள் மூலம் அறியலாம்.

**மூலம்–**

மாம் ஹி பார்த்த வ்யபாச்ரித்ய யே அபி ஸ்யு: பாபயோநய:
ஸ்த்ரீயோ வைச்யாஸ்ததா சூத்ராஸ்தே அபி யாந்தி பராம் கதிம்

என்று பகவதாச்ரயணமாத்ரம் ஸர்வஸாதாரணமாகச் சரண்யன் தானும் அருளிச் செய்தான். உபாஸநத்துக்கும் ப்ராரம்பம் த்ரைவர்ணிக சரீரத்திலேயானாலும் அவஸாநம் ஸர்வசரீரத்திலும் கூடுமென்னுமிடம்

தர்மவ்யாதாதய: அப்யந்யே பூர்வாப்யாஸாஜ்ஜுகுப்ஸிதே
வர்ணாவரத்வே ஸம்ப்ராப்தா: ஸம்ஸித்திம் ச்ரமணீ யதா

என்று ஸ்ரீவிஷ்ணுதர்மத்திலே சொல்லப்பட்டது. இப்படி உபாஸநம் த்ரைவர்ணிகர்க்கே ஆரம்பணீயமானாற்போலே ப்ரபத்தியில் ஒரு நியாமகத்தாலே ஸாமாந்ய வசநத்துக்கு ஸங்கோசமில்லாமையாலும் விசேஷவசந ப்ராபல்யத்தாலும் இப்ப்ரபதநம் ஸர்வர்க்கும் யோக்யம். ஆனபின்பு இது தனக்கு விசேஷித்து வேண்டும் அதிகாராம்சமும் முன்பே சொன்னோம்.

அதஸ்த்ரைவர்ணிகத்வாதி: பாவ: அபாவ: அபி கஸ்யசித்
நாதிகார: ப்ரபத்தேஸ்ஸ்யாத் ஆகிஞ்சந்யமநாச்ரித:

இவ்வர்த்தத்தைக் "குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன்" என்கிற பாட்டிலும், ஜநித்வாஹம் வம்சே என்கிற ச்லோகத்திலும் கண்டு கொள்வது. ஆகையால் சரண்ய சரணாகதி ஜ்ஞாநமும் ஆகிஞ்சந்யாதிகளுமுடைய ஸர்வஜாதீயர்க்கும் ப்ரபத்த்யதிகாரம் ஸித்தம்.

**விளக்கம்–** பகவானை அண்டி நிற்பது என்பது அனைவருக்கும் பொதுவானதே என்பதை, அனைவருக்கும் புகலிடமாக உள்ள க்ருஷ்ணன் கீதையில் (9-38) - மாம் ஹி பார்த்த வ்யபாச்ரித்ய யே அபி ஸ்யு: பாபயோநய: ஸ்த்ரீயோ வைச்யாஸ்ததா சூத்ராஸ்தே அபி யாந்தி பராம் கதிம் – பார்த்தா! பாவம் செய்தவர்களின் வயிற்றில் பிறக்கின்ற பெண்கள், வைச்யர்கள், சூத்திரர்கள் ஆகியவர்களில் யார் என்னை வந்து அடைகின்றனரோ அவர்கள் உயர்ந்த கதிக்குச் செல்கிறார்கள் – என்றான். உபாஸனம் அல்லது த்யானம் என்பது மேல் மூன்று வர்ணத்தினரால் மட்டுமே தொடங்கப்படலாம் என்றபோதிலும், அதன் முடிவு என்பது எந்த வர்ணத்தில் சரீரம் எடுத்துப் பிறந்தாலும் கைகூடும்; இதனை ஸ்ரீவிஷ்ணுதர்மம் (10-2-29) - தர்மவ்யாதாதய: அப்யந்யே பூர்வாப்யாஸாஜ்ஜுகுப்ஸிதே

வர்ணாவரத்வே ஸம்ப்ராப்தா: ஸம்ஸித்திம் ச்ரமணீ யதா - தர்மவ்யாதர் போன்றவர்கள் அருவருப்பான குலத்தில் பிறந்தபோதும், கடந்த பிறவியில் பக்தியோகம் கைக்கொண்டிருந்த காரணத்தால், அந்தப் பழக்கம் காரணமாக, இந்தப் பிறவியிலும் அதனையே பின்பற்றி, சபரி போன்று ஸித்தி அடைந்தனர் – என்றது. இப்படியாக உபாஸனம் அல்லது த்யானம் என்பது மேல் மூன்று வர்ணத்தினரால் மட்டுமே தொடங்கப்படலாம் என்பது போன்று, ப்ரபத்தி என்பதில் இது போன்று எந்தவிதமான தகுதித்தடைகளை விதிக்கின்ற பொதுவான வாக்கியங்கள் இல்லை. மேலும் ப்ரபத்திக்கான தகுதிகளைப் பற்றி உரைக்கின்ற வாக்கியத்திலும், அனைவரும் ப்ரபத்தியைக் கைக்கொள்ள அதிகாரம் உண்டு என்றே கூறப்பட்டுள்ளது. ப்ரபத்திக்கான தகுதிகளைப் பற்றி நாம் முன்பே விரிவாக உரைத்தோம்.

அதஸ்த்ரைவர்ணிகத்வாதி: பாவ: அபாவ: அபி கஸ்யசித் நாதிகார: ப்ரபத்தேஸ்ஸ்யாத் ஆகிஞ்சந்யமநாச்ரித: - ஆகவே ஒருவன் மூன்று வர்ணத்தைச் சேர்ந்தவனாக உள்ளதும், அவ்விதம் இல்லாமல் உள்ளதும், மற்ற உபாயங்கள் ஏதும் கைக்கொள்ளாமல் உள்ள நிலையை முன்னிட்டு, ப்ரபத்திக்கு அதிகாரம் ஆகாது – என்று உணர்க. இதனைக் கீழே உள்ள ப்ரமாணங்களில் காண்க:

- திருச்சந்தவிருத்தம் (90) - குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன் – தர்மங்களைச் செய்வதற்கு ஏற்றதான நான்கு வர்ணங்களில் எதிலும் நான் பிறக்கவில்லை.

- ஸ்தோத்ரரத்னம் (61) - ஜநித்வாஹம் வம்சே – உன்னுடைய திருவடிகளில் மட்டுமே மனதை வைக்கக்கூடியவர்கள் தோன்றிய வம்சத்தில் பிறந்த நான், பாவங்கள் சூழ்ந்த மனம் கொண்டவனாக ஸம்ஸாரத்தில் மூழ்கியபடி உள்ளேன்.

ஆகவே ப்ரபத்தி என்பது சரணம் அடையத் தக்கவனாக உள்ள ஸர்வேச்வரனைப் பற்றி அறிந்தவர்களுக்கும், சரணாகதி குறித்து அறிந்தவர்களுக்கும், வேறு உபாயங்களைக் கைக்கொள்ளாமல் உள்ளவர்களுக்கும் – அவர்கள் எந்த வர்ணத்தினராக இருந்தாலும் ஏற்புடையதே என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை.

## ப்ரபத்தியின் தன்மை பற்றிய சந்தேகங்களும் விளக்கங்களும்

**மூலம்–** இவ்வுபாய ஸ்வரூபத்தைப் பற்ற

நாராயணம் ஸலக்ஷ்மீகம் ப்ராப்தும் தச்சரணத்வம்
உபாய இதி விச்வாஸோ த்வயார்த்த: சரணாகதி:

என்கிற அபியுக்தர் பாசுரமும் அதிகார கோடியிலும் அங்க கோடியிலும் நிற்கிற விச்வாஸத்தினுடைய ப்ராதாந்யம் சொல்லுகைக்காக வத்தனை. அப்படியே ப்ரபத்திர்விச்வாஸ:, ஸக்ருத்ப்ரார்தநாமாத்ரேண அபேக்ஷிதம் தாஸ்யதீதி விச்வாஸ பூர்வகம் ப்ரார்த்தநமிதி யாவத் என்கிற வாக்யமும் ப்ராதாந்யவிவக்ஷிதையாலே முதல் விச்வாஸத்தைச் சொல்லி அநந்யஸாத்யே என்கிற பரதமுநி ப்ரணித லக்ஷண வாக்யத்தின்படியே விச்வாஸபூர்வகம் ப்ரார்த்தநமென்று நிஷ்கர்ஷித்தது. இவ்வாக்யந்தானும் ஆத்மநிக்ஷேபம் அங்கி, இதரங்கள் அங்கங்கள் என்று சொல்லுகிற ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுக்த: இத்யாதி வசநங்களாலே ப்ரார்த்தனையும் அங்கமாகையால் ரக்ஷாபேக்ஷம் ப்ரதீக்ஷதே என்கிறபடியே ஈச்வரன் அபேக்ஷாமாத்ர ஸாபேக்ஷன் என்று இவ்வங்கத்தின் ப்ராதாந்யத்தை விவக்ஷித்துச் சொன்னபடி சிறிய கத்யத்திலும் விச்வாஸபூர்வக ப்ரார்த்தனையைப் பண்ணி நமோ அஸ்து தே என்று முடிக்கையாலும் உபாய சரணசப்த ஸாமர்த்யத்தாலும் நிக்ஷேபமும் ஸித்தம்.

**விளக்கம்–** ப்ரபத்தியின் ஸ்வரூபத்தை விளக்கும்விதமாக நம்பத்தகுந்தவர்களின் வாசகமான - நாராயணம் ஸலக்ஷ்மீகம் ப்ராப்தும் தச்சரணத்வம் உபாய இதி விச்வாஸோ த்வயார்த்த: சரணாகதி: - பெரியபிராட்டியுடன் கூடியபடி உள்ள ஸ்ரீமந்நாராயணனை அடைவதற்கு, அவனுடைய இரண்டு திருவடிகள் மட்டுமே உபாயம் என்னும் விச்வாஸமே த்வயமந்த்திரத்தில் கூறப்பட்ட சரணாகதி – என்றது காண்க. இந்த வரியின் உட்கருத்து என்னவென்றால், விச்வாஸம் என்பது சரணாகதி செய்பவனின் மனதில் முக்கியமாக இருத்தல் வேண்டும் என்பதும், இந்த விச்வாஸம் என்பது ப்ரபத்தியின் ப்ரதான அங்கமாக உள்ளது என்பதும் ஆகும். இதே போன்று ஸ்ரீபாஷ்யகாரர் - ப்ரபத்திர்விச்வாஸ:, ஸக்ருத்ப்ரார்தநாமாத்ரேண அபேக்ஷிதம் தாஸ்யதீதி விச்வாஸ பூர்வகம் ப்ரார்த்தநமிதி யாவத் – ப்ரபத்தி என்பது விச்வாஸமே; ஒருமுறை வேண்டி நின்றாலே போதுமானது, வேண்டியதை அளிப்பான் என்னும் விச்வாஸம் ஆகும் – என்று உரைத்தார். இந்த வாக்கியமானது முதலில் ப்ரபத்திக்கு மிகவும் முக்கியமானது விச்வாஸமே என்னும் கருத்தால் கூறப்பட்டது. மேலும் இந்த வாக்கியம், அநந்யஸாத்யே – ப்ரபத்தி என்பது விச்வாஸத்துடன் கூடிய வேண்டுதலே – என்பதான பரதமுனியின் வாக்கியத்தையும் வெளிப்படுத்துவதாக, அதாவது முதலில் விச்வாஸம் அவசியம் என்பதைக் கூறுவதாக

உள்ளது. ஆத்மசமர்ப்பணம் என்பது ப்ரபத்திக்கு அங்கி என்பதும், கார்ப்பண்யம் உட்பட பலவும் அங்கங்கள் எனவும் முன்பே உரைக்கப்பட்டது. லக்ஷ்மீ தந்த்ரத்தில் (17-74) - ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுக்த: - ஐந்து அங்கங்களுடன் கூடியதான ந்யாஸமே சரணாகதி எனப்படுகிறது – என்றது காண்க. ஆகவே ஸ்ரீபாஷ்யகாரரின் வாக்கியத்தில் "ப்ரபத்தி என்பது விச்வாஸத்துடன் வேண்டி நிற்பதே" என்று கூறுவது, ஐந்து அங்கங்களில் ஒன்றான எம்பெருமானின் காப்பாற்றுதலை வேண்டி நிற்கின்ற அங்கத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தவே ஆகும் என்றாகிறது. இதனையே லக்ஷ்மீ தந்த்ரத்தில் (17-78) - ரக்ஷாபேக்ஷம் ப்ரதீக்ஷதே – ரக்ஷிக்கவேண்டும் என்னும் ப்ரார்த்தனையை எதிர்பார்க்கிறான் – என்றது காண்க. ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்த சிறிய கத்யம் எனப்படும் ஸ்ரீரங்க கத்யத்திலும் "முதலில் விச்வாஸம் அவசியம்" என்று உரைத்து, "நமோ அஸ்து தே" என்று முடிப்பதைக் காண்க. மேலும் அங்கு, எம்பெருமானையே உபாயமாக நாடுவதை "சரணம்" என்னும் பதம் மூலம் உரைத்தார்.

**மூலம்** – நமஸ்ஸு ஆத்மநிக்ஷேபபரமென்னுமிடம் நமஸ்காராத்மகம் யஸ்மை விதாயாத்ம நிவேதனம் இத்யாதிகளிலே ப்ரஸித்தம். ஸ்ரீவைகுண்டகத்யத்தில் ப்ரார்த்தநா பூர்வக ஆத்மநிக்ஷேபம் கண்டோக்தமாயிற்று. ஆகையால் அநேநைவ து மந்த்ரேண ஸ்வாத்மாநம் மயி நிக்ஷிபேத், ஆத்மாத்மயி பரந்யாஸ: இத்யாதிகளிலே அங்கிவிதாநம். இப்படியல்லாதபோது ஷட்விதா சரணாகதி: என்கிற வாக்யத்தில் ஆபாத ப்ரதீதியைக் கொண்டு ஸ்நாநம் ஸப்தவிதம் ஸ்ம்ருதம் இத்யாதிகளிற் சொன்ன ஸாநாநாதி பேதங்கள் போலே தனித்தனியே ப்ரபத்தி விசேஷங்களாகப் ப்ரஸங்கிக்கும். ப்ரபத்திம் தாம் ப்ரயுஞ்ஜீத ஸ்வாங்கை: பஞ்சபிராவ்ருதாம் இத்யாதி வசநாந்தர பலத்தாலே நியமிக்கப் பார்க்கில் அப்படியே ப்ரார்த்தநா விச்வாஸாதிகளை ப்ரபத்தியென்று சொல்லுகிற வசநங்களையும் நியமித்து ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத: இத்யாதிகளிற்படியே நிக்ஷேபமொன்றுமே அங்கி, இதரங்கள் அங்கங்கள் என்கை உசிதம். பூயஸாம் ந்யாயத்தைப் பார்த்தாலும் ஸாத்யகிதந்த்ர லக்ஷ்மீதந்த்ர அஹிர்புத்ந்யஸம்ஹிதாதிகளில் ப்ரபத்த்யத்யாயங்களிலே நிக்ஷேபம் அங்கியென்றே ப்ரஸித்தம். த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி: சரணாகதிரித்யுக்தா என்கிறதுவும் தத்ப்ரகரணத்திலே ப்ரதானமாகச் சொன்ன பரந்யாஸ பர்யந்தமென்னுமிடம் அவதாரண ஸஹக்ருத உபாய சப்தத்தாலே வ்யஞ்ஜிதம் ஓரொரு விவக்ஷைகளாலே அங்கங்களைப் ப்ரதானமாகச் சொல்லுகை லோகத்திலுமுண்டு. ஆலம்ப சப்தம் யாகபர்யந்தமானாற்போலே "சரணம் வ்ரஜ" இத்யாதிகளின் தாதுக்கள் ந்யாஸ நிக்ஷேப த்யாகாதி சப்தங்களாலே சொல்லப்பட்ட ஆத்ம யாகத்தைச் சொல்லுகை வைதிக மர்யாதைக்கு அநுகுணம். யாகமாவது இன்ன தேவதைக்கு இன்ன ஹவிஸ்ஸு என்று இங்ஙனே ஒரு புத்தி விசேஷம். இப்படி என் ஆத்மாவாகிற ஸ்வாதுதமான ஹவிஸ்ஸு ஸ்ரீமானான நாராயணன் பொருட்டு என்றிங்ஙனேயிருப்பதொரு புத்திவிசேஷம். இவ்விடத்தில் ஆத்மயாகம் இவ்வாத்மநிக்ஷேபத்தில் ஸர்வபலார்த்திகளுக்கும் ஸாதாரணமான கர்த்தவ்ய ஸ்வரூபம் ரக்ஷாபரந்யாஸமென்னுமிடம் முன்பே சொன்னோம்.

ஹவிஸ்ஸமர்ப்பணாதத்ர ப்ரயோகவிதி சக்தித:
ஆத்மரக்ஷா பரந்யாஸ: அகிஞ்சநஸ்யாதிரிச்யதே
அத: ஸ்ரீராமமிச்ராத்யை: பரந்யாஸ விவக்ஷயா
ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்த்யம்ச: ப்ரபத்திரிதி லக்ஷித:
அக்ருதே து பரந்யாஸே ரக்ஷாபேக்ஷண மாத்ரத:
பச்சாத் ஸ்வயத்ந விரதி: ந ப்ரஸித்தயதி லோகவத்
ஆகிஞ்சந்ய பரந்யாஸோபாயத்வ ப்ரார்த்தநாத்மநாம்
த்ரயாணாம் ஸௌஹ்ருதம் ஸூக்ஷ்மம் ய: பச்யதி ஸ பச்யதி

இப்படி அங்கபஞ்சக ஸம்பந்நமான ஆத்மரக்ஷா பரந்யாஸமே ப்ரபத்தி சாஸ்த்ர மெல்லாவற்றிலும் ப்ரதானமான விதேயமென்று ஸ்ரீவிஷ்ணுசித்த வாதிஹம்ஸாம்புவாஹ வரதாசார்யாதிகள் ஸங்க்ரஹித்தார்கள்.

**விளக்கம்–** நமோஸ்துதே என்பதில் உள்ள நம: என்னும் பதம் ஆத்ம சமர்ப்பணத்தைக் குறிக்கிறது என்னும் கருத்தை மந்த்ரராஜபத ஸ்தோத்ரம் (11) - நமஸ்காராத்மகம் யஸ்மை விதாயாத்ம நிவேதனம் – நமஸ்காரம் என்பதான ஆத்மசமர்ப்பணத்தை யாரிடத்தில் செய்து, தன்னுடைய துக்கம் அனைத்தும் நீங்கப் பெற்று, அடையவேண்டிய அனைத்தையும் அடைகிறானோ அந்த ஸர்வேச்வரனை வணங்குகிறேன் – என்பதில் காணலாம். ஸ்ரீவைகுண்டகத்யத்தில் ப்ரார்த்தனையைத் தொடர்ந்து ஆத்மசமர்ப்பணம் என்பது தெளிவாகவே உரைக்கப்பட்டது. ஆகவே கீழே உள்ள வாக்கியங்களின் மூலம் ஆத்மசமர்ப்பணம் என்பது "காப்பாற்றவேண்டும்" என்னும் ப்ரார்த்தனையைக் காட்டிலும் வேறுபட்டது என்பதும், ப்ரார்த்தனை என்பது அங்கம் என்பதும், ஆத்மசமர்ப்பணம் அங்கி என்பதும் விதிக்கப்படுகிறது:

- ஸாத்யகிதந்த்ரம் - அநேநைவ து மந்த்ரேண ஸ்வாத்மாநம் மயி நிக்ஷிபேத் – இந்த மந்த்ரம் கொண்டு ஒருவன் ஆத்மாவை என்னிடம் சமர்ப்பணம் செய்யவேண்டும்.

- லக்ஷ்மீதந்த்ரம் - ஆத்மாத்மயி பரந்யாஸ: - ஆத்மாவின் ரக்ஷணத்தை ஸர்வேச்வரனிடம் ஒப்படைத்தலே ஆத்மசமர்ப்பணம்.

இவ்விதம் கொள்ளவில்லையென்றால், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-2-28) - ஷட்விதா சரணாகதி: - சரணாகதி ஆறு வகைப்படும் – என்பது போன்றதான வாக்கியங்கள், உள்ளது உள்ளபடி பொருள் கொள்ளப்படும்; இவ்விதம் பொருள் கொள்ளப்பட்டால், பாத்மஸம்ஹிதை - ஸ்நாநம் ஸப்தவிதம் ஸ்ம்ருதம் – ஸ்நாநம் ஏழு வகைப்படும் – என்று கூறும் வாக்கியத்தின்படி நாம் எவ்விதம் ஸ்நாநம் என்பது ஏழு விதமாக உள்ளது என்று

கொள்ளுகிறோமோ, அதே போன்று, ப்ரபத்தியின் ஐந்து அங்கங்களும், ஒவ்வொரு விதமான அங்கி (அல்லது ப்ரபத்தி) என்று கொள்ளப்பட்டுவிடும். ஆனால் லக்ஷ்மீ தந்த்ரம் (28-10) - ப்ரபத்திம் தாம் ப்ரயுஞ்ஜீத ஸ்வாங்கை: பஞ்சபிராவ்ருதாம் – ஐந்து அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியைச் செய்யக்கடவன் – என்னும் வரியின் மூலம், அங்கங்களை மேலே கூறப்பட்டது போன்று அங்கியாகக் கருதிவிட வாய்ப்பில்லை என்று வாதம் செய்யலாம். அப்படி என்றால் அதே வாதம் மூலமும், லக்ஷ்மீ தந்த்ரம் (17-74) - ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத: - ந்யாஸம் என்பது ஐந்து அங்கங்களுடன் கூடியது – என்னும் வாக்கியம் மூலமும் "ப்ரபத்தி என்பது ப்ரார்த்தனை, ப்ரபத்தி என்பது விச்வாஸம்" என்று கொள்ளப்பட்டு, "நிக்ஷேபம் அல்லது சமர்ப்பணம் என்பது மட்டுமே அங்கி" மற்ற அனைத்தும் அங்கங்களே என்று தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட வசனத்தைப் பொறுத்தவரையில் ஏதேனும் சந்தேகம் உண்டானால், அந்த வசனத்திற்கு அதிகப்படியான பொருள் எவ்விதம் அளிக்கப்படுகிறதோ (பூயஸாம் ந்யாயம்), அதன்படி கொள்ளப்படலாம். இதன்படி, ப்ரபத்தியைக் குறித்து ஸாத்யகி தந்த்ரம், லக்ஷ்மீ தந்த்ரம், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை ஆகியவற்றில் உள்ளதைக் கொண்டால், ஆத்மசமர்ப்பணம் என்னும் நிக்ஷேபம் என்பது அங்கி என்றே ஆகிறது. அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-31) - த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி: சரணாகதிரித்யுக்தா – நீயே எனக்கு உபாயமாக ஆவாய் என்று ப்ரார்த்தனை செய்வதே சரணாகதி என்றாகிறது – என்னும் ச்லோகத்தில், உபாயம் என்னும் பதம் ஏவகாரத்துடன் (நீயே என்பதில் உள்ள ஏவகாரம் – நீ மட்டுமே என்னும் பொருளில் கொள்க) வருவதைக் காண்பித்து, அதுவே பரந்யாஸம் அல்லது தன்னுடைய பொறுப்புகள் அனைத்தையும் அவனிடம் ஒப்படைத்தல் என்று கூறியது காண்க. நாம் பொதுவாகவே ஒரு பொருளின் முக்கியத்துவத்தை உணர்த்த மற்றொரு பொருளை முக்கியமானது என்று மறைமுகமாகக் கூறி உணர்த்துவதைக் காண்கிறோம். ஆலம்ப என்னும் பதம் யாகம் என்பதையும் குறிக்கும் (இந்தப் பதம் கொல்லுவதையும் குறிக்கும்) என்பது போன்று, சரமச்லோகத்தில் உள்ள "சரணம் வ்ரஜ" என்பதில் உள்ள தாதுவும், இதே போன்று வேறு சில இடங்களில் உள்ள தாதுக்களும், "ந்யாஸம், நிக்ஷேபம், த்யாகம்" போன்ற பல பதங்களால் உணர்த்தப்பட்ட ஆத்மசமர்ப்பணம் என்பதான ஆத்ம யாகத்தைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும்; இவ்விதம் கொள்வதே வேதங்களில் உள்ளது போன்ற பதப்ரயோகங்களைப் பயன்படுத்துவதாக அர்த்தமாகிறது. யாகம் என்பது இன்ன தேவதைக்கு, இன்ன அவிர்பாகம் அளிக்கப்படவேண்டும் என்பதாகவே உள்ளது. இதே போன்று ஆத்மயாகம் என்பதும் "எனது ஆத்மாவான மிகவும் இனிமையான அவிர்பாகம் என்பதி ஸ்ரீமானான நாராயணன் பொருட்டே உள்ளது" என்றே கொள்ளப்படவேண்டும். இப்படியாக உள்ள ஆத்மசமர்ப்பணம் என்பதில், அனைவராலும் செய்யப்பட வேண்டியது என்னவென்றால், தங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தல் என்பதே ஆகும்; இதனை நாம் முன்பே கூறினோம்.

- ஹவிஸ்ஸமர்ப்பணாதத்ர ப்ரயோகவிதி சக்தித: ஆத்மரக்ஷா பரந்யாஸ: அகிஞ்சநஸ்யாதிரிச்யதே – மோக்ஷத்தின் பொருட்டு செய்யப்படும் ப்ரபத்தியில், அங்கு விதிக்கப்பட்டுள்ள விதிகளின் காரணமாக, வேறு கதி இல்லாத ப்ரபந்நன் ஒருவனுக்கு, தன்னுடைய ஆத்மா என்னும் அவிர்பாகத்தை அளிப்பதைக் காட்டிலும், தன்னுடைய ஆத்மாவைக் காப்பாற்றும் பொறுப்பை அளித்தல் என்பதே வலுவாக உள்ளது.

- அத: ஸ்ரீராமமிச்ராத்யை: பரந்யாஸ விவக்ஷயா ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்த்யம்ச: ப்ரபத்திரிதி லக்ஷித: - ஸ்ரீராம்மிச்ரர் உள்ளிட்ட ஆசார்யர்களால் பரந்யாஸத்தைக் கூறவேண்டும் என்னும் ஆசை காரணமாக, “தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள முயலுதல் என்பதைச் செய்யாமல் இருக்கவேண்டும் என்னும் நிலையே ப்ரபத்தி” எனப்பட்டது.

- அக்ருதே து பரந்யாஸே ரக்ஷாபேக்ஷண மாத்ரத: பச்சாத் ஸ்வயத்ந விரதி: ந ப்ரஸித்த்யதி லோகவத் – இந்த உலகில் “என்னைக் காக்கும் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன்” என்று கூறினாலே தவிர, ”என்னைக் காக்கவேண்டும்” என்னும் வேண்டுகோளானது, நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள முயலாமல் கைகூடாது. இதே போன்றுதான் பரந்யாஸம் செய்யப்படாத நிலையிலும் உள்ளது.

- ஆகிஞ்சந்ய பரந்யாஸோபாயத்வ ப்ரார்த்தநாத்மநாம் த்ரயாணாம் ஸௌஹ்ருதம் ஸூக்ஷ்மம் ய: பச்யதி ஸ பச்யதி – ஆகிஞ்சந்யம், பரந்யாஸம், உபாயமாக இருக்கவேண்டும் என்னும் ப்ரார்த்தனை ஆகிய அனைத்திற்கும் இடையே உள்ள ஸூக்ஷ்மமான ஒற்றுமையை யார் அறிகிறானோ அவனே ப்ரபத்தியின் ஸ்வரூபத்தை அறிந்தவன் ஆகிறான்.

ஆக ஐந்து அங்கங்களுடன் கூடியதான ப்ரபத்தி என்பதைப் பற்றிக் கூறும் சாஸ்த்ரங்களை அனைத்துமே ”தன்னுடைய ஆத்மாவைக் காப்பாற்றும் பொறுப்பை அவனிடம் ஒப்படைக்கவேண்டும்” என்பதையே முதன்மையாக விதிக்கின்றன. இந்த உண்மையையே ஸ்ரீவிஷ்ணுசித்தர், வாதிஹம்ஸாம்புவஹர், வரதாசார்யர் உள்ளிட்ட பலரும் சுருக்கமாக உணர்த்தினர்.

## சேஷத்வ அநுஸந்தானம் மட்டுமே உபாயம் என்பது கண்டிக்கப்படுதல்

**மூலம்–** இவ்விடத்திலே சிலர் சாஸ்த்ரார்த்த தத்த்வம் தெளிந்தபோதே சேஷத்வாநுஸந்தாநம் பண்ணினானன்றோ?

ஸ்வோஜ்ஜீவநேச்சா யதி தே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி
ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர

என்றதுவும் பரமபுருஷார்ய ததுபாயங்களை வேண்டியிருந்தாயாகில் நீ தாஸனாய் ஈச்வரன் ஸ்வாமியாயிருக்கிறது ஸ்வபாவ ஸித்தம் என்று தத்துவத்திலே தெளிவோடே வர்த்தியென்றபடியன்றோ? ஆனால் இப்போது ஆத்ம ஸமர்ப்பணமென்று ஒரு விதேயமுண்டோ என்று சொல்லுவார்கள். இதுவும் வாக்யஜந்ய ஜ்ஞாநமாத்ரத்தாலே மோக்ஷமென்கைபோலே அநாதரணீயம்.

ஜித கௌஸ்துப சௌர்யஸ்ய ஸம்ராஜ: ஸர்வபாப்மநாம்
சிஷ்டம் ஹ்யாத்ம அபஹாரஸ்ய நிஷ்க்ருதி: ஸ்வபரார்பணம்
பரசேஷத்வ தீமாத்ரம் அதிகாரி விசேஷகம்
பச்சாதாத்ம அபராஹஸ்ய நிரோதாய ச கல்பதே

சேஷத்வாதிவிசிஷ்டமான ஆத்ம தத்த்வத்தைச் சாஸ்த்ரத்தாலே தெளிந்தவனுக்கு அதிகார விசேஷத்தோடும், பரிகர விசேஷத்தோடும், பலஸங்கல்ப விசேஷத்தோடும் கூடி சேஷத்வ ப்ரதிஸந்தாநகர்ப்பமான ஸ்வாத்மரக்ஷா பரந்யாஸமிறே அநாத்யபராதமூல நிக்ரஹ நிவ்ருத்திக்கு உபாயமாக விதிக்கப்படுகிற ஆத்ம ஸமர்ப்பணம். தத்த்வ ஜ்ஞாநத்தாலே மோக்ஷமென்கிற இதுவும் ஓர் உபாயாநுஷ்டாநத்தை முன்னிட்டென்னுமிடம் பஜஸ்ய மாம், மாமேகம் சரணம் வ்ரஜ இத்யாதி விதிபலப்ராப்தம்.

**விளக்கம்–** ஒரு சிலர் கூறுவது, “ஒரு மனிதன் சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட தத்துவங்களை அறிந்தான் என்றால், தான் எம்பெருமானுடைய அடிமை என்னும் ஸம்பந்தத்தைப் அவன் புரிந்து கொண்டவன் ஆகிறான் அல்லவோ?” என்று கூறுவர். ஸ்ரீவிஷ்ணுதத்வம் - ஸ்வோஜ்ஜீவநேச்சா யதி தே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர – உன்னுடைய உயர்ந்த வாழ்க்கை மற்றும் உன்னுடைய இருப்பு ஆகியவற்றில் உனக்கு விருப்பம் இருந்தால் ஸர்வேச்வரன் ஸ்வாமியாக உள்ளதையும், நீ உன்னுடைய ஸ்வபாவமாகவே அவனது தாஸனாக உள்ளதையும் எப்போதும் சிந்தித்தபடி இருப்பாயாக – என்றது காண்க; இந்த ச்லோகத்தின் பொருள், “நீ உன்னுடைய உயர்ந்த புருஷார்த்தங்களையும், அவற்றை அடையும் உபாயங்களையும் விரும்பினாய் என்றால் நீ ஸர்வேச்வரனின் தாஸன்

என்பதையும், அவனே எஜமானன் என்பதையும், இந்த ஸம்பந்தம் இயற்கையாகவே உள்ளது என்பதையும் அறியவேண்டும்", என்பதே ஆகும் அல்லவோ? அவர்கள் மேலும் கேட்பது, "இப்படி உள்ளபோது, இவ்விதமாக உள்ள ஸம்பந்தம் பற்றி சிந்தித்தபடி உள்ளதைக் காட்டிலும், ஆத்மஸமர்ப்பணம் என்பதான விதி தனியாக உள்ளதோ?", என்பதாகும். ச்ருதி வாக்கியங்களைப் பற்றிய ஞானம் உண்டானாலே மோக்ஷம் கிட்டிவிடும் என்று கூறும் அத்வைத வாதங்களைப் போன்று, இவர்களின் வாதமும் தள்ளப்பட வேண்டியதே ஆகும். கீழே உள்ள வரிகள் காண்க:

- ஜித கௌஸ்துப சௌர்யஸ்ய ஸம்ராஜ: ஸர்வபாப்மநாம் சிஷ்டம் ஹ்யாத்ம அபஹாரஸ்ய நிஷ்க்ருதி: ஸ்வபரார்பணம் – ஸர்வேச்வரனுக்குச் சொந்தமான கௌஸ்துபம் என்னும் இரத்தினத்தைத் திருடுவது போன்ற குற்றமாக உள்ளதும், அனைத்துவிதமான பாவங்களுக்கும் முதன்மையான பாவமாக உள்ளதும் ஆகிய ஆத்மாபஹாரம் (நான் சுதந்திரமானவன் என்னும் எண்ணம்) என்னும் பாவத்திற்கு ப்ராயச்சித்தமாக, தன்னுடைய அனைத்து பொறுப்புகளையும் எம்பெருமானிடம் சமர்ப்பித்தல் என்பதே சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளது அல்லவோ?

- பரசேஷத்வ தீமாத்ரம் அதிகாரி விசேஷகம் பச்சாதாத்ம அபராஹஸ்ய நிரோதாய ச கல்பதே – தான் ஸர்வேச்வரனுக்கு வசப்பட்டவன் என்பதான ஞானம் ஒருவனுக்கு முதலில் சரணாகதியின் அதிகாரத்தை அளிக்கிறது; அதன் பின்னர் அந்த எண்ணமானது ஆத்மாபஹாரத்தைத் தடுக்கும் சக்தியைக் கொண்டதாக உள்ளது.

ஸர்வேச்வரனுக்கு அடிமைப்பட்டதான ஆத்மதத்வம் குறித்து ஒருவன் சாஸ்த்ரம் மூலம் முதலில் அறிகிறான். இப்படியாகக் கிட்டிய அதிகாரம், ப்ரபத்திக்கான அங்கங்கள், தனக்குக் கிட்டப்போகும் பலன் என்ன என்பது குறித்த ஞானம் போன்ற பலவற்றுடன் கூடியவனாக, தான் ஸர்வேவரனுக்குத் தாஸன் என்னும் எண்ணத்தைக் கொண்டவனாக, தன்னைக் காக்கும் பொறுப்பை ஸர்வேச்வரனிடம் ஒப்படைக்கிறான். எல்லையற்ற காலமாகச் செய்துவரும் அபராதங்களுக்கான தண்டனையிலிருந்து தப்ப உதவும் உபாயமாக உள்ள இந்தச் செயலே ஆத்மஸமர்ப்பணம் எனப்படுகிறது. தத்வஜ்ஞானம் மூலம் மோக்ஷம் கிட்டும் என்பதான இந்த வாதமும் ஒரு குறிப்பிட்ட உபாய அனுஷ்டானத்தை முன்னிட்டே கிட்டும் என்பதை கீதை (9-33) – பஜஸ்ய மாம் – என்னை உபாஸிப்பாயாக, கீதை (18-66) – மாமேகம் சரணம் வ்ரஜ – என்னை மட்டும் சரணம் அடைவாய் – என்பதான வாக்கியங்களில் அறியலாம்.

**மூலம்–**

ஜ்ஞாநாந்மோக்ஷோபதேசோ ஹி தத்பூர்வோபாஸநாதிநா
உபாஸநாதி ரூபாத்வா ஜ்ஞாநாந்மோக்ஷோ விவக்ஷித:

சாஸ்த்ர ஜந்யமான சேஷத்வ ஜ்ஞாநமாத்ரம் நிவ்ருத்தி தர்மங்களான ந்யாஸோ பாஸநாதிகள் எல்லாவற்றுக்கும் பொதுவாயிருக்கும். சேஷவ்ருத்திரூபமான கைங்கர்யமே முமுக்ஷுவுக்குப் புருஷார்த்த காஷ்டையாகையாலே சேஷத்வமறியாதே மோக்ஷோபாயம் அனுஷ்டிக்கை கடியாதிறே. சேஷத்வ ஜ்ஞாநமின்றிக்கே மோக்ஷார்த்தமாக விதித்த தர்மங்களை அநுஷ்டித்தானாகிலும் இத்தர்மங்கள் தாமே சேஷத்வ ஜ்ஞாநத்தையும் உண்டாக்கிப் பூர்ணாநுஷ்டாந முகத்தாலேயிறே மோக்ஷ ஹேதுவாவது. ஆகையால் இங்கு விதேயமான ஸ்மர்ப்பணம் சேஷத்வ ஜ்ஞாநமாத்ரமன்று. மற்று ஏதென்னில், சேஷத்வ ஜ்ஞாநாதியுக்தமான ஸ்வரக்ஷாபரந்யாஸம்.

வாக்யமாத்ரேண ஸித்தத்வாத் ஸித்தோபாய இஹோச்யதே
ப்ரபத்திரிதி வாத: அபி விதிநாத்ர விஹந்யதே

**விளக்கம்–** ஜ்ஞாநாந்மோக்ஷோபதேசோ ஹி தத்பூர்வோபாஸநாதிநா உபாஸநாதி ரூபாத்வா ஜ்ஞாநாந்மோக்ஷோ விவக்ஷித: - “தத்வஞானம் மூலம் மோக்ஷம் கிட்டும்” என்பதான கருத்தை இருவிதமாகப் பொருள் கொள்ளவேண்டும்; தத்வஞானம் மூலம் கிட்டுகின்ற உபாஸநம் மூலமாகவே மோக்ஷம் என்பது ஒருவிதம்; உபாஸநம் வடிவிலான ஞானம் மூலம் மோக்ஷம் என்பது மற்றொருவிதம் – என்று கொள்க. சாஸ்த்ரங்கள் மூலம் பெறப்பட்ட ஞானமான ”ஸர்வேச்வரனுக்குத் தாஸனாக உள்ள ஸம்பந்தம்” என்பது ஸம்ஸாரத்திலிருந்து விடுவிக்கவல்லதும் மோக்ஷத்திற்கான உபாயமாக உள்ளதும் ஆகிய பரந்யாஸம், உபாஸனை போன்ற அனைத்திற்கும் பொதுவானதே ஆகும். அடிமையாக உள்ள ஒருவனுக்கு முக்கியமான பணி என்பது எஜமானனுக்குச் செய்யும் கைங்கர்யமே என்பதாலும், இதுவே அடையவேண்டிய புருஷார்த்தங்களின் எல்லையாக உள்ளதாலும், ”நாம் ஸர்வேச்வரனுக்கு அடிமையாக உள்ளோம்” என்பதான உறவுமுறையை அறியாமல், எந்த மோக்ஷ உபாயத்தையும் கைக்கொள்ள இயலாது. ஒருவன் இத்தகைய தாஸ்ய உறவுமுறையை அறியாமல் மோக்ஷத்திற்கான தர்மங்களை அவற்றின் விதிப்படி கைக்கொள்கிறான் என்று வைத்துக் கொள்வோம்; அப்படிக் கொண்டாலும் அவன் கைக்கொண்ட அந்த தர்மங்களே அவனுக்கு தாஸ்ய உறவுமுறை குறித்த ஞானத்தை உண்டாக்கி, அதன் மூலம் மோக்ஷ உபாயத்தை அவனுக்கு பூர்ணமாக்கி விடுகின்றன. ஆக ஆத்மஸமர்ப்பணம் என்று விதிக்கப்பட்டது, வெறும் தாஸ்ய ஞானம் மட்டுமே அல்ல. வேறு என்ன என்றால், அத்தகைய தாஸ்ய ஞானத்துடன் கூடியதான, தன்னைக் காக்கும் பொறுப்பை அவனிடம் ஒப்படைக்கும் செயலே ஆகும். வாக்யமாத்ரேண ஸித்தத்வாத்

ஸித்தோபாய இஹோச்யதே ப்ரபத்திரிதி வாத: அபி விதிநாத்ர விஹந்யதே – ப்ரபத்தி என்று சொல்லப்படும் ஞானத்தின் வகை என்பது “ஸர்வேச்வரனே சரணம்” என்னும் சாஸ்த்ரங்களின் அடிப்படையில் அமைந்த ஞான வடிவே ஆகும்; இதனால்தான் அந்த ப்ரபத்தி ஞானத்தை சாஸ்த்ரங்கள் ஸித்தோபாயம் என்று கூறுகின்றன.

## சரமச்லோகம் உபாயத்தை விதிக்கவில்லை என்பதற்கான மறுப்பு

**மூலம்** – சரணம்வ்ரஜ என்கிற இது இமமர்த்தம் ஜாநீஹி என்கிற மாத்ரமாய் ஒரு கர்த்தவ்யோபாயவிதியரமன்றிக்கே யொழிந்தாலோவென்னில், இது சப்தஸ்வாரஸ்ய விருத்தம்.

ப்ரபத்திம் தாம் ப்ரயுஞ்ஜீத ஸ்வாங்கை: பஞ்சபிராவ்ருதாம்

இத்யாதிகளான ஸபரிகர ஸ்புடதர ப்ரபத்திவிதிகளோடும் விரோதிக்கும், ஈச்வரன் மோக்ஷோபாயமென்கிற இவ்வளவே இங்கு வக்தவ்யமாய் மோக்ஷாதிகாரிக்கு விதேயாந்தரமின்றிக்கே ஒழிந்தால் இவ்விடம் ப்ரஸ்துதமான பக்தியோகத்துக்கு அபேக்ஷிதமான தத்த்வோபதேசமாத்ரம்.

**விளக்கம்–** கீதை (18-66) – சரணம் வ்ரஜ – சரணம் புகுவாயாக – என்பதான வாக்கியம் “ஸர்வேச்வரனே சரணம் அடையத்தக்கவன் என்னும் உண்மையை அறிவாயாக” என்ற ஞானத்தை மட்டுமே அளிக்கிறது என்றும் இந்த வரியில் பின்பற்றவேண்டிய உபாயத்தைக் விதிக்கின்ற கருத்தும் ஏதும் இல்லை என்றும் சிலர் கூறுவர்; இந்த வாதம் இந்தப் பதங்களின் உண்மையாய பொருளுக்கு விரோதமாக உள்ளதாகும். மேலும் இந்த வாதம், லக்ஷ்மீ தந்த்ரம் (28-10) - ப்ரபத்திம் தாம் ப்ரயுஞ்ஜீத ஸ்வாங்கை: பஞ்சபிராவ்ருதாம் – ஐந்து அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியைச் செய்யக்கடவன் – போன்ற வரிகளின்படி கூறப்படுவதான, அங்கங்களுடனே இயற்றப்படவேண்டும் என்று தெளிவாக விதிக்கப்பட்ட ப்ரபத்தி விதிகளோடு விரோதமாகவே உள்ளதாகும். சரமச்லோகம் என்பது ஸர்வேச்வரனே மோக்ஷ உபாயம் என்றும், மோக்ஷத்தை விரும்பும் அதிகாரிக்கான எந்தவிதமான செயல்பாடுகளும் இங்கு கூறப்படவில்லை என்றும் சிலர் கூறுவர்; இவ்விதம் கொண்டால் சரமச்லோகம் என்பது பக்தியோகத்திற்கான தேவை என்ன என்பதை விளக்குவது மட்டுமே என்றாகிறது (அதாவது ப்ரபத்தி குறித்து இதில் கூறப்படவில்லை என்றாகிறது. இது பொருந்தாது).

## தன்னுடைய முயற்சி நீங்குதல் என்பதே ப்ரபத்தி என்பதற்கான மறுப்பு

**மூலம்** – இங்கு தத்த்வஜ்ஞாநமுடையவனுக்கு ஸ்வரக்ஷணார்த்த ஸ்வ வ்யாபார நிவ்ருத்தியே ப்ரபத்தியாய் ஸர்வதர்ம ஸ்வரூப த்யாகமாத்ரம் ஸாத்யமாக விதிக்கப்படுகிறதென்பார்க்கு நிவ்ருத்திரூபமேயாகிலும் ஸாத்யமாக விதிக்கப்பட்ட ஸர்வதர்மத்யாகந்தான் ஸ்வரக்ஷணார்த்த ஸ்வ வ்யாபாரமாகையாலே ஸ்வவசன விரோதமும் ஸாங்கப்ரபத்தி விதாயகமான வாக்ய விரோதமும் வரும்.

**விளக்கம்**– ப்ரபத்தி என்பது தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள முயலாமல் இருக்கை என்றும், அதனைக் கைக்கொள்ள அனைத்து தர்மங்களையும் (உபாயங்களையும்) கைவிடுதல் என்பதே விதிக்கப்பட்டது என்றும் சிலர் கூறுவர். இதற்கு பதில் கூறுவோம். அனைத்து தர்மங்களையும் கைவிடுதல் என்பதே ஒரு செயல் என்பதையும், இந்தச் செயல் என்பது தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்வதற்காகச் செய்யப்படுவது என்றும் அல்லவோ ஆகிறது? இதனால் அவர்கள் கூறும் கருத்தான “தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள முயலாமல் இருக்கையே ப்ரபத்தி” என்பதற்கு முரண்பாடு உண்டாகிறது. மேலும் இவ்விதம் கொண்டால் மேலே கூறப்பட்டதான “ஐந்து அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியைச் செய்யக்கடவன்” என்னும் விதிவாக்கியத்துடன் முரண்பாடு உண்டாகும்.

## ப்ரபத்தி விதிக்கப்படுவதாகக் கொண்டால் ஈச்வரனின் ஸ்வபாவத்திற்கு விருத்தம் என்பதற்கான மறுப்பு

**மூலம்**– ப்ரபத்திக்கு ஸாதநத்வமாதல் ஸித்தஸாதந ஸஹகாரித்வமாதல் கொள்ளில் ஸித்தோபாயமான ஈச்வரனுடைய ஏகத்வம் ஸித்தத்வம் பரமசேதநத்வம் பரமகாருணிகத்வம் ஸர்வசக்தித்வம் நிரபேக்ஷத்வம் முதலான ஸ்வபாவ விசேஷங்களுக்கு விருத்தமாமென்னும் ப்ரஸதங்கள் ச்ருதி ஸ்ம்ருதி விரோத வ்யாப்திசூந்யத்வாதி தோஷங்களாலே தர்க்கமாஸங்கள். இவற்றை ஸத்தர்க்கங்களாக நினைக்கில் உபாஸநத்துக்கு இசைந்த ஸாதநமாவாதிகளிலும் இப்ப்ரஸதங்கள் வரும்.

**விளக்கம்**– ப்ரபத்தியை (மோக்ஷ) உபாயமாகவோ அல்லது ப்ரபத்தியானது ஸித்தோபாயமான எம்பெருமானுக்கு உதவுவதாகவோ கொண்டால் – ஸித்தோபாயமான எம்பெருமான் மட்டுமே உபாயம், அவனே ஸித்தமான உபாயம், அவன் கருணை மிகுந்தவன், அவன் எதனையும் செய்யும் வல்லமை கொண்டவன், மற்ற யாருடைய உதவியையும் எதற்கும் எதிர்பாராதவன் – போன்ற ஸர்வேச்வரனின் ஸ்வரூபங்களுக்கு விரோதம் உண்டாகும் என்று சிலர் வாதாடலாம். இவர்களுடைய இந்த வாதங்கள் ச்ருதி

மற்றும் ஸ்ம்ருதிகளுக்கு விரோதமாக உள்ளன. இவர்களின் வாதம் எந்தக் கருத்தையும் அடிப்படையாகக் கொண்டதாக இல்லை. இவர்களுடைய இத்தகைய வாதங்கள் வெறும் தர்க்கவாதங்களாகத் தோன்றுகின்றன அல்லாமல், பொருத்தமான வாதங்களாகத் தோன்றவில்லை. இவ்வாதங்களை சரியானவை என்று ஏற்றுக் கொண்டால், உபாஸனைக்குத் துணையாக உள்ள அங்கங்கள்கூட அவசியம் அற்றது என்றே தேறிவிடும்.

## பக்தியோகம் உபாயம் அல்ல என்ற வாதத்திற்கான மறுப்பு

**மூலம்**–உபாஸநம்தானும் ஸாதநமன்றென்னில், ஸர்வதர்மாந் பரித்யஜ்ய என்றவிடத்தில் உபாஸநத்தையும் தர்மசப்தார்த்தமாக வ்யாக்யானம் பண்ணுகையாலே ஸ்வவசந விரோதமுண்டாம். செருக்கு அடக்குகைக்காக வேண்டாச் சுமைகளை எடுப்பிக்கையாலே அந்யபரமான உபதேசத்தாலே பிறந்த அர்ஜுநன் புத்தியாலே தர்மமென்று தோற்றினவற்றை ஸர்வதர்மாந் என்று அநுவதிக்கிறது என்னில்,

இஜ்யாசார தமாஹிம்ஸா தாந ஸ்வாத்யாய கர்மணாம்
அயம் து பரமோ தர்மோ யத்யோகேநாத்மதர்சநம்
ஸர்வேஷாமேவ தர்மாணாமுத்தமோ வைஷ்ணவோ விதி:
ந விஷ்ணவாராதநாத் புண்யம் வித்யதே கர்மம் வைதிகம்

இத்யாதிகளாலே பரம தர்மங்களாக ப்ரஸித்தங்களான நிவ்ருத்திதர்மங்களைத் தர்மங்களல்லவென்றால், கைமுதிக ந்யாயத்தாலே ப்ரவ்ருத்திதர்மங்களும் தர்மங்களன்றிக்கே ஸர்வ சாஸ்த்ரங்களுக்கும் ப்ராமாண்யமில்லாதபடியாய் பரவாஹ்ய குத்ருஷ்டி பக்ஷங்களிலே ப்ரவேசமாம்.

**விளக்கம்–** ஒரு சிலர் உபாஸநம் என்பது கூட உபாயம் அல்ல என்று கூறுவர்; இவ்விதம் கொண்டால், கீதை (18-66) – ஸர்வதர்மாந் பரித்யஜ்ய – அனைத்து தர்மங்களையும் கைவிட்டு – என்றுள்ள ச்லோகத்திற்கான வ்யாக்யானம் செய்யும்போது, தர்மம் என்ற பதத்திற்கு உபாஸநம் என்று பொருள் கொண்டு அளிக்கப்பட்ட அவர்களது மதத்தைச் சேர்ந்தவர்களின் கருத்திற்கே முரண்பாடு ஏற்படுகிறது. இதற்கு இவர்கள் கூறும் சமாதானம் – தேவையற்ற உபதேசங்கள் மூலமாகக் கலங்கி நிற்கும் அர்ஜுனன், தன்னுடைய உபதேசங்களின் உண்மையான கருத்தை உணராமல் மயங்கி நிற்கிறான்; அவனுடைய செருக்கு காரணமாக உண்டான இந்த நிலையை நீக்கும்விதமாகவே க்ருஷ்ணன் தர்மம் என்ற பதத்தில் அதிகப்படியான கருத்துக்களை ஏற்றிக் கூறும்விதமாக ஸர்வதர்மாந் என்று அருளினான் – என்பதாகும். இவ்விதம் கொண்டால் ஏற்படும் முரண்பாடுகளைக் கூறுவோம். கீழே உள்ள வரிகளைக் காண்க:

- யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி (1-8) - இஜ்யாசார தமாஹிம்ஸா தாந ஸ்வாத்யாய கர்மணாம் அயம் து பரமோ தர்மோ யத்யோகேநாத்மதர்சநம் – பகவத் ஆராதகம், ஆசாரம், புலன்களை அடக்குதல், அஹிம்ஸை, தானங்கள், வேத அத்யயனம் உள்ளிட்ட பலவிதமான கர்மங்களுக்குள் கர்மயோகம், பக்தியோகம் மற்றும் ஞானயோகம் ஆகியவற்றால் பரமாத்மாவைக் காண்பதே சிறந்த தர்மமாகும்.

- மஹாபாரதம் - ஸர்வேஷாமேவ தர்மாணாமுத்தமோ வைஷ்ணவோ விதி: - அனைத்து தர்மங்களுக்குள், பகவத் ஆராதனம் என்னும் தர்மமே மேன்மையானது.

- வ்யாஸ ஸ்ம்ருதி (2-42) - ந விஷ்ணவாராதநாத் புண்யம் வித்யதே கர்மம் வைதிகம் – விஷ்ணு ஆராதனை என்பதைத் தவிர புண்ணியமான கர்மம் எதனையும் சாஸ்த்ரங்கள் கூறவில்லை.

மேலே உள்ள வரிகளில் காணப்படும் ப்ரஸித்தமான உயர்ந்த தர்மங்கள், இந்த ஸம்ஸார உலகில் உள்ள கர்மங்களில் இருந்து விடுபடச் செய்யும் தர்மங்களாக உள்ளன; இவற்றையே தர்மங்கள் அல்ல என்று உரைத்தால், கௌமுதிக ந்யாயத்தால் (அனைத்து தகுதிகள் உள்ள ஒருவனுக்கே ஒரு வஸ்து கிடைக்காதபோது, தகுதியே இல்லாத ஒருவனுக்குக் கிட்டாது என்னும் ந்யாயம்), ஸம்ஸார உலகிற்கு பரிந்துரைக்கப்படும் தர்மங்களும் தர்மங்களே அல்ல என்றாகிவிடுகிறது. அப்படி என்றால் எந்த சாஸ்த்ரங்களும் ப்ரமாணம் அல்ல என்றாகிறது. ஆக இவ்விதம் உரைப்பவர்கள் நாஸ்திகர்கள் என்றே கூறவேண்டும்.

## ப்ரபத்தி உபாயம் அல்ல என்ற வாதத்திற்கான மறுப்பு

**மூலம்** – ஆனாலும், உபாஸநாதிகள்போலே சரணவரணமும் தர்ம சப்த வாச்யமாகையாலே இங்கு ஸர்வசப்த ஸங்கோசம் வாராமைக்காக இதுவும் ஸாதநத்வ வேஷத்தாலே த்யாஜ்யமன்றோ? ஆகையால் ப்ரபத்திக்கும் ஸாதநத்வமாதல் ஸித்தஸாதந ஸஹகாரித்வமாதல் கொள்ளுகை இவ்வசநம் தனக்கும் விருத்தமன்றோவென்னில் – இங்கு ஸாக்ஷாத் ஸாதநத்வ புத்தியை விடவேணுமென்னும்போது பக்தியோகாதிகளிலும் துல்யம். ப்ரஸாதநத்வ வேஷத்தாலும் தர்மத்வம் இதுக்கு விடவேணுமென்னில் ஸர்வசப்த ஸங்கோசம் வாராமைக்காகவே க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் இத்யாதிகளிற்படியே தர்மமான ஸித்தோபாயத்திலும் ஸாதநத்வ புத்தியைவிடப் ப்ரஸங்கிக்கும். இவ்வாக்யத்தில் ப்ரதிபாத்யமான தர்மத்தையொழித்த தர்மங்களல்லவோ த்யாஜ்யங்களாவனவென்னில், இங்கு விஹிதையான சரணாகதியிலும் துல்யம்.

**விளக்கம்–** உபாஸனம் என்பது உபாயம் அல்ல என்று மேலே வாதம் செய்பவர்கள், மேலும் ஒரு கேள்வி கேட்கலாம்: ஸர்வேச்வரனிடம் சரணம் புக வேண்டுவது என்பதும் உபாஸநம் போன்று ஒருவிதமான தர்மமே ஆகும்; ஆகவே, ஸர்வதர்மாந் என்பதில் உள்ள "ஸர்வ = அனைத்து" என்னும் பதத்தின் பொருளைச் சுருக்காமல் இருக்கவேண்டும் என்றால் – இத்தகைய சரணமடைதல் என்பதும் ஓர் உபாயமாகவே உள்ளதால், இதுவும் கைவிடத்தக்கதே ஆகிறது அல்லவா? இது போன்றே, ப்ரபத்தி என்பது நேரடி உபாயமாகவோ அல்லது மறைமுக உபாயமாகவோ உள்ளதால், இத்தகைய உபாயம் என்பது கீதையின் – ஸர்வதர்மாந் பரித்யஜ்ய – என்பதற்கு எதிர்மறையாக உள்ளது அல்லவோ? இதற்கு மறுப்பாக நாம் ஒரு கேள்வி எழுப்புகிறோம். நீங்கள் (ப்ரபத்தி உபாயம் அல்ல என்று கூறுபவர்கள்) என்ன கூறவிரும்புகிறீர்கள்? "உபாயம் என்பது நேரடியாகப் பலன் அளிக்கும்" என்னும் எண்ணத்தையும் துறந்த பின்னரே உபாயத்தைக் கைக்கொள்ளவேண்டும் என்று நீங்கள் கூறினால், இதே கருத்து பக்தியோகத்திற்கும் பொருந்தும். ப்ரபத்தி என்பது ஸர்வேச்வரனின் க்ருபையைப் பெற்றுத் தரவல்ல ஸாதநம் என்பதால், அதுவும் ஒரு தர்மமே என்றாகிறது; ஆகவே "ஸர்வதர்மாந்" என்பதற்குள் இத்தகைய தர்மமும் அடங்குவதால், ப்ரபத்தி என்ற தர்மத்தையும் கைவிடவேண்டும் என்று நீங்கள் கூறலாம் – இவ்விதம் கொண்டால் ஸர்வதர்மாந் என்ற பதத்திற்கு எந்தவிதமான குறையும் வராமல் இருக்கும்விதமாக, மஹாபாரதம் ஆரண்யபர்வம் (71-123) - க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் – க்ருஷ்ணனே எப்போதும் உள்ள தர்மம் – என்றுள்ள நிலையில், தர்மம் என்னும் பதம் மூலம் கூறப்பட்ட ஸித்தோபாயமான எம்பெருமானையும் கைவிடவேண்டியதாகிறது அல்லவோ? இதற்கு நீங்கள், "சரமச்லோகத்தில் கூறப்பட்ட தர்மத்தைத் தவிர (மாமேகம் – என்னை மட்டும் – என்பதான தர்மம்), மற்ற தர்மங்கள் அனைத்தையும் கைவிடவேண்டும் என்று கொள்ளவேண்டும்", என்று கூறலாம்; இவ்விதம் கொண்டால், அதே ச்லோகத்தில் கூறப்பட்ட சரணாகதியையும் ஏற்கவேண்டியதுதானே!

## ஸித்தோபாயம் மற்றும் ஸாத்தோபாயத்தின் உபகாரங்கள்

**மூலம்–** உபாஸநாதிகளைப்போலே தனக்கு உத்பாதகமாகவாதல், வர்த்தகமாகவாதல், ஸஹகாரியாகவாதல், த்வாரமாகவாதல், ஒன்றால் அபேக்ஷையறும்படி நித்யமாய், உபசயாபசய ரஹிதமாய், ஸர்வதா பரிபூர்ணமான ஸஹஜ காருண்யாதிகளை உடைத்தாய், ஸங்கல்பமுண்டானபோது த்வாரநிரபேக்ஷமாகக் கார்யம் பிறக்கும்படி ஸத்யஸங்கல்பமாயிருக்கிற ஸித்தோபாயத்துக்குப் பக்திப்ரபத்திகள் எவ்வாகாரங்களால் உபகாரகங்களாகின்றனவென்னில் – இவை அநாதியான அபசார பரம்பரையாலே உத்பந்நமாய் ஸம்ஸாரஹேதுவாகாய்க் கிடக்கிற நிக்ரஹத்தைச் சமிப்பித்துக் கொண்டு உபகரிக்கின்றன. இவை பலாந்தரத்துக்கு உபாயங்களாம்போது ஜ்யோதிஷ்டோமாதிகளைப்போலே தத்ததநுகுண ப்ரீதிவிசேஷங்களை உத்பாதித்துக் கொண்டு

அம்முகத்தாலே உபகாரங்களாம். முமுக்ஷுவுக்கு ஸாத்யோபாயங்களாகிற வ்யாஜ மாத்ரத்தாலே சாந்தநிக்ரஹமான ஸித்தோபாயம் நிக்ரஹபலமான ஜ்ஞான ஸங்கோசாதிகளைக் கழித்துப் பரிபூர்ண கைங்கர்ய பர்யந்த பலத்தைக் கொடுத்து யாவதாத்மபாவியாக உபகரிக்கும். ஆகையால் முமுக்ஷுவினுடைய ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தி பூர்வகமாய் பரிபூர்ண கைங்கர்ய பர்யந்தமான பலபரம்பரையெல்லாம் ஸித்தோபாய கார்யமென்றும், ப்ரஸாதமான ஸாத்தோபாயமடியாக வருகிறதென்றும் சொல்லுகிற ப்ரமாணங்களிரண்டும் ஸுஸங்கதங்கள்.

**விளக்கம்–** (உபாஸனங்கள் போன்று உற்பத்தி ஆதல், பலபல நிலைகளைக் கடந்த பின்னரே முழுமை அடைதல், மற்ற சிலவற்றின் உதவியை நாடியிருத்தல் ஆகியவை ஸர்வேச்வரன் என்னும் உபாயத்துக்கு உண்டா என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்) உபாயமாக உள்ள பகவான் உற்பத்தி ஆதல், படிப்படியாக வளர்ச்சி அடைதல், மற்றவற்றின் உதவிகளை நாடுதல் போன்றவை அற்று இருக்கிறான். அவன் நித்யமாக உள்ளான்; எந்தவிதமான வளர்ச்சியோ குன்றுதலோ அற்றவனாக உள்ளான்; அனைத்து உயிர்களிடத்தும் பரிபூர்ணமாக கருணை கொண்டவனாக உள்ளான்; இவற்றை எப்போதும் உடையவாக இருக்கிறான். அவன் தன்னுடைய தவறாத ஸங்கல்பம் காரணமாக, எதனையும் விடாமல், வேறு எதனுடைய உதவியையும் எதிர்பாராமல், எப்போதும் உபாயமாக இருக்கிறான். இப்படி உள்ளபோது இவனுக்கு பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகியவை எவ்விதம் உபகாரம் செய்பவையாக உள்ளன என்று கேட்கலாம். நாம் எல்லையற்ற காலங்களாகத் தொடர்ந்து செய்கின்ற பலவிதமான அபசாரங்களே ஸம்ஸாரத்தில் சுழன்றபடி உள்ளதற்குக் காரணமாகின்றன; அதாவது, இந்த அபசாரங்கள் ஸர்வேச்வரனின் தண்டனைகளுக்கு ஏதுவாக இருந்துகொண்டு, அந்தத் தண்டனைகளே ஸம்ஸாரத்தில் உழல்வதற்கு காரணமாக உள்ளன. இந்நிலையில் பக்தியும் ப்ரபத்தியும் அந்த தண்டனைகளை நீக்கவோ (அல்லது குறைக்கவோ) உதவியாக உள்ளன. இவை (பக்தி மற்றும் ப்ரபத்தி) மற்ற பலன்களுக்காகச் செய்யப்படும்போது (மோக்ஷம் தவிர), இந்த உபாயங்கள் அவற்றின் பலனுக்கு ஏற்றபடியான மகிழ்வை ஸர்வேச்வரனுக்கு உண்டாக்கி, அவனைப் பலன் அளிக்கும்படிச் செய்கின்றன; அதாவது ஜ்யோதிஷ்டோமம் போன்றவை எவ்விதம் பலன் அளிக்கிறதோ அது போன்று இவையும் உதவுகின்றன. முமுக்ஷு ஒருவன் இந்த உபாயங்களை மோக்ஷத்தின் பொருட்டு கைக்கொள்ளும்போது, இந்த உபாயங்கள் மூலமாக சேதநனின் விஷயத்தில் (அபசாரம் காரணமாக) தண்டனை அளிக்கின்ற மனோபாவத்தில் உள்ள ஸித்தோபாயமான எம்பெருமான் செய்வது என்னவென்றால் – தன்னுடைய முந்தைய தண்டனை காரணமாக எற்பட்டிருந்த ஞானச்சுருக்கம் போன்றவற்றை விலக்கி, முழுமையான கைங்கர்யம் என்பது வரை உள்ள பலன்களை அளித்து, ஆத்மா உள்ளவரை உபசாரம் செய்வான். ஆகவே ஸித்தோபாயமான எம்பெருமான் முமுக்ஷுவின் தடைகள் அனைத்தையும் விலக்கி, பரிபூர்ணமான கைங்கர்யம் என்பதுவரை உள்ள அனைத்து பலன்களையும் அளிக்கிறான்; தான் செய்கின்ற பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகிய

உபாயங்களால் மகிழ்கின்ற காரணத்தாலேயே எம்பெருமானால் இந்தப் பலன்கள் வருகின்றன – இந்த இரண்டு ப்ரமாண கருத்துக்களும் பொருத்தமானதே ஆகும்.

## ப்ரபத்தியை விதிக்கவேண்டியதில்லை என்னும் வாதத்திற்கான மறுப்பு

**மூலம்–** ஆனாலும் இப் ப்ரபத்தியாகிற உபாய விசேஷத்தைச் சாஸ்த்ரம் விதிக்க வேணுமோ? லோகத்தில் தன்னை ரக்ஷித்துக் கொள்ள விரகில்லாதே அழுந்துவான் ஒருவன் அப்போது ஸந்நிஹிதனான ரக்ஷண ஸமர்த்தனைப் பற்றுமாப்போலே தன்னையும் ஈச்வரனையும் ஸித்தபரமான சாஸ்த்ரத்தாலே தெளிந்தால் தானே, அவனை சரணமாகப் பற்றானோ? ஆகையால் அகிஞ்சநனுக்குப் பக்தி ஸ்தானத்தில் ப்ரபத்தியை விதிக்கக் கூடாதே என்றும் சிலர் சொல்லுவார்கள். இதுவும் ஔசித்யமூலமான அதிவாதம். எங்ஙனேயென்னில் – லோகத்தில் ஒருவனை ஒருவன் ஆச்ரயிக்கும்போது இன்னபடியே இவன் இரங்கும் என்னுமிடத்தை ஒரு ப்ரமாணத்தாலே அறிந்து ஆச்ரயிக்குமாபோலே, இங்கும் ஈச்வரனை இன்ன ப்ரகாரத்தாலே இன்ன அதிகாரி பற்றினால் இவனை ஈச்வரன் ரக்ஷிக்குமென்னும் இடம் அறியும்போது கர்த்தவ்யபரமான சாஸ்த்ரமொழிய வேறொரு ப்ரமாணமில்லை. நாம் ஆச்ரயிக்க ரக்ஷிக்குமென்று அநுமாநத்தாலே அறுதியிட்டு ஆச்ரயிக்கில் ஈச்வர தத்த்வ ஜ்ஞாநமுடையாரெல்லார்க்கும் இப்படி அநுஷ்டிக்கலாமாகையாலே உபாஸந விதாயக சாஸ்த்ரங்கள் நிரர்த்தங்களாம். ஸமர்த்தன் உபாஸநாதிகளைப் பண்ண, அவற்றில் ஸமர்த்தனல்லாதவன் ப்ரபத்தியைப் பண்ணவென்று விசேஷித்து நியமிக்கை அநுமாநத்தால் கடைப்படாது.

**விளக்கம்–** பக்தியோகத்தைக் கைக்கொள்ள இயலாதவனுக்கு ப்ரபத்தி என்பதை சாஸ்த்ரங்கள் ஏன் விதிக்கவேண்டும்? இந்த உலகில் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள இயலாத ஒருவன், ஒரு விபத்தில் சிக்கும்போது, தனக்கு அருகில் உள்ள காப்பாற்றும் சக்தி கொண்ட ஒருவனை, தானாகவே வலியச் சென்று பற்றுகிறான்; இது போன்றே உபாயம் மற்றும் உபேயம் ஆகியவை குறித்து எடுத்துக் கூறுகின்ற சாஸ்த்ரங்கள் மூலம் தன்னைக் குறித்தும், ஈச்வரனைக் குறித்தும் அறிந்து தெளிந்த ஒருவன், தானாகவே ஸர்வேச்வரனை சரணம் என்று பற்றமாட்டானோ? இதற்கு ஏன் விதிக்க வேண்டும்? எனவே தன்னிடம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எந்தத் திறனும் இல்லை என்று தெளிந்த ஒருவனுக்கு பக்திக்குப் பதிலாக ப்ரபத்தியை விதிக்க வேண்டிய அவசியம் இல்லையே என்று சிலர் ஆக்ஷேபம் செய்யக்கூடும். இந்த வாதம் சரியான காரணத்தைக் கூறி அமைத்துள்ளபோதிலும், ஏற்க இயலாத ஒன்றாகிறது. ஏன்? இந்த உலகில் ஒருவனை மற்றொருவன் ஓர் உதவிக்காக அண்டும்போது, அவன் இவ்விதமாகத் தனக்கு உதவி செய்யக்கூடும் என்பதை தகுந்த சான்றுகள் மூலம் அறிந்த பின்னரே, அவனை அண்டுகிறான் அல்லவோ? இது போன்று ஈச்வரனை எத்தகைய அதிகாரி, எந்த முறையில் பற்றினால், அவனை ஈச்வரனம் ரக்ஷிப்பான் என்று அறிவதற்கு கடமைகளைச்

சரிவர உரைக்கின்ற சாஸ்த்ரங்களைத் தவிர வேறு ப்ரமாணம் ஏதும் இல்லை. இதற்கு ஒரு எதிர்கேள்வி கேட்கலாம் – "நாம் அவனை அண்டினால் அவன் தானாகவே ரக்ஷிக்க மாட்டானோ?" என்று யூகத்தின் அடிப்படையிலே அவனை அண்டலாம் அல்லவோ – என்று கேட்கலாம். ஸர்வேச்வரனைப் பற்றிய ஞானம் கொண்ட அனைவரும் இவ்விதமாக யூகத்தின் அடிப்படையில் அவனை அண்டலாம் என்னும்போது பக்தியோகத்தை விதிக்கின்ற சாஸ்த்ரங்கள் அனைத்தும் பயனற்றுப் போய்விடும். தகுதி உள்ளவன் பக்தியோகம் போன்ற உபாயங்களையும், தகுதி இல்லாதவன் ப்ரபத்தியையும் கைக்கொள்ளலாம் என்பதை அநுமானத்தால் அறிய இயலாது.

**மூலம்** - மற்றுள்ள உபாயங்களில் ஸமர்த்தனன்றிக்கே ஒழிந்தால் அவற்றினுடைய ஸ்தாநத்திலே ப்ரபத்தியைப் பண்ணுவதென்று சாஸ்த்ரம் விதியாதபோது முன்பு விதித்த உபாயத்துக்கு அநர்ஹனானபடியாலே அதின் பலத்தை இழக்கும்படியாம். எங்ஙனே என்னில், லோகத்தில் ராஜஸேவாதிகளும் தத்பலங்களும் காணச் செய்தே மாலாகரண தீபாரோபண ஸ்துதி நமஸ்காராதிகளை சாஸ்த்ரநிரபேக்ஷமாக அநுஷ்டித்தால் அபசாரங்கள் வரும்படியிருக்கையாலே பரிகர நியமங்களோடு கூடின பகவத்ஸேவாதி ப்ரகாரங்களும் தத்பலங்களும் நியதங்களாகச் சாஸ்த்ரங்கொண்டு அறிகிறாப்போலே இங்கும் லோகத்தில் ப்ரபத்தியும் தத்பலங்களும் கண்டுபோந்தாலும் ஸதாசார்ய உபதேச ஸாபேக்ஷ மந்த்ரவிசேஷாதிகளோடு கூடின ப்ரபத்திக்கும் பலவிசேஷங்களுக்கும் ஸாத்ய ஸாதந பாவம் சாஸ்த்ரம் கொண்டு அறியவேண்டுகையால் அவ்வோ பலங்களுக்காக ஸ்வாவிசேஷங்களை விதிக்கிறாப்போலே ப்ரபத்தியையும் விதிக்கிறது. இங்ஙனல்லாத போது ராஜஸேவையைப் போலே பகவத் ஸேவையும் விதிக்கவேண்டாதொழியும்; ப்ரபத்திக்கும் ஸதாசார்யோபதேச பூர்வக மந்த்ரக்ரஹணாதிகள் அநபேக்ஷிதங்களாகப் ப்ரஸங்கிக்கும். மந்த்ராத்யநர்ஹர்க்கும் சரண்யவிசேஷ பலவிசேஷாநுபந்தியான அந்யூநாநதிக கர்த்தவ்ய விசேஷத்தினுடைய அத்யவஸாயத்துக்கு அநந்யதா ஸித்தமான அநுமாநம் கிடையாது. ஆகையால் ஸபரிகர ஸேவா விசேஷங்கள்போலே ஸபரிகர பரஸமர்ப்பணமும் இங்கு விதேயமாகக் குறையில்லை.

**விளக்கம்–** இது தவிர மற்ற பலன்களை விரும்பும் ஒருவன் பக்தியோகம் போன்ற மற்ற உபாயங்களைக் கைக்கொள்ள இயலாத சூழ்நிலையில் இருக்கக்கூடும்; அவற்றுக்குப் பதிலாக ப்ரபத்தியைக் கைக்கொள்ளலாம் என்று சாஸ்த்ரங்கள் விதிக்காவிட்டால், அவன் பக்தியோகம் போன்றவற்றையும் செய்ய முடியாமல், அதற்குப் பதிலாக ப்ரபத்தி உள்ளது என்பதையும் அறியாமல் இருந்துவிடுவான்; இதனால் தான் அடைய விரும்பிய பலன்களை இழக்க நேரிடும். இந்த உலகில் அரசர்களுக்கு மாலை ஸமர்ப்பித்தல், தூபதீபங்கள் ஸமர்ப்பித்தல், துதி செய்தல், வணங்குதல் போன்ற செயல்களைச் செய்யும்போது, சாஸ்த்ரங்களில் கூறிய விதிகளுக்கு உட்பட்டே அவற்றைச் செய்யவேண்டும், மீறிச் செய்தால் அபசாரம் ஏற்படும். இது போன்றே ஸர்வேச்வரனுக்குக் கைங்கர்யங்களைச் செய்யவேண்டிய முறை என்ன, அவற்றின் பலன்கள் என்ன

போன்றவற்றைச் சாஸ்த்ரங்கள் மூலமாக அறிந்து கொண்டு செய்யவேண்டும் என்று முன்னர் உரைக்கப்பட்டது. இது போன்று இந்த உலகில் நாம் ப்ரபத்தி மற்றும் அதன் பலன் ஆகியவற்றைக் கண்டபோதிலும், ஆசார்யனிடம் உபதேசமாகப் பெற்ற மந்த்ரங்களுடன் கூடியதான ப்ரபத்திக்கும் அதன் பலன்களுக்கும் இடையே உள்ள கார்ய - காரண ஸம்பந்தம் என்பதை சாஸ்த்ரங்கள் மூலமாகவே அறிய இயலும். ஒரு சில குறிப்பிட்ட பலன்களை அடையும் பொருட்டு செய்யவேண்டிய செயல்களை எவ்விதம் சாஸ்த்ரம் விதிக்கிறதோ, அது போன்று ப்ரபத்தியும் சாஸ்த்ரம் மூலம் விதிக்கப்பட்டது. இவ்விதம் கொள்ளவில்லை என்றால், அரசர்களுக்குச் செய்யும் செயல்களுக்கு எவ்விதம் சாஸ்த்ரங்கள் ஏதும் விதிக்கவில்லையோ அது போன்றே ஸர்வேச்வரனுக்குச் செய்யும் கைங்கர்யங்களிலும் ஏதும் விதிக்கப்படவில்லை என்றாகும். இதனால், ப்ரபத்திக்கு முன்பாக ஆசார்யனிடம் மந்த்ரங்களைப் பெறுதல் போன்றவையும் அவசியம் இல்லை என்றாகிவிடும். ஒரு சிலர் மந்த்ரங்களைக் கூறும் தகுதி இல்லாதவர்களாக இருக்கலாம்; இவர்கள் சரணமடைவதற்கு ஏற்றவனாகவும், பல குணங்களுடன் கூடியவனாகவும் உள்ள ஸர்வேச்வரனிடம் ப்ரபத்தி செய்யலாம்; இதன் மூலம் இவர்களுக்கு குறிப்பிட்ட பலன்கள் கைகூடும்; ஆனால் இதனைச் சரியான வழியில், எதனையும் எதிர்பாராமல், விதிகளுக்கு மீறாமல் செய்யவேண்டும் – இவ்விதம் சிலர் கூறுவதை எந்தவிதமான அநுமானம் மூலமும் நிரூபிக்க இயலாது. ஆகவே, ஸர்வேச்வரனை வழிபடும் முறைகளும், அவனுக்குக் கைங்கர்யம் செய்யும் விதங்களும் எவ்விதம் அங்கங்களுடன் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டுள்ளதோ அதே போன்று, ப்ரபத்தியை அதன் அங்கங்களுடன் சாஸ்த்ரங்கள் விதிப்பதில் எந்தவிதமான தோஷமும் இல்லை.

## பக்தியோகம் என்பது ஸ்வரூபத்திற்கு முரணானது என்னும் வாதத்திற்கான மறுப்பு

**மூலம்**–இப்படி யதாவிகாரம் சாஸ்த்ரம் விதித்தவற்றிலும் உபாஸநாதிகள் ஸ்வரூப விருத்தங்களென்று சிலர் சொல்லுவார்கள். இதுவும் ப்ரபத்தியை ஸ்துதிக்கைக்காக அதிவாதம் பண்ணினார்களாமித்தனை. எங்ஙனேயென்னில் –

(1) நித்யமான ஆத்ம ஸ்வரூபத்துக்கு இவை நாசகங்களாய்க் கொண்டு ஸ்வரூப விருத்தங்கள் என்னவொண்ணாது.

(2) ப்ரபத்த்யநுஷ்டாநத்திலும் கைங்கர்யத்திலும் போலே பக்த்யாதிகளிலும் – கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்த்வாத், பராத்து தச்ச்ருதே: - என்கிறபடியே பகவததீந கர்த்ருத்வம் உண்டாகையாலும், ஆத்ம ஸ்வரூபம் ஆத்யந்த நிர்வ்யாபாரமென்னும்போது ஸத்த்வ லக்ஷணமான அர்த்தக்ரியாகாரித்வம் இல்லாமையாலே துச்சத்வம் ப்ரஸங்கிக்கையாலும், ஜ்ஞாந சிகீர்ஷா ப்ரயத்ந ஆச்ரயத்வரூபமான கர்த்ருத்வமில்லையாக்கி ஆத்மாவுக்கு

ஸந்நிதிமாத்ரமே வ்யாபாரமென்னில் போக்த்ருத்வாதிகளுமின்றிக்கே இவனுக்கு ஸம்ஸாரமும் மித்யாவாய் மோக்ஷோபாய நைரபேக்ஷ்யாதி ப்ரஸங்கம் வருகையாலும், ஸாங்க்யாதிகள் சொல்லுமாப்போலே ஸ்வரூபத்தில் கர்த்ருத்வமில்லாமையாலே உபாஸநாதிகள் ஸ்வரூப விருத்தங்கள் என்று சொல்லவுமொண்ணாது.

அசேஷ்டமாநமாஸீநம் ஸ்ரீ: கஞ்சிதுபாதிஷ்டதி
கர்மீ கர்மாநுஸ்ருத்யாந்யோ ந ப்ராச்யமதிகச்சதி

என்றதுவும் சாஸ்த்ரசோதிதோபாயங்களினுடைய நைரர்த்தக்யம் சொன்னபடியன்று. பூர்வாநுஷ்டித கர்மவிசேஷங்களுடைய பலவிசேஷம் சொன்னபடியத்தனை.

**விளக்கம்–** சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட உபாயங்களில், உபாஸனைகள் என்பதும் ஜீவனுடைய ஸ்வரூபத்திற்கு முரணானதே என்று சிலர் கூறுவார்கள். இது போன்று உரைத்தல் என்பது ப்ரபத்தியைப் புகழ்வதற்காக என்றே கொள்ளப்படவேண்டும். எப்படி?

(1) இது போன்ற உபாஸனங்கள் ஆத்மஸ்வரூபத்தை அழித்துவிடும் என்று கூற இயலாது, ஏன் என்றால் ஆத்மா என்பது நித்யமானது ஆகும்.

(2) ஸாங்க்யர்கள் கூறுவது போன்று ஆத்மாவிற்கு இயல்பாகவே செயலாற்றும் தன்மை கிடையாது என்பதால் உபாஸனங்கள் போன்றவற்றைச் செய்ய இயலாது என்று கூறுவது சரியல்ல. ஏன்? ப்ரபத்தியைக் கைக்கொள்வது, ஸர்வேச்வரனுக்கான கைங்கர்யத்தில் ஈடுபடுவது முதலான செயல்கள் போன்று, ஸர்வேச்வரனின் கட்டளைக்கு ஏற்ப செயலாற்றும் திறன் ஆத்மாவுக்கு உண்டு (சுதந்திரமாகச் செயலாற்றும் தன்மை மட்டுமே கிடையாது என்று கொள்க). இதனை ப்ரஹ்மஸூத்ரம் (2-3-33) - கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்த்வாத்– ஜீவன் செயல்களுடன் கூடியவன், சாஸ்த்ரங்கள் "இதனைச் செய், செய்யாதே" என்று கூறுவதால் என்றும், ப்ரஹ்மஸூத்ரம் (2-3-40) - பராத்து தச்ச்ருதே: - ஜீவனின் செயல் புரிதல் என்பது ஸர்வேச்வரனுக்கு அடங்கியே ஆகும் – என்றும் கூறியது காண்க. ஆத்மா எப்போதுமே செயலாற்ற இயலாது என்று கூறினால் – குறிப்பிட்ட செயல்களைச் செய்வதால் மட்டுமே ஒரு வஸ்துவானது நிலைத்து இருக்கமுடியும் என்னும் கருத்தின் அடிப்படையில், ஆத்மாவானது இல்லாத ஒரு வஸ்து என்றே ஆகிவிடும். ஆத்மா என்பது எவ்வித ஞானமும் இல்லாமல், செயல் புரியும் ஆசையும் இல்லாமல், செயல் புரிவதற்கான எந்தவிதமான முயற்சியும் எடுக்கவேண்டிய அவசியமும் இல்லாமல், வெறுமனே உள்ளது என்று கூறினால் – அத்தகைய ஆத்மா எவ்வித இன்பத்தையும், துன்பத்தையும் அனுபவிக்கத் தகுதி அற்றது என்றாகிவிடும்; இவ்விதம் கொண்டால், ஸம்ஸாரத்தில் ஜீவன் சிக்குவது என்பது பொய் என்றும், ஸம்ஸாரமே மாயை என்றும், மோக்ஷம் அளிக்கக்கூடிய உபாயங்கள் ஏதும் அவசியம்

இல்லை என்றும் ஆகிறது. மேலும், மஹாபாரதம் சாந்திபர்வம் (339-15) - அசேஷ்டமாநமாஸீநம் ஸ்ரீ: கஞ்சிதுபாதிஷ்டதி கர்மீ கர்மாநுஸ்ருத்யாந்யோ ந ப்ராச்யமதிகச்சதி – ஏதும் செய்யாமல் வெறுமனே அமர்ந்திருக்கும் ஒருவனிடம் மஹாலக்ஷ்மி தானாகவே வருகிறாள். தன்னுடைய உடலைக் காப்பாற்றும் பொருட்டு செயல்களைச் செய்து கொண்டிருப்பவன், தனது பூர்வ கர்மவினை காரணமாக உணவைக் கூட அடைவதில்லை – என்றது காண்க; இந்த ச்லோகத்தினைக் கருத்தில் கொண்டு சாஸ்த்ரங்களில் கூறப்படும் உபாயங்கள் பயன் அற்றவை என்று கொள்ளக்கூடாது; இந்த ச்லோகமானது முற்பிறவியில் செய்த ஒரு சில கர்மங்கள் இப்போது நல்ல பலனை அளிக்கின்றன என்பதையே கூறுகிறது.

**மூலம்–** மோக்ஷப்ரதிகூலங்களான ராகாத்யுபாதிகளாலே வந்த காம்யநிஷித்தங்கள் போலே பந்தகங்களல்லாமையாலும் மோக்ஷார்த்தி தனக்கே விதிக்கையாலும் உபாஸநாதிகளுக்குச் சாஸ்த்ர முகத்தாலே அநர்த்தாவஹத்வரூபமான ஸ்வரூப விரோதம் சொல்லவொண்ணாது. ஆகையால் ஆத்மஸ்வரூபத்தைப் பற்ற உபாஸநாதிகளுக்கு நாசகத்வ அஸம்பாவிதத்வ அநர்த்தாவஹத்வங்களில்லாமையாலே ஒருபடியாலும் ஸ்வரூபவிரோதம் ப்ரஸங்கிக்கவில்லை.

**விளக்கம்–** மோக்ஷத்தைத் தடுக்கவல்லதும், ஆசை உள்ளிட்ட பலவற்றின் அடிப்படையில் அமைந்ததாகவும் உள்ளதாகிய பலனை விரும்பிச் செய்கின்ற காம்ய கர்மங்கள் போன்றோ, வேதங்களால் தடுக்கப்பட்ட கர்மங்கள் போன்றோ பக்தியோகம் என்பது கிடையாது; அவற்றைப் போன்று பக்தியோகமானது ஸம்ஸாரபந்தத்தை அளிப்பதில்லை. இத்தகைய உபாஸனம் என்பது மோக்ஷத்தை விரும்பும் ஒருவனுக்கு மட்டுமே விதிக்கப்பட்டுள்ளது. ஆக, எந்த வழியிலும் பக்தியோகம் என்னும் உபாஸனம் ஆத்மஸ்வரூபத்திற்கு விரோதம் என்று கூற இயலாது. ஆகவே உபாஸனம் என்பது எவ்விதத்திலும் ஆத்மஸ்வரூபத்திற்கு நாசம் விளைவிப்பதாகவோ, செய்வதற்கு அரிதாகவோ, தகாத பலன்களை அளிப்பதாகவோ இல்லை. எனவே உபாஸனை மூலம் எப்போதும் ஆத்மஸ்வரூபத்திற்கு நாசம் உண்டாவதில்லை.

**மூலம்–** ஆனாலும், ஆத்மா தேஹாதிவிலக்ஷணனாகையாலே ஸ்வரூபத்தில் வர்ணாச்ரமாதிகளில்லையென்று தெளிந்தவனுக்கு ”ப்ராஹ்மணோஹம்”, “க்ஷத்ரியோஹம்” என்றாற்போலே வரும் அபிமாநங்களடியாகக் கர்த்தவ்யங்களான வர்ணாச்ரமாதி தர்மங்களும், அவற்றோடே துவக்குண்டான உபாயாந்தரங்களும் அநுஷ்டேயங்களல்லாமையாலே இவ்வர்ணாச்ரமாதி நிபந்தங்களான தர்மங்கள், ஸ்வரூப விருத்தங்களென்னக் குறையென் என்னில், இதுவும் அநுபபந்நம். எங்ஙனேயென்னில் – ஸ்வரூபத்தில் கர்மவிசேஷங்களடியாக ப்ராஹ்மணத்வாதிகளில்லையென்று தெளிந்தானே ஆகிலும் கர்மவிசேஷங்களடியாக ப்ராஹ்மணத்வாதி விசிஷ்ட சரீரத்தோடே

ஸம்பத்தனாயிருக்கையாலே அச்சரீர ஸம்பந்தமே அடியாக வருகிற க்ஷுத்பிபாஸாதிகளுக்குப் பரிஹாரம் பண்ணுகிற கணக்கிலே அச்சரீரம் விடுமளவும் அவ்வோ வர்ணாச்ரமாதிகளுக்கும் தன் சக்திக்கும் அநுரூபமாக அநிஷ்ட நிவ்ருத்தி இஷ்டப்ராப்திகளைப் பற்றச் சாஸ்த்ரங்கள் விதித்த தர்மங்களை விடவொண்ணாது. ஆகையால் இத்தர்மங்களை தேஹாத்மவிவேகமடியாக ஸ்வரூப விருத்தங்களாக்கி இவற்றுக்குத் த்யாஜ்யதை சொல்லவொண்ணாது. தேஹாத்ம விவேகமுடையவனுக்கே பாரலௌகிக போகஸாதநமான தர்மத்தில் அதிகாரமாகையால் இத்தர்மங்களுடைய அநுஷ்டானத்துக்கு ஸ்வரூபத்தில் ப்ராஹ்மண்யாதி ப்ரமம் அதிகாரமன்று; ப்ராஹ்மண்யாதி விசிஷ்ட சரீரஸம்பந்தமே அதிகாரம். ஆகையால் ஸர்வ தர்மாநுஷ்டாநத்துக்கும் உபயுக்தமான ப்ரக்ருத்யாத்மவிவேகமடியாக உபாஸநாதிகளுக்கு விரோதம் கண்டிலோம். உபாஸநாதிகள் அஹங்காராதிகர்ப்பங்கள் என்னுமிடம் சாஸ்த்ரமிசையாதிருக்கச் செய்தே ஆரோபித்தார்களத்தனை.

**விளக்கம்**– சரீரத்தைத் காட்டிலும் ஆத்மா வேறுபட்டது என்பதால், ஆத்ம ஸ்வரூபத்தைப் பொறுத்தவரையில் வர்ணாச்ரம பேதங்கள் இல்லையென்று சிலர் தெளியக்கூடும். இவர்களுக்கு "நான் அந்தணன்", "நான் க்ஷத்ரியன்" என்ற மயக்கம் காரணமாக ஏற்படுகின்ற, அந்தந்த வர்ணங்களுக்கு உரிய தர்மங்களும், அவற்றுடன் கூடியதான மற்ற உபாயங்களும் கைக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. இத்தகைய வர்ணாச்ரமங்களின் காரணமாக உண்டான தர்மங்கள் அனைத்தும் ஆத்ம ஸ்வரூபத்திற்கு விரோதமானவை – இப்படியாக ஒரு சிலர் வாதாடலாம். இது ஏற்க இயலாத வாதமாகும். ஏன்? ஆத்ம ஸ்வரூபத்தைப் பொறுத்தவரையில் ப்ராஹ்மணத்தன்மை போன்றவை கிடையாது என்றபோதிலும், ஒருவன் தன்னுடைய பூர்வ கர்மங்களின் காரணமாக உண்டான ப்ராஹ்மணத்தன்மையுடன் கூடிய சரீரத்தின் தொடர்பை இப்போது அடைந்துள்ளான்; அந்தச் சரீரத்துடன் தொடர்பு கொண்டுள்ளதால் ஏற்படுகின்ற பசி, தாகம் போன்றவற்றை அவன் போக்கிக் கொள்ள முயல்கிறான் அல்லவோ? அதே போன்று அந்தச் சரீரத்தை விடுகின்ற காலம்வரையில் அவன் வர்ணாச்ரம தர்மங்களுக்கு ஏற்றபடி சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டவற்றைச் செய்தபடி இருத்தல்வேண்டும். தனது விருப்பங்கள் நிறைவேறவும் விருப்பம், அற்றவை நடைபெறாமல் இருப்பதற்கும், தன்னுடைய சக்திக்கு ஏற்றபடியாக, இவற்றைச் செய்யவேண்டும். இவைகளை விடுதல் கூடாது. ஆகவே சரீரத்திற்கும் ஆத்மாவிற்கும் உள்ள வேறுபாடுகளை அறிந்தவன் என்று கொண்டு, அந்த விவேகத்தின் அடிப்படையில், வர்ணாச்ரம தர்மங்கள் ஆத்மஸ்வரூபத்திற்கு விரோதமானவை என்று அவற்றைக் கைவிடலாகாது. இப்படிப்பட்ட சரீரம் மற்றும் ஆத்மா ஆகியவற்றின் விவேகம் கொண்ட ஒருவனுக்கு மட்டுமே இது போன்ற தர்மங்களில் அதிகாரம் உண்டு; ஆகவே இது போன்ற வர்ணாச்ரம தர்மங்களைக் கைக்கொள்ளுதல் என்பது ஆத்மஸ்வரூபத்தில் ப்ராஹ்மணத்தன்மை போன்றவை உள்ளது என்ற மயக்கத்தின் அடிப்படையில் வருவதால் அல்ல, ப்ராஹ்மணன் உள்ளிட்ட சரீரத்தின் தொடர்பு காரணமாக உண்டான அதிகாரத்தாலேயே ஆகும்.ஆகவே அவரவர்களின் வர்ணாச்ரம தர்மங்களைச் செய்தல் என்பதற்கும், சரீரம்

மற்றும் ஆத்மா ஆகியவற்றின் விவேகம் என்பதற்கும் எந்தவிதமான விரோதமும் காண இயலவில்லை. உபாஸநங்களில் அஹங்காரம் கூடியே உள்ளது என்பதை சாஸ்த்ரங்கள் ஒப்புக்கொள்ளாதபோதிலும், சிலர் இதனை இவ்விதம் உள்ளதாகவே கூறுகின்றனர்.

**மூலம் –** கர்மோபார்ஜிதங்களான கரணகளேபரங்களாகிற உபாதிகளைக் கொண்டு அநுஷ்டிக்கையாலே கர்மயோகாதிகள் நிருபாதிக ஸ்வரூப விருத்தங்கள் என்பார்க்கும் ஸ்வரூபஜ்ஞாந த்வயச்ரவணாதிகளும் மந:ப்ரப்ருதி ஸாபேக்ஷங்களாகையாலே துல்ய தோஷங்களாம்.

**விளக்கம்–** கர்மயோகம் போன்ற உபாயங்களைக் கைக்கொள்ளும்போது, அவற்றை உடல் உறுப்புகள் மற்றும் புலன்கள் கொண்டே இயற்றவேண்டும்; இத்தகைய சரீரம் போன்றவை, பூர்வகர்மங்களால் உண்டாவது என்பதால், கர்மயோகம் முதலானவை ஆத்மஸ்வரூபத்திற்கு விரோதமானவை என்று ஒரு சிலர் கூறுவர். ஆத்மஸ்வரூபத்தைக் குறித்த ஞானம் பெறுவதற்கும், த்வயம் போன்றவற்றை அனுஷ்டிப்பதற்கும் மனம் போன்றவை அவசியம் வேண்டியதாகையால், இந்த வாதம் ஏற்க இயலாத ஒன்றாகும்.

**மூலம்–** ஆனாலும், சேஷபூதனாகையாலே தன்னைத்தானே ரக்ஷித்துக் கொள்ளப் ப்ராப்தனுமன்றிக்கே அத்யந்தபரதந்த்ரனாகையாலே தன்னைத்தான் ரக்ஷித்துக் கொள்ளச் சக்தனுமன்றிக்கே இருக்கிற இவனுக்கு ஸ்வரக்ஷணார்த்தமாகக் கர்த்தவ்யமென்று ஒருபாயத்தை விதிக்கையும், அது இவனுக்கு ஸாத்யமாய் ஸாத்யோபாயமென்று பேர் பெறுகிறதென்று சொல்லுகையும் உபபந்நமோ? ஆனபின்பு பக்தியோகாதிகள் சேஷத்வாநுரூபங்களல்லாமையாலே ஸ்வரூபத்துக்கு அநிஷ்டாவஹங்கள் என்றும் அத்யந்த பாரதந்த்ர்ய விருத்தங்களாகையாலே அஸம்பாவிதங்கள் என்றும் சொல்லவொண்ணாதோவென்னில், இது ஸர்வமோக்ஷ ப்ரஸங்காதிகளாலே முன்பே பரிஹ்ருதம். இவன் செய்ததொரு வ்யாஜங்கொள்ளாதே முக்தனாக்கில் அநாதியாக முக்தனாகப் ப்ரஸங்கிக்கும். ஈச்வரன் கேவல ஸ்வாதந்த்ர்யத்தாலே நினைத்தபோது முக்தனாக்கில் வைஷம்ய நைர்குண்யாதி தோஷங்களும் வரும். மோக்ஷோபாய விதாயங்களான சாஸ்த்ரங்களுமெல்லாம் நிரர்த்தங்களுமாம். ஆகையால் இச்சேஷத்வத்தால் வகுத்த விஷயத்தைப் பற்றுகையில் ஔசித்யமும், உடையவன் உடைமையை ரக்ஷிக்கையில் ஔசித்யமுமுண்டாம். அத்யந்த பாரதந்த்ர்யத்தால் அவன் கொடுத்த ஸ்வாதந்த்ர்யத்தைச் சுமந்து அவனுக்கு அபிமதங்களான உபாயங்களை அநுஷ்டிக்கையும் பலம் பெறுகைக்கு அவன் கைபார்த்திருக்க வேண்டுகையும் ஸித்திக்கும். இச்சேஷத்வபாரதந்த்யங்களிரண்டும் பலதசையில் அவனுகந்த கைங்கர்யத்தை அவனிட்ட வழக்காக நடத்துகைக்கும் உறுப்பாம். இவையடியாக ஸ்வரக்ஷணார்த்த ஸ்வவ்யாபாரமாகாதென்பார்க்குத் தாங்கள் யதாசாஸ்த்ரம் பகவத் ப்ரீத்யாதிபலத்தைக் கோலி அநுஷ்டிக்கிற கைங்கர்யத்திலும், ஸாத்யமாக விதிக்கப்படுகிற ப்ரபத்தி தன்னிலும் ஸ்வரூபவிரோத புத்தியாலே அதிகாரமில்லையாம். வாக்யஜந்யமான

ஸம்பந்த ஜ்ஞாநாதிமாத்ரத்திற்காட்டில் அதிரிக்தமாக “சரணம் வ்ரஜ” என்று விதேயமாகையாலே ஸாத்யமாயிருக்கும் ப்ரபத்தி ஸ்வரூபமென்னுமிடம் முன்பே சொன்னோம். ஆகையால் சேஷபூதனுமாய்ப் பரதந்த்ரனுமான இவனுக்கு யதாதிகாரம் ஸ்வரக்ஷணார்த்த வ்யாபாரம் பண்ணக் குறையில்லை.

**விளக்கம்–**இங்கு ஓர் ஆக்ஷேபம் எழலாம். ஜீவன் ஸர்வேச்வரனுக்காக மட்டுமே உள்ளவன் (சேஷபூதன்) என்பதால், தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள எந்தவிதமான கடமையும் அவனுக்கு இல்லை; அவன் ஸர்வேச்வரனை மட்டுமே முற்றிலுமாக சார்ந்துள்ளவன் என்பதால் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள எந்தவிதமான சக்தியும் கொண்டவன் அல்லன். இப்படி உள்ளபோது இவன் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள ஓர் உபாயத்தை சாஸ்த்ரங்கள் விதிப்பதும், அத்தகைய உபாயம் இவனால் கைக்கொள்ளப்படுவதால் ஸாத்யோபாயம் எனப்படுவதும் எவ்விதம் பொருந்தும்? ஆகவே பக்தியோகங்கள் சேஷத்வமான ஸ்வரூபத்திற்கு ஏற்றது அல்ல என்பதால் அவை தீமை பயப்பவை என்றும், அவை ஸர்வேச்வரனுக்கு மட்டுமே வசப்பட்டு இருத்தல் என்னும் தன்மைக்கு விரோதமாக உள்ளதால் சேதனனுக்கு உண்டாகத் தகுதி அற்றவை என்றும் கூறலாம் அல்லவோ? இதற்கான சமாதானம் உரைக்கிறார். இதற்கான பதிலை நாம் ”அனைவருக்கும் மோக்ஷம்” என்னும் ப்ரகரணத்தில் உரைத்தோம். அதாவது, எந்தவிதமான உபாயமும் இல்லாமல் மோக்ஷம் அளித்தல் என்றால், அனைவருக்குமே மோக்ஷம் அளிப்பது என்றாகிவிடும். மேலும் எந்தவொரு உபாயமும் இல்லாமல் மோக்ஷம் அளித்தல் என்றால், “அவனுக்கு அநாதியாகவே மோக்ஷம் அளித்திருக்கலாம்” என்று சிலர் கூறக்கூடும். ஸர்வேச்வரன் எல்லையற்ற சுதந்திரம் கொண்டவன் என்பதால், அவன் எண்ணியபோது, தான் யாரை நினைக்கிறானோ அவனுக்கு மோக்ஷம் அளித்தல் என்றால், ஸர்வேச்வரன் பாரபக்ஷம் பார்ப்பவன் என்றும், கருணை இல்லாதவன் என்றும் கூறக்கூடும். மேலும், மோக்ஷத்திற்கான உபாயத்தை விதிக்கின்ற சாஸ்த்ரங்கள் அனைத்தும் பயனற்றுப் போய்விடும். இது தவிர ஜீவனுடைய சேஷத்வம் என்பது அவனுடைய எஜமானனாகிய ஸர்வேச்வரனைப் பற்றுவதற்கும், எஜமானனாக உள்ள ஸர்வேச்வரன் ஜீவனைத் தனது உடைமையாகக் கொண்டு ரக்ஷிப்பதற்கும் ஓர் உபாயத்தைக் கைக்கொள்ளுதல் என்பது பொருத்தமாகவே உள்ளது. மேலும் ஓர் உபாயம் என்பது – இப்படியாக ஸர்வேச்வரனுக்கு வசப்பட்டு இருத்தலும், ஸர்வேச்வரன் தனக்கு அளித்த ஓரளவு சுதந்திரத்தைக் கொண்டு அவனுக்கு மகிழ்வை அளிப்பதான உபாயத்தைக் கைக்கொள்ளவும், அதன் பலனாக ஏதேனும் அடைவதற்கு ஸர்வேச்வரனின் திருவுள்ளத்தை எதிர்பார்த்தபடி இருப்பதற்கும் – ஏற்றதாகவே உள்ளது. இப்படியாக உள்ள அடிமைத்தனத்துடன் இருத்தல், அவனுக்கு மட்டுமே வசப்பட்டு இருத்தல் என்னும் நிலைகள், முக்தி அடையும்போது அவனுக்கு மகிழ்வை அளிக்கும் விதமாக இருக்கின்ற கைங்கர்யங்களை, அவன் நியமிக்கின்றதாகவே கொண்டு செய்வதற்குக் காரணமாகின்றன. இத்தகைய சேஷத்வம் மற்றும் பாரதந்த்ர்யம் ஆகியவற்றைக் காரணம் காண்பித்து, சேதநனுக்குத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் செயல்கள் ஏதும் இருத்தல் கூடாது என்று சிலர் கூறலாம்; இப்படிப்பட்டவர்களும்

ஸர்வேச்வரனின் உகப்புக்காகச் செய்கின்ற சாஸ்த்ரங்களுக்கு உட்பட்ட கைங்கர்யங்கள் மற்றும் ப்ரபத்தி ஆகியவை ஆத்மாவிச்ன் ஸ்வரூபத்திற்கு விரோதம் என்பதால் கைவிடும்படியே ஆகிவிடுகிறது. சேதநனின் முயற்சியாக உள்ள ப்ரபத்தி என்பது சாஸ்த்ரங்களால் உண்டாகும் ஈச்வரன்-ஜீவனுக்குள்ள ஸம்பந்தம் என்னும் ஞானத்தின் தொடர்பு காரணமாக எழுவதைக் காட்டிலும், "சரணம் வ்ரஜ – சரணம் அடைவாய்" என்னும் வாக்கியத்தில் விதிக்கப்படுவதால் கைக்கொள்வதற்கு ஏற்றது என்று முன்பே கூறினோம். ஆகவே ஸர்வேச்வரனுக்கு அனைத்துவிதமான அடிமைத்தனத்தைச் செய்தபடியும், அவனுக்கு மட்டுமே வசப்பட்டு நின்றபடியும் உள்ள சேதநனுக்கு தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளுவதற்கான பக்தியோகம் போன்றவை அவனுடைய ஆத்மஸ்வரூபத்திற்கு விரோதம் இல்லை என்பதால் அவற்றைக் கைக்கொள்வதில் தடையில்லை.

**மூலம்–** ஆனாலும், அநந்யார்ஹ சேஷபூதனாகத் தன்னைத் தெளிந்து பரமை காந்தியாயிருக்கிற இவனுக்கு தேவதாந்தர த்வாரங்களான வர்ணாச்ரமதர்மங்களும் அவற்றை இதிகர்த்தவ்யதையாக உடைத்தான பக்தியோகாதிகளும் ஐகாந்த்ய விருத்தங்களன்றோ? சுத்த யாஜிகளுக்கன்றோ பரமைகாந்தித்வம் கூடுவது என்னில் – இது பாஷ்யாதிகளின் நிஷ்கர்ஷம் தெளியாமையடியாக வந்த சோத்யம். எங்ஙனேயென்னில் – ப்ரதர்த்தநாதி வித்யைகளில் பரமாத்மா இந்த்ராதி சரீரகனாக முமுக்ஷுவுக்கு உபாஸ்யன் என்று அறுதியிட்டார். வித்யாங்கமான வர்ணாச்ரம தர்மங்களிலும் அவ்வோ தேவதைகளைச் சரீரமாகக் கொண்டு நிற்கிற பரமாத்மாவே ஆராத்யனென்று நிஷ்கர்ஷித்தார். ஆகையால் ஸ்வதந்த்ரமாகச் சில தேவதைகளைப் பற்றினாலும் பலாந்தர காமனையாலே தன்னுடைய நித்யநைமித்திகங்களுக்குப் புறம்பான தேவதாந்தராந்வயம் வரிலும் பரமைகாந்தித்வத்துக்கு விருத்தமாம். பலாந்தர ஸங்கமுமின்றிக்கே பரமாத்மாவுக்கு விசேஷணங்களாகத் தேவதைகளை வைத்து அக்நயாதி சப்தங்களை விசேஷ்ய பர்யந்தமாக அநுஸந்தித்தும், ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி: என்கிற ந்யாயத்தாலே அக்நீந்த்ராதி சப்தங்களை ஸாக்ஷாத் பகவத் வாசகங்களாக அநுஸந்தித்தும் ஸ்வதர்மாநுஷ்டாநம் பண்ணுமிடத்தில் விதிபலத்தாலே பரமைகாந்தித்வ விரோதம் இல்லை.

**விளக்கம்–** ஆனால் மற்ற யாருக்கும் வசப்படுவதோ அல்லது கைங்கர்யம் செய்வதோ அல்லாமல், ஸர்வேச்வரனுக்கு மட்டுமே தான் அடிமை என்று தன்னை உணர்ந்து பரமைகாந்தியாக ஒருவன் இருக்கக்கூடும். அப்படிப்பட்ட ஒருவனுக்கு தன்னுடைய வர்ணாச்ரம தர்மங்களைச் செய்யும்போது மற்ற தேவதைகளின் தொடர்பு கொண்ட செயல்களைச் செய்வதும் (அக்னி, சூரியன் போன்ற தேவதைகள்), அவற்றை பக்தியோகத்தின் அங்கமாகக் கொள்ளுதலும் அவனுடைய தன்மைக்கு பொருத்தம் அற்றவையாக உள்ளன அல்லவோ? ஸர்வேச்வரனைத் தவிர மற்ற எந்த தேவதையின் தொடர்பும் கொள்ளாதவர்களுக்கு அல்லவோ பரமைகாந்தி என்னும் நிலை உண்டாகும்?

என்று கேட்கலாம். இத்தகைய சந்தேகம் என்பது ஸ்ரீபாஷ்யம் போன்ற க்ரந்தங்களைப் பற்றிய தெளிவு பிறக்காத காரணத்தால் உண்டாகின்றன. எப்படி என்றால் – ஸ்ரீபாஷ்யத்தில் ப்ரதர்த்தந மது வித்யைகளைக் குறித்துக் கூறும் பகுதிகளில் முமுக்ஷு ஒருவன், இந்த்ரன் உள்ளிட்ட தேவர்களின் அந்தர்யாமியாகவே ஸர்வேச்வரன் உள்ளான் என்றும், ஸர்வேச்வரனின் சரீரமாகவே அந்தத் தேவதைகள் உள்ளன என்றும், இப்படியாக உள்ள ஸர்வேச்வரனை உபாஸிக்கவேண்டும் என்றும் தெளிவாக உரைத்தார். வித்யைகளின் அங்கமாக உள்ள வர்ணாச்ரம தர்மங்களை இயற்றும்போது அந்தந்த தேவதைகளைச் சரீரமாகக் கொண்டுள்ள பரமாத்மாவே ஆராதிக்கப்படுகிறான் என்றும் ஸ்ரீபாஷ்யத்தில் அருளிச்செய்தார். ஆனால் சுதந்திரமாக மற்ற தேவதைகளை அண்டினாலும், மற்ற பலன்களின் ஆசை கொண்டு தன்னுடைய நித்யநைமித்திக கர்மங்களைத் தவிர மற்ற கர்மங்களை இயற்றும்போது மற்ற தேவதைகளின் தொடர்பு உண்டானாலும் பரமைகாந்தி என்னும் தன்மைக்கு பாதகமே உண்டாகிறது. ஆனால் மற்ற பலன்களின் எந்தவிதமான ஆசையும் கொள்ளாமலும், மற்ற தேவதைகள் அனைத்தும் பரமாத்மாவுக்கு சரீரங்களாகவே உள்ளன என்ற எண்ணத்துடனும், அக்னி போன்ற பதங்கள் அவர்களைத் தனது சரீரமாகவே கொண்ட பரமாத்மாவையே குறிக்கின்றன என்ற எண்ணத்துடனும் தன்னுடைய நித்யநைமித்திக கர்மங்களை இயற்றுவதில் எந்தவிதமான தோஷமும் இல்லை. ப்ரஹ்மஸூத்ரம் (1-2-29) - ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி: - அக்னி என்னும் பதம் பரமாத்மா என்னும் சப்தத்தை உணர்த்துவதாகக் கொள்வதில் விரோதம் இல்லை என்று ஜைமிநி கருதுகிறார் – என்றபடி அக்னி, இந்த்ரன் போன்ற பதங்கள் எம்பெருமானையே குறிப்பதாக எண்ணியபடியும், இவ்விதமாகவே தன்னுடைய கர்மங்களை இயற்றுவதாலும் பரமைகாந்திக்கு எந்தவிதமான தோஷமும் உண்டாவதில்லை.

**மூலம்** – ஆனாலும், அபிசாராதிகளை விதித்த கட்டளையிலே சாஸ்த்ரப்ரரோசநாதிகளில் அபிஸந்தியாலே அதிகாரி விசேஷத்திலே உபாஸநாதிகளை விதித்ததத்தனையன்றோ? முமுக்ஷுவுக்கு ப்ராப்யப்ராபகங்கள் ஏகமாகையாலே ப்ராப்யாநுரூபமான உபாயம் ஸர்வேச்வரன் ஒருவனுமே. ஆகையாலன்றோ

அத பாதக பீதஸ்த்வம் ஸர்வபாவேந பாரத
விமுக்தாந்ய ஸமாரம்போ நாராயணபரோ பவ

என்று தர்மதேவதை தன் புத்திரனுக்கு உபாஸநாதிகளை ப்ராப்யவிரோதிகளென்று நினைத்து நிந்தித்ததென்னில், அதுவும் அத்யந்த அநுபபந்நம். எங்ஙனேயென்னில் – அபிசாராதிகள் பல விசேஷமடியாகவிறே அநர்த்தஹேதுக்களாயின. இங்கு பலம் மோக்ஷமானபடியாலே அம்முகத்தால் அநர்த்தப்ரஸங்கமில்லை. ஏகாதிகாரி விஷயத்திலே ஏகபலத்துக்கு குருவாயிருப்பதொன்றை உபாயமாகக் காட்டி லகுவாயிருப்பதொன்றிலே ருசியைப் பிறப்பிக்கிறது என்கை விவக்ஷித விபரீதம். அங்கத்திலே அங்கிபல நிர்தேசமாய்

ஸ்துதிமாத்ரமாயிறே அப்போது பலிப்பது. ப்ராப்யத்துக்கு இன்னது அநுரூபமென்னுமிடம் சாஸ்த்ரவேத்யமாகையாலே யுக்திமாத்ரத்தாலே ப்ராப்யவிரோதம் சொல்லவொண்ணாது. ஆகமஸித்தங்களில் ஒன்றை விருத்த தர்க்கங்களாலே பாதிக்கில், துல்ய ந்யாயத்தாலே ஸர்வ சாஸ்த்ரங்களும் ப்ரபத்தி சாஸ்த்ரம்தானும் ப்ரமாணமன்றிக்கேயொழியும். அத பாதக பீதஸ்த்வம் என்கிறவிடத்திலும் பாதக சப்தத்தாலே உபாஸநாதிகளை நிந்திக்கிறதென்கைக்கும் ப்ரமாணமில்லை. ஆகையால் முமுக்ஷுவுக்கு விஹிதங்களாகையாலே பக்தி ப்ரபத்திகள் இரண்டும் யதாதிகார பரிக்ராஹ்யங்கள்.

**விளக்கம்–** ஆனால் ஒரு சில சாஸ்த்ரங்கள் அபிசாரங்களை (பில்லி, ஏவல் போன்றவை) விதித்துள்ளன. இது போன்றே ப்ரபத்தி போன்றவைகளில் நம்பிக்கை உண்டாக்குவதற்காக சாஸ்த்ரம் பக்தி என்பதை உபாயமாக விதித்தது. ஆக இவற்றை இயற்றவேண்டும் என்னும் கட்டாயம் விதிக்கப்படவில்லை. மோக்ஷத்தை விரும்பும் ஒருவனுக்கு உபாயமும் பலனும் ஒருவனே ஆவான். ஆகவே பலனாக உள்ள எம்பெருமானை அடையத்தக்க உபாயமும் எம்பெருமானாகவே உள்ளதால், பக்தியோகம் உபாயம் அல்ல என்றே தேறுகிறது. இதனைக் கருத்தில் கொண்டே தர்மதேவதை தன்னுடைய புத்ரனாகிய தர்மனுக்கு விஷ்ணுதர்மத்தில் (66-72) - அத பாதக பீதஸ்த்வம் ஸர்வபாவேந பாரத விமுக்தாந்ய ஸமாரம்போ நாராயணபரோ பவ – தர்மனே! நீ பாவங்களுக்குப் பயந்தாய் என்றால் மற்ற செயல்களைச் செய்யாமல் எப்போதும் நாராயணனையே அடையவேண்டியவனாக எண்ணியபடி இருப்பாயாக – என்றாள். ஆக தர்மதேவதையும் உபாஸனை போன்றவைகளை அடையப்படும் இலக்கிற்குத் தடையாகவே எண்ணியதைக் காணலாம். இவ்விதம் சிலர் உரைப்பதும் பொருந்தாத வாதங்களே ஆகும். எப்படி? அபிசார கர்மங்கள் அனைத்துமே தீயபலனைக் கருத்தில் கொண்டு இயற்றப்படுவதால், அவை தீயதே ஆகும். ஆனால் பக்தியோகமானது மோக்ஷம் என்னும் உயர்ந்த பலனை அளிப்பதால் இவ்விதம் தவறான பலனை அளிப்பதாகாது. உலகில் எளிதான ஒன்றை உதாரணமாகக் காண்பித்து, கடினமான மற்றொரு செயலில் ஒருவனை ஈடுபடுத்த முயல்வதையே காணலாம் அல்லாமல், கடினமான ஒன்றை உதாரணமாகக் காண்பித்து எளிய செயலைச் செய்விப்பது வழக்கம் அல்ல. இங்கு அதே போன்று கடினமான பக்தியோகம் என்பதைக் காண்பித்து எளியதாக உள்ள ப்ரபத்தி மீது ருசியை உண்டாக்கிவதாகக் கூறுவது பொருந்தாத வாதமாகும். மேலும் இவர்களது வாதத்தின்படி- அங்கியாகிய ப்ரபத்தியின் பலனாக மோக்ஷம் உள்ளது; ஆனால் ப்ரபத்தியின் அங்கமான பக்தி என்பதற்கும் மோக்ஷம் பலனாகக் கூறப்படுவது வெறும் அர்த்தவாதமே (பக்தியைப் புகழ்வதற்காகவே) – என்றாகிறது. ஆகவே இவர்களைப் பொறுத்தவரையில் பக்தி என்பது மோக்ஷத்தை அளிக்காது என்பதாகிறது. இவ்விதம் கொண்டால் பக்தி என்பதை ப்ரபத்தியின் அங்கமாக இவர்களே கொண்டதாகிறது; ஆனால் இந்தக் கருத்து இவர்கள் உண்மையில் ஏற்காத ஒன்றாவதால், முரண்பாடு உண்டாகிறது. ஆக இவர்களின் வாதம் தள்ளப்படுகிறது. அடையப்படும் இலக்காக உள்ள ஸர்வேச்வரனை, அவனாலேயே ஏற்கப்படுவதான அவனை

அடைவிக்கக்கூடிய உபாயம் என்பது சாஸ்த்ரங்கள் மூலமாக மட்டுமே அறியக்கூடியது. ஆகவே வெறும் யுக்தியை மட்டுமே கருத்தில் கொண்டு "பக்தியோகம் பலனுக்கு ஏற்ற உபாயம் அல்ல" என்று தள்ளுதல் சரியான செயல் அல்ல. ஸ்ருதிகளால் கூறப்பட்ட ஏதேனும் ஒன்றை, த்தாழ்வான வாதங்கள் மூலமாக மறுப்பது என்றால், அதே காரணம் மூலமாக ப்ரபத்தி உட்பட அனைத்துவிதமான சாஸ்த்ரங்களும் ப்ரமாணங்கள் அல்ல என்று தள்ளிவிடலாம் அல்லவோ? இவர்கள் மேலே கூறிய - அத பாதக பீதஸ்த்வம் – என்னும் விஷ்ணுதர்ம வாக்கியத்தில் பாதகம் என்னும் பதம் மூலம் உபாஸனை போன்றவைகள் தள்ளப்படுகின்றன என்று கூறுவதற்கு எந்த ப்ரமாணமும் இல்லை. ஆகவே பதி மற்றும் ப்ரபத்தி ஆகிய இரண்டுமே மோக்ஷம் அடைய விரும்பும் ஒருவனுக்கு விதிக்கப்பட்டதால், அவரவர்களின் அதிகாரத்திற்கு ஏற்ப இவற்றில் ஒன்று உபாயமாகிறது.

**மூலம்–** விஹிதங்களேயாகிலும் ஆசார்யருசி பரிக்ருஹீதங்களல்லாதபடியாலே அதிதி ஸத்காராதிகளிலேவிஹிதங்களான கவாலம்பாதிகள் போலே உபாஸநாதிகள் சிஷ்ட பரிக்ரஹ விருத்தங்களாகையாலே அநாதரணீயங்களல்லவோவென்கையும் நிரூபக வாக்யமன்று. ஸதாசார்ய பரிக்ரஹமில்லாதபோதன்றோ அஸ்வர்க்யம் லோக வித்விஷ்டம் தர்ம்யமப்யாசரேந்ந து என்று கழிக்கலாவது. இங்கு தஸ்மை நமோ முநிவராய பராசராய என்னும்படி ச்லாக்யமான பராசராதி பூர்வாசார்யர்கள் அநுஷ்டிக்கையாலே ஸர்வசிஷ்ட பஹிஷ்காரம் சொல்லவொண்ணாது.

**விளக்கம்–** பக்தி மற்றும் ப்ரபத்தி போன்றவை சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டபோதிலும், அவற்றை பூர்வாசார்யர்கள் முழு மனதுடன் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதால் அவற்றைக் கைவிடவேண்டும்; விருந்தாளிகளை மகிழ்விப்பதற்காக எருதுகளைக் கொல்வது விதிக்கப்பட்டது போன்றே இதுவும் ஆகிறது; ஆகவே இவற்றை சிஷ்யர்கள் ஏற்கத்தக்கது அல்ல என்று கைவிடவேண்டும் எனச் சிலர் உரைக்கலாம். இத்தகைய வாக்யங்கள் ஆராய்ந்து உரைக்கப்பட்டவை அல்ல என்றே கூறவேண்டும். அனைத்து ஆசார்யர்களும் இதனை கைவிட்டால் அல்லவோ, யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி (1-156) - அஸ்வர்க்யம் லோக வித்விஷ்டம் தர்ம்யமப்யாசரேந்ந து – சாஸ்த்ரங்களில் ஒரு குறிப்பிட்ட பலனுக்காக ஓர் உபாயம் கூறப்பட்டிருந்தாலும், அந்த உபாயம் ஸ்வர்க்கம் பெறுவதற்குத் தடையாகவோ அல்லது உலகத்தாரால் பழிக்கப்படும்படி இருந்தாலோ அதனைக் கைக்கொள்ளக்கூடாது – என்ற வாக்கியத்தின்படி கைவிடவேண்டும்? ஆனால் இங்கு ஸ்தோத்ரரத்னம் (4) - தஸ்மை நமோ முநிவராய பராசராய – ரிஷியான பராசரருக்கு எனது நமஸ்காரங்கள் – என்று கொண்டாடப்படுகின்ற பராசரர் உள்ளிட்ட பல பூர்வாசார்யர்கள் பக்தியோகத்தை கைகொண்டார்கள் என்பதால், அனைவரும் அதனை ஒதுக்கினர் என்று கூற இயலாது.

மூலம் – இப்படி யுகாந்தரங்களில் இவை தர்மங்களானாலும் கலியுகத்தில் யதோக்தமான பரமாத்மோபாஸநாதிகளுக்கு அதிகாரிகள் துர்லபராகையாலே இவை இக்காலத்துக்குப் பொருந்துபவையல்ல. ஆகையாலன்றோ

கலௌ ஸங்கீர்த்ய கேசவம் என்றும்,

கலேர்தோஷநிதே ராஜந்நாஸ்தி ஹ்யேகோ மஹாந் குண:
கீர்த்தநாதேந க்ருஷ்ணஸ்ய முக்தபந்த: பரம் வ்ரஜேத்

என்றும் சொல்லுகிறது – என்னவுமொண்ணாது,

கலௌ க்ருதயுகம் தஸ்ய கலிஸ்தஸ்ய க்ருதே யுகே
யஸ்ய சேதஸி கோவிந்தோ ஹ்ருதயே தஸ்ய நாச்யுத:

என்கிறபடியே இக்காலத்திலும் உபாஸநாதிகளுக்கு அதிகாரிகள் ஸ்வயம்ப்ரயோஜந யோக நிஷ்டரான பூர்வாசார்யர்கள் போலே ஸம்பாவிதரிறே. இங்ஙனல்லாதபோது ஸங்கீர்த்தந வ்யதிரிக்தையான ப்ரபத்திக்கும்,

கிம் நு தஸ்ய ச மந்த்ரஸ்ய கர்மண: கமலாஸந
ந கப்யதே அதிகாரீ வா ச்ரோதுகாமோ அபி வா நர:

இத்யாதிகளிற்படியே மஹாவிச்வாஸாதியுக்தரான அதிகாரிகள் தேட்டமாகையாலே அவ்விடத்திலும் இப் ப்ரஸங்கம் வரும்.

**விளக்கம்–** இவ்விதம் பல யுகங்களில் பக்தியோகம் என்பது தர்மமாக இருந்தபோதிலும், இந்தக் கலியுகத்தில் சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட விதிகளின்படி பரமாத்மாவைக் குறித்து த்யானிக்கவல்ல அதிகாரிகளோ அல்லது உபாஸனங்களில் இழியக் கூடிய அதிகாரிகளோ கிட்டுவது கடினம் என்பதால், இந்தக் காலத்திற்குப் பக்தியோகம் பொருந்தாது. இதனால் அல்லவோ கீழே உள்ள வரிகள் கூறப்பட்டன:

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-2-17) - கலௌ ஸங்கீர்த்ய கேசவம் – க்ருத யுகத்தில் த்யானம் மூலமும், த்ரேதா யுகத்தில் யாகம் மூலமும், த்வாபர யுகத்தில் அர்ச்சனை மூலமும் கிட்டும் பலன்கள், கலி யுகத்தில் நாமஸங்கீர்த்தனம் மூலமே கிட்டிவிடும்.

- மஹாபாரதம் (12-3-51) - கலேர்தோஷநிதே ராஜந்நாஸ்தி ஹ்யோகோ மஹாந் குண: கீர்த்தநாதேந க்ருஷ்ணஸ்ய முக்தபந்த: பரம் வ்ரஜேத் – அரசனே! தோஷங்கள் அனைத்திற்கும் இருப்பிடமாக உள்ள கலியுகத்திற்கு ஒரு உயர்ந்த குணமும் உள்ளது. கலியுகத்தில் க்ருஷ்ணனின் திருநாமத்தைக் கூறுவதால் கர்மபந்தங்களிலிருந்து விடுபட்டு அவனையே அடைகிறான்.

இது போன்ற வாதங்களை ஏற்க இயலாது. இந்தக் கலிகாலத்திலும் ஸ்வயம் ப்ரயோஜனமாகப் பக்தியோகத்தை இயற்றும் பூர்வாசார்யர்கள் போன்று பக்தியோகத்தைக் கைக்கொள்ளவல்ல சில அதிகாரிகள் தோன்றக்கூடும். இதனை விஷ்ணுதர்மம் (109-57) - கலௌ க்ருதயுகம் தஸ்ய கலிஸ்தஸ்ய க்ருதே யுகே யஸ்ய சேதஸி கோவிந்தோ ஹ்ருதயே தஸ்ய நாச்யுத: - யாருடைய மனதில் கோவிந்தன் உள்ளானோ, அவனுக்குக் கலியுகம் என்பது க்ருதயுகமாகவே ஆகிறது; யாருடைய மனதில் அச்சுதன் இல்லையோ அவனுக்குக் க்ருதயுகமும் கலியுகமாகிறது – என்றது காண்க. இவ்விதம் கொள்ளவில்லையென்றால் நாம ஸங்கீர்த்தனைக் காட்டிலும் வேறுபட்டதான ப்ரபத்திக்கு, பௌஷ்கர ஸம்ஹிதை - கிம் நு தஸ்ய ச மந்த்ரஸ்ய கர்மணா: கமலாஸந ந கப்யதே அதிகாரீ வா ச்ரோதுகாமோ அபி வா நர: - நான்முகனே! இந்த மந்த்ரத்துக்கும், இதனை உரைத்தபடியே செய்யப்படும் ப்ரபத்திக்கும் அதிகாரியும் கிட்டமாட்டான், மந்த்ரத்தைக் கேட்கும் மனிதனும் கிட்டமாட்டான் – என்று கூறுவதற்கு ஏற்ப மஹாவிச்வாஸத்துடன் கூடிய அதிகாரிகள் கிட்டமாட்டனர் என்பதால், ப்ரபத்தியும் கலிகாலத்தில் பொருந்தாத ஒன்றாகிவிடும்.

## பக்தி ஸ்வரூபத்திற்கு விரோதமானது என்பதன் உட்கருத்து

**மூலம்–** ஆனபின்பு உபாஸநாதிகளுக்கு வேறொரு விரோதமில்லாமையாலே யதாசாஸ்த்ரம் ஆதுராதிகளுக்கு அவகாஹநாதிகள் போலே இவை அகிஞ்சந: அநந்யகதி: என்றிருக்கும் அதிகாரிக்கு ஸ்வாதிகார விருத்தங்கள் என்ன ப்ராப்தம். இவ்வதிகார விரோதமறியாதே உபாஸநாதிகளிலே ப்ரவர்த்திக்குமவனைப் பற்ற நரஸ்ய புத்தி தௌர்பல்யாத் உபாயாந்தரமித்யதே என்றது. ஆகையால் இவ்வுபாஸநாதிகளும் அதிகார்யந்தரத்துக்கு யதாதிகாரம் அநுகுணங்கள்.

**விளக்கம்–** மேலே கூறப்பட்ட பல கருத்துக்கள் மூலம், பக்திக்கு ஸ்வரூப விரோதம் இல்லை என்றே ஆகிறது. ஆனால், “நோய்வாய்ப்பட்டவன் குளிர்ந்த நீரில் நீராட சக்தி அற்றவன்” என்பது போன்று, ப்ரபத்தியைத் தவிர மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளச் சக்தியில்லாத அதிகாரிக்குப் பக்தியானது தனது தகுதிக்கு ஏற்புடையது அல்ல என்று கொள்வது சரியே ஆகும். இது ஸ்தோத்ரரத்னம் (22) - அகிஞ்சந: அநந்யகதி: - என்னைக் காப்பாற்றிக் கொள்ள வேறு கதியற்றவன் – என்றுள்ள அதிகாரிக்குப் பொருத்தமே ஆகும்.

மேலும் தாங்கள் பக்தி அல்லது உபாஸனையைக் கைக்கொள்ளும் தகுதி அற்றவர்கள் என்று தெரியாமல், அதனை உபாயமாகக் கொள்பவர்கள் குறித்தே லக்ஷ்மீ தந்த்ரத்தில் (28-17) - நரஸ்ய புத்தி தௌர்பல்யாத் உபாயாந்தரமித்யதே – தன்னுடைய அறியாமை என்னும் புத்தி தடுமாற்றத்தால் பக்தி என்னும் உபாயத்தைக் கைக்கொள்கிறான் – என்று கூறப்பட்டது. ஆகவே இது போன்ற உபாஸனங்கள் கூட, மற்ற அதிகாரிகளுக்கு, அவர்களின் தகுதிக்கு ஏற்பவே பொருந்தும்.

## பக்தியைக் காட்டிலும் ப்ரபத்திக்கு உள்ள மேன்மை

**மூலம்–** அவற்றுக்கு ஸாமர்த்யமில்லாமையாதலால் விளம்பக்ஷமனல்லாமையாதலால் இப் ப்ரபத்தியை ஸ்வதந்த்ரோபாயமாகப் பற்றினவனை “செய்த வேள்வியர்” என்றும், க்ருதக்ருத்யனென்றும், அநுஷ்டித க்ரதுசதன் என்றும், இவனுக்கு மரணாந்தமாக நடக்கிற வ்யாபாரங்களை அவப்ருத பர்யந்த கர்த்தவ்ய கலாபங்களாக ஸ்துதித்தும், க்ரத்வந்தராநுஷ்டாநம் பண்ணினவனுக்கு மேலுள்ள நித்ய நைமித்திகங்கள் போலே இவனுக்கு ஸ்வதந்த்ரவிதியாலே வர்ணாச்ரமாதிதர்மங்கள் நடவா நிற்கச் செய்தேயும் அநுஷ்டிதாத்மயாக பலத்தைப் பற்றக் கர்த்தவ்யாந்தர நிரபேக்ஷனாகவும் ஆழ்வார்களும் மஹர்ஷிகளும் பகவச்சாஸ்த்ரங்களும் வேதங்களும் கோஷியா நின்றன. ஆகையால்

தபஸ்விப்யோ அதிகோ யோகீ ஜ்ஞாநிப்யோ அபி மதோ அதிக:
கர்மிப்யச்சாதிகோ யோகீ தஸ்மாத்யோகீ பவார்ஜுந

இத்யாதிகளாலே ப்ரவ்ருத்தி தர்மங்களிற்காட்டில் நிவ்ருத்தி தர்மங்கள் ச்ரேஷ்டங்களானாற் போலவும், அவை தம்மில் ஆத்மவிஷயமான யோகம் ச்ரேஷ்டமானாற் போலவும், ஆத்மவிஷய யோகங்களிற்காட்டில் யோகிநாமபி ஸர்வேஷாம் என்கிறபடியே வஸுதேவநந்தன விஷயமான யோகம் ச்ரேஷ்டமானாற் போலவும், பரமாத்ம விஷய வித்யாவிசேஷங்களெல்லாவற்றிலும் ந்யாஸநிக்ஷேபாதி சப்தங்களாலே சொல்லப்பட்ட வித்யாவிசேஷமே ஸுகரத்வ ஸக்ருத்கர்த்தவ்யத்வ சீக்ர பலப்ரதத்வாதிகளாலே ச்ரேஷ்டதமம். ந்யாஸவித்யையிலே கண்டோக்தமான இவ்வர்த்தத்தை

தேஷாம் து தபஸாம் ந்யாஸமதிரிக்தம் தப: ச்ருதம்
ஸத்கர்மநிரதா: சுத்தா: ஸாங்க்யயோகவிதஸ்ததா
நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி

என்று பகவச்சாஸ்த்ரம் உபப்ரும்ஹித்தது. அவகாஹநாதிகளில் ஸமர்த்தனல்லாதவனுக்கு மாநஸம் விஷ்ணுசிந்தநம் என்று பகவத்சிந்தநத்தை ஸ்நாநமாக விதித்தால் அது

ஸ்நாநாந்தரங்கள் பண்ணுகிற சுத்தியையும் பண்ணி, பாபாந்தரங்களையும் சமிப்பித்து அப்போதே பகவதநுபவ ரஸத்தையுமுண்டாக்குமாப்போலே உபாஸநாதிகளில் ஸமர்த்தனல்லாதவனுக்கு ப்ரபத்தியை விதித்தாலும் இப் ப்ரபத்திதானே அவை கொடுக்கும் பலத்தையும் அவை தம்மையும் கொடுக்கவற்றாய் அகிஞ்சநனுக்கு உத்தாரகமாய் அவன் அபேக்ஷித்த காலத்திலே பலாவிநாபாவத்தையும் உடைத்தாயிருக்கையாலே அதிகப்ரபாவமாயிருக்கும்.

**விளக்கம்–** அதனைச் செய்யத் தகுதி இல்லாத காரணத்தாலோ, அல்லது தகுதி இருந்தாலும் மோக்ஷம் பெறுவதில் உள்ள காலதாமதத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாததாலோ ஒருவன் ப்ரபத்தியை உபாயமாகக் கைக்கொள்ளக்கூடும். யார் ஒருவன் ப்ரபத்தியை ஸ்வதந்த்ரமான உபாயமாகக் கொண்டானோ அவனைக் கீழே உள்ள வரிகளில் காணப்பட்டபடி ஆழ்வார்களும், மஹரிஷிகளும், பகவத் சாஸ்த்ரங்களும், வேதங்களும் புகழ்கின்றன:

- திருவாய்மொழி (5-7-5) – செய்த வேள்வியர் – யாகமாகிய ப்ரபத்தியைச் செய்தவர்கள்
- ஸாத்வத தந்த்ரம் – க்ருதக்ருத்யன் – செய்யவேண்டியதைச் செய்தவன்
- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-49) - அநுஷ்டித க்ரதுசதன் – நூறு யாகங்களைச் செய்தவன்

மேலும் இந்தச் சாஸ்த்ரங்கள் அவனது மரண காலம்வரை அவன் செய்துவரும் ஒவ்வொரு செயல்களையும் பாராட்டுகின்றன; அந்தச் செயல்கள் யஜ்ஞங்கள் இயற்றுவதாகவும், முடிவில் செய்யப்படும் நீராடுதல் போன்றும் கொள்ளப்படுகின்றன. இந்தச் சாஸ்த்ரங்கள் மேலும் உரைப்பது என்னவென்றால் – யஜ்ஞங்களை இயற்றிய ஒருவன், அதன் பின்னர் எவ்விதம் தன்னுடைய நித்ய நைமித்திக கர்மங்களை இயற்றியபடி உள்ளானோ அது போன்று, ப்ரபத்தி செய்தவன் தனக்கு விதிக்கப்பட்டதான வர்ணாச்ரம தர்மங்களைச் சரிவர இயற்றியபடி இருத்தல்வேண்டும். ஆனால் யார் ஒருவன் ஆத்மயஜ்ஞம் செய்தானோ அவன் தன்னுடைய பலன்களைப் பெறும் பொருட்டு எந்தவிதமான கர்மங்களையும் செய்தல் வேண்டாம்.

கீதையில் (6-10) - தபஸ்விப்யோ அதிகோ யோகீ ஜ்ஞாநிப்யோ அபி மதோ அதிக: கர்மிப்யச்சாதிகோ யோகீ தஸ்மாத்யோகீ பவார்ஜுந – அர்ஜுனா! ஆத்ம ஸ்வரூபத்தை த்யானம் செய்யும் யோ ஒருவன், தவம் செய்பவர்களைக் காட்டிலும் உயர்ந்தவன்; ஆத்ம ஞானியைத் தவிர மற்ற ஞானிகளைக் காடிலும் உயர்ந்தவன்; அச்வமேதம் உள்ளிட்ட கர்மங்களைச் செய்பவர்களைக் காட்டிலும் உயர்ந்தவன்; ஆகவே நீயும் ஆத்ம

ஸ்வரூபத்தை த்யானம் செய்பவனாக ஆவாயாக – என்றது காண்க; ஆகவே இந்தப் பிறவியில் உண்டாகின்ற பலனுக்காகச் செய்யப்படும் செயல்களைக் காட்டிலும், மறுமையில் விளைய உள்ள பலனுக்காகச் செய்யப்படும் கர்மங்களே சிறந்தவை; அவற்றைக் காட்டிலும் ஆத்மாவைக் குறித்த யோகங்கள் மேலும் சிறந்தவை; ஆத்மாவைக் குறித்த யோகங்களில், கீதை (6-47) - யோகிநாமபி ஸர்வேஷாம் – என்னைக் குறித்தே த்யானிப்பவன் மிகவும் உயர்ந்த யோகி – என்று கூறுவதற்கு ஏற்ப, வஸுதேவரின் புத்ரனாகிய க்ருஷ்ணனைக் குறித்த யோகம் என்பது மிகவும் சிறந்தது ஆகும்.இது போன்றே பரமாத்மாவைக் குறித்துப் பல வித்யைகள் இருந்தாலும், அவை அனைத்தையும் விட ந்யாஸம், நிக்ஷேபம் என்று கூறப்படும் ப்ரபத்தியானது – செய்வதற்கு எளியது, ஒருமுறை செய்தாலே போதுமானது, விரைவாகப் பலன் அளிப்பது – போன்ற குறிப்பட்ட சில காரணங்களால் மிகவும் ஏற்றமுடையதாகிறது. இப்படிப்பட்ட ந்யாஸ வித்யையின் பெருமை குறித்து பாஞ்சராத்ரம் பின்வருமாறு உரைக்கிறது:

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-36) - தேஷாம் து தபஸாம் ந்யாஸமதிரிக்தம் தப: ச்ருதம் – மோக்ஷம் குறித்து உபதேசிக்கப்பட்ட தவங்கள் அனைத்திலும் ப்ரபத்தியானது மிகவும் உயர்ந்த தவமாகிறது.

- லக்ஷ்மீ தந்த்ரம் (17-62) - ஸத்கர்மநிரதா: சுத்தா: ஸாங்க்யயோகவிதஸ்ததா நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி – கர்மயோகத்தைக் கைக்கொண்டு, ஞானயோக பக்தி யோகங்களைச் செய்பவர்கள் ப்ரபத்தி செய்தவனுடைய கோடியில் ஒரு பாகத்தைக் கூடப் பெறத் தகுதியானவர்கள் அல்லர்.

உடல்நிலை சரியில்லாதவை போன்ற காரணங்களால் மூழ்கி நீராட இயலாத ஒருவனுக்கு கார்க்ய ஸ்ம்ருதி - மாநஸம் விஷ்ணுசிந்தநம் – விஷ்ணுவைக் குறித்த த்யானம் – என்று கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வனை த்யானம் செய்வதையே ஒருவகையான நீராடுதல் என்று சாஸ்த்ரங்கள் உரைக்கின்றன. இது மாநஸ ஸ்நாநம் எனப்படும். இது நீரில் மூழ்கி நீராடுதல் போன்றவை அளிக்கின்ற தூய்மையை அளிப்பதுடன் அல்லாமல், பாவங்களையும் உடனே போக்கிவிடும். இதனால் பகவத் அநுபவம் என்னும் இனிமையையும் அப்போதே உண்டாக்கிவிடும். இது போன்றே பக்தியோகம் போன்றவற்றில் ஈடுபடும் சக்தியற்ற ஒருவனுக்கு ப்ரபத்தியை விதிக்கலாம். இதனால் அந்த ப்ரபத்தி என்பது பக்தியோகம் அளிக்கவல்ல பலனை அளிக்கிறது; பக்தியோகத்தையும் அளிக்கிறது; மற்ற உபாயங்களைக் கைக்கொள்ள இயலாதவனைக் கரையேற்றுகிறது; அவன் விரும்பும் காலத்தில் தக்க பலனையும் அளிக்கிறது; இதனால் ப்ரபத்தியானது மிகவும் மேன்மை கொண்டதாக உள்ளது.

## ப்ரபத்தியின் அங்கங்கள் குறித்து எழுகின்ற ஐயங்களுக்கான விடைகள்

**மூலம்–** இப்படிஇவ்வுபாயத்தின் அதிகாரத்திலும் ஸ்வரூபத்திலும் வரும் கலக்கங்கள் சமிப்பித்தோம். இனிமேல் பரிகாரங்களில் வரும் வ்யாமோஹம் சமிப்பிக்கிறோம்.

**விளக்கம்–** இதுவரை நாம் இந்த ப்ரபத்தி உபாயத்தின் அதிகாரங்கள் மற்றும் ஸ்வரூபங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட சந்தேகங்களை நீக்கினோம். இனி இந்த உபாயத்திற்கான அங்கங்கள் குறித்து ஏற்படுகின்ற மயக்கங்களைப் போக்குவோம்.

## ப்ரபத்திக்கு அங்கங்கள் அவசியமில்லை என்னும் கருத்துக்கு மறுப்பு

**மூலம்–** இவ்வுபாயத்துக்கு ஆநுகூல்ய ஸங்கல்பாதிகள் வேணுமோ? ஆர்த்தோ வா யதி வா த்ருப்த: என்றும்,

மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந
தோஷோ யத்யாபி ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம்

என்றும், யதி வா வாரண: ஸ்வயம் என்றும் சொல்லுகிற ரிபூணாமபி வத்ஸலனான சரண்யன் சரண்யகதனுடைய தோஷங்களைப் பார்க்குமோ? அநாலோசிதவிசேஷ அசேஷலோக சரண்யன் என்றன்றோ பூர்வர்கள் பாசுரம். ஆகையால் இவை ஸம்பாவித ஸ்வபாவங்களாமித்தனையன்றோவென்று சிலர் சொல்லுவார்கள். இதுக்கு ப்ரபத்த்யுத்தர காலத்தில் ஆநுகூல்யாதிகள் அநுவர்த்தியாதொழியிலும் ப்ரதிஸமாதாநம் சிறந்து ப்ரபத்தி பலமும் குறைவற்றிருக்குமென்கையிலே தாத்பர்யம் கொள்ளலாம். இங்ஙனல்லாதபோது ஷட்விதா சரணாகதி: என்றும், ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத: என்றும், ஸ்வாங்கை: பஞ்சபிராவ்ருதாம் என்றும் அங்காங்கிகளை விபஜித்துச் சொல்லுகிற பல ப்ரமாணங்களுக்கும் விருத்தம். லோகத்தில் ரக்ஷ்யத்ரவ்ய ஸமர்ப்பண மர்யாதைக்கும் பொருந்தாதென்றும் இவ்வங்கங்களுடைய ஸக்ருத்கரணாதி ப்ரகாரங்களுக்கும் முன்பே சொன்னோம். ப்ரஹ்மாஸ்த்ரமும் ஸ்வாங்க ஸாபேக்ஷமாயிறே இருப்பது. ஆகையால்

ப்ரபத்தே: க்வசிதப்யேவம் பராபேக்ஷா ந வித்யதே
ஸா ஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாமபலப்ரதா

என்றதுவும் தர்மாந்தர நைரபேக்ஷ்யம் சொன்னபடி. இப்படியல்லாதபோது இவர்கள் இசைந்த மஹாவிச்வாஸத்தையும் இக்கட்டளையிலே ஸம்பாவித ஸ்வபாவமாக்கலாம்.

**விளக்கம்–** ப்ரபத்தி உபாயத்துக்கு "எதனைச் செய்யவேண்டுமோ அதனை மட்டுமே செய்தல்" போன்றதான உறுதிகள் அவசியமாக இருத்தல் வேண்டுமா? கீழே உள்ள வரிகள் காண்க:

- இராமாயணம் யுத்தகாண்டம் (18-28) - ஆர்த்தோ வா யதி வா த்ருப்த: - ஒருவன் உடனே பலன் வேண்டுகிற ஆர்த்தனாகவோ, சற்று தாமதித்துப் பலன் கிடைத்தாலும் பரவாயில்லை என்று உள்ள த்ருப்தனாகவோ இருந்தாலும்.

- இராமாயணம் யுத்தகாண்டம் (18-3) - மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சநதோஷோ யத்யாபி ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம் – என்னிடம் தோழன் போன்று வந்தவனை நான் எப்போதும் விடமாட்டேன். அவனிடம் எந்தக் குறை இருந்தாலும் நான் ஏற்பேன். இதனை உயர்ந்தவர்கள் கொண்டாடுவார்கள்.

- இராமாயணம் யுத்தகாண்டம் (18-35) - யதி வா வாரண: ஸ்வயம் – சுக்ரீவனே! அவன் இராவணனாக இருந்தாலும் விபீஷணனாக இருந்தாலும் அழைத்து வா

மேலே கூறப்பட்டபடி தன்னுடைய விரோதியாக உள்ளவர்களுக்கும் வாத்ஸல்யம் காண்பிக்கும் ஸர்வேச்வரன், தன்னிடம் சரணம் என்று புக வருபவர்களின் தோஷங்களை ஆராய்வானோ? சரணாகதி கத்யத்தில் (சூர்ணை 5) - அநாலோசிதவிசேஷ அசேஷலோக சரண்யன் – தன்னை சரணம் என்று அடைந்தவர்களின் விசேஷங்களை ஆராயாமல், அனைத்து லோகங்களுக்கும் சரணம் புக ஏற்றவன் – என்று அல்லவோ எம்பெருமானார் அருளிச்செய்தார்? ஆகையால் இது போன்ற அங்கங்கள் ப்ரபத்தி செய்தவர்களுக்கு அதன் பின்னர் உண்டாகக்கூடிய ஸ்வபாவங்களே அல்லாமல், முதலிலேயேஇருக்கவேண்டிய அவசியம் இல்லை – என்று சிலர் உரைக்கலாம். இவர்கள் இப்படியாக ஏன் கூறுகின்றனர் என்றால் – ப்ரபத்தியின்போது ஆநுகூல்ய ஸங்கல்பம் போன்றவை இருந்து, ப்ரபத்தி கைகூடுகிறது; அதன் பின்னர் அவை இல்லாமல் போகிறது; ஆகவே சிறிதுகாலம் அவன் செய்யக்கூடாதவற்றைச் செய்கின்ற ப்ரதிகூலனாக இருந்தாலும், தகுந்த பிராயச்சித்தம் மூலம் அத்தகைய தோஷங்கள் கழிந்துவிடும் – என்பதால் இருக்கலாம். இப்படிக் கொள்ளாமல், ஆநுகூல்ய ஸங்கல்பம் உள்ளிட்டவற்றை ப்ரபத்தியின் அங்கமாகக் கொள்ளவில்லை என்றால், ப்ரபத்திக்கான அங்கங்களை

விரிவாகப் பிரித்து உரைக்கின்ற கீழே உள்ள பல ப்ரமாணங்களுக்கு முரண்பாடு உண்டாகிறது:

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-28-29) - ஷட்விதா சரணாகதி: - சரணாகதி ஆறு வகைப்படும்
- லக்ஷ்மீதந்த்ரம் (17-74) - ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத: - ஐந்து அங்கங்களுடன் கூடியது பரந்யாஸம்
- லக்ஷ்மீதந்த்ரம் (28-11) - ஸ்வாங்கை: பஞ்சபிராவ்ருதாம் – ஐந்து அங்கங்களுடன் கூடிய பரந்யாஸத்தைச் செய்வானாக

இந்த உலகில் சரணம் புகுகின்ற வஸ்துக்களுக்கு இந்த அங்கங்கள் ஒருமுறையேனும் அவசியம் என்பதை நாம் முன்னரே உரைத்தோம். ப்ரஹ்மாஸ்திரம் கூட ஒரு சில அங்கங்களை எதிர்பார்க்கிறது அல்லவோ? எனவே ஸநத்குமார ஸம்ஹிதை - ப்ரபத்தே: க்வசிதப்யேவம் பராபேக்ஷா ந வித்யதேஸா ஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாமபலப்ரதா – பக்தியோகம் போன்று ப்ரபத்திக்கு வேறு எந்த எதிர்பார்ப்பும், எந்தக் காலத்திலும் இல்லை; அது எப்போதும், எல்லார்க்கும் பலன் அளிக்கும் – போன்ற வரிகள் மற்ற தர்மங்கள் எதனையும் எதிர்பார்ப்பதில்லை என்ற பொருளிலேயே உரைக்கப்பட்டது. இப்படிக் கொள்ளவில்லை என்றால், மஹாவிச்வாஸம் என்பதையும் இவர்கள் இந்தப் பட்டியலில் சேர்த்து, அதுவும் அவசியமற்ற அங்கம் எனலாமே!

## மஹாவிச்வாஸம் ப்ரபத்திக்கு அங்கமாகவேண்டுமா என்னும் சந்தேகம் நீக்குதல்

**மூலம்–** இவ் அவகாசத்திலே வேறே சிலர் ஆஸ்திகனுக்கு சாஸ்த்ரார்த்த விச்வாஸம் பிறக்குமதுக்கு மேற்பட மஹாவிச்வாஸமென்று ஒன்று உண்டோ? ஆகையால் இதுவும் ஸர்வசாஸ்த்ரார்த்த ஸாதாரணமாமத்தனை போக்கி ப்ரபத்திக்கு விசேஷித்து அங்கமாகவற்றோ? என்று நினைப்பார்கள். அதுவும் ந விச்வஸேதவிச்வஸ்தே விச்வஸ்தே நாதிவிச்வஸேத் இத்யாதிகளிலே விச்வாஸ தாரதம்யம் ப்ரஸித்தமாகையாலும், இவ்விடத்தில் அதிசயித விச்வாஸம் அங்கமென்கிற வசநத்தாலும் பரிஹ்ருதம். இப்படி புருஷவிசேஷங்களிலே விச்வாஸ தாரத்ம்யமுண்டென்னும் இடத்தை ஸ்ரீமதஷ்டாக்ஷர ப்ரஹ்மவித்யையிலே

யஸ்ய யாவாம்ச்ச விச்வாஸ: தஸ்ய ஸித்திச்ச தாவதீ
ஏதாவாநிதி நைதஸ்ய ப்ரபாவ: பரிமீயதே

என்று ஸ்ரீநாரதபகவான் அருளிச்செய்தான். மந்தவிச்வாஸரான ப்ரபந்நாபாஸரையும் முடிவிலே ஸர்வேச்வரன் ரக்ஷிக்கும்; எங்ஙனேயென்னில்,

ஸக்ருதுச்சரிதம் யேந ஹரிரித்யக்ஷரத்வயம்
பத்த: பரிகரஸ்தேந மோக்ஷாய கமநம் ப்ரதி

இத்யாதிகளிலும் இவற்றையடியொற்றின த்வத் அங்க்ரிமுத்திச்ய, உதீர்ணஸம்ஸார என்கிற ச்லோகங்களிலும், "மொய்த்த வல்வினையுள் நின்று" இத்யாதிகளிலும் அபிப்ரேதமானபடியே இவன் பலஸித்திக்குக் கோலின காலத்துக்குள்ளே உபாய பூர்த்தியை உண்டாக்கி ரக்ஷிக்குமென்னுமிடத்தை நினைத்து,

வ்ருதைவ பவதோ யாதா பூயஸீ ஜந்ம ஸந்ததி:
தஸ்யாமந்யதமம் ஜந்ம ஸஞ்சிந்த்ய சரணம் வ்ரஜ

என்று தேவலனைக் குறித்து ஸ்ரீசாண்டில்ய பகவான் அருளிச்செய்தானிறே.

சரண்யம் சரணம் ச த்வமாஹுர்திவ்யா மஹர்ஷய: என்றதுவும் மஹர்ஷிகளுக்கே விச்வாஸம் கூடுவது; இவர்கள் வாக்யத்தையிட்டு மந்த விச்வாஸரைத் தெளிவிக்க வேணும் என்றபடி. இப்படி விச்வாஸ தாரதம்யமுண்டாகையால் யதாசாஸ்த்ரம் மஹாவிச்வாஸம் ப்ரபத்த்யங்கமாகக் குறையில்லை.

**விளக்கம்–** ஒரு சிலர், "ஆஸ்திகன் ஒருவனுக்கு சாஸ்த்ரங்களில் கூறப்பட்டவை குறித்து திடமான நம்பிக்கை ஏற்பட்ட பின்னர், மஹாவிச்வாஸம் என்பதும் வேண்டுமோ? ஆகவே இத்தகைய நம்பிக்கை என்பது சாஸ்த்ரங்களில் கூறியபடி பொதுவானதாகவே இருக்கும் அல்லாமல், ப்ரபத்திக்கு மட்டும் தனியாகக் கூடுமோ?", என்று கேட்கலாம். இதனை மறுப்போம். மஹாபாரதம் உத்யோகபர்வம் (37-9) - ந விச்வஸேதவிச்வஸ்தே விச்வஸ்தே நாதிவிச்வஸேத் – தன்னிடம் ஒருவனுக்கு நம்பிக்கை இல்லை என்றால், அவனை நம்பக்கூடாது; நம்பிய ஒருவனிடம் கூட மிக அதிகமான நம்பிக்கை வைத்தல் கூடாது – போன்ற வரிகளில் நம்பிக்கை வைக்கும் அளவுகளில் வேறுபாடுகள் உண்டு என்பதை அறியலாம். மேலும் மஹாவிச்வாஸம் என்பது ப்ரபத்தியின் அங்கம் என்று கூறுகின்ற வரிகளாலும் இந்த வாதம் தள்ளப்படவேண்டியதே ஆகும். ஸ்ரீமதஷ்டாக்ஷர

ப்ரஹ்மவித்யையில், பல்வேறு அளவிலான நம்பிக்கையுடன் பல்வேறு மனிதர்கள் உள்ளனர் என்பதை நாரதமஹரிஷி, நாரதீய கல்பத்தில் (1-14) - யஸ்ய யாவாம்ச்ச விச்வாஸ: தஸ்ய ஸித்திச்ச தாவதீ ஏதாவாநிதி நைதஸ்ய ப்ரபாவ: பரிமீயதே – யார் ஒருவனுக்கு மூலமந்த்ரத்தில் எந்த அளவு நம்பிக்கை உள்ளதோ, அந்த அளவே அவனுக்குப் பலன் கிடைக்கும்; மூலமந்த்ரத்தின் மேன்மை இவ்வளவே என்று அளவிட்டு உரைக்க இயலாது – என்றது காண்க. ஒருவன் ப்ரபந்நனாக இருந்தபோதிலும், ப்ரபத்திக்கு உரிய அங்கங்கள் முழுமையாக இன்றி உள்ளபோதிலும் அவனை ஸர்வேச்வரன் கண்டிப்பாகக் காப்பாற்றுகிறான். இதற்கான ப்ரமாணம் ஸ்ரீவிஷ்ணுதர்மம் (70-84) - ஸக்ருதுச்சரிதம் யேந ஹரிரித்யக்ஷரத்வயம் பத்த: பரிகரஸ்தேந மோக்ஷாய கமநம் ப்ரதி – ஹரி: என்னும் இரண்டு எழுத்து கொண்ட மந்த்ரம் யாரால் உச்சரிக்கப்பட்டதோ, அவனால் மோக்ஷத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகிறது – என்பதாகும். இந்தக் கருத்தைப் பின்பற்றியே கீழே உள்ள வரிகள் உள்ளதைக் காண்க:

- ஸ்தோத்ரரத்னம் (28) - த்வத் அங்க்ரிமுத்திச்ய – உனது திருவடிகளைக் குறித்து எப்போதாவது, யாராலாவது, எப்படியாவது அஞ்சலி செய்யப்பட்டால் போதுமானது; அது அனைத்து பாவங்களையும் நீக்குகிறது.

- ஸ்தோத்ரரத்னம் (29) - உதீர்ணஸம்ஸார – உனது திருவடிகளின் மீது உள்ள பக்தி என்னும் அமிர்தமான கடலின் ஒரு திவலை போதுமானது; அதுவே மிகப்பெரிதாக எரிகின்ற ஸம்ஸாரம் என்னும் காட்டுத்தீயை அணைக்கவல்லது.

- திருமாலை (4) - மொய்த்த வல்வினையுள் நின்று – நெய்க்குடத்தை மொய்க்கும் எறும்புகள் போன்று தன்னைச் சூழ்ந்த கொடிய வினைகள் அனைத்தையும் “கோவிந்த” என்னும் திருநாமத்தால் க்ஷத்ரபந்து போக்கிக் கொண்டான்.

இந்த வரிகளில் கூறப்பட்டது போன்று ப்ரபந்நனின் பலனுக்கு ஏற்றதான உபாயத்தை ஸர்வேச்வரன் தானாகவே சீர்செய்து, தக்க சமயத்தில் காப்பாற்றுகிறான். இந்தக் கருத்தை மனதில் கொண்டுதான் தேவலர் என்னும் முனிவரிடம் ஸ்ரீசாண்டில்ய மஹரிஷி, சாண்டில்ய ஸம்ஹிதையில் - வ்ருதைவ பவதோ யாதா பூயஸீ ஜந்ம ஸந்ததி: தஸ்யாமந்யதமம் ஜந்ம ஸஞ்சிந்த்ய சரணம் வ்ரஜ – (உமக்குச் சரணாகதி என்னும் உபாயத்தில் நம்பிக்கை உள்ளது; ஆனால் மஹாவிச்வாஸம் இல்லை) ஆகவேதான் பல பிறவிகள் உமக்கு வீணாகக் கழிந்தன; இந்தப் பிறவியும் அவற்றில் ஒன்று என்று எண்ணி விடாதபடி, ப்ரபத்தியைச் செய்வீராக – என்றார். இராமாயணம் யுத்தகாண்டம் (120-18) - சரண்யம் சரணம் ச த்வமாஹுர்திவ்யா மஹர்ஷய: - மஹரிஷிகள் உன்னையே சரணம் அடையத்தக்கவன் என்றும், சரணம் அடைந்தவர்களைக் காப்பவன் என்றும்

கூறுகிறார்கள் – என்பதற்கு ஏற்ப, மஹாவிச்வாஸம் என்பது மஹரிஷிகளுக்கே எளிதாக ஏற்படுகிறது அல்லவோ? ஆனால் இப்படியாக உள்ள இவர்களின் வாக்கியங்கள் மூலமாக குறைவான மஹாவிச்வாஸம் கொண்டவர்களைத் திருத்தவேண்டும். ஆகவே நம்பிக்கை என்பதில் இவ்விதமாக ஏற்றத்தாழ்வுகள் உள்ளதால், சாஸ்த்ரங்களில் கூறப்பட்டதான மஹாவிச்வாஸம் என்பது ப்ரபத்திக்கு அங்கம் என்னும் கருத்தில் எந்தக் குறையும் இல்லை என்றாகிறது.

## பக்தி, ப்ரபத்திகளில் விச்வாஸம் தளர்வது குறித்த சந்தேகங்களும் சமாதானமும்

**மூலம்–** சிலர்க்கு இவற்றில் விச்வாஸம் குலையும்படியும் அதுக்குப் பரிஹாரமும் சொல்லுகிறோம்:

1. பக்தி ப்ரபத்திகள் புத்திபேதத்தாலே ஐச்வர்ய மோக்ஷங்களாகிற விருத்த பலங்களைக் கொடுக்கக்கூடுமோ? விதைக்கிறவனுடைய அபிஸந்திபேதத்தாலே ஒரு விதை வேறொரு பலத்தைக் கொடுக்கக் கண்டோமோ? என்று சிலர் பார்ப்பார்கள். இதுக்குப் பரிஹாரம் – ந்யாயங்களாலே பாதிக்கவொண்ணாதபடி ப்ரத்யக்ஷாதிகளைப் போலே ஸ்வவிஷயத்தில் ப்ரமாணமான சாஸ்த்ரம் காட்டுகையால் இப்படிக்கூடும். லோகத்திலும் தர்மசீலனாய் உதாரனான ராஜாவுக்கு விலையாக ஏதேனும் ஒன்றைக் கொடுத்தால் பெறும் (பெரும்) விலை கிடைக்கவும் அது தன்னையே உபஹாரபுத்தியாலே கொடுத்தால் வேண்டுவதெல்லாம் கிடைக்கவும் காணாநின்றோம். இப்பக்தி ப்ரபத்திகள் ப்ரயோஜநாந்தரபரனுக்கும் ப்ரவ்ருத்தி தர்மகோடியிலே நிற்கும். பகவச் சரணார்த்திகளுக்கு நிவ்ருத்தி தர்மங்களாம். இவ்வர்த்தம் நித்ய நைமித்திகளாதிகளிலும் ஒக்கும்.

**விளக்கம்–** ஒரு சிலர் பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகியவற்றில் உள்ள விச்வாஸம் குறைதல் என்பது பற்றிய சந்தேகங்களை எழுப்புகின்றனர். இதற்கான சமாதானத்தைக் கூறுவோம். பக்தி மற்றும் ப்ரபத்தி போன்றவைகள் அவற்றைப் பின்பற்றுபவரின் விருப்பத்திற்கு (அல்லது மனோபாவத்திற்கு எனலாம்) ஏற்றபடி இந்தப் பூமியில் கிட்டக்கூடிய செல்வம் போன்றவற்றையோ அல்லது மோக்ஷம் முதலானவற்றையோ அளிக்கக்கூடும்? இவை இரண்டும் முரண்பட்ட பலன்கள் ஆகும். ஒரு விதையானது விதைப்பவனின் மனதிற்கு ஏற்ப வேறு ஒரு செடியை அளிக்கக்கூடுமோ (அதாவது – "எனக்கு நெல் வேண்டும்" என்று எண்ணியபடி கோதுமையைத் தூவினால், நெல் விளையுமோ)? இப்படியாகச் சிலர் கேட்டக்கூடும். இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில், வெறும் ந்யாய வாதங்களால் மட்டும் அல்லாமல், நேரில் காண்பது போன்று தெளிவாகவே சாஸ்த்ரங்கள் விளக்குகின்றன; ஆகவே இவற்றை மறுக்க இயலாது. இந்த உலகில் தர்மவழியில்

நிற்கின்ற ஓர் அரசன் உள்ளான் என்று வைத்துக் கொள்வோம். அவனிடம் ஒரு பொருளை, அதன் சரியான விலைக்கு விற்றால், அந்தப் பொருளின் விலை உள்ளது உள்ளபடி நமக்குக் கிட்டிவிடும்; ஆனால், அந்தப் பொருளையே அரசனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தால், அந்தப் பொருளின் விலையைக் காட்டிலும் பன்மடங்கு விலையாக உள்ள பலன்கள் நமக்கு வருவதைக் காணலாம் அல்லவா? இப்படியாகவே பக்தி மற்றும் ப்ரபத்தி போன்றவை, மற்ற பயனை எண்ணிக் கைக்கொள்பவனுக்கு, இந்த உலகில் கிட்டக்கூடிய பலன்களுக்காகச் செய்யப்படும் தர்மங்களைப் போன்றே ஆகிவிடும். ஆனால், ஸர்வேச்வரனின் திருவடிகளையே சரணம் என்று எண்ணி, அவற்றைக் கைக்கொள்பவனுக்கு, மறுமைப் பயனுக்காகச் செய்யப்படும் தர்மங்களாக ஆகின்றன. இந்தச் சிந்தனை என்பது நித்ய நைமித்திக கர்மங்களுக்கும் பொருந்தும்.

**மூலம்** - 2. இப்படியே ஆவ்ருத்த்யநாவ்ருத்த்யாதிகளாலே விஷமஸ்வபாவங்களான உபாஸந ப்ரபதனங்கள் ஏக பல ஸாதநமாகக் கூடுமோவென்னில் இதுக்கு உத்தரமும் அதிகாரி விசேஷத்தாலே லோக வேதங்களிற்படியே ஸித்தம்.

**விளக்கம்**– பக்தியோகம் என்பதை இடைவிடாமல் செய்தபடி இருக்கவேண்டும், ப்ரபத்தி என்பதை ஒரு பலனுக்காக ஒருமுறை மட்டுமே இயற்றவேண்டும் என்னும் விதி உள்ளது. ஆக இவை இரண்டும் வெவ்வேறுவிதமான தன்மைகள் கொண்டவை என்று ஆகின்றன. இப்படி உள்ளபோது, இவை ஒரே பலனை அளிப்பதற்கு உபாயமாக உள்ளன என்பது எப்படிப் பொருந்தும் என்று கேட்கலாம். இவற்றைக் கைக்கொள்ளும் அதிகாரிகளின் சக்திக்கு ஏற்ப இவை பலனை அளிப்பதில் தடையில்லை. உலகில் செல்வம் என்னும் ஒரே பலனை அளிப்பதற்கு கடுமையான தொழில்களும், மிகவும் சுலபமான தொழில்களும் உள்ளதைக் காணலாம். இதே போன்று, ஸ்வர்க்கம் என்னும் ஒரே பலனைப் பெறுவதற்கு வேதங்களில் எளிமையான யாகங்களும், கடுமையான தவங்களும் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

**மூலம்**– 3. முமுக்ஷுக்களாய் ஸ்வதந்த்ர ப்ரபத்தி பண்ணினவர்களுக்கு உபாயமும் மோக்ஷமும் ஏகரூபமாயிருக்கச் செய்தேயும், ஸம்ஸாரத்தில் அடிச்சூட்டால் வரும் த்வரையின் தாரதம்யத்துக்கீடாகத் தத்தம் இச்சையாலே காலம் குறிக்கிறதில் ஏற்றச் சுருக்கத்தாலே பலத்தில் விளம்பாவிளம்பங்கள் கூடும்.

**விளக்கம்**– முமுக்ஷுக்களில் இருவகை உண்டு. இவர்கள் - இந்தச் சரீரம் கழியும்வரை பொறுக்க இயலாமல், சட்டென்று மோக்ஷம் விரும்பும் ஆர்த்தர்கள், இந்தச் சரீரம் கழிந்த பின்னர் மோக்ஷம் கிட்டினால் போதும் என்றுள்ள த்ருப்தர்கள் – என்பவர் ஆவர். இவர்களுக்கு மோக்ஷ உபாயமான ப்ரபத்தியும், மோக்ஷமும் ஒரே வடிவாக உள்ளன. இப்படி உள்ளபோது, ஆர்த்தனுக்கு சட்டென்ற மோக்ஷமும், த்ருப்தனுக்கு தாமதித்த

மோக்ஷமும் எவ்விதம் கூடும் என்று கேட்கலாம். ஆர்த்தன் என்பவன் ஸம்ஸாரத்தில் உள்ள துன்பங்களால் தவித்து, அதனைப் பொறுக்க இயலாமல் மோக்ஷம் பெற ப்ரபத்தி செய்கிறான். ஸம்ஸாரத்தில் உள்ள துயரங்களைப் பொறுத்துக் கொள்ளும் த்ருப்தன், சரீரம் கழிந்த பின்னர் மோக்ஷம் பெறும்வகையில் ப்ரபத்தி செய்கிறான். ஆக இவர்களுடைய மோக்ஷம் பெறுவதில் உள்ள வேகம் என்பது ஏற்றத்தாழ்வுகள் கொண்டதாக உள்ளது. இதற்கு ஈடாக, அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப, பலனை அடைவதிலும் விரைவு மற்றும் காலதாமதம் ஏற்படும்.

**மூலம்** – 4. ஆழ்வார்கள் நாதமுனிகளுள்ளிட்டார்க்கு பகவத் ஸாக்ஷாத்காராதிகள் உண்டாயிருக்க, சிலர்க்கு இவையன்றிக்கே ஒழிகைக்குக் காரணம் – ப்ரபத்தி காலத்தில் பலஸங்கல்பத்தில் வைஷம்யம். ப்ராரப்த ஸுக்ருதவிசேஷமாகவுமாம். முன்பு கோலின பலாம்சம் ஸக்ருத்ப்ரபத்தியாலே ஸித்தமானாலும் கோலாத அம்சத்தைப் பற்றப் பின்பு தீவ்ரஸம்வேகம் பிறந்தார்க்குப் புந:ப்ரபத்தி பண்ணவுமாம்.

**விளக்கம்–** இந்த உலகில் ஆழ்வார்கள், நாதமுனிகள் போன்ற ப்ரபந்நர்களுக்கு மட்டும் இந்த உலகத்தில் அவர்கள் உள்ளபோதே பகவத் ஸாக்ஷாத்காரம் உண்டானது, ஆனால் மற்ற ப்ரபந்நர்களுக்கு அவ்விதம் உண்டாவதில்லை. இதன் காரணம் என்ன? ப்ரபத்தி செய்யும்போது கைக்கொள்ளும் ஸங்கல்பத்தினால் உண்டாகும் வேறுபாடே இதற்குக் காரணம் ஆகும் (அதாவது ஆழ்வார்கள் தங்களுக்கு பகவத் ஸாத்காரம் வேண்டும் என்று ஸங்கல்பம் செய்திருக்கலாம் என்று கருத்து). மற்றவர்களுக்கு ஏன் அவ்விதம் ஸங்கல்பம் செய்யவேண்டும் என்று தோன்றுவதில்லை என்றால் – ஆழ்வார்களுக்கு அந்த நேரத்தில் பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட பூர்வ புண்யகர்மங்கள் காரணமாக இருக்கலாம். முன்னர் ஒருமுறை செய்த ப்ரபத்தியின் காரணமாக உண்டாகும் பலன் உறுதியே ஆகும்; ஆனால், அந்தப் ப்ரபத்தியின்போது கேட்காத ஒரு விஷயத்தைக் குறித்து, பின்னர் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது என்றால், அந்தப் பலனுக்காக மீண்டும் ஒருமுறை ப்ரபத்தி செய்யலாம் (அதாவது முதலில் ப்ரபத்தி செய்தபோது வேண்டிய பலனை எண்ணி, மீண்டும் ப்ரபத்தி செய்து கேட்கக்கூடாது; ஆனால் வேறு பலன் கேட்டு மீண்டும் ப்ரபத்தி செய்யலாம் என்று கருத்து).

**மூலம்–** 5. வேறே சிலர் த்ருஷ்டார்த்த ப்ரபத்திகளிலே சில பலியாதொழியக் கண்டு ஸகலபல ஸாதநமான ப்ரபத்தியிலே அதிசங்கை பண்ணுவார்கள். அவர்களையும் அல்லாத சாஸ்த்ரார்த்தங்களிற்படிகளிலே கர்ம கர்த்ருஸாதந வைகுண்யத்தை வெளியிட்டுத் தெளிவிக்கவேணும். இங்கு கர்ம வைகுண்யமாவது மஹாவிச்வாஸாதிகள் குறைகை. கர்த்ரு வைகுண்யமாவது ப்ரபத்திக்குச் சொன்ன அதிகாரம் ந்யூநமாகை. ஸாதந வைகுண்யமாவது யதாசாஸ்த்ரம் ப்ரபத்யநுஷ்டாநத்துக்கு மூலமான ஸத் உபதேசாதிகள்

இன்றிக்கே ஒழிகை. இவ்வைகுண்யங்களற ப்ரபத்தி பண்ணினபோது தத்பலங்களாகக் கோலின த்ருஷ்டங்களும் ஸித்திக்கக் காணா நின்றோம்.

**விளக்கம்–** ஒரு சிலர் ப்ரபத்தி செய்யும்போது செல்வம் போன்றவற்றைப் பலனாகப் பெறவேண்டும் என்று செய்யக்கூடும். ஆனால் அந்தப் பலன்களை அவர்கள் பெறாமல் இருக்கக்கூடும். இதன் காரணமாக அனைத்து பலன்களையும் அளிக்கவல்ல உபாயமாக உள்ள ப்ரபத்தியின் மீது அவர்கள் சந்தேகம் கொள்ளக்கூடும். இதனை நீக்குவது எப்படி? அவர்களுக்கு, ப்ரபத்தி அல்லாத மற்ற சாஸ்த்ரங்களைப் போன்றே ஒரு சில குறைபாடுகளால் பலன் கிட்டவில்லை என்பதைப் புரிய வைக்கவேண்டும். இந்தக் குறைபாடுகள் எவை? அவை – கர்ம வைகுண்யம், கர்த்ரு வைகுண்யம், ஸாதந வைகுண்யம் போன்றவை ஆகும். கர்ம வைகுண்யம் என்றால் ப்ரபத்தியில் உள்ள மஹாவிச்வாஸம் போன்ற முக்கியமான அங்கங்களில் ஏற்படும் குறைபாடுகள் ஆகும். கர்த்ரு வைகுண்யம் என்றால் ப்ரபத்திக்குத் தேவையான தகுதியில் ஏதேனும் குறைபாடுகள் ஆகும். ஸாதந வைகுண்யம் என்றால் ப்ரபத்தியைச் சாஸ்த்ர முறைப்படி கைக்கொள்வதற்கு அடிப்படையான ஆசார்ய உபதேசம் போன்றவை இல்லாமல் உள்ள நிலையாகும். இத்தகைய குறைகள் இன்றி செய்யப்படும் ப்ரபத்தி மூலம், ப்ரபத்தி செய்தவர்கள் தாங்கள் விரும்பிய பலனைப் பெறுவதை நாம் காணலாம்.

## சரமச்லோகம் குறித்த ஐயங்களுக்கான கண்டனம்

**மூலம்–** வேறேசிலர் ப்ரபத்தி சாஸ்த்ரத்தோடு சாஸ்த்ராந்தரங்களோடு வாசியற ஸர்வசாஸ்த்ரங்களுக்கும் ப்ரவர்த்தகரான வ்யாஸாதிகள்:ஆலோட்ய ஸர்வசாஸ்த்ராணி விசார்ய ச புந: இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயண: ஸதா என்றும், ஹரிரேக: ஸதா த்யேயோ பவத்பி: ஸத்த்வஸம்ஸ்திதை: என்றும், ஸ்மர்த்தவ்யஸ்ஸததம் விஷ்ணு: என்றும் இப்படி நிஷ்கர்ஷியா நிற்க, ஸக்ருத் ப்ரபத்தி மாத்ரத்தாலே மோக்ஷமாகக் கூடுமோ? மாமேவ யே ப்ரபத்யந்தே இத்யாதிகள் அங்கப்ரபத்தி விஷயங்களானாற் போலே சரமச்லோகாதிகளும் ஸபரிகர ப்ரபத்தியை பக்த்யங்கமாக விதிக்கின்றனவாக வேண்டாவோ என்று சொல்லுவார்கள்.

**விளக்கம்–** மேலும் சிலர் எழுப்பும் ஆக்ஷேபம்: ப்ரபத்தி சாஸ்த்ரங்களை மற்ற அனைத்து சாஸ்த்ரங்களுடன் வேறுபாடு இல்லாமல் பரவச்செய்த வ்யாஸர் உள்ளிட்ட பலரும் கீழே உள்ள பல வரிகளில் உரைப்பது போன்று முடிவு செய்தனர்.

- மஹாபாரதம் (178-11) - ஆலோடய ஸர்வசாஸ்த்ராணி விசார்ய ச புந: இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயண: ஸதா – அனைத்து சாஸ்த்ரங்களையும் நன்றாக ஆராய்ந்து பார்த்து, பலவிதமான யுக்திகள் மூலம் விசாரித்தபோது, நாராயணனே எப்போதும் த்யானித்தபடி இருக்கத்தக்கவன் என்பது மட்டுமே உறுதியாகிறது.

- ஹரிவம்ஸம் (132-14) - ஹரிரேக: ஸதா த்யேயோ பவத்பி: ஸத்த்வஸம்ஸ்திதை: - ஸாத்விகர்களால் எப்போதும் த்யானிக்கத்தக்கவன் விஷ்ணுவே ஆவான்

- ஹரிவம்ஸம் (132-14) - ஸ்மர்த்தவ்யஸ்ஸததம் விஷ்ணு: - விஷ்ணுவை எப்போதும் நினைக்கவேண்டும்

மேலே உள்ள வரிகளின்படி மோக்ஷ காலம் உண்டாகும்வரை எப்போதும் விஷ்ணுவையே த்யானித்தபடி இருத்தல்வேண்டும் என்றாகிறது; இப்படி உள்ளபோது, ஒரேமுறை ப்ரபத்தி செய்வதால் மோக்ஷம் கிட்டிவிடுமோ? கீதையில் (7-14) - மாமேவ யே ப்ரபத்யந்தே – என்னிடம் ப்ரபத்தி செய்தவர்கள் மாயையைக் கடக்கிறார்கள் – போன்ற வாக்கியங்கள் மூலம் பக்தியின் அங்கமாக அல்லவோ ப்ரபத்தி கூறப்படுகிறது? இது போன்றே சரமச்லோகம் முதலானவையும் பக்தியின் அங்கமாகவே ப்ரபத்தியைக் கூறுகின்றன என்றே கொள்ளவேண்டும். இப்படியாகச் சிலர் உரைப்பார்கள்.

**மூலம் -** இதுவும் அநுபபந்நம்:

சரணம் த்வாம் ப்ரபந்நா யே த்யாநயோக விவர்ஜிதா:
தே அபி ம்ருத்யுமதிக்ரம்ய யாந்தி தத்வைஷ்ணம் பதம் என்றும்,

யத்யேந காமகாமேந ந ஸாத்யம் ஸாதநாந்தரை:
முமுக்ஷுணா யத்ஸாங்க்யேந யோகேந ந ச பக்தி:
ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே யதி:
தேந தேநாப்யதே தத்தத் ந்யாஸேநைவ மஹாமுநே
பரமாத்மா ச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம: என்றும்,

இத்யாதி வசனங்களாலே ஸ்வதந்த்ர ப்ரபத்தி ஸித்தித்தால் இந்நிஷ்டையுடையவனுக்கு ஸ்ரீவைகுண்டகத்யத்திற்படியிலே ஸ்வயம் பலமாக த்யேயோ நாராயணஸ்ஸதா என்கிற அர்த்தத்தில் தன் விழுக்காடு அந்வயத்துக்கு விரோதமில்லை. இது அரோகனுக்கும் ஆரோக்யார்த்திக்கும் க்ஷீரம் ஸேவ்யமென்றதோடொக்கும். ஸாங்கமான த்யாநவிசேஷம் ஸர்வாதிகாரமன்றேயாகிலும் பகவத்விஷயத்தில் அதிகாராநுரூபமாக அறியலாமளவும்

“நிரந்தரம் நினைப்பதாக நீ வேண்டுமே” இத்யாதிகளிற்படியே அநுஸந்திக்கவும் குறையில்லை. பாஷ்யகாரரும் இவ்வுபாயநிஷ்டையைச் சிறிய கத்யத்திலும் பெரிய கத்யத்திலும் அருளிச்செய்து, ஸ்ரீவைகுண்டகத்யத்திலும் இந்நிஷ்டையைச் சுருக்கிக் காட்டி, இருந்த நாள் ப்ராப்யருசி குலையாதே வளர்ந்து போகும்படிக்கு ஈடான அநுஸந்தாந விசேஷத்தை ததச்ச ப்ரத்யஹம் ஆத்மோஜ்ஜீவநாய ஏவம் அநுஸ்மரேத் என்று தொடங்கி அருளிச்செய்தார். இப் ப்ரபந்நனுக்குப் “பூசித்தும் போக்கினேன் போது” என்கிற அநந்யப்ரயோஜநமான பூஜாவிசேஷத்தை அத பரமைகாந்திநோ பகவதாராதந ப்ரயோஜகம் வக்ஷ்யே பகவத் கைங்கர்யைகரதி: பரமைகாந்தீ பூத்வா என்று தொடங்கி நித்யத்திலே அத்யர்த்த ப்ரியாவிரத விசததம ப்ரத்யக்ஷரூபாநுத்யாநேந த்யாயந்நாஸீத என்று அருளிச்செய்தார்.

**விளக்கம்–** இவர்கள் கூறுவது பொருந்தாத வாதமாகும். கீழே உள்ள வரிகள் காண்க:

- ப்ராஹ்மபுராணம் (53) - சரணம் த்வாம் ப்ரபந்நா யே த்யாநயோக விவர்ஜிதா: தே அபி ம்ருத்யுமதிக்ரம்ய யாந்தி தத்வைஷ்ணம் பதம் – யார் ஒருவர் பக்தியோகம் இயற்றுவதற்கான சக்தி இன்றி, உன்னையே உபாயமாக அடைகிறாரோ, அப்படிப்பட்டவர்களும் மரணத்தைக் கடந்து உன்னுடைய இடமாகிய பரமபதத்தை அடைகிறார்கள்.

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37, 25 – 27) - யத்யேந காமகாமேந ந ஸாத்யம் ஸாதநாந்தரை: முமுக்ஷுணா யத் ஸாங்க்யேந யோகேந ந ச பக்தி: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே யதி: தேந தேநாப்யதே தத்தத் ந்யாஸேநைவ மஹாமுநே பரமாத்மா ச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம: - பயனில் விருப்பம் கொண்ட பலராலும், எந்தெந்த பலன்கள் மற்ற உபாயங்களால் அடைய இயலாதோ, முமுக்ஷுவால் மோக்ஷம் என்னும் பலன் கர்மயோகம், ஞானயோகம் மற்றும் பக்தியோகம் ஆகியவற்றால் அடைய இயலாதோ அப்படிப்பட்ட பலவிதமான பலன்களும் ப்ரபத்தியால் அடையப்படுகின்றன. அப்படிப்பட்ட ப்ரபத்தி மூலமே புருஷோத்தமனாகிய பரமாத்மாவும் அடையப்படுகிறான். எங்கு சென்றால் மீண்டும் திரும்புவது என்பது இல்லையோ, அந்த இடமே முமுக்ஷுக்களால் விரும்பப்படும் இடமாகும்.

மேலே உள்ள வரிகளின்படி ஒருவன் வேறு எதனையும் கைக்கொள்ளாமல் ப்ரபத்தியை மட்டுமே நேரடியான உபாயமாகக் கொண்டால், அவனுக்கு ஸ்ரீவைகுண்டகத்யத்தில் அருளிச்செய்தபடி, ப்ரபத்தியின் பலனாக, மஹாபாரதம் (178-11) - த்யேயோ நாராயணஸ்ஸதா – எப்போதும் நாராயணனையே த்யானிக்கக் கடவன் – என்பதற்கு ஏற்ப உள்ள நிலையானது தானாகவே அவனுக்குக் கைகூடுகிறது என்பதில் எந்த ஐயமும்

இல்லை. இது பாலானது எவ்விதம் ஆரோக்யமாக உள்ளவனுக்கும், உடல்நிலை குன்றியவனுக்கும் ஒரே போன்று உள்ளதோ, அது போன்று ஆகும். அங்கங்களுடன் கூடிய த்யானம் என்பது அனைவருக்கும் ஏற்றதாக உள்ளது அல்ல (அனைவருக்கும் அதற்குத் தகுதி இல்லை என்று கருத்து) என்றபோதிலும், பகவத்விஷயத்தைப் பொறுத்தவரை திருச்சந்தவிருத்தம் (101) - நிரந்தரம் நினைப்பதாக நீ வேண்டுமே – நான் உன்னை எப்போதும் நினைக்கும்படியாக நீ உனது திருவுள்ளத்தில் பற்றவேண்டும் – என்று கூறுவதற்கு ஏற்ப, த்யானம் கைகூடாது என்பது இல்லை. இப்படிப்பட்ட ப்ரபத்தியை ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீரங்க கத்யத்திலும், சரணாகதி கத்யத்திலும் அருளிச் செய்தார். மேலும் இதனை ஸ்ரீவைகுண்ட கத்யத்தில் சுருக்கமாக அருளிச்செய்தார். மேலும் இந்த உலகில் உள்ள காலம் முடிய அடையப்படும் இலக்கான ஸர்வேச்வரன் மீது உள்ள ருசி குறையாமல் இருப்பதற்காக, ஸ்ரீவைகுண்ட கத்யத்தில் - ததச்ச ப்ரத்யஹம் ஆத்மோஜ்ஜீவநாய ஏவம் அநுஸ்மரேத் – ஒவ்வொரு நாளும் தான் பிழைத்திருக்கும் பொருட்டு, இவ்விதமாக த்யானம் செய்யவேண்டும் – என்று அருளிச்செய்தார். மேலும் இப்படிப்பட்ட ப்ரபந்நன் தன்னுடைய காலத்தை மற்ற பலன்களை எதிர்பாராமல், நான்காம் திருவந்தாதி (63) - பூசித்தும் போக்கினேன் போது – அவனை வணங்கியும் பூஜித்தும் காலத்தைக் கழித்து – என்றபடியே இருப்பான் என்னும் கருத்தை தன்னுடைய நித்யம் என்னும் நூலில் அருளிசெய்தார். இதனை அந்த நூலில் - அத பரமைகாந்திநோ பகவதாராதந ப்ரயோஜகம் வக்ஷ்யே பகவத் கைங்கர்யைகரதி: பரமைகாந்தீ பூத்வா … அத்யர்த்த ப்ரியாவிரத விசததம ப்ரத்யக்ஷரூபாநுத்யாநேந த்யாயந்நாஸீத – பரமைகாந்திகள் ஸர்வேச்வரனுக்கு ஆராதனை செய்யும் வரிசையைக் கூறுகிறேன். ஸர்வேச்வரனுடைய கைங்கர்யம் என்பதில் மட்டுமே ஆசை கொண்ட பரமைகாந்தி ஆகி … எல்லையற்ற அன்புடன், வேறு எந்தவிதமான எண்ணங்களும் இல்லாமல், தன்னுடைய கண்களால் நேரடியாகவே ஸர்வேச்வரனைக் காண்பதாகவே எண்ணியபடி த்யானம் செய்தபடி இருக்கவேண்டும் – என்றார்.

## பகவத் ஆராதநம் போன்றவற்றைச் செய்யவேண்டிய கட்டாயம்

**மூலம்** – இப்படி அநந்யப்ரயோஜந நிரந்தர பகவதநுஸந்தாந பரீவாஹமான கைங்கர்யத்திலே பகவச்சாஸ்த்ரோக்தமுமாய் வ்யாஸ தக்ஷாதி மஹர்ஷி மதங்களோடும் ஸங்கதமாய் "மறம் திகழும்" என்கிற பாட்டிலும், "இருமுப்பொழுதேத்தி" என்ற பாசுரத்துக்கு விவக்ஷிதமாக ஆசார்யர்கள் வ்யாக்யாநம் பண்ணின காலவிபாகத்தை

அபிகச்சந் ஹரிம் ப்ராத: பச்சாத் த்ரவ்யாணி சார்ஜயந்
அர்ச்சயம்ச்ச ததோ தேவம் மந்த்ராந் ஜபந்நபி
த்யாயந்நபி பரம் தேவம் காலேஷூக்தேஷு பஞ்சஸு
தர்மாநஸ்ஸதா சைவம் பாஞ்சகாலிக வர்த்தமநா
ஸ்வார்ஜிதை: கந்தபுஷ்பாத்யை: சுபைச்சக்தயநுரூபத:
ஆராதயந் ஹரிம் பக்த்யா கமயிஷ்யாமி வாஸராந்

என்று பாஷ்யகாரர் அருளிச்செய்யக் கேட்டு வங்கிபுரத்து நம்பி நித்யத்திலே ஸங்க்ரஹித்தார். இப்படிப் பெரியஜீயர் உள்ளிட்டார் நித்யங்களிலும் கண்டுகொள்வது. இவற்றிலுள்ள வைஷம்யங்கள் அவ்வோ ஸம்ஹிதாவிசேஷங்களிலே சொல்லும் விகல்பங்களாலே ஸங்கதங்கள். இப்படியாகையாலே ந தேவலோகா க்ரமணம், பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா,

யத்ர குத்ர குலே வாஸோ யேஷு கேஷு பவோஸ்து மே
தவ தாஸ்யைகபோகே ஸ்யாத் ஸதா ஸர்வத்ர மே ரதி:
கர்மணா மநஸா வாசா சிரஸா வா கதஞ்சந்
த்வாம் விநா நாந்யமுத்திச்ய கரிஷ்யே கிஞ்சித் அப்யஹம்

“தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே” என்கிறபடியே பகவத் ப்ரீதிமாத்ரம் ப்ரயோஜநமான கைங்கர்யத்திலே ஸ்வாசார்யோபதிஷ்டமாயிருப்பதொரு சாஸ்த்ரீய ப்ரக்ரியைக் கொண்டு யதாகாலம் அந்வயிக்க ப்ராப்தம்.

**விளக்கம்** – இப்படியாக இடைவிடாத த்யானத்தின் விளைவாக உள்ளதும், மற்ற எந்தவிதமான பலனையும் எதிர்பாராமல் செய்யப்படுவதும், ஒருநாளைக்கு ஐந்துவிதமான ஆராதனையுடன் கூடியதும் ஆகிய பகவத் கைங்கர்யம் என்பது பாஞ்சராத்ர ஆகம சாஸ்த்ரங்களிலும், வ்யாஸர் மற்றும் தக்ஷர் ஆகிய மஹரிஷிகளின் வாக்குகளிலும் தெளிவாகவே உள்ளது. இந்தக் கருத்து பெருமாள் திருமொழி (1-7) – மறம் திகழும் – என்றுள்ள பாசுரத்தில், (1-7) – இருமுப்பொழுதேத்தி - கொடுமையான பல சிந்தனைகள் கொண்ட மனதை வசப்படுத்தி, ஐந்து காலங்களிலும் ஆராதித்து – என்று ஆசார்யர்கள் வ்யாக்யானம் இட்டது காண்க. இப்படியாக இந்தப் பாசுரத்தில் கூறப்பட்டபடி உள்ள

ஐந்துகால ஆராதனை என்பதைக் குறித்து ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்ததைக் கேட்ட வங்கிபுரத்து நம்பி தன்னுடைய காரிகையில் (34-36) கீழே உள்ள வரிகளை அருளிச்செய்தார்:

அபிகச்சந் ஹரிம் ப்ராத: பச்சாத் த்ரவ்யாணி சார்ஜயந்
அர்ச்சயம்ச்ச ததோ தேவம் மந்த்ராந் ஜபந்நபி
த்யாயந்நபி பரம் தேவம் காலேஷ்வேக்தேஷு பஞ்சஸு
தர்மாநஸ்ஸதா சைவம் பாஞ்சகாலிக வர்த்தமநா
ஸ்வார்ஜிதை: கந்தபுஷ்பாத்யை: சுபைச்சக்தயநுரூபத:
ஆராதயந் ஹரிம் பக்த்யா கமயிஷ்யாமி வாஸராந்

இதன் பொருள் – காலை நேரங்களில் ஸர்வேச்வரனிடம் சென்று, அதன் பின்னர் அவனை ஆராதிப்பதற்குத் தேவையான பொருட்களைச் சேகரித்து, அதன் பின்னர் அவனை ஆராதனம் செய்து, அதன் பின்னர் அவனைக் குறித்த மந்த்ரங்களை ஜபித்தபடி இருந்து, பின்னர் மிகவும் உயந்தவனாக உள்ள அவனை எப்போதும் த்யானித்தபடி இருப்பேன். இப்படியாக ஐந்து காலங்களில் அவனை ஆராதித்தபடி எனது பொழுதைப் போக்குவேன். ஒவ்வொரு நாளையும் ஐந்தாகப் பிரித்து, அந்தந்த வேளைகளில் செய்யப்பட வேண்டிய ஆராதனைகளைச் செய்தபடி இருப்பேன். என்னால் இயன்றவரை சேகரிக்கப்பட்ட சிறந்த சந்தனம், மலர்கள் ஆகியவற்றைக் கொண்டு அவனைப் பக்தியுடன் ஆராதனை செய்வேன் (இங்கு கூறப்பட்ட ஐந்து காலம் என்பது – அபிகமனம், உபாதானம், இஜ்யை, ஸ்வாத்யாயம் மற்றும் யோகம் என்பதாகும்).

இப்படியாக உள்ள விஷயங்கள் குறித்து பெரியஜீயர் போன்றவர்கள் அருளிச்செய்த அன்றாட அனுஷ்டானங்கள் குறித்த நூல்களில் மேலும் அறியலாம். இது போன்ற பல க்ரந்தங்களில் காணப்படும் சிறு வேறுபாடுகள் என்பவை, பல்வேறு ஸம்ஹிதைகளில் காணப்படும் வேறுபாடு காரணமாகவே உண்டாகின்றன என்று அறிக.

இப்படியாக ப்ரபந்நன் ஒருவன் தன்னுடைய ஆசார்யனால் உபதேசம் செய்யப்பட்டபடி, சாஸ்த்ரங்களில் கூறப்பட்டபடி, ஸர்வேச்வரனுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்துவது மட்டுமே பலன் என்பதான கைங்கர்யத்திலே ஈடுபட்டபடி இருத்தல்வேண்டும். மற்ற எதுவும்

அவனுக்கு மகிழ்வு உண்டாக்காது என்றும் எண்ணவேண்டும். இதனைக் கீழே உள்ள பல வரிகளும் உணர்த்துகின்றன:

- இராமாயணம் அயோத்யாகாண்டம் (31-5) - ந தேவலோகா க்ரமணம் – இராமா! உன்னை விட்டு ஸ்ரீவைகுண்டம் செல்வதையும் நான் விரும்பவில்லை.

- இராமாயணம் அயோத்யாகாண்டம் (31-27) - பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா – நீ சீதையுடன் உள்ளபோது, அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்தபடி இருப்பேன்.

- ஜிதந்தே ஸ்தோத்ரம் (2 – 8, 9) - யத்ர குத்ர குலே வாஸோ யேஷு கேஷு பவோஸ்து மே தவ தாஸ்யைகபோகே ஸ்யாத் ஸதா ஸர்வத்ர மே ரதி: கர்மணா மநஸா வாசா சிரஸா வா கதஞ்சந் த்வாம் விநா நாந்யமுத்திச்ய கரிஷ்யே கிஞ்சித் அப்யஹம் – எனக்கு எந்தக் குலத்தில் பிறவி உண்டானாலும் அப்படியே இருக்கட்டும், யார் மூலமாகவேனும் பிறப்பு இருக்கட்டும், ஆனால் உன்னுடைய கைங்கர்யம் என்னும் இன்பத்தில் மட்டுமே எங்கும், எப்போதும் எனக்கு மகிழ்ச்சி உண்டாகவேண்டும். உன்னைத் தவிர மற்ற எந்த ஒரு தெய்வத்தையும் நான் எண்ணியபடி எனது சரீரம், மனம், வாக்கு, தலை போன்றவற்றால் எந்தச் செயலையும் செய்யமாட்டேன்.

- திருவாய்மொழி (2-9-4) - தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே – தன்னுடைய மகிழ்ச்சிக்காக அவன் என்னை ஈடுபடுத்திக் கொள்வதே எனக்குப் பலனாகும்.

## ஐந்துவிதமான தோஷங்கள் வராமல் தடுத்தல்

**மூலம்** – இப்படி நித்யமாக விதிக்கிற பகவதபிகமநாதிகளில் லோகாயதிகரைப் போலே க்யாதி லாப பூஜைகளுக்காகவாதல், தத்த்வஜ்ஞாந வைராக்யாதிகளில்லாதாரைப் போலே ப்ரயோஜநாந்தரத்துக்காகவாதல், பூர்ணோபாயமல்லாதாரைப் போலே மோக்ஷார்த்தமாக வாதலன்றிக்கே முக்தரைப் போலே ஸ்வாம்யபிமதத்தை நடத்த வேணுமென்கிற ருசியாலே யதாசாஸ்த்ரம் ஸ்வயம்ப்ரயோஜனமாக இழிந்தால் இவ் அபிகமநாதிகள்

அந்யாபிகமநமும் அந்யார்த்தப்ரவ்ருத்தியும் அந்யயஜநமும் அந்யசப்தங்களும் அந்யசிந்தையுமாகிற சித்ரங்கள் புகாமைக்குக் கடகமாயிருக்கும்.

**விளக்கம்** – அபிகமநம் உள்ளிட்ட அன்றாட பகவத் ஆராதனை என்பது ப்ரத்யக்ஷமாகக் காண்பதை மட்டுமே நம்புகின்றவர்கள் போன்று புகழ், செல்வம் போன்ற லாபங்களை மனதில் கொண்டு செய்தல் கூடாது; உண்மையான ஞானம், வைராக்யம் இல்லாதவர்கள் போன்று ஸர்வேச்வரனைத் தவிர மற்ற பலன்களுக்காகச் செய்தல் கூடாது; ப்ரபத்தியைச் செய்யாதவர்கள் போன்று மோக்ஷத்திற்கான உபாயமாகச் செய்தல் கூடாது. பின்னர் எவ்விதம் செய்யவேண்டும்? முக்தரைப் போன்று ஸர்வேச்வரனின் திருவுள்ளப்படியே நடக்கவேண்டும் என்னும் ஆசையை மனதில் நிறுத்தி, சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட முறைகளை அடியொட்டி, ஸ்வயம்ப்ரயோஜனம் என்று கருதி இவற்றைச் செய்யவேண்டும். இவ்விதம் செய்யும்போது அந்த பகவத் ஆராதனை காரணமாக – மற்ற தேவதைகளைப் பற்றுதல், தனக்காகப் பொருள் சேகரித்தல் போன்ற முயற்சிகள், மற்ற தேவதைகளை ஆராதனை செய்தல், மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசுதல், மற்ற தேவதைகளை எண்ணுதல் – போன்ற குற்றங்கள் நம்மை அடையாமல், அந்த ஆராதனை என்பதே தடுத்து நிறுத்திவிடும்.

**மூலம்** – அந்யாபிகமநம் ஆகாதென்னுமிடத்தை "இனிப் போய் ஒருவன் தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின் சாயை அழிவு கண்டாய்" என்று பெரியாழ்வார் அருளிச்செய்தார். அந்யார்த்தப்ரவ்ருத்தி ஆகாதென்னுமிடத்தையும் "கூறை சோறு இவை வேண்டுவதில்லை" என்று அருளிச்செய்தார். அந்யயஜநம் ஆகாதென்னுமிடத்தை "உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவனையல்லால்" என்றும், "தேவன் எம்பெருமானுக்கல்லால் பூவும் பூசையும் தகுமே" என்றும், "ஈன்றோளிருக்க மணை நீராட்டி" என்றும், "மற்றிங்கோர் புதுத்தெய்வம் கொண்டாடும் தொண்டீர் பெற்ற தாயிருக்க மணை வெந்நீராட்டுதீரோ? மாட்டாத தகவற்றீரே" என்றும் இத்யாதிகளிலே அருளிச் செய்தார்கள்.

**விளக்கம்** – அந்யாபிகமநம் (மற்ற தேவதைகளைப் பற்றுதல்) என்பது செய்யத்தகாத ஒன்று என்பதை பெரியாழ்வார் தனது திருமொழியில் (5-3-3) - இனிப் போய் ஒருவன் தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின் சாயை அழிவு கண்டாய் – உனக்கு ஏற்ற

கைங்கர்யங்களைச் செய்யும் நான், இனி மற்றொருவரின் வாசலில் நின்று வணங்கினால் உன்னுடைய தேஜஸ்ஸுக்கு அது தோஷம் அல்லவோ – என்றார். அந்யார்த்தப்ரவ்ருத்தி (தனக்காகப் பொருள் சேகரித்தல்) என்பதும் கூடாது என்பதை பெரியாழ்வார் திருமொழியில் (5-1-4) - கூறை சோறு இவை வேண்டுவதில்லை – உடையையும் உணவையும் நான் உன்னிடம் கேட்கமாட்டேன் – என்றது காண்க. அந்யயஜநம் (மற்ற தேவதைகளை ஆராதனை செய்தல்) என்பது கூடாது என்பதை கீழே உள்ள பல வரிகளில் கூறியதைக் காண்க:

- திருவாய்மொழி (4-6-10) - உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவனையல்லால் – மற்றொரு தெய்வத்தைத் தொழமாட்டாள்

- திருவாய்மொழி (2-2-4) - "தேவன் எம்பெருமானுக்கல்லால் பூவும் பூசையும் தகுமே – ஸர்வேச்வரனாகிய எம்பெருமானுக்கு அல்லாமல் மலர்களும் ஆராதனையும் வேறு யாருக்கு ஏற்புடையது?

- திருவாசிரியம் (6) - ஈன்றோளிருக்க மணை நீராட்டி – பெற்ற தாய் உள்ளபோது, அவளை விடுத்து மரப்பாச்சி பொம்மைக்கு நீராட்டுவது போன்று

- பெரியாழ்வார் திருமொழி (11-6-6) - மற்றிங்கோர் புதுத்தெய்வம் கொண்டாடும் தொண்டீர் பெற்ற தாயிருக்க மணை வெந்நீராட்டுதீரோ? மாட்டாத தகவற்றீரே – ஸர்வேச்வரனை விடுத்து மற்ற பலரையும் தெய்வங்கள் என்று எண்ணிக் கொண்டாடும் உலகினரே! பெற்ற தாய் உள்ளபோது, அவளை விடுத்து மரப்பாச்சி பொம்மைக்கு வென்னீர் கொண்டு நீராட்டுவீர்களோ? அவனுக்குக் கைங்கர்யம் செய்ய இயலாதபடி அவன் கருணையைப் பெறாதவர்களே

**மூலம்** – ஸப்தர்ஷி ஸம்வாதத்திலும்

விஷ்ணும் ப்ரஹ்மண்யதேவேசம் ஸர்வலோக நமஸ்க்ருதம்
த்ரைலோக்ய ஸ்திதி ஸம்ஹார ஸ்ருஷ்டி ஹேதும் நிரீச்வரம்
ஆதாதாரம் விதாதாரம் ஸந்தாரம் ஜகத்குரும்
விஹாய ஸ பஜத்வந்யம் பிஸஸ்தைந்யம் கரோதி ய:

விஷ்ணுதர்மபரோ ந ஸ்யாத்விஷ்ணுதர்ம பராங்முக:
குதர்ம வ்ரதசீலஸ்ஸ்யாத் பிஸஸ்தைந்யம் கரோதி ய:

என்றும் சொல்லப்பட்டது. அந்யகீர்த்தநம் ஆகாதென்னுமிடத்தை “வாய் அவனையல்லது வாழ்த்தாது”, “சொன்னால் விரோதம்” இத்யாதிகளிலே அருளிச்செய்தார்கள். அந்யசிந்தநம் ஆகாதென்னுமிடத்தை “சிந்தை மற்றொன்றின் திறத்தல்லாத் தன்மை தேவபிரானறியும்” என்றும், “வருதேவர் மற்றுளரென்று என் மனத்து இறையும் கருதேன்” என்றும் அருளிச்செய்தார்.

**விளக்கம்** – ஸம்ப்தரிஷிகளில் உரையாடலில் இதிஹாஸ ஸமுச்சயம் (10-58, 59) - விஷ்ணும் ப்ரஹ்மண்யதேவேசம் ஸர்வலோக நமஸ்க்ருதம் த்ரைலோக்ய ஸ்திதி ஸம்ஹார ஸ்ருஷ்டி ஹேதும் நிரீச்வரம் ஆதாதாரம் விதாதாரம் ஸந்தாரம் ஜகத்குரும் விஹாய ஸ பஜத்வந்யம் பிஸஸ்தைந்யம் கரோதி ய: - யார் ஒருவன் தாமரைக் கிழங்கைத் திருடுகிறானோ (அவனுக்கான தண்டனை என்னவென்றால்) அவன், அந்தணர்களுக்கு நன்மையைச் செய்பவனும், தேவர்களை நியமிப்பவனும், அனைத்து உலகினராலும் வணங்கப்படுபவனும், மூன்று உலகங்களின் படைத்தல் – காத்தல் – அழித்தல் ஆகியவற்றுக்குக் காரணமானவனும், தன்னை நியமிக்க வேறு யாரும் இல்லாதவனும், இந்த உலகிற்கு ஆதாரமானவனும், உலகத்தைப் படைத்து அழிப்பவனும், உலகின் குருவும் ஆகிய விஷ்ணுவைத் தவிர்த்து வேறு தெய்வத்தை வணங்குவானாக (அதாவது மற்ற தெய்வங்களை வணங்குதலே தண்டனை என்று கருத்து) – என்றது காண்க. மேலும் இதிஹாஸ ஸமுச்சயம் (12-77) - யார் ஒருவன் தாமரைக் கிழங்கைத் திருடுகிறானோ (அவனுக்கான தண்டனை என்னவென்றால்) அவன், ஸர்வேச்வரனுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும் தர்மங்களைச் செய்யாதவனும், அந்தத் தர்மங்களை எண்ணாதவனும், தீய

தர்மங்களைச் செய்யும் ஸ்வபாவம் கொண்டவனாகவும் ஆகக்கடவன் – என்றதும் காண்க. அந்யகீர்த்தநம் (மற்ற தேவதைகளைக் குறித்துப் பேசுதல்) என்பது செய்யத்தகாத ஒன்று என்பதை முதல் திருவந்தாதி (11) - வாய் அவனையல்லது வாழ்த்தாது – என்னுடைய வாய் ஸர்வேச்வரனைத் தவிர யாரையும் புகழ்ந்து பேசாது – என்றும், திருவாய்மொழி (3-9-1) - சொன்னால் விரோதம் – ஸர்வேச்வரனைத் தவிர வேறு யாரையும் துதித்தல் தகாது – என்றும் கூறப்பட்டது. அந்யசிந்தநம் (மற்ற தேவதைகளை எண்ணுதல்)என்பது செய்யத்தகாத ஒன்று என்பதைக் கீழே உள்ள வரிகளில் காண்க:

- திருவாய்மொழி (7-10-10) - சிந்தை மற்றொன்றின் திறத்தல்லாத் தன்மை தேவபிரானறியும் – திருவாறன்விளையில் எழுந்தருளியுள்ள எம்பெருமானைத் தவிர வேறு எதிலும் புத்தி செய்யாத எனது ஸ்வபாவத்தை அவன் அறிவான்.

- பெரியதிருமொழி (8-10-2) - வருதேவர் மற்றுளரென்று என் மனத்து இறையும் கருதேன் – “நானே அண்டத்தக்கவன்” என்று கூறிக்கொண்டு வருகிற தெய்வம் வேறு ஒன்று உள்ளது என்று என் மனதால் சிறிதும் எண்ணமாட்டேன்.

## பகவத் ஆராதனத்தில் அதிகாரம் இல்லாதவர்களுக்கும் கைங்கர்யம் கைகூடும் விதம்

**மூலம்** – இஸ் ஸமாராதனாதி க்ரமங்களில் அநதிக்ருதர்க்கும் இக்காலங்கள் எல்லாவற்றிலும் தங்களுக்கு யோக்யமான நித்ய நைமித்திகங்களாலும் ஸங்கீர்த்தநாதிகளாலும் ஸமாராதனாதியோக்யரானபரமபாகவதருக்குப் பரதந்த்ரராய் யதாதிகாரம் வல்ல தேவை செய்து இக்கைங்கர்யம் இழவாதொழியலாம். இவ்வர்த்தத்தை

ஆராதநாநாம் ஸர்வேஷாம் விஷ்ணோராராதநம் பரம்
தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீயாராதநம் பரம்

என்றும், “குன்றமெடுத்த பிரான் அடியாரோடும் ஒன்றி நின்ற சடகோபனுரை செயல்” என்றும், “ஏத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சாத்தியிருப்பார் தவம்” என்றும்

அருளிச்செய்தார்கள். இக்கைங்கர்யங்களை அநுஷ்டித்து உகப்பார்க்கும் இதுகண்டு உகப்பார்க்கும் ஜகத்வ்யாபாரம் பண்ண அதிக்ருதனான ஈச்வரனுக்கும் முக்தருக்கும் போலே போகம் ஏகரூபம்.

தர்ம: ச்ருதோ வா த்ருஷ்டோ வா ஸ்ம்ருதோ வா கதிதோபி வா
அநுமோதிதோ வா ராஜேந்த்ர புநாதி புருஷம் ஸதா

என்கிறபாவநத்வம் போலே போக்யத்வமும் ஏகரூபமாகக் குறையில்லை.

**விளக்கம்** – இப்படியாக உள்ள பகவத் ஆராதனைகளைச் செய்வதற்குத் தகுதி இல்லாமல் சிலர் இருக்கலாம். இப்படிப்பட்டவர்கள் - தங்களுக்காக விதிக்கப்பட்ட நித்ய நைமித்திக கர்மங்களை சரிவர இயற்றியபடியும், ஸர்வேச்வரனை அவனது திருநாமங்கள் கொண்டு போற்றியபடியும், பகவத் ஆராதனைகளைச் செய்யும் தகுதி கொண்ட பரமபாகவதர்களுக்கு வசப்பட்டவர்களாக இருந்து அவர்களுக்கான கைங்கர்யங்களில் ஏற்ற உதவிகளைச் செய்தபடியும் இருந்தால் – பகவத் கைங்கர்யத்தை அவர்கள் இழப்பதில்லை. இதனைக் கீழே உள்ள பல வரிகளில் காணலாம்:

பாத்மோத்தரம் (29-81) - ஆராதநாநாம் ஸர்வேஷாம் விஷ்ணோராராதநம் பரம் தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீயாராதநம் பரம் – அனைத்து ஆராதனைகளிலும் மஹாவிஷ்ணுவின் ஆராதனை மிகவும் சிறந்தது. அதனைக் காட்டிலும் உயர்ந்த பாகவதர்களின் ஆராதனை என்பது மிகவும் சிறந்தது.

- திருவாய்மொழி (7-4-11) - குன்றமெடுத்த பிரான் அடியாரோடும் ஒன்றி நின்ற சடகோபனுரை செயல் – கோவர்த்தன மலையைத் திருக்கரத்தால் எடுத்து ஆயர்களைக் காப்பாற்றிய ஸர்வேச்வரனின் அடியார்களோடு எப்போதும் சேர்ந்தபடி உள்ள சடகோபனின் கைங்கர்யங்களை.

- நான்முகன் திருவந்தாதி (18) - ஏத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சாத்தியிருப்பார் தவம் – ஸர்வேச்வரனைத் துதித்தபடி உள்ளவர்களை, அவ்விதம் துதித்தபடி உள்ளவர்களை ஆராதிப்பவர்களின் தவம் வெல்லும்.

உலகைப் படைத்தல் போன்ற செயல்களுக்குக் காரணமாக உள்ள ஸர்வேச்வரனுக்கும், முக்தி அடைந்தவர்களுக்கும் பரமபதத்தில் உள்ள இன்பம் எவ்விதம் ஒரே போன்று உள்ளதோ அது போலவே – பகவத் கைங்கர்யத்தில் ஈடுபட்டவர்களுக்கும், அவர்கள் ஈடுபட்டுள்ளதைக் கண்டு மகிழ்பவர்களுக்கும் இன்பம் ஒரே போன்று உள்ளது. இவ்விதம் இருவருக்கும் ஒரே போன்ற இன்பமே கிட்டும் என்பதை மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வம் (96-31) - தர்ம: ச்ருதோ வா த்ருஷ்டோ வா ஸ்ம்ருதோ வா கதிதோபி வா அநுமோதிதோ வா ராஜேந்த்ர புநாதி புருஷம் ஸதா – அரசர்களில் உயர்ந்தவனே! ஒருவன் செய்த தர்மத்தைக் காண்பதும், அதனைக் குறித்துக் கேட்பதும், அதனை எண்ணுவதும், அதனைக் குறித்து மற்றவர்களிடம் உரைப்பதும், அதனைக் கண்டு மகிழ்வதும் ஆகிய செயல்களை ஒருவன் செய்யக்கூடும்; அவனை அந்தச் செயல்கள் தூய்மைப்படுத்தும் – என்று கூறியது போன்றே கொள்க.

## அனைவருக்கும் பகவத் நினைவு ஏற்படுதல்

**மூலம்** – அப்படியே தஸ்மாத் ஸப்ரணவம் சூத்ரோ மந்நாமாநி ந கீர்த்தயேத் என்று மஹாபாரதத்திலும், அஷ்டாக்ஷரஜப: ஸ்த்ரீணாம் ப்ரக்ருத்யைவ விதீயதே ந ஸ்வர: ப்ரணவ: அங்காநாப்யந்யவிதயஸ்ததா ஸ்த்ரீணாம் து சூத்ரஜாதீநாம் மந்த்ரமாத்ரோக்திரிஷ்யதே என்று நாரதீயாதிகளிலும், நமோ நாராயணேத்யுக்த்வா ஸ்வபாக: புநராகமத் என்று ஸ்ரீவராஹ புராணத்திலும், “வாயினால் நமோ நாராயணாவென்று மத்தகத்திடைக் கைகளைக் கூப்பி” என்றும், “நாமம் சொல்லில் நமோ நாராயணமே” என்றும் சொல்லுகிறபடியே திருமந்த்ரமாகிற எட்டுக் கண்ணனான கரும்பிலே வேர்ப்பற்றும் தலையாடையும் கழிந்தால் நடுவுள்ள அம்சம் ஸர்வோபஜீவ்யமாகிறாற்போலே ப்ரபத்திநிஷ்டர் எல்லார்க்கும் ஸர்வ காலத்திலும் பகவதநுஸ்மரண ரஸத்துக்கும் விரோதமில்லை. ஸபரிகரமான விலக்ஷண பக்தியோகமாகிலிறே சிலர்க்கு விரோதமுள்ளது. க்ஷணமாத்ர ஸாத்யமான ப்ரபதநம் ஸித்தமானவளவிலும் த்வயமர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா என்று சரண்யன் அருளிச்செய்தானிறே. ஆகையால் த்யேயோ நாராயண: ஸதா என்றதுவும் யதாதிகாரம்

சிலர்க்கு உபாயமாகவும் சிலர்க்குப் பலமாகவும் கொள்ளுகையால் இது ஸ்வதந்த்ர ப்ரபத்திக்கு விருத்தமன்று.

**விளக்கம்** – எட்டுக் கணுக்களுடன் கூடிய கரும்பின் தலைப்பகுதியையும், வேர்ப்பாகத்தையும் வெட்டிய பின்னர் அது அனைவராலும் சுவைத்து உண்ணக் கூடியதாக உள்ளது. இது போன்றே திருமந்த்ரத்தில் உள்ள ப்ரணவப் பக்தி (ஓம்) மற்றும் இறுதியில் உள்ள "ஆய" என்னும் பகுதி (நாராயணாய என்பதில் உள்ள ஆய) என்பதை நீக்கிய பின்னர், அந்தத் திருமந்த்ரமானது அனைவராலும், அனைத்து காலத்திலும் ஏற்கப்படக்கூடியதாக, ப்ரபந்நர்கள் என்னும் அனைவருக்கும் பகவத் அனுபவம் என்னும் ரஸத்தை அளிப்பதாகவே உள்ளது. கீழே உள்ள பல வரிகளில் ப்ரணவம் மற்றும் நான்காம் வேற்றுமையான "ஆய" என்ற இரண்டும் இல்லாமல் திருமந்த்ரம் உச்சரிப்பது குறித்து கூறப்படுவது காண்க:

- மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வம் (118-14) - தஸ்மாத் ஸப்ரணவம் சூத்ரோ மந்நாமாநி ந கீர்த்தயேத் – ஆகவே சூத்திரன் என்னுடைய நாமங்களை ப்ரணவத்துடன் சேர்த்து உச்சரித்தல் கூடாது.

- நாரதீயம் - அஷ்டாக்ஷரஜப: ஸ்த்ரீணாம் ப்ரக்ருத்யைவ விதீயதே ந ஸ்வர: ப்ரணவ: அங்காநாப்யந்யவிதயஸ்ததா ஸ்த்ரீணாம் து சூத்ரஜாதீநாம் மந்த்ரமாத்ரோக்திரிஷ்யதே – எட்டு எழுத்து கொண்டதான மூல மந்த்ரத்தின் ஜபம் என்பது பெண்களுக்கு நான்காம் வேற்றுமை உருபு இல்லாமல் (ஆய என்னும் விகுதி) செய்யப்படவேண்டும் என்று விதி உள்ளது. இது போன்றே அவர்களுக்கு ப்ரணவம், அங்கந்யாஸம் போன்றவையும் விதிக்கப்படவில்லை. பெண்கள் மற்றும் சூத்திரர்கள் ஆகியோர் வெறும் மந்த்ரத்தை உரைப்பது மட்டுமே ஜபம் என்று கொள்ளப்பட்டது.

- ஸ்ரீவராஹபுராணம் (135 – 53) - நமோ நாராயணேத்யுக்த்வா ஸ்வபாக: புநராகமத் – "நமோ நாராயணா" என்று உச்சரித்தபடி, நாயின் மாமிசத்தை உண்ணும் பிறவியில் பிறந்த நம்பாடுவான் மீண்டும் நம்மிடம் வந்தான்

- பெரியாழ்வார் திருமொழி (4-5-2) - வாயினால் நமோ நாராயணாவென்று மத்தகத்திடைக் கைகளைக் கூப்பி – "நமோ நாராயணா" என்று வாயினால் உச்சரித்தபடியும், கைகளைத் தலைக்கு மேலே உயர்த்தி கூப்பியபடியும்

- பெரியாழ்வார் திருமொழி (6-10-1) - நாமம் சொல்லில் நமோ நாராயணமே – ஸர்வேச்வரனின் திருநாமம் உரைத்தால் "நமோ நாராயணா" என்று கூறவேண்டும்.

பக்தியோகம் மட்டுமே ஒரு சிலருக்கு ஏற்கப்படாததாக உள்ளது. ப்ரபத்தி என்பது அதனைக் கைக்கொள்ளும்போது ஒரு சில நொடிகளே ஆனாலும், சரணாகதி கத்யத்தில் - த்வயமர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா – எப்போதும் நீவிர் த்வய மந்த்ரத்தை அதன் பொருளுடன் எண்ணியபடியே இருப்பீராக – என்று அனைவராலும் சரணம் புக ஏற்றவனாகிய ஸ்ரீரங்கநாதன் அருளிச்செய்தான் அல்லவோ? ஆகவே த்யேயோ நாராயண: ஸதா – எப்போதும் நாராயணனையே த்யானித்தபடி இருக்கவேண்டும் – என்று கூறும் விதியானது ஒரு சிலருக்கு உபாயம் என்றும், ஒரு சிலருக்கு பலன் என்றும் கொள்ளவேண்டும். ஆகவே இது ப்ரபத்திக்கு விரோதம் அல்ல.

### ப்ரபத்திக்கு உள்ள இரண்டு நிலைகள் (ஸ்வதந்த்ர நிலை, அங்க நிலை)

**மூலம்** – இப் ப்ரபத்தி அங்கமான வேஷத்தை பாஷ்யாதிகளிலே உதாஹரித்தருளினார். ஸ்வதந்த்ரமான வேஷத்தை கத்யத்திலே அருளிச்செய்தார். க்லேசாநாம் ச க்ஷயகரம் யோகாதந்யந்ந வித்யதே ந கர்மணாம் க்ஷயோ பூய ஜந்மநாமயுதைரபி ருதே யோகாத்கர்ம கக்ஷம் யோகாக்நி: க்ஷபயேத் பரம் இத்யாதிகளும் ஸ்வதந்த்ர ப்ரபத்தி விதிபலத்தாலே அதிகார்யந்தர விஷயங்களாகக் கடவன. இப்படி ஸாத்யோபாய விஷயமாக மற்றும் பிறக்கும் கலக்கங்களுக்குப் பரிஹாரம் நிக்ஷேபரக்ஷையில் கண்டு கொள்வது.

**விளக்கம்** – ப்ரபத்தியானது பக்தியோகத்துக்கு அங்கமாக உள்ளது என்பதை உடையவர் ஸ்ரீபாஷ்யத்தில் அருளிச்செய்தார். அதே ப்ரபத்தி என்பது தானாகவே ஓர் உபாயமாகவும் உள்ளது என்பதை உடையவர் கத்யத்தில் அருளிச்செய்தார். கீழே உள்ள பல வரிகளில் மற்ற யோகங்கள் உபாயமாகக் கூறப்பட்டபோதிலும், ப்ரபத்தி என்பது தானாகவே நேரடி

உபாயமாகவும், தான் ஓர் உபாயத்தின் அங்கமாகவும் இருப்பதால், மேலே கூறப்பட்ட வரிகளில் உள்ள யோகங்கள் அவற்றுக்குத் தகுதியானவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று அறியவேண்டும்:

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-7-20) - க்லேசாநாம் ச க்ஷயகரம் யோகாதந்யந்ந வித்யதே – அவித்யை போன்ற சோகங்களை நீக்கவல்லது யோகத்தைத் தவிர வேறு ஏதும் இல்லை.

- ஸ்ரீவிஷ்ணுதர்மம் (102-4) - ந கர்மணாம் க்ஷயோ பூய ஜந்மநாமயுதைரபி ருதே யோகாத்கர்ம கக்ஷம் யோகாக்நி: க்ஷபயேத் பரம் – பதினாயிரம் பிறவிகள் எடுத்தாலும் யோகம் இன்றி கர்மங்களை அழிக்க இயலாது. யோகம் என்னும் அக்னியே, கர்மம் என்னும் அடர்ந்த புல்லை அழிக்கவல்லது.

இப்படியாக ஸாத்யோபாயமான பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகியவை குறித்து எழுகின்ற ஐயங்களை நீக்கிக் கொள்ள நிக்ஷேபரக்ஷையைக் காண்க.

## ரஹஸ்யத்ரயத்தில் ஸாத்யோபாயம் கைக்கொள்ளப்படவேண்டும்

**மூலம்** – இஸ் ஸாத்யோபாயம் இங்கு சோதிதமான கட்டளையிலே ரஹஸ்யத்ரயத்தில் யதாஸ்தாநம் அநுஸந்தேயம்.

**விளக்கம்** – இந்த அத்யாயத்தில் கூறப்பட்ட ஸாத்யோபாயத்தை ரஹஸ்யத்ரயத்தை எங்கெல்லாம் எண்ணுகிறோமோ, அங்கெல்லாம் கைக்கொள்ளவேண்டும்.

வரிக்கின்றனன் பரன் யாவரை யென்று மறையதனில்
விரிக்கின்றதுங் குறியொன்றால் வினையரை யாதலினாம்
உரைக்கின்ற நன்னெறி யோரும் படிகளிலோர்ந்துலகம்
தரிக்கின்ற தாரகனார் தகவால் தரிக்கின்றனமே

**பொருள்** – ஸர்வேச்வரன் கர்மபந்தங்களில் சிக்குண்ட ஜீவன்களில், ஒரு சிலரை மட்டும் தன்னுடைய கருணைக்குப் பாத்திரமாகும்படியாகத் தேர்ந்தெடுப்பதாக அவனைக் குறித்து விரிவாக உரைக்கும் ச்ருதிகள் கூறுகின்றன. ஆனால் அவன் இவ்விதம் தேர்ந்தெடுப்பதும் ஒரு சில காரணங்களைப் பற்றியே ஆகும். ஆகவே சாஸ்த்ரங்கள் கூறுகின்ற பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகிய சிறந்த உபாயங்கள், அந்தச் சாஸ்த்ரங்கள் கூறுவது போன்றே அவைகள் ஈச்வரனின் கருணையை வசீகரம் செய்யக்கூடியவை என்றும், அவற்றால் வசீகரிக்கப்படும் ஈச்வரனே சிறந்த உபாயம் என்றும் நாம் தெளிகிறோம். இதனால்தான், அனைத்து உலகங்களையும் தாங்கி நிற்கும் ஸர்வேச்வரனின் கருணையால் நாம் பிழைக்கிறோம்.

தத்தத் ஹைதுகஹேதுகே க்ருததீய: தர்க்க இந்த்ரஜால க்ரமே
விப்ராணா: கதக ப்ரதாந கணநே நிஷ்டாம் கநிஷ்டாச்ரயாம்
அத்யாத்ம ச்ருதி ஸம்ப்ரதாய கதகைரத்தா விசுத்தாசயா:
ஸித்தோபாய வசீக்ரியாமிதி ஹி ந: ஸாத்யாம் ஸமத்யாபயந்

**பொருள்** – அந்தந்த அறிவுள்ளவர்களின் தர்க்கவாதங்கள் என்னும் இந்த்ரஜால வித்யைகளில் இருந்து காப்பாற்றப்பட்ட புத்தியை உடையவர்களும், வாதம் செய்பவர்களில் முக்கியமானவர்கள் யார் என்று எண்ணும்போது சுண்டுவிரலை ஆதாரமாகக் கொண்ட இருப்பை உடையவர்களும், வேதாந்த சாஸ்த்ரங்களுடைய ஸம்ப்ரதாயம் என்னும் தேத்தாங்கொட்டைகளால் (இது நீரைத் தெளிய வைப்பதாகும்) நன்றாகவும் கலக்கம் ஏதும் இன்றியும் தெளிந்த மனம் கொண்டவர்களும் ஆகிய நம்முடைய ஆசார்யர்கள் செய்தது என்ன? ஸித்தோபாயமான ஸர்வேச்வரனை வசப்படுத்துவதற்குக் காரணமாக உள்ள பக்தி மற்றும் ப்ரபத்திகளை இந்த அதிகாரத்தில் உரைத்தபடி நமக்கு நன்றாக உபதேசித்தனர்.

## ஸாத்யோபாயசோதநாதிகாரம் ஸம்பூர்ணம்

# 25. ப்ரபாவவ்யவஸ்தாதிகாரம்

ஸ்வரூபம் யத்யாத்ருக் குண விபவ லீலாதி ச விபோ:
ததாஜ்ஞாஸேதுச்ச ச்ருதிபிரவஸேயம் தககிலம்
ததா தத்பக்தாநாம் ததுபஸதநாதேச்ச மஹிமா
யதா அதீதம் ஸத்பிர்யதிபதிமுகை: அத்யவஸித:

**பொருள்** – ஸர்வேச்வரனின் ஸ்வரூபம் என்ன? அது எப்படிப்பட்டது? அவனுடைய குணங்கள், விபூதிகள், லீலைகள், திருமேனி ஆகியவை எவை, அவை எப்படிப்பட்டவை? பல்வேறு வர்ணங்களும், ஆச்ரமங்களும் எவை, அவற்றின் தர்மங்கள் எவை – போன்ர பலவற்றையும் வேதங்களால் உள்ளது உள்ளபடி அறியவேண்டியதாகும். இது போன்றே பகவானின் அடியார்கள், பகவானை அடையும் உபாயங்களான பக்தி போன்றவை ஆகியவற்றின் மேன்மைகள் என்ன என்பதை சாஸ்த்ரங்களில் கூறப்பட்டது போன்றே நம்முடைய பூர்வாசார்யர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

## முன்னுரை

**மூலம்** – இப்படி த்வயத்தில் த்வதீயாந்தபதங்களாலே ப்ரகாசிதமான ஸித்தோபாய விஷயமாகவும், ஆக்யாதபதத்தாலே சொல்லப்பட்ட ஸாத்யோபாயவிஷயமாகவும் பிறக்கும் வ்யாகுலங்கள் சமிப்பிக்கும் வழி காட்டினோம். இவ் உபாயப்ரபாவ விஷயமாக ப்ரமாணங்கள் காட்டினவளவுக்கு ஏற நினைத்தும் குறைய நினைத்தும் வரும் கலக்கங்கள் சமிப்பிக்க வேணும்.

**விளக்கம்** – இப்படியாக த்வய மந்த்ரத்தில் உள்ள இரண்டாம் வேற்றுமையுடன் கூடிய சொற்கள் (சரணௌ, சரணம்) மூலமாக உண்டாகின்ற ஸித்தோபாயம் குறித்த ஐயங்களும், ஸாத்யோபாய (ப்ரபத்தி) குறித்து ப்ரபத்யே என்னும் பதம் மூலமாக உரைக்கப்படும் விஷயங்களில் உள்ள ஐயங்களும் நீக்கப்பட்டன. இனி உபாயங்களுக்கு ப்ரமாணங்களில் காட்டப்பட்டதைக் காட்டிலும் சிலர் அதிகமாகவும், சிலர் குறைவாகவும் முக்கியத்வம் உள்ளதோ என்று சந்தேகம் கொள்கிறார்கள். இதனைப் போக்குவோம்.

## உபாயநிஷ்டரின் பெருமைகள்

**மூலம் –**

ஆஸ்போடயந்தி பிதர: ப்ரண்ருத்யந்தி பிதாமஹா:
வைஷ்ணவோ ந: குலே ஜாத: ச நஸ்ஸந்தாரயிஷ்யதி என்றும்,

“கேசவன் தமர் கீழ்மேலெமரேழு பிறப்பும் மாசதிரிது பெற்று” என்றும் சொல்லுகிறபடியே அநுபந்திகளுக்கும் உத்தாரகமான ப்ரபாவத்தையுடையனாயிறே இவ்வுபாய நிஷ்டன் இருப்பது. யோ ஹ்யேநம் புருஷம் வேத தேவா அபி ந தம் விது: என்று பகவத் ஞானமுடையவனுடைய ப்ரபாவம் தேவர்களாலும் பரிச்சேதிக்கவொண்ணா தென்றார்களிறே. ஆனாலும் இதுக்கு விருத்தமல்லாத ப்ரமாணபலத்தாலே முற்பட ஜாதி வ்யவஸ்தை சொல்லுகிறோம்.

**விளக்கம்** – கீழே உள்ள வரிகளில் கூறுவது போன்று தன்னைச் சேர்ந்தவர்களையும் உய்விப்பதான ப்ரபாவம் கொண்டவனாகவே பக்தி, ப்ரபத்தி போன்ற உபாயங்களில் இழிந்த ஒருவன் உள்ளான்:

- ஸ்ரீவராஹபுராணம் - ஆஸ்போடயந்தி பிதர: ப்ரண்ருத்யந்தி பிதாமஹா: வைஷ்ணவோ ந: குலே ஜாத: ச நஸ்ஸந்தாரயிஷ்யதி – பித்ருக்களும், பிதாமஹர்களும், “நம்முடைய குலத்தில் விஷ்ணுபக்தன் ஒருவன் பிறந்துள்ளான், அவன் நம்மை கரையேற்றுவான்”, என்று தங்கள் தோள்களைத் தட்டியபடி ஆடுகிறார்கள்.

- திருவாய்மொழி (2-7-1) - கேசவன் தமர் கீழ்மேலெமரேழு பிறப்பும் மாசதிரிது பெற்று – எனது குலத்தில் பிறந்தவர்களில் கீழே உள்ள ஏழு தலைமுறைகள், மேலே உள்ள ஏழு தலைமுறைகள் ஸர்வேச்வரனின் அடியார்களாக உள்ளனர். இதனை நாம் அரிதாகப் பெற்றோம்.

இது போன்று ஸர்வேச்வரனைக் குறித்த ஞானம் உள்ளவனுடைய மேன்மையைப் பற்றி தேவர்களாலும் கூற இயலாது என்பதை மஹாபாரதம் வனபர்வம் (160-21) - யோ ஹ்யேநம் புருஷம் வேத தேவா அபி ந தம் விது: - யார் ஒருவன் க்ருஷ்ணனை உள்ளபடி அறிகிறானோ, அப்படிப்பட்ட பக்தனுடைய மேன்மையை நித்யஸூரிகளும் எந்த அளவு என்று அறியமாட்டனர் – என்றது காண்க. ஆனாலும் இப்படிப்பட்ட மேன்மைக்கு குலத்தின் (ஜாதியின்) வாயிலாக உள்ள எல்லையை நாம் மேலே கூறப்பட்ட வரிகளுக்கு முரணாகாமல் உள்ள ப்ரமாணங்களால் இப்போது காட்டுவோம்.

## ஜாதி, குலம் குறித்த விளக்கம், ஜாதி நீங்காமை

**மூலம் –**

ந சூத்ரா பகவத்பக்தா விப்ரா பாகவதா: ஸ்ம்ருதா:
ஸர்வவர்ணேஷு சூத்ரா யே ஹ்யபக்தா ஜநார்த்தனே

என்று பகவத்பக்தியாகிற குணவிசேஷ ஸதஸப்தாவங்களாலே அபக்ருஷ்ட ஜாதீயரை உத்க்ருஷ்ட ஜாதீய வாசக சப்தத்தாலே சொல்லியும், உத்க்ருஷ்ட ஜாதீயரை அபக்ருஷ்ட ஜாதீய வாசக சப்தத்தாலே சொல்லியும் இருந்தது. இதடியாக பகவத்பக்தரெல்லாரும் ஏகஜாதியரன்றோ என்று ம்ருதுப்ரஜ்ஞர்கள் நினைப்பர்கள். இங்ஙனேயாகில் பாகவத ப்ராஹ்மணன் இன்னபடியே வர்த்திப்பான், பாகவத சூத்ரன் இன்னபடியே வர்த்திப்பான் என்று ஆசார நியமங்கள் சொல்லும் ஸர்வசாஸ்த்ரங்களும் விரோதிக்கும். கேவல ப்ராஹ்மணனுக்கும் கேவல சூத்ரனுக்குமுள்ள எல்லை பாகவத ப்ராஹ்மணனுக்கும் பாகவத சூத்ரனுக்கும் கொள்ளவேணுமென்றும், இவர்களை ஸமரென்கிற சாஸ்த்ரங்களும் பரமபுருஷார்த்த ஸாம்யாதிகளாலே என்றும் கிடாம்பி அப்புள்ளார் அருளிச்செய்தார்.

**விளக்கம்** – மஹாபாரதம் - ந சூத்ரா பகவத்பக்தா விப்ரா பாகவதா: ஸ்ம்ருதா:ஸர்வவர்ணேஷு சூத்ரா யே ஹ்யபக்தா ஜநார்த்தனே – பகவானிடம் பக்தி கொண்ட சூத்ரர்கள் சூத்ரர்கள் அல்லர்; அவர்கள் பாகவதர்களான ப்ராஹ்மணர்களே ஆவர்; அனைத்து ஜாதியிலும் யாருக்கு ஜனார்த்தனனிடம் பக்தி இல்லையோ அவர்கள்

சூத்ரர்களே ஆவர் – என்றது காண்க. இப்படியாக பகவானிடம் கொண்ட பக்தி, பக்தி இல்லாத தன்மை ஆகியவை மூலம் தாழ்ந்த குலத்தவர்களை உயர்ந்த குலம் என்றும், உயர்ந்த குலத்தினரை தாழ்ந்த குலம் என்றும் கூறியதைக் காணலாம். ஆனால் மந்தமான அறிவு கொண்டவர்கள், "பகவானிடம் பக்தி கொண்டவர்கள் அனைவரும் ஒரே குலம் அல்லவோ?" என்று கேட்கலாம். இவ்விதம் கொண்டால், "ஸர்வேச்வரனின் பக்தனாக உள்ள ப்ராஹ்மணன் இவ்விதம் நடந்துகொள்வான், ஸர்வேச்வரனின் பக்தனாக உள்ள சூத்ரன் இவ்விதம் நடந்துகொள்வான்", என்று அவரவர்களுக்கு உரிய நடத்தை குறித்துக் கூறுகின்ற அனைத்து சாஸ்த்ரங்களும் விரோதமாகிவிடும். பகவத் பக்தி இல்லாத ப்ராஹ்மணன் மற்றும் பகவத் பக்தி இல்லாத சூத்ரன் ஆகியோருக்கு இடையில் உள்ள வேறுபாடு என்பது, பகவத் பக்தி உள்ள ப்ராஹ்மணன் மற்றும் பகவத் பக்தி உள்ள சூத்ரன் ஆகியோருக்கு இடையிலும் உள்ளது என்று புரிந்து கொள்ளவேண்டும். அவர்கள் இருவரும் ஸமம் என்று கூறுகின்ற சாஸ்த்ரங்கள் அனைத்தும், அவர்களுடைய பலனாகிய மோக்ஷம் என்பது ஸமம் என்பதை மட்டுமே உணர்த்துகின்றன. இதனை கிடாம்பி அப்புள்ளார் அருளிச்செய்துள்ளார்.

**மூலம்** – "குலம் தரும்" என்கிற பாட்டுக்கு வ்யாக்யானம் பண்ணின அபியுக்தரும் – ஜந்மத்தால் வ்ருத்தத்தால் குறைந்தான் ஒருத்தனுக்கு பகவத்ஸம்பந்தமுண்டானாலும் அவனை இவையுடையான் ஒருத்தன் தாழ நினைக்கக் கூச வேண்டும்படியாயிற்று பகவத்ப்ரபாவமிருக்கும்படி; ஆனால் அவர்களோடு பெண் கொடுத்துக் கொள்ளுகிறதில்லையே என்னில் அது ஜாதி நிபந்தனம் ச்லோகை குணநிபந்தனை என்று நிஷ்கர்ஷித்தார்கள். "குலம் தரும்" என்றதுவும், "பண்டைக் குலத்தைத் தவிர்ந்து" என்றதுவும் தொண்டக்குலத்தில் உத்கர்ஷம் சொன்னபடி. தேவதாந்தராதி ஸங்கீர்ண குலமன்றே இவனது.

மா ஜநிஷ்ட ஸ நோ வம்சே ஜாதோ வா த்ராக்விபத்யதாம்
ஆஜந்ம மரணம் யஸ்ய வாஸுதேவோ வ தைவதம்

என்றிறே ஏகாந்தி குலத்தின் பாசுரம். இப்படி வேறொரு குலமானாலும் ஜாதி சப்தமும் குல சப்தமும் பிந்நார்த்தமாகவும் ப்ரயுக்தமாகையாலே ஜாதி பேதியாது; குலம் பேதிக்கும், திரு ஸுரபியானாலும் கோத்வம் கழியாதிறே.

**விளக்கம்** – பெரியதிருமொழி (1-1-9) – குலம் தரும் – நாராயண என்னும் திருநாமம் உயர்ந்த குலத்தை அளிக்கும் – என்னும் பாசுரத்திற்கு வ்யாக்யானம் அருளிச்செய்த ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை, "தனது குலம், செயல்பாடுகள் ஆகியவற்றால் மிகவும் தாழ்ந்த ஒருவனுக்கு பகவத் ஸம்பந்தம் உண்டாகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது இவற்றால் உயர்ந்தவன் ஒருவன், அவனைத் தாழ்வாக நினைப்பதற்குக் கூட கூசுவான். இதற்குக் காரணம் பகவத் ப்ரபாவமே ஆகும். ஆனால் இதனையே காரணமாக வைத்து இருவருக்கும் இடையே பெண்கொடுத்தல் போன்ற ஸம்பந்தங்களுக்கு சாஸ்த்ரம் இடம் அளிப்பதில்லை. திருமணம் போன்றவை ஜாதியை அடிப்படையாகக் கொண்டவை; புகழ்வது என்பது நல்ல குணங்களை அடிப்படையாகக் கொண்டவை", என்றது காண்க. பெரியதிருமொழி (1-1-9) – குலம் தரும், திருப்பல்லாண்டு (5) - பண்டைக் குலத்தைத் தவிர்ந்து – பழைய குலத்தை நீக்கி – என்பதான பாசுரங்கள் அடியார்களின் குலத்தைப் புகழ்வதாக மட்டுமே உள்ளன. அதாவது இந்தப் பாசுரங்களில் கூறப்பட்ட வைஷ்ணவ குலம் என்பது, நாராயணனை அல்லாமல் மற்ற எந்த தேவதைகளுடனும் கலந்த குலம் அல்ல என்பதே இங்கு கூறப்பட்டதாகும். வராஹபுராணம் - மா ஜநிஷ்ட ஸ நோ வம்சே ஜாதோ வா த்ராக்விபத்யதாம் ஆஜந்ம மரணம் யஸ்ய வாஸுதேவோ வ தைவதம் – யார் ஒருவனுக்கு பிறப்பு முதல் இறப்பு முடிய வாஸுதேவன் தெய்வம் அல்லவோ, அவன் நம்முடைய குலத்தில் பிறக்கவேண்டாம்; அப்படியே பிறந்தாலும் அவன் விரைவாக மரணம் அடையட்டும் – என்று அல்லவோ பகவானிடம் மட்டுமே பக்தி கொண்டவர்கள் குறித்துக் கூறப்படுகிறது. ஒரு சில இடங்களில் குலம், ஜாதி ஆகிய இரண்டு சொற்களும் வெவ்வேறு பொருளில் உபயோகப்பட்டுள்ளன; (குலம் என்பது வைஷ்ணவகுலம் என்னும் பொருளிலும், ஜாதி என்பது அந்தண ஜாதி என்னும் பொருளிலும் உள்ளது) ஆகவே ஜாதி மாறக்கூடியதல்ல, குலம் மாறக்கூடியது. கோயிலில் உள்ள பசுவாக இருந்தாலும் அது பசு என்பது மாறாது அல்லவோ?

**மூலம்** – மஹர்ஷிகளும், ஸ சூத்ரா இதி மந்தவ்ய: இத்யாதிகளிற்படியே ப்ரதிபத்தி விசேஷங்களைப் பற்ற உத்க்ருஷ்டர் பக்கல் அபக்ருஷ்ட சப்தமும், அபக்ருஷ்டர் பக்கல் உத்க்ருஷ்டர் சப்தமும் ப்ரயோகித்தார்களித்தனை. ஆகையால் பகவத் பக்தரல்லாத ப்ராஹ்மணர் சூத்ரர்களைப் போலே அநாதரணீயரென்றும், பகவத் பக்தரான சூத்ரர்கள் ப்ராஹ்மணரைப் போலே ச்லாகநீயரென்றும் சாஸ்த்ர தாத்பர்யம். இங்ஙனல்லாதபோது,

சண்டாளமபி வ்ருத்தஸ்தம் தம் தேவோ ப்ராஹ்மணம் விது:

சண்டாள: ப்ரத்யவஸிதா: பரிவ்ராஜக தாபஸா:

ந தேந வ்ருத்தோ பவதி யேநாஸ்ய பலிதம் சிர:
பாலோபி ய: ப்ரஜாநாதி தம் தேவா: ஸ்தவிரம் விது:

என்று இப்புடைகளிலே நிந்தா ப்ரசம்ஸை பண்ணுகிற வாக்யங்களைக் கொண்டு ஸர்வமர்யாதைகளும் கலங்கும்படியாம். ஆன பின்பு

ப்ரதிபத்தி விசேஷார்த்தம் அந்யத்ராந்யத்வ கீர்த்தநம்
விசேஷவிதி ஸாகாங்க்ஷா: தத்ர தத்தத் ப்ரவ்ருத்தய:

என்று இங்குற்றைக்கும் ஸமாதானம்.

**விளக்கம்** – மஹரிஷிகளும் பாரமேஷ்ட்ய ஸம்ஹிதை - ஸ சூத்ரா இதி மந்தவ்ய: - நெற்றியில் குறுக்காக புண்ட்ரம் இடுபவன் சூத்ரனாகக் கொள்ளப்படுவான் – என்பது போன்ற வரிகள் மூலமாக, உயர்ந்த குலத்தில் பிறந்தவனைத் தாழ்ந்தவன் என்றும், தாழ்ந்த குலத்தில் பிறந்தவனை உயர்ந்தவன் என்றும் கூறியதைக் காணலாம். ஆகவே பகவத் பக்தி இல்லாத ப்ராஹ்மணனை சூத்ரன் போன்று தாழ்ந்தவனாகவே கொள்ளவேண்டும் என்றும், பகவத் பக்தி கொண்ட சூத்ரனை அந்தணர்கள் போன்று உயர்ந்தவர்களாகவே கொள்ளவேண்டும் என்றும் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன என்றாகிறது. இவ்விதம் கொள்ளவில்லை என்றால், இப்படிப்பட்ட வரையறைகளைக் கூறுவதான கீழே உள்ள பல வாக்கியங்களும் முரணாக ஆகிவிடும்:

- மஹாபாரதம் (ஆச்வமேதிக பர்வம் – 116-8) - சண்டாளமபி வ்ருத்தஸ்தம் தம் தேவோ ப்ராஹ்மணம் விது: - தன்னுடைய ஒழுக்கங்களைப் பின்பற்றும் சண்டாளனை, அந்தணன் என்றே தேவர்கள் அறிகின்றார்கள்.

- தக்ஷஸ்ம்ருதி (4-20) - சண்டாளா: ப்ரத்யவஸிதா: பரிவ்ராஜக தாபஸா: - ஸந்ந்யாஸிகள் மற்றும் வாநப்ரஸ்தர்கள் தங்களுடைய ஒழுக்கத்திலிருந்து தவறினால் சண்டாளர்களே ஆவர்.

- மநு ஸ்ம்ருதி (2-156) - ந தேந வ்ருத்தோ பவதி யேநாஸ்ய பலிதம் சிர: பாலோபி ய: ப்ரஜாநாதி தம் தேவா: ஸ்தவிரம் விது: - தலை நரைத்தால் மட்டுமே ஒருவன் கிழவன் என்றாவதில்லை; சிறந்த ஞானம் கொண்ட சிறுவனைக் கூட கிழவன் என்றே தேவர்கள் கொள்கிறார்கள்.

மேலே உள்ள பலவற்றுக்கும் ஸமாதானம் - ப்ரதிபத்தி விசேஷார்த்தம் அந்யத்ராந்யத்வ கீர்த்தநம் விசேஷவிதி ஸாகாங்க்ஷா: தத்ர தத்தத் ப்ரவ்ருத்தய: - ஒரு குலத்தைச் சேர்ந்த ஒருவனை, மற்றொரு குலத்தைச் சேர்ந்தவனாகப் புகழ்ந்து கூறுவது ஏனென்றால், அவ்விதம் அவனை எண்ணவேண்டும் என்பதற்காகவே ஆகும்; ஆனால் அவனை நமஸ்கரித்தல் போன்றதான செயல்களுக்குத் தனித்தனி விதிகள் உள்ளன – என்பதாகும்.

## விதுரர் குறித்த ஐயங்களுக்கு விளக்கம்

**மூலம்** – ஸ்ரீவிதுரரும் ஸ்வஜாத்யநுரூபமாக விவாஹாதிகள்பண்ணினார்கள்.

பக்தவத்ஸு த்விஜாக்ரயேஷு நிஷண்ணா: பரமாஸநே
விதுராந்நாநி புபுஜே சுசீநி குணவந்தி ச

என்று இதனைக் கேட்டுத் துர்யோதநன்

பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய மாம் சைவ மதுஸூதந
கிமர்த்தம் புண்டரீகாக்ஷ புக்தம் வ்ருஷள போஜநம் என்று கேட்க,

த்விஷதந்நம் ந போக்தவ்யம் நைவ போஜயேத்
பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம ப்ராணா ஹி பாண்டவா:

என்று உத்தரம் அருளிச்செய்கையாலே ஸ்ரீவிதுரருக்குத் துர்யோதநன் சொன்ன ஜாதி விசேஷத்தை பகவான் இசைந்தானாயிற்று. ஆனால், ப்ராஹ்மணர்க்கும் க்ஷத்ரியர்க்கும் சூத்ரனுடைய பக்வாநத்தை புஜிக்கை நிஷித்தமன்றோ என்னில், ஆர்யாதிஷ்டிதா சூத்ரா அந்நஸம்ஸ்கர்த்தாரஸ்ஸ்யு: என்று ஆபஸ்தம்பாதிகள் சொல்லுகிறபடியே யுகாந்தரங்களில் ஆர்யபரதந்த்ரரான அவ்விடத்தில் நிஷேதமில்லை. இது சுசிஸ்து ப்ரயதோ பூத்வா விதுரோந்நமுபஹாரத் என்று ஸ்ரீவிதுரருடைய குணவிசேஷங்கள் சொல்லுகையாலே ஸூசிதம்.

**விளக்கம்** – விதுரர் தன்னுடைய ஜாதிக்கு ஏற்றபடியே திருமணம் செய்துகொண்டார். மஹாபாரதம் உத்யோகபர்வம் (76-45) - பக்தவத்ஸு த்விஜாக்ரயேஷு நிஷண்ணா: பரமாஸநே விதுராந்நாநி புபுஜே சுசீநி குணவந்தி ச – அந்தணர்களின் உயர்ந்தவர்கள் உணவு உட்கொண்ட பின்னர், மிகவும் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருந்த க்ருஷ்ணன், தூய்மையான குணம் கொண்டதான விதுரரின் உணவை உட்கொண்டான் – என்றது காண்க. இந்தச் செய்தியைக் கேட்ட துரியோதனன், க்ருஷ்ணனிடம் பாரதஸாவித்ரீ (13) - பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய மாம் சைவ மதுஸூதந கிமர்த்தம் புண்டரீகாக்ஷ புக்தம் வ்ருஷள போஜநம் – தாமரை போன்ற கண்கள் கொண்ட மதுஸூதனனே! பீஷ்மர், துரோணர் போன்றவர்களையும் என்னையும் ஒதுக்கிவிட்டு சூத்ரனாகிய விதுரரின் வீட்டில் நீ ஏன் உணவு உட்கொண்டாய் – என்றான். இதற்கு க்ருஷ்ணன் பாரதஸாவித்ரீ (23) - த்விஷதந்நம் ந போக்தவ்யம் நைவ போஜயேத் பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம ப்ராணா ஹி பாண்டவா: - விரோதியின் உணவை உட்கொள்ளக்கூடாது, அவர்களுக்கு உணவை அளிக்கவும் கூடாது. நீ எனது ப்ராணனாக உள்ள பாண்டவர்களைப் பகைக்கிறாயே – என்றான். இதன் மூலம் துரியோதனன் உரைத்தபடி விதுரரின் ஜாதி குறித்த கருத்த க்ருஷ்ணன் ஏற்றான் என்றாகிறது. ஆனால் அந்தணர்களும், க்ஷத்ரியர்களும் சூத்ரன் ஒருவனால் அளிக்கப்பட்ட உணவை உட்கொள்வது கூடாது அல்லவோ என்ற கேள்வி எழலாம். இதற்கு விடையாக, ஆபஸ்தம்ப ஸூத்ரம் (2-3-4) - ஆர்யாதிஷ்டிதா சூத்ரா அந்நஸம்ஸ்கர்த்தாரஸ்ஸ்யு: - அந்தணர்களால் நியமிக்கப்பட்ட சூத்ரர்கள் அவர்களுக்காக உணவைச் சமைக்க அனுமதிக்கப்படுகிறார்கள் – என்றது காண்க. கலியுகம் நீங்கலாக மற்ற யுகங்களில் சூத்ரர்களுக்கு இது போன்ற வரையறை ஏதும் இல்லை; காரணம் அவர்கள் ஆர்யர்களின் நியமனத்துக்கு ஏற்ப அவர்களுக்கு

உணவைச் சமைக்க அவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். மேலும் மஹாபாரதம் உத்யோகபர்வம் (76-43) - சுசிஸ்து ப்ரயதோ பூத்வா விதுரோந்நமுபஹாரத் – மிகவும் தூய்மையானவராகிய விதுரர், அந்த உணவை அளித்தார் – என்று கூறுவதன் மூலம் விதுரருக்கு இருந்த குணமேன்மை உரைக்கப்பட்டது.

**மூலம்** – ப்ரஹ்மவித்துக்களான இவர் யோகப்ரபாவத்தாலே தேஹந்யாஸம் பண்ணின பின்பு, ப்ராப்தனான தர்மபுத்ரன் செய்த ஸம்ஸ்கார விசேஷம் தூஷ்ணீம் அநுஷ்டிதமாதல், வ்யக்திவிசேஷ நியதமாதலாமித்தனை. இது கொண்டு வ்யக்த்யந்தரங்களில் ந்யாஸ ஸஞ்சாரம் பண்ணவொண்ணாது. இங்ஙனல்லாதபோது தர்மோத்தரரான பாண்டவர்களுக்கு ஒரு நியதிவிசேஷத்தாலே வந்த தார ஸாதாரண்யத்தைக் கொண்டு ஸர்வலோகமும் வ்யாகுலமாம்படியாம். ஆகையாலே தம் தம் ஜாதிகளை விடாதே நின்று அவ்வோ ஜாதிகளுக்கு உசித ப்ரக்ரியையாலே யதாதிகாரம் பகவத் கைங்கர்யம் பண்ண ப்ராப்தம்.

**விளக்கம்** – இப்படிப்பட்ட ப்ரஹ்மஞானியான விதுரர் தனது உயிரை விட்டபோது, அவருக்கு ஈமக்கடன் செய்யக் கடமைப்பட்டவனாகிய தர்மன், ப்ரேத ஸம்ஸ்காரங்களை சிறப்பாகச் செய்யவேண்டும் என்று செய்தான். அப்போது மௌனமான முறையில் அவை செய்யப்பட்டபோதிலும், உயர்ந்த ஒருவருக்காகச் செய்யப்பட்டது சரியே என்றானது. இதனைக் கருத்தில் கொண்டு, “ஓர் இடத்தில் நடந்ததை மற்றொரு இடத்திலும் செய்யலாம்” என்னும் ரீதியில், மற்ற யாருக்கும் செய்யலாகாது. இவ்விதம் கொள்ளவில்லை என்றால், சூழ்நிலை காரணமாக ஒரே பத்னியைக் கொண்ட பாண்டவர்கள் போன்று மற்றவர்களும் செய்யக்கூடும் அல்லவோ? ஆகவே அவரவர்கள் தங்களுடைய ஜாதியில் விதிக்கப்பட்டதான ஸர்வேச்வரனுடைய கைங்கர்யம் குறித்து நன்கு உணர்ந்து, அதன்படியே செய்தல் வேண்டும்.

## விச்வாமித்ரருக்கு வேறு ஜாதி வந்தமைக்கு சமாதானம்

**மூலம்** – மோஹநசாஸ்த்ரங்களில் சொன்ன ஜாத்யுத்தராதிகளை ப்ரமாணிகர் நினைக்கலாகாது. சரு வ்யத்யாஸாதிகளான சில விசேஷ நிதாநங்களாலே வருகிற விச்வாமித்ராதிகளுடைய நிலை வேறு சிலருக்குக் கூடுமென்கை வசநவிருத்தம்.

**விளக்கம்** – தகுந்த சாஸ்த்ரங்களை மட்டுமே ப்ரமாணமாகக் கொள்பவர்கள், மயங்கவைக்கும் சாஸ்த்ரங்களில் கூறப்பட்டதை ப்ரமாணங்களாகக் கொள்ளக்கூடாது. அந்தணர் ஒருவருக்கான உணவை விச்வாமித்ரரின் தாய் உட்கொண்ட காரணத்தினால் விச்வாமித்திரர் பிறந்தார்; அவர் க்ஷத்ரியராக உள்ளபோதிலும், இந்தக் காரணத்தினால் அந்தணரே ஆகிறார். ஆகவே இவருடைய நிகழ்வைக் கொண்டு மற்றவர்களுக்கும் இதனை விதிக்கக்கூடாது.

## ஆழ்வார்களும் தங்களுடைய ஜாதியின் வரம்பை மீறாமல் இருந்தமை

**மூலம்** – விதுராதிகளிலும் உத்க்ருஷ்ட ப்ரபாவரான ஆழ்வார்களுடைய வ்ருத்தாந்த விசேஷங்களை நாம் அநுஷ்டாநத்துக்கு த்ருஷ்டாந்தமாக்கலாகாது. அவர்கள் வ்ருத்தாந்தங்களையும் ஆராய்ந்தால் ஸ்வஜாதி நியமத்தைக் கடந்தமையில்லை.

**விளக்கம்** – விதுரரைக் காட்டிலும் உயர்ந்தவர்களான ஆழ்வார்களின் சரிதங்களைக் கொண்டு, அவற்றை நமது விஷயங்களுக்கு உதாரணம் காட்டக்கூடாது. ஆழ்வார்களின் சரிதங்களை ஆராய்ந்தால், அவர்கள் யாரும் தங்களுடைய ஜாதிக்கான வரம்பை மீறவில்லை என்று அறியலாம்.

## வித்யைகளை அறிவதில் உள்ள வரையறை

**மூலம் –**

விஷ்ணுர்நித்யம் வித்யயா தாத ஈடய:
தஸ்மாத் ஜ்ஞானம் நித்யரூபம் வரேண்யம்
ப்ராப்யம் ஞானம் ப்ராஹ்மணாத் க்ஷத்ரியாத்வா
வைச்யாச்சூத்ராத்வா அபி நீசாதபீக்ஷ்ணம்

என்கிற ச்லோகத்தில் பகவத்ஞானம் அவச்யம் ஸம்பாதநீயமாகையாலே பூர்வபூர்வா லாபத்தில் மற்றுள்ளார் பக்கலிலும் ஜ்ஞாந மாத்ரம் விசதமாக ஸம்பாதநீயம் என்றிவ்வளவு சொல்லிற்று. இப்படியானாலும் வித்யா மந்த்ராதிகளுடைய க்ரஹணம் ப்ராஹ்மணாதி விஷயத்திலே ஆகவேணுமென்னுமிடம், சூத்ரயோநாவஹம் ஜாதோ நாத: அந்யத் வக்துமுத்ஸஹே என்ற ஸ்ரீவிதுரவாக்யத்தாலே ஸித்தம். துலாதார தர்மவ்யாதாதிகளும் தர்மஸந்தேஹம் கேட்க வந்த ப்ராஹ்மணரைத் தாங்கள் ஸம்பாவித்துத் தீர்த்த யாத்ரையிலே வழி திகைத்தாரை வழியிலே சேர்த்த மாத்ரம் அவர்களைத் தெளிவித்து விட்டார்களித்தனை; அல்லது முக்யமான ஆசார்யகம் பண்ணினார்களல்லர். இப்ரகாரங்கள் இவ்விதிஹாஸங்களிலே கண்டு கொள்வது.

**விளக்கம்** - விஷ்ணுர்நித்யம் வித்யயா தாத ஈடய: தஸ்மாத் ஜ்ஞானம் நித்யரூபம் வரேண்யம் – விஷ்ணு ஞானம் கொண்டு எப்போதும் துதிக்கத் தக்கவன்; ஆகவே அவன் குறித்த உயர்ந்த ஞானத்தை ஓர் அந்தணன் மூலம் பெற்றுக் கொள்ளவேண்டும்; மஹாபாரதம் சாந்திபர்வம் (323-88) - ப்ராப்யம் ஞானம் ப்ராஹ்மணாத் க்ஷத்ரியாத்வா வைச்யாச்சூத்ராத்வா அபி நீசாதபீக்ஷ்ணம் – ஞானம் என்பதை அந்தணன், க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன், அதற்கும் தாழ்ந்த பிறவி கொண்டவன் என்று யாரிடமிருந்தாவது எப்போதும் ஸம்பாதித்தபடி இருக்கவேண்டும் – இது போன்ற ச்லோகங்கள் மூலம் பகவத்ஞானம் என்பது அவசியம் சம்பாதிக்கப்படவேண்டும் என்பதால், அந்தந்த வர்ணங்களில் உள்ளவர்கள் கிட்டவில்லையென்றால், அதற்கடுத்த வர்ணத்தில் உள்ளவர்களிடமிருந்து அந்த ஞானத்தை மட்டும் பெறலாம் என்று கூறப்பட்டது. ஆனால் வித்யைகள், மந்த்ரங்கள் போன்றவை அந்தணர்களிடமிருந்து மட்டுமே பெறப்பட

வேண்டும் என்பதை சூத்ரயோநாவஹம் ஜாதோ நாத: அந்யத் வக்துமுத்ஸஹே – சூத்ரயோனியில் பிறந்த நான் இதற்கு மேல் ஏதும் உரைக்கத் துணிவு கொண்டவன் அல்லன் – போன்ற விதுர வசனங்கள் மூலம் அறியலாம். மிதிலையில் மாம்ஸ விற்பனை செய்யும் தர்மவ்யாதன் மற்றும் காசியில் வச்ய குலத்தில் வந்த துலாதாரன் போன்றவர்கள், தங்களிடம் தர்மங்கள் குறித்த விஷயங்களில் உள்ள ஐயங்களைப் போக்கிக்கொள்ள வந்த அந்தணர்களுக்கு, திவ்யதேச யாத்திரை செல்பவர்கள் பாதை தெரியாமல் தவிக்கும்போது அவர்களுக்குச் சரியான பாதையைக் காண்பித்து உதவுவது போன்று, அவர்களுடைய ஐயங்களைத் தீர்த்தனர்; அவர்கள் அந்த அந்தணர்களின் ஆசார்யர்கள் ஆகவில்லை. இது போன்றே இதிஹாஸங்களில் உள்ள பல்வேறு நிகழ்வுகளை புரிந்து கொள்ளவேண்டும்.

**மூலம் –**

பக்திரஷ்டவிதா ஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே
தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹ்யஹம்

என்றதுவும் கந்யாப்ரதாநாதிபரமன்று, ஞானப்ரதாநாதிபரம் என்று வ்யாக்யானம் பண்ணினார்கள். பூஜ்ய: என்கிற சப்தமும் ஸாதாரணமாகையாலே “பாகவதத்வ முண்டானால் ஸர்வரும் சாஸ்த்ரம் சொன்ன மட்டுக்களிலே ஆதரணீயர்; இவர்களை ஸஜாதீயரோடு ஒக்க நினைத்து அவஜ்ஞை பண்ணினபோது நரகமாம்” என்று இவ்வளவிலே தாத்பர்யம். இவ்வர்த்தத்தை ய:சூத்ரம் பகவத்பக்தம் என்று தொடங்கி மஹர்ஷி ஸங்க்ரஹித்தான். ஆகையால் ஜாதி வ்யவஸ்தை குலையாதே நிற்க பாகவத ப்ரபாவம் கண்டு கொள்வது.

அதோ ஜதேநிர்க்ருஷ்டாயா: ஸர்வஸ்யா வா விநாசத:
ஸாஜாத்யம் விஷ்ணுபக்தாநாம் இதி மந்தமிதம் வச:

வைஷ்ணவத்வேந மாந்யத்வம் ஸமாநம் முநிஸம்மதம்
ஜாத்யாதி த்வம்ஸதஸ்ஸாம்யம் பக்திகாலே பவிஷ்யதி

**விளக்கம்** – கருடபுராணம் - பக்திரஷ்டவிதா ஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹ்யஹம் – யார் ஒருவனுக்கு என்

மீது எட்டுவிதமான பக்தி உள்ளதோ அவன் மிலேச்சனாக உள்ளபோதிலும் ஞானம் மற்றும் பக்தி கொண்ட உயர்ந்த அந்தணன் என்றும், ஸந்ந்யாஸி என்றும், பண்டிதன் என்றும் கொள்ளத்தக்கவன் – என்ற வரியின் மூலம், இப்படிப்பட்டவனுக்கு பெண்ணைக் கொடுத்து ஸம்பந்தம் செய்துகொள்ளலாம் என்று கூறப்படவில்லை; மாறாக அவனுடன் ஞானம் குறித்த ஸம்பந்தம் மட்டுமே கொள்ளலாம் என்பதே உணர்த்தப்பட்டது என்று பூர்வர்கள் வ்யாக்யானம் செய்துள்ளனர். "பூஜ்ய – வணங்கத்தக்கவன்" என்னும் பதமானது பொதுவான ஒன்றாகும்; இதன் மூலம் ஸர்வேச்வரனிடம் பக்தி கொண்ட ஒருவனை மதிக்கவேண்டும் என்பதும், ஆனால் சாஸ்த்ரங்களால் வரையறை செய்யப்பட்ட அளவு மட்டுமே மதிக்கவேண்டும் என்பதும் உணரப்படவேண்டும். இப்படிப்பட்டவர்களைத் தங்களுடைய குலத்திற்கு ஒத்தவர்கள் என்று நடத்தினால், நரகம் கிட்டும் என்பதை அறியவேண்டும். இதனை இதிஹாஸ ஸமுச்சயம் (25-26) - ய:சூத்ரம் பகவத்பக்தம் – பகவத் பக்தனாக உள்ள சூத்ரனையோ, வேடனையோ, நாய் மாமிசம் உண்பவனையோ தங்களுடைய ஜாதிக்கு சமமாக எண்ணுபவர்கள் நரகம் புகுவர் – என்று சுருக்கமாக உரைத்தமை காண்க. ஆகவே பாகவதன் ஒருவனின் ப்ரபாவம் குறித்து அறியும்போதும் சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட எல்லைகளைத் தாண்டாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

அதோ ஜதேநிர்க்ருஷ்டாயா: ஸர்வஸ்யா வா விநாசத:
ஸாஜாத்யம் விஷ்ணுபக்தாநாம் இதி மந்தமிதம் வச:

**இதன் பொருள்** – ஆகவே "விஷ்ணுவின் பக்தர்கள்" என்னும் காரணத்தால் தாழ்ந்த ஜாதி என்பது கழிவதாலும், அனைத்து ஜாதி என்பது நீங்குவதாலும், அனைவரும் ஒரே போன்று ஜாதி உள்ளவர்கள் என்று அறிவது மந்தபுத்தி ஆகும்.

வைஷ்ணவத்வேந மாந்யத்வம் ஸமாநம் முநிஸம்மதம்
ஜாத்யாதி த்வம்ஸதஸ்ஸாம்யம் பக்திகாலே பவிஷ்யதி

**இதன் பொருள்** – வைஷ்ணவர்களாக உள்ளதால் அனைவராலும் கொண்டாடத்தக்கவர்கள் என்னும் நிலை பொதுவானது என்பதை ரிஷிகளும் ஏற்கிறார்கள்; ஆனால் ஜாதி முதலியவை கழிந்து, மற்றவர்களுடன் ஒத்த நிலை என்பது மோக்ஷகாலத்தில் மட்டுமே உண்டாவதாகும்.

## ஜாதி எல்லைகளுக்கான ப்ரமாணங்கள்

**மூலம்** – பகவத்கீதாதிகளிலும்

ஸ்த்ரியோ வைச்யாஸ்ததா சூத்ரா: தே அபி யாந்தி பராம் கதிம்

ஸ்வே ஸ்வே கர்மண்யமிரத: ஸம்ஸித்திம் லபதே நர:
ஸ்வகர்மநிரதஸ்ஸித்திம் யதா விந்ததி தச்ச்ருணு

ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ:

தஸ்மாத் ஸப்ரணவம் சூத்ரோ மந்நாமாநி ந கீர்த்தயேத்

வர்ணாச்ரமாசாரவதா புருஷேண பர: புமாந்
விஷ்ணுராராத்யதே பந்தா நாந்யஸ்தத்தோஷ காரக:

ந சலித நிஜவர்ண தர்மதோ ய:

இத்யாதிகளாலே பாகவதனுக்கே யதாபூர்வம் ஜாதி வ்யவஸ்தையும், அதுக்கு அநுரூபமான வ்ருத்த வ்யவஸ்தையும் ஸுஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டது.

இப்படி பாகவதத்வமாகிற குணமும் அதடியாக வரும் புருஷார்த்த விசேஷமும் ஸமாநமாயிருக்க, ஜாதி விசேஷங்களும் வ்ருத்திவிசேஷங்களும் நித்ய வ்யவஸ்திதங்கள் என்னுமிடம் சூத்ர: ஸாது: கலி: ஸாது: இத்யாதிகளிலும் ப்ரஸித்தம்.

**விளக்கம்** – கீழே உள்ள பல வரிகள் காண்க:

- கீதை (9-32) - ஸ்த்ரியோ வைச்யாஸ்ததா சூத்ரா: தே அபி யாந்தி பராம் கதிம் – பாவம் செய்தவர்களின் வயிற்றில் பிறந்த பெண்கள், வைச்யர்கள், சூத்ரர்கள்

போன்றவர்களில் யார் என்னை வந்து அடைகிறார்களோ அவர்கள் உயர்ந்த கதியைப் பெறுகிறார்கள்.

- கீதை (18-45) - ஸ்வே ஸ்வே கர்மண்யமிரத: ஸம்ஸித்திம் லபதே நர: ஸ்வகர்மநிரதஸ்ஸித்திம் யதா விந்ததி தச்ச்ருணு – தன்னுடைய கர்மங்களில் ப்ரீதி கொள்ளும் மனிதன், தான் அடையவேண்டிய புருஷார்த்தங்களை அடைகிறான்.

- கீதை (18-46) - ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ: - தனது கர்மம் மூலம் பகவானை ஆராதனை செய்து ஸித்தி அடைகிறான்.

- மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வம் (118-14) - தஸ்மாத் ஸப்ரணவம் சூத்ரோ மந்நாமாநி ந கீர்த்தயேத் – சூத்ரன் என்னுடைய திருநாமத்தை ப்ரணவத்துடன் சேர்த்து உரைக்கலாகாது.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (3-8-9) - வர்ணாச்ரமாசாரவதா புருஷேண பர: புமாந் விஷ்ணுராராத்யதே பந்தா நாந்யஸ்தத்தோஷ காரக: - ஜாதி மற்றும் ஆச்ரமம் ஆகியவற்றுக்கு உண்டான ஆதாரத்தைக் கொண்டு பரமபுருஷன் ஆராதிக்கப்படுகிறான்; இதனைக் காட்டிலும் அவனுக்கு வேறு எதுவும் மகிழ்ச்சி அளிப்பதில்லை.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (3-7-20) - ந சலித நிஜவர்ண தர்மதோ ய: - யார் தன்னுடைய ஜாதிக்கு உரிய கர்மங்களை விடாமல் உள்ளானோ அவனே உண்மையான விஷ்ணுபக்தன்.

மேலே உள்ள பல வரிகள் மூலமாக ஒருவன் பாகவதனாக உள்ளபோதிலும் அந்தந்த ஜாதி மற்றும் ஆச்ரமத்துக்கான விதிகள் தெளிவாகவே கூறப்பட்டன. மேலும் பாகவதனுக்கு உரிய இருப்பும், அதற்கான பலனாகிய மோக்ஷமும் அனைத்து ஜாதிக்கும் பொதுவாக உள்ளபோதிலும், அந்தந்த ஜாதி மற்றும் ஆச்ரமத்திற்கான விதிகள் தனியாக உண்டு என்று கருத்து. இதனை ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-2-6) - சூத்ர: ஸாது: கலி: ஸாது: - சூத்ரன் நல்லவன், கலியுகம் நல்லது – என்பதால் அறியலாம்.

## சரீரம் மற்றும் மனம் காரணமாக ஏற்படும் ஜாதிகளின் பேதங்கள்

**மூலம்** – தம: சூத்ரே ரஜ: க்ஷத்ரே ப்ராஹ்மணே ஸத்த்வமுத்தமம் இத்யாதிகளில் சொல்லுகிறபடியே ஸத்த்வாதி குண தாரதம்யவத்தான சரீரத்தில் ப்ராஹ்மண்யாதிகள் வேறே; மனஸ்ஸில் ஸத்த்வாதி குணவிசேஷமடியாக ஸர்வ ஜாதிகளிலும் ப்ரசம்ஸா வாக்யங்களாலே சொல்லப்பட்ட ப்ராஹ்மண்யாதிகளும் வேறே. இவற்றில் சாரீர குண விசேஷமடியாக வ்யவஸ்திதங்களான சாரீர ஜாதிவிசேஷங்கள் உத்பத்தி ஸித்தங்களாய் மரணாந்தமாக ஸ்திரங்களாயிருக்கும். மானஸமான ஸத்த்வாதி குணோந்மேஷமடியாகச் சொல்லுகிற ப்ராஹ்மண்யாதிகள் ஸர்வஜாதிகளுக்கும் ஸம்பாவிதங்களாய், ப்ரஹ்லாதிகளுக்கு ஜந்மஸித்தங்களாய், நீக்கியுள்ளார்க்கு ஆசார்ய ஸம்பந்தாதி ஹேதுக்களாலே ஆகந்துகங்களாயிருக்கும். இதில் சாரீர ஜாதி விசேஷங்களையிட்டுச் சில சாஸ்த்ரங்கள் நியதங்களாம். மானஸமான ப்ராஹ்மண்யாதிகளையிட்டு அவற்றுக்கு அநுரூபமான புருஷார்த்த விஷயங்களும் ப்ரசம்ஸாதிகளும் ஸர்வஜாதியிலும் ஸம்பாவிதங்களாம். இதில் ப்ராஹ்மணாதிகள் பக்கலிலே மாநஸமான விபரீதாகாரங்கள் வந்தால் சம தமாதி போக்யமாக சாஸ்த்ர ஸித்தமான ஜந்மத்திலே பிறந்து தப்பினானென்று மிகவும் நிந்தை நடக்கும். ஜாத்யந்தரங்களிலே பிறந்து குணோத்தரனாய்ப் போந்தானாகில் ஏதை: ஸமேத: சூத்ரோ அபி வார்த்தகே மானமர்ஹதி இத்யாதிகளிற்படியே ப்ரசம்ஸை மிகவும் நடக்கும். இவற்றில் சாரீரமாயும் மாநஸமாயும் வரும் உத்கர்ஷம் கர்வ ஹேதுவாமாகில் அநர்த்தகரமாம். இவ்விரண்டு வழியாலுமுள்ள அபகர்ஷம் “குலங்களாய ஈரிரண்டில்” என்கிற பாட்டிலும், ஜதித்வாஹம் வம்சே என்கிற ச்லோகத்திலும்சொல்லுகிறபடியே தான் நின்ற நிலை தெளிந்து கார்பண்யத்தை விளைத்து அகிஞ்சநாதிகாரமான உபாய விசேஷத்திலே மூட்டுமாகில் புருஷார்த்த காரணமாகையாலே ச்லாக்யமாம். இப்படிக்கு ஜாதி வ்யவஸ்தையும் ஜாத்யநுரூபமான வ்ருத்த வ்யவஸ்தையும் உண்டானாலும் ஸர்வருக்கும் பாகவதத்வ நிபந்தனமாக முன்பு ஸமர்ப்பித்த உத்தேச்யத்வ ப்ரதிபத்திக்கு விரோதமில்லை.

**விளக்கம்** – மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வம் (40-11) - தம: சூத்ரே ரஜ: க்ஷத்ரே ப்ராஹ்மணே ஸத்த்வமுத்தமம் – சூத்ரனிடம் மிகுதியான தமோ குணம், க்ஷத்ரியனிடம் மிகுதியான ரஜோ குணம், அந்தணனிடம் மிகுந்த ஸத்த்வ குணம் காணப்படும் – என்பது

போன்ற வரிகள் காண்க. இது போன்ற வாக்கியங்களில் கூறப்படும் ஸத்த்வம் முதலான சரீரத்தில் காணப்படும் குணங்களின் அடிப்படையில் அந்தணன் போன்றதான பிரிவுகள் என்பது வேறு; இது போன்றுள்ள ஒரு சில வாக்கியங்களில் கூறப்படும் ஸத்த்வம் முதலான மனதில் காணப்படும் குணங்களின் அடிப்படையில் அந்தணன் போன்றதான பிரிவுகள் என்பது வேறு என்று அறியவேண்டும். இவற்றில் சரீரத்தின் அடிப்படையில் உண்டான குணங்களின் காரணமாக ஏற்படும் ஜாதிவிசேஷங்கள் பிறப்பு தொடங்கி, மரணம் முடிய நீடிக்கும். அந்தணனுக்கே உரியதும், மனதில் உண்டாவதும் ஆகிய ஸத்த்வகுணம் என்பது அனைத்து ஜாதிகளுக்கும் உண்டாகலாம். இதனை ப்ரஹ்லாதன் போன்றவர்களுக்கு பிறப்பிலேயே இருந்ததைக் காணலாம். ஒரு சிலருக்கு ஆசார்ய ஸம்பந்தம் போன்ற சில காரணங்களால் சிறிது காலம் கழித்து உண்டாகலாம். சரீர குண வேறுபாடுகள் காரணமாக உண்டான ஜாதியின் அடிப்படையில், ஒரு சில சாஸ்த்ரங்கள் ஒரு சிலருக்கு மட்டுமே விதிக்கப்படுகின்றன. மனதில் உண்டாகின்ற அந்தணனின் தன்மையான ஸத்த்வம் போன்றவற்றால் உண்டாகவல்ல புருஷார்த்தம் குறித்த சிந்தனை மற்றும் அவற்றுக்கான உபாயங்களை நாடுதல் போன்றவை அனைத்து ஜாதிகளிலும் காணப்படலாம். அந்தண ஜாதியில் பிறந்து, அவனுடைய மனதில் விபரீதமான எண்ணங்கள் உண்டானால், “மனதை அடக்கவல்ல ஜாதியில் பிறந்து சாஸ்த்ரங்களுக்கு ஏற்றபடி நடக்கவேண்டிய இவன், இப்படிப் பிறந்தானே”, என்று அனைவரும் பழிப்பர். ஆனால் அந்தணன் அல்லாத ஜாதியில் பிறந்த ஒருவன் உயர்ந்த குணங்களுடன் உள்ளான் என்றால், யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி (1-110) - ஏதை: ஸமேத: சூத்ரோ அபி வார்த்தகே மானமர்ஹதி – வித்யை, கர்மம், வயது, பந்து, செல்வம் என்றுள்ள வரிசைப்படி கூடியுள்ள சூத்ரனும் கௌரவிக்கப்படத் தக்கவன் – என்பதற்கு ஏற்ப, கொண்டாடப்படுவான். ஒருவனுக்கு சரீரம் மற்றும் மனம் ஆகியவை காரணமாக உண்டாகும் குணங்களால் கர்வம் உண்டானால், அது நாசத்தையே ஏற்படுத்தும். இந்த இரண்டுவிதங்களாலும் உண்டாகும் ஜாதி தாழ்வு குறித்து திருச்சந்தவிருத்தம் (90) - குலங்களாய ஈரிரண்டில் – தர்மங்களைச் செய்ய ஏற்றதான அந்தணன் உள்ளிட்ட நான்கு ஜாதியில் நான் பிறக்கவில்லை – என்றும், ஸ்தோத்ரரத்னம் (61) - ஜதித்வாஹம் வம்சே – உயர்ந்த குலத்தில் பிறந்த நான், பாவங்களைச் செய்தபடி உள்ளேனே – என்றும் கூறுவதைக் காண்க. இந்த நிலை குறித்து ஒருவன் வருத்தம் கொள்ளும்போது, அவனுக்குத் தனது தாழ்ந்த நிலையைக் குறித்து இரக்கம் உண்டாகி, தனது நிலைக்கு ஏற்றபடியான உபாயத்தைத் தேடிக் கொள்ளக்கூடும்; இத்தகைய வருத்தம் என்பது

போற்றத்தக்கதாக உள்ளது. இப்படியாக எத்தனை விதிகள் இருந்தாலும், "பகவத் பக்தர்" என்னும் முறையில் அளிக்கப்படவேண்டிய மரியாதையை யாராக இருந்தாலும் பெறுவதில் தடை ஏதும் இல்லை.

## சரீரம் மற்றும் மனம் காரணமாக ஏற்படும் ஜாதிகளின் பேதங்கள்

## மூன்றுவகையான பாகவதர்கள்

**மூலம்** – இப்பகவத்பரரில் ஐகாந்த்யம் பகவத்யேஷாம் ஸமாநமதிகாரிணாம் என்கிறபடியே தேவதாந்தர ஸ்பர்சமற்றவர்கள் ஏகாந்திகள். அவர்களில் வைத்துக் கொண்டு ஜ்ஞாநீ து பரமைகாந்தீ என்கிறபடியே ப்ரயோஜனாந்தர ஸ்பர்சமுமற்றவர்கள் பரமைகாந்திகள். அவர்களில் வைத்துக் கொண்டு விளம்பாக்ஷமராய் ஸர்வசக்தியான சேஷி பக்கலிலே பரந்யாஸம் பண்ணி, செய்கிற கைங்கர்யத்துக்கு ப்ரயோஜநாந்தரம் கோலுகை "பொலிசைக்கு இடுவார் மாத்ரம்" என்கிற ச்ருத்யர்த்தத்தைத் தெளிந்து, இக்கைங்கர்யத்துக்கு மோக்ஷமும் ப்ரயோஜநமென்று கோலாதே கைங்கர்யைக ப்ரயோஜநராயிருக்குமவர்களுடைய பரமைகாந்தித்வம் ஷோடச வர்ண ஸ்வர்ணத்தோடு ஒக்கும். இம்மாற்று அறியும் மஹர்ஷிகள் மஹாபாரதாதிகளிலே இப் பரமைகாந்திகளுடைய மாஹாத்ம்யத்தைப் ப்ரபஞ்சித்தார்கள்.

**விளக்கம்** – பாகவதர்களில் கீதார்த்த ஸங்க்ரஹம் (28) - ஐகாந்த்யம் பகவத்யேஷாம் ஸமாநமதிகாரிணாம் – பகவானிடம் மட்டுமே பக்தி என்பது ஆர்த்தன் அல்லாத மற்ற மூன்றுவகையினருக்கும் சமம் – என்பதற்கு ஏற்ப, மற்ற தேவதைகளை ஆராதிக்காமல் இருப்பவர்கள் ஏகாந்திகள் ஆவர். இவர்களில், கீதார்த்த ஸங்க்ரஹம் (29) – ஜ்ஞாநீ து பரமைகாந்தீ – இவர்களில் ஞானியாக உள்ளவன் பரமைகாந்தி ஆவான் – என்பதற்கு ஏற்ப, பகவானிடம் எந்தவிதமான பயனையும் எதிர்பாராமல் உள்ளவன் பரமைகாந்தி ஆவான். இவர்களில், அனைத்து சக்தியும் கொண்டவனும் அனைவருக்கும் எஜமானனாக உள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரனின் திருவடிகளில் பரந்யாஸம் செய்து, அதன் பின்னர் தான் செய்யும் கைங்கர்யத்துக்கு மோக்ஷம் என்ற பலனையும் எதிர்பார்க்காமல், பகவானிடம் பலனை எதிர்பார்ப்பவர்கள் வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள் போன்றே ஆவர் என்பதை ச்ருதிகள் கூறுவதை உணர்ந்து, தாங்கள் செய்யும் கைங்கர்யம் என்பதே கைங்கர்யத்தின் பலன் என்று எண்ணியபடி உள்ளவர்கள் பதினாறு கட்டி வராகன்

(தூய்மையான தங்கம்) போன்றவர்கள் ஆவர். இதனை உணர்ந்த மஹரிஷிகள் மஹாபாரதம் போன்றவற்றில் இப்படிப்பட்ட பரமைகாந்திகளின் மாஹாத்ம்யத்தை அருளிச் செய்தனர்.

## நாராயணைக நிஷ்டஸ்ய என்னும் ச்லோகத்தின் பொருள்

**மூலம்** – இவன் ப்ரபாவத்தைப் பற்ற

நாராயணைக நிஷ்டஸ்ய யா யா வ்ருத்திஸ்ததர்சநம்
யோ யோ ஜல்பஸ்ய ஸ ஜப: தத்த்யாநம் யந்நிரீக்ஷணம்
தத்பாதாம்ப்வதுலம் தீர்த்தம் ததுச்சிஷ்டம் ஸுபாவநம்
ததுக்திமாத்ரம் மந்த்ராக்ராஹ்யம் தத்ஸ்ப்ருஷ்டமகிலம் சுசி

என்கிற ச்லோகங்கள் ப்ரமாணமேயாகிலும், இங்கு "யா யா வ்ருத்திஸ்ததர்சநம்" என்றது சாஸ்த்ரவிருத்த வ்ருத்தியைச் சொன்னபடியன்று. தேச காலாதி வைகுண்யத்தாலே ஆபத்ஸ்வநந்தராவ்ருத்தி: என்கிற நிலையிலே நின்றாலும் அது ஸமாராதநோபயுக்தமான ஸம்யகுபாதநமாம் என்றபடி.

**விளக்கம்** – இப்படிப்பட்ட பாகவதர்களின் ப்ரபாவத்தை விஹஹேந்த்ர ஸம்ஹிதை - நாராயணைக நிஷ்டஸ்ய யா யா வ்ருத்திஸ்ததர்சநம்யோ யோ ஜல்பஸ்ய ஸ ஜப: தத்த்யாநம் யந்நிரீக்ஷணம்தத்பாதாம்ப்வதுலம் தீர்த்தம் ததுச்சிஷ்டம் ஸுபாவநம்ததுக்திமாத்ரம் மந்த்ராக்ராஹ்யம் தத்ஸ்ப்ருஷ்டமகிலம் சுசி – நாராயணன் ஒருவனை மட்டுமே எப்போதும் எண்ணியபடி உள்ளவனுக்கு எந்தெந்த கர்மங்கள் உண்டோ, அவை அனைத்தும் பகவத் ஆராதனையே ஆகும்; அவன் பேசும் அனைத்தும் ஜபமே ஆகும்; அவன் பார்க்கும் அனைத்தும் பகவத் த்யானமே ஆகும்; அவனுடைய கால்களில் பட்ட நீரானது தூய்மையான தீர்த்தம் ஆகும்; அவன் உண்ட பின்னர் மீதம் உள்ள உணவு தூய்மையானது ஆகும்; அவனுடைய பேச்சு அனைத்தும் மந்த்ரம்; அவன் தொடுவது அனைத்தும் தூய்மை ஆகிறது – என்றது காண்க. ஆனால் இங்கு "யா யா வ்ருத்திஸ்ததர்சநம் - எந்தெந்த கர்மங்கள் உண்டோ, அவை அனைத்தும் பகவத்

ஆராதனை" என்று கூறப்பட்டபோதிலும், இங்கு சாஸ்த்ரங்களால் தடுக்கப்பட்ட கர்மங்களைக் கூறவில்லை என்று அறியவேண்டும். ஒருவன் இடம், காலம் போன்ற சூழ்நிலை காரணமாகத் தன்னால் செய்யவேண்டியவற்றைச் செய்யாமல் போக நேர்ந்தாலும், தனக்கு விதிக்கப்படாமல், தன்னைக் காட்டிலும் தாழ்ந்தவற்றுக்கு விதிக்கப்பட்டதைச் செய்தால் தோஷம் ஏதும் இல்லை.

**மூலம் -** மந்நிமித்தம் க்ருதம் பாபமபி தர்மாய கல்பதே

என்றதுக்கும் இதுவே தாத்பர்யம். இங்ஙனல்லாதபோது அதிப்ரஸங்கம் வரும். "யா யா சேஷ்டா" என்று பாடமானாலும் அர்த்தப்ராப்த சாஸ்த்ரப்ராப்தங்கள்போலே ஸ்வபாவ ப்ராப்தங்களான நிமிஷோந்மேஷாதிகளும் ஸமர்ப்பணீயங்களாக ரஹஸ்யசாஸ்த்ர ஸித்தமாகையாலே தத் அர்ச்சநமென்னலாம். இது நிஷித்தத்தில் ப்ரஸங்கியாது. ப்ரதிஷித்தமல்லாத ஸ்வபாவ அர்த்த சாஸ்த்ரங்களிறே ஸமர்ப்பணீயங்களாக ஓதப்பட்டன. இதின் உபப்ருஹ்மணமான யத் கரோஷி யதச்நாஸி என்கிற ச்லோகத்துக்கும் இப்படி சாஸ்த்ரவிரோதமில்லாத விஷயத்திலே தாத்பர்யம். இவற்றில் சாஸ்த்ர விருத்தங்கள் வந்தால் அதிகாராநுரூபமான நைமித்திகம் நிக்ரஹசமநமான கைங்கர்யம்.

**விளக்கம்** – மந்நிமித்தம் க்ருதம் பாபமபி தர்மாய கல்பதே – எனக்காகப் பாவம் செய்யப்பட்டாலும் அது தர்மமே ஆகிறது – என்ற வரியைக் காண்க. இவ்விதம் கொள்ளவில்லை என்றால், ஆபத்து நேராத காலங்களில் செய்யப்படும் பாவங்களும் தர்மம் என்றே ஆகிவிடும். மேலே உள்ள ச்லோகத்தை "யா யா வ்ருத்தி" என்பதற்குப் பதிலாக "யா யா சேஷ்டா" என்று கொண்டால், சாஸ்த்ரங்களால் இந்த உடலை உயிருடன் தக்க வைப்பதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட விஷயங்கள் போன்று, "சேஷ்டா" என்னும் பதமானது இயற்கையாகவே நடைபெறுவதான கண் இமைகளை மூடுவதும் திறப்பதும் போன்ற செயல்களைக் குறிக்கிறது என்றாகிறது; இவை சாஸ்த்ரங்களால் ஏற்கப்படுவதால், இவற்றை பகவானுக்கு அர்ப்பணித்தால் இவையும் பகவத் ஆராதனமாகவே கொள்ளப்படும். இது போன்ற செயல்கள் சாஸ்த்ரங்களால் தடுக்கப்பட்ட செயல்கள் ஆகாது. ஆக எவை தடுக்கப்படாத செயல்களோ, எவை ஒருவனுக்குத் தகுதியாக உள்ளனவோ அவை மட்டுமே பகவானுக்கு அர்ப்பணம் செய்யக்

கூடிய ஆராதனைகளாகும். கீதையில் (9-27) - யத் கரோஷி யதச்நாஸி – நீ எதனைச் செய்கிறாயோ அதனை எனக்கு அளிப்பாயாக – என்ற ச்லோகத்தில் இது போன்று சாஸ்த்ரங்களுக்கு முரண்பாடு இல்லாத செயல்கள் மட்டுமே கூறப்படுகிறது. சாஸ்த்ரங்களுக்கு முரணான செயல்கள் ஏதேனும் செய்தால், அதற்கான பிராயச்சித்தம் என்பது தனது அதிகார வரம்பிற்குள் அடங்கியபடி செய்யப்படவேண்டும்.

**மூலம் –**

யோ யோ ஜல்ப: ஸ ஸ ஜப: என்றதுவும்,

பாருஷ்யமதிவாதச்ச பைசுநம் சைவ ஸர்வச:
அஸம்பத்த ப்ரலாபச்ச வாங்மயம் ஸ்யாச்சதுர்விதம்

என்று சாஸ்த்ரப்ரதிஷித்தமான வ்ருதா ஜல்பத்தைச் சொன்னபடியன்று. தத்த்வ ஹித விஷயமாக சிஷ்ய குரு ஸப்ரஹ்மசாரி சிஷ்ட ச்ரேயோர்த்திகளோடே அஜ்ஞாத ஜ்ஞாபநார்த்தமாகவும், ஜ்ஞாத ஸ்திரீகணார்த்தமாகவும் ஸம்சய நிராகரணார்த்தமாகவும் பண்ணும் உக்திப்ரத்யுக்தி பரம்பரைகளைச் சொல்லுகிறது. ந விக்ருஹ்ய கதாம் குர்யாத் என்று ஸாமாந்யேந சொல்லச் செய்தேயும்

யதாசக்தி நிக்ருண்ஹீயாத் தேவதா குரு நிந்தகாந்

என்று விசேஷித்து தர்மசாஸ்த்ரஸித்தமாகையாலே பாஹ்ய குத்ருஷ்டிகளைப் பற்ற விஜிகீஷுவாகச் சொல்லும் வாக்யபரம்பரையை ஜல்பம் என்றதாகவுமாம்.

**விளக்கம்** - யோ யோ ஜல்ப: ஸ ஸ ஜப: - அவன் எதனைக் கூறுகிறானோ அதுவே ஜபம் என்ற வாக்கியம் மூலம், மநு ஸ்ம்ருதி (12-6) - பாருஷ்யமதிவாதச்ச பைசுநம் சைவ ஸர்வச: அஸம்பத்த ப்ரலாபச்ச வாங்மயம் ஸ்யாச்சதுர்விதம் – கடுமையாகப் பேசுதல், உள்ளது உள்ளபடி உரைக்காமல் மிகைப்படுத்துதல், கோள் உரைத்தல், பொருத்தம் இல்லாமல் உரைத்தல் என்று வாக்கு விஷயத்தில் நான்கு பாவங்கள் உள்ளன – என்று கூறுவதற்கு ஏற்ப, சாஸ்த்ர விரோதமாக கூறப்பட்ட விஷயங்களை உரைத்தால் ஜபம் என்று

கொள்ளமுடியாது. அந்த வரியில் கூறப்பட்ட "பேசுதல்" என்பது எதுவென்றால் உண்மை மற்றும் நன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு மனிதன் தன்னுடைய சிஷ்யர்கள், ஆசார்யன், சகமனிதர்கள், பண்டிதர்கள் ஆகியவர்களிடம் அவர்களுக்கு தெரிந்ததை அறியவும், சந்தேகத்தை நீக்கவும் செய்யும் சொற்களே ஆகும். மாறாக அந்த வரியில் உள்ள "ஜல்ப" என்னும் பதமானது, வாதம் செய்யும்போது ப்ரயோகிக்கின்ற சொற்கள் என்றும் கொள்ளலாம்; மநுஸ்ம்ருதியில் (4-72) - ந விக்ருஹ்ய கதாம் குர்யாத் - உண்மையை அறிந்து கொள்ள முயலாமல் சண்டை இடுவதற்காக வீண்வாதம் செய்யக்கூடாது – என்று கூறியபோதிலும், யதாசக்தி நிக்ருண்ஹீயாத் தேவதா குரு நிந்தகாந் – தெய்வத்தையும் ஆசார்யர்களையும் நிந்திப்பவர்களைக் கண்டிக்கவேண்டும் – என்றது காண்க. ஆக இது போன்றவர்களை வாதத்தில் வெல்ல விரும்பும் ஒருவன் கூறும் சொற்களை "ஜல்ப" என்னும் பதம் மூலம் உரைத்ததாகக் கொள்ளலாம்.

**மூலம்** – "தத் த்யாநம் யந்நிரீக்ஷணம்" என்றது நிஷித்த ந்ருத்தாதி தர்சநத்தைச் சொன்னபடியன்று. கைங்கர்யார்த்தமாக ப்ரவர்த்திக்கும்போது இவன் கண்ணுக்கு இலக்கான பதார்த்தங்கள் எல்லாம் அஹம் ஹரி: ஸர்வாமிதம் ஜநார்த்தந: இத்யாதிகளிற்படியே "நிற்கின்றதெல்லாம் நெடுமால்" என்று ப்ராஹ்மாத்மகமாய்த் தோன்றும் ப்ரகாரத்தைத் சொன்னபடி.

**விளக்கம்** - தத் த்யாநம் யந்நிரீக்ஷணம் – அவன் எதனைக் காண்கிறானோ அது த்யானம் ஆகும் – என்ற வாக்கியம் மூலம் சாஸ்த்ரங்களால் தடுக்கப்பட்ட நாட்டியம் போன்றவற்றைப் பார்த்தல் முதலான செயல்கள் கூறப்படவில்லை. இந்த வரியின் மூலம் கூறப்பட்டது என்னவென்றால் இவன் கைங்கர்யம் செய்யும்போது, இவன் கண்களால் காணப்படும் பொருள்கள் எல்லாம், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-22-87) - அஹம் ஹரி: ஸர்வாமிதம் ஜநார்த்தந: - நான் ஸ்ரீஹரி, இவை அனைத்தும் ஜநார்த்தனன் – என்றுள்ள வரிக்கு எற்றபடியும், நான்முகன் திருவந்தாதி (54) - நிற்கின்றதெல்லாம் நெடுமால் – கண் முன்னர் நிற்பது அனைத்தும் ஸர்வேச்வரன் – என்ற வரிக்கு ஏற்றபடியும், இவனுடைய கண்களில் அனைத்துப் பொருள்களும் ப்ரஹ்மத்தை அந்தராத்மாகவாகக் கொண்டதாகவே புலப்படுகிறது.

**மூலம்** – “தத் பாதாம்ப்வதுலம் தீர்த்தம்” என்றதுவும் ப்ராப்த விஷயத்திலே குணாதிக்யம் சொல்லுகிறது. பாதோதகம் தீர்த்தமாகச் சொன்ன விஷயத்தில் நாராயணைக நிஷ்டத்வம் உண்டாயிற்றாகில் அது ஸர்வாதிக தீர்த்தமென்றபடி; அல்லது பாகவதனுடைய பாதத்திலே யாத்ருச்சிகமாகப்பட்ட நிர்மால்ய ஜலாதிகளும் அதுலமான தீர்த்தமென்றபடியன்று.

**விளக்கம்** - தத் பாதாம்ப்வதுலம் தீர்த்தம் – அந்த அடியாரின் திருவடிகளுடன் தொடர்பு கொண்ட நீர் புண்யதீர்த்தமாகிறது – என்ற வரியின் மூலம், சரியான நிலையில் மட்டுமே அத்தகைய புண்ணியத்தன்மை ஏற்படும் என்று அறியவேண்டும். அதாவது ஒருவன் நாராயணன் விஷத்தில் மட்டுமே மிகுந்த நிஷ்டையுடன் கூடியவனாக இருந்தால் மட்டுமே, அவனது பாதங்களுடன் தொடர்பு கொண்ட நீரானது, புண்ணிய தீர்த்தங்களைக் காட்டிலும் மேன்மையானதாக ஆகிறது; அவனுடைய பாதங்களில் தற்செயலாக வந்து பட்ட நீரானது அவ்விதம் ஆவதில்லை என்று கருத்து.

**மூலம்** - “ததுச்சிஷ்டம் ஸுபாவநம்” என்றதுவும் புநருபநயநாதி ப்ரகரணங்களிலே பாவநமாக சாஸ்த்ரப்ராப்தமான உச்சிஷ்ட விசேஷத்துக்கு இக்குணவிசேஷமடியாகப் பாவநத்வாதிசயம் சொன்னபடி. மற்றும் சிஷ்ய புத்ராதிகளுக்கு நாராயணைக நிஷ்டத்வம் உண்டானால் ஆசார்யாதிகளுக்கும் அவர்களுடைய உச்சிஷ்டம் ஸுபாவநமென்றபடி அன்று.

**விளக்கம்** - ததுச்சிஷ்டம் ஸுபாவநம் – அவன் உண்ட மீதம் தூய்மைப்படுத்தவல்லது – என்ற வரியின் மூலம், உபநயனம் முதலான ப்ரகரணங்களில் எத்தகைய உணவு தூய்மைப்படுத்தவல்லதோ, அது மட்டுமே கூறப்படுவதாகக் கொள்ளவேண்டும். சிஷ்யர்களோ அல்லது புத்ரர்களோ நாராயணனைக் குறித்து ஆழ்ந்த நிஷ்டையில் உள்ளபோதும், அவர்களது மிஞ்சிய உணவு என்பது ஆசார்யர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இவ்விதம் செய்யவல்லது என்பதை இங்கு கூறவில்லை.

**மூலம் –**

நிர்மால்யம் பக்ஷயித்வைவம் உச்சிஷ்டமகுரோரபி
மாஸம் பயோவ்ரதோ பூத்வா ஜபந்நஷ்டாக்ஷரம் ஸதா
ப்ரஹ்மகூர்ச்சம் தத: பீத்வா பூதோ பவதி பாவந:

என்று பகவத் தர்மநிஷ்டனுக்கு ஸமயாசாரம் சொல்லுகிற ஸநத்குமார ஸம்ஹிதாவசநத்தை ஆகமப்ராமாண்யத்திலே ஆளவந்தார் உதாஹரித்தருளினார். ஆகையாலே "போனகம் செய்த சேடம் தருவரேல் புனிதமன்றே" என்றதுவும் குருவிஷயமாமித்தனை. பொதுவானாலும் பகவத்ஸங்கீர்த்தனபரர் தேச காலாதி வைகுண்யத்தாலே ஊனவ்ருத்திகளுமாய் ஊனகாரகர்களுமாய் இருந்தார்களேயாகிலும் தாங்கள் அமுது செய்த சேடம் தருவராகில் புனிதமாமென்றதித்தனை. இதில் சேஷசப்தம்

அந்நசேஷ: கிம் க்ரியதாம்? இஷ்டை: ஸஹ புஜ்யதாம்

இத்யாதிகளில் ந்யாயத்தாலே பாண்டஸ்த விஷயமானால் விரோதமில்லை. உச்சிஷ்ட சப்தம் தானும் ச்ருத்யாதிகளிலே பக்தசிஷ்டமாய்ப் பாகபாத்ரஸ்தமானதிலும் ப்ரயுக்தம்.

பரித்யஜேதர்த்தகாமௌ யௌ ஸ்யாதாம் தர்மவர்ஜிதௌ
தர்மம் சாப்யஸுகோதர்கம் லோகஸம்ருஷ்டமேவ ச

என்று மந்வாதிகள் வ்யவஸ்தை பண்ணினார்கள்.

**விளக்கம் –** பகவத் தர்மத்தைப் பின்பற்றும் ஒருவனுக்குரிய விதிமுறை என்று ஸநத்குமார ஸம்ஹிதையின் கூறப்பட்ட வரிகளை ஸ்வாமி ஆளவந்தார் தன்னுடைய ஆகமப்ரமாண்யத்தில் மேற்கோள் காட்டுகிறார். அந்த வரியானது - நிர்மால்யம் பக்ஷயித்வைவம் உச்சிஷ்டமகுரோரபி மாஸம் பயோவ்ரதோ பூத்வா ஜபந்நஷ்டாக்ஷரம் ஸதா ப்ரஹ்மகூர்ச்சம் தத: பீத்வா பூதோ பவதி பாவந: - மற்ற தேவதைகளுக்கு நிவேதனம் செய்தவற்றையும், குரு இல்லாத ஒருவன் உட்கொண்டு வைத்த மீதத்தையும் உட்கொள்ளும் ஒருவன், ஒரு மாதம் வெறும் பால் மட்டுமே பருகி அஷ்டாக்ஷரத்தை

எப்போதும் ஜபித்து ப்ரஹ்ம கூர்ச்ச பஞ்சகவ்யத்தை உட்கொண்ட பின்னரே தூய்மை அடைகிறான் – என்பதாகும். ஆகவே திருமாலையில் (42) - போனகம் செய்த சேடம் தருவரேல் புனிதமன்றே – பாகவதர்கள் தாங்கள் உட்கொண்ட மீதத்தை அளித்தால் உடனே சுத்தம் கொடுக்கும் – என்ற வரியும் குருவுக்கு மட்டுமே பொருந்தும் என்று கருத்து. இந்த பாசுர வரியானது பொதுவாக எல்லாருக்கும் பொருந்தும் என்று கூறினாலும் – பரமபக்தர்கள் காலம், இருப்பிடம் போன்ற பலவிதமனா சூழ்நிலை காரணமாக, தங்களுக்கு விதிக்கப்பட்ட கர்மங்களைக் காட்டிலும் தாழ்ந்த செயலைச் செய்ய நேரிட்டாலும் அல்லது மற்றவர்களை அவ்விதம் செய்ய வைத்தாலும், அவர்கள் அளிக்கும் மீதமான உணவு என்னைப் பரிசுத்தமாக்கும் – என்று கொள்ளவேண்டும். அந்தப் பாசுர வரியில் உள்ள “சேஷ” என்னும் பதம், அந்நசேஷ: கிம் க்ரியதாம்? இஷ்டை: ஸஹ புஜ்யதாம் – ச்ரார்த்தத்தில் மீதமான உணவை என்ன செய்யவேண்டும் என்று கேட்க, அதனைத் தனக்கு இஷ்டமானவர்களுடன் உண்ணவேண்டும் – என்று கூறப்பட்ட பொருளையே அளிக்கிறது. ”உச்சிஷ்ட” என்னும் பதம், ச்ருதிகளில் சமைத்த பாத்திரத்தில் மீதம் உள்ள உணவையே குறிக்கிறது. மனு முதலாவர்கள் (மனு ஸ்ம்ருதி: 4-176) - பரித்யஜேதர்த்தகாமௌ யௌ ஸ்யாதாம் தர்மவர்ஜிதௌ தர்மம் சாப்யஸுகோதர்கம் லோகஸம்ருஷ்டமேவ ச – தர்மத்தை விட்டு அகன்று சென்ற வஸ்து மட்டும் காமம் ஆகியவற்றை விடவேண்டும்; துக்கம் அளிக்கவல்லதாகவும், உலகினரால் வெறுக்கப்படுவதாகவும் உள்ள தர்மத்தையும் விடவேண்டும் – என்றது காண்க.

**மூலம்** - “ததுக்திமாத்ரம் மந்த்ராக்ரயம்” என்றது இவன் தஞ்சமாக உபதேசித்த பாஷாவாக்யங்களும் திருமந்த்ரம்போலே ஆதரித்து அநுஸந்திக்க வேணுமென்றபடி; அல்லது இவன் சொல்லும் லௌகிக வ்யவஹாரங்கள் ஜபாதியோஜ்யங்கள் என்றபடியன்று “சொல்லும் அவிடு சுருதியாம்” என்றதுக்கும் இப்படி ஹிதார்த்தமான வாக்யமே விஷயம்.

**விளக்கம்** - ததுக்திமாத்ரம் மந்த்ராக்ரயம் – அவன் கூறுவது மந்த்ரம் போன்றதே ஆகும் – என்பதன் பொருள் என்னவென்றால், அவன் சாதாரண வாக்கியங்களை உச்சரித்தால் கூட, அவற்றை திருமந்த்ரம் போன்று எண்ணிக் கொண்டு பின்பற்றவேண்டும் என்பதாகும். அல்லது, அவன் கூறுவதை ஜபம் போன்று கொள்ளாமல், ஞானஸாரத்தில்

(40) - சொல்லும் அவிடு கருதியாம் – அவன் கூறும் பரிஹாஸ வார்த்தைகளும் வேதம் போன்று ஆகும் – என்றும் கொள்ளலாம்.

**மூலம்** – “தத்ஸ்ப்ருஷ்டமகிலம் சுசி” என்றது ஆதுர விஷயத்தில் ஸ்ப்ருஷ்ட்வா ஸ்நாநம் போலவும் தீக்ஷாகாலத்தில் விஷ்ணுஹஸ்தப்ரதாநாக்யஸ்பர்சம் போலவும் திருப்ப்ரதிஷ்டையில் மஹாபாகவத ஸ்பர்சம் போலவும், மற்றும் ஸ்பர்சம் விஹிதமான இடங்களிலே இவனுடைய ஸ்பர்சம் பெற்றதாகில் ஸ்ப்ருஷ்டமானவையெல்லாம் பரிசுத்தமாமென்றபடி அல்லது

உதும்பரம் ந ஸாதேத்து

காலிங்கோதும்பராலாபு பிம்பாநி பரிவர்ஜயேத் தாந்யச்நதஸ்து ஸததம் நித்யம் தூரதரோ ஹரி: வ்ருந்தாக கதகாலிங்க பில்வோதும்பரபி: ஸடா: யோ பக்ஷயதி ஸம்மோஹாத்தஸ்ய தூரதரோ ஹரி: காலிங்கீம் க்ஷுத்ரவார்த்தாகம் தக்தாந்நம் மௌஸலீம் ததா தும்பிகாபல மச்நீயாத்தஸ்ய தூரதரோ ஹரி: யோத்தி வார்த்தாக காலிங்கம் மஸூர விஸகாந்யபி அந்தகாலே ஜகந்நாதம் கோவிந்தம் ந ஸ்மரிஷ்யதி

தும்பம் கோசாதகம் சைவ பலண்டும் க்ருஞ்ஜனம் ததா சத்ராகம் விட்வராஹம் ச புக்த்வா சாந்த்ராயணம் சரேத்

நாளிகா சண சத்ராக குஸும்பாலாபு விட்பவாந் கும்பீ கஞ்சுகவ்ருந்தாக கோவிதாராம்ச்ச வர்ஜயேத் க்ஷீரம் லவண ஸம்மிச்ரம் உச்சிஷ்டேபி ச யத்க்ருதம் பாநம் ரஜகதீர்த்தே ச ஸுராபாநஸமம் விது:

ஆரநாளம் ந ஸேவேத கதாசித்பகவத்பர: ஸுராகல்பம் ஹி தத்ஞேயம் தஸ்மாத்யத்நேந வர்ஜயேத் ப்ரமாதாதபி கீலாலம் ய: ஸ்ப்ருசேத்வைஷ்ணவோ நர: உபசார சதேநாபி ந க்ஷமாமி வஸுந்தரே

ஏகாதச்யாம் ஸுரச்ரேஷ்ட யோ புங்க்தே த்விஜஜந்மவாந் ப்ரதிக்ராஸமயம் புங்க்தே கில்பிஷம் ச்வாநவிட்ஸமம் ஏகாதச்யாம் து யோ புங்க்தே சக்தஸ்ஸந்நிருபத்ரவ: ஸுராபாநஸமம் பாபம் பவேத்தஸ்ய ந ஸம்சய: மத்யாபாநாத் ஸுரச்ரேஷ்ட பாதைவ நரகம் வ்ரஜேத் ஏகாதச்யந்நகாமஸ்து பித்ருபிஸ்சஹ மஜ்ஜதி

அந்நதோஷாதசமநாத் நாநாவிஷயதர்சநாத் தேஹசௌசாதி விரஹாத் ஸமலம் ஜாயதே மந:

ஆலஸ்யாதந்நதோஷாச்ச ம்ருத்யுர்விப்ராந் ஜிகாம்ஸதி

இத்யாதிகளாலே நிஷித்தமானவையெல்லாம் இவன் தொட்டவாறே சுத்தமாம் என்றபடியன்று. இப்படி விஷய வ்யவஸ்தை பண்ணாதபோது பரிக்ருஹீததமங்களான பஹுசாஸ்த்ரங்களோடும் சிஷ்டாநுஷ்டாநத்தோடும் விரோதிக்கையாலே அதிவாதமாத்ரமாய் விடும்.

**விளக்கம்** - தத்ஸ்ப்ருஷ்டமகிலம் சுசி – அவன் எதனைத் தொடுகிறானோ அவை தூய்மை அடைகின்றன – என்ற வாக்கியத்தை, நோயாளி ஒருவன் நீராடுவதற்குப் பதிலாக அவனைத் தொட்டு ஒருவன் அவன் சார்பாக நீராடலாம்; தீக்ஷை கொடுக்கும் காலத்தில் ஆசார்யன் சிஷ்யனைத் தொடுதல் என்பது மஹாவிஷ்ணுவின் திருக்கரத்தால் தொடுதலுக்குச் சமம்; புதிதாக ப்ரதிஷ்டை செய்யப்பட்ட விக்ரஹத்தை பாகவதன் ஒருவன் தொடுவது உயர்ந்தது முதலான வாக்கியங்களில் உள்ள பொருளில் எடுத்துக் கொள்ளவேண்டும். அதாவது சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டபடி இவனுடைய தொடுதல் என்பது தூய்மைப்படுத்தவல்லது என்று கருத்து. இதனை ஏற்காவிட்டால், கீழே உள்ள பல வாக்கியங்களில் காணப்படும் தவிர்க்கப்படவேண்டிய பலவையும் இவனது தொடுதலால் தூய்மை அடையும் என்றாகிவிடும்:

- மஹாபாரதம் - உதும்பரம் ந ஸாதேத்து – அத்திக்காயை உண்ணக்கூடாது

- காலிங்கோதும்பராலாபு பிம்பாநி பரிவர்ஜயேத் தாந்யச்நதஸ்து ஸததம் நித்யம் தூரதரோ ஹரி: வ்ருந்தாக கதகாலிங்க பில்வோதும்பரபி: ஸடா: யோ பக்ஷயதி

ஸம்மோஹாத்தஸ்ய தூரதரோ ஹரி: காலிங்கீம் க்ஷுத்ரவார்த்தாகம் தக்தாந்நம் மௌஸலீம் ததா தும்பிகாபல மச்நீயாத்தஸ்ய தூரதரோ ஹரி: யோத்தி வார்த்தாக காலிங்கம் மஸூர விஸகாந்யபி அந்தகாலே ஜகந்நாதம் கோவிந்தம் ந ஸ்மரிஷ்யதி – அத்திக்காய், சுரைக்காய், கோவைப்பழம் முதலானவற்றை உண்ணக்கூடாது; இவற்றை உண்பவனிடமிருந்து ஸ்ரீஹரி தூரத்திலேயே இருப்பான். வெண்கத்திரிக்காய், தேத்தாங்கொட்டை, குவளை, அத்திக்காய், காந்தல் ஆகியவற்றை யார் ஒருவன் உண்கிறானோ அவனிடமிருந்து ஸ்ரீஹரி தூரத்திலேயே உள்ளான். சிற்றவரை, காந்தல், சுரைக்காய் உண்ணக்கூடாது; இவற்றை உண்பவனிடமிருந்து ஸ்ரீஹரி தூரத்திலேயே இருப்பான். வெண்கத்திரி, கன்று போட்ட 10 நாட்களுக்குள்ளான பசுவின் பாலால் உண்டான தயிர், தாமரைக்கிழங்கு ஆகியவற்றை உண்பவன் தன்னுடைய மரணகாலத்தில் ஜகந்நாதனை எண்ணமாட்டான்.

- தும்பம் கோசாதகம் சைவ பலண்டும் க்ருஞ்ஜனம் ததா சத்ராகம் விட்வராஹம் ச புக்த்வா சாந்த்ராயணம் சரேத் – பீர்க்கங்காய், ஈருள்ளி, வெள்ளுள்ளி, நாய்க்குடை ஆகியவற்றை உண்பவன் சாந்த்ராயணம் என்னும் விரதத்தைச் செய்யவேண்டும்.

- நாளிகா சண சத்ராக குஸூம்பாலாபு விட்பவாந் கும்பீ கஞ்சுகவ்ருந்தாக கோவிதாராம்ச்ச வர்ஜயேத் க்ஷீரம் லவண ஸம்மிச்ரம் உச்சிஷ்டேபி ச யத்க்ருதம் பாநம் ரஜகதீர்த்தே ச ஸூராபாநஸமம் விது: - தேங்காய்முளை, நாய்க்குடை, குசும்பை, சுரைக்காய், மலத்தை எருவாக இட்டு அதன் மூலம் விளைந்தவை, உப்பு இட்ட பால், எச்சிலில் உண்டாக்கிய நெய், வண்ணான்துறை நீர் ஆகியவற்றை உட்கொள்ளுவது கள்ளுக்குச் சமம்.

- ஆரநாளம் ந ஸேவேத கதாசித்பகவத்பர: ஸூராகல்பம் ஹி தத்ஜ்ஞேயம் தஸ்மாத்யத்நேந வர்ஜயேத் – பகவத் பக்தி கொண்ட ஒருவன் காடியை எப்போதும் உண்ணக்கூடாது. அது கள்ளுக்குச் சமம் என்பதால் அதனைத் தள்ளவேண்டும்.

- ப்ரமாதாதபி கீலாலம் ய: ஸ்ப்ருசேத்வைஷ்ணவோ நர: உபசார சதேநாபி ந க்ஷமாமி வஸுந்தரே – பூமாதேவியே! எந்த விஷ்ணுபக்தன் ரத்தத்தைத் தான் அறியாமல் தொட நேர்ந்தாலும், அந்தத் தோஷத்தை நான் நூறு உபசாரம் செய்தாலும் பொறுக்கமாட்டேன்.

- ஏகாதச்யாம் ஸுரச்ரேஷ்ட யோ புங்க்தே த்விஜஜந்மவாந் ப்ரதிக்ராஸமயம் புங்க்தே கில்பிஷம் ச்வாநவிட்ஸமம் – அந்தணன் ஒருவன் ஏகாதசியில் அன்னத்தை உண்டால், அவன் ஒவ்வொரு களபத்திலும் பாவத்தையே உண்கிறான். அவன் உணவு நாயின் மலத்துக்குச் சமம் ஆகும்.

- ஏகாதச்யாம் து யோ புங்க்தே சக்தஸ்ஸந்நிரூபத்ரவ: ஸுராபாநஸமம் பாபம் பவேத்தஸ்ய ந ஸம்சய: மத்யாபாநாத் ஸுரச்ரேஷ்ட பாதைவ நரகம் வ்ரஜேத் ஏகாதச்யந்நகாமஸ்து பித்ருபிஸ்ஸஹ மஜ்ஜதி – யார் ஒருவன் சக்தியோடு கூடியவனாக உள்ளபோதிலும், ஏகாதசியில் உண்கிறானோ, அவனுக்குக் கள் உண்ட பாவன் ஏற்படும். இதில் ஐயமில்லை. கள் குடித்தவன் தான் மட்டும் நரகம் செல்வான்; ஏகாதசியில் அன்னத்தை உண்பவன் தனது பித்ருக்களையும் நரகம் கொண்டு செல்வான்.

- அந்நதோஷாதசமநாத் நாநாவிஷயதர்சநாத் தேஹசௌசாதி விரஹாத் ஸமலம் ஜாயதே மந: - தோஷத்துடன் கூடிய உணவை உண்பதாலும், வைராக்யம் இல்லாததாலும், பலவிதமான விஷயங்களைக் காண்பதாலும், சரீரசுத்தி இல்லாமையாலும் மனம் தோஷம் கொண்டதாக ஆகிறது.

- ஆலஸ்யாதந்நதோஷாச்ச ம்ருத்யுர்விப்ராந் ஜிகாம்ஸதி – வேத அத்யயனம் செய்யாமலும், சோம்பலாலும், ஆஹாரத்தில் உள்ள தோஷத்தாலும் அந்தணர்களைக் கொல்ல எண்ணுகிறான்.

மேலே உள்ள பல வரிகளால், விலக்கப்பட்டவை என்றாலும் இவன் தொட்டால் அவை தூய்மை அடையாது என்று உணரலாம். இப்படியாக ஆராயாமல் உள்ளபோது, அவை

பலவிதமான சாஸ்த்ரங்களோடும், அவற்றைக் கடைபிடிக்கின்ற விதிமுறைகளோடும் முரண்பாடாகிவிடும்.

## பரமைகாந்திகளும் சாஸ்த்ரங்களை மீறுதல் கூடாது

**மூலம்–** மஹாப்ரபாவனான பரமைகாந்தி பக்கலிலும் இச்சாஸ்த்ரீய நியமம் குலையாதென்னுமிடம் நாதமுநிகள், ஆளவந்தார், எம்பெருமானாருள்ளிட்ட பரமாசார்யர்களுடைய அந்திமதிவஸாவதியான அநுஷ்டானங்களைக் கேட்டுத் தெளிந்து கொள்வது.

**விளக்கம்–** மிகவும் சிறந்த ப்ரபாவங்களுடன் கூடிய பரமைகாந்திகளும் கூட சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட விதிகளை மீறுதல் கூடாது. இதனை நாதமுனிகள், ஆளவந்தார், எம்பெருமானார் முதலான உயர்ந்த ஆசார்யர்கள், தங்களுடைய அந்திமகாலம் முடிய, தங்களுடைய அனுஷ்டானங்களைக் கைவிடாமல் இருந்தனர் என்பதன் மூலம் தெளிவாக அறியலாம்.

## தாமஸ, ராஜஸ, ஸாத்விக த்யாகங்கள்

**மூலம்–** தேவ தைவிக சாஸ்த்ரங்களிற் சொல்லுகிற நியமங்களை பாஹ்யரும் குத்ருஷ்டிகளும் ப்ராந்தியாலே விடுகிறவிடம் தாமஸ த்யாகமென்னுமிடத்தை

நியதஸ்ய து ஸந்யாஸ: கர்மணோ நோபபத்யதே
மோஹாத்தஸ்ய பரித்யாக: தாமஸ: பரிகீர்த்தித:

என்கிற ச்லோகத்தாலே அருளிச்செய்தான்.

**விளக்கம்–** வேதங்களிலும் தர்மசாஸ்த்ரங்களிலும் கூறப்பட்ட பல விதிமுறைகளை நாஸ்திகர்களும், ஒரு சில ஆஸ்திகர்களும் தங்களுடைய விபரீதமான ஞானம் காரணமாக விடுதல் என்பது தாமஸ த்யாகம் ஆகும். இதனைப் பகவான் கீதையில் (18-7) - நியதஸ்ய து ஸந்யாஸ: கர்மணோ நோபபத்யதே மோஹாத்தஸ்ய பரித்யாக: தாமஸ: பரிகீர்த்தித: - வர்ணங்களுக்கும், ஆச்ரமங்களுக்கும் உண்டான கர்மங்களை யாரும் விடுதல் கூடாது; அறியாமை காரணமாக அவற்றைக் கைவிடுதல் என்பது தாமஸ த்யாகம் ஆகும் – என்றான்.

**மூலம்** - குடும்ப பரணாதிகளுக்கு அலைந்து ஸந்ந்யாஸாதிகளைப் பற்றுவாரைப் போலே துக்கரூபைகளான ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்குச் சோம்பிவிடுகிறவிடம் ராஜஸ த்யாகமென்னுமிடத்தை

துக்கமித்யேவ ய: கர்ம காயக்லேச பயாத்த்யஜேத்
ஸ க்ருத்வா ராஜஸம் த்யாகம் நைவ த்யாகபலம் லபேத்

என்று அருளிச்செய்தான்.

**விளக்கம்**– தங்களது குடும்பத்தைக் காப்பாற்ற மிகவும் கடினப்பட்டு, அது இயலாமல் போகவே, ஸந்யாஸம் கைக்கொள்பவர்கள் போன்று, கர்மங்களைச் செய்யும்போது ஏற்படக்கூடிய சரீர உபாதைகளுக்கும் அஞ்சி, சோம்பல் காரணமாக அவற்றைக் கைவிடுதல் ராஜஸ த்யாகம் ஆகும். இதனைப் பகவான் கீதையில் (18-8) - துக்கமித்யேவ ய: கர்ம காயக்லேச பயாத்த்யஜேத் ஸ க்ருத்வா ராஜஸம் த்யாகம் நைவ த்யாகபலம் லபேத் – செய்யவேண்டிய கர்மத்தை, அது உடலை வருத்துமோ என்று எண்ணி, அச்சம் காரணமாகக் கைவிடுபவன், ராஜஸ த்யாகம் எனப்படும் அத்தகைய கைவிடுதல் மூலம் எந்தப் பலனையும் அடைவதில்லை – என்றான்.

**மூலம்** – தன் அதிகாராநுரூபமாகத் தவிர வேண்டுமவை தவிர்த்து செய்ய வேண்டுமவை செய்யுமிடத்தில் நான் ஸ்வதந்த்ரனாய்ச் செய்கிறேனென்றும், எனக்கு இக்கர்மம் சேஷபூதமென்றும், எனக்கு இன்ன பலத்துக்கு இதுதானே ஸாதநமென்றும் பிறக்கும் நினைவை மாற்றி ஸர்வேச்வரன் செய்விக்க அவனுக்குச் சேஷமான கைங்கர்யத்தை அவனுக்கப்பே ப்ரயோஜநமாக அநுஸந்தித்து அநுஷ்டிக்கை ஸாத்விக த்யாகமென்னும் இடத்தை

கார்யமித்யேவ யத்கர்ம நியதம் க்ரியதே அர்ஜுந
ஸங்கம் த்யக்த்வா பலஞ்சைவ ஸ த்யாக: ஸாத்த்விகோ மத:

என்று அருளிச்செய்தான்.

**விளக்கம்**– தன்னுடைய அதிகாரத்திற்குட்பட்டுச் செய்யவேண்டியவற்றைச் செய்தும், செய்யவேண்டாதவற்றைச் செய்யாமல் விடுத்தும், கர்மங்களைச் செய்யும்போது “நான் இவற்றை ஸ்வதந்த்ரமாகச் செய்கிரேண்” என்று எண்ணாமல் செய்தும், தான் செய்யும் கர்மம் தனக்கு வசப்பட்டது என்று எண்ணாமலும், “எனக்கு இன்ன பலத்துக்குச் சாதனமாக இந்தக் கர்மமே உள்ளது” என்று எண்ணாமலும், தான் செய்கின்ற எந்த ஒரு

கர்மத்தையும் ஸர்வேச்வரன் செய்விக்க அவனுக்கு வசப்பட்டுள்ள அவனுடைய கைங்கர்யம் என்பதை அவனுடைய உகப்பு என்பதே பலன் என்னும் எண்ணத்துடன் செய்தல் என்பதே ஸாத்விக த்யாகம் ஆகும்.இதனைப் பகவான் கீதையில் (18-9) - கார்யமித்யேவ யத்கர்ம நியதம் க்ரியதே அர்ஜுந ஸங்கம் த்யக்த்வா பலஞ்சைவ ஸ த்யாக: ஸாத்த்விகோ மத: - அர்ஜுனா! சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட எந்தக் கர்மம் கட்டாயம் செய்யப்படவேண்டும் என்று கருதி, பயனையும் பற்றுதலையும் விடுத்துச் செய்யப்படுகிறதோ, அதுவே ஸாத்விக த்யாகம் எனப்படும் – என்றான்.

**மூலம்** – இப்பகவத்ப்ரீதி ப்ரயோஜநமாக அநுஷ்டிக்கிறவிடத்திலே இப் ப்ரீதிக்கு மோக்ஷமும் பலமாகக் கோலாதே பூர்வப்ரபத்தியாலே பிறந்த பரமகாருணிகன் ப்ரஸாதத்தாலே மோக்ஷம் ஸித்தமென்று நினைத்து முக்தனுடைய கைங்கர்யம் போலவும், அரோகனுடைய பால்வார்த்துண்ணுகை போலவும் அநுஷ்டிக்கை ஸாத்விக த்யாகத்தின் எல்லை நிலமாகக் கடவது. இது பசித்து உண்பார் மாத்ரம். இங்ஙனல்லாதபோது ஓட்டத்துக்கு அப்பம் தின்பார் மாத்ரம்.

**விளக்கம்–** இதனைக் காட்டிலும் உயர்ந்த நிலை என்னவென்றால், ஸர்வேச்வரனின் மகிழ்வு என்பதையே பலனாகக் கொண்டுக் கர்மங்களைச் செய்யும்போது, அந்த மகிழ்வு காரணமாக்க் கிட்டுகின்ற மோக்ஷத்தையும் பெரிதாக எண்ணாமல், அந்த மோக்ஷம் என்பது தான் முன்பு செய்த ப்ரபத்தியால் உண்டான, பரமகாருணிகனான ஸர்வேச்வரனுடைய அநுக்ரஹத்தால் கிட்டும் என்று உறுதி செய்யவேண்டும்; மேலும் முக்தி பெற்ற ஒருவனுடைய கைங்கர்யம் போன்று, “கைங்கர்யம் செய்தல்” என்பதே கைங்கர்யத்தின் பலன் என்று எண்ணியபடி செய்யவேண்டும். இதுவே ஸாத்விக த்யாகத்தின் எல்லையாகும். இதுவே பசித்து உண்ணக்கூடியவர்கள் நிலை போன்று ஆகும். இப்படி இல்லாதபோது வெறும் பந்தயத்துக்காக அப்பம் உண்ணுவது போன்றதாகும் (பசித்து உண்டால், உணவின் சுவையை அனுபவித்து உண்பர் என்று கருத்து).

## “ஸர்வதர்மாந் பரித்யஜ்ய” என்பதன் விளக்கம்

**மூலம்** – “ஸர்வதர்மாந் பரித்யஜ்ய” என்கிறவிடத்தில் ப்ரதம யோஜனையில் புத்தி விசேஷரூபமான ஸாத்விகத்யாகம் சொல்லுகிறதென்று பாஷ்யகாரர் அருளிச்செய்தார். இப்புத்தி விசேஷம் ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனுக்கு ப்ரபத்யநுஷ்டாந காலத்திலும் பின்பு ஸ்வயம்ப்ரயோஜநமாய் உபாயத்தோடு துவக்கற்ற உத்தரக்ருத்யத்திலும் உபஜீவ்யம். த்விதீய யோஜனையில் அல்பசக்தியாய், விளம்பாக்ஷமனானவனுக்கு துஷ்கரமாய், சிரகால ஸாத்யமான உபாயாந்தரத்தைப் பார்த்து சோகம் பிறக்க அவனுடைய சோகாபநோதநார்த்தமாக ஸுகரமாய ஸக்ருத் கர்த்தவ்யமுமான உபாயாந்தரத்தை

விதித்ததாக்கி, “நீ உபாயாந்தரத்தில் அலையவேண்டா” என்கிறது என்று அருளிச் செய்தார். இப் ப்ரபத்யநுஷ்டாநத்துக்குப் பூர்வாவஸ்தையில் உபாயாந்தராநந்வயம் தைவாத் ஆகதமாய் ப்ரபத்யதிகாரத்திலே சொருகக் கடவது. உத்தராவஸ்தையில் உபாயாந்தராநந்வயம் சாஸ்த்ரத்வாத் ஆகதமாய் இப் ப்ரபத்தியினுடைய நைரபேக்ஷ்யத்திலே நிற்கக் கடவது.

**விளக்கம்–** கீதையில் (18-66) - ஸர்வதர்மாந் பரித்யஜ்ய – என்னும் ச்லோகத்திற்கான பாஷ்யம் இடும்போது எம்பெருமானார் இரண்டுவிதமான அருளிச்செய்தார். முதலில், “அனைத்து தர்மங்களையும் கைவிடுதல்” என்பதற்கு அனைத்து கர்மங்களையும் தனது பலனுக்காக, தானே செய்கிறோம் என்னும் எண்ணத்தைக் கைவிடுதல் ஆகும் என்ற கருத்தில் பொருள் அருளிச்செய்தார். அதாவது ஸாத்விகத்யாகம் என்பதை உரைத்தார். இப்படிப்பட்ட சிந்தனை யாருக்கு அவசியம் என்றால் ப்ரபத்தியை நேரடியான உபாயம் என்று கொண்டவனுக்கு ஆகும்; மேலும் ப்ரபத்தியைக் கைக்கொள்ளும்போதும், ப்ரபத்திக்குப் பின்னரும் செய்யப்படும் எந்தவிதமான கர்மங்களும் மற்ற உபாயங்களுடன் தொடர்புள்ளவையாக இருத்தல் கூடாது. இரண்டாவது வ்யாக்யானத்தில், “அனைத்து தர்மங்களையும் கைவிடுதல்” என்பதற்கு – தனக்கு முக்தி உண்டாவதற்கு ஏற்படும் காலதாமதத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாத ஒருவன், சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டுள்ள கர்மங்களைக் கண்டும் அவற்றின் விதிகளைக் கண்டும், தன்னால் அவற்றை இயற்ற இயலாத நிலை கண்டு மலைத்து, சோகம் கொள்கிறான். இதனைக் கண்ட ஸர்வேச்வரன், அவனுடைய சோகத்தைப் போக்கும்விதமாக, மிகவும் எளிதாகக் கைக்கொள்ளக் கூடியதும், ஒருமுறை அநுஷ்டித்தாலே போதுமானதும் ஆகிய உபாயத்தைக் கூறும்விதமாக, “நீ மற்ற உபாயங்களை நாடவேண்டாம்” என்றான். ப்ரபந்நன் ஒருவன், ப்ரபத்தி அநுஷ்டிக்கும் தகுதியைப் பெறுவதற்கு, ப்ரபத்தி அநுஷ்டிக்கும் முன்பாக மற்ற உபாயங்களில் ஈடுபடாமல் இருத்தல்வேண்டும் என்றும், இந்த நிலை தனக்கு ஸர்வேச்வரனின் கடாக்ஷத்தால் தானே கிட்டும் என்றும் உணரவேண்டும். ப்ரபத்திக்குப் பின்னர், மற்ற உபாயங்களில் ஈடுபடுதல் என்பதை சாஸ்த்ரங்களே தடை செய்வதையும், இதனால் ப்ரபத்திக்கு மற்ற உபாயம் ஏதும் அவசியம் இல்லை என்றும் அறியலாம்.

**மூலம் -** “பரித்யஜ்ய” என்கிற இது அநுவாதம் என்பார்க்கு அதிகாரம் சொல்லுகிறதென்று தாத்பர்யம். விதியென்பார்க்கு ப்ரபத்தியாகிற உபாயத்தினுடைய நைரபேக்ஷ்யாதிகளைச் சொல்லுகிறது என்று தாத்பர்யம். இப்படி “பரித்யஜ்ய” என்கிறவிடத்தில் அதிகாரம் விவக்ஷிதமானால் “மாமேகம்” என்கிறவிடத்திலே நைரபேக்ஷ்யம் அநுஸந்திக்க ப்ராப்தம். “பரித்யஜ்ய” என்று நைரபேக்ஷ்யம் விவக்ஷிதமானால் “மா சுச:” என்கிற சோக நிஷேதத்தாலே அகிஞ்சனனாய் நிற்கிற நிலை தோற்றுகையாலே அதிகாரமும் அர்த்தஸித்தமாகக் கடவது. அப்போது

ப்ரக்ருதேபாஸநந்யாயாத் ததங்காநாமுபஸ்திதௌ
அந்யேஷாம் சைததங்கத்வ த்யாகோத்ர ப்ரதிபாத்யதே

ஏகசப்தம் ஸாத்த்விகத்யாகத்தாலே தன் பக்கலில் பராதீந கர்த்ருத்வாதிகளை விவக்ஷித்தல், பலோபாயைக்யத்தைச் சொல்லுதல், ஏகமே ஸர்வோபாயஸ்தாநத்திலே நிற்கிற நிலையைக் காட்டுதல் செய்யக்கடவது.

**விளக்கம்–** "பரித்யஜ்ய" என்பது அநுவாதம் போன்று முன்பு கூறியதே மீண்டும் கூறப்பட்டது என்று சிலர் உரைக்கலாம்; ஆனால் இது ப்ரபத்திக்கான அதிகாரத்தைக் கூறுகிறது. இந்தப் பதம் என்ன செய்யவேண்டும் என்னும் விதியைக் குறிக்கிறது என்றால், ப்ரபத்தி என்னும் உபாயத்திற்கு வேறு ஏதும் அவசியம் இல்லை என்று தேறுகிறது. ஆக "பரித்யஜ்ய" என்னும் பதம் மூலம் அதிகாரம் உரைக்கப்பட்டால், "மாமேகம்" என்னும் பதங்கள் பகவான் அல்லாமல் மோக்ஷத்திற்கு வேறு ஏதும் அவசியம் இல்லை என்றாகும். "பரித்யஜ்ய" என்பதன் மூலம் ப்ரபத்திக்கு மற்ற ஏதும் அவசியம் இல்லை என்று உரைக்கப்பட்டால், "மா சுச:" என்பது மற்ற உபாயங்கள் இல்லாமல் கதியற்று நிற்பவனுடைய சோகத்தைத் தீர்த்தல் என்பதை உரைப்பதாகிறது. அப்போது - ப்ரக்ருதேபாஸநந்யாயாத் ததங்காநாமுபஸ்திதௌ அந்யேஷாம் சைததங்கத்வ த்யாகோத்ர ப்ரதிபாத்யதே – இதுவரை கூறப்பட்ட பக்தியோக நியாயம் காரணமாக, அந்தப் பக்தியோகத்தின் அங்கங்கள் நினைவில் உண்டாகும்போது, அந்த அங்கங்கள் அல்லாமல் உள்ள மற்ற தர்மங்களில், ப்ரபத்திக்கு அங்கம் என்னும் புத்தியைக் கைவிடுதல் என்பது "பரித்யஜ்ய" என்பதால் விதிக்கப்படுகிறது – என்று கொள்ளவேண்டும். "மாம் ஏகம்" என்பதில் உள்ள "ஏக" சப்தமானது - ஸாத்விகத்யாகத்தில், தான் செய்யும் அனைத்தும் ஸர்வேச்வரனின் வசப்பட்டே உள்ளது என்பதும், ப்ரபத்தியில் உபாயமும் பலனும் ஸர்வேச்வரன் என்னும் ஒன்று மட்டுமே என்பதும், மற்ற அனைத்து உபாயங்களின் இடத்தில் ப்ரபத்தி மட்டுமே உள்ளது என்பதும் – கூறுவதாக உள்ளது.

**மூலம்–** ப்ரபத்திக்காக ஒன்றும்அநுஷ்டிக்க வேண்டாவாகிலும் ஸ்வதந்த்ராதிகாரத்தாலே கிங்கரனான இவனுக்கு ஸ்வாமியினுடைய ஆஜ்ஞாதிலங்கனம் ஆகாது என்று ஸமர்த்தித்தார்கள்.

ஆஜ்ஞாவிரோதிபி: ஸ்வார்ஹ ப்ராயச்சித்த: பராங்முகை:
ஸ்வாதிகாரோசித: ஸர்வை: ப்ரத்யவாயோ துரத்யய:

ஆஜ்ஞாநுபாலநே தத்தத் ப்ரத்யவாய நிவாரணம்
ஸ்வாபிஸந்தோஷத: ப்ரீதி: இதி லாபத்வயம் ஸ்திரம்

அநிச்சாதோ நிவர்த்ததே ஸ்வர்காத்யம் கர்மணாம் பலம்
அமர்யாதஸ்ய துர்வார: ப்ரத்யவாய: அந்யஹேதுக:

**விளக்கம்–** ப்ரபத்தியின் பொருட்டு நித்ய நைமித்திக கர்மங்களை அனுஷ்டிக்க வேண்டியதில்லை என்றாலும், அவை ஒருவன் ஸ்வதந்த்ரமானவன் அல்லன் என்பதால் அவனுக்கு விதிக்கப்பட்டுள்ளன. ஆகவே அவற்றை அவன் இயற்றாமல் இருத்தல் என்பது எஜமானனாகிய ஸர்வேச்வரனுடைய ஆணைகளை மீறுதல் என்றே ஆகும் என பூர்வர்கள் உரைத்தனர்.

- ஆஜ்ஞாவிரோதிபி: ஸ்வார்ஹ ப்ராயச்சித்த: பராங்முகை: ஸ்வாதிகாரோசித: ஸர்வை: ப்ரத்யவாயோ துரத்யய: - ஸர்வேச்வரனுடைய ஆணைகளை மீறி நடப்பவர்களும், தங்களுடைய அதிகாரங்களுக்கு ஏற்ப பிராயச்சித்தம் செய்யவேண்டும் என்று எண்ணாதவர்களும் தங்களுடைய விதி மீறல்களுக்குரிய விளைவுகளைக் கடக்க இயலாது.

- ஆஜ்ஞாநுபாலநே தத்தத் ப்ரத்யவாய நிவாரணம் ஸ்வாபிஸந்தோஷத: ப்ரீதி: இதி லாபத்வயம் ஸ்திரம் – ஸர்வேச்வரனுடைய ஆணைகளுக்குட்பட்டு நடப்பதால் அந்தக் கட்டளைகளைச் செய்யாமல் விடுவதால் உண்டாகக்கூடிய தோஷங்களைத் தவிர்த்தல், ஸர்வேச்வரனுடைய ப்ரீதி காரணமாகத் தனக்கு உண்டாகவல்ல மகிழ்ச்சி ஆகிய இரண்டு நன்மைகளும் ஸ்திரமாக இருக்கும்.

- அநிச்சாதோ நிவர்த்ததே ஸ்வர்காத்யம் கர்மணாம் பலம் அமர்யாதஸ்ய துர்வார: ப்ரத்யவாய: அந்யஹேதுக: - வர்ணாச்ரம கர்மங்களுக்குப் பலனாக ஏற்படவல்ல ஸ்வர்க்கம் முதலான பலன்கள், ப்ரபந்நன் ஒருவன் அவற்றில் ஆசையில்லாமல் செய்வதால், இவனுக்கு ஏற்படுவதில்லை. ஆனால் சாஸ்த்ரங்களில் உள்ளவற்றை ஒருவன் மீறி நடந்தால், அந்தக் காரணத்தினாலேயே அவனுக்கு தோஷங்கள் உண்டாகும்.

**மூலம்–** இப் ப்ரபத்தியை பக்தியோகாங்கமாக அருளிச்செய்தது ப்ரபத்தி ஸகலபல ஸாதனமானபடியைப் ப்ரக்ருதமான பக்தியோகமாகிற பலத்திலே உதாஹரித்தபடி. இங்கு த்விதீய யோஜனையில் துஷ்கரங்களான பக்தியோக பர்யந்தோபாயங்களினுடைய ஸ்தாநத்திலே நிற்கிற உபாயவிசேஷமும் ப்ரதம யோஜனையில் புத்திவிசேஷ பூர்வகமான ப்ரபத்த்யநுஷ்டானமும் க்ருதோபாயனுடைய ஸ்வயம் ப்ரயோஜனமான கைங்கர்யமும் அநுஸந்தேயம். கிஞ்ச,

ஸுதுஷ்கரேண சோசேத்யோ யேந யேநஷ்டஹேதுநா
ஸ ஸ தஸ்யாஹமேவேதி சரமச்லோக ஸங்க்ரஹ:

பாவாபாவௌ ந தர்மாணாம் ப்ரபத்தேரங்கமிஷ்யதே
ஸ்வதந்த்ர சிஷ்டயா சக்யேஹா சேஷாபாவோதிகாரக:

க்ரத்வநங்கதயா யே து ததாநீம் அநநுஷ்டிதா:
ஸ்வகாலே ஸ்வவிதேரேவ கார்யஸ்தே தத்வதத்ர ந:

**விளக்கம்–** எம்பெருமானார் கீதாபாஷ்யத்தில் ப்ரபத்தியை பக்தியோகத்தின் அங்கமாக அருளிச்செய்தது ஏன் என்றால், அனைத்து பலன்களையும் அளிக்கவல்லதான பக்தியோகத்தை, அந்தப் ப்ரபத்தி எவ்விதம் பெற்றுத் தரவல்லது என்று உணர்த்தவே ஆகும். எம்பெருமானாரின் கீதா சரமச்லோகத்திற்கான பாஷ்யத்தினுடைய இரண்டாவது வ்யாக்யானத்தின்படி, இயற்றுவதற்குக் கடினமாக உள்ள பக்தியோகம் உட்பட அனைத்துவிதமான உபாயங்களுக்கும் பதிலாகவே ப்ரபத்தி உள்ளது என்று அறியவேண்டும். முதலாவது வ்யாக்யானத்தினைக் கொள்ளும்போதும் - எவ்விதம் மற்ற கர்மங்களைத் தான் செய்வதாக எண்ணாமல், அவற்றைப் பகவான் தன் மூலமாகவே செய்து கொள்கிறான் என்று எண்ணுகிறோமோ, அதே போன்று ப்ரபத்தியையும் பகவானே செய்கிறான் என்று கொள்ளவேண்டும்; இவ்விதம் கொள்ளும்போது அவனுடைய கைங்கர்யம் என்பதே பலனாக ஆகிறது.

- ஸுதுஷ்கரேண சோசேத்யோ யேந யேநஷ்டஹேதுநா ஸ ஸ தஸ்யாஹமேவேதி சரமச்லோக ஸங்க்ரஹ: - “யார் ஒருவன் தன்னால் இயற்றமுடியாமல் உள்ளதாகிய இஷ்டமான பலனை அளிக்கவல்ல உபாயம் குறித்து (அவற்றை இயற்ற முடியவில்லையே என்று எண்ணி) வருந்துகிறானோ, அவனுக்கு அந்த உபாயம் நானே ஆவேன்” என்பதே சரமச்லோகத்தின் சுருக்கமான பொருள் ஆகும்.

- பாவாபாவௌ ந தர்மாணாம் ப்ரபத்தேரங்கமிஷ்யதே ஸ்வதந்த்ர சிஷ்டயா சக்யேஹா சேஷாபாவோதிகாரக: - வர்ணாச்ரம தர்மங்களைக் கைக்கொள்வதும், கைக்கொள்ளாமல் இருப்பதும் ப்ரபத்திக்கு அங்கமாக ஏற்கப்படுவதில்லை. ஸர்வேச்வரனின் ஆணை என்பதால் செய்யவேண்டிய தர்மங்களில் அவன் ஆசை கொள்கிறான். அவனால் செய்ய இயலாமல் உள்ள கர்மங்கள் ப்ரபத்திக்கு அவசியமான ஆகிஞ்சந்யம் என்றாகிறது.

- க்ரத்வநங்கதயா யே து ததாநீம் அநநுஷ்டிதா: ஸ்வகாலே ஸ்வவிதேரேவ கார்யஸ்தே தத்வதத்ர ந: - யஜ்ஞங்களை இயற்றும்போது தர்ச பூர்ணாமாசங்கள் விதிக்கப்படுவதில்லை; ஆகவே அவை அப்போது செய்யப்படுவதில்லை. ஆனால்

அவை செய்யப்படவேண்டிய காலங்களில் செய்யப்படுகின்றன. இதே போன்று நித்ய நைமித்திக கர்மங்கள் ப்ரபத்தியின் அங்கங்களாக இல்லாத காரணத்தால், அவை ப்ரபத்தியின்போது செய்யப்படுவதில்லை.

**மூலம்–** த்யஜ தர்மமதர்மம்ச என்கிறதுவும் காம்யங்களையும் நிஷித்தங்களையும் விடச் சொன்னபடி த்யஜ ஸத்யாந்ருதே அபி என்கிறதுவும் ஆத்மாநுபவத்தையும் ஐச்வர்யத்தையும் ப்ரயோஜனமாகக் கோலாதே கொள் என்றபடி. வாசிகங்களை விசேஷித்துச் சொல்லிற்றாகவுமாம். இதின் அருமை தோற்றுகைக்காக உபே ஸத்யாந்ருதே த்யக்த்வா என்று அநுவதிக்கிறது. த்யாகத்தில் கர்த்ருத்வமும் பராதீநமென்று அநுஸந்திக்கைக்காக யேந த்யஜஸி தத்த்யஜ என்கிறது.

**விளக்கம்–** மஹாபாரதம் சாந்திபர்வம் (339-44) - த்யஜ தர்மமதர்மம்ச– உபாயமான தர்மத்தையும், விலக்கப்பட்ட அதர்மத்தையும் கைவிடுவாயாக – என்ற வரியானது காம்ய கர்மங்களையும், தடுக்கப்பட்ட கர்மங்களையும் விடும்படி உரைப்பதாகும். இதே போன்று, மஹாபாரதம் சாந்திபர்வம் (339-44) - த்யஜ ஸத்யாந்ருதே அபி – ஸத்யம் என்னும் ஆத்ம அனுபவத்தையும், அந்ருதம் என்னும் மற்ற விஷய அனுபவங்களையும் கைவிடுவாயாக – என்ற வரியானது ஆத்ம அனுபவம் மற்றும் ஐச்வர்யம் ஆகியவற்றைப் பலனாக எண்ணக் கூடாது என்று கூறுகிறது. மேலும், மஹாபாரதம் சாந்திபர்வம் (339-44) - உபே ஸத்யாந்ருதே த்யக்த்வா– எந்த எண்ணத்தால் இந்த இரண்டையும் விடுகிறாயோ – என்றும் கூறியது. நம்முடைய கர்த்ருத்வம் என்பது பகவானின் வசப்பட்டது என்பதை எண்ணும்விதமாகவே, மஹாபாரதம் சாந்திபர்வம் (339-44) - யேந த்யஜஸி தத்த்யஜ - அந்த எண்ணத்தையும் விடுவாயாக – என்றது.

**மூலம்–** இப்படியானால் ஆஜ்ஞாதிலங்கனத்துக்கு ஒரு விரகின்றிக்கேயிருக்க, சிலர்

தஸ்மாத்த்வமுத்தவோத்ஸ்ருஜ்ய சோதநாம் ப்ரதிசோதநாம்
ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச ச்ரோதவ்யம் ச்ரதமேவ ச

மாமேகமேவ சரணம் ஆத்மாநம் ஸர்வதேஹிநாம்
யாஹி ஸர்வாத்மபாவேந யாஸ்யஸி ஹ்யகுதோபயம்

என்று நிவ்ருத்தியையுங்கூட விடச் சொன்னபடியானாலும் "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய" என்கிற இடத்தில் ஸர்வ சப்தத்தை ஸங்கோசியாமைக்காகவும் நிவ்ருத்தி ரூபங்களையும் கூட விடவேண்டுகையால், அவற்றை விடுகையாவது நிஷேதித்தவை எல்லாவற்றிலும்

யதாசக்தி அநுஷ்டாநமாகையால், இந்த நிஷித்தாநுஷ்டாநம் விதிபலப்ராப்தமாகையாலே ப்ரபந்நனுக்கு புத்திபூர்வோத்தராதமும் லோபியாதென்று ப்ரமிப்பர்கள். இது மிகவும் பரிஹஸநீயம், எங்ஙனேயென்னில் – அலோபகர் பாபம் பண்ணினால் லோபியாது என்பார்கள். இவர்கள் பாபம் அவச்யம் அநுஷ்டிக்க வேணுமென்றார்களாயிற்று. இது

பக்ஷ்யோத்தமப்ரதிச்சந்நம் மத்ஸ்யோ பளிசமாயஸம்
அந்நாபிலாஷீ க்ரஸதே நாநுபந்தவேக்ஷதே

என்கிற கணக்காம். இவையெல்லாவற்றையும் நினைத்து

அஹோ பத மஹத்கஷ்டம் விபரீதமிதம் ஜகத்
யேநாபத்ரபதே ஸாது: அஸாதுஸ்தேந துஷ்யதி

என்று மஹர்ஷி நிர்வண்ணனானான். இவர்கள் சொல்லுகிறபடி அர்த்தமானால் யாவஜ்ஜீவம் இருந்து அநுஷ்டிக்கும் நிஷித்தாநுஷ்டாநம் எல்லாம் ப்ரபத்திக்கு அங்கமாகையால் ஸாங்கப்ரபதநம் ஸக்ருத் கர்த்தவ்யம் என்னுமிடம் கழியும். ப்ரபத்திக்ஷணத்தில் எல்லா நிஷித்தங்களும் அநுஷ்டிக்கை அசக்யம். அப்போது யதாசக்தி நிஷித்தாநுஷ்டாநம் பண்ணிக் கொண்டு ப்ரபத்தி பண்ணவும் கண்டறியோம். இப்பக்ஷத்தில் பாபங்களும் அக்நீஷோமீய ஹிம்ஸை போலே பாபசப்த வாச்யமல்லாமையாலே புத்திபூர்வோத்தராகத்தையும் கூட்டி "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்கிற இடத்துக்குத் தாங்கள் வ்யாக்யானம் பண்ணின ப்ரகாரமும் விருத்தமாம். யதாசக்தி த்ரிவிதாபசாரங்கள் கர்த்தவ்யங்களாகவும் ப்ரஸங்கிக்கும். இது பூர்வாநுஷ்டாநத்துக்கும், பூர்வஸம்ப்ரதாயத்துக்கும், ஸ்வாநுஷ்டாநத்துக்கும், மற்றும் இப்போது காண்கிற முமுக்ஷுக்களுடைய அநுஷ்டாநத்துக்கும் விருத்தம். இப்படிச் சொல்லுபவர்கள் தம்மை ஒரு ப்ரபந்நர் அர்த்தகாமங்கள் அடியாக நலியப்புக்கால், இது ப்ரபந்நதர்மமன்றோ என்று இவரை உகந்திருக்கப் ப்ராப்தமாம். இது அநந்த ப்ரமாணங்களுக்கு விருத்தமாமளவேயன்றிக்கே இங்கு எடுத்த வசநங்களுக்கு விவக்ஷிதமும் அன்று.

**விளக்கம்–** ஆக ஸர்வேச்வரனின் ஆணைகளை மீறுவதற்கு எந்தவிதமான ப்ரமாணமும் இல்லாதபோது ஒரு சிலர் கீழே உள்ள வரிகளைக் கூறுவர்:

- ஸ்ரீமத் பாகவதம் (11-12-14) - தஸ்மாத்த்வமுத்தவோத்ஸ்ருஜ்ய சோதநாம் ப்ரதிசோதநாம் ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச ச்ரோதவ்யம் ச்ரதமேவ ச – க்ருஷ்ணன் உத்தவரிடம், "உத்தவா! ஆகவே ஒரு குறிப்பட்ட பலனுக்காக உள்ள உபாயமாக இதனைச் செய் என்னும் விதியையும், இதனைச் செய்யவேண்டாம் என்னும்

விதியையும், இப்படியாக விதிக்கின்ற தர்மத்தையும், இந்த இரண்டு கர்மங்களுக்கும் உதவியாக இதுவரை உன்னால் கேட்கப்பட்டதும், இனி கேட்க உள்ளதும் ஆகிய அங்கங்களை விடுவாயாக", என்றான்.

- ஸ்ரீமத் பாகவதம் (11-12-15) -மாமேகமேவ சரணம் ஆத்மாநம் ஸர்வதேஹிநாம் யாஹி ஸர்வாத்மபாவேந யாஸ்யஸி ஹ்யகுதோபயம் – அனைத்து ஆத்மாக்களுக்கும் ஆத்மாவாக உள்ள என்னை மட்டுமே அனைத்துவிதங்களாலும் சரணம் அடைவாயாக. இவ்விதம் செய்தால் யாரிடமும் பயம் இல்லாத நிலையாகிய மோக்ஷத்தை அடைவாய்.

இவர்கள் கூறுவது என்னவென்றால் – மேலே உள்ள வரிகளில் ஒரு சில கர்மங்களைச் செய்யாமல் உள்ள நிலையைக் கூட விடவேண்டும் என்று கூறப்பட்டதாலும், கீதா சரமச்லோகத்தில் உள்ள "ஸர்வ" என்ற பதத்திற்கான எல்லையைக் குறுக்குவது சரியல்ல என்பதாலும் நாம் செய்யக்கூடாது என்று கூறப்பட்ட கர்மங்களில் இருந்து விலகி இருத்தலையும் கைவிடவேண்டும் என்றாகிறது. ஆகவே தடுக்கப்பட்ட கர்மங்களையும் நமது சக்திக்கு உட்பட்ட அளவில் செய்யலாம் என்றாகிறது – என்பதாகும். இவர்கள் கருத்தின்படி தடுக்கப்பட்ட கர்மங்களையும் செய்யலாம் என்றானதால், ப்ரபத்திக்குப் பின்னர் ஒரு ப்ரபந்நன் தடுக்கப்பட்டவற்றைச் செய்தாலும் தோஷம் உண்டாகாது என்ற மயக்கத்தில் இருப்பார்கள். இது பரிகாசம் செய்யவேண்டியதாகும். இவர்கள் சார்வாகர்கள் கூறுவது போன்று – மனிதன் பாவங்கள் செய்தாலும் தோஷம் உண்டாகாது – என்று கூறுகிறார்கள். இவர்களின் கருத்தின்படி, ப்ரபந்நன் பாவம் செய்தே ஆகவேண்டும் என்று கூறுவது போல் உள்ளது! இது எப்படி உள்ளது என்றால் மஹாபாரதம் உத்யோகபர்வம் (33-13) - பச்ஷ்யோத்தமப்ரதிச்சந்நம் மத்ஸ்யோ பளிசமாயஸம் அந்நாபிலாஷீ க்ரஸதே நாநுபந்தவேக்ஷதே – தூண்டிலில் உள்ள உணவை மட்டுமே சிந்தித்து, அதில் உள்ள முள்ளை எண்ணாமல் மீன் வருகிறது; அது பின்னே உண்டாகவல்ல தீமையை எண்ணுவதில்லை – என்பது போன்றதாகும். இவை அனைத்தும் மனதில் கொண்டதாலேயே, மஹாபாரதம் வனபர்வம் (2-65) - அஹோ பத மஹத்கஷ்டம் விபரீதமிதம் ஜகத் யேநாபத்ரபதே ஸாது: அஸாதுஸ்தேந துஷ்யதி – ஸாதுவான மனிதன் காண்பதற்கு கூசுகின்ற வஸ்துவை தீமை பொருந்திய ஒருவன் கண்டு மகிழ்கிறான்; இது என்னே! உலகின் செய்கை இவ்விதம் விபரீதமாக உள்ளதே – என்று கூறி வருந்துவது காண்க.

மேலே உள்ள கருத்தின்படி அவர்கள் கூறுவதே உத்தவருக்கு உபதேசிக்கப்பட்ட அர்த்தம் என்றால், ஒருவன் தன்னுடைய வாழ்வில் செய்யும் அனைத்து தடை செய்யப்பட்ட செயல்களுமே ப்ரபத்தியின் அங்கங்கள் என்றாகிவிடும். இவ்விதம் கொள்ளும்போது

ப்ரபத்தியை, அதன் அங்கங்களுடன் ஒருமுறை மட்டுமே கைக்கொள்ளவேண்டும் என்று கூறுவது பலனற்றதாகும். ப்ரபத்தியின்போது விலக்கப்பட்ட அனைத்து கர்மங்களையும் ஒரே நேரத்தில் செய்வது என்பது இயலாத ஒன்றாகும். அல்லது இது போன்று ப்ரபத்தி காலத்தி, தனது சக்திக்கு உட்பட்ட அனைத்து தடுக்கப்பட்ட கர்மங்களை ஒருவன் இயற்றி நாம் காண்பதில்லை. இவர்களின் எண்ணத்தின்படி அக்நீஷோமீய யாகத்தில் பசுவதை என்பது எவ்விதம் வேதங்களால் விதிக்கப்பட்டதால் பாவமாகாதோ, அது போன்று விலக்கப்பட்ட கர்மங்களை இயற்றுவதும் பாவம் அல்ல என்பதாகும். இவை அனைத்தும் இவர்கள், கீதை (18-66) - ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – அனைத்து பாவங்களில் இருந்தும் நான் காப்பாற்றுவேன் – என்ற ச்லோகத்திற்கு இட்ட வ்யாக்யானத்திற்கு முரணாக உள்ளதைக் காணலாம். இவர்கள் கூறுவது போன்று மனம், சரீரம், வாக்கு ஆகிய மூன்றாலும் நமது சக்திக்கு உட்பட்ட அளவு அபசாரங்கள் செய்தபடி இருத்தல் வேண்டும் என்றாகிறது. இது நமது ஆசார்யர்கள் இதுவரை நடந்து கொண்ட விதங்களுக்கும், நமது ஸம்ப்ரதாயத்திற்கும், இவ்விதம் கூறுபவர்களின் ஸம்ப்ரதாயத்திற்கும், முமுக்ஷுவின் இலக்கணங்களுக்கும் விரோதமாக உள்ளது. இவர்களை யாரோ ஒரு ப்ரபந்நன், இவர்களுக்கு உலக விஷயங்கள் மீது உள்ள ஆசை காரணமாக, திருத்த முயற்சித்தால், "இதுதான் ப்ரபந்நர்களின் தர்மமோ?", என்று ஏளனமாகப் பேசி மகிழ்வர். இந்தச் செய்கை எண்ணற்ற ப்ரமாணங்களுக்கு முரண்பாடாக உள்ளதோடு மட்டும் அல்லாமல், இதுவரை எடுக்கப்பட்ட வாக்கியங்களுக்குப் பொருந்துவதாகவும் இல்லை.

**மூலம்–** நிஷித்த நிவ்ருத்தி ரூபங்களெல்லாம் ஸர்வதர்ம சப்தத்தாலே ஸங்க்ருஹீதங்கள் என்னுமிடம் தர்ம சப்தார்த்தம் அறியாமல் சொன்னபடியென்று சில ஆசார்யர்கள் நிர்வஹிப்பார்கள். எங்ஙனேயென்னில் – நிவ்ருத்திகளிலே ஒரு பலத்துக்கு ஸாதநமாக நியம விசேஷங்களுடனேயே செய்தவை தர்ம சப்தார்த்தமாம். ஸாமாந்யமான அஹிம்ஸாதிமாத்ரம் பாபாபாவமாமித்தனை போக்கி தர்மசப்தத்துக்கு முக்யார்த்தமன்று. ஆகையால் பலவிசேஷ நியமவிசேஷங்களோடே கூடின அஹிம்ஸாதிகளை விடுகையாவது, பலங்களையும் நியமங்களையும் விடுகை; மற்றும் நிவ்ருத்தி சாஸ்த்ரத்திற் சொன்ன நிவ்ருத்திகளை விடுகைக்கு விரகில்லை.

**விளக்கம் –** தர்மம் என்னும் பதத்தின் பொருள் அறியாத காரணத்தினால், "ஸர்வ தர்மாந்" என்பதன் மூலம் தடுக்கப்பட்ட கர்மங்களின் தடைகளும் கூறப்பட்டுள்ளது என்பதை ஒரு சில ஆசார்யர்கள் உரைப்பர். இது எப்படி என்றால் – தடுக்கப்பட்டவற்றில் ஒரு சில கர்மங்கள் சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டும், ஆனால் குறிப்பிட்ட பலன்களுக்காகச் செய்வதாகவும் இருக்கலாம்; இவையே தர்மம் என்னும் சப்தம் மூலம் கூறப்படுவதாகக்

கொள்க. உதாரணமாக அஹிம்ஸை என்பது பாவங்கள் இல்லாத ஒன்றே அல்லாமல், அதன் பொருட்டு எந்தவிதமான விதிமுறைகளும் இல்லை என்பதால் அதனை, தர்மம் என்று கூற இயலாது. ஆகவே ஒரு பலனின் பொருட்டு பின்பற்றப்படும் அஹிம்ஸை என்பதை விடுதல் என்றால், அதன் மூலம் விளையும் பலன்கள் மற்றும் அந்த விதிமுறைகள் ஆகியவற்றைக் கைவிடுவதே ஆகும். இது அல்லாமல் தடுக்கப்பட்ட கர்மங்களின் தடைகளைக் கைவிடுதல் என்பது எந்தவிதமான முக்தி சாஸ்த்ரங்களிலும் கூறப்படைல்லை.

**மூலம்** - நியமவிசேஷாதிகளோடே கூடாத அஹிம்ஸாதிமாத்ரமும் தர்ம சப்தார்த்தம் என்னும் பக்ஷத்திலும் சொல்லுகிறோம்:

அதர்ம பரிஹாரே அபி தர்மத்வேந விவக்ஷிதே
ஸ்யாத் ஸ்வதந்த்ர விதேரேவ நித்யம் தஸ்ய பரிக்ரஹ:

ஆநுகூல்ய பரித்யாகம் ப்ராதிகூல்ய பரிக்ரஹம்
ப்ரபத்த்யங்கம் ப்ரதிஜ்ஞாதும் ந சக்யம் ஸாதுஸம்ஸதி

ப்ரபந்நமதிக்ருத்யைவ ஸதாசாராநதிக்ரம:
ப்ரபத்த்யத்யாய படித: ப்ரதிஸந்தீயதாமிஹ

இப்படி அற்றபின் சோதநாம் ப்ரதிசோதநாம், ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச என்கிற இடத்திலும் ப்ரபத்திக்கு அங்கமாக ஒன்றும் ஸ்வீகரிக்க வேண்டா என்றதாமித்தனை. முமுக்ஷுமாத்ரத்தைப் பற்ற த்ரைவர்ணிகாந் த்யஜேத்தர்மாந் என்கிற கட்டளையிலே பலாந்தர ஸாதநமாகச் சோதிதைகளான ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும் அவற்றுக்கு உறுப்பான சாஸ்த்ரங்களையும் விடச் சொன்னதாகவுமாம்.

**விளக்கம்** – அஹிம்ஸை என்பது நியமங்களுடன் கூடியது அல்ல என்றாலும், அதனைத் தர்மம் என்னும் பதம் மூலம் குறிக்கலாம் என்று சிலர் கூறுவர்; இவ்விதம் கொண்டாலும், பதில் உரைக்கலாம். கீழே உள்ள வரிகளைக் காண்க:

- அதர்ம பரிஹாரே அபி தர்மத்வேந விவக்ஷிதே ஸ்யாத் ஸ்வதந்த்ர விதேரேவ நித்யம் தஸ்ய பரிக்ரஹ: - அதர்மத்தை விடுதல் என்பது தர்மம் என்னும் பதத்திற்கு அர்த்தமாக உரைக்கப்பட்டாலும், அதர்மத்தைக் கைவிடுதல் என்பது தனியாகவே ஏற்கப்பட்ட ஒன்றாகையால், அது எப்போதுமே உள்ளதாகிறது.

- ஆநுகூல்ய பரித்யாகம் ப்ராதிகூல்ய பரிக்ரஹம் ப்ரபத்த்யங்கம் ப்ரதிஜ்ஞாதும் ந சக்யம் ஸாதுஸம்ஸதி – ஆநுகூல்யத்தைக் கைவிடுவதையும் (ஆநுகூல்யம் என்றால் ஸர்வேச்வரனுக்கு மகிழ்வை உண்டாக்கும் செயல்கள்), ப்ரதிகூல்யத்தை ஏற்பதும் (ப்ரதிகூல்யம் என்றால் ஸர்வேச்வரனுக்கு வருத்தம் உண்டாக்கும் செயல்கள்) ஆகிய இரண்டும் ப்ரபத்தியின் அங்கங்கள் என்று கற்றவர்கள் உள்ள சபையில் கூற முடியாது.

- ப்ரபந்நமதிக்ருத்யைவ ஸதாசாராநதிக்ரம: ப்ரபத்த்யத்யாய படித: ப்ரதிஸந்தீயதாமிஹ – வர்ணாச்ரம தர்மங்களைக் கைவிடுதல் கூடாது என்று ப்ரபந்நனைக் குறித்தே கூறப்பட்டுள்ளது.

இப்படியாக முடிவு செய்த பின்னர், சோதநாம் ப்ரதிசோதநாம், ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் - உத்தவா! ஆகவே ஒரு குறிப்பட்ட பலனுக்காக உள்ள உபாயமாக இதனைச் செய் என்னும் விதியையும், இதனைச் செய்யவேண்டாம் என்னும் விதியையும், இப்படியாக விதிக்கின்ற தர்மத்தையும், இந்த இரண்டு கர்மங்களுக்கும் உதவியாக இதுவரை உன்னால் கேட்கப்பட்டதும், இனி கேட்க உள்ளதும் – என்ற வரியானது ப்ரபத்திக்கு அங்கமாக இவற்றைக் கொள்ளவேண்டாம் என்பதே ஆகும். முமுக்ஷுவைக் குறித்தும் த்ரைவர்ணிகாந் த்யஜேத்தர்மாந் – தர்மம், அர்த்தம், காமம் என்பதற்குச் சாதனமான தர்மங்களைக் கைவிடவேண்டும் – என்று மற்ற பலன்களைக் குறித்துக் கூறப்பட்டவற்றையும் காண்க.

**மூலம்** – இங்ஙனன்றிக்கேநித்ய நைமித்திகாதிகளுடைய ஸ்வரூப த்யாகம் விவக்ஷிதம் என்னில், முன்பு சொன்ன ஸர்வவிரோதமும் ப்ரஸங்கிக்கும். இந்த நிஷ்கர்ஷம் ஸத்த்வநிஷ்டராய் விவேகிகளாயிருப்பார் தெளிந்து அங்கீகரிப்பார்கள். இவ்வர்த்தத்தை “செய்யாதன செய்யோம், தீக்குறளை சென்றோதோம்” என்றும், “செய்யேல் தீவினை என்று அருள் செய்யும்” என்றும் அருளிச் செய்தார்கள். “நாயினேன் செய்த குற்றம்

நற்றமாகவே கொள் ஞாலநாதனே” என்றதுக்கும் தாத்பர்யத்தைப் பார்த்தால் க்ஷமிக்க வேணுமென்று அபேக்ஷித்தபடியாகையாலே ப்ரபந்நனுக்கும் அபராதம் புகுந்தால்

அஜ்ஞானாதத வா ஜ்ஞானாத் அபராதேஷு ஸத்ஸ்வபி
ப்ரயாச்சித்தம் க்ஷமஸ்வேதி ப்ரார்த்தநைகைவ கேவலம்

என்கிறபடியே க்ஷமை கொள்ளப் ப்ராப்தம்.

ப்ராயச்சித்தாந்தராசக்த: காலக்ஷேபாக்ஷமோபி வா
புந: ப்ரபத்யதே நாதம் அபிந்தந் லோகஸங்க்ரஹம்

**விளக்கம்** – இவ்விதம் அல்லாமல், நித்ய நைமித்திக கர்மங்களைக் கைவிடவேண்டும் என்று கொண்டால், இதுவரை கூறப்பட்ட அனைத்துமே முரணாகிவிடும். ஸாத்விகமாக உள்ளவர்களும், விவேகம் உள்ளவர்களும் இவ்விதம் கூறியதை ஏற்பர். இதனைக் கீழே உள்ள வரிகளில் காண்க:

- திருப்பாவை (2) - செய்யாதன செய்யோம், தீக்குறளை சென்றோதோம் – எதனைச் செய்யாக்கூடாதோ அதனைச் செய்யமாட்டோம்; தீயவற்றைச் செய்யமாட்டோம்

- திருவாய்மொழி (2-9-3) - செய்யேல் தீவினை என்று அருள் செய்யும் – தீயவற்றைச் செய்யாமல் இருக்க அருளவேண்டும்.

மேலும், திருச்சந்தவிருத்தம் (111) - நாயினேன் செய்த குற்றம் நற்றமாகவே கொள் ஞாலநாதனே – நாதனே! மிகவும் அற்பனான நான் செய்யும் குற்றங்களையும் குணங்களாகவே கொள்ளவேண்டும் – என்றுள்ள வரியானது, குற்றங்களை மன்னிக்கவேண்டும் என்னும் ப்ரார்த்தனையாகவே உள்ளது. ஆகவே ப்ரபந்நன் ஒருவன் குற்றம் செய்ய நேரிட்டால், வங்கிபுரம் நம்பி காரிகை - அஜ்ஞானாதத வா ஜ்ஞானாத் அபராதேஷு ஸத்ஸ்வபி ப்ரயாச்சித்தம் க்ஷமஸ்வேதி ப்ரார்த்தநைகைவ கேவலம் – தெரிந்தோ, தெரியாமலோ அபசாரம் செய்தால், “பொறுத்துக் கொள்ளவேண்டும்” என்று மன்னிப்புக் கேட்பதே சிறந்த ப்ராயச்சித்தமாகும். ப்ராயச்சித்தாந்தராசக்த:

காலக்ஷேபாக்ஷமோபி வா புந: ப்ரபத்யதே நாதம் அபிந்தந் லோகஸங்க்ரஹம் – வேறு ப்ராயச்சித்தம் செய்யச் சக்தி அற்றவனும், காலதாமதம் பொறுக்க இயலாத ஸ்வபாவம் உள்ளவனும், உலகைக் காப்பாற்றவேண்டும் என்றுள்ள சாஸ்த்ரங்களுக்குப் பங்கம் உண்டாக்காமல் பகவானிடம் ப்ரபத்தி செய்கிறான்.

## அறிந்து செய்யும் பாவங்கள் ப்ரபந்நனுக்கும் உண்டாகாது என்னும் வாதத்திற்கான கண்டனம்

**மூலம்** –முமுக்ஷுத்வமேயடியாக புத்திபூர்வ நிஷித்தங்கள் புகுராவென்னும் வார்த்தையும் வித்யதே ப்ராஹ்மணே தம: என்னுமாப் போலே ஔசித்யத்தாலே சொன்னபடியத்தனை. முமுக்ஷுவுக்கே புத்திபூர்வ நிஷித்தங்கள் புகுந்து பரிஹாரங்கள் பண்ணுகை மஹர்ஷிகள் பக்கலிலும் ருஷிப்ராயர் பக்கலிலுமுள்படக் கண்டு போரா நின்றதிறே. இங்ஙனன்றாகில் உபாஸகர்களும் முமுக்ஷுக்களாகையாலே அவர்களுக்கும் புத்திபூர்வோத்தராகம் கடியாமையாலே “உத்தராகாச்லேஷம் ப்ராமாதிக விஷயம்; புத்திபூர்வோத்தராகத்துக்கு க்ஷந்தவ்யத்வம் இல்லை” என்று வ்யவஸ்தை பண்ணவொண்ணாதொழியும். உபாஸகனுக்கும் ப்ரபந்நனுக்கும் வர்ண ஆச்ரம ஜாதி கோத்ர ப்ரவர சரண குல தேச கால அவஸ்தா குண ஸமயாதிகளை உபாதியாகக் கொண்டு சொன்ன நிஷித்தங்கள் தவிருமிடத்தில் விசேஷமில்லை. நிஷித்தங்கள் புகுந்தால் ப்ராயச்சித்தம் யதாதிகாரமாகையாலே வைஷம்யம் உண்டு.

**விளக்கம்** – மோக்ஷத்தில் விருப்பம் உள்ளபோது சாஸ்த்ரங்களில் விலக்கப்பட்ட செயல்களை அறிந்துகொண்டு செய்யும் நிலை உண்டாகாது என்று கூறுவது, “அப்படிப்பட்ட நிலை பெரும்பாலும் ஏற்படாது” என்றே கூறுவதாகும் – இவ்விதம் உரைப்பது பொருத்தமல்ல. இது இராமாயணம் யுத்தகாண்டம் (16-9) - வித்யதே ப்ராஹ்மணே தம: - அந்தணனிடம் இந்த்ரியங்களை அடக்கும் வலிமை உண்டு – என்று கூறுவது போன்றே ஆகும். மஹரிஷிகளுக்கும், சில உயர்ந்த முமுக்ஷுக்களுக்கும் கூட இது போன்று சாஸ்த்ரங்களில் விலக்கப்பட்டவற்றைச் செய்யும் நிலை உண்டாகி, பின்னர் அதற்கான பிராயச்சித்தம் செய்த நிகழ்வுகள் உண்டு. இவ்விதம் கொள்ளவில்லை என்றால் (அதாவது முமுக்ஷு அறிந்துகொண்டே தவறுகள் செய்யமாட்டான் என்று கொண்டால்),

பதியோகத்தில் உள்ள உபாஸகர்களும் முமுக்ஷுக்களாகையாலே அவர்களும் அறிந்துகொண்டு தவறு செய்யமாட்டார்கள் என்றாகும்; இது ஸ்ரீபாஷ்யத்தில் – பின்னர் செய்யப்படும் பாவம் என்பது அறியாமல் செய்தால் மட்டுமே பொறுத்துக் கொள்ளப்படும் என்றும், அறிந்து கொண்டு செய்யும் பாவங்களுக்கு மன்னிப்பு இல்லை என்றும் – கூறப்பட்டது வீணாகும். ஆக உபாஸகனாக இருந்தாலும், ப்ரபந்நனாக இருந்தாலும் வர்ணம், ஆச்ரமம், பால் (ஆண், பெண்), கோத்ரம், ப்ரவரம், ஒழுக்கம், குலம், இடம், காலம், சூழ்நிலை, குணம், மனநிலை ஆகிய எதிலும் அறிந்துகொண்டு செய்யும் பாவங்களுக்கு வேறுபாடு இல்லை. ஆனால் அவ்விதமாகச் செய்யும் தவறுகளுக்கான பிராயச்சித்தத்தில், அதிகாரிபேதம் காரணமாக வேறுபாடு உண்டு.

**மூலம்** – "என்னடியார் அது செய்யார், செய்தாரேல் நன்று செய்தார்" என்கிறதுவும் அபராதம் புகுருமென்கைக்கு லிங்கம். இங்கு, "செய்தாரேல் நன்று செய்தார்" என்றதுக்கு "ப்ராமாதிகமாகப் புகுந்தால் நாமே க்ஷமிப்புதோம்; புத்திபூர்வகமாகப் புகுந்தால் அவர்கள் க்ஷமை கொள்ளாதவளவிலும் சிக்ஷா விசேஷங்களாலே நாம் சமிப்புதோம்; ஒருபடிக்கும் கைவிடோம்" என்று தாத்பர்யம். "நன்று செய்தாரென்பர் போலும்" என்று சொல்லுகையாலே, இது வஸ்துவ்ருத்தியில் நன்று அன்று என்னுமிடம் ஸூசிதம்.

விளக்கம் – பெரியாழ்வார் திருமொழி (4-9-2) - என்னடியார் அது செய்யார், செய்தாரேல் நன்று செய்தார் – என்ற வரியும், அபராதங்கள் உண்டாக வாய்ப்பு உண்டு என்பதையே கூறுகிறது. இங்கு, "செய்தாரேல் நன்று செய்தார்" என்பதன் பொருள் – தாங்கள் அறியாமல் தவறு செய்தால் பொறுத்துக்கொள்ளப்படும்; ஆனால் அறிந்து கொண்டு தவறு செய்தால், அதனைத் தொடர்ந்து மன்னிப்பு கேட்காமல் இருந்தால், அவர்களைத் தண்டிப்பேன்; ஆனால் எப்படி என்றாலும் கைவிடமாட்டேன் – என்பதாகும். ஆனால் இவர்கள் செய்யும் தவறுகள் தவறுகளே என்பதை "நன்று செய்தாரென்பர் போலும் – நல்லது செய்ததாகவே கொள்ளப்படும்" என்பதால் உணரலாம்.

## அறிந்தே செய்யும் பாவங்களுக்கு ப்ரபந்நரும் ப்ராயச்சித்தம் செய்யவேண்டும்

**மூலம் –**

அபயஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத்
ப்ராயசித்திரியம் ஸாத்ர யுத்புந: சரணம் வ்ரஜேத்

என்று சொல்லுகையாலே புத்திபூர்வோத்தராகத்தில் ஈச்வரனுக்கு நிக்ரஹஹேச்சை உதியாதென்னவொண்ணாது. ஸர்வசக்தியானவனுக்கு நிக்ரஹஹேச்சை பிறந்தால் க்ஷமை கொள்ளாதபோது பலஸித்தியில்லை என்னவும் ஒண்ணாது. ஈச்வரனுக்குப் ப்ரீத்யபாவமாத்ரம் பிறக்குமத்தனையென்றால் தனக்கு அத்தால்மேல் ஒரு ப்ரத்யவாயம் இல்லையாகில் புந: ப்ராயச்சித்தம் பண்ணவேண்டா. தனக்கும் ப்ரீத்யபாவம் பிறக்குமத்தனையென்றாலும் ப்ரத்யவாயம் ஸித்தமாயிற்று. அதிலும் கழிந்ததுக்கு ப்ராயச்சித்தம் வேண்டா. மேலும் அநுவ்ருத்தமாய் வரப்புகுகிற ப்ரீத்யபாவத்தைப் பற்ற ப்ராயச்சித்தமென்றால், இத்தோடு துல்ய யோகக்ஷேமதையாலே யதாஸம்பவம் ச்ருத்யாதி ஸித்தங்களான உபக்லேசங்களும் வரும் என்று பீதனாய் ப்ராயச்சித்தம் பண்ண ப்ராப்தம்.

**விளக்கம்** – லக்ஷ்மீதந்த்ரம் (17-91) - அபயஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத் ப்ராயசித்திரியம் ஸாத்ர யுத்புந: சரணம் வ்ரஜேத் – அபசாரங்கள் உண்டானால் அதற்கான ப்ராயச்சித்தங்களைச் செய்தே தீரவேண்டும்; செய்யவேண்டிய ப்ராயச்சித்தம் ப்ரபத்தியே ஆகும் – என்றது காண்க. ஆக ப்ரபந்நன் ஒருவன் ப்ரபத்திக்குப் பின்னர் அபசாரங்கள் செய்தால், அவனைத் தண்டிக்கவேண்டும் என்று ஈச்வரனுக்கு ஆசை உண்டாகாது எனக் கொள்ளக்கூடாது. அனைத்து சக்தியும் கொண்ட ஈச்வரனுக்கு அவனைத் தண்டிக்க வேண்டும் என்னும் விருப்பம் உண்டானால், ப்ராயச்சித்தம் செய்யாதபோதும் அசம்பாவிதம் ஏதும் நிகழாது என்றும் கூறமுடியாது. இவ்விதம் செய்யப்படும் அபசாரங்கள் மூலமாக ஸர்வேச்வரனுக்கு ப்ரீதி மட்டுமே குறையும் என்று கூறினால், அத்தகைய ப்ரீதிகுறைவு ஒருவனுக்கு எந்தவிதமான அசம்பாவிதத்தையும் உண்டாக்காது என்றால், எந்தவிதமான ப்ராயச்சித்தமும் செய்யவேண்டியதில்லை. மேலும், அபசாரம் காரணமாக ஈச்வரனுக்கு ப்ரீதிகுறைவு உண்டாவது மட்டும் அல்லாமல், தனக்கும் ஈச்வரனிடம் ப்ரீதிகுறைவு உண்டாதல் என்பது மட்டுமே அதிகபக்ஷமாக உண்டாகும்

என்று கொள்ளும்போது, அந்த ப்ரீதிகுறைவு என்னும் அசம்பாவிதத்தைத் ஒப்புக் கொள்ளவேண்டும். இப்படியாக ஏற்படும் ப்ரீதிகுறைவு என்பது தற்காலிகமானது என்பதால் அதற்காக எந்தவிதமான ப்ராயச்சித்தமும் செய்யவேண்டியதில்லை. ப்ரீதிகுறைவு என்பது தொடர்ந்தபடி இருக்கலாம் என்ற நிலையில் ப்ராயச்சித்தம் செய்யவேண்டும் என்று கூறலாம்; இதன் காரணம் ச்ருதிகளிலும் ஸ்ம்ருதிகளிலும், நித்ய நைமித்திக கர்மங்களை இயற்றாமல் போனால் கிட்டக்கூடிய அசம்பாவிதங்களை ஒத்த நிலையையே ப்ரீதிகுறைவும் உண்டாக்கும் என்ற பயம் காரணமாகச் செய்தல் வேண்டும்.

**மூலம்** – ஆகையால் உபக்லேசங்களும், இங்குற்ற பகவதநுபவத்துக்குக் கரணாசக்திஞான ஸங்கோச துக்காதிகள் அடியாக வரும் விச்சேத ஸங்கோசங்களும், நியதாயுஸ்ஸுக்கள் அல்லாதார்க்கு ஆயுர்வ்ருத்தியாலே பரமபலத்துக்கு விளம்பமும் ப்ரஸங்கியாமைக்குப் புந: ப்ராபதநம் பண்ணுகிறது. இது வேண்டா என்பார்க்கும் நிஷித்தங்களை க்ஷமிக்கிற ந்யாயத்தாலே இதுவும் க்ஷமாவிஷயமாகையாலே இதுவே உசிதம். புத்திபூர்வோத்த ராகத்துக்கும் ஏற்கனவே ப்ரபத்தி பண்ணவொண்ணாதென்னுமிடமும், முன்பு கோலின பலமொழியப் பலாந்தரார்த்தமாகப் ப்ரபத்யந்தரம் பண்ணுகையில் விரோதம் இல்லையென்னுமிடமும் முன்பே ஸமர்த்தித்தோம். இப்படி பகவதாஜ்ஞாஸித்தமான ஸதாசாராநுபாலநத்திலும் விரோதமில்லாமை கண்டுகொள்வது.

**விளக்கம்** – எனவே துக்கங்களாலும்; இந்த்ரியங்களின் வலிமை குறைதல், ஞானம் குறையத் தொடங்குதல் முதலான துக்கங்கள் காரணமாக பகவத் அனுபவத்திற்கு உண்டாகும் தடைகளும்; சராசரியாக வாழும் ஆயுளைக் காட்டிலும் அதிகமான உயிருடன் இருப்பதால் மோக்ஷத்திற்கான காலதாமதம் ஆவதால் துக்கமும் – முதலானவை உண்டாகக்கூடாது என்றால் மீண்டும் ஒருமுறை செய்த தவறுகளுக்கான ப்ராயச்சித்தம் அவசியம் செய்தல்வேண்டும். இத்தகைய ப்ரபத்தி மீண்டும் தேவையில்லை என்று கூறுபவர்களுக்கும், தவறுகளைச் ஸர்வேச்வரன் பொறுத்துக்கொள்வான் என்று அவர்கள் கூறுவதால், இவ்விதம் ப்ராயச்சித்தம் செய்வதும் அதற்கான முயற்சிகளே என்பதால், ப்ராயச்சித்தமான ப்ரபத்தி பொருத்தமே ஆகும். தான் அறிந்துகொண்டே செய்யப்போகும் தவறுகளுக்காக முன்கூட்டியே ப்ராயச்சித்தமான ப்ரபத்தி செய்தல் என்பது பொருந்தாது என்றும், முன்னர் ப்ரபத்தி செய்தபோது ப்ரார்த்திக்காத பலனுக்காக மீண்டும் ஒருமுறை ப்ரபத்தி செய்வதில் தவறில்லை என்றும் முன்பே கூறப்பட்டது. ஆக ஸர்வேச்வரனின்

ஆணைக்கு உட்பட்டு செய்யும் எந்தவிதமான கர்மங்களிலும், எந்தவிதமான தோஷமும் இல்லை என்று அறியவேண்டும்.

**மூலம் –**

ப்ரபந்நஸ்ய நிஷித்தைரபி அலேபமுபபாதயந்
யதாபிமத ஸத்வ்ருத்த நிஷ்டேப்ய: கிமஸூயதி

ஆஜ்ஞாதிலங்கநே யஸ்ய ரக்ஷகத்வம் ந பஜ்யதே
ஆஜ்ஞாநுபாலநே தஸ்ய கதம் ததுபருத்யதே

ந சாசாரம் விநா கிஞ்சித் கைங்கர்யமுபபத்யதே
ந ஹி சௌசமுக்ருத்வைவ ஸமாராதநமர்ஹதி

ஆசாரப்ரபவோ தர்மோ தர்மஸ்ய ப்ரபுரச்யுத:
இதி பஞ்சமவேதே அபி ஸர்வசாஸ்த்ரார்த்த ஈரித:

ப்ரபத்தி ப்ரதிஸந்தாநம் ஆப்தைர்யதுபதிச்யதே
தத் ஸ்வாதிகார நியத ஹாநோபாதாந ஸித்தயே

ப்ரதிஸந்தாநதோ ஹி ஸ்யாத் அதீபூர்வேஷ்வலேபதீ:
புத்திபூர்வேஷ்வபி புந: ப்ரபத்தேரேவ ஸங்க்ரஹ:

அதோ நிரபராதேந வர்திதவ்யம் க்ருதாத்மநா
அபராத ப்ரஸங்கே ச புந: ப்ரபதநம் க்ஷமம்

**விளக்கம் –**

- ப்ரபந்நஸ்ய நிஷித்தைரபி அலேபமுபபாதயந் யதாபிமத ஸத்வ்ருத்த நிஷ்டேப்ய: கிமஸூயதி – ப்ரபந்நன் ஒருவன் சாஸ்த்ரங்களால் தடுக்கப்பட்டற்றைச்

செய்தாலும் தோஷம் இல்லை என்று கூறுபவர்கள், பகவானால் விதிக்கப்பட்ட கர்மங்களைச் சரிவர செய்பவர்களைக் கண்டு ஏன் பொறாமை கொள்ளவேண்டும்?

- ஆஜ்ஞாதிலங்கநே யஸ்ய ரக்ஷகத்வம் ந பஜ்யதே ஆஜ்ஞாநுபாலநே தஸ்ய கதம் ததுபருத்தயதே – ஸர்வேச்வரனின் ஆணைகளை மீறி நடந்தாலும் அவன் நம்மைக் காப்பாற்றுவதிலிருந்து தவறுவதில்லை என்று கூறினால், அவனுடைய ஆணைகளை மதித்து நடப்பவர்களை அவன் காப்பாற்றாமல் இருக்கக்கூடும் என்று எவ்விதம் கூற முடியும்?

- ந சாசாரம் விநா கிஞ்சித் கைங்கர்யமுபபத்யதே ந ஹி சௌசமுக்ருத்வைவ ஸமாராதநமர்ஹதி – ஆசாரம் இன்றிச் செய்யும் எந்தவிதமான கைங்கர்யமும் பொருந்தாது. ஒருவன் தன்னைத் தூய்மையாக வைத்துக் கொள்ளவில்லை என்றால், அவன் ஸர்வேவரனை ஆராதிக்கத் தகுதி அற்றவன் ஆகிறான்.

- ஆசாரப்ரபவோ தர்மோ தர்மஸ்ய ப்ரபுரச்யுத: இதி பஞ்சமவேதே அபி ஸர்வசாஸ்த்ரார்த்த ஈரித: - “தர்மம் என்பது ஆசாரத்தால் உண்டாகிறது, அந்தத் தர்மத்தின் நாதனாக ஸர்வேச்வரன் உள்ளான்”, என்று ஐந்தாவது வேதமாக உள்ள மஹாபாரதம் அனைத்து சாஸ்த்ரங்களிலும் உள்ளவற்றை உரைத்தது.

- ப்ரபத்தி ப்ரதிஸந்தாநம் ஆப்தைர்யதுபதிச்யதே தத் ஸ்வாதிகார நியத ஹாநோபாதாந ஸித்தயே – முன்பு செய்யப்பட்டதாகிய, நம்பத்தகுந்தவர்களால் உபதேசிக்கப்பட்ட ப்ரபத்தியைச் சிந்தித்தபடி இருத்தல் என்பது தன்னுடைய அதிகாரங்களுக்குட்பட்ட ப்ராயச்சித்தத்தைச் செய்யவும், அல்லாதவற்றை விடுவதற்குமே ஆகும்.

- ப்ரதிஸந்தாநதோ ஹி ஸ்யாத் அதீபூர்வேஷ்வலேபதீ: புத்திபூர்வேஷ்வபி புந: ப்ரபத்தேரேவ ஸங்க்ரஹ: - ப்ரபத்தியைச் சிந்திப்பதன் மூலம் அறியாமல் செய்யும் தவறுகள் ஒட்டாது என்னும் எண்ணமும், அறிந்துகொண்டே செய்யும் பாவங்களுக்கான ப்ராயச்சித்தம் மீண்டும் ப்ரபத்தியே ஆகிறது என்னும் எண்ணமும் உண்டாகிறது.

- அதோ நிரபராதேந வர்திதவ்யம் க்ருதாத்மநா அபராத ப்ரஸங்கே ச புந: ப்ரபதநம் க்ஷமம் – ஆகவே புத்தியுள்ள ஒருவன் எந்தவிதமான அபசாரங்களும் செய்யாமல் இருத்தல் வேண்டும். அபசாரங்கள் உண்டானால் மீண்டும் ப்ரபத்தி செய்து கொள்வதே சிறந்தது.

## ப்ரபந்நனுக்கான உபாயம்

**மூலம்** – அடியிலே நிரபராதனாக வேணுமென்று கோலி ப்ரபத்தி பண்ணினவனுக்கும் பின்பு இதுக்காக ப்ரபத்யந்தரம் பண்ணினவனுக்கும் உத்தரக்ருத்யம் நிரபராதமாகவே நடக்கும்.

**விளக்கம்** – முதலில் ப்ரபத்தி செய்யும்போதே தன்னுடைய வாழ்க்கையில் பாவங்கள் நீங்க வேண்டும் என்று எண்ணியபடி ப்ரபத்தி செய்தவனுக்கும், பின்னர் ஒரு காலகட்டத்தில் இனி உள்ள வாழ்க்கையில் பாவம் ஏற்படக்கூடாது என்று மீண்டும் ப்ரபத்தி செய்பவனுக்கும் அதன் பின்னர் பாவங்கள் ஸம்பவிப்பதில்லை.

## அறிந்தே செய்யும் பாவங்களுக்கு ப்ராயச்சித்தம் அவசியமாகும்

**மூலம்** – இதிஹாஸ புராணங்களில் சில வ்ருத்தாந்த தர்சநமாத்ரத்தைக் கொண்டு வசந விரோதத்தை அநாதரித்து பாகவதனுடைய புத்திபூர்வோத்தராகம் க்ஷந்தவ்யமென்று சிலர் சொல்லுவார்கள். இதுவும் அவ்வோ ப்ரகரணங்களில் அபிப்ராயம் அறியாமல் வந்தது. மஹாராஜருக்கும் உள்பட ஸமயாதிலங்கநமாத்ரமான அபராதம் பெருமாள் திருவுள்ளத்திலே சோகாபிபவத்தாலே ப்ரதிபாஸித்து

ந ச ஸங்குசித: பந்தா யேந வாலீ ஹதோ கத:
ஸமயே திஷ்ட ஸுக்ரீவ மா வாலிபதமந்வகா:

என்று அருளிச்செய்யக் கேட்டு இளையபெருமாள், பெருமாள் தாமே தணியவிட வேண்டும்படி சீறியருளிக் கிஷ்கிந்தையிலே செல்ல,

க்ருதாபராதஸ்ய ஹி தே நாந்யத் பச்யாம்யஹம் க்ஷமம்
அந்தரேணாஞ்ஜலிம் பத்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத்

என்று இந்த்ர வ்யாகரண பண்டிதன் மஹாராஜருக்கு உபதேசித்தானிறே. அவ்வளவில் மஹாராஜரும் இசைந்து

யதி கிஞ்சிததிக்ராந்தம் விச்வாஸாத் ப்ரணயேந வா
ப்ரேஷ்யஸ்ய க்ஷமிதவ்யம் மே ந கச்சிந்நபராத்யதி

என்று விண்ணப்பம் செய்ய வேண்டிற்று. அப்போது இளையபெருமாளுக்கும் தாம் மிகுதியாகச் சொன்ன வார்த்தைகளுக்கு

யச்ச சோகாபிபூதஸ்ய ச்ருத்வா ராமஸ்ய பாஷிதம்
மயா த்வம் புருஷாண்யுக்த: தச்ச த்வம் க்ஷந்துமர்ஹஸி

என்று க்ஷமை கொள்ளவேண்டிற்று. இப்படி ப்ரபந்நனுக்கும் ப்ராரப்த கர்ம விசேஷங்களாலே புத்திபூர்வோத்தராகம் புகுரவும் கூடும்; அவை புகுந்தால் அநுதப்தனாய் க்ஷமை கொள்ளவும் வேணும்.

**விளக்கம்** – ஒரு சிலர் இதிஹாஸம் மற்றும் புராணங்களில் உள்ள நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு, சாஸ்த்ரங்களில் கூறப்படுவதற்கு முரணாக, ப்ரபந்நன் ஒருவன் அறிந்து கொண்டே பாவங்கள் செய்தாலும் பொறுத்துக் கொள்ளப்படும் என்று கூறுவார்கள். இவர்களின் இந்தச் சிந்தனையானது, அந்த ப்ரகரணங்களின் நிலை அறியாத காரணத்தால் உண்டானதாகும். ஓர் உதாரணம் காண்போம். சுக்ரீவன் இராமனுக்கு உதவுவதாக வாக்களித்தான்; ஆனால் அந்தக் காலம் கழிந்த பின்னரும் வந்து உதவவில்லை; இதனால் உண்டான அபராதம் என்பது இராமனின் திருவுள்ளத்தில் சோகமாக உருவெடுத்தது. இதனால் இராமன் இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (30-81)

- ந ச ஸங்குசித: பந்தா யேந வாலீ ஹதோ கத: ஸமயே திஷ்ட ஸுக்ரீவ மா வாலிபதமந்வகா: - வாலியை அழித்த மார்க்கமானது இன்னும் அடைக்கப்படாமல் உள்ளது; சுக்ரீவா! ஆகவே நீ அளித்த வாக்கின்படி நடப்பாயாக, வாலி போன மார்க்கத்தில் செல்லாதே – என்றான். இதனைக் கேட்ட லக்ஷ்மணன் மிகுந்த சீற்றம் கொண்டான்; அப்போது அவனைச் சமாதானம் செய்த இராமன் அவனை கிஷ்கிந்தைக்கு அனுப்பினான். லக்ஷ்மணனின் சீற்றத்தை உணர்ந்த இலக்கண பண்டிதனாகிய அனுமன் சுக்ரீவனிடம், இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (32-11) - க்ருதாபராதஸ்ய ஹி தே நாந்யத் பச்யாம்யஹம் க்ஷமம் அந்தரேணாஞ்ஜலிம் பத்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத் – மிகுந்த அபராதம் செய்துள்ள நீ (சுக்ரீவன்), உன்னுடைய கைகளால் லக்ஷ்மணை வணங்கி, பொறுத்துக் கொள்ளுமாறு விண்ணப்பம் செய்வதைக் காட்டிலும் வேறு உபாயத்தை (அனுமனாகிய) என்னால் காண இயலவில்லை – என்றான். இதனை ஏற்றுக் கொண்ட சுக்ரீவன் லக்ஷ்மணனிடம், இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (36-11) - யதி கிஞ்சிததிக்ராந்தம் விச்வாஸாத் ப்ரணயேந வா ப்ரேஷ்யஸ்ய க்ஷமிதவ்யம் மே ந கச்சிந்நபராத்யதி – என்னுடைய தன்னம்பிக்கையாலோ அல்லது அன்பினாலோ நான் ஏதேனும் அபராதம் செய்திருந்தால் என்னை மன்னிக்கவேண்டுகிறேன். இந்த உலகில் குற்றம் செய்யாதவர்கள் யாரும் இல்லை – என்றான். இதனைக் கேட்ட லக்ஷ்மணன், தான் சுக்ரீவனைக் குறித்து உரைத்த சொற்களைச் சிந்தித்து, இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (36-28) - யச்ச சோகாபிபூதஸ்ய ச்ருத்வா ராமஸ்ய பாஷிதம் மயா த்வம் புருஷாண்யுக்த: தச்ச த்வம் க்ஷந்துமர்ஹஸி – மிகுந்த துன்பத்தில் ஆழ்ந்துள்ள இராமனின் சொற்களைக் கேட்டதன் காரணமாகவே நான் உன்னைக் குறித்துக் கடுமையான சொற்கள் உரைத்தேன். இதனை நீ பொறுத்துக் கொள்ளவேண்டும் – என்று சுக்ரீவனிடம் மன்னிப்பு கோரினான் அல்லவோ? ஆகவே ப்ரபந்நன் ஒருவன், பலன் தரத் தொடங்கிவிட்ட பூர்வஜன்ம கர்ம பலன்கள் காரணமாக உண்டாகும் அபராதங்களுக்கு ஏற்ற ப்ராயச்சித்தங்களைச் செய்தே தீரவேண்டும்; அவற்றுக்காக மன்னிப்பும் கேட்கவேண்டும்.

## ஆளவந்தார் மற்றும் ஆழ்வார்களின் கூற்றுகளில் உள்ள ஆழ்கருத்து

**மூலம்** – "ந தர்மநிஷ்டோஸ்மி", "குளித்து மூன்றனலையோம்பும் குறிகொள் அந்தணமை தன்னை ஒளித்திட்டேன்" இத்யாதிகளும் கர்மயோகாதிகளுக்குச் சக்தியில்லாமல் சொல்லுகிறவத்தனை; யதாசக்தி பகவதாஜ்ஞாநுபாலநத்தைத் தவிரச் சொல்லுகிறனவன்று. ஆகையால் ப்ரபந்நனுக்கும் ப்ராஹ்மண்யாதி விசிஷ்ட சரீரம் விடுமளவும் அவ்வோ ஜாத்யாதிகளுக்கு ஈடான பகவதாஜ்ஞாநுபாலநம் கர்த்தவ்யம்.

**விளக்கம்** – ஸ்தோத்ரரத்னம் (22) - ந தர்மநிஷ்டோஸ்மி – நான் எந்தவிதமான தர்மங்களையும் கைக்கொள்ளவில்லை - என்றும், திருமாலை (25) - குளித்து மூன்றனலையோம்பும் குறிகொள் அந்தணமை தன்னை ஒளித்திட்டேன் – நீராடிய பின்னர் அந்தணன் ஒருவன் செய்யவேண்டிய கர்மங்களை நான் விட்டேன் – என்றும் கூறப்பட்ட வாக்கியங்கள் கர்மயோகத்தில் ஈடுபடுவதற்கான சக்தி இல்லை என்பதை மட்டுமே உணர்த்துகின்றன; அவை நம்முடைய சக்திக்கு உட்பட்ட ஸர்வேச்வரனுடைய ஆணைகளை மீறும்படி உரைக்கவில்லை. ஆகவே ப்ரபந்நன் என்றாலும், ப்ராஹ்மண்யம் முதலான ஜாதியைக் கொண்டுள்ள இந்தச் சரீரம் அழியும்வரை, அந்த ஜாதிக்கு ஏற்றபடி உள்ள பகவானின் ஆணைப்படி உள்ள தர்மங்களைச் செய்தே ஆகவேண்டும்.

ஆஹார க்ரஹ மந்த்ரார்த்த ஜாத்யாதி நியமைர்யுத:
குர்யால்லக்ஷ்மீச கைங்கர்யம் சக்தி அநந்ய ப்ரயோஜந:

**பொருள்** – உணவில் உள்ள கட்டுப்பாடுகள், ஆசார்ய பரம்பரை மூலமாக வந்த ஞானத்தை மட்டுமே ஏற்கவேண்டும் என்னும் கட்டுப்பாடுகள், தனக்காக விதிக்கப்பட்ட வேதங்களில் உள்ள மந்த்ரங்களைக் கொண்டு மட்டுமே கர்மம் செய்யவேண்டும் என்னும் கட்டுப்பாடுகள், நேர்மையான முறையில் இயற்றப்பட்ட செல்வம் மூலம் மட்டுமே கர்மங்களைச் செய்யவேண்டும் என்னும் கட்டுப்பாடுகள், இன்ன ஜாதியைச் சேர்ந்தவர்கள் இன்ன கர்மத்தை மட்டுமே செய்யவேண்டும் என்னும் கட்டுப்பாடுகள் முதலானவற்றுடன் கூடியவனாக, வேறு பலனை எதிர்பாராமல், தன்னுடைய சக்திக்கு

ஏற்றபடி மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய ஸ்ரீமந்நாராயணனுக்குக் கைங்கர்யம் செய்வானாக.

ஆசாராத்மகுணோபாய புருஷார்த்த விசேஷத:
அதிகாரிணி வைசிஷ்டயம் ப்ரக்ருஷ்யேதோத்தரோத்தரம்

**பொருள்** – தர்மங்களைச் சரியாகக் கடைபிடித்தல், தயை முதலான ஆத்மகுணங்கள், பகவானிடம் பக்தி, புருஷார்த்தங்கள் ஆகியவற்றின் பெருமைகளால் ஒரு அதிகாரியிடம் காணப்படும் மேன்மை என்பது மேலும் உயர்த்தியை அடையும்.

**மூலம்** – இப் ப்ரபாவநியமம் ரஹஸ்யத்ரயத்தில் ஈச்வரனுடைய ப்ரசாஸித்ருத்வாதி குணாநுபந்தமாக அநுஸந்தேயம்.

**விளக்கம்** – இப்படியாக உள்ள ப்ரபத்தி என்பதன் ப்ரபாவம், ரஹஸ்யத்ரயமாக உள்ள திருமந்த்ரம், த்வயமந்த்ரம் மற்றும் சரமச்லோகத்தால் கூறப்படும் ஸர்வேச்வனுடைய திருக்கல்யாணம் குணங்களுடன் ஸம்பந்தம் உள்ளவை என்று அறிக.

தகவால் தரிக்கின்ற தன்னடியார்களைத் தன் திறத்தில்
மிகவாதாஞ் செய்யு மெய்யருள் வித்தகன் மெய்யுரையின்
அகவா யறிந்தவ ராரணநீதி நெறிகுலைதல்
அகவாரென் வெங்கள் தேசிக ருண்மை யுரைத்தனரே

**பொருள்** – தன்னுடைய கருணை மூலமே தரிக்கின்ற தன்னுடைய அடியாகளாகிய ப்ரபந்நர்களை, தன்னைப் போன்று ஆக்குவதில் மிகுந்த அக்கறை காண்பிக்கின்ற, ஆச்சர்யமான செயல்களைக் கொண்ட க்ருஷ்ணன் அருளிச்செய்த சரமச்லோகத்தின் ஆழ்பொருளை வ்யாஸர் முதலானோர் நன்கு அறிவார்கள்; ஆகவே அவர்கள் உபநிஷத்துக்களில் உரைக்கப்பட்ட தர்ம மார்க்கம் தவறுவதை விரும்பமாட்டார்கள்; இப்படியாக உள்ள உண்மையை எங்களுடைய ஆசார்யர்கள் எங்களுக்கு உபதேசித்தனர்.

சாதுர்வர்ண்ய சதுர்விதாச்ரமமுகே பேதே யதாவஸ்திதே
வ்ருத்தம் தந்நியதம் குணாநுகுணயா வ்ருத்தயா விசிஷ்டம் ச்ரிதா:
த்யாகோபப்லவ நித்ய தூர சரணவ்ரஜ்யா விதௌ கோவிதா:
சிந்தாம் அப்யுகுணந்தும் அந்திமயுகே அபி ஏகாந்திந: ஸந்தி ந:

**பொருள்** – நான்கு ஜாதிகள், நான்கு ஆச்ரமங்கள் ஆகியவற்றுக்கு இடையே உள்ள பேதங்கள் சாஸ்த்ரங்களில் கூறியபடி உள்ளன. விஷ்ணுவின் பக்தனாக இருப்பதற்கு ஏற்ற அநுஷ்டானங்களால் கூடின ஜாதி மற்றும் ஆச்ரமம் ஆகியவற்றுக்கு ஏற்றதான நடத்தை உள்ளவர்களாகவும், வர்ணாச்ரம தர்மங்களைக் கைவிடுதல் என்பதாகிய குற்றத்துக்கு எப்போதும் தொலைவில் உள்ளதான ப்ரபத்தி செய்யும் விஷயத்தில் ஸாமர்த்யம் உள்ளவர்களாகவும் இருக்கின்ற பரமைகாந்திகளாகிய ப்ரபந்நர்கள் – இந்தக் கலியுகத்திலும் தங்களுக்குரிய தர்மங்களின்படி வாழ்ந்து, நாம் அவர்களைப் பற்றி ஆராயும் ரீதியில் உள்ளனர்.

ப்ரபாவ வ்யவஸ்த அதிகாரம் ஸம்பூர்ணம்

## அத்யாயம் – 26 – ப்ரபாவரக்ஷாதிகாரம்

**மூலம்** –

சிலாதே: ஸ்த்ரீத்வாதி: விபரிணதி: ஸ்த்வத்புதமிதம்
தத: அப்யேதச்சித்ரம் யதுத தஹநஸ்யைவ ஹிமதா
த்ருணஸ்யைவாஸ்த்ரத்வம் ரிபுஷு நிஹதேரேவ ஹிததா
பதத்ரேணைவேஹ த்ரிபுவந பரித்ராணமிதி ச

**பொருள்** – கல் போன்றவைகளுக்கு பெண் தன்மை உண்டாவது போன்ற அற்புதமான மாறுதல்கள் இருக்கட்டும் (அஹல்யை). அதனைக் காட்டிலும் அதிக வியப்பு அளிப்பது என்னவென்றால் அக்னிக்கு குளிர்ந்த தன்மை வருவதும் (அனுமன்), புல் ஒன்று ஆயுதமாக மாறுவதும் (காகாசுரன் விஷயத்தில்), பகைவர்களை அழித்தும் அவர்களுக்கு நன்மை அளிப்பதும் (வாலி, பூதனை முதலியவர்கள்), பாதுகைகள் அயோத்தியில் இருந்தபடி மூன்று லோகங்களைக் காப்பதும் ஆகும்.

**மூலம்** – உபாய ப்ரபாவ வ்யவஸ்தை சொன்னோம். இனிமேல் உபாய ப்ரபாவத்தை ஸங்குசிதமாகப் பார்த்து வரும் தப்புகள் பரிஹரிக்கிறோம்.

**விளக்கம்** – உபாயமாக உள்ள ப்ரபத்தியின் ப்ரபாவம் எங்கு எல்லையுடன் கூடியதாக உள்ளது என்று கூறினோம். இனி ப்ரபத்தியைக் குறைவாக மதிப்பிடுபவர்களின் தவறான எண்ணங்களை நீக்குவோம்.

### ப்ரபத்தி ப்ராரப்த கர்மங்களை நீக்குவது குறித்த ஆக்ஷேபம்

**மூலம்** – அத்யுத்கடை: புண்யபாபை: இஹைவ பலமச்நேது என்கிற கணக்கிலே

உபாய பக்தி: ப்ராரப்த வ்யதிரிக்தாத்ய நாசிநீ
ஸாத்ய பக்திஸ்து ஸா ஹந்த்ரீ ப்ராரப்தஸ்யாபி பூயஸீ

என்கையாலே ப்ராரப்தங்களையுங்கூட அமுக்கி தன் பலத்தைக் கொடுக்கவற்றான ப்ரபத்தியைப் பண்ணினவனுக்கு வித்யாந்தர ந்யாயத்தாலே உத்தர பூர்வார்த்தங்களும், இவ்வித்யைக்குத் தன்னேற்றமான ஸாமர்த்யத்தாலே ப்ராரப்த கர்மபலத்தைப் பற்ற உண்டான ஆர்த்தியிலே எல்லைக்கு ஈடாக க்ஷணாந்தர திவஸாந்தர ஜந்மாந்தராத்யநு வ்ருத்தியும் கழியக்கடவதென்று மா சுச: என்கிற வாக்யத்துக்கு அபிப்ராயம்.

**விளக்கம்** – விஹஹேந்த்ர ஸம்ஹிதை - அத்யுத்கடை: புண்யபாபை: இஹைவ பலமச்நேது – க்ரூரமான பாவங்களையும், அதிகமான புண்ணியங்களையும் செய்பவன் இந்த ஜன்மத்திலேயே அவற்றின் பலன்களை அனுபவிக்கிறான் – என்று கூறியது காண்க. மேலும் இதே போன்று, உபாய பக்தி: ப்ராரப்த வ்யதிரிக்தாத்ய நாசிநீ ஸாத்ய பக்திஸ்து ஸா ஹந்த்ரீ ப்ராரப்தஸ்யாபி பூயஸீ – உபாயமாக உள்ள பக்தியானது பலன் தரத் தொடங்கிய கர்மபலன்கள் (ப்ராரப்த) அல்லாத மற்ற பாவங்களைப் போக்கும், ப்ரபத்தியானது பக்தியைக் காட்டிலும் உயர்வாக நின்று ப்ராரப்த பாவத்தையும் போக்கும் – என்றது காண்க. ஆக ப்ரபத்தியானது, பலன் தரத் தொடங்கிய பாவங்களைப் அழிப்பதோடு நிற்காமல், மேலும் பலன்களையும் அளிக்கவல்லதாகும். எந்தவொரு வித்யையை எடுத்துக் கொண்டாலும், கற்பதற்கு முன்னரும், அதன் பின்னரும் உள்ள பாவங்களைத் தனக்கே உரித்தான பெருமை காரணமாக அந்த வித்யை நீக்கவல்லது என்று கூறுவதற்கு ஏற்ப, ப்ரபத்தியானது அந்த வித்யையைக் காட்டிலும் உயர்ந்ததாக இருந்து கொண்டு, பலன் தரத் தொடங்கிய கர்மபலன் என்பது அடுத்த நொடியோ, அடுத்த நாளோ, அடுத்த பிறவியிலோ கூட இல்லாதபடிச் செய்துவிடுகிறது. இதுவே கீதை (18-66) – மா சுச: - ஆகவே அச்சம் கொள்ளாதே – என்பதன் பொருளாகும்.

**மூலம்** – இவ்வர்த்தம் தத்த்வமாகில் ப்ராரப்த கர்ம விசேஷபலமாய்க் கொண்டு வருகிற துக்கங்களும், துக்க காரணங்களான கர்மங்களினுடைய ஆஜர்னமும் கழிய வேண்டாவோ? ஆர்த்தனாய்ப் புருஷன் அர்த்திக்கக் கொடுக்கவேணும் என்னில், ஆநுஷங்கிகமான புங்க்திபாவநத்வாதிகளைப் போலே அநபிஸம்ஹிதங்களையுங்கூட ஹிதைஷியான ஈச்வரன் தானே கொடுக்கத்தட்டு ஏன்? இப்படிச் செய்யக் காணாமையால் சோக விஷயமான அம்சமெல்லாம் நிச்சேஷமாகப் ப்ரபத்தியாலே கழியும் என்றவிடம் ப்ரபத்தி ப்ரபாவாதிசயத்தைப் பற்ற ஸ்துதி பண்ணினபடியென்று சிலர் இதின் ப்ரபாவத்தை வரையிட்டுப் பார்ப்பர்கள்.

**விளக்கம்** – கீழே உள்ள சில கேள்விகளை ப்ரபத்தியின் பெருமை குறித்து சந்தேகம் கொள்பவர்கள் அல்லது ஆக்ஷேபம் செய்பவர்கள் எழுப்புவர். ப்ரபத்திக்கு உள்ள இந்த மேன்மை உண்மையாக இருந்தால், ப்ரபந்நன் ஒருவனுக்குப் ப்ராரப்த கர்மங்களின் பலனாக உள்ள துக்கங்களும், அவற்றுக்குக் காரணமாக உள்ள கர்மாநுஷ்டானங்களும் ப்ரபத்திக்குப் பின்னரும் நீங்காமல் உள்ளது ஏன்? இதற்கு, “சரீரம் விழும்போது மோக்ஷம் வேண்டும் என்று ப்ரபத்தி காலத்தில் ஸங்ல்பம் செய்தும், சரீரம் நீடிக்கும்வரை துன்பங்கள் நீங்காமையும் அவற்றின் காரணமான கர்மங்கள் தொடராமையும் அப்போது ஸங்கல்பம் செய்யாமலும் இருந்திருக்கலாம்”, என்று நீங்கள் பதில் உரைக்கக்கூடும். ஆனால், விருப்பப்பட்ட முக்கியமான பலனைக் காட்டிலும் வேறுபட்டதான பலன்களை, ப்ரபந்நரோடு கர்மங்களைச் செய்பவர்களும் தூய்மை அடைவது போன்று, ப்ரபந்நன் ப்ரபத்தி காலத்தில் ஸங்கல்பிக்காதவற்றையும் ஸர்வேச்வரன் அளிக்கத் தடை என்ன உள்ளது? இவ்விதம் ஸர்வேச்வரன் செய்வதில்லை என்பதால், துன்பம் உண்டாகக் காரணமாக உள்ள அனைத்தும் ப்ரபத்தியின் மூலம் நீங்கிவிடும் என்று கூறுவது, ப்ரபத்தியின் பெருமையை உயர்த்திக் கூற மட்டுமே ஆகும். இப்படியாக ஒரு சிலர் ப்ரபத்தியின் பெருமையை எல்லைப்படுத்தி உரைப்பர்.

## ஈச்வரன் அளிக்கும் துக்கமும் ப்ரபந்நனுக்கு நன்மையையே அளிக்கும்

**மூலம்** – இதுக்குஉத்தரம், அநுக்ரஹசீலனாய் ஆச்ரயிப்பார்க்குப் ப்ரபத்தி வாக்யோச்சாரண ப்ராரம்பத்திலே கடுக மோக்ஷம் கொடுக்கத் த்வரிக்கிற ஈச்வரன் இவனுடைய நசையாலே சிறிது காலம் இங்கே வைக்க இசைந்தவளவிலே இவ்விடத்திலுள்ள சிற்றின்பங்களை துக்க ப்ரஸங்க ரஹிதமாக அநுபவிப்பிக்குமாகில் இவனுக்கு இந்நசை ஒருகாலும் மாளாது; பகவதநுபவத்தில் போக்யதாபுத்தியும் கொழுந்துவிட்டு வராது. ஆகையால், யந்யாநுக்ரஹமிச்சாமி தநம் தஸ்ய ஹராம்யஹம் பாந்தவைச்ச வியோகேந ஸதா பவதி துக்கித: தேந துக்கேந ஸந்தப்தோ யதி மாம் ந பரித்யஜேத் தம் ப்ரஸாதம் கரிஷ்யாமி ய: ஸுரைரபி துர்லப: என்கிறபடிகளிலே, துக்காதிகளுக்குக் காரணமான ப்ராரப்த கர்ம விசேஷத்தை ஸந்நிஹிதமான கசாதிகளைப் போலே துணையாகக் கொண்டு பித்ராதிகளைப் போலே சிக்ஷகனான ஈச்வரன், சில

கடின ப்ரக்ருதிகளுக்குப் பண்ணுகிற அநுக்ரஹ விசேஷம் இதென்று அநுஸந்திக்கை உசிதம்.

**விளக்கம்** – இதற்கு விடை அளிப்போம். அனுக்ரஹம் செய்யும் ஸ்வபாவம் உள்ள ஈச்வரன், தன்னிடம் ப்ரபத்தி செய்தவர்களுக்கு அந்த நொடியிலேயே மோக்ஷம் அளிக்கத் தயாராகவே உள்ளான். ஆனால் ப்ரபந்நனின் ஆசை காரணமாக அவனை ஸர்வேச்வரன் இந்த உலகில் சிறிது காலம் நிறுத்து வைக்க வேண்டியதாக உள்ளது. அந்தக் காலகட்டத்தில், ப்ரபந்நன் இந்த உலகில் உள்ள சிற்றின்பங்களை எந்தவிதமான துன்பமும் இல்லாமல், சுகமாக அனுபவிக்கிறான் என்று கொள்வோம்; இவ்விதம் இருந்தால், அவனுக்கு இந்த உலகில் தொடர்ந்து இருப்பதற்கான ஆசை எப்போதும் குறையாது; மேலும் பகவத் அனுபவத்தில் ஆழ்ந்த ஈடுபாடும் உண்டாகாது. ஆகவே யஸ்யாநுக்ரஹமிச்சாமி தநம் தஸ்ய ஹராம்யஹம் பாந்தவைச்ச வியோகேந ஸதா பவதி துக்கித: தேந துக்கேந ஸந்தப்தோ யதி மாம் ந பரித்யஜேத் தம் ப்ரஸாதம் கரிஷ்யாமி ய: ஸுரைரபி துர்லப: - யாருக்கு நான் அனுக்ரஹம் செய்யவேண்டும் என்று விரும்புகிறேனோ அவர்களுடைய செல்வங்களை முதலில் நான் அபகரிப்பேன்; அவனுடைய பந்துக்களின் மரணத்தால் அவன் மிகுந்த துன்பம் அடைவான்; அப்போதும் அவன் என்னை விடாமல் இருந்தால், தேவர்களுக்கும் கிட்டாத அனுக்ரஹத்தை அவனுக்கு நான் செய்வேன் – என்றுள்ள ச்லோகங்களுக்கு ஏற்ப, அந்த மனிதனுடைய துக்கத்திற்குக் காரணமாக உள்ள பலன் தரத் தொடங்கிவிட்ட அவனுடைய கர்மங்களைத் தனக்கு அருகில் சாட்டை போன்று துணையாக வைத்தபடி, தந்தையைப் போன்று சிறிய துன்பங்களைத் தண்டனைகளாக அளிக்கிறான். இவ்விதம் செய்வதும் அவனைத் திருத்தும்விதமாக ஸர்வேச்வரன் செய்யும் அனுக்ரஹமே என்று உணரவேண்டும்.

**மூலம்** – ஒரு வ்யாதி விசேஷத்தை உண்டோ என்று ராஜா கேட்க, அவரும் ஓர் உபாத்யாயர் உண்டென்று பட்டர் அருளிச்செய்தார். ஆயுஸ்ஸு வளர்க்கவொண்ணாதபடி நியதாயுஸ்ஸானவனுக்கு உள்ளத்தில் உத்வேகம் பிறக்கைக்காகவும், அநியதாயுஸ்ஸுக்களுக்கு ஆயுஷ்காமீயங்களையிட்டு வளர்க்க நினையாமைக்குமாக துக்காதிகள் இவனுக்கு உபாத்யாயர்கள். இது ஆழ்வானுள்ளிட்டார் பக்கலிலே ப்ரஸித்தம். அபசாரங்களையும் தத்பலங்களையும் சிலர்க்குக் காட்டி மறைக்கிற இதுவும் “பாம்போடு ஒரு கூரையிலே பயின்றார்போல் தாங்காது உள்ளம் தள்ளும் என் தாமரைக்

கண்ணா” என்று நிர்வேதபூர்த்தியைக் கடுகப் பிறப்பித்துத் தானிசைந்த ஸம்ஸார நிவர்த்தனத்தைக் கடுக இவனையும் இசைவிக்கைக்காகவத்தனை. இவ்விடத்தில் ப்ரதிகூலாநுபவாம்சம் துஷ்கர்ம பலம். இது சிக்ஷணமாகிறதுவும் ப்ராயச்சித்தத்திலே மூட்டுகிறதுவும் உபாய பலம். இவற்றில் சிக்ஷணாதிகள் ப்ராரப்த ஸுக்ருதவிசேஷ பலமாயும் வரும். ப்ராணார்த்தியாய் விழுந்த காகத்துக்குப் ப்ராணன் கொடுக்கையாலே அங்கும் ப்ரபத்தி பலம் பூர்ணம். துஷ்ப்ரக்ருதியான இக்காகத்துக்கு சிக்ஷையாக ஒரு கண்ணை வாங்கிவிட்டதுவும் நிக்ரஹமன்று; அநுக்ரஹ விசேஷம்.

**விளக்கம்** – ஸ்வாமி பராசரபட்டரை நோக்கி ஒரு ராஜா ஒரு பிணியைக் குறித்து உரைத்து, அந்தப் பிணி பட்டருக்கும் உண்டோ என்று கேட்டார். அதற்கு பட்டர் தனக்கும் ஆசிரியன் உண்டு என்றார் (இங்கு ஆசிரியன் என்று பட்டர் உரைத்தது துன்பத்தையே ஆகும். துன்பம் எவ்விதம் ஆசிரியன் ஆகும்? பொதுவாக மனிதர்கள் நியதாயுஸ்ஸுக்கள், அநியதாயுஸ்ஸுக்கள் என்று இரண்டு விதமாக உள்ளனர். நியதாயுஸ்ஸுக்கள் என்பவர்கள் ஹோமம் முதலியவை செய்தாலும் “இவர்களுடைய ஆயுள் இத்தனை காலம் மட்டுமே” என்று ஸர்வேச்வரனால் முடிவு செய்யப்பட்டவர்கள் ஆவர். அநியதாயுஸ்ஸுக்கள் என்பவர்கள் ஹோமம் முதலியவற்றைச் செய்து, அதனால் “இவர்களுடைய ஆயுள் இத்தனை காலம் மட்டுமே” என்று ஸர்வேச்வரனால் முடிவு செய்யப்படாதவர்கள் ஆவர். இவர்களில் நியதாயுஸ்ஸுக்களுக்கு துன்பங்கள் வந்தால், தங்களுடைய வாழ்வின் மீது பற்றுதல் இல்லாத மனநிலை உண்டாகி, மோக்ஷத்தை எண்ணத் தொடங்குவர்; அநியதாயுஸ்ஸுக்களுக்கு துன்பம் வந்தால் ஹோமம் முதலானவற்றைச் செய்து தங்களுடைய ஆயுளை நீட்டிக்க முயலமாட்டார்கள். இப்படியாக இவர்கள் இருவருக்கும் துன்பம் என்பதே இவர்களைத் திருத்தவல்ல சரியான ஆசிரியனாகும். இதனை ஸ்வாமி கூரத்தாழ்வான் முதலானவர்களின் வாழ்வில் காணலாம் (தனது கண்ணை இழந்தபோதிலும், மீண்டும் கண்ணை வேண்டாமல், அகக்கண் மூலமே ஸர்வேச்வரனைத் தரிசித்து வந்தார்). ஒரு சில ப்ரபந்நர்கள் அறிந்துகொண்டே சில தவறுகளைச் செய்யக்கூடும்; பின்னர் அதற்கான ப்ராயச்சித்தம் செய்வர்; இவ்விதம் துன்பம் அளிப்பது மறைமுகமாக திருத்தவே ஆகும். அவர்களுக்கு தான் அளிக்க விரும்பிய மோக்ஷத்தை விரைவாகக் கொடுக்கும் பொருட்டு, பெரியதிருமொழி (11-8-3) - பாம்போடு ஒரு கூரையிலே பயின்றார்போல் தாங்காது உள்ளம் தள்ளும் என் தாமரைக் கண்ணா – தாமரை போன்ற கண்கள் கொண்டவனே! இந்த ஸம்ஸாரத்தில் வசித்தல்

என்பது பாம்புடன் ஒரே வீட்டில் வசிப்பது போன்று மிகவும் பயங்கரமாக உள்ளதைக் கண்டு எனது மனம் தடுமாறுகிறது – என்று கூறுவதற்கு ஏற்ப, அவர்களை இந்த ஸம்ஸாரத்திலிருந்து வெளியேறும்படியாகச் செய்வதற்காகவே துன்பங்களை உண்டாக்குகிறான். இங்கு துக்கத்தை அனுபவித்தல் என்பது பூர்வஜன்ம கர்மபலன்களால் ஆகும். அதற்கான தண்டனையாக உள்ள பிராயச்சித்தம் முதலானவற்றில் ஈடுபடுத்துதல் என்பது ப்ரபத்தியின் பலனாகும். இவற்றில் ஒரு சில தண்டனைகள், பூர்வஜன்மத்தில் செய்யப்பட்டு, இப்போது பலன் தரத் தொடங்கிய புண்ணியங்களாலும் ஆகும்.தன்னுடைய உயிரின் மீது ஆசை கொண்டு இராமனிடம் சரணம் புகுந்த காக்கைக்கு மீண்டும் உயிர் அளித்ததால், ப்ரபத்தியின் பலன் அங்கு வெளிப்பட்டது. அந்தக் காக்கையின் நடத்தை காரணமாக அதன் ஒரு கண்ணைப் பறித்தது என்பது தண்டனை என்று கூற இயலாது; மீண்டும் தவறு செய்யாமல் இருக்கும் பொருட்டு செய்யப்பட்ட அனுக்ரஹம் என்றே ஆகிறது.

## ப்ரபத்தியின் ப்ரபாவம் குறையாமல் அநுஸந்திக்க வேண்டும்

**மூலம்** – ஆகையால் ஆபூத ஸம்ப்லவம் நரகத்திலே கிடக்கும்படி க்ஷணக்ருத பாப கர்மங்களுடைய ப்ரபாவமான பகவந்நிக்ரஹ விசேஷத்தை இசைந்தாற் போலவும், “துக்க ஸம்ஸார காந்தாரம் அபாரமிபிதாவதாம் ஏக: க்ருஷ்ண நமஸ்கரோ முக்தீரஸ்ய தேசிக:” என்றும், “ஏகோபி க்ருஷ்ணே ஸுக்ருத: ப்ரணாமோ தசாச்வமேதாவப்ருதேந துல்ய: தசாச்வமேதீ புநரேதி ஜந்ம ப்ரணாமீ ந புநர்பவாய” என்றும், ஸுக்ருத ப்ரணாம விசேஷத்தினுடைய ப்ரபாவத்தை இசைந்தாற் போலவும், ஸக்ருதேவ ப்ரபந்நாய, அத பாதக பீதஸ்த்வம், குயோநிஷ்வபி ஸஞ்ஜாதோ ய: ஸக்ருச்சரணம் கத: இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே இப் ப்ரபத்தி ப்ரபாவத்தையும் சாஸ்த்ரார்த்தோபப்லவ ப்ரஸங்கமில்லாத விஷயத்தில் சுருங்காதே அநுஸந்திக்கப் ப்ராப்தம்.

**விளக்கம்** – ஒரு நொடியில் செய்யக்கூடியதான சில பாவங்கள், ஸர்வேச்வரன் நமக்கு அளிக்கும் தண்டனை காரணமாக உண்டாகி, அதனால் மஹாப்ரளயம் முடிய நரகங்களில் தள்ளக்கூடிய சக்தி அந்தப் பாவங்களுக்கு உள்ளதை ஏற்றுக்கொள்கிறோம்; கீழே உள்ள வரிகளில் கூறப்பட்டபடி ஸுக்ருத ப்ரணாமத்தின் பெருமையை நாம் ஏற்றுக்

கொள்கிறோம் (ஸுக்ருத ப்ரணாமம் – இரண்டு கைகளால் மூன்று தடவை அஞ்ஜலி செய்து, முழங்கால் வரை கைகளை நீட்டியபடி நெற்றி, மூக்கு, கன்னம் முதலியவைகளால் மூன்று முறை பூமியைத் தொட்டு ஸாஷ்டாங்கமான நமஸ்காரத்தைப் பன்னிரண்டு முறை செய்வதாகும்):

- விஷ்ணுதர்மம் (1-18) - துக்க ஸம்ஸார காந்தாரம் அபாரமிபிதாவதாம் ஏக: க்ருஷ்ண நமஸ்கரோ முக்தீரஸ்ய தேசிக: - ஸம்ஸாரம் என்பதான எல்லை காண இயலாத கானகத்தில் ஓடியபடி உள்ளவர்களுக்கு, க்ருஷ்ணனைக் குறித்துச் செய்வதான நமஸ்காரம் என்பது, மோக்ஷம் என்பதான எல்லையைக் காணச்செய்யும்.

- மஹாபாரதம் சாந்திபர்வம் (46-119) - ஏகோபி க்ருஷ்ணே ஸுக்ருத: ப்ரணாமோ தசாச்வமேதாவப்ருதேந துல்ய: தசாச்வமேதீ புநரேதி ஜந்ம ப்ரணாமீ ந புநர்பவாய – க்ருஷ்ணனைக் குறித்து ஒருமுறை செய்யப்பட்ட ஸுக்ருத ப்ரணாமம் என்பது பத்து முறை செய்யப்பட்ட அச்வமேதத்திற்குச் சமம் ஆகுமோ? இல்லை, காரணம் பத்து அச்வமேத யாகம் செய்தவன் மீண்டும் பிறக்கக்கூடும்; ஆனால் க்ருஷ்ணனைக் குறித்து ஸுக்ருத ப்ரணாமம் செய்தவன் மீண்டும் பிறப்பதில்லை.

ஆகவே மேலே உள்ளதை ஏற்றுக் கொள்வதைப் போன்று, கீழே காணப்படும் வரிகளில் கூறப்படுவதான நொடிப்பொழுதில் அநுஷ்டிக்கப்படும் ப்ரபத்தியின் பெருமையை, சாஸ்த்ர விரோதம் இல்லாத மார்க்கத்தில் குறைவில்லாமல் ஏற்கவேண்டும்:

- இராமாயணம் யுத்தகாண்டம் (18-33) - ஸக்ருதேவ ப்ரபந்நாய – ஒருமுறை ப்ரபத்தி செய்தாலும்

- விஷ்ணுதர்மம் (66-72) - அத பாதக பீதஸ்த்வம் – பாவங்களுக்குப் பயப்படுபவன் என்றால், வேறு எதனையும் செய்யாமல், நாராயணனை அடையவேண்டும் என்பதை மட்டுமே எண்ணுவாயாக

- ஸநத்குமார ஸம்ஹிதை - குயோநிஷ்வபி ஸஞ்ஜாதோ ய: ஸக்ருச்சரணம் கத: - தாழ்ந்த குலத்தில் பிறந்தாலும், யார் ஒருவன் ஸர்வேச்வரனிடம் ஒருமுறை ப்ரபத்தி செய்கிறானோ, அவன் தன்னுடைய தாய்தகப்பனைக் கொன்றவனாக இருந்தாலும், காக்கப்படுகிறான்.

## முதலில் செய்யப்பட்ட ப்ரபத்தியே, அதன் பின்னர் அறிந்தே செய்யும் பாவங்களை நீக்கும் என்பதற்கான மறுப்பு

**மூலம்** – தம் மாதா பித்ருத ஹந்தாரமபி பாதி பவார்த்திஹா என்றதுவும் உத்தராக விஷயமல்லாதபோது உபப்லவமில்லை. உத்தராக விஷயத்தில் நிஸ்தார க்ரமங்கள் முன்பே சொன்னோம்.

சரணம் ச ப்ரபந்நாநாம் தவாஸ்மீதி ச யாசதாம்
ப்ரஸாதம் பித்ரு ஹந்த்ருணாம் அபி குர்வந்தி ஸாதவ:

இத்யாதிகளும் இப்படிக்கு ஸுகாடிதங்கள்.

**விளக்கம்** - ஸநத்குமார ஸம்ஹிதை - தம் மாதா பித்ருத ஹந்தாரமபி பாதி பவார்த்திஹா – தன்னுடைய மாதாபிதாக்களைக் கொன்றவனாக உள்ளபோதிலும் காக்கிறான் – என்பது ப்ரபத்திக்குப் பின்னர் நிகழ்ந்தால் மட்டுமே சாஸ்த்ர விரோதமாகாது. ப்ரபத்தியின் பின்னர் செய்யப்படும் பாவங்களுக்கான பிராயச்சித்தம் குறித்து முன்பே (அபராத பரிஹாராதிகாரம்) கூறினோம். விஷ்ணுதர்மம் (106-53) - சரணம் ச ப்ரபந்நாநாம் தவாஸ்மீதி ச யாசதாம் ப்ரஸாதம் பித்ரு ஹந்த்ருணாம் அபி குர்வந்தி ஸாதவ: - சரணம் புகுந்தவர்களையும், “உங்களுக்கு நான் அடிமையாக இருப்பேன்” என்று கூறுபவர்களையும், அவர்கள் தகப்பனைக் கொன்றவர்கள் என்றாலும், ஸாதுக்கள் காப்பாற்றுகிறார்கள் – என்பதிலும் இது பொருந்தும்.

## நல்ல மார்க்கத்திலிருந்து சற்றே தவறிய பாகவதர்களை நிந்திக்கக்கூடாது

**மூலம்** – நம் தர்சனத்திலே நிலையுடையராய் முமுக்ஷுக்களாய் கர்ம ஞான பக்தி ப்ரபத்திகளில் ஏதேனும் ஒரு சாஸ்த்ரீய மர்யாதையாலே பகவத் ப்ரவணரானார்க்கு யதமாநஸம்ஜ்ஞாத்யவஸ்தைகளிலே அர்த்தஸங்காதிகளாகிற சில வ்யாதிகள் நிச்சேஷமாக சமியாதமட்டைக் கொண்டு இவர்கள் ப்ராக்ருதரைப் போலே அஸம்பாஷ்யரென்று சில வைராக்யமாத்ர ப்ரதாநர்கள் சொல்லுவார்கள். இதுவும் பகவச்சாஸ்த்ராதிகளில் கிந்நவ்ருத்யாதி ப்ரகரணங்களாலே பரிஹார்யம்.

டம்பி ஹைதுக பாஷண்டி பகவ்ருத்தீச்ச வர்ஜயேத்

யே து ஸாமாந்ய பாவேந மந்யந்தே புருஷோத்தமம்
தே வை பாஷண்டிநோ ஜ்ஞேயா: ஸர்வகர்ம பஹிஷ்க்ருதா:

பும்ஸாம் ஜடாபரண மௌண்டயவதாம் வ்ருதைவ

இத்யாதிகளிற்படியே வழி தப்பினார் பக்கல் சொல்லும் வார்த்தையை நல்வழியில் அடி தடுமாறினார் பக்கல் சொல்லலாகாதிறே.

**விளக்கம்** – நம்முடைய எம்பெருமானார் ஸித்தாந்தத்தில் மிகவும் உறுதி உள்ளவர்களாக, மோக்ஷத்தின் பொருட்டு கர்மம் – பக்தி – ஞானம் – ப்ரபத்தி முதலான சாஸ்த்ரங்கள் விதித்துள்ள மார்க்கங்களில் மிகவும் விருப்பம் கொண்டு ஸர்வேச்வரனை மட்டுமே எப்போதும் சிந்தித்தபடி உள்ளவர்களாக இருப்பவர்களில் ஒரு சிலர், யதமாந ஸம்ஜ்ஞை முதலான ஜ்ஞானயோக நிஷ்டைகளில் முதல் நிலையில் இருக்கக்கூடும். இவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக பொருள் தேடுதல் முதலான செயல்களில் ஈடுபடுவதால், காமம் முதலான அற்பமான நிலைகளில் இருத்தல்கூடும். இவர்களுடன் பேசுதல் கூடாது என்று வைராக்யத்தை மட்டுமே முக்கியமாகக் கொண்டவர்கள் கூறலாம். இவ்விதம் கூறுவது சரியல்ல. தங்களுடைய வாழ்க்கைக்கு ஏற்ற பொருள் கிட்டாமல் திரியும் தரித்ரர்களை அவமதிப்பது கூடாது; அவர்கள் மூலமாகவே இந்த உலகைத் தூய்மை

செய்கிறான் என்று ஸ்ரீபாஞ்சராத்ரம் கூறுகிறது. மேலும் கீழே உள்ள வரிகளின்படி, தீய மார்க்கங்களில் செல்பவர்கள் குறித்து கூறப்படும் சொற்களை, நல்ல வழியில் சென்று சற்றே தடுமாறியவர்கள் விஷயத்தில் கூறுவது சரியல்ல:

- யாஜ்ஞ்யவல்க்ய ஸ்ம்ருதி (1-130) - டம்பி ஹைதுக பாஷண்டி பகவ்ருத்தீச்ச வர்ஜயேத் – தங்களைக் காண்பவர்கள் கொண்டாடவேண்டும் என்று தர்மகார்யங்கள் செய்பவர், ஹைதுகர்கள், பாஷண்டிகள், கொக்கு போன்று எப்போதும் இரைக்காகக் காத்துள்ளவர்கள் முதலானவர்களிடமிருந்து எதுவும் பெறுதல் கூடாது.

- யே து ஸாமாந்ய பாவேந மந்யந்தே புருஷோத்தமம் தே வை பாஷண்டிநோ ஜ்ஞேயா: ஸர்வகர்ம பஹிஷ்க்ருதா: - புருஷோத்தமனாகிய ஸர்வேச்வரனை மற்ற தெய்வங்களுடன் சமமாக எண்ணுபவர்கள் பாஷண்டிகள் ஆவர்; அவர்கள் அனைத்து கர்மங்களிலிருந்தும் விலக்கப்பட்டவர் ஆவர்.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (3-18-105) - பும்ஸாம் ஜடாபரண மௌண்டயவதாம் வ்ருதைவ – ஜடை என்னும் ஆபரணம் அல்லது மொட்டைத் தலை ஆகியவை உள்ளவர்களால் பகவத் ஆராதனம் போன்றவற்றைச் செய்யாமல் உண்பவர்களுடன் பேசினால் நாசம் அடைவர்.

**மூலம்** – பாகவதரில் ஊந ஹீந பரிஸ்ரஸ்த நஷ்ட விஷயங்களிலும் பரிமாற்றங்களில் தாரதம்யம் விதித்ததேயாகிலும் ஏகாந்த்யம் குலையாதேயிருக்கில் முடிவில் ஒரு விரகாலே இவர்கள் ஈடேறிவிடுவார்கள். இவர்கள் திறத்திலும் அபசாரம் ஆகாது என்றிறே சாஸ்த்ரம் விதித்தது. “நேஹாபிக்ரம நாசோஸ்தி ப்ரத்யவாயோ ந வித்யதே ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்” என்றும், “பார்த்த நைவேஹ நாமுத்ர விநாசஸ்தஸ்ய வித்யதே ந ஹி கல்யாணக்ருத் கச்சித் துர்கதிம் தாத கச்சதி” என்றும், கர்மயோகத்தில் சொன்ன ப்ரபாவம் பக்தி ப்ரபத்திகளில் கைமுதிக ந்யாய ஸித்தமிறே. “அபி சேத்ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக் ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ:” என்றும், “அபி பாபேஷ்வபிரதா மத்பக்தா: பாண்டுநந்தன முச்யந்தே பாதகை:

ஸர்வை: பத்மபத்ரமிவாம்பஸா" என்றும் ஸர்வேச்வரன் தானே அர்ஜுநனையும் தர்மபுத்திரனையும் பற்ற அருளிச்செய்தான்.

**விளக்கம்** – பாகவதர்களாக உள்ளபோதிலும் தோள்களில் சங்கு சக்கரம் பொறிக்கப்படாதவன் (ஊநன்), திருமண்காப்பு இல்லாதவன் (ஹீநன்), பகவானுடைய திருநாமத்தைப் பெயராக வைக்கப்படாதவன் (பரிஸ்ரஸ்தன்), மந்த்ர உபதேசம் பெறப்படாதவன் (நஷ்டன்) முதலானவர்களை உபசரிப்பதில் ஏற்றத்தாழ்வு காண்பிக்கலாம் என்று கூறப்பட்டபோதிலும், அவர்கள் ஏதேனும் மார்க்கத்தில் இறுதியில் கரையேறிவிடுவார்கள்; அதனால் அவர்களிடம் அபசாரம் அடையக்கூடாது என்றே சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. கீழே உள்ள வரிகளின்படி க்ருஷ்ணன் கர்மயோகத்திற்கே அளப்பரிய பெருமைகளை உரைத்துள்ளபோது, பக்தி மற்றும் ப்ரபத்தியின் பெருமைகளைக் கூறவும் வேண்டுமோ? தகுதி இல்லாதபோதே கிட்டும்போது, தகுதி இருந்தால் கிட்டும் என்பது ப்ரஸித்தம் அல்லவோ (இதுவே கைமுதிக ந்யாயம் ஆகும்)

- கீதை (2-40) - நேஹாபிக்ரம நாசோஸ்தி ப்ரத்யவாயோ ந வித்யதே ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத் – கர்மயோகத்தில் செய்யப்பட்ட தொடக்கம் என்பது எப்போதும் வீணாவதில்லை. அதே போன்று, அது முடியாமல் நின்றாலும் தோஷம் இல்லை. அந்தக் கர்மத்தின் மிகச் சிறிய பகுதி கூட இவனை மிகவும் பெரிய ஸம்ஸார பயத்திலிருந்து காப்பாற்றும்.

- கீதை (6-40) - பார்த்த நைவேஹ நாமுத்ர விநாசஸ்தஸ்ய வித்யதே ந ஹி கல்யாணக்ருத் கச்சித் துர்கதிம் தாத கச்சதி – பார்த்தா! யோகம் செய்யத் தொடங்கிய ஒருவனுக்கு, அது முழுமை அடையாமல் போனாலும் இங்கும் அங்கும் எந்தவிதமான அழிவும் உண்டாவதில்லை. நல்ல செயலைச் செய்த எவனும் தீயகதியை அடையமாட்டான் அல்லவோ?

மேலும் கீழே உள்ள வரிகளின் மூலம், ஸர்வேச்வரன் தனது திருவாயால் அர்ஜுனனையும் தர்மனையும் நோக்கி, தனது திருவடிகளை அடைபவன் எத்தகைய தீய ஒழுக்கம் கொண்டவன் என்றாலும், அவன் அனைத்து பாவங்களிலிருந்தும் விடுவிக்கப்படுகிறான் என்றான்:

- கீதை (9-30) - அபி சேத்ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக் ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ: - மிகவும் தாழ்ந்த ஒழுக்கத்தை ஒருவன் கொண்டிருந்தாலும், என்னை அவன் எந்தவிதமான பலனும் எதிர்பாராமல் வணங்கினால், அவன் ஸாதுக்களில் மிகவும் சிறந்தவன் ஆகிறான். அவன் மதிப்பதற்கு ஏற்றவன் ஆவான்.

- மஹாபாரதம் - அபி பாபேஷ்வபிரதா மத்பக்தா: பாண்டுநந்தன முச்யந்தே பாதகை: ஸர்வை: பத்மபத்ரமிவாம்பஸா – பாண்டுவின் புத்திரனே! என்னுடைய பக்தர்கள் பாவச் செயல்களைச் செய்தாலும், தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாமல் உள்ளது போன்று, அவர்களிடம் அந்தப் பாவங்கள் ஒட்டுவதில்லை.

**மூலம்** – அப்படியே ஸ்ரீபுண்டரீக நாரத ஸம்வாதத்திலும்

சீரவாஸா ஜடீ வா ஸ்யாத் த்ரிதண்டீ முண்ட ஏவ வா
பூஷிதோ வா த்விஜச்ரேஷ்ட ந லிங்கம் தர்மகாரணம்
யே ந்ருசம்ஸா துராத்மாந: பாபாசாரரதா: ஸதா
தே அபி யாந்தி பரம் ஸ்தாநம் நரா நாராயணாச்ரிதா:

லிப்யந்தே ந ச பாபேந வைஷ்ணவா வீதகல்மஷா:
புநந்தி ஸகலம் லோகம் ஸஹஸ்ராம்சுரிவோதித:

ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு யஸ்ய ஸ்யாத்புத்திரீத்ருசீ
தாஸோஹம் வாஸுதேவஸ்ய ஸர்வலோக மஹாத்மந:
ஸ யாதி விஷ்ணு ஸாலோக்யம் புருஷோ நாத்ர ஸம்சய:
கிம் புநஸ்தத்கதப்ராணா: புருஷா: ஸம்யதேந்த்ரியா:

என்று பகவத்ப்ரவணர் அநுவ்ருத்த தோஷரானாலும் யதார்ஹ ப்ராயச்சித்தாதிமுகத்தாலே மோக்ஷஸித்தியில் ஸம்சயமில்லையென்னுமிடத்தையும், நிர்த்தோஷருக்குக் கைமுதிக ந்யாயத்தாலே கடுக மோக்ஷஸித்தியையும் சொல்லி,

அச்வமேத சதைரிஷ்ட்வா வாஜபேயசதைரபி
ந ப்ராப்நுவந்தி ஸுகதிம் நாராயண பராங்முகா:

என்றும் பகவத்விமுகருக்கு அநந்தங்களான உத்க்ருஷ்ட ஸுக்ருதங்களாலும் ஸுகதி இல்லையென்று மஹர்ஷி இவ்வர்த்தங்களை ப்ரபஞ்சித்தான். யே ஹ்யேநம் புருஷம் வேத தேவா அபி ந தம் விது: என்கையாலே, பகவத்ஞானம் உடையவனுடைய ப்ரபாவம் நித்யஸூரிகளுக்கும் பரிச்சேத்யமன்றிறே.

**விளக்கம்** – புண்டரீகனுக்கும் நாரதனுக்கும் இடையில் நிகழ்ந்த உரையாடலில் கீழே உள்ள வரிகள் காணலாம்:

- இதிஹாஸ ஸமுச்சயம் (31-118, 119) - சீரவாஸா ஜடீ வா ஸ்யாத் த்ரிதண்டீ முண்ட ஏவ வா பூஷிதோ வா த்விஜச்ரேஷ்ட ந லிங்கம் தர்மகாரணம் யே ந்ருசம்ஸா துராத்மாந: பாபாசாரரதா: ஸதா தே அபி யாந்தி பரம் ஸ்தாநம் நரா நாராயணாச்ரிதா: - அந்தணர்களில் உயர்ந்தவனே! பகவானின் பக்தன் ஒருவன் மரவுரியையோ அல்லது நல்ல ஆடையையோ அணிந்தாலும், சடை அல்லது நல்ல கேசம் உள்ளவன் என்றாலும், த்ரிதண்டம் அல்லது ஏகதண்டம் கொண்டிருந்தாலும், மொட்டைத் தலையோடு இருந்தாலும், ஆச்ரம தர்மங்களின் அடையாளங்களுடன் உண்டு அல்லது அவை இல்லை என்றாலும் இவை ஏதும் மோக்ஷம் அளிக்கவல்லவை அல்ல. சிறிதும் இரக்கம் இல்லாமல், எப்போதும் தீய வழிகளில் நிற்பவர்கள் கூட, நாராயணனை அண்டினால் மோக்ஷம் பெறலாம்.

- இதிஹாஸ ஸமுச்சயம் (31-120) - லிப்யந்தே ந ச பாபேந வைஷ்ணவா வீதகல்மஷா: புநந்தி ஸகலம் லோகம் ஸஹஸ்ராம்சுரிவோதித: - ஸர்வேச்வரனை அண்டிய வைஷ்ணவர்கள், அறிந்தே செய்யும் பாவங்களைத் தகுந்த பிராயச்சித்தம் செய்து போக்கியும், அறியாமல் செய்யும் பாவங்கள் தங்களிடம் ஒட்டாமலும் செய்து, உதயசூரியன் போன்று இந்த உலகம் முழுவதையும் தூய்மை அடையச் செய்கிறார்கள்.

- இதிஹாஸ ஸமுச்சயம் (31-121, 122) - ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு யஸ்ய ஸ்யாத்புத்திரீத்ருசீ தாஸோஹம் வாஸுதேவஸ்ய ஸர்வலோக மஹாத்மந: ஸ யாதி விஷ்ணு ஸாலோக்யம் புருஷோ நாத்ர ஸம்சய: கிம் புநஸ்தத்கதப்ராணா: புருஷா: ஸம்யதேந்த்ரியா: - “அனைத்து உலகங்களிலும் மஹாத்மா என்று கொண்டாடப்படும் வாஸுதேவனுக்கு நான் அடிமை” என்னும் எண்ணம் யார் ஒருவனுக்கு பல்லாயிரம் பிறவிகளின் இறுதியில் உண்டாகிறதோ, அவன் விஷ்ணுவின் பரமபதம் அடைகிறான். இதில் சிறிதும் ஐயம் இல்லை. இந்த்ரியங்களை அடக்கி, பகவானிடம் தங்களுடைய பிராணனை வைத்தவர்கள், அவனை அடைவது குறித்துக் கூறவும் வேண்டுமோ?

ஆக, ஸர்வேச்வரனை எப்போதும் சிந்தித்தபடி உள்ளவர்கள், இடைவிடாமல் குற்றங்களைச் செய்தபடி இருந்தாலும், அவற்றுக்கான பிராயச்சித்தம் செய்தால் அவர்களுக்கு மோக்ஷம் கிட்டுவதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. இப்படி உள்ளபோது, தோஷம் இல்லாதவருக்கு மோக்ஷம் கிட்டுவதைக் கூறவும் வேண்டுமோ? இதிஹாஸ ஸமுச்சயம் (31-170) - அச்வமேத சதைரிஷ்ட்வா வாஜபேயசதைரபி ந ப்ராப்நுவந்தி ஸுகதிம் நாராயண பராங்முகா: - நாராயணனை உதாசீனம் செய்து, நூறு அச்வமேத யாகங்களையும், நூறு வாஜபேய யாகங்களையும் செய்தாலும், அவர்கள் நல்லகதி அடையமாட்டார்கள் என்று கூறியது காண்க. ஆக ஸர்வேச்வரனை மறந்தவர்களுக்கு, எப்படிப்பட்ட உயர்ந்த மார்க்கத்தாலும் மோக்ஷம் கிட்டாது என்பதை விரிவாக உரைத்தது காண்க. மஹாபாரதம் வனபர்வம் (160-21) - யே ஹ்யேநம் புருஷம் வேத தேவா அபி ந தம் விது: - க்ருஷ்ணனை உள்ளபடி அறிபவர்களின் பெருமையை நித்யஸூரிகளும் அறியமாட்டனர் – என்பதால், பகவானைக் குறித்த ஞானம் உள்ளவர்களின் மேன்மையை, நித்யஸூரிகளாலும் அளவிட இயலாது என்று தேறுகிறது.

**மூலம்** – ஆகையால் அநுவ்ருத்த புத்திபூர்வ தோஷரான பாகவதர்க்கு உபக்லேசாதிகள் உண்டானாலும் அவஜ்ஞாதிகள் பண்ணலாகாது.

அவைஷ்ணவ நமஸ்காராத் அவமாநாச்ச கேசவே
வைஷ்ணவே பரிவாதாச்ச பதத்யேவ ந ஸம்சய:

யதிநிந்தாபரோ நித்யம் வைஷ்ணவாநவமந்யது
அத்யாத்மவிமுக: ஸோஸ்து பிஸஸ்தைந்யம் கரோதி ய:

அந்தர்துஷ்டோ பஹி: சாந்தோ ப்ரஹ்மவித் த்வேஷதத்பர:
கர்மநிந்தாபர: ஸோஸ்து பிஸஸ்தைந்யம் கரோதி ய:

நித்யாநிஷ்டாந ஸம்யுக்தாந் அத்யாத்ம ஞானதுர்பலாந்
வ்யாமோஹயதி துர்புத்தி: பிஸஸ்தைந்யம் கரோதி ய:

என்று சொல்லப்பட்டதிறே.

**விளக்கம்** – ஆகவே பாகவதர்களுக்கு, அவர்கள் அறிந்தே தவறுகள் செய்ய நேர்ந்தாலும், அவர்களை அவமானம் செய்தல் கூடாது. கீழே உள்ள வரிகளைக் காண்க:

- நாரதீயம் - அவைஷ்ணவ நமஸ்காராத் அவமாநாச்ச கேசவே வைஷ்ணவே பரிவாதாச்ச பதத்யேவ ந ஸம்சய: - விஷ்ணுவின் பக்தர்களாக இல்லாதவர்களை வணங்குவதாலும், ஸர்வேச்வரனை அவமானம் செய்வதாலும், விஷ்ணுவின் பக்தர்களைத் தூஷிப்பதாலும் உடனேயே தாழ்ந்தவனாகிறான் என்பதில் ஐயம் இல்லை.

- இதிஹாஸ ஸமுச்சயம் (10 – 62) - யதிநிந்தாபரோ நித்யம் வைஷ்ணவாநவமந்யது அத்யாத்மவிமுக: ஸோஸ்து பிஸஸ்தைந்யம் கரோதி ய: - தாமரைக் கிழங்கைத் திருடிய ஒருவன் துறவிகளை இகழ்வதாலும், வைஷ்ணவர்களை அவமதிப்பதாலும் ஆத்மாவை அறிய முயலாமல் உள்ளதால் உண்டாகக்கூடிய தோஷத்தை அடைகிறான்.

- இதிஹாஸ ஸமுச்சயம் (10 – 75) - அந்தர்துஷ்டோ பஹி: சாந்தோ ப்ரஹ்மவித் த்வேஷதத்பர: கர்மநிந்தாபர: ஸோஸ்து பிஸஸ்தைந்யம் கரோதி ய: - தாமரைக் கிழங்கைத் திருடிய ஒருவன் தனது மனதில் எப்போதும் தோஷங்கள் உள்ளவனாகவும், வெளியில் காணும்போது சாந்தனாகவும், ப்ரஹ்மஞானிகளிடம்

எப்போதும் துவேஷம் பாராட்டுபவனாகவும், சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட சிறந்த கர்மங்களை வெறுப்பவனாகவும் மாறட்டும்.

- இதிஹாஸ ஸமுச்சயம் (10 – 76) - நித்யாநிஷ்டாந ஸம்யுக்தாந் அத்யாத்ம ஞானதுர்பலாந் வ்யாமோஹயதி துர்புத்தி: பிஸஸ்தைந்யம் கரோதி ய: - தாமரைக் கிழங்கைத் திருடிய ஒருவன் தீயபுத்தி உள்ளவனாகவும், நல்ல அனுஷ்டானம் உள்ளபோதிலும் ஜீவாத்ம பரமாத்ம விஷயத்தில் உறுதியான அறிவு இல்லாதவர்களை மயக்குபவனாகவும் மாறட்டும்.

## பாகவதாபசாரத்தின் கொடுமை

**மூலம்** – ஸ்ரீபாஷ்யகாரர் அக்ருத்யகரண க்ருத்யகரணங்களோடே பகவதபசாராதிகளைச் சேர எடுத்தது கோபலீவர்த்தந ந்யாயத்தாலே பகவதபசாராதிகள் தீவ்ரங்கள் என்கைக்காக. எல்லாம் பகவதபசாரங்களாயிருக்க, முகபேதங்களை விலக்ஷித்துச் சிலவற்றை இங்கு பாகவதபசாரங்கள் என்கிறது. “யாவை சில அபசாரங்களைப் புறம்பே செய்கிறான்; அப்படிப்பட்டவை தம்மையே பகவத்பாகவத விஷயங்களிலே செய்தால் விஷயஸ்வபாவத்தாலே ராஜத்ரோஹாதிகளைப்போலே மிகவும் தண்டஹேதுக்களாம்” என்று விசேஷோபாதநத்துக்கு அபிப்ராயம். நரகத்துக்கு நாற்றங்காலான ஸம்ஸார மண்டலத்திலே நல்வழி நடப்பார் துர்லபராயிருக்க பகவத்விஷயத்தைப் பற்றி அதிகாராநுரூபமாக முக்திமார்க்கத்துக்கு முன்னடியான கர்மயோகாதி பர்வபேதங்களிலே நின்றாரையும் நெகிழ நினைக்கை பாகவதாபசாரம்.

**விளக்கம்** – ஸ்வாமி எம்பெருமானார் தன்னுடைய சரணாகதி கத்யத்தில் பகவத் அபசாரம் குறித்துக் கூறும்போது, செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை முதலானவற்றைக் குறித்துக் கூறியது கோபலீவர்த்தன ந்யாயம் காரணமாக பகவத் அபசாரங்கள் மிகவும் கொடுமையானவை என்று உணர்த்தவே ஆகும் (கோபலீவர்த்தன ந்யாயம் – கோ என்னும் பதம் பசு மற்றும் காளை ஆகிய இரண்டையுமே உணர்த்தும் பொதுவான பதமாகும். ஆனால் பலீவர்த்தம் என்பது காளையைக் குறிக்கும். ஆக கோ என்று பொதுவாகக் கூறாம, பலீவர்த்தனம் கொண்டுவா என்று கூறினால், காளையை மட்டுமே

கொண்டு வரவேண்டும். இதே போன்று செய்யக்கூடாதவை என்பதிலேயே பகவத் பாகவத அபசாரங்கள் அடங்கும் என்றாலும், அவற்றைத் தனித்தனியே கூறியது மேலும் குறிப்பிட்டு உணர்த்தவே ஆகும் என்று கருத்து). எந்தவிதமான பாவமும் பகவத் அபசாரமே ஆகும்; ஆனாலும் ஒரு சிலவற்றை மட்டும் தனித்துக் கூறுவது, அவை பாகவத அபசாரங்கள் என்று உணர்த்தவே ஆகும். "பொதுவாக சிலர் சிலருக்கு அபசாரங்கள் இழைக்கக்கூடும். அப்படிப்பட்ட அபசாரங்களை பகவத்பாகவத விஷயங்களிலே செய்தால், அவற்றின் கொடுமை காரணமாக, அவை ராஜதுரோஹம் போன்று மிகவும் கொடிய தண்டனை அடையவேண்டிய குற்றங்களாகும்" என்று கருத்து. நரகத்துக்கு மிகவும் எளிதாக இட்டுச்செல்லும் இடமாக உள்ளது. இந்தக் காரணத்தால், இதில் நல்லவழியில் நடப்பவர்கள் மிகவும் குறைவே ஆகும். ஆகவே இந்த உலகத்தில் பகவத் விஷயத்தில் ஈடுபட்டவராகி, ஆனால் மோக்ஷத்திற்கான உபாயம் கைகூடாமல், அதன் முன்பு உள்ளதான கர்மயோகம் மற்றும் ஞானயோகங்களிலே உள்ளவர்களை இழிவாக எண்ணுதல் பாகவத அபசாரங்களாகிறது.

## மோக்ஷம் கிட்டாமை மற்றும் கிட்டும் நிலை

**மூலம் –**

ந சப்தசாஸ்த்ராபிரதஸ்ய மோக்ஷோ ந போஜநாச்சாதந தத்பரஸ்ய
ந சைவ ரம்யாவஸத ப்ரியஸ்ய ந லோக சித்தக்ரஹணே ரதஸ்ய

இத்யாதிகளிலும் பகவத்ப்ராவண்யமின்றிக்கே,

சிச்நோதரே யே அபிரதா: ஸதைவ ஸ்தேயாந்ருதா வாக்பருஷாச்ச நித்யம்
வ்யபததர்மா இதி தாந் விதித்வா தூராத்தேவா: ஸம்பரிவர்ஜயந்தி

என்கிறபடியே பாஹ்யவிஷய ப்ராவண்யமேயுடையார்க்கு மோக்ஷமில்லை என்றபடி.

பராங்முகாநாம் கோவிந்தே விஷயாஸக்த சேதஸாம்
தேஷாம் தத்பரமம் ப்ரஹ்ம தூராத் தூரதரே ஸ்திதம்

இத்யாதிகளிலும் இவ்வர்த்தம் ஸித்தம்.

தந்மயத்வேந கோவிந்தே யே நரா ந்யஸ்தசேதஸ:
விஷய த்யாகாதிநஸ்தேஷாம் விஜ்ஞேயம் ச ததந்திகே

இத்யாதிகள் பகவத்பரருமாய் விஷய த்யாகாதிகளுமானார்க்கு விளம்பமில்லை என்கிறன.

**விளக்கம்** – இதிஹாஸ ஸமுச்சயம் (2-10) - ந சப்தசாஸ்த்ராபிரதஸ்ய மோக்ஷோ ந போஜநாச்சாதந தத்பரஸ்ய ந சைவ ரம்யாவஸத ப்ரியஸ்ய ந லோக சித்தக்ரஹணே ரதஸ்ய – சப்த இலக்கண சாஸ்த்ரங்களில் எப்போதும் மூழ்கியபடி உள்ளவனுக்கும், உடை மற்றும் உணவு விஷயங்களில் ஈடுபட்டபடி உள்ளவனுக்கும், அழகான வீட்டில் வசிப்பதில் விருப்பம் உள்ளவனுக்கும், உலகத்தினரின் மனம் கவரும்விதமாகப் பேச ஆர்வம் உள்ளவனுக்கும் மோக்ஷம் கிட்டாது – என்றும், பகவானைக் குறித்த சிந்தனை சிறிதும் இல்லாமல், மஹாபாரதம் சாந்திபர்வம் (305-36) - சிச்நோதரே யே அபிரதா: ஸதைவ ஸ்தேயாந்ருதா வாக்பருஷாச்ச நித்யம் வ்யபததர்மா இதி தாந் விதித்வா தூராத்தேவா: ஸம்பரிவர்ஜயந்தி – எப்போதும் சிற்றின்பம் மற்றும் உண்ணுதல் ஆகியவற்றில் ஈடுபட்டவர்கள், திருடுதல் மற்றும் கடுமையாகப் பேசுதல் என்பதையே இயல்பாக உள்ளவர்கள் முதலானோர் தங்களுடைய தர்மங்களை விட்டவர்கள் என்று கருதி தேவர்கள் இவர்களை அண்டுவதில்லை – என்றும் கூறுவதற்கு ஏற்ப தாழ்ந்த சிந்தனையும் செயலும் உள்ளவர்களுக்கு மோக்ஷம் கிட்டுவதில்லை. இதனை ஸ்ரீவிஷ்ணுதர்மம் (99-13) - பராங்முகாநாம் கோவிந்தே விஷயாஸக்த சேதஸாம் தேஷாம் தத்பரமம் ப்ரஹ்ம தூராத் தூரதரே ஸ்திதம் – கோவிந்தனை மறந்து எப்போதும் சிற்றின்ப விஷயங்களில் மனதைச் செலுத்துபவர்களுக்கு, பரப்ரஹ்மம் மிகவும் தூரத்தில் உள்ளது – என்று உரைத்தது காண்க. ஆனால், ஸ்ரீவிஷ்ணுதர்மம் (99-15) - தந்மயத்வேந கோவிந்தே யே நரா ந்யஸ்தசேதஸ: விஷயத்யாகாதிநஸ்தேஷாம் விஜ்ஞேயம் ச ததந்திகே – கோவிந்தனை எப்போதும் சிந்தித்தபடி, அவனிடம் மட்டுமே மனதைச் செலுத்தி, மற்ற விஷயங்களில் பற்றுதல் இல்லாமல் உள்ளவர்களின் அருகில் பகவான் எப்போதும் உள்ளான் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனை எண்ணியபடியும், மற்ற விஷயங்களைக் குறித்த சிந்தனை இல்லாமலும் உள்ளவர்களுக்கு மோக்ஷம் தாமதிக்காமல் உண்டாகிறது.

## போலியான பாகவதர்களைக் கூட உண்மை வெளிப்படும்வரை ஆதரிக்க வேண்டும்

**மூலம்** – உள்ளொரு பசையற்றுப் பசுத்தோல் போர்த்துப் புலிப் பாய்ச்சல் பாயுங்கணக்கிலே பகவதவபாநை பண்ணித் திரிவாரையும் உள்ளறியுமளவும் உபரிசராதிகள் அஸுராதிகளை ஆதரித்தாற்போலே ரூப நாமங்களையிட்டு ஆதரிக்கப் ப்ராப்தம். இப்படிக்கொத்த சைலூஷ வ்ருத்திகளைப் பற்ற

ந லிங்கம் தர்மகாரணம்

பலம் கதக வ்ருக்ஷஸ்ய யத்யப்யம்பு ப்ரஸாதநம்
ந நாமக்ரஹணேநைவ தஸ்ய வாரி ப்ரஸீததி

என்கிறது.

**விளக்கம்** – தங்களுடைய உள்ளத்தில் எந்தவிதமான பக்தியும் இல்லாமல், பசுத்தோலைப் போர்த்தியபடி திரியும் புலி போன்று சிலர் வெளிவேஷம் பூண்டு இருக்கக்கூடும். அவர்களுடைய உண்மையான தன்மை வெளிப்படும்வரை, உபரிசரர் முதலானோர் எவ்விதம் அஸுரர்களை அவர்களுடைய தன்மை வெளிப்படும்வரை ஆதரித்தார்களோ, அது போன்று அவர்களுடைய ரூபங்களையும் பெயர்களையும் அவமானம் செய்யாமல் மதித்தபடி இருக்கவேண்டும். இப்படியாக இயல்பாகவே நடிக்கும் தொழிலுடன் கூடியவர்கள் குறித்த கீழே உள்ள வரிகளை காண்க:

- இதிஹாஸ ஸமுச்சயம் - ந லிங்கம் தர்மகாரணம் – இந்த வேஷங்கள் மோக்ஷ காரணம்ம் ஆகாது.
- மநுஸ்ம்ருதி (6-67) - பலம் கதக வ்ருக்ஷஸ்ய யத்யப்யம்பு ப்ரஸாதநம் ந நாமக்ரஹணேநைவ தஸ்ய வாரி ப்ரஸீததி – தேத்தாங்கொட்டை என்பது நீரைத் தெளிவாக்கும் என்றபோதிலும், அதன் பெயரை மட்டும் கூறுவதால் நீரானது தெளிவாகாது.

## ஸர்வேச்வரனைப் பகைக்காமல் உள்ளவர்களுக்கு மட்டுமே நாம ஸங்கீர்த்தனம் முதலானவை பலன் அளிக்கும்

மூலம் –

ஆர்த்தா விஷண்ணா: சிதிலாச்ச பீதா கோரேஷு ச வ்யாதிஷு வர்த்தமாநா:
ஸம்கீர்த்ய நாராயண சப்தமாத்ரம் விமுக்ததுக்கா: ஸுகிநோ பவந்தி என்றும்

அவசேநாபி யந்நாம்நி கீர்த்திதே ஸர்வபாதகை:
புமாந் விமுச்யதே ஸத்ய: ஸிம்ஹத்ரஸ்தைர் ம்ருகைரிவ என்றும்

ஸாங்கேத்யம் பரிஹாஸ்யம் வா ஸ்தோபம் ஹேளநமேவ வா
வைகுண்டநாம க்ரஹணம் அசேஷாக விநாசநம் என்றும்

ஹரிர்ஹரதி பாபாநி துஷ்டசித்தைரபி ஸ்ம்ருத:
அநிச்சயாபி ஸம்ஸ்ப்ருஷ்டோ தஹத்யேவ ஹி பாவக: என்றும்

ஏதாவதாலபக நிர்ஹரணாய பும்ஸாம்
ஸங்கீர்த்தனம் பகவதோ குணகர்ம நாம்நாம்
ஆக்ருச்ய புத்ரமகவாந் யதஜாமிளோபி
நாராயணேதி மித்ரயமாண உபைதி முக்திம் என்றும்

“மொய்த்த வல்வினையுள் நின்று மூன்றெழுத்துடைய பேரால் கத்திரபந்துமன்றே பராங்கதி கண்டுகொண்டான் இத்தனை அடியரானார்க்கு இரங்கும் நம் அரங்கனாய பித்தனைப் பெற்றும்” என்றும் சொல்லுகிற இவையெல்லாம், பகவத்ப்ரவித்வேஷம் இல்லாதவனுக்கு ஆஸ்திக்யம் மந்தமாகிலும், பாலாதிகளைப் போலே அர்த்தஞானம் இல்லையேயாகிலும், வாய் வெருவுமாப் போலே அபிஸந்தி இல்லையேயாகிலும், ஸங்கேத பரிஹாஸாதிகளிலே துவக்குண்டு அபிஸந்த்யந்தரம் உண்டாகிலும், ப்ரயோஜநாந்தர ஸங்கமுண்டாகிலும், தோஷாந்தரங்களுண்டாகிலும் ஸங்கீர்த்தனம் பாவநதமம் என்றபடி. அல்லது பகவத்பரிவாதாதிகளுக்காக பகவந்நாம ஸங்கீர்த்தனம்

பண்ணினாலும் பாபம் போம் என்றபடியன்று. பகவத்பரிவாதாதிகள் பாதகங்களாகவிறே பரிகணித்துக் கிடப்பது.

யே த்விஷந்தி மஹாத்மாநம் ந ஸ்மரந்தி ச கேசவம்
ந தேஷாம் புண்யதீர்த்தேஷு கதி: ஸம்ஸர்கிணாமபி என்றும்,

ய: புத்ர: பிதரம் த்வேஷ்டி தம் விதாதந்யரேதஸம்
யோ விஷ்ணும் ஸததம் த்வேஷ்டி தம் வித்யாதந்த்யரேதஸம்

என்றும் சொன்னார்களிறே.

**விளக்கம் –**

- ஆர்த்தா விஷண்ணா: சிதிலாச்ச பீதா கோரேஷு ச வ்யாதிஷு வர்த்தமாநா: ஸம்கீர்த்ய நாராயண சப்தமாத்ரம் விமுக்தது:கா: ஸுகிநோ பவந்தி – இந்த உலகில் ஸுகம் கிட்டாத காரணத்தால் வருத்தம் அடைபவர்களும், ஸ்வர்க்கம் முதலான ஸுகம் கிட்டாத காரணத்தால் வருத்தம் அடைபவர்களும், எதிலும் நிலை இல்லாமல் உள்ளவர்களும், ஸம்ஸாரத்தைக் கண்டு அச்சம் கொள்பவர்களும், நோயால் வருந்துபவர்களும் “நாராயணா” என்ற ஒரு பதத்தைக் கூறினால் மட்டுமே போதுமானது; தங்களுடைய துன்பம் நீங்கி, இன்பம் அடைவர்.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-8-19) - அவசேநாபி யந்நாம்நி கீர்த்திதே ஸர்வபாதகை: புமாந் விமுச்யதே ஸத்ய: ஸிம்ஹத்ரஸ்தைர் ம்ருகைரிவ – ஸர்வேச்வரனுடைய திருநாமத்தை எவ்விதம் உச்சரித்தாலும், சிங்கத்தைக் கண்ட மான்கள் அந்தக் காட்டை விட்டு ஓடுவது போன்று, அனைத்து பாவங்களும் அவனை விட்டு ஓடுகின்றன.

- ஸ்ரீமத்பாகவதம் (6-2-14) - ஸாங்கேத்யம் பரிஹாஸ்யம் வா ஸ்தோபம் ஹேளநமேவ வா வைகுண்டநாம க்ரஹணம் அசேஷாக விநாசநம் – ஒருவனுக்குப் பெயர் சூட்டுவதாலும், பரிஹாஸம் செய்வதாலும், ஸ்தோபமாகவும் (நாராயணா

என்பதற்குப் பதில் நாணா என்று கூறுவது), ஏளனமாகவும் (நாராயணா என்று உச்சரிப்பவனை, நாராயணா என்று கிண்டலாக அழைத்தல்) என்று எவ்விதம் அவனுடைய திருநாமத்தை உச்சரித்தாலும், அது அனைத்து பாவங்களையும் நீக்கும்.

- ஹரி அஷ்டகம் - ஹரிர்ஹரதி பாபாநி துஷ்டசித்தைரபி ஸ்ம்ருத: அநிச்சயாபி ஸம்ஸ்ப்ருஷ்டோ தஹத்யேவ ஹி பாவக: - ஸ்ரீஹரியான பகவான், தீய மனம் உள்ளவர்களால் நினைக்கப்பட்டால் கூட, அவர்களுடைய பாவங்களைப் போக்குகிறான். அறியாமல் நெருப்பைத் தொட்டாலும், அது எரிக்கும் அல்லவோ?

- ஸ்ரீமத்பாகவதம் (6-4-34) - ஏதாவதாலபக நிர்ஹரணாய பும்ஸாம் ஸங்கீர்த்தனம் பகவதோ குணகர்ம நாம்நாம் ஆக்ருச்ய புத்ரமகவாந் யதஜாமிளோபி நாராயணேதி மித்ரயமாண உபைதி முக்திம் – மனிதர்களுடைய பாவங்களை நீக்கும்விதமாக ஸர்வேச்வரனுடைய குணங்கள் மற்றும் அவனுடைய லீலைகளை உணர்த்தும் திருநாமங்கள் பலவற்றையும் கூறவேண்டும் என்று அவசியம் இல்லை. ஒரு திருநாமம் கூறினாலே போதுமானது. காரணம், அஜாமிளன் மிகுந்த பாபியாக இருந்தபோதிலும், இறக்கும் தருணத்தில் தனது புத்திரனை "நாராயணா" என்று அழைத்து முக்தி அடைந்தான் அல்லவோ?

- திருமாலை (4) மொய்த்த வல்வினையுள் நின்று மூன்றெழுத்துடைய பேரால் கத்திரபந்துமன்றே பராங்கதி கண்டுகொண்டான் இத்தனை அடியரானார்க்கு இரங்கும் நம் அரங்கனாய பித்தனைப் பெற்றும் – நெய்யுள்ள குடத்தைச் சூழ்ந்துள்ள எறும்புகள் போன்று, தன்னைச் சூழ்ந்துள்ள கர்மபலன்களின் நடுவில் உள்ள க்ஷத்ரபந்து என்பவன், மூன்று அக்ஷரங்களுடைய "கோவிந்த" என்று அழைத்து உயர்ந்த கதி அடைந்தான். இப்படியாகத் தனது அடையார்கள் விஷயத்தில் மிகுந்த பித்துப் பிடித்தவனாக உள்ள ஸ்ரீரங்கநாதன் உள்ளபோது, (அவனை நாடாமல்) ஏன் ஸம்ஸாரத்தில் துன்பம் அடைகிறார்கள்?

மேலே உள்ள பல வரிகளின் மூலம் உணர்த்தப்படுவது – ஒருவனுக்கு பகவானிடம் விரோதம் பாராட்டும் புத்தி இல்லையென்றால் அவனுக்கு ஆஸ்திகத்தன்மை குறைவாக

உள்ளபோதிலும், சிறு குழந்தைகள் போன்று பகவானைப் புகழ்த்தும் வரிகளின் பொருளை அறியவில்லை என்றாலும், எந்தவிதமான உட்கருத்தும் உணராமல், ஏதோ ஒன்றை உரைப்பது போன்று திருநாமத்தை உரைத்தாலும், பரிஹஸிக்கும் விதமாகவோ வேறு பலனை விரும்பியோ உரைத்தாலும், கூறுவதில் தோஷங்கள் இருந்தாலும் பகவானின் திருநாமங்களை உச்சரித்தல் என்பது அவனைப் பரிசுத்தனாக்கும். ஆனால் பகவானைத் தூஷிக்கும்விதமாக அவனுடைய திருநாமங்களை உச்சரித்தால் பாவமே உண்டாகும். அவனைத் தூஷிப்பது பாவமே என்றல்லவோ கணக்கிடப்பட்டுள்ளது? கீழே உள்ள வரிகள் காண்க:

- மஹாபாரதம் சாந்திபர்வம் (336-36) - யே த்விஷந்தி மஹாத்மாநம் ந ஸ்மரந்தி ச கேசவம் ந தேஷாம் புண்யதீர்த்தேஷு கதி: ஸம்ஸர்கிணாமபி – கேசவனை எண்ணாத அளவிற்கு அவனிடம் பகைமை பாராட்டுபவர்களும், அவர்களுடன் சேர்பவர்களும் புண்ய நதிகளில் நீராடினால் கூட, எந்தவிதமான பலனையும் பெறமாட்டனர்.

- ப்ரஹ்மாண்ட புராணம் - ய: புத்ர: பிதரம் த்வேஷ்டி தம் விதாதந்யரேதஸம் யோ விஷ்ணும் ஸததம் த்வேஷ்டி தம் வித்யாதந்த்யரேதஸம் – தன்னுடைய தந்தையுடன் பகை கொள்ளும் புத்திரனை வேறு ஒருவனுக்குப் பிறந்தவனாகவே கொள்ளவேண்டும். விஷ்ணுவிடம் எப்போதும் பகைமையுடன் உள்ளவனை சண்டாளனுக்குப் பிறந்தவனாகவே அறியவேண்டும்.

## ஒரு சில அதிகாரிகளின் நிலை

**மூலம் –**

கோப்ய: காமாப்தயாத் கம்ஸோ த்வேஷாச்சைத்யாதயோ ந்ருபா:
ஸம்பந்தாத் வ்ருஷ்ணயோ யூயம் ஸ்நேஹாப்தக்த்யா வயம் ப்ரபோ

என்கிறபடியே ஏதேனுமொருவகையாலே துவக்குண்டாரும் பிழைப்பரென்றதுவும்

யயா கயா ச விதயா ஸம்பந்த: ஸ து பாவந:

என்றதுவும் பூர்வஸுக்ருத விசேஷங்களாலே நியதரான அதிகாரி விசேஷங்களைப் பற்றவென்னுமிடம் இவர்களுடைய பூர்வாபர வ்ருத்தாந்தங்கள் சொல்லுகிற புராணாதிகளிலே ப்ரஸித்தம்.

**விளக்கம்** – ஸ்ரீமத்பாகவதம் (7-1-30) - கோப்ய: காமாப்தயாத் கம்ஸோ த்வேஷாச்சைத்யாதயோ ந்ருபா: ஸம்பந்தாத் வ்ருஷ்ணயோ யூயம் ஸ்நேஹாப்தக்த்யா வயம் ப்ரபோ – நாரதர், "யுதிஷ்டிரனே! கோபிகைகள் காமத்தாலும், கம்ஸம் பயத்தாலும், சிசுபாலன் போன்றவர்கள் த்வேஷத்தாலும், நீங்களும் யதுவம்சத்தில் பிறந்தவர்களும் சிநேஹத்தாலும், நாங்கள் பக்தியாலும் மோக்ஷம் அடையலாம்", என்றது காண்க. ஆனால், ஏதேனும் ஒருவகையில் உயர்ந்த கதி அடைவார்கள் என்றாலும், அவர்கள் முற்பிறவிகளில் ஏதேனும் நற்செயல்கள் செய்திருக்கவேண்டும். இதனை ஸ்ரீரங்க மாஹாத்ம்யம் (8-12) - யயா கயா ச விதயா ஸம்பந்த: ஸ து பாவந: - தோஷங்கள் இல்லாத பகவானுடனான எந்தவிதமான ஸம்பந்தமும் ஒருவனுடைய பாவங்களைப் போக்கும் – என்றது காண்க. இந்த இரண்டு ச்லோகங்களும் கடந்த பிறவிகளில் நற்செயல்கள் செய்த காரணத்தால், சிறப்பான ஒரு அதிகாரம் பெற்றவர்களையே கூறுகிறது என்பதை அறியவேண்டும். கம்ஸன் முதலானவர்களின் பூர்வ ஜன்ம நிகழ்வுகளின் மூலம் இது தெளிவாகிறது.

**மூலம்** – இப்படி பகவத்க்ஷேத்ரத்தில் சரீர விச்லேஷாதிகள் மோக்ஷோபகாரகமாம் என்றதுவும் பச்வாதிகளைப் போலேயாகிலும் ப்ராதிகூல்யமில்லாதார்க்கு உபகாரகமாம் என்றபடி. இங்ஙனல்லாதபோது அங்கே பகவத் ப்ராதிகூல்யம் பண்ணப் புகுந்து பட்டவர்களுக்கும் மோக்ஷமுண்டாகப் ப்ரஸங்கிக்கும்.

துஷ்டேந்த்ரிய வசாச்சித்தம் ந்ருபாம் யத் கல்மஷைர்வ்ருதம்
தந்தகாலே ஸம்சுத்திம் யாதி நாராயணாலயே

என்கிற ஸ்ரீஸாத்த்வத வசனமும் க்ஷேத்ர வாஸாதி தத்பரரானார்க்கு சாஸ்த்ர விரோதமில்லாத சப்தாதி ப்ராவண்யத்தாலே முன்பு பகவத் ஸாக்ஷாத்காராதிகள்

இல்லையேயாகிலும் அந்திம காலத்திலே தெளிவுண்டாமென்னுமிவ்வளவிலே தத்பரமென்னுமிடம் ப்ரகரணாதி ஸித்தம்.

யம் யோகிந: ப்ராண வியோக காலே யத்நேந சித்தே விநிவேசயந்தி என்று சொல்லப்படுகிற ஸ்வயத்நாபேக்ஷையற அந்திம காலத்திலே இவர்களுக்குத் தெளிவு வருகிற இது ஏற்றம். இது கேவலம் மதீயயைவ தயயாதி ப்ரபுத்த: என்று ப்ரபந்ந விஷயத்திலும் ப்ரதர்சிதம்.

**விளக்கம்** – பகவான் விருப்பத்துடன் வசிக்கின்ற திவ்யதேசங்களில் உண்டாகும் மரணம் என்பது மோக்ஷத்தை அளிக்க உபகாரமாகும் என்னும் நிலையானது பசு முதலான விலங்குகள் போன்று ஏதும் அறியாதவர்கள் என்றாலும், பகவானிடம் வெறுப்புடன் இல்லாதவர்களுக்கே ஆகும். இவ்விதம் கொள்ளவில்லை என்றால், க்ஷேத்ரங்களில் வசிக்கின்ற பாவம் செய்பவர்களும் மோக்ஷம் போகலாம் என்று ஆகிவிடும். ஸ்ரீஸாத்வத ஸம்ஹிதை (7-120) - துஷ்டேந்த்ரிய வசாச்சித்தம் ந்ருபாம் யத் கல்மஷைர்வ்ருதம் ததந்தகாலே ஸம்சுத்திம் யாதி நாராயணாலயே – கொடுமையான இந்த்ரியங்களால் பீடிக்கப்பட்டு தோஷம் அடைந்த மனம், மரணம் உண்டாகும் காலத்தில் நாராயணன் வசிக்கும் க்ஷேத்ரத்தில் வசிப்பதால் தூய்மை அடைகிறது – முதலான வரிகள், புண்ய க்ஷேத்ரங்களில் வசிப்பவர்கள், சாஸ்த்ரங்களுக்கு விரோதம் உண்டாகாத விதத்தில் உலகில் உள்ள இன்பங்களை அனுபவித்தபடி இருந்து, அதன் காரணமாக பகவத் தரிசனம் உண்டாகாமல் இருந்தபோதிலும், தெளிவை அடைவார்கள் என்பதை உணர்த்துகின்றன.

மஹாபாரதம் சாந்திபர்வம் (46-139) - யம் யோகிந: ப்ராண வியோக காலே யத்நேந சித்தே விநிவேசயந்தி – யோகிகள் எந்த ஒரு பகவானை மிகுந்த முயற்சி எடுத்து தங்களுடைய மரண காலத்தில் தங்களுடைய மனதில் நிலை நிறுத்த முயல்கிறார்களோ, அந்தப் பகவானைத் தனது கண்கள் முன்பாகத் தரிசித்தபடி பீஷ்மர் தனது உயிரை விட்டார் – முதலான வரிகளின் மூலம், அந்திம காலத்தில் க்ஷேத்ரத்தில் வசிக்கும் காரணத்தால், தங்களுடைய முயற்சி ஏதும் இல்லாமலேயே உயர்ந்த கதி அடைவர். இந்தக் கருத்து சரணாகதி கத்யத்தில் - கேவலம் மதீயயைவ தயயாதி ப்ரபுத்த: - என்னுடைய கருணை

காரணமாக அந்திம காலத்தில் ஞானம் வெளிப்படும் – என்று ப்ரபந்நர்கள் விஷயத்திலும் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

**மூலம்** – ஆகையால் பகவத் ப்ரதிகூலர்க்குப் ப்ராதிகூல்ய விசேஷமான ரூப நாம க்ஷேத்ரவாஸ ஸங்கீர்த்தனாதிகள் தஞ்சமாகாது. புண்ய க்ஷேத்ரங்களில் பண்ணும் ப்ரதிகூலாசரணங்கள் மிகவும் பாதகங்களாம் என்னுமிடம் பஹுசாஸ்த்ர ஸித்தம். இதுவும் பகவத் ப்ரபாவம். பகவத் ப்ரவணர்க்கு வ்ருத்ரன் க்ஷத்ரபந்து உள்ளிட்டார்க்குப்போலே ஆநுகூல்யங்கள்தாமே எல்லா தோஷங்களையும் ஒரு விரகாலே போக்கி உத்தாரகங்களாம். ஆன பின்பு ஸ்வஸங்கல்ப நியதமாயிருப்பது ஏதேனுமொரு வ்யாஜத்தாலே ஸர்வேச்வரன் ஸ்வரூப ப்ராப்தமான முக்தைச்வர்யம் கொடுக்க நினைப்பிட்ட அதிகாரிகள் பக்கலுள்ள தோஷங்களுக்குச் செலவு செய்வான்.

**விளக்கம்** – ஆகவே பகவானுக்கு விரோதியாக உள்ளவர்களுக்கு பகவத் ரூபம், பகவானின் திருநாமங்கள், திவ்யதேசங்களில் வசித்தல், திருநாம ஸங்கீர்த்தனம் முதலானவை பயன்படாது. புண்யக்ஷேத்ரங்களில் செய்யப்படுவதான பகவானுக்கு விருப்பம் அற்ற செயல்கள், மிகுந்த தீங்கை உண்டாகும் என்று பல சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இது ஸர்வேச்வரனுடைய ப்ரபாவம் காரணமாக ஆகும். மாறாக வ்ருத்ரன், க்ஷத்ரபந்து போன்று பகவானிடம் ஆழ்ந்த பக்தி உள்ளவர்கள், ஸர்வேச்வரனுக்கு மகிழ்வை உண்டாக்கும்விதமாக எத்தகைய செயல்களைச் செய்தாலும், அவர்களுடைய அனைத்து தோஷங்களையும் ஏதோ ஒரு வகையில் நீக்க அந்தச் செயல்கள் உதவுகின்றன. ஆகவே பாகவதர்களிடம் ஏதேனும் தோஷம் உள்ளபோதிலும், ஸர்வேச்வரன் தான் எண்ணியுள்ள ஏதேனும் ஒரு விதத்தில், அவர்களுடைய தோஷங்களி நீக்கி, அவர்களுடைய ஸ்வரூபத்தை விளங்கச் செய்வதான முக்தி என்னும் மிகப்பெரிய செல்வத்தை அளிப்பான்; இதற்காக அந்த அதிகாரிகளிடம் உள்ள தோஷங்களை, சிறிய அளவுள்ள தண்டனைகளாலே நீக்குவான்.

## பாகவதர்களுடன் சேர்ந்து வாழவேண்டிய முறை

**மூலம்** – “ஏக: சாஸ்தா ந த்விதீய: அஸ்தி சாஸ்தா ” என்றும், “ப்ரசாஸிதாரம் ஸர்வேஷாம்” என்றும், “சாஸ்தா விஷ்ணுரசேஷஸ்ய” என்றும் சொல்லப்படுகிறவன்தானே என்று தெளிந்து,

ராகாதிதூஷிதே சித்தே நாஸ்பதோ மதுஸூதந:
ந பத்நாதி ரதிம் ஹம்ஸ: கதாசித் கர்தாமாம்பஸி

இத்யாதிகளைப் பார்த்து நெகிழாதே, இவ்வதிகாரிகள் பக்கலுள்ள குணாம்சத்தை மருபூமியில் தண்ணீர் பெற்றாற்போலே உகந்து,

கர்மணா மநஸா வாசா யதபீக்ஷ்ணம் நிஷேவதே
ததேவாபஹரத்யேநம் தஸ்மாத் கல்யாணமாசரேத்

என்கிறபடியே கரண த்ரயத்தாலும் தான் நல்வழி கைவிடாதே,

ஸம்ஸார விஷவ்ருக்ஷஸ்ய த்வே பலே ஹி அம்ருதோபமே
கதாசித் கேசவே பக்தி: தத்பக்தைர்வா ஸமாகம:

என்று இங்கிருந்த காலத்துக்கு ப்ரயோஜநமாக எடுத்த “பரமனைப் பயிலுந் திருவுடைய சிறுமாமனிசருடன் சேர்த்தியாகிற சிறிய பெறாப் பேற்றைத் திருவருளாலே பெற்றோ” மென்று க்ருதார்த்தனாய், “திருமால் தலைக்கொண்ட நங்கட்கு எங்கே வரும் தீவினை” என்று வ்யவஸிதனாய், “ஆள்கின்றான் ஆழியான் ஆரால் குறைவுடையம்” என்கிறபடியே பரமபதத்தில் பெறப் புகுகிற பரிபூர்ண கைங்கர்ய ஸாம்ராஜ்யத்துக்கு இங்கே முடி சூடியிருக்க ப்ராப்தம்.

**விளக்கம்** – ஆக கீழே உள்ள பல வரிகளில் கூறப்பட்டுள்ளது போன்று, அனைத்தையும் நியமிப்பவன் ஸர்வேச்வரன் மட்டுமே என்று தெளிவாக உணரவேண்டும்:

- மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வம் (27-1) - ஏக: சாஸ்தா ந த்விதீய: அஸ்தி சாஸ்தா – அவன் மட்டுமே நியமிப்பவன், இரண்டாவது நியமிப்பவன் என்று யாரும் இல்லை.

- மநுஸ்ம்ருதி (12-122) - ப்ரசாஸிதாரம் ஸர்வேஷாம் – அனைத்தையும் நியமிப்பவனாக ஸர்வேச்வரனை அறியவேண்டும்.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-17-20) - சாஸ்தா விஷ்ணுரசேஷஸ்ய – அனைவருடைய இதயத்தில் உள்ள விஷ்ணுவே, அனைத்தையும் நியமிக்கிறான்.

மேலும், ஸ்ரீவிஷ்ணுதர்மம் (9-11) - ராகாதிதூஷிதே சித்தே நாஸ்பதோ மதுஸூதந: ந பத்நாதி ரதிம் ஹம்ஸ: கதாசித் கர்தாமாம்பஸி – ஆசை முதலானவற்றால் கெடுக்கப்பட்ட மனதில் மதுஸூதனன் ஒருபோதும் வசிப்பதில்லை; அன்னப்பறவை சேறு நிறைந்த நீரைக் கண்டு ஒருபோதும் விருப்பம் கொள்வதில்லை அல்லவோ – என்று கூறும் வரிகளை நன்றாக உணர்ந்து, பாகவதர்களை அவமதிக்காமல் இருத்தல்வேண்டும். மாறாக அவர்களிடம் உள்ள நற்குணங்களைக் காணும்போது, பாலைவனத்தில் சுவையான குடிநீரைப் பெற்றது போன்று மகிழவேண்டும். மஹாபாரதம் உத்யோகபர்வம் (38-56) - கர்மணா மநஸா வாசா யதபீக்ஷ்ணம் நிஷேவதே ததேவாபஹரத்யேநம் தஸ்மாத் கல்யாணமாசரேத் – ஒருவன் சரீரம், மனம், வாக்கு முதலியவற்றால் எந்த ஒரு செயலை அடிக்கடிச் செய்கிறானோ, அந்தச் செயல் அவனைத் தனக்கு அடிமையாக்குகிறது; ஆகவே எப்போதும் நல்லவற்றை மட்டுமே செய்தல்வேண்டும் – என்று கூறுவதற்கு ஏற்ப, மனம் முதலான மூன்றாலும் நல்லவழியைக் கைவிடாமல் இருக்கவேண்டும். மேலும் ஸம்ஸார விஷவ்ருக்ஷஸ்ய த்வே பலே ஹி அம்ருதோபமே கதாசித் கேசவே பக்தி: தத்பக்தைர்வா ஸமாகம: - ஸம்ஸாரம் என்னும் விஷமரத்தில் அமிர்தம் போன்று இரண்டு பழங்கள் உண்டு; அவையாவன ஸர்வேச்வரனிடம் உண்டாகும் பக்தி, பாகவதர்களின் சேர்க்கை – என்றும், திருவாய்மொழி - பரமனைப் பயிலுந் திருவுடைய சிறுமாமனிசருடன் சேர்த்தியாகிற சிறிய பெறாப் பேற்றைத் திருவருளாலே பெற்றோம் – ஸர்வேச்வரனை அடைவதான உயர்ந்த பாக்கியம் உள்ளவரும், உருவத்தால் சிறியவராக இருந்தாலும் அறிவால் உயர்ந்தவரும் ஆகிய பாகவதர்களுடன் சேருதல் என்பதான எளிதில் கிட்டாத பலனை நாம் அடைந்தோம் – என்றும் கூறியது போன்று, பாகவதர்களுடனான

ஸம்பந்தம் என்பது இங்கு வாழும் காலத்தில் நமக்குக் கிட்டிய உயர்ந்த பலன் என்று எண்ணவேண்டும். மேலும், திருவிருத்தம் (88) - திருமால் தலைக்கொண்ட நங்கட்கு எங்கே வரும் தீவினை என்று கூறியது போன்று ஸர்வேச்வரனால் கைக்கொள்ளப்பட்ட தனக்கு தீவினைகள் வராது என்ற உறுதியுடன் இருக்கவேண்டும். திருவாய்மொழி (10-4-3) - ஆள்கின்றான் ஆழியான் ஆரால் குறைவுடையம் – ஸர்வேச்வரன் என்னைக் காக்கும்போது யாரால் எனக்குச் சேரவேண்டியதைக் குறைக்க இயலும் – என்பதற்கு ஏற்ப, பரமபதத்தில் கிட்ட உள்ள பரிபூர்ண கைங்கர்ய சாம்ராஜ்யத்துக்கு இங்கேயே முடி சூடிக்கொள்கிறோம் என்று எண்ணியபடி இருக்கவேண்டும்.

**மூலம்** – இப்படி வ்யவஸ்திதமான ப்ரபாவம் ரஹஸ்யத்ரயத்தில் பலநிர்தேச ப்ரதேசங்களிலே அநுஷங்க ஸித்தமாக அநுஸந்தேயம்.

**விளக்கம்** – இப்படியாக உள்ள நிலையின் ப்ரபாவங்கள் குறித்து ரஹஸ்ய மந்த்ரங்கள் மூன்றின் பலன் குறித்துக் கூறப்படும் இடங்களில், நேரடியாகக் கூறப்படாமல் உள்ளபோதிலும், தானாகவே வெளிப்படுகிறது.

உண்மை யுரைக்கு மறைகளி லோங்கிய வுத்தமனார்
வண்மை யளப்பரி தாதலின் வந்து கழல்பணிவார்
தண்மை கிடக்கத் தரமள வென்ற வியப்பிலதாம்
உண்மை யுரைத்தன ரோரந் தவிர வுயர்ந்தனரே

**பொருள்** – உண்மையை மட்டுமே உரைப்பதான உபநிஷத்துக்களில் போற்றப்படும் மிகவும் உயர்ந்த புருஷோத்தமனாகிய ஸர்வேச்வரனுடைய பெருமைகள் இத்தகையது என்று அளவிட இயலாது; ஆகவே அவனுடைய திருவடிகளில் பணிந்து நிற்பவர்கள் தாழ்ந்தவர்கள் என்றாலும், அவர்களுடைய பெருமையும் அளவிடும் இயல்புடையது அல்ல என்ற உண்மையை நம்முடைய ஆசார்யர்கள் எவ்விதமான பாரபக்ஷமும் இல்லாமல் உபதேசித்தார்கள்.

ராக த்வேஷ மதாதிகைரிஹ மஹாரக்ஷேஷாபிரக்ஷேஷாபிதே
நித்யே ரக்ஷிதரி ஸ்திதே நிஜ பர ந்யாஸாபிதாநம் தப:

யத் கக்ஷீக்ருதமத்யசேத விவிதாந் தர்மாநதர்மத்ருஹ:
தத் பூமார்ணவ லேசவர்ணநமபி ப்ராசாம் ந வாசாம் பதம்

**பொருள்** – இந்த உலகில் காணப்படும் ஆசை, வெறுப்பு,கர்வம் முதலான பெரிய அரக்கர்களால் எப்போதும் பாதிக்கப்படாமல் அனைத்தையும் காக்கும் ஸர்வேச்வரன் உள்ளான். அவனுடைய திருவடிகளில் நம்முடைய பாரத்தைச் சமர்ப்பித்தல் என்பதான ப்ரபத்தி என்னும் தவமானது, பாவங்களை நீக்கவல்ல பலவிதமான தர்மங்களைக் காட்டிலும் மேலானதாக உள்ளது என்று ஏற்கப்படுகிறது. இப்படிப்பட்ட ப்ரபத்தியின் பெருமை என்னும் கடலின் ஒரு துளியை வர்ணித்தல் என்பது வேத வரிகளுக்கும் இயலாத செயலாகும்.

ப்ரபாவரக்ஷாதிகாரம் ஸம்பூர்ணம்

ஸ்த்திரீகரண பாகம் ஸம்பூர்ணம்

பெரியபெருமாள் திருவடிகளே சரணம்

பெரியபெருமாள் திருவடிகள் தஞ்சம் அடைந்த நம் உடையவர் திருவடிகளே சரணம்

உடையவர் திருவடிகள் சரணம் புகுந்த நம் தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## அதிகாரம் 27


நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)



www.namperumal.com / namperumal.wordpress.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# 27. மூலமந்த்ராதிகாரம்

தாரம் பூர்வம் ததுநு ஹ்ருதயம் தச்ச நாராயணாயேதி
ஆம்நாயோக்தம் பதமவயதாம் ஸார்த்தமாசார்யதத்தம்
அக்நீகுர்வந் அலஸ மநஸாம் ஆத்மரக்ஷாபரம் ந:
க்ஷிப்ரம் தேவ: க்ஷிபது நிகிலாந் கிங்கரைச்வர்ய விக்நாந்

**பொருள்** – முதலில் ப்ரணவம், தொடர்ந்து நமஸ்ஸு, அதன் பின்னர் நாராயணாய என்று வேதங்களில் உபதேசிக்கப்பட்ட பதம் முதலானவற்றை நமது ஆசார்யன் நமக்குப் பொருளுடன் உபதேசிக்கிறார். அதனை எப்போதும் சிந்தித்தபடி உள்ள, வேறு கதி அற்றவர்களான நம்மைக் காப்பாற்றும் பாரத்தை ஸர்வேச்வரன் ஒப்புக்கொண்டுள்ளான். அவன் நம்முடைய கைங்கர்யம் என்னும் ஐச்வர்யத்துக்கு உண்டாகும் அனைத்துவிதமான தடைகளையும் நீக்கவேண்டும்.

கல்யாணமாவஹது கார்த்தயுகம் ஸ்வதர்மம்
ப்ரக்யாபயந் ப்ரணிஹிதேஷு நராதிகேஷு
ஆத்யம் கமப்யதிகதோ ரதமஷ்டசக்ரம்
பந்து: ஸதாம் பதரிகாச்ரம் தாபஸோ ந:

**பொருள்** – மிகுந்த கவனத்துடன் கேட்கும் நரன், நாரதர் முதலானவர்களுக்கு, க்ருதயுகத்தின் தொடர்புடைய தன்னுடைய தர்மங்களை உபதேசம் செய்தபடியும், எட்டுச் சக்கரம் உள்ளதான மேன்மையான ரதத்தை (அதாவது எட்டு எழுத்து கொண்டதான மூலமந்த்ரம் என்னும் ரதம்) உடைய சான்றோர்களுக்குப் பந்துவாயும், பத்ரிநாத் என்னும் பதரிகாச்ரமத்தில் தவம் செய்தபடியும் உள்ள நாராயணன் நமக்கு மோக்ஷம் கிட்டும் காலம் முடிய க்ஷேமம் அளிக்கவேண்டும்.

யதந்த: ஸ்தமசேஷேண வாங்மயம் வேதவைதிகம்
தஸ்மை வ்யாபக முக்யாய மந்த்ராய மஹதே நம:

**பொருள்** – வேதங்களிலும், அவற்றை ஆதாரமாக உள்ள ஸ்ம்ருதிகளிலும் உள்ள பதங்கள் அனைத்தும் எந்த மந்த்ரத்தில் அடங்கி உள்ளனவோ, வ்யாபக மந்த்ரங்களில் (ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ பகவதே வாஸுதேவாய, ஓம் நமோ விஷ்ணவே ஆகிய மூன்றும் வ்யாபக மந்த்ரங்கள் எனப்படும்) எந்த மந்த்ரம் சிறப்பானதோ, அந்த மேன்மையான மந்த்ரத்திற்கு என்னுடைய நமஸ்காரம்.

இஹ மூலமந்த்ர ஸம்வ்ருதமர்த்தமசேஷேண கச்சிதநுபவதி
ஸ்படிகதல நிஹித நிதிமிவ தேசிக தத்தேந சக்ஷுஷா ஜந்து:

**பொருள்** – இந்த உலகில் உள்ள ஒருவன், தன்னுடைய ஆசார்யர்களால் தனக்கு அளிக்கப்பட்ட ஞானக்கண் மூலம் திருமந்த்ரத்தில் மறைவாக உள்ள பொருளை, ஸ்படிகமாக உள்ள பூமியில் காணப்படும் புதையல் போன்று, முழுவதுமாக எடுத்து அனுபவிக்கிறான்.

## மூன்று ரஹஸ்யங்களின் நோக்கம்

**மூலம்** – ஸத்த்வஸ்தர்க்கு அநுஸந்தேயங்களான ஸாரதமார்த்தங்களையும், அவற்றினுடைய ஸ்திரீகரண ப்ரகாரங்களையும் ப்ரதிபாதித்தோம். இவற்றையெல்லாம் ப்ரகாசிப்பிக்கிற ரஹஸ்யத்ரயத்தில் பதவாக்ய யோஜனைகள் இருக்கும்படி சொல்லுகிறோம்.

**விளக்கம்** – இதுவரை ஒவ்வொரு ஸாத்விகரும் நினைவில் கொள்ளவேண்டியதான பல முக்கியமான தத்துவங்களை, சரியான ப்ரமாணங்களின் அடிப்படையில் விரிவாக விளக்கினோம். இனி இவை அனைத்தையும் ஒருமித்து வெளிப்படுத்துவதான மூன்று மந்த்ரங்களில் (திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகம்) காணப்படும் பதங்களையும்,

வாக்கியங்களையும் சரியானபடி வரிசைப்படுத்தி பொருள் கொள்ளவேண்டியது குறித்துக் கூறுவோம்.

**மூலம்** – அவற்றில் முற்படத் திருமந்த்ரம் பரசேஷதைகரஸ ஸ்வரூபாதிகளைத் தெளிவித்து அம்முகத்தாலே ஸமஸ்த ப்ரதிபந்தக நிவ்ருத்தி பூர்வக பரமபுருஷார்த்த ப்ராப்தியிலே ருசியையும், த்வரையையும் விளைப்பித்து, உபாயாதிகார பூர்த்தியை உண்டாக்கும். இப்படி அதிகாரியானவனுடைய பலாபேக்ஷாபூர்வக உபாயவிசேஷாநுஷ்டாந ப்ரகாரத்தை த்வயம் விசதமாக ப்ரகாசிப்பிக்கும். இவ்வுபாய விசேஷத்தை விதிக்கிறது சரமச்லோகம்.

**விளக்கம்** – இந்த மூன்று மந்த்ரங்களில் முதலில் திருமந்த்ரம் என்பது, ஸர்வேச்வரனுக்கு அடிமையாக இருத்தலே ஜீவனுடைய ஸ்வரூபம் என்று உணர்த்துகிறது. இதன் பொருட்டு, திருமந்த்ரமானது மோக்ஷம் பெறுவதில் உள்ள அனைத்து இடையூறுகளையும் நீக்குவதன் மூலம் மோக்ஷத்தின் மீது ஒரு ஆசையை உண்டாக்கி, அந்த மோக்ஷத்தை உடனே அடையவேண்டும் என்னும் வேகத்தையும் உண்டாக்கி, அதற்கான உபாயங்களைக் கைக்கொள்வதற்கான தகுதிகளின் நிறைவை உண்டாக்குகிறது. இப்படியாக உள்ள அதிகாரிக்கு, மோக்ஷம் என்னும் புருஷார்த்தத்தின் மீது ஒரு பிடிப்பை உண்டாகி, அதற்கான உபாயத்தை எவ்விதம் கைக்கொள்ளவேண்டும் என்பதை த்வய மந்த்ரம் தெளிவாக உணர்த்துகிறது. இந்த உபாயத்தை சரம ச்லோகம் விதியாக உரைக்கிறது.

**மூலம்** – இவை மூன்றிலும் தனித்தனியே எல்லா அர்த்தங்களையும் சப்தமாகவும் ஆர்த்தமாகவும் காணலாமாகிலும், ஓரொன்றிலே ஓரொன்றுக்கு நோக்காயிருக்கும். திருமந்த்ரத்தில் ப்ரதமபதத்திலே ப்ரதமாக்ஷரத்திலே ஸம்க்ஷிப்தமான சரண்ய பரதத்வத்தையும், இதில் மத்யம த்ருதீய பதங்களிலே ப்ரதிபந்நமான உபாயோபேயங்களையும் அடைவே விசதமாக்குகிறது த்வயம். இதில் “ப்ரபத்யே” என்கிற பதத்தில் உத்தமனாலே விவக்ஷிதமான அதிகாரி விசேஷத்தையும் அர்த்தஸித்தமான உபாயாந்தர நைரபேக்ஷ்யத்தையும், உபேயத்தில் நம: சப்த ஸம்க்ஷிப்தமான விரோதி நிவ்ருத்த்யம்சத்தையும் வெளியிடுகிறது சரமச்லோகம்.

**விளக்கம்** – இந்த மூன்றுவிதமான கருத்துக்களையும், மூன்று மந்த்ரங்களிலும் நேரடியாகவும், ஆழ்ந்த பொருளாகவும் தனித்தனியே காணலாம்; என்றாலும், ஒவ்வொரு மந்த்ரத்திற்கும் தனித்தனியான குறிக்கோள் உள்ளது. திருமந்த்ரத்தில் உள்ள முதல் சொல்லான "ஓம்" என்பதில் உள்ள "அ" என்னும் அக்ஷரம் அனைவருக்கும் அடைக்கலமாக உள்ள பரம்பொருளைச் சுருக்கமாகக் கூறுகிறது; இதன் நடுப்பதமான "நமோ" மற்றும் மூன்றாவது பதமான "நாராயணாய" ஆகியவை உபாயத்தையும், உபேயத்தையும் கூறுவதாகும். இவற்றின் பொருளை த்வய மந்த்ரம் விரிவாகக் கூறுகிறது. த்வய மந்த்ரத்தில் உள்ள "ப்ரபத்யே" என்பதன் மூலம் அதிகாரியின் விசேஷத்தை நேரடியாகவும், மற்ற உபாயங்கள் ஏதும் அவசியம் இல்லை என்பதை மறைமுகமாகவும், கடைசியாக உள்ள "நம:" என்பதன் மூலம் அதிகாரிக்கு உண்டாகக்கூடிய அனைத்து தடைகளும் நீங்குவதும் கூறப்படுகிறது. த்வயத்தில் கூறப்பட்ட இந்த மூன்றையும் சரமச்லோகம் தெளிவாக்குகிறது.

திருமந்த்ரம் = தாரகம், சரமச்லோகம் = போஷகம், த்வயம் = போக்யம்

**மூலம்** – இவை மூன்றும் நமக்கு ஞான அனுஷ்டான பலநிதாநங்களாய்க் கொண்டு தாரக போஷக போக்யங்கள்.

> வ்யக்தம் ஹி பகவாந் தேவ: ஸாக்ஷாந்நாராயண: ஸ்வயம்
> அஷ்டாக்ஷர ஸ்வரூபேண முகேஷு பரிவர்த்ததே

என்கிறபடியே தேசிகஜிஹ்வையில் இருந்து சிஷ்ய ஹ்ருதய குஹாந்தகாரத்தைக் கழித்துப் பரசேஷதைகரஸமான பரிசுத்த ஸ்வரூபத்தை வெளியிட்டு ஸத்தாலாபத்தைப் பண்ணுகையாலே திருமந்த்ரம் தாரகம். சரமோபாயத்திலே ப்ரவர்த்திக்கும்படியான ஞான விசேஷோபசய ஹேதுவாகையாலே ச்ரோதவ்யசேஷமில்லாதபடி உபாயோபதேச பர்யவஸாநமான சரமச்லோகம் போஷகம். ஸக்ருதுச்சாரணத்தாலே பரமபுருஷார்த்த ஹேதுவாய்க்கொண்டு ஸதாநுஸந்தாநத்தாலே க்ருதார்த்தனாக்குகையாலே த்வயம் போக்யம்.

**விளக்கம்** – திருமந்த்ரம், சரமச்லோகம், த்வயம் என்னும் இந்த மூன்று மந்த்ரங்களும் நமக்கு ஞானம், அனுஷ்டானம் மற்றும் பலன்களை அளிப்பதால் இவை முறையே தாரகம் (பேணுதல்), போஷகம் (போஷாக்கு அளித்தல்) மற்றும் போக்யம் (இன்பம் அளித்தல்) என்பதாக உள்ளன. நாரதீயத்தில் (1-32) - வ்யக்தம் ஹி பகவாந் தேவ: ஸாக்ஷாந்நாராயண: ஸ்வயம் அஷ்டாக்ஷர ஸ்வரூபேண முகேஷு பரிவர்த்ததே – பகவான் என்று அனைவராலும் போற்றப்படும் தேவாதிதேவனாகிய நாராயணன், தானாகவே வலிய வந்து, அஷ்டாக்ஷரமான திருமந்த்ரத்தை ஜபிப்பவர்களின் முகத்தில் நிற்கிறான் என்பது உறுதி – என்றது காண்க. ஆக ஆசார்யனுடைய வாக்கிலிருந்து புறப்பட்டு, சிஷ்யனுடைய இதயம் என்னும் குகைக்குள் காணப்படும் அறியாமை முதலான இருட்டுகளை அகற்றி, அவன் ஸர்வேவரனுக்கு மட்டுமே அடிமை என்பதான அவனுடைய ஸ்வரூபத்தை அவனுக்குப் புரியவைத்து, அவனை “இருக்கும் வஸ்து” என்று மாற்றும் பலனை அளிப்பதால், திருமந்த்ரம் அவனுக்குத் தாரகம் (நம்மைப் பேணவல்ல பொருள்கள் தாரகம் ஆகும்) ஆகிறது. ப்ரபத்தி என்னும் உபாயத்தைக் கைக்கொள்வதற்கான ஞானத்தை வளர்த்துக்கொள்ள சரமச்லோகம் உதவுகிறது; இந்த உபாயத்தைக் கூறவல்ல இறுதியான கருத்தைக் கொண்டதாகவும், வேறு எதுவும் அவசியம் இல்லை என்று கூறுவதாகவும் உள்ளதால் சரமச்லோகம் போஷகம் (பால், தயிர் போன்று போஷாக்கு அளிப்பதால் போஷகம்) ஆகிறது. த்வய மந்த்ரமாகிய தன்னை ஒருவன் உச்சரித்தால் மட்டுமே போதுமானது, அவனுக்குத் தேவையான உயர்ந்த புருஷார்த்தம் கொடுப்பதாலும்; தன்னை எப்போதும் உச்சரித்தபடி உள்ளதால் ஆனந்தம் அளிப்பதாலும் த்வயமந்த்ரம் போக்யம் (இன்பம் அளிப்பது) ஆகிறது.

## திருமந்த்ரத்தின் பெருமைகள்

**மூலம்** – இவற்றில் திருமந்த்ரத்தினுடைய ருஷி – சந்தோ – தேவதா – பீஜ – சக்தி – வர்ண – விநியோக – ஸ்தாந – ந்யாஸாதிகள் அவ்வோ கல்பஸம்ப்ரதாயங்களுக்கு ஈடாகக் கண்டு கொள்வது. இத்திருமந்த்ரம் ஆதர்வண கடாத்யுபநிஷத்துக்களிலும், மற்றும் மந்வாதி சாஸ்த்ரங்களிலும், நாராயணாத்மக ஹைரண்யகர்ப்ப நாரதீய போதாயநாதி பஹுவித கல்பங்களிலும் ஸுப்ரஸித்த வைபவமாயிருக்கும். மந்த்ராந்தங்களிற் காட்டில் பகவந்

மந்த்ரங்கள் அதிகமானாற் போலவும் அநந்தங்களான பகவந்மந்த்ரங்கள் தம்மில் வ்யாபக த்ரயம் அதிகமானாற் போலவும்.

மந்த்ராணாம் பரமோ மந்த்ரோ குஹ்யாநாம் குஹ்யாமுத்தமம்
பவித்ரம் ச பவித்ராணாம் மூலமந்த்ர: ஸநாதந:

என்கையாலே வ்யாபமந்த்ரங்கள் எல்லாவற்றிலும் அதிகமாய், ஸர்வவேத ஸாரமாய், ஸர்வாநிஷ்ட நிவர்த்தநக்ஷமமாய் ஸர்வபுருஷார்த்தங்களுக்கும் ஸாதகமாய், ஸர்வ உபாயங்களுக்கும் உபகாரகமாய், ஸர்வவர்ணங்களுக்கும் தந்தம் அதிகாராநுகுணமாக வைதிகரூபத்தாலும் தாந்த்ரிகரூபத்தாலும் உபஜீவ்யமாய், வ்யாப்ய வ்யாபக கண்டோக்திமத்தாய் ஸர்வமந்த்ர நைரபேக்ஷ்யகரமாய் ஸர்வபகவந் மூர்த்திகளுக்கும் ஸாதாரணமாயிருக்கையாலே ஸர்வாசார்யர்களும் இத்தையே விரும்பிப் போருவார்கள்.

**விளக்கம்** – இந்த மூன்றில், திருமந்த்ரத்தினுடைய ரிஷி, சந்தஸ், தேவதை, பீஜம், சக்தி, வர்ணம், முறை, இடம், அங்கங்கள் முதலானவற்றை அந்தந்த கல்பங்களில் உள்ள ஸம்ப்ரதாயத்திற்கு ஏற்றபடி அறியவேண்டும். திருமந்த்ரத்தின் மேன்மை குறித்து ஆதர்வணம், கட முதலான உபநிஷத்துக்களிலும், மனு முதலான சாஸ்த்ரங்களிலும், நாராயணாத்மகம், ஹைரண்யகர்ப்பம், நாரதீயம், போதாயனம் முதலான பலவிதமான கல்பங்களிலும் கூறப்பட்டுள்ளதை அனைவரும் அறிவர். மற்ற மந்த்ரங்களைக் காட்டிலும் ஸர்வேச்வரனைக் குறித்துள்ள மந்த்ரங்கள் மேன்மையானவை; எண்ணற்ற பகவத் மந்த்ரங்களில் வ்யாபக மந்த்ரங்களான (வ்யாபக மந்த்ரம் = ஸர்வேச்வரன் எங்கும் வ்யாபித்துள்ளான் என்பதை உணர்த்தும் மந்த்ரங்கள்) இந்த மூன்றும் மிகவும் உயர்ந்தவை. நாரதீய கல்பத்தில் (1-11) - மந்த்ராணாம் பரமோ மந்த்ரோ குஹ்யாநாம் குஹ்யாமுத்தமம் பவித்ரம் ச பவித்ராணாம் மூலமந்த்ர: ஸநாதந: - அநாதியான மூலமந்த்ரம், அனைத்து மந்த்ரங்களுக்குள் மிகவும் உயர்ந்ததாகும், ரஹஸ்யங்களுக்குள் மிகவும் ரஹஸ்யமானதாகும், தூய்மை அடையச் செய்பவனவற்றுள் மிகவும் தூய்மையானதாகும் – என்று கூறுவது காண்க. ஆக வ்யாபக மந்த்ரங்கள் அனைத்திலும் உயர்ந்ததாகவும், அனைத்து வேதங்களுக்கும் ஸாரமானதாகவும், அனைத்து தீமைகளையும் நீக்கவல்லதாகவும், அனைத்து உயர்ந்த பலன்களையும் அளிக்கும் உபாயமாகவும், அனைத்து உபாயங்களுக்கும் உபாயமாகவும், அனைத்து வர்ணத்தினரும்

தங்களுடைய தகுதிக்கு ஏற்றவாறு வைதிகம் மற்றும் தாந்த்ரிக ரூபங்களில் கடைப்பிடிக்க ஏற்றதாகவும், சேதன அசேதன ஈச்வர தத்துவங்களை வெளிப்படுத்தவல்லதாகவும், மற்ற மந்த்ரங்களின் துணை இல்லாமல் தானாகவே அனைத்து பலன்களையும் அளிக்கவல்லதாகவும், அனைத்து ஸர்வேச்வர மூர்த்திகளுக்கும் பொதுவாக உள்ளதாகவும் இருப்பதால் இதனை ஆசார்யர்கள் அனைவரும் பெரிதும் விரும்பிக் கைக்கொள்வர்.

**மூலம்** – ஆழ்வார்களும் "நின் திருவெட்டெழுத்தும் கற்று" என்றும், "எட்டெழுத்தும் ஓதுவார்கள் வல்லர் வானமாளவே" என்றும், "எட்டெழுத்தும் வாரமாக ஓதுவார்கள் வல்லர் வானமாளவே" என்றும், "நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயணாய" என்றும், "நல்வகையால் நமோ நாராயணா" என்றும் திருமந்த்ரத்தையே விரும்பிப் போந்தார்கள். ருஷிகளும்

பஹவோ ஹி மஹாத்மநோ முநய: ஸநகாதய:
அஷ்டாக்ஷரம் ஸமாச்ரித்ய தே ஜக்முர்வைஷ்ணவம் பதம்

யதா ஸர்வேஷு தேவேஷு நாஸ்தி நாராயணாத்பர:
ததா ஸர்வேஷு மந்த்ரேஷு நாஸ்தி சாஷ்டாக்ஷராத்பர:

பூத்வோர்த்வபாஹுரத்ராத்ய ஸத்யபூர்வம் ப்ரவீமி வ:
ஹே புத்ரசிஷ்யா: ச்ருணுத ந மந்த்ர: அஷ்டாக்ஷராத்பர:

ததர்சிநபரோ நித்யம் தத் பக்தஸ்தம் நபஸ்குரு
தத்பக்தா ந விநச்யந்தி ஹ்யஷ்டாக்ஷரபராயணா:

ஆஸீநா வா சயாநா வா திஷ்டந்தோ யத்ர குத்ர வா
நமோ நாராயணாயேதி மந்த்ரைகசரணா வயம்

என்றார்கள்.

இத்திருமந்த்ரத்தை ஸர்வேச்வரன் ஸ்ரீநாரதபகவானையிட்டு ஸ்ரீபுண்டரீகனுக்கு உபதேசிப்பிக்க, அவனும் இதையே பரமஹிதமாகக் கேட்டபடியாலே

புண்டரீக: அபி தர்மாத்மா நாராயண பராயண:
நமோ நாராயணாயேதி மந்த்ரமஷ்டாக்ஷரம் ஜபந்

இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே இம்மந்த்ரநிஷ்டனாய் முக்தனானான். இம்மந்த்ரத்தைத் திருமங்கையாழ்வாருக்கு ஸர்வேச்வரன் தானே உபதேசித்தான்.

**விளக்கம்** – கீழே உள்ள பல வரிகளின் மூலம் ஆழ்வார்களும் திருமந்த்ரத்தையே பெரிதும் விரும்பினார்கள் என்று அறியலாம்:

- பெரியதிருமொழி (8-10-3) - நின் திருவெட்டெழுத்தும் கற்று – உனது எட்டு எழுத்து கொண்ட திருமந்த்ரத்தைக் கற்றுக்கொண்டு
- திருச்சந்தவிருத்தம் (17) - எட்டெழுத்தும் ஓதுவார்கள் வல்லர் வானமாளவே – எட்டு எழுத்துள்ள திருமந்த்ரத்தை எப்போதும் கூறுபவர்கள் ஸ்ரீவைகுண்டத்தை ஆளும் சக்தி உள்ளவர்கள் ஆவர்
- திருச்சந்தவிருத்தம் (78) - எட்டெழுத்தும் வாரமாக ஓதுவார்கள் வல்லர் வானமாளவே - எட்டு எழுத்துள்ள திருமந்த்ரத்தை எப்போதும் விருப்பத்துடன் கூறுபவர்கள் ஸ்ரீவைகுண்டத்தை ஆளும் சக்தி உள்ளவர்கள் ஆவர்
- பெரியாழ்வார் திருமொழி (1-1-4) - நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயணாய – நாட்டில் உள்ள அனைவரும் இதன் பெருமையை நன்றாக உணரும்படி “நமோ நாராயணாய” என்று கூறுவீர்களாக
- பெரியாழ்வார் திருமொழி (1-1-11) - நல்வகையால் நமோ நாராயணா - நமோ நாராயணாய என்னும் திருமந்த்ரத்தை பலமுறை உரைத்து

- மேலும் பல ரிஷிகளும் கீழே உள்ள வரிகளில் உள்ளது போன்று திருமந்த்ரத்தின் பெருமையை உணர்த்துவது காண்க:

- நாரதீய கல்பம் (1-16) - பஹவோ ஹி மஹாத்மநோ முநய: ஸநகாதய: அஷ்டாக்ஷரம் ஸமாச்ரித்ய தே ஜக்முர்வைஷ்ணவம் பதம் – ஸநகர் முதலான பல ரிஷிகள் எட்டு எழுத்து கொண்ட திருமந்த்ரத்தை ஜபித்தபடி இருந்து ஸர்வேச்வரனின் இருப்பிடமான பரமபதம் அடைந்தனர்.

- நாரதீய கல்பம் (1-42) - யதா ஸர்வேஷு தேவேஷு நாஸ்தி நாராயணாத்பர: ததா ஸர்வேஷு மந்த்ரேஷு நாஸ்தி சாஷ்டாக்ஷராத்பர: - அனைத்து தேவர்களுக்குள்ளும் நாராயணனைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் இல்லாதது போன்று, அனைத்து மந்த்ரங்களுக்குள்ளும் எட்டு எழுத்து கொண்ட திருமந்த்ரத்தைக் காட்டிலும் உயர்ந்தது இல்லை.

- நரஸிம்ஹபுராணம் (18-32) - பூத்வோர்த்வபாஹுரத்ராத்ய ஸத்யபூர்வம் ப்ரவீமி வ: ஹே புத்ரசிஷ்யா: ச்ருணுத ந மந்த்ர: அஷ்டாக்ஷராத்பர: - புத்திரர்களே! சிஷ்யர்களே! நான் எனது கையை உயர்த்தி ஸத்யம் செய்தபடி கூறுகிறேன், கேளுங்கள், எட்டு எழுத்து கொண்ட திருமந்த்ரத்தைக் காட்டிலும் உயர்ந்த மந்த்ரம் வேறில்லை.

- நரஸிம்ஹபுராணம் (18-32) - ததர்சிநபரோ நித்யம் தத் பக்தஸ்தம் நபஸ்குரு தத்பக்தா ந விநச்யந்தி ஹ்யஷ்டாக்ஷரபராயணா: - அனத மந்த்ரம் கொண்டு எப்போதும் அவனைத் துதித்து அர்ச்சனை செய்யுங்கள், அதனைக் கொண்டு அவன் மீது பக்தி செலுத்துங்கள், எட்டு எழுத்து கொண்ட திருமந்த்ரத்தைக் கொண்டு அவன் மீது பக்தி செய்பவர்கள் என்றும் அழிவதில்லை.

- நாரதீய கல்பம் (4-70) - ஆஸீநா வா சயாநா வா திஷ்டந்தோ யத்ர குத்ர வா நமோ நாராயணாயேதி மந்த்ரைகசரணா வயம் - அமர்ந்துள்ளபோதும், படுத்துள்ளபோதும், நின்று கொண்டுள்ளபோதும், “நமோ நாராயணாய” என்னும்

எட்டு எழுத்து கொண்ட திருமந்த்ரத்தை மட்டுமே தங்களுடைய உபாயமாகக் கொண்டவர்கள்.

இந்தத் திருமந்த்ரத்தை ஸர்வேச்வரனாகிய ஸ்ரீமந்நாரயணன் ஸ்ரீநாரத மஹரிஷி மூலமாகப் புண்டரீகனுக்கு உபதேசித்தான். அவனும் அந்த உபதேசம் தனக்கு மிகவும் உயர்ந்த நன்மை அளிக்கவல்லது என்ற உறுதியுடன் கேட்டான். இதனால் அவன், இதிஹாஸ ஸமுச்சயம் (31-124) - புண்டரீக: அபி தர்மாத்மா நாராயண பராயண: நமோ நாராயணாயேதி மந்த்ரமஷ்டாக்ஷரம் ஜபந் – தர்மத்தில் ஆழ்ந்த பற்றுதல் உள்ள புண்டரீகன், தன்னால் அடையப்படவேண்டியவர்களில் மிகவும் உயர்ந்தவன் ஸ்ரீமந்நாராயணன் மட்டுமே என்று எண்ணியவனாக, "நமோ நாராயணாய" என்னும் எட்டு எழுத்து கொண்ட திருமந்த்ரத்தை ஜபித்து, மோக்ஷம் அடைந்தான் – என்னும் வரியில் கூறியபடி முக்தி அடைந்தான். இந்தத் திருமந்த்ரத்தை திருமங்கையாழ்வாருக்கு ஸர்வேச்வரன் நேரடியாகத் தானே உபதேசம் செய்தான்.

## திருமந்த்ரத்தில் அனைவருக்கும் உள்ள அதிகாரமும் வரையறையும்

**மூலம்** – இது ப்ரணவ சதுர்த்திகளையொழிந்தபோது ஸர்வாதிகாரம் என்னுமிடம் ஸ்ரீவராஹ புராணத்தில் கைசிகத்வாதசீ மாஹாத்ம்யத்திலே நமோ நாராயணேத்யுக்த்வா ச்வபாக: புநராகமத் என்கிற வசநத்தாலே காட்டப்பட்டது. இவ்வர்த்தம் "நாமம் சொல்லில் நமோ நாராயணமே" என்றும், "நன் மாலை கொண்டு நமோ நாரயணா" என்றும், "நாவாயிலுண்டே நமோ நாராயணாவென்று ஓவாதுரைக்கும் உரையுண்டே" என்றும் சொல்லுகிற பாசுரங்களாலும் ப்ரஸித்தம். இது ப்ராஹ்மணாதிகளுக்கு அதீதமான க்ரமத்திலே ப்ரணவத்தோடே கூட அஷ்டாக்ஷரமாயிருக்கும்.

**விளக்கம்** – திருமந்த்ரத்தில் முதலில் உள்ள ப்ரணவம் (ஓங்காரம்) மற்றும் இறுதியில் உள்ள "ஆய" என்னும் நான்காம் வேற்றுமை உருபு ஆகிய இரண்டையும் நீக்கினால், இந்த மந்த்ரத்தை அனைவரும் உச்சரிக்கலாம் என்பதை, ஸ்ரீவராஹபுராணத்தில் உள்ள கைசிக த்வாதசீ மாஹாத்ம்யத்தில் நமோ நாராயணேத்யுக்த்வா ச்வபாக: புநராகமத் – "நமோ நாராயணா" என்று கூறியபடி நாய் மாமிஸம் உட்கொள்ளும் தாழ்ந்த பிறவியில் வந்த

நம்பாடுவான் மீண்டும் வந்தான் – என்ற வரி மூலம் அறியலாம். இதே கருத்து கீழே உள்ள பாசுரங்களில் காணப்படுகிறது:

- பெரியதிருமொழி (6-10-1) - நாமம் சொல்லில் நமோ நாராயணமே – ஸர்வேச்வரனுடைய திருநாமத்தை உச்சரிக்கும்போது “நமோ நாராயணா” என்று கூறவேண்டும்.

- முதல்திருவந்தாதி (27) - நன் மாலை கொண்டு நமோ நாரயணா – “நமோ நாராயணா” என்னும் சிறந்த மாலையைக் கொண்டு.

- முதல்திருவந்தாதி (95) - நாவாயிலுண்டே நமோ நாராயணாவென்று ஓவாதுரைக்கும் உரையுண்டே – வாயில் நாக்கும், இடைவிடாமல் உரைக்கும் நமோ நாராயணா என்னும் மந்த்ரமும் உள்ளது அல்லவா

அந்தணர்களுக்கு இந்தத் திருமந்த்ரமானது ஓதப்பட்ட முறையில், ப்ரணவத்துடன் சேர்ந்து எட்டு எழுத்துடைய மந்த்ரமாக உள்ளது.

**மூலம் –**

வைதிகம் தாந்த்ரிகம் சைவ ததா வைதிகதாந்த்ரிகம்
த்ரிவிதம் கர்ம ஸம்ப்ரோக்தம் பஞ்சராத்ராம்ருதார்ணவே

வைதிகம்ப்ராஹ்மணாநாம் து ராஜ்ஞாம் வைதிகதாந்த்ரிகம்
தாந்த்ரிகம் வைச்யசூத்ராணாம் ஸர்வேஷாம் தாந்த்ரிகம் து வா

அஷ்டாக்ஷரச்ச யோ மந்த்ரோ த்வாதசாக்ஷர ஏவ ச
ஷடக்ஷரச்ச யோ மந்த்ரோ விஷ்ணோரமிததேஜஸ:

ஏதே மந்த்ரா: ப்ராதாநாஸ்து வைதிகா: ப்ராணவைர்யுதா:
ப்ரணவேந விஹீநாஸ்து தாந்த்ரிகா ஏவ கீர்த்திதா:

ந ஸ்வர: ப்ரணவ: அங்காநி நாப்யந்யவிதயஸ்ததா
ஸ்த்ரீணாம் து சூத்ரஜாதீநாம் மந்த்ரமாத்ரோக்திரிஷ்யதே
என்கிறபடியே ப்ரணவம் ஒழிந்தபோது,

தத்ரோத்தராயணஸ்யாதி: பிந்துமாந் விஷ்ணுரந்தத:
பீஜமஷ்டாக்ஷரஸ்ய ஸ்யாத் தேநாஷ்டாக்ஷரதா பவேத்

என்கிற ப்ரக்ரியையாலே எட்டெழுத்தும் அநுஸந்தேயமாக விதிக்கப்பட்டது.

**விளக்கம் –**

- வைதிகம் தாந்த்ரிகம் சைவ ததா வைதிகதாந்த்ரிகம் த்ரிவிதம் கர்ம ஸம்ப்ரோக்தம் பஞ்சராத்ராம்ருதார்ணவே – பாஞ்சராத்ரம் என்னும் பாற்கடலில் கர்மமானது வைதிகம், தாந்த்ரிகம், வைதிகதாந்த்ரிகம் என்னும் மூன்றுவிதமாக உள்ளது என்று கூறப்படுகிறது

- வைதிகம்ப்ராஹ்மணாநாம் து ராஜ்ஞாம் வைதிகதாந்த்ரிகம் தாந்த்ரிகம் வைச்ய சூத்ராணாம் ஸர்வேஷாம் தாந்த்ரிகம் து வா – அந்தணர்களுக்கு வைதிகமான கர்மங்கள், க்ஷத்ரியர்களுக்கு வைதிக தாந்த்ரிகமான கர்மங்கள், வைச்யர்கள் மற்றும் சூத்திரர்களுக்கு தாந்த்ரிக கர்மங்கள், அனைவருக்கும் தாந்த்ரிகமான கர்மங்கள் என்று உண்டு

- அஷ்டாக்ஷரச்ச யோ மந்த்ரோ த்வாதசாக்ஷர ஏவ ச ஷடக்ஷரச்ச யோ மந்த்ரோ விஷ்ணோரமிததேஜஸ: - அஷ்டாக்ஷரம் (எட்டெழுத்து – நமோ நாராயணா), த்வாதசாக்ஷரம் (பன்னிரண்டு எழுத்து – நமோ பகவதே வாஸுதேவா), ஷடக்ஷரம் (ஆறு எழுத்து – நமோ விஷ்ணவே) என்னும் மந்த்ரங்கள் எல்லையற்ற தேஜஸ் உள்ள விஷ்ணுவின் மந்த்ரங்கள் ஆகும்

- ஏதே மந்த்ரா: ப்ராதாநாஸ்து வைதிகா: ப்ராணவைர்யுதா: ப்ரணவேந விஹீநாஸ்து தாந்த்ரிகா ஏவ கீர்த்திதா: - இந்த மந்த்ரங்களுடன் ப்ரணவம் சேர்க்கும்போது, அவை வைதிக மந்த்ரங்களாகின்றன. ப்ரணவம் சேராதபோது அவை தாந்த்ரிக மந்தரங்கள் ஆகின்றன

- ந ஸ்வர: ப்ரணவ: அங்காநி நாப்யந்யவிதயஸ்ததா ஸ்த்ரீணாம் து சூத்ரஜாதீநாம் மந்த்ரமாத்ரோக்திரிஷ்யதே – பெண்களுக்கும், சூத்ரர்களுக்கும் மூலமந்த்ரத்தில், நாராயணா என்பதைத் தொடர்ந்து “ஆய” என்பது இல்லாமல் மட்டுமே அதிகாரம் உண்டு. மேலும் அவர்களுக்கு ஸ்வரம், ப்ரணவம், அங்கவிதிகள் முதலானவை இல்லை. மந்த்ரத்தை ஜபித்தல் மட்டுமே சாஸ்த்ரம் கூறுகிறது

இப்படியாக ப்ரணவம் என்பது உச்சரிக்கப்படாமல் உள்ளபோது, நாரதீயகல்பத்தில் (1-27) - தத்ரோத்தராயணஸ்யாதி: பிந்துமாந் விஷ்ணுரந்தத: பீஜமஷ்டாக்ஷரஸ்ய ஸ்யாத் தேநாஷ்டாக்ஷரதா பவேத் – அஷ்டாக்ஷரத்தில் உள்ள நார, அயந என்னும் பதங்களில், அயந என்னும் பதத்தில் உள்ள “அ” என்பது விஷ்ணுவைக் குறிக்கும்; அதனுடன் “ம்” என்னும் எழுத்தை இணைத்தால், “அம்” என்பது கிட்டும்; இதுவே அஷ்டாரக்ஷத்திற்கான பீஜமாகும்; இவ்விதம் செய்வதால், எட்டெழுத்து கொண்ட மந்த்ரமாகிறது – என்று கூறுவதற்கு ஏற்ப, எட்டெழுத்து மந்த்ரமானது எப்போது கூறப்படவேண்டும் என்று விதிக்கப்பட்டது.

**மூலம்** – ப்ரணவமொழிந்தாலும் அது கூடினாலுமுள்ள பலம் இவ்வதிகாரிகளுக்கு உண்டென்னுமிடம்:

கிம் தத்ர பஹுபிர்மந்த்ரை: கிம் தத்ர பஹுபிர்வ்ரதை:
நமோ நாராயணாயேதி மந்த்ர: ஸர்வார்த்தஸாதக:

இத்யாதிகளாலே ஸித்தம். இப்படி ப்ரணவமொழிய அஷ்டாக்ஷரமானபோது ப்ரணவத்தில் அர்த்தமெல்லாம் இப் ப்ரணவப்ரதிச்சந்தமாக சாஸ்த்ரம் வகுத்த அக்ஷரத்திலே ப்ரதமாக்ஷரம் ஸர்வஸங்க்ரஹமான கணக்கிலே சுருங்க அநுஸந்தேயம்.

மத்யமாக்ஷரத்தில் பொருளும் அர்த்தஸித்தமாம். இதில் த்ருதீயாக்ஷரத்தில் சொல்லுகிற ஜ்ஞாத்ருத்வாதிகளும் நமஸ்ஸில் த்விதீயாக்ஷரத்தில் ப்ரக்ருதியாலே அநுஸந்தேயம்.

**விளக்கம்** – திருமந்த்ரத்தை ஜபிக்கும்போது ப்ரணவத்தை நீக்கி உச்சரித்தாலும், அதனுடன் சேர்த்து உச்சரித்தாலும் அதனால் பலன் நிச்சயமாக உண்டாகும் என்பதை நாரதீயகல்பம் (1-41) - கிம் தத்ர பஹுபிர்மந்த்ரை: கிம் தத்ர பஹுபிர்வ்ரதை: நமோ நாராயணாயேதி மந்த்ர: ஸர்வார்த்தஸாதக: - தேவையான பலனை அடைவதற்கு பல மந்த்ரங்களால் என்ன பயன் உள்ளது? பல விரதங்களால் என்ன பயன் உள்ளது? "நமோ நாராயணாய" என்னும் மந்த்ரம் மட்டுமே அனைத்து பலன்களையும் அளிக்கவல்லதாக உள்ளது – என்றது காண்க. இவ்விதம் ப்ரணவத்திற்குப் பதிலாக "அம்" என்று திருமந்த்ரத்தில் உச்சரிக்கும்போது, அதில் ப்ரணவத்தால் கூறப்படும் அனைத்து பொருள்களும் அடங்கும்; காரணம் "அ" என்னும் எழுத்தானது அனைத்தையும் சுருக்கமாக உரைக்கவல்லது என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ப்ரணவத்தின் நடு எழுத்தான "உ" என்பதன் பொருளான "மட்டுமே" என்பது நேரடியாக நம்மால் உணர இயலும். ப்ரணவத்தின் இறுதி எழுத்தான "ம்" என்பதன் பொருளான "ஞானம் உடையவனாதல்" போன்ற அர்த்தங்கள், "நமோ" என்பதில் உள்ள இரண்டாவது அக்ஷரம் மூலம் (அதாவது – "ம்") என்பதால் வெளிப்படுகிறது.

## ப்ரணவத்தின் பெருமை மற்றும் பலவிதமான அர்த்தங்களும்

**மூலம்** – ப்ரணவம் ஸ்வதந்த்ரமானபோது ஏகமாத்ரம் த்விமாத்ரம் த்ரிமாத்ரம் ஸார்த்தத்ரிமாத்ரமென்றாற்போலே பல ப்ரகாரமாய் அர்த்தங்களும் அப்படியே கார்ய காரண அவஸ்த பரமாத்மவாசகத்வாதி ப்ரக்ருதியையாலே பலவகைப்பட்டிருக்கும். வ்யாபக மந்த்ரங்களிலும் ப்ரணவத்தைப் பரமாத்மப்ரதாநமாகவும் சில சாஸ்த்ரங்கள் சொல்லும்.

**விளக்கம்** – இத்தகைய ப்ரணவத்தைத் தனித்து ஒரு மந்த்ரமாக உச்சரிக்கும்போது அதனை ஒன்று, இரண்டு, மூன்று அல்லது மூன்றரை மாத்திரை அளவுகளில் உச்சரிக்கலாம் (ஒரு மாத்திரை என்றால் ஒரு விநாடியாகும்). அந்தந்த மாத்திரை அளவுகளுக்கு ஏற்ப

ப்ரஹ்மத்தைக் கார்யமாகவும், காரணமாகவும் கொள்வர் (ப்ரணவம் என்பது ப்ரஹ்மத்தைக் குறிப்பதாகும். இது ஒரு மாத்திரை அளவில் உச்சரிக்கப்படும்போது, கார்யரூபத்தில் உள்ள பூலோகத்தைச் சரீரமாகக் கொண்ட ப்ரஹ்மத்தைக் கூறுவதாக உள்ளது. இரண்டு மாத்திரை அளவில் உச்சரிக்கப்படும்போது, கார்யரூபத்தில் உள்ள அந்தரிக்ஷ லோகத்தைச் சரீரமாகக் கொண்ட ப்ரஹ்மத்தைக் கூறுவதாக உள்ளது. மூன்று மாத்திரை அளவில் உச்சரிக்கப்படும்போது, கார்யரூபத்தில் உள்ள ஸ்வர்க்க லோகத்தைச் சரீரமாகக் கொண்ட ப்ரஹ்மத்தைக் கூறுவதாக உள்ளது. மூன்றரை மாத்திரை அளவில் உச்சரிக்கப்படும்போது, காரணரூபத்தில் உள்ள ப்ரஹ்மத்தைக் கூறுவதாக உள்ளது – அதாவது பரவாஸுதேவ ரூபம்). ஒரு சில சாஸ்த்ரங்களில் - ப்ரணவமானது மூன்று வ்யாபக மந்த்ரங்களின் (நமோ விஷ்ணவே, நமோ நாராயணாய, நமோ பகவதே வாஸுதேவாய) முன்பாக வரும்போது, அதனை ஒரே அக்ஷரமாக (அதாவது அ, உ, ம என்று பிரிக்காமல்) கொண்டு, அப்போது அது ப்ரஹ்மத்தை உணர்த்துவதாகக் கொள்க – என்று கூறப்படுகிறது (இவ்விதம் கொண்டால்: அகாரம் = ரிக்வேதம், உகாரம் = யஜுர்வேதம், மகாரம் = ஸாமவேதம், மகாரத்தின் மேலே உள்ள புள்ளி = அதர்வணவேதம் என்று கொள்ளப்பட்டு, இவற்றால் கூறப்படும் பரமாத்மாவை அந்த ஒற்றை எழுத்து உணர்த்துகிறது என்பர்).

**மூலம்** – இதின் ப்ரபாவம்

ஆத்யம் து த்ரயக்ஷரம் ப்ரஹ்ம த்ரயீ யத்ர ப்ரதிஷ்டிதா
ஸ குஹ்யோந்யஸ்த்ரி வ்ருத்வேதோ யஸ்தம் வேத ஸ வேதவித்

இத்யாதிகளிலே ப்ரஸித்தம். இது

ஹவிர்க்ருஹீத்வா ஆத்மரூபம் வஸுரண்யேதி மந்த்ரத:
ஜுஹுயாத் ப்ரணவேநாக்நௌ அச்யுதாக்யே ஸநாதநே

என்கிறபடியே ந்யாஸவித்யையில் ஸ்வதந்த்ரமாய் ஆத்மஸமர்ப்பண பரமாயிருக்கும். அக்கட்டளையில் இங்கும் ஸமர்ப்பணபரமாகவும் யோஜிப்பார்கள். இவ்விடத்தில்

ஸ்வரூபஜ்ஞாந ப்ராதாந்யத்தாலே சேஷத்வாநுஸந்தாநமாத்ரம் உபஜீவ்யமென்றும் யோஜிப்பார்கள். அப்போது இச்சேஷத்வாநுஸந்தாநம் அதிகாரத்திலே சேரும்.

**விளக்கம்** – ப்ரணவத்தின் மேன்மையானது, மநுஸ்ம்ருதி (11-265) - ஆத்யம் து த்ரயக்ஷரம் ப்ரஹ்ம த்ரயீ யத்ர ப்ரதிஷ்டிதா ஸ குஹ்யோந்யஸ்த்ரி வ்ருத்வேதோ யஸ்தம் வேத ஸ வேதவித் – மூன்று எழுத்து கொண்டதான ப்ரணவம் என்பது அனைத்து வேதங்களுக்கும் முதலாவதாக உள்ளது; அதில் அனைத்து வேதங்களின் கருத்தும் அடங்கியுள்ளது; இந்த ப்ரணவம் என்னும் வேதமானது, அனைத்து வேதங்களைக் காட்டிலும் மேன்மையானது; இதனை சூத்திரர்களும் பெண்களும் அறியாதபடி காக்கவேண்டும்; இதனை அறிந்தவன் அனைத்தையும் அறிந்தவன் ஆகிறான் – போன்ற வரிகளின் மூலம் தெளிவாகிறது. மேலும், இத்தகைய ப்ரணவமானது, தனித்தே, வஸுரண்ய மந்த்ரத்தில் – ஆத்மஸமர்ப்பணபர – ஆத்மாவை ப்ரணவம் மூலம் ப்ரஹ்மத்திடம் சேர்க்கவேண்டும் – என்று கூறுவதற்கு ஏற்ப உள்ளது என்பதை ந்யாஸவித்யையில் - ஹவிர்க்ருஹீத்வா ஆத்மரூபம் வஸுரண்யேதி மந்த்ரத: ஜுஹுயாத் ப்ரணவேநாக்நௌ அச்யுதாக்யே ஸநாதநே – ஆத்மா என்னும் அவிர்பாகத்தை, “வஸுரண்ய” என்னும் மந்த்ரம் கொண்டு, எப்போதும் எரிந்தபடி உள்ள அச்சுதன் என்னும் அக்னியில், ப்ரணவத்தால் ஹோமம் செய்யவேண்டும் – என்றது காண்க. இதன் காரணமாக, ப்ரணவம் என்பது ஸமர்ப்பணத்தைக் குறிப்பதாகவும் கொள்வர். ஒரு சிலர், திருமந்த்ரம் மூலமே ஆத்மா அடிமை என்றும், ஸர்வேச்வரன் எஜமானன் என்றும் உள்ள சேஷ-சேஷி ஞானத்தை அடைவதால், ப்ரணவமானது திருமந்த்ரத்துடன் மட்டுமே அங்கீகரிக்கத்தக்கது என்று கூறுவர். இவ்விதம் கொண்டால், ப்ரணவமானது, உபாய அதிகாரத்தில் அடங்கி விடுகிறது.

**மூலம்** – க்ஷேத்ரஜ்ஞஸ்யேச்வரஜ்ஞாநாத் விசுத்தி: பரமா மதா என்றது, சேஷிதத்த்வ ஜ்ஞாநமாத்ரபரமானபோது உபாயாநர்ஹதா நிவ்ருத்திபரம். உபாயரூபம் ஜ்ஞாநாநந்தரத்தை விவக்ஷிக்கும்போது மோக்ஷபரம்.

**விளக்கம்** – யஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி (3-34) - க்ஷேத்ரஜ்ஞஸ்யேச்வரஜ்ஞாநாத் விசுத்தி: பரமா மதா – ஈச்வரனைக் குறித்த ஞானம் காரணமாக பந்தப்பட்ட ஜீவனுக்கு மிகவும் உயர்ந்த தூய்மை கிட்டுகிறது – என்று கூறப்பட்டதன் பொருள் என்னவென்றால்,

ப்ரணவமானது எஜமானன் – அடிமை என்னும் ஞானத்தை உண்டாக்குகிறது என்று கொள்ளும்போது உபாயத்தைக் கைக்கொள்வதற்குத் தகுதியின்மையை உண்டாக்கவல்ல அசுத்தத்தை விலக்குகிறது என்பதாகும். ஆனால் ப்ரணவமானது உபாயமாக உள்ள ஸர்வேச்வரனைக் குறித்த ஞானத்தை உண்டாக்குகிறது என்னும்போது, பரிசுத்தி என்பது மோக்ஷத்தைக் குறிக்கும்.

## ப்ரணவத்தைப் பிரித்துப் பொருள் கொள்ளவேண்டிய முறை

**மூலம் –**

இப் ப்ரணவார்த்தாநுஸந்தாந க்ரமத்தை

> ஈத்ருச: பரமாத்மா அயம் ப்ரத்யகாத்மா ததேத்ருச:
> தத் ஸம்பந்தாநுஸந்தாநம் இதி யோக: ப்ரகீர்த்தித:

என்று ஸ்ரீசாண்டில்யபகவான் அருளிச்செய்தான். இத்தை

> அகாரார்த்தோ விஷ்ணுர்ஜகதுதய ரக்ஷா ப்ரளயக்ருத்
> மகாரார்த்தோ ஜீவஸ்ததுபகரணம் வைஷ்ணவமிதம்
> உகாரோ அநந்யார்ஹம் நியமயதி ஸம்பந்தமநயோ:
> த்ரயீஸாரஸ்த்ரயாத்மா ப்ரணவ இமமர்த்தம் ஸமதிசத்

என்று விவரித்தார்கள். "கண்ணபுரமென்று உடையானுக்கு அடியேன், ஒருவருக்கு உரியேனோ?" என்றதும் இப் ப்ரணவார்த்த விவரணம். ப்ரணவத்தில் அக்ஷரத்ரயத்தையும் வேதத்ரயஸாரமாக ச்ருதி ஸ்ம்ருதிகள் ப்ரபஞ்சித்தன.

**விளக்கம் –** ப்ரணவத்தின் ஆழ்பொருளை எவ்விதம் அறியவேண்டும் என்று ஸ்ரீசாண்டில்ய மஹரிஷி சாண்டில்ய ஸ்ம்ருதியில் (5-17) - ஈத்ருச: பரமாத்மா அயம் ப்ரத்யகாத்மா ததேத்ருச: தத் ஸம்பந்தாநுஸந்தாநம் இதி யோக: ப்ரகீர்த்தித: - பரமாத்மா

இப்படிப்பட்டவன், ஜீவாத்மா இப்படிப்பட்டவன் என்று இவர்கள் இருவருடைய தொடர்பு குறித்து எண்ணுதல் யோகம் எனப்படும் – என்றது காண்க. அஷ்டச்லோகியில் (1) - அகாரார்த்தோ விஷ்ணுர்ஜகதுதய ரக்ஷா ப்ரளயக்ருத் மகாரார்த்தோ ஜீவஸ்தததுபகரணம் வைஷ்ணவமிதம் உகாரோ அநந்யார்ஹம் நியமயதி ஸம்பந்தமநயோ: த்ரயீஸாரஸ்த்ரயாத்மா ப்ரணவ இமமர்த்தம் ஸமதிசத் – இந்த உலகைப் படைத்து, காத்து, அழிப்பவனாகிய மஹாவிஷ்ணு “அ” என்பதன் பொருளாவான். “ம” என்பது ஜீவனாகும்; அவன் விஷ்ணுவின் அடிமையாகிறான். இந்த இருவருக்கும் இடையே உள்ள ஸம்பந்தம் வேறு யாருக்கும் உரியது அல்ல என்று கூறுவது “உ” என்பதாகும். ஆக மூன்று வேதங்களின் ஸாரமாகவும், மூன்று எழுத்துக்களைக் கொண்டதாகவும் உள்ள ப்ரணவம் இந்தப் பொருளை உரைக்கிறது. பெரியதிருமொழி (8-9-3) - கண்ணபுரமென்று உடையானுக்கு அடியேன், ஒருவருக்கு உரியேனோ? – திருக்கண்ணபுரத்தில் உறையும் ஸர்வேச்வரனுக்கு அடிமையாகிய நான், வேறு யாருக்கும் அடிமை ஆவேனோ – என்று கூறுதல் ப்ரணவத்தின் இந்தக் கருத்துக்கு விளக்கமாகும். ப்ரணவத்தில் மூன்று எழுத்துக்கள் உள்ளதையும், அது மூன்று வேதங்களுடைய ஸாரமாக உள்ளதையும் ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் பரக்க உரைத்தன.

## “அ” என்பது ஸர்வேச்வரனைக் கூறுதலும், அதற்கு “காத்தல்” என்று பொருள் உள்ளதும்

**மூலம்** – இவ்வக்ஷரங்கள் இவ்வர்த்தங்களைச் சொல்லுகிறபடி எங்ஙனேயென்னில்:

அஷ்டாக்ஷர சரீராங்க ப்ரணவாத்யக்ஷரேண து
அகாரேணாகிலாதார: பரமாத்மா அபிதீயதே
ஸமஸ்த சப்த மூலத்வாந் அகாரஸ்ய ஸ்வபாவத:
ஸமஸ்தவாச்யமூலத்வாத் ப்ரஹ்மணோ அபி ஸ்வபாவத:
வாச்ய வாசக ஸம்பந்த: தயோரர்த்தாத் ப்ரதீயதே

என்று ஸ்ரீவாமநபுராண வசநத்தாலே ஸர்வவாசகஜாத ப்ரக்ருதியான ப்ரதமாக்ஷரத்துக்கு ஸர்வவாச்யஜாத ப்ரக்ருதியான நாராயணன் வாச்யன் என்று ப்ரஸித்தமான அர்த்தத்தை வேதார்த்தஸங்க்ரத்திலே அருளிச் செய்தார்.

**விளக்கம்** – ப்ரணவத்தில் உள்ள எழுத்துக்கள் இவ்விதமாக பொருள் தருகின்றன என்று எவ்விதம் கூறப்பட்டது என்றால் ஸ்ரீவாமநபுராணத்தில் - அஷ்டாக்ஷர சரீராங்க ப்ரணவாத்யக்ஷரேண து அகாரேணாகிலாதாரா: பரமாத்மா அபிகீயதே ஸமஸ்த சப்த மூலத்வாந் அகாரஸ்ய ஸ்வபாவத: ஸமஸ்தவாச்யமூலத்வாத் ப்ரஹ்மணோ அபி ஸ்வபாவத: வாச்ய வாசக ஸம்பந்த: தயோரர்த்தாத் ப்ரதீயதே – அஷ்டாக்ஷரம் என்னும் சரீரத்திற்கு ஓர் அங்கமாக ப்ரணவம் உள்ளது; அதன் முதல் எழுத்தான “அ” என்பதன் மூலம், அனைத்திற்கும் ஆதாரமாக உள்ள ஸர்வேச்வரன் கூறப்படுகிறான். அனைத்து சொற்களுக்கும் “அ” என்பது இயல்பாகவே காரணமாக உள்ளதாலும், அந்தச் சொற்களால் கூறப்படும் அனைத்து வஸ்துக்களுக்கும் ஸர்வேச்வரனே காரணமாக உள்ளதாலும், “அ” என்பது அவனையே கூறுகிறது; ஆகவே அவன்தான் அகாரத்தால் கூறப்படுபவன். இவ்விதமாக உள்ள தொடர்பு என்பது அகாரத்துக்கும், ஸர்வேச்வரனுக்கும் ஏற்றதாக உள்ளது – என்றது காண்க. இதன் மூலம் அனைத்து வஸ்துக்களையும் குறிக்கும் சொற்கள் அனைத்திற்கும் முதல் எழுத்தான “அ” என்பதால் கூறப்படுபவன், அந்தச் சொற்கள் மூலமாக அறியப்படும் அனைத்து வஸ்துக்களுக்கும் காரணமான நாராயணனே ஆவான் என்னும் அர்த்தத்தை இந்த வாமனபுராண வாக்கியங்கள் கூறுவதை ஸ்வாமி எம்பெருமானார் தன்னுடைய வேதார்த்தஸங்க்ரத்தில் அருளிச்செய்தார்.

**மூலம்** – இத்தாலே காரணவாக்ய ஸித்தமான ஸகல ஜகந்நிமித்தோபாதாந காரணத்வமும் அத்தாலே ஆக்ஷிப்தமான ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வாதி குணவர்க்கமும் இங்கே ஸித்தமாயிற்று. இவ்வக்ஷரம் பகவத்வாசகமென்னுமிடம் “அ நிஷேதே புமாந் விஷ்ணௌ” என்றும், “அகாரோ விஷ்ணு வாசக:” என்றும், “அ இதி பகவதோ நாராயணஸ்ய ப்ரதம அபிதாநமபிததா கிம் நாம மங்கலம் ந க்ருதம்” என்றும் நிகண்டங்களிலும் ப்ரயோகங்களிலும் ப்ரஸித்தம். இது வ்யாகரண வ்யுத்பத்தியாலே ஸர்வேச்வரனைச் சொல்லும்போது ரக்ஷண ப்ரீணநாதிவிஷயமான தாதுவிலே, கர்த்ருவாசியான ப்ரத்யயத்தாலே நிஷ்பந்நமான பதமாய் ஸர்வரக்ஷகத்வாதி விசிஷ்டனாகக் காட்டும்.

இத்தாது, அநேகார்த்தமேயாகிலும் ரக்ஷணார்த்தத்தில் ப்ரஸித்தி ப்ரகர்ஷத்தாலும், இவ்வர்த்தம் இங்கே அபேக்ஷிதமாகையாலும், இங்கே நாநார்த்தங்கள் அநுஸந்தேயங்களாக ஒரு நிருக்தியில்லாமையாலும் ப்ரதமபடிதமான ரக்ஷணம் சப்தமாய் மற்ற அபேக்ஷிதார்த்தங்கள் இத்தாலே ஆக்ஷிப்தங்களாக அநுஸந்திக்கை உசிதமென்று இவ்வளவே ஆசார்யர்கள் வ்யாக்யானம் பண்ணினார்கள்.

**விளக்கம்** – ஆக இதன் மூலம் ஸர்வேச்வரன் இந்த உலகின் நிமித்த காரணமாகவும், உபாதான காரணமாகவும் உள்ளான் என்பது தெளிவாகிறது; இதே கருத்து அவனுடைய அனைத்தும் அறிந்த தன்மை மற்றும் அனைத்து சக்தியும் கொண்ட தன்மை முதலானவற்றால் யூகித்து அறியப்படுகிறது. இந்த “அ” என்னும் எழுத்து பகவானைக் குறிக்கும் என்பது கீழே உள்ள நிகண்டுகளாலும், பல அறிஞர்களின் வாக்குகளாலும் தெளிவாகிறது:

- அ நிஷேதே புமாந் விஷ்ணௌ – அ அன்னும் எழுத்து “இல்லை” என்னும் பொருளையும், விஷ்ணு என்னும் பொருளையும் தருவதாகும்.
- அகாரோ விஷ்ணு வாசக: - “அ” என்னும் எழுத்து விஷ்ணுவைக் குறிக்கும்.
- அ இதி பகவதோ நாராயணஸ்ய ப்ரதம அபிதாநமபிததா கிம் நாம மங்கலம் ந க்ருதம் – நாராயணனுடைய முதல் பெயராகிய “அ” என்பதை உரைப்பதன் மூலமே மங்களம் செய்யப்பட்டதாகிறது அல்லவோ?

மேலும் “அ” என்பது ஸர்வேச்வரனைக் குறிப்பதாகக் கொள்ளும்போது, இலக்கண ரீதியில் நோக்கினாலும், அந்த எழுத்து “ரக்ஷித்தல், மகிழ்வித்தல்” போன்ற பொருளைக் கொடுப்பதான “அவ” என்னும் தாதுவிலிருந்து வந்ததாகிறது; ஆக, இவ்விதம் கொள்ளும்போதும், “அ” என்பது அனைத்தையும் காப்பாற்றுபவனையே குறிப்பதாகிறது. இந்த “அவ” என்னும் தாது பல அர்த்தங்களை அளிப்பதாக உள்ளபோதிலும், “காத்தல்” என்னும் அர்த்தமே மிகவும் சிறப்பாக உள்ளதாகும். மேலும் இந்த அர்த்தமே இங்கு பொருந்துவதாக உள்ளது. இந்தத் தாதுவுக்கு பலவிதமான அர்த்தங்கள் இருப்பதற்கு எந்தவிதமான வரையறையும், ப்ரமாணங்களும் இல்லை. ஆகவே இலக்கணத்தில் கூறப்படுவதும், சிறப்பானதும் ஆகிய “காத்தல்” என்பதே பொருந்துகிறது; மற்ற அர்த்தங்கள் அனைத்தும் இந்த முதன்மையான அர்த்தத்தைத் தழுவி உள்ளன என்றே

கொள்ளவேண்டும். இதனால்தான் நம்முடைய ஆசார்யர்கள் இந்த “அவ” என்னும் தாதுவுக்கு “காப்பாற்றுபவன்” என்னும் அர்த்தத்தை முதன்மையாகக் கொண்டனர்.

**மூலம்** – இந்த ரக்ஷகத்வம் அவச்சேதகமில்லாமையாலே ஸர்வ விஷயம். ரக்ஷா ப்ரகாரங்கள் விஷயங்கள்தோறும் ப்ரமாணங்கள் காட்டினபடியிலே விசித்திரங்களாய் இருக்கும். இது ஹேது நிர்த்தேசம் பண்ணாமையாலே நிருபாதிகமாய்த் தோன்றினாலும் ஸாபராதரான ஸம்ஸாரிகளுக்கு மோக்ஷாதிப்ரதாநத்தில் ஸ்வதந்த்ரனான ஈச்வரன் தான் ஸங்கல்பித்து வைத்ததொரு வ்யாஜத்தை அபேக்ஷித்திருக்கும். நித்யர் பக்கலிலும் முக்தர் பக்கலிலும் நிருபாதிக ஸஹஜ காருண்யமாத்ரத்தாலே ஸ்திதஸ்தாபநரூபேண ரக்ஷை முழுக்க நடக்கும்.

**விளக்கம்** – இப்படிப்பட்ட ரக்ஷகத்தன்மை என்பதை வரையறை செய்யும் எந்தவிதமான ப்ரமாணமும் இல்லாத காரணத்தால், இது அனைவருக்கும் பொதுவானதே ஆகும். ஆனால் காக்கப்படுகின்ற (அல்லது காப்பாற்றப்படவேண்டிய) வஸ்துக்களுக்கு ஏற்றபடி இந்த ரக்ஷகத்தன்மையானது பலவிதங்களில் இருக்கலாம் என்று ப்ரமாணங்கள் கூறுகின்றன. இப்படிப்பட்ட காப்பாறுதல் என்பது “இன்ன காரணத்தால்” என்று கூறப்படாததால் அது “காரணம் பற்றி வருதல் இல்லை” என்று கொள்ளப்பட்டாலும், சுதந்திரமானவனான ஸர்வேச்வரன், தான் ஏற்படுத்தியுள்ள விதத்தில் ஜீவன் நடக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறான்; காரணம் ஸம்ஸாரத்திலிருந்து மோக்ஷம் அளிப்பதற்கு ஒரு வலுவான காரணம் வேண்டும் அல்லவோ? ஆனால் நித்யஸூரிகள் விஷயத்திலும், முக்தி பெற்றவர்கள் விஷயத்திலும் இப்படிப்பட்ட “காரணம் இல்லாமல் காப்பாற்றுதல்” என்னும் நிலை ஸர்வேச்வரனுடைய கருணையால், முன்பே ஏற்படுத்திய நிலை என்பதைக் காக்கும்விதமாக, எப்போதும் நடக்கும்.

**மூலம்** – இப்படி ஸ்வாபாவிகமான ரக்ஷகத்வம் ப்ராதிகூல்யம் நடக்கும் காலத்தில் அநாத்யபராதத்தாலே பிறந்த நிக்ரஹரூபோபாதியாலே ப்ரதிபத்தமாம். ப்ரதிபந்தமான இவ்வுபாதியைக் கழிக்கைக்காகவே ப்ரபத்தி முதலான வ்யாஜங்கள் சாஸ்த்ரஸித்தங்கள்.

த்ராணே ஸ்வாமித்வமௌசித்யம் ந்யாஸாத்யா: ஸஹகாரிண:
ப்ரதாநஹேது: ஸ்வாதந்த்ர்ய விசிஷ்டா கருணா விபோ:

**விளக்கம்** – ஆனால் இப்படி அவனுக்கு இயல்பாகவே உள்ளதான காப்பாற்றும் தன்மை என்பது, எல்லையற்ற காலமாக ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ளவர்கள், அவனுக்கு விருப்பம் இல்லாத செயல்களைச் செய்தபடி உள்ளதால் தண்டனை பெறவேண்டிய அவசியம் உள்ளவர்களாக இருப்பதால், தடுக்கப்பட்டதாகவே இருக்கிறது. இவ்விதமாக ஸர்வேச்வரனுடைய கருணையைத் தடுப்பதான இந்த நிலைகளை நீக்கும்விதமாகவே சாஸ்த்ரங்கள் ப்ரபத்தி முதலான உபாயங்களைக் கூறுகின்றன. த்ராணே ஸ்வாமித்வமௌசித்யம் ந்யாஸாத்யா: ஸஹகாரிண: ப்ரதாநஹேது: ஸ்வாதந்த்ர்ய விசிஷ்டா கருணா விபோ: - ஸ்வாமியாக இருத்தல் என்னும் நிலை காப்பாற்றுவதில் பொருந்துகிறது, ப்ரபத்தி முதலானவை உதவுவதற்கான காரணங்களாக உள்ளன, ஸர்வேச்வரனுடைய சுதந்திரத்தோடு கூடிய தயை என்பதே முக்கியமான காரணம் ஆகும்.

## ப்ரணவத்தில் உள்ள “அ” என்னும் எழுத்து பிராட்டியையும் கூறுதல்

**மூலம்** – ஸர்வரக்ஷணதீக்ஷிதனானவன்

லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யரூபயா
ரக்ஷகா: ஸர்வஸித்தாந்தே வேதாந்தே அபி ச கீயதே

இத்யாதிகளிற்படியே ஸபத்நீகனாக ஸித்தனாயிருக்கையாலே இங்கே ப்ரமாணஸித்த உபயோகவிசேஷமான பத்நீஸம்பந்தம் ஆர்த்தம். இப்படி ஸந்நியோகசிஷ்ட ந்யாயத்தாலே எம்பெருமானைச் சொல்லுமிடம் எங்கும் பிராட்டியையும் சொல்லிற்றாம் என்னுமிடத்தை ததந்தர்பாவாத்த்வாம் ந ப்ருதகபிதத்தே ச்ருதிரபி என்று ஸமர்த்தித்தார்கள். ஆகையால் ஸ்வரூபநிரூபக தர்மங்கள் ஸர்வவித்யைகளிலும் வருகிற கணக்கிலே அவற்றில் ப்ரதாநமான இவ்விசேஷணமும் ஸர்வவித்யைகளிலும் அநுஸந்தேயம். இதுதான் தேவதாந்தர வ்யாவ்ருத்தியையும் பண்ணிக் கொண்டு ஸர்வாதிசாயியான ஸ்வதந்த்ர ஸ்வரூபத்துக்கு நிரூபகமாம். இவனுடைய ஸ்வத: ஸித்தாதிசயங்களான ஸ்வரூப விக்ரஹ விபூதிகள் பாஸ்கரேண ப்ரபா யதா என்னும்படி விசேஷணமாய் நிற்கிற இவளுடைய ஸ்வரூப விக்ரஹ விபூதிகளாலும்,

லப்தாதிசயங்களாய்க் கொண்டு விளங்கி இருக்குமென்னுமிடம் தேவதா பாரமார்த்ய வேதிகளான மஹர்ஷிகளாலே ப்ரபஞ்சிதம்.

**விளக்கம்** – லக்ஷ்மீதந்த்ரம் (28-14) - லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யரூபயா ரக்ஷகா: ஸர்வஸித்தாந்தே வேதாந்தே அபி ச கீயதே – கருணையே வடிவான மஹாலக்ஷ்மியை அருகில் வைத்தபடியே அனைத்தையும் ரக்ஷிக்கிறான் என்று அனைத்து ஸித்தாந்தங்களும் வேதாந்தங்களும் உரைக்கின்றன – என்பதற்கு ஏற்றபடி, அனைத்தையும் காக்கவேண்டும் என்னும் உறுதியுடன் உள்ள ஸர்வேச்வரன், அதனைத் தனது பத்னியுடன் சேர்ந்தே செய்கிறான். அவன் தன்னுடைய பத்னியுடன் இவ்விதம் மற்றவற்றைக் காப்பாற்றுவதற்காகக் கொண்டுள்ள ஸம்பந்தம் என்பது, ப்ரமாணங்களின் மூலம் நம்மால் ஊகித்து அறிய இயலும். ஆக ஸந்நியோகசிஷ்ட ந்யாயத்தின் மூலம் (இரண்டும் அவசியம் என்று கூறப்பட்ட பின்னர், ஒரு இடத்தில் அவற்றில் ஒன்று அவசியம் என்று கூறப்பட்டால், அந்த இடத்தில் இரண்டாவதையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்), ஸர்வேச்வரனைக் குறிப்பிடும் இடங்களில் எல்லாம் பெரிய பிராட்டியாரையும் சேர்த்தே படிக்கவேண்டும் என்பதை, ஸ்ரீகுணரத்னகோசம் (28) - ததந்தர்பாவாத்த்வாம் ந ப்ருதகபிதத்தே ச்ருதிரபி – நீ அவனுடன் எப்போதும் சேர்ந்துள்ள காரணத்தால்தான், வேதங்கள் உன்னைத் தனித்து கூறாமல் இருந்தன – என்பது போன்ற வரிகளில் ஆசார்யர்கள் உரைத்தனர். உபநிஷத்துக்களில் கூறப்படும் அனைத்து வித்யைகளிலும், எங்கெல்லாம் ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபம் மற்றும் குணங்கள் குறித்து கூறப்பட்டுள்ளனவோ, அங்கெல்லாம் "அவன் மஹாலக்ஷ்மியின் நாயகன்" என்னும் கருத்தைச் சேர்த்தே கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட "மஹாலக்ஷ்மியின் நாயகன்" என்னும் நிலையே மற்ற தேவதைகளை அண்டாமல் உள்ளதையும், எதனையும் எதிர்பாராமலிருக்கும் அவனுடைய ஸ்வரூபத்தையும் நிரூபிக்கிறது. அவனுடைய ஸ்வரூபம், ஐச்வர்யம், மேன்மைகள் ஆகிய பலவும், இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (21-15) - பாஸ்கரேண ப்ரபா யதா – சூரியனை விட்டு ஒளி பிரியாதது போன்று – என்று கூறுவதற்கு ஏற்ப உள்ளவளான மஹாலக்ஷ்மியின் ஸ்வரூபம், ஐச்வர்யம், மேன்மைகள் ஆகியவற்றால் பெறப்பட்ட மேன்மை உடையனவாகப் பிரகாசிக்கின்றன. இவ்விதமே ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபம் அறிந்த மஹரிஷிகள் உரைத்தனர்.

**மூலம்** – இப்படி நாராயணசப்தத்திலும் பத்நீஸம்பந்தம் அநுஸந்தேயம். இப்பத்நீ ஸம்பந்தம் த்வயத்திலே கண்டோக்தம். த்வய விவரணமான கத்யத்தில் ப்ரதமத்தில் பகவந் நாராயண என்று தொடங்கிச் சொல்லச் செய்தே நாரவர்க்கத்தின் நடுவே இவளைச் சொல்லிற்றும் பத்நீத்வ நிபந்தனமான பதி பாரார்த்யத்தாலும் "நர ஸம்பந்திநோ நாரா:" என்கிற வ்யுத்பத்தியாலும் ஆகக்கடவது.

**விளக்கம்** – திருமந்த்ரத்தில் உள்ள "நாராயண" என்னும் பதத்திலும் மஹாலக்ஷ்மியுடனான ஸம்பந்தத்தை எண்ணியபடி இருக்கவேண்டும். இதே கருத்து த்வய மந்த்ரத்தில் தெளிவாகவும் வெளிப்படையாகவும் கூறப்பட்டுள்ளது. த்வய மந்த்ரத்தை விவரிப்பதான எம்பெருமானாரின் சரணாகதிகத்யத்தின் தொடக்கத்தில் - பகவந் நாராயண – என்றுள்ள பகுதியில் நார வர்க்கத்தில் (ஜீவர்கள்) மஹாலக்ஷ்மியைச் சேர்த்தார் என்றுள்ள வ்யாக்யானங்கள் உண்மையே. ஆனால் இங்கு பிராட்டி ஜீவாத்மா என்னும் பொருளில் இவ்விதம் சேர்க்கப்படவில்லை. அவள் தனது கணவனுக்குக் கட்டுப்பட்டவள் என்று வெளிப்படுத்தும் விதத்திலும், நர ஸம்பந்திநோ நாரா: - நாரர்களுடன் தொடர்புள்ள – என்பதான விதத்திலும் மட்டுமே இங்கு கூறப்பட்டது.

## அகாரத்தின் மீது ஏறி மாறியுள்ள நான்காம் வேற்றுமை உருபின் பொருள்

**மூலம்** – இங்கு ப்ரதமாக்ஷரம் சதுர்த்யேகவசநாந்தமாய் விபக்திலோபம் பிறந்து கிடக்கிறது. அது எங்ஙனேயென்னில் – பரமாத்மாவுக்கு ஸ்வாத்மாவை ஸமர்ப்பிக்க விதிக்கிறவிடத்திலே ப்ரணவத்தை மந்த்ரமாக விதிக்கையாலும், இதுக்கு அநுஷ்டேயார்த்த ப்ரகாசம் ப்ராப்தமாகையாலும், இதில் ஸமர்ப்பணீயனான ஆத்மா த்ருதீயாக்ஷரத்திலே ப்ரகாசிக்கையாலும் இதுக்கு உத்தேச்யமான பரப்ரஹ்மம் ப்ரதமாக்ஷரத்தில் ப்ரக்ருதியாலே தோற்றுகையாலும், உத்தேச்யகாரகத்தையும் ஸமர்ப்பணீய வஸ்துவையும் ஸமாநாதிகரித்துப் ப்ரயோகிக்கை உசிதமல்லாமையாலும், உத்தேச்யகாரகத்துக்கு அநுரூபமான சதுர்த்திவிபக்தியை இவ்விடத்திலே கொள்ளப் ப்ராப்தம். ப்ரதம த்ருதீயாக்ஷரங்களை ஸமாநாதிகரணங்களாகக் கொண்டு ஜீவ பரமாத்மாக்களுடைய ஸ்வரூபைக்யமிங்கே சொல்லப்படுகிறதென்னும் குத்ருஷ்டி

பக்ஷத்துக்கு பஹுப்ரமாணவிரோதமும் ஸமபிவ்யாஹ்ருத நமச்சப்த நாராயணசப்த சதுர்த்திகளுடைய ஸ்வரஸார்த்த விரோதமும் வரும்.

**விளக்கம்** – இங்கு ப்ரணவத்தின் முதல் எழுத்தாகிய "அ" என்பதன் மேல் நான்காம் வேற்றுமை உருபு (நான்காம் வேற்றுமை என்பது – இதற்காக, அதற்காக என்னும் கருத்து உணர்த்துவதாகும்) ஏறி, பின்னர் அழிகிறது. இதன் காரணங்கள் கீழே உள்ளன:

- பரமாத்மாவிடம் ஜீவாத்மாவை சமர்ப்பணம் செய்யும் இடத்தில், தைத்திரீய உபநிஷத் ப்ரணவத்தை முக்கியமான மந்த்ரமாக உரைக்கிறது.

- அந்த மந்த்ரம் என்ன செய்யவேண்டும் என்பதைத் தெளிவாக வலியுறுத்துகிறது

- சமர்ப்பணம் செய்யப்படுகின்ற ஜீவாத்மா மூன்றாவது எழுத்தால் (ஓம் என்பதில் உள்ள ம) கூறப்படுகிறது; எந்த ஒரு பரமாத்மாவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறதோ, அந்தப் பரமாத்மா முதல் எழுத்தால் (அ) கூறப்படுகிறது.

- சமர்ப்பிக்கப்படும் வஸ்துவும், எந்த வஸ்துவுக்காகச் சமர்ப்பணம் செய்யப்படுகிறதோ அந்த வஸ்துவும் ஒரே வேற்றுமையில் கூறப்படக்கூடாது; ஆகவே எந்த வஸ்துவுக்காகச் சமர்ப்பணம் செய்யப்படுகிறதோ அந்த வஸ்துவைக் குறிக்கும் முதல் எழுத்தான "அ" என்பது நான்காம் வேற்றுமை ஏற்றிக் கூறப்படுவதாகக் கொள்ளவேண்டும்.

- "அ" மற்றும் "ம" ஆகிய இரண்டும் ஒரே வேற்றுமையில் உள்ளதால், அவை ஜீவாத்மா – பரமாத்மா ஐக்யத்தை உரைக்கிறது என்று அத்வைதிகள் கூறுவது அனைத்துவிதமான ப்ரமாணங்களுக்கு முரணான கருத்தாகும். மேலும் இந்தக் கருத்துன்படி, ப்ரணவத்துடன் சேர்த்து உரைக்கப்படும் "நாராயண" மற்றும் "நமோ" என்பதற்கு இயற்கையாக உள்ள பொருளுடன் விரோதம் தோன்றும் (ஆகவே "அ" மற்றும் "ம" ஆகிய இரண்டும் ஒரே வேற்றுமையில் இல்லை எனக்கருத்து).

**மூலம்** – இது ப்ரணவத்தை தநுஸ்ஸாகவும், ஆத்மாவை சரமாகவும், ப்ரஹ்மத்தை இலக்காகவும், ஆத்மஸமர்ப்பணத்தை லக்ஷ்யவேதமாகவும் வகுத்துச் சொல்லுகிற வாக்யத்தாலும் ஸித்தம். இங்கு பரஸமர்ப்பணம் பொருளாம்போது ஸ்வதந்த்ர ப்ரணவத்திற்கண்ட சதுர்த்தியிற்படியே இச்சதுர்த்திக்கும் அர்த்தமாகக் கடவது. இங்கு ப்ரணவம் பரசேஷதைகரஸ ஸ்வரூப ப்ரதிபாதநபரமான பொருளில் இச்சதுர்த்தீ தாதர்த்யத்தை விவக்ஷிக்கையாலே ஆத்ம பரமாத்மாக்களுடைய சேஷசேஷிபாவம் ப்ரகாச்யமாகையால் நிருபாதிக ஸர்வசேஷியான ஈச்வரனைப் பற்றத் தான் நிருபாதிக சேஷமானபடி அநுஸந்தேயம். “த்வம் மே” என்று ஸ்வாமியான ஸர்வேவரன் தொடர்ந்து பிடித்தாலும், “அஹம் மே” என்று திமிறப் பண்ணும் அஹங்கார விசேஷத்தாலே அஸத்கல்பனான இஜ்ஜீவாத்மாவை சேஷத்வாநுஸந்தாநம் உஜ்ஜீவிப்பிக்கிற தாகையாலே இதின் ப்ராதாந்யம் தோற்றுகைக்காக தர்மிக்கு முன்னே சேஷியோடே ஸம்பந்தத்தைச் சொல்லிற்று.

நிச்சிதே பரசேஷத்வே சேஷம் ஸம்பரிபூர்யதே
அநிச்சிதே புநஸ்தஸ்மிந் அந்யத் ஸர்வமஸத்ஸமம்

**விளக்கம்** – இந்தக் கருத்தானது, முண்டக உபநிஷத்தில் (2-2-4) – ப்ரணவோ தநு: சரோ ஹி ஆத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்யமுச்யதே – என்பதான ப்ரணவத்தை வில்லாகவும், ஆத்மாவை அம்பாகவும், ப்ரஹ்மத்தை எய்யப்படவேண்டிய இலக்காகவும், மற்ற விஷயங்களில் ஈடுபடாமல் இருத்தல் என்பது குறியை அடித்தலாகவும் கூறப்பட்ட வாக்கியம் மூலமும் தெளிவாகிறது. திருமந்த்ரத்தில் உள்ள ப்ரணவத்தின் மூலம் ஆத்மசமர்ப்பணம் உணர்த்தப்படும்போது, ப்ரணவமானது தனி மந்த்ரமாக உள்ளபோது அதில் காணப்படும் (அகாரத்தில் காணப்படும்) நான்காம் வேற்றுமை என்பது போன்றே திருமந்த்ரத்திலும் கொள்ளவேண்டும். மாறாக ப்ரணவம் என்பது அனைத்திற்கும் இயல்பான எஜமானனாக உள்ள ஸர்வேச்வரனின் பொருட்டு உள்ள ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை உணர்த்துவதாக உள்ளது என்று பொருள் கொண்டால், ப்ரணவத்தின் நான்காம் வேற்றுமையானது, “பிறருடைய பயனையே தனது பயனாகக் கொள்ளுகை” என்பதை வெளிப்படுத்துவதாக உள்ளது. ஆகவே ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையே இயல்பாகவே உள்ளதான அடிமை – எஜமானன் என்னும் உறவையே அது உணர்த்துகிறது. ஆகவே ஸர்வேச்வரன் நமக்கு இயற்கையாகவே எஜமானன் என்றும்,

நாம் அவனுக்கு இயற்கையாகவே அடிமைகள் என்றும் உணரவேண்டும். ஸர்வேச்வரன் ஜீவனிடம், "த்வம் மே – நீ எனக்கு உரியவன்" என்று கூறி பிடிக்க முயலும்போது, ஜீவாத்மா, "அஹம் மே – நான் எனக்கே உரியவன்" என்று கூறி அகல முயல்கிறான். ஆகவே, "நாம் ஸர்வேச்வரனுக்கு அடிமை" என்னும் எண்ணம் மட்டுமே ஜீவனை நிலை நிறுத்தும் என்றும், அல்லது ஜீவாத்மாவின் இருப்பு என்பது இல்லாமல் ஆகும் என்றும் உணரவேண்டும். இத்தகைய உண்மையின் முக்கியத்வத்தை உணர்த்தும் பொருட்டே, ப்ரணவத்தில் ஜீவாத்மாவைக் கூறும் "ம" என்பதற்கு முன்பாகவே, இந்த உறவை உணர்த்துவதான "அ" அமைக்கப்பட்டது.

நிச்சிதே பரசேஷத்வே சேஷம் ஸம்பரிபூர்யதே
அநிச்சிதே புநஸ்தஸ்மிந் அந்யத் ஸர்வமஸத்ஸமம்

**இதன் பொருள்** – ஸர்வேச்வரனுக்கு அடிமை என்னும் நிலை நிச்சயிக்கப்பட்டிருந்தால், சாந்தி முதலானவை நன்றாகப் பூர்த்தியாகும். இத்தகைய ஸம்பந்தம் இல்லையென்றால், அனைத்தும் இருந்தாலும், இல்லாமல் இருத்தல் என்னும் நிலைக்குச் சமமே ஆகும்.

## திவ்யதம்பதிகள் இருவரும் அனைவருக்கும் எஜமானர்கள்

**மூலம்** – இப்படி ஈச்வரன் ஸர்வசேஷியாம்போது,

அஸ்யா மம ச சேஷம் ஹி விபூதிரூபயாத்மிகா
இதி ச்ருதிரஸ்ஸித்தம் மச்சாஸ்த்ரேஷ்வபி மாநத என்றும்,

உபயாதிஷ்டாநம் சைகம் சேஷித்வம் என்றும்

சொல்லுகிறபடியே ஸபத்நீகனாயிருக்கும். அக்நீஷோமீயாதிகளிற்போலே ஆத்ம ஹவிருத்தேச்ய தேவதாத்வம் இருவர்க்கும் கூடவென்று தோற்றுகைக்காக சேஷிகள் இருவராயிருக்க சேஷித்வமேகமென்கிறது. மத்யமாக்ஷரத்தை லக்ஷ்மீவாசகமாகச் சொல்லுகிற கடச்ருதி வாக்யத்தைப் பராமர்சித்தால் இருவரையும் பற்ற இவ்வாத்மா

சேஷமென்னுமிடம் சாப்தம். சேஷத்வமாவது தனக்கு ஓர் உபகாரத்தைப் ப்ராதாநமாகப் பற்றலன்றிக்கே பரோபகாரார்ஹமாகை. இத்தை "பரகதாதிசயாதாநேச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸ சேஷ:, பர: சேஷீ" என்று ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்தார்.

**விளக்கம்** – இப்படியாக ஸர்வேச்வரன் அனைத்திற்கும் எஜமானனாக உள்ளபோது, கீழே உள்ள வாக்கியங்களின்படி, அவன் தன்னுடைய பத்னியுடன் சேர்ந்தே அவ்விதமாக இருப்பான்:

- விஷ்வக்ஸேந ஸம்ஹிதை - அஸ்யா மம ச சேஷம் ஹி விபூதிரூபயாத்மிகா இதி ச்ருதிரஸ்ஸித்தம் மச்சாஸ்த்ரேஷ்வபி மாநத – இரண்டுவிதமான விபூதிகளும் எனக்கும், பிராட்டிக்கும் அடிமையானது என்று அனைத்து வேதாந்தங்களும், பாஞ்சராத்ரமும் கூறுகின்றன

- உபயாதிஷ்டாநம் சைகம் சேஷித்வம் – எஜமானத்தன்மை என்பது இருவரிடமும் உள்ளது

அக்நீஷோமீய யாகத்தில் அவிர்பாகம் என்பது ஸோமன் மற்றும் அக்னி ஆகிய இருவருக்கும் தனித்தனியே அல்ல, இருவருக்கும் சேர்ந்தே அளிக்கப்படுகிறது; அதே போன்று, ஆத்மஸமர்ப்பணம் என்பது ஸர்வேச்வரனுக்கும் பெரியபிராட்டிக்கும் சேர்ந்தே செய்யப்படுகிறது. (அடுத்து கட ச்ருதி வாக்கியம் ஒன்றைக் கூறுகிறார். அந்த வாக்கியம்:

அகாரேணோச்யதே விஷ்ணு: ஸர்வலோகேச்வரோ ஹரி:
உத்த்ருதா விஷ்ணுநா லக்ஷ்மீ: உகாரேணோச்யதே ததா
மகாராஸ்து தயோர்தாஸ இதி ப்ரணவ லக்ஷணம்

இதன் பொருள் – "அ" என்பதன் மூலம் அனைத்து லோகங்களுக்கும் ஈச்வரனாகிய விஷ்ணு கூறப்படுகிறான்; "உ" என்பதன் மூலம் ஸர்வேச்வரனால் எப்போதும் தாங்கப்படும் லக்ஷ்மீ கூறப்படுகிறாள்; "ம" என்பதன் மூலம் இவர்கள் இருவருக்கும் ஜீவாத்மா அடிமை என்று கூறப்படுகிறான்; இதுவே ப்ரணவத்தின் கருத்து). கட ச்ருதியில்

மஹாலக்ஷ்மியைக் குறிக்கும் நடு எழுத்தான "ம" என்பதை நோக்கினால், ஜீவாத்மா இருவருக்கும் அடிமை என்பது தெளிவாகிறது. அடிமைத்தனம் என்பது தனக்காக எதனையும் எதிர்நோக்கி இராமல், மற்றவர்களுக்காக இருப்பதாகும். இதனை ஸ்ரீபாஷ்யகாரர் தன்னுடைய வேதார்த்த ஸங்க்ரஹத்தில் - பரகதாதிசயாதாநேச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸ சேஷ:, பர: சேஷீ – மற்றவர்களுக்கு ஓர் அதிசயத்தை உண்டாக்கவேண்டும் என்னும் ஆசை காரணமாக ஏற்கத்தக்கதாக உள்ள நிலை என்பது எந்த ஒரு வஸ்துவின் ஸ்வரூபமோ அதே சேஷம், அந்த அதிசயத்தை அடைபவன் சேஷீ – என்றது காண்க.

**மூலம்** – இவ்விடத்தில் ச்ருதியில் தோற்றின ஷஷ்டீ த்விவசனம் லுப்தம். இங்கு ஸம்பந்த ஸாமாந்யத்திலே ப்ரவ்ருத்தியையான ஷஷ்டியானது ப்ரமாணஸித்தமாய் அபேக்ஷிதமான விசேஷத்திலே விச்ரமிக்கக் கடவது. தாதர்த்யமாகிற உபயுக்தமான ஸம்பந்த விசேஷம் வ்யக்தமாகைக்காகச் சதுர்த்தி த்விவசனம் ஏறி லோபித்துக் கிடக்கிறதாகவுமாம். அப்போது லுப்தமான சதுர்த்தி த்விவசனத்தினுடைய விவரணமாகிறது இருவருக்கும் தாஸன் என்கிற ச்ருதி. இப்படி ஹவிருத்தேச்ய தேவதா த்வந்த்வத்தில் ஹவிஸ்ஸுபோலே இருவரையும் பற்ற இவ்வாத்மா சேஷமென்னும்போது இங்கு அவதாரணம் அர்த்தம். இவர்களிருவருக்கும் இவ்வாத்மா அநந்யார்ஹ நிருபாதிக சேஷம் என்றதாயிற்று.

**விளக்கம்** – ப்ரணவத்தில், காணப்படுவதான ஆறாம்வேற்றுமை இருமை என்பது மறைமுகமாக உள்ளது. பொதுவாக உறவைக் குறிப்பிடுவதான ஆறாம் வேற்றுமை என்பது, ப்ரணவத்தில் சேஷனுக்கும் சேஷிக்கும் இடையே உள்ள பந்தத்தைக் கூறுவதாக உள்ளது. அல்லது ஆறாம்வேற்றுமை இருமை மூலம், அவர்கள் இருவருக்காக மட்டுமே ஜீவாத்மா உள்ளான் என்பது மறைமுகமாக உணர்த்தப்பட்டது எனலாம். "இருவருக்கும் அவிர்ப்பாகம் போன்று" என்று மேலே கூறியதை நோக்கினால், மறைமுகமான இருமை வசனத்தை உணரலாம். ப்ரணவத்தில் உள்ள "உ" என்பது லக்ஷ்மியைக் குறிப்பதாகவும், ஜீவாத்மா இருவருக்கும் தாஸன் என்றும் கொண்டால், "உ" என்பதன் மூலம் "இருவருக்கு மட்டும்" என்பது நேரடியாக உணர்த்தப்படவில்லை என்றாலும், இந்த இடத்தின் பொருளை நோக்கும்போது தெளிவாகிறது. ஆகவே ஜீவாத்மா இயல்பாகவே "இந்த இருவருக்கும் அடிமை" என்பதும், மற்ற யாருக்கும் வசப்பட்டவன் அல்லன் என்றும் தேறுகிறது.

## ப்ரணவத்தில் உள்ள “உ” என்னும் எழுத்து ஸர்வேச்வரனுக்கு அல்லாமல் மற்ற யாருக்கும் அடிமை அல்ல என்பதைக் கூறுதல்

**மூலம்** – இம்மத்யமாக்ஷரம் ச்ரௌதப்ரயோகத்தாலே அவதாரணபரமானபோது இத்தம்பாதிகளையொழிந்தார்க்கு நிருபாதிகசேஷம் என்று சங்கியாமைக்காக அந்யயோக வ்யவச்சேதம் இங்கே சாப்தம். இத்தாலே அந்யரைப் பற்ற சேஷத்வம் ஸ்வரூப ப்ராப்தமன்று என்னுமிடத்தைச் சொல்லுகையாலே யதாவஸ்திதாமஜ்ஞாநம் உடையவனுக்குத் ததீயபர்யந்தமாக தேவதாந்தர ஸ்பர்சம் நிவ்ருத்தமாயிற்று. பகவதபிமதமான பாகவத சேஷத்வத்தாலே அந்யசேஷத்வதோஷம் வாராதென்னுமிடம் புருஷார்த்த காஷ்டையிலே சொன்னோம். இப்படி அந்யயோக வ்யவச்சேதம் சப்தமாகப் பெற்றால் அயோக வ்யவச்சேதமும் காலஸங்கோசகம் இல்லாமையாலே ஸித்தம். இச் சேஷத்வ அயோக வ்யவச்சேதத்தாலே ஈச்வரனுக்கு ப்ருதக்ஸித்தி அநர்ஹ விசேஷமாய்த் தோற்றின சேதந த்ரவ்யத்துக்கும் அசித்துக்குப் போலே சரீரத்வம் ப்ரகாசிதம்.

**விளக்கம்** – ப்ரணவத்தின் நடு எழுத்தான “ம” என்பது, வேதங்களில் ப்ரயோகிக்கும் பொருளான “மற்றொன்றின் தொடர்பை அறுத்தல்” என்னும் பொருளில் கொள்ளப்பட்டால், ஜீவாத்மாவுக்கு மற்ற தேவதைகளுடன் இயற்கையாகவே தொடர்பு உள்ளதோ என்னும் ஐயத்தை நீக்குவதாகவே அமைகிறது; இந்த சந்தேக நீக்கம் என்பது அந்த எழுத்தின் மூலம் மட்டுமே உண்டாகிறது. அந்த எழுத்தானது, ஸர்வேச்வரனுக்கு அல்லாமல் மற்ற யாருக்கும் அடிமையாக இருத்தல் என்பது ஜீவனுக்கு இயல்பாகவே அமைந்தது அல்ல என்பதைக் கூறுவதால், தன்னுடைய ஸ்வரூபத்தைக் குறித்த ஞானம் உள்ள ஒருவனுக்கு மற்ற தேவதைகளுடனான தொடர்பு இருக்கக்கூடாது என்பது மட்டும் அல்லாமல், அந்த மற்ற தேவதைகளுடைய அடியார்களுடனும் தொடர்பு இருத்தல் ஆகாது என்பதை உணர்த்துகிறது. புருஷார்த்த காஷ்டாதிகாரத்தில், பாகவதர்களுக்கு அடிமையாக இருத்தல் என்பது பகவானுக்கு மகிழ்வை ஏற்படுத்துவதாகும் என்று கூறப்பட்டதால், பகவான் அல்லாமல் மற்றவர்களுக்கு (பாகவதர்களுக்கு) அடிமையாக இருத்தல் என்பதில் எந்தவிதமான தோஷமும் உண்டாகாது. இந்த “உ” என்னும் எழுத்து மூலம் மற்றவர்களுக்கு அடிமையாக இருக்கும் தன்மை விலக்கப்படுகிறது என்று கூறும்போது, ஸர்வேச்வரனுக்கு அடிமை அல்லாமல் உள்ள நிலையும் விலக்கப்படுகிறது.

இப்படியாக ஜீவனுக்கு அடிமைத்தனம் என்பது விலக்கப்படாமல் உள்ளதால், இத்தகைய சேதநவஸ்துவானது ஸர்வேச்வரனிடமிருந்து பிரிக்க இயலாத ஒரு விசேஷணமாக (அல்லது தனித்து இருக்கக் கூடிய தகுதி அற்றதான விசேஷணமாக) உள்ளது என்றாகிறது; ஆகவே அசேதங்கள் எவ்விதம் அவனுடைய சரீரங்களாகவே உள்ளனவோ, அது போன்றே இந்த சேதன வஸ்துக்களும் அவனுடைய சரீரங்களாகவே உள்ளன என்று தேறுகிறது.

## ப்ரணவத்தில் உள்ள “ம” என்னும் எழுத்து ஜீவனைக் கூறுகிறது என்பதற்கான விளக்கம்

**மூலம்** – த்ருதீயாக்ஷரம் இங்கு அவச்யாநுஸந்தேயமான ஜீவனை முன்னாகக் கொண்டு உக்தமான சேஷத்வத்துக்கு ஆச்ரயமான ஸர்வத்தையும் உபலக்ஷிக்கிறது. இது ஜீவாத்ம வாசகமென்னுமிடம்

மகாரம் ஜீவபூதம் து சரீரே வ்யாபகம் ந்யஸேத் என்றும்,

பஞ்சார்ணாநாம் து பஞ்சாநாம் வர்க்காணாம் பரமேச்வர:
ஸம்ஸ்தித: காதிமாந்தாநாம் தத்த்வாத்மத்வேந ஸர்வதா என்றும்,

பூதாநி ச கவர்க்கேண சவர்க்கேணேந்த்ரியாணி ச
டவர்க்கேண தவர்க்கேண ஜ்ஞாநகந்தாதயஸ்ததா
மந: பகாரேணைவோக்தம் பகாரேண த்வஹம்க்ருதி:
பகாரேண பகாரேண மஹாந் ப்ரக்ருதிருச்யதே
ஆத்மா து ஸ மகாரோயம் பஞ்சவிம்ச: ப்ரகீர்த்தித: என்றும்

தத்த்வஸாகரஸம்ஹிதாதிகளிலே பஞ்சவிம்சதி தத்த்வங்களுக்கும் ககாரம் முதலான இருபத்தைந்து அக்ஷரங்களும் வாசகங்களாக வகுத்துச் சொல்லுகையாலே ஸித்தம். இத்தால் ஜடத்வாசேதநத்வாதி தோஷாச்ரயங்களான இருபத்தினாலு தத்துவங்களைக்

காட்டிலும், ஸர்வகாரணமாகவும், ஸர்வரக்ஷகனாகவும், ஸர்வசேஷியாகவும் ப்ரதமாக்ஷரத்தில் தோற்றின ஷட் விம்சகனிற் காட்டிலும் ஜீவாத்மாவுக்கு வேறுபாடு ஸித்தித்தது. இத்திருமந்த்ரத்தில் மகாரங்களும் நாரசப்தமும் நிஷ்கர்ஷ விவக்ஷையாலே விசேஷணமாத்ரபரங்கள்.

**விளக்கம்** – மூன்றாவது எழுத்தான “ம” என்பது ஜீவாத்மாவை மட்டுமே குறிக்கவில்லை, ஸர்வேச்வரனுக்கு அடிமையாக உள்ள சேதந அசேதநங்கள் அனைத்தையுமே குறிக்கிறது. ஆனாலும், “ம” என்பது குறிப்பாக ஜீவாத்மாவைக் காட்டுகிறது என்பதைக் கீழே உள்ள வரிகளில் காண்க:

- மகாரம் ஜீவபூதம் து சரீரே வ்யாபகம் ந்யஸேத் – ஜீவனைக் குறிக்கும் “ம” என்னும் எழுத்து மூலம் வ்யாபகந்யாஸம் செய்யவேண்டும்.

- தத்துவஸாகரஸம்ஹிதை - பஞ்சார்ணாநாம் து பஞ்சாநாம் வர்க்காணாம் பரமேச்வர: ஸம்ஸ்தித: காதிமாந்தாநாம் தத்த்வாத்மத்வேந ஸர்வதா – ஸம்ஸ்க்ருத மொழியில் உள்ள முதல் “க” தொடங்கி “ம” முடிய உள்ள இருபத்து ஐந்து (ஐந்து வரிசைகள் X ஐந்து எழுத்துக்கள் = 25) எழுத்துக்களும், இருபத்து ஐந்து தத்துவங்களைக் குறிக்கின்றன. இருபத்து ஐந்து தத்துவங்களின் ஆத்மாவாக ஸர்வேச்வரன் உள்ளான்.

- பாத்மோத்தரபுராணம் (4-25,26,27) - பூதாநி ச கவர்க்கேண சவர்க்கேணேந்த்ரியாணி ச டவர்க்கேண தவர்க்கேண ஜ்ஞாநகந்தாதயஸ் ததா மந: பகாரேணைவோக்தம் பகாரேண த்வஹம்க்ருதி: பகாரேண பகாரேண மஹாந் ப்ரக்ருதிருச்யதே ஆத்மா து ஸ மகாரோயம் பஞ்சவிம்ச: ப்ரகீர்த்தித: - ஸம்ஸ்க்ருத மொழியில் உள்ள “க” வர்க்கம் மூலம் (ஐந்து எழுத்துக்கள்) பஞ்சபூதங்களும், “ச” வர்க்கம் மூலம் ஐந்து கர்மேந்த்ரியங்களும், “ட” வர்க்கம் மூலம் ஐந்து ஞானேந்த்ரியங்களும், “த” வர்க்கம் மூலம் ஐந்து தந்மாத்ரைகளும், “ப (प)” மூலம் மனமும், “ஃப (फ)” மூலம் அஹங்காரமும், “ப (ब)” மூலம் மஹானும், “ப (भ)” மூலம் ப்ரக்ருதியும் கூறப்படுகின்றன. “ம” மூலம் கூறப்படும் ஜீவாத்மா இருபத்து ஐந்தாவது தத்துவம் ஆகிறான்.

ஆக இப்படியாக, தத்த்வஸாகரஸம்ஹிதை முதலானவற்றில் இருபத்து ஐந்து தத்துவங்களை உணர்த்துவதாக "க" தொடங்கி உள்ள எழுத்துக்கள் கூறப்பட்டன. இதன் மூலம் ஜடமாகவும் அசேதனமாகவும் இருக்கும் தோஷங்கள் உள்ள இருபத்து நாலு தத்துவங்களைக் காட்டிலும் வேறுபட்டவனாகவும்; அனைத்திற்கும் காரணமாகவும், அனைத்தையும் காப்பவனாகவும், அனைவருக்கும் எஜமானனாகவும், "அ" என்னும் எழுத்தால் கூறப்படுபவனும்,இருபத்து ஆறாவது தத்துவமாக உள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரனைக் காட்டிலும் வேறுபட்டவனாகவும் ஜீவாத்மா உள்ளான் என்பதும் தேறுகிறது. திருமந்த்ரத்தில் உள்ள "ம" என்னும் எழுத்தும், "நார" என்னும் பகுதியும் வரையறுத்துக் கூறுகின்ற விருப்பம் காரணமாக ஜீவனையே உணர்த்துவதாகும்.

**மூலம்** – இவ்வக்ஷரம் வ்யாகரண ப்ரக்ரியைப் பார்த்தால் "மந ஜ்ஞாந" இத்யாதி தாதுக்களிலே நிஷ்பந்நமான பதமாகையாலே "ஜ்ஞ: அத ஏவ" என்கிற அதிகரணத்திற்படியே ஜ்ஞாநஸ்வரூபனுமாய், ஜ்ஞாநகுணகனுமாய் அணுவான ஜீவாத்மாவைச் சொல்லுகிறது. ஜ்ஞாநஸ்வரூபனாகப் பொதுவிலே சொன்னாலும் இவன் ஸ்வரூபம் அநுகூலமாகப் ப்ரமாணஸித்தமாகையாலே ஆநந்தரூபமான விசேஷமும் ஸித்திக்கும். ஜ்ஞாநகுணகனென்னுமிடம் சொன்னால் ப்ரமாணாநுஸாரத்தாலே முக்த தசையில் நிருபாதிக ப்ரஸரணமாய் ஸங்கோசரஹிதமான ஜ்ஞாநம் குணமானமை தோற்றும்.

**விளக்கம்** – "ம" என்னும் எழுத்தை இலக்கண ரீதியில் ஆராய்ந்தால், "மந்" என்னும் வினைப்பகுதியிலிருந்து இந்த எழுத்து தோன்றுகிறது. இந்த வினைப்பகுதிக்கு "ஞானம்" என்று பொருள். ஆகவே இந்தப் பதம், ப்ரஹ்மஸூத்ரம் (2-3-19) - ஜ்ஞ: அத ஏவ – ஞானத்தைக் குணமாகக் கொண்டவன் – என்று கூறுவதற்கு, ஞானத்தையே ஸ்வரூபமாகவும் குணமாகவும் கொண்டுள்ளவனும், அணு அளவே உள்ளவனாகவும் இருக்கும் ஜீவாத்மாவைக் குறிக்கும். ஜீவாத்மாவை "ஞானஸ்வரூபன்" என்று பொதுவாக உரைத்தாலும், இந்த ஸ்வரூபமானது தகுந்த ப்ரமாணங்களால் கூறப்படுவதால், ஜீவாத்மாவின் ஸ்வரூபம் ஆனந்தமயமானதும் ஆகும் என்பது தானாகவே தேறுகிறது (அதாவது ஆனந்தமயமாக உள்ளதும் ஒருவிதமான ஞானமே என்று கருத்து). ஜீவாத்மா

ஞானத்தைக் குணமாகக் கொண்டவன் என்று உரைக்கும்போது, அவன் இவ்விதமாக ஞானத்தைக் கொண்டிருத்தல் குறித்து எந்தவிதமான கட்டுப்பாடுகளையும் ப்ரமாணங்கள் கூறாத காரணத்தால், அவனுடைய முக்திநிலையில் அவனுடைய ஞானமானது எந்தவிதமான சுருக்கமும் இல்லாமல் எங்கும் பரவி நிற்கிறது; இதன் மூலம் ஞானம் அவனுக்குக் குணமாக உள்ள நிலை வெளிப்படுகிறது.

**மூலம்** – இப்படிப் பரிசுத்தமான ஸ்வாபாவிகரூபத்தைப் பார்த்தால் அசேதநங்களிலுள்ள ஜடத்வாதிகளும் கழிந்து ஸம்ஸார தசையிலுள்ள க்லேசாதிகளும் கழிந்து நிற்கையாலே ஸ்வரூப தர்மங்களிரண்டிலுமுள்ள நிர்மலத்வம் அநுஸம்ஹிதமாயிற்று. இந்தப் பரசேஷதைக ரஸ பரிசுத்த ஸ்வரூபமே முமுக்ஷு தசையிலே அநுஸந்தேயம் என்னுமிடம், “வ்யதிரேக: தத்பாவ பாவித்வாத் ந து உபலப்திவத்” என்னும் ஸூத்ரத்திலே ஸித்தம். இவனுக்கு முமுக்ஷு தசையில் பலதசாநுஸந்தாநம் பலாபேக்ஷைக்கு உறுப்பாம். புருஷார்த்த பேதங்களுக்கு ஈடாக அநுஸந்தேயாகாரங்கள் வேறுபட்டிருக்கும் என்னுமிடம் ஸ்ரீகீதையில் அஷ்டமாத்யாயத்திலும் பாஷ்யாதிகளிலும் ஸுவ்யக்தம். ஜீவபேதம் ப்ரமாணிகமாகையால் இத் த்ருதீயாக்ஷரம் “நாத்மா ச்ருதே:” இத்யாதிகளிற்போலே ஜாத்யேகத்வபரம். இப்படி ஜீவதத்த்வத்தை எல்லாம் இங்கு “தாஸபூதாஸ்ஸ்வத: ஸர்வே ஹி ஆத்மந: பரமாத்மந:” என்கிறபடியே ஸாமாந்யேந பகவச்சேஷமாகச் சொன்னாலும் அதிலே தானும் அந்தர்கதனாகையாலே “அத: அஹமபி தே தாஸ:” என்னும் அநுஸந்தாநமும் ஸித்திக்கிறது.

**விளக்கம்** – ஜீவாத்மாவின் இயல்பானதும் பரிசுத்தமானதும் ஆகிய ஸ்வரூபத்தைக் காணும்போது, அதற்கு அசேதனங்களுக்கே உரிய ஜடத்தன்மைகளும், ஸம்ஸாரத்தின் வேதனைகளும் நீங்கியுள்ளதைக் காணலாம். ஆகவே ஜீவாத்மாவின் ஸ்வரூபம் மற்றும் தர்மங்களில், எந்தவிதமான தோஷமும் இல்லாத நிலை பொருந்தியுள்ளதைக் காணலாம். முமுக்ஷு ஒருவன் ஜீவாத்மா தூய்மையான தன்மையையும், ஜீவாத்மா ஸர்வேச்வரனுக்கு அடிமையாக உள்ள நிலையில் மட்டுமே இன்பமாக உள்ளது என்பதையும் எப்போதும் எண்ணியபடி இருத்தல் வேண்டும். இதனை ப்ரஹ்மஸூத்ரம் (3-3-52) - வ்யதிரேக: தத்பாவ பாவித்வாத் ந து உபலப்திவத் – ஜீவாத்மாவுக்கு ஸம்ஸாரதசையைக் காட்டிலும் மோக்ஷ தசையில் உள்ள வேறுபாடு எண்ணப்படவேண்டும்; அந்த ஸ்வரூபத்தைக் கொண்டவனாகக் காணப்படுவதால் – என்றது காண்க. முமுக்ஷு ஒருவனுக்கு மோக்ஷம்

என்னும் பலன் குறித்து எண்ணுவது, அந்தப் பலனை அடையவேண்டும் என்னும் ஆர்வத்தை மேலும் தூண்ட காரணமாகிறது. அடையவேண்டிய புருஷார்த்தங்களுக்கு ஏற்றபடி த்யானங்களும் மாறுபடுவதை ஸ்ரீமத்பகவத்கீதையின் எட்டாவது அத்யாயத்திலும், ஸ்ரீபாஷ்யத்திலும் மிகவும் தெளிவாகக் காணலாம். ப்ரமாணங்கள் பல ஜீவாத்மாக்கள் உள்ளன என்று கூறுகின்றன; ஆகவே “ம” என்னும் எழுத்து ஒருமையில் இருந்தாலும், அது ஜீவாத்மா என்னும் ஜாதியைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும். இதனை ப்ரஹ்மஸூத்ரம் (2-3-18) - நாத்மா ச்ருதே: - ஜீவாத்மாவுக்கு உற்பத்தி இல்லை – என்று ஒருமையில் கூறுவது போன்றே கொள்ளவேண்டும். தாஸபூதாஸ்ஸ்வத: ஸர்வே ஹி ஆத்மந: பரமாத்மந: - அனைத்து ஆத்மாக்களும் இயல்பாகவே பரமாத்மாவுக்கு தாஸர்கள் – என்று அனைத்து ஜீவாத்மாக்களையும் பொதுவாகக் கூறினாலும், ஒவ்வொரு ஜீவாத்மாவும் பரமாத்மாவுக்கு அடிமை என்பதால் ஒவ்வொருவரும், “அத: அஹமபி ஸே தாஸ: - நான் அவனுடைய அடிமை” என்று எண்ணவேண்டும்.

**மூலம்** – சேஷத்வஜ்ஞாநமும் ஸ்யஸ்வாதந்த்ர்யாபிமாந நிவ்ருத்த்யாதிகளும் உபாய விசேஷ பரிக்ரஹமும் பலபூத சேஷவ்ருத்தி ப்ரார்த்தனையும் தனக்குப் பிறக்கிறதாகையாலே தன்னைப் ப்ரதாநமாகக் காட்டவேண்டுகையால் த்ருதீயாக்ஷரத்துக்கு விசேஷ்யபதமாக அஹம்சப்தத்தை அத்யாஹரித்து அந்வயமாகிறதென்றும் சில ஆசார்யர்கள் சொல்லுவார்கள். அப்போதும் ப்ரணவ விவரணமான “மம நாத யதஸ்தி யோஸ்ம்யஹ ஸகலம் தத்தி ததைவ மாதவ” இத்யாதிகளிற்படியே குணங்கள் ப்ரதாநாதுவர்த்திகளென்கிற ந்யாயத்தாலே தனக்கு சேஷமான குணாதிகளும் உபலக்ஷிதங்கள்.

**விளக்கம்** – தான் ஸர்வேச்வரனுக்கு அடிமை என்னும் ஞானம், தான் சுதந்திரமானவன் என்ற எண்ணம் விலகுதல், ப்ரபத்தி என்னும் உபாயத்தை மட்டுமே கைக்கொள்ளுதல், ஸர்வேச்வரனுக்குக் கைங்கர்யம் செய்யவேண்டும் என்னும் பலனுக்கான ப்ரார்த்தனை ஆகிய அனைத்தும் ப்ரபந்நன் ஒருவனுக்கு உண்டாகவேண்டும். ஆகவே ப்ரணவத்தில் ஜீவனை ப்ரதானமாகக் காண்பிக்கவேண்டும் என்பதால், ப்ரணவத்தின் மூன்றாம் எழுத்தான “ம” என்பதற்கு “அஹம் = ஜீவனாகிய நான்” என்னும் பொருள் வருவிக்கப்படுவதாக சில ஆசார்யர்கள் உரைக்கிறார்கள். இவ்விதம் கொண்டாலும், ப்ரணவத்தின் விவரணமாக உள்ள ஆளவந்தாரின் ஸ்தோத்ரரத்னத்தில் (52) - மம நாத

யதஸ்தி யோஸ்ம்யஹ ஸகலம் தத்தி ததைவ மாதவ – மாதவா! “நான்”, “எனது” என்று கூறப்படும் வஸ்துக்கள் அனைத்தும் உன்னுடையது என்று அறிந்த பின்னர் உனக்கு நான் எதனைச் சமர்ப்பிக்க இயலும் – சில தன்மைகள் மட்டுமே கூறப்பட்டாலும், ஜீவனுக்கே உரிய அனைத்தும் இதில் மறைமுகமாக உணர்த்தப்பட்டதாகவே கொள்க.

**மூலம்** – வேறே சில ஆசார்யர்கள் அஸ்மச்சப்தத்தில் வ்யஞ்ஜனமாத்ரமான மகாரத்தை எடுத்து சாந்தஸப்ரக்ரியையாலே பூர்வோத்தரபாகங்கள் லோபித்து நிற்கிறதாய்த் த்ருதீயாக்ஷரம்தானே அஹமர்த்தத்தைக் காட்டுகிறதென்றும் யோஜிப்பார்கள். பரமாத்மாவுக்கு ஆத்மஹவிஸ்ஸை ஸமர்ப்பிக்க விதிக்கிற ந்யாஸவித்யையிலே ப்ரணவத்தை மந்த்ரமாக ஓதுகையாலே இது அநுஷ்டேயார்த்த ப்ரகாசகமாகைக்காக இதிலே பராவராத்மவிஷயமான வாசகாம்சம் அபேக்ஷிதமானால் ப்ரமாணாநுஸாரத்தாலே ப்ரதமாக்ஷரம் உத்தேச்யகாரகத்தைச் சொல்லுகையாலும், மத்யமாக்ஷரம் அந்யார்த்தமாகையாலும், பரிசேஷ்யத்தாலே த்ருதீயாக்ஷரம் ஸமர்ப்பணீயமான ப்ரத்யகாத்ம ஹவிஸ்ஸைக் காட்டவேண்டியதால் இவ்வக்ஷரத்துக்கு அஹம் என்று பொருளாகை மிகவும் உசிதம். ஆகையாலேயிறே பட்டர் இங்குற்ற ப்ரணவத்துக்கு அகாரார்த்தாயைவ ஸ்வமஹம் என்று வ்யாக்யாநம் பண்ணிற்று.

**விளக்கம்** – ஒரு சில ஆசார்யர்கள், வேத இலக்கணப்படி, "நான்" என்பதைக் குறிப்பதான “அஸ்மத்” என்பதின் முதல் பகுதியான “அஸ்” என்பதையும் இறுதிப் பகுதியான “அத்” என்பதையும் நீக்கி, நடுவில் உள்ள “ம்” என்னும் மெய்யெழுத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, “நான்” என்னும் ஜீவாத்மாவை இந்த “ம்” என்பது குறிப்பது போன்றே, ப்ரணவத்தின் மூன்றாம் எழுத்தான மகாரமும் ஜீவாத்மாவைக் குறிக்கிறது என்று உரைப்பர். தைத்திரீய உபநிஷத்தில் உள்ள ந்யாஸவித்யையில் ஜீவாத்மாவை பரமாத்மாவுக்கு அவிர்பாகமாய் சமர்ப்பணம் செய்யும்போது உச்சரிக்கவேண்டிய மந்த்ரமாக ப்ரணவமே உள்ளது. ஆகவே அந்த மந்த்ரத்தில் அனுஷ்டிக்கவேண்டியதைத் தெளிவாக்கும் பொருட்டு, பரமாத்மா மற்றும் ஜீவாத்மாவைக் குறிக்கும் சொற்கள் வெளிப்படையாக இருத்தல்வேண்டும் அல்லாமல் மறைமுகமாக இருத்தல் கூடாது. ப்ரமாணங்களின் அடிப்படையில் நோக்கினால் ப்ரணவத்தின் முதல் எழுத்தான “அ” என்பது யாரிடம் சரணம் புகுகிறோமோ அந்த வஸ்துவைக் குறிப்பதாகவும், நடு எழுத்தான “உ” என்பது வேறு ஒரு அர்த்தத்தைக் குறிப்பதாகவும், மீதம் உள்ளதால் “ம”

என்பது சமர்ப்பிக்கப்படுவதான ஜீவாத்மாவைக் குறிப்பதாகவும் ஆகிறது. இதனால்தான் ஸ்வாமி பராசரபட்டர் அஷ்டச்லோகியில் ப்ரணவத்துக்கு விவரணம் கூறும்போது, "அ என்னும் எழுத்தால் கூறப்படும் பகவானுக்கு மட்டுமே நான் உடைமையாக உள்ளேன்", என்றார்.

## "நம:" என்பதன் விளக்கம்

**மூலம்** – இப்படியே நமஸ்ஸின் மகாரம் மூன்றத்தொரு ப்ரகாரத்தாலே ப்ரத்யகாத்மாவைச் சொல்லுகிறது. இது ஷஷ்டீ விபக்த்யந்தமாகையாலும் நகாரம் நிஷேதத்தைச் சொல்லுகையாலும் "ந மம" என்றதாயிற்று. நிஷேதத்தில் ஆதராதிசயம் தோற்றுகைக்காக நஞ் முன்னே கிடக்கிறது. இது த்ருஷ்டா ஸீதா என்னுமாப் போலேயிருக்கிறது. இம்மகாரத்தில் ஷஷ்டியானது ஸம்பந்தஸாமாந்ய முகத்தாலே உசிதஸம்பந்த விசேஷத்தை விவக்ஷிக்கிறது. இவ்வபிப்பிராயத்தாலேயிறே பட்டரும் "அத மஹ்யம் ந" என்றது. வாக்யங்களுக்கு அவதாரணத்திலே தாத்பர்யம் கொள்ளுகை உசிதமாகையாலே இப்ப்ரணவத்திலே மத்யமாக்ஷரஸித்தமான தாத்பர்யார்த்தத்தோடே உறவாயிருக்கிற இந்நமஸ்ஸின் பொருளே ஸர்வத்திலும் ஸாரமென்னுமிடம்

த்வயக்ஷரஸ்து பவேந்ம்ருத்யு: த்ரயக்ஷரம் ப்ரஹ்ம சாச்வதம்
மமேதி த்வயக்ஷரோ ம்ருத்யு: ந மமேதி ச சாச்வதம்

இத்யாதிகளாலே சொல்லப்பட்டது.

ஸர்வ ஜிஹ்மம் ம்ருத்யுபதம் ஆர்ஜிவம் ப்ரஹ்மண: பதம்
ஏதாவாந் ஜ்ஞாநவிஷய: கிம் ப்ரலாப: கரிஷ்யதி

என்கிற ச்லோகத்துக்கும் இந்நமஸ்ஸின் பொருளிலே ப்ராதாந்யேந தாத்பர்யம்.

**விளக்கம்** – இவ்விதமாக "நம:" என்பதில் உள்ள "ம" என்பதும் முன்பே உரைக்கப்பட்டது போன்று "இருபத்து ஐந்தாவது தத்துவம், அறியக்கூடிய வஸ்து, நான்" என்பதான மூன்று

விதங்களில் கூறப்படும் ஜீவாத்மாவையே குறிப்பதாக உள்ளது. இங்குள்ள "ம" என்பது ஆறாம் வேற்றுமையாக உள்ளதாலும், "ந" என்பது "இல்லை" என்று மறுக்கும் பொருளைக் கொண்டதாக உள்ளதாலும், "ந மம - என்னுடையது இல்லை" என்று வந்தது. இங்கு "இல்லை" என்று மறுப்பதற்கு அதிக முக்கியத்வம் அளிக்கவேண்டும் என்பதால் "ந" என்பது முதலில் வந்தது; அனுமன் சீதையைக் கண்டதை முதலில் அறிவிக்கவேண்டும் என்பதால், "ஸீதா த்ருஷ்டா – சீதையைக் கண்டேன்" என்று கூறாமல், இராமாயணம் பாலகாண்டம் (1-78) – த்ருஷ்டா ஸீதா – கண்டேன் சீதையை – என்பது போல இங்கும் கொள்க. "ம" என்ற ஆறாம் வேற்றுமை மூலம் பொதுவாக உறவுமுறை கூறப்பட்டாலும், இங்கு இதன் மூலம் "எஜமானன் – அடிமை" என்னும் ப்ரத்யேகமான உறவுமுறை உணர்த்தப்படுகிறது. இதன் காரணமாகவே ஸ்வாமி பராசரபட்டர் தனது அஷ்டச்லோகியில் (3) - அத மஹ்யம் ந – நான் எனக்காக இல்லை – என்றார். ஒவ்வொரு வாக்கியமும் ஒரு குறிப்பட்ட பொருளையே அளிப்பதற்காக உள்ளது என்னும் கருத்தின்படி, "நமஸ்" என்பது, "மட்டுமே (அதாவது நான் ஸர்வேச்வரனுக்கு மட்டுமே உரியவன், எனக்கு அல்ல)" என்னும் பொருளை அளிப்பதான ப்ரணவத்தின் நடு எழுத்தான "உ" என்பது போலவே அமைந்துள்ளதாகும். இதனை மஹாபாரதம் சாந்திபர்வம் (13-4) - த்வயக்ஷரஸ்து பவேந்ம்ருத்யு: த்ரயக்ஷரம் ப்ரஹ்ம சாச்வதம் மமேதி த்வயக்ஷரோ ம்ருத்யு: ந மமேதி ச சாச்வதம் – ஸம்ஸாரத்தின் காரணம் "மம" என்னும் இரண்டு எழுத்து, ப்ரஹ்மத்தை அடைவதற்குக் காரணம் "ந மம" என்னும் மூன்று எழுத்து – என்றது காண்க. இதே போன்று, மஹாபாரதம் சாந்திபர்வம் (79-21) - ஸர்வ ஜிஹ்யம் ம்ருத்யுபதம் ஆர்ஜிவம் ப்ரஹ்மண: பதம் ஏதாவாந் ஜ்ஞாநவிஷய: கிம் ப்ரலாப: கரிஷ்யதி – மமகாரம் போன்ற பலவும் ஸம்ஸாரத்துக்குக் காரணமான அறியாமையை வளர்ப்பதாகும், அடிமைத்தனம் போன்ற பலவும் மோக்ஷத்துக்குக் காரணமான ஞானத்தை வளர்ப்பதாகும், இது மட்டுமே அறியவேண்டியதாகும், மற்றவற்றைக் குறித்து விவாதித்து என்ன பயன் – என்ற வரியும் இதே கருத்தை உணர்த்துவதாகும்.

## "நம:" என்பது ஜீவன் தனக்குத்தானே உரியவன் அல்லன் போன்ற பலவற்றை உணர்த்துதல்

**மூலம்** – இங்கு "ந மம" என்கிறது எதையென்னில், ப்ரணவத்தில் த்ருதீயாக்ஷரத்தை அநுஷங்கித்து நான் எனக்குரியேனல்லேன் என்றதாயிற்று. அத்யாஹாரத்திற் காட்டில் அநுஷங்கம் உசிதமென்னும் இடம் அனுஷங்காதிகரண ஸித்தம். இங்கு "ந மமாஹம்" என்று விசேஷிக்கையாலே கீழ் அந்யசேஷத்வத்தைக் கழிக்கிற மத்யமாக்ஷரம் கோபலீவர்த்த ந்யாயத்தாலே ஸ்வவ்யதிரிக்த விஷயம். "அஹம் ந மம" என்கிற வாக்யத்தாலே தன் ஸ்வரூபமும் தனக்கு உரித்தல்லாமையாலே குணங்கள் ப்ரதாநாநுவர்த்திகள் என்கிறபடியே வேறொன்றையும் பற்றத் தனக்கு நிருபாதிக ஸ்வாமித்வம் இல்லையென்று விசேஷித்து அநுஸந்தாநம் பலித்தது. இது விசேஷ நிர்த்தேசத்துக்குப் ப்ரயோஜநம்.

**விளக்கம்** – (ஜீவாத்மா தனக்குத்தானே அடிமை அல்லன் என்று கூறுதல்) – இங்கு "ந மம" என்பதன் மூலம் கூறப்படுவது என்னவென்றால், ப்ரணவத்தில் உள்ள மூன்றாவது எழுத்தான "ம" என்பது "நம:" என்பதுடன் இழுத்துச் சேர்த்துக் கொள்ளப்பட்டு, "ந மம" என்றாகி, "நான் எனக்கு உரியவன் அல்லேன்" என்னும் பொருளைத் தருகிறது என்பதாகும் (இவ்விதம் முன் பின் உள்ள எழுத்துக்களை இழுத்துக் கொள்வது அநுஷங்கம் எனப்படும்). அல்லது இத்துடன் "கிஞ்சித்" என்பதைச் சேர்த்துக் கொண்டு, "ஒரு பொருளும் எனக்கு உரியது அல்ல" என்னும் பொருளையும் உரைப்பதாகக் கொள்ளலாம் (இது போன்று புதிதாக ஒரு சொல்லை வருவித்துக் கொள்ளுதல் அத்யாஹாரம் ஆகும்). ஆனால், பூர்வமீமாம்ஸையில் அத்யாஹாரத்தைக் காட்டிலும், அநுஷங்கம் சிறப்பானது என்பதால், அதனையே கொள்க. இங்கு "ந மமாஹம்" என்பது "நான் எனக்கு உரியவன் அல்லன்" என்பதைக் கூறுகிறது; ப்ரணவத்தின் நடு எழுத்தான "உ" என்பதன் மூலம், "நான் ஈச்வரனுக்கு மட்டுமே உரியவன்" என்பதும், "மற்றவர்களுக்கு உரியவன்" என்பதை மறுப்பதும் கூறப்பட்டதால், இங்குள்ள "நம:" என்பதில் "நான்" என்பதும் அடங்கிவிடுகிறது (அதாவது "நான் மற்றவர்களுக்கு உரியவன் அல்லன்" என்பது மட்டும் அல்ல, "நான் எனக்கும் உரியவன் அல்லன்" என்று கருத்து). இது கோபலீவர்த்த ந்யாயத்தாலே ஆகும் ("கோ" என்றால் மாடு அல்லது காளை ஆகிய இரண்டையும்

குறிக்கும்; "பலீவர்த்த:" என்றால் காளையை மட்டுமே குறிக்கும்; "மாட்டைக் கொண்டு வா" என்றால், "இரண்டில் ஒன்றைக் கொண்டு வா" என்று பொருள்; இவற்றில் காளையை மட்டுமே கொண்டு வரவேண்டும் என்பதால், "கோ பலீவர்த்த:" என்பர். இது போன்றே ப்ரணவத்தில் உள்ள "ம" என்னும் எழுத்து, "மற்றவர்களுக்கு அடிமை அல்லன்" என்பதைக் கூறும்போது, "தனக்கும் அடிமை அல்லன்" என்பதையும் கூறுகிறது என்று கருத்து). "அஹம் ந மம" என்பதன் மூலம், "தனது ஸ்வரூபமும் தனக்கு உரியது அல்ல" என்று தேறுகிறது. இதன் மூலம் - குணங்கள், தன்மைகள் முதலானவை அவற்றை உடையவனையே பின்பற்றும் என்பது போன்று, தனக்கு வேறு எதனையும் இயல்பாகவே பின்பற்றும் உரிமை இல்லை என்பதும் தேறுகிறது.

**மூலம்** – இப்படி அநுஷங்கியாத பக்ஷத்தில் பொதுவிலே தன்னோடு துவக்குண்டாய்த் தோற்றுகிறவற்றையெல்லாம் என்னதன்றென்று தன் துவக்கறுக்கிறது. இத்தால் தன்னையும் தன்னுடைய குண விக்ரஹாதிகளையும் பற்றத் தன் விசேஷங்களைக் கழிக்கையாலே விபரீதாஹங்கார மமகாரங்களாகிற ஸம்ஸார மூலங்கள் சேதிக்கப்பட்டன. இங்கு கழிக்கிற அஹங்காரம் ப்ரமரூபமான புத்தி விசேஷம். மற்றும் தத்துவங்களில் எண்ணின அஹங்காரம் விவேக மாத்ரத்தால் கழிவதொன்றன்று; ஸூக்ஷ்ம சரீரம் விடுமளவும் இவனைத் தொத்திக் கிடக்கும். இவ் அசித்ஸம்பந்தம் இவனுக்குக் கழியாதிருக்க இதின் கார்யங்களாய் ப்ரமரூபங்களான அஹங்காராதி வ்யாதிகள் மூலமந்த்ராதிகளாலே ஸித்தமான விவேகமாகிற பேஷஜ விசேஷத்தாலே கழிகின்றன.

**விளக்கம்** – (ஜீவாத்மாவுக்கு எதுவும் அடிமை இல்லை) – "அஹம்" என்னும் பதத்திற்கு அநுஷங்கம் என்னும்படி பொருள் கொள்ளாமல், "ஒரு பொருளும் எனக்கு உரியது அல்ல" என்னும்படி அத்யாஹாரத்தில் பொருள் கொண்டால், தன்னுடன் தொடர்புள்ளது என்று தோன்றும் பொருள்கள் எல்லாம் தன்னுடையது அன்று என்ற எண்ணத்தால், தொடர்பற்றுப் போய்விடும். ஆக இவற்றின் மூலமாக "நம:" என்பது தன்னைக் குறித்தும் தன்னுடைய குணங்கள் முதலானவற்றைக் குறித்தும் உள்ள "இவை என்னுடையவை, நான்" முதலான ஸம்ஸாரம் உண்டாவதற்கு மூலகாரணங்களாக உள்ள அஹங்கார மமகாரங்களை, "ஒரு பொருளும் எனக்கு உரியது அல்ல " என்ற எண்ணத்தை உண்டாக்கி விலக்குகிறது. இங்கு கூறப்படும் அஹங்காரம் என்பது ஒருவிதமான புத்தி மயக்கம்

ஆகும். அஹங்காரம் என்ற பதம், இருபத்துநான்கு தத்துவங்களில் ஒன்றைக் குறிக்கவும் பயன்படும்; ஆனால் அந்த அஹங்காரம் என்பது விவேகத்தால் மட்டுமே நீங்குவதல்ல; ஜீவாத்மா தனது ஸூக்ஷ்ம சரீரத்தைப் பிரியும்வரை அது தொடர்ந்தபடியே இருப்பதாகும். இந்த அஹங்காரம் என்ற அசித் வஸ்துவுடனான தொடர்பு ஜீவாத்மாவுக்கு விலகாமல் உள்ளபோதிலும், அதனால் உண்டாகும் நோய்களான அபிமானம் (என்னுடையது போன்ற சிந்தனைகள்) என்பதான மயக்கங்கள், அஷ்டாக்ஷரம் முதலான மூலமந்த்ரங்கள் மூலம் உண்டாகும் விவேகம் முதலான மருந்துகள் மூலம் விலகுகின்றன.

**மூலம்** – தனக்கு அந்யசேஷத்வம் ப்ரணவத்தில் மத்யமாக்ஷரத்திலே கழிகையாலே அந்யனான தன்னைப் பற்றத் தனக்கு சேஷத்வமில்லை என்று பிரித்துச் சொல்ல வேண்டாமையால் அந்யசேஷியாய்த் தோற்றின தனக்கு இங்கு ஏதேனுமொன்றையும் பற்ற நிரூபாதிக ஸ்வாமித்வம் கழிக்கையிலே தாத்பர்யமாகவுமாம். ஜீவனுக்கு சேஷமானவையெல்லாம் நிரூபாதிக ஸர்வசேஷியான ஸர்வேச்வரன் ஸ்வார்த்தமாகக் கொடுத்தவையிறே. ஜீவர்களுடைய நித்யங்களான குணாதிகள் ஈச்வரனுடைய நித்யேச்சாஸித்தங்கள். அசுத்த தசையிலும் சுத்த தசையிலும் உண்டான அநித்ய விக்ரஹாதிகள் இவர்களுடைய கர்மஜந்யமாயும் கர்மநிரபேக்ஷமாயுமுள்ள அநித்யேச்சா ஸித்தங்கள்.

**விளக்கம்** – ப்ரணவத்தின் நடு எழுத்தான “ம” என்பதன் மூலம் ஜீவாத்மா ஸர்வேச்வரனுக்கு அல்லாமல் மற்றவர்களுக்கு அடிமை என்பது தள்ளப்படுகிறது; ஆக ஜீவாத்மா தனக்குத்தானே அடிமை அல்லன் என்பதைத் தனியாக மீண்டும் கூறவேண்டும் என்று அவசியம் இல்லை. ஆக ஒருவனுக்குச் சிலர் அடிமைகளாகத் தோன்றினாலும் அல்லது இவன் யாருக்கும் அடிமை என்று தோன்றினாலும், அவர்களுக்கு இவன் இயல்பான எஜமானனும் அல்லன், இவன் அவர்களுக்கு இயல்பான அடிமையும் அல்லன். ஜீவனுடைய அடிமை என்று காணப்படும் அனைத்தும் (அவனுடைய சரீரம், குணங்கள் போன்றவை), ஜீவாத்மாவுடைய இயல்பான எஜமானனும், அனைத்து உயிர்களின் எஜமானனும் ஆகிய ஸர்வேச்வரனால், ஸர்வேவரன் பொருட்டு அளிக்கப்பட்டவையே ஆகும். ஜீவாத்மாவுக்கு எப்போதும் உள்ளதான குணங்கள் முதலானவை, ஸர்வேச்வரனுடைய விருப்பம் காரணமாகவே அளிக்கப்பட்டவை ஆகும். மேலும் ஸம்ஸாரத்தில் உள்ளபோது உண்டாகும் சரீரங்களும், மோக்ஷம் கிட்டிய பின்னர்

உண்டாகும் சரீரமும் முறையே ஸர்வேச்வரனுடைய விருப்பத்திற்கு ஏற்றபடி, முற்பிறவியில் உண்டான கர்மபலன்கள் மற்றும் கர்மபலன் நீங்கிய நிலை ஆகியவற்றால் உண்டாகின்றன.

**மூலம்** – ப்ரணவத்தில் அந்யசேஷத்வம் கழிகையாலே பரமாத்மாவிற் காட்டில் அந்யனான தனக்குத்தான் சேஷனல்லனென்னுமிடம் ஸித்திக்கையாலும், தான் வேறொருத்தர்க்குச் சேஷமல்லாதாப்போலே வேறு ஒன்றும் தன்னைப்பற்ற நிருபாதிக சேஷமன்று என்னுமிடம் இங்கே வருகையாலும் ப்ரணவத்தில் தோற்றாத ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியிலே நமஸ்ஸுக்குத் தாத்பர்யமாகவுமாம். அப்போது பூர்வப்ரயுக்த மகாரத்தை அநுஷங்கித்து நான் எனக்கு நிர்வாஹகனல்லேனென்று சொல்லிற்றாயிற்று. ஸ்வாதந்த்ர்ய பதமாத்ரத்தை அத்யாஹரித்து "ந மம ஸ்வாதந்த்ர்யம்" என்றதாகவுமாம். இச்சேதநனுக்கு ஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியாவது நிரபேக்ஷ கர்த்ருத்வாநர்ஹதை. இதுக்கு அடி பத்தாவஸ்தையிலும் முக்தாவஸ்தையிலும் ஸ்வபுத்திபூர்வ ப்ரவ்ருத்தி பண்ணா நின்றாலும் ஈச்வரன் கொடுத்த கரணாதிகளைக் கொண்டு அவன் ப்ரேரகனுமாய் ஸஹகாரியுமாக ப்ரவர்த்திக்க வேண்டுகை.

**விளக்கம்** – ப்ரணவத்தில் ஜீவாத்மா (ஸர்வேச்வரன் தவிர வேறு) யாருக்கும் அடிமை அல்லன் என்று கூறப்படுகிறது. இதன் மூலம் ஜீவாத்மா தனக்கும் கூட தான் அடிமை அல்ல என்றாகிறது. ஆக இதன் மூலம் தானே தனக்கு அடிமை அல்லாதபோது, தனக்கும் ஏதும் அடிமை அல்ல என்பதும் தேறுகிறது. ஆனால், இந்தக் கருத்து (தான் தனக்கு அடிமை அல்ல என்னும் கருத்து) ப்ரணவத்தில் வெளிப்படவில்லை. ஆகவே இந்தக் கருத்து "நம:" என்பதன் மூலம் வெளிப்படுகிறது என்று கொள்க. இவ்விதம் கொள்ளும்போது, ப்ரணவத்தில் உள்ள "ம" என்னும் எழுத்தை "நம" என்பதில் இணைத்துக் கொண்டு (ந மம), "நான் என்னை நிர்வாகம் செய்யவல்லவன் அல்லன்" என்பது வெளிப்படுகிறது. இதே போன்று, "ந மம" என்பதன் இறுதியில் "ஸ்வாதந்த்ர்யம்" என்பதைச் சேர்த்துக் கொண்டு, "ந மம ஸ்வாதந்த்ர்யம் = எனக்கு சுதந்திரம் இல்லை" என்பதும் வெளிப்படுகிறது. "சுதந்திரம் இல்லை" என்றால், ஸர்வேச்வரனுடைய உதவி இல்லாமல் ஜீவாத்மா எந்த ஒரு செயலையும் செய்ய இயலாது என்று கருத்து. இதன் காரணம் என்னவென்றால் - ஸம்ஸாரத்தில் உள்ளபோதும், முக்தி அடைந்தபோதும் ஜீவாத்மா தன்னுடைய அறிவுக்கு ஏற்றபடி செயல்களைச் செய்தாலும், அவற்றை

ஸர்வேச்வரன் அளித்த இந்த்ரியங்களைக் கொண்டும், அந்த இந்த்ரியங்களை ஸர்வேச்வரன் தூண்டுவது கொண்டும் மட்டுமே செய்கிறான்.

## நம: என்பது ஸர்வேச்வரன் அனைத்தையும் ரக்ஷிப்பவன் என்பதை உணர்த்துகிறது

**மூலம்** – ஈச்வரனுக்கு ப்ரதமாக்ஷரத்தில் ப்ரக்ருதியிலே சொன்ன ஸர்வரக்ஷகத்வம் உபாயாதிகாரிகள் பக்கல் ஏதேனும் ஓர் உபாயத்திலே ப்ரேரித்துக் கொண்டே வரக்கடவது. ஜீவன் ஸ்வரக்ஷணார்த்தமான உபாயாநுஷ்டானத்திலும் பராதீநகர்த்தாவாகையாலும், இவ்வுபாயம் அனுஷ்டித்தாலும் பலப்ரதாநரூப ரக்ஷை பண்ணுவான் ப்ரஸந்நனான ஸர்வேச்வரனாகையாலும் ப்ரதாமாக்ஷரத்திலே ப்ரக்ருதியாலே சொல்லப்பட்ட அவனுடைய ஸர்வரக்ஷகத்வமே இந் நம: சப்தத்தாலும் த்ருடீக்ருதம். இப்படி ப்ரதமசதுர்த்தியாலே ப்ரதிபந்நமான ஈச்வரனுடைய நிருபாதிக ஸர்வ சேஷத்வமும் ஜீவனுக்கு ஏதேனும் ஒன்றையும் பற்ற நிருபாதிக ஸர்வசேஷத்வம் கழித்த முன்புற்ற யோஜனையாலே த்ருடீக்ருதமாயிற்று. இஜ்ஜீவனுக்குள்ள ஸ்வாதந்த்ர்யமும் “பராத்து தச்சேத:” என்கிற ந்யாயத்தாலே நிருபாதிக ஸ்வாதந்த்ரனாய் ஸர்வார்த்த ப்ரவ்ருத்தனான பரமாத்மா வடிவாக வந்தது. அப்படியே வஸ்த்வந்தரங்களைப் பற்ற இஜ்ஜீவனுக்கு சேஷத்வமும் நிருபாதிக சேஷியான அவன் ஸர்வார்த்தமாகக் கொடுக்க வந்தது.

**விளக்கம்** – ப்ரணவத்தின் முதல் எழுத்தான “அ” என்பதன் மூலம் உணர்த்தப்படும் “ஸர்வேச்வரன் அனைத்தையும் ரக்ஷிப்பவன்” என்னும் பொருளானது, அதற்கான உபாயங்களைக் கைக்கொள்ளுபவர்களிடம் உள்ள ஏதேனும் ஒரு உபாயத்தின் அடிப்படையில் உண்டாகிறது. ஜீவன் தானாக ஒரு உபாயத்தைக் கைக்கொண்டாலும், அதற்கான செயல்பாடுகளைச் செய்ய அவன் ஸர்வேச்வரனையே நாடவேண்டும் என்பதாலும், அந்த உபாயத்தை ஜீவன் செய்தாலும் அதற்கான பலனை அளித்துக் காப்பாற்றுபவன் கருணை நிறைந்த ஸர்வேச்வரன் என்பதாலும், ப்ரணவத்தின் தொடக்க எழுத்தான “அ” என்பதால் கூறப்பட்ட “ஸர்வேச்வரன் அனைத்தையும் ரக்ஷிப்பவன்” என்னும் கருத்தே “நம:” என்பதன் மூலமும் உறுதியாகிறது. இதே போன்று ப்ரணவத்தின்

முதல் எழுத்தான "அ" என்பதில் உள்ள நான்காம் வேற்றுமை மூலம் உணர்த்தப்படுவதான "ஸர்வேச்வரன் அனைத்திற்கும் இயற்கையான எஜமானன்" என்பதும், ஜீவனுக்கு இயல்பாகவே எதுவும் அடிமையல்ல என்று முன்பு கூறப்பட்டதால் தெளிவாகிறது. ப்ரஹ்மஸூத்ரம் (2-3-40) - பராத்து தச்சேத: - ஜீவனுடைய கர்த்ருத்வம் பரமாத்மாவின் வசப்பட்டது – என்று கூறுவதால், ஜீவாத்மா சுதந்திரமாக ஒரு செயலைச் செய்வது போன்று தோன்றுவது எதனால் என்றால், அவனுடைய இயல்பான எஜமானனாகிய ஸர்வேச்வரன் அவ்விதம் செய்ய அனுமதி அளித்ததால் ஆகும்.

ஸ்ரீமாந் ஸ்வதந்த்ர: ஸ்வாமீ ச ஸர்வத்ராந்யாநபேக்ஷயா
நிரபேக்ஷ ஸ்வதந்த்ரத்வம் ஸ்வாப்யம் சாந்யஸ்ய ந க்வசித்

**பொருள்** – பெரியபிராட்டியின் நாயகனான ஸர்வேச்வரன் அனைத்து வஸ்துக்களிலும், மற்ற யாரையும் நாட வேண்டிய அவசியம் இல்லாமல் சுதந்திரமாகவும், எஜமானனாகவும் உள்ளான். வேறு யாருக்கும் எந்த விஷயத்திலும் மற்ற யாரையும் நாட வேண்டிய அவசியம் இல்லாமல் சுதந்திரமாகவும், எஜமானனாகவும் இருக்கும் நிலை இல்லை.

தாஸஸ்ய நமஸச்சேமௌ ஸாரௌ தேசிக தர்சிதௌ
அநந்ய சரணத்வாதே: அதிகாரஸ்ய ஸித்தயே

**பொருள்** – ப்ரணவம் மற்றும் "நம:" ஆகிய இரண்டின் இந்த ஆழ்கருத்துக்கள், மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளாமல் இருத்தல் முதலான தகுதிகள் கிட்டுவதற்காக ஆசார்யர்களால் உபதேசிக்கப்பட்டவை ஆகும்.

**மூலம்** – லோகத்தில் ஸ்வாமித்ம ஸ்வாதந்த்ர்யங்கள் அபிமதங்களாயும், தாஸத்வ பாரதந்த்ர்யங்கள் அநபிமதங்களாயும் தோற்றுகிறது கர்மோபாதிகமாகவத்தனை. இங்கு ப்ரணவ நமஸ்ஸுக்களிலே சொன்ன தாஸத்வமும் பாரதந்த்ர்யமும் தாஸபூதா: ஸ்வத: ஸர்வே இத்யாதிகளிற்படியே ஸ்வரூப ப்ராப்தங்களாகையாலே தத்வ வித்துக்களுக்கு அநுகூலங்கள்.

**விளக்கம்** – இந்த உலகில் எஜமானனாக உள்ள தன்மை, மற்றவர்களுக்குக் கட்டுப்படாமல் உள்ள தன்மை ஆகிய இரண்டும் பொதுவாக விரும்பப்படுகிறது; அடிமையாக உள்ள தன்மை, மற்றவர்களுக்கு அடங்கி நடக்கும் நிலை ஆகிய இரண்டும் பொதுவாக விரும்பப்படுவதில்லை. இவ்விதம் உள்ள நிலை பூர்வகர்மங்களால் ஆகும். ஆனால் ப்ரணவம் மற்றும் "நம:" என்பதால் கூறப்படும் ஸர்வேச்வரனுக்கு அடிமையாக உள்ள நிலை, அவனுக்கு வசப்பட்டு இருத்தல் ஆகிய நிலை இரண்டும், ஈச்வர ஸம்ஹிதையில் - தாஸபூதா: ஸ்வத: ஸர்வே – நாம் அனைவரும் இயல்பாகவே அவனுக்கு அடிமைகள் – என்று கூறுவதற்கு ஏற்ப ஆத்ம ஸ்வரூபத்தை ஒட்டி உள்ளதால், உண்மையை உள்ளது உள்ளபடி அறிந்தவர்களுக்கு ஏற்புடையவே ஆகும்.

## பாகவதர்களுக்கு அடிமையாக இருத்தல் கிட்டும் முறை

**மூலம்** – இப்படி அத்யந்த பரார்த்ய பாரதந்த்ர்யங்கள் ஸித்திக்கையாலே "அடியார்க்கு என்னையாட்படுத்த விமலன்" என்கிறபடியே ஸ்வதந்த்ரனான சேஷிக்கு இஷ்டவிநியோகார்ஹனானபடியாலே ததீய சேஷத்வமும் இங்கே ஸித்தம். சேஷியுமாய் ஸ்வதந்த்ரனுமாகையாலே ஈச்வரன் இவ்வாத்மாவைத் தனக்கு நல்லவரான அடியார்க்குத் தன் உகப்பாலே சேஷமாக்கினால் இது ப்ராப்தமன்றென்னவொண்ணாது; விலக்கவொண்ணாது, சேஷியாகையாலே இஷ்டவிநியோகத்துக்கு ப்ராப்தன்; ஸ்வதந்த்ரனாகையாலே இதுக்கு ஸமர்த்தன், "மற்றும் ஓர் தெய்வம் உளதென்று இருப்பாரோடு உற்றிலேன், உற்றதும் உன்னடியார்க்கடிமை" என்கிற பாட்டிலும் இவ்வர்த்தம் கண்டு கொள்வது.

**விளக்கம்** – ஆக ஜீவாத்மா ஈச்வரனுக்காக மட்டுமே உள்ளன் என்பதும், அவனுக்கு வசப்பட்டவன் என்பதும் தெளிவாகிறது. அமலனாதிபிரான் (1) – அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன் – என்பதற்கு ஏற்ப, எஜமானனாகிய ஈச்வரனுக்கு விருப்பமானவற்றை மட்டுமே ஜீவன் செய்யவேண்டும் என்பதால், அவனுடைய விருப்பதிற்கு ஏற்ப அவனுடைய அடியார்களுக்குத் தொண்டு செய்யும்படிச் செய்வதால், பாகவதர்களுக்குக் கைங்கர்யம் செய்தல் என்பது உண்டாகிறது. நம்முடைய எஜமானனும், சுதந்திரமானவனும் ஆகிய ஈச்வரன் தன்னுடைய மகிழ்வு காரணமாக நல்ல

பாகவதர்களுக்கு நம்மை அடிமையாக்கினால், அது சரியல்ல என்று எண்ணக்கூடாது, அதனை விலக்கவும் முயற்சி செய்யக்கூடாது. நமது எஜமானன் என்பதால், தன்னுடைய விருப்பம் போன்று நம்மை அவன் பயன்படுத்திக் கொள்ளலாம். அவன் சுதந்திரமானவன் என்பதால் இவ்விதம் செய்யும் திறன் அவனுக்கு உள்ளது. பெரியதிருமொழி (8-10-3) - மற்றும் ஓர் தெய்வம் உளதென்று இருப்பாரோடு உற்றிலேன், உற்றதும் உன்னடியார்க்கடிமை – உன்னைத் தவிர மற்றொரு தெய்வம் உண்டு என்பவர்களோடு நான் சேரமாட்டேன், உன்னை அடைந்தவர்களுக்கே நான் அடிமை - என்னும் பாசுரத்தில் இந்தப் பொருள் வெளிப்படுவது காண்க.

ஸ்வேச்சயைவ பரேசாஸ்ய தாததீந்ய பலாத்து ந:
பகவத்பக்த சேஷத்வம் ஸ்வேச்சயாபி க்வசித் பவேத்

**பொருள்** – உயர்ந்த இந்த்ரன் போன்றவர்களுக்கு ஈச்வரனாக உள்ள ஸர்வேச்வரனுக்கு தனது அடியார்களுக்கு தான் அடிமையாக இருக்கவேண்டும் என்னும் எண்ணம் அவனுடைய விருப்பத்தால் ஏற்படுகிறது. ஆனால் அவனுடைய அடியார்களுக்கு நாம் அடிமையாக இருக்கவேண்டும் என்னும் எண்ணம், நாம் அவனுக்கு வசப்பட்டுள்ளதால் உண்டாகிறது. ஆனால் சில நேரங்களில் அது போன்று நம்முடைய விருப்பத்தாலும் உண்டாகும்.

குணாதிகே ஹி விஷயே குணஸாரஸ்ய வேதிந:
ராமே ராமாநுஜஸ்யேவ தாஸ்யம் குணக்ருதம் பவேத்

**பொருள்** – நல்ல குணங்கள் பொருந்திய பாகவதர்களைக் குறித்து அடிமைத்தன்மை உண்டாவது என்பது, இராமனிடம் லக்ஷ்மணன் போன்று, அவர்களுடைய குணங்களிக் ரஸம் அறிந்தவனுக்கு, அவனுடைய குணத்தால் உண்டாகும்.

தாஸ்யமைச்வர்யோகேந ஜ்ஞாதீநாம் ச கரோப்யஹம்
அர்த்தபோக்தா ச போகாநாம் வாக்துரிக்தாநி ச க்ஷமே

**பொருள்** – க்ருஷ்ணன் கூறுவது, "ஈச்வரனுடைய ஸ்வபாவமாக உள்ள சுதந்திரம் என்பதன் தொடர்பு காரணமாக நான் எனது பக்தர்களுக்குத் தொண்டு செய்கிறேன். எனது இன்பங்களில் ஒரு பகுதியை நான் அனுபவித்து, மற்ற பகுதியை அவர்களுக்கு அளிக்கிறேன். அவர்களுடைய வாயால் கூறப்படும் கடுமையான சொற்களையும் நான் பொறுத்துக் கொள்கிறேன்", என்பதாகும்.

இதி ஸ்வோக்திநயாதேவ ஸ்வபக்தவிஷயே விபு:
ஆத்மாத்மீயஸ்ய ஸர்வஸ்ய ஸங்கல்பயதி சேஷதாம்

**பொருள்** – இப்படியாக தான் கூறிய (மேலே உள்ள க்ருஷ்ண வாக்கியம்) நியாயத்தால் சுதந்திரமான ஸர்வேச்வரன், தனது பக்தர்கள் விஷயத்தில், தனக்கு மட்டும் அல்லாமல் தன்னைச் சேர்ந்த பலவற்றுக்கும் "பக்தர்களுக்கு அடிமை" என்பதை முடிவு செய்கிறான்.

அந்யோந்ய சேஷபாவோபி பரஸ்வாதந்த்ர்ய ஸ்வபவ:
தத்ததாகாரபேதேந யுக்த இத்யுபபாதிதம்

**பொருள்** – பாகவதர்கள் ஒருவருக்கொருவர் அடிமைகளாகக் கைங்கர்யம் செய்தபடி இருத்தல் என்பது, ஸர்வேச்வரனுடைய சுதந்திரம் காரணமாக உண்டாகிறது என்பதும், அவ்விதம் இருத்தல் என்பது பொருத்தாமனது என்பதும் புருஷார்த்தகாஷ்டாதிகாரத்தில் முன்பே கூறப்பட்டது.

## நம: என்பதன் மூலம் உபாயம் மற்றும் பரஸமர்ப்பணம் கிட்டுதல்

**மூலம்** – இப்படி ஸ்வதந்த்ரனான சேஷியிட்ட வழக்காய் அகிஞ்சநனாயிருக்கிற இவனுக்கு அவனாலே புருஷார்த்தம் பெறவேண்டுகையாலே அவனுடைய வசீகரணார்த்தமாக த்வயத்திலும் சரமச்லோகத்திலும் விசதமாகச் சொல்லுகிற சரண வரணம் இங்கே ஸூசிதம். ஆத்மஸமர்ப்பணமும் சரணவரணமும் அந்யோந்யம் பிரியாமையாலே ஒரொன்றைச் சொல்லும் சப்தங்களில் இரண்டும் விவக்ஷிதம்.

**விளக்கம்** – வேறு உபாயம் ஏதும் இல்லாத காரணத்தால், தனது எஜமானனும் சுதந்திரமாக உள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரன் மூலமாக மட்டுமே தன்னுடைய புருஷார்த்தங்கள் கிட்டும் என்னும் நிலையில் ஜீவாத்மா உள்ளான். ஆகவே ஸர்வேச்வரனை அண்டுவதற்கு அவசியமான த்வயம் மற்றும் சரமச்லோகம் ஆகிய இரண்டிலும் உள்ள "காப்பாற்றுதலுக்கான ப்ரார்த்தனை" என்பது, திருமந்த்ரத்திலும் குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது. ஆத்மசமர்ப்பணம் மற்றும் "காப்பாற்றுதலுக்கான ப்ரார்த்தனை" ஆகிய இரண்டும் ஒன்றை ஒன்று எப்போதும் பிரியாமல் உள்ளதால், இவை இரண்டில் ஒன்றைக் கூறும் பதமானது, இரண்டையுமே குறிக்கும் என்று கருத்து.

**மூலம்** –

ய: ஸ தேவோ மயா த்ருஷ்ட: புரா பத்மாயதேக்ஷண:
ஸ ஏவ புருஷவ்யாக்ர ஸம்பந்தீ தே ஜநார்த்தந:

ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ:
கச்சத்வமேநம் சரணம் சரண்யம் புருஷர்ஷபா:

என்று உபதேசிக்க,

ஏவமுக்தாஸ்த்ரய: பார்த்தா யமௌ ச பரதர்ஷப
த்ரௌபத்யா ஸஹிதா: ஸர்வே நமச்சக்ருர்ஜநார்த்தநம்

என்று சொல்லுகையாலும், தமயந்தீ வ்ருத்தாந்தத்திலே "சரணம் ப்ரதி தேவாநாம் ப்ராப்தகாலமமந்யத" என்று உபக்ரமித்து, "வாசா ச மநஸா சைவ நமஸ்காரம் ப்ரயுஜ்ய ஸா" என்கையாலும், நம: சப்தம்தானே சரணாகதிசப்த ஸ்தாநத்திலே படிதமாகையாலே இது தன்னோடு தன் துவக்கறுத்துக் கொண்டு ஸபரிகரமான ஸ்வரக்ஷா பரஸமர்ப்பணத்திலே தத்பரமாகவுமாம். நமஸ்ஸு ஆத்ம ஸமர்ப்பணபரமாயிருக்கு மென்னுமிடம்,

ஸமித்ஸாதநகாதீநாம் யஜ்ஞாநாம் ந்யாஸமாத்மந:
நமஸா ய: அகரோத்தேவ ஸ ஸ்வத்வர இதீரித:

நமஸ்காராத்மகம் யஸ்மை விதாயாத்மநிவேதநம்

இத்யாதிகளாலும் ப்ரஸித்தம். "நானும் எனக்குரியேனல்லேன், என்னுடையதான வ்யாபாராதிகளும் எனக்குச் சேஷமன்று, இவையெல்லாம் ஸர்வேச்வரனுக்கே சேஷம்" என்றிவை முதலான அர்த்தங்களெல்லாம் நம: சப்தத்திலே விவக்ஷிதமென்னுமிடம் நிருக்தத்தில் நமஸ்கார ப்ரகரணத்திலே ஓதப்பட்டது.

**விளக்கம்** – "நம:" என்னும் சப்தம் "காப்பாற்றுதலுக்கான ப்ரார்த்தனை" என்பதைக் கீழே உள்ள வரிகளில் காணலாம்:

- மஹாபாரதம் வனபர்வம் (161-50) - ய: ஸ தேவோ மயா த்ருஷ்ட: புரா பத்மாயதேக்ஷண: ஸ ஏவ புருஷவ்யாக்ர ஸம்பந்தீ தே ஜநார்த்தந: - மார்க்கண்டேயர் பாண்டவர்களிடம், "புருஷர்களில் உயர்ந்தவனே! தாமரையின் இதழ் போன்று விரிந்த திருக்கண்கள் கொண்ட எந்தவொரு ஸர்வேச்வரன், அனைத்து ஸமுத்திரத்தால் சூழப்பட்டபோது என்னால் பார்க்கப்பட்டானோ, ஜனார்த்தனனாகிய அவன் உனக்கு ஸம்பந்தம் உள்ளவன் ஆகிறான்" என்றார்.

- மஹாபாரதம் வனபர்வம் (161-50) - ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ: கச்சத்வமேநம் சரணம் சரண்யம் புருஷர்ஷபா: - மஹாலக்ஷ்மியின் நாதனாகிய ஸர்வேச்வரன் அனைத்து லோகங்களுக்கும் தந்தையாகவும் தாயாகவும் உள்ளான். புருஷர்களின் உயர்ந்த பாண்டவர்களே! அனைத்திற்கும் ரக்ஷகனான அவனை மட்டுமே உபாயமாகக் கொண்டு அவனிடம் சரணாகதி செய்யுங்கள்.

- மஹாபாரதம் வனபர்வம் (161-36) - ஏவமுக்தாஸ்த்ரய: பார்த்தா யமௌ ச பரதர்ஷப த்ரௌபத்யா ஸஹிதா: ஸர்வே நமச்சக்ருர்ஜநார்த்தநம் – மார்க்கண்டேயரால் உபதேசிக்கப்பட்ட குந்தியின் புத்திரர்கள் மூவரும் நகுல

ஸஹாதேவர்களுடனும், திரௌபதியுடனும் சேர்ந்து க்ருஷ்ணனைச் சரணம் அடைந்தார்கள்.

இதே போன்று மஹாபாரதம் வனபர்வத்தில் (48-15) உள்ள தமயந்தீ சரிதத்தில் - சரணம் ப்ரதி தேவாநாம் ப்ராப்தகாலமமந்யத – தேவர்களைக் குறித்துச் சரணாகதி செய்யவேண்டிய காலம் வந்தது என்று தமயந்தி எண்ணினாள் – என்று தொடங்கி, வாசா ச மநஸா சைவ நமஸ்காரம் ப்ரயுஜ்ய ஸா – ஆகவே அவள் வாக்காலும் மனதாலும் பல நமஸ்காரங்களைச் செய்து – என்று கூறியது காண்க. ஆக "நம:" என்னும் சப்தம் "காப்பாற்றுதலுக்கான ப்ரார்த்தனை" என்பதால், ஜீவாத்மா தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள இயலாதவன் என்பதையும், "ந மம பார: - நான் எனது பாரத்தைச் சுமக்கவல்லவன் அல்லன்" என்பதையும் தெளிவாக்குகிறது. கீழே உள்ள இரண்டு வரிகளின் மூலம், "நம:" என்பது ஸர்வேச்வரனுக்குச் செய்யப்படும் ஆத்மஸமர்ப்பணம் என்பதைத் தெளிவாக்குகிறது:

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-37) - ஸமித்ஸாதநகாதீநாம் யஜ்ஞாநாம் ந்யாஸமாத்மந: நமஸா ய: அகரோத்தேவ ஸ ஸ்வத்வர இதீரித: - ஸமித்து முதலானவை கொண்டு இயற்றப்படும் யஜ்ஞங்களில், ஸர்வேச்வரனுக்கு "நம:" என்பதன் மூலம் ஆத்ம ஸமர்ப்பணம் செய்தவன் மிகவும் உயர்ந்த யஜ்ஞம் செய்தவன் ஆகிறான்.

- மந்த்ரராஜபதம் - நமஸ்காராத்மகம் யஸ்மை விதாயாத்மநிவேதநம் – நமஸ்காரம் என்னும் ஆத்ம ஸமர்ப்பணத்தை யார் ஒருவனிடம் செய்து.

நிருக்தியில் உள்ள நமஸ்காரப் பகுதியில், கீழே உள்ள பலவும் "நம:" என்னும் சப்தத்தால் வெளிப்படுகின்றன என்று கூறுவது காண்க:

- நான் எனக்கு உரியவன் அல்லன்
- நான் செய்யும் செயல்கள் எதற்கும் நான் எஜமானன் அல்லன் அல்லது அந்தச் செயல்கள் எனக்கு அடிமை அல்ல
- இவை அனைத்தும் ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமையாகும்

## "நம:" என்பதற்கு அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் உள்ள மூன்றுவிதமான விளக்கங்கள்

**மூலம்** – இந்த நம: சப்தத்துக்கு ஸ்தூல ஸூக்ஷ்ம பரங்களென்று மூன்று அர்த்தங்களை வகுத்து அஹிர்புத்ந்யன் வ்யாக்யானம் பண்ணினான்.

ப்ரேக்ஷாவத: ப்ரவ்ருத்திர்யா ப்ரஹ்விபாவாத்மிகா ஸ்வத:
உத்க்ருஷ்டம் பரமுதித்ச்ய தந்நம: பரிகீயதே

லோகே சேதநவர்க்கஸ்து த்விதைவ பரிகீர்த்யதே
ஜ்யாயாம்ச்சைவ ததா அஜ்யாயாந் நைவாப்யாம் வித்யதே பர:

காலதோ குணதச்சைவ ப்ரகர்ஷோ யத்ர திஷ்டதி
சப்தஸ்தம் முக்யயா வ்ருத்தயா ஜ்யாயாநித்யவலம்பதே

அதச்சேதநவர்க்கோந்ய: ஸ்ம்ருத: ப்ரத்யவரோ புதை:
அஜ்யாயாம்ச்சாநயோர்யோக: சேஷசேஷிதயேஷ்யதே

அஜ்யாயாம்ஸோபரே ஸர்வே ஜ்யாயாநேகோ மத: பர:
நந்த்ரு நந்தவ்ய பாவேந தேஷாம் தேந ஸமந்வய:

நந்தவ்ய: பரம: சேஷீ சேஷா நந்தார ஈரிதா:
நந்த்ரு நந்தவ்ய பாவோயம் ந ப்ரயோஜநபூர்வக:

நீசோச்சயோ: ஸ்வபாவோயம் நந்த்ரு நந்தவ்யதாத்மக:
உபாதிரஹிதேநாயம் யேந பாவேந சேதந:

நமதி ஜ்யாயஸே தஸ்மை தத்வா நமநமுச்யதே
பகவாந் மே பரோ நித்யம் அஹம் ப்ரத்யவர: ஸதா

இதி பாவோ நம: ப்ரோக்தோ நமஸ: காரணம் ஹி ஸ:
நாமயத்யாபி வா தேவம் ப்ரஹ்வீபாவயதி த்ருவம்

ப்ரஹ்வீபவதி நோசே ஹி பரோ நைச்யம் விலோகயந்
அதோ வா நம உத்திஷ்டம் யத்தம் நாமயதி ஸ்வயம்

வாசா நம இதி ப்ரோச்ய மநஸா வபுஷா ச யத்
தந்நம: பூர்ணமுத்திஷ்டம் அதோ அந்யந்ந்யூநமுச்யதே

**விளக்கம்** – இப்படியாக உள்ள "நம:" என்பதற்கு அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் ஸ்தூலம், ஸூக்ஷ்மம் மற்றும் பரம் என்னும் மூன்று அர்த்தங்கள் கூறப்பட்டன. அவையாவன் அடுத்து உள்ள பல ச்லோகங்களில் கூறப்பட்டுள்ளன.

- ப்ரேக்ஷாவத: ப்ரவ்ருத்திர்யா ப்ரஹ்விபாவாத்மிகா ஸ்வத: உத்க்ருஷ்டம் பரமுதித்ச்ய தந்நம: பரிகீயதே – அறிவுள்ள ஒருவன் தன்னைக் காட்டிலும் உயர்ந்த ஒருவனைக் குறித்து எந்தவிதமான பலனையும் எதிர்பாராமல் தானாகவே வணங்குவதாகிய சரீரத்தின் செயல்பாடு "நமஸ்" எனப்படுகிறது.

- லோகே சேதநவர்க்கஸ்து த்விதைவ பரிகீர்த்யதே ஜ்யாயாம்ச்சைவ ததா அஜ்யாயாந் நைவாப்யாம் வித்யதே பர: - சாஸ்த்ரங்களில் சேதநர்கள் அனைவரும் உயர்ந்தவர்கள் மற்றும் தாழ்ந்தவர்கள் என்று இருவகைப்பட்டவர்களாக மட்டுமே கூறப்படுகிறார்கள்; வேறு விதங்கள் இல்லை.

- காலதோ குணதச்சைவ ப்ரகர்ஷோ யத்ர திஷ்டதி சப்தஸ்தம் முக்யயா வ்ருத்தயா ஜ்யாயாநித்யவலம்பதே – அந்த இருவரில் காலம் மற்றும் குணம் ஆகியவற்றால் மேன்மை உள்ளவன் மட்டுமே "உயர்ந்தவன்" என்னும் பொருள் தருகின்ற "ஜ்யாயாந்" என்னும் சொல்லின் பொருளாகிறான். ஸர்வேச்வரன் மட்டுமே இவ்விதம் நித்யமாயும், எங்கும் உள்ளவனாயும், அளவற்ற குணங்கள் கொண்டவனாக உள்ளதாலும் அவனே "ஜ்யாயாந்" எனப்படுகிறான்.

- அதச்சேதநவர்க்கோந்ய: ஸ்ம்ருத: ப்ரத்யவரோ புதை: அஜ்யாயாம்ச்சாநயோர்யோக: சேஷசேஷிதயேஷ்யதே – அவனைத் தவிர்த்துள்ள மற்ற ஜீவாத்மாக்கள் அனைவரும் “தாழ்ந்தவர்கள்” என்னும் பொருள் தருகின்ற “அஜ்யாயாந்” எனப்படுகின்றனர். உயர்ந்த அவனுக்கும் தாழ்ந்த இவர்களுக்கும் இடையே உள்ள உறவு என்பது “எஜமானன் – அடிமை” என்பதான “சேஷி – சேஷ பாவம்” ஆகும்.

- அஜ்யாயாம்ஸோபரே ஸர்வே ஜ்யாயாநேகோ மத: பர: நந்த்ரு நந்தவ்ய பாவேந தேஷாம் தேந ஸமந்வய: - அவன் ஒருவன் மட்டுமே உயர்ந்தவன் ஆவான், மற்ற அனைவரும் தாழ்ந்தவர்களே ஆவர். அவன் வணங்கப்படுபவனாகவும், இவர்கள் வணங்குபவர்களாவும் இருப்பதே அவனுடன் இவர்களுக்கு உள்ள உறவாகும்.

- நந்தவ்ய: பரம: சேஷீ சேஷா நந்தார ஈரிதா: நந்த்ரு நந்தவ்ய பாவோயம் ந ப்ரயோஜநபூர்வக: - வணங்கப்படுபவன் “உயர்ந்தவன், சேஷி” என்று கூறப்படுகிறான். வணங்கும் மற்றவர்கள் “சேஷர்கள்” எனப்படுகிறார்கள். இவர்கள் இருவருக்கும் இடையே உள்ள இந்த உறவுமுறையானது எந்தவிதமான பலனையும் எதிர்பாராமல், இயற்கையாகவே அமைந்துள்ளது.

- நீசோச்சயோ: ஸ்வபாவோயம் நந்த்ரு நந்தவ்யதாத்மக: உபாதிரஹிதேநாயம் யேந பாவேந சேதந: நமதி ஜ்யாயஸே தஸ்மை தத்வா நமநமுச்யதே – சேதநன் ஒருவன் உயர்ந்த அவனை எந்த ஒரு பலனையும் எதிர்பாராமல் எவ்விதம் வணங்குகிறானோ, அத்தகைய நமஸ்காரம் என்பதற்கும், “அவனே சேஷி, நாம் சேஷன்” என்று எண்ணுவதற்கும் “நமநம்” என்று பெயர்.

- பகவாந் மே பரோ நித்யம் அஹம் ப்ரத்யவர: ஸதா இதி பாவோ நம: ப்ரோக்தோ நமஸ: காரணம் ஹி ஸ: - “பகவான் எப்போதும் எனக்கு எஜமானன், நான் அவனுக்கு எப்போதும் அடிமை” என்றுள்ள எண்ணமே நமஸ் எனப்படுகிறது. இதன் காரணம், அத்தகைய எண்ணமே சரீரத்தால் செய்யப்படும் நமஸ்காரம் என்பதற்குக் காரணமாக உள்ளதால் ஆகும்.

- நாமயத்யாபி வா தேவம் ப்ரஹ்வீபாவயதி த்ருவம் ப்ரஹ்வீபவதி நோசே ஹி பரோ நைச்யம் விலோகயந் – இத்தகைய நமஸ்காரம் என்பது ஸர்வேச்வரனை வணங்கும்படிச் செய்கிறது. வணங்குபவன் விண்ணப்பம் செய்வதை பகவான் அளிக்கும்படியாகச் செய்கிறது. இது உறுதியாகும். மிகவும் உயர்ந்த பகவான், தன்னிடம் தாழ்ந்து வணங்குபவர்களைக் கண்டு, தானும் அவர்களிடம் வணக்கம் உள்ளவனாகிறான்.

- அதோ வா நம உத்திஷ்டம் யத்தம் நாமயதி ஸ்வயம் – ஆக, ஸர்வேச்வரனையும் வணங்கும்படிச் செய்வதால், இந்தச் செயல் "நமஸ்ஸு" எனப்படுகிறது.

- வாசா நம இதி ப்ரோச்ய மநஸா வபுஷா ச யத் - தந்நம: பூர்ணமுத்திஷ்டம் அதோ அந்யந்ந்யூநமுச்யதே – வாக்கு கொண்டு "நம" என்று உரைத்து, மனம் மூலம் இதனை எண்ணியபடி இருந்து, சரீரத்தால் வணங்குவதே பரிபூர்ணமான நமஸ் ஆகும். இதனைத் தவிரச் செய்யப்படுவது குறையுடன் கூடிய நமஸ் ஆகும்.

மூலம் –

இயம் கரணபூர்த்தி: ஸ்யாத் அங்கபூர்த்திமிமாம் ச்ருணு
சாச்வதீ மம ஸம்ஸித்தி: இயம் ப்ரஹ்வீபவாமி யத்

புருஷம் பரமுத்திச்ய ந மே ஸித்திரிதோந்யதா
இத்யங்கமுதிதம் ச்ரேஷ்டம் பலேப்ஸா தத்விரோதிநீ

அநாதிவாஸநாரோஹாத் அநைச்வர்யாத் ஸ்வபாவஜாத்
மலாவகுண்டிதத்வாச்ச துஷ்க்ரியா விஹதிர்ஹி யா

தத்கார்பண்யம் ததுத்போதோ த்விதீயம் ஹ்யங்கமித்ருசம்
ஸ்வஸ்வாதந்த்ர்யாவபோதஸ்து தத்விரோத உதீர்யதே

பரத்வே ஸதி தேவோயம் பூதாநாமநுகம்பந:
அநுக்ரஹைகதீர் நித்யம் இத்யேதத்து த்ருதீயகம்

உபேக்ஷகோ யதாகர்ம பலதாயீதி யா மதி:
விச்வாஸாத்மகமேதத்து த்ருதீயம் ஹந்தி வை ஸதா

**விளக்கம் –**

- இயம் கரணபூர்த்தி: ஸ்யாத் அங்கபூர்த்திமிமாம் ச்ருணு சாச்வதீ மம ஸம்ஸித்தி: இயம் ப்ரஹ்வீபவாமி யத் – இதுவரை பூர்ணமான ப்ரபத்தி குறித்து கூறப்பட்டது. இனி இந்த ப்ரபத்தியின் அங்கங்களுடைய பூர்த்தி குறித்து உரைப்பதைக் கேட்பாயாக.

- புருஷம் பரமுத்திச்ய ந மே ஸித்திரிதோந்யதா இத்யங்கமுதிதம் ச்ரேஷ்டம் பலேப்ஸா தத்விரோதிநீ – பரமபுருஷனாகிய ஸர்வேச்வரனைக் குறித்து நான் செய்யும் ப்ரபத்தி என்பதே எனக்கு உறுதியான பலனாகும். இதனைக் காட்டிலும் வேறு பலன் எனக்கு அவசியமில்லை என்று இருத்தல், சிறந்த அங்கமாகக் கூறப்படுகிறது. பலன் மீது ஆசை என்பது இந்த அங்கத்துக்கு விரோதியாகும்.

- அநாதிவாஸநாரோஹாத் அநைச்வர்யாத் ஸ்வபாவஜாத் மலாவகுண்டிதத்வாச்ச துஷ்க்ரியா விஹதிர்ஹி யா – எல்லையற்ற தீயவாசனை உள்ளடக்கியதாலும், இயற்கையாகவே ஒருவனுக்கு உட்பட்டுள்ளதாலும், த்வேஷம் மற்றும் ஆசை முதலான தாழ்ந்தவற்றால் மனம் நிரம்பி உள்ளதாலும் அறிவு மற்றும் சக்தியானது பக்தியைச் செய்வதற்கு இயலாமல் தடைபடுகின்றன. இந்தத் தன்மையே ஆகிஞ்சந்யம் ஆகும்.

- தத்கார்பண்யம் ததுத்போதோ த்விதீயம் ஹ்யங்கமித்ருசம் ஸ்வஸ்வாதந்த்ர்யாவபோதஸ்து தத்விரோத உதீர்யதே – இவ்விதம் உள்ளதான ஆகிஞ்சந்யம் நமக்கு உள்ளதை எப்போது எண்ணியபடி இருத்தலே கார்ப்பண்யம்

என்னும் இரண்டாவது அங்கமாகும். இந்த அங்கத்துக்கு, “தான் ஸ்வதந்த்ரன்” என்னும் எண்ணம் தடையாகிறது.

- பரத்வே ஸதி தேவோயம் பூதாநாமநுகம்பந: அநுக்ரஹைகதீர் நித்யம் இத்யேதத்து த்ருதீயகம் – எம்பெருமான் மிகவும் உயர்ந்தவன் என்றாலும் அனைத்து உயிர்களிடமும் அன்புள்ளவன், எப்போதும் அனுக்ரஹம் செய்வதில் மட்டுமே சிந்தனை உள்ளவன் என்று எண்ணுவது மூன்றாவது அங்கமான மஹாவிச்வாஸம் ஆகும்.

- உபேக்ஷகோ யதாகர்ம பலதாயீதி யா மதி: விச்வாஸாத்மகமேதத்து த்ருதீயம் ஹந்தி வை ஸதா – அவன் கர்மத்துக்கு ஏற்றபடி மட்டுமே பலன் அளிப்பான், நம்மை அவன் தள்ளிவிடுவான் போன்ற எண்ணங்கள் மஹாவிச்வாஸத்துக்குக் கெடுதல் உண்டாக்கும்.

மூலம் –

ஏவம் பூதோப்யசக்த: ஸந் ந த்ராணம் பவிதும் க்ஷம:
இதி புத்தாயாஸ்ய தேவஸ்ய கோப்த்ருசக்தி நிரூபணம்

சதுர்த்தமங்கமுத்திஷ்டம் அமுஷ்ய வ்யாஹதி: புந:
உதாஸீநோ குணபாவாத் இத்யுத்ப்ரேக்ஷா நிமித்தஜா

ஸ்வஸ்ய ஸ்வாமிநி வ்ருத்திர்யா ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம்
ததங்கம் பஞ்சமம் ப்ரோக்தம் ஆஜ்ஞா வ்யாகாத வர்ஜநம்

ஆசாஸ்த்ரீயோபஸேவா து தத்விகாத உதீர்யதே
சராசராணி பூதாநி ஸர்வாணி பகவத்வபு:

அதஸ்ததாநுகூல்யம் மே கார்யமித்யேவ நிச்சய:
ஷஷ்டமங்கம் ஸமுத்திஷ்டம் தத்வ்யாகாதோ நிராக்ருதி:

**விளக்கம் -**

- ஏவம் பூதோப்யசக்த: ஸந் ந த்ராணம் பவிதும் க்ஷம: இதி புத்தாயாஸ்ய தேவஸ்ய கோப்த்ருசக்தி நிரூபணம் – இவ்விதம் அவன் இரக்கம் நிறைந்தவன் என்றாலும், அவனுக்குச் சக்தியில்லை என்பதால் நம்மை ரக்ஷிக்கமாட்டான் என்று எண்ணாமல் நம்மை ரக்ஷிப்பவன் அவனே என்று எண்ணியபடி, அவனை ரக்ஷிக்கவேண்டும் என்று விண்ணப்பித்தலே கோப்த்ருத்வ வரணம் என்னும் அங்கமாகும்.

- சதுர்த்தமங்கமுத்திஷ்டம் அமுஷ்ய வ்யாஹதி: புந: உதாஸீநோ குணபாவாத் இத்யுத்ப்ரேக்ஷா நிமித்தஜா – இந்த கோப்த்ருத்வ வரணம் என்னும் நான்காவது அங்கத்தைச் சிந்திக்காமல், அவனுக்குக் குணம் இல்லாமையால் நம்மை ரக்ஷிக்காமல், உதாஸீனம் செய்வான் என்று எண்ணுதல் இந்த அங்கத்துக்கு விரோதியாகும்.

- ஸ்வஸ்ய ஸ்வாமிநி வ்ருத்திர்யா ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம் ததங்கம் பஞ்சமம் ப்ரோக்தம் ஆஜ்ஞா வ்யாகாத வர்ஜநம் – தான் தன்னுடைய எஜமானனாகிய ஸர்வேச்வரனுக்கு விருப்பம் அல்லாதவற்றைச் செய்யமாட்டேன் என்று இருத்தல் ப்ராதிகூல்ய வர்ஜனம் என்னும் ஐந்தாவது அங்கமாகும்.

- ஆசாஸ்த்ரீயோபஸேவா து தத்விகாத உதீர்யதே சராசராணி பூதாநி ஸர்வாணி பகவத்வபு: - இந்த ப்ராதிகூல்ய வர்ஜனம் என்னும் அங்கத்துக்கு விரோதியாக உள்ளது எதுவென்றால் சாஸ்த்ரங்களுக்கு விரோதமாகச் செயல்களைச் செய்வதாகும். அனைத்து உயிர்களும் ஸர்வேச்வரனுடைய சரீரமாகும்.

- அதஸ்ததாநுகூல்யம் மே கார்யமித்யேவ நிச்சய: ஷஷ்டமங்கம் ஸமுத்திஷ்டம் தத்வ்யாகாதோ நிராக்ருதி: - அதனால் (அனைத்தும் அவன் சரீரம் என்பதால்), அனைத்திற்கும் விருப்பமானவற்றையே செய்தல் வேண்டும் என்று இருத்தல் ஆறாவது அங்கமான ஆநுகூல்ய ஸங்கல்பம் ஆகும். உயிர்களுக்குத் தீமை செய்தல் இந்த அங்கத்துக்கு விரோதமாகும்.

**மூலம் –**

பூர்ணமங்கைரூபாங்கைச்ச நமநம் தே ப்ரகீர்த்திதம்
ஸ்தூலோயம் நமஸாஸ்த்வர்த்த: ஸூக்ஷ்மமந்யம் நிசாமய

சேதநஸ்ய யதா ஸ்வஸ்மிந் ஸ்வீயே ச வஸ்துநி
மம இத்யக்ஷர த்வந்த்வம் ததா மம்யஸ்ய வாசகம்

அநாதிவாஸநாரூட மித்யாஜ்ஞாந நிபந்தநா
ஆத்மாத்மீய பதார்த்தஸ்தா யா ஸ்வாதந்த்ர்யஸ்வதாமதி:

மே நேத்யேவம் ஸமீசீந புத்தயா ஸாத்ர நிவார்யதே
நாஹம் மம ஸ்வதந்த்ரோஹம் நாஸ்மீத்யஸ்யார்த்த உச்யதே

ந மே தேஹாதிகம் வஸ்து ஸ சேஷ: பரமாத்மந:
இதி புத்தயா நிவர்த்தந்தே தாஸ்தா: ஸ்வீயா மநீஷிகா:

அநாதிவாஸநாஜாதை: போதைஸ்தைஸ்தைர் விகல்பிதை:
ரூஷிதம் யத்த்ருடம் தத்தத் ஸ்வாதந்த்ர்ய ஸ்வத்வ தீமயம்

தத்தத்வைஷ்ணவ ஸார்வாத்ம்ய ப்ரதிபோத ஸமுத்தயா
நம இத்யேதயா வாசா நந்த்ரா ஸ்வஸ்மாதபோஹ்யதே

**விளக்கம் -**

- பூர்ணமங்கைரூபாங்கைச்ச நமநம் தே ப்ரகீர்த்திதம் ஸ்தூலோயம் நமஸாஸ்த்வர்த்த: ஸூக்ஷ்மமந்யம் நிசாமய – இவ்விதம் அங்கங்கள் மற்றும் அவற்றுக்கான விரோதிகளைச் செய்யாமல் உள்ளதான உபாயங்கள் ஆகியவற்றுடன் கூடிய சரணாகதி உனக்குக் கூறப்பட்டது. இதுவே "நம:"

என்பதன் ஸ்தூலமான பொருளாகும். அடுத்து இதன் ஸூக்ஷ்மமான பொருளைக் குறித்துக் கேட்பாயாக.

- சேதநஸ்ய யதா ஸ்வஸ்மிந் ஸ்வீயே ச வஸ்துநி மம இத்யக்ஷர த்வந்த்வம் ததா மம்யஸ்ய வாசகம் – ஒரு சேதநன் எப்போது தன்னையும், தன்னைச் சேர்ந்தவற்றையும் "எனது" என்று எண்ணுகிறானோ அப்போது "மம" என்ற இரண்டு எழுத்துக்களும் மமகாரத்தைக் குறிக்கும்.

- அநாதிவாஸநாரூட மித்யாஜ்ஞாந நிபந்தநா ஆத்மாத்மீய பதார்த்தஸ்தா யா ஸ்வாதந்த்ர்யஸ்வதாமதி: மே நேத்யேவம் ஸமீசீந புத்தயா ஸாத்ர நிவார்யதே - தன்னைக் குறித்து, தன்னுடைய உடைமைகள் குறித்தும் "நான் சுதந்திரமானவன், இந்தப் பொருள்கள் என்னுடையவை" என்னும் எண்ணம் எல்லையற்ற காலமாகத் தொடர்ந்து வரும் அறியாமையால் உண்டாகிறது. இந்த எண்ணமானது "மே ந" என்னும் ஞானத்தால் விலக்கப்படுகிறது.

- நாஹம் மம ஸ்வதந்த்ரோஹம் நாஸ்மீத்யஸ்யார்த்த உச்யதே – "மே ந" என்பதற்கு நான் சுதந்திரமானவன் அல்லன், நான் எனக்கு அடிமை அல்லன் என்று பொருள்.

- ந மே தேஹாதிகம் வஸ்து ஸ சேஷ: பரமாத்மந: இதி புத்தயா நிவர்த்தந்தே தாஸ்தா: ஸ்வீயா மதீஷிகா: - "சரீரம் முதலானவை என்னுடையது அல்ல, அவை பரமாத்மாவுக்கு வசப்பட்டவை" என்னும் எண்ணம் காரணமாகவே "என்னுடையது" என்பதான அந்த எண்ணங்கள் நீக்கப்படுகின்றன.

- அநாதிவாஸநாஜாதை: போதைஸ்தைஸ்தைர் விகல்பிதை: ரூஷிதம் யத்த்ருடம் தத்தத் ஸ்வாதந்த்ர்ய ஸ்வத்வ தீமயம் – "நான் சுதந்திரமானவன், இவை அனைத்தும் என்னுடையவை" என்னும் எண்ணங்கள் எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள எண்ணற்ற தீய வாஸனைகளால் வஸ்துக்களின் உண்மையான ஸ்வரூபத்துக்கு விரோதமாக உள்ள வேறுபட்ட எண்ணங்களால் உண்டாகிறது.

- தத்தத்வைஷ்ணவ ஸார்வாத்ம்ய ப்ரதிபோத ஸமுத்தயா நம இத்யேதயா வாசா நந்த்ரா ஸ்வஸ்மாதபோஹ்யதே – மேலே கூறிய எண்ணங்கள் “ஸர்வேச்வரன் அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ளான்” என்னும் நல்ல அறிவுடன் “நம:” என்னும் பதம் கொண்டு ப்ரபத்தி பண்ணுகிறவனிடம் தன்னாலே விலகுகிறது.

**மூலம் –**

இதி தே ஸூக்ஷ்ம உத்திஷ்ட: பரமந்யம் நிசாமய
மந்தா நகார உத்திஷ்டோ ம: ப்ரதாந உதீர்யதே

விஸர்க: பரமேசஸ்து தத்ரார்த்தேயம் நிருச்யதே
அநாதி: பரமேசோ ய: சக்திமாந் புருஷோத்தம:

தத்ப்ராப்தயே ப்ரதாநோயம் மந்தா நமந நாமவாந்
இதி தே த்ரிவிதி: ப்ரோக்தோ நம: சப்தார்த்த ஈத்ருச:

**விளக்கம் –**

- இதி தே ஸூக்ஷ்ம உத்திஷ்ட: பரமந்யம் நிசாமய மந்தா நகார உத்திஷ்டோ ம: ப்ரதாந உதீர்யதே விஸர்க: பரமேசஸ்து தத்ரார்த்தேயம் நிருச்யதே – இப்படியாக ஸூக்ஷ்மம் என்னும் பொருள் கூறப்பட்டது. “பரம்” என்னும் அடுத்த பொருளைக் கேட்பாயாக. “ந” என்பது உபாயத்தையும், “ம” என்பது முக்கியமானது என்பதையும், விஸர்க்கம் (:) என்பது ஸர்வேச்ரவனையும் குறிக்கும்.

- அநாதி: பரமேசோ ய: சக்திமாந் புருஷோத்தம: தத்ப்ராப்தயே ப்ரதாநோயம் மந்தா நமந நாமவாந் இதி தே த்ரிவிதி: ப்ரோக்தோ நம: சப்தார்த்த ஈத்ருச: - எப்போதும் உள்ளவனாய் மிகவும் உயர்ந்த ஸர்வேச்வரனாய், சர்க்தி நிறைந்தவனாய் உள்ள புருஷோத்தமனை அடைவதற்கு “நமநம் (சரணாகதி)” என்பதே முக்கியமான உபாயம் ஆகும். இவ்விதம் “நம:” என்பதன் மூன்றுவிதமான அர்த்தங்கள் உனக்குக் கூறப்பட்டன.

**மூலம்** – இவ்விடத்தில், "நந்தவ்ய: பரம: சேஷீ" என்கையாலே நமஸ்ஸுக்குப் பரமசேஷியே ப்ரதிஸம்பந்தியென்னுமிடம் ஸ்வத: ப்ராப்தம். பரமசேஷி இன்னாரென்று தெளிகைக்காக விசேஷ நாமதேயம். இங்கு "அசாஸ்த்ரீயோபஸேவா து தத்விகாத உதீர்யதே" என்றும், "தத்வியாகாதோ நிராக்ருதி:" என்றும் சொன்ன வசநங்களுக்குப் ப்ரபத்தி காலத்தில் புத்திபூர்வ ப்ராதிகூல்யம் நடக்குமாகில் ஆநுகூல்ய ஸங்கல்பமும் ப்ரதிகூல்யத்தில் அபிஸந்தி விராமாதிகளும் இல்லையாயிற்றாமென்று தாத்பர்யம். ப்ரபத்த்யுத்தர காலத்தில் புத்திபூர்வ ப்ராதிகூல்யம் நடந்ததாகில் இவன் ருசியோடு பொருந்தின ஸ்வதந்த்ர்ய பகவதாஜ்ஞைக்கு விருத்தமாம்.

**விளக்கம்** – இங்கு அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் (52-7) - நந்தவ்ய: பரம: சேஷீ – வணங்கப்படுபவனே உயர்ந்தவன் என்றும், சேஷி என்றும் கூறப்படுகிறான் – என்று கூறுவதால், "நம:" என்பதற்குத் தொடர்புடையவன் அந்த உயர்ந்த எஜமானனே என்பது பொருத்தமாகவும் உறுதியாகவும் உள்ளது. அப்படிப்பட்ட உயர்ந்த எஜமானன் யார் என்று உணர்த்துவதற்காகவே அவனுடைய திருநாமங்கள் கூறப்படுகின்றன. மேலே கூறப்பட்ட அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை வரிகளில், அசாஸ்த்ரீயோபஸேவா து தத்விகாத உதீர்யதே – சாஸ்த்ரங்களில் தள்ளப்பட்டவற்றைச் செய்தல் இதற்கு விரோதமானது – என்றும், தத்வியாகாதோ நிராக்ருதி: - மற்ற உயிர்களுக்குக் கெடுதல் செய்தல் இதற்கு விரோதமானது என்றும் கூறப்பட்டது. இந்த வரிகளால் உணர்த்தப்படுவது என்ன? அதாவது ப்ரபத்தி செய்யும் நேரத்தில் அவனுக்கு விருப்பம் அல்லாதவற்றை அறிந்துகொண்டு செய்தால், "அவனுக்கு விருப்பமானவற்றைச் செய்தல், அவனுக்கு விருப்பம் அல்லாதவற்றைச் செய்யாமல் இருத்தல்" என்பதான எண்ணம் அடியுடன் இல்லை என்று கருத்து என்பதை விளக்குவதாகவே அந்த வரிகள் உள்ளன. ப்ரபத்திக்குப் பின்னர் ஸர்வேச்வரனுக்கு விருப்பம் அல்லாதவற்றைச் செய்தால், இவன் ப்ரபத்தி செய்யும்போது எந்த ஒரு பகவானின் ஆணைகளை விருப்பத்துடன் ஏற்றானோ, அதற்கு மாறாக நடப்பவன் ஆகிறான்.

**மூலம்** – இங்கு ஸ்தூலமான அர்த்தமாவது வ்யாகரணத்தைத் துவக்கி வருகிற ஸ்புட வ்யுத்பத்தியாலே தோற்றுமது. ஸூக்ஷ்மமாவது வர்ணஸாம்யாதிகளைக் கொண்டிழிகிற நிருக்தபலத்தாலே தோற்றுமது. பரமாவது ரஹஸ்ய சாஸ்த்ரங்களில் சொல்லுகிற அக்ஷர நிகண்டு ப்ரக்ரியையாலே தோற்றுமது.

**விளக்கம்** – மேலே கூறப்பட்ட அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை வரிகளின் ஸ்தூலமான பொருளானது (மேலோட்டமான பொருள் எனலாம்), இலக்கண ரீதியில் ஆராயப்படும் தெளிவான பகுதி மற்றும் விகுதிகளால் அறியப்படுவதாகும் (இதனால் ஸர்வேச்வரனைக் குறித்து தான் தாழ்ந்து நின்று வணங்குதல், ப்ரபத்தியை அதன் அங்கங்களுடன் இயற்றுதல் என்பது தேறும்). அந்த வரிகளின் ஸூக்ஷ்ம பொருளானது (மறைந்துள்ள பொருள் எனலாம்), எழுத்துக்களுடைய ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டுள்ள நிருக்தம் மூலம் அறியப்படுவதாகும் (இதனால் "நானும், எனக்குரியது என்று எண்ணப்படுபவையும் எனக்கு உரியவை அல்ல" என்பதும், "எனக்குச் சுதந்திரம் இல்லை" என்பதும் தேறும்). அந்த வரிகளின் மிகவும் உயர்ந்த பொருளானது இரகசியமான சாஸ்த்ரங்களில் கூறப்படும் பதங்களுடைய பொருள் மூலம் அறியப்படுவதாகும் (இதனால் ஸாத்தோபாயமான ப்ரபத்தி மூலம் அடையப்படும் பலன் ஸித்தோபாயமான ஸர்வேச்வரன் என்பது தேறும்).

**மூலம்** - இதில் முற்பட சேஷபூதனுக்கு ஸ்வத:ப்ராப்த வ்ருத்தியும் ஸாங்கந்யாஸரூபமான ஸாத்யோபாய சரீரமும் வகுத்தது. அநந்தரம் மோக்ஷோபாயாதிகாரிக்கு அவச்யாபேக்ஷிதமான நிரபேக்ஷ ஸ்வாதந்த்ர்யாதி நிவ்ருத்தி பூர்வக ஸ்வரூப சோதநம் பண்ணிற்று. பின்பு ஸாத்யோபாய விசேஷத்தாலே வசீகார்யமுமாய்ப் ப்ராப்யமுமாயிருக்கிற ஸித்தமிருக்கும்படியைச் சொல்லிற்று. உபாயாந்தரங்களிற் காட்டில் ஸமர்ப்பணத்தினுடைய ப்ரதாநோபாயத்வம் சொல்லிற்றாகவுமாம். இவையெல்லாம் மேற்சொல்லப் புகுகிற வாக்யார்த்தங்களிலே யதாஸம்பவம் அநுஸந்தித்துக் கொள்வது.

**விளக்கம்** – இப்படியாக உள்ள மூன்றுவிதமான அர்த்தங்களில் முதலாவதான ஸ்தூல அர்த்தத்தில், ஸர்வேச்வரனுக்கு அடிமையாக உள்ள ஜீவாத்மாவின் இயல்பாக உள்ள வணங்குதலும், அந்த வணங்குதல் என்பதன் செய்கையான ஸாத்யோபாயத்தின் அமைப்பும் கூறப்பட்டது. அடுத்து இரண்டாவதாக உள்ள ஸூக்ஷ்ம அர்த்தத்தில், மோக்ஷத்தை விரும்பும் முமுக்ஷுவுக்கு அவசியம் இருக்கவேண்டியதான "எந்தச் சூழலிலும் சுதந்திரமானவன் அல்லன்" என்பதான ஸ்வரூபத்தின் நிலையை உணர்த்தியது. அடுத்து மூன்றாவதான அர்த்தத்தில் அடையப்படவேண்டிய இலக்காகவும், குறிப்பிட்ட உபாயம் மூலம் மட்டுமே அடையப்படக்கூடியவனும் ஆகிய ஸித்தோபாயமான ஸர்வேச்வரனுடைய ஸ்வபாவம் கூறப்பட்டது. அல்லது மற்ற அனைத்து உபாயங்களைக்

காட்டிலும் சரணாகதி என்பதன் முதன்மை கூறப்பட்டது எனலாம். இவை அனைத்தையும் மேலே கூறப்படவுள்ள பத்துவிதமான யோசனைகளில் ஆங்காங்கு எவ்விதம் இயலுமோ அவ்விதம் கொள்க.

**மூலம் –**

ஏவம் சிக்ஷித நாநார்த்த நம: சப்த ஸமந்விதா:
ஸர்வே கரணதாம் யாந்தி மந்த்ரா: ஸ்வாத்மஸமர்ப்பணே

ஜீவஸாமாந்ய முகத: ச்ருங்க க்ராஹிகயாபி வா
மகாரௌ தார நமஸோ: ஸ்வாநுஸந்தாநதாவிஹ

இஹ யா ஸ்வாநுஸந்தாந ப்ரக்ரியைகஸ்ய தர்சிதா
அந்யேஷாமபி தத்ஸாம்யாத் நாந்யோந்யசரணா இமே

**பொருள் –**

- ஏவம் சிக்ஷித நாநார்த்த நம: சப்த ஸமந்விதா: ஸர்வே கரணதாம் யாந்தி மந்த்ரா: ஸ்வாத்மஸமர்ப்பணே – இப்படியாக “நம:” என்பதுடன் இணைக்கப்பட்டதான பல்வேறு அர்த்தங்கள் கொண்ட அனைத்து மந்த்ரங்களும், தன்னுடைய ஆத்மாவைச் சமர்ப்பிக்கும்போது செயல்படக்கூடிய மந்த்ரங்களாக உள்ளன.

- ஜீவஸாமாந்ய முகத: ச்ருங்க க்ராஹிகயாபி வா மகாரௌ தார நமஸோ: ஸ்வாநுஸந்தாநதாவிஹ – இந்த மூல மந்த்ரத்தில் ப்ரணவம் மற்றும் “நம:” ஆகிய இரண்டிலும் உள்ள “ம” என்னும் எழுத்து பொதுவாக ஜீவாத்மாவைக் கூறுவதன் மூலமாகவாவது அல்லது நேராகக் கொம்பைப் பிடித்தல் என்னும் நியாயம் காரணமாகவாவது (அஹம் என்பதால்), தன்னுடைய ஆத்ம ஸ்வரூபத்தைக் குறித்து எப்போதும் சிந்திப்பதை வெளிப்படுத்துவதாக உள்ளன.

- இஹ யா ஸ்வாநுஸந்தாந ப்ரக்ரியைகஸ்ய தர்சிதா அந்யேஷாமபி தத்ஸாம்யாத் நாந்யோந்யசரணா இமே – மூலமந்த்ரத்தில் எந்த ஒரு ஜீவனுக்கு தன்னுடைய ஸ்வரூபத்தை எண்ணவேண்டிய வகை உரைக்கப்பட்டதோ, மற்ற ஜீவாத்மாக்களுக்கும் அதே எண்ணவேண்டிய வகை ஒத்ததாக உள்ளதால், ஜீவாத்மாக்கள் ஒருவருக்கு ஒருவர் ரக்ஷகர் அல்லர்.

**மூலம்** –

அத: ஸ்வபரரக்ஷாயாம் பராதீநேஷு ஜந்துஷு
நிரபேக்ஷ சரண்யத்வம் நியதம் கமலாபதௌ

**பொருள்** – ஆகவே தன்னையும் மற்றவர்களையும் காப்பாற்றுதல் என்னும் செயலில், ஜீவாத்மாக்கள் மற்றவர்களுடைய உதவியை எதிர்பார்த்தபடி உள்ளதால், "யாரையும் எதிர்பாராமல் காப்பாற்றும் திறன்" என்பது ஸ்ரீமந்நாராயணனிடம் வசப்பட்டுள்ளது.

## நாராயண என்னும் பதத்தின் விளக்கம்

### நாராயண என்பது ப்ரணவத்தில் உள்ள "அ" என்பதன் விளக்கம் ஆதல் மற்றும் எஜமானன் அடிமை என்னும் தொடர்பை உணர்த்துதல்

**மூலம்** – இங்கு சப்தமாகவாதல் அர்த்தமாகவாதல் நமஸ்ஸிலே தோற்றின சரணாகதியாகிற ஸாத்யோபாயத்தாலே ப்ரஸாதநீயனாய் மேலில் சதுர்த்தியில் விவக்ஷிதமான கைங்கர்யத்துக்கு ப்ரதி ஸம்பந்தியுமாய் ஸர்வரக்ஷகனாகவும் ஸர்வசேஷியாகவும் ப்ரதமாக்ஷரத்தில் ப்ரதிபந்நனான நிரபேக்ஷ சரண்யனுடைய படியை வெளியிடுகிறது. யோகரூடமான நாராயணசப்தம் சுருங்கச் சொன்ன அர்த்தம் தன்னையே அஜ்ஞாந ஸம்சய விபர்யயங்கள் கழியும்படி முகாந்தரத்தாலே தெளிவிக்கை விவரணம். இஸ்ஸங்க்ரஹ விவரண பாவம் ப்ரதமாக்ஷரம் முதலாக யதாஸம்பவம் கண்டு கொள்வது.

**விளக்கம் –** திருமந்த்ரத்தில் உள்ள "நாராயண" என்னும் பதமானது அதன் பொருள் மற்றும் ஒலி ஆகிய இரண்டின் மூலமும், ப்ரணவத்தின் முதல் எழுத்தாகிய "அ" என்பதன் மூலம் உணர்த்தப்பட்ட கருத்தான அனைத்திற்கும் ரக்ஷகன் மற்றும் அனைத்திற்கும் எஜமானன் என்பதை விவரிக்கிறது. அவனுடைய கருணை என்பது சரணாகதி எனப்படும் ஸாத்யோபாயத்தால் கிட்டுகிறது என்னும் கருத்து, "நம:" என்பதன் மூலம் உணர்த்தப்படுகிறது. "நாராயணாய" என்பதில் காணப்படும் "ஆய" என்னும் நான்காம் வேற்றுமை மூலம், அவன் சரணாகதி செய்த ப்ரபந்நனுடைய கைங்கர்யங்களைப் பெறுகிறான் என்பது மறைமுகமாக உணர்த்தப்படுகிறது. விவரணம் என்பது முன்பே கூறப்பட்ட ஒன்றைக் குறித்து, எந்தவிதமான ஐயமும் இல்லாமல் உணர்த்தும்விதமாக, மீண்டும் விளக்குவதாகும். இதனை "நாராயண" என்பதில் காணலாம்; அதாவது "அ" என்னும் எழுத்தின் மூலம் தெரிவிக்கப்படும் அனைத்திற்கும் எஜமானன் மற்றும் ரக்ஷகன் என்னும் கருத்தானது "நாராயண" என்பதால் விளக்கப்படுகிறது (குறிப்பு: யோகரூடம் என்பது இரண்டுவிதமாகப் பொருள் தரும்படியான அமைப்பாகும். இங்கு நாராயண என்னும் பதம், பெயர் என்று கொண்டால் மஹாவிஷ்ணுவையும், அதன் அர்த்தத்தைக் கொண்டால் அனைவருக்கும் ஆதாரமாக உள்ளதையும் குறிக்கும்).

**மூலம்** – இந்நாராயணசப்தம் சேஷ சேஷி தத்த்வங்கள் இரண்டையும் வெளியாகக் காட்டுகிற உபகாராதிசயத்தாலே விஷ்ணுகாயத்ரியிலும் திருநாராயணீயத்திலே நாமநிர்வசநம் பண்ணுகிறவிடத்திலும் மற்றுமுள்ள வ்யாபகநாமங்களுக்கும் முன்னே படிக்கப்பட்டது. ஸர்வ பரவித்யோபாஸ்ய விசேஷநிர்ணயம் பண்ணுகிற நாராயணாநுவாகம் பரதத்வமாக சங்கிதரான ப்ரஹ்மசிவாதிகளெல்லாம் ஸாமாநாதிகரண்யத்தாலே அங்குச் சொன்ன விச்வம்போலே விபூதியானார்களென்றும், இவர்களும் நாரசப்தார்த்தமென்றும் தெளிவிக்கைகாக இந்நாராயணசப்தத்தைப் பலகாலும் ஆதாரம் தோற்ற ஆவர்த்தித்தது.

**விளக்கம்** – "எஜமானன் – சேவகன்" என்னும் தொடர்பை விளக்குவதற்குப் பெரிதும் உதவக்கூடியதான "நாராயண" என்னும் திருநாமமானது, பகவானின் வ்யாபகநாமங்களை (வ்யாபகநாமங்கள் = நாராயணன், வாஸுதேவன், விஷ்ணு) விவரிக்கும் பகுதிகள் கொண்டதான விஷ்ணுகாயத்ரியிலும் (விஷ்ணுகாயத்ரி = நாராயணோபநிஷத்தில் வருவதான - நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி தந்நோ விஷ்ணு:

ப்ரசோதயாத்), திருநாராயணீயத்திலும் (திருநாராயணீயம் = மஹாபாரதம் சாந்திபர்வம் மோக்ஷதர்மம் – நாராயணமயநம் க்யாதோ ஹ்யஹமேகஸ்ஸநாதந: ஆபோ நாரா இதி ப்ரோக்தா ஆபோ வை நரஸூநவ: அயநம் மம தா: பூர்வம் தேந நாராயண: அஸ்மி அஹம் – ஒருவனாகவும் நித்யனாகவும் உள்ள நான் நாரங்களுக்கு எல்லாம் இருப்பிடம் ஆவேன் என்று போற்றப்படுகிறேன். ஜலங்களே நாரங்கள் எனப்படுகின்றன. அந்த ஜலங்கள் விஷ்ணுவிடமிருந்து தோன்றிய தத்துவங்களாகும். அந்தத் தத்துவங்கள் எனக்கு முன்பு இருப்பிடமாக இருந்த காரணத்தால் நான் நாராயணன் எனப்படுகிறேன்) முதன்மையான இடத்தில் வருவதாகும். நாராயணாநுவாகத்தில் (தைத்திரீய உபநிஷத்தில் "ஸஹஸ்ரசீர்ஷா தேவம்" என்று தொடங்கும் அநுவாகம்) ப்ரஹ்மவித்யைகளை விதிக்கும் உபநிஷத் வாக்கியங்களில் கூறப்படும் உபாஸனை தேவதை யார் என்று தீர்மானிக்கும் பகுதி உள்ளது; அந்த உபநிஷத் வாக்கியங்கள் பலவற்றிலும் ப்ரம்மா, சிவன் முதலானவர்களுடைய பெயர்கள் பல இடங்களில் வந்த காரணத்தால், அவர்கள்தான் உபாஸனை தேவதையோ என்று ஐயம் எழலாம்; ஆனால் அங்கு அவர்கள் பெயரைக் காட்டிலும் நாராயணன் என்னும் திருநாமம் பலமுறை வருவதன் மூலம், அவர்கள் அனைவரும் இந்த உலகங்களைப் போன்று, ஸர்வேச்வரனாகிய நாராயணனுடைய விபூதிகளே (செல்வங்கள்) என்று உணர்த்தப்படுகிறது. மேலும் அங்கு "ப்ரஹ்மா: நாராயண:, சிவ: நாராயண:, இந்த்ர நாராயண:" என்று ஒரே முதல் வேற்றுமையில் அவர்களை உரைத்து, இவர்களை நாராயணன் தனது சரீரமாகக் கொண்டுள்ளான் என்றும் உணர்த்தப்பட்டது.

## நாராயண சப்தத்தின் பெருமை

**மூலம்** – இச் சப்தத்தின் ப்ரபாவம் "ஸங்கீர்த்ய நாராயண சப்தமாத்ரம்", "நாராயணோதி யஸ்யாஸ்யே", "நாராயணோதி சப்தோஸ்தி" இத்யாதிகளிலும், ஆழ்வார்களுடைய "குலம் தரும் செல்வம் தந்திடும்", "நாரணன் தம் அன்னை நரகம் புகாள்" இத்யாதிகளான பாசுரங்களிலும் ப்ரஸித்தம். நாரதீயகல்பத்திலும்

ரோகாபத்பய துக்கேப்யோ முச்யந்தே நாத்ர ஸம்சய:
அபி நாராயணேத்யேதத் சப்தமாத்ர ப்ரலாபிந:

என்றும் சொல்லப்பட்டது. இது தன்னையே ஸ்வரவ்யஞ்ஜந பேதத்தாலே எட்டுத் திருவக்ஷரமாக பாவிக்கத் திருமந்த்ரத்தோடு ஒக்குமென்று ப்ராணாந்த்ரரோக்தம்.

**விளக்கம்** – "நாராயண" என்னும் பதத்தின் மேன்மையானது பின்வரும் பல வரிகளில் கூறப்பட்டுள்ளதைக் காண்க:

- ஸங்கீர்த்ய நாராயண சப்தமாத்ரம் விமுக்த துக்கா: ஸுகிநோ பவந்தி – "நாராயணா" என்ற திருநாமத்தை மட்டுமே உச்சரித்தால் போதுமானது, அவர்கள் தங்களுடைய துக்கங்கள் நீங்கி இன்பம் அடைவர்.
- நாராயணோதி யஸ்யாஸ்யே – கன்றைப் பசு பின் தொடர்வது போன்று, – "நாராயணா" என்ற திருநாமத்தை உச்சரிப்பவனை நாராயணன் எப்போதும் பின் தொடர்கிறான்.
- நாராயணோதி சப்தோஸ்தி – நாராயணன் என்னும் திருநாமம் உள்ளது (அப்படி உள்ளபோதும் அதனை உச்சரிக்காமல் நரகத்தில் வீழ்கிறார்களே!)
- பெரிய திருமொழி (1-1-9) - குலம் தரும் செல்வம் தந்திடும் – (நாராயணன் என்னும் திருநாமம்) ஸ்ரீவைஷ்ணவ குலப் பிறப்பையும், கைங்கர்யம் என்னும் செல்வத்தையும் அளிக்கும்
- பெரியாழ்வார் திருமொழி (4-6-1 முதல் 4-6-9 முடிய) - நாரணன் தம் அன்னை நரகம் புகாள் – "நாராயணன்" என்று தனது புத்திரனுக்குப் பெயரிட்ட தாய் ஒருவள் நரகம் செல்லமாட்டாள்.
- நாரதீயகல்பம் (1-26) - ரோகாபத்பய துக்கேப்யோ முச்யந்தே நாத்ர ஸம்சய: அபி நாராயணேத்யேதத் சப்தமாத்ர ப்ரலாபிந: - "நாராயண" என்னும் ஒரு சொல்லை மட்டுமே உச்சரிப்பவர்கள் நோய், ஆபத்து, பயம் துக்கம் ஆகிய அனைத்திலிருந்தும் விடுபடுகிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

“நாராயண” என்னும் திருநாமத்தை உயிரெழுத்து மற்றும் மெய்யெழுத்து என்று பிரித்தால் எட்டு எழுத்துக்கள் உள்ளதைக் காணலாம் (நா – ந் + ஆ, ரா – ர் + ஆ, ய – ய் + அ, ண – ண் + அ). இதனால் இந்தப் பதம் அஷ்டாக்ஷர மந்த்ரத்தோடு ஒத்துப் போகிறது என்று கொள்க.

## நாராயண சப்தத்திற்குப் பஹுவ்ரீஹி, தத்புருஷ ஸமாஸங்கள் மூலம் உண்டாகும் விளக்கம்

**குறிப்பு:** நாராயண என்னும் பதம் “நார” மற்றும் “அயநம்” என்னும் இரண்டு பதங்கள் சேர்ந்து உண்டாகும் பதமாகும். இதனை “நாராணாம் + அயநம்” என்றும், “நாரா: + அயநம்” என்றும் இரண்டுவிதமாகப் பிரிக்கலாம். இவற்றில் “நாராணாம் + அயநம்” என்று பிரிப்பது தத்புருஷ ஸமாஸம் எனப்படும்; இது தமிழ் இலக்கணத்தில் வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும்; இதன் பொருள் “நாரங்களுக்கு இருப்பிடமாக உள்ளவன்” என்பதாகும். “நாரா: + அயநம்” என்று பிரிப்பது பஹுவ்ரீஹி ஸமாஸம் எனப்படும்; இது தமிழ் இலக்கணத்தில் அன்மொழித்தொகை எனப்படும்; இதன் பொருள் “நாரங்களை இருப்பிடமாக உடையவன்” என்பதாகும்.

**மூலம்** – ஈச்வரனோடு ப்ருதக்ஸித்தங்களல்லாத நாரங்களுக்கு “நாரா: அயநம் யஸ்ய” என்றும், “நாராணாமயநம்” என்றும் நிஷ்கர்ஷவிவக்ஷையாலே வையதிகரண்யம் உண்டாயிற்று. இச்சப்தத்துக்கு நம்மாழ்வார் “எண்பெருக்கு அந்நலத்து ஒண்பொருள் ஈறில வண் புகழ் நாரணன்” என்றும், “நாரணன் மூவேழுலகுக்கும் நாதன்” என்றும் பூர்வாபரங்களிலே ஸமாஸத்வயத்தில் அர்த்தத்தைப் ப்ரதர்சிப்பித்தார். இதிலே ஹேயப்ரத்யநீகத்வ கல்யாணைகதாநத்வ ரூபமான உபயலிங்கத்வமும் உபயவிபூதியோகமும் கர்ப்பிதம். தேவீ பூஷண ஆயுத பரிஜந பரிச்சத த்வாரபால பார்ஷதாதி பேதங்களும் இங்கே அநுஸந்தேயங்கள்.

**விளக்கம்** – ஸர்வேச்வரனோடு வேறுபட்டு அல்லாமல் (பிரிந்து அல்லாமல்) நிற்க இயலாத நாரங்கள் எனப்படும் சேதன அசேதனங்கள், “நாராயண” என்னும் பதமானது

“நாரா: அயநம் யஸ்ய – யாருக்கு இருப்பிடம் நாரங்களோ, அவன்” என்றும், “நாராணாமயநம் = நாரங்களுக்கு இருப்பிடமாக உள்ளவன்” என்றும் இரண்டுவிதமாக பொருள் அளிப்பது கொண்டு, தனித்திருப்பது போன்று தோன்றுகிறது. இவ்விதம் இந்தப் பதம் இரண்டாகப் பிரிந்து, இருவிதமான பொருள்களை அளிப்பதை நம்மாழ்வார் திருவாய்மொழியின் தொடக்கத்திலும், இறுதியிலும் பின்வருமாறு அருளிச்செய்தார்:

- திருவாய்மொழி (1-2-10) - எண்பெருக்கு அந்நலத்து ஒண்பொருள் ஈறில வண் புகழ் நாரணன் – எண்ணற்றவர்களும், ஞானம் ஆனந்தம் முதலான குணங்கள் உள்ளவர்களும் ஆகிய ஜீவாத்மாக்கள், அசேதநங்கள், அளவற்ற திருக்கல்யாண குணங்கள் ஆகியவற்றைத் தனது அடிமையாகக் கொண்டவன்.

- திருவாய்மொழி (2-7-3) - நாரணன் மூவேழுலகுக்கும் நாதன் – ஏழு லோகங்களுக்கும் நாராயணன் நாதன் ஆவான்.

இவ்விதம் உரைக்கையில் - தோஷம் அற்றவை மற்றும் உயர்ந்த தன்மைகளுடன் கூடியவை என்னும் இருவிதமான அடையாளங்களுடன் உள்ள தன்மை, லீலாவிபூதி மற்றும் நித்யவிபூதி ஆகிய இரண்டுடன் உள்ள தன்மை ஆகிய இரண்டும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இங்கு நாரங்கள் என்பதில் தேவிமார்கள், ஆபரணங்கள், ஆயுதங்கள், வேலையாட்கள், குடை, சாமரம், பாதுகை, படைத்தலைவர்கள் போன்ற பலதும் அடங்கும்.

காரணத்வமபாத்யத்வம் உபாயத்வமுபேயதா
இதி சரீரகஸ்தாப்யம் இஹ சாபி வ்யவஸ்திதம்

**பொருள்** – ஜகத்காரணமாக இருத்தல், இவ்விதம் உள்ளதற்கு எந்தவிதமான முரணான ப்ரமாணங்கள் கொண்டு தடை கூற இயலாமல் இருத்தல், உபாயமாக இருத்தல், பலனாக இருத்தல் போன்று வேதாந்தங்களில் கூறப்படும் பலவிதமான அர்த்தங்கள் “நாராயணன்” என்னும் பதத்திலும் நிரூபிக்கப்பட்டுள்ளன.

**மூலம்** – இதெல்லாம் "ஜ்ஞாநாநந்தாமலத்வாதி" என்று தொடங்கி பட்டர் நித்யத்திலே ப்ரதிபாதிதம்.

**விளக்கம்** – இவை அனைத்து பட்டர் தன்னுடைய நித்யம் என்னும் நூலில் "ஞானம், ஆனந்தம், தூய்மை முதலானவை" என்று தொடங்கி விளக்கியுள்ளார்.

**மூலம்** – இவ்விடத்தில், "ஸ்ருஷ்ட்வா நாரம் தோயமந்த: ஸ்திதோஹம் யேந ஸ்யாந்மே நாம நாராயணோதி", "ஆபோ நாரா இதி ப்ரோக்தா ஆபோ வை நரஸூநவ: தா யதஸ்யாயநம் பூர்வம் தேந நாராயண: ஸ்ம்ருத:" இத்யாதிகளிலே அப்புக்களையெடுத்தது தத்வாந்தரங்களுக்கு உபலக்ஷணம் என்னுமிடம்

நராஜ்ஜாதாநி தத்த்வாநி நாராணீதி ததோ விது:
தாந்யேவ சாயநம் தஸ்யே தேந நாராயண: ஸ்ம்ருத:

இத்யாதிகளாலே ஸித்தம். இந்த பஹுவ்ரீஹி ஸமாஸமான நிர்வசநத்தில் "நராஜ்ஜாதாநி தத்த்வாநி" என்று நார சப்தார்த்தம் சொல்லுகையாலே மஹோபநிஷத் ப்ரப்ருதிகளிற் சொல்லுகிறபடியே ப்ரஹ்மேசாநாதி ஸர்வத்தையும் பற்ற நாராயணனுடைய ஸர்வவித காரணத்வமும், அயந சப்தார்த்தத்தில் "ஈயத இத்யயநம்" என்கிற கர்ம வ்யுத்பத்தியாலே இவற்றை வ்யாப்யமாக உடையவனுடைய ஸர்வவ்யாப்யகத்வமும், அதுக்கு உபயுக்தமான நிரதிசய ஸூக்ஷ்மத்வமும் சொல்லிற்றாயிற்று. இப்பொருள்கள் "ஈயதே அஸ்மிந்" என்கிற அதிகரண வ்யுத்பத்தியிலும் வரும்.

நாராணாமயநத்வாச்ச நாராயண இதி ஸ்ம்ருத:

நாரஸ்த்விதி ஸர்வபும்ஸாம் ஸமூஹ: பரிகீர்த்தித:
கதிராலம்பநம் தஸ்ய தேந நாராயண: ஸ்ம்ருத:

நாரோ நராணாம் ஸங்க்யாத: தஸ்யாஹமயநம் கதி:
தேநாஸ்மி முநிபிர்நித்யம் நாராயண இதீரித:

நாரசப்தேந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதே புதை:
தேஷாமயநபூதத்வாத் நாராயண இஹோச்யதே
தஸ்மாந்நாராயணம் பந்தும் மாதரம் பிதரம் குரும்
நிவாஸம் சரணம் சாஹு: வேதவேதாந்தபாரகா:

**விளக்கம்** – கீழே உள்ள வரிகள் காண்க:

- வராஹபுராணம் (2-12) - ஸ்ருஷ்ட்வா நாரம் தோயமந்த: ஸ்திதோஹம் யேந ஸ்யாந்மே நாம நாராயணோதி – நாரம் எனப்படும் நீரைப் படைத்து அதற்குள் நான் இருந்தேன். ஆகவே எனக்கு நாராயணன் என்னும் பெயர் வந்தது.

- மநுஸ்ம்ருதி (1-10) - ஆபோ நாரா இதி ப்ரோக்தா ஆபோ வை நரஸூநவ: தா யதஸ்யாயநம் பூர்வம் தேந நாராயண: ஸ்ம்ருத: - நீரானது நாரம் எனப்படுகிறது. காரணம் அது நரனிடமிருந்து (நரன் – நாசம் அற்றவன், ஸர்வேச்வரன்) உண்டானதாகும். அது அவனுக்கு முன்னர் இருந்த இடமாக உள்ளதால், அவன் நாராயணன் எனப்படுகிறான்.

இந்த வரிகளில் நீரைக் குறித்து உரைத்தமை என்பது மற்ற தத்துவங்களை முழுவது உரைக்காமல் ஒன்றை மட்டுமே எடுத்துக்காட்டாக உரைப்பதற்காக ஆகும்; இந்தக் கருத்தை, மஹாபாரதம் ஆநுசாநிகபர்வம் (178-7) - நராஜ்ஜாதாநி தத்த்வாநி நாராணீதி ததோ விது: தாந்யேவ சாயநம் தஸ்யே தேந நாராயண: ஸ்ம்ருத: - ப்ருத்வீ முதலான தத்துவங்கள் நரனாகிய ஸர்வேச்வரனிடமிருந்தே உண்டானதாகும்; ஆகவே அவை நாரங்கள் ஆகும்; அவனுக்கு அவையே இருப்பிடமாக உள்ளதால் அவன் நாராயணன் எனப்படுகிறான் – என்பதில் காணலாம் (அதாவது இங்கு பூமியை மட்டும் உரைத்தமை காண்க). இங்கு பஹுவ்ரீஹி மொழித்தொகை விளக்கத்தில், “நராஜ்ஜாதாநி தத்த்வாநி” என்ற இடத்தின் மூலம் “தத்த்வங்கள் நரனிடமிருந்து வெளிப்பட்டன” என்று உணர்த்தப்பட்டதால், அவை நாரங்கள் எனப்படுகின்றன என்பது தெளிவு. இதன் மூலம், மஹாநாராயண உபநிஷத் முதலானவற்றில் கூறப்பட்டபடி (ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாநோ நாபோ நாக்நீஷோமௌ நேமே த்யாவாப்ருதிவீ ந நக்ஷத்ராணி ந ஸூர்யோ ந சந்த்ரமா: – தொடக்கத்தில் நாராயணன் மட்டுமே இருந்தான்;

நான்முகன், சிவன், நீர், அக்னி, சோமன், த்யுலோகம், பூமி, நக்ஷத்ரங்கள், சூரியன், சந்த்ரன் போன்ற எதுவும் இல்லை), நான்முகன் மற்றும் சிவன் போன்ற அனைத்திற்கும் நாராயணனே அனைத்துவிதமான காரணமாக இருந்தான் என்பது மேலும் தெளிவாகிறது. “அயந” என்னும் சப்தம், “ஈயத இத்யயநம்” என்பதன் மூலம் வெளிப்பட்டதாகும். அதாவது எங்கும் வியாபிக்கப்படும் (நிறைதல்) வஸ்துக்களை இந்தப் பதம் கூறுகிறது. இதன் மூலம் அவன் அனைத்திலும் வியாபித்தும், அவை அனைத்தும் அவனால் வியாபிக்கப்பட்டும் உள்ளன என்பதும், இவ்விதம் அனைத்தையும் வியாபித்து நிற்கத் தேவையான மிகவும் நுண்ணியதாக உள்ள தன்மை என்பதும் இங்கு கூறப்பட்டது. இந்தக் கருத்துக்கள் அனைத்தும், “ஈயதே அஸ்மிந்” என்பதால் வெளிப்படும் “அயந” என்பதிலும் தேறும்; இவ்விதம் கொள்ளும்போது அனைத்தும் வியாபித்திருப்பதற்கான ஆதார வஸ்துவை உரைத்தல் என்றாகிறது. நாராயண என்னும் பதத்தை தத்புருஷ மொழித்தொகை அடிப்படையில் “நாராணம் + அயநம்” என்று பிரிக்கலாம்; அதாவது நாரங்களுக்கு இருப்பிடமானவன் என்று பொருள். இவ்விதம் கொண்டால், அந்தப் பதமானது “நாராயணம்” என்று பொதுப்பாலில் இருத்தல் வேண்டும். ஆனால், நிருக்தி (இலக்கணம் எனலாம்) அடிப்படையில், “நாராயண:” என்னும் ஆண்பால் விரோதமாகாது. கீழே உள்ள பல ப்ரமாண வரிகளின் மூலம் இந்தக் கருத்துக்களைக் காணலாம்:

- மஹாபாரதம் உத்யோகபர்வம் (63-32) - நாராணாமயநத்வாச்ச நாராயண இதி ஸ்ம்ருத: - நாரங்களுக்கு ஆதாரமாக உள்ளதால் நாராயணன் எனப்படுகிறான்.

- பாத்மோத்தர புராணம் - நாரஸ்த்விதி ஸர்வபும்ஸாம் ஸமூஹ: பரிகீர்த்தித: கதிராலம்பநம் தஸ்ய தேந நாராயண: ஸ்ம்ருத: - நாரம் என்று அனைத்து ஜீவன்களுடைய கூட்டம் கூறப்படுகிறது. அவை அடையவேண்டியவனாகவும், அவை அடைவதற்கு உபாயமாகவும் உள்ளதால் நாராயணன் எனப்படுகிறான்.

- பாத்மோத்தர புராணம் - நாரோ நராணாம் ஸங்காத: தஸ்யாஹமயநம் கதி: தேநாஸ்மி முநிபிர்நித்யம் நாராயண இதீரித: - நாரம் என்பது நரர்கள் என்னும் ஜீவன்களுடைய கூட்டம் ஆகும். அவற்றுக்கு அடையப்படவேண்டியவனாகவும், அடைவதற்கான உபாயமாகவும் நான் உள்ளதால், முனிவர்களால் எப்போதும் நான் “நாராயணன்” எனப்படுகிறேன்.

- பாத்மோத்தர புராணம் - நாரசப்தேந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதே புதை: தேஷாமயநபூதத்வாத் நாராயண இஹோச்யதே தஸ்மாந்நாராயணம் பந்தும் மாதரம் பிதரம் குரும் நிவாஸம் சரணம் சாஹு: வேதவேதாந்தபாரகா: - நார என்னும் பதம் ஜீவன்களுடைய கூட்டத்தைக் குறிப்பதாக அறிவுள்ளவர்கள் கூறுகிறார்கள். அவற்றுக்கு இருப்பிடமாக உள்ளதால் நாராயணன் எனப்படுகிறான். ஆகவே வேதங்களை நன்றாக அறிந்தவர்கள் நாராயணனை உறவினனாகவும், தாயாகவும், தந்தையாகவும், குருவாகவும், ஆதாரமாகவும், உபாயமாகவும் உரைக்கிறார்கள்.

## "அயநம்" என்னும் பதம் உபாயம், பலன், ஆதாரம் முதலான பொருள்களை உணர்த்துகிறது

**மூலம்** – இங்கு "ரீங்க்ஷயே" என்கிற தாதுவிலே "ர" என்று ஸ்வரூபத்தாலே க்ஷயிஷ்ணுவான அசித்பதார்த்தத்தைச் சொல்லி, அதில் வேறுபட்டு ஸ்வரூப விகார ரஹிதமான சேதநவர்க்கத்தை நகநைகாதி சப்தம் போலே நஸமாஸமான நர சப்தத்தாலே சொல்லி, அதின் ஸமூஹங்களை நாரசப்தத்தாலே சொல்லி, இந்த ஸமூஹங்களுக்கு அயநம் என்கிற இத்தால் ஸ்வாதீந த்ரிவித சேதந அசேதந ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதனானவன் நரசப்தவாச்யரான த்ரிவிதாத்மாக்களுடைய ஸமூஹங்களுக்கும் அபேக்ஷிதஹேதுவுமாய் ஸ்வயம் போக்யதையாலே உபேயமுமாய்,

விஷ்ண்வாதாரம் யதா சைதத் த்ரைலோக்யம் ஸமவஸ்திதம்

யோ லோகத்ரயமாவிச்ய விபர்த்யவ்யய ஈச்வர:

இத்யாதிகளிற்படியே ஆதாரமுமாய் இருக்கிறபடி சொல்லப்பட்டது. எங்ஙனேயென்னில் "இண் கதௌ" என்கிற தாதுவிலே "ஈயதே அநேந" என்று அயநசப்தத்தில் கரண வ்யுத்பத்தியாலே ஈச்வரன் உபாயமாயும், "ஈயதே அஸௌ" என்கிற கர்ம வ்யுத்பத்தியாலே உபேயமாயும், "ஈயதே அஸ்மிந்" என்கிற அதிகரண வ்யுத்பத்தியாலே ஆதாரமாயும்

தோற்றுகிறான். "அய பய கதௌ" என்கிற அயதி தாதுவிலும் இவ் அயநபதம் நிஷ்பந்நமாம். இவ் உபாயத்வோபேயத்வாதிகளுக்கு உபயுக்தமான ஸௌலப்யமும் பரத்வமும் இங்கே ஸித்தம்.

**விளக்கம்** – "ரீங்" என்னும் தாது "அழிதல்" என்பதைக் குறிக்கும். ஆக "ர" என்பது ("நர" என்பதில் உள்ள "ர") ஸ்வரூபத்தால் அழியும் தன்மையைக் கொண்ட அசித்துக்களைக் குறிக்கும். ஆகவே அவற்றிலிருந்து வேறுபட்டதான அழியாத ஸ்வரூபம் கொண்டதான சேதநங்களை "நர" (நர = ந + ர = அழியாத ஸ்வரூபம் கொண்ட) என்பதாலே, சேதனர்கள் அழியாத ஸ்வரூபம் கொண்டவர்கள் என்பதாகிறது. அதாவது "ந" என்னும் ஸமாஸம் கொண்டு "ர" என்பது மறுக்கப்பட்டது. இது எவ்விதம் உள்ளது என்றால் - "க" என்பது அசைதலைக் குறிக்கும், "ந + க = அசையாமல் உள்ளது" என்னும் பொருள்பட "நக" என்பது மலையைக் குறிக்கும்; "ஏக" என்பது ஒன்றைக் குறிக்கும், "ந + ஏக = நைக = ஒன்றல்ல = பல" என்னும் பொருள்பட "நைக" என்பர்; இது போன்றே இங்கும் கொள்க. ஆகவே "நர" என்பது சேதனத்தைக் குறிக்கும், "நார" என்பது அந்த சேதனர்களுடைய கூட்டத்தைக் குறிக்கும். அவைகளின் இருப்பிடம் (அயநம்) நாராயணன் ஆவான். இதன் மூலம் அவன் மூன்றுவிதமான சேதனர்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளவன் என்றும் (மூன்றுவிதம் = பத்தர், முக்தர், நித்யஸூரிகள்), அசேதனங்களையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளவன் என்றும், அவற்றுடைய ஸ்வரூபம்-இருப்பு-செயல் ஆகியவற்றையும் நியமிப்பவன் என்றும் தேறுகிறது. "நர" என்னும் பதம் மூலம் குறிப்பிடப்படும் மூன்றுவகையான சேதனர்களுடைய விருப்பங்களை அவனே நிறைவேற்றுகிறான். அவன் ஆனந்தமயமாக உள்ளதால், அவர்களால் விரும்பப்படும் இலக்காகவும் உள்ளான். மேலும்,

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (2-13-2) - விஷ்ண்வாதாரம் யதா சைதத் த்ரைலோக்யம் ஸமவஸ்திதம் – இந்த மூன்று உலகங்களும் எவ்விதம் மஹாவிஷ்ணுவை ஆதாரமாகக் கொண்டுள்ளனவோ

- ஸ்ரீமத்பகவத்கீதை (15-17) - யோ லோகத்ரயமாவிச்ய விபர்த்யவ்யய ஈச்வர: - மூன்று உலகங்களிலும் ஆத்மாவாக உள்ளே நின்று நியமித்து

என்று உள்ளதற்கு ஏற்ப, அவனே ஆதாரமாக உள்ள தன்மையும் கூறப்பட்டது.

இவை அனைத்தும் "அயந" என்னும் பதம் மூலம் எவ்விதம் உணர்த்தப்படுகிறது என்று அடுத்து கூறுகிறார். "அயந" என்பது "செல்லுதல்" என்னும் பொருள் கொண்டதான "இண்" என்னும் தாதுவிலிருந்து, மூன்றுவிதங்களில் உண்டாக்கிறது. அவையாவன:

- ஈயதே அநேந (இவனைக் கொண்டு அடையப்படுகிறது) – இதில் இவன் காரண வஸ்துவாகக் கூறப்படுகிறான்; ஸர்வேச்வரன் உபாயமாகக் கூறப்படுகிறான்.

- ஈயதே அஸௌ (இவன் அடையப்படுகிறான்) – ஸர்வேச்வரன் அடையப்படும் இலக்காக அல்லது உபேயமாக உள்ளான்.
- ஈயதே அஸ்மிந் (இவனிடம் அடையப்படுகிறது) – ஸர்வேச்வரனே அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளான்.

இது தவிர, "செல்லுதல்" என்னும் பொருள் தருவதான "அய்" என்னும் தாதுவிலிருந்தும் இந்தக் கருத்து தேறுகிறது. ஆகவே ஸர்வேச்வரன் உபாயமாகவும், உபேயமாகவும், எளியவனாகவும், அனைத்திற்கும் ஈச்வரனாகவும் உள்ள தன்மை தெளிவாகிறது.

## பஹுவ்ரீஹி மற்றும் தத்புருஷம் ஆகியவை ஸர்வேச்வரனுடைய அந்தர்வ்யாப்தி மற்றும் பஹிர்வ்யாப்தியை உணர்த்துதல்

**மூலம்** – அயநமென்று வாஸஸ்தாநமாய் அப்போது பஹுவ்ரீஹி ஸமாஸத்தாலே அந்தர்வ்யாப்தியும், தத்புருஷனாலே பஹிர்வ்யாப்தியும் தோற்றுகிறது என்றும் அநுஸந்திப்பர்கள். இவை இரண்டும் ச்ருதி ஸித்தம். அந்தர்வ்யாப்தியாவது – இவையுள்ள விடத்தில் தன்னை இல்லையென்னவொண்ணாதபடி கலந்து நிற்கை. பஹிர்வ்யாப்தியாவது – இவை இல்லாத இடத்திலும் எங்கும் தான் உளனாகை. விபுக்களான காலாதிகளுக்கு பஹிர்வ்யாப்தி சொல்லவேண்டா.

நாராயணமணீயாம்ஸம் அசேஷாணாமணீயஸாம்

என்றது அந்தர்வ்யாப்திக்கு அநுகுணமாய் நிற்கிற ப்ரதிகாதாநர்ஹத்வம் அல்லது அணு பரிமாணத்வமன்று. இது சொல்லுமிடம் உபாயத்வச்சேதத்தாலே என்று ஸூத்ரபாஷ்யாதி ஸித்தம். வ்யாப்தனுக்கு ப்ரதிவஸ்து பூர்ணத்வமாவது ஓரோர் உபாத்யவச்சிந்ந ப்ரதேசமே ஸர்வத்தையும் நிர்வஹிக்கவல்ல சக்தியுடைத்தாயிருக்கை, அல்லது வஸ்துதோறும் ஸ்வரூப ஸமாப்தியன்று. இது கொள்ளில் பஹிர்வ்யாப்திக்கு விருத்தமாம். இத்தை அகடிதகடநா சக்தியாலே நிர்வஹிக்கில் விருத்த ஸமுச்சயம் கொள்ளும் பரமதங்களிற்படியாம்.

**விளக்கம்** – "அயநம்" என்பதை "இருப்பிடம்" என்று பொருள் கொண்டு, "நாராயண" என்பதை பஹுவ்ரீஹியாகக் (நாரா: அயநம் அஸ்ய = நாரங்களை இருப்பிடமாகக் கொண்டவன்) கொண்டால், நாராயணன் தன்னுள் அனைத்தையும் கொண்டவனாக அனைத்திலும் வியாபித்துள்ளான் (அந்தர்வ்யாப்தி) என்பது தேறும். மாறாக, "அயநம்" என்பதை "இருப்பிடம்" என்று பொருள் கொண்டு, "நாராயண" என்பதை தத்புருஷமாகக் (நாரணாம் அயநம் = நாரங்களுக்கு இருப்பிடமாக உள்ளவன்) கொண்டால், நாராயணன் தன்னுள் அனைத்தையும் கொள்ளாதவனாக அனைத்திலும் வியாபித்துள்ளான் (பஹிர்வ்யாப்தி) என்பது தேறும். இந்தக் கருத்து இரண்டும் ச்ருதிகள் மூலம் தேறுவதாகும். அந்தர்வ்யாப்தி என்றால் – சேதந அசேதநங்கள் இருக்கின்ற இடங்களில் இவன் இல்லை என்று கூற இயலாதபடி, அவை அனைத்திலும் கலந்து நிற்பதாகும். பஹிர்வ்யாப்தி என்றால் – அவை இல்லாத இடங்களிலும் இவன் உள்ளான் என்னும்படியாக இருத்தல் ஆகும். காலம் முதலானவை எங்கும் உள்ளதாகும்; ஆகவே ஸர்வேச்வரன் போன்று அவையும் பஹிர்வ்யாப்தி உள்ளவை என்று கூறுதல் கூடாது. ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-9-41) - நாராயணமணீயாம்ஸம் அசேஷாணாமணீயஸாம் – ஸூக்ஷ்மங்களாக உள்ள அனைத்து வஸ்துக்களைக் காட்டிலும் ஸூக்ஷ்மமாக உள்ள நாராயணன் – என்று கூறும்போது "அணு" என்னும் பதமானது "சிறியது" என்னும் பொருளில் வராமல், "ஸூக்ஷ்மமானது" என்னும் பொருளில் வந்தது என்றே கொள்ளவேண்டும். ஆகவே இதன் மூலம் உணர்த்தப்படுவது என்னவென்றால், ஸூக்ஷ்மமாக உள்ள தன்மை என்பது காரணமாக அவைகளுக்குள் அவன் இருப்பதில் எந்தவிதமான தடையும் இல்லை என்பதாகும். அவன் அணு போன்றுள்ள வஸ்துக்களுடன் (உபாதிகள்) சேர்ந்துள்ளதால், அணுவல்லாத அவனை அணு என்று கூறியதை ஸ்ரீபாஷ்யத்திலும் காணலாம். எங்கும்

வியாபித்துள்ளவனுக்கு "அனைத்து வஸ்துக்களிலும் நிறைந்துள்ள தன்மை" என்பது ஏதேனும் ஒரு வஸ்துவில் நிறைந்துள்ளபோதிலும், அதன் மூலமாக அனைத்தையும் நிர்வாகம் செய்யும் சக்தி உள்ளது என்பதே ஆகும். இதனை விடுத்து, அனைத்து வஸ்துக்களிலும் அவனுடைய ஸ்வரூபம் நிறைந்தால் மட்டுமே இது தேறும் என்பது சரியல்ல. இவ்விதம் கொண்டால் பஹிர்வ்யாப்திக்கு முரணாகிவிடும். இதனைச் சேராதவற்றை ஒன்று சேர்க்கும் ஆற்றல் மூலம் செய்கிறான் என்று கொண்டால், பாஸ்கர யாதவப்ரகாச மதங்களுடைய "முரணான இரண்டு வஸ்துக்களை ஒன்றாகச் சேர்க்க இயலும்" என்பதை ஒப்புக்கொண்டது போன்றாகிவிடும்.

## "அ", "நர", "அயந" ஆகியவை ஸர்வேச்வரனையே வெவ்வேறு ஆகாரங்களுடன் காட்டுகின்றன

**மூலம்** – இங்கு ப்ரதமாக்ஷரத்தாலும், நாரசப்தத்தில் ப்ரக்ருதியான நர சப்தத்தாலும், அயந சப்தத்தாலும் ஸர்வேச்வரனைச் சொல்லுகிறபோது ரக்ஷகத்வ காரணத்வ நித்யத்வ நேத்ருத்வ, ஆதாரத்வ அந்தர்யாமித்வாதிகளான ஆகாரபேதங்களாலே மூன்றும் ஸப்ரயோஜநங்கள்.

**விளக்கம்** – திருமந்த்ரத்தின் தொடக்கத்தில் காணப்படும் ப்ரணவத்தில் உள்ள முதல் எழுத்தான "அ" என்பதாலும், "நார" என்பதன் அடிப்படையான "நர" என்பதாலும், "அயந" என்பதாலும் ஸர்வேச்வரனை உரைக்கும்போது, இவை அனைத்தும் – அவனுடைய காக்கும் தன்மை, அனைத்திற்கும் காரணமாக உள்ள தன்மை, எப்போதும் உள்ள தன்மை, அனைத்தையும் வழி நடத்தும் தன்மை, அனைத்திற்கும் ஆதாரமாக உள்ள தன்மை, அனைத்திற்கும் அந்தர்யாமியாக உள்ள தன்மை முதலான பலவற்றையும் வெளிப்படுத்துகின்றன.

## "ம", "நார" போன்றவை ஜீவனைக் குறிப்பதன் கருத்து மற்றும் பயன்

**மூலம்** – ப்ரணவத்தில் த்ருதீயாக்ஷரத்தாலே சேதநனைப் ப்ரகாசிப்பிக்கச் செய்தே இங்கு நாரசப்தத்தாலே மீண்டும் சொல்லுவானேன் என்னில், "நான் உன்னை அன்றி இலேன்

கண்டாய் நாரணனே நீ என்னை அன்றியிலை" என்றும், "ராமாநுஜம் லக்ஷ்மண பூர்வஜம் ச" என்றும் சொல்லுகிறபடியே ஒன்றையிட்டு ஒன்றை நிரூபியா நின்றால் அர்ஜுநரதம் போலே ப்ரணவம் சேஷப்ரதாநமாகையாலும் ராஸமண்டலம் போலே நாராயணசப்தம் சேஷி ப்ரதாநமாகையாலும் புநருக்தியில்லை. ப்ரணவந்தன்னிலும் சாப்தப்ராதாந்யம் ஜீவனுக்கானாலும் ரக்ஷகனான சேஷிக்கே அர்த்தப்ராதாந்யம்.

**விளக்கம்** – ப்ரணவத்தின் மூன்றாம் எழுத்தான "ம" என்பதன் மூலம் ஜீவாத்மா உணர்த்தப்படுகிறது. இவ்விதம் முன்பே ஜீவனை உணர்த்திய பின்னர் "நாராயண" என்பதில் உள்ள "நார" என்பதன் மூலம் மீண்டும் ஏன் ஜீவாத்மா கூறப்பட்டது (இது "கூறியது கூறல்" என்னும் புநருக்தி தோஷம் ஆகாதோ என்னும் கேள்வி எழலாம்)? இதற்கு விடை அளிக்கப்படுகிறது. நான்காம் திருவந்தாதி (7) - நான் உன்னை அன்றி இலேன் கண்டாய் நாரணனே நீ என்னை அன்றியிலை – என்றும், இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (28-10) - ராமாநுஜம் லக்ஷ்மண பூர்வஜம் ச – ராமனுக்குத் தம்பியான லக்ஷ்மணனையும், லக்ஷ்மணனுக்கு மூத்தவனாகிய இராமனையும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப பரமாத்மா மற்றும் ஜீவாத்மா ஆகிய இருவரையும் ஒருவரைக் கொண்டு ஒருவரை கூறும்போது - அர்ஜுனனின் தேரில் ஜீவாத்மாவாகிய அர்ஜுனனுக்கு எவ்விதம் முதன்மை உள்ளதோ அது போன்று அடிமையாகிய ஜீவாத்மாவுக்கு ப்ரணவத்தில் முதன்மை உள்ளது; ராஸலீலையில் பரமாத்மாவாகிய க்ருஷ்ணனுக்கு எவ்விதம் முதன்மை உள்ளதோ அது போன்று எஜமானனாகிய பரமாத்மாவுக்கு "நாராயண" பதத்தில் முதன்மை உள்ளது – இதனால் "கூறியது கூறல்" என்னும் புநருக்தி தோஷம் இல்லை. ப்ரணவத்தில் உள்ள "ம" என்னும் எழுத்து மூலம் அடிமையாகிய ஜீவாத்மாவுக்கு முதன்மை உள்ளது என்று தோன்றினாலும், ப்ரணவத்தின் ஆழ்பொருளைக் காணும்போது எஜமானனாகிய பரமாத்மாவுக்கே முதன்மை உள்ளதை அறியலாம்.

**மூலம்** – ப்ரணவத்திலே ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் ஜ்ஞாநாகாரனாய் ப்ரத்யக்காய் அணுவாய்த் தோற்றின ஜீவனுக்கு நாரசப்தம் க்ஷயமில்லாதவனென்று நித்யத்வம் சொல்லுகையாலும், நரருடைய ஸமூஹத்தைச் சொல்லுகையாலே ஜீவர்களுடைய அந்யோந்ய பேதத்தை வ்யக்தமாக்குகையாலும், நரஜ்ஜாதங்கள் நாரங்கள் என்றபோது விசிஷ்ட வேஷத்தாலே ப்ரஹ்மகார்யத்வம் தோற்றுகையாலும் பத த்வயத்துக்கும் ப்ரயோஜந பேதமுண்டு. நாரசப்த ஸமாநாதிகரணமான அயநசப்தத்தாலே இவற்றுக்கு

வ்யாப்தத்வாதிகளும் கண்டு கொள்வது. "நித்யரான பல சேதநர்க்கு ஒரு நித்யனான சேதநன் அபிமதஹேது" வென்கிற ச்ருத்யர்த்தமும் இங்கே கண்டு கொள்வது. நித்யனாக ப்ரமாணஸித்தனான ஜீவனுக்கு ப்ரஹ்மகார்யத்வம் விசேஷண த்வாரகம். இப்படி நாராயணாத்மகாதி கல்பங்களிலே சொன்ன வ்யுத்பத்த்யந்தரங்களுமெல்லாம் இவற்றோடு துல்யம்.

**விளக்கம்** – தன்னுடைய குணம் மற்றும் ஸ்வரூபம் ஆகியவற்றில் ஞானமயமாகவும், மற்ற வஸ்துக்களுக்குத் தன்னைத் தானே உணர்த்தவல்ல தன்மை கொண்டவனாகவும், அணுவாகவும் ப்ரணவத்தில் கூறப்படும் ஜீவாத்மா, "நார" என்பதன் மூலம் மாறுபாடுகள் அடையாத நித்யமாகவும் உள்ளவன் என்று கூறப்படுகிறான். "நாரா:" என்பதன் மூல ஜீவாத்மாக்கள் பலர் உண்டு என்று கூறப்பட்டு, ஆகவே ஜீவாத்மாக்கள் ஒவ்வொன்றுக்கும் வேறுபாடு உள்ளது என்பது தெளிவாக்கப்படுகிறது. மாறாக, "நாரா:" என்பது "நர" எனப்படும் பகவானிடமிருந்து வெளிப்பட்டவை என்று பொருள் தரும் எனக்கொண்டால், ஜீவாத்மாக்கள் அனைத்தும் ப்ரஹ்மத்தையே தங்களுடைய காரண வஸ்துவாகக் கொண்டவை, இவை அனைத்தும் அதன் கார்யவஸ்துக்கள் என்பது தெளிவாகிறது. இப்படியாக "நாராயண" என்னும் பதத்திற்கு கூடுதலான அர்த்தங்கள் உள்ளதால், "ம" மற்றும் "நார" என்னும் இருவிதங்களால் ஜீவாத்மா கூறப்படுவதில் ஒரு பிரயோஜனம் உள்ளது. "நாராயண" என்பதை "நாரா: அயநம் யஸ்ய" என்று பஹுவ்ரீஹியாகக் கொண்டால், "அயந" என்பது இலக்கண ரீதியில் "நாரா:" என்பதுடன் இணைந்து வருகிறது. இத்தகைய "அயந" என்பதன் மூலம் ஜீவாத்மாக்கள் அவனால் வ்யாபிக்கப்பட்டவை என்று தெளிவாகிறது. சேதநர்கள் பல உண்டு என்றும், அவர்கள் நித்யமானவர்கள் என்றும், அவர்களில் ஒரு நித்யமான சேதநன் (ஸர்வேச்வரன்) அவர்கள் தங்களுடைய புருஷார்த்தங்களை அடைய உதவுகிறான் என்றும் கூறும் ச்ருதி வாக்கியம் இங்கு உணர்த்தப்படுகிறது (அந்த ச்ருதி வாக்கியம் ச்வேதாஸ்வதர உபநிஷத் [6-13] – நித்யோநித்யாநாம் சேதநச்சேதநாநாமேகோ பஹூநாம் யோ விததாதி காமாந் – அநித்யமான பல சேதர்களின் நடுவில் நித்யனான ஒருவன் அவர்கள் விரும்பியதை அளிக்கிறான்). ஜீவாத்மா நித்யன் என்பதற்குப் பல ப்ரமாணங்கள் உள்ளன. அவன் ப்ரஹ்மத்தைத் தன்னுடைய உற்பத்திக்குக் காரணமாகக் கொண்டுள்ளான் என்று மேலே கூறப்படுவதன் மூலம் உணர்த்தப்படுவது என்னவென்றால் – தன்னுடைய சரீரத்திற்கு மட்டுமே இவ்விதம் ப்ரஹ்மத்தைக் காரணமாகக் கொண்டுள்ளான் அல்லாமல்,

தன்னுடைய ஸ்வபாவத்திற்கு அல்ல – என்பதாகும். நாராயணாத்மகம் போன்ற கல்பங்களில் கூறப்படுவதும் இதே பொருளில் ஆகும்.

### "நார" என்பது சேதநம் மற்றும் அசேதநங்களைக் கூறுவதாகும்

**மூலம் –**

சேதநாசேதநம் ஸர்வம் விஷ்ணோர்யத்வயதிரிச்யதே
நாரம் ததயநம் சேதம் நாரயணஸ்து ஸ:

என்கையாலே "ஸர்வ பும்ஸாம் ஸமூஹ:" என்றதுவும் உபலக்ஷணமாகையால் க்ஷயிஷ்ணுக்களல்லாமையாலே ஸ்வரூபத்தாலேயாதல், ப்ரவாஹத்தாலேயாதல் நித்யங்களாய் நரசப்தவாச்யங்களான ஸர்வதத்தங்களுடைய ஸமூஹங்களும் நாரங்கள்.

**விளக்கம்** - சேதநாசேதநம் ஸர்வம் விஷ்ணோர்யத்வயதிரிச்யதே நாரம் ததயநம் சேதம் நாரயணஸ்து ஸ: - விஷ்ணுவைக் காட்டிலும் வேறாகிய சேதந அசேதநங்கள் அனைத்தும் நாரம், அவை யாருக்கு இருப்பிடமாக உள்ளனவோ அவன் நாராயணன் – என்று கூறுவதால், "ஸர்வ பும்ஸாம் ஸமூஹ: - நாரா: என்பது அனைத்து ஜீவாத்மாக்களும்" என்று உரைப்பதன் மூலம், "ஜீவாத்மா" என்னும் பதம் மற்ற அனைத்து தத்துவங்களுக்கும் ஓர் உதாரணம் மட்டுமே ஆகும் என்று கொள்க. இதன் காரணம் அசேதநங்களாக இருந்தாலும் அவை தங்களுடைய ஸ்வரூபத்தை இழப்பதில்லை என்பதாலும், தங்களுடைய நிலைகளை அவை தொடர்ந்து மாற்றியபடி உள்ளதாலும் அவையும் நித்யமே ஆகின்றன. ஆகவே "நாரா:" என்னும் பதம், "நர" என்று கூறப்படுபவையும், நித்யமாக உள்ளவையும் ஆகிய அனைத்து தத்துவங்களையும் குறிக்கும் என்று கருத்து.

## "நார" என்னும் சொல் ஸர்வேச்வரனைக் கூறுதலும், அதன் மூலமாக "நாராயண" என்னும் சொல்லுக்குக் கிட்டும் அர்த்தமும்

**மூலம்** – ஸர்வ வ்யாபகத்வாதி விசிஷ்டனாய் இருக்கச்செய்தே தத்கத தோஷங்களையும் தத்ப்ரயுக்த தோஷங்களையும் கழிக்கிற ஹயரஹிதன் என்கிற வ்யுத்பத்தியாதலும், "நா நயே" இத்யாதிகளாலும், "ஜஹ்நுர் நாராயணோ நர:" என்று நாமதேயமாகச் சொல்லுகையாலும் "ஆபோ நாராயணோத்பூதா: தா ஏவாஸ்யாயநம் புந:" என்கிற வ்யாஸ ஸ்ம்ருதி வாக்யத்தாலே "ஆபௌ வை நரஸூநவ:" இத்யாதிகளில் நர சப்தமும் நாராயணனையே சொல்லுகிறதென்னுமிடம் ஸுவ்யக்தமாகையாலும் நரனென்று நித்யனாய் ஸர்வநேதாவான ஸர்வேச்வரனுக்குத் திருநாமமாகையாலே

நர ஸம்பந்திநோ நாரா நர: ஸ புருஷோத்தம:
நயநத்யகில விஞ்ஜானம் நாசயத்யகிலம் தம:
ந ரிஷ்யதி ச ஸர்வத்ர நரஸ்தஸ்மாத் ஸநாதந:
நர ஸம்பந்திந: ஸர்வே சேதநாசேதநாத்மகா:
ஈசிதவ்யதயா நாரா தார்ய போஷ்யதயா ததா
நியாம்யத்வேந ஸ்ருஜ்யத்வ ப்ரவேச பரணைஸ்ததா
அயதே நிகிலாந் நாராந் வ்யாப்நோதி க்ரியயா தயா
நாராச்சாப்யயநம் தஸ்ய தைஸ்தப்தாவ நிரூபணாத்
நாராணாமயநம் வாஸஸ்தே ச தஸ்யாயநம் ஸதா
மரமா ச கதிஸ்தேஷாம் நாராணாமாத்மநாம் ஸதா

என்று அஹிர்புத்நயாதிகள் நிர்வசநம் பண்ணினபடியே, "நர ஸம்பந்தி நாரம்" என்கிற வ்யுத்பத்தியாலே ஸர்வேச்வரனுடைய ஸ்வரூப நிரூபக தர்மங்களும் நிரூபித ஸ்வரூப விசேஷண தர்மங்களும் வ்யாபாரங்களும் விக்ரஹ விசேஷங்களும் மற்றுமுள்ள த்ரிவித சேதநாசேதநங்களுமெல்லாம் நார சப்தார்த்தமானபோது ஸ்வவ்யதிரிக்த ஸர்வத்துக்கும் ஆச்ரயத்வாதி ரூபேண நிற்கும் ப்ரகாரம் விவக்ஷிதமாகையாலே ஸ்வாநிஷ்டத்வாதிகளைச் சொல்லுகிறது.

**விளக்கம்** – “நர” என்னும் பதம் “நாராயண” என்னும் பொருளையும் தருவதாகும் என்பதற்கான காரணங்கள்:

- அனைத்து சேதந அசேதநங்களிலும் வ்யாபித்து நின்றாலும், அவைகளால் தனக்கு உண்டாகவல்ல தோஷங்களும் துன்பங்களும் தன்னை அண்டாமல் இருப்பதால் “தாழ்ந்தவற்றை விலக்குபவன்” என்னும்படியாக உள்ளவன்

- “ந்ரு” என்னும் தாது “வழி நடத்துதல்” என்னும் பொருளைத் தருகிறது; ஆகவே “வழி நடத்துபவன்” என்னும் காரணத்தால் “நர” ஆகிறது.

- ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் - ஜஹ்நுர் நாராயணோ நர: - ஜஹ்நு = அடியார்கள் அல்லதார்க்குத் தனது மேன்மையை மறைப்பவன், நர: = சேதந அசேதநங்கள் அழியாமல் இருக்கப் பெற்றவன்.

- வ்யாஸ ஸ்ம்ருதி (2-16) - ஆபோ நாராயணோத்பூதா: தா ஏவாஸ்யாயநம் புந: - ஜலம் நாராயணனிடமிருந்து உண்டானது, அதுவே அவனுக்கு இருப்பிடம் ஆகும் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஆபௌ வை நரஸூநவ: - ஜலங்கள் அனைத்து நர என்னும் நாராயணனின் மக்களே ஆகும் – என்பது காண்க.

ஆகவே “நர” என்பதால் எப்போதும் உள்ளவனும், அனைத்தையும் நியமிப்பவனும் ஆகிய நாராயணனே கூறப்படுகிறான் என்றாகிறது. மேலும் அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் உள்ள வரிகளைக் கீழே காண்க (52: 50 – 54):

நர ஸம்பந்திநோ நாரா நர: ஸ புருஷோத்தம:
நயநத்யகில விஞ்ஜானம் நாசயத்யகிலம் தம:
ந ரிஷ்யதி ச ஸர்வத்ர நரஸ்தஸ்மாத் ஸநாதந:
நர ஸம்பந்திந: ஸர்வே சேதநாசேதநாத்மகா:
ஈசிதவ்யதயா நாரா தார்ய போஷ்யதயா ததா
நியாம்யத்வேந ஸ்ருஜ்யத்வ ப்ரவேச பரணைஸ்ததா
அயதே நிகிலாந் நாராந் வ்யாப்நோதி க்ரியயா தயா

நாராச்சாப்யயநம் தஸ்ய தைஸ்தப்தாவ நிரூபணாத்
நாராணாமயநம் வாஸஸ்தே ச தஸ்யாயநம் ஸதா
மரமா ச கதிஸ்தேஷாம் நாராணாமாத்மநாம் ஸதா

**இதன் பொருள்** – நரன் என்னும் புருஷோத்தமனைச் சார்ந்துள்ளவை நாரங்கள் ஆகும். அந்த நரன் தன்னுடைய அடியார்களுக்கு அனைத்து ஞானத்தையும் அளிப்பவன் ஆவான். அவர்களுடைய அறியாமையை முற்றிலுமாக அழிப்பவன் ஆவான். அவன் எங்கு இருந்தாலும், எந்தவிதமான வேறுபாட்டையும் அடைவதில்லை. அவன் எப்போதும் ஒரே போன்று உள்ளதால், நரன் எனப்படுகிறான். அவனை அண்டியுள்ள சேதநங்கள், அசேதநங்கள் ஆகிய அனைத்தும் அவனுக்கு அடிமைகளாகவும், அவனால் தாங்கப்பட்டவைகளாகவும், அவனால் காப்பாற்றப்படுபவையாயும், அவனால் கட்டுப்படுத்தப்படுபவையாயும், அவனால் படைக்கப்பட்டவையாயும், அவனால் உள்ளே புகுந்து தாங்கப்படுபவையாயும் உள்ளதால் அவை நரனுடையவை ஆகின்றன. அவனே அனைத்து நாரங்களையும், அவற்றுள் புகுந்து போஷித்தல் முதலான செயல்கள் மூலம் அவற்றைக் கட்டுப்படுத்துகிறான். நாரங்களே அவனை அறிவதற்கு சாதனங்களாகும்; காரணம், அவை மூலம் அவன் உள்ளதை அறிய இயல்கிறது. நாரங்கள் அவனுடைய இருப்பிடம், அவன் அவையுடைய இருப்பிடம். அவனே நாரங்களாகிய ஆத்மாக்களுக்கு அடையவேண்டிய இலக்காகவும், அந்த இலக்கை அடைய உதவும் உபாயமாகவும் உள்ளான்.

இப்படியாக, அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை முதலானவற்றில் உறுதியாகக் கூறப்பட்டபடி, "நர ஸம்பந்தி நாரம் – நரனுடைய தொடர்புடையதால் நாரங்கள்" என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபத்தை உணர்த்தும் பண்புகளும் (ஸத்யம், ஞானம், அநந்தம் உள்ளிட்டவை), அப்படிப்பட்ட பண்புகளை உணர்த்தவல்ல அவனுடைய திருக்கல்யாண குணங்களாகிய காருண்யம் போன்றவையும், அவனுடைய செயல்களும், அவனுடைய திருமேனி ரூபங்களும், அவனுடைய மூன்றுவிதமான சேதந அசேதநங்களும் (பத்தர், முக்தர், நித்யர்) – இவை அனைத்தும் "நார" என்னும் பதம் மூலம் உணர்த்தப்படுகின்றன. ஆகவே இதன் மூலம் அவன் அல்லாத மற்ற அனைத்தையும் தாங்கி நிற்பது என்னும் தன்மை அவனுக்குள்ளது என்றாகிறது. ஆகவே அவன் தனக்குத்தானே ஆதாரமாக உள்ளான், தனக்குத்தானே எஜமானனாக உள்ளான் போன்ற தன்மைகள் தெளிவாகிறது.

**மூலம்** – இப்படி வ்யாபந பரண நியமந ஸ்வாம்யாதிகளாலே வேறுபட்டிருக்கிற புருஷோத்தமனுக்கும் தத்ஸம்பந்திகளுக்கும் குத்ருஷ்டிகள் சொன்ன ஸ்வரூபைக்யாதி ப்ரமம் கழியும்படி ஸர்வசரீரித்வ ஸர்வசப்த வாச்யத்வாதிக வைபவமும் இங்கே பலிதம். நரசப்தத்தாலே சோதக வாக்யார்த்தமும், நாரசப்தத்தாலே நராஜ்ஜாதாநி தத்த்வாநி நாராணி என்கையாலே காரண வாக்யார்த்தமும், அயநசப்தத்தாலே அவ்வோ உபாஸந வாக்யார்த்தங்களுமெல்லாம் இங்கே ப்ரகாசிதங்களாகிறன.

**விளக்கம்** – இப்படியாக எங்கும் வ்யாபித்துள்ளவனும், அனைத்தையும் தாங்கி நிற்பவனும், அனைத்தையும் நியமிப்பவனும், அனைத்திற்கும் எஜமானனாக உள்ளவனும் ஆகிய பரமாத்மாவுக்கும், அவனுடன் எப்போதும் சம்பந்தம் உள்ள ஜீவாத்மாக்களுக்கும் ஸ்வரூபம் ஒன்றே எனக்கூறும் மற்ற மதங்களுடைய வாதங்களால் உண்டாகும் அறிவுமயக்கம் என்பது அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ளான், அனைத்து சப்தங்களாலும் கூறப்படும்படியான வைபவம் கொண்டுள்ளான் போன்றவை மூலம் நீங்குகிறது என்பது தெளிவாகிறது. “நர” என்னும் பதம் மூலம் ச்ருதியில் உள்ள சோதக வாக்கியங்களின் ஆழ்பொருளும் (இவை ஸத்யம் ஞானம் அநந்தம் போன்ற வாக்கியங்கள் – அதாவது ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தைக் கூறுபவை), “நார” என்னும் பதம் மூலம் மஹாபாரதம் - நராஜ்ஜாதாநி தத்த்வாநி நாராணி – ப்ருதிவீ முதலான தத்துவங்கள் அந்த நரனிடமிருந்தே வருவதால் அவைகள் நாரங்கள் என்று கூறப்படுகின்ற – என்பதற்கு ஏற்றபடி ச்ருதியில் உள்ள காரண வாக்கியங்களின் ஆழ்பொருளும் (காரண வாக்கியங்கள் என்பது ப்ரஹ்மமே அனைத்திற்கும் காரணம் என்று கூறும் வாக்கியங்கள்), “அயந” என்னும் பதம் மூலம் அந்த ப்ரஹ்மத்தை உபாஸித்தக் குறித்து ச்ருதியில் உள்ள உபாஸனை வாக்கியங்களின் ஆழ்பொருளும் தெளிவாகின்றன.

**மூலம்** – ஸுபாலோபநிஷத் ப்ரப்ருதிகளிலே ஸர்வாந்தர்யாமியுமாய் ஸர்வவித பந்துவுமாயிருக்கிற ஸர்வேச்வரன் நாராயணசப்தத்தாலே தேவதாந்தர வ்யாவ்ருத்தனாக ப்ரதிபாதிதனானான், லோகத்திலுள்ள ஸர்வபந்துக்களும் பகவத் ஸங்கல்பத்தாலே பந்துக்களானார்கள். “த்வமேவ மாதா ச பிதா த்வமேவ”, “எம்பிரான் எந்தை”, “பிதா த்வம் மாதா த்வம்” இத்யாதிகளிற்படியே நிருபாதிக ஸர்வவிதபந்து ஸர்வேச்வரன் ஒருவனுமே.

**விளக்கம்** – ஸுபால உபநிஷத்தில் காணப்படும் வரிகள் மூலம் (மாதா பிதா ப்ராதா நிவாஸ: சரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண: - தாய், தந்தை, சகோதரன், இருப்பிடம், ரக்ஷிப்பவன், நண்பன், அடையப்படும் இலக்கு ஆகிய அனைத்தும் நாராயணனே) அனைத்திற்கும் அந்தர்யாமியாகவும், அனைத்துவிதமான உறவினனாகவும் உள்ள ஸர்வேச்வரன், "நாராயண" என்னும் பதம் மூலம் மற்ற தேவதைகளைக் காட்டிலும் வேறுபட்டவன் என்று தெளிவாக உரைக்கப்பட்டான். அவனுடைய ஸங்கல்பம் காரணமாக உலகத்தில் உள்ள அனைத்து உறவினர்களும் நமக்கும் உறவினர்கள் ஆயினர். கீழே உள்ள வரிகளின்படி நாராயணன் ஒருவன் மட்டுமே, எந்தவிதமான காரணமும் இல்லாமல், இயற்கையாகவே, நமக்கு அனைத்துவிதமான உறவினனாக உள்ளான்:

- காந்தாரியின் வாக்கியம் - த்வமேவ மாதா ச பிதா த்வமேவ – நீயே தாய், நீயே தந்தையும் ஆவாய்
- பெரியதிருமொழி (1-1-6) - எம்பிரான் எந்தை
- ஸ்தோத்ரரத்னம் (60) - பிதா த்வம் மாதா த்வம் – நீயே தந்தை, நீயே தாய்

**மூலம்** – "யஸ்ய ப்ரஸாதே ஸகலா: ப்ரஸீதேயுரிமா: ப்ரஜா:" என்றும், "ப்ரஸந்நமபவத் தஸ்மை ப்ரஸந்நாய சராசரம்", "ப்ரஸந்நோ தேவதேவேச" என்றும் சொல்லுகையாலே, அவன் ப்ரஸந்நனானால் ப்ரதிகூலராவார் ஒருவருமில்லை. இவ்வீச்வரனுக்கு "ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்" என்கிற ஆகாரம் ஸ்வபாவஸித்தம். ஆகாராந்தரம் சேதநருடைய ஆஜ்ஞாதிலங்கநமாகிற உபாதியடியாக வந்தது. அதுவும் அல்பவ்யாஜத்தாலே மாறும். "இத்தனை அடியரானார்க்கு இரங்கும் நம் அரங்கனாய பித்தனை" என்றார்களிறே.

**விளக்கம்** – இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (4-21) - யஸ்ய ப்ரஸாதே ஸகலா: ப்ரஸீதேயுரிமா: ப்ரஜா: - யாருடைய அனுக்ரஹம் இருந்தால் இந்த அனைத்து ப்ரஜைகளும் நமக்கு அனுக்ரஹம் செய்யவல்லவர்களாக ஆகிறார்களோ – என்றும், இதிஹாஸ ஸமுச்சயம் (33-141) - ப்ரஸந்நமபவத் தஸ்மை ப்ரஸந்நாய சராசரம் – கேசவன் மகிழ்ந்தால் அதன் காரணமாகவே தெளிந்த மனம் கொண்ட உன் விஷயத்தில் அனைத்து உயிர்களும் மனத்தெளிவு அடைகின்றன – என்றும், நரஸிம்ஹபுராணம் - ப்ரஸந்நோ தேவதேவேச – தேவர்களுக்கும் தேவனாகிய ஸர்வேச்வரன் மகிழ்ந்தபோது அனைத்து

உலகங்களும் மகிழ்வுற்றா – என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரன் நம்மைக் குறித்து மகிழ்ந்தான், நமக்கு எதிராக நடப்பவர்கள் யாரும் இருக்கமாட்டனர். இத்தகைய ஸர்வேச்வரனுக்கு, கீதை (5-29) - ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் – அனைத்து உயிர்களுக்கும் நண்பன் – என்னும் தன்மை இயற்கையாகவே உள்ளதாகும். அவன் யாரிடமாவது இத்தகைய தன்மை இல்லாமல் உள்ளான் என்றால், அந்த மனிதன் அவனுடைய கட்டளைகளை மீறி நடந்த காரணத்தால் மட்டுமே ஆகும். அத்தகைய நிலையும் மிகவும் சிறிய காரணத்தால் மாறிவிடும். திருமாலையில் (4) - இத்தனை அடியரானார்க்கு இரங்கும் நம் அரங்கனாய பித்தனை – என்றது காண்க.

**மூலம்** – இந்நாராயண சப்தத்தில் சதுர்த்தியாலே மேல் சொல்லப்புகுகிற வாக்யார்த்தங்களுக்கு ஈடாகத் தாதர்த்யாதிகள் காட்டப்படுகின்றன. ஸ்தூலா நுஸந்தாநத்தில் இச்சதுர்த்தீ “நம:” சப்தயோகத்தாலும் கொள்ளலாம். அப்போது இச்சதுர்த்திக்கு ப்ரயோஜநாதிசயமில்லை.

ஷஷ்டபஞ்சதசாத்வயர்ணாத் கேவல வ்யஞ்ஜநீக்ருதாத்
உத்தரோ மந்த்ரசேஷஸ்து சக்திரித்யஸ்ய கத்யதே

என்கையாலே இது திருமந்த்ரத்தில் பலஸித்தி ஹேதுவான ப்ரதேசம். யோஜநா விசேஷங்களில் பலப்ரார்த்தனையும் இவ்விடத்திலேயாகிறது.

அர்த்தாத் ப்ரகரணால்லிங்காத் ஔசித்யாத்தேசகாலத:
சப்தார்த்தா: ப்ரவிபஜ்யந்தே ந சப்தாதேவ கேவலாத்

என்கிறபடியே ஒரு சப்தத்துக்கே ப்ரகரணாதிகளுக்கு ஈடாக அர்த்தபதம் கொள்ளுகை ஸர்வஸம்மதம். ஆகையாலே தீயமாநார்த்த சேஷித்வம் ஸம்ப்ரதாநத்வமிஷ்யதே இத்யாதிகளிற்படியே பர ஸ்வத்வ ஆபாதனம் இவ்விடத்தில் கூடாதாகிலும், ஈச்வரன் தனக்குச் சேஷமான வஸ்துவைத் தானே ரக்ஷித்துக் கொள்ளும்படி ஸமர்ப்பிக்கிற அளவைப் பற்ற இவ் வ்யாபக மந்த்ரங்களில் சதுர்த்தியை ஸம்ப்ரதாநார்த்தையாக அஹிர்புத்ந்யன் வ்யாக்யானம் பண்ணினான்.

நிசீபாவேந ஸந்த்யோத்யம் ஆத்மநோ யத் ஸமர்ப்பணம்
விஷ்ண்வாதிஷு சதுர்த்தீ தத்ஸம்ப்ரதாந ப்ரதர்சிநீ
நீசீபூதோ ஹ்யஸாவாத்மா யத் ஸம்ரக்ஷ்யதயா அர்ப்யதே
தத் கஸ்மா இத்யபேக்ஷாயாம் விஷ்ணவே ஸ இதீர்யதே

என்கிற வசநத்தில் "விஷ்ண்வாதிஷு" என்கையாலே நாராயணாதி சப்தங்களில் சதுர்த்தியும் வ்யாக்யானம் பண்ணப்பட்டது.

**விளக்கம்** – அடுத்து "நாராயண" என்னும் பதத்தில் காணப்படும் நான்காம் வேற்றுமை ( "ஆய" – நாராயணனுக்காக) மூலம், இனி உரைக்கப்பட உள்ளதான பொருளுக்குச் சேரும் விதத்தில், அவனுக்காகவே ஜீவாத்மா இருக்கும் தன்மை முதலானவை கூறப்படுகின்றன. "நாராயணாய" என்பதை நேரடியாகப் பொருள் கொள்ளும்போது, நான்காம் வேற்றுமை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை "நம:" என்னும் பதம் மூலம் உணரலாம் (அதாவது – நம: = நான் எனக்கு உரியவன் அல்லன்; அப்படி என்றால் நான் யாருக்கு உரியவன்? நாராயணாய = நாரயணனுக்கு உரியவன்). இவ்விதம் கொள்ளும்போது இங்குள்ள நான்காம் வேற்றுமையானது இலக்கண விதிகளின்படி வரவேண்டும் அல்லாமல் வேறு வழி இல்லை. நாரதீயம் (1-59) - ஷஷ்டபஞ்சதசாத்வயர்ணாத் கேவல வ்யஞ்ஜநீக்ருதாத் உத்தரோ மந்த்ரசேஷஸ்து சக்திரித்யஸ்ய கத்யதே – திருமந்த்ரத்தில் உள்ள "ந" என்பதிலிருந்து எண்ணும்போது ஆறாவது எழுத்தாகவும், வடமொழியில் "ச" என்னும் எழுத்தைத் தொடர்ந்து பதினைந்தாவது எழுத்தாகவும் உள்ள "ண" (நாராயண என்பதில் உள்ள "ண") என்னும் எழுத்துவரை உள்ள பகுதியை விட்டுவிட்டு, மீதம் உள்ள பகுதியானது (ஆய என்னும் பகுதி), திருமந்த்ரத்தின் சக்தி என்று கூறப்படுகிறது – என்பது போன்ற வரிகளில் உள்ளது போன்று, "ஆய" என்னும் நான்காம் வேற்றுமையே திருமந்த்ரத்தின் பலன் கிட்டுவதற்குக் காரணமான பகுதியாக உள்ளது. ஒரு சிலர் இந்தப் பகுதியில்தான், திருமந்த்ரத்தின் பலனைப் பெறுவதற்கான ப்ரார்த்தனை அடங்கி உள்ளது என்கிறார்கள். அர்த்தாத் ப்ரகரணால்லிங்காத் ஔசித்யாத்தேசகாலத: சப்தார்த்தா: ப்ரவிபஜ்யந்தே ந சப்தாதேவ கேவலாத் – பலன், ஸந்தர்ப்பம், அடையாளம், தகுதி, இடம், காலம் ஆகியவற்றுக்கு ஏற்றபடி சொற்களின் பொருள் மாறுபடும்; இவற்றை ஆராயாமல் சொற்களுக்குள்ள சப்தத்தை கொண்டு மட்டுமே பொருள் உரைத்தல் கூடாது – என்று கூறுவதற்கு ஏற்ப ஒரு சொல் அமைந்துள்ள இடத்திற்கு ஏற்றபடி அதற்குப் பொருள்

உரைத்தல் என்பது அனைவராலும் ஏற்கப்படுவதாகும். ஆகவே, தீயமாநார்த்த சேஷித்வம் ஸம்ப்ரதாநத்வமிஷ்யதே – கொடுக்கின்ற வஸ்துவுக்கு ஏற்றபடியான பெற்றுக் கொள்பவனாக இருத்தல் ஸம்ப்ரதாநம் என்கிறது – போன்ற வரிகளுக்கு ஏற்ப, ஈச்வரனுக்கு உரிமை இல்லாத ஒரு பொருள் (ஜீவாத்மா) அவனுக்கு வழங்கப்படவில்லை; ஜீவாத்மா எப்போதுமே அவனுக்கு உடைமையான வஸ்துவே ஆகும். மேலும், ஈச்வரனுக்குச் சொந்தமான வஸ்துவாகிய ஜீவாத்மாவை அந்த ஈச்வரனே காப்பாற்றிக் கொள்ளட்டும் என்று ஜீவாத்மா எண்ணியபடி தன்னைச் சமர்ப்பணம் செய்வது என்பதே இந்த மந்த்ரங்களில் உள்ள நான்காம் வேற்றுமை உணர்த்துகிறது என்பதை வெளிப்படுத்தும்விதமாக, இந்த மந்த்ரங்களில் உள்ள நான்காம் வேற்றுமையானது ஸம்ப்ரதாநத்தை உணர்த்துகிறது என்பதை அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (52-35, 36) கீழே உள்ளபடி உரைக்கிறது:

- நிசீபாவேந ஸந்த்யோத்யம் ஆத்மநோ யத் ஸமர்ப்பணம் விஷ்ண்வாதிஷு சதுர்த்தீ தத்ஸம்ப்ரதாந ப்ரதர்சிநீ - ஸர்வேச்வரனிடம் ஜீவாத்மாவைக் காப்பாற்றப்பட வேண்டிய பொருள் என்று சமர்ப்பணம் செய்தல் என்பது ஜீவாத்மா அடிமையாக உள்ளதால் உணர்த்தப்படுகிறது. இத்தகைய சமர்ப்பணம் என்பதே விஷ்ணு முதலான சொற்களில் காணப்படும் நான்காம் வேற்றுமையில் உள்ளதான ஸம்ப்ரதாநத்தைக் கூறுகிறது.

- நீசீபூதோ ஹ்யஸாவாத்மா யத் ஸம்ரக்ஷ்யதயா அர்ப்யதே தத் கஸ்மா இத்யபேக்ஷாயாம் விஷ்ணவே ஸ இதீர்யதே – அடிமையான ஜீவாத்மாவை, இந்த ஜீவாத்மா யாரால் காப்பாற்றப்பட வேண்டியவன் என்று எண்ணியபடி அளிக்கவேண்டும் என்றால், “விஷ்ணுவுக்கு” என்றே கூறப்பட வேண்டும்.

மேலே உள்ள ச்லோகங்களில் காணப்படும் “விஷ்ண்வாதிஷு” என்பதன் மூலம் “நாராயணாய” என்பதில் உள்ள நான்காம் வேற்றுமையும் விளக்கப்பட்டது.

## அஷ்டாக்ஷரத்தில் உள்ள அக்ஷரத்துக்கான பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த பல பொருள்கள்

**மூலம்** – இத்திருமந்த்ரத்தில் நகாரம் முதலான ஏழு திருவக்ஷரங்களுக்கும் ப்ரத்யேகம் மந்த்ர ஸ்ம்ருதிகளிற் சொன்ன அர்த்தங்களை

நாயகத்வம் ச ஸர்வேஷாம் நாமநத்வம் பரே பதே
நாசகத்வம் விருத்வாநாம் நகாரார்த்த: ப்ரகீர்த்தித:

மங்களத்வம் மஹத்த்வம் ச மஹநம் கரோதி யத்
ஆச்ரிதாநாம் ததோ ஜ்ஞேயோ மகாரார்த்தஸ்ததோ புதை:

நாஸ்திக்ய ஹாநிர் நித்யத்வம் நேத்ருத்வம் ச ஹரே: பதே
நாகார ஸேவிநாம் ந்ருணாம் மந்த்ரவித்பி: ப்ரகீர்த்தித:

ரஞ்ஜநம் பகவத்யாசு ராகஹாநிஸ்ததோ அந்யத:
ராஷ்ட்ரத்ராணாதிகம் சாபி ப்ராப்யதே ரேபஸேவயா

யோகோத்யோக: பலம் சாசு யகாராத் ப்ராப்யதே புதை:
வர்ணநம் ச ததா விஷ்ணோ: வாணீஸித்திர்ணகாரத:

யக்ஷ ராக்ஷஸ வேதாள பூதாதீநாம் பயாய ய:
ஏவமக்ஷர நிர்வாஹோ மந்த்ரவித்பி: ப்ரகீர்த்தித:

இத்யாதிகளாலே சில ஆசார்யர்கள் ஸங்க்ரஹித்தார்கள்.

**விளக்கம்** – திருமந்த்ரத்தில் (ப்ரணவம் நீங்கலாக) உள்ள "ந" என்னும் எழுத்து தொடக்கமாக உள்ள ஏழு எழுத்துக்களுக்கும் மந்த்ர ஸ்ம்ருதிகளில் உள்ளது போன்று

தனித்தனியாக நம்முடைய பூர்வாசார்யர்கள் கீழே உள்ளது போன்று அருளிச் செய்தார்கள்:

- நாயகத்வம் ச ஸர்வேஷாம் நாமநத்வம் பரே பதே நாசகத்வம் விருத்வாநாம் நகாரார்த்த: ப்ரகீர்த்தித: - அனைவருக்கும் க்ஷேமங்களை அளித்தல், பரமபதம் மீது பற்றுதல் உண்டாக்குதல், இதற்கு விரோதியாக உள்ளதான "ஆத்மாவுக்கு ஏற்காத குணங்கள்" என்பவற்றை அழித்தல் ஆகியவையே "ந" என்பதன் பொருளாகும் ("நமோ" என்பதில் உள்ள "ந")

- மங்களத்வம் மஹத்த்வம் ச மஹநம் கரோதி யத் ஆச்ரிதாநாம் ததோ ஜ்ஞேயோ மகாரார்த்தஸ்ததோ புதை: - அடியார்களுக்கு மங்களத்தைச் செய்தல், அவர்களுடைய ஞானத்தை நன்றாக மலரும்படிச் செய்தல், அவர்களை மற்றவர்கள் வணங்கும்படிச் செய்தல் ஆகியவையே "ம" என்பதன் பொருளாகும் ("நமோ" என்பதில் உள்ள "ம")

- நாஸ்திக்ய ஹாநிர் நித்யத்வம் நேத்ருத்வம் ச ஹரே: பதே நாகார ஸேவிநாம் ந்ருணாம் மந்த்ரவித்பி: ப்ரகீர்த்தித: - நாஸ்திகத் தன்மையை விலக்குதல், ஸர்வேச்வரனுக்கான கைங்கர்யத்தை எப்போதும் செய்தல், பரமபதம் கொண்டு சேர்க்கும்விதம் உள்ள ஆசார்ய தன்மை ஆகியவையே "நா" என்பதன் பொருளாகும் ("நாராயணாய" என்பதில் உள்ள "நா")

- ரஞ்ஜநம் பகவத்யாசு ராகஹாநிஸ்ததோ அந்யத: ராஷ்ட்ரத்ராணாதிகம் சாபி ப்ராப்யதே ரேபஸேவயா – ஸர்வேவரனிடம் விரைவாக ப்ரீதி உண்டாதல், அவனைத் தவிர மற்றவர்களிடம் உள்ள ஈடுபாட்டினை விடுதல், ராஜ்யத்தைக் காத்தல் ஆகியவை "ரா" என்னும் எழுத்தைத் த்யானிப்பவர்க்குக் கிட்டும் ("நாராயணாய" என்பதில் உள்ள "ரா")

- யோகோத்யோக: பலம் சாசு யகாராத் ப்ராப்யதே புதை: வர்ணநம் ச ததா விஷ்ணோ: வாணீஸித்திர்ணகாரத: - ஸர்வேச்வரனை அடைவதில் உள்ள வேகமும் அதன் பயனும் "ய" என்பதால் உண்டாகின்றன; ஸர்வேச்வரனைப்

புகழ்வதும், அதற்கான வாக்கும் "ண" என்பதால் உண்டாகின்றன ("நாராயணாய" என்பதில் உள்ள "ய" மற்றும் "ண")

- யக்ஷ ராக்ஷஸ வேதாள பூதாதீநாம் பயாய ய: ஏவமக்ஷர நிர்வாஹோ மந்த்ரவித்பி: ப்ரகீர்த்தித: - யக்ஷன், ராக்ஷஸன், வேதாளம், பூதம் ஆகியவை பயந்து ஓடுதல் என்பது "ய" என்பதால் உண்டாகிறது ("நாராயணாய" என்பதில் உள்ள "ய"). இவ்விதம் மந்த்ரத்தில் உள்ள எழுத்துக்களுடைய பொருள்கள் மற்றும் பயன்கள், மந்த்ரங்களை அறிந்தவர்களால் கூறப்படுகிறது.

திருமந்த்ரம் பகவத்ஸ்வரூபம் மற்றும் ஜீவஸ்வரூபம் ஆகியவற்றைக் காட்டுதல்

**மூலம்** – இப்படி இப்பதங்களினுடைய வ்யாகரண நிருக்தாதி ஸித்த வ்யுத்பத்தி பராமர்சத்தாலே பரவாதி மூலமாக வரும் மாசற விளக்கப்பட்ட திருமந்த்ரமாகிற கண்ணாடி, பரஸ்வரூபாதிகளையும் ஸ்வஸ்வரூபத்திற் காணவரிய நிலங்களையுமெல்லாம் ஸுவ்யக்தமாகக் காட்டும்.

**விளக்கம்** – இப்படியாக திருமந்த்ரத்தில் உள்ள பல எழுத்துக்களுடைய வ்யாகரணம், நிருக்தம், மந்த்ரசாஸ்த்ரம் ஆகியவற்றில் கூறப்பட்ட பொருள்களை ஆராய்வதன் மூலம் திருமந்த்ரம் என்பது மிகவும் தெளிவாக விளக்கப்பட்டது. இவ்விதம் கண்ணாடி போன்றுள்ள திருமந்த்ரம், அறிந்து கொள்வதற்குக் கடினமாக உள்ளதான பரமாத்மாவுடைய ஸ்வரூபம் மற்றும் ஜீவாத்மாவுடைய ஸ்வரூபம் ஆகிய இரண்டையும் முகவும் தெளிவாகக் காண்பிக்கிறது.

## திருமந்த்ரத்தில் சிந்திக்கவல்ல (த்யானிக்கத்தக்க) பகவத் குணங்கள்

**மூலம்** – இதுக்குப் ப்ரதிபாத்ய தேவதையாய்ப் ப்ராப்யமுமான பரஸ்வரூபத்தை இத்திருமந்த்ரத்தில் சப்தங்களாயும் ஆர்த்தங்களாயுமுள்ள ப்ரகாரங்களோடேகூட யதா ப்ரமாணம் அநுஸந்திக்கும்போது ரக்ஷகத்வம், அதினுடைய ஸ்வபாவ ஸித்தத்வம், அதில் ஸர்வவிஷயத்வம், ரக்ஷ்யவஸ்து விசேஷாநுரூபமாக ரக்ஷையினுடைய நாநாப்ரகாரத்வம்,

ஸர்வதா ரக்ஷகத்வம், ஸர்வத்ர ரக்ஷகத்வம், ஸர்வப்ரகார ரக்ஷகத்வம், ஸ்வார்த்த ரக்ஷகத்வம், ஸர்வரக்ஷகத்வாபேக்ஷிதமான ஸர்வஜ்ஞத்வம், ஸர்வசக்தித்வம், ஸ்வேச்சா வ்யதிரிக்தாநிவார்யத்வம், அநதிக்ரமணீய ரக்ஷண ஸம்ரம்பத்வம், பரமகாருணிகத்வம், அவஸர ப்ரதீக்ஷத்வம், வ்யாஜமாத்ர ஸாபேக்ஷத்வம், ஆச்ரித ஸுலபத்வம், விச்வஸநீயத்வம், ஸாபராததடநாத்யநுகுண விசேஷணத்வம், சேஷித்வம், அதினுடைய நிருபாதிகத்வ நித்யத்வ ஸர்வவிஷயத்வங்கள், அநந்யசேஷித்வம், குணக்ருதசேஷித்வம், ஸபத்நீகசேஷித்வம், ஸமாப்யதிகாராஹித்யம், ஆத்மஹவிருத்தேசார்ஹத்வம், அசித் பத்த முக்த நித்ய விலக்ஷணத்வம், பரவிசேஷித்வ ஹேதுத்வம்

**விளக்கம்** – திருமந்த்ரத்தில் கூறப்படும் தெய்வமாகிய நாராயணனுடைய ஸ்வரூபத்தை, திருமந்த்ரத்தின் ஆழ்ந்த பொருள் மற்றும் சப்தங்கள் ஆகியவற்றின் மூலம், தகுந்த ப்ரமாணங்களுடன் த்யானிக்கும்போது, அந்த ஸ்வரூபத்தில் கீழே கூறப்படும் பல தன்மைகள் வெளிப்படுகின்றன. அவையாவன – காப்பாற்றும் தன்மை, அவன் இயல்பாகவே காப்பாற்றும் தன்மையுடன் இருத்தல், அவ்விதம் காக்கும்போது அனைத்தையும் காத்தல், காப்பாற்றப்படும் வஸ்துக்கள் பல தன்மைகளுடன் உள்ளதால் காப்பாற்றும் தன்மைகளும் பலதாக இருத்தல், அனைத்துக் காலங்களிலும் காத்தல், அனைத்து இடங்களிலும் காத்தல், அனைத்துவிதங்களிலும் காத்தல், தன்னுடைய விருப்பம் காரணமாகவே காத்தல், அனைத்தையும் காப்பாற்றுவதற்கு அவசியமாக உள்ளதான அனைத்தையும் அறியும் தன்மை, அனைத்து சக்திகளும் கொண்டிருத்தல், தன்னுடைய விருப்பம் அல்லாமல் தன்னால் காப்பாற்றப்படுதல் என்பதை யாராலும் ஒதுக்க இயலாத தன்மை, அவன் காப்பாற்றுவதை யாராலும் தடுக்க இயலாத தன்மை, மிகுந்த கருணை நிறைந்த தன்மை, காப்பாற்றுவதற்கான தகுந்த தருணத்தை எதிர்பார்த்தபடி உள்ள தன்மை, ஜீவனைக் காப்பாற்ற அந்த ஜீவனிடமிருந்து ஒரு சிறிய அல்ப காரணத்தை மட்டுமே நோக்கியிருக்கும் தன்மை, தன்னை அழைப்பவர்களுக்கு மிகவும் எளியவனாக உள்ள தன்மை, எப்போதும் நம்பலாம் என்னும்படி உள்ள தன்மை, யார் எந்த ஒரு தவறு இழைத்தாலும் அதனைப் பொறுத்துக்கொள்ளும்படித் தன்னிடம் சிபாரிசு செய்யும் தன்மை (மஹாலக்ஷ்மி), அனைத்திற்கும் எஜமானனாக உள்ள தன்மை, எந்தவிதமான காரணமும் இல்லாமல் எப்போதும் அனைவருக்கும் எஜமானனாக உள்ள தன்மை, மற்ற யாருக்கும் இவன் அடிமையாக இல்லாத தன்மை, யார் தன்னுடைய குணங்களையும் தன்மைகளையும் அறிகிறார்களோ அவர்களுக்கு எஜமானனாக

இருத்தல், தன்னுடைய பத்தினியாகிய பெரியபிராட்டியுடன் சேர்ந்து எஜமானனாக இருத்தல், தனக்கு நிகராகவோ அல்லது விஞ்சியோ யாரும் இல்லாத தன்மை, ஆத்மாவை அவிர்பாகமாக அளிப்பதற்கு அனைத்து தகுதியும் கொண்டிருத்தல், அசித் – ஸம்ஸாரி – முக்தி பெற்றவர் – நித்யஸூரிகள் ஆகிய அனைத்தைக் காட்டிலும் வேறுபட்டிருத்தல், அனைத்தும் இவன் அடிமையாக உள்ளதால் அனைத்திற்கும் காரணமாக உள்ள தன்மை.

**மூலம்** – ஸ்வத: கர்த்ருத்வம், சக்த்யாதாயகத்வம், ப்ரேரகத்வம், அநந்யப்ரேர்யத்வம், அநுமந்த்ருத்வம், கர்மஸாக்ஷித்வம், ஸஹகாரித்வம், ப்ரியப்ரவர்த்தகத்வம், ஹிதப்ரவர்த்தகத்வம், நிருபாதிக நந்தவ்யத்வம், வசீகார்யத்வம், ஸித்தோபாயத்வம், ஸாத்யோபாய ஹேதுத்வம், ச்ருதி ஸ்ம்ருதி ரூபாஜ்ஞாவத்வம், தண்டதரத்வம், ஸர்வஸமத்வம், ஆச்ரித பக்ஷபாதித்வம், அவித்யாதி ஹேதுத்வம், அவித்யாத்யநர்ஹத்வம், ஆச்ரித அவித்யா நிவர்த்தகத்வம், ஸ்வரூபாந்யதாபாவ ராஹித்யம், ஸ்வபாவாந்யதாபாவ ராஹித்யம், ஸர்வநேந்த்ருத்வம், ஸர்வ ஜகத் வ்யாபார லீலத்வம்

**விளக்கம்** – அனைத்தையும் யாருடைய உதவியும் இன்றித் தானாகவே செய்யவல்ல தன்மை, அறியும் தன்மை முதலானவற்றால் ஜீவாத்மாக்களை கவரும் தன்மை, அனைத்து செயல்களையும் தூண்டவல்ல தன்மை, மற்ற யாராலும் தூண்டப்படவேண்டிய அவசியம் இல்லாத தன்மை, அனைத்து கர்மங்களையும் செய்ய அனுமதி அளிக்கும் தன்மை, அனைத்து கர்மங்களுக்கும் ஒரே சாட்சியாக உள்ள தன்மை, கர்மங்களுக்கு உதவியாக உள்ள தன்மை, அவனுக்கு விருப்பமானவற்றைச் செய்பவர்களை ஊக்குவிக்கும் தன்மை, அவனுடைய அடியார்கள் தங்களுக்கு நன்மையானவற்றைச் செய்யும்படியாகத் தூண்டும் தன்மை, எந்தவிதமான காரணமும் அவசியம் இல்லாமல் உபாசிக்கப்படும் வஸ்துவாக இருத்தல், மற்றவர்களால் ஏவப்பட்டுத் தங்களுடைய செயல்களை முடித்துக் கொள்ளும்படியாக உள்ள தன்மை, எப்போதும் ஜீவாத்மாவுக்கு உதவக் கூடிய நிலையில் உள்ள தன்மை, பக்தி அல்லது ப்ரபத்தியை ஜீவாத்மா கைக்கொள்ளக் காரணமாக உள்ள தன்மை, ச்ருதி மற்றும் ஸ்ம்ருதி ரூபங்களில் தன்னுடைய ஆணைகளை வெளிப்படுத்திய தன்மை, தவறு செய்பவர்களைத் தண்டிக்கும் தன்மை, அனைவரையும் ஒரே போன்று ஆதரிப்பவன், தன்னை அண்டி நிற்பவர்களிடம் அதிகமான கருணையை வெளிப்படுத்தும் தன்மை, அவித்யை முதலானவை உண்டாகக் காரணமாக உள்ள தன்மை, அவித்யை மற்றும் கர்மங்கள் அற்ற தன்மை, தன்னுடைய அடியார்களுடைய அவித்யையை நீக்கும்

தன்மை, தன்னுடைய ஸ்வரூபம் எப்போதும் மாறாதபடி உள்ள தன்மை, தன்னுடைய இயல்பான தன்மை எப்போதும் மாறாதபடி உள்ள தன்மை, அனைத்து ஜீவாத்மாக்களையும் ஆளும் தன்மை, உலகங்களைப் படைத்து காத்து ஸம்ஹாரம் செய்வதை ஒரு லீலையாகக் கொண்ட தன்மை.

**மூலம் –** ஸர்வவேதாந்த ப்ரதாந ப்ரதிபாத்யத்வம், ஸர்வேபாதநத்வம், ஸர்வநிமித்தத்வம், ஸத்யஸங்கல்பத்வம், ஸர்வ சரீரத்வம், ஸர்வ சப்த வாச்யத்வம், ஸர்வ கர்ம ஸமாராத்யத்வம், ஸர்வ பல ப்ரதத்வம், ஸர்வவித பந்துத்வம், ஸர்வ வ்யாபகத்வம், நிரதிசய ஸூக்ஷ்மத்வம், ஸர்வ தாரத்வம், ஸ்வநிஷ்டத்வம், ஸத்யத்வம், ஜ்ஞாநத்வம், அநந்தத்வம், ஆனந்தத்வம், அமலத்வம், நிரூபித ஸ்வரூப விசேஷண அநுக்தாநந்த குணவத்த்வம், நித்ய திவ்யமங்கள விக்ரஹத்த்வம், பரவ்யூஹாத்யவஸ்தாவத்த்வம், ஸத்யாவதாரத்வம், அஜஹத்ஸ்வ ஸ்வபாவத்வம், அப்ராக்ருதாவதாரத்வம், அகர்மவச்ய அவதாரத்வம், அகாலநியாமாவதாரத்வம், ஆச்ரிதார்த்த குணபரீவாஹ அவதாரத்வம், ஸர்வாவஸ்த சுபாச்ரயத்வம், ஸர்வாவஸ்த லக்ஷ்மீஸஹசரத்வம், திவ்ய பூஷணாயுத மஹிஷீ ஸ்தாந பரிஜன பரிச்சத த்வாரபால பார்ஷதாதிமத்த்வம்,

**பொருள் –** அனைத்து வேதாந்தங்களிலும் முதன்மையானவனாகக் கூறப்படுதல், அனைத்துவிதமான உபாதானக் காரணமாக இருத்தல், அனைத்துவிதமான நிமித்த காரணமாக இருத்தல், தவறாத ஸங்கல்பத்துடன் இருத்தல், அனைத்தையும் சரீரமாகக் கொண்டிருத்தல், அனைத்து சொற்களாலும் கூறப்படுதல், அனைத்து கர்மங்களையும் தனது ஆராதனையாகவே கொண்டிருத்தல், அனைத்து கர்மங்களுக்கான அனைத்து பலன்களையும் அளித்தல், அனைவருக்கும் அனைத்துவிதமான உறவினனாக இருத்தல், எங்கும் நீக்கமற பரவி இருத்தல், மிகவும் ஸூக்ஷ்மமாக இருத்தல், அனைத்தையும் தாங்கியபடி இருத்தல், தனக்குத்தானே ஆதாரமாக இருத்தல், ஸத்யத்துடன் இருத்தல், ஞானமயமாக இருத்தல், அனைத்திலும் எல்லையற்றபடி இருத்தல், ஆனந்தமயமாக இருத்தல், எந்தவிதமான தோஷமும் இல்லாமல் இருத்தல், தன்னுடைய எல்லயற்ற ஸ்வரூபங்கள் அனைத்தும் ஸத்யம் உள்ளிட்ட பலவற்றால் வெளிப்படும்படி இருத்தல், எப்போதும் மங்களகரமான திருமேனியுடன் இருத்தல், பர வ்யூஹம் முதலான நிலைகளுடன் இருத்தல், ஸத்யம் முதலானவற்றை வெளிப்படுத்தும் அவதாரங்களுடன் இருத்தல், தன்னுடைய ஸ்வபாவங்களுடன் கூடியபடியே அவதாரங்களுடன் இருத்தல்,

இந்தப் பூமியின் தொடர்புடைய எந்தவொரு வஸ்துவின் ஸம்பந்தமும் இல்லாதபடியான அவதாரங்களுடன் இருத்தல், கர்மங்கள் காரணமாக உண்டான சரீரம் என்று இல்லாதபடியான சரீரத்துடன் கூடிய அவதாரங்களுடன் இருத்தல், இந்த நேரத்தில் இந்த அவதாரத்தில் வரவேண்டும் என்று காலநியமனம் இல்லாத அவதாரங்களுடன் இருத்தல், தன்னுடைய அடியார்களுடைய குறைகளை நீக்கவல்ல கல்யாணகுணங்கள் நிரம்பிய அவதாரங்களுடன் இருத்தல், எந்த நிலையிலும் தூய்மை மற்றும் அண்டக்கூடிய தன்மை ஆகியவற்றுடன் இருத்தல், எந்த நிலையிலும் மஹாலக்ஷ்மியுடன் கூடி இருத்தல், திவ்யமான ஆபரணங்கள் - ஆயுதங்கள் – பட்டமஹிஷிகள் – இருப்பிடம் – வேலையாட்கள் – ஆசனங்கள் – வாயில் காப்பாளர்கள் போன்ற பலவற்றுடன் கூடியபடி இருத்தல்.

**மூலம்** – ஸ்தூலசரீர விச்லேஷகத்வம், விச்ரம ஸ்தாநத்வம், அநுக்ரஹ விசேஷவத்த்வம், ப்ரஹ்ம நாடீ த்வார ப்ரகாசகத்வம், தத்ப்ரவேசகத்வம், ப்ரஹ்மரந்த்ர உத்க்ராந்தி ஹேதுத்வம், அர்ச்சிராதி ஆதிவாஹிக நியோக்த்ருத்வம், ஸூர்ய த்வாராதி நேத்ருத்வம், அண்ட ஆவரண ப்ரக்ருதி மண்டலாதி க்ரமஹேதுத்வம், விரஜா தீர ப்ராபகத்வம், ஸூக்ஷ்ம சரீர விச்லேஷகத்வம், அப்ராக்ருத தேஹப்ரதத்வம், திவ்ய அப்ஸரஸ் ஸத்காராதி ப்ரயோஜகத்வம், ப்ரஹ்மகந்தாதி ப்ரவேசகத்வம், நித்யமுக்த ஸத்கார விசேஷ ஹேதுத்வம், பர்யங்காதிரோஹண பர்யந்தாதரவத்வம், பரிபூர்ணானுபவ ஹேதுத்வம், ப்ரதான ப்ராப்யத்வம், ஸதேஹ விதேஹ பஹுதேஹ க்ருத ஸர்வவித கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தித்வம், அவாப்த ஸமஸ்த காமத்வம், நிரதிசய ஆனந்தவத்த்வம், நிரதிசய போக்யத்வம், ஸர்வ ப்ரகார போக்யத்வம், ஸர்வதா அனுகூல ஸ்வபாவத்வம், அத்யந்த துல்ய போக ப்ரதத்வம், ஆச்ரித விச்லேஷா ஸஹத்வம், அபுநராவ்ருத்தி ஹேதுத்வம் என்று இவை ப்ரதாநமாக மற்றும் இவற்றைத் துவக்கி வரும் ஏற்றங்களுமெல்லாம் அடைவே அநுஸந்தேயங்கள்.

**விளக்கம்** – ஸ்தூல சரீரத்திலிருந்து ஆத்மாவைப் பிரித்து எடுக்கவல்ல திறனுடன் இருத்தல், ஜீவாத்மா ஓய்வெடுக்க இருப்பிடமாக இருத்தல் (உறங்கும்போது ஜீவாத்மா இதயத்தில் புரீதத் என்னும் பகுதியில் உள்ள பரமாத்மாவுடன் சென்று ஓய்வெடுப்பதாக ப்ரஹ்மஸூத்ரம் கூறுகிறது), ஜீவாத்மாவுக்கு எப்போதும் சிறப்பான அனுக்ரஹம் செய்தபடி இருத்தல், சரீரத்திலிருந்து மோக்ஷம் செல்லக் கிளம்பும் ஜீவாத்மாவுக்கு

ப்ரஹ்மநாடி இன்னது என்று காண்பிக்க அந்த நாடியை ஒளிரும்படிச் செய்தல் (101 நாடிகளில், 101வது நாடி எது என்று அறிய உதவுதல்), அந்த ப்ரஹ்மநாடியில் ஜீவாத்மா புகும்படிச் செய்தல், ப்ரஹ்மநாடியிலிருந்து ஜீவாத்மாவை வெளியேற்றுதல், அர்ச்சிஸ் மற்றும் ஆதிவாஹனர்களை ஜீவாத்மாவுக்கு மெய்க்காப்பாளர்களாக நியமித்தல், சூரிய மண்டலத்தில் புகும் ஜீவாத்மாவை வழி நடத்துதல், ஜீவாத்மா அண்டம் – ஆவரணம் முதலானவற்றை வரிசையாகக் கடக்கும்படிச் செய்தல், இவ்விதம் வரும் ஜீவாத்மாவை விரஜா நதிக்கரைக்குக் கொண்டு செல்லுதல், அங்கு ஜீவாத்மா ஸூக்ஷ்ம சரீரத்தை விட்டு வெளியேறும்படிச் செய்தல், அவனுக்கு பரமபதத்தில் வசிப்பதற்கு ஏற்ற சரீரம் அளித்தல், அப்ஸரஸ் முதலானவர்கள் ஜீவாத்மாவை வரவேற்கும்படிச் செய்தல், ப்ரஹ்மத்திற்கே உரிய நறுமணம் முதலானவற்றை அந்த ஜீவாத்மாவுக்கு அளித்தல், நித்யஸூரிகள் மற்றும் முக்தர்கள் முதலானவர்கள் ஜீவாத்மாவை வரவேற்கும்படிச் செய்தல், தன்னுடைய ஸிம்ஹாஸனத்திற்கு அருகில் வரும் அந்த ஜீவாத்மா ஸிம்ஹாஸனத்தில் ஏறி அமரும்படிச் செய்தல், தன்னுடைய பரிபூர்ணமான அனுபவத்தை அந்த ஜீவாத்மாவுக்கு அளித்தல், அடையவேண்டிய மிகவும் உயர்ந்த இலக்காக இருத்தல், சரீரத்துடனோ சரீரம் இல்லாமலோ பல சரீரங்களுடனோ ஜீவாத்மா தனக்கு எப்போதும் அனைத்துவிதமான கைங்கர்யங்களும் செய்யும்படிச் செய்தல், தான் விரும்பும் அனைத்தும் கிடைக்கப் பெற்று இருத்தல், எல்லையற்ற ஆனந்தம் கொண்டிருத்தல், எல்லையற்ற இன்பம் அளிப்பவனாக இருத்தல், அனைத்துவிதமான இன்பங்களையும் அளிப்பவனாக இருத்தல், தன்னுடைய இயல்பாகவே அனைவருக்கும் எப்போதும் அனுகூலமாக இருத்தல், தான் எப்போதும் அனுபவித்தபடி உள்ள இன்பத்திற்கு நிகரான எல்லையற்ற இன்பத்தை அளித்தல், தன்னி அண்டியவர்களை விட்டுப் பிரிய இயலாமல் சேர்ந்தே இருத்தல், ஸம்ஸாரத்திற்கு ஜீவாத்மா மீண்டும் திரும்பாமல் இருக்கக் காரணமாக இருத்தல் – இவை மட்டும் அல்லாமல், இவற்றை முக்கியமாகக் கொண்டு, இது போன்றுள்ளவற்றால் உண்டாகும் ஏற்றங்கள் அனைத்தும் பகவத்குண விசேஷங்கள் ஆகும்.

*இஹ ஸங்க்ரஹத: ஸ்ரீமாந் கோப்யதா சேஷீ ஸமாதிக தரித்ர:*
*சரணம் ஸர்வசரீரீ ப்ராப்ய: ஸேவ்யச்ச ஸாதுபிர்பவ்ய:*

**பொருள்** – மஹாலக்ஷ்மியின் நாயகனாகவும், காப்பவனாகவும், எஜமானனாகவும், தனக்கு நிகராகவோ உயர்ந்தவராகவோ யாரும் இல்லாதவனாகவும், உபாயமாகவும்,

அனைத்திற்கும் அந்தர்யாமியாகவும், அடையப்பட வேண்டிய இலக்காகவும், வணங்கத்தக்கவனாகவும் உள்ளவனே ஸாதுக்களால் இந்த மூலமந்த்ரத்தில் சுருக்கமாக எண்ணப்பட வேண்டியவன் ஆவான்.

## திருமந்த்ரத்தில் உணரவேண்டிய ஜீவாத்ம ஸ்வருபத்தினுடைய தன்மைகள்

**மூலம் –** இப்படி ப்ராப்யனான பரமாத்மாவை ப்ராபிக்கும் ஜீவாத்மா இத்திருமந்த்ரத்தாலே அநுஸந்தேயனாம்போது ஸ்ரீமத்ரக்ஷ்யத்வம், அநந்ய ரக்ஷ்யத்வம், ஸர்வத்ர ஸர்வதா ஸர்வப்ரகார ரக்ஷகவத்த்வம், ஸுசீல ரக்ஷகவத்த்வம், புருஷகாரவத்த்வம், மஹாவிச்வாஸ யோகித்த்வம், ஸலக்ஷ்மீகதாஸத்வம், நித்ய தாஸத்வம், நிரூபாதிக தாஸத்வம், அநந்யார்ஹ தாஸத்வம், ஜ்ஞாநத்வம், ஆனந்தத்வம், ஸ்வயம் ப்ரகாசத்வம், ஸ்வஸ்மை பாஸமாநத்வம், அஹம் சப்த வாச்யத்வம், அணுபரிமாணத்வம், ஸூக்ஷ்மத்வம், சோதநாத்யநர்ஹத்வம், சதுர்விசதித்த்வ விலக்ஷணத்வம், அமலத்வம், ஈச்வராதந்யத்வம், ஜ்ஞாத்ருத்வம், ஆநுகூல்யாதி யோக்யத்வம், பரமபுருஷார்த்த அபேக்ஷார்ஹத்வம், நியோக யோக்யத்வம், கைங்கர்ய யோக்யத்வம், ஸர்வஸாக்ஷாத்கார யோக்யத்வம்

**விளக்கம் –** இவ்விதம் அடையப்படவேண்டியவனாகிய பரமாத்மாவை அடைய முயலும் ஜீவாத்மா, இந்தத் திருமந்த்ரம் மூலம் எண்ணப்படும்போது அவனுக்கு உள்ள தன்மைகளாவன – மஹாலக்ஷ்மியுடன் சேர்ந்துள்ள ஸர்வேச்வரனால் காக்கப்படுபவன், மற்ற யாராலும் காக்கப்பட இயலாதவன், எப்போதும் எங்கும் அனைத்துவிதங்களிலும் காக்கப்படுபவன், மிக உயர்ந்த குணங்கள் கொண்டவனால் காக்கப்படுபவன், மஹாலக்ஷ்மியால் சிபாரிசு செய்யப்படுபவன், மஹாவிச்வாஸம் என்னும் யோகம் உள்ளவன், மஹாலக்ஷ்மியுடன் கூடிய ஸர்வேச்வரனுக்கு எப்போதும் தாஸனாக உள்ளவன், எப்போதும் அவர்களுக்குத் தாஸனாக உள்ளவன், எந்தவிதமான காரணமும் இன்றி இயல்பாகவே அவர்களுக்குத் தாஸனாக உள்ளவன், மற்ற யாருக்கும் தாஸன் அல்லன், ஞானமயமானவன், ஆனந்தமயமானவன், தானாகவே ப்ரகாசிப்பவன், தனக்குத்தானே தன்னை வெளிப்படுத்திக் கொள்பவன், “நான்” என்பதால் குறிக்கப்படுபவன் (ஆத்மா), அணு அளவே உள்ளவன், மிகவும் நுண்ணியமானவன், அறுக்கவோ எரிக்கவோ இயலாதவன், இருபத்து நான்கு தத்துவங்களைக் காட்டிலும்

வேறுபட்டவன், தோஷங்கள் அற்றவன், ஈச்வரனைக் காட்டிலும் வேறுபட்டவன், எப்போதும் அறியும் தன்மை கொண்டவன், அனுபவிக்கத் தகுந்த அனைத்தையும் அனுபவிக்கும் தகுதி கொண்டவன், மிகவும் உயர்ந்த புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை விரும்பும் தகுதி உள்ளவன், ஸர்வேச்வரனால் கைக்கொள்ளப்படத் தகுந்தவன், பகவானுக்கு அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்யத் தகுதி உள்ளவன், அனைத்தையும் நேரடியாகக் காணும் திறன் கொண்டவன்.

**மூலம்** – நிரதிசய ஆனந்த யோக்யத்வம், பராபேக்ஷ கர்த்ருத்வம், ஸோபாதிக ஸ்வாமித்வம், பாகவத சேஷித்வம், பாகவத கிங்கரத்வம், அநந்யோபாயத்வம், அவித்யாதிமத்த்வம், கரணாதிஸாபேக்ஷ ஜ்ஞாந விகாஸவத்த்வம், ஸம்ஸார பயாக்ராந்தத்வம், அவித்யாதி நிவ்ருத்தி ஸாபேக்ஷத்வம், அகிஞ்சநத்வம், ஈச்வர ஸௌஹார்த்தாதிமத்த்வம், ஸதாசார்ய ப்ராப்திமத்த்வம், ஸாத்யோபாய அநுஷ்டான அர்ஹத்வம், உபாயநிஷ்டத்வம், மஹாப்ரபாவத்வம், விசிஷ்ட வேஷத்தாலே ஸ்ருஷ்டி ஸம்ஹார விஷயத்வம், அக்ஷயத்வம், ஸ்வதோ பஹுத்வம், அஸங்க்யாதத்வம், ஈச்வர வ்யாப்யத்வம், ஈச்வர நியாம்யத்வம், ஈச்வ்ர தார்யத்வம்,

**விளக்கம்** – எல்லையற்ற ஆனந்தம் பெறக்கூடிய தகுதி உள்ளவன், ஸர்வேச்வரனுடைய விருப்பத்துக்கு இணங்க செயல் புரிபவன், ஒரு சில கட்டங்களில் ஒரு சிலவற்றுக்கு எஜமானன், அடியார்களுக்கு அடிமையாக உள்ளவன், அவர்களுக்குத் தொண்டு செய்பவன், ஸர்வேச்வரன் அல்லாது வேறு உபாயம் இல்லாதவன், அவித்யை முதலியவற்றால் பீடிக்கப்படுபவன், தன்னுடைய உடல் உறுப்புகள் மூலம் ஞானம் மலரும்படியாக உள்ளவன், ஸம்ஸார பயம் என்னும் முடிச்சுகளால் கட்டப்படுபவன், தன்னுடைய அவித்யை முதலானவை அகலும் வழி பார்த்து உள்ளவன், ஸர்வேச்வரன் தன்னைக் காக்க தன்னிடம் முதல் ஏதும் இல்லாதவன், ஸர்வேச்வரனுடைய நட்பு போன்ற பல நன்மைகளைக் கொண்டவன், நல்ல ஆசார்யனை அடைய முயல்பவன், பக்தி அல்லது ப்ரபத்தி என்பதான ஸாத்யோபாயங்களைக் கைக்கொள்ளும் தகுதி கொண்டவன், தான் பற்றியுள்ள உபாயத்தில் உறுதியாக உள்ளவன், உயர்ந்த ப்ரபாவங்கள் கொண்டவன், சரீரம் முதலானவற்றுடன் கூடியுள்ளதால் ஸ்ருஷ்டி, ஸம்ஹாரம் போன்றவற்றுக்கு இலக்காக உள்ளவன், எந்தவிதத்திலும் தேயாதவன் (அழியாதவன்), தன்னைப் போன்று பலரையும் கொண்டவன் (பல ஆத்மாக்கள் உண்டு), எண்ணற்றவர்களில் ஒருவன்,

ஸர்வேச்வரனால் வ்யாபிக்கப்பட்டவன், ஸர்வேச்வரனால் நியமிக்கப்படுபவன், ஸர்வேச்வரனால் தாங்கப்படுபவன்.

**மூலம்** – இவற்றின் நியமமடியாக வந்த ஈச்வர சரீரத்வம், ஈச்வர லீலாரஸ ஹேதுத்வம், ஈச்வர போகோபகரணார்ஹத்வம், தததீந கதித்வம், தததீந தத் ப்ராப்தித்வம், ஐச்வர்ய கைவல்ய நிரபேக்ஷகத்வம், பகவத் ப்ராப்தயர்த்தித்வம், ஸர்வா வித்யோந்முக்தத்வம், ஆவிர்பூத ஸ்வரூபத்வம், ஸர்வ த்ருஷ்டத்வம், ஸர்வப்ரகார பகவதநுபவைக போகத்வம், நிரதிசயாநந்தத்த்வம், பகவத் போகார்த்த போக்த்ருத்வம், ஐச்சிக விக்ரஹாதிமத்த்வம், இச்சாவிகாத ரஹிதத்வம், ஈச்வர லக்ஷண வ்யதிரிக்த பரமஸாம்யம், அசேஷ கைங்கர்யைக ரதித்வம், அபுநராவ்ருத்திமத்த்வம் என்று இவை ப்ரதானங்களாகக் கொண்டு இவற்றைத் துவக்கி வரும் மற்றுள்ள ப்ராமாணிகார்த்தங்களும் எல்லாம் இப்பதங்களில் அடைவே சப்த ஸாமர்த்யத்தாலும் அர்த்த ஸ்வபாவத்தாலும் அநுஸந்தேயங்கள்.

**விளக்கம்** – மேலே கூறப்பட்ட பலவற்றின் காரணமாக உண்டாகும் தன்மைகளான ஸர்வேச்வரனுடைய சரீரமாக இருத்தல், ஸர்வேச்வரனுடைய லீலைகளுக்குக் காரணமாக இருத்தல், ஸர்வேச்வரன் அனுபவிக்கத்தகுந்தவனாக இருத்தல், தன்னுடைய இலக்கை எட்டும் மார்க்கம் ஸர்வேச்வரனைச் சார்ந்திருத்தல், அந்த இலக்கை அடைதலும் ஸர்வேச்வரனைச் சார்ந்திருத்தல், ஐச்வர்யம் அல்லது கைவல்யத்தை எதிர்பாராமல் இருத்தல், பகவானை அடைதலையே எண்ணியிருத்தல், அவித்யை முதலான தோஷங்களிலிருந்து விடுபடுதல், தானாகவே தன்னுடைய ஸ்வரூபம் வெளிப்படுதல், முக்தி நிலையில் அனைத்தையும் காணும்படி இருத்தல், பகவத் அனுபவம் என்பதிலேயே அனைத்துவிதமான இன்பங்களையும் அனுபவித்தல், எல்லையற்ற ஆனந்தம் கொண்டிருத்தல், பகவான் அனுபவிப்பதற்காக மட்டுமே இருத்தல், முக்தி நிலையில் தான் விரும்பும் வடிவத்தை தன்னுடைய விருப்பத்தின்படி எடுத்தல், தடையில்லாத இச்சை கொண்டிருத்தல், ஸர்வேச்வரனுக்கு மட்டுமே உரிய தன்மைகள் தவிர்த்து மற்ற அனைத்திலும் அவனைப் போன்றே இருத்தல், பலவிதமான கைங்கர்யங்கள் செய்வதில் ஆனந்தம் கொள்ளுதல், மோக்ஷம் பெற்ற பின்னர் மீண்டும் திரும்புதல் இல்லாமை போன்றவை தொடங்கி, ப்ரமாணங்களில் காணப்படும் மற்ற பல தன்மைகளும் திருமந்த்ரத்தில் உள்ள பதங்களில் சப்தம் மூலமும், அர்த்தம் மூலமும் வெளிப்படுகின்றன.

## திருமந்த்ரத்தில் காணப்படும் மூன்று பதங்களால் உணரப்பட வேண்டிய மூன்று முக்கியமான அம்சங்கள்

பத த்ரயோ அத்ர ஸம்க்ஷேபாத் பாவ்யா அநந்யார்ஹ சேஷதா
அநந்யோபாயதா ஸ்வஸ்ய ததா அநந்யபுமர்த்ததா

**பொருள்** – திருமந்த்ரத்தில் உள்ள மூன்று பதங்களிலும் சுருக்கமாக உணரப்பட வேண்டியவை என்னவென்றால்: தனக்கு ஸர்வேச்வரன் அல்லாமல் வேறு யாரும் எஜமானனாக இல்லாத நிலை, வேறு எதனையும் உபாயமாகக் கைக்கொள்ளாத நிலை மற்றும் வேறு எந்தவிதமான புருஷார்த்தத்தையும் விரும்பாத நிலை ஆகும்.

## திருமந்த்ரத்தின் ஆழ்பொருளை அறிவதால் உண்டாகும் நன்மைகள்

**மூலம்** – இப்படி ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்தம் என்னும்படியிருக்கிற இத்திருமந்த்ரத்திலே சிதசிதீச்வர ஸ்வரூபங்களும், ஜீவர்களுடைய அந்யோந்ய பேதமும், சேஷசேஷி பாவாதிகளாலே நிரூபாதிக ஜீவேச்வர பேதமும், நிகில ஜகந்நிமித்தோபாதாந பூத பரதேவதா விசேஷ நிர்த்தாரணாதிகளும் ஸித்திக்கையால், இப்படி அநுஸந்திப்பார் இருந்த ஊரில் இருக்குமவர்களுக்கும் ஈச்வரனில்லையென்றும், நிர்விசேஷனென்றும், அத்யந்த உதாஸீநனென்றும், ப்ரதிபலன துல்யைச்வர்யனென்றும், கர்மவிசேஷ ஸித்தைச்வர்யனென்றும், கதாசித் கர்மாதி பரவசனென்றும், த்ரிமூர்த்திகளும் ஸமரென்றும், ஏகரென்றும், த்ரிமூர்த்த்யத்தீர்ணன் பரதத்த்வமென்றும், ப்ரஹ்மாதிகளிலே ஒருவன் ஈச்வரனென்றும், ஸ்வரூப பரிணாமவானென்றும், நிமித்தோபாதானைக்யம் கொள்ளவொண்ணாதென்றும், ஜீவேச்வரர்கள் ஏகாத்மாவென்றும், உபாதி ஸித்த பேதரென்றும், நித்யபிந்நாபிந்நரென்றும், ஜீவன் கர்மாத்ராதீந சேஷபாவனென்றும், அநியத சேஷபாவனென்றும், ஜடனென்றும், ஜ்ஞாநமாத்ர ஸ்வரூபனென்றும், நித்யமுக்தனென்றும், ஆரோபித போகனென்றும், கர்த்தாவல்லனென்றும், ஈச்வர நிரபேக்ஷ கர்த்தாவென்றும், ஆப்ரலயஸ்தாயியென்றும், ஆமோக்ஷஸ்தாயியென்றும், ஏகனென்றும், ஸ்வநிஷ்டனென்றும், ஸ்வரூபத: கார்ய பூதனென்றும், கார்யத்வ ப்ரஸங்க ரஹிதனென்றும், கர்மாத்ரோபாயனென்றும், முக்ததசையில் பாஷாண கல்பனென்றும்,

ஸ்வாத்மாநந்தமாத்ர த்ருப்தனென்றும், அத்யந்த ஸ்வதந்த்ரனாமென்றும், ஈச்வரனோடே ஏகீபூதனாமென்றும், வ்யாபாராதி ரஹிதனாமென்றும், விபாகாவிபாகாதி சக்திமானென்றும், ஆனந்ததாரதம்யவானென்றும், வ்யவஸ்தித ஸாலோக்யாதி பேதவானென்றும், மற்றும் இப்புடைகளிலுள்ள பாஹ்ய குத்ருஷ்டி மதங்களொன்றாலும் கலக்கம் வாராது.

**விளக்கம்** – இப்படியாக ஹாரீதஸ்ம்ருதி (3-65) – ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்தம் – ஒருவன் அறியவேண்டிய அனைத்தும் திருமந்த்ரத்தில் உள்ளது – என்று கூறுவதற்கு ஏற்ப அனைத்துமாக திருமந்த்ரம் உள்ளது. இதன் மூலம் ஒருவன் சித், அசித் மற்றும் ஈச்வரன் ஆகிய மூன்றின் ஸ்வரூபங்களை அறியலாம்; ஒவ்வொரு ஜீவாத்மாவுக்கும் இடையே உள்ள பேதங்களையும் அறியலாம். ஜீவாத்மா – பரமாத்மா ஆகிய இருவரும் முறையே அடிமை – எஜமானன் என்றுள்ளதால், இவர்களுக்கு இடையே உள்ளதான எந்தவிதமான விதிவிலக்கும் இல்லாமல் காணப்படும் வேறுபாட்டையும் திருமந்த்ரம் உபதேசிக்கிறது. அனைத்து லோகங்களுக்கும் நிமித்த காரணமாகவும், உபாதானக் காரணமாகவும் (பானைக்கு குயவன் நிமித்த காரணம், மண் உபாதானக் காரணம்) உள்ள உயர்ந்த பரமாத்மாவையும் திருமந்த்ரம் நிரூபிக்கிறது. ஆக திருமந்த்ரத்தை எப்போதும் எண்ணியபடி உள்ளவர்கள் நிறைந்த ஊரில் வசிக்கும் ஒருவர் கீழே கூறப்படும் எந்தவிதமான கலக்கங்களையும் அடையமாட்டார்கள் – ஈச்வரன் இல்லை, ஈச்வரனுக்கு எந்தவிதமான குணங்களும் பண்புகளும் இல்லை, ஈச்வரன் ஜீவாத்மாக்களிடம் விலகியே உள்ளான், அவனுடைய ஸர்வேச்வரத்வம் அல்லது அர்ச்சை போன்ற வடிவங்கள் உண்மையானது அல்ல, அவனுடைய ஸர்வேச்வரத்தன்மை என்பது அவனிடம் உள்ள சிறப்பான கர்மத்தால் உண்டாகிறது, அவன் அவ்வப்போது கர்மவசப்படுகிறான், நான்முகன் – விஷ்ணு – சிவன் ஆகிய மூவரும் சமம் ஆவர், அவர்கள் ஒருவரே ஆவர், உண்மையான ப்ரஹ்மம் என்பது இந்த மூவருக்கும் அப்பாற்பட்டது, நான்முகன் அல்லது சிவன் ஆகியவர்களில் ஒருவரே ஈச்வரன், ஈச்வரனுடைய ஸ்வரூபம் மாறக்கூடியது, நிமித்த காரணமும் உபாதானக் காரணமும் ஒன்றாக இயலாது, ஜீவனும் பரமாத்மாவும் உண்மையில் ஒரே ஆத்மா, அறியாமை முதலான தோஷங்கள் உண்டாவதால் ஒரே ஆத்மாவானது இவ்விதம் ஜீவாத்மா மற்றும் பரமாத்மா என்றாகிறது, அவர்கள் இருவரும் வேறுபட்டவர்களும் அல்லர் ஒன்றும் அல்லர், தன்னுடைய கர்மம் காரணமாகவே ஜீவன் அடிமையாக உள்ளான், ஜீவன் சில நேரத்தில் அடிமையாகவும் அடிமை அல்லாதவன்

என்றும் உள்ளான், ஜீவன் அறிவற்ற ஜடமே ஆவான், ஜீவாத்மா ஞானமயன் மட்டுமே ஆவான் (ஞானத்தைத் தனது பண்பாகக் கொண்டவன் அல்லன்), அவன் எப்போதும் பந்தப்பட்டவன் அல்லன், அவன் அனைத்தையும் தான் அனுபவிப்பதாக எண்ணிக் கொள்கிறான், ஆத்மா செயலாற்றுபவன் அல்லன், ஆத்மா செயலாற்றுபவன் என்றாலும் ஈச்வரனுக்குக் கட்டுப்பட்டு செயலாற்றுபவன் அல்லன், ப்ரளய காலம் முடிய மட்டுமே ஜீவாத்மா இருப்பான், மோக்ஷம் கிட்டும் வரை மட்டுமே ஜீவாத்மா இருப்பான், ஜீவாத்மா ஒன்று மட்டுமே (மற்ற அனைத்தும் மாயை), ஜீவாத்மா தனக்குத்தானே ஆதாரமாக உள்ளவன், ஜீவாத்மா தன்னுடைய ஸ்வரூபத்தால் ஏதோ ஒரு காரணத்தால் உண்டான கார்யம் ஆவான், ஜீவாத்மா எந்தவிதத்திலும் (அவனுடைய சரீரம் உட்பட) ஒரு காரணத்தின் விளைவால் உண்டான கார்யம் அல்லன், தன்னுடைய முடிவைக் கர்மத்தால் மட்டுமே அடையவல்லவன், முக்தி பெற்ற ஜீவாத்மா கல் போன்றவன், சரீரம் அற நிலையில் மட்டுமே ஜீவாத்மா மகிழ்வுடன் உள்ளான், ஜீவாத்மா முழு சுதந்திரம் கொண்டவன், ஜீவாத்மா ஈச்வரனுடன் ஒன்றாவான், ஜீவாத்மாவுக்கு எந்தவிதமான செயல்பாடுகளும் இல்லை, ஜீவாத்மா ஈச்வரனை விட்டுப் பிரிந்தும் இருக்கலாம் அல்லது சேர்ந்தும் இருக்கலாம், முக்தி அடைந்த பின்னர் ஜீவாத்மாக்களுக்கு இடையே உள்ள ஆனந்தத்தில் வேறுபாடுகள் உண்டு, ப்ரஹ்மத்தைப் போன்ற தன்மைகள் கொள்வதில் வேறுபாடுகளுடன் கூடியவன் – போன்றதான கலக்கம் நிறைந்த சிந்தனைகள் உள்ள மதத்தினர்களுடைய மறைக்கப்பட்ட பார்வைகளால் குழப்பம் அடைய மாட்டனர்.

**மூலம்** – இப்படியே ரக்ஷகனான ஸ்ரீய:பதியைப் பற்ற விச்வாஸமாந்த்யமும், ரக்ஷகாந்தராந்வேஷணமும், "த்வம் மே அஹம் மே" என்று பிணக்கும், நிருபாதிக அந்ய சேஷத்வ ப்ரமமும், தேவதாந்தர ப்ராவண்யமும், தத்பக்த ஸம்ஸர்கமும், மற்றுமுள்ள அஸேவ்யஸேவா ருசியும், தேஹாத்ம ப்ரமாதிகளும், ஸ்வதந்த்ராத்ம ப்ரமாதிகளும், ஸ்வார்த பரிக்ரஹமும், பாகவதாபசாரமும், ஆகிஞ்சந்ய விஸ்ம்ருதியும், ஸம்ஸாராநுவ்ருத்தி ருசியும், ஆத்மநாசாதி பயமும், அஸதாசார ருசியும், சத்ரு மித்ராதி விபாக நிரூபணமும், பாந்தவாந்தர பரிக்ரஹமும், ப்ரயோஜநாந்தர ருசியும், பரம ப்ரயோஜன வைமுக்யமும், மற்றும் ஸ்வநிஷ்டா விரோதிகள் ஒன்றும் பின்னாடாது.

**விளக்கம்** – (திருமந்த்ரத்தை அநுஸந்திப்பதால் விளையும் நன்மைகளைத் தொடர்கிறார்) மகாலக்ஷ்மியின் நாயகனான ஸர்வேச்வரன் காப்பாற்றுவான் என்னும் ஆழ்ந்த

நம்பிக்கையில் தளர்வு, வேறு யாரேனும் காப்பாற்றுவார்களா என்ற தேடுதல், "நீ எனக்கு உரியவன்" என்று ஸர்வேச்வரன் கூறுகையில் "நான் எனக்கே உரியவன்" என்று மறுத்தல், மற்றவர்களுக்கு எந்தவிதமான காரணமும் இன்றி அடிமையாக இருத்தல் என்னும் மயக்கம், மற்ற தேவதைகளிடம் விருப்பம் கொள்ளுதல், அந்த தேவதைகளின் பக்தர்களிடம் ஈடுபாடு கொள்ளுதல், நம்முடைய கைங்கர்யத்தை ஏற்கத் தகுதி அற்றவர்களுக்குக் கைங்கர்யம் செய்தல், சரீரமே ஆத்மா என்ற மயக்கம், ஆத்மா சுதந்திரமானது என்னும் மயக்கம், நமக்காகச் சொத்து சேர்த்தல் முதலிய செயல்களில் ஈடுபாடு, பாகவதர்களிடம் அபசாரப்படுதல், நம்மிடம் கரையேற எந்தவிதமான முதலீடும் இல்லை என்பதை மறத்தல், ஸம்ஸாரத்தில் உழன்றபடி இருப்பதில் ஆர்வம் காண்பித்தல், ஆத்மா அழிந்துவிடும் என்று அச்சம் கொள்ளுதல், தகாதவற்றைச் செய்வதில் ஆர்வமாக இருத்தல், நண்பர்கள் விரோதிகள் என்று பாரபக்ஷம் பார்த்தல், மற்ற பலன்களில் ஈடுபாடு உண்டாதல், ஸர்வேச்வரனை அடைதல் என்னும் உயர்ந்த குறிக்கோளை மறத்தல், தன்னுடைய குறிக்கோளில் நிலைநிற்பதைத் தடுக்கும் விரோதிகள் என்று எதுவும் அருகில் அண்டாது.

இஹ நிஜபக்ஷ விருத்தௌ: ஈத்ருசநிஷ்டா விரோதிபிச்சாந்யௌ:
த்விசதுஷ்க ஸாரவேதீ கங்காஹ்ருத: இவ ந கச்சதி க்ஷோபம்

**பொருள்** – இந்த இரு நான்கு எழுத்தின் (எட்டு எழுத்து = அஷ்டாக்ஷரம் = திருமந்த்ரம்) ஆழ்பொருளை அறிந்த ஒருவன், தன்னுடைய ஸித்தாந்தத்துக்கு முரணாக உள்ள ஸித்தாந்தங்களாலும், தன்னுடைய நிஷ்டைக்கு முரணாக உள்ளவற்றாலும், கங்கையில் காணப்படும் மடு போன்று கலக்கம் அடையமாட்டான்.

## திருமந்த்ரத்தின் ஆழ்பொருளை விளக்கவல்ல பத்துவிதமான கருத்துக்கள்

**மூலம்** – இத்திருமந்த்ரத்தில் வாக்யமும் வாக்யார்த்தமும் இருக்கும்படி எங்ஙனேயென்னில், இத்தை ஏகவாக்யமென்றும், வாக்யத்வயமென்றும், வாக்யத்ரமென்றும் அவ்வோ ஸம்ப்ரதாயங்களாலே அநுஸந்திப்பார்கள். இப்படி வாக்யார்த்தத்தையும் பஹுப்ரகாரமாக வகுத்து அநுஸந்தானம் பண்ணுவார்கள்.

**விளக்கம்** – இந்தத் திருமந்த்ரமானது ஒரு வரி அல்லது பல வரிகள் கொண்டுள்ளவிதம் மற்றும் அதற்கான பொருள்கள் எவ்விதம் உள்ளன என்று காண்போம். திருமந்த்ரத்தை ஒரு வாக்கியம் என்றூம், இரண்டு வாக்கியம் என்றும், மூன்று வாக்கியம் என்றும் அந்தந்த ஸம்ப்ரதாயங்களில் முன்னோர்கள் காண்பித்துள்ளனர். இதே போன்று அந்தந்த வாக்கியங்களின் பொருளையும் பலவிதமாகக் காண்பித்துள்ளனர்.

## ஒரு வாக்கியமாகக் கொண்ட இரண்டு கருத்துக்கள்

**மூலம்** – (1) ஏகவாக்யமானபோது "தஸ்ய வாசக: ப்ரணவ:" இத்யாதிகளிற்படியே "ப்ரணவ ப்ரதிபாத்ய ஸ்வபாவ விசிஷ்டாய நாராயணாய நம:" என்று அந்வயமாம். இப் ப்ரணவம்தானே நாமமாகவற்றாய் நிற்க அவ்யக்தார்த்தத யோங்கார: கேவலம் நைவ ஸாதக: என்று சாண்டில்யாத்யுக்த ப்ரக்ரியையாலே வ்யாபக மந்த்ரங்களில் நாமாந்தரம் வ்யக்தயர்த்தம். இந்த யோஜநாவிசேஷம் அஹிர்புத்ந்யாத்யுக்தமான ஸ்தூலாநுஸந்தான ப்ரகாரத்தைப் பார்த்தால் உபாயபரம். இப்படியானாலும் ஸ்வரூப புருஷார்த்தங்கள் இதிலே அந்தர்கதங்கள்.

**விளக்கம்** – (முதல் கருத்து) திருமந்த்ரம் ஒரு வரி என்று கொள்ளப்படும்போது, யோகஸூத்ரம் (1-27) - தஸ்ய வாசக: ப்ரணவ: - ஸர்வேச்வரனைக் கூறும் சொல் ப்ரணவம் – என்பதற்கு ஏற்ப, "ப்ரணவம் மூலம் தனது ஸ்வபாவம் வெளிப்படுகின்றவனாகிய நாராயணனுக்கு நமஸ்காரம்" என்று திருமந்த்ரத்திற்குப் பொருள் உண்டாகிறது. ப்ரணவம் என்பதே அவனுடைய திருநாமமாக உள்ளபோதிலும், நாராயணன் என்று மற்றும் ஒரு திருநாமத்தையும் கூறுவதன் காரணம் தெளிவாக விளக்குவதற்கே ஆகும் (அதாவது "ஓம் நமோ நாராயணாய" என்பதில் "ஓம்" என்பதே அவனுடைய திருநாமத்தைக் கூறுகையில், தனியாக மீண்டும் "நாராயண" என்பது அவசியமோ என்பதற்கு விடை அளிக்கிறார்). சாண்டில்ய ஸ்ம்ருதி (5-71) - அவ்யக்தார்த்தத யோங்கார: கேவலம் நைவ ஸாதக: - ப்ரணவம் தெளிவான பொருள் உடையது அல்ல என்பதால் அது ஸர்வேச்வரனை விளக்கிக் கூறும் திறன் கொண்டது அல்ல – என்று கூறுவதால், வ்யாபக மந்த்ரங்களில் (அஷ்டாக்ஷரம், த்வாதசாக்ஷரம்

போன்றவை) திருநாமம் காணப்படுவது தெளிவாக்கவே ஆகும். இப்படியாக அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை போன்றவற்றிலும் காணப்படுவதான விளக்கங்கள் மூலம், திருமந்த்ரம் உபாயம் என்று தெளிவாகத் தேறுகிறது.

**மூலம்** – (2) பத்தாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா நம இத்யேவ வாதிந: இத்யாதிகளைப் பார்த்துப் ப்ராண்யாந்தர்கத சேஷவ்ருத்தி பரமாகவும் அநுஸந்திப்பார்கள். இவ் வ்ருத்தி விசேஷமும் ஸ்வரூபாநுஸந்தான பூர்வகம். இதுவும் க்ருதோபாயர்க்கு இவ்வளவு ரஸிக்கும் அவஸ்தையிலும் உபஜீவ்யம்.

**விளக்கம்** – (இரண்டாம் கருத்து) மஹாபாரதம் சாந்திபர்வம் (344-45) - பத்தாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா நம இத்யேவ வாதிந: - கைகளைக் கூப்பியபடி, "நம:" என்று உச்சரித்து மகிழ்ந்து – போன்ற வாக்கியங்கள் மூலம், திருமந்த்ரமானது அடையவேண்டிய மோக்ஷத்தில் அடங்கியுள்ளதான ஸ்வயம் ப்ரயோஜனமாக உள்ள மனம், வாக்கு, சரீரம் கொண்டு செய்தலாகிற அடிமைத்தனத்தைக் காண்பிப்பதாகவும் உள்ளது. இத்தகைய கைங்கர்யம் என்பது, தான் ஸர்வேச்வரனுக்கு அடிமை என்று தனது ஸ்வரூபத்தை முதற்கண் அறிந்த பின்னரே உண்டாகவேண்டும். அல்லது, இந்தக் கைங்கர்யத்தால் பகவானுடைய உகப்பை அறிபவர்களால், இந்தக் கைங்கர்யமாகிற உபாயமானது (தங்களுடைய ஸ்வரூபத்தை அறியும் முன்பாகவே) கைக்கொள்ளப்படுகிறது.

## இரண்டு வாக்கியமாகக் கொண்ட மூன்று கருத்துக்கள்

**மூலம்** – (3) இவ்விரண்டு அநுஸந்தானமும் ப்ரதிஷ்டிதமாம்போது ஸ்வரூப விவேகம் வேணும். அதற்காக வாக்ய த்வயமாக அநுஸந்திக்கும்போது "அகார நாராயண சப்த வாச்ய ஸர்வதாரத்வாதி விசிஷ்டனானவனுக்கே நான் நிருபாதிக அநந்யார்ஹ சேஷபூதன், எனக்குரியேனல்லேன், ஒன்றைப்பற்ற நிருபாதிக ஸ்வாமியுமல்லேன், நிரபேக்ஷ ஸ்வதந்த்ரனுமல்லேன்" என்றதாம். அகார நாராயண சப்தங்களிரண்டும் பகவந்நாமமாகையாலே புநருக்தி வாராதோவென்னில், அப்போது வ்யுத்பத்தி விசேஷ ஸித்தமான அர்த்தவிசேஷத்தை விவக்ஷித்து ஒன்று விசேஷணமாகக் கடவது. அகார வாச்யனான நாராயணனுக்கு என்றும் புநருக்தி பரிஹரிக்கலாம். பகவச்சப்தமும்

நாமதேயமாயிருக்க வாஸுதேவாதி சப்தத்தோடே ஸாமாநாதிகரணமாகா நின்றதிறே. ஸர்வ பீஜாக்ஷர வாச்யமான ஸர்வ காரணம் தேவதாந்தரமோவென்று சங்கியாதபடி நாராயணனென்று விசேஷிக்கையாலும் ஸப்ரயோஜனம். மந்த்ரங்களுக்குப் பதக்ரம் அத்யயந நியதம், அந்வயம் அர்த்தாநுகுணமாகக் கடவது.

**விளக்கம்** – (பத்துவிதமான கருத்துக்களில் மூன்றாவது) மேலே கூறப்பட்ட இரண்டுவிதமான கருத்துக்களும் நன்றாகப் பதியும்போது, தன்னுடைய ஸ்வரூபம் குறித்து பிரித்தறியும் அறிவு அவசியமாகிறது. இதனால் திருமந்த்ரத்தை இரண்டு வாக்கியமாகப் பிரிக்கலாம் (முதல் வாக்கியமாக “ஓம் நாராயணாய” என்பதை “அ நாராயணாய உம்” என்றும், இரண்டாம் வாக்கியமாக “நமஸ்” என்றும் பிரிக்கலாம்). இவ்விதம் எண்ணும்போது, முதல் வாக்கியம் மூலம் “அ என்னும் பதம் மூலம் கூறப்படுபவனும், அனைத்தையும் தாங்கி நிற்பவனும் ஆகிய நாராயணனுக்கு மட்டுமே நான் இயற்கையாகவே அடிமை, மற்ற யாருக்கும் அடிமை அல்லன்” என்பது தேறுகிறது. இரண்டாவது வாக்கியம் மூலம் “நான் எனக்குக் கூட சொந்தமானவன் அல்லன், நான் எதற்கும் எஜமானன் அல்லன், எனக்கு எந்தவிதமான சுதந்திரமும் இல்லை” என்பது தேறுகிறது. இங்கு ஒரு சந்தேகம் எழலாம்; “அ மற்றும் நாராயண ஆகிய இரண்டுமே பகவானுடைய திருநாமங்கள் ஆகும். இவ்விதம் உள்ளபோது – அ நாராயணாய – என்பதன் மூலம் ‘கூறியது கூறல்’ என்பதான புநருக்தி தோஷம் உண்டாகாதோ எனக் கேட்கலாம். அந்தத் தோஷம் உண்டாகாது, காரணம் அவ்விதம் கொள்ளும்போது ஒரு திருநாமம் மற்றொன்றைச் சிறப்பிக்க வந்ததாகக் கொள்ளவேண்டும். அல்லது “அ நாராயணாய உம்” என்பதற்கு “அ என்னும் அக்ஷரத்தால் கூறப்படும் நாராயணனுக்கு நான் அடிமை” என்று பொருள் கொண்டால், புநருக்தி தோஷம் உண்டாகாது. “ஓம் நமோ பகவதே வாஸுதேவாய” என்னும் மந்திரத்தில் “பகவான்” என்னும் அவனுடைய ஒரு திருநாமம், “வாஸுதேவன்” என்னும் அவனுடைய மற்றொரு திருநாமத்துடன் ஒரே வேற்றுமையில் படிக்கப்பட்டது அல்லவோ? அனைத்திற்கும் காரணமாக உள்ளவன் யார் என்னும் சந்தேகம் எழும்போது அனைத்து அக்ஷரங்களுக்கும் பீஜமாக உள்ள “அ” என்பதால் கூறப்படும் நாராயணனே ஆவான் என்னும்போது இரண்டுக்கும் தனித்தனியாகப் பயன் உள்ளது காண்க. ஒரு மந்திரத்தில் பதங்கள் அமைந்துள்ள வரிசை என்பது வேதத்தில் ஓதுகிறபடி ஆகும்; ஆனால் அந்தப் பதங்களை வரிசைப்படுத்திப் படித்தல் என்பது பொருள் அறியும் அடிப்படையில் ஆகும்.

**மூலம்** – இப்படி வாக்ய த்வயமானால் திருமந்த்ரம் முழுக்க ஸ்வரூபபரம். இந்த ஸ்வரூபபர யோஜனையைப் பற்ற "திருமந்த்ரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைக நிஷ்டனாவாய்" என்று பூர்வர்கள் அருளிச் செய்தார்கள். பிறக்கையாவது ஸ்வரூபஜ்ஞானம் பிறக்கையாலே "அன்று நான் பிறந்திலேன், பிறந்த பின் மறந்திலேன்" என்கிற முன்பற்ற நிலை கழிகை. அதாவது, தன் இசைவாலும் அநந்யசேஷனாய், அநந்யாதீனனாய், அதடியாக அநந்யப்ரயோஜநனாய், அநந்யசரணனாகை. வளருகையாவது – அதிகார விசேஷாநுரூப கர்த்தவ்ய விசேஷ விஷய ஜ்ஞாந விசேஷத்தாலே உபாய பரிக்ரஹம் பண்ணுகை. த்வயைக நிஷ்டனாகையாவது – த்வயாநுஸந்தானத்தாலே உபாயாந்தரத்திலும் ப்ரயோஜநாந்தரத்திலும் துவக்கற இதில் சொன்ன உபாயத்திலும் ப்ரயோஜனத்திலும் ப்ரதிதிஷ்டிதனாகை. இப்படித் திருமந்த்ரமும் த்வயமுங்கூட ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களைக் காட்டுகின்றன.

**விளக்கம்** – இவ்விதம் திருமந்த்ரம் என்பது இரண்டு வாக்கியமாகக் கொள்ளப்பட்டால், அது ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை விளக்குவதாகிறது. இவ்விதம் திருமந்த்ரம் ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை விளக்குவதாகக் கொள்ளும்போது பூர்வர்கள், "திருமந்த்ரத்தில் பிறந்து, த்வயத்தில் வளர்ந்து, த்வயத்திலேயே நிலைநிற்க வேண்டும்" என்பார்கள். இங்கு பிறப்பு என்றால் ஆத்மஸ்வரூபத்தைக் குறித்த ஞானம் உண்டாதல் என்பதும், அதன் முன்பிருந்த நிலை நீங்குதலும் ஆகும். இதனைத் திருச்சந்தவிருத்தத்தில் (64) - அன்று நான் பிறந்திலேன், பிறந்த பின் மறந்திலேன் – என்றது காண்க. அதாவது தான் பகவானுக்கு அல்லாமல் வேறு யாருக்கும் அடிமை இல்லை, பகவானுக்கு மட்டுமே வசப்பட்டவன், இதன் காரணமாக எந்தவிதமான பலனையும் எதிர்பாராமல் இருத்தல், அவன் அல்லாமல் மற்ற யாரிடம் சரணம் புகாமல் இருத்தல் போன்ற நிலைகளில் தன்னுடைய முழுமனதுடன் இருத்தல் என்று கருத்து. "த்வயத்தில் வளர்தல்" என்றால் – ஒரு குறிப்பிட்ட செயலை அதற்கான தகுதியை அடைந்த பின்னரே செய்யவேண்டும் என்னும் ஞானம் அடைந்த பின்னர், அந்தச் செயலை உபாயமாகக் கொள்ளுதல் ஆகும். "த்வயத்தில் நிலைநிற்பது" என்றால் – த்வயத்தை மட்டுமே எப்போதும் எண்ணியபடி, அதனையே உபாயமாகக் கொண்டு, அதன் மூலம் கிட்டப்படும் பலனைக் குறித்து நன்றாக அறிந்து, இப்படிப்பட்ட உபாயம் மற்றும் பலன் ஆகியவை அல்லாமல் வேறு எதிலும் செல்லாமல், இதில் மட்டுமே நிலையாக இருத்தல் ஆகும். இப்படியாக திருமந்த்ரம்

மற்றும் த்வயம் ஆகிய இரண்டும் சேர்ந்து ஆத்மஸ்வரூபம், உபாயம் மற்றும் உபாயத்தின் பலன் ஆகியவற்றை உணர்த்துகின்றன.

**மூலம்** – (4) இவ்விரண்டு வாக்யமான யோஜநை தன்னிலே திருமந்த்ரம் முழுக்க ஸபரிகர ஆத்மஸமர்ப்பணபரம் என்றும் அநுஸந்திப்பார்கள். அப்போது ப்ரணவத்தில் மகாரம் ப்ரதமாந்தமேயாக அமையும். ஹவி:ஸமர்ப்பண ந்யாயத்தாலே நிருபாதிகமான ஆத்மஹவிஸ்ஸு நிருபாதிக தேவதையாய் அகாரவாச்யனான நாராயணனுக்கே பரமாக ஸமர்ப்பிதம் என்றதாயிற்று. இப்படி நிருபாதிகமான ஆத்மயாகத்தில் "நம:" என்று தன்னோடு தன் துவக்கறுத்து எனக்கு பரமல்லேன் என்றதாயிற்று. "இதமிந்த்ராய, ந மம" என்னுமாப்போலே இங்கும் பரஸம்பந்த விதியிலும் ஸ்வஸம்பந்த நிஷேதத்திலும் ப்ரவ்ருத்தமாகையாலே வாக்ய த்வயமும் ஸப்ரயோஜநம். இந் நமஸ்ஸு ஸமர்ப்பணந் தன்னிலும் பரநிரபேக்ஷ கர்த்ருத்வாதிகளை நிஷேதிக்கையிலே தத்பரமாகவுமாம். வேறொருத்தருக்கும் பரமன்று, எனக்கும் பரமன்று என்று வாக்ய த்வயாபிப்ராய மாகவுமாம். திருமந்த்ரம் ஆத்மநிவேதனபரமென்னுமிடத்தை நித்யத்திலே "மூலமந்த்ரேண ஸ்வாத்மாநம் தேவாய நிவேத்ய" என்று அருளிச்செய்தார். இப்படி ஸ்ரீவைகுண்ட கத்யத்திலும்

> ஸ்ரீமதா மூலமந்த்ரேண மாமைகாந்திக ஆத்யந்திக பரிசர்யாகரணாய
> பரிக்ருஹ்ணீஷ்வேதி யாசமாந: ப்ராணம்ய ஆத்மாநம் பகவதே நிவேதயேத்

என்று இவ்வர்த்தம் தர்சிதம்.

**விளக்கம்** – திருமந்த்ரத்தை இரண்டு வாக்கியங்களாகக் கொள்ளும்போது ஒரு சிலர் திருமந்த்ரம் முழுவதும் ஆத்மஸமர்ப்பணத்தை அதன் அங்கங்களுடன் விவரிப்பதாகக் கொள்வார்கள். இவ்விதம் கொண்டால் ப்ரணவமான "ஓம்" என்பதில் உள்ள "ம்" என்பது முதல் வேற்றுமையில் கொள்ளப்படும். இவ்விதம் உள்ளபோது ஹவி:ஸமர்ப்பண ந்யாயத்தின் (யாகத்தின் இந்த்ரனுக்கு உரிய அவிர்பாகம் அளிக்கப்படும்போது – இதம் இந்த்ராய ந மம – இது இந்த்ரனுக்காக, எனக்காக அல்ல – என்று கூறப்படுவதைக் காணலாம். இங்கு அவிர்பாகத்தை "இதம் = இது" என்று முதல் வேற்றுமையில் குறித்தது காண்க. இவ்விதம் சமர்ப்பணம் செய்யப்படும் பொருளை முதல் வேற்றுமையில் உரைத்து

ஹோமம் செய்தல் ஹவி:ஸமர்ப்பண ந்யாயம் என்று கூறப்படுகிறது) காரணமாக, திருமந்த்ரமானது "எந்தவிதமான காரணமோ அல்லது கட்டுப்பாடோ இன்றி இந்த ஆத்மாவானது 'அ' என்னும் சப்தம் மூலம் கூறப்படுபவனும் இயல்பான எஜமானனாக உள்ளவனும் ஆகிய நாராயணனுக்கு அளிக்கப்படுகிறது" என்னும் பொருளை அளிப்பதாகும். இவ்விதம் எந்தவிதமான கட்டுப்பாடும் இன்றி ஆத்மசமர்ப்பணம் செய்யும் யாகத்தில், "நம" என்னும் பதம் "என்னைக் காக்கும் பொறுப்பு இனி என்னைச் சேர்ந்தது அல்ல" என்னும் பொருளை அளிப்பதாகிறது. "இதமிந்த்ராய, ந மம – இது இந்த்ரனுக்கு உரியது, எனக்கு உரியது அல்ல" என்று இரண்டு வாக்கியங்களாகக் கூறுவது போன்று, இங்கும் திருமந்த்ரத்தில் உள்ள இரண்டு வாக்கியங்களும் அவசியமாகிறது; முதல் வாக்கியம் ஸர்வேச்வரனுடனான ஸம்பந்தத்தைக் கூறுவதாகவும், இரண்டாவது வாக்கியம் தன்னுடைய ரக்ஷகத்தில் தன்னுடனான தொடர்பை நீக்குவதைக் கூறுவதாகவும் கொள்ளவேண்டும். மேலும் இங்குள்ள "நம" என்பதுடன் கூடிய சமர்ப்பணம் என்பது ஸர்வேச்வரன் அல்லாமல் தான் தனித்து எதனையும் செய்பவன் அல்லன் என்பதையும் உரைப்பதாகிறது. இரண்டு வாக்கியங்களின் பொருள் – "என்னைக் காப்பாற்றும் பொறுப்பு என்பது ஸர்வேச்வரனுக்கு அல்லாமல் வேறு யாருக்கும் இல்லை, அது என்னுடையதும் அல்ல" – என்பதாகும். திருமந்த்ரம் ஆத்மசமர்ப்பணத்தை உணர்த்துகிறது என்பதை எம்பெருமானார் தன்னுடைய நித்யத்தில் - மூலமந்த்ரேண ஸ்வாத்மாநம் தேவாய நிவேத்ய – மூலமந்த்ரத்தால் ஆத்மாவை எம்பெருமானுக்குச் சமர்ப்பணம் செய்து – என்றார். மேலும் இதே கருத்தை ஸ்ரீவைகுண்டகத்யத்தில் (சூர்ணை 4) - ஸ்ரீமதா மூலமந்த்ரேண மாமைகாந்திக ஆத்யந்திக பரிசர்யாகரணாய பரிக்ருஹ்ணீஷ்வேதி யாசமாந: ப்ராணம்ய ஆத்மாநம் பகவதே நிவேதயேத் – "ஸர்வேச்வரனே! உனக்கு மட்டுமே இடைவிடாமல் கைங்கர்யம் செய்யும்பொருட்டு என்னை ஏற்பாயாக" என்று விண்ணப்பித்து, வணங்கி, மிகவும் மேன்மையுள்ளதான திருமந்த்ரத்தால் தன்னுடைய ஆத்மாவை ஸர்வேச்வரனுக்குச் சமர்ப்பிக்கவேண்டும் – என்று கூறியதைக் காணலாம்.

**மூலம்** – (5) வாக்யந்தோறும் ஒரு ப்ரார்த்தநா பதத்தை அத்யஹரித்துத் திருமந்த்ரம் முழுக்க த்வயத்தில் உத்தரகண்டம் போலே இஷ்ட ப்ராப்தி அநிஷ்ட நிவ்ருத்தி ரூப புருஷார்த்த ப்ரார்த்தநா பரமாகவும் அநுஸந்திப்பார்கள். அப்போதும் ஸ்வரூபாநுஸந்தாநம் இதிலே அந்தர்கதம். ஸ்வரூபமாத்ர பரமானபோதும் புருஷார்த்த விசேஷம் ஸூசிதம்.

அதினுபாயமும் ப்ரார்த்தனையும் தத்தத் ப்ரமாண வசத்தாலே வரும். இம்மந்த்ரோத் பாத்யங்களான சேஷத்வஜ்ஞாநாதிகள் முன்பு ப்ராப்தங்களல்லாமையாலே இம்மந்த்ரம் முழுக்கப் ப்ராப்ய பரமென்றது அந்யபரம். எங்ஙனேயென்னில், ப்ராப்ய பரமென்றது ப்ராப்ய ப்ரதிபாதகம் என்றபடியன்று. சப்தத்தால் உத்பாத்யமான ஜ்ஞாநம் சப்தத்துக்குப் ப்ரதிபாத்யமன்றிறே.

**விளக்கம்** – திருமந்த்ரத்தின் இரண்டு வாக்கியங்களிலும் ஒவ்வொரு வாக்கியத்திலும் ஒரு விண்ணப்பத்தை உரைப்பதாகக் கொள்ளலாம் (இப்படிக் கொண்டால் திருமந்த்ரம் – "அ" என்னும் அக்ஷரம் மூலம் கூறப்படும் நாராயணனுக்கு நான் கைங்கர்யம் செய்வேனாக, இதற்கு எந்தவிதமான தடையும் உண்டாகாமல் இருக்கட்டும் – என்ற பொருள் தருகிறது). இவ்விதம் கொண்டால் திருமந்த்ரம் முழுவதும் நாம் விரும்புவதை அளிப்பதாகவும், விருப்பம் இல்லாதவற்றை விலக்குவதாகவும் ஆகிறது என்று இரண்டு உயர்ந்த பலன்களை அளிப்பதாகக் கொள்வர். இவ்விதம் கொள்ளும்போதும் ஆத்மஸ்வரூபத்தின் தன்மையானது மறைமுகமாகக் கூறப்படுகிறது. மேலே மூன்றாவது சிந்தனையின்படி திருமந்த்ரமானது ஆத்மஸ்வரூபத்தை மட்டுமே விளக்குவதாகக் கொண்டாலும், மறைமுகமாக அது புருஷார்த்தத்தையும் குறிக்கிறது. திருமந்த்ரத்தின் உபாயமாகும் தன்மையும், அது விண்ணப்பமாகும் தன்மையும் ப்ரபத்திக்கான ப்ரமாண வாக்கியங்கள் மூலம் வெளிப்படுகின்றன. பொதுவாகவே இந்தத் திருமந்த்ரம் மூலம் உண்டாகின்ற ஆத்மஸ்வரூபம், உபாயம் மற்றும் புருஷார்த்தம் குறித்த ஞானங்கள், திருமந்த்ரத்தை அறிவதற்கு முன்பு உண்டாவதில்லை. ஆகவே இவற்றைக் குறித்த ஞானம் உண்டாதலே ப்ராப்யம் (அடையவேண்டிய இலக்கு) என்றும், இவற்றை உண்டாக்கும் திருமந்த்ரம், ப்ராப்யபரம் (இந்த மூன்றைக் குறித்த ஞானத்தை உண்டாக்குவதைத் தனது இலக்காகக் கொண்டது) என்றாகிறது. ஆனால் திருமந்த்ரம் இவற்றைக் குறித்த ஞானத்தை மட்டுமே உண்டாக்குகிறது அல்லாமல், அவற்றின் மூலம் பெறப்படும் ஞானத்தைக் குறிப்பதில்லை என்று அறியவேண்டும். அதாவது திருமந்த்ரமானது ஆத்மஸ்வரூபம், உபாயம் மற்றும் புருஷார்த்தத்தைக் குறிக்கிறது அல்லாமல், அவற்றின் மூலம் பெறப்படும் ஞானத்தைக் குறிப்பதில்லை (உதாரணமாக – "குடை" என்னும் சொல், இன்ன பொருள் என்ற அறிவை நமக்கு அளிக்கிறது. "குடை" என்னும் சொல்லை நாம் கேட்கும்போது, அந்தக் குடையைக் குறித்த அறிவையும் (அதன் பயன் என்ன போன்றவை) நாம் அடைகிறோம். ஆனால் "குடை" என்னும் சொல்லே அதனைக் குறித்த அறிவை நமக்கு அளிக்கிறது என்று கூற

இயலாது அல்லவோ? அதாவது ஒரு சொல்லும், அந்தச் சொல் உச்சரிக்கப்படும்போது உண்டாகும் அறிவும் வெவ்வேறானவை ஆகும். "குடை", "குடையைக் குறித்த அறிவு" ஆகிய இரண்டும் வெவ்வேறு ஆகும்).

**மூலம்** – (6) திருமந்த்ரம் மூன்று வாக்யமானபோது ஸ்வரூபமும் புருஷார்த்தமும் சொல்ல உபாயம் ஆர்த்தமாதல், ஸ்வரூபமும் உபாயமும் சொல்ல புருஷார்த்தம் ஆர்த்தமாதல், உபாயமும் புருஷார்த்தமும் சொல்ல ஸ்வரூபம் ஆர்த்தமாதல், ஸ்வரூப உபாய புருஷார்த்தங்கள் அடைவே சப்தங்களாதல் ஆகக்கடவது. எங்ஙனேயென்னில் –

அகாரார்த்தாயைவ ஸ்வமஹமத மஹ்யம் ந நிவஹா:
நராணாம் நித்யாநாமயநமிதி நாராயண பதம்
யமாஹாஸ்மை காலம் ஸகலமபி ஸர்வத்ர ஸகலா
ஸ்வவஸ்தா ஸ்வாவிஸ்ஸ்யுர்மம ஸஹஜ கைங்கர்ய விதய:

என்கிறபடியே ப்ரணவமும் நமஸ்ஸும் ஸ்வரூபத்தை சோதிக்கிறன. மூன்றாம் பதம் ப்ரணவத்திற் சொன்ன தாதர்த்யத்தைப் புரஸ்கரித்துக் கொண்டு அத்யாஹ்ருதமான க்ரியா பதத்தோடே கூடிப் புருஷார்த்த ப்ரார்த்தநார்த்தம். அப்போது அநிஷ்ட நிவ்ருத்தி ப்ரார்த்தனை அர்த்த ஸ்வபாவத்தாலே வரக்கடவது. த்வயத்திலும், "பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா" இத்யாதிகளிலும் சொல்லுகிறபடியே கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியும் ஸபத்நீகனானபடியாலே இங்கும் ஸலக்ஷ்மீகனான நாராயணன் பொருட்டாவேன் என்றபடி. நாராயணாய என்கிற இதுக்குக் க்ரியாபேக்ஷை உண்டாகையால் ஔசித்யத்தாலே பவேயம் என்றொரு பதம் அத்யாஹார்யம். "வழுவிலா அடிமை செய்ய வேண்டு" மென்றும், "அடியேனை ஆட்கொண்டருளே" யென்றும், "நித்ய கிங்கரதாம் ப்ரார்த்தயே" என்றும், "நித்ய கிங்கரோ பவாநி" என்றும் இப் ப்ரார்த்தனையைப் ப்ரயோகித்தார்களிறே.

**விளக்கம்** – திருமந்த்ரம் என்பது மூன்று வாக்கியங்கள் கொண்டது என்று கொள்ளும்போது, பலவிதமான கருத்துகள் கிட்டுகின்றன. அவையாவன -

- திருமந்த்ரத்தில் உள்ள பதங்கள் ஆத்மஸ்வரூபத்தையும் புருஷார்த்தத்தையும் நேரடியாகக் கூறுகின்றன, உபாயம் என்பது மறைமுகமாகக் கூறப்படுகிறது – இது (6) மற்றும் (7) என்பதில் விளக்கப்படுகிறது.

- திருமந்த்ரத்தில் உள்ள பதங்கள் ஆத்மஸ்வரூபத்தையும் உபாயத்தையும் நேரடியாகக் கூறுகின்றன, புருஷார்த்தம் என்பது மறைமுகமாகக் கூறப்படுகிறது – இது (8) என்பதில் விளக்கப்படுகிறது.

- திருமந்த்ரத்தில் உள்ள பதங்கள் உபாயத்தையும் புருஷார்த்தத்தையும் நேரடியாகக் கூறுகின்றன, ஆத்மஸ்வரூப என்பது மறைமுகமாகக் கூறப்படுகிறது – இது (9) என்பதில் விளக்கப்படுகிறது.

- திருமந்த்ரத்தில் உள்ள பதங்கள் ஆத்மஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் ஆகியவற்றை "ஓம், நம:, நாராயண" என்னும் பதங்கள் முறையே நேரடியாகக் கூறுகின்றன – இது (10) என்பதில் விளக்கப்படுகிறது.

இது எப்படி என்று கேட்கலாம். அஷ்டச்லோகி (3) :

அகாரார்த்தாயைவ ஸ்வமஹமத மஹ்யம் ந நிவஹா:
நராணாம் நித்யாநாமயநமிதி நாராயண பதம்
யமாஹாஸ்மை காலம் ஸகலமபி ஸர்வத்ர ஸகலா
ஸ்வவஸ்தா ஸ்வாவிஸ்ஸ்யுர்மம ஸஹஜ கைங்கர்ய விதய:

இதன் பொருள் – "அ" என்பதன் பொருளாக உள்ள நாராயணனுக்கே நான் அடிமை, நான் எனக்காக இருக்கவில்லை. "நாராயணன்" என்னும் பதம் மூலம் "எப்போதும் உள்ளவர்களான ஜீவாத்மாக்கள் அவனுக்கு இருப்பிடம்" என்று யாரைக் கூறுகிறதோ, அந்த நாராயணன் பொருட்டு, எனக்கு இயல்பாகவே உண்டான கைங்கர்யங்களின் நிலைகள் அனைத்தும் எப்போதும், எங்கும், அனைத்து நிலைகளிலும் உண்டாகவேண்டும் – என்பதாகும். இதன் மூலம் "ஓம், நம:" ஆகியவை ஆத்மஸ்வரூபத்தைத் தெளிவாகக் கூறுகின்றன என்று அறியலாம். மூன்றாவது பதமான

“நாராயணாய” என்பது “ஆவேன்” என்னும் வினைச்சொல்லோடு சேர்ந்து ப்ரணவத்தின் மூலம் கூறப்பட்ட பகவானின் பொருட்டு, அடையப்படும் இலக்கை அடையவேண்டும் என்னும் ப்ரார்த்தனையைக் காட்டுகிறது (அதாவது – நான் நாராயணனுக்காக ஆவேன் – என்பது ப்ரார்த்தனை). இவ்விதம் கொள்ளும்போது அடையப்படும் இலக்கை அடையவிடாமல் தடுக்கும் தடைகளை நீக்கவேண்டும் என்னும் ப்ரார்த்தனை இங்கு மறைமுகமாகவே உள்ளது என்றாகிறது. த்வயம் மற்றும் இராமாயணம் அயோத்யாகாண்டம் (31-27) - பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா – நீ மலையின் தாழ்வரைகளில் சீதையுடன் இன்பமாகக் கழிக்கப்போகிறாய் – என்றுள்ள வரிகளில் கூறுவது போன்று கைங்கர்யத்தினை ஏற்பவன் பத்னியோடு உள்ளவன் என்பதால், இங்கு “லக்ஷ்மியுடன் சேர்ந்த நாராயணன் பொருட்டு நான் ஆகக்கடவேன்” என்பதே ப்ரார்த்தனை ஆகிறது. திருமந்த்ரத்தில் உள்ள “நாராயணயாய” என்பதுடன் சேரும் விதமாக ஒரு வினைச்சொல் வேண்டும் என்றால், “பவேயம் = ஆகக்கடவன்” என்பதை மறைமுகமாக இணைத்துக் கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட ப்ரார்த்தனையைக் கீழே உள்ள வரிகளில் காணலாம்:

- திருவாய்மொழி (3-3-1) – வழுவிலா அடிமை செய்யவேண்டும் – அனைத்து இடங்களிலும் அனைத்து நிலைகளிலும் கைங்கர்யம் செய்வேனாக
- பெரியதிருமொழி (1-9-2) - அடியேனை ஆட்கொண்டருளே
- ஸ்ரீரங்ககத்யம் (3) - நித்ய கிங்கரதாம் ப்ரார்த்தயே – ஸ்ரீரங்கநாதா! எப்போதும் உனக்குக் கைங்கர்யம் செய்யவேண்டும் என்று ப்ரார்த்திக்கிறேன்
- ஸ்ரீரங்ககத்யம் (1) - நித்ய கிங்கரோ பவாநி - – ஸ்ரீரங்கநாதா! எப்போதும் உனக்குக் கைங்கர்யம் செய்யவேண்டும்

**மூலம்** – தாதர்த்யம் நித்யஸித்தமாகையாலே ஆசாஸிக்க வேண்டாமையாலும் இஸ் ஸம்பந்த ஸ்வரூபம் ப்ரணவத்திலே சொல்லுகையாலும் இதின் பலமாய் ஸமுத்ரே கோஷ்பதமஸ்தி என்னுமாபோலே புருஷார்த்தாந்தரங்களையெல்லாம் விளாக்குலைக்

கொண்டிருக்கிற பரிபூர்ண ப்ரஹ்மாநுபவ பரீவாஹரூபமான கைங்கர்யம் ஒழிவில் காலத்திற்படியே இங்கு அபேக்ஷிக்கப்படுகிறது.

அத்ர ஸ்வலாபாபேக்ஷாபி ஸ்வாமி லாபாவஸாயிநீ
ஸ்வாமி ப்ரயோஜநோபேக்ஷாப்யத: ஸ்வாநந்த ஹேதுகா

உன்னை உகப்பிக்கும் கைங்கர்யத்தை நான் பெறவேணுமென்னாலும், என்னை அடிமை கொண்டு நீ உகக்க வேணுமென்னாலும் இருவர்க்கும் ப்ரயோஜநம் ஸித்தம்.

**விளக்கம்** – "அவனுக்காகவே இருத்தல் (வாழ்தல்)" என்னும் நிலை எப்போதுமே ஜீவாத்மாவுக்கு உள்ளதாகும். அந்த நிலையை ப்ராத்திர்த்து அடையவேண்டிய அவசியம் இல்லை. மேலும், அவனுடனான இத்தகைய ஸம்பந்தத்தின் தன்மை குறித்து ப்ரணவத்தில் கூறப்படுகிறது. ஆகவே இத்தகைய நிலையின் பலனாக உள்ளதும், "ஒரு ஸமுத்திரத்தில் சிறிய ஒரு நீர் நிலையும் அடக்கம் ஆகும்" என்பதற்கு ஏற்ப அனைத்து புருஷார்த்தங்களையும் தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருப்பதும் ஆகிய பரிபூர்ணமான பகவத் அனுபவம் என்னும் கைங்கர்யமே ஸர்வேச்வரனிடம் ப்ராத்திக்கப்படுகிறது. அத்ர ஸ்வலாபாபேக்ஷாபி ஸ்வாமி லாபாவஸாயிநீ ஸ்வாமி ப்ரயோஜநோபேக்ஷாப்யத: ஸ்வாநந்த ஹேதுகா – "நாராயணாய" என்னும் பதத்தில் உள்ள நான்காம் வேற்றுமை மூலமாக ஜீவாத்மா தன்னுடைய புருஷார்த்தத்தை ப்ரார்த்தித்தாலும், எஜமானனாகிய ஸர்வேச்வரன் ஆனந்தம் கொள்ளுதல் என்பதான அவனுடைய ப்ரயோஜனத்திலேயே சென்று முடிகிறது; இது போன்று பகவானாகிய அவன் ஆனந்தம் கொள்ளவேண்டும் என்று அவனுடைய பலனை எண்ணுதல் என்பதும் அடிமை – எஜமானன் என்னும் உறவுமுறை காரணமாக ஜீவனின் ஆனந்தத்திலே முடிகிறது. எஜமானனாகிய உன்னை மகிழ்விக்கும்படியான கைங்கர்யத்தை நான் அடைந்தாலும், எனது அடிமைத்தனத்தால் நீ மகிழ்ந்தாலும் நாம் இருவருக்குமே ப்ரயோஜனம் உள்ளது.

## கைங்கர்யம் குறித்த கருத்து வேறுபாடு

**மூலம் –**

த்ரைகுண்யம் ஷட்குணாத்யம் ச த்விதான்னம் பரிகீர்த்திதம்
த்ரைகுண்யமன்னம் பத்தானாம் இதரேஷாமதேதரத்

என்கிற ஷட்குணாத்யமான அன்னமாவது பகவத் குணாநுபவம், அதடியாக வருகிற போக்யதம கைங்கர்ய விசேஷங்களாகவுமாம். "போகமாத்ர ஸாம்யலிங்காச்ச" என்கிறபடியே முக்ததசையில் பரமஸாம்யம் போகத்திலும் ஜ்ஞாநத்திலுமாகையால் அப்போதும் ஸ்வரூபாநுபந்தியான சேஷத்வத்துக்கும் இதின் பலமான கைங்கர்யத்துக்கும் விரோதமில்லை. முமுக்ஷு தசையிலும் முக்தி தசையிலும் உண்டான அஹங்க்ரஹம் சரீராத்மபாவத்தாலே என்று பாஷ்யாதிகளிலே ஸமர்த்திதமாகையால் இவ்வஹங்க்ரஹம் பரார்த்த காஷ்டையடியாக வந்ததிறே. இப்படி முக்த தசையில் வரும் கைங்கர்யம் ஸ்வத:ப்ராப்தமாய் த்வந்த்வரஹிதமாய் நிரந்தரமாய் அநவச்சிந்நமாயிருக்கும். முமுக்ஷு தசையில் ஸ்வயம் ப்ரயோஜனமாகப் பண்ணும் கைங்கர்யம் ஸ்க்ருத விசேஷோபாதிகமாய் த்வந்த்வதிதிக்ஷாயுக்தமாய் நித்ராதிகளாலே அந்தரிதமாய் அவச்சிந்ந ரஸமாயிருக்கும்.

**விளக்கம் –** லக்ஷ்மீ தந்த்ரம் - த்ரைகுண்யம் ஷட்குணாத்யம் ச த்விதான்னம் பரிகீர்த்திதம் த்ரைகுண்யமன்னம் பத்தானாம் இதரேஷாமதேதரத் – அன்னம் என்பது ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்களால் ஆனது அல்லது ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ் என்னும் ஆறு குணங்களால் ஆனது என்று இருவகைப்படும்; முதலாவது வகை பந்தப்படுத்தப்பட்ட ஜீவாத்மாக்களுக்கும், இரண்டாவது வகை முக்தர்களுக்கும் உடையதாகும் – என்று கூறுவது காணலாம். இங்கு ஆறுவகையான தன்மைகள் கொண்ட அன்னம் என்பது பகவானின் ஆறு குணங்களையும் அனுபவித்தல், அந்த அனுபவம் மூலமாக வருகின்ற இன்பமும் கைங்கர்யமும் ஆகும். ப்ரஹ்மஸூத்ரம் (4-4-21) - போகமாத்ர ஸாம்யலிங்காச்ச - ப்ரஹ்ம அனுபவம் என்னும் போகம் மூலமாகவே முக்தனுக்கு ப்ரஹ்மத்துடனான ஒற்றுமையைக் கூறுவதால், ஜகத்வ்யாபாரம் (ஸ்ருஷ்டி முதலான செய்கைகள்) இல்லாமல் உள்ளதே முக்தனின் ஐச்வர்யம் ஆகும் – என்று கூறுவதற்கு ஏற்ப, முக்தி அடைந்த நிலையில் ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் ஞானம், ஆனந்தம் போன்றவற்றில் மட்டுமே ஒற்றுமை உண்டு என்று கொள்ளவேண்டும்.

அப்படிக் கொண்டாலும், தனது இயல்பாகவே ஜீவாத்மா ஸர்வேச்வரனுக்கு அடிமை என்பதிலும், அதன் காரணமாக அவன் பகவானுக்குக் கைங்கர்யம் செய்வதிலும் எந்த விரோதமும் இல்லை. முக்தி பெறவேண்டும் என்னும் ஆசையுடன் கூடிய நிலையிலும், முக்தி அடைந்த நிலையிலும், “நான் ப்ரஹ்மமாகவே உள்ளேன்” என்னும் எண்ணமானது, “நான் ப்ரஹ்மத்தின் சரீரம் ஆவேன்” என்று எண்ணுதலே ஆகும் என ஸ்ரீபாஷ்யத்திலும் மற்ற க்ரந்தங்களிலும் கூறப்பட்டது. ஆகவே “நான் ப்ரஹ்மமாகவே உள்ளேன்” என்னும் எண்ணமானது, ஜீவாத்மா என்னும் சரீரம் அதன் ஆத்மாவாகிய ப்ரஹ்மத்தையே அண்டி உள்ளது என்றும், ப்ரஹ்மத்தின் கைங்கர்யத்திற்காகவே உள்ளது என்றும் உள்ள தன்மையாலேயே தோன்றுகிறது. முக்தி அடைந்த நிலையில் உண்டாகும் பகவத் கைங்கர்யம் என்பது ஆத்மாவுக்கு அதன் இயல்பான தன்மையாலேயே ஏற்படுகிறது; அது சுக-துக்கம் போன்று இரட்டையாக வரும் நிலைகள் அற்றதாக உள்ளது; எப்போதும் உள்ளதாகவும், எல்லையற்ற ஆனந்தம் உண்டாக்குவதாகவும் உள்ளது. ஆனால் முக்தி அடையவேண்டும் என்னும் ஆசையுடன் கூடிய நிலையில் (உயிர் வாழும்போது), தன்னுடைய பலனுக்காகச் செய்கின்ற பகவத்கைங்கர்யங்கள் அனைத்துமே முற்பிறவிகளில் செய்த புண்ணியகர்மங்களுடைய பலனால் உண்டானவையாகவும், சுக-துக்கம் போன்று இரட்டையாக வரும் நிலைகளுடன் கூடியதாகவும், உறக்கம் போன்ற தடைகளுடன் கூடியதால் அளவுள்ள ஆனந்தம் அளிக்கவல்லதாகவும் மட்டுமே இருக்கும்.

**மூலம்** – இங்கு இவன் கைங்கர்யமொழியப் பண்ணும் வ்யாபாரங்களில் பகவதாஜ்ஞைக்குப் பொருந்தாதவை எல்லாம் ஏதேனுமொரு ப்ரதிகூல பலத்தைக் கொடுக்கும். பகவதனுஜ்ஞாதங்களான காம்யங்களில் ஸ்வர்க்க பச்வாத்யர்த்தங்க ளானவையெல்லாம் அநேக தோஷதுஷ்டங்களான அநுகூல ஆபாஸங்களைக் கொடுத்து அம்முகத்தாலே பாதகங்களாம். ஆகையாலே முமுக்ஷுவுக்கு த்ரைவர்காந் த்யஜேத் தர்மான் என்கிறபடியே ப்ரயோஜநாந்தர ஹேதுக்களைவிட்டு பக்தி தத்த்வ ஜ்ஞானங்களையும் பகவத் பாகவத ஸம்ருத்தியையும் பற்றச் செய்யும் காம்யங்களான பகவத் தர்மங்கள், ஸாதனமாக அநுஷ்டிக்கச் செய்தேயும் பந்தகங்களல்லாமையாலே உசிதமான கைங்கர்ய கோடியிலே சேர்ந்து கிடக்கும்.

**விளக்கம்** – பகவத் கைங்கர்யம் அல்லாத செயல்களைச் செய்யும்போது, அவை ஸர்வேச்வரனுடைய ஆணைகளை மீறுவதாக உள்ளபோது, அந்தச் செயல்கள் ஏதேனும் தகாத விளைவுகளை உண்டாக்கும். பகவானின் ஆணைகளுக்கு உட்பட்ட செயல்களான

சில காம்யகர்மங்கள் ஸ்வர்க்கம், பசு போன்றவற்றை அளித்து, இன்பம் பயப்பது போன்று தோன்றினாலும், அவை சில தகாத பலன்களையும் அளிப்பதாகும்; ஆகவே அவையும் பாதகங்களே ஆகும். ஆக, ஸ்ரீவிஷ்ணுபுராணம் - த்ரைவர்காந் த்யஜேத் தர்மான் – தர்மம், அர்த்தம், காமம் ஆகியவற்றுக்கு உபாயமாக உள்ள தர்மங்களைக் கைவிடவேண்டும் – என்பதற்கு ஏற்றபடி, மோக்ஷத்தில் விருப்பம் உள்ள முமுக்ஷு ஒருவன், மற்ற பலன்களை அளிக்கக் காரணமாக உள்ள செயல்களைக் கைவிட்டு, பக்தி மற்றும் உண்மையான ஞானம் ஆகியவற்றை அளிக்கவல்ல செயல்களையும், பகவத் பாகவத மேன்மையை வளர்க்கும் செயல்களையும் செய்தல் வேண்டும். இவையும் மோக்ஷம், ஞானம் என்பதான விருப்பங்களின் அடிப்படையில் உள்ள செயல்களுக்கு உபாயமாக உள்ளபோதிலும், ஸம்ஸார பந்தத்தை உண்டாக்காது என்பதால், கைக்கொள்ள ஏற்றதான கைங்கர்யங்கள் என்றே ஆகின்றன.

**மூலம்** – ப்ரணவத்திற் சொன்ன பகவச்சேஷத்வம் நமஸ்ஸிலே ஔசித்ய ரூபமான அத்யந்த பாரதந்த்ர்ய பாரார்த்யங்களடியாக யதாப்ரமாணம் ததீய பர்யந்தமாய் நிற்கையாலே "நாராயணாய" என்கிறவிடத்தில் அபேக்ஷிக்கிற பகவத் கைங்கர்யமும் ததீய பர்யந்தம்.

மம மத்பக்த பக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத்
தஸ்மான் மத்பக்த பக்தாச்ச பூஜநீயா விசேஷத:

தஸ்மாத் விஷ்ணு ப்ரஸாதாய வைஷ்ணவான் பரிதோஷயேத்
ப்ரஸாதஸுமுகோ விஷ்ணு: தேநைவ ஸ்யாந்ந ஸம்சய:

இத்யாதிகளிலும் இவ்வர்த்தம் ஸித்தம்.

**விளக்கம்** – ப்ரணவத்தில் கூறப்படுவதான பகவானுக்கு அடிமையாக உள்ள நிலை என்பது, அவனுடைய அடியார்களுக்கும் அடிமையாக இருத்தல் என்பதைப் பல ப்ரமாணங்களால் உணரலாம். ஆகவே திருமந்த்ரத்தில் "நாராயணாய" என்னும் பதம் மூலம் விண்ணப்பிக்கப்படுவதான பகவத் கைங்கர்யம் என்பது பாகவத

கைங்கர்யத்தையும் உள்ளடக்கியது என்றாகிறது. இதனைக் கீழே உள்ள வரிகள் உணர்த்துகின்றன:

- மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வம் (116-23) - மம மத்பக்த பக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத் தஸ்மான் மத்பக்த பக்தாச்ச பூஜநீயா விசேஷத: - என்னுடைய அடியார்களிடம் பக்தியாக உள்ளவர்கள் மீது எனக்கு ப்ரீதி அதிகமாக உள்ளது. ஆகவே எனது அடியார்களை நன்றாக பூஜிக்கவேண்டும்.

- இதிஹாஸ ஸமுச்சயம் (25-2) - தஸ்மாத் விஷ்ணு ப்ரஸாதாய வைஷ்ணவான் பரிதோஷயேத் ப்ரஸாதஸுமுகோ விஷ்ணு: தேநைவ ஸ்யாந்ந ஸம்சய: - ஆகவே விஷ்ணுவின் க்ருபையைப் பெறுவதற்கு அவனுடைய அடியார்களை மகிழ வைக்கவேண்டும். அதனால் விஷ்ணு க்ருபை செய்யத் தொடங்குவான் என்பதில் நியம் இல்லை.

**மூலம்** – ஸர்வம் பரவசம் துக்கம் இத்யாதிகள் தனக்குப் ப்ராப்தமல்லாத க்ஷுத்ர விஷயத்திலே கர்மபலமாக வருகிற பாரவச்யம் துக்க காரணமென்கின்றன. பகவத் பாகவத விஷயத்தில் பாரதந்த்ர்யம் ஆத்மா அபிமான அநுகுண புருஷார்த்த வ்யவஸ்தையாலே நிரதிசய ப்ரீதிகாரணம். இங்கு ததீயரென்கிறது ததீயத்வ வ்யவஸாய ரஸமுடையவர்களை. நாரங்களாலே விசிஷ்டனான நாராயணனைப் பற்றக் கைங்கர்யத்தை அபேக்ஷிக்கும்போது விசேஷணங்களான நாரங்களையும் பற்றக் கைங்கர்யம் அபேக்ஷிக்கப்பட்டதா மென்னுமிடம் ந்யாய ஸித்தமாகையாலே இங்கே ததீய கைங்கர்யம் ஸித்திக்கிறது என்று சிலர் சொல்லுவார்கள். இப்படி விசேஷணத்வமே ப்ரயோஜனமானால் நார சப்தார்த்தங்களாக இங்கு விவக்ஷிதங்களான ப்ரஹ்மாதி தேவதாந்தரங்களையும் பகவத் த்வேஷிகளையும் பச்வாதிகளையும் பற்றக் கைங்கர்யாபேக்ஷை பண்ணிற்றாம். நரபதியைப் பற்றக் கைங்கர்யத்தை அபேக்ஷித்தான் என்றால் நரரைப் பற்றக் கைங்கர்யம் அபேக்ஷிதமாகாதாப் போலே இங்கும் ந்யாய மாத்ரத்தால் நாரங்களைப் பற்றக் கைங்கர்யாபேக்ஷை ஸித்தியாது. ஆனபின்பு ப்ரமாண முகத்தாலே ஸ்வாமியினுடைய அபிமதம் செய்ய அபேக்ஷிக்கிறானாகையாலே அவனுக்குப் ப்ரியதமராயிருக்கிற சேஷத்வ ஞானமுடைய அநந்ய ப்ரயோஜனரைப் பற்றக்

கைங்கர்யம் அபேக்ஷிதமாமித்தனை. அநுபாவ்யதையிலும் நார சப்தார்த்தமான ஸர்வமும் ப்ரவிஷ்டமாமென்னுமிடமும் ப்ரமாண பலத்தாலே வந்ததத்தனை.

**விளக்கம்** – தன்னுடைய ஸ்வரூபத்திற்கு ஏற்கத் தகாததாகவும், பூர்வ கர்மவினைகளின் காரணமாக வருவதும் ஆகிய தாழ்ந்தவர்களைச் சார்ந்திருத்தல் என்னும் நிலையானது, துக்கத்திற்கான காரணமாகிறது என்பதை மநுஸ்ம்ருதி (4-160) – ஸர்வம் பரவசம் துக்கம் – மற்றவர்க்கு வசப்பட்டிருத்தல் என்பது துக்கத்தின் காரணம் – என்றது காண்க. பகவானுக்கும் அவனுடைய அடியார்களுக்கும் வசப்பட்டிருத்தல் என்பதே ஆத்ம ஸ்வருபத்தை நன்கு அறிந்த ஒருவனுக்கு உன்னதமான புருஷார்த்தம் என்பதால், அவ்விதம் பகவானையும் அடியார்களையும் சார்ந்திருத்தல் என்னும் நிலையானது, எல்லையற்ற மகிழ்ச்சிக்கான காரணமாகிறது. இங்கு “ததீயர்” என்றால் பகவானுக்குக் கைங்கர்யம் செய்வதில் எல்லையற்ற ஆசை கொண்டவர்கள் ஆவர். நாரங்கள் என்பதான ஜீவாத்மாக்களுடன் கூடிய நாராயணனுக்குக் கைங்கர்யம் செய்தல் என்பதை விண்ணப்பம் செய்யும்போது, அவனுடன் கூடி உள்ள ஜீவாத்மாக்களுக்கும் கைங்கர்யம் செய்ய விரும்புதல் நேரடியான நியாயம் என்பதால், அவனுடைய அடியார்களுக்குக் கைங்கர்யம் செய்தல் என்பது இயல்பாகவே ஸித்திப்பதாகும் என்று சிலர் கூறுவர். ஆனால், இந்த ந்யாயத்தின்படி அனைத்து ஜீவாத்மாக்களும் நாராயணனுடன் கூடியுள்ள நாரங்கள் என்பதால், அனைவருக்கும் கைங்கர்யம் செய்தல் என்பதை விண்ணப்பித்தால், “நார” என்னும் பதம் மூலம் கூறப்படும் நான்முகன் போன்ற மற்ற தெய்வங்கள், பகவானிடம் விரோதம் காண்பிப்பவர்கள், விலங்குகள் போன்ற அனைத்திற்கும் கைங்கர்யம் செய்தலை விண்ணப்பித்தல் என்றாகிவிடும் அல்லவோ? மக்களின் பதியாகிய அரசனுக்குச் சேவை செய்ய விரும்பினால், அந்த மக்களுக்கும் சேவை செய்தல் என்பது அவசியம் இல்லை என்னும் ந்யாயம் போன்றே, இங்கும் நாரங்களான அனைவருக்கும் கைங்கர்யம் செய்ய விண்ணப்பித்தல் என்பது பொருந்தாது. ஆகவே ஒருவன் தனது எஜமானனாகிய நாராயணனுக்கு எது மகிழ்வை அளிக்கும் என்று அறிந்து அதன்படி தகுந்த ப்ரமாண வாக்கியங்களின் அடிப்படையில் கைங்கர்யம் செய்ய விரும்பும்போது, யார் நாராயணனுக்கு ப்ரியமாக உள்ளனரோ (அல்லது நாராயணனிடம் ப்ரியமாக உள்ளனரோ) அல்லது நாராயணனுக்கு மட்டுமே அல்லாது வேறு யாருக்கும் அடிமையாக இல்லாமல் உள்ளனரோ அல்லது நாராயணன் அல்லாமல் வேறு பலன் ஏதும் இல்லை என்று உள்ளனரோ, இப்படிப்பட்டவர்களுக்கும் கைங்கர்யம் செய்யவே

விரும்புகிறான். அவனை அனுபவிக்க முழுத் தகுதி உள்ள முக்தி பெற்ற நிலையிலும், “நார” என்னும் பதம் மூலம் உணர்த்தப்படுவதான அங்குள்ள ஆனந்தங்கள் போன்ற பலவும் பகவத் அனுபவத்திலேயே அடங்கிவிடுவதைக் காண்பிக்கப் பல ப்ரமாண வாக்கியங்கள் உள்ளன.

**மூலம்** – இப்படி திருமந்த்ரத்தில் வாக்ய த்ரயத்திலே இரண்டு வாக்யம் ஸ்வரூப பரமாய் ஒரு வாக்யம் புருஷார்த்த ப்ரார்த்தனாபரமாக யோஜித்தது.

**விளக்கம்** – ஆக இதுவரை திருமந்த்ரம் மூன்று வாக்கியமாக உள்ளது என்று கொள்ளப்பட்டி விளக்கம் அளிக்கப்பட்டது. இவ்விதம் கொள்ளும்போது முதல் இரண்டு வாக்கியங்கள் ஆத்ம ஸ்வரூபத்தைக் குறித்து உள்ளது என்றும், மூன்றாவது வாக்கியம் புருஷார்த்தத்தை அடைவதற்காகச் செய்யப்படும் ப்ரார்த்தனை என்றும் கூறப்பட்டது.

**மூலம்** – (7) இங்ஙனன்றிக்கே ப்ரணவம் ஸ்வரூப பரமாய் நமஸ்ஸிலே அநிஷ்ட நிவ்ருத்தி ப்ரார்த்தனையாய் அநிஷ்டம் நிவர்த்தித்தால் வரும் புருஷார்த்தத்தை நாராயணாய ஸ்யாம் என்று கணிசிக்கிறதாகவுமாம். இந்நமஸ்ஸுக்கும் இப்படி த்வயத்தில் நமஸ்ஸுக்குப் போலே விரோதி நிவ்ருத்தி ப்ரார்த்தனையிலே தாத்பர்யமான யோஜநா விசேஷமும்,

ப்ரணவோதித தச்சேஷ பாவோஹம் நிஜகர்மபி:
அஹங்கார மமத்வாப்யாம் அபிபூதோப்யத: பரம்

தச்சேஷத்வாநுஸந்தான பூர்வ தச்சேஷவ்ருத்திக:
பூயாஸமித்யமும் பாவம் வ்யநக்தி நம இத்யத:

என்று பட்டர் நித்யத்திலே ப்ரதர்சிதம். ஆகையாலே “அஹம் ந மம ஸ்யாம்” என்றாதல் “ந மம கிஞ்சித் ஸ்யாத்” என்றாதல் வாக்யாந்வயமாய். இத்தாலே “அஸ்ய ஜீவாத்மநோ அநாத்யவித்யா ஸம்சித புண்யபாபரூப கர்ம ப்ரவாஹ ஹேதுக ப்ரஹ்மாதி ஸுர நர திர்யக் ஸ்தாவராத்மக சதுர்வித தேஹ ப்ரவேச க்ருத தத்தத் ஆத்மாபிமான ஜனித அவர்ஜநீய பவபய வித்வம்ஸநாய” என்றும், “பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்” என்றும் சொல்லுகிற அவித்யா கர்ம ததுபய வாஸநா ருசி ப்ரக்ருதி

ஸம்பந்தாதி ரூபமான ஸர்வாநிஷ்டமும் அத்யந்த நிவ்ருத்தமாக வேணுமென்று அபேக்ஷித்ததாயிற்று.

**விளக்கம்** – இவ்விதம் அல்லாமல் திருமந்த்ரத்தை மூன்று வாக்கியங்களாகக் கொண்டால், ப்ரணவம் என்பது ஆத்ம ஸ்வரூபத்தை விளக்குவதாகவும், "நம:" என்பது விருப்பம் அல்லாதவற்றை நீக்கித் தரவேண்டும் என்னும் ப்ரார்த்தனையாகவும், இவ்விதம் விருப்பம் அல்லாதவை நீங்கியதன் காரணமாகக் கிட்டும் புருஷார்த்தம் என்பது நாராயணாய ஸ்யாம் – நாராயணனுக்காக இருக்கக் கடவேன் – என்பதால் உணர்த்தப்படுவதாகவும் உள்ளது. த்வய மந்த்ரத்தில் உள்ள "நம:" என்பது எவ்விதம் தடைகளை நீக்க உதவும் விண்ணப்பம் ஆகிறதோ அதே போன்று திருமந்த்ரத்திலும் உள்ளது என்பதைக் கீழே காணப்படும் ஸ்வாமி பராசரபட்டரின் நித்யம் என்னும் க்ரந்தத்தில் உள்ள வரிகள் மூலம் அறியலாம் - ப்ரணவோதித தச்சேஷ பாவோஹம் நிஜகர்மபி: அஹங்கார மமத்வாப்யாம் அபிபூதோப்யத: பரம்; தச்சேஷத்வாநுஸந்தான பூர்வ தச்சேஷவ்ருத்திக: பூயாஸமித்யமும் பாவம் வ்யநக்தி நம இத்யத: - "ப்ரணவத்தில் கூறப்பட்டது போன்று அடியேன் ஸர்வேச்வரனுக்கு அடிமையாக உள்ளேன். என்னுடைய கர்மங்களின் விளைவால் இதுவரை 'நான், என்னுடையது' என்பதான அஹங்காரம் மற்றும் மமகாரங்களால் பீடிக்கப்பட்டிருந்தேன். இனி அவனுக்கு மட்டுமே அடிமை என்று கொண்டு, அவனுக்கு ஏற்ற கைங்கர்யங்களைச் செய்வேன்" என்னும் பொருளையே "நம:" என்பது கூறுகிறது – என்றது காண்க. ஆகவே "அஹம் ந மம ஸ்யாம் – நான் என்னுடைய அடிமை அல்லன்" அல்லது "ந மம கிஞ்சித் ஸ்யாத் – நான் சிறிதளவும் என்னுடையவன் அல்லன்" என்பது போன்ற வாக்கியங்கள் "எனக்குத் தடைகள் இல்லாமல் போகட்டும்" என்னும் விண்ணப்பத்தையே குறிப்பதாகின்றன. இதன் மூலம் வேதார்த்த ஸங்க்ரஹம் - அஸ்ய ஜீவாத்மநோ அநாத்யவித்யா ஸம்சித புண்யபாபரூப கர்ம ப்ரவாஹ ஹேதுக ப்ரஹ்மாதி ஸுர நர திர்யக் ஸ்தாவராத்மக சதுர்வித தேஹ ப்ரவேச க்ருத தத்தத் ஆத்மாபிமான ஜனித அவர்ஜநீய பவபய வித்வம்ஸநாய – எல்லையற்ற காலமாக தொடர்ந்தபடி உள்ள அறியாமை காரணமாக ஜீவாத்மாவுக்குப் புண்ணிய பாவங்கள் ரூபமாகக் கர்மங்கள் உண்டாகின்றன; இந்தக் கர்ம வெள்ளம் காரணமாக நான்முகன் உள்ளிட்ட தேவர்கள், மனிதர்கள், விலக்குகள், தாவரங்கள் என்பதான நான்குவிதமான சரீரங்களில் ஜீவன் ப்ரவேசிக்கிறான்; பின்னர் அந்தந்த சரீரங்களில் உள்ளதற்கு ஏற்ப, தான் அந்தச் சரீரமே என்று எண்ணியவனாக, விலக்க இயலாத ஸம்ஸார பயத்தை அடைகிறான் – என்றும்,

திருவிருத்தம் (1) - பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப வருவதான “அறியாமை, கர்மம்” என்னும் இரண்டும், இந்த இரண்டின் காரணமாக உண்டாகும் ருசியும், இந்த உலகத்துடன் கொள்ளும் தொடர்பு காரணமாக உண்டாகும் அனைத்துவிதமான விருப்பம் அற்ற நிலைகளும் அடியுடன் நீங்கவேண்டும் என்னும் விருப்பத்தைக் கூறியதாயிற்று.

## விருப்பம் அல்லாதவற்றை நீக்கவேண்டும் என்னும் ப்ரார்த்தனை விருப்பமானவற்றை தானாகவே அளித்தாலும், அதனைத் தனியாக விண்ணப்பிப்பதன் காரணங்கள்

**மூலம்** – இப்படி அநிஷ்டநிவ்ருத்தியை ப்ரார்த்தித்தால், இஷ்ட ப்ராப்தியை அபேக்ஷிக்க வேணுமோ?

ஸம்பத்யாவிர்பாவ: ஸ்வேநசப்தாத் என்றும்,

யதா ந க்ரியதே ஜ்யோத்ஸ்நா மலப்ரக்ஷாளநாந்மணே:
தோஷ ப்ரஹாணாந் ந ஜ்ஞானம் ஆத்மன: க்ரியதே ததா
யதோதபாந கரணாத் க்ரியதே ந ஜலாம்பரம்
ஸதேவ நீயதே வ்யக்திம் அஸத: ஸம்பவ: குத:
ததா ஹேயகுண த்வம்ஸாத் அவபோதாததயோ குணா:
ப்ரகாச்யந்தே ந ஜன்யந்தே நித்யா ஏவாத்மனோ ஹி தே என்றும்

சொல்லுகிறபடியே இஷ்ட ப்ராப்தி தானே வாராதோவென்னில்,

ஸ்வத: ஸ்வார்ஹம் யதா பாகம் புத்ர: பிதுரபேக்ஷதே
ஸாபராதஸ்ததா தாஸ: கைங்கர்யம் பரமாத்மந:

தன் அபராதத்தாலே ஸ்வத: ப்ராப்தத்தை இழந்து கிடக்கிற இவன் “என் கூறு நான் பெறவேணும், அதுக்காக என் அபராதத்தைப் பொறுத்தருளவேணும்” என்று

அபேக்ஷிக்கையில் விரோதமில்லை. இத்தால் ப்ரதிபந்தக நிவ்ருத்தியில் மாணிக்கத்தி லொளியும், "இச்சாத ஏவ தவ விச்வபதார்த்த ஸத்தா" என்கிறபடியே நியதையான ஈச்வரேச்சையாலே பரம்புமாபோலே இங்கும் ஸ்வாபாவிகமான ஜ்ஞாவிகாஸாதிகள் ஸஹஜ காருண்ய ரூபையான ஈச்வரேச்சையாலே வருகிறனவென்னுமிடம் தோற்றுகிறது.

**விளக்கம்** – இப்படியாக விருப்பம் அல்லாதவற்றை நீக்கிக் கொடுக்கவேண்டும் என்று ப்ரார்த்தனை செய்யும்போது, விருப்பமானவற்றை அளிக்கவேண்டும் என்று தனியாக மீண்டும் விண்ணப்பிக்கவேண்டுமோ?

- ப்ரஹ்மஸூத்ரம் (4-4-1) - ஸம்பத்யாவிர்பாவ: ஸ்வேநசப்தாத் – ப்ரஹ்மத்தை அடையும்போது ஜீவாத்மாவுக்கு அதுவரை மறைந்திருந்த குணங்கள் தானாகவே வெளிப்படுகின்றன.

- ஸ்ரீவிஷ்ணுதர்மம் (104 – 55, 56, 57) - யதா ந க்ரியதே ஜ்யோத்ஸ்நா மலப்ரக்ஷாள நாந்மணே: தோஷப்ரஹாணாந் ந ஜ்ஞாநமாத்மந: க்ரியதே ததா யதோதபாநகாணாத் க்ரியதே ந ஜலாம்பரம் ஸதேவ நீயதே வ்யக்திம் அஸத: ஸம்பவ: குத: ததா ஹேய குணத்வம்ஸாத் அவபோதாதயோ குணா: ப்ரகாச்யந்தே ந ஜ்ஞாயந்தே நித்யா ஏவ ஆத்மாநோ ஹி தே - வைரம் போன்ற கற்களில் உள்ள அழுக்கை நீக்குவதால் அதற்குப் புதிதாக ஒளி உண்டாவதில்லை; இது போன்றே சரீர தொடர்பு காரணமாக ஏற்பட்ட தோஷங்களை நீக்குவதால் ஆத்மாவிற்குப் புதிதாக ஞானம் உண்டாகுவதில்லை; குளம் கிணறு போன்றவற்றை வெட்டும்போது அங்கு புதிதாக நீர் உண்டாவதில்லை, மறைந்திருந்த நீர் மீண்டும் வெளிப்படுகிறது; இது போன்று தாழ்வான குணங்கள் அனைத்தும் மோக்ஷம் அடையும்போது நீங்கிய பின்னர், ஞானம் போன்ற இயல்பான தன்மைகள் ஆத்மாவிடம் வெளிப்படுகின்றன, அவை புதிதாக உண்டாவதில்லை, அவை ஆத்மாவிடம் எப்போதும் உள்ளவை அல்லவோ?

மேலே உள்ள வரிகளின்படி, விருப்பமானவை தானாகவே வந்து சேரும் அல்லவோ (இந்தக் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்)? ஸ்வத: ஸ்வார்ஹம் யதா பாகம் புத்ர: பிதுரபேக்ஷதே ஸாபராதஸ்ததா தாஸ: கைங்கர்யம் பரமாத்மந: - தந்தையிடமிருந்து

தனக்கு இயல்பாகவே கிட்ட உள்ள பாகத்தை ஒரு புத்திரன் எவ்விதம் வேண்டுகிறானோ அது போன்று அபராதங்கள் பல உள்ளவனாகிய ஒரு சேதநன், ஸர்வேச்வரனிடமிருந்து கைங்கர்யத்தை வேண்டுகிறான். தன்னுடைய குற்றங்கள் காரணமாக தனக்கு இயல்பாகவே கிட்டவல்ல கைங்கர்யங்கள் போன்றவற்றை இழந்து நிற்கும் சேதநன் ஸர்வேச்வரனிடம், "எனக்கான பங்கை நான் பெறவேண்டும். ஆகவே எனது அபராதங்களை நீ பொறுத்தருள வேண்டும்" என்று பிரார்த்தனை செய்வதில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை. இதன் மூலம் மேலே உள்ள விஷ்ணுதர்ம வரிகளில் கூறப்பட்ட "மாணிக்கத்தில் ஏற்படும் ஒளி", ஸ்ரீவைகுண்டஸ்தவம் (36) - இச்சாத ஏவ தவ விச்வபதார்த்த ஸத்தா – உன்னுடைய ஸங்கல்பத்தாலேயே அனைத்து வஸ்துக்களுக்கும் இருப்பு உண்டாகிறது – என்னும் நிலை ஆகியவை அனைத்தையும் நியமிக்கும் ஸர்வேச்வரனுடைய இச்சை காரணமாகவே பரவி நிற்பது போன்று, இயல்பாகவே ஜீவாத்மாவுக்கு உரியதான ஞானமலர்ச்சி முதலானவை இயற்கையாகவே காருண்ய ரூபம் கொண்டதான ஸர்வேச்வரனுடைய இச்சையால் உண்டாகின்றன என்று தேறுகிறது.

**மூலம்** – ஆனாலும் பாவாந்தராபாவத்தில் ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தி தானே இஷ்டப்ராப்தியா யிருக்கத் தனித்துச் சொன்னால் புநருக்தி வாராதோ? "அவித்யா நிவ்ருத்திரேவ ஹி மோக்ஷ:" என்று ஸ்ரீபாஷ்யகாரரும் அருளிச் செய்திலரோவென்னில்,

ஏகமேவ ஸ்வரூபேண பரேண ச நிரூபிதம்
இஷ்ட ப்ராப்திரநிஷ்டஸ்ய நிவ்ருத்திச்சேதி கீர்த்யதே

ஒன்று தன்னையே ஸ்வரூபத்தாலும் ப்ரதியோகியாலும் நிரூபித்துப் ப்ரயோஜந விசேஷ அபிஸந்தியாலே பிரியச் சொல்லக்கடவதாயிருக்கும். ஸம்ஸார தசையில் ஒரு ப்ரதிகூல நிவ்ருத்தி ப்ரதிகூலாந்தரமாயும் அநுகூல ப்ரதிகூல உபயநிவ்ருத்தியாயுமிருக்கும். இங்கு ஸர்வப்ரதிகூல நிவ்ருத்தியாகையாலே மேல் முழுக்க அநுகூலமேயாயிருக்கும். ஆகையால் பூர்வாவஸ்தையினுடைய அநிஷ்டதமத்வத்தையும் கேவலாநுகூல ரூபையான உத்தராவஸ்தையினுடைய இஷ்டதமத்வத்தையும் தோற்றுவிக்கைக்காக ஆதராதிசயத்தாலே பிரிய அபேக்ஷிக்கிறது.

**விளக்கம்** – ஆனால் விசிஷ்டாத்வைதத்தில் ஒரு வஸ்து இல்லை என்று உரைக்கும்போது, அது மற்றொரு வஸ்து உள்ளதைக் குறிக்கும் அல்லவோ (இது “பாவாந்தர அபாவம்” என்னும் பதத்தால் கூறப்படுகிறது. “மரத்தில் பறவை இல்லை” என்றால் “மரம் உள்ளது” என்பது தேறுகிறது)? இதே போன்று விருப்பம் அல்லாதவைகள் அனைத்தும் விலகும்போது, விருப்பமானவை தானாகவே வந்து சேரும்; இதனை விடுத்து, “விருப்பமானவை வரவேண்டும்” என்று தனியாக உரைத்தாக், “கூறியது கூறல்” என்னும் புநருக்தி தோஷம் வரும் அல்லவோ என்று கேட்கலாம். மேலும், ஸ்ரீபாஷ்யத்தில் (லகு ஸித்தாந்தம்) - அவித்யா நிவ்ருத்திரேவ ஹி மோக்ஷ: - அவித்யை என்னும் முன் செய்த கர்மங்கள் விலகுவதே மோக்ஷம் – என்று எம்பெருமானாரும் உரைத்தார் அல்லவோ (கர்மங்கள் விலகினால் தானாகவே மோக்ஷம் ஏற்படும், தனியாக உரைக்கத் தேவையில்லை அல்லவோ)? இதற்கான விடையை அருளிச்செய்கிறார். ஏகமேவ ஸ்வரூபேண பரேண ச நிரூபிதம் இஷ்ட ப்ராப்திரநிஷ்டஸ்ய நிவ்ருத்திச்சேதி கீர்த்யதே – ஒரு வஸ்து அதனுடைய இயல்பான தன்மை மூலமும், அதற்கு எதிரான தன்மை உள்ள மற்றொன்றின் மூலமும் விளக்கப்படுவது போன்று, “விருப்பமானவற்றை அடைதல், விருப்பம் அல்லாதவை நீங்குத” என்று தனித்தனியாக உரைக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நிலையை உணர்த்தும் பொருட்டு, ஒரு வஸ்துவின் இயல்பான தன்மை, அதற்கு விரோதமாக உள்ள தன்மை ஆகிய இரண்டையும் தனித்தனியே பிரித்து உரைப்பர். ஸம்ஸாரத்தில் உள்ளபோது, விருப்பம் அல்லாத ஒன்று விலகுதல் என்பதும் விருப்பம் அல்லாத ஒரு நிகழ்வாகவே இருக்கலாம்; அல்லது விருப்பம் உள்ள ஒன்று விலகுவதும், விருப்பம் அல்லாத ஒன்றூ விலகுவதும் ஒரே போன்று இருக்கலாம். ஆனால் மோக்ஷ நிலையில், விருப்பம் அல்லாதவை விலகுதல் என்பது முற்றிலுமாக விருப்பம் உள்ள நிகழ்வே ஆகும். ஆகவே, முதலில் உரைக்கப்பட்ட ஸம்ஸாரம் என்பது விரும்பத்தக்கது அல்ல என்றும், அடுத்து உரைக்கப்பட்ட மோக்ஷம் என்பது விருப்பம் அல்லாதவை அனைத்தும் நீங்கி விருப்பமானவை மட்டுமே உள்ளதால் விரும்பத்தக்கது என்றும் உணர்த்துவதற்காகவே விருப்பம் அல்லாதவை விலகுதல், விருப்பமானவை வந்து சேர்தல் ஆகிய இரண்டும் தனித்தனியே கூறப்பட்டன.

**மூலம்** – பகவந் நிக்ரஹாதி நிவ்ருத்தியும் ஜீவனுடைய ஜ்ஞாந விகாஸாதிகளும் வேறாகையாலே பிரிய அபேக்ஷிக்கிறதாகவுமாம். ஜ்ஞாந ஸங்கோசாதிகளுக்கு ஹேதுவான பகவந் நிக்ரஹாதிகளுடைய நிவ்ருத்தியும், நிக்ரஹ பலமான ஜ்ஞாந

ஸங்கோசாதிகளுடைய நிவ்ருத்தியான ஜ்ஞாந விகாஸ கைங்கர்யாதிகளும் வேறுபட்டவையாகையாலே பிரிய அபேக்ஷிக்கக் குறையில்லையிறே.

**விளக்கம்** – நாம் செய்த செயல்களுக்கான பகவானின் தண்டனையிலிருந்து விலகுதல், ஜீவாத்மாவுக்கு மறைக்கப்பட்டிருந்த ஞானம் மலர்தல் ஆகிய இரண்டும் வெவ்வேறு என்பதால், இந்த இரண்டும் தனித்தனியேதான் விண்ணப்பிக்கப்படவேண்டும். ஜீவாத்மாவுக்கு இயல்பான ஞானம் மறைதல் என்பதறுகு பகவான் அளிக்கும் தண்டனையே காரணமாகும்; இப்படி உள்ளபோது அந்தத் தண்டனை நீங்குதல் என்பதும், அந்தத் தண்டனையின் காரணமாக உண்டான ஞானச்சுருக்கம் மறைதல் என்பதான ஞானமலர்ச்சி மற்றும் பகவத் கைங்கர்யம் என்பவைகளும் வெவ்வேறு என்பதால், இரண்டையும் தனித்தனியே விண்ணப்பம் செய்வதில் எந்தவிதமான குறையும் இல்லை.

**மூலம்** – ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தி பிறந்தால் பாஷாண கல்பத்வாதி மதாந்தர சங்கை வாராமைக்காகவும், பகவத் ப்ராப்தியில் இந்த்ராதி ப்ராப்தியிற்போலே துக்க ஸம்பந்தமில்லை என்று தோற்றுவிக்கையில் தாத்பர்யத்தாலும் பிரித்துச் சொல்லுகிறதாகவுமாம்.

**விளக்கம்** – தார்க்கிகமதம் போன்றவற்றில், மோக்ஷம் என்பது விருப்பம் அற்ற அனைத்தும் விலகப் பெற்று, எந்தவிதமான சுகமோ துக்கமோ பீடிக்காதவிதத்தில் ஒரு கல் போன்று ஆவதே மோக்ஷம் ஆகும் என்று கூறுவர். நம்முடைய ஸித்தாந்தத்தில், மோக்ஷம் என்பது அது போன்றதோ என்னும் ஐயத்தை விலக்கும் பொருட்டும், மோக்ஷம் என்பது உயர்ந்த ஆனந்தம் அளிக்கவல்லது என்பதை உணர்த்தும் பொருட்டும் – பகவானை அடைதல் என்பதான மோக்ஷத்தில், இந்த்ரன் முதலான பதவிகளை அடைந்தால் உண்டாகும் மகிழ்ச்சி போன்றும் அல்லது எந்தவிதமான துக்கமும் உண்டாவதில்லை (பேரானந்தம் மட்டுமே உண்டாகும்) என்பதை உணர்த்துவதற்காகப் பிரித்துக் கூறப்பட்டது எனலாம்.

**மூலம்** – இப்படி ஸ்வரூபமும், புருஷார்த்த ப்ரார்த்தனமும் சப்தமானால் இப் புருஷார்த்தத்துக்கு ஸாதநமாக சாஸ்த்ர விகஸிதமான ஸாத்யோபாயமும் பரந்யாஸ

பர்யந்தமாக அகிஞ்சநனுக்கு அநிஷ்ட நிவ்ருத்தியைச் சொல்லுகிற நமஸ்ஸிலே ஆர்த்தமாக அநுஸந்தேயம்.

**விளக்கம்** – இவ்விதம் ஆத்மஸ்வரூபம் மற்றும் புருஷார்த்தத்திற்கான ப்ரார்த்தனை ஆகிய இரண்டும் அந்தந்த சொற்களாலேயே உணர்த்தப்படுகிறது என்றால் – "மற்ற ஏதும் துணையில்லை என்று அனைத்தையும் கைவிட்டு, பகவானிடம் சரணம் என்று புகுகின்ற ஒருவனுடைய விருப்பம் அல்லாதவை அனைத்தும் விலகுகின்றன" என்பதை உணர்த்தும் "நம:" என்னும் பதமானது, சாஸ்த்ரங்களில் கூறப்பட்டதும் புருஷார்த்தத்திற்குத் தேவையான உபாயமாக உள்ளதும் ஆகிய ஸாத்யோபாயத்தையும் மறைமுகமாகக் கூறுகிறது என்று கருத்து.

**மூலம்** – (8) இப் புருஷார்த்த ப்ரார்த்தனை இச்சாமாத்ரமாயிருக்கை யன்றிக்கே கோப்த்ருத்வவரண ரூபையாகையாலே சேஷம் உபலக்ஷிதமாகவுமாம். அப்போது திருமந்த்ரம் ஸ்வரூபோபாய ப்ரதாநமாயிருக்கும். அயந சப்தத்தில் கரண வ்யுத்பத்தியாலே ஈச்வரனுடைய உபாயத்வமும் ஸித்திக்கும்.

**விளக்கம்** – (8) புருஷார்த்தத்தை வேண்டுதல் என்பது தன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளும் ஒரு ப்ரார்த்தனை அல்ல, ஸர்வேச்வரனிடம் தன்னை சரணாகதனாக ஏற்கவேண்டும் என்று விண்ணப்பித்தலே ஆகும் என்பதால் – அதற்கான அங்கங்கள் வெளிப்படையாகக் கூறப்படாமல், மறைமுகமாக உள்ளது. இவ்விதம் கொள்ளும்போது திருமந்த்ரமானது ஸ்வரூபம் மற்றும் உபாயத்தைக் கூறுவதாகும் (மற்ற உபாயத்தை இயற்ற இயலாத எனக்கு, அந்த உபாயத்தின் இடத்தில் நின்று எனக்கு விருப்பம் அல்லாதவற்றை விலக்கவேண்டும்; எனக்கு விருப்பமான கைங்கர்யத்தையும் அளிக்கவேண்டும்). "நாராயணாய" என்பதை "நாராணாம் அயநம் யேன" என்று பிரிக்கும்போது, "அயந" என்னும் பதம் "உபாயம்" என்னும் பொருளை அளிப்பதாகும்.

**மூலம்** – (9)

கேசித்து சரம ச்லோகே த்வயே சோக்த க்ரமாதிஹ
பரந்யாஸபரம் தாரம் சேஷம் பலபரம் விது:

**விளக்கம்** – (9) ஒரு சில ஆசார்யர்கள், சரமச்லோகம் மற்றும் த்வயம் ஆகிய இரண்டிலும் கூறப்பட்டது போன்றே திருமந்த்ரத்திலும், ப்ரணவம் என்பது பரந்யாஸத்தையே குறிக்கிறது என்றும், மற்ற இரண்டு பதங்களும் (நாராயண, நம:) அதன் பலனை உரைப்பதாகவும் கூறுகிறார்கள்.

**மூலம்** – (10) இத்திருமந்த்ரத்தில் ஸ்வரூப உபாய புருஷார்த்தங்கள் மூன்றும் அடைவே சப்தமாகவுமாம். அப்போது ப்ரணவம் ஸ்வரூப பரம், நமஸ்ஸு உபாய பரம், சேஷம் புருஷார்த்த ப்ரார்த்தநா பரம். இம்மூன்றின் விரிவெல்லாம் அத்யாத்ம சாஸ்த்ரங்களைக் கொண்டு தெளிந்து இங்கே அநுஸந்தேயம்.

**விளக்கம்** – (10) திருமந்த்ரம் என்பது ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் ஆகிய மூன்றையும் குறிக்கிறது. இவ்விதம் கொள்ளும்போது, ப்ரணவம் என்பது ஸ்வரூபத்தையும், “நம:” என்பது உபாயத்தையும், எஞ்சியுள்ளதான “நாராயணாய” என்பது புருஷார்த்தத்திற்கான ப்ரார்த்தனை என்றும் கொள்ளப்படலாம். இந்த மூன்றைக் குறித்த விளங்கங்களை வேதாந்த சாஸ்த்ரங்களைக் கொண்டு தெளிவாக அறியலாம்.

## பத்தாவதாக உள்ள கருத்துக்கு வேதாந்த சாஸ்த்ரம் அதிகமாகப் பொருந்துதல்

**மூலம்** – இந்த யோஜனைக்கு வேதாந்த சாஸ்த்ரத்தில் தத்த்வோபாய புருஷார்த்தங்களை நிரூபித்த க்ரமத்தோடு சேர்த்தியுண்டு. எங்ஙனேயென்னில் – முதல் இரண்டு அத்யாயத்தாலே பராவரதத்த்வங்களைத் தெளிவித்துத் த்ருதீயத்தாலே பராவரதத்த்வங்களோடே கூடின உபாயம் சொல்லிச் சதுர்த்தத்தாலே பலம் சொல்லியிறே சாரீரக சாஸ்த்ரம் தலைக்கட்டிற்று. அங்கு முதல் இரண்டு அத்யாயத்திற் சொன்ன பராவரதத்த்வ ஸ்வரூபமும், நான்காம் அத்யாயத்திற் சொன்ன பலமும் ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனுக்கும் துல்யம். மூன்றாம் அத்யாயத்தில் வைராக்ய பாதத்திலும், உபலிங்க பாதத்திலும் சொன்ன ஸம்ஸார தோஷமும் சரண்யனுடைய ஹேயப்ரத்யநீக கல்யாணைகதாநத்வமும் முமுக்ஷுவான இவனுக்கு அவச்யம் ஜ்ஞாதவ்யம். மூன்றாம் பாதத்தில் உபாயமாகச் சொன்ன உபாஸந பேதங்களை அவற்றுக்கு அதிகாரிகளானவர்கள் அநுஷ்டிக்கக் கடவர்கள். அகிஞ்சனனான அதிகாரி தனக்கு

அவறின் அருமையைக் கண்டு “நாநா சப்தாதி பேதாத்”, “விகல்போ அவிசிஷ்ட பலத்வாத்” என்கிற அதிகரணங்களிற் சொன்ன கட்டளையிலே வித்யாந்தர வ்யாவ்ருத்தமாய் அவை கொடுக்கும் மோக்ஷத்தைக் கொடுக்குமிடத்தில் நிரபேக்ஷமுமான ந்யாஸத்தையே பற்றக் கடவன். நான்காம் பாதத்திற் சொன்ன வர்ணாச்ரம தர்மங்களை உபாஸநநிஷ்டன் “ஸஹகாரித்வேந ச” என்கிறபடியே வித்யாபரிகரமாக அநுஷ்டிக்கும். ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டன் “விஹிதத்வாத் ஆச்ரமகர்ம அபி” என்கிறபடியே பகவதாஜ்ஞா ஸித்தமென்று ஸ்வயம் ப்ரயோஜனமாக அநுஷ்டிக்கும். இப்படியானால் சாரீரகத்திற் சொன்ன ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களெல்லாம் ஸ்ரீமதஷ்டாக்ஷராந்த:ஸ்தங்கள். இதில் அர்த்த பஞ்சகாதிகள் கிடக்கிற வகுப்பெல்லாம் கீழே சொன்னோம்.

**விளக்கம்** – மேலே இறுதியாகக் கூறப்பட்ட (பத்தாவது) கருத்துக்கு வேதாந்த சாஸ்த்ரத்தில் தத்வம், உபாயம், புருஷார்த்தம் ஆகியவற்றுக்கான விளக்கங்களுடன் ஒற்றுமை உண்டு. எப்படி? ப்ரஹ்மஸூத்திரத்தின் முதல் இரண்டு அத்யாயங்களில் உயர்ந்த தத்வம் (ப்ரஹ்மம்), ப்ரஹ்மத்தைக் காட்டிலும் தாழ்ந்த தத்வம் ஆகியவற்றைத் தெளிவாக்கிய பின்னர், மூன்றாம் அத்யாயத்தில் உபாயத்தைக் கூறி, அதற்கான அதிகாரிகளின் தகுதி மற்றும் அங்கங்கள் விளக்கப்படுகின்றன. நான்காம் அத்யாயத்தில் ப்ரஹ்மத்தை அனுபவித்தல் என்னும் பலன் கூறப்பட்டு நிறைவு செய்யப்படுகிறது. முதல் இரண்டு அத்யாயங்களில் கூறப்பட்டதான உயர்ந்த தத்வம் மற்றும் தாழ்ந்த தத்வம் ஆகியவற்றின் ஸ்வரூபம் மற்றும் நான்காம் அத்யாயத்தில் கூறப்பட்டதான பலன் ஆகிய இரண்டும், ப்ரபத்தியை நேரடியான சுதந்திர உபாயமாகக் கொண்டவனுக்கு ஒன்றே ஆகும். ஸம்ஸாரத்தில் உள்ள தோஷங்களை விளக்குவதான மூன்றாம் அத்யாயத்தில் உள்ள வைராக்ய பாதம் மற்றும் உபயலிங்க பாதம் ஆகிய இரண்டிலும் கூறப்பட்டவையும், அனவரும் சரணம் அடையும்படியாக உள்ள ஸர்வேச்வரனுடைய தாழ்வுகள் அனைத்திற்கும் எதிர்த்தட்டாக உள்ள தன்மை மற்றும் திருக்கல்யாண குணங்களின் இருப்பிடமாக உள்ள தன்மை ஆகியவையும், முமுக்ஷு அவசியம் அறிந்து கொள்ளவேண்டியதாகும். மூன்றாம் அத்யாயத்தின் மூன்றாம் பாதத்தில் உபாயமாகக் கூறப்பட்ட பலவிதமான உபாஸனைகள், பக்தியை உபாயமாகக் கொண்ட அதிகாரிகள் கடைப்பிடிக்க வேண்டியதாகும். இத்தகைய பக்தியைக் கைக்கொள்ளச் சக்தியற்றவனும், மற்ற எந்தவிதமான உபாயங்களும் அற்ற ஒருவன், இத்தகைய பக்தி உபாயங்கள் அனைத்தும் அவனால் கைக்கொள்ள இயலாதவை என்று உணர்ந்து, ப்ரஹ்மஸூத்ரம் (3-

3-56) - நாநா சப்தாதி பேதாத் – ப்ரஹ்மவித்யைகளுடைய பெயர்கள் வேறுபட்டுள்ளதால் அவை வெவ்வேறானவை – என்றும், ப்ரஹ்மஸூத்ரம் (3-3-57) - விகல்போ அவிசிஷ்ட பலத்வாத் – ப்ரஹ்மவித்யைகள் அனைத்தும் மோக்ஷம் மட்டுமே பலனாக உள்ளதால் அவற்றில் எதனை வேண்டுமானாலும் கைக்கொள்ளலாம் – என்றும் கூறப்படுவதான வித்யைகள் மற்றும் அவற்றின்பலனாகிய மோக்ஷம் ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபட்டதான ந்யாஸத்தை (சரணாகதி) மட்டுமே உபாயமாகக் கொள்ளக்கடவன். நான்காம் அத்யாயத்தில் கூறப்பட்டுள்ள உபாஸனையை (பக்தி) கைக்கொள்ளும் ஒருவன், தன்னுடைய வர்ணாச்ரம தர்மங்களை ப்ரஹ்மஸூத்ரம் (3-4-33) - ஸஹகாரித்வேந ச – பக்தியோகம் செய்பவன் தனது வர்ணாச்ரம தர்மங்களை பக்தியோகத்தின் அங்கமாக இயற்றவேண்டும் – என்பதற்கு ஏற்ப, வித்யைக்கு அங்கமாக இயற்றக்கடவன். யார் ஒருவன் ப்ரபத்தியை நேரடி மார்க்கமாகக் கொள்கிறானோ அவன் தன்னுடைய வர்ணாச்ரம தர்மங்களை, ப்ரஹ்மஸூத்ரம் (3-4-32) - விஹிதத்வாத் ஆச்ரமகர்ம அபி – ப்ரஹ்மவித்யைக்கு அங்கமாக உள்ள யஜ்ஞம் போன்ற கர்மங்கள் விதிக்கப்பட்டுள்ளதால், அவை க்ருஹஸ்தாச்ரமத்தில் உள்ளவர்களாலும் இயற்றப்பட வேண்டியதே ஆகும் – என்பதற்கு ஏற்ப, அவை பகவானின் ஆணைகள் என்று கொண்டு, அந்தக் கர்மங்களுக்காக (எந்தவிதமான பலனையும் எதிர்பாராமல்) இயற்றக்கடவன். இவ்விதம் புரிந்துகொண்டால், சாரீரக சாஸ்த்ரத்தில் விளக்கப்பட்டுள்ள ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் ஆகியவை திருமந்த்ரத்திலும் பொதிந்துள்ளதை உணரலாம். இதில் உள்ள அர்த்தபஞ்சகம் குறித்து நான்காம் அத்யாயமான "அர்த்தபஞ்சகாதிகாரம்" கூறிற்று.

## திருமந்த்ரத்தைக் குறித்த பத்துவிதமான கருத்துக்களின் சுருக்கம்

**மூலம்** – இப்படித் திருமந்த்ரம் ஏகவாக்யமானபோது (1) உபாய பரமென்றும், (2) வ்ருத்தி பரமென்றும்; வாக்ய த்வயமானபோது (3) ஸ்வரூப பரமென்றும், (4) அந்வய வ்யதிரேக முகேந ஸமர்ப்பண பரமென்றும், (5) புருஷார்த்த ப்ரார்த்தநா பரமென்றும்; வாக்ய த்ரயமானபோது (6) முதலிரண்டு பதமும் ஸ்வரூபமாய் மேல்பதம் புருஷார்த்த ப்ரார்த்தநா பரமென்றும், (7) ப்ரணவம் ஸ்வரூப பரமாய் மேல் இரண்டு பதமும் அநிஷ்ட நிவ்ருத்தி இஷ்ட ப்ராப்தி ப்ரார்த்தநா பரமென்றும்; இக்கட்டளையிலே (8) ப்ரதம பதம் ஸ்வரூப

பரமாய் மேலிரண்டு பதமும் உபாய பரமென்றும், (9) ப்ரதம பதம் ஸமர்ப்பண பரமாய் மேலிரண்டு பதமும் பல ப்ரார்த்தநா பரமென்றும், (10) பத த்ரயமும் அடைவே தத்வ உபாய புருஷார்த்த ப்ரார்த்தநா பரமென்றும் அநந்தார்த்த கர்ப்பமான இத்திருமந்த்ரத்தில் வாக்யார்த்தத்தைப் பத்துப்படியாக யதா ஸம்ப்ரதாயம் அநுஸந்திப்பார்கள். இப்படிச் சிலவற்றைப் ப்ரதாநமாக அநுஸந்தித்தாலும் மற்றுள்ளவையும் ஆர்த்தமாகக் கடவது.

ததேவம் பத வாக்யார்த்தை: தத்வவித் குரு தர்சிதை:
தத் தத் குத்ருஷ்டி கதிதம் நிரஸ்தம் யோஜநாந்தரம்

**விளக்கம்** – எண்ணற்றவிதத்தில் கூறலாம்படியான கருத்துக்களைத் தன்னுள் அடக்கியுள்ள திருமந்த்ரத்தைக் குறித்து பல ஆசார்யர்கள், தங்கள் தங்கள் ஸம்ப்ரதாயத்தின்படி கீழே உள்ள பத்துவிதமான கருத்துக்களை உரைக்கிறார்கள் (இவற்றையே மேலே இதுவரை நாம் விரிவாகப் பார்த்தோம்). அவையாவன:

- திருமந்த்ரம் ஒரே வாக்கியம் என்று கொள்ளப்படும்போது, அது (1) ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை உணர்த்துகிறது. (2) அவன் ஸர்வேச்வரனுக்கு அடிமையாக இருந்து செய்பவற்றைக் கூறுகிறது.

- இரண்டு வாக்கியங்களாக கொள்ளப்படும்போது, அது (1) ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை உணர்த்துகிறது. (2) உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் (என்னைக் காக்கும் பொறுப்பு அவனுடையது, அது என்னுடையது அல்ல என்று) ஆத்மாவைச் சமர்ப்பணம் செய்தலைக் கூறுகிறது. (3) புருஷார்த்த விண்ணப்பத்தைக் கூறுகிறது.

- மூன்று வாக்கியங்களாகக் கொள்ளப்படும்போது, (1) முதல் இரண்டு பதங்களும் ஆத்ம ஸ்வரூபத்தையும், மூன்றாம் பதம் புருஷார்த்த விண்ணப்பத்தையும் கூறுகிறது. (2) முதல் பதமான ப்ரணவம் ஆத்ம ஸ்வரூபத்தையும், மற்ற இரண்டு பதங்களும் விருப்பம் அல்லாதவற்றை விலக்குதல் மற்றும் விருப்பமானவற்றை அளித்தல் என்னும் விண்ணப்பத்தை உள்ளடக்கியதையும் கூறுகிறது. (3) முதல் பதமான ப்ரணவம் புருஷார்த்த விண்ணப்பத்தையும், அடுத்த இரண்டு பதங்களை

அந்தப் புருஷார்த்தத்தை அடைவிக்கச்செய்யும் உபாயத்தையும் கூறுகிறது. (4) முதல் பதமான ப்ரணவம் ஆத்ம சமர்ப்பணத்தையும், அடுத்த இரண்டு பதங்கள் அத்தகைய சமர்ப்பணத்தால் உண்டாகும் பலனுக்கான விண்ணப்பத்தையும் கூறுகிறது. (5) மூன்று பதங்களும் முறையே தத்வம், உபாயம், புருஷார்த்தம் ஆகியவற்றைக் கூறுகின்றன.

மேலே கூறப்பட்டபடி உள்ள கருத்துக்களை முதன்மையாகக் கொண்டாலும், மேலும் வெளிப்படும் பலவிதமான கருத்துக்களைத் துணைக்கருத்துகளாகக் கொள்ளலாம்.

ததேவம் பத வாக்யார்த்தை: தத்வவித் குரு தர்சிதை:
தத் தத் குத்ருஷ்டி கதிதம் நிரஸ்தம் யோஜநாந்தரம்

**இதன் பொருள்** – ஆகவே இப்படியாக மெய்ப்பொருளை அறிந்த பூர்வாசார்யர்களால் உபதேசிக்கப்பட்ட பதங்கள், வாக்கியங்கள் ஆகியவற்றின் ஆழ்பொருள் மூலமாக திருமந்த்ரத்துக்கு வேறு பொருள் உரைக்கும் அந்தந்த மதங்களின் மற்ற கருத்துக்கள் தள்ளப்பட்டன.

## திருமந்த்ரத்தைக் குறித்து நன்றாக அறிந்தவனுக்கு வரும் மேன்மை

**மூலம்** - இத்திருமந்த்ரத்தில் பாஹ்யகுத்ருஷ்டி மதங்களால் கலக்கவொண்ணாத தெளிவுடையவனை

ப்ரஜ்ஞா ப்ராஸாதமாருஹ்ய ஹ்யசோச்ய: சோசதோ ஜநாந்
பூமிஸ்தானிவ சைலஸ்தோ ஹ்யஜ்ஞாந் ப்ராஜ்ஞ: ப்ரபச்யதி

என்கிறது. “ஜ்ஞாநேந ஹீந: பசுபி: ஸமாந:” என்கிறவிடத்தில் ஞானமென்கிறதுவும் இத்தெளிவை. இப்படித் தெளிந்தவன்

ந ப்ரஹ்ருஷ்யதி ஸம்மானே நாவமாநே அநுதப்யதே
கங்காஹ்நத இவாக்ஷோப்யோ ய: ஸ பண்டித உச்யதே

என்கிறபடியே மாநாவமாநாதிகளிற் கலங்கான். இத்திருமந்த்ரத்தில் யதார்த்த ஞானமும் நிஷ்டையுமுடையவனை ஆதரிக்கும் தேசத்திலும்

யத்ராஷ்டாக்ஷர ஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே
ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி துர்பிக்ஷ தஸ்கரா:

என்கிறபடியே ஒரு தோஷமும் வாராது. இச் ச்லோகத்தால்

ராகாதி ரோகாந் ஸததாநுஷக்தாந் அசேஷகாய ப்ரஸ்ருதாநசேஷாந்
ஔத்ஸுக்ய மோஹாரதிதாந் ஜகாந யோ அபூர்வ வைத்யாய நமோஸ்து தஸ்மை

என்று ஆயுர்வேத வித்துக்கள் ப்ரதாந வ்யாதிகளாக எடுத்த ராகாதிகளும், ஸத்துக்களுக்கு ஸ்ரீயென்று ஓதப்பட்ட ஞான ஸம்பத்தினுடைய ஸங்கோசமும், பாஹ்யதஸ்கரர்க்கு நிலமல்லாத ஆத்மாபஹாராதிகளைப் பண்ணும் மாஹாதஸ்கரரான அஹங்காராதிகளும் நடையாடாவென்றதாயிற்று.

**விளக்கம்** - திருமந்த்ரத்துக்கு வேறுவிதமாகப் பொருள் உரைக்கும் மதங்களின் மற்ற கருத்துக்களால் மயங்காமல் உள்ளவனை மஹாபாரதம் சாந்திபர்வம் (150-11) - ப்ரஜ்ஞா ப்ராஸாதமாருஹ்ய ஹ்யசோச்ய: சோசதோ ஜநாந் பூமிஸ்தானிவ சைலஸ்தோ ஹ்யஜ்ஞாந் ப்ராஜ்ஞ: ப்ரபச்யதி – திருமந்த்ரத்தின் ஆழ்பொருள் ஞானம் என்னும் மேல்மாடியில் ஏறியவனும், தன்னைக் குறித்து எதற்கும் சிறிதும் கவலைப்படாதவனும் ஆகிய ஞானம் உள்ள ஒருவன், இப்படிப்பட்ட ஞானம் இல்லாதவர்களை, மலையில் நிற்கும் ஒருவன் கீழே உள்ளவர்களை மிகவும் சிறிய உருவத்தில் காண்பது போன்று, காண்கிறான் – என்றது. நரஸிம்ஹபுராணத்தில் (16-13) - ஜ்ஞாநேந ஹீந: பசுபி: ஸமாந: - ஞானம் அற்றவன் விலங்குகளுக்குச் சமம் - என்று "ஞானம்" என்னும் பதம் மூலமாக, திருமந்த்ரம் குறித்த இத்தகைய தெளிவான ஞானமே கூறப்பட்டது. இப்படியாகத் திருமந்த்ரம் குறித்த தெளிவான ஞானம் உள்ளவன், மஹாபாரதம் உத்யோகபர்வம் (32-33) - ந ப்ரஹ்ருஷ்யதி ஸம்மானே நாவமாநே அநுதப்யதே கங்காஹ்நத இவாக்ஷோப்யோ ய: ஸ பண்டித உச்யதே – மற்றவர்கள் தன்னைப் புகழும்போது மகிழாமலும், இகழும்போது

வருந்தாமலும் நின்று, கங்கையின் ஆழத்தில் உள்ள நீர் போன்று கலங்காமல் நிலையாக உள்ளவன் பண்டிதன் எனப்படுகிறான் – என்பதற்கு ஏற்ப, தனக்கு உண்டாகும் புகழ்ச்சி மற்றும் அவமானம் ஆகியவற்றால் கலங்கமாட்டான்.

இப்படிப்பட்ட திருமந்த்ரத்தைக் குறித்து உள்ளது உள்ளபடி அறிந்தவனும், அதிலேயே நிலையாக நிற்பவனும் ஆகிய ஒருவனைப் போற்றிக் கொண்டாடும் இடத்திற்கு, நாரதீயம் (1-20) - யத்ராஷ்டாக்ஷர ஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி துர்பிக்ஷ தஸ்கரா: - திருமந்த்ரத்தைக் குறித்து உள்ளது உள்ளபடி அறிந்தவனும், அதிலேயே நிலையாக நிற்பவனும் ஆகிய ஒருவனை ஆதரிக்கும் இடத்தில் வ்யாதி (ஆசை), பஞ்சம் (ஞானம் இன்மை), திருடர்கள் (அஹங்காரம், மமகாரம்) இருக்கமாட்டனர் – என்று கூறுவதற்கு ஏற்ப, எந்தவிதமான தோஷமும் உண்டாகாது. மேலும் இந்த நாரதீய ச்லோகம் வேறொரு கருத்தையும் உணர்த்துகிறது; ராகாதி ரோகாந் ஸததாநுஷக்தாந் அசேஷகாய ப்ரஸ்ருதாநசேஷாந் ஔத்ஸுக்ய மோஹாரதிதாந் ஜகாந யோ அபூர்வ வைத்யாய நமோஸ்து தஸ்மை – எப்போதும் உள்ளதும், சரீரம் முழுவதும் பரவியதும், அளவு கடந்த மகிழ்ச்சி – அறியாமை – மனநிறைவின்மை ஆகியவற்றை ஏற்படுத்துவதும் ஆகிய ராகம் (ஆசை) போன்ற நோயை, அடியுடன் அழிக்கவல்ல அதிசயமான வைத்தியனான பகவானுக்கு நமஸ்காரம் – என்று ஆயுர்வேதத்தை நன்றாக அறிந்தவர்கள், முதன்மையான நோயாகக் கூறிய ஆசை போன்றவையும், ஸாதுக்களுக்குச் செல்வம் என்று கொண்டாடப்படும் ஞானம் என்னும் செல்வத்தின் குறைவும், காணும் பொருள்கள் அனைத்தையும் திருடுகிறவர்கள் போன்று ஸர்வேச்வரனுடைய ஆத்மாவைத் தன்னுடையது என்று சொந்தம் கொண்டாடும் அஹங்காரம் போன்ற திருடர்களும், திருமந்த்ரத்தைக் குறித்து உள்ளது உள்ளபடி அறிந்தவனும், அதிலேயே நிலையாக நிற்பவனும் ஆகிய ஒருவனைப் போற்றிக் கொண்டாடும் இடத்தில் இருக்கமாட்டனர் என்று கருத்து.

## திருமந்த்ரத்தின் பெருமைகள்

**மூலம்** – (i) இத்திருமந்த்ரத்தில் அறுதியிட்ட பொருளே விஷ்ணு வாஸுதேவ சப்த விசிஷ்டங்களான வ்யாபக மந்த்ராந்தரங்களுக்கும் பொருள்.

வ்யாப்தி காந்தி ப்ரவேசேச்சா: தத்தத்தாது நிபந்தநா:
பரத்வே அப்யதிகா விஷ்ணோ: தேவஸ்ய பரமாத்மந:

என்று அஹிர்புத்ந்யாதிகள் நிர்வசனம் பண்ணினபடியே “விஷல் வ்யாப்தௌ, வச காந்தௌ, விச ப்ரவேசநே, இஷு இச்சாயாம்” என்கிற தாதுக்களிலே நிஷ்பந்நமான விஷ்ணு சப்தத்திலுள்ள பொருள்களும்; வாஸுதேவ சப்தத்திலும் “வஸதி வாஸயதி” என்றும், “தீவ்யதி” என்றும் தோற்றின ஸர்வ வ்யாபகத்வம், ஸர்வ ஆதாரத்வம், தத்கததோஷ ரஹிதத்வம், க்ரீடா விஜிகீஷாதிமத்த்வம் ஆகாரங்களுமெல்லாம் நாராயண சப்தார்த்தத்திலே ஏகதேசம்.

**விளக்கம்** – “விஷ்ணு, வாஸுதேவன்” முதலான சொற்களை உள்ளடக்கிய வ்யாபக மந்த்ரங்களான “ஓம் நமோ விஷ்ணவே, “ஓம் நமோ பகவதே வாஸுதேவாய” ஆகியவை உணர்த்தும் ஆழ்பொருள்களானவை, திருமந்த்ரத்தில் உறுதிபட உரைக்கப்பட்ட பொருளே ஆகும். அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (52-38) - வ்யாப்தி காந்தி ப்ரவேசேச்சா: தத்தத்தாது நிபந்தநா: பரத்வே அப்யதிகா விஷ்ணோ: தேவஸ்ய பரமாத்மந: - எங்கும் நிறைந்திருத்தல், ஒளியுடன் இருத்தல், உட்புகுந்திருத்தல், ஸங்கல்பம் ஆகிய பொருள்களைக் கொண்டதான அந்தந்த தாதுக்கள் (மூல சொற்கள்), ஸர்வேச்வரனைக் கூறும்போது அவனுடைய மேன்மை காரணமாக, அந்தந்த பொருள்களை மிகுதியாகக் காட்டுவதாகும் – என்றது காண்க. விஷல் வ்யாப்தௌ – “விஷ்” என்பது எங்கும் உள்ளதைக் குறிக்கும், விச ப்ரவேசநே – “வச்” என்பது ஒளிர்தலைக் குறிக்கும், விச ப்ரவேசநே – “விச்” என்பது உட்புகுதலைக் குறிக்கும், இஷு இச்சாயாம் – “இஷ்” என்பது இச்சையைக் குறிக்கும்; இந்த நான்கு தாதுக்களிலிருந்து உண்டான “விஷ்ணு” என்னும் பதத்தின் பொருளும், “வஸதி – அனைத்திலும் உட்புகுந்து நிற்பவன், வாஸயதி – தன்னுள் அனைத்தையும் இருக்கும்படிச் செய்பவன், தீவ்யதி - ஒளிர்தல்” என்னும்

தாதுக்களிலிருந்து உண்டான “வாஸுதேவ” என்னும் பதத்தின் பொருளும் – அவன் அனைத்தையும் தாங்கி நிற்பவன், அனைத்துடனும் தொடர்பு கொண்டிருந்தாலும் அவற்றின் தோஷங்களால் தீண்டப்படாதவன், அனைத்தையும் ஒரு லீலையாகவே செய்பவன், அனைத்தையும் வெல்லக்கூடியவன் – போன்றவற்றை உணர்த்தி, இவை “நாராயண” என்னும் பதத்தின் ஒரு சில பகுதிகளில் காணப்படுவதாகவும் உள்ளன.

**மூலம்** – (ii) ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச
ஸர்வமஷ்டாக்ஷராந்த: ஸ்தம் யச்சாந்யதபி வாங்மயம்

என்கையால், இத்திருவஷ்டாக்ஷரமே முமுக்ஷுக்களுக்குத் தத்த்வஹிதாநு பந்திகளான ஸர்வாபேக்ஷிதங்களுக்கும் ப்ரகாசகம்.

ருசோ யஜூம்ஷி ஸாமாநி யோ அதீதே அஸக்ருதஞ்ஜஸா
ஸக்ருதஷ்டாக்ஷரம் ஜப்த்வா ஸ தஸ்ய பலமச்நுதே

என்கையாலே இதினுடைய ஸக்ருதுச்சாரணம் ஸர்வ வேத ஜப துல்யம்.

**விளக்கம்** – (ii) நாரதீயம் (1-9) - ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச ஸர்வமஷ்டாக்ஷராந்த: ஸ்தம் யச்சாந்யதபி வாங்மயம் – ருக், யஜுர், ஸாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்கள் மூலமும் அறியப்படக்கூடிய அனைத்தும், திருவஷ்டாக்ஷர மந்த்ரத்திலேயே அடங்கி உள்ளன – என்று கூறுவதால், இத்தகைய திருவஷ்டாக்ஷர மந்த்ரமே, மோக்ஷத்தில் விருப்பம் உள்ளவர்களுக்கு அவசியமான உண்மை மற்றும் நன்மைகளை அளிக்கவல்ல அனைத்து விருப்பங்களையும் உணர்த்துவதாகும். நாரதீயம் (1-10) - ருசோ யஜூம்ஷி ஸாமாநி யோ அதீதே அஸக்ருதஞ்ஜஸா ஸக்ருதஷ்டாக்ஷரம் ஜப்த்வா ஸ தஸ்ய பலமச்நுதே – ருக், யஜுர், ஸாமம் ஆகிய மூன்று வேதங்களையும் பலமுறைப் பூர்ணமாக அத்யயனம் செய்தால் உண்டாகும் பலன், திருவஷ்டாக்ஷரத்தை ஒருமுறை ஜபித்தாலே கிட்டுகிறது – என்று கூறுவதால், திருவஷ்டாக்ஷரத்தின் ஒரு உச்சாடனம் என்பது, அனைத்து வேதங்களையும் ஓதியதற்குச் சமம் ஆகிறது.

**மூலம்** – (iii) யஸ்ய யாவாம்ச்ச விச்வாஸ: தஸ்ய ஸித்தச்ச தாவதீ
ஏதாவாநிதி நைதஸ்ய ப்ரபாவ: பரிமீயதே

என்கையாலே, தந்தம் விச்வாஸ தாரதர்ம்யத்துக்கு ஈடாக ஸித்தி தாரதர்ம்யம் உண்டானாலும், மஹாவிச்வாஸமுடையார் பக்கல் இத்திருமந்த்ரம் அநவச்சிந்ந ப்ரபாவமாயிருக்கும். இச்ச்லோகத்தில், இன்னாரால் பரிச்சேதிக்க வொண்ணாதென்று விசேஷியாமையாலே "நர நாரணனாய் உலகத்து அறநூல் சிங்காமை விரித்தவன்" என்கிறபடியே, இத்திருமந்த்ரத்துக்குப் ப்ரவர்த்தகனுமாய்ப் ப்ரதிபாத்யனுமாயிருக்கிற ஸ்வத: ஸர்வஜ்ஞனான நாராயணன் தானும் இதின் ப்ரபாவத்தைப் பரிச்சேத யோக்யமன்றென்று அறியுமத்தனை. இம்மந்த்ரத்துக்கு த்ரஷ்டாவுமாய் தேவதையுமானவன் பக்கலிலே இத்தை ஸார்த்தமாகப் பெற்ற திருமங்கையாழ்வார் "அந்தணர் மாட்டு அந்தி வைத்த மந்திரத்தை மந்திரத்தால் மறவாது என்றும் வாழுதியேல் வாழலாம்" என்றருளிச்செய்தார்.

**விளக்கம்** – நாரதீயம் (1-14) - யஸ்ய யாவாம்ச்ச விச்வாஸ: தஸ்ய ஸித்தச்ச தாவதீ ஏதாவாநிதி நைதஸ்ய ப்ரபாவ: பரிமீயதே – ஒருவனுக்குத் திருமந்த்ரத்தில் எந்த அளவு விச்வாஸம் உள்ளதோ, அந்த அளவு அவனுக்கு அதனால் பலன் கிட்டும்; அதன் பெருமையை "இந்த அளவு" என்று அளவிட இயலாது – என்று கூறுவதற்கு ஏற்ப, அவரவர்களுடைய விச்வாஸத்திற்கு ஏற்ப, திருமந்த்ரம் பலன் அளிக்கவல்லது என்றாலும், மஹாவிச்வாஸத்துடன் உள்ளவர்கள் விஷயத்தில் திருமந்த்ரம் அளிக்கவல்ல பலனை அளவிட இயலாதபடியே இருக்கும். இந்த நாரதீய ச்லோகத்தில், திருமந்த்ரத்தின் ப்ரபாவத்தை இன்னாரால் அளவிட்டுக் கூற இயலும் என்று யாரையும் குறிப்பிட்டுக் கூறாத காரணத்தால், பெரியதிருமொழி (10-6-1) - நர நாரணனாய் உலகத்து அறநூல் சிங்காமை விரித்தவன் – நரனாகவும் நாராயணனாகவும் பதரிகாச்ரமத்தில் நின்று சாஸ்த்ரங்களை ஒத்துள்ள திருமந்த்ரத்தைச் சுருக்காமல் உரைத்தவன் – என்று கூறுவதற்கு ஏற்ப, இந்தத் திருமந்த்ரத்தை உபதேசித்தவனும், இத்திருமந்த்ரத்தால் கூறப்படுபவனும் ஆகிய அனைத்தும் அறிந்த நாராயணன், தானே முயன்றாலும், திருமந்த்ரத்தின் பெருமையை அளவிட்டுக் கூறத் தகுதி அற்றவன் என்று தேறுகிறது. இப்படிப்பட்ட உயர்ந்த இத்திருமந்த்ரத்தின் குருவும் தேவதையாகவும் உள்ள நாராயணனிடமிருந்தே இதன் ஆழ்பொருளைக் கற்றுணர்ந்த திருமங்கையாழ்வார், திருநெடுந்தாண்டகம் (4) -

அந்தணர் மாட்டு அந்தி வைத்த மந்திரத்தை மந்திரத்தால் மறவாது என்றும் வாழுதியேல் வாழலாம் – அந்தணர்களின் செல்வமான வேதாந்த சாஸ்த்ரத்தில் காணப்படும் ஸர்வேச்வரனை, திருமந்த்ரத்தால் என்றும் மறக்காமல் அனுபவித்தால், நல்வாழ்வு பெறலாம் – என்று அருளிச்செய்தமை காண்க.

## திருமந்த்ரம் அனைத்து பலன்களையும் அளித்தல்

**மூலம் –**

எட்டுமாமூர்த்தி எண் கண்ணன் எண்டிக்கு
 எட்டிறை எண் ப்ரக்ருதி
எட்டு மாவரைகளீன்ற எண் குணத்தோன்
 எட்டெணுமெண் குண மதியோர்க்கு
எட்டு மாமலர் எண் சித்தி எண் பத்தி
 எட்டு யோகாங்கம் எண் செல்வம்
எட்டு மாகுணம் எட்டெட் டெணுங்கலை
 எட்டிரத மேலனவும் எட்டுனமே

ஸர்வகாரணபூதனுமாய் அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதானுமான ஸர்வேச்வரனுக்கு ப்ரதிபாதகமான திருவஷ்டாக்ஷரத்தை அநுஸந்திக்கும் மஹாமதிகளுக்கு ஆத்மகுணாதிகளிலும் அஷ்டைச்வர்யாதிகளிலும் யதா மநோரதம் துர்லபமாயிருப்பது ஒன்றுமில்லையென்கிறது. (எட்டு மாமூர்த்தி) – ஆகாசாதி பூதங்களைந்தும் சந்த்ராதித்யர்களும், யஜமாநனும் தனக்கு மூர்த்திகளாக வரம் பெற்று அஷ்டமூர்த்தியென்று பேர் பெற்ற ருத்ரன். (எண் கண்ணன்) – சதுர்முகனாகையாலே எட்டுக் கண்ணுடைய ப்ரஹ்மா. (எண்டிசைக்கு) – எட்டு திக்குகள். (எட்டு இறை) – இந்த்ராதிகளான எட்டு திக்பாலகர்கள். (எண் ப்ரக்ருதி) – அவ்யக்த மஹதஹங்காராதிகளான எட்டுத் தத்த்வங்கள். (எட்டு மாவரைகள்) – எட்டுக் குலபர்வதங்கள். (ஈன்ற எண் குணத்தோன்) – இவையெல்லாவற்றையும் ஸ்ருஷ்டித்த குணாஷ்டக விசிஷ்டனான பரமாத்மா. இவனுக்கு எட்டு குணங்களென்கிறது

கர்மவச்யத்வ ஜரா மரண சோக க்ஷுத் பிபாஸைகளன்றிக்கே ஒழிகையும், நித்யங்களான போக்யங்களையுடைனாகையும், நினைத்தது முடிக்க வல்லனாகையும். (எட்டெணுமெண் குண மதியோர்க்கு) – இப்படிப்பட்ட ஸர்வேச்வரனுக்கு ப்ரதாந மந்த்ரமான திருவஷ்டாக்ஷரத்தை ஸார்த்தமாகக் கேட்டு அநுஸந்திக்கும் அஷ்டாங்க புத்தியுடைய அநந்யரான ப்ரதிபுத்தர்க்கு. புத்திக்கு எட்டு அங்கங்களாவன –

க்ரஹணம் தாரணம் சைவ ஸ்மரணம் ப்ரதிபாதநம்
ஊஹ: அபோஹ: அர்த்தவிஜ்ஞானம் தத்த்வஜ்ஞானோ ச தீ குணா: என்கிறவை

**விளக்கம்** – அனைத்து உயிர்களுக்கும் காரணமாக உள்ளவனும், தாழ்ந்தவை அனைத்திற்கும் எதிர்த்தட்டாக உள்ளவனும், அனைத்துவிதமான திருக்கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாக உள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரனைக் கூறுவதான திருவஷ்டாக்ஷர மந்த்ரத்தை எப்போதும் சிந்தித்தபடி உள்ள கூர்மையான புத்தி கொண்டவர்களுக்கு ஆத்மகுணங்கள், எட்டுவிதமான ஐச்வர்யங்கள் போன்ற பலவும், அவர்கள் அவற்றை வேண்டும் என்று விரும்பினால் கிட்டுவது கடினமல்ல; அவர்களுக்குக் கிட்டாதது ஏதும் இல்லை. (எட்டு மாமூர்த்தி) – பூமி, நீர், அக்னி, காற்று, ஆகாயம் என்பதான பஞ்சபூதங்கள், சந்த்ரன், சூரியன், யஜ்ஞங்களை இயற்றும் யஜமானன் ஆகிய எட்டு பேரும் தனது சரீரங்களாக இருத்தல் வேண்டும் என்று வரம் வாங்கிய காரணத்தால், இவற்றைத் தனது சரீரமாகக் கொண்டுள்ள ருத்ரன். (எண் கண்ணன்) – நான்கு முகங்கள் உள்ளதால், ஒரு முகத்திற்கு இரண்டு கண்கள் வீதம், எட்டு கண்கள் கொண்ட நான்முகன். (எண்டிசைக்கு) – எட்டு திசைகள். (எட்டு இறை) – எட்டு திசைகளுக்குத் தேவதைகளான இந்த்ரன் முதலான திக்பாலகர்கள். (எண் ப்ரக்ருதி) – அவ்யக்தம், அஹங்காரம், மஹத் மற்றும் பஞ்சபூதங்கள் ஐந்து என்பதான எட்டு தத்துவங்கள். (எட்டு இறை) – இந்த்ரன், அக்னி, யமன் நிர்ருதி , வருணன், வாயு, ஸோமன் (அல்லது குபேரன்) மற்றும் ஈசானன் என்னும் எட்டு திக்பாலகர்கள். (எட்டு மாவரைகள்) – ஹிமவான், நிஷதம், விந்த்யம், மால்யவான், பாரியாத்ரகம், மந்தரம், மலயம் மற்றும் மேரு என்னும் எட்டு பர்வதங்கள். (ஈன்ற எண் குணத்தோன்) – இவை அனைத்தையும் படைத்த எட்டுவிதமான குணங்கள் பொருந்தியதால் தனித்து விளங்கும் பரமாத்மா. பரமாத்மாவின் எட்டு குணங்கள் – கர்மபந்தம், வயோதிகம், மரணம், சோகம், பசி, தாகம் போன்றவை இல்லாமை, எப்போதும் இருக்கின்ற இன்பத்தை உடையவன் மற்றும் எண்ணியதை முடிக்கவல்லவன்

என்பவையாகும். (எட்டெணுமெண் குண மதியோர்க்கு) – இப்படிப்பட்ட ஸர்வேச்வரனைக் குறித்துக் கூறும் மந்த்ரங்களில் முதன்மையாக உள்ளதான திருவஷ்டாக்ஷர மந்த்ரத்தை, அதன் ஆழ்பொருளுடன் அறிந்து, அதனை எப்போதும் சிந்தித்தபடி உள்ள எட்டுவிதமான அங்கங்களுடன் கூடிய புத்தியைக் கொண்டவர்களும், மற்ற எதனையும் நாடாமல் இதனை மட்டுமே சிந்தித்தபடி உள்ளவர்களுக்கு. இங்கு புத்திக்கு உள்ள எட்டுவிதமான அங்கங்கள் – காமந்தகீயம் (1) - க்ரஹணம் தாரணம் சைவ ஸ்மரணம் ப்ரதிபாதநம் ஊஹ: அபோஹ: அர்த்தவிஜ்ஞானம் தத்த்வஜ்ஞானோ ச தீ குணா: - விஷயங்களைப் சட்டென்று உணர்தல், மனதில் அதனை நிலைநிறுத்தல், மீண்டும் மீண்டும் அதனைச் சிந்தித்தல், மற்றவர்களுக்கு உணர்த்துதல், மற்றவர்கள் கூறாதவற்றை அறிதல், மற்றவர்கள் கூறியவற்றில் அவசியம் அல்லாதவற்றை விலக்குதல், விஷயங்களை உள்ளது உள்ளபடி தெளிவாக அறிதல், அவற்றின் உண்மைகளை உணர்தல் – என்பவை ஆகும்.

**மூலம்** – (எட்டு மாமலர்)

அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரிய நிக்ரஹ:
ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் வேசிஷத:
ஜ்ஞாநம் புஷ்பம் தப: புஷ்பம் த்யானம் புஷ்பம் ததைவ ச
ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரதீதிகரம் பவேத் என்கிற புஷ்பங்கள்

(எண் சித்தி)

ஊஹஸ் தர்கோ அத்யயனம் துக்கவிதாதாஸ் த்ரய: ஸுஹ்ருத் ப்ராப்தி:
தானம் ச ஸித்தயோ அஷ்டௌ என்கிற எட்டு ஸித்தி

**விளக்கம்** – (எட்டு மாமலர்) - அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரிய நிக்ரஹ: ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் வேசிஷத: ஜ்ஞாநம் புஷ்பம் தப: புஷ்பம் த்யானம் புஷ்பம் ததைவ ச ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரதீதிகரம் பவேத் – அஹிம்ஸை, இந்த்ரியங்களை அடக்குதல், அனைத்து உயிர்களிடமும் இரக்கம், பொறுமை, ஞானம், தவம், த்யானம் மற்றும் ஸத்யம் ஆகிய எட்டு மலர்களும் மஹாவிஷ்ணுவுக்கு மிகவும்

பிடித்தவை ஆகும் – என்பதான எட்டு மலர்கள். (எண் சித்தி) – ஸாங்க்யகாரிகை (51) - ஊஹஸ் தர்கோ அத்யயனம் துக்கவிதாதாஸ் த்ரய: ஸுஹ்ருத் ப்ராப்தி: தானம் ச ஸித்தயோ அஷ்டௌ – கூறப்படாத விஷயங்களை ஊகித்து அறிதல், சொற்களின் மூலம் அறிதல், வேதங்களை அத்யயனம் செய்தல், தன்னாலும் தெய்வத்தாலும் மற்றவர்களாலும் என்று மூன்றுவிதமான துன்பங்கள் இல்லாமை, நல்லவர்கள் நட்பு, தானம் – என்பவை எட்டுவிதமான ஸித்திகள் ஆகும்.

**மூலம்** – (எண் பத்தி)

மத்பக்த ஜன வாத்ஸல்யம் பூஜயாம் சாநுமோதனம்
மத்கதா ச்ரவணே பக்தி: ஸ்வர நேத்ராங்க விக்ரியா
ஸ்வயமாராதனே யத்நோ மமார்த்தே டம்ப வர்ஜனம்
மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி
பக்திரஷ்டவிதா ஹி ஏஷா

என்கிற எட்டு விதங்களான பக்திகள். (எட்டு யோகாங்கம்) – யோகாங்கமாகச் சொல்லப்பட்ட யமநியமாதிகள். (எண் செல்வம்) –

அணிமா மஹிமா ச ததா லதிமா கரிமா வசித்வமைச்வர்யம்
ப்ராப்தி: ப்ராகாம்யம் சேத்யஷ்டைச்வர்யாணி யோக யுக்தஸ்ய

என்கிற எட்டு விபூதிகள்.

**விளக்கம்** – (எண் பக்தி) - கருட புராணம் (219-6, 7, 8) - மத்பக்தஜந வாத்ஸல்யம் பூஜாயாம் சாநுமோதநம் மத்கதா ச்ரவணே பக்தி: ஸ்வர நேத்ராங்கவிக்ரியா ஸ்வயமாராதநே யத்நோ மமார்த்தே டம்பவர்ஜநம் மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி பக்திரஷ்டவிதா ஹி ஏஷா – என்னிடம் உள்ள பக்தி என்பது எட்டு வகைப்படும். அவையாவன: என் பக்தர்களிடம் உள்ள குறைகளைப் பொருட்படுத்தாமை; எனக்குச் செய்யும் பூஜையைக் கண்டு மகிழ்தல்; எனது சரிதங்களைக் கேட்பதில் ஆவல்;

அவற்றைக் கேட்கும்போது குரல் தழுதழுத்து, மயிர்க்கூச்சல் எடுத்து, கண்ணீர் பெருகுதல்; தானும் ஆராதனை செய்தல்; எனது விஷயத்தில் ஆடம்பரம், டம்பம் இல்லாத தன்மை; எப்போது என்னை நினைத்தபடி இருத்தல்; என்னிடம் என்னைத் தவிர வேறு பலன் கேட்காமல் இருத்தல் – என்பதாகும் – என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள எட்டுவிதமான பக்திகள். (எட்டு யோகாங்கம்) – யோகத்தின் அங்கங்களாகச் கூறப்படும் யமம், நியமம், ஆசனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், த்யானம், தாரணம், ஸமாதி ஆகியவை ஆகும். (எண் செல்வம்) – ஸாங்க்யகாரிகை - அணிமா மஹிமா ச ததா லதிமா கரிமா வசித்வமைச்வர்யம் ப்ராப்தி: ப்ராகாம்யம் சேத்யஷ்டைச்வர்யாணி யோக யுக்தஸ்ய – சரீரத்தைச் சுருக்குதல் [அணிமா], பெரியதாக்குதல் [மஹிமா], இலேசாக்குதல் [லதிமா], கனமாக்குதல் [கரிமா], அனைத்தையும் வசப்படுத்தல், அனைவருக்கும் தலைவனாக இருத்தல், விரும்பியதை அடைதல், விரும்பும் இடத்திற்குச் செல்லுதல் என்பவை எட்டு ஸித்திகள் ஆகும் – என்பதற்கு ஏற்ப உள்ள எட்டு செல்வங்கள்.

**மூலம்** - (எட்டு மாகுணம்) – முக்தி தசையில் ஆவிர்பவிக்கும் குணாஷ்டகம், "அஷ்டௌ குணா: புருஷம் தீபயந்தி" இத்யாதிகளிற் சொன்னவையாகும். (எட்டெட்டெணும் கலை) – சதுஷ்ஷஷ்டி கலைகள். (எட்டிரத மேலதுவும்) – "ச்ருங்கார வீர கருணாத்புத ஹாஸ்ய பயானகா: பீபத்ஸ ரௌத்ரௌ ச ரஸா:" என்கிற ரஸங்களெட்டுக்கும் மேலான சாந்தி ரஸம். (எட்டினவே) – இவற்றில் இவனுக்கு இச்சையுள்ளபோது எட்டாதவை யொன்றுமில்லை. ஆத்மகுணாதிகள் நிரம்பாதொழிகிறது அநுஸந்தாநத்தில் ஊற்றம் போதாமையாலே, அஷ்டைச்வர்யாதிகள் வாராதொழிகிறது உபேக்ஷையாலே, கடுக ஸம்ஸாரம் நிவர்த்தியாதொழிகிறது இசைவில் குறைவாலே. ஆகையாலிறே, "நமோ நாராயணாயேதி மந்த்ர: ஸர்வார்த்த ஸாதக:" என்கிறது.

**விளக்கம்** – ஒருவனுக்கு மோக்ஷம் உண்டாகும் நிலையில் எட்டுவிதமான குணங்கள் வெளிப்படுகின்றன. அவையாவன, மஹாபாரதம் உத்யோகபர்வம் (33-106) - அஷ்டௌ குணா: புருஷம் தீபயந்தி ப்ரஜ்ஞா ச கௌல்யம் ச தம: ச்ருதம் ச பராக்ரமச்ச அபஹுபாஷிதா ச தானம் யதாசக்தி க்ருதஜ்ஞதா ச – சரியான ஞானம், உயர்ந்த பிறவி, புலனடக்கம், வேத ஞானம், விரோதிகளை எதிர்க்கும் வல்லமை, அதிகமாகப் பேசாதிருத்தல், முடிந்தவரை தானம் செய்தல், செய்ந்நன்றி மறவாமை – என்னும் எட்டு குணங்கள் ஒருவனை மற்றவர்களைக் காட்டிலும் உயர்த்துகின்றன – என்பதில்

கூறப்பட்டவை எனலாம். (எட்டெட்டெணும் கலை) – அறுபத்து நான்கு கலைகள் [இவை – ஆகும்]. (எட்டிரத மேலதுவும்) – அமரகோசம் (1-7-17) - ச்ருங்கார வீர கருணாத்புத ஹாஸ்ய பயானகா: பீபத்ஸ ரௌத்ரௌ ச ரஸா: - சிருங்காரம் (காதல்), வீரம், சோகம், அத்புதம், ஹாஸ்யம், பயம், இழிப்பு மற்றும் கோபம் – என்பதற்கு ஏற்ப உள்ளதான எட்டு ரஸங்கள், ஒன்பதாவது சாந்தி ரஸம். (எட்டினவே) – இவை அனைத்தையும் இவன் விரும்பும்போது, இவற்றில் கிட்டாதது ஒன்றும் இல்லை. ஒருவனுக்கு ஆத்மகுணம் உண்டாகாமல் இருப்பதற்கு அதனையே எண்ணியபடி இல்லாமல் இருத்தலால் ஆகும், எட்டு ஐச்வர்யங்கள் உண்டாகாமல் இருப்பதற்கு அவற்றில் கவனம் செலுத்தாததால் ஆகும், ஸம்ஸாரம் விரைந்து நீங்காமல் இருப்பதற்கு அதன் மீது உள்ள ஆசை குறையாமல் உள்ளதால் ஆகும். இதனால்தான், நாரதீயத்தில் (1-41) - நமோ நாராயணாயேதி மந்த்ர: ஸர்வார்த்த ஸாதக: - நமோ நாராயணா என்னும் மந்த்ரம் அனைத்து விருப்பங்களையும் பூர்த்தி செய்யவல்லது – எனப்பட்டது.

அவித்யா பூதநோந்முக்தை: அநவஜ்ஞாத ஸத்பதை:
அஸதாஸ்வாத ஸவ்ரீடை: ஆதிஷ்டமிதி தர்சிதம்

**பொருள்** – அவித்யை என்னும் பேயிலிருந்து விடுதலை அடைந்தவர்களும், அனைவராலும் ஏற்கப்பட்ட வழியில் நடப்பவர்களும், தாழ்ந்த பலன்களை அனுபவிப்பதில் நாணம் கொண்டவர்களும் ஆகிய பூர்வாசார்யர்கள் வெளியிட்ட திருமந்த்ரத்திற்கான ஆழ்பொருள், இவ்விதம் இங்கு கூறப்பட்டது.

உயர்ந்தனன் காவலன் அல்லார்க்குரிமை துறந்துயிராய்
மயர்ந்தமை தீர்ந்து மற்றோர் வழியின்றி அடைக்கலமாய்ப்
பயந்தவன் நாரணன் பாதங்கள் சேர்ந்து பழவடியார்
நய்ந்த குற்றேவலெல்லாம் நாடு நன் மனுவோதினமே

**பொருள்** – அனைவரைக் காட்டிலும் உயர்ந்தவனும், அனைத்தையும் காப்பவனும் ஆகிய பகவான் அல்லாமல் மற்ற யாருக்கும் அடிமையாக இருத்தலைத் தவிர்த்து, உயர்ந்த ஜீவனாக தன்னுடைய அறியாமை நீங்கப் பெற்று, மற்ற எந்தவிதமான உபாயமும் இன்றி, காப்பாற்றப்படவேண்டிய பொருள் என்னும் தகுதி பெற்று, அனைத்து உலகங்களையும்

படைத்தவனாகிய நாராயணனுடைய திருவடிகளை மட்டுமே உபாயமாகப் பற்றி, எல்லையற்ற காலமாக அவனுக்கு மட்டுமே கைங்கர்யம் செய்தபடி உள்ள நித்யஸூரிகள் எப்போதும் விரும்பியபடி உள்ளதான பகவத் கைங்கர்யங்கள் அனைத்தையும் விண்ணப்பித்தல் என்பதை வெளிப்படுத்துவதான மிகவும் உயர்ந்த அஷ்டாக்ஷரத்தை நாம் எப்போதும் எண்ணியபடி உள்ளோம்.

இத்தம் ஸங்கடித: பதை: த்ரிபிரஸாவேக த்வி பஞ்சாக்ஷரை:
அர்த்தைஸ் தத்த்வ ஹித ப்ரயோஜனமயை: அத்யாத்மஸாரைஸ் த்ரிபி:
ஆத்யஸ் த்ரயக்ஷர வேதஸூதிரஜஹத் ஸ்தூலாதி வ்ருத்தி த்ரய:
த்ரைகுண்ய ப்ரசமம் ப்ரயச்சதி ஸதாம் த்ரய்யந்தஸாரோ மநு:

**பொருள்** – இப்படியாக ஒன்று, இரண்டு, ஐந்து எழுத்துக்கள் கொண்ட மூன்று சொற்களைக் (ஒன்று – ஓம், இரண்டு – நமோ, ஐந்து – நாராயணாய) கொண்டதாகவும், வேதாந்த ஸாரங்களாக உள்ளதான தத்வம் – ஹிதம் – புருஷார்த்தம் (உண்மை, நன்மை, பலன்) ஆகியவற்றை விளக்குவதாக அமைக்கப்பட்டதாகவும், மூன்று வ்யாபக மந்த்ரங்களில் முதன்மையானதாகவும் (ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ விஷ்ணவே, ஓம் நமோ பகவதே வாஸுதேவாய), அ – உ – ம என்னும் மூன்று எழுத்துக்களைக் கொண்டதான ப்ரணவ வேதத்தைக் கொண்டதாகவும், ஸ்தூலம் – ஸூக்ஷ்மம் – பரம் என்னும் மூன்றின் பொருளை உள்ளடக்கிய “நம:” என்னும் சொல் கொண்டதாகவும், வேதாந்த ஸாரமான “நாராயண” என்னும் சொல்லைக் கொண்டதாகவும் உள்ள இந்தத் திருமந்த்ரமானது, முமுக்ஷுக்களுக்கு ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை அளிக்கிறது.

மூலமந்த்ராதிகாரம் ஸம்பூர்ணம்

பெரியபெருமாள் திருவடிகளே சரணம்

பெரியபெருமாள் திருவடிகள் தஞ்சம் அடைந்த நம் உடையவர் திருவடிகளே சரணம்

உடையவர் திருவடிகள் சரணம் புகுந்த நம் தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீஅரவிந்தவல்லி ஸமேத ஸ்ரீபத்ரிநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## அதிகாரம் 28

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)
www.namperumal.com / namperumal.wordpress.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# 28. த்வயாதிகாரம்

ஆகர்ணிதோ விதநுதே க்ருதக்ருத்யகக்ஷ்யாம்
ஆம்ரேடிதோ திசதி யச்ச க்ருதார்த்த பாவம்
ப்ரத்யூஷதாம் பஜதி ஸம்ஸ்ருதி காலராத்ரே:
பத்மாஸஹாய சரணாகதி மந்த்ர ஏஷ:

**பொருள்** – எந்த ஒரு மந்த்ரம் உபதேசம் மூலம் கேட்கப்பட்டதாகவும், அதனை உச்சரித்தால் செய்யவேண்டியதைச் செய்து முடித்த நிலையை உண்டாக்குவதாகவும், மீண்டும் மீண்டும் உச்சரிக்கப்படுவதாகவும், பலனைப் பெற்ற நிலையை அளிப்பதாகவும் உள்ளதோ, அத்தகைய த்வயம் என்னும் மந்த்ரமானது, தாமரையில் உதித்த மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய நாராயணனிடம் செய்யும் ப்ரபத்திக்கு உரிய மந்த்ரமான இருந்துகொண்டு, ஸம்ஸாரம் என்னும் அடர்ந்த இரவுப்பொழுதிற்கு, அதிகாலைப் பொழுதாக உள்ள தன்மையை அடைகிறது.

## த்யவம் திருமந்த்ரத்தில் பொருளை விளக்குகிறது

**மூலம்** – திருமந்த்ரத்தில் மத்யம பதத்தில் ஆர்த்தமாகவாதல் சாப்தமாகவாதல் சொன்ன உபாய விசேஷத்தையும், இதின் பலமாகத் த்ருதீய பதத்திற் சொன்ன புருஷார்த்த விசேஷத்தையும் விசதமாக ப்ரகாசிப்பிக்கிறது த்வயம்.

**விளக்கம்** – திருமந்த்ரத்தில் காணப்படும் "நம:" என்னும் நடுவில் உள்ள சொல்லானது நேரடியாகவும் தெளிவாகவும், திருமந்த்ரத்தில் உள்ள உபாய தன்மையை (ப்ரபத்தி) உணர்த்துகிறது; திருமந்த்ரத்தில் உள்ள மூன்றாவது சொல்லான "நாராயணாய" என்பது திருமந்த்ரத்தின் மூலம் கிட்டவல்ல பலனாகிய உயர்ந்த புருஷார்த்தத்தைக் கூறுகிறது; இந்த இரண்டையும் சேர்த்து த்வய மந்த்ரம் தெளிவாக உரைக்கிறது.

## த்வயம் ச்ருதிகளில் உள்ளதாகும்

**மூலம்** – இது கடவல்லியிலே பிரியவோதிச் சேர்த்து அநுஸந்திக்க விதிக்கையாலும், பகவச்சாஸ்த்ரத்திலே ஸ்ரீப்ரச்ந ஸம்ஹிதாதிகளிலே வர்ணோத்தாராதிகளும் பண்ணிப் ப்ரதிபாதிக்கையாலும் ச்ருதி மூலமான தாந்த்ரிக மந்த்ரம். இத்தைப் பூர்வாசார்ய வாக்யமென்று சிலர் சொன்னதுவும், ஆப்தர் உபதேசித்தாரென்று ஆதரிக்கைக்காகவாதல், பரமாசார்யனான ஸர்வேச்வரன் பகவச்சாஸ்த்ரத்திலே அருளிச் செய்கையாலேயாதல் ஆமத்தனை. இதுக்கு ருஷ்யாதிகளும் மூலமந்த்ராதிகளிற்போலே அபேக்ஷமாணர்க்கு மந்த்ர வ்யாகரணாதிகளிற்படியே கண்டு கொள்ளலாம்.

**விளக்கம்** – கடவல்லி என்பதான உபநிஷத்தில் காணப்படும் இரண்டு வெவ்வேறு பகுதிகளில் த்வய மந்த்ரம் கூறப்பட்டுள்ளது. அவற்றுக்கு இடையே வேறு சில வாக்கியங்கள் காணப்பட்டாலும், மோக்ஷத்தை விரும்பும் ஒருவன், அந்த இரண்டு பகுதிகளையும் ஒரு மந்த்ரமாகச் சேர்த்துக் கொண்டு, இந்த மந்த்ரத்தை எப்போதும் எண்ணியபடி இருத்தல்வேண்டும் என்று கூறுகிறது. பாஞ்சராத்ரத்தில் உள்ள ஸ்ரீப்ரச்ந ஸம்ஹிதை போன்றவற்றிலும், இந்த மந்த்ரத்தின் ஒவ்வொரு சொல்லையும் தனித்தனியாக எடுத்து, “முதல், இரண்டு” என்று வரிசையாக எண்ணம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே த்வயம் என்பது ச்ருதி மூலமாக பாஞ்சராத்திற்கு வந்து, அதன் மூலம் நமக்கு வந்தது என்று அறியவேண்டும். த்வயத்தை ஒரு சிலர் பூர்வாசார்யர்கள் உரைத்த வாக்கியம் என்றும் கூறுவர். இதன் காரணம் என்னவென்றால் – ஆசார்யர்கள் உபதேசித்தனர் என்று கூறினால், ஆசார்யர்களிடம் ஆழ்ந்த பக்தி கொண்டவர்கள் இதனை மிகுந்த ஈடுபாட்டுடன் கொண்டாடுவார்கள் என்பதாலும் அல்லது அனைவருக்கும் முதல் ஆசார்யனான ஸர்வேச்வரனாகிய நாராயணன் இதனைப் பாஞ்சராத்ரத்தில் அருளிச்செய்ததாலும் – ஆகும். இந்த மந்த்ரத்தின் ரிஷி யார், பீஜம் எது போன்றவற்றை மூலமந்த்ரங்களில் உள்ளது போன்று, இவற்றை அறிய விருப்பம் உள்ளவர்கள், மந்த்ரசாஸ்த்ரங்களிலும் இலக்கண நூல்களிலும் கண்டு அறியலாம்.

## த்வயம் என்னும் பெயர் வரக் காரணம் மற்றும் த்வயத்திற்கு முழுமையான அதிகாரியும்

**மூலம்** – இம்மந்த்ரம் "ஸ ப்ராதுச் சரணௌ காடம்", "பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா" என்கிற ச்லோகத்தில் விவக்ஷிதமான உபாய உபேய ரூபமான அர்த்த த்வயத்தைப் ப்ரதிபாதிக்கையாலே "த்வயம்" என்று பேர் பெற்றது. இப்படியிருக்கையால் உபாயாந்தரங்களிலும் உபேயந்தரங்களிலும் துவக்கற்றவன், இம்மந்த்ரத்துக்குப் பூர்ணாதிகாரி. இம்மந்த்ரம், வாரண ஸமர்ப்பணங்களை அடைவே ப்ரதிபாதிக்கையாலே த்வயமென்று சொல்லப்படுகிறது என்றும் சிலர் சொல்லுவார்கள். இப்படி "ஸ்ரீமந்நாராயண ஸ்வாமிந்" இத்யாதி மந்த்ராந்தரத்திலும் த்வய சப்த ப்ரயோகத்துக்கு இவையே நிமித்தம்.

**விளக்கம்** – த்வயமானது (த்வயம் என்றால் இரண்டு) இந்த "த்வயம்" என்னும் பெயரை அடைந்தது எப்படி என்றால்: இராமாயணம் அயோத்யாகாண்டம் (2-31-2) - ஸ ப்ராதுச் சரணௌ காடம் – லக்ஷ்மணன் தனது மூத்தவனாகிய இராமனின் திருவடிகளில் சீதையின் முன்னிலையில் விழுந்து உரைக்கத் தொடங்கினான் – என்றுள்ள ச்லோகத்தைத் தொடர்ந்து, இராமாயணம் அயோத்யாகாண்டம் (2-31-27) - பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா – நீ வைதேகியுடன் சேர்ந்து இந்த மலையின் குகைகளில் இன்பமாக இருப்பீராக; உங்களுக்கு வேண்டிய அனைத்து கைங்கயங்களையும் நான் செய்வேன் – என்று கூறுவதன் மூலம் வெளிப்படுவதான உபாயம் மற்றும் உபேயம் (வழி மற்றும் பலன்) ஆகியவற்றை, தானும் வெளிப்படுத்துவதால் ஆகும். மற்ற உபாயங்களிலும், மற்ற பலன்களிலும் பற்று இல்லாதவனே இந்த த்வயத்திற்கான தகுதி உள்ளவன் ஆவான். தன்னைக் காப்பவனைப் போற்றுவதும், தனது பாரத்தை அவனிடம் சமர்ப்பணம் செய்வதும் என்றுள்ள இரண்டையும் இந்த மந்திரம் வெளிப்படுத்துவதால் இது "த்வயம்" என்று பெயர் பெற்றது என சிலர் கூறுவர். ஸ்ரீமந்நாராயண! ஸ்வாமிந் ந அநந்ய சரணஸ்தவ சரணௌ சரணம் யாத: தவ ஏவ அஸ்மி அஹம் அச்யுத – மஹாலக்ஷ்மியுடன் கூடிய நாராயணா! எனது ஸ்வாமியே! எனக்கு வேறு யாரும் சரணம் என்று அண்டுவதற்கு இல்லை, நீ மட்டுமே எனக்கு அடைக்கலம் ஆவாய், அடியார்களை நழுவவிடாதவனே! –

என்பது போன்றுள்ள மந்திரங்களில் கூறப்படுவது போன்றே, இங்கும் பொருள் கொள்ளப்படவேண்டும்.

## த்வயத்தை உபதேசம் பெறும் முறை

**மூலம்** – மந்த்ரராஜ இமம் வித்யாத் குருவந்தன பூர்வகம்
குருரேவ பரம் ப்ரஹ்ம குருரேவ பரா கதி:
குருரேவ பரா வித்யா குருரேவ பராயணம்
குருரேவ பர: காமோ குருரேவ பரம் தனம்
யஸ்மாத் தத் உபதேஷ்டாஸௌ தஸ்மாத் குருதரோ குரு:
நாநுகூல்யம் ந நக்ஷத்ரம் ந தீர்த்தாதி நிஷேவணம்
ந புரச் ச்ரவணம் நித்யம் ஜபம் வா அபேக்ஷதே ஹி அயம்
நமஸ்க்ருத்ய குரும் தீர்க்க ப்ரணாமைஸ் த்ரிபிராதித:
தத்பாதௌ க்ருஹ்ய மூர்த்நி ஸ்வே நிதாய விநயாந்வித:
க்ருஹ்ணீயாந் மந்த்ரராஜானம் நிதிகாங்க்ஷீவ நிர்த்தன:
லப்த்வைவ மந்த்ரராஜாநம் மாம் கச்சேச்சரணம் நர:
அநேநைவ து மந்த்ரேண ஸ்வாத்மானம் மயி நிக்ஷிபேத்
மயி நிக்ஷிப்த கர்தவ்ய: க்ருத க்ருத்யோ பவிஷ்யதி

என்று ப்ரபத்தி மந்த்ராந்தரத்திற் சொன்ன குரு உபஸத்த்யாதிகள் இங்கும் வர ப்ராப்தம்.

**விளக்கம்** – ஸாத்யகி தந்திரத்தில் – (மேலே மூலத்தில் உள்ள ச்லோகத்தின் பொருள்) – முதலில் குருவை வணங்கி, அதன் பின்னர் மந்த்ரங்களின் அரசனாக உள்ள இந்த மந்திரத்தை அறியவேண்டும். குருவே பரப்ரஹ்மம், உயர்ந்த வழி, உயர்ந்த கல்வி, உயர்ந்த உபாயம், உயர்ந்த பலன், உயர்ந்த செல்வம் ஆவார். உயர்ந்த மந்திரத்தை உபதேசிப்பதன் காரணமாக, அவரே உயர்ந்தவர். இந்த மந்த்ர உபதேசத்தைப் பெறுவதற்கு நல்ல நாள், நீராடுதல், ஹோமம் போன்றவை, அன்றாடம் கேட்டல், ஜபித்தல் போன்ற எதுவும் அவசியம் இல்லை. குருவை மூன்று முறை சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி, அவருடைய திருவடிகளைத் தனது தலையில் ஏற்று, செல்வத்தை

விரும்பும் ஏழை போன்று, வணக்கத்துடன் நின்று, இந்த மந்திரத்தை அறியவேண்டும்.இவ்விதம் மந்த்ரங்களுக்கு அரசனாகிய இந்த மந்த்ரத்தை அறிந்த பின்னர், என்னைச் சரணம் அடையவேண்டும். இந்த மந்த்ரத்தின் மூலம் தனது ஆத்மாவை என்னிடம் சமர்ப்பணம் செய்யவேண்டும். இவ்விதம் செய்த ஒருவன், தான் செய்யவேண்டியதைச் செய்தவன் ஆகிறான் – என்று உள்ளது. இங்கு ப்ரபத்தி மந்த்ரத்திற்குக் கூறப்பட்டதான குருவை அணுகி உபதேசம் பெறுதல் போன்றவை, த்வயத்திற்கும் பொருந்தும்.

## த்வயத்தின் பெருமை

**மூலம்** – ஆஸ்திகனுக்கு இம்மந்த்ரத்தினுடைய ஸமுதாய ஜ்ஞாந பூர்வக ஸக்ருதுச்சாரணமே உத்தாரகமென்னுமிடம் சாஸ்த்ர ஸித்தம். இம்மந்த்ரத்தை “யேந கேநாபி ப்ரகாரேண த்வய வக்தா த்வம்” என்று மந்த்ராந்தங்களிற்காட்டில் வ்யாவ்ருத்தி தோற்ற அருளிச்செய்தார்.

அவசேநாபி யந்நாம்நி கீர்த்திதே ஸர்வபாதகை:
புமாந் விமுச்யதே ஸத்ய: ஸிம்ஹ த்ரஸ்தைர் ம்ருகைரிவ

நாம்நஸ்தே யாவதீ சக்தி: பாப நிர்ஹரணே ஹரே
ச்வபசோபி நர: கர்தும் க்ஷமஸ்தாவந்ந கில்பணம்

இத்யாதிகளிலே திருநாம ஸங்கீர்த்தந மாத்ரத்தினுடைய ப்ரபாவம் இருக்கும்படி கண்டால் சரண்ய சரணாகதி தத் பலவிசேஷங்களைப் பூரணமாய் ப்ரகாசிப்பிக்கிற இம்மந்த்ர விசேஷத்தினுடைய ஸக்ருதுச்சாரண மாத்ரத்தளவிலும் உள்ள ப்ரபாவம் ச்ருத்யாதி ப்ரமாண பலத்தாலே ஸுக்ரஹம். இப் ப்ரபாவ நிபந்தநத்தையும் இங்கே ப்ரமாண ஸம்ப்ரதாயங்களாலே கண்டு கொள்வது. இப்படிப்பட்ட ரஹஸ்யதமார்த்தங்களில் ஹேது நிரூபணம் பண்ணக்கடவதன்று, சாஸ்த்ரத்தைக் கொண்டு விச்வஸிக்குமத்தனை என்னுமிடம் மஹாபாரதாதிகளிலே,

தேவகுஹ்யேஷு சாந்யேஷு ஹேதுர்தேவி நிரர்தக:
பதிராந்தவதேவாத்ர வர்த்திதவ்யம் ஹிதைஷிணா

இத்யாதிகளாலே சொல்லப்பட்டது.

**விளக்கம்** – த்வய மந்த்ரத்தின் முழுப்பொருளை உணர்ந்து, இதில் ஆழ்ந்த நம்பிக்கை உள்ள ஒருவன் இதனை ஒருமுறை உச்சரித்தாலே, இது அவனை கரையேற்றும் என்பது சாஸ்த்ரங்களால் தெளிவாக அறியலாம். மற்ற மந்த்ரங்களைக் காட்டிலும் இதற்கு உள்ள வேறுபாட்டினை எம்பெருமானார் சரணாகதி கத்யத்தில் - யேந கேநாபி ப்ரகாரேண த்வய வக்தா த்வம் – எந்த விதத்தில் த்வய மந்த்ரம் உச்சரிக்கப்பட்டாலும் – என்றார்.

ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-8-19) - அவசேநாபி யந்நாம்நி கீர்த்திதே ஸர்வபாதகை: புமாந் விமுச்யதே ஸத்ய: ஸிம்ஹ த்ரஸ்தைர் ம்ருகைரிவ – தன்னை அறியாமல் ஒருவன் ஸர்வேச்வரனுடைய திருநாமத்தை உச்சரித்தாலும், சிங்கத்தைக் கண்டு பயந்து அந்தக் காட்டில் உள்ள விலங்குகள் ஓடுவது போன்று, அவனுடைய பாவங்கள் அனைத்தும் அவனிடமிருந்து ஓடுகின்றன – என்றும், விஷ்ணுஸ்ம்ருதி (6) - நாம்நஸ்தே யாவதீ சக்தி: பாப நிர்ஹரணே ஹரே ச்வபசோபி நர: கர்தும் க்ஷமஸ்தாவந்ந கில்பணம் – ஸர்வேச்வரா! பாவங்களை நீக்கவல்லதான உன்னுடைய திருநாமத்திற்கு உள்ள சக்தியின் அளவுக்குப் பாவங்களைச் செய்ய, நாய் இறைச்சி உண்பவனால் கூட இயலாது – என்றும் உள்ள வரிகளில் திருநாம ஸங்கீர்த்தனம் மட்டுமே போதுமானது என்று அவனுடைய ப்ரபாவம் உரைக்கப்பட்டுள்ளது; இப்படி உள்ளபோது - அனைவரும் சரணம் புகுகின்றபடி உள்ள அவனைக் குறித்தும், சரணாகதி குறித்து, அதன் பலனைக் குறித்தும் முழுவதுமாக உரைக்கவல்லதான த்வய மந்த்ரத்தினை ஒருமுறை உச்சரித்தாலே போதுமானது என்று இதன் ப்ரபாவத்தை கூறுகின்ற ச்ருதி வாக்கியங்கள், அவையே ப்ரமாணங்கள் என்பதால் எளிதாக அறியக்கூடிய விதத்தில் உள்ளன. த்வய மந்த்ரத்தின் ப்ரபாவத்திற்கான காரணம் குறித்து தகுந்த ப்ரமாணங்கள் மூலமும், அவரவர்களுடைய ஸம்ப்ரதாயம் மூலமும் எளிதாக அறியலாம். ஆனால் இவ்விதம் இதன் ப்ரபாவத்தினுடைய காரண விளக்கத்தினை ஆராய்தல் முறையல்ல. இதன் ப்ரபாவம் குறித்து சாஸ்த்ரங்கள் கூறுவதன் அடிப்படையில் விச்வாசத்துடன் ஏற்றே ஆகவேண்டும். இந்தக் கருத்தினை, மஹாபாரதம் அநுசாஸனிகபர்வம் (228-60) - தேவகுஹ்யேஷு சாந்யேஷு ஹேதுர்தேவி நிரர்தக:

பதிராந்தவதேவாத்ர வர்த்திதவ்யம் ஹிதைஷிணா – தேவரஹஸ்யங்கள் மற்றும் உள்ள ரஹஸ்யங்கள் ஆகியவற்றின் காரணத்தை ஆராய்தல் பயனற்றதே ஆகும். தன்னுடைய நன்மையை விரும்பும் ஒருவன், இது போன்ற விஷயங்களில் குருடனைப் போன்றும் செவிடனைப் போன்றும் இருத்தல்வேண்டும் – என்றது காண்க.

## ப்ரபத்தி மந்த்ரங்களில் த்வயமே முதன்மையானது என்பதற்கான காரணம்

**மூலம்** – இம்மந்த்ரத்திலே விவக்ஷிதமான ஆத்மஸமர்ப்பணம்

ஸர்வோபாதி விநிர்முக்தம் க்ஷேத்ரஜ்ஞம் ப்ரஹ்மணி ந்யஸேத்
ஏதத் த்யானம் ச யோகச்ச சேஷோந்யோ க்ரந்த விஸ்தரித:

இத்யாதிகளாலே ப்ரகரணாந்தரங்களிலும் ஸ்துதிக்கப்பட்டது. "ஏதத் ஜ்ஞாநம் ச ஜ்ஞேயம் ச" என்று பாடாந்தரம். இச்ச்லோகம் ஸ்வரூப ஸமர்ப்பண பரமானாலும் இங்கு சொல்லுகிற பரஸமர்ப்பணம், ததநுப்ரவிஷ்டம். இஸ்ஸமர்ப்பணத்துக்கு

நிவேதயீத ஸ்வாத்மாநம் விஷ்ணாவாமலதேஜஸி
ததாத்மா தந்மநா: சாந்த: தத் விஷ்ணோரிதி மந்த்ரத:

என்று வ்யாஸ ஸ்ம்ருத்யாதிகளிலும் ச்வேதாச்வதராதிகளிலும் சொன்ன மந்த்ராந்தரங்கள் இப்படி சரண்ய சரணாகதி தத் பலங்களை விசதமாகப் ப்ரகாசிப்பியாது. திருமந்த்ரத்திலும் இவை மூன்றும் ஸங்க்ஷிப்தங்கள். ஆகையாலே ப்ராப்ய ப்ராபக விசேஷங்களை ஸம்பூர்ணமாகப் ப்ரகாசிப்பிக்கிற இத் த்வயமே, ப்ரபத்தி மந்தரங்கள் எல்லாவற்றிலும் ப்ரதானம்.

**விளக்கம்** – த்வய மந்த்ரத்தின் மூலம் உணர்த்தப்படுவதான ஆத்ம சமர்ப்பணம் என்பது, தக்ஷ ஸ்ம்ருதி (7-21) - ஸர்வோபாதி விநிர்முக்தம் க்ஷேத்ரஜ்ஞம் ப்ரஹ்மணி ந்யஸேத் ஏதத்த்யானம் ச யோகச்ச சேஷோந்யோ க்ரந்த விஸ்தரித: - அவித்யை போன்றதான அனைத்துவிதமான உபாதிகளும் நீங்கப்பெற்ற ஆத்ம ஸ்வரூபத்தை ப்ரஹ்மத்திடம்

அர்ப்பணிக்க வேண்டும். இதுவே பக்தியோகம் மற்றும் அதன் அங்கமான கர்மயோகமும் ஆகும். மற்ற அனைத்தும் க்ரந்தங்களை (நூல்களை) பெரிதாக்குபவை மட்டுமே ஆகும் – போன்ற வாக்கியங்களால் கொண்டாடப்படுகிறது; இந்த வரியில் உள்ள "சேஷோந்யோ க்ரந்த விஸ்தரித:" என்பதற்குப் பதிலாக, ஏதத் ஜ்ஞாநம் ச ஜ்ஞேயம் ச – இதுவே உண்மையானதும், அடையப்பட வேண்டியதும் ஆகிய ஞானம் ஆகும் – என்றும் படிப்பர். இந்த ச்லோகம் ஆத்ம ஸமர்ப்பணத்தைக் கூறுவதாக உள்ளபோதிலும், நம்முடைய பாரங்களைச் சமர்ப்பித்து நம்மைக் காப்பாற்றும் பொறுப்பை ஒப்படைத்தல் என்பதும், இதிலேயே அடங்குகிறது. வ்யாஸ ஸ்ம்ருதி - நிவேதயீத ஸ்வாத்மாநம் விஷ்ணாவாமலதேஜஸி ததாத்மா தந்மநா: சாந்த: தத் விஷ்ணோரிதி மந்த்ரத: - தோஷங்கள் ஏதும் இல்லாத தேஜஸ் கொண்ட மஹாவிஷ்ணுவிடம், அவனுடைய சரீரமாக நின்று, அவனிடம் மட்டுமே ஈடுபாடுடைய மனதுடன் கூடியவனாகவும், மற்ற எதிலும் நாட்டம் அற்றவனாகவும் நின்று, தனது ஆத்மாவை "தத் விஷ்ணோ:" என்ற மந்த்ரத்தால் சமர்ப்பணம் செய்யவேண்டும் – என்றும், ச்வேதாஸ்வதர உபநிஷத்தில் (6-18) – யோ ப்ராஹ்மணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை தை ஹ தேவமாத்ம புத்தி ப்ரகாசம் முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே – எந்த ஸர்வேச்வரன் தன்னுடைய திருநாபியிலிருந்து நான்முகனைப் படைத்து, அவனுக்கு வேதங்கள் மூலமாக மற்ற அனைத்தையும் படைக்கும் திறனை அளித்தானோ, தன்னைக் குறித்த ஞானத்தைத் தனது கருணையால் மலரும்படிச் செய்கிறானோ, அவனை, மோக்ஷத்தை விரும்பும் நான் சரணம் அடைகிறேன் – என்றும் உள்ள வரிகளில், த்வய மந்த்ரம் போன்று, சரணம் புகத்தக்க ஸர்வேச்வரனைக் குறித்தும், சரணாகதி குறித்தும், சரணாகதியால் உண்டாகவல்ல பலன் குறித்து தெளிவாகக் கூறப்படவில்லை. திருமந்த்ரத்தில் கூட இந்த மூன்று விஷயங்கள் குறித்து மிகவும் சுருக்கமாகவே கூறப்பட்டது. ஆகவே அடையப்படவேண்டிய இலக்கு, அடைவதற்கான உபாயம் ஆகிய இரண்டையும் தெளிவாக உரைக்கின்ற இந்த த்வய மந்த்ரமே, ப்ரபத்திக்கான மற்ற மந்த்ரங்களைக் காட்டிலும் முதன்மையானது ஆகும்.

## சரணாகதி கத்யத்தில் த்வயத்தின் பொருளை விளக்குதல்

**மூலம்** – இதின் அர்த்தத்தை ச்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸ, புராண, பகவச் சாஸ்த்ராதிகளில் ப்ரஸித்தமானபடியே, ஸதாசார்ய ஸம்ப்ரதாய க்ரமத்தாலே கத்யத்திலே விவரித்தருளினார். எங்ஙனேயென்னில் – "பகவந் நாராயணாபிமதாநுரூப ஸ்வரூப ரூப" என்று தொடங்கி, ஸ்ரீமச்சப்த அபிப்ரேதத்தை அருளிச் செய்தார். "அகில ஹேய ப்ரத்யநீக" இத்யாதியாலே, ஸ்வரூப – ரூப – குண – விபூதிகளைப் பரக்க அருளிச் செய்கையாலே, நாராயண சப்தார்த்தம் வ்யாக்யாதமாயிற்று. முற்படப் பிராட்டியைச் சொல்லச் செய்தே, புருஷகாரத்வ நிர்வாஹார்த்தமாக விபூதி மத்யத்தில் நிலை தோற்றுகைக்காக, மீண்டும் நாரயண சப்த வ்யாக்யானத்திலும் அருளிச் செய்தார். அநந்தரம், "ஸ்ரீமந்நாராயண" என்று பலோபாய வாக்யங்களில் ப்ரயுக்தமான வ்யாக்யேய சப்தத்தை உபாதாநம் பண்ணி யருளினார். "ப்ரபத்யே" என்கிறவிடத்தில் உத்தமனாலே விவக்ஷிதமான அதிகாரி விசேஷம் "அநந்ய சரண: அஹம்" என்று வ்ய்ருதமாயிற்று. "த்வத் பாதாரவிந்த யுகளம் சரணம் ப்ரபத்யே" என்கையாலே, சரணௌ என்கிற சப்தமும், சரண சப்தமும், க்ரியா பதமும், ப்ரதர்சிதமாயிற்று. அநந்தரம், "த்வயம்" என்று வ்யாக்யேயத்தைப் பூர்ணமாக நிர்தேசித்தார்.

**விளக்கம்** – த்வயத்தின் ஆழ்பொருள் குறித்து வேதங்கள், ஸ்ம்ருதிகள், இதிகாசங்கள், புராணங்கள், பாஞ்சராத்ரம் போன்ற பலவற்றிலும் விரிவாகக் கூறப்பட்டது போன்றே எம்பெருமானார் தன்னுடைய ஆசார்ய வழியில் நிலை நின்றவராக, தான் அருளிச் செய்த சரணாகதி கத்யத்தில் த்வயத்தின் ஆழ்பொருளை விளக்கினார். எப்படி என்று காண்போம். சரணாகதி கத்யத்தில் - பகவந் நாராயணா அபிமத அநுரூப ஸ்வரூப ரூப – ஸ்ரீமந்நாராயணனின் ஸ்வரூபத்திற்கு இனிமையாக உள்ளவளும், ரூபத்திற்குப் பொருத்தமாக உள்ளவளும் – என்று தொடங்குவதன் மூலம் "ஸ்ரீமந்" என்னும் த்வய மந்த்ரத்தின் முதல் பதத்தினுடைய பொருளை அருளிச்செய்தார். தொடர்ந்து, அகில ஹேய ப்ரத்யநீக – தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டாக உள்ளவன் – என்பதன் மூலம் ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதி குறித்து அருளிச்செய்தார்; இதனால் த்வயத்தில் உள்ள "நாராயண" என்னும் பதம் விளக்கப்பட்டதாயிற்று. பெரியபிராட்டியைக் குறித்து தொடக்கத்திலேயே உரைத்தாலும், "நாராயண" என்னும்

பதத்தினை விளக்கும்போது, விபூதிகளை அருளிச்செய்வதன் நடுவில், அவளுடைய புருஷகாரத்தன்மையை (சிபாரிசு செய்யும் தன்மை) உணர்த்தும் பொருட்டும் "ஸ்ரீவல்லபா" என்றார். தொடர்ந்து பலன் மற்றும் அதனைப் பெறுவதற்கான உபாயம் ஆகியவற்றைக் கூறும் வரியில் உபயோகிக்கப்பட்ட "ஸ்ரீமந்நாராயண" என்பதை விளக்கினார். த்வயத்தில் உள்ள "ப்ரபத்யே" என்னும் பதம் மூலம் சரணம் அடையும் அதிகாரியைக் கூறுவதான தன்மை நிலையை (first person singular), கத்யத்தில் "அநந்ய சரண: அஹம் – மற்ற புகலிடம் இல்லாமல் உன்னிடம் சரணம் புகும் நான்" என்றார். கத்யத்தில் - த்வத் பாதாரவிந்த யுகளம் சரணம் ப்ரபத்யே – உன்னுடைய தாமரை போன்ற திருவடிகளில் நான் சரணம் அடைகிறேன் – என்பதன் மூலம் த்வயத்தில் உள்ள "சரணௌ, சரணம், ப்ரபத்யே" என்னும் மூன்றும் விளக்கப்பட்டன. தொடர்ந்து த்வயம் என்னும் பதத்தை உரைத்து, அதனையும் விளக்கினார்.

**வ்யாக்யானம்** – அடியிலேயாதல் முடிவிலேயாதல் "த்வயம்" என்று நிர்த்தேசியாதே இவ்வளவிலே சொல்ல வேண்டுவானென்? என்னில், உபாய ப்ராப்யங்களில் இங்கு ப்ரதாநபூதன் ஸ்ரீமானான நாராயணனாகையாலே இரண்டு இடத்திலும் கிடக்கிற ஸவிசேஷண நாராயண சப்தம் வ்யாக்யாதமாய் நின்றவளவிலே இம்மந்த்ரத்துக்குப் ப்ரதிபாத்யமான ஸாத்யோபாயத்தோடே கூடப் ப்ரதாநோபாயமும் ப்ரதாந ப்ராப்யமும் வ்யாக்யாதமென்று தோற்றுகைக்காக இங்கே "த்வயம்" என்று அருளிச் செய்தார். அநந்தரம், "பிதரம் மாதரம்" என்று தொடங்கி ஜிதந்தாவிசேஷ பகவத்கீதாதி ஸ்திதமான ஸம்வாத வாக்ய முகத்தாலே அநந்ய ப்ரயோஜனனாய் அநந்யோபாயனாய்க் கொண்டு உபாய பரிக்ரஹம் பண்ணினபடியையும், சரண்ய ஸ்வபாவாநுஸந்தான பூர்வகமாக அபராத க்ஷமணம் பண்ணுகிறபடியையும், த்வயத்துக்கு ஸமுதிதார்த்தமாக அருளிச் செய்தார்.

**விளக்கம்** – "சரணாகதி கத்யத்தின் தொடக்கத்தில் அல்லது இறுதியில் 'த்வயம்' என்ற பதத்தை நேரடியாகக் கூறாமல், நடுவில் உள்ள ஏதோ ஒரு இடத்தில் மட்டும் ஏன் கூறவேண்டும்?", என்று கேட்கலாம். இதற்கு விடை அளிப்போம். இலக்கை அடைவதற்கான உபாயம் மற்றும் அந்த உபாயத்தால் அடையப்படும் இலக்கு ஆகிய இரண்டுமே ஸ்ரீமந்நாராயணனே ஆகிறான். த்வயத்தில் இரண்டு இடங்களில் வருவதான, "ஸ்ரீ" என்னும் அடைமொழியுடன் கூடிய "நாராயண" என்னும் பதம் குறித்து கத்யத்தில்

முன்பே (தொடக்கத்திலேயே) கூறப்பட்டது. ஆகவே, த்வயத்தில் கூறப்படுவதான ஸாத்யோபாயம் என்னும் ப்ரபத்தியுடன் சேர்ந்து, இலக்கை அடைவதற்கான உபாயம் மற்றும் அந்த உபாயத்தால் அடையப்படும் இலக்கு ஆகியவையும் கத்யத்தில் விளக்கப்பட்டன என்பதை உணர்த்தும்விதமாக இங்கு "த்வயம்" என்னும் சொல்லை உபயோகித்தார். அடுத்து "பிதரம் மாதரம்" என்று தொடங்கும் கத்ய பகுதியில், ஜிதந்தே ஸ்தோத்ரம் மற்றும் ஸ்ரீமத்பகவத்கீதை போன்றவற்றில் இதே கருத்தை உணர்த்தவல்ல வரிகளைக் குறிப்பிட்டு, த்வயத்தின் மூலம் உணர்த்தபடும் ஆழ்பொருளை விளக்கினார்; அது என்னவென்றால் – உபாயமான ப்ரபத்தியை ஸ்ரீமந்நாராயணன் அல்லாமல் வேறு எந்தவிதமான இலக்கைக் குறித்தும் கைக்கொள்ளாமை, ஸ்ரீமந்நாராயணன் அல்லாமல் மற்ற எந்தவிதமான உபாயத்தையும் கைக்கொள்ளாமை, ரக்ஷகனான ஸ்ரீமந்நாராயணனுடைய ஸ்வபாவத்தை மனதில் நிறுத்தி அவன் நம்முடைய அனைத்துவிதமான குற்றங்களையும் பொறுக்கும் தன்மையை எண்ணியபடி இருத்தல் – ஆகியவை ஆகும்.

**மூலம்** – மேல் அர்த்தக்ரமத்தாலே முற்பட நமஸ்ஸாலே ப்ரார்த்திக்கிற அநிஷ்ட நிவ்ருத்தியை வ்யாக்யானம் பண்ணி, பின்பு இங்குள்ள பரபக்த்யாதி புருஷார்த்த பூர்வகமாகச் சதுர்த்யந்த பதங்களில் விபக்த்யபிப்ரேதமான பரமபுருஷார்த்த லாபத்தை வெளியிட்டருளினார். இப்படி அநுஷ்டிதோபாயனான அதிகாரி விஷயத்தில் இங்கும் அங்கும் உள்ள ஸித்தியைப் பற்றச் சரமச்லோகத்தில் உத்தரார்த்தத்திற்படியே ஸ்வாபாவிக தயார்த்தமான பகவதபிப்ராயம் இருக்கும்படியைத் தத்வ்யஞ்ஜக பகவத் வாக்ய ப்ரக்ரியையாலே அருளிச் செய்து காட்டினார். ஆகையாலே கத்யத்தில் அருளிச் செய்ததெல்லாம் த்வயத்தில் விவக்ஷிதம். இது "த்வயமர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா" என்கிற பாசுரத்தாலும் ஸூசிதம்.

**விளக்கம்** – அடுத்து த்வயத்தில் உள்ள சொற்களை அவை அமைந்துள்ள வரிசைப்படி எடுக்காமல், அந்த மந்த்ரத்தினுடைய பொருளின் அடிப்படையில் சொற்களை எடுத்து, நமக்கு விருப்பம் இல்லாதவற்றை விலக்கவேண்டும் என்னும் விண்ணப்பத்தை ப்ரார்த்திகின்ற "நம:" என்பதை வ்யாக்யானம் செய்தார். தொடர்ந்து, பரபக்தி மற்றும் புருஷார்த்தத்தை முன்னிறுத்துவதான "நாராயணாய" என்னும் நான்காம் வேற்றுமை உள்ள சொல்லின் இறுதியில் காணப்படும் "ஆய" என்பதன் மூலம் கூறப்படுவதான

வாழ்வின் மிகவும் உயர்ந்த இலக்கை (பகவானை அடைதல் மற்றும் அவனுக்குக் கைங்கர்யம் செய்தல்) விளக்கினார். அதனைத் தொடர்ந்து, அதிகாரி விஷயத்தில் இங்கு வாழும்போதும், பரமபதம் அடைந்த பின்னரும் வெளிப்படுவதும், சரமச்லோகத்தின் இரண்டாவது வரியில் உள்ளதும் ஆகிய பகவானுடைய தயை நிறைந்த தன்மையை, அதனை வெளிப்படுத்தும் பகவானுடைய சொற்களாலேயே அருளிச்செய்தார். ஆகவே சரணாகதி கத்யத்தில் அருளிச்செய்தவை அனைத்துமே த்வயத்திலும் அறியப்பட வேண்டும் என்றே கூறப்பட்டதாகும். இது, சரணாகதி கத்யம் - த்வயமர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா – த்வயத்தின் ஆழ்பொருளை எண்ணியபடி மட்டும் அல்லாமல், அதனையே எப்போதும் உச்சரித்தபடி உள்ள நீ – என்பதன் மூலம் அறியப்படும்.

மூலம் –

பரபக்த்யாதி மூலத்வம் கைங்கர்யஸ்ய யதுச்யதே
கத்யாதிஷு ததப்யாஹு: அபவர்கதசாச்ரயம்

உத்தரோத்தரயோ: ஸ்வாமி ஸாக்ஷாத்கரண போகயோ:
பூர்வபூர்வ க்ஷணேஷ்டத்வாத் தந்மூலத்வமுதீரிதம்

சரீர பாத காலே து ஹார்தஸ்யாநுக்ரஹ: ஸ்வயம்
பரிபாகம் ப்ரபந்நாநாம் ப்ரயச்சதி ததாவிதம்

அங்கோலதைல ஸிக்தாநாம் பீஜாநாமசிராத்யதா
விபாக: பலபர்யந்த: ததா அத்ரேதி நிதர்சிதம்

துஷ்டேந்த்ரிய வசாச்சித்தம் ந்ருணாம் யத்கல்மஷைர் வ்ருதம்
ததந்தகாலே ஸம்சுத்திம் யாதி நாராயணாலயே
இதி வ்ரதவிசேஷே யத் ஸாத்த்வதாதிஷு சிஷ்யதே
தத்வதத்ரோபபத்யதே கத்யோக்தாந்த்ய தசாகம:

அநுக்ரஹ விசேஷேண கேநசித் பரமாத்மந:
குருகாதிச நாதாத்யா: ப்ராகப்யந்வபவந் ப்ரபும்

**விளக்கம் –**

- பரபக்தி ஆதி மூலத்வம் கைங்கர்யஸ்ய யத் உச்யதே கத்யாதிஷு ததாபி ஆஹு: அபவர்கதசாச்ரயம் – கத்யம் போன்றவற்றில், கைங்கர்யத்திற்கு ப்ரபத்தி முதலானவற்றைக் காரணமாகக் கொண்ட எத்தகைய தன்மை கூறப்படுகிறதோ, அதனையும் மோக்ஷத்தை அடைந்த நிலை என்றே பூர்வர்கள் கூறினார்கள்.

- உத்தரோத்தரயோ: ஸ்வாமி ஸாக்ஷாத்கரண போகயோ: பூர்வபூர்வ க்ஷணேஷ்டத்வாத் தந்மூலத்வமுதீரிதம் – பகவத் ஸாக்ஷாத்காரம் (பரஜ்ஞாநம்), தடையின்றி அவனை அனுபவித்தல் போன்ற நிலைகள் பின்னர் ஒரு காலகட்டத்தில் வருவதாகிலும், அவற்றைக் குறித்து முன்பே ஆசையுடன் எண்ணியபடி உள்ளதால், அவை பரபக்தியால் வருவதாகும் என்பர்.

- சரீர பாத காலே து ஹார்தஸ்யாநுக்ரஹ: ஸ்வயம் பரிபாகம் ப்ரபந்நாநாம் ப்ரயச்சதி ததாவிதம் – சரீரத்தை விடும் காலம் வந்தவுடன், ஜீவாத்மாக்களுடைய இதயத்தில் உள்ள ஸர்வேச்வரனுடைய க்ருபை என்பது, அவர்கள் செய்த ப்ரபத்தியின் விளைவாக, பகவத் ஸாக்ஷாத்காரம் என்பதை அளிக்கிறது.

- அங்கோலதைல ஸிக்தாநாம் பீஜாநாமசிராத்யதா விபாக: பலபர்யந்த: ததா அத்ரேதி நிதர்சிதம் – அழிஞ்சிக் கொட்டையின் தைலத்தில் ஊற வைக்கப்பட்ட மற்ற விதைகளுக்கு, விரைந்து பழம் அளிக்கவல்ல திறன் உண்டாகிறது. இது போன்றே பகவத் கருணை என்பது ப்ரபத்தி செய்தவர்களுக்கு விரைவாக பரபக்தி, பரஜ்ஞாநம் மற்றும் பரமபக்தி ஆகியவற்றை அளிக்கிறது.

- துஷ்டேந்த்ரிய வசாச்சித்தம் ந்ருணாம் யத்கல்மஷைர் வ்ருதம் ததந்தகாலே ஸம்சுத்திம் யாதி நாராயணாலயே இதி வ்ரதவிசேஷே யத் ஸாத்த்வதாதிஷு சிஷ்யதே தத்வதத்ரோபபத்யதே கத்யோக்தாந்த்ய தசாகம: – மனிதர்களுடைய எந்த ஒரு மனமானது தீய இந்த்ரியங்களுக்கு வசமாக உள்ளதன் காரணமாகத் தோஷங்களால் நிறைந்துள்ளதோ, அதே மனம் ஸர்வேச்வரன் உறைகின்ற க்ஷேத்ரங்களில் வசிப்பதால், மரணம் அடையும் காலத்தில் மிகுந்த தூய்மையை

அடைவதாக ஸாத்வம் போன்ற ஸம்ஹிதைகளில் கூறப்பட்டுள்ளது. இது போன்று மோக்ஷ உபாயமாகக் கூறப்பட்டுள்ளவற்றில் காணப்படும் அனைத்தும் கத்யத்தில் கூறப்படுவதால், கத்யத்தில் வெளிப்படுத்தப்படும் இறுதி நிலை என்பது பொருத்தமே ஆகும்.

- அநுக்ரஹ விசேஷேண கேநசித் பரமாத்மந: குருகாதிச நாதாத்யா: ப்ராகப்யந்வபவந் ப்ரபும் – நம்மாழ்வார், நாதமுனிகள் போன்றவர்கள் ஸர்வேச்வரனுடைய மேன்மையான அனுக்ரஹம் காரணமாக, தாங்கள் தங்களுடைய சரீரத்தை விடுவதற்கு முன்பும் கூட பகவானை அனுபவித்தனர்.

## த்வயத்தின் பொருளை நம்மாழ்வார் உரைத்தல்

**மூலம்** – இத் த்வயத்தின் அர்த்தத்தை நம்மாழ்வாரும் "திரு நாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மினோ" என்றும், "முகில்வண்ணனடியை அடைந்து அருள்சூடி உய்ந்தவன்" என்றும், "அகலகில்லேன்" முதலான ப்ரதேசங்களிலும் அருளிச்செய்தார்.

**விளக்கம்** – த்யவ மந்த்ரத்தின் ஆழ்பொருளை நம்மாழ்வார் திருவாய்மொழி (4-1-1) - திரு நாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மினோ – என்றும், திருவாய்மொழி (7-2-11) – முகில்வண்ணன் அடியை அடைந்து அருள்சூடி உய்ந்தவன் – என்றும், திருவாய்மொழி (6-10-10) – அகலகில்லேன் – என்றும் உள்ள இடங்களில் அருளிச்செய்தார்.

## த்வயத்தின் முற்பகுதி பொருள் விளக்கம்
## ஸ்ரீமந் நாராயண என்பதின் பொருளை உரைத்தல்

**மூலம்** – இதில் முற்பட "ஸ்ரீமந்நாராயண" என்று ஸர்வ சரண்யமான பரதத்த்வத்தைச் சொன்னபடி. ஸ்ரிய:பதித்வ லிங்கத்தாலும் நாராயண சப்தத்தாலுமிறே ச்ருதிகளில் பரதத்த்வ விசேஷ நிர்ணயம் பண்ணப்பட்டது. நாராயணன் சரண்யனாம்போது லக்ஷ்மீ விசிஷ்டனாயிருக்குமென்கைக்காகப் பூர்வகண்டத்தில் ஸ்ரீமச்சப்தம்.

ஆகாரிணஸ்து விஜ்ஞாநம் ஆகாரஜ்ஞாந பூர்வகம்
தேநாகாரம் ச்ரியம் ஜ்ஞாத்வா ஜ்ஞாதவ்யோ பகவாந் ஹரி:

என்று அருளாளப் பெருமாளெம்பெருமானார் அருளிச்செய்தார். இது உத்தர கண்டத்திற்போலே பூர்வகண்டத்திலும் விசேஷமென்னுமிடமும், உபாய விசேஷணங்களால் உபாயத்வம் வாராதென்னுமிடமும், ஸித்தோபாய சோதநத்திலே சொன்னோம்.

**விளக்கம்** – த்வயத்தின் தொடக்கத்தில் உள்ள "ஸ்ரீமந்நாராயண" என்பது, அனைவரும் சரணம் புகத்தக்கபடி உள்ளதான பர தத்துவத்தைக் கூறுகிறது. ச்ருதிகளில் அவனுடைய பரத்வம் என்பது அவன் மஹாலக்ஷ்மியின் நாயகனாக உள்ளதாலும், "நாராயண" என்னும் சப்தத்தாலும் நிர்ணயிக்கப்பட்டது. நாராயணன் உபாயமாக ஆகும்போது, மஹாலக்ஷ்மியிம் உபாயமாக உள்ளாள் என்பதையும், அவன் அப்போது தனது தன்மையுடன் (மஹாலக்ஷ்மி) உள்ளான் என்பதையும் த்வயத்தின் முற்பகுதியில் உள்ள "ஸ்ரீமத்" சப்தம் காண்பிக்கிறது. ஸ்வாமி அருளாளப் பெருமாளெம்பெருமானார் - ஆகாரிணஸ்து விஜ்ஞாநம் ஆகாரஜ்ஞாந பூர்வகம் தேநாகாரம் ச்ரியம் ஜ்ஞாத்வா ஜ்ஞாதவ்யோ பகவாந் ஹரி: - ஒரு பொருளுக்கு உரிய சிறப்பான தன்மையை அறிந்த பின்னரே, அந்தப் பொருளைக் குறித்து அறியவேண்டும். இதே போன்று மஹாலக்ஷ்மியைத் தனது சிறப்பான தன்மையாகக் கொண்டுள்ள ஸ்ரீஹரியை அறிவதற்கு முன்பாக, அந்தச் சிறப்பான தன்மையாகிய மஹாலக்ஷ்மியை அறிதல் வேண்டும் – என்றார். த்வயத்தின் முற்பகுதி, பிற்பகுதி ஆகிய இரண்டிலும் மஹாலக்ஷ்மியின் நிலை மாறாமல் உள்ளதையும், இருவருமே உபாயமாக உள்ளதைக் குறித்து எழுகின்ற ஐயங்களுக்கு அவசியம் இல்லாததையும் ஸித்தோபாய சோதந அதிகாரத்தில் கூறினோம்.

## ஸ்ரீ சப்தத்தின் ஆறு பொருள்கள்

**மூலம்** – ஸ்ரீ சப்தம் ச்ரீயதே, ச்ரயதே, ச்ருணோதி, ச்ராவயதி, ச்ருணாதி, ச்ரீணாதி என்று ஆறுபடியாக பகவச்சாஸ்த்ரங்களிலே நிர்வசநம் பண்ணப்பட்டிருக்கும்.

**விளக்கம்** – “ஸ்ரீ” என்னும் பதம் ச்ரீயதே, ச்ரயதே, ச்ருணோதி, ச்ராவயதி, ச்ருணாதி, ச்ரீணாதி என்று ஆறுவிதமான பொருளை அளிப்பதாகும் என்று பாஞ்சராத்ரம் கூறுகிறது.

## ஸ்ரீயதே, ச்ரயதே என்பவற்றின் பொருள்

**மூலம்** – அவற்றில் அபேக்ஷித பதாந்தரங்கள் ஒளசித்யத்தாலும் அவ்வோ ப்ரமாண பலத்தாலும் விசேஷித்து அறியவேண்டும். அவ்விடத்தில் ஸ்வோஜ்ஜீவநார்த்திகளாலே ஆச்ரயிக்கப்படுமென்றும், இவர்களை உஜ்ஜீவிப்பிக்கைக்காக ஸர்வேச்வரனை ஆச்ரயித்திருக்கும் என்றும் பொருளானபோது,

பிதா இவ த்வத் ப்ரேயாந் ஜநநி பரிபூர்ணாகஸி ஜநே
ஹித ஸ்ரோதோ வ்ருத்யா பவதி ச கதாசித் கலுஷ தீ:
கிம் ஏதத் நிர்தோஷ: க இஹ ஜகதி இதி த்வம் உசிதை:
உபாயை: விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா தத் அஸி ந:

என்கிறபடியே, ஸாபராதரானவர்கள் பக்கல் ஸ்வயம் ஹ்தைஷியாய், தண்டதரனான ஸர்வேச்வரனுடைய சீற்றத்தை ஆற்றி, அவனுடைய ஸஹஜ காருண்யம் இவர்களுக்கு உஜ்ஜீவகமாம்படி பண்ணிக் கொடுக்கையால் மாத்ருத்வ ப்ரயுக்த வாத்ஸல்யாதிசயத்தாலே புருஷகாரபூதையாய் நிற்கிற ஏற்றம் சொல்லிற்றாம். “அவிஜ்ஞாதா” இத்யாதிகளிற்போலே இங்கு, “விஸ்மார்ய” என்றதுக்கும், “அல்லி மலர் மகள் போக மயக்குகள்” இத்யாதிகளுக்கும் ஸதா ஸர்வஜ்ஞனான ஈச்வரனுடைய நிக்ரஹாபிஸந்தி நிவ்ருத்தியிலே தாத்பர்யம்.

**விளக்கம்** – [ச்ரீயதே = அடையப்படுபவள், ச்ரயதே = அடைபவள், ச்ருணோதி = கேட்பவள், ச்ராவயதி = கேட்க வைப்பவள், ச்ருணாதி = விலக்குபவள், ச்ரீணாதி = உண்டாக்குபவள்]. இங்கு காணப்படும் இந்த ஆறு தாதுக்களுடைய பொருளானது சுருக்கமாக உள்ளதால், அந்தந்த தாதுக்களுடன் அவசியமான சொற்களைச் சேர்த்துக் கொண்டும், ப்ரமாணங்களுக்கு ஏற்பவும் பொருள் கொள்ளவேண்டும். இவற்றில் முதலில் தாங்கள் (ஸம்ஸாரத்திலிருந்து) பிழைக்கவேண்டும் என்று விரும்பும் சேதநர்களால்

அடையப்படுபவள் என்றும், அவர்களை பிழைக்கச் செய்யும்பொருட்டு ஸர்வேச்வரனை (அவர்களுக்காகப் பரிந்து உரைக்க) தான் அண்டுகிறாள் என்றும் கூறும்போது, இந்த ச்லோகத்தை நினைவு கூறவேண்டும் : ஸ்ரீகுணரத்னகோசம் (52) - பிதா இவ த்வத் ப்ரேயாந் ஜநநி பரிபூர்ணாகஸி ஜநே ஹித ஸ்ரோதோ வ்ருத்யா பவதி ச கதாசித் கலுஷ தீ: கிம் ஏதத் நிர்தோஷ: க இஹ ஜகதி இதி த்வம் உசிதை: உபாயை: விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா தத் அஸி ந: - அனைவருக்கும் தாயாக இருப்பவளே! ஸ்ரீரங்கநாயகீ! உனது அன்புக் கணவனான ஸ்ரீரங்கநாதன், குற்றங்கள் புரிகின்ற இந்த உலகில் உள்ள மக்களிடம், அவர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு, ஒரு தகப்பன் போல், அவர்கள் மீது கோபம் கொள்வான். அது போன்ற நேரங்களில் நீ அவனிடம், “என்ன செயல் நீங்கள் புரிகிறீர்கள்? இந்த உலகத்தில் குற்றம் செய்யாதவர் யார்?”, என்று இதமாகப் பேசுகிறாய். இதன் மூலம் அவன் எங்கள் குற்றங்களை மறக்கும்படிச் செய்கிறாய். இதன் காரணமாக எங்கள் தாய் ஸ்தானத்தில் நீயே உள்ளாய் – என்பதாகும். ஆக, ஸர்வேச்வரன் தவறுகள் செய்த சேதநர்களுக்கு, அவர்களைத் திருத்தும் விதமாகத் தண்டனை அளிக்க முற்படும்போது, அவனை இவள் அண்டி, அவனுடைய சீற்றத்தைத் தணித்து, அவனிடம் இயல்பாகவே உள்ளதான கருணை என்பது சேதநர்கள் கரையேற உதவும்படியாகச் செய்கிறாள். இதன் மூலம், சேதநர்களுடைய தாயாக உள்ளதன் காரணமாக எழுகின்ற வாத்ஸல்யத்தின் மிகுதியால், இவள் சிபாரிசு செய்பவளாக உள்ள மேன்மை உரைக்கப்பட்டது. இந்த ச்லோகத்தில் கூறப்படும் “விஸ்மர்ய = மறக்கும்படி” என்பதும், திருவாய்மொழி (3-10-8) - அல்லி மலர் மகள் போக மயக்குகள் – என்பதும், ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் (483) – அவிஜ்ஞாதா – அடியார்களுடைய குற்றங்களைக் காணாதவன் – என்பதற்கு ஏற்ப, அனைத்தும் அறிந்த ஸர்வேச்வரனுடைய “தவறுகளின் காரணமாகத் தண்டித்தல்” என்ற நிலையை நீக்குதல் என்பதை அடியொட்டியே உள்ளன என்று அறியவேண்டும்.

**மூலம்** – ஸாபேக்ஷனான புருஷனுக்கு அபேக்ஷிதம் தலைக்கட்டிக் கொடுக்கவல்ல சேதநன், அபிகம்யனாகைக்கு உபாயமாக வரிக்கப்பட்ட சேதநாந்தரத்தைப் புருஷகாரம் என்று வ்யவஹரிப்பார்கள். இப்புருஷகாரம் பலத்துக்குப் பரம்பரயா காரணம்.

அர்த்த ஸ்வபாவாநுஷ்டான லோகத்ருஷ்டி குருக்திபி:
ச்ருத்யா ஸ்ம்ருத்யா ச ஸம்ஸித்தம் கடகார்த்தாவலம்பநம்

என்று இப்புருஷகாரபாவத்துக்குப் ப்ரமாணம் நிக்ஷேப ரக்ஷையிலே சொன்னோம்.

**விளக்கம்** – விருப்பம் கொண்ட ஒருவனுக்கு, அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொடுக்கவல்ல மற்றொருவனை உபாயமாகப் பற்றவேண்டும் என்று வேறு ஒருவன் சிபாரிசு செய்தலையே புருஷாகரம் என்பார்கள். இந்தப் புருஷகாரமே அடையப்படும் பலனுக்கான காரணமாக உள்ளது. இந்த புருஷகாரத் தன்மையைக் குறித்து, நிக்ஷேப ரக்ஷையில் - அர்த்த ஸ்வபாவாநுஷ்டான லோகத்ருஷ்டி குரூக்திபி: ச்ருத்யா ஸ்ம்ருத்யா ச ஸம்ஸித்தம் கடகார்த்தாவலம்பநம் – பொருள்களுடைய இயல்பு, முன்னோர்களுடைய செயல்பாடு, உலக வழக்கம், பூர்வர்களுடைய அருளிச்செயல்கள், வேதங்கள், ஸ்ம்ருதிகள் என்று பலவற்றாலும் புருஷகாரமாக உள்ளவர்களை அண்டவேண்டும் என்பது ஏற்பட்டது – என்று கூறினோம்.

**மூலம்** – இவற்றில் அர்த்த ஸ்வபாவமாவது – ஈச்வரனைப்போலே பித்ருத்வாநுரூபமான ப்ரதாபோஷ்மலத்வம் கலசாதே மாத்ருத்வ ப்ரயுக்தங்களான வாத்ஸல்யாதிகள் அதிசயித்து "ந கச்சிந் ந அபராத்யதி", "க: குப்யேத்வா நரோத்தம", "மர்ஷயாமீஹ துர்பலா" என்கையே ஸ்வபாவமாயிருக்கையும், வால்லப்யாதிசயத்தாலே இவளை முன்னிட்டால் அவன் மறுக்கமாட்டாதொழிகையும், இவ்வர்த்த ஸ்வபாவத்தாலே இவளைப் பற்றுவார்க்குப் புருஷகாராந்தர அபேக்ஷையுண்டாய், அநவஸ்தை வராது.

**விளக்கம்** – மேலே கூறப்பட்ட நிக்ஷேபரக்ஷை ச்லோகத்தில் "அர்த்த ஸ்வபாவம் = பிராட்டியின் இயல்பான தன்மை" என்றால் – தந்தையைப் போன்ற ஸர்வேச்வரனின் பாசத்தில் ஆண்களுக்கே உரிய கண்டிப்புத்தன்மை உள்ளது போன்று இவளிடம் காணப்படாமல், தாய்க்கு மட்டுமே உரியதான வாத்ஸல்யம் முதலியவையே இவளுடைய தன்மையாக உள்ளது என்பதாகும். இராமாயணம் யுத்தகாண்டம் (116-44) - ந கச்சிந் ந அபராத்யதி – தவறுகள் செய்யாதவன் யாரும் இல்லை – என்றும், இராமாயணம் யுத்தகாண்டம் (116-38) - க: குப்யேத்வா நரோத்தம – தனது அரசனுடைய கட்டளைக்கு இணங்கி நடக்கும் அரக்கிகள் குறித்து யார் கோபம் கொள்வார்கள் – என்றும், இராமாயணம் யுத்தகாண்டம் (116-40) - மர்ஷயாமீஹ துர்பலா – அரக்கிகளுக்கு உண்டாகும் துன்பத்தை என்னால் பொறுக்க இயலாது – என்றும் உரைப்பதே

பிராட்டியின் தன்மையாக உள்ளது. இவள் அவனுடைய மிகுந்த அன்புக்கு உரியவள் என்பதால், இவளை முன்னிறுத்தினால், நமக்காக இவள் செய்யும் சிபாரிசை அவனால் மறுக்க இயலாது. இப்படியாக உள்ள இவளுடைய தன்மை காரணமாக, இவள் நமக்காகப் பரிந்து பேசுவதற்காக, நாம் வேறு யாரிடமும் சிபாரிசுக்குச் செல்லவேண்டாம். இப்படியாக சிபாரிசு செய்யும் விஷயத்தில், இவளிடம் சென்றுவிட்டால், சிபாரிசுக்கான முடிவற்ற நிலை (ஒருவரிடம் சிபாரிசு செய்ய மற்றவரிடம் செல்லுதல், அந்த மற்றவரிடம் சிபாரிசு செய்ய வேறு ஒருவரிடம் செல்லுதல் என்று இப்படியே எண்ணற்றவர்களிடம் செல்லுதல்) உண்டாகாது.

**மூலம்** – “அநுஷ்டானமாவது” – ப்ரஹ்லாத விஷயத்தில் ப்ரேமாதிசயத்தாலே ப்ரதிகூல விஷயத்திற் பிறந்த சீற்றத்தின் கனத்தைக் கண்டு அணுக அஞ்சின ப்ரஹ்மாதிகள் இவளைச் சரணமாகப் பற்றி இவள் முன்னிலையாக ஸ்ரீந்ருஸிம்ஹ ரூபனான ஸர்வேச்வரனைக் கிட்டி ஸ்தோத்ரம் பண்ணினார்களென்று புராண ப்ரஸித்தம். “ஸீதாம் உவாசாதிசயா ராகவம் ச மஹாவ்ரதம்”, “ஸீதா ஸமக்ஷம் காகுத்ஸ்தம்” இத்யாதிகளிலும் கண்டுகொள்வது.

**விளக்கம்** - மேலே கூறப்பட்ட நிக்ஷேபரக்ஷை ச்லோகத்தில் “அநுஷ்டாநம் = சான்றோர்களின் நடத்தைகள்” என்றால் – ப்ரஹ்லாதன் மீது கொண்ட ப்ரேமை காரணமாக, அவனுடைய விரோதியான ஹிரண்யன் மீது கொண்ட சீற்றத்தைக் கண்டு, நான்முகன் உள்ளிட்ட அனைவரும் நரஸிம்ஹ ரூபம் எடுத்த ஸர்வேச்வரனை அணுக அஞ்சினர். அப்போது மஹாலக்ஷ்மியைச் சரணம் புகுந்த அவர்கள், அவளை முன்னிறுத்தி நரஸிம்ஹனை அண்டி நின்று துதித்தனர் என்பதைப் புராணங்களில் காணலாம். இதனை, இராமாயணம் அயோத்யாகாண்டம் (31-2) - ஸீதாம் உவாசாதிசயா ராகவம் ச மஹாவ்ரதம் – லக்ஷ்மணன் சீதையையும் உயர்ந்த ஸங்கல்பம் கொண்ட இராமனையும் நோக்கி உரைத்தான் – என்றும், இராமாயணம் அயோத்யாகாண்டம் (15-6) - ஸீதா ஸமக்ஷம் காகுத்ஸ்தம் – சீதையின் முன்னிலையில் லக்ஷ்மணன் இராமனிடம் உரைத்தான் – என்றும் உள்ள வரிகளிலும் காணலாம்.

**மூலம்** – லோகத்ருஷ்டியாவது, அந்த:புர பரிஜனத்தை அபராத பூயஸ்தையுண்டானாலும், ராஜாக்கள் அல்பங்களான ப்ரஸாநங்களாலே க்ஷமிக்கக் காண்கை. இவ்வர்த்தம் “மாதர் லக்ஷ்மி யதைவ மைதில ஜந:” என்கிற ச்லோகத்திலும் விவக்ஷிதம். குருக்தியாவது, நம்மாழ்வார் முதலான ஆசார்யர்களுடைய “அகலகில்லேன்” முதலான பாசுரங்கள். இவற்றுக்கு மூலமான ஸூக்தவிசேஷ ரூபைகளான ச்ருதிகளையும் கண்டு கொள்வது. இவையடியாக வந்த ஸ்ம்ருதிகளான, “வாச: பரம் ப்ரார்த்தயிதா ப்ரபத்யேந்நியத: ச்ரியம்” இத்யாதிகளான சௌநகாதி வாக்யங்கள்.

**விளக்கம்** - மேலே கூறப்பட்ட நிக்ஷேபரக்ஷை ச்லோகத்தில் “லோகத்ருஷ்டி = உலக வழக்கம்” என்றால் அரசர்கள், தங்களுடைய அந்தப்புரத்தில் பணியாற்றுபவர்கள் மிகுந்த குற்றம் செய்தாலும், அவர்களுக்குச் சிறிய தண்டனை மட்டுமே அளிப்பதைக் காணலாம். இதனை ஸ்ரீகுணரத்னகோசம் (51) - மாத: லக்ஷ்மி யதைவ மைதிலி ஜந: தேந அத்வநா தே வயம் த்வத் தாஸ்ய ஏகரஸாபிமாந ஸுபகை: பாவை: இஹ அமுத்ர ச ஜாமாதா தயித: தவ இதி பவதீ ஸம்பந்த த்ருஷ்ட்யா ஹரிம் பச்யேம ப்ரதியாம யாம ச பரீசாராந் ப்ரஹ்ருஷ்யேமச - தாயே! ஸீதே! ஸ்ரீரங்கநாயகீ! உனக்கு மிதிலை நகரத்து மக்கள் எப்படி உள்ளனரோ அப்படியே நாங்களும் உள்ளோம். உனக்கு என்றும் அடிமைத்தனம் பூண்டு நிற்போம். எங்கள் வீட்டுப் பெண்ணான உனக்கு திருவரங்கத்தில் மட்டும் அல்லாமல் பரமபதத்திலும் மணமகனாக உள்ள ஸ்ரீரங்கநாதனை, “உனது கணவன், எங்கள் வீட்டு மாப்பிள்ளை”, என்று சொந்தம் கொண்டாடி நெருங்கி நிற்போம். அவனுக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளை இனிதே செய்யும் வாய்ப்பு அமையப் பெறுவோம். இதன் மூலம் நாங்கள் ஆனந்தத்தில் மூழ்கி நிற்போம் – என்பதில் காணலாம். மேலே கூறப்பட்ட நிக்ஷேபரக்ஷை ச்லோகத்தில் “குருக்தி = பூர்வர்களின் அருளிச்செயல்களில்” என்றால், நம்மாழ்வார் முதலான ஆசார்யர்கள் அருளிச்செய்த திருவாய்மொழி (6-10-10) – அகலகில்லேன் – போன்ற பாசுரங்கள் ஆகும். மேலும் ஸ்ரீஸூக்தம் முதலான வடிவங்களில் உள்ள ச்ருதிகளையும் இவ்விஷயத்தில் உதாரணம் கொள்ளலாம். இவற்றினை அடிப்படையாகக் கொண்டு வந்த சௌநக ஸம்ஹிதை - வாச: பரம் ப்ரார்த்தயிதா ப்ரபத்யேந்நியத: ச்ரியம் – அனைத்து சொற்களின் பொருளாக உள்ள பரம்பொருளை அடையவேண்டும் என்னும் எண்ணம் கொண்டவன், மஹாலக்ஷ்மியைச் சரணம் புகவேண்டும் – போன்ற ஸ்ம்ருதிகளையும் காண்க.

**மூலம்** – இப்படி இவளுக்கு ஸர்வேச்வரன் திருவடிகளில் கடகத்வம் பஹு ப்ரமாண ஸித்தமாகையால், இங்கும் இவ்விவக்ஷை கொள்ள உசிதம். இப்படிப் புருஷகாரபூதையுமாய் ஸித்தோபாய விசேஷணமுமாய்க் கொண்டு ஆச்ரயிக்கப்படும். "ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம்", "ஸ்வத: ஸ்ரீஸ்த்வம் விஷ்ணோ: ஸ்வமஸி" என்கிற ச்லோகங்களின்படியே ஆதித்யாதிகளுக்குப் ப்ரபாதிகள் போலே அதிசய காரிணியாய்க் கொண்டு ஸித்தோபாயத்தை ஆச்ரயித்திருக்கும். எல்லோர்க்கும் ஸேவ்யையாய் ஸர்வேச்வரனை ஸேவித்திருக்கும் என்று பொருளானபோது எல்லார்க்கும் ஸ்வாமினியாய், "காந்தஸ் தே புருஷோத்தம:", "சேஷித்வே பரம: புமாந்" என்கிறபடியே அவனுக்குச் சேஷமான நிலை சொல்லிற்றாம். "ஜகத் ஸமஸ்தம் யதபாங்க ஸம்ச்ரயம்" இத்யாதிகளிற்படியே எல்லா வஸ்துக்களாலும் ஆச்ரயிக்கப்பட்டு எல்லாவற்றையும் தான் ஆச்ரயித்திருக்குமென்று பொருளானபோது நாராயணாதி சப்தங்கள் ச்ரியபதிக்குச் சொல்லுங் கட்டளையை விஷ்ணுபத்நிக்கும் சொல்லிற்றாம். ஸ்ரீபாஷ்யகாரரும் "பகவந்நாராயண" என்கிற நேரிலே "பகவதீம் ஸ்ரீயம்" என்று அருளிச்செய்தார்.

**விளக்கம்** – இப்படியாக இவளுக்கு நம்மை ஸர்வேச்வரனுடைய திருவடிகளில் கொண்டு சேர்ப்பிக்கும் தன்மை உண்டு என்பது பல ப்ரமாண வாக்கியங்கள் மூலம் தெளிவாகிறது என்பதால், இக்கருத்தையே இங்கும் கொள்ளவேண்டும். ஆகவே இவள் பகவானிடம் நமக்காகச் சிபாரிசு செய்பவள் என்றும், ஸித்தோபாயத்தின் (ஸர்வேச்வரன்) ஒரு குணம் என்றும் கொள்ளப்பட்டு அனைவராலும் அண்டப்படுகிறாள். ஆக, ஸ்ரீகுணரத்னகோசம் (28) - ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம் பகவத: இதம் சந்த்ரவதநே - சந்திரனைப் போன்ற குளிர்ந்த முகம் உடையவளே! தாயே! மஹாலக்ஷ்மீ! ஸ்ரீரங்கநாயகீ! நன்றாக ஆராய்ந்து பார்த்தால் உனது கணவனான ஸ்ரீரங்கநாதனின் ஸ்வரூபம், திருக்கல்யாண குணங்கள் போன்றவை உனது தொடர்பு அவனுக்கு உள்ளதால் அல்லவோ உண்டாகிறது? – என்றும், ஸ்ரீகுணரத்னகோசம் (31) - ஸ்வத: ஸ்ரீ: த்வம் விஷ்ணோ: ஸ்வம் அஸி - மஹாலக்ஷ்மீ! ஸ்ரீரங்கநாயகீ! நீ ஸ்ரீரங்கநாதனுக்கு உரிமை உள்ளவளாக எப்போதும் இருக்கிறாய் – என்றும் உள்ள ச்லோகங்களுக்கு ஏற்ப, சூரியனுக்கு எவ்விதம் அதன் க்ரணங்கள் உள்ளனவோ அது போன்று, ஸித்தோபாயமான ஸர்வேச்வரனுக்கு மேன்மையைச் செய்பவளாக அவனை அண்டியுள்ளாள். அனைவராலும் வணங்கப்படும் அவள், ஸர்வேச்வரனை வணங்கியபடி உள்ளாள் என்று பொருளாகும்போது, அனைவருக்கும் எஜமானியாக உள்ள நிலையும், சதுச்லோகி (1) - காந்தஸ் தே

புருஷோத்தம: - உனது ப்ரியமான கணவன் புருஷோத்தமன் என்று விளங்குபவன் – என்றும், ஸ்ரீகுணரத்னகோசம் (22) – சேஷித்வே பரம: புமாந் – உனக்குப் பலவிதங்களிலும் உதவிட உன்னுடைய எஜமானனாகிய ஸ்ரீரங்கநாதன் உள்ளான் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, இவள் ஸர்வேச்வரனுக்கு உட்பட்டவளாக உள்ள நிலையும் புலப்படுகிறது. ஸ்தோத்ரரத்னம் (37) - ஜகத் ஸமஸ்தம் யதபாங்க ஸம்ச்ரயம் – இந்த உலகம் முழுவது எந்த ஒரு பிராட்டியின் கடைக்கண் நோக்கை ஆதாரமாகக் கொண்டு அண்டி நிற்கிறதோ – என்பது போன்ற வரிகளுக்கு ஏற்ப, அனைத்து வஸ்துக்களாலும் அண்டப்பட்டுள்ளவள் என்று பொருளாகும்போது, நாராயண பதம் மூலம் “அவனை அனைத்தும் அண்டியுள்ளன, அவன் அனைத்தின் உள்ளும் உள்ளான்” என்று கூறுவது போன்றே, விஷ்ணுபத்னியாகிய இவளுக்கும் கொள்ளலாம். சரணாகதி கத்யத்தில் எம்பெருமானார், “பகவந் நாராயண” என்று தொடங்கும் பகுதியில், “பகவதீம் ஸ்ரீயம்” என்று அருளிச் செய்தார்.

## ச்ருணோதி, ச்ராவயதி என்பவற்றின் பொருள்

**மூலம்** – ச்ருணோதி, ச்ராவயதி என்கிற வ்யுத்பத்திகளில் ஸாபராதரான அடியோங்களை ஸர்வேச்வரன் திருவடிகளிலே காட்டிக் கொடுத்தருள வேணுமென்று இப்புடைகளிலே ஆச்ரிதருடைய ஆர்த்தி த்வநியைக் கேட்டு ஸர்வேச்வரனுக்கு விண்ணப்பம் செய்து இவர்களுடைய ஆர்த்தியைச் சமிப்பிக்குமென்றதாம். புருஷகார க்ருத்யத்தைச் சொல்லுகிற இதுக்கும் புருஷகார பாவத்திலே நோக்கு.

**விளக்கம்** – “ஸ்ரீ” என்பதற்கு ச்ருணோதி (கேட்பவள்), ச்ராவயதி (கேட்கும்படிச் செய்பவள்) என்று பொருள் கொள்ளும்போது, “ஸர்வேச்வரன் விஷயத்தில் பல அபராதங்களைச் செய்த எங்களை அவனுடைய திருவடிகளில் நாங்கள் சேரும்படிச் செய்யவேண்டும்” என்று இவ்விதமாக அவனை அண்டுபவர்கள் புலம்பும் ஒலியைக் கேட்கிறாள்; உடனே அவள் ஸர்வேச்வரனிடம் விண்ணப்பித்து, இவர்களுடைய புலம்பலை தணிக்கிறாள் என்று கருத்து. இவளுடைய புருஷகாரச் செயலைக் கூறும் பதங்களானவை, இவளுடைய புருஷகாரத் தன்மையையே கூறுகின்றன.

**மூலம் –**

மத்பத த்வந்த்வமேகம் ப்ரபத்யந்தே பராயணம்
உத்தரிஷ்யாம்யஹம் தேவி ஸம்ஸாராத் ஸ்வயமேவ தாந்

ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம:

இத்யாதிகளை அவன் பக்கலிலே கேட்டு,

ச்ருணு சாவஹித: காந்த யத்தே வக்ஷ்யாம்யஹம் ஹிதம்
ப்ராணைரபி த்வயா நித்யம் ஸம்ரக்ஷ்ய: சரணாகத:

என்று கபோதத்தைக் கபோதி கேட்பித்தாற்போலே, அவஸரத்திலே கேட்பிக்கு மென்னவுமாம். ஸர்வேச்வரன் பக்கலிலே லோக ஹிதத்தைக் கேட்டு, “மித்ரமௌபயிகம் கர்த்தும்” இத்யாதிகளிற்படியே விபரீதரையுங்கூடக் கேட்பிக்கு மென்னவுமாம்.

**விளக்கம்** – வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். வராஹ புராணம் - மத்பத த்வந்த்வமேகம் ப்ரபத்யந்தே பராயணம் உத்தரிஷ்யாம்யஹம் தேவி ஸம்ஸாராத் ஸ்வயமேவ தாந் – தேவீ! எனது திருவடிகள் இரண்டையும் சிறந்த உபாயமாகப் பற்றுபவர்களை ஸம்ஸாரத்திலிருந்து நானே கரை ஏற்றுவேன் – என்றும், இராமாயணம் ஸுந்தரகாண்டம் (38-39) - ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம: - இரக்கம் கொள்வதே உயர்ந்த தர்மம் – என்றும் அவன் கூறுவதைக் கேட்கும் பிராட்டி, இதிஹாஸ ஸமுச்சயம் (8-40) - ச்ருணு சாவஹித: காந்த யத்தே வக்ஷ்யாம்யஹம் ஹிதம் ப்ராணைரபி த்வயா நித்யம் ஸம்ரக்ஷ்ய: சரணாகத: - (பெண் புறா ஆண் புறாவிடம்) உமக்கு நன்மையை அளிக்கவல்ல ஒன்றைக் கூறுகிறேன்; சரணம் புகுந்தவனை உம்முடைய உயிரைக் கொடுத்தாவது நீவிர் காக்கவேண்டும் – என்று பெண் புறா ஆண் புறாவிடம் கூறுவது போன்று, தகுந்த நேரம் பார்த்து உரைத்து, அவனைக் கேட்கும்படிச் செய்கிறாள். அல்லது மற்றொரு விதமாகவும் பொருள் கூறலாம் – ஸர்வேச்வரனிடமிருந்து உலகிற்கு நன்மையானவற்றைக் கேட்கிறாள் என்றும் கூறலாம். இராமாயணம் ஸுந்தரகாண்டம் (21-19) - மித்ரமௌபயிகம் கர்த்தும் – சீதை இராவணனிடம், “உனது இறப்பை நீ காப்பாற்ற

எண்ணினால், இராமனுடன் தோழமை கொள்வாயாக", என்றாள் – என்பதற்கு ஏற்ப, சேதநர்களை நன்மையான விஷயங்களைக் கேட்கும்படியும் செய்கிறாள்.

## ச்ருணாதி என்பதன் பொருள்

**மூலம்** – ச்ருணாதி நிகிலாந் தோஷாந் என்று வ்யுத்பத்தியானபோது, "லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்ய ரூபயா ரக்ஷக: ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேபி ச கீயதே" என்றும், "வேரி மாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்குமே" என்றும் சொல்லுகிறபடியே, உபாயாதிகாரிகளுக்கு விரோதிகளான கர்மாதிகளைக் கழிக்குமென்றதாம்.

**விளக்கம்** – "ஸ்ரீ" என்பது "ச்ருணாதி நிகிலாந் தோஷாந் – அனைத்து தோஷங்களையும் நீக்குகிறாள்" என்று பொருள் அளிக்கும்போது, லக்ஷ்மீ தந்த்ரம் (28-14) - லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்ய ரூபயா ரக்ஷக: ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேபி ச கீயதே - கருணையே வடிவம் எடுத்தாற்போன்று இருக்கின்ற லக்ஷ்மியுடன் இருந்தபடியே ஸர்வேச்வரன் அனைத்தையும் ரக்ஷிக்கிறான் என அனைத்து ஸித்தாந்தங்களும் வேதாந்தங்களும் உரைக்கின்றன – என்றும், திருவாய்மொழி (4-5-11) - வேரி மாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்குமே – தாமரையில் வீற்றிருந்து அடியார்களுடைய கர்மங்களை நீக்குவாள் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, உபாயத்தைக் கைக்கொள்ளும் தகுதி உடையவர்களுக்கு, அதுவரை உபாயத்தைக் கைக்கொள்ளத் தடையாக இருந்த கர்மங்களை நீக்குகிறாள் என்று கொள்ளவேண்டும்.

## ச்ரீணாதி என்பதன் பொருள்

**மூலம்** – ச்ரீணாதி ச குணைர்ஜகத் என்று நிருக்தியில் தன் காருண்யாதி குணங்களாலே "நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு" இத்யாதிகளிற்படியே ஆச்ரிதர்க்குக் கைங்கர்ய பர்யந்த குணபரிபாகத்தை உண்டாக்கும் என்றதாம்.

**விளக்கம்** - "ஸ்ரீ" என்பது "ச்ரீணாதி ச குணைர்ஜகத் – தனது குணங்களால் அனைத்து லோகங்களையும் பக்குவப்படுத்துகிறாள்" என்று பொருள் அளிக்கும்போது, திருவாய்மொழி (9-2-1) - நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு – என்பதற்கு ஏற்ப, கைங்கர்யத்தில் ஈடுபடும்படியாக அடியார்களுடைய குணத்தைப் பக்குவப்படுத்துகிறாள் என்று கொள்ளவேண்டும்.

## "ஸ்ரீ" சப்தத்தின் ஆறு பொருள்களையும் த்வயத்தின் இரு பகுதிகளிலும் கொள்ளவேண்டிய முறை

**மூலம்** – இவ்வ்யுத்பத்திகள் எல்லாவற்றிலும் உள்ள வைபவத்தைக் கணிசித்து, "ஸ்ரீரித்யேவ ச நாம தே பகவதி ப்ரூம: கதம் த்வாம் வயம்" என்று ஆளவந்தார் அருளிச்செய்தார். பட்டரும் நிருபாதிக மங்கலத்வத்தை நினைத்து "ஸ்ரீரஸி யத:" என்றார். இவ்வர்த்தங்களில் ஈச்வரனுடைய உபாய பாவத்துக்கு உபயுக்தங்களானவை பூர்வகண்டத்திலும் ப்ராப்யதைக்கு உபயுக்தமானவை உத்தரகண்டத்திலும் அநுஸந்தேயங்கள்.

**விளக்கம்** – இப்படியாக உள்ள ஆறுவிதமான பொருள்களாலும் பெரியபிராட்டிக்கு உள்ள எல்லையற்ற வைபவத்தை எண்ணியே ஸ்வாமி ஆளவந்தார் சதுச்ச்லோகியில் (1) - ஸ்ரீரித்யேவ ச நாம தே பகவதி ப்ரூம: கதம் த்வாம் வயம் - உன்னுடைய திருநாமமும் "ஸ்ரீ" என்று உள்ளது. இப்படிப்பட்ட உன்னை நான் எவ்விதம் புகழ்வேன் – என்றார். ஸ்வாமி பராசரபட்டர், பெரியபிராட்டியுடன் ஸர்வேச்வரனுக்கு உள்ள இயற்கையான தொடர்பு காரணமாகவே அவனுக்கு அனைத்து மங்களங்களும் உண்டாவதை எண்ணியே ஸ்ரீகுணரத்னகோசத்தில் (29) - ஸ்ரீரஸி யத: - உன்னுடைய ஸம்பந்தம் காரணமாக அல்லவோ அவன் மங்களங்கள் நிறைந்துள்ளான் – என்றார். த்வய மந்த்ரத்தில் உபாயத்தைக் கூறுவதான முதல் வரியில் உள்ள "ஸ்ரீ" என்னும் சொல், உபாயமாக இருப்பதற்கு அவசியமான குணங்களைக் கூறும்; பலனைக் கூறுவதான இரண்டாவது வரியில் உள்ள "ஸ்ரீ" என்னும் சொல், பலனாவதற்கு அவசியமான குணங்களைக் கூறும் என்று கொள்க.

## “ஸ்ரீ” என்பதன் அடுத்துள்ள “மதுப்” விகுதியின் (suffix) பொருள்

**மூலம்** – ஸ்வாம்யுபாய உபேயச்ச ஸ்வரூபாதி ஸமர்ப்பண
ப்ரதித: ப்ரதி ஸம்பந்தீ ஸ்ரீமாந் நிகம சக்ஷுஷாம்

“ஸ்ரீமாந்” என்று பொதுவிலே சொன்னாலும் ப்ரமாணாநுஸாரத்தாலே இங்கு ஸ்ரிய:பதியென்றபடி. ஸாமந்யமாகத் தோற்றின ஸம்பந்தம், ஸ்ரீதிபலத்தாலே விசேஷிதம். ஸர்வருக்கும் ஆச்ரயணீயையாய், ஜகந்மாதாவான இவளுக்குப் பதியென்னவே பரத்வமும் ஸௌலப்யமும் தோற்றும். இங்குப் பிராட்டியை விசேஷித்து எடுக்கையாலே நார சப்தார்த்தங்களான வஸ்த்வந்தரங்களிற் காட்டில் வ்யுத்பத்தியும், விசேஷணமாக நிர்த்தேசிக்கையாலே யதா ப்ரமாணம் பதிபாரார்த்தமும் ஸூசிதம்.

பூம நிந்தா ப்ரசம்ஸாஸு நித்ய யோகே அதிசாயநே
ஸம்ஸர்க்கே அஸ்தி விவக்ஷாயாம் பவந்தி மதுபாதய:

என்று அநேகார்த்தமாயிருந்ததேயாகிலும் இங்கு மதுப் உபயோக விசேஷத்தாலே ப்ரமாண ஸித்தமான நித்யயோகத்தைச் சொல்லுகிறது. விக்ரஹத்தில் ப்ரஹ்மசர்யாவஸ்தையிலுமுள்பட “க்ருஷ்ணாஜிநேந ஸம்வ்ருண்வந் வதூம் வக்ஷ: ஸ்தலாலயாம்” என்னும்படியிறே நித்யயோகமிருப்பது.

**விளக்கம்** - ஸ்வாம்யுபாய உபேயச்ச ஸ்வரூபாதி ஸமர்ப்பண ப்ரதித: ப்ரதி ஸம்பந்தீ ஸ்ரீமாந் நிகம சக்ஷுஷாம் – வேதங்கள் என்னும் கண்களைக் கொண்டு அறிபவர்களுக்கு, அவர்கள் தங்களைக் காப்பாற்றும் பொறுப்பு போன்றவற்றைச் ஸர்வேச்வரனுக்குச் சமர்ப்பணம் செய்யும்போது, அவன் ஸ்வாமியாகவும் உபாயமாகவும் பலனாகவும் இருந்தபடி அடையவேண்டிய இலக்காகிறான் – என்பது அறிக. “ஸ்ரீமாந்” என்னும் பதமானது “ஸ்ரீயுடன் தொடர்பு உள்ளவன்” என்று பொதுவான பொருளை அளித்தாலும், வேதங்கள் என்னும் ப்ரமாணம் மூலம், அந்தப் பதமானது “பெரியபிராட்டியின் கணவன்” என்பதையே உணர்த்துகிறது. ஆக பொதுவாகத் தோன்றும் ஸம்பந்தம் என்பது வேதங்களுடைய பலம் காரணமாகக் குறிப்பிட்ட ஸம்பந்தத்தை உணர்த்துவதாகிறது.

அனைத்து உயிர்களும் அண்டி நிற்பவளாய், அனைத்து உலகங்களின் தாயாய் உள்ள பெரியபிராட்டியின் நாயகன் என்னும்போது அவனுக்கு எஜமானத்தன்மையும் ஸௌலப்யமும் வெளிப்படுகிறது. "ஸ்ரீமந்நாராயண" என்பதில் "நார" என்னும் சப்தத்துடன் "ஸ்ரீ" என்னும் சப்தம் இணைக்கப்பட்டாலும், அவளைச் சிறப்பித்துக் கூறுவதால், அவளுக்கும் "நார" என்னும் பதம் மூலம் கூறப்படும் மற்ற வஸ்துக்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு வெளிப்படுகிறது. மேலும் "ஸ்ரீமாந்" என்பதன் மூலம் இவளை அவனுடைய தன்மையாகக் கூறுவதால், தகுந்த ப்ரமாணம் மூலம், இவளுடைய இருப்பு என்பது தனது கணவனாகிய அவனுக்காகவே ஆகும் என்பது வெளிப்படுகிறது. அஷ்டாத்யாயீ வார்த்திகம் (5-2-94) - பூம நிந்தா ப்ரசம்ஸாஸு நித்ய யோகே அதிசாயநே ஸம்ஸர்க்கே அஸ்தி விவக்ஷாயாம் பவந்தி மதுபாதய: - "மதுப்" போன்ற விகுதிகள் மிகுதி, பழிப்பு, புகழ்ச்சி, எப்போதும் கூடியிருத்தல், சிறப்பாக இருத்தல், சம்பந்தம் போன்ற பல பொருள்களை அளிப்பதாகும் – என்பதற்கு ஏற்ப "மதுப்" என்னும் விகுதியானது பலவிதமான பொருள்களை அளிப்பதாக உள்ளபோதிலும், இங்கு ப்ரமாணங்கள் மூலமாக, அந்த விகுதியானது "எப்போதும் கூடியிருத்தல்" என்னும் பொருளையே அளிக்கிறது. இந்தச் சேர்த்தியானது அவன் ப்ரஹ்மச்சாரியாக (வாமனாவதாரம்) வந்தபோதிலும், க்ருஷ்ணாஜிநேந ஸம்வ்ருண்வந் வதூம் வக்ஷ: ஸ்தலாலயாம் – தனது திருமார்பில் எப்போதும் உள்ளவளை, மான் தோல் கொண்டு மூடி வந்து – என்பதற்கு ஏற்ப, உள்ளது என்று அறியலாம்.

## ஸர்வேச்வரனுடன் பிராட்டி உள்ள நித்யயோகம் குறித்த வாதங்களுக்குச் சமாதானமும் காரணமும்

**மூலம்** – (1) அப்ருதக்ஸித்த வஸ்துவுக்கு "ஸ்ரீமாந்" என்று மத்வர்த்தீய ப்ரத்யய ஸாபேக்ஷமாக ஸாமாநாதிகரண்யம் கூடுமோ என்றும், (2) ப்ருதக்ஸித்தமாகில் "கீர்த்தி: ஸ்ரீவாக்ச நாரீணாம்" என்றும், "பூவில் வாழ் மகளாய்" என்றும் மத்வர்த்தீய ப்ரத்யய நிரபேக்ஷமாக ஸாமாநாதிகரண்யம் கூடுமோ என்றும் சிலர் சொல்லும் சோத்யங்கள் இரண்டும் மந்தங்கள். எங்ஙனேயென்னில் "தத் குணஸாரத்வாத்து தத் வ்யபதேச: ப்ராஜ்ஞவத்" என்கிற ந்யாயத்தாலே, ஜ்ஞாநகுணத்தையிட்டு ஆத்மாவை ஜ்ஞாநமென்று சொல்லலாயிருக்கச் செய்தே, ஜ்ஞாநவாந் என்று மத்வர்த்தீய ப்ரத்யயாந்விதமாகவும்

ஸாமாநாதிகரண்யம் உண்டாகிறாப்போலே இங்கும் குறையில்லை. ஆகையால், மத்வர்த்தீய ப்ரத்யய மாத்ரத்தைக் கொண்டு, ப்ருதக்ஸித்தமென்று நிச்சயிக்கப் போகாது. "நரபதிரேவ ஸர்வே லோகா:" இத்யாதிகளிற்போலே, விவக்ஷாந்தரம் ஸம்பாவிதமானவிடத்தில், இப் ப்ரத்யயமில்லாத ஸாமாநாதிகரண்யத்தைக் கொண்டு, ப்ருதக்ஸித்தமன்றென்னவு மொண்ணாது. ஆன பின்பு, விசதமாகப் ப்ரதிபாதிக்கும் ப்ரமாணாந்தரங்களைக் கொண்டு இவ் வஸ்து ஸ்திதியிருக்கும்படி தெளியப் ப்ராப்தம்.

**விளக்கம்** – இங்கு இரண்டுவிதமான ஆக்ஷேபங்களை சிலர் எழுப்புகின்றனர். அவையாவன:

(1) ஒன்றை விட்டு ஒன்று பிரிக்க இயலாதபடி உள்ளதும், ஒன்று இல்லாமல் மற்றொன்று இல்லை என்னும்படி உள்ளது ஆகிய இரண்டு பொருள்களை இணைக்க "மதுப்" என்ற விகுதியைப் பயன்படுத்த இயலாது (உதாரணமாக சூரிய ஒளியை எடுத்துக் கொள்வோம். இங்குள்ள சூரியன் என்பதிலிருந்து ஒளியைப் பிரிக்க இயலாது. ஆக இங்கு "மதுப்" விகுதியைச் சேர்க்க இயலாது). ஆனால் பிரிக்க முடிந்த இரண்டு வஸ்துக்களை "மதுப்" கொண்டு இணைக்கலாம் (உதாரணமாக, "நீலச்சட்டை அணிந்த சிறுவன்". இங்கு "நீலச்சட்டை" மற்றும் "சிறுவன்" ஆகிய இரண்டும் ஒன்றில்லாமல் மற்றொன்று இருக்கும்). ஆக இங்கு "ஸ்ரீமாந்" என்பதில் மதுப் விகுதி உள்ளதால், "ஸ்ரீ" என்பதை நாராயணனிடமிருந்து பிரிக்க இயலும் என்று தேறுகிறது. இது பொருந்தாது.

(2) "ஸ்ரீ"யை நாராயணனிடமிருந்து பிரிக்க இயலும் என்றும், அவன் இல்லாதபோது அவள் தனித்திருக்கலாம் (சீதை இராமனை விட்டுப் பிரிந்து இருந்தாள்) என்றும் கூறி, "ஸ்ரீ" என்பதை "பகவான்" என்னும் பதத்துடன் "மதுப்" விகுதியுடன் இணைக்காமல் சேர்க்க இயலாது என்று கூறினால், இதுவும் பொருந்தாது. காரணம், கீதையில் (10-34) - கீர்த்தி: ஸ்ரீவாக்ச நாரீணாம் – பெண்களில் கீர்த்தி தேவியாகவும், லக்ஷ்மியாகவும், வாக் தேவதையாகவும் நானே உள்ளேன் – என்றும், திருவாய்மொழியில் (6-3-6) - பூவில் வாழ் மகளாய் – தாமரையில் வஸிக்கும் மஹாலக்ஷ்மியாய் உள்ள என் பரஞ்சுடரே – என்றும் கூறியது காண்க.

இந்த இரண்டு எதிர்வாதங்களும் பொருந்தாதவை ஆகும். எப்படி? “மதுப்” என்னும் விகுதி உள்ளதால் மட்டுமே அதனால் இணைக்கப்பட்ட இரண்டு பொருள்களையும் பிரிக்க இயலுமா இயலாதா என்று கூற முடியாது. உதாரணமாக ப்ரஹ்மஸூத்ரம் (2-3-29) - தத் குணஸாரத்வாத்து தத் வ்யபதேச: ப்ராஜ்ஞவத் – ஜீவனுக்கு ஞானம் என்னும் குணமே சாரமாக உள்ளதால் ஜீவனே ஞானம் எனப்படுகிறான்; ஸர்வேச்வரனுக்கு ஆனந்தம் என்னும் குணமே சாரமாக உள்ளதால் அவனே ஆனந்தம் எனப்படுகிறான் என்று கூறுவது போல – என்பது காண்க. இங்கு ஜீவனுக்கும் ஞானத்திற்கும் பிரிக்க இயலாத ஸம்பந்தம் இருந்தாலும், “ஞானவான் – ஞானம் கொண்டவன்” என்று ஜீவனைக் கூறுவதைக் காணலாம். இதே போன்று இங்கும் கொள்வதில் எந்தவிதமான தோஷமும் இல்லை. ஆகவே, “மதுப்” என்னும் விகுதி உள்ளதால் மட்டுமே அதனால் இணைக்கப்பட்ட இரண்டு பொருள்களையும் பிரிக்க இயலுமா இயலாதா என்று கூற முடியாது. மேலும் ஓர் உதாரணம் காண்போம். நரபதிரேவ ஸர்வே லோகா: - அரசனே நாட்டில் உள்ள அனைத்தும் – என்னும் வாக்கியத்தில் “லோகா:” என்பதைத் தொடர்ந்து “மதுப்” விகுதி இல்லாத காரணத்தினால், அரசனுக்கும் நாட்டிற்கும் பிரிக்க இயலாத தொடர்பு உள்ளது, அரசன் இல்லாமல் நாடு இருக்க முடியாது என்று கூற முடியாது அல்லவோ? ஆகவே “மதுப்” என்னும் விகுதி உள்ளதால் ஸம்பந்தம் உள்ளதா இல்லையா என்று ஆராயாமல், தகுந்த ப்ரமாணங்களைக் கொண்டே இப்படியாக உள்ள ஸம்பந்தங்களைத் தீர்மானிக்கவேண்டும்.

**மூலம்** – இங்கு உபாயதசையிலும் பலதசையிலும் ப்ரமாணங்கள் நித்யயோகத்தைச் சொல்லுகையாலும், இம்மந்த்ரத்தில் இவ்வர்த்தம் ப்ரகாசிப்பிக்கை அபேக்ஷித மாகையாலும் பூர்வோத்தர கண்டங்களில் மதுப்பாலே “ஸ ப்ராதுச்சரணௌ காடம்”, “பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா” என்கிறபடியே பிரிவற்றபடி சொல்லிற்றாயிற்று. நம்மாழ்வாரும் “அகலகில்லேன் இறையும் என்றும் அலர்மேல்மங்கை உறை மார்பா” என்றும், “ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப” என்றும், “இங்குமங்கும் திருமாலன்றி இன்மை கண்டு” என்றும் உபாயதசையிலும் பலதசையிலும் ஸ்ரீமச்சப்தத்திற் சொன்ன நித்யயோகத்தை அநுஸந்தித்தார். இவ் வநுஸந்தாநம் ஸாபராதர்க்கு அணியிடாதே நினைத்தபோதே ஆச்ரயிக்கைக்கு உறுப்பாம்.

**விளக்கம்** – பெரியபிராட்டியார் ஸர்வேச்வரனுடன் எப்போதும் இணைந்துள்ளதான இந்தத் தொடர்பு என்பது, இவர்கள் இருவருமாகச் சேர்ந்து உபாயமாக நிற்கும்போதும், உபாயத்தைக் கைக்கொண்டவுடன் பலன் அளிக்கும்போதும் உள்ளது என்று பல ப்ரமாணங்களும் கூறுவதாலும், த்வய மந்த்ரத்தில் இப்படிப்பட்ட பொருள் வெளிப்படவேண்டும் என்பதாலும், த்வய மந்த்ரத்தின் முதல் வரி மற்றும் இரண்டாம் வரியில் உள்ள "மதுப்" என்னும் விகுதி மூலம் இவர்கள் இருவரும் பிரிவற்றபடி உள்ள நிலை கூறப்பட்டது. இதனை இராமாயணம் (2-31-2) - ஸ ப்ராதுச்சரணௌ காடம் – இராமனுடைய இரண்டு திருவடிகளையும் சீதையின் முன்னிலையில் பற்றியபடி லக்ஷ்மணன் உரைத்தான் – என்றும், இராமாயணம் (2-31-27) - பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா – (இராமனிடம் லக்ஷ்மணன்) நீ வைதேகியுடன் சேர்ந்து – என்றும் கூறுவதன் மூலமும் அறியலாம். இவர்கள் இருவருமாகச் சேர்ந்துள்ள நிலையானது உபாயமாக நிற்கும்போதும், உபாயத்தைக் கைக்கொண்டவுடன் பலன் அளிக்கும்போதும் வெளிப்படுவதைத் திருவுள்ளத்தில் கொண்டே நம்மாழ்வார் பின்வருமாறு அருளிச்செய்தார்:

- திருவாய்மொழி (6-10-10) - அகலகில்லேன் இறையும் என்றும் அலர்மேல்மங்கை உறை மார்பா
- திருவாய்மொழி (4-9-10) - ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப
- திருவாய்மொழி (7-9-11) - இங்குமங்கும் திருமாலன்றி இன்மை கண்டு

இத்தகைய சேர்க்கை குறித்த எண்ணமானது எந்தவிதமான சந்தேகமும் இன்று ஸர்வேச்வரனுடைய திருவடிகளை அண்டுவதற்கு மிகவும் அவசியமான காரணமாகும்.

நாராயண என்னும் பதத்தின் பொருள்

**மூலம்** – இப்படி அபேக்ஷிதமான புருஷகாரந்தானும் தன்னேற்றமாம்படி யிருக்கின்றன, நாராயண சப்தத்தில் தோற்றுகிற ஸம்பந்தமும் குணங்களும். இது "தன்னடியார்" என்கிற பாட்டிலே காணலாம்.

**விளக்கம்** – "நாராயண" என்னும் பதம் மூலம் கூறப்படும் ஸம்பந்தம் மற்றும் குணங்களைக் காணும்போது, "ஸர்வேச்வரனை அண்டுவதற்கு இந்த ஸம்பந்தம் மற்றும் குணங்களே

போதுமானவை ஆகும். இதனுடன் சேர்ந்து பெரியபிராட்டியும் சிபாரிசு செய்யும்போது, அவன் நம்மைக் காப்பது குறித்துக் கூறவும் வேண்டுமோ?" என்று கூறலாம்படியாக அந்த ஸம்பந்தம் மற்றும் குணங்கள் உள்ளன. இதனை, பெரியாழ்வார் திருமொழி (4-10-2) – தன்னடியார் – என்னும் பாசுரத்தில் காணலாம்.

## த்வயத்தில் "ஸ்ரீமத்" என்பதுடன் "நாராயண" என்பதும் உள்ளதன் பலன்

**மூலம்** – "ஸ்ரீதர: ஸ்ரீகர: ச்ரேய: ஸ்ரீமாந் லோகத்ரயாச்ரய:" இத்யாதிகளிலே பகவந்நாமமாகப் ப்ரஸித்தமான ஸ்ரீமச்சப்தமே அமையாதோ என்னில், பூர்வகண்டத்தில் உபாயபாவத்துக்கு உறுப்பான குணவிசேஷா நுஸந்தா நார்த்தமாகவும் உத்தரகண்டத்தில் ஸர்வவிசிஷ்டனான சேஷி ப்ராப்யனாயத் தோற்றுகைக்காகவும் நாராயண சப்தம் அபேக்ஷிதமாகையால், இங்கு ஸ்ரீமச்சப்தம் விசேஷணம்.

**விளக்கம்** – ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் (617-620) - ஸ்ரீதர: ஸ்ரீகர: ச்ரேய:ஸ்ரீமாந் லோகத்ரயாச்ரய: - மஹாலக்ஷ்மியைத் தரிப்பவன், அனைத்து அவதாரங்களிலும் தனக்கு ஏற்றவிதமாக அவளைக் கொள்பவன், அனைத்து பலனுக்காகவும் அடையப்படுபவளான பெரியபிராட்டியைப் பிரியாதவன், மூன்று உலகங்களாலும் அண்டப்படுபவன் – போன்றவற்றில், "ஸ்ரீமாந்" என்னும் பதமே நாராயணனைக் குறிக்கும்போது, தனியாக "நாராயண" என்று கூறவேண்டுமோ? விடை அளிப்போம். த்வயத்தின் முற்பகுதியானது உபாயத்தைக் கூறுவதால், ஸர்வேச்வரன் உபாயமாவதற்குத் தேவையான சில சிறப்பான குணங்களைச் சேதநன் எண்ணியபடி இருத்தல் வேண்டும்; அப்படிப்பட்ட குணங்களைக் கூறுவதால் அங்கு "நாராயண" என்பது அவசியமாகிறது; அப்போது "ஸ்ரீமாந்" என்பது "பெரியபிராட்டியுடன் எப்போதும் உள்ளவன்" என்னும் சிறப்பான குணத்தை மட்டுமே கூறுவதாகவும், திருநாமத்தைக் கூறுவதாக அமையவில்லை என்றும் கொள்ளவேண்டும். த்வயத்தின் இரண்டாவது வரியில், "அவன் அனைத்து குணங்களுடன் கூடிய எஜமானன்" என்று எண்ணப்படவேண்டும் என்பதால், "நாராயண" என்னும் பதம் அவசியமாகிறது; ஆக இங்கும் "ஸ்ரீமத்" என்னும் பதம் அந்த எஜமானத்தன்மையை உணர்த்தும் விசேஷணமாக உள்ளது.

த்வயத்தின் முதல் வரியில் உள்ள "நாராயண" என்னும் பதம் மூலம் உணர்த்தப்படும் முக்கிய குணங்கள், அவற்றின் விளக்கம், பயன்கள்

**மூலம்** – இங்குற்ற நாராயண சப்தத்துக்கு மூலமந்த்ராதிகாரத்தில் வ்யுத்பத்திகளாலே சொன்ன அர்த்தங்களெல்லாம் விவக்ஷிதங்களாகிலும், பூர்வகண்டத்தில் நாராயண சப்தத்துக்கு சரண்யதையிலே நோக்கானபடியாலே "நிகரில் புகழாய்" இத்யாதிகளிலே ஸங்க்ருஹீதங்களான வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌசீல்ய ஸௌலப்ய ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வ ஸத்யஸங்கல்பத்வ பரமகாருணிகத்வ க்ருதஜ்ஞத்வ ஸ்திரத்வ பரிபூர்ணத்வ பரமோதாரத்வாதிகள் இங்கு அநுஸந்தேயங்களில் ப்ரதாநதமங்கள்.

**விளக்கம்** – த்வய மந்த்ரத்தில் உள்ள "நாராயண" என்னும் பதத்திற்கான பொருள் அனைத்தும் திருமந்த்ரத்தில் உள்ள "நாராயண" என்னும் பதம் மூலமே கூறப்பட்டன என்றாலும், த்வயத்தில் உள்ள இந்தப் பதத்திற்கு "சரணம் அடையத்தக்கவன்" என்னும் பொருளே முதன்மையானதாகும். ஆகவே உபாயமாக இருப்பதற்குத் தேவையான குணங்களை மட்டுமே கூறுவதாகக் கொள்ளவேண்டும். அவற்றில் சில மிக்குயமான குணங்களாவன – பசு கன்றிடம் காண்பிப்பது போன்ற பரிவு (வாத்ஸல்யம்), எஜமானத்தன்மை (ஸ்வாமித்வம்), சிறந்த தன்மை (ஸௌசீல்யம்), எளிமையாக அடையக்கூடிய தன்மை (ஸௌலப்யம்), அனைத்தும் அறிந்த தன்மை (ஸர்வஜ்ஞத்வம்), அனைத்தும் வல்ல திறமை (ஸர்வசக்தித்வம்), தடையில்லாத உறுதி (ஸத்யஸங்கல்பத்வம்), அபாரமான கருணை (பரமகாருணிகத்வம்), செய்ந்நன்றி மறவாமை (க்ருதஜ்ஞத்வம்), உறுதி (ஸ்திரத்வம்), முழுமை (பரிபூர்ணத்வம்) மற்றும் எல்லையற்ற தாராளம் (பரமோதாரத்வம்) – ஆகும். இவற்றை, திருவாய்மொழி (6-10-10) – நிகரில் புகழாய் – என்பதில் காணலாம்.

**மூலம்** – இவற்றில்

(1) வாத்ஸல்யமாவது - "தோஷ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேதத்கர்ஹிதம்" என்கிறபடியே ஆச்ரிதனுடைய அபராதத்தைப் பாராதே, அங்கீகரிக்கைக்கு ஈடான இரக்கம். இது தன் தோஷங்களைப் பார்த்து அகலாமைக்கு உறுப்பாம்.

(2) ஸ்வாமித்வமாவது - ப்ரணவாதிகளில் சிக்ஷிதமான ஸம்பந்த விசேஷம். இது தன் பேறாக ரக்ஷிக்குமென்கிற தேற்றத்துக்கு உறுப்பாம்.

(3) ஸௌசீல்யமாவது – தான் ஸர்வாதிகனாய் வைத்துத் தண்ணியரான நிஷாத வாநர கோபாலாதிகளோடே நிரந்த்ர ஸம்ச்லேஷம் பண்ணுகை. இது "அம்மான் ஆழிப்பிரான் அவன் எவ்விடத்தான் யான் ஆர்" என்று அகலாதே, ஸாரத்ய தூத்யாதி பர்யந்தமாக அபேக்ஷிக்கும்படி விச்வஸநீயதைக்கு உறுப்பாம்.

(4) ஸௌலப்யமாவது – ஸநக ஸநந்தாதி மஹாயோகிகளுக்குங்கூட கிட்ட நிலமில்லாத தன்னை, "ஸகல மநுஜ நயன விஷயதாம் கத:" என்னும்படி பண்ணுகை. இது கிட்ட அரியனென்கிற நிஸ்ப்ருஹதை வாராமைக்கு உறுப்பாம்.

(5) ஸர்வஜ்ஞத்வமாவது – "அஜ்ஞாதம் நாஸ்தி தே கிஞ்சித்", "யோ வித்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத:" என்கிறபடியே ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரிக்கை. இது ஆச்ரிதர்க்குக் கொடுக்கவேண்டும் நன்மைகளிலும், கழிக்கவேண்டும் விரோதிகளிலும் இவன் அறியாதது இல்லையென்னும் அநுஸந்தானத்துக்கு உறுப்பாம்.

(6) ஸர்வசக்தித்வமாவது – அகடித கடநா ஸாமர்த்யம். இது ஸம்ஸாரிகளான நம்மை நினைத்தபோது நித்யஸூரி பரிஷத்திலே நிவேசிப்பிக்க வல்லன் என்கிற நிச்சயத்துக்கு உறுப்பாம்.

(7) ஸத்யஸங்கல்பத்வமாவது – தன் ஸங்கல்பத்துக்குத் தன்னாலும் ப்ரதிஹதி யின்றிக்கே யொழிகை. இது "அஹம் ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்கிற பாசுரம் பழுதாகாது என்கிற விஸ்ரம்பதுக்கு உறுப்பாம்.

(8) பரமகாருணிகத்வமாவது – ஸ்வார்த்த நிரபேக்ஷயான பரதுக்க நிராகரணேச்சை. இது அநந்தாபராதங்களை யுடையவர்களையும், "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்", "யதி வா ராவண: ஸ்வயம்" என்கிறபடியே ஒரு வ்யாஜ மாத்ரத்தாலே க்ஷமிக்கும் என்கிற தெளிவுக்கு உறுப்பாம்.

(9) க்ருதஜ்ஞத்வமாவது – "ந ஸ்மரத்யபகாராணாம் சதமப்யாத்மவத்தயா கதஞ்சிதுபகாரேண க்ருதேநைகேந துஷ்யதி", "ருணம் ப்ரவ்ருத்தமிவ ஹ்ருதயாந் நாபஸர்ப்பதி" என்கிறபடியே அத்யல்பாநுகூல வ்யாபாரத்தையும் பரமோபகாரம் பண்ணினாற்போலே மறவாதொழிகை. இது தன் பக்கலில் ஏதேனும் ஒரு வல்லகுறி கண்டால் இனி நம்மை ஒரு காலத்திலும் கைவிடான் என்றிருக்கைக்கு உறுப்பாம்.

(10) ஸ்திரத்வமாவது – ஆச்ரித ரக்ஷணத்தில் நிலையுடமை. இது அத்யந்தாந்தரங்கர் விலக்கிலும் “ந த்யஜேயம் கதஞ்சந” என்கிறபடியே நம்மை விடான் என்று நம்புகைக்கு உறுப்பாம்.

(11) பரிபூர்ணத்வமாவது – அவாப்த ஸமஸ்த காமத்வம். இது “அண்வப்யுபஹ்ருதம் பக்தை: ப்ரேம்ணா பூர்யேவ மே பவேத்”, “பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி” இத்யாதிகளிற்படியே, பாவபந்தம் பார்க்குமத்தனையொழிய மற்றும் நாம் இடும் பிச்சையில் வரிசை பாரான் என்று வல்ல கிஞ்சித்காரத்திலே முயல்கைக்கு உறுப்பாம்.

(12) பரமோதாரத்வமாவது – உபாய லாகவமும் உபேய கௌரவமும் மாத்ராபகர்ஷமும் பாராதே, ஸர்வஸ்வதாநம் பண்ணியும் நாம் செய்தது போராது என்றிருக்கும் வதாந்யதை. இது, ததிபாண்டாதிகளைப் போலே ஹடாத்காரம் பண்ணியும், அநுபந்தி பர்யந்தமாகப் பரமபுருஷார்த்தத்தை அபேக்ஷிக்கைக்கு உறுப்பாம்.

இப்படி மற்றும் சரண்யதைக்கு உபயுக்தமான குணங்களையும் அவற்றினுடைய உபயோக விசேஷங்களையும் இங்கே அநுஸந்தித்துக் கொள்வது.

**விளக்கம் –**

(1) வாத்ஸல்யம் – இந்தக் குணமானது, இராமாயணம் யுத்தகாண்டம் (18-3) - தோஷ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம் – தோஷத்துடன் கூடியபடி இருந்தாலும் தோழன் போன்று வந்தவனை நான் (இராமன்) விடமாட்டேன் – என்று கூறுவதற்கு ஏற்ப, தன்னை அண்டியவனிடம் உள்ள தோஷங்களை ஆராயாமல், அவனை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்யவல்லதாக ஸர்வேச்வரனிடம் உள்ள இரக்கம் ஆகும். இது, சேதநன் தன்னிடம் உள்ள தோஷங்களைக் கண்டு ஸர்வேச்வரனை நெருங்குவதற்கு அஞ்சி விலகாமல் இருப்பதற்குப் பயன்படுவதாகும்.

(2) ஸ்வாமித்வம் - ப்ரணவம் முதலானவற்றில் அறியப்படுவதான எஜமானன் – அடிமை என்னும் தொடர்பை உணர்த்துவதாகும். “நம்மைக் காப்பாற்றுவதைத் தன்னுடைய பேறாக எண்ணி ஸர்வேச்வரன் காப்பான்” என்னும் மஹாவிச்வாஸத்திற்கு இது பயன்படுவதாகும்.

(3) ஸௌசீல்யம் – ஸர்வேச்வரனாகிய தான் அனைத்திலும் மேம்பட்டவனாக உள்ளபோதிலும், தாழ்ந்தவராகிய வேடன் (குகன்), வானரங்கள், இடையர்கள் என்று எந்தவிதமான வேறுபாடும் ஆராயாமல் கலந்து நிற்பதாகும். இது, திருவாய்மொழி (5-1-7) - அம்மான் ஆழிப்பிரான் அவன் எவ்விடத்தான் யான் ஆர் – சக்கரம் ஏந்திய அவன் இருப்பது எங்கே? நான் யார் அதனை அடைய? - என்று எண்ணி விலகாமல், பாண்டவர்கள் க்ருஷ்ணனைத் தங்களுக்காகத் தேர் ஓட்டவும், தூது செல்லவும் பணித்தது போன்று ஸர்வேச்வரனிடம் ஆழ்ந்த நம்பிக்கையுடன் விண்ணப்பிப்பதற்கு உதவும்.

(4) ஸௌலப்யம் – ஸநகர், ஸநந்தர் போன்ற மஹாயோகிகளாலும் எளிதில் அடைய இயலாத ஸர்வேச்வரனாகிய தன்னை, கீதாபாஷ்யம் (முதல் ச்லோக அவதாரிகை) - ஸகல மநுஜ நயன விஷயதாம் கத: - அனைத்து மனிதர்களுடைய கண்களுக்கு இலக்காக உள்ளவன் – என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள தன்மை. இது, "ஸர்வேச்வரன் நம்மால் அடைவதற்கு மிகவும் அரியவன்" என்ற ஆசையற்ற நிலை வராமல் இருத்தலுக்குப் பயன்படுவதாகும்.

(5) ஸர்வஜ்ஞத்வம் –இராமாயணம் யுத்தகாண்டம் (17-35) - அஜ்ஞாதம் நாஸ்தி தே கிஞ்சித் – (அனுமன் இராமனிடம்) மூன்று உலகங்களிலும் நீ அறியாதவை ஏதும் இல்லை – என்றும், ந்யாயதத்வம் - யோ வித்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத: - எந்த ஸர்வேச்வரன் அனைத்தையும் குறித்து ஒரே நேரத்தில் நேரடியாகவே அறிகிறானோ – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்தையும் நேரடியாக அறியும் தன்மை. இது, சேதநன் தனது மனதில், "எனக்கு நன்மை எது என்றும், விலக்கவேண்டிய தீமை எது என்றும் ஸர்வேச்வரன் அறியாதது ஏதும் இல்லை", என்று எண்ணுவதற்குப் பயன்படும்.

(6) ஸர்வசக்தித்வம் – மற்ற யாராலும் செய்ய இயலாதவற்றையும் தான் செய்து முடிக்கவல்ல தன்மை. இது, "ஸம்ஸாரத்தில் உள்ள நம்மை ஸர்வேச்வரன் நினைத்தால் சட்டென்று நித்யஸூரிகளுக்கு ஒப்பான நிலையில் (மோக்ஷம்) புகச் செய்ய இயலும்" என்று உறுதியாக நம்புவதற்குப் பயன்படும்.

(7) ஸத்யஸங்கல்பம் – தான் ஒரு விஷயத்தை எண்ணிவிட்டால், அதனைத் தானே முயன்றாலும் தடுக்க இயலாத உறுதியான தன்மை. இது, கீதையில் (18-66) - அஹம் ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – நான் உன்னுடைய அனைத்து பாபங்களையும் விலக்கி மோக்ஷம் அளிக்கிறேன் – என்று கூறிய சொற்கள் பிசகாது என்று உறுதியாக நம்புவதற்குப் பயன்படும்.

(8) பரமகாருணிகத்வம் – தன்னுடைய பயனை எண்ணாமல், மற்றவர்களுடைய துன்பங்களைப் போக்குவதில் உள்ள விருப்பம் ஆகும். இது, எல்லையற்ற அபராதங்களை ஒருவன் செய்திருந்தாலும், இராமாயணம் யுத்தகாண்டம் (18-3) - மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் – (இராமன் கூறுவது) தோழன் போன்று வந்தவனை நான் விடமாட்டேன் – என்றும், இராமாயணம் யுத்தகாண்டம் (18-35) - யதி வா ராவண: ஸ்வயம் – (சுக்ரீவனிடம் இராமன்) விபீஷணனோ அல்லது இராவணனோ, யாராக இருப்பினும் – என்றும் உரைத்து, அவர்களிடம் காணப்படும் ஒரு சிறிய நன்மையை மட்டுமே கருத்தில் கொண்டு மன்னித்து ஏற்கிறான் என்று உறுதியாக நம்புவதற்குப் பயன்படும்.

(9) க்ருதஜ்ஞத்வம் – இராமாயணம் அயோத்யாகாண்டம் (1-11) - ந ஸ்மரத்யபகாராணாம் சதமப்யாத்மவத்தயா கதஞ்சிதுபகாரேண க்ருதேநைகேந துஷ்யதி – இராமன் மிகவும் பெருந்தன்மை கொண்டவன் என்பதால், ஒருவன் நூற்றுக்கணக்கான அபராதங்கள் செய்திருந்தாலும், அவற்றை எண்ணுவதில்லை; ஏதேனும் ஒரு சிறிய நன்மை செய்திருந்தாலும் மகிழ்கிறான் – என்றும், மஹாபாரதம் உத்யோகபர்வம் (47-23) - ருணம் ப்ரவ்ருத்தமிவ ஹ்ருதயாந் நாபஸர்ப்பதி – (க்ருஷ்ணன் உரைப்பது) திரௌபதி என்னை “கோவிந்தா” என்று அழைத்தது கடன் போன்று எனது மனதை விட்டு அகலாமல் உள்ளது – என்றும் கூறுவதற்கு ஏற்ப மிகவும் சிறிய அளவே நல்லதைச் செய்தாலும், அதனைத் தனக்குச் செய்த பேருதவியாக எண்ணி மறக்காமல் உள்ள தன்மை. இது, நம்மிடம் ஏதேனும் ஒரு சிறிய நன்மைக்கான அடையாளத்தைக் கண்டால் கூட, நம்மை எப்போதும் அவன் கைவிடமாட்டான் என்று உறுதியுடன் இருப்பதற்குப் பயன்படும்.

(10) ஸ்திரத்வம் – தனது அடியார்களைக் காப்பாற்றுவதில் எப்போதும் உறுதியுடன் இருக்கும் தன்மை. இது, ஸர்வேச்வரனுக்கு மிகவும் அந்தரங்கமாக உள்ளவர்களான பெரியபிராட்டியார் போன்றவர்கள் தடுத்தாலும், இராமாயணம் யுத்தகாண்டம் (18-3) - ந

த்யஜேயம் கதஞ்சந – (இராமன் உரைப்பது) ஒருபோதும் கைவிடமாட்டேன் – என்று கூறுவதற்கு ஏற்ப, நம்மைக் கைவிடமாட்டான் என்று உறுதியாக நம்புவதற்குப் பயன்படும்.

(11) பரிபூர்ணத்வம் – தான் விரும்பும் அனைத்தையும் பெறவல்ல தன்மை. இது, ஸ்ரீமத்பாகவதம் (10-81-3) - அண்வப்யுபஹ்ருதம் பக்தை: ப்ரேம்ணா பூர்யேவ மே பவேத் – அடியார்கள் எனக்கு ஏதேனும் அணு அளவே கொண்டு வந்தாலும் அவர்களிடம் உள்ள ப்ரேமை காரணமாக அது எனக்கு மிகவும் பெரியதாகவே தோன்றும் – என்றும், கீதை (9-26) - பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி – இலை, புஷ்பம், பழம், நீர் என்று எதனை என்றாலும், எனக்குப் பக்தியுடன் அளித்தால் ஏற்கிறேன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, நாம் அளிப்பதில் நம்முடைய ப்ரேமை வெளிப்படுவதைக் காண்கிறானே அல்லாமல், நாம் அளிக்கும் பொருளின் தரம் பார்ப்பதில்லை என்று எண்ணி நம்மால் இயன்றவற்றை அளிக்க முயலுவதற்குப் பயன்படும்.

(12) பரம உதாரத்வம் – சேதநன் கைக்கொள்கின்ற உபாயத்தின் சிறுமை, அதனால் அவன் பெறப்போகும் பலனின் மேன்மை, அந்தப் பலனைப் பெற உள்ளவனுடைய தாழ்மை போன்ற எதனையும் ஆராயாமல், “நாம் அந்த மனிதனுக்குச் செய்த நன்மைகள் போதாது” என்று எண்ணியிருக்கும் வள்ளல் தன்மை. இது, ததிபாண்டன் என்பவன் தனக்கும் தன்னுடைய வீட்டில் க்ருஷ்ணன் ஒளிந்திருந்த பானைக்கும் மோக்ஷம் வேண்டும் என்று கட்டாயப்படுத்திப் பெற்றது போன்று, சேதநன் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் மோக்ஷம் அளிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்திப் பெறுவதற்குப் பயன்படும்.

இப்படியாக ஸர்வேச்வரன் உபாயமாக ஆவதற்கு அவசியமான மற்ற குணங்களையும், அவற்றின் பயன்களையும் இங்கு எண்ணிக் கொள்ளலாம்.

## த்வயத்தின் இரண்டாம் வரியில் உள்ள “நாராயண” என்னும் பதம் மூலம் உணர்த்தப்படும் முக்கிய குணங்கள்

**மூலம்** – உபாயாநுஷ்டாந தசையில் அவ்வோ வித்யைகளுக்கு அடைத்து கதிபய குணவிசிஷ்டன் அநுஸந்தேயனாய், ப்ராப்தி தசையில் ஸமஸ்த குண விபூதி விசிஷ்டன் அநுபாவ்யனானாலும், இங்கு உத்தரகண்டத்தில் நாராயண சப்தத்துக்கு ஸ்வரூப க்ருதமாயும் குணக்ருதமாயும் வரும் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்திலே நோக்கானபடியாலே, அதுக்கு உபயுக்தங்களான சேஷித்வ நிரதிசய போக்யத்வாதிகள் ப்ரதாநங்கள். இங்கு ஸம்பந்த விசேஷாதி முகத்தாலே, ஆநுகூல்ய ஸங்கல்பமும் ப்ரதிகூல்ய வர்ஜநமும் ஸூசிதமானபடி அதிகாராந்தரத்திலே சொன்னோம்.

**விளக்கம்** – (வேதங்களில் கூறப்பட்டுள்ள வித்யைகளைப் பின்பற்றி) உபாஸனம் செய்யும்போது, அந்தந்த வித்யைகளுக்கு ஏற்றபடி உள்ளதான ப்ரஹ்மத்தின் சில குணங்களை மட்டுமே எண்ணியபடியும், அந்த உபாஸனங்களுக்கான பலனை அனுபவிக்கும் நேரத்தில் ப்ரஹ்மத்தின் அனைத்து குணங்களையும் எண்ணியபடியும் இருப்பர். இதே போன்று இங்கும் கொள்ளவேண்டும். த்வயத்தின் இரண்டாவது வரியில் உள்ள “நாராயண” என்னும் சொல்லானது அனைத்து குணங்களையும் கூடியவனாகவே அவனைக் குறிக்கிறது; ஆனால் இங்கு அவனுடைய ஸ்வரூபம் மற்றும் குணங்களைக் காணும் நாம், அவனுக்குக் கைங்கர்யம் செய்யவேண்டும் என்ற எண்ணம் கொள்வதால், அந்தக் கைங்கர்யத்துக்கு ஏற்ற குணங்களையே இங்குள்ள “நாராயண” என்னும் சொல் மூலம் கொள்ளலாம். இதற்குத் தேவைப்படும் குணங்களானவை அவனுடைய எஜமானத்தன்மையும், நமக்கு எல்லையற்ற ஆனந்தத்தை அளிக்கவல்ல தன்மையுமே ஆகும். இங்கு வெளிப்படும் எஜமானன் – அடிமை என்னும் ஸம்பந்தம் மூலம், அவனுக்கு எது ஏற்குமோ அதனை மட்டுமே நாம் செய்வோம் என்றும், அவனுக்கு விருப்பம் அல்லாதவற்றைக் கைவிடுவோம் என்றும் நாம் எடுக்கும் நிலைப்பாடு மறைமுகமாக வெளிப்படுகிறது என்பதை பரிகர விபாக அதிகாரத்தில் (அதிகாரம் – 11) கூறினோம்.

## "சரண" என்னும் சொல்லில் விளக்கம்

**மூலம்** – இவ்விடத்தில் "ஸ்ரீமந்நாராயணசரணௌ" என்று ஸமஸ்தமாகவும் யோஜிப்பார்கள். "கமலநயந வாஸுதேவ விஷ்ணோ தரணிதராச்யுத சங்கசக்ரபாணே பவ சரணம்" என்கிற ப்ரயோகத்தையும், "த்வமேவ உபாய பூதோ மே பவ" என்கிற வாக்யத்தையும், "அகலகில்லேன்" என்கிற பாட்டையும், "அகிஞ்சந: அநந்ய கதி: சரண்ய" என்கிற ஸ்தோத்ர வாக்யத்தையும், இத்யாதி மந்த்ராந்தரங்களையும், த்வய விவரணமான கத்யத்தையும் பார்த்து, "ஸ்ரீமந், நாராயண" என்று இரண்டு ஸம்புத்திகளாக்கி, "தவ" என்று ஒரு பதத்தை அத்யாஹரித்தும் யோஜிப்பார்கள். இப்படி வ்யஸ்தமானாலும், ஸமஸ்தமானாலும் விசேஷண விசேஷயங்கள் நிற்கும் நிலைக்கு வைஷம்யமில்லை. இந்நிலை, பூர்வோத்தர கண்டங்களிலும் ஒக்கும்.

**விளக்கம்** – இங்கு "ஸ்ரீமந் நாராயண சரணௌ" என்று ஒரே தொகுதியாகக் கொண்டு "ஸ்ரீமானாகிய நாராயணனின் திருவடிகளில்" என்று பொருள் வரும்படியாகவும் கொள்வர். அல்லது,

- விஷ்ணுபுராணம் (3-7-33) - கமலநயந வாஸுதேவ விஷ்ணோ தரணிதராச்யுத சங்கசக்ரபாணே பவ சரணமிதீரயந்தி யே வை த்யஜ பட தூரதரேண தாநபாபாந் – யமன் தனது கிங்கரனிடம், "தாமரை போன்ற கண்கள் கொண்டவனே! வாஸுதேவா! விஷ்ணுவே! அடியார்களை நழுவவிடாதவனே! சங்கு மற்றும் சக்கரங்களைத் திருக்கரங்களில் கொண்டவனே! நீயே எனக்கு அடைக்கலம் – இவ்விதமாகக் கூறுபவர்கள் எந்தவிதமான பாவங்களும் அற்றவர்கள் ஆவர். அவர்களை நீ அணுகாமல், அவர்களை விட்டு விலகிச் செல்வாயாக", என்றான் – என்பதில் உள்ள "சரணம்" என்னும் சொல்லின் உபயோகம்

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-3) - த்வமேவ உபாய பூதோ மே பவ – நீயே எனக்கு உபாயமாக உள்ளாய் – என்னும் வாக்கியம்

- திருவாய்மொழி (6-10-10) – அகலகில்லேன் – என்னும் பாசுரம்

- ஸ்தோத்ரரத்னம் (22) - அகிஞ்சந: அநந்ய கதி: சரண்ய – உன்னைத் தவிர வேறு உபாயமும் இலக்கும் இல்லாத நான் உன்னையே சரணம் அடைகிறேன் – என்னும் ச்லோகம்

இது போன்றே உள்ள மற்றும் பல மந்த்ரங்கள், த்வயத்தினை விவரிப்பதாகவே உள்ள சரணாகதி கத்யம் ஆகிய பலவற்றையும் ஆராய்ந்து, “ஸ்ரீமந் நாராயண சரணௌ” என்பதை “ஸ்ரீமந்” மற்றும் “நாராயண” என்றும் பிரித்து, அவை இரண்டையும் அவனை அழைக்கும் சொற்களாக்கி, அங்கு “தவ = உன்னுடைய” என்னும் ஒரு சொல்லை உண்டாக்கிக் கொண்டு, “ஸ்ரீமந் நாராயணா! உன்னுடைய திருவடிகளே சரணம்” என்று கொள்வர். இப்படியாக இங்கு பிரிக்கப்பட்டாலும், சேர்ந்து கொள்ளப்பட்டாலும், “ஸ்ரீ” என்னும் அடைமொழி மற்றும் அந்த அடைமொழியால் உணர்த்தப்படும் “நாராயண” என்னும் வஸ்து ஆகிய இரண்டுக்கும் இடையே உள்ள ஸம்பந்தத்துக்கு எந்த வேறுபாடும் இல்லை. இந்த நிலையானது, த்வயத்தின் முதல் வரி மற்றும் இரண்டாம் வரி ஆகிய இரண்டிற்கும் ஒரே போன்று பொருந்தும்.

**மூலம்** – சரணௌ என்கிற சப்தம் நித்யமான திவ்யமங்கள விக்ரஹத்துக்கு உபலக்ஷணம். ஸ்ரிய:பதியினுடைய ஸர்வஸ்மாத் பரத்வமும் நித்ய விக்ரஹ யோகமும் ஜ்ஞாதவ்யங்களில் ப்ரதாநதமாமென்னுமிடம்,

> நித்யஸித்தே ததாகாரே தத்பரத்வே ச பௌஷ்கர
> யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே தஸ்யாஸௌ ஸந்நிதிம் வ்ரஜேத்

இத்யாதிகளிலே ப்ரஸித்தம். ஆகையால் “ஸ்ரீமந்நாராயண” என்கிற இடத்திலே ஸௌலப்யாந்விதமான பரத்வமும், “சரணௌ” என்கிற இடத்திலே நித்ய விக்ரஹ யோகமும் அநுஸந்தேயம்.

**விளக்கம்** – “சரணௌ” என்னும் பதமானது திருவடிகளை உணர்த்தினாலும், அது பகவானுடைய திவ்யமங்களை திருமேனி முழுவதற்கும் உதாரணம் ஆகும் (அதாவது முழுவதையுமே குறிக்கும்). மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய ஸர்வேச்வரன் அனைவரைக் காட்டிலும் உயர்ந்தவன் என்பதும், அவன் திவ்யமங்கள திருமேனியுடன் கூடியுள்ளவன் என்பதும் அறியப்படவேண்டியவற்றில் முதன்மையானவை ஆகும். இதனை, பௌஷ்கர ஸம்ஹிதையில் - நித்யஸித்தே ததாகாரே தத்பரத்வே ச பௌஷ்கர யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே தஸ்யாஸௌ ஸந்நிதிம் வ்ரஜேத் – எப்போதும் உள்ளவனாகிய

ஸர்வேச்வரனுடைய திருமேனியைக் குறித்தும், அவன் அனைவரைக் காட்டிலும் உயர்ந்தவன் என்பது குறித்தும் யார் ஒருவனுடைய மனதில் இவை இவ்விதம் உள்ளன என்னும் எண்ணம் உள்ளதோ அவர்களிடம் எம்பெருமான் வருவான் – என்பதனால் உணரலாம். ஆகவே த்வயத்தில் உள்ள "ஸ்ரீமந்நாராயண" என்பதன் மூலம் ஸௌலப்யத்துடன் (எளிதில் அண்டலாம் என்னும் தன்மை) கூடிய உயர்ந்த நிலையில் உள்ள தன்மையும், "சரணௌ" என்பதன் மூலம் அவன் திவ்யமங்கள திருமேனியுடன் கூடியுள்ளவன் என்பதும் எண்ணப்படவேண்டும்.

## எம்பெருமானுடைய திவ்யமங்கள திருமேனியின் மேன்மை

**மூலம் –** திவ்யாத்ம ஸ்வரூபத்திலும் கீழ்ச்சொன்ன குணாதிகளிலும் தெளிவில்லாதார்க்கும், சுத்த ஸத்த்வ த்ரவ்யமயமாய், ஸ்வவிஷய ஜ்ஞாநத்தாலே ஜ்நாந ஸங்கோசத்துக்கு நிவர்த்தகமாய், பரத்வ ஸௌலப்ய வ்யஞ்ஜகமான திவ்யமங்கள விக்ரஹமே இலக்காம். இப் ப்ராதாந்யத்தைப் பற்றி கத்யத்தில் குணங்களுக்கு முன்னே திவ்யமங்கள விக்ரஹத்தை அருளிச்செய்தார். திவ்யாத்ம ஸ்வரூபத்தில் தெளிவுடையராயிருக்கச் செய்தேயும், "மூர்த்தம் ப்ரஹ்ம ததோபி தத் ப்ரியதரம் ரூபம் யதத்யத்புதம்" என்னும்படி ஈச்வரன் தனக்கும் போக்யமான நித்ய விக்ரஹாநுபவத்தில் ஊற்றத்தாலே திருமங்கையாழ்வார் தம்மை ஈச்வர விஷயத்தில் தேஹாத்மவாதிகளாக அருளிச்செய்வர்.

**விளக்கம்** – ஸர்வேச்வரனுடைய திவ்யாத்ம ஸ்வரூபம் மற்றும் "நாராயண" என்பதன் மூலம் உணர்த்தப்பட்ட அவனுடைய குணங்கள் ஆகியவற்றைக் குறித்துத் தெளிவான அறிவு இல்லாதவர்களுக்கு, அவனுடைய திவ்யமங்கள திருமேனியே இலக்காகும். அவனுடைய அந்தத் திருமேனியானது சுத்தஸத்வமயமானதாகும். தன்னைக் குறித்து நன்றாக அறிந்தவனுடைய ஞானத்தின் சுருக்கங்களை விலக்கி, அந்த ஞானத்தை மலரச் செய்வதாகும். மேலும் அது அவனுடைய உயர்ந்த தன்மையையும் (பரத்வம்), எளிய தன்மையையும் (ஸௌலப்யம்) ஒருங்கே வெளிப்படுத்துவதாகும். இதன் முக்கியத்வம் காரணமாகவே எம்பெருமானார் கத்யத்தில், அவனுடைய குணங்களை வர்ணிப்பதற்கு முன்பாகவே இந்தத் திருமேனியை வர்ணித்தார். திருமங்கையாழ்வார் அவனுடைய திவ்யாத்ம ஸ்வரூபம் குறித்து மிகவும் தெளிந்த ஞானம் உடையவர் ஆவார்; ஆனாலும், சதுச்லோகி (4) - மூர்த்தம் ப்ரஹ்ம ததோபி தத் ப்ரியதரம் ரூபம் யதத்யத்புதம் –

அவனுடைய திவ்யமங்கள விக்ரஹம் என்பது அவனுடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தைக் காட்டிலும் அவனுக்கு மிகவும் விருப்பமானதாக உள்ளது – என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனுக்குக் கூட இன்பமாக உள்ளதால், அந்தத் திருமேனியை அனுபவிக்க வேண்டும் என்னும் ஆழ்ந்த ஈடுபாடு காரணமாக, அவனுடைய திவ்யமங்கள திருமேனி அல்லாமல் திவ்யாத்ம ஸ்வரூபம் என்று ஏதும் இல்லை, அவை ஒன்றே என அருளிச்செய்வார்.

**மூலம்** – ஸர்வேச்வரனுடைய திவ்யமங்கள விக்ரஹத்துக்கு

பாபம் ஹரதி யத் பும்ஸாம் ஸ்ம்ருதம் ஸங்கல்பமநாமயம்
தத் புண்டரீக நயநம் விஷ்ணோர் த்ரக்ஷ்யாம்யஹம் முகம்

ரூபௌளதார்ய குணை: பும்ஸாம் த்ருஷ்டி சிதாபஹாரிணம்

இத்யாதிகளிற்படியே சுபத்வமும், ஆச்ரயத்வமுமுண்டு. பத்தருக்கு ஆச்ரயத்வமுண்டாகிலும் சுபத்வமில்லை. பகவத் ஸ்வரூபத்துக்கு சுபத்வமுண்டேயாகிலும், ஆச்ரயத்வமில்லை. ஸம்ஸாரபந்த ரஹிதமான பரிசுத்தாத்ம ஸ்வரூபத்துக்கு ஸம்ஸாரிக்கைக்கு ஸஹகாரி யோக்யதை இல்லையேயாகிலும், பரதந்த்ர சேதநதையாலே ஸம்ஸரிக்கைக்கு ஸ்வரூப யோக்ய வஸ்துவாகையாலே அதுக்கு ஹேய ப்ரத்யநீகத்வரூப சுபத்வமுமில்லை, ஆச்ரயத்வமுமில்லை. முக்தருடைய விக்ரஹ பரிக்ரஹ தசையிலும் நித்ய விக்ரஹரான நித்யருக்கும் ஆச்ரயத்வமுண்டேயாகிலும், ஸம்ஸார நிவர்த்தந க்ஷமமான, சுபத்வமில்லை. ஆகையால், திவ்யமங்கள விக்ரஹத்துக்கே முமுக்ஷூபயுக்தமான சுபத்வமும், ஆச்ரயத்வமும் உள்ளது.

பராவர ஸுகக்ராஹ்யம் ப்ரமபோத ப்ரஸாவகம்
ஸ்வரூபாத் ஸ்வாமிநோ ரூபமுபாதேயதமம் விது:

சரணாகதிவிதாயக வாக்யத்திலும், “மாமேகம் சரணம் வ்ரஜ” என்று விக்ரஹ விசிஷ்டன் இலக்காய்த் தோற்றினான். இத் திவ்ய விக்ரஹ பர வ்யூஹாத்யவஸ்தா பஞ்சகத்திலும் சுபாச்ரயமென்னுமிடம் சாஸ்த்ர ஸித்தம்.

**விளக்கம்** – ஸர்வேச்வரனுடைய திவ்யமங்கள விக்ரஹத்துக்கு, கீழே உள்ள வரிகளின்படி, த்யானிப்பவர்களுடைய பாபங்களை நீக்கும் தன்மை (சுபத்வம்) மற்றும் அவர்களுடைய மனதில் ஆழமாகப் பதியும் தன்மை (ஆச்ரயத்வம்) ஆகிய இரண்டும் உண்டு:

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-17-4) - பாபம் ஹரதி யத் பும்ஸாம் ஸ்ம்ருதம் ஸங்கல்பமநாமயம் தத் புண்டரீக நயநம் விஷ்ணோர் த்ரக்ஷ்யாம்யஹம் முகம் – ஸர்வேச்வரன் தனது ஸங்கல்பத்தால் எடுத்துக் கொண்ட திருமேனியின் அழகான திருமுகமானது, அதனை நினைத்த நொடியிலேயே அனைத்து பாபங்களையும் போக்கவல்லது; அப்படிப்பட்ட தாமரைக்கண்கள் கொண்ட திருமுகத்தை நான் எப்போது காண்பேன்?

- இராமாயணம் அயோத்யாகாண்டம் (3-39) - ரூபௌதார்ய குணை: பும்ஸாம் த்ருஷ்டி சிதாபஹாரிணம் – தனது அழகால் மனிதர்களின் கண்களையும், தாராள குணத்தால் அவர்களுடைய மனதையும் கவரவல்ல இராமன்

ஸம்ஸாரத்தில் பந்தப்பட்டுள்ள ஜீவாத்மாக்களுடைய சரீரத்திற்கு மற்றவர்களுடைய மனத்தால் நினைக்கப்படக்கூடிய தகுதி உள்ளது என்றாலும், அவ்விதம் நினைப்பவர்களுடைய பாபங்களைப் போக்கும் திறன் அதற்கு இல்லை. ஸர்வேச்வரனுடைய திவ்யாத்ம ஸ்வரூபத்திற்கு பாபங்களைப் போக்கும் வல்லமை இருந்தாலும், த்யானிக்கப்படக்கூடியதாக அது இல்லை. ஸம்ஸாரத்திலிருந்து முக்தி அடைந்த ஜீவாத்ம ஸ்வரூபத்துக்கு, மீண்டும் ஸம்ஸாரத்தில் வந்து சிக்கிக் கொள்வதற்கான கர்மபந்தம் என்னும் துணைத்தகுதி (ஸஹகாரி காரணம்) இல்லை; ஆனாலும் அவன் இயல்பாகவே மற்றவர்களுடைய வசப்பட்டுள்ளதால் (ஸர்வேச்வரனுடைய விருப்பத்திற்கு ஏற்ப நடக்கும் நிலை), மீண்டும் ஸம்ஸாரத்தில் வந்து சிக்கிக் கொள்ளும் தகுதி உள்ளது; ஆகவே அந்த ஆத்மஸ்வரூபத்திற்கும் (முக்தி பெற்ற ஆத்மா), தோஷங்களுக்கு எதிர்த்தட்டாக உள்ளதான பாபங்களைப் போக்கும் திறன் மற்றும் மனதில் ஆழமாகப் பதியும் தன்மை ஆகிய இரண்டுமே இல்லை. முக்தி அடைந்த ஜீவாத்மா மோக்ஷத்தில் அடையும் வேறு சரீரம், நித்யஸூரிகளுடைய சரீரம் ஆகியவை த்யானிக்கவல்லதாக உள்ளபோதிலும், ஸம்ஸாரத்திற்குக் காரணமாக உள்ள பாபங்களை நீக்கும் திறன் அவற்றுக்கு இல்லை. ஆகவே எம்பெருமானுடைய திவ்யமங்கள

திருமேனிக்கு மட்டுமே, மோக்ஷத்தை விரும்பும் முமுக்ஷுக்களுக்குப் பயன்படுவதான பாபங்களைப் போக்கும் திறன் மற்றும் மனதில் ஆழமாகப் பதியும் தன்மை ஆகிய இரண்டுமே உள்ளது. பராவர ஸுகக்ராஹ்யம் ப்ரமபோத ப்ரஸாவகம் ஸ்வரூபாத் ஸ்வாமிநோ ரூபமுபாதேயதமம் விது: - உயர்ந்த நான்முகன் முதலான தேவர்களும், தாழ்ந்த மற்ற சேதநர்களும் எளிதாக த்யானிக்க ஏற்றதாகவும், பக்தி மற்றும் ஞானம் ஆகியவற்றை வளர்க்கவல்லதும் ஆகிய எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்ரஹமே அவனுடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தைக் காட்டிலும் நமக்கு ஏற்கத் தகுந்தது என்று முன்னோர் உரைத்தனர். சரணாகதியை விதிப்பதான கீதை (18-66) - மாமேகம் சரணம் வ்ரஜ – என்னை மட்டுமே சரணம் அடைவாயாக – வாக்கியத்திலும், பகவான் தனது திருமேனியையே உணர்த்தினான். பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி மற்றும் அர்ச்சை ஆகிய ஐந்து நிலைகளில் உள்ள ஸர்வேச்வரனுடைய திருமேனிக்கு இந்த இரண்டு தன்மைகளுமே உண்டு என்பதால், அவற்றை “சுபாச்ரயம்” என்றே சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

## ஸர்வேச்வரனுடைய திருமேனியில் திருவடிகளை மட்டுமே பற்றுவதன் காரணம்

**மூலம் –**

சிதாலம்பநஸௌகர்ய க்ருபோத்தம்பகதாதிபி:
உபாயத்வமிஹ ஸ்வாமி பாதயோரநுஸம்ஹிதம்

இங்கு தாஸபூதன் ஔசித்யதிசயத்தாலும், அநதிக்ரமணீய ஹி சரண க்ரஹணம் என்கிறபடியே க்ருபோத்தம்பகத்வாதிசயத்தாலும், “தவாம்ருதஸ்யந்திந” இத்யாதிகளிற்படியே போக்யத்வாதிசயத்தாலும், திருவடிகளை அவலம்பிக்கிறான். இவ்வர்த்தம் “ஸர்வதா சரண த்வந்த்வம்”, “த்வத் பாதகமலாதந்யத்”, “மம தே பாதயோ: ஸ்திதம்”, “லோகவிக்ராந்த சரணௌ சரணம் தேவ்ரஜம் விபோ”, “ஸ ப்ராதுச் சரணௌ காடம்”, “தஸ்ய தாம்ரதலௌ தாத சரணௌ ஸுப்ரதிஷ்டிதௌ | ஸுஜாத ம்ருது ரக்தாபி: அங்குலீபிரலங்க்ருதௌ | ப்ரயதேந மயா மூர்த்நா க்ருஹீத்வா ஹி அபிவந்திதௌ”,

"சரணௌ சரணம் யாத:", "ப்ரபந்நாகௌக வித்வம்ஸி சரணௌ சரணம் கத:" இத்யாதிகளிலும் ப்ரஸித்தம். இவற்றை அடியொற்றினவர்களும் "உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேன்" என்றும், "த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே" என்றும் அருளிச்செய்தார்கள். "ஸௌகந்த்ய ஸௌகுமார்யாதி குண விக்ரஹவாந் ஹரி: | தஸ்ய ஸ்வாத்ம ப்ரதாநே து ஸாதநம் ஸ்வபத த்வயம்" என்று அபியுக்தரும் ப்ரதிபாதித்தார்கள்.

**விளக்கம்** – சிதாலம்பநஸௌகர்ய க்ருபோத்தம்பகதாதிபி: | உபாயத்வமிஹ ஸ்வாமி பாதயோரநுஸம்ஹிதம் – த்யானத்திற்கு வசதியான இலக்காக இருத்தல், அவனுக்குள்ள க்ருபையை அதிகரித்தல் போன்ற காரணங்களால், த்வய மந்த்ரத்தில், உபாயமாக உள்ள தன்மையானது ஸர்வேச்வரனுடைய திருவடிகளில் கொள்ளப்பட்டது. ஸர்வேச்வரனுடைய திருவடிகளானவை அவனுடைய அடிமையாக உள்ள ஜீவாத்மாவால் சரணம் புகத் தகுதியாக உள்ளதாலும், ஒருவனுடைய திருவடிகளைப் பற்றும்போது அவன் அதனைத் தாங்கமாட்டான் என்பதால் ஸர்வேச்வரனுடைய கருணையை நன்றாக வளரச் செய்யும் தன்மை திருவடிகளைப் பற்றும்போது உண்டாவதாலும், ஸ்தோத்ரரத்னம் (27) – தவ அம்ருதஸ்யந்திந – மோக்ஷத்தை அளிக்கவல்ல திருவடித்தாமரை – என்பதற்கு ஏற்ப இன்பம் அளிக்கவல்லதாக உள்ளதாலும், ஸர்வேச்வரனுடைய திருவடிகளைப் பற்றுகிறான். இந்தக் கருத்து கீழே உள்ள பல வரிகளிலும் வெளிப்படுகிறது:

- ஜிதந்தே (1-2) - ஸர்வதா சரண த்வந்த்வம் – எப்போதும் உனது இரண்டு திருவடிகளையே சரணம் அடைகிறேன்
- ஜிதந்தே (1-10) - த்வத் பாதகமலாதந்யத் – உனது இரண்டு திருவடித்தாமரைகள் (அல்லாமல் எனக்கு நன்மைகளைத் தரவல்லது ஏதும் இல்லை)
- ஜிதந்தே (1-13) - மம தே பாதயோ: ஸ்திதம் – எனது மனம் உனது திருவடிகளில் நிலையாக உள்ளது
- ஜிதந்தே - லோகவிக்ராந்த சரணௌ சரணம் தேவ்ரஜம் விபோ – உலகம் அளந்த உனது திருவடிகளே எனக்குச் சரணம்

- இராமாயணம் அயோத்யாகாண்டம் (31-27) - ஸ ப்ராதுச் சரணௌ காடம் – லக்ஷ்மணன் இராமனுடைய திருவடிகளை இறுகப் பிடித்து

- மஹாபாரதம் வனபர்வம் (160-135) - தஸ்ய தாம்ரதலௌ தாத சரணௌ ஸுப்ரதிஷ்டிதௌ | ஸுஜாத ம்ருது ரக்தாபி: அங்குலீபிரலங்க்ருதௌ | ப்ரயதேந மயா மூர்த்நா க்ருஹீத்வா ஹி அபிவந்திதௌ – சிவந்த உள்ளங்கால்கள், அழகான மெல்லிய சிவந்த விரல்கள் ஆகியவற்றுடன் கூடிய பகவானுடைய திருவடிகள் தூய மனதுடன் எனது சிரஸால் வணங்கப்பட்டன

- சரணௌ சரணம் யாத: - உனது திருவடிகளையே சரணம் என்று புகுந்தேன்

- ப்ரபந்நாகௌக வித்வம்ஸி சரணௌ சரணம் கத: - ப்ரபந்நர்களுடைய பாபங்களை அழிக்கவல்ல உனது திருவடிகளைச் சரணம் அடைந்தேன்

இவற்றையே பின்பற்றுபவர்கள், திருவாய்மொழியில் (6-10-10) – உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன் – என்றும், ஸ்தோத்ரரத்னத்தில் (22) - த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே – உனது திருவடிகளையே சரணம் என்று புகுந்தேன் – என்றும் கூறினர். இதனையே ஸ்வாமி பராசரபட்டர் போன்றவர்கள் - ஸௌகந்த்ய ஸௌகுமார்யாதி குண விக்ரஹவாந் ஹரி: | தஸ்ய ஸ்வாத்ம ப்ரதாநே து ஸாதநம் ஸ்வபத த்வயம் – ஸர்வேச்வரன் நல்ல மனம், மிகுந்த மென்மை போன்ற பல தன்மைகளுடன் கூடிய திருமேனியைக் கொண்டவன் ஆவான்; இப்படிப்பட்ட அவன் தன்னை அனுபவிக்கும்விதமாக அளிக்கும் இரண்டு திருவடிகளே உபாயமாக உள்ளன – என்பது போன்று அருளிச்செய்தார்கள்.

## "சரணம்" என்னும் பதத்திற்கு "திருவடிகளை மட்டுமே" என்பதைத் தேறும் பொருளாகக் கொள்ளல்

**மூலம்** – சரணௌ என்கிற இடத்தில் "தமேவ சரணம் கச்ச", "கழல்களையே சரணாக", "நாகணைமிசை நம்பிரான் சரணே சரண்" இத்யாதிகளிற்படியே அவதாரணம் விவக்ஷிதம்.

**விளக்கம்** – “சரணௌ” என்னும் பதத்திற்கு, கீதை (18-62) - தமேவ சரணம் கச்ச – அவனுடைய திருவடிகளை மட்டுமே சரணம் புகுவாய் – என்றும், திருவாய்மொழி (5-8-11) - கழல்களையே சரணாக – என்றும், திருவாய்மொழி (5-10-11) - நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, “அவனுடைய திருவடிகளை மட்டுமே சரணம் என்று” என்பதே தேறுகின்ற பொருளாகக் கொள்ளவேண்டும்.

“சரணௌ” என்ற பதத்தில் உள்ள இருமை, உபாய நேரத்தில் பெரியபிராட்டியின் ஸம்பந்தம் உள்ளது என்பதை மறுக்காமல் உள்ளது

**மூலம்** – சரணாவிதி நிர்த்தேச: பத்நீ வைசிஷ்டய பாதக:
இதி மந்தைரிதம் ப்ரோக்தம் ஸ்ரீமச்சப்த விரோதத:

சப்தஸ்வரஸத: ப்ராப்தம் வைசிஷ்டயம் ப்ரதமச்ருதம்
விசேஷ்ய சரணத்வித்வம் ந ஹி பாதிதுமர்ஹதி

சரணாநிதி வக்தவ்ய இதி யச்ச ப்ரஸஞ்ஜிதம்
க்ரந்தஜ்ஞைரபஹாஸ்யம் தத் ப்ரதிபாதாந்யத: அந்வயாத்

ந ஸம்ராஜி ஸபத்நீகே ஸத்விதீயோக்தி ஸாஹஸம்
தத: அத்ரேத்யபராம்ருச்ய தர்சிதம் குருஸாஹஸம்

**விளக்கம்** – (மேலே உள்ள நான்கு ச்லோகங்களுக்கும் ஒன்றாக விளக்கம் தரப்படுகிறது) த்வய மந்த்ரத்தில் உள்ள “சரணௌ” என்னும் பதம் இருமையில் உள்ளதன் மூலம் [“சரண” என்பதன் இருமை “சரணௌ” ஆகும்], பகவான் “ஸ்ரீயை” தனது குணமாகவே கொண்டுள்ளான் [அல்லது உபாய நிலையிலும் பெரியபிராட்டியின் ஸம்பந்தம் உள்ளது] என்ற கருத்து மறுக்கப்பட்டது என்னும் இந்த வாதமானது, மந்தபுத்தி உள்ளவர்களால் கூறப்பட்டது [அவர்களுடைய கூற்றின்படி, பிராட்டிக்கும் ஸம்பந்தம் உண்டு என்றால், இருமைக்குப் பதிலாக நான்கை உணர்த்தும் பதமே வரவேண்டும் என்பதாகும். இருமையில் கூறுவதால், இங்கு பகவானின் திருவடிகள் மட்டுமே கூறப்பட்டது என்பது

அவர்கள் கருத்து]. த்வயத்தின் தொடக்கத்திலேயே "ஸ்ரீமத்" என்னும் பதம் மூலம் "தனது குணங்களான ஸ்ரீயுடன்" என்று கூறப்படுவதால், இந்த வாதம் தள்ளப்படவேண்டியதே ஆகும். "ஸ்ரீ" என்று தொடக்கத்திலேயே அறியப்படுவதான பெரியபிராட்டியுடனான ஸம்பந்தத்தை, மந்த்ரத்தில் அடுத்து வருவதான திருவடிகளுடைய இரண்டாக உள்ள தன்மையைக் கூறும் "சரணௌ" என்பது தடுக்கவல்லது அல்ல. இங்கு "சரணங்களை" என்று பன்மையில் கூறியிருக்கவேண்டும் என்று கூறப்படும் அவர்களுடைய வாதம் இலக்கணத்தை அறிந்தவர்களால் பரிகாசம் செய்வதற்கு ஏற்றதாகும் [அதாவது இரண்டு ஜோடி திருவடிகள் = நான்கு திருவடிகள் என்று கூறியிருக்கவேண்டும் என்பது வாதம்]; காரணம் கணவன் முதன்மையானவன் என்பதாலும், அவனைப் பின்பற்றி உள்ளவள் மனைவி என்பதாலும், இருமையில் கூறுவதே போதுமானதாகும். அரசியுடன் கூடிய ஒரு அரசனைக் குறித்து, அவன் மற்றொருவளுடன் சேர்ந்தவன் என்று கூறுவது எவ்விதம் பொருந்தாதோ அது போன்றே இங்கும் ஆராயாமல் கூறப்பட்டது.

## பெரியபிராட்டியும் உபாயமாக உள்ளதால் பகவான் அனைத்து சக்தியும் கொண்டவன் என்னும் தன்மைக்கு இழுக்கு இல்லாமை

**மூலம்** – ஸர்வசக்தியானவன் உபாயமாம்போது இவ் விசேஷணத்தால் அபேக்ஷை ஏன்? ஸாபேக்ஷனாகில் ஸர்வசக்தியன்றிக்கேயொழியானோ? என்னில், இச் சோத்யம் நாராயண சப்தத்தாலும், சரண சப்தத்தாலும் சொல்லப்பட்ட குணவிக்ரஹ யோகத்திலும் பண்ணலாம். அவை இவனுக்கு விசேஷணங்களாகையாலும், அவற்றுக்கு வஸ்த்வநுரூபமாக உபயோக விசேஷங்கள் உண்டாகையாலும், அவற்றால் ஸர்வசக்தித்வ விரோதமில்லையென்று யதாப்ரமாணம் கொள்ளில், இது பஹுப்ரமாண ப்ராப்தமாய் இங்கு ஸ்ரீமச்சப்தத்திலும் ஸ்வாரஸிக விசேஷண பாவமான பத்நீ ஸம்பந்தத்திலும் துல்யம். இப்படியிருக்க, "சரணௌ" என்கிற த்விவசன மாத்ரத்தைக் கொண்டு ஸ்ரீ ஸம்பந்தத்தை உபலக்ஷணமென்னில், குணாதி ஸம்பந்தத்தையும் இப்படிச் சொல்லப் ப்ரஸங்கிக்கும். சரண சப்தத்தில் உபாயவாசி சப்த ஸமபி வ்யாஹாரத்தாலே, உபயுக்த குணவிக்ரஹ விசிஷ்டன் உபாயமாகிறானென்று விலக்ஷிதம் என்னில், இது இங்கும் துல்யம்.

**விளக்கம்** – இங்கு ஒரு கேள்வி எழலாம்; அனைத்து சக்திகளையும் கொண்ட ஸர்வேச்வரனே உபாயமாக உள்ளபோது, அவனுக்கு ஸ்ரீ போன்ற தன்மைகள் (அல்லது பெரியபிராட்டியின் ஸம்பந்தம்) போன்றவற்றின் அவசியம் என்ன? ஸ்ரீ அவனுக்கு அவசியம் என்றால், அவன் அனைத்து சக்திகளும் கொண்டவன் அல்லன் என்றாகிவிடும் அல்லவோ? (இதற்கு சமாதானம் உரைக்கிறார். இதற்கு ஒரு கேள்வியை தானே எழுப்பிக் கொண்டு, அதற்கு சமாதானம் உரைக்கும்விதத்தில், முதல் கேள்விக்கும் விடை அளிக்கிறார்) "நாராயண" என்னும் பதம், "சரண" என்னும் பதம் ஆகியவற்றால் வெளிப்படுகின்ற அவனுடைய திருக்கல்யாணகுணங்கள், திருமேனி போன்றவற்றிலும் இந்தக் கேள்வியை எழுப்பலாம் அல்லவோ? குணங்கள் மற்றும் திருமேனி ஆகிய இரண்டும் அவனுடைய தன்மைகளாக உள்ளதாலும், அவனுடன் ஸம்பந்தம் கொள்ளும் அந்தந்த வஸ்துக்களுக்கு ஏற்றபடி அவற்றுக்கு உபயோகம் உண்டாவதாலும், ப்ரமாணங்களால் உறுதியாக்கப்பட்ட அவற்றால், இவனுடைய "அனைத்து சக்தியும் கொண்டவன்" என்னும் தன்மைக்கு முரண்பாடு இல்லை என்று பதில் உரைக்கலாம்; இதே பதிலையே இங்கும் கொள்வோம்; பெரியபிராட்டியைக் குறிப்பதான "ஸ்ரீ" என்னும் பதமும் பலவிதமான ப்ரமாணங்களில் கூறப்பட்டுள்ளதாலும், "ஸ்ரீ" என்னும் பதத்தின் மூலம் அவனுடைய தன்மையாக பெரியபிராட்டி உள்ளது புலப்படுவதாலும், இந்த "ஸ்ரீ" என்னும் தன்மை மூலம் இவனுடைய "அனைத்து சக்தியும் கொண்டவன்" என்னும் தன்மைக்கு முரண்பாடு இல்லை என்று உறுதியாகக் கூறலாம். மேலும் ஒரு கேள்வி எழலாம். "சரணௌ" என்னும் பதமானது ஸர்வேச்வரனுடைய திருவடிகளை மட்டுமே கூறுவதால், ஸ்ரீ என்பது அவனுடைய உபலக்ஷணமாக (ஒரு பொருளின் அடிப்படை தன்மையாக உள்ளது விசேஷணம் எனப்படும். அந்தப் பொருளுக்கு மற்ற பல தன்மைகளாக உள்ளவை உபலக்ஷணம் எனப்படும். உதாரணமாக – உப்பு என்பதன் அடிப்படைத் தன்மை கரிப்பு என்பதாகும்; ஆனால் துகள்களாக உள்ளது போன்றவை உபலக்ஷணங்கள் ஆகும் – காரணம் கட்டி உப்பு என்பதும் உண்டு அல்லவோ) மட்டுமே கூறப்படவேண்டும் அல்லவோ? (இதற்கு சமாதானம் கூறுகிறார்) அப்படி என்றால் அவனுடைய திருமேனி, குணங்கள் போன்றவற்றையும் உபலக்ஷணமாகக் கூறிவிடலாமே! "சரணௌ" என்னும் பதமானது "நாராயண" என்னும் பதத்துடன் இணைந்து கூறப்பட்டு அவை (திருவடிகள்) உபாயமாக உள்ளன என்றும், உபாயமாக இருப்பதற்குத் தேவையான குணங்கள் மற்றும் திருமேனி ஆகியவற்றைக் கொண்டவனே உபாயமாக இருக்கமுடியும் என்றும் கூறினால், அதே கருத்தை ஸ்ரீக்கும் கூறலாம்.

**மூலம்** – இப்படியிருக்க இவளை விசேஷணமாகக் கொள்ளில், ஸர்வசக்தித்வ விரோதம் வருமென்பார்க்கு இப்புருஷகாரபேக்ஷையிலும் ஸர்வசக்தித்வ விரோதம் ப்ரஸங்கிக்கும். "யுவத்வாதௌ துல்யே" என்கிற ச்லோகத்திற் சொன்ன குணவிபாகத்தின்படியே, பும்ஸ்த்வ பித்ருத்வ ப்ரசாஸித்ருத்வாதிகளாலே ப்ரதாபோத்தரனாய், தண்டகரனாய் நிற்கிற ஈச்வரனைப் பற்ற இழிவார்க்கு, ஸ்த்ரீத்வ மாத்ருத்வாதிகளாலே வந்த மார்தவ வாத்ஸல்யாதி குணாதிசயத்தாலே இவள் அவனைப் பற்ற நமக்குப் புருஷகாரமாகையும் ஈச்வர ஸ்வாதந்த்ர்ய நியதமென்று சொல்லில், இப்படியே ஸஹதர்மசாரிணியான இவளாலே விசிஷ்டனாய்க் கொண்டு சரண்யனாகையும் ஈச்வர ஸ்வாதந்த்ர்ய நியதமென்று கொண்டால், ஒரு ப்ரமாணத்துக்கும் விரோதமில்லை.

**விளக்கம்** – இப்படி உள்ளபோது, பெரியபிராட்டியை ஸர்வேச்வரனுடைய விசேஷணமாகக் கொண்டால், இவனுடைய "அனைத்து சக்தியும் கொண்டவன்" என்னும் தன்மைக்கு முரண்பாடு ஏற்படும் என்று கூறுபவர்கள், அவளுடைய சிபாரிசு செய்யும் தன்மையை (புருஷகாரத்தை) மற்றும் ஏற்றுக்கொண்டால், அவளுடைய சிபாரிசு என்பதை இவன் எதிர்பார்ப்பதால், இவனுடைய "அனைத்து சக்தியும் கொண்டவன்" என்னும் தன்மைக்கு முரண்பாடு ஏற்படும் அல்லவோ? இதற்கு விடையாக அவர்கள், ஸ்ரீகுணரத்னகோசம் (14) - யுவத்வாதௌ துல்யே அபி அபரவசதா சத்ருசமந, ஸ்திரத்வ ஆதீந் க்ருத்வா பகவதி குணாந் பும்ஸ்த்வ ஸுலபாந்; த்வயி ஸ்த்ரீத்வ ஏகாந்தாந் ம்ரதிம பதிபாரார்த்த்ய கருணா, க்ஷமா ஆதீந் வா போக்தும் பவதி யுவயோ: ஆத்மநி பிதா - ஸ்ரீரங்கநாயகீ! மேலே கூறப்பட்ட இளமை முதலியவை உங்கள் இருவருக்கும் பொதுவாக உள்ளது என்றாலும் ஸ்ரீரங்கநாதனிடம் ஆண்களுக்கே உரிய சில குணங்கள் உள்ளன. அவையாவன - மற்றவர்களுக்கு எளிதில் வசப்படாமல் இருத்தல், அடியார்களின் பகைவர்களை அழித்தல், என்ன இடையூறு வந்தாலும் அடியார்களைக் காத்து நிற்பது - இவை முதலான குணங்கள் அவனிடம் மட்டுமே உண்டு. உன்னிடம் பெண்களுக்கே உரிய குணங்கள் பொதிந்து உள்ளன. அவையாவன் - இரக்கம் நிரம்பிய மனம், ஸ்ரீரங்கநாதனின் குறிப்பறிந்து நடத்தல், கருணை, பொறுமை போன்ற பல குணங்கள் உன்னிடம் உள்ளன. இப்படியாக உங்கள் இருவரிடமும் உள்ள குணங்களில் வேறுபாடு உள்ளது – என்ற ச்லோகத்தில் கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரன் தன்னிடம் உள்ள ஆண்மை, அனைத்திற்கும் தந்தையாக இருத்தல், ஆளுந்தன்மை போன்றவற்றால் கடினமானவனாகவும் தண்டிப்பவனாகவும் உள்ளதால், அவனைச் சேதநர்கள்

அண்டும்போது,பெண்மை மற்றும் அனைத்திற்கும் தாயாக இருத்தல் போன்றவற்றால் வந்ததான மேன்மை, வாத்ஸல்யம் முதலான குணங்கள் ஆகியவை அவளிடம் அதிகமாக உள்ளதால் அவள் சிபாரிசு செய்யவேண்டும் என்று ஸர்வேச்வரன் தன்னுடைய சுதந்திரமான தன்மையால் அவளை நியமித்துள்ளான் என்று கூறலாம். அப்படியென்றால், ஸர்வேச்வரனாகிய தன்னுடன் இருந்து அனைத்து செயல்களையும் நடத்தும் அவளைத் தன்னுடைய விசேஷணமாகக் கொண்டு தான் உபாயமாக இருத்தல் என்பதும் ஸர்வேச்வரன் தன்னுடைய சுதந்திரம் காரணமாக இடும் கட்டளை என்று கொள்ளலாம்.

## “சரண” என்பதன் பொருள்

**மூலம்** – இவ்விடத்தில் சரண சப்தம்

உபாயே க்ருஹரக்ஷித்ரோ: சப்த: சரணமித்யயம்
வர்த்ததே ஸாம்ப்ரதம் த்வேஷ உபாயார்த்தைக வாசக:

என்று விசேஷிக்கையாலே உபாயபரம்.

**விளக்கம்** – இங்கு சரணம் என்னும் பதமானது, அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37 – 29) - உபாயே க்ருஹரக்ஷித்ரோ: சப்த: சரணமித்யயம் வர்த்ததே ஸாம்ப்ரதம் த்வேஷ உபாயார்த்தைக வாசக: - சரணம் என்னும் பதம் உபாயம், வீடு, ரக்ஷகன் ஆகியவற்றைக் கூறுவதாகும்; இங்கு உபாயம் என்னும் பொருளே தொனிக்கிறது – என்று சிறப்பித்துக் கூறப்படுவதால், அது உபாயம் என்னும் பொருளையே தருவதாகும்.

## ஸர்வேச்வரன் மற்ற உபாயமாக உள்ளதன் விசேஷம்

**மூலம்** – பரந்யாஸ பலாதேவ ஸ்வயத்ந விநிவ்ருத்தயே
அத்ரோபாயாந்தர ஸ்தாநே ரக்ஷகோ விநிவேசித:

ஸர்வாதிகாரிகளுக்கும் அவ்வோ சாஸ்த்ரார்த்தங்களாலே ஆராதிதனான ஸர்வேச்வரன் பலோபாயமாயிருக்க இங்கு விசேஷித்து உபாயமென்ன வேண்டிற்று – உபாயாந்தர ஸ்தாநத்திலே ஸஹஜகாருண்யாதி விசிஷ்டனான ஈச்வரனை நிறுத்துகிற ப்ரபத்தி ப்ரகாரம் தோற்றுகைக்காகவாமத்தனை. இங்கு பக்தியோக ஸ்தாநத்திலே ப்ரபத்தி நில்லாநிற்க, ஈச்வரன் உபாயாந்தர ஸ்தாநத்திலே நிற்கையாவது என் என்னில், அங்கமாகப் ப்ரபத்தியும் பண்ணி உபாயமாக உபாஸநமும் அநுஷ்டித்துப் பெறவேண்டும் பலத்தை, அவ்வுபாயமொழியவே ப்ரபத்திமாத்ரத்தாலே பெறுகைக்கு அடி, ஈச்வரனுடைய ஸஹஜகாருண்யாதி ஸ்வபாவ விசேஷமாகையாலே அகிஞ்சனனுக்கு ஈச்வரன் உபாயாந்தர ஸ்தாநத்திலே நின்றானென்கிறது.

**விளக்கம்** – பரந்யாஸ பலாதேவ ஸ்வயத்ந விநிவ்ருத்தயே அத்ரோபாயாந்தர ஸ்தாநே ரக்ஷகோ விநிவேசித: - சேதநன் ஒருவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் பொறுப்பு தன்னிடமிருந்து விலகுவதற்காக பரந்யாஸம் செய்கிறான்; பரந்யாஸம் செய்த வலிமையால், ரக்ஷகனாக உள்ள ஸர்வேச்வரன், மற்ற உபாயங்களின் இடத்தில் அந்தச் சேதநனால் நிறுத்தப்படுகிறான். பலவிதமான பலன்களை அடையும் பொருட்டு அந்தந்த அதிகாரிகளுக்கு சாஸ்த்ரங்கள் பலவிதமான கர்மங்களை விதிக்கின்றன; அந்தக் கர்மங்களால் ஆராதிக்கப்படும் ஸர்வேச்வரன், அனைத்து அதிகாரிகளுக்கும் பலன் அளிப்பதால் அனைவருக்குமே உபாயமாக உள்ளான். இவ்விதம் உள்ளபோது த்வயத்தில், ப்ரபந்நனை மட்டும் கூறி ஸர்வேச்வரன் உபாயமாக உள்ளான் என்று கூறப்பட்டது ஏன்? இதற்கு விடை – இயல்பாக அமைந்துள்ள கருணை முதலான குணங்களைக் கொண்ட ஸர்வேச்வரன், ப்ரபந்நனால் இயற்ற இயலாத மற்ற உபாயங்களின் [ப்ரபத்தி அல்லாமல் உள்ள பக்தியோகம், கர்மயோகம் போன்றவை] இடத்தில் நின்று அவற்றின் பலன்களை அளிப்பதற்கு ப்ரபத்தி காரணமாக உள்ளது என்று உணர்த்துவதற்காகவே ஆகும். பக்தியோகம் என்பதற்குப் பதிலாகவே ப்ரபத்தி உபாயமாக உள்ளது; இவ்விதம் உள்ளபோது, “மற்ற உபாயங்களின் இடத்தில் ஸர்வேச்வரன் உள்ளான்” என்று கூறுவது ஏன்? உபாஸனம் (பக்தியோகம்) என்னும் உபாயத்தைக் கைக்கொண்டு, அதன் அங்கமாக ப்ரபத்தியும் செய்வதால், அந்த ப்ரபத்தி மூலம் பலன் ஏற்படுகிறது. ஆனால் அத்தகைய உபாஸனம் இல்லை என்றால், ப்ரபத்தி மூலம் மட்டுமே பலன் கிட்டியாக வேண்டும். இது, ஸர்வேச்வரனுடைய இயல்பான கருணை முதலான குணங்கள் மூலமே கிட்டும். ஆகவேதான், உபாஸனம் முதலான

உபாயங்கள் இல்லாத சேதநன் விஷயத்தில் ஸர்வேச்வரன் அத்தகைய உபாயங்களின் இடத்தில் உள்ளான் என்று கருத்து.

**மூலம்** – அபிமத பலத்துக்கு உபாயமாக விஹிதமான பரம் சுமக்கமாட்டாத அகிஞ்சநன், கோப்தாவாய் நிற்கிற அவனை நீ எனக்கு உபாயமாகவேணுமென்று உபாயாந்தர ஸ்தாநத்திலே நிவேசிப்பிக்கையாவது – "என் தலையில் உபாயாந்தரத்தைச் சுமத்தாதே. அவற்றைச் சுமந்தால், மேல்வரும் அபிமதமெல்லாம் தருகை, ஸமர்த்த காருணிகனான உனக்கே பரமாக ஏறிட்டுக் கொள்ள வேணும்" – என்கை. இவ்வம்சத்தை நிஷ்கர்ஷித்து நிக்ஷேபத்தை அங்கியென்று சொல்லுகிறது. இது ஸ்வநிர்பரத்வ பர்யந்தரம். இந் நிஷ்கர்ஷத்தை நினைத்து "ஸாம்ப்ரதம் த்வேஷ உபாயார்த்தைக வாசக:" என்கிறது.

**விளக்கம்** – சேதநன் ஒருவன் தான் விரும்பிய பலனை அடைவதற்காகச் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட உபாயங்களைச் செய்ய முயன்று, அதனை நிறைவேற்ற இயலாமல் நிற்கிறான்; அப்போது அவன் ரக்ஷகனாக நிற்கும் ஸர்வேச்வரனிடம், "நீ எனக்கு உபாயமாக வேண்டும்" என்று விண்ணப்பிக்கிறான் [அதாவது சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்ட உபாயங்களின் இடத்தில் ஸர்வேச்வரன் நிற்கும்படியாக]. ஆக மற்ற உபாயங்களின் இடத்தில் ஸர்வேச்வரனை நிற்கும்படியாகச் செய்தல் என்றால் என்ன? சேதநன் ஸர்வேச்வரனிடம், "மற்ற உபாயங்களையும் கர்மங்களையும் செய்யும் சுமையை என் தலையில் ஏற்றாமல் இருப்பாயாக. ஆனால் அவற்றைச் சுமப்பதன் மூலம் கிட்டவல்லதான பலன்கள் அனைத்தையும் தருதல் என்பதை, சக்தியும் கருணையும் நிறைந்த உனது பொறுப்பாக ஏற்றுக் கொள்வாயாக", என்று ப்ரார்த்தித்தல் ஆகும். இத்தகைய தன்மையை உறுதியுடன் கூறும் பொருட்டே நிக்ஷேபம் அல்லது பரந்யாஸத்தை அங்கி என்பர். இந்த நிலையானது நம்முடைய பாரங்களை நம்மிடம் இல்லாமல் செய்த பின்னரே (அவற்றை அவனிடம் ஒப்படைத்த பின்னரே) உண்டாவதாகும். இத்தகைய உறுதியை எண்ணியே, அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் (37-30) - ஸாம்ப்ரதம் த்வேஷ உபாயார்த்தைக வாசக: - "சரணம்" என்னும் சொல் உபாயம் என்னும் பொருளைத் தரும் – என்று கூறப்பட்டது.

## உபாயமாக இருக்கவேண்டும் என்னும் ப்ரார்த்தனை மற்றும் சரணாகதி ஆகிய இரண்டையும் கூறும் இடங்களில் “கூறியது கூறல்” என்பதற்கான சமாதானம்

**மூலம்** – உபாய ப்ரார்த்தனையையும் நிக்ஷேபத்தையும் ஓரிடத்திலே பிரியச் சொல்லுமிடங்களில் உபாய சப்தத்தில் இவ்விவக்ஷையைத் தவிருதல், பரஸமர்ப்பணாதிகள் ஸுவ்யக்தங்களாகைக்காகப் பிரியச் சொல்கிறதாதல், இங்கு ஸ்வரூபமும் பரமும் பலமும் ஸமர்ப்பணீயமாகையாலே அநேகாம்ச விசிஷ்டமான ஸமர்ப்பணத்தில் அம்சாந்தர பரமாதல் ஆகக்கடவது. இவை மூன்று ப்ரகாரத்துக்கும் புநருக்தி தோஷமில்லை.

**விளக்கம்** – ஒரு சில இடங்களில் பகவானை உபாயமாக இருப்பதற்கான ப்ரார்த்தனை மற்றும் பரந்யாஸம் (சரணாகதி) ஆகிய இரண்டும் தனித்தனியே கூறப்படுவதைக் காணலாம். இதற்கான காரணம் கீழே உள்ளவற்றால் ஆகும்:

- அது போன்று இரண்டும் கூறப்பட்ட இடங்களில் உள்ள உபாயம் என்னும் சொல்லானது “காப்பாற்றவேண்டும்” என்னும் பொருளில் வந்தது அல்லாமல், மேலே கூறப்பட்டபடி மற்ற உபாயமாக இருத்தல் வேண்டும் என்னும் ப்ரார்த்தனையைக் குறிக்கவில்லை.

- உபாயமாக இருத்தல் வேண்டும் என்னும் ப்ரார்த்தனை மற்றும் நம்மைக் காக்கும் பொறுப்பை ஒப்படைத்தல் ஆகிய இரண்டையும் வேறுபடுத்திக் காண்பிப்பதற்காக ஆகும்.

- ஸமர்ப்பணம் என்பது ஸ்வரூபம், பரம் (நம்முடைய பொறுப்புகள்), பலன் ஆகிய மூன்றையுமே கொண்டுள்ளதால், பல பகுதிகளுடன் கூடியதான ஸமர்ப்பணத்தில், இவை ஒவ்வொரொன்றையும் மற்ற இரண்டிலிருந்தும் வேறுபடுத்திக் காண்பிப்பதற்காக ஆகும்.

ஆகவே இவற்றில் புநருக்தி தோஷம் என்பதான "கூறியது கூறல்" என்னும் குற்றம் இல்லை.

### ப்ரபத்திக்கு தனித்து அறியவேண்டிய தன்மை

**மூலம்** – இவ் வுபாயத்வம் ந்யாஸவித்யைக்கு விசேஷித்து வேத்யாகாரம். இதுக்கு அபேக்ஷிதமாய்க் கொண்டு ஜ்ஞாநசக்த்யாதிகள் வருகின்றன.

**விளக்கம்** – ஸர்வேச்வரன் உபாயமாக உள்ள சிறப்பு என்பது ந்யாஸ வித்யையில் சிறப்பாக அறியப்படவேண்டிய விஷயம் ஆகும். ஸர்வேச்வரனுடைய ஞானம், சக்தி போன்றவையும் இங்கு தேவைப்படும் விஷயங்கள் ஆகின்றன.

### ப்ரபத்யே என்பதன் விளக்கம்

### ப்ரபத்திக்கான அங்கங்களை சரண சப்தத்துடன் ப்ரபத்யே என்னும் பதம் கூறுதல்

**மூலம்** – ப்ரபத்யே என்கிறவிடத்தில் கதிவாசியான தாது கத்யர்த்தங்கள் புத்த்யர்த்தங்களாகையாலே, இங்கு அபேக்ஷித புத்திவிசேஷத்தைச் சொல்லுகிறது. புத்தியாவது – இவ்விடத்தில் "ரக்ஷிப்யதீதி விச்வாஸ:" என்கிற அத்யவஸாயம். அங்கங்களில் ஸாரமான விச்வாஸத்தை முன்னிட்டுக் கொண்டு ஸபரிகரமான ஸாத்யோபாயம் இங்கே தோற்றுகிறது. எங்ஙனேயென்னில், இங்கு "ப்ர" என்கிற உபஸர்க்கம் விச்வாஸத்தினுடைய ப்ரகர்ஷ ரூபமான மஹத்தையைக் காட்டும். இவ்விச்வாஸ ப்ரகர்ஷம், ஶ்ரீமச்சப்தத்திலும் நாராயண சப்தத்திலும் உள்ள புருஷகார ஸபந்த குணாதிகளை அநுஸந்தித்தவாறே வரும். இத்தாலே தன் அபசார ப்ராசுர்யாதிகளடியாக வரும் சங்கைகளெல்லாம் கழியும்.

**விளக்கம்** – "கதி = செல்க, நகர்க" என்பதைக் கூறும் வினைச்சொற்கள் "அறிக" என்பதையும் உணர்த்துவதாகும்; ஆகவே "ப்ரபத்யே" என்பதில் உள்ள "பத்" என்னும் தாதுவானது "செல்க" என்னும் பொருளைத் தருவதால் அதுவே "அறிக, புத்தி"

என்பதையும் உணர்த்துவதாகிறது. இங்கு கூறப்படும் ஞானம் என்னவென்றால், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-29) - ரக்ஷிப்யதீதி விச்வாஸ: - பகவான் நம்மைக் காப்பான் என்னும் நம்பிக்கை – என்பதற்கு ஏற்ப உள்ள உறுதியான ஞானம் ஆகும். ப்ரபத்தியின் அங்கங்களில் மஹாவிச்வாஸம் என்பதே மிகவும் முக்கியமானது என்பதால், இங்கு ஸாத்யோபாயமான ப்ரபத்தி என்பதே அதன் அங்கங்களுடன் கூறப்பட்டதாகிறது. எப்படி? "ப்ரபத்யே" என்பதில் உள்ள "ப்ர" என்பது பெருமையைக் கூறுவதாகும். அது எதன் பெருமையைக் காட்டுகிறது என்றால், மஹாவிச்வாஸத்தின் மிகுதியைக் காட்டுகிறது. இத்தகைய மஹாவிச்வாஸ மிகுதி என்பது எப்போது உண்டாகும் என்றால் – "ஸ்ரீ" என்னும் பதத்தால் கூறப்படும் பெரியபிராட்டியின் புருஷகாரத்தன்மை மற்றும் "நாராயண" என்னும் பதத்தால் கூறப்படும் ஸர்வேச்வரனுடன் நமக்கு உள்ள பந்தம் ஆகியவற்றை அறிந்தால் மட்டுமே ஆகும். இதனால், மிகுதியான அபசாரம் செய்வதன் காரணமாக மஹாவிச்வாஸத்தில் ஏற்படும் சந்தேகங்கள் விலகுகின்றன (அல்லது மஹாவிச்வாசத்தின் மீது உள்ள சந்தேகம் என்னும் அபசாரம் விலகும்).

**மூலம்** – இவ்விச்வாஸ தாடர்யம் வேணுமென்னுமிடத்தை

ராக்ஷஸாநாம் அவிஸ்ரம்பாத் ஆஞ்ஜநேயஸ்ய பந்தநே
யதா விகலிதா ஸத்ய: த்வமோகா அப்யஸ்த்ர பந்தநா
ததா பும்ஸாமவிஸ்ரம்பாத் ப்ரபத்தி: ப்ரச்யுதா பவேத்
தஸ்மாத் விஸ்ரம்ப யுக்தாநாம் முக்திம் தாஸ்யதி ஸாசிராத்

என்று சொல்லிற்று. இவ் வ்யவஸாயத்தினுடைய ப்ரபாவம், "வ்யவஸாயாத்ருதே ப்ரஹ்ம நாஸாதயதி தத்பரம்", "நிஸ்ஸம்சயேஷு ஸர்வேஷு நித்யம் வஸதி வை ஹரி: | ஸஸம்சயாந் ஹேதுபலாந் நாத்யாவஸதி மாதவ:" இத்யாதிகளிலும் ஸுப்ரஸித்தம்.

**விளக்கம்** – இத்தகைய உறுதியான நம்பிக்கை வேண்டும் என்பதை, ஸநத்குமார ஸம்ஹிதை - ராக்ஷஸாநாம் அவிஸ்ரம்பாத் ஆஞ்ஜநேயஸ்ய பந்தநே யதா விகலிதா ஸத்ய: த்வமோகா அப்யஸ்த்ர பந்தநா ததா பும்ஸாமவிஸ்ரம்பாத் ப்ரபத்தி: ப்ரச்யுதா பவேத் தஸ்மாத் விஸ்ரம்ப யுக்தாநாம் முக்திம் தாஸ்யதி ஸாசிராத் – அனுமன் ப்ரஹ்மாஸ்த்ரத்தால் கட்டுண்டான்; அப்போது அரக்கர்களுக்கு அந்த ப்ரஹ்மாஸ்த்ரம் மீது உண்டான

நம்பிக்கை தளர்வு காரணமாக அந்த ப்ரஹ்மாஸ்த்ரம் நழுவியது; இது போன்றே ப்ரபத்தியின் மீது நம்பிக்கை குறைந்தால், ப்ரபத்தி பலனற்றதாகிறது. ஆகவே ப்ரபத்தில் நம்பிக்கை உள்ளவர்களுக்கே மோக்ஷம் கிட்டும் – என்றது. இத்தகைய உறுதியான நம்பிக்கையின் மேன்மையானது கீழே உள்ள வரிகள் மூலம் அறியலாம்:

- மஹாபாரதம் சாந்திபர்வம் (334-47) - வ்யவஸாயாத்ருதே ப்ரஹ்ம நாஸாதயதி தத்பரம் – மனதில் உறுதி இல்லை என்றால், ப்ரஹ்மத்தை அடையமாட்டான்

- மஹாபாரதம் சாந்திபர்வம் (359-71) - நிஸ்ஸம்சயேஷு ஸர்வேஷு நித்யம் வஸதி வை ஹரி: | ஸஸம்சயாந் ஹேதுபலாந் நாத்யாவஸதி மாதவ: - சந்தேகம் இல்லாத அனைவரிடமும் மாதவன் அவர்கள் அருகிலேயே உள்ளான். ஐயம் கொள்பவர்களை அவன் விட்டுச் செல்கிறான்

**மூலம்** – இம்மஹாவிச்வாஸம் உண்டானால் பின்பு விமர்ச காலத்தில் ஒருகாலும் ஸம்சயம் பிறவாது. ஆகையால் பின்பு ஒருகாலும் இவ்விஷயத்தில் ஸம்சயம் பிறவாதபடியான ப்ரதமக்ஷணத்தில் மஹாவிச்வாஸம் ப்ரபத்திக்கு அங்கம். இது மந்தமாயிருந்தாலும் விசேஷித்துக் கடாக்ஷிக்கத் தொடங்கின ஈச்வரன், சேஷபூரணம் பண்ணும். "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந" என்று சரண்யன் அருளிச்செய்தானிறே. அஞ்ஜல்யாதிகளும் அகப்பட "ந ஜாது ஹீயதே" என்னும்படியிறே இருப்பது. ஆகையால் மந்தவிச்வாஸமும் மஹாவிச்வாஸ பர்யந்தமாம்.

**விளக்கம்** – இத்தகைய மஹாவிச்வாஸம் உண்டான பின்னர், பகவத் குணங்களைக் குறித்து ஆராய முற்பட்டாலும், அவற்றில் ஐயம் உண்டாகாது. ஆகவே பின்னர் எப்போதும் ஐயம் தோன்றாதவிதத்தில் உள்ள உறுதியான மஹாவிச்வாஸம் என்பதே ப்ரபத்தியின்போது அங்கமாக உள்ளது என்று அறியவேண்டும். சிலருக்கு இந்த மஹாவிச்வாஸம் குறைவாக இருந்தாலும், அவனைக் கடாக்ஷிக்கத் தொடங்கும் ஸர்வேச்வரன், அவனுடைய நம்பிக்கையைப் பரிபூர்ணமாக்குகிறான். இதனை, இராமாயணம் யுத்தகாண்டத்தி (18-3) - மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந – நண்பன் போன்று (வேடம் பூண்டு) வந்தாலும், அவனை நான் கைவிடமாட்டேன் – என்று அனைவருக்கும் சரணாகதி அளிக்கும் இராமன் உரைத்தான் அல்லவோ? ஓர் அஞ்ஜலி

உள்பட உள்ளவையே போதுமானது என்பதை ஸ்தோத்ரரத்னத்தில் (28) - ந ஜாது ஹீயதே – அது எப்போதும் வீணாகாது – என்றது காண்க. ஆகவே ப்ரபத்தி செய்தவர்கள் விஷயத்தில் நம்பிக்கை குறைவாக இருந்தாலும் அது படிப்படியாக மஹாவிச்வாஸமாக மாறிவிடும்.

**மூலம்** – (ii) இப்படி உபாயமாக அத்யவஸிக்கிறேனென்று மஹாவிச்வாஸத்தைச் சொல்ல, "அநந்ய ஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிச்வாஸ பூர்வகம் | ததேகோபாயதா யாச்சா ப்ரபத்தி: சரணாகதி:", "த்வமேவோபாய பூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி: சரணாகதி: இத்யுக்தா", "பவ சரணம்" இத்யாதி ப்ரமாணாநுஸாரத்தாலே உபாய ப்ரார்த்தனையும் இங்கே சொல்லிற்றாயிற்று. இவ்வுபாய ப்ரார்த்தனையிலே கோப்த்ருத்வவரணம் அந்தர்கதம்; ப்ருதக்பூதமன்று.

**விளக்கம்** – இவ்விதம் "உன்னையே உபாயமாக ஏற்கிறேன்" என்று உறுதியான மஹாவிச்வாஸத்துடன் உரைத்த பின்னர், அவனை உபாயமாக ஏற்பது என்னும் ப்ரார்த்தனை செய்யப்பட்டதாகிறது. இது பின்வரும் ப்ரமாணங்களால் தேறுகிறது:

- அநந்ய ஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிச்வாஸ பூர்வகம் ததேகோபாயதா யாச்சா ப்ரபத்தி: சரணாகதி: - தனக்குத் தேவையான பலனை வேறு யாராலும் நிறைவேற்றிக் கொடுக்க இயலாது என்னும்போது, மஹாவிச்வாஸத்தை முன்னிட்டுக் கொண்டு சாமர்த்யமாக உள்ள ஒருவனை அண்டி நின்று "நீயே எனக்கு உபாயமாக இருப்பாயாக" என்று விண்ணப்பிப்பதே சரணாகதி ஆகும்

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-31) - த்வமேவோபாய பூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி: சரணாகதி: இத்யுக்தா – "நீயே எனக்கு உபாயமாக இருத்தல் வேண்டும்" என்று ப்ரார்த்திக்கும் எண்ணமே சரணாகதி என்று கூறப்படுகிறது.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (3-7-33) - பவ சரணம் – நீயே எனக்கு அடைக்கலம்

இந்த விண்ணப்பத்தில் "காப்பாற்றவேண்டும்" என்னும் ப்ரார்த்தனையும் அடங்கும்; அது தனியான ப்ரார்த்தனை அல்ல.

## த்வயத்தின் இரண்டு பகுதிகளாலும் ப்ரார்த்திக்கப்படுபவை

**மூலம்** – இஷ்டப்ராப்தி அநிஷ்டநிவ்ருத்தி ரூபமான பலத்தினுடைய ப்ரார்த்தனையை உத்தர கண்டத்திலே பண்ணாநிற்க, இங்கும் பலப்ரார்த்தனையைப் பண்ணினால் புநருக்தியுண்டாம்; ப்ரபத்திக்குப் பலமாக பக்திரூபோபாயத்தைப் ப்ரார்த்திக்குமாப்போலே ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனுக்கு இங்கு ஸாத்யமாய்ப் ப்ரார்த்தநீயமாயிருப்பதோர் உபாயமில்லை. ஆன பின்பு இங்கும் ப்ரார்த்தனையைச் சொல்லுகிறபடி என்னென்னில், பலப்ரதாநம் பண்ணுகிறவிடம் ஸர்வாதிகாரி விஷயத்திலும் பொதுவாயிருக்க, அகிஞ்சநனாய் ஸர்வபரந்யாஸம் பண்ணுகிறவன் பக்கல் ப்ரபத்தி வேறோர் உபாயத்துக்கு அங்கமாக நில்லாதபடி சரண்யன் தான் உபாயாந்தர ஸ்தாநத்திலே நின்று, பலம் கொடுக்கிற அம்சம் ஏற்றமானபடியாலே அவ்வேற்றமான பரஸ்வீகாராம்சம் இங்கு ப்ரார்த்திக்கப்படுகிறது.

**விளக்கம்** – விருப்பங்களை நிறைவேற்றித் தரவேண்டும், விருப்பம் அல்லாதவற்றை விலக்கித் தரவேண்டும் என்பதான ப்ரார்த்தனைகள் த்வயத்தின் இரண்டாவது பகுதியில் செய்யப்படுவதால், இதே விண்ணப்பங்கள் முதல் பகுதியிலும் உள்ளன என்றால், கூறியது கூறல் என்னும் புநருக்தி தோஷம் உண்டாகும் அல்லவோ? ப்ரபத்தியை ஓர் அங்கமாகக் கைக்கொண்டால், அதன் பலனாக பக்தி வடிவில் உள்ள உபாயத்தை அடையவேண்டும் என்பதை ப்ரார்த்தனையாகக் கொள்ளலாம். ஆனால் ப்ரபத்தியைத் தனியான (அல்லது நேரடியான) உபாயம் என்று கொண்டால், அதனைப் பெற வேறு ஓர் உபாயத்தைத் தரவேண்டும் என்னும் ப்ரார்த்தனைக்கு இடமில்லை. ஆனாலும் இங்கு ப்ரர்த்தனையைக் கூறுவது எப்படி (அதாவது த்வயத்தின் முதல் பகுதியின் மூலம் ப்ரார்த்திக்கப்படுவது என்ன)? இதற்கான விடை - த்வயத்தின் இரண்டாவது பகுதியில் உள்ள ப்ரார்த்தனை மூலம் பெறப்படும் பலன்கள் பக்தி அல்லது ப்ரபத்தி என்னும் இரண்டுவிதமான உபாயங்களைக் கைக்கொண்ட அனைத்துவிதமான அதிகாரிகளுக்கும் பொதுவாகவே உள்ளது. ஆனால் மற்ற எந்தவிதமான உபாயங்களும் இல்லாமல், தன்னுடைய ஸ்வரூபம் – பாரம் – பலன் ஆகிய அனைத்தையும் சமர்ப்பணம் செய்த ஒருவனுக்கு, ப்ரபத்தியானது வேறு ஓர் உபாயத்தின் அங்கம் அல்ல என்பதால், உபாயமாக ஸர்வேச்வரனே வந்து நின்று பலனை அளிக்கிறான்; இதனால் ப்ரபத்திக்கு

மிகுந்த ஏற்றம் உண்டாகிறது. ஆகவே த்வயத்தின் முதல் பகுதியால், ஸர்வேச்வரன் நம்மைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்கவேண்டும் என்பதே ப்ரார்த்திக்கப்படுகிறது.

**மூலம்** – ஆனாலும் இப்படி உபாயமாய் நிற்கவேணுமென்று அபேக்ஷிக்கவே அபிமத பலவிசேஷத்தை உபாயாந்தர வ்யவதாநமறத் தரவேணுமென்று ப்ரார்த்தித்ததாகாதோ? ஆகையால், உத்தரகண்டத்தில் ப்ரார்த்தனை மிகுதியன்றோ என்னில், உக்தப்ரகாரத்தாலே ப்ராத்தநா விஷயத்தில் அம்சபேதம் தோற்றுகைக்காகப் பிரிய அபேக்ஷிக்கிறதாகையாலே மிகுதியில்லை. உத்தரகண்டத்தில் அபேக்ஷணீய பலவிசேஷ வ்யஞ்ஜகமான வாக்யத்தினுடைய அந்வயமாத்ரத்துக்காக ப்ரார்த்தநா பதம் அத்யாஹரித்தாலும் பலஸ்வரூப மாத்ரத்திலே தாத்பர்யமென்று பரிஹாரமாகவுமாம்.

**விளக்கம்** – ஆனால் ஸர்வேச்வரன் இவ்விதம் உபாயமாக இருத்தல் வேண்டும் என்று விண்ணப்பம் செய்வது என்பது, மற்ற எந்தவிதமான உபாயங்களும் அவசியம் இன்றி அவனே வந்து பலனை அளிக்கவேண்டும் என்னும் விண்ணப்பத்தினை ஒத்துள்ளது அல்லவோ? இவ்விதம் கொண்டால் த்வயத்தின் இரண்டாம் பகுதி கூறியது கூறல் என்றாகிவிடும் அல்லவோ? இதற்கான சமாதானம் – இவ்விதம் கொள்வதற்கில்லை; காரணம் இரண்டாம் பகுதியின் ப்ரார்த்தனையில், முதல் பகுதியின் மூலம் கூறப்படும் விண்ணப்பத்தினைக் காட்டிலும் வேறுபட்ட அம்சங்களே உள்ளன [அதாவது முதல் பகுதியில் உள்ள விண்ணப்பத்தில் அவனே உபாயமாக இருத்தல்வேண்டும் என்று கூறும்போது, அவன் உபாயமாக வரவேண்டும் என்பது அல்லாமல் வேறு பலனைக் குறித்து விண்ணப்பம் இல்லை. ஆனால், இரண்டாவது பகுதியில், பலனை விரும்புதல் என்னும் அம்சம் உள்ளது]. இரண்டாவது பகுதியில் பலனுக்கான ப்ரார்த்தனையைக் குறிக்கும் சொல் என்பது அந்தப் பகுதியை முழுமை அடையச் செய்வதற்காகவே உள்ளது என்றபோதிலும் - முதல் பகுதியில் அவனே உபாயமாக இருத்தல்வேண்டும் என்னும் விண்ணப்பம் உள்ளது என்றாலும், இரண்டாவது பகுதியில்தான், வேண்டும் பலன் இன்னது என்று கூறப்படுகிறது.

## த்வயத்தின் இரண்டு பகுதிகளும் சேர்ந்து அளிக்கும் பொருள்

**மூலம்** – பூர்வோத்தர கண்டங்கள் இரண்டுக்கும் திரண்ட பொருள் நிஷ்கர்ஷிக்குமிடத்தில், அகிஞ்சநனான எனக்கு நீ உபாயாந்தர ஸ்தாநத்திலே நின்று, பலவிசேஷத்தைத் தருகைக்காக யதோக்தமான ஆத்மரக்ஷாபரநிக்ஷேபம் பண்ணுகிறேனென்று ஒரு விசிஷ்ட ப்ரார்த்தநாந்வித பரஸமர்ப்பணமாம். இஸ்ஸமர்ப்பணமும், அத்யவஸாய சப்தார்த்தமாம். இப்படி ஸபரிகரமான பரஸமர்ப்பணமே ப்ரபத்தி சாஸ்த்ரார்த்தமென்னுமிடம் ப்ரமாண ஸம்ப்ரதாயங்களாலே பலவிடத்திலும் ஸமர்த்தித்தோம். “அநேநைவ து மந்த்ரேண ஸ்வாத்மாநம் மயி நிக்ஷிபேத் | மயி நிக்ஷிப்த கர்த்தவ்ய: க்ருதக்ருத்யோ பவிஷ்யதி” என்று ப்ரபத்தி மந்த்ராந்தரத்திற் சொன்ன கர்த்தவ்ய நிக்ஷேப ப்ராதாந்யம் இங்கும் துல்யம்.

**விளக்கம்** – த்வயத்தின் முதற்பகுதி மற்றும் இரண்டாம் பகுதி ஆகிய இரண்டையும் சேர்த்து, த்வயத்தின் பொருளை உறுதி செய்யும்போது, “நான் எந்தவிதமான உபாயமும் அற்றவன். ஆகவே நீ அந்த உபாயங்களில் இடத்தில் நின்று, எனக்கு விருப்பமான பலனை அளிப்பாயாக. இதனை வெளிப்படுத்தும்விதமாக, என்னைக் காப்பாற்றும் பொறுப்பை, நான் உன்னிடம் சமர்ப்பணம் செய்கிறேன்”, என்று கூறுதலே ஆகும். ஆகவே த்வயம் என்பது நம்மைக் காக்கும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தல் என்பதுடன் கூடிய ஒரு சிறப்பான ப்ரார்த்தனை ஆகும். இத்தகைய சமர்ப்பணம் என்பதும், “ப்ரபத்யே” என்பதான உறுதிமொழியின் பொருளாகும். இவ்விதம் அனைத்து அங்கங்களுடன் கூடியதான சமர்ப்பணம் என்பதே ப்ரபத்தி ஆகும் என்று பல ப்ரமாணங்களாலும், பழக்க வழக்கங்களாலும் நாம் பலமுறை நிரூபித்துள்ளோம். ஸாத்யகி தந்த்ரத்தில் - அநேநைவ து மந்த்ரேண ஸ்வாத்மாநம் மயி நிக்ஷிபேத் மயி நிக்ஷிப்த கர்த்தவ்ய: க்ருதக்ருத்யோ பவிஷ்யதி – இந்த மந்த்ரம் கொண்டு ஒருவன் தனது ஆத்மாவை என்னிடம் ஸமர்ப்பணம் செய்யவேண்டும்; இப்படிச் செய்யவேண்டியதை என்னிடம் செய்தவன், செய்யவேண்டியதைச் செய்தவன் ஆகிறான் – என்னும்படி, ப்ரபத்திக்காகச் சொல்லப்படும் மந்த்ரங்களில் கூறப்படும் பரஸமர்ப்பணமே த்வயத்திலும் உள்ளது.

## ப்ரபத்யே என்பதன் தன்மை விகுதியினுடைய பொருள்

**மூலம்** – மோக்ஷப்ரதமான ஸித்தோபாயத்துக்கு முமுக்ஷுவின் பக்கலிலே உள்ளதொரு சாஸ்த்ரீயமான ஸாத்ய வ்யாஜம் வசீகரணமென்னுமிடம் தன்னைக் கர்த்தாவாகக் காட்டுகிற உத்தமனாலே ஸித்தம்.

**விளக்கம்** – சேதநனை ப்ரபத்தியில் கர்த்தாவாகக் காண்பிக்கின்றதான “ப்ரபத்யே” என்பதில் உள்ள முதலாம் நபர் ஒருமை (நான்) என்பது, மோக்ஷத்தை பலனாக அளிக்கவல்ல ஸித்தோபாயமான ஸர்வேச்வரனை வசப்படுத்தும் உபாயமாக உள்ளது; இது சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டதான பல வழிகளில் ஒன்று (பக்தி, ப்ரபத்தி போன்றவை) என்றாகிறது.

**மூலம்** – இதில் ஔசித்யத்தாலே “புகலொன்றில்லா அடியேன்”, “அஹம் அஸ்மி அபராதாநாம் ஆலயோ அகிஞ்சநோ அகதி”, “ந தர்மநிஷ்டோஸ்மி ந சாத்மவேதீ” இத்யாதிகளிற்படியே அதிகாரி விசேஷமும், கார்ப்பண்யமாகிற பரிகரமும் ஸூசிதம். இது கத்யத்தில் “அநந்யசரண:” என்கிற பதத்திலும், சிறு கத்யத்தில் “ஸ்வாத்ம நித்ய நியாம்ய” என்கிற சூர்ணிகையிலும், ஸ்ரீவைகுண்ட கத்யத்தில் “தத் ப்ராப்தயே ச தத்பாதாம்புஜ த்வய ப்ரபத்தேரந்யந்ந மே கல்பகோடி ஸஹஸ்ரேணாபி ஸாதநமஸ்தீதி மந்வாந:” என்கிற சூர்ணிகையிலும் ப்ரபஞ்சிதமாயிற்று. அருளாளப்பெருமாளெம்பெருமானாரும்,

ஸ்வாபீஷ்டே பரஸம்பந்தே ஸ்வாசக்தத்யா ஹீநஸாதந:
தத் ப்ராப்த்யுபாயம் க்ருத்வா விச்வாஸ பூர்வகம்

என்று அருளிச்செய்தார். இப்படி அகிஞ்சநாதிகாரமாய், பர ஸமர்ப்பண ரூபமான உபாயத்தைச் சொல்லுகையாலே, துஷ்கர கர்மாந்தர நைரபேக்ஷ்யம் அர்த்த ஸித்தம். இப்படி சரண சப்தாந்விதமான “ப்ரபத்யே” என்கிற பதத்திலே, “ரக்ஷிஷ்யதீதி விச்வாஸோ கோப்த்ருத்வ வரணம் ததா | ஆத்மநிக்ஷேப கார்ப்பண்யே” என்று நிர்திஷ்டமான நாலும் சொல்லிற்றாயிற்று.

**விளக்கம்** – த்வயத்தின் முதற்பகுதியில், இதற்கான அதிகாரி இன்னவர் என்பதும், ப்ரபத்தியின் ஒரு அங்கமான “எந்தவிதமான கைம்முதலும் இல்லாமல் இருத்தல் (கார்ப்பண்யம்)” என்பதும் கீழே உள்ள வரிகளில் கூறுவது போன்று, வெளிப்படுகிறது:

- திருவாய்மொழி (6-10-10) - புகலொன்றில்லா அடியேன்

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-30) - அஹம் அஸ்மி அபராதாநாம் ஆலயோ அகிஞ்சநோ அகதி – நான் அபராதங்களுக்கு இருப்பிடமாகவும், என்னைக் காப்பாற்றிக் கொள்ளும் சக்தி அற்றவனாகவும், உன்னை அல்லாமல் அடையவேண்டிய வஸ்து வேறு இல்லாமலும் உள்ளேன்

- ஸ்தோத்ரரத்னம் (22) - ந தர்மநிஷ்டோஸ்மி ந சாத்மவேதீ – நான் கர்மயோகம், ஜ்ஞாந யோகம், பதியோகம் போன்ற தர்மங்களை இயற்றியவன் அல்லன்

இது சரணாகதி கத்யத்தில் - அநந்யசரண: - வேறு சரண் அற்ற – என்பதன் மூலமும்; சிறு கத்யமான ஸ்ரீரங்க கத்யத்தில் - ஸ்வாத்ம நித்ய நியாம்ய – என்னுடைய ஆத்மாவானது உன்னுடைய கட்டளைக்கு உட்பட்டது – என்னும் சூர்ணை மூலமும்; ஸ்ரீவைகுண்ட கத்யத்தில் - தத் ப்ராப்தயே ச தத்பாதாம்புஜ த்வய ப்ரபத்தேரந்யந்ந மே கல்பகோடி ஸஹஸ்ரேணாபி ஸாதநமஸ்தீதி மந்வாந: - ஸர்வேச்வரனை அடைவதற்கு அவனுடைய இரண்டு திருவடித் தாமரைகளில் ப்ரபத்தி செய்வது அல்லாமல் மற்ற எந்தவிதமான உபாயமும், ஆயிரம் கோடி கல்பங்கள் கழிந்தாலும் எனக்கு இல்லை என்று எண்ணும் நான் – என்னும் சூர்ணை மூலமும் வெளிப்பட்டது. இதனை ஸ்வாமி அருளாளப்பெருமாளெம்பெருமானார், ஸ்வாபீஷ்டே பரஸம்பந்தே ஸ்வாசக்தத்யா ஹீநஸாதந: தத் ப்ராப்த்யுபாயம் க்ருத்வா விச்வாஸ பூர்வகம் – தான் விரும்புவதான மோக்ஷம் என்னும் பகவத் அனுபவத்திற்குத் தேவையான மற்ற எந்தவிதமான உபாயத்தையும் கைக்கொள்ளச் சக்தி அற்றவனாக, மஹாவிச்வாஸத்துடன் பகவானுடைய திருவடிகளை மட்டுமே உபாயமாகக் கொண்டு – என்று அருளிச்செய்தார். இவ்விதம் ப்ரபத்தி என்பது, தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் சக்தி ஏதும் தன்னிடம் இல்லை என்றும், தன்னைக் காப்பாற்றும் பாரத்தை அவனிடம் ஒப்படைத்தல் என்றும் உள்ள உபாயத்தைக் கூறுவதால், இதனைக் கைக்கொள்ளும் அதிகாரி ஒருவன் தன்னால்

இயற்றுவதற்குக் கடினமான எதனையும் கைக்கொள்ளவேண்டாம் என்பது தெளிவாகிறது. ஆக, “சரணம்” என்பதுடன் சேர்ந்ததான “ப்ரபத்யே” என்னும் சொல்லில், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-28) - ரக்ஷிஷ்யதீதி விச்வாஸோ கோப்த்ருத்வ வரணம் ததா | ஆத்மநிக்ஷேப கார்ப்பண்யே – அவனுக்கு ஏற்ற முறையில் உள்ளேன் என்னும் எண்ணம், அவனுக்கு விருப்பம் அல்லாதவற்றை விடுதல், அவன் ரக்ஷிப்பான் என்னும் நம்பிக்கை, அவன் நம்மைக் காக்கவேண்டும் என்னும் ப்ரார்த்தனை, தனது ஆத்மஸ்வரூபத்தைச் சமர்ப்பணம் செய்தல், கார்ப்பண்யம் – என்பதான அங்கங்கள் கூறப்பட்டது.

## த்வயத்தில் ஆநுகூல்ய ஸங்கல்பம் மற்றும் ப்ராதிகூல வர்ஜநம் ஆகியவற்றைக் கூறுதல்

**மூலம் –**

சராசராணி பூதாநி ஸர்வாணி பகவத் வபு:
அதஸ்ததாநுகூல்யம் மே கார்யமித்யேவ நிச்சய:

ஸ்வஸ்ய ஸ்வாமிநி வ்ருத்திர்யா ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம்

இத்யாதி ப்ரமாணங்களின்படியே, ஸ்வாமித்வாதி நிபந்தநங்களைச் சொல்லுகிற ஸவிசேஷணமான நாராயண சப்தத்திலே, ஆநுகூல்ய ஸங்கல்பமும் ப்ராதிகூல்ய வர்ஜநமும் ஸூசிதமென்னுமிடம் முன்பே சொன்னோம். இப்பரிகரங்களும், உபாயார்த்தமாக ஸக்ருத் கர்த்தவ்யங்களென்னுமிடம் அதிகாராந்தரத்திலே சொன்னோம்.

**விளக்கம்** – அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (52-23) - சராசராணி பூதாநி ஸர்வாணி பகவத் வபு: அதஸ்ததாநுகூல்யம் மே கார்யமித்யேவ நிச்சய: - அசையும் மற்றும் அசையாத பொருள்கள் அனைத்தும் பகவானின் சரீரம் ஆகும்; ஆகவே அவைகளுக்கு நன்மையை மட்டுமே செய்தல் வேண்டும் – என்றும், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (52-21) - ஸ்வஸ்ய ஸ்வாமிநி வ்ருத்திர்யா ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம் – தான் தன்னுடைய எஜமானனுக்கு விரோதமானவற்றைச் செய்யாமல் இருப்பது ப்ராதிகூல்ய வர்ஜநம் – என்றும் உள்ள

ப்ரமாணங்களுக்கு ஏற்ப, அவனே எஜமானன் போன்றவற்றைக் கூறும் நாராயண என்னும் பதம் மூலம், அவனுக்கு ஏற்றவற்றைச் செய்தல் (ஆநுகூல்ய ஸங்கல்பம்), விருப்பம் அல்லாதவற்றைச் செய்யாமல் இருத்தல் (ப்ராதிகூல்ய வர்ஜநம்) ஆகிய இரண்டும் மறைமுகமாக உணர்த்தப்படுகிறது என்பதை முன்பே கூறினோம். ப்ரபத்தியின் இரண்டு அங்கங்களாக உள்ள இந்த இரண்டையும் உபாயமாக ஒருமுறை மட்டுமே எண்ணப்படவேண்டும் என்பதையும் பரிகரவிபாக அதிகாரத்தில் கூறினோம்.

## "ப்ரபத்யே" என்பது நிகழ்கால வினையாகக் கூறப்படுதல்

**மூலம் –** இக் க்ரியா பதத்தில், வர்த்தமாந வ்யபதேசம் பர்ஹிர்வநாதி மந்த்ரங்களிற்போலே அநுஷ்டாந காலாபிப்ராயம். இங்ஙனன்றிக்கே இவ் வர்த்தமாந வ்யபதேசம் வர்த்தமாந தேஹாவதியாகப் ப்ரயத்த்யநுஷ்டாந கர்த்தவ்யதையை விவக்ஷிக்கிறதென்றும், பலம் வருமளவும் ப்ரபத்தி பரிகரமான விச்வாஸாநுவ்ருத்தியை விவக்ஷிக்கிறதென்றும், ப்ரபத்தி காலத்தில் தான் ஸங்கல்பித்தபடியே ஆநுகூல்யாதிகள் ப்ரபத்தி பரிகரமாகவே மேல் அநுவர்த்திக்க வேண்டும்படியைக் காட்டுகிறதென்றும் சொல்லும் பக்ஷங்கள், இவ்வுபாயம் ஸபரிகரமாக ஸக்ருத் கர்த்தவ்யமென்று காட்டுகிற ப்ரமாணங்களோடே விரோதிக்கும். த்வராதிசயத்தாலும் போகரூபதையாலும் வரும் ஆவ்ருத்திக்கும், பூர்வகண்டத்திற் சொன்னபடியே அநுஷ்டிதமான உபாய சரீரத்தில் ப்ரவேசமில்லை. ஆகையால் இவ்வுபாய வாக்யத்தில் வர்த்தமாந வ்யபதேசம், "த்வயமர்த்தாநு ஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா" என்கிற ராகப்ராப்த போகரூபாநு வ்ருத்தியை விவக்ஷிக்கிறதுமன்று.

**விளக்கம் –** "ப்ரபத்யே" என்னும் வினைச்சொல்லில் உள்ள நிகழ்கால வினையானது, யாகங்களில் தர்ப்பப்புல்லை அறுக்கும்போது கூறப்படுவதான ""பர்ஹிர்தேவஸதநம் தாமி" என்னும் மந்த்ரம் போன்று, அந்தச் செயலைச் செய்யும் காலத்தைக் குறிப்பதாகும் (அதாவது ப்ரபத்தியைச் செய்யும் நேரம்). "ப்ரபத்யே" என்பதில் உள்ள நிகழ்கால வினைக்கு இவ்விதம் பொருள் கொள்ளாமல் சிலர் :

- இந்தச் சரீரம் உள்ளவரை ப்ரபத்தியைக் கைக்கொள்ளவேண்டும் என்பதையே நிகழ்கால வினை குறிக்கிறது
- பலன் கிட்டும்வரை ப்ரபத்தியின் அங்கமான மஹாவிச்வாஸத்தைக் கைக்கொள்ளவேண்டும் என்பதையே நிகழ்கால வினை குறிக்கிறது
- ப்ரபத்தி நேரத்தில் ஸங்கல்பித்துக் கொண்ட ஆநுகூல்யம் போன்றவை, ப்ரபத்தியின் அங்கமாகத் தொடர்ந்தபடியே இருத்தல் வேண்டும் என்பதையே நிகழ்கால வினை குறிக்கிறது

என்று இப்படியாகப் பலவிதமாகக் கூறுவர். ஆனால் இவை அனைத்தும், "ப்ரபத்தியானது அதன் அங்கங்களுடன் ஒரு பலனைக் குறித்து, ஒரேமுறை மட்டுமே கைக்கொள்ளபட வேண்டும்" என்பதைக் கூறுகின்ற ப்ரமாணங்களுடன் முரண்படுகின்றன. ப்ரபந்நன் ஒருவன் விரைவாகப் பலனை அடையவேண்டும் என்றும், அந்தப் பலனை அனுபவிக்கவேண்டும் என்றும் எண்ணி, இவ்விதம் ப்ரபத்தியைத் தொடர்ந்தபடி இருத்தல் என்பது, முன்பு கூறப்பட்டது போன்று உபாயமாகக் கைக்கொள்ளும் பிரிவில் சேராது. மேலும் இவ்விதமாக மற்ற பலனுக்காகச் (அதாவது மோக்ஷத்தை உடனே பெறவேண்டும் என்னும் பலன்) செய்வதாலும், எம்பெருமானார் கத்யத்தில் - த்வயமர்த்தாநு ஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா – த்வயத்தை அதன் பொருளுடன் உணர்ந்து கூறியபடி – என்று கூறியபடியே எப்போதும் செய்தபடி உள்ள த்வய மந்த்ர சிந்தனை என்பது மற்ற பலனைக் கருதாமல் உள்ளதாலும், மோக்ஷத்திற்கு உபாயமாகக் கைக்கொள்ளபடும் ப்ரபத்தியில், இவர்கள் கூறும் ப்ரபத்தி சேராது.

## த்வயத்தின் முற்பகுதியில் உள்ள விஷயங்கள்

**மூலம்** – இப்படி ஸர்வசரண்யத்வமும், சரணாகதி ஸ்வரூபமும், இதின் பரிகரங்களும், அதிகாரி விசேஷமும் பூர்வகண்டத்திலே ப்ரகாசிதமாயிற்று. இத்தாலே அநந்யோபாயத்வமும் ஸித்தித்தது.

**விளக்கம் –** ஆக த்வயத்தின் முற்பகுதியானது, அனைவருக்கும் புகலிடமாக ஸர்வேச்வரன் உள்ள தன்மை, சரணாகதியின் தன்மை, அதன் அங்கங்கள், இதனைக் கைக்கொள்ளும் ஒருவனுடைய தன்மைகள் போன்ற பலவற்றையும் கூறியது. இதன் மூலம், ஜீவாத்மாவுக்கு வேறு உபாயம் ஏதும் இல்லை என்பதும் வெளிப்பட்டது.

## த்வயத்தின் பிற்பகுதியின் விளக்கம்

**மூலம்** – இப்படித் தோற்றின சரணாகதி, "தாவதார்த்திஸ்ததா வாஞ்சா தாவந்மோஹஸ்ததா அஸுகம்" இத்யாதிகளிற்படியே ஸகல பல ஸாதநமாகையாலும், "ததந்ய: கோ மஹோதார:" என்கிறபடியே பரமோதாரனான சரண்யன் அர்த்திதார்த்த பரிதாந தீக்ஷிதனாய் "கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும்" என்னும்படி நிற்கையாலும், இங்கு என்ன பலத்துக்காகப் ப்ரபத்தி பண்ணுகிறதென்கிற அபேக்ஷையிலே மஹோதாரனான சரண்யனுக்கும், ஸர்வோத்க்ருஷ்ட விஷயமான இவ்வசீகரண விசேஷத்துக்கும், சேஷைகரஸனான தன் ஸ்வரூபத்துக்கும் அநுரூபமான பலவிசேஷத்தை உதரகண்டம் "தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே" என்கிறபடியே ஸமஸ்த விரோதி நிவ்ருத்தி பர்யந்தமாகப் ப்ரார்த்திக்கிறது. இத்தாலே அநந்ய ப்ரயோஜநத்வமும் ஸித்திக்கிறது.

**விளக்கம்** – இப்படியாக (த்வயத்தின் முதல் பகுதியில்) கூறப்பட்ட சரணாகதி, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-9-73) - தாவதார்த்திஸ்ததா வாஞ்சா தாவந்மோஹஸ்ததா அஸுகம் – எதுவரை அனைத்து பாபங்களையும் விலக்கவல்ல உன்னிடம் ப்ரபத்தி செய்யவில்லையோ, அதுவரை மட்டுமே ஒருவனுக்குத் தான் இழந்த செல்வத்தை மீண்டும் அடையவேண்டும் என்பதான கவலை (நீடிக்கும்) – போன்ற வரிகளில் கூறப்பட்டபடி, அனைத்துவிதமான பயனையும் அளிக்கவல்லதாகும். மேலும், இதிஹாஸ ஸமுச்சயம் (31-114) - ததந்ய: கோ மஹோதார: - தாராளமாக அளிப்பதில் அவனைத் தவிர வேறு யார் உள்ளனர் – என்று கூறப்படும் வாக்கியங்களுக்கு ஏற்ப, பெருங்கொடையாளனாக அனைத்து உயிர்களும் சரணம் புகுவதற்கு ஏற்றபடி உள்ள ஸர்வேச்வரன், தன்னிடம் கேட்டவற்றை அளித்தல் என்னும் உறுதியுடன், திருவாய்மொழி (3-9-5) - கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும் – அவனிடமிருந்து எதனைப் பெற்றாலும்

அவனிடம் குறைவதில்லை, நாம் வேண்டிய அனைத்தையும் அளிப்பான் – என்று கூறுவதற்கு ஏற்றபடி உள்ளான். ஆக எந்தப் பலனை எதிர்பார்த்து ப்ரபத்தி செய்வது என்னும் கேள்வி எழுகிறது (இதற்கான விடை த்வயத்தின் இரண்டாம் பகுதியில் உள்ளது). இத்தகைய பலன் என்பது - அனைத்தையும் அளிக்கவல்ல கொடையாளனாகிய ஸர்வேச்வரனுக்கும், அனைவரிலும் மேம்பட்ட எம்பெருமானைக் குறித்துச் செய்யப்படும் ப்ரபத்திக்கும், அவனுக்குக் கைங்கர்யம் செய்தலையே தனக்கு இன்பமாகக் கொள்ளும் சேதநனுடைய ஸ்வரூபத்திற்கும் – ஏற்றதாக இருத்தல் வேண்டும். ஆக, திருவாய்மொழி (2-9-4) - தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே – என்பதற்கு ஏற்ப, அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் அளிக்கவேண்டும் என்பதும், அந்தக் கைங்கர்யங்களுக்குத் தடையாக வரக்கூடிய அனைத்தையும் நீக்கவேண்டும் என்பதுமே த்வயத்தின் இரண்டாம் பகுதியில் ப்ரார்த்திக்கப்படுகிறது. இதன் மூலம் மற்ற எதனிலும் இலக்கு வைத்தல் கூடாது என்பதும் வெளிப்படுகிறது.

## த்வயத்தின் இரண்டாம் வரியில் உள்ள “நாராயண” என்பதன் பொருள்

**மூலம்** – இவ்விடத்திலே ஸவிசேஷணமான நாராயண சப்தம், ப்ராப்யதைக்கு அநுரூபமான ஸ்வாமித்வாதிகளும் அநந்த குண விபூதி விசிஷ்டனான ஸ்வாமியினுடைய ஸர்வ ப்ரகார நிரதிசய போக்யதையுமாகிற ஆகாரங்களை யதா ப்ரமாணம் ப்ராதந்யேந காட்டுகிறது.

**விளக்கம்** – இரண்டாம் வரியில் உள்ள “நாராயண” என்னும் பதம் (”ஸ்ரீமதே நாராயணாய நம:” என்பதில் உள்ள பதம்) - ஸர்வேச்வரன் அனுபவிக்கப்படும் பலனாக இருப்பதற்குத் தேவையான எஜமானத்தன்மை போன்றவற்றையும், எல்லையற்ற குணங்கள் – விபூதிகள் போன்றவை நிறைந்த ஸர்வேச்வரன் அனைத்துவிதங்களிலும் இன்பம் அளிப்பவனாக இருத்தல் போன்றவற்றையும் தகுந்த ப்ரமாணங்களை முன்னிட்டு உணர்த்துகிறது.

## த்வயத்தின் இரண்டாம் வரியில் உள்ள "ஸ்ரீமத்" என்பதன் பொருள்

**மூலம்** – இப்படி உபயவிபூதி விசிஷ்டம் ப்ராப்யமாயிருக்கச் செய்தேயும் ஆத்ம ஹவிருத்தேச்ய ரூபமாய், சேஷத்வ ப்ரதிஸம்பந்திகளுமாய், அதடியாக வருகிற கைங்கர்யத்துக்கும் இலக்காய்க் கொண்டு, ப்ரதாந ப்ராப்யருமாயிருப்பார் இவ் விசிஷ்ட தம்பதிகள் என்று தோற்றுகைக்காக இங்கு ஸ்ரீமச்சப்தம். இவ்வர்த்தம், "வைகுண்டே து பரே லோகே ஸ்ரீயா ஸார்தம் ஜகத்பதி:", "தயா ஸஹாஸீநம் அநந்த போகிநி", "ஆத்மாநுரூபயா ஸ்ரீயா ஸஹாஸீநம்", "ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப", "கோலத் திருமாமகளோடு உன்னை" இத்யாதிகளிலும் விலக்ஷிதம்.

**விளக்கம்** – நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகியவற்றினைக் கொண்ட ஸர்வேச்வரனைக் குறிப்பிட்டால் மட்டுமே போதுமானது என்றாலும், "ஸ்ரீமத்" என்பதும் த்வயத்தின் இரண்டாம் வரியில் உள்ளது. இது ஏனென்றால் – சேதநன் அளிக்கின்ற ஆத்மா என்னும் அவிர்பாகத்தை ஏற்பவர்களாகவும், சேதநனுடைய அடிமைத்தனத்திற்கு ஏற்ற எஜமானர்களாகவும், அதன் மூலம் உண்டாகின்ற கைங்கர்யத்திற்கு இலக்காக உள்ளவர்களாகவும் இருந்தபடி, சேதநனால் முக்கியமான பலனாக அடையப்படுபவர்கள் இந்தத் திவ்யதம்பதிகள் என்பதை உணர்த்தவே ஆகும். இதனைக் கீழே உள்ள பல வரிகளிலும் காணலாம்:

- லைங்க புராணம் - வைகுண்டே து பரே லோகே ஸ்ரீயா ஸார்தம் ஜகத்பதி: - ஸ்ரீவைகுண்டம் என்னும் உயர்ந்த லோகத்தில், அனைத்து லோகங்களுக்கும் எஜமானனாகிய ஸர்வேச்வரன், தனது பத்தினியுடன் உள்ளான்

- ஸ்தோத்ரரத்னம் (39) - தயா ஸஹாஸீநம் அநந்த போகிநி – ஆதிசேஷன் மீது பிராட்டியுடன் எழுந்தருளியுள்ள

- ஸ்ரீவைகுண்டகத்யம் (சூர்ணை 4) - ஆத்மாநுரூபயா ஸ்ரீயா ஸஹாஸீநம் – தனக்கு ஏற்றபடியாக உள்ள பிராட்டியுடன் உள்ள

- திருவாய்மொழி (4-9-10) - ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப
- திருவாய்மொழி (6-9-3) - கோலத் திருமாமகளோடு உன்னை
- த்வயத்தின் இரண்டாம் வரியில் உள்ள "ஸ்ரீ" என்பதன் முக்கிய பொருள்

**மூலம்** – இங்குற்ற ஸ்ரீ சப்தம்,

ச்ருணாதி நிகிலாந் தோஷாந் ஸ்ரீணாதி ச குணைர்ஜகத்
ஸ்ரீயதே ச அகிலைர் நித்யம் ச்ரயதே ச பரம் பதம்

ச்ரயந்தீம் ஸ்ரீயமாணாம் ச ச்ருணதீம் ச்ருண்வதீமபி

இத்யாதிகளிற்படியே, அநேகார்த்தங்கள் உண்டேயாகிலும், "ஸ்ரீஞ்ஸேவாயாம்" என்கிற தாதுவிலே ஸேவ்யத்வாதிகளைச் சொல்லிக் கொண்டு கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வபரம்.

**விளக்கம்** – த்வயத்தின் இரண்டாம் வரியில் உள்ள "ஸ்ரீ" என்னும் பதம் :

- ச்ருணாதி நிகிலாந் தோஷாந் ஸ்ரீணாதி ச குணைர்ஜகத் ஸ்ரீயதே ச அகிலைர் நித்யம் ச்ரயதே ச பரம் பதம் – மஹாலக்ஷ்மி அனைத்து தோஷங்களையும் விலக்குகிறாள், இந்த உலகில் உள்ளவர்களுக்கு நல்ல குணத்தை அளிக்கிறாள், அனைவராலும் எப்போதும் அடையப்படுகிறாள், தானும் ஸர்வேச்வரனை அடைகிறாள்

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (21-8) - ச்ரயந்தீம் ஸ்ரீயமாணாம் ச ச்ருணதீம் ச்ருண்வதீமபி – தான் ஸர்வேச்வரனை அடைபவளாகவும், மற்றவர்களால் தான் அடையப்படுபவளாகவும், அவர்களுடைய குறைகளைக் கேட்பவளாகவும்

என்பதான வரிகளில் கூறப்படுவதற்கு ஏற்ப பலவிதமான அர்த்தங்களை அளிப்பதாக உள்ளது என்றாலும், இங்கு அந்தப் பதம் "ஸேவிக்கப்படுபவள்" என்னும் பொருளைய்யே

அடைகிறது; ஆக அந்தப் பதம், “கைங்கர்யங்களைப் பெறுகிறாள்” என்னும் பொருளை அளிப்பதாகும்.

## த்வயத்தின் இரண்டாம் வரியில் உள்ள “நாராயண” என்பதன் பயன்

**மூலம் –** “ஸ்ரீமதே” என்கிற சப்தந்தன்னாலே விசிஷ்டமான ப்ரதிஸம்பந்தி தோற்றிற்றே யாகிலும், ஸர்வவித கைங்கர்யத்துக்கும் ப்ரயோஜநமான ப்ரீதி விசேஷத்தைப் பிறப்பிக்கும் ஸம்பந்த குண விபூத்யாதி பரிபூர்ணாநுபவ ஸித்திக்காக இங்கு நாராயண சப்தம், ப்ரயுக்தமாகிறது.

**விளக்கம் -** த்வயத்தின் இரண்டாம் வரியில் உள்ள “ஸ்ரீமதே” என்னும் பதம் மூலமே பிராட்டியுடன் சேர்ந்த நாராயணனும் கூறப்பட்டாலும் - அனைத்துவிதமான கைங்கர்யங்களையும்; அதன் மூலம் பகவானுடனான ஸம்பந்தம், அவனுடைய குணம் மற்றும் விபூதிகள் போன்றவற்றால் உண்டாகவல்ல ப்ரீதியுடன் கூடிய முழுமையான அனுபவத்தையும் அளிக்கவல்லது பகவத் அனுபவமே ஆகும். இந்த ஸம்பந்தத்தையும், அனுபவத்தையும் உணர்த்தவே “நாராயண” என்னும் பதம் தனியாகவும் கூறப்படுகிறது.

## “ஆய” என்னும் நான்காம் வேற்றுமை உருபின் பொருள்

**மூலம் –** இங்கு சதுர்த்தீ தாதர்த்ய முகத்தாலே கைங்கர்யத்தைக் கணிசிக்கிறது. தாதர்த்யம் மாத்ரம் நித்யமாகையாலே, “தச்சேஷத்வா நுஸந்தாநபூர்வ தச்சேஷ வ்ருத்திக:”, “அஹம் ஸர்வம் கரிஷ்யாமி” இத்யாதிகளிற்படியே இங்கு பரிபூர்ணாநுபவ பூர்வகமான கைங்கர்யம் ப்ரார்த்தநீயம். சரணாகதனாம்போது சரண்யனை அபிமத ப்ரார்த்தனை பண்ணுகிறானாகையாலே இங்கே “பவேயம்” என்று ஒரு பதம் அத்யாஹார்யம். இப்படிப் ப்ராதாந்யத்தாலே முற்பட இஷ்ட ப்ராப்தியை அபேக்ஷித்து இதுக்காக அநந்தரம் நமஸ்ஸாலே ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தியையும் ப்ரார்த்திக்கிறது.

அப்ராப்தித: பரிஹரந் ஸ்வபரை: ஸ்வரக்ஷாம்
தாதர்த்யதீ பரிஹ்ருத ஸ்வபரார்த்தபாவ:
அந்யோபபோக விரஹாதநக: ப்ரபந்நோ
புங்க்தே ஸ்வபோகமகிலம் பதிபோக சேஷம்

**விளக்கம்** – "நாராயணாய" என்பதில் உள்ள "ஆய" என்னும் நான்காம் வேற்றுமையானது, சேதநன் ஸர்வேச்வரனுக்குக் கைங்கர்யம் செய்தபடி இருத்தலை (அல்லது அடிமையாக இருத்தலை) உணர்த்துவதாகும். ஆனால், இத்தகைய அடிமைத்தனம் என்பது சேதநனுக்கு எப்போதும் உள்ளதால், அதனைப் ப்ரார்த்திக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, பராசர பட்டரின் நித்யத்தில் - தச்சேஷத்வா நுஸந்தாநபூர்வ தச்சேஷ வ்ருத்திக: - அவனுக்கு மட்டுமே அடிமை என்று எண்ணியபடி, அவனுக்கு ஏற்ற கைங்கர்யங்களைச் செய்வேன் – என்றும், இராமாயணம் (2-31-29) – அஹம் ஸர்வம் கரிஷ்யாமி – அனைத்து கைங்கர்யங்களையும் செய்வேன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அடிமைத்தனம் மூலம் வரக்கூடிய பரிபூர்ணமான பகவத் அனுபவத்தை முன்னிட்டு உண்டாவதான கைங்கர்யமே இங்கு விண்ணப்பிக்கப்படுகிறது. சரணாகதி செய்யும்போது சரணம் அடைகின்ற சேதநன் ஒருவன், சரணம் அடையத்தக்க பகவானிடம் தன்னுடைய விருப்பத்தை ப்ரார்த்திப்பதால், இங்கு "பவேயம் = நான் ஆவேனாக" என்னும் வினைமுற்றை வரவழைத்துக் கொள்ளவேண்டும் (அதாவது – ஸ்ரீமதே நாராயணாய பவேயம் = நான் நாராயணனுக்காக ஆவேனாக). ஆக முதலில் நமக்கு விருப்பமான "ஸர்வேச்வரனுக்குக் கைங்கர்யம் செய்தல்" என்பது ப்ரார்த்திக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து "நம:" என்பதன் மூலம் நமக்கு விருப்பம் அல்லாதவை அனைத்தும் நீங்குதல் என்பது ப்ரார்த்திக்கப்படுகிறது. **மேலே உள்ள ச்லோகத்தின் பொருள்** – ப்ரபந்நன் ஒருவன் தன்னைக் காப்பாற்றுதல் என்னும் செயல் தனக்கும் மற்றவர்களுக்கும் உரிமை இல்லாத செயல் என்பதால் அவற்றை நீக்கிக் கொண்டவனாகவும், தான் "ஸர்வேச்வரனுக்கு மட்டுமே வசப்பட்டவன்" என்னும் எண்ணம் காரணமாக தான் தனக்கும் மற்றவர்களுக்கும் அடிமை என்னும் எண்ணத்தை நீக்கிக் கொண்டவனாகவும், மற்ற எதனைக் குறித்தும் எண்ணாமல் உள்ளதால் எந்தவிதமான தோஷமும் இல்லாதவனாகவும், தனக்கு வரக்கூடிய இன்பங்கள் அனைத்தும் ஸர்வேச்வரனுடைய இன்பத்துக்கு அடங்கியதாக எண்ணிபடியும் அனுபவிக்கிறான் – என்பதாகும்.

## "நம:" என்பதன் பொருள்

**மூலம் –** இந்நமஸ்ஸுக்கும் க்ரியாபதம் அத்யாஹரித்துக் கொள்ளவேணும்; "ந மம ஸ்யாம்" என்றது "எனக்காவேனல்லேன்" என்றபடி. "ந மம கிஞ்சித் ஸ்யாத்" என்று ஸர்வவிஷய மமகார நிவ்ருத்தி முகத்தாலே ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தியைப் ப்ரார்த்திக்கிறதாகவுமாம். திருமந்த்ரத்தில் இஷ்ட ப்ராப்தி அநிஷ்ட நிவ்ருத்தி சொன்ன சோத்ய பரிஹாரங்கள் இங்கும் அநுஸந்தித்துக் கொள்வது.

**விளக்கம் –** இந்த "நம:" என்னும் சொல்லின் பின்னால் ஒரு வினைமுற்றை வரவழைத்துக் கொள்ளவேண்டும். அதாவது "ந மம ஸ்யாம் = நான் எனக்காக வாழ்பவன் அல்லன்" என்று பொருள் தரும்படியாக "ஸ்யாம்" என்னும் வினைமுற்றைச் சேர்த்தல் வேண்டும். அல்லது "ந மம கிஞ்சித் ஸ்யாத் = என்னுடையது என்பதாக எந்த ஒரு பொருளும் இருத்தல் வேண்டாம்" என்று [இங்கு "ஸ்யாத், கிஞ்சித்" என்னும் இரண்டு சொற்கள் சேர்க்கப்பட்டன] படித்துப் பொருள் கொள்ளலாம்; இதனால் அனைத்து பொருள்களிலும் "இவை என்னுடையது" என்னும் மமகாரம் நீங்குதல் ப்ரார்த்திக்கப்பட்டு, நமக்கு விருப்பம் அல்லாத அனைத்தும் நீங்குதலுக்கான ப்ரார்த்தனை செய்யப்படுகிறது என்றும் கொள்ளலாம். திருமந்த்ரந்தின் மூலம் நமக்கு விருப்பமானவை வந்து சேர்தல் மற்றும் விருப்பம் அல்லாதவை விலகுதல் குறித்த உண்டான சந்தேகங்களும் அவற்றுக்கான சமாதானங்களும், கடந்த அத்யாயத்தில் கூறப்பட்டன; அவற்றையே இங்கும் கொள்ளலாம்.

**மூலம் -** இந் நம: சப்தத்தாலே அவித்யா கர்ம ததுபய வாஸநா ருசி ப்ரக்ருதி ஸம்பந்தாதி ரூபங்களான ஸர்வவிரோதிகளையும் கழியா நிற்கச் செய்தேயும், இதுக்கு நிர்வசநம் பண்ணுகிற ச்ருதியின்படியே பரிபூர்ண கைங்கர்ய ரூப பல தசையில் பலாந்தராநுபவ ந்யாயத்தாலே, சங்கிதமான ஸ்வாதீந ஸ்வார்த்த கர்த்ருத்வம் ஸ்வாதீந ஸ்வார்த்த போக்த்ருத்வமாகிற களைகளைக் கழிக்கையிலே இங்கு ப்ரதாந தாத்பர்யமென்று அநுஸந்திப்பார்கள். இத்தால், பலாந்தராநுபவ தசையிலுண்டாம் ஸ்வாதீந ஸ்வார்த்த கர்த்ருத்வ போக்த்ருத்வ ப்ரமங்கள், முக்த தசையில் கைங்கர்யத்தில் இல்லாதபடி கண்டு அக்கட்டளையிலே ப்ரார்த்திக்கிறானென்றதாயிற்று.

**விளக்கம்** – இந்த உலகுடன் கொண்டுள்ள தொடர்பு காரணமாக, உலக விஷயங்கள் மீது உள்ள பூர்வ வாசனைகள், அவற்றின் மீது உள்ள ஆசைகள் போன்றவை காரணமாக அவித்யை (அறியாமை) மற்றும் கர்மங்கள் தொடர்ந்தபடி உள்ளன; "நம:" என்பதன் மூலம், இப்படிப்பட்ட அவித்யை மற்றும் கர்மங்கள் நீங்கவேண்டும் என்னும் ப்ரார்த்தனை செய்யப்படுகிறது என்றாலும், சில பூர்வாசார்யர்கள் கருதுவது என்னவென்றால் – மோக்ஷம் பெற்ற பின்னர் உண்டாகின்ற பகவத் கைங்கர்ய விஷயத்தில், "நான் செய்கிறேன், இவற்றை நான் எனக்காகச் செய்கிறேன், நான் அனுபவிக்கிறேன், நான் எனக்காக மட்டுமே அனுபவிக்கிறேன்" என்பதான எண்ணங்கள் உண்டாகுமோ என்ற சந்தேகம் ஏற்படலாம்; ஆனால், "மற்ற பலன்களாக உள்ள செல்வம், ஸ்வர்க்கம் போன்றவற்றை அனுபவிக்கும்போது ஒருவனுக்கு உண்டாகின்ற 'நான் தக்க உபாயங்களைச் செய்து இவற்றை அனுபவிக்கிறேன்' போன்ற எண்ணங்கள், மோக்ஷம் என்னும் பலனை அனுபவிக்கும்போது ஏற்படாது" என்பதான பலாந்தர அனுபவ ந்யாயம் போன்று, இந்த தோஷங்கள் மோக்ஷ நிலையில் பகவத் கைங்கர்ய விஷயத்தில் உண்டாகாமல் கழிப்பதே "நம:" என்பதன் முக்கியமான ப்ரார்த்தனை – என்பதாகும். ஆகவே இந்த உலகில் உள்ள செல்வம் முதலானவற்றை அனுபவிக்கும்போது உண்டாகின்ற "விஷயத்தில், "நான் செய்கிறேன், இவற்றை நான் எனக்காகச் செய்கிறேன், நான் அனுபவிக்கிறேன், நான் எனக்காக மட்டுமே அனுபவிக்கிறேன்" என்பதான மயக்கங்கள், மோக்ஷ நிலையில் உண்டாகின்ற பகவத் கைங்கர்யத்தின்போது இல்லாதைக் கண்டு, அது போன்றே விண்ணப்பிக்கிறான் என்றாயிற்று.

### "நம:" என்பதற்கு அருளாளப்பெருமாள் எம்பெருமானாருடைய விளக்கம்

**மூலம்** – பரமாத்மநி நாராயணாம் ஸர்வபார ஸமர்ப்பணாத்
ஸம்ஜாதம் நைரபேக்ஷ்யம் து நம இத்யுச்யதே புதை:

என்று இங்குற்ற நமஸ்ஸை அருளாளப்பெருமாள் எம்பெருமானார் வ்யாக்யானம் பண்ணினார். இந்த ச்லோகத்திற் சொன்ன நைரபேக்ஷ்யம் ஸ்வரக்ஷணத்தில் நிர்பரத்வம். இந்த நிர்பரத்வத்தாலே பரஸமர்ப்பணம் ஸூசிதமாதல், ஸ்வநிர்பரத்வ பர்யந்தமான பரஸமர்ப்பணம் இவ்விடத்திலே விவக்ஷிதமாதல் ஆகக்கடவது. ஹவி: ஸமர்ப்பணத்தில்

“இதமிந்த்ராய ந மம” என்னுமாப்போலே “அஹம் ஸ்ரீமதே நாராயணாய” என்று இங்கு பரகர்பமாக ஸமர்ப்பித்து, “ந மம” என்று தன்னுடன் துவக்கறுக்கிறதென்றால், இஸ்ஸமர்ப்பண யோஜனைக்கு ஸ்வரஸம். இந்த யோஜனையில், பூர்வகண்டம் அங்க பஞ்சக பரம்; உத்தரகண்டம் அங்கி ப்ரதிபாதகம்.

**விளக்கம்** – பரமாத்மநி நாராயணாம் ஸர்வபார ஸமர்ப்பணாத் ஸம்ஜாதம் நைரபேக்ஷ்யம் து நம இத்யுச்யதே புதை: - தன்னுடைய அனைத்து பாரங்களையும் பரமாத்மாவாகிய நாராயணனிடம் சமர்ப்பணம் செய்த காரணத்தால், (தன்னுடைய விஷயத்தில்) வேறு எதனையும் எதிர்பாராமல் உள்ள நிலையே “நம:” என்பதால் கூறப்படுவதாகச் சான்றோர்கள் உரைப்பர் – என்று “நம:” என்னும் சொல்லுக்கான பொருளை ஸ்வாமி அருளாளப்பெருமாள் எம்பெருமானார் வ்யாக்யானம் செய்தார். இந்த ச்லோகத்தில் உள்ள “நைரபேக்ஷ்யம்” என்னும் சொல்லானது, தன்னைக் காப்பாற்றிக் கொள்வதில் எந்தவிதமான பொறுப்பையும் எதிர்பாராமல் இருத்தல் என்பதாகும். இப்படியாக நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் பொறுப்பிலிருந்து நாம் விலகிக் கொள்ளுதல் என்பதால் “நம்முடைய பாரங்களைச் சமர்ப்பித்தல்” கூறப்பட்டது என்றோ அல்லது நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் பொறுப்பை நாம் கைவிடுதல் முடிய உள்ள “நம்முடைய பாரங்களைச் சமர்ப்பித்தல்” கூறப்பட்டது என்றோ கூறப்பட்டது எனலாம். யஜ்ஞத்தில் அவிர்பாகத்தை அளிக்கும்போது “இதம் இந்த்ராய ந மம – இது இந்த்ரனுக்காக, எனக்காக அல்ல” என்று கூறுவது போன்றே த்வய மந்த்ரத்திலும் “அஹம் ஸ்ரீமதே நாராயணாய – நான் ஸ்ரீமந்நாராயணனுக்காக” என்று சமர்ப்பணம் செய்து, “ந மம – நான் எனக்கு உரியவன் அல்லேன்” என்று தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் பொறுப்பை தான் கைவிடுதல் என்னும்போது, மேலே கூறப்பட்ட பரசமர்ப்பணம் குறித்த கருத்து மிகவும் பொருத்தமாகிறது. இவ்விதம் பொருள் கொள்ளும்போது, த்வயத்தில் உள்ள முதல் வரியானது ப்ரபத்திக்கான ஐந்து அங்கங்களையும் (ஆநுகூல்ய ஸங்கல்பம் – ஸர்வேச்வரனுக்கு ஏற்ற வகையில் நடக்க உறுதி செய்தல், ப்ராதிகூல்ய வர்ஜநம் – அவனுடைய திருவுள்ளத்திற்கு மாறாக நடக்காமல் இருத்தலை உறுதி செய்தல், மஹாவிச்வாஸம் – அவன் நிச்சயமாக மோக்ஷம் அளிப்பான் என்னும் நம்பிக்கை, கார்ப்பண்யம் – அவனுக்கு நம் மீது க்ருபை ஏற்படும்படி தாழ்ந்து நிற்றல், கோப்த்ருத்வ வரணம் – எந்த உபாயங்களையும் இயற்ற சக்தி இல்லாத தன்னை அந்த உபாயங்களின்

இடத்தில் நின்று காக்குமாறு வேண்டுதல்), இரண்டாவது வரியானது அங்கியாக உள்ள ப்ரபத்தியையும் குறிக்கும்.

**மூலம்** – "அஹமத்யேவ மயா ஸமர்ப்பித:" என்கிறபடியே இவ்விடத்தில் நான் ஸ்ரீமானான நாராயணனுக்கென்று ஸமர்ப்பிக்க "யத் ஸம்ரக்ஷ்யதயா அர்ப்பயதே", "தவைவாஸ்மி ஹி பர:" இத்யாதிகளிற்படியே ஸ்வரக்ஷணபரமும், ஸ்வரக்ஷணபலமும் அவனதென்று இங்கே அபிப்ரேதமாகவுமாம்.

**விளக்கம்** – ஸ்தோத்ரரத்னம் (52) - அஹமத்யேவ மயா ஸமர்ப்பித: - இப்படிப்பட்ட நான் என்னால் உனது திருவடிகளில் சமர்ப்பிக்கப்பட்டேன் – என்னும் ச்லோகத்திற்கு ஏற்ப, "பெரியபிராட்டியாருடன் கூடிய நாராயணனுக்கு நான் சமர்ப்பணம் செய்யப்பட்டேன்" என்று கூறும்போது, தன்னைக் காப்பாற்றும் பொறுப்பு மற்றும் அவ்விதம் காப்பாற்றப்படுவதால் உண்டாகும் பலன் ஆகிய இரண்டும் நாராயணனுக்கே சேர்கின்றன என்பதை கீழே உள்ள ச்லோகங்களால் அறியலாம்.

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (52-35) - யத் ஸம்ரக்ஷ்யதயா அர்ப்பயதே – தன்னைக் காப்பாற்றும் பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப்படுகிறது என்ற கேள்வி எழும்போது, விஷ்ணுவிடம் என்பது பதிலாகிறது

- ஸ்தோத்ரரத்னம் (60) - தவைவாஸ்மி ஹி பர: - உன்னால் காக்க வேண்டியவற்றில் நானும் ஒருவன்

**மூலம்** – "நம:" என்கிற இத்தாலே ஆத்ம ஆத்மநீயங்களோடும் ஸ்வரக்ஷண தத்பலங்களோடும் தனக்குத் துவக்கற்றமை காட்டுகிறது. பரஸம்பந்த விதியிலும் ஸ்வஸம்பந்த நிஷேதத்திலும் தாத்பர்யமாகையாலே இச்சதுர்த்தீ, நமஸ்ஸுக்கள் இரண்டுக்கும் பலமுண்டு. இஸ்ஸமர்ப்பணந்தன்னிலும் பரநிரபேக்ஷ கர்த்ருத்வாதிகளை நிஷேதிக்கைக்காக "நம:" என்கிறதாகவுமாம்.

**விளக்கம்** – "நம:" என்பதன் மூலம் ஒருவனுக்கு அவனுடைய ஆத்மாவுடனான ஸம்பந்தம் நீங்குவதும், அவனுக்கும் அவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் எண்ணதிற்கும் உள்ள

ஸம்பந்தம் நீங்குவதும், அதன் மூலம் கிட்டும் பலனுக்கும் அவனுக்கும் உள்ள ஸம்பந்தம் நீங்குவதும் உணர்த்தப்படுகிறது. “நாராயணாய” என்பதில் உள்ள நான்காம் வேற்றுமையான “ஆய” என்பதும், “நம:” என்பதும் முறையே பகவானுடனான ஸம்பந்தம் உள்ளதையும், நம்முடைய ஆத்மாவுடன் நமக்குச் ஸம்பந்தம் இல்லாததையும் (அதாவது நமது சரீரத்துடன் ஆத்மாவுக்குப் பிடிப்பு இல்லாமை அல்லது நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் செயலுடன் நமக்கு ஸம்பந்தம் இல்லாமை) உணர்த்துகின்றன. இப்படியாக உள்ள ஸமர்ப்பணத்தை உணர்த்துவது மட்டும் அல்லாமல், ஸர்வேச்வரனுக்கு விருப்பம் அல்லாத செயல்களைச் செய்யாமல் இருப்பதையும் உணர்த்தவே “நம:” எனப்படுகிறது என்றும் கூறலாம்.

**மூலம்** – ஸ்தூலப்ரக்ரியையைக் கொண்டாலும், “நமாமி” என்கிற பதத்தை ஆத்ம ஸமர்ப்பணார்த்தமென்று வ்யாக்யானம் பண்ணின பதஸ்தோத்ர ப்ரக்ரியையாலே, இந் நம: சப்தம் ஸமர்ப்பணப் பொருளுக்கு ஸங்கதம். இப்படி உத்தரகண்டத்தை ஆத்ம ஸமர்ப்பண பரமாக அநுஸந்திப்பார்க்கு, இதுக்கு அநுரூபமாய் ஸ்வரூபாநுபந்தியான பலவிசேஷம் இங்கே ஸ்வத: ப்ராப்தம். பூர்வோக்தமானபடியே பலபரமாக உத்தரகண்டத்தை அநுஸந்திப்பார்க்கு, இவ்வாத்ம ரக்ஷாபரஸமர்ப்பணம், உபாயபரமான பூர்வகண்டத்தில் சரண சப்தாந் விதமான க்ரியாபதத்திலே அநுஸந்தேயம்.

**விளக்கம்** – “நம:” என்னும் சொல்லுக்கு நேரடியாக உள்ள சாதாரண பொருளைக் கொண்டாலும், மந்த்ரராஜபத ஸ்தோத்ரத்தில் “நமாமி” என்னும் பதத்திற்கு “ஆத்மாவைச் சமர்ப்பணம் செய்தல்” என்று பொருள் கூறுவது போன்றே, “நம:” என்னும் சொல்லுக்கு “சமர்ப்பணம் செய்கிறேன்” என்று பொருள் கொள்ளலாம். ஆக த்வயத்தின் இரண்டாவது வரியானது ஆத்ம ஸமர்ப்பணத்தைக் கூறுகிறது என்று பொருள் கொள்பவர்களுக்கு, அவர்களுடைய ஆத்ம ஸ்வரூபத்திற்குச் சேருவதான பகவத் கைங்கர்யம் என்பது பலனாக உண்டாகிறது என்பது தானாகவே வெளிப்படுகிறது. அல்லது த்வயத்தின் இரண்டாவது வரியானது மேலே கூறியது போன்று பலனாகிய கைங்கர்யத்தைக் கூறுகிறது என்று பொருள் கொள்பவர்களுக்கு, உபாயத்தைக் கூறுவதான முதல் வரியானது சரணம் என்னும் பொருளை உணர்த்தும் வினைமுற்றான “ப்ரபத்யே” என்பதன் மூலம், ஆத்ம ஸமர்ப்பணத்தைக் கூறுவதாகக் கொள்ளவேண்டும்.

## த்வயத்தில் உள்ள சொற்களின் மூலம் கிடைக்கும் பொருளின் சுருக்கம்

**மூலம்** – இப்படி த்வயத்தில் பதங்களில் அடைவே சப்த அர்த்த ஸ்வபாவங்களாலே புருஷகாரயோகம், அதின் நித்யத்வம், உபாய வைசிஷ்டயம், சரண்யகுண பூர்ணத்வம், ஸம்பந்த விசேஷம், திவ்யமங்கள விக்ரஹயோகம், அதில் சேஷபூதன் இழியும் துறை, அதின் உபாயத்வ ப்ரகாரம், வசீகரண விசேஷம், தத்பரிகரங்கள், அதிகாரி விசேஷம், ப்ராப்ய வைசிஷ்டயம், குணவிபூதி விசிஷ்ட ப்ராப்யத்வம், கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வம், கைங்கர்ய ப்ரார்த்தனை, ஸர்வவிதி கைங்கர்ய லாபம், ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தி, அதினுடைய ஆத்யந்திகத்வம், பராதீந பரார்த்த கர்த்ருத்வம், ததாவித போக்த்ருத்வம் என்றிவை ப்ரதானமாய், இவற்றுக்கு அபேக்ஷிதங்களுமெல்லாம் ஸித்த ஸாத்ய விபாகவத்தான உபாயமென்றும் உபேயமென்றும் இரண்டு ப்ரதாந ப்ரதிபாத்யங்களோடே துவக்குண்டு ப்ரகாசிதங்களாயிற்று.

**விளக்கம்** – த்வயத்தில் உள்ள பல சொற்களின் தன்மைகளாலும், அந்தச் சொற்களில் மறைமுகமாக வெளிப்படும் பொருளாலும் கீழே உள்ள பல அர்த்தங்கள் வெளிப்படுகின்றன – புருஷகாரமாக (சிபாரிசு) உள்ள பெரியபிராட்டியுடன் ஸர்வேச்வரனுக்கு உள்ள சேர்த்தி, இந்தச் சேர்த்தியின் எப்போதும் உள்ள தன்மை, ஸர்வேச்வரனுடன் சேர்ந்து பெரியபிராட்டியும் உபாயமாக உள்ள தன்மை, அடையப்படும் ஸர்வேச்வரன் அனைத்து குணங்களையும் பூர்ணமாகக் கொண்டுள்ள தன்மை, ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையே உள்ள தொடர்பின் சிறப்பு (எஜமானன் – அடிமை, சரீரி – சரீரம் போன்றவை), ஸர்வேச்வரன் திவ்யமானதும் மங்களகரமானதும் ஆகிய திருமேனியைக் கொண்டிருத்தல், இப்படியாக உள்ள திருமேனியுடன் கூடிய ஸர்வேச்வரனை அடிமையான ஜீவாத்மா அண்டுதல், இத்தகைய திருமேனி ஜீவாத்மாவுக்கு உபாயமாக உள்ள விதம், ஸர்வேச்வரனுடைய க்ருபையைப் பெறும் விதம், அதன் அங்கங்கள், உபாயத்தைக் கைக்கொள்ள முயலும் அதிகாரியின் தன்மைகள், ஸ்ரீயுடன் கூடிய ஸர்வேச்வரன் அடையவேண்டிய இலக்காக உள்ளது எப்படி, அடையவேண்டிய இலக்காக உள்ள ஸர்வேச்வரன் குணங்களுடனும் விபூதிகளுடனும் உள்ளது எப்படி, ஸர்வேச்வரனும் பெரியபிராட்டியும் நம்முடைய கைங்கர்யங்களை ஏற்பவர்களாக உள்ளது எப்படி, இத்தகைய கைங்கர்யத்தைப்

பெறுவதற்கான ப்ரார்த்தனை, அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் அடைதல், நமக்கு விருப்பம் அல்லாதவை அனைத்தும் நம்மை விட்டு விலகுதல், இவ்விதம் விலகிய அனைத்தும் மீண்டும் உண்டாகாமல் இருத்தல் (அல்லது அவை தொடக்கம் மற்றும் முடிவுடன் அழிதல்), ஸர்வேச்வரனுடைய விருப்பத்திற்கும் ஆணைக்கும் ஏற்ப ஜீவாத்மா செயலாற்றியபடி உள்ள நிலை, மோக்ஷம் பெற்ற பின்னரும் ஸர்வேச்வரனுடைய விருப்பத்திற்கும் ஆணைக்கும் ஏற்ப ஜீவாத்மா இன்பங்களை அனுபவித்தபடி உள்ள நிலை – போன்றவை ஆகும். இவை மட்டும் அல்லாமல் த்வயத்தின் மூலம் வெளிப்படும் மேலும் இரண்டு முக்கியமான விஷயங்கள் – ஸித்தமாகவும் (ஸர்வேச்வரன் மற்றும் பெரியபிராட்டி), ஸாத்யமாகவும் (ப்ரபத்தி) உள்ளதான உபாயம் மற்றும் ஸித்தமாகவும் (ஸர்வேச்வரன் மற்றும் பெரியபிராட்டி), ஸாத்யமாகவும் (கைங்கர்யம்) உள்ளதான இலக்கு – என்பவை ஆகும்.

## கைக்கொள்ளும் நேரத்தில் த்வயத்தின் அர்த்தங்களை எண்ணும் விதம்

**மூலம்** – இப்படி சாரீரக சாஸ்த்ரத்திற்போலவே தத்த்வவிசேஷமும் உபாயவிசேஷமும் பலவிசேஷமும் இம்மந்த்ரத்திலே ப்ரதிபாதிதமானாலும், இது ச்வேதாஸ்வதர மந்த்ரம் போலே பலாபேக்ஷாபூர்வகமான உபாயாநுஷ்டான ப்ரதானமாகையால், உபாய பலங்களுடைய உத்பத்தி க்ரமத்தோடே சேர்ந்த பாட க்ரமத்தாலே பல ப்ரதிபாதக வாக்யம் பிற்பட்டாலும், அர்த்த க்ரமத்தாலே இது முற்பட அநுஸந்தேயமென்று பூர்வர்கள் அருளிச் செய்வர்கள். புருஷன் புருஷார்த்தத்தை விமர்சித்துக் கொண்டன்றி, உபாயவிமர்சமும் உபாயாநுஷ்டாநமும் பண்ணானிறே. இப்படித் திருமந்த்ரத்திலும் உபாய பல ப்ரதிபாதகம்சங்களில் க்ரம ப்ரகாரங்களைக் கண்டு கொள்வது. பலார்த்தியாய் அதிகாரியானாலிறே இவனுக்கு இவ்வுபாயாநுஷ்டாநம் வருவது? “த்வயேந சரணம் வ்ரஜேத்”, “த்வயார்த்த: சரணாகதி:” என்கிற அபியுக்தர் பாசுரங்களாலும் த்வயம் உபாயாநுஷ்டாநத்தைப் ப்ரதானமாக ப்ரகாசிக்கிறது.

**பொருள்** – ப்ரஹ்மஸூத்ரத்தில் உள்ளதைப் போன்றே த்வயத்திலும் பெரியபிராட்டியுடன் கூடிய ஸர்வேச்வரனுடைய மேன்மை, அவனை அடையும் உபாயத்தின் சிறப்பு (ப்ரபத்தியின் சிறப்பு), அந்த உபாயத்தின் மூலம் அடையும் பலனின் சிறப்பு

(கைங்கர்யத்தின் சிறப்பு) ஆகியவை அதே வரிசையில் கூறப்படுகின்றன. ஆனால் இந்த த்வய மந்த்ரத்தில், ச்வேதாஸ்வதர உபநிஷத்தில் உள்ள மந்த்ரம் போன்று (மோக்ஷத்தை விரும்பி உன்னைச் சரணம் அடைகிறேன்), பலனை முதலில் கூறி அதனைத் தொடர்ந்து உபாயத்தைக் கூறவில்லையே என்று சிலர் கேட்கலாம். இதற்கான சமாதானத்தை – உபாயம் மற்றும் பலன் என்னும் வரிசையில் த்வய மந்த்ரம் உள்ளபோதிலும், இதனால் பலனைக் குறித்துக் கூறும் வாக்கியம் பின்னுக்குத் தள்ளப்பட்டபோதிலும், ப்ரபத்தியைக் கைக்கொள்ளும் நேரத்தில் முதலில் பலனையே(கைங்கர்யத்தையே) எண்ணுதல் வேண்டும் – என்று பூர்வாசார்யர்கள் உரைப்பர். ஒரு உபாயத்தைக் குறித்து அறிந்து கொண்டு, அதனைக் கைக்கொள்ளும் எந்த ஒரு மனிதனும், அந்த உபாயத்தால் விளையக்கூடிய பலன் என்ன என்பதை அல்லவோ முதலில் ஆராய்வான்? அதன் பின்னரே அவன் உபாயத்தில் ஈடுபடுவான். இது போன்றே திருமந்த்ரத்திலும், உபாயம் மற்றும் பலனைக் கூறுதலில் உள்ள வரிசையைக் கொள்ளவேண்டும். ஒருவன் பலனை அடைவதில் விருப்பம் கொள்ளவேண்டும், மேலும் அதற்கான தகுதி அவனிடம் இருக்கவேண்டும், அதன் பின்னர் அல்லவோ அவன் அந்தப் பலனுக்கான உபாயத்தில் ஈடுபடுவான்? த்வயேந சரணம் வ்ரஜேத் – த்வயம் என்னும் மந்த்ரத்தால் சரணம் அடையவேண்டும் – என்றும், த்வயார்த்த: சரணாகதி: - த்வயத்தால் கூறப்படும் சரணாகதி – என்றும் உள்ள சான்றோர்கள் வாக்கின்படி, த்வயம் என்பது உபாயத்தைக் கைக்கொள்ளுதலையே முதன்மையாகக் கூறுகிறது.

## த்வயத்தின் மூலம் கிட்டும் திரண்ட பொருள்

**மூலம்** – இங்கு பூர்வகண்டமும், சதுர்த்யந்த பதங்களும், நமஸ்ஸுமாக மூன்று அவாந்தர வாக்யங்களானாலும், திரள உபாயப்ரதாநமான ஒரு வாக்யமாய்த் தலைக்கட்டக் கடவது. எங்ஙனேயென்னில், ஸர்வஸ்வாமியாய் ஸர்வப்ரகார நிரதிசய போக்யனாய்ப் பெரியபிராட்டியாரோடு பிரிவில்லாத நாராயணன் திருவடிகளில் ஸ்வரூப ப்ராப்தமான ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யத்துக்கும் விரோதியான ஸர்வமும் கழிந்து பரிபூர்ண கைங்கர்யம் பெறுகைக்கு அகிஞ்சனனான அடியேன் ஸ்வரக்ஷணபராதிகளில் எனக்கு அந்வயமறும்படி ஸ்ரீமானான நாராயணன்

திருவடிகளிலே அங்கபஞ்சக ஸம்பந்நமான ஆத்மரக்ஷா பரஸமர்ப்பணம் பண்ணுகிறேனென்று த்வயத்தில் திரண்ட பொருள்.

**விளக்கம்** – த்வயத்தில் உள்ள முதல் வரி, நான்காம் வேற்றுமையான "ஆய" என்பதில் முடியும் சொற்கள், "நம:" என்று உள்ளவற்றைத் தனித்தனியே கொண்டு, த்வயத்தில் மூன்று இடைப்பட்ட வாக்கியங்கள் உள்ளன என்றாலும் (முதல் வாக்கியம் – ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே – பெரியபிராட்டியுடன் கூடிய ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளில் சரணம் அடைகிறேன்; இரண்டாவது வாக்கியம் – ஸ்ரீமதே நாராயணான ஸ்யாம் – பெரியபிராட்டியுடன் கூடிய நாராயணனுடைய திருவடிகளில் பரிபூர்ணமான கைங்கர்யத்தை அடைவேனாக; மூன்றாம் வாக்கியம் – நம: - கைங்கர்யத்துக்கு எந்தவிதமான தடையும் உண்டாகக்கூடாது), உபாயத்தைக் கருத்தில் கொண்டு, அதனை ஒரே வாக்கியமாகவே கொள்ளவேண்டும். இது எப்படி? அனைவருக்கும் எஜமானனாகவும், எல்லையற்ற இனிமை நிறைந்தவனாகவும், பெரியபிராட்டியை விட்டு அகலாதவனாகவும் உள்ள ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளில்; என்னுடைய ஆத்மஸ்வரூபத்திற்குச் சேர்வதான, அனைத்து இடங்களிலும் அனைத்து காலங்களிலும் அனைத்து நிலைகளிலும் அனைத்துவிதங்களிலும் செய்யப்படும் கைங்கர்யத்துக்கு; தடையாக உள்ள அனைத்துவிதமான இடையூறுகளும் நீங்கி, பரிபூர்ணமான கைங்கர்யத்தில் ஈடுபடுவதற்கு; மற்ற எந்தவிதமான உபாயங்களிலும் சக்தியில்லாத நான் – என்னைக் காப்பாற்றும் பொறுப்பிலும், அதன் பலனிலும் சற்றும் ஸம்பந்தம் கொள்ளாதபடி, பெரியபிராட்டியார் என்னும் செல்வம் கொண்ட ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளில் ஐந்து அங்கங்களுடன் கூடியதான, "என்னுடைய ஆத்மாவை ரக்ஷித்து, அதனைக் காக்கும் பாரத்தை அவனிடம் சமர்ப்பிக்கிறேன்" என்பதான ப்ரபத்தியைச் செய்கிறேன் – என்பதே த்வயத்தின் மூலம் வெளிப்படும் விரிவான பொருளாகும்.

**மூலம்** –

வைராக்ய விஜித ஸ்வாந்தை: ப்ரபத்தி விஜிதேச்வரை:
அநுக்ரோசைக விஜிதை: இத்யுபாதேசி தேசிகை:

இதமஷ்டபதம் வ்யாஸே ஸமாஸே ஷட்பதம் விது:
வாக்யம் பஞ்சபதைர் யுக்தம் இத்யாக்யாத ப்ரதாநகம்

ஏகம் த்வயம் த்ரய வயம் ஸுக லப்ய துர்யம்
வ்யக்த அர்த்தபஞ்சகம் உபாத்த ஷடங்க யோகம்
ஸப்தார்ணவீ மஹிமவத் விவ்ருத அஷ்டவர்ண
ரங்கே ஸதாமிஹ ரஸம் நவமம் ப்ரஸூதே

ஓதுமிரண்டை இசைத்து அருளால் உதவும் திருமால்
பாதமிரண்டும் சரணெனப் பற்றி நம் பங்கயத்தாள்
நாதனை நண்ணி நலந்திகழ் நாட்டில் அடிமையெல்லாம்
கோதிலுணர்த்தியுடன் கொள்ளுமாறு குறித்தனமே

ந வேதாந்தாத் சாஸ்த்ரம் ந மதுமதநாத் தத்த்வம் அதிகம்
ந தத்பக்தாத் தீர்த்தம் ந தத் அபிமதாத் ஸாத்த்விக பதம்
ந ஸத்த்வாத் ஆரோக்யம் ந புதபஜநாத் போதஜநகம்
ந முக்தே: ஸௌக்யம் ந த்வய வசநத: க்ஷேமகரணம்

**பொருள் –**

- வைராக்ய விஜித ஸ்வாந்தை: ப்ரபத்தி விஜிதேச்வரை: அநுக்ரோசைக விஜிதை: இத்யுபாதேசி தேசிகை: - தங்களுடைய வைராக்யம் மூலம் தங்களுடைய மனத்தை வசப்படுத்தியவர்களும், ப்ரபத்தி மூலம் ஸர்வேச்வரனை வசப்படுத்தியவர்களும், இரக்கத்தால் மட்டுமே வெல்லப்பட்டவர்களும் ஆகிய ஆசார்யர்களால் இவ்விதம் உபதேசிக்கப்பட்டது.

- இதம் அஷ்டபதம் வ்யாஸே ஸமாஸே ஷட்பதம் விது: வாக்யம் பஞ்சபதைர் யுக்தம் இத்யாக்யாத ப்ரதாநகம் – த்வயமானது பிரிக்கப்பட்டால் (ஸ்ரீமந் நாராயண சரணௌ – என மூன்று சொற்களாகப் பிரிக்கப்பட்டால்) எட்டு சொற்களைக் கொண்டதாகவும், பிரிக்கப்படாமல் சேர்ந்தே இருந்தால் (ஸ்ரீமந் நாராயண

சரணௌ – என்பது ஒரே சொல்லாகக் கொள்ளப்பட்டால்) ஐந்து சொற்களைக் கொண்டதாகவும் (ஸ்ரீமந் நாராயண சரணௌ, சரணம், ப்ரபத்யே, ஸ்ரீமதே நாராயணாய, நம:), "ப்ரபத்யே" என்னும் வினைச்சொல்லை முதன்மையாகக் கொண்டதாகவும் (ப்ரபத்யே, சரணம், ஸ்ரீமந் நாராயண சரணௌ, ஸ்ரீமதே நாராயணாய, நம:) உள்ள வாக்கியமாகும் என்று கொண்டனர்.

- ஏகம் த்வயம் த்ரய வயம் ஸுக லப்ய துர்யம் வ்யக்த அர்த்தபஞ்சகம் உபாத்த ஷடங்க யோகம் ஸப்தார்ணவீ மஹிமவத் விவ்ருத அஷ்டவர்ண ரங்கே ஸதாமிஹ ரஸம் நவமம் ப்ரஸூதே – த்வயம் என்னும் பெயர் கொண்ட இந்த ஒரே வாக்கியமானது மூன்று உட்பகுதி வாக்கியங்களைக் கொண்டதாகவும், நான்காவதான மோக்ஷத்தை அளிப்பதாகவும், அர்த்தபஞ்சகம் என்னும் ஐந்து விஷயங்களை தெரிவிப்பதாகவும், ஆறு அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தி யோகத்தை அளிப்பதாகவும், ஏழு ஸமுத்திரங்கள் போன்று மேன்மை கொண்டதாகவும், எட்டு எழுத்துள்ள திருமந்த்ரத்தை விளக்குவதாகவும், ஸம்ஸார மண்டலத்தில் உள்ளதான ஸ்ரீரங்கத்தில் வசிப்பவர்களுக்கு சாந்தி என்னும் ஒன்பதாவது ரஸத்தை அளிப்பதாகவும் உள்ளது.

- ஓதுமிரண்டை இசைத்து அருளால் உதவும் திருமால் பாதமிரண்டும் சரணெனப் பற்றி நம் பங்கயத்தாள் நாதனை நண்ணி நலந்திகழ் நாட்டில் அடிமையெல்லாம் கோதிலுணர்த்தியுடன் கொள்ளுமாறு குறித்தனமே – வேதங்களில் அத்யயனம் செய்யப்படுவதான இரண்டு வாக்கியங்களை ஒன்றாகச் சேர்த்து தன்னுடைய க்ருபையால் "த்வயம்" என்று அளித்து உபகாரம் செய்த ஸர்வேச்வரனுடைய இரண்டு திருவடிகளை மட்டுமே நமக்கு உபாயமாகப் பற்றியபடி, தாமரைமலரில் வசிப்பவளான நம்முடைய பெரியபிராட்டியின் நாயகனை அண்டி நின்று, ஆனந்தம் நிலைப்பதான பரமபதத்தில், அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் (நாம் செய்கிறோம், அதன் பலனை நாம் அனுபவிக்கிறோம் என்று எண்ணுகின்ற) தோஷம் இல்லாதவிதத்தில் கைக்கொள்ளும் வழியை நாம் த்வயத்தில் கூறினோம்

- ந வேதாந்தாத் சாஸ்த்ரம் ந மதுமதநாத் தத்த்வம் அதிகம் ந தத்பக்தாத் தீர்த்தம் ந தத் அபிமதாத் ஸாத்த்விக பதம் ந ஸத்த்வாத் ஆரோக்யம் ந புதபஜநாத் போதஜநகம் ந


email : sridharan_book@yahoo.com

முக்தே: ஸௌக்யம் ந த்வய வசநத: க்ஷேமகரணம் – வேதாந்தங்களைக் காட்டிலும் உயர்ந்த சாஸ்த்ரம் இல்லை, மது என்னும் அஸுரனை அழித்த க்ருஷ்ணனைக் காட்டிலும் உயர்ந்த தத்துவம் இல்லை, பாகவதர்களைக் காட்டிலும் தூய்மையாக்கவல்ல பொருள்கள் இல்லை, பாகவதர்கள் விருப்பத்துடன் வாழும் இடங்களைக் காட்டிலும் ஸத்வகுணம் நிறைந்த இடங்கள் இல்லை, ஸத்வகுணத்தைக் காட்டிலும் ஆரோக்யம் அளிக்கவல்ல பொருள்கள் இல்லை, சிறந்த ஆசார்யனை அடைவதைக் காட்டிலும் மெய்ஜ்ஞானம் அளிப்பது வேறு இல்லை, மோக்ஷத்தைக் காட்டிலும் ஸுகம் அளிப்பது வேறு இல்லை, த்வயத்தை எண்ணியபடி இருத்தலைப் போன்று க்ஷேமம் அளிப்பது வேறு இல்லை.

## த்வயாதிகாரம் ஸம்பூர்ணம்

பெரியபெருமாள் திருவடிகளே சரணம்

பெரியபெருமாள் திருவடிகள் தஞ்சம் அடைந்த நம் உடையவர் திருவடிகளே சரணம்

உடையவர் திருவடிகள் சரணம் புகுந்த நம் தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீஅரவிந்தவல்லி ஸமேத ஸ்ரீபத்ரிநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## அதிகாரம் 29

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)
www.namperumal.com / namperumal.wordpress.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# 29. சரம ச்லோக அதிகாரம்

ய உபநிஷதாமந்தே யஸ்மாதநந்த தயாம்புதே:
த்ருடித ஜநதா சோக: ச்லோக: ஸ்வயம் ஸமஜாயத
தமிஹ விதிநா க்ருஷ்ணம் தர்மம் ப்ரபத்ய ஸநாதநம்
சமித துரித சங்காதங்க த்யஜ: ஸுகமாஸ்மஹே

**பொருள்** – எந்த ஸர்வேச்வரன் உபநிஷத்துக்களின் அருகே உள்ளானோ, எல்லையற்ற கருணைக்கடலாக உள்ள எந்த ஒரு ஸர்வேச்வரனிடமிருந்து இந்த உலகில் உள்ளவர்களுடைய துன்பங்களை விலக்கக்கூடிய சரமச்லோகம் தானாகவே வெளிப்பட்டதோ, அப்படிப்பட்ட ஸித்தோபாயமாகிய க்ருஷ்ணனைத் தகுந்த முறைப்படிச் சரணம் புகுந்து தங்களுடைய பாபங்கள் அனைத்தையும் கைவிட்டவர்களாக, சந்தேகம் – அச்சம் போன்றவற்றைக் கைவிட்டவர்களாக, சுகமாக உள்ளோம்.

துர்விஜ்ஞாநைர் நியமகஹநை: தூரவிச்ராந்திதேசை:
பால அநர்ஹை: பஹுபி: அயநை: சோசதாம் ந: ஸுபந்தா:
நிஷ்ப்ரத்யூஹம் நிஜபதமஸௌ நேதுகாம: ஸ்வபூம்நா
ஸத்பாதேயம் கமபி விதத்தே ஸாரதி: ஸர்வநேதா

**பொருள்** – அறிந்துகொள்வதற்கு மிகவும் கடினமாகவும், பலவிதமான கட்டுப்பாடுகள் உள்ளதால் இயற்றுவதற்குக் கடினமாகவும், தாமதமாகவே பலன் அளிப்பதாகவும், கைம்முதல் இல்லாதவர்களுக்குக் கைக்கொள்ள இயலாததாகவும் உள்ள பலவிதமான உபாயங்களால் நாம் வருந்தி (கலங்கி) நிற்கிறோம். இப்படியுள்ள நமக்கு, நல்லதொரு உபாயமாகவும், அனைவரையும் நெறிப்படுத்தி பலன் அளிப்பவனாகவும், தேர் ஓட்டுபவனாகவும் உள்ள க்ருஷ்ணன், தனது மேன்மை காரணமாக, எந்தவிதமான தடையும் இல்லாமல் நம்மை அவனுடைய இடத்திற்கு அழைத்துச் செல்ல

எண்ணியவனாக, மேன்மையான சிறந்த மார்க்கத்தை (ப்ரபத்தியை சரம ச்லோகத்தில்) விதித்தான்.

ஒண்டொடியாள் திருமகளும் தானுமாகி
ஒரு நினைவால் ஈன்ற உயிரெல்லாம் உய்ய
வண் துவரைநகர் வாழ வசுதேவற்காய்
மன்னவற்குத் தேர்ப்பாகனாகி நின்ற
தண்டுளவமலர் மார்பன் தானே சொன்ன
தனித்தருமம் தானெமக்காய்த் தன்னை என்றும்
கண்டு களித்து அடிசூட விலக்காய் நின்ற
கண்புதையல் விளையாட்டைக் கழிக்கின்றானே

**பொருள்** – அழகான த்வாரகையில் உள்ள அனைவரும் நலமாக இருக்கும்விதமாக, வஸுதேவனுக்குப் புத்திரனாக அவதரித்தவனும், அர்ஜுனனுக்குத் தேரோட்டியாக நின்றவனும், குளிர்ந்த துளசியுடன் சேர்ந்த மலர்களைத் தனது திருமார்பில் அணிந்தவனும் ஆகிய க்ருஷ்ணன், அழகான வளையல்கள் அணிந்த பெரியபிராட்டியும் தானுமாகச் சேர்ந்து, இந்த உலகத்தைக் கரையேற்றுவதற்காக ஒரே போன்று சிந்தித்தனர். ஆகவே, தானே சரமச்லோகத்தில் தன்னையே அடையக்கூடிய தர்மமாக (ஸித்தோபாயமாக) வெளிப்படுத்திக் கொண்டான். இதன் மூலமாக, அவனை எப்போதும் அனுபவித்தபடி நின்று, அவனுக்குக் கைங்கர்யம் செய்யக்கூடிய வாய்ப்பிற்குத் தடையாக உள்ளதான ப்ரக்ருதியுடனான தொடர்பு என்னும் கண்கட்டி விளையாட்டை நீக்குகிறான்.

## சரமச்லோகத்தின் அவதாரிகை

**மூலம் –**

ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:
நாகபர்யந்தம் உத்ஸ்ருஜ்ய ஹி ஆகதோ மதுராம் புரீம்

என்கிறபடியே ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன், ஸாதுபரித்ராண துஷ்க்ருத் விநாச தர்ம ஸம்ஸ்தாநங்களுக்காக "வண்டுவராபதி மன்னனாய்" வந்து அவதரித்தருளி ஸர்வஸுலபனாய், "த்ரௌபத்யா ஸஹிதா: ஸர்வே நமச்சக்ருர்ஜநார்த்தநம்" என்கிறபடியே சரணாகதரான பாண்டவர்களுக்கு "இன்னார் தூதனென நின்று" அர்ஜுநனை ரதியாக்கித் தான் ஸாரதியாய் அவனுக்கு விதேயனாய் நின்றவளவிலே,

**விளக்கம்** – ஹரிவம்சம் (113-62) - ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந: நாகபர்யந்தம் உத்ஸ்ருஜ்ய ஹி ஆகதோ மதுராம் புரீம் – மஹாலக்ஷ்மியின் நாதனாகிய ஸ்ரீமந்நாராயணன், திருப்பாற்கடலில் உள்ள ஆதிசேஷன் என்னும் தனது படுக்கையை விட்டு, மதுராவில் வந்து தோன்றினான் – என்பதற்கு ஏற்ப, மஹாலக்ஷ்மியின் நாதனாகிய ஸர்வேச்வரன், நல்லவர்களைக் காப்பாற்றவும் – தீயவற்றை அழிக்கவும் – தர்ம மார்க்கத்தை நிலைநாட்டவும், திருவாய்மொழி (5-3-6) – வண்துவராபதி மன்னன் – என்பதற்கு ஏற்ப பெரியதான த்வாரகையின் சக்ரவர்த்தியாக அவதரித்து எல்லாருக்கும் எளிதாக நாடலாம்படி விளங்கினான்; மஹாபாரதம் வனபர்வம் (161-36) - ஏவமுக்தாஸ்த்ரய: பார்த்தா யமௌ ச பரதர்ஷப த்ரௌபத்யா ஸஹிதா: ஸர்வே நமச்சக்ருர்ஜநார்த்தநம் – மார்க்கண்டேயரால் உபதேசிக்கப்பட்ட குந்தியின் புத்திரர்கள் மூவரும் நகுல ஸஹாதேவர்களுடனும், திரௌபதியுடனும் சேர்ந்து க்ருஷ்ணனைச் சரணம் அடைந்தார்கள் – என்பதற்கு ஏற்ப தன்னைச் சரணம் அடைந்த பாண்டவர்களுக்காக, பெரியதிருமொழி (2-2-3) – இன்னார் தூதனென நின்றான் – என்பதற்கு ஏற்ப தூது சென்று, அர்ஜுனனைத் தேரில் அமர வைத்து தான் அவனுக்குச் சாரதியாக அவன் கூறுவதற்கு ஏற்ப நடந்தபடி இருந்தபோது …

**மூலம்** – இவ்வர்ஜுநன், தன்னை நிமித்தமாத்ரமாகக் கொண்டு ஸர்வேச்வரன் தன் ப்ரதிபக்ஷங்களை நிரஸிக்க நின்ற நிலையைக் கண்டு பந்துவிநாசம் ஸித்தமென்று நிச்சயித்து, அஸ்தாந ஸ்நேஹத்தாலே பிறந்த சோகத்தாலும், அஸ்தாந க்ருபையாலும், ஆசார்யாதிகள் யுத்தோந்முகரேயாகிலும் அவர்கள் வதத்தாலே பாபம் வருகிறதென்கிற பயத்தாலும் கலங்கி, எது ஹிதமென்று தெளியவேண்டுமென்று பார்த்து, "யச்ச்ரேய: ஸ்யாந்நிச்சிதம் ப்ரூஹி தந்மே சிஷ்யஸ்தே அஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்" என்று விண்ணப்பம் செய்ய; அவனுடைய சோகத்தை நிவர்த்திப்பிக்கைக்காக தேஹாதி வ்யதிரிக்தமாய்ப் பரசேஷதைகரஸமான நித்யாத்ம ஸ்வரூபத்தையும், இஸ்ஸ்வரூபம்

தெளிந்தவனுக்குப் பரமபுருஷார்த்த லாபத்துக்குப் பரம்பரயா காரணங்களான கர்மயோக ஞானயோகங்களையும், ஸாக்ஷாதுபாயமாகச் சோதிதமான பக்தியோகத்தையும் ஸபரிகரமாக உபதேசிக்க,

**விளக்கம்** – தன்னை ஒரு பெயரளவில் மட்டுமே யுத்தபூமியில் நிறுத்திவிட்டு, ஸர்வேச்வரன் தன்னுடைய எதிர்தரப்பினர் அனைவரையும் அழிப்பதற்காக நின்றதை அர்ஜுனன் கண்டான். இதனால் தனது உறவினர்கள் அனைவரும் மடிவது உறுதி என்று முடிவு செய்தான். ஆகவே, வரக்கூடாத இடத்தில் (அதாவது யுத்தபூமியில்) தகாதவர்கள் குறித்து உண்டான சோகம் காரணமாகவும், அவசியம் இல்லாத கருணை காரணமாகவும், யுத்தத்தில் தனக்கு முன்பாக தனது ஆசார்யர்கள் உள்ளதால் அவர்களைக் கொன்ற பாபம் உண்டாகும் என்னும் பயம் காரணமாகவும் கலங்கினான். தனக்கு எது நன்மை என்று அறிய எண்ணினான். ஆகவே கீதையில் (2-7) - யச்ச்ரேய: ஸ்யாந்நிச்சிதம் ப்ரூஹி தந்மே சிஷ்யஸ்தே அஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் – உன்னுடைய சிஷ்யனாக உன்னிடம் சரணம் அடைந்த எனக்கு எது நன்மை என்று உனக்குத் தோன்றுகிறதோ, அதனை உபதேசிப்பாயாக – என்று கூறுவதற்கு ஏற்ப விண்ணப்பித்தான். அவனுடைய சோகத்தை விலக்குவதற்காக, சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டதும் ஸர்வேச்வரனுக்கு கைங்கர்யம் செய்தலை மட்டுமே தனக்கு இன்பமாகக் கொண்டதும் நித்யமாக உள்ளதும் ஆகிய ஆத்மஸ்வரூபத்தைக் குறித்தும், இப்படிப்பட்ட ஆத்மஸ்வரூபம் குறித்து அறிந்த ஒருவன் உயர்ந்த புருஷார்த்தமாகிய மோக்ஷம் பெறுவதற்கான காரணமாக உள்ள கர்மயோகம் – ஞானயோகம் ஆகியவை குறித்தும், நேரடியான காரணமாக உள்ள பக்தியோகத்தைக் குறித்தும், அவற்றின் அங்கங்களுடன் உபதேசித்தபோது …

**மூலம்** – இப்பரமபுருஷார்த்தத்தைக் கடுகப் பெறவேணுமென்கிற த்வரை உண்டேயாகிலும், ஸபரிகரமான இவ் வுபாயத்தினுடைய துஷ்கரதையினாலும், இவ் வுபாயாநுஷ்டானத்துக்கு அபேக்ஷித ஞான சக்திகளுண்டேயாகிலும், அநேகாவதாநத்தோடே கூடச் சிரகால ஸாத்யமான உபாய ஸ்வபாவத்தாலே அபிமதம் கடுகத் தலைக்கட்டாதபடியிருக்கையாலும் நிரதிசய சோகாவிஷ்டனான அர்ஜுனனை வ்யாஜமாகக் கொண்டு பரமகாருணிகனான கீதோபநிஷதாசார்யன், "பக்த்யா பரமயாவாபி ப்ரபத்த்யா வா மஹாமதே ப்ராப்யோஹம் நாந்யதா ப்ராப்யோ மம கைங்கர்ய லிப்ஸுபி:" என்று தான் விகல்பித்து விதித்த உபாயங்களில், "தாவதார்த்திஸ்

ததா வாஞ்சா தாவந்மோஹஸ் ததா அஸுகம்" என்கிறபடியே தன் திருவடிகளைப் பெறுகைக்கும் மற்றும் அபிமதமானவை எல்லாவற்றுக்கும் பொதுவான ஸாதநமாய், ஆநுகூல்ய ஸங்கல்பாதி வ்யதிரிக்த பரிகர நிரபேக்ஷமாய், லகுதரமாய், க்ஷணமாத்ர ஸாத்யமான ரஹஸ்யதமோபாயத்தை ச்ரோதவ்ய சேஷமில்லாதபடி, உபதேச பர்யவஸானமான சரமச்லோகத்தால் ஸகல லோக ரக்ஷார்த்தமாக அருளிச் செய்கிறான்.

**விளக்கம்** – இப்படிப்பட்ட உயர்ந்த புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை விரைவாகப் பெறவேண்டும் என்னும் வேகம் அர்ஜுனனிடம் இருந்தபோதிலும், பல அங்கங்களுடன் கூடியதான இந்தப் பக்தியோகத்தை எளிதாக இயற்றமுடியாத காரணத்தாலும், இந்த உபாயத்தைக் (பக்தியோகம்) கைக்கொள்ளத் தேவையான ஞானம் மற்றும் சக்தி போன்றவை அவசியம் என்பதாலும், பலவிதமான கவனத்துடன் இந்த உபாயத்தைக் கைக்கொண்டாலும் தனது விருப்பம் என்பதான மோக்ஷம் விரைவாகக் கிட்டாது என்பதாலும், அர்ஜுனன் மேலும் சோகம் அடைந்தான். இப்படிப்பட்ட அர்ஜுனனை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு, மிகுந்த கருணையுள்ள கீதாசார்யனாகிய க்ருஷ்ணன் செய்தது என்னவென்றால் - பக்த்யா பரமயாவாபி ப்ரபத்த்யா வா மஹாமதே ப்ராப்யோஹம் நாந்யதா ப்ராப்யோ மம கைங்கர்ய லிப்ஸுபி: - சிறந்த மதி நிறைந்தவனே! எனக்குக் கைங்கர்யம் செய்தல் வேண்டும் என்று எண்ணுபவர்களால் பக்தி அல்லது ப்ரபத்தியால் மட்டுமே நான் அடையப்படுகிறேன்; மற்ற வழிகளால் அடைய இயலாது – என்பதற்கு ஏற்ப தான் விதித்த உபாயங்களுக்குள், விஷ்ணுபுராணம் (1-9-73) - தாவதார்த்திஸ்ததா வாஞ்சா தாவந்மோஹஸ்ததா அஸுகம் யாவந்த யாதி சரணம் த்வாமசேஷாதநாசநம் – அனைத்து பாவங்களையும் நீக்கவல்ல ப்ரபத்தியை உன்னிடம் பண்ணாமல் உள்ளவரை மட்டுமே மனிதனுக்குத் தான் இழந்த செல்வங்களை மீண்டும் பெறவேண்டும், புதிய செல்வம் அடையவேண்டும், சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்மாவை உணராமல் இருப்பது, ஸம்ஸார துக்கம் ஆகியவை தொடரும் – என்பதற்கு ஏற்ப தன்னுடைய திருவடிகளை அடைவதற்கும், மேலும் விரும்பப்படும் அனைத்திற்கும் பொதுவானதாகவும் உள்ள ஸாதனமாகவும்; அவனுக்கு விருப்பமானவற்றைச் செய்தல் மற்றும் விருப்பம் அல்லாதவற்றைத் தவிர்த்தல் என்னும் இரண்டு அங்கங்களை மட்டுமே அவசியமாகக் கொண்டதாகவும்; மிகவும் எளிதாகவும்; கேட்ட நொடிப்பொழுதில் தகுந்த உபாயமாக உள்ளதும்; மிகவும் இரகசியமாக உள்ளதும் – ஆகிய உபாயத்தை, இதற்கும் மேல் கேட்பதற்கு ஒன்றும் இல்லை என்று கூறலாம்படியாக உள்ள, உபதேசத்தில் முடிவதான சரமச்லோகம் மூலம் அனைத்து உலகங்களையும் காப்பாற்றும் பொருட்டு அருளிச் செய்தான்.

**மூலம்** – ச்ருதி ஸித்தமான இவ்வர்த்தத்தை சரண்யனான ஸர்வேச்வரன் தானே உபதேசிக்க, இதுதானே "ஸந்த்யஜ்ய விதிநா நித்யம் ஷட்விதம் சரணாகதிம் ஆசார்யாநுஜ்ஞயா குர்யாத் சாஸ்த்ர த்ருஷ்டேந வர்த்மநா" என்று ஸ்ரீவிஷ்ணுதத்வாதிகளிற் சொன்ன ஆசார்யாநுஜ்ஞையுமாயிற்று.

**விளக்கம்** – ச்ருதிகளிலும் வெளிப்படுத்தப்பட்ட இந்த ஆழ்பொருளை, அனைவரும் சரணம் புகத்தக்கவனாகிய ஸர்வேச்வரன் தனது திருவாய் கொண்டு தானே உபதேசித்தான். ஆகவே இந்த சரமச்லோகமானது, ஸ்ரீவிஷ்ணுதத்வம் – ஸர்வதர்மாந் ஸர்வகாமாந் ஐஹிகாமுஷ்மிகாநபி ஸந்த்யஜ்ய விதிநா நித்யம் ஷட்விதம் சரணாகதிம் ஆசார்யாநுஜ்ஞயா குர்யாத் சாஸ்த்ர த்ருஷ்டேந வர்த்மநா – அனைத்து கர்மங்கள், அவற்றுக்குச் சாதனமாக உள்ள அனைத்து கர்மங்கள் ஆகியவற்றைக் கைவிட்டு, ஐந்து அங்கங்களுடன் கூடிய சரணாகதியை (ஐந்து அங்கங்கள், சரணாகதி என்னும் ஒரு அங்கி = ஆறு), ஆசார்யனுடைய அனுமதியைப் பெற்ற பின்னர், சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டபடி பலன்களைத் துறந்து இயற்றவேண்டும் – என்பதற்கு ஏற்ப, ஆசார்யனுடைய அனுமதியுடன் கைக்கொண்டதாயிற்று.

## சரமச்லோகத்தின் முக்கியமான குறிக்கோள்

**மூலம்** – "ஸர்வதர்மாந்" இந்த ச்லோகத்துக்கு சங்கராதி குத்ருஷ்டிகள் சொல்லும் பொருள்களையெல்லாம் தாத்பர்யசந்த்ரிகையிலும், நிக்ஷேபரக்ஷையிலும் பரக்க தூஷித்தோம். இங்கு ஸாரமான அர்த்தங்களை ஸத் ஸம்ப்ரதாய ஸித்தமானபடியே சொல்லுகிறோம். இதில் பூர்வார்த்தம் உபாய விதாயகம், உத்தரார்த்தம் பல நிர்த்தேசாதிமுகத்தாலே விதிசேஷம். ஆகையால் இச் ச்லோகம் உபாயவிதிநா ப்ரதாநம்.

**விளக்கம்** – "ஸர்வதர்மாந்" என்று தொடங்கும் இந்த சரமச்லோகத்துக்கு ஆதிசங்கரர் முதலானவர்கள் கூறிய அர்த்தங்களை தாத்பர்யசந்த்ரிகை மற்றும் நிக்ஷேபரக்ஷை ஆகியவற்றில் விரிவாகக் கண்டித்தோம். இந்த ச்லோகத்தின் சாரத்தை திருக்கோஷ்டியூர் நம்பி மூலமாகப் பெறப்பட்ட கருத்தை முன்னிறுத்தி உரைக்கிறோம். இந்த ச்லோகத்தின் முதற்பகுதியானது உபாயத்தை விதிப்பதாகும். இரண்டாம் பகுதியானது பலன் முதலானவற்றைக் கூறுவதால் விதிவாக்கியத்தின் அங்கமாக உள்ளது. ஆகவே இந்த ச்லோகமானது உபாயத்தை விதிப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

## சரமச்லோகத்தின் முதல் பாகத்தின் விளக்கம்

### “ஸர்வதர்மாந்” என்பதன் விளக்கம்

**மூலம்** – தர்மமாவது சாஸ்த்ரமே கொண்டு அறியவேண்டியிருக்கும் புருஷார்த்த ஸாதநம். “தர்மாந்” என்கிற பஹுவசநத்தாலே அபிமத ஸாதநமாக சாஸ்த்ர சோதிதங்களான தர்மங்களுடைய பஹுல்யத்தைச் சொல்லுகிறது. “ஸர்வ” சப்தத்தாலே ஸபரிகரமான நிலையை விவக்ஷிக்கிறது. தர்மபரிகரங்களையும் தர்மமென்று சொல்லக் குறையில்லையிறே. இஸ் ஸர்வசப்தத்தை ஏகசப்த ப்ரதிஸம்பந்தியாக யோஜிக்கும்போது, இது அங்கிகளான நாநாதர்மங்களினுடைய கார்த்ஸ்ந்யத்தைச் சொல்லுகிறது. இப்படி பொதுவிலே சொன்னாலும் இங்குப் ப்ரகரண வசத்தாலே, மோக்ஷார்த்தமாக சாஸ்த்ர விஹிதங்களாய் ஸபரிகரங்களாய் நாநாப்ரகாரங்களான உபாஸனங்களையெல்லாம் சொல்லுகையிலே தாத்பர்யம்.

**விளக்கம்** – “தர்மம்” என்னும் சொல்லானது, சாஸ்த்ரங்கள் (வேதங்கள்) மூலமாக மட்டுமே அறியப்படக்கூடிய உயர்ந்த பலனைத் தருகின்ற உபாயத்தைக் குறிக்கும். “தர்மாந்” என்று பன்மையில் கூறுவதன் மூலம், விரும்புகின்ற பலனை அளிப்பதற்கு ஏற்ற உபாயமாகச் சாஸ்த்ரங்களில் பல தர்மங்கள் விதிக்கப்பட்டுள்ளன என்பது உணர்த்தப்படுகிறது. “ஸர்வ” என்னும் சொல்லானது, அந்த தர்மங்கள் அனைத்தும் அவற்றின் அங்கங்களுடன் கூடியுள்ளதைக் குறிக்கும். தர்மங்களுக்கு அங்கங்களாக உள்ளவற்றையும் தர்மங்கள் என்று கூறுவதில் தவறில்லை அல்லவோ? “மாம் ஏக” என்பதில் உள்ள “ஏக = ஒன்று” என்னும் சொல்லுக்கு எதிர்மறையாக “ஸர்வ” என்பதை வைத்து நோக்கும்போது, இது அங்கிகளாக உள்ள பலவிதமான தர்மங்களுடைய முழுமையைக் குறிக்கும். “தர்ம” என்னும் சொல் பொதுவான தர்மங்களைக் கூறுவது போன்று இருந்தாலும், இந்த இடத்தில், மோக்ஷத்திற்கான உபாயங்களாக சாஸ்த்ரங்கள் கூறுவனவற்றை வெளிப்படுத்துவதாகவே உள்ளது; அதாவது அதற்கு அங்கங்களாக உள்ள பலவிதமான உபாஸனைகள் கூறப்படுகின்றன.

**மூலம்** – புருஷோத்தமத்வ ஞானம் ஸர்வவித்யைகளுக்கும் உபகாரமான தத்வ ஞானமாத்ரமாகவும், அவதார ரஹஸ்ய சிந்தநம் அநுஷ்டிக்கிற உபாஸநாதிகளுடைய சீக்ர

நிஷ்பத்தி ஹேதுவாகவும், தேசவாஸாதிகள் உபாயவிரோதி பாப க்ஷய ஹேதுக்களாய்க் கொண்டு உபாய நிஷ்பாதகங்களாவும் ஸ்ரீகீதாபாஷ்யாதிகளிலே ஸமர்த்திக்கையாலே, இவற்றை ஸாக்ஷாந்மோக்ஷோபாயங்களாக்கி அங்கி பஹுத்வ விஷயமான பஹு வசநத்தாலே விவக்ஷிக்கிறதென்கை உசிதமன்று. "நாநா சப்தாதி பேதாத்" என்கிறபடியே, இவையொழியவும் ஸத்வித்யா தஹரவித்யாதி பேதத்தாலே, அங்கி பஹுத்வம் கிடைக்கையால் இப்பஹு வசநம் ஸார்த்தம். அங்கி பஹுத்வத்தையும் பரிகர பஹுத்வத்தையுங்கூட விவக்ஷித்தாலும் விரோதமில்லை.

**விளக்கம்** – புருஷோத்தமனைக் குறித்த ஞானம் (புருஷோத்தம வித்யை – கீதை அத்யாயம் 11) என்பதே அனைத்து வித்யைகளுக்கும் உதவியாக உள்ள தத்வஞானத்தை அளிக்கவல்லது என்றும், அவனுடைய அவதாரத்தைக் குறித்து அறிதல் என்பது உபாஸனைகளுடைய பலனான அவனை விரைவாக அளிப்பதற்குக் காரணம் என்றும், இத்தகைய உபாஸனைகளுக்குத் தடையாக உள்ள பாபங்களை போக்கவல்ல காரணங்களாக திவ்யதேசங்களில் வசித்தல் முதலானவை உள்ளதால் உபாஸனைக்கு அவை ஏதுவாக உள்ளன என்றும் கீதாபாஷ்யம் முதலானவற்றில் அருளிச்செய்யப்பட்டது. இவற்றை மோக்ஷத்திற்கான நேரடியான காரணங்கள் என்று கொண்டு, இவற்றையும் தர்மங்கள் என்று பன்மையில் கூறப்பட்ட தர்மங்களில் அடங்கும் என்று உரைக்க இயலாது (காரணம் இவை உபாஸனை போன்று மோக்ஷத்திற்கான நேரடியான உபாயங்கள் அல்ல). ப்ரஹ்மஸூத்ரம் (3-3-56) - நாநா சப்தாதி பேதாத் – பெயர்கள் வெவ்வேறாக உள்ளதால் ப்ரஹ்மவித்யைகளும் வேறுபட்டவை ஆகும் – என்பதற்கு ஏற்ப, ஸத்வித்யை, தஹரவித்யை என்று பலவிதமான வித்யைகள் உள்ளதால், "தர்மாந்" என்று பன்மையில் கூறப்பட்டது என்று கருத்து. ஆக அங்கிகளும் (உபாஸனைகள்), அதன் அங்கங்களும் பலவாக உள்ளதால், "தர்மாந்" என்று பன்மையில் கூறப்பட்டது என உரைத்தாலும் தவறில்லை.

## "பரித்யஜ்ய" என்பதன் பொருள்

**மூலம்** – "பரித்யஜ்ய" என்கிறவிடத்தில் த்யாகமாவது "அநயா ச ப்ரபத்யா மாம் ஆகிஞ்சந்யைக பூர்வகம்" இத்யாதிகளிற்படியே அகிஞ்சநனான தன் நிலையைக் கண்டு

உபாயாந்தரங்களிற் பிறந்த நைராச்யம். ஆசையாலே பற்றானால் ஆசையை விடுகை த்யாகமென்ன உசிதமிறே. அதில் "பரி" என்கிற உபஸர்கத்தாலே, "அநாகத அநந்த கால ஸமீக்ஷயா அபி அத்ருஷ்ட ஸந்தார உபாய:", "த்வத் பாத கமலாத் அந்யத் ந மே ஜந்மாந்தரேஷ்வபி" இத்யாதிகளிற்படியே அத்யந்த அகிஞ்சநனுக்கு ஸர்வ காலத்திலும் ஸர்வ ப்ரகாரத்தாலும் யோக்யதையில்லாமை தெளிகையாலே பிறந்த நைராச்ய அதிசயம் சொல்லப்படுகிறது. ஸர்வ ப்ரகாரத்தாலும் த்யாகமாவது, பூர்ண அநுஷ்டாந சக்தியில்லாதபோது யதாசக்தி அநுஷ்டாநம் பண்ணுகிறோமென்றும், அதுக்கு யோக்யதையில்லாத தசையிலே வேறே சில அநுகல்பங்களையாதல் உபாய உபாயங்களையாதல் அநுஷ்டிக்கிறோமென்றும் தனக்கு துஷ்கரங்களைக் கணிசிக்கும் துராசையற்றிருக்கை.

**விளக்கம்** – ("பரித்யஜ்ய" என்றால் "முழுமையாக விடுதல்" என்று பொருள்) இங்கு "விடுதல்" என்பது அநயா ச ப்ரபத்யா மாம் ஆகிஞ்சந்யைக பூர்வகம் – இந்த ப்ரபத்தி மூலம் "மற்ற உபாயம் ஏதும் இல்லாமை" என்பதை மட்டுமே முன்னிட்டுக் கொண்ட என்னை – போன்றவற்றில் கூறப்படுவது போன்று, மற்ற உபாயங்களைக் கைக்கொள்ள இயலாமல் உள்ள தனது நிலையைக் கண்ட ஒருவன், அத்தகைய மற்ற உபாயங்களின் மீது ஆசையின்றிப் போவதைக் குறிக்கும். ஒன்றை ஆசை காரணமாகப் பற்றினால், அந்த ஆசையை விடுதலே த்யாகம் என்று கூறுவது பொருத்தமே ஆகும். "பரித்யஜ்ய" என்பதில் உள்ள "பரி" என்னும் உபஸர்க்கம் மூலம், ஸ்ரீரங்ககத்யம் (2) - அநாகத அநந்த கால ஸமீக்ஷயா அபி அத்ருஷ்ட ஸந்தார உபாய: - இனி வரப்போகின்ற எல்லையற்ற காலத்தை நோக்கியபோதிலும் ஸம்ஸாரத்தைக் கடப்பதற்கான உபாயம் இன்றி உள்ளேன் – என்றும், ஜிதந்தே ஸ்தோத்ரம் (1-10) - த்வத் பாத கமலாத் அந்யத் ந மே ஜந்மாந்தரேஷ்வபி – உன்னுடைய தாமரை போன்ற திருவடிகள் அல்லாமல் எனக்கு எந்த ஜன்மத்திலும் வேறு புகலிடம் இல்லை – என்றும் கூறுவதற்கு ஏற்ப மற்ற எந்தவிதமான உபாயமும் இல்லாமல் உள்ளவனுக்கு, அனைத்து காலத்திலும் அனைத்து விதங்களிலும் தன்னிடம் வேறு உபாயங்களைக் கைக்கொள்ளத் தகுதி இல்லை என்று தோன்றுவதால் உண்டாகும் ஆசையற்ற தன்மையின் மிகுதியானது கூறப்படுகிறது. அனைத்துவிதங்களிலும் த்யாகம் என்பது என்ன? மோக்ஷத்திற்கு உபாயமாக உள்ள பக்தியோகத்தை முழுமையாகக் கைக்கொள்ள இயலாதபோது நம்முடைய சக்திக்கும் தகுதிக்கும் ஏற்றவரை அனுஷ்டிப்போம் என்றும், அதற்கும் சக்தி இல்லையெனில் அதற்கு

மாறாக உள்ள அவை போன்ற மற்றவற்றையோ அல்லது உபாயத்திற்கு உபாயமாக உள்ளவற்றையோ அனுஷ்டிப்போம் என்றும் எண்ணியபடி, தன்னால் கைக்கொள்ள இயலாதவற்றிலிருந்து ஆசையை முழுவதுமாக விலக்கிக் கொள்ளும் நிலையாகும்.

**மூலம்** – இவ் அநுவாதத்துக்கு அதிகார விசேஷத்தைக் காட்டுகை ப்ரயோஜநம். அதில் "பரி" என்கிற உபஸர்க்கம் அதிகார பௌஷ்கல்யத்தை விவக்ஷிக்கிறது. "அநித்யம் அஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்" என்கிறவிடத்தில் "ப்ராப்ய" என்கிறது விதியன்றிக்கே "ப்ராப்ய வர்த்தமாந: த்வம்" என்று வ்யாக்யாதமானாற்போலே இங்கும், "பரித்யஜ்ய ஸ்தித: த்வம்" என்று விவக்ஷிதமாகக் கடவது. இப்படி அர்த்தாந்தரங்களிலும் ப்ரயோகமுண்டாகையாலே "க்த்வா" ச்ருதி மாத்ரத்தைக் கொண்டு, த்யாகம் அங்கமென்னவொண்ணாது.

**விளக்கம்** – "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய" என்பது அநுவாதம் ஆகும் (அநுவாதம் என்றால் முன்பே நடந்ததை உரைப்பதாகும். இது விதிமுறையைக் கூறுவது அல்ல. அதாவது மற்ற அனைத்து உபாயங்களையும் கைக்கொள்ள இயலாமல், அதனைக் கைவிட்டுள்ள நிலையில் ஸர்வேச்வரனையே உபாயமாகக் கைக்கொள்ளுதலே இங்கு கூறப்படுகிறது). இது ப்ரபத்தியைக் கைக்கொள்ளும் தகுதி கொண்ட அதிகாரியைக் கூறுகிறது. "பரி" என்பது அத்தகைய தகுதியின் முழுமையைக் கூறுகிறது. கீதை (9-33) - அநித்யம் அஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம் – நிலையற்றதும் ஆனந்தம் அற்றதும் ஆகிய இந்த லோகத்தை அடைந்த நீ என்னைப் பக்தியுடன் பணிவாயாக – என்னும் ச்லோகத்தில் உள்ள "ப்ராப்ய = அடைந்த" என்பது விதிமுறையைக் கூறும் தொனியில் வரவில்லை; மாறாக "ப்ராப்ய வர்த்தமாந: த்வம் – இந்த உலகத்தை அடைந்துள்ள நீ" என்னும் தொனியில் வந்துள்ளது. இதே போன்று இங்கும் "பரித்யஜ்ய ஸ்தித: த்வம் – அனைத்து வழிகளையும் கைவிட்டுள்ள நீ" என்று கொள்ளவேண்டும். ஆகவே இவ்விதம் நம்மால் பெறப்படும் அர்த்தங்களில் வேறுபாடு உள்ளதால், "க்த்வா – செய்ததன் பின்னர்" என்று உள்ளதைக் கொண்டு "அனைத்தையும் கைவிடுதல்" என்பது ப்ரபத்தியின் அங்கம் என்று கூற இயலாது.

**மூலம்** – “பரித்யஜ்ய” என்கிறது விதியானபோது, ப்ரபத்யத்யாயாதிகளில் விதிக்கிறபடியே ஆகிஞ்சந்ய ப்ரதிஸந்தாநாதி ரூபமான கார்பண்யமாகிற ப்ரபத்யங்கத்தை விதிக்கிறதென்றால், அர்த்தத்தில் விரோதமில்லை. அப்போது “ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய” என்கிறவிது, “அஹம் அஸ்மி அபராதாநாம் ஆலயே: அகிஞ்சந: அகதி:”, “ந தர்ம நிஷ்டே அஸ்மி” இத்யாதிகளிற்படியே, ஸர்வதர்மங்களும் தன்னை யோக்யதா பர்யந்தமாகக் கழித்தபடியை முன்னிட்டுக் கொண்டு என்றபடி. இவ்வளவு விளம்பித ப்ரதீதிகமான அர்த்தமும், பஹு ப்ரமாண அநுகுணமாகையால் அவற்றுக்கு விருத்தமாக சங்கராத்யுக்தங்களான ஸர்வதர்ம ஸ்வரூப த்யாகார்த்தங்களிற் காட்டிலும் உபாதேயம்.

**விளக்கம்** – “பரித்யஜ்ய” என்பது “இன்னதைச் செய்யவேண்டும்” என்று விதிக்கப்படும் பொருளில் உள்ளது என்று கொண்டால், ப்ரபத்தி அத்யாயம் போன்றவற்றில் விதிக்கப்படுவது போன்று, “என்னிடம் எந்தவிதமான கைம்முதலும் இல்லை” என்று எண்ணும் வடிவத்தில் உள்ளதான கார்பண்யத்தை (வேறு கதி அற்றவன் என்னும் நிலை) விதிப்பதாகக் கூறுவதில் குற்றம் இல்லை. இவ்விதம் கொண்டால் “ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய” என்பது, அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-30) - அஹம் அஸ்மி அபராதாநாம் ஆலயே: அகிஞ்சந: அகதி: - நான் அபராதங்களின் இருப்பிடமாக உள்ளேன், என்னைக் காப்பாற்றிக் கொள்ளும் சக்தி அற்றவனாக உள்ளேன், உன்னை அடையும் வழி அறியாதவனாக உள்ளேன் – என்றும், ஸ்தோத்ரரத்னம் (22) – ந தர்ம நிஷ்டே அஸ்மி – தர்மத்தில் நிலைநிற்காமல் உள்ளேன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, “அனைத்து தர்மங்களையும் கைக்கொள்ளத் தகுதி அற்றவனாக உள்ள நிலை” என்பதை உணர்த்துவதாக உள்ளது. இந்தப் பொருளானது ஒருவனுக்கு தாமதமாகவே அறியப்படுவதால், அந்தத் தாமதம் என்னும் தோஷம் கொண்டதாகவே உள்ளது; ஆனாலும், இவ்விதம் பொருள் கொள்ளுதல் என்பது பல ப்ரமாணங்களுக்கு ஏற்றபடியாகவே உள்ளதால், இதற்கு முரணாகப் பொருள் உரைத்த சங்கரர் முதலானவர்களுடைய கூற்றாகிய “அனைத்து தர்மங்களையும் அவற்றின் ஸ்வரூபத்துடன் கைவிடுதல்” என்பதைக் காட்டிலும் சிறந்ததே ஆகும்.

**மூலம்** – ப்ரபத்திக்காக ஒரு தர்மமும் அநுஷ்டிக்க வேண்டாவென்று ப்ரபத்தியினுடைய நைரபேக்ஷ்யத்தைச் சொல்லுகிறதென்கை விதிபக்ஷத்துக்கு உசிதம். அப்போது “பரி” என்கிற உபஸர்கம், “ஆசாந்தேந கர்தவ்யம் சுசிநா கர்தவ்யம்” இத்யாதிகளிற் சொல்லுகிற

ஸர்வ ஸாதாரண யோக்யதா ஆபாதகங்களும் இதுக்கு அங்கமாக ஸ்வீகார்யங்களாகாவென்று விவக்ஷிக்கிறது.

**விளக்கம்** – “பரித்யஜ்ய” என்பதை ஒரு விதிமுறையாகக் கொண்டால், “ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய” என்பதற்கு “ப்ரபத்திக்காக எந்த ஒரு தர்மத்தையும் கைக்கொள்ள வேண்டாம்” என்பதே பொருளாகிறது; அதாவது ப்ரபத்தி அவற்றை எதிர்பார்ப்பதில்லை என்று பொருள். இவ்விதம் கொள்ளும்போது “பரி” என்னும் உபஸர்க்கமானது - ஆசாந்தேந கர்தவ்யம் சுசிநா கர்தவ்யம் – இது ஆசமனம் செய்பவன் செய்யவேண்டியது, இது சரீரத்தூய்மையுடன் செய்யவேண்டியது – என்று கூறப்படுவதான, அனைத்துவிதமான கர்மங்களுக்கு ஏற்ற பொதுவான தகுதியை உண்டாக்குகின்ற ஆசமனம், நீராடுதல் போன்றவைகளைக் கூட, ப்ரபத்திக்கு அங்கமாக ஏற்கக்கூடாது என்று தேறுகிறது.

## “பரித்யஜ்ய” என்னும் பதத்திற்கு மற்றவர்கள் கூறும் பொருள்களுக்கு மறுப்பு

**மூலம்** – இங்ஙனன்றிக்கே கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகமென்கிற தர்மங்களினுடைய ஸ்வரூப த்யாகம் ப்ரபத்திக்கு அங்கமென்னும் பக்ஷத்தில், ப்ரபத்தி ஸர்வாதிகாரமன்றிக்கேயொழியும். தர்மாநிஷ்டாந சக்தனுக்கிறே அவற்றினுடைய த்யாகத்தை விதிக்க வேண்டுவது? இது பஹுப்ரமாண ஸித்தமான கார்ப்பண்யமாகிற அங்கத்துக்கும் “புகலொன்றில்லா அடியேன்”, “குலங்களாய”, “குளித்து மூன்று”, “ந தர்மாநிஷ்ட: அஸ்மி” இத்யாதிகளிலே ப்ரஸித்தமான அகிஞ்சநாதிகாரமென்கிற ஸம்ப்ரதாயத்துக்கும் விருத்தமாம்.

**விளக்கம்** – இவ்விதம் கொள்ளாமல் கர்மயோகம், ஞானயோகம் மற்றும் பக்தியோகம் ஆகியவற்றின் ஸ்வரூபங்களைத் துறத்தல் என்பது ப்ரபத்திக்கு ஓர் அங்கம் (இன்றியமையாத செயல்) என்று கொண்டால், ப்ரபத்தியானத்ய் அனைவரும் கைக்கொள்ளக்கூடிய ஒன்று என்னும் தன்மையை இழந்துவிடும். அந்த மூன்றையும் கைக்கொள்ளவல்ல ஒருவனால் மட்டுமே அல்லவோ அவற்றைத் துறக்க இயலும்? இது, பல ப்ரமாணங்களாலும் ப்ரபத்திக்கு ஒரு அங்கமாக ஏற்கப்பட்டதான “நான் சக்தி

அற்றவன்" என்னும் கார்ப்பண்யம் என்பதற்கு முரணாகிவிடும். மேலும் திருவாய்மொழி (6-10-10) – புகல் ஒன்றில்லா அடியேன் – என்றும், திருச்சந்தவிருத்தம் (90) – குலங்களாய – என்றும், திருமாலை (25) – குளித்து மூன்றலை – என்றும், ஸ்தோத்ரரத்னம் (22) – ந தர்மாநிஷ்ட: அஸ்மி – நான் எந்தவிதமான தர்மநிஷ்டைகளிலும் நிற்காதவன் – என்றும் உள்ள வரிகளின் மூலம் வெளிப்படுவதான "எந்தவிதமான உபாயமும் அற்றவன் (அகிஞ்சநன்)" என்னும் அங்கத்துக்கும் முரணாகும்.

**மூலம்** – ஈச்வரனைப் பற்ற அத்யந்த பரதந்த்ரதையாலே உபாயாந்தரங்களுக்கு க்ஷேத்ரஜ்ஞன் நித்யாசக்தன் என்று கட்டி, இவனுக்கு அவற்றினுடைய த்யாகத்தை விதிக்கிறதென்னுமது ஸர்வசாஸ்த்ர ஸ்வவசந ஸ்வப்ரவ்ருத்த்யாதி விரோதத்தாலே அத்யந்த பரிஹாஸ்யம். அப்போது துல்ய ந்யாயதையாலே "வ்ரஜ" என்கை தானும் கடியாது. உபாயாந்தரங்களுக்கு ஜீவாத்மா நித்யாசக்தனென்கை தங்களுக்கு அநிஷ்டமான அநுவாத பக்ஷத்துக்கு ஸ்த்ரீகரணம் பண்ணினபடியாமத்தனை. ஏகப்ரயோகந்தானே அசக்தனைப் பற்றத் த்யாகாநுவாதமாய் இதரனைப் பற்றாத் த்யாக விதியாகை ஏகவாக்யத்தில் கடியாது.

**விளக்கம்** – க்ஷேத்ரஜ்ஞனான ஜீவாத்மா ஸர்வேச்வரனை நம்பியே உள்ளதாலும், அவனுக்கு வசப்பட்டவனாகவே உள்ளதாலும், எப்போதும் மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளவதற்கான சக்தி அற்றவன் என்று தீர்மானித்து, அதன் காரணமாக அந்த உபாயங்களைக் கைவிடவேண்டும் என்று கூறுதல் அனைத்து சாஸ்த்ரங்களுக்கு விரோதமாக உள்ளதாலும், இதனை இவ்விதம் உபதேசம் செய்பவர்கள் கூறுவதற்கும் செய்வதற்கும் முரணாக உள்ளதாலும் எல்லையற்ற பரிகாசத்திற்கு உட்பட வேண்டியதே ஆகும் (அதாவது ஒருவனுக்கு ஒரு செயலைச் செய்ய சக்தி இல்லை என்று கூறிய பின்னர், அவன் அந்தச் செயலைச் செய்யாமல் துறக்கவேண்டும் என்று கூறுவது பரிகாசத்திற்கு உரியது அல்லவோ). இவ்விதம் இவர்கள் கூறியதை ஏற்றுக்கொண்டால், அதே கருத்தின்படி "வ்ரஜ – என்னை அடைவாய்" என்று கூறுவதையும் இயற்றமுடியாது (சக்தி இல்லை) என்றே ஆகிறது. ஜீவாத்மா எப்போதும் மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளும் சக்தி அற்றவன் என்று கூறுபவர்கள், "பரித்யஜ்ய" என்பது முன்பே நடந்த ஒன்றை மீண்டும் கூறுகிறது என்பதை இவர்கள் ஏற்க மறுக்கிறார்கள் (அதாவது ஒருவனுக்கு ஒறு செயலைச் செய்யும் சக்தி இல்லை என்பது, அந்தச் செயலை அவன் முன்பு

ஒருமுறையேனும் செய்தால் அல்லவோ உணர இயலும்). மேலும் ஒரு வாக்கியத்தில் ஒரே முறை ஒரு சொல்லை பயன்படுத்துவதன் மூலம் – “ஒருவனுக்கு ஒரு செயலைச் செய்வதற்கான சக்தி இல்லாத காரணத்தால் என்ன நடந்தது”, “ஒருவனால் ஒரு செயலைச் செய்ய முடிந்த காரணத்தால் அதனைத் துறக்கவேண்டும்” – ஆகிய இரண்டையும் ஒருசேர உரைக்க இயலாது.

**மூலம்** – பலத்தில் வைஷம்யமின்றிக்கே அதிகாரியும் ஏகனாயிருக்க “குரு – லகு” விகல்பமும் சொல்லவொண்ணாது. குரூபாயத்திலே சக்தனானவனுக்கே அதின் த்யாக விசிஷ்டமான லகூபாயத்தை விதித்தால், குரூபாயத்தில் ஒருத்தரும் ப்ரவர்த்திப்பாரில்லாமையாலும், வேறொரு முகத்தாலே அதிகாரபேதம் சொல்ல வொண்ணாமையாலும், குரூபாயத்தை விதிக்கிற சாஸ்த்ரங்களெல்லாம் ப்ரமாணமன்றிக்கே யொழியும். லகூபாய ப்ரோசநார்த்தமாக குரூபாயத்தை விதித்து, அது தன்னையே நிஷேதிக்கிறதென்கையும் அத்யந்த அநுசிதம். அநுபாயங்களை உபாயங்களாக விதிக்கிறதென்றால், ச்ருதி ஸ்ம்ருதிகள் மோஹந சாஸ்த்ரங்களாகப் ப்ரஸங்கிக்கையாலே, சரண்ய ஸ்வரூபாதிகளும் ஸித்தியாதபடியாம். குருக்களான க்ருஷ்யாதி வ்யாபாரங்களும், லகுக்களான ரத்நவாணிஜ்யாதிகளும் அர்த்தார்த்திகள் பக்கல் விகல்பிக்கிறதுவும், அதிகாரி விசேஷ வ்யவஸ்தையாலே என்னுமிடம் லோகப்ரஸித்தம். ஆழ்வானுடைய சரமச்லோக வ்யாக்யானத்திலும் இவ்வளவே விவக்ஷிதமாகையால், ஒரு விரோதமுமில்லை. ஸமாவர்த்தநாதிகளில் குரு லகு விகல்பமும் அவஸ்தா விசேஷங்களாலே நியதமென்று கொள்ளாதபோது, குருவிதாந வையர்த்தமும் வரும்.

**விளக்கம்** – ஒரு அதிகாரி தர்மங்களை இயற்றும் சக்தி கொண்டவனாக உள்ளபோது, அடையும் பலன்களின் எந்தவிதமான வேறுபாடுகளும் இல்லாதபோது, கடினமானது – சுலபமானது (குரு – லகு) என்று இரண்டுவிதமான உபாயங்களில் ஏதேனும் ஒன்றைக் கைக்கொள்ளலாம் என்று கூறுவதாக இருத்தல் ஆகாது. ஏன்? கடினமாக உபாயத்தைக் கைக்கொள்ளும் சக்தி கொண்ட ஒருவனுக்கு, அதனைத் துறந்து சுலபமான உபாயத்தைக் கைக்கொள்ளும்படிக் கூறினால், அதன் பின்னர் யாரும் கடினமான உபாயத்தைக் கைகொள்ள யாரும் முயலமாட்டார்கள்; மேலும், வேறு எந்தவிதமான வழியாலும் அதிகாரிகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை உரைக்க இயலாமல் போகும்; இந்தக் காரணங்களால், கடினமான உபாயத்தை உரைக்கும் சாஸ்த்ரங்களுக்கு, அவை

ப்ரமாணமாக உள்ளன என்னும் தன்மை மறைந்துவிடும். "சுலபமான உபாயத்தைக் கைக்கொள்வதில் ஆசையை உண்டாக்கும்விதமாக, கடினமான உபாயத்தை முதலில் விதித்த பின்னர் அவற்றைத் துறத்தல் குறித்துக் கூறப்படுகிறது" என்று கூறுவது மிகவும் பொருந்தாத கூற்றாகும். "உபாயங்களாக அல்லாதவற்றை உபாயங்களாகக் கூறிய பின்னர், அவற்றைத் துறத்தல் குறித்துக் கூறப்படுகிறது" என்று கூறினால், ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் மோக்ஷ உபாயங்களாக இல்லாதவற்றைக் கூறுகின்றன என்னும் தோஷம் ஏற்படும்; இதனால அவை மூலம் அறியப்படுவதான ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபம் குறித்து உறுதியாக அறிய இயலாத நிலை உண்டாகிவிடும். இந்த உலகில் பொருள் சேர்ப்பதில் ஆசை உள்ளவர்களில் சிலர் விவசாயம் செய்தல் போன்ற கடினமான செயல்களையும், சிலர் ரத்னங்களை விற்பது போன்ற சுலபமான செயல்களையும் செய்கிறார்கள் அல்லவோ (இதே போன்று மோக்ஷ உபாயங்களிலும் இருந்தால் என்ன) என்று சிலர் கேட்கலாம்; ஆனால் இந்த வேறுபாடுகளின் காரணம் அந்தந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களில் வேறுபாடு உள்ளதால் ஆகும். ஸ்வாமி கூரத்தாழ்வானின் சரமச்லோகத்திற்கான வ்யாக்யானத்திலும் நாம் கூறிய கருத்தே உள்ளதால், எந்தவிதமான முரண்பாடும் இல்லை. ஸமாவர்த்தனம் (ப்ரம்மசர்யத்தை முடித்துக் கொண்டு க்ருஹஸ்தனாக ஆகும்போதும் செய்யவேண்டிய ஸ்நானம் போன்றவை) போன்றவற்றில் கடினமானவையும் சுலபமானவையும் சூழ்நிலைக்குத் தக்கபடி விதிக்கப்பட்டுள்ளது என்று கொள்ளாவிட்டால், கடினமான உபாயத்தை விதிப்பது வீணாகும் (க்ருஹஸ்தனாக உடனேயே ஆகிறான் என்னும்போது சுலபமான ஸ்நானமும், சிறிது காலம் கழிந்த பின்னரே க்ருஹஸ்தனாகிறான் என்னும்போது கடினமான ஸ்நானமும் விதிக்கப்பட்டுள்ளது).

**மூலம்** – "ஜ்ஞாபூர்த்தியாதல் விச்வாஸ பூர்த்தியாதலுடையவன் ப்ரபத்திக்கு அதிகாரி; ஜ்ஞாந மாந்த்யமாதல் விஸ்வாஸ மாந்த்யமாதலுடையவன் உபாஸநாதிகளுக்கு அதிகாரி" என்றால், இச் சரமச்லோகாதிகளுக்கு உபதேஷ்டாக்களுமாய்ப் பரமாஸ்திகருமாகையாலே பூர்ண ஜ்ஞாந விச்வாஸரான வ்யாஸாதிகளுக்கு உபாஸநாதிகளில் அதிகாரமில்லையாம். அவர்கள் உபதேச காலத்திலே ஜ்ஞாந விச்வாஸங்களுடையராகப் பின்பு கலங்கி உபாஸகரானார்களென்கைக்கு ஒரு ப்ரமாணமில்லை.

**விளக்கம்** – ஒரு சிலர், "முழுமையான ஞானம் கொண்டவனும், பரிபூர்ணமான விச்வாஸம் கொண்டவனும் மட்டுமே ப்ரபத்திக்குத் தகுதியானவன்; ஞானம் முழுமை அடையாதவனும், விச்வாஸம் முழுமை அடையாதவனும் மட்டுமே உபாஸனை செய்வதற்குத் தகுதியானவன்" என்னும் பிழையான கருத்தைக் கொண்டுள்ளனர். இவ்விதம் கொண்டால், சரமச்லோகத்தை வெளிப்படுத்தியவர்களும், உயர்ந்த ஆஸ்திகர்களும், பரிபூர்ணமான ஞானம் கொண்டவர்களும், முழுமையான விச்வாஸம் நிறைந்தவர்களும் ஆகிய வ்யாஸர் போன்றவர்கள் உபாஸனை செய்யும் தகுதி அற்றவர்கள் என்றாகிவிடும். அவர்கள் உபதேசம் செய்யும்போது முழுமையான ஞானம் மற்றும் பரிபூர்ணமான விச்வாஸம் கொண்டவர்களாக இருந்து, பின்னர் அவற்றை இழந்து உபாஸகர்கள் ஆனார்கள் என்பதற்கு எந்தவிதமான ப்ரமாணமும் இல்லை.

**மூலம்** – ப்ரபந்நராய் வைத்து லோகஸங்க்ரஹார்த்தமாக உபாஸநாதிகளை அநுஷ்டித்தார்களென்கைக்கும் அவ்வோ ப்ரபந்தங்களில் ஒரு வசநமில்லை. அப்படிக் கல்பிக்கப்புக்காலும், தன் அதிகாரத்துக்கு நிஷித்தமானவற்றை லோகஸங்க்ரஹார்த்தமாக அநுஷ்டிக்கப்புக்கால், அவை இவன் தனக்கும் பாபமாய் அதிகாரத்துக்கு விருத்தாநுஷ்டாநம் பண்ணுகையாலே தன் அநுஷ்டாநத்தையிட்டு லோகஸங்க்ரஹார்த்தம் பண்ணவும் கடப்படாதொழியும். தனக்கு இரண்டு வழிகள் சாஸ்த்ர அநுமதங்களானால், அவற்றில் லோகத்தார்க்குச் சக்யமாய் அவர்களுக்கு ஹிதமாயிருப்பதொன்றைத் தான் அநுஷ்டித்துக் காட்டி, லோகத்தாரை அதிலே நிலை நிறுத்துகையே லோகஸங்க்ரஹமென்று ஸ்ரீகீதாபாஷ்யத்திலேயருளிச் செய்தார். அல்லது ஸந்யாஸிக்கு நிஷித்தமான க்ருஹஸ்தைகாந்த தர்மத்தை, ஸந்யாஸி அநுஷ்டித்துக் காட்டுமது லோகஸங்க்ரஹார்த்தமாகாது; இது ஆஜ்ஞாநாதிலங்கநமாமத்தனை. இப்படியே ப்ரபத்யதிகாரிக்கு நிஷித்தத்தை, அவன்தானே கைங்கர்ய புத்தியாலே அநுஷ்டிக்கையும் ஸ்வாதிகார விருத்தம். ப்ரபத்திக்கு அநபேக்ஷிதங்களான சாஸ்த்ரீயங்களைக் கைங்கர்ய புத்தியாலே அநுஷ்டிப்பார்க்கு விரோதமில்லை.

**விளக்கம்** – மேலும் அவர்கள் ப்ரபந்நர்களாக தங்களுடைய வாழ்வில் இருந்தபோதிலும், லோகஸங்க்ரஹமாக (அனைத்து யோகங்களிலும் உயர்ந்த நிலையில் உள்ள ஒருவன் தன்னுடைய நிலைக்கு ஏற்றபடியான உயர்ந்தவற்றையே கைக்கொள்ளவேண்டும். ஆனால் தன்னைக் காட்டிலும் யோகம் போன்றவற்றில் தாழ்ந்தவர்களாக உள்ளவர்கள்,

தன்னைப் பின்பற்றி அத்தகைய உயர்ந்தவற்றைச் செய்ய முயன்றால், அவர்களால் இயலாமல் அழிந்துவிடுவார்கள் என்பதற்காக, அவர்கள் நிலைக்குத் தாழ்ந்து அவர்களுக்கு ஏற்றபடியான கர்மங்களைக் கைக்கொள்ளுதலே லோகஸங்க்ரஹமாகும். இதனைக் கீதை 3-20ல் காண்க) இருப்பதற்காக உபாஸனத்தில் நின்றனர் என்று கூறுவதற்கும் எந்தவிதமான ப்ரமாணமும் இல்லை. அது போன்று அவர்கள் செய்தார்கள் என்று வைத்துக்கொண்டால், ஒருவன் தனக்கு சாஸ்த்ரங்களால் விலக்கப்பட்டவற்றை உலகிற்கு உதாரணம் காண்பிப்பதற்காகக் கைக்கொண்டாலும், அது அவனுடைய நிலைக்கு விரோதமாகவும் பாபங்களை உண்டாக்குவதாகவும் உள்ளதால், அவனால் உலகிற்குச் சரியான உதாரணமாக இருக்கமுடியாமல் போய்விடும். கீதாபாஷ்யத்தில் (3-20) ஸ்வாமி எம்பெருமானார் லோகஸங்க்ரஹத்திற்கு இரண்டு வழிகள் சாஸ்த்ரங்களால் கூறப்பட்டன என்றால், அவற்றில் உலகத்தாருக்கு எது மிகவும் எளிமையாகவும் நன்மை அளிப்பதாகவும் உள்ளதோ, அதனை ஒருவன் தனது வாழ்க்கையில் கைக்கொண்டு, அதில் அவர்களை நிலைநிறுத்துவதே லோகஸங்க்ரஹகம் என்று காண்பித்தார். ஸந்யாஸி ஒருவன், தனக்கு விலக்கப்பட்டதாகவும் க்ருஹஸ்தனால் மட்டுமே கைக்கொள்ளக் கூடியதாகவும் உள்ள தர்மங்களை, கைக்கொண்டால் அது லோகஸங்க்ரஹம் ஆகாது; இது பகவானின் ஆணையை மீறும் செயலாகும். இது போன்று, ப்ரபந்நன் ஒருவன் தனக்கு விலக்கப்பட்ட ஒரு செயலை, அது கைங்கர்யம் ஆகும் என்று தவறாக எண்ணிச் செய்தாலும், அவனுடைய அதிகாரத்திற்கு அது முரணே ஆகும். ஆனால் ப்ரபந்நன் ஒருவன் சாஸ்த்ரங்களால் ஏற்கப்பட்டதும், ப்ரபத்திக்கு அவசியம் இல்லாததும் ஆகிய செயல்களை, அவை கைங்கர்யம் என்று கொண்டு இயற்றினால், அதனால் தவறில்லை.

## தங்களுடைய வர்ணாச்ரம தர்மங்களைத் துறக்கவேண்டும் என்பதற்கான கண்டனம்

**மூலம்** – "தந்தம் ஜாத்யாதிகளுக்கு அநுரூபங்களுமாய்த் தத்தமக்கு சக்யங்களுமான ஸர்வ தர்மங்களினுடைய ஸ்வரூப த்யாகம், அங்கமாக விதேயம்" என்னும் பக்ஷத்திலும், ப்ரபத்த்யுத்தர காலம் தன் வர்ணாச்ரமாதிகாரங்களுக்கு அநுரூபமாக அடைத்த கைங்கர்யத்தையும் இழந்து அஹிம்ஸா ஸத்யவசநாதி ஸாமாந்ய தர்மங்களையும் ஆசார்ய வந்தனாதிகளையும் தவிர்ந்து பசு ம்ருக பக்ஷ்யாதிகளைப் போலே திரியும்படியாம்.

**விளக்கம்** – ஒரு சிலர், "அவரவர்களுடைய குலங்களுக்கு உரியதாகவும், அவரவர்களுடைய ஆச்ரம அதிகாரங்களுக்கு ஏற்றதாகவும் உள்ள அனைத்தையும் கைவிடுதல் என்பது ப்ரபத்திக்கு அங்கமாகும்", என்று கூறுகிறார்கள். இவ்விதம் செய்தால், ப்ரபத்திக்கு பின்னர் வரும் காலங்களில் அவர்கள் தங்களுடைய வர்ணாச்ரமத்திற்கு ஏற்றதாக சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட பகவத் கைங்கர்யங்களை இழப்பர், அஹிம்ஸை – உண்மையைப் பேசுதல் முதலான தர்மங்களையும் இழப்பர், ஆசார்யர்களை அண்டாமல் இருப்பர், பசு மற்றும் பறவைகள் போன்று திரிந்தபடி இருப்பர்.

**மூலம்** – "நிஷேத வாக்ய ஸித்தங்களான நிவ்ருத்தி ரூப தர்மங்கள், ஸ்வரக்ஷணார்த்த ஸ்வவ்யாபாரமல்லாமையாலே, சரணாகதியோடு விரோதமில்லாமையால் இங்குப் ப்ரவ்ருத்தி ரூப தர்மங்களினுடைய த்யாகமே விவக்ஷிதம்" என்னும் நிர்வாஹமும் மந்தம். நிவ்ருத்தியும் வ்யாபார விசேஷமென்னுமிடமும் அதுவும் ஸ்வரக்ஷணார்த்தமா மென்னுமிடமும் லோக வேத ஸித்தமிறே.

**விளக்கம்** – "சில செயல்களைச் செய்யக்கூடாது என்று தடுக்கும் விதத்தில் அமைந்துள்ள விலக்குகின்ற வடிவத்தில் உள்ளதான (நிவ்ருத்தி) தர்மங்கள், தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்வதற்குக் கைக்கொள்ளும் செயல்களைக் கூறாத காரணத்தால், அவை சரணாகதியுடன் முரண்பாடு அற்றவை அல்ல (இவை வெளிப்படையாகத் தடுக்கப்பட்டதால், தனியாகக் கைவிடவேண்டியது இல்லை). ஆகவே இங்கு கைவிடப்படவேண்டும் என்று கூறப்பட்டவை, வேதங்களால் செய்தாகவேண்டும் என்று உபதேசம் செய்யப்படும் தர்மங்கள் அல்லாமல், மேலே கூறப்பட்ட நிவ்ருத்தி தர்மங்கள் அல்ல" என்று சிலர் கூறுவர். இந்த வாதமும் பொருந்தாது. சிலவற்றைச் செய்தல் கூடாது என்று தடுக்கப்பட்டாலும், அந்தத் தர்மங்களும் ஒரு சிலருக்கு விருப்பமான செயல்களாகவே இருக்கலாம் (அப்போது அவர்கள் அதனைக் கைவிடுகிறார்கள் அல்லவோ) அல்லது அவை தங்களைக் காபாற்றிக் கொள்ளும் செயலாகவும் இருக்கலாம் என்பதை நாம் இந்த உலகத்திலும் வேதங்களிலும் காணலாம்.

**மூலம்** – இவ் விதிபலத்தாலே ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபங்களான ஸர்வதர்மங்களையும் தவிர்ந்து திரிகைதானே ப்ரபந்நனுக்கு சாஸ்த்ரார்த்தமானாலோவென்னில், ப்ரபந்நரான பூர்வர்களும் இப்போதுள்ளாரும், ஸாவதாநமாய்ப் பண்ணிப் போகிற கைங்கர்யங்களும், அபசார பரிஹாரங்களும் விருத்தாநுஷ்டமாம். யதா ப்ரமாணம் ப்ரபத்தி ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகராய்ப் பரமகாருணிகருமா யிருக்கிறவர்களுக்கு, ப்ரம விப்ரலம்ப ஸம்பாவனையுமில்லை.

**விளக்கம்** – ஒரு சிலர் "பரித்யஜ்ய" என்பதன் மூலம் விதிக்கப்படும் கட்டளையின் வலிமை காரணமாக, செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை ஆகிய அனைத்து தர்மங்களையும் கைவிட்டு இருப்பதே ப்ரபந்நன் செய்யவேண்டியது என்று சாஸ்த்ரங்கள் கூறுவதாக உரைக்கிறார்கள். இவ்விதம் கொண்டால், ப்ரபந்நர்களாக இதுவரை இருந்துள்ள பூர்வர்கள் மற்றும் இப்போது உள்ளவர்கள் ஆகிய அனைவரும் செய்கின்ற கைங்கர்யங்கள் மற்றும் தங்களுடைய அபராதங்களுக்கான ப்ராயச்சித்தங்கள் ஆகிய அனைத்துமே சாஸ்த்ரங்களுக்கு விரோதமானவை என்றாகிவிடும். ப்ரபத்தியைத் தகுந்த ப்ரமாணங்களின் அடிப்படையில் வழிவழியாகக் கைகொண்டபடி உள்ளவர்களுக்கும், மிகுந்த கருணை கொண்டவர்களுக்கும் எந்தவிதமான அறியாமையோ அல்லது மற்றவர்களை வஞ்சிக்கும் தன்மையோ இல்லை என்று அறியவேண்டும்.

**மூலம்** – "யாவஜ்ஜீவம் ஸர்வதர்ம த்யாகம் விதேயமாகிலன்றோ இவ்விரோதமுள்ளது? ப்ரபத்த்யநுஷ்டாந க்ஷணத்தில், ஸர்வதர்மங்களினுடைய ஸ்வரூப த்யாகம் அங்கமானால் விரோதமில்லையே" என்னில், அப்போது ஸம்பாவிதமல்லாதவற்றினுடைய ஸ்வரூப த்யாகம் விதிக்கவேண்டா; ஸம்பாவிதமானவற்றினுடைய ஸ்வரூப த்யாகம் விதேயமாகில், அப்போது உண்டான பகவத் க்ஷேத்ரவாஸ சிகா யஜ்ஞோபவீத ஊர்த்வ புண்ட்ரதாரணாதிகளைத் தவிர்ந்து கொண்டு ப்ரபத்தி பண்ணப் ப்ரஸங்கிக்கும்.

**விளக்கம்** – ஒரு சிலர், "மேலே கூறப்பட்ட மறுப்பானது, ப்ரபந்நன் ஒருவன் தனது வாழ்க்கை முழுவதும் அனைத்து தர்மங்களையும் துறக்கவேண்டும் என்று கூறினால் மட்டுமே பொருந்தும். மாறாக, ப்ரபத்தி நேரத்தில், அதன் அங்கமாக, அனைத்து தர்மங்களையும் அவற்றின் ஸ்வரூபத்துடன் துறந்து, ப்ரபத்திக்குப் பின்னர் அவற்றை மீண்டும் கைக்கொள்ளலாம் என்று கூறினால், அந்த மறுப்பு பொருந்தாது", எனலாம்.

இதற்கு சமாதானம் உரைப்போம் - அனைத்து நேரங்களிலும் கைக்கொள்ளப்படாத ஒரு செயலைத் துறக்கவேண்டும் என்று விதிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ப்ரபத்தி நேரத்தில் இயற்றப்படுகின்ற தர்மங்களை மட்டுமே அவற்றின் ஸ்வரூபத்துடன் துறக்கவேண்டும் என்றால் ப்ரபத்தியானது, "பகவான் உகப்புடன் வசிக்கும் திவ்யதேசத்தில் நாமும் வசித்தல், சிகை வைத்துக் கொள்ளுதல், யஜ்ஞோபவீதம் தரித்தல், திருமண்காப்பு அணிதல்" போன்ற பலவற்றையும் துறந்த பின்னரே கைக்கொள்ளப்பட வேண்டும் என்றாகிறது அல்லவோ?

**மூலம்** – ஆகையால் உபாஸநத்தில் வரும் கர்மாத்யங்களாலே நிரபேக்ஷையாயிருக்கிற ப்ரபத்திக்கு அங்கமாக ஒரு தர்மத்தையும் பற்றவேண்டாவென்கையே த்யாகவிதி பக்ஷத்துக்கு உசிதம். இந்தத் த்யாகவிதியான பக்ஷந்தன்னிலும் உபாயாந்தர ஸாமர்த்யமில்லார்க்கும், அது உண்டாகிலும் விளம்ப க்ஷமரல்லாதார்க்கும், இப் ப்ரபத்தியில் அதிகாரம். இப்படியானால் ஒரு ப்ரமாணத்துக்கும் விரோதமில்லை.

**விளக்கம்** – ஆகவே உபாஸனைக்குத் தேவையான அங்கமாக உள்ள அந்தவிதமான தர்மத்தையும் ப்ரபத்திக்கு அங்கமாகக் கைக்கொள்ளவேண்டியதில்லை (அல்லது அதனை ப்ரபத்தி எதிர்நோக்குவதில்லை) என்பதே, அனைத்தையும் கைவிடவேண்டும் என்னும் விதியால் (இதுவே த்யாகவிதி பக்ஷம் எனப்படுகிறது) கூறப்படுவதாகும். "பரித்யஜ்ய" என்பதன் மூலம், "இப்படியாக உள்ள விதியிலும் கூட, மற்ற உபாயங்களில் ஈடுபட சக்தி அற்றவர்களுக்கும் மற்றும் அத்தகைய சக்தி உள்ளபோதிலும் கிட்டக்கூடிய பலனில் ஏற்படும் தாமதத்தைப் பொறுக்க இயலாதவர்களுக்கும் இந்த ப்ரபத்தியைக் கைக்கொள்ளத் தகுதி உள்ளது" என்று கூறப்படுவதாகக் கொள்ளலாம். இவ்விதம் கொண்டால் எந்தவிதமான ப்ரமாணங்களுக்கும் முரண்பாடு உண்டாகாது.

**மூலம்** – பூர்வாசார்யர்களும் இவ்விடத்தில் ஸர்வதர்ம ஸ்வரூப த்யாகம் ப்ரபத்த்யங்கமென்றும், இப்படியன்றென்றும் விவாதமும் பண்ணினார்களல்லர். ப்ரபத்திக்கு அதிகாரமான ஆகிஞ்சந்யமும், ப்ரபத்தியினுடைய நைரபேக்ஷ்யமும் இச் சரமச்லோகத்தில் எந்தப் பதங்களிலே விவக்ஷிக்கை உசிதமென்று விமர்சித்தார்களத்தனை.

**விளக்கம்** – பூர்வாசார்யர்கள் கூட, அனைத்து தர்மங்களையும் அவற்றின் ஸ்வரூபத்துடன் கைவிடுதல் என்பது ப்ரபத்தியின் அங்கமா இல்லையா என்று விவாதம் செய்யவில்லை. அவர்களுடைய ஆராய்ச்சி முழுவதும் சரமச்லோகத்தின் எந்தப் பதங்கள் மூலம், ப்ரபத்திக்குத் தகுதியாக உள்ளதான "மற்ற உபாயங்களைக் கைக்கொள்ள இயலாமை (ஆகிஞ்சந்யம்)" மற்றும் ப்ரபத்திக்கு எந்தவிதமான அங்கங்களும் அவசியம் இல்லை ஆகியவை உணர்த்தப்படுகின்றன என்பதிலேயே காணப்படுகிறது.

அதிகாரம் புரஸ்க்ருத்ய உபாயஸ்ய நிரபேக்ஷதாம்
ஏக சப்தேந வக்தீதி கேசித் வாக்யவிதோ விது:

**பொருள்** – வாக்கியங்களுடைய அமைப்பு முறையை அறிந்த சில ஆசார்யர்கள், பரித்யஜ்ய என்பதன் மூலம் சரம ச்லோகமானது முதலில், ப்ரபத்திக்கான அதிகாரம் கொண்டவர்களை உரைத்த பின்னர் (இவர்கள் ஆகிஞ்சந்யத்தை உடையவர்கள்), "ஏகம்" என்னும் பதம் மூலம் மற்ற அங்கங்கள் அவசியம் இல்லை என்பதைக் கூறுவதாகக் கொண்டனர்.

நைரபேக்ஷ்யம் புரஸ்க்ருத்ய விஹிதஸ்ய லகீயஸ:
உபாயஸ்ய அதிகாரம் து சோக த்யோத்யம் விது: பரே

**பொருள்** – ஒரு சிலர் கூறுவது : சரம ச்லோகமானது முதலில் மற்ற அங்கங்கள் அவசியம் இல்லை என்பதைக் கூறிய பின்னர், "வ்ரஜ" என்பதன் மூலம் விதிக்கப்படுவதான மிகவும் எளிய உபாயத்தைக் கைக்கொள்ளும் தகுதி உள்ளவன் யார் என்பதை, "மாசுச:" என்பதன் மூலம் தள்ளப்படவேண்டியதாகக் கூறப்படும் சோகம் என்பதால் உணர்த்துகிறது (அதாவது இங்கு சோகம் என்பது மற்ற உபாயங்களைக் கைக்கொள்ள இயலவில்லையே என்னும் நிலையாகும்) – என்பதாகும்.

இத்தம் அர்த்த அவிசேஷே அபி யோஜநாபேத மாத்ரத:
ப்ராசாம் விவாத: ஸம்வ்ருத்தோ பாஷ்யகாரை: அவாரித:

**பொருள்** – சரம ச்லோகத்தால் கூறப்படும் பொருள் இன்னது என்னும் கருத்தில் பூர்வாசார்யர்களுக்குள் எந்த வேறுபாடும் இல்லை; ஆனால், அந்த ச்லோகத்தில் எந்தப் பதம், எந்தப் பொருளை உணர்த்துகிறது என்பதில் மட்டுமே அவர்களுக்குள் முரண்பாடு உள்ளது. ஆகவே இவற்றை எம்பெருமானார் தடுக்கவில்லை.

அஜ்ஞாத பூர்வ வ்ருத்தாந்தை: யத் தத்ர ஆரோபிதம் பரை:
தத் து ஸ்ரீவிஷ்ணுசித்தாத்யை: நிர்மூலம் இதி தர்சிதம்

**பொருள்** – முன்பு உள்ளவற்றைக் குறித்து ஏதும் அறியாதவர்களால், சரம ச்லோகத்தின் மூலம் "தர்மங்களைத் துறக்கவேண்டும்" என்று எந்த ஒரு இல்லாத அம்சம் கூறப்பட்டதோ, அது வேரில்லாத கருத்து என்று அல்லவோ எங்களாழ்வான் உள்ளிட்ட பலராலும் கூறப்பட்டது.

## இரண்டு முக்கிய ச்லோகங்களுக்கான விளக்கம்

**மூலம்** - ஆனால், "இதம் சரணம் அஜ்ஞாநம் இதமேவ விஜாநதாம் | இதம் திதீர்ஷதாம் பாரம் இதம் ஆநந்த்யம் இச்சதாம்" என்றும், "அவித்யாதோ தேவே பரிப்ருடதயா வா விதிதயா | ஸ்வபக்தேர் பூம்நா வா ஜகதி கதிம் அந்யாம் அவிதுஷாம்" என்றும் சொல்லுகிற அதிகார பேதமிருக்கும்படி என்? என்னில், இவ்விடத்திற் சொன்ன அஜ்ஞாநம், உபாஸநாதிகளில் தெளிவில்லாமையாதல் ப்ரபத்தி தன்னிலும் ஸூக்ஷ்ம விசேஷங்கள் அறியாமையாதலா மத்தனை.

**விளக்கம்** – ஆனால், லக்ஷ்மீ தந்த்ரம் (17-101) - இதம் சரணம் அஜ்ஞாநம் இதமேவ விஜாநதாம் | இதம் திதீர்ஷதாம் பாரம் இதம் ஆநந்த்யம் இச்சதாம் - ஏதும் அறியாதவர்கள், அனைத்தும் அறிந்தவர்கள் என்ற அனைவரும், இந்தப் பெருங்கடலின் அக்கரையை அடைந்து, தாங்கள் அடைய விரும்பும் இலக்கான மோக்ஷத்தைப் பெறுவதற்கு இதுவே வழியாகும் – என்றும், ஸ்வாமி பராசரபட்டரின் முக்தகம் - அவித்யாதோ தேவே பரிப்ருடதயா வா விதிதயா | ஸ்வபக்தேர் பூம்நா வா ஜகதி கதிம் அந்யாம் அவிதுஷாம் – பக்தியோகத்தில் ஞானம் இல்லாதவர்கள், நாராயணனே உயர்ந்த தேவன் என்னும்

பக்தியோகத்திற்குத் தேவையான ஞானம் உள்ளவர்கள், ஸர்வேச்வரனிடம் மாறாத அன்பு கொண்டவர்கள், ப்ரபத்தி அன்றி வேறு கதி அறியாதவர்கள் – என்றும் உள்ள ச்லோகங்களில், ப்ரபத்தியைக் கைக்கொள்ளும் அதிகாரிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளை எவ்விதம் விளக்க இயலும் என்று கேட்கலாம். இந்த ச்லோகங்களில் கூறப்படும் அறியாமை என்பது, உபாஸனைகளில் தெளிவான ஞானம் இல்லாமையும் மற்றும் ப்ரபத்தியைக் குறித்து மிகவும் நுட்பமான ஞானம் இல்லாமையுமே ஆகும்.

**மூலம்** – இவற்றில் “விஜாநதாம்” என்றும், “தேவே பரிவ்ருடதயா வா விதிதயா” என்றும் சொன்ன ஜ்ஞாந விசேஷமும் உபாஸனாதிகளில் தெளிவாதல், ப்ரபத்திக்கு உபயுக்தமான சரண்யகுணாதி விஷயத்தில் தெளிவாதலாமித்தனை அல்லது இதுக்கு அநபேக்ஷிதமான ஸர்வவிஷய ஜ்ஞாநமன்று. பரிவ்ருடத்வ ரூபமான சரண்யகுண விசேஷ ஞாநமிறே இங்கு சொல்லப்படுகிறது. இவ் உபயுக்த ஞாநமுண்டானாலும், உபாயாந்தரத்தில் சக்தியில்லாதபோது அகிஞ்சநனாய் ப்ரபத்திக்கு அதிகாரியாம். சக்தியுண்டேயாகிலும், “சரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்தந: | மாம் நயேத்யதி காகுத்ஸ்த: தத்தஸ்ய ஸத்ருசம் பவேத்” என்கிறபடியே ரக்ஷகன் கைபார்த்து தான் கைவாங்கியிருக்கையன்றோ உசிதமென்னில், இது ப்ரபந்நனுடைய உத்தர க்ருத்ய விசேஷத்துக்கு உதாஹரணமாம். அல்லாதபோது உபாயவிதாயக சாஸ்த்ரங்கள் நிரர்த்தங்களாம்.

**விளக்கம்** – மேலே உள்ள ச்லோகங்களில் காணப்படும் “விஜாநதாம் = யார் அறிந்தவரோ” மற்றும் “தேவே பரிவ்ருடதயா வா விதிதயா = அனைவரைக் காட்டிலும் உயர்ந்தவன் என்னும் ஞானம்” என்னும் இரண்டின் மூலமும் உபாஸனையைக் குறித்து நன்றாக அறிந்த ஞானம் அல்லது தான் சரணம் அடையத்தகுந்த ஸர்வேச்வரனுடைய திருக்கல்யாண குணங்கள் குறித்த ஞானம் என்பது மட்டுமே கூறப்படுகிறது; இவை அல்லாமல், ப்ரபத்திக்குத் தேவையற்றதான அனைத்துவிஷயங்களைக் குறித்த ஞானம் அல்ல; காரணம் இங்கு சரணம் புகத்தக்கவனுடைய “அனைவரைக் காட்டிலும் உயர்ந்தவன்” என்னும் ஞானமே கூறப்படுகிறது. உபாஸனத்தைக் குறித்த ஞானம் இருந்தாலும், அத்தகைய உபாஸனையைக் கைக்கொள்ள இயலவில்லை என்றால், அவன் மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளும் சக்தியற்றவன் என்றாகி, ப்ரபத்திக்குத் தகுதியாவன் ஆகிறான். ஆனால் ஒருவனுக்கு அத்தகைய சக்தி இருந்தாலும், சீதை, இராமாயணம் ஸுந்தரகாண்டத்தில் (39-30) - சரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம்

பரபலார்த்தந: மாம் நயேத்யாதி காகுத்ஸ்த: தத்தஸ்ய ஸத்ருசம் பவேத்– விரோதியின் வலிமையை அழிக்கவல்ல இராமன், இலங்கையைத் தனது அம்புகளால் நிரப்பி, அதன் பின்னரே என்னை அழைத்துச் செல்லவேண்டும். இதுவே அவனுக்குப் பெருமை ஆகும் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரன் தன்னைக் காப்பாற்றும் தருணத்திற்குக் காத்திருந்து, மற்ற உபாயங்களில் ஈடுபடாமல் இருப்பது அல்லவோ உசிதமாகும் என்று சிலர் கேட்கலாம். சீதையின் கருத்தானது, ப்ரபத்திக்குப் பின்னர் ப்ரபந்நன் இருக்கவேண்டிய நிலைக்கு உதாரணம் ஆகும். இவ்விதம் கொள்ளவில்லை என்றால், உபாயங்களைக் கைக்கொள்ளவேண்டும் என்று கூறுகின்ற சாஸ்த்ரங்கள் அனைத்தும் பொருளற்றவை ஆகிவிடும்.

**மூலம்** – உபாயாந்தரத்தில் தனக்கு ஜ்ஞாநமுண்டாய், அதில் அநுஷ்டாந சக்தியுமுண்டானாலும், விளம்ப க்ஷமனன்றிக்கே இருக்குமாகில் கடுக பலம் தரவல்ல ப்ரபத்தியே நமக்கு உசிதை யென்றிருக்குமவனும் இப் ப்ரபத்திக்கு அதிகாரியாம். இத்தை "இதம் திதீர்ஷதாம் பாரம்" இத்யாதிகளிலே சொல்லுகிறது. எங்ஙனேயென்னில், "திதீர்ஷதாம் பாரம்" என்றது கடுக அநிஷ்ட நிவ்ருத்தி பிறக்க வேணுமென்னும் த்வரையுடையார்க்கு என்றபடி. "ஆநந்த்யம் இச்சதாம்" என்றது ஸ்வரூப ப்ராப்ய பரிபூர்ண பகவத் அநுபவத்தைப் பெற்றல்லது தரிக்கமாட்டார்க்கு என்றபடி.

**விளக்கம்** – ஒருவனுக்கு மற்ற உபாயங்களில் ஞானம் கொண்டவனாக, அவற்றைக் கைக்கொள்ள அவன் சக்தி உள்ளவனாக இருந்தாலும், அவற்றின் மூலம் பலன் கிடைக்கும் காலதாமதத்தைத் பொறுத்துக் கொள்ள இயலாமல், விரைந்து பலன் தரவல்ல ப்ரபத்தியே தனக்கு ஏற்றது என்று எண்ணினால், அவன் ப்ரபத்திக்குத் தகுதியானவன் ஆகிறான். இதனையே மேலே உள்ள லக்ஷ்மீ தந்த்ரம் (17-101) – இதம் திதீர்ஷதாம் பாரம் – ஸம்ஸாரம் என்னும் பெருங்கடலின் அக்கரையை அடைய எண்ணுபவர்களுக்கு இதுவே உபாயம் – என்று கூறியது. எப்படியென்றால், "திதீர்ஷதாம் பாரம்" என்பதால், தங்களுக்கு விருப்பம் அல்லாதவை (ஸம்ஸாரம்) விரைந்து நீங்கவேண்டும் என்னும் வேகம் கொண்டவர்களுக்கு என்னும் கருத்து கூறப்படுகிறது. லக்ஷ்மீ தந்த்ரம் (17-101) – ஆநந்த்யம் இச்சதாம் – என்பது தங்களுடைய ஆத்மஸ்வரூபத்திற்கு ஏற்ற இலக்காக உள்ளதான பரிபூர்ணமான பகவத் அனுபவம் கிட்டினால் அல்லாமல், உயிர் தாங்க மாட்டார்கள் என்பதைக் கூறுவதாகும்.

**மூலம்** – இவையிரண்டையும் நினைத்து "ஸ்வபக்தே பூம்நா வா" என்கிறார். இங்கு பக்தியென்றது ப்ரேம பாரவச்யத்தைச் சொன்னபடி; அல்லது பக்தியோகத்தைச் சொன்னபடியன்று. இப்படி பக்தியினுடைய பூமாவாகிறது கடுகப் ப்ராப்தி கிடையாதபோது அழியும்படியான அவஸ்தா விசேஷம். இது சிலர்க்குக் கட்டளைப்பட்ட பக்தியோகமில்லையாகிலும், ஸுக்ருத விசேஷ மூலமான பகவத் ப்ரஸாதத்தாலே வரும். இவ் அவஸ்தையுடையவனும் ப்ரபத்திக்கு அதிகாரி.

**விளக்கம்** – இந்த இரண்டையும் கருத்தில் கொண்டே ஸ்வாமி பராசரபட்டர் – ஸ்வபக்தே பூம்நா வா – பக்தியின் மிகுதியால் – என்றார். இங்கு கூறப்பட்ட பக்தி என்பது பகவானிடம் கொண்ட ப்ரேமை ஆகும், அது பக்தியோகத்தைக் குறிக்கவில்லை. பக்தியின் மிகுதி என்றால், விரைவாக பகவானைக் கிட்ட இயலவில்லை என்றால், உயிர் போகும்படியான நிலையில் உள்ள தன்மையாகும். இத்தகைய நிலையானது சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்ட பக்தியோகத்தில் காணப்படுவதில்லை என்றாலும், ஒரு சிலருக்கு அவர்கள் செய்த நற்செயல்கள் காரணமாக, இந்த நிலையானது பகவானால் அளிக்கப்படுவதாகும். இந்த நிலையில் உள்ளவர்களும் ப்ரபத்திக்குத் தகுதியானவர்கள் ஆவர்.

**மூலம்** – இப்படியாகையால் உபாயாந்தரத்தில் அஜ்ஞராய் இவ்வுபாயத்தில் ஸமுதாய ஜ்ஞாநமாத்ரமுடையராயிருப்பார்க்கும், இதிலும் உபாயாந்தரத்திலும் தெளிவுண்டானாலும் உபாயாந்தரத்தில் அநுஷ்டாந சக்தியில்லாதார்க்கும், இவையிரண்டும் உண்டானாலும் விளம்பம் பொறாத ஆர்த்யதிசயமுடையார்க்கும் ப்ரபத்தியிலே இழியலாம். இவ்விளம்ப க்ஷமனும் தான் நினைத்த காலத்திலே பலம் பெறுகைக்கு உபாயாந்தர ரஹிதன். இப் ப்ரகாரத்தை நினைத்து “ஜகதி கதிம் அந்யாம் அவிதுஷாம்” என்கிறது.

**விளக்கம்** – ஆக மற்ற உபாயங்களைக் குறித்து அறியாதவர்களாக ப்ரபத்தியைக் குறித்து மட்டுமே நன்கு அறிந்தவர்களாக உள்ளவர்கள், ப்ரபத்தி மற்றும் மற்ற உபாயங்கள் ஆகிய இரண்டிலும் ஞானம் உள்ளவர்கள் என்றாலும் மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளும் சக்தி அற்றவர்களாக உள்ளவர்கள், இந்த இரண்டைக் குறித்தும் ஞானம் மற்றும் சக்தி ஆகிய இரண்டையும் கொண்டவர்களாக இருந்தாலும் இவற்றால் ஏற்படவல்ல பலன் காலதாமதமாக உண்டாவதைப் பொறுத்துக் கொள்ள இயலாதவர்கள் ஆகியோர் ப்ரபத்தியைக் கைக்கொள்ளலாம். இவ்விதம் காலதாமதத்தைப் பொறுத்துக்கொள்ள இயலாமல் உள்ளவன், தான் நினைத்த காலத்தில் பலன் அடைவதற்கான உபாயங்களைக் கைக்கொள்ள இயலாதவனே ஆகிறான். இதனைக் கருத்தில் கொண்டே ஸ்வாமி பராசரபட்டர் - ஜகதி கதிம் அந்யாம் அவிதுஷாம் – இந்த உலகத்தில் வேறு உபாயங்களை அறியாதவன் – என்றார்.

**மூலம்** – வ்யாஸாதிகள் அதிகாரி புருஷர்களாகையாலே விளம்ப க்ஷமருமாய் இருப்பார்கள். ஆகையால் உபாஸநத்தில் இழிந்தார்கள்; அல்லது ஜ்ஞாந மாந்த்யமாதல் விச்வாஸ மாந்த்யமாதல் உண்டாகி இழிந்தார்களல்லர்;

அசக்தஸ்யாதி க்ருச்சேஷு துராசா தார்ட்டய சாலிந:
கஸ்யசித் புத்தி தௌர்பல்யம் லகு த்யாகஸ்ய காரணம்

தத்ர ப்ரபத்யநர்ஹாணாம் அந்யாதித்யபி யுஜ்யதே
வ்யாஸாதிஷு து நைவைஷா நீதி: ஸம்சய காதிஷு

இப்படி உபாஸந ப்ரபதங்களுக்கு அதிகாரம் வ்யவஸ்திதமாகையால் இரண்டு சாஸ்த்ரமும் ஸப்ரயோஜநம். இரண்டு அதிகாரிகளுக்கும் ஸ்வதர்மத்தில் ப்ரதிபத்தி வைஷம்யமே உள்ளது. ப்ரபந்நனுக்குக் கோரின பலத்தைப் பற்ற வேறு ஒன்றை அநுஷ்டிக்கில் ப்ரஹ்மாஸ்த்ர பந்த ந்யாயத்தாலே விரோதமுண்டானாலும், ஸ்வயம் ப்ரயோஜநமாகவாதல் பகவத்பாகவத ஸம்ருத்தயாதி பலாந்தரத்தைப் பற்றவாதல் வேறொன்றை அநுஷ்டித்தால் விரோதமில்லை.

**விளக்கம்** – வ்யாஸர் முதலானவர்கள் பரமபுருஷனுடைய அதிகாரிகள் என்பதால் அவர்கள் காலதாமதத்தையும் பொறுத்துக் கொண்டார்கள், மற்ற உபாயங்களிலும் ஈடுபட்டார்கள். அவர்கள் ஞானம் இன்றியோ அல்லது நம்பிக்கை இன்றியோ மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளவில்லை.

- அசக்தஸ்யாதி க்ருச்சேஷு துராசா தார்ட்டய சாலிந: கஸ்யசித் புத்தி தௌர்பல்யம் லகு த்யாகஸ்ய காரணம் – கைக்கொள்ள மிகவும் கடினமாக உள்ள உபாயங்களில் நிலைநிற்கச் சக்தி அற்றவனாகவும், பக்தியோகம் முதலியவற்றால் முக்தி அடைவேன் என்னும் வீணாசையைக் கொண்டவனாகவும் உள்ள ஒருவனுக்கு, எளிதான உபாயத்தைக் கைவிடுதல் என்பதற்குக் காரணம் நம்பிக்கைக் குறைவே ஆகும்.

- தத்ர ப்ரபத்யநர்ஹாணாம் அந்யாதித்யபி யுஜ்யதே வ்யாஸாதிஷு து நைவைஷா நீதி: ஸம்சய காதிஷு – அத்தகைய நம்பிக்கைக் குறைவு உண்டாகும்போது, ப்ரபத்தியைக் கைக்கொள்ளும் தகுதி இல்லாதவர்களுக்கு வேறு உபாயம் ஏற்றதே என்று கூறுவது பொருத்தமே ஆகும். ஆனால் மற்றவர்களுடைய ஐயங்களைப் போக்கும் வ்யாஸர் முதலானவர்களிடம் இந்தச் சிந்தனை பொருந்தாது.

இப்படியாக உபாஸனை மற்றும் ப்ரபத்தி ஆகிய இரண்டிற்கான தகுதியைக் குறித்துத் தீர்மானிக்கப்பட்டதால், இந்த இரண்டுமே அந்தந்த நிலைகளுக்கு ஏற்றபடி பயன் அளிப்பதே ஆகின்றன. இந்த இரண்டு அதிகாரிகளுக்கும் அவரவர்களுடைய தர்மங்களுக்குக் கைக்கொள்வதில் உள்ள வேறுபாடு என்பது அவர்களுக்கு அவற்றைக் குறித்த எண்ணத்தில் உள்ள வேறுபாடு காரணமாகவே அமைகிறது. ப்ரபந்நன் ஒருவன் தான் அடைய எண்ணும் பலனுக்காக (மோக்ஷம்) வேறு எந்த உபாயத்தைக் கைக்கொண்டாலும், அவை ப்ரஹ்மாஸ்த்ரத்திற்கு முன்பாக எதுவும் பலிக்காதது போன்று, பலன் அளிக்காது (ப்ரபத்தி உட்பட). ஆனால் அவை பகவத் ஆராதனையாகவும், பாகவத நன்மைக்காகவும் செய்யப்பட்டால், எந்தப் பாதிப்பும் இல்லை.

## "பரித்யஜ்ய" என்பதற்கு உபாயத்வ புத்தியைத் துறத்தல் என்பதே பொருள் என்பது கண்டிக்கப்படுதல்

**மூலம்** – இப்படி ஸ்வரூப த்யாகம் கூடாதொழிந்தாலும் உபாயத்வ புத்தி த்யாகம் பண்ணுகை "பரித்யஜ்ய"வுக்குப் பொருளானாலோ என்னில், ப்ரபந்நனுக்கு உத்தர க்ருத்ய கோசரங்களான வாக்யங்களில், உபாயத்வ புத்தி த்யாகம் விதிக்கிறவிடம் உசிதம். இங்கு உத்தர க்ருத்ய பரமன்றிக்கே உபாய விதாயகமாயிருக்கிற இவ்வாக்யத்திற் சொல்லுகையாலே, இப்புத்தி த்யாக பூர்வகமான தர்மஸ்வரூபம் ப்ரபத்திக்கு அங்கமாக அநுஷ்டேயம் என்று பலிக்கையால் "ஸ்வயம்ப்ரயோஜநமான கேவல கைங்கர்யம் உத்தர க்ருத்யம்" என்கிற பதம் ஸித்தியாது. இவ்வுபாயத்துக்குச் சொல்லுகிற தர்மாந்தர நைரபேக்ஷ்யமும் கிடையாது. இவ்வுபாயம் அகிஞ்சநாதிகாரமன்றிக்கே ஒழியும். எங்ஙனேயென்னில் உபாயமல்லாதவற்றில் உபாயத்வ புத்தி த்யாகம் இங்கு விதிக்கவேண்டா. உபாயமானவற்றில் உபாயத்வ புத்தி த்யாகம் பண்ணி

அநுஷ்டிக்கையாவது பழைய உபாஸநாதிகளில் நிலையாம். இங்கு உபாயத்வ புத்தி த்யாகம் பொருளாகச் சொல்லுகிற பக்ஷத்தில் த்யாக விதிக்கும் அநுஷ்டாந விதிக்கும் அதிகாரி பேதத்தாலே விரோதம் பரிஹரித்தவிடமும் அநபேக்ஷித வசநம். இங்கு ஸ்வரூப த்யாகம் சொல்லும்போதிறே இவ் விரோத ப்ரஸங்கமுள்ளது? இப்படி புத்தி விசேஷ த்யாக பூர்வக கர்ம ஜ்ஞாந பக்திகளைப் ப்ரபத்திக்கு அங்கமாக இசையும் பக்ஷத்தில், உபாஸந ப்ரபதநங்களுக்கு அங்காங்கி வ்யபதேசத்தில் மாறாட்டமேயுள்ளது. அங்க பாவத்தில் யதாகதஞ்சித் அநுஷ்டாநம் அமையுமென்கிற வைஷம்யமும் பந்தம். “ஸகலாங்கோப ஸம்ஹாரே காம்ய கர்ம ப்ரஸித்யதி” என்று சொல்லப்பட்டதிறே.

**விளக்கம்** – ஒரு சிலர், “பரித்யஜ்ய என்பதன் மூலம் தர்மங்களை முழுவதுமாகக் கைவிடாமல், அவற்றை உபாயமாக எண்ணும் சிந்தனையை மட்டுமே கைவிடுதல் என்று கூறப்படுவதாகக் கொள்ளலாம் அல்லவோ?”, என்று கேட்கலாம். ப்ரபந்நன் ஒருவனுக்கு ப்ரபத்திக்குப் பின்னர் செய்யவேண்டியவற்றைக் கூறும் வாக்கியங்களில் இது போன்று அவற்றை உபாயமாக எண்ணும் சிந்தனையை மட்டுமே கைவிடுதல் என்று விதிக்கப்பட்டுள்ளது சரியே ஆகும். ஆனால் இந்த சரமச்லோகம் என்பது ப்ரபத்திக்கு முன்பாக உள்ள உபாயத்தைக் கூறுவதாக உள்ளது, ப்ரபத்திக்குப் பின்னர் செய்யவேண்டியவற்றை விதிக்கவில்லை. ஆகவே பரித்யஜ்ய என்பதற்கு இவ்விதம் பொருள் கொண்டால், இந்தத் தர்மங்களை ப்ரபத்தியின் அங்கமாகவே கொண்டு அவற்றைக் கைக்கொள்ளவேண்டும் என்றும், ஆனால் அவை உபாயம் அல்ல என்னும் சிந்தனையுடன் இருத்தல்வேண்டும் என்றும் கூறுவதாகிறது. இதனை ஒப்புக்கொண்டால், ப்ரபத்திக்குப் பின்னர் செய்யப்படும் சில செயல்கள் எந்தவிதமான பலனையும் எதிர்பாராமலும், அந்தச் செயல்களைச் செய்யவேண்டும் என்னும் ஒரு கட்டாயத்திற்காகவும், பகவானுக்குச் செய்யப்படும் கைங்கர்யம் என்னும் எண்ணத்துடனும் செய்தல் வேண்டும் என்னும் விதியானது பொருந்தாமல் போகும். மேலும் ப்ரபத்திக்கு இன்றியமையாத அங்கங்கள் என்று ஏதும் இல்லாமலும் போகும். இதன் விளைவாக மற்ற உபாயங்கள் ஏதும் இன்றி உள்ள ஒருவர் கைக்கொள்ளக்கூடிய உபாயமே இந்த ப்ரபத்தி என்னும் நிலை மறைந்துவிடும் (அல்லது மற்ற உபாயங்கள் இல்லாமல் உள்ளதே இதற்கான தகுதி என்பது இல்லாமல் போகும்); எப்படியென்றால் – உபாயங்களாக அல்லாத தர்மங்களை உபாயங்களாக எண்ணி, அவற்றை உபாயம் அல்ல என்று துறத்தலை பரித்யஜ்ய என்பதால் விதிப்பதாகிறது என்று கூறுதல் அவசியம்

அற்றதாகும். உபாயமாக உள்ள தர்மங்களை உபாயமாகச் சிந்தையில் வைக்காமல் இயற்றுதல் என்பது பழைய உபாஸனை போன்றதே ஆகும். மேலும் “பரித்யஜ்ய” என்பதற்கு தர்மங்களை உபாயங்களாக எண்ணுவதைக் கைவிடுதல் என்று கொண்டால், கைவிடுதல் என்னும் விதி மற்றும் கைக்கொள்ளும் என்னும் விதி ஆகியவை அந்தந்த அதிகாரியைப் பொறுத்தே அமையும் என்று சமாதானம் கூறுவது அவசியம் அற்றதாகிறது. “பரித்யஜ்ய” என்பதற்கு, தர்மங்களை அடியுடன் கைவிடுதல் என்று கூறினால் மட்டுமே இவ்விதம் பிரிப்பது பொருந்துகிறது? கர்மம், ஞானம் மற்றும் பக்தி ஆகியவற்றை, அவை உபாயங்கள் என்று எண்ணாமல் கைக்கொள்ளவேண்டும் என்ற நிலை ப்ரபத்திக்கான அங்கம் என்று கொண்டால், பக்தனுக்கும் ப்ரபந்நனுக்கும் வேறுபாடு இல்லாமல் போய்விடும். மேலும் அங்கமாக உள்ள ஒரு செயல்பாட்டைப் பொறுத்தவரையில், அதனைப் பரிபூர்ணமாகச் செய்தல்வேண்டும் என்னும் அவசியம் இல்லை என்றும், தனது சக்திக்கு ஏற்ப அவற்றை இயற்றினால் போதுமானது என்றும் கூறுவதும் சரியல்ல. பூர்வமீமாம்ஸையில் - ஸகலாங்கோப ஸம்ஹாரே காம்ய கர்ம ப்ரஸித்யதி – ஒரு பலனுக்காகச் செய்யப்படும் செயலானது அனைத்து அங்கங்களுடன் செய்தால் மட்டுமே பலன் அளிக்கும் – என்று கூறப்பட்டது அல்லவோ?

**மூலம் –**

அத: ஸ்வரூப த்யாக உக்தௌ கைங்கர்யஸ்ய அபசாரதா
உபாயத்வம் இதி த்யாகோ தத் ஸ்வரூப அங்கதா பவேத்

ஸாத்விக த்யாக யுக்தாநாம் தர்மாணாம் ஏதத் அங்கதா
நூநம் விஸ்ம்ருத காகாதி வ்ருத்தாந்தை: உபவர்ணிதா

ஸக்ருத் ப்ரபதநே ஏவ தர்மாந்தரதவீயஸா
தத் க்ஷணே அபிமதம் பூர்வே ஸம்ப்ராபு: இதி சுச்ரும

ப்ரஸக்த அங்கத்வ பாதே து ப்ரஹ்மாஸ்த்ர ஸம தேஜஸ:
உபாயஸ்ய ப்ரபாவச்ச கைங்கர்யாதி ச ஸூஸ்திரம்

**பொருள் –**

- அத: ஸ்வரூப த்யாக உக்தௌ கைங்கர்யஸ்ய அபசாரதா உபாயத்வம் இதி த்யாகோ தத் ஸ்வரூப அங்கதா பவேத் – எனவே கர்மங்களை ஸ்வரூபத்துடன் விடவேண்டும் என்று கூறினால், கைங்கர்யத்திற்கு அபசாரமாக உள்ள நிலை உண்டாகிவிடும். கர்மங்கள் உபாயங்களாக உள்ளன என்னும் எண்ணத்தைக் கைவிடவேண்டும் என்று கூறினால், தர்மங்களுடைய ஸ்வரூபத்திற்கு (ப்ரபத்தியின்) அங்கமாக உள்ள நிலை உண்டாகும்.

- ஸாத்விக த்யாக யுக்தாநாம் தர்மாணாம் ஏதத் அங்கதா நூநம் விஸ்ம்ருத காகாதி வ்ருத்தாந்தை: உபவர்ணிதா – காகாஸுரனுடைய சரிதத்தை மறந்தவர்களால், ஸாத்விக த்யாகத்துடன் சேர்ந்ததாக உள்ள தர்மங்களுக்கு ப்ரபத்தியின் அங்கமாக உள்ள தன்மை கூறப்படுகிறது.

- ஸக்ருத் ப்ரபதநே ஏவ தர்மாந்தரதவீயஸா தத் க்ஷணே அபிமதம் பூர்வே ஸம்ப்ராபு: இதி சுச்ரும – ஐந்து அங்கங்கள் அல்லாமல் வேறு எந்தத் தர்மங்களையும் அங்கமாக வேண்டாதபடி உள்ளதும், ஒருமுறை மட்டுமே செய்யப்படுவதும் ஆகிய ப்ரபத்தியால், ப்ரபத்தி செய்தவர்கள் அந்த நொடியிலேயே தாங்கள் விரும்பிய பலனை அடைந்தார்கள் என நாம் அறிகிறோம்.

- ப்ரஸக்த அங்கத்வ பாதே து ப்ரஹ்மாஸ்த்ர ஸம தேஜஸ: உபாயஸ்ய ப்ரபாவச்ச கைங்கர்யாதி ச ஸுஸ்திரம் – மற்ற தர்மங்கள் ப்ரபத்திக்கு அங்கமாக வருவதை மறுத்தவுடன், ப்ரஹ்மாஸ்த்ரம் போன்ற தேஜஸ் கொண்ட ப்ரபத்தியின் பெருமை மற்றும் கைங்கர்யம் ஆகியவை உறுதியாக நின்றன.

## “பரித்யஜ்ய” என்னும் த்யாகவிதியின் ஆழ்பொருளும் விளக்கமும்

**மூலம்** – ஆகையால் “இங்கு ஸர்வதர்மங்களினுடைய ஸ்வரூப த்யாகத்தை அங்கமாக விதிக்கிறது” என்றும், “அவை அங்கமாம்படி இங்கு புத்தி விசேஷ த்யாக மாத்ரம்

விதிக்கிறது" என்றும் சொல்லுகிற பக்ஷங்கள் ஆஜ்ஞாநுபாலநாதி சாஸ்த்ரங்களுக்கும், ப்ரபத்திக்கு நைரபேக்ஷ்யம் சொல்லுகிற சாஸ்த்ரங்களுக்கும், பூர்வாசார்ய ஸம்ப்ரதாயங்களுக்கும், ப்ரபந்நராய்ப் போந்த பூர்வசிஷ்டர்களுடைய ஆசாரத்துக்கும் விருத்தங்களாம். இப்படி உக்த தோஷங்களாலே தர்மங்களினுடைய ஸ்வரூப த்யாகமும் ப்ரபத்திக்கு அங்கமன்று; உக்த நைரபேக்ஷ்யத்தாலே அந்த தர்மங்களினுடைய ஸ்வரூபமும் இதுக்கு அங்கமன்று. ஆகையால் இங்கு மற்றொரு தர்மத்தாலும் இப் ப்ரபத்திக்கு அபேக்ஷையில்லை என்கையிலே இத் த்யாக விதிக்குத் தாத்பர்யம்.

**விளக்கம்** – ஆகவே "பரித்யஜ்ய என்னும் த்யாக விதியானது, அனைத்து தர்மங்களையும் அதன் ஸ்வரூபத்துடன் கைவிடுதல் என்பதையே ப்ரபத்திக்கு அங்கமாக விதிக்கிறது" என்றும், "பரித்யஜ்ய என்னும் த்யாக விதியானது, அனைத்து தர்மங்களையும், அந்தத் தர்மங்கள் உபாயமாக உள்ளன என்னும் எண்ணத்தைக் கைவிடுதல் என்பதையே ப்ரபத்திக்கு அங்கமாக விதிக்கிறது" என்றும் கூறுகின்ற இரண்டுவிதமான கருத்துக்களும் - கர்மங்களுக்கான கட்டளைகளைக் கூறுகின்ற சாஸ்த்ரங்களுக்கும், ப்ரபத்தியானது மற்ற எதனையும் எதிர்பார்ப்பதில்லை என்று கூறுகின்ற சாஸ்த்ரங்களுக்கும், பூர்வாசார்ய ஸம்ப்ரதாயங்களுக்கும், ப்ரபந்நர்களாகத் திகழும் பூர்வ சிஷ்யர்களுடைய ஒழுக்கங்களுக்கும் முரணாக உள்ளன. இவ்விதம் கூறப்பட்ட தோஷங்கள் காரணமாக தர்மங்களை அவற்றின் ஸ்வரூபத்துடன் துறப்பது என்பது ப்ரபத்திக்கு அங்கம் அல்ல. இதே போன்று, ப்ரபத்தி எந்த ஒன்றையும் செய்யவேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை என்பதால், தர்மங்களை இயற்றுவதும் ப்ரபத்திக்கு அங்கம் அல்ல. ஆகவே பரித்யஜ்ய என்னும் இந்த த்யாக விதிக்கு, "ப்ரபத்தி வேறு எந்த ஒரு தர்மத்தையும் எதிர்பார்ப்பதில்லை" என்பதே கருத்தாகும்.

**மூலம்** – "இப்படிப் ப்ரதிஷேதிக்கைக்குப் ப்ரஸங்கம் வேணும். இங்கு என்ன தர்மங்கள் ப்ரஸக்தங்களாய்ப் ப்ரதிஷேதிக்கப்படுகின்றன?" என்னில் – வேதாந்த சோதிதைகளான வித்யைகளில் ஒரு வித்யையிலே ஓதி அங்கங்களாய்த் தோற்றின வர்ணாச்ரம தர்மங்களும் கதி சிந்தநாதிகளும் வித்யாந்தரத்திலும் வருமாப்போலே, ந்யாஸ வித்யையிலும் இவை துல்ய ந்யாயதையாலே அங்கங்களாய் வரப்புக இப்படி அங்கத்வ ப்ரஸங்கமுடைய ஸர்வதர்மங்களாலும் இதுக்கு அபேக்ஷையில்லை என்கை இவ்விடத்துக்கு உசிதம்.

**விளக்கம்** – "இவ்விதமாக மறுப்பதற்கு (அல்லது தடுப்பதற்கு) ஏதேனும் தவறாக உரைக்கப்பட்டிருக்கவேண்டும். இங்கு எத்தகைய தர்மங்கள் இவ்விதம் தவறாக உரைக்கப்பட்டதால் அவை மறுக்கப்படுகின்றன?" என்று சிலர் கேட்கலாம். வேதாந்தங்களான உபநிஷத்துகளில் விதிக்கப்படும் பல வித்யைகளில், ஏதேனும் ஒரு வித்யையில் மட்டுமே அங்கங்களாகக் காணப்படுகின்ற சில வர்ணாச்ரம தர்மங்களும், அர்ச்சிராதி கதி குறித்த சிந்தனைகளும், மற்ற வித்யைகளுக்கும் (அவற்றில் கூறப்படவில்லை என்றாலும்) பொருந்தும்; இதே போன்று, ந்யாஸ வித்யையாகிற ப்ரபத்திக்கு இது போன்ற அங்கங்கள் (மேலே கூறப்பட்ட இரண்டு கருத்துக்கள் காண்க) அவசியமானது என்று தோன்றினாலும், இவ்விதம் தவறுதலாக ப்ரபத்தியின் அங்கங்களாக எண்ணப்படும் இவை ப்ரபத்தியால் எதிர்பார்க்கப்படுவதில்லை. இதுவே இங்கு சரியான கருத்தாகும்.

## தர்மங்களைத் துறத்தல் ப்ரபத்திக்கு அங்கம் அல்ல

**மூலம்** – இத் தர்மங்களுக்கு "ஸஹகாரித்வேந ச" என்ற ஸூத்ரத்திற் சொன்ன வித்யா ஸஹகாரித்வ வேஷம் தவிர்த்தாலும், "விஹிதத்வாச்சாச்ரம கர்மாபி" என்று ஸூத்ராந்தரத்திற் சொன்ன விநியோகாந்தரத்துக்குப் ப்ரபந்நன் பக்கல் நிவாரகரில்லை. ஆகையால் இத்தர்மங்களினுடைய அநுஷ்டாநமும் தர்மங்களைத் த்யஜிக்கையும் ப்ரபத்திக்கு அங்கமல்லாமையால் அசக்யங்களில் நைரச்யம் அதிகாரத்திலே சொருகும். சக்யமான நித்ய நைமித்திகங்களுடைய அநுஷ்டாநம் ஆஜ்ஞாநுபாலனமான கைங்கர்ய மாத்ரமாம்.

**விளக்கம்** – இந்தத் தர்மங்கள், ப்ரஹ்மஸூத்ரம் (3-4-33) - ஸஹகாரித்வேந ச - ப்ரஹ்மவித்யை உண்டாவதற்குக் கர்மங்கள் துணையாக உள்ள காரணத்தினால் அவை இயற்றப்படவேண்டும் – என்பதற்கு ஏற்ப ப்ரஹ்மவித்யைக்கு மட்டுமே அங்கம் என்றும், ப்ரபத்திக்கு அங்கம் அல்ல என்றும் உள்ளன. ஆனால், ப்ரஹ்மஸூத்ரம் (3-4-32) - விஹிதத்வாச்சாச்ரம கர்மாபி – அனைத்து ஆச்ரமங்களிலும் உள்ளவர்களாலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் – என்று வேறு ஒரு ஸூத்ரத்தில் கூறுவதற்கு ஏற்ப, வேறு ஒருவிதமான பயனுக்காக அவற்றை ப்ரபந்நன் இயற்றவேண்டும் என்பதைத் தடுக்கும்

ப்ரமாணம் ஏதும் இல்லை. ஆகவே இந்தக் கர்மங்களை இயற்றுதல், இயற்றாமல் கைவிடுதல் ஆகிய இரண்டுமே ப்ரபத்திக்கு அங்கம் அல்ல என்பதால், அவற்றைத் தனது சக்திக்கும் மீறி இயற்றுதல் என்பது ப்ரபத்திக்கான தகுதியை அதிகப்படுத்துவதாகவே அமையும். மேலும் தனது சக்திக்கு உட்பட்டு இயற்றப்படும் நித்ய நைமித்திக கர்மங்கள், பகவத் ஆணைக்கு உட்பட்டுச் செய்யப்படும் கைங்கர்யம் போன்றதே என்றாகிறது.

ஸங்கல்பமாத்ரமேவ அங்கம் ச்ருதம் ஆசரணம் புந:
அநங்கம் ஆஜ்ஞயா ப்ராப்தம் ஸங்கல்ப நிபந்தநம்

**பொருள்** – "நான் பகவானுக்கு ஏற்றபடி நடந்துகொள்வேன்" என்று மனதால் எண்ணுவது மட்டுமே சாஸ்த்ரங்களில் அங்கமாகக் கொள்ளப்பட்டது. ஆனால் அவ்விதம் நடந்து கொள்ளுதல் என்பது அங்கம் அல்ல, அது பகவத் ஆணையால் உண்டானதாகும்; அது ஸங்கல்பம் காரணமாக வந்தது அல்ல.

## பகவத் ஆணையாக இல்லையென்றாலும் ப்ரபந்நன் ஏன் கைங்கர்யம் செய்யவேண்டும்

**மூலம்** – இப்படியாகில் இவனுக்கு நித்ய நைமித்திகங்களில் அடைக்கவொண்ணாத ப்ரபூத கைங்கர்யங்களுக்குப் ப்ரயோஜகர் ஆர்? என்னில், இவை இவனுக்கு உபாயாந்தரத்திற் புகா; அங்காந்தர நிரபேக்ஷயான ப்ரபத்திக்கு பரிகரங்களுமாகா; அகரணத்தில் ஈச்வரன் வெறுக்குமென்று செய்கிறானுமல்லன்; தனியே இவை தமக்கு ஒரு பாபக்ஷய ஸ்வர்க பசு புத்ராதி பலாந்தரத்தை ஆசைப்பட்டுச் செய்கிறானுமல்லன்; லௌகிகரானவர்கள் த்யூதாதிகள் பண்ணுமாப்போலே கேவலம் தன் உகப்பாலே ப்ரவர்த்திக்கிறானுமல்லன்; முக்தரைப்போலே பகவதபிப்ராயத்தைப் ப்ரத்யக்ஷமாகக் கண்டு அவனை உகப்பிக்கைக்குப் ப்ரவர்த்திக்கிறானுமல்லன்; மற்று எங்ஙனேயென்னில், இக்கைங்கர்யங்களுக்கும் பலாந்த்ரங்கள்போலே பகவத் ப்ரீதியும் பலமாக சாஸ்த்ர ஸித்தமாகையாலே அவனுக்கப்பிலே ஸத்த்வோத்தரனான தன் ப்ரக்ருதி ஸ்வபாவத்தாலே ருசி பிறக்கையாலே ஸுஹ்ருத் புத்ராதி உபலாலநங்களிற் போலே ஸர்வவித பந்துவான அவனுடைய ப்ரீணநங்களிலே சாஸ்த்ரம் கைவிளக்காகப் ப்ரவர்த்திக்கிறான்.


email : sridharan_book@yahoo.com

**விளக்கம்** – அப்படியானால் ப்ரபந்நன் ஒருவனுக்கு நித்ய நைமித்திக கர்மங்களில் சேராதபடியும், பகவத் ஆணை என்பது அல்லாமலும் உள்ள கைங்கர்யங்களை செய்யத் தூண்டுவது எது என்ற கேள்வி எழலாம். இத்தகைய கர்மங்கள் இவனுக்கு மோக்ஷத்திற்கான உபாயம் என்பதிலும் சேராது; இப்படிப்பட்ட கர்மங்கள் எதனையும் அங்கமாக எதிர்பாராமல் உள்ள ப்ரபத்திக்கு இவை அங்கமாகவும் இல்லை; இவற்றைச் செய்யவில்லை என்றால் ஸர்வேச்வரன் தன்னை வெறுக்கக்கூடும் என்பதாலும் செய்வதில்லை; இவற்றின் மூலம் தனது பாபங்கள் நீங்குதல், ஸ்வர்க்கம் – பசு – புத்திரன் போன்ற பலன்கள் கிட்டும் என்னும் ஆசையிலும் செய்வதில்லை; உலகில் உள்ளவர்கள் சூதாடுதல் போன்று இவற்றைத் தனது மகிழ்வுக்காகவும் செய்வதில்லை; முக்தர்கள் தங்களுடைய செய்கைகளைப் பகவான் ஏற்றுக்கொண்டு மகிழ்வதை நேரடியாகக் காண்பது போன்று, அவனை மகிழ வைப்பதற்காகவும் செய்வதில்லை. அப்படியென்றால் இது போன்ற கைங்கர்யங்களை எதற்காகச் செய்கிறான்? மற்ற பலன்கள் போன்று இந்தக் கைங்கர்யங்கள் பகவத் ப்ரீதியைப் பலனாகக் கொண்டவை என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன; ஸத்வகுணம் மேலோங்கி நிற்கும் இவனுக்கு இயல்பாகவே ஸர்வேச்வரனுடைய உகப்பு என்பதில் ஆசை ஏற்படுகிறது; ஆகவே சாஸ்த்ரங்களைத் தனக்கு வழிகாட்டும் விளக்காகக் கொண்டு, தனக்கு அனைத்துவிதமான உறவினனாக உள்ள ஸர்வேச்வரனை, தன்னுடைய நண்பர்கள் மற்றும் குழந்தைகள் போன்றவர்களை எவ்விதம் மகிழவைப்பானோ அது போன்றே மகிழும்படிச் செய்வதற்காக இவற்றை இயற்றுகிறான்.

## ப்ரபந்நன் சாஸ்த்ரத்திற்கு வசப்பட்டவன் அல்லன் என்பதற்கு மறுப்பு

**மூலம்** – இவ்விடத்திலே சிலர் "ஸர்வேச்வரன் பக்கலிலே ஸர்வபரந்யாஸம் பண்ணின விவேகிக்குத் த்யாஜ்ய உபாதேய விபாக நிர்ணாயகம் ஸ்வரூபமஜ்ஞாநமன்றோ? இப்படி இவன் ஸ்வரூப வச்யனாமத்தனை போக்கி, சாஸ்த்ர வச்யனாம்படி என்?" என்று சொல்லுவார்கள். இதுவும் அநுபபந்நம்; எங்ஙனே என்னில் – ஸ்வரூபம் இன்னபடி இருக்குமென்று சாஸ்த்ரத்தைக் கொண்டு அறுதியிட்டால் "இஸ் ஸ்வரூபத்துக்கு இன்ன புருஷார்த்தமும் ததுபாயமும் த்யாஜ்யம், இன்ன புருஷார்த்தமும் ததுபாயமும் உபாதேயம்"

என்று பிரித்துத் தெளிகைக்கு முக்தனாமளவும் சாஸ்த்ரமொழிய வழியில்லை. ஸ்வரூபத்தில் சேஷத்வாதிகளைக் கொண்டு சில ஔசித்யமாத்ரம் அறியலாமத்தனை அல்லது, "சேஷி உகந்த கைங்கர்யத்தின் ப்ரகாரம் இது. இக் கைங்கர்யத்துக்கு உபாயங்கள் இவை" என்று ஸ்வரூப ஞானம் நியமித்துக் காட்டாது. ஆனபின்பு சாஸ்த்ரத்தை அநாதரித்து நிஷித்த த்ரவ்யங்களைக் கொண்டாதல், விஹிதங்கள் தம்மிலும் ந்யாயார்ஜிதமல்லாத த்ரவ்யங்களைக் கொண்டாதல், தனக்கு ருசித்தபடியே சாஸ்த்ர விருத்தமாயிருக்கும் கட்டளையிலே கைங்கர்யத்தை நடத்தப் பார்த்தால் உபசார அபசாரங்களுக்குப் பிரிவில்லையாம். அப்போது தன் ருசி ஒழிய வேறு நியாமகமில்லாமையாலே முமுக்ஷுக்கள் தவிர்ந்து போருகிற ஸர்வ நிஷித்தங்களையும் தன் ருசிமாத்ரத்தாலே கைங்கர்யமாக அநுஷ்டிக்கப் ப்ரஸங்கிக்கும். ஹவிர் நிவேதனத்திலும் ஸ்ரீபாஷ்யகாரர் "சாஸ்த்ர விருத்தாநி ஸம்ப்ருத்ய" என்று அருளிச்செய்தார். ஆகையால் சாஸ்த்ரவச்யனாய்த் தன் அதிகாரத்துக்குச் சாஸ்த்ரமடைத்த கைங்கர்யங்களையே பண்ணப் ப்ராப்தம்.

**விளக்கம்** – ஒரு சிலர், "ஸர்வேச்வரனிடம் தன்னைக் குறித்த அனைத்துவிதமான பொறுப்புகளையும் ஒப்படைத்த விவேகம் கொண்ட ஒருவனால் விலக்கப்பட வேண்டியது, ஏற்கக்கூடியது ஆகியவற்றைப் பிரித்து உணர்த்துவது அவனுடைய ஸ்வரூப ஞானமே ஆகும் அல்லவோ? ஆகவே அவன் தனது ஸ்வரூப ஞானத்திற்கே கட்டுப்பட்டவன் என்று கூறாமல், சாஸ்த்ரத்திற்குக் கட்டுப்பட்டவன் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்?", என்று கேட்கலாம். இந்தக் கேள்வி பொருத்தமற்றதாகும். எப்படி? ஆத்ம ஸ்வரூபம் இத்தன்மை கொண்டது என்று சாஸ்த்ரத்தின் மூலம் அறிந்த பின்னர், "இத்தகைய ஆத்ம ஸ்வரூபத்திற்கு - இந்தப் புருஷார்த்தமும், அதற்கான உபாயமும் கைவிடத்தக்கது; இந்தப் புருஷார்த்தமும், அதற்கான உபாயமும் ஏற்கத்தக்கது" என்று முக்தி பெறும் காலம் முடிய வேறுபடுத்தி அறிந்து கொள்வதற்கு சாஸ்த்ரங்கள் அல்லாமல் வேறு உபாயம் இல்லை. ஆத்ம ஸ்வரூபத்திற்குச் சேரும்விதத்தில் உள்ளதான அடிமைத்தனம் என்பதன் மூலம் அடிமையான சேதநன், "இந்தக் கைங்கர்யத்தால் எஜமானனாகிய ஸர்வேச்ரவனுடைய மகிழ்ச்சியே பலன்" என்பதை மட்டுமே அறிய இயலும் அல்லாமல், "எஜமானனாகிய ஸர்வேச்ரவனை மகிழவைக்கும் கைங்கர்யத்தின் முறை இன்னதாகும், இதற்கான உபாயங்களை இவையாகும்" என்று உணர்த்துவதற்கு ஸ்வரூப ஞானத்தால் இயலாது. ஆகவே சாஸ்த்ரங்களை ஒதுக்கிவிட்டு, சாஸ்த்ரங்களால்

விலக்கப்பட்ட பொருள்களைக் கைக்கொள்ளுதல், சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்ட பொருள்களைத் தகாத வழியில் கைக்கொள்ளுதல், சாஸ்த்ரங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கைங்கர்யங்களாக உள்ளபோதிலும் தனது விருப்பத்திற்கு ஏற்ப வேறுவிதமாகச் செய்தல் போன்றவை மூலம் உபசாரம் மற்றும் அபசாரம் ஆகியவற்றில் வேறுபாடு காண இயலாமல் போகும். அந்தச் சூழ்நிலையில் தனது விருப்பம் அல்லாமல் வேறு எந்தவிதமான ப்ரமாணமும் இல்லை என்பதால், முமுக்ஷுக்களால் விலக்கப்படும் அனைத்தையும் தனது விருப்பம் என்ற காரணத்தால் கைங்கர்யமாக இயற்றுதல் என்ற நிலை உண்டாகும். எம்பெருமானார் தான் அருளிச்செய்த நித்யத்தில், திருவாராதனம் செய்யும்போது தளிகையை சமர்ப்பிப்பதைக் கூறும் இடத்தில், சாஸ்த்ர விருத்தாநி ஸம்ப்ருத்ய – சாஸ்த்ரங்களுடன் முரண்படாதபடி பொருள்களை ஈட்டி – என்று அருளிச்செய்தார். ஆகவே ப்ரபந்நன் ஒருவன் சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்பட்டு, அவை தனது தகுதிக்கு ஏற்ப எத்தகைய கைங்கர்யங்களை விதிக்கின்றனவோ அவற்றைச் செய்தபடி இருத்தலே ஏற்புடையதாகும்.

### கைங்கர்யம் செய்வது குறித்து ஸ்வாமி ஆளவந்தாருடைய கருத்துக்கள்

**மூலம்** – “தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ ஜ்ஞாத்வா சாஸ்த்ர விதாநோக்தம் கர்ம கர்த்தும் இஹ அர்ஹஸி” என்ற உபதேசம், ஸர்வாதிகாரிகளுக்கும் பொதுவாயிருக்கும். ஆளவந்தார் ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹத்திலே “ஜ்ஞாநீ து பரமைகாந்தி ததாயத்தாத்ம ஜீவந: தத் ஸம்ச்லேஷ வியோகைக ஸுக துக்கஸ்ததேகதீ:”, “பகவத் த்யாந யோகோக்தி வந்தந ஸ்துதி கீர்த்தநை: லப்தாத்மா தத் கத ப்ராண மநோ புத்தி இந்த்ரிய க்ரிய:”, “விஜகர்மாதி பக்தயந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித: உபாயதாம் பரித்யஜ்ய ந்யஸ்யேத்தேவே து தமபீ:” என்று அருளிச் செய்தவிடத்தில் “ப்ரீத்யைவ காரித:” என்றதுவும் சாஸ்த்ரம் வேண்டாவென்றபடியன்று; இங்கு சாஸ்த்ரம் கொண்டே அறியவேண்டுகிற கைங்கர்யந்தன்னில், ஸ்வாமி ஸந்தோஷ ஜநகத்வமடியாக சேஷபூதனான தனக்குப் பிறக்கிற ப்ரீதியினுடைய ப்ரேரகத்வ அதிசயம் சொல்லுகையிலே தாத்பர்யம்.

**விளக்கம்** – கீதையில் (16-24) - தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ ஜ்ஞாத்வா சாஸ்த்ர விதாநோக்தம் கர்ம கர்த்தும் இஹ அர்ஹஸி – இந்த உலகில் செய்யத்தக்கது எது, செய்யத்தகாதது எது என்பதற்கான ப்ரமாணம் சாஸ்த்ரமே ஆகும். இவ்விதம் அறிந்துகொண்டு சாஸ்த்ரங்கள் கூறும் முறைகளில் உனது கர்மங்களை இயற்றுவாயாக – என்றுள்ள உபதேசமானது அனைத்துவிதமான அதிகாரிகளுக்கும் பொருந்துவதாகும். ஸ்வாமி ஆளவந்தார் கீதார்த்த ஸங்க்ரஹத்தில் (29) - ஜ்ஞாநீ து பரமைகாந்தி ததாயத்தாத்ம ஜீவந: தத் ஸம்ச்லேஷ வியோகைக ஸுக துக்கஸ்ததேகதீ: - ஞானி என்பவன் ஸர்வேச்வரனைத் தவிர வேறு தெய்வத்தை ஏற்காதவன், ஸர்வேச்வரனுக்கு வசப்பட்டதான வாழ்க்கையை வாழ்பவன், அவனுடன் கூடியிருத்தலை இன்பமாகவும் பிரிவதைத் துன்பமாகவும் கொண்டவன் ஆவான்; (30) - பகவத் த்யாந யோகோக்தி வந்தந ஸ்துதி கீர்த்தநை: லப்தாத்மா தத் கத ப்ராண மநோ புத்தி இந்த்ரிய க்ரிய: - பகவானை த்யானித்தல், அவனைக் காணுதல், அவனை வணங்குதல், அவனைத் துதித்தல், அவனைக் குறித்துப் புகழ்ந்தபடி இருத்தல், அவனிடம் நிலையாக உள்ள ப்ராணன் – மனம் – புத்தி – இந்த்ரியங்கள் ஆகியவற்றைக் கொண்டவனாக இருக்கிறான்; (31) - விஜகர்மாதி பக்தயந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித: உபாயதாம் பரித்யஜ்ய ந்யஸ்யேத்தேவே து தமபீ: - தனது கர்மங்கள் தொடங்கி பக்தியோகம் முடிய உள்ள அனைத்தையும் அவன் மீது கொண்ட அன்பு மூலம் பெறும் ஊக்கத்தால் செய்யவேண்டும். அவற்றை உபாயம் என்று கொள்ளாமல், மற்ற தேவதைகளைக் கண்டு அஞ்சாமல், ஸர்வேச்வரனே உபாயம் என்று எண்ணவேண்டும் – என்றும் கூறியவற்றில் காணப்படும் “ப்ரீத்யைவ காரித: - அவன் மீது கொண்ட அன்பு மூலம் பெறும் ஊக்கத்தால்” என்று கூறியது சாஸ்த்ரங்கள் அவசியம் இல்லை என்னும் எண்ணத்தில் அல்ல. சாஸ்த்ரம் மூலம் மட்டுமே அறியப்படுவதான கைங்கர்யங்களில் ஈடுபடுவதால் எஜமானனாகிய ஸர்வேச்வரனுடைய திருவுள்ளத்தில் பிறக்கும் மகிழ்ச்சி காரணமாக அவனுடைய அடிமையாக உள்ள தனக்கு உண்டாகும் அன்பானது அந்தக் கைங்கர்யங்களை மேன்மேலும் செய்யத் தூண்டுகிறது என்பதை உணர்த்தவே இவ்விதம் கூறப்பட்டது.

**மூலம்** – இச் ச்லோகங்களை உபாஸநாதிகாரி பக்கலிலே யோஜிக்கும்போது உபாஸநாதிகளுடைய ஸ்வாதுதமத்வத்தையும், பலோபாயமான சரண்யனுக்குப் ப்ரஸாதநமாய்க் கொண்டு பலத்துக்கு ஸாக்ஷாதுபாயமன்றிக்கே நிற்கிற நிலையையும்,

இவ்வுபாஸநத்தாலே ப்ரஸந்நனான ஸர்வேச்வரன் தானே பலத்துக்கு ஸாக்ஷாதுபாயமாய் நிற்கிற நிலையையும் சொல்லுகையிலே நோக்காகக் கடவது.

**விளக்கம்** – இந்த ச்லோகங்களை உபாஸனையில் நிலைநிற்கும் அதிகாரி விஷயத்தில் வைத்து நோக்கும்போது - இந்த உபாஸனைகள் அனைத்துமே அதனை இயற்றுபவனுக்கு இனிமையாக உள்ளன என்பதும், ஆனால் இவை நேரடியாகப் பலன் அளிக்கவல்லது அல்ல என்பதும், பலனை அளிக்கவல்ல உபாயமாக உள்ள ஸர்வேச்வரனுடைய அனுக்ரஹத்தைப் பெற உதவும் உபாயமாக உள்ளன என்பதும், இந்த உபாஸனைகளால் மகிழ்கின்ற ஸர்வேச்வரன், தானே பலனைப் பெறுவதற்கான உபாயமாக நிற்கிறான் என்பதும் வெளிப்படுகின்றன.

**மூலம்** – ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டன் திறத்தில் இச் ச்லோகங்களை யோஜிக்கும்போது, இவன் அஜ்ஞாநுஜ்ஞைகளாலே பண்ணும் கைங்கர்யமெல்லாம் பக்தியோகாதிகளின் கட்டளை குலையாதிருந்தாலும் ஸ்வாமி ஸந்தோஷமொழிய வேறொரு ஸ்வர்க மோக்ஷாதி ப்ரயோஜநத்துக்கு உபாயமாக அநுஷ்டிக்கிறானல்லாமையாலே இவனுக்கு அநந்யோபாயதையும் அநந்ய ப்ரயோஜநதையும் குலையாதேயிருக்கிறபடியையும், அகிஞ்சநனான இவனுக்கு ஈச்வரன் தானே உபாயாந்தர ஸ்தாநத்திலே நின்று பலம் கொடுக்கிறபடியையும் சொல்லுகையிலே தாத்பர்யம்.

**விளக்கம்** – இந்த ச்லோகங்களை ப்ரபத்தியைக் கைகொண்ட அதிகாரி விஷயத்தில் வைத்து நோக்கினால் – ஸர்வேச்வரனுடைய கட்டளைகளாகவே உள்ள நித்ய நைமித்திக கர்மங்கள் அனைத்தும் பக்தியோகத்தின் பொருட்டு விதிக்கப்பட்டுள்ளதால் அவற்றைக் கைங்கர்யமாகச் செய்தபடி உள்ளான் என்றாலும், பகவானுடைய மகிழ்ச்சிக்காகவே அவற்றை இயற்றுகிறான் அல்லாமல் ஸ்வர்க்கம், மோக்ஷம் முதலான பலன்களை அடைவதற்காக இயற்றவில்லை; ஆகவே மோக்ஷம் போன்றவை பொருட்டு வேறு எந்தவிதமான உபாயத்தையும் கைக்கொள்ளாமல் உள்ளான். ஆகவே இந்த ச்லோகங்கள் – இவனுக்கு மற்ற உபாயங்கள் இல்லை என்பதையும், மற்ற பலன்களை இவன் நாடுவதில்லை என்பதையும் (அதாவது இந்த நிலைகள் இவனுக்கு அகலாமல் உள்ளன என்று கருத்து), வேறு உபாயம் இன்றி உள்ள இவனுக்கு, ஈச்வரன் தானே மற்ற

உபாயங்களின் இடத்தில் நின்று அவற்றுக்கான பலனை அளிக்கிறான் என்பதையும் கூறுவதாக உள்ளன.

## வர்ணாச்ரம தர்மங்கள் பரமைகாந்தி என்னும் நிலையை மாற்றுவதில்லை

**மூலம்** – "இரண்டு அதிகாரிகளும் 'ப்ரதிபுத்தா ந ஸேவந்தே', 'அநந்ய தேவதா பக்தா:', 'நாந்யம் தேவம் நமஸ்குர்யாத்' இத்யாதிகளிற்படியே பரமைகாந்திகளாயிருக்க, இங்கு 'நிஜ கர்மாதி பக்தயந்தம்' என்று அருளிச்செய்தபடியே வர்ணாச்ரமாதி தர்மங்களை இவர்கள் அநுஷ்டிக்கப்புக்கால் அக்நீந்த்ராதி தேவதா வ்யாமிச்ரதையாலே பரமைகாந்தித்வம் குலையாதோ?" என்று வேதாந்த வ்யுத்பத்தி பண்ணாதார் சோத்யம் பண்ணுவார்கள். இவ்விடத்தில் "ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி:" என்கிற ஸூத்ரத்தின்படியே அக்நயநாதி வ்யுத்பத்தி வசத்தாலே அக்நயாதி சப்தங்களை ஸர்வேச்வரனுக்கு ஸாக்ஷாத் வாசகங்களாக நிர்வஹிக்கலாமிடத்தில் இவை ஸ்ரீஸஹஸ்ரநாமத்தின் திருநாமங்கள்படியே நிற்கையாலே இவற்றில் தேவதாந்தர ஸ்பர்சமில்லை.

**விளக்கம்** – "பக்தியோகம் மற்றும் ப்ரபத்தி ஆகிய இரண்டுவிதமான அதிகாரிகள் மஹாபாரதம் சாந்திபர்வம் (350-36) - ப்ரதிபுத்தா ந ஸேவந்தே – நல்ல புத்தி உள்ளவர்கள் மற்ற தேவதைகளை வணங்குவதில்லை – என்றும், மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வம் (104-91) - அநந்ய தேவதா பக்தா: - மற்ற தேவதைகளிடம் பக்தி அற்றவர்களாக – என்றும், பாதராயண ஸூக்தி - நாந்யம் தேவம் நமஸ்குர்யாத் – மற்ற தேவதைகளை நமஸ்கரித்தல் கூடாது – என்றும் கூறுவதற்கு ஏற்ப பரமைகாந்திகளாக உள்ளனர். இவ்விதம் உள்ளபோது, கீதார்த்த ஸங்க்ரஹம் (31) - நிஜ கர்மாதி பக்தயந்தம் – தனது வர்ணாச்ரம தர்மங்களை இயற்றி – என்பதற்கு ஏற்ப வர்ணாச்ரம தர்மங்களை இவர்கள் செய்வதற்கு முனையும்போது, அதில் அக்னி இந்த்ரன் முதலான மற்ற தேவதைகளுடைய ஆராதனங்களும் கலந்துள்ளது; இதன் காரணமாக இவர்களுடைய இந்த பரமைகாந்தி தன்மை பாதிக்காதோ?", என்று வேதாந்தங்களை சரிவர அறியாத சிலர் கேட்கலாம். இங்கு ப்ரஹ்மஸூத்ரம் (1-2-29) - ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி: - அக்னி போன்ற சொற்கள் ஸர்வேவரனையே கூறுவதால் விரோதம் இல்லை என்று ஜைமினி கருதுகிறார்

– என்ற ஸூத்ரத்திற்கு ஏற்ப அக்னி முதலான சப்தங்களைப் பிரித்து எடுக்கும்போது அவை ஸர்வேச்வரனையே நேரடியாகக் கூறுவதாகும். ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்தில், இது போன்றே பிரித்துப் பொருள் கொள்வது போன்று, இங்கும் கொள்ளலாம். ஆகவே இவற்றில் மற்ற தேவதைகள் கூறப்படவில்லை என்றாகிறது.

**மூலம்** – “தேவாந் ருஷீந் பித்ரூந் பகவதாத்மகாந் த்யாத்வா ஸந்தர்ப்பயம்” என்று நித்ய ப்ரப்ருதிகளில் ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்தபடியே, தத் தத் தேவதா சரீரகனாகப் பரமாத்மாவை அநுஸந்தித்துக் கொண்டு தத் தத் கர்மங்களை அநுஷ்டிக்கை சாஸ்த்ர பல ஸித்தமான இடத்தில் “உபாஸாத் த்ரைவித்யாத்” என்கிறபடியே ப்ரதர்தந வித்யாதிகளில் விதேஷ்யமான திவ்யாத்ம ஸ்வரூபத்தாலும் சேதநாசேதந விசிஷ்டனாகவும் பரமாத்மாவை உபாஸியா நின்றாலும் விசேஷணமான சேதநாசேதநங்களில் ஆராத்யத்வ மில்லாதாப்போலே இவ்விடத்திலும் விசேஷணமான தேவர்ஷி பித்ராதிகளை இவன் ஆராதிக்கிறானல்லன்.

**விளக்கம்** – நித்யக்ரந்தத்தில் - தேவாந் ருஷீந் பித்ரூந் பகவதாத்மகாந் த்யாத்வா ஸந்தர்ப்பயம் – தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள் ஆகியோரை பகவானையே தங்கள் அந்தர்யாமியாகக் கொண்டவர்களாக த்யானித்து – என்று எம்பெருமானார் அருளிச்செய்ததற்கு ஏற்ப, ஒருவன் தனது வர்ணாச்ரம தர்மங்களைக் கைக்கொள்ளும்போது, அந்தந்த தேவதைகளைச் சரீரமாகக் கொண்டுள்ள பரமாத்மாவே ஆராதிக்கப்படுகிறான் என்று எண்ணியபடி அந்தந்த கர்மங்களை இயற்றவேண்டும் என்றே சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ப்ரஹ்மஸூத்ரம் (1-1-32) - உபாஸாத் த்ரைவித்யாத் – என்பதற்கு ஏற்ப ப்ரதர்தந வித்யை முதலானவற்றில் கூறப்படுவது போன்று பரமாத்மா - தனது இயல்பான திவ்யமான ஸ்வரூபத்துடன் உள்ளவனாக, சேதநங்களைத் தனது சரீரமாகக் கொண்டவனாக, அசேதநங்களைத் தனது சரீரமாகக் கொண்டவனாக என்பதான மூன்று விதங்களில் ஆராதிக்கப்படலாம். இப்படியாக பரமாத்மா ஆதாரிக்கப்பட்டாலும், அவனுடைய ஆராதனம் என்பது அந்தந்த சேதந அசேதநங்களைக் குறிப்பதாக ஆகாது. இது போன்றே இங்கும் தேவர்கள், ரிஷிகள் மற்றும் பித்ருக்களை ப்ரபந்நன் ஆராதிப்பதில்லை என்று கருத்து.

**மூலம்** – "அஹம் ஹி ஸர்வ யஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச", "ஹவ்ய கவ்ய புகேகஸ்த்வம் பித்ருதேவ ஸ்வரூபத்ருத்", "யே யஜந்தி பித்ரூந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹுூதாசநாந் ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்தி தே" என்கிறபடியே ஸர்வாந்தர்யாமியானவனே ப்ரதிபுத்தனான இவனுக்கு ஆராத்யனாகையாலே இப்படித் தெளிந்து அநுஷ்டிக்குமவனுக்கு யதாசாஸ்த்ரம் அநுஷ்டிக்கிற கைங்கர்யங்களால் உபாயாந்தர ஸ்பர்சம் வாராதாப்போலவும், கைங்கர்யார்த்தங்களான த்ரவ்யார்ஜந நிவேதிதோபயோகாதிகளால் ப்ரயோஜநாந்தர ஸ்பர்சம் வாராதாப்போலவும், ஆராத்ய விசேஷணமாக விதி பல ப்ராப்தங்களான சேதநாசேதநங்களால் தேவதாந்தர ஸ்பர்ச தோஷம் வாராது.

**விளக்கம்** – கீதை (9-24) - அஹம் ஹி ஸர்வ யஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச – அனைத்து யஜ்ஞங்களாலும் ஆராதிக்கப்படுபவன் நானே ஆவேன் – என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-19-73) - ஹவ்ய கவ்ய புகேகஸ்த்வம் பித்ருதேவ ஸ்வரூபத்ருத் – தேவர்கள் வடிவம் கொண்டு ஹவிஸ்ஸுகளையும், பித்ருக்கள் வடிவம் கொண்டு கவ்யங்களையும் நீயே ஏற்கிறாய் – என்றும், மஹாபாரதம் சாந்திபர்வம் (355-41) - யே யஜந்தி பித்ருந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹுூதாசநாந் ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்தி தே – பித்ருக்கள், தேவர்கள், அந்தணர்கள் மற்றும் அக்னியை ஆராதனை செய்பவர்கள் அனைத்து உயிர்களின் ஆத்மாவான எம்பெருமானையே ஆராதனை செய்கிறார்கள் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்திற்கும் அந்தர்யாமியாக உள்ள ஸர்வேச்வரனே ஞானியான ப்ரபந்நனுக்கு ஆராதனை தெய்வமாக உள்ளான். இவ்விதம் அறிந்துகொண்டு உபாஸிக்கும் ஒருவனுக்கு – சாஸ்த்ரங்கள் மூலம் விதிக்கப்பட்ட கைங்கர்யங்களைக் கைக்கொள்ளும் ஒருவனுக்கு மற்ற உபாயங்களுடைய தொடர்பு உண்டாகாமல் இருக்கிறது; மற்ற தேவதைகளுக்காக அந்தந்த கர்மங்களில் விதிக்கப்பட்டபடி பொருளை ஈட்டுதல் மற்றும் நைவேத்யத்தை உட்கொள்ளல் போன்றவற்றால் மற்ற பலன்களை நாடுதல் என்னும் தோஷம் ஏற்படுவதில்லை; அந்தந்த விதிகளுக்கு ஏற்ப மற்ற தேவதைகளை ஆராதிக்க நேர்ந்தாலும், சேதந அசேதநங்களைத் தனது சரீரமாகக் கொண்ட ஸர்வேச்வரனையே ஆராதிப்பதால், மற்ற தேவதைகளுடைய தீண்டுதல் என்னும் தோஷம் இல்லை.

**மூலம்** – "நாராயணம் பரித்யஜ்ய ஹ்ருதிஸ்தம் ப்ரபுமீச்வரம் | யோ அந்யமர்ச்சயதே தேவம் பரபுத்தயா ஸ பாபபாக்", "யஸ்து நாராயணம் தேவம் ஸாமாந்யேநாபி மந்யதே | ஸ யாதி நரகம் கோரம் யாவச்சந்த்ர திவாகரம்", "புத்த ருத்ராதி வஸதீம் மசாநம் சவமேவ ச | அடதீம் ராஜதாநீம் ச தூரத: பரிவர்ஜயேத்" இத்யாதிகளிற்படியே தேவதாந்தரங்களிலே

பரத்வ புத்தி பண்ணுதல், ஸமத்வ புத்தி பண்ணுதல், நித்ய நைமித்திகங்களில் துவக்கற்ற தேவதாந்தர ஸ்தலங்களிலே செல்லுதல் செய்யில் பரமைகாந்திக்கு தோஷமாமல்லது, நித்ய நைமித்திகங்களில் ஆராத்யனான ஸர்வாந்தர்யாமிக்குச் சரீரமாய் நிற்கிற நிலையில் இத்தேவதைகள் பக்கல் பரத்வ புத்தியும் ஸாம்ய புத்தியும் ஸ்வநிஷ்டத்வ புத்தியும் ஆராத்யத்வ புத்தியும் பல ப்ரதாந புத்தியும் இல்லாமையாலே உபாஸ்ய விசேஷணங்களான ப்ராண வைச்வாநர த்ரைலோக்யாதிகளால் இவனுக்கு வ்யபிசாரம் வாராதாப்போலே, சாஸ்த்ர ஸித்தங்களான அக்நீந்த்ராதி விசேஷணங்களால் இவனுக்கு ஏகாந்த்ய விரோதம் வாராது.

**விளக்கம்** – ப்ரஜாபத்ய ஸ்ம்ருதி - நாராயணம் பரித்யஜ்ய ஹ்ருதிஸ்தம் ப்ரபுமீச்வரம் யோ அந்யமர்ச்சயதே தேவம் பரபுத்தயா ஸ பாபபாக் – தன்னுடைய இதயத்தில் வசிப்பவனும் தன்னை நியமிக்கும் எஜமானனும் ஆகிய நாராயணனை விடுத்து மற்ற தெய்வங்களை உயர்ந்ததாகக் கருதி வணங்குபவன் பாபி ஆவான் – என்றும், மஹாபாரதம் - யஸ்து நாராயணம் தேவம் ஸாமாந்யேநாபி மந்யதே ஸ யாதி நரகம் கோரம் யாவச்சந்த்ர திவாகரம் – நாராயணனை மற்ற தெய்வங்களுக்குச் சமமாக எண்ணிபவன் சந்த்ரன் மற்றும் சூரியன் உள்ளவரை கோரமான நரகத்தில் கிடப்பான் – என்றும், சாண்டில்ய ஸ்ம்ருதி (4-19) - புத்த ருத்ராதி வஸதீம் மசாநம் சவமேவ ச அடதீம் ராஜதாநீம் ச தூரத: பரிவர்ஜயேத் – புத்தன், ருத்ரன் முதலானவர்களுடைய ஆலயங்கள், இடுகாடு, பிணம், வனம், தலைநகர் ஆகியவற்றின் அருகில் செல்லாமல் தூரமாக விலகிச் செல்லவேண்டும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப பரமைகாந்தி ஒருவன் மற்ற தெய்வங்களை உயர்ந்ததாக எண்ணுதல், அவர்களை நாராயணனுக்குச் சமமாக எண்ணுதல், அவர்களுக்கு நித்ய நைமித்திக கர்மங்களுடன் எந்தவிதமான ஸம்பந்தமும் இல்லாதபோது அவர்களுடைய ஆலயங்களுக்குச் செல்லுதல் ஆகியவற்றைச் செய்யும்போது அவனுக்குத் தோஷம் உண்டாகிறது. ஆனால், நித்ய நைமித்திக கர்மங்கள் மூலமாக ஆராதிக்கப்படுபவனும், அனைத்திற்கும் அந்தர்யாமியாக உள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரனுக்கு இந்தத் தெய்வங்கள் அனைத்தும் சரீரமாக உள்ளனர் என்று எண்ணும்போது - இந்தத் தெய்வங்கள் மிகவும் உயர்ந்தவை என்றும், இவர்கள் நாராயணனுக்குச் சமம் என்றும், இவர்கள் சுதந்திரமானவர்கள் என்றும், இவர்களே கர்மங்களால் ஆராதிக்கப்படுகிறார்கள் என்றும், இவர்களே அனைத்து பலன்களையும் அளிக்கிறார்கள் என்றும் எண்ணுவது நிகழாது; ஆகவே பல்வேறு உபாஸன வித்யைகளாக உள்ள ப்ராணவித்யை, வைச்வாநர

வித்யை, த்ரைலோக்ய வித்யை போன்றவற்றால் மற்ற தேவதைகளுடைய ஸம்பந்தம் உண்டாகாமல் இருப்பது போன்று, இந்தப் பரமைகாந்திக்கும் சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்ட அக்னி, இந்த்ரன் போன்ற சொற்களை அந்தந்த மந்த்ரங்களில் உச்சரிப்பதால் இவனுடைய பரமைகாந்தித் தன்மை நீங்காது.

**மூலம்** – வங்கிபுரத்து நம்பியும் ப்ரபந்நனுக்கு அஹோராத்ர க்ருத்யமான பகவத் ஸமாராதநத்தைச் சொல்ல இழிந்து "காயத்ரீ ஜப பர்யந்தம் மந்த்ராசமந பூர்வகம் | ஸாந்த்யம் கர்மாகிலம் ஸாது ஸமாப்ய ச யதாவிதி || ஸமிதாஜ்யாதிபிர் த்ரவ்யை: மந்த்ரைரபி யதோதிதை: | ஹுத்வா அக்நீந் அக்நிஹோத்ராதௌ உக்தம் காலமபி க்ஷிபந்" என்றும், "ததோ மாத்யந்திநம் கர்ம ஸ்வோதிதம் ச்ருதி சோதிதம் | ஸ்நாநாதி ப்ரஹ்ம யஜ்ஞாந்தம் க்ருத்வா அகிலமதந்த்ரித:" என்றும், "ஹோமம் பித்ரு க்ரியாம் பச்சாத் அநுயாகாதிகம் ச யத்" என்றும் இப் ப்ரகாரங்களிலே தத் தந்மந்த்ர பூர்வகங்களான வர்ணாச்ரம தர்மங்களை அருளிச்செய்தார். பட்டரும் ஆழ்வானும் தாந்தாங்கள் அருளிச் செய்த நித்யங்களிலே "ச்ருதி ஸ்ம்ருத்யுதிதம் கர்ம யாவச்சக்தி பராத்மந: | ஆராதநத்வேநாபாத்ய ஸ ஊர்த்வபுண்ட்ரச்ச தர்பயேத்" இத்யாதிகளை அருளிச் செய்தார்கள். பெரியஜீயரும் "ஸ்ரீபராசர பட்டார்ய சரணௌ ஸம்ச்ரயேமஹி" இத்யாதியாலே ஸம்ப்ரதாய விசேஷ ஜ்ஞாபநார்த்தமாக குருநமஸ்காராதிகளைப் பண்ணி, "பகவச்சரணாம்போஜ பரிசார்ய விதிக்ரமம் | ஏகாந்திபிர் அநுஷ்டேயம் நித்யம் ஸமபிதத்யமஹே" என்று தொடங்கி "ஆபோஹித்யாதிபிர் மந்த்ரை: வாசகை: பரமாத்மந: | ஸம்ப்ரேக்ஷ்ய மந்த்ர ஆசமநம் மந்த்ரைஸ் தத் ப்ரதிபாதகை: || ஆதித்யாந்த: ஸ்திதஸ்ய அர்க்யம் விதீர்ய பரமாத்மந: | ப்ரதிபாதிகயா விஷ்ணோ: ஸவித்ரயா தம் ஜபேத்விரம் || த்யாயந் ஜப்த்வோபதிஷ்டேத தமேவ புருஷோத்தமம் | நாராயணாத்மகாந் தேவாந் ருஷீந் ஸந்தர்பயேத் பித்ரூந்" என்று அருளிச்செய்தார். பாஷ்யகார ஸம்ப்ரதாயத்திலுள்ள குலங்கள் எல்லாம் இன்றறுதியாக ஸ்வஸூத்ரோக்தமானபடியே தத் தத் தேவதா மந்த்ரங்களைக் கொண்டு விவாஹ உபநயநாதிகள் அநுஷ்டிக்கவும் காணா நின்றோம். பெரியநம்பி முதலான பரமாசார்யர்களும் தந்தம் ஸூத்ரங்களின்படியே யஜ்ஞாதிகள் பண்ணினார்களென்னுமிடம் ஸர்வர்க்கும் ப்ரஸித்தம்.

**விளக்கம்** – அஹோராத்ரம் என்பதான பகவத் ஆராதனம் குறித்து ப்ரபந்நர்களுக்கு வங்கிபுரத்து நம்பி உபதேசிக்க எண்ணியவராக, வங்கிவம்சேச்வர காரிகை (77-84) -

காயத்ரீ ஜப பர்யந்தம் மந்த்ராசமந பூர்வகம் | ஸாந்த்யம் கர்மாகிலம் ஸாது ஸமாப்ய ச யதாவிதி || ஸமிதாஜ்யாதிபிர் த்ரவ்யை: மந்த்ரைரபி யதோதிதை: | ஹுத்வா அக்நீந் அக்நிஹோத்ராதௌ உக்தம் காலமபி க்ஷிபந் – மந்த்ரத்துடன் ஆசமநத்தைத் தொடங்கி காயத்ரீஜபம் முடிய உள்ளதான ஸந்த்யாகாலத்து கர்மங்கள் அனைத்தையும் முறைப்படி முடித்து, ஸமித்து நெய் போன்றவை கொண்டு தகுந்த மந்த்ரங்கள் மூலம் அக்னிஹோத்ரம் போன்ற கர்மங்களை இயற்றி, சாஸ்த்ரம் விதித்த முறைகளில் காலத்தைக் கழித்தபடி – என்றும், காரிகை (90) - ததோ மாத்யந்தினம் கர்ம ஸ்வோதிதம் ச்ருதி சோதிதம் | ஸ்நாநாதி ப்ரஹ்ம யஜ்ஞாந்தம் க்ருத்வா அகிலமதந்த்ரித: - மதிய நேரத்தில் செய்யவேண்டும் என்று சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்ட கர்மங்கள் அனைத்தையும் நீராடுதல் தொடங்கி ப்ரஹ்மயஜ்ஞம் முடிய உள்ள அனைத்தையும் சலிப்பில்லாமல் முடித்து – என்றும், காரிகை (501) - ஹோமம் பித்ரு க்ரியாம் பச்சாத் அநுயாகாதிகம் ச யத் – பின்னர் தேவயஜ்ஞம், பித்ருயஜ்ஞம் ஆகியவற்றைச் செய்து பகவத் ஆராதனையில் சமர்ப்பித்த ப்ரஸாதங்களை உண்ணவேண்டும் – என்றும் அருளிச்செய்தார்; அதாவது தங்களுடைய வர்ணாச்ரம தர்மங்களை அவற்றுக்கு உரிய மந்த்ரங்களுடன் செய்தல் வேண்டும் என்றார். ஸ்வாமி பராசரபட்டரும் கூரத்தாழ்வானும் தாங்கள் அருளிச்செய்த நித்யக்ரந்தத்தில், ச்ருதி ஸ்ம்ருத்யுதிதம் கர்ம யாவச்சக்தி பராத்மந: | ஆராதநத்வேநாபாத்ய ஸ ஊர்த்வபுண்ட்ரச்ச தர்பயேத் – ச்ருதி மற்றும் ஸ்ம்ருதி ஆகியவற்றில் விதிக்கப்பட்ட கர்மங்களை ஊர்த்தபுண்ட்ரத்தைத் தரித்தபடி, பரமாத்மாவுக்குச் செய்யும் ஆராதனம் என்றே எண்ணியபடி, தங்களுடைய சக்திக்கு ஏற்ப தர்ப்பணத்தையும் செய்தல்வேண்டும் – என்றனர். ஸ்வாமி நஞ்ஜீயர், "ஸ்ரீபராசர பட்டார்ய சரணௌ ஸம்ச்ரயேமஹி – ஸ்வாமி பராசரபட்டருடைய திருவடிகளில் சரணம் புகுகிறோம்" என்பதன் மூலம் ஆசார்யர்களுக்குச் செய்யவேண்டிய நமஸ்காரம் முதலானவற்றை நினைவுபடுத்துகிறார். இதனைத் தொடர்ந்து, பகவச்சரணாம்போஜ பரிசார்ய விதிக்ரமம் | ஏகாந்திபிர் அநுஷ்டேயம் நித்யம் ஸமபிதத்யமஹே – பரமைகாந்திகள் அன்றாடம் செய்யவேண்டியதான பகவானுடைய திருவடித்தாமரைளின் கைங்கர்ய வரிசையை உரைக்கிறோம் – என்றார். மேலும், ஆபோஹித்யாதிபிர் மந்த்ரை: வாசகை: பரமாத்மந: | ஸம்ப்ரேக்ஷ்ய மந்த்ர ஆசமநம் மந்த்ரைஸ் தத் ப்ரதிபாதகை: || ஆதித்யாந்த: ஸ்திதஸ்ய அர்க்யம் விதீர்ய பரமாத்மந: | ப்ரதிபாதிகயா விஷ்ணோ: ஸவித்ரயா தம் ஜபேத்விரம் || த்யாயந் ஜப்த்வோபதிஷ்டேத தமேவ புருஷோத்தமம் | நாராயணாத்மகாந் தேவாந் ருஷீந் ஸந்தர்பயேத் பித்ரூந் – ஸர்வேச்வரனைக் கூறிகின்ற "ஆபோஹி" தொடக்கமாக உள்ள

மந்த்ரங்கள் மூலம் ப்ரோக்ஷித்துக் கொண்டு, அவனைக் கூறும் மந்த்ரங்களால் ஆசமனம் செய்யவேண்டும்; பின்னர் சூரியமண்டலத்தில் உள்ள ஸர்வேச்வரனுக்கு அர்க்யம் அளிக்கவேண்டும்; தொடர்ந்து அவனை உரைக்கும் ஸாவித்ரி மந்த்ரம் மூலம் அவனைத் த்யானித்து ஜபிக்கவேண்டும்; அடுத்து புருஷோத்தமனாகிய அவனை உபஸ்தாநம் செய்து, நாராயணனைத் தங்கள் ஆத்மாவாகக் கொண்டுள்ள தேவர்கள் ரிஷிகள் பித்ருக்கள் ஆகியோருக்குத் தர்ப்பணம் செய்யவேண்டும் – என்று அருளிச் செய்தார். ஸ்ரீபாஷ்யகாரருடைய மதத்தில் உள்ள பல்வேறு குலத்தவர்கள், தங்களுடைய குலத்திற்கு ஏற்ப உள்ள ஸூத்ரங்கள் மூலமாக அந்தந்த தேவதைகளைக் குறித்த மந்த்ரங்கள் மூலம் விவாஹம் மற்றும் உபநயனம் ஆகியவற்றைச் செய்வதை நாம் காண்கிறோம். பெரியநம்பி முதலான ஆசார்யர்களும் தங்களுடைய ஸூத்ரங்களைப் பின்பற்றியே யஜ்ஞம் முதலானவற்றைச் செய்தார்கள் என்பது அறிவோம்.

## சாஸ்த்ரங்களை மீறி தாங்கள் விரும்புகின்ற மந்த்ரங்களைக் கைக்கொள்ளக் கூடாது

**மூலம்** – ஆனபின்பு பாஷ்யகாரருடையவும் தச்சிஷ்ய ப்ரவிஷ்யர்களுடையவும் உபதேசாநுஷ்டாநங்களிலே நிஷ்டையுடையார்க்கு ஆகம ஸித்தாந்த அநுவர்த்திகளான ஸம்ஹிதா விசேஷங்களில் ப்ரதிநியதமாகச் சொல்லும் மந்த்ரவிசேஷங்களைக் கொண்டு க்ரியா விசேஷங்கள் அநுஷ்டிக்கவொண்ணாது அதிகாராதிகளுக்கு அநுரூபமாகச் சதுர்வித பஞ்சராத்ரமும் விபக்தமாய் நிற்கும் நிலையும், வசந விரோதமில்லாவிடத்தில் அநுக்தமந்யதோ க்ராஹ்யம் என்கிற ந்யாயம் நடக்கும்படியும், நாலாச்ரமத்திலும் ப்ரஹ்மவித்யையும் மோக்ஷபலமும் உண்டென்று சாரீரகாதிகளிலே ஸமர்த்தித்தாற்போலே ஆகம ஸித்தாந்தாதிகள் நாலிலும் ஸாக்ஷாந்மோக்ஷோபாயமும் மோக்ஷ ப்ராப்தியும் உண்டென்றும் ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷையில் உபபாதித்தோம். இச்சாஸ்த்ரங்களில் வ்யவஸ்திதமாக விதித்தபடியொழியத் தந்தமக்கு ருசித்த மந்த்ரங்களைக் கொண்டு ஸர்வகர்மங்களையும் அநுஷ்டித்தால், ப்ராயச்சித்தாதிகளும் பரக்கச் சொல்லப்பட்டன. ஆனபின்பு, முக்தனாமளவும் ஸ்வாதிகாராநுகுணமாகச் சாஸ்த்ரம் சொன்ன கட்டளையன்றிக்கே கைங்கர்யம் பண்ண விரகில்லை.

**விளக்கம் –** ஸ்ரீபாஷ்யகாரர், அவருடைய சிஷ்யர்கள், அவர்களுடைய சிஷ்யர்கள் என்று இப்படிப்பட்ட பரம்பரையில் உள்ளவர்களுடைய உபதேசங்கள் மற்றும் அவர்களுடைய விதிகளை எப்போதும் சிந்தையில் கொண்டபடி உள்ளவர்கள், ஸாத்வதம் போன்ற ஆக ஸித்தாந்தங்களுக்கே உரியதான ஸம்ஹிதைகளில் கூறப்பட்டுள்ள மந்த்ரங்கள் மூலமாக தங்களுடைய கர்மங்களை இயற்றுதல் கூடாது. பாஞ்சராத்ரத்தில் உள்ளதான ஆகம ஸித்தாந்தம், மந்த்ர ஸித்தாந்தம், தந்த்ர ஸித்தாந்தம் மற்றும் தந்த்ராந்தர ஸித்தாந்தம் ஆகிய நான்கு ஸித்தாந்தங்களில், அந்தந்த அதிகாரிகளுக்கு ஏற்றபடியான வரையறைகள் உள்ளன. எந்தவிதமான தடைகளையும் கூறாத ச்லோகங்கள் உள்ள இடத்தில் மட்டுமே, ஒரு ஸித்தாந்தத்தில் கூறப்படாதவற்றை, வேறொரு ஸித்தாந்தத்திலிருந்து கைக்கொள்ளலாம் என்னும் விதியும் உள்ளது. நான்கு ஆச்ரமங்களில் உள்ளவர்களுக்கும் ப்ரஹ்மவித்யை மற்றும் மோக்ஷம் ஆகியவை உண்டு என்று ப்ரஹ்மஸூத்ரம் முதலானவற்றில் கூறப்பட்டது போன்று, இந்த நான்கு ஆக ஸித்தாந்தங்களில் ஈடுபடுபவர்களுக்கும் மோக்ஷ உபாயம் மற்றும் மோக்ஷம் ஆகியவை உண்டு என்று பாஞ்சராத்ர ரக்ஷையில் கூறப்பட்டது. இந்தச் சாஸ்த்ரங்களில் அந்தந்த அதிகாரிகளுக்கு ஏற்ப விதிக்கப்பட்ட மந்த்ரங்கள் அல்லாமல், தங்களுக்கு விருப்பமான மந்த்ரங்கள் மூலமாகக் கர்மங்களை இயற்றுபவர்களுக்கு ஏற்றபடியான ப்ராயச்சித்தங்களும் கூறப்பட்டுள்ளன. ஆகவே ஒருவன் முக்தி அடையும்வரை தன்னுடைய அதிகாரத்திற்கு ஏற்ப சாஸ்ந்த்ரங்கள் கூறும் முறையை மீறி கைங்கர்யம் செய்தல் என்பதற்கு இடமில்லை.

## விலக்கவேண்டிய மற்ற கருத்துக்கள்

**மூலம் –** இப்படி ப்ரபந்நனுக்கும் சாஸ்த்ரவச்யனாய் சாஸ்த்ரோக்த கைங்கர்யமே பண்ண வேண்டுகையாலே விதி நிஷேத லங்கநபேக்ஷமும் விஹித நிஷித்த த்யாக பக்ஷமும், "வர்ணாச்ரம தர்மங்கள் ஔபாதிகங்களாகையாலே ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தவனுக்குத் த்யாஜ்யங்கள்" என்கிற பக்ஷமும், "இவை செய்யவுமாம், தவிரவுமாம்" என்கிற பக்ஷமும், "இவை தவிர்ந்தாலும் உகப்பிக்குமத்தனையொழிய வேறொரு ப்ரத்யவாயமில்லை" என்கிற பக்ஷமும், "இவை அநுஷ்டியாதபோது லோக விரோத மாத்ரமே ப்ரத்யவாயம்" என்கிற பக்ஷமும், மற்றும் இப்புடைகளிலுள்ள பக்ஷங்களுமெல்லாம் ஸம்மயங்

ந்யாயாநுக்ரூஹீத சாஸ்த்ர ஸம்ப்ரதாய விருத்தங்களானபடியாலே ஸத்த்வஸ்தர்க்கு அநுபாதேயங்கள்.

**விளக்கம்** – இப்படியாக ப்ரபந்நனும் சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்பட்டே இருத்தல் வேண்டும் என்றும், சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட முறையிலேயே கைங்கர்யங்கள் செய்யவேண்டும் என்றும் தெளிவாகிறது. ஆகவே, ப்ரபந்நனால் கைக்கொள்ளலாம் என்று கீழே கூறப்பட்டுள்ள பல கருத்துக்கள், சிறந்த ந்யாயங்களுடைய ஆதரவைப் பெற்றுள்ள சாஸ்த்ரங்களுக்கும் ஸம்ப்ரதாயங்களுக்கும் முரணாக உள்ளதால், ந்யாயத்தின்படியும் ஸத்வத்திலும் நிற்பவர்களால் இவை தள்ளத்தக்கவை ஆகின்றன; அவையாவன – விதிக்கப்பட்ட கர்மங்களைத் துறத்தல் மற்றும் தடுக்கப்பட்ட கர்மங்களைச் செய்தல் ஆகியவற்றை மீறலாம்; விதிக்கப்பட்ட கர்மங்களைத் துறத்தல் மற்றும் தடுக்கப்பட்ட கர்மங்களைச் செய்தல் ஆகியவற்றைக் கைக்கொள்ளலாம்; வர்ணாச்ரம தர்மங்கள் என்பவை சரீரத்தின் காரணமாக ஏற்பட்டவை என்பதால், ஆத்ம ஸ்வரூபத்தைக் குறித்த ஞானம் பிறந்தவன் அவற்றைத் துறக்கலாம்; வர்ணாச்ரம தர்மங்களை செய்தாலும் செய்யலாம், செய்யாவிடினும் பாதகமில்லை; அவற்றைத் துறப்பதன் மூலம் பகவானுடைய மகிழ்ச்சியை இழப்பது மட்டுமே நிகழும், அல்லாது வேறு ஏதும் இல்லை; இவற்றைக் கைவிடும்போது உலகில் உள்ளவர்களால் பழிக்கப்படுவது மட்டுமே நிகழும் – என்பதாகும்.

## ஸந்த்யாவந்தனம் போன்றவற்றை விடக்கூடாமை, மற்ற கைங்கர்யங்களை விரோதம் வராமல் செய்தல்

**மூலம்** – ஸந்ந்யாஸாச்ரமஸ்தர்க்குப் பண்டுள்ளவை சிலவற்றை நிஷேதித்துப் புதியனவாகச் சிலவற்றை விதிக்குமாபோலே, பாகவத தத்வமடியாகச் சிலவற்றை நிஷேதித்துச் சிலவற்றை அபூர்வமாக விதித்தாலும், "ஸந்த்யாஹீந: அசுசிர் நித்யம் அநர்ஹ: ஸர்வகர்மஸு" இத்யாதிகளிலே அவச்ய கர்த்தவ்யங்களாகச் சொல்லப்பட்ட கர்மங்களை விடவொண்ணாது. தர்மசாஸ்த்ர ஸூத்ரபேதங்களிற்போலே பகவச்சாஸ்த்ர ஸம்ஹிதாபேதங்களிலும் இதிஹாஸ புராணங்களிலும் சொல்லும் ஸந்த்யோபாஸந பேதங்களை அவ்வோ சாஸ்த்ரங்களிலே இழிந்தவர்கள் அநுஷ்டிக்கக்கடவர்கள்.

“தைவதாந்யபிகச்சேது” என்றும், “தேவஸ்தாந ப்ரணாமனம்” என்றும் இப்புடைகளிலே தர்மசாஸ்த்ர இதிஹாஸாதிகளிற் சொன்ன ஆசாரமும் பரமைகாந்திக்கு சாஸ்த்ர பலத்தாலே பகவத்விஷயத்திலே நியதம். ஆகையால் ஒரு சாஸ்த்ரத்துக்கும் விரோதமில்லை. “தஸ்மாத் அஷ்டாக்ஷரம் மந்த்ரம் மத்பக்தைர் வீதகல்மஷை: | ஸந்த்யாகாலேஷு ஜப்தவ்யம் ஸததம் சாத்மசுத்தயே” என்று ஸ்ரீவைஷ்ணவ தர்மசாஸ்த்ரங்களிற் சொன்னதுவும், “த்வயமர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா” என்று கத்யத்திலருளிச் செய்ததுவும் மற்றும் இப்புடைகைளில் உள்ளவையுமெல்லாம் அவச்ய கர்த்தவ்யங்களான நித்ய நைமித்திகங்களுக்கு விரோதம் வாராதபடி அவற்றுக்குப் போக்கி மிக்க காலத்திலேயாகக் கடவன். “ச்ரௌத ஸ்மார்த்தா விருத்தேஷு காலேஷு ஜபமாசரேத்” என்று நாரதாதிகளும் சொன்னார்கள். “ஹுத்வா அக்நீந் அக்நிஹோத்ராதௌ உக்தம் காலமபி க்ஷிபந்” என்று வங்கிபுரத்து நம்பியும் அருளிச்செய்தார். பாஷ்யகாரர் அந்திமதசையிலும் வருந்தியெழுந்திருந்து ஸந்த்யாகாலத்திலே ஜலாஞ்ஜலி ப்ரக்ஷேபம் பண்ணியருளினார்.

**விளக்கம்** – ஸந்யாஸிகளுக்கு, அவர்களுடைய முந்தைய ஆச்ரம நிலைகளில் விதிக்கப்பட்ட கர்மங்களில் சில அம்சங்கள் தடுக்கப்பட்டும், சில அம்சங்கள் புதியதாகச் சேர்க்கப்பட்டும் உள்ளதைக் காணலாம். இதே போன்று பாகவதர்களுக்கு ஒரு சில கர்மங்கள் தடுக்கப்பட்டும், சில புதியதாகச் சேர்க்கப்பட்டும் உள்ளன. ஆனால், தக்ஷ ஸ்ம்ருதி (2-27) - ஸந்த்யாஹீந: அசுசிர் நித்யம் அநர்ஹ: ஸர்வகர்மஸு – ஸந்த்யாவந்தனம் செய்யாதவன் எப்போதுமே அசுத்தமானவனே ஆவான், அவன் வேறு எந்தக் கர்மங்களையும் செய்யும் தகுதி கொண்டவன் அல்லன் – என்று கூறுவதற்கு ஏற்ப கண்டிப்பாகச் செய்யப்படவேண்டும் என்று விதிக்கப்பட்ட கர்மங்களை யாராக இருந்தாலும் கைவிட இயலாது. தர்மசாஸ்த்ரங்கள் மற்றும் ஸூத்ரங்களில் ஸந்த்யாவந்தன முறைகளில் வேறுபாடு உள்ளது போன்று, பாஞ்சராத்ர ஸம்ஹிதைகள் மற்றும் இதிஹாஸ புராணங்களிலும் ஸந்த்யாவந்தன முறைகளில் வேறுபாடு உள்ளது; ஆகவே அந்தந்த சாஸ்த்ரங்களைப் பின்பற்றுபவர்கள், அந்தந்த முறைகளுக்கு ஏற்ப அவற்றை இயற்றவேண்டும். மநு ஸ்ம்ருதி (4-153) – தைவதாந்யபிகச்சேது – காப்பாற்றவேண்டும் என்று தெய்வங்களை ப்ரார்த்திக்கக் கடவன் – என்றும், மஹாபாரதம் - தேவஸ்தாந ப்ரணாமனம் – தெய்வ ஆலயத்தைக் கண்டால் வணங்கவேண்டும் – என்றும் தர்மசாஸ்த்ரம் மற்றும் இதிஹாஸம் ஆகியவற்றில்

கூறப்பட்ட ஆசாரங்கள், பரமைகாந்திக்கு அந்த சாஸ்த்ரங்களின் வலிமை காரணமாக பகவானைக் குறித்து மட்டுமே இருப்பதாகக் கொள்ளவேண்டும். ஆகவே எந்த சாஸ்த்ரங்களுக்கும் முரண்பாடு இல்லை. மஹாபாரதம் ஆச்வமேதிக பர்வம் (98-69) - தஸ்மாத் அஷ்டாக்ஷரம் மந்த்ரம் மத்பக்தைர் வீதகல்மஷை: | ஸந்த்யாகாலேஷு ஜப்தவ்யம் ஸததம் சாத்மசுத்தயே – ஆகவே தங்களுடைய மனதில் உள்ள களங்கங்கள் நீங்கப் பெற்ற எனது பக்தர்கள், ஸந்த்யாகாலத்திலும் அல்லது எப்போதும் அஷ்டாக்ஷரத்தை ஜபித்தபடி இருப்பார்களாக – என்றும், சரணாகதி கத்யம் – த்வயம் அர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா – (ஸ்ரீரங்கநாதன் கூறுவது) த்வய மந்த்ரத்தை அதன் பொருளுடன் உணர்ந்து ஜபித்தபடி இருப்பாயாக – என்றும் உள்ள வரிகளின்படி அஷ்டாக்ஷரம் மற்றும் த்வயம் ஆகியவற்றை ஜபித்தபடி இருத்தல்வேண்டும் என்று கூறப்பட்டாலும், நித்ய நைமித்திக கர்மங்களை அந்தந்த காலங்களில் இயற்றிய பின்னர், எஞ்சியுள்ள நேரத்தில் மட்டுமே இதனைச் செய்யவேண்டும் என்று கருத்து. நாரதர் போன்றவர்கள் - ச்ரௌத ஸ்மார்த்தா விருத்தேஷு காலேஷு ஜபமாசரேத் – நித்ய நைமித்திக காலங்களில் செய்யவேண்டிய கர்மங்களுக்கு தடை ஏற்படாதவிதத்தில் ஜபிக்கவேண்டும் – என்றது காணலாம். வங்கிபுரத்து நம்பியும் - ஹுத்வா அக்நீந் அக்நிஹோத்ராதௌ உக்தம் காலமபி க்ஷிபந் – அக்னிஹோத்ரம் முதலானவற்றில் அக்னிகளில் ஹோமம் செய்து, இப்படியாகக் காலத்தைக் கழித்து – என்றார். எம்பெருமானார் தனது அந்திம காலத்தில், உடல் தள்ளாமையுடன் இருந்தபோதிலும், ஸந்த்யாகாலத்தில் அர்க்யம் முதலானவற்றை அளித்தபடியே இருந்தார்.

## பகவத் கைங்கர்யத்தை வர்ணாச்ரம தர்மங்களுக்கு உட்பட்டே செய்யவேண்டும்

**மூலம்** – ஆகையால் வர்ணாச்ரம தர்மங்கள் ஔபாதிகங்களென்று த்யஜிக்கை பூர்வாநுஷ்டாநாதி விருத்தம். இப்படி த்யஜிக்கில், தேஹேந்த்ரியாதி உபாதிகளையொழிய மாலாகரண தீபாரோபணாதி விசேஷ கைங்கர்யங்களும் அநுஷ்டிக்க வொண்ணாமையால், அவையுமெல்லாம் ஔபாதிகங்களாய்த் த்யாஜ்யங்களாம். அவை அநுஷ்டிக்க ஆசைப்படில் அவற்றுக்கு யோக்யதாபாதகங்களான ஆசார ஸம்ஸ்காராதிகளையும் விடவொண்ணாது. ஆனபின்பு

(1) ஆஹார க்ரஹ மந்த்ராதி ஜாத்யாதி நியமைர்யுத:
குர்யாத் லக்ஷ்மீச கைங்கர்யம் சக்த்யா அநந்ய ப்ரயோஜந:
(2) மங்கல்யஸூத்ர வஸ்த்ராதீந் ஸம்ரக்ஷதி யதா வதூ:
ததா ப்ரபந்ந: சாஸ்த்ரீயா பதி கைங்கர்ய பத்ததிம்
(3) யத்வத் மங்கல்ய ஸூத்ராதே: த்யாகே ஸம்ரக்ஷணே அபி வா
ரக்ஷேத் நிரோதை: போகைர் வா பதி: தத்வத் இஹ அபி
(4) அவஜ்ஞார்யம் அநர்த்தாய பக்த ஜந்மாதி சிந்தநம்
சாஸ்த்ர வ்யவஸ்தா மாத்ரார்த்தம் ந து தத் தூஷ்யதி க்வசித்
(5) அத ஏவ ஹி சாஸ்த்ரேஷு தத் தத் ஜாத்யைவ தர்சிதா:
தர்மவ்யாத துலாதார சபரீ விதுராதய:
(6) ஸ்வஜாதி அநுகுண ஏவ ஏஷாம் வ்ருத்தி: அபி இதிஹாஸிகீ
விசேஷ விதி ஸித்தம் து தத்வலாத் தத்ர யுஜ்யதே
(7) தேச காலாதி கார்யாதி விசேஷேஷு வ்யவஸ்திதா:
ந தர்மா: ப்ராப்திம் அர்ஹந்தி தேசகாலாந்தராதிஷு
(8) கேசித் தத் தத் உபாக்யாந தாத்பர்ய க்ரஹணாக்ஷமா:
கலி கோலாஹல க்ரீடாம் வர்த்தயந்தி ரமாபதே
(9) மாத்ருபி: பித்ருபிச்ச ஏதா: பதிபிர் தேவரை: ததா
பூஜ்யா பூஷயிதவ்யாச்ச பஹு கல்யாணம் ஈப்ஸுபி:
(10) ஜாமயோ யாநி கேஹாநி சாபந்தி அப்ரதிபூஜிதா:
தாநி க்ருத்யா ஹதாநீவ விநச்யந்தி ஸமந்தத:
(11) ஏவமாதிஷு பூஜோக்தி: யதா ஔசித்யாத் நியமயதே
பக்த ம்லேச்சாதி பூஜோக்தி: ஏவம் ஏவ நியம்யதாம்

இந் நியமங்களெல்லாம் ஸம்ப்ரதிபந்ந சிஷ்டாநுஷ்டாந பரம்பரையாலும் ஸித்தங்கள். ஆகையால், தன் வர்ணாச்ரமாதிகளுக்கு அடைத்த நியமங்களோடே பகவத் கைங்கர்யம் பண்ணுகை பரமைகாந்தித்வ விருத்தமன்று.

**விளக்கம் –** ஆகவே வர்ணாச்ரம தர்மங்கள் அனைத்தும் இந்தச் சரீரம் என்னும் ஸம்பந்தம் காரணமாகவே வந்தன என்று எண்ணு அவற்றைக் கைவிடுதல் என்பது பூர்வர்கள்

இயற்றி வந்தவை என்ற நிலைக்கு முரணாகின்றன. இவ்விதம் அவற்றைக் கைவிட்டால், சரீரம் மற்றும் இந்த்ரியங்கள் ஆகியவற்றைக் கொண்டு செய்யப்படும் கைங்கர்யங்களான மாலை மற்றும் தீபம் ஆகியவற்றை சமர்ப்பித்தல் என்பதையும், அவை சரீரங்கள் கொண்டு செய்யப்படுதல் என்பதால் விடவேண்டியதாகும். அவற்றைக் கைக்கொள்ள வேண்டும் என்றால், அவற்றை இயற்றும் தகுதியை ஏற்படுத்துகின்ற நித்ய கர்மங்களைக் கைவிடலாகாது. இவ்விதம் ஆன பின்னர், (1) – உணவு, கற்பது, மந்த்ரங்கள், பொருள் ஈட்டல், குலம் ஆகிய அனைத்திலும் தகுந்த கட்டுப்பாடுகளுடன் உள்ளவனாகவும், மற்ற பயன்களை விரும்பாதவனாகவும், மஹாலக்ஷ்மியின் நாயகனுக்குத் தன்னால் இயன்ற கைங்கர்யத்தைச் செய்யவேண்டும். (2) – ஒரு பெண் எவ்வாறு தனது திருமாங்கல்யம், விவாஹப் புடவை ஆகியவற்றை மிகவும் கவனத்துடன் பாதுகாக்கிறாளோ அது போன்று ப்ரபந்நன் சாஸ்த்ரங்களை வழுவாமல் ஸர்வேச்வரனுடைய கைங்கர்யத்தைக் காக்கவேண்டும். (3) – தனது திருமாங்கல்யத்தை விட்டவளை தண்டனையுடனும், பாதுகாப்பவளை இன்பத்துடனும் எவ்விதம் கணவன் காப்பாற்றுவானோ அது போன்றே ஸர்வேச்வரனும் கைங்கர்ய விஷயத்தில் உள்ளான். (4) அவமதிக்கும் பொருட்டு பக்தர்களுடைய பிறப்பு முதலானவற்றைக் குறித்து ஆராய்தல் போன்ற செயல்கள் பெரும் தீமையை உண்டாக்கும்; ஆனால் சாஸ்த்ரங்களில் கூறியவற்றை உறுதி செய்வதற்காக செய்யப்படும் இந்த ஆராய்ச்சியால் தோஷம் இல்லை. (5) ஆகவே சாஸ்த்ரங்களில் தர்மவ்யாதர், துலாதரர், சபரீ முதலானவர்கள் அவரவர்களுடைய குலத்தைக் குறிப்பிட்டே கூறப்பட்டுள்ளனர். (6) இதிஹாஸங்களில் காண்பிக்கப்பட்ட இவர்களுடைய செய்கைகளும், இவர்களுடைய குலத்தின் அடிப்படையிலேயே உள்ளன; ஒரு சிலருக்கு ஏற்படும் விதிவிலக்கு என்பது அந்தந்த அதிகாரியின் செயலைப் பொறுத்தே அமையும். (7) குறிப்பிட்ட இடம், காலம், அதிகாரி என்பதற்கு மட்டும் வரையறை செய்யப்பட்ட தர்மங்கள், மற்ற இடம் காலம் போன்றவற்றுக்குப் பொருந்தாது. (8) இதிஹாஸம் முதலானவற்றில் கூறப்பட்டுள்ளவற்றை அறியாமல் தவறுகள் செய்தபடி உள்ளவர்கள், கலியின் ஆரவாரத்தினால் மஹாலக்ஷ்மியின் நாயகனுக்கு லீலையை அதிகப்படுத்துகின்றனர். (9) தாய், தந்தை, கணவன், மைத்துனன் போன்ற அனைவராலும் தங்களுடைய மங்களங்களுக்காக இந்த மருமகள் அலங்கரிக்கப்பட்டு பூஜிக்கத்தக்கவள் ஆவாள். (10) – இவ்விதம் பூஜிக்கப்படாத மருமகள் சபிக்கும் வீடானது பேயால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது போன்று அழிகிறது. (11) – இங்குள்ள

“பூஜிக்கப்படுதல்” என்பது எவ்விதம் கொள்ளப்படுகிறதோ அது போன்றே, பக்தர்கள் தாழ்ந்தவர்களாக இருந்தாலும் பூஜிக்கப்படவேண்டும் என்று கொள்ளவேண்டும்.

இங்கு கூறப்பட்ட அனைத்து விதிகளும், அனைத்துவிதமான ஆசார்ய-சிஷ்ய பரம்பரைகளால் ஏற்கப்பட்டதாகும். ஆகவே தன்னுடைய வர்ணாச்ரம தர்மங்களுக்கு ஏற்ற கட்டுப்பாடுகளுடன் செய்யப்படும் பகவத் கைங்கர்யம் என்பது பரமைகாந்தி என்னும் நிலைக்கு முரணானது அல்ல.

### பரமைகாந்திகள் அல்லாதவர்கள் செய்யும் கைங்கர்யம்

(1) ஸாக்ஷாத் லக்ஷ்மீபதௌ ஏவ க்ருதம் கைங்கர்யம் அஞ்ஜஸா
ஸார கல்க விபாகேந த்விதா ஸாத்பி: உதீர்யதே
(2) க்ருதக்ருத்யஸ்ய கைங்கர்யம் யத் அநந்ய ப்ரயோஜநம்
குர்வாதி ரக்ஷணார்தம் வா தத் ஸாரம் ஸம்ப்ரசக்ஷதே
(3) டம்பார்த்தம் பரபீடார்த்தம் தந்நிரோதார்த்தம் ஏவ வா
ப்ரயோஜநா அந்தரார்த்தம் வா கைங்கர்யம் கல்க இஷ்யதே

பரமைகாந்திகளல்லாதார் பண்ணும் கைங்கர்யத்தை ஸர்வேச்வரன் திருவடிகளாலே கைக்கொள்ளுமென்னுமிடத்தையும், பரமைகாந்திகள் பண்ணும் கைங்கர்யத்தைத் திருமுடியாலே கைக்கொள்ளுமென்னுமிடத்தையும் “தத் ஸர்வம் தேவதேவஸ்ய சரணாவுபதிஷ்டதே” என்றும், “யா: க்ரியா: ஸம்ப்ரயுக்தா: ஸ்யு: ஏகாந்த கத புத்திபி: தா: ஸர்வா: சிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணந்தி வை ஸ்வயம்” என்றும் ஸ்ரீவேதவ்யாஸ பகவான் அருளிச்செய்தான்.

**விளக்கம்** – (1) மஹாலக்ஷ்மியின் நாயகனிடம் செய்யப்பட்ட கைங்கர்யங்கள் அனைத்தும் ஸாரம் மற்றும் சக்கை என்னும் இருவிதமாக உள்ளதாக ஸாதுக்களால் கூறப்படுகிறது. (2) எந்தவிதமான பலனையும் எதிர்பாராமல் உள்ளவைகள் மற்றும் ஆசார்யன் போன்றவர்களைக் காப்பாற்றுவதற்காகச் செய்யப்படுபவைகள் முதலான கைங்கர்யங்களை ஸாரமாகக் கூறுகிறார்கள். (3) டம்பம், மற்றவர்களுக்குத் துன்பத்தை

உண்டாக்குதல், மற்றவர்களைக் கைங்கர்யம் செய்யவிடாமல் தடுத்தல், மற்ற பலன்கள் ஆகியவற்றுக்காகச் செய்யப்படும் கைங்கர்யங்களை சக்கை என்று கூறுகிறார்கள். பரமைகாந்திகள் அல்லாதவர்களால் செய்யப்படும் கைங்கர்யங்களைப் பகவான் தனது திருவடிகளால் ஏற்கிறான் என்றும், பரமைகாந்திகளால் செய்யப்படும் கைங்கர்யங்களைப் பகவான் தனது திருமுடியால் ஏற்கிறான் என்றும் வ்யாஸபகவான் அருளிச்செய்தார்; மஹாபாரதம் சாந்திபர்வம் (353-63, 64) - தத் ஸர்வம் தேவதேவஸ்ய சரணாவுபதிஷ்டதே – தேவர்களுக்கு அளிக்கப்பட்ட அவிர்பாகமானது பகவானின் திருவடித்தாமரையில் சேர்கிறது; யா: க்ரியா: ஸம்ப்ரயுக்தா: ஸ்யு: ஏகாந்த கத புத்திபி: தா: ஸர்வா: சிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணந்தி வை ஸ்வயம் – பரமைகாந்திகளால் செய்யப்படும் கர்மங்களை பகவான் தானே தனது திருமுடியால் ஏற்கிறான்.

## பகவானுடைய ஆணையாகவும், ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் உள்ள கைங்கர்யங்களும் ப்ரபத்திக்கு அங்கம் அல்ல

**மூலம்** – இப்படி இவன் பகவதாஜ்ஞையாலே அநுஷ்டிக்கிற நித்ய நைமித்திகங்களும், பகவதநுஜ்ஞையாலே இவனுக்கப்பே ப்ரயோஜநமாக அநுஷ்டிக்கிற ஏற்றமான கைங்கர்யங்களும் இப் ப்ரபத்தியோடு துவக்கற்று நின்ற நிலை "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்கிற விதாநத்தாலே ஸித்தமாயிற்று. "அத: சக்யாநி ஸர்வாணி ந ப்ரபத்த்யர்த்தம் ஆசரேத் | அசக்யேஷு ச ஸாமர்த்யம் ந ததர்த்தம் ஸமார்ஜயேத்".

**விளக்கம்** – பரமைகாந்திகளாக உள்ளவர்கள், நித்ய நைமித்திக கர்மங்களை ஸர்வேச்வரனுடைய கட்டளைகள் என்றே இயற்றுவார்கள். பகவானால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கர்மங்களை அவனுடைய மகிழ்ச்சிக்காகவே செய்வார்கள். ஆனால் இந்த இரண்டுமே ப்ரபத்தியுடன் எந்தவிதமான சம்பந்தமும் அற்றதாகவே இருக்கும் என்னும் நிலையானது "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்னும் விதி மூலம் உண்டாகிறது. அத: சக்யாநி ஸர்வாணி ந ப்ரபத்த்யர்த்தம் ஆசரேத் | அசக்யேஷு ச ஸாமர்த்யம் ந ததர்த்தம் ஸமார்ஜயேத் – ஆகவே ஒருவன் தன்னால் இயன்ற அனைத்தையும் ப்ரபத்தியின் அங்கமாக இயற்றுதல் கூடாது, தனக்குச் சக்தியில்லாத கர்மங்களை ப்ரபத்தியின் அங்கமாக எண்ணி கைக்கொள்ளுதலும் கூடாது.

**மூலம்** – இந்த யோஜனையில் அதிகாரமான ஆகிஞ்சந்யமும் "சோகியாதே கொள்" என்று தேற்றுகிற வாக்யத்தாலே ஸூசிதம். அநுவாத பக்ஷத்தில் தன் அசக்தியாலே கழிந்தவையொழிய, சக்யமாய்ச் செய்கிற ஆஜ்ஞாநுபாலநாதிகளும் ப்ரபத்தியில் துவக்கொண்ணா என்னுமிடம் "ஏக" சப்தத்திலே விவக்ஷிதமாகக் கடவது. இப்பக்ஷத்தில் "மா சுச:" என்கிற வாக்யம், "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்று உக்தமான அதிகாரத்தை வ்யக்தமாக்கிக் கொண்டு மேலுள்ள நிர்பரத்வாதிகளை முன்னிட்டு உத்தரகாலத்தில் இருக்கக் கடவபடியையெல்லாம் உபலக்ஷிக்கிறது.

**விளக்கம்** – இவ்விதமாக "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்பதற்குப் பொருள் கொள்ளும்போது, "சரணம் அடைவதற்கு வேறு எந்தவிதமான உபாயத்தையும் கைக்கொள்ளும் சக்தி இல்லாமல் உள்ளேன்" என்பதான ஆகிஞ்சந்யமானது, "மா சுச: - சோகம் அடையாதே" என்பதன் மூலம், ப்ரபத்திக்குரிய அதிகாரத்தை ஏற்படுத்துவதை அறியலாம். மாறாக "பரித்யஜ்ய" என்பது முன்பே நடந்த ஒன்றைக் கூறுவதாகக் கொண்டால் (அதாவது வேறு உபாயத்தைக் கைக்கொள்ள இயலாத நிலை என்பதைக் கூறுவதாகக் கொண்டால்), தன்னுடைய சக்திக்கு ஏற்ப இல்லாதவை என்று தள்ளப்பட்டவை தவிர பகவானுடைய கட்டளைகளாக உள்ளவை மற்றும் அவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை ஆகியவையும் ப்ரபத்தியுடன் சம்பந்தம் அற்றவை என்பதை "ஏக" என்னும் என்னும் சொல் கூறுகிறது. இப்படியாகப் பொருள் கொண்டால், "மா சுச:" என்பது, "பரித்யஜ்ய" என்ற சொல் மூலம் கூறப்பட்டதான ப்ரபத்திக்கான அதிகாரம் (தகுதி) மற்றும் ப்ரபத்திக்குப் பின்னர் எந்தவிதமான பாரமும் இல்லாமல் இருத்தல் போன்றதான ப்ரபந்நனுடைய கைக்கொள்ளவேண்டிய தன்மைகளையும் கூறுவதாகிறது.

**மூலம்** – த்யாகவிதி பக்ஷத்துக்குப் ப்ரமாண விரோதம் வராதபடி இன்னமும் சில கதிகள் உண்டு. "ஆத்ம அசக்ய வ்ருதா ஆயாஸ நிவாரணம் இஹ அபி வா | லஜ்ஜா புரஸ்ஸர த்யாக வாத: அபி அத்ர நியம்யதாம்", "ஸ்வதுஷ்கரேஷு தர்மேஷு குச காச அவலம்பத: | ஆசா லேச அநுவ்ருத்தி: வா த்யாக உக்த்வா விநிவார்யதே", "அவிசிஷ்ட பலத்வேந விகல்போ யச்ச ஸூத்ரித: | தந்முகேந அபி ப்ரஹ்மாஸ்த்ர ந்யாய ஸூசநம்". அசக்யத்திலே ப்ரவ்ருத்தனை "தவிர்" என்கையும், தனக்கு துஷ்கரங்களாய்க் கழிந்து நிற்கிறவற்றிலே அபிநிவேசமுடையவனை "இது வேண்டா" என்கையும், விகல்பித்த உபாயாந்தரங்களிலே

ஒன்றை இங்கே கூட்டில் ப்ரஹ்மாஸ்த்ர ந்யாயத்தாலே விரோதிக்கும் என்று கழிக்கையும் விதி ப்ரகாரங்கள்.

**விளக்கம்** – துறத்தல் என்னும் விதிக்கு விரோதம் ஏற்படாதபடி "பரித்யஜ்ய" என்னும் பதத்திற்கு வேறு வழிகளிலும் பொருள் உரைக்கலாம். அவையாவன: ஆத்ம அசக்ய வ்ருதா ஆயாஸ நிவாரணம் இஹ அபி வா லஜ்ஜா புரஸ்ஸர த்யாக வாத: அபி அத்ர நியம்யதாம் – அல்லது "பரித்யஜ்ய" என்பதற்கு தன்னால் கைக்கொள்ள இயலாதபடி உள்ள பக்தியோகம் போன்றவற்றில் ஈடுபடவேண்டாம் என்று மறுப்பதும் பொருள் என்று கொள்ளலாம். இவ்விதம் கொள்ளும்போது, வெட்கம் காரணமாகக் கைவிடுவதும் அடங்கும் – என்றும், ஸ்வதுஷ்கரேஷு தர்மேஷு குச காச அவலம்பத: ஆசா லேச அநுவ்ருத்தி: வா த்யாக உக்த்வா விநிவார்யதே – வெள்ளத்தில் சிக்கிய ஒருவன் தர்ப்பை மற்றும் நாணல் ஆகியவற்றைப் பிடித்துக் கரையேற முயல்வது போன்று, தனக்கு இயலாத தர்மங்களில் ஈடுபட முயலுதலை "பரித்யஜ்ய" என்பது தடுப்பதாகவும் கொள்ளலாம் – என்றும், அவிசிஷ்ட பலத்வேந விகல்போ யச்ச ஸூத்ரித: தந்முகேந அபி ப்ரஹ்மாஸ்த்ர ந்யாய ஸூசநம் – உபநிஷத்துக்களில் கூறப்பட்டுள்ள முப்பத்து இரண்டு வித்யைகளும் ஒரே போன்று பலனை அளிப்பதால், அவற்றில் ஏதேனும் ஒன்றைக் கைக்கொள்ளுதலே போதுமானது என்று ப்ரஹ்மஸூத்ரம் கூறுகிறது. இவ்விதம் மற்ற வித்யைகளைக் கைக்கொண்டால், ப்ரஹ்மாஸ்த்ரம் போன்ற ப்ரபத்தி பயனற்றுப் போகும் என்பதையே "பரித்யஜ்ய" என்பதில் உள்ள துறத்தலானது தெரிவிக்கிறது – என்றும் கொள்க. ஆக இங்கு கூறப்படுவது என்னவென்றால் – தன்னால் இயலாத ஒன்றைச் செய்ய முயலும் ஒருவனைக் குறித்து "தவிர்ப்பாயாக" என்று தடுத்தல், தன்னால் இயலாது என்று அறிந்த பின்னரும் அவற்றில் ஈடுபட உறுதியாக உள்ளவனைக் குறித்து "இது வேண்டாம்" என்று கூறுதல், முக்தியை விரும்பும் ஒருவன் ப்ரபத்தி அல்லாமல் உள்ள மற்ற வித்யையில் ஏதேனும் ஒன்றைக் கைக்கொள்ள முயலும்போது, ப்ரஹ்மாஸ்த்ரம் போன்று ப்ரபத்தி பலனற்றுப் போகும் என்று கூறுதல் – ஆகும்.

## "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய" – இதற்கான ஆறு பொருள்களின் சுருக்கம்

**மூலம்** – "அதோ அசக்த அதிகாரத்வம் ஆகிஞ்சந்ய ப்ரஸ்க்ரியா | அநங்கபாவோ தர்மாணாம் அசக்ய ஆரம்ப வாரணம்", "தத் ப்ரத்யாசா ப்ரசமநம் ப்ரஹ்மாஸ்த்ர ந்யாய ஸூசநம் | ஸர்வதர்ம பரித்யாக சப்தார்த்தா: ஸாது ஸம்மதா:", "தேவதாந்தர தர்மாதி த்யாக உக்தி: அவிரோதிநீ | உபாஸகே அபி துல்யத்வாத் இஹ ஸா ந விசேஷிகா". "உபாயாபாய ஸந்த்யாகீ" இத்யாதிகளிற் சொன்ன உபாய த்யாகமும் இப் ப்ரகாரங்களிலே நிர்வாஹ்யம்.

(1) மூண்டாலும் அரியதனில் முயல வேண்டா
முன்னமதில் ஆசைதனை விடுகை திண்மை
வேண்டாது சரணநெறி வேறோர் கூட்டு
வேண்டில் அயனத்திரம்போல் வெள்கி நிற்கும்

(2) நீண்டாகு நிறைமதியோர் நெறியில் கூடா
நின் தனிமை துணையாக என்றன் பாதம்
பூண்டால் உன் பிழைகளெல்லாம் பொறுப்பனென்ற
புண்ணியனார் புகழனைத்தும் புகழுவோமே

**விளக்கம்** - அதோ அசக்த அதிகாரத்வம் ஆகிஞ்சந்ய ப்ரஸ்க்ரியா அநங்கபாவோ தர்மாணாம் அசக்ய ஆரம்ப வாரணம் – ஆகவே சக்தியில்லாதவனுக்கு மட்டுமே அதிகாரம் என்னும் தன்மை, தன்னிடம் வேறு கைம்முதல் இல்லை என்பதை எண்ணியபடி இருத்தலை முன்னிறுத்துதல், வர்ணாச்ரம தர்மங்கள் அங்கமாக இல்லாத தன்மை, செய்ய இயலாதவற்றை செய்ய முனைவதைத் தடுத்தல்; தத் ப்ரத்யாசா ப்ரசமநம் ப்ரஹ்மாஸ்த்ர ந்யாய ஸூசநம் ஸர்வதர்ம பரித்யாக சப்தார்த்தா: ஸாது ஸம்மதா: - அதனைக் குறித்த ஆசையைக் கைவிடல், ப்ரஹ்மாஸ்த்ரம் போன்று வேறு எதனையும் பொறுக்காமல் உள்ளதைக் கூறுதல் ஆகியவையே "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய" என்பதன் பொருளாக ஸாதுக்களால் ஏற்கப்படுகிறது. தேவதாந்தர தர்மாதி த்யாக உக்தி: அவிரோதிநீ உபாஸகே அபி துல்யத்வாத் இஹ ஸா ந விசேஷிகா – மற்ற தேவதைகளைக் குறித்த

தர்மங்கள் முதலானவற்றைக் கைவிடுவதைப் பொருளாக உரைத்தல் என்பது ப்ரபந்நர்கள் விஷயத்தில் முரண்பாடு ஆகாது; ஆனால், பக்தியோகத்தில் நிற்பவன் விஷயத்தில் அவற்றைக் கைவிடுதல் ஒத்துப் போவதால், ப்ரபந்நனை மட்டுமே குறிக்கும் இந்த ச்லோகத்தில், அவ்விதம் உரைப்பது சிறப்பித்துக் காட்டாது. மேலும் லக்ஷ்மீ தந்த்ரம் (17-81) - உபாயாபாய ஸந்த்யாகீ – மற்ற உபாயங்கள் அபாயங்கள் ஆகியவற்றைக் கைவிட்டு – என்பதற்கு ஏற்ப உள்ளதான உபாயங்களைக் கைவிடுதல் என்பதும், இவ்விதம் பொருள் கொள்வதுடன் சேரும்.

**(1) பொருள்** – இயற்ற இயலாத உபாயத்தைச் செய்யத் தொடங்கினாலும், இனி அதில் ஈடுபடவேண்டாம். தொடக்கத்திலேயே அந்த உபாயத்தில் உள்ள ஆசையைக் கைவிடுவதே சிறந்தது. சரணாகதியானது (ஆநுகூல்ய ஸங்கல்பம் முதலான ஐந்து அங்கங்கள்) நீங்கலாக வேறு எதன் துணையையும் நாடுவதில்லை. ப்ரபந்நன் ஒருவன் வேறு உபாயத்தை நாடிவிட்டால், ப்ரஹ்மாஸ்த்ரம் போன்று அதனைப் பொறுத்துக் கொள்ள இயலாமல், வெட்கப்பட்டு பலன் தராமல் நின்றுபோகும்.

**(2) பொருள்** – நீண்டகாலம் இயற்றியபடி இருக்கவேண்டியதும், நிறைவான அறிவு கொண்டவர்களுக்கு மட்டுமே உரியதும் ஆகிய பக்தியோகம் முதலான உபாயங்களில் ஈடுபடாமல் உள்ள நீ, வேறு கதியின்றி நிற்கும் அந்த நிலையையே உனக்குத் துணையாகக் கொண்டு, எனது திருவடிகளை உபாயமாக அடைவாயாக. அப்போது நான் உனது பாபங்கள் அனைத்தையும் பொறுத்துக் கொள்வேன் – இப்படியாக அருளிச்செய்த க்ருஷ்ணனுடைய புகழ் அனைத்தையும் நாம் துதிப்போமாக.

## க்ருஷ்ணனின் அவதார ரஹஸ்யம்

**மூலம்** – இங்கு “மாம்”, “அஹம்” என்கிற பதங்களுக்கு அடைவே அவதார ரஹஸ்யத்திலும், புருஷோத்தமத்வ ப்ரதிபாதந ப்ரகரணத்திலும் சொல்லுகிறபடியே, ஸௌலப்யத்திலும் ஸ்வாதந்த்ர்யத்திலும் ப்ராதாந்யேந நோக்கு.

அவதாரஸ்ய ஸத்யத்வம் அஜஹத் ஸ்வ ஸ்வபாவத்வ
சுத்தஸத்வ மயத்வம் ச ஸ்வ இச்சா மாத்ர நிதாநதா
தர்ம க்லாநௌ ஸமுதய: ஸாது ஸம்ரக்ஷணார்த்ததா
இதி ஜந்ம ரஹஸ்யம் யோ வேத்தி ந அஸ்ய புநர்பவ:

இவ் அவதார ரஹஸ்ய ஞானம் ஸத்வாரக ப்ரபத்தி நிஷ்டனுக்கு உபாயபூரகம், ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனுக்கு ஸ்வதந்த்ரனுடைய ஸௌலப்யத்தைக் காட்டும். இப் ப்ரகரணங்கள் இரண்டிலும் ஸித்தமான ஸௌலப்யமும் ஸ்வாதந்த்ர்யமும் ஒன்றுக்கொன்று துணையாயிருக்கும்.

(1) ஸ்வதந்த்ரஸ்ய அபி ந ஏவ ஸ்யாத் ஆச்ரயோ துர்லபஸ்ய து
அஸ்வதந்த்ராத் பலம் ந ஸ்யாத் ஸுலபாத் ஆச்ரிதாத் அபி
(2) அஸ்வதந்த்ரே ந கைங்கர்யம் ஸித்யேத் ஸ்வைர ப்ரஸங்கத:
துர்லபே ஸாத்யம் அபி ஏதத் ந ஹ்ருதயம் லோகநீதித:

ஆகையாலே கேவலஸுலபமான த்ருணாதிகளைப் போலன்றிக்கே ச்லாத்யனுமாய், துர்லபமான மேருவைப் போலுமன்றிக்கே ஸுலபன்ய்மாய்ப் பரனுமான சரண்யன் ஆச்ரயணீயனுமாய்ப் ப்ராப்யனுமாகிறான்.

**விளக்கம்** – சரமச்லோகத்தில் உள்ள “மாம்” என்னும் சொல்லானது ஸ்ரீமத்பகவத்கீதையில் க்ருஷ்ணன் தனது அவதார ரஹஸ்யத்தை வெளியிடும் இடத்தில் (இது கீதையில் 4-4 தொடங்கி 4-9 முடிய உள்ள ச்லோகங்கள்) உணர்த்தப்படும் ஸௌலப்யத்தைக் காட்டுவதாகும்; “அஹம்” என்னும் சொல்லானது ஸ்ரீமத்பகவத்கீதையின் புருஷோத்தம அத்யாயத்தில் வெளிப்படுகின்ற சுதந்திரமானவன் என்னும் தன்மையைக் காட்டுவதாகும். அவதாரஸ்ய ஸத்யத்வம் அஜஹத் ஸ்வ ஸ்வபாவத்வ சுத்தஸத்வ மயத்வம் ச ஸ்வ இச்சா மாத்ர நிதாநதா தர்ம க்லாநௌ ஸமுதய: ஸாது ஸம்ரக்ஷணார்த்ததா இதி ஜந்ம ரஹஸ்யம் யோ வேத்தி ந அஸ்ய புநர்பவ: - ஸர்வேச்வரனுடைய அவதாரத்தின் ஸத்யமான தன்மை, அவதாரங்களில் தனது இயல்பை விடாத தன்மை, சுத்தமான ஸத்வத்தை மட்டுமே கொண்ட தன்மை, தனது ஸங்கல்பத்தை மட்டுமே அனைத்திற்கும் காரணமாகக் கொண்ட தன்மை, தர்மத்திற்கு இழிவு ஏற்படும்போது அவதரிக்கும் தன்மை, ஸாதுக்களை

ரக்ஷித்தலையே தனது பயனாகக் கொண்டுள்ள தன்மை என்பதான க்ருஷ்ணனுடைய அவதார ரஹஸ்யத்தை அறியும் ஒருவனுக்கு மறுபிறவி இல்லை. இவ்விதமாக உள்ள அவதார ரஹஸ்யம் குறித்த ஞானமானது - ப்ரபத்தியை அங்கமாகக் கொண்டு பக்தியில் நிலைநிற்பவனுக்கு, அவனுடைய உபாயத்தை பூர்த்தி செய்ய உதவும்; ப்ரபத்தியையே நேரடியான உபாயமாகக் கொண்டவனுக்கு, பகவானுடைய ஸௌலப்யத்தை உணர்த்தும். இங்கு இந்த விஷயத்தில் பகவானுடைய சுதந்திரத்தன்மையும், ஸௌலப்யமும் ஒன்றுக்கொன்று துணை செய்தபடியே இருக்கும். (1) ஸ்வதந்த்ரஸ்ய அபி ந ஏவ ஸ்யாத் ஆச்ரயோ துர்லபஸ்ய து அஸ்வதந்த்ராத் பலம் ந ஸ்யாத் ஸுலபாத் ஆச்ரிதாத் அபி – சுதந்திரமாக ஒருவன் இருந்தாலும் அவன் தன்னை அண்டுவதற்கு மிகவும் கடினமானவனாக இருந்தால், அவனை அடைதல் நிகழாது. அடைவதற்கு எளியவனாக இருந்து, சுதந்திரமானவனாக இல்லையென்றால், அவனிடமிருந்து எந்தப் பயனும் உண்டாகாது. (2) அஸ்வதந்த்ரே ந கைங்கர்யம் ஸித்யேத் ஸ்வைர ப்ரஸங்கத: துர்லபே ஸாத்யம் அபி ஏதத் ந ஹ்ருதயம் லோகநீதித: - சுதந்திரமாக இல்லாத ஒருவனிடம் நாம் நமது விருப்பத்தின்படி கைங்கர்யம் செய்ய இயலும் என்பதால், நேர்மையான கைங்கர்யம் ஏற்படாது. அண்டுவதற்குக் கடினமாக இருக்கும் ஒருவனிடம் கைங்கர்யம் செய்யமுடியும் என்றாலும், அது கட்டாயத்தின் அடிப்படையில் செய்வதால் செய்பவனுக்கு மனநிறைவை அளிக்காது. ஆகவே மிகவும் எளிமையாக உள்ள புல் போன்று அல்லாமல் சிறந்தவனாகவும், அடைவதற்கு இயலாத மேருமலை போன்று அல்லாமல் அடைவதற்கு எளியவனாகவும், உயர்ந்தவனாகவும், சரணம் புகத்தக்கவனாகவும் உள்ள அவனே அண்டி நிற்பதற்கான பயனாகவும் உள்ளான்.

**மூலம்** – இவ்விரண்டு பதத்திலும் ஸர்வரக்ஷகனான ஸர்வசேஷி ரக்ஷணத்துக்கு அவஸரம் பார்த்து நிற்கிற நிலையும் தோற்றுகிறது. இப்படி அவஸர ப்ரதீக்ஷனான ஈச்வரன், "ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" என்கிறபடியே, "என்றோ நம்மை இவர்கள் அபேக்ஷிப்பது?" என்கிற அபிப்ராயத்தாலே அபிமுகனாய் நிற்கிற நிலை, "மாம்" என்கிற பதத்திலே ஸூசிதம். "என்று நாம் இவர்களை அழுக்குக் கழற்றின ஆபரணத்தைப்போலே அங்கீகரிப்பது" என்கிற அபிப்ராயத்தாலே, ஸத்வரனாய்த் தன் பேறாகப் பலம் குடுக்க நிற்கிற நிலை "அஹம்" என்கிற பதத்திலே காட்டப்படுகிறது.

**விளக்கம்** – இப்படியாக "மாம், அஹம்" என்னும் இரண்டு சொற்கள் மூலமும், அனைத்தையும் காப்பவனும், அனைத்திற்கும் எஜமானனும் ஆகிய பகவான், ப்ரபந்நனைக் காப்பாற்றுவதற்கான நேரத்தை எதிர்பார்த்தபடி நிற்கின்ற நிலையானது வெளிப்படுகிறது. இவ்விதம் சரியான நேரத்தை எதிர்பார்த்தபடி உள்ள ஈச்வரன், லக்ஷ்மீ தந்த்ரம் (17-78) - ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே – காக்கவேண்டும் என்னும் விண்ணப்பத்தை எதிர்பார்க்கிறான் – என்பதற்கு ஏற்ப, "இவர்கள் நம்மை என்று விண்ணப்பிப்பார்கள்?" என்று ஆவலுடன் நிற்கின்ற நிலையானது "மாம்" என்னும் சொல் மூலம் சூசகமாக வெளிப்படுகிறது. "அழுக்கு நீக்கப்பட்ட ஆபரணம் போன்று (ப்ரக்ருதியிலிருந்து விடுபட்ட இந்த ஜீவாத்மா) என்று இவர்களை நாம் ஏற்றுக்கொள்வது?" என்று எண்ணியபடி, நமக்கான பலனை விரைவாக அளித்தலே தனது பயன் என்று ஈச்வரன் நிற்கும் நிலையை "அஹம்" என்னும் சொல் காண்பிக்கிறது.

**மூலம்** – இப்படி அகிஞ்சநனான அதிகாரிக்கு யதாவிதி ரக்ஷாபேக்ஷா பூர்வக பரந்யாஸத்தையொழிய வேறொன்றால் அபேக்ஷையில்லாத ஸித்தோபாயத்தை "மாம் ஏகம்" என்று காட்டி, அதினுடைய வசீகரணார்த்தமான ஸாத்யோபாயத்தை "சரணம் வ்ரஜ" என்று விதியாலே காட்டுகிறது. இப்படி விதிக்கிற ப்ரபத்தி ரூப வித்யைக்கு, சரண்ய ப்ரஸாதநமாகச் சோதிதத்வத்தாலே வருகிற உபாயத்வம் பக்தியோக துல்யம்; இதனாலே ப்ரஸந்நனான ஈச்வரன் மோக்ஷத்துக்கு ஸாக்ஷாதுபாயம்.

**விளக்கம்** – வேறு கதியில்லாத அதிகாரி ஒருவனுக்கு, தகுந்த விதிப்படி "என்னைக் காக்கவேண்டும்" என்னும் விண்ணப்பத்தை முன்னிறுத்தி, தனது பாரங்களை அவனிடம் சமர்ப்பணம் செய்வது அல்லாமல், வேறு எதனையும் எதிர்பாராமல் உள்ள ஸித்தோபாயத்தை (ஈச்வரன்) சரமச்லோகத்தில் உள்ள "மாம் ஏகம்" என்னும் சொற்கள் காண்பிக்கின்றன. அவனை ஈர்ப்பதான ஸாத்யோபாயமானது (ப்ரபத்தி), சரமச்லோகத்தில் உள்ள "சரணம் வ்ரஜ" என்னும் விதி மூலம் காண்பிக்கப்படுகிறது. இவ்விதமாக விதிக்கப்பட்டுள்ள ப்ரபத்தி வடிவத்தில் உள்ள வித்யையானது, அவனை மகிழ வைப்பதற்காக விதிக்கப்பட்டதால், இது பக்தியோகம் போன்று உபாயமாக உள்ளது. இதன் மூலம் மகிழும் ஈச்வரன், மோக்ஷத்திற்கான நேரடியான உபாயம் ஆகிறான்.

## "மாம்" என்னும் சொல்லின் விளக்கம்

**மூலம்** – இவ்வித்யைக்கு விசேஷித்து விவேத்யாகாரம் நிரபேக்ஷ உபாயத்வம். இதுக்கு அபயுக்தாகாரங்களெல்லாம் "மாம்", "ஏகம்" என்கிற பதங்களிலே விவக்ஷிதங்கள். "ஏஷ நாராயண: ஸ்ரீமாந்" இத்யாதிகளிலே நிர்திஷ்ட ப்ரகாரனான சரண்யனைச் சொல்லுகிற "மாம்" என்கிற பதத்தாலே திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் ப்ரகாசிதமான ஸர்வரக்ஷகத்வமும் ஸர்வசேஷித்வமும் ஸ்ரீய:பதித்வமும் நாராயணத்வமும், இவற்றால் ஆக்ருஷ்டமாய்ப் பரத்வ ஸௌலப்யங்களுக்கு உறுப்பாய் வருகிற ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வாதிகளும், பரமகாருணிகத்வ ஸௌசீல்ய வாத்ஸல்யாதிகளும், த்வயத்தில் த்விவசநாந்த பதத்தாலே தோற்றின சுபாச்ரயமாய்ப் பரத்வ ஸௌலப்ய வ்யஞ்ஜகமான பார்த்தஸாரதியினுடைய திவ்யமங்கள விக்ரஹ விசேஷமும் காட்டப்படுகின்றன.

**விளக்கம்** – இந்த ப்ரபத்தின் என்னும் வித்யையின் தனித்தன்மை என்னவென்றால், இது வேறு எதனையும் தனது அங்கமாக எதிர்பார்க்காத உபாயமாக இருத்தலே ஆகும். இத்தகைய தன்மைக்குத் தேவையான மற்ற தன்மைகள் அனைத்தும் "மாம், ஏகம்" ஆகிய சொற்களால் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. ஹரிவம்சம் (113-62) - ஏஷ நாராயண: ஸ்ரீமாந் – இந்த நாராயணன் – என்றுள்ள பல வாக்கியங்களில் கூறப்பட்ட குணங்களைக் கொண்டவனாக உள்ளவனும், அனைவரும் சரணம் புகலாம்படி உள்ளவனும் ஆகிய அவனையே "மாம்" என்னும் சொல்லானது குறிக்கிறது. இந்தச் சொல்லானது – திருமந்த்ரம் மற்றும் த்வயம் ஆகியவற்றில் வெளிப்படுகின்ற அனைவரையும் காக்கும் தன்மை, அனைத்திற்கும் எஜமானனாக உள்ள தன்மை, மஹாலக்ஷ்மியின் நாயகனாக உள்ள தன்மை, நரர்கள் தங்கும் இடமாக உள்ள தன்மை போன்ற பலவற்றையும் காண்பிக்கிறது; இது மட்டும் அல்லாமல், இவை மூலம் வெளிப்படுகின்ற அவனுடைய குணங்களான உயர்ந்த தன்மை மற்றும் எளிமையான தன்மை ஆகியவற்றுக்கு அடிப்படையாக உள்ள அனைத்தையும் அறிந்த தன்மை மற்றும் அனைத்து சக்தியையும் கொண்ட தன்மை முதலானவற்றையும் காண்பிக்கிறது; மேலும், "மாம்" என்னும் சொல்லானது மிகுந்த கருணை, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்னும் பாகுபாடு இன்றி அனைவருடனும் ஒரே போன்று பழகும் தன்மை, வாத்ஸல்யம் போன்றவற்றையும் உணர்த்துகிறது; மேலும், த்வயத்தில் உள்ள "சரணௌ" என்னும் சொல்லால்

கூறப்படுவதான எளிதாக அண்டவல்லதாகவும், அனைத்து மங்களங்களையும் அளிப்பதாகவும், பரத்வம் – ஸௌலப்யம் முதலானவற்றை வெளிப்படுத்துவதாகவும் உள்ள பார்த்தசாரதியின் திவ்யமங்கள திருமேனியின் சிறப்பும் “மாம்” என்னும் சொல்லால் உணர்த்தப்படுகிறது.

**மூலம்** – இங்கே “நிகரில் புகழாய்” இத்யாதிகளிற் சொல்லுகிற வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌசீல்ய ஸௌலப்ய ரூபமான இக்குண சதுஷ்டயமும் அடியிலே அஸ்தாந ஸ்நேஹாதிகளாலே கலங்கின அர்ஜுநனை அநாதரியாமையாலும், “மத்த: பரதரம் நாந்யத்” என்று தானே அருளிச்செய்கையாலும், “ஹே க்ருஷ்ண ஹே யாதவ”, “ரதம் ஸ்தாபய மே அச்யுத” என்னும்படி நின்று ஸாரத்யாதிகளைப் பண்ணுகையாலும், “காணவேண்டும்” என்ன ஸ்வவைச்வரூபத்தைக் காட்ட, “மீண்டும் பழைய ஸௌம்ய விக்ரஹத்தைக் காட்டவேண்டும்” என்ன அப்போதே ஸாரதிரூபனாய்த் தோற்றி நிற்கையாலும் வ்யஞ்சிதமாயிற்று.

**விளக்கம்** – “மாம்” என்னும் சொல் மூலம் திருவாய்மொழி (6-10-1) – நிகரில் புகழாய் – என்பது போன்றவற்றில் கூறப்படுவதான வாத்ஸல்யம், ஸ்வாமியாக உள்ள தன்மை, ஸௌசீல்யம் மற்றும் ஸௌலப்யம் ஆகிய நான்கு குணங்களும் வெளிப்படுகின்றன. எப்படி? சிநேகம் வரக்கூடாத இடமான யுத்தகளத்தில் கலங்கி நின்ற அர்ஜுனனைக் கைவிடாமல் இருத்தல்; கீதை (7-7) - மத்த: பரதரம் நாந்யத் – என்னைக் காட்டிலும் உயர்ந்தது ஏதும் இல்லை – என்று தானே அருளிச்செய்தல்; கீதை (11-41) - ஹே க்ருஷ்ண ஹே யாதவ – என்றும், கீதை (1-21) - ரதம் ஸ்தாபய மே அச்யுத – தேரை அங்கே எனக்காக நிறுத்துவாயாக – என்றும் அர்ஜுனன் கூறுவதற்கு ஏற்ப தேர் ஓட்டுதல் முதலானவற்றைச் செய்தல்; “உன்னுடைய உண்மையான ரூபத்தைக் காணவேண்டும்” என்று அர்ஜுனன் கேட்டபோது தனது விச்வரூபத்தைக் காண்பித்தும், “மீண்டும் உன்னுடைய அழகான திருமேனியையே காண்பிக்கவேண்டும்” என்று கூறியவுடன் தேர் ஓட்டுபவனாக நிற்கும் ரூபத்தைக் காண்பித்தல் – இது போன்ற பலவற்றாலும் வெளிப்பட்டது.

**மூலம்** – உத்தமான சரண்ய குணங்களில், ஆச்ரித ஸம்ரக்ஷணத்துக்குப் ப்ரதாந தமங்கள் “ஸர்வஜ்ஞ: அபி ஹி விச்வேச: ஸதா காருணிக: அபி ஸந்” என்று பகவச்சாஸ்த்ரத்திலும்,

“த்வத் ஜ்ஞாந சக்தி கருணாஸு ஸதீஷு” என்கிற அபியுக்த வாக்யத்திலும் ஸங்க்ரஹிக்கப்பட்டன. இவை மூன்றிலும், ஜ்ஞாந சக்திகள் நிக்ரஹ அநுக்ரஹ ஸாதாரணங்கள். ஸ்வாமித்வமும், லீலோபகரண மாக்குகைக்கும் போகோபகரண மாக்குகைக்கும் பொதுவாகையாலே, ஜ்ஞாந சக்திகளை ரக்ஷணைகாந்தங்களாக நியமிக்கமாட்டாது. காருண்யமும் இதின் சுவடுகளான ஸௌசீல்ய வாத்ஸல்யாதிகளும் அநுக்ரஹத்துக்கு ஏகாந்தங்கள்.

**விளக்கம்** – அனைவரும் சரணம் புகத்தக்கவிதத்தில் உள்ளதாகக் கூறப்பட்ட குணங்களில், தன்னை அடைந்தவர்களைக் காப்பதற்கு மிகவும் அவசியமான குணங்களாக உள்ளவை பகவத் சாஸ்த்ரமாகிய லக்ஷ்மீ தந்த்ரத்தில் (17-78) - ஸர்வஜ்ஞ: அபி ஹி விச்வேச: ஸதா காருணிக: அபி ஸந் – அனைத்தையும் நியமிக்கும் அவன், அனைத்தையும் அறிந்தவனாகவும், கருணை நிறைந்தவனாகவும் – என்றும், சான்றோர் அருளிச்செய்த அதிமாநுஷஸ்தவத்தில் (61) - த்வத் ஜ்ஞாந சக்தி கருணாஸு ஸதீஷு – உனது ஞானம், சக்தி, கருணை போன்றவை உள்ளபோது – என்றும் சுருக்கமாகக் கூறப்பட்டன. இந்த மூன்று குணங்களில் ஞானம் மற்றும் சக்தி ஆகியவையே தண்டிப்பதற்கும், அனுக்ரஹம் செய்வதற்கும் அவசியமானவை ஆகும். இவனுடைய எஜமானத்தன்மை என்பது ஜீவாத்மா மூலமாக ஸம்ஸாரத்தில் லீலைகளை அனுபவிக்கவும், அந்த ஜீவாத்மா மோக்ஷம் அடைந்த பின்னர் அவன் மூலமாக இன்பத்தை அனுபவிக்கவும் அவசியமாக உள்ளது. ஆகவே இத்தகைய எஜமானத்தன்மையானது பகவானுடைய ஞானம் மற்றும் சக்தி ஆகிய குணங்கள், காக்கும் செயலில் மட்டுமே ஈடுபடும்படியாகக் கட்டுப்படுத்த இயலாது. ஆனால் காருண்யமும், அதன் மூலம் வெளிப்படுவதான ஸௌசீல்யம் மற்றும் வாத்ஸல்யம் ஆகியவை அனுக்ரஹம் செய்வதற்காக மட்டுமே உள்ளன.

**மூலம்** – இப்படி இக்காருண்யத்தினுடைய வாசியைக் கண்ட பூர்வர்கள், “ஸோஹம் தே தேவதேவேச நார்ச்சநாதௌ ஸ்துதௌ ந ச | ஸாமர்த்யவாந் க்ருபாமாத்ர மநோவ்ருத்தி: ப்ரஸீத மே” என்றும், “நின்னருளே புரிந்திருந்தேன்” என்றும், “துணியேன் இனி நின்னருளல்லது எனக்கு” என்றும், “உனதருளே பார்ப்பன் அடியேனே” என்றும், “திருமாமகளைப் பெற்றும் என்னெஞ்சகங் கோயில் கொண்ட பேரருளாளன்” என்றும், “உன் திருவருளாலன்றிக் காப்பதரிது” என்றும், “நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்” என்றும், “ஆவா என்று அருள் செய்து” என்றும், “க்ருபயா கேவலம்

ஆத்மஸாத்குரு" என்றும், "கரீச தேஷாமபி தாவகீ தயா ததாத்வக்ருத்ஸைவ து மே பலம் மதம்" என்றும், இப் ப்ரகாரங்களிலே இக் க்ருபாகுணத்தைத் தஞ்சமாக அநுஸந்தித்து ஸம்பந்தத்தையும் குணாந்தரங்களையும் காருண்யத்துக்குச் சொல்லிற்றுச் செய்வனவாக்கித் தாங்கள் காருண்யைகாந்திகளாய்ப் போந்தார்கள். பிராட்டியும் குணாந்தரங்களிருக்க, "வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத்" என்று அருளிச்செய்தாள். கத்யத்திலும் "மதீயயைய தயயா" என்கையாலே, இக் க்ருபையின் ப்ராதாந்யம் விலக்ஷிதம்.

**விளக்கம்** – இப்படியாகப் பகவானின் காருண்யத்திற்கு உள்ள மேன்மையான வேறுபாட்டை அறிந்த பூர்வாசார்யர்கள், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-7-70) - ஸோஹம் தே தேவதேவேச நார்ச்சநாதௌ ஸ்துதௌ ந ச | ஸாமர்த்யவாந் க்ருபாமாத்ர மநோவ்ருத்தி: ப்ரஸீத மே – தேவர்களின் தேவனே! நான் உன்னை அர்ச்சனை செய்வதற்கோ அல்லது துதிப்பதற்கோ சக்தி அற்றவன் ஆவேன். ஆகவே நீ கருணையை மட்டுமே உனது சிந்தனையில் நிறுத்தி எனக்கு அருளவேண்டும் – என்றும், பெரியாழ்வார் திருமொழி (5-4-1) - நின்னருளே புரிந்திருந்தேன் – என்றும், பெரியதிருமொழி (11-8-8) - துணியேன் இனி நின்னருளல்லது எனக்கு – என்றும், பெருமாள் திருமொழி (5-4) - உனதருளே பார்ப்பன் அடியேனே – என்றும், பெரியதிருமொழி (9-5-10) - திருமாமகளைப் பெற்றும் என்னெஞ்சகங் கோயில் கொண்ட பேரருளாளன் – என்றும், திருவிருத்தம் (62) - உன் திருவருளாலன்றிக் காப்பதரிது – என்றும், திருவாய்மொழி (9-2-1) - நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் – என்றும், திருவாய்மொழி (5-1-9) - ஆவா என்று அருள் செய்து – என்றும், ஸ்தோத்ரரத்னம் (48) - க்ருபயா கேவலம் ஆத்மஸாத்குரு – உன்னுடைய க்ருபை மூலம் மட்டுமே கொண்டு, எனது முயற்சி ஏதும் இன்றி – என்றும், வரதராஜஸ்தவம் (94) - கரீச தேஷாமபி தாவகீ தயா ததாத்வக்ருத்ஸைவ து மே பலம் மதம் – வரதனே! உனது தயை என்பதே எனக்கு ஏற்ற வலிமை அளிக்கும் என்பது உறுதி – என்றும் பல இடங்களில் இந்தக் கருணை என்னும் குணத்தையே தாங்கள் தஞ்சம் புகுவதற்கு ஏற்றதாக எண்ணினர். ஆகவே அவனுடன் உள்ள ஸம்பந்தம் மற்றும் மற்ற குணங்கள் ஆகியவற்றை, அவனைத் தாங்கள் கூறியதைச் செய்யவைக்கும் என்று சிந்தித்து, அவனுடைய கருணை என்னும் குணத்தில் மட்டுமே நிலைநின்றார்கள். பெரியபிராட்டியும், அவனிடம் பல குணங்கள் உள்ளபோதிலும், இராமாயணம் ஸுந்தரகாண்டம் (38-34) - வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத் – சரணம்

புகுந்த காகமானது அழிக்கப்படவேண்டியவன் என்றபோதிலும் தனது கருணையால் காப்பாற்றினான் – என்றே அனுமனிடம் கூறினாள். சரணாகதி கத்யத்திலும் - மதீயயைய தயயா – (ஸ்ரீரங்கநாதன் உரைப்பது) எனது கருணையால் மட்டுமே – என்று அருளிச்செய்தான். ஆகவே அவனுடைய க்ருபையின் முதன்மை என்பது தெளிவாகிறது.

**மூலம்** – இப்படி ஆச்ரித ரக்ஷணத்துக்குப் ப்ரதாநமாயும், பரிகரமாயும் உள்ள ஸர்வாகாரங்களாலும் விசிஷ்டனான தன்னை அபிமுக ஸ்திதியிலே “மாம்” என்று நிர்தேசித்தருளினான்.

**விளக்கம்** – இப்படியாகத் தன்னை அடைந்தவர்களைக் காப்பாற்றுவதற்கு முதன்மையாகவும், துணையாகவும் உள்ள பலவற்றிலும் சிறந்தவனாகிய தன்னை அர்ஜுனன் முன்பாக நிறுத்திக் கொண்டு, “மாம்” என்று உறுதியாக உரைத்தான்.

## “ஏக” என்னும் சொல்லுக்கு உள்ள ஆறு பொருள்களின் விளக்கம்

## “ஏக” என்பது உபாயமும் பலனும் ஒன்றே ஆகும் என்று கூறுதல்

**மூலம்** – “மாம்” என்கிற பதத்திலே ஏகவசநத்தாலே ஏகத்வம் தோற்றா நிற்கப் பின்பும் ஏகசப்தம், “தன்னைத் தந்த கற்பகம்” என்கிறபடியே ப்ராப்யனானவன் தானே ப்ராபகனானபடியாலே, உபாய பலைக்யத்தைச் சொல்லுகிறதென்றும் யோஜிப்பார்கள். இதுக்கு “மாம் ஏகம் ஏவ சரணம்” என்கிற ஸமாந ப்ரகரண வாக்யமும் அநுகுணம். ஏவகாரம் உண்டாயிருக்க, ஏகசப்தம் கிடந்தால் இதுக்கு அவதாரணமொழிய வேறே பொருள் கொள்ளுகை உசிதமிறே.

**விளக்கம்** – “மாம்” என்னும் சொல்லின் மூலமே “ஒருவனை” என்னும் கருத்து வெளிப்படுகிறது; இவ்விதம் உள்ளபோது “ஏகம் – ஒருவனை” என்று இந்தக் கருத்தையே மீண்டும் ஒருமுறை தனியாக ஏன் கூறவேண்டும் என்ற கேள்வி எழலாம். இதற்கு ஒரு சிலர், “திருவாய்மொழி (2-7-1) - தன்னைத் தந்த கற்பகம் – என்பதற்கு ஏற்ப அடையப்பட வேண்டிய இலக்காக உள்ள அவனே, அந்த இலக்கை அடைய வைக்கும் உபாயமாகவும் உள்ளான் என்பதால், உபாயமும் பலனும் ஒன்றே என்பதை வெளிப்படுத்தவே ஆகும்”,

என்று கூறுகிறார்கள். இந்தக் கருத்தானது, ஸ்ரீமத்பாகவதம் (11-12-14) – மாம் ஏகம் ஏவ சரணம் – என் ஒருவனை மட்டுமே சரணம் புகுவாயாக – என்று இதே போன்று வெளிப்படுத்தும் வரியுடன் ஒத்திருப்பதாகும். அந்த வரியில் “ஒருவனை” என்பது முன்பே உள்ளபோது, தனியாக மீண்டும் ஒருமுறை அதே சொல்லானது இடம் பெற்றால், அது வேறு ஒரு கருத்தை உணர்த்தவே ஆகும் என்று கொள்ளலாம் (அதாவது உபாயமும், பலனும் ஒருவனே என்று உணர்த்தவே ஆகும்).

## “ஏக” என்பது ஜீவாத்மாவிற்கு சுதந்திரத்தை விலக்குகிறது என்று கூறுதல்

**மூலம்** – இங்ஙனன்றிக்கே “முக்ய அந்ய கேவலேஷு ஏகம்” என்கிறபடியே பஹ்வர்த்தமான ஏகசப்தம் இங்கு கேவல பர்யாயமாய் “மாமேவ யே ப்ரபத்யந்தே”, “தமேவ சரணம் கச்ச” இத்யாதிகளிற்படியே அவதாரணார்த்தமாய் சரண்யகுண பௌஷ்கல்யத்தாலே ஸ்வஸ்வாதந்த்ர்யாதிகளை நிவர்த்திப்பிக்கிறதென்றும் சொல்லுவர்கள். எங்ஙனேயென்னில் ஸ்வரக்ஷைக்கு உபயுக்தங்களான வசீகரணங்களை சாஸ்த்ர நியுக்தனான தான் அநுஷ்டிக்கையாலே ரக்ஷையிலே தனக்கும் கர்த்ருத்வம் தோற்றி, ஸித்தோபாயபூதனான சரண்யனோடொக்கத் தன்னையும் உபாயமாக எண்ணப்புக, இப்படிப் ப்ரஸக்தமான உபாய த்வித்வத்தைக் கழிக்கிறது ஏகசப்தம். அது கழிந்தபடி என்னென்னில், “கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்த்வாத்” என்கிறபடியே ஜீவனுக்குக் கர்த்ருத்வம் ப்ராமாணிகமேயாகிலும் இது பராதீநமுமாய் அல்பவிஷயமுமாய்ப் ப்ரதிஹதி யோக்யமுமாயிருக்கும். ஆகையால் இவன் தான் உபாயாநுஷ்டாநம் பண்ணிற்றும், “வரத தவ கலு ப்ரஸாதாத்ருதே | சரணமிதி வசோ அபி மே நோதியாத்” என்று சொல்லுகிறபடியே அவன் கடாக்ஷமடியாக வருகையால் அவனாலே ப்ரேரிதனாய், அவன் ஸஹகரியாதபோது நீட்ட முடக்கமாட்டாதே அவன் கொடுத்த கரண களேபரங்களைக் கொண்டு அவன் காட்டின உபாயத்தை அவன் துணை செய்ய அநுஷ்டித்து அவன் கொடுக்கப் புகுகிற பலத்துக்குச் சாதகம் போலே அண்ணாந்திருக்கிற இவனை ஸ்வாதீந ஸர்வ விஷய அப்ரதிஹத கர்த்ருத்வமுடையவனோடே துல்யமாக இரண்டாம் ஸித்தோபாயமாக எண்ணுக்கை, விவேகியான முமுக்ஷுவுக்கு உசிதமன்றென்று ஏகசப்தத்தாலே சொல்லிற்றாயிற்று.

**விளக்கம்** – இவ்விதம் பொருள் கொள்ளாமல், முக்ய அந்ய கேவலேஷு ஏகம் – "ஏகம்" என்னும் சொல்லானது முக்கியம், வேறு மற்றும் "அது மட்டுமே" என்னும் பொருள் தருவதாகும் – என்பதற்கு ஏற்ப பல பொருள்களைக் கூறுவதான "ஏக" என்னும் சொல்லானது இங்கு "அது மட்டுமே" என்னும் பொருள் தருவதாகச் சிலர் கூறுவார்கள். அதாவது, கீதை (7-14) - மாமேவ யே ப்ரபத்யந்தே – என்னை மட்டுமே சரணம் புகுந்து – என்றும், கீதை (18-62) - தமேவ சரணம் கச்ச – அவனை மட்டுமே சரணம் புகுந்து – என்றும் கூறுவதற்கு ஏற்ப சரணம் புகத் தக்கவனுடைய குணங்களின் நிறைவை வெளிப்படுத்தும்விதமாகவும், தனக்கு சுதந்திரமாக செயலாற்றும் சக்தி உள்ளது என்னும் எண்ணத்தை விலக்குவதற்காகவும் இவ்விதம் கூறப்படுகிறது. இது எப்படி (அதாவது "ஏகம்" என்பது எவ்விதம் ஜீவனின் சுதந்திரத்தன்மையை விலக்குகிறது என்பதை விளக்குகிறார்)? ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ளும்விதமாக, பகவானை வசீகரிக்கும் செயல்களைச் சாஸ்த்ரங்களில் கூறப்பட்டவிதங்களில் இயற்றுகிறான்; அப்போது அவன் தனது மனதில், தன்னைக் காக்கும் செயல்களில், ஸித்தோபாயமாக உள்ள பகவானைப் போன்றே தனக்கும் சம பங்கு உள்ளதாக எண்ணக்கூடும். இத்தகைய எண்ணத்தை "ஏக" என்னும் தனிச்சொல்லானது, பகவான் மட்டுமே ஒரே உபாயம் என்று உணர்த்தி, இரண்டாவது உபாயம் உள்ளது என்று எண்ணுவதைத் தடுக்கிறது (அதாவது பகவான் ஓர் உபாயம், தானே தனக்கு உபாயம் என்று இரண்டு உபாயங்கள்). எப்படித் தடுக்கிறது? ப்ரஹ்மஸூத்ரம் (2-3-33) - கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்த்வாத் – ஜீவாத்மாவிற்கு செயல் புரிதல் உள்ளது, இல்லையேல் சாஸ்த்ரங்கள் வீணாகும் - என்பதற்கு ஏற்ப, ஜீவாத்மாவிற்கு உள்ள செயலாற்றும் தன்மைக்குக் தகுந்த ப்ரமாணங்கள் உள்ளன; ஆனால் இத்தகைய செயலாற்றுதல் என்பது பகவானுக்கு உட்பட்டதாகவும், அற்பமானதாகவும், எளிதாகத் தடுக்கப்படக்கூடியதாகவும் உள்ளது. ஆகவே இவன் உபாயத்தைக் கைக்கொண்டாலும், அந்த நிலையானது ஸ்ரீவரதராஜஸ்தவம் (88) - வரத தவ கலு ப்ரஸாதாத்ருதே சரணாமிதி வசோ அபி மே நோதியாத் – வரதனே! உன்னுடைய கருணை இல்லையென்றால், "நீயே எனக்கு அடைக்கலம் ஆவாய்" என்னும் சொல் கூட எனது வாக்கில் வராது – என்பதற்கு ஏற்ப, பகவானுடைய திருவுள்ளத்தால்தான் உண்டாகிறது. பகவான் துணை செய்யவில்லையென்றால், சேதநனால் தனது கால்களையும் கைகளையும் நீட்டவும் மடக்கவும் கூட இயலாது. ஆகவே அவன் அளித்த சரீரம் மற்றும் இந்த்ரியங்களைக் கொண்டு, அவன் காண்பித்த உபாயத்தை, அவனுடைய துணை மூலம் கைக்கொண்டு, அவன் அளிக்கவுள்ள பலனை "மழை மேகத்தை நோக்கி

வாயைத் திறந்து காத்திருக்கும் சாதகப்பறவை” போன்று எதிர்பார்த்து சேதநன் நிற்கிறான். ஆகவே சுதந்திரமானவனும், அனைத்து விஷயங்களிலும் எந்தவிதமான இடையூறும் இல்லாத ஸங்கல்பம் கொண்டவனும் ஆகிய ஸர்வேச்வரனுடன் இணைந்து, தன்னையும் ஒரு உபாயமாக எண்ணுதலானது, முமுக்ஷுவிற்குப் பொருந்தாது என்பதையே “ஏக” என்பது கூறுகிறது.

## “ஏக” என்பது ப்ரபத்தியை ஸித்தோபாயமாக உள்ள ஸர்வேச்வரன் போன்ற உபாயம் என்று எண்ணுதலைத் தள்ளுகிறது

**மூலம்** – இக்கட்டளையிலே ஸாத்யோபாயமான ப்ரபத்தியையும் ஸித்தோபாயத்தோடு ஒரு கோவையாக எண்ணாமைக்காக ஏக சப்தம் என்றும் சொல்லுவர்கள். அது எங்ஙனேயென்னில், இப் ப்ரபத்தியும் பக்தியோகம் போலே ப்ரஸாதநமாக விதிக்கப்படிருந்ததேயாகிலும், ஸஹஜ காருண்யாதி விசிஷ்டனான ஸர்வேச்வரனுடைய காலுஷ்ய சமாநமாத்ரார்த்தமாய் ஸாக்ஷாத் பலத்துக்கு ஸஹஜ ஸாமர்த்ய காருண்ய விசிஷ்டனான இவன் நினைவே காரணமாம்படியாய், அவன் தானே அத்யந்த அகிஞ்சநனான ப்ரபந்நனுக்கு பரஸ்வீகாரத்தாலே பக்தியோகாதிகளான குருதரோபாயங்களின் நேரே நின்று இவ்வாநுகூல்ய ஸங்கல்பாதி யுக்த ப்ரபத்திமாத்ர வ்யாஜ ஸாபேக்ஷனாய் வேறொன்றால் அபேக்ஷையில்லாமையால் நிரபேக்ஷோபாயத்வமே இந் ந்யாஸ வித்யைக்கு வேத்யாகாரமாகக் கொண்டு “த்வமேவோபாயபூதோ மே பவ” என்று அபேக்ஷணீயனாயிருக்க, “என் உணர்வினுள்ளே இருத்தினேன் அதுவும் அவனது இன்னருளே” என்றும், “இசைவித்து என்னை உன் தாளிணைக்கீழ் இருத்தும் அம்மானே” என்றும் சொல்லுகிறபடியே, உபாயபூதனான அவன் செய்விக்கச் செய்கிற வ்யாஜமாத்ரத்தை அவனோடு ஒக்க உபாயமாக எண்ணுகை உசிதமன்றென்று ஏக சப்தத்துக்குத் தாத்பர்யம்.

**விளக்கம்** – இதே போன்று சேதநனால் இயற்றப்படுகின்ற ப்ரபத்தியை, ஸித்தோபாயமாக உள்ள பகவானுக்குச் சமமாக எண்ணக்கூடாது என்பதைத் தள்ளுவதற்காகவே “ஏக” என்ற சொல் உள்ளதாகவும் கூறுவார்கள். ப்ரபத்தியானது பக்தியோகம் போன்று பகவானின் அனுக்ரஹத்திற்கு உபாயமாக உள்ளது என்றே விதிக்கப்பட்டுள்ளது; ஆனாலும்,

இயல்பாகவே கருணையைக் கொண்ட ஸர்வேச்வரனுக்கு, ஏதோ ஒரு காரணத்தால் சேதநன் மீது ஏற்படக்கூடிய சீற்றத்தை நீக்கும் அளவுடன் ப்ரபத்தியானது நின்று விடுகிறது. ஆனால் இறுதியான பலனுக்கான காரணம், இயல்பாகவே கருணையைக் கொண்ட ஸர்வேச்வரனுடைய ஸங்கல்பமே ஆகும். மற்ற உபாயங்களைக் கைக்கொள்ள சக்தியின்றி, ப்ரபத்தியை மட்டுமே கைக்கொள்ளும் ஒருவனுடைய அனைத்துவிதமான பொறுப்புகளையும் தானே ஏற்றுக்கொள்ளும் ஸர்வேச்வரன், பக்தியோகம் உள்ளிட்ட உபாயங்களின் இடத்தில் தானே நிற்கிறான். ஆநுகூல்ய ஸங்கல்பம் போன்ற குறிப்பிட்ட அங்கங்களை மட்டுமே கொண்ட இந்த ப்ரபத்தியை ஒரு காரணமாக மட்டுமே வைத்துக் கொண்டு, அவன் பலன் தருகிறான். இவ்விதம் வேறு எதனையும் எதிர்பாராமல் தனித்தன்மையுடன் உள்ள இந்த ப்ரபத்திக்கு, அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-31) - த்வமேவோபாயபூதோ மே பவ – நீ மட்டுமே எனது உபாயமாக இருத்தல்வேண்டும் – என்பதற்கு ஏற்ப, அவன் மட்டுமே நம்மால் ப்ரார்த்திக்கப்பட வேண்டியவனாய் உள்ளான். ஆகவே திருவாய்மொழி (5-8-9) - என் உணர்வினுள்ளே இருத்தினேன் அதுவும் அவனது இன்னருளே – என்றும், திருவாய்மொழி (8-8-3) - இசைவித்து என்னை உன் தாளிணைக்கீழ் இருத்தும் அம்மானே – என்றும் கூறுவதற்கு ஏற்ப, உபாயமாக உள்ள அவன் நம்மை ப்ரபத்தி செய்யவேண்டும் என்று எண்ணுவதன் மூலமே நாம் ப்ரபத்தி செய்கிறோம் என்பதால், ப்ரபத்தியை அவனுக்குச் சமமான உபாயமாக கருதுதல் உசிதம் அல்ல என்பதை "ஏக" என்னும் சொல் உணர்த்துவதாகக் கருத்து.

### ப்ரபத்திக் குறித்து மிகைப்படுத்தப்பட்ட வாதங்களுக்கான மறுப்பு

**மூலம்** – இப்படி ஸித்தோபாயத்தைப் பற்ற, ஸாத்யோபாயம் வ்யாஜமாத்ரமாய், இது ப்ரதாநமன்றிக்கே நிற்கிற நிலையைப் பற்ற ஸம்பந்த ஜ்ஞாநமாத்ரம், ஸித்தோபாய ப்ரதிபத்திமாத்ரம், அநிவாரண மாத்ரம், அநுமதி மாத்ரம், அசித்வ வ்யாவ்ருத்தி மாத்ரம், சைதந்ய க்ருத்யம், சித்த ஸமாதாநம், அதிகாரி விசேஷணம் என்று இப்புடைகளிலே அதிவாதம் பண்ணினார்கள். இவ் அந்யபரோக்தியை கொண்டு இவைதாமே அர்த்தமென்று அறுதியிடவொண்ணாது. இவையெல்லாம் "சரணம் வ்ரஜ" என்கிற விதிக்கு விருத்தங்களாம்.

**விளக்கம்** – இப்படியாக ஸித்தோபாயமாக உள்ள ஸர்வேச்வரனைப் பற்றுவதற்கு ஸாத்யோபாயம் என்பது ஒரு சிறிய காரணமாக (ஒரு சிறிய வாய்ப்பாக) உள்ளது. ஆனாலும் ஒரு சிலர் இந்தச் சிறிய காரணத்தையும், அவசியம் இல்லாமல் பெரிதாக ஊதியபடி உள்ளனர். அவர்கள் ப்ரபத்தி என்பது - “அடிமையாகிய ஜீவாத்மா மற்றும் எஜமானனாகிய பரமாத்மா ஆகியவர்களுக்கு இடையே உள்ள ஸம்பந்தம் குறித்த ஞானம் மட்டுமே ஆகும்”, “ஸர்வேச்வரன் ஸித்தோபாயமாக உள்ளான் என்னும் ஞானம் மட்டுமே ஆகும்”, “அவனுடைய கருணையைத் தடுக்காமல் இருத்தல்”, “அவனுடைய செயல்களுக்கு அனுமதி அளித்தல் மட்டுமே ஆகும்”, “அசித்தைக் காட்டிலும் வேறுபட்டவன் என்னும் எண்ணம் மட்டுமே ஆகும்”, “சேதநர்களுக்கே உரிய செய்கை”, “சித்தத்தின் அமைதியான நிலை”, “அதிகாரியின் சிறப்பு” என்று பலவாக உரைக்கிறார்கள். இப்படியாக வேறு பல கருத்துக்களை மனதில் கொண்டபடி உரைக்கப்பட்ட இவை அனைத்தும் ப்ரபத்தியின் பொருள் என்று உறுதியாகக் கூறமுடியாது. இவை அனைத்தும் “சரணம் வ்ரஜ” என்னும் விதிமுறைக்கு முரண்பாடுகளே ஆகும்.

**மூலம்** - அதிப்ரஸங்காதி தோஷங்களுமுண்டு. அது எங்ஙனேயென்னில் ஸம்பந்த ஜ்ஞாந மாத்ரமென்றாலும், ஸித்தோபாய ப்ரதிபத்தி மாத்ரமென்றாலும் இது வாக்யமாத்ர ஜந்யமாகில் விதி விஷயமாகமாட்டாது. அவிதேய ஜ்ஞாநத்தாலே மோக்ஷமென்பார்க்கு உபாஸநாதி விதி விரோதம் பாஷ்யாதி ஸித்தம், தத்வ ஜ்ஞாநமுடையவனுக்குப் பின்பு கர்த்தவ்யமான ஜ்ஞாநாந்தரமாகில் ப்ரபத்தியினுடைய விதி லக்ஷண அநுஷ்டாந வாக்யங்கள் சொல்லுகிறபடியே இதின் ஸ்வரூபம் அங்கீகரிக்க வேணும், ஸித்தோபாய ஸ்வீகாரமென்ற பாசுரத்துக்கும் ஸித்தோபாயத்தை அறிந்து அது தனக்குக் கார்யகரமாம்படி பண்ணுகிற விதி ப்ராப்த ப்ரார்த்தநா பூர்வக பரந்யாஸ ரூப அதிகாரி க்ருத்யத்திலேயிறே தாத்பர்யம்.

**விளக்கம்** – மேலும் இது போன்று உரைத்தல் என்பது மிகவும் மிகைப்படுத்தி உரைத்தல் என்னும் தவறையும் ஏற்படுத்தும். எப்படி? ப்ரபத்தி என்பது - “அடிமையாகிய ஜீவாத்மா மற்றும் எஜமானனாகிய பரமாத்மா ஆகியவர்களுக்கு இடையே உள்ள ஸம்பந்தம் குறித்த ஞானம் மட்டுமே ஆகும்” மற்றும் “ஸர்வேச்வரன் ஸித்தோபாயமாக உள்ளான் என்னும் ஞானம் மட்டுமே ஆகும்” என்றால், இத்தகைய ஞானமானது நேரடியாகவே அறியப்படும் என்பதால், “இதனை அறிவாயாக” என்று கூறும் விதிவாக்கியங்கள் அவசியம்

அற்றதாகும். மோக்ஷம் என்பது சாஸ்த்ரங்களில் விதிக்கப்படாத ஞானம் மூலமே கிட்டும் என்று கூறினால், இத்தகைய கருத்துக்கள் உபாஸனை விதிகளுக்கு விரோதம் என்று ஸ்ரீபாஷ்யம் முதலானவற்றில் கூறப்பட்டது. உண்மையைக் குறித்த ஞானம் கொண்ட ஒருவன், அதனைத் தொடர்ந்து ப்ரபத்தி என்னும் ஞானம் பெறவேண்டும் என்று கூறினால், இத்தகைய ஞானத்தின் ஸ்வரூபத்தை "தகுந்த விதிகள் (சரணம் வ்ரஜ என்பது போன்றவை, இதன் தன்மைகள், இதனைக் கைக்கொள்ளும் முறைகள் (திருமந்த்ரம், த்வயம் ஆகியவற்றைக் கூறியபடியே இருத்தல்)" முதலானவற்றை உரைக்கும் வாக்கியங்கள் மூலமே ஏற்கவேண்டும். "ப்ரபத்தி என்பது ஸித்தோபாயத்தை ஏற்பது மட்டுமே ஆகும்" என்று கூறினால், முதலில் ஸித்தோபாயத்தை அறியவேண்டும், அதனைத் தொடர்ந்து அவனுக்குள்ள தகுதி காரணமாக தனது பாரங்களை ஒப்படைக்கவேண்டும் (பரந்யாஸம்), இத்தகைய ஒப்படைத்தல் என்பது தகுந்த விதிகளில் கூறப்பட்ட ப்ரார்த்தனையின் பின்னரே நடக்கவேண்டும்.

**மூலம்** – அநிவாரணமாத்ரமென்றது விலக்காத மாத்ரமானால், ரக்ஷகனான ஈச்வரனை இவன் முன்பு ப்ரபலனாய் விலக்கினானாகில், ஈச்வரனுடைய ஈச்வரத்வம் ஸங்குசிதமாம். அபராதத்தாலே நிக்ரஹத்தையுண்டாக்கி விலக்கினானாகில், இவன் பண்ணுகிற ப்ரபத்தி ப்ரஸாதநமேயாக வேண்டும். ஸ்வரக்ஷணார்த்த வ்யாபாரத்தாலே விலக்கினானென்னில், நிர்வ்யாபாரமான ஸுஷுப்தி ப்ரளயாத்யவஸ்தைகளிலும் வ்யாபரிக்க யோக்யனாயிருக்கிற ஜாக்ரத் தசையில் விலக்காதேயிருக்கும்போதும், ஈச்வரன் மோக்ஷ ப்ரதாநம் பண்ணப் பார்க்கும்.

**விளக்கம்** – ப்ரபத்தி என்பது பகவானுடைய கருணையைத் தடுக்காமல் இருத்தல் மட்டுமே ஆகும் என்று கூறினால், அவனால் அதிக வலிமை காரணமாக பகவானுடைய செயலையே தடுக்க இயல்கிறது என்றும், பகவானுடைய ஈச்வரத்தன்மை குறைவாக உள்ளது என்றும் பொருளாகிவிடும். "கருணையைத் தடுத்தல்" என்பது, பகவானுடைய ஆணையை மதிக்காமல் ஒரு தவறு செய்துவிட்டு, அதற்கான தண்டனையை தன்னிசையாக ஏற்பதற்காகவே ஆகும் என்று கூறினால், ப்ரபத்தி என்பது ப்ராயச்சித்தம் என்பது போன்றாகிவிடும். "கருணையைத் தடுத்தல்" என்பது தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள முயல்வதால் ஆகும் என்று கூறினால், எந்தவிதமான செயல்களும் இல்லாத நிலைகளான ஆழ்ந்த உறக்கம் மற்றும் ப்ரளயம் ஆகிய காலங்களிலும்,

செயல்கள் செய்ய முடிந்த விழிப்பு நிலையிலும் செயல் செய்யாமல் உள்ள காலங்களிலும், பகவான் இவனுக்கு மோக்ஷம் அளிக்க முனைவான் என்றாகும்.

**மூலம்** – அநுமதி மாத்ரமென்றால் அது உபாஸகனுக்கும் துல்யம். அசித்வ்யாவ்ருத்தி மாத்ரம் ப்ரதிகூல தசையிலும் உண்டாகையாலே இவ்வளவே ரக்ஷணீயதைக்கு உறுப்பாகாது. சைதந்ய க்ருத்யமென்றால் உபாஸநாதிகளும் மற்றுமுள்ள சேதந வ்ருத்திகளுமெல்லாம் சைதந்ய க்ருத்யமாகையாலே, இதுக்கு ஒரு வாசி சொல்லிற்றாகாது. சேதநனுக்குத்தானே வருமதென்று விவக்ஷிக்கில், உபதேசாதிகள் வேண்டாதொழியும். பல அநுபயுக்த சித்த ஸமாதாநமாத்ரம் என்னில், தந்தம் ருச்யநுரூபமாகப் ப்ரதிபுருஷம் வேறுபடும். "வ்ரஜ" என்று விதேயமாய்ப் பலதத்காமாநாதிகளன்றிக்கே இருக்கிற இத்தை, அதிகாரி விசேஷணமென்னவொண்ணாது.

**விளக்கம்** – ப்ரபத்தி என்பது பகவான் தன்னுடைய கருணை இவன் மீது காண்பிக்க இவன் அனுமதி அளித்தல் மட்டுமே ஆகும் என்று கூறினால், அது உபாஸகன் போன்ற நிலையே ஆகும் (இங்கு நாம் ப்ரபந்நன் குறித்து உரைக்கிறோம்). ப்ரபத்தி என்பது அசித்தைக் காட்டிலும் வேறுபட்ட நிலையாக அறிதலே ஆகும் என்றால், அத்தகைய நிலையானது பகவானுக்கு விருப்பம் இல்லாத செயல்களைச் செய்தாலும் காணப்படும்; இது நிச்சயமாக காப்பாற்றுதலுக்குக் காரணமாக அமையாது. ப்ரபத்தி என்பது சேதநங்களின் செயல்படுதல் என்பது மட்டுமே ஆகும் என்று கூறினால், உபாஸனத்திற்கும் சேதநர்களுடைய மற்ற செயல்களுக்கும் (நடத்தல், படித்தல் போன்றவை) எந்தவிதமான வேறுபாடும் இல்லை என்றாகிவிடும்; ஆனால், ப்ரபத்தி என்பது ஒருவனுக்கு தானாகவே வந்து சேர்கிறது என்று கூறினால், ப்ரபத்தியைக் குறித்த உபதேசங்கள் அவசியம் இல்லை என்றாகிவிடும். ப்ரபத்தி என்பது பலனைக் குறித்து எண்ணாமல் உள்ள மனச்சாந்தியே ஆகும் என்றால், அவரவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப இது மாறுபடும். ப்ரபத்தி சென்பது எந்த ஒரு செயலும் அல்ல, அதிகாரியின் ஒரு சிறப்புத்தன்மை மட்டுமே ஆகும் என்று கூறினால், "வ்ரஜ" என்று கூறுவது பொருத்தம் அற்றதாகும்; காரணம், இந்தச் சொல்லானது ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்யவேண்டும் என்பதையும், பலனைக் குறித்து ஏதும் கூறாமலும் உள்ளது.

**மூலம்** – கர்த்தவ்யமாக விதிக்கிற ப்ரபத்தி தனக்கே இப்படி ஏதேனுமொரு கண்ணழிவு பண்ணில், உபாஸநாதிகளையும் இப்படிக் கண்ணழிக்கலாம். இப்போது இம்முகங்களாலே உபாஸநாதிகளிற்காட்டில் ப்ரபத்திக்கு வ்யாவ்ருத்தி சொல்ல நினைத்தது தலைக்கட்டாது. ஸ்வவிஷய ஸ்வீகார விசிஷ்டமாய்க் கொண்டு பலப்ரதமாகா நிற்கச் செய்தே, இஸ் ஸித்தோபாயம் ஸ்வீகாரத்தாலும் நிரபேக்ஷமென்று புத்தி பண்ணவேண்டுமென்னில், இது த்ருஷ்டிவிதிபோலே ஆரோபிதமாதல், ஸ்வவசந விருத்தமாதல் ஆம்.

**விளக்கம்** – செய்யவேண்டும் என்று விதிக்கப்படும் ப்ரபத்தியைக் குறித்தே இத்தனை குற்றங்கள் கூறலாம்படி உள்ளபோது, உபாஸனம் முதலானவற்றைக் குறித்தும் குற்றங்களைக் கூறலாம். இவ்விதம் குற்றங்களைக் கூற நேர்ந்தால், இரண்டிற்கும் குற்றம் உள்ளது என்பது பொதுவாக உள்ளபோது, உபாஸனத்தைக் காட்டிலும் ப்ரபத்தி வேறுபட்டது என்று உரைக்கமுடியாது. ஸித்தோபாயமான பகவான் ஒருவனைக் காப்பாற்றுவதைத் தனது பொறுப்பாக ஏற்றுக்கொண்டு, அவனுக்குரிய பலன்களை அளிக்கிறான் என்னும்போது, இத்தகைய "பகவானின் ஏற்றுக் கொள்ளுதல்" என்பது அவசியம் அற்றது என்று சிலர் உரைக்கிறார்கள்; இவ்விதம் கொண்டால், ப்ரபத்தி என்பது இல்லாத ஒன்றைக் குறித்து த்யானிப்பது போன்று ஆகிவிடும்; இதன் விளைவாக, "பகவானின் ஏற்றுக் கொள்ளுதல்" என்பது அவசியம் அற்றது என்னும் எண்ணமானது, "சரணம் வ்ரஜ" என்று பகவான் கூறும் வாக்குகளுக்கு முரணாகிவிடும்.

**மூலம்** – ஆகையால் ஈச்வரன் ப்ரஸாதநீயனாய்ப் ப்ரதாநமான ஸித்தோபாயம், பக்தி ப்ரபத்திகள் இரண்டும் ப்ரஸாதநங்களாய்க் கொண்டு ப்ரதாநமல்லாத ஸாத்யோபாயங்கள், இவையிரண்டத்தொன்றிலே யதாதிகாரம் நிலையாகக் கடவது.

**விளக்கம்** – ஆகவே ஈச்வரனே வணங்குவதற்குரிய இலக்காகவும், முதன்மையான ஸித்தோபாயமும் ஆகிறான். எனவே பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகிய இரண்டும் முதன்மையாக அல்லாத ஸாத்யோபாயங்கள் என்றாகின்றன. முமுக்ஷு ஒருவன் தனது தகுதிக்கு ஏற்ப இந்த இரண்டில் ஏதேனும் ஒன்றில் நிலை நிற்கவேண்டும்.

## ப்ரபத்தி தவிர வேறு எந்த உபாயத்திலும் ஈடுபடுதல் கூடாது என்பதை “ஏக” என்பது உணர்த்துகிறது

**மூலம்** – அபேக்ஷித பலத்துக்கு உபாயமாக விதித்த ஸாதநாந்தரங்களை இடையிட வேண்டாதபடி ப்ரபத்திக்கு அநந்தரம் பரஸ்வீகாரம் பண்ணின சரண்யன் தனித்து நிற்கும் நிலையைப் பற்ற ஏக சப்தம் என்றும் சொல்லுவர்கள். அது எங்ஙனேயென்னில், ப்ரபத்தியும் பண்ணி அநந்தரம் அதடியாக உபாஸநாதிகளும் அநுஷ்டித்தால் பலோபாயமாகக் கடவனான சரண்யன், அகிஞ்சநனாய் விளம்ப க்ஷமனல்லாத இவன்றிறத்தில் ப்ரபத்திக்கும் தனக்கும் நடுவே நிற்பதொரு சுமை சுமத்தாதே, இவன் சுமையைத் தன் குணங்களின் மேலே ஏறிட்டு, “சரண்யன் த்வாம் ப்ரபந்நா யே த்யாந யோக விவர்ஜிதா: தே அபி ம்ருத்யுபதிக்ரம்ய யாந்தி தத்வைஷ்ணவம் பதம்”, “ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்” என்றும் சொல்லுகிறபடியே, குணவிசிஷ்டனான தானே, நிரபேக்ஷ பலப்ரதனாய் நிற்கும் நிலையை அநுஸந்தித்துக் கொண்டு, சரணமாக அடையென்று இங்கு சொல்லிற்றாயிற்று.

**விளக்கம்** – சேதநன் ஒருவன் விரும்பிய பலனைப் பெறுவதற்கு ஸாதனமாக விதிக்கப்பட்ட மற்ற உபாயங்கள் எதனையும் எதிர்பார்க்க வேண்டாதவிதத்தில், ப்ரபத்திக்குப் பின்னர், அந்தச் சேதநனுடைய அனைத்து பொறுப்புகளையும் தானே ஏற்றுக்கொண்டவனும், அந்தச் சேதநன் சரணம் புகுந்தவனும் ஆகிய ஸர்வேச்வரன் தனித்து நிற்கும் நிலையையே “ஏக” என்னும் சொல் உணர்த்துவதாகச் சிலர் உரைப்பர். எப்படி என்றால், மற்ற உபாயங்கள் எதனையும் கைக்கொள்ளும் சக்தியின்றி, விரைவாகப் பலனைப் பெறுவதற்காக ப்ரபத்தியைக் கைக்கொண்ட சேதநன் விஷயத்தில் ஸர்வேச்வரன், தனக்கும் ப்ரபத்திக்கும் இடையே அந்தச் சேதநனுக்கு வேறு ஒரு உபாயம் என்னும் சுமையை அளிக்காமல், அந்தச் சுமையைத் தன் மீது ஏற்றுக் கொண்டு, ப்ரஹ்மபுராணம் - சரண்யன் த்வாம் ப்ரபந்நா யே த்யாந யோக விவர்ஜிதா: தே அபி ம்ருத்யுபதிக்ரம்ய யாந்தி தத் வைஷ்ணவம் பதம் – யார் பக்தியோகத்தைக் கைக்கொள்ள சக்தியற்றவர்களாக உன்னையே உபாயம் என்று அடைகிறார்களோ அவர்கள், ஸம்ஸாரத்தைக் கடந்து, உன்னுடைய இடமாகிய ஸ்ரீவைகுண்டத்தை அடைகிறார்கள் – என்றும், திருவாய்மொழி (5-7-10) - ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் –

என்றும் கூறுவதற்கு ஏற்ப, அனைத்து குணங்களிலும் சிறப்புற்று இருக்கும் தானே, அந்த மற்ற உபாயங்களின் இடத்தில் நின்று, அவற்றுக்கான பலனை அளிக்கிறான் என்பதையே “ஏக” என்பது உணர்த்துவதாகக் கொண்டு, “சரணம் அடைவாயாக” என்று கூறப்பட்டதாகக் கருத்து.

## ப்ரபத்திக்கு அங்கமாக உள்ளவற்றை அல்லாமல் வேறு எதனையும் அங்கமாக எதிர்பாராமை என்பதை “ஏக” சப்தம் கூறுகிறது

**மூலம்** – இப்படியே பரிபூர்ணனான தன்னைப் ப்ரபத்தி பண்ணும்போது ஆநுகூல்ய ஸங்கல்பாதிகளையொழிய வேறொரு பரிகரத்தை இதிலே வித்யாந்தரத்திற்போலே சொருகிக் கொண்டு, அதுவும் ப்ரஸாதமான உபாயகோடியிலே நிற்கிறதென்னும் நினைவைக் கழிக்கைக்காக, ஏக சப்தமென்றும் சொல்லுவர்கள். “ஆஜ்ஞாநுஜ்ஞைகளாலே அநுஷ்டிக்கும் கர்த்தவ்யாந்தரங்களுமெல்லாம் ப்ரபத்திக்குத் துணையல்ல. இப் ப்ரபத்தியாலே வசீக்ருதனாய்ப் பலம் தரவிருக்கிற நானொருவனுமே இக்ஷ்ணிகோபாயத்துக்குப் ப்ரதிபூவாய் நின்றேன். இப் ப்ரபத்தி பலத்தைப் பற்ற வேறொரு தேவை செய்யவேண்டா. அத்தேவையைத் துணையாகக் கொண்டு உன்னை நான் ரக்ஷிக்கப் புகுகிறேனல்லேன்” என்று தாத்பர்யம். இத்தால் ஆநுகூல்ய ஸங்கல்பாதி விசிஷ்ட ப்ரபத்தியொழியப் ப்ரபத்தி பரிகரம் என்று பேரிட்டுத் தனக்கு வேறொரு ஸஹகாரி காரணத்தைக் கூட்ட வேண்டாவென்று சொல்லிற்றாயிற்று. “யேந கேநாபி ப்ரகாரேண த்வயவக்தா த்வம்” என்றும், “ப்ரபத்தி வாசைவ நிரீக்ஷிதும் வ்ருணே” என்றும் சொல்லுகிறபடியே, பூர்ண ப்ரபத்திக்கு அபேக்ஷிதமான தெளிவு இல்லாவிடிலும், யதாகதஞ்சிதநுஷ்டாநத்தாலே கார்யம் செய்கிற இவ்வுபாயத்துக்கு வேறொரு பரிகரத்தைத் தேடப் ப்ரஸங்கமில்லையிறே.

**விளக்கம்** – அனைத்துவிதங்களிலும் பரிபூர்ணமாக உள்ள அவனிடம் ப்ரபத்தி செய்யும்போது, அவனுக்கு விருப்பமானவற்றைச் செய்தல் மற்றும் விருப்பம் அல்லாதவற்றைத் தவிர்த்தல் ஆகிய இரண்டு மட்டுமே அவசியம் ஆகும்; ஆகவே வித்யைகளுக்கு மற்ற அங்கங்கள் தேவைப்படுவது போன்று, அவனை மகிழ்விப்பதற்காக ப்ரபத்தியில் மற்ற அங்கங்கள் எதனையும் சேர்த்தல் கூடாது; இவற்றை உணர்த்துவதே

“ஏக” என்பதாகும் என்று சிலர் கூறுவர். இங்கு பகவானுடைய திருவுள்ளமானது, “என்னுடைய ஆணைகளாக உள்ளவை அல்லது என்னால் ஏற்கப்படுபவை என்றுள்ள எந்த ஒரு கர்மமும் ப்ரபத்திக்கு அங்கமாக இருப்பதில்லை. ப்ரபத்தியால் வசீகரிக்கப்பட்டு பலன் அளிக்கக்கூடிய நான் மட்டுமே இத்தகைய ப்ரபத்திக்கு ஜாமீனாக உள்ளேன். ப்ரபத்தியின் பலனைப் பெறுவதற்கு வேறு எந்தவொரு தேவையும் இல்லை. அப்படிப்பட்ட எந்த ஒரு துணையையும் கொண்டு நான் உன்னைக் காப்பதில்லை”, என்பதே ஆகும். ஆகவே இதன் மூலம், பகவானுக்கு விருப்பமானவற்றை மட்டுமே செய்தல் என்பது போன்ற சிறப்பானவை தவிர “ப்ரபத்திக்கான அங்கம்” என்று எந்த ஒன்றும் ப்ரபத்திக்குத் துணையாகச் சேர்க்க வேண்டியதில்லை என்று கூறப்பட்டது. சரணாகதி கத்யம் - யேந கேநாபி ப்ரகாரேண த்வயவக்தா த்வம் – ஏதோ ஒருவிதத்தில் த்வயமந்த்ரத்தைக் கூறியபடி உள்ள நீ – என்றும், வரதராஜ ஸ்தவம் (92) - ப்ரபத்தி வாசைவ நிரீக்ஷிதும் வ்ருணே – ப்ரபத்தியைக் கூறும் சொல்லால் உன்னைக் காண – என்றும் கூறுவதற்கு ஏற்ப, பரிபூர்ணமான ப்ரபத்திக்குத் தேவையான தெளிவு ஒருவனிடம் இல்லையென்றாலும், தன்னால் இயன்ற அளவில் ப்ரபத்தியைக் கைக்கொண்டாலே போதுமானது. ஆகவே ப்ரபத்திக்கு வேறு எந்த அங்கத்தின் துணையையும் தேடவேண்டிய அவசியம் இல்லை என்று கருத்து.

**மூலம்** – “தத: ஸாகர வேளாயாம் தர்மாந் அஸ்தீர்ய ராகவ: | அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோததே: || பாஹும் புஜகா போகாபம் உபதாயாரிஸூதந:” என்று பெருமாள் ஸமுத்ரத்தைப் பற்ற சரணாகதி பண்ணினவிடத்திலும், “ஸ ராஜா பரமாபந்நோ தேவச்ரேஷ்டமகாத்ததா | சரண்யம் ஸர்வபூதேசம் பக்த்யா நாராயணம் ஹரிம் || ஸமாஹிதோ நிராஹார: ஷட் ராத்ரேண மஹாயசா: | ததர்சாதர்சிநே ராஜா தேவம் நாராயணம் ப்ரபும்” என்று ஸப்த வ்யாயோபாக்யாநத்திலே ப்ரஹ்மதத்த சரிதத்திலும் சொன்ன ப்ரகாரங்களுமெல்லாம் ப்ரபத்திக்கு அங்கமல்ல. இவ்விரண்டிடமும் ஸபரிகர ப்ரதிசயநாதி ப்ரதாநமாகையாலே, அங்கு அந்த நியமங்கள் சொல்ல ப்ராப்தம். இப்படி ஸுக்ருத ப்ரணாமத்திலும் கண்டு கொள்வது.

**விளக்கம்** – இராமாயணம் யுத்தகாண்டம் (21-1, 2) - தத: ஸாகர வேளாயாம் தர்மாந் அஸ்தீர்ய ராகவ: | அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோததே: || பாஹும் புஜகா போகாபம் உபதாயாரிஸூதந: - விரோதிகளை வெல்பவனாகிய இராமன்,

கடற்கரையில் தர்ப்பங்களைப் படுக்கை போன்று விரித்து, ஸர்ப்பத்தின் சரீரம் போன்ற தனது கையைத் தலையணையாக வைத்துக் கொண்டு, கைகளைக் குவித்தபடி, ஸமுத்ரராஜனின் வருகையை எதிர்நோக்கி, கிழக்குமுகமாகச் சயனித்தான் – என்று இராமன் ஸமுத்ர அரசனிடம் சரணாகதி பண்ணிய இடம் மற்றும் ஹரிவம்சம் (27-11-13) - ஸ ராஜா பரமாபந்நோ தேவச்ரேஷ்டமகாத்ததா | சரண்யம் ஸர்வபூதேசம் பக்த்யா நாராயணம் ஹரிம் || ஸமாஹிதோ நிராஹார: ஷட் ராத்ரேண மஹாயசா: | ததர்சாதர்சிநே ராஜா தேவம் நாராயணம் ப்ரபும் – மிகுந்த ஆபத்தில் இருந்த அந்த அரசன் (இவன் ப்ரஹ்மதத்தன் என்பவன் ஆவான்) தேவர்களில் உயர்ந்தவனும், காப்பவனும், அனைத்து ஜீவராசிகளுக்கும் தலைவனும் ஆகிய நாராயணனை, பக்தியுடன் சரணம் புகுந்தான்; ஆறு இரவுகள் உணவு உண்ணாமல் இருந்த அந்த அரசன், நாராயணனை த்யானத்தால் கண்டான் – என்றுள்ள நிகழ்வில் காணப்படும் ப்ரஹ்மதத்த சரிதத்தில் கூறப்பட்ட உபவாசம் போன்றவை ப்ரபத்திக்கு அங்கம் அல்ல. இந்த இரண்டு இடங்களிலும், இறக்கும்வரை உபவாசம் இருத்தல் என்னும் செயலே முக்கியமானதாக உள்ளதால், அத்தகைய விதிமுறைகள் பொருத்தமே ஆகிறது. இது போன்றே ஸுக்ருத ப்ரணாமத்திலும் பொருந்தும் (ஸுக்ருத ப்ரணாமம் – இரண்டு கைகள் கொண்டு மூன்று முறை அஞ்ஜலி செய்து, முழங்கால் முடிய கைகளை நீட்டி, நெற்றி மூக்கு கன்னம் ஆகியவற்றால் மூன்று முறை பூமியைத் தொட்டு, ஸாஷ்டாங்கமான நமஸ்காரத்தைப் பன்னிரண்டு முறைகள் செய்வது ஆகும்).

**மூலம்** – இங்கு ப்ரபத்த்யத்யாதிகளிற் சொன்ன ஆநுகூல்ய ஸங்கல்பாதி பரிகரங்களொழிய வேறு நியமங்கள் வேண்டா. ஆகிஞ்சந்யைகதநரான "த்ரௌபதீ, தமயந்தீ, ராக்ஷஸீ, விபீஷண, க்ஷத்ரபந்து, முசுகுந்த, கஜேந்த்ர, பாண்டவ, தேவ, ஸுமுக, த்ரிசங்கு, சுநச்சேப, கிராத, காக, கபோதாதிகள்" சரணாகதராகிறபோது, அப்போதைய ஆநுகூல்யாதிகளையொழிய வேறோர் இதிகர்த்தவ்யதையைச் சொல்லக் கண்டிலோம். க்ஷணகால ஸாத்யமாய் நிரபேக்ஷமான ப்ரபத்தி மாத்ரத்தாலே கடுக அவ்வோ சரணாகதர்க்கு அவ்வோ அபேக்ஷித ஸித்தியும் கண்டோம். இப்படி மோக்ஷார்த்த ப்ரபத்தியிலும் இவன் கோரின காலத்திலே பலஸித்திக்குக் குறைவில்லை. இது, "மா சுச:" என்கிற வாக்யத்திற்கும் தாத்பர்யம். "பரித்யஜ்ய" என்கிறவிடத்திலே பரிகராந்தர நைரபேக்ஷ்யம் சொன்ன பொருளிலே "ஏக" சப்தத்தில் இந்த யோஜநை த்ருடீகரணார்த்தமாகக் கடவது. இதுக்கு அர்த்தாந்தரம் விவக்ஷிதமாகவுமாம். "ஏக"

சப்தத்துக்கு இது பொருளானால், "பரித்யஜ்ய" என்கிறவிதுக்கு அங்கு சொன்ன அர்த்தாந்தரங்களைக் கொள்ளவும்.

**விளக்கம்** – ப்ரபத்தியைக் குறித்து உரைத்த அங்கங்களாகிய "பகவானுக்கு விருப்பமானவற்றை மட்டுமே செய்தல்" என்பது போன்றவை அல்லாமல் வேறு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லை. த்ரௌபதீ, தமயந்தீ (உண்மையான நளனைக் கண்டறிவதற்காக, லோகபாலகர்களைச் சரணம் அடைந்தாள்), ராக்ஷஸீ (சீதையிடம் சரணம் புகுந்த த்ரிஜடை), விபீஷணன், க்ஷத்ரபந்து (முனிவரிடம் சரணம் புகுந்தவன்), முசுகுந்தன் (க்ருஷ்ணனிடம் சரணம் புகுந்தவன்), கஜேந்த்ரன் (நாராயணனிடம் சரணம் புகுந்தவன்), பாண்டவர்கள், தேவர்கள் (விஷ்ணுவிடம் சரணம் புகுந்தவர்கள்), ஸுமுகன் (கருடன் மூலமாகப் பகவானிடம் சரணம் புகுந்தவன்), த்ரிசங்கு (விச்வாமித்ரரிடம் சரணம் புகுந்தவன்), சுநச்சேபன் (இந்த்ரனிடமும் உபேந்த்ரனிடமும் சரணம் புகுந்தவன்), கிராதன் (புறாவிடம் அடைக்கலம் புகுந்த வேடன்), காகம் (இராமனிடம் சரணம் புகுந்தவன்), கபோதாதிகள் (சிபிச்சக்ரவர்த்தியிடம் சரணம் புகுந்த புறா என்பது போன்றவை) ஆகிய பலரும் சரணம் புகுந்தபோது, அடைக்கலம் அளித்தவருக்கு "விருப்பமானவற்றை மட்டுமே செய்தல்" என்பதை மட்டும் காணலாம் அல்லாமல், வேறு எந்தவிதமான "இதனைச் செய்யவேண்டும்" என்னும் விதிகளை அல்ல. எந்தவிதமான அங்கங்களையும் எதிர்பாராமல் ஒரு நொடியில் செய்யப்படுகின்ற ப்ரபத்தியானது, சரணம் புகுந்தவர்களுக்கு, அவர்கள் விரும்பிய பலனை அளிப்பதை நாம் காணலாம். இதே போன்று மோக்ஷத்தை விரும்பி செய்யப்படும் ப்ரபத்தியிலும், ப்ரபந்நன் விருப்பப்பட்ட காலத்தில் அவனுக்குப் பலன் கிட்டுவதில் எந்தத் தடையும் இல்லை. இதுவே "மா சுச: - வருத்தம் கொள்ளாதே" என்னும் சொற்றொடரின் கருத்தாகும். "பரித்யஜ்ய" என்பதற்கு "ப்ரபத்திக்கு ஏதும் அவசியம் இல்லை" என்பதைப் பொருளாகக் கொண்டால், "ஏக" என்பது இந்தக் கருத்தை மிகவும் உறுதியாக உரைப்பதாக உள்ளது என்றாகும். அல்லது "ஏக" என்பது உபாயமும் உபேயமும் ஒன்றே ஆகும் என்பதைக் கூறுவதாகவும் கொள்ளலாம். மாறாக "ஏக" என்பதற்கு "ப்ரபத்திக்கு ஏதும் அவசியம் இல்லை" என்பதைப் பொருளாகக் கொண்டால், "பரித்யஜ்ய" என்பது முன்பே கூறிய பொருளைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

**மூலம்** – ஸபரிகர ப்ரபத்திக்கு உபாஸநாதிகளான அங்கிகளையும், இவற்றின் பரிகரங்களான தர்மாந்தரங்களையும் கழிக்கிற இப்பொருள்களில் இவ் ஏக சப்தம் சரண்யனை விசேஷித்தபடி என்னென்னில், அகிஞ்சநன் பக்கலிலே இவை ப்ரஸாதநமாய்க் கொண்டு, சரண்யனோடு துவக்கற்றமை காட்டுகைக்காக “மாம் ஏகம்” என்கிறது.

**விளக்கம்** – ஆனால், “ஏக” என்பது ப்ரபத்தியைக் குறிப்பதாகவே இருக்கவேண்டும் என்னும்போது, அது சரணம் அடையத்தக்கவனாக உள்ள ஸர்வேச்வரனைக் குறித்து உள்ளதாக எவ்விதம் கூறலாம் என்னும் கேள்விக்கு விடை அளிப்போம். மற்ற உபாயங்கள் ஏதும் இன்றி உள்ள ஒருவனுக்கு, ப்ரபத்தி தவிர உள்ள மற்ற எந்தவிதமான தர்மங்களும் ஈச்வரனுடைய உபாஸனையாக இருப்பதில்லை என்பதையே, “மாம் ஏகம்” என்பது உணர்த்துகிறது.

## பகவானே அனைத்து பலன்களுக்கும் ஸாதனம் என்பதை “ஏக” சப்தம் உணர்த்துகிறது

**மூலம்** – “ஸர்வதர்மாந்” என்கிற கீழில் “ஸர்வ” சப்தத்தையும், “ஸர்வபாபேப்யோ” என்கிற மேலில் “ஸர்வ” சப்தத்தையும் பார்த்து, இவ் ஏக சப்தம் “ஸர்வ” சப்தத்துக்கு ப்ரதிஸம்பந்தியாய் நிற்கிறதென்றும் சொல்லுவார்கள். அப்போது, “ஸுதுஷ்கரேண சோசேத் யோ யேந யேந இஷ்டஹேதுநா | ஸ ஸ ஸத்யாஹமேவேதி சரம ச்லோக ஸங்க்ரஹ:”.

**விளக்கம்** – சரமச்லோகத்தின் முதல் வரியில் உள்ள “ஸர்வதர்மாந்” என்பதில் உள்ள “ஸர்வ” என்னும் சொல், இரண்டாவது வரியில் உள்ள “ஸர்வபாபேப்யோ” என்பதில் உள்ள “ஸர்வ” என்னும் சொல் ஆகிய இரண்டையும் ஆராய்ந்த பின்னர், “ஏக” என்னும் சொல்லானது, “ஸர்வ” என்பதற்கு எதிராக உள்ளது என்று சிலர் கூறுவர். இவ்விதம் கொண்டால், ஸுதுஷ்கரேண சோசேத் யோ யேந யேந இஷ்டஹேதுநா | ஸ ஸ ஸத்யாஹமேவேதி சரம ச்லோக ஸங்க்ரஹ: - யார் ஒருவன் தன்னால் செய்வதற்கு மிகவும்

அரிதாக உள்ள உபாயத்தைக் கைக்கொள்ள இயலாத காரணத்தால் வருத்தம் அடைவானோ, அவனுக்கு அந்த உபாயமாக நானே உள்ளேன் என்பதே கருத்தாகிவிடும்.

**மூலம்** – இத்தாலே என் சொல்லிற்றாயிற்று என்னில், "யத்யேந காமகாமேந ந ஸாத்யம் ஸாதநாந்தரை: | முமுக்ஷுணா யத் ஸாங்க்யேந யோகேந ந ச பக்தித: || ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே யதி: | தேந தேநாப்யதே தத்தத் ந்யாஸேநைவ மஹாமுநே || பரமாத்மா ச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம:" என்கிற கட்டளையிலே தனக்கு அபிமதங்களாயிருப்பதேனும் ஒரு பலங்களைப் பற்ற அவற்றுக்கு அநுகுணமாகத் தனித்தனியே சாஸ்த்ரங்களாலே விதிக்கப்பட்ட உபாயங்களில் ஜ்ஞாந அபாவத்தாலேயாதல், ஜ்ஞாநமுண்டாயிருக்க சக்த்யபாவத்தாலேயாதல், இவையிரண்டும் உண்டாயிருக்க விளம்பாக்ஷமத்வத்தாலேயாதல் சோகித்த அதிகாரியைப் பற்ற, "அவ்வுபாயங்களொன்றிலும் நீ அலையவேண்டா. அவை தனித்தனியே தரும் பலங்களுக்கெல்லாம் ப்ரபத்தி வசீக்ருதனான நான் ஒருவனுமே அமையும்" என்று சொல்லிற்றாயிற்று. "பல ஔஷதங்கள் தரவல்ல ஆரோக்யத்தை எல்லாம் இஸ் ஸித்தௌஷதம் ஒன்றுமே தரவற்றாகையாலே, நீ ஔஷதாந்தரங்களுக்கு அலமராதே, இந்த ஔஷதமொன்றையுமே உபஜீவிக்கவமையும்; இது உனக்கு அந்த ஔஷதங்களாலே கழிக்கப்படும் வ்யாதிகள் எல்லாவற்றையும் கழிக்கும்; உனக்குப் பின்பு ஸர்வபோகங்களையும் புஜிக்கலாம், நீ ஆரோக்யத்தையும் போகங்களையும் இழக்கிறோமென்று வெறுக்கவேண்டா" என்று சொல்லுமாப்போலேயிருக்கிறது இச் சரமச்லோகம்.

**விளக்கம்** – இதன் மூலம் கூறப்படுவது என்னவென்றால், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37, 25 – 27) - யத்யேந காமகாமேந ந ஸாத்யம் ஸாதநாந்தரை: முமுக்ஷுணா யத் ஸாங்க்யேந யோகேந ந ச பக்தி: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே யதி: தேந தேநாப்யதே தத்தத் ந்யாஸேநைவ மஹாமுநே பரமாத்மா ச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம: - பயனில் விருப்பம் கொண்ட பலராலும், எந்தெந்த பலன்கள் மற்ற உபாயங்களால் அடைய இயலாதோ, முமுக்ஷுவால் மோக்ஷம் என்னும் பலன் கர்மயோகம், ஞானயோகம் மற்றும் பக்தியோகம் ஆகியவற்றால் அடைய இயலாதோ அப்படிப்பட்ட பலவிதமான பலன்களும் ப்ரபத்தியால் அடையப்படுகின்றன. அப்படிப்பட்ட ப்ரபத்தி மூலமே புருஷோத்தமனாகிய பரமாத்மாவும் அடையப்படுகிறான். எங்கு சென்றால் மீண்டும் திரும்புவது என்பது இல்லையோ, அந்த இடமே முமுக்ஷுக்களால் விரும்பப்படும் இடமாகும் – என்பதற்கு ஏற்ப ஒருவன் தனக்கு விருப்பமான ஏதேனும் ஒரு பலனை

அடைவதற்கு சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட விதிமுறைகள் என்ன என்னும் ஞானம் இல்லாத காரணத்தாலோ, அல்லது அந்த விதிமுறைகளைக் குறித்த ஞானம் உள்ளபோதிலும் அதற்கான சக்தி இன்றி இருப்பதாலோ, அல்லது இந்த இரண்டும் உள்ளபோதிலும் (ஞானம் மற்றும் சக்தி) அந்தப் பலனைப் பெறுவதில் உள்ள காலதாமதத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாத காரணத்தாலோ சோகத்தில் இருக்கக்கூடும். இப்படிப்பட்ட சோகத்தில் உள்ள அவனிடம் சரம ச்லோகமானது, "நீ அது போன்று உபாயங்களைத் தேடி அலையவேண்டாம். ப்ரபத்தி மூலம் வசப்படக்கூடிய நானே, அந்த உபாயங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே தருகின்ற அனைத்து பலன்களையும் தரவல்ல உபாயம் ஆவேன்", என்று கூறுவதாக உள்ளது. அதாவது, "பல மருந்துகள் சேர்ந்து அளிக்கவல்ல ஆரோக்யத்தை இந்த உயர்ந்த மருந்து ஒன்று மட்டுமே அளிக்கவல்லது என்பதால், நீ மற்ற மருந்துகளை அடைய முயலவேண்டாம். இந்த ஒரு மருந்து மட்டுமே போதுமானதாகும். மற்ற மருந்துகள் அனைத்தும் சேர்ந்து நீக்குகின்ற வ்யாதிகள் அனைத்தையும், இந்த ஒரு மருந்து மட்டுமே விலக்கும். அதன் பின்னர் நீ அனைத்து இன்பங்களையும் அனுபவிக்கலாம். ஆகவே நீ ஆரோக்யம் மற்றும் இன்பங்கள் ஆகியவற்றை இழந்தோமே என்று சோகம் அடையவேண்டாம்", என்று கூறுவதாகவே சரம ச்லோகம் அமைந்துள்ளது.

### ப்ரபத்தியே அனைத்து உபாயங்களாக இருத்தல்

**மூலம்** – "ஸர்வ" சப்த ப்ரதிஸம்பந்தியான "ஏக" சப்தம், ஸித்தோபாய ப்ராதாந்யத்தாலே, சரண்யனை விசேஷித்துக் கொண்டு நின்றாலும், "ந்யாஸேநைவ" என்கிறபடியே ப்ரபத்தியொன்றுமே ஸர்வதர்மாந்தர ஸ்தாநத்திலும் விதிக்கப்படுகிறதென்று லபிக்கும். இத்தால், த்ரிவர்கார்த்தங்களும் இப் பகவத் ப்ரபத்தி பண்ணலாம் என்றதாயிற்று. அப்போது, "த்வயாபி ப்ராப்தம் ஐச்வர்யம் யதஸ்தம் தோஷயாம்யஹம்", "நாஹமாராதயாமி த்வாம் தவ பத்தோயமஞ்ஜலி:", "ஸ த்வம் ப்ரஹர வா மா வா மயி வஜ்ரம் புரந்தர | நாஹம் உத்ஸ்ருஜ்ய கோவிந்தம் அந்யமாராதயாமி போ:" இத்யாதிகளிற்படியே, நித்ய நைமித்திகங்களில் விசேஷணமாய்ப் புகுமளவேயொழிய மற்றும் ஸர்வாவஸ்தையிலும் தேவதாந்தர ஸ்பர்சமற்றிருக்கை உசிதம். மோக்ஷத்துக்கு உபாயாந்தரார்த்தங்களாய் உபாய விரோதிகளைக் கழிக்க வேண்டுவார்க்கும் இப் ப்ரபத்தி

பண்ணலாம். ப்ராப்தி விரோதியைக் கழிக்க வேண்டுவார்க்கும் இப் ப்ரபத்தி தானே அமையுமென்று ப்ரபத்தியினுடைய ஸகல அபிமத ஸாதநத்வம் இங்கே சொல்லிற்றாயிற்று. இதில் ப்ரபத்தி உபாய விரோதியைக் கழிக்கும் கட்டளையை, ஸ்ரீகீதாபாஷ்யத்தில் த்விதீய யோஜநையிலே அருளிச்செய்தார். ப்ராப்தி விரோதியைக் கழிக்கும் கட்டளையை, கத்யத்திலே அருளிச்செய்தார். இவை இரண்டிடத்திலும் ஒன்றை அநாதரித்து ஒன்றை அருளிச்செய்தபடியன்று. இரண்டு இடமும் ஸர்வாபிமத ஸாதநமான இவ்வுபாயத்தின் ப்ரபாவத்துக்கு உதாஹரண பரம்.

**விளக்கம்** - "ஸர்வ – அனைத்தும்" என்பதன் எதிர்மறையாக உள்ள "ஏக = ஒன்று மட்டுமே" என்பது, ஸித்தோபாயமாக உள்ளவனும் அனைவரும் சரணம் புகத்தக்கவனும் ஆகிய ஸர்வேச்வரனையே சிறப்பாகக் கூறியபடி உள்ளது; ஆனாலும், "ந்யாஸேந ஏவ = ப்ரபத்தியால் மட்டுமே" என்பதற்கும் ஏற்ப அனைத்து தர்மங்களின் இடத்தி, ப்ரபத்தி மட்டுமே விதிக்கப்படுகிறது என்பதை உணர்த்துவதாகவே உள்ளது. ஆகவே தர்மம், அர்த்தம், காமம் ஆகிய முதல் மூன்று புருஷார்த்தங்களை விரும்புபவர்கள் கூட, அவற்றை அடைவதற்காகப் பகவானிடம் ப்ரபத்தி செய்யலாம் என்றாகிறது. இவ்விதம் உள்ளபோது, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (2-14) - த்வயாபி ப்ராப்தம் ஐச்வர்யம் யதஸ்தம் தோஷயாம்யஹம் – இந்த்ரனே! நீ இந்த ஐச்வர்யத்தை யார் மூலம் பெற்றாயோ அந்த பகவானை நானும் மகிழ்விக்கிறேன் – என்றும், ஸ்ரீவிஷ்ணுதர்மம் (2-8) - நாஹமாராதயாமி த்வாம் தவ பத்தோயமஞ்ஜலி: - நான் உன்னை ஆராதிக்கமாட்டேன், உனக்கு ஒரு கும்பிடு இடுகிறேன் – என்றும், ஸ்ரீவிஷ்ணுதர்மம் (2-24) - ஸ த்வம் ப்ரஹர வா மா வா மயி வஜ்ரம் புரந்தர | நாஹம் உத்ஸ்ருஜ்ய கோவிந்தம் அந்யமாராதயாமி போ: - இந்த்ரனே! நீ என்னை உனது வஜ்ராயுதம் கொண்டு அடித்தாலும் அடிக்காவிட்டாலும், நான் கோவிந்தனை அல்லாமல் வேறு யாரையும் ஆராதிக்கமாட்டேன் – என்றும் உள்ள வரிகளுக்கு ஏற்ப, நித்ய நைமித்திக கர்மங்கள் அல்லாமல், மற்ற அனைத்து நிலைகளிலும் வேறு தெய்வத்தின் தொடர்பு அற்று இருத்தலே உசிதமாகும். மோக்ஷத்தைப் பெறுவதற்காக மற்ற உபாயங்களை (பக்தியோகம் போன்றவை) நாடுபவர்களுக்கும், தங்களுடைய அத்தகைய செயல்களுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல் இருப்பதற்காக ப்ரபத்தியைச் செய்யலாம். பகவானை அடையவிடாமல் தடுக்கும் தடைகளாக உள்ள பாபங்கள் போன்றவை கழிவதற்கும் ப்ரபத்தியைக் கைக்கொள்ளலாம். இப்படியாக ப்ரபத்தியானது அனைத்துவிதமான விருப்பங்களையும் நிறைவேற்றிக்

கொடுக்கும் தன்மை கொண்டது என்பதை சரமச்லோகம் கூறுகிறது. இவற்றில் ப்ரபத்தியானது உபாயங்களைக் கைக்கொள்ளவிடாமல் தடுக்கின்ற பாபங்கள் முதலானவற்றை விலக்குகிறது என்பதை எம்பெருமானார் தனது ஸ்ரீகீதாபாஷ்யத்தில், சரமச்லோகத்திற்கான இரண்டாவது விளக்கத்தில் அருளிச்செய்தார். ப்ரபத்தியானது பகவானை அடையவிடாமல் தடுக்கின்ற பாபங்கள் முதலானவற்றை விலக்குகிறது என்பதை எம்பெருமானார் சரணாகதி கத்யத்தில் அருளிச்செய்தார். இந்த இரண்டு இடங்களில், ஒரு இடத்தில் மற்றொரு இடத்தில் கூறப்பட்ட விஷயத்தைத் தள்ளியபடி அருளிச்செய்தார் என்று கூறக்கூடாது. இந்த இரண்டு இடங்களிலுமே, ப்ரபத்தி உபாயமானது அனைத்துவிதமான விருப்பங்களையும் நிறைவேற்றும் தன்மை கொண்டது என்று அதன் ப்ரபாவத்தை விளக்கும் உதாரணங்களாகவே உள்ளன.

**மூலம்** – ப்ரணவம் மந்த்ராந்தரத்தில் ப்ரவேசித்து நின்றும், ஸ்வதந்த்ரமாயும் நிற்குமாப்போலே, இப் ப்ரபத்தி அதிகாரி விசேஷத்தில் பக்த்யங்கமுமாய், அதிகார்யந்தரத்திலே ஸ்வதந்த்ரமுமாயிருக்கை வசந பலத்தாலே ஸித்தம். இப்படி நியதாதிகாரமாக பக்தி ப்ரபத்திகள் விகல்பித்து நிற்கிற நிலை, "பக்த்யா பரமயா வாபி ப்ரபத்த்யா வா மஹாமதே" இத்யாதிகளிலே ப்ரஸித்தம். ஆகையால், "ஸம்யக் ஜ்ஞாநேந வா மோக்ஷம் பங்காயாம் மரணேந வா | ப்ரணாமத்வாபி ஸு॒க்ருதாத் பக்த்யா வா லபதே நர:" இத்யாதிகளிலே ஸாக்ஷாதுபாயத்தோடே கூடப் பரம்பரோபாயங்களை எடுத்ததுவும் அவற்றினுடைய ப்ராசஸ்த்ய அதிசயம் தோற்றுகைக்காகவத்தனை.

**விளக்கம்** – ப்ரணவமானது மற்றொரு மந்த்ரத்தில் புகுந்து, அந்த மந்த்ரத்தில் பகுதியாகவே நிற்கிறது (அதாவது "நமோ நாராயணாய" என்பதில் "ஓம்" என்னும் ப்ரணவம் புகுந்து, அதன் பகுதியாக நிற்கிறது); ஆனாலும் அத்தகைய ப்ரணவமானது தனியான ஒரு மந்த்ரமாகவும் உள்ளது. இது போன்றே ப்ரபத்தியானது, தகுந்த அதிகாரிகளுக்கு பக்தி உபாயமாகவும், பக்தி அதிகாரி அல்லாத மற்றவர்களுக்கு தனியான உபாயமாகவும் உள்ளது; இதனை பல ப்ரமாணங்களால் அறியலாம். இப்படியாக பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகியவை, அந்தந்த அதிகாரிகளுக்கு ஏற்றபடி, தனித்தனி உபாயமாக உள்ளன என்பதை பக்த்யா பரமயா வாபி ப்ரபத்த்யா வா மஹாமதே – சிறந்த புத்தி கொண்டவனே! நான் பக்தியாலோ அல்லது ப்ரபத்தியாலோ அடையத்தக்கவன் – என்பது போன்றவற்றால் அறியலாம். ஆகவே, ஸம்யக் ஜ்ஞாநேந வா மோக்ஷம் பங்காயாம் மரணேந வா |

ப்ரணாமத்வாபி ஸுக்ருதாத் பக்த்யா வா லபதே நர: - ஒருவன் சிறந்த ஞானத்தாலோ, அல்லது கங்கையில் விழுந்து மரணம் அடைவதாலோ, அல்லது சரியான வணக்கத்தாலோ, அல்லது பக்தியோகத்தாலோ மோக்ஷம் அடைகிறான் – என்பது போன்ற வாக்கியங்களில், மோக்ஷத்திற்கான நேரடியான உபாயத்துடன் சேர்த்து, மோக்ஷத்திற்கான உபாயத்தின் அங்கங்களாக உள்ளவையும் கூறப்பட்டுள்ளன. இது ஏனென்றால், இத்தகைய மறைமுகமான உபாயங்களின் பெருமைகளை உரைப்பதற்காகவே ஆகும்.

## "ஏக" என்பதன் ஆறு பொருள்களுடைய சுருக்கம்

**மூலம் –**

(1) ப்ராப்யஸ்ய ஏவ ப்ராபகத்வம் ஸ்வப்ரதாந்ய நிவாரணம்
ப்ரபத்தே: வ்யாஜமாத்ரத்வம் அந்ய உபாயை: அநந்வய:
(2) தத் அங்கைரபி அஸம்பந்த: ஸர்வ ஸாத்யேஷு அபிந்நதா
இத்தம் அர்த்தா: ஷடாசார்யை: ஏக சப்தஸ்ய தர்சிதா:

**பொருள் –**

(1) அடையப்படவேண்டிய இலக்காக உள்ள ஸர்வேச்வரனே, அந்த இலக்கை அடைய வைக்கின்ற உபாயமாகவும் இருத்தலை உணர்த்துதல்; ஜீவாத்மா தானும் உபாயத்தில் பங்கு வகிப்பவன் என்று தன்னை முக்கியமாக எண்ணிவதைத் தடுத்தல்; ப்ரபத்தி என்பது ஒரு வ்யாஜம் (வாய்ப்பு எனலாம்) மட்டுமே என்று உணர்த்துதல்; மற்ற உபாயங்களுடன் ஸம்பந்தம் இல்லாமல் இருத்தல்;

(2) மற்ற உபாயங்களின் அங்களுடனும் ஸம்பந்தம் இல்லாமல் இருத்தல்; அனைத்து பயன்களையும் தான் மட்டுமே அளிக்கவல்லதாக உள்ள தன்மை ஆகிய ஆறு பொருள்கள் "ஏக" என்னும் சொல்லிற்கு உள்ளதாக ஆசார்யர்களால் உணர்த்தப்பட்டது.

## "ஏக" என்ற பதமானது பெரியபிராட்டி உபாயமாக உள்ளதை விலக்குவதில்லை என்னும் விளக்கம்

மூலம் –

(1) கேசித் து இஹ ஏக சப்தார்த்தம் சரண்ய ஐக்யம் ப்ரசக்ஷதே
விசிநஷ்டி ததா அபி ஸ்ரீ: குணவிக்ரஹவத் ப்ரபும்
(2) ஈச்வரீ ஸர்வபூதாநாம் இயம் பகவத: ப்ரியா
ஸம்ச்ரித த்ராண தீக்ஷாயாம் ஸஹதர்மசரீ ஸ்ம்ருதா
(3) ஏகம் ஜகத் உபாதாநம் இதி உக்தே ப்ரமாணத:
யதா அபேக்ஷித வைசிஷ்டயம் ததா அத்ராபி பவிஷ்யதி
(4) ஏக உபாஸித விதாநே அபி குணதீநாம் யதா அந்வய:
தத் ஏக சரண வ்ரஜ்யா விதாநே அபி அநுமந்யதாம்
(5) ததா குணாதி வைஷ்டயே ஸித்தோபாய ஐக்யம் அக்ஷதம்
ஏவம் பத்நீ விசிஷ்டத்வே அபி அபீஷ்டம் சாஸ்த்ர சக்ஷுஷாம்
(6) ப்ரபா ப்ரபாவதோ: யத்வத் ஏக உக்தௌ இதர அந்வய:
ஏவம் அந்யதர உக்தௌ ஸ்யாத் ஸஹவ்ருத்தி அபிதாநத:
(7) ஸ்மரந்தி ச ஏநாம் முநய: ஸம்ஸார அர்ணவ தாரிணீம்
ஊசது: ஸ்வயம் அபி ஏதத் ஸாத்வதாதிஷு தாவுபௌ
(8) உபாய உபேய தசயோ: த்வயே அபி ஸ்ரீ: ஸமந்விதா
இஷ்டா ச சேஷிணி த்வந்தே சேஷ வ்ருத்தி: யதா உசிதா
(9) அத: அநந்யபர அநேக ச்ருதி ஸ்ம்ருதி அநுஸாரத:
பத்நீ விசிஷ்ட ஏவ ஏக: ப்ரபத்தவ்ய இஹ உதித:

**பொருள் -**

(1) ஆனால் ஒரு சிலர், சரமச்லோகத்தில் உபாயமாக உள்ள வஸ்து ஒன்றாக இருத்தல் என்பதையே "ஏக" என்னும் சொல் உணர்த்துவதாகக் கூறுகிறார்கள். இவ்விதம் கொண்டாலும், ஸர்வேச்வரனுடைய கல்யாணகுணங்கள் மற்றும் அவனுடைய திருமேனி

போன்றவை அவனுக்கு எவ்விதம் விசேஷணங்களாக (விசேஷணம் என்றால் ஒரு பொருளை மற்றவற்றிலிருந்து தனித்து உணர்த்தக்கூடிய தன்மைகள்) உள்ளனவோ, அது போன்றே பெரியபிராட்டியும் நின்று, உபாயமாக உள்ளாள் என்றே கொள்ளவேண்டும்.

(2) அனைத்து உயிர்களுக்கும் ஈச்வரரியும், ஸர்வேச்வரனுக்கு ப்ரியமானவளும் ஆகிய இந்தப் பெரியபிராட்டி, அவனுடைய "அடியார்களைக் காப்பாற்றுதல்" என்னும் விரதத்தில் அவனுடன் சேர்த்து நின்று, அத்தகைய தர்மத்தைச் செய்கிறாள் என்று கூறப்படுகிறாள்.

(3) இந்த ஜகத்தின் உபாதானக் காரணம் என்பது ஒரே வஸ்துவே (ப்ரஹ்மம்) ஆகும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனாலும், ஸூக்ஷ்மமான சித் மற்றும் அசித் ஆகியவற்றுடன் ப்ரஹ்மம் சேர்ந்திருந்தல் என்பது எவ்விதம் ப்ரமாணங்களால் காண்பிக்கப்படுகிறதோ, அதே போன்று, பெரியபிராட்டி விஷயத்திலும் உண்டு.

(4) ஒருவனை மட்டுமே உபாஸிக்கவேண்டும் என்று கூறப்பட்டாலும், குணம் முதலானவற்றுக்கும் எவ்விதம் உபாஸனையில் ஸம்பந்தம் ஏற்கப்படுகிறதோ அது போன்று, இவளுடைய ஸம்பந்தமும் ஏற்கப்படவேண்டும்.

(5) ஸித்தோபாயத்திற்கு (ஸர்வேச்வரனுக்கு) எவ்விதம் குணம் முதலானவற்றுடன் சேர்ந்திருப்பதில் தடை இல்லையோ அது போன்றே, பெரியபிராட்டியுடன் சேர்ந்திருப்பதும் சாஸ்த்ரங்களை மட்டுமே கண்ணாகக் கொண்டவர்களுக்கு விருப்பமானதே ஆகும்.

(6) ஒளி மற்றும் ஒளியுடன் கூடிய பொருள் ஆகிய இரண்டினுள் ஏதேனும் ஒன்றைக் கூறினாலே மற்றொன்றின் ஸம்பந்தம் எவ்விதம் தானாகவே வெளிப்படுகிறதோ அது போன்றே, ஸர்வேச்வரன் மற்றும் பெரியபிராட்டி ஆகியோர்களில் ஒருவரைக் கூறினால் மற்றவரும் கூறப்பட்டவர் ஆகிறார்.

(7) ஸம்ஸாரம் என்னும் ஸமுத்ரத்தைக் கடக்க வைப்பவளாக பெரியபிராட்டியார் உள்ளதை முனிவர்கள் ஸ்ம்ருதிகளில் கூறுகிறார்கள். இந்த விஷயத்தை ஸர்வேச்வரனும் பெரியபிராட்டியும் ஸாத்வத ஸம்ஹிதை போன்றவற்றில் தாங்களே உரைத்தனர்.

(8) த்வய மந்த்ரத்தில், எஜமானர்களாகிய இந்த இருவரிடமும் எவ்விதம் கைங்கர்யமானது ஏற்றுக் கொள்ளப்பட்டு, பொருத்தமாக உள்ளதோ அது போன்றே, ஸர்வேச்வரன் உபாயம் மற்றும் உபேயமாக உள்ள இரண்டு நிலைகளிலும் பெரியபிராட்டியும் சேர்ந்தே உள்ளாள்.

(9) எனவே மற்ற பொருளைக் குறித்து உரைக்கின்ற குறிக்கோள் ஏதும் இல்லாத பல ச்ருதிகள் மற்றும் ஸ்ம்ருதிகள் ஆகியவற்றைப் பின்பற்றியே, "ஒருவனாக உள்ள ஸர்வேச்வரன் பெரியபிராட்டியுடன் கூடியவனாகவே ப்ரபத்தி செய்யப்பட வேண்டியவன்" என்று இந்தச் சரம ச்லோகம் கூறுகிறது.

### சரண என்னும் சொல்லின் பொருள்

**மூலம்** – இங்குற்ற சரண சப்தத்துக்கும், த்வயாதிகாரத்திற் சொன்ன பொருளை அநுஸந்தித்துக் கொள்வது. இந்த சரணவரணம் அர்ஜுநனைக் குறித்து உபதேசிக்கப்பட்டதே யாகிலும், "அநாலோசித விசேஷ அசேஷ லோக சரண்ய" என்கிறபடியே ஸர்வ விஷயமென்னுமிடம் ச்வேதாச்வதர ச்ருதி ப்ரஸித்தம். "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்", "சரண்யம் சரணம் ச த்வாம்", "யோகோ யோகவிதாம் நேதா", "அம்ருதம் ஸாதநம் ஸாத்யம்" இத்யாதிகளிலும் ஸங்கோசமில்லாமையாலே ஸர்வ விஷயத்வம் விவக்ஷிதம். இப்படி இவன் சரணமாக வரணீயனாம்போதைக்குத் தான் அநந்யசரணனாகையே வேண்டுவது.

**விளக்கம்** – சரமச்லோகத்தில் உள்ள "சரண" என்னும் சொல்லிற்கு, த்வய அதிகாரத்தில் கூறப்பட்ட பொருளையே எடுத்துக் கொள்ளலாம். இங்குள்ள சரண என்னும் சொல்லானது அர்ஜுனனைக் குறித்து உபதேசிக்கப்பட்டபோதிலும், சரணாகதி கத்யத்தில் - அநாலோசித விசேஷ அசேஷ லோக சரண்ய – தன்னை அடைந்தவர்களிடம்

எந்தவிதமான சிறப்பையும் ஆராயாமல் அனைத்து லோகங்களுக்கும் அடைக்கலமாக உள்ளவன் – என்பதற்கு ஏற்ப அனைவருக்கும் இங்குள்ள "சரண" என்ற சொல்லானது பொருந்தும் என்பதை ச்வேதாஸ்வதர ச்ருதி மூலம் அறியலாம். மேலும் மஹாபாரதம் வனபர்வம் (71-123) - க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் – க்ருஷ்ணனையே எப்போதும் உள்ள தர்மமாகக் கொண்டு – என்றும், இராமாயணம் யுத்தகாண்டம் (120-18) - சரண்யம் சரணம் ச த்வாம் – சரணம் அடைந்தவர்களைக் காப்பவனாக நீயே உள்ளாய் – என்றும், ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் (18, 19) - யோகோ யோகவிதாம் நேதா – மோக்ஷத்தின் உபாயமாகவும், பக்தியோகத்தில் நிற்பவர்களுக்குப் பலனை அளிப்பவனாகவும் உள்ளவன் – என்றும், ஸ்ரீவிஷ்ணுதர்மம் (72-4) - அம்ருதம் ஸாதநம் ஸாத்யம் – அவனையே அழியாத உபாயமாகவும் பலனாகவும் கொண்டு – என்றும் கூறுவதற்கு ஏற்ப "சரண" என்னும் சொல்லிற்கு குறிப்பிட்ட அளவு மட்டுமே பொருள் உள்ளது என்னும் எல்லை எல்லாத காரணத்தால், அனைவருக்குமே பொருந்தும் என்றாகிறது. அவனைச் சரணம் என்று அடையும்போது, வேறு எதனையும் சரணம் என்று புகாமல் இருத்தலே அவசியமாகிறது.

## வ்ரஜ என்னும் சொல்லின் பொருள்

**மூலம்** – வ்ரஜ என்கிற சப்தமும் ப்ரபத்யே என்கிறவிடத்தில் அறுதியிட்ட ஸபரிகர ஆத்ம நிபேக்ஷத்தையே சொல்லுகிறது. அவ்விடம் அநுஷ்டாதாவினுடைய அநுஸந்தாநமானபடியாலே உத்தமனாயிற்று. இவ்விடம் "சிஷ்யஸ்தே அஹம் சாதி மாம்" என்கிற அபிமுகனாக நின்றவனைக் குறித்து விதிக்கிறதாகையாலே மத்யமனாயிற்று. இவ் ஆநுகூல்ய ஸங்கல்பாதி அங்காந்தரங்களும் இங்கே ஸூசிதமானபடியை த்வயத்திற்போலே உசிதபதங்களிலே கண்டு கொள்வது.

**விளக்கம்** - சரமச்லோகத்தில் உள்ள "வ்ரஜ" என்ற சொல்லும், த்வய அதிகாரத்தில் "ப்ரபத்யே" என்பதை விளக்கும்போது உரைக்கப்பட்டதான, "அனைத்து அங்கங்களுடன் கூடியபடி ஆத்மாவைச் சமர்ப்பித்தல்", என்பதையே குறிக்கிறது. ஆனால் த்வய மந்த்ரத்தில் உள்ள "ப்ரபத்யே" என்பது சரணம் அடைபவனுடைய சிந்தனை என்பதால், அங்கு தன்மை இடத்தில் கூறப்பட்டது. ஆனால் சரமச்லோகத்தில் உள்ள "சரண" என்னும்

சொல்லானது, கீதை (2-7) - சிஷ்யஸ்தே அஹம் சாதி மாம் – உனது சிஷ்யனாகிய எனக்கு எது சிறந்ததோ – என்று க்ருஷ்ணன் முன்பாக விருப்பத்துடன் நின்றவனைக் குறித்து விதிப்பதாக உள்ளதால், இந்தச் சொல்லானது முன்னிலை இடத்தில் கூறப்பட்டது. பகவானுக்கு விருப்பமானதை மட்டுமே செய்தல் முதலான அங்கங்கள் சரமச்லோகத்தில் மறைமுகமாக கூறப்பட்டதை, த்வய மந்த்ரத்தைப் போன்றே தகுந்த சொற்களில் அறியலாம்.

## ப்ரபத்தியை ஒருமுறையே இயற்றவேண்டும்

**மூலம்** – "ஸக்ருத் க்ருத: சாஸ்த்ரார்த்த:" என்கிற நிர்ணயத்துக்கு உபாஸநத்திற் போலே இங்கு ஆவ்ருத்தி வேண்டும்படி அபவாதமில்லை. இவ்வர்த்தம் "ஸக்ருத் ஏவ ப்ரபந்நாய" இத்யாதி வசநத்தாலும் ஸுப்ரதிஷ்டிதம். இப்படி மஹோதாரனான ஸர்வசக்தி பக்கலிலே பரந்யாஸம் பண்ணுமவனுக்கு ஸ்வாபிப்ராய விசேஷணமொழிய, பலவிளம்பத்துக்கு ஹேதுவில்லை. ஆகையாலே இந் ந்யாஸவித்யைக்குப் ப்ராரப்த நிவர்த்தகத்வம் விசேஷமாகிறது.

**விளக்கம்** – "சாஸ்த்ரம் விதிப்பதை ஒருமுறை செய்தாலே போதுமானது" என்னும் விதிமுறை உள்ளது. ஆனால் உபாஸனமானது அடிக்கடி செய்யப்படவேண்டும் என்பதால், இந்த விதிமுறை உபாஸனத்திற்குப் பொருந்தாது. ஆனால் ப்ரபத்திக்கு உபாஸனம் போன்ற விதிவிலக்கு இருப்பதில்லை. இந்தக் கருத்தானது, இராமாயணம் யுத்தகாண்டம் (18-33) - ஸக்ருத் ஏவ ப்ரபந்நாய – ஒருமுறை ப்ரபத்தி செய்தவனாக இருந்தாலும் – என்னும் வாக்கியத்தால் உறுதியாகிறது. மிகுந்த தாராளமானவனும், அனைத்து சக்திகளும் கொண்டவனுமாகிய பகவானிடம் தன்னுடைய பாரங்கள் அனைத்தையும் ஒப்படைத்து ப்ரபத்தி செய்த ஒருவனுக்கு, அவனுடைய விருப்பம் காரணமாக அல்லாமல், வேறு எந்தக் காரணத்தாலும் பலன் கிடைக்கத் தாமதம் உண்டாவதில்லை. ஆகவே ப்ரபத்தியானது பலன் அளிக்கத் தொடங்கிய கர்மங்களையும் கூட விலக்கவல்ல சிறப்பு உள்ளது.

## ஜீவனுக்கு ப்ரபத்தியை விதிப்பது பொருந்தாது என்ற கருத்துக்குக் கண்டனம்

**மூலம்** – இவ்விடத்திலே சிலர் "ஸ்வதந்த்ரனைக் குறித்தன்றோ ஒன்றை விதிப்பது? அத்யந்த பரதந்த்ரனாக அத்யாத்ம சாஸ்த்ரங்களிலும், மூல மந்த்ராதிகளிலும் சிக்ஷிதனான அதிகாரியைக் குறித்து 'வ்ரஜ' என்று ஒரு கர்த்தவ்யத்தை விதிக்கும்படி என்?" என்று சொல்லுவார்கள். இது பாரதந்த்ர்யத்தைப் பராமர்சியாமல் சொன்னபடி. எங்ஙனே என்னில், "கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்வாத்", "பராத் து தத் ச்ருதே:" என்று வேதாந்தத்தில் அறுதியிட்டபடியே இவனுக்கு பகவததீந கர்த்ருத்வமுண்டாகையாலே, இவனைப் பற்ற விதிக்கக் குறையில்லை. அசித்துக்கள் சப்தாதிகளை ஈச்வரன் உண்டாக்கச் சுமக்கிறாப்போலே இவ்வளவு ஸ்வாதந்த்ர்யத்தை எடுத்துச் சுமக்கையும் இவனுக்கு பகவத் பாரதந்த்ர்ய காஷ்டையிருந்தபடி. இவனுக்கு ஒரு வழியாலும் கர்த்ருத்வம் இல்லையென்னில், ப்ரக்ருதி அவித்யாதிகளுக்குக் கர்த்ருத்வம் சொல்லுகிற ஸித்தாந்த துல்யமாம். கர்த்ருத்வம் ஸ்வாதீனமென்னில், ஸர்வாத்ம நியந்தா ஒருவன் என்கிற அர்த்தம் கிடையாமையாலே நிரீச்வர ஸித்தாந்தப்படியாம். ஈச்வராதீனமாக வரும் கர்த்ருத்வம் தானும் ஜ்ஞாத்ருத்வ மாத்ரமென்னில், புருஷார்த்த ஸம்பாதந ருசியும் ததுபாய ப்ரவ்ருத்தியும் தவிரப் ப்ரஸங்கிக்கும். ஜ்ஞாநமும், அதின் அவஸ்தா விசேஷமான இச்சையுமேயுள்ளன; வேறொரு வ்யாபாரமில்லையென்னிலும், த்ருஷ்ட அத்ருஷ்டார்த்தங்களான ஓர் உபாயங்களையும் ஸ்வயம் ப்ரயோஜனமான கைங்கர்யங்களையும் அநுஷ்டிக்க விரகில்லை. ஆகையால் ஜ்ஞாந சிகீர்ஷா ப்ரயத்னங்கள் மூன்றும் ஆத்மாவுக்கு உண்டு.

**விளக்கம்** – ஒரு சிலர், "முற்றிலுமாகச் சுதந்திரமாக உள்ள ஒருவனைக் குறித்து மட்டுமே எந்த ஒரு செயலையும் செய்வது குறித்து விதிக்க இயலும். மூல மந்த்ரம் மற்றும் ஆத்மாவைக் குறித்து உரைக்கும் சாஸ்த்ரங்கள் ஆகிய அனைத்திலும், பகவானுக்கு அடிமையாக உள்ளவனாகவே ஜீவாத்மா கூறப்படுகிறான். இப்படி உள்ளபோது, சுதந்திரம் அற்றவனாக உள்ள ஜீவாத்மாவைக் குறித்து 'வ்ரஜ' என்பது போன்ற செயலைச் செய்வதை விதிப்பது எவ்விதம் பொருந்தும்?", என்று கூறுவார்கள். இந்தக் கருத்தானது பகவானுக்கு வசப்பட்டிருத்தல் என்றால் என்ன என்பதை அறியாமல் உரைப்பதாகும். ப்ரஹ்ம ஸூத்ரம் (2-3-40) - கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்வாத் – ஜீவாத்மாவுக்கு செயல்

புரிதல் உள்ளது – என்றும், ப்ரஹ்ம ஸூத்ரம் (2-3-33) - பராத் து தத் ச்ருதே: - அவனை நம்பியே உள்ளது – என்றும் வேதாந்தங்களில் உறுதியாகக் கூறுவதற்கு ஏற்ப, ஜீவாத்மாவுக்கு பகவான் இட்ட கட்டளைக்கு ஏற்றபடியான செயலாற்றுதல் உள்ளது என்பதால், இவனைக் குறித்து இவ்விதம் விதிப்பதில் எந்தக் குற்றமும் இல்லை. அசித் வஸ்துக்களாக உள்ள ஆகாசம் என்பது ஈச்வரன் உண்டாக்கிய சப்தத்தைத் தனது தன்மையாகக் கொள்வது போன்றே, பகவானால் அளிக்கப்பட்ட இத்தகைய செயலாற்றும் நிலையை ஜீவாத்மா கொண்டுள்ளான். ஜீவாத்மாவுக்கு எந்தவிதத்திலும் செயலாற்றுதல் என்பது இல்லையென்றால், "ப்ரக்ருதி மற்றும் அவித்யை ஆகியவற்றுக்கு மட்டுமே செயலாற்றுதல் உள்ளது" என்று கூறும் ஸாங்க்யம் மற்றும் அத்வைத ஸித்தாந்தம் போன்று ஆகிவிடும். "செயலாற்றுதல் என்பது ஜீவாத்மாவுக்கு சுதந்திரமான செயலாகவே உள்ளது" என்று கூறினால், அனைத்தையும் நியமிக்கும் ஒருவன் உள்ளான் என்னும் கருத்து இல்லாமல் போகும்; இது நிரீச்வர ஸாங்க்யம் என்றாகும். செயலாற்றுதல் என்பது பகவானுக்கு அடங்கியே உள்ளது என்றாலும், அது அறியும் செயலை மட்டுமே செய்கிறது என்று கூறினால், புருஷார்த்தங்களின் மீது எந்தவிதமான ருசியும் இல்லாமல் போகும்; மேலும் புருஷார்த்தங்களைப் பெற வைக்கும் உபாயங்களில் ஈடுபாடு இன்றியும் போகும். ஞானம் மற்றும் அதன் ஒரு நிலையான அதனைப் பெறவேண்டும் என்னும் ஆசை ஆகியவை மட்டுமே ஜீவாத்மாவுக்கு உள்ளன என்று கூறினால், இந்த உலகில் பெறுகின்ற பலன்கள் மற்றும் அந்த உலகில் பெறுகின்ற பலன்கள் ஆகியவற்றுக்கான உபாயம் மற்றும் தானே தனக்குச் செய்து கொள்ளும் செயல்கள் ஆகியவற்றைச் செய்யமாட்டனர். எனவே "அறிவு, செயலில் விருப்பம், செயலைச் செய்யும் முயற்சி" ஆகிய மூன்றுமே ஆத்மாவுக்கு உள்ளது.

**மூலம்** – இதில் சிகீர்ஷா ப்ரயத்நங்கள் ஜ்ஞாநத்தினுடைய அவஸ்தா விசேஷங்களென்னுமிடத்தை, வேதார்த்தஸங்க்ரஹத்தில் அருளிச்செய்த லாகவ யுக்தியாலே கண்டு கொள்வது. க்ரியாச்ரயத்வ ரூபமான கர்த்ருத்வம் சேதநாசேதந ஸாதாரணம். ப்ரயத்நாச்ரயத்வ ரூபமான கர்த்ருத்வம் சேதநைகாந்தம். ப்ரயத்நமாவது சரீராதி ப்ரேரண ஹேதுவான புத்தி விசேஷம். ஜ்ஞாநமாத்ரத்துக்கு ஆச்ரயமானபோதும், போக மாத்ரத்துக்கு ஆச்ரயமானபோதும், க்ரியாச்ரயத்வமாத்ரமான ஸாமாந்ய கர்த்ருத்வமே உள்ளது. ஒன்றைத் தன் புத்தியாலே உத்பாதிக்கும்போது ப்ரயத்நாச்ரயத்வ ரூபமான கர்த்ருத்வம். இப்படிப்பட்ட கர்த்ருத்வம், கைங்கர்ய மாத்ரத்திலே என்கையும்

உசிதமன்று. அங்கும், பகவத் ப்ரீதியென்று ஒரு ப்ரயோஜநத்தை உத்தேசித்து உபாய அநுஷ்டாநம் பண்ணினானாயிறேயிருப்பது? ஆனபின்பு, கர்த்ருத்வத்தில் பந்த ஹேதுவான ஆகாரமே த்யாஜ்யம். அது எது என்னில், ஈச்வரன் கொடுத்த ஜ்ஞாநசக்த்யாதிகளையும், கரணகளேபராதிகளையும் கொண்டு, அவன் ப்ரேரகனுமாய்ப் பலியுமாய்க் கொண்டு, ஸஹகாரிக்கப் ப்ரவர்த்திக்கிற தன்னை, இதுக்கு விபரீதமாக அநுஸந்திக்கையும், இவ் வநுஸந்தாநத்தில் திருத்தமுண்டேயாகிலும், இதிலே ப்ரயோஜநாந்தரத்தை இடுக்கி அநுஷ்டிக்கையும் பந்தகம். பக்தி ப்ரபத்திகள் தாமும், ப்ரயோஜநாந்தர பரனுக்கு பந்தகமாயிறே இருப்பன? ஆகையால், ஸ்வாபாவிக கைங்கர்யார்த்தியாய், அநந்ய ப்ரயோஜநனாயிருக்குமவனுக்கும் பல தசையில் கர்த்ருத்வம் போலே, உபாய தசையில் கர்த்ருத்வமும் விருத்தமன்று.

**விளக்கம்** – இந்த மூன்றில், “செயலில் விருப்பம், செயலைச் செய்யும் முயற்சி” ஆகிய இரண்டும் ஞானத்தின் நிலைமாறுதல்கள் (அல்லது ஞானத்தில் நிலைகள்) மட்டுமே ஆகும் என்பதை எம்பெருமானார் தனது வேதார்த்த ஸங்க்ரஹத்தில் அருளிச்செய்தமை காணலாம். செயல்களுக்கு இருப்பிடமாக இருத்தல் (அல்லது செய்பவனாக இருத்தல்) என்ற வடிவத்தில் உள்ள கர்த்ருத்வம் (செயலாற்றுதல் அல்லது செயல் புரிதல்) என்பது, சேதநங்களுக்கும் அசேதநங்களுக்கும் சாதாரணமாகவே இருக்கக்கூடிய ஒன்றாகும். ஆனால் ஒரு செயலில் முனைதல் (அல்லது முயற்சி) என்பது, சேதநங்களுக்கு மட்டுமே உள்ளதாகும். முயற்சி என்பது, சரீரத்தை ஒரு செயலுக்குப் பயன்படுத்தக் காரணமாக உள்ள புத்தியாகும். ஞானத்திற்கு மட்டுமே இருப்பிடமாக இருத்தல், இன்பத்திற்கு மட்டுமே இருப்பிடமாக இருத்தல் என்னும் நிலைகளில், “இருப்பிடமாக இருத்தல்” என்னும் செயல் மட்டுமே உள்ளது; இது சாதாரணமாக அனைவருக்கும் (சேதந, அசேதநங்கள்) உள்ளதாகும். ஆனால், தன்னுடைய புத்தியால் ஒரு செயலைச் செய்யத் தொடங்கும்போது மட்டுமே, அவனிடம் முயற்சியின் இருப்பிடமாக உள்ள கர்த்ருத்வம் காணப்படுகிறது. இத்தகைய செயலாற்றுதல் என்பது, கைங்கர்யத்தில் மட்டுமே உள்ளது என்று கூறுவதும் சரியல்ல; காரணம் இவ்விதம் கொண்டால், “பகவானுடைய மகிழ்ச்சி” என்னும் ஒரு பயனைக் கருத்தில் கொண்டே இத்தகைய உபாயத்தைக் கைக்கொள்கிறான் என்றாகிவிடும் அல்லவோ? ஆகவே எந்தவிதமான செயல் புரிதலிலும், ஸம்ஸார பந்தம் உண்டாக்கக் காரணமான அம்சங்கள் கைவிட வேண்டியவையே ஆகும். அத்தகைய செயலாற்றுதல்கள் எவை (அல்லது கைவிடத்தக்க அம்சங்கள் எவை)? ஈச்வரன் தனக்கு

அளித்த ஞானம் மற்றும் சக்தி முதலியவைகள், சரீரம் மற்றும் இந்த்ரியங்கள் முதலியவைகள் ஆகியவற்றைக் கொண்டு ஒரு சேதநன், ஒரு செயலில் இறங்குகிறான். அப்போது அந்தச் சேதநனை ஏவுபவனாகவும், தாங்குபவனாகவும், அந்தச் செயல் மூலம் கிட்டவல்ல பயனை அனுபவிப்பனாகவும் இருந்தபடி ஈச்வரன், அந்தச் சேதநனில் செயல்பாட்டில் உதவுகிறான். ஆனால் அந்தச் சேதநன் இதனை உணராதபடி, முரணாக எண்ணினாலோ (அதாவது தானே அந்தச் செயலிச் செய்வதாக எண்ணுதல்), அல்லது இந்த விஷயத்தில் மெய்யான ஞானம் இருந்தாலும் (இவற்றை ஈச்வரனே செய்கிறான் என்னும் ஞானம்) வேறு ஒரு பயனுக்காகச் செய்தாலோ, அந்த எண்ணங்களே ஸம்ஸார பந்தத்தை உண்டாக்கிவிடும். மோக்ஷம் அல்லாத பயனுக்காகக் கைக்கொள்ளும் பக்தியும், ப்ரபத்தியும் கூட ஒருவனுக்கு பந்தத்தை உண்டாக்கிவிடும். ஆகவே தனக்கு இயற்கையாகவே அமைந்துள்ளதான பகவத் கைங்கர்யத்தை மட்டுமே வேண்டி நின்று, மற்ற எந்தவிதமான பயனையும் எதிர்பாராமல் உள்ள ஒருவனுக்கு, மோக்ஷ பலன் பெற்ற நிலையில் கைங்கர்யம் உள்ளது போன்று, மோக்ஷத்திற்கான உபாய நிலையில் உள்ளபோது, பகவானுக்கு அடங்கி நடத்தல் என்னும் செயலால் விரோதம் இல்லை.

**மூலம்** – பல தசையில் விவித விசித்ர கைங்கர்ய கர்த்ருத்வம் கேவலம் ஈச்வரேச்சா வைசித்ரியோடே பொருந்தின ஸ்வேச்சையாலேயாயிருக்கும். ஸம்ஸார தசையில் உள்ள கர்த்ருத்வமெல்லாம், கர்மானுரூபமாக ஈச்வரன் பரிணமிப்பித்த ஸத்த்வ ரஜஸ் தமஸ்ஸுக்களை உபாதியாகக் கொண்டு பஹுவிதமாயிருக்கும். இதில் ரஜஸ்ஸாலும் தமஸ்ஸாலும் ப்ரயோஜநாந்தர ஸங்க ஹேதுவான ஸத்த்வத்தாலும் வரும் கர்த்ருத்வம், பந்தகம். பகவத் ப்ராப்தியிலே ஸங்கத்தைப் புணர்க்கும் ப்ரக்ருஷ்ட ஸத்த்வ விசேஷமடியாக வரும் கர்த்ருத்வம், மோக்ஷ காரணம். இக் குணத்ரயத்தோடு துவக்கற்றிருக்கும் முக்ததசையில், கர்த்ருத்வம்.

**விளக்கம்** – பலனாகிய மோக்ஷ நிலையில் பலவிதமானதும், அனைத்தைக் காட்டிலும் வேறுபட்டதும் ஆகிய கைங்கர்யங்களைச் செய்வதில் ஒருவனுக்கு உள்ள கர்த்ருத்வம் என்பது, ஸர்வேச்வரனுடைய பலவிதமான விருப்பங்களுக்கு ஏற்ப உள்ளதான தனது விருப்பத்தின் மூலம் உண்டாவதாகும். ஸம்ஸார நிலையில் உள்ள சேதநனுக்கு உள்ள கர்த்ருத்வம் அனைத்தும் அவனுடைய கர்மங்களுக்கு ஏற்ப ஈச்வரனால் உண்டாக்கப்பட்ட ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பலவிதமாக

இருக்கும். இவற்றில் ரஜஸ் மற்றும் தமஸ் ஆகியவற்றாலும், மற்ற பயன்களில் பற்றுதல் உண்டாக்கவல்ல ஸத்வம் ஆகியவற்றால் உண்டாகும் கர்த்ருத்வம் என்பது பந்தத்தை உண்டாக்குவதாகும். பகவானை அடையவேண்டும் என்னும் எண்ணத்தை அதிகரிக்கின்றதான உயர்ந்த ஸத்வம் மூலம் உண்டாகும் கர்த்ருத்வம் என்பது மோக்ஷ காரணமாகும். முக்தி நிலையில் உள்ள கர்த்ருத்வம் என்பது, இந்த மூன்று குணங்களின் ஸம்பந்தம் இல்லாமல் இருக்கும்.

**மூலம்** – இப்படியிருக்கையால் ஆத்மாவுக்கு கர்த்ருத்வமில்லை என்கிற வாக்யங்களுக்கும் கர்த்ருத்வமுண்டென்கிற வாக்யங்களுக்கும் விஷய வ்யவஸ்தை உண்டாகையாலே விரோதமில்லை. அது எங்ஙனேயென்னில், கர்த்ருத்வமில்லை என்கிற வாக்யங்கள் ஈச்வராதீனமாயும், தத்தாயத்த ப்ரக்ருதி அதீனமாயும் வரும் கர்த்ருத்வத்தை நிரபேக்ஷமென்று நினைக்கலாகாதென்கிறன. கர்த்ருத்வம் உண்டு என்கிற வாக்யங்கள், ஈச்ரவேச்சாதிகளடியாகவே வந்த ஜ்ஞாநத்துக்கும் தத்விசேஷங்களான சிகீர்ஷா ப்ரயத்னங்களுக்கும் இவனே ஆச்ரயமென்னும் இடத்தைச் சொல்லுகின்றன. இந் நிஷ்கர்ஷ ப்ரகாரத்தை, “சரீர வாங்மநஸோபிர்யத்” என்று தொடங்கி, கீதாசார்யன் தானே அறுதியிட்டான். அவ்விடத்தில், “தேவம் சைவாத்ர பஞ்சமம்” என்று புருஷோத்தமனைச் சொல்லுகிறது. இவன் ஜீவனை ஒரு கார்யத்தில் ப்ரவர்த்திப்பிக்கும்போது இக்கார்யத்தைப் பற்றக் காரயிதாவென்று சொல்லப்படும்; தானே ப்ரவர்த்திக்கும் பல ப்ரதாநாதிகளிலும் ஸ்ருஷ்ட்யாதிகளிலும் கர்த்தாவென்று சொல்லப்படும்; ஒன்றிலே ப்ரவ்ருத்தனான சேதநனை விலக்காதவளவில் உபேக்ஷகன்; அப்போது இசைந்திருக்கையாலே அநுமந்தா; இளந்தலை சுமக்குமவனுக்குப் ப்ரபலன் பெருந்தலை சுமக்குமாப்போலே கூடப் ப்ரவர்த்திக்கையாலே ஸஹகாரி. ஸ்ருஷ்ட்யாதிகளில் தேவ மநுஷ்யாதி வைஷம்யம், ஜீவ கர்மவிசேஷ உபாதிகமாகையாலே “சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குண கர்ம விபாகச: | தஸ்ய கர்த்தாரமபி மாம் வித்தயகர்த்தாரம் அவ்யயம்” என்று ஈச்வரனுக்குக் கர்த்ருத்வ நிஷேதம் பண்ணுகிறது.

**விளக்கம்** – இவ்விதம் உள்ளபோது, சாஸ்த்ரங்களில் ஆத்மாவுக்குக் கர்த்ருத்வம் (செயல் புரிதல்) இல்லை என்றும், ஆத்மாவுக்குக் கர்த்ருத்வம் உண்டு என்றும் கூறப்படும் வாக்கியங்களுக்கு முரண்பாடு இல்லை; காரணம், எப்போது கர்த்ருத்வம் இல்லை மற்றும் எப்போது உண்டு என்று பிரித்துக் கூறும் வரையறை உள்ளதால் ஆகும். அது எப்படி?

ஜீவனுக்குக் கர்த்ருத்வம் இல்லை என்று கூறும் வாக்கியங்கள், "ஜீவாத்மாவின் கர்த்ருத்வம் என்பது ஈச்வரனுக்கு அடங்கியே வருகிறது என்பதாலும், ஈச்வரனுக்கு அடங்கிய ப்ரக்ருதிக்கு அடங்கியே வருகிறது என்பதாலும், ஈச்வரனை எதிர்பார்த்து நிற்காமல் சுதந்திரமான கர்த்ருத்வம் ஜீவனுக்கு இல்லை", என்பதையே கூறுகின்றன. ஜீவனுக்குக் கர்த்ருத்வம் உண்டு என்று கூறும் வாக்கியங்கள், "ஈச்வரனுடைய ஸங்கல்பம் காரணமாகவே உண்டாகும் ஞானம் மற்றும் அத்தகைய ஞானத்தின் விளைவுகளாக உள்ள இச்சை மற்றும் முயற்சிகள் ஆகியவற்றுக்கு இருப்பிடமாக ஜீவாத்மா உள்ளான்", என்பதையே கூறுகின்றன. இதனை கீதாசார்யன் கீதையில் (18-15) - சரீர வாங்மநஸோபிர்யத் – சரீரம், வாக்கு, மனம் என்றுள்ள ச்லோகம் தொடங்கி உரைத்தான். கீதை (18-14) - தேவம் சைவாத்ர பஞ்சமம் – ஐந்தாவது தெய்வம் – என்பது புருஷோத்தமனையே குறிப்பதாகும். ஈச்வரன், ஜீவனை ஒரு செயலில் ஈடுபடுத்தும்போது, அந்தக் கார்யத்தைப் பொறுத்தவரை, காரயிதா எனப்படுகிறான். ஈச்வரன், தானே செயல்படுவதாக உள்ளதான பலன்களை அளித்தல் மற்றும் ஸ்ருஷ்டி முதலானவற்றில், கர்த்தா எனப்படுகிறான். சேதநன் ஒரு செயலில் ஈடுபடும்போது அவனை அந்தச் செயலிலிருந்து ஈச்வரன் விலக்காதபோது, உபேக்ஷகன் எனப்படுகிறான். அந்தச் செயலைச் செய்ய அனுமதிக்கும்போது அநுமந்தா எனப்படுகிறான். அதிகமான சுமையைச் சுமக்கும் சக்தி அற்றவனுக்கு, பெரும் சுமையைச் சுமக்கும் சக்தி கொண்டவன் உதவுவது போன்று ஜீவனுடன் சேர்ந்து நின்று செயலில் ஈடுபடும்போது ஸஹகாரி எனப்படுகிறான். ஸ்ருஷ்டியில் உண்டாகின்ற "தேவர்கள், மனிதர்கள்" முதலான வேறுபாடுகள் ஜீவாத்மாவின் கர்மம் காரணமாகவே உண்டாகின்றன. ஆகவே கீதை (4-13) - சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குண கர்ம விபாகச: | தஸ்ய கர்த்தாரமபி மாம் வித்தயகர்த்தாரம் அவ்யயம் – குணங்கள் மற்றும் கர்மங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நான்கு வர்ணங்கள் என்னால் உண்டாக்கப்பட்டன. இவ்விதம் அத்தகைய ஸ்ருஷ்டி முதலானவற்றை நான் செய்தாலும், நான் அவற்றின் கர்த்தா அல்லன் என்று அறிவாயாக – என்று கூறுவதன் காரணமாக, ஈச்வரனுக்குக் கர்த்ருத்வம் இல்லை என்று தள்ளப்படுகிறது.

**மூலம்** – இப்படி ஸர்வவிஷய ஸாதாரண கர்த்ருத்வமுடைய ஈச்வரனடியாக ஜீவனுக்கு ஸ்வபுத்தி பூர்வ ப்ரவ்ருத்தி சக்தி ரூபமான நியோக யோக்யத்வம் ஸித்தமாகையாலே, இங்கு "வ்ரஜ" என்று விதிக்கக் குறையில்லை.

**விளக்கம்** – இவ்விதம் பொதுவாகவே அனைத்து விஷயங்களிலும் கர்த்தாவாக உள்ள ஈச்வரனுக்கு அடங்கியபடி உள்ள ஜீவாத்மா, தனது புத்தி அறிந்து ஒன்றைச் செய்யக்கூடிய சக்தி கொண்டவன் என்பதால், அவனைக் குறித்து கீதை (18-66) – வ்ரஜ – சரணம் அடைவாயாக – என்று விதிப்பதில் தவறில்லை.

## பிள்ளான் வாக்கியங்களின் கருத்து

**மூலம்** – இப்படி பக்த்யாதிகள் போலே சரணாகதி தர்மமும் கர்த்தவ்யமாக விதிக்கப்படுகையால், "தன்னால் வரும் நன்மை விலைப்பால் போலே, ஈச்வரனால் வரும் நன்மை முலைப்பால் போலே" என்று பிள்ளான் வார்த்தைக்கு, "பக்தி ப்ரபத்யாதிகளெல்லாம் அவனாலே வருகினவென்று நினைக்கவேண்டும்" என்று தன்னுடைய பராதீந கர்த்ருத்வத்திலே தாத்பர்யம்.

**விளக்கம்** – இவ்விதமாக பக்தி போன்று, சரணாகதி என்னும் தர்மமும் செய்யப்படவேண்டிய ஒன்று என விதிக்கப்படுகிறது. ஆகவே திருக்குருகைப் பிரான் பிள்ளான் கூறியதான "நாமே நமக்கு ஏற்படுத்திக் கொள்ளும் நன்மை என்பது விலைக்கு வாங்கப்படும் பால் போன்றதாகும். ஈச்வரனால் நமக்கு உண்டாகும் நன்மை என்பது தாய்ப்பால் போன்றதாகும்", என்பதன் மூலம், "பக்தி மற்றும் ப்ரபத்தி போன்ற அனைத்து அவனுடைய கருணையால் உண்டாவதே ஆகும்" என்பதை உணரவேண்டும். மேலும் ஜீவாத்மா ஈச்வரனை நம்பியே உள்ளான் என்பதும் தெளிவாகிறது.

## ஆளவந்தார் செய்த ப்ரபத்திக்கு க்ஷமை கொண்டார் என்பதான கருத்துக்கு மறுப்பு

**மூலம்** -

அந்ய விச்வாஸ ஸித்தயர்த்தம் பக்த்யுபாய விதிம் வதந்
ஸர்வசாஸ்த்ரேஷ்வ விச்வாஸம் ஆதத்தே முகபேதத:

மத்யோபஹத மாத்ரஸ்த தீர்த்த த்ருஷ்டாந்த வர்ணனம்
அஹங்காராந்வயே து ஸ்யாத் ப்ரபத்தாவபி பக்திவத்

ஆகையால், "ப்ரஸீத மத் வ்ருத்தம் அசிந்தயித்வ" இத்யாதிகள் முன்பு தாம் பண்ணின ப்ரபத்திக்கு க்ஷமை கொள்ளுகிறபடி என்று சிலர் சொல்லுமதுவும் அஹங்கார ஸ்பர்சாதி சங்கையப் பற்றவாமத்தனை அல்லது யதாசாஸ்த்ரம் அநுஷ்டித்த ப்ரபத்தி அபராதமாய் அதுக்கு க்ஷமை கொள்ளுகிறபடியன்று. அப்படியாகில், "பிதாமஹம் நாதமுனிம் விலோக்ய ப்ரஸீத:" என்கிற பூர்வாசார்ய புரஸ்காராதிகளும் தாம் செய்கிறதாகையாலே, இதுக்கு க்ஷமை கொள்ள வேண்டி அநவஸ்தையாம். இது ஸ்வ பர நிர்வாஹகமாகில் இது போல முன்பு பண்ணின ப்ரபதமும் ஸ்வ பர நிர்வாஹகமென்னலாம். இங்குச் சொல்லும் குதர்க்கங்களாலே பூர்வர்கள் பண்ணின ப்ரபத்தியும் அபராதமாயறுகையாலே, பூர்வர்களை முன்னிடவுமொண்ணாதொழியும். ஆகையால் இஸ் ஸ்தோரத்தில் ஆத்யந்தங்களில் பண்ணின ஆசார்ய புரஸ்காரம் இங்கு அருளிச்செய்கிற ப்ரபத்திக்கு அபேக்ஷிதமாயாதல், வைகல்ய பரிஹாரார்த்தமாயாதல் உபயுக்தமாய் வந்ததித்தனை. இவ் ஆசார்ய புரஸ்காரத்திற்போலே ப்ரபத்யாதிகளிலும் பராதீந கர்த்ருத்வம் தோஷமன்று.

**விளக்கம்** - அந்ய விச்வாஸ ஸித்தயர்த்தம் பக்த்யுபாய விதிம் வதந் ஸர்வசாஸ்த்ரேஷ்வ விச்வாஸம் ஆதத்தே முகபேதத: - ப்ரபத்தி என்னும் மற்றொரு உபாயத்தில் விச்வாஸம் உண்டாவதற்காக பக்தி என்னும் உபாயம் குறித்த விதியை உரைப்பவன், அனைத்து சாஸ்த்ரங்களிலும் நம்பிக்கை அற்ற நிலையை உண்டாக்குகிறான். மத்யோபஹத மாத்ரஸ்த தீர்த்த த்ருஷ்டாந்த வர்ணனம் அஹங்காராந்வயே து ஸ்யாத் ப்ரபத்தாவபி பக்திவத் – பக்தியோகத்தை ஒரு சிலர், "மதுவின் கலப்பு காரணமாக அசுத்தமான தண்ணீர்" என்று ஒப்புமை கூறுகிறார்கள்; ஆனால் இத்தகைய ஒப்புமை என்பது பக்தியோகத்தில் அஹங்காரம் கலந்திருந்தால் மட்டுமே பொருந்தும்; இத்தகைய ஒப்புமை என்பது ப்ரபத்தியில் அஹங்காரம் கலந்திருந்தாலும் பொருந்தும். ஆகவே, ஸ்தோத்ரரத்னம் (65) - ப்ரஸீத மத் வ்ருத்தம் அசிந்தயித்வ – எனது செய்கையை ஆராயாமல் என்னை அனுக்ரஹிக்கவேண்டும் – என்று ஸ்வாமி ஆளவந்தார் கூறுவது, தாம் முன்பு செய்த ப்ரபத்திக்கான மன்னிப்பே ஆகும் என்று சிலர் கூறுகிறார்கள்; ஆனால் ஆளவந்தார் இவ்விதம் உரைத்தல் என்பது அத்தகைய ப்ரபத்தியின்போது தனக்கு

அஹங்காரம் கலந்திருக்கலாம் என்னும் எண்ணத்தாலேயே ஆகும் அல்லாமல், சாஸ்த்ரங்களால் கூறப்பட்ட ப்ரபத்தியைச் செய்தது குற்றம் ஆகும் என்னும் எண்ணத்தால் அல்ல. இவ்விதம் பொருள் கொண்டால் (அதாவது குற்றம் என்று கொண்டால்), ஸ்தோத்ரரத்னம் (65) - பிதாமஹம் நாதமுனிம் விலோக்ய ப்ரஸீத: - எனது பாட்டனாராகிய நாதமுனிகளுக்காக – என்று தன்னுடைய பூர்வாசார்யர்களை முன்னிறுத்தி விண்ணப்பம் செய்தது குற்றமே ஆகும் என்று எல்லையற்ற சுழற்சி உண்டாகும். "இவ்விதம் விண்ணப்பம் செய்தல் என்பது இதனால் ஏற்படும் பாபம் மற்றும் இதற்கு முன்பாக செய்தப் பாபங்கள் ஆகிய அனைத்தையும் நீக்குவதற்காகவே ஆகும்" என்று கூறினால், இதே போன்று ப்ரபத்தி என்பதும் அதனால் ஏற்படும் பாபம் மற்றும் இதற்கு முன்பாக செய்தப் பாபங்கள் ஆகிய அனைத்தையும் நீக்குவதற்காகவே ஆகும் என்று உரைக்கலாம் அல்லவோ? இப்படியாகத் தவறான வாதங்களை ஏற்றுக் கொண்டால், பூர்வாசார்யர்களும் ப்ரபத்தியைச் செய்ததால் பாபம் நிறைந்தவர்களே ஆவார்கள் என்பதால், அவர்களுக்கு மரியாதை அளித்தல் என்பது சரியல்ல என்றாகிவிடும். ஆகவே இந்த ச்லோகத்தின் தொடக்கம் மற்றும் இறுதி ஆகியவற்றில் ஆளவந்தார் தனது பூர்வாசார்யர்களிடம் செய்த விண்ணப்பம் என்பது ப்ரபத்தியின் ஒரு அங்கம் என்பதாலோ அல்லது தான் முன்பு செய்த ப்ரபத்தியில் உள்ள குறைகளை நீக்குவதற்காகவோ ஆகும். இவ்விதம் ஆசார்யர்களை முன்னிறுத்திச் செய்வது போன்று ப்ரபத்தியிலும் வேறு ஒருவருடைய (பகவான்) எண்ணத்தை அடியாக்கிக் கொண்டு செய்வதில் தோஷம் இல்லை.

## ஜீவாத்மாவிற்குக் கர்த்ருத்வம் இல்லை என்பதால் தடுக்கப்பட்ட கர்மங்கள் அவனுக்கு ஒட்டாது என்னும் வாதத்திற்கான மறுப்பு

**மூலம் –** இப்படி பராதீந கர்த்ருத்வம் ப்ராமாணிகமாகையாலே ஆத்மாவுக்குக் கர்த்ருத்வமில்லாமையாலே ஸ்வரூபம் தெளிந்தவனை நிஷித்த கர்மங்களில் ஒன்றும் லேபியாதென்கிற பக்ஷமும் நிரஸ்தம். முமுக்ஷுவுக்குச் சொன்ன பால்யம் பாலக்ருத்யங்களான காமசாராதிகளன்று. ஸ்வமாஹாத்ம்ய அநாவிஷ்காரமாத்ரம் என்னுமிடம் "அநாவிஷ்குர்வந்நந்வயாத்" என்கிற ஸூத்ரத்திலே ஸமர்த்திதம். "அநிஷ்டமிஷ்டம் மிச்ரம் ச", "யஸ்ய நாஹம்க்ருதோ பாவ:" இத்யாதி வசனங்கள், புத்திபூர்வ உத்தராக

விஷயங்களல்லவென்னுமிடம் பஹு சாஸ்த்ர விரோதம் வாராமைக்காக, பாஷ்யாதிகளிலே ஸமர்த்திக்கப்பட்டது. "ஹத்வா அபி" என்றதுவும் தர்மயுத்தாதி விஷயம்.

**விளக்கம்** – "ஜீவாத்மாவின் கர்த்ருத்வம் என்பது பகவானுக்கு வசப்பட்டதாக இருத்தல் என்பது பல ப்ரமாணங்களால் வெளிப்படுவதால், ஜீவாத்மாவுக்கு உண்மையான கர்த்ருத்வம் இல்லை. ஆகவே இவ்விதமாகத் தனது ஸ்வரூபம் குறித்து உள்ளது உள்ளபடி அறிந்தவர்களுக்கு, தடுக்கப்பட்ட கர்மங்களைச் செய்வதால் எந்தவிதமான தோஷமும் உண்டாகாது" என்று சிலர் கூறுவதும் தவறாகும். முமுக்ஷு ஒருவன் குழந்தை போன்று இருக்கவேண்டும் என்று உபநிஷத்துக்கள் கூறுவதன் மூலம், அவர்கள் தங்கள் விருப்பம்ம் போன்று செயலாற்றலாம் என்று கூறப்படவில்லை. குழந்தைகள் போன்று இருத்தல் என்பது, "தன்னைக் குறித்து பெருமையாக அனைவரிடமும் பறைசாற்றக்கூடாது" என்பதையே குறிக்கிறது; இதனையே ப்ரஹ்மஸூத்ரம் (3-4-49) – அநாவிஷ்குர்வந் அந்வயாத் - வெளிப்படுத்தாமல் இருப்பதே, தொடர்பு உள்ளதால் (இப்படி உள்ள பால்யத் தன்மைக்கு வித்யைக்கும்) – என்கிறது. கீதை (18-12) - அநிஷ்டமிஷ்டம் மிச்ரம் ச – விருப்பம் அற்றவை மற்றும் விருப்பமானை ஆகிய இரண்டும் கலந்து – என்றும், கீதை (18-17) - யஸ்ய நாஹம்க்ருதோ பாவ: - "நானே செய்கிறேன்" என்னும் எண்ணம் இன்றி – என்றும் உள்ள வாக்கியங்கள், ப்ரபத்திக்குப் பின்னர் அறிந்து கொண்டே செய்யும் பாபங்களைக் குறிக்கவில்லை என்று கீதாபாஷ்யத்தில் எம்பெருமானார் அருளிச்செய்தார்; இவ்விதம் கொண்டால் மட்டுமே வேறு எந்தச் சாஸ்த்ரங்களுடனும் முரண்பாடு உண்டாகாது. கீதை (18-17) – ஹத்வா அபி – கொன்றாலும் – என்பது தர்மயுத்தத்திற்கு மட்டுமே பொருந்தும்.

**மூலம் –**

உபபுக்தெளஷத ந்யாயாத் உத்தராபத்ய மர்தநம்
அநந்யபர நிர்பாத ச்ருதி ஸ்ம்ருதி சதைர்ஹதம்

மந்வாதிகளும், "ஜீவிதாத்யயமாபந்ந யோ அந்நமத்தி யதஸ்தத: | ஆகாச இவ பங்கேந ந ஸ பாபேந லிப்யதே" என்றும், "ப்ரணஸம்சயமாபந்நோ யோ அந்நமத்தி யதஸ்தத: | லிப்யதே ந ஸ பாபேந பத்மபத்ரமிவாம்பஸா" என்றும் நியமித்தார்கள். இது

ப்ரஹ்மவித்துக்கும் துல்யமென்னுமிடம் "ஸர்வாந்நாநுமதிச்ச ப்ரணாத்யயே தத் தர்சநாத்" என்கிற ஸூத்ரத்திலே ஸாதிதமாயிற்று. ஆகையால், கர்த்ருத்வம் ஆத்மாவுக்கு இல்லையென்றாதல், பாரதந்த்ர்ய ஞானமாத்ரத்தைக் கொண்டாதல் புத்தி பூர்வோத்தராகம் ஒரு படிக்கும் லெபியாதென்கையும், இத்தைப் பற்றப் புந: ப்ரபதநம் வேண்டாவென்கையும் பரபக்ஷமாம்.

**விளக்கம்** - உபபுக்தௌஷத ந்யாயாத் உத்தராபத்ய மர்தநம் அநந்யபர நிர்பாத ச்ருதி ஸ்ம்ருதி சதைர்ஹதம் – "மிகவும் உயர்ந்த மருந்தை உட்கொள்ளும்போது அது வேலை செய்வது போன்று, ப்ரபத்தியானது தன்னைக் கைக்கொண்ட பின்னர் உண்டாகும் பாபங்களை நீக்குகிறது" என்னும் கருத்தானது நூற்றுக்கணக்கான ச்ருதி மற்றும் ஸ்ம்ருதி வாக்கியங்களில் மறுக்கப்பட்டுள்ளது. "எந்த நிலைகளில் விதிமுறைகளை மீறலாம்" என்பதை மநு ஸ்ம்ருதியிலும் (5-104) - ஜீவிதாத்யயமாபந்ந யோ அந்நமத்தி யதஸ்தத: | ஆகாச இவ பங்கேந ந ஸ பாபேந லிப்யதே – பட்டினியால் உயிர் போகும் நிலை ஏற்படும்போது எங்கிருந்தோ வந்த உணவை உட்கொண்டாலும், ஆகாசத்தில் வீசப்படும் உணவு அதில் ஒட்டாதது போன்று, அவனிடம் பாபம் ஒட்டுவதில்லை – என்றும், ப்ரணஸம்சயமாபந்நோ யோ அந்நமத்தி யதஸ்தத: | லிப்யதே ந ஸ பாபேந பத்மபத்ரமிவாம்பஸா - பட்டினியால் உயிர் போகும் நிலை ஏற்படும்போது எங்கிருந்தோ வந்த உணவை உட்கொண்டாலும், தாமரை இலையில் உள்ள நீர் அதில் ஒட்டாதது போன்று, அவனிடம் பாபம் ஒட்டுவதில்லை – என்றும் கூறப்பட்டது. இத்தகைய நிலையானது ப்ரஹ்மத்தை அறிந்தவனுக்கும் பொருந்தும் என்பது ப்ரஹ்மஸூத்ரத்தில் (3-4-28) – ஸர்வ அந்ந அநுமதிச்ச ப்ரணாத்யயே தத் தர்சநாத் - ப்ராணவித்யை உள்ளவனுக்கு, அவன் உயிர் பிரிவதாக இருந்தால் மட்டுமே எந்தவிதமான உணவும் அனுமதிக்கப்படுகிறது – எனப்பட்டது. எனவே ஆத்மாவுக்குக் கர்த்ருத்வம் இல்லை என்பதாலும், ஆத்மா ஸர்வேச்வரன் வசப்பட்டது என்பதாலும், ப்ரபத்திக்குப் பின்னர் அறிந்துகொண்டே செய்யும் பாபங்கள் ஒட்டாது என்பதால் மீண்டும் ப்ராயச்சித்த ப்ரபத்தி செய்யவேண்டாம் என்னும் கருத்து சரியல்ல.

## "வ்ரஜ" என்பது விதிக்கப்படுவதில்லை என்பது போன்ற வாதங்களை மறுத்தல்

**மூலம்** – இவ்விடத்தில் சிலர் "வ்ரஜ" இத்யாதி விதிகளை அந்யபரங்களாக்கி "யோ அந்யதா ஸந்தமாத்மாநம் அந்யதா ப்ரதிபத்யதே | கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்ம அபஹாரிணா", "யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதி ஸ்தித: | தேந சேதவிவாதஸ்தே மா கங்காம் மா குரூந் கம:", "ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர" இத்யாதிகளில் தாத்பர்ய கதிகளையும் பராமர்சியாதே இவற்றைக் கொண்டு சாஸ்த்ர ஜந்ய ஸம்பந்த ஜ்ஞாநமொழிய வேறு முமுக்ஷுவுக்கு அநுஷ்டேயமாயிருப்பதோர் உபாயமில்லை என்பார்கள். இது பக்தி ப்ரபத்த்யாதி விதி ஸ்வாரஸ்ய விருத்தம். ராக ப்ராப்த ச்ரவண மநநங்களாலே ஸித்தமான சாஸ்த்ர ஜந்ய ஜ்ஞாநத்தை விதிக்கவும் வேண்டா.

**விளக்கம்** – இங்கு ஒரு சிலர் "வ்ரஜ" என்பது ஒரு விதிமுறை போன்று விதிப்பது அல்ல என்று கூறுவர். இவர்கள், மஹாபாரதம் உத்யோக பர்வம் (41-37) - யோ அந்யதா ஸந்தமாத்மாநம் அந்யதா ப்ரதிபத்யதே | கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்ம அபஹாரிணா – ஸர்வேச்வரனுக்குச் சொந்தமாக உள்ள ஆத்மாவை சுதந்திரமானவன் என்று எண்ணும் ஒருவன் ஆத்மாவைக் களவு செய்தவன் ஆகிறான்; அவன் எத்தகைய பாபங்களைத்தான் செய்யவில்லை - என்றும், மநுஸ்ம்ருதி (6-92) - யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதி ஸ்தித: | தேந சேதவிவாதஸ்தே மா கங்காம் மா குரூந் கம: - ஸூர்யமண்டலத்திலும் இதயத்திலும் வசிக்கின்ற பரமாத்மாவுக்கு விரோதமாக நடல்லாமல் இருந்தால் கங்கைக்கும் குருக்ஷேத்ரத்திற்கும் செல்லவேண்டாம் - என்றும், ஸ்ரீவிஷ்ணுதத்வம் - ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர – ஆத்மாவானது ஸ்ரீஹரிக்கு இயல்பாகவே அடிமையானது என்று எப்போதும் எண்ணியபடி இருப்பாயாக – என்றும் கூறப்படுகின்ற பல வாக்கியங்களுடைய உண்மையான கருத்தை அறியாமல், இந்த வாக்கியங்கள் மூலமாகவே "சாஸ்த்ரங்கள் மூலமாக அறியப்படுவதான ஜீவாத்மா மற்றும் பரமாத்மா ஸம்பந்தம் என்பதை மட்டும் அறிந்தாலே போதுமானது; முமுக்ஷுவுக்கு வேறு உபாயம் ஏதும் இல்லை" என்று உரைக்கிறார்கள். இது பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகிய விதிகளுக்கு முரண்பட்ட கருத்தாகும். கேட்டல், சிந்தித்தல் போன்றவற்றால் உண்டாகின்ற சாஸ்த்ர ஞானம் என்பது, விருப்பத்தால் உண்டாகிறதே அல்லாமல், எதனாலும் விதிக்கப்பட்டு வருவதில்லை.

**மூலம்** – அவிதேய ஜ்ஞாநத்தை மோக்ஷஸாதநமாகச் சொல்லுவார்க்கு விதி விரோதாதி தோஷங்களும் வரும் என்று ஸாதித்ததிறே. ஆன பின்பு ஸர்வ வித்யாதி நிஷ்டரான முமுக்ஷுக்களுக்கும் பொதுவாய்ப் பரம்பரயா உபகாரகமான ஜீவ பரமாத்ம ஸம்பந்த ஜ்ஞாநம் சாஸ்த்ரத்தாலே பிறந்தவனுக்கு நம்முடைய ஸ்வாமியாய் நிரதிசய போக்யனான ஸ்ரீய:பதியைப் ப்ராபிக்கைக்கு விரகு எது என்கிற உபாயாகாங்க்ஷை பிறந்தவளவில் இங்கே அவ்வோ அதிகாரி விசேஷ அநுரூபமாக விதிக்கப்படுகிற ஜ்ஞாநாந்தரங்கள் பக்தி ப்ரபத்திகள். அவற்றில் ப்ரபத்தியாவது "யத் ஸம்ரக்ஷ்யதயா அர்ப்யதே" இத்யாதிகளிற்படியே ஸபரிகரமான ஸ்வரக்ஷாபர ஸமர்ப்பணம். இது ஸம்பந்த அநுஸந்தாந கர்ப்பமாக வேண்டுமென்கைக்காக, ஸம்பந்த ஜ்ஞாநம் ப்ரபத்தியென்று சொன்னார்களத்தனை. இப்பரந்யாஸ ரூப ப்ரபத்தியின் ஸ்வரூப பரிகர அதிகாராதிகளை முன்பே பரக்கச் சொன்னோம்.

**விளக்கம்** – விதிக்கப்படவேண்டாத ஞானம் என்பது மோக்ஷத்திற்கு ஸாதனம் என்று சிலர் கூறலாம்; இவ்விதம் கூறினால், விதிமுறைகளுக்கு விரோதம் போன்ற தோஷங்கள் வரலாம் என்று ஸ்ரீபாஷ்யத்தில் கூறப்பட்டது. இவ்விதம் கொள்ளும்போது, முமுக்ஷுக்கள் எந்த வித்யையைக் கைக்கொண்டாலும், ஜீவாத்மா மற்றும் பரமாத்மா ஆகியோருக்கு இடையே உள்ள ஸம்பந்தத்தைக் குறித்த ஞானம் என்பதே மறைமுகமாக உதவுவதாக உள்ளது. இத்தகைய ஞானத்தை முமுக்ஷு ஒருவன் தகுந்த சாஸ்த்ரம் மூலம் அறிந்த பின்னர், "நம்முடைய ஸ்வாமியும், எல்லையற்ற இனிமை உள்ளவனும் ஆகிய மஹாலக்ஷ்மியின் நாயகனை அடைவதற்கான வழி எது?" என்று அறிவதற்கான ஆசை உண்டாகிறது. இவ்விதமான அதிகாரிக்குத் தகுந்தபடி விதிக்கப்படுவது என்னவென்றால், ஞானம் என்னும் வடிவத்தைக் கொள்கின்ற பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகும். இவற்றில் ப்ரபத்தி என்பது, அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (52-36) - யத் ஸம்ரக்ஷ்யதயா அர்ப்யதே – யாரிடம் இந்த ஜீவாத்மாவைக் காப்பாற்றும் பொறுப்பை அளிக்கவேண்டும் – என்றுள்ள வாக்கியங்களின்படி, தன்னைக் காக்கும் அனைத்து பொறுப்புகளையும் அவனிடம் அளிப்பதே ஆகும். இத்தகைய ப்ரபத்தி என்பது ஜீவாத்மா மற்றும் பரமாத்மா ஆகியோருக்கு இடையே உள்ள ஸம்பந்தத்தைக் குறித்த ஞானத்துடன் கைக்கொள்ளப்பட வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகவே இத்தகைய ஞானம் என்பதே ப்ரபத்தி என்று கூறினார்கள். தன்னுடைய பாரத்தை அவனிடம் ஸமர்ப்பணம் செய்வதாகிய ப்ரபத்தியின் ஸ்வரூபம், அங்கங்கள் மற்றும் அதிகாரிகள் குறித்து முன்பே விரிவாக உரைத்தோம்.

## “ஏக” என்பதன் பொருள் சுருக்கம்

சாதனமும் நற்பயனும் நானே யாவன்
　　சாதகனும் என் வயமாய் என்னைப் பற்றும்
சாதனமும் சரணநெறி அன்றுனக்குச்
　　சாதனங்கள் இந்நிலைக்கோர் இடையினில்லா
வேதனை சேர் வேறங்கம் இதனில் வேண்டா
　　வேறெல்லா நிற்கு நிலை நானே நிற்பன்
தூதனுமாம் நாதனுமாம் என்னைப் பற்றிச்
　　சோகம் தீரென உரைத்தான் சூழ்கின்றானே

**பொருள்** – “உபாயமாகவும், நல்ல பயனாகவும் நானே நிற்பேன். உபாயத்தைக் கைக்கொள்பவன் எனக்கு வசப்பட்டவனாக நின்று, என்னையே சரணம் அடைவான். உனக்குச் சரணாகதி என்பது பலனை ஏற்படுத்தவல்லது மட்டுமே அல்லாமல் நேர் உபாயம் அல்ல. பக்தி முதலான உபாயங்கள் இத்தகைய சரணாகதிக்கு துணை அல்ல. மிகுந்த சிரமத்துடன் இயற்றவல்ல மற்ற அங்கங்கள் ஏதும் சரணாகதிக்கு அவசியம் இல்லை. மற்ற உபாயங்கள் அனைத்தும் நிற்கின்ற இடத்தில் நின்று நானே பலனை அளிப்பேன். தூது செல்லும்படி எளியவனாகவும், ஸ்வாமியாகவும் உள்ள என்னைச் சரணம் புகுந்து உனது சோகத்தைப் போக்கிக் கொள்வாயாக”, என்று உரைத்த ஸர்வேச்வரன், தானே நம்மை விடாமல் சூழ்ந்து கொள்கிறான்.

## சரம ச்லோகத்தின் இரண்டாம் வரியின் விஷயம்

**மூலம்** – இப்படிப் பூர்வார்த்தத்தாலே ஓர் அதிகாரி விசேஷத்துக்கு த்வயத்தில் பூர்வகண்டத்திலே அநுஸந்தேயமாய் ஸர்வதர்மங்களுக்குமுள்ள ப்ரபாவத்தையும் அவற்றுக்கு இல்லாத ஸ்வ அஸாதாரண ப்ரபாவத்தையும் உடைத்தான ஸக்ருத் கர்த்தவ்ய உபாய விசேஷத்தை அதிகார நைரபேக்ஷ்யாதி விவரண பூர்வகமாக விதித்து, உத்தரார்த்தத்தாலே த்வயத்தில் உத்தரகண்டத்தில் பலத்தை நம: சப்த ஸம்க்ஷிப்த

அநிஷ்ட நிவ்ருத்தி விவரணமுகத்தாலே அருளிச் செய்தான். இங்கு பூர்வார்த்தத்தாலே அதிகாரி க்ருத்யத்தை அருளிச்செய்தான்; உத்தரார்த்தத்தாலே சரண்யனாய் ஸ்வீக்ருத பரனான தன் க்ருத்யத்தை அருளிச்செய்து, க்ருதக்ருத்யனான இவனைத் தேற்றுகிறான்.

**விளக்கம்** – இவ்விதமாக சரம ச்லோகத்தில் உள்ள முதல் பகுதி மூலமாக, குறிப்பிட்ட அதிகாரிக்கு, த்வய மந்த்ரத்தின் முற்பகுதியில் கூறப்பட்டதும், மற்ற அனைத்து தர்மங்களில் உள்ள பெருமைகள் அனைத்தையும் தன்னுள் அடக்கியது மட்டும் அல்லாமல் அவற்றுக்கு இல்லாத பல பெருமைகளைக் கொண்டதும், தனக்கென்று வேறு எந்தவிதமான அங்கங்களையும் எதிர்பாராமல் உள்ளதும், ஒருமுறை மட்டுமே செய்யத்தக்கதும் ஆகிய ப்ரபத்தியை விதித்தான். சரம ச்லோகத்தின் இரண்டாவது பகுதியில், த்வய மந்த்ரத்தின் இரண்டாவது பகுதியில் உள்ள "நம:" என்பதன் மூலம் சுருக்கமாகக் கூறப்பட்டதான இந்த ப்ரபத்தியின் பலனை, அதிகாரிக்கு விருப்பம் அல்லாதவற்றை விலக்குகிறது என்பதன் மூலமாக விரிவாக அருளிச்செய்தான். மேலும், சரம ச்லோகத்தின் முதல் பகுதி மூலமாக அதிகாரி செய்யவேண்டியதை உரைத்தான்; இரண்டாம் பகுதி மூலமாக சரணம் அடையத்தக்கவனாக இருந்து, தன்னைச் சரணம் அடைந்தவனுடைய பாரத்தை ஏற்றுக் கொண்ட க்ருஷ்ணன், தான் செய்யவேண்டியதை உரைத்து, செய்யவேண்டியதைச் செய்தவனாகிய அர்ஜுனனைத் தேற்றுகிறான்.

## "அஹம்" என்பதன் விளக்கம்

**மூலம்** – இவ்விடத்தில் "மோக்ஷயிஷ்யாமி" என்கிற உத்தமனாலே, "நான்" தோற்றா நிற்க, மிகுதியான "அஹம்" என்கிற பதம், அர்த்த ஸ்வபாவத்தாலே ஸர்வபாப விமோசநத்துக்கு உறுப்பான அகடிதகடநா சக்த்யாதிகளை விவக்ஷித்து ஸப்ரயோஜனமாகிறது. "அபராதம் பண்ணினவனை விலங்கிட்டு வைத்த ஸமாதிக தரித்ரனான நான் ஒரு வ்யாஜத்தாலே உல்லஸித காருண்யனாய் அபராதத்தைப் பொறுத்து விடும்போது விலக்கவல்லாரில்லை. வேறொருவனாலே இவனை முக்தனாக்கவுமெண்ணாது" என்று இங்கு தாத்பர்யம். இவ்வர்த்தம் "மோக்ஷதோ பகவாந் விஷ்ணு:", "பசவ: பாசிதா: பூர்வம் பரமேண ஸ்வலீலயா | தேநைவ மோசநீயாஸ்தே நாந்யைர்மோசயிதும் க்ஷமா:" இத்யாதிகளிலே ப்ரஸித்தம்.

**விளக்கம்** – இந்த இடத்தில் உள்ள “மோக்ஷயிஷ்யாமி – விடுவிப்பேன்” என்ற தன்மை விகுதி மூலம் ”நான்” என்பது வெளிப்படாமல் உள்ளது. ஆகவே தொடர்ந்து “அஹம் – நான்” என்று கூறப்பட்டதால், அனைத்துவிதமான பாபங்களிலிருந்தும் தன்னை அண்டியவனை விடுவிப்பதற்கு அவசியமாக உள்ளதான “யாராலும் செய்ய இயலாத செயல்களைச் செய்தல்” என்பது போன்ற சக்திகளை வெளிப்படுத்தப்படுகிறது. அதாவது, “மிகுந்த அபராதங்களைச் செய்த ஒருவனை ஸம்ஸாரம் என்னும் சிறையில் அகப்படுத்தி, ‘என்னைக் காட்டிலும் உயர்ந்தவரும் இல்லை, சமமானவரும் இல்லை’ என்பவனாக உள்ள நான், அவன் கைக்கொண்ட உபாயம் காரணமாக, ஓங்கி வளர்கின்ற கருணை கொண்டு அவனுடைய அபராதங்களைப் பொறுத்துக் கொண்டு அவனுக்குப் பலன் அளிக்கத் தொடங்கும்போது, அதனை விலக்கவல்லவர்கள் யாரும் இல்லை. நான் அல்லாமல் இவனுக்கு வேறு யாரும் முக்தி அளிக்கவும் இயலாது” என்று கருத்து. இந்தக் கருத்தானது, மோக்ஷதோ பகவாந் விஷ்ணு: - பகவான் விஷ்ணுவே மோக்ஷம் அளிக்கவல்லவன் – என்றும், ஸ்ரீவிஷ்ணுதத்வம் - பசவ: பாசிதா: பூர்வம் பரமேண ஸ்வலீலயா | தேநைவ மோசநீயாஸ்தே நாந்யைர்மீசயிதும் க்ஷமா: - ஸர்வேச்வரனால் அவனுடைய லீலைக்காகவே இங்கு அனைவரும் கர்மம் என்னும் கயிற்றால் கட்டப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிக்க அவனால் மட்டுமே முடியும் அல்லாமல், வேறு யாராலும் அல்ல – என்றும் உள்ள வரிகளில் காணலாம்.

**மூலம்** – இவ் “அஹம்” என்கிற பதத்தில் ஸஹஜ காருண்யாதிகள் பேரணியாக, ப்ரபத்தியடியாக வந்த ப்ரஸாத விசேஷம் இளவணியாய், நிரங்குசமான ஸ்வாதந்த்ர்யம் ஸர்வவிரோதி நிராகரணார்த்தமாக முன்னே நிற்கிறது. அது எங்ஙனேயென்னில், ஸஹஜ காருண்யம் அல்ப வ்யாஜத்தைக் கொண்டு அநந்த அபராதங்களை அநாதரிக்கும்படியான ப்ரஸாதத்தை உண்டாக்குகிறது. இப் ப்ரஸாத விசேஷம், காருண்ய உபச்லிஷ்டமாய்க் கொண்டு, நிரங்குச ஸ்வாதந்த்ர்யத்தை ஆச்ரிதருடைய ஸர்வவிரோதி நிராகரணத்துக்கு உறுப்பாக்குகிறது. இப்படி ஸர்வ பாப விமோசநத்துக்கு அபேக்ஷிதமான ஸர்வாகாரத்தாலும் விசிஷ்டனான ஈச்வரனுடைய நிரபேக்ஷ கர்த்ருத்வ தத்பரமான “அஹம்” சப்தத்திலே அவதாரணம் பலிதம்.

**விளக்கம்** – இங்குள்ள “அஹம் – நான்” என்னும் சொல்லானது, பகவானுடைய இயல்பான கருணையை மூலகாரணமாகக் கொண்டபடி, ப்ரபத்தி மூலமாக ஏற்படுகின்ற சிறப்பான அனுக்ரஹத்தை நடுவில் உண்டாகக்கூடிய துணையாகக் கொண்டு, எந்தவிதமான தடையும் இன்றி உள்ளதான பகவானுடைய சுதந்திரம் என்பது அனைத்துவிதமான பாபங்களையும் நீக்குவதற்கு, தான் முன்னே நிற்பதை உணர்த்துவதாகவும் கொள்ளலாம். இது எப்படி? பகவானுக்கு இயல்பாகவே உள்ள கருணை என்பது, அவனை அண்டியவர்களிடம் மிகவும் சிறிய அளவில் இருக்கின்ற ஏதேனும் ஒரு காரணத்தைக் கைக்கொண்டு, அவர்களுடைய எல்லையற்ற அபராதங்களை அவன் தள்ளும்படியான அனுக்ரஹத்தை உண்டாக்குகிறது. இத்தகைய அனுக்ரஹமானது அவனுடைய கருணையுடன் சேர்ந்ததாக நின்று, அவனுடைய தடையற்ற சுதந்திரத்தை, அவனை அண்டியவர்கள் அவனை அடையத் தடையாக உள்ள அனைத்துவிதமான விரோதிகளையும் நீக்குவதற்கு அடிப்படையாக உள்ளது. இவ்விதம் “அஹம்” என்னும் சொல்லானது, அனைத்து பாபங்களிலிருந்தும் விடுவிப்பதற்கு அவசியமாக உள்ள அனைத்து அம்சங்களுடனும் கூடியுள்ள ஈச்வரனுடைய “எதனையும் எதிர்பாராமல் செயல் புரிதல்” என்னும் தன்மையை வெளிப்படுத்துவதால், இந்தச் சொல்லில் “நானே (அதாவது நான் மட்டுமே”) என்னும் ஏவகாரம் மறைமுகமாக வெளிப்படுகிறது.

## “த்வா” என்பதன் விளக்கம்

**மூலம்** – “த்வா” என்றது “ந த்வேவாஹம் முதலான உபதேச பரம்பரையாலே சிதசிதீச்வர தத்வ த்ரய விவேகம் பிறந்து, ஐச்வர்யாதி புருஷாத்தங்களினுடைய அல்பத்வ அஸ்திரத்வாதி தோஷங்களைத் தெளிந்து மத்ப்ராப்தி ரூபமான பரமபுருஷார்த்தத்தைப் பெறவேண்டுமென்று அபிநிவிஷ்டனாய் இதுக்கு உபதிஷ்டமான துஷ்கர உபாயாந்தரத்தில் துவக்கற்றுப் ப்ராப்யனாய் ஸர்வவிரோதி நிராகாரண க்ஷமனான என் பக்கலிலே பரந்யாஸம் பண்ணிக் க்ருதக்ருத்யனாய்க் கோலின பல லாபத்தை பற்ற இனி ஒரு கர்த்தவ்யாந்தரத்தில் ப்ராப்தியில்லாத உன்னை” என்றபடி.

**விளக்கம்** – “த்வா – உன்னை” என்பதன் கருத்து என்ன? கீதை (2-12) - ந த்வேவாஹம் – ஸர்வேச்வரனாகிய நான் – என்பது போன்ற எனது உபதேசங்கள் மூலமாக “சித், அசித்

மற்றும் ஈச்வரன்” ஆகிய மூன்று தத்துவங்களைக் குறித்த விவேகம் அடைந்தவனாகவும்; ஐச்வர்யம் முதலான பலன்களுடைய அற்பமான தன்மை மற்றும் நிலையற்ற தன்மை ஆகிய தோஷங்களை அறிந்தவனாகவும்; பகவானாகிய என்னை அடைதல் என்னும் மிகவும் உயர்ந்த பலனைப் பெற விரும்பியவனாகவும்; அதற்காக விதிக்கப்பட்ட பலவிதமான உபாயங்கள் அனைத்தையும் விலக்கியவனாகவும்; உன்னால் அடையத்தக்கவனும், உனது விரோதிகள் அனைத்தையும் நீக்கவல்லவனும், அனைத்தையும் பொறுப்பவனும் ஆகிய என்னிடம் உனது பாரங்கள் அனைத்தையும் ஒப்படைத்தவனாகவும்; இதன் மூலம் செய்யவேண்டிய அனைத்தையும் செய்து முடித்தவனாகவும்; இந்தப் பலனுக்காக இனி வேறு எந்த உபாயத்தையும் பற்றவேண்டாதவனாகவும் உள்ள உன்னை என்று கருத்து.

## “ஸர்வபாப” என்பதன் விளக்கம்

### முமுக்ஷுவுக்கு புண்ணியமும் பாபமே என்றாதல்

**மூலம்** – இப்படி பந்த மோக்ஷ சக்தனான மோக்ஷ ப்ரதனையும், அசக்தனாய் அவன் பக்கலிலே ந்யஸ்தபரனான முமுக்ஷுவையும் சொல்லி, மேல் “ஸர்வ பாபேப்ய:” என்று பந்தங்களைச் சொல்லுகிறது. பாபமாவது, சாஸ்த்ரவிதேத்யமான அநர்த ஸாதநம்; அநர்த்தமாவது ப்ரதிகூல ப்ராப்தியும் அநுகூல நிவ்ருத்தியும். இங்கு பாபசப்தம் முமுக்ஷுவைப் பற்ற அநிஷ்ட பலங்களான ஸாம்ஸாரிக புண்யங்களையும் சொல்லுகிறது. “ஏதே வை நிரயாஸ்தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந:” என்கையாலே, ஸ்வர்காதிகளும் முமுக்ஷுவுக்கு நரகமாகையால் இவனுக்கு ஸ்வர்கஹேதுவோடு நரகஹேதுவோடு வாசியில்லை. ஆகையாலிறே முமுக்ஷுவுக்குப் பாபங்களை விடச் சொல்லுகிறாப்போலே, “த்ரைவர்க்காந் த்யஜேத் தர்மாந்” என்று விதிக்கிறது. “இருவல்வினைகளும் சரித்து” என்கிறபடியே ஸுக்ருத துஷ்க்ருதங்கள் இரண்டும் முமுக்ஷுவுக்கு நிராகாரணீயங்களாகவிறே சொல்லுகின்றன.

**விளக்கம்** – இப்படியாக சேதநனுக்கு ஸம்ஸார பந்தம் மற்றும் மோக்ஷம் ஆகிய இரண்டையும் அளிக்கவல்லவனும், மோக்ஷத்தை அளிப்பவனும் ஆகிய பகவானைக் கூறி (இது “அஹம்” என்னும் சொல்), தன்னிடம் எந்தவிதமான சக்தியும் அற்றவனாக தனது பாரங்கள் அனைத்தையும் பகவானிடம் ஒப்படைத்தவனாக உள்ள முமுக்ஷுவைக் கூறி (இது “த்வா” என்னும் சொல்), அடுத்து ஸம்ஸார பந்தங்களாக உள்ளவை “ஸர்வ பாபேப்ய:” என்பதால் கூறப்படுகின்றன. பாபம் என்றால் தீங்கு ஏற்படுத்தவல்லது என்று சாஸ்த்ரம் மூலம் அறியப்படுவது ஆகும்; தீங்கு என்றால் தீமை உண்டாதல் மற்றும் நன்மை இழத்தல் ஆகும். இங்குள்ள “பாபம்” என்னும் சொல்லானது முமுக்ஷுக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு விருப்பம் இல்லாத பலன்களாகிய புண்ணியத்தையும் சேர்த்தே குறிக்கிறது. மஹாபாரதம் சாந்திபர்வம் (196-6) - ஏதே வை நிரயாஸ்தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந: - அவனுடைய இடத்தைப் பார்க்கும்போது மற்றவை நரகங்களே – என்று கூறப்படுவதால், முமுக்ஷுவுக்கு ஸ்வர்கமும் நரகத்தைப் போன்றதே ஆகும்; ஆகவே முமுக்ஷுவுக்கு ஸ்வர்க்கம் மற்றும் நரகம் ஆகியவற்றுக்கு இட்டுச் செல்லக்கூடிய காரணங்களில் வேறுபாடு இல்லை. இந்தக் காரணத்தால்தான் முமுக்ஷுக்களிடம் “பாபங்களை விடவேண்டும்” என்று கூறுவது போன்றே, த்ரைவர்க்காந் த்யஜேத் தர்மாந் – தர்மம், அர்த்தம், காமம் ஆகியவற்றுக்குக் காரணமான தர்மங்களையும் விடவேண்டும் – என்று விதிக்கப்பட்டது. திருவாய்மொழி (1-5-10) - இருவல்வினைகளும் சரித்து – என்பதற்கு ஏற்ப புண்ணியம் மற்றும் பாபம் ஆகிய இரண்டுமே முமுக்ஷுக்களுக்குத் தவிர்க்கப்பட வேண்டியவை என்றே கூறப்படுகின்றன.

## “பாபேப்ய:” என்னும் பன்மை மற்றும் “ஸர்வ” என்னும் சொல் ஆகியவற்றின் விளக்கம்

**மூலம்** – இப்படி புண்யபாப ரூபமான பந்த காரணத்தைப் பாப சப்தத்தாலே சொல்லி, பஹுவசநத்தாலே புண்யபாபங்களினுடைய ஆநந்த்யத்தை விவக்ஷிக்கிறது. இனி ஸர்வ சப்தத்தாலே விசேஷிக்கிறதென் என்னில், ப்ராப்தி விரோதியான கர்மத்துக்குக் காரணமாயும் கார்யமாயும் வருகிற அவித்யையையும், விபரீத வாஸநையையும், விபரீத ருசியையும், “ஸ்தூல ஸூக்ஷ்ம ரூப ப்ரக்ருதி” ஸம்பந்தத்தையும் பாப ராசியிலே சேர்க்கைக்காக.

**விளக்கம்** – இவ்விதமாக ஸம்ஸார பந்தம் உண்டாவதற்குக் காரணமாக உள்ள புண்ணியம் மற்றும் பாபம் ஆகிய இரண்டுமே “பாபம்” என்னும் சொல்லால் உரைக்கப்பட்டு, “பாபேப்ய:” என்ற பன்மை மூலம் புண்ணியம் மற்றும் பாபம் ஆகியவற்றின் எண்ணற்ற நிலை கூறப்படுகிறது. பகவானை அடைவதற்குத் தடையாக உள்ள கர்மங்களுக்குக் காரணமாகவும் மற்றும் அத்தகைய கர்மங்களின் கார்யமாகவும் உள்ள அவித்யை, விபரீதமான வாசனைகள், விபரீதமான ருசிகள், ஸ்தூலமாகவும் ஸூக்ஷ்மமாகவும் உள்ள சரீரத்தை விடுவதை முடிய ஜீவாத்மாவைப் பற்றியபடி உள்ள இந்த உலகின் ஸம்பந்தம் போன்ற பலவும் “ஸர்வ” என்னும் சொல் மூலமாக பாபங்களின் கூட்டத்தில் சேர்க்கப்பட்டன.

## சரணாகதி கத்யத்தின் சூர்ணை மூலமாக “ஸர்வபாப” என்பதை விளக்குதல்

**மூலம்** – இப்படி “ஸர்வபாபேப்ய:” என்கிற விரோதி வர்கத்தையெல்லாம் “மநோ வாக் காயை:” என்று தொடங்கி மூன்று சூர்ணிகையாலே சப்தமாகவும் ஆர்த்தமாகவும் அருளிச்செய்தார். “க்ஷபயித்வா அதிகாராந் ஸ்வாந் சச்வத் காலேந பூயஸா | வேதஸோ யத்ர மோதந்தே சங்கரா: ஸு புரந்தரா:” என்றும், “யாவததிகாரம் அவஸ்தித: ஆதிகாரிகாணாம்” என்றும் சொல்லுகிறபடியே சிலர்க்கு அதிகார அவஸாநத்திலே மோக்ஷமாயிருந்தது. அதிகாரிகளல்லாதார்க்கும் “அநாரப்த கார்யே ஏவ து பூர்வே ததவதே:” என்கிறபடியே ப்ராரப்த கர்ம போக அவஸாநத்திலேயாயிருந்தது. இப்படியிருக்க, இவ்விடத்தில் ஆரப்த கார்யத்தை க்ஷமிக்கையாவதென்னென்னில், பல ப்ரதாந ப்ரவ்ருத்தமான கர்மத்திலும் ஜந்மாந்தர திவஸாந்தர ஸ்தித்யாதிகளுக்கு ஆரம்பகமான அம்சமும் இஸ் ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனுக்கு அநிஷ்டமாய், அத்தையும் பற்ற இவன் சோகிக்கில் அவ்வம்சத்தையும் ஈச்வரன் க்ஷமிக்கும். அப்போதே மோக்ஷம் பெற்றன்றி தரிக்கமாட்டாத ஆர்த்தி அதிசமுடையார்க்கு, அக்ஷ்க்ஷணத்திலே ப்ராரப்த

கார்யமான கர்மத்தை நிச்சேஷமாக க்ஷமிக்கும். ஆகையால் ஆரப்த கார்யத்தை க்ஷமிக்க வேண்டுமென்று அபேக்ஷிக்கக் குறையில்லை.

**விளக்கம்** – இவ்விதம் "ஸர்வபாபேப்ய:" என்பதன் மூலம் கூறப்பட்டதான "பகவானை அண்டவிடாமல் தடுக்கும் விரோதிகள்" அனைத்தையும் எம்பெருமானார் சரணாகதி கத்யத்தில் (சூர்ணை 11) – மநோ வாக் காயை: - மனம், வாக்கு, சரீரம் – என்று தொடங்குகின்ற மூன்று சூர்ணைகளில் விரிவாக அருளிச்செய்தார். லக்ஷ்மீ தந்த்ரத்தில் (17) - ஏகாந்திநோ மாஹாபாகா யத்ர பச்யந்தி நௌ ஸதா க்ஷபயித்வாதிகாராந் ஸ்வாந் சச்வத்காலேந பூயஸா - நாராயணனை மட்டுமே வழிபட்டபடி உள்ள அவர்கள், இந்த இடத்தில் எப்போதும் எங்கள் இருவரையும் பார்த்துக் கொண்டு, தாங்கள் செய்த ப்ரபத்திக்கான பலன்களை அனுபவித்தபடி உள்ளனர் – என்றும், (18) - வேதஸோ யத்ர மோதந்தே சங்கரா: ஸ புரந்தரா: ஸூரயோ நித்ய ஸம்ஸித்தா: ஸர்வதா ஸர்வ தர்சிந: - அங்கு நான்முகன், சங்கரன், புரந்தரர்கள் (இந்த்ரன்கள் - ஒவ்வொரு கல்பத்திலும் இந்த்ரன் மாறுபாடுவதால், இதுவரை இருந்த இந்த்ரன்கள், இப்போது உள்ள இந்த்ரன்), தேவர்கள், எப்போதும் ஸித்தி பெற்ற ரிஷிகள் என்று பலரும் எப்போதும் உயர்ந்த விஷ்ணுவின் ரூபத்தைத் தரிசித்தபடி உள்ளனர் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஒரு சில அதிகாரங்களில் பகவானால் நியமிக்கப்பட்டவர்களுக்கு, அந்த அதிகாரத்தின் முடிவில் மட்டுமே மோக்ஷம் ஏற்படும். இவ்விதமான அதிகாரிகள் அல்லாதவர்களுக்கு, ப்ரஹ்ம ஸூத்ரம் (4-1-15) - அநாரப்த கார்யே ஏவ து பூர்வே தததவதே: - இதுவரை பலன் அளிக்கத் தொடங்காத புண்ணிய பாபங்கள் மட்டுமே அழிகின்றன; காலதாமதம் கூறப்படுவதால் ஆகும் – என்பதற்கு ஏற்ப, பலன் அளிக்கத் தொடங்கிய கர்மங்களை அனுபவித்த பின்னரே மோக்ஷம் உண்டாகும். இவ்விதம் உள்ளபோது இங்கு, "பலன் அளிக்கத் தொடங்கிய கர்மங்களையும் பகவான் பொறுக்கிறான்", என்று கூறுவதன் கருத்து என்ன? ப்ரபந்நன் ஒருவன் தன்னுடைய பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்களில், அடுத்த பிறவி அல்லது அடுத்த நாளின் இருப்பு போன்றவற்றை அளிக்கவல்ல கர்ம பலன்கள் குறித்து விருப்பம் இன்றி துன்பம் அடைவானாகில், அத்தகைய கர்மங்களைப் பகவான் அப்போதே அழிக்கிறான். அந்த நொடியிலேயே மோக்ஷம் பெற்றால் அல்லாமல் உயிர் தரிக்கமாட்டாதவர்களான மிகுந்த துடிப்பு கொண்ட ப்ரபந்நர்களுக்கு, பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்களை, அந்த நொடியிலேயே அழிக்கிறான். ஆகவே பலன்

அளிக்கத் தொடங்கிய கர்மங்களைப் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்று விரும்புவதில் குறையில்லை.

**மூலம் –** இவ்விடத்தில், ப்ரபத்தி காலத்துக்கு முன்புள்ளவற்றை “க்ருதாந்” என்றெடுத்துப் பின்புள்ளவற்றை “கரிஷ்யமாணாந்” என்று சொல்லா நின்றது; ப்ரபத்தி காலத்தில் பண்ணுவன சில பாபங்கள் காண்கிறோம், இப்படியிருக்கக் க்ரியமாணங்களை க்ஷமிக்கையாவது ஏன் என்னில், “ப்ராரப்தோபரி ஸமாப்தச்ச வர்த்தமாந:” என்கிற ப்ரக்ரியையாலே ப்ரபத்திக்கு முன்பே தொடங்கிப் பின்பே தலைக்கட்ட வேண்டும்படி சிரகால ஸாத்யமாயிருக்குமவற்றையும் தத்க்ஷணத்தில் ப்ராமாதிகங்களையும் இங்கு க்ரியமாணங்களென்கிறது. கரிஷ்யமாணங்களாவன பின்பு தொடங்குமவை. இப்படி க்ரியமாண ஏகதேசங்களாயும், கரிஷ்யமாணங்களாயுமுள்ள உத்தராகத்தில் புத்தி பூர்வகமல்லாதவை, ஈச்வரன் க்ஷமிக்க ச்லேஷியாதே போம். புத்தி பூர்வகங்களானவை ப்ரபந்நனுக்கு “ப்ராயச்சித்திரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத்” என்கையாலே புந: ப்ரபத்தியாலே சமிக்கும்.

**விளக்கம் –** எம்பெருமானார் சரணாகதி கத்யத்தில், “க்ருதாந்” என்னும் சொல் மூலம் ப்ரபத்திக்கு முன்பு செய்த பாபங்களையும், “கரிஷ்யமாணாந்” என்னும் சொல் மூலம் ப்ரபத்திக்குப் பின்னர் செய்யக்கூடும் என்னும் பாபங்களையும் உரைத்தார். ஆனால் இங்கு ப்ரபத்தி நேரத்தில் செய்யக்கூடிய பாபங்களை நாம் பொதுவாகக் காண்பதில்லை; இவ்விதம் உள்ளபோது இங்கு “க்ரியமாணாந்” என்று நிகழ்காலத்தில் உள்ளதாகக் கூறி, அதனைப் பொறுக்கவேண்டும் என்று உரைப்பதன் கருத்து என்ன? அதாவது, ப்ராரப்தோபரி ஸமாப்தச்ச வர்த்தமாந: - தொடங்கப்பட்டு முடிவடையாமல் இருப்பதே வர்த்தமாநம் ஆகும் – என்று கூறுவதற்கு ஏற்ப, ப்ரபத்திக்கு முன்பு செய்யத் தொடங்கப்பட்டு, அவற்றை முடிப்பதற்கு நீண்ட காலம் ஆகும்விதமாக, அஜாக்ரதையின் விளைவால் ப்ரபத்தியின்போதும் செய்வதாக உள்ள பாப கர்மங்களே “க்ரியமாணங்கள்” எனப்படுகின்றன. “கரிஷ்யமாணாந்” என்பது ப்ரபத்திக்குப் பின்னர் செய்யப்படும் பாபங்கள் ஆகும். இவ்விதம் உள்ளபோது ப்ரபத்திக்குப் பின்னர் செய்யப்படும் பாபங்களிலும், முன்பு தொடங்கப்பட்டு ப்ரபத்தி காலத்தில் செய்யப்படும் பாபங்களிலும், எவை புத்தி அறிந்து செய்யப்படாதவையோ, அவை அனைத்தும் ஈச்வரனால் பொறுக்கப்பட்டு, மீதம் ஏதும் இல்லாமல் அழிந்துவிடும். ப்ரபத்திக்குப் பின்னர் புத்தி

அறிந்து செய்யப்படும் பாபங்கள், லக்ஷ்மீ தந்த்ரம் (17-91) - ப்ராயச்சித்திரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத் – பாபங்களுக்கான ப்ராயச்சித்தம் செய்யப்படவேண்டும், அத்தகைய ப்ராயச்சித்தமானது மீண்டும் ப்ரபத்தி செய்வதே ஆகும் – என்பதற்கு ஏற்ப மீண்டும் ப்ரபத்தி செய்வதால் தள்ளப்படும்.

## ப்ரபந்நன் அறிந்தே செய்யும் பாபங்கள் குறித்த வாதங்கள்

### இத்தகைய பாபங்கள் மோக்ஷத்தைக் கருத்தில் கொண்டு செய்யப்பட்ட ப்ரபத்தியால் விலகும் என்று கூறுவதன் கருத்து

**மூலம்** – ஸர்வேச்வரன்றான் மோக்ஷம் தர நினைக்கும்போது பாதகங்களும் விலக்காகாவென்னும் வார்த்தையும், "புத்தி பூர்வ உத்தராகத்தில் நிக்ரஹமும் வாராது. ப்ராயச்சித்தமும் வேண்டா" என்றபடியன்று; ப்ரஸாதத்தாலே அவன் ப்ரஸந்நனானால் மோக்ஷம் அவச்யம் பாவிக்குமென்றபடி. இதுக்கு இப்படி ஈச்வரன் புந:ப்ரபத்தியாகிற ப்ராயச்சித்தத்திலே மூட்டுகிறதுவும் க்ஷமாபலம்.

**விளக்கம்** – ஒரு சிலர், "ஸர்வேச்வரன் தானாகவே முன்வந்து ஒருவனுக்கு மோக்ஷம் அளிக்கத் தீர்மானித்தால், அந்த மனிதனுடைய பாபங்கள் அதனைத் தடுக்காது" என்று கூறுகிறார்கள். இந்தக் கருத்தானது, "அந்த மனிதன், தெரிந்து கொண்டே செய்யும் பாபங்கள் மூலம் பகவானுக்குக் கோபம் உண்டாகாது. ஆகவே அவற்றுக்கு ப்ராயச்சித்தம் செய்யவேண்டியதில்லை", என்ற கருத்தாக இருக்கமுடியாது. ஸர்வேச்வரன் தன்னுடைய கருணையால் மகிழ்ந்து மோக்ஷம் அளிக்கிறான் என்றால், அத்தகைய மோக்ஷம் நிச்சயமாகக் கிட்டும் என்பதே அவர்கள் கருத்தாகும்; ஆனால், அத்தகைய பாபங்களுக்கு மீண்டும் ப்ரபத்தி என்னும் ப்ராயச்சித்தம் அவசியம் இல்லை என்பது அவர்கள் கருத்தல்ல. அத்தகைய ப்ராயச்சித்தம் செய்யும்படியாக ஈச்வரன் அந்த மனிதனைத் தூண்டுவதும், ஈச்வரனுடைய பொறுமையே காரணம் என்பதை அறியவேண்டும்.

### ப்ரபந்நனுடைய குற்றங்கள் ஈச்வரனுக்கு இனிமை என்று கூறுவதன் கருத்து

**மூலம்** – ப்ரியதமை உடம்பில் அழுக்கும், வத்ஸத்தினுடைய வழும்பும் போலே ப்ரபந்நனுடைய தோஷமென்கிற வார்த்தையும், துஷ்டரும் சரணாகதரானால் ஈச்வரன் கைவிடாதே திருத்துமென்றபடி. இங்ஙனன்றிக்கே புத்திபூர்வ உத்தராகமும் ஈச்வரனுக்கு போக்யமென்று விவக்ஷிதமானால், ப்ரபந்நனுக்கு இதுவே யதாசக்தி ஸம்பாத்யமாம்.

**விளக்கம்** – ஒரு சிலர், "ஒருவனுக்குத் தனது ப்ரியமான மனைவியின் உடலில் உள்ள அழுக்கும், பசுவிற்குத் தனது கன்றின் மீது உள்ள அழுக்கும் எவ்விதம் இனிமையாக உள்ளதோ அதே போன்று, ஈச்வரனுக்கு ப்ரபந்நனுடைய தோஷங்கள் இனிமையாகவே உள்ளன", என்று கூறுகிறார்கள். இத்தகைய கருத்தானது, துஷ்டர்கள் கூட ப்ரபத்தி செய்தால் ஈச்வரன் அவர்களிக் கைவிடாமல் திருத்தி ஏற்றுக்கொள்வான் என்பதே ஆகும். இவ்விதம் கொள்ளாமல், "ப்ரபந்நன் ஒருவன் அறிந்துகொண்டே செய்யும் பாபங்கள் கூட ஈச்வரனுக்கு இனிமையாகவே இருக்கும்", என்று கொண்டால், ப்ரபந்நன் தன்னால் இயன்றவரைப் பாபங்களைச் செய்தபடி இருக்கலாம் என்றாகிவிடும்.

## அறிந்து செய்யும் பாபங்களுக்கு ப்ராயச்சித்தம் செய்யவில்லை என்றால் மோக்ஷம் தடையாகாது, சிறிய தண்டனைகள் கிட்டும்

**மூலம்** – ப்ரக்ருதி விசேஷ ஸ்வபாவத்தாலே அபராதங்கள் புத்திபூர்வகமாக வந்தாலும், புந:ப்ரபத்தி பண்ணாதார் பக்கலிலும் "தேவம் சார்ங்கதரம் விஷ்ணும் யே ப்ரபந்நா: பராயணம் | ந தேஷாம் யம ஸாலோக்ய ந ச தே நரகௌகஸ:", "யஸ்மிந் கஸ்மிந் குலே ஜாதா யத்ர குத்ர நிவாஸிந: | வாஸுதேவரதா நித்யம் யமலோகம் ந யாந்தி தே" இத்யாதிகளிற்படியே நரகாதிகள் வாராதபடி பண்ணி, ராஜபுத்ராத்யபராதத்திற்போலே லகு ப்ரத்யவாயத்தாலே கண்ணழிக்கிறதுவும் க்ஷமாவிசேஷம். பாபங்களுக்கு த்ருஷ்ட ப்ரத்யவாயங்களும் நரகாதி ப்ரத்யவாயங்களும் உண்டாயிருக்க, நரகாதிகள் இவனுக்கில்லையென்று விசேஷ வசநங்கள் சொன்னால், த்ருஷ்ட ப்ரத்யவாயங்களுக்கு பாதகரில்லை. வசந விரோதத்தில் ந்யாயம் ப்ரவர்த்தியாது.

**விளக்கம்** – ப்ரபந்நன் ஒருவன் இந்த உலகத்தின் தொடர்பு காரணமாக சில தவறுகளை அறிந்துகொண்டே செய்து, அதற்கான ப்ராயச்சித்த ப்ரபத்தியைச் செய்யாமல் விட்டாலும், வாமநபுராணம் (94-43) - தேவ சார்ங்கதரம் விஷ்ணும் ப்ரபந்நா: பராயணம் ந தேஷாம்

யமஸாலோக்யம் ந ச தே நரகௌகஸ: - சார்ங்கம் என்னும் வில்லை உடைய ஸ்ரீமந்நாராயணனே தாங்கள் பெற வேண்டிய உயர்ந்த புருஷார்த்தம் என்று கருதி, அவனது திருவடிகளில் ப்ரபத்தி செய்தவர்கள், யமலோகம் செல்வதில்லை; அவர்களுக்கு நரக இருப்பும் இல்லை- என்றும், யஸ்மிந் கஸ்மிந் குலே ஜாதா யத்ர குத்ர நிவாஸிந: வஸுதேவ ரதா நித்யம் யமலோகம் ந யாந்தி தே – எந்தக் குலத்தில் பிறந்தாலும், எங்கு வாழ்ந்தாலும் எம்பெருமானிடம் எப்போதும் ஈடுபட்டபடி உள்ளவர்கள் யமலோகம் புகுவதில்லை – என்றும் கூறுவதற்கு ஏற்ப, அவர்களுக்கு நரகம் போன்ற துன்பங்கள் வராதபடி செய்கிறான்; மேலும், இப்படிப்பட்ட ப்ரபந்நனுக்கு அரசகுமாரன் போன்று குறைவான தண்டனையே அளிக்கப்பட்டு, அந்தக் குற்றங்களை நீக்குகிறான்; இது போன்று செய்தலும் ஈச்வரனுடைய பொறுமையே காரணம் என்பதை அறியவேண்டும். ஆனால், பாபங்களுக்கு இந்த உலகில் உள்ளபோது தண்டனைகளும், மேல் உலகிற்குச் செல்லும்போது நரகங்களும் கிட்டுவதாகவே சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இவ்விதம் உள்ளபோது, ப்ரபந்நனுக்கு நரகங்கள் போன்றவை இல்லை என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றன; இதன் மூலமாக அவனுக்கு இந்த உலகில் தண்டனைகள் உண்டு என்பது தள்ளப்படவில்லை. ப்ரமாணங்களுடன் எந்தவிதமான வசந ந்யாயமும் முரண்பட முயலாது.

## அறிந்தே செய்யும் பாபங்களுக்கு ப்ராயச்சித்தம் செய்யாத சில ப்ரபந்நர்களுக்குத் தண்டனை இல்லை என்பதன் கருத்து

**மூலம்** – ஸாபராதருமாய் அநுதாபமுமின்றிக்கே புந: ப்ரபத்தியும் பண்ணாதேயிருப்பார் சில ப்ரபந்நர்க்கு உபக்லேசங்களாகச் சொன்ன காணத்வாதி த்ருஷ்ட ப்ரத்யவாயங்கள் காணாதிரா நின்றோமென்கை மந்தசோத்யம். அவர்களுக்கும் அபராதாதி தாரதம்யத்துக்கு நாநாப்ரகார தாபத்ரய அநுபவம், உபயுக்த ஜ்ஞாநமாந்த்யம், இங்குள்ள பகவதநுபவ ரஸ ஸங்கோச விச்சேதங்கள், பகவத் பாகவத கைங்கர்ய ரஸ விச்சேதம், பகவதபசார பாகவதாபசாராதிகள், சிஷ்டகர்ஹாபஹிஷ்காராதிகள், ஸுக்ருத விசேஷ நாசம், ஸாத்த்விகாநாதரம், மநோரத பங்க க்லேசம் என்றிப்புடைகளில் ஏதேனுமோர் உபக்லேச ரூபமான ப்ரத்யவாயம் காணலாம். அக்ருத்யகரண க்ருத்யாகரணாதி ரூபங்களான நாநாவித பாபங்களுக்கு இப்படி நாநாவித த்ருஷ்ட ப்ரத்யவாய கரத்வமும் ச்ருதிகளிலும் மந்வாதி தர்மசாஸ்த்ரங்களிலும் இதிஹாஸ புராண பகவச்சாஸ்த்ராதிகளிலும் ப்ரஸித்தம்.

ஆகையால் காணத்வாதி உபக்லேச விசேஷ உதாஹரணமும் உபலக்ஷணமென்னுமிடம் வாக்யோபக்ரமத்தில் ஸமுதாய நிர்தேசாதிகளாலே ஸித்தம்.

**விளக்கம்** – ஒரு சில ப்ரபந்நர்கள் மிகுந்த அபராதங்களைச் செய்பவர்களாக, அதனைக் குறித்து எந்தவிதமான வருத்தமும் அடையாதவர்களாக, அதற்காக எந்தவிதமான ப்ராயச்சித்த ப்ரபத்தியும் செய்யாமல் உள்ளபோதிலும், அவர்களுக்கு சாஸ்த்ரங்கள் கூறும் தண்டனைகளாக உள்ள கண்கள் குருடாகுதல் முதலான எதுவும் நேராமல் உள்ளனரே என்னும் கேள்வியானது மந்தமான ஒன்றாகும். அவர்களுக்கும் பாபங்களுக்கு ஏற்றபடியாக வாழ்க்கையில் பலவிதமான துன்பங்கள், பகவத் கைங்கர்யத்திற்குத் தேவையான ஞானம் குறைதல், பகவானை அனுபவிப்பதில் குறைவு உண்டாகுதல் அல்லது அனுபவம் ஏற்படாமல் விலகுதல், பகவானுக்கும் பாகவதருக்கும் கைங்கர்யம் செய்யும் ஈடுபாடு நீங்குதல், பகவத் மற்றும் பாகவத அபசாரங்கள் உண்டாகுதல், உயர்ந்தவர்களால் பழித்துத் தள்ளப்படுதல், நன்மையானவற்றின் அழிவு, நல்லவர்களால் தள்ளப்படுதல், விருப்பங்கள் நிறைவேறாமல் இருத்தல் என்பதான விதங்களில் தண்டனை ஏற்படவே செய்யும். செய்யக்கூடாதவற்றைச் செய்தல், செய்யவேண்டியதைச் செய்யாமல் இருத்தல் முதலான வடிவங்களில் உள்ளதான பலவிதமான பாபங்களுக்கு, இவ்விதமாகப் பலவிதமான தண்டனைகள் உள்ளதை ச்ருதிகளிலும், மநுதர்மம் போன்ற தர்ம சாஸ்த்ரங்களிலும், இதிகாசங்களிலும், புராணங்களிலும், பாஞ்சராத்ர ஆகமங்களிலும் காணலாம். ஆகவே ச்ருதிகளில், "கண்கள் குருடாகுதல்" முதலான தண்டனைகள் குறித்துக் கூறப்படும் வாக்கியங்களுக்கு முன்பாகவே "இவர்களுக்கு தண்டனைகள் உண்டாகும்" என்று பொதுவாகக் கூறுவதால், "கண்கள் குருடாகுதல்" முதலான தண்டனைகளும் இங்கு எடுக்கப்பட்டன என்றே கொள்ளவேண்டும்,

### அறிந்து செய்ததும், ப்ராயச்சித்தம் செய்யப்படாததும் உண்டான பாபத்தால் நேரிடும் துன்பங்களை கர்மபலன் என்று கூறக்கூடாது

**மூலம்** – வசந பல ஸித்தமாய் புத்தி பூர்வ உத்தராக பலமான உபக்லேச வர்க்கத்தைப் ப்ராரப்த கர்ம விசேஷ பலமென்று நிஷ்கர்ஷிக்க விரகில்லை. இவை யதா ஸம்பவம் உபயவித கர்மத்தாலும் வரும். ஆகையாலேயிறே புத்தி பூர்வ உத்தராகத்துக்கு ஸாத்விகர்

அஞ்சிப்போருகிறது. இங்ஙனல்லாதபோது புந:ப்ரபத்தி விதாயக சாஸ்த்ரமும் அப்படிக்கு சிஷ்டாநுஷ்டாநமும் பூர்வ ஸம்ப்ரதாயமும் விரோதிக்கும்.

**விளக்கம்** – ப்ரபந்நர்கள் தங்களுடைய புத்தி அறிந்து செய்கின்ற பாபங்களால் உண்டாகும் பலன்கள் அனைத்தும், அவர்களுடைய "பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட பூர்வகர்மங்கள்" என்று உறுதியாகக் கூறுவதற்கு எந்தவிதமான ப்ரமாண ஆதாரங்களும் இல்லை. இவை இந்த இரண்டுவிதமான கர்மங்களாலும் உண்டாகலாம். இந்தக் காரணத்தால்தான் ஸாத்விகமான தன்மை கொண்டவர்கள் புத்தி அறிந்து செய்கின்ற பாபங்களுக்கு அஞ்சுகிறார்கள். இவ்விதம் கொள்ளவில்லையென்றால், மீண்டும் ப்ரபத்தி என்னும் ப்ராயச்சித்தம் செய்வதை விதிக்கும் சாஸ்த்ரங்களும், அவ்விதம் செய்பவர்களுடைய செயல்களும், இதுவரை இதனைப் பின்பற்றி வந்த வழக்கங்களும் முரணாகிவிடும்.

### அபராதங்கள் செய்தபடி உள்ளபோதிலும், அதற்காக மனவருத்தம் கொள்ளாத ப்ரபந்நர்கள் குறித்து நஞ்ஜீயர் கூறுவதன் கருத்து

**மூலம்** – அபசாராநந்தரம் அநுதாபம் பிறந்ததில்லையாகில் ஞானம் பிறந்ததில்லையாகக் கடவதென்ற நஞ்ஜீயர் வார்த்தைக்கும் அநுதாபம் பிறவாதவருடைய ஞானமாந்த்யத்திலே தாத்பர்யம். ஸோபாதிகளான பகவதபிப்ராய பேதங்களுக்கு ஈடாக வரும் புத்திபூர்வாபசாரம் சிலர்க்குப் பிறவாது; சிலர்க்குப் பிறந்தவை அநுதாபாதிகளாலே கழியும்; கடின ப்ரக்ருதிகளுக்கு அநுதாபம் பிறவாது. ஆகையால் புத்தி பூர்வ உத்தராகம் பிறந்தால் அநுதப்தனாய்ப் புந:ப்ரபத்தி பண்ணாதபோது உபக்லேசம் சொல்லுகிற ச்ருத்யாதிகளின் கட்டளையிலே லகு ப்ரத்யவாயத்தாலே தீரும்.

விவேகாநாம் ப்ரபந்நாநாம் தீபூர்வாகஸ்யநுத்யம:
மத்யாநாமநுதாபாதி: சிக்ஷா கடிந சேதஸாம்

**விளக்கம்** – "ப்ரபந்நன் ஒருவன் தான் செய்த அபசாரத்திற்காக வருந்தவில்லையென்றால், அவனுக்கு ஞானம் பிறக்கவில்லை என்றே கொள்ளவேண்டும்", என்று நஞ்ஜீயர்

உரைத்தார்; ஆனால் இவ்விதம் அவன் வருந்தாமைக்குக் காரணம் அவனுடைய மந்தமான புத்தியே ஆகும். “பகவானுடைய விருப்பம் இன்மையைப் பெற்றுத் தரும்” என்பதான புத்தி அறிந்து செய்கின்ற பாபங்களானவை பூர்வகர்மங்களால் உண்டாகின்றன; இவை ஒரு சில ப்ரபந்நர்களுக்கு உண்டாகாது. ஒரு சிலர் ப்ரபந்நர்களுக்கு இவ்விதம் உண்டாகும் பாபங்கள், அவர்கள் அதற்காக வருந்தியவுடனேயே கழிந்துவிடும். கடினமான மனம் கொண்டவர்கள் இவ்விதம் வருந்தமாட்டனர். ஆகவே புத்தி அறிந்து செய்கின்ற பாபங்கள் செய்த ப்ரபந்நன் அதற்காக வருந்தி, ப்ராயச்சித்த ப்ரபத்தியைச் செய்யாதபோது, அவற்றுக்கான துன்பங்களை அனுபவிக்கவேண்டும் என்று ச்ருதிகள் கூறுவது போன்று, இங்குள்ளபோதே சிறிய தண்டனைகள் கிட்டுவதன் மூலம், அந்தப் பாபங்கள் நீங்குகின்றன. விவேகாநாம் ப்ரபந்நானாம் தீபூர்வாகஸ்யநுத்யம: மத்யாநாமநுதாபாதி: சிக்ஷா கடிந சேதஸாம் – விவேகம் அடைந்த ப்ரபந்நர்களுக்கு புத்தி அறிந்து செய்கின்ற பாபங்களைச் செய்தல் என்பதே உண்டாகாது, நடுத்தரமான ப்ரபந்நர்களுக்கு வருந்துதல் மற்றும் ப்ராயச்சித்தம் ஆகியவை உண்டாகும், கடினமான மனம் கொண்டவர்களுக்குச் சிறிய தண்டனைகள் உண்டாகும்.

## அறிந்து கொண்டே ப்ரபந்நன் ஏன் பாபம் செய்யக்கூடாது என்பதன் காரணம்

**மூலம்** – ஆனபின்பு ஒரு படியாலும் பகவந் நிக்ரஹம் வாராமைக்காக புத்தி பூர்வாபராதம் பரிஹரணீயம்.

ப்ரீதிமேவ ஸமுதிச்ய ஸ்வதந்த்ர அஜ்ஞாந அநுபாலநே
நிக்ரஹாநுதய: அப்யஸ்ய நாந்தரீயக ஏவ வா

**விளக்கம்** – எனவே எந்தவிதத்திலும் பகவான் தண்டனை அளிக்காதபடி, புத்தி அறிந்து செய்யும் பாபங்களை முற்றிலுமாக விலக்கவேண்டும். ப்ரீதிமேவ ஸமுதிச்ய ஸ்வதந்த்ர அஜ்ஞாந அநுபாலநே நிக்ரஹாநுதய: அப்யஸ்ய நாந்தரீயக ஏவ வா – பகவானுடைய ப்ரீதி என்பதையே பலனாக எண்ணியபடி, சுதந்திரமான ஸர்வேச்வரனுடைய

கட்டளைகளைப் பின்பற்றியபடி இருந்தால், அவனுடைய தண்டனை கிட்டாமல் இருத்தல் என்பதே, நாம் வேண்டாமல் தானாகவே வரும் பலன் ஆகும்.

## பாகவத அபசாரம் விலக்குதல்

**மூலம்** – இப்படி யசசக்தி அபராதங்களைப் பரிஹரித்துக் கொண்டு போகா நின்றால், பாகவதாபசாரமும் அதுடையாரோடு ஸம்ஸர்கமும் போரப் பரிஹணீயம்.

ப்ரஹ்மவித் பாபவர்காணாம் அநந்தாநாம் மஹீயஸாம்
தத் த்வேஷி ஸங்க்ரமம் ஜாநந் த்ரஸ்யேத் ததபராதத:

ஸாபராதேஷு ஸம்ஸர்கே அபி அபராதாந் வஹத்யஸௌ
வோதுமீச்வர க்ருத்யாநி தத்விரோதாதபீப்ஸதி

**விளக்கம்** – இவ்விதமாகத் தன்னால் இயன்றவரை பாபங்களை விலக்கும்போது, பாகவத அபசாரம் செய்யாமலும், அதனைச் செய்பவர்களுடன் ஸம்பந்தம் கொள்ளாமலும் இருப்பதற்கு முயலவேண்டும். ப்ரஹ்மவித் பாபவர்காணாம் அநந்தாநாம் மஹீயஸாம் தத் த்வேஷி ஸங்க்ரமம் ஜாநந் த்ரஸ்யேத் தத் அபராதத: - ப்ரஹ்மத்தை அறிந்தவனால் செய்யப்பட்ட எண்ணற்றதும் பெரியதும் ஆகிய பாபங்கள் அனைத்தும், அவனை வெறுப்பவர்களிடம் சென்று சேரும்; ஆகவே அவர்களிடம் அபசாரப்படுதல் குறித்து அஞ்சவேண்டும். ஸாபராதேஷு ஸம்ஸர்கே அபி அபராதாந் வஹதி அஸௌ வோதும் ஈச்வர க்ருத்யாநி தத் விரோதாத் அபீப்ஸதி – ப்ரஹ்மவித்துக்களிடம் அபசாரம் செய்த ஒருவனுடன் சேர்ந்தாலும் அபசாரம் செய்தவன் ஆகிறான்; அதே நேரத்தில் ப்ரஹ்மவித்துகளுக்கு அபசாரம் செய்யும் ஒருவனைத் தண்டிக்க முனைந்தாலும், ஈச்வரன் செய்வதான தண்டித்தல் போன்ற செயல்களைத் தான் சுமந்தவன் ஆகிறான்.

தன்னினைவில் விலக்கின்றித் தன்னை நண்ணார்
நினைவனைத்தும் தான் விளைத்தும் விலக்கு நாதன்
எந்நினைவை இப்பவத்தில் இன்று மாற்றி

இணையடிக்கீழ் அடைக்கலமென்று எம்மை வைத்து
முன்னினைவால் யாம் முயன்ற வினையால் வந்த
முனிவயர்ந்து முத்தி தர முன்னே தோன்றி
நன்னினைவால் நாமிசையும் காலம் இன்றோ
நாளையோவென்று நகை செய்கின்றானே

**பொருள்** – தனது ஸங்கல்பத்திற்கு எந்தவிதமான தடையும் இல்லாத ஸர்வேச்வரன், தன்னை வந்தடையாதவர்களுக்கு அனைத்து ஆசைகளையும் உண்டாக்குகிறான்; அவர்கள் அவற்றை அடையவிடாமல் தடுக்கவும் செய்கிறான். ஆனால் இன்று அவன் என்னுடைய ஸம்ஸார ஆசைகள் அனைத்தையும் விலக்கி, என்னைக் காக்கப்பட வேண்டிய பொருளாக ஏற்றுக் கொண்டு, தனது இரண்டு திருவடிகளின் கீழ் வைத்துக் கொள்கிறான். ப்ரபத்திக்கு முன்பு எனக்குள்ள அஹங்காரம் முதலானவற்றால் நான் செய்த பல தவறுகளால் தனக்கு உண்டான கோபம் அனைத்தையும் மறந்து, மோக்ஷம் அளிக்கும் பொருட்டு பலவவிதங்களில் அவதரிக்கிறான். இவ்விதம் அவன் வந்தபோதும் எனக்கு நல்ல ஞானம் உண்டாகி நான் பரமபதம் செல்லத் தயாராகும் நாள் இன்றோ அல்லது நாளையோ என்று பரிகாசம் செய்யும்விதமாகக் கேட்கிறான்.

## மோக்ஷயிஷ்யாமி என்பதன் பொருள்

**மூலம்** – "மோக்ஷயிஷ்யாமி" என்றது, "உனக்கு இஷ்டமானபோது முக்தனாக்குவன்" என்றபடி.

**விளக்கம்** – "மோக்ஷயிஷ்யாமி" என்பதன் கருத்து என்னவென்றால், "உனக்கு எப்போது விருப்பமோ அப்போது உனக்கு நான் முக்தி அளிப்பேன்" என்பதாகும்.

## "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்பதன் மூலம் ப்ரபத்தியில் விருப்பம் ஏற்படுத்துவதே நோக்கமாகும் என்பதற்கு மறுப்பு

**மூலம்** – சில பாபங்களை “ந க்ஷமாமி” என்கையும், இங்கே “ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி” என்கையும் விருத்தமன்றோ? ஆகையால் இது உபச்சந்தநமாமத்தனையன்றோ என்னில், இவை இரண்டும் பிந்ந விஷயமாகையாலே விரோதமில்லை. “ந க்ஷமாமி” என்றது, “பத்மபத்ர சதேநாபி ந க்ஷமாமி வஸுந்தரே | உபசார சதேநாபி ந க்ஷமாமி வஸுந்தரே” என்றாப்போலே சொல்லுகிற போலியான ப்ராயச்சித்தாந்தரங்களால் க்ஷமியேனென்றபடி. இங்கு ஸர்வபாப ப்ராயச்சித்தமாய் இருப்பதோர் உபாயவிசேஷத்தாலே எல்லாவற்றையும் க்ஷமிப்பேனென்கிறது. “யதி வா வரண: ஸ்வயம்” என்றிறே அபிப்ராயமிருப்பது? இப்படி வ்யவஸ்தித விஷயமாக வசநங்கள் தாமே காட்டுகையாலே விரோதமில்லாமையால் இது உபச்சந்தந மாத்ரமன்று. இங்ஙனல்லாதபோது பக்தி ப்ரபத்தி ரூப மோக்ஷோபாயங்களை விதிக்கிற சாஸ்த்ரங்களெல்லாம் அத்யந்த வ்யாகுலங்களாம்.

**விளக்கம்** – ஒரு சிலர், “வராஹ புராணத்தில் ந க்ஷமாமி – நான் பொறுக்கமாட்டேன் – என்று பகவான் கூறுவதும், இங்கு ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – அனைத்து பாபங்களிலிருந்தும் விடுவிப்பேன் – என்று கூறுவதும் முரணாக உள்ளது அல்லவோ? ஆகவே இங்கு கூறப்பட்ட ‘ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி’ என்பது மனதிற்கு ஆறுதல் அளிப்பதற்காகக் கூறப்பட்டது என்றே ஆகிறது அல்லவோ?”, எனலாம். ஆனால் பகவானுடைய இந்த இரண்டு கூற்றுகளும் வெவ்வேறு விஷயங்களின் அடிப்படையில் உள்ளதால் இங்கு விரோதம் இல்லை. “ந க்ஷமாமி – நான் பொறுக்கமாட்டேன்” என்று கூறியது, “பத்மபத்ர சதேநாபி ந க்ஷமாமி வஸுந்தரே உபசார சதேநாபி ந க்ஷமாமி வஸுந்தரே – எந்த ஒரு விஷ்ணுபக்தன் இரத்தத்தை அறியாமல் தொடுகிறானோ அவன், நூற்றுக்கணக்கான தாமரைகளை கொண்டு என்னை அர்ச்சனை செய்தாலும் நான் பொறுக்கமாட்டேன், எனக்கு அவன் நூற்றுக்கணக்கான உபசாரங்கள் செய்தாலும் நான் பொறுக்கமாட்டேன்” என்பதால் கூறப்பட்டதான “போலியான ப்ராயச்சித்தங்கள் மூலம் நான் மன்னிக்கமாட்டேன்” என்பதாகும். ஆனால் இங்கு, “அனைத்துவிதமான பாபங்களையும் போக்கவல்ல ப்ராயச்சித்தமாக உள்ளதான ஒரு உபாயத்தின் சிறப்பு காரணமாகப் பொறுத்துக்கொள்வேன்” என்று கருத்து. இராமாயணம் யுத்தகாண்டம் (18-34) - யதி வா வரண: ஸ்வயம் – இராமன் சுக்ரீவனிடம், “இராவணன், விபீஷணன் என யாராக இருந்தாலும் இங்கு அழைத்து வா. நான் மன்னிக்கிறேன்”, என்று கூறுவதற்கு ஏற்ப அல்லவோ பகவானின் திருவுள்ளம் உள்ளது? இவ்விதம் வேறுபட்ட விஷயங்கள்

குறித்து இது போன்ற வாக்கியங்கள் உள்ளதை அந்த வாக்கியங்களே காண்பிப்பதால், இங்கு முரண்பாடு ஏதும் இல்லை; ஆகவே இங்கு கூறப்பட்ட “ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி” என்பது மனதிற்கு ஆறுதல் அளிப்பதற்காகக் கூறப்பட்டது அல்ல. இவ்விதம் கொள்ளவில்லை என்றால், பக்தி மற்றும் ப்ரபத்தி ரூபத்தில் உள்ள மோக்ஷ உபாயங்களை விதிக்கின்ற சாஸ்த்ரங்கள் அனைத்தும் எந்தவிதமான ப்ரமாணத் தன்மையும் அற்றவை என்றாகும்.

## பாபங்களிலிருந்து விடுவிப்பேன் என்பதன் கருத்து

**மூலம்** – இங்கு பாபங்களினின்றும் விடுவிக்கையாவது, அநாதியான விபரீதாநுஷ்டாநத்தாலே பிறந்த நிக்ரஹாபிப்ராயத்தை ஈச்வரன்தான் விடுகை. இந் நிக்ரஹ நிவ்ருத்தியாலே நிக்ரஹ கார்யங்களான அவித்யாதிகளெல்லாம் நிவ்ருத்திகளாம். ஈச்வரனுடைய நிக்ரஹ நிவ்ருத்தியாவது, "மத் ப்ரஸாதாத்" என்கிற அபிப்ராய விசேஷம். ஜீவனுக்கு அவித்யாதிகளுடைய நிவ்ருத்தியாவது, ஜ்ஞாந விகாஸாதிகள்.

**விளக்கம்** – இங்கு பகவான் “பாபங்களிலிருந்து விடுவிப்பேன்” என்று கூறுவதன் கருத்து என்ன? எல்லையற்ற காலமாகச் சேதநன் ஒருவன், தொடர்ந்து சாஸ்த்ரங்களை மீறியபடியே உள்ளதால், அவனுக்குத் தண்டனை அளிக்கவேண்டும் என்னும் எண்ணம் பகவானுக்கு உண்டாகிறது; ஆனால் அத்தகைய எண்ணத்தை ஈச்வரன் மாற்றிக் கொள்வதே “பாபங்களிலிருந்து விடுவிப்பேன்” என்று கூறுவதன் கருத்து ஆகும். இத்தகைய “தண்டனை விலகுதல்” என்பதன் விளைவாக, தண்டனைகள் மூலம் உண்டாவதாகிய அவித்யை போன்ற அனைத்தும் விலகுகின்றன. ஈச்வரனுடைய “தண்டிப்பதலிருந்து விலகுதல்” என்பது, கீதை (18-56) – மத் ப்ரஸாதாத் – எனது அருளால் – என்பதாகிறது. ஜீவாத்மாவின் அவித்யை போன்றவை விலகுதல் என்பது, அவனுக்கு ஞானம் மீண்டும் மலர்தலே ஆகும்.

## ப்ரபந்நனுக்கு அனைத்து பாபங்களும் நீங்கும் முறை

**மூலம்** – இவனுக்கு இப்படிப் புண்யபாப ரூபமான ஸம்ஸார காரணம் கழியும் க்ரமம் எது என்னில், உபாய விரோதிகள் முன்பே ஸ்வஹேதுக்களாலே கழிந்ததால், ப்ராரப்தேதரங்களாய்ப் ப்ராப்தி விரோதிகளாகவல்ல பூர்வ புண்யபாபங்கள் உபாயாரம்பத்திலே நிச்சேஷமாகக் கழியும். உத்தரங்களான பாபங்களில், புத்தி பூர்வமல்லாதவையும் தேச கால வைகுண்யாதிகளால் வருமவையும் ஒன்றும் லேபியாது. உபாயத்தில் புத்திபூர்வ உத்தராகங்கள் ஸ்வ அதிகார அநுகுண ப்ராயச்சித்த விசேஷத்தாலேயாதல், சிக்ஷார்த்தமான லகு பலவிசேஷத்தாலேயாதல் தீரும். ப்ரபந்நனுக்குப் ப்ராரப்தத்தில் இசைந்த காலத்துக்குள்ளே விபக்வமாம் கர்மாம்சம் அநுபவத்தாலும், அவாந்தர ப்ராயச்சித்தத்தாலும் நாச்யம். மேலுள்ளதும் உபாய மாஹாத்ம்யத்தாலே கழியும். உபயபாவநா க்ரமத்தாலே வந்த புத்தி பூர்வ உத்தர புண்யங்களில் ப்ரதிபந்தமில்லாதவையும் உபாஸகனுக்கு வித்யா அநுகுண பூர்வோத்தர புண்யங்களும் பலப்ரதாநத்தாலே கழியும். வித்யைக்கு அநுபயுக்த புத்திபூர்வ உத்தர புண்யங்களில், ப்ரதிபத்த பலங்களும், வித்யோபயுக்த பூர்வோத்தர புண்யங்களில் அநுகூல ப்ரதிகூல ப்ரபல கர்மாந்தர பலங்களாலே, நிருத்த அவஸரங்களாய் பலம் கொடுக்கப் பெறாதே மிகுதியாய் நின்றவையும் அந்திமகாலத்திலே கழியும். இவ்வர்த்தம் “இதரஸ்ய அபி ஏவம் அஸம்ச்லேஷ: பாதே து” என்கிற ஸூத்ரத்திலே அபிப்ரேதம்.

**விளக்கம்** – ஒரு ப்ரபந்நனுக்கு இவ்விதமாகப் புண்ணியம் மற்றும் பாபங்கள் கழிகின்ற முறை என்ன? உபாயத்தைக் கைக்கொள்ள இயலாமல் தடுக்கின்ற தடைகள் அனைத்தும் அவைகளுடைய காரணங்களால் கழிவதால் (உதாரணமாக தகுந்த உபதேசம் முதலானவை), உபாயமான ப்ரபத்தியைக் கைக்கொள்வதற்குத் தடையாக உள்ளதும், முன்பே உள்ளதும், பலன் அளிக்கத் தொடங்காதவையாக உள்ளதும் ஆகிய புண்ணிய பாபங்கள் அனைத்தும், உபாயத்தைக் கைக்கொள்ளத் தொடங்கியவுடனேயே, மீதம் ஏதும் இல்லாமல் கழிகின்றன. ப்ரபத்திக்குப் பின்னர் இடம் மற்றும் காலம் ஆகியவை காரணமாகவும், புத்தி அறியாமல் செய்ததாகவும் உள்ள பாபங்கள் எதுவும் ப்ரபந்நனிடம் சேராது. ப்ரபத்திக்குப் பின்னர் புத்தி அறிந்து செய்யப்படும் பாபங்கள் அனைத்தும் அவரவர்களுடைய சக்திக்கு ஏற்ப செய்யப்படும் ப்ராயச்சித்தங்களுடைய சிறப்பு மற்றும் பலன்களை அனுபவித்தல் என்னும் வடிவில் வருவதான சிறிய அளவில் கிடைக்கின்ற தண்டனைகள் மூலமாகக் கழிகின்றன. இந்தச் சரீரம் தீரும்வரை ப்ரபந்நனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவையும், பலன் அளிக்கத் தொடங்கியவையும் ஆகிய கர்மங்கள்

அனைத்தும், அவற்றின் பலன்களை அனுபவிப்பதன் மூலமும், தகுந்த ப்ராயச்சித்தம் மூலமும் அழிகின்றன. பலன் அளிக்கத் தொடங்கிய கர்மங்களும், ப்ரபத்தியின் மேன்மையால் அழிகின்றன. ப்ரபத்தியைக் கைக்கொள்வதற்கு முன்பும் பின்பும், மோக்ஷம் மற்றும் ஸம்ஸாரம் ஆகிய இரண்டைக் குறித்தும், புத்தி அறிந்து செய்த புண்ணிய கர்மங்களால் உண்டாகும் பலன்களில், மோக்ஷத்திற்கு (அல்லது ப்ரபத்திக்கு) தடையாக இல்லாதவையும், உபாஸகனுடைய வித்யைக்குப் பலம் சேர்ப்பவையாக உள்ளவையும், பலன் அளித்தவுடன் மறைகின்றன. ஒரு சில புண்ணியங்கள், உபாஸனைக்குப் பின்னரும் முன்னரும் செய்யப்பட்டவையாக இருந்து, அவை வித்யைக்கு உபயோகமாக இல்லாமலும், இதுவரை பலன்கள் ஏதும் அளிக்காமலும் இருக்கலாம்; ஒரு சில புண்ணியங்கள், உபாஸனைக்குப் பின்னரும் முன்னரும் செய்யப்பட்டவையாக இருந்து, அவை வித்யைக்கு உபயோகமாக உள்ளபோதிலும், உபாஸனையில் உள்ள மற்ற கர்மங்களின் வலிமை காரணமாகத் தாங்கள் பலன் அளிப்பதற்கு ஏற்ற காலம் இல்லாததால், பலன் அளிக்காமல் இருக்கலாம்; இது போன்று மீதம் உள்ள பலன்கள் அனைத்தும் இறுதி நேரத்தில் நீங்கிவிடும். இந்தக் கருத்தானது ப்ரஹ்மஸூத்ரம் (4-1-14) - இதரஸ்ய அபி ஏவம் அஸம்ச்லேஷ: பாதே து - புண்ணியங்களுக்கும் அதே போன்று, சரீரம் நீங்கும் நேரத்தில் – என்பதில் கூறப்பட்டது.

### ப்ரபந்நனுக்குக் கர்மங்கள் ஒட்டாமல் போவதும், நீங்குவதும்

**மூலம்** – பகவத் ப்ரீதி மாத்ரமே பலமாக அநுஷ்டித்த கேவல கைங்கர்ய ரூப ஸுக்ருதங்கள் அப்போதே தத்தபலங்களாகையாலே, அவற்றுக்கு அச்லேஷம் சொல்ல வேண்டா. லோக ஸங்க்ரஹார்த்த விதியாலே அநுஷ்டிக்குமவையும் தனக்கு அப்படியே பகவதாஜ்ஞா ஸித்தங்களாகையாலே, அவையும் இவனுக்குக் கேவல கைங்கர்யங்களாய் தத்தபலங்கள். இவற்றில் அநவதாநத்தாலே ஸாத்விக த்யாக ரஹிதமாக அநுஷ்டிதங்கள் உண்டாகில், அவையுமெல்லாம் “தாந்யேவ பாவோபஹதாநி கல்க:” என்கிறபடியே பாபதுல்யங்களாய் மோக்ஷயிஷ்யாமிக்கு விஷயமாம். பலாந்தரார்த்தமாகப் பண்ணின ப்ரபத்த்யந்தரங்களும் தத்தபலங்களாய்ப் போம். பூர்வப்ரபத்திக்குக் கோரின பலத்தைப் பற்றப் புந: ப்ரபத்தி பண்ணுகை மஹாவிச்வாஸத்தோடே கூட அநுஷ்டித்த பூர்வ ப்ரபத்தி ப்ரதிபந்தநத்தாலே கூடாது. அநேக ப்ரபத்திகள் கூட ஏக பல ஸாதநமென்று நினைத்து அநுஷ்டித்தாலும்,

உபாயாந்தரச்சாயையாம். வித்யா மஹாத்ம்யத்தாலே இக்கர்மங்களுக்கு விநாசமாவது, ஈச்வரன் இவற்றுக்குப் ப்ராப்தமான பலப்ரதாந அபிஸந்தியை விடுகை. அச்லேஷமாவது, இவ் ஆச்ரிதர் திறத்தில் இக்கர்ம பல ப்ரதாந அபிஸந்தி உதியாதொழிகை.

**விளக்கம்** – மற்ற எந்த ஒரு பயனையும் எதிர்பாராமல், பகவானுடைய மகிழ்ச்சியை மட்டுமே கருத்தில் கொண்டு ப்ரபந்நன் செய்யும் கைங்கர்யங்கள் என்னும் புண்ணியச் செயல்கள் அனைத்தும், அப்போதே பலனை அளித்து விலகுபவை என்பதால், அவற்றில் மீதம் எதுவும் இருப்பதில்லை. மற்ற எந்த ஒரு பயனையும் எதிர்பாராமல், இந்த லோகத்தில் உள்ளவர்களைத் திருத்தும்விதமாக ப்ரபந்நன் செய்யும் செயல்கள் அனைத்தும் பகவானுடைய ஆணைக்கு உட்பட்டவையாக உள்ளதால், அவையும் இவன் செய்யும் கைங்கர்யங்கள் என்றாகி, அப்போதே பலனை அளித்து விலகுகின்றன. இவற்றில் ஒரு சில கைங்கர்யங்களை ப்ரபந்நன் தனது கவனக் குறைவு காரணமாக, "நான் செய்கிறேன், என்னுடையது" என்னும் எண்ணத்துடன் செய்துவிட்டான் என்றால் அவை, மஹாபாரதம் ஆதிபர்வம் (1-301) - தாந்யேவ பாவோபஹதாநி கல்க: - தானம் போன்றவை தனக்காகச் செய்யப்படும்வரை பாபம் ஆகாது – என்று கூறுவதற்கு ஏற்ப, பாபங்களுக்கு நிகராகவே கருத்தப்பட்டு "மோக்ஷயிஷ்யாமி" என்னும் பகவானுடைய வாக்கிற்கு இலக்காக விலகும். மோக்ஷத்திற்காகச் செய்யும் ப்ரபத்திக்குப் பின்னர், மற்ற பலன்களை எதிர்பார்த்து செய்யப்படும் ப்ரபத்தியானது, அதற்கான பலனை அளித்த பின்னர் மறையும். ஒரு பலனை எண்ணியபடி ப்ரபத்தி செய்த பின்னர், அந்த ப்ரபத்தியைத் தான் மஹாவிச்வாஸத்துடன் செய்ததாக உணர்ந்த பின்னர், அதே பலனுக்கான ப்ரபத்தியை மீண்டும் செய்தல் கூடாது. ஒரு ப்ரபத்தியைச் செய்த பின்னர், அதற்கான துணை என்று எண்ணியபடி மேலும் சில ப்ரபத்திகளைச் செய்தல் என்பது, மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளுதல் என்றே ஆகிறது. வித்யையின் மேன்மை காரணமாக இந்தக் கர்மங்களின் அழிவு என்பது, ஈச்வரன் தனது திருவுள்ளத்தில் "இவற்றுக்கான பலனை அளிப்போம்" என்று எண்ணுதலால் ஆகும். இந்தக் கர்மங்களின் பலன்கள் அழியாமல் மீதம் இருத்தல் என்பது, ஈச்வரன் தனது திருவுள்ளத்தில் "இவற்றுக்கான பலனை அளிப்போம்" என்று எண்ணாமல் உள்ளதால் ஆகும்.

## ப்ரபந்நனுடைய கர்மங்களை நண்பர்களும் விரோதிகளும் பங்காகப் பெறுதல் குறித்த விளக்கங்கள்

### பங்கு பெறும் கர்மங்கள் எவை?

**மூலம்** – இப்படி ஸர்வகர்மங்களும் கழியாநிற்க, ஸுஹ்ருத்துக்களும் த்விஷத்துக்களும் கூறிட்டுக் கொள்ளுமவை எவை என்னில் - அச்லேஷ விநாச விஷயங்களும், புத்திபூர்வோத்தர புண்யங்களில் கர்மாந்தர ப்ரதிபத்த பலன்களும்.

**விளக்கம்** – ப்ரபந்நனுடைய அனைத்து கர்ம பலன்களும் இவ்விதம் நீங்கிய பின்னர், அவனுடைய மரணத்திற்குப் பின்னர், அவனுடைய நண்பர்களும் விரோதிகளும் பங்கிட்டுக் கொள்வது எவை? அழியாமல் மீதம் உள்ள சில பாப பலன்களை அவனுடைய விரோதிகள் பெறுகின்றனர்; ப்ரபத்திக்குப் பின்னர் புத்தியால் உணர்ந்து செய்யப்பட்ட புண்ணியங்களில், மற்ற சில கர்மங்களால் பலன் அளிக்காமல் தடைப்பட்டுக் கிடந்த சில புண்ணியங்களை அவனுடைய நண்பர்கள் பெறுகின்றனர்.

### பங்கீடு அந்திம காலம் முடிய செய்யப்படாமல் உள்ளது ஏன்?

**மூலம்** – இவற்றை ஈச்வரன் உபாயாரம்பத்திலே ஸுஹ்ருத்துக்கள் பக்கலிலும், த்விஷத்துக்கள் பக்கலிலும் ஸங்க்ரமிப்பியாதே, அந்திம தசையளவும் பார்த்திருக்க வேண்டுவானென் என்னில் – இவ் ஆச்ரிதர் பக்கல் பண்ணின ஆநுகூல்யத்துக்கு மேல் விபரீதம் செய்யில் இஸ்ஸுக்ருதங்களை ஸங்க்ரமிப்பியா தொழிகைக்காகவும், ஆச்ரிதர் பக்கலில் பண்ணின ப்ராதிகூல்யத்துக்கு மேல் க்ஷமை கொள்ள அவஸரம் கொடுக்கைக்காகவும், இவ் ஆச்ரிதருடைய அந்திம சரீர விச்லேஷத்தளவும் இவர்களுடைய புண்ய பாபங்களை அசல்பிளந்தேறிடா தொழிகிறான். ஸ்வர்காத்யர்த்த ஸுக்ருதம் முமுக்ஷுவுக்குப் பாபமாகையாலே, அது முமுக்ஷுவான ஸ்ஹ்ருத்தின் பக்கல் ஸங்க்ரமியாது.

**விளக்கம்** – ப்ரபந்நன் ஒருவன் ப்ரபத்தியைக் கொண்ட உடனேயே அவனுடைய புண்ணிய பாப பலன்களை, நண்பர்களுக்கும் விரோதிகளுக்கும் பங்கிட்டுக்

கொடுக்காமல், ப்ரபந்நனுடைய அந்திம காலம் முடிய ஈச்வரன் ஏன் காத்திருக்கவேண்டும் என்று கேட்கலாம். இதற்கான விடை அளிக்கப்படுகிறது. ப்ரபந்நன் ப்ரபத்தி செய்யும் அந்த நேரத்தில், அவனுடைய நண்பனாக உள்ள ஒருவன், அவனுக்குத் தீமை செய்யக்கூடும்; இதன் விளைவாக, அந்திம காலத்தில் அந்த நண்பனுக்கு இவனுடைய புண்ணிய பலன்கள் செல்லக்கூடாது. இதே போன்று, ப்ரபந்நன் ப்ரபத்தி செய்யும் அந்த நேரத்தில், அவனுடைய பகைவனாக உள்ள ஒருவன், அவனிடம் மன்னிப்புக் கேட்கக்கூடும்; இதன் விளைவாக, அந்திம காலத்தில் அந்தப் பகைவனுக்கு இவனுடைய பாப பலன்கள் செல்லக்கூடாது. ஆகவே, ப்ரபந்நன் தனது சரீரத்தை விடும் காலம் முடிய, அவனுடைய புண்ணிய பாபங்களை நண்பர்களுக்கும் விரோதிகளுக்கும் பிரித்துக் கொடுக்காமல் ஈச்வரன் காத்திருக்கிறான். ப்ரபத்திக்கு முன்பாகச் செய்த கர்மங்கள், ஸ்வர்க்கம் முதலானவற்றை அளிக்கவல்லவை என்றாலும், அவை முமுக்ஷு ஒருவனுக்குப் பாபமே ஆகும்; ஆகவே அந்த ப்ரபந்நனுடைய நண்பன் ஒருவன் முமுக்ஷு என்னும்போது, அந்தப் பலன்கள் அவனைச் சேராது.

## ஒருவருடைய கர்ம பலன்கள் மற்றவரைச் சேர்தல் எப்படி?

மூலம் – ஆரேனும் பண்ணின கர்மங்கள் வேறே சிலர் பக்கலிலே ஸங்க்ரமிக்கையாவது என் என்னில், இக் கர்த்தாவைப் பற்ற ஈச்வரனுக்கு வரும் நிக்ரஹ அநுக்ரஹங்களோடு ஸமாநமாக இவனுடைய சத்ரு மித்ரர்கள் பக்கலிலே நிக்ரஹ அநுக்ரஹங்கள் உதிக்கை. ஆரேனும் அநுஷ்டித்த கர்மங்களுக்கு ஆரேனும் பக்கலிலே நிக்ரஹ அநுக்ரஹங்கள் பிறந்தால் அதிப்ரஸங்கம் வாராதோ என்னில், இதுவும் முமுக்ஷு விஷயத்தில் அநுகூல்ய ப்ரதிகூலர்க்கு உபசார அபசார ரூபமான கர்மமடியாக வருகிறதாகையாலே அதிப்ரஸங்கமில்லை. ஆகையாலிறே உதாஸீநர் பக்கல் ஸுக்ருத துஷ்க்ருதங்கள் இரண்டும் ஸங்க்ரமிக்குமென்னாதொழிகிறது. பல ஸாரூப்ய மாத்ரத்தாலே இங்கு ஸங்க்ரமணோபசாரம். இஸ் ஸுக்ருத துஷ்க்ருத ஸங்க்ராந்தி சொல்லுகிற ச்ருதியாலே ஈச்வரனுக்கு அத்யர்த்த ப்ரியனான ஜ்ஞாநி விஷயத்திற் பண்ணின உபசார அபசாரங்களால் வரும் ப்ரீதி கோபங்களினுடைய தீவ்ர தமத்வம் ஸூசிதமாயிற்று.

**விளக்கம்** – ஆனால் ஒருவர் செய்த கர்மங்களின் பலன்கள், மற்றொருவரிடம் சென்று சேர்தல் என்பது எப்படி? அந்த ப்ரபந்நன் விஷயத்தில் ஈச்வரனுக்கு உண்டாகும் அநுக்ரஹத்தால் புண்ணியமும், நிக்ரஹத்தால் (கோபம் எனலாம்) பாபமும் உண்டாகின்றன. அத்தகைய ப்ரபந்நனிடம் உண்டாவது போன்றே, அவனுடைய சத்ருக்களிடம் ஈச்வரனுடைய நிக்ரஹமும், நண்பர்களிடம் ஈச்வரனுடைய அனுக்ரஹமும் உண்டாகின்றன. ஆனால் ஒருவர் செய்த கர்மங்களின் விளைவாக வேறு ஒருவரிடம் அனுக்ரஹமும் நிக்ரஹமும் ஏற்படுதல் என்பது பொருந்தாது அல்லவோ? முமுக்ஷுவுக்கு நண்பர்கள் விஷயத்தில் உண்டாகும் அனுக்ரஹம் என்பது அவர்கள் அந்த முமுக்ஷுவுக்குச் செய்கின்ற நன்மையால் உண்டாகிறது; முமுக்ஷுவுக்கு விரோதிகள் விஷயத்தில் உண்டாகும் நிக்ரஹம் என்பது அவர்கள் அந்த முமுக்ஷுவுக்குச் செய்கின்ற தீமையால் உண்டாகிறது; ஆகவே இங்கு பொருந்தாமை ஏதும் இல்லை. இந்தக் காரணத்தால்தான், முமுக்ஷுவிடம் நண்பர்களாகவும் பகைவர்களாகவும் இல்லாமல், நடுநிலையுடன் உள்ளவர்களிடம் முமுக்ஷுவின் புண்ணிய பாபங்கள் சென்று சேர்வதில்லை. இங்கு முமுக்ஷுவின் நண்பர்களும் பகைவர்களும் அவனுக்கு நிகரான பலன்களைப் பெறுவதால்தான், இங்கு “சென்று சேர்கிறது” என்று கூறப்படுகிறது. இவ்விதம் புண்ணிய பாப பலன்கள் சென்று சேர்தல் குறித்துக் கூறுகின்ற ச்ருதி வாக்கியங்கள் மூலமாக, “பகவானுக்கு மிகவும் ப்ரியமான உள்ள ஞானியின் விஷயத்தில் செய்யப்படும் நன்மைகள் மற்றும் தீமைகள் காரணமாக, பகவானுக்கு உண்டாகும் அளவு கடந்த மகிழ்ச்சி மற்றும் கோபம்” ஆகியவை வெளிப்படுகின்றன.

## “ஸர்வபாப” என்பதால் வெளிப்படுபவை

**மூலம்** – “ஸுதுஷ்கரேண சோசேத்ய:” என்கிற ச்லோகத்திற் சொன்ன யோஜனையில் “ஸர்வபாபேப்ய:” என்றது அதிகாரியுடைய அபேக்ஷைக்கு ஈடாகப் ப்ராப்தி விரோதிகளையும் உபாய விரோதிகளையும் ப்ரதிகூல அநுபவ ஹேதுக்களையும் ஸங்க்ரஹிக்கிறது. இங்கு ப்ராப்தி விரோதியாவது “ஸாபராதனான இவன் நம்மை அநுபவிக்கக் கடவனல்லன்” என்கிற பகவத் ஸங்கல்பம். உபாய விரோதியாவது “நம்மை இவன் தெளிந்து வசீகரிக்கக் கடவனல்லன்” என்கிற ஸங்கல்பம். ப்ரதிகூல அநுபவ ஹேதுவாவது, அவ்வோ ப்ரதிகூல கர்மாநுஷ்டாநங்களாலே வந்த அவ்வோ பல ப்ரதாந ஸங்கல்பம். முமுக்ஷுவைப் பற்ற ஸர்வநிக்ரஹங்களும் நிவ்ருத்தங்களானால் நிக்ரஹ

கார்யங்களாம். பின்பு காரணாபாவத்தாலே கார்யமான ப்ரதிகூலங்களில் ஒன்றும் வாராது. இது "அநாவ்ருத்தி: சப்தாத்" என்கிற ஸூத்ரத்திலே விவக்ஷிதம். இந்த நிஷ்கர்ஷங்களெல்லாம் பாஷ்யத்திலே ஸத்ஸம்ப்ரதாயத்தோடே கூடச் சிரபரிசயம் பண்ணின மஹாப்ராஜ்ஞருக்கு நிலமாயிருக்கும்.

**விளக்கம்** – தாத்பர்ய சந்த்ரிகையில், கீதை (18-66)க்கான விளக்கத்தில் கூறப்பட்ட "ஸுதுஷ்கரேண சோசேத்ய: - தன்னால் செய்ய இயலாது என்று யார் ஒருவன் உள்ளானோ, அவனுக்கு அந்த உபாயத்தின் இடத்தில் நானே நிற்பேன்" என்ற கருத்தின்படி, "ஸர்வபாபேப்யோ:" என்பதில் "அடையப்படும் இலக்கான பகவானை அடையவிடாமல் தடுக்கும் விரோதிகள், உபாயத்தைக் கைக்கொள்ள விடாமல் தடுக்கும் விரோதிகள் மற்றும் பகவானுக்கு விருப்பம் இல்லாதவற்றில் ஈடுபடும் காரணங்கள்" ஆகிய அனைத்துமே அதிகாரியின் விருப்பம் என்பதில் சேர்க்கப்படுகிறது. இங்கு "பகவானை அடையவிடாமல் தடுக்கும் விரோதி" என்பது, "பல குற்றங்களைச் செய்த இவன் நம்மை அடைந்து அனுபவிக்கும் தகுதி கொண்டவன் அல்லன்" என்று பகவான் எண்ணுதலே ஆகும்; "உபாயத்தைக் கைக்கொள்ள விடாமல் தடுக்கும் விரோதி" என்பது, "இவன் நம்மைக் குறித்து முற்றிலுமாக உணர்ந்து நம்மை வசீகரிக்க வல்லவன் அல்லன்" என பகவான் எண்ணுதலே ஆகும்; "பகவானுக்கு விருப்பம் இல்லாதவற்றில் ஈடுபடும் காரணங்கள்" என்பவை, "நமக்கு விருப்பம் இல்லாதவற்றை செய்ததால் உண்டாகும் பலன்களை இவன் அனுபவிக்கக்கடவான்" என்று பகவான் எண்ணுதல் ஆகும். ஆனால் முமுக்ஷுவைப் பொறுத்தவரை அனைத்து தண்டனைகளும் ரத்து செய்யப்பட்டால், அந்த தண்டனைகளின் விளைவுகளும் நீங்குகின்றன. அதன் பின்னர், அத்தகைய காரணங்கள் விலகியதால், அவற்றின் விளைவுகளாக உள்ள "பகவானுக்கு விருப்பம் அற்றவற்றைச் செய்தல்" என்பவை நேராது. இக்கருத்தானது, ப்ரஹ்மஸூத்ரம் (4-4-22) - அநாவ்ருத்தி: சப்தாத் – மோக்ஷம் பெற்றவன் திரும்புதல் இல்லை – என்பதால் உணர்த்தப்படுகிறது. இவ்விதமான கருத்துக்கள் அனைத்தும், ஸ்ரீபாஷ்யத்தை நீண்டகாலமாக மிகவும் சிரமத்துடன் தகுந்த முறையில் கற்று வருபவர்களுக்கு, அறியக்கூடிய விஷயமாக இருக்கும்.

## தடைகள் விலகுதல் மற்றும் விருப்பம் நிறைவேறுதல்

**மூலம் –** இப்படி "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று கார்யகாரண ரூப ஸமஸ்த ப்ரதிபந்த ப்ரவாஹ நிவ்ருத்தியைச் சொல்ல, ஸ்வத:ப்ராப்தமான பரிபூர்ண பகவதநுபவ ஆவிர்பாவம் சொல்லிற்றாயிற்று. "யதா ந க்ரியதே ஜ்யோத்ஸ்நா மலப்ரக்ஷாளநாந்மணே: | தோஷ ப்ரஹாணாந் ந ஜ்ஞானம் ஆத்மன: க்ரியதே ததா || யதோதபாந கரணாத் க்ரியதே ந ஜலாம்பரம் | ஸதேவ நீயதே வ்யக்திம் அஸத: ஸம்பவ: குத: || ததா ஹேயகுண த்வம்ஸாத் அவபோதாததயோ குணா: | ப்ரகாச்யந்தே ந ஜன்யந்தே நித்யா ஏவாத்மனோ ஹி தே ||" என்று ஸ்ரீசௌநகபகவான் அருளிச்செய்தான். ஜ்ஞாந த்ரவ்யமும், இதினுடைய ஸர்வவிசேஷ விகாஸத்துக்கு ஸ்வரூப யோக்யதா ரூபையான சக்தியும் நித்யங்களாகையாலே அவற்றில் ஆவிர்பாவ சப்தம் முக்யம். ஸர்வவிசேஷ விகாஸமும், துக்க நிவ்ருத்தியாதிகளும், ஸங்கல்பாதிகளும், கைங்கர்யங்களும் ஆகந்துகளாயிருக்க, இவை நிவ்ருத்தி ப்ரதிபந்த ஸ்வரூப உபாதிகங்களாகையாலே மேல் முழுக்க நடக்கும்படி தோற்றுகைக்காக இவற்றில் "ஆவிஸ்ஸ்யுர்மம ஸஹஜ கைங்கர்ய விதய:" இத்யாதிகளாலே ஆவிர்பாவ சப்தம் ப்ரயுக்தமாகிறது. ஸ்வரூப யோக்யத்வத்தாலே கர்போபாதிகமாக பஹுவிதமான ஆநுகூல்ய ப்ராதிகூல்யங்கள் நடந்த பகவத்விபூதியான வஸ்துக்களுக்கு மேலெல்லாம் மோக்ஷதசையில் ஆநுகூல்யமே ஸ்வரூப ப்ராப்தமாகையாலே, அதிலும் ஆவிர்பாவ சப்தத்துக்கு விரோதமில்லை. ஆகையால் "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்ன இவ் அநுகூல அவஸ்தாந்தரம் ஸித்தமாயிற்று.

**விளக்கம் –** இவ்விதமாக கீதை (18-66) – ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – என்பது, காரண வடிவில் உள்ள தடைகள் (பகவான் தண்டித்தல்) மற்றும் கார்ய வடிவில் உள்ள தடைகள் (அவித்யை போன்றவை) ஆகிய அனைத்தின் நீக்கம் குறித்துக் கூறுவதாக உள்ளது; இதன் மூலம், பகவத் அனுபவம் பரிபூர்ணமாக வெளிப்படுகின்ற நிலையைக் கூறுவதாகக் கருத்து. இதனை பகவான் சௌநகர் ஸ்ரீவிஷ்ணுதர்மம் (104 – 55, 56, 57) - யதா ந க்ரியதே ஜ்யோத்ஸ்நா மலப்ரக்ஷாள நாந்மணே: தோஷப்ரஹாணாந் ந ஜ்ஞாநமாத்மந: க்ரியதே ததா யதோதபாநகாணாத் க்ரியதே ந ஜலாம்பரம் ஸதேவ நீயதே வ்யக்திம் அஸத: ஸம்பவ: குத: ததா ஹேய குணத்வம்ஸாத் அவபோதாதயோ குணா: ப்ரகாச்யந்தே ந ஜ்ஞாயந்தே நித்யா ஏவ ஆத்மாநோ ஹி தே - வைரம் போன்ற கற்களில் உள்ள அழுக்கை நீக்குவதால் அதற்குப் புதிதாக ஒளி உண்டாவதில்லை; இது போன்றே

சரீர தொடர்பு காரணமாக ஏற்பட்ட தோஷங்களை நீக்குவதால் ஆத்மாவிற்குப் புதிதாக ஞானம் உண்டாகுவதில்லை; குளம் கிணறு போன்றவற்றை வெட்டும்போது அங்கு புதிதாக நீர் உண்டாவதில்லை, மறைந்திருந்த நீர் மீண்டும் வெளிப்படுகிறது; இது போன்று தாழ்வான குணங்கள் அனைத்தும் மோக்ஷம் அடையும்போது நீங்கிய பின்னர், ஞானம் போன்ற இயல்பான தன்மைகள் ஆத்மாவிடம் வெளிப்படுகின்றன, அவை புதிதாக உண்டாவதில்லை, அவை ஆத்மாவிடம் எப்போதும் உள்ளவை அல்லவோ – என்று அருளிச்செய்தார். ஞானம் என்னும் திரவியம் (அதாவது தர்மபூத ஞானம்) மற்றும் அனைத்தையும் பரவி நிற்கும் அதன் சக்தி ஆகிய இரண்டும் நித்யமாக உள்ளதால், அவற்றைக் குறித்து "இருப்பது வெளிப்படுதல்" என்று கூறுவதே சரியானதாகும். அனைத்து வஸ்துக்களிலும் ஞானம் பரவி நிற்பது, துக்கங்களிலிருந்து விடுதலை, ஸங்கல்பங்கள், கைங்கர்யங்கள் ஆகிய அனைத்துமே புதியதாக வருபவையே ஆகும்; ஆனாலும் அவற்றின் வெளிப்படுதல் என்பது "தடைகள் நீங்குதல்" முதலான உபாதிகளைப் பொறுத்தே அமைகிறது என்பதை உணர்த்தும்விதமாகவும், இந்த உபாதிகள் மறையும்போது இவை அனைத்தும் தாமாகவே வெளிப்படுகின்றன என்பதாலும் இவற்றைக் குறித்து, அஷ்டச்லோகி (3) - ஆவிஸ்ஸ்யுர்மம ஸஹஜ கைங்கர்ய விதய: - எனக்கு இயல்பாகவே அமைந்துள்ள பலவிதமான கைங்கர்யத்தன்மைகள் வெளிப்படட்டும் – என்பது போன்ற வரிகளில் உள்ளது போன்று, "இருப்பது வெளிப்படுதல்" என்று கூறுவதே பொருத்தமாகிறது. ஸம்ஸார நிலையில் உள்ளபோது, இந்த உலகில் பகவானுடைய உடைமைகளாக உள்ள அனைத்து வஸ்துக்களில், பலவிதமான வஸ்துக்கள் நமக்கு ஏற்புடையதாக இல்லாமலும், சில வஸ்துக்கள் மட்டுமே ஏற்புடையதாக உள்ளதாகவும் இருப்பதற்குக் காரணம், "கர்மம்" என்னும் உபாதியே ஆகும். ஆனால் அவை அனைத்தின் இயல்பும் "ஏற்கப்படக்கூடியவை" என்பதாகவே உள்ளதால், மோக்ஷ நிலையில் அவை அனைத்துமே ஏற்புடையதாக ஆகின்றன என்பதால், அந்த நிலையிலும் "இருப்பது வெளிப்படுதல்" என்று கூறுவதில் முரண்பாடில்லை. ஆகவே கீதை (18-66) - ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – என்பதன் மூலம், அனைத்து வஸ்துக்களும் தங்களுக்கு இயல்பாகவே உரியதான ஏற்புடைய தன்மையுடன் வெளிப்படும் நிலையை ஜீவாத்மா அடைகிறான் என்பது உணர்த்தப்படுகிறது.

**மூலம்** – "ஏக" சப்தத்துக்கு உபாய பலைக்யம் பொருளானபோது, இவ் இஷ்டப்ராப்தியும் இச் ச்லோகத்திலே ஸுவ்யக்தமாகச் சொல்லிற்றாம். கீழில் ச்லோகத்திலே விசதமாகச் சொன்ன அர்த்தம் இங்கு ப்ராப்தி விரோதியைக் கழிக்கையாலும், "ஏக" சப்தத்தில் விவக்ஷாவிசேஷத்தாலும் சொல்லிற்றாம். ஆன பின்பு இது ஸாபேக்ஷமாய்க் கொண்டு கீழில் ச்லோகத்துக்கு சேஷமாகிறதன்று.

**விளக்கம்** – சரமச்லோகத்தில் உள்ள "ஏக" என்னும் சொல்லானது உபாயம் மற்றும் உபேயம் ஆகிய இரண்டின் சேர்க்கையையும் குறிக்கும் என்று கொண்டால், இந்த ச்லோகத்தின் மூலம் "விரும்பியதை அடைதல்" என்னும் பலனும் மிகத்தெளிவாகக் கூறப்பட்டது என்று கருத்து. ஆகவே கீதை (18-65)ல் கூறப்பட்ட கருத்தானது, இந்த ச்லோகத்தில் கூறப்பட்ட "இலக்கைத் தடுக்கும் விரோதிகளை நீக்குதல்" என்னும் கருத்து மற்றும் "ஏக" என்னும் சொல்லில் உள்ள விளக்கமான கருத்து ஆகியவற்றாலும் வெளிப்படுகிறது. ஆகவே சரமலோகமானது, இதற்கும் முந்தைய ச்லோகத்தின் "பொருள் விளக்கம்" என்று கருதி, அதன் எஞ்சிய பாகமே ஆகும் எனக் கூற இயலாது.

## கைவல்யம் மூலம் பாபங்கள் விலகுவதில்லை

**மூலம்** – "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்ற இவ்வளவால் "மாமேவைஷ்யஸி" என்று சொன்ன பகவத் ப்ராப்தி ஸித்திக்குமோ? ஸர்வபாப நிவ்ருத்தி உண்டாயே பகவத் ப்ராப்தியன்றிக்கே ஸ்வாத்ம மாத்ர அநுபவரூபமான கைவல்யம் பெறுவாருமில்லையோ? பகவத் ப்ராப்தியிற்காட்டில் வேறுபட்ட கைவல்யம், "இஹ லௌகிகர்மைச்வர்யம் ஸ்வர்காத்யம் பாரலௌகிகம் | கைவல்யம் பகவந்தம் ச மந்த்ர: அயம் ஸாதயிஷ்யதி" என்று நாரதாதிகளாலே சொல்லப்பட்டதிறே. ஆளவந்தாரும் "ஐச்வர்யாக்ஷர யாதாத்ம்ய பகவச்சரணார்திநாம்" என்றும், "ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்வஸு" என்றும் அருளிச்செய்தார். கத்யத்திலும் "ஸர்வகாமாம்ச்ச ஸாக்ஷராந்" என்கிற வாக்யமும் உபாத்தமாயிற்று. ஸ்ரீகீதாபாஷ்யாதிகளிலும் இவ் அர்த்தம் ப்ரபஞ்சிதம். ஆகையால் "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி என்ற ஸர்வபாப நிவ்ருத்தி, கைவல்யத்துக்கும் பகவத் ப்ராப்திக்கும் பொதுவன்றோ?" என்கை மந்த சோத்யம். எங்ஙனே என்னில், ஸர்வபாபங்களும் கழிந்தால் ஸ்வத:ப்ராப்தமான பகவதநுபவத்தை இழந்து கிடக்கைக்குக்

காரணமில்லாமையாலே அப்போது பகவதநுபவ ரஹிதமான ஆத்ம மாத்ர அநுபவம் கடியாது. ஆகையால் அவ் அவஸ்தையில் ஐச்வர்யமும் ஜராமரணாதி துக்கங்களும் வருகைக்கு ஈடான கர்மங்கள் கழிந்து, பரிபூர்ண பகவதநுபவத்துக்குப் ப்ரதிபந்தகமான கர்மம் கழியாதே கிடக்கிறவளவிலே, "யம் லப்த்வா சாபரம் லாபம் மந்யதே நாதிகம் தத:" என்னும்படியிருப்பது ஒரு ஸ்வாத்மாநுபவ ஆநந்தவிசேஷம். "ஆத்மார்த்த சேத் த்ரய: அப்யேதே தத் கைவல்யஸ்ய ஸாதகா:" என்று சொல்லுகிறபடியே தனக்கு சக்யமாயிருப்பதோர் உபாய விசேஷத்தாலே ஸித்தித்த இவ் அநுபவத்தை, அசிதநுபவத்தோடும் பகவதநுபவத்தோடும் துவக்கில்லாதபடியாலே, கைவல்யமென்று பேரிட்டார்கள்.

**விளக்கம்** – கீதை (18-66) - ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – அனைத்து பாபங்களையும் விலக்கி – என்பதற்கு ஏற்ப, அனைத்து பாபங்களும் விலகின நிலையில், "மாமேவைஷ்யஸி – நீ என்னையே அடைவாய்" என்று பகவான் உரைத்தபடியே "பகவானை அடைதல்" என்பது ஏற்படுமோ? அனைத்து பாபங்களும் நீங்கிய பின்னர், "பகவானை அடைதல்" என்பது அல்லாமல், "தனது ஆத்மஸ்வரூபத்தை மட்டுமே அனுபவித்தல்" என்ற வடிவில் உள்ளதான கைவல்யத்தையும் சிலர் அடைகிறார்கள் அல்லவோ? "பகவானை அடைதல்" என்பதைக் காட்டிலும் வேறுபட்டதான கைவல்யமானது, நாரதீயகல்பத்தில் - இஹ லௌகிகமைச்வர்யம் ஸ்வர்காத்யம் பாரலௌகிகம் | கைவல்யம் பகவந்தம் ச மந்த்ர: அயம் ஸாதயிஷ்யதி – இந்த மந்த்ரமானது (திருமந்த்ரம்) இம்மையில் செல்வத்தையும், மறுமையில் ஸ்வர்கத்தையும் அளிக்கிறது; மேலும் கைவல்யம் மற்றும் பகவத் அனுபவத்தையும் அளிக்கிறது – என்று நாரதமஹரிஷி போன்றவர்கள் கூறினார்கள் அல்லவோ? ஆளவந்தாரும், கீதார்த்த ஸங்க்ரஹத்தில் (12) – ஐச்வர்ய அக்ஷர யாதாத்ம்ய பகவச் சரணார்திநாம் – ஐச்வர்யம், ஆத்ம அனுபவம், பகவத் திருவடிகளின் அனுபவம் – என்றும், சதுச்ச்லோகி (3) - ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்வஸு – ஆத்ம அனுபவம் மற்றும் பகவத் அனுபவம் – என்றும் அருளிச்செய்தார். கத்யத்தில் - ஸர்வகாமாம்ச்ச ஸ அக்ஷராந் – அனைத்து விருப்பங்களையும், கைவல்யத்தையும் விட்டு – என்ற வாக்கியமானது எடுத்துக் கூறப்பட்டது. இந்தக் கருத்தானது ஸ்ரீகீதாபாஷ்யம் போன்றவற்றிலும் விரிவாகக் கூறப்பட்டது. எனவே "அனைத்து பாபங்களும் விலகுதல்" என்பது கைவல்யம் மற்றும் பகவானை அடைதல் ஆகிய இரண்டிற்கும் பொதுவானதே ஆகும் அல்லவோ என்று

கேட்பது மந்தமான புத்தி கொண்ட கேள்வியாகும். எப்படி? அனைத்து பாபங்களும் நீங்கிய பின்னர், தானாகவே கிட்டவல்லதாகிய பகவத் அனுபவத்தைப் பெறாமல் இருப்பதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை; ஆகவே அந்த நிலையில் பகவத் அனுபவத்தைத் தவிர்ந்துள்ளதான ஆத்ம அனுபவம் மட்டும் கிட்டுதல் என்பது ஏற்படாது. எனவே அத்தகைய சூழலில், ஐச்வர்யம் மற்றும் வயோதிக மரண துக்கங்கள் உண்டாவதற்குக் காரணமாக உள்ள கர்மங்கள் அனைத்தும் கழியப் பெற்று, பரிபூர்ணமான பகவத் அனுபவம் உண்டாவதற்குத் தடையாக உள்ள ஏதேனும் ஒரு கர்மம் கழியாமல் உள்ளபோது, கீதை (6-22) - யம் லப்த்வா சாபரம் லாபம் மந்யதே நாதிகம் தத: - ஆத்ம அனுபவம் என்னும் நிலையில் உள்ள ஒருவன் அதிலிருந்து ஓய்ந்தாலும், ஆத்மாவை மட்டுமே விரும்புபவனாக - என்பதற்கு ஏற்ப ஆத்மாவை அனுபவிப்பதால் ஒரு ஆனந்தம் உண்டாகிறது. கீதார்த்த ஸங்க்ரஹம் (27) - ஆத்மார்த்த சேத் த்ரய: அப்யேதே தத் கைவல்யஸ்ய ஸாதகா: - ஜீவாத்ம அனுபவம் என்னும் கைவல்யத்தை கர்மயோகம், ஞானயோகம் மற்றும் பக்தியோகம் ஆகிய மூன்றும் அளிக்கவல்லவை – என்று கூறுவதற்கு ஏற்ப, தனது சக்திக்கு ஏற்றதொரு உபாயம் மூலம் கிட்டிய இந்த ஆத்ம அனுபவமானது, “அசித் பொருள்களை அனுபவித்தல், பகவத் அனுபவம் பெறுதல்” ஆகிய இரண்டினோடும் சேராமல் உள்ளதால், இதற்கு “கைவல்யம்” என்று பெயரிட்டனர்.

## பகவானை அடைதல் என்பதைக் கைவல்யம் என்றும், கைவல்யத்தை மோக்ஷம் என்றும் கூறுவதன் காரணம்

**மூலம்** – பகவத் ப்ராப்தியில் கைவல்ய சப்தம் ஸர்வோபாதி நிவ்ருத்தியை நினைக்கிறது. ஆத்ம மாத்ர அநுபவ விஷயமாக “ஸ்வாத்மாநுபூதிரிதி யா கில முக்திருக்தா” இத்யாதிகளில் ப்ரயுக்தமான முக்தி சப்தமும், “விகதேச்சா பய க்ரோதோ ய: ஸதா முக்த ஏவ ஸ:” இத்யாதிகளிற்போலே நிர்வாஹம். “ஜரா மரண மோக்ஷாய” என்றதுவும் தேவர்களுடைய அபரத்வ வ்யபதேசம் போலே அபேக்ஷிகம்; க்ரமேண முக்தி பர்யந்தமாம் விஷயத்தைப் பற்றச் சொல்லுகிறதாகவுமாம். இப்படி விபவ வ்யூஹ ஸாலோக்யாதி மாத்ரத்தில் முக்தி சப்தமும் நிர்வாஹம். “லோகேஷு விஷ்ணோர் நிவஸாந்தி கேசித் ஸமீபம்ருச்சந்தி ச கேசிதந்யே அந்யே து ரூபம் ஸத்ருசம் பஜந்தே ஸாயுஜ்யமந்யே ஸ து

மோக்ஷ உக்த:" என்று நியமிக்கப்பட்டதிறே. இதிற் சொன்ன ஸாயுஜ்யம் பரமபதத்திற் சென்றவனுடைய போக ஸாம்யமாம்.

**விளக்கம்** - "பகவானை அடைதல்" என்பதும் சில இடங்களில் "கைவல்யம்" என்று கூறப்படுகிறது; இதன் காரணம் முக்தி பெற்ற நிலையில் அனைத்து தடைகளும் விலகுவதால் ஆகும். ஸ்ரீவரதராஜ ஸ்தவம் (81) – ஸ்வாத்ம அநுபூதி: இதி யா கில முக்திருக்தா – ஆத்ம அனுபவம் என்பதான இந்த முக்தியையும் – என்பது போன்ற இடங்களில், ஆத்ம அனுபவத்தை முக்தி என்னும் சொல்லால் கூறுவது, கீதை (5-28) - விகதேச்சா பய க்ரோதோ ய: ஸதா முக்த ஏவ ஸ: - ஆசை, பயம், கோபம் ஆகியவை நீங்கப் பெற்றவனாக மோக்ஷத்தில் மட்டுமே ஆசை கொண்டவனாக ஆத்மாவைப் பார்ப்பதில் நோக்கம் உள்ள ஒருவன் – என்று கூறுவது போன்றே ஆகிறது. கீதை (7-29) - ஜரா மரண மோக்ஷாய – (கைவல்யம் என்பது) வயோதிகம் மற்றும் மரணத்திலிருந்து மோக்ஷம் – என்று கூறுவதும், (அமரர்கள் அல்லாத) தேவர்களை, அமரர்கள் என்று கூறியிருப்பது போன்றே ஆகும். அல்லது கைவல்யம் என்பதும் படிப்படியாக முக்தி நிலைக்கு இட்டுச் செல்லும் என்று கூறுவதாகவும் கொள்ளலாம். இவ்விதமாகவே விபவம், வ்யூஹம், ஸாலோக்யம் ஆகிய லோகங்களை அடைவதும் முக்தி என்னும் சொல்லால் கூறப்பட்டது என்று கருத்து. ஸ்ரீமத் பாகவதம் - லோகேஷு விஷ்ணோர் நிவஸாந்தி கேசித் ஸமீபம்ருச்சந்தி ச கேசிதந்யே அந்யே து ரூபம் ஸத்ருசம் பஜந்தே ஸாயுஜ்யமந்யே ஸ து மோக்ஷ உக்த: - ஸர்வேச்வரனை உபாஸனை செய்தவர்களில் சிலர் அவனுடைய லோகத்திலேயே வஸிக்கின்றனர் (ஸாலோக்யம்), ஒரு சிலர் அவனுக்கு மிகவும் அருகில் வஸிக்கின்றனர் (ஸாமீப்யம்), ஒரு சிலர் அவனுக்குச் சமமான ரூபம் பெறுகின்றனர் (ஸாரூப்யம்), சிலர் எம்பெருமானுக்குச் சமமான இன்பங்களை அனுபவிக்கின்றனர் (ஸாயுஜ்யம்); இந்த ஸாயுஜ்யம் என்பதே மோக்ஷமென்றும் கூறப்படும் – என்று கூறப்பட்டது. இதில் கூறப்பட்டதான ஸாயுஜ்யம் என்பது பரமபதத்திற்கு செல்லும் ஒருவன், பகவானைப் போன்றே ஆனந்தத்துடன் உள்ளான் என்னும் நிலையாகும்.

## கைவல்யம் நித்யமானதும் அல்ல, மோக்ஷமும் அல்ல

**மூலம்** – கேவல ஆத்ம அநுபவம் நித்யமன்று என்னுமிடமும், ஸாக்ஷாந் மோக்ஷமன்று என்னுமிடமும் "சதுர்விதா மம ஜநா பக்தா ஏவ ஹி தே ச்ருதா: | தேஷாமேகாந்திந: ச்ரேஷ்டா: தே சைவாநந்யதேவதா: || அஹமேவ கதிஸ்தேஷாம் நிராசீ: கர்மகாரிணாம் | யே து சிஷ்டாத்ரயோ பக்தா: பலகாம ஹி தே மதா: || ஸர்வே ச்யவநதர்மாண: ப்ரதிபுத்தஸ்து மோக்ஷபாக்" என்கிற வசநத்தாலே ஸித்தம். "முச்யேதார்த்தஸ்ததா ரோகாத் ச்ருத்வேமாமாதித: கதாம் | ஜிஜ்ஞாஸுர்லபதே பக்திம் பக்தோ பக்தகதிம் லபேத் ||" என்கையாலே ஸ்ரீகீதையில் "ஜிஜ்ஞாஸு" என்கிற ஆத்மநிஷ்டனும் க்ரமேண ஜ்ஞாநியாமென்று உக்தமாயிற்று. "மன்னுறில்" என்று பகவதநுபவத்தை நித்யம் என்கையாலும், இதுக்கு வ்யவச்சேத்யமாகச் சொல்லும் ஆத்ம மாத்ராநுபவம் நித்யமன்று என்னுமிடம் வ்யஞ்ஜிதம். இதுக்கு "இறுதி கூடா" இத்யாதிகளில் நாசமில்லை என்கிற பாசுரமும் சாதுர்பாஸ்யாதி கர்மபல விசேஷங்களில் அக்ஷய்யத்வோக்தி போலே "எனையூழி" என்கிற அதிசிரகால ஸ்தாயித்வ அபிப்ராயம். "யோகிநாம் அம்ருதம் ஸ்தாநம் ஸ்வாத்ம ஸந்தோஷ காரிணாம்" என்று இவ் ஆத்மாநுபவ ஸ்தாநவிசேஷமும் சொல்லப்பட்டது. இஸ் ஸ்தாந விசேஷம் பரமபதமன்று என்னுமிடம் இப் ப்ரகரணந் தன்னிலே "ஏகாந்திந: ஸதா ப்ரஹ்ம த்யாயிநோ யோகிநோ ஹி யே | தேஷாம் தத் பரமம் ஸ்தாநம் யத்வை பச்யந்தி ஸூரய:" என்று பகவத் ப்ராப்தி காமனான பரமைகாந்திக்கு ஸூரித்ருச்யமான ஸ்தாநாந்தரம் சொல்லுகையாலே ஸித்தம்.

**விளக்கம்** – ஆத்ம அனுபவம் மட்டுமே என்பதான கைவல்யமானது நித்யமானதும் அல்ல மற்றும் மோக்ஷமும் அல்ல என்பதை மஹாபாரதம் சாந்திபர்வத்தில் - சதுர்விதா மம ஜநா பக்தா ஏவ ஹி தே ஸ்ம்ருதா: ஏஷாமேகாந்திந: ச்ரேஷ்டா: தே சைவாநந்யதேவதா: அஹமேவ கதிஸ்தேஷாம் நிராசீ: கர்மகாரிணாம் யே து சிஷ்டாத்ரயோ பக்தா: பலகாம ஹி தே மதா: ஸர்வே ச்யவநதர்மாண: ப்ரதிபுத்தஸ்து மோக்ஷபாக் – என்னுடைய பக்தர்கள் நான்கு வகை ஆவர்; அவர்களில் என்னைத் தவிர மற்ற தேவதைகளை நாடாமல் உள்ளவர்களே சிறந்தவர்கள்; அவர்கள் தங்களுடைய கர்மங்களை எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்கின்றனர்; என்னை அடைவதையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர்; மற்ற மூவரும் உலகவிஷயங்களைப் பலனாக எதிர்பார்ப்பதால், நழுவ வாய்ப்புள்ளது; என்னை மட்டுமே வணங்கியபடி உள்ள புத்திமான் மோக்ஷம் பெறுகிறான் – என்னும் வாக்கியத்தால் அறியலாம். மஹாபாரதம் சாந்திபர்வத்தில் (348-81) - முச்யேதார்த்தஸ்ததா ரோகாத் ச்ருத்வேமாமாதித: கதாம் ஜிஜ்ஞாஸுர்லபதே பக்திம் பக்தோ பக்தகதிம் லபேத் – தொடக்கம் முதல் இதனைக்

கேட்பதால், செல்வத்தை இழந்த ஒருவன், அந்தத் துன்பத்திலிருந்து விடுபடுவான்; ஆத்ம அனுபவத்தை விரும்புபவன் பக்தியை அடைகிறான்; பக்தியோகத்தில் உள்ளவன் மோக்ஷம் அடைகிறான் – என்று கூறுவதால், கீதையில் (7-16) – ஜிஜ்ஞாஸு – என்று கூறப்படும் ஆத்மநிஷ்டனும் நாளடைவில் ஞானியாகிறான் என்பது கூறப்பட்டதாகிறது. திருவாய்மொழி (1-2-5) – மன்னுறில் – என்னும் பாசுரத்தால் பகவத் அனுபவத்தை நித்யமானது என்று கூறுவதாலும், இது ஏற்படுவதற்குத் தடுக்கப்படவேண்டியதாகக் கூறப்படும் “ஆத்மாவை மட்டுமே அனுபவித்தல்” என்பது நித்யமானது அல்ல என்று கூறுவதாலும் இக்கருத்து உணர்த்தப்படுகிறது. மேலும் இதற்கு திருவாய்மொழி (6-9-10) - இறுதிகூடா – என்பது போன்ற பாசுரங்களில் ஆத்ம அனுபவத்திற்கு அழிவில்லை என்ற கருத்தானது, சாதுர்மாஸ்யம் என்பது போன்றதான கர்ம பலன்களுக்கு அழிவில்லை என்று கூறப்பட்டது போன்று, அவைகள் திருவாய்மொழி (6-9-10) – எனையூழி – என்பதற்கு ஏற்ப நீண்டகாலங்கள் அழியாதவையாக உள்ளன என்றே ஆகிறது (நித்யமானது அல்ல). ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-6-38) - யோகிநாம் அம்ருதம் ஸ்தாநம் ஸ்வாத்ம ஸந்தோஷ காரிணாம் – யோகிகளுக்கு “அம்ருதம்” எனப்படும் இடமே ஆத்ம அனுபவத்தில் ஈடுபட்டு மகிழ்வதற்கு ஏற்றதாக உள்ளது – என்பதன் மூலம், இத்தகைய ஆத்ம அனுபவம் கிட்டுகின்ற இடம் குறித்துக் கூறப்பட்டது. ஆனால் இத்தகைய இடமானது பரமபதம் அல்ல என்பதை, இதே பகுதியில் உள்ள ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-6-39) - ஏகாந்திந: ஸதா ப்ரஹ்ம த்யாயிநோ யோகிநோ ஹி யே | தேஷாம் தத் பரமம் ஸ்தாநம் யத்வை பச்யந்தி ஸூரய: - ப்ரஹ்மத்தை மட்டுமே எப்போதும் த்யானித்தபடி உள்ள யோகிகள் அடையும் இடமானது, நித்யஸூரிகள் எப்போதும் அனுபவித்தபடி உள்ள பரமபதம் ஆகும் – என்னும் வாக்கியம் மூலம், பகவானை அடைதல் என்பதை மட்டுமே விரும்பியபடி உள்ள பரமைகாந்திக்கு, நித்யஸூரிகள் எப்போதும் பார்த்தபடி உள்ள இடமே ஏற்ற இடம் என்று கூறப்படுவதால் அறியலாம்.

## ஜீவாத்மாவை மட்டுமே உபாஸிப்பவனுக்கு மோக்ஷம் இல்லை

**மூலம்** – பஞ்சாக்நி வித்யாதிகளிற் சொன்ன ப்ரஹ்மாத்மக ஸ்வாத்ம அநுஸந்தாநம் பண்ணுவார்க்கு பாஷ்யாதிகளிலே அர்ச்சிராதிகதியும் ப்ரஹ்ம ப்ராப்தியும் சொல்லப்பட்டது. ஆகையால் இப் பஞ்சாக்நி வித்யா நிஷ்டர்க்கு ஆத்ம மாத்ர அநுபவ

ரூபமான அவாந்தர பலம் வந்தாலும், மதுவித்யா ந்யாயத்தாலே ப்ரஹ்ம ப்ராப்தி பர்யந்தமாய்விடும். ப்ரக்ருதி ஸம்ஸ்ருஷ்டமாயாதல் ப்ரக்ருதி வியுக்தமாயாதல் இருக்கும் ஆத்ம வஸ்துவை, ஸ்வரூபேணவாதல் ப்ரஹ்மத்ருஷ்டியாலேயாதல் பண்ணும் அநுஸந்தாநங்கள் நாலுக்கும் நாமாதி உபாஸநங்களுக்குப் போலே, அர்ச்சிராதிகதியும் ப்ரஹ்ம ப்ராப்தியுமில்லை என்னுமிடத்தை, "அப்ரதீகாலம்பநாந் நயதீதி பாதராயண உபயதா ச தோஷாத் தத் க்ரதுச்ச" என்கிற ஸூத்ரத்திலே அருளிச்செய்தார். "ச்ருதோபநிஷத்க கத்ய பிதாநாச்ச" என்கிற ஸூத்ரத்திலும் ஒரு வித்யா விசேஷத்தில் உபாஸ்யன் பரமாத்மா என்கைக்கு அர்ச்சிராதிகதி சொன்னதை ஹேதுவாகக் கொண்டு ஸாதிக்கையாலே, ஜீவ மாத்ர உபாஸகனுக்கு அர்ச்சிராதிகதியில்லை என்னுமிடம் ஸித்தமாயிற்று. ஆகையால் ப்ரஹ்ம ப்ராப்தியில்லாதார்க்கு இச் ச்லோகத்திற் சொல்லுகிற "ஸர்வ பாப" நிவ்ருத்தியில்லை. ஸர்வ பாப நிவ்ருத்தியுடையார்க்கு ப்ரஹ்மாநுபவ ஸங்கோசமில்லை.

**விளக்கம்** – பஞ்சாக்னி வித்யைகளில் கூறப்பட்டதாகிய "தங்களுடைய ஆத்மாவின் அந்தராத்மாவாக ப்ரஹ்மம் உள்ளது" என்று தங்கள் ஆத்மாவை எண்ணியபடி உள்ளவர்களுக்கு, அவர்களுடைய உயிர் பிரிந்த பின்னர், அர்ச்சிராதி மார்க்கமாகச் செல்லுதல் மற்றும் ப்ரஹ்மத்தை அடைதல் ஆகியவை உள்ளதாக ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம் முதலானவற்றில் கூறப்பட்டது. ஆகவே பஞ்சாக்னி வித்யையில் ஈடுபட்டபடி உள்ளவர்களுக்கு, அவர்கள் தங்களுடைய ஆத்மாவை மட்டுமே அனுபவித்தபடி இருத்தல் என்பதன் விளைவாக நடுவில் சிறிதளவு உண்டாகக்கூடிய பலன்கள் ஏற்பட்டாலும், மதுவித்யை ந்யாயம் (மதுவித்யையின்போது சிறிது காலம் வஸுவாக இருத்தல்) காரணமாக, அவர்களுக்கு ப்ரஹ்மத்தை அடைதல் என்பது உறுதியாகக் கைகூடும். ஒரு சிலர், ப்ரக்ருதியுடன் ஸம்பந்தம் கொண்டுள்ளது என்றோ அல்லது ப்ரக்ருதியிடமிருந்து விடுபட்டுள்ளது என்றோ உள்ளதான தங்களுடைய ஆத்மாவை, அதன் ஸ்வரூபத்தையோ அல்லது அதனையே ப்ரஹ்மம் என்றோ எண்ணியபடி இருக்கக்கூடும். இத்தகைய நான்குவிதமான உபாஸனங்கள், பெயர் முதலானவற்றை உபாஸனம் செய்வதன் மூலம் அர்ச்சிராதிகதியும் ப்ரஹ்மத்தை அடைதலும் எவ்விதம் நிகழாதோ, அதனைப் போன்றே செய்யவல்லவை ஆகும். இதனை ப்ரஹ்மஸூத்ரம் (4-3-14) - அப்ரதீகாலம்பநாந் நயதி இதி பாதராயண: உபயதா ச தோஷாத் தத்க்ரது: ச - ப்ரஹ்மத்தின் அவயவமான சித் மற்றும் அசித்துக்களை பேறாகக்

கொண்டு உபாஸிக்காதவர்கள் தவிர உள்ள மற்றவர்களையே அர்ச்சிராதி மார்க்கமாக அழைத்துச் செல்கின்றனர் என்று பாதராயணர் கருதுகிறார். இவ்விதம் கூறாமல் உள்ள மற்ற இரண்டு வாதங்களிலும் தோஷங்கள் உள்ளன. இதனையே தத்க்ரது ந்யாயம் கூறுகிறது – என்பதில் அருளிச்செய்தார். மேலும், ப்ரஹ்மஸூத்ரம் (1-2-17) - ச்ருத உபநிஷத்க கத்யபிதாநாத் ச - பரமாத்மாவைக் குறித்து உண்மை அறிவு உள்ளவன், எப்போதும் எண்ணியபடி இருத்தல் வேண்டும் என்று அர்ச்சிராதிகதியைக் கூறுவதால், கண்ணில் உள்ளவன் பரமபுருஷனே ஆவான் – என்று மற்றொரு வித்யை விஷயத்தில், "உபாஸிக்கப்பட வேண்டியவன் பரமாத்மாவே ஆவான்" என்பதை அங்கு அர்ச்சிராதி மார்க்கம் குறித்துக் கூறுவதன் காரணமாக உரைப்பதால், ஜீவாத்மாவை மட்டுமே உபாஸிப்பவனுக்கு அர்ச்சிராதி மார்க்கம் இல்லை என்பது தெளிவாகிறது. ஆகவே ப்ரஹ்மத்தை அடையாதவர்களுக்கு, கீதை (18-66) – ஸர்வ பாப – அனைத்து பாபங்களிலிருந்தும் – என்பதான பாபங்கள் விலகுதல் இல்லை. ஆனால் பாபங்கள் அனைத்திலிருந்தும் விலகப்பெற்றவர்களுக்கு, ப்ரஹ்ம அனுபவத்தில் சுருக்கம் ஏற்படுவதில்லை.

**மூலம்** - இப்படி இங்கு ஸர்வ பாப நிவ்ருத்தியைச் சொல்லுகையாலே கேவல ஆத்ம அநுபவத்துக்குக் காரணமாய் பரிபூர்ண ப்ரஹ்ம அநுபவத்துக்குப் ப்ரதிபந்தகமான கர்மவிசேஷமும் கழிகையாலே "மாமேவைஷ்யஸி" என்று கீழ் ச்லோகத்திற் சொன்ன அர்த்தம் இங்கும் ஸித்தமாயிற்று. "மாமேவைஷ்யஸி" என்கிற ப்ராப்தியாவது பரிபூர்ணாநுபவம். இப் பரிபூர்ண அநுபவ ஸித்திக்காக அர்ச்சிராதிகதியும் தேசவிசேஷ ப்ராப்தியுமுண்டாகிறது. இக் க்ரமத்திலே இவ் அநுபவம் கொடுப்பதாக ஸ்வதந்த்ரன் அநாதியாக நியமித்து வைத்தான் என்னுமிடம் இக் கதி விசேஷாதிகளைப் ப்ரதிபாதிக்கிற சாஸ்த்ரங்களாலே ஸித்தம்.

**விளக்கம்** – இவ்விதமாக இங்கு அனைத்து பாபங்களும் நீங்குதல் குறித்துக் கூறப்படுவதால், ஆத்மாவை மட்டுமே அனுபவித்தல் என்பதற்குக் காரணமாகவும், முழுமையான ப்ரஹ்ம அனுபவம் ஏற்படுவதற்குத் தடையாக உள்ளதாகவும் இருப்பதான கர்மங்கள் அனைத்தும் கழிவதால், கீதை (18-65) – மாமேவைஷ்யஸி – இதனையே உண்மை என்று உனக்கு நான் உறுதியாகக் கூறுகிறேன் – என்னும் கருத்து இந்த ச்லோகத்திலும் வெளிப்படுகிறது. கீதை (18-65) – மாமேவைஷ்யஸி – என்னும் நிலையை அடைதல் என்பது முழுமையான ப்ரஹ்ம அனுபவம் ஆகும். இத்தகைய "முழுமையான

ப்ரஹ்ம அனுபவம்" கிட்டுவதற்காகவே அர்ச்சிராதி மார்க்கம் மற்றும் பரமபதத்தை அடைதல் ஆகிய இரண்டும் ஏற்படுகிறது. "இப்படிப்பட்ட வரிசையில் இத்தகைய ப்ரஹ்ம அனுபவத்தை அளிக்கவேண்டும் என்பதாகவே ஸர்வேச்வரன் நியமனம் செய்துள்ளான்" என்பதை, இத்தகைய அர்ச்சிராதி மார்க்கம் மற்றும் பரமபதம் ஆகியவற்றைக் குறித்துக் கூறுகின்ற சாஸ்த்ரங்களால் அறியலாம்.

## முக்தி நிலையில் உண்டாகும் ஞான மலர்ச்சியின் மேன்மை

**மூலம்** – இக் கதிவிசேஷத்துக்கு முன்பு சாஸ்த்ரத்தாலே ப்ரஹ்ம ஸ்வரூபத்தை அறிகிறபோதும் யோகத்தாலே ஸாக்ஷாத்கரிக்கிறபோதும் விபவ லோகாதிகளில் ப்ராபிக்கும்போதும் பிறக்கும் ப்ரகாசம் ஸக்ருதாதீநமாய்க் கரணாயத்தமாய் வருகிறதாகையாலே பரிமிதமுமாய் விச்சேதவத்துமாய் இருக்கும். முக்ததசையில் பிறக்கிற ப்ரகாசம், ஸங்கோச விச்சேதங்களுக்குக் காரணம் ஒன்றும் இல்லாமையாலே பரிபூர்ண விஷயமுமாய்ப் புநர்விச்சேத ரஹிதமுமாய் இருக்கும். இவ் அநுபவ பரீவாஹமாய் "க்ரியதாமிதி மாம் வத" என்கிறபடியே சேஷி உகந்த பரிபூர்ண கைங்கர்யம் வருகிறது. "பாரமார்த்திக" என்கிற கத்ய வாக்யத்திற்சொன்ன பலபர்வ பரம்பரையெல்லாம் இங்கே யதா ப்ரமாணம் விவக்ஷிக்கப்படுகின்றன.

**விளக்கம்** – அர்ச்சிராதி மார்க்கமாக ஒருவன் செல்வதற்கு முன்பாக, அவன் சாஸ்த்ரங்கள் மூலமாக ப்ரஹ்ம ஸ்வரூபத்தைக் குறித்து அறிகிறான், தனது யோகத்தால் ப்ரஹ்மத்தை நேரடியாகவே உணர்கிறான், விபவ லோகங்களில் சஞ்சரிக்கிறான். இவற்றின் விளைவாக அவனுக்கு ஏற்படுகின்ற ப்ரகாசமானது, அந்தச் செயல்கள் காரணமாகவே உள்ளதாகவும், அவனுடைய ஞானேந்த்ரியங்களை நம்பி உள்ளதாகவும் இருப்பதால், அந்த ப்ரகாசமானது அளவுடன் கூடியதாகவும், எளிதில் மாறுவதாகவும் இருக்கும். ஆனால், முக்தி அடைந்த நிலையில் கிட்டும் ப்ரகாசம் என்பது, சுருக்கம் மற்றும் மலர்ச்சி ஆகியவற்றுக்கு இடம் இல்லை என்பதால், பரிபூர்ணமாகவும் முழுமையானதாகவும் மாற்றங்களுக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்கும். இத்தகைய அனுபவமானது அளவற்று உள்ளபோது, இராமாயணம் ஆரண்யகாண்டம் (15-7) - க்ரியதாமிதி மாம் வத – லக்ஷ்மணன் இராமனிடம், "இதனைச் செய் என்று எனக்கு நீ கூறுவாயாக" – என்று

கூறுவதற்கு ஏற்ப எஜமானனுக்கு மகிழ்வு ஏற்படும்விதமாக உள்ள பர்பூர்ணமான கைங்கர்யம் உண்டாகிறது. சரணாகதி கத்யத்தில், "பாரமார்த்திக" என்று தொடங்கி கூறப்படும் பலன்களின் தொடர்ச்சி அனைத்தும், இங்கு தகுந்த ப்ரமாணம் மூலம் கூறப்படுவதாகவே உள்ளன.

## "மா சுச:" என்பதன் விளக்கம்

**மூலம்** – இனிமேல் "மா சுச:" என்கிற இத்தாலே கீழருளிச்செய்த அர்த்தத்தில் தீர்வு ப்ரகாசிதமாகிறது.

**விளக்கம்** – அடுத்து "மா சுச:" என்பதன் மூலம், இதுவரை கூறப்பட்டவற்றுடைய முடிவு வெளிப்படுகிறது.

## "மா சுச:" என்பது விதிமுறை அல்ல

**மூலம்** – சிலர் "மா சுச:" என்கிறவிது விதியாகையாலே ப்ரபந்நனான பின்பு சோகிக்கை வித்யதிலங்கனமாய் இவனை உபாயபூதனான சரண்யன் நெகிழ்ந்து தன் கார்யத்துக்குத் தானே கடவனாகையாகிற ப்ரத்யவாயமுண்டாம் என்று சொன்னவிடம் புத்திபூர்வ உத்தராகத்தையும் "ஸர்வ பாபேப்ய:" என்கிறவிடத்திலே கூட்டித் தாங்களே பண்ணின வ்யாக்யானத்துக்கும், "ப்ரபந்நனை சரண்யன் ஒருபடியாலும் கைவிடான்" என்கிற வாக்கியங்களுக்கும் விருத்தமாம். ஆகையால் இவ்வுபாயத்தில் இழியுமவனுக்கு சோக ஹேதுக்களெல்லாம் கழிகையாலே சோகிக்க வேண்டா என்னுமிடத்தைச் சொல்லிக் கொண்டு விச்வாஸத்தை த்ருடீகரிக்கையிலே தாத்பர்யம்.

**விளக்கம்** – ஒரு சிலர் "மா சுச: - வருத்தம் அடையாதே" என்பது, தவிர்க்கப்பட வேண்டிய செயலை விதிப்பதாகும் என்று கூறுகிறார்கள். அவர்களுடைய கருத்தின்படி, "ப்ரபத்திக்குப் பின்னர் ஒருவன் எந்த விஷயத்திற்கும் வருத்தம் அடைதல் கூடாது. அவ்வாறு வருந்துதல் என்பது ப்ரபத்தி விதிமுறைக்கு விரோதமாக உள்ளதால், உபாயமாக உள்ள ஸர்வேச்வரன் தனது திருவுள்ளத்தை மாற்றிக் கொள்கிறான். இதன்

காரணமாக வருத்தம் அடைந்த ப்ரப்பந்நன் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளட்டும் என்று கைவிடுகிறான்", என்பதாகும். இந்தக் கருத்தானது, "தன்னைச சரணம் புகுந்தவர்களை ஸர்வேச்வரன் ஒருநாளும் கைவிடமாட்டான்" என்று கூறுகின்ற ப்ரமாணங்கள் அனைத்திற்கும் முரணானது ஆகும். ஆகவே, "மா சுச:" என்பது, இந்த உபாயத்தைக் கைக்கொண்ட ஒருவனுக்கு, துக்கம் உண்டாகக் காரணமாக உள்ள அனைத்தும் விலகுவதால் அவன் சோகம் அடையவேண்டாம் என்று உரைத்து, அவனுடைய நம்பிக்கை உறுதியாக்குவதில் மட்டுமே நோக்கம் கொண்டதாகும்.

பந்து நாச ஆதய: பூர்வம் பஹவ: சோக ஹேதவ:
தத் தத் ஸமுசிதை: ஸம்யக் உபதேசை: அபோதிதா:

**பொருள்** – உறவினர்கள் அழிதல் முதலான பலவிதங்களில் உள்ளதான துக்கத்திற்கான காரணங்கள் அனைத்தும் முன்பு அந்தந்த துக்கத்தை நீக்கக்கூடிய உபதேசங்களால் நேர்த்தியாக விலக்கப்பட்டன.

ஸுதுஷ்கரத்வாத் தர்மணாம் அபாரத்வாத் விரோதிநாம்
ஸித்த: பல விளம்பவாத் ச சோக: அத்ய விநிவார்யதே

**பொருள்** – கர்மயோகம் போன்ற தர்மங்களால் செய்ய இயலாதபடி உள்ளதாலும், பேற்றினை அடைவதற்குத் தடையாக உள்ள எல்லையற்ற பாபங்களாலும், பலனைப் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தாலும் நேர்கின்ற அனைத்து துக்கங்களும் இந்த உபதேசம் மூலம் விலக்கப்பட்டன.

**மூலம்** - "அபிமத பலத்துக்கு துஷ்கர ஸாதநமுமன்றிக்கே ஸர்வ விரோதி நிவர்த்தந க்ஷமமுமாய்ப் பல விளம்பமுமின்றிக்கேயிருக்கிற இவ்வுபாய விசேஷம் உபதிஷ்டமான பின்பு உபாய தௌஷ்கர்யாதிகளடியாக உனக்கு சோகிக்கப் ப்ராப்தியில்லை. இவ்வுபாயம் அநுஷ்டித்தால் உன் கார்யம் எனக்கு பரமாய் நானே பலியுமாய் உன்னை ரக்ஷியாதபோது எனக்கு அவத்யமாம்படியிருக்கும் தசையிலும் தநாதி துல்யனான உனக்கு சோகிக்கப் ப்ராப்தியுண்டோ" என்று திருவுள்ளம்.

**விளக்கம்** – இங்கு ஸர்வேச்வரனுடைய திருவுள்ளமானது, “சேதநனாகிய உனக்கு விருப்பமான பலனைப் பெறுவதற்காக நீ செய்யவேண்டிய கடினமான உபாயமாக இல்லாமலும், மிகவும் எளிதாக இருப்பதும், அனைத்து தடைகளையும் நீக்கவல்லதும், காலம் தாழ்ந்து பலன் அளிக்காமல் உடனே பலன் அளிக்கவல்லதும் ஆகிய ப்ரபத்தி என்னும் இந்த உபாயம், என்னால் உனக்கு உபதேசம் செய்யப்பட்ட பின்னர் நீ சோகம் கொள்வதற்கு அவசியமே இல்லை. இந்த உபாயத்தை நீ கைக்கொண்ட பின்னர் உனக்கான பலனை அளித்தல் என்பது என்னுடைய பொறுப்பாகிறது. அத்தகைய பலனை அடைபவனும் நானே ஆகிறேன். உன்னைக் காக்கவில்லையென்றால் எனக்குக் கேடு உண்டாகும் என்றுள்ளபோது, என்னால் காப்பாற்றப்படும் செல்வத்தின் இடத்தில் உள்ள உனக்குத் துக்கம் கொள்ளும் நிலை உள்ளதோ?”, என்பதே ஆகும்.

**மூலம்** – இங்கு கழிக்கிற சோகம் யதாவஸ்தித ஆத்மோபதேசாதிகளாலே கழிந்த பந்து வதாதி நிமித்தமான பழைய சோகமன்று; ப்ரகரண அநுகுணமான சோகாந்தரம். எங்ஙனேயென்னில், “தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாய அஸுரீ மதா” என்று பிரித்துச் சொன்னவாறே, “நாம் ஆஸுர ப்ரக்ருதிகளாகில் செய்வது என்?” என்று சோகித்த அர்ஜுநனைப் பற்ற “மா சுச: ஸம்பதம் தைவீம் அபிஜாத: அஸி பாண்டவ” என்றாற்போலே இங்கு சீரிய பலத்தில் தீவ்ரஸங்கம் நடவா நிற்க, சிரகால ஸேவ்யமாய் அந்தராய பஹுலமாய் அத்யந்தாவஹிதர்க்கும் க்ருச்ச்ர ஸாத்யமான உபாயத்தையும் தன் அளவையும் கண்டு, ‘நமக்கு இவ் உபாயம் தலைக்கட்டி எங்கே இப் பல ஸித்தி உண்டாகப் போகிறது?” என்று சோகித்த அர்ஜுநனுக்கு க்ஷணகால ஸாத்யமாய், ஸர்வ அந்தராய ரஹிதமாய் ஸுகரமான உபாயத்தைக் காட்டிக் கொடுத்து, அம்முகத்தாலே பல ஸித்தியில் நிர்பரனுமாய் நிஸ்ஸம்சயனுமாம்படி பண்ணி, “மா சுச:” என்று சொன்னால் இது உபாயாந்தர தௌஷ்கர்யாதிகளடியாகப் பிறந்த சோகத்தைக் கழிக்கிறதாமித்தனையிறே.

**விளக்கம்** – இங்குள்ள “மா சுச:” என்பதன் மூலம் விலக்கப்படுகிற துக்கமானது, யுத்தம் தொடங்கியபோது தனது உறவினர்களை எப்படிக் கொல்வது என்று எழுந்ததும், ஆத்மா குறித்த உபதேசங்களால் விலகியதும் ஆகிய “உறவினர்கள் குறித்த சோகம்” அல்ல. இந்தப் பகுதியில் கூறப்படும் விஷயத்தைக் குறித்த துக்கமே இங்கு உரைக்கப்படுகிறது. எப்படி? கீதையில் (16-5) - தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாய அஸுரீ மதா –

தேவர்களைப் போன்ற தன்மைகள் மோக்ஷத்திற்கும், அஸுரர்களைப் போன்ற தன்மைகள் பந்தத்திற்கும் கொண்டு செல்லும் – என்று பகவான் பிரித்து உரைத்தான். இதனைக் கேட்ட அர்ஜுனன், “நான் அஸுரத் தன்மைகள் கொண்டவனாக இருந்தால் என்ன செய்வது?”, என்று எண்ணி சோகம் கொண்டான். இதனை உணர்ந்த பகவான், “மா சுச: ஸம்பதம் தைவீம் அபிஜாத: அஸி பாண்டவ – பாண்டவனே! நீ தேவர்களைப் போன்ற தன்மைகள் அடையவே பிறந்தாய். ஆகவே வருந்தாதே” என்றான். இதனைப் போன்றே மோக்ஷம் அடைவதில் விருப்பம் கொண்டவனாக நின்ற அர்ஜுனன், இங்கு பகவான் உபதேசம் செய்த உபாயத்தை நீண்டகாலம் கைக்கொள்ளவேண்டும் என்றும், அதற்கும் பல தடைகள் உண்டாகும் என்றும், மிகவும் கவனத்துடன் உள்ளவர்களுக்கும் கூடக் கடினமாக இருப்பதாகும் என்றும், மிகவும் சிரமத்துடன் செய்யவேண்டியதான இந்த உபாயத்தைக் குறித்து சோகம் கொண்டான். அந்த உபாயத்தில் உள்ள சிரமத்தையும், தனது தகுதியையும் குறித்துச் சிந்தித்து, “எனக்கு இந்த உபாயம் கைகூடி, எவ்விதம் பலனை அளிக்க இயலும்?”, என்று எண்ணி சோகம் அடைந்தான். அப்போது பகவான் ஒரு நொடிப்பொழுதில் செய்யக்கூடியதும், எந்தவிதமான தடையும் இல்லாததும், மிகவும் எளிதானதும் ஆகிய மற்றொரு உபாயத்தைக் காண்பித்துக் கொடுத்தான். இதன் மூலமாக அர்ஜுனன் மோக்ஷ உபாயத்தைக் குறித்து பாரம் அற்றவனாகவும், சந்தேகம் அற்றவனாகவும் ஆகும்படிச் செய்து, “மா சுச: - வருத்தம் கொள்ளாதே” என்றான். ஆகவே இங்கு கூறப்பட்ட சொற்களானவை முதலில் கூறப்பட்ட மற்ற உபாயங்களைக் கைக்கொள்வதில் ஏற்படக்கூடிய துக்கத்தை விலக்குவதாகவே உள்ளது என்று கருத்து.

**மூலம்** - இப் பகவத்கீதையில் முற்பட ப்ரக்ருதி ஆத்ம விவேகத்தை உண்டாக்கிப் பின்பு பரம்பரயா மோக்ஷகாரணங்களான கர்மயோக ஜ்ஞாநயோகங்களையும் ஸாக்ஷாத் மோக்ஷ ஸாதநமாக வேதாந்த விஹிதமான பக்தியோகத்தையும் ஸபரிகரமாக உபதேசித்து, “இதி தே ஜ்ஞாநமுகாக்யாதம் குஹ்யாத் குஹ்யதரம் மயா விம்ருச்யைதசேஷேண யதேச்சஸி ததா குரு” என்று அருளிச்செய்தவாறே அர்ஜுநனுடைய முகத்தில் உருவுதலைக் கண்டருளியிருக்கச்செய்தே கடுக லகூபாயத்தை அருளிச்செய்யாதே, “பரீக்ஷாம் ச ஜகந்நாத: கரோத்யத்ருட சேதஸாம்” என்கிற கட்டளையைக் கண்டருளி நாம் “இன்னது உனக்கு ஸாக்ஷாத் மோக்ஷ ஸாதநமான பரிமஹிதம்; இத்தைப் ப்ரதாநமாகக் கணிசித்து இதுக்கு அநுரூபமாக வர்த்தி” என்று நிகமியாதே, “ஏஷ மந்தா விதர்பாணாம் ஏஷ கச்சதி கோஸலாந்” என்னுமாப்போல

உபேக்ஷகத்வ சங்கை பண்ணலாம்படி "யதேச்சஸி ததா குரு" என்று சொல்லித் தலைக்கட்டினோமென்று இது வ்யாஜமாக சோகித்தானென்று பாவித்து, இன்னுமொரு நிலை ப்ரதாநமான பக்தியோகத்தை நிஷ்கர்ஷித்து உபதேசித்த பக்தியோகந்தன்னையே "ஸர்வ குஹ்யதமம் பூய:" என்று தொடங்கி இரண்டு ச்லோகத்தாலே அத்யாதரம் தோற்ற ஸப்ரத்யபிஜ்ஞமாம்படி நிஷ்கர்ஷித்து நிகமிக்க, அவ்வளவிலும் இவன் சோகம் இரட்டித்துத் தோற்றினபடியைக் கண்டருளின ஸாரதிரூபனான ஸர்வேச்வரன், "இனி இவன் அதிலகுவான மோக்ஷோபாயத்தை உபதேசிக்கைக்குப் பூர்ணபாத்ரமானான்" என்று திருவுள்ளம் பற்றி அருளிச்செய்யப்போகிற சீரிய லகூபாயத்துக்குப் ப்ரசம்ஸாரூபமாக ஒரு காலக்ஷேபம் பண்ணாதே, கடுக ஸகல பல ஸாதநமான ஸ்வவிஷய சரணாகதியை உபதேசித்து இவனுடைய மநோரதத்துக்கும் ஸாரதியாய் ஸர்வசோகத்தையும் கழிக்கிறானாகையாலே இங்கு நிவாரிக்கிற சோகம் பழைய சோகங்களில் வேறுபட்டது என்னுமிடம் ப்ரகரண பரமர்சத்தாலே ஸுவ்யக்தம்.

**விளக்கம்** – ஸ்ரீமத்பகவத்கீதையில் முதலில் ப்ரக்ருதி மற்றும் ஆத்மா ஆகிய இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் குறித்த ஞானத்தை உண்டாக்குகிறான். அதன் பின்னர் மோக்ஷத்திற்கு மறைமுகமான காரணங்களாக உள்ள கர்மயோகம் மற்றும் ஞானயோகம் ஆகியவை குறித்து உரைக்கிறான். அதன் பின்னர் மோக்ஷத்திற்கான நேரடியான காரணமாக வேதாந்தங்களில் விதிக்கப்பட்டதான பக்தியோகத்தை, அதன் அங்கங்களுடன் உபதேசிக்கிறான். அதனைத் தொடர்ந்து கீதை (18-63) - இதி தே ஜ்ஞாநமுகாக்யாதம் குஹ்யாத் குஹ்யதரம் மயா விம்ருச்யைததசேஷேண யதேச்சஸி ததா குரு – இப்படியாக ரஹஸ்யங்களில் மிகவும் ரஹஸ்யமான ஞானம் என்னால் உனக்குக் கூறப்பட்டது. நீ இவை அனைத்தையும் ஆராய்ந்து நோக்கி, எவ்விதம் விரும்புகிறாயோ அவ்விதம் செய்வாயாக – என்றான். அப்போது அர்ஜுனனுடைய முகத்தில் ஒரு வாட்டத்தை க்ருஷ்ணன் கண்டான். ஆனாலும், ஸ்ரீவிஷ்ணுதர்மம் (74-89) - பரீக்ஷாம் ச ஜகந்நாத: கரோத்யத்ருட சேதஸாம் – மிகவும் பலவீனமான மனம் கொண்டவர்களுடைய செல்வங்களைப் பறித்து, அந்த நிலையிலும் அவர்கள் தன்னைக் கைவிடாமல் உள்ளனரா என்று சோதிக்கிறான் – என்னும் விதிக்கு ஏற்ப, அர்ஜுனனுக்கு க்ருஷ்ணன் சட்டென்று மிகவும் எளிதான உபாயத்தை அருளிச்செய்யவில்லை. ஆகவே பகவான் அர்ஜுனனிடம், "இதுவே உனக்கு மோக்ஷத்தை அளிக்கக்கூடிய நேரடியான உபாயம் ஆகும். இதுவே உனக்கு ஏற்றதாகும். இதனையே முதன்மையாகக் கொண்டு, இதனைப் பின்பற்றி

நடப்பாயாக” என்று கூறி முடிக்கவில்லை; மாறாக, மஹாபாரதம் வனபர்வம் (50-48) - ஏஷ மந்தா விதர்பாணாம் ஏஷ கச்சதி கோஸலாந் – (நளன் தமயந்தியிடம்) இது விதர்ப்ப நாடு செல்லும் பாதை, இது கோஸல நாடு செல்லும் பாதை – என்று கூறப்பட்டது போன்று, அர்ஜுனனுடைய நன்மையில் பிடிப்பு இல்லாதவனாக உள்ளானோ என்ற ஐயம் ஏற்படும்விதமாக, “யதேச்சஸி ததா குரு - எவ்விதம் விரும்புகிறாயோ அவ்விதம் செய்வாயாக” என உரைத்து முடித்தான். இவ்விதம் அர்ஜுனனிடம் பிடிப்பு இல்லாதபடி நடந்ததால் அர்ஜுனனுக்கு சோகம் ஏற்பட்டது என்று க்ருஷ்ணன் அனைவரையும் எண்ண வைத்து, இதனையே ஒரு லீலையாகக் கொண்டு, மீண்டும் ஒருமுறை மோக்ஷ உபாயமாக உள்ள பக்தியோகத்தை உபதேசிக்கிறான். ஆகவே க்ருஷ்ணன் கீதை (18-64) - ஸர்வ குஹ்யதமம் பூய: - உயர்ந்த ரஹஸ்யத்தை நான் மீண்டும் கூறுகிறேன் – என்று தொடங்கி, அடுத்த இரண்டு ச்லோகங்களில், தான் முன்பு செய்த உபதேசமானது அர்ஜுனனுக்கு மீண்டும் நினைவுக்கு வரும்விதமான, மிகவும் ஈடுபாட்டுடன் உறுதியுடன் உபதேசம் செய்து முடிக்கிறான். அப்போது அர்ஜுனனுடைய முகத்தில் இருந்த சோகமானது முன்பைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமானதை, தேர் ஓட்டியாக வந்த ஸர்வேச்வரன் கண்டான். ஆகவே அவன் தனது திருவுள்ளத்தில், “இப்போதுதான் இவன் மிகவும் எளிதான மோக்ஷ உபாயத்தைக் குறித்த உபதேசத்தைக் கேட்கும் முழுத் தகுதியையும் பெற்றவன் ஆனான்”, என்று தீர்மானித்தான். ஆகவே, அத்தகைய மோக்ஷ உபாயத்தைக் குறித்து புகழ்வதான சொற்களைக் கூறிக்கொண்டிருக்காமல், சற்றும் தாமதம் செய்யாமல், அனைத்துவிதமான பலன்களையும் அளிக்கவல்லதான தன்னைக் குறித்த சரணாகதியை உபதேசித்தான். இப்படியாக அர்ஜுனனுடைய மனம் என்னும் தேரையும் செலுத்துகின்ற சாரதியாக நின்று, அவனுடைய அனைத்து சோகங்களையும் போக்கினான். ஆகவே இங்கு விலக்கப்பட்ட சோகம் என்பது, முன்பு தனது உறவினர்களை இழப்போமோ என்னும் எண்ணத்தால் எழுந்த சோகத்தைக் காட்டிலும் வேறுபட்டது என்பதை இந்தப் பகுதியில் உள்ள விஷயங்கள் மூலமாகத் தெளிவாக அறியலாம்.

**மூலம்** – உபாயாந்தர ரஹிதனானவனைக் குறித்து “மாமேகம் சரணம் வ்ரஜ” என்று விதித்த கட்டளையிலே அசக்தனானவன் சக்தன் கையிலே பரஸமர்ப்பணம் பண்ணுகையாலும் ஸ்வதந்த்ர காருணிக சேஷி பரஸ்வீகாரம் பண்ணுகையாலும் இப் ப்ரபந்நனுக்கு இச் ச்லோகத்தில் பூர்வார்த்தத்திலே நிர்பரத்வமும், ஸர்வசக்தியாய்

ஸ்வீக்ருதபரனாய் ஆச்ரிதர் விஷயத்தில் ஸத்யவாதியான சேஷி “அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி” என்று அருளிச்செய்கையாலே ந்யஸ்தபரனான இவனுக்கு இனி ஆகாமி நரகாதி ப்ரத்யவாய சங்கா ப்ரஸங்கமில்லாமையாலே நிர்பயத்வமும், இச் ச்லோகம் “செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மை பெருவார்த்தை”யாகையாலே நிஸ்ஸம்சயத்வமும் பலிதம். ஆகையால் இங்கு உபாய விசேஷ அநுஷ்டானங்கள் வந்தால் உபாய அநுபந்தியாயும் வரும் சோகத்தில் ப்ராப்தியில்லை என்கிறது.

**விளக்கம்** – மற்ற உபாயங்கள் அனைத்தையும் கைவிட்ட ஒருவனிடம் பகவான் கீதையில் (18-66) – மாம் ஏகம் சரணம் வ்ரஜ – என்னிடம் மட்டுமே சரணம் அடைவாயாக – என்று கூறினான்; ஆகவே தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் எந்தவிதமான முயற்சியில் ஈடுபடவும் சக்தி அற்ற அந்த ஒருவன், அப்படிப்பட்ட சக்தி கொண்ட பகவானிடம் தனது பாரத்தை ஒப்படைக்கிறான். இதனைத் தொடர்ந்து சுதந்திரமானவனும், மிகுந்த கருணை கொண்டவனும், எஜமானனும் ஆகிய பகவான், அந்த மனிதனைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்கிறான். ஆகவே இந்த ச்லோகத்தின் முதல் பாதி மூலமாக, தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும் பொறுப்புகள் அனைத்திலிருந்தும் அந்த மனிதன் விடுதலை அடைகிறான் என்றாகிறது. அனைத்துவிதமான சக்திகளையும் கொண்டவனும், தங்களைக் காப்பாற்றும் பொறுப்பைத் தன்னிடம் ஒப்படைத்தவர்கள் விஷயத்தில் உண்மையாக நடப்பவனும், எஜமானனும் ஆகிய பகவான், கீதையில் (18-66) - அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – அனைத்து பாபங்களிலிருந்தும் நான் உன்னை விடுவிப்பேன் – என்று அருளிச்செய்கிறான். இதன் விளைவாகத் தன்னுடைய பாரங்கள் அனைத்தையும் ஒப்படைத்த அந்த மனிதனுக்கு இனி வரும் காலத்தில் “நரகம் முதலான துன்பங்கள் உண்டாக்குமோ” என்னும் ஐயம் இல்லாத காரணத்தால், அவனுக்கு பயம் இன்மை உண்டாகிறது. மேலும் கீதையின் இந்த சரம ச்லோகமானது நாச்சியார் திருமொழி (11-10) - செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மை பெருவார்த்தை – என்பதற்கு ஏற்ப திருவரங்கன் அருளிச்செய்த காரணத்தால், இதில் கூறப்பட்ட விஷயங்களில் எந்தவிதமான ஐயமும் அவசியம் இல்லை. ஆகவே இத்தகைய உபாயம் குறித்து உபதேசிக்கப்பெற்ற ஒருவன், இதனைக் கைக்கொண்டால், அவன் இந்த உபாயத்தைக் குறித்து சோகம் அடையமாட்டான் என்று கருத்து.

## அச்சம் கொண்டவன் ப்ரபத்திக்கு அதிகாரி என்பதன் கருத்து

**மூலம்** – இத்தாலே சோக விசேஷ ஆவிஷ்டன் ப்ரபத்திக்கு அதிகாரி என்று தோற்றாநிற்க "அஹம் பீத: அஸ்மி" என்றும், "பாவீ தழுவென மொழிவதற்கு அஞ்சி நம்பனே வந்து உன் திருவடியடைந்தேன்" என்றும் பீதனானவன் ப்ரபத்திக்கு அதிகாரி என்று சொல்லுகிறபடி என்? என்னில், கீழ் அபிமதம் ஸித்தியாதே நின்ற நிலையைப் பார்த்து சோகமும் மேல் அபிமதத்துக்குப் ப்ரதிபந்தகங்களான ப்ரபல விரோதிகளைப் பார்த்து பயமும் நடையாடுகிறதாகையாலே முமுக்ஷுவுக்கு அநிஷ்ட நிவ்ருத்தியிலும் இஷ்ட ப்ராப்தியிலும் ஒன்றைச் சொல்ல இரண்டும் வருமாப் போலே, அதிகாரத்திலும் பய சோகங்களில் ஒன்றைச் சொல்ல இரண்டும் ஸித்திக்கும். அத்யந்த அகிஞ்சநனுக்கு இப் பய சோகங்கள் இரண்டும் விஞ்சியிருக்கும். ஆகையால் இங்கு அதிசயித சோக ஆவிஷ்டனான அதிகாரி விசேஷத்துக்கு அநுகுணமான உபாய விசேஷத்தைக் காட்டி இவனை நிஸ்ஸம்சயனுமாய், நிர்பரனுமாய், நிர்பயனுமாய், ஹஷ்டமநாவுமாக்கித் தலைக்கட்டுகிறது. இவ் அதிசயித பயத்தைப் பற்ற "அஞ்சின நீ என்னை அடையென்றார் வந்தார்" என்றும் சொன்னோம்.

**விளக்கம்** – இங்கு கீதை (18-66) – மா சுச: - வருத்தம் கொள்ளாதே – என்பதன் மூலம், குறிப்பிட்ட சோகத்தைக் கொண்டவன் மட்டுமே ப்ரபத்திக்கான தகுதி கொண்டவன் என்பது வெளிப்படுகிறது. ஆனால், ஜிதந்தே (1-8) - அஹம் பீத: அஸ்மி – இந்த ஸம்ஸாரத்தைக் கண்டு நான் அச்சம் கொள்கிறேன் – என்றும், பெரிய திருமொழி (1-6-4) - பாவீ தழுவென மொழிவதற்கு அஞ்சி நம்பனே வந்து உன் திருவடி அடைந்தேன் – என்றும் கூறப்படும் ப்ரமாணங்கள் மூலம், "அச்சம் கொண்டவன் ப்ரபத்திக்குத் தகுதி உள்ளவன்" என்று எப்படிக் கூறப்படுகிறது? இதனை விளக்குவோம். தான் விரும்புகின்ற இறுதியான பலன் இதுவரை கைகூடாமையால் சோகம் கொள்கிறான்; தொடர்ந்து, அந்தப் பலன் கிட்டுவதைத் தடுக்கவல்ல பல தடைகளைக் கண்டு அச்சமும் கொள்கிறான். முமுக்ஷு ஒருவனுக்கு "விருப்பமற்றவை விலகுதல், விருப்பமானவை கைகூடுதல்" ஆகிய இரண்டில் ஏதேனும் ஒன்றை உரைத்தாலே, மற்றொன்று தானாகவே வெளிப்படும்; அதே போன்று ப்ரபத்திக்கான தகுதியாக "சோகம், அச்சம்" ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை உரைத்தாலே, மற்றொன்று தானாகவே வெளிப்படும். மற்ற எந்தவிதமான உபாயமும்

கையில் இல்லாததால் ப்ரபத்திக்கான முழுத் தகுதியையும் அடைந்த ஒருவனுக்கு இவ்விதமாக சோகமும் பயமும் அதிகமாகவே இருக்கும். ஆகவே இந்த சரம ச்லோகத்தில், எல்லையற்ற சோகம் நிறைந்த ஒருவனுக்கு ஏற்றதான உபாயம் கூறப்பட்டது; இதன் மூலம் அவன் சந்தேகம் அற்றவனாகவும், பாரம் அற்றவனாகவும், பயம் அற்றவனாகவும், மகிழ்ச்சி நிறைந்தவனாகவும் செய்யப்படுகிறான். இங்குள்ள அதிகமான அச்சத்தைக் குறித்து, திருச்சின்னமாலையில் (8) - அஞ்சின நீ என்னை அடையென்றார் வந்தார் – என்று கூறப்பட்டது.

## ப்ரபந்நனுக்கு துக்கம் விலகுதலும், துயரமும் பரஸ்பரம் முரண்படாமல் இருத்தல்

**மூலம்** – இப்படிக் க்ருதக்ருத்யனான இவனுக்கு “தத்து கர்ம ஸமாசரேத்” என்று விஹிதமான கர்த்தவ்யாந்தர கைங்கர்ய அநுப்ரவிஷ்ட ஸதாசார விசேஷமென்னுமிடம், பூர்வாபர க்ரந்தங்களாலும் இச் ச்லோகந்தன்னில் அக்ரியாவதநர்த்தாய என்கையாலும் ஸித்தம். ஆகையால் மேல் பலஸித்தியில் ஸம்சயம் இல்லாமையாலும், மோக்ஷோபாயமாக ஒரு கர்த்தவ்யசேஷமில்லாமையாலும், இவனுக்கு உள்ள கர்த்தவ்யம் ஆஜ்ஞா அநுபாலநரூபமான ஸ்வயம்ப்ரயோஜனமாகையாலும், அபராத ப்ரஸக்தமானால் அதிகாராந்தரத்திற் சொன்ன கட்டளையிலே அநுதாபாதிகளாலே ஸுபரிஹரமாகையாலும் இவன் ஹ்ருஷ்டமனாவாகக் குறையில்லை. இந்த ஹர்ஷம் விவேகியாய் ஹேயமான சரீராதிகளோடே துவக்குண்டிருக்கிற இவனுக்கு நிர்வேத மிச்ரமாய் நடந்ததேயாகிலும், இந் நிர்தேசமும் இச் சோக நிவ்ருத்தியும் பிந்ந விஷயங்களாகையாலே விரோதமில்லை.

**விளக்கம்** – இவ்விதம் செய்யவேண்டிய செயலான ப்ரபத்தியைச் செய்த ப்ரபந்நன் ஒருவன், ஸ்ரீலக்ஷ்மீதந்த்ரம் (17-88) - தத்து கர்ம ஸமாசரேத் – பலனை அளிக்காததும், செய்யாமல் விடுத்தால் பாபம் உண்டாக்கவல்லதும் உள்ள கர்மங்களைச் செய்தே ஆகவேண்டும் – என்று கூறுவதற்கு ஏற்ப, புண்ணியம் நிறைந்தவர்களால்

கைங்கர்யத்துடன் சேர்த்துச் செய்யப்படும் கர்மங்களை, தனது வர்ணாச்ரம தர்மங்களுக்கு ஏற்ப செய்யவேண்டும். இந்தக் கருத்தானது, இந்த ஸ்ரீலக்ஷ்மீதந்த்ர ச்லோகத்திற்கு முன்பும் பின்பும் உள்ள ச்லோகங்களாலும், இந்த ச்லோகத்தாலும், "இதனைச் செய்யாவிட்டால் பாபம் ஸம்பவிக்கும்" என்று கூறுவதன் மூலம் அறியலாம். ஆகவே இனி கிட்டவுள்ள பலனைக் குறித்து எந்தவிதமான ஐயமும் இல்லை என்பதாலும், மோக்ஷத்திற்காக இனி வேறு எந்த உபாயத்தையும் கைக்கொள்ள வேண்டியதில்லை என்பதாலும், இனி செய்யவேண்டியவை அனைத்தும் பகவானின் ஆணையாக உள்ளதாகவும் அவையே பலனாக உள்ளவையாகவும் இருக்கும் கர்மங்களே ஆகும் என்பதாலும், ப்ரபத்திக்குப் பின்னர் அபசாரம் உண்டானாலும் வேறு ஒரு அத்யாயத்தில் அவற்றுக்கான ப்ராயச்சித்தம் போதுமானது என்று கூறப்பட்டதற்கு ஏற்ப அவை எளிதாக அகலக்கூடியவை என்பதாலும், ப்ரபந்நன் ஒருவன் தனது இதயத்தில் மகிழ்ந்தபடி இருப்பதில் எந்தத் தடையும் (அல்லது குறையும்) இல்லை. விவேகம் நிறைந்தவனாகவும் தாழ்ந்தவையான சரீரம் போன்றவற்றுடன் ஸம்பந்தம் கொண்டவனாகவும் உள்ள ப்ரபந்நனுக்கு, இத்தகைய மகிழ்ச்சி என்பது அவனுடைய துயரத்துடன் சேர்ந்து இருந்தாலும், "துயரம், சோகம் நீங்குதல்" ஆகிய இரண்டும் தனித்தனி விஷயங்கள் என்பதால், இரண்டும் காணப்படுவதில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை.

## ஆர்த்த ப்ரபந்நன் மற்றும் த்ருப்த ப்ரபந்நன் குறித்த விளக்கங்கள்

**குறிப்பு** – அப்போதே மோக்ஷம் பெறவேண்டும் என்று ப்ரபத்தி செய்பவன் ஆர்த்த ப்ரபந்நன் ஆவான். சரீரத்தின் முடிவில் மோக்ஷம் பெறவேண்டும் என்று ப்ரபத்தி செய்பவன் த்ருப்த ப்ரபந்நன் ஆவான். இதனைக் குறித்து மேலும் விளக்கங்கள் பின்னர் அளிக்கப்பட்டுள்ளன.

**மூலம்** – "மா சுச:" என்கிற இதுவே சோக நிமித்தமானவையெல்லாம் மோசநீயமாகைக்கு நியாமகமாகையாலே ப்ராரப்த கர்மத்திலும் சோக நிமித்தாம்சமெல்லாம் கழிகையால் ஆர்த்தி அதிசயமுடையவனுக்கு அப்போதே மோக்ஷம் ஸித்திக்கும். "மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்" இத்யாதிகளிற்படியே ப்ராரப்த கர்மத்திலும் மேலுள்ளதெல்லாம் கழிந்து இச் சரீராவஸநத்திலே மோக்ஷமென்று இசைய

வேண்டியதால், இச் சரீரந் தன்னிலும் ஆயுச்சேஷம் அநிஷ்டமானபோது இதுவும் ப்ரபத்தி வசீக்ருத ஸர்வசக்தி ஸங்கல்பத்தாலே கழியக் குறையில்லையிறே.

**விளக்கம்** – கீதை (18-66) – மா சுச: - வருத்தம் அடையாதே – என்னும் சொற்களே அனைத்துவிதமான சோகத்திற்கும் காரணமாக உள்ளவற்றை நீக்குவதற்குத் தகுதியாக உள்ளன. பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்கள் மூலமாக உண்டாகவல்ல சோகங்களும் கூட, இதன் மூலம் நீங்குகின்றன. ஆகவே, மிகுந்த சோகத்தில் உள்ள ஒருவனுக்குக் காலதாமதம் உண்டாகாமல் அப்போதே (அவன் விரும்பினால்) மோக்ஷம் அளிக்கிறது. திருவாய்மொழி (9-10-5) - மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான் – என்பதற்கு ஏற்ப, பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்களில் இதுவரை கழியாமல் உள்ள கர்மங்கள் அனைத்தும் விலகி, இந்தச் சரீரம் விழும்போது மோக்ஷமானது கிட்டும் என்ற நம்பிக்கை வேண்டும். இந்தச் சரீரம் உள்ளபோதே, இதன் மீதம் உள்ள ஆயுட்காலம் என்பது விருப்பம் இல்லாததாக இருந்தால், ப்ரபத்தி மூலம் அடையப்பெற்றதான அனைத்து சக்திகளும் கொண்ட ஸர்வேச்வரனுடைய க்ருபையின் விளைவாக, அவனுடைய ஸங்கல்பத்தால், இந்தச் சரீரமும் நீங்குவதில் குறையில்லை.

ப்ராயச்சித்த விசேஷேஷு ஸர்வஸ்வாராதிகேஷு ச
ந ஆத்ம ஹிம்ஸந தோஷ: அஸ்தி ததா ஆர்த்த சரணாகதௌ

**பொருள்** – தன்னையே வருத்திக் கொள்வதான சில சிறப்பு ப்ராயச்சித்தங்கள், தன்னையே அக்னியில் அளிப்பதான ஸர்வஸ்வாரம் முதலான யாகங்கள் போன்று ஆர்த்த ப்ரபத்தியிலும் “ஆத்மா ஹிம்ஸித்தல்” என்னும் தோஷம் இல்லை.

த்ருப்தஸ்ய து யதா சாஸ்த்ரம் சிரம் ஜீவிதும் இச்சத:
ப்ரணரக்ஷண சாஸ்த்ரார்த்த லங்கநம் து அபராதநம்

**பொருள்** – சாஸ்த்ரங்கள் தவறாமல் நீண்டகாலம் உயிர் வாழ எண்ணும் த்ருப்த ப்ரபந்நன் ஒருவனுக்கு, உயிரைக் காக்கும்விதத்தில் சாஸ்த்ரங்களில் கூறப்பட்டவற்றை மீறி நடத்தல் (உதாரணமாக தனது சரீரத்தைப் பாதுகாத்தல்) என்பது அபராதமே ஆகும்.

**மூலம்** – யோகிகள் யோகவிசேஷத்தாலே தேஹ ந்யாஸம் பண்ணுமாப்போலே, ஆர்த்தி அதிசயமுடையவன் ப்ரபத்தியாலே தேஹ ந்யாஸம் பண்ணுகைக்குத் தீர்த்த ப்ரவேசாதிகளிற்போலே யுகவிசேஷ நியமமுமில்லை. இவ் ஆர்த்த ப்ரபந்நனே எல்லாரிலும் கடுக ஆத்ம ரக்ஷணம் பண்ணுகிறவன்.

**விளக்கம்** – யோகிகள், தங்களுடைய யோகத்தின் சிறப்பு காரணமாக, தாங்கள் விரும்பும்போது தங்களுடைய சரீரத்தை விடுவார்கள் (அதாவது உயிர் துறப்பார்கள்). அது போன்றே ஆர்த்த ப்ரபந்நன் ஒருவன், ஆர்த்தி ப்ரபத்தி மூலம், தனது சரீரத்தை விடுகிறான். தனது உயிரைத் துறப்பதற்கு நீரில் மூழ்குதல் முதலான செயல்களைச் செய்வதற்குக் கலியுகத்தில் சிறப்பான விதிவிலக்கு ஏதும் இல்லை. ஆனாலும், ஆர்த்த ப்ரபந்நனுக்கு இது போன்ற விதிகள் ஏதும் இல்லை. இத்தகைய ஆர்த்த ப்ரபந்நனே, அனைவரைக் காட்டிலும் தனது ஆத்மாவை விரைவாகக் காப்பாற்றிக் கொள்பவன் ஆவான்.

**மூலம்** – இப்படி ஆர்த்தன், த்ருப்தன் என்கிற பிரிவும் இவனுக்குப் பிறந்த சோகத்தில் வைஷம்யமடியாகச் சொல்லுகிறதத்தனை; ஒருவனுக்கு சோகமில்லாமையன்று. ஐந்மாந்தராதிமாத்ரம் சோக நிமித்தமாய் ஏதேனுமொரு நாள் மோக்ஷம் பெறுவோமென்று தேறியிருக்குமவன் இங்கு த்ருப்தன்; அல்லது உத்க்ருஷ்ட ஜந அவமாநாதி ஹேதுவான கர்வ ரூபமான அநாத்ம குணத்தையுடையவனல்லன். இச் சரீரத்தில் சதுர்முக ஐச்வர்யம் பெற்றாலும் இது பரிபூர்ண பகவதநுபவ விரோதியானபடியாலே இவ் வர்த்தமாந தேஹ ஸம்பந்தமுங்கூட மஹாக்நி போலே துஸ்ஸஹமாய், "உடலும் உயிரும் மங்கவொட்டு" என்னும்படி, ப்ரபத்யநுஷ்டாந அநந்தரம் க்ஷண மாத்ர விளம்ப க்ஷமனல்லாதவன் ஆர்த்த ப்ரபந்நன்; அல்லது "ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு: ஆர்த்தார்த்தீ" என்கிறவிடத்தில் சொல்லப்பட்டவனல்லன். "ஆர்த்தோ வா யதி வா த்ருப்த:" என்கிறவிடம் அதிவாதமென்பார்க்கும் இங்கு இவ் அர்த்த ஸ்திதியில் விவாதம் பண்ணவொண்ணாது. உபாய அநுஷ்டானத்திற்குப் பின்பு பலமாகையாலும் இது உபதேச வேளையாகையாலும் இவ் ஆர்த்தன் திறத்திலும் "மோக்ஷயிஷ்யாமி" என்ற பவிஷ்யத் நிர்தேசத்துக்குக் குறையில்லை.

**விளக்கம்** – இவ்விதமாக ப்ரபந்நர்களை “ஆர்த்தன், த்ருப்தன்” என்று இரண்டாகப் பிரித்தல் என்பது, அவரவர்களுடைய சோகத்தின் அளவைப் பொறுத்தே ஆகும்; த்ருப்தனுக்குச் சோகம் இல்லை என்று கொள்ளக்கூடாது. த்ருப்தன் என்பவன், அடுத்த பிறவி ஏற்படக்கூடும் என்று எண்ணுவதால் மட்டுமே சோகம் கொள்பவன் ஆவான்; “நான் ஏதேனும் ஒருநாளில் மோக்ஷம் அடைவேன்” என்ற விச்வாஸத்துடன் காத்திருப்பவன் ஆவான்; இவன், உயர்ந்த பிறவி எடுத்துள்ளபோதிலும் அவமானம் அடைவதற்குக் காரணமாக உள்ள கர்வம் முதலான அநாத்ம குணங்களைக் கொண்டவன் அல்லன். ஆர்த்த ப்ரபந்நன் என்பவன் – இந்தச் சரீரத்தில் உள்ளபோது நான்முகன் பதவி கிடத்தாலும் கூட, அந்தப் பதவியானது பரிபூர்ணமான பகவத் அனுபவம் உண்டாவதற்கு இடையூறாக இருக்கும் என்று எண்ணுபவன்; தன்னுடைய தற்போதுள்ள சரீர ஸம்பந்தம் கூட கொளுத்தும் அக்னி போன்று வருத்துவதாக எண்ணுபவன்; ஆகவே ப்ரபத்திக்குப் பின்னர் ஒரு க்ஷணம் கூட உயிருடன் இருப்பதற்குப் பொறுக்காதவன்; திருவாய்மொழி (10-7-9) - உடலும் உயிரும் மங்கவொட்டு – எனது சரீரத்தையும் உயிரையும் எடுப்பாயாக – என்னும்படி விண்ணப்பம் செய்பவன் ஆவான். அல்லது கீதையில் (7-16) - ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு: ஆர்த்தார்த்தீ - தான் இழந்ததை செல்வங்களைப் பெறத் துடிப்பவன் ஆர்த்தன் – என்பதில் கூறப்பட்டவன் அல்லன் எனலாம். ஒரு சிலர், இராமாயணம் யுத்தகாண்டம் (18-28) - ஆர்த்தோ வா யதி வா த்ருப்த: - ஆர்த்தன் மற்றும் த்ருப்தன் என்று யாராக இருந்தாலும், சரணாகதி அடைந்தால் காப்பாற்றப்பட வேண்டியவனே ஆகிறான் – என்னும் வாக்கியத்தில் கர்வத்துடன் கூடிய த்ருப்தனும் காப்பாற்றப்பட வேண்டியவன் என்று கூறப்படுவதால், இது மிகைப்படுத்தப்பட்ட வாக்கியம் என்பர்; ஆனால் இங்கு கூறப்பட்ட பல விஷயங்களையும் நோக்கும்போது, இவ்விதம் வாதம் செய்வது பொருந்தாது. கீதையில் (18-66) – மோக்ஷயிஷ்யாமி – நான் உன்னை விடுவிப்பேன் – என்று எதிர்கால வினையைப் பயன்படுத்திய செயலானது, ஆர்த்தன் விஷயத்தில் பொருந்தாது (காரணம் அவன் அப்போதே மோக்ஷம் அடையவேண்டும் என்று எண்ணுபவன்) என்ற சந்தேகம் எழலாம்; ஆனால் அத்தகைய முடிவு என்பது உபாயத்தைக் கைக்கொண்ட பின்னரே உண்டாகும் என்பதாலும், அத்தகைய உபாயம் குறித்த உபதேசம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாலும், இவ்விதம் உரைப்பது பொருத்தமே ஆகும்.

**மூலம்** – இவ் ஆர்த்த த்ருப்தாதி விபாகங்களெல்லாம் ஸக்ருத தாரதம்ய மூலமான பகவதநுக்ரஹ தாரதம்யத்தாலே வரும். “ப்ராரப்த மாத்ர முக்தத்ர தத்த்வவித் ஸுகமாப்நுயாத்” இத்யாதி வசனங்கள், ஆர்த்த ப்ரபந்ந விஷயத்தில் நிரவகாசங்கள். த்ருப்த ப்ரபந்நன் திறத்தில் உத்தர க்ருத்யம்சத்தைப் பற்ற “மா சுச:” என்கிற வாக்யத்தின் கருத்தை “ஆத்யாத்மிக ஆதிபௌதிக” என்று தொடங்கி, “அதஸ்த்வம் தவ தத்வதோ மத் ஜ்ஞாந தர்சந ப்ராப்திஷு நிஸ்ஸம்சய: ஸுகமாஸ்வ” என்று அருளிச்செய்தார்.

**விளக்கம்** – ப்ரபந்நர்களில் உள்ள ஆர்த்தன் மற்றும் த்ருப்தன் என்பதான வேறுபாடுகள், அவரவர்கள் செய்த நற்செயல்களில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் காரணமாக பகவத் அனுக்ரஹத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளால் உண்டாகின்றன. “ப்ராரப்த மாத்ர முக்தத்ர தத்த்வவித் ஸுகமாப்நுயாத் – தத்வங்களை அறிந்து ப்ரபத்தியைக் கைக்கொண்ட ஒருவன், பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்ம பலன்களை அனுபவித்தவனாக, அந்தச் சரீரத்தின் முடிவில் மோக்ஷ ஸுகம் அடைவான்” என்பது போன்ற வசனங்கள், ஆர்த்த ப்ரபந்நன் விஷயத்தில் பொருந்தாது. ப்ரபத்திக்குப் பின்னர் த்ருப்த ப்ரபந்நன் ஒருவன் என்ன செய்யவேண்டும் என்பதை “மா சுச: - வருத்தம் கொள்ளாதே” என்னும் வாக்கியத்தின் அடிப்படையில், எம்பெருமானார் சரணாகதி கத்யத்தில், “ஆத்யாத்மிக ஆதிபௌதிக” என்று தொடங்கி, “அதஸ்த்வம் தவ தத்வதோ மத் ஜ்ஞாந தர்சந ப்ராப்திஷு நிஸ்ஸம்சய: ஸுகமாஸ்வ – நீ என்னை உள்ளது உள்ளபடி அறிதல், பார்த்தல் மற்றும் அடைதல் ஆகியவற்றில் எந்தவிதமான ஐயமும் கொள்ளாமல் ஸுகமாக இருப்பாயாக”, என்று அருளிச்செய்தார்.

## சோகத்திற்கான காரணங்கள்

**மூலம்** – இங்கு சொல்லுகிற சோக நிவ்ருத்திக்கு ஒருபடியாலும் ஸங்கோசகரில்லாமையாலே இவ் உபாய விசேஷ ஜ்ஞாநத்தாலும் அநுஷ்டாநத்தாலுமாக ஸர்வ ப்ரகார சோக ஹேதுக்களெல்லாம் கழியும்படிச் சொல்லிற்றாகிறது. அநுஷ்டாந பர்யந்தமல்லாத ஜ்ஞாநமாத்ரம் இவ் உபதேசத்தாலே பிறந்தாலும், “ந காதா காதிநம் சாஸ்தி பஹு சேதபி காயதி | ப்ரக்ருதிம் யாந்தி பூதாநி குலிங்க சகுநிர்யதா” என்கிற கணக்காய் நிஷ்ப்ரயோஜநமாகையாலே, ஜ்ஞாந அநுஷ்டாநங்கள் இரண்டினுடையவும் பலமான சோகநிவ்ருத்தியையெல்லாம் இங்கு விவக்ஷிக்கிறது. ஆகையால்,

உபாயாநுஷ்டானத்தில் பூர்வ அபர மத்ய தசைகளைப் பற்ற ஸம்பாவிதமான சோகமெல்லாம் இங்கே கழிக்கப்படுகின்றன. எங்ஙனேயென்னில் அதிகாரி விசேஷத்தையும், உபாய விசேஷத்தையும் உத்தரக்ருத்ய விசேஷத்தையும், பரிபூர்ண கைங்கர்ய பர்யந்த பல ஸித்தியையும் பற்றப் பல படியாக சோகம் ஸம்பாவிதம்.

**விளக்கம்** – சரமச்லோகத்தில் கூறப்படுவதான "சோகம் விலகுதல்" என்பதற்கு எந்தவிதமான சுருக்கமும் இல்லை. ஆகவே இந்த உபாயத்தைக் குறித்த ஞானம் மற்றும் இதனைக் கைக்கொள்ளுதல் ஆகியவை மூலம் ஒருவனுடைய அனைத்துவிதமான சோகங்களும் (அவற்றுக்கான காரணங்களுடன் சேர்ந்து) விலகும் என்பது கூறப்பட்டதாகிறது. இங்கு கூறப்பட்ட உபதேசம் மூலம் இந்த உபாயத்தைக் கைக்கொள்ளாமல், இதனைக் குறித்த வெறும் ஞானம் மட்டும் ஏற்பட்டால், மஹாபாரதம் சாந்திபர்வம் (42-21) - ந காதா காதிநம் சாஸ்தி பஹு² சேதபி காயதி | ப்ரக்ருதிம் யாந்தி பூதாநி குலிங்க சகுநிர்யதா – சாஸ்த்ரமானது, தன்னைப் பலமுறை படித்தவனைத் திருத்த இயலவில்லை. குலிங்கம் என்னும் பறவையானது சிங்கத்தின் வாயில் உள்ள உணவை எடுத்தல் என்னும் விபரீதமான நோக்கம் கொண்டதாக உள்ளது போன்று, இங்குள்ள அனைத்து உயிர்களும் தங்களுடைய பூர்வ வாஸனையை விடாமல் உள்ளன – என்பதற்கு ஏற்ப, அத்தகைய ஞானத்தால் எந்தவிதமான பயனும் இல்லை. ஆகவே, சோகம் விலகுவதற்கு இந்த உபாயத்தைக் குறித்த ஞானமும், அதனைக் கைக்கொள்ளுதலும் ஆகிய இரண்டும் அவசியமே என்று இந்த ச்லோகம் கூறுகிறது. எனவே உபாயத்தைக் கைக்கொள்ளும் விஷயத்தில், உபாயத்தைக் கைக்கொள்ளும் முன்போ நடுவிலோ அல்லது பின்போ உண்டாகும் சோகங்கள் அனைத்தும் நீக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. எப்படி என்றால், "உபாயத்தைக் கைக்கொள்ளத் தனக்கு உள்ள தகுதி, உபாயத்தின் வலிமை, ப்ரபத்தி உபாயத்திற்குப் பின்னர் செய்யவேண்டியவை, பரிபூர்ணமான கைங்கர்யம் முடிய இறுதியாகக் கிட்ட உள்ள பலன்" ஆகியவற்றைக் குறித்து எண்ணுவதால் மட்டுமே சோகம் ஏற்படுவதால் ஆகும்.

## "மா சுச:" என்னும் சொற்றொடருக்குப் பத்துவிதமான பொருள்கள்

**மூலம் – (1)** அதில் அநுஷ்டிக்கப் புகுகிற சரணாகதி தர்மம், ஜாதி வர்ண ஆச்ரமாதி விசேஷ நியதமல்லாமையாலே ப்ராப்ய ருசியும், ப்ராபக விச்வாஸமும், ஆகிஞ்சந்ய ஜ்ஞாநாதிகளும் உண்டானபோது ஒருவர்க்கும் "நாம் இதுக்கு அதிகாரிகளல்லோ" மென்று சோகிக்கவேண்டா.

**விளக்கம் –** ப்ரபத்தி உபாயத்தில் உள்ள சரணாகதி தர்மமானது ஜாதி, வர்ணம், ஆச்ரமம் முதலானவற்றைப் பார்ப்பதில்லை. அடையவேண்டியதான மோக்ஷத்தில் ருசி, ப்ரபத்தியில் மஹாவிச்வாஸம், பக்தியோகம் போன்றவற்றைக் கைக்கொள்ள சக்தி இல்லை என்னும் எண்ணம் முதலானவை இருந்தாலே போதுமானது. "நாம் இதற்குத் தகு கொண்டவர்களா?" என்று எண்ணி சோகம் அடையவேண்டியதில்லை.

**மூலம் – (2)** இவ் உபாய விசேஷம் ஸபரிகரமாக க்ஷணகால ஸாத்யமாய், ஸுகரமாய், ஆவ்ருத்தி நிரபேக்ஷமாய், உபாயாந்தர வ்யவதாநமும் துஷ்கர பரிகராந்தரமுமின்றிக்கே இருப்பதாய், கோலின காலத்திலே அபேக்ஷித பலங்கள் எல்லாவற்றையும் தரவற்றாயிருக்கையால், ஆகிஞ்சந்யமும் பல விளம்ப பயமுமுடைய நமக்கு ஸபரிகரமாக சிரகால அநுவர்த்தநீயமாய் அத்யந்த அவஹிதர்க்கும் க்ருச்ரஸாத்யமாய்த் ததாவித பரிகராந்தர ஸாபேக்ஷமாய்ப் பல விளம்பமுமுடைத்தான உபாயாந்தரத்திலே அலைய வேண்டுகிறதோவென்று சோகிக்கவேண்டா.

**விளக்கம் –** இந்த ப்ரபத்தி உபாயம் என்பது அங்கங்களுடன் கைக்கொள்ள மிகவும் எளிதாகவும், ஒரே க்ஷணத்தில் செய்யக்கூடியதாகவும், மீண்டும் மீண்டும் செய்யவேண்டும் என்று எதிர்பாராமல் உள்ளதாகவும், மற்ற உபாயங்கள் மற்றும் அங்கங்கள் ஆகியவற்றை எதிர்பாராமலும், கடினமான அங்களைக் கொள்ளாமல் உள்ளதாகவும், நாம் விரும்பும் அந்த நொடியிலேயே அனைத்து பலன்களையும் தரவல்லதாகவும் உள்ளது. ஆகவே வேறு எந்தவிதமான உபாயத்தைக் கைக்கொள்ளவும் தன்னிடம் சக்தி இல்லை என்றும், பலன் அளிக்கத் தாமதம் ஆகுமோ என்றும் அச்சம் கொள்ளும் நமக்கு, "அனைத்து அங்கங்களுடன் நீண்டகாலம் கைக்கொள்ள வேண்டியதாகவும், மிகவும் கவனத்துடன் உள்ளவர்களாலும் கூடக் கைக்கொள்ள கடினமானதாகவும், அனைத்து அங்கங்களுடன் செய்யவேண்டியதாகவும், பலன்

அளிப்பதில் காலதாமதத்துடன் கூடியுள்ளதாகவும் உள்ள மற்ற உபாயங்களைக் கைக்கொள்ள வேண்டுமோ?” என்று சோகம் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை.

**மூலம்** – (3) இப்படி லகூபாயமாத்ரத்தாலே வசீகார்யனாய்ப் பல ப்ரதாநம் பண்ணவிருக்கிற சரண்யன் ஸர்வஸுலபனாய், விச்வாஸநீயதமனாய், பரமகாருணிகனாய் நிரங்குச ஸ்வாதந்த்ர்யனாய் இருக்கையாலே ஸித்தோபாயத்தைப் பற்ற சோகிக்க வேண்டா.

**விளக்கம்** – இவ்விதம் உள்ளதான மிகவும் எளிய ப்ரபத்தி உபாயம் மூலம் வசப்பட்டு நிற்பவனும், பலனை அளிப்பவனும், அனைவராலும் சரணம் புகத்தக்கவனும் ஆகிய ஸர்வேச்வரன் அனைவராலும் அடைவதற்கு எளியவனாகவும், நம்பத்தக்கவனாகவும், மிகுந்த கருணை கொண்டவனாகவும், சுருக்கமும் தடையும் இல்லாத சுதந்திரம் கொண்டவனாகவும் உள்ளான். ஆகவே இப்படிப்பட்ட ஸித்தோபாயமான ஸர்வேச்வரனைப் பற்றுவதற்குச் சோகம் கொள்ளவேண்டாம்.

**மூலம்** – (4) இவ் உபாயாநுஷ்டாநத்துக்குப் பின்பு ஆஜ்ஞா அநுஜ்ஞைகளாலே பண்ணும் ஸத் கர்மங்களெல்லாம் இப் ப்ரபத்திக்கு அங்கமல்லாமையாலே அவற்றுக்கு தேச காலாதி வைகுண்யத்தாலே சில வைகல்பம் உண்டானாலும், உபாஸநத்துக்குப் போல் இதுக்குப் பரிகர வைகல்பம் பிறக்கிறதோவென்று சோகிக்க வேண்டா.

**விளக்கம்** – ப்ரபத்தைக் கைக்கொண்ட பின்னர், பகவானின் கட்டளைகள் என்றோ அல்லது பகவானுடைய அங்கீகாரத்தைப் பெறவேண்டும் என்று எண்ணியோ செய்யப்படுகின்ற நற்செயல்கள் எதுவும் ப்ரபத்திக்கு அங்கங்களாக இருப்பதில்லை. ஆகவே அத்தகைய நித்யகர்மங்கள் முதலானவற்றை இயற்றும்போது காலம் மற்றும் இடம் ஆகியவை காரணமாக அந்தக் கர்மங்களுக்கு ஏதேனும் குறைகள் உண்டானாலும், இதன் மூலம் அங்கங்களுக்குக் குறைகள் உண்டாகுமோ என்று எண்ணி சோகம் கொள்ளவேண்டாம்.

**மூலம்** – (5) பகவத் கைங்கர்யாதிகளுக்கு அநர்ஹதையையுண்டாக்கும் புத்தி பூர்வ மஹா பாகவத அபசாராதிகளை விளைவித்து தக்தபடம் போலேயாக்கவல்ல ப்ராரப்த பலமான

பாப விசேஷத்துக்கு அஞ்சி ப்ரதம ப்ரபத்தி காலத்திலேயாதல், பின்பு ஒரு கால் அதுக்காகப் ப்ரபத்தி பண்ணியாதல் நிரபராதமான உத்தரக்ருத்யத்தை அபேக்ஷித்தால் மேல் அபராத ப்ரஸங்கத்தையும் பற்ற சோகிக்கவேண்டா.

**விளக்கம்** – ப்ரபத்திக்குப் பின்னர், பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்களின் விளைவாக, மஹாபாகவதர்களிடம் அறிந்து கொண்டே சில அபசாரங்கள் உண்டாகலாம். அவை பகவத் கைங்கர்யம் செய்யும் தகுதியை இழக்கும்படிச் செய்து, எரிந்த துணி போன்று பயனற்றதாக்குகின்றன. ஆகவே இவற்றுக்கு அச்சம் கொண்டு, ப்ரபத்தி செய்யும் அந்த நேரத்திலேயே, வருங்காலத்தில் எந்தவிதமான அபராதங்களும் இல்லாத கைங்கர்யங்களையும் ஸங்கல்பம் செய்யவேண்டும். அந்த நேரத்தில் செய்யத் தவறினால், அதற்காக ஒரு ப்ரபத்தியை பின்னர் செய்து கொள்ளலாம். இவ்விதம் செய்யும்போது வருங்காலத்தில் அபராதங்களுடைய ஸம்பந்தம் உண்டாகாது. ஆகவே ப்ரபத்திக்குப் பின்னர் அபராதங்கள் உண்டாகுமோ என்று சோகம் அடையவேண்டாம்.

**மூலம்** – (6) இப்படி நிரபராதமான உத்தரக்ருத்யத்தை அபேக்ஷியாதார்க்கும் மேல் புத்தி பூர்வ அபராதம் வந்தாலும் "ந த்யஜேயம் கதஞ்சந" என்று இருக்கக்கடவ, சரண்யன் இவனுக்கு அநுதாபத்தை உண்டாக்கிப் புந:ப்ரபத்தியாகிற ப்ராயச்சித்த விசேஷத்திலே மூட்டியும், அதுவும் கைதப்பும்படியான கடின ப்ரக்ருதிகளுக்கு சிக்ஷாரூபங்களான உபக்லேச மாத்ரங்களைக் காட்டி மேல் அபராதம் பண்ணாதபடி விலக்கியும், பலங்கோரின காலத்துக்கு முன்பே கண்ணழிக்கையாலே ப்ரபந்நனுக்கு மின்னொளி போலே தோற்றி நிலைநில்லாதே போகிற புத்தி பூர்வ அபராத லேசங்களாலே நரகாதி மஹாக்லேசங்கள் வரில் செய்வதென் என்று சங்கித்து சோகிக்க வேண்டா.

**விளக்கம்** – ஒருவன் தனது ப்ரபத்தி காலத்தில், "பின்னால் வரும் வாழ்நாள் முழுவதும் எந்தவிதமான அபராதங்களையும் செய்யாமல் இருப்பேனாக", என்று ப்ரார்த்தனை செய்யாமல் இருந்தான் என்றாலும், அவனுக்கு ப்ரபத்தியின் பின்னர் அபராதங்கள் வந்து சேர்ந்தாலும், ஸர்வேச்வரன் இராமாயணம் யுத்தகாண்டம் (18-4) - ந த்யஜேயம் கதஞ்சந – நான் ஒருபோதும் கைவிடேன் – என்று கூறினாலும், அந்த மனிதனுடைய மனதில் "நாம் தவறு செய்துவிட்டோம்" என்னும் எண்ணத்தை உண்டாக்கி, அவனை மீண்டும் ப்ரபத்தி என்னும் ப்ராயச்சித்தம் செய்யும்படியாகச் செய்கிறான். அதனையும் செய்யாமல்

இருக்கின்ற சில கடினமான மனிதர்களுக்கு ஒரு சில சிறிய தண்டனைகளை அளித்து, அவர்கள் மீண்டும் அபராதங்களைச் செய்யாமல் இருக்கும்படியாக மாற்றுகிறான். அவன் பலன் பெறுவதற்கும் முன்பாகவே அவனிடம் உள்ள அனைத்து தவறுகளையும் நீக்குகிறான். ஆகவே அவனால் செய்யப்பட்ட அனைத்துவிதமான அபராதங்களும் வானில் தோன்றி மறையும் மின்னல் போன்றே உள்ளதால், "முன்பு செய்த அபராதங்களுடைய விளைவால் நரகம் ஏற்பட்டால் என்ன செய்வது?", என்னும் சந்தேகத்தால் துக்கம் அடையவேண்டாம்.

**மூலம்** – (7) ஆர்த்தி ப்ரபந்நனுக்கு அப்போதே பல ஸித்தியுண்டாம்படி இருக்கையாலே "தேஹே சேத் ப்ரீதிமான் மூடோ பவிதா நரகே அபி ஸ:" என்னும்படி நரக துல்யமான இச்சரீரம் அநுவர்த்திக்கிறதோ என்று சோகிக்கவேண்டா.

**விளக்கம்** – ஒரு க்ஷணமும் கூட காலதாமதத்தைப் பொறுக்க இயலாமல் உள்ள ஆர்த்தி ப்ரபந்நன் ஒருவனுகு, நான் அப்போதே மோக்ஷம் அளிக்கிறேன். ஆகவே ஸ்ரீவிஷ்ணு புராணம் (1-17-63) - தேஹே சேத் ப்ரீதிமான் மூடோ பவிதா நரகே அபி ஸ: - சரீரத்தில் அன்பு வைக்கும் மூடன் ஒருவன் நரகத்தில் ஈடுபடுவான் – என்று கூறுவதற்கு ஏற்ப நரகத்திற்குச் சமமான இந்தச் சரீரம் நீடித்தபடி இருக்குமோ என்னும் துக்கம் வேண்டாம்.

**மூலம்** – (8) கர்மயோகம் முதலான நிவ்ருத்தி தர்மங்களெல்லாம் "ந இஹ அபி க்ரம நாச: அஸ்தி" இத்யாதிகளிற்படியே இட்டபடை கற்படையாகையாலும், இச் சரணாகதனைப் பற்ற விசேஷித்து "ந த்யஜேயம் கதஞ்சந" என்கையாலும், த்ருப்த ப்ரபந்நனுக்கும் கோரின காலத்தளவு விளம்பித்தாலும் பலஸித்தியில் ஸம்சயமில்லாமையாலே, "யஜ்ஞ: அந்ருதேந க்ஷரதி தப: க்ஷரதி விஸ்மயாத் | ஆயுர் விப்ரபரீவாதாத் தாநம் ச பரிகீர்த்திநாத்" இத்யாதிகளிற்படியே, ஸுக்ருத நாசகங்களாயிருப்பன சில துஷ்க்ருதங்களாலே இப் ப்ரபத்தி ரூபமான ஸுக்ருதம் நசித்துப் பலம் கிடையாதொழியில் செய்வதென் என்று சோகிக்க வேண்டா.

**விளக்கம்** – மறுமைப் பயனை அளிக்கவல்லதான கர்மயோகம் முதலான கர்மங்கள் அனைத்தும் கீதை (2-40) - ந இஹ அபி க்ரம நாச: அஸ்தி – கர்மயோகத்தில் தொடங்கப்பட்ட எதுவும் அழிவதில்லை – என்று கூறுவதற்கு ஏற்ப அஸ்திவாரம் இட்டது

கல்லைக் கொண்டு என்பதால் பலனை நிச்சயமாக அளித்தே தீரும் என்பதாலும், சரணம் புகுந்த இவனைக் குறித்து இராமாயணம் யுத்தகாண்டம் (18-4) - ந த்யஜேயம் கதஞ்சந – நான் ஒருபோதும் கைவிடேன் – என்று உறுதியுடன் உள்ளதாலும், ப்ரபந்நன் ஒருவன் விணப்பித்த காலம் முடிய மோக்ஷம் என்பது தாமதமானால் கூட பலன் கிட்டுமோ என்னும் ஐயம் தேவையில்லை. ஆகவே மநுஸ்ம்ருதி (4-27) - யஜ்ஞ: அந்ருதேந க்ஷரதி தப: க்ஷரதி விஸ்மயாத் | ஆயுர் விப்ரபரீவாதாத் தாநம் ச பரிகீர்த்திநாத் – யாகமானது பொய் உரைப்பதாலும், தவமானது கர்வம் அடைவதாலும், ஆயுளானது அந்தணர்களைத் தூஷிப்பதாலும், தானமானது தானே வெளிப்படுத்திக்கொள்வதாலும் அழிகின்றன – என்று கூறுவதற்கு ஏற்ப நற்செயல்களாக உள்ள சிலவற்றை அழிப்பதாக தீமையான செயல்கள் உள்ளது போன்று, இந்தப் ப்ரபத்தி ரூபமான நற்செயலானது அழிந்து, பலன் கிட்டாமல் போனால் என்ன செய்வது என்று சோகம் கொள்ளவேண்டாம்.

**மூலம்** – (9) இச் சரீராந்தரம் மோக்ஷம் பெறவேண்டுமென்று காலங்குறிக்கையாலே, ஜந்மாந்தராதி ஹேதுக்களான ப்ராரப்த கர்ம விசேஷங்களாலே நமக்கு ஜந்மாந்தரங்கள் வரில் செய்வதென் என்று சோகிக்க வேண்டா.

**விளக்கம்** - இந்தச் சரீரம் முடிந்தவுடன் மோக்ஷம் அடையவேண்டும் என்று சேதநன் விரும்புவதால், அடுத்த ஜன்மத்தை உண்டாக்கக் காரணமாக உள்ளதான "பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்கள்" என்பதன் விளைவாக, பல பிறவிகள் உண்டானால் என்ன செய்வது என்று சோகம் அடையவேண்டாம்.

மூலம் – (10) அநந்ய ப்ரயோஜநனாய் ப்ரபந்நனான இவனுக்குப் ப்ரதிபந்தகங்களான ஸர்வபாபங்களும் கழிகையாலே கேவல ஆத்ம அநுபவாதிகளான அந்தரயங்களாலே பரம பலத்துக்கு விளம்பம் வருகிறதோவென்று சோகிக்க வேண்டா.

**விளக்கம்** – மற்ற எந்த பலன்களையும் நாடாமல் ப்ரபத்தியைக் கைக்கொண்ட ஒருவனுக்கு, மோக்ஷம் பெறுவதில் இடையூறாக இருந்த அனைத்து பாபங்களும் (கர்மங்கள்) நீங்குவதால், ஆத்ம அனுபவம் என்பது போன்றவற்றால் மிகவும் உயர்ந்த பலனாகிய மோக்ஷத்தை அடைவதில் காலதாமதம் உண்டானால் என்ன செய்வது என்று சோகம் அடையவேண்டாம்.

**மூலம்** – இப்படி ஸர்வப்ரகார சோக ஹேதுக்களும் கழியும்படி எனக்கு அநுக்ரஹ விஷய பூதனான நீ இனி சோகிக்கையாவது முன்பு நிக்ரஹ விஷய பூதனாய் நின்ற தசையில் சோகியாதாப் போலே அநிபுண க்ருத்யமாய் இவ் உபாய விசேஷ வைலக்ஷண்யத்துக்கும் ரக்ஷணபரமேறிட்டுக் கொள்ளுகிற ஸித்தோபாய பூதனான என் ப்ரபாவத்துக்கும் என் பக்கலிலே ஸர்வபரந்யாஸம் பண்ணிக் க்ருதக்ருத்யனாயிருக்கிற உன் நிலைக்கும் தகுதியன்றென்று திருவுள்ளம்.

**விளக்கம்** – இவ்விதம் உனது அனைத்துவிதமான சோகங்களும் நீங்கும்படியாக எனது அனுக்ரஹத்தை நீ பெற்றாய். ஆகவே இனி நீ சோகம் அடைதல் என்பது, ப்ரபத்திக்கு முன்பாக நீ செய்யும் தவறுகளால் எனது தண்டனைக்கு உள்ளாவாய் என அறிந்திருந்தும் சோகம் அடையாமல் அப்போது இருந்தது போன்று மூடத்தனமே ஆகும். ப்ரபத்தியின் பின்னர் சோகம் கொள்ளுதல் என்பது, "ப்ரபத்தி உபாயத்தின் மேன்மை, உன்னுடைய பொறுப்புகள் அனைத்தையும் என் மீது ஏற்றுக் கொள்கின்ற ஸித்தோபாயனாகிய எனது ப்ரபாவம், என்னிடம் உனது பாரங்கள் அனைத்தையும் ஒப்படைத்த பின்னர் செய்யவேண்டியதைச் செய்தவனாக நிற்கும் உன்னுடைய நிலை" ஆகிய அனைத்திற்கும் ஏற்புடையதன்று.

## சமரச்லோகத்தில் உள்ள "மா சுச:" என்பதே உயர்ந்த ரஹஸ்யம்

**மூலம்** – இப்படிச் சரமச்லோகத்தில் ஸாரதமான "மா சுச:" என்கிற சரமவாக்யத்தின் தாத்பர்யத்தைத் தங்கள் சரமதசையிலே ஆசார்யர்கள் ஸச்சிஷ்யர்களுக்கு உபதேசிப்பார்கள்.

**விளக்கம்** – இவ்விதமாக சரமச்லோகத்தில் உள்ள "மா சுச:" என்னும் பகுதியானது, இந்த ச்லோகத்தின் ஸாரமாகவே உள்ளதால், இதன் கருத்தை ஆசார்யர்கள் தங்களுடைய இறுதி நாட்களில் சிறந்த சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்வர்.

## சரமச்லோகத்தினுடைய ஆழ்பொருள்கள் சுருக்கம்

**மூலம்** – இச் ச்லோகத்தில் பதங்களில் அடைவே (1) அதிகாரி விசேஷம், ஆகிஞ்சந்ய புரஸ்காரம், துஷ்கர பரிகராந்தர நைரபேக்ஷ்யம், அசக்ய ப்ரவ்ருத்தி அநைசித்யம், துஷ்கர அபிநிவேச வையர்த்யம், உபாய விசேஷத்தின் கணையுடைமை. (2) முமுக்ஷுவுக்கு சரண்ய விசேஷம், சரண்யனுடைய ஸுலபத்வ ஸுசீலத்வாதி குணபூர்ணத்வம், ஹித தம உபதேசித்வம். (3) ப்ராப்யனே ப்ராபகனானமை, நிரபேக்ஷ ஸர்வ விஷய நிஷ்ப்ரத்யூஹ கர்த்ருத்வம், வ்யாஜமாத்ர ப்ரதீக்ஷத்வம், உபாயாந்தர வ்யவதாந நிரபேக்ஷத்வம், பரிகராந்தர நிரபேக்ஷ ப்ரஸாத்யத்வம், ஸர்வ பலார்தி சரண்யத்வம், சரண்யாந்தர பரிக்ரஹ அஸஹத்வம், சரண்ய வைசிஷ்டயம். (4) உபயாந்தர ஸ்தாந நிவேச்யத்வம், பர ஸ்வீகர்த்ருத்வம். (5) பரந்யாஸ ரூப ஸாத்யோபாய விசேஷம், அதின் பரிகரங்கள், ஸர்வாதிகாரத்வம், ஸக்ருத்கர்தவ்யத்வம், ஸுக்ரத்வம், அவிளம்பித பல ப்ரதத்வம், ப்ராரப்த நிவர்த்தந க்ஷமத்வம். (6) அதிகாரியினுடைய பராதீந கர்த்ருத்வம், சாஸ்த்ர வச்யத்வம். (7) ரக்ஷகனுடைய பரமகாருணிகத்வம், ஸுப்ரஸந்நத்வம், நிரங்குச ஸ்வாதந்த்ர்யம், துர்நிவாரத்வம், பராநபேக்ஷத்வம், அவஸர ப்ரதீக்ஷத்வம். (8) சரண்யகதனுடைய க்ருதக்ருத்யத்வம், பரிக்ருஹீத உபாய தத் பலங்களைப் பற்றக் கர்த்தவ்யாந்தரத்தில் ப்ராப்தியில்லாமை, பகவதத்யர்த்த ப்ரியத்வம். (9) த்ரைகாலிக விரோதி பூயஸ்த்வம், விரோதி வர்க வைசித்ரயம். (10) அவற்றினுடைய ஈச்வர ஸங்கல்பமாத்ர நிவர்த்யத்வம், ப்ரபந்நேச்சா நியதமான விரோதி நிவ்ருத்தி காலம், விரோதி நிவ்ருத்தி ஸ்வரூபம், ஆத்ம கைவல்ய வ்யாவ்ருத்த யதாவஸ்தித ஸ்வரூபாவிர்பாவம், பரிபூர்ண பகவதநுபவம், ஸர்வவித கைங்கர்யம், அபுநராவ்ருத்தி. (11) முன்பு சோக ஹேது ப்ராசுர்யம், பின்பு சோகிக்கப் ப்ராப்தியில்லாமை, விமர்ச காலமெல்லாம் நிஸ்ஸம்யத்வம், சோக நிவ்ருத்தி, நிர்பயத்வம், ஹர்ஷ விசேஷம், சரீரபாத கால ப்ரதீக்ஷத்வம், நிரபராத கைங்கர்ய ரஸிகத்வம் என்று இவை ப்ரதாநமாய் மற்றும் இவற்றுக்கு அபேக்ஷிதங்களெல்லாம் சப்த சக்தியாலும் அர்த்த ஸ்வபாவத்தாலும் அநுசிஷ்டங்கள்.

**விளக்கம்** – [மேலே உள்ளவற்றில் காணப்படும் எண்கள், சரம ச்லோகத்தில் உள்ள அந்தந்த பதங்களுடைய ஆழ்பொருள் ஆகும். அவையாவன - (1) ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய, (2) மாம், (3) ஏக, (4) சரண, (5) வ்ரஜ என்பதன் தாதுப்பகுதி, (6) வ்ரஜ என்பதன் விகுதி, (7) அஹம், (8) த்வா, (9) ஸர்வ பாப, (10) மோக்ஷயிஷ்யாமி, (11) மா

சுச: - என்பவை ஆகும்] சரமச்லோகத்தில் உள்ள பதங்களில் பின்வரும் கருத்துக்கள் மறைந்துள்ளன:

(1) இந்த உபாயத்திற்குத் தகுதியான அதிகாரியின் சிறப்பு, மற்ற எந்தவிதமான உபாயமும் அற்று இருத்தல், செய்வதற்குக் கடினமான அங்கங்களை எதிர்பாராமல் இருத்தல், ஒருவனுடைய சக்திக்கு மீறிய செயல்களைச் செய்யவேண்டிய அவசியம் இன்மை (அல்லது அது போன்ற செயல்களில் முனைதலின் பொருத்தம் இன்மை), இயலாத செயல்களில் ஈடுபடுவதால் எந்தப் பலனும் கிட்டாமல் போதல், இந்த உபாயமானது மற்ற உபாயங்களைப் பொருத்துக் கொள்ளாமை

(2) முமுக்ஷுவுக்கு அனைத்துவிதத்திலும் ஏற்றவனாக அவன் மட்டுமே இருத்தலின் சிறப்பு, சரணம் அடையத்தக்கவனுடைய எளிமையாக அடையத்தக்கவனாக இருத்தல் மற்றும் சிறந்தவனாக இருத்தல் ஆகிய குணங்களுடைய முழுமை அடைந்த நிலை, நன்மை பயக்கவல்லவற்றை மட்டுமே உபதேசிக்கும் தன்மை

(3) அடையத்தக்கவனாக இருப்பவனே தன்னை அடைவதற்கான உபாயமாகவும் உள்ள நிலை, எந்தவிதமான இடையூறும் இன்றி வேறு எதனுடைய துணையையும் எதிர்பாராமல் தனித்து நின்று எந்த ஒரு செயலையும் செய்யும் தன்மை, ஒருவனைக் காப்பதற்காக அந்த மனிதனிடமிருந்து ஏதோ ஒரு சிறிய வாய்ப்பை மட்டுமே எதிர்பார்க்கும் தன்மை, மற்ற எந்தவிதமான உபாயங்களையும் எதிர்பாராத தன்மை, மற்ற எந்தவிதமான அங்களையும் எதிர்பாராத தன்மை, அனைத்து பலன்களையும் அளிக்கவல்லதான சரணம் புகும்படி உள்ள தன்மை, மற்ற யாரையும் சரணம் புகத்தக்கவர்களாகக் கொள்ளுதலைப் பொறுக்க இயலாத தன்மை, பெரியபிராட்டியும் சேர்ந்து உபாயமாக உள்ள தன்மை

(4) மற்ற உபாயங்களின் இடத்தில் நிற்கக்கூடிய தன்மை, மற்றவர்களுடைய பாரத்தை ஏற்றுக்கொண்டு அவர்களுக்காகச் செயலாற்றும் தன்மை

(5) ஒருவன் தன்னைக் காப்பாற்றும் பொறுப்பை ஒப்படைக்கும்விதமாக உள்ள ஸாதனம், அதன் அங்கங்கள், அந்த உபாயத்தை அனைவரும் கைக்கொள்ளலாம்படி உள்ள தன்மை, ஒருமுறை மட்டுமே இயற்றபடக்கூடியதாக உள்ள தன்மை, மிகவும் எளிதாக இயற்றக்கூடியதாக உள்ள தன்மை, பலன் அளிப்பதில் தாமதம் இல்லாத தன்மை, பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட பூர்வகர்மங்களையும் விலக்கக்கூடிய தன்மை

(6) இந்த உபாயத்தைக் கைக்கொள்ளும் அதிகாரி ஸர்வேச்வரனை அல்லாமல் வேறு எதற்கும் வசப்படாத தன்மை, சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்பட்ட தன்மை

(7) காப்பாற்றுபவனுடைய மிக உயர்ந்த கருணை, எப்போதும் க்ருபையுடன் கூடிய தன்மை, சுருக்கம் அடையாத சுதந்திர தன்மை, தவிர்க்க முடியாதபடி உள்ள தன்மை, வேறு உதவிகளை எதிர்பாராத தன்மை, காப்பதற்கான தருணைத்தை எதிர்பார்க்கும் தன்மை

(8) சரணம் புகுந்தவனுடைய செய்யவேண்டியதைச் செய்துமுடித்த தன்மை, தான் கைக்கொள்கின்ற உபாயம் மற்றும் அதன் பலன் ஆகியவற்றைப் பெறுவதற்காக வேறு எதிலும் ஈடுபடக்கூடாது என்னும் தன்மை, பகவானுக்கு மிகவும் ப்ரியமானவனாக உள்ள தன்மை

(9) மூன்றுகாலங்களிலும் முக்திக்கு உண்டாகக்கூடிய தடைகள், பலவிதமான வடிவங்களில் முக்திக்குத் தடையாக உள்ளவை

(10) அந்தத் தடைகள் அனைத்தும் பகவானுடைய வெறும் ஸங்கல்பத்தாலேயே நீங்கும் நிலை, இவை எப்போது விலகவேண்டும் என்று ப்ரபந்நன் நினைக்கிறானோ அப்போதும் நீங்கும் நிலை, இந்த விரோதிகள் நீங்கும் விதங்கள், ஆத்மாவை அனுபவித்தல் என்பதைக் காட்டிலும் வேறுபட்டதான தனது ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபம் உள்ளது உள்ளபடி வெளிப்படுதல், முழுமையான பகவத் அனுபவம், பகவானுக்கு அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்தல், மீண்டும் ஸம்ஸாரத்திற்குத் திரும்பாமை

(11) உபாயத்தைக் கைக்கொள்வதற்கு முன்பாக சோகம் நீடிப்பதற்கான காரணம், உபாயத்தைக் கைக்கொண்ட பின்னர் சோகத்திற்கான அவசியம் இன்மை, மேலும் உள்ள காலங்கள் அனைத்திலும் எந்தவிதமான ஐயமும் அற்ற நிலை, சோகங்கள் அனைத்தும் விலகுதல், பயம் அற்ற நிலை, மிகுந்த சிறப்பான மகிழ்ச்சி, எப்போது எந்தச் சரீரம் விலகும் என்று அந்தக் காலத்தை எதிர்நோக்குதல், எந்தவிதமான தோஷங்களும் அற்ற கைங்கர்யங்களைச் செய்தல்

இது போன்ற முதன்மையான பலவும் மற்றும் இவற்றால் எதிர்பார்க்கப்படும் மற்ற அனைத்தும், சரமச்லோகத்தில் உள்ள சொற்களுடைய வலிமை மற்றும் ஆழ்பொருள்களை வெளிப்படுத்தும் இயல்பு ஆகியவற்றால் உணரலாம்படி உள்ளன.

## சரம ச்லோகத்தின் திரண்ட பொருள்

**மூலம்** – "(1) அல்பஜ்ஞனாய், அல்பசக்தியாய், பரிமித காலவர்த்தியாய், விளம்ப க்ஷமனுமன்றிக்கேயிருக்கிற உன்னாலே அறியவும் அநுஷ்டிக்கவும் அரிதாய்ப் பல விளம்பமுமுண்டாயிருக்கிற உபாயாந்தரங்களில் அலையாதே. (2) ஸர்வஸுலபனாய், ஸர்வலோக சரண்யனாய், சரண்யத்வ உபயுக்த ஸர்வாகார விசிஷ்டனான என்னையொருவனையுமே (3) அத்யவஸித்துக் கொண்டு, அங்க பஞ்சக ஸம்பந்நமான ஆத்மரக்ஷா பரஸமர்ப்பணத்தைப் பண்ணு. (4) இப்படி அநுஷ்டிதோபாயனாய், க்ருதக்ருத்யனாய், எனக்கு அடைக்கலமாய், அத்யர்த்த ப்ரியனான உன்னை, (5) பரமகாருணிகனாய், ஸுப்ரஸந்நனாய், நிரங்குச ஸ்வாதந்த்ர்யனாய், ஸ்வார்த்த ப்ரவ்ருத்தனான நானே என் ஸங்கல்ப மாத்ரமே துணையாகக் கொண்டு, (6) பஹுப்ரகாரமாய், அநந்தமாய், துரத்யயமான ஸர்வ விரோதி வர்க்கத்தோடும் பின் தொடர்ச்சியில்லாதபடி துவக்கறுத்து, என்னோடொக்க என்னுடைய ஆத்மாத்மீயங்களை யெல்லாம் அநுபவிக்கையாலே துல்யபோகனாக்கிப் பரிபூர்ண அநுபவ பரீவாஹ ரூபமான ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யத்தையும் தந்து உகப்பன். (7) நீ ஒன்றுக்கும் சோகிக்க வேண்டா", என்று சரமச்லோகத்தில் திரண்ட பொருள்.

**விளக்கம்** - [மேலே உள்ளவற்றில் காணப்படும் எண்கள், சரம ச்லோகத்தில் உள்ள அந்தந்த பதங்களுடைய ஆழ்பொருள் ஆகும். அவையாவன - (1) ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய, (2) மாம் ஏகம், (3) சரணம் வ்ரஜ, (4) த்வா, (5) அஹம், (6) ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி, (7) மா சுச: - என்பவை ஆகும்]

சரமச்லோகத்தின் திரண்ட பொருள் என்னவென்றால்:

(1) அற்பமான ஞானம் கொண்டவனாகவும், அற்பமான சக்தி கொண்டவனாகவும், குறுகிய ஆயுள் கொண்டவனாகவும், மோக்ஷம் என்னும் பலனைப் பெறுவதில் உள்ள காலதாமதத்தைப் பொறுக்க இயலாதவனாகவும் நீ உள்ளாய். இப்படிப்பட்ட நீ, உன்னால் அறிவதற்கும் பின்பற்றுவதற்கும் மிகவும் கடினமானதாகவும், பலனைப் பெற்றுத் தருவதில் மிகவும் தாமதத்துடன் கூடியதாகவும் உள்ள மற்ற உபாயங்களை நாடாமல் இருப்பாயாக.

(2) அனைவராலும் எளிதாக அடையலாம்படி உள்ளவனும், அனைத்து லோகங்களும் சரணம் புகுபவனாகவும், அனைவரும் வந்து சரணம் புகுவதற்கு வேண்டிய அனைத்து தன்மைகளையும் கொண்டவனாகவும் உள்ள என்னை மட்டுமே.

(3) நீ கைக்கொண்டு (அல்லது பின்பற்றி), உன்னுடைய ஆத்மாவைக் காப்பாற்றும்படியாக, உனது அனைத்து பாரங்களையும், ஐந்து அங்கங்களுடன் கூடியதான ப்ரபத்தியைச் செய்வாயாக.

(4) இப்படியாக இந்த உபாயத்தைக் கைக்கொண்டவனாகவும், செய்யவேண்டியதைச் செய்தவனாகவும், என்னால் காக்கப்பட வேண்டியவனாகவும், எனக்கு மிகவும் ப்ரியமானவனாகவும் உள்ள உன்னை.

(5) மிகுந்த கருணை நிறைந்தவனும், க்ருபை நிறைந்தவனும், சுருக்கம் அடையாத சுதந்திரமானவனும், எங்கும் நிறைந்தவனும் ஆகிய நான், எனது ஸங்கல்பத்தை மட்டுமே துணையாகக் கொண்டு.

(6) பலவிதமாக உள்ளதும், எண்ணற்றதும், கடப்பதற்கு அரியதும் ஆகிய அனைத்துவிதமான தடைகளும் (அல்லது விரோதிகளும்) உன்னைப் பின்தொடராதபடி அவற்றை அடியுடன் விலக்குவேன். தொடர்ந்து என்னையும், எனது எல்லாவற்றையும் நீ அனுபவிக்கும்படி நான் செய்வதால், எனக்கு சமமாக அனைத்து இன்பங்களையும் நீ அனுபவிப்பாய். மேலும் உன்னுடைய இந்த அனுபவமானது அனைத்து இடங்கள், அனைத்து காலங்கள், அனைத்து நிலைகள் ஆகியவற்றில் அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்வதான பரிபூர்ணமான ரூபம் கொண்டதாகவே இருக்கும்படியாக நான் மகிழ்வுடன் அளிப்பேன்.

(7) நீ எதனைக் குறித்தும் சோகம் அடையவேண்டாம்.

ஏகம் ஸர்வப்ரதம் தர்மம் ஸ்ரீயா ஜுஷ்டம் ஸமாச்ரிதை:
அபேத சோகைராசார்யை: அயம் பந்தா: ப்ரதர்சித:

**பொருள் –** “இது மட்டுமே” என்றுள்ளதாகவும், அனைத்து பலன்களையும் அளிப்பதாகவும், பெரியபிராட்டியுடன் கூடியுள்ளதாகவும் இருக்கின்ற ஸித்தோபாயமாகிற ஸர்வேச்வரனை அடைந்தவர்களும், இதன் விளைவாகத் தங்கள் துன்பம் அனைத்தும் நீங்கப் பெற்றவர்களும் ஆகிய நம்முடைய ஆசார்யர்களால் இந்த ப்ரபத்தி வழியானது நமக்கு நன்றாக விளக்கப்பட்டது.

குறிப்புடன் மேவும் தர்மங்களின்றி அங்கோவலனார்
வெறித்துளவக்கழல் மெய்யரணென்று விரைந்தடைந்து
பிரித்த வினைத்திரள் பின்தொடராவகை அப்பெரியோர்
மறிப்புடை மன்னருள் வாசகத்தால் மருளற்றனமே

**பொருள்** – மிகுந்த மன ஒருமைப்பாட்டுடன் செய்யவேண்டியதான பக்தியோகம் முதலான உபாயங்களைப் பின்பற்ற இயலாமல், நறுமணத்துடன் கூடிய துளசியைக் கொண்டதான க்ருஷ்ணனுடைய திருவடிகளையே தகுந்த உபாயம் என்று கொண்டு, அதனையே மிகவும் விரைவாக அடையும்படியாக ஆனோம். இதன் காரணமாக நம்மிடமிருந்து அகற்றப்பட்ட பாபங்கள் நம்மிடம் மீண்டும் வராதபடியாக நின்றோம். நம்மை வளைத்துக் கொண்டு வசப்படுத்துகின்ற க்ருஷ்ணனுடைய உறுதியான க்ருபை காரணமாக உண்டான சரமச்லோகத்தால், நம்முடைய அறியாமைகள் நீங்கப்பெற்றோம்.

வ்யாஸ ஆம்நாய பயோதி கௌஸ்துபநிபம் ஹ்ருத்யம் ஹரே: உத்தமம்
ச்லோகம் கேசந லோக வேத பதவீ விச்வாஸித அர்த்தம் விது:
யேஷாம் உக்திஷு முக்தி ஸௌத விசிகா ஸோபாந பங்க்திஷு அமீ
வைசம்பாயந சௌநக ப்ரப்ருதய: ச்ரேஷ்டா: சிர: கம்பிந:

**பொருள்** – பகவான் வ்யாஸருடைய வேதமாகிய மஹாபாரதம் என்ற ஸமுத்ரத்தில் உண்டானதும், பகவானுக்கு இனிமையான கௌஸ்துப மணி போன்றதும் ஆகிய சரமச்லோகமானது, "சரணாகதி" என்னும் ஆழ்பொருள் கொண்டது என்பதை லோகத்தில் உள்ள வசனங்கள் மூலமாகவும் வேதங்கள் மூலமாகவும் நம்முடைய பூர்வாசார்யர்கள் ஆழ்ந்த விச்வாஸத்துடன் அறிந்தனர். முக்தி என்னும் மாடமாளிகைக்குக் கொண்டு செல்லக்கூடிய படிக்கட்டுகளாக உள்ள இந்த ஆசார்யர்களுடைய சொற்களைக் கேட்டு, வைசம்பாயநர் சௌநகர் முதலான உயர்ந்தவர்கள் பலரும் தங்களுடைய தலையை அசைத்து இந்தக் கருத்துக்களுக்குச் சம்மதம் தெரிவிக்கிறார்கள்.

சரமச்லோக அதிகாரம் ஸம்பூர்ணம்

பதவாக்யயோஜநா பாகம் ஸம்பூர்ணம்

பெரியபெருமாள் திருவடிகளே சரணம்
பெரியபெருமாள் திருவடிகள் தஞ்சம் அடைந்த நம் உடையவர் திருவடிகளே சரணம்
உடையவர் திருவடிகள் சரணம் புகுந்த நம் தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீஅரவிந்தவல்லி ஸமேத ஸ்ரீபத்ரிநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## அதிகாரம் 30

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)
www.namperumal.com / namperumal.wordpress.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸம்ப்ரதாய ப்ரக்ரியா பாகம்

# 30. ஆசார்ய க்ருத்ய அதிகாரம்

(ஆசார்யனுக்கு உள்ள கடமைகள்)

**மூலம் –**

அதிஜிகமிஷு: ஆத்யம் தாம திவ்யம் த்ரிதாம்ந:
ச்ருத விவித பரீக்ஷா சோதிதே க்வ அபி பாத்ரே
அநக குண தசாயாம் ஆஹித ஸ்நேஹம் ஆர்ய:
ப்ரதிசதி நிரபாயம் ஸம்ப்ரதாய ப்ரதீபம்

**பொருள் –** திருப்பாற்கடல், ஸூர்யமண்டலம் மற்றும் ஸ்ரீவைகுண்டம் ஆகிய மூன்று உயர்ந்த இடங்களைக் கொண்டுள்ளவனாகிய ஸர்வேச்வரனுடையதும், முதன்மையானதும், திவ்யமானதும் ஆகிய பரமபதத்தை அடையவேண்டும் என்று விரும்பும் ஆசார்யன் செய்வது என்னவென்றால்: தகுந்த சாஸ்த்ரங்களில் கூறப்பட்டதான பலவிதமான சோதனைகள் மூலம் தகுதியானவன் என்று ஏற்கப்படும் ஒரு சிஷ்யனைத் தேர்ந்தெடுக்கிறார்; அப்படிப்பட்ட உயர்ந்த குணங்கள் கொண்ட அந்த சிஷ்யன் என்னும் விளக்கில், மிகுந்த வாத்ஸல்யம் என்னும் எண்ணெயை ஊற்றி, அழிவற்றதான ஸம்ப்ரதாயம் என்னும் தீபத்தை அளிக்கிறார்.

## உபதேசங்களை யாருக்கு உபதேசம் செய்யவேண்டும், செய்யக்கூடாது

**மூலம் –** இப்படி "குருர்கரீயாந்" என்றும், "தமிமம் ஸர்வஸம்பந்நம் ஆசார்யம் பிதரம் குரும்" என்றும் சொல்லுகிறபடியே, பரமாசார்யனான ஸர்வேச்வரன் முதலாக ஸதாசார்ய ஸம்ப்ரதாய ஸமாகதங்களாய் ஸம்ஹீ ஸ்தந்யம் போலே விஜாதீயர்க்கு ரஸம் தெரியாத ரஹஸ்ய த்ரயார்த்தங்களை ஸங்க்ரஹேண சேர்த்துத் தாங்களும் அநுஸந்தித்து, "யோ கோபாயதி அயோக்யாநாம் யோக்யாநாம் ஸம்ப்ரயச்சதி | இமம் அர்த்தம் ஸ மாந்யோ மே

ஸ்வஸ்தி வ: அஸ்து வ்ரஜாமி அஹம்", "இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந | ந சாசுச்ருஷவே வாச்யம் ந ச மாம் ய: அப்யஸூயதி", "ய இமம் பரமம் குஹ்யம் மத் பக்தேஷு அபி தாஸ்யதி | பக்திம் மயி பராம் க்ருத்வா மாமேவைஷ்யத்ய ஸம்சய:"

**விளக்கம்** – இப்படியாக கீதை (11-43) – குரூர்கரியாந் – நீயே குருவாகவும் செயலாற்றுகிறாய் – என்றும், மஹாபாரதம் சபாபர்வம் (41-21) - தமிமம் ஸர்வஸம்பந்நம் ஆசார்யம் பிதரம் குரும் – ஸஹாதேவன், "ஆசார்யனாகவும், தந்தையாகவும், குருவாகவும் உள்ள க்ருஷ்ணனே அனைத்துவிதங்களிலும் கொண்டாடத்தக்கவன்" – என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனே முதல் ஆசார்யனாக உள்ளான். அவனிடமிருந்து நமது ஸம்ப்ரதாய ஆசார்ய பரம்பரை தொடங்குகிறது. இத்தகைய ஆசார்யர்களால் மூன்று மந்த்ரங்களுடைய (திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகம்) ஆழ்பொருள்கள் ஒன்றாகத் திரட்டப்பட்டு, எல்லையற்ற சுவையுடன் கூடியதாக அளிக்கப்படுகிறது. பெண் சிங்கத்தின் பாலுடைய சுவையை அறியாதவர்கள் போன்று, மற்ற மதத்தினரால் இந்தச் சுவையை அறிய இயலாது. இந்த மூன்று மந்த்ரங்களுடைய ஆழ்பொருளைச் சுருக்கி, அதனையே ஆசார்யன் எப்போதும் எண்ணியபடி உள்ளார். அதன் பின்னர் அவர் எவ்விதம், யாருக்கு உபதேசிக்கவேண்டும் என்பதை அடுத்துள்ள பல ச்லோகங்கள் கூறுகின்றன: ஸாத்வத ஸம்ஹிதை (24-375) - யோ கோபாயதி அயோக்யாநாம் யோக்யாநாம் ஸம்ப்ரயச்சதி | இமம் அர்த்தம் ஸ மாந்யோ மே ஸ்வஸ்தி வ: அஸ்து வ்ரஜாமி அஹம் – இந்த ஆழ்பொருளைக் கேட்கும் தகுதி இல்லாதவர்களுக்கு இவற்றை மறைத்தும், கேட்கும் தகுதி உள்ளவர்களுக்கு இவற்றை உபதேசித்தும் செய்பவர்கள் என்னால் கொண்டாடப்படுகிறார்கள். அவர்களுக்கு நன்மையே உண்டாகும் என நான் உரைக்கிறேன் – என்றும், கீதை (18-67) - இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந | ந சாசுச்ருஷவே வாச்யம் ந ச மாம் ய: அப்யஸூயதி – இவ்விதம் நான் உனக்கு உபதேசித்தவற்றை தவம் புரியாதவனுக்கும், பக்தி அற்றவனுக்கும், கேட்பதற்கு விருப்பம் அற்றவனுக்கும், என்னிடம் பொறாமை கொண்டவனுக்கும் உபதேசித்தக் கூடாது – என்றும், கீதை (18-68) - ய இமம் பரமம் குஹ்யம் மத் பக்தேஷு அபி தாஸ்யதி | பக்திம் மயி பராம் க்ருத்வா மாமேவைஷ்யத்ய ஸம்சய: - யார் ஒருவன் என்னிடம் மிகுந்த ப்ரேமையுடன் கூடிய பக்தி கொண்டவனாக இருந்தபடி, இந்த உயர்ந்த சாஸ்த்ரத்தை எனது பக்தர்களுக்கு உரைப்பானோ, அவன் என்னையே அடைகிறான் என்பதில் ஐயம் இல்லை – என்றும் கூறப்படுகிறது.

**மூலம்** – "நாவேதநிஷ்டா ஜநஸ்ய ராஜந் ப்ரதேயம் ஏதத் பரமம் த்வயா பவேத் | விவித் ஸமாநஸ்ய விபோதகாரகம் ப்ரபோதஹேதோ: ப்ரணதஸ்ய சாஸநம்", "ந தேயம் ஏதச்ச ததா அநுதாத்மநே சடாய க்லீபாய ந ஜிஹ்யபுத்தயே | ந பண்டிதஜ்ஞாய பரோபதாபிநே தேயம் த்வயேதம் விநிபோத யாத்ருசே", "ச்ரத்தாந்விதாயத குணாந்விதாய பராபவாதாத்விரதாய நித்யம் | விசுத்தயோகாய புதாய சைவ க்ரியாவதே அத க்ஷமிணே ஹிதாய", "விவிக்த சீலாய விதிப்ரியாய விவாதபீதாய பஹுச்ருதாய | விஜாநதே சைவ ததா ஹிதக்ஷமாதமாய நித்யாத்ம ஸமாய தேஹிநாம்", "ஏதைர் குணைர் ஹீநதமே ந தேயம் ஏதத் பரம் ப்ரஹ்ம விசுத்தமாஹு: | ந ச்ரேயஸா யோக்ஷ்யதி தாத்ருசே க்ருதம் தர்ம ப்ரவக்தாரமபாத்ரதாநாத்", "ப்ருத்வீமாம் யத்யபி ரத்நபூர்ணாம் தத்யாந்ந தேயம் த்விதமவ்ரதாய | ஜிதேந்த்ரியாயைதத ஸம்சயம் தே பவேத் ப்ரதேயம் பரமம் நரேந்த்ர", "கரால மா தே பயமஸ்து கிஞ்சித் ஏதத் பரம் ப்ரஹ்ம ச்ருதம் த்வயா அத்ய | யதாவத் உக்தம் பரமம் பவித்ரம் விசோகம் அத்யந்தம் அநாதிமத்யம்"

**விளக்கம்** – மஹாபாரதம் சாந்திபர்வம் (313-33 முதல் 38: வசிஷ்டர் உரைப்பது) - நாவேதநிஷ்டா ஜநஸ்ய ராஜந் ப்ரதேயம் ஏதத் பரமம் த்வயா பவேத் | விவித் ஸமாநஸ்ய விபோதகாரகம் ப்ரபோதஹேதோ: ப்ரணதஸ்ய சாஸநம் – ராஜனே! உண்மையை அறியவேண்டும் என்று விருப்பம் கொண்டு, அத்தகைய ஞானத்தை அடைவதற்காக வந்து வணங்கி நிற்பவனுக்கு ஞானத்தை அளிக்கவல்ல இந்த சாஸ்த்ரத்தை, வேதங்களில் இழியாதவனுக்கு உபதேசித்தல் கூடாது – என்றும், ந தேயம் ஏதச்ச ததா அநுதாத்மநே சடாய க்லீபாய ந ஜிஹ்யபுத்தயே | ந பண்டிதஜ்ஞாய பரோபதாபிநே தேயம் த்வயேதம் விநிபோத யாத்ருசே – இதனைப் பொய் கூறுபவனுக்கும், வஞ்சகம் நிறைந்தவனுக்கும், நபும்ஸகனுக்கும், தாழ்ந்த புத்தி கொண்டவனுக்கும், தன்னை மேதையாக எண்ணுபவனுக்கும், மற்றவர்களைத் துன்புறுத்துபவனுக்கும் உரைத்தல் கூடாது; யாருக்கு உரைக்கலாம் என நான் கூறக் கேட்பாயாக – என்றும், ச்ரத்தாந்விதாயத குணாந்விதாய பராபவாதாத்விரதாய நித்யம் | விசுத்தயோகாய புதாய சைவ க்ரியாவதே அத க்ஷமிணே ஹிதாய || விவிக்த சீலாய விதிப்ரியாய விவாதபீதாய பஹுச்ருதாய | விஜாநதே சைவ ததா ஹிதக்ஷமாதமாய நித்யாத்ம ஸமாய தேஹிநாம் – ச்ரத்தை நிறைந்தவனுக்கும், சிறந்த குணங்கள் கொண்டவனுக்கும், மற்றவர்களைத் தூற்றாதவனுக்கும், சிறந்த வாதங்களை ஏற்பவனுக்கும், உபதேசங்களை உள்வாங்கும் திறன் கொண்டவனுக்கும், சிறந்த ஒழுக்கம் உள்ளவனுக்கும், கர்மங்களை இயற்றும்போது உண்டாகும் துன்பங்களைப்

பொறுப்பவனுக்கும், உலகத்திற்கு நன்மையை மட்டுமே விரும்புபவனுக்கும், தனிமையில் வசிக்க விரும்புபவனுக்கும், சாஸ்த்ரங்களை அறிவதில் மகிழ்பவனுக்கும், பயனற்ற வாதங்களைக் கண்டு அஞ்சுபவனுக்கும், ஆசார்யனிடமிருந்து அறிந்தவனுக்கும், செய்ந்நன்றி நிறைந்தவனுக்கும், பொறுமை மற்றும் இரக்கம் நிறைந்தவனுக்கும், நித்யமாக உள்ள அனைத்து ஆத்மாக்களையும் தன்னைப் போன்றே எண்ணுபவனுக்கும் உபதேசிக்கலாம் – என்றும், ஏதைர் குணைர் ஹீநதமே ந தேயம் ஏதத் பரம் ப்ரஹ்ம விசுத்தமாஹு: | ந ச்ரேயஸா யோக்ஷ்யதி தாத்ருசே க்ருதம் தர்ம ப்ரவக்தாரமபாத்ரதாநாத் – இத்தகைய நற்குணங்கள் அற்றவனுக்கு, தூய்மையான பரப்ரஹ்மம் குறித்து உபதேசிக்கும் இந்தச் சாஸ்த்ரத்தை உபதேசம் செய்தல்கூடாது என்று முன்னோர்கள் கூறுகிறார்கள். இதனை மீறி உபதேசம் செய்தால் எந்தவிதமான நன்மையும் உண்டாகாது – என்றும், ப்ருத்வீமாம் யத்யபி ரத்நபூர்ணாம் தத்யாந்ந தேயம் த்விதமவ்ரதாய | ஜிதேந்த்ரியாயைதத ஸம்சயம் தே பவேத் ப்ரதேயம் பரமம் நரேந்த்ர – ராஜனே! இந்த உலகில் உள்ள அனைத்து இரத்தினங்களையும் தக்ஷிணையாக அளித்தால் கூட, வ்ரதம் இல்லாத ஒருவனுக்கு இந்தச் சாஸ்த்ரத்தை உபதேசித்தல் கூடாது. புலன்களைத் தன்வசப்படுத்திய ஒருவனுக்கு, இதனை உபதேசிக்கலாம் – என்றும், கரால மா தே பயமஸ்து கிஞ்சித் ஏதத் பரம் ப்ரஹ்ம ச்ருதம் த்வயா அத்ய | யதாவத் உக்தம் பரமம் பவித்ரம் விசோகம் அத்யந்தம் அநாதிமத்யம் – ராஜனே! நீ அச்சம் கொள்ளவேண்டாம். பரப்ரம்ஹம் குறித்த சாஸ்த்ரத்தை நீ இப்போது கேட்டாய். தொடக்கம், மத்யம் மற்றும் முடிவு அற்றதும் துன்பம் இல்லாததும் தூய்மையானதும் ஆகிய பரப்ரஹ்மம் குறித்து உனக்கு உள்ளது உள்ளபடி கூறப்பட்டது – என்றும் கூறியது காணலாம்.

**மூலம்** – "வித்யயைவ ஸமம் காமம் மர்தவ்யம் ப்ரஹ்மவாதிநா | ஆபத்யபி ச கோராயாம் நத்வேநாமிரிணே வபேத்", "ஏகதஸ்த்வபவர்கார்த்தம் அநுஷ்டாநாதிகௌசலம் | லோகாந் அநுஸாரஸ்த்வேகத்ர குரு: பச்சாத் உதீரித:", "பவந்தி பஹவோ மூர்கா: க்வசித் ஏகோ விசுத்ததீ: | த்ராஸித: அபி ஸதா மூர்கை: அசலோ ய: ஸ புத்திமாந்", "ந விச்வாஸ: க்வசித் கார்யோ விசேஷாத்து கலௌ யுகே | பாபிஷ்டா வாதவர்ஷேண மோஹயந்த்ய விசக்ஷணாந்", "கோபயந்நாசரேத் தர்மம் நாப்ருஷ்ட: கிஞ்சித் உச்சரேத் | ப்ருஷ்ட: அபி ந வதேத் அர்தம் குஹ்யம் ஸித்தாந்தம் ஏவ ச", "ஆச்ரிதாயாதி பக்தாய சாஸ்த்ர ச்ரத்தாபராய ச | ந்யாயேந ப்ருச்சதே ஸர்வம் வக்தவ்யம் சௌசயோகிநே", "ஆத்ம பூஜார்த்தம்

அர்தார்தம் டம்பார்தம் அபி கிந்நதீ: | அயோக்யேஷு வதந் சாஸ்த்ரம் ஸந்மார்காத் ப்ரச்யுதோ பவேத்", "ஊஷரே நிவபேத்விஜம் ஷண்டே கந்யாம் ப்ரயோஜயேத் | ஸ்ருஜேத்வா வாநரே மாலாம் நாபத்ரே சாஸ்த்ரம் உத்ஸ்ருஜேத்" என்றும், "ந நாஸ்திகாயாந்ருஜவே நாபக்தாய கதாசந | நைவ ஹிம்ஸாபிருசயே ந லுப்தாய விசேஷத:", "தாதவ்யோ மந்த்ரராஜ: அயம் மந்த்ர: அயம் ந ஹி தாத்ருச: | ருஜவே குருபக்தாய வைஷ்ணவாய விசேஷத:", "ஸர்வப்ராண்யநுகூலாய தாதவ்யோ தேசிகேந து" என்றும்,

**விளக்கம்** - மநு ஸ்ம்ருதி (2-113) – வித்யயைவ ஸமம் காமம் மர்தவ்யம் ப்ரஹ்மவாதிநா | ஆபத்யபி ச கோராயாம் நத்வேநாமிரிணே வபேத் – ப்ரஹ்மத்தைக் குறித்த உபதேசம் பெறத்தக்க சிஷ்யன் கிட்டவில்லையென்றால், தான் அறிந்த வித்யையுடன் இறக்கவேண்டும். கோரமான ஆபத்து உண்டானாலும், ப்ரஹ்மவித்யையை தகாத நிலத்தில் விதைக்கக்கூடாது – என்றும், சாண்டில்ய ஸ்ம்ருதி (4-251 முதல் 259) – மூர்காச்ச பண்டிதம் மந்யா அதர்மா தார்மிகா இவ | தர்மயுக்தாந் ப்ரபாதந்தே ஸாதூநாம் லிங்கமாஸ்திதா: - மூடர்கள் தங்களைப் பண்டிதர்களாக எண்ணிக்கொண்டு தாங்கள் அதர்மத்தைப் பின்பற்றினாலும் தர்மவான்கள் போன்று தங்களை வெளிப்படுத்திக் கொண்டு, ஸாதுக்கள் போன்ற வேஷம் பூண்டு அனைவரையும் துன்புறுத்துகிறார்கள் – என்றும், ஏகதஸ்த்வபவர்கார்த்தம் அநுஷ்டாநாதிகௌசலம் | லோகாந் அநுஸாரஸ்த்வேகத்ர குரு: பச்சாத் உதீரித: - ஒரு பக்கம் மோக்ஷம் செல்வதற்கான செயல்களைச் சரியானபடி செய்து வருவதாகக் காண்பித்துக் கொண்டு, மறு பக்கம் உலகியல் வாழ்க்கையை நடத்தியபடி உள்ள ஆசார்யன் இழியப்படுகிறான் – என்றும், பவந்தி பஹவோ மூர்கா: க்வசித் ஏகோ விசுத்ததீ: | த்ராஸித: அபி ஸதா மூர்கை: அசலோ ய: ஸ புத்திமாந் – தீய அறிவு நிறைந்தவர்கள் பலர் உள்ளனர். கலங்காத தூய்மையான அறிவு கொண்டவன் சிலரில் ஒருவனே உள்ளான். தீய அறிவு நிறைந்தவர்களால் அச்சுறுத்தப்பட்டாலும் கலங்காமல் உள்ளவனே புத்து உள்ளவன் ஆவான் – என்றும், ந விச்வாஸ: க்வசித் கார்யோ விசேஷாத்து கலௌ யுகே | பாபிஷ்டா வாதவர்ஷேண மோஹயந்த்ய விசக்ஷணாந் – யாரிடமும் மிகவும் எளிதாக விச்வாஸம் கொள்ளக்கூடாது. குறிப்பாக கலியுகத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். பாபம் நிறைந்தவர்கள் தகாத வாதங்களால் மயக்குவார்கள் – என்றும், கோபயந்நாசரேத் தர்மம் நாப்ருஷ்ட: கிஞ்சித் உச்சரேத் | ப்ருஷ்ட: அபி ந வதேத் அர்தம் குஹ்யம் ஸித்தாந்தம் ஏவ ச – தர்மங்களுடைய நுட்பங்களை மறைத்தபடி தர்மம் செய்யவேண்டும். ஒருவன் கேட்காமல் எதனையும்

உரைத்தல் கூடாது. அவ்விதம் கேட்கப்பட்டாலும் ரஹஸ்யங்களையும் ஸித்தாந்தங்களையும் வெளியிடக்கூடாது – என்றும், ஆச்ரிதாயாதி பக்தாய சாஸ்த்ர ச்ரத்தாபராய ச | ந்யாயேந ப்ருச்சதே ஸர்வம் வக்தவ்யம் சௌசயோகிநே – ஆழ்ந்த பக்தியுடனும், சாஸ்த்ரங்களின் மீது மிகுந்த ஈடுபாட்டுடனும், தூய்மையுடனும் வந்து தகுந்த ந்யாயத்துடன் வேண்டி நிற்பவனுக்கு அனைத்து சாஸ்த்ரங்களையும் உபதேசித்தல் வேண்டும் – என்றும், ஆத்ம பூஜார்த்தம் அர்தார்தம் டம்பார்தம் அபி கிந்நதீ: | அயோக்யேஷு வதந் சாஸ்த்ரம் ஸந்மார்காத் ப்ரச்யுதோ பவேத் – தன்னை மற்றவர்கள் வணங்கவேண்டும் என்பதற்காகவும், செல்வத்தை ஈட்டுவதற்காகவும், டம்பத்திற்காகவும் தகுதி அற்றவர்களுக்கு சாஸ்த்ரங்களை உரைத்தல் கூடாது. அவன் துன்ப நிலையில் இருந்தபடி அவ்விதம் செய்தாலும் முறை தவறியவனே ஆகிறான் – என்றும், ஊஷரே நிவபேத்விஜம் ஷண்டே கந்யாம் ப்ரயோஜயேத் | ஸ்ருஜேத்வா வாநரே மாலாம் நாபத்ரே சாஸ்த்ரம் உத்ஸ்ருஜேத் – உவர் நிலைத்தில் விதையை விதைக்கலாம், நபும்ஸகனுக்குப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கலாம், குரங்கிடம் மலர்மாலையை அளிக்கலாம், ஆனால் தகாதவனுக்கு சாஸ்த்ரத்தை உபதேசம் செய்தல் கூடாது – என்றும், ஸாத்யகி தந்த்ரம் - ந நாஸ்திகாயாந்ருஜவே நாபக்தாய கதாசந | நைவ ஹிம்ஸாபிருசயே ந லுப்தாய விசேஷத: நாஸ்திகன், நேர்மை அற்றவன், பக்தி அற்றவன், மற்றவர்களுக்குத் துன்பம் செய்பவன், லோபி ஆகியோருக்கு எப்போதுமே உயர்ந்த இந்த மந்த்ரத்தைக் கூறுதல் ஆகாது – என்றும், ஸாத்யகி தந்த்ரம் - தாதவ்யோ மந்த்ரராஜ: அயம் மந்த்ர: அயம் ந ஹி தாத்ருச: | ருஜவே குருபக்தாய வைஷ்ணவாய விசேஷத: || ஸர்வப்ராண்யநுகூலாய தாதவ்யோ தேசிகேந து - இப்படிப்பட்டவர்களுக்கு மந்த்ரராஜமான இதனை உரைத்தல் கூடாது. நேர்மை உள்ளவன், ஆசார்ய பக்தி கொண்டவன், விஷ்ணுவை ஆராதிப்பவன், அனைத்து உயிர்களுக்கும் நன்மையைச் செய்பவன் ஆகியோருக்கு இந்த மந்த்ரத்தை உபதேசிக்கலாம் – என்றும்.

**மூலம்** – “தொண்டர்க்கமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன்”, “அந்தாதி மேலிட்டு அறிவித்தேன் ஆழ்பொருளைச் சிந்தாமல் கொண்மின் நீர் தேர்ந்து” என்று ஸ்ரீஸாத்வத பகவத்கீதா வஸிஷ்ட கராலஸம்வாத சாண்டில்யஸ்ம்ருதி இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே சரண்யன் அநுமதி பண்ணும்படிக்கு ஈடான ஸாத்விகதா ஆஸ்திக்யாதி குணங்களையுடைராய்,

**விளக்கம்** – திருவாய்மொழி (9-4-9) - தொண்டர்க்கமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன் – என்றும், நான்முகன் திருவந்தாதி (1) - அந்தாதி மேலிட்டு அறிவித்தேன் ஆழ்பொருளைச் சிந்தாமல் கொண்மின் நீர் தேர்ந்து – என்று கூறுவதற்கு ஏற்ப ஸ்ரீஸாத்வத ஸம்ஹிதை, ஸ்ரீமத் பகவத்கீதை, மஹாபாரதத்தில் உள்ள “வஸிஷ்ட கரால உரையாடல்கள்”, சாண்டில்ய ஸ்ம்ருதி ஆகியவற்றில் உரைத்தபடியே, சரணம் புகத் தக்கவனாக உள்ள ஸர்வேச்வரன் ஏற்பதற்கு ஈடாக உள்ளதான ஆஸ்திகம் முதலான சிறந்த குணங்களைக் கொண்டவர்களாக.

**மூலம்** – “அபயம் ஸத்த்வ ஸம்சுத்தி: ஜ்ஞாநயோக வ்யவஸ்திதி: | தாநம் தமச்ச யஜ்ஞச்ச ஸ்வாத்யாயஸ்தப ஆர்ஜவம்”, “அஹிம்ஸா ஸத்யம் அக்ரோத: த்யாக: சாந்திரபைசுநம் | தயா பூதேஷ்வலோலுப்த்வம் மார்தவம் ஹ்ரீரசாபலம்”, “தேஜ: க்ஷமா த்ருதி: சௌசம் அத்ரோஹோ நாதிமாநிதா | பவந்தி ஸம்பதம் தைவீம் அபிஜாதஸ்ய பாரத” என்றும், “த்விவிதோ பூதஸர்க: அயம் தைவ ஆஸுர ஏவ ச | விஷ்ணுபக்திபரோ தைவ:” என்றும் சொல்லப்பட்ட தைவப்ரக்ருதிகளுக்கு “ஸம்வத்ஸரம் ததர்தம் வா மாஸத்ரயமதாபி வா | பரீக்ஷ்ய விவிதோபாயை: க்ருபயா நிஸ்ப்ருஹோ வதேத்”, “யத்ருச்சயோபஸந்நாநாம் தேசாந்தர நிவாஸிநாம் | இஷ்டோபதேச: கர்தவ்யோ நாராயண ரதாத்மநாம்” இத்யாதிகளிற் சொன்ன பரீக்ஷாதி மூல குண நிச்சய பூர்வகமாக, “ச்ருதாதந்யத்ர ஸந்துஷ்ட: தத்ரைவ ச குதூஹலீ” என்னலாம் அவஸ்தையிலே அஷட்கர்ணமாக வெளியிட்டு, “டம்போ தர்ப: அதிமாநச்ச க்ரோத: பாருஷ்யமேவ ச | அஜ்ஞாநம் ச அபிஜாதஸ்ய பார்த ஸம்பதமாஸுரீம்” என்றும், “விபரீத: ததா அஸுர:” என்றும் சொல்லப்பட்ட ஆஸுர ப்ரக்ருதிகளுக்கு மறைத்துச் சீரிய தநமுடையார் சேமித்து வாழுமாப்போலே சரிதார்த்தராய் வர்த்திப்பார்கள் பூர்வாசார்யர்கள்.

**விளக்கம்** – கீதை (16-1) - அபயம் ஸத்த்வ ஸம்சுத்தி: ஜ்ஞாநயோக வ்யவஸ்திதி: | தாநம் தமச்ச யஜ்ஞச்ச ஸ்வாத்யாயஸ்தப ஆர்ஜவம் – எதற்கும் அச்சம் கொள்ளாமல் இருத்தல், ஸத்வ குணத்துடன் இருத்தல், ஆத்ம ஸ்வரூபம் குறித்த சிந்தனையுடன் இருத்தல், தானம் அளித்தல், மனதைத் தன்வசப்படுத்தல், யஜ்ஞம் செய்தல், உபவாஸம் முதலான தவம் செய்தல், வேத அப்யாஸத்தில் ஈடுபடுதல், சொல் வாக்கு செயல் ஆகியவை ஒன்றாக இருத்தல் – என்றும், கீதை (16-2) - அஹிம்ஸா ஸத்யம் அக்ரோத: த்யாக: சாந்திரபைசுநம் | தயா பூதேஷ்வலோலுப்த்வம் மார்தவம் ஹ்ரீரசாபலம் – மற்ற உயிர்களுக்கு துன்பம்

உண்டாக்காமை, உண்மையை மட்டுமே உரைத்தல், கோபம் அடையாமல் இருத்தல், நன்மை உண்டாக்காதவற்றைத் துறத்தல், இந்த்ரியங்களை அடக்குதல், புறங்கூறாமை, அன்புடன் இருத்தல், புலன் விஷயங்களில் பற்று நீங்குதல், மென்மையுடன் இருத்தல், தீமையைச் செய்ய வெட்கம் அடைதல், சபலம் கொள்ளாமை – என்றும், கீதை (16-3) - தேஜ: க்ஷமா த்ருதி: சௌசம் அத்ரோஹோ நாதிமாநிதா | பவந்தி ஸம்பதம் தைவீம் அபிஜாதஸ்ய பாரத – தீய எண்ணம் கொள்பவர்களால் வெல்ல இயலாமல் இருத்தல், பொறுமையாக இருத்தல், உறுதியுடன் இருத்தல், தூய்மையாக இருத்தல், நற்செயல்களைத் தடுக்காமை, கர்வம் அடையாமல் இருத்தல் ஆகியவை தெய்வீகமான குணம் கொண்டவனுக்கு உள்ள தன்மைகள் ஆகும் – என்றும், ஸ்ரீவிஷ்ணுதர்மம் (109-74) - த்விவிதோ பூதஸர்க: அயம் தைவ ஆஸுர ஏவ ச | விஷ்ணுபக்திபரோ தைவ: - ஸ்ருஷ்டி என்பது தெய்வம் மற்றும் ஆஸுரம் என்னும் இரண்டுவிதமாக உள்ளது. விஷ்ணுவிடம் பக்தியுடன் உள்ளது தெய்வப் பிறவியாகும் – என்றும் உள்ள பல வாக்கியங்கள் மூலமாக தெய்வப் பிறவிகளுடைய தன்மைகள் கூறப்பட்டன. இப்படிப்பட்ட தெய்வப் பிறவிகளை, சாண்டில்ய ஸ்ம்ருதி (1-115) - ஸம்வத்ஸரம் தத்ர்தம் வா மாஸத்ரயமதாபி வா | பரீக்ஷ்ய விவிதோபாயை: க்ருபயா நிஸ்ப்ருஹோ வதேத் - ஆசார்யன் தனது சிஷ்யனை ஒரு வருடம் அல்லது ஆறு மாதம் அல்லது மூன்று மாதம் ஆகியவற்றில் பலவிதமான சோதனைகள் செய்து, அதன் பின்னர் எந்தப் பயனையும் எதிர்பாராமல், தனது க்ருபையை மட்டுமே முன்னிறுத்தி உபதேசிக்கவேண்டும் – என்றும், ஸாத்விக ஸம்ஹிதை (21-45) - யத்ருச்சயோபஸந்நாநாம் தேசாந்தர நிவாஸிநாம் | இஷ்டோபதேச: கர்தவ்யோ நாராயண ரதாத்மநாம் – நாராயணனிடம் எப்போதும் ஈடுபட்டபடி உள்ளவர்கள், மிகுந்த தூரதேசத்திலிருந்து வந்தால், அவர்களுக்கு எந்தவிதமான சோதனையும் இன்று உபதேசம் செய்யவேண்டும் – என்றும் உள்ள வாக்கியங்களின்படி சோதனைகள் மூலமாக அவர்களுடைய குணங்களை உறுதி செய்யவேண்டும். அதன் பின்னர் - ச்ருதாதந்யத்ர ஸந்துஷ்ட: தத்ரைவ ச குதூஹலீ – சாஸ்த்ரங்களைக் கேட்பதில் ஆர்வம் கொண்டும், மற்ற விஷயங்களை அறிவதில் ஆர்வம் அற்றும் – என்று கூறும் நிலையை அடைந்தவுடன், ஆசார்யன் உபதேசிக்கக் கேட்கலாம்படி ரஹஸ்ய அர்த்தங்களை ஆசார்யன் வெளியிடுகிறார். ஆனால் கீதை (16-4) - டம்போ தர்ப: அதிமாநச்ச க்ரோத: பாருஷ்யமேவ ச | அஜ்ஞாநம் ச அபிஜாதஸ்ய பார்த ஸம்பதமாஸுரீம் – புகழ் அடையவேண்டும் என்னும் எண்ணத்துடன் தர்மம் செய்தல், செருக்குடன் கூடிய நிலை, கோபம், கடுமை, அறிவற்ற தன்மை – ஆகியவை அஸுரர்களுக்கே உரிய தன்மை ஆகும் - என்றும், விபரீத: ததா

அஸுர: - விபரீதமான அறிவு கொண்ட அஸுரப்பிறவிகள் – என்றும் கூறுவதற்கு ஏர்ப உள்ள அஸுரப்பிறவிகளுக்கு இந்த ரஹஸ்யங்களை ஆசார்யன் மறைப்பார். இப்படியாகச் செல்வம் கொண்டவர்கள் சேமித்து வாழ்வது போன்று ஆசார்யர்கள் வாழ்வர்கள்.

## ஆசார்யர்களுடைய உபதேசங்கள்

**மூலம்** – இவர்கள் "தேஹ இந்த்ரியாதி வ்யதிரிக்தனாய் நித்யனாயிருப்பான் ஓர் ஆத்மா உண்டு. இச் சேதநாசேதநங்கள் இரண்டுமொழிய இவற்றுக்கு அந்தர்யாமியாய் சேஷியாயிருப்பான் ஒரு பரமாத்மா உண்டு. இப்பரமாத்மாவையொழிய இவ்வாத்மாவுக்கு தானும் பிறரும் ரக்ஷகராக மாட்டார்" என்று தத்வத்தையும்.

**விளக்கம்** – ஆசார்யர்கள், "(அநித்யமான) சரீரம், இந்த்ரியங்கள் ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபட்டவனும், நித்யமாக உள்ளவனும் ஆகிய ஆத்மா என்னும் ஒருவன் உள்ளான். சேதநங்கள் மற்றும் அசேதநங்களை ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபட்டவனும், இவற்றுக்கு அந்தர்யாமியாக உள்ளவனும், இவற்றுக்கு எஜமானனும் ஆகிய பரமாத்மா என்னும் ஒருவன் உள்ளான். இந்த ஆத்மாவிற்கு, பரமாத்மா அல்லாமல் வேறு யாரும் காப்பாற்றுபவர்கள் அல்லர்", என்னும் உண்மைகளையும்.

**மூலம்** – "அநாதிகாலம் அந்தாதியாக ஸம்ஸாரித்துப் போந்த அடியேனுக்கு இனி ஒரு கர்ப்பவாஸாதி க்லேசம் வாராதபடி திருவடிகளைத் தந்து ரக்ஷித்தருள வேண்டுமென்று ஆசார்யன் ப்ரஸாதித்த குரு பரம்பரா பூர்வக த்வயத்தாலே ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளை சரணமாகப் பற்றி ஆத்மாத்மீயங்களையும், அவற்றைப் பற்ற வரும் சுமைகளையும் அங்கே ஸமர்ப்பிப்பது" என்று ஹிதத்தையும்.

**விளக்கம்** – அடுத்ததாக, "எல்லையற்ற காலமாக நான் ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ளேன். இனியும் எனக்கு கர்ப்பவாஸம் (அதாவது மீண்டும் ஒரு பிறவி) முதலான துன்பங்கள் உண்டாகாதவிதமாக உன்னுடைய திருவடிகளை எனக்கு அளித்து என்னை காக்கவேண்டும் என்று உரைத்து, குரு பரம்பரையை முன்னிட்டுக் கொண்டு ஆசார்யன்

உபதேசித்த த்வயம் மூலமாக ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளே சரணம் என்று பற்றவேண்டும். அதனைத் தொடர்ந்து தன்னையும், தனது உடைமைகளையும், பாரங்களையும் அவனிடம் சமர்ப்பணம் செய்யவேண்டும்" என்று நன்மைகளையும்.

**மூலம்** – "ஸதாசார்யன் காட்டிக் கொடுக்கக் கைக்கொண்ட எம்பெருமான் இனி நம்மை ஒரு படிக்கும் கைவிடான் என்கிற தேற்றத்தோடே இங்கு இருந்த காலம் அபவர்க பூர்வ ரஸங்கமான நிரபராத அநுகூல வ்ருத்தியோடே நடப்பது" என்று உத்தரக்ருத்யத்தையும் ஸங்க்ரஹ ருசிகளுக்குச் சுருங்க அருளிச்செய்வார்கள்.

**விளக்கம்** - "நம்முடைய சிறந்த ஆசார்யன் நம்மை எம்பெருமானிடம் காட்டிக் கொடுத்துள்ளான்; இவ்விதம் நம்மைக் கைக்கொண்ட எம்பெருமான் இனி ஒருபோதும், எந்த நிலையிலும் நம்மைக் கைவிடமாட்டான் என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன் வாழவேண்டும். இந்த உலகில் வாழும் காலம் முடிய, இந்த வாழ்க்கையானது மோக்ஷம் பெற்ற பின்னர் அடையும் வாழ்விற்கான ஒரு ஒத்திகையே ஆகும் என்று எண்ணியபடி, எந்தவிதமான அபசாரங்களும் இல்லாதபடி, பகவானுக்கு ஏற்றவிதத்தில் இருக்கவேண்டும்", என்று ஆத்மசமர்ப்பணம் செய்த பின்னர் செய்யவேண்டியவற்றையும், சுருக்கமாக அறியவிரும்புபவர்களுக்காக சுருக்கமாக அருளிச்செய்வார்கள்.

ப்ரத்யேயஸ்து விலக்ஷண: ப்ரக்ருதி தஸ்த்ராதா பதிஸ்தத்பர:
தஸ்மிந்நாத்ம பரார்ப்பணம் ஹித தமம் தச்சேஷவ்ருத்தி: பலம்
இத்தம் தத்வ ஹிதே புமர்த்தம் இதி நஸ்த்ரேதா விபக்தம் தநம்
தாயத்வேந தயாதநா: ஸ்வயம் அது: ததாத்மநாம் தேசிகா:

**பொருள்** – ப்ரக்ருதியைக் காட்டிலும் உயர்ந்தவனாகிய ஜீவாத்மா அசேதநம் மற்றும் ஈச்வரன் ஆகியவர்களைக் காட்டிலும் வேறுபட்டவன் என்றே எண்ணத் தக்கவன் ஆவான். அவனைக் காட்டிலும் உயர்ந்தவனாகிய ஈச்வரன், ரக்ஷகன் மற்றும் எஜமானன் என்றும், சேதநம் மற்றும் அசேதநங்களைக் காட்டிலும் வேறுபட்டவன் என்றே எண்ணத் தக்கவன் ஆவான். அப்படிப்பட்ட ஈச்வரனிடம் தனது பொறுப்புகள் அனைத்தையும் சமர்ப்பணம் செய்தல் என்பது மிகுந்த நன்மையானது ஆகும். ஈச்வரன் மற்றும் அவனது அடியார்களுக்கு கைங்கர்யங்களைச் செய்தல் என்பது மிகுந்த பயன் அளிக்கும்.

இப்படியாக தத்வம், நன்மை மற்றும் பயன் என மூன்றுவிதமாகச் செல்வங்கள் உள்ளன. ஆத்மாவை சமர்ப்பணம் செய்த ஆசார்யர்கள், கருணை என்பதையே தங்கள் செல்வமாகக் கொண்டு, மேலே கூறப்பட்ட செல்வத்தில் நமக்குரிய பங்கை, தாங்களாகவே அளித்தனர்.

## இந்த ப்ரபந்தத்தில் உள்ளவை வழிவழியாக வந்தவை ஆகும்

**மூலம்** – இப்படி ரஹஸ்ய த்ரயத்தைப் பற்றின கீழும் மேலும் உள்ள பாசுரங்களை யெல்லாம் வேதாந்த உதயந ஸம்ப்ரதாயமான மடைப்பள்ளி வார்த்தையை ஆசார்யன் பக்கலிலே தாம் கேட்டருளினபடியே கிடாம்பியப்புள்ளார் அடியேனைக் கிளியைப் பழக்குமாப் போலே பழக்கி வைக்க அவர் திருவுள்ளத்தில் இரக்கமடியாகப் பெருமாள் தெளியப் ப்ரகாசிப்பித்து மறவாமற் காத்துப் பிழையறப் பேசுவித்த பாசுரங்கள்.

**விளக்கம்** – இவ்விதமாக “ரஹஸ்ய த்ரயம்” குறித்து நாம் இதுவரையிலும், இனியும் உள்ள உரைத்த விஷயங்கள் முழுவதும், வேதாந்த சாஸ்த்ரத்திற்கு உதயநர் போன்று உள்ளவரும், திருமடைப்பள்ளியாச்சான் தனக்கு உபதேசம் செய்தவற்றை ஆசார்யனிடம் தான் கேட்டருளியவிதமாக அடியேனுக்கு உபதேசித்தவரும், நம்மைக் கிளிப்பிள்ளை போன்று பழக்கியவரும் ஆகிய கிடாம்பி அப்புள்ளார் அடியேனுக்கு உபதேசம் செய்தவை ஆகும். அவருடைய திருவுள்ளத்தில் உள்ள இரக்கம் காரணமாக, அவர் உபதேசம் செய்த அனைத்தையும் எம்பெருமான் அடியேனுக்கு மிகவும் தெளிவாக்கி, அவற்றை என்றும் மறக்காமலும், பிழை இன்றி உரைக்கும்விதமாகவும் செய்தான். அந்த விஷயங்கள் இவையே ஆகும்.

பாட்டுக்குரிய பழையவர் மூவரைப் பண்டொருகால்
மாட்டுக்கருள் தரு மாயன் மலிந்து வருத்துதலால்
நாட்டுக்கிருள் செக நான்மறையந்தாதி நடை விளங்க
வீட்டுக்கிடை கழிக்கே வெளிகாட்டும் அம்மெய் விளக்கே

**பொருள்** – அனைவருக்கும் அருள் புரிபவனும், வியக்கவைக்கும் செயல்கள் செய்பவனும் ஆகிய ஸர்வேச்வரன், சிறந்த பாசுரங்கள் கொண்டு தன்னைக் குறித்து பாடத்தக்கவர்களான மூன்று முதலாழ்வார்களையும், முன்பு ஒரு காலத்தில் மிகவும்

நெருக்கமாக நின்று வருத்தினான். அப்போது அவர்களால் அங்கு வெளிப்பட்ட ப்ரபந்தங்கள் என்னும் மெய்யான தீபமானது, இந்த உலகத்தைச் சூழந்துள்ள அறியாமை என்னும் இருள் நீங்குவதற்காகவும், வேதாந்த மார்க்கம் நன்கு தழைப்பதற்காகவும், சிறந்த வழிகளை வெளிப்படுத்தும்.

மருளற்ற தேசிகர் வானுகப்பாலிந்த வையமெல்லாம்
இருளற்று இறைவன் இணையடி பூண்டுயவெண்ணுதலால்
தெருளுற்ற செந்தொழிற் செல்வம் பெருகிச் சிறந்தவர்பால்
அருளற்ற சிந்தையினால் அழியா விளக்கினரே

**பொருள்** – அறியாமை என்பது சிறிதும் அற்ற சான்றோர்கள் பரமபதம் செல்ல விரும்பியதாலும், இந்த உலகம் முழுவதும் அறியாமை நீங்கப்பெற்று பகவானுடைய பொருந்திய இரண்டு திருவடிகளை உபாயமாகப் பற்றி நின்று கரையேற வேண்டும் என்று எண்ணுவதாலும், கருணை நிறைந்த மனத்துடன், சிறந்த விவேகம் நிறைந்த கைங்கர்யம் என்னும் செல்வம் பெருகி, சிறந்த சிஷ்யர்களிடம் அழியாத ஸம்ப்ரதாயம் என்னும் தீபத்தை ஏற்றினர்.

நிரவதி தயா திவ்ய உதத்வத் தரங்க நிரங்குசை:
நியமயதி ய: சிஷ்யாந் சிக்ஷா க்ரமை: குண ஸங்க்ரமை:
அசரம் குரோராஜ்ஞா பாரம்பரீ பரவாநஸௌ
ந பரமிஹ தாந் தல்லக்ஷேண ஸ்வயம் அபி ரக்ஷதி

**பொருள்** – யார் ஒருவர், எல்லை காண இயலாத உயர்ந்த ஸமுத்ரத்தின் அலைகள் போன்று தடை அற்றவையும், சிறந்த குணங்களை உண்டாக்கவல்லவையும் ஆகிய கல்வி முறைகளால், தனது சிஷ்யர்களை நியமிக்கிறாரோ, அப்படிப்பட்ட குருவானவர் தன்னுடைய சிஷ்யர்களை மட்டும் காப்பாற்றவில்லை; அதே காரணத்தால், அனைவருக்கும் முதல் ஆசார்யனாக உள்ள பகவானுடைய ஆணைக்கு அடங்கி நடந்து, தன்னையும் காப்பாற்றிக் கொள்கிறார்.

ஆசார்ய க்ருத்ய அதிகாரம் ஸம்பூர்ணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீஅரவிந்தவல்லி ஸமேத ஸ்ரீபத்ரிநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## அதிகாரம் 31


நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)


www.namperumal.com / namperumal.wordpress.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# 31. சிஷ்ய க்ருத்ய அதிகாரம்

(சிஷ்யனுக்கு உள்ள கடமைகள்)

**மூலம் –**

அசிதில குருபக்தி: தத் ப்ரசம்ஸாதி சீல:
ப்ரசுர பஹுமதி: தத் வஸ்து வாஸ்து ஆதிகே அபி
குணவதி விநியோக்தும் கோபயந் ஸம்ப்ரதாயம்
க்ருதவித் அநகவ்ருத்தி: கிம் ச விந்தேத் நிதாநம்

**பொருள் –** குறைவில்லாத குருபக்தி கொண்டவனும், ஆசார்யனைப் புகழ்தல் முதலானவற்றைச் செய்தபடி உள்ளவனும், அவருடைய பொருள்கள் மற்றும் உடைமைகள் ஆகியவற்றிலும் உயர்ந்த புத்தி கொண்டவனும், சிறந்த குணங்கள் கொண்டர்களுக்காக மட்டுமே உபதேசிக்கப்படும்விதமாக ஸம்ப்ரதாயமாக வரும் உபதேசங்களைக் காப்பாற்றுபவனும், ஆசார்யன் செய்த உதவியை எப்போதும் நினைவில் கொள்பவனும், விதிக்கப்பட்டவற்றைச் செய்தபடி உள்ளவனும் ஆகிய ஒருவன், உயர்ந்த புதையலாகிய ஸர்வேச்வரனை ஏன் அடையமாட்டான்?

## ஆசார்யனுக்குச் செய்யவேண்டிய கைம்மாறு ஏதும் இல்லை

**மூலம்** - இவ் அர்த்தங்களையெல்லாம் மிடியனுக்கு அகத்துக்குள்ளே மஹாநிதியைக் காட்டிக் கொடுக்குமாப் போலே வெளியிடுகையாலே மஹோபகாரகனான ஆசார்யன் திறத்தில் சிஷ்யன் :

(1) க்ருதஜ்ஞனாயிருக்க வேண்டுமென்றும், த்ரோஹம் பண்ணாதொழிய வேண்டுமென்றும் சாஸ்த்ரங்கள் சொன்னவிடம், இரண்டு விபூதியும் விபூதிமானும் இவனைச் சீச்சீயென்னும்படியுமாய், ஹிதம் சொன்ன ப்ரஹ்லாத விபீஷணாதிகளுக்குப்

ப்ரதிகூலரான ஹிரண்ய ராவணாதிகளோடு துல்யனுமாய், "வித்யாசோரோ குருத்ரோஹீ வேதேச்வர விதூஷக: | த ஏதே பஹுபாப்மாந: ஸத்யோ தண்டயா இதி ச்ருதி:" என்கிறபடியே தண்டயனுமாகாமைக்காகவத்தனை. ப்ரத்யுபகாரம் சொன்னபடியன்று.

**விளக்கம்** – இவ்விதமாக உள்ள பல விஷயங்களை, "செல்வம் ஏதும் அற்றவனாக உள்ள ஒருவனுக்கு, அவனுடைய வீட்டிலேயே உள்ள புதையலைக் காட்டிக் கொடுத்தல்" என்பது போன்று, ஆசார்யன் மிகப் பெரிய உபகாரத்தைச் செய்கிறார். அவருடைய விஷயத்தில் சிஷ்யன் எப்படி இருக்கவேண்டும்:

(1) செய்ந்நன்றி அறிந்தவனாக இருக்கவேண்டும் என்றும், அவருக்கு ஒருபோதும் துரோகம் செய்தல் கூடாது என்றும் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இவ்விதம் கூறப்பட்டது ஏன்? நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதியில் உள்ளவர்களும், இந்த இரண்டு விபூதிகளுக்கும் எஜமானனாகிய ஸர்வேச்வரனும் இந்தச் சிஷ்யனை வெறுத்து தள்ளக்கூடாது என்பதற்காகவும்; நன்மைகளை மட்டுமே எடுத்துரைத்த ப்ரஹ்லாதன் மற்றும் விபீஷணன் விஷயத்தில் ஹிரண்யன் மற்றும் இராவணன் நடந்து கொண்டது போன்று இவன் இருத்தல் கூடாது என்பதற்காகவும்; வித்யாசோரோ குருத்ரோஹீ வேதேச்வர விதூஷக: | த ஏதே பஹுபாப்மாந: ஸத்யோ தண்டயா இதி ச்ருதி: - ஆசார்யனின் அனுமதி இல்லாலம் அவருடைய உபதேசங்களைக் கேட்டு வித்யையைத் திருடுதல், அவருக்குத் துரோகம் செய்பவன், வேதம் மற்றும் ஈச்வரனை தூஷிப்பவன் ஆகியவர்கள் மிகுந்த பாபப் செய்தவர்கள் ஆவர். இவர்களை உடனேயே தண்டிக்கவேண்டும் என ச்ருதி கூறுகிறது – என்பதற்கு ஏற்ப அந்தச் சிஷ்யன் தண்டனை பெறும் நிலையை அடையக்கூடாது என்பதற்காகவுமே ஆகும். மாறாக, "செய்ந்நன்றி அறிந்தவனாக இருக்கவேண்டும், அவருக்கு ஒருபோதும் துரோகம் செய்தல் கூடாது" என்னும் தன்மைகளால் அவருக்கு ப்ரதி உபகாரம் செய்தலே கூறப்பட்டது என்று கருத்து அல்ல.

**மூலம்** - (2) "சரீரமர்த்தம் ப்ராணம் ச ஸத்குருப்யோ நிவேதயத்" என்றும், "ஸர்வஸ்வம் வா ததர்தம் வா ததர்த்தார்த்தார்த்தம் ஏவ வா | குரவே தக்ஷிணாம் தத்யாத் யதாசக்த்யபி வா புந:" என்றும் இப்படைகளிற் சொல்லுகிறவையும், ப்ரணிபாத அபிவாதநாதிகளைப் போலே இவனுக்குச் சில கர்த்தவ்யங்களைச் சொல்லிற்றத்தனை போக்கி, "க்ருபயா

நி:ஸ்ப்ருஹோ வதேத்” என்னும்படியிருக்கிற அநந்யப்ரயோஜநனான ஆசார்யனுக்குப் ப்ரத்யுபகாரம் சொன்னபடியன்று.

**விளக்கம்** – விஹகேச்வர ஸம்ஹிதையில் - சரீரமர்த்தம் ப்ராணம் ச ஸத்குருப்யோ நிவேதயத் – ஒரு சிஷ்யன் தனது சரீரம், செல்வம், ப்ராணன் ஆகியவற்றை சிறந்த ஆசார்யனிடம் சமர்ப்பணம் செய்யவேண்டும் – என்றும், ஸர்வஸ்வம் வா ததர்த்தம் வா ததர்த்தார்த்தார்த்தம் ஏவ வா | குரவே தக்ஷிணாம் தத்யாத் யதாசக்த்யபி வா புந: - சிஷ்யன் தனது செல்வத்தை முழுவதுமோ, அல்லது பாதி பாகத்தையோ, அல்லது கால் பாகத்தையோ, அல்லது தனது சக்திக்கு ஏற்பவோ, தனது ஆசார்யனுக்கு குருதக்ஷிணையாக அளிக்கவேண்டும் – என்றும் கூறப்பட்டுள்ளன. இது போன்ற உபதேசங்கள் அனைத்தும், ஆசார்யனை வணங்குதல் என்பது போன்ற கடமைகளாக மட்டுமே கூறப்பட்டுள்ளன. இவை மூலமாக, சாண்டில்ய ஸ்ம்ருதி (1-115) - க்ருபயா நி:ஸ்ப்ருஹோ வதேத் – ஒரு பயனையும் கருதாமல் உபதேசிக்கவேண்டும் – என்று கூறுவதற்கு ஏற்ப உள்ளவரும், எந்தப் பயனையும் எதிர்பாராமல் உள்ளவரும் ஆகிய ஆசார்யனுக்கு ப்ரதி உபகாரம் செய்தலே கூறப்பட்டது என்று கருத்து அல்ல.

**மூலம்** - (3) பகவான் பக்கல் போலே ஆசார்யன் பக்கலிலே வர்த்திப்பானென்றும், அவனுக்கு நல்லனானாற்போலே ஆசார்யனுக்கும் நல்லனாயிருப்பானென்றும் வேதாந்தங்களிற் சொன்னதும்; “ந ப்ரமாத்யேத் குரௌ சிஷ்யோ வாங்மந:காய கர்மபி: | அவிபஜ்யாத்மநா ஆசார்யம் வர்த்தேத அஸ்மிந் யதா அச்யுதே”, “தேவமிவாசார்யம் உபாஸீத” என்று சாண்டில்ய ஆபஸ்தம்பாதிகள் சொன்னதுவும் ஆசார்யனுக்கு ப்ரத்யுபகாரம் சொன்னபடியன்று; சாஸ்த்ர சக்ஷுஸ்ஸான இவன் விழிகண் குருடனாகாமைக்கும் பகவதநுபவம் போலே விலக்ஷணமான இவ் அநுபவத்தை ஜந்ம பிக்ஷுவான இவன் இழவாமைக்கும் சொல்லிற்றத்தனை.

**விளக்கம்** – “பகவானிடம் எவ்விதம் நடந்துகொள்வானோ அதே போன்று ஆசார்யனிடமும் இருத்தல் வேண்டும்” என்றும், “பகவானிடம் கொண்டுள்ள பக்தியைப் போன்றே ஆசார்யனிடம் பக்தியுடன் இருத்தல்வேண்டும்” என்றும் வேதாந்தங்களில் உபதேசிக்கப்பட்டது. இதனைப் போன்றே, சாண்டில்ய ஸ்ம்ருதி (1-118) - ந ப்ரமாத்யேத் குரௌ சிஷ்யோ வாங்மந:காய கர்மபி: | அவிபஜ்யாத்மநா ஆசார்யம் வர்த்தேத அஸ்மிந்

யதா அச்யுதே – சிஷ்யன் ஒருவன் தனது ஆசார்யன் விஷயத்தில் வாக்கு, மனம், சரீரம் ஆகியவற்றால் அபராதம் செய்யக்கூடாது. ஆசார்யனைத் தன்னிடமிருந்து வேறுபடுத்திக் காணாமல், அச்யுதனிடம் நடப்பது போன்றே நடக்கவேண்டும் – என்றும், ஆபஸ்தம் ஸூத்ரம் (1-2-6-13) - தேவமிவாசார்யம் உபாஸீத – பகவானைப் போன்றே ஆசார்யனையும் உபாஸிக்கவேண்டும் – என்றும் கூறப்பட்டன. இந்த உபதேசங்கள் அனைத்தின் மூலமும், "ஆசார்யனுக்கு ப்ரதி உபகாரம் செய்யவேண்டும்", என்பது கூறப்படவில்லை. மாறாக, சாஸ்த்ரங்களை மட்டுமே கண்களாகக் கொண்டு அறியவேண்டிய சிஷ்யன் ஒருவன், தனது கண்கள் இருந்தும் குருடன் போன்று இல்லாமல், பகவத் அனுபவம் போன்றே வேறுபட்டதாக உள்ள ஆசார்ய அனுபவத்தை இதுவரை இழந்து நின்றது போன்று இனியும் இழக்காமல் இருப்பதற்காகவே கூறப்பட்டன.

**மூலம்** – இப்படி இவ்விஷயத்தில் ப்ரத்யுபகாரமில்லை யென்னுமிடத்தை, "ப்ரஹ்மவித்யா ப்ரதாநஸ்ய தேவைரபி ந சக்யதே | ப்ரதிப்ரதாநமபி வா தத்யாத் சக்தித ஆதாராத்" என்று ஸ்ரீசாண்டில்ய பகவான் அருளிச்செய்தான். இதில், "யதா சக்தி தாநம்" சொன்னதுவும் தன் ஆதாரத்துக்குப் போக்குவீடாகச் சொன்னதத்தனை. இவ்வளவைக் கொண்டு ப்ரத்யுபகாரம் பண்ணினானாகத் தன்னை நினைத்திருக்கப்பெறான்.

**விளக்கம்** – இவ்விதமாக, ஆசார்யன் விஷயத்தில் எந்தவிதமான ப்ரதி உபகாரத்திற்கும் இடமே இல்லை என்பதை, சாண்டியஸ்ம்ருதி (1-117) - ப்ரஹ்மவித்யா ப்ரதாநஸ்ய தேவைரபி ந சக்யதே | ப்ரதிப்ரதாநமபி வா தத்யாத் சக்தித ஆதாராத் – ப்ரஹ்மவித்யையை உபதேசித்த ஆசார்யனுக்குக் கைம்மாறு செய்வதற்கு தேவர்களுக்கும் சக்தி இல்லை. ஆனாலும், சிஷ்யன் தனது சக்திக்கு ஏற்ப ஏதேனும் அளிக்கவேண்டும் – என்று கூறியது. இந்த வாக்கியத்தில் உள்ள "யதா சக்தி தாநம் – தனது சக்திக்கு ஏற்ப தானம்" என்பதும் கூட, தான் ஆசார்யன் மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துவதற்காகவே ஆகும். இவ்விதம் செய்வதன் மூலம், தான் ஆசார்யனுக்கு ப்ரதி உபகாரம் செய்ததாக எண்ணக்கூடாது.

## சிஷ்யனுடைய கடமைகள்

**மூலம்** – (1) இவன் உபதேசித்த அர்த்தங்களை, “கபாலஸ்தம் யதா தோயம் ச்வத்ருதௌ ச யதா பய: | த்ருஷ்டம் ஸ்யாத் ஸ்தாநதோஷேண வ்ருத்திஹீநே ததா ச்ருதம்” என்கிறபடியே தன் விபரீத அநுஷ்டாநங்களாலே கபாலஸ்த தோயாதிகளைப் போலே, அநுபஜீவ்யமாக்காதொழியவும்.

**விளக்கம்** – (1) ஆசார்யன் தனக்கு உபதேசித்த ஆழ்பொருள்களை, மஹாபாரதம் சாந்தி பர்வம் (35-42) - கபாலஸ்தம் யதா தோயம் ச்வத்ருதௌ ச யதா பய: | த்ருஷ்டம் ஸ்யாத் ஸ்தாநதோஷேண வ்ருத்திஹீநே ததா ச்ருதம் – மண்டை ஓட்டில் உள்ள தண்ணீரும், நாயின் தோலால் செய்யப்பட்ட பையில் உள்ள பாலும், அவை உள்ள இடங்கள் காரணமாக தோஷத்துடன் கூடியவையாக உள்ளது போன்று, ஒழுக்கம் இல்லாதவனுக்குச் செய்யப்பட்ட உபதேசமும் ஆகிறது – என்று கூறுவதற்கு ஏற்ப, தன்னுடைய தகாத செய்கைகளால், மண்டை ஓட்டில் வைக்கப்பட்டவற்றைப் போன்று, மற்றவர்களுக்குப் பயன்படாதபடி செய்யாமல் இருக்கவேண்டும்.

**மூலம்** – (2) “யச்ச்ருதம் ந விராகாய ந தர்மாய ந சாந்தயே | ஸுபத்தமபி சப்தேந காகவசிதமேவ தத்” என்கிறபடியே, கற்றதே ப்ரயோஜநமாக்காதொழியவும். (3) இவற்றைக் கொண்டு வாந்தாசியாகாதொழியவும். (4) இவற்றையெல்லாம், “பண்டிதைரர்த்த கார்பண்யாத் பண்ய ஸ்த்ரீபிரிவ ஸ்வயம் | ஆத்மா ஸம்ஸ்க்ருத்ய ஸம்ஸ்க்ருத்ய பரோபகரணீக்ருத:” இத்யாதிகளில் பரிஹஸிக்கிறபடியே, கணிகாலங்காரமாக்குதல், விலைச்சாந்தாக்குதல், அம்பலத்தில் அவற்பொதியாக்குதல், குரங்கின் கையில் பூமாலையாக்குதல் செய்யாதொழியவும்.

**விளக்கம்** - (2) இதிஹாஸ ஸமுச்சயம் (12-38) - யச்ச்ருதம் ந விராகாய ந தர்மாய ந சாந்தயே | ஸுபத்தமபி சப்தேந காகவசிதமேவ தத் – எத்தகைய கல்வியானது வைராக்யம், தர்மம், அடக்கம் ஆகியவற்றை அளிக்கவில்லையோ, அத்தகைய கல்வியானது காக்கையின் ஒலி போன்று பயனற்றதே ஆகும் – என்று கூறுவதற்கு ஏற்ப, தான் பெற்ற உபதேசங்கள் அனைத்தையும், “கற்றது மட்டுமே பயன். கடைப்பிடிக்கப்படவில்லை” என்னும் நிலைக்குத் தள்ளக்கூடாது. (3) அந்த உபதேசங்களை, கக்கியதை உண்பவன் போன்று, வியாபாரம் ஆக்குதல் கூடாது. (4) மேலும், “பண்டிதைரர்த்த கார்பண்யாத்

பண்ய ஸ்த்ரீபிரிவ ஸ்வயம் | ஆத்மா ஸம்ஸ்க்ருத்ய ஸம்ஸ்க்ருத்ய பரோபகரணீக்ருத: - விலைமாதர்கள் தங்களுடைய சரீரத்தை நன்கு அலங்கரித்து மற்றவர்களுக்குப் பயன்படும்விதமாகச் செய்கிறார்கள், இதனைப் போன்றே கல்வியில் சிறந்த ஒரு சிலர் தங்களுடைய கல்வியைப் பொருளாசை காரணமாக மற்றவர்களுக்கே பயன்படுத்துகிறார்கள்" என்று பரிகாசம் செய்வதற்கு ஏற்ப, தாங்கள் பெற்ற உபதேசங்களை விலைமாதர்களுடைய அலங்காரம் போன்றும், உயர்ந்த சந்தனத்தை தான் அனுபவிக்காமல் விலைக்கு விற்பது போன்றும், கையில் உள்ள அவல் மூட்டையைப் பிரிக்க அதனை மற்றவர்கள் தின்று தீர்ப்பது போன்றும், குரங்கின் கையில் சிக்கிய பூமாலை போன்றும் செய்யாமல் இருக்கவேண்டும்.

**மூலம்** – (5) அடியிலே வித்யைதான் "சேவதிஷ்டே அஸ்மி ரக்ஷ மாம்" என்று ப்ராஹ்மணனை அபேக்ஷித்தபடியே முன்பே அஸூயாதிகளைக் கைப்பிடித்து வைப்பார் கையிற் காட்டிக்கொடாதே ரக்ஷித்துக் கொள்ளவும்.

**விளக்கம்** – (5) ப்ரஹ்மவித்யையானது ப்ராஹ்மணனிடம் வந்து, "மநுஸ்ம்ருதியில் (2-114) - சேவதிஷ்டே அஸ்மி ரக்ஷ மாம் – நான் உனக்குச் சேம நிதியாகவே எப்போதும் இருப்பேன். என்னை நீ காப்பாயாக", என்று கூறுவதற்கு ஏற்ப, வித்யையைப் பொறாமை உள்ளவர்களுக்கு உபதேசிக்காமல் காப்பாற்றவேண்டும்.

**மூலம்** – (6) பிறவிக்குருடனான தன்னை அயர்வறுமமரர்கள் பரிஷத்துக்கு அர்ஹனாம்படி திருத்தின மஹோபகாரகனுக்குச் செய்யலாம் ப்ரத்யுபகாரம் இல்லையென்னுமிடத்தைத் தெளிந்து, "ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராமகுலாதிபி: | விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்ய: தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி" என்கிற நிலையிலுங்காட்டில், "வஸிஷ்ட வ்யபதேசிந:" என்கிறபடியே சரண்யனான பெருமாள் வம்ச க்ரமாகதமாகப் பிறந்து படைத்துக் கைக்கொண்ட நிலை இந்நிலையென்று பரிக்ரஹித்து "என்னைத் தீ மனம் கொடுத்தாய் உனக்கு என் செய்கேன்?" என்று இருக்கவும் ப்ராப்தம்.

**விளக்கம்** – (6) பிறவியிலேயே ஏதும் அறியாத குருடனாக இருந்த தன்னை, ஞானச்சுருக்கம் ஏதும் இல்லாத நித்யஸூரிகளுக்குச் சமமாகச் சென்று அமரலாம்படியாகத் தகுதி பெறச் செய்து திருத்திய மிகப் பெரிய உபகாரம் செய்தவருக்கு,

செய்யத்தக்கதான ப்ரதி உபகாரம் ஏதும் இல்லை என்று அறியவேண்டும். அதன் பின்னர், "விஷ்வக்சேந ஸம்ஹிதை - ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராமகுலாதிபி: | விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்ய: தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி - மற்ற தேவதைகளைப் பற்றாத பரமபாகவதனைப் பற்றிக் குறிப்பிடும்போது அவனுடைய ஊர், குலம் முதலானவற்றைக் கொண்டு அவனைக் குறிப்பிடக்கூடாது; அவனுக்கு எம்பெருமானுடன் உள்ள தொடர்பைக் கூறியே கூறவேண்டும்; காரணம், அவனுக்கு அனைத்துமாக எம்பெருமானே அல்லவோ உள்ளான்" என்றுள்ள நிலையைக் காட்டிலும், இராமாயணம் பாலகாண்டம் (19-2) - வஸிஷ்ட வ்யபதேசிந: - வஸிஷ்டரைக் கொண்டு உன்னைக் கூறிக் கொள்கின்ற – என்பதற்கு ஏற்ப, அனைவருக்கும் புகலிடமாக உள்ள இராமனே தனது வம்சத்தை விடுத்து, இவ்விதம் ஆசார்யனைக் கொண்டு அடையாளப்படுத்திக் கொள்வது போன்ற நிலையில் நின்றான் – என்று இந்த நிலையைக் கைக்கொண்டு, திருவாய்மொழி (6-7-8) - என்னைத் தீ மனம் கொடுத்தாய் உனக்கு என் செய்கேன் – என்று ஆசார்யனைக் குறித்து உரைக்கும்படியாக இருத்தல் ஏற்புடையது ஆகும்.

**மூலம்** – தான் இப்படிப் பெற்ற ரஹஸ்யத்ரய ஸாரார்த்தமான மஹாதநத்தை முன்னில் அதிகாரத்திற் சொன்னபடியே உசித ஸ்தாநம் அறிந்து ஸமர்ப்பிக்கும்போது, "கதயாமி யதாபூர்வ தக்ஷாத்யைர்முநிஸத்தமை: | ப்ருஷ்ட: ப்ரவோச பகவாந் அப்ஜயோநி: விதாமஹ: || தைச்சோக்தம் புருகுத்ஸாய பூபுஜே நர்மதாதடே | ஸாரஸ்வதாய தேநாபி மம ஸாரஸ்வதேந ச" என்று ஸ்ரீபராசரப்ரஹ்மர்ஷி மைத்ரேய பகவானுக்கு அருளிச் செய்தாற்போலே, குருபரம்பரையைப் ப்ரகாசிப்பித்துக் கொண்டு, தன் க்ருதஜ்ஞதையும் அர்த்தத்தின் சீர்மையும் தோற்ற, உபதேசிக்கவேண்டும்.

**விளக்கம்** – இவ்விதம் சிஷ்யன் ஒருவன், தான் பெற்ற ரஹஸ்ய த்ரயத்தின் ஆழ்பொருள்கள் என்பதான பெரும் செல்வத்தை, வேறு ஒரு தகுந்தவருக்கு உபதேசம் செய்யும்போது, ஸ்ரீவிபு. (1-2-8, 1-2-9) - கதயாமி யதாபூர்வ தக்ஷாத்யைர்முநிஸத்தமை: | ப்ருஷ்ட: ப்ரவோச பகவாந் அப்ஜயோநி: விதாமஹ: || தைச்சோக்தம் புருகுத்ஸாய பூபுஜே நர்மதாதடே | ஸாரஸ்வதாய தேநாபி மம ஸாரஸ்வதேந ச – முன்பு தாமரையில் உதித்த நான்முகன், தக்ஷர் போன்ற முனிவர்களால் கேட்கப்பட்டு, அவர்களுக்கு உரைத்தான். பின்னர் அவர்களால், நர்மதை நதியின் கரையில் புருகுத்ஸன் என்ற அரசனுக்கு உபதேசிக்கப்பட்டது. அந்த அரசன் அதனை ஸாரஸ்வதனுக்கு உரைத்தான். அதனை

நான் உனக்குக் கூறுகிறேன் – என்று ஸ்ரீபராசர மஹரிஷியானவர், பகவான் மைத்ரேயருக்கு அருளிச்செய்தது போன்று, தனது குருபரம்பரையை வெளியிட்டு, அந்தப் பரம்பரை விஷயத்தில் செய்ந்நன்றி மற்றும் உபதேசங்களில் ஆழ்பொருள்கள் ஆகியவை வெளிப்படும்படியாக உபதேசம் செய்யவேண்டும்.

**மூலம்** – அத்யாத்ம ரஹஸ்யங்களைச் சொல்லுமவன் ஸம்ப்ரதாயமின்றிக்கேயிருக்க ஏடு பார்த்தாதல், சுவறேறிக் கேட்டாதல் சொல்லுமாகில் களவு கொண்டு ஆபரணம் பூண்டாற்போலே கண்டார்க்கெல்லாம் தான் அஞ்சவேண்டும்படியாம். "யத்ருச்சயா ச்ருதோ மந்த்ர: சந்நேநாதச்சலேந வா | பத்ரேக்ஷிதோ வா வ்யர்த்த: ஸ்யாத் ப்ரத்யுதாநர்த்ததோ பவேத்" இத்யாதிகளிற்படியே ப்ரத்யவாய பர்யந்தமுமாம். கேட்டுச் சொல்லச் செய்தே, "தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா", "ப்ரணிபத்யாபிவாத்ய ச" இத்யாதிகளிற் சொல்லுகிற முறையொழியக் கேட்டுச் சொல்லுமாகில் காலன் கொண்டு ஆபரணம் பூண்டாற்போலே கண்டார் எல்லோரும் தன்னை அருவருக்கும்படியாம். "யச்சாதர்மேண விப்ரூதே யச்சாதர்மேண ப்ருச்சதி | தயோரந்யதர: ப்ரைதி வித்வேஷம் வா அதிகச்சதி" என்கிறபடியே அநர்த்தாவஹமுமாம்.

**விளக்கம்** – ஆழ்ந்த ரஹஸ்யங்களை தானாகவே பல நூல்களைக் கொண்டு அறிந்து கொண்டோ அல்லது அடுத்தவர்கள் கூறுவதை மறைந்து நின்று கேட்டோ அறியும் ஒருவன், அதனை மற்றவர்களுக்கு உபதேசம் செய்ய முற்படும்போது, களவு செய்யப்பட்ட ஆபரணத்தை அணியும் ஒருவன், அனைவரையும் கண்டு அஞ்சுவது போன்று, அச்சத்துடன் இருக்கும் நிலை உண்டாகும்; மேலும், இந்தச் செய்கையானது, பாத்மஸம்ஹிதை - யத்ருச்சயா ச்ருதோ மந்த்ர: சந்நேநாதச்சலேந வா | பத்ரேக்ஷிதோ வா வ்யர்த்த: ஸ்யாத் ப்ரத்யுதாநர்த்ததோ பவேத் – மறைந்து நின்றோ அல்லது நூல்கள் மூலமோ கற்ற விஷயங்கள் பயனை அளிக்காது, தீமையை உண்டாக்கக்கூடும் – என்று கூறுவதற்கு ஏற்ப, பாபத்தையும் உண்டாக்கக்கூடும். முறையாக அறிந்த விஷயங்களை ஒருவன் மற்றொருவனுக்கு உபதேசிக்கும்போது, கீதை (4-34) - தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா – உண்மையை அறிந்தவர்களுடைய கால்களில் விழுந்து வணங்கி அவர்களுக்குத் தொண்டு செய்து – என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-1-1) – ப்ரணிபத்ய அபிவாத்ய ச – வணங்கி அபிவாதநம் செய்து – என்றும் கூறுவதற்கு ஏற்ப, தன்னால் உபதேசிக்கப்படும் அந்த மற்றொருவன், தன்னை வணங்குதல் முதலானவற்றைச்

செய்யாமல் உள்ளபோதிலும் அவனுக்கு உபதேசம் செய்தால், “தனது ஆயுளை நீட்டிக்கும்விதமாக எள்ளால் செய்யப்பட்ட தனது ஒரு உருவ பொம்மைக்கு ஆபரணங்களை அணிவித்து, அதனைத் தானமாக வழங்க முற்படும்போது, அதனைப் பெறுவதற்கு அனைவரும் அஞ்சுவர்” என்பது போன்று, மற்றவர்கள் அஞ்சும்படியாக நிற்பான். மேலும், மஹாபாரதம் சாந்திபர்வம் (335-51) - யச்சாதர்மேண விப்ரூதே யச்சாதர்மேண ப்ருச்சதி | தயோரந்யதர: ப்ரைதி வித்வேஷம் வா அதிகச்சதி – முறையின்றி உபதேசம் செய்பவன் மற்றும் கற்பவன் ஆகிய இருவரில் ஒருவன் இறப்பான் அல்லது பகைவன் ஆவான் – என்று கூறுவது போன்று தீமை உண்டாகும்.

**மூலம்** – யதா ந்யாயம் கேட்டுச் சொல்லச் செய்தே சொல்லும்போது, குருவைப் ப்ரகாசிப்பியாதொழியுமாகில், இவன் சொல்லுகிற அர்த்தங்கள் வேரில்லாக் கொற்றான் போலே அடியற்றவையோ என்று சிஷ்யனுக்கும் அதிசங்கை பிறக்கும்படியாய் அநாதர விஷயமுமாம். “ஸ்வகுரூணாம் ஸ்வசிஷ்யேப்ய: க்யாபநம் சாக்ருதம் ததா” என்று த்வாத்ரிம்சத் அபசார வர்க்கத்திலே குருவைப் ப்ரகாசிப்பியாதொழிகையும் படிக்கப்பட்டது. அப்போது, “குரும் ப்ரகாசயேத்தீமாந் மந்த்ரம் யத்நேந கோபயேத் | அப்ரகாச ப்ரகாசாப்யாம் க்ஷீயேதே ஸம்பதாயுஷீ” என்கிறபடியே ஜ்ஞாந வைசத்ய பூர்வகமான பகவதநுபவ ஸம்பத்தும், ஆத்மாவுக்கு ஸத்தா அநுவ்ருத்தி ஹேதுவான, சேஷத்வ அநுஸந்தாந பூவக ஸ்வநிஷ்டையும் குலையும்படியாம். குருவைப் ப்ரகாசிப்பியா நிற்கச் செய்தே, அவன் பண்ணின சாஸ்த்ரீய உபதேசத்துக்கு விருத்தம் சொல்லுமாகில், விப்ரலம்பகனென்று பேருமாய், “ஜ்யோதிஷாம் வ்யவஹாரம் ச ப்ராயச்சித்தம் சிகித்ஸநம் | விநா சாஸ்த்ரேண யோ ப்ரூயாத் தமாஹுர் ப்ரஹ்மகாதகம்” என்கிறபடியே பாபிஷ்டனுமாம்.

**விளக்கம்** – சரியான முறையில் விண்ணப்பிக்கப்பட்டு உபதேசித்தால் கூட, அவ்வித உபதேசிக்கும்போது, தனது ஆசார்யனைக் குறித்து புகழாமல் ஒருவன் இருந்தால், அவன் கூறுகின்ற உபதேசங்கள் அனைத்தும், “வேர் ஏதும் இல்லாமல் மரத்திலேயே வளரும் கொடி” என்பது போன்று, “இந்த உபதேசங்களில் ஏதேனும் முறை உள்ளதோ” என்று கேட்பவர்களுக்கு சந்தேகம் எழுந்து, அவனை ஒதுக்கக்கூடும். மேலும், ஸ்வகுரூணாம் ஸ்வசிஷ்யேப்ய: க்யாபநம் சாக்ருதம் ததா – தனது சிஷ்யர்களிடம் தனது குருவைக் குறித்து வெளிப்படுத்தாமல் இருத்தல் – என்பது முப்பத்து இரண்டு வகையான அபசாரங்களில்

ஒன்றாகும் என, குருவைப் புகழாமல் இருத்தல் என்பது குறித்துக் கூறப்பட்டது. இவ்விதம் ஆகும்போது, சேஷஸம்ஹிதை (14-50) - குரும் ப்ரகாசயேத் தீமாந் மந்த்ரம் யத்நேந கோபயேத் | அப்ரகாச ப்ரகாசாப்யாம் க்ஷீயேதே ஸம்பதாயுஷீ – அறிவுள்ளவன் தனது குருவை வெளிப்படுத்தவேண்டும். மந்த்ரத்தை யத்நம் கொண்டு மறைக்கவேண்டும். குருவை வெளிப்படுத்தாமலும், மந்த்ரத்தை மறைக்காமலும் இருந்தால், ஞானமும் நிஷ்டையும் தேய்கின்றன – என்று கூறுவதற்கு ஏற்ப, தெளிவான ஞானத்துடன் கூடியதான பகவத் அனுபவம் என்னும் செல்வமும், "எனது ஆத்மாவும் ஒரு பொருள்" என்று கூறும்படியாகச் செய்யவல்ல கைங்கர்ய நிஷ்டையும் குறையும். ஒருவன் தனது குருவைப் புகழ்ந்தபடி இருந்தாலும், அவர் செய்த சாஸ்த்ர உபதேசங்களுக்கு முரணாகப் பொருள் கூறினால், "வஞ்சகன்" என்னும் பெயர் உண்டாகும்; மேலும், ஜ்யோதிஷாம் வ்யவஹாரம் ச ப்ராயச்சித்தம் சிகித்ஸநம் | விநா சாஸ்த்ரேண யோ ப்ரூயாத் தமாஹுர் ப்ரஹ்மகாதகம் – ஜோதிடம், நீதி, ப்ராயச்சித்தம், வைத்தியம் ஆகியவற்றுக்கு, அவற்றுக்கு உண்டாகிய சாஸ்த்ரத்திற்கு முரணாகப் பொருள் உரைப்பவனை ப்ரஹ்மஹத்தி செய்தவன் என்றே கூறவேண்டும் – என்பதற்கு ஏற்ப பாபமும் உண்டாகும்.

**மூலம்** – (5) ஸச்சிஷ்யனுக்குப் ப்ராப்த தசையில் உபதேசத்தைத் தவிருமாகில், லுப்தனென்று பேருமாய், "பாத்ரஸ்தம் ஆத்மஞானம் ச க்ருத்வா பிண்டம் ஸமுத் ஸ்ருஜேத் | நாந்தர்தாயநம் ஸ்வயம் யதா யாதி ஜகத்பீஜம் அபீஜக்ருத்" என்கிற பகவந் நியோகத்தையும் கடந்தானாம்.

**விளக்கம்** – (5) தன்னுடைய சிஷ்யன் ஒருவனுக்குத் தகுந்த காலத்தில் உபதேசம் செய்ய ஒருவன் தவறினால், அவன் "பேராசைக்காரன்" என்னும் பெயர் பெறுகிறான். அது மட்டும் அல்லாமல், பௌஷ்கர ஸம்ஹிதை (1-44) - பாத்ரஸ்தம் ஆத்மஞானம் ச க்ருத்வா பிண்டம் ஸமுத் ஸ்ருஜேத் | நாந்தர்தாயநம் ஸ்வயம் யதா யாதி ஜகத்பீஜம் அபீஜக்ருத் – தான் அறிந்த ஆத்மஞானத்தைத் தகுந்த சிஷ்யனுக்கு உபதேசித்த பின்னர் இறக்கவேண்டும். இந்த உலகின் விதை போன்ற ஆத்மஞானத்தைத் தகுந்த பண்ணில் விதைத்த பின்னர் இறக்கவேண்டும். அவ்விதம் செய்யாமல் செல்லக்கூடாது – என்று கூறுகின்ற பகவத் ஆணையையும் மீறியவன் ஆகிறான்.

**மூலம்** – ஆகையால் விளக்குப் பிடிக்குமவன், தன்னை ராஜா ஒரு கார்யத்துக்குப் போகச் சொன்னால் தன் கையில் விளக்கை அதுக்கு ப்ராப்தரானார் கையிலே கொடுத்துப் போமாப்போலே, ஸத்பாத்ரமானார்க்குத் தான் சொல்லும்போது தனக்கு உபதேசித்த ஆசார்யனை முற்பட வெளியிட்டு பின்பு தனக்கு உபதிஷ்டமான அர்த்தங்களையே சொல்லவும். சில காரணங்களாலே திவ்ய சக்ஷு: ச்ரோத்ரங்கள் பெற்றுத்தான் இவற்றாலே அறிந்து சொல்லுமவற்றையும், "வ்யாஸ ப்ரஸாதாத் ச்ருதவாந் ஏதத் குஹ்யமஹம் பரம் | யோகம் யோகேச்வராத் க்ருஷ்ணாத் ஸாக்ஷாத் கதயத: ஸ்வயம்" என்கிறபடியே, "ஸதாசார்ய ப்ரஸாதமடியாக இவ் அர்த்தமறிந்தேன். என் கைமிடுக்காலே அறிந்து சொல்லுகிறேனல்லேன்" என்ற இவ்வுண்மையை வெளியிட்டுக் கொண்டு சொல்லவும் பெறில் இவன் சொல்லும் அர்த்தங்களெல்லாம் ஸர்வர்க்கும் ஆதரணீயங்களுமாய், இவன் க்ருதஜ்ஞனாயிருந்தானென்று ஸாத்விகரும் ப்ரசம்ஸித்துப் ப்ரஸாதிக்கும்படியாய் ஸத்யவாதியாயிருந்தானென்று உபநிஷத்துக்களும் ஔபநிஷத பரமபுருஷனும் தங்களோடொக்க இவனைப் ப்ரமாணபூதன் என்று ஆதரிக்கும்படியுமாம். இப்படிக் க்ருதஜ்ஞனாய் அவஹிதனான சிஷ்யனைப் பற்ற நாம் செய்த க்ருஷி பலித்ததென்று ஆசார்யனும் க்ருதார்த்தனாயிருக்கும்.

**விளக்கம்** – அரசன் ஒருவனுக்குக் கைவிளக்கு பிடித்தபடி செல்லும் ஒருவனை வேறு ஒரு செயல் செய்வதற்காக அரசன் அனுப்பினால், அவன் தனக்குப் பதிலாகப் பொறுத்தமான வேறு ஒருவனை கைவிளக்குப் பிடிக்க ஏற்பாடு செய்துவிட்டுச் செல்வதை நாம் காணலாம். இதே போன்று, தனது ஆசார்யன் தனக்கு உபதேசித்து விட்டுச் சென்றதை, தான் ஒரு தகுதியான சிஷ்யனுக்கு உபதேசம் செய்த பின்னர் இறக்கவேண்டும். ஒருவனுக்கு, ஒரு சில காரணங்களால் திவ்யமான பார்வை மற்றும் செவிகள் கிட்டக்கூடும். அதன் விளைவாக அவன் ரஹஸ்யங்களைத் தானாகவே அறியக்கூடும். அவ்விதம் உள்ளபோது அவன், கீதை (18-75) - வ்யாஸ ப்ரஸாதாத் ச்ருதவாந் ஏதத் குஹ்யமஹம் பரம் | யோகம் யோகேச்வராத் க்ருஷ்ணாத் ஸாக்ஷாத் கதயத: ஸ்வயம் – (ஸஞ்ஜயன் கூறுதல்) வ்யாஸருடைய அருளால் தெய்வீகமான பார்வை பெற்ற நான், உயர்ந்த இந்த ரஹஸ்யமான யோகத்தை, யோகேச்வரனாகிய க்ருஷ்ணனிடமிருந்து நேரடியாகவே கேட்டேன் – என்று கூறுவது போன்று, "எனது ஆசார்யனுடைய அருளால் நான் இந்த விஷயங்களை அறிந்தேன். எனது திறமையால் நான் இதனை அறியவில்லை" என்ற உண்மையைக் கூறவேண்டும். இவ்விதம் உரைத்த பின்னர், அவன் கூறும்

உபதேசங்கள் அனைத்தும், அனைவராலும் ஏற்கப்படுவதாகவே இருக்கும். மேலும், "இவன் செய்ந்நன்றி மறவாதவன்" என்று சான்றோர்கள் இவனை அனுக்ரஹம் செய்வர். "இவன் ஸத்யத்தை உரைப்பவன் ஆவான்" என்று உபநிஷத்துக்களும், அந்த உபநிஷத்துக்களால் வெளிப்படும் பரமபுருஷனும், "இவன் நம்மைப் போன்றே ப்ரமாணமாகக் கொள்ளத்தக்கவன்" என்று கொண்டாடும்படியாக இருப்பான். மேலும், "இவ்விதம் செய்ந்நன்றி மறவாதவனும், கவனத்துடன் உள்ளவனும் ஆகிய ஒரு சிஷ்யனை அடையவேண்டும் என்று நாம் செய்த முயற்சி பலித்தது" என்று ஆசார்யனும் மகிழ்வார்.

ஸாக்ஷாந்முக்தேருபாயாந் யோ வித்யாபேதாநுபாதிசத்
கத்யதே மோக்ஷசாஸ்த்ரேஷு ஸ து ச்ரேஷ்டதமோ குரு:

**பொருள்** – எந்த ஒரு ஆசார்யன், மோக்ஷத்திற்கு நேரடியான உபாயங்களாக உள்ள வித்யைகளை உபதேசிக்கிறானோ அவனே, மோக்ஷம் குறித்த சாஸ்த்ரங்களால், "மிகவும் உயர்ந்த ஆசார்யன்" என்று கொண்டாடப்படுகிறான்.

ஆசார்யவத்தயா மோக்ஷம் ஆமநந்தி ஸ்மரந்தி ச
இஹாமுத்ர ச தத்பாதௌ சரணம் தேசிகா விது:

**பொருள்** – ஆசார்யனை அடைவதன் மூலம் மோக்ஷம் கிட்டுவதாக உபநிஷத்துக்கள் கூறுகின்றன. இந்த உலகிலும், மோக்ஷம் பெற்ற பின்னரும், ஆசார்யனுடைய திருவடிகளே தஞ்சம் என்பதாக ஆசார்யர்கள் அறிந்தனர்.

ஏற்றி மனத்து எழில் ஞான விளக்கை இருள் அனைத்தும்
மாற்றினவர்க்கு ஒரு கைம்மா மாயனும் காணகில்லான்
போற்றி உகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்கு புகழ்
சாற்றி வளர்ப்பதும் கற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே

**பொருள்** – நம்முடைய மனதில் உள்ள அறியாமை என்னும் இருள் அனைத்தும் விலகும்படியாக, ஞானம் என்னும் தீபத்தை ஏற்றி வைக்கும் ஆசார்யனுக்குச் செய்யவேண்டிய கைம்மாறு என்ன என்பதை ஸர்வேச்வரனும் அறியமாட்டான்.

ஆசார்யனை நாம் போற்றுவதும், நமது மனதில் எப்போதும் எண்ணுவதும், அவருடைய புகழை நாம் கொண்டாடி மேலும் வளர்ப்பதும் ஆகிய செயல்கள் அனைத்தும், அவர் நமக்கு முன்பு செய்த உபகாரத்தைக் காணும்போது, அற்பமே ஆகும்.

அத்யாஸீந துரங்க வக்த்ர விலஸத் ஜிஹ்வா அக்ர ஸிம்ஹாஸநாத்
ஆசார்யாத் இஹ தேவதாம் ஸமாதிகாம் அந்யாம் ந மந்யாமஹே
யஸ்ய அஸௌ பஜதே கதாசித் அஜஹத் பூமா ஸ்வயம் பூமிகாம்
மக்நாநாம் பவிநாம் பவார்ணவ ஸமுத்தாராய நாராயண:

**பொருள்** – ஸம்ஸாரத்தில் மூழ்கியபடி உள்ள ஸம்ஸாரிகளை, ஸம்ஸாரம் என்னும் ஸமுத்ரத்திலிருந்து கரையேற்றும் விதமாக, ஸ்ரீமந்நாராயணன், தனது மேன்மையைக் கைவிடாதபடியாக, ஆசார்யன் என்னும் வடிவத்தைத் தானே எடுக்கிறான். அப்படிப்பட்ட ஆசார்யனுடைய நாக்கு நுனியானது, ஹயக்ரீவன் ஏறி அமர்ந்துள்ள ஸிம்ஹாஸனமாக விளங்குகிறது. அவரைக் காட்டிலும் இங்கு வேறு எந்த ஒரு தேவதையையும் உயர்ந்ததாக் நாம் எண்ணவில்லை.

சிஷ்ய க்ருத்ய அதிகாரம் ஸம்பூர்ணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீஅரவிந்தவல்லி ஸமேத ஸ்ரீபத்ரிநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்



ஸ்வாமி வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(மூலம், எளிய தமிழ்நடை)

## அதிகாரம் 32


நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)



www.namperumal.com / namperumal.wordpress.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# 32. நிகமந அதிகாரம்

(இதுவரை கூறப்பட்ட அதிகாரங்களின் சுருக்கம்)

**மூலம் –**

கர பதரித விச்வ: கச்சித் ஆசார்ய த்ருஷ்டயா
முஷித நிகில மோஹோ மூலமந்த்ராதி போக:
ஸகுண விஷய ஸித்தௌ ஸம்ப்ரதாயம் ப்ரயச்சந்
ஸுசரித ஸிலஹாரீ ஸூரிப்ருந்த அபிநந்த்ய:

**பொருள் –** ஒரு அதிகாரி, தனது ஆசார்யனுடைய கடாக்ஷம் காரணமாக, அனைத்து விஷயங்களையும் உள்ளங்கை இலந்தைப்பழம் போன்று நன்றாக அறிகிறான். இதனால் தனது அனைத்துவிதமான அஜ்ஞானங்களும் நீங்கப் பெறுகிறான். மூலமந்த்ரம் முதலானவற்றுடைய ஆழ்பொருளை எப்போதும் எண்ணியபடி இருத்தல் என்னும் அனுபத்தை அடைகிறான். சிறந்த குணங்கள் கொண்ட வேறு ஒருவனைச் சந்தித்தால், தன்னுடைய ஸம்ப்ரதாயத்தைக் குறித்து உபதேசிக்கிறான். சான்றோர்களுடைய பழக்கங்கள் என்பதான தானியங்களைப் பொறுக்கி எடுக்கிறான். இதனால் நித்யஸூரிகளுடைய கூட்டத்தால் கொண்டாடப்படுகிறான்.

## கடந்த அதிகாரங்களுடைய திரண்ட பொருள்

**மூலம் –** (1) இப்படி இஜ்ஜீவாத்மா ஸூரிகளோடு ஒக்க பகவதநுபவ ரஸத்துக்கு ஸ்வரூப யோக்யனாய் வைத்து அநாதிகாலம் இழந்து ஓரளவிலே புரிந்து ஸதாசார்ய ஸம்பந்தமுண்டாய்த் தத்வ ஹிதங்களை அறியத் தொடங்கினபடியும்; (2) இவற்றை அறிவிக்கும் ப்ரமாணங்களில் ரஹஸ்யத்ரயம் ஸாரதமமானபடியும்; (3) இவற்றைக் கொண்டு அறியும் அர்த்தங்களில் ஈச ஈசிதவ்யங்களினுடைய சரீர ஆத்மபாவ

ஸம்பந்தாதிகள் ப்ரதாந ப்ரதிதந்த்ரமாய் ஜ்ஞாதவ்யங்களானபடியும்; (4) இஸ் ஸம்பந்தத்தோடே கூட ஜ்ஞாதவ்யமாக பூர்வாசார்ய ஸங்க்ருஹீதமான அர்த்தபஞ்சகம் ரஹஸ்யத்ரயத்தில் கிடக்கும்படியும்; (5) இவ் அர்த்தபஞ்சகத்துக்குள்ளே தத்வத்ரயாதி விபாக சிந்தை பண்ணுவார்க்குத் தாத்பர்யமும்; (6) இவ் அர்த்தபஞ்சகத்தில் ஈச்வரனாக ஸாத்விக சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டவன் ஸ்ரீய:பதியென்னுமிடமும்; (7) இத் தத்வ த்ரயங்களெல்லாம் தெளிந்தவன் முமுக்ஷுவாய் மோக்ஷ உபாய உந்முகனாம்படியும்; (8) அதிகாரி விபாகமும்; (9) இவ் அதிகாரிகளுக்கு அநுரூபமான உபாய விபாகமும்; (10) இவ்வுபாயங்களில் ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனுக்கு அதிகார விசேஷம் இருக்கும் கட்டளையும்; (11) ஸக்ருத் கர்த்தவ்யமான இவ்வுபாயத்துக்கு அநுரூபமாக விஹிதமான பரிகர விபாகமும்; (12) முமுக்ஷுவுக்கு பரிகரமான பரந்யாஸ ரூப ப்ரதாந கர்த்தவ்யத்தினுடைய ஸந்நிவேசம் இருக்கும்படியும்; (13) இப்படி ஸாங்க ப்ரபதந அநுஷ்டானம் பண்ணினவன் ஸர்வரக்ஷண அதிக்ருதன் பக்கலிலே ந்யஸ்த பரனாகையாலே க்ருதக்ருத்யனாம்படியும்; (14) இந் நிஷ்டை தனக்குப் பிறந்தமை கண்டு தான் தேறியிருக்கைக்கு அடையாளங்களும்; (15) இவனுக்கு ஆர்த்தியில் மாந்த்யத்தாலே சரீரம் அநுவர்த்தித்ததாகில் இங்கிருந்த காலத்துக்கு ஸ்வயம்ப்ரயோஜநமாய் ஸ்வரூப ப்ராப்த சேஷ வ்ருத்தி ரூபமான கைங்கர்யம் இருக்கும்படியும்;

**குறிப்பு** – அடுத்த இரண்டு விளக்கங்களில், அடைப்புக்குறிக்குள் இருக்கின்ற எண்கள், அந்தந்த அதிகாரத்தைக் குறிப்பதாகும். அதாவது, அந்த அதிகாரங்களில் கூறப்பட்ட விஷயத்தின் இரத்தினச்சுருக்கமான கருத்தாகும்.

**விளக்கம்** – (1) இவ்விதமாக இந்த ஜீவாத்மா நித்யஸூரிகளைப் போன்றே பகவத் அனுபவத்தை எப்போதும் அனுபவிக்கும் தகுதி கொண்டவனாக உள்ளபோதிலும், எல்லையற்ற காலமாக அதனை இழந்து நிற்கிறான். பின்னர் தனது நிலையை உணர்ந்தவனாக, ஒரு நல்ல ஆசார்யனுடைய ஸம்பந்தத்தை அடைந்து, உண்மை மற்றும் நன்மை ஆகியவற்றை அறிந்து தெளிகிறான். (2) உண்மை மற்றும் நன்மை ஆகியவற்றைக் கூறவல்ல ப்ரமாணங்களின் ஸாரமாக மூன்று ரஹஸ்யங்களே உள்ளன. (3) இந்த மூன்று ரஹஸ்யங்கள் மூலமாக அறியப்படும் விஷயங்களில், "ஆள்பவன் – ஆளப்படும் வஸ்து" என்னும் உறவுமுறையை வெளிப்படுத்தும்விதமாக சேதந அசேதநங்கள் மற்றும் ஈச்வரன் ஆகியோருக்கு இடையே உள்ள "சரீரம் – ஆத்மா" என்பது

முக்கியமாக அறியப்படவேண்டியதாக உள்ளது. (4) இத்தகைய ஸம்பந்தத்துடன் சேர்த்து, பூர்வாசார்யர்களால் கூறப்பட்ட அர்த்தபஞ்சகமும் அவசியமாக அறியப்படவேண்டிய விஷயமாகிறது. (5) இத்தகைய அர்த்தபஞ்சகத்தில், மூன்று தத்வங்களைத் தனியாகப் பிரித்து அதனைக் குறித்து ஆராய்ந்து அறிதல். (6) இந்த அர்த்தபஞ்சகத்தில், ஸாத்விக சாஸ்த்ரங்களால் ஈச்வரன் என்று கூறப்பட்டவன், "மஹாலக்ஷ்மியின் நாதன்" என்று அறிதல். (7) இந்த மூன்று தத்வங்கள் குறித்து அறிந்தவன், மோக்ஷத்தை விருப்புபவனாக, அதற்கான உபாயத்தைக் கைக்கொள்ள முயலுதல். (8) உபாயத்தைக் கைக்கொள்ளும் அதிகாரிகளுடைய வகைகள். (9) அந்த அதிகாரிகளுக்கு ஏற்றவிதமாக உபாயங்களில் உள்ள பிரிவுகள். (10) இந்த உபாயங்களில், ப்ரபத்தியைக் கைக்கொள்ளும் அதிகாரிக்கு உள்ள சிறப்பான அதிகாரங்கள். (11) ஒருமுறை மட்டுமே இயற்றவேண்டிய இந்த ப்ரபத்தி உபாயத்திற்கு ஏற்றவிதமாக விதிக்கப்பட்ட அங்கங்களுடைய பிரிவுகள். (12) மோக்ஷத்தை விரும்பும் அதிகாரிக்கு ஏற்றதான, அங்கங்களுடன் கைக்கொள்ள வேண்டிய பரந்யாஸ வடிவில் உள்ள அங்கியின் விளக்கம். (13) இவ்விதம் அனைத்து அங்கங்களுடனும் பரந்யாஸம் செய்த ஒருவன், தன்னைக் காப்பாற்றும் அனைத்து பொறுப்புகளையும் ஸர்வேச்வரனிடம் அளித்ததால், செய்யவேண்டியதைச் செய்துவிட்டான் என்னும் காரணத்தால், மேற்கொண்டு எதனையும் செய்ய வேண்டியதில்லை என்னுதல். (14) இத்தகைய நிஷ்டை தனக்கு உண்டானது குறித்து தான் சமாதானத்துடன் இருத்தலுக்கான அடையாளங்கள். (15) ஸம்ஸாரத்தில் உள்ள நிலையைப் பொறுக்க இயலாமல் விரைந்து இந்தச் சரீரம் விழவேண்டும் என்னும் ப்ரார்த்தனைச் செய்யாதவரை தொடர்ந்தபடி உள்ள சரீர காலம் முடிய, தனது பயனாக, தனது ஆத்மஸ்வரூபத்தை அடையவைப்பதாக உள்ள கைங்கர்யம்.

**மூலம்** – (16) பகவத் கைங்கர்யத்துக்கு எல்லை நிலம் பாகவத கைங்கர்யமானபடியும்; (17) சாஸிதாவான ஸ்வாமிக்கு அபிமதமல்லாதது கைங்கர்யமல்லாமையாலே, யதா சாஸ்த்ரம் கைங்கர்யம் அநுஷ்டிக்க வேண்டினபடியும்; (18) இச் சாஸ்த்ரீய கைங்கர்ய ப்ரவ்ருத்தனுக்கு அபராதங்கள் புகாமைக்கும் புகுந்தவை கழிகைக்கும் விரகுகளும்; (19) இந் நிரபராத கைங்கர்யத்துக்கு ஸ்தாநமாக அநாபத்தில் உசிதமாவது பாகவத ஆச்ரிதமான பகவத் க்ஷேத்ரமென்னுமிடமும்; (20) இப்படி இருந்த இவ் அதிகாரிக்கு சரண்ய ஸங்கல்ப விசேஷத்தாலே ப்ரசஸ்த தேச காலாதி நியதி நிரபேக்ஷமாக, ஸ்தூல சரீரத்தினின்றும் நிர்யாணமிருக்கும்படியும்; (21) இப்படிப் புறப்பட்டால் பிதா

யௌவராஜ்யத்துக்கு முடிசூட்ட அழைத்து வரவிட்ட ராஜகுமாரன் போமாப் போலே பெரிய மேன்மையோடே பரமபத பர்யந்தமாக அர்ச்சிராதி மார்க்கத்தாலே போம்படியும்; (22) இப்படிப் போனால் அங்கு பிறக்கும் ஸ்வச்சந்த கைங்கர்ய பர்யந்தமாக பரிபூர்ண அநுபவ ரூபமான முக்தைச்வர்யமிருக்கும்படியும்; (23) இப்படி உக்தமான ஜ்ஞாதவ்யங்களில் ப்ரதானமான ஸித்தோபாயத்தையும்; (24) கர்த்தவ்யங்களில் ப்ரதானமான ஸாத்யோபாயத்தையும்; (25, 26) இவ் உபாய நிஷ்டனுடைய ப்ரபாவத்தில் சாஸ்த்ரங்களிசையாத ஏற்றச் சுருக்கங்களையும் பற்றி ஆஹார தோஷ ஹேதுக ஸம்ஸர்க்க யுகஸ்வபாவாதிகளாலே வரும் கலக்கங்களுக்குப் பண்ணும் பரிஹார ப்ரகாரங்களும்; (27, 28, 29) இவையெல்லாம் அநுஸந்திக்கைக்கு முகமான ரஹஸ்ய த்ரயத்தில், பத வாக்ய யோஜனைகளும்; (30) இவ்வர்த்தங்களுக்கெல்லாம் யதா சாஸ்த்ரம் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தநம் பண்ணும் ஆசார்யனுக்கு உபதேசாதி ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி விஷயங்களிருக்கும்படியும்; (31) இப்படிப் பரமோபகாரகனான ஆசார்யன் திறத்தில் தகுதியான ப்ரத்யுபகாரமில்லாமையாலே நித்ய ருணியான சிஷ்யனுக்குச் செய்ய அடுக்குமைவையெல்லாம்; (32) ச்ருதி ஸ்ம்ருதி ஸூத்ர ஸம்ப்ரதாயங்களாலும், இவற்றுக்கு அநுகூலங்களான ஸமீசீந ந்யாயங்களாலும், அஜ்ஞாந ஸம்சய விபர்யயங்களற யதா ச்ருதம் யதா ஹ்ருதயம் உபபாதித்தோம்.

**விளக்கம்** – (16) பகவத் கைங்கர்யத்தின் எல்லையாக பாகவத கைங்கர்யம் உள்ளது. (17) தன்னுடைய எஜமானனாகிய பகவானுக்கு விருப்பம் அற்றவை கைங்கர்யமாக இருக்காது என்பதால், சாஸ்த்ரங்கள் எவ்விதம் கூறுகின்றனவோ அதன்படியே கைங்கர்யம் செய்யவேண்டும். (18) சாஸ்த்ர முறைப்படி கைங்கர்யங்களைச் செய்யும் ஒருவனுக்குத் தோஷங்கள் உண்டாகாது; அதனையும் மீறி உண்டானாலும் கூட, அவை நீங்கக்கூடிய வழிகள். (19) எந்தவிதமான தோஷங்களும் இல்லாத கைங்கர்யத்திற்கு இடமாகவும், ஆபத்து இல்லாதபோது ஏற்றதும், பாகவதர்கள் வசிக்கின்ற பகவத் க்ஷேத்ரமே ஆகும். (20) இவ்விதம் உள்ள இந்த அதிகாரிக்கு பகவானுடைய ஸங்கல்பத்தின் சிறப்பு காரணமாக இடம் மற்றும் காலம் ஆகிய கட்டுப்பாடுகள் இன்றி, சரீரத்திலிருந்து உயிர் பிரிதல். (21) இவ்விதம் புறப்பட்ட பின்னர், அரசன் ஒருவனால் முடிசூட்டிக் கொள்ள அழைப்பு விடுக்கப்பட்ட அரசகுமாரன் போன்று, மிகுந்த மேன்மையுண்ட அர்ச்சிராதி மார்க்கமாகப் பரமபதம் செல்லும் விதம். (22) இவ்விதம் பரமபதம் சென்ற பின்னர், பரிபூர்ணமான பகவத் அனுபவத்துடன் கூடிய கைங்கர்யம் என்பதான முக்தி ஐச்வர்யம்

உள்ள நிலை. (23) இப்படியாக அறியவேண்டிய விஷயங்களில் முதன்மையாக உள்ள ஸித்தோபாயமான பகவானைக் குறித்த கலக்கங்களும் அவற்றின் நீக்கமும். (24) செய்யவேண்டியவற்றில் முதன்மையாக உள்ள ஸாத்யோபாயமான ப்ரபத்தியைக் குறித்த கலக்கங்களும் அவற்றின் நீக்கமும். (25, 26) ப்ரபந்நனுடைய மேன்மையில் சாஸ்த்ரங்கள் ஒப்புக்கொள்ளாத ஏற்றம் குறித்த சந்தேகங்களும் விளக்கங்களும்; மேலே கூறப்பட்ட ஸித்தோபாயம், ஸாத்யோபாயம், ப்ரபந்நனுடைய ப்ரபாவம் ஆகியவை குறித்து தூய்மையற்ற உணவு, தகாதவர்களுடைய உறவு, வசிக்கும் யுகத்தின் இயல்பு முதலானவை காரணமாக ஏற்படக்கூடிய சந்தேகங்கள் மற்றும் விளக்கங்கள். (27, 28, 29) இவை அனைத்தையும் எப்போதும் எண்ணியபடி இருப்பதற்கு ஏற்ற வழியாக, மூன்று ரஹஸ்யங்களின் பதங்களும் அவற்றின் பொருள்களும் இருத்தல். (30) இவை அனைத்தையும் குறித்து தகுந்த சாஸ்த்ரங்களின் அடிப்படையில் உபதேசம் செய்யும் ஆசார்யன், அத்தகைய உபதேசங்களைச் செய்யும்போது செய்யவேண்டியவை மற்றும் தவிர்க்கவேண்டியவை எவை. (31) இவ்விதம் மிகப் பெரிய உபகாரம் செய்த ஆசார்யனுக்கு ஏற்ற கைம்மாறு எதுவும் சிஷ்யனிடம் இருக்காது என்பதால், எப்போதுமே அவருக்குக் கடனாளியாகவே உள்ள சிஷ்யன் செய்யத் தகுந்தவை. (32) இது போன்ற அனைத்தைக் குறித்து ச்ருதி, ஸ்ம்ருதி, ப்ரஹ்மஸூத்ரம், ஸம்ப்ரதாயம் ஆகியவற்றைக் கொண்டும், இவைகளுக்கு ஏற்றபடியாக உள்ள யுக்தி ந்யாயங்களைக் கொண்டும், "அறியாமை, சந்தேகம், தவறாக அறிதல்" ஆகிய தோஷங்கள் விலகும்படியாக, முன்னோர்களிடமிருந்து கேட்டதன் மூலமும், நமக்குத் தென்பட்ட ப்ரமாணங்கள் மூலமும் நாம் விரிவாக உரைத்தோம்.

## ரஹஸ்ய த்ரய ஸாரத்தின் ஆழ்பொருளை எவ்வாறு அறியவேண்டும்

**மூலம்** – இவ்வர்த்தங்களையெல்லாம் முற்பட ஸத்ஸம்ப்ரதாயமுடைய ஸதாசார்யன் பக்கலிலே ஸம்யக் உபஸந்நனாய், "சிஷ்யஸ்தே அஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்" என்று விண்ணப்பம் செய்து, ஸாதரனாய் விசதமாக ச்ரவணம் பண்ணி இவற்றுக்கு உபயுக்தங்களான நல் வார்த்தைகளையும், "ஸுவ்யாஹ்ருதாநி மஹதாம் ஸுக்ருதாநி ததஸ்தத: | ஸஞ்சிந்வந் தீர ஆஸீத ஸிலஹாரீ ஸிலம் யதா" என்கிறபடியே ஆய்ந்தெடுத்து, அப்யாஸ பூயஸ்தையாலே தெளிந்து கொள்வது.

**விளக்கம்** – இதுவரை கூறப்பட்ட ஆழ்பொருள்கள் அனைத்தையும் முதலில் சீரிய வழியில் உயர்ந்த ஸம்ப்ரதாயத்தைக் கொண்ட ஓர் ஆசார்யனிடம் அவருக்கு ஏற்ற கைங்கர்யங்களைச் செய்து, "கீதை (2-7) - சிஷ்யஸ்தே அஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் – உன்னைச் சரணம் புகுந்த சிஷ்யனாகிய என்னை ஏற்றுக் கொண்டு உபதேசிக்க வேண்டும்" என்று விண்ணப்பம் செய்யவேண்டும். பின்னர் அவர் உரைப்பதை மிகுந்த ஈடுபாட்டுடன் விரிவாகக் கேட்டு உணரவேண்டும். பின்னர் இவற்றுக்கு உபயோகமாக உள்ளதாக ஆசார்யன் உரைக்கும் அருள்மொழிகளை, மஹாபாரதம் உத்யோகபர்வம் (34-34) - ஸுவ்யாஹ்ருதாநி மஹதாம் ஸுக்ருதாநி ததஸ்தத: | ஸஞ்சிந்வந் தீர ஆஸீத ஸிலஹாரீ ஸிலம் யதா – கீழே சிதறும் தானியங்களைக் கொண்டு உயிர் வாழ்பவன் அவற்றைப் பொறுக்கு எடுத்துச் சேமிப்பது போன்று, சான்றோர்களுடைய சிறந்த சொற்கள் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றைத் திரட்டி எடுத்து கவலை இல்லாமல் வாழ்வேண்டும் – என்பதற்கு ஏற்ப, ஆய்ந்து எடுத்துக் கொண்டு, மீண்டும் மீண்டும் கேஅல் மற்றும் பார்த்தல் என்னும் வழியில் தெளியவேண்டும்.

## இந்த நூலில் கூறியவற்றுக்குத் தோஷம் இல்லாமை

**மூலம்** – "ஸூக்ஷ்ம: பரமதுர்ஜ்ஞேய: ஸதாம் தர்ம: ப்லவங்கம" என்றும், "தர்மஸ்ய தத்த்வம் நிஹிதம் குஹாயாம்" என்றும், "அணீயாந் க்ஷுரதாராயா: கோ தர்மம் வக்துமர்ஹதி" என்றும் ரிஷிகளுக்கும்கூட வருந்திப் பத விந்யாஸம் பண்ண வேண்டி இருக்கிற நிலங்களில், "மஹாஜநோ யேந கத: ஸ பந்தா:" என்றும், "தர்மசாஸ்த்ர ரதாரூடா வேத கட்க தரா த்விஜா: | க்ரீடார்த்தமபி யத் ப்ரூயு: ஸ தர்ம: பரமோ மத:" என்றும் சொல்லுகிறபடியே ச்ருதி ஸ்ம்ருதி சரணரான பூர்வாசார்யர்கள், கண்டக சோதநம் பண்ணி நடந்த வழியிலே நடக்கையாலே நமக்கு வருவதொரு தப்பில்லை.

**விளக்கம்** – இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (18-15) - ஸூக்ஷ்ம: பரமதுர்ஜ்ஞேய: ஸதாம் தர்ம: ப்லவங்கம –உயர்ந்தவர்கள், தங்களை அண்டியவர்களைக் காக்கும் தர்மம் மிகவும் ஸூக்ஷ்மமானது – என்றும், மஹாபாரதம் வனபர்வம் (268-121) - தர்மஸ்ய தத்த்வம் நிஹிதம் குஹாயாம் – தர்மத்தின் தத்வம் இரகசியமானது – என்றும்,

மஹாபாரதம் உத்யோகபர்வம் (35-29) - அணீயாந் க்ஷுரதாராயா: கோ தர்மம் வக்துமர்ஹதி – கத்தி நுனியைக் காட்டிலும் ஸூக்ஷ்மமான தர்மத்தை யாரால் விளக்கும் தகுதி யாருக்கு உள்ளது – என்றும் கூறுவதற்கு ஏற்ப, மிகவும் உயர்ந்த மஹரிஷகளும் கூட மிகவும் சிரமத்துடன் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் உள்ளன. ஆனால், மஹாபாரதம் வனபர்வம் (268-121) - மஹாஜநோ யேந கத: ஸ பந்தா: - சான்றோர்கள் எந்த வழியில் நடந்தார்களோ அதுவே நமக்கும் சிறந்த வழியாகும் – என்றும், தர்மசாஸ்த்ர ரதாரூடா வேத கட்க தரா த்விஜா: | க்ரீடார்த்தமபி யத் ப்ரூயு: ஸ தர்ம: பரமோ மத: - தர்மசாஸ்த்ரம் என்னும் தேரில் அமர்ந்து, வேதங்கள் என்னும் வாளைக் கையில் பிடித்து நிற்கும் அந்தணர்கள் விளையாட்டாகவே உரைப்பதும் கூட தர்மம் என்றே கொள்ளப்படும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப ச்ருதி மற்றும் ஸ்ம்ருதி ஆகியவற்றையே அண்டி நிற்கும் நம்முடைய பூர்வாசார்யர்கள், வழியில் உள்ள முட்களை எடுத்து பாதையைத் தூய்மையாக்குவது போன்று உண்டாக்கிய பாதையில் நாம் செல்வதால், நமக்கு வழி தவறிப் போகும் பாதிப்பும் தவறும் ஏற்படுவதில்லை.

## பூர்வாசார்யர்களைப் பின்பற்றினால் கிட்டும் நன்மைகள்

**மூலம்** – இவ்வழி நடந்தவர்களுக்கு, "அவிச்ராந்தமநாலம்பம் அபாதேயமதேசிகம் | தம: காந்தாரமத்வாநம் கதமேகோ கமிஷ்யஸி" என்றும், "நிஷ்பாநீயே நிராலம்பே நிச்சாயே நிரபாச்ரயே | த்ராகீயஸ்யசுபே மார்கே யமஸ்ய ஸதநம் ப்ரதி" என்றும் மஹர்ஷிகள் நெஞ்சாறல்படும் வழிகள் காணவேண்டா. பஞ்சாக்நி வித்யையிற் சொன்னபடியே "பருத்திபட்ட பன்னிரண்டும் பட்டுப் பூட்டைக் குண்டிகை போலே" ஏறுவது இழிவதாக தூமாதி மார்கத்திலே பரிப்ரமிக்கவும் வேண்டா.

**விளக்கம்** – இத்தகைய நல்வழியில் செல்பவர்களுக்கு, மஹாபாரதம் சாந்திபர்வம் (337-34) - அவிச்ராந்தமநாலம்பம் அபாதேயமதேசிகம் | தம: காந்தாரமத்வாநம் கதமேகோ கமிஷ்யஸி - இளைப்பாறுவதற்கு ஏற்ற இடம் இல்லாமல், பற்றிக் கொள்ள கைப்பிடி இல்லாமல், பசியைத் தீர்ப்பதற்கான உணவும் இல்லாமல், வழி காட்டுபவர்கள் இல்லாமல், இருளில் செல்லவேண்டியதாக உள்ள நரக மார்க்கம் என்பதில் நீ தனித்து எவ்விதம் செல்வாய் – என்றும், வங்கீபுரத்து நம்பி காரிகை (24) - நிஷ்பாநீயே நிராலம்பே

நிச்சாயே நிரபாச்ரயே | த்ராகீயஸ்யசுபே மார்கே யமஸ்ய ஸதநம் ப்ரதி – பருகுவதற்கு நீரும், தாங்குவதற்குக் கைப்பிடியும், ஒதுங்குவதற்கு நிழலும், தங்குவதற்கு இடமும் இல்லாமல், மிகவும் நீண்டதாக, துக்கத்தை மட்டுமே அளிப்பதாக உள்ள யமனின் இடத்திற்குச் செல்லும் பாதையே எனக்கு அச்சத்தை உண்டாக்கும் பிறவிகளுடைய வரிசையாக உள்ளன – என்றும், மஹரிஷிகள் வேதனை அடைகின்ற வழிகளில் செல்லவேண்டிய அவசியல் இல்லை. பஞ்சாக்நி வித்யையில் கூறுவது போன்று, பருத்தியானது பல நிலைகளைக் கடந்த பின்னர் ஆடையாவது போன்றும், ஏற்றம் நீர் இறைக்கும்போது மேலும் கீழுமாகச் செல்வது போன்றும், தூமாதி மார்க்கமாக வருவதும் போவதுமாக உள்ள நிலை உண்டாகாது.

**மூலம்** – "த்வம் நயஞ்சித்பிருதஞ்சித்பி: கர்மஸூத்ரோபபாதிதை: | ஹரே விஹரஸி க்ரீடா கந்துகைரிவ ஜந்துபி:" என்கிற பகவத் லீலோபகரணமான தசை கழிந்து மற்றுமுள்ள அதிசயித பலங்கள் பெறப்போம் அதிகாரிகளுடைய வழிகளிற்காட்டில் புருஷார்த்த ப்ரயஸ்தையாலும், புநராவ்ருத்தியில்லாமையாலும் "தேப்யோ விசிஷ்டாம் ஜாநாமி கதிமேகாந்திநாம் ந்ருணாம்", "உத்க்ராமதி ச மார்கஸ்த: ... சீதிபூதோ நிராமய:", "தேவயாந: பர: பந்தா யோகிநாம் க்லேச ஸம்க்ஷயே" இத்யாதிகளிற்படியே அத்யந்த விசிஷ்டமாய்,

**விளக்கம்** – ஸ்ரீவிஷ்ணுதர்மம் - த்வம் நயஞ்சித்பிருதஞ்சித்பி: கர்மஸூத்ரோபபாதிதை: | ஹரே விஹரஸி க்ரீடா கந்துகைரிவ ஜந்துபி: - ஸர்வேச்வரனே! கர்மங்கள் என்னும் கயிற்றால் கட்டப்பட்ட பந்துகள் போன்று கீழும் மேலுமாக எழும்பியபடி உள்ள ஜந்துக்களைக் கொண்டு நீ விளையாடுகிறாய் – என்று கூறுவதற்கு ஏற்ப, பகவானின் லீலையில் விளைவாக ஸம்ஸார நிலையில் உள்ளவர்கள், அந்த நிலை நீங்கிய பின்னர், ஸ்வர்கம் முதலான பலன்களைப் பெறுகின்ற அதிகாரிகள் செல்லும் பாதையைக் காட்டிலும் வேறான (அர்ச்சிராதி) பாதையில் செல்கிறார்கள். இத்தகைய மார்க்கமானது புருஷார்த்தத்தின் மேன்மை மற்றும் மீண்டும் ஸம்ஸாரத்திற்குத் திரும்புதல் இல்லாமை ஆகிய காரணங்களால், மஹாபாரதம் சாந்திபர்வம் (358-6) - தேப்யோ விசிஷ்டாம் ஜாநாமி கதிம் ஏகாந்திநாம் ந்ருணாம் – அவனைச் சரணம் புகுந்தவர்கள் செல்லும் வழியானது மிகவும் மேலானது – என்றும், மஹாபாரதம் சாந்திபர்வம் (194-27) - உத்க்ராமதி ச மார்கஸ்த: ... சீதிபூதோ நிராமய: - மேலே எழும்பும் ஜீவாத்மா அந்த மார்க்கத்தில் சென்று ... ஸம்ஸார துன்பம் நீங்கப்பெற்று – என்றும், தேவயாந: பர: பந்தா

யோகிநாம் க்லேச ஸம்க்ஷயே – யோகிகளுக்கு கர்மங்கள் நீங்கிய பின்னர் தேவயானம் என்னும் உயர்ந்த மார்க்கம் கிட்டுகிறது – என்றும் கூறுவதற்கு ஏற்ப மிகவும் உயர்ந்ததாக உள்ளது.

**மூலம்** – "ஆத்மா கேவலதாம் ப்ராப்தோ யத்ர கத்வா ந சோசதி", "அத்யர்காநலதீப்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோர் மஹாத்மந: | ஸ்வயைவ ப்ரபயா ராஜந் துஷ்ப்ரேக்ஷம் தேவதாநவை:", "தத்ர கத்வா புநர்நேமம் லோகமாயந்தி பாரத", "ஏதே வை நிரயாஸ்தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந:" இத்யாதிகளிலும், ஸம்ஸார அத்வாவுக்குப் பாரமென்று ச்ருதிகளிலும் ஓதப்படுகிற பரமபதத்தைப் பர்யந்தமாகவுடைத்தாய், பகவத் ப்ரஸாத அவலம்பநமாய், பரிபூர்ணமான பரமபுருஷார்த்தத்தைப் பெறப் புகுபோகிறோமென்கிற ஸந்தோஷத்தைப் பாதேயமாகவுடைத்தாய்,

**விளக்கம்** – மஹாபாரதம் சாந்திபர்வம் (196-11) - ஆத்மா கேவலதாம் ப்ராப்தோ யத்ர கத்வா ந சோசதி – ஜீவாத்மா தனது துன்பம் நீங்கப்பெறும் இடம் இதுவே ஆகும் – என்றும், மஹாபாரதம் வநபர்வம் (136-18) - அத்யர்காநலதீப்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோர் மஹாத்மந: | ஸ்வயைவ ப்ரபயா ராஜந் துஷ்ப்ரேக்ஷம் தேவதாநவை: - விஷ்ணுவுடைய இடமானது சூரியன், அக்னி ஆகியவற்றைக் காட்டிலும் ப்ரகாசத்துடன் உள்ளதாகும்; அதன் ஒளி காரணமாக அதனை தேவர்களாலும் அஸுரர்களாலும் காண இயலாது – என்றும், மஹாபாரதம் வநபர்வம் (136-23) - தத்ர கத்வா புநர்நேமம் லோகமாயந்தி பாரத – பரதகுலத்தில் வந்தவனே! எங்கு சென்றவர்கள் மீண்டும் திரும்புவதில்லையோ – என்றும், மஹாபாரதம் சாந்திபர்வம் (196-6) - ஏதே வை நிரயாஸ்தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந: - பரமாத்மாவுடைய இடத்தைக் காணும்போது, மற்ற இடங்கள் அனைத்தும் தாழ்ந்தவையே – என்றும் உள்ள பல வரிகளிலும், ஸம்ஸாரம் என்னும் மார்க்கத்திற்கு அக்கரையாக உள்ளதென்று ச்ருதிகளிலும் ஓதப்படும் பரமபதத்தை எல்லையாகக் கொண்டதாகவும்; பகவத் க்ருபையைத் தனது கைப்பிடியாகக் கொண்டதாகவும்; "பரிபூர்ணமான உயர்ந்த புருஷார்த்தமான பகவத் அனுபவத்தை அடையப்போகிறோம்" என்னும் மகிழ்ச்சியை வழிச்சோறாகக் கொண்டதாகவும்;

**மூலம்** – "தத் ப்ரகாசிதத்வார:" என்கிறபடியே ஹார்தனான ஈச்வரனுடைய ஸௌஹார்தத்தாலே காட்டப்படுகிற அர்ச்சிராதி மார்க்கத்தாலே அவ்வோ தேவதைகள்

தத்தம் எல்லைகள்தோறும் மங்கல ப்ரதீப பூர்ணகும்பாதிகளை முன்னிட்டு ஸபரிகரராய் எதிர்கொண்டு ஸார்வபௌம உபசாரங்களைப் பண்ணி வழி நடத்த, கர்மலோகத்தில் இருந்த நாள் இறைகொண்ட தேவதைகளெல்லாம் காணிக்கையிட்டுக் கண்டு அநுவர்த்திக்க, அவர்களுக்கும் எட்டவொண்ணாத எல்லைகளெல்லாம் கடந்து நித்யஸூரிகள் திரளிற் புக்கால் வாசி தெரியாதபடியான நிரதிசய பூர்த்தியைப் பெற்று,

**விளக்கம்** – ப்ர. ஸூ. (4-2-16 ததோக: அக்ரஜ்வலநம் தத் ப்ரகாசி தத்வாரோ வித்யா ஸாமர்த்யாத் தச்சேஷ கத்யநுஸ்ம்ருதியோகாச்ச ஹார்த்தாநுக்ருஹீத: சதாதிகயா - ப்ரஹ்மவித்யையின் திறன் காரணமாகவும், அந்த வித்யைக்கு அங்கமாக உள்ள அர்ச்சிராதி மார்க்கத்தையே சிந்தனை செய்தபடி இருத்தல் என்ற யோகத்தாலும், தனது இதயம் என்ற தாமரையில் அமர்ந்துள்ள எம்பெருமானால் அருளப்படுகிறான். இதனால் பகவான் வசிக்கின்ற அந்த இதயம் ஒளி வீசுகிறது. அந்த ஒளியின் மூலம் காண்பித்துக் கொடுக்கப்பட்ட நூற்று ஒன்றாவது நாடியான ஸுஷும்நை நாடி மூலம் கிளம்புகிறான் – என்று கூறுவதற்கு ஏற்ப, இதயத்தில் எப்போதும் வீற்றுள்ள ஈச்வரனுடைய நல்லெண்ணம் காரணமாக வழி காண்பிக்கப்படுவதான அர்ச்சிராதி மார்க்கத்தில் செல்லும்போது, அந்தந்த தேவதைகள் தங்கள் எல்லைகள் முடிய மங்களதீபம் மற்றும் பூர்ணகும்பம் ஆகியவற்றை அளித்து, தங்களுடைய பரிவாரங்களுடன் எதிர்கொண்டு அழைத்து, ஓர் அரசனுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்து வழி நடத்தியபடி இருப்பர். இவர்கள் இந்தக் கர்மபூமியில் இருந்த காலம் முடிய யாகங்களில் அவிர்பாகம் அளித்தபோது அவற்றை ஏற்றுக்கொண்ட தேவதைகள் அனைவரும் இவர்களுக்கு வழி முழுவதும் உபசாரங்கள் செய்தபடி இருப்பர். அவர்களால் பின்தொடர இயலாத எல்லையைக் கடந்து செல்லும் இவர்கள், நித்யஸூரிகள் உள்ள இடத்தை அடைந்து, அந்தக் கூட்டத்தில் கலந்த பின்னர், இவர்களுக்கும் அவர்களுக்கும் இடையே வேறுபாடு இல்லாதபடியாக அனைத்திலும் எல்லையற்ற முழுமை அடைவார்கள்.

**மூலம்** – "ததோ மஹதி பர்யங்கே மணிகாஞ்சந சித்ரிதே | ததர்சி க்ருஷ்ணமாஸீநம் நீலம் மேராவிவாம்புதம் || ஜாஜ்வல்யமாநம் வபுஷா திவ்யாபரண பூஷிதம் | ப்ரீதகௌசேய ஸம்விதம் ஹேம்நீவோபசிதம் மணிம் || கௌஸ்துபேந ஹ்யுர:ஸ்தேந மணிநா அபிவிராஜிதம் | உத்யதேவோதயம் சைலம் ஸூர்யேநாப்தம் கிரீடிநம் || நௌபம்யம் வித்யதே தஸ்ய த்ரிஷு லோகேஷு கிஞ்சந ||", "தம் வைச்ரவண ஸங்காசம் உபவிஷ்டம்

ஸ்வலங்க்ருதம் | ததர்ச ஸுதஃ பர்யங்கே ஸௌவர்ணே ஸோத்தரச்சதே || வராஹருதிராபேண சுசிநா ச ஸுகந்திநா | அநுலிப்தம் பரார்த்யேந சந்தநேந பரந்தபம் || ஸ்திதயா பார்ச்வதச்சாபி வாலவ்யஜந ஹஸ்தயா | உபேதம் ஸீதயா பூய: சித்ரயா சசிநம் யதா || தம் தபந்தமிவாதித்யம் உபபந்நம் ஸ்வதேஜஸா | வவந்தே வரதம் வந்தீ விநயஜ்ஞோ விநீதவத் ||" என்று பாரத ராமாயணங்களில் சொல்லப்பட்ட அவதார ஆஸிகையாலே வ்யஞ்சிதமான பரமபத பர்யங்கத்திலே எழுந்தருளியிருக்கிற ஸபத்நீகனான ஸர்வேச்வரன் தாளிணைக்கீழ் "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டு நாம்" என்கிற மநோரதத்தின்படியே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யங்களையும் பெற்று வாழ்வார்கள். இப்படி ஸ்ரீய:பதியான நாராயணன் திருவடிகளே உபாய தசையிலும் பல தசையிலும் உப ஜீவ்யங்கள்.

**விளக்கம்** – மேலும் இவர்கள், மஹாபாரதம் சாந்திபர்வம் - ததோ மஹதி பர்யங்கே மணிகாஞ்சந சித்ரிதே | ததர்சி க்ருஷ்ணமாஸீநம் நீலம் மேராவிவாம்புதம் || ஜாஜ்வல்யமாநம் வபுஷா திவ்யாபரண பூஷிதம் | பீதகௌசேய ஸம்விதம் ஹேம்நீவோபசிதம் மணிம் || கௌஸ்துபேந ஹ்யுர:ஸ்தேந மணிநா அபிவிராஜிதம் | உத்யதேவோதயம் சைலம் ஸுர்யேநாப்தம் கிரீடிநம் || நௌபம்யம் வித்யதே தஸ்ய த்ரிஷு லோகேஷு கிஞ்சந – அதன் பின்னர், மாணிக்கம் மற்றும் பொன் ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்ட பெரிய கட்டிலில், மேரு மலையில் மழைமேகம் பொருந்தியுள்ளது போன்று, க்ருஷ்ணனைக் கண்டார். அவனுடைய திருமேனியானது பீதாம்பரத்துடன் கூடியதாகவும், நேர்த்தியான ஆபரணங்கள் பூண்டதாகவும், ஸ்வர்ணத்தில் பதிக்கப்பட்ட நீல இரத்தினம் போன்று உள்ளது. அவனுடைய திருமார்பில் கௌஸ்துபம் ஒளிர, திருமுடியில் க்ரீடமானது ப்ரகாசிக்க, இப்படியாக அவனுடைய அந்த இருப்பானது மலையில் உதிக்கும் சூரியன் போன்று உள்ளது. இவ்விதம் உள்ள அவனுடைய அழகுக்கு ஈடாக மூன்று லோகத்திலும் யாரும் இல்லை – என்றும், இராமாயணம் அயோத்யாகாண்டம் (16 – 8 முதல் 11) - தம் வைச்ரவண ஸங்காசம் உபவிஷ்டம் ஸ்வலங்க்ருதம் | ததர்ச ஸுத: பர்யங்கே ஸௌவர்ணே ஸோத்தரச்சதே || வராஹருதிராபேண சுசிநா ச ஸுகந்திநா | அநுலிப்தம் பரார்த்யேந சந்தநேந பரந்தபம் || ஸ்திதயா பார்ச்வதச்சாபி வாலவ்யஜந ஹஸ்தயா | உபேதம் ஸீதயா பூய: சித்ரயா சசிநம் யதா || தம் தபந்தமிவாதித்யம் உபபந்நம் ஸ்வதேஜஸா | வவந்தே வரதம் வந்தீ

விநயஜ்ஞோ விநீதவத் – நேர்த்தியான விரிப்புடன் கூடிய ஸ்வர்ண கட்டிலில் அனைத்து ஆபரணங்களுடன் கூடியவனாக, பன்றியின் குருதி போன்று சிவந்த நறுமணம் கொண்ட சந்தனம் பூசியவனாக, அருகில் உள்ள ஸீதை சந்த்ரனுடன் இணைந்த சித்திரை நக்ஷத்ரம் போன்று சாமரத்துடன் நிற்க, குபேரன் போன்று அமர்ந்திருந்த இராமனை, ஸுமந்திரன் கண்டான். சூரியன் போன்ற தேஜஸ் கொண்டவனாகவும், கேட்கும் வரங்கள் அளிப்பவனாகவும் உள்ள இராமனை ஸுமந்த்ரன் பணிந்தான் – என்றும் உள்ள மஹாபாரதம் மற்றும் இராமாயணம் ஆகிய வரிகளில் உள்ள அவதாரங்கள் குறித்த குறிப்புகளில் வெளிப்படுபவனும், பரமபதத்தில் தனது பத்னியுடன் எழுந்தருளியுள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரனுடைய திருவடிகளில், திருவாய்மொழி - ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டு நாம் – என்ற ஆசைக்கு ஏற்ப அனைத்து இடங்களிலும், அனைத்து காலங்களிலும், அனைத்து நிலைகளிலும், அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்தபடி வாழ்வார்கள். இப்படியாக மஹாலக்ஷ்மியின் நாயகனாக உள்ள நாராயணன் திருவடிகளே உபாய நிலை மற்றும் பலன் அடையும் மோக்ஷ நிலை ஆகிய இரண்டு நிலைகளிலும் அடையத்தக்கவை ஆகும்.

## பெரியபெருமாளின் திருவடிகளை வர்ணித்தல்

உறுசகடம் உடைய ஒரு காலுற்று உணர்ந்தன
உடன் மருதம் ஒடிய ஒரு போதில் தவழ்ந்தன
உறி தடவும் அளவில் உரலோடு உற்று நின்றன
உறு நெறி ஓர் தருமன் விடு தூதுக்கு உகந்தன
மறநெறியர் முறிய பிருதானத்து வந்தன
மலர்மகள் கை வருட மலர் போதிற் சிவந்தன
மறு பிறவி அறு முனிவர் மாலுக்கு இசைந்தன
மனுமுறையில் வருவது ஓர் விமானத்து உறைந்தன
அறமுடைய விசயன் அமர் தேரில் திகழ்ந்தன
அடல் உரக படம் மடிய ஆடிக் கடிந்தன
அறு சமயம் அறிவு அரிய தானத்து அமர்ந்தன

அணிகுருகை நகர் முனிவர் நாவுக்கு அமைந்தன
வெறியுடைய துவளமலர் வீறுக்கு அணிந்தன
விழுகரி ஓர் குமரன் என மேவிச் சிறந்தன
விறல் அசுரர் படை அடைய வீயத் துரந்தன
விடல் அரிய பெரியபெருமாள் மென் பதங்களே

**பொருள்** – யாராலும் விட இயலாதபடி உள்ள பெரியபெருமாளுடைய மென்மையான திருவடிகள் எப்படி உள்ளன என்றால்: சகடாசுரன் உடையும்படியாக முன்பு கூர்மையாக நோக்கியபடி இருந்தன; ஒன்றாகச் சேர்ந்திருந்த மருதமரங்கள் ஒடிந்து விழும்படியாக ஒரு காலத்தில் தவந்தன; வெண்ணெய் முதலானவற்றை வைத்திருந்த உறியைத் தொட்ட நேரத்தில், உரலோடு ஒன்றாகக் கட்டப்பட்டன; சிறந்த நெறியுடன் நிற்கும் ஒரே தர்மபுத்ரன் அனுப்பிய தூதிற்காக மகிழ்ந்தபடி சென்றன; கம்சன் அனுப்பிய கொடியவர்கள் அழியும்படியாக பிருந்தாவனத்திற்கு வந்தன; தாமரையில் வீற்றுள்ள பெரியபிராட்டியாரின் மென்மையான வருடலைக் கூடப் பொறுக்க இயலாமல் மலரைக் காட்டிலும் சிவந்தன; அடுத்த பிறவியை நீக்கவல்ல முனிவர்களுடைய பக்தியை ஏற்றன; மனுவம்சத்தில் இந்த உலகிற்கு வந்த ஸ்ரீரங்க விமானத்தில் எப்போதும் உள்ளன; தர்மம் பொருந்திய அர்ஜுனன் அமர்ந்த திருத்தேரில் காணப்பட்டன; வலிமையான காளியனுடைய படங்கள் அனைத்தும் நலியும்படியாக ஆடின; ஆறு மதங்களால் அறிய இயலாத பரமபதத்தில் அமர்ந்தன; ஆபரணமாகத் திகழும் ஆழ்வார் திருநகரியின் எஜமானராகிய நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக்கு ஏற்றபடி விளங்கின; பரிமளம் கொண்ட துளசியின் அழகுக்கு ஏற்றபடியான அழகுடன் விளங்கின; உத்தரையின் கர்ப்பத்திலிருந்து விழுந்த கரிக்கட்டையை, பரீக்ஷித் என்னும் ஒப்பற்ற குமரனாகச் செய்தன; வலிமையுள்ள அசுரர் படைகளை விரட்டின.

## இந்த நூலைக் குறித்து உரைத்தல்

இதி யதிராஜ மஹாநஸ பரிமள பரிவாஹ வாஸிதாம் பிபத
விபுத பரிஷத் நிஷேவ்யாம் வேதாந்த உதயந ஸம்ப்ரதாய ஸுதாம்

**பொருள்** – இப்படியாக இதுவரை கூறப்பட்டதும், எம்பெருமானாருடைய திருமடைப்பள்ளியின் பரிமளத்தைப் பெற்றதும், அனைத்தும் அறிந்தவர்களால் அனுபவிக்கும் தகுதி கொண்டதும், வேதாந்த சாஸ்த்ரத்தின் உதயநராக உள்ள திருமடைப்பள்ளியாச்சானுடைய ஸம்ப்ரதாயம் கொண்டதும் ஆகிய அமிர்தத்தைப் பருகுவீர்களாக.

கலகண்ட குண ஆஸ்வாத்யே காமஸ்ய அஸ்த்ரே நிஜாங்குரே
நிம்ப வ்ருத்திபி: உத்கீர்ணே ந சூத: பரிதப்யதே

**பொருள்** – மாமரம் ஒன்று, குயில்களால் நன்றாகச் சுவைத்து உண்ணப்படுவதும், மன்மதனுடைய செயல்களுக்கு ஏற்றதாக உள்ளதும் ஆகிய தனது தளிர் இலைகளைக் கொண்டு வாழ்கின்ற விலங்குகளால், அந்தத் தளிர்கள் உமிழப்பட்டாலும் வருத்தம் அடைவதில்லை (இதனைப் போன்றே இந்த நூலை, பொறாமை காரணமாகத் தள்ளினாலும், எந்தக் குறையும் இல்லை).

முன்பெற்ற ஞானமும் மோகம் துறக்கலும் மூன்று உரையில்
தன்பற்ற தன்மையும் தாழ்ந்தவர்க்கு ஈயும் தனித்தகவும்
மன்பற்றி நின்ற வகை உரைக்கின்ற மறையவர்பால்
சின்பற்றி என் பயன் சீர் அறிவோர்க்கு இவை செப்பினமே

**பொருள்** – மன்னனாக உள்ள ஸர்வேச்வரனைச் சரணம் என்று அடைந்து, அதன் விளைவாக உயர்ந்த நிலையை அடைந்த விதத்தை உபதேசிப்பவர்களும், வேதங்களை நன்றாக அறிந்தவர்களும் ஆகிய சான்றோர்களிடம் உன்னதமான ஞானத்தைப் பெறுவதற்கு சிலர் விழையக்கூடும். இவர்கள் பொருட்டு, "நம்முடைய ஆசார்யர்களிடமிருந்து நாம் பெற்ற ஞானமும், மயக்கத்தை நீக்குதலும், மூன்று ரஹஸ்யங்களில் நமக்கு நம்மைக் குறித்த சுதந்திரம் இல்லாமையும், தன்னை வந்து பணிந்தவர்கள் விஷயத்தில் ஏற்படும் க்ருபையும்" என்பதான பல விஷயங்களை இந்த நூலில் நாம் உரைத்தோம். இதனைக் கருத்தில் கொள்ளாமல் அற்ப விஷயங்களில் ஈடுபடுதலால் என்ன பயன் உள்ளது?

நிர்விஷ்டம் யதிஸார்வபௌம வசஸாம் ஆவ்ருத்திபிர் யௌவநம்
நிர்தூத இதர பாரதந்த்ர்ய நிரயா நிதா: ஸுகம் வாஸரா:
அங்கீக்ருத்ய ஸதாம் ப்ரஸத்திமஸதாம் கர்வ: அபி நிர்வாபித:
சேஷ ஆயுஷி அபி சேஷி தம்பதி தயா தீக்ஷாம் உதீக்ஷாமஹே

**பொருள்** – யதிராஜருடைய நூல்களைக் கற்பதில் இளமைக்காலம் நன்றாகக் கழிந்தது. மற்றவர்களுக்கு வசப்பட்டிருத்தல் என்பதான நரகம் கழிந்த நாள்களும் இன்பமாகவே கழிக்கப்பட்டன. சான்றோர்களுடைய அனுக்ரஹத்தைப் பெற்ற பின்னர், மற்ற மதங்களுடைய செருக்கும் ஒடுக்கப்பட்டது. இனி உள்ள காலங்களில், நம்முடைய எஜமானர்களாகிய திவ்யதம்பதிகளுடைய கருணையால் உண்டாகும் ஸங்கல்பத்தை எதிர்நோக்கி நிற்கிறோம்.

செப்பச் செவிக்கு அமுது என்னத் திகழும் செழுங்குணத்துத்
தப்பு அற்றவருக்குத் தாமே உகந்து தருந்தகவால்
ஒப்பற்ற நான்மறை உள்ளக் கருத்தில் உறைத்து உரைத்து
முப்பத்து இரண்டு இவை முத்தமிழ் சேர்ந்த மொழித்திருவே

**பொருள்** – உயர்ந்த குணங்களில் சற்றும் பிறழாத அதிகாரிகள் விஷயத்தில் ஸர்வேச்வரனும் அவனுடைய அடியார்களும் தாங்களாகவே மகிழ்வுடன் அளிக்கின்ற கருணையால், ஈடில்லாத நான்கு வேதங்களுடைய ஆழ்பொருளில் நன்றாக பரிசயம் செய்து உரைக்கப்பட்டவையும், கூறப்படும்போது காதுகளுக்கு அமிர்தம் என்று உரைக்கும்படியாகத் திகழ்பவையும் ஆகிய இந்த முப்பத்து இரண்டு பாசுரங்களும், மூன்றுவகையான தமிழுக்கு ஏற்ற அலங்காரம் ஆகும்.

ஆஸ்திக்யவாந் நிசித புத்தி: அநப்யஸூயு:
ஸத் ஸம்ப்ரதாய பரிசுத்த மநா: ஸத் அர்த்தா
ஸங்கேத பீதிரஹித: ஸத்குணேஷு அஸக்த:
ஸத் வர்த்தநீம் அநுவிதாஸ்யதி சாச்வதீம் ந:

**பொருள்** – ஆஸ்திகனாகவும், பொறாமை அற்றவனாகவும், உயர்ந்த ஸம்ப்ரதாயம் காரணமாகப் பரிசுத்தமான மனம் கொண்டவனாகவும், சிறந்த பொருள்களையே விரும்புபவனாகவும், அவசியமற்ற கட்டுப்பாடுகளுக்கு அச்சம் கொள்ளாதவனாகவும், துரும்பு போன்ற தாழ்ந்த பலன்களில் ஈடுபாடு இல்லாதவனவாகவும் உள்ள ஒருவன், நம்முடைய நித்யமான இந்த நூலில் கூறப்பட்டுள்ள சிறந்த கருத்துக்களை எப்போதும் பின்பற்றுவான்.

மறை உரைக்கும் பொருள் எல்லாம் மெய் என்று ஓர்வார்
மன்னிய கூர் மதி உடையார் வண்குணத்தில்
குறை உரைக்க நினைவில்லார் குருக்கள் தம்பால்
கோதற்ற மனம் பெற்றார் கொள்வார் நன்மை
சிறை வளர்க்கும் சில மாந்தர் சங்கேதத்தால்
சிதையாத திண் மதியோர் தெரிந்தது ஓரார்
பொறை நிலத்தின் மிகும் புனிதர் காட்டும் எங்கள்
பொன்றாத நன்னெறியில் புகுதுவாரே

**பொருள்** – வேதங்களில் கூறப்படுகின்ற ஆழ்பொருள்கள் அனைத்தும் உண்மையே என்று உறுதியாக எண்ணுபவர்களாகவும், திடமானதும் கூர்மையானதும் ஆகிய புத்தியைக் கொண்டவர்களாகவும், மற்றவர்களுடைய குணங்களில் குற்றம் காண எண்ணம் இல்லாதவர்களாகவும், ஆசார்யர்களிடம் சிறந்த விஷயங்களைப் பெறுபவர்களாகவும், சிறையாக உள்ள ஸம்ஸாரத்தை மேன்மேலும் வளர்க்கின்றவர்களுடைய கட்டுப்பாட்டால் கெடாத உறுதியானவர்களாகவும், அற்பமானவற்றில் ஈடுபாடு கொள்ளாதவர்களாகவும் உள்ளவர்கள், பூமியைக் காட்டிலும் பொறுமையான ஆசார்யர்களால் காண்பிக்கப்பட்ட எங்களுடைய அழியாத மார்க்கத்தில் சேர்வர்.

இது வழி இன்னமுது என்றவர் இன்புலன் வேறு இடுவார்
இது வழியாம் அலவென்று அறிவார் எங்கள் தேசிகரே
இது வழி எய்துக என்று உகப்பால் எம் பிழை பொறுப்பார்
இது வழியா மறையோர் அருளால் யாம் இசைந்தனமே

**பொருள்** – பலராலும் இனிமையானது என்று கொண்டாடப்படும் அற்பமானவற்றை விலக்கி வைப்பவர்களும்; பகவத் க்ருபையே மோக்ஷ வழி என்றும், மற்றவை ஏதும் அல்ல என்றும் அறிபவர்களும் ஆகிய உயர்ந்த ஆசார்யர்களே, "இங்கு கூறப்பட்ட ப்ரபத்தி வழியில் நிலையாக நடப்பீர்களாக" என்று அனைவருக்கும் உபதேசிப்பதில் மகிழ்கிறார்கள். அதன் விளைவாக எங்களுடைய அனைத்து பிழைகளையும் பொறுத்துக் கொண்டு, இங்கு கூறப்பட்ட வழியே இனிமையான அமிர்தம் ஆகும் என்று உபதேசித்தவர்கள் அவர்களே ஆவர். எனவே வேதங்களின் வழி நிற்கின்ற அவர்களுடைய க்ருபையால், இந்த வழியே சிறந்தது என்று நாங்கள் ஏற்கிறோம்.

எட்டும் இரண்டும் அறியாத எம்மை இவை அறிவித்து
எட்டவொண்ணாத இடந்தரும் எங்கள் அம்மாதவனார்
முட்ட வினைத்திரள் மாள முயன்றிடும் அஞ்சல் என்றார்
கட்டெழில் வாசகத்தால் கலங்கா நிலை பெற்றனமே

**பொருள்** – எட்டு எழுத்துக்கள் கொண்ட திருமந்த்ரம் மற்றும் இரண்டு அடிகள் கொண்ட த்வயம், சரமச்லோகம் ஆகியவற்றை அறியாத எங்களுக்கு இவற்றை உபதேசம் செய்து, இதன் மூலம் எளிதில் எட்டுவதற்கு இயலாத பரமபதத்தை அளிப்பவனாகிய ஸ்ரீமந்நாராயணன், "உங்களுடைய கர்ம கூட்டங்கள் அனைத்தும் அழியும்படியாக ப்ரபத்தியைக் கைக்கொள்வீராக" என்று அருளிச்செய்தான். அப்படிப்பட்ட கட்டு குலையாத அழகுடன் கூடியதான அவனுடைய சரமச்லோகத்தின் மூலம் நாங்கள் கலக்கம் அடையாத நிலையைப் பெற்றோம்.

வானுள் அமர்ந்தவருக்கும் வகுந்த வரும் நிலைகள்
தான் உளனாய் உகக்கும் தரம் இங்கு நமக்கு உளதே
கூன் உள நெஞ்சுகளால் குற்றம் எண்ணி இகழ்ந்திடினும்
தேனுள பாத மலர்த் திருமாலுக்குத் தித்திக்குமே

**பொருள்** – தேவர்கள் மற்றும் நித்யஸூரிகள் ஆகியவர்களுக்குக் கூட இந்த நூலில் கூறப்பட்ட இருப்புகள் மிகவும் அரியதாகக் கிடைக்கக்கூடியதாக இருக்கும். ஆனால் அத்தகைய இருப்புகள் நமக்கு உள்ளதாகவும், இப்படிப்பட்ட நிலையானது

பொருந்தியுள்ளவர்களைக் கண்டு மகிழும்படியான பெருமை மிக்க இயல்பானது நமக்கு உள்ளதாகவும் நாம் திகழ்கிறோம். தாழ்ந்த எண்ணம் கொண்டவர்கள் இந்த நூலிலும் நம்மிடமும் குற்றங்கள் உள்ளது என்று எண்ணித் தூற்றினாலும், இந்த நூலானது தேன் நிரம்பிய தாமரை போன்ற திருவடிகளைக் கொண்ட ஸர்வேச்வரனுக்கு மகிழ்வையே உண்டாக்கும்.

வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகால் அடியோம்
உள்ளத்து எழுதியது ஓலையில் இட்டனம் யாம் இதற்கென்
கொள்ளத் துணியினும் கோது என்று இகழினும் கூர் மதியீர்
எள்ளத்தனை உகவாது இகழாது எம் எழில் மதியே

**பொருள்** – வெண்மையான குதிரையாக அவதரித்த ஸ்ரீஹயக்ரீவன், எம்முடைய ஆசார்யனாக அவதாதம் செய்து, தகுந்த உபதேசம் என்னும் எழுதுகோல் மூலமாக எம்முடைய உள்ளத்தில் எழுதியவற்றை, நாம் இந்த நூலில் எழுதினோம். ஆகவே இந்த நூலில் என்ன குற்றம் உள்ளது (அல்லது நாம் இவ்விதம் எழுதியதில் என்ன குற்றம் உள்ளது)? கூர்மையான அறிவு கொண்டவர்களே! இந்த நூலை ஏற்றுக் கொண்டாலும் எமது அழகான மனமானது சிறிதளுவும் மகிழ்வில் துள்ளாது; இதனை ஏற்காமல், குற்றம் உள்ளதாக இகழ்ந்தாலும், அவர்களை எமது அழகான மனமானது சிறிதளுவும் இகழாது.

ரஹஸ்ய த்ரய ஸார: அயம் வேங்கடேச விபச்சிதா
சரண்ய தம்பித விதாம் ஸம்மத: ஸமக்ருஹ்யத

**பொருள்** – "ரஹஸ்ய த்ரய ஸாரம்" என்னும் இந்த நூலானது, வேங்கடேசன் எனப்படும் நம்மால், சரணம் அடையத்தக்க ஸர்வேச்வரனுடைய இயல்பை நன்றாக அறிந்தவர்களால் ஏற்றுக் கொள்ளும்படியாக உண்டாக்கப்பட்டதாகும்.

நிமகந அதிகாரம் ஸம்பூர்ணம்

ஸம்ப்ரதாய ப்ரக்ரியா பாகம் ஸம்பூர்ணம்

ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரம் ஸம்பூர்ணம்

ஸ்வாமி வேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்

தஞ்சம் அடைந்த நம் இராமாநுசன் திருவடிகளே தஞ்சம்

மஹாலக்ஷ்மீ ஸமேத ஸ்ரீஹயக்ரீவன் திருவடிகளே தஞ்சம்

ஸ்ரீரங்க திவ்யதம்பதிகள் திருவடிகளே தஞ்சம்